E. 1137

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 12

உ

சிவமயம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

[படங்களுடன்]

(முதற் பகுதி)

திருமலைச் சருக்கம் - தில்லைவாழந்தணர் சருக்கம்

கோவை - வழக்கறிஞர்

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. அவர்கள்

தொகுத்தியற்றிய

உரையுடன்

[சென்னைச் சர்வகலாசாலையார் ஆதரவு பெற்றது]

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

15—9—1937

உரிமை
ஆசிரியர்க்கே.

விலை ரூ. 6-0-0.

பெரிய புராண உரை—(முதற் பகுதி)

திருமலைச்சருக்கமும் - தில்லைவாழந்தணர் சருக்கமும்

பொருளடக்கம்

முன்சேர்க்கை		பக்கங்கள்
மதிப்புரைகள்	...	1— 7
சிறப்புப்பாயிரம்	...	8— 9
முகவுரைக்கு முன்னுரை	...	11—20
நாயன்மார் திருநட்சத்திரக்கோவை	...	21—23
சமயகுரவர் முதலியோர் திருநட்சத்திரங்களும் வயதும்	...	23
தனித்தொண்டர் திருநட்சத்திரங்கள் - சருக்க வரிசை	...	24—25
,, மாத வரிசை	...	26
,, அகர வரிசை	...	27
ஏனைத்திருத்தொண்டர் திருநட்சத்திரங்கள்	...	28
திருப்பதிக்கோவை	...	29—30
திருப்பதிகக்கோவை	...	31—32
திருமுறைகண்ட புராணம்	...	33—38
திருத்தொண்டர் புராணசாரம்	...	39—54
சேக்கிழார் புராணமென்னும் திருத்தொண்டர் புராண வரலாறு	...	55—72
திருத்தொண்டர் புராண வரலாற்றுச் சுருக்கமும், சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களும்	...	73—80
திருத்தொண்டர் திருநாமக்கோவையும் உரைக்குறிப்புக்களும்	...	81—88
சேக்கிழார் சுவாமிகளைப்பற்றிய துதிகள்	...	88
சேக்கிழார்சுவாமிகள் பிள்ளைத்தமிழ்த் திரட்டு	...	89—92
சேக்கிழார் செய்யுளணிக் குறிப்புக்கள்	...	92—96
பெயர் விளக்கம்	...	97—114
திருத்தொண்டர்புராணமும் உரையும் :—		௧—௬௯௬

முதற் காண்டம்

பாயிரம்	...	௧—௧௫
முதலாவது, திருமலைச்சருக்கம்	....	௧௬—௪௨௮
1. திருமலைச்சிறப்பு	...	௧௬—௫௮
2. பதிகம்	...	௫௯—௬௧
3. திருநாட்டுச்சிறப்பு	...	௬௨—௧௦௭
4. திருவாரூர்த் திருநகரச் சிறப்பு	...	௧௦௭—௧௬௫
5. திருக்கூட்டச் சிறப்பு	...	௧௬௬—௧௮௪
6. தடுத்தாட்கொண்ட புராணம்	...	௧௮௪—௪௨௮

இரண்டாவது, தில்லைவாழந்தணர் சருக்கம் ௪௨௬—௬௯௬

1. தில்லைவாழந்தணர் புராணம் ... ௪௩௧—௪௪௫
2. திருநீலகண்ட நாயனார் புராணம் ... ௪௪௫—௪௯௫
3. இயற்பகை நாயனார் புராணம் ... ௪௬௫—௫௪௪
4. இளையான்குடிமாற நாயனார் புராணம் ... ௫௪௫—௫௭௬
5. மெய்ப்பொருணாயனார் புராணம் ... ௫௭௬—௬௧௦
6. விறன்மிண்ட நாயனார் புராணம் ... ௬௧௦—௬௩௩
7. அமர்நீதி நாயனார் புராணம் ... ௬௩௪—௬௯௦

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி ... ௬௯௧—௬௯௩

தில்லைவாழந்தணர் சருக்கம் - சரித ஆராய்ச்சியுரை ... ௬௯௪—௬௯௬

பின்சேர்க்கை

பாட்டு முதற்குறிப்பு ... i—v

திருத்தங்கள் ... vi—xxiv

அருஞ்சொற்றொடர் அகராதி ... xxv—xLiv

விசேடக்குறிப்பு :—மேற்கண்ட பற்பல பொருள்களையும் வகைப்படுத்தி திறவு தற்கும், உரைக்கும், பெருந் துணைசெய்து ஊக்கப்படுத்தியது அன்பர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களது விசேட ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் கூடிய பதிப்பாகும்—பதிப்பாசிரியன்.

முதற்பகுதியிலுள்ள படங்கள்

1.	சேக்கிழார் சுவாமிகள் சோழுட்டுத் திருநாகேச்சரத்தில் உள்ள திருக்கோலம்	முன்சேர்க்கையின்	முகப்பு
2.	சேக்கிழார் சுவாமிகள் தாயார்	,,	73
3.	சேக்கிழார் சுவாமிகள் தம்பியார் பாலறுவாயர்	,,	73
4.	ஏட்டிதழினிரு பக்கங்கள்	,,	79
5.	திருநாரையூர்க்கோயில் - பொல்லாப் பிள்ளையார் சந்நிதி	,,	114

		பாட்டு	பக்கம்
6.	திருக்கயிலாயமலையும் - இமயச்சாரலும் ...	11	௧௬
7.	பசு ஆராய்ச்சிமணியைக் கொம்பினுல் அசைத்து அடித்தல் ...	112	௧௩௩
8.	மனுச்சோழர் தேரினை மகன்மேற் செல ஊர்தல் ...	129	௧௩௩
9.	திருவாரூர்ப் பூங்கோயில் ...	136	௧௬௬
10.	தேவாசிரியமண்டபம் ...	137	௧௬௬
11.	மணம் வந்தபுத்தூர் (மணந் தவிர்ந்த புத்தூர் - மணம் தவிர்ந்த இடம் இப்போது ஆலயமாக உள்ளது) ...	169	௨௦௫
12.	மணம் வந்தபுத்தூர் - சடங்கவிசிவாசாரியார் வீடு ...	173	௨௦௫
13.	இறைவன் கிழவேதியராக வந்தகோலம் ...	174	௨௦௫
14.	திருவெண்ணெய்நல்லூர் - வழக்குவென்ற அம்பலம் ...	195	௨௨௫
15.	திருத்துறையூர் ...	225	௨௨௫
16.	திருவெண்ணெய்நல்லூர் - திருவருட்டுறை ...	211	௨௪௧
17.	திருநாவலூர் ...	148	௨௪௧
18.	நம்பியாரூரரது முதல் யாத்திரைப்படம் ...		௪௨௧
19.	திருப்புலீச்சரம் ...	396	௪௮௧
20.	திருநீலகண்ட நாயனுரும் மனைவியாரும் - முதுமையும், மீளப்பெற்ற இளமையும் ...	398	௪௮௧
21.	காவிரி - சங்கமத்துறை ...	404	௫௩௦
22.	திருச்சாய்க்காடு - கோயில் ...	429	௫௩௦
23.	இளையான்குடிமாறநாயனுரும் அவர் மனைவியாரும் ...	465	௫௬௮
24.	முளைவாரி யமுதளித்த நாற்றங்கால் ...	457	௫௬௮
25.	புன்செய்ப் பயிர் பறித்த கொல்லையும் நாயனுர் வீடு இருந்த இடமும் ...	460	௫௬௮
26.	திருக்கோவலூர் ...	467	௫௭௬
27.	திருஅறையணிநல்லூர்		௫௭௯
28.	திருநாரையூர் ஆலயம் ...		௬௧௪
29.	திருச்செங்குன்றூர் ...	492	௬௧௪
30.	பழையாறை (திருமேற்றளி) ...		௬௩௭
31.	பழையாறை ...	502	௬௩௭
32.	பழையாறை (வடதளி) ...	505	௬௩௭
33.	திருநல்லூர் திருக்கோயில் (உட்புறம் பார்வை) ...	505	௬௩௭
34.	திருநல்லூர் அமர்நீதி நாயனுர் அமைத்த திருமடம் ...	505	௬௮௪
35.	அமர்நீதி நாயனுர் - மனைவியார் - மைந்தனுர்—(பழையாறை வடதளியிலுள்ள திருவுருவங்கள்) ...	548	௬௮௪

பாட பேதங்கள்

பக்கம் ௧௦௩ - தலைப்பு - திருவாரூர்ச் சிறப்பு என்று சில பிரதிகளில் உள்ளது.

௧௧௯-ம் பக்கத்துள்ள "கொற்ற வாழி" (100) என்னும் செய்யுள் சில பிரதிகளில் அடுத்த "பொங்கு மாமறை" (101) என்பதன் பின் உள்ளது.

பக்கம்	செய்யுள்	அடி	
௧௨௫	104	1	அளவில்பல் கலைகள்.
௧௨௯	108	2	செல்லத்தான்பட் (டும்பரின்).
௧௩௧	110	4	பிறந்தவா றேருவன்.
௧௮௧	145	4	எங்கறிந் தேத்துகேன்.
௨௦௭	172	2	தாண்டிய மாவுந் தம்போல்.
௨௨௫	195	3	ஆதியுன்.
௨௩௦	201	2	செழுமறை முனி.
௨௩௭	209	2	பான்முறை யேவல்
௨௬௬	231	1	அமர்ந்துறையும்.
௨௮௯	249	2	சீல மாதவர்கள்.
௩௨௭	274	3	வாட் கோண்டகண் மடமங்கை.
௩௩௨	277	4	கதிர்த்துமுன் ஏந்து.
௩௬௦	297	1	மணிப் புறத்தின்.
௩௭௭	312	4	நீட்டுவாய்.
௩௯௬	330	3	கலன்கள் மின்ன.
௪௦௦	333	4	மைக்கருங்கண்.

௪௧௮ - ௪௨௨ - 348-ம் செய்யுளுக்கும் (தம்பெருமான்) 349-ம் செய்யுளுக்கும் (உம்பர் நாயகர்) இடையில் அடியிற்கண்ட செய்யுள் ஏட்டில் காணப்படுகிறது :—

"அப்பெரியோர் திருவருளால் அளவிறந்த கருணையராய்
ஒப்பரிய ஆரூரன் பிராணுதல் உளதாமென்
றிற்பரிசுக் கினிதிருக்கை சாத்துமென வெழுந்தனவால்
முப்புவனங் களுமுய்ய எழுந்தவொலி திருக்கையொலி."

௪௪௧	357	1	செம்மையால் துணிந்த.
௫௧௬	417	3	ஈண்டிப் பயந்த.
௫௯௮	483	4	தீதிடை விலக்கா.

இவை பின்னர்க் காணப்பட்டன. அன்பர்கள் இவற்றை ஏற்ற இடங்களில் எடுத்துக் குறித்துக் கொள்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பொல்லாப் பிள்ளையார் துதி

என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை வியனாரை யூர்முக்க
ணரசுமகி ழத்திமுகத் தான்.

—திருவிரட்டை மணிமாலை - நம்பியாண்டார் நம்பிகள்.

கல்லா னிழன்மலை, வில்லா ரருளிய,
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே.

—சிவஞானபோதம் - மெய்கண்டதேவர்.



திருமுறையிருக்கும் இடத்தையும் நாயன்மார்களது வரலாற்றையும்
நம்பியாண்டார் நம்பிகளுக்கு அறிவித்துக் கலித்துறையந்தாதி பாடுவித்தருளிய
திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் ஆலயம் - தென்புறமிருந்து பார்வை.

நம்பியாண்டார் நம்பி துதி

(அபியுக்தர் வாக்கு)

பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழுக்கைமுக
மன்ன னறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்
பன்னவத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.

உ

சிவமயம்

மதிப்புரைகள்.

திருவாவடுதுறை யாதீனம். ஸ்ரீமத் - நமசிவாயத் தம்பிரான் சுவாமிகள்.

மகாபுருஷ செல்வச் சிரஞ்சீவி நமது சுப்ரமண்ய முதலியாரவர்களுக்கு சுவாமி அம்பலவாண சுவாமி கிருபையால் சகல சம்பத்தும் மென்மேலும் பெருக உண்டாக ஆசீர்வாதம்.

திருவருளால் இவண் சுபம். தங்கள் க்ஷேமத்தையறியப் பேரவாவுடையேம். தாங்களனுப்பிய பெரியபுராணவுரை வந்துசேர்ந்தது. சொற்சுவை பொருட்சுவைகளை ஆர அருந்தி இன்புறுகின்றோம். தமிழ் உலகிற்கு ஓர் பெரும் விருந்தே.

சூரியனார் கோயிலாதீனம்

ஸ்ரீமத் - முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் அருளிய

ஆசியுரை

பொன்னல ரிதழி யணிசடைக் கூத்தர் புலிதவாய் மலர்ந்தருள் செய்த
மன்னரு "உலகெ லா"மெனு முதலே மரவிட முதலிடை கடையும்
துன்னக விருடீர்ந் துயிரெலாம் வாழத் தூயசெந் தமிழ்க்குறை நீங்கப்
பன்னருந் தெய்வச் சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணம், 1

வாழிமா மறையின் மெய்ப்பய னாகி வளர்பெருஞ் சைவசித் தாந்தக்
கேழிலா நெறியி னநுபவப் பேறு கிடைத்துய ரளவிலாப் பெரியார்
பாழிமால் விடையோ னருள்வழிப் படர்ந்தபண் பொடு சரிதமும் விரித்தே
ஆழியா ரமுதின் மிகுசுவை யுடைத்தா யருந்தவர் விருந்துமா யினதே. 2

உரைத்தவந் நூலின் பெருமையா ருணர்வா ரோங்குமா பதியுமா பதியாய்த்
தரைத்தவ முடைய ததியினோர் தேறத் தவ்வா லாறுபெற் றிலமேல் ;
திரைத்தரு கடலிற் கலசமார் முறைதா னேர்ந்தவா றுரைகண்முன் பல்லோர்
உரைத்தன ரிந்நாண் மாக்களு மந்நூற் குணதம துளத்துள துரைத்தார். 3

திருத்தகு தெய்வச் சேக்கிழார் பெருமான் றிருவுளச் சம்பிர தாயக்
கருத்திது வென்று காட்டிமேற் கோளும் வின்பெறு சொற்பொரு ணயமும்
தெரித்துமெய்ச் சைவ நெறிமுறை விளக்கிச் சிலர்சிறு நெறியுரை மறுத்தே
அருத்தியி னறிஞ ரேற்குநல் லுரையீ தண்ணு ளளித்தன னம்மா. 4

அப்பெருந் தகைதா னொளிற் கோவைக் கணிமணி விளக்கென வோங்கும்
சுப்பிர மணிய முதலியார், பீ. ஏ., எனும்பெயர்த் தூயவன் சைவ
முப்பெருந் தீக்கை பெற்றரு ணூலின் நெறிசிவ பூசனை புரிவோன் ;
இப்பரி சன்பர் பிறரையும் புரிவித் திறையருட் குரியராக் கிடுவோன் ; 5

வேறு

செந்த மிழ்ப்பு லஞ்சி றந்த செய சொற்க ளாற்பிர
பந்த மாலை கட்டி யெங்கள் பட்டு நாய கர்க்கணி

கந்த சாமி முதலி யார்செய் கணிப்பின் மாத வத்தினால்
மைந்த னாகி வந்து சைவம் வாழ வாழு மாண்பினேன் ; 6

ஆண்டு தோறு மாறி ரண்டதாய் லங்கு திருமுறை
பூண்ட நேச நியம மாக வோது கின்ற புண்ணியன் ;
தாண்ட வஞ்செய் யீச னன்பர் தங்களுக் குகந்ததொண்
டூண்டு மன்பி னோடு செய்து நைஞ்சு கின்ற வியல்பினேன் ; 7

வேறு

தேவாரம் பண்ணினொடு சிறுவர்களும் பயிலநேர்தச் செய்து சைவர்க்
கோவாத நியதியெனுஞ் சிவதீக்கை முறையுரிவித் தொழுகச் செய்வோன் ;
மாவாழுங் கோவைநகர்த் தமிழ்ச்சங்கம் வளர்த்துவரும் வண்மை யாளன் ;
பாவாணர் மகிழ்பிள்ளைக் கவிகருணை யம்பிகைதாள் பரவிச் செய்தோன் ; 8

வேறு

இன்ன வாகிய பண்புகள் பிறவுங் கேய்ந்தோன் ;
தன்ன வாகிய யாவையுஞ் சேக்கிழார் தமவா
முன்னி வாழுமெய் யறிவினோர் முயன்றுசெய் யுரையும்
மன்னி வாழியிவ் வண்ணலு மநில மிசையே. 9

திருக்கோவலூராதீனம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

சந்நிதி வீதி, திருப்பாதிரிப்புலியூர். யுவ ஆண்டு கன்னிமதி 22.

சிவபெருமானது அருட்டிறத்தினையும், அவ்வருட்டிறத்தினைப் பெற்று இன்ப முற்ற அடியார் வரலாற்றினையும் அறிவிக்கும் தமிழ்ப்பேரிலக்கியம் பெரிய புராணமாம் திருத்தொண்டர் புராணம்.

இந்நூற்குப் பல அறிஞர்கள் முன்னர் உரை கண்டனர்.

உரை காணும் வகை பலதிறத்தது. நம் அன்பர் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ., அவர்கள் கண்டிருக்கும் உரைவகை சாலச் சிறந்ததொன்றே. இவ்வுரை பண்டையோர் கொள்கையை அரண் செய்து இக்காலத்தினர் கொள்கைகளுள் ஏற்பன கொண்டு மிளிர்கின்றது. சொன்னயங்களும் பொருணயங்களும் இலேசினறிய எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. நூலுள் நுழைந்து கிடந்த சாத்திரக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றன.

கற்பார்க்கு வரும் ஐயங்களைத் தன்னுரை கொண்டும் பிற மேற்கோள் கொண்டும் ஒழிக்கின்றது. திருமுறைகளினின்றும் வேறு பழைய நூல்களினின்றும் காட்டப்படும் பகுதிகள் அசைக்க ஒண்ணு நிலையில் அமர்ந்திருக்கின்றன. வேண்டும் இடங்களில் பொழிப்புரையும் பதவுரையும் கருத்துரையும் குறிப்புரையுமாக விளங்குகின்றது இவ்வுரை.

இவ்வுரை கண்ட இவர்களும் இவர்தம் முன்னையோரும் தமிழ்ப் புலமையிலும் சிறந்து, சிவபூசை செய்வதிலும் சிறந்து, அடியார் பத்தி முதலியவற்றிலும் சிறந்து மேன்மை அடைந்தவர்கள்.

இவ்வுரை நூலுள் காணப்படும் படங்களோ இயற்கைக்கு மாறுபடா அழகை உடையன. இவ்வுரை நூல் வடிவம் காண்பார் கண்ணைக் கவரும் கவினைப் பெற்று ஒளிர்வது.

அச்சினிலை இரும்பூது பயக்கும் இல்பினது.

இன்ப நலம் பல செறிந்த இவ்வுரை நூல் இறவா இன்பந்தரும் சிவபத்தர்களே யன்றி இன்சுவை நுகரும் தமிழிலார்வமுடையார் பலரும் கற்று இன்புறுந் தகுதி யது. இவ்வுரை நூலைக் கண்டு நாம் பெரிதும் இன்புற்றும். சிவனருள் சிறக்க; சிவபத்தி வளர்க; இந்நூல் செழிக்க; உலகம் இன்பம் பெறுக.

"சித்தாந்தம்"

பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம்

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ. அவர்கள் உரை - முதற் சஞ்சிகை.

இச்சஞ்சிகையைத் திரு. முதலியாரவர்கள் நமது பார்வைக்கு அனுப்பி வைத்த மைக்காக அவர்கட்கு நன்றி கூறுகிறேம். திரு. முதலியாரவர்கள் பெரியபுராணத்தைத் தமது ஆயுள் முழுமையும் பயின்று ஆராயும் சிறந்த நூலாகக் கொண்டுள்ளாரென்பது சைவ உலகம் அறிந்ததொன்று. சில ஆண்டுகட்கு முன் இப்பெரியார் சென்னைப் பல் கலைக் கழகத்தின் ஆதரவில் பெரிய புராணத்தையும் சேக்கிழாரையும் பற்றிய சொற் பொழிவுகள் சிலவற்றை நிகழ்த்தியதும் அன்பர் பலர் நினைவிலிருக்கும். இவ்வுரை வெளியீட்டில் தமக்குத் தேவார முதலிய திருமுறைகளிலுள்ள சிறந்த பயிற்சி, நுண்ணிய ஆராய்ச்சி முதலியவைகட்கேற்ப இவ்வுரையாசிரியர் பற்பல நுட்பமான பொருள் களை மிகத் திறம்படத் திருமுறை மேற்கோள்களோடு விளக்கியுள்ளது பெரிதும் பாராட்டத்தக்கது. கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகளும், தில்லை, திருக்கைலா யம் முதலிய தலங்களின் படங்களும் இந்நூற்றுண்டுக் கேற்ற முறையில் இவ்வெளி யீட்டில் சேர்க்கப் பெற்றுள்ளன. திருமுறை யாராய்ச்சியில் தலைசிறந்து விளங்கிய காலஞ்சென்ற **கயப்பாக்கம்-சதாசிவ செட்டியார், பி. ஏ.** அவர்களது குறிப்புரைகளும் இடையிடையே தரப்பெற்றுள்ளன.

பெரிய புராணத்தை ஒரு சமய நூலாகமட்டும் கொள்ளாது ஒரு சிறந்த தமிழ்க் காவிய நூலாகக் கொண்டு காவியச் சுவை நிரம்பிய பகுதிகளை இவ்வுரையாசிரியர் செம்மையாக விளக்கியுள்ளது மிகவும் விரும்பத்தக்க முறையேயாம். இந்நூலிற் பொதிந்து கிடக்கும் சாத்திரக் கருத்துக்கள் பல, உந்தி களிறு உயர்போதம் சித்தி முதலிய சிறந்த சாத்திர மேற்கோள்களோடு விளக்கப் பெற்றுள்ளன.

தமிழிலும் சைவத்திலும் பற்றுடைய ஒவ்வொருவரும் இவ்வுரை வெளியீட்டை வாங்கிப் பயன் பெறுக. இப்பெரும் பணி முட்டின்றி முடிதற்குரிய எல்லா நலங்களை யும் திரு. முதலியாரவர்கட்கு முழுமுதற் கடவுள் அளிப்பாராக.

"ஞானசித்தி"

இலங்கை—யுவ௵ புரட்டாசி௴ 15௳ - 1935௵ அக்டோபர்௴ 1௳

பெரியபுராண மூலமும் உரையும் - முதற் சஞ்சிகை:—கோவைத் தமிழ்ச் சங்கத்தா ரிடமிருந்து உரையுடன் கூடிய பெரிய புராண முதற் சஞ்சிகை யொன்று மதிப்பு ரைக்காக நமது பார்வைக்கு வந்திருக்கிறது. அதனை நாம் ஆங்காங்குப் பன்முறை படித்துப் பார்த்தோம். அது நமக்கு மிகவும்மகிழ்ச்சியை விளைவித்தது.

சைவ சமயத்திற்குப் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்னும் மூன்றும் மூன்று கண்களென்று டறுப. அத்தகைய மூன்றனுள் ஒன்றாகிய பெரிய புராணத்திற்கு உரை காணும் தகுதியெல்லாருக்கும் இயைவதன்று.

சைவ சமய நூல்களுள் தலைசிறந்து விளங்கும் பெரிய புராணமென்னும் அருட் காவியத்திற்குப் பல்வகை நயமும் ஒருங்கமைந்த உரையொன்று வைதிக சைவ நன் மக்களுக்கு வேண்டற்பாலதேயாம்.

சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினரும், வழக்கறிஞரும் ஆகிய திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ., அவர்களால் மூலபாடத்தை எடுத்து முதலிறுதிகளை அனுவதித்துக் கொண்டு பொழிப்புத் திரட்டியும், பின்னர்ப் பதசாரத்தை விளக்கியும், எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கூறியும், தேவார திருவாசகங்களிலும் பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் திருக்குறள் கம்ப ராமாயண முதலிய நூல்களிலும் மேற்கோள் எடுத்துக் காட்டிப் பொருள் நிச்சயஞ் செய்தும் எழுதப்பட்டிருக்கும் இவ்வரிய பெரிய ஆராய்ச்சியுரை கற்போர்க்குப் பெரிதும் பயன் தருமென்று கூறுவது சிறிதும் மிகையாகாது.

மேற்றிசைக் கல்விமான்கள் வரம்பு கடந்து பழைய வைதிக சைவக் கொள்கைக்கு மாறாக இந்நாளில் எழுதிவரும் வியாசங்களைப் படித்து மன நிலை தடுமாறி வரும் இக்கால மக்களுக்கு இவ்வுரை பெரிதும் பயன்படுமென்று நினைக்கின்றோம்

"செந்தமிழ்ச் செல்வி"

(யுவஹு வைகாசிமீ)

சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினரும், கோவைத் தமிழ்ச்சங்கத் துணைத் தலைவரும், வழக்கறிஞருமாகிய சைவத் திருவாளர் - C. K. சுப்பிரமணிய முதலியார், B. A. அவர்கள் தாம் நெடுங்கால முயன்று அரிதிற் சேர்த்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும், தலக் குறிப்புக்களுடனும், வரலாற்றுக் குறிப்புக்களுடனும், பல படங்களுடனும் கண்ணைக் கவரும் வகையில் ஒரு விரிவாராய்ச்சியுரை எழுதிச் சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிட முன்வந்ததைக் கண்டு களிபேருவகை யெய்துகிறோம். முதற்சஞ்சிகை எதிர்பார்த்த அளவிற்கு மேலாகப் பல அரிய பெரிய உண்மைக் குறிப்புக்களையுட் கொண்டிருத்தலினாலே இவ்வுரை மற்றிதுகாறும் வெளிவந்துள்ள உரைகள் பலவற்றினும் மேம்பட்டதாய் விளங்கும் எனத் துணிந்து கூறலாம்......................சிறந்த இவ்வுரை வெளிவருவதற்குப் பலவாற்றானும் துணைபுரியும் கோவைத் தமிழ்ச் சங்கத்தார் திருப்பணி பெரிதும் பாராட்டற் குரித்தாம்.

" இந்துசாதனம் "

(இலங்கை—யுவஹு புரட்டாசிமீ 16௳)

பெரிய புராணமென்னுந் திருத்தொண்டர் புராணம்:—சென்னைச் சர்வகலா சங்க அங்கத்தினரும், அதன் கலைக்குழு உறுப்பினரும், கோவைத் தமிழ்ச்சங்க உதவித் தலைவருமாய சைவத்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்கள் சைவ சமயத்திற் கொண்டுள்ள அபிமானங் காரணமாக, மேற்புராணத்தை ஆங்காங்கு வேண்டிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும், தலக்குறிப்புக்களுடனும், இன்னும் பல அரிய விஷயங்களுடனும் வெளியிட்டுள்ளார். ஆரிருள் வாய்ப்பட்டு அவஸ்தைப்படும் சைவசமயிகட்கு ஒரு விளக்கொளி கிடைத்தன்னவாய் முதலியாரவர்கள் செய்துவரும் திருத்தொண்டு பெரிதும் பாராட்டப்படத்தக்கதொன்றாம். சைவ சித்தாந்த உண்மைகளையும், கருத்துக்களையும் எடுத்துக்காட்டிச் செல்லும் ஒழுங்கு படிக்கப்படிக்கத் தெவிட்டா இன்பந் தருகின்றது. சைவசமயச் சரிதைகளை எம்மனோர்க்கு எடுத்துக்காட்டுவது பெரியபுராணமொன்றே. இத்தகைய புராணத்தைத் தக்கமுறையில் படிப்போர் மனதிற் பதியும் வண்ணம் உரையெழுதிய இவ்வாசிரியர்க்குச் சைவமக்களாகிய நாமெல்லாரும் பெரிதுங் கடப்பாடுடையேமாவேம். பொற்பூவுக்கு நாற்றமுடைத்தன்னவாய் நல்ல காகிதத்தில் அழகாகக் கண்ணைக் கவரும் பான்மையதாய் அச்சிடப்பெற்றிருக்கிறது.

சிவப்பிரம்மஸ்ரீ. G. சிவசுப்ரமண்யக் குருக்கள் அவர்கள்.
காரியதரிசி, சொர்ணாம்பிகா சைவ சித்தாந்த சபை, சேலம்.

ஆ சி யு ரை

கோவையம் பதியிற் பேரூர்க் கோகட ராசன் கோயிற்
சேவைசெய் தடிப ணிந்த செந்தமிழ்க் கந்த சாமிப்
பூவையின் வயிற்று தித்த புதல்வனற் சுப்ர மண்யன்
சேவையர் சேக்கி ழாரின் திருமுறைக் குரைசொற் றனன்.

உரைநடைப் பொருட்க ருத்தின் உண்மையை விளக்கு மிந்நூல்
திரைகடல் சூழ வெங்குஞ் சிறப்புற விளங்கப் பெம்மான்
நரைபிணி மயக்க றுத்து நன்மனம் பொலிய வன்னோன்
கரையிலாப் புவியி னென்றுங் கனிவுரை நிகழ்த்தி வாழ்க.

நம் கிளிவனநாதன் ஆதிரைத் திருநடங் கண்டபோழ்து மலர் சிலம்படி வாழ்த்தி - வணங்கிப் - பெற்ற திருவருட்டிருநீறு இத்துடன் அனுப்பப் பெற்றுளது. அணிந்து அமலன் அருளால் விரைவிற் "பெரியபுராண உரை வெளியீட்டுப் பணி" நிறை வேற்றிப் பேரானந்தப் பெருவாழ்வு அருளி அன்பின்வழி நிற்பீர் ஆகுக.

உரைச் சிறப்பு—வரிசை 149-வது சுந்தரமூர்த்தி சுவாமியின் திருஅவதாரச் செய்யுளுக்கு உரை கண்டருளும்போது ஆதிசைவ மரபின் பெருமையையும் நிலைமை யையும் குறிப்பிட்டு எங்கள் சமூகத்திற்கே ஊக்கத்தையும், அன்பர்கள் பலர்க்கும் ஆதி சைவரிடத்துப் பற்றும் கருணையும் நிரம்பும் ஏதுவையும் உதவியதுபோல அனேக நல்லறிவுச் சுடரொளிகள் இவ்வுரையில் வீசுகின்றன. வரிசை 407-வது செய்யுளில் இயற்பகைக்கு அருள் புரிந்தவிடத்து 'அம்மையார் திரோத சத்தியாய் நின்று அருட் சத்தியின் தொழிலியற்றினர்' எனும் சிவாகமக் கருத்து நுமது பேருரையில் மிளிர் வது கண்டு மகிழ்ந்தனன். பற்பல விசேட உரைகளும் இதில் இலங்குகின்றன. காலத் திற்கேற்ப மக்களின் ஐயம் நீக்கி நல்லுணர்வு தரும் பொன்மொழிகள் நிறைந்து திகழ் கின்றன.

ஆசி—இவ்வரிய உரை நூலை உலகிற்கு உதவிவரும் பெருந்தகைமைக்கு எம்மா லாய உதவி இறைவன் எங்குருநாதன் ஞானஸ்கந்தன் திருவடியிணைபற்றித் தங்கட்கு நிறையாயுளும், நோயற்ற வாழ்வும், தளரா நன்மனமும், மறவா அன்பும் நிறைந்து தாங்கள் நீடூழி வாழ நல்லாசி பகர்ந்தனம்.

வேண்டுகோள்—நமது ஆதிசைவ மரபினர் அனைவரும் இவ்வுரைநூலைப் பெற்று வாசிப்பதால் தமிழ் - திருமுறை - சித்தாந்தம் - வேதாகம நுண்பொருள் முதலியவை களைச் சுலபமாக அறிந்துகொள்ள இவ்வுரை ஓர் திறவுகோலாக உதவும். ஆதலின் ஒவ்வொருவரும் இவ்வுரைநூலைப் பெற்றுக் கற்றுணர்ந்து ஆர்வமிகு மன்பினராய் முப்போதும் அர்ச்சித்து ஆலாலசுந்தரர், நம்பியாண்டார் நம்பி, அருணந்திசிவம், முதலிய நமது பரமாசாரியர்களின் அருளைக் கடைப்பிடித்து உய்ய வேண்டுகின்றேன். சிவாலய தருமபரிபாலகர்கள் தங்கள் பார்வையில் வாங்கிவைத்தும், பாராயணம் செய் வித்தும், பூசித்தும், ஆலய தத்துவங்களை அன்பர்களுக்கு உணர்த்தி வைக்க முன்வரு வார்களென்றும் கோருகிறேன். பல வழிகளிலும் இவ்வுரை நூலைப் பரவச் செய்வது சைவர்களது கடமை.

மகாமகோபாத்யாய, தாட்சிணாத்ய கலாநிதி

பிரம்மஸ்ரீ டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்.

சொற்பொருட் சுவை மலிந்த நூலாகிய பெரிய புராணத்தைப் பலர் பல வருஷங்களாக ஆராய்ந்து குறிப்புரையும் விரிவுரையும் எழுதிப் பகுதிகளாகவும், முழுப் புத்தகமாகவும் வெளியிட்டிருக்கின்றனர். கோயம்புத்தூர் வழக்கறிஞராகவுள்ள ம-௱-௱-ஸ்ரீ ஸி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள், விரிவான உரையுடன் வெளியிட்டு வரும் பெரியபுராணச் சஞ்சிகைகள் சிலவற்றைப் படித்துப் பார்த்தேன். இவ்வுரை முதலியார் அவர்களுடைய ஆராய்ச்சித் திறனையும், கல்வி யாற்றலையும் நன்றாக விளக்குகின்றது.

தல சம்பந்தமான செய்திகளும், வேறு நூற் கருத்துக்களும், மேற்கோள்களும், சாஸனப் பகுதிகளும், படங்களும் இவ்வுரையில் உரிய இடங்களில் மிகநன்றாக அமைந்துள்ளன. இவ்வளவு உழைத்து எழுதப்பட்ட உரை இந்நூலுக்கு இதுகாறும் இல்லை. இவ்வுரையைப் படிப்பவர்களுக்குப் பல அருமையான செய்திகள் விளங்கும்.

முதலியாரவர்களுடைய நன்முயற்சி அவர்களுக்குப் புகழ் புண்ணியங்களை யளிக்குமென்பதில் ஐயமில்லை.

திருவாளர் - பண்டிதமணி - மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர், அண்ணாமலைநகர்.

தாங்கள் அரிதின் ஆராய்ந்து இயற்றிய பெரியபுராண உரைப் பகுதிகளை ஆங்காங்குப் படித்துப் பார்த்தேன். என் உள்ளத்தை மிகவும் இன்புறுத்தின. இதுவரை வெளிப்பட்ட உரைகளுள் இது சிறந்ததாகும் என்பதற்குப் பல சான்றுகளுள்ளன. முதலிற் பொழிப்பாகத்திரட்டியும், பின்னர்ச் சொற்பொருணயங்களைத் தனித்தனியே எடுத்து விளக்கியும், சைவ சித்தாந்தக் கருத்துக்களை உரிய இடங்களில் இயைத்துக் காட்டியும் செல்லும் உரைநடை ஒழுங்கு பயில்வார்க்குப் பெரிதும் உபகாரமாகும். சைவசமய சரிதத் தலைநூல் பெரியபுராணமாகும். அதற்கு உரைகாணும் தகுதி பலவகையிலும் தங்களுக்கு உள்ளதென்பதை இத்தமிழ்நாடு நன்கு அறியும். ஷை சஞ்சிகையின் பதிப்பு அழகு கண்ணைக் கவர்கின்றது. இங்ஙனம் உள்ளுறைப் பொருளும் புற அமைப்பும் ஒருங்கு சிறந்து விளங்கும் தங்கள் உரை வெளியீடு தமிழ் நிலத்தார்க்கு இவ்வமயம் இன்றியமையாததாகும்.

திருவாளர் - T. B. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள், M.A., B.L.,

சில்லாக்கல்வி அதிபர், தென்னாற்காடு.

"......It is a most meritorious work"

திருவாளர் - பண்டிதர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

தாங்கள் அரிதின் ஆராய்ந்தறிந்து திரட்டி வெளியிடும் அரும்பொருள்களைச் சுவைத்துப் பயனுறுதற்கு இன்னும் பருவம் வரப் பெறுதேனாயுள்ளேன் என்பதனை நாணத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. எனினும் சின்னாளில் அவற்றைப் பெரிதும் துய்த்து மகிழுவேன் என நம்பியுள்ளேன். இங்ஙனம் பொருள் நுட்பங்களை இன்னுஞ் சுவைத்திலேனாயினும் வெளியீட்டிற் காணப்படும் பலவகைச் சிறப்புக்களையும் அவற்றிற்கான தங்கள் அருமுயற்சிகளையும் அறிந்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றேன். வெளியீட்டில் வந்துகொண்டிருக்கும் படங்கள் சரித்திரங்களின் உண்மைத் தன்மையை விளக்கி யாவர்க்கும் புதிய உணர்ச்சியை எழுப்புவனவாமென்று துணிகின்றேன்.

திருவாளர். ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T.,

சென்னை நகராண்மைக் கழகம், கல்வி இலாக்காத் தலைவர்.

உலகெலாமுணர்ந் தோதற்கரிய ஒருத்தனது திருத்தொண்டரியல்பை உள்ளவாறு உணர்ந்து இனி தெடுத்தோதல் தெய்வச் சேக்கிழார்க் கல்லது தேவர்க்கும் அரிது என்ப. அங்ஙனம் அவர் விரித்தோதிய திருத்தொண்டர் புராணத்திற் செம்பாகமாய்ப் பலர்க்கும் புலப்படும் பொருள்கள்தாமே அளவிலாத பெருமையும், மக்களை ஒளி நெறியிற் செலுத்தும் ஆற்றலும் உடையன. மற்றும் அத்தனிப் பெருநூலிற் செறிந்து கிடக்கும் விழுமிய சொற்பொருள்களின் திட்ப நுட்பங்கள் பல. ஆன்றோர் எடுத்துக் காட்டி உபகரித்தாலன்றி, அவை பெரும்பாலார் அறிவிற்கு எட்டக் கூடியன வல்ல. ஆதலின் எளிமையும் அருமையும் ஒருங்கு படைத்த இப்பெரிய புராணத்திற்கு அறிஞர்கள் உரை அவசியமாகும்.

இவ்வாறு இந்நூற்கு இதுவரையிற் பலவகை உரைகண்டுதவினோர் சுமார் எண்மராவர். அவருரைகளுள் ஒரு சிலவே அகலவுரையா யமைந்தவை; பிறவெல்லாம் குறிப்புரைகளாகும். இதுபோழ்து, சைவத் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வெளியிட்டு வரும் பரந்த உரையானது, முன்னே வெளிவந்துள்ள உரைகளின் நலங்களனைத்தையும் தன்பாற் கொண்டிலங்குகின்றது. அதனோடு, அவற்றிற் காணப்பெறாத வேறு பல நயங்களையும், சரித்திரக் குறிப்புக்கள், புராண வரலாற்றுத் தொடர்புள்ள படங்கள், தலவிசேடங்கள், தேவாராதி அருட்பாக்களின் நுணுக்கங்கள், சைவ சம்பிரதாய மேன்மைகள் முதலிய அரிய பொருள்களையும் வழங்கும் அருள்சேர் அறிவுக் களஞ்சியமாய் உள்ளது. அன்றியும், இவ்வுரையாசிரியர், பெரிய புராணங் காட்டும் பெருங் குறிக்கோளையும், அதனை அடைதற் கமைந்த அறத்தாற்றின் உயர்வையும் ஒரு புறமும், தற்கால வாழ்விற் காணும் சிறு குறிக்கோளையும் அதை நோக்கிச் செல்லும் மறத்தாற்றின் இழிவையும் மற்றொரு புறமுமாக ஆங்காங்கு எடுத்துக் காட்டிச் செல்கின்றார். இதனால், "புலனோடு தியங்கும் பொய்யுளங் கடந்த"வன் முதல்வன் என்பதும், மக்கள் "ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழலாதே, வான் நோக்கும் வழி" நிற்றலே மாண்பாம் என்பதும் மனத்தில் நன்றாய்ப் பதிகின்றன.

செந்தமிழறிவிலும், சிவபத்தியிலும் சிறந்து விளங்கும் திருவாளர் முதலியாரவர்கள் பெரிய புராணத்தைப் பல ஆண்டுகளாகச் சமயக் கண்ணுஞ் சாத்திரக் கண்ணுங் கொண்டு பேரன்புடனும் பயபத்தியுடனும் தாமே பன்முறை ஆராய்ந்து வந்துள்ளார்கள். அதனோடு சைவத் திருவாளர் - க. சதாசிவ செட்டியாரவர்கள் போன்ற திருமுறையாராய்ச்சி வல்ல பெருமக்களோடு அளவளாவிப் பெற்ற அரிய நுட்பங்களைக் கேட்டுச் சேமித்து வைத்துள்ளார்கள். இவற்றின் பயனாகக் கிடைத்த நுண்பொருள்களை யெல்லாம் "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் சைவ நன்னெறி கடைப்பிடித்து நம்மனோர்க்கு இப்பதிப்பின் வாயிலாக வழங்கி வருகின்றார்கள்.

தமிழ்ப் பெருநூலாகிய இதன் வெளியீட்டிற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஆதரவளித்திருப்பது அவர்கட்கு அழகு செய்வ தொன்றாம். பெறுதற்கரிய பெருநிதியாய் விளங்கும் இப்பெரியபுராணப் பதிப்பைப் பொதுவாகத் தமிழன்பர் அனைவரும், சிறப்பாகச் சைவ நல்லோரும் விரும்பிப் பெற்றுப் பயனடைதல் அவர்கட்குரிய கடமையாகும்.

சிவமயம்

சிறப்புப்பாயிரம்

சென்னை. திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் இயற்றியது.

மணிநீர் வரைப்பின் மன்னிய மக்கள்
மணிமுடி யிந்திரன் மாலயன் முதலாந்
தேவரு மறியாத் திருவுரு வுடையோன்
எவருந் தெளிய வெழிலுருக் கொள்வோன்
கறையணி கண்டமுங் கவின்பெறு மேனியும்
நிறையணி பொடியும் நேர்மையாக் கொண்டோன்
அவன்றனைச் சிவனென வரனென வன்பொடு
பவமறு புண்ணியர் பாடும் பான்மையர்
"கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கி"ய
பல்வகை யடியார் பரந்த புகழ்தனைச்
சில்வகைச் செய்யுளிற் செவ்விதி னுரைப்பது
நன்னா டெனப்படுந் தொண்டை நாட்டினிற்
குன்றைப் பதிவாழ் கோதிலாச் செம்மல்
சேவுகைத் தேறிடுஞ் செல்வனை நினைவோன்
சேக்கிழா ரென்னுஞ் சிறந்த புகழோன்
அவநெறி புகாம லநபாய வேந்தனைச்
சிவநெறி படரச் செந்நெறிப் புகுத்திய
பெருமை சான்ற **பெரிய புராண**மென்
றரும்பொருள் திரட்டி யடியவர்க் கருளுந்
தன்னே ரில்லாப் பொற்கிழி தனக்குத்
தொன்னூற் றுறைபோஞ் செந்நாப் புலவர்
விரிவுரை குறிப்புரை வகுத்தனர் பலரே ;
விரிவுரை தம்முள் விளங்கிய பொருளொடு
பின்னோர் வேண்டும் விகற்ப மனைத்தும்
தொன்முறை வழாது தொகுத்தும் விரித்தும்
ஆய்ந்துற நோக்கி யழகுற வமைத்து
எய்ந்துள பொருளெலா மெளிதிற் றெளியத்
தருகென வகுத்தனன் தாவில்சீர்ப் பயனைத்
தருவென வளிக்குந் தன்மை வளமிகு
கொண்மூ வுறங்குங் கோவை தன்னுள்
வண்டமிழ் வளர்த்த வேளாண் டலைவன்
கந்த னீன்ற காதற் றனயன் ;
பந்த நீக்கு பனுவல்கள் பன்முறை
திருச்சிற் றம்பலத் திருத்தகு குரவன்

திருவடிச் சார்ந்து திருந்த வோதினோன் ;
சைவம் மிகுத்த **சதாசிவத்** தோன்றல்
பௌவப் பிறவிப் பரிபவம் போக்க
மொழிந்த பொருளை முறையோ டுணர்ந்தோன் ;
ஏனைய கலைகளோ டாங்கில முணர்ந்தோன் ;
வழக்கு நெறியை வளமொடு பயின்று
ஒழுக்க நெறியினி லுறைப்புட னிற்போன் ;
கனிந்த மனமுடன் கண்கணீர் மல்கத்
தொனிப்பொருள் பலவொடு தொண்டர்தங் காதை
காதலிற் கசிந்து கழறிடுங் கருத்தன் ;
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாகிய
நாத னுமை நயப்புற நவில்வோன் ;
ஓது மறையினு மொளிதிகழ் திருமுறை
நாளு மோதிடும் நற்றவ ; னன்பினால்
மெய்த்த ழைந்து விதிர்ப்புறு சிந்தையார்,
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினர்,
இத்திறத் தவரன் றியும்மே தக்க
சீலமு நோன்புஞ் செறிவு மோங்கிடும்
முத்துக் கற்பக முனிவ ருணர்த்திய
வித்தகப் பூசை விறலுடன் புரிவோன் ;
பேரூ ருறைவான் பட்டிப் பெருமான்
தேரூர் சிறப்பிற் சிறப்புகள் செய்வோன் ;
பத்தர்சீர் பரவும் பண்பன்
மெய்த்தவன் **சுப்பிர மணியன்** றானே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முகவுரைக்கு முன்னுரை

முகவுரை யென்பது நூலுக்கு முன்னே இருக்கும் பகுதியாம். ஆனால் அதைப் பெரும்பாலும் நூல் முடிந்தபின் கடைசியில்தான் எழுதுவார்கள். கடைசியில் எழுதி முன்னே வைப்பார்கள். அது போலவே நானும் இவ்வுரைக்கு ஒரு முகவுரை எழுத எண்ணியுள்ளேன். எனது உரைப்பதிப்பு இப்போதுதான் தொடங்குகிறது. இஃது இறைவனருளால் நிறைவேறுமானால் அதற்கு ஒன்றிரண்டு ஆண்டுகள் செல்லும். அதன் பிறகு தானே முகவுரை நான் எழுதவேண்டி வரும். ஆனால் இது வெளியிடத் தொடங்கும் இப்போது ஒரு முகவுரையு மில்லாமல் வெளியிட நான் விரும்பவில்லை. ஆதலின் பின்னே எழுதும் முகவுரை எப்படியோ இறைவன் அருள்வழி வருவது வருக. இப்போதைக்கு இதனை அந்த முகவுரைக்கு முன்னுரையாக வைத்துக் கொள்ளுமாறு அன்பர்களை வேண்டுவன்.

பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்துக்குக் குறிப்புக்களுடன் ஒரு பதிப்பு வெளியிடலாம் என்ற எண்ணம் மூன்று நான்கு ஆண்டுகளாக என்னுள் எழுந்து நின்றது. உரிய படங்களும் தேவாரக் குறிப்புக்களும் பழய ஏட்டுப் பிரதிகளிற் கண்ட பாடபேதங்களும் அதில் வெளிவர வேண்டுமென்றும் விரும்பினேன். ஆனால் இப்போது என் செயல் எனக்கே நகையினை நிறுத்துகின்றது புராணத்தின் அளவு கடந்த பெருமைக்கும், எனது அளவு கடந்த சிறுமைக்கும் எத்தனை தூரம் என்று. ஆயினும் அந்த ஆசை என்னைவிட வில்லை. ஆசை அச்சத்தை விழுங்கி மேலெழுந்தது.

பெரிய புராணத்திலே எனது இளமை முதல் எனையறியாமல் ஒரு விருப்பம் உண்டாகி வளர்ந்து வந்தது. 1894-ம் ஆண்டில் எனது ஆசிரியராகிய **பண்டிதர் ஸ்ரீமத் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை**யவர்களை அடுத்து நான் தமிழ் பயிலத் தொடங்கினேன். அவர் எனக்குத் தாயினு மினியர். தமிழ் அமுதினை எனது கீழ்த்தரமறிந்து அதற்குத் தக்கபடி செவ்விதி னூட்டுவர். அவர் இவ்வுலகை நீத்து இறைவன் திருவடியடைந்த 1906-ம் ஆண்டுவரை அவரது பாதசேவையும் நல்லுபதேசப் பயனும் பெற்றேன். பெரிய புராணத்திலும் சிற்சில பாட்டுக்கள் மட்டும் எனக்கு அவர்கள் பாடஞ் சொன்னதுண்டு. பள்ளிச் சிறுவனும் பக்குவமுடையே னாதலின் முறையாகவோ முழுதுமோ பாடங் கேட்கப் பெற்றேனில்லை. நானும் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை. ஆனால் அப்போதே பெரிய புராணத்திலே பெரிய விருப்பத்தை மட்டும் அவர்கள் என் மனத்திலே புகுத்திவிட்டார்கள். "பெரிய புராணத்தை மற்ற தமிழ் இலக்கியங்கள் புராணங்கள் முதலியவற்றோடு ஒன்றாக நீ நினையாதே. அதன் பெருமை மிகப் பெரிது. உலக நிலையில் அறியத்தக்க சிறிய பொருள்கள்முதல் முத்தி நிலையிற் காணும் பெரிய பொருள்கள்வரை எல்லாப் பொருள்களும் இதில் உண்டு. சாப்பிட இலைபோடும் மரபுகூட இதிற் சொல்லியிருப்பது பார் (ஈர்வாய் வலம்பெற மரபின் வைத்தார் - அப்பூதி - 39) என்றெல்லாம் அவர் அவ்வப்போது எனக்கு அங்கங்கே எடுத்துக்காட்டும் சொற்கள் இப்போதும் என் காதிற்குள் ஒலிக்கின்றன. அவர் செய்த சிற்சில அரிய பெரியபுராணப் பிரசங்கங்களையும் நான் உடனிருந்து கேட்கும் பேறும் பெற்றேன். இராமாயணத்தில் வல்ல பிரசங்கியாராகிய சேலம் வித்வான் திரு. சரவணபிள்ளை என்பவர் அவரது நண்பர். அவர் ஒருநாள் எனது ஆசிரியர் வீட்டில் கம்பராமாயணம் - குகப்படலம் - பிரசங்கம் செய்தார். அதில் "வந்தெதிரே

தொழுதானை", "கங்கை யிருகரை யுடையான்" என்ற பாட்டுக்களுக்கு அனேகம் உரைகள் எடுத்துப் பொருந்தச் சொல்லி அழகாக உபந்நியசித்தார். அது என் மனதைக் கவர்ந்தது. அதுபற்றி நான் எனது ஆசிரியரிடம் கூறினேன். அதற்கு அவர் "இதைவிட மிக அதிகமாகப் பெரியபுராணப் பாடல்களிலே எங்கும் சிறந்த அழகான பொருள்கள் பல கிடைக்கும். நான் சொல்கிறேன் பார்" என்று ஒருநாள் நண்பர் ஒருவர் வீட்டில் இயற்பகை நாயனுர் புராணம் பிரசங்கம் செய்யும்போது 15-ம் பாட்டில் "பழிவிட நீபோ" என்ற இடத்தில் அனேகம் பொருள்களைப் பொருந்த எடுத்துச் சொல்லி அருமையாகப் பிரசங்கித்தார். அதில் நாயனுருக்கும், அவர் குடிக்கும், மனைவியாருக்கும், மனைவியார் குடிக்கும், சுற்றத்தார்க்கும், அவர் குடிமரபினுக்கும், அந்நாட்டுக்கும், அவர் செய்துவந்த அறத்திற்குமாகப் பல்வகையானும் வந்து ஏறக்கூடிய பழிகளையெல்லாம் எடுத்துப் பொருத்திக்காட்டி ஒவ்வொன்ருய்ப்பேசினுர். அதுமுதல் பின்னும் எனக்கு இப்புராணத்தில் மேலும் மேலும் ஆசை அதிகரித்து வந்தது. இவ்வாறு அவர் ஏதோ நான் பாடங் கேட்டுக்கொண்ட காலத்திலேயே காட்டிப்போந்த இடங்கள் பலவுண்டு. அவர் திருவாரூர்ச்சிறப்பு, இளையான்குடிமாற நாயனுர் புராணம்,மெய்ப்பொருள் நாயனுர் புராணம் முதலிய சில சரிதங்களை முறையாகப் பேசிச் சொற்பொழிவாற்றின காலத்துக் கூடஇருந்து கேட்கப்பெற்ற புண்ணியத்தால் இப்புராணத்திலே எனது ஆசை மேலும் வளர்வதாயிற்று. அவ்வாறு கேட்ட அருமைப்பாடுகளை முறைப்பட எழுதிச் சேமித்து வைத்தேனில்லையே யென்று பலகாலும் வருந்தியது முண்டு. சற்றேறக்குறைய 1894-ம் ஆண்டுமுதல் அதாவது இற்றைக்கு நாற்பத்திரண்டு ஆண்டுகளாக இப்புராணத்தை இடையிடையேயும், அதிலும் சென்ற இருபதாண்டுகளாய் முறையாய் ஆண்டிற் கொருமுறையும் வாசிக்கும் நல்லூழ்பெற்றேன். 1894-ம் ஆண்டு முதல் 1906 வரை ஒரு **பனிரண்டாண்டுகள்** எனது ஆசிரியரின்கீழ் நின்று இப்புராணத்தினுள் மேற்கண்டவாறு அங்கங்குப் போதனை பெற்றகாலமெனப்பேன்.

எனது ஆசிரியர் இறைவனது திருவடிநீழலை யடைந்தபின்னர் எனக்கு இப்புராணத்தைப் போதிக்கவல்ல பெரியார் அனேகமாகக் கிடைக்காமலே ஒரு **பன்னிரண்டு ஆண்டுகள்** கழிந்தன. அக்காலத்தும் இதனைப் பயில்வதை நான் விடவில்லை. எனக்கும் ஏதோ தெரியுமென்று நினைத்துப் பல நண்பர்கள் பல சபைகளுக்கு என்னைக் கூப்பிடும்போதெல்லாம் இப்புராணத்துப் பொருள்களையே சென்ற சென்ற இடங்களிலெல்லாம் பேசுவேன். பிறரையும் அவற்றையே பேசும்படியும் வேண்டுவேன். இவ்வாறு மேலும் பன்னிரண்டு வருடங்கள் கழிந்தன.கழியவே எனது அதிர்ஷ்டவசத்தால் எங்கள் நாட்டில் சைவப் பயிர்வளர்க்கும் ஒரு வெண்முகிலை இறைவன் கொடுத்து அருளினுர். அந்தமுகில் சைவத் **திருவாளர். கயப்பாக்கம். சதாசிவச் செட்டியார், பி. ஏ.** அவர்களே யாவர். அவர்கள் 1918 ம் வருடத்தில் பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைவராய் வந்தார்கள். அவரது பிரசங்க மழையினுல், எங்கள் நாட்டிலே முன்னர் வாடியிருந்த சைவப் பயிர் சிறிது சிறிதாய்த் தழைத்தது. அவர்களைப் பெரியபுராணத்தைத் தினந்தோறும் முறையாய்ச் சொல்லிப் பிரசங்கிக்கும்படி பல பெரியார்கள் வேண்டிக்கொண்டனர். அதற்கிணங்கி அவர்கள் 1919 முதல் (சிற்சில இடையீடுகளிடையே) நாடோறும் பிரசங்கித்துவந்தார்கள். 1922ஞு அக்டோபர்மீ 11உ புராணப் பிரசங்கம் இனிது நிறைவேறிற்று. நிறைவேற்று விழாவன்று பெரியபுராண ஏட்டையும் மற்ற 11 சைவத் தெய்வத் திருமுறைகளையும் யானையின்மேல் வைத்து நகர்வலம் செய்வித்துப் பல பெரியார்கள் பெருவிழாக் கொண்டாடிச் சிறப்புச் செய்தார்கள். அந்த நன்முயற்சியில் புராணப் பிரசங்கநாட்களிலெல்லாம் எனக்கு ஒரு பெரிய திருப்பணி கிடைத்தது. அஃதாவது அவர்கள் பிரசங்கத்திற்கு தினமும் நானே கையேடு வாசிப்பதாம். அப்போது அவர்களது அருமையான பிரசங்கங்களில் எனக்கு அரு

மைப்பாடாய்த் தோன்றிய சில குறிப்புக்களைக் குறித்துவைக்கவேண்டுமென்று ஒரு விருப்பம் யாதுகாரணம்பற்றியோ எனக்கு உண்டாகியது. பிரசங்கம் நிகழும்போதே காகிதத் துண்டுகள் வைத்துக்கொண்டு அவர் சொல்லும் அரிய பெரிய குறிப்புக்களை என் சிறிய மனங்கொண்டவளவு குறித்துவந்தேன். அவர்கள் அவ்வப்போது புராணத்திலிருந்து எடுத்து எடுத்து எங்களுக்கு இடித்திடித்துச் சொன்ன புத்திமதிகள் என்னுள்ளே இன்னும் தொனித்துக்கொண்டிருக்கின்றன. எனவே, இங்குக் கூறியவற்றால் சேக்கிழார் சுவாமிகளிடத்தே எனக்கு உளதாகிய ஆசையும் நேசமும் வளர்ந்த வகைகளைக் கூறினேனன்றி வேறில்லை. "உன்பழவடியார் கூட்டம், அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே" என்றபடி எழுந்த இவ்வாசையினையே பற்றுக்கோடாகக் கொண்டு அதிலே பத்தியும் வளர்வதாயிற்று. ஆனால் எனது சிற்றறிவாகிய கொள்கலனானது அந்த அரிய பெரியபுராணமாகிய பேரமுதப் பெருங்கடலிலே தன் சிறிய அளவிலே அமைந்தமட்டும் கொள்வதன்றி வேறென் செய்யவல்லது? பெரியபுராணத்தின் பெருமைகளை ஒன்றும் அறிந்தேனில்லை என்று சொல்ல மட்டும் எனது மனம் துணிகின்றதே யன்றி எதையாவது அறிந்தேன் என்ற துணிபு உண்டாகின்றதில்லை. என்? "அறிதோ றறியாமை கண்டற்று" என்றபடி படிக்குந்தோறுங் கேட்குந்தோறும் புதிது புதிதாய்த் தோன்றும் கருத்துக்களின் பெருமையாலே இவை முன் நாம் அறியவில்லையே யென்ற தோற்றமே உண்டாகின்றதாகலின். அப்போதும் இவ்வாறு ஓர் உரை எழுதவேண்டுமென்னும் எண்ணம் எனக்குத் தோன்றவேயில்லை. ஆனால் அந்தக் குறிப்புக்களை மட்டும் சேமித்து வைத்திருந்தேன். அதன்பின் **மற்றோர் பன்னீராண்டுகள் கழிந்தன.** ஆனால் எனது ஆருயிரனைய திரு. செட்டியாரவர்கள் பேருதவியினால் பின்னரும் அதிவிருப்பத்துடன் புராணத்தைப் படித்துவந்தேன். அதைப் பிறர் கேட்க நான் சொல்வதைவிடப் பெரியார் வாயிலாகக் கேட்பதிலேயே அதிக விருப்பமிருந்தது. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் முதலிய பெரியார்களும், பண்டிதமணி திரு. மு. கதிரேசன் செட்டியாரவர்கள், வித்வான் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் முதலிய நுணுகிய ஆராய்ச்சியாளர்களும் இதைப் பேசும்போதெல்லாம் நான் மிக விரும்பிக் கேட்டுப் பயன்பெற்று வந்தேன் என்பதை அப்பெரியார்கள் அறிவார்களோ அறியார்களோ அதை நான் அறியேன். 1930-ம் வருஷத்தில் சென்னைச் சர்வகலா சங்கத்தார் ஆதரவில் சில பிரசங்கங்கள் செய்யுமாறு என்னை அழைத்தனர். அதற்கிணங்கி அவர்களாதரவில் நான் 1930 ஜனவரி 31, பிப்ரவரி 1-3 நாட்களில் சென்னைப் பச்சையப்ப முதலியார் கல்லூரி மண்டபத்தில் "சேக்கிழார்" என்ற தலைப்பில் செய்த 3 நாட் பிரசங்கங்களும் இப்புராணத்தையும் அதன் ஆசிரியரையும் பற்றியனவே. அந்தப் பிரசங்கங்களை அவர்களது உத்தரவு பெற்றுப் புத்தகமாக வெளியிட்ட பின்னரே புராணத்துக்கு ஒரு விளக்க உரை காணவேண்டும் என்னும் எண்ணம் தோன்றிற்று. இலௌகிகத்திலுங்கூட எந்தத் துறையில் மக்கள் நல்வாழ்க்கை வாழவேண்டுமாயினும் அதற்குப் பெரிய புராணமே நன்கு துணை செய்வதாகும் என்ற எண்ணம் எனக்குள் வேரூன்றி வளர்ந்து வருகின்றது. இதனைப் பல துறைகளிலும் எனது 'சேக்கிழார்' என்ற நூலிற் காட்டியுள்ளேன். சில ஆண்டுகளின் முன் சிதம்பரத்தில் ஆனியுத்திரத் திருவிழாவின்போது ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் சைவப்பிரகாச வித்யாசாலையில் சேக்கிழாரைப் பற்றிப் பேசியபோது உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் தெல்லிப்புழை 'புரோக்தர்', திரு. கனகராயர் அவர்கள் நமது நாட்டுக்குச் சுயராச்சியம் வேண்டுமானால் பெரியபுராணத்தை நன்கு படிக்கவேண்டுமென்று சொல்லி என்னுடன் அளவளாவிக் கொண்டிருந்து, அது முதல் என் நண்பராயினர்.

உரை காணும் எண்ணம் தோன்றியது முதற் பல பழைய ஏடுகளைத் தேடிப் பெற்றேன். சிதம்பரத்தில் எனது தீட்சா குருமூர்த்திகளாய் எழுந்தருளிய உலகமூர்த்தி தேசிகர் மடம் ஸ்ரீலஸ்ரீ **கணபதி முத்துக் கற்பகக் குருக்களையா** அவர்கள் தமது திருமடத்தில் பரம்பரையாயிருந்ததொரு மிகப் பழைய ஏட்டுப்பிரதியை மிக அன்புடன் உதவி ஆசி கூறியருளினார்கள். திருவாவடுதுறையில் எனது நண்பரொருவர் இரண்டு பிரதிகள் உதவினர். தருமபுர ஆதீனம் ஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் மிக அன்புடன் ஆசீர்வதித்து ஒரு பழைய பிரதி உபகரித்தார்கள். எனது நண்பர்கள் சாத்தூர் திரு. T. S. கந்தசாமி முதலியார், B. A. அவர்களும், திரு. T. K. சிதம்பரநாத முதலியார், B.A., B.L. அவர்களும், திரு. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L. அவர்களும் தனித்தனிப் பிரதிகள் உதவினார்கள். இன்னும் வேறிடங்களிலிருந்தும் பல பழைய ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன. இவற்றோடு அச்சிடப்பட்ட மூலப் பாடப் பதிப்புக்களும் உரைப்பாடப் பதிப்புக்களும் இவ்வுரைக்குப் பெருந்துணை செய்தன. இவற்றுள் சிதம்பரம், திருவாவடுதுறைப் பிரதிகள் சுத்தமாயும் நல்லாதரவு தருவனவாயுமுள்ளன. திருநெல்வேலிப் பிரதிகளில் சில துணிகரமான இடைச்செருகல்கள் காணப்பெற்றன. அகத்திய முனிவரும் பயந்து சென்று பின் அதினின்றும் மீளாது ஆங்கே வதிகின்ற தமிழ்ப் பெருமை தென்பாண்டிநாட்டுக் குரிமையானதன்றோ? நாட்டுக்கோட்டை நகரச் செட்டியார்களது மரபில் வந்த தமிழ் வல்லுநராகிய ஒரு பெரியார் திரு. **இராமநாத செட்டியார்** என்பார் ஏறக்குறைய 60 ஆண்டுகளின் முன் சிதம்பரத்தில் வாழ்ந்தனர். ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கராகிய ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளையவர்களிடம் பெரியபுராணத்தை முறையாய்க் கற்றுப் பாடங்கேட்பதற்கென்றே இவர் யாழ்ப்பாணஞ் சென்று தங்கிப் பாடங்கேட்டனர் என்பர். இப்புராணம் அவர்கள்பால் பாடங்கேட்ட பல பெரியார்களுள் மேற்குறித்த எனது தீட்சா குருவும், சிதம்பரம் ஸ்ரீ நடராச ஓதுவாரவர்களும் தாங்கள் பாடங் கேட்டபோது குறித்துவைத்த கையெழுத்துக் குறிப்புப் புத்தகம் ஒன்றை இப்போது சிதம்பரத்தில் திருக்கழிப்பாலை ஸ்ரீ பழனியப்ப முதலியார் தேவாரப் பாடசாலை உபாத்தியாயர் **ஸ்ரீ இராமலிங்க ஓதுவார்மூர்த்திகள்** பலநாட் சேமித்துப் போற்றிவைத்திருந்து அன்போடு உதவினார்கள். இவ்வாறு கிடைத்த ஏட்டுப் பிரதிகள் பன்னிரண்டினையும் அன்புடன் மிகுந்த சிரமப்பட்டு ஆராய்ந்து பாடபேத முதலியவற்றைக் குறித்து உதவிய பெரியார் சூரியனார்கோயிலாதீனத்தில் நிருவாண தீட்சை பெற்றவரும் பேரன்பருமாகிய பவானித் தமிழ்ப்பண்டிதர் **திரு. க. குமாரசாமிப் பிள்ளையவர்கள்.** இவ்வாராய்ச்சியாற் பல அரும்பொருள்கள் கிடைத்தன. இடைச்செருகலான பாட்டுக்களை ஒருவாறு நிச்சயிக்க இவை பேருதவியாயின. "துலையெனும் **சலத்தால்—கலத்தால்—இச்ச**ழக்கினின் றேற்றுவார்" (அமர்நீதி நாயனார் புராணம் 41), "இனியமொழி விளம்பி விடை - **கொடுத்தார் - கொண்டார்**" (நரசி. முனை. புரா. 7), வெந்தொழில்வன் **கூற்றுண்ண—விடந் தீண்ட**—(திருமூல. புரா. 11) என்பனபோன்ற பாடபேதங்கள்எவ்வளவு பொருளாழமான உண்மைகளை விளக்கி நிற்கின்றன என்று பாருங்கள்!

பத்தராய்ப் பணிவார் சருக்கத்திலே துதிக்கப் பெற்ற தொகையடியார் பண்புகளை ஒவ்வோர் தொகையடியார்க்கு ஒவ்வோர் பாட்டினாலே புராணம் செய்தமைத்தனர் ஆசிரியர் என்றும் இப்போது அவற்றிற் காணும் மற்றும் பற்பல பாட்டுக்களும் பிறராற் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டன என்றும் ஊகிக்க இடமிருக்கின்றது. ஆயின் இப்பதிப்பிலே நல்லபொருட்பேதமுள்ள சில பாடபேதங்களை மட்டும்குறித்துள்ளேன். பெரியபுராணத்தை நியதியாய்ப் பாராயணஞ் செய்வோர் முறையாகப் படித்து வரும்போது நிறுத்தவும் தொடங்கவும் உள்ள உரிய இடங்களைத் தெரிந்த அளவில் அவ்வப்பாட்டுக்களின் முன் போட்ட * நட்சத்திரக் குறியீடு கொண்டு காட்ட முயன்றுள்ளேன்.

தேவாரப் பாடல் பெற்ற தலங்களைப் பற்றிப் பல பெரியார்கள் பல வரலாறுகள் வெளியிட்டுள்ளார்கள். நாயன்மார்களது அவதார தலங்களில் அவற்றுள் அடங்காதவற்றிற்கு அதுபோல வரலாறு, சென்றடையும் வழி முதலிய விவரங்கள் இதுவரை ஒருவரும் தொகுத்து வெளியிடாதது ஒரு பெருங் குறையேயாம். இதனால் பல தலங்கள் இருக்குமிடமும் தெரியக்கூடவில்லை. சில தலங்கள் ஒன்றோடொன்று மயங்கி யறியப் படுகின்றன. ஒரே பேரால் பல தலங்கள் காணப்படுகின்றன. அங்கங்கு நேரிற் சென்று கண்டும், அறிந்தோரைக் கேட்டும், தலவழக்குக்கள், தலசரிதங்கள், கல்வெட்டுக்கள் முதலிய பலவும் ஆராய்ந்தும் இத்தலங்களை நிச்சயிக்கவேண்டி யிருக்கின்றது. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் மரபினரும், நாயன்மார் தலங்களுக்குச் சென்று சென்று தரிசித்தவரும், நாயன்மார்களிடத்துப் பேரன்பு கொண்டு கலித்துறையந்தாதி முதலியவற்றை அனுபவித்துப் பாராயணஞ் செய்வோருமாகிய தஞ்சாவூர் **முத்து** என்பவர் தந்த தலக்குறிப்புக்கள் எனக்குப் பெருந்துணை செய்தன. மாற நாயனாரது **இளையான்குடி** சோழநாட்டுத் (தஞ்சை சில்லா) திருநள்ளாற்றினை யடுத்துள்ள தலமா? அல்லது பாண்டி நாட்டு (இராமநாதபுரம் சில்லாப்) பரமக்குடியை அடுத்துள்ள தலமா? என்பது இன்னும் ஐயப்பாடேயாய் நின்றது. நாயன்மார் தலக்குறிப்புக்கள் பலவற்றையும், பலவாறு முயன்று சேகரித்த மற்றும் பல பொருள்களையும் அங்கங்குக் குறித்துள்ளேன். ஆங்காங்குப் பொருந்திய தேவாரக் குறிப்புக்களும் அறிந்தவரை தந்துள்ளேன். மேற்கோள்களைப் பெரும்பாலும் சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகள் - பதினான்கு சாத்திரங்கள் - திருக்குறள் - கந்தபுராணம் - திருவிளையாடற் புராணமாதி சைவபுராணங்கள் முதலிய சைவப் பெருநூல்களிலிருந்தே தந்துள்ளேன். வேதத்திற்கு வேதமே பிரமாணம். இந்நூற் கருத்தைப் பொருந்த விளக்குவன தமிழ் வேதமே என்பது எனது துணிபு. வேறு நூற்களின் மேற்கோள்கள் சிறுபான்மையேயாம். இதுபற்றி அறிவோர் குறைகூறார் என்று நம்புகின்றேன்.

கற்பனை என்ற தலைப்பின்கீழ் அவ்வப் புராணங்களினின்றும் நாம் அறிந்து கொள்ளக்கூடிய உண்மைகளாக என் சிறிய அறிவுட்பட்ட குறிப்புக்களைக் குறித்துள்ளேன். அவை அவ்வப்புராணங்களில் ஆராய்ச்சியைத் தூண்டி மக்களை நல்வழிப்படுத்துமென்று நம்புகின்றேன். உரைக்குறிப்புக்களில் எனக்குக் கிடைத்துள்ள அச்சிட்ட உரைப்பகுதிகளிற் கண்ட பொருள்களை சில அரிய இடங்களிற் பேர் குறித்தும், சில இடங்களிற் பேர் குறியாமலும் பயன்படுத்திக்கொண்டேன். அவைபற்றி அவ்வவ்வுரைகளின் உரிமையுடையோர்பால் மன்னிப்புக் கேட்கின்றேன். அவர்கள் தமது பெருமையினால் என்மீது சினங்கொள்ளார்கள் என்பது எனது துணிபு. அச்சில் வாராத பல பெரியார்களது உரைக்குறிப்புகளும் எனக்குப் பேருதவி புரிந்தன. அவற்றுட் சிறந்த திரு. இராமநாத செட்டியாரது உரைக்குறிப்புக்களைப்பற்றி முன்னரே குறித்தேன். அதனினும் மிகச் சிறந்தனவாய், நான் உடனிருந்து கேட்டுக் குறித்தனவாய் எனக்கு ஊன்றுகோல்போல மிக உதவி வருவது சைவப் பெரியார் **ஸ்ரீ**. க. சதாசிவ செட்டியாரவர்களது உரைக்குறிப்புக்களேயாம். இவற்றின் வரலாறும் முன்னரே குறித்துள்ளேன். இவ்வாறு பலவிடத்துக் கண்டவையும் கேட்டவையுமாயுள்ள குறிப்புக்களே இப்பதிப்பிற் காண்பனவாம். ஆதலின் இதனை அடியேன் **தொகுத்தியற்றிய** உரையென்றே முகப்புத்தாளிற் பொறித்துள்ளேன்.

" இதில் உனது சொந்தம் ஏதேனும் உண்டோ ? என வினவுவீராயின், உண்டு - என்பேன். ஆனால் அவற்றைப் பிரித்துக் காண்பது மிக எளிது. பெரியோர் கண்டு கொள்வர். இவ்வெளியீட்டிற் காணும் குறையும், மிகையும், பிழையும், என்றிவைகளெல்லாம் என்னுடைய சொந்தப் பொருள்களேயாம். உரைத்தொகுப்பிலே பாட்டுக் கடினமாய்க் கொண்டு கூட்டி உரைக்கற்பாலதாய்க் காணுமிடத்துப் பதவுரையாகவும் ஏனை எல்லா இடத்தும் பொழிப்புரையாகவும் பொருள் அமைத்துள்ளேன். விசேட வுரை

யிற் சொல்லாக்கம் - சொற்குறிப்பு - தொடர்களின் அமைப்பு - இலக்கணக் குறிப்பு - சாத்திரக் குறிப்பு - முன்பின் தொடர்பு - மேற்கோள் முதலிய பலவும் இயன்ற வரை குறித்துள்ளேன். பாடபேதங்கள் அவ்வப்பாட்டினுரை யிறுதியிற் காணப்படும். அரிய பாடபேதங்களை உரையினுள்ளேயே அமைத்து உரைக்குறிப்பும் தந்துள்ளேன்.

நாயன்மார்கள் தலங்கள்-அவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற ஆலயங்கள்-அங்கங்குக் காணப்படும் அவர்களது பழந்திருவுருவப் படிமங்கள் முதலியவற்றை இயன்றவரையிற் படம் பிடித்துப் பதித்துள்ளதும் இவ்வெளியீட்டிற்காணும் ஒரு புதுமையாம். பல அன்பர்களும் இதனை விரும்பினார்கள்; விரும்புவார்கள். பலரும் பலவகையானும் துணை செய்துதவி வருகின்றனர். அவர்கள் யாவர்க்கும் எனது நன்றி உரியது.

இவ்வெளியீட்டினை அச்சிடுங்கால் பெருந்துணையா யுதவுகின்றோர் பல பெரியார்கள். அவர்களுட் டலைசிறந்து விளங்குவோர் சூரியனார் கோயிலாதீனத்து ஸ்ரீமத் **முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிக**ளாவார். அவர்கள் தமது உடல் நிலையையும், மற்றும் வசதிக் குறைகளையும் ஒரு சிறிதும் பாராட்டாது இதன் அச்சுப் **புருப்புக்களைப்** பிழைதிருத்தியும், பல அரிய சாத்திரக் கருத்துக்களை உதவியும் வருகின்றார்கள். அவர்கள் **புருப்** மட்டும் திருத்துகின்றார்களா? அன்று! என்னையே திருத்துகின்றார்கள். அவர்கட்கு எஞ்ஞான்றும் எனது கடப்பாடான நன்றி உரியது. மற்றும் அச்சிடுங்காற் பேருதவி புரிந்து வரும் என் தீட்சா குருபுத்திரராகிய சிதம்பரம் **வித்வான் ந. சிவப்பிரகாசதேசிகரும்,** பறங்கிப்பேட்டை வித்வான் திரு. **பெரியசாமிப் பிள்ளை,** சென்னைக் கயப்பாக்கம் **சோமசுந்தர செட்டியார்** முதலிய பல பெரியார்களும் பல திருத்தங்கள் செய்து உதவி வருகின்றார்கள். இப்புராண உரை வெளியீட்டில் எல்லா வகையாலும் சிறிதும் சலிப்பின்றிப் பேருதவி புரிந்துவரும் எனது ஆப்த நண்பரும், திரு. கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியாரவர்கள் உறவினரும், சீடருமாகிய **திருவாளர் R. ஷண்முகசுந்தரஞ் செட்டியாரவர்கட்கு** எனது கடப்பாடும், நன்றியும், ஆசியும், உரியன.

கோவைத் தமிழ்ச் சங்கத்தார் இவ்வெளியீட்டைத் தங்கள் சங்க வெளியீடாக ஏற்றுப் பன்னிரண்டாவது வெளியீடாகப் பிரசுரித்துள்ளார்கள். மற்றும் இதற்காவன வாகிய பல உதவிகளையும் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு எனது நன்றி உரியது.

சாது அச்சுக்கூடத் தலைவரவர்கள் இவ்வெளியீட்டில் செய்த - செய்கின்ற - பேருபகாரம் போற்றத்தகுந்ததாம். எனது தாமதங்களையும், மற்றும் அவர்கள்பால் நான் செய்யும் பற்பல இன்னல்களையும் ஒரு சிறிதும் பாராட்டாது, அவர்கள் எந்நாளும் இவ்வெளியீட்டைச் சோர்வுறாது அச்சேற்றி வரும் உதவியை நான் என்றும் மறவேன். சென்னை **போடோ எம்போரியம்** காரியஸ்தர் பற்பல புகைப்படங்கள் எடுத்து உதவினார்கள். அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

எனது இச்சிறு முயற்சியினையும் பாராட்டி ஊக்கமளித்து மதிப்புரை தந்துதவின பற்பல பெரியார்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்பியாரூரது முதல் யாத்திரைக்குத் தலப்படம் (Map) வரைந்தும் - நாயன்மார்களைப்பற்றிய கல்வெட்டுகளைத் தந்தும் உபகரித்தவர் எனது ஆப்த நண்பரும், கோவைத் தமிழ்ச்சங்க அமைச்சரும் ஆகிய இராவ்சாகிப் திருவாளர் **கோவை C. M. இராமச்சந்திரன் செட்டியார், B. A., B. L., F. R. G. S.,** அவர்கள். இதுமட்டுமா? இவ்வுரையிற் சரித ஆராய்ச்சிப் பகுதியில் அங்கங்கே காணும் பொருள்களிற் பற்பலவும் அவர்களுடன் நான் அளவளாவியதன் பயனாற் போந்தன என்றே சொல்வேன். இது போலவே இனியும் இவ்வுரை முற்றும்வரை அவர் தமதரிய சரித ஆராய்ச்சியிற் கண்ட உண்மைகளை உதவிவருவதாக என்று கொண்டார்கள். எதிர்காலத்துச் செய்யும் அவ்வுதவிபற்றியும் இப்போதே அவர்கட்கு எனது நன்றி செலுத்துகின்றேன்.

யாவர் யாது செய்யினும் பொருள் தருவாரையின்றி இவ்வுலகில் யாதும் இல்லை என்பது துணிபேயன்றோ ? பொருளிலார்க் கிவ்வுலகமில்லை யென்று முடித்தனர் நாயனார். இவ்வெளியீடு மிக்க பொருட் செலவில் இயல்வதொன்றென்பது வெளிப்படை. இதனைப் பெறுதலும் - பெற்றுக் கற்று அறிந்துகொள்ளுதலும் இலகுவாயிருக்கும்படி உயர்ந்த கடிதத்தில் ராயல் 8 பக்கம் கொண்ட 20 பாரங்கள் (160 பக்கம்) கொண்ட சஞ்சிகைகளாகக் குறைந்த விலைக்கு வெளியிடப்பெறுகின்றது. இதனைத் தமிழுலகம் ஏற்றுஆதரித்து வருதல் அடியேன் செய்த பாக்கியமே. இவ்வெளியீட்டிற்கு **சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தார்** மிக அன்புடன் ரூ. **1000/-**இதற்கு நன்கொடை தருவதாகத் தீர்மானித்து அதிற் பகுதியை இப்போதே உதவியுள்ளார்கள். மற்றைப் பகுதியை வெளியீட்டு இறுதியில் தருவதாக வைத்துள்ள கருத்து இதன் நிறைவைக் காணும் அவர்களது ஆவல் மிகுதியைக் குறிக்கின்றது. முன்னர்க் குறித்தபடி இவ்வுரையில் எண்ணத்தைத் தூண்டியும், உரை வெளியீட்டிற்கு நன்கொடை அளித்தும் உதவிய சர்வகலாசாலையாருக்கு என் மனமார்ந்த நன்றி உரியது. இளம்பிராயத்தில் என்னோடு ஒருசாலை மாணவரானவரும் சென்னை அரசாங்க விவசாயக் கல்லூரித் தலைவராயிருந்து விடுதி பெற்றவரும் ஆகிய என் அரிய நண்பர் **இராவ்பகதூர் திரு. C. தாதுலிங்க முதலியாரின்** நன்கொடை ரூ. 500/-ம் கோயமுத்தூர் சில்லாதேவஸ்தான சபையார்களின் நன்கொடை ரூ. 250/-ம் மிக நன்றியோடு பாராட்டற்குரியன. இன்னும் இதுபோலவே பல்லாற்றானும் இதற்குப் பொருளுதவி புரிந்தூக்கிவரும் எல்லா அன்பர்கட்கும் மனமார்ந்த நன்றி செலுத்துகின்றேன். இவ்வெளியீடு முற்றுப்பெறும்வரை இவ்வாறே தமிழுலகமும் சைவ உலகமும் இதனை ஆதரிக்கவேண்டுகிறேன். தமிழ்நாடுகளுள்ளே இலங்கையிலுள்ள அன்பர்கள் பலர் இதனை மிக ஆதரித்து ஊக்கமளித்துவருதல் எனது பாக்கியமே. அதுபோலவே தென்னிந்தியாவில் உள்ள தமிழ் அன்பர்களும் சைவப் பெரியார்களும் ஆதரிப்பார்களாயின் என் முயற்சி மிக எளிதின் நிறைவேறும்.

நாயன்மார்களது திருவுருவப் படிமங்களையும் ஆலயங்களையும் படம் பிடித்து வெளியிடுவது மிகுந்த கடினமான காரியம் என்பது யாவருமறிவர். இதுவரை ஆங்காங்குப் படங்களை எடுத்து அனுப்பிப் பேருபகாரம் புரிந்த பெருமக்களாகிய திரு. **T. B. கிருஷ்ணசாமி முதலியார்** M. A., B. L., அடிசைக்கிழார் **திரு. அ. சிதம்பரனார், திரு. T. S. மீனாட்சிசுந்தர முதலியார்**, B. A., எனது அருமை நண்பர் வித்வான் **திரு. A. கந்தசாமி பிள்ளை**, கடலூர் - **திரு தங்கவேல் பிள்ளை** முதலிய பல அன்பர்களுக்கும் எனது நன்றி உரியது.

பல்வகைப் பிறவியினும் தவஞ்செய்து பெற்றது மனிதப் பிறவி. இதன் அருமையை அறியாது "வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்." அதுமட்டோ? " பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார் !"

> " நந்தவனத்திலோ ராண்டி—அவன்
> நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்,
> கொண்டு வந்தானொரு தோண்டி—யதைக்
> கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி "

என்ற வேடிக்கைபோன்ற வினயப்பாட்டு இந்நாள் உலகர்க்கு முற்றும் பொருந்துவதாயிற்று. மனிதன் என்றாலே நினைப்பவன் - அறிவுடையவன் - என்பது பொருள். அறிவுபெற்ற பயனாவது அறியவேண்டியதை அறிவதுதானே. தான் வந்ததையும் போவதையும் அறிந்து நீடித்த ஊதியத்தைத் தேடுவதைத் தவிர வேறு என்ன பயன் அறிவினால் உண்டு ? அறிவினாற் பெறும் உறுதிப் பயன்களில் நீடித்த உறுதி வீடு என்பதே என அறிவோர் துணிந்தனர். இஃது எல்லாநாட்டு எல்லாக்காலத்து எல்லாப் பேரறிஞர்க்கும் ஒக்கும். இதனை அடைய இறைவன் வகுத்தது அறிவு

நெறியே. அதுவே உயர்ந்த ஞானிகளாலே ஞானநெறி - ஒளிநெறி - நன்னெறி - குருநெறி - சிவநெறியெனப் பலவகையாலும் பேசப்பெறும். இதனை அடையும் வழி காட்ட வேதங்களை இறைவர், தாமே அருளினர்; தன்னிற் பிறிதில்லாது தானேயாகிய பெருமக்கள் வாக்கினின்றும் அருளினர்; இவற்றை அறியும் அறிவையும் மக்களுக்கு அருளினர். அறிவினாலே மறையாதி சாத்திர ஞானங்களை உணர்ந்தும், அவ்வழிநின்றோரைப் பின்பற்றியும், அவை காட்டும் சமயவழி நின்றும், உலகர் உய்யுமாறு செய்தலே இறைவன் அருட்செயல். "நல்லறிவையும் வகுத்து மறையாதி நூலையும் வகுத்துச் சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்துமேற் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்றார் தாயுமானார். இவ்வாறு அருளப்பட்ட நூல்களிலே பெரிய புராணம் தலைசிறந்து விளங்குவதாம். அஃது இறைவன் தானே அருளியதும், ஆசிரியர் சேக்கிழார் வாக்கினின்று அருளியதுமாகிய அருள்வாக்காம். இஃதுண்மை ஞானநூல். ஞானிகளைப்பற்றிய நூல். தமிழ்ச்சுவை வேண்டுவோர்க்குப் பேரிலக்கியமும் பெருங் காவியமுமாம். கதை வேண்டுவோர்க்குக் கதையுமாம். உலகநூல் பயில்வோர்க் கஃதேயாம். வேறு பல சொல்லுவதென்? யார் யார் எதனை வேண்டுமானாலும் இதன்பாற் பெறலாம். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்கண்டாய்" என்ற இறைவனிலக்கணமே அவனருள் வாக்காகிய இதனிலக்கணமுமாம்.

உலகப் பொருளும் உறுதிப் பொருளும் ஒருங்கே பெறும் அரும் பெரும் பண்டாரமாகிய இதனைத் தமிழ் மக்களும் சைவ மக்களும் பயின்று பயின்று உணர்ந்துணர்ந்து பயன்பெற்று உய்யவேண்டு மென்பதே எனது பேராசையாகும். இவ்வெளியீடு அதற்கு ஒரு சிறிதேனும் உதவுமானால் நான் பெரும்பேறு பெற்றவனாக எண்ணி மகிழ்வேன். ஆணவ உருவமாகிய புதிய ஆராய்ச்சி முறையிற் றலைப்பட்டு இவ்வருள் நூலுள்ளும் புகுந்து வினைதேடி யுழன்று கெடுவோரும் கெடுப்போரும் பலர். இப்புராணத்தினுள்ளே இடைச்செருகலாக 33 பாட்டுக்கள் பிற்காலத்திலே புகுத்தப்பட்டன என்பது பலர் துணிபு. இவைபற்றிய அடியேனது சில கருத்துக்களை எனது 'சேக்கிழார்' என்னும் நூலில் 206-224 பக்கங்களிற் குறித்துள்ளேன். அவ்வாராய்ச்சியினுள் நான் மிகவும் அஞ்சியே உட்புகுந்தேன். உமாபதி சிவாசாரியார் காட்டிய பாடற்றொகையின்மேற் பல பாட்டுக்கள் காணப்பட்டமையும், சிற்சில இடங்கள் சேக்கிழார் பெருமானுக்கே உரிய முத்திரையின் அமைவில்லாத பாடல்கள் காணப்பட்டமையுமே நான் அக்கருத்துக்களை மிக அச்சத்துடன் வெளியிட நேர்ந்தது. இவ்வாறன்றிப் பற்பல நவீனக் கிளர்ச்சிகளிற் பட்டுத், தத்தம் புதிய கருத்துக்களுக்கிசையாதன என்று கொண்டு, இப்புராணத்தின் பல பகுதிகளைச் சேக்கிழார் வாக்கல்ல என்று தத்தம் மனம்போனவாறு ஒதுக்குவாருமுளர். திருமலைச் சிறப்பில் திருக்கைலாயத்தில் ஆலாலசுந்தரர் அனிந்திதை கமலினியார் நிகழ்ச்சி, திருநாளைப்போவார் தில்லையில் அந்தணர்கள் முன் தீமூழ்கி முனியாகிய நிகழ்ச்சி, சமணர் கழுவேறிய நிகழ்ச்சி முதலிய பகுதிகளைத் தத்தம் நவீன ஆணவ ஆராய்ச்சியிற் பட்டு ஒதுக்குவாரையும் சைவவுலகம் இற்றைநாட் காண்கின்றது. என்னே விதியின் கதி! இவ்வாறு அவ்வவர் மனத்துக் கேலாதனவற்றைத் தள்ளிக்கொண்டே போனால் புராணத்தில் ஒன்று மெஞ்சாதென்பது ஒருதலை. ஆராய்வார் ஒவ்வோர் நிலையினின்றமைந்து முறைப்பட்டொழுகலே சால்புடைத்தன்றி மனம்போன போக்கெல்லாம் போய் வீழ்தல் ஆராய்ச்சியாகாது. இத்தகைய ஆராய்ச்சிகளால் உண்மை காண வியலாது அபசாரமே விளையும். இவற்றைக் காண்பதும் கேட்பதும் சிவநிந்தையாகிய பெரும் பாவம் பயக்கும் என்பது நூற்றுணிபு.

பதிபுண்ணியப் பெருமக்களாகிய உண்மை நாயன்மார்களது உண்மைச் சரிதமாகிய இந்த ஞானநூலுக்கும், ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையேனாகிய எனக்கும் எத்தனை தூரம்? உயர் மலையுச்சியும் ஆழ்கடலாழமும் ஒப்பினும் ஒவ்வாதே,

ஆயினும் ஆசையும், எனது முன்னோர் செய்த நல்வினைப் பயனும் சேர்ந்து இந்நல் வினை முயற்சியில் என்னையும் கூட்டிற்று. அதில் தினமும் உபகரித்து நாடோறும் முன்னிற்பன தமிழ்க்கருணைத் தெய்வமாய் - எனது ஆன்மநாயகனும் - உள்ள குமாரக் கடவுளது சேவடிகள்.

" புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடிய னாக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி "

என்று கச்சியப்ப சிவாசாரியார் அருளிய தோத்திரத்தில் **என்னையும்** என்ற இழிவு சிறப்பு எனக்கே முற்றிலும் பொருந்தப் பாடி யுபகரித்தனர் என நான் பலகாலும் எண்ணிய துண்மை.

இவ்வெளியீடு முதற்சஞ்சிகையின் முதற்பகுதி திருத்தில்லையிலே ஆயிரக்கால் மண்டபத்திலே வைத்துச் சேக்கிழார் சுவாமிகள் திருநக்ஷத்திரத் தினமாகிய யுவ வருடம் வைகாசி மாதம் 23-ந் தேதிக்கு (5—6—1935) புதன்கிழமை யன்று வெளியிடப் பெற்றது. அன்று ஸ்ரீ நடேசப் பெருமானுக்குத் திருப்பாவாடை நிவேதனத்துடன் விசேட பூசை செய்யப் பெற்றது. சேக்கிழார் நாயனார்க்குக் கோயி லிலும், ஸ்ரீ பழனியப்ப முதலியார் பாடசாலையிலும் விசேட பூசையும் குருபூசையும் நிகழ்ந்தன. மாலையில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு பெருங் கூட்டம் கூடிற்று. அது காலை இவ்வுரை முயற்சியைப் பற்றிப் பல தமிழ்ப் பெரியார்கள் பாராட்டி ஊக்க மளித் தனர். தில்லைவாழந்தணர்கள் இதனை ஆதரித்து ஆசீர்வதித்தனர். ஸ்ரீ கல்யாணசுந்தர தீட்சிதர் அதுபோழ்து சபைத் தலைமை பூண்டருளினர். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் பரிவட்டம் அனுப்பி ஆசீர்வதித்தருளிற்று. பெருங் கருணைத் தடங்கடலாகிய ஸ்ரீ நடேசப் பெருமான் திருவருளே உருவமாக இவை நிகழ்ந்தன என்று போற்றுவதன்றி வேறுரைக்குமா றறியேன்!

இவ்வெளியீட்டிற் காணும் குறை, மிகை, பிழைகளைப் பொறுத்துத் திருத்தி ஏற் றுக் கொள்வது என்னையுடையவர்களாகிய பெரியோர் கடமை. இப்பகுதியிற் செய் தக்க திருத்தங்களைக் காட்டி உபகரிப்பது அறிந்தோர் கடமை. அவர்களது திருத்தங் களை மனமார ஏற்றுக்கொண்டு செய்வதனை அடியேன் கடனாகமேற் கொள்வேன் என்பதற்கு இப்பகுதியினிறுதியிற் காணும் திருத்தங்கள் உறுதி கூறும். ஏனையோர் இகழ்வரேல் அதனால் எனக்காவதொன் றுமில்லை.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார்—எம்மை
யுணரா ருணரா ரடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

என்ற எனது பரமாசாரியார் வாக்கு எனது தலைமேல் நிற்பதாம்.

இனிவர நிற்கும் இவ்வெளியீட்டின் எஞ்சிய பெரும் பகுதிகளும் இவ்வாறே இனிது நிறைவேற இறைவனது திருவருளும், பெரியோர் ஆசியும், தமிழ்ச் சைவ வுல கத்தின் ஆதரவும் இனிது துணைசெய்து மங்கலமாக்குவிப்பனவாக.

'சேக்கிழார் நிலையம்'
கோவை, 5—3—37.

அடியேன்,
C. K. சுப்பிரமணியன்.

இவ்வெளியீட்டிற்குத் துணை நின்ற பிரதிகள்

உரைக் கையெழுத்துக் குறிப்புக்கள்

1. கயப்பாக்கம். திரு. சதாசிவஞ் செட்டியாரவர்கள், B.A.
2. திரு. இராமநாதஞ் செட்டியார் அவர்கள்.

உரைப்பிரதிகள்

1. ஸ்ரீமத் மகாலிங்கையர் அவர்கள் பொழிப்புரை (திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் வரை)
2. ,, ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (முழுமையும்)
3. ,, சுப்பராயுலு நாயகர் அவர்கள் (முழுமையும்)
4. ,, காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் (முதல் மூன்று சருக்கங்கள்.)

மூலப்பிரதிகள்

1. வித்வான் காஞ்சி சபாபதி முதலியாரவர்கள் முதற் பதிப்பு. சித்தார்த்தி (1859)
2. ஷெயார் இரண்டாம் பதிப்பு. (1870)
3. சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை பதிப்பு. (1879)
4. ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பு முதற்காண்டம். (1884)

பழைய ஏட்டுப் பிரதிகள்

1. திருவாவடுதுறை பிரதிகள்	2
2. திருத்தருமபுர ஆதீனப் பிரதி	1
3. சிதம்பரம் உலகமூர்த்தி தேசிகர் மடத்துப் பிரதி	1
4. T. K. சிதம்பரநாத முதலியார் தந்த நெல்லைப் பிரதி	1
5. சாத்தூர் திரு. T. S. கந்தசாமி முதலியார் தந்த பிரதி	1
6. எனது வீட்டில் இருந்த மிகச் சிதைந்த தனி ஏடுகள்	1
7. மற்றும் பிரதிகள்	5
ஆக.	12

உ

திருச்சிற்றம்பலம்

அறுபான்மும்மை நாயன்மார்

திருநட்சத்திரங்கள்

ஒன்றகல வெட்டெட்டா மோதுமடி யாரரன்பாற்
றுன்றுமதி நாளினிது சொல்லவே—வென்றிதரும்
பொன்னிதிவி நாயகனார் பூமுடிமே லாடுதிருச்
சன்னிதிவி நாயகனார் தாள்.

நிலைமண்டிலவாசிரியப்பா

தில்லைவா ழந்தணர் திருவரு ளாலவர்
மல்குசீர்ப் பதத்தை மகிழ்வொடு வணங்கிக்
கடிதிரு நீல கண்டர்தை விசாகம்
வடிவியற் பகையார் மார்கழி யுத்திரம்
வருமிளை யான்குடி மாறரா வணிமகங்
கருதுமெய்ப் பொருளார் கார்த்திகை யுத்திரம்
விறன்மிண்ட கண்டர் மேடமா திரைநா
ளறனமர் நீதி யாணிப் பூரம்
மாணெறி பத்தர் மாசியி லத்தங்
காணுமே னாதியார் கன்னியுத் திராட
மலர்கண் ணப்பர் மகரமான் றலையிற்
குலவுகுங் குலியர் கோளரி மூலங்
தருமா னக்கஞ் சாறர்விற் சுவாதி
யரிவாட் டாயர்தை யாதிரை நாளி
லானாயர் கார்த்திகை யத்த நாளிற்
கான மூர்த்தியார் கடகத் தாரன்
முருக ரிடப மூல மதனி
லுருத்திர பசுபதி யுயர்கன்னி முன்னாள்
பொருந்திரு நாளைப் போவார்கன் னியிற்பார்
திருக்குறிப் படியார் சித்திரைச் சுவாதி
சண்டீச ராமவர் தையுத்தி ரத்திற்
றண்டமி ழப்பர் தகரிற் சதயங்
குலச்சிறை நாயனார் கோளரி யனுட
மலகில் குறும்ப ராடியிற் சித்திரை
யருள்கா ரைக்கா லம்மைமீன் விளக்கா
மருகிலப் பூதிதை யதிற்சத யத்திற்
கமைநீல நக்கர் காளை மூலத்தி
னமிநந்தி யடிக ணாள்விடைப் பூச
ஞான சம்பந்தர் நாள்விடை மூல
மான கலிக்காம ராணி ரேவதியி

லருட்டிரு மூல மைப்பசி முன்னாள்
வருதண்டி யடிகள் வளர்மீன் சதயஞ்
சேமமா மூர்க்கர் தேண்மதி மூலஞ்
சோமாசி மாறர் தொழுவிடை யரவிற்
சாக்கிய நாயனார் தனுப்பூ ராடந்
தேக்கிய சிறப்புலி தேட்பூ ராடஞ்
சேர்சிறுத் தொண்டர் சித்திரைப் பரணி
சேரமான் கடகஞ் சேர்ந்தசோ தியினிற்
கணநாதர் மீனங் கலந்தவா திரையிற்
குணமாங் கூற்றுவர் குளிர்மதி யாதிரை
பொய்யடிமை யில்லாப் புலவர்தாள் போற்றி
மெய்ப்புகழ்ச் சோழர் மிளிர்குளி ரார
னரசிங்க முனையார் நற்கன்னி சதயந்
திரவதி பத்தர் சிங்கவா யிலியங்
கலிக்கம்பர் மகரக் கடைநா ளதனிற்
கலியரா டியினிற் கலந்தவிந் திரனு
யேசிற் சத்தியார் துலாப்பூ சத்தி
ஐயர்கா டவர்கோ னைப்பசி மூலங்
கணம்புல்ல நாயனார் கார்த்திகை யங்கி
கணஞ்சேர் காரியார் கடம்பூ ராடந்
தூய்நெடு மாறர் துலாமதிப் பரணியில்
வாயிலார் நாயனார் மார்கழி யிரேவதி
வெம்முனை யடுவார் மீனப் பூசஞ்
செம்மையா நங்கழற் சிங்கர்சேப் பரணி
மருவிடங் கழியார் மதிதுலா வாரல்
செருத்துணை நாயனார் சிங்கப் பூசஞ்
சேட்புகழ்த் துணையார் சிங்கவா யிலியங்
கோட்புலி நாயனார் குளிர்மதி கேட்டை
பத்தராய்த் தாழ்வார் பரமனைப் பாடுவார்
சித்தத் தைச்சிவன் பாலே சேர்த்துளா
ரப்புறு செய்த்திரு வாரூர்ப் பிறந்தார்
முப்பொழு துந்திரு மேனி தீண்டுவார்
முப்புவி தொழுமுழு நீறு பூசுவா
ரப்பாலு மடிச்சார்ந் தாரை வணங்கிப்
பூசலா ரைப்பசி புகுமனு டத்தின்
மாசிலா மானியார் மைம்மதி யுரோகிணி
மிகுசிவ நேசர் மீனரோ கிணியிற்
றொருகுபுகழ்ச் செங்கட் சோழர் குடக்குன்
றடுநீல கண்டயாழ்ப் பாணர்சே மூலஞ்
சடையனார் மார்கழி சார்ந்தவா திரையி
லிசைஞானி மேடத் திசைந்த சித்திரையில்
வசையிலா விம்மதி மருவுமிந் நாளிற்
பரகதி யடைந்த பத்தரைப் பாடிக்
கருதுவன் றொண்டர் கடகச் சுவாதி

75 குருபூசை நாளிற் குறைவிலா திவர்க்கு
வருபூசை தந்தோர் மாநிலத் தோங்கித்
தவப்பய னெய்திச் சதுமறைக் கிரியிற்
சிவகதி யடைத லிண்ண முண்மையதே.

திருநட்சத்திரம் முற்றிற்று.

சைவசமய குரவர் முதலியோர் குருபூசைத் தினங்கள்

சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசி மூல
மத்தரைப் பணிசம் பந்த ராணிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

சந்தான குரவர் குருபூசைத் தினங்கள்

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

சைவசமய குரவர் நால்வர் வயது

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவா றுதொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

“பெருமகிழ்ச்சி தானிறைந்த **சித்திரையிற் சதயமாந்** திருநாளில்” என்று (திருநா - புரா - 428) அப்பர் சுவாமிகளது திருநட்சத்திரத்தையும், “புண்ணியப் **பதினாறாண்டு** பேர்பெறும் புகலி வேந்தர்” என்று (திருஞான - புரா - 1109) திருஞானசம்பந்த சுவாமிகளது வயதையும் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்துக் குறித்தருளினர்.

குறிப்பு:—மேடம் - தகர் - மை = **சித்திரை**. இடபம் - காளை - **விடை** - சே = **வைகாசி**. கடகம் - குளிர் = **ஆடி**. கோளரி - சிங்கம் = **ஆவணி**. கன்னி = **புரட்டாசி**. துலாம் = **ஐப்பசி**. தேள் = **கார்த்திகை**. வில் - தனு = **மார்கழி**. மகரம் = **தை**. மீன் = **பங்குனி**. முன்னாள் = **அசுவினி**. ஆரல் - அங்கி = **கார்த்திகை**. பார் = **உரோகிணி**. மான்றலை = **மிருகசீரிடம்**. அரவு = **ஆயிலியம்**. விளக்கு = **சுவாதி**. இந்திரனாள் = **கேட்டை**. குன்று = **சதயம்**,

உ

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டத்தொகையிற் போற்றப்பட்டுள்ள

தனித்திருத்தொண்டர்கள் திருநட்சத்திரங்கள்

சருக்க வரிசை.

2. தில்லைவாழந்தணர் சருக்கம்

எண்	திருத்தொண்டர்	திங்கள்	திருநட்சத்திரம்
1.	திருநீலகண்ட நாயனார்	தை	விசாகம்
2.	இயற்பகை நாயனார்	மார்கழி	உத்திரம்
3.	இளையான்குடி மாறநாயனார்	ஆவணி	மகம்
4.	மெய்ப்பொருள் நாயனார்	கார்த்திகை	உத்திரம்
5.	விறன்மிண்ட நாயனார்	சித்திரை	திருவாதிரை
6.	அமர்நீதி நாயனார்	ஆனி	பூரம்

3. இலைமலிந்த சருக்கம்

7.	எறிபத்த நாயனார்	மாசி	அத்தம்
8.	ஏனாதிநாத நாயனார்	புரட்டாசி	உத்திராடம்
9.	கண்ணப்ப நாயனார்	தை	மிருகசீரிடம்
10.	குங்குலியக்கலய நாயனார்	ஆவணி	மூலம்
11.	மானக்கஞ்சாற நாயனார்	மார்கழி	சுவாதி
12.	அரிவாட்டாய நாயனார்	தை	திருவாதிரை
13.	ஆனாய நாயனார்	கார்த்திகை	அத்தம்

4. மும்மையாலுலகாண்ட சருக்கம்

14.	மூர்த்தி நாயனார்	ஆடி	கார்த்திகை
15.	முருக நாயனார்	வைகாசி	மூலம்
16.	உருத்திர பசுபதி நாயனார்	புரட்டாசி	அசுவினி
17.	திருநாளைப்போவார் நாயனார்	புரட்டாசி	ரோகணி
18.	திருக்குறிப்புத்தொண்ட நாயனார்	சித்திரை	சுவாதி
19.	சண்டேசுர நாயனார்	தை	உத்திரம்

5. திருநின்ற சருக்கம்

20.	திருநாவுக்கரசு நாயனார்	சித்திரை	சதயம்
21.	குலச்சிறை நாயனார்	ஆவணி	அனுடம்
22.	பெருமிழலைக்குறும்ப நாயனார்	ஆடி	சித்திரை
23.	காரைக்காலம்மையார்	பங்குனி	சுவாதி
24.	அப்பூதியடிகள் நாயனார்	தை	சதயம்
25.	திருநீலநக்க நாயனார்	வைகாசி	மூலம்
26.	நமிநந்தியடிகள் நாயனார்	வைகாசி	பூசம்

6. வம்பறாவரிவண்டுச் சருக்கம்

27.	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்	வைகாசி	மூலம்
28.	ஏயர்கோன்கலிக்காம நாயனார்	ஆனி	ரேவதி

29.	திருமூல நாயனார்	ஐப்பசி	அசுவனி
30.	தண்டியடிகணாயனார்	பங்குனி	சதயம்
31.	மூர்க்க நாயனார்	கார்த்திகை	மூலம்
32.	சோமாசிமாற நாயனார்	வைகாசி	ஆயிலியம்

7. வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

33.	சாக்கிய நாயனார்	மார்கழி	பூராடம்
34.	சிறப்புலி நாயனார்	கார்த்திகை	பூராடம்
35.	சிறுத்தொண்ட நாயனார்	சித்திரை	பரணி
36.	சேரமான்பெருமாணாயனார்	ஆடி	சுவாதி
37.	கணநாத நாயனார்	பங்குனி	திருவாதிரை
38.	கூற்றுவ நாயனார்	ஆடி	திருவாதிரை

8. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்

39.	புகழ்ச்சோழ நாயனார்	ஆடி	கார்த்திகை
40.	நரசிங்க முனையரைய நாயனார்	புரட்டாசி	சதயம்
41.	அதிபத்த நாயனார்	ஆவணி	ஆயிலியம்
42.	கலிக்கம்ப நாயனார்	தை	இரேவதி
43.	கலிய நாயனார்	ஆடி	கேட்டை
44.	சத்தி நாயனார்	ஐப்பசி	பூசம்
45.	ஐயடிகள் காடவர்கோனாயனார்	ஐப்பசி	மூலம்

9. கறைக்கண்டன் சருக்கம்

46.	கணம்புல்ல நாயனார்	கார்த்திகை	கார்த்திகை
47.	காரி நாயனார்	மாசி	பூராடம்
48.	நெடுமாற நாயனார்	ஐப்பசி	பரணி
49.	வாயிலார் நாயனார்	மார்கழி	இரேவதி
50.	முனையடுவார் நாயனார்	பங்குனி	பூசம்

10. கடல்சூழ்ந்த சருக்கம்

51.	கழற்சிங்க நாயனார்	வைகாசி	பரணி
52.	இடங்கழி நாயனார்	ஐப்பசி	கார்த்திகை
53.	செருத்துணை நாயனார்	ஆவணி	பூசம்
54.	புகழ்த்துணை நாயனார்	ஆவணி	ஆயிலியம்
55.	கோட்புலி நாயனார்	ஆடி	கேட்டை

12. மன்னியசீர்ச் சருக்கம்

56.	பூசலார் நாயனார்	ஐப்பசி	அனுடம்
57.	மங்கையர்க்கரசியார்	சித்திரை	உரோகணி
58.	நேச நாயனார்	பங்குனி	உரோகணி
59.	கோச்செங்கட்சோழ நாயனார்	மாசி	சதயம்
60.	திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்	வைகாசி	மூலம்
61.	சடைய நாயனார்	மார்கழி	திருவாதிரை
62.	இசைஞானியார்	சித்திரை	சித்திரை

13. வெள்ளானைச் சருக்கம்

63.	**சுந்தரமூர்த்தி நாயனார்**	**ஆடி**	**சுவாதி**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அறுபத்துமூன்று நாயன்மார்களின்

திருநட்சத்திரங்கள்

மாத வரிசை

குறிப்பு :— தொகையடியார்களில், தில்லைவாழந்தணர்களுக்குச் சித்திரை முதல் நாளிலும், ஏனையோர்க்குப் பங்குனி இறுதி நாளிலும் குருபூசை செய்வது வழக்கு.

சித்திரை

சிறுத்தொண்டர்—பரணி.
மங்கையர்க்கரசியார்—உரோகிணி.
விறன்மிண்டர்—திருவாதிரை.
இசைஞானியார்—சித்திரை.
திருக்குறிப்புத்தொண்டர்—சுவாதி.
திருநாவுக்கரசர்—சதயம்.

வைகாசி

கழற்சிங்கர்—பரணி.
நமிநந்தியடிகள்—பூசம்.
சோமாசிமாறர்—ஆயிலியம்.
திருஞானசம்பந்தர்
முருகர்
திருநீலநக்கர்
திருநீலகண்ட யாழ்ப்பாணர் } மூலம்.

ஆனி

அமர்நீதியார்—பூரம்.
கலிக்காமர்—இரேவதி.

ஆடி

மூர்த்தியார்
புகழ்ச்சோழர் } கார்த்திகை
கூற்றுவர்—திருவாதிரை.
பெருமிழலைக்குறும்பர்—சித்திரை.
சுந்தரர்
கழறிற்றறிவார் என்னும் சேரமான்பெருமாள் } சுவாதி
கலியர்
கோட்புலியார் } கேட்டை

ஆவணி

செருத்துணையார்—பூசம்.
புகழ்த்துணையார்—ஆயிலியம்.
அதிபத்தர்
இளையான்குடிமாறர் } மகம்.
குலச்சிறையார்—அனுடம்.
குங்குலியக்கலயர்—மூலம்.

புரட்டாசி

உருத்திரபசுபதியார்—அசுவினி.
திருநாளைப்போவார்—உரோகிணி.
ஏனாதிநாதர்—உத்திராடம்.
நரசிங்கமுனையரையர்—சதயம்.

ஐப்பசி

திருமூலர்—அசுவினி.
நெடுமாறர்—பரணி.
இடங்கழியார்—கார்த்திகை.
சத்தியார்—பூசம்.
பூசலார்—அனுடம்.
ஐயடிகள்காடவர்கோன்—மூலம்.

கார்த்திகை

கணம்புல்லர்—கார்த்திகை.
மெய்ப்பொருளார்—உத்திரம்.
ஆனாயர்—அத்தம்.
மூர்க்கர்—மூலம்.
சிறப்புலியார்—பூராடம்.

மார்கழி

சடையனார்—திருவாதிரை.
இயற்பகையார்—உத்திரம்.
மானக்கஞ்சாறர்—சுவாதி.
சாக்கியர்—பூராடம்.
வாயிலார்—இரேவதி.

தை

கலிக்கம்பர்—இரேவதி.
கண்ணப்பர்—மிருகசீரிடம்.
அரிவாட்டாயர்—திருவாதிரை.
சண்டேசுவரர்—உத்திரம்.
திருநீலகண்டர்—விசாகம்.
அப்பூதியார்—சதயம்.

மாசி

எறிபத்தர்—அத்தம்.
காரியார்—பூராடம்.
கோச்செங்கட்சோழர்—சதயம்.

பங்குனி

நேசர்—உரோகிணி.
கணநாதர்—திருவாதிரை.
முனையடுவார்—பூசம்.
காரைக்காலம்மையார்—சுவாதி.
தண்டியடிகள்—சதயம்.

உ

திருச்சிற்றம்பலம்

அறுபத்துமூன்று நாயன்மார்களின்

திருநட்சத்திரங்கள்

அகர வரிசை

திருத்தொண்டர்—மாதம்—நட்சத்திரம்

அதிபத்தர்—ஆவணி—ஆயிலியம்.
அப்பூதியார்—தை—சதயம்.
அமர்நீதியார்—ஆனி—பூரம்.
அரிவாட்டாயர்—தை—திருவாதிரை.
ஆனாயர்—கார்த்திகை—அத்தம்.
இசைஞானியார்—சித்திரை—சித்திரை.
இடங்கழியார்—ஐப்பசி—கார்த்திகை.
இயற்பகையார்—மார்கழி—உத்திரம்.
இளையான்குடிமாறர்—ஆவணி—மகம்.
உருத்திரபசுபதி—புரட்டாசி—அசுவினி.
எறிபத்தர்—மாசி—அத்தம்.
ஏயர்கோன்கலிக்காமர்—ஆனி—இரேவதி
ஏனாதிநாதர்—புரட்டாசி—உத்திரம்.
ஐயடிகள்—ஐப்பசி—மூலம்.
கணநாதர்—பங்குனி—திருவாதிரை.
கணம்புல்லர்—கார்த்திகை—கார்த்திகை.
கண்ணப்பர்—தை—மிருகசீரிடம்.
கழற்சிங்கர்—வைகாசி—பரணி.
கலிக்கம்பர்—தை—இரேவதி.
கலியர்—ஆடி—கேட்டை.
காரியார்—மாசி—பூராடம்.
காரைக்காலம்மையார்—பங்குனி—சுவாதி
குங்கிலியக்கலயர்—ஆவணி—மூலம்.
குலச்சிறையார்—ஆவணி—அனுடம்.
கூற்றுவர்—ஆடி—திருவாதிரை.
கோச்செங்கட்சோழர்—மாசி—சதயம்.
கோட்புலியார்—ஆடி—கேட்டை.
சடையனார்—மார்கழி—திருவாதிரை.
சண்டேசர்—தை—உத்திரம்.
சத்தியார்—ஐப்பசி—பூசம்.
சாக்கியர்—மார்கழி—பூராடம்.
சிறப்புலியார்—கார்த்திகை—பூராடம்.

திருத்தொண்டர்—மாதம்—நட்சத்திரம்

சிறுத்தொண்டர்—சித்திரை—பரணி.
சுந்தரர்—ஆடி—சுவாதி.
செருத்துணையார்—ஆவணி—பூசம்.
சேரமான்பெருமாள்—ஆடி—சுவாதி.
சோமாசிமாறர்—வைகாசி—ஆயிலியம்.
தண்டியடிகள்—பங்குனி—சதயம்.
திருக்குறிப்பு—சித்திரை—சுவாதி.
திருஞானசம்பந்தர்—வைகாசி—மூலம்.
திருநாவுக்கரசர்—சித்திரை—சதயம்.
திருநாளைப்போவார்—புரட்டாசி—உரோகிணி.
திருநீலகண்டக்குயவர்—தை—விசாகம்.
திருநீலகண்டப்பாணர்—வைகாசி—மூலம்
திருநீலநக்கர்—வைகாசி—மூலம்.
திருமூலர்—ஐப்பசி—அசுவனி
நரசிங்கமுனையர்—புரட்டாசி—சதயம்.
நமிநந்தியார்—வைகாசி—பூசம்.
நெடுமாறர்—ஐப்பசி—பரணி.
நேசர்—பங்குனி—உரோகிணி.
புகழ்ச்சோழர்—ஆடி—கார்த்திகை.
புகழ்த்துணையார்—ஆவணி—ஆயிலியம்.
பூசலார்—ஐப்பசி—அனுடம்.
பெருமிழலைக்குறும்பர்—ஆடி—சித்திரை.
மங்கையர்க்கரசியார்—சித்திரை—உரோகிணி.
மானக்கஞ்சாறர்—மார்கழி—சுவாதி.
முருகர்—வைகாசி—மூலம்.
முனையடுவார்—பங்குனி—பூசம்.
மூர்க்கர்—கார்த்திகை—மூலம்.
மூர்த்தியார்—ஆடி—கார்த்திகை.
மெய்ப்பொருள்—கார்த்திகை—உத்திரம்.
வாயிலார்—மார்கழி—இரேவதி.
விறன்மிண்டர்—சித்திரை—திருவாதிரை.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மேலே குறிக்கப்படாத

திருத்தொண்டர்களின் திருநட்சத்திரங்கள்

திருத்தொண்டர்	திங்கள்	திருநட்சத்திரம்
மாணிக்கவாசக சுவாமிகள்	ஆனி	மகம்
திலகவதியம்மையார்	தை	உத்திரம்
பட்டினத்தடிகள்	ஆடி	உத்திராடம்
நம்பியாண்டார் நம்பிகள்	வைகாசி	பூசம்
சேக்கிழார் சுவாமிகள்	வைகாசி	பூசம்
மெய்கண்ட சிவாசாரியார்	ஐப்பசி	சுவாதி
அருணந்தி சிவாசாரியார்	புரட்டாசி	பூரம்
மறைஞானசம்பந்த சிவாசாரியார்	ஆவணி	உத்திரம்
உமாபதி சிவாசாரியார்	சித்திரை	அத்தம்
*திருவள்ளுவர்	மாசி	உத்திரம்
மாதவச் சிவஞான முனிவர்	சித்திரை	ஆயிலியம்

*இவரது நாள் வைகாசித் திங்கள் அனுடம் என்றுங் கூறுவர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த

திருப்பதிக் கோவை

கோயிறிரு வேட்களநெல் வாயில்கழிப் பாலை குலவுபெரு மணமயேந் திரப் பள்ளி முல்லை, வாயில்கலிக் காழூர்சாய்க் காடுதிருப் பல்ல, வனீச்சரம்வெண் காடுவளர் திருக்காட்டுப் பள்ளி, தாயிலான் குருகாவூர் காழிகோ லக்கா தருக்கிளர்புள் ளிருக்கு வே ளூர்கண்ணார் கோயின், ஞாயிலியற் கடைமுடியே நின்றியூர் புன்கூர் நாடியநீ ரோன்னி யூர்வேள்விக் குடியே, ௧

கருதெதிர்கொள் பாடிமணஞ் சேரிதிருக் குறுக்கை கருப்பறிய லூர்கதியே காட்டுகுரக் குக்கா, மருவும்வாழ் கொளிபுத்தூர் மண்ணிப்படிக் கரையே வளருமோ மாம் புலியூர் கானாட்டு முள்ளூர், திருநாரை யூர்கடம்பூர் பந்தணைநல் லூர்பொன் றிகழ்கஞ்ச னூர்கோடி காமங்கலக் குடியே, திருப்பனந்தா ளாப்பாடி சேய்ஞலூர் திருந்து தேவன் குடி திருவியலூர் திருக்கொட்டை யூரே, ௨

இன்னம்பர் திருப்புறம் பயம்விசய மங்கை யியல்வைகா வூர்நல்வட குரங்காடு துறையே, பின்னமறு பழனமை யாறுநெய்த் தானம் பெரும்புலியூர் மழபாடி திருப் பழூவூர் கானூ, ரன்னவன்பி லாலந்துறை மாந்துறைபாற் றுறையே யானைக்கா பைஞ் ஞீலி பாச்சிலாச் சிராம, மன்னுமீங் கோய்மலையி னேடெறும்பான் றூன்றே வடகரையிற் பதி;தென்பால் வாட்போக்கி யாமே, ௩

கடம்பந்துறை திருப்பராய்த்துறை கற்குடிமூக் கீச்சரங் கருதுதிருச் சிராப்பள்ளி திருவெறும்பி யூரே, நெடுங்களமே லைக்காட்டுப் பள்ளியாலம் பொழில்சீர் நிகழ்திருப்பூந் துருத்திகண்டி யூர்சோற்றுத் துறைமா, லடும்வேதி குடிதென்குடித் திட்டைபுள்ள மங்கை யணியார்சக் கரப்பள்ளி யருங்கருகா வூரே, படர்பாலைத் துறைநல்லூர் திருவாவூ ரதனிற் பசுபதீச் சாஞ்சத்தி முற்றம்பட்டீச் சரமே, ௪

ஆறைவட தளிதிருவ லஞ்சுழியே குடமூக் கதனிற்கீழ்க் கோட்டங்கா ரோண நா கேச்சரங், கூறுமிடை மருதுகுரங் காடுதுறை நீலக் குடிவைகன் மாடக்கோயி னல் லங்கோ ழம்பஞ், சாறமரா வடுதுறைதண் டுருத்திதிரு வழூந்தூர் சகம்புகழ்மா யூரம்விள நகர்பறிய லூரோ, வீறுசெம்பொன் பள்ளிநனி பள்ளிவலம் புரமே வியன்றலைச்சங் காடாக்கூர் விளங்குகட வூரே, ௫

திருக்கடவூர் மயானமொடு திருவேட்டக் குடியே தெளிச்சேரி தருமபுர நள்ளாறு கோட்டா, றுரைக்குமம்பர்ப் பெருந்திருக் கோயின்மா காள முயர்மீயச் சூரிளங் கோ யிற்றிலதைப் பதிபூ, மருக்கமழ்பாம் புரநற்சிறு குடிவீழி மிழலை வன்னியூர் கருவிலி மன் பேணுபெருந் துறையென், கருத்துடைக்கு நறையூர்ச்சித் தீச்சரத்தோ டரிசிற் கரைப்புத்தூர் சிவபுரமுங் கலையநல்லூர் காணே, ௬

கருக்குடிவாஞ் சியந்திருநன் னிலத்துப்பெருங் கோயில் கவின்கொண்டீச் சரம் பனையூர் விற்குடிதென் புகலூ, ரிருக்கும்வர்த்த மானேச்சர மிராமனதீச் சரமே யியல்ப யற்றூர் செங்காட்டங் குடிமருக லிருளே, முருக்குதிருச் சாத்தமங்கை நாகைக்கா

ரோண முன்றிருச்சிக் கற்றிருக்கீழ் வேளூர்தே வூரே, யரிக்கரியான் பள்ளியின்முக்
கூட றிருவாரூ ரரனெறிமூ லட்டானம் பரவையுண்மண் டளியே, எ

மேலாகும் விளமர்கர வீரம்பெரு வேளூர் மிளிர்தலையா லங்காடு குடவாயில்
சேறை, நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர் நவிலுமிரும் பூளைதிரு வரதைப்
பெரும் பாழி, மாலூரு மவளிவணல் லூர்பரிதி நியமம் வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச்
சரநீர்ச், சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந் திருவிடும்பா வனத்தோடு
சேர்ந்தகடிக் குளமே, அ

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்டுறையோ டழகே தருகொள்ளம் பூதூர்பே ரெ
யில்கொள்ளிக் காடு, கண்டருதெங் கூர்நெல்லிக்கா நாட்டியத்தான் குடியே காறுயில்
கன்றாப்பூர் வலிவலங்கைச் சினத்தோ, டண்டர்பிரான் கோளிலிதென் றிருவாய்மூர்
மறைக்கா டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந்தேன் கரையி, லெண்டருநூற் றிரு
பந்தே ; ழிப்பா லீழந்தி லிசைகோண மாமலைகே தீச்சரமென் றிரண்டே ; கூ

ஆலவா யாப்பனூர் பரங்குன்றே டகத்தோ டருங்கொடுங்குன் றந்திருப்புத் தூர்
புனவா யிலிரா, மேலுமிரா மேச்சர மாடானைகா னப்பே ரொழிற்றிருப்பூ வணஞ்
சுழிய லின்புறுகுற் றாலம், பாலலோ சனன்றிருநெல் வேலியொடு பாண்டி பதினுந்து ;
மலைநாட்டி லஞ்சைக்கள மொன்றே ; சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி திருநணு
கொடிமாடச் செங்குன்றூர் தானே, க0

வெஞ்சமாக் கூடல்கொடு முடிகருவூர் கோங்கின் மேவுமே; ழரத்துறைவண் டேங்
கானை மாட, மெஞ்சலில்கூ டலையாற்றூ ரெருக்கத்தம் புலியூ ரிணையகலுந் தினைநகர்
சோ புரமதிகை புகழே, விஞ்சுதிரு நாவலூர் முதுகுன்றந் திருநெல் வெண்ணெய்திருக்
கோவலூ ரறையணிநல் லூரே, மஞ்சுதிக ழிடையாறு வெண்ணெய்நல்லூர் துறையூர்
வடுகூர்வீ டேயருளூந் திருமாணி குழியே, கக

தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச் சரம்புறவார் பனங்காட்டூர் திருவா
மாத் தூரே, யெண்ணரண் ணுமலையு நடுநாட்டி லிருபத் திரண்டாகு ; மிப்பாலே கம்ப
மேற் றளிவிண், கண்ணேங்கு மதிலோண காந்தன்றளி யனேக தங்காவ தங்கச்சி நெறிக்
காரைக் காடே, யுண்ணுடு குரங்கணின்முட் டந்திருமா கறலோத் தூர்வன்பார்த் தான்
பனங்காட் டூர்வல்லமாற் பேறே, கஉ

ஊறலிலம் பையங்கோட்டூர் விற்கோலமா லங்கா டுயர்பாசூர் வெண்பாக்கங் கள்
ளில்கா ளத்தி, மாறிறிரு வொற்றியூர் வலிதாயம் பாலி வடமுல்லை வாயில்வேற் காடு
திரு மயிலை, யீறிறிரு வான்மியூர்கச் சூராலக் கோயி லிடைச்சுரங் கழுக்குன்ற மச்சிறு
பாக் கம்மே, மாறிறிரு வக்கரையே யரசிலிதொல் லிரும்பை மாகாளந் தொண்டைநன்
னாட் டெண்ணின்மூப்பா னிரண்டே ; கங

கோகரணந் துளுவதே யத்திலொன்றே; யிப்பாற் குலவுபருப் பதநீல பருப்பதமம்
பிகைதன், பாகருறை யனேகதங்கா வதந்திருக்கே தாரம் பகர்நொடித்தான் மலைவடக்
கிற் பதியைந்தே ; யிவற்றோ, டாகவிரு நூற்றெழுபா னென்கென்பர் மூவ ரருட்பதிக
மிருக்குமூ; ரதிகமாம் வைப்புத்;, தாகமுட னினைப்போர்க்குந் துதிப்போர்க்கும் வினை
கள் சாராவாம் ; பிறப்பகலுஞ் ; சத்தியமுத் தியுமே. கச

திருப்பதிக் கோவை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த

திருப்பதிகக் கோவை

ஒன்றாதி யோரெழுபத் தொன்றீறாய் மூவர்தமிழ்
சென்றார் சிவதலங்கள் செப்புதற்கு—நின்று
கடக்குஞ் சாமுகனோர் காய்விழியா னீன்ற
கடக்குஞ் சாமுகனே காப்பு.

பன்னுசிவ தலமொருநூற் றைம்பதிற்று மூன்று பதிக மொன்று; நாற்பத்தொன் பதுபதிக மிரண்டா; முன்னுமிரு பதிற்றெட்டு நகர்பதிக மூன்று; மொரு பதினோர் தலம்பதிக மொருநான்கென் றுணர்க; மன்னுமிரு நான்குதல மோரைந்தே பதிக; மற்றுமைந்து தலங்களுக்கு வருபதிக மாறும்; பின்னுமைந்து வளநகர்க்குப் பெறும் பதிக மேழாம்; பேசுமொரு நான்குதலம் பெறும்பதிக மெட்டே. ௧

பரவுமொரு நான்குதலம் பதினொன்றாம் பதிகம்; பன்னுமிரு தலம்பதிகம் பன்னி ரண்டாப் பகரு; முறைசெயிரு தலம்பதிகம் பதினெட்டா மிப்பா; லொருமூன்று தலங் களுக்கிங் குறுபதிக முறைக்கி, னிரவிவரு மறுநான்கு - முப்பத்திற்று நான்கு - நீடேழு பத்தொன்றுமென நிரனிரையா மாகக் கருதுசிவ தலமிருநூற் றெழுபதிற்று நான்கு கடைகாப்போ டெழுநூற்று நாற்பதிற்றொன் பானே. ௨

திருப்பழூர் சேய்ஞலூர் திருமுல்லை வாயி றிருவைகா கொடிமாடச் செங்குன்றூர் வியலூர், கருக்குடிதெங் கூர்பனந்தாள் கலிக்காமூர் தலைச்சங் காடுமயேந் திரப்பள்ளி கைச்சினங்கன் றூப்பூர், குரக்குக்கா பெரும்புலியூர் திருக்காட்டுப் பள்ளி குடந்தைக்கீழ்க் கோட்டமொடு குடந்தைக்கா ரோணம், மெருக்கத்தம் புலியூர்வெண் டுறைகண்ணார் கோயி லிலம்பையங்கோட் டூர்சிக்க லிராமனதீச் சரமே, ௩

பள்ளியின்முக் கூடறிரு விரும்பூளை யாவூர்ப் பசுபதீச் சரம்பாலைத் துறைபருதி நியமங், கள்ளில்குரங் கணின்முட்டந் திருமுருகன் பூண்டி கஞ்சனூர் கச்சிநெறிக் காரைக்கா டோத்தூர், புள்ளமங்கை நாட்டியத்தான் குடிகலைய நல்லூர் புக்கொளியூ ரவிநாசி பூவனூர் துறையூர், கொள்ளிக்கா டிடைச்சுரமச் சிறுபாக்கம் விளமர் கொட் டையூர் கொடுங்குன்றங் கூடலையாற் றூரே, ௪

நெல்வேலி திருவழுந்தூர் தருமபுரம் பயற்றூர் நெடுங்களம்வக் கரையிருப்பை மாகாளம் வடுகூர், நெல்வெண்ணெய் வடகரைமாந் துறைதிருவிற் கோலநீடூர்சக் கரப் பள்ளி யகத்தியான் பள்ளி, நெல்வாயில் பேணுபெருந் துறைநாலூர் மயான நெல்லிக்கா விற்குடிவீ ரட்டமதி முத்தம், வல்லமறை யணிநல்லூர் தலையாலங் காடு வாட்போக்கி திருநாவ லூர்மயிலாப் பூரே, ௫

திருவாரூர்ப் பரவையுண்மண் டளிசாத்த மங்கை சிற்றேமந் தெளிச்சேரி திருவு சாத் தானங், கரவீரந் திருவாலம் பொழில்வெண்ணெய் நல்லூர் கச்சியனே கதங்காவ தங்கோடிக் குழக, ராசிலிதென் குடித்திட்டை வடமுல்லை வாயி லம்பர்ப்பெருந் திருக் கோயில் வெண்பாக்கஞ் சுழியல், பெருமணமிந் திரநீல பருப்பதம்வேற் காடு பேரெயில் பாற் றுறைமூக்கீச் சாமுண்டீச் சரமே, ௬

பறியலூர் வீரட்டங் கானாட்டு முள்ளூர் பாதாளீச் சரமெதிர்கொள் பாடிவலி தாயஞ், சிறுகுடிகச் சூராலக் கோயில்கொள்ளம் பூதூர் திருப்புறவார் பனங்காட்டூர் விளநகர்தண் டலைநீ, ணெறியாதைப் பெரும்பாழி யூறல்கரு வூரா னிலையிடும்பா வனங்கடுவாய்க் கரைப்புத்தூர் கடம்பந், துறைதிருவே டகந்திருவஞ் சைக்களமா டானை சோபுரங்கற் குடிவடகு ரங்காடு துறையே, ௭

திருமாணி குழிவேட்டக் குடிதிருவாப் பாடி திருந்துதே வன்குடிமா கறல்சத்தி முற்றந், திருவாப்ப னூர்மீயச் சூரவ்வூர் தன்னிற் றிகழ்ந்ததிரு விளங்கோயில் வெஞ் சமாக் கூடல், பெருநீலக் குடிமண்ணிப் படிக்கரைநன் னிலத்துப் பெருங்கோயி றிருநணா திருப்பட்டீச் சரமே, திருவீங்கோய் மலைவன்பார்த் தான்பனங்காட் டூரே திருப்புகலூர் வர்த்தமா னேச்சரம்பாம் புரமே. ௮

கடைமுடியே யோணகாந் தன்றளிகோட் டூர்வை கன்மாடக் கோயிலிடை யாறு பழை யாறை, வடதளிநற் றினைநகரங் கோணமா மலைசீர் வன்னியூர் கருவிலிய னேக தங்கா வதநல், விடமேவு கடிக்குளநற் றிருக்களரேன் **றிவைகட் கிரும்பதிக மொவ் வொன்றென் றிசைத்திடுக** ; விப்பாற், குடவாயில் புனவாயி றூங்கானை மாடங் கோழம்ப மவளிவணல் லூர்கோலக் காவே, ௯

குருகாவூர் திருவேள்விக் குடிவிசய மங்கை குற்றாலங் குடமூக்குக் கோட்டாறு பனையூர், கருகாவூர் குரங்காடு துறையோமாம் புலியூர் கண்டியூர் வேதிகுடி கானூர் கோ கரணந், திருவாரூ ரறனெறிபந் தணைநல்லூர் நல்லந் திருக்கண்டீச் சரந்தேவூர் திருச்சிராப் பள்ளி, பெருவேளூர் கீழ்வேளூ ரெறும்பியூர் கானப் பேர்திருமங் கலக் குடியாக் கூர்கோவ லூரே. ௧0

திருப்பரங்குன் றந்திருப்பா திரிப்புலியூர் குறுக்கை திருப்புத்தூர் மணஞ்சேரி பாச்சிலாச் சிராமங், கருப்பறிய லூர்கேதீச் சரந்திருக்கே தாரங் கச்சிமேற் றளிமேலைத் திருக்காட்டுப் பள்ளி, யருத்தியுறு பட்டினத்துப் பல்லவனீச் சரம்பே ரன்பிலா லந் துறைப ராய்த்துறைவேட் களமிங், குரைத்தசி ரன்னியூ **ரிவ்விரண்டாம் பதிகமுள்ள தலங்** ; கடவூர்ம யானம்வாஞ் சியமே. ௧௧

துருத்திதிரு நனிபள்ளி திருமருக றிருப்பூந் துருத்திபுறம் பயங்கடவூர் புள்ளி ருக்கு வேளூ, ரரத்துறைவாழ் கொளிபுத்தூர் வான்மியூர் பாசூ ரம்பர்மா காள மயிலாடு துறை வாய்மூர், திருக்கழுக்குன் றம்பாண்டிக் கொடுமுடிரா மேச்சரஞ் செங்காட்டங் குடிவெண்ணி திருச்செம்பொன் பள்ளி, பருப்பதம்புன் கூரரிசிற் கரைப்புத்தூர் சேறை பைஞ்ஞீலி கற்குடிமா மலை**பதிக மூன்றே**. ௧௨

வலம்புரமா லங்காடு சிவபுரங்கா ளத்தி வலிவலஞ்சாய்க் காடுதிருக் கோடிகா நகரம், நலந்திகழும் பூவணங்கோ ளிலிநின்றி யூரு நறையூர்ச்சித் தீச்சரமு **நான்கா றும் பதிகம்** ; வலஞ்சுழிநல் லூர்பழன மாமாத்தூ ரண்ணா மலைகடம்பூ ரின்னம்பர் நாரையூ **ரைந்தா**; நிலந்திகழ்நா கேச்சரமாற் பேறுமழ பாடி நெய்த்தானம் வெண் **காடு நீள்பதிக மாறே** ; ௧௩

கயிலாய மானைக்கா நள்ளாறு நாகைக் காரோணந் திருச்சோற்றுத் துறையேழு ; புகலூர், வயலாருங் கழிப்பாலை யொற்றியூர் திருவா வடுதுறையே**ட் டாந்**;தில்லை மறைக் காடு மதுரை, யியலாரு முதுகுன்றம் **பதினொன்று** ; கச்சி யேகம்ப மிடைமருதீ **ரா**;றையா றதிகை, யய**வீரொன்பான்**; வீழி·யாரூர்·சீகாழி **யறுநான்கு - முப்பானொன் - கெழுபத்தொன்** றாமே. ௧௪

திருப்பதிகக்கோவை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - உமாபதி சிவாசாரியார்

அருளிச் செய்த

திருமுறைகண்ட புராணம்

கருமுறை விண்டடி யவருய் மாறருள் கவுணியர் குலதீபந்
தருமுறை நாவுக் கரசா ரூரர் தாஞ்சே மித்திடுமத்
திருமுறை கண்ட புராண முரைக்கச் சிந்துர முகனற்றாள்
ஒருமுறை யிருமுறை மும்முறை வாழ்த்தி யுவந்தன் பொடுபணிவாம்.

வேறு

உலகமகிழ் தருசைய மீது தோன்றி யோவாது வருபொன்னி சூழ்சோ ணாட்டின்
றிலகமென விளங்குமணி மாட **வாரூர்த் தியாகேசர்** பதம்பணிந்து செங்கோ லோச்சி
யலகில்புகழ் **பெறுராச ராச மன்ன னபயகுல சேகரன்**பா லெய்து மன்ப
ரிலகுமொரு மூவருள் பதிக மொன்றொன் றேயினிதி னுரைசெய்ய வன்பாற் கேட்டு,

கையிரண்டு முச்சிமே லேறக் கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப
வையன்மலர்ப் பதமுளத்தே கொண்டு போற்றி யரியமுறை தேடவெங்கு மிலாமை யா
னையுமனத் தினனுகி யிருக்குங் காலை, **நாரையூ** ரினிலாதி சைவமறை யோன்பால்[லே
வையமெலா மீடேறச் சைவம் வாழ மாமணிபோ லொருசிறுவன் வந்து தோன்றி, ௨

வளமொடுப நயனவிதிச் சடங்கும் பூண்டு மறைமுதலாங் கலைபயின்று வருநா
ளீன்ற, கிளர்மறையோ னோரூர்க்குச் செல்ல, மைந்தன் கேடில்பிதா வுரைத்தமொழிப்
படியே யந்தி, யிளமதிச்செஞ் சடைப்பொல்லாப் பிள்ளை யாரை யேத்தியா ராதிப்பா
னினிதி னேகி, யுளமலியன் பொடுதிருமஞ் சனமுன் னுகு முரியவெலாஞ் செய்து
நிவே தனமுன் வைத்து, ௩

எம்பெருமா னமுதுசெய வேண்டு மென்ன விறைஞ்சிடவு மமுதுசெயா திருப்பக்
கண்டு, வெம்பியுள "மேதேனுந் தவறிங் குண்டோ? வேழமுக னே!யடியே னிவேதித்
திட்ட, பம்பமுத முண்ணுத தென்னை ?" யென்னப் பரிந்து,தலை தனைமோதப் புகுங்கா,
லெம்மா "னம்பி!பொறு" வெனத்தடுத்,தவ் வமுத மெல்லா நன்கருந்த, வுவந்துநம்பி
நவில்வதானான் ; ௪

"எந்தையே! யினியடியேன் பள்ளிக் கேகி லெங்கடே சிகனடிப்பா னுத லாலே
சந்தமறை முதற்கலைக ணீயே யோதித் தரல்வேண்டு" மென,வேழ முகத்தோன் ஞானு
மந்தமற வோதுவிக்க, வோதி நம்பி மகிழ்ந்தனனன்; றதுபோல மற்றை நாளும்
விந்தையொடு நிகழ,**நம்பி யாண்டார் நம்பி** மேவியிருந் திடுஞ்செய்தி வேந்தன் கேளா,

"செல்வமிகு திருநாரை யூரின் மேவுஞ் சிவனளித்த மதகரிக்குச் சிந்தை கூர்ந்து
நல்லபுக முடையநம்பி யாண்டார் நம்பி நண்பினொடு நிவேதிப்பான் மதுர மிக்க [ன்றே,
வெல்லையில்வா ழைக்கனிதே னவலோ டப்ப மௌளுண்டை யிவ்வுலகோ ரெடுக்க" வெ
மல்லன்மிகு சேனையுட னிராச ராச மன்னவனு மந்நகரில் வந்து சேர்ந்தான். ௬

ஆங்கதனுக் கந்நகரி லிடம்போதாம லயல்சூழப் பதின்காத வகல வெல்லை, மாங்
கனிவா ழைக்கனிகள் வருக்கை யாவும் வந்தனவவ் வெல்லையெல்லா மருவ வைத்துப்

பாங்கினுட னம்பிதாள் பணிந்து மன்னன் பலகனிகள் கொணர்ந்தவெலாம் பகர்ந்து போற்றி, "யீங்கிதனைப் பொல்லாத பிள்ளையாருக் கிப்பொழுதே நிவேதிக்க" வென்று சொன்னான். எ

நம்பியர சன்சொன்ன வார்த்தை கேளா " நன்றனது பணி " யென்ன வருளா லுன்னித், தும்பிமுக னடிபணிந்து "மன்னனிங்குத் தொகுத்தனநீ யமுதுசெய வேண்டு"மென்னக், கம்பமதக் களிற்றுமுகத் தானு மங்குக் கருத்தினுட னம்பியுரைக் கிசைந்து காட்ட, விம்பரினில் வந்தனநாற் சுத்தி செய்தே யிருந்தவெலாம் படைக்க,வவ னேற்றல் செய்தான். அ

புகர்முகக்கை புறப்படவே படைத்த வெல்லாம் புகுந்தவிட மறியாமற் போன பின்னை, யகநெகிழ மெய்யரும்பிக் கண்ணீர் வார நம்பிகழ லன்பினு லரசன் போற்றி, "மிகவுமொரு விண்ணப்ப மடியேற் குண்டு ; வேதியனே! கே"ளென்று விளம்பு வான் "மெய்ப், புகழதுசேர் மூவர்தமிழ் தொண்டர் செய்தி பூதலத்தில் விளங்க"வெனப் போற்றி நின்றான். கூ

அந்தவுரை கேட்டலுமங் கரசன் றன்னை நம்பிமகிழ்ந் தருள்புரிவா " னருள்சேர் மூவர், செந்தமிழ்க ளிருந்தவிட, மன்ப ருள்ளோர் செய்திக்கவ் விநாயகன்றாள் சிந்தித் தெந்தா, யந்தவகை யேதென்று கேட்டா லெந்தை மகிழ்ந்தருளு மந்நெறியை வழாது னக்குத், தந்திடுவன் மன்ன!பொறு " வென்று சொல்லித் தந்திமுகன் சந்நிதியிற் றாழ்ந்து சென்றான். க௦

சென்றுபணிந் திபமுகத்தோன் பாதப் போதைச் சென்னியில்வைத் தவனருளிற் றிளைத்துச் சிந்தை, யொன்றுமற வுருகி,விழி தாரைகொள்ள, வுண்மையினால் வந்தித் தங் குவாவோன் றன்னை, "யின்றமிழ்சேர் மூவர்தமி ழிருந்த வெல்லை, யெல்லையில்சீர்த் திருத்தொண்ட ரியல்பு மூர்த்தி!, நன்றுமருள் செய்தருள வேண்டு"மென்ன, நாகமுக னம்பிக்கு நவில லுற்றான். கக

வார்ந்தருட்க ணீர்சொரிய நம்பி கேட்ப "வண்டமிழ்க ளிருந்தவிட மன்று ளாடுங்
கூர்ந்தவிருட் கண்டர்புறக் கடையின் பாங்கர்க் கோலமலர்க் கைகளடை யாள மாகச்[சார
சார்ந்தன"வென் றருள்செய்து,தொண்டர் பேறுஞ் சாற்றுதலாற்,சகதலத்தோ ரருளைச்
வார்ந்ததமி ழிருந்தவிட, மன்பர் செய்தி, யத்தனையு நம்பிமனத் தருளிற் கொண்டார்.

கொண்டுகுல சேகரனுங் கோன்பால் வந்து,குஞ்சரத்தோ னருள்செய்த கொள்கை யெல்லா, மண்டுபெருங் காதலுடன் சொல்லி, யந்த வண்டமிழின் பெருமைதனை வகுத் துச் சொல்வார், "கண்டபெரு மந்திரமே மூவர்பாடல் கைகாணு மந்திரங் கண்ணுத லோன் கூற, லெண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற்காக விம்மொழியின் பெருமை யையா னியம்பக் கேணீ!. கங

"சேடர்மலி காழிநகர் வேந்தர்தாமுந் தேவர்புகழ் திருத்தோணிச் சிவனார் பங்கிற்
பீடுடைய வுமைமுலைப்பா னருளா லுண்டு பிஞ்ஞகனைச் சினவிடைமேற் பெருகக் கண்டு
தோடுடைய செவியன்முதற் கல்லூ ரென்னுந் தொடைமுடிவாப் பரசமயத் தொகை
பாடினார் பதிகங்கள் பாவி லொன்றாம் பதினாறயிர முளதாப் பகரு மன்றே.[கண் மாளப்

திருநாவுக் கரையரெனுஞ் செம்மை யாளர் தீயமணர் சிறைநீங்க வதிகை மேவுங்
குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலை கொடுங்கூற்ற யினவென்ன வெடுத்துக் கோதி
லொருமானைத் தரிக்குமொரு வரையுங் காறு மொருநாற்பத் தொன்பதினா யிரம தாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப் பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்று ளாரே. கரு

பின்புசில நாளின்க ணாரூர் நம்பி பிறங்குதிரு வெண்ணெய்நல்லூர்ப் பித்தா வென்னு, மின்பமுதற் றிருப்பதிக மூழி தோறு மீறாய்மூப் பத்தெண்ணா யிரம தாக

முன்புகுந்த நவர்நோடித்தான் மலையிற் சேர்ந்தார் ; முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர் தன்னி, லன்றவர்கை யிலச்சினையால் வைத்தார் : மன்ன ! வாராய்ந்து தருக" வென வருளிச் செய்தார். கசு

"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடு மதுபோலன்; றிதுவென்று முளதா; முண்மைப், பரபதமுந் தற்பரமும் பரனே யன்றிப் பலரில்லை யென்றெழுதும் பனுவல்; பாரி, னெரியினிடை வேவா; தாற் றெதிரே யோடு; மென்புக்கு முயிர்கொடுக்கு; மிடுநஞ் சாற்றுங்; கரியைவளை விக்குங்; கன் மிதக்கப் பண்ணுங்; கராமதலை கரையி லுறக் காற்றுங் காணே." கஎ

என்றென்று நம்பிக்குப் பரிவா லுண்மை யின்றமிழின் பெருமைதனை யியம்பக் கேட்டுக், குன்றொன்று பேருருவங் கொண்டாற் போலுங் குஞ்சரத்தோ னருளினை யுட் கொண்டு மன்னன், மன்றினிடஞ் சென்று, மறை யோர்க டொண்டர் வார்சடை யோர் காவலுடை மரபோர்க் கெல்லா, நன்றெங்கள் கணபதிதன் சொல்லி தென்று நன்மையுடன் மன்னவனூர் நவிலுங் காலை, கஅ

அத்தகையோர் "தமிழ்வைத்த மூவர் வந்தா லறைதிறக்கு" மெனவுரைக்க, வரசன் றானு மெய்த்தகுசீ ரம்பலவர்க் குற்ற செல்வ விழாவெடுத்து, விளம்புதமிழ் மூவர் தம்மை யுய்த்தணிவீ தியினிலுலா வருவித் தும்பர் நாயகன்றன் கோயில்வல மாக்கி, யுள்ளே [ன்.
சித்தமெலா முருக்குதமி ழிருக்கைசேரச் சேர்த்தி, "யவர்சேர்ந்த" தெனச் செப்பிநின்று

ஐயர்நட மாடுமம் பலத்தின் மேல்பா லருள்பெற்ற மூவர்தம தருள்சேர் செய்ய கையதுவே யிலச்சினையா யிருந்த காப்பைக் கண்டவர்க ளதிசயிப்பக் கடைவாய் நீக்கிப் பொய்யுடையோ ரறிவுதனைப் புலன்கண் மூடும் பொற்பதுபோற் போதமிகும் பாட றன் னொய்யசிறு வன்மீக மூடக் கண்டு நொடிப்பளவி னிற்சிந்தை நொந்த வேந்தன், [னை

பார்த்ததனைப் புறத்துய்ப்ப வுரைத்து, மேலே படிந்திருந்த மண்மலையைச் சேரத்தள்ளிச் சீர்த்ததில தயிலமலி கும்பங் கொண்டு செல்லுநனை யச்சொரிந்து திருவே டெல்லா மார்த்தவரு ளதனாலே யெடுத்து நோக்க வலகிலா வேடுபழு தாகக் கண்டு [ன்.
"தீர்த்தமுடிக் கணிபரனே! பரனே!" யென்னச் சிந்தைதளர்ந் திருகணீர் சோர நின்று

ஏந்துபுகழ் வளவனிவ்வா றன்பினாலே யிடர்க்கடலின் கரைகாணா தினையுங் காலைச், சார்ந்தமலை மகள்கொழுந னருளால் "வேதச் சைவநெறித் தலைவரொனு மூவர் பாடல், வேய்ந்தனபோன் மண்மூடச் செய்தேயீண்டு வேண்டுவன வைத்தோ" மென் றுலகி லுள்ள, மாந்தரொடு மன்னவனுங் கேட்கு மாற்றால் வானகத்தி லோரோசை யெழுந்த தன்றே. உஉ

அந்தமொழி கேட்டலுமே, மன்னன்றானு மாடினான்; பாடினா; னலக்கண் யாவுஞ், சிந்தினா; னமுதமுண்டான் போல நெஞ்சந் தேறினா; னம்பிதிரு வடியிற் றாழ்ந்தான்; பந்தமறு சிவனடியார் கொள்க வென்னாப் பண்டாரந் திறந்துவிட்டான்; பரிவு கூர்ந்தான் ; இந்தவகைப் பெருங்களிகொண் மன்னன் றானு மெழின்முறையை முன்போல வகுக்க வெண்ணி, உங

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர் வகுத்தருளா லமைத்ததிரு முறையோர் மூன்று, மன்னவகை வாகீசர் முறையோர் மூன்று, மாரூ ருரைத்ததிரு முறைய தொன் றாந், துன்னுவகை யேழாகத் தொகுத்துச் செய்தான் றாயமனு வேழுகோடி யென்ப துன்னித், தன்னிகரி றிருவருளான் மன்னன்றானுந் தாரணியோர் வீடுபெறுந் தன்மை சூழ்ந்தே. உச

வேறு

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி னன்கின லிலங்குதிரு முறைமூன்று ;
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினல்
வண்பெற்ற முறை;யொன்று நூற்றினல் வண்ரெண்டார் ; உரு

ஆகவளர் திருமுறையே ; ழருட்டிருவா சகமொன்று ;
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்று;சிவ
போகமிகு மந்திரமா முறையொன்று ; புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள். உசு

வைத்ததற்பி னம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களையு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினென்றப் பண்ணினர். உஎ

மந்திரங்க ளேழுகோடி யாதலினன் மன்னுமவ
ரிந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்துப்,
பந்தமுறு மந்திரங்கள் பதினென்று மாதலின
லந்தமுறை நான்கினெடு முறைபதினென் ருக்கினர். உஅ

ஆக்கியபின் றிருத்தொண்டத் தொகையடைவை யருளாலே
நோக்கியபின் னயன்மார் நடங்கடைவுக், தொழிற்பேறும்
பாக்கியத்தா லிபமுகத்தோ னருள்செய்த பகுதியினல்
வாக்கியல்சே ரந்தாதி நம்பியடை வேவகுத்தார். உகூ

சீரருள்சே ரறுபத்து மூவர்தனி ; திருக்கூட்டஞ்
சாருமவ ரொன்பானுந் ; தண்டமிழா னுரைசெய்து
பேரிசையாம் வகையடைவு புவியினிடைப் பெருமையினற்
சீருலவு திருவெருக்கத் தம்புலியூர் சென்றடைந்தார். ௩௦

சென்னியரு ணம்பியிவ ரந்நகரைச் சேர்ந்துசிவன்
மன்னுதிருக் கோயிலினை வலங்கொண்டு பணிந் "தரனே
யின்னிசைதந் தரு"ளென்ன விரக்கமுடன் குறைந்திரப்பக்
கன்னியொரு பங்குடையோ னருள்செய்த கடனுரைப்பாம். ௩க

"நல்லிசையாழ்ப் பாணனர் நன்மரபின் வழிவந்த
வல்லியொருத் திக்கிசைகள் வாய்ப்பவளித் தோ"மென்று
சொல்ல,வவ டனையழைத்துச் சுருதிவழிப் பண்டமுவு
நல்லிசையின் வழிகேட்டு நம்பியிறை யுண்மகிழ்ந்தார். ௩உ

"ஆங்கவனை யம்பலத்து ளாடுவார் திருமுன்பே
பாங்கினுடன் கொடுவந்து பண்ணடைவு பயில்பாட
லோங்கருளான் முறைபணித்தற் கொக்கு"மென வோரோசை
நீங்கரிய வானின்க ணிகழவா சன்கேட்டான். ௩௩

மன்னனுக்கு நம்பிக்கு மறையவர்மூ வாயிரவர்
பன்னரிய திருத்தொண்டர் பலதுறையோர்க் குங்கேட்க

வின்னருண்முன் வியந்துரைத்த விவண்முதலா விசைத்தவிசை
தென்னிலமேன் மிகத்தோன்றத் திருவருளாற் றோன்றியதாம். ௩௪

சொன்னட்ட பாடைக்குத் தொகையெட்டுக் கட்டளையா ;
மின்னிசையாற் றருந்தக்க ராகத்தேழ் கட்டளையாம் ;
பன்னுபழந் தக்கரா கப்பண்ணின் மூன்றுளதா ;
முன்னரிய தக்கேசிக் கோரிரண்டு வருவித்தார். ௩௫

மேவுகுறிஞ் சிக்கஞ்சு ; வியாழக்குறிஞ் சிக்காறு
பாவுபுகழ் மேகராகக் குறிஞ்சிப்பா லிரண்டு ;
தேவுவந்த விந்தளத்தின் செய்திக்கு நான்;கினிய
தாவில்புகழ்க் காமரத்தின் றன்மைதனக் கிரண்டமைத்தார். ௩௬

காந்தார மாகிய பியந்தையாங் கட்டளைக்கு
வாய்ந்தவகை மூன்றாக்கி, வன்னட்ட ராகத்திற்
கேய்ந்தவகை யிரண்டாக்கிச், செவ்வழியொன் றாக்கி,யிசைக்
காந்தார பஞ்சமத்தின் கட்டளைமூன் றாக்கினார். ௩௭

கொல்லிக்கு நாலாக்கிக், கவுசிகத்துக் கூறும்வகை
சொல்லிலிரண் டாக்கி,மிகு தூங்கிசைநேர் பஞ்சமத்திற்
கொல்லையினி லொன்றாக்கிச், சாதாரிக் கொன்பதாப்,
புல்லுமிசைப் புறநீர்மைக் கொன்றாகப் போற்றினார். ௩௮

அந்தாளிக் கொன்றாக்கி, வாகீச ரருந்தமிழின்
முந்தாய பலதமிழுக் கொன்றொன்றா மொழிவித்து,
நந்தாத நேரிசையாங் கொல்லிக்கு நாட்டிலிரண்,
டுந்தாடுங் குறுந்தொகைக்கோர் கட்டளையா விரித்துரைத்தார். ௩௯

தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்தங்
காண்டகையார் தடுத்தாண்ட வையாரு டுய்யமுறைக்
கீண்டிசைசே ரிந்தளத்துக் கிரண்டாக வெடுத்துரைத்து,
நீண்டதக்க ராகத்துக் கிரண்டாக நிகழ்வித்தார். ௪௦

கூறரிய நட்டரா கத்திரண்டு, கொல்லிக்கு
வேறுவகை மூன்றாக, மிகுந்தபழம் பஞ்சுரத்துக்
கேறும்வகை யிரண்டாக்கி, யின்னிசைசேர் தக்கேசிப்
பேறிசையா றாக்கி,யதிற் காந்தாரம் பிரித்திரண்டாம். ௪௧

ஒன்றாகுங் காந்தார பஞ்சமத்துக்; கோரிரண்டா
நன்றான சீர்நட்ட பாடைக்கு; நவின்றுரைக்கிற்
குன்றாத புறநீர்மைக் கிரண்டாகுங்; கூறுமிசை
யொன்றாகக் காமரத்துக் கொன்றாகப் போற்றினார். ௪௨

உற்றவிசைக் குறிஞ்சிக்கோ ரிரண்டாக வகுத்தமைத்துப்,
பற்றரிய செந்துருத்திக் கொன்றாக்கிக், கவுசிகப்பாற்
றுற்றவிசை யிரண்டாக்கித், தூயவிசைப் பஞ்சமத்துக்
கற்றவிசை யொன்றாக்கி, யானருளால் விரித்தமைத்தார். ௪௩

இந்தவகை சிவன்செவிப்பா லெக்கண்ணுந் தழைத்தோங்க
வந்தமிலா வறுபத்து மூவரு ளம்புவிமே

னந்தியிட மும்மலமு நல்லுலகோர் நீங்கியிடச்
சிந்தையருட் சிவமாகத் தெளிவித்தா னருட்சென்னி ௪௪

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனு
மோராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையு
மாராத வன்பினுட னடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதன்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம். ௪௫

திருமுறைகண்டபுராணம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - ௪௬

திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை, திருமுறைகண்ட புராணம் எனுமிவை ஆக்கியோர் பெயரில்லாமலே பல பதிப்புக்களிற் பதிக்கப்பட்டுள்ளன. இவை உமாபதி சிவனார் திருவாக்கல்ல என்று கூறுவாருமுண்டு. இங்கு இறுதிப் பாட்டிலே "திருத்தொண்டர் பதந்துதிப்பாம்" (45) என்றது திருத்தொண்டர் புராணசாரத்தினைக் குறிக்குமெனத் தோன்றுவதால் அதன் ஆசிரியராகிய உமாபதி சிவாசாரியாரே திருமுறைகண்ட புராணமுஞ் செய்தாராவர் என்ற கொள்கை வலியுறுகின்றது.

உ

திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - உமாபதிசிவாசாரியார்

அருளிச் செய்த

" திருத்தொண்டர்புராணப்பயன் " என்னும்

திருத்தொண்டர் புராணசாரம்

மல்குபுகழ் வன்றொண்ட ரருளா லீந்த
வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை
நல்கும்வகை புல்கும்வகை நம்பி யாண்டார்
நம்பிதிரு வந்தாதி நவின்ற வாற்றாற்
பல்குநெறித் தொண்டர்சீர் பரவ வல்ல
பான்மையா ரெமையாளும் பரிவால் வைத்த
*செல்வமிகுந் திருத்தொண்டர் புராண மேவுந்
திருந்துபய னடியேனுஞ் செப்ப லுற்றேன். க

சுந்தரமூர்த்தி நாயனார்

தண்கயிலை யதுநீங்கி, நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாராய்,
மண்புகழ வருட்டுறையா னோலை காட்டி
மணம்விலக்க, வன்றொண்டா, யதிகை சேர்ந்து,
நண்பினுட னருள்புரிய, வாரூர் மேவி,
நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்,
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே. உ

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்,
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து,
தப்பின்முது குன்றர்தரும் †பொருளாற் றிட்டுத்,
தடத்தெடுத்துச், சங்கிலிதோள் சார்ந்து, நாத
னொப்பிறனித் தூதுவந், தாறூடு கீறி,
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி,
மெய்ப்பெரிய களிறேறி, யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே. ௩

தில்லைவாழந்தணர்

நல்லவா னவர்போற்றுந் தில்லை மன்று
ணடஞ்செய் பெருமானுக் கணியார், நற்பொற்
றெல்லைவான் பணியெடுத்தற் குரியார், வீடுங்
‡துறந்தநெறி யார், தொண்டத் தொகைமுன் பாடத்

பாடபேதம்—*செல்வமலி. †பொன். ‡துறந்தநிலையார்.

"தில்லைவா ழந்தண"ரென் றெடுத்து நாதன் செப்புமரு
ளுடையார், முத் தீயார், பத்திக்
கெல்லைகாண் பரியா,ரோப் புலகிற் றூமே
யேய்ந்துளா, ரெமையாள வாய்ந்து ளாரே. ௪

திருநீலகண்ட நாயனர்

தில்லைநகர் வேட்கோவர் அூர்த்த ராகித்,
"தீண்டிலெமைத் திருநீல கண்ட" மென்று
சொல்லுமனை யாடனையே யன்றி மற்றுந்
துடியிடையா ரிடையின்பந் துறந்து, மூத்,தங்
கெல்லையிலோ டிறைவைத்து மாற்றி "'நாங்க
ளெடுத்தில'மென் றியம்பு"மென, விழிந்து பொய்கை
மெல்லியலா ளுடன்மூழ்கி, யிளமை யெய்தி,
விளங்குபுலீச் சரத்தரனை மேவி னரே. ௫

இயற்பகை நாயனர்

எழிலாருங் காவிரிப்பூம் பட்டி னத்து
ளியல்வணிக, ரியற்பகையா, ரிருவர் தேட
வழலாய பிரான்றூர்த்த மறையோ னகி
யாயிழையைத் தரவேண்டி யணைய, வையன்
கழலாரப் பணிந்து,மனைக் கற்பின் மேன்மைக்
காதலியைக் கொடுத், தமர்செய் கருத்தால் வந்த
பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்து, மீளப்
பிஞ்ஞகனை ரழைத்தருளப், பெற்று ளாரே. ௬

இளையான்குடி மாறநாயனர்

மன்னியவே ளாண்டொன்மை யிளைசை மாறர், வறுமையா லுணவுமிக மறந்து வைகி,
யுன்னருநள் ளிருண்மழையி லுண்டி வேண்டி யும்பர்பிரா னணைய,வய லுழுது வித்துஞ்
செந்நெல்முளை யமுதுமனை யலக்கா லாக்கிச், சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து,
பன்னலரு முணவருந்தற் கெழுந்த சோதிப் பரலோக முழுதாண்ட பான்மை யாரே.

மெய்ப்பொருணயனர்

சேதிபர்நற் கோவலூர் மலாட மன்னர்,
திருவேட மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை
நீதியினு ; ருடன்பொருது தோற்ற மாற்று
னெடுஞ்சினமுங் கொடும்படையு நிகழா வண்ணம்
மாதவர்போ லொருமுறைகொண் டணுகி வாளால்
வன்மைபுரிந் திட,மருண்டு வந்த தத்தன்
காதலுற, "நமர்தத்தா !" வென் று நோக்கிக்,
கடிதகல்வித், திறைவனடி கைக்கொண் டாரே. ௮

விறன்மிண்ட நாயனர்

விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண் டொன்மை
விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்,
"வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும்
வன்றொண்டன் புற;கவனை வலிய வாண்ட

துளங்குசடை முடியோனும் புற"வென் றன்பாற்
சொல்லுதலு, மவர்தோண்டத் தோகைமுன் பாட்
உளங்குளிர "வுள"தென்று; ரதனு லெண்ண
லுவகைதர வுயர்கணத்து ளோங்கி னாரே. கூ

அமர்நீதி நாயனார்

பழையாறை வணிகரமர் நீதி யார்பாற்
பரவுசிறு முனிவடிவாய்ப் பயிலு நல்லூர்க்
குழைகாதர் வந்,தொருகோ வணத்தை *வைத்துக்,
கொடுத்ததனை யெடுத்தொளித்துக், குளித்து வந்து,
தொழிலாரு மதுவேண்டி, வெகுண்டு, "நீரித்
துலையிடுங் கோவணநேர் தூக்கு" மென்ன,
வெழிலாரும் பொன்மனைவி யிளஞ்சே யேற்றி,
யேறினர்,வா னுலகுதொழ வேறி னாரே. க0

எறிபத்த நாயனார்

திருமருவு கருவூரா னிலையார் சாத்துஞ் சிவகாமி யார்மலரைச் சிந்த, யானை
யரனெறியோ னெறிபத்தர் பாகரோடு மறவெறிய, வென்னுயிரு மகற்றீ ரென்று
புரவலனார் கொடுத்தபடை யன்பால் வாங்கிப்,புரிந்தரிவான் புக,வெழுந்த புனிதவாக்காற்
கரியினுடன் விழுந்தாரு மெழுந்தார்; தாமுங் கணநாத ரதுகாவல் கைக்கொண் டாரே.

ஏனாதிநாத நாயனார்

ஈழக் குலச்சான்றா, ரெயினனூர்வா ழேனாதி நாதனா, ரிறைவ னீற்றைத்
தாழத் தொழுமரபார், படைக ளாற்றுந் தன்மை†பெரு வதிசூரன் சமரிற் றோற்று
வாழத் திருநீறு சாத்தக் கண்டு மருண்டார், தெருண்டார்,கை வாள்வி டார்,நேர்
வீழக் களிப்பார்போ னின்றே, யாக்கை விடுவித்துச், சிவனருளே மேவி னாரே. கஉ

கண்ணப்ப நாயனார்

வேடரதி பதியுடுப்பூர் வேந்த னாகன்
விளங்கியசேய், திண்ணனார், கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதரு மலருங்
காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தி யார்க்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச்,
சீறுசிவ கோசரியுந் தெளிய,விழிப் புண்ணீ
ரோட,வொரு கண்ணப்பி, "யொருகண் ணப்ப!
வொழிக"வெனு மருள்கொடரு குறநின் றாரே. கங

குங்குலியக்கலய நாயனார்

சீலமலி திருக்கடவூர்க் கலய னாராந்
திகழ்மறையோர், பணிவறுமை சிதையா முன்னே
தாலியைநெற் கொளவென்று வாங்கிக் கொண்டு,
சங்கையில்குங் குலியத்தாற் சார்ந்த செல்வர்,
ஞாலநிகழ் திருப்பனந்தா ணாதர் நேரே
நரபதியுந் தொழக்கச்சா னயர்ந்து போதப்,
பாலமுத முண்டாரு மாசு மெய்திப்
பரிந்தமுது செயவருள்சேர் பான்மை யாரே. கச

பா - ம்—*வைக்கக். †பொரு அரிசூரன்.

மானக்கஞ்சாற நாயனார்

கஞ்சநகர் மானக்கஞ் சாற னார்சீர்க் காதன்மகள் வதுவைமணங் காண நாதன்
வஞ்சமலி மாவிரதத் **தலைவ** னாகி வந்துபுகுந் தவளளக மகிழ்ந்து நோக்கிப்
“பஞ்சவடிக் கா”மென்ன, வரிந்து நீட்டும் பத்தரெதிர் மறைந்திறைவன் **பணித்த** வாக்கா
லெஞ்சலில்வண் குழல்பெற்ற பேதை மாதை யேயர்பிராற் குதவி,யரு ளெய்தி னாரே.

அரிவாட்டாய நாயனார்

தாவில்கண மங்கலத்துள் வேளாண் டொன்மைத் **தாயனார்**, நாயனார் தமக்கே செந்நெற்
றாவரிசி யென,வினைவ தவையே யாகத், துறந்துணவு வடுவரிசி துளங்கு கீரை [ன்னே,
யாவினினைத் துடன்கொணர,வோர்கமரிற் சிந்த, வழிந்,தரிவாள் கொண்டேட்டி யரியா மு
மாவடுவி னொலியுமான் கரமுந் தோன்றி வாள்விலக்கி யமரர்தொழ வைத்த வன்றே.

ஆனாய நாயனார்

மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருண்
மருவுபுக **ழானாயர்**, வளரா மேய்ப்பார்,
கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து
குழலிசையி னைந்தெழுத்துங் குழைய வைத்துத்,
தங்குசரா சரங்களெல்லா முருகா நிற்பத்,
தம்பிரா னணைந்துசெவி தாழ்த்தி வாழ்ந்து
பொங்கியவான் கருணைபுரிந் “தென்று மூதப்
போதுக”வென் றருள,வுடன் போயி னாரே. கஎ

மூர்த்தி நாயனார்

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தியாராம் வணிகர்,திரு வாலவாய் மன்னர் சாத்தத்
தழங்குதிர முழங்கைதரத், தேய்த்த ஆறுந் தவிர்ந்,தமணர் வஞ்சனையுந் தவிர, மன்ன
னிழந்தவுயி ரினனாக, ஞால நல்க, வெழில்வேணி முடியாக, விலங்கு வேட
முழங்குபுக ழணியாக, விரைநீ றாக **மும்மையுல காண்ட**ருளின் முன்னி னாரே. கஅ

முருக நாயனார்

மன்னுதிருப் புகலூர்வாழ் முருக னாரா மறையவர்கோ, வர்த்தமா னீச்ச ரத்தார்
சென்னியினுக் கழகமரு மலர்கள் கொய்து *திருமாலை புகழ்மாலை திகழச் சாத்திக்,
கன்னிமதிற் கழுமலநா டுடைய நாதன் காதன்மிகு மணங்காணுங் களிப்பி னாலே
யின்னல்கெட,வுடன்சேவித் தருளான் மீளா திலங்குபெரு மணத்தானை யெய்தி னாரே.

உருத்திரபசுபதி நாயனார்

பங்கமில்வண் புகழ்நிலவு **தலையூர்** வாழும்
பசுபதியா ரெனுமறையோர், பணிந்து செந்தே
னங்கமல மடுவினிடை யல்லு மெல்லு
மகலாதே யாகளமா யமர்ந்து, நின்று,
திங்கள்வளர் சடைமுடியா னடிகள் போற்றித்,
திருவெழுத்து **முருத்திர** முந்†திகழ வோதி,
மங்கையிட முடையபிரா னருளான் மேலை
வானவர்க டொழுமுலகின் மன்னி னாரே. உ0

பா - ம்—*திகழ்மாலை புகழ்மாலை திருந்தச் சாத்தி. †திருந்த.

திருநாளைப்போவார் நாயனார்

நன்மைதிகழ் மேற்காநாட் டாத னூர்வாழ்
நந்தனார், புறத்தொண்டர், "நாளைப் போகப்
பொன்மலிதென் புலியூர்க்"கென் றுரைப்பார், புன்கூர்ப்
பொய்கையமைத் தடலேறு பிரிய நோக்கி,
வன்மதில்சூழ் தில்லையிறை யருளால் வாய்ந்த
வண்டழலி னிடைமூழ்கி, மறையோர் போற்ற
மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்து, நாதன்
விளங்குநடந் தொழுமன்றுண் மேவி னாரே. ௨௧

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

கோந்தலர்பூம் பொழிற்கச்சி நகரே காலிக்
குலத்தலைவர், தவர்குறிப்புக் குறித்து ளார்பால்
வந்திறைவர் "நமக்கின்று தாரீ ராகின்
வருந்துமுட" லெனவாங்கி மாசு நீத்த
கந்தைபுல ராதொழிய, மழையு மாலைக்
கடும்பொழுதும் வரக்கண்டு, கலங்கிக், கன்மேற்
சிந்தமுடி புடைப்பளவிற், றிருவே கம்பர்
திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி னாரே. ௨௨

சண்டேசுர நாயனார்

வேதமலி சேய்ஞலூ ரெச்ச தத்தன்
விளங்கியசேய், மறைபயிலும் விசார சன்மர்,
கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாது, தாமே
கொண்டுநிரை மண்ணியின்றென் கரையி னீழற்
றுதகியின் மணலிலிங்கத் தான்பா லாட்டத்,
தாதைபொறு தவையிடறுந் தாள்கண் மாளக்
காதி,மலர்த் தாம-முயர் நாம-முண்ட
கல-மகனும் பத-மருளாற் கைக்கொண் டாரே. ௨௩

திருநாவுக்கரசு நாயனார்

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில் *கோறுக் கையரதிபர் புகழ னார்பான்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றி,யமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரு டாவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப், பாடலிபுத் திரத்திற்
பாழியொழித், தானதிகைப் பதியில் வந்தார். ௨௪

வந்துதமக் கையாருளா னீறு சாத்தி,
வண்டமிழா னேய்தீர்ந்து, வாக்கின் மன்னாய்,
வெந்தபொடி - விடம்-வேழம் - வேலை - நீந்தி,
வியன்சூலங், கொடியிடபம் விளங்கச் சாத்தி,

பா - ம்—*குறுக்கை.

யந்தமிலப் பூதிமக னரவு மாற்றி,
யருட்காசு பெற்று,மறை யடைப்பு நீக்கிப்,
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு,
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னாரே. ௨௫

குலச்சிறை நாயனார்

கோதில்புகழ் தருமணமேற் குடியார், கோவண்
குலச்சிறையார், தென்னர்குல வமைச்சர், குன்றா
மாதவர்க ளடிபரவு மரபார், பாண்டி
மாதேவி யாரருள்வான் பயிர்க்கு வேலி,
காதன்மிகு கவுணியர்கோன் வாதிற் றோற்ற
கையரைவை கைக்கரைசேர் கழுவி லேற்று
நீதியினா, ராலவாய் நிமலர்ச் சேர்ந்த
நின்மலனா, ரென்மலங்க ணீக்கி னாரே. ௨௬

பெருமிழலைக்குறும்ப நாயனார்

கொண்டல்பணி வளர்சோலை மிழலை நாட்டுக்
கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்ப னார்,சீ
ரண்டர்பிரா னடியவருக் கடியா ராகு
மாதரவா லணுக்கவன் றொண்டர்க் காளாய்,
மண்டொழுமெண் டருசித்தி வாய்ந்து ளார்தாம்,
வன்றொண்டர் வடகயிலை மருவு நாண்மு
னெண்டிகழு மறைமூல நெறியூ டேகி,
யிலங்கொளிசேர் வடகயிலை யெய்தி னாரே. ௨௭

காரைக்காலம்மையார்

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க தனதத்தன் றரும்புனித வதியார், மாவின்
செங்கனிக டிருவருளா லழைப்பக், கண்டு திகழ்கணவ னதிசயித்துத் தேச நீங்க,
வங்கவுட லிழந்து,முடி நடையா லேறி, "யம்மையே!" யெனநாத, "னப்பா" வென்று,
பொங்குவட கயிலைபணிந், தாலங் காட்டிற் புனிதனட மனவரதம் போற்றி னாரே. ௨௮

அப்பூதியடிக ணாயனார்

அந்தமினற் றிங்களூர் வருமப்பூதி யருமறையோர், திருநாவுக் கரசி னாமம்
பந்தரிடை யெழுதக்,கண் டரசு மெய்தப், பணிந்து,பரி கலநேடிப் படப்பை சேர்ந்த
மைந்தனுயி ருயர்கதலி யிலைமேற் றுஞ்சும் வாளரவு கவர,வுடன் மறைத்தல் கேட்டுச்
சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தாற் றீர்த்துத் திருவமுது செய,வருளைச் சேர்ந்துளாரே

திருநீல்நக்க நாயனார்

நீதிதரு மறையோர்வாழ் சாத்த மங்கை நீலநக்க ரயவந்தி நிமலர் மேனி
யூதிவிழுஞ் சிலம்பிகடிந் தவளை நீத்தார்க், குமியாத விடநாத னுறுநோய் காட்டக்,
காதன்மிகு மனைவியையு மகிழ்ந்து மேவிக்,காழியர்கோ னமுதுசெயக் களித்து வாழ்ந்து,
வேதிகையிற் பாணனார்க் கிடமு நல்கி, விளங்குபெரு மணத்தானை மேவி னாரே. ௩௦

நமிநந்தியடிக ணாயனார்

நண்ணுபுகழ் மறையோர்வா ழேமப் பேறூர் நமிநந்தி யடிகடிரு விளக்கு நல்க,
வெண்ணெயம ணர்கள்விலக்க, நீரா லாரூ ரிலங்குமர னெறி யாருக் கேற்று நாளிற்,

கண்ணமணர் கெடக்,கண்பெற் றடிகள் வாழக், காவலனு ணிபந்தங்கள் கட்டு வித்தே,
யண்ணலருள் கண்டாரூ ரமர்ந்து'தொண்டர்க் காணி'யெனு மாசினரு ளடைந்துளாரே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
    கவுணியர்கோ னழு,துமையாள் கருதி யூட்டு
மேழிசையி னமுதுண்டு, தாளம் வாங்கி,
    யிலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி,
வாழுமுய லகனகற்றிப், பந்த ரேய்ந்து,
    வளர்கிழிபெற், றரவின்விட மருகற் றீர்த்து,
வீழிநகர்க் காசெய்தி, மறைக்கதவம் பிணித்து,
    மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே. ௩௨

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி,
    யாற்றிலிடு *மேடெதிர்போ யணைய வேற்றி,
யோரமண ரொழியாமே கழுவி லேற்றி,
    யோதுதிருப் பதிகத்தா லோட மேற்றிக்,
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்,
    காயாத பனையின்முது கனிக ளேற்றி,
யீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி,
    யிலங்குபெரு மணத்தானை யெய்தி னாரே. ௩௩

ஏயர்கோன்கலிக்காம நாயனார்

ஏதமில்வே ளாளர்பெரு மங்க லத்து
    ளேயர்கோன் கலிக்காம "ரிறையை நேரே
தூதுகொளு மவனனுகி லென்னு" மென்னுந்
    துணிவினர்பா, லிறைவனருஞ் சூலை யேவி
"வேதனைவன் றொண்டன்வரி னீங்கு" மென்ன,
    வெகுண்டுடல்வாள் கொடுதுறந்து, மேய †நாவற்
போதகமு முடலிகழ, வெழுந்து, தாழ்ந்து,
    போற்றி,யது விலக்கி,யருள் பொருந்தி னாரே. ௩௪

திருமூல நாயனார்

கயிலாயத் தொருசித்தர், பொதியிற் சேர்வார்
    காவிரிசூழ் **சாத்தனூர்** கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத், துயர நீடும்
    பசுக்களைக்கண், டவனுடலிற் பாய்ந்து, போத,
அயலாகப் பண்டையுட; லருளான் மேவி
    யாவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரு மரசடியி லிருந்து, கூறிக்,
    கோதிலா வடகயிலை குறுகி னாரே. ௩௫

தண்டியடிகணாயனார்

திருவாரூர் வருந்**தண்டி யடிகள்,** காட்சி
    சேராதார், குளந்தொட்டற் கமணர் சீறிக்
"குருடா!நீ முன்செவிடுங் கூடிற்" றென்று
    குறித்தறியைப் பறித்தெறியக், கொதித்துத், தங்க

பா - ம்—*ஏடெதிரே. †நாவற்போதகம் - திருநாவலூரர்.

ணருளாலே விழித்,தெவரு மந்த ராக,
வமணர்கலக் கம்பலகண், டவர்கள் பாழிப்
பருவான கற்பறித்,தா விக்கரையுங் கட்டிப்,
பரனருளா லமருலகம் பற்றி னாரே. ௩௬

மூர்க்க நாயனார்

தொண்டைவள நாட்டுவளர் வேற்காட் டூர்வாழ்
தொல்லுழவர், **நற்சூதர்**, சூது வென்று,
கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்குங்
கொள்கையினார், திருக்குடந்தை குறுகி யுள்ளார்,
விண்டிசைவு குழறுமொழி வீணர் மாள
வெகுண்டிடலான் **மூர்க்க**ரென விளம்பு நாம
மெண்டிசையு மிகவுடையா, ரண்டர் போற்று
மேழுலகு முடனாளு மியல்பி னாரே. ௩௭

சோமாசிமாற நாயனார்

அம்பர்நக ரந்தணர்**சோ மாசி மாற,**
ரன்பர்களாம் யாவர்க்கு மன்பினமு தளிப்பா,
ரும்பர்நிகழ் வகையாகம் பலவுஞ் செய்யு
முண்மையினா, ரைந்தெழுத்து மோவா நாவார்,
நம்பர்திகழ் திருவாரூர் நயந்து போற்று
நாவலர்கோ னடிபரவு நன்மை யாலே
யிம்பர்தொழ வும்பர்பணிந் தேத்த மேலை
யேழுலகு முடனாளு மியல்பி னாரே. ௩௮

சாக்கிய நாயனார்

சங்கமங்கை வரும்வேளாண் டலைவர், **காஞ்சிச்**
சாக்கியரோ டியைந்,தவர்தந் தவறுஞ் சைவத்
துங்கமலி பொருளுமுணர்ந், தந்த வேடந்
துறவாதே, சிவலிங்கந் தொழுவோர், கண்டோ
ரங்கன்மலர் திருமேனி யழுந்தச் சாத்தி,
யமருநாண் மறந்தொருநா ளருந்தா தோடிச்
செங்கலெறிந் திடுமளவின், மகிழ்ந்த நாதன்
றிருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே. ௩௯

சிறப்புலி நாயனார்

திருவாக்கூ ரருமறையோ, ருலக மேத்துஞ்
சிறப்புலியார், மறப்புலியா ருரிமேற் செங்க
ணரவார்த்தார் வருமேற்றார்க் கன்ப ரானார்க்
கமுதளிப்பா, ரொளிவெண்ணீ றணிந்த மார்பர்,
பெருவாக்கான் மறைபரவி யாகம் போற்றும்
பெற்றியினா, ரைந்தெழுத்தும் பிறழா தோதிக்
கருவாக்கா விறைவன்றா ளிணைகள் சேர்ந்த
கருத்தினா, ரெனையாவுந் திருத்தி னாரே. ௪௦

சிறுத்தொண்ட நாயனார்

பல்குமருத் துவாதிபர், செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவ, ரமுதளிக்கும் பரஞ்சோதி யார்,மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர், காழி நாடன்
றிருவருள்சேர்ந் தவர்,வளருஞ் சீராளன் றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்
னன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்துமக வருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தி னாரே. ௬௧

சேரமான்பெருமாணாயனார்

காவலர்ம கோதையார், கொடுங்கோ ளூர்க்கோக்,
கழறியவை யறிந்தகோச், சிலம்போசைக் கருத்தார்,
நாவலர்கோ னண்ப,"ரடிச் சேர" னென்றே
நவின்றுவரும் வண்ணானை நயந்த கோ, நற்
பாவலர்கோப், பாணபத் திரனால் வாய்ந்த
பாமர்திரு முகம்வாங்கிப் பணிகோ, வெற்பின்
மேவியகோ, வானைக்குக் குதிரை வைத்த
வீரர்கோ, வெனையாளுஞ் சேரர் கோவே. ௬௨

கணநாத நாயனார்

கந்தமலி வயற்காழி மறையோ, ரேத்துங்
கணநாதர் திருத்தோணிக் கடவு ளார்க்கு
நந்தவனம் பலவமைத்து, மலருங் கொய்து,
நற்றாமஞ் சொற்றாம நயந்து சாத்தி,
வந்தவரைத் தொண்டாக்கிப், பணிகள் பூட்டி,
*வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்து வாழ்த்திப்,
புந்திமகிழ்ந், தானருளாற் கயிலை மேவிப்
பொருவில்கணத் தவர்காவல் பொருந்தி னாரே. ௬௩

கூற்றுவ நாயனார்

குன்றாத புகழாளர், களந்தை வேந்தர், கூற்றுவனார், மாற்றலர்மண் கொண்டு சூடப்
பொன்றாழு முடிவேண்டப், புலியூர் வாழும் பூசுரர்கள் கொடாதகலப், புனித னீந்த
மன்றாடுந் திருவடியே முடியாச்சூடி, மாநிலங்காத், திறைவனுறை மாடக் கோயிற்
சென்றாசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து, திருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே.

பொய்யடிமையில்லாத புலவர்

பொய்யறியாக் கபிலரொடு பரண ராதிப்
புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த வோதிச்,
செய்யுளிடை வளராசு மதுர நல்ல
சித்திரம்வித் தாரமெனத் தெரிக்குஞ் செம்மை
மெய்யுடைய தொடைகளெல்லா மன்று ளாடன்
மேவியகோ னிருதாளில் விரவச் சாத்திக்,
கையுடையஞ் சலியினரா, யருளான் மேலைக்
கருதரிய வமருலகங் கைக்கொண் டாரே. ௬௪

---

*வாதுசெய்த வாரணம் - சமண்வாது வென்ற ஆளுடைய பிள்ளையார்.

புகழ்ச்சோழ நாயனூர்

பொழின்மருவுங் கருவூர்வாழ் புகழார் சோழர்,
“போதகம்போ லென்னுயிரும் போக்கு” மென்றே,
யழலவிர்வாள் கொடுத்தபிரா, னதிக மான்மே
லடர்ந்தபெரும் படையேவ வவர்கொண் டேய்ந்த
தழல்விழிகொ டலைகாண்பார், கண்ட தோர்புன்
சடைத்தலையை முடித்தலையாற் றூழ்ந்து வாங்கிக்,
கழல்பரவி, யதுசிரத்தி னேந்தி, வாய்ந்த
கனன்மூழ்கி, யிறைவனடி கைக்கொண் டாரே. ௪௬

நரசிங்கமுனையரைய நாயனூர்

நாடுபுகழ் முனைப்பாடி நாடு மேய **நரசிங்க** முனையர்,புவி நயந்து, மன்று
ளாடுமவ ராதிரைநா ளடியார்க் கம்பொ னமுதளிப்பா, ரொளிவெண்ணீ றணிந்துதூர்த்த
வேடமுடை யவர்க்கிரட்டிச்செம்பொ னீந்து,விடுத்,தழகாராலயங்கள் விளங்கச்செய்து,
தோடலர்தா ருடையபிரா னருளை யாளத் தோன்றினு, ரெனையருளி னூன்றி னூரே.

அதிபத்த நாயனூர்

அலையாருங் கடனுகை நகருள் வாழு **மதிபத்தர்**, பரதவர்க ளதிபர், வேலை
வலைவாரி வருமீனிற் றலைமீ னீசன் வார்கழற்கே யென்றுவிடு மரபார், பன்னுட்
டலையான தொருமீனே சார, நாளுந் தங்தொழிலால் விடுத்து,மிடி சாரச், செம்பொ
னிலையாரு மணிநயந்த மீனென் றெய்த, நீத்,தருளா லிறைவனடி சேர்ந்து ளாரே. ௪௮

கலிக்கம்ப நாயனூர்

கடவுளருட் கண்ணுர்கள் பயிலுந் தொல்லைக் கடந்தைநகர், வணிகர்கலிக் கம்ப, ரன்பர்க்
கடிமையுற வமுதளிப்பா, ரடியா னீங்கி யருளுருவா யன்பருட னணைய வேத்தி,
யிடையிலவ ரடியிணையும் விளக்கா நிற்ப, விகழ்மனைவி காகமலி யிரண்டு கையும்
படியில்விழ வெறிந்,தவள்செய் பணியுந் தாமே பரிந்து,புரிந் தானருளே பற்றி னூரே.

கலிய நாயனூர்

தடமதில்சூ ழொற்றியூர் நகருள் வாழுஞ்
சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார்,
படர்புகழார் **கலியனுர்,** நலியுங் கூற்றைப்
பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவான் மற்றோ
ருடலிலராய்ச், செக்குழல்வார்க், கதுவு நேரா,
துயர்மனைவி யைக்கொள்வா ருளரு மின்றி,
மிடறுதிர மகனிறைய வரிய, நாதன்
வியன்கைகொடு பிடிப்ப,வருண் மேவி னூரே. ௫௦

சத்தி நாயனூர்

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சை யூர்வாழ்
வேளாளர், **சத்தியார்**, விமலர் பாதத்
துரியவர்க ளடிபரவு மொருமை யார்,நா
வோவாமே யைந்தெழுத்து முரைக்கு நீரா,
ரிருளின்மிட றுடையபிரா னடியார் தம்மை
யிகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கி வாங்கி
யரியுமது திருத்தொழிலா வுடையார், மன்று
ளாடியசே வடிநீழ லடைந்து ளாரே. ௫௧

ஐயடிகள்காடவர்கோனாயனார்

வையநிகழ் **பல்லவர்**தங் குலத்து வந்த மாமணி,மா நிலமுழுது மகிழ்ந்து காக்கு
மையடிகள் காடவர்கோ, னருளா னூல்க ளறிந்,தரசு புரிந்திடுத லமையு மென்றே,
பொய்யனைய வுடல்வாழ்வு கழியு மாறு பொருந்தியிடும் புகழ்வெண்பாப் புலியூர் மேவுஞ்
செய்யதிரு வடிமுதலாப் பதிக டோறுஞ் செப்பினா, ரென்வினைக டப்பி னாரே. ௫௨

கணம்புல்ல நாயனார்

இலகுவட வெள்ளாற்றுத் தென்பால் வாழு **மிருக்குவே ளூர**திப, ரெழிலார் சென்னிக்
கலைநிலவா ரடிபரவுங் **கணம்புல்லர்**, தில்லைக் கருதுபுலீச் சரத்தார்க்குக் காதற் றீப
நிலைதரத்தா மிட,மிடியா லொருநாட் புல்லா னீடுவிளக் கிட,வதுவு நேரா தாகத்,
*தலைமயிரி னெரிகொளுவு மளவி, னாதன் றூவாத †வாழ்வருளுந் தன்மை யாரே. ௫௩

காரி நாயனார்

திருக்கடவூர் வருமுரவோர், **காரி** யாராந்
திகழ்தொண்டர், வண்டமிழ்நூ றிருந்த வோதி
விருப்பொடுதம் பெயராற்பா விளம்பி, மும்மை
வேந்தரையு முறைமுறையே மேவி, யங்க
ணுரைத்தவுரை நயமாக்கி, யவர்பா லேய்ந்த
வொண்பொருளா லாலயங்க ளோங்கச் செய்து,
தரைக்குளருந் தவர்க்கேவ றகமுன் போற்றுந்
தன்மையா லருள்சேர்ந்த நன்மை யாரே. ௫௪

நின்றசீர்நெடுமாற நாயனார்

கன்னன்மலி **நெல்வேலிக்** கவினார் **மாறர்**,
கவுரியர்கோ, னமணருறு கலக்க மெல்லாம்
பொன்னெயில்சூழ் சிரபுரக்கோ னணைய மாற்றிப்,
புனிதமிகு நீறணிந்து, போற்றி செய்து,
மன்னுபுகழ் மங்கையருக் கரசி யாரா
மலர்மாது மணிமார்ப மகிழ்ந்து, மாற்றார்
வெந்நிடுதல் கண்,டரசு புரிந்து, காழி
வேந்தருள் சேர்ந்தபெரு விறலி னாரே. ௫௫

வாயிலார் நாயனார்

ஞாயிலார் மதிற்**றொண்டை நாட்டு** மேன்மை
நண்ணு**மயி லாபுரி**யின் வேளாண் டொன்மை
வாயிலார், மலைவில்லா னடியே போற்றி,
மறவாமை தலைநின்ற மனமே செம்பொற்
கோயிலா, வுயர்ஞானம் விளக்கா, நீராக்
குலவியவா னந்த,மன்பே யமுதாக் கொண்டு,
தாயிலா னிருசரண நிகழ வேத்துந்
தன்மையா, ரருள்சேர்ந்த நன்மை யாரே. ௫௬

முனையடுவார் நாயனார்

பொன்னிவளந் தருநாட்டுப் புகழு **நீடூர்ப்**
பொருவிறிரு மலிவேளாண் டொன்மை மிக்கார்,
முன்னியவர் **முனையடுவா**, ரிகலார் போரின்
முரணழிவார் தமக்காக மொழிந்த கூலி

பா - ம்—*தலையின் மயிர். †வரமருளுந் தகைமையோரே.

மன்னுநிதி கொண்டு,சயங் கொடுத்து, வந்த
வளர்பொருளா லிறைவனடி வழுவா வன்பர்க்
கன்னமவர் நகையின்மிக மிசைய நல்கு
மன்பர்,துன்ப மவையாவு மகன்று ளாரே. ருஎ

கழற்சிங்க நாயனர்

காடவர்தங் குலமுவந்த **கழலார் சிங்கர்,**
காதன்மிகு தேவியுடன் காவ லாரூ
ராடவல பெருமானைப் பணிவா, ரங்கோ
ரகன்றமலர் தனைமோந்த வரிவை மூக்கைச்
சேடுடைய செருத்துணையா ரரியக், கேட்டுத்,
திறலரசர் மலரெடுத்த செங்கை யென்றே
சூடகமுன் கைதடிந்து, ஞாலங் காத்த,
தூய்மையா ரருள்சேர்ந்த வாய்மை யாரே. ருஅ

இடங்கழி நாயனர்

கோநாட்டுக் கொடும்பாளூரிருக்கும் **வேளிர்**
குலத்தலைவ, **ரிடங்கழியார்,** கொங்கிற் செம்பொ
னேற்றூர் மன்றின்முக டம்பொன் மேய்ந்த
வாதித்தன் மரபோர், நெற் கவர்ந்தோ ரன்பர்
போநாப்ப ணிருளின்கட் காவ லாளர்
புரவலர்முன் கொணர,வவர் புகலக் கேட்டு,
மானேற்று ரடியாரே கொள்க வென்று,
வழங்கி,யர சாண்டருளின் மன்னி னரே. ருகூ

செருத்துணை நாயனர்

இரைத்தணையார் புனற்பொன்னி **மருக னாட்**
டெழிலாருந் **தஞ்சை**நக ருழவ, ரேத்துஞ்
செருத்துணையார், திருவாரூர் சேர்ந்து வாழ்வார்,
செல்வமிகும் பல்லவர்கோன் றேவி வீழ்ந்த
மருத்துணையார் மலரெடுத்து மோப்பக் கண்டு,
வளமலிபூங் கத்தியா லவண்மூக் கீர்ந்த
கருத்துணையார், விறற்றிருத்தொண் டினையே செய்து
கருதலரு மமருலகங் கைக்கொண் டாரே. சுo

புகழ்த்துணை நாயனர்

புண்ணியர்கள் புகழழகார் **திருப்புத் தூர்**வாழ்
புகழ்த்துணையா, ரகத்தடிமைப் புனிதர், சின்னாண்
மண்ணிகழ மழைபொழியா வற்கா லத்தால்
வருந்துடல நடுங்கிடவு மணிநீ ரேந்தி,
யண்ணன்முடி பொழிகலச முடிமேல் வீழ
வயர்ந்தொருநாட் புலம்ப,வர னருளா லீந்த
நண்ணலரு மொருகாசுப் படியால் வாழ்ந்து,
நலமலிசீ ரமருலக நண்ணி னரே. சுக

கோட்புலி நாயனார்

குலவுபுகழ் நாட்டியத்தான் குடிவே ளாளர்,
கோட்புலியார், குவித்துயர்த்த செந்நெற் கூடு
நிலவணிவார்க் கமைத்,தானை நிறுத்தி, யொன்னார்
நேர்மலைவார், திருவாணை நினையா தேநெற்
சிலமிடியா லழித்தபடி யறிந்து, வாளாற்
சேர்ந்தபெருங் கிளைஞருடல் சிதற வீசி,
யிலகுமொரு குழவியையு மெறிந்து,நாத
னெண்ணரிய கருணைநிழ லெய்தி னாரே. ௯௨

பத்தராய்ப்பணிவார்கள்

தொண்டரடித் தொழல்,பூசைத் தொழின்மகிழ்த, லழகார்
துளங்கியவர்ச் சனைபுரித, லுருகுதிநிய மங்கள்
கொண்டபணி திருவடிக்கே கொடுத்த, லீசன்
குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு
மண்டிவிழி துளும்பன்,மயிர் சிலும்ப, லுன்னன்,
மருவுதிருப் பணிகாட்டி வருப வாங்கி
யுண்டிகொளா தொழித,லென விவையோ ரெட்டு
முடையரவர் பத்தரென வுரைத்து ளாரே. ௯௩

பரமனையேபாடுவார்

அருந்தமிழால், வடகலையா, லருளா லொன்று லறிவுநெறி மருவுமருங் *கவிகள் யாவுந்
திருந்தியவா னவர்பணிய மன்று ளாடுந் தேவர்பிரான் கழலிணையே சேர வோதி,
விருந்திடுநா வுடையபயன் மேவி னோர்தா, மேலானே மெனமகிழ்ந்து, விழிநீர் சோரப்,
பரிந்தருளாற் பரமனையே பாட வல்ல பான்மையா ரெமையாளு மேன்மை யாரே. ௯௪

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்

பாரணவும் புலனந்தக் கரண மொன்றும் படராமே நடுநாடி பயிலு நாதங்
காரணபங் கயன்முதலா மைவர் வாழ்வுங் கழியுநெறி வழிபடவுங் கருதி, மேலைப் [வுஞ்
பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவு நோக்கிப், புணர்ந்தணைந்த சிவாநுபவ போக மே
சீரணவு மவரன்றே வெம்மை யாளுஞ் சித்தத்தைச் சிவன்பாலே வைத்து ளாரே. ௯௫

திருவாரூர்ப்பிறந்தார்

பொங்கியமா தவமுடையார் வருண நான்கிற் பொருந்தினர்க,ளெல்லாத புகழி னுள்ளார்,
சங்கையிலா வருந்தவமுன் புரிந்தா, ரிங்குச் சார்விலா, ரிறைவனருள் சார்த லாலே
கங்கைவாழ் சடைமுடியா னருளை நீங்காக் கணநாத ரெனவாழுங் கருத்தர், கன்னிச்
செங்கண்வரால் வளர்வாவி திகழு மாரூர்ச் சிறந்துளா ரெமையாளப் பிறந்து ளாரே. ௯௬

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்

செப்பலருந் தவமுடைய செம்மை யாளர், சிறுகாலே மலர்வாவி திகழ மூழ்கி, [மைத்
யொப்பிறு நீறணிந்து, நியதி யாற்றி, யோவாமே யைந்தெழுத்து †முரைத்து, மேன்
தப்பில்சிவா கமவிதியா லின்பா லன்பாந் தன்மையா னன்மையாந் தகையா ரென்று
முப்பொழுதுந் திருமேனி தீண்ட வல்ல முறைமையார் பிறவிதெறுந் திறமை யாரே.

பா - ம்—*கலைகள். †உணர்ந்துரைத்துத்.

முழுநீறுபூசிய முனிவர்

கற்பமனு கற்பமுப கற்ப மென்றிக் கடனணைந்த திருநீறுங் கனற்க ணீறும்
பொற்புடைய வாசஞுசா னங்கி யாறு பொல்லாத பூமியெதிர் புனைத லாகா
வற்புதமாந் திரிபுண்ட மதியின் பாதி யகிலாங்கந் தீபமிகு மழகார் வட்ட
முற்பொலிய வுடலணியு முறையா ரன்றே முழுநீறு பூசவல்ல முனிவர் தாமே. ௬௮

அப்பாலுமடிச்சார்ந்தார்

தாரரு மூவேந்தர் பயிலுந் தொல்லைத்
தமிழ்நாட்டப் புறத்திறைவன் சரணஞ் சார்ந்த
சீராருந் தொண்டர்களு, மண்ட ரேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்புங் காலத்
தோராருந் தொடையிலுறு திப்பா - லப்பா -
லெந்தைபிரா னடியடைந்த வியல்பி னோரு,
மாயாத காதலுடை யவர்க ளன்றே
வப்பாலு மடிச்சார்ந்த வடியார் தாமே. ௬௯

பூசலார் நாயனார்

பொருவருந்தண் டகநாட்டு நின்ற வூர்வாழ் பூசுரர்கோப், பூசலார், புந்தி யாலே
யிருநிதியந் தேடி,யா லயமு மாக்கி, யெழுந்தருளப் பண்ணுவதா வெண்ணுங் காலை,
யானதனைக் காடவர்கோற் கருள, மன்ன னந்நகர மணைந்தவ்வா றறிந்து, தாழ, [ளூரே.
விரவுமனக் கோயிலுற விருத்தி, யங்கண் வேண்டுவகொண் டிறைஞ்சி,யருண் மேவி

மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து,
மன்னவர்சூழ் தென்னவர்க்கு மாதேவி யார்,மண்
சங்கைகெட வமண்சமயஞ் சாட வல்ல
சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த
பொங்குதிரு வருளுடைய போத வல்லி,
பொருவினெடு மாறனார் புயமேல் வாழுஞ்
செங்கலச முலையாட னருளா லின்பஞ்
சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்த வாறே. ௭௧

நேச நாயனார்

சாலியர்கோக், காம்பீலித் தலைவர், மேன்மை
தாவாத புகழ்நேசர், தஞ்சொ லென்றுங்
கோலியவைந் தெழுத்தோதிச், சிந்தை யுன்னிக்,
கொண்டபொரு ளன்பர்கொளக் கொடுத்து, வாழ்வார்,
சீலமிகுந் திருத்தொண்டர்க் குடையுங் கீளுந்
திருந்தியவெண் கோவணமுஞ் சேர வீந்து,
பாலனைய வொளிநீற்றான் பாத மேத்திப்,
பரலோக முழுதாண்ட பான்மை யாரே. ௭௨

கோச்செங்கட்சோழ நாயனர்

வெண்ணுவ லிறைக்கொளிநூற் பந்தர் செய்ய
வியன்சிலம்பி, யதுவழித்த வெள்ளா னைக்கை
யுண்ணுடிக் கடித்தவுட லொழியச், சோழ
னுயர்குலத்துச் சுபதேவன் கமலத் தோங்கும்
பெண்ணுகி யவள்வயிற்றில் வைகிச், செங்கட்
பெருமானுய்த், தென்னவராய்ப், பெருங்கோயில் பலவுங்
கண்ணார்வித், துயர்தில்லை மறையவர்க்கு முறையுள்
கனகமய மாக்கி,யருள் கைக்கொண் டாரே. எங

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர்

பிறங்கெருக்கத் தம்புலியூர் வாழும் பேரியாழ்
பேணுதிரு நீலகண்டப் பெரும்பாண ஞர்,சீர்
திறந்தருசெம் பொற்பலகை யால வாயி
னிமலன்பாற் பெற்ருரூர் சேர்ந்துசிவன் வாயி
றிறந்தருளும் வடதிசையே சேர்ந்து, போற்றித்,
திருஞான சம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி,
யறந்திகழுந் திருப்பதிகம் யாழி லேற்றி,
யாசிறிருப் பெருமணஞ்சேர்ந், தருள்பெற் ருரே. எச

சடைய நாயனர்

சங்கையிலா வரன்மறையோர், நாவ லூர்வாழ்
தவரதிபர், தம்பிரான் ருேழ ராய
வெங்கள்பிரான் - றவநெறிக்கோ ரிலக்கு - வாய்த்த
விசைஞானி யார்தனைய - ரெண்ணுர் சிங்க -
மங்கையர்க டொழும்பரவை மணவாள நம்பி -
வந்துதிக்க மாதவங்கள் வருந்திச் செய்தார்,
வெங்கணரா விளங்குமிளம் பிறைசேர் சென்னி
விடையின ரருள்சேர்ந்த சடைய னரே. எரு

இசைஞானியார்

நாவற் றிருப்பதிக்கோர் செல்வச்சைவ நாயகமாஞ் சடையனர் நயந்த வின்பப்
பூவைக் குலமடந்தை, பொற்பார் கொம்பு, புனிதமிகு நீறணிந்து போற்றி செய்தே,
யாவிற் றிகழ்தலைவன் வலிய வாண்ட வாரூர ரவதரிக்க வருந்தவங்கள் புரிந்தார்,
யாவர்க்கு மெட்டாத விசைந்த வின்ப விசைஞானி யெனஞான மௌிதா மன்றே.எசு

திருக்கூட்டத்தார் - தனியடியார் - புராணச் செய்யுட்டொகை - புராணசாரச் செய்யுட்டொகை

அத்தரடி யவர்கூட்டத் தில்லை வாழு
மந்தணர்பொய் யடிமையிலாப் புலவ ராசில்
பத்தர்முத லெழுவரோ டொன்பதின்ம ரேழொன்
பதின்மர்தனிப் பேரெண்ணென் பதின்ம ராய

வித்தொகையிற் றொண்டர்சீ ருரைத்தான் வைத்த
    வீரிரண்டா யிரத்திருநூற் றைம்பத்து மூன்ற
முத்தமசல் விருத்தத்திற், *பயனுஞ் செய்யு
    ளுலகெழுபத் தைந்தெனமின் றுரைக்கு மன்றே, எஎ

திருத்தொண்டர் புராணசார முற்றிற்று.

செல்வமிகு திருத்தொண்டத் தொகையி லுள்ளார்
    சிறந்ததனிப் பெயராக வறுபதின்மேன் மூவர்
மல்லன்மிகு கூட்டப்பே ரருள்சேர்ந் தார்கண்
    மாதவத்தோர் மும்மூன்று வகைபெற் றோர்க
ளில்லறத்துந் துறவறத்து மிருந்து வாழ்ந்தே
    யியல்பாகச் சிவபதநான் கிசைந்தார் தம்மை
யல்லலறுத் தெனையாண்ட சைவசிகா மணியா
    ரருட்புலியூ ருமாபதியா ரருள்செய் தாரே. எஅ

—அபியுக்தர்வாக்கு.

ஆகத் திருவிருத்தம் - எஅ.

---

*பயனுஞ் செய்யுள் உலகெழுபத்தைந்து என்றது - திருத்தொண்டர் புராணப் பயன் என்னும் திருத்தொண்டர் புராணசாரச் செய்யுட்டொகை எழுபத்தைந்து என்று குறித்தபடி என்பர். காப்புச் செய்யுள் நீக்கி எழுபத்தைந்து விருத்தங்களால் இந்நூல் அமைந்திருத்தல் காண்க. இந்நூற்குத் திருத்தொண்டர் புராணப்பயன் என்று ஆசிரியர் பேரிட்டனர் என்பது இதன் காப்புச் செய்யுளில் "திருத்தொண்டர் புராண மேவுந் திருந்துபய னடியேனுஞ் செப்பலுற்றேன்" என்றதாலும் அறியப் படும். இதில் தொண்டர்சீர் உரைத்தான் - என்றது சேக்கிழார் பெருமானை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - உமாபதிசிவாசாரியார்

அருளிய

சேக்கிழார் புராணம்

என வழங்கும்

திருத்தொண்டர்புராண வரலாறு

பாயிரம்

காப்பு

வெண்பா

திருமருவுங் குன்றத்தூர்ச் சேக்கிழார் செல்வ
வருண்மொழித் தேவர்புரா ணஞ்சீர்—வருவதற்கு
மைம்மா மழைபோன் மதத்தான் றிரண்டபுழைக்
கைம்மா வதனத்தான் காப்பு.

விநாயகர் துதி

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். க

சபாநாதர்

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி. உ

சிவகாமசுந்தரி

பாங்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. ௩

கற்பக விநாயகர்

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி. ௪

சுப்பிரமணியர்

பாறுமுக மும்பொருந்தப் பருந்துவிருந் துணக்கழுகு
நூறுமுக மாயணைந்து நூழில்படு களம்புகுத

மாறுமுகந் தருநிருதர் மடியவடி வேலெடுத்த
ஆறுமுகன் திருவடித்தா மரையிணைக ளவைபோற்றி. ௫

சைவசமயாசாரியர்கள்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி ;
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி ;
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி ;
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. ௬

திருத்தொண்டத்தொகையடியார் - சேக்கிழார்

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி ;
ஒல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி. ௭

நூற்பெயர்

தாய்மலர்ந்த முகத்தினளாய்த் தழுவிமுலை தரவந்த
நோய்மலர்ந்த பிறவிதொறு நுழையாம லுலகுய்யத்
தீமலர்ந்த சடைக்கூத்தர் திருவருளாற் சேக்கிழார்
வாய்மலர்ந்த புராணத்தின் வரலாறு விரித்துரைப்பாம். ௮

அவையடக்கம்

*ஊர்க்கடலை யிவனெனவந் துதித்தரா னோங்குதமிழ்
நூற்கடலைக் கரைகண்டு நுவலநினைக் குமதுதிருப்
பாற்கடலைச் சிற்றெறும்பு பருகநினைப் பதுபோலும்;
நீர்க்கடல்சூழ் மண்ணுலகை நிறுக்கநினைக் குமதொக்கும். ௯

†தேவுடனே கூடியசொற் செழுந்தமிழோர் தெரிந்துரைத்த
பாவுடனே கூடியவென் பருப்பொருளும் விழுப்பொருளாங் ;
கோவுடனே கூடிவருங் குருட்டாவு மூர்புகுதும் ;
பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால். ௰

பாயிரம் முற்றியது.

நூல்

பாலாறு வளஞ்சுரந்து நல்க, மல்கும் பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறுங்
காலாறு கோலியிசை பாட, நீடு களிமயினின் றாடுமியற் றொண்டை நாட்டு
ஞலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்ட நன்றிபுனை குன்றைவள நாட்டுமிக்க
சேலாறு கின்றவயற் குன்றத்தூரிற் சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே. ௧௧

நாடெங்குஞ் சோழன்முனந் தெரிந்தே யேற்று நற்குடிநாற் பத்தெண்ணா யிரத்து வந்த
கூடல்கிழான் புரிசைகிழான் குலவு சீர்வெண் குளப்பாக்கி ழான்வரிசைக் குளத்து ழான்
றேடுபுக ழாரிவருஞ் சிறந்து வாழச், சேக்கிழார் குடியிலிந்தத் தேச முய்யப் [முன்
பாடல்புரி யருண்மொழித்தே வரும்,பி னந்தம் பாலறு வாயரும்வந் துதித்து வாழ்ந்தார்.

*ஊர்க்கடலை - சாம்பற்புழுதி எனவும், ஓங்கு தமிழ் நூற்கடல் - பெரியபுராணம் எனவும் கூறுவர்.

†தேவுடனே கூடியசொற் செந்தமிழோர் - தெய்வத்தன்மை வாய்ந்த தமிழ்வாணராகிய சேக்கிழார். தெரிந்துரைத்த பா - பெரியபுராணம். பருப்பொருள் - அற்பப் பொருள்.

இமயமலை யரையன்மக டழுவக் கச்சி
யேகம்பர் திருமேனி‡குழைந்த தன்று,
சமயமவை யாறினுக்குந் தலைவிக் கீசர்
தந்தபடி யெட்டுழக்கீ ராழி நெல்லு
முமைதிருச்சூ டகக்கையாற் கொடுக்க வாங்கி,
யுழவுதொழி லாற்பெருக்கி, யுலக மெல்லாந்
தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும், வேளாண்
டலைவர்பெரும் புகழுலகிற் றழைத்த தன்றே. கங

விளைகழனி பூலோக முழுது, மேரி
விரிதிரைநீர்க் கடல்,வருணன் கம்பு கட்டி,
கிளர்கலப்பை தரு,சுமையாள் சுவேத ராமன்,
கிடாமறலி வசத்,தீசன் வசத்தா, னென்றிங்
களவறிந்தாண் டாண்டுதொறும் விதைதப் பாம
லளக்குமவள் கச்சியறம் வளர்த்த மாதா
வொளிபெருகு கொழுமிகுதி யெறும்பீ றான
வுயிரனைத்துந் தேவருமுண் டுவப்ப தன்றே. கச

*மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத், தாங்கள்
கூறியசொற் பிழையாது, துணிந்து, செந்தீக்
குழியிலெழு பதுபேரு முழுகிக், கங்கை
யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும், வேளாளர் பெருமை யெம்மாற்
பிறித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ. கரு

காராள ரணிவயலி லுழுது தங்கள் கையார நட்ட†முடி திருந்தி லிந்தப்
பாராளுந் திறலரசர் கவித்த வெற்றிப் பசும்பொன்மணி முடிதிருந்துங்; கலப்பை பூண்ட
வேராலெண் டிசைவளர்க்கும் புகழ்வே ளாள ரேரடிக்குஞ் சிறுகோலாற் றாணி யாளச்
சீராரு முடியாச ரிருந்து செங்கோல் செலுத்துவர்;வே ளாளர்புகழ் செப்ப லாமோ. கசு

வாயிலார், சத்தியார், விறல்சேர் மிண்டர், வாக்கரையர், சாக்கியர்,கோட் புலி,கஞ் சாறர்,
ஏயர்கோன் கலிக்காமர், முனைவித் தாக்கும் இளையான்றன் குடிமாறர், மூர்க்கர், செங்கை
தாயனார், செருத்துணையார், செருவில் வெம்போர் சாதித்த முனையடுவா ராக நம்பி [த்
பாயிரஞ்சேர் அறுபதுபேர் தனிப்பேர் தம்மிற் பதின்மூவர் வேளாளர் பகருங் காலே.

அத்தகைய புகழ்வேளாண் மரபிற் சேக்கி ழார்குடியில் வந்தவருண் மொழித்தே வர்க்குத்
தத்துபரி வளவனுந்தன் செங்கோ லோச்சுந் தலைமையளித், தவர்தமக்குத் தனது பேரு
முத்தமச்சோ ழப்பல்ல வன்று னென்று முயர்பட்டங் கொடுத்திட,வாங் கவர்நீர் நாட்டு
நித்தனுறை திருநாகேச் சுரத்தி லன்பு நிறைதலினுன் மறவாத நிலைமை மிக்கார். கஅ

தம்பதிகுன் றத்தூரின் ‡மடவ ளாகந் தானுக்கித், திருக்கோயில் தாபித், தாங்கட் [றி,
செம்பியர்கோன் திருநாகேச் சுரம்போ லீதுந் திருநாகேச் சுரமெனவே திருப்பேர் சாற்

*நீலி என்னும் பேய்மகள் சரிதம் திருக்குறிப்புத்தொண்டர் புரா - 3-ம் பாட்டிலும், திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டுப்பதிகம் முதற்பாட்டினும் குறித்தல் காண்க.

†முடி - கோல்-உழவுவழக்குச் சொற்கள். சிலேடையா லரசாங்கத்திற்குக் கூறினர்.

‡மடவளாகம் - திருமதிலின் புறத்து அதனை அடுத்துச் சுற்றியுள்ள வீதி.

யம்புவியி லங்காங்க வைப வங்கட் கானபரி கலந்திருநாள் பூசை கற்பித்,
திம்பர்புகழ் வளவனா சுரிமைச் செங்கோ லிமசேது பரியந்த மியற்று நாளில், ௧௯

*கலகமிடு மமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்
றுலகிலுளோர் சிலர்கற்று, நெற்குத் துண்ணு
துமிகுத்திக் கைவருந்திக், கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து, குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து,
விலைதருமென் கரும்பிருக்க விரும்பை மென்று,
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்த வாறே, ௨௦

வளவனுங்குண் டமண்†புரட்டுத் திருட்டுச் சிந்தா
மணிக்கதையை மெய்யென்று வரிசை கூர
வுளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக் கேட்க,
வுபயகுல மணிவிளக்காஞ் சேக்கி ழார்கண்,
டிளவரசன் றனைநோக்கிச், "சமணர் பொய்ந்நூ
லிது;மறுமைக் காகா;திம் மைக்கு மற்றே;
வளமருவு கின்றசிவ கதையிம் மைக்கு
மறுமைக்கு முறுதி"யென, வளவன் கேட்டு, ௨௧

"அவகதையாய்ப் பயனற்ற கதையீ தாகி,
லம்மையுமிம் மையுமுறுதி பயக்கத் தக்க
சிவகதையே; ததுகற்ற திறமைப் பேரார்?
சீவகசிந் தாமணிபோ லிடையில் வந்த
நவகதையோ ?; புராதனமோ ?; முன்னூ லுண்டோ ?;
நானிலத்துச் சொன்னவரார் ?; கேட்ட பேரார் ?;
தவகதையோ ?; தவம்பண்ணிப் பேறு பெற்ற
தனிக்கதையோ ?; வடைவுபடச் சாற்று" மென்றான். ௨௨

செம்பியர்பூ பதிமகிழ்ந்து வினவிக் கேட்கச்
சேக்கிழார் குரிசிலுரை செய்வார் "ஞாலத்
தம்பலவர் திருத்தொண்டர் பெருமை யாரு
மடிகண்முத லடியெடுத்துக் கொடுக்க, நாவ
னம்பிபதி னொருதிருப்பாட் டாகச் செய்த
நலமலிதோண் டத்தொகைக்கு, நாரை யூரிற்
றும்பிமுகன் பொருளுரைக்க, நம்பி யாண்டார்
சுருதிமொழிக் கலித்துறையந் தாதி செய்தார். ௨௩

---

*உயர்ந்த சைவசமயமிருக்கத் தாழ்ந்த சமண சமயத்தினுள் தாம் புகுந்தமைக்கு எடுத்துக்காட்டாக இப்பாட்டிற் காட்டிய பழமொழிகளை அப்பர் சுவாமிகள் தமது திருவாரூர் - காந்தாரம் - பழமொழித் திருப்பதிகத்தினுட் காட்டியருளியிருத்தல் குறிக்க.

†மெய்ப்பயன் குறியாத சரிதமாதலின் **புரட்டு** என்றும், சில வேதவிருத்தம் நீக்கி, கொல்லாமை பொய்யாமை முதலாக அதிற்கூறும் அறங்கள் எமது புராண இதிகாசங்களில் முன்பு உள்ளனவே யாதலின் **திருட்டு** என்றுங் கூறினர் - என்பர் ஸ்ரீமத் - ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்.

"ஆயுமறை மொழிநம்பி யாண்டார் நம்பி
யருள்செய்த கலித்துறையந் தாதி தன்னைச்
சேயதிரு முறைகண்ட ராச ராச
தேவர்,சிவா லயதேவர், முதலா யுள்ள
ஏயகருங் கடல்புடைசூ *ழுலக மெல்லா
மெடுத்தினிது பாராட்டிற்" றென்ன, "வந்தத்
தூயகதை யடைவுபடச் சொல்வீ" ரென்று
சோழனுரை செயக்கேட்டுக், குன்றை வேந்தர், உச

தில்லைவா ழந்தணரே முதற்,பண் பாடு
திருநீல கண்டத்துப் பாண ரீறாச்,
சொல்லியதொண் டத்தொகைநூல் வகையந் தாதித்
தொடர்ச்சியினை விரித்துரைக்க, வளவன் கேட்டு,
மெல்லியலாள் பங்கர்திரு வருளை நோக்கி,
வியந்,தடிமைத் தொண்டுசெய்து பேறு பெற்ற
செல்கதியை நினைந்,துருகி, வளவர் கோமான்
சேவையர்கா வலரைமுக நோக்கிச், சொல்வான், உரு

"அவரவர்கள் நா,டவர்க ளிருந்த வூர்,வந்
தவதரித்த திருமரபு, திருப்பேர், செய்த
சிவசமயத் திருத்தொண்டு, முற்பிற் பாடு,
சிவனடிக்கீ ழுயர்பரம முத்தி பெற்றோர்,
எவருமறி யச்சீவன் முத்த ராயிங்
கிருப்பவர்க, ளினிமேலும் பிறப்போர், மண்மேல்
அவர்களைச்சேர்ந் தருள்பெற்றோர், பகைத்துப் பெற்றோ,
ரவர்கள்பகை யாய்நரகி லடைந்த பேர்கள், உசா

"இல்லறத்தி லிருந்துநனி முத்தி பெற்றோ,
ரில்லறத்திற் சிற்றின்ப வியல்பை நீக்கி
நல்லறமாந் துறவறத்தி னின்று பெற்றோர்,
நற்பிரம சாரிகளா யருள்பெற் றுய்ந்தோர்,
செல்கதிசற் குருவருளாற் சென்று சேர்ந்தோர்,
சிவபூசை செய்துபர முத்தி பெற்றோர்,
புல்லறிவு தவிர்ந்துதிரு வேடமேமெய்ப்
பொருளெனக்கொண் டரனடிக்கீழ்ப் பொருந்தப் புக்கோர், உஎ

"இப்படியே யடைவுபடப் பிரித்துக் கேட்டால்
யாவருக்கு மேதரிக்கச் செவிநா நீட்ட
வொப்பரிய பொருடெரிந்து விளங்கித் தோன்ற,
வுவமையுடைத் தாயகதை கற்க, நிற்கத்,
தப்பில்பெருங் காவியமா விரித்துச், செய்து
தருவீ"ரென் றவர்க்குவிடை கொடுத்து, வேண்டுஞ்
செப்பரிய திரவியமுங் கொடுக்க, வாங்கிச்,
சேக்கிழார் குறிசிறிருத் தில்லை சேர்ந்தார். உஅ

---

*இங்கு உலகமெல்லாம் - என்றது அறிஞர் தொகுதியை உணர்த்திற்று. உலகம் பசித்தது என்புழிப்போலப் பாராட்டிற்று என அஃறிணை முடிபு கொண்டது.

வேறு

தில்லை யெல்லையில் வந்து,வந்,தெதிர் தெண்ட னாக விழுந்,தெழுந்,
தல்லி சேர்கம லத்த டத்தினின் மூழ்கி, யம்பல வாணர்முன்
னொல்லை சென்று, பணிந்து, கைத்தல முச்சி வைத், துள முருகி,நைந்,
தெல்லை காணரி தாய பேரொளி யின்ப வாரியின் மூழ்கியே, ௨௯

அடைய லார்புர நீறெ ழுத்திரு நகைசெய் தன்னொரு மூவரைப்
படியின் மேலடி மைக்கொ ளும்பத பங்க யங்கள் பணிந்து,நின்,
"றடிக ளே!யுன தடியர் சீரடி யேனு ரைத்திட வடியெடுத்
திடர்கெ டத்தரு வா"யெனத்,திரு வருளை யெண்ணி, யிறைஞ்சினார். ௩௦

அலைபு னற்பகி ரதிந திச்சடை யாட வாடர வாடநின்
றிலகு மன்றினி லாடு வார்திரு வருளி னாலச ரீரிவாக்
"**குலகே லா**"மென வடியெ டுத்துரை செய்த பேரொலி யோசைமிக்,
கிலகு சீரடி யார்செ விப்புலத் தெங்கு மாகி நிறைந்ததால். ௩௧

தில்லை மாநகர் வாழ வாழ்தவ சிந்தை யந்தண ராறைஞ்ஞூ,
றல்ல தும்பல மடப தித்*தவ, ராச ரிக்கையி லுள்ளபேர்
எல்லை யில்லவ ரியாவ ருங்களி கொளவி ளங்கச ரீரிவாக்
கொல்லை வந்தெழ வனைவ ருங்கர முச்சி வைத்துள முருகினார். ௩௨

உள்ள லார்புர நீறெ ழுக்கணை யொன்று தொட்டுயர் மன்றில்வாழ்
வள்ள லார்திரு மாலை யுந்திரு நீறு மெய்ப்பரி வட்டமு
†மெள்ள லாரல ரென்று சேவையர் காவ லர்க்கிவை யினிதளித்,
தள்ள லார்வய னீடு தில்லையி லனைவ ருங்களி கொண்டபின், ௩௩

சேவை காவலர் தொண்டர் சீருரை செய்வ தற்குயர் செய்யுண்முன்,
மூவ ரோதிய திருநெ றித்தமி ழாத லால்வரன் முறைமையால்
யாவ ரும்புகழ் திருநெ றித்தலை வரைவ ணங்கி யிணங்கிமெய்த்
தாவ ருஞ்‡**சிவ சாத னங்க** டரித்து நீறு பரித்தரோ, ௩௪

வந்து சூழ நிரைத்த §வையிரு நூறு கான்மணி மண்டபத்
தெந்தை யார்திரு வருளை யுன்னி, யிருந்து, சேவையர் காவலர்
செந்த மிழ்த்தொடை யால்வி ளங்கிய திருவி ருத்த நிருத்தனார்
தந்த சொன்முத லாவெ டுத்தனர் **தானுவான புராண நூல்.** ௩௫

வேறு

திருமறையோர் புராணமவை பதின்மூன்று; சிவவே
தியாரனை வழிபட்ட புராண⁑மோ ரிரண்டு;
குரைகழன்மா மாத்திரரொன்; றறுவர்முடி மன்னர்;
குறுநிலமன் னவரைவர்; வணிகர்குலத் தைவ;

---

*தவராசாரிக்கை - தவாசிரமம். †எள்ளலாரலர் = தரிக்கத்தக்கவர்.

‡சிவசாதனங்களாவன - முண்டனம், குண்டலம், சிரமாலை, கரமாலை, கண்டமாலை தாழ்வடம் - முதலியன 50-வது பாட்டுப் பார்க்க. சிறப்புப்பற்றித் திருநீற்றை வேறு பிரித்துக் கூறினார்.

§ஆயிரக்கான் மண்டபம் என்னும் இராச சபை.

⁑மீரிரண்டு - என்ற பாடம் தவறு.

ரிருமைநெறி வேளாளர் பதின்மூவ, ரிடைய
ரிருவர்,கா லியர் - குயவர் - தயிலவினை யாளர் -
பரதவர் - சான் றூர் - வண்ணார் - சிலைமறவர் - நீசர் -
பாண - ரிவ ரோரொருவ ராம்;பகருங் காலே. ௩௬

அறுதிபெறத் திருமரபு குறித்துரையாப் புராண
மவைகளொரு பதின்மூன்று; திருக்கூட்டந் தன்னின்,
மறுவிலவர் பதியறிந்த கதையிரண்டு - வந்த
மரபறிந்த கதையிரண்டு - பேரறிந்த கதையொன் -
றுறுமரபு தெரியாப்பு ராணமவை யோரே -
ழூரறியாக் கதையேழு - பேரறியாக் கதையெட் -
டிறுதியிலக் கங்கண்ட திருக்கூட்ட மொன் - றெண்
*ணித்தனையென் றறியாத திருக்கூட்ட மெட்டே. ௩௭

தில்லைமறை யோர்கலயர் முருகர்பசு பதியார்
சிறப்புலியார் கணநாதர் பூசலைசண் டேசர்
கல்வினிறை சோமாசி மாறர்நமி நந்தி
கவுணியஞா ரப்பூதி நீலநக்க ராகச்
செல்வமறை யோர்காதை பதின்மூன்று; சிவவே
தியர்காதை யிரண்டுபுகழ்த் துணையார்முப் போதும்
வல்லபடி சிவனையருச் சிப்பார்கண்; மாமாத்
திரர்மரபிற் சிறுத்தொண்ட ரொருவர்;முடி மன்னர், ௩௮

*தில்லைவாழந்தணர் புராணமும் திருவாரூர்ப்பிறந்தார் புராணமும் **பதியறிந்த கதை**யென்றும், தில்லைவாழந்தணர் புராணமும் முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் புராணமும் **மரபறிந்த கதை**யென்றும், கபிலர் பரணர் முதலாக நாற்பத்தொன்மருக்கும் பெயர் கூறப்படுதலில், பொய்யடிமையில்லாத புலவர் புராணம் **பேரறிந்த கதை**யென்றும், மேற்குறித்த மரபறிந்த தொகையடியார் புராணம் இரண்டு நீக்கி ஏனைய தொகையடியார் புராணம் ஏழும் **மரபறியாக் கதை**யென்றும், மேற்கூறிய பதியறிந்த கதை இரண்டு நீக்கி ஏனைய தொகையடியார் புராணம் ஏழும் **ஊரறியாக் கதை**யென்றும், பொய்யடிமையில்லாதபுலவர்புராண நீக்கி ஏனைய தொகையடியார் புராணம் எட்டும் **பேரறியாக் கதை**யென்றும், தில்லைமூவாயிரவர் எனத் தொகை கூறப்படுதலின் அவர் புராணம் **இறுதியிலக்கங்கண்ட புராணம்** என்றும், ஏனைய எட்டுந் தொகை காணுமையின் **எண்ணித்தனை யென்றறியாத** திருக்கூட்டமெனவுங் கொள்க. கடைச்சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்று இலக்கங் கூறப்படுதலின் அவரை இலக்கங் காணுத் தொகையோடு சேர்த்த தென்னெனின்: ஆண்டுச் சங்க மிருந்தாரேயன்றி அச்சங்கத்துச் சிவபிரான்மேற் பல பாடற்றிரட்டைப் பாடி அரங்கேற்றிய புலவரும் அடங்கலில் தொகைகூற அமையாமையினென்க—ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரை. சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்றது கடைச்சங்கப்புலவோர் ஆசனத்தொகை. இவர்கள் பல காலத்து மிருந்தவர். அன்றியும் இவருள்ளே சமணர் முதலிய புறச்சமயிகளுமிருந்தனர். அவர்கள் அரன்பாற் பொய்யடிமையில்லாத புலவ ராகார். இதனுனும் இவர்கள் இலக்கங்காணுத் தொகையடியார் என்பதாம். "கபிலர் பரணர் முதல்" எனத் திருவந்தாதியிற் கூறிய பெயர்களை ஆசிரியர் சேக்கிழார் இவர் புராணத்துக் குறித்துக் கூறுமையேகொண்டு இப்புலவராவார் திருவாதவூரடிகள் என்று சாதிப்பாருமுளர். சேக்கிழார் கருத்து அஃதன்று என்பது உமாபதி சிவனுர் அருளிய புராணசாரப் பாட்டானும் அறியப்படும்.

அறுவரெவ ரவர்செங்கட் சோழர்புகழ்ச் சோழ
ரருண்மானி யிடங்கழியார் நெடுமாறர் சேரர் ;
துறுநிலமன் னவரைவர் நரசிங்க முனையர்
கூற்றுவனார் கழற்சிங்கர் மெய்ப்பொருளை யடிகள் ;
முறைமைவணி கரிலைவர் காரைக்கா லம்மை
மூர்த்திகலிக் கம்பரமர் நீதியியற் பகையார் ;
திறமைபுரி வேளாளர் பதின்மூவர் மூர்க்கர்
செருத்துணையார் வாயிலார் கோட்புலியார் சத்தி ; ௩௯

தாயனா ரிளையான்றன் குடிமாற ரரசு
சாக்கியர்கஞ் சாறர்விறன் மிண்டர் முனையடுவா
ரேயர்கோன் கலிக்காமர்; கோபாலர் மரபி
லிருவர்திரு மூலனா ரானாயர் ; துயவர்
சேயபுகழ்த் திருநீல கண்டனார்; பாணர்
திருமரபிற் றிருநீல கண்டத்துப் பாணர் ;
மேயதிற லதிபத்தர் பரதவர்; கண்ணப்பர்
வேடர்;மர பிணிற் சான்ற ரேனாதி நாதர் ; ௪௦

நேசனார் சாலியரிற்; றிருநாளைப் போவார்
நீசர்மர பினி;லெங்க டிருக்குறிப்புத் தொண்டர்
தூசொலிக்கு மேகாலி மரபு;தில தயிலத்
தொழின்மர பிற்கலியனார்; மரபுகுறித் துரையாக்
காசில்கதை பதின்மூன்று குலச்சிறையார் தண்டி
கணம்புல்ல ரெறிபத்தர் காரியார் குறும்பர்
தேசுடைய பத்தர்பர மனைப்பாடு வார்கள்
சித்தத்தைச் சிவன்பால்வைத் தாராரூர்ப் பிறந்தார், ௪௧

சேப்பரிய பொய்யடிமை யில்லாதார் மெய்யிற்
றிருநீறு பூசுமுனி வர்களுலகு தன்னில்
அப்பாலு மடிச்சார்ந்தா; ரிவர்கடமிற் சிலபே
ராய்ந்ததமிழ்ப் பேர்சிலபேர்; மலையாளர் சிலபேர் ;
தப்பாத தெலுங்கர்சிலர்; மற்றுளதே சத்தோர்
தவஞ்செய்து பரகதியை யடைந்தவர்கள் சிலபே ;
*ரிப்போது மிருந்தரனை வழிபடுவோர் சிலபே ;
ரினிமேலுந் திருமேனி கொடுவருவோர் சிலரே ; ௪௨

திருஞான சம்பந்தர் திருநாவுக் கரையர்
திருமூலர் நெடுமாறர் மங்கையருக் கரசி
கரைசேருங் குலச்சிறையார் யாழ்ப்பாணர் குறும்பர்
கணநாத ரப்பூதி சோமாசி மாற

---

*தொகையடியார்களில் முத்திபெற்றாரொழிய " இப்போது மிருந்தரனை வழிபடுவோரும் - இனிமேலும் வருவோருமாவார் - தில்லைவாழந்தணர், பத்தராய்ப்பணிவார், பரமனையேபாடுவார், சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார், முழுநீறுபூசியமுனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார், என்னுமிவர்களேயாம் - ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரை.

ருரைசேரு மிவர்கள்பதி னொருவர்தரு வருளா
லுயர்முத்தி யடைந்தவர்க; ளெறிபத்தர் கலயர்
முருகனார் கண்ணப்ப ரானாயர் தாயர்
மூர்த்தியார் சண்டேசர் திருநாளைப் போவார், ௨௩

சேரனார் சாக்கியனார் கூற்றுவனார் தண்டி
சிறப்புலியார் பசுபதியார் கலிக்காமர் கலியர்
காரியா ரதிபத்தர் நீலநக்கர் பூசல்
கணம்புல்லர் கோட்புலியார் நமிநந்தி யடிகள்
சீருடைய கழற்சிங்கர் வாயிலார் தூய
செருத்துணையார் புகழ்த்துணையார் காடவரை யடிகண்
மூரிநெடு வேற்செங்கட் சோழனா ராக
முப்பதுபேர் சிவலிங்கத் தான்முத்தி யடைந்தோர் ; ௨௪

திருநீல கண்டனா ரியற்பகையார் மூர்க்கர்
சிறுத்தொண்டர் திருக்குறிப்புத் தொண்டர்விறன் மிண்ட
ரருள்சேரு மிடங்கழியார் முனையடுவார் சத்தி
யமர்நீதி மெய்ப்பொருளா ரேனாதி நாதர்
கரைசேரும் புகழ்ச்சோழர் கஞ்சாறர் மாறர்
காரைக்கா லம்மைநர சிங்கர்கலிக் கம்பர்
வருநேச ராகவொரு பத்தோன்ப தடியார்
மணிவேடத் தாரைவழி பட்டரனை யடைந்தோர் ; ௨௫

கவுணியர்நா வுக்கரசர் பேயாரிம் மூவர்
கற்குமிய லிசைவல்லோ; ரிசைத்தமிழ்நூல் வல்லோர்
பவமணுகாத் திருநாளைப் போவாரா னாயர்
பாணர்பர மனைப்பாடு வாராக நால்வர்;
புவனிபுக ழையடிக டிருமூலர் காரி
பொய்யடிமை யில்லாத தமிழ்ப்புலவர் சேரர்
நவமுடைய விவரைவ ரியல்வல்லோர்; நின்ற
நாயன்மார் தவம்புரிந்து நற்கதியை யடைந்தோர், ௨௬

இல்லறத்தி னின்றவர்க டிருநீல கண்ட
ரியற்பகையா *ருள்ளிட்டார்; மூர்த்தியா ரப்பர்
நல்லதுற வறம்;பிரம சாரிகள்சண் டேசர்;
நானிலத்தி லரனடியார் தங்களுடன் சேர்ந்து
செல்கதிபெற் றவர்ஞான சம்பந்த ருடனே
திருமணத்தி லொருமணமாய்ச் சேர்ந்தவர்க ளனேகர்,
பல்வளஞ்சே ராரூர ருடன்சேரர் கையிற்
பரியுகைக்க வுடன்சென்ற பரிசனமெண் ணிறந்தோர் ; ௨௭

சிவனடியா ருடன்பகையாய் முத்தியடைந் தவர்கள்
சேய்ஞலூர்ச் சண்டேசர் பிதாவெச்ச தத்தன்
கவர்புகழ்சேர் கோட்புலியா ருரைத்த "திரு விரையாக்
கலி" பிழைத்த கிளை;பகைத்து நரகினைச்சென் றடைந்தோர்

*தனியடியார்களில் பிரமசரியத்தும் துறவறத்தும் நின்ற மூவர் நீக்கி ஏனையோர் இல்லறத்தினராதலின் உள்ளிட்டார் என்றார் - ஸ்ரீமத் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரை.

தவரான மூர்த்தியா ரிறைவனுக்குச் சாத்துஞ்
சந்தனக்காப் பினைவிலக்கி யமண்சமயச் சார்வாய்ப்
புவிபுரந்த கருநடமன் னவன்முதல னேகர்;
புராணகதை யினைப்பிரித்துப் புகலவெளி தலவே. ௪௮

ஆரூரர் திருத்தொண்டத் தொகையுரைத்த நாளி
லடித்தொண்டு செய்தொண்டர் சில;ரவர்க்கு முன்னே
பேரூர்மெய்த் தொண்டுசெய்த பேர்சிலபே; ரவர்க்குப்
பிறகுதிருத் தொண்டுசெயும் பேர்சிலபே; ராகச்
சீரூருந் திருத்தொண்டர் புராணத்திற் சேர்த்துச்
சேவையர்கோன் சேவைசெயுந் தொண்டரள விறந்தோர் ;
காரூரு மணிகண்டர்க் கவர்கள் செய்த
கைத்தொண்டி னிலைகரைகண் டுரைக்கவெளி தலவே. ௪௯

ஒருலகோ? வொருதிசையோ? வொருபதியோ? தம்மி
லொருமரபோ? வொருபெயரோ? வொருகாலந் தானோ?
பேருலகி *லொருமைநெறி தருங்கதையோ? பன்மைப்
பெருங்கதையோ? பேறொன்றோ ? வல்லவே யிதனை
யே"**நலகே லாமுணர்ந்தோ தற்கரிய வன்**"னென்
றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு
பாருலகி னுமகனின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் **தனர்தோண்டர் சீர்பரவ வல்லார்.** ௫௦

கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளி து; முந்நீர்க்
கடற்கரையி னுய்மணலை யெண்ணியள விடலாம்;
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகுந் ;
தருங்கடலின் மீனையள விடலாகும்; வானத்
தாரகையை யளவிடலாஞ்; சங்கரன்ற டமது
சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே!. ௫௧

அறுபதுபேர் தனித்திருப்பேர்; திருக்கூட்ட மொன்ப ;
தாகவறு பத்தொன்ப தானடியார் கதையை
மறுவிறிரு நாவலூர்ச் சிவமறையோர் குலத்து
வருசடைய னார்மனைவி யிசைஞானி வயிற்றி
லுறுதிபெற வவதரித்த வாரூரர் முன்னு
னுரைசெய்த **திருத்தோண்டத் தோகைப்பதிகத் தடைவே**
நறைமலிபூம் பொழில்புடைசூழ் திருநாரை யூரி
னம்பியாண் டார்**திருவந் தாதி**கடைப் பிடித்து, ௫௨

காண்டமிரண் டாவகுத்துக், கதைப்பரப்பைத் தொகுத்துக்,
கருதரிய சருக்கங்கள் **பதின்மூன்று** நிலையிட்,
டுண்டுரைத்த புராணத்திற் றிருவிருத்த **நாலா**
யிரத்திருநூற் றைம்பத்து மூன்றுக வமைத்துச்,

---

*ஓர் வமிச பாரம்பரியமாய்த் தொடர்ந்து வாராமையின் **ஒருமைநேறி தருங்கதை** யாகாது; மரபாற் பலவாய்வரினும் திருத்தொண்டின் ஒருதொடர்புபற்றியன ஆதலின் **பன்மைப் பெருங்கதை**யாகாது.

சேண்டகைய "திருத்தொண்டர் புராண"மெனப் புராணத்
திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட்,
டாண்டகைமை பெறவெழுதி, மைக்காப்புச் சாத்தி,
யழகுபெறக் கவளிகையு மமைத்ததில்வைத் ததன்பின், ௫௩

வேறு

சேவை காவலர் புராண காதைதொகை செயநினைந்தெமை யகன்றபின்
"இயாவர் தாமரு கிருந்த பேர்கள்?கதை சென்ற தெவ்வள?வி ருந்ததெங் ?
காவதென்? னிவைக ளறிய வேண்டுமெ தறிந்து வாரு"மென வளவர்கோ
னேவி னானுரிய தூதர்; தூதரறி யாம லொற்றரையு மேவினான். ௫௪

வென்றி வேள்வளவ னளவ றிந்துவர விட்ட காளையர் புராணநூல்
ஒன்று பாதிகதை சென்ற தென்றுசில ரோடி னார்;சில ருவந்துசென்
றின்று நாளைமுடி யும்பு ராணமினி யென்று ரைத்திட, விறைஞ்சினான் ;
சென்று நற்கதை முடிந்த தென்றுசிலர் செம்பி யற்குறுதி செப்பினார். ௫௫

வந்து சொன்னவர்க ளனைவ ருக்குநவ மணிக ளுந்துகிலு மம்பொனுஞ்
சிந்தி யள்ளியு முவந்து வீசி,யுயர் செம்பொ னம்பல மருங்கில்வா
ழந்தி வண்ணர்நட மும்ப ணிந்து,முத லடியெ டுத்தவர் கொடுத்திடப்
புந்தி செய்துமகிழ் சேவை காவலர் புராண முந்தொழு வனானொ, ௫௬

வீதி வீதிக டொறுந்தொ றும்பயண மென்று வென்றிமணி முரசறைந்,
தோதி, வேதியர்க ளெண்ணி யிட்டவுயர் நாளு மோரையு முகூர்த்தமும்
போத நாடி,வரை புரைக டக்களிறு புரவி தேர்கருவி யாடரச்
சாது ரங்கமுட னேசெ லப்பிளிறு தந்தி மேல்கொடு நடந்தனன். ௫௭

தேர்மு ழக்கொலி, மழைக்க டக்கரட சிந்து ரக்களிறு பிளிறுசீ
ரார்மு ழக்கொலி, பரிச்செ ருக்கொலி, பதாதி வந்தெதி ரடர்ந்தெழும்
போர்மு ழக்கொலி, சழக்கி லாதுயர் படைக்க லன்புணரு மோசை,யேழ்
கார்மு ழக்கொலியி னெட்டி ரட்டிநிறை கடன்மு ழக்கென முழக்கெழ, ௫௮

வளவர் கோன்வர வறிந்து தில்லைமறை யோரும் வண்மைமட பதிகளும்
பிளவு கொண்டமதி நுதன்ம டந்தையரு மற்று முள்ளபெரி யோர்களுங்
களவி லாதமொழி கொடுபு ராணகதை செய்த கங்கைகுல திலகருந்
தளவ மாலையப யனையெ திர்ந்தினிய சார வாசிபல சாற்றினார். ௫௯

பூண்ட மானதிரு முடியு, மிட்டதிரு முண்ட மும்,கவச முந் துணைக்
*குண்ட லங்களு, மிரண்டு காதினும் வடிந்த லைந்தகுழை யுந்,திருக்
கண்ட மாலைகர மாலை யுஞ்சிரசு மாலை யுங்,கவின் விளங்கவே
தொண்டர் சீர்பரவு வான னைந்தசுப சரிதை சோழனெதிர் கண்டனன். ௬௦

கண்ட போதுள மகிழ்ந்து, தன்னையறி யாது, கைகடலை மீதுறக்,
"கொண்ட வேடமா னடியர் வேடமிது குறைவி லாததவ வேட"மென்
றண்ட வாணர்திரு வருளை யுன்னி,யவ ரடிமை கொண்டபெரு மையைநினைந்,
தெண்ட யங்கரச ரேறு சேவையர் குலாதி பாதுகை யிறைஞ்சினான். ௬௧

இறைஞ்சி யம்பலவர் பாத தாமரை யிறைஞ்ச வெண்ணி,வான் முறைமையா
லறஞ்சி றந்தமுனி சேவை காவலரு, மாறைஞ் ஞூறுமறை யோர்களுந்,

---

*குண்டலம் - ஆறு உருத்திராக்கங்கள் சேர்த்தமைத்த காதணி. குழை - மணி யிழைத்து வட்டமாய்ச் சதுரப்பாட்டுடன் அமைத்த காதணி. சரிதை - செயல்.

துறஞ்சி றந்தமட பதிக ளுந்,தொடர வந்து, மன்னனரி பிரமர்பான்
மறைஞ்சு நின்றபொருள் வெளிப்ப டக்கனக மன்றி னின்றபடி கண்டனன். ௬௨

கண்ட கண்ணருவி தாரை கொள்ள,விரு கைக ளஞ்சலிகொ ளக்,கசிந்,
தெண்ட ரும்புளக ரோம கூபமெழ, வின்ப வாரிகரை புரள,வாய்
விண்ட தூமொழிகள் குழற, வன்பினொடு விம்மி விம்மியருண் மேவிடத்,
தெண்ட னுகமுன் விழுந்,தெ ழுந்து,நனி செம்பி யன்பரவ, வெம்பிரான்,
௬௩

"சேக்கி ழானமது தொண்டர் சீர்பரவ, நாம கிழ்ந்துலக மென்றுநம்
வாக்கி னுலடி யெடுத்து ரைத்திட, வரைந்து நூல்செய்து முடித்தனன்;
காக்கும் வேல்வளவ! நீயி தைக்கடிது கே"ளெ னக்கனக வெளியிலே
யூக்க மானதிரு வாக்கெ ழுந்தது திருச்சி லம்பொலியு முடனெழ. ௬௪

மன்று ளாடிதிரு வாய்ம லர்ந்தமொழி யுஞ்சி லம்பொலியு மன்றிலே
நின்ற மானிடர் செவிப்பு லன்புக நிறைந்த, தன்றியு நிலத்தின்மே
†லொன்றி நின்றுயர் சராச ரங்களடை யக்க சிந்துருகி யோலிடக்,
குன்றி லங்குதிர டோண ரேந்த்ரபதி குதுகு லித்துள மகிழ்ந்தனன். ௬௫

"தொண்டர் தொண்டுசெய் புராண காதைமதி சூடு நாதர்திரு வருளினால்
விண்ட நீதிபுனை சேக்கி ழார்முனி விரித்து ரைத்தகதை கேட்பதற்
கண்ட வாணரடி யாரெ லாங்கடுக வருக" வென்றுதிசை திசைதொறு
மெண்ட யங்கரச னேடெ டுத்தெழுதி யாளு மோலைகளு மேவினான். ௬௬

வேறு

கவச மணிந்த சனங்களு மிங்கித முங்கம்பித்
தவச முறுஞ்சிவ சிந்தையு, மன்பக லாமேன்மைத்
தவச ரிதத்தொழி லுஞ்,சிவ சாதன முஞ்,சாரச்
சிவச மயத்தவர் யாவரும் வந்து திரண்டார்கள். ௬௭

வேதியர் வேத முழக்கொலி, வேதத் தைத்தமிழா
லோதிய மூவர் திருப்பதிகத் தொலி, யோவாமற்
பூதிய ணிந்தா கரவென வன்பர் புகழ்ந்தோதுங்
காதியல் பேரொலி, காரொலி போலொலி கைத்தேற. ௬௮

பூசிப் பவர்சிலர்; பூசித் தன்பொடு புனிதன்று
ணேசிப் பவர்சிலர்; "பிறவா வரமரு ணிமலா"வென்
றியாசிப் பவர்சிலர்; திருமுறை யெழுதிக் களிகூர
வாசிப் பவர்சில; ராக விருந்து மகிழ்ந்தார்கள். ௬௯

தெள்ளு திரைக்கடன் மீது மிதந்த திருத்தோணி
வள்ளலை யன்புசெ யன்பர் மடங்க டொறும்பாலர்
மெள்ள விருந்து மிழற்று புராண விருத்தத்தைக்
கிள்ளைகள் பாடியு ரைப்பன; கேட்பன மெய்ப்பூவை. ௭௦

மற்றது கண்டு களித்த நலத்த மனத்தோடு
சுற்றிய மந்திரி மாரொடு தந்திரி மார்சூழத்
தெற்றென வந்து திரண்டு முரண்டரு சீர்நாடு
பெற்றது செல்வ மெனத்தனி யோகை பெருத்தார்கள். ௭௧

---

*துறம் - துறவறம். †ஆனாயநாயனார்புராண வரலாறு பார்க்க.

பாடினர் தும்புரு நாரதர்; நீடிசை பாடாநின்
றாடினர் வானி லரம்பைய; ரஞ்சலி யெஞ்சாமற்
சூடினர் மண்ணின் மடந்தைய; ரெந்தை துணைப்பாதந்
தேடினர் மாலய; னன்பர் நடந்தரி சித்தார்கள். ௭௨

சங்கொடு பேரி கறங்கிசை வீணை தனித்தாளம்
வங்கிய கான மிடக்கை கடக்கை மணிக்காளம்
பொங்கிய பம்பை வலம்புரி சுண்டை முதற்பொற்பார்
மங்கல தூரிய மெங்கு முழங்கி வனப்பெய்த, ௭௩

வேதியர் வேள்வி நெடும்புகை, யாலய மெங்கெங்குங்
காதிய குங்குலி யப்புகை, நீடு கருப்பாலைச்
சோதி நெடும்புகை, தோரண வீதி தொறுந்தோறு
மாதர் புகைக்கு மகிற்புகை, யெங்கும் வனப்பெய்த, ௭௪

ஆடக நாடக சாலைகள், முத்தணி யத்தாணி,
மேடை யரங்கு, களங்க மிலாத வெளிக்கூட,
மாட, மதிட்கள, மாளிகை, சூளிகை, யெங்கெங்குந்
தோடவிழ் மாலைகள் *பொன்னரி மாலைகள் சூழ்வித்தார். ௭௫

பழுதக லத்திரு வலகு விருப்பொடு பணிமாறிக்
குழைவு பெறத்திகழ் கோமய நீர்குளி ரச்செய்து
தழைபொதி தோரண முங்கொடி யுந்துகி லுஞ்சார்வித்
தழகு பெறத்திரு வீதி புதுக்கி யதன்பின்பு, ௭௬

வேறு

†திருநெ றித்தமிழ் வல்ல பேர்கள், சிவாக மங்கள் படித்தபேர்,
கருநெ றிப்பகை ஞான நூல்பல கற்ற பேர்,மறை கற்றபேர்,
குருநெ றிக்குரி யோ,ரி லக்கண விலக்கி யங்கள் குறித்தபேர்,
பெருநெ றிப்பல காவி யங்கதை பேச வல்லவ ரனைவரும், ௭௭

வேறு

வள்ளலார் திருநடஞ்செய் மன்றின் முன்றின்
மறையவர்கோ மயசலத்தான் மெழுகித் தாபித்
தெள்ளரும்வெண் சுதையொழுக்கி யறுகாற் பீட
மிட்டதன்மேற் பசும்பட்டு விரித்து மீதே
வெள்ளைமடித் திட்டெது மலருந் தூவி
விரைநறுந்தூ பங்கொடுத்தா தனங்கற் பித்துத்
தெள்ளுதமிழ்ச் சேக்கிழார் புராணஞ் செய்த
திருமுறையை யதன்மேல்வைத் திறைஞ்சிப் போற்றி, ௭௮

"வாழிதிருத் தொண்டர்புரா ணத்தை நீரே
வாசித்துப் பொருளருளிச் செய்வீ" ரென்று
சோழர்பெரு மான்முதலா மடிய ரெல்லாஞ்
சொலக்கேட்டுக், குன்றைமுனி மன்று ளாடுந்

*பொன்னரிமாலை - பொன்னை மலரிதழ்போலரிந்து தொடுத்தமாலை.
†திருநெறித் தமிழ் - தேவாரத் திருமுறைகள்.

தாழ்சடையா னடியெடுத்துத் தரத்தாஞ் செய்த
 சைவகதை யினைவிளங்க விரித்துச் சொல்லச்,
சூழவிருந் தம்பலவ ரடியா ரெல்லாஞ்
 சுருதிமொழி யிதுவெனக்கை தொழுது கேட்டார். எக

தாளுடைய திருச்சிலம்பு புலம்பநடம் புரியுந்
 தன்மையா னுக்கிசைந்த பேர்வழியி னுளு
மாளுடைய பிள்ளையா ரவதரித்த நாளு
 மவரழுது திருஞான மமுதுசெய்த நாளுஞ்
சூளுடையா திரைநாளாஞ் சித்திரை யாதிரைநாட்
 டொடங்கியெதி ராமாண்டு சித்திரையா திரையி
னுளுடைய கதைமுடிப்ப மெனக்குன்றை வேந்தர்
 நடத்தவினை வருமிருந்து கேட்டனர்நா டோறும். அ0

*சிறப்புடைய மூவர்முத லிகடிருவாய் மலர்ந்த
 திருநெறிய தமிழ்,மூலர் திருமந்திர மாலை,
யறப்பயனுங் காரைக்காற் பேயிரட்டை மாலை,
 யந்தாதி, மூத்தபதி கங்,கழறிற் றறிவார்
மறப்பரிய பொன்வண்ணத் தந்தாதி, திருமும்
 மணிக்கோவை, தெய்வவுலா, வையடிகள் வெண்பா,
வுறுப்பாகத், திருவிருத்த **மூடலாகப்**, பொருட்கோ
 ளுயிராக நாலடியா னடந்த“**துல கெல்லாம்** ” அக

அன்றுமுத னுடோறு நாடோறு மண்ண
 லடியாரை விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ்
சென்றுறையத் திருமடங்க, டிருமடங்க டோறுந்
 திருவிளக்,கங் கவர்சாத்த வுள்ளுடை,மேற் போர்வை,

*இதிற் கூறப்பட்டன மூவர் தேவாரங்களாகிய திருமுறைகளேழும், திருமூலர் திருமந்திரமாகிய பத்தாந் திருமுறை ஒன்றும், காரைக்காலம்மையா ரருளிய அற்புதத் திருவந்தாதி, திருஇரட்டைமணிமாலை, மூத்ததிருப்பதிகங்கள் ஆகிய பிரபந்தங்கள் நான்கும், கழறிற்றறிவார்நாயனர் என்னும் சேரமான்பெருமாணயனரது பொன் வண்ணத்தந்தாதி, திருமும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா என்ற பிரபந்தங்கள் மூன்றும், ஐயடிகள் காடவர்கோனயனரது க்ஷேத்திரவெண்பா ஒன்றும் ஆகிய இவைகளாம். இவர்கள் இப்புராணத்துக் கூறிய அறுபான்மும்மை நாயன்மார்களில் இயலிசைத் தமிழ்ப் புலவர்பெருமக்களாவார். இத் திருப்பாட்டுக்கள் ஆளுடைய பிள்ளையார் முதலாயினுர் சரிதங்களை விளக்குதற்குக் கருவிகளாயும் சிறந்த சரித ஆதாரங்களாயும் ஆங்காங்கும் ஆசிரியராற் கொள்ளப்பட்டு இப்புராணத்தை அவர் அமைத் திருத்தலின் இவை **உறுப்பாக** என்ருர். இவற்றின் பொருள்களே இப்புராணத்தின் பொருளா யமைதலின் **பொருட்கோள் உயிராக** என்ருர். இவ்வுண்மையை இப் புராணத்துள் “தோடுடைய செவியன்” முதலிய திருப்பதிகங்கள் பலவற்றிற்கும் ஆசிரியர் சரிதத் தொடர்பும் உட்கோளும் கூறியிருத்தலும், திருப்பாசுரத்திற்குப் பேருரை செய்திருத்தலும் முதலியவற்று னறிக. இவற்றில் தேவாரந் திருமந்திர நிற்க எஞ்சியவை பதினொரந் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகளாற் கோக்கப் பட்டதுங் காண்க. “**நடந்தது உலகெல்லாம்**” என்றது, இப்புராணம் உலகிலே நின்றதெங்கும் நிலவி எனவும், ஆகுபெயராய் “உலகெலாம்” என்ற தொடக்கத்தை யுடைய புராணம் நடந்தது எனவும் இரு பொருளும் பெற அமைந்த அழகு காண்க

மூவர் முதலிகள் - முதன்மையோராகிய ஆளுடையபிள்ளையார் முதலிய மூவர்.

துன்றியசெந் நெலினடிசில், கன்ன,னறுங் கனிக,
ளேவறு சுவைக்கறி,நெய், தயிர்,திரண்ட பா,றே,
னன்றுதிருப் பண்ணியந்,தண் ணீரமுத, மடைக்காய்,
நரபதியே வலினமைச்சர் நாடோறு நடத்த, அ௨

நலமலியுந் திருத்தில்லை மன்றினினின் றாடு
நடராசற் கன்றமுதன் மகபூசை நடத்தி,
யலகில்புகழ்த் தில்லைவா ழந்தணர்க்கும் வெவ்வே
றமுதுபடி கறியமுது முதலான வெல்லா
நலமலிசெங் கோல்வளவன் றப்பாமே நாளு
நடத்திவர, வரனடியார் நிறைந்து,பதஞ் சலியும்
புலிமுனியுந் தவஞ்செய்த பெரும்பற்றப் புலியூர்
பூலோக சிவலோக மெனப்பொலிந்து தோன்ற, அ௩

மருவுதிரு முறைசேர்ப்பா, ரெழுதுவா, ரிருந்து
வாசிப்பார், பொருளுரைப்பார், கேட்டிருப்பார், மகிழ்ந்து
சிரமசைத்துக் கொண்டாடிக் குதுகுலிப்பார், சிரிப்பார்,
*தேனிப்பார், குன்றைமுனி சேக்கிழார் செய்த
வரியதவத் தினைநினைப்பா, "ரம்பலவர் முன்னு
ளடியெடுத்துக் கொடுக்கவிவர் பாடின"ரென் றுரைப்பார்,
"பெரியபுரா ணங்கேட்ட வளவர்பிரான் செவிக்குப்
பிடிக்குமோ வினிச்சிந்தா மணிப்புரட்"டென் றுரைப்பார். அ௪

இத்தகைய சிறப்புடனே திருத்தொண்டர் புராண
மிருந்தன்பர் பாராட்ட நடந்ததிரா மாண்டு
சித்திரையா திரைநாளின் முடிய,வது கண்டு
திருத்தொண்ட ரரவெனும்பே ரொலியெழுந்து பொங்கக்,
கத்துதிரைக் கடலொலியை விழுங்கிமுழங் கோரேழ்
கடலொலியைக் கீழ்ப்படுத்திப் பிரமாண்ட வெளியைப்
பொத்தியிமை யவர்செவியை நிறைத்துயரப் பொங்கிப்
பொன்னுலகுக் கப்பாலும் புகப்பொலிந்த தன்றே. அ௫

திருத்தொண்டர் புராணமெழு தியமுறையை மறையோர்
சிவமூல மந்திரத்தா லருச்சனைசெய் திறைஞ்சி,
யிருக்குமுதன் மறைநான்கி னின்றுமுத லாக
விதுவுமொரு **தமிழ்வேத மைந்தாவ** தென்று
கருத்திருத்தி, யமுதடைக்காய் நறுந்தூப தீபங்
†கவரிகுடை கண்ணாடி யாலத்தி நீறு
பரித்தளவு செயக்கண்டு, வளவர்பிரான் முறையைப்
பசும்பட்டி னுற்சூழ்ந்து பொற்கலத்தி லிருத்தி, அ௬

சேறிமதயா னைச்சிரத்திற் பொற்கலத்தோ டெடுத்துத்,
திருமுறையை யிருத்தியபின், சேவையர்கா வலரை
முறைமைபெற வேற்றி,யா சனுங்கூட வேறி,
முறைமையினு லிணைக்கவரி துணைக்கரத்தால் வீச,

*தேனித்தல் - தேன் முதலியவற்றை உண்டார் போலக் களிப்பால் நாவைச் சுவைத்தல். சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்—திருவாசகம்.

†கண்ணாடி முதலியன பூசைக்குரிய சோடசோபசாரமெனப்படும்.

மறைமுழங்க, விண்ணவர்கள் கற்பகப்பூ மாரி
    மழைபொழியத், திருவீதி வலமாக வரும்போ,
திறைவர்திரு வருளெனினைந் தடலரசர் கோமா
    "னிதுவன்றே நான்செய்த தவப்பய?"னென் றிசைத்தான். ௮௭

வாரணத்தி லிவரைவரக் கண்டதிரு வீதி
    மறுகுதொறுந் தூய்மைசெய்து வாழைகளு நாட்டிப்
பூரணகும் பமுமமைத்துப் பொரியுமிகத் தூவிப்
    பொன்னரிமா லையுநறும்பூ மாலைகளுந் தூக்கித்
தோரணங்க ணிரைத்துவிரை நறுந்தூப மேந்திச்
    சுடர்விளக்கு மேற்றியணி மணிவிளக்கு மேந்தி
யாரணங்கள் விரித்தோதி மாமறையோ ரெதிர்கொண்
    டறுகெடுப்ப வாழ்த்தெடுத்தா ரரம்பையர்க ளெல்லாம். ௮௮

வேறு

"காவல ஞரிவர்; தவரிவர்; காவலர் கவரி யிடத்தகு மோ?"வென்பார்;
"சேவையர் காவல ஞர்சிவ மான சிறப்பிது நல்ல சிறப்!"பென்பார்;
"தேவரு மெழுதவொ ணுமறை யைத்தமிழ் செய்து திருப்பதி கம்பாடு
மூவரு மோநமுத லாயுல கத்து முளைத்த முதற்போருடா!" னென்பார். ௮௯

மீன்மழை பெய்தது மேக வொழுங்குகள்; விண்ணவர் கற்பக விரைசேர்பூ
நன்மழை பெய்தனர்; சேவையர் காவலர் நாவல ரின்புற நாவாரச்
சொன்மழை பெய்தன; ரிரவலர் மிடிகெட வள்ளி முகந்தெதிர் சோளேசன்
பொன்மழை பெய்தன; னுருகிய நெஞ்சொடு கண்மழை யன்பர் பொழிந்தார்கள். ௯௰

"மதுர விராமா யணகதை யுரைசெய்த வான்மிக பகவனு மொப்பல்ல;
விதிவழி பாரத முரைசெய்து கரைசெய்த வேத வியாதனு மொப்பல்ல;
சிதைவற வாயிர நாவுட னறிவுள சேட விசேடனு மொப்பல்ல;
பொதிய மலைக்குறு முனிவனு மொப்பல புகழ்புனை குன்றை முனிக்"கென்பார். ௯௧

மெய்யுள சிவசா தனமும் வெளிப்பட வெண்ணீ றெழுதிய கண்ணேறுங்
கையுந் திகழ்மணி கண்டமு மொளிதரு கவளிகை யும்புத் தகவேடு
மையுந் திருவுள மழியுந் தொறுமா காவெனு நாமமு நாமெல்லா
முய்யும் படியருள் கருணையு மழகி தெனத்தொழு தனருல கவரெல்லாம். ௯௨

பூவை மறந்தனள் வெண்டா மரைமயில்; புகல்தரு சங்கப் புலவோர்சொற்
பாவை மறந்தனள்; தேச சுபாடித பயனை மறந்தனள்; பதுமத்தோ
ஞவை மறந்தனள்; பொதிய மலைத்தலை நண்ணிய புண்ணிய முனிவனெனுங்
கோவை மறந்தனள்; சேவையர் காவல ஞர்திரு நாவிற் குடிகொண்டாள். ௯௩

இப்படி யிப்படி தன்னில் விதிப்படி யிம்பரு மும்பரு மேனேரு
மப்படி சூழ வரத்திரு வீதி வலஞ்செய் தணைந்தம் பலமுன்றிற்
றப்பற யானையி னின்று மிழிந்தா சனுமுறை செறிசே வையர்கோவு
முப்புரி நூன்மறை யோரொ டணைந்தெழு தியமுறை யைத்திரு முன்வைத்தார். ௯௪

வேறு

அண்ட வாணரெதிர் தெண்ட னுகவனை வரும்வி ழுந்துபி னெழுந்துசீர்
கொண்ட சேவைகுல திலக ருக்கனை வருங்கு றித்தெதிர் கொடுத்தபேர்
தொண்ட சீர்பரவு வாரெ னப்பெயர் சுமத்தி, ஞானமுடி சூட்டி,முன்
மண்ட பத்தினி லிருத்தி, மற்றவரை வளவர் பூபதி வணங்கினுன். ௯௫

*மூவ ரோதுதிரு முறைக ளேழு,திரு வாத வூரர்முறை யொன்;றிசைப்
பாவ ரைந்தமுறை யொன்று; மூலர்முறை யொன்று; பாசுரம தாதியாக்
கோவை செய்தமுறை யொன்று; சேவையர் குலாதி நீதிமுறை யொன்றுடன்
பாவை பாகர்திரு வருள்சி றந்தமுறை பன்னி ரண்டென வகுத்தபின், கசு

†தோடு செய்ததிரு நெறிய செந்தமிழொ டொக்கு" மென்றுரை தொடர்ந்துசெப்
பேடு செய்து,நட ராசர் சந்நிதியி லேற்றி னார்க;ளிது பாவிசூழ்
நாடு செய்ததவ!; நீடு குன்றைவள நகரி செய்ததவ!; நிகரிலாப்
பீடு செய்தபகி ரதிகு லத்திலகர் சேக்கிழார் செய்த பெருந்தவம் ! கஎ

ஆய வேலையன பாய "னிந்நிலைமை யாத லாலனுசர் பாலறு
வாய ரெங்குள?"ரெ னப்,பணிந்திரு மருங்கு நின்றவர் விளம்புவார் :

---

*மூவர் ஓது திருமுறைகள் ஏழாவன - ஆளுடையபிள்ளையார் தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் தேவாரங்கள் நான்காவது, ஐந்தாவது, ஆறுவது திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகளது தேவாரங்கள் ஏழாவது திருமுறையாகவும் வகுக்கப்பெற்று உள்ளவையாம். வாதவூரர் முறை ஒன்று என்பது திருவாசகமும் திருக்கோவையுமாகிய எட்டாவது திருமுறையாம். இசைப்பா வரைந்த முறை ஒன்று என்பது திருமாளிகைத்தேவர் முதற் சேதிராயரீறாக ஒன்பதின்மர் பெருமக்கள் அருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பவையாம். இவை திருவிசைப்பா என்ற பெயரால் ஒன்பதாவது திருமுறையாக வகுக்கப்பட்டன. இவற்றுள் அடங்கிய திருப்பதிகங்கள் திருவிசைப்பா இருபத்தெட்டும் திருப்பல்லாண்டு ஒன்றும் ஆக இருபத்தொன்பதாம். மூலர் முறை ஒன்று என்பது திருமூலநாயனார் திருவாவடுதுறையில் அரசின்கீழ்ச் சிவயோகத்திருந்து ஆண்டுக்கொரு மந்திரமாக அருளிய மூவாயிரம் திருமந்திரங்களடங்கிய பத்தாவது திருமுறையாம். பாசுரமதாதியாக் கோவைசெய்த முறை ஒன்று என்பது, திருவாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுர முதலாக நம்பியாண்டார்நம்பிகள் அருளிய திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலையீறாக நாற்பது பிரபந்தங்களைக் கோவை செய்த பதினோராந் திருமுறையாம். இவற்றை அருளியவர்கள் திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார்நம்பிகள் வரைப் பன்னிருவர் என்பர். இதனையும் ஏனை முன்னைத் திருமுறைகளையும், இராசராச தேவர் நம்பியாண்டார்நம்பிகளை வேண்ட, அவர் கோவை செய்த வரலாறு திருமுறைகண்ட புராணத்துட் (23—29) காண்க. முன் வகுத்த அப்பதினொன்றுடன் சேர்த்துப் புராணத்தைப் பனிரண்டாந்திருமுறையாக வகுத்தவர் அநபாயசோழ தேவர் என்க. திருநெறிய தமிழ் - தேவாரங்கள்.

†தோடு செய்த திருநெறிய செந்தமிழொ டொக்குமென்று உரை தொடர்ந்து செப்பேடு செய்து—என்றது இப்புராணமும், "தோடுடைய" எனத் தொடங்கினவையாய் முன்னுள் நம்பியாண்டார் நம்பிகளது அருட்டுணை கொண்டு வகுத்த திருமுறைகளோடு ஒப்பாகும் என்று சொல்லி, அக் கருத்தினாலே தொடர்ந்து, செப்பேடு வரைந்து சாசனம் செய்து - என்றதாம். இந்தச் செப்பேடானது இக் கருத்தொன்றினையே வெளியிடப்பெற்ற அரசாது கட்டளையாக அமைத்தனரென்றும்; அற்றன்றிப், புராணமுழுமையுமே செப்பேட்டில் வரைந்து சேமஞ் செய்தனர் என்றும் இருவகையும் கொள்கின்றனர். எவ்வகையேயாயினும் இதுபற்றிய செப்பேட்டுச் சாசனமொன்று அரசாணையால் நடராசர் கருவூலத்துள்ளே சேமிக்கப்பட்டதென்பது தில்லைவாழந்தணர்களிலொருவராகிய உமாபதியாராணையால் ஒருதலையாய்த் துணியப்படும். அது கிடைப்பின் சைவத்துக்குப் பேருதியமாம்.

"தூய குன்றைநகர் மீது தம்பெயர் துலங்க வோர்குள மமைத்தபி
னேய நாகையா னூர்தி ருப்பணி யியற்றி யவ்விடை யிருந்தனர்" ௯௮

என்று சொல்லவவர் தமைய ழைத்தரச "னிவ ரமைச்ச;ரிவர் பட்டமு
மன்றன் மாலைபுனை தொண்டை மா"னென வகுத்த பின்,றமது மண்டல
மன்று வற்பம்வர வந்த டைந்தவரை யாற்றல் செய்து,தொண்டை மண்டல
நின்று காத்தபெரு மானெ னத்தமது பெயரை யெங்கணு நிறுத்தினர். ௯௯

தொண்டர் சீர்பரவு சேக்கிழார் குரிசி றூய தில்லைநகர் தன்னிலே
பண்டு மூவர்பதி கத்து வந்தவறு பத்து மூவர்கதை தனையுணர்ந்,
தண்ட வாணரடி யார்க டம்முட னருந்த வந்தனி லிருந்து,பி
னிண்டை வைத்தசடை யம்ப லத்தவ ரெடுத்த பாதநிழ லெய்தினர். ௧௦௦

வாழி தில்லைமணி மன்று ளென்றுநட மாடு மங்கணர் மலர்ப்பதம் !;
வாழி காழிநகர் வாழ வந்ததிரு நெறிய ராதிபதி வள்ளறள் !;
வாழி யன்பர்திரு நீறு,மிட்டதிரு மூண்ட முத்துவய கவசமும் !;
வாழி குன்றைமுனி சேவை யாதிதிரு வாய்ம லர்ந்தருள் புராணமே ! ௧௦௧

தேசி லங்குமுகில் குன்றை யாதிபதி தொண்டர் சீர்பரவு சேக்கிழார்
வாச லன்றுமுத லின்று காறுமினி மேலும் வாழையடி வாழையாய்
வீசு தென்றன்மணி மண்ட பத்தரசு வீற்றி ருக்குமுடி மன்னருக்
கீச னன்பர்கள் புராண முஞ்சொலி யமைச்சு மாகிநல மெய்துமால். ௧௦௨

அண்ட வாணர்தொழு தில்லை யம்பலவ ரடியெ டுத்"துலகெ லா"மெனத்
தொண்டர் சீர்பரவு சேக்கி ழான்,வரிசை துன்று குன்றைநக ராதிபன்,
றண்ட காதிபதி, திருநே றித்தலைமை தங்கு செங்கைமுகில், பைங்கழற்
புண்ட ரீகமலர் தெண்ட னிட்டுவினை போக்கு வார்பிறவி நீக்குவார். ௧௦௩

சிறப்புப்பாயிரம்

திருக்கிளருங் கயிலைமலைக் காவல்பூண்ட செல்வமலி திருநந்தி மரபில் வந்து
கருக்குழியி லெமைவீழா தெடுத்தாட் கொள்ளுங் கருணைமிகு மெய்கண்ட தேவர், தூய
மருக்கிளர்தாள் பரவுமரு ணந்தி தேவர், மகிழுமறை ஞான தேவ ருக்கன் பாகி
யிருக்குமுமா பதிதேவர் சேக்கி ழார்த மிசைப்புரா ணம்முரைத்தா ரென்ப மாதோ.

—அபியுக்தர் வாக்கு.

திருச்சிற்றம்பலம்

தில்லைமூவாயிரவரி லொருவரும், சந்தானுசாரியர் நால்வரிலொருவருமாகிய
உமாபதிசிவாசாரியார் அருளிச் செய்த

சேக்கிழார்புராண மென்னும்

திருத்தொண்டர்புராண வரலாறு

முற்றும்.

ஆக திருவிருத்தம் ௧௦௪.



சேக்கிழார் சுவாமிகளது தம்பியார்
பாலறுவாயர்

சேக்கிழார் சுவாமிகளது
தாயார்

சோழநாட்டுத் திருநாகேச்சுரத்தில் உள்ள படிமங்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராண

வரலாற்றுச் சுருக்கமும்

ஆசிரியர் சேக்கிழார்சுவாமிகளது

சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களும்

உலகிலே எல்லாவுயிர்களுக்கும் கருணைத்தாயாகியவர் உமைஅம்மையார். அவ்வுயிர்கள் எவைகட்கும் போக மோட்சங்களைத் தரும்பொருட்டு அவர் இறைவனைத் தழுவுதற்குத் தவம்புரிந்தனர். அதற்குரிய இடமாகப் பெற்றது **தொண்டை நன்னாடு.** பாலாறு பெருகி இதற்கு எல்லா வளங்களையும் தருகின்றது. இந்நாடு, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலப்பகுதிகளையும் இவற்றின் புணர்ப்பாலாகிய நிலப் பகுதிகளையும் சிறக்க உடையது. இந்நிலப்பகுதிகள் ஒவ்வொன்றும் சிவத்தலங்களிற் சிறந்தனவற்றைத் தம்முட்கொண்டு விளங்கும் பெருமையுடையன.

இந்நாட்டிலே கரிகாற்பெருவளப் பெருஞ்சோழர் பற்பல நாட்டினும் தெரிந்து கொண்ட நற்குடி நாற்பத்தெண்ணாயிரத்து **வேளாண் மக்களைக்** குடியேற்றினர். ஒழுக்கத்தினும் வாய்மையினும் சிறந்த குடிகளால் நிரம்பப் பெற்றதால் "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு **சான்றோருடைத்து**" எனப் பாராட்டப்பெற்றது இந்நாடேயாம்.

இந்நாட்டின் இருபத்துநான்கு கோட்டங்களிற் சிறந்து விளங்குவது **புலியூர்க் கோட்டம்.** அதில் உள்ள நாடு பலவற்றினும் சிறந்தது **குன்றத்தூர் நாடு.** அதனுட் சிறந்து விளங்குவது **குன்றத்தூர்.** அவ்வூரில் வேளாண்குடிமரபிலே **சேக்கிழார்குடி** பெருமைபெற்று வாழ்ந்தது. அக்குடிசெய்த பெருந்தவப்பயனாய் **அருண்மொழித் தேவரும்,** அவர் தம்பியாராகிய **பாலறவாயரும்** அவதரித்து வாழ்ந்தனர்.

காமாட்சியம்மையாரிடம் இருநாழிநெல் பெற்று அதனை உழவுதொழிலாற் பெருக்கி உலகமெல்லாமுண்டு வாழும்படி அறம் வளர்க்கும் வேளாளர் குலம் மிகப் புகழ்பெற்றதாம். ஒரு வணிகனுக்குத் தாம் சொன்னசொல்லைக் காக்க எழுபது பேர் வேளாளர்கள் முன்னாளில் தீப்பாய்ந்து வாய்மை காத்த திருவாலங்காட்டுப் பழயனூர்ச் சரிதம் ஆளுடைய பிள்ளையாராலும் புகழப்பட்டதென்றால், வேறு நாம் புகழ்வது என்னை ? அறுபத்து மூன்று நாயன்மார்களிலே பதின்மூவர் வேளாளர்களாவார். இத்தகைய விழுக்குலத்திலே சிறந்த விழுக்குடியிலே அவதரித்து விழுத்தகைமையானும் அறிவானும் மேம்பட்டு விளங்கிய அருண்மொழித்தேவர் பெருமையை அக்காலத்துச் சோழநாட்டையாண்ட **குலோத்துங்கச் சோழர்** என்ற அரசர் கேட்டு அவருக்கு **உத்தமச்சோழப் பல்லவன்** என்ற பட்டமுந்தந்து அவரைத் தமது முதன் மந்திரியாக அமைத்துக் கொண்டார். அவ்வாறே அவரும் அமைச்சர் தொழில்பூண்டு அரசாங்கத்தைத் திறம்பெற நடத்தி வந்தார். அந்நாளில் அருண்மொழித் தேவர் **திருநாகேச்சரத்தில்** எழுந்தருளியுள்ள இறைவனிடத்து மிக்க அன்பு செலுத்தி அவரையே தமது **ஆன்மார்த்த நாயகராகக்** கொண்டு வழிபட்டு வந்து, அத்திருக்கோயிலிற் பற்பல திருப்பணிகள் செய்தனர். அங்கு நடேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கனகசபையையும் அதன் முன்புறம் மண்டபத்தையும்

புதிதாய் அமைத்துத் திருப்பணிசெய்தனர். தமது ஊராகிய குன்றத்தூரிலே தமக்குக் கிராமப்புலத்திலே இருந்த மனைக்கட்டு இடத்தில் தமது ஆன்மார்த்த நாயகராகிய திருநாகேச்சுரத்திறைவர் நினைவுக்கு அறிகுறியாகத் திருக்கோயிலும், திருமடவளாகமும் அமைத்துத் தாபித்து,அதற்குத் **திருநாகேச்சரம்** என்று பேருமிட்டு, அதற்கு நித்திய நைமித்திக விசேட உற்சவாதிகளும் நியமித்தார். அவ்வூரிற்றமக்கிருந்த நிலம் முதலிய பொருள்கள் அனைத்தையும் அத்திருக்கோயிற் றிட்டச்செலவுகளுக்கென்று நியோகித்தார். அங்ஙிபந்தமும் திருக்கோயிலும் இன்றும் அவ்வாறே நின்று நிலவிச் சிறப்பாய் நிகழ்ந்து வருகின்றன.

அருண்மொழியார் அறநெறியிற் சீர்பெற அமைச்சியல் நடத்தினர். அந்நாளில், உலகர் பலரும் பாராட்டி வந்ததுபோலவே, அருங்கலை விநோதரான இவரது அரசர் **அநபாயரும்** சீவகசிந்தாமணி என்ற சமண காவியத்தைப் பெரிதும் பாராட்டி அதைப் பலவாறும் கேட்டு மகிழ்வாராயினர். அதுகண்டு, அரசனை உண்மை நெறியிற் றிருத்துதல் அமைச்சரது கடமைகளில் ஒன்றாதலின்,ஆசிரியர் அருண்மொழியார் "இது பொய்நூல்; சிற்றின்பக் கதைகள் மலிந்து மக்களைத் தீயவழியிற் புகுத்தும்; மறுமைக்காகாது; இம்மைக்குமாகாது; இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி தந்து வீடு தருவன சிவ கதைகளேயாம்" என்று அறிவுறுத்தினர். அதுகேட்ட அரசர் "அவ்வாறாயின் அச்சிவகதைகள் யாவை?" எனக் கேட்டனர். "திருவாரூர் இறைவர் தாமே "தில்லைவா ழந்தணர்தமடியார்க்கு மடியேன்" என்று முதலடி எடுத்துக் கொடுத்து அறிவுணர்த்தி யருளியபடி நம்பியாரூரர் **திருத்தொண்டத்தொகை** பாடியருளினர். அதனை விரித்துத் **திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார்** பொருளுரைக்கக் கேட்ட **நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி** பாடினர். இவ்வாறு வந்த திருத்தொண்டர் வரலாறுகளை **இராசராசசோழதேவர்,** சிவாலய முனிவர் முதலாகப் பற்பல பெரியோரும், உலகரும் பாராட்டிக் கொண்டாடினர்" என்று அவற்றின் வரலாற்றினை அருண்மொழித்தேவர் எடுத்துச் சொல்லியருளினர். அரசர் "அச்சரிதங்களைச் சொல்க" எனக் கேட்க, அருண்மொழியாரும், அவ்வாறே தில்லைவாழந்தணர் சரிதம் முதலாகத் திருநீலகண்டயாழ்ப்பாணர் சரிதம் ஈறாக விரித்துரைத்தனர். அதுகேட்ட அரசர் மிக மகிழ்ந்து "இவ்வடியார்கள் அவதரித்த நாடும், ஊரும், மரபும் அவரவர்கள் பேரும், செய்த திருத்தொண்டின் வரலாறும் அடைவுபடப் பிரித்தும் விரித்தும் உலகெலாம் கேட்டுய்யுமாறு ஒரு **பெருங் காப்பியமாகச்** செய்து தருதல்வேண்டும்" என்று அமைச்சரை வேண்டினர். அவருமிசைந்தார். அதன் பொருட்டுத் தக்க திரவியங்களையும் தந்து தக்க பரிசனங்களுடன் அவரை அவர் விருப்பின்படியே திருத்தில்லைக்கு வழியனுப்ப, அவரும் அங்குச் சென்று சேர்ந்தனர். தில்லை யெல்லையை வணங்கிக்கொண்டு அம்பலவாணர் திருமுன்னர்ச் சென்று, வணங்கி, உள்ளமுருகி, நைந்து, கண்ணீர்வார்ந்து, உரோமம் சிலிர்க்கப், பேரின்பவெள்ளத்தில் மூழ்கி,வணங்கி,நின்று, "அடிகளே! உமது அடியார்களது சீர்களை அடியேன் உரைத்திட அடியெடுத்துக் கொடுத்து, இடர்களைக் களைந்தருள வேண்டும்" என்று வேண்டி இறைஞ்சினர். அப்போது அம்பலவாணர் அருளினால் அசரீரிவாக்கு "**உலகேலாம்**" என்று உரை செய்த பேரொலி எழுந்து அடியார் செவிப்புலத்து எங்குமாகி நிறைந்தது. அது கேட்ட தில்லைவாழந்தணர்களும் மடபதிகள் முதலிய யாவரும் அம்பலவாணரை வணங்கி மகிழ்ந்தனர். அருண்மொழித்தேவரும் திருநெறித்தலைவர்களாகிய சமயகுரவர்களை வணங்கிச், சிவசாதனங்களைத் தரித்துக்கொண்டு, ஆயிரக்கால் மண்டபத்திலே யிருந்து, திருவருளையே மேற்கொண்டவராய், அம்பலவர் எடுத்துக்கொடுத்த மொழியையே முதலாக வைத்து, அன்று முதலாகப் புராணத்தை முறையாகப் பாடி முடித்தருளினர். இவர் புராணம் பாடிய சிறப்பைச் சந்தான குரவர்பெருமானாகிய உமாபதிசிவாசாரிய சுவாமிகள்,

“ ஒருலகோ ? வொருதிசையோ ? வொருபதியோ ? தம்மி
லொருமரபோ ? வொருபெயரோ ? வொருகாலந் தானோ ?
பேருலகி லொருமைநெறி தருங்கதையோ ? பன்மைப்
பெருங்கதையோ ? பேரொன்றோ ? வல்லவே ! யிதனை
யே“ருலகெ லாமுணர்ந்தோ தற்கரிய வன்”னென்
றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு,
பாருலகி னுமகணின் றெடுத்துக்கை நீட்டப்,
பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார் ”

“ கருங்கடலைக் கைநீத்துக் கொளலெளிது ; முந்நீர்க்
கடற்கரையி னுய்மணலை யெண்ணியள விடலாம் ;
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும் ;
தருங்கடலின் மீனையள விடலாகும் ; வானத்
தாரகையை யளவிடலாஞ் சங்கரன்று டமது
சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே ”

என்று வியந்து பாராட்டிக் காட்டினர் என்றால் அதன் பெருமையை யாமோ அளந்து காணவல்லோம் ? இவ்வாறு பாடிய புராணத்தை இரண்டு காண்டங்களாகவும் பதின் மூன்று சருக்கங்களாகவும் வகுத்துத், தெய்வம் மணக்கும் நாலாயிரத்து இருநூற்றைம் பத்துமூன்று செய்யுட்களாற் பாடி முடித்து, அதற்குத் திருத்தொண்டர் புராண மென்று பேரிட்டு, அப்புராணத் திருவேட்டினை மைக்காப்பணிந்து, கவளிகையுமிட்டு நிறைவு செய்தருளினர் ஆசிரியர்.

அருண்மொழியார் புராணம் பாடத் தில்லைக்குச் சென்றபின் அரசர் பல காலமும் ‘புராணம் எவ்வளவு சென்றது ? எவ்வளவு சென்றது ?’ என்று தூதுவர்களையும் ஒற்றர் களையும் அனுப்பித் தெரிந்து வந்தனர். புராண நிறைவெய்திய செய்தி கேட்டனர். அது சொல்லியவர்க்கெல்லாம் செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலும் முதலான வரிசைகள் சிறப்புறப் பொழிந்தனர்; “தில்லையம்பலவாணரது திருக்கூத்துக் கும்பிட்டு அவர் அருண்மொழி முதலெடுத்துத் தரப்பெற்ற அருண்மொழியாரையும், அம்முதல் கொண்டு அவர் வாய்மலர்ந்த புராணத்தையும் தொழுவேன் யான்” என்று துணிந்த னர் ; “யாவரும் பயணம் எழுக” என்று முரசறைவித்தனர் ; நல்வேளையிற் றமும் சேனைகள் சூழப்புறப்பட்டனர். அவர் வரவு கேட்ட தில்லைவாழந்தணர்களும், மடபதி களும், மற்றும் பெரியோர்களும், அருண்மொழியாரும் மகிழ்ந்து அரசரை எதிர் கொண்டு இனிய மொழி பல பகர்ந்து வரவேற்றனர்.

“ முண்ட மானதிரு முடியு மிட்டதிரு முண்ட முங்கவச முந்துணைக்
குண்ட லங்களு மிரண்டு காதினும் வடிந்த லைந்தகுழை யுந்திருக்
கண்ட மாலைகர மாலை யுஞ்சிரசு மாலை யுங்கவின் விளங்கவே
தொண்டர் சீர்பரவு வான வைந்தசுப சரிதை சோழனெதிர் கண்டனன் ”

அரசர்அருண்மொழியாரைத் தவவேடத் தரசராகக் கண்டு அத்திருவேடத்தினையும் அம்பலவர் அருளையும் நினைந்து அவரது திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினர். பின்பு அரசர், யாவரும் சூழத் திருச்சிற்றம்பலவாணர் திருமுன்பு சென்று, கண்ணருவிபாய, உரோமம் புளகிப்ப, வாய்குழற, அன்பினாலே விம்மிவிம்மி, ஆனந்த பரவசராகி, வீழ்ந்து, எழுந்து, நின்றனர். அப்போது “சேக்கிழான் நமது தொண்டர்சீர் பரவுதற்கு நாமே “உலகெலாம்” என்று அடியெடுத்துக் கொடுக்க வரைந்து நூல்செய்து முடித்தனன்

வளவ! நீ இதை விரைந்து கேள்" என்று கனகசபையில் இறைவனுடைய அசரீரி வாக்கு யாவருங் கேட்க எழுந்தது. அவர் பாதத் திருச்சிலம்பி னொலியும் உடனே எழுந்தது. அரசர் அதுகேட்டு உளங்கசிந்து உருகி மகிழ்ந்தனர். "இத்திருக் கதையினை விரித்துக் கேட்க யாவரும் வருக" என்று எல்லாத் திக்குக்களிலும் அரசர் ஓலை போக்கினர். அவ்வாறே சிவ சமயத்தவர் யாவரும் யாங்கணுமிருந்தும் வந்து திரண்டார்கள். நகர முழுவதும் அலங்கரித்தனர். திருவீதிகளிற் றோரண முதலியன கட்டி அழகு செய்து புதுக்கினார்கள். நடராசர் நடஞ்செய்யும் கனகசபைத் திருமுன்றிலிற் கோமயத்தால் மெழுகி, அறுகாற் பீடமிட்டு, அதன்மேற் பசும்பட்டு விரித்து, மேலே வெண் பட்டு மடித்து இட்டுப், புதுமலர்கள் தூவி, நறுந்தூப தீபங் கொடுத்துச், சிவாகம விதிப் படி ஆசனங் கற்பித்தனர். அதன்மேற் றெள்ளுதமிழ்ச் சேக்கிழார் செய்த புராணத் திருமுறையை வைத்து இறைஞ்சிப் போற்றினர். "இப்புராணத்தை நீரே வாசித்துப் பொருள் அருளிச் செய்வீர்" என்று யாவரும் கேட்கக் குன்றை முனிவரும் அவ்வாறே சொல்ல விசைந்தனர். சிவபெருமானுக் கிசைந்த பேர்வழியின்னாளும், ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும், அவர் அழுது ஞானமுண்டருளிய நாளும் ஆகிய திருவா திரை நாளிலே சித்திரையிற்றொடங்கி அடுத்த சித்திரைத் திருவாதிரையிலே முடிப் போமென்றுகொண்டு சேக்கிழார்பெருமான் நடத்த ஆயிரக்கான் மண்டபத்தில் அனை வரும் நாடோறுமிருந்து கேட்டனர். மூவர் முதலிகள் அருளிய திருநெறித் தமிழாகிய தேவாரமும், திருமூலர் அருளிய திருமந்திரமாலையும், அம்மையார் அருளிய திரு விரட்டைமணிமாலை, அற்புதத்திருவந்தாதி, மூத்ததிருப்பதிகம் என்றிவைகளும், கழ றிற்றறிவார் நாயனாருளிய பொன்வண்ணத்தந்தாதி, ஞானவுலா, திருமும்மணிக் கோவை என்றிவையும், ஐயடிகள்காடவர்கோ னாயனாருளிய திருவெண்பாவும் ஆகிய இவற்றைத் தனது உறுப்பாகவும், திருவிருத்தப்பாவினத்தை உடலாகவும், பொருள் கோள் உயிராகவும் கொண்டு, நாலடியால் "உலகெலாம்" என்ற புராணம் உலகெலாம் நடந்தது. புராணம் சொல்லத் தொடங்கிய நாள் முதலாக நாடோறும் வந்து கேட்ட எல்லா அடியவர்களுக்கும் உறையுள், உணவு முதலிய எல்லா உபசாரங்களையும் அரசர் ஏவலின்படி அமைச்சர்கள் நடத்தினர். நடராசருக்கு மகாபூசை நடத்தினர். தில்லைவா ழந்தணர்கட்கெல்லாம் வெவ்வேறாக அமுதுபடி முதலான வெல்லா நடத்தினர். இவ் வாறு திருத்தில்லை சிவலோகம் போலப் பொலிந்து தோன்றிற்று. திருமுறையைப் பல பேர் எழுதுவர்; பல பேர் வாசிப்பர்; பல பேர் பொருளுரைப்பர்; பலர் சிர மசைத்துக் கொண்டாடுவர்; பலர் சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்; வேறு பலர் குன்றை முனிவர் செய்த அருந்தவப் பயனை எண்ணி எண்ணி மகிழ்வர்; மற்றும் பலர் அம்பலவர் அருளினை மகிழ்வர்; பற்பலரும் "இது கேட்ட சோழர் செவிக்கு இனிச் சிந்தாமணிப் புரட்டுப் பிடிக்குமோ" என்பர். இவ்வாறு அன்பர்கள் பாராட்ட அடுத்த வாண்டு சித்திரைத் திருவாதிரை நாளில் புராணம் படித்து முடித்தனர் சேக்கிழார் பெருமான். அன்பர் முழக்கிய அரவொலி கடலினு மிக்குமுழங்கியது. திருத்தொண்டர் புராணம் எழுதிய திருமுறையை மறையோர் சிவமூல மந்திரத்தால் அருச்சனைசெய்து இறைஞ்சினர். வேதத்தோ டொப்ப இதுவும் ஒரு தமிழ்வேதமேயாம் என்று தூபதீப நிவேதனம் முதலிய உபசாரங்களுடன் பூசித்தனர். பின்பு அரசர் அத்திருமுறை யைப் பச்சைப் பட்டினாற் சுற்றிப், பொற்கலத்தில் வைத்து, யானைச் சிரத்தில் ஏற்றி வைத்து, அதனை யடுத்துச் சேக்கிழார் பெருமானையும் ஏற்றினர். அரசருங்கூட ஏறிப் பின்புறம் அமர்ந்து தமது இரண்டு கரங்களினாலும் இரண்டு வெண்சாமரைகளை வீசி னர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். இவ்வாறு திருவீதி வலம் வந்தபோது அரசர் மனமிக மகிழ்ந்து "இதுவன்றோ நான் செய்த தவப் பயன்" என்று மகிழ்ந்தனர். வீதி கள்தோறும் வாழைகட்டித் தோரண முதலியவற்றால் அலங்கரித்துப் பூரண கும்பமும்

வைத்து தூபதீபமேற்றிப் பூசித்தனர். வேதியர் வேதமோதி எதிர்கொண்டு வாழ்த்தினர். கண்ணுற்காணும் பேறுபெற்றரெல்லாம் பலவாறும் வாழ்த்தினர். இவ்வாறு திருவீதி வலம்வந்து அம்பலமுன்றிலிலே யானையினின்றும் இறங்கிச் சேக்கிழார் பெருமான் தில்லைவாழ் அந்தணரோடு மணையத், திருவம்பல முன்பு திருமுறையை வைத்து யாவரும் அம்பலவாணரை வணங்கிப் போற்றினர். சேக்கிழார் பெருமானுக்குத் " **தொண்டர்சீர் பரவுவார்** " என்ற பட்டம் சுமத்தி, ஞானமுடி சூட்டி, மண்டபத்தில் அமர்த்தி, அவரைச் சோழர் வணங்கினர்.

" தோடு செய்ததிரு நெறிய செந்தமிழொ டொக்கும்" என்றுரை தொடர்ந்து,செப்
பேடு செய்து,நட ராசர் சந்நிதியி லேற்றி ஞர்க;ளிது பாலிசூழ்
நாடு செய்ததவ!; நீடு குன்றைவள நகரி செய்ததவ!; நிகரிலாப்
பீடு செய்தபகி ரதிகு லத்திலகர் **சேக்கி ழார்செய்த பெருந்தவம்!**"

அரசன் அதன்பின் சேக்கிழாரது தம்பியாராகிய பாலறுவாயர் எங்குற்றர் என்று விசாரித்தனர். அவர் குன்றத்தூரில் தமது பெயரினுலே திருக்குளம் அமைத்து அங்குத் திருநாகேச்சரத்திலே திருப்பணி செய்து அமர்ந்தனர் என்று தெரிந்து அவரை வரவழைத்து அவர்க்குத் **தொண்டைமான்** என்று பட்டம் அளித்தனர். அமைச்சுரிமை பூண்டு நாடுகாவல் கைக்கொள்ளுமாறு அவரை வேண்டினர். அவர் தமது நாட்டைவிட்டுவர இசையாமையால் அங்கிருந்தபடியே அமைச்சுரிமை பூணும் படி அரசர் வேண்ட அவரும் உடன்பட்டாராய் அரசர்க்குற்ற துணையாய் அமைச்சியற்றினர். அக்காலத்திலே தொண்டை நாட்டிலே உண்டாகிய பஞ்சத்தில் மக்களையெல்லாம் வருந்தாது காத்தனர். அவருக்குத் **தொண்டைமண்டலம் நின்று காத்த பெருமான்** என்ற பெயர் எங்கும் பரவியது.

சேக்கிழார் பெருமான் தில்லை நகரிலே இருந்து, அறுபத்துமூன்று நாயன்மார் சரிதங்களை யுணர்ந்து கொண்டு, அடியார்களுடன் அருந்தவத்திலிருந்து, பின் அம்பலவர் இனித்தமுடைய எடுத்தபாதநிழ லெய்தினர்.

வாழ்த்து

வாழி தில்லைமணி மன்று ளென்றுநட மாடு மங்கணர் மலர்ப்பதம்!;
வாழி காழிநகர் வாழ வந்ததிரு நெறிய ராதிபதி வள்ளலுள்!;
வாழி யன்பர்திரு நீறு மிட்டதிரு முண்ட முந்துவய கவசமும்!;
வாழி குன்றைமுனி சேவை யாதிதிரு வாய்மலர்ந்தருள் புராணமே!.

சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

பெயரும் இளமையும்

சேக்கிழார்சுவாமிகளது இயற்பெயர் அருண்மொழியார் என்பது. அது இறைவனது திருநாமங்களுள் ஒன்று. சேக்கிழார் குடியிற்பிறந்து, சிறந்து, அக்குலவிளக்காக நிலவியதனுல் இவரைச் சேக்கிழாரென்றே வழங்குவர். இளஞ்சேக்கிழார் பழந்தமிழ் நூல்களில் மிக வல்லவராய் விளங்கினர். திருக்குறளைப் பெரிதும் பயின்று சிறந்தனர் என்பர்.

புராணம் பாடிய பிற்றைநிலை

சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராண மரங்கேற்றியபின் திருத்தில்லையிலே தங்கியிருந்து அப்புராணத்திற் கூறிய சரிதங்களை உணர்ந்துகொண்டும், திருத்தொண்டர்களுடன் அருந்தவத்தினிலிருந்துகொண்டும் சிவபிரானடிநீழல் எய்தினர்.

ஆசிரியரது வழி வழியாரே அமைச்சர்கள்

அவர் பெருமையினை உட்கொண்டு, அரசர் அவரது தம்பியார் பாலறுவாயரைத் தமது அமைச்சராகக் கொண்டனர். அதன் பின்பு வந்த சோழ அரசர்களும் அவர்களது வாழையடி வாழையாய் வமிச பரம்பரையில் வந்த பெருமக்களையே தமது அமைச்சர்களாகக் கொண்டு அரசு செலுத்தினர் என்றும், அவ்வமைச்சர்கள் இவ்வுலகங் காவல் பூண அரசர்க்கு அமைச்சராயின மட்டில் அமையாது, திருத்தொண்டர் புராணத்தையும் அவ்வவ் வரசர்களுக்கு உபதேசித்து வருதல் பின்னுட் பல நூறு ஆண்டுகள்வரை மரபாயிருந்தது என்றும், சேக்கிழார் சுவாமிகளுக்கு ஏறக்குறைய இருநூறாண்டுகளின் பின் வாழ்ந்த உமாபதியார் திருவாக்கினு லறிகின்றோம்.

"......சேக்கிழார், வாச லன்றுமுத லின்று காறுமினி மேலும் வாழையடி வாழையாய், வீசு தென்றன்மணி மண்டபத்தரசு வீற்றிருக்குமுடி யரசருக், கீச னன்பர்கள் புராண முஞ்சொலி, யமைச்சு மாகி,நல மெய்துமால்" என்பது திருத்தொண்டர் புராண வரலாறு. இதில் இனிமேலும் என்றதனுல் சோழ அரசர்கள் இதனை நியதியான மரபாகக் கையாண்டனர் என்றும் தெரிகின்றது.

நாயனாருக்குத் திருநாகேச்சரம் ஆன்மார்த்த தலமானது

திருநாகேச்சரவீசரிடத்துப் பராய்க் கடனெறியினின்ற நல்வினைப் பயனுலே இவர் தாயார், இவரையும், இவரது இளவலாகிய பாலறுவாயரையும் பெற்றெடுத்தார் என்றும், அதனுலும் பின்னர்ப் பல நிகழ்ச்சிகளின் தொடர்பினுலும் இவர் அவ்விறைவரையே தமது ஆன்மார்த்தமாகக் கொண்டு நேசித்துப் பூசித்தனர் என்றும் ஊகிக்க இடமிருக்கின்றது. "மாநாக மருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி, நாளும் பரவுவார் பிணிதீர்க்கும் நலம்போற்றி" (திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம் - 412) என்ற குறிப்பும், உமாபதி சிவத்தின் திருவாக்கும் இதற்கு ஆதாரந்தருகின்றன. அமைச்சராகிய பின் திருநாகேச்சரத்தைத் தமது வாசத்தலமாகக் கொண்டு பல நாளும் வழிபட்டு அங்குத் திருப்பணிகள் செய்தனர் என்று கொள்ள இடமிருக்கின்றது. அத்தலத்தே இவரது தாயாரும் தாமும் தம்பியுமாக உள்ள திருவுருவங்கள் திருக்கோயிலினுள்ளே தாபிக்கப்பெற்று இந்நாளும் பூசிக்கப்படுகின்றன.

காலம்

குன்றத்தூரிற் சேக்கிழார் சுவாமிகளது வீடு இருந்த இடத்தில் இப்போது அவரது கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவர் வாழ்ந்த காலம் இப்போதைக்கு ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளின் முன் என்று கொள்ளப்படுகிறது. புராணம் பாடுவித்த அநபாயச் சோழர் முதலாவது குலோத்துங்கர் என்ற கொள்கை முன் நிலவியிருந்தது. இப்போது அக்கொள்கை வலியுறுது, அவர் இரண்டாங் குலோத்துங்கரே என்றும், அவரது காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதி என்றும் உள்ள கொள்கை சரித ஆராய்ச்சி வல்ல பல அறிஞர்களாலும், அரசாங்கக் கல்வெட்டுப் பரிசோதனை அதிகாரிகளாலும் பற்பல ஏதுக்களால் வலியுறுத்தப் பெறுகின்றது. இவ்விரு கொள்கையுமே யன்றி அநபாயர் என்பவர் கங்கைகொண்டசோழர் ஆவார் என்று கொள்வாரும் உண்டு. இந்நாள் அறிஞர் பலரும் ஆதரிக்கும் கொள்கையின்படி பார்த்தாற், கலிங்கத்துப்பரணி பாடிய செயங்கொண்டார் சேக்கிழார் சுவாமிகளுக்கு முன்னும், ஒட்டக்கூத்தர் அவருடனும், கம்பர் அவர்க்குப் பின்னும் இருந்த புலவராவார்கள்.

புராணத்தின் ஆதாரங்கள்

சேக்கிழார் சுவாமிகள் புராணம் பாடுதற்கு முதனூல் திருத்தொண்டத்தொகை. வழிநூலும் வகைநூலுமாகியது நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி.மேலும் இப்புராணத்திற்கும் பேராதாரவாகவும் அடிநிலையாகவுமுள்ளன மூவர் முதலிகள் அருளிய திருநெறித் தமிழாகிய தேவாரம் முதலிய அருளுல்கள். ஆசிரியர் அவற்றை முற்றும் ஆய்ந்துணர்ந்து அவற்றுட் கண்ட உண்மைகளை விளக்கியதோடு அவற்





எனது அருமைத் தந்தையார் வித்வான் - கோவை - கந்தசாமி முதலியார் அவர்கள் வைத்திருந்த பழைய ஏட்டுப்பிரதியின் ஓரிதழின் இரு பக்கங்கள்.—பதிப்பாசிரியன். —பக்கம் - 79.

பழஞ் சுவடியின் நிலை

குறிப்பு:—இங்குக்காட்டிய சுவடிப்படங்கள் பல அரிய பொருள்களை விளக்குகின்றன. 1½ அங்குல அகலமுள்ள ஓலையிதழின் ஒருபுறத்திற் பத்துச் செய்யுட்களும், முதலிலுங் கடைசியிலும் அவ்வப்புராணங்களின் பெயரும், செய்யுட் கடையிலக்கங்களும், கொண்டு புராணமுடிந்தவிடத்துத் திருச்சிற்றம்பலம் என்றெழுதியுமுள்ளன. ஒரு பக்கத்தில் 27 வரிகளும், மற்ற பக்கம் 26 வரிகளுமாக எழுத்துக்கள் ஒன்றோடொன்றுசேராமலும் வரிகள் பிறழாமலும் எழுதப்பட்டன. இடப்புறம் புராணத் தலைப்புக்குப் பக்க இடம் விட்டுத் தனியாக எழுதப்பட்டுளது. கோல் துளைக்கும் இடம் விடப்பட்டது. இது என் அருமைத் தந்தையார் வைத்துப் போற்றி யிருந்த ஏட்டுச் சுவடியின் ஓர் இதழ். 48 ஆண்டுகளின் முன்னர் அவர் தமது 51-வது வயதிற் சிவகதி பெற்றனர். எனவே இச்சுவடி இற்றைக்கு ஒரு நூறு ஆண்டுகளின் முன் எழுதிப் போற்றப்பட்டதென்று கூறலாம். கல்விநிலை, எழுத்துநிலை, தமிழில் ஆர்வநிலை, சுவடி போற்றுநிலை முதலியவை அந்நாள் நின்ற உயர்வும் நேர்மையும் இது கொண்டு ஒருவாறு தெரியலாம். இந்நாள் அச்சிற்றானும் சிறிய இடத்தில் இத்தகைத்தாய்ப் பொறிக்க இயலாமை காணலாம். இவ்வருஞ் சுவடி என் வீட்டிலிருந்தும் எனது பேதைமையாலும் கவனக் குறைவாலும் தீவினையாலும் முழுதும் சிதலுக்கிரையாயிற்று. நான் அறிந்து தேடும் போது மிகச் சில இதழ்களே முழுதும் பகுதிகளுமாகக் கிடைத்தன.

இச்சுவடி யிதழினா லறியப்படும் பொருள்கள் :—(1) பத்தராய்ப் பணிவார் புராணத்து இறுதியில் 4141 என்று குறித்துள்ளது. 4282 பாட்டுக்களுள்ள பதிப்புச் சுவடிகளில், மேற் கண்ட இடத்துச் செய்யுள் 4154 ஆகிறது. எனவே அதுவரை பின் வந்தார் 13 செய்யுட்கள் இடைச் செருகல் செய்தனர் என்று கூறக் காரணமுண்டு.

(2) பத்தராய்ப்பணிவார் சருக்கம் ஒவ்வொரு புராணமும் பொதுவாக ஒவ்வொரு திருப்பாட்டா னமைந்துள்ள தென்பது இவ்விதழிற் காணலாகும். பரமனை - புரா - "தென்றமிழும்..." (க); சித்தத் - புரா - "காரணபங்கயம்..." (க); திருவாரூர் - புரா - "திருக்கயிலை..." (க); முப்போ - புரா - "எப்போது மினிய..." (க); "தெரிந்து..." (உ) வே. "நாரணற்கும்..." (௩); அப்பாலும் - புரா - "மூவேந்தர்..." (க) "செற்றார் தம்..." (2); என்ற எட்டுச் செய்யுட்களே காணப்படுகின்றன. எனவே இச்சருக்கத்தில் பின் வந்தவர் சேர்ந்த இடைச் செருகல்கள் அச்சுப் பிரதிகளிற் கண்ட "புரமூன்றும்" "அருவாரு" "தெரிந்துணரின்" "ஆதார" "அம்பலத்தே" "ஆரணிய" "அடவிபடு" "இந்தவகை" என்ற எட்டுச் செய்யுட்களாம் என்னலாம்.

(3) அன்பர்கள் நேரே கண்டு கொள்ளுமாறு இவ்விதழ்களின் படம் இங்குப் பதித்தேன். ஆர்வத்தொடும் இதற்குதவி செய்த என் நண்பர் திரு. திருத்துறையூர்-**ஆறுமுக நாயனார்க்கு** என் நன்றி உரியது.

றையே தமது புராணத்திற்கு ஆதாரவாகக் கொண்டனர். புராணமாகிய பெரு மாளிகை அந்த அடிநிலையின்மேற் கட்டப்பட்டது என்னின் அஃது அமையும். இவற்றையே இப்புராணத்தின் உறுப்புக்களாக மேலே சுட்டப்பட்டதும் காண்க. இனி முன்னுளிற் கண்ட பழங் கல்வெட்டுக்களும், அமைச்சர் பெருமானுகிய ஆசிரியர் அரசாங்கஞ் செலுத்தலிற் கண்ட சாசன முதலியவையும், உலகவழக்கிற் கேட்ட சரிதவரலாறுகள் முதலியவைகளும் ஆதாரவாயின. இவை எல்லாவற்றிற்கும் மேலாய் ஆசிரியர் அம்பலவர் திருவருள் வெளியிலே அத்துவிதமாய் நின்று, அருண்மயமான ஞானக்கண்ணிலே எல்லா உண்மைகளையும் அவனே காட்டக் கண்டு, அறிந்தபடி பாடினர். இப்புராணம் முழுதும் அருள்வாக்காகிய வேதம் என்பது முக்காலும் சத்தியமேயாம்.

இப்புராணச் செய்யுள் தொகை 4253 என்பது உமாபதியார் புராண வரலாறு.

செய்யுட்டொகையும்இடைச் செருகல்களும்

இத்தொகைக்குமேல் 32 பாட்டுக்கள் அச்சிட்ட பிரதிகளிற் காணப் படுகின்றன. அவை பிற்காலப்புலவர்களால் உண்டாக்கப்பட்டுப் புராணத்திற் புகுத்தப்பெற்ற இடைச்செருகல்கள் என்று அறிஞர் கருதுகின்றனர். செய்யுட்டொகையும் இடைச்செருகலையும் காட்டத் தக்கதோர் பழைய சுவடியின் படம் உதாரணத்துக்காக இதில் சேர்த்துள்ளேன். இன்னும் இதுபற்றிய ஆராய்ச்சியும் சேக்கிழார் சுவாமிகளைப்பற்றியும் புராணத்தைப்பற்றியும் உள்ள பற்பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களும் எனது சேக்கிழார் என்ற நூலில் எழுதியுள்ளேன். இடன் நேர்ந்தவழிப் புராண உரையினுள்ளும் அங்கங்குங் குறித்துள்ளேன். விரிவு ஆண்டாண்டுக் கண்டுகொள்க.

தனித் தமிழ் நூல்

இப்புராணம் உபமன்னிய பக்த விலாசம் என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு என்போர் சிலர். இது முற்றிலும் தவறு. இது தனித்தமிழ் நூலேயாம்.

இப்புராணத்தின் பயனாவது இருள் போக்குதல் என்க. என்னை ? இருள் இருவகைப்படும்: புறவிருள் ஒன்று; சிந்தையுள் நின்ற அகவிருள் மற்றொன்று; புறவிருள் போக்குபவன் செங்கதிரவன். அதுபோல் உயிரினிடத்துப் பொருந்திய ஆணவம் என்னும் வலிய இருளைப் போக்குவது இத் தொண்டர் புராணம் என ஆசிரியர் நூற்பெயர் சொல்லியவிடத்தே அறிவுறுத்தியுள்ளார். உலகச் சார்புபற்றிக் கற்போருக்கும் இப்புராணம் பெரும் உண்மைகளை அறிவுறுத்தி நற்பயன் அளிக்கும். இப்புராணம் ஒரு பெருங்காப்பியமாம். நாட்டின் அமைப்பும், அந்நாள் வழக்குக்களும், சரிதமும், பிறவும் அறிதற்கு இது பெருந்துணையாம். ஆணவ நீங்கி அரனடி நினைந்து பேரின்பமுறும் ஆசைபற்றிக் கற்போருக்கு இது பெருஞ் சேமநிதியாம். இது பேரின்ப வீட்டிற்குச் சாதனமாவதன்றி இதுவே சாத்தியமெனப்படும் அடையப்படுபொருளுமாம் என்பதும் அறிஞர் துணிபு. ஆசிரியர் இப்புராணம் பாடி அரங்கேற்றிய பின்னர், இப்புராணச் சரிதங்களை யுணர்ந்துகொண்டு இவ்வுலகத்துத் தமது எஞ்சிய வாழ்நாளைச் செலுத்தி அரனடி யடைந்தனர் என அறிகின்றோமன்றோ ? கலைஞானங்களை யறிதற்கும் இது பெருந்துணையாம்.

பயன்

உலகத்து எவ்வெப் பக்குவமுடையார்க்கும் இப்புராணம் வழிகாட்டும் திருவிளக்காம் என்பது இதனுட் பேசப்படும் சிவப்பேறடைந்தோர் சரிதங்களான் அறியக்கிடக்கும். இதனுள்ளே மரபுவகையானே திருமறையோர் சரிதம் பதின்மூன்றும், சிவவேதியர் சரிதங்கள் நான்குமாம் ; மாமாத்திரர் ஒருவர், முடிமன்னர் அறுவர், குறுநில மன்னர் ஐவர், வணிகர் ஐவர், வேளாளர் பதின்மூவர், சாலியர் இருவர், குயவர் - தைல வினையாளர் - பரதவர் - சான்றார் - வண்ணார் - மறவர் - நீசர் - பாணர் இவர்

பல பக்குவமுடையார்க்கும் பயன் படும் சிறப்பு

ஒவ்வொருவர், மரபு குறித்து உரையாதார் பதின்மூவர் என்று இப்புராணத்திற் போற்றப்பட்டோரின் மரபு வகுக்கப்பெறுகின்றது.

இனி, இப்பெரியார் திருக்கூட்டத்திலே தமிழர் சில பேர்; மலையாளர் சிலபேர்; தெலுங்கர் சிலர்; மற்றுள்ள தேசத்தோர் சிலர்; முற்காலத்தவர் சிலர்; இப்போதுள்ளவர் சிலர்; இனி எதிர்காலத்து வருவோர் சிலர் என்று அறியப்படும். இனி, வழிபாட்டு வகையாலே திருஞானசம்பந்த நாயனார் முதற் சோமாசிமாற நாயனார் வரைப் பத்தொன்பது பேர் குருவழிபாட்டாலும், எறிபத்தர் முதலாகக் கோச்செங்கட் சோழனாரீறாக முப்பதுபேர் சிவலிங்க வழிபாட்டாலும், திருநீலகண்டனார் முதல் நேசர் வரைப் பத்தொன்பது பேர் அடியாரது திருவேட வழிபாட்டாலும் முத்தியடைந்தனர் என்றறியக் கிடக்கின்றது.

இனித், தமிழ்வகையானே திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள், காரைக்காலம்மையார் இம்மூவர்கள் இயற்றமிழும் இசைத்தமிழும் வல்லவர்கள்; திருநாளைப்போவார், ஆனாயர், திருநீலகண்டயாழ்ப்பாணர், பரமனையேபாடுவார் என்ற இவர்கள் இசைத்தமிழ் வல்லோர்; ஐயடிகள், திருமூலர், காரியார், பொய்யடிமையில்லாத புலவர், கழறிற்றறிவார் என்னுமிவர்கள் இயற்றமிழ் வல்லோராவர்.

இனி, ஆச்சிரம வகையானே, திருநீலகண்டர், இயற்பகையார் முதலியோர் இல்லறத்தினின்றே பேரின்ப முத்தி பெற்றோர்; மூர்த்தியாரும், அப்பர் சுவாமிகளும் துறவறத்தினின்று பேறடைந்தோர்; சண்டேசர் பிரமசாரிகள்.

இனி, அடியார்களுடன் சார அணைந்தமையால் அச்சார்புபற்றி முத்தியடைந்தோர் பல்லோர். திருஞானசம்பந்த சுவாமிகளது திருமணத்திலே சேவித்து உடனே முத்தி பெற்றாரும், சேரரும் நம்பியாரூரரும் கயிலைக்கெழுந்தருளும்போது அன்பினால் உடல் வீழ்த்து, வீர யாக்கைகொண்டு அவர்களைச் சாரச் சென்றணைந்தாரும் முதலிய எண்ணிறந்தோர் வரலாறு இதனைப் புலப்படுத்தும். சிவனடியாருடன் பகைத்து அவராற் புனிதமாக்கப்பட்டு முத்தி பெற்றோரும் பலர். அவர்களாவார் சண்டேசராற் றண்டிக்கப்பட்டுக் குற்ற நீங்கிய எச்சதத்தன் என்னும் அவர் பிதா, கோட்புலியாராற் றண்டிக்கப்பெற்ற சுற்றத்தார் முதலியோராம். சிவனடியார்களைப் பகைத்து நரகத்திலடைந்தோர் மூர்த்திநாயனாரது திருத்தொண்டினுக்கு இடையூறு செய்த வடுகக் கருநாட மன்னன் முதலியோராம். இவ்வாறு இப்புராண சரிதங்களைப் பிரித்துப் புகல வரிதாம். தனியடியார்களும் தொகையடியார்களுமாகித் திருநாவலூரார் காலத்து முன்னும் பின்னும் நின்று சிவனடியடைந்த அடியார்கள் எண்ணிறந்தபேர். இவர்கள் யாவரும் உலகர்க்கு வழிகாட்டிய உத்தமர்களாவார். இவ்விரிவுகளை உமாபதியார் அருளிய திருத்தொண்டர்புராண வரலாற்றிற் காண்க.

முன்னை வரலாறும் முடிபும்

இவர்கள் கதையினை உமாதேவியாருக்குப் பரமசிவன் உபதேசித்த வரலாறு சிவரகசியத்து ஒன்பதாம் அமிசத்திலே கேட்கப்படும். திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார்நம்பிகளுக்குத் தெருட்டியருளினர். உபமன்னியமுனிவர் பல பெருமுனிவர்களுக்கு எடுத்துச் சொன்னார். இவ்வாறு திருக்கைலாய பரம்பரையிலே வந்த, உலகம்போற்றும் உத்தமர்களது சரிதமாகிய இப்புராணத்தைப் பயின்று உலகம் இம்மை மறுமை வீட்டின்பங்களை யடைந்துய்வதாக. இப்புராணம் காட்டக் காண்பதன்றித் தேவார முதலிய அருட்டிருவாக்குக்கள் பலவற்றிற்கும் நாம் உள்ளுறையும் பொருளும் காண்பதரிது. இக்கண்கொண்டு நாம் அவற்றையும் ஓதி உய்வோமாக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாதவச் சிவஞான முனிவர்

அருளிச் செய்த

திருத்தொண்டர் திருநாமக்கோவை.

மெய்யன்பர் நாமமெல்லாம் வெவ்வேறு போற்றிடவைங்
கையன் றிருவடியே காப்பு.

கலிவெண்பா

தில்லைவா ழந்தணர்கள் சீர்நீல கண்டனா
ரில்லை யளித்த வியற்பகையார்—தொல்லை
யிளையான் குடிமாறர் மெய்ப்பொருளா ரொன்று
மிளையா விறன்மிண்ட ரின்ப—மளவுமமர்
நீதி யெறிபத்தர் நீண்டபுக ழேனாதி
நாதர்திருக் கண்ணப்பர் நற்கலயர்—மேதகுசீர்
மானக்கஞ் சாறரரி வாட்டாய ரானாயர்
ஞானத் திருமூர்த்தி நாயனார்—மேன்மை
முருகர் பசுபதியார் முன்னாளைப் போவார்
துரிசி றிருக்குறிப்புத் தொண்டர்—மருவுமறைச்
சண்டீசர் வாகீசர் தக்க குலச்சிறையார்
கொண்ட மிழலைக் குறும்பனார்—தொண்டுசெயு
நீள்காரைக் காலம்மை யப்பூதி நீலநக்கர்
மூனா நமிநந்தி முத்தமிழை—யானாந்
திருஞான சம்பந்தர் செய்ய கலிக்காம
ரருண்மூலர் தண்டி யடிகள்—வருமூர்க்கர்
சோமாசி மாறனார் சாக்கியனார் சூழாக்கூர்
நாமார் சிறப்புலியார் நற்செருண்டி—னேமச்
சிறுத்தொண்டர் சேரமான் செய்ய கணநாதர்
விறற்களந்தைக் கூற்றுவனார் விஞ்சைத்—திறத்துமிகும்
பொய்யடிமை யில்லாப் புலவர் புகழ்ச்சோழர்
மொய்கொணர சிங்க முனையரைய—ரையாதி
பத்தர் கலிக்கம்பர் கலியர் பகர்சத்தி
கைத்தபுல னையடிகள் காடவர்கோன்—மொய்த்தகணம்
புல்லனார் காரிநெடு மாறர்புகழ் வாயிலார்
நல்ல முனையடுவார் நாயனார்—மல்குகழற்
சிங்க ரிடங்கழியார் தஞ்சைச் செருத்துணையார்
கொங்கார் புகழ்த்துணையார் கோட்புலியா—ரங்கணர்க்குப்
பத்தராய்த் தாழ்வார் பரமனையே பாடுவார்
சித்தஞ் சிவன்பாலே சேர்த்துள்ளார்—நித்தமு

முத்திநெறி காட்டு முதல்வர் முழுதுணர்ந்தோர்
பித்தனுறை யாரூர்ப் பிறந்தார்க—ளத்தனையே
முப்போதுந் தீண்டுவார் முழுநீறு பூசுவா
ரப்பாலு மீச னடிச்சார்ந்தார்—மெய்ப்பூசன்
மானியார் நேசனார் வாழ்செங்கட் சோழனார்
பான்மையார் நீலகண்டப் பாணனார்—மேன்மைச்
சடையரிசை ஞானியிவர் தம்மையெல்லாஞ் சேர்த்துத்
தொடையாகப் பாடியவன் றொண்ட—ரடியிணைகள்
சிந்தனைசெய் திந்தத் திருநாமக் கோவைதனை
மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து—நைந்துருகி
மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங் கற்பனையு—மையலுந்தீர்ந்
தத்துவிதா னந்த வகண்டபரி பூரணத்தி
னித்தியமா வாழ்வார் நிசம்.

திருத்தொண்டர் திருநாமக்கோவை முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

திருநாமக்கோவையின் உரைக்குறிப்புக்கள்

1. **சீர் நீலகண்டனார்** - **சீர்** - சிறப்பு - சீர்த்தி. அயலறியாத வண்ணம் அண்ணலாராணை காத்துப், பெருந்தேவர்களுங் கடத்தற்கரிய காமத்தை வென்ற சிறப்புக் குறிக்கச் **சீர்** என்றார். மயலில் **சீர்த்தொண்டனார்** - என்ற பெரிய புராண ஆட்சி போற்றப்பட்டது காண்க.

2. **இல்லை** அளித்த - அடியார் வேண்டிய தெதுவாயினும் இல்லை என்று சொல்லாமற் கொடுத்த. "இல்லையே யென்னாத" என்ற திருத்தொண்டத்தொகையும், அதற்கு, "மறைச்சிலம்படியார், மிக்க சீரடி யார்கள்யா ரேனும் வேண்டும் யாவையும் இல்லையென் னாதே, இக்கடற்படி நிகழமுன் கொடுக்கு மியல்பு" என்ற பெரியபுராணவுரையும் இங்குச் சுருக்கிக் காட்டிய அழகு காண்க. **என்னாது** என்பது தொக்கு நின்றது. இனி, **இல்லை** - இல்-மனைவி என்று கொண்டு, **இல்லை அளித்த** - மனைவியை அளித்த என்று பொருள் கொள்ளின், **இல்லை** என்ற விதப்பு, நாடுறு பழியு மொன்னார் நகையையு நாணாது, "உன்றன் மனைவியைப் பனவற் கீந்தோ பாடவ முரைப்பது- கொடுக்கயா மொட்டோம்" என்ற பாசத்தார் கட்டினை யறுத்துச், செய்வதற்கரிய செய்கையாகிய களத்திரபாச நீக்கின தீரங் குறித்தது. **இல்லையளித்த** என்ற ஒரு சொற்றொடரானே நாயனாரது பண்பும், சரிதமுங் குறிக்கவைத்த பேரழகு காண்க.

2. **தோல்லை** - தொன்மையும் வாய்மையும் சிறந்த வேளாண்குலத்தின் குடிப் பண்பு குறித்தது. வறுமை, பசி முதலிய எந்தத் தொல்லை வரினும் இளையாது அடியாரைப் பேணியவர் என்ற குறிப்பும் காண்க.

4. **என்றும் இளையா** விறன்மிண்டர் - திருக்கூட்டம் பேணாது செல்லும் நம்பியாரூரும் புறகு; அவரையாண்ட பிரானாகிய திருவாரூரும் புறகு - என்ற வன்மையும், புவியெங்குஞ் சென்று ஆளுடையாரடியவர்தந் திண்மை யொழுக்க நடை செலுத்திய இவரது வீரமுஞ், சலியாமையும் குறித்து **என்றும் இளையா** என்றார்.

5. **இன்பம் அளவும்** அமர்நீதி - திருவிழாச் சேவித்தலும், அடியார்க்கமுதளித்தலும் என்ற, மண்ணினிற் பிறந்தார் பெறும் பயனிரண்டினையும் பெற்று, வாழ்ந்து காட்டிய இவரது சரிதங் குறித்து **இன்பம் அளவும்** என்றார். இவையே - இவ்வளவினவே,

இன்பம் ; பிற வெல்லாந் துன்பத்துக்கே யேதுவாம் என்பது உண்மைநூற் றுணிபு. இன்பத்தை இவ்வாறு அளந்து வாழ்க்கையிற் காட்டியதுடன், துலைக்கோல் கொண்டு நிறுத்தலளவையானும் அளந்து காட்டியவராதலின் **அளவும்** - அளத்தலைச் செய்யும் - அமர்நீதி என்றார். இதனால் அவரது சரிதங் குறித்த அழகு காண்க.

5. **நீண்ட புகழ்** ஏனாதி - **நீண்ட புகழ்** என்றது தமது மாற்றானேயாயினும் நீறு புனைந்த அடியாராயினார்க்கு, நிராயுதரைக் கொன்றார் எனும் பாவ மெய்தாதபடி காக்கும் பொருட்டுத் தாம் ஆயுதந்தாங்கி, மலைவார்போல் நின்று, தம் உயிரையும் அளித்த பெரும்புகழ் குறித்தது. உயிரையும் உவந்தீயும் புகழின்மேற் புகழ் வேறில்லை.

6. திருக்கண்ணப்பர் - நக்கீரதேவர் அருளிய திருக்கண்ணப்பதேவர் திருமறம் (பதினோராந் திருமுறை) "திருக்கண்ணப்பன்" என்று தொடங்கி அதனையே கொண்டு முடிந்தது இங்குப் போற்றப்பட்டது. **திரு** என்றது ஆளுடையபிள்ளையார் காளத்தியப்பரைக் "கும்பிட்ட பய" னிதுவே (திருஞான - புரா - 1023) யென்று காணும்படி, பேறினி யிதன்மே லுண்டோ? எனப்பெற்ற மன்னுபேரருட் டிரு.

6. **நற்** கலயர் - குங்கிலியக்கலய நாயனார். பலபகல் உணவில்லாது பசியால் வாடிய தமது மக்கள் முதலியோர் பசி தீர்க்க நெற்கொள்வதற்கு மனைவியார் தந்த திருமங்கல நூற்றாலியை, நெற்கொள்ளாது, இறைவனுக்கேற்ற குங்கிலியத்துக்கு மாறினார். அதனை ஏற்றுக்கொண்ட இறைவன் பெருவள னீந்தருள, அதுகொண்டு, ஆளுடைய அரசுக்கும் ஆளுடையபிள்ளையார்க்கும் மற்றும் அடியார்க்கும் மாகேசுரபூசை செய்தனர் நாயனார். இந்நலமெல்லாங் குறிக்க **நல்** என்றார்.

8. **ஞானத் திரு** மூர்த்தி நாயனார் - ஞானம் - திரு - என்ற அடைமொழிகள், இவர் ஞானம் பெற்றுத் துறவறத்தில் நின்றமையும், அதில் நின்று திருநீறு, கண்டிகை, சடைமுடி என்ற மும்மைத் **திருவே** பொருளாகக் கைக்கொண்டு உலக வாழ்வாகிய அரசர் திருவை அதுகொண்டு அளந்த திறங் குறித்தன.

9. **மேன்மை** முருகர் - இறைவன் முடிமேல் முப்போதும் மாலை சாத்தி அவரது குறிப்பறிந்து களிக்கும் நாயனாரது **மேன்மை**யினை ஆளுடையபிள்ளையார் தேவாரத்திற் பாராட்டியது மிகு **மேன்மை**யாம். பிள்ளையார்க்கும், அரசுகட்கும், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், திருநீலகண்டயாழ்ப்பாணர் முதலிய சீரடியார் பலர்க்கும் ஒக்க அமுதளித்துபசரித்து உடனுறைவின் பயன் பெற்றது பெரு**மேன்மை**. பிள்ளையார் திருமணத்திற் சிவனடி பெற்றது சிறந்த **மேன்மை**. இவையெல்லாங் குறிக்க **மேன்மை** முருகர் என்றார்.

9. **முன்** நாளைப்போவார் - இவர் திருத்தில்லையினை உடம்பாற்போ யடையு**முன்** பலநாளும் மனத்தாற் சென்றடைந்ததனையும், குலத்தாற் கடையாராயினும், நலத்தால் முனியாகி, முன்னவர்க்கும் **முன்**னாகி அணைந்ததனையும் குறிக்க **முன்** என்றார்.

10. **துரிசில் - துரிசு** - அழுக்கு. அடியாரது ஆடைகளின் துகள் மாசு கழிப்பவர் போல, இந்நாயனார் செய்தசெயல் தமது "தொல்லைவினை ஆசுடைய மலமூன்று மணையவரும் பெரும்பிறவி மாசுதனை விடக்கழித்"தது குறிப்பு. ஆன்மாக்களாகிய நமது துரிசுகளையும் இல்லையாகச் செய்பவர் என்ற குறிப்புமாம்.

10. **மருவும் மறைச்** சண்டீசர்-மலரின் முகையில் மணம் மருவுவதுபோல முந்தையறிவின் தொடர்ச்சியினாலே வேதம் - வேதாங்கம் - ஆகமம் எல்லாமறிந்த அறிவு **மருவியவர்** - வந்து பொருந்தியவர்-என்றது குறிப்பு. மறை மருவும் என்க. **மறை** - ஆகமங்களையும் ஆறு அங்கங்களையும் உடன் குறித்தது. (சண்டீசர் புரா - 13)

11. **தக்க** குலச்சிறையார் - (திருவாலவாய் - பண் - புறநீர்மை.) ஆளுடைய பிள்ளையாரருளிய திருப்பதிகத்தில் ஆறு திருப்பாட்டுக்களிற் பாராட்டப்பெற்ற

தகுதியும், அவர் செய்த சைவத் தாபனத்திற்குத் துணைக்காரணமாகி நின்ற தகுதியும், அடியார் திருவேட வழிபாட்டுச் சிறப்பின் தகுதியும் குறிக்கும்படி தக்க என்றார்.

12. **கொண்ட** - தாம் குருவாகக் கொண்ட நம்பியாரூரரது பாதமே பற்றாகக் கொண்டு, அச்சிறப்பினாலே அவர்க்குமுன் இறைவர் பாதங் கைக்கொண்ட சிறப்புக் குறிக்கக் கொண்ட என்றார்.

12-13. **தொண்டு செயும் நீள்** காரைக்காலம்மை - நீள் தொண்டு செயும் என மாற்றுக. மறவா வரம்பெற்று, மகிழ்ந்து பாடித், தொண்டுசெய்து, இறைவர் திருவடிக் கீழ் என்றுமிருக்கின்றாராதலின் நீள் என்றும், செயும் என்றும் கூறினார். காலங்கடந்து நீளும் தொண்டினை முக்காலத்தும் செயும் என்க. "பிறந்து மொழிபயின்ற பின்னெல் லாங் காதல், சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்" என்ற அம்மையாரது அற்புதத் திருவந்தாதிக் கருத்துங் குறித்தது.

14. **மூளு** நமிநந்தி - பொறாமை மூண்ட அமணர் சொற்கள் கேட்டு மனத்தில் வருத்த மூண்டனர். இறைவனருள் மூள, அரனெறியார் கோயில் முழுதும் பல நாளும் நீராற்றிருவிளக்கு மூள எரித்தனர். திருமணலிக்கு இறைவனது திரு எழுச்சி சேவிக்க எல்லாக் குலத்துள்ளோரும் உடன் நண்ணியதனால் இழிவு தொடக் கிற்று என மனத்தில் மூண்ட இழிபினை, இறைவன் காட்டிய அறிவுச்சுடர் மூளத், திரு வாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் கணநாதர்களாகக் காட்டக் கண்டு, அந்த அறிவு மூளப் பெற்றனர். "தொண்டர்க்காணி" என ஆண்டஅரசுகள் பாராட்டும்படி மூண்ட அடிமைத் திறம் பெற்றனர் என்பனவாதி குறிப்புக்கள் பெற மூளும் என்றார்.

14-15. **முத்தமிழை ஆளும்** - ஆளுடையபிள்ளையார் முத்தமிழ் விரகராந்தன்மை குறித்தது. "தமிழ்ஞான சம்பந்தன்", "தமிழாகரன்", "அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்" என்பனவாதி அவரது தேவார ஆட்சிகளும், "அணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா, துணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தானென வூத" - (223) என்ற புராணமும் குறிக்க. தமிழை ஆளுதல் - மூலவிலக்கியங்களை யருளிச்செய்து, தமிழிலக்கணங்கள் தமது ஆணையினடங்கி நின்று உறுதிப்பொருள் தரப் பயன்படுத்து தல். இக்கருத்துப்பற்றியே நாவலர் பெருமானும் "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" (திருப்புன்கூர் - தக்கேசி-4), "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞானசம்பந்தன்" (திருக்கோலக்கா - தக்கேசி - 8), "தமிழ் ஞானசம்பந்தன்" (திருக்கேதாரம் - நட்ட பாடை - 10) எனத் தமிழொடு புணர்த்தியே துதித்ததும், "பழுத்த செந்தமிழ்மலர்" (திருவீழிமிழலை - 10) எனச் சேந்தனார் திருவிசைப்பாவிற் றுதித்ததும், "இருந் தமிழ்" எனத் திருவந்தாதி (39) யிலும், "ஞானத்தமிழ்" என மும்மணிக்கோவையி லும் (11) நம்பியாண்டார் நம்பிகள் துதித்ததும், "அசைவில்செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல" எனச் சேக்கிழார்சுவாமிகள் புராணத்துக் (24) காட் டியதும், பிறவும் காண்க.

15. **செய்ய** - செம்மையையுடைய. செம்மையாவது "எந்தை தந்தை தந்தை யெங் கூட்டமெல்லாந், தம்பிரானீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும், இம்பரின் மிக்க வாழ்க்கை" யுடைய நீர்மை குறித்தது. (ஏயர்கோன் - புரா - 392.)

16. **அருண்மூலர்** - தம்மை மேய்ப்பானாகிய மூலன் பிரிவினால் வருந்திய பசுக்க ளின் துன்ப நீங்க அருள் கொண்டமையும், அதன் பொருட்டுத் தம்முடலினின்றும் அவனுடலிலே தாமுயன்ற பவனவழித் தம்முயிரைப் பாய்த்தியமையும், பின்னர், மூல னைக் காணாது வருந்தும் பசுக்களாகிய உயிர்களின் பொருட்டு ஆகமப் பொருளைத் தமிழ் வகுப்பத் தம் உடல் காக்க இறைவன் அருள் வைத்தமையும், உலகர் "பிறவிவிடந் தீர்ந்துய்ய" அருள்கொண்டு "ஞானமுத னான்குமலர் நற்றிருமந் திரமாலை" அருளியமை யும் குறிக்க அருள் மூலர் என்றார்.

16. **வருமூர்க்கர்** - தொண்டை நாட்டுத் திருவேற்காட்டேரினின்றும் சோழ நாட்டுத் திருக்குடந்தைக்கு **வரும்** என்றும், சூதினில் வென்ற பொருளால் முன்னர் அடியார்க் கமுதளித்துத் தாம் அமுது செயக் கடைப்பந்திக்கு **வரும்** என்றும், தீமை பயக்கும் பாதகமாமென்று விலக்கிய சூதினையும் நன்மை பயக்க வல்லதாக்க **வரும்** என்றும் குறிக்க **வரும்** என்றார்.

17—18. **சூழ் ஆக்கூர்** - **நாமார்** - சிறப்புலியார். இன்மையாற் சென்றிரப்பார்க் கில்லை யென்னுதே யீயும், தன்மையார் சூழ்ந்திருக்கப்பெற்ற சிறப்பும், இதனை ஆளு டைய பிள்ளையாரது மறைத்திருவாக்கினுற் பாராட்டப் பெற்ற பெருஞ் சிறப்பினுற் சூழப்பெற்றதும், குறிக்கச் **சூழ் ஆக்கூர்** என்றார். மறைத்திரு வாக்கூர் அவ்வூர்-என்பது புராணம். **நாம்** ஆர் - நாமம் - **நாம்** என நின்றது. **நாம்** - கீர்த்தி - புகழ். இவரது புகழா வது "இரப்பார்க்கொன் றீவார்மே னிற்கும் புகழ்" என்றபடி வள்ளன்மையுடைய ராதல். இது பற்றியே திருத்தொண்டத் தொகையில் "சீர்கொண்ட புகழ்வள்ளல்" என்று நம்பியாரூரராற் றுதிக்கப்பட்டனர் என்றது குறிப்பு.

18—19. **நற்றெண்டிணேமச்** சிறுத்தொண்டர் - அடியார் முன்பு மிகச் சிறியராய் அடைந்து வழிபட்டார் என்றதும், அடியார்க்கு அமுது படைத்தலே நியமமாக - நேமமாகக் - கொண்டொழுகினுர் என்றதும், அத்தொண்டின் ஏமம்-காவல்-பெற்றனர் என்றதும் குறிப்பாம்.

19. **செய்ய** கணநாதர்-திருநின்ற செம்மை என்னும் சிவத்தன்மை பெறுவிக்கும் பலவகைத் திருத்தொண்டினுறுதி பெறத் தொண்டருக் கறிவளித்துச், செம்மைத் தொண்டரையாக்கித், தாமும் செம்மை பெற்றனர் என்பது குறிக்கச் **செய்ய** என்றார்.

20. **விறற்களந்தைக் கூற்றுவனுர்** - மாற்றலர் வெருளுங் கருவி நான்கும் நிறை வீரச்செருக்கின் மேலாயினுர் எனவும், வேந்தர் வளநாடு பலவும் கவர்ந்த **விறலி**னர் என வும்,முடி ஒன்றுமொழிய அரசர்திரு வெல்லாமுடையாராயின **விறல்** படைத்தனர் என வும், தாம் சூட எண்ணிய அரசர் முடியைத் தில்லைவாழந்தணர் தமக்குச் சூட்டா தொழியவும் தில்லைவாழ் பேரந்தணராகிய இறைவர்பால் வேண்டி அவரது திருவடி யினையே முடியாகச் சூட்டப் பெற்ற **விறலி**னையுடையார் எனவும் குறிக்க **விறல்** என்ற அடைமொழி தந்தோதினுர்.

20—21. **விஞ்சைத் திறத்து மிகும்** - விஞ்சை - வித்தை ; **திறம்** - அதனுலாய பயன். **மிகும்** - அதில் முனைத்து நிற்றல். செய்யுணிகழ் சொற்றெளிவு பெற்ற **திற** மும், செவ்விய நூல் பல கற்றதனுலாய பயனிதுவே யென அறிந்து ஈசன் மலரடிக்கே யாளாயின **திற**மும், இவற்றில் மிக்கு நின்றமையும் குறிப்பாம்.

22. **மொய் கோள்** - **மொய்** - போர். போர்க்களம். **கோள்** - வெற்றி கொண்ட. இந்நாயனுர் பல போர்களிலும் வெற்றி பெற்றார் என்பது சரிதம். "தெம்முனைகள் பல கடந்து" என்பது புராணம். தீங்குநெறிப் பாங்காகும் போரினும் அடியாரடி யடை தலே புனைந்து வெற்றி. பெற்றவர். "சீலமிலரே யெனினும் திருநீறு சார்ந்தாரை ஞாலம் இகழ்ந்து அருநரக நண்ணுமற்" செய்யவல்லது ஒருபெரும் மாயப்போரின் வெற்றியாம். காமக்குறி மலர்ந்த ஊனநிகழ் மேனியராய் நீறணிந்து வந்த அடியவருக் குப், பிறர்முன்னே, படி இரட்டிப்பொன் கொடுத்த வகையாலே இம்மாயப் போரிலும் வெற்றிகொண்டார் என்பனவாதி குறிப்புக்கள் பெற **மொய்கோள்** என்றார்.

22—23. **ஐயர்** அதிபத்தர் - ஐயராகிய அதிபத்தர். இவரது குலம் பரதவர் - மீன் வலைஞர் - என்ற தாழ்ந்த குலமேயாயினும் இவர் ஐயரே - பெருமையிற் சிறந்தோ ரேயாம் என்றது குறிப்பு. திருநாளைப்போவாரைத் தில்லைவாழந்தணர்கள் "ஐயரே" - (திருநாளை - புரா - 30) என்றதும், திருநீலகண்ட யாழ்ப்பாணரை ஆளுடையபிள்ளை யார் "ஐயர்நீர்" - (திருஞான-புரா - 133-450) என்றதும் முதலிய ஆட்சிகள் காண்க.

23. **பகர் சத்தி** - அன்பரை இகழ்ந்த நாவினை அரியும் சத்தியுடையார் என்று எவரும் பகரும் சத்தியார் என்ற குறிப்பு. அன்பரை "இகழ்ந் தியம்பும்முரை வைத்த நாவை வலித்தரி சத்தியாற் சத்தியாரெனும்" - (சத்தி - புரா - 3) என்றது புராணம்.

24. **கைத்தபுலன்** ஐயடிகள் காடவர்கோன் - புலன் கைத்த என மாற்றுக. **கைத்த** - கசந்த - வெறுத்த. தமது அரசாட்சியை இன்னலென இகழ்ந்து வெறுத்து ஒதுக்கியவர் ; யாக்கை நிலையாதென்பதையும், யாக்கை விரைந்து அழிந்துபோவதன் முன்னே அரன் பணிசெய்து அவன் தலந்தோறுஞ் சென்று அவனை யடையவேண்டு மென்பதையும் வலியுறுத்தி ஐம்புல வின்பங்களையும் **கைக்குமாறு** உலகர்க் கறிவுறுத் தும் க்ஷேத்திரவெண்பாப் பாடினர் ; பேரரசரான தாமும் ஐம்புலன்களையும் **கைத்துத்,** தமது முடிதுறந்து, சிவதலந்தோறும் சென்று, பாடிச், சிவனடி பெற்றனர் என்பன வாதி குறிப்புக்கள் பெறக் **கைத்தபுலன்** என்றார்.

24. **மொய்த்த** கணம்புல்லனர் - மொய்த்த-மொய்த்தல் - தொகுத்தல் - கூட்டு தல். தொகுதியாய் அரிந்து கட்டிய கணம்புல்லினால் தம் வாழ்வு நடத்தியவர் ; முறை யாமங் குறையாமல் இறைவன் சந்நிதியில் விளக்கெரிக்கக் கணம்புல்லுப் போதாமையாலே தமது திருமுடியினையே அதற்கீடாகக் கூட்டியவர் என்பது குறிப்பு.

25. **புகழ்** வாயிலார் - அகமலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமைநாளும் அன்பினாற் புகழ்ந்து நிறைவழிபாடுசெய்த புகழினையுடையார்.

26. **நல்ல** முனையடுவார் - தமது உதவிக்கீடாக நிதிபெற்றுச் சென்று, நள்ளார் முனையெறிகின்ற அதனையும் நடுவுநிலை வைத்துச், சீர்தூக்கிக், கூலியேற்றுச் சென்று வென்றாராதலானும், அவ்வாறு பெற்ற நிதியத்தை ஈசனடியார்க் காக்கினாராதலானும் **நல்ல** என்றார்.

26. **மல்கு** கழற்சிங்கர் - **மல்குதல்** - நிறைதல். தமது பட்டமு மணிந்து காதல் பயில்பெருந் தேவிபால் வைத்த அன்பினும் இறைவன் பணியில் அதிகம் பற்று **மல்கிய** வர் என்ற குறிப்பும், மலர் மோந்த மூக்கின் முன்னே பூவைத் தொட்டு முன் எடுத்த கையாம் முற்படத் துணிப்பதென்ற நீதி உறைப்பும் **மல்கியவர்** என்ற குறிப்பும் பெற **மல்கு** என்றார்.

28. **கோங்கார்** - கோங்கு - வாசனை - இருந்தவிடத்தன்றி நெடுந்தூரம் சென்று பரவி வீசும் புகழினையும் குறிக்கும். நித்தல் ஒரு படிக்காசு இறைவனிடம் பெற்ற திருஅருண் மணமும், அதனாற் பரவிய அவரது புகழ் மணமும் குறித்தது.

30. **சித்தம் சிவன்பாலே சேர்ந்துள்ளார், நித்தமு, முத்திநெறி காட்டும் முதல்வர் முழுதுணர்ந்தோர்** என்றது, தாம் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த அதனால் சிவத்தடைந்து, அடித்தொண்டின் வழியடைந்தார். அதுவே முத்திபெறும் நெறி யாவதென்று உலகுக்குக் காட்டுகின்ற முதன்மையார். இவர்களே முழு உண்மையும் உணர்ந்தவர்களாவார். பிரமன் முதலிய காரணபங்கய மைந்தின் கடவுளர் பதமுங் கடந்து, அதன் மேலையதாகிய பூரண மெய்ப்பரஞ்சோதி பொலிந்து விளங்கும் நாதாந் தத் தாரணையாலே சிவத்தை யடைந்து சிவாநுபோகம் பெற்று நிற்பவர்களாதலால் அந் நிறைவினுள் நின்று முழுதுமுணர்ந்தோராவர் என்றவாறும். சிவத்தையடையும் எல் லாத் தொண்டினுள்ளும் சித்தம் சிவன்பால் வைத்தல் வேண்டப்படும் ; ஆயினும் அது முடிவுபெற்று நிற்கும் சிறப்பு நோக்கி இதனை யிவ்வாறு விரித்துக் கூறினார்.

32. **அத்தனையே** - அத்தன் திருமேனியை. திருமேனி என்று திருத்தொண் டத் தொகையிற் கூறியது அத்தனாகிய சிவபெருமானது திருமேனியையே என்று விளக்குவார் தேற்றேகாரந் தந்துங் கூறினார்.

34. **மெய்ப்பூசல்** - மெய் - உள்ள மெய்த் தன்மையாலே தம் நினைப்பினால் எடுத்த மனக்கோயிலில் இறைவனைத் தாபித்துப் பலநாட் பேணிய சிறப்புக் குறித்தது.

35. **வாழ் செங்கட் சோழனார்** - சிலந்தியா யிருந்தபோது தம் வாய்நூலாற் றிருநிழற்பந்தர் செய்து, இறைவன் றிருமேனிமேற் சருகுவிழாது காத்து, அப்பந்தரின் கீழ் இறைவனை **வாழச்**செய்து, வழிபட்டமையாலே, திக்கெல்லாந் தன் செங்கோல் முறை செல்லத் தமது ஆணைப்பந்தர் நிழற்கீழ் உலகமெல்லாம் **வாழ** நின்ற பேரரசும், இறைவனுக்கு 78 மாடக்கோயில்கள் அமைத்து அவற்றிற்கு வேண்டும் நிபந்தமும் அமைத்த **வாழ்வும்**, சோழனாய் உலகாண்டதே யன்றிப் பாண்டிநாடுங் கொண்டு தென்னவனாயும் உலகாண்ட **வாழ்வும்**, மூவர் முதலிகளாலும் பாராட்டப் பெறும் **வாழ்வும்**, அதுவேயுமன்றி, வைணவ ஆழ்வாராதியர்களாலுந் துதிக்கப் பெறும் **வாழ்வும்**, என்றுமழியாப் புகழ் **வாழ்வும்**, பெற்ற சிறப்புக் குறிக்க **வாழ்** என்ற அடைமொழி தந்தோதினார்.

36. **பான்மையார்** - பான்மை-ஊழ். தன்மை என்றலுமாம். முன்னைப்**பான்மை** வழியாற் பாணர் மரபிற் றோன்றினாரேனும், ஆளுடைய பிள்ளையார் திருவடிச் சார்பு பெறும் **பான்மையும்**, அவர் தேவாரங்களை யாழிலிட்டுப் பிரிவின்றிச் சேவிக்கப்பெற்றுடனிருந்து வரும் **பான்மையும்**, அதனாலே அவர் முன்னே பரமர் தாளடையும் **பான்மையும்** பெற்றாராதலின் **பான்மையார்** என்றார். புராணத்தில் "**வரும்பான்மை**யினிற் பெரும்பாணர்" (12) என்ற சேக்கிழார் திருமொழி இங்குப் போற்றப்பட்டது காண்க.

36-37. **மேன்மைச்சடையர்** - "குவலயத்தி னலம்விளங்கும்படி, நாம் விளங்கும்படி, நற்றவத்தின் பலன் விளங்கும்படி" என்று நம்பியாண்டார் நம்பிகளும், "ஞாலமெல்லாங் குடிவாழ" என்று சேக்கிழார் சுவாமிகளும், போற்றியுள்ள பயனை உலகுக்குத் தரும்பொருட்டுத் தாம் வரங் கிடந்து நம்பியாரூரைப் பெற்றீந்த **மேன்மை** குறித்தார். இதனையே "தம்பிரான் றோழராய எங்கள் பிரான் - தவநெறிக்கோரிலக்கு - எண்ணார் சிங்கம் - மங்கையர்க டொழும்பரவை மணவாள நம்பி - வந்துதிக்க மாதவங்கள் வருந்திச் செய்தார்" என்று போற்றினார் உமாபதிசிவனார்.

38. **தொடை** என்றது திருத்தொண்டத்தொகை.

39. இந்தத் **திருநாமக்கோவை**தனை **மந்திரமாக்** கொண்டு என்றது இக்கோவையின் இயல்பு குறித்தது. இதிற் கண்ட திருத்தொண்டர் திருநாமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் மந்திரமாம். ஆதலின் இக்கோவை முழுதும் மந்திரமேயாம். "ஞானசம்பந்தனென்னு நாமமந்திரமுஞ் சொல்ல, ஆனபோ தயர்வு தன்னை யகன்றிட" (திருஞான - புரா - 721) என்றவிடத்து இத்திருநாமங்கள் மந்திரங்களாமாறும், அவற்றைக் கேட்டலின் பயனுங் குறித்தது காண்க. அப்பூதியடிகள் திருநாவுக்கரசு என்ற திருநாமமாகிய ஓர் "சொற்றா னெழுதியுங் கூறியுமே யென்றுந் துன்பில் பதம் பெற்றார்" என்றதுங் காண்க. இக்கோவையிலே முழுதும் திருத்தொண்டர் திருநாமங்களை அவ்வப்படியே தனித்தனியாகக் காணுமாறு கோத்தனர் ஆசிரியர்; அதுவும் திருத்தொண்டத்தொகையின் முறையிலே கோத்தனர்; அதுவும் கலிவெண்பாவாக யாத்தனர். செய்யுள் நோக்கி யின்றியமையாத இடத்து இடையிடையே தந்த மிகச் சில அடைமொழிகள் தாமும் மேலே கண்டபடி அவ்வச் சரிதங்களின் உள்ளுறையை நன்கு விளக்குவனவாய், முன்னோர்மொழி போற்றுந் திறத்தில், அணிபெற அமைந்துள்ளன. இத்தெய்விக அமைப்பும் அழகும் எமது மாதவச் **சிவஞான முனிவரது** திருவாக்கின் சிறப்புக் காட்டுவன. இதனை **மந்திரமாக்கொண்டு** என்றருளியதன் காரணம் மேலே காட்டியபடியாம். **மந்திரம்** - எண்ணுவோனைக் காப்பது என்பதாம். ஆதலின் "இதனை விதிப்படி ஓதுவார் பெறும் பயனாவது அத்துவிதானந்தப் பரமுத்திப் பெருவாழ்வேயாம்! இது சத்தியம்!" என்று ஆணையிட்டுக் கூறியருளி முடித்ததும் காண்க.

40—41. **மயிர்சிலிர்த்து - நைந்து - உருகி - மெய்யன்பால் - என்றும்**-என்பன மந்திரங்களை எண்ணுவதும் ஓதுவதுமாகிய முறை வகுத்துக் காட்டியவாறு.

41. **பெறுவார்கள்** - இது முன்னைத் தவத்தளவாற் கிடைக்கும்பேறு - எல்லார்க்கும் எளிதன்று என்பதாம்.

42. **கைதவம்** - கீழ்மை ; **புல்லறிவு** - கைதவத்திற்குக் காரணமாகிய அறியாமை - ஆணவம்; **கற்பனை** - பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருள். **மையல்** - மயக்கம் - திரிபுணர்ச்சி.

43. **அத்துவிதம்** - இரண்டறக் கலத்தல். **ஆனந்தம்** - நண்ணரிய சிவாநந்தமாகிய பரமசுகம். இறவாத பேரின்பம். **அகண்டம்** - அளவுட்படாதது. **பரிபூரணம்.** குறைவிலா நிறைவு. **நித்தியம்** - அழிவில்லாமை. இவ்வாழ்வே முத்தி நிலையாம். திருத்தொண்டர் திருநாமங்களை விதிப்படி யெண்ணின் அவை முத்திப் பேறளிப்பன எனப் பயன் கூறியவாறு.

44. **நிசம்** - உண்மை - சத்தியம் - உறுதி - நிச்சயம் - என்ற ஆணை.

இத் திருநாமக்கோவை **மெய்யன்பர்** என்று தொடங்கி, **நிசம்** என நிறைவு பெற்றது. உண்மையே ஆதி ; உண்மையே அந்தம் ; இதனுள் நிறைந்த முழுமையும் உண்மையே என்றதாம். **சத்**தாதல் இறைவனதிலக்கணம். அவனை அணைந்தோர் தன்மையும் அஃதேயாம் என்றது குறிப்பு.

இதனை நாடோறும் விதிப்படி பாராயணஞ் செய்வோர் எல்லா நலன்களையும் பெறுவர் என்பது சத்தியம் !

திருநாமக்கோவை உரைக்குறிப்புக்கள் முற்றியன

சேக்கிழார் துதிகள்

அண்ட வாணர்தொழு தில்லை யம்பலவ ரடியெ டுத்'**துலகெ லா**'மெனத்
தொண்டர் சீர்பரவு **சேக்கி ழான்**,வரிசை துன்று குன்றைநக ராதிபன்,
தண்ட காதிபதி, திருநெ றித்தலைமை தங்கு செங்கைமுகில், பைங்கழற்
புண்ட ரீகமலர் தெண்ட னிட்டுவினை போக்கு வார்பிறவி நீக்குவார்.

—**உமாபதிசிவாசாரியார்.**

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரா னெங்கள்
பாக்கி யப்பய னப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்.

—**மாதவச்சிவஞான முனிவர்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திரிசிரபுரம் - மகாவித்துவான்

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றிய

சேக்கிழார்சுவாமிகள்

பிள்ளைத்தமிழ்த் திரட்டு

பாயிரம்

விநாயகக்கடவுள் வணக்கம்

க. மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன
வாய்க்கடைத் தோற்றியவிரு
மருப்பிரண் டென்னவங் கைக்கோ டிரண்டென்ன
மார்பின்முத் தாரமென்னப்
பாமேவு பேருதா பந்தமென வரைசூழ்
படாமெனத் தாளின்முத்தம்
பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப்
பண்ணவனை யஞ்ச லிப்பாம்
ஏமேவு ஞானசபை யிறைவர்தம் மேனியி
னிணங்குற வெழுப்புலகேலா
மென்னுமறை யாதியாக் கொண்டவ ருயிர்க்கருளு
மியல்பனைத் துந்தெரித்து
நாமேவு மம்முதலோ டொன்றுவினை யுருபுதொக
நான்கடி யாதிசெய்து
நாற்சீரி னுனேறி விளக்கியோளிர் சேக்கிழார்
நற்றமிழ்க் கவிதழையவே.

காப்புப் பருவம்

உ. மும்மைமறை யும்பரவு மும்மையுல கும்புகழு
மும்மையாப் பகாமாதி
மும்மையுயிர் குறினெடி றனித்துமத சவ்வூர்ந்து
முதலமையு நாமமுற்றூர்
செம்மைபெறு மும்மையாம் வருணத் துதித்துச்
சிறந்தோங்கு மூர்த்தியார்முற்
செறியுமிரு மும்மையார் செம்பொற் பதாம்புயஞ்
சென்னிவைத் தேத்தெடுப்பா

நம்மையருள் சிவபாத விருதய ருளத்துவகை
நண்ணவொண் பொருளாதலா
னுடுமுழு வாரவல மியைதலா லியாவோரு
நாவலர் பிரானென்னலால்
வெம்மைதவிர் புகலியார் முதன்மூவ ரும்புகலும்
வேதத் தமிழ்க்கணுள்ள
மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள்செய் குன்றையூர்
வேந்தைப் புரக்கவென்றே. 3

செங்கீரைப் பருவம்

௩. புண்ணிய முதலே! பொங்கொளி மணியே! பொய்யாப் பெருவாழ்வே!
பொள்ளலின் முத்தே! கள்ளமில் வித்தே! புரையில் சுவைப்பாகே!
தண்ணிய வமுதே! மண்ணியன் மதியே! தமிழ்நா வலரேறே!
சத்துவ நிதியே! பொத்திய மலநோய் சாடு பெரும்பகையே!
யெண்ணிய வன்ப ருளத்தமு தூற வினிக்கு நறுந்தேனே !
யென்றும் பத்தி ரசங்கனி கனியே! யெந்நா ளினுமெங்கட்
கண்ணிய பொருளே! யாய்பவர் தெருளே! யாடுக செங்கீரை
யாரரு ளாகர! சேவையர் காவல! வாடுக செங்கீரை. 7

தாலப் பருவம்

௪. சோறு மணக்கு மடங்களெலாந், தூய்மை மணக்குஞ் சிந்தையெலாம்,
சுவண மணக்கு மாடையெலாந், தொங்கன் மணக்குந் தோள்களெலாஞ்
சேறு மணக்குங் கழனியெலாஞ், செல்வ மணக்கு மாடமெலாந்,
தென்றன் மணக்கு மேடையெலாந், தெய்வ மணக்குஞ் செய்யுளெலா,
நீறு மணக்கு நெற்றியெலா, நெய்யே மணக்குங் கறிகளெலா,
நெருப்பு மணக்குங் குண்டமெலா, நேய மணக்கும் வீதியெலாஞ்,
சாறு மணக்குங் குன்றத்தூர்த் தலைவா ! தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச் சைவா! தாலோ தாலேலோ. 5

சப்பாணிப் பருவம்

௫. நாடிய விரிநூல் சொற்றிடு திறனு னன்னு லாசிரிய,
னருபா சுரமுத லுரைசெய் தலினு னவிலுரை யாசிரியன்
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரி யன்,னிவை நிகழ்தொறு நிகழ்தோறும்
ஆடிய ஞானத் திறனுற லான்ஞா னாசிரி யனு,நீயென்
றுன்றோர் பலரும் புகழப் படுபவ! வகில மெலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத்தூரன்! கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல! நாவல! கொட்டுக சப்பாணி. 9

முத்தப் பருவம்

௬. நிலஞ்சார் தெய்வக் கற்பகமே! நிமல ஞான வாரிதியே!
நீடுஞ் சைவப் பெருவாழ்வே! நிலவா நின்ற குணக்குன்றே !
வலஞ்சார் பெருநா வலரேறே! மாறு வருட்சிந் தாமணியே !
மதிப்பார் மதியு ளெழுஞ்சுடரே! வாழ்த்து வார்தம் பெரும்பேறே!

புலஞ்சார் பத்தி விளைநிலமே! போக்கு வரவில் பூரணமே!
புந்திக் கினிக்குஞ் சுவையமுதே! போற்றி யினிமே லொருதாயர்
கலஞ்சார் முலைப்பா லருந்தாத கனிவாய் முத்தந் தருகவே,
கனகக் குன்றை யனக!செழுங் கனிவாய் முத்தந் தருகவே. 5

வாரானைப் பருவம்

எ. நீடுமின் பரிவையர் புணர்ப்பென்ம ரும்,மைந்து
நிகழ்கந்த முங்கெடுதலே
நிலவுமின் பென்மருங், குணமூன்று மொழிதலே
நிரம்பலுறு மின்பென்மரு,
நாடுமின் பிருவினைக் கேடென்ம ரும்,மல
நசித்தலே யின்பென்மரு,
நவில்விக்கி ரகநித்த மின்பென்ம ருந்,தோன்று
ஞானமே யின்பென்மரும்,
பாடுமின் புயிர்கெடுத லென்மரும், பகுதிமேற்
கெடுதலே யின்பென்மரும்,
படுசித்தி யின்பென்ம ரும்,பிறரும் வாதம்
படர்ந்துவரு திறனற,வளங்
கூடுசெந் தமிழருமை யறிபெருஞ் சேவையார்
குலசிகா மணி!வருகவே
கொன்றைச் சடாடவியர் மன்றைப் பாரவியெழு
குன்றைப் பிரான்!வருகவே. 3

அம்புலிப் பருவம்

அ. துறையுடைய பாம்பொன் றெடுத்துண் டுமிழ்ந்திடக்
குலைகுலைந் துழல்வை, யெங்கள்
கோமான் பெருங்கல்வி யாட்சியை யுணர்ந்துசெங்
குருமணிச் சூட்டுமோட்டு
நிறைவுகெழு துத்திப் பணுடவிப் பாம்பொன்று
நேரடைய மன்றுணு ;
கினையீன்ற தொருபாவை ; யிலகுவே பாரமென
ரென்னுளைத் தனையுமெண்ணேன்
முறையினேறு சிறுதூக்கி னெழுபாவை யும்புக
முடித்துற நிறுத்தானிவன் ;
மொழியெங்க டம்பிரான் வல்லபமுணர்ந் திலைகொன் ?;
முத்தமா ளிகைவானயாற்
றறைமணித் திடாரய குன்றைநக ராளியுட
னம்புலீ ! யாடவாவே
யருளுருத் தேசுபொலி யருண்மொழித் தேவனுட
னம்புலீ ! யாடவாவே. 6

சிற்றிற் பருவம்

௯. அலைக்கும் புனல்சூ ழம்பலத்தி லாடும் பெருமா னருள்பெற்று
வவன்செய் தொழிலோ ரைந்துண்டு, வமைந்த தொழிலோ மேற்கோட ?
னிலைக்குங் கடையென் னொழித்தனையோ ! நினையா நிற்கு மனுக்கிரக
நீயே யதுசெய் யாவிடினெங் நிரப்பு நீக்கு பவரியாரே ?
மலைக்கும் பிறவிப் பிணிமருந்தே! வாழ்த்து வார்சிந் தாமணியே !
வயங்குஞ் சைவப் பெருவாழ்வே! மாறாக் கருணை மாக்கடலே !
சிலைக்குந் தமிழ்த்தண் டகநாடா! சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வஞ் செருக்கு குன்றையருட் செல்வா! சிற்றில் சிதையேலே. 10

சிறுபறைப் பருவம்

௰. கனிவி லெமைப்பொரு வார்களு நெஞ்சு கரைந்துகரைந் துருகக்,
காமரு பத்தியும் வயிராக் கியமுங் கவினக் குதிகொள்ளத்,
தனிவில்பொன் மேருவெ னக்கொடு திரிபுர தகனம் புரிபெருமான்
றயங்குபொ னம்பல நின்றுபல் லோரஞ் சலிசெய நடநவில
நனிவி லிடும்புகழ் மிகுசம் பந்தரு நாவுக் கிறையவரு
நாவலர் கோவுஞ் சிரகர கம்பித நன்கு புரிந்தருள
முனிவி றமிழ்க்கவி பாடிய புலவன்! முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்! முழக்குக சிறுபறையே. 8

சிறுதேர்ப் பருவம்

௧௧. மருவாய் நறுந்தா தகித்தொங்கல் வளவர்கோ மகனுட னிவர்ந்திரு கையு
மணிக்கவரி வாங்கிவீ சக்கற்ப கப்பூ மகிழ்ந்துவா னுடர் தூற்றப்
பெருவாய் திறந்துபட கம்பேரி முதலாம் பெரும்பணை யெலாமுழங்கப் [தக்
பிறங்குமூவா யிரவர் முதலியோர் மறையொலி பிறங்கத் தொடர்ந்துபோ
கருவா யுறுமற்றை யாருந் தலைக்குமேற் கைகுவித் தேத்தி மேவக்
கருதும் புராணமுடி விற்குஞ் சாத்தில கடத்திவர்ந் தோங்கு தில்லைத்
தெருவா யுலாப்போது சேவையர் குலாதிபன்! சிறுதே ருருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்திஞேன்! சிறுதே ருருட்டி யருளே.

சேக்கிழார் செய்யுளணிக் குறிப்புக்கள்

(எண்கள் பாட்டு எண்கள்)

அணி - அழகு என்பர். தமிழிலக்கணத்தை ஐந்தாகப் பகுத்து அவற்றில் இறுதியில் வைத்தெண்ணப்படுவது அணியிலக்கணம் என்பது மரபாம். உயர்ந்தோர் செய்யுட்கெல்லாம் இன்றியமையாதது அணி. "பொருட்கிடனாக உணர்வினின் வல்லோரணிபெறச் செய்வன செய்யுள்" என்பது சூத்திரம். எனவே தெய்வச் சேக்கிழார் பிரானருளிய - அன்று - அவருள் நின்று இறைவன் அருளிய - இப்புராணப் பெருங் காப்பியச் செய்யுட்கள் ஒவ்வொன்றும் ஒன்றும் பலவுமாகிய அணிகளுடையனவேயாம். வடமொழிக் காவியங்களுக்குப் பேருரை வகுக்கும் உரையாசிரியர்கள் ஒவ்வொரு பாட்டினும் அணிகள் எடுத்து வகுத்துக் காட்டுவர். ஆயின் இவ்வுரையில் மிகச் சில பாட்டுக்களில் மட்டும் அணிகள் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட்டுக்கும் அணிகள் காட்டிச் செல்வதற்குரிய அறிவும் ஆற்றலும் போதிய காலமு மிடமும் பெருமையின் அம்மட்டிற் காட்டி மேற்செல்ல நேர்ந்தது. ஆயினும் சேக்கிழார் செய்யுளணிகளில் ஒரு சிலவேனும் இவ்வுரையில் ஓர் பாகத்தில் ஒருசேரக் காட்டுதல் நலமென்று பெரியோர் பணிக்க, அதனைச் சிரமேற்கொண்டு இங்குச் சில குறிப்புக்கள் எழுதத் துணிந்தேன்.

தமிழில் உவமையணி ஒன்றேகொண்டு, அதற்கு **உவமவியல்** என ஓரியலும் வகுத்தனர் ஆசிரியர்தொல்காப்பியர். பின்னுளிற் தமிழிற் பெரும்பாலும் வடமொழி கலந்து வழங்கியதாக, வடமொழி அலங்கார சாத்திரமும் அவ்வாறே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கலாயிற்று. தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலியவை வடமொழி அலங்காரங்களின் மொழிபெயர்ப்புக்களே. பின்னர் வந்த இலக்கண விளக்க நூலாரும் அவற்றை ஒட்டியே "தன்மை உவமை உருவகந் தீவகம்" என்ற சூத்திரத்திலே 35 அணிகளை உடன்படுத்தினர். இவற்றுட் பின்வருநிலை முதலிய சொல்லணிகளும், தீவகம் - நிரனிறை முதலிய பொருள்கோணிலை பற்றியவைகளும், பிறவற்றையும் ஒழித்து எஞ்சியனவற்றிற் பெரும்பகுதி உவம விசேடங்களேயாம்.

சிலேடை, ஒப்புமைக்கூட்டம், தற்குறிப்பேற்றம் முதலியவை உவம இயல்பினையே தாங்கி நிற்கின்றன. ஆர்வம், விரோதம் முதலியவாகக்கூறப்படும் சுவைகளை மெய்ப்பாடுகள் என வைத்து **மெய்ப்பாட்டியலிற்** கூறினர் ஆசிரியர் தொல்காப்பியர். பெரிய புராணத்திற்கு இலக்கணமாவது தொல்காப்பியமே. ஆயினும் திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்திற்கு முன்பிருந்தே வடமொழி யாட்சிகள் பல தமிழில் விரவி வழங்கினவாதலின் ஆசிரியர் சேக்கிழார் அதனைப் பின்பற்றியே நூல்செய்து பல அணிவகைகளையும் மேற்கொண்டு கூறியருளினர். தண்டியலங்கார முடையார் தொல்காப்பியரைப்பெரும்பாலும் தழுவியே உவமைகளை வகுத்துள்ளார். அதனுட் கூறியவற்றையும் உடன்பட்டு இப்பகுதியிற் கண்டவற்றுள் இங்குச்சில அணிகளுக்குமட்டும் உதாரணங் காட்டப்படுகின்றது. இவ்வகையில் வல்ல பேரறிஞர்கள் பின்னும் முயன்றால் எல்லா அணிகளுக்கும் இந்நூலினின்றே உதாரணங் காட்டலாம். வல்லார் அது செய்து உதவுவார்களாக.

சொல்லணிகளுட் சில :—

1. கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன—65.
2. பண்டரு விபஞ்சி—82.
3. மாடு போதகங்கள்—83.
4. வீதிகள் விழவினார்ப்பும்—(84) முதலிய பாட்டுக்களுட் காண்க.

பொருளணிகளுட் சில:—

I தன்மை:—(அ) பொருட்டன்மை. 1. உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்—1. 2. வாரிசொரியும் கதிர்முத்தும்—492.

(ஆ) **தொழிற்றன்மை:**—எய்துமென் பெடை யோடு—304.

II உவமை:—1 தொழிலுவமம் - அல்லது வினையுவமம் -

1. மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற, பொங்கியவிருளை யேனைப் புறவிருள் போக்குகின்ற செங்கதிரவன் போனீக்குந் திருத்தொண்டர் புராணம்—10.

2. திரிமுகக்காந்தஞ் சேர்ந்த வல்லிரும் பணையுமாபோல் வள்ளலுங் கடிது சென்றான்—196.

3. ஈன்றவான் கனைப்புக் கேட்ட கன்றுபோற் கதறி நம்பி—214.

4. கதிர்மணி பிறந்த தென்ன வுருத்திர கணிகைமாராம் பதியிலார் குலத்திற் றோன்றி—278.

5. மடவார் செய்த சைத்யோபசாரம் அழலின் நெய்சொரிந்தாலொத்தன—319.

2. ஏதுவுவமம்:—இன்ன காரணத்தால் இது இதனை ஒக்கும் என்பது.

1. அண்ணல் வீற்றிருக்கப் பெற்றதாதலின்......புண்ணியந் திரண்டுள்ளது போல்வது—12.

2. வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும், உய்யவே சுரந்தளித் தூட்டு நீரதாதலின் காவிரி செய்ய பூமகட்குச் செவிலி போல்வது—53.

3. வரைதரவந்த மேன்மையால், எண்ணில் பேரறங்களும் வளர்க்கு மீகையால், காவிரி, ஆளுடைநாயகி கருணையின் ஒழுக்கம் போன்றது—56.

4. மலர் நீரால் வழிபட்டு, எண்ணில் சிவாலயத்து எம்பிரானை யிறைஞ்சலின் காவிரி, உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்கும்—57.

5. நீற் றொளியால், நிறை தூய்மையால், அஞ்செழுத் தோசை பொலிதலால், தேவாசிரியன் ஆயிரம் பாற்கடல் போல்வது—138.

6. ஆர்த்த வெள்வளைகளாலும், குழைமகரத்தாலும், ஒளிமணிகளாலும், நீர்த்தரங்கத்தாலும், திருமண வெழுச்சி கடல் கிளர்ந்தது போன்றது—168.

7. உயிர்கட்கெல்லாந் தூய்மையும், இன்பமும், தண்மையும் தந்து போதலின் வெண்ணீற்றின் பேரொளி போன்றது நிலா—308.

3. உருவுவமம் அல்லது பண்புவமம்:—நிறம் முதலிய பண்புபற்றிய ஒப்பு.

1. பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப் பன்னு நீள்பனி மால்வரைப் பாலது கயிலைத் திருமாமலை—11.

2. கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ், புண்ணிய நுதற்றிருநீறு பொலிவெய்த—175.

3. தண் மதி முதிர்ந்து கதிர் சாய்வதென மீதே, வெண்ணரை முடித்தது விழுந் திடை சழங்க—175.

4. மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப், பொய்தவ வேடங் கொண்டு—473.

4. ஐயவுவமம் :—உவமையும் பொருளுந் துணிவுறாது ஐயப்படக் கூறுவது. ஐயம் - பலதலையாயவுணர்வு.

1. மானிளம் பிணையோ—280-என்ற பாட்டிற்காண்பன ஐயவுவமையின்பாற்படும்.
2. கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ—286.

3. ஓவிய நான்முகனெழுத வொண்ணுமையுள்ளத்தான்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ—287.

4. முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ ?......மாரனோ ? முதலியன—290.

(286—287—290-பாட்டுக்கள் ஐயம் என்ற அகப்பொருட்டுறையில் அமைந்தன. இவற்றை ஐயவுவம அணிபெற அமைத்த அழகும் காண்க).

5. சிலேடையுவமம்:—சொற் பொதுமையால் ஒப்புமை கூறுதல்.

1. மாலினுந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ், சால்பினுற் பல்லுயிர் தருதன் மாண்பினுற், கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையால், போலுநான் முகனையும் பொன்னி மாநதி—54.

2. ஓங்கி - நிகரின்றி மிக்கு - வெண்மையுண்மைக் கருவினும் வளத்தவாகி - சுருள் விரித்து - அரனுக்கு அன்பர் ஆவின சிந்தைபோல அலர்ந்தன கதிர்கள்—71.

3. கலன்கள் விரவலால் - பேரொலியால் - பலவாறு மடுத்தலால் - ஆரூர் வீதிகள் அளக்கர் போன்றன—94.

4. நான்மறை நாதம்பயின்ற பண்புமிக - வெண்கொடியாடுஞ்சீர் - நாவொலி - திசைகளுன்கெதிர் புறப்படல் - இவற்றால், அயன் பொற் சதுர்முகங்கள் எனலாயின தில்லைத் திருவாயில்களுன்கு—243.

6. தற்குறிப்பேற்ற உவமம்:—

1. வித்தகர் தன்மைபோல விளைந்தனசாலி—72.

2. இஞ்சித் தண்கிடங்கு (அகழி) சூழுங்காட்சி, சிலம்பொலி போற்று நான்மறைப் பதியைநாளும் வணங்கக் கடல்வலங்கொள்வதுபோற் புடைசூழ்வது போன்றது—241.

3. அனங்கன்மெய் தனங்க ளீட்டங் கொள்ளமிக் குயர்வ போன்று கொங்கை மிக் குயர்ந்தன—282.

7. உண்மையுவமம்:—முதலிற் கண்டு கருதியது உண்மையன்று. இதுவே உண்மை - என்ற குறிப்புடன் ஒப்புமை கூறுவது.

1. கரும்பல்லநெல் - கமுகல்ல கரும்பு - அரும்பல்ல முலை - அமுதல்ல மொழி - என வருவன—65.

8. நிந்தையுவமம்:—உவமானப்பொருளின் உயர்வைத்தாழ்த்திக் கூறுவது போலக்கூறி உவமேயத்தின் உயர்வு தோன்றக்கூறுதல்.

1. சூதும் பங்கயமுகையுஞ் சாய்த்துப் பணைத்தெழுந்து—167.

2. கொங்கை கோங்கரும்பை வீழ்ப்ப—282.

9. இல்பொருளுவமம்:—அபூதவுவமை என்பர் வடநூலார்.

1. புண்ணியத்தின் புண்ணியமோ, புயல்சுமந்து விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ—286.

2. பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்ததென்ன—434.

3. அருகு நாப்ப ணறிவருங் கங்குருன், கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்,டுருகின்றது போன்றது—454.

4. வண்ணநீடிய மைக்குழம்பாமென்று—455.

10. மெய்யுவமம்:—வடிவு பற்றிய ஒப்புமை.

1. காவிரி, மாதர் மண்மடந்தை பொன்மார்பிற் றாழ்ந்ததோர், ஓதநீர் நித்திலத் தாமமொக்கும்—52.

2. பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும், வஞ்ச மாக்கடம் வல்வினையும், அரன் அஞ்செழுத்துமுணரா அறிவிலோர், நெஞ்சுமென்ன இருண்டது நீண்ட வான்—305.

11. தொகையுவமம்:—பொதுத் தன்மை மறைந்து நிற்க வருவது.
மயிலியலின் இன்சொற்றொண்டைச் செங்கனிவா யிளங்கொடி—293.

12. பலவிரவிய உவமம்:—"விரவியும் வரூஉ மரபின வென்ப" என்ற தொல்காப்பிய விதிப்படி உவமஞ் செய்யும்வழி மேற் காட்டியவாறு ஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் விரவி வருதலும் மரபாம்.

(அ) ஏதுவுவமமும் சமுச்சய உவமையும் சிலேடையும் விரவிய கலவையணி.

"ஐயர் வீற்றிருக்குந் தன்மையினாலும், அளப்பரும் பெருமையினாலும், மெய் யொளி தழைக்குந் தூய்மையினாலும்" அநபாயன் திருமனம் போல ஓங்குவது திருக் கயிலாயமலை—22.

(ஆ) மெய்யும் தொழிலும் பற்றிய உவமம்.

1. கைதை, துன்றுநீறுபுனைதொண்டர்களென்னத் தூயநீறுபுனை மேனியவாகிச் சென்று சென்று முரல்கின்றன—242.
2. விற்புரை நுதலின் வேற்கண்—285.
3. எரிதளிர்த் தென்ன நீண்ட மின்னொளிர்சடை—369.
4. எரிதுள்ளி னாலென வெகுண்டான்—527.

(இ) மெய்யும் உருவும் தொழிலும் பற்றிய உவமம்.

எரியினிடைத் தோய்ந்த செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து—124.

(ஈ) தொழிலும் பயனும் பற்றி வந்த உவமம்.

பாசப் பழிமுதல் பறிப்பார் போலக் குழிநிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவி பறித்தார்—460.

(உ) உவமமும் சிலேடையும் கலந்த கலவை யணி.

கங்கையாம் பொன்னியாங் கன்னி நீத்தம்—55.

III உருவகம்:—"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித், தொன்றெனை மாட்டினஃ துருவகமாகும்" என்ப.

1. மறைச் சுரும்பு—241. 2. மின்னமுதத்தினை—304.

உவமஉருவகம்:—

கயிலை உலகமாகிய கொடியின் மேற்பூத்த வெண்மலர் போல்வது—13.

IV தற்குறிப்பேற்றம்:—1. கடலைக் கடந்து அமுதத்தினைக் காட்டுவன் என்பது போலச் சூரியன் கடல்புக—304.

2. சீறடிமே னூபுரங்க ளறிந்தனபோற் சிறிதளவே யொலிப்ப—316.

3. திருமணக் கோலங் காணக் காமுறு மனத்தான் போலக் கதிரவ னுதயஞ்செய் தான்—158.

4. வன்றொண்டர் வருந்தினால், இறுமறுங்குலார்க்கியார் பிழைப்பாரென்று, கங்கு னங்கை முன்கொண்ட புன்முறுவல் என்ன - வெண்ணிலா முகிழ்த்தது—306.

இன்னும் இவை பற்றி எனது "சேக்கிழார்" என்ற நூலிற் (121-ம் பக்கம் முதல் 142-ம் பக்கம் வரை) கூறியுள்ளவையும் பார்க்க. அணிகள் எவையேயாயினும் சேக் கிழாரது கைப்பட்டபோது அவை சிவப்பொலிவுற்றுப் பத்திச் சுவையே காட்டுவன.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இந்நூலின்

திருமலைச் சருக்கம் - தில்லைவாழந்தணர் சருக்கம் - இவைகளிற் கண்ட

பெயர் விளக்கம்

(இலக்கங்கள் பாட்டின் வரிசை எண்களைக் குறிக்கும்.)

அகத்தியர் (52) - இப்பதத்திற்குப் பொருள் விந்தமலையை அடக்கியவர் என்பதாகும். சப்த இருடிகளுள்ளும் சிரேட்டர். கும்பத்தினின்றும் பிறந்தவர் என்ப. தேவர்களை வருத்திய விருத்திராசுரன் தேவேந்திரனுக்குப் பயந்து கடலில் ஒளித்துக் கொள்ளத் தேவர்களின் வேண்டுதலுக்கிணங்கிக் கடல்நீரை ஆசமனஞ்செய்து அவனை வெளிப்படுத்திக் காட்டியவர். தென்றிசை நோக்கி வருகையில், தாம் பொதியமலையடைந்து திரும்பி வரும்வரை விந்தமலையினைப் பணிந்தேயிருக்க எனப் பணித்து அதன் அகங்காரத்தை அடக்கியவர். இராமபிரானுக்கும், பல விருடிகளுக்கும் சிவதீக்கைசெய்து உண்மையுபதேசங்கள் செய்தவர். சிவபெருமான் பார்வதிதேவியாரைத் திருமணம் செய்தகாலத்துத் தேவர் முதலிய யாவரும் வடதிசையிற்சேரத் தென்றிசை உயரவே அதனைச் சமனுக்குதற்பொருட்டுச் சிவபெருமான் ஆணையின்படி தென்றிசை நோக்கிவந்து பொதிய மலையிலே தங்கியுள்ளார். காவிரியாற்றைத் தென்றிசைக்குக் கொணர்ந்தவர். முருகக்கடவுளிடமும் சிவபிரானிடமும் தமிழுபதேசம் பெற்றவர். தமிழ்த் தலைவர் - தமிழ்முனி - என்பர். தமிழ்ச்சங்க மிருந்து தமிழாராய்ந்தவர். இவர் செய்த நூல் அகத்தியம் முதலியன. இவர் பெருமை நோக்கி "ஆதிமாதவமுனி அகத்தியன்" என்றார் ஆசிரியர். "நீண்ட தமிழா லுலகை நேமியினளந்தான்" என்றார் கம்பர். மலையுருக இசைபாடியவர். இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்தவர்.

அங்கம் - ஆறங்கம் (354) - வேதாங்கங்கள் எனப் பெறும். அவை **சிக்கை** - **வியாகரணம்** - **கற்ப சூத்திரம்** - **நிருத்தம்** - **சந்தோவிசிதி** - **சோதிடம்** என ஆறும். இவற்றுள் **சிக்கை** என்பது **பாணினி**யாலியற்றப் பெற்றது. இதனுள் வேத லோக சப்தங்களிரண்டுக்கும் இலக்கணம் கூறப்பட்டன. வைதிகப் பிரகாணம் ஒரு தனிப் பகுதி. **வியாகரணம்** - இதற்குப் **பாணினி** முதலியோர் கர்த்தாக்கள்; காத்தியாயனரும் பதஞ்சலியும் வியாக்யானம் செய்திருக்கின்றனர். இதனுள் வேத சப்தங்களின் பிரகிருதி பிரத்யய ஞானம் விரிவாகப் பேசப்பெற்றுள்ளதென்ப. **கற்ப சூத்திரம்** - ஆச்வலாயனர் - காத்யாயனர் - ஆபஸ்தம்பர் - போதாயனர் - வைகானஸர் - த்ராயாயனர் - பாரத்வாஜர் - சத்யாசாடர் - ஹிரண்யகேசி முதலியவர்கள் ஆசிரியர்களாவார். இது யஞ்ஞகர்மங்கள் ஆற்றும் வழியினைப் போதிக்கும். **நிருக்தம்** - இது வேத சப்த நிகண்டு. இதன் ஆசிரியர் **பாஸ்கமரிஷி** என்பவர். **சந்தோவிசிதி** - இதன் ஆசிரியர் **பிங்கல** முனிவர் என்பவர். வேதத்திற் கூறப்பட்ட காயத்திரி முதலிய சந்தங்களினிலக்கணங்களை விளக்கும். **சோதிடம்** - இதற்கு ஆதித்யாதியர் கர்த்தாக்கள். வைதிக கர்மங்களைத் தொடங்குவதற்கேற்ற காலநிர்ணயங்களையும் அவற்றின் பலன்களையும் தெரிவிக்கும்.

M

அணுக்கன்றிருவாயில் (250)-தில்லையில் நடேசப்பெருமான் சந்நிதியின் மூற்றிரு வாயில். இஃது பேரம்பலத்தினின்று மேலேறுக்கிச் சிற்றம்பலத்துக்குக்கொண்டு சேர்க்கும் வாயில்களிலே சிற்றம்பலத்தினை அடுத்து நிற்குந் திருவாயில் என்ப.

அதிகைவீரட்டானம் (228 - 234) - இது நடுநாட்டுச் சிவத்தலம். கெடில நதியின் வடகரையிலுள்ளது. வீரட்டானங்கள் எனப்படும் எட்டுத் தலங்களில் ஒன்று. இதில் திரிபுரதகனம் செய்த வீரம் நடைபெற்றதாம். அப்பர் சுவாமிகளை ஆட்கொண்ட தலம். விரிவு தலவிசேடம் (பக்கம் - உஎக) காண்க.

அநபாயன் (8 - 22 - 83 - 98 - 404) - **பேரம்பலம் பொன்னணிசோழன்** (8)-**அபயன்** (22)-**அநகபாயன்(திருக்குலம்)**(404)-இவரது அமைச்சராகிய சேக்கிழார் பெருமான் இவரது வேண்டுகோளின்படி இத்திருத்தொண்டர் புராணமியற்றினர். இதனை இவர் கேட்டு அரங்கேற்றுவித்துச் செப்பேடு செய்து 12-வது திருமுறையென வகுத்தனர். புராணம் பாடுவித்த நன்றியின் பொருட்டு இவர் ஆசிரியரால் புராணத்தினுட் பன்னிரண்டிடங்களிற் பாராட்டப்பெற்றுள்ளார். உமாபதிசிவாசாரியார் - மாதவச் சிவஞான சுவாமிகள் முதலிய பல பெரியோர்களாலும் பாராட்டிப் போற்றப்பட்டவர். பேரம்பலமுந் திருவெல்லையும் பொன்மயமாக்கியவர். திருநீற்றுச்சோழன் முதலிய பெயர்களால் விளங்குபவர். இவர் காலம் 800 ஆண்டுகளின் முன் என்பர். இவர் சரித விரிவு திருத்தொண்டர்புராண வரலாற்றினும், அரசாங்கக் கல்வெட்டுப் பரிசோதன அறிக்கைகளினும், எனது “ **சேக்கிழார்** ” என்ற நூலினும் கண்டுகொள்க.

அநிந்திதை (34) - திருக்கைலாயத்தில் உமாதேவியாருக்குப் பணி செய்யும் இரண்டு சேடிமார்களில் ஒருவர். இவர் சங்கிலியாராக அவதரித்துத் திருவொற்றியூரிற் கன்னிமாடத்திருந்து திருப்பணி செய்தவர். ஆளுடைய நம்பிகளிடம் பிரியா வகைக்கு ஒரு சபதம் பெற்று, மணந்து, மீண்டும் கயிலையடைந்தவர். திருமலைச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம், வெள்ளானைச் சருக்கம் முதலியவற்றுள்ளும், நம்பிகள் தேவாரங்களுள்ளும், இவர் சரித விரிவு கண்டு கொள்க.

அரசு - உடைய அரசு - உழவாரப் படையாளி (229) - அப்பர் சுவாமிகள்.

அருட்டுறை (211) - திருவெண்ணெய்நல்லூர்ச் சிவாலயத்தின் பெயர்.

அரம்பையர் (19 - 245) - தேவேந்திர சபையின் ஆடற்பெண்கள். தேவமாதர்.

அரவுலகு (284) - நாகலோகம்.

அருந்ததி (363) - கருத்த முனிவர் புதல்வி. வசிட்டரது மனைவி. கற்பிற் சிறந்தவள். கருநிறம் இயைந்த செந்நிற முள்ளவளாய் யாவருங் காண நட்சத்திர பதம் பெற்றவள். உலகவர் மணஞ் செய்து கொள்ளுங்காற் கற்பிற்கு இலக்கியமாக மணமகன் மணமகளுக்கு இவளைக் காட்டுதல் மரபும் மணச் சடங்குகளில் ஒன்றுமாம்.

அமர்நீதி நாயனர் (501 - 526) - அறுபான்மும்மைத் தனியடியாருள் ஒருவர். அப்பர் சுவாமிகளாலும் பாராட்டிப் பேசப் பெற்ற பெருமை யுடையவர். சரிதச் சருக்கம் காண்க. (பக்கங்கள் - ௬௮௬ - ௬௮எ - ௬௮௮.)

அம்பர் மாகாளம் (262) - இது சோழ நாட்டுத் தலங்களி லொன்று. அரிசொலாற்றின் கரையிலுள்ளது. மாகாளர் பூசித்ததும் சூரபதுமன் தங்கையாகிய அசமுகியைக் கைகுறைத்ததுமாகிய தலம். தலவிசேடம் (பக்கம் - ௩௪௩) காண்க.

ஆரூர் (43 - 126 - 254 - 274 - 297 - 496) - தலவிசேடங் காண்க (பக்கங்கள் - ௧௬௩ - ௧௬௪.)

ஆரூரண்ணல் (358) - திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசப் பெருமான்.

ஆலால சுந்தரர் (32 - 146) - இப்பூவுலகில் அவதரிக்கு முன்னும், அவதாரத்தின் பின்னும் கயிலையில் உள்ள நிலையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளது பெயர். அங்குச் சிவபெருமானுக்குத் திருமாலை திருநீறு எடுத்தேந்தும் பணி செய்யும் அணுக்கத்

தொண்டர். தேவருமசுரரும் அமிர்தம் கடையுங்கால் எழுந்ததும் திருமால் முதலிய தேவரும் எதிர் நிற்க வியலாததும் ஆகிய கொடிய ஆலகால விடத்தைத் தன் கையிலேந் திச் சென்று சிவபெருமானிடம் கொடுத்தவர்.

இசைக்கலைப் பெயர்கள் (221 - 222) - **இந்தளம் - முதல் - மும்மை - கிழமை - இசை - பாணி.**

இசைஞானியார் (149) - *சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார். சடையனூர் மனைவி. அறுபத்துமூன் று நாயன்மார்களில் பெண் அடியார்களுள் ஒருவர். கமலாபுரத் தில் (திருவாரூர்) சிவகோதம கோத்திரத்தில் ஞானசிவாசாரியார் குடும்பத்தில் அவ தரித்தவர் என்ப.*

இந்திரன் (137) - **புரந்தரன்** (19—126) - (*தேவர்களைக் காப்பவன்*) - **இந்திர தெய்வதம்** (62) - **சதமகன்** (249) - *தேவர்களுக்கு அரசன், மருத நிலத் தெய்வம். வயல்களில் நாறு நடுவதற்குமுன் தொழப்படும் பேறுடையோன். மழைக்காக உலகத் தவரால் செய்யப்படும் விழா வேற்பவன். நூறு அசுவமேதயாகம் செய்து இந்திர பட் டத்தை எய்தியவன். இந்திரன் - மேலான ஐசுவரியமுடையோன்.*

இயமன் - மறலி (113) - **காலன்** (338) - *அட்டதிக்குப் பாலகர்களில் தென்றி சைக்குரிய தேவன். காலன் - காலம் அளந்து உரிய காலத்தில் வருபவன். தருமன்- தருமராசன் எனவும் பலவாறு பெயர் பெற்றவன்.*

இயற்பகை நாயனுர் (403 - 405 - 409 - 410 - 424 - 430) - *அறுபான்மும்மைத் தனியடியாருள் ஒருவர். பெருங்குடி வணிகர். அடியவர்கள் எது வேண்டினும் இல்லை யென்னுது கொடுப்பவர். தன் மனைவியையும் ஒரு சிவனடியாருக் கீந்த செயற்கரிய செயலினைச் செய்த தீரர். சரிதச் சுருக்கங் காண்க (பக்கம் - ௩௭௪).*

இயற்றமிழ் (51) - *இயலிசை நாடகம் என்னும் முத்தமிழின் ஒன்று. தமிழிலக் கியங்களிற் செய்யுளும் உரைநடையுமாக இயல்வது, (பக்கம். ௬௩ - பாக்க.)*

இலக்குமி - மாமலராள் (86) - **வரமலர் மங்கை** - (279) - **திரு** - (364) - *மகாவிட்டு ணுவின் தேவியார். திருவாரூரில் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து மங்கிலியங் காத்துக் கொண்டவர்.*

இளையான்குடி (440) - **இளசை** (439) - *இது மாற நாயனுர் அவதரித்த திருத் தலம். இதனுலே அவருக்கு இளையான் குடிமாற நாயனுர் என்ற திருநாமமும் வந்தது. தலவிசேடங் காண்க (பக்கம் - ௩௭அ, ௩௬௭).*

இளையான்குடி மாற நாயனுர் (440) - *அறுபான்மும்மைத் தனியடியாருளொரு வர். சரிதச் சுருக்கம் காண்க (பக் - ௩௭௩.)*

உபமன்னிய முனிவர் (23 - 24 - 25 - 29 - 47) - *சிறந்த முனிவர். வியாக்கிரபாத முனிவரது புதல்வர். இவர் பாலனுய்ப் பாலுக் கழுதபோழ்து சிவபெருமான் தந்த பாற்கடலுண்டு வளர்ந்தவர். சிவன்றன்னையே தொழும் பான்மையர். கண்ணனுக்குச் சிவதீக்கை செய்தவர். ஆரூரர் வெள்ளையானையிலமர்ந்து மாலொடயனும் தேவர் முனிவரும் சூழக் கைலைக்குச் செல்லுங்கால் பேரொளியாகக் கண்டு தரிசித்துச் சுந்தர மூர்த்திகளது முன் பின் வரலாறுகளையும், அடியார் சரிதங்களையும் கயிலையில் முனிவர் களுக்கு அருளியவர். இவர் அருளிய வரலாற்றின்படியால் இத்திருத்தொண்டர் புராண மியற்றப்பெற்றதாம். திருமலைச் சருக்கம் (47) பார்க்க.*

உமாதேவியார் - ஆளுடைய நாயகி (32 - 57) - **மெய்த்தவக் கோடி** (42) - **எம் பிராட்டி** (44) - **ஏழுலகீன்றவள்** (44) - **தனிநாயகி** (241) - **அறம்பயந்தாள்** (257) - **பார்ப் பதி** (271) - **மலைவல்லி** (281) - **மாமலையாள்** (338) - **உம்பர் நாயகி** (407) - **இமக் குலக்கோடி** (405) - *சிவபெருமானரது சத்தி. அவர் திருவுருவில் பாதியுருக் கொண்ட வர். பற்பல வன்பர்களிடத்துக் குழவியாய்த் தோன்றி, வளர்ந்து, பின்னர் இறைவனை மணந்து கொள்ளப் பெற்றவர். இறைவனது அருள் சுரக்கும் கூறு. ஒருகாலத்தில்*

பர்வத ராசனும் அவன் மனைவி மேனையும் புத்திரப் பேற்றிற்காகத் தவஞ் செய்தபோது இறைவனாணையின்படி குழந்தையுருக் கொண்டு சென்று அவர்களிடம் வளர்ந்து வந்தமையால் "ஐமவதி" என்றும், பர்வதராசன் மகளாக உபசரிக்கப் பெற்றமையின் "பார்ப்பதி" என்றும் அழைக்கப் பெற்றார். "குழந்தையாகி ஐந்து வயது நிறைந்த பருவத்திற் றவத்தில் விருப்பமுற்று அதனைத் தாய் தந்தையர்க்குக் கூறியபோது (உ=ஓ, பெண்ணே !, மா=வேண்டாம் என்று) தடை செய்யப்பட்டமையின் இவருக்குப், பிரணவத்தின் (வியஷ்டி ரூபமாய் - வர்ணவியத்தியயத்தினால் எய்திய உ+ம்+அ) சொரூபமாகிய, உமை என்னுந்திருநாமம் எய்திற்று" - என்று ஸ்காந்தம் - சம்பவகாண்டம் கூறும். மணப்பருவம் வரச், சிவபெருமான் அம்மையார் "கொண்ட தவங்கண்டு, குறிப்பினொடுஞ் சென்றவள் தன் குணத்தினை நன்கறிந்து விரும்பும்வரங் கொடுத்தருளி - வேட்டருளிச் செய்த"னர். மற்றும் பல சரிதங்கள் புராணங்கடோறும் காண்க. அடியார்களுக்கு வெளிப்படும்போதெல்லாம் உமையொரு பாகமாகவே இறைவன் வருவர். ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "ஆரணமு மூலகேழு மீன்றருளி - யனைத்தினுக்குங் காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வுருவான சீரணங்கு" எனவும், "அருட்கருணை தானாய திருவுள்ள முடைய தவவல்லி" எனவும் இன்னும் பற்பல படியும் வாழ்த்தியவற்றானும் பிறவாற்றானும் இவர் தன்மைகள் அறிக.

எரிமூன்று (354) - ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி - எனும் வைதிக அக்கினி மூன்று.

ஐந்தெழுத்து (84) - **அஞ்செழுத்து** (305) - ஸ்ரீபஞ்சாக்கர மகாமந்திரம். இதனியல்புகள் நல்லாசிரியர்களை யடுத்து அறியத்தக்கன.

ஐம்பூதம் (16) - **பூதம்** (43) - **பூதமைந்து** (142) - நிலன் - நீர் - நெருப்பு - உயிர்ப்பு (காற்று) - விசும்பு என்பன.

ஐந்துபோறிவு (252) - ஐந்துவகையாக - ஐந்துவகைகளிலே - பெயர்கின்ற அறிவு. ஐம்பொறிகளின் வழியே சென்று ஐந்து புல(விடய)ங்களை அறிவதாதலின் ஐயறிவெனப்படும்.

ஐயாறு (45) - இது சோழநாட்டுக் காவிரியின் வடகரையிலுள்ள சிவதலங்களுளொன்று. நங்கள் நாதனும் நந்திதவஞ் செய்தது. முனிவரும் தேவரும் பஞ்சாக்கர செபஞ் செய்து பேறு பெற்றதாற் "செப்பியேசம்" என்ற காரணப் பெயர் பெற்றது. வடமொழியிற் பஞ்சநதம் என்று சொல்லப் பெறுவது. காவிரி, சுவாமிபாத கங்கை, தேவிகங்கை, இடபகங்கை, நந்திதேவருவகை இவ்வைந்து நதிகள் சேருமிடம். அப்பர் சுவாமிகள் கைலைக் காட்சி கண்ட தலம்.

ஓசை ஐந்து (215) - **ஐந்து** (245) - பஞ்சநாதம். தேவவாத்திய முழக்கு. தேவ துந்துபி என்பர். முதலிற் காளத்தி மலையேறும்போது திண்ணனார் இவை கேட்டனர். இக்காலத்தும் கொங்கு நாட்டில் வெள்ளிமலையின்மேல் தேவபூசை நடைபெறும் போது இரவில் இம்மலை உச்சியில் தங்கும் அன்பர் கேட்க முழங்குவன.

கங்கை (55 - 147 - 311 - 388 - 516 - 518) - பெருநதிகளில் ஒன்று. தேவருலகத்திலுள்ள ஏழு தீர்த்தங்களில் ஒன்று. மிகப் புனிதமுடையது. தன்னுட் படிந்தாரைப் புனிதமாக்குவது. சிவபிரான் முடியிலணிவது. பகீரதன் வேண்டப் பெருமானால் உலகிற்றரப்பட்டது.

கடவுள் (76) - **பெரும்பெயர்(ச்சாலை)** (77) **(பெரும் பெயர் - மகாவாக்கியம்)**

கமலாலயம் - திருவாரூரிலுள்ள திருக்குளம். இது இலக்குமியால் உண்டாக்கப் பட்டதால் இப்பெயர் பெற்றது. திருமுதுகுன்றில் மணிமுத்தா நதியிலிட்ட பொன்னை ஆரூரர் சிவபெருமானருளினாலே இக்குளத்தின் வடகிழக்கு மூலையிலெடுத்துப் பரவை நாச்சியாருக்குக் கொடுத்தனர். ஐந்து வேலிப் பரப்புடையது.

கமலினி (34 - 277) - திருக்கயிலாயத்தில் உமாதேவியாரது இரண்டு சேடியரு ளொருவர். திருவாரூரில் பரவையாராக அவதரித்துச் சிவபெருமா னருளாற் சுந்தர மூர்த்தி சுவாமிகளை மணந்தவர். (**பரவையார்** காண்க.)

கம்பையாறு (44) - காஞ்சிபுரத்தின் தல நதி. இதன் கரையில் உமாதேவியார் சிவபூசை செய்தபோது திருவிளையாட்டாலே ஆறு பெருக, அம்மை முதல்வரைத் தழுவிக் கொள்ள அதனால் அம்மையாரது முலைத்தழும்பும் வளைத்தழும்பும் கொண்டனர் என்பது புராணம். இதன் கரையில் எழுந்தருளியவர் கம்பர். அவர் கோயில் "கம்பம்" எனப்படும். இந்நதி இப்போது நிலத்தின்கீழ் ஓடுகின்றது. (திருக்குறிப்பு - புரா - பார்க்க.)

கயிலாயமலை (11—22) - **கயிலை** (174) - **முதற் பெருங் கயிலை** (277) - சிவ பெருமான் என்றும் எழுந்தருளி யிருக்கும் திருமலை. பனிவரை - திருமலை - பொன் மலை - வெள்ளிமலை - நொடித்தான்மலை - இமாலயம் என்றுஞ் சொல்லப் பெறுவது. பனியுறைந்து "பொன்னின் வெண்டிருநீறு புனைந்தென"த் திகழ்வது.

கலுழன் (18) - கருடன். விட்டுணுவுடன் செய்த போரில் தமது தவ வலிமையால் அவரைச் செயித்தவர். செயித்தபின் நீ கேட்ட வரம் நாம் கொடுப்போம் என்று பெருமிதங் கூற, விட்டுணு தமது ஊர்தியாக இருக்க வேண்ட, அவ்வாறே அவரது வாகனமாகியவர். மிக்க வலிமையுடையவர். புள்ளரசு எனப்படுவர்.

கழுமலம் (257) - **சீகாழி** காண்க.

களிற்றுப்படி (251) - யானைத் துதிக்கை வடிவினவாகிய திரணைகள் இரண்டு புறமும் அமைந்துள்ள ஐந்து படிகள். களிற்றுக்கை பிரணவத்தையும் ஐந்து படிகள் திருவைந் தெழுத்தையும் குறிப்பன. தில்லைத் திருச்சிற்றம்பலச் சபையில் நடராஜ மூர்த்தியைச் சாரச் செல்வதற்கு அமைந்த படிகள். திருவணுக்கன் றிருவாயிலைக் கடந்து சென்று அடையத்தக்கனவாய் நடராசருக்கு அடுத்துள்ளன. யானைத் துதிக்கை வடிவமுள்ள அத்திரணைகள் உயிர்ப்புற்றெழுந்து திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனாருளிய **திருக்களிற்றுப்படியார்** என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலினை நட்டப் பிரான் திருவடியிற் சேர்ப்பித்தன.

கற்பகம் (15 - 270 - 286) - தேவ உலகத்துள்ள தேவமரம். கேட்டது கொடுக்கும் தன்மை வாய்ந்த தென்பர்.

காஞ்சி (44) - காஞ்சிபுரம். திருவேகம்பம் என்று கூறப்படுவது. உமாதேவியார் தனித் தவஞ் செய்து வெளிப்படக்கண்ட திருக்கோயிலுடையது. பிரமனும் சரசுவதியும் பூசித்தது. இதன் விரிவு திருக்குறிப்புத் தொண்டர் புராணத்திற் காண்க.

காவிரி (52 - 59) - **பொன்னி** (54 - 404 - 502 - 516 - 518) - தென் இந்தியாவை வாழ்விக்க வந்த பெரியநதி. "பொன்னி" என்றும் அதற்குப் பெயருண்டு. கவேர ஆச்சிரமத்தின் வழிவந்தமையால் காவேரி என்னும் பெயராயிற்றென்ப. மேற்குத் தொடர்ச்சி மலைகளிற் குடகு நாட்டில் சையமலையில் உற்பத்தியாவது. தென்னாடு போந்த அகத்திய முனிவரது கமண்டலத்திருந்த இஃது, இந்திரன் வேண்டுகோளுக் கிணங்கிய விநாயகர் காக வுருக்கொண்டு வந்து கமண்டலத்தைக் கவிழ்க்கவே, நதியாய்ப் பெருகியது. அகத்தியர் வரத்தால் எல்லாத் தீர்த்தங்களும் வணங்கும் வரம் அடைந்து அகண்ட காவேரியெனப் பெயர் பெற்றது. உலகத்தார் பாபங்களைப் போக்குவது. "பொன்னி நன்னதி மிக்க நீர் பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக்குவதோர் நன்னெடும்பெருந் தீர்த்தம்" என்று பாராட்டப்பட்டது.

கிரியை - சைவபாதங்கள் நான்களுள் ஒன்று. இது சற்புத்திர மார்க்கம். இதனியல்புகளைக் "கந்த வர்க்கமும் கிளர்மணிப் புகையும் கவின்கொ டீபமும் புனிதமஞ் சனமும், கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங் கொண்டு மாயையின் குணங்களொன் றிலராய், ஐந்து சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி யங்கி யின்கடன் முடித்தருள்

வழிசின், நிந்த நற்பெருங் கிரியையன் புடனே யியற்ற வல்லவ ரேம்மருங் கிருப்பார்"- திருவாதவூரர் புராணம்.

குபேரன் - நிதிமன்னவன் (246) - **நிதிக்கிழவன்** (465) - சிவபெருமான்றோழர். அட்டதிக்குப் பாலகரிலொருவர்.

குறட் பூதம் (16) - சிவகணங்களாகிய பூதங்கள். "குண்டைக் குறட்பூதங் குழும" என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு. இவை என்றும் சிவபெருமானைச் சூழ்ந்து கொண்டு ஆடியும் பாடியும் திளைப்பன. அளவில்லா வலிமையுடையன. சிவபெருமான் இவைகட்கெல்லாம் நாதரானமையின் "பூத நாதன்" எனப் பெறுவர்.

கெடிலம் (230—235) - **தென்றிசையிற் கங்கை** (235) - நடுநாட்டில் ஓடும் ஒரு நதி. ஜீவநதி யென்ப. தென்றிசையிற் கங்கையெனப் போற்றப்படுவது. இதன் வடகரையிலே திருவதிகை வீரட்டானம் உள்ளது.

கொள்ளிடம் (230—256) - ஒரு நதி. ஆங்கிலத்தில் Coleroon என்பர். சோழ நாட்டில் பாய்வது. திருப்பராய்த்துறைக்குச் சமீபத்தில் காவிரியினின்றும் பிரிவது. இதற்குக் **கலங் கொள்ளிடம்** என்ற பழம் பேர் கல்வெட்டுக்களில் காணப்பெறு கின்றது. சோழ மன்னர்கள் கடலிலிருந்து தமது நாட்டிற்குள் மரக்கலங்கள் வரு வதற்காகக் கலம் கொள்ளத் தக்க அகலமும் ஆழமும் பெற அமைத்தனர் என்ப.

கோலக்கா (260) - இது சோழ நாட்டுத்தலம். சீகாழிக்கு மேல்பால் அரை நாழியளவிலுள்ளது. திருஞான சம்பந்தப் பெருந்தகையார் ஓசையுடைய பொற்று ளம் பெற்றுப் பதிகம் பாடிய திருத்தலம். தலவிசேடங் காண்க (பக் - ௩௧௧).

கோவலூர் வீரட்டம் (467—472) - இது நடுநாட்டுத் தலங்களிலொன்று. அந்தகாசுர சங்காரம் நிகழ்ந்தது. வீரட்டங்களிலொன்று. மெய்ப்பொருள் நாயனார் ஆட்சி செலுத்திய நகரம். திருக்கு+ஓவல்+ஊர்=அறியாமையை ஒழித்து (உயிர் களுக்கு அருள்புரியும்) தலம் என்று தலமான்மியம் கூறும். தலவிசேடங் காண்க (பக் - ௬௦௬).

சடங்கவி சிவாசாரியார் (153—154) - சிவமறையவர். இவரது ஊர் புத்தூர். இவரது புதல்வியைச் சுந்தரமூர்த்திகட்குத் திருமணஞ் செய்து கொடுக்க இசைந்து பின்னர்ப் பெருமானுல் தடுத்தாட் கொள்ளப் பெற்றமையால் மணம் தவிரவே, வன் றொண்டர் திருவடிகளைத் துதித்துக் கதியெய்தினர். தடுத்தாட்கொண்ட புராணத்துட் சரிதங் காண்க.

சடையனார் (149—153) - அறுபான்மும்மைத் தனியடியாரு ளொருவர். சிவ மறையவர். ஆரூரருக்குத் தந்தை. இசைஞானிப் பிராட்டியாருக்குக் கணவர்.

சரசுவதி - வெண்கோடி (243) - பிரமனது தேவி. வெள்ளை நிறமும், வெண் கலையும் கொண்டு வெண்டாமரையில் வீற்றிருப்பவள். சகல கலாவல்லி.

சரியை - சைவ நாற்பாதங்களுள் ஒன்று. தாசமார்க்கம். "ஆவ லாலெமக் காமலர் மரங்க ளாக்க லம்மலர் பறித்தலம் மலராற், றாவி லாவகை தார்பல சமைத்த றணப்பி லெம்புகழ் சாற்றலன் புடனு, மேவு மாலய மலகிடன் மெழுகல் விளக்க னல்விளக் கிடுத லெம் மடியார்க், கேவ லானவை செய்தலிச் சரியை யியற்ற வல்லவர்க் கெம்மூல களிப் போம்" - திருவாதவூரடிகள் புராணம்.

சாய்க்காடு (429) - சோழநாட்டுத் தலங்களுளொன்று. காவிரிப்பூம்பட்டினத் திற் கருகிலுள்ளது. தலவிசேடங் காண்க (பக் - ௫௪௩).

சிதம்பரம் - காவிரிநதியின் வடகரையிலுள்ள தலங்களுள் முதன்மை பெற்றது. "கோயில்" எனப் பெறுவது. புலிக்கால் முனிவர் - வியாக்கிரபாதர் - பூசித்தமையின் புலியூர் எனப் பெற்றது. தில்லையென்னும் மரமடர்ந்த காடாயிருந்தமையின் **தில்லை வனம்** எனவும் பெறும். சிவகங்கை, பரமானந்த கூபம், புலிமடு, வியாக்கிரபாத

தீர்த்தம் (இளமை யாக்கினார் குளம்), அனந்ததீர்த்தம், நாகசேரி, பிரமதீர்த்தம், சிவப் பிரியை, திருப்பாற்கடல், குய்யதீர்த்தம் எனும் பத்துத் தீர்த்தங்களுடையது. "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று தியாகேசப்பெருமான் தமது திருவாக்கினாற் சிறப்பித்தருளிய அந்தணர்கள் வசிக்கும் தலம். பரம ஆசாரியமூர்த்திகளாகிய மணி வாசகப் பெருமான் பலகாலம் தங்கித் தவஞ்செய்து நடேசப் பெருமானுடன் இரண் டறக் கலந்தருளியதும், நந்தனாரெனுந் திருநாளைப்போவார் முத்திபெற்றதும், சமயா சாரியர்களும், சந்தானாசாரியர்களும், நாயன்மார்களும் தொழுது பாடியதும் ஆகிய பல விசேடங்கள் கொண்டது. விராட்புருடனுடைய இருதயத்தானமாகியது. மற்றும் இதன் அளவிடற்கரிய பெருமைகளை இப்புராணத்தினுள் ஆங்காங்கு வருமிடங்களி லும், பல புராணங்களிலும், தக்கார்வாய்க் கேட்டும் தெளிக. தலவிசேடமுங் காண்க.

சித்தவடமடம் (229) - நடுநாட்டில் திருவதிகைவீரட்டானத்திற்கு வடமேற்கில் 3 நாழிகை யளவிலுள்ளது. பழமையாகிய பொதுமடம். இப்போது அவ்விடத்திலொரு சிவாலயமுண்டு. சிவபெருமான் நம்பியாரூரருக்குத் திருவடி தீக்கை செய்த மடம். அப்பர் சுவாமிகள் தேவாரத்திற் பாராட்டப்பெற்றது.

சிவபெருமான் - சேயவன் (8) (தழல்போற் சிவந்த திருமேனியுடையவன். செம்மை தருபவன். சிவன்.) - **ஆதிதேவர்** (20) - **தம்பிரான்** (21 - 44 - 368) **பிஞ் ஞகன்** (21) (தலைக்கோலமுடையான்) - **சடையான்** (21) - **ஐயர்** (22 - 38 - 251); **சிவன்** (23 - 325 - 255) - **பூதநாதன்** (24) - **சம்பு** (29 - 90) (இன்பமாக்குபவன்) - **மெய்ப்பொருளாகிய வள்ளல்** (31) - **ஈசன்** (36) - **ஆதிமூர்த்தி** - (37) - **அங்கணு ளன்** (39) (அழகிய அருட்கண்ணுடையவன்) - **நீத்தன்** (42); **மாதொர்பாகன்** (43 - 142) - **புராணன்** (48) - **எம்பிரான்** (58) - **பரமன்** (72) - **அரன்** (72) - **அகில கார ணர்** (135) - **பூதநாயகர்** (136)-**அத்தர்** (140) - **தாண்டவப் பெருமான்** (145)-**அங்கணர்** (147 - 533) - **நாதன்** (164) - **மாலுமயனுக்கருமரியார்** (174) - **நெற்றிவிழியான்** (182) - **யாவரையும் வேறடிமையாவுடைய எம்மான்** (183)-**பித்தன்** (186-187-219) - **பேயன்** (187)-**துணைவனார்** (188)-**அந்தணாளன்** (189) - (அந்தணன்)-**பூவணத்தவர்** (189) - **இறை வன்** (191) - **பிறைசூடி** (220)-**தேவர்பிரான்** (224) - **நிருத்தனார்** (227-352) - **தம்மான்** (234)-**கைம்மாவினுரியான்** (234)-**வந்தருவான்** (237) - **ஆடுகின்றவர்** (255)-**விடையான்** (258) - **பிரான்** (271) - **பரம்பொருள்** (271) - **பார்ப்பதிபாகன்** (271) - **கண்ணுதல்** (291) - **திருநடம் புரிவார்** (354) - **மலைமகள் கேள்வன்** (381) - **புண்ணியப் பொருளா யுள்ளான்** (385) - **எல்லையிலான்** (390) - **வேத முதல்வர்** (399) - **தேவர்கடேவர்** (401) - **சாதி வேதியர்** (413) - **வழித்துணை** (418)-**சங்கரன்** (464)-(இன்பம் செய்பவன்); **இடபவாகனன்** (464) - சைவ சமயத்திற் பேசப்படும் முழுமுதற் கடவுள். நிவிர்த்தி கலை முதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக் கண்ணதாகிய மா சங் காரத்தைச் செய்யும் வினைமுதலா யுள்ள முதல்வர். அவ னவ ளது வென்று பகுத்துப் பலவாய்ச் சுட்டி யுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய இருகூற்றுப் பிரபஞ்சத் தொகுதி சங்கார காலத்தில் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற தன்னிடத்தினின்றும், சகசமல நீங்காமையால், அதுநீங்குதற் பொருட்டுமீளத் தோன்றுமாறு நிற்பவர். அவரே திதிக்கடவுளும் படைப்புக் கடவுளும் தோன்றுதற்குக் காரணமானவர். இது அவரது பொது வியல்பாம். இப்பொருள் சிவசத்தா மென்பது ஞானநூல். பசுஞான பாச ஞானங்களால் அறியப்படாமையிற் சிவமாம். பதிஞானத்தா லறியப்படுதலிற் சத்தாம். சிவசத்து என்பது சத்துச்சித்து என்னும் பொருளில் வந்தது. இவ்விரு தன்மைகளும் சச்சிதானந்தம் என மூன்றாயும், முற்றுணர்வு முதலிய ஆறாயும், எட்டாயும் விரியும். இவை இப்புராண முதற் செய்யுளில் வைத்தோதினார் ஆசிரியர். விரிவு சிவஞானபாடிய 1 - 6 - சூத்திரங்களுட் காண்க. இவர் மும்மூர்த்திகளில் ஒருவரல்லர். நான்காவதாகிய பொருள் - துரியமூர்த்தி - என்பது வேதம். "துரியங் கடந்த சுடர்த்தோகையுட

னென்றும் பிரியாதே நிற்கின்ற பெம்மான் '' என்பது திருக்களிற்றுப் படியார். ஒரு நாம மோருருவ மொன்றுமில்லார். ஆயினும் அன்பர்க்கருளும் பொருட்டுப் பல நாமங் களும் பல உருவங்களும் தாங்கி வருவர். முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவர். தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல் இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என்ற எண்குணங்களுந் தமக்கேயுரியவர். நிலம், நீர், நெருப்பு, கால், விசும்பு, நிலா, பகலோன், உயிர் என்ற அட்டமூர்த்தமாய் நிற்பவர். இவர்க்குத் தடை யிலா ஞானமாகிய மேனி ; அருளே உரு. சத்தியே திருமேனியாகக்கொண்டு வருவது உயிர்கட்கருளாற் பேரின்ப முத்தியளித்தற் பொருட்டேயாம். பேரின்ப முத்தியாவது தன்னிலையினுள்ள எண் குணங்களாகிய சிவத்துவ விளக்கமேயாம். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சத்தி, பின்னமிலா னெங்கள் பிரான் ''—திருவருட்பயன். யார்க்கருள வெளிப்படும் உருவங்கள் உருவநிலை. ஊர்தி வெள்ளேறு. உமையொரு பாக முடையார். என்றும் மன்னி வாழ்வது கயிலைத் திருமாமலை. தேவர்கடேவர் திருவா ரூரில் மனுச்சோழர்க்கு ஆவின் கன்று மூலம் அருள் புலப்படுத்தினர். நம்பி ஆரூரரைக் கிழவேதியராக வந்து தடுத்தாட் கொண்டவர். தில்லைவாழந்தணர்க்கு அம்பலத்தே ஆனந்தக் கூத்தராக நின்று அவர்தம் பூசையினை ஏற்பவர். திருநீலகண்டர் பால் ஓடு வைத்து மாற்றி, அவர் அயலறியாத வண்ணம் ஆணையுய்த்த செய்தியை உலகறியச் செய்தருளியவர். இயற்பகையார்பாற் றூயநீறு பொன்மேனியில் விளங்கத் தூர்த்த வேடமுந் தோன்ற வேதியராய் வந்து, அவர், இன்புறுதாரந் தன்னை ஈசனுக் கன்ப ரென்றே துன்புறுத்தவுந் தொண்டராம் பெருமையை, உலகில் விளக்கியருளியவர். அன்புறு மனத்தா ருதனடியவர்க் கன்புநீடிய மாறநாயனுர், நல்குரவான போதிலும் அவ்வாறே செலுத்த வல்லவர் என்பதை, ஒரு அடியவராய் வந்து உலகிற்குக் காட்டி யருளியவர். தமது இன்னுயிர் செருக்கக்கண்டும் "திருவேடமே மெய்ப்பொருள்" எனத் தொழுது, "தத்தா நமர்" எனத் தடுத்த மெய்ப்பொருளார்க்குக் காட்சி கொடுத்துத் தம் அருட்கழ னீழல் சேரக்கொண்டவா றிடையறுமற் கும்பிடுங் கொள்கை யீந்தவர். அடி யவர்தந் திண்மை யொழுக்க நடை செலுத்தித், தம்மையும் புறகு என்ற, விறன் மிண்டர்க்குத் தந்தாணிழற்கீழ் மிக்க கணநாயகராகும் தன்மை தந்தருளியவர். மறைக்குலப் பிரமசாரியாய் வந்து, அமர்நீதியாரிடம் கோவணங் கொடுத்து, அதனை மறைத்து, அதற்கீடாக அவர் பொருள்க ளனைத்தையும் அவர் குடும்பத்தையும் அவரையும் துலையிலேறச்செய்து, அத்துலையினையே விமானமாக்கி, அவரைச் சிவபுரியி னிற் சேர்த்தருளியவர். இவ்வாறே மற்றை நாயன்மார்கள் சரிதங்களாலும் அறிக. இவரது இயல்பு சொல்லுக்கடங்காமையின் இப்புராணத்துப் பலவிடத்தும் கூறிய தன்மைகளின் வைத்து ஒருவாறு உணரத்தக்கது.

சிவலோகம் (223) - **வீடு** (402) - **பேரின்பம்** (402) - **இறைவனுலகம்.**

சிற்றம்பலம் (250 - 351 - 360)-**திருஅம்பலம்** (248) - **சிற்பரவியோமம்** (351) - **தில்லையம்பலம்** (435) - **தில்லைமன்று** (470) - கனகசபை, பொன் மாளிகை என்று பலவாறும் போற்றுவர். சிவபெருமான் நித்தியானந்தத் தாண்டவம் புரியுமிடம்.

சீகாழி - **தோணிபுரம்** (46-259) - **புகலி** (258) - **புறவம்** (260) - சோழ நாட்டுத் தலங்களி லொன்று. பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரு பெயர்களையுடையது. இது பிரம புரீசுவரர் ஆகிய **இலிங்கம்**, தோணியப்பராகிய **குரு**, சட்டை நாதராகிய **சங்கமம்** என்னும் மூவுருவோடும் இறைவன் விளங்குகின்ற பெருமையுடையது. திருஞானசம்பந்த சுவாமிகள் அவதரித்து அம்மையார் திருமு லைப்பா லுண்டருளிய தலம். ஆளுடைய பிள்ளையார் அவதரித்த தலமாதலின் "உள்ளு நான் மிதியேன் '' என்று அஞ்சி நம்பியாரூரர் இதனை வலம் வந்தபோது சிவபெரு

மான் எதிர்காட்சி கொடுக்கத் தரிசித்துக் "கயிலையினில் வீற்றிருந்தபடி கண்டுகொண் டேன்"னெனப் பதிகம் பாடியருளிய தன்மை வாய்ந்தது. தலவிசேடம் திருஞானசம் பந்தமூர்த்தி நாயனர் புராணத்துட் காண்க. இதன் பெயர்கள் ஊழிக்காலக்கிரமத்தில் வந்தன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் - **வன்றொண்டன்** - (47 - 48 - 216 - 274 - 293 - 306 - 315 - 340 - 346 - 358 - 407) - **நாவலர்கோன்** - (27 - 224 - 271 - 325 - 326) - **நம்பியாரூரன்** - 29 - 50 - 150 - 165 - 201 - 209 - 343 - 349) - **நம்பி** - (39 - 179 - 188) - **ஈசனுக்கினியான்** - (161) - **நாவலர் பெருந்தகை** (181) - **நாவனகரூரன்** (184) - **திருநாவலூரான்** - (184 - 188) - **ஆரூரர்** - (194 - 197 - 232 - 273) - **நாவலூரர்கோ** (208) - **நாவலர் பெருமான்** (220) - **நாவலர் தனிநாதன்** (223) - **தமிழ்நாதன்** (232) - **திருநாவலூராளி** (233) - **நாவனகரார் பெருமான்** (244) - **வள்ளலார்** (258) - **தம்பிரான் தோழர்** - (275 - 317) - **தமிழ் நாவலர்தம் பெருமான்** - (276) - **ஆளுடைய நம்பி** (285) - **நாவலர் காவலர்** - (287) - **உடையநம்பி** (295) - **நாவலூரன்** - (303) - **நாவலூர் மன்னன்** (327) - **திருமுனைப்பாடி நாடர்** (344) - **ஊரன்** (498) - **ஆரூரன்** (325).

சைவ சமயகுரவர் நால்வரி லொருவர். தோழ மார்க்கத்தை அநுட்டித்துக் காட் டிய ஆசாரியர். திருத்தொண்டர் புராணம் என்னும் இப்பெருங் காப்பியத்திற்குத் தலைவர். கயிலாயத்தில் சிவபெருமானது அழகே உருவாய் வெளிப்பட்டுத் தோன் றியவர் என்பர். திருப்பாற்கடலினின்று மெழுந்த ஆலகால விடத்தைத் சிறிதளவாகத் திரட்டி வந்து சிவபெருமானிடம் தந்தமையால் **ஆலாலசுந்தரர்** *என்னும் பெயர் பெற் றவர். மாதவஞ்செய்த தென்றிசை வாழ்ந்திட இவர் மண்ணுலகிற் போந்த காரணம் திருமலைச் சிறப்பிலும் (61), இவர் வாழ்க்கை தடுத்தாட்கொண்ட புராணத்திலும் (424), ஏயர்கோன்கலிக்காம நாயனர் புராணம், கழறிற்றறிவார் நாயனர் புராணம், வெள் ளானைச்சருக்கம் இவற்றிலும் காண்க. இவர் கயிலையினின்றும் பூவுலகிற் போந்து திருத்தொண்டத்தொகை யருளி மீளக் கயிலையடைந்த வரலாற்றின் விரிவே இப் புராணமாம்.*

சூரியன் - **ஞாயிறு** (26) - **செங்கதிரவன்** (10) - **வெங்கதிரோன்** (98) - **கதிரவன்** (159) - **இரவி** (228) - **ஏழ்பரித்தேரோன்** (303) - **பகல்** (307) - **கதிரோன்** (326) - *ஒன்பது கோள்களில் இராச கிரகம் எனப்படுவர். உலகிற்கு ஒளியும் சூடும் தந்து தழைக்கச் செய்து காப்பவர். சிவபெருமானது வலது கண்ணுவார். இவரினின்றும் வருவது சோழ மரபு.*

செங்குன்றூர் (492) - *இது மலைநாட்டு வைப்புத் தலம்.* **செங்கண்ணூர்** *என்று தற்காலம் வழங்கப் பெறுகின்றது. விறன்மிண்ட நாயனர் திருவவதாரஞ்செய்த திருத் தலம். சிலப்பதிகாரக் கதாநாயகியாகிய கண்ணகி இங்கு நின்றும் கோவலனுடன் விமானத்தில் ஏறி விண்ணுலக மடைந்தாளென்று கூறப்படுகின்றது. தில்லை மூவாயிர வர்போன்று இங்கு மூவாயிரம் வேதியர்கள் வாழ்ந்தனரென்று நம்மாழ்வார் பாசுரத்தா னறியப்படும். தலவிசேடம் காண்க (பக் - ௬௯௨).*

சேதிநாடு (466 - 467 - 490) - **சேதியர்** (474) - *நடுநாட்டின் ஓர் உட்பிரிவு. மலாடர் நாடு என்றும் கூறுப. தற்காலம் திருக்கோவலூர் தாலூகா இதன் பரப்பாகும். மெய்ப் பொருணயனர் ஆண்ட திருநாடு.*

சேர நாடு (492) - *சேர மன்னர்களால் ஆளப்பட்டது. மலைநாடு-முன்னளில்தமிழ் நாடா யிருந்தது. சென்ற 600 ஆண்டுகளாக மலையாளநாடாயிருந்து வருகின்றது.*

சேரர் (492) - *தமிழ் மூவேந்தர் மரபுகளில் ஒரு மரபு.*

சைய மால்வரை (53) - *பரத கண்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் காவிரி நதிக்குப் பிறப்பிடமாயுள்ள ஒரு மலை. குடகு நாட்டிலுள்ளது.*

சைவம் (50) - சிவசம்பந்தமுடையது. இராஜாங்கத்தமர்ந்த வைதிக சைவசமயம். மற்றைச் சமயங்கள் யாவும் இதனங்கங்களாம். பலதிறப்பட்ட ஆன்மாக்களுக்கு உய் வினைத் தருவதோருயர்ந்த நெறி. "வேதப்பயனும் சைவம்" - சண்டீசர் - புரா - (9).

சோழ நாடு - புனனாடு (50) - **காவிரி நாடு** (51 - 62) - **நீர்நாடு** (67) - **பொன்னி நாடு** (502) - சோழ மரபில்வந்த மன்னர்களால் ஆளப்பட்டது.

சோழர் (51) - **செம்பியர்** (97) - **வளவன்** (116) - **சென்னி** (404) - **செம்பியர்** (502) - தமிழ் மூவேந்தர் மரபுகளில் ஒன்று. திருநீற்றின் உரிமை பெற்றாராய்ச் சைவத் துறையின் வழிவழிக் குடியாக வந்த அரசர்கள்.

ஞானம் - ஞானமே முதலா நான்கு (356)-சைவ நாற்பாதங்களுளொன்று."பரந்த வான்கலை முழுதுமா கமநூற் பகுதி யும்பல சமயசாத் திரமுந், தெரிந்து தேர்ந்ததில் வாய்ந்தமுப் பொருளின் செய்தி யேபொரு ளெனமனந் தெளிந்து, புரிந்து போந்துள சிற்றறி வினைத்தும் போக்கி யவ்வறி வெனச்சிவ போதம்,விரிந்து தோன்றநெஞ் சுடைய வித் தகரே மேன்மை யானநம் **மெய்ப்பதம்** பெறுவார்." - திருவாதவூரடிகள் புராணம்.

தத்தன் (475—482—484) - மெய்ப்பொருணாயனாரது மெய்க்காவலாளன். தன் தலைவரான நாயனார் சொற்கடவா தொழுகும் பணியாளன். சரிதச் சுருக்கம் (பக் - ௩0௬) காண்க.

தமிழ் வரைப்பு (85) - தமிழ் உலகம். தமிழ் நாடு. செந்தமிழ் நாடென்றும், கொடுந்தமிழ் நாடென்றும், இலக்கணங்களில் வரையறுத்த எல்லைக்குட்பட்ட தமிழ் வழங்கும் நிலம். இது ஒரு காலத்து வடக்கு இமயமலைவரையும் தெற்குக் கடலின் மேலும் பல்லாயிரங்காத அளவும் பரவியிருந்ததென்று சரிதங் கூறும். கடல்கோள் களினாலும் அன்னிய மொழியாளர் படையெடுப்புக்களினாலும் இதனெல்லை இஞ் ஞான்று குறுகி நிற்கின்றது என்ப.

தருமம் (107—129) - அறக்கடவுள். இஃது இறைவன் மேற் கொள்ளும் நீதி யுருவம். "இன்னவுரு வின்னநிற மென்றுணர்வ தேலரிது நீதிபலவுந் தன்னதுரு வாமென மிகுத்ததவ நீதியொடு தானமர்வு" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. இறைவனது விடை தருமசொரூபமானதென்பர்.

திருக்கூட்டம் (347 - 349 - 495 - 498) - திருத்தொண்டர்கள் சேர்ந்து கூடி யுள்ள தொகுதி.

திருத்தொண்டத் தொகை (35 - 47 - 48 - 358 - 489 - 501) - **திருத்தொண்டத் தொகைத் தமிழ்** (146) - **திருத்தொண்டத் தொகைப் பதிகம்** (340 - 347) - **"தென்ற மிழ்ப்பயன்"** (357) - "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று திருவாரூர்ப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்க ஆரூரர் பாடியருளிய பதினொரு திருப்பாசுரங் கள் கொண்ட பதிகம். அறுபான்மும்மைத் தனியடியார்களையும் ஒன்பது தொகை யடியார்களையும் போற்றுவது. இதுவே இப்புராணத்திற்கு முதனூலும் பதிகமுமாக வுள்ளது. திருமலைச் சிறப்பு, தடுத்தாட் கொண்டபுராணம் முதலியவற்றில் இதன் விரிவு காண்க.

திருத்தொண்டர் - புனிதர் (141) - சிவபெருமானது அடிமறவாத பெரியோர். இவர்களது வரலாறு பண்பும் இப்புராணங்கூறும். சிறப்பாகத் திருக்கூட்டச் சிறப்பு என்ற பகுதியிற் பேசப் பெறுவர்.

திருத்தொண்டர் புராணம் (10) - ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் இப்புராணத் திற்கு இட்ட பெயர்.

திருநீலகண்டம் (363 - 365 - 366) - விடமணிந்து தேவர்களைக் காத்த இறைவ னது கண்டம். இதன்பேரால் ஆணை நிகழ்ந்த வரலாறு திருநீலகண்டநாயனார் சரிதத் திற் காண்க. இப்பெயரால் அமைந்து, கொங்குநாட்டிற் பனிநோய் தீர்த்த ஆளுடைய பிள்ளையார் திருநீலகண்டப்பதிக வரலாறு அவர் புராணத்தினுட் காண்க.

திருநீலகண்ட நாயனார் - திருநீலகண்டக்குயவனார் (359) - அறுபான்மும்மைத் தனியடியாருளொருவர். "மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லேனல்லன்" என்று முற்றத்துறந்த பட்டினத்தடிகளாற் பாராட்டப்பெற்றவர். சரித சுருக்கம் காண்க (பக் - ௬௯௨).

திருவெல்லை - எல்லை (238 - 256) - தில்லைக்கோயிலுக்கு நாற்புறமும் ஒரு காத தூரத்தில் அமைந்தது. ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் இத்திருவெல்லையைப் பணிந்து போற்றியே உட்சென்றனர்.

தில்லைவாழந்தணர் (345) - **தெய்வவேதியர்** (357) - **தில்லையந்தணர்** (359) - **மும்மையாயிரவர்** (357) - **(தில்லைவாழந்தணர்கள்) சபை** - (389 - 390) - சிதம்பரத்தில் ஸ்ரீ நடராச மூர்த்திக்கு அகம்படித் தொண்டு புரிவோர். தீட்சிதர் என்று அழைக்கப் பெறுபவர். நட்டப்பிரான் ஆராதனையில் விருப்புற்றுத் திருக்கயிலையிலிருந்து எழுந்தருளிய சிவகணத்தவர். இவர்கள் தொகை மூவாயிரம் என்ப. "முட்டாத முச்சந்தி மூவாயிரவர்" முதலிய திருவாக்குக்கள் காண்க. நட்டப்பிரானும் "நாமிவரிலொருவன்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். விதிமுறை அக்கினி காரியம் வழுவின்றிச் செய்வோர். தேவாரத் தமிழ் முறைகளிற் றுதிக்கப்பெற்றோர். திருஞானசம்பந்த சுவாமிகள் கணநாதர்களாகக் கண்டு பதிகமோதியுள்ளார். இவர்கள் ஒன்பது தொகையடியார்களுள் ஒரு கூட்டத்தவர். சுருக்கம் காண்க (பக் - ௪௪௪.)

தில்லை (2 - 350 - 445) - **பெரும்பற்றப்புலியூர்** (41) - **புலியூர்** (227)-**சிதம்பரம்** பார்க்க.

தீனநகர் (237) - இது நடுநாட்டுத் தலங்களுளொன்று. தீர்த்தனகரி என்றழைக்கப் பெறுவது. தலவிசேடங் காண்க (பக் - ௨௭௬).

துந்துபி (14) - தேவவாத்திய வகைகளிலொன்று.

துதிக்கையோன் (18) - **தாழ் செவி நீண்முடிக் கடக் களிறு** (3) - விநாயகக் கடவுள். துதிக்கையினையுடைய யானைமுகமுடையவர். சிவபெருமானது மூத்தகுமாரர். இவரது வரலாறு கந்தபுராணத்துட் காண்க.

துவரை (24) - துவாரகை. கண்ணனது தலைநகரம். வடநாட்டிலுள்ளது.

துறையூர் (225) - இது நடுநாட்டுத் தலங்களுளொன்று. சந்தானகுரவருள் ஒருவராகிய சகலாகம பண்டிதரென்னும் அருணந்தி சிவாசாரியார் அவதரித்த தலம். நம்பியாரூரர் தவநெறி வேண்டிப் பெற்ற தலம். தலவிசேடங் காண்க (பக் - ௨௬௧).

தென்திசை - (35) - **தென்புவி** (37) - பரதகண்டத்தின் தென்பாகம். சிவபெருமானது பூசனைக்குப் பொருந்தும் இடம் பலவும், புண்ணிய நீர் பலவும் தன்னிடம் அமைய மாதவஞ் செய்து பெற்றது.

தேவர் - சோதிவானவர் (87) - **உம்பர்** (265 - 301) - **விண்ணவர்** (20) - **அண்டர்** (60) - **திவ்** என்ற ஒளிகொண்ட உடம்பையுடையவர்களாதலின் தேவர் எனப்படுவர்.

தேவாசிரியன் (137 - 270 - 497) - **தேவாசிரியனுங் காவணம்** (335) - இது ஒரு மண்டபம். இப்போது ஆயிரக்கால் மண்டபம் என்பர். திருவாரூர்ப்பூங்கோயிலுள் திருவாயின் முன்னால் உள்ளது. அடியார் கூட்டம் நிறைந்துள்ள சபை. இங்கு நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகைப் பதிகத்தைப் பாடியருளித் திருக்கூட்டத்தினை வணங்கினர். திருமால் முதலிய தேவர்கள் தரிசனத்துக்குக் காலம் பார்த்தும் அடியார்களை ஆசிரயத்துமிருக்குமிடம். திருக்கூட்டச் சிறப்புக் காண்க (பக் - ௧௮௫).

நந்தி(தேவர்) (20 - 45) - சிவபெருமான் சன்னிதியில் அதிகாரியாக இருத்தப் பெற்றவர். சிவனாரது முதற்சீடர். சிவாகமம் முதலான எல்லாச் சாத்திரமும் பயின்றவர். முக்கண், நாற்றோள், நீலகண்டம் முதலியவற்றுடன் பெருமானது சாரூபம் பெற்றவராய்க் கைகளிலே உடைவாளும் பிரம்புந் தாங்கியவர். அவிநீய சம்பு, அபரபரமேசுவரன் என்று அழைக்கப்பெறுபவர். இவர் சிலாத முனிவருக்குப் புதல்வராகச் சிவாஞ்

ஞைப்படி படைச்சாலில் மாணிக்கப் பெட்டியில் நான்கு கரங்களும் சடைமுடியுமாக அவதரித்தனர். திருவையாற்றிலே தவஞ்செய்து, மகா உருத்திரத்தை எட்டுக் கோடி உருச்செபித்துச், சிவனருள் பெற்றுச், சுயசை என்னும் தேவியை மணந்து, திருக் கயிலை யடைந்தவர். திருப்பேரூரில் இவரது திருவுருவச் செப்புப் படிமத்தில் "பட்டீசுவர சாமியார் வாசற் பிரதானி" என்று எழுதப் பெற்றுள்ளது. கோவிற் சன்னதியில் முன்னிருக்கும் இடபதேவர் வேறு. நந்திதேவர் வேறு. சிலர் இவ்விருவரையும் ஒருவரேயாகக் கொண்டு மயங்குவர்.

நம்பி (317) - (1) சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாமங்களில் ஒன்று. (2) ஆதி சைவர் மரபு குறிக்கும் பெயர். நம்பியாண்டார் நம்பி முதலியவை காண்க. (3) நம்பி - நம்பி அடையப்படுபவன் - சிவபெருமான். இவர் பெயர் குறிக்கும் "**நம்பி**" **யென்ற திருப்பதிகம்** (சுந்தரமூர்த்திகள் தேவாரம்) காண்க. நம்பி - குணபூரணன் என்பர்.

நம்பியாண்டார் நம்பி (49) - திருநாரையூரில் ஆதிசைவர் குலத்துதித்தவர். இவர் தந்தையார் ஒரு நாள் வேற்றூர் செல்லத், தாயார் நிவேதனம் முதலியன செய்து கொடுத்துப் பொல்லாப் பிள்ளையாரைப் பூசிக்க ஏவினள். நம்பிகள் ஆலயஞ் சென்று பிள்ளையாருக்குத் திருமஞ்சன மாட்டி, அவரது திருமுன்பு அன்னம் முதலிய நிவேதனங்களைப் படைத்துப், புசிக்க வேண்டினர். பிள்ளையார் புசிக்காது வாளா விருக்க, நம்பிகள் சோர்ந்து தமது தலையைச் சிலைமேல் மோதப் புகுதலும், பிள்ளையார் தடுத்து நம்பி படைத்த யாவும் உட்கொண்டருளினார். பள்ளிக்குச் செல்லுங் காலம் தாழ்த்தமை அறிவிக்கவும், பிள்ளையார் அவருக்குச் சகல கலைகளையும் தாமே ஓதுவித்தருளினார். இவ்வற்புதம் அறிந்த அபயகுல சோழர் திருநாரையூர் வந்து, நம்பிகளை வணங்கிப், பிள்ளையாருக்கு விசேட பூசைகள் ஆற்றுவித்து, மூவரோதியருளிய தேவாரத் திருமுறைக ளிருக்குமிடத்தை அறிய விரும்பி விநாயகர்பாற் கேட்டறிவிக்கும்படி வேண்டினார். நம்பியார், பிள்ளையார்பாற் கேட்டறிந்தபடி, அத்திருமுறைகள் தில்லை மேற்குக் கோபுரத்தை யடுத்த திருமதிலில் சேமித்திருக்கிறதாக் கூறி, அச் சோழனுடன் திருத்தில்லை சென்று, திருமுறைகளை வெளிப்படுத்திச், சிதல் அரித்ததுபோக எஞ்சியவற்றைத் திருமுறைகளாக வகுத்தார். சைவத் தெய்வத் திருமுறைகளில் முதற் பதினொரு திருமுறை வகுத்தவர் இவரே. இவர் பாடிய பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையிலுள்ளன. அவை :—விநாயகர் திருவிரட்டைமணிமாலை - கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம் - திருத்தொண்டர் திருவந்தாதி - திருநாவுக்கரசர் திருவேகாதச மாலை என்பனவும், - ஆளுடைய பிள்ளையார் பேரில் திருவந்தாதி, சண்பைத் திரு விருத்தம், மும்மணிக்கோவை, திரு உலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்ற இவைகளுமாம். இவர் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியே திருத்தொண்டத் தொகை யென்னும் முதனூலுக்கு வழிநூலாக, அதன் விரிநூலாகி இத்திருத்தொண்டர் புராணம் திகழ்கின்றது. இவர் சரிதவிரிவு திருமுறை கண்ட புராணத்தும் ஏனைய நூல்களிலும் காண்க. இவர் ஆளுடைய பிள்ளையாரிடத்து உபாசனை வழியே மிக்க அன்பு பூண்டொழுகி அவர்பால் விசேடித்த அருள் பெற்றவர். திருமுறை வகுப்பு விவரம், திருத்தொண்டர் புராண வரலாறு 96-ம் பாட்டினும் அதன் உரைக் குறிப்பினுங் காண்க.

நரசிங்க முனையரையர் (151) - திருமுனைப்பாடி நாட்டரசர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை மகன்மைகொண்டு வளர்த்தவர். பெரியபுராணத்துட் பேசப்பெறுந் தனியடியாரு ளொருவரென்ப. இவர் சரிதம் இவரது புராணத்துட் காண்க.

நல்லூர் (505 - 506 - 507) - இது சோழநாட்டுத் தலங்களுளொன்று. அமர்நீதி நாயனார் திருத்தொண்டு செய்தருளிய தலம். வாகீசப் பெருந்தகையாருக்குத் திருவடி தீக்கை செய்த திருத்தலம். தலவிசேடங் காண்க (பக் - ௬அ௬).

நாயன்மார் (4 - 470 - 534) - தலைவர்கள். தலைமைபற்றிச் சிவபெருமானது பெயர். அவரது பேரடியார்களான அறுபத்துமூவர்முதலியோர்க்கும் வழங்கும்.

நாவலூர் (148 - 224 - 309 - 332) - இது நடுநாட்டுத் தலங்களுளொன்று. திருநாமநல்லூர் என்று வழங்கப்பெறும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த தலம். சடையனார், இசைஞானியார், நரசிங்க முனையரையர் முத்திபெற்ற தலம். தலவிசேடங் காண்க (பக் - உ௫அ).

நான்முகன் (17) - **அயன்** (126 - 243) - **திசைமுகன்** (137) - **நான்முகன்** (287) - பிரமதேவன். சிவனாணையின் வழியே படைத்தற்றொழில் செய்யும் தேவர். இவர் முகங்களைந்தில் ஒன்றினைச் சிவபிரான் கிள்ளிவிட்டதினால் நான்முக முடையராயினர். வேதங்களை சிவபிரானால் உபதேசிக்கப்பெற்றுத் தேவர் முனிவர்களுக்கு உபதேசிக்கும் போதகாசிரியர். திருமாலின் உந்திச் சுழியினின்றும் தோன்றியவர். மும்மூர்த்திகளுளொருவர். அன்னவூர்தி யுடையார். இவர் பொன்னிறத்தராய்த் தாடி, மீசை, நான்கு முகம், கைகளில் செபமாலை - தண்டாயுதம் - ஸ்ருக் - ஸ்ருவம் - கமண்டலம் உடையவர்; சரசுவதி - சாவித்திரி - காயத்திரி என்பவர்கள் இவரது தேவியர். பல சரிதங்கள் இவரைப் பற்றி நிகழ்வன. புராணங்கள் பார்க்க. பதினெண் புராணங்களுட் பிராமம், பதுமம் என்னுமிரண்டும் இவரைப் பற்றியன.

நீதிவழக்குக்கலைப் பெயர்கள் - **ஆட்சி** - **ஆவணம்** - **காட்சி** - **மூலவோலை** - **படியோலை** - **மாட்சி** - (201 - 202) **ஆளோலை** (185) - **காணத்தான்** (204) - **சபையோர்** (204) - **வழக்கு** (390) - (இவை இப்பகுதியிற் காணப்பட்டன).

நீர்நாடு (54) - சோழ வளநாடு.

பதிகம் (48) - புராண உறுப்புக்களில் ஒன்று. புராணப் பொருளைச் சுருக்கி முகப்பிற் கூறுவது. இப்புராணத்திற்குப் பதிகம் திருத்தொண்டத்தொகை.

பதியிலார் (குலம்) (90—278) - **உருத்திர கணிகைமார்** (278) உருத்திரகணிகையர் மரபு.

பரசிராமன் (491) - பிருகு வம்சத்தில் வந்த சமதக்கினி முனிவருக்கு இரேணுகையிடம் பிறந்த குமாரர். இவர் விட்டுணுவின் அமிசாவதாரம். இவர், தம் தந்தையைக் கொன்ற கார்த்தவீரியன் வழிவரும் க்ஷத்திரியர்களை நாசம் செய்யும் பொருட்டுச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து பரசு ஆயுதம் பெற்றவர். அவ்வாறு கொன்ற பாவம் நீங்கும் பொருட்டுத் தென்றிசையில் ஒரு நாடு கண்டு, அந்நாட்டை வேதியர்க் கீந்தனர். அந்நாடே மலையாள நாடாகும். காஞ்சிப்புராணமும் பிறவும் காண்க.

பரவையார் - (90 - 278 - 289 - 294 - 296 - 315 - 325 - 326 - 327 - 328) **நங்கை பரவையார்** (293 - 309) - கயிலையில் உமாதேவியா ரிருசேடியருட் கமலினியென்பவர் பரவையாராகத் திருவாரூரில் திருவவதாரஞ் செய்தார். பதியிலார் குலமாகிய உருத்திர கணிகையர் குலத்திலுற்பவித்தவர். சிவபெருமான் ஆணையால் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருமணம் செய்துகொண்டவர். கண்ணுதலைத் தொழு மன்பே கைக்கொண்டவர். "**நங்கை பரவை**" என்று இராசராசேச்சரத்திற் செப்புப் படிமத்தில் இவர் பெயர் காணப்பெறும். வீதிவிடங்கப் பெருமாள் திருவோலக்கத்திற் பாடலாடல்களுக் குரியவர். இறைவன் ஓரிரவில் இருமுறை தூது நடந்த இவரது திருமாளிகை யிருந்த இடத்தில் இப்போது இவரது கோயில் உள்ளது. தடுத்தாட் கொண்ட புராணச் சுருக்கத்தும் (பக் - சஉச),ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணத்தும், கழறிற் றறிவார் புராணத்தும், வெள்ளானைச் சருக்கத்தும் இவர் சரிதங் காண்க.

பழையாறை (502) - **ஆறை** (501) - இது சோழநாட்டுத் தலங்களுளொன்று. அமர்நீதி நாயனார் அவதரித்த தலம். தலவிசேடங் காண்க (பக் - ௬அஅ).

பனிவரை (11 - 51) - **இமயம்** (74) - இமயமலை. பனியால் மூடப்பட்டது.

பாற்கடல் (25 - 138) - பெருஞ் சமுத்திரங்கள் ஏழனுளொன்று. திருமால்பள்ளி கொண்டுள்ளது. தேவாசுரர்கள் அமிர்தம் பெறக் கடைந்தபோது இதனின்றெழுந்த விடத்தைச் சிவபெருமான் உண்டு கண்டத்தில் நிறுத்தி உலகைக் காத்தனர். உபமன்னிய முனிவர் பாலுக்கு அழுதபோது சிவபெருமான் இக்கடலினை வரவழைத்து அவருக்கு உண்ணும்படி அளித்தனர். அமுதசொரூபமானது. இதனைக் கடைந்தெடுத்த அமுதத்தைத் தேவர்கள் உண்டு நீண்ட வாழ்நாள் பெற்று அமரராயினர்.

பிரணவம் - வேதமூலம் (43) - எல்லா மந்திரங்களுக்கும் முதலாயது. மறைகட்குப் பிறப்பிடமாவது. சமட்டி - வியட்டி என இருவகைப்படும். இதனால் அறிவிக்கப்படும் பொருளாய் - இதற்கு வாச்சியனாய் - உள்ளவர் சிவபெருமான். இதன் வடிவமாயுள்ளவர் விநாயகக் கடவுள். இதனுள் விளங்குபவர் ஆனந்தக் கூத்தராகிய நடேசப்பெருமான். கொன்றைமலர் இதன் வடிவமாயமைந்ததாதலின் அது சிவபெருமானுக்குத் திருவடையாளமாலையாயமைந்த தென்பர்.

பிள்ளையார் (258) - திருஞானசம்பந்த சுவாமிகள். ஆளுடைய பிள்ளையார். உலகத் தாய் தந்தையரால் பிள்ளையாகக் கொண்டு பாலூட்டப் பெற்றமையால் இப்பெயர் பெற்றார். இவர் வரலாறு இவரது புராணத்துட் காண்க.

பிள்ளைப் பருவங்கள் - பருவம் (279) - **காப்பு** (279) - **தளர்நடைப் பருவம், பிள்ளைமைப் பருவம்** (282) - **பேதைமைப் பருவம்** (282) - **கழங்கு - பந்து - அம்மனை - ஊசல்** (281) - காப்பு - செங்கீரை - தால் - சப்பாணி - முத்தம் - வாரானை - அம்புலி - சிறுபறை - சிற்றில் - சிறுதேர் - என்பனவாக வகுத்துப் பிள்ளைக்கவிப் பிரபந்தம் பாடுதல் மரபு. பெண்பாற் பிள்ளைக்கவியில் மேற்கூறியவற்றில் கடைமூன் றொழித்துக் கழங்கு - அம்மனை - ஊசல் - என்பவற்றைக் கூட்டிப் பாடுதல் மரபு. "கருந்தடங்கண்ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருக் கழுமலமே" - என்பது ஆளுடையபிள்ளையார் தேவாரம். (பக்கங்கள் - ௩௮0 - ௩௮௧ - பார்க்க.) (தளர்நடை - ஒருவகைப்பருவம் போலும்)

புகலூர் - சோழநாட்டுத் தலங்களுளொன்று. அப்பமூர்த்திகள் திருவடியடைந்த தலம். நம்பியாரூரர் செங்கல் செம்பொன்னாகப் பெற்ற தலம். சரண்யபுரம் என்று வடமொழியில் கூறுப. தலவிசேடங் காண்க (பக் - ௩௧௮).

புகார் (403 - 404 - 408) - காவிரிப்பூம்பட்டினம்.

புத்தூர் (153) - **மணம் வந்த புத்தூர்** (169) - சடங்கவி சிவாசாரியாரது ஊர். "மணம் வந்த புத்தூர்" எனப் பன்னாள் வழங்கியது. இப்போது மணம் தவிர்ந்த புத்தூர் என வழங்கப் பெறுகின்றது. இது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முதலிற் குறித்திருந்த திருமணம் தவிர்ந்ததைக் குறிப்பதாகும். நம்பியாரூரரது ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்கிட்டு இறைவன் தடுத்தாட் கொண்டருளிய தலம்.

புலீச்சரம் (396) - இது சிதம்பரத்திலுள்ளதோர் சிவாலயம். வியாக்கிரபாதரால் பூசிக்கப் பெற்றது. திருநீலகண்டக் குயவனாருக்கு அனுக்கிரகித்த திருத்தலம். இளமை யாக்கினார் கோயில் என்ப. தலவிசேடங் காண்க (௬௮௨).

புற்றிடங் கொண்டவர் (100—136) - **புற்றிடங் கொண்ட புராதனர்** (271) - திருவாரூர்த் திருமூலத்தானத்தே புற்றினை இடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவர். வடமொழியில் வன்மீகநாதர் என்பர். வன்மீகம் - புற்று.

புனல் நாடு - சோழ நாடு.

புன்கூர் (261) - இது சோழ நாட்டுத்தலம். திருநாளைப்போவார், ஏயர்கோன் கலிக்காம நாயனார் தொண்டாற்றிய தலம். தலவிசேடங் காண்க (பக் - ௩௧௨).

பூங்கோயில் (134—135) - **பூங்கோயில் மேயபிரான்** (271) - திருவாரூரி லுள்ள சிவாலயத்திற்குப் பெயர்.

பூமகள் (53) - **நிலமகள்** (97) - பூமிதேவி எனவும், விட்டுணுவின் இருதேவிய ரில் ஒருவரெனவும் பெறுவர்.

பெண்ணை (228) - ஒருநதி. நடுநாட்டிற்கு வளந்தருவது. சிவபெருமான் பிரா கத்தின் வழி வந்தபடியால் பிணுகினி யென்று பெயருடையது. இதன்தென்பால் திருவெண்ணெய் நல்லூர் உள்ளது. வடபால் திருத்துறையூரிருந்தது. அது கால பேதத்தால் இப்போது தென்பக்கமாயது.

பேரம்பலம் (8) - **பேரம்பல மேரு** (250) - சிதம்பரத்தில் ஐந்து சபைகளில் (அம்பலங்களில்) ஒன்று. சிற்றம்பலத்திற்குக் கீழ்பாலின் உள்ளது. சோமாஸ்கந்த மூர்த்தி முதலிய உற்சவமூர்த்திகள் எழுந்தருளியுள்ள இடம். முன்னர் அநபாயச் சக்கரவர்த்தியால் பொன்வேயப்பட்டது.

பொன் மாளிகை (250) - தில்லையில் நடராசர் எழுந்தருளும் ஐந்து அம்பலங் களுள் ஒன்று. பொன்னம்பலம் என்பதும் வழக்கு.

மதி (27 - 307 - 311) - **நிலா** (253 - 308) - **திங்கள்** (55 - 245 - 280) - **இந்து** (252) - **மதியம்** (321) - சந்திரன். நவக்கோள்களில் ஒன்று. உலகுக்குத் தூய்மையும் இன்பமும் தண்மையும் தந்து காப்பவன். அமிர்த சொரூபமானவன். சிவபெருமானது இடது கண். பாற்கடல் கடைந்ததில் எழுந்ததென்பது புராணம். இறைவன் மதிசூடிய வரலாறு புராணங்களுட் பேற்றம்பெறக் கேட்கப்படும்.

மயிலாடுதுறை (262) - சோழநாட்டுத் தலங்களுளொன்று. அம்பிகை மயி லாக வுருக்கொண்டு இறைவனை வழிபட்ட தலம். இப்போது மாயவரம் என்பர். தல விசேடங் காண்க (பக் - ௩௧௩).

மருதம் (75) - வயலும் வயல்சார்ந்த இடமும் நிலனாக அமைந்த திணை. நானி லத்தொன்று. ஐந்திணைகளிலொன்று.

மலயம் (313) - பொதிகை மலை. அகத்தியர் திருக் கைலாயத்திலிருந்து தென்திசை போந்து தங்கி யிருக்கும் மலை. தென்றல் பிறக்குமிடம். திருநெல் வேலிச் சில்லாவிலுள்ளது.

மலாடர் (467) - மலையமானாட்டில் வாழ்பவர். மலையமான் நாடு மலாடு என மருவி வழங்கும்.

மலைநாடு (491 - 496) - சேரர்களது நாடு. மலைவளம் மிக்குடையது. சேரமான் பெருமாள் நாயனார் அரசுபுரிந்த நாடு. விறன்மிண்டநாயனார் அவதரித்த பேறுடையது.

மறலியூர்தி (113) - இயமனது வாகனம். எருமைக்கடா.

மனுவேந்தன் (98 - 112 - 134) - அநபாயச்சோழன் வழிமுதல். சூரியபரம்பரை யில் வந்தோர். திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டவர். மனுநீதி செலுத்து முறையானே மனுநீதிச் சோழன் எனப் பெயராக்கிக்கொண்டவர். திருநகரச் சிறப்புச் சுருக்கங் காண்க (பக் - கக௩).

மனுநீதி (100 - 102) - **தொன் மனுநூல்** (122) - சோழ மரபில் முந்தையாகிய **மனு** என்பவரால் வகுக்கப்பெற்ற அரசாங்க நீதிமுறைத் தருமநூல்.

மாணிகுழி (236) - இது நடுநாட்டுத் தலங்களுளொன்று. கருட நதியின் தென் கரையிலுள்ளது. வாமனாவதாரங் கொண்ட விஷ்ணுமூர்த்தி மாணிக்கம் வைத்துப் பூசித்த தலம். தலவிசேடங் காண்க (பக் - ௨௭௪).

மாரன் (290 - 319) - **அநங்கன்** (282 - 292) - **மதனர்** (287) - **காமன்** (310) - **மன்மதனர்** (322) - மன்மதன் என்றுங் கூறுவர். விஷ்ணுமூர்த்தியின் மனதிற் பிறந்த வன். காதலரிருவருக்கும் நடுநின்று நேயத்தைப் பெருக்குபவன். இவனது தேவி இரதி. இவனுக்குக், கரும்பு வில்; வண்டு நாண்; தாமரை - அசோகம் - மா - முல்லை - நீலம் என்னும் ஐந்து மலர்களும் பாணங்கள்; மீன் கொடி; இலஞ்சி மாலை; சோலை படைவீடு; மங்கையர் சேனைகள்; தென்னம்பாளை கவரி; தென்றல்

தேர் ; இருள் யானை ; கடல் முரசம் ; குயில் எக்காளம் ; சந்திரன் குடை ; மாலையும் இரவும் இவன் ஆட்சிக்காலம். தட்சிணாமூர்த்தியா யெழுந்தருளியிருந்த சிவபெருமான் மீது தேவர்களால் குமார சம்பவத்தின் பொருட்டுத் தனித்து ஏவப்பட்டு மலரம்பு சொரிந்தான். இறைவன் நெற்றிக் கண்ணால் பார்த்ததும் சாம்பராயினான். இவனது தேவி இரதி வேண்டலும், இறைவன் பார்வதியம்மையைத் திருமணம் செய்த காலத்துத் திருவருளால் உயிர்பெற்றெழுந்தான். இரதிக்கு மாத்திரம் உருவுடையவனாய், உலகருக்கு அநங்கனாய் விளங்குபவன்.

மாவலி (236) - சிவபெருமானிடம் பெருவரம் பெற்றுப் பெருவலி பெற்ற பேரரசன். இவன்பால் திருமால் வாமனனாய் மூவடி மண்ணிரந்து, பெற்று, இவனைப் பாதலத்தழுத்தி, அப்பழி தீரத் திருமாணிகுழியிற் சிவனைப் பூசித்தனர். இச்சரிதம் சிவஞானசித்தியார் என்ற ஞானசாத்திரத்தில் " தானமென் றிரந்துசெல்ல " என்ற பாட்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. முன்பிறவியில் எலியாயிருந்து, திருக்கோயிலிலிருந்த விளக்குநெய்யை யுண்ணும்போது, மூக்குச் சுட்டிடக், கனன்று, அபுத்தி பூர்வமாய்த் திரியைத் தூண்டிய சிவபுண்ணியங் காரணமாக இறைவனருளால் மூவுலகாளும் பேரரசு பெற்றவன். இச்சரிதம் "நிறைமறைக் காடு தன்னி னீண்டெரி தீபந் தன்னைக், கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட, நிறைகடன் மண்ணும் விண்ணு நீண்டவா னுலக மெல்லாங், குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே" என்று அப்பர் சுவாமிகளாற் பாராட்டப்பெற்றது.

மாறர் - மாறன் (439) - **மாறனார்** (440) - இளையான் குடிமாற நாயனார் புராணங் காண்க.

முருகன் (290) - குமாரக்கடவுள். என்றும் இளமையும் அழகுமுடையவர். சிவபெருமானது இளைய சேய். இவரது வரலாறு கந்தபுராணத்துட் காண்க.

முனைப்பாடி (147) - முனையரையர் என்ற பேருடைய சிற்றரச மரபினரால் ஆளப்பெற்ற நாடு. " நரசிங்க முனையரென் னும் நாடுவாழரசர்" என்னுமாட்சி காண்க. தற்காலம் ஏறக்குறைய, தென்னாறுகாடு சில்லா இந்நாட்டின் பரப்பாகும்.

மூலட்டானம் (270) - திருவாரூர்ப் புற்றிடங் கொண்டார் எழுந்தருளியிருக்கும் இடம். திருவாரூர்த் திருமூலட்டான மெனப்படும். தில்லையிற் பொன்னம்பலத்தின் வடபுறம் மூலஇலிங்கமூர்த்தி எழுந்தருளி யிருக்குமிடமும் இவ்வாறே பெயர் பெறும்.

மெய்ப்பொருளனார் (467—472) - அறுபான் மும்மைத்தனியடியாரு ளொருவர். சிவவேடத்தையே சிந்தை செய்யு மியல்பினர். ஆகமப்பிரியர். இராசராசதேவர் இந்நாயனாரது செப்புப்படிமத்தில் " தத்தா ! நமரே காண் என்ற மெய்ப்பொருளனார்" எனப் பொறித்துள்ளார். "இன்னுயிர் செகுக்கக் கண்டும் எம்பிரானன்பரென்றே நன்னெறி காத்தவர்". சரிதங் காண்க (பக் - ௩௦௮).

மேருச்சிலை (496—498) - மகாமேருமலையையே சிவபெருமான் திருபுரதகனத்தில் வில்லாகக் கொண்டனர் என்ப.

யாதவன் (24) - **துவரைக்கிறை** (24) - யதுமரபிற் பிறந்தவன் கண்ணன். துவாரகைக்கு அரசன். உபமன்னிய மாமுனிவராற் சிவதீக்கை செய்யப்பெற்றவன். " ஓதிய வாசுதேவர் " என்ற பாட்டில் இச்செய்தியை ஞானசாத்திரமாகிய சிவஞான சித்தியாரில் எடுத்துக் காட்டியிருத்தல் காண்க.

யோகம் - சைவபாதங்கள் நான்கனுள் ஒன்று. " மூக்கு ணம்புல னைந்துடனடக்கி மூல வாயுவை யெழுப்பிரு வழியைச், சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத் திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த், தக்க வஞ்செழுத் தோரெழுத் தருவாந் தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே, புக்கழுந்தின ரமதுநப் பெறுவார்; புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல் " - திருவாதவூரர் புராணம். இதனைத் தோழமார்க்கம் என்ப.

வகை (49) - தொகை நூலை வகைப்படுத்திக் கூறுவது. வகைநூல் என்பர்.

வானிழல் (9) - ஆகாயவாணி. இறைவனது அருளிப்பாடாகிய கேட்கப்படும் நிலையினை மேற்கொண்ட திருமேனி.

விஞ்சையர் (14 - 290) - ஒருவகைத் தேவச் சாதியார். கானம் வல்லவர்.

வியாக்கிரபாதர் - புலிக்காலன் (41) - தில்லையில் திருநடனம் காணும் முனிவருளொருவர். மத்தியந்தன முனிவர் புத்திரர். இவர் சிவபூசை கடைப்பிடித்துச் சிவபெருமானை நேரிற் றரிசித்து வந்தவர். சிவபூசைக்குப் பழுதில்லா மலர் எடுக்க நகங்களிற் கண்களும், மரம் வழுக்காமல் ஏறப் புலிக்காலும் கையும் பெற்றவர். வசிட்டரது உடன் பிறந்தவளை மணந்து உபமன்னியு முனிவரை ஈன்றவர்.

விறன்மிண்டநாயனார் (494—500—501)-அறுபத்துமூன்று தனியடியாரிலொருவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தவர். வேளாளர்; செங்கண்ணூர் க்ஷேத்திர மான்மியம் என்னும் மலையாள நூலின் முகவுரையில் "நாயர்" என்று கூறப்பெறுகின்றனர். நாயனார் என்பதனை மலையாளர் நாயர் என மருவி வழங்கினர் போலும். "நாயனை யடியானேவுங் காரியம்" - "நாயனு மடிமை நாட்டியதாகும்" என்ற வழக்குக்களும் காண்க. திருவேடத்தினில் உண்மை யன்புடையாராய்ப் பத்தி செய்பவர். திருத்தொண்டத்தொகையால் உலகு விளங்கவரும் பேறு தனக்குக் காரணர். "தியாகேசரும் புறகு" என்று கூறும் திண்மையுடையார். சரிதச் சுருக்கங் காண்க (பக் - கூ௩க).

விட்டுணுமூர்த்தி - நெடியோன் (18)-**மால்** (20—54—126—137)-**மாதவன்** (24)-**அரி**(73)-**வாமனன்** (236)-**செங்கணவன்** (236)-மும்மூர்த்திகளு ளொருவர். திதிக்கடவுளென்பர். நீலவர்ணமுடையராய், சங்கு சக்கர கதா கோதண்ட நாந்தகதாரியாய், இலக்குமி சமேதராய்த் திருப்பாற்கடற் பள்ளியுடையராய் வைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பர். சிஷ்டர்களின் அநுக்கிரகத்தின் பொருட்டும், துஷ்டர்களின் நிக்கிரகத்தின் பொருட்டும் பத்துப் பிறவி யெடுத்தவர். கருடனை யூர்தியாக வுடையவர். சிவபெருமானைத் திரிபுர தகன காலத்து இடபமாய்த் தாங்கியவர். வராகமாய் நிலந்தோண்டிச் சிவனாரது திருவடிகளைக் காண முயன்றவர். அயக்கிரீவனைக் கொன்றபின் சார்ங்கம் என்னும் வில்லின்மீது சார்ந்து உறங்குகையில் அவ்வில்லின் நாணற்றுத் தலையிழந்தமையால், இலக்குமி திருவாரூரில் இறைவனைப் பூசித்து மங்கலம் பெற்றதன் பயனாக மீண்டு மெழுந்தவர். மாவலிபால் மண்ணிரந்த சரிதம் முன்னர்க் கூறப்பட்டது. கிருட்டிணவதாரத்தில் சிவதீக்கை பெற்றுச் சிவபூசை செய்தவர். இராமாவதாரத்தில் இராவணன்சேனையைக் கொன்ற பழிபோக இராமேசுவரத்தில் இலிங்கந் தாபித்துப் பூசித்தவர். சிவபெருமான் சலந்தராசுரனைக் கொன்ற சக்கரத்தை வேண்டித் தினமாயிரந் தாமரைகளாற் சிவபூசை செய்து, ஓர் நாள் பூவொன்று குறையத், தன் கண்ணொன்றிடந்து அர்ச்சிக்கப், பெருமான் வெளிப்பட, அவரிடம் சக்கரமும் அதைத் தாங்கச் சக்தியும் பெற்ற பேராளர். இதனை "நீற்றினை நிறையப் பூசி" என்ற திருவீழிமிழலைத் திருநேரிசையிற் பாராட்டி யருளினர் அப்பர் சுவாமிகள். (எஞ்சிய பகுதிகள் அந்தந்தத் தொகுதிகளிலுள்ளவற்றைத் திரட்டி எழுதப் பெறும்.)

வீதிவிடங்கப் பெருமான் (130—276) - திருவாரூர்த் தியாகேசப் பெருமான். உளிபடாமல் இயன்ற திருவுருவுடையராயும் திருவீதியில் வருபவராயு முள்ளவர். திருவாரூரினின்றும் போந்து திருமால் மார்பகத்தில் வைத்துத் தியானிக்கத் திருப்பாற்கடலிற் பலகாலம் வீற்றிருந்தார். அங்கு நின்றும் இந்திரன் வேண்டிப் பெற்றுத் தேவலோகத்தில் வைத்துப் பல காலம் பூசிக்க இருந்தவர். பின்னர் முசுகுந்தச் சக்கரவர்த்தியால் மீண்டும் திருவாரூரில் எழுந்தருளி வீற்றிருக்கின்றவர்.

வீரட்டானம் (230 - சிவபெருமான் பிரமனது தலையொன்றினைக் கிள்ளியது - அந்தகாசுரனைச் சங்கரித்தது - திரிபுர மெரித்தது - தக்கயாக சங்காரம் புரிந்தது - சலந்தரனைக் கொன்றது - யானை உரித்தது - காமனை எரித்தது - இயமனை உதைத்

தது - என்ற எட்டுவீரங்கள் செய்த எட்டுத் தலங்கள். இவை முறையே திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக் குறுக்கை, திருக்கடவூர் என்பன.

வெண்ணெய் நல்லூர் (193—195—196) - **வெண்ணெய் நல்லூராய்** (194) - **வெண்ணெய் நல்லூர்ப் பித்தன்**(205) - *இங்குள்ள திருக்கோயிலுக்குத்* **திருஅருட்டுறை** *என்று பெயர். நம்பியாரூரரைத் தடுத்தாட் கொண்ட தலம். தடுத்தாட் கொண்ட நல்லூர் என்றும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இவ்வூரில் வழக்குவென்ற திருவம்பலம் குலோத்துங்கச் சோழராற் கட்டப்பட்ட வரலாறு கல்வெட்டுக்களிற் காணப்படும். தலவிசேடங் காண்க* (பக் - உ௫௩).

வேட்கோவர் (371—378—380—391—392) - **குலம்** (360·376) - *மண்ணுடையார், குயவர் என்பர்.*

வேதம் - **இருக்கு** (260) - **வேதவாரணம்** (340) - **மறைச்சிரம்** (351) - **அரு மறை** (354) - *இவை நான்கு. இருக்கு - எசுர் - சாமம் - அதர்வணம் என்பன. வடமொழியி லாக்கப் பெற்றன. இறைவன் இவற்றைப் பிரமனுக்கு உபதேசிக்கப், பிரமன் இருடி களுக்கு உபதேசித்தனர் என்பர். மந்திரரூபமாயும் தோத்திரரூபமாயும் உள்ளது.*

வேதாளம் (20) - *சிவபெருமானது சிவகணப்பூதப் படைகளில் ஒருவகை.*

வேளாண் குலம் (494) - *வேளாளர் மரபு. நில ஆட்சிக்குரிய மரபு. "வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும் தாளாளர்" என்று திருஞானசம்பந்த சுவாமிகள் போற்றியது அறிக. இவர்களது மரபு விளக்கம் திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணத்தினும், திருத்தொண்டர் புராண வரலாற்றினும் காண்க.*

இந்நூலின்

திருமலைச் சருக்கம் - தில்லைவாழந்தணர் சருக்கம் - இவைகளிற் கண்ட பெயர்விளக்கம் முற்றும்.

குறிப்பு :—*சிவபெருமான், உமாதேவியார், சரசுவதி, சூரியன், பிரணவம், சிதம் பரம், திருத்தொண்டர், இசைக்கலைப் பெயர்கள், நீதிவழக்குக் கலைப்பெயர்கள், சரியை, கிரியை, யோகம், மாறர், விட்டுணுமூர்த்தி, வியாக்கிரபாதர், குபேரன் முதலிய சில பெயர்கள் நூலிற் காணப்படாதவையாயினும், நூலுட் கண்டவற்றை அவ்வத் தலைப்பின்கீழ்த் தொகுத்து இலகுவிற் காண உதவுவன ; ஆதலின் அவையும் தரப் பட்டன.*



அருண்மொழித் தேவர் எனும்
ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள்
(சோழநாட்டுத் திருநாகேச்சுரத்திலே உள்ள
திருவுருவம்)

“ தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்ல பிரானெங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம் ”—சிவஞான சுவாமிகள்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

என்னும்

திருத்தொண்டர் புராணம்

முதற் காண்டம்

பாயிரம்

நடராசர் துதி

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். க

(இதன் பொருள்) *உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் - உலகங்கள் எல்லாவற்றாலும் உணர்தற்கும் ஓதுதற்கும் அரியவனாய்; நிலவு உலாவிய நீர்மலி வேணியன் - (அங்ஙனம் அரியவனாயினும் தன்னை யாவரும் எளிதில் கண்டு தரிசித்து உய்யவேண்டும் என்னும் கருணையினால்) மூன்றாம் பிறைச்சந்திரன் உலாவுதற்கு இடமாய்க் கங்கையைத் தரித்த சடையை உடையவனாயும்; அலகு இல் சோதியன் - அளவில்லாத ஒளியுரு வுடையனாயும்; அம்பலத்து ஆடுவான் - திருத்தில்லையில் திருச்சிற்றம்பலத்தினிடத்தே ஆனந்தத் திருக்கூத்து ஆடுகின்றவனாயும் உள்ள இறைவனுடைய; மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம் - அன்பர் உள்ளத்தே மலர்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்தி வணக்கம் செய்வோம்.*

(விளக்கவுரை) திருத்தொண்டர் புராணம் : *இறைவனுக்குத் தொண்டுசெய்யும் அடியவர்களது அடிமைத் திறத்தை விரித்துக்கூறும் பெருநூல் என்று பொருள். இது இந்நூலுக்கு ஆசிரியர் தந்த பெயர். பாயிரம் பத்தாவது பாட்டினுட் காண்க. இதனைப்* **பெரியபுராணம்** *எனக் கூறுவது உலகிற் பரந்த வழக்கப் பெயராம். செய்தற்கரிய செய்கை செய்த பெரியார் சரிதங் கூறும் நூலாதலின் இவ்வாறு வழங்கலாயிற்று.*

இது ஒரு பெருங்காப்பியம். அங்ஙனமன்றிப் பல சரிதங்கள் சேர்ந்த ஒரு கோவை எனச் சிலர் எண்ணுவர். அது சரியன்று. சுந்தரமூர்த்திகளைத் தலைவராகவும் பரவையார் சங்கிலியார் என்ற இருவரையும் தலைவியராகவும் கொண்டு அவர்கள் யிலையிலிருந்து ஒரு காரணம்பற்றிப் பூவுலகத்தில் அவதரித்து, மணந்து, உலகத்தார்க்கு

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களையும் காட்டி, உணர்த்தி, உய்வித்து மீளவும் திருக்கயிலை சேர்ந்தார்கள் என்பது காப்பியத்தின் உட்பொருள். இதில் தலைவன் தலைவியர் கூட்டம்—பிரிவு—முதலிய அகப்பொருளும், போர் முதலிய புறப்பொருளும், சூரியன் உதயம்—அத்தமனம் ஆகிய பொழுதின் சிறப்பும், பெரும் பொழுது சிறுபொழுது முதலிய பகுப்புக்களும், இன்னும் பெருங்காப்பிய உறுப்புக்கள் முற்றும் சிறப்பாய் அறியக்கிடக்கும். இது பெருங்காப்பியமாகும் விவரங்களை விரிவாக எனது சேக்கிழார் எனும் நூலிற் காண்க.

முதற் காண்டம் : இது இந்நூற் பெரும் பிரிவுகளிலே முதலாவது. ஆசிரியர் இந்நூலை இரண்டு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளார். நூலின் பெரும் பிரிவு காண்டம் எனப் பெறுவது வழக்கு.

பாயிரம் : இது நூலின் முகப்பில் உரைக்கப்படுவது. நூற்பெயர் - வழி - எல்லை - நுதலிய பொருள் முதலிய பொருள்களைக் கூறுவது பாயிரம் எனப் பெயர்பெறும். இதன் இலக்கணத்தை நன்னூல் முதலியவற்றிற் காண்க. " ஆயிரம் முகத்தா னகன்ற தாயினும் - பாயிர மில்லது பனுவ லன்றே " என்பது விதியாகலின் இப்புராணத்திற்கு முதலில் ஆசிரியர் பாயிர முரைத்து வைத்தார்.

உலகு என்பது உயர்ந்தோரைக் குறித்து நின்றது ; " உலகெனப்படுவது உயர்ந் தோர் மேற்றே " என்பதிலக்கணம்.

உணர்ந்து ஓதற்கு அரியவன் - உணர்தற்கும் ஓதுதற்கும் அரியவன். உணர்தல் மனத்தின் தொழில் ; ஓதுதல் - வாக்கின் தொழில். எனவே, உட்கரண புறக்கரணங்களாகிய கருவிகளின் தொழிலுக்கு அப்பாற்பட்டவன் என்பதாம். " மாற்ற மனங்கழிய நின்ற மறையோன் ", "சொற்பதங் கடந்த தொல்லோன்" (திருவாசகம்), "உணர்ந் தார்க் குணர்வரியோன் " (திருக்கோவையார்), " உரையின் வரையும் பொருளின் அளவும், இருவகைப்பட்ட எல்லையும் கடந்து " (பட்டினத்தடிகள் கோயில்நான்மணிமாலை) என்பனவாதி திருவாக்குகள் காண்க.

இங்குக் குறித்தது இறைவனது சொரூப இலக்கணம். இது சித்தாகிய அவனது அருவத் திருமேனி. உயிர்கள் தமது பசு பாச ஞானத்தால் எட்டுதற்கு அரியவன் என்பது. " அரியானை...........யார்க்கும் தெரியாத தத்துவனை......" என்று இந்த அம் பலத் தாடுவானை அப்பர் சுவாமிகள் எடுத்துத் துதித்த கருத்தும் காண்க.

நிலவு உலாவிய நீர்மலி வேணியன் - இது இறைவனது தடத்த இலக்கணங் குறித்தது. இஃது அவனுடைய உருவத் திருமேனி. அருவத் திருமேனியிலிருந்து உருவத் திருமேனி தாங்கி வருவது உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டு. நிலவும் நீரும் சடையிற் றாங்கிய வரலாறுகள் அவனது அருளைக் குறிப்பன. இவ்வரலாறுகளின் விரிவைக் கந்தபுராணம் முதலியவற்றிற் காண்க. உலவுந் தன்மை யுடைத்தாயிருந்தும் சாபத்தால் வந்த குறைநோய் காரணமாக உலவுதலையிழந்த நிலாவை உலவும் படி வைத்தான் ; ஓடுந் தன்மையுடைய நீரினை ஓடாமல் தங்கவைத்தான், என்று இச் செயல்களின் பெருமை குறித்தவாறு. " நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை - நிலமருவி நீரோடக் கண்டான் றன்னை " (வாகீசர்) என்பனவாதி திருவாக்குகள் காண்க.

உலாவிய என்பது இறந்தகாலங் குறிப்பதாலும் நிலவு, நிகழும்இக்காலத்தும் உலவுதலாலும் இது கால வழுவமைதியாமோ ? எனின் ஆசிரியர் முதற்பாட்டிலே வழுவமைதி அமைப்பாரல்லரே என்று சங்கை கொள்வார் சிலர். நிலா உலாவத் தொடங்கியதொரு முன் காலம். ஆதலின் இறந்த காலத்திற் கூறுதல் வழுவன் றென்க. உலாவிய என்பதனை உலவும் பொருட்டு என்ற பொருளில் வரும் செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சமாகக் கொண்டு, நிலா உலாவுந் தன்மை பெறும்

பொருட்டுத் தண்ணிய நீர்மை மலிந்த வேணி என்று உரைத்தலுமாம். உலாவிய என்ற வினை எச்சம் மலி என்ற வினை கொண்டது.

அலகில் சோதியன் - "சோதி" - ஈண்டு ஞானவொளி. இவ்வொளி, விளக்க விளங்கும் இல்லக விளக்காகிய சுடர் விளக்கும், பல்லக விளக்காகப் பலருங் காணும் ஞாயிறு முதலிய சுடர் விளக்கும், இந்திரிய அந்தக்காண ஆன்ம போதமாகிய ஆன்ம விளக்கும், அல்லவாய், இவை எல்லாவற்றையுங் கடந்து, தற்பிரகாசமாயும் பரப்பிரகாசமாயும் நிற்றலான் அளவில் சோதியாய், எவற்றிற்கு மேலாக நிற்றலாற் பரஞ்சோதியாய்த், தானே விளங்குதலாற் சுயஞ் சோதியாய், உள்ள பரஞானமான சிவஞானச் சோதி என்றறிக."—சுயப்பாக்கம் - சதாசிவ செட்டியார், B.A., அவர்கள் குறிப்பு. இது இறைவனது அருவுருவத் திருமேனியாம். "திகழ் ஒளியை" என்ற வாகீசர் திருவாக்கும் காண்க. **அலகில்** - அளவில்லாத, அளவிட முடியாத. பின்னர்த் தடுத்தாட்கொண்ட புராணம் 193-வது பாட்டில் "சோதியா யெழும் சோதியுட் சோதிய" என்ற இடத்து உரைக் குறிப்புப் பார்க்க. மேலே கூறிய அருவம் - உருவம் - அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளையும் தாங்கிய இறைவனே அம்பலத்திலே ஆடுகின்றவன் என்பார், இவற்றிற்கு அடுத்தபடியிலே **அம்பலத்தாடுவான்** என்று எடுத்துக் கூறினார். அம்பலமும் ஆடும் இயல்பும் பின்னர்க் கூறப்பெறும்.

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் ; அருவுரு வான போது
திருமேனி உபயங் கண்டோம் ; செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே"—**சிவஞானசித்தியார்.**

"மன்றி லானஎம் மியல்புனக் குரைக்கின் மாசி லாவுரு மூன்றவற் றருவம்
ஒன்று பேரொளி யொன்றரு வுருவ மொன்று தானரு ளுருவமென் றுணர்வாய்"
—**திருவாதவூரர்புராணம்**

முதலிய ஆதாரங்களைக் காண்க.

"'உலகெலா முணர்ந்தோதற் கரியவன்' என்பதனான், சொரூப சிவ வியல்பும், 'அலகில் சோதியன்' என்பதனாற் றடத்த விலய சிவவியல்பும், 'அம்பலத் தாடுவான்' என்பதனான் தடத்த அதிகார சிவவியல்பும், 'நிலவு லாவிய நீர்மலி வேணியன்' என்பதனான் தடத்த போக சிவவியல்பும் கூறப்பட்டமை யறிந்துகொள்க."—சுயப்பாக்கம் - சதாசிவ செட்டியார், B. A., அவர்கள் குறிப்பு.

இப்பாட்டிற்கு மேற்கூறியபடி அரியவன்—வேணியன்—சோதியன்—ஆடுவான் என்று நான்காகப் பகுத்து உரை கூறுதல் ஒன்று. இவ்வாறன்றி அரியவனாகிச் சோதியன் என்றும் வேணியனாகி ஆடுவான் என்றும் இரண்டாகப் பகுத்து நிரனிறையே கூட்டிப் பொருள் உரைத்தலும் ஆம். இங்ஙனம் கொள்ளும்போது அவனே தானாகி ஏகனாகி நின்று தன்மையிலே கருவி கரணங் கடந்து அறியப்பெறும் நிலை ஒன்றும், கருவி கரணங்களுடன் கூடிய அறிவினால் முன்னிலையில் அறியப்பெறும் நிலை ஒன்றும் குறித்தவாறு. "உணர்வி னோர்பெற வரும்சிவ போகத்தை யொழிவின்றி உருவின்கண், அணையும் ஐம்பொறி யளவினு மெளிவர அருளினை எனப்போற்றி" (திருஞான - புரா - 161) என்பதும் காண்க.

வணங்குவாம் - என்று உளப்படுத்திக் கூறியதனால் குருவின்மூலம் படர்க்கையில் அறியப்பெறும் நிலையுமாம்.

மலர் சிலம்பு அடி - அடியார் உள்ளத்தினிடத்தே மலர்கின்ற சிலம்பையணிந்த திருவடி. "மலர்மிசை ஏகினான்" என்ற திருக்குறளில் ஆசிரியர் பரிமேலழகர் "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தே - அவர்நினைந்த வடிவோடு விரைந்து சேறலின்" என்று கூறியதும் காண்க.

அடியார்களது குவிந்த உள்ளக் கமலங்களை மலர்த்தும் திருவடி என்றுமாம். மலரடி - சிலம்படி என்று தனித்தனிக் கூட்டுக. மலரைச் சிலம்புக்கு அடைமொழி யாக்கி மலர்கின்ற நாத உருவமாகிய சிலம்பு என்பதுமாம். சிலம்பு நாதத்தின் மூலம் தான் இருக்கும் இடமாகிய திருவடியை உணர்த்தி உயிர்களை வந்து அடையும்படி அழைக்கும் குறிப்பு. கழறிற்றறிவார் நாயனார்க்குத் தினந்தோறும் பூசைமுடிவிலே "பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலி யளித்"தமை காண்க. "திருச்சிலம்போசை ஒலிவழியே சென்று, நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற" எனும் திருவாக்கும் காண்க.

வாழ்த்துதல் - நாம் வாழும்பொருட்டு. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ் வான்" என்பது திருவாசகம். "நமச்சிவாய வாஅழ்க" முதலிய திருவாக்குகளும் திருப்பல்லாண்டு முதலிய அருட்பாக்களும் இக்கருத்தே பற்றியன.

"**வணங்குவாம்**" என்றதனால் **வணக்கமும்**, "**வாழ்த்தி**" என்றதனால் **வாழ்த்தும்**, "மலர்சிலம்பு **அடி**" என்றதனால் அத்திருவடிகளை எக்காலத்தும் மனத்தே பதித்த அடியார்களது அடிமைத் திறத்தைக் கூறுவது இந்நூல் என்று குறிப்பதாகிய **வரு பொருளுரைத்தலும்** பெற்றும். திருவடியையே பற்றுக்கோடாகக் கொண்டவர்கள் இப்புராணத்திலே கூறப்பெற்ற அடியார்கள். அதனாலேயே அவர்களுக்கு **அடியவர்** என்று பெயராம். அடியை வணங்கி அங்கு நிலைபெற்றவரை ஏத்துதல் மரபு. இதன் விரிவைப் பின்னர்த் தடுத்தாட்கொண்ட புராணம் 191 முதல் 194 திருப்பாட்டுக்களின் உரையிற் காண்க.

"**உலகெலாம்**" என்ற திருவாக்கு சேக்கிழார்பெருமானுக்கு நடேசப் பெரு மான் எடுத்துக் கொடுத்த முதல். இம்முதலினையே முதலாக வைத்துக்கொண்டு ஆசிரியர் அத்திருவருளின் வழியே இப்புராணம் பாடி முடித்தனர். இதனைத் திருத் தொண்டர் புராண வரலாற்றிலே உமாபதி சிவாசாரிய சுவாமிகள் விரிவாய்க் கூறி யருளியது காண்க. "அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த, திருவளர் ஒளிசூழ் திருச்சிற் றம்பலம்" என்றபடி இப்புராணமும் மறையே—வேதமே—யாதலால் இறைவன் தந்ததும் பிரணவ உருவமானதுமான இம்முதலைப் புராணத்தின் முதலாகிய இப்பாட்டிலும், "சோதி முத்தின் சிவிகை......உய்ய உல **கெலாம்**" (திருஞானசம்பந்த நாயனார் புராணம் - 216) என்ற இடையிலும், "என் றும் இன்பம்......நிலவி **யுலகெலாம்**" என்ற இறுதிப்பாட்டிலும் பதித்து வைத்த னர். அதுவேயுமன்றி அடியார்களிடையே திருவருள் வெளிப்படும் அரிய சிற்சில இடங்களிலும் அருமையாக வைத்துள்ளார். ஆங்காங்குக் கண்டுகொள்க.

உலகெலாம் என்பது பிரணவ உருவமுடையது. என்னை ? வாய்திறந்த (அங் காந்த) போதே பிறப்பது அகரமாதலாலும் அதுவே எல்லா எழுத்துக்கும் முதலான தாலும் அகரம் பெறப்பட்டது. உலகெலாம் என்றதில் முதல் உகாரமும், இறுதி மகர ஒற்றும் ஆக அகர உகர மகரங்களாகிய வியட்டிப் பிரணவ உருவம் இப்புராணத் திருமுறையாம் என்க.

தகர ஆகாயமாகிய சித் ஆகாயத்தைக் குறிப்பதும் "எல்லையிலா மறைமுதல் மெய் யும்" ஆகிய தகரத்துடன் (த்) கூடிய ஓங்காரத்திலே "**தோடுடைய**" என்று தொடங் கிய தமிழ் வேதம் "நிலவி உலகெலாம்" என்றதில் உள்ள **மகர** ஒற்றுடன் (**ம்**) கூடித் தேவார முதற் பெரியபுராண மிறுதியாக உள்ள சைவத் திருமுறை பன்னிரண்டும் மறையேயாய்ப் பிரணவ உருவமுடையன என்பதும் காண்க.

"அரியவன்—வேணியன்—சோதியன்—ஆகி ஆடுவான் அடி வணங்குவாம்" என்று வினைமுடிவு செய்க. உயர்ந்தார்க்கும் அரியவனாயினும் தாழ்ந்தார்க்கு எளியவ னாய்த் தன்னை விளங்கக் காட்டும் ஒளியுடன் வெளியிலே ஆடுவான். "ஆயுநுண்

பொருள் ஆகியும் வெளியே அம்பலத்து நின்றுவோர்" (இயற்பகை - 4) எனப் பின்னர் கூறுவதும் காண்க. "ஓதியாரும் அறிவா ரில்லையோதி உலகெலாம், சோதியாய் நிறைந் தான் சுடர்ச் சோதியுட் சோதியான் " (தேவாரம் - திருஞான - இந்தளம் - திருவை யாறு - 7) என்ற வேதப்பிரமாணமும் காண்க.

மலர் சிலம்படி என்பது வினையுருபு தொக்கதென "நாமேவு மம்முதலொ டொன்றவினை யுருபுதொக, நான்கனடி யாதிசெய்து, நாற்சீரி னுனெறி விளக்கி யொளிர் சேக்கிழார், நற்றமிழ்க் கவிதழையவே" என்று திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழில் பாராட்டியதைக் காண்க. இக் கலிவிருத்தத்தின் நான்காமடி நாற்சீருடையதாய் ஒவ்வொரு சீரும் சைவாகமங் களிலோதிய நாற்பாதங்களாகிய ஞானம், யோகம், கிரியை, சரியை எனும் நெறிகளை விளக்கும் தன்மையதெனப் போற்றப்பட்டது. இவையே நன்னெறி, தோழர்நெறி, மக்கள்நெறி, அடிமைநெறி என்று கூறப்படும்.

இன்னும் இப்பாட்டினுரை விரிக்கில் பெருகும். அறிந்தார்வாய்க் கேட்டுணர்க. இத்திருப்பாட்டினை அடியொற்றியே கம்பர் தமது இராமாயணத்தில் "உலகம் யாவை யும்" என்ற கடவுள் வணக்கச் செய்யுள் கூறியிருத்தலும் காண்க. (1)

2\. ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாந டஞ்செய் வரதர்பொற் றுடொழ. உ

இப்பாட்டினால், மேலே 'மலர் சிலம்படியை வாழ்த்தி வணங்'கியதன் பயன் கூறியவாறு:

(இ - ள்) ஊன்...பிறவியே - ஊன் பொருந்திய உடம்புடன் சேர்ந்த மானிடப் பிறவியே; தான்...சாரும் ஆல் - தான் பெற்ற உறுதிப் பொருளை அடையும்; தேன்... தில்லையுள் - தேன் சேர்ந்த மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த தில்லைப்பதியிலே; மாநடம்...தொழ - பெருங் கூத்தைச் செய்கின்ற வரதனுடைய பொற் பாதங்களை வணங்க; தாள் தொழப் பிறவி உறுதியைச் சாரும் - என்று கூட்டி முடிவு செய்க.

(வி - ரை) ஊன் அடைந்த உடம்பின் பிறவி - மற்றப் பிறவிகளினின்றும் பிரித்து ஊனினால் ஆகிய விசேட உடம்பு பெற்ற மானிடரை உணர்த்திற்று. மரம் செடி முதலிய தாவரங்களும் உடம்பும் பிறவியும் ஆம். ஆயினும் அவ்வுடம்புகள் ஊனடைந்த உடம்புகளல்ல. மற்ற ஆடு முதலிய உயிர்ப் பிராணிகளும் ஊனடைந்த உடம்புடையன. அவற்றுள் சிருட்டிக் கிரமத்திலே மேலே வந்த சிறந்த அறிவுக்கு இடமாகிய ஊன் பொருந்திய உடம்பு மானிட உடம்பே யாதலின் இங்குக் குறித்தது மானிடப் பிறவியை என்க. இவ்வாறு அன்றி **ஊன்** உடம்பிற்குப் பொது இலக்கணமாகக் கொண்டு சிறுபான்மை ஈ (ஈங்கோய்மலை), எறும்பு (எறும்பியூர்), கழுதை (கரவீரம்), முதலியவை சிவபெருமானைப் பூசித்த செய்தியையும் அடக்கி உரைத்தலுமாம். ஊன் அடைந்ததே யாயினும் - உறுதியைச் சாரும் என்று உம்மை விரித்துரைக்க. ஆல் - உறுதி குறிக்கும் அசைமொழி.

உடம்பின் பிறவி - உடம்பிற்குள் வந்த உயிர் எடுத்த பிறவி.—**தான் அடைந்த** - அந்தந்த உயிரின் பக்குவ நோக்கிப் பிறவி தரப்பெற்றதனுலுண்டாகிய.—**உறுதி** - பிறந்த பயன். தானடைய நின்ற உறுதி என்று முரைப்பர்.

"மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காக அன்றே

வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ''
—சிவஞான சித்தியார்.

என்ற சாத்திரமும் காண்க.

இறைவனுடைய அடியைத் தொழுதலே மனிதர் பிறந்து அறிவு படைத்ததன் பயனாகும் என்பது

"கற்றதனு லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

எனும் திருக்குறள் முதலிய பிரமாணங்களாலும் அறிக.

"கால்கொடுத் திருகை ஏற்றிக் கழிநிறைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைத்துங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட னாரே"

எனும் தேவாரத்திலே அப்பர் சுவாமிகள் மனிதர்கள் ஊனடைந்த உடம்பின் பிறவி தானடைந்த தன்மையை விரித்துக் கூறுவது காண்க. **ஊன்** என்று தொடங்கியது அதன் உண்மைத்தன்மை காட்டி வெறுக்கை தோன்றற்காக.

தொழு...சாரும் - தொழப்பெறுமானால் பிறவி உறுதியைச் சாரும்.—**வரதர் பொற்றாள்** - வரதருடைய மாநடஞ்செய் பொற்றாள் என்று நடஞ்செய்தலைத் தாள் உடன் கூட்டி யுரைத்தலும் ஒன்று. **வரதன்** - வரங் கொடுப்பவன். **பொன்தாள்** - அழகிய பாதம். இது தூக்கிய திருப்பாதம்.

"......எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று இதனையே அருளினார் அப்பர் சுவாமிகள்.

ஊன் அடைந்து வெறுக்கத் தக்கதேயாயினும் இக்காரியம் செய்யுமாயின் விரும்பத்தக்கதாம் என்றபடி.

தேன் அடைந்த - தேன் அடைந்த மலர் - தேன் அடைந்த தில்லை - தேன் அடைந்த நடம் - தேன் அடைந்த பொற்றாள் - என நால்வழியும் பிரித்துக் கூட்டி உரைத்துக்கொள்ளலாம்.

"அந்த இடைமருதில் ஆனந்தத் தேன்இருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ"

என்பது திருவாசகம். ஆதலின், நடராசரையே தேன் என்றுரைத்தல் ஒன்று. "இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து" என்று பின்னர்க் கண்ணப்ப நாயனார் புராணத்துக் குறிப்பிடுதலும் காண்க.

"..................ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"

என்று திருவாசகத்திற் காண்கின்றபடி தேன் அடைந்த (நடஞ்செய்) தாள் என்பதுமாம்.

ஊன் - ஊனம், குற்றம் என்று பொருள்கொண்டு மலமாகிய குற்றத்தினால் உயிர் ஓர் உடம்பினுட் பிறந்த பிறவி என்றுரைத்தலுமாம்.

முதற்றிருப்பாட்டிலே 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்றார். அதன் பயன் யாது? என்பார்க்கு அந்த நடஞ்செய் பொற்றாள் தொழ பிறவியே உறுதி சாரும். வேறு என்னதான் கிடையாது? என்று இப்பாட்டினால் விடைகூறியவாறு. (2)

3. எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம். ௩

இது விநாயக வணக்கம்

(இ - ள்) எடுக்கும் மாக்கதை - உயிர்களை மலமாகிய சேற்றிலிருந்து எடுக்கும் தன்மையுடைய இப்பெரிய புராணம்; இன் தமிழ்ச் செய்யுளாய் - இனிய தமிழ்ப் பாட்டுக்களாக; நடக்கும்...செய்திட - இனிது நிறைவேறி உலகில் நிலவுகின்ற மேன்மையை நமக்கு அருள்செய்யும் பொருட்டு; தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடி - ஐந்து தடக்கைகளையும் தாழ்ந்த செவிகளையும் நீண்ட முடியினையும் உடைய; கடம் களிற்றைக் கருத்துள் இருத்துவாம் - மதயானை முகமுடைய விநாயகக் கடவுளை மனதிலே பதிய வைப்போம்.

(வி - ரை) எடுக்கும் மாக்கதை - ஆன்மாக்களைப் பாவங்களாகிய குழியிலிருந்து மேலே எடுத்து உயர்த்தவல்லதாய்ச் சரிதங்களிற் சிறந்தது. "என்னை இப்பவத்திற் சேரா வகை **எடுத்து**" என்ற திருவாக்கும் காண்க.

எடுக்கும் - மேற்கொண்டு தொடங்குகின்றதாகிய என்றுரைத்தலுமாம். **மாக்கதை**- பெரிய கதை; பெரியபுராணம் என்க. இப்புராணம் பல சரிதங்களின் கோவையன்று என்பதும் இஃது பெருங்காப்பியமாய்த் தொடர்ந்த ஒரே சரிதம் என்பதும் முன்னரே கூறப்பெற்றது. ஆதலின் மாக்கதை என ஒருமையிற் கூறியவாறு. இதனுள் அங்கமாக எல்லாத் தொண்டர் சரிதங்களும் பொருந்துவன ஆதலின் மாக்கதை என்று ஒருமையிற் கூறியவாறுமாயிற்று. இதுவும் ஆசிரியர் கருதிய பெயரே என்பர்.

செய்திடத் தடக்கை ஐந்துடைத் தாழ்செவி. செய்திட - செய்யும் பொருட்டு என்று உரைக்க. அன்றியும், செய் - செய்கின்ற; திட - தட - கை - திடமுடைய பெருங்கை என்றுரைத்தலுமாம். அடியார்களது வலிய வினைகள் யாவையும் போக்கி அருள் புரிவதற்குத் திடமும் பரப்பும் பொருந்திய ஐந்து கைகளும், அவர் குறை கேட்டருளச் சித்தமாய்த் தாழ்ந்த செவியும் உடையார் என்க.

இஃது, தொடங்கி எடுத்துக்கொண்ட நூல் இடையூறு இல்லாமல் இனிது முடியும் பொருட்டு நூன்முகத்திலே செய்யப்பெறும் விநாயக வணக்கம். இந்நூலுக்கு "மெய்ம்மொழி வானிழல் கூறிய பொருளாய்" "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுத்தார் நடராசர். ஆதலின் அவரை முதலில் வணங்கி அதன்பின் நூல் தொடங்குகின்றார் ஆதலின் இதுவே நூன்முகமாயிற்று.

அன்றியும் சாக்கிரத்திலே அதீதத்தைப் புரிய வல்லவர் ஆசிரியர் சேக்கிழார் பெருமான். ஆதலின் அவர்க்கு இடையூறு சிறிதும் அணுகாது என்பதை அறிந்து வைத்தாராயினும் ஆன்றோர் ஆசாரம் பாதுகாப்பதற்கும் உலகுக்கு அறிவுறுத்தற்குமாக இங்கு விநாயக வணக்கம் செய்தார் என்பதுமாம். மேலும் ஒளி வட்டத்தின் உள்ளே விளங்கும் நடேசப் பெருமானை (பிரணவ உருவமுடையவராக) வணங்கவே எல்லா மூர்த்திகளையும் வணங்கியபடியாம். விநாயகப் பெருமான் தம்மை நினைப்பவர்களுக்கு வரும் எல்லா இடையூறுகளையும் போக்கி அவர்கள் எடுத்த காரியங்களையும் இனிது முற்றுவிக்கும் தன்மை யுடையவர். அது இறைவனது திருவாணை.

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்

அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதிநீ"

என்பது கந்தபுராணம். இன்னும் விநாயகர் வரலாறுகளைக் கந்தபுராணத்துட் காண்க. விக்கினங்களை எல்லாம் (இடையூறுகளை) போக்குகின்றவராதலின் விக்கின விநாயகர் என்று அவருக்குப் பெயராயிற்று. "குமரனும் விக்கின விநாயகனும்" என்பது தேவாரம்.

தடக்கை ஐந்து - பண்ணியம் (மோதகம்) ஏந்தியது ஒருகை. இதனைத் தமக்காகப் பயன்படுத்திக் கொள்வர்; ஒரு கை இரத்தின கலசம் ஏந்தியது; இதனைத் தந்தை தாயர்க்கு உபசாரத்தின் பொருட்டு ஆக்குவர்; ஒரு கை தமது ஒடித்த கொம்பினைத் தாங்கியது. இதைக் கயமுகாசுரனைக் கொன்று தேவர்களுக்கு அருள்புரியப் பயன் படுத்தினர். மற்ற இரண்டு கைகள் பாசமும் அங்குசமும் தாங்கியவை. இவ்விரண்டு கைகளையும் உயிர்களைக் கட்டுப்படுத்தும் ஆணவமாகிய மத யானையை அடக்கி உயிர்களைக் காப்பதற்காகப் பயன்படுத்துவர். இவ்வாறு தமது கைகள் ஐந்தில் மற்றவர்களுக்கு ஒவ்வோர் கையும் கருணையினால் உயிர்களுக்காக இரண்டு கைகளையும் வைத்தார் என்று இவரது கருணைப்பெருக்கைக் கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்திலே "பண்ணிய மேந்தும் கரந்தனைக் காக்கி" என்று பாராட்டியிருத்தல் காண்க.

கடக்களிறு - கடம். யானைக்கு உரியது மூன்று மதம் - இங்கே விநாயக மூர்த்திக்குத் தலை ஒன்றுமே யானை உருவுடையதாதலால் கன்னமதம் கபோலமதம் எனும் இரண்டுமே கொள்ளப்படும். பெரும்பான்மைபற்றி மும்மதத்தன் என்று உபசரிப்பதும் வழக்காம். முருகப்பெருமானுடன் வள்ளிப்பிராட்டியாரைச் சேர்த்தற் பொருட்டு யானை உருவத்தோடு எழுந்தருளியபோது மும்மதத்தன் என்ற பேர் முழுதும் பொருந்த இருந்தமையும் உணரப்பெறுவதாம்.

இன் தமிழ் - இனிமை என்ற பெயரும், இனிய பொருளும் உடைமையினால் **இன் தமிழ்** என்றார். சொல்லாலும் பொருளாலும் இனியது. சொல்லால் இனிமை இலக்கணங்களாலும், பொருளால் இனிமை இறைவனைச் சுட்டிக் காட்டுகின்ற இயல்பாலும் உணர்க. **இன் தமிழ்** என்றும் **இன் செய்யுள்** என்றும் கூட்டலுமாம். (3)

வேறு

4. மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே. ச

இது திருக்கூட்ட வாழ்த்து

(இ - ள்) மதிவளர்...உளாரை - பிறை வளர்தற்கு இடமாகிய சடையையுடைய திருச்சிற்றம்பலவாணரை; முன் துதி செயும் நாயன்மார் - நினைந்து துதித்துச் செயல் செய்யும் நாயன்மார்களுடைய; தூய...பேரவை - தூய சொன்மலரின் நலத்தை அனுபவிக்கும் தூயவர்கள் நிறைந்த அடியார் பெருந் திருக்கூட்டமானது; விதிமுறை - இறைவன் ஆணை வழியே; உலகினில் விளங்கி வெல்கவே - உலகில் விளக்கமடைந்து வெற்றி பெறுவதாக.

(வி - ரை) **மதிவளர் சடை** - மதியை வளரச்செய்து இடமும் கொடுத்த சடை. மதிவளர் மன்றுளார் எனக் கூட்டித் தம்மை யடைந்தார்க்கு நாளுநாளும் நல்லறிவு வளரச்செய்யும் இறைவன் என்றுரைத்தலுமாம். ஆணவமல மறைப்பிலே கிடக்கும்

உயிர்களுக்கு இறைவன் நல்அறிவு விளக்கம் செய்து தன்னை அடையும்படிச் செய்கின்றான் என்பது சாத்திரமாம். "நல்லறிவையும் வகுத்து" என்றார் தாயுமானார்.

மூன் துதி செயும் - முன் - நினைக்கின்ற, துதி - துதிக்கின்ற, செயும் - செய்கின்ற என மூன்றாகப் பகுத்து மனம் வாக்குக் காயம் என்ற மூன்றாலும் பணிசெய்கின்ற நாயன்மார் என்க. மூன் - முன்னே என்று உரைத்தலும் ஒன்று. அடியவர்கள் தேவர்க்கும் ஏனைய எல்லாருக்கும் முன்னே சென்று நின்று துதிக்கும் உரிமையுடையவர். "தொண்டர்கள்பின் உம்பர்குழாம் மல்குதிருக் காளத்திமாமலை" என்பது திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 343. இப்பொருளில் துதிசெயும் - துதிக்கும் என்க.

நாயன்மார் - தலைவர்கள். அடியார்கள். சிவபெருமானது திருவடிசம்பந்தமுடையவர்களே ஏனை யாவர்க்கும் தலைவராவார் என்ற உண்மைப்படி அடியவர்களே நாயன்மார் (தலைவர்) என்று பெயர்பெறுவர். நாயனார் என்பது எல்லார்க்குந் தலைவராயினமை பற்றிச் சிவபெருமானுக்கே உரிய பெயர். அவர் பெயர் அவரைச் சார்ந்த அடியவர்க்குமாயிற்று.

"அழகிது நாயனீரே அமுதுசெய் தருளும்" என்றார். (கண் - புரா - 125.) "அயவந்தி யமர்ந்த நாயனாரையும் அருச்சனை புரிந்திட நயந்தார்" (திருநீலநக்க நாயனார் - புரா - 7.) "நாயனு மடிமை நாட்டிய தாகும்" (அகத்தியர் தேவாரத் திரட்டு.) "தில்லை நாயனாரை நயந்துரை செய்தன" (சேதிராயர் திருவிசைப்பா - 10.) முதலிய திருவாக்குகள் காண்க.

புனிதர் - உள்ளும் புறம்பும் தூய்மையுள்ளவர்கள். "மாசிலாத மணிதிகழ் மேனிமேற், பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்" (திருக்கூட்டச் சிறப்பு.) "அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்பது குறள். இராசத தாமத குணங்களின் தொழில் ஒழிந்து சத்துவ குணத் தொழில் மிகுந்தவர்கள்.

நாயன்மார் தூய சொல் மலர் போதி நலன் நுகர்தருத லாவது - நாயன்மார்கள் அருளிய தூய தேவாரம் திருவாசகம் முதலிய தூய சொற்களாகிய மலர்களிலே பொதிந்த நலமாகிய சிவபெருமானது புகழ்ச் சிறப்புக்களை எண்ணி எண்ணித் திளைத்து அனுபவித்தல். **மலர்ப்போதி** - மலர்களாகிய சுமைகளினுடைய என்று உரைத்தலுமாம். பொதி - சுமை. "அப்பொதி கொடுப்பக் கொண்டு" (குங்கிலியக்கலயர் புராணம். 12.) நாயன்மார்களைப் பற்றிய தூயசொல் என்றுரைப்பினும் அமையும். துதிசெயும் நாயன்மாரும் அந்தத் துதிகளாகிய தூய சொன்மலர் நலனுகர் புனிதரும் நிறைந்த பேரவை என உம்மைத் தொகையாக்கி உரைத்தலுமாம். நுகர்தரு - ஒரு சொல். அதை (நுகர் புனிதர் - தரு புனிதர் என) இரண்டாக்கித் தாமும் நுகர்ந்து பிறர்க்கும் தரும் புனிதர் என உரைக்கினும் அமையும்.

பேரவை - அடியார்களது திறங்களை அனுபவிக்கும் பெருஞ் சபை. பெருந் திருக்கூட்டம் - இச்சபை இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் முக்காலத்தும் நிகழ்வதாதலாலும் அளவின்மையாலும் பெருஞ் சபையாயிற்று. நுகர்தரு புனிதர் என மூன்று காலத்துக்கும் பொருந்தும் எச்சத்தாற் குறித்ததும் காண்க. ஆதலின் பேரவை என்றார். அளவின்மை வரும் பாட்டிற் காண்க. இச்சபை எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழும் தன்மை

"மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்........." என்பதனாற் காண்க.

—**அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்**

2

விளங்கி வேல்கவே - விளக்கமும் வெற்றியும் பொருந்துவதாக என்க. விளக்கம் பெறுதல் உலகத்தாராற் போற்றப் பெறுதல்; வெற்றி பெறுதல் - மேலோங்கி நிற்றல். "வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க" முதலாகத் திருவாசகத்திலே இறைவனது திருவடிகள் வெல்க - வெல்க என்று பன்முறையும் வாழ்த்திப் போற்றியது காண்க.

வேறு

5. அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாவடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட வுரைப்பரி தாயினும்
அளவில் ஆசை துரப்ப வறைகுவேன். ௫

இதுமுதல் மூன்று திருப்பாட்டுக்கள் அவையடக்கம்.

அவையைத் தன்னுள்ளே அடக்குதல். தன்னைத் தாழ்த்தலால் அவை அடங்குமென்பது. "வலிதன்றே தாழுந்துலக்கு" என்ற கருத்தும் காண்க.

(இ - ள்) அளவு...கூறுகேன் - அளவற்ற பெருமைகளை யுடையார்களாகிய அளவில்லாத அடியார்களது புகழ்களை எவ்வாறு எடுத்துச் சொல்ல வல்லேன்; அளவு கூட உரைப்பு அரிது - அவற்றை அளவு கூடும்படிச் சொல்லுதல் அரிது; ஆயினும் - இருந்தபோதிலும்; அளவு இல் ஆசை துரப்ப அறைகுவேன் - (என் மாட்டாமையை அறிந்து தடுத்தேனாயினும் தடுக்க ஒண்ணாதபடி) அளவற்ற ஆசை (என்னைச் சொல்வாயாக என்று) துரப்பதனாலே சொல்லத் துணிகின்றேன்.

(வி - ரை) அளவிலாத பெருமை - மேற்பாட்டிலே "தெரிவரும் பெருமை", "பொருவருஞ் சீர்" என்று விதந்து பேசப்பட்டது. இப்பெருமைகளின் விரிவைப் பின்னர்த் 'திருக்கூட்டச் சிறப்பு' என்ற பகுதியிற் காண்க. பெருமை - செயற்கரும் செய்கை செய்வது.

அளவிலாசை - பேராசை. வருகின்ற பாட்டில் பெருநசை என்பது காண்க. தனது தகுதிக்கு மீறிய செயல் செய்வேன் என்று எழும் ஆசை.

துரப்ப - தூண்ட. தூண்டுதலினால் சொல்லப் புகுந்தேன்.

அளவு கூட - அளவு கூடும்படியாக; அளவிட்டு - அளவுபடுத்தி என்பது. (5)

6. தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தண்கட லூற்றுண் பெருநசை
ஒருசு ணங்கனை ஒக்கும் தகைமையேன். ௬

(இ - ள்) முற்றப் பெருகு...உண் - பெருத்த அமிர்தமாகிய பாற்கடலை ஊற்றுக் காண உண்ணவேண்டும் என்கிற; பெருநசை...தகைமையேன் - பேராசை கொண்டதொரு நாயினைப் போல்கின்ற தன்மை யுடையேன் யான்; ஆதலின், தெரிவு அரும் பெருமை திருத்தொண்டர்தம் - அறிதற்கரிய பெருமை வாய்ந்த திருத்தொண்டர்களுடைய; பொருவருஞ்சீர் புகலலுற்றேன் - ஒப்பற்ற சீர்களை எடுத்துச் சொல்ல முற்படுகின்றேன்.

(வி - ரை) முற்றப் பெருகு - இதற்குமேற் பெரிதில்லை என்று அளவு மிகவும் பெருகிய.

கடல் ஊற்று உண் பெருநசை - சிறு ஊற்றை உண்டு வற்றச்செய்து விடுவது போலே கடலாகிய இதனையும் (ஊற்றுக்காண) உண்டு வற்றச்செய்து விடுவோம் என்ற பேராசை. சிறிது சிறிதாக நக்கி உண்பதல்லாமல் ஒரு சேர உண்ண முடியாததால் நாயைக் கூறியவாறு. பேராசையும் அதனாலே விளங்கும் - மேற்பாட்டில் அளவில் ஆசை என்றமை காண்க. இதனையே கம்பர் "பூசை முற்றவும் நக்குபு புக்கென" என்றமை காண்க.

ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன் - சுணங்கன் - நாய். நாயை ஒக்கும் தன்மையுடையேன். நாயைப்போல என்று உவமித்தார் - நாயினேன் என்று உருவக மாகக் கூறாது உவமமாகக் கூறினர். கட்டுப்பட்ட காலம் தவிர மற்றைக் காலத்திலே மலமருந்துதல் முதலிய துர்க்குணமுடையது நாய். மனிதர் நற் கூட்டத்தின் நீங்கிய உடன் இழி செயல் செய்வர் - நாயாயிருந்தால் அந்த இழிகுணம் அதன் இயல்பென் பர். நாய் அல்லாதிருந்தும் அதுபோன்ற இழிகுணமுடைமை மிக்க இழிவு என்பார் உருவகமாக்காது உவமமாகக் கூறினர் போலும்.

தேர்வரும் பெருமை - பின்னர்த் திருக்கூட்டச் சிறப்பில் காண்க. "மண்பா தலம்புக்கு......"; "வானந்துளங்கிலென்........."; "எங்கெழிலென் ஞாயிறு"; "வடகோ டுயர்ந்தென்ன......" முதலிய திருவாக்குகளிலும் காண்க.

தொண்டர் - தொண்டு செய்வோர். இறைவனுக்கும் அடியார்க்கும் பலவகையா லும் அடிமைசெய்தலைத் தவிர வேறு ஒன்றும் செயல் செய்யாதவர்.

தண்கடலூற்றும் என்று பாடமாயின், ஊற்றும் - கவிழ்க்கும் எனப் பொருள் கொள்க. கடலையே கவிழ்க்கும் பேராசை என்க. (6)

7. செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவரும் கொள்வரால்
இப்பொ ருட்கென் உரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால். எ

(இ - ள்) செப்பல்...சிறப்பினால் - சொல்லாற் பெறப்படும் பொருள் சிறந்ததானால், அதனைச் சொல்லும் சொல் சிறந்ததல்லாவிட்டாலும் அதுபற்றி யிகழாது பொருளின் சிறப்பையே நோக்கி; அப்பொருட்கு...கொள்வர் ஆல் - அப்பொருளைச் சொல்லும் சொல்லை யாவர்களும் கைக்கொள்வர்; (அதுபற்றியே) இப்பொருட்கு...ஆயினும் - இதனுள்ளே குறித்த அடியார் புகழ்களாகிய பெரும்பொருளுக்கு எனது சொல் சிறி தேயானாலும்; மெய்ப்பொருட்கு...மேன்மையால் - உண்மைப் பொருளையே உணரும் உரிமையுடைய பெரியோர் இதனை அந்த மேன்மையே கருதி யிகழாது கைக்கொள்வர்.

(வி - ரை) இப்பாட்டில் முதலிரண்டடிகளிற் கூறியது ஒரு பொது உண்மை. அவ்வுண்மையைப்பற்றி என்உரையும் கொள்வர் என்று அவை அடக்கம் கூறியவாறு.

செப்பலுற்ற பொருள் - ஒருவன் சொல்லப்புகுந்த பொருள். இவ்வாறன்றிப் பொருள் என்பதை மக்கள் என்று கொண்டு, மக்களின் சிறப்பு நோக்கி அவர் வாயில் உரைக்கும் பாச்சி - சோச்சி முதலிய உரையும் கொள்ளுவர் என்றுரைப்பாரு முளர். "தம்பொருள் என்ப தம்மக்கள்"—**குறள்.**

மெய்ப்பொருட்கு உரியார் - உண்மை காணும் விருப்புடைய பெரியோர். பிறர் (பொய்ப்பொருள் கருதுவோர் முதலிய பிறர்)கொள்ளாவிடினும் இவர் கொள்வர் என்க.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார்—தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்" என்பது.—**சிவஞானபோதம்.**

மேன்மையால் - பொருளின் மேன்மையால் என்க. தங்கள் மேன்மையால் என்றுரைப்பினுமாம். **அப்பொருட்கு உரை** - அப்பொருளை உரைக்கவந்த உரை. உரை பொருளுக்கு ஏற்பத் தகுதியற்றதாயினும் என வருவித்துரைக்க.

இப்பொருட்கு - இந்தப் புராணத்திற் போந்த பொருளுக்கு. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற திருக்குறட் சொல்லையும் கருத்தையும் இங்கு வைத்து நோக்குக. (7)

8. மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்றிருப் பேரம்பலஞ் செய்ய
தூய பொன்னணி சோழனீ டூழிபார்
ஆய சீர்அந பாய னரசவை. ௮

(இ - ள்) சேயவன்...சோழன் - செம்மேனி எம்மானாகிய நடராசப் பெருமானுடைய திருப்பேரம்பலமாகிய சபையைப் பொன்னினால் மெழுகி வேய்ந்து அணிசெய்த சோழர் பெருமானாகிய; நீடூழி...அநபாயன் - உலகிலே நீடூழி நிலைத்துப் புகழும் சிறப்பும் உடைய அநபாயச் சோழச் சக்கரவர்த்தியாரது ; அரசு அவை மேய...ஆம் - அரச சபையானது (மேலே கூறியபடி சிறந்த பொருளைத் தன்னுள்ளே) மேவப் பெற்றதால் இவ்வுரையை ஏற்றுக்கொண்டு விருப்பத்துடன் நிகழச் செய்வதாகும்.

(வி - ரை) **ஆம்** - (விரும்பும். ஆதலின்) இது ஆகும். ஆவதாம் - செய்யப்பெறுவதாயிற்று என்று இந்நூல் செய்தற்குரிய காரணம் கூறினார். அநபாயச் சோழர் செய்க எனக் கேட்டபடியே ஆசிரியர் செய்தனர் என்ற வரலாறு திருத்தொண்டர் புராணத்திலே உமாபதி சிவாசாரியார் விரிவாய்க் கூறியருளினார். அங்குக் காண்க. அநபாயன் அரசவை இவ்வுரை கொண்டு விரும்பும் என்று கூட்டி முடிக்க.

பேரம்பலம் செய்ய தூய பொன்அணி சோழன்-இப்புராணம் பாடுவித்த அநபாயர் என்ற குலோத்துங்கச் சோழர் II தில்லையிலே பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்தார் என்பது *கல்வெட்டுகளாலும் அறியப்பெறும் உண்மை. ஆசிரியரது காலத்தை நிச்சயம் செய்யக் கிடைக்கும் சரித ஆதாரவுகளில் இது ஒன்று. இங்குக் கூறிய "**பேரம்பலம்**" என்றற்குச் சிற்றம்பலம் என மயங்கிக்கொண்டு உரை கூறுவாரும் உளர். சிற்றம்பலம் வேறு ; பேரம்பலம் வேறு ; இரண்டும் வெவ்வேறாய் இறைவன் எழுந்தருளியிருக்கும் தனியிடங்கள் என்பது தில்லையிற் சென்று கூர்ந்து தரிசித்தார்க்கு நன்கு விளங்கும். முதலாவது குலோத்துங்கச் சோழர் (இரண்டாவது குலோத்துங்கருடைய பாட்டனார்.) சிற்றம்பலம் பொன்வேய்ந்தார். இரண்டாவது குலோத்துங்கர் மீண்டும் சிற்றம்பலத்தில் பொன்வேய்தற்கு இடமில்லாமையால் பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தார். அன்றியும், தமது அன்பு மிகுதியினால் தில்லை எல்லையிலும் திருவீதிகளிலும் அவ்வாறே பொன்மயமாக்கும் பல திருப்பணிகளும் செய்தனர் என்பது ஆசிரியர் பின்னர்க் கூறுவனவற்றால் விளங்கும்.†

"சென்னி, அபயன், குலோத்துங்கச் சோழன், தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு, என்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான், அநபாயன்"—**சண்டீசர் புராணம்** - 8.

---

*திருப்புறம்பயம். 1927 - 350 இலக்கமுள்ள கல்வெட்டினால் விக்கிரம சோழ வளநாட்டின் அரசரான குலோத்துங்கர் பேரம்பலம் பொன்வேய்ந்தமை தெரிகின்றது.

†இதன் விரிவு, எனது 'சேக்கிழார்' என்னும் நூலில் 12 முதல் 23 பக்கங்களிற் காண்க.

"மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்கும்
சென்னி, நீடு அநபாயன்,.............."—புகழ்ச்சோழ நாயனார் புராணம்-8.

கோண்டு விநம்பும் அநபாயன் அரசவை என நிகழ்காலத்திற் கூறியதனால் இப் புராணம் அவ்வரசன் முன்னர்ச் சபையில் கேட்கப்பெற்றதென்பதும் பெற்றாம். நீடூழி பார் ஆயசீர் அநபாயன் - இப்போது அநபாயர் உலகை ஆள்கின்றார். அவர் அரசு நீடூழி நிலை பெறுக. அதன்கீழ் உலகம் ஆகுக. (ஆக்கம் பெறுக) என்று இப்புராணம் பாடுவித்த உபகாரத்தின் பொருட்டு வாழ்த்துக் கூறியவாறுமாயிற்று. "வேந்தனு மோங்குக" என்ற தேவாரமும் காண்க.

"...வையம் பொதுக்கடிந்து இனிது காக்கும்
கொற்றவன் அநபாயன் பொற்குடைநிழற் குளிர்வது........."
—திருநாட்டுச் சிறப்பு - 35.

என்ற இடத்திலேயும் அந்நாளிற் சோழவளநாடு அநபாயருடைய ஆளுகையில் வாழ்கின்றதாக நிகழ்காலத்துக் குறித்ததும் காண்க. பாடுவித்த அரசன் சிறப்பை வாழ்த்தியதும் நன்றிபாராட்டியதும் ஆம். இக்கருத்துப் பற்றியே ஆசிரியர் அநபாயருடைய பெயரை இப்புராணத்துள்ளே பதினொரு இடங்களில் அமைத்துள்ளார். அங்கங்கே கண்டு கொள்க.* (8)

9. அருளி னீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளி னாகும் எனப்புகல் வாமன்றே. கூ

(இ - ள்) அருளின்...தெருளினீர் - அருளே தன்மையாயுள்ள திருத்தொண்டின் புகழ் அறிய அரிதென்று (மேலே "அளவுகூட உரைப்பரிது" என்றும், "தெரிவரும் பெருமை" என்றும் கூறி) உணர்ந்துள்ள நீர் ; இது செப்புதற்கு ஆம் ? எனின் - இது செப்புதற்குத் துணியலாமோ? என்பீராகில்; வெருள் இல்...பொருளின் - மயக்கநீக்கும் மெய்ம்மொழியாலே வானினிடத்தே யமர்ந்து கூறியருளிய பொருளின் துணையாலே; "ஆம்" எனப் புகல்வாம் - அது யாம் செப்புதற்கு உரித்தேயாம் என்று துணிந்து கூறுவோம் ; அன்றே - அவன் மெய்ம்மொழி கூறித் துணைசெய்த அன்றைக்கே.

(வி - ரை) அருளின் நீர்மைத் திருத்தொண்டு - பிறிதொன்றினும் படாது அருள் வயப்பட்டு அத்தன்மையேயாக நிற்கும் திருத்தொண்டு. "ஏகனாகி இறைபணி நிற்க" என்ற இலக்கணப்படி உள்ள அடிமைத் திறம். அறிவரும் தெருளினீர் - அறிவரிது என்ற தெருட்சி பெற்ற. அல்லது அறிவு - அரும் - தெருள் - இல் - நீர் என்று பிரித்து, உரிய அறிவும் அரிய ஞானமும் இல்லாத நீர் என்று உரைத்தலும் ஒன்று.

ஆம் எனின்-ஆமோ என்று வினவுவீராயின். ஆம் - ஆமோ? வினு உருபு தொக்கது.

வெருள் - வெருட்சி. ஐயம் - திரிபு - மயக்கம் முதலியன. இல் இல்லையாகச் செய்யும் ; போக்கும்.

மெய் மொழி வான்நிழல் கூறிய பொருள் - (1) வானினின்றும் நிழலாய்க் கூறிய மெய்ம்மொழிப் பொருள். (2) மெய்ம்மொழிவான் நிழல் - உண்மையே மொழிபவன். சத்தாகிய இறைவனுடைய நிழல். வெளிப்படாத நிலை - மறைந்து நின்று கூறிய நிலை. (3) வான் நிழல் கூறிய மெய்ம்மொழியும் பொருளும் என்றுமாம். நிழல் - ஒரு பொருளின் சாயலாய்க் காணப்பட்டு அப்பொருளை அனுமான அளவையால் அறிவிப்பது.

*சேக்கிழார் - 180, 181, 182, 183 பக்கங்களிற் காண்க.

பொருள் - உலகெலாம் என்று எடுத்துக் கொடுத்த முதல் மொழியாகிய ஊதியம். மெய்ம்மொழி-மெய்யனுடைய மொழி; மெய்யாகிய மொழி என்க. இதன் விரிவு முதற் பாட்டில் காண்க.

புராணம் பாடத் தொடங்குமுன் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் நடராசப் பெருமான் திருமுன்பு நின்று வணங்கி "அடிகளே!...உனது அடியார் சீர் அடியேன் உரைத்திட இடர் கெடுத்து அடி எடுத்துத் தருவாய்" என்று பிரார்த்தித்தனர். அதற்கு

"அலைபு னற்பகி ரதிந திச்சடை யாட வாடர வாடநின்
றிலகு மன்றினி லாடு வார்திரு வருளி னூல்அச ரீரிவாக்(கு)
'உலகெ லாம்'என அடிஎடுத்துரை செய்த பேரொலி ஓசைமிக்
கிலகு சீரடி யார்செ விப்புலத் தெங்கு மாகி நிறைந்ததால்"

என்று இதனையே உமாபதி சிவாசாரியார் திருத்தொண்டர் புராண வரலாற்றிற் கூறியருளியது காண்க. (9)

வேறு

10. இங்கித னாமங் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராண மென்பாம்.

இப்புராணத்தின் பெயர் கூறியவாறு.

(இ - ள்) இங்கு...கூறின் - இப்புராணத்தின் பெயர் என்னென்று சொல்வோமாயின்; இவ்வுலகத்து...இரண்டில்-ஆதிகாலந் தொட்டு இங்குள்ள இருவேறு இருட்கூட்டங்களிலே ; ஏனை...செங்கதிரவன்போல் - மற்றப் பௌதிகமாகிய வெளியிருட்டைப் போக்குகின்ற சூரியனைப்போல; மாக்கள்...இருளை - மாக்களின் மனத்துள்ளே பொருந்தி நின்று பொங்கிய அக இருளாகிய ஆணவத்தைப் போக்கி உதவும் ; திருத்தொண்டர் புராணம் என்பாம் - திருத்தொண்டர் புராணம் என்று சொல்வோம்.

(வி - ரை) ஆசிரியர் இதற்கு இட்ட நூற்பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது.

புறவிருள் போக்குகின்ற கதிரவன்போல் அகவிருளைப் போக்கும் புராணம் என்பது உவமம். பௌதிகமாகிய புற இருள் பொருள்களைக் காணவொட்டாமல் மறைத்துக்கொண்டிருக்கும். ஆனால் தன்னை மறைக்கச் சக்தி யில்லாமல் காட்டிக்கொண்டிருக்கும். ஆதலின் அதற்கு வேறு அடைமொழியின்றி ஏனை என்று இலகுவிற் பிரித்துக் கூறினர். ஆனால் அக இருளுக்குச் சிந்தையுள்ளே - சார்ந்து - நின்ற - பொங்கிய என மூன்று அடைமொழி கொடுத்துக் கூறினர். அது உலகத்தைக் காணவொட்டாமல் மறைத்து நிற்கின்றதேயன்றித் தன்னையும் மறைத்துக்கொண்டு நிற்கும் வலியுடைமை பற்றி என்க. "இருபொருளும் காட்டாதிது" என்பது சாத்திரம்.

மாக்கள் - ஆணவமாகிய அக இருளில் மூடப்பட்டார் நன்மை தீமை நாடியறியும் அறிவு இல்லாதவராதலின் மாக்களே ஆவர் என்பார் ஐயறிவுடையவற்றின் பெயராகிய மாக்கள் என்ற பெயரால் கூறினர். "மாவு மாக்களு மையறி வினவே" என்ப திலக்கணம்.

சார்ந்து—நின்று—பொங்கிய - சார்தல்—நிற்றல்—பொங்குதல் என மூன்றும் இருள்மலம் என்னும் ஆணவமாகிய மூலமலத்தின் செய்கை.

சார்தல் - அநாதியே பந்தித்தல் - சார்ந்ததன் வண்ணமாகிய உயிர்களைத் தன்வயமாக்குவது. "ஆணவத்தோ டத்துவித மானபடி" என்ற திருவாக்கும் காண்க.

நிற்றல் - என்றும் நீங்காது நிலைத்து உயிர்களுடன் சேர்ந்து நிற்றலாம். "முத்தியி னும் மூன்று முதலும் மொழியக்கேள்" என்றபடி அப்போதும் வலிகெட்டாயினும் நீங்காது நிற்பது.

போங்குதல் - தன் செயலைப் பல சத்திகளாலும் செய்துகொண்டு உயிர்களைப் பிறவிகளில் மேன்மேலும் செலுத்துதல். "கருணைக் கிணங்காத வன்மையையும்" என்ற தாயுமானுர் திருவாக்கும் காண்க.

நீக்கும் - வலியில்லாமலும் செயலில்லாமலும் செய்யும்.

பாயிரமாகிய இப்பகுதியிலே முதற்பாட்டு இறைவன் திருமொழியும், இரண்டா வது பாட்டு அவன் துதியுமாம். மூன்ருவது பாட்டு நூன்மங்கலமும் காப்புக் கடவுள் வணக்கமுமாம். நான்காவது பாட்டு நூல் நுதலிய பொருளைக் கூறிற்று. 5, 6, 7-வது திருப்பாட்டுக்கள் அவையடக்கம் கூறுவன. 8-வது பாட்டு நூல் செய்வித்தார் பெயரும் நூல் கேட்டாரும் அவைக்களமும் கூறிற்று. 9-வது பாட்டு நூல் வந்த வழியும் 10 வது பாட்டு நூற்பெயரையும், சிந்தையிருளைப் போக்குகின்றது என்ற நூற்பயனையும் அறி விப்பனவாம். இன்றமிழ்ச் செய்யுளாய் என்றதால் மூன்ருவது பாட்டில் நூல்வழங்கும் எல்லை தமிழ் உலகத்தின் எல்லையே என்று எல்லையும் கூறியபடியாம். என்பாம் - புகல் வாம் - என்ற வினைகளுக்குத் தோன்ரு எழுவாய் "சேக்கிழார்" ஆசிரியர் என நூல் செய்தாரையும் குறித்தவாறும்.

"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனே டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே" என்பது இலக்கணம். (10)

பாயிரம் முற்றிற்று.

முதலாவது

திருமலைச் சருக்கம்

திருமலைச் சிறப்பு

11. பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கு மறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. க

திருமலைச் சருக்கம் : முதற் காண்டத்திலே, திருமலையில் நிகழ்ந்ததாய் இப்புராண அடியார் திறங்கள் உலகத்திலே தெரிந்த வரலாற்றை உரைக்கும் பகுதி. சருக்கம் உட் பிரிவு. சுந்தரமூர்த்திகள் திருவாரூரிலே பாடியருளிய திருத்தொண்டத் தொகையே இப்புராணத்து மூலமாம். அவர் திருக்கயிலை மலையிலிருந்து இவ்வுலகிலே அவதரிக்க நேர்ந்ததும், திருவாரூரிலே போந்து திருத்தொண்டத்தொகை பாட நிகழ்ந்ததும் ஆகிய வரலாறு இச்சருக்கத்திலே பேசப்பெறும். திருமலை - திருக்கயிலை மலை. திருத்தொண் டத்தொகை பாடியபின் இறுதியில் சுந்தரமூர்த்திகள் திருமலைக்குத் திரும்பி அணைந்த வரலாறு இறுதிச் சருக்கமாகிய வெள்ளானைச் சருக்கத்திற் பேசப்பெறும். இவற்றிற் கிடையே திருத்தொண்டத் தொகையின் ஒவ்வோர் திருப்பாட்டின் முதற் சொற் றொடரையே பெயராகக் கொண்டு "தில்லைவாழ் அந்தணர் சருக்கம்" முதல் "மன் னிய சீர்ச் சருக்கம்" வரைப் பதினொரு சருக்கமும் கூடி ஆகப் பதின்மூன்று சருக்கங் களில் நிறைந்து முடிவுபெற்றது இப் புராணம். அவற்றுள் திருமலைச் சருக்கம், தில்லை வாழ் அந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம் என்ற ஐந்தும் முதற் காண்டத்தில் அடங்கியன. இவற்றுள்ளே முதலாவது, **திருமலைச் சருக்கம் :**—திருமலைச் சிறப்பு - திருநாட்டுச் சிறப்பு - திரு வாரூர்த் திருநகரச் சிறப்பு - திருக்கூட்டச் சிறப்பு - தடுத்தாட்கொண்ட புராணம் - என ஐந்து உட்பகுதிகளை யுடையது.

திருமலைச்சிறப்பு - திருமலையின் பெருமையைச் சொல்லும் பகுதி. **திருமலை** - முழுமுதற் கடவுளாகிய இறைவன் எழுந்தருளிய தலைமைபற்றி அடைமொழியும் வேறு தனிப்பெயரும் இல்லாமலே **திரு** என்ற உயர்வு காட்டும் அடையுடன் சொல்லப் பட்டது. திருக்கோயில் என்பது கோயில்களிற் சிறந்து தலைமைபெற்ற தில்லையை உணர்த்துவதுபோலத் **திருமலை** என்பது மலைகளிற் சிறந்து தலைமைபெற்ற கயிலை மலையை உணர்த்திற்று. "திருவளர் தாமரை" என்ற திருக்கோவையாருக்குப் பேராசிரி யர் உரைத்தவற்றைக் காண்க. திரு - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம். இது இம்மலைக்கு மிகப்பெரிதும் பொருத்தமுடைத்தாம் என்பது இதனைக் கண்டார்க்கு இனிது விளங்கும். திருமலை என்பதற்கு வெள்ளிமலை எனத் தக்கயாகப்பரணி உரை யில் கண்டவாறு மறிக.

(இ - ள்) பொன்னின்...புனைந்து என - பொன்னின் மேலே வெள்ளிய திரு நீற்றை அணிந்தாற்போல ; பன்னும்...பாலது - எடுத்துச் சொல்லற்குரிய நீண்ட இமய மலையில் உள்ளது ; தன்னை...அறிவரியான் - யாவர்க்கும் தனது தன்மையை இன்ன

தென்று அறிவதற்கு அரியதாயிருக்கின்ற சிவபெருமான் ; என்றும்...மாமலை - எக்காலத்தும் நீங்காமற் பொருந்தி வாழ்தற்கிடமாகிய கயிலை என்கின்ற பெரிய திருமலையாகும்.

திருமலையின் சிறப்புக் கூறுவதுடன் சுந்தரமூர்த்திகள் கயிலாயத்திலிருந்து நிலவுலகில் அவதரிக்க நேர்ந்த சரிதமும் இதிற் கூறப்பெற்றது. சுந்தரமூர்த்திகள் நிலவுலகிற்குப் புறப்பட்டதும் மீண்டுச் சேர்ந்ததும் இம்மலையேயாதலாலும், இப்புராணத்திற்கு மூலநூலாகிய திருத்தொண்டத் தொகை கிடைப்பதற்கு மூலகாரணமாகிய நிகழ்ச்சி நிகழ்ந்த இடம் இதுவாதலாலும் இம்மலைச் சிறப்பைக்கொண்டு புராணம் தொடங்குகின்றார் ஆசிரியர்.

(பாயிரத்துடன் தொடர்பாய் இச்சருக்க முழுதும் பாட்டிலக்கம் தொடர்ந்து சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்பெறுகின்றது)

(வி - ரை) கயிலைத் திருமாமலை...பனிமால்வரைப் பாலது என்று முடிக்க.

பொன்னின் வெண்திருநீறு புனைந்து என - இது உவமானம். பொன்னின்மேல் வெள்ளிய திருநீறு அணிந்தாற்போல மால் வரையின் மேலே பனி உறைந்து உள்ளது என்பது.

பனிமால்வரை - பெரிய இமயமலை. இது பொன்மலை என நூல்களிற் பேசப்பெறும். இமாசலம் - இமாலயம் - (The Himalayas) என்பது. பன்னும் - பலவாற்றாலும் புகழ்ந்து பேசப்படுவது. நீர் பனிக்கட்டியாக உறைந்து கிடக்கும் மலையாதலின் **பனிமால்வரை** என்றார் - இது அன்பின் நீர்மை உறைப்புப்பெற்றுத் தங்கும் இடம் என்பது குறிப்பு - இறைவனுடைய திருக்கயிலை இதில் இருத்தலின்-என்க. உலகிலே மிகப்பெரிய மலைத்தொடர்ச்சி. இதன் சிகரமே உலகில் மிக உயர்ச்சியுடையது. அந்தச் சிகரம் கயிலை மலையாம். மிக உயர்ந்த மலையின் மிக உயர்ந்த சிகரம் என்க. இது எப்பொழுதும் பனிக்கட்டியால் மூடப்பெற்றிருக்கும். ஆதலின் வெண்மையாய் வெண்ணீற்றுக் கோலமாய் விளங்கும். குறித்த உயரத்துக்கு மேற்பட்ட இடங்கள்தான் பனியால் மூடப்படும். அவ்வுயரத்துக்குக் கீழே உள்ள மலையின் பாகங்கள் பனி மூடாமல் தூரப் பார்வைக்குப் பொன்னிறமாகவே காட்டும். ஆதலின் 'பொன்னின் மேல் வெண்ணீறு புனைந்தாற்போல்' என்றார். **வரைப்பாலது** - வரையின் ஒரு பகுதியிலே உள்ளது. இது கயிலை மலையின் தூர தரிசனம் கூறியபடி.

தன்னை யார்க்கும் அறிவரியான் - "இன்ன தன்மையன் என்று அறியொண்ணா எம்மானை" என்பது சுந்தரமூர்த்திகளது திருவாரூர்த் தேவாரம். "யாவராயினும் அன்பரன்றி அறியொணா மலர்ச் சோதியான் " (திருவாசகம்). "கனகக் குன்றத் தெழிற் பெருஞ் சோதியை" "பொன்னெடுங் குன்ற மொன்றுண்டு கண்டீர்" என்பனவாதி திருவிருத்தங்களால் அப்பர் சுவாமிகள் துதித்தருளியபடி பொன்மலையும் கயிலைவெண் சிகரமும் இறைவன் வடிவமாகவே விளங்குவது ஆதலின் அத்தோற்றத்திற்குள்ளே "அரியான்" மன்னி வாழ்கின்றான் என்று குறிப்பிட்டபடியுமாம். "பொன்னொத்த மேனி மேல் வெண்ணீ றணிந்து " என்னும் தேவாரமும் காண்க. **மன்னிவாழ் கயிலைத் திருமாமலை** - இத்திருமலையையே சிவசொரூபமாகக் கண்டு அதனுள்ளே சிவத்தையும் கண்டு ஆசிரியர் தரிசித்து நம்மையும் தரிசிக்கச் செய்கின்றபடி காண்க. அதில் விளங்கும் பெருமானைப்போலவே இந்த மலையும் உயர ஆகாய விமானங்களிற் பறந்து காண் பார்க்கும் அறிதற்கரியதாய் விளங்குவது இந்நாட் கண்கண்ட காட்சியாம். கயிலை - இது பூகைலாயம். (நூல்களிற் பேசப்பெறும் மகா கயிலாயமன்று) மதங்காகமம் காண்க. இங்கே மன்மத தகனம்—சனகாதி முனிவர்களுக்கு உபதேசம்—முதலியன நிகழ்ந்தன. இதிற் பஞ்சரிஷிகளது ஆசிரமங்களும் உள்ளன. பின்னர் " முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம் " என்று கூறுவது காண்க. அப்பர் சுவாமிகள் திருக்கயிலை

யாத்திரை செய்த இடம் இதுவே. இறைவன் மும்மூர்த்திகட்கு முதல்வராய் உபதேசம் செய்தனர் என்பது வரலாறு. சமீபகாலத்தில் இம்மலையின் ஒரு பாகத்தில் இந்துநதிச் சார்பிலே ஒரு பெரிய மண்மேட்டைத் தோண்டிப் புதைந்து கிடந்த ஒரு பெருநகரங் கண்டுள்ளார்கள். அதிற் சைவப் பெருமைகளும், சரிதங்களும், பழமையும், காணப் பல பொருள்கள் கிடைத்தன. அதிலே ஒன்று - மூன்று சிரமும் நான்கு கைகளும் கொண்டு யோகாசனத்தில் உபதேச மூர்த்தியாய் ஒரு மரத்தடியில் வீற்றிருக்கும் உருவமாய் இதனைச் சுற்றிப் புலி யானை இருடிகள் முதலியன காணப்பெற்றது. இது மேற்குறித்த மும்மூர்த்திக்கு உபதேசித்த ஆசிரியமூர்த்திக் கோலம் போலும். காதுகளைப் பொத்திக்கொண்டு கேட்பதுபோல உள்ள உருவங்களும் பக்கத்திருப்பனவாம். சிவலிங்கம்,நந்திதேவர், அம்பிகை, முதலிய உருவங்களும் உள்ளன. இவற்றின் விரிவை சர், ஜான் மார்ஷல் என்பவர் எழுதிய "இந்து நதிச் சாரல் நாகரிகம்" (Indus Valley Civilisation) என்னும் நூலுட் காண்க. மேலே கண்ட மும்மூர்த்தி உபதேசக் கோலத்தைக் கேட்கும்போது,

> "காது பொத்தரைக் கின்னர ருழுவை கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம்
> கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக் கோல ஆல்நிழற் கீழறம் பகர"

என்னும் சுந்தரமூர்த்திகளது திருநின்றியூர்த் தேவாரம் - (6). நினைவுக்கு வரும்.

என்றும் மன்னி-எக்காலத்திலும் நீங்காது நிலைபெற்று. ஊழிக்காலத்திலும் தான் அழியாமல் நிற்பதாலும், எல்லாவற்றையும் அழிக்கும் நாயகனாகிய சிவபெருமானுக்கு இருப்பிடமாய் நிற்பதாலும் **என்றும்**-எக்காலத்தும் - என்றார். இதனையே திருநொடித் தான்மலை என்று சுந்தரமூர்த்திகள் தேவாரத்திற் பாடியிருத்தல் காண்க. நொடித்தல்-அழித்தல். காரைக்காலம்மையார் தலையால் நடந்து சென்ற கயிலை இது. 1

12. அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணு மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது. உ

(இ - ள்) அண்ணல்...ஆதலின் - (யாவருக்கும் மேலாம் அளவில்லாத சீருடையானாகிய) பெருமையுடைய சிவபெருமான் விரும்பி எழுந்தருளி என்றும் மன்னியிருக்கும் பேறுபெற்ற மலையாதலால் ; நண்ணும்...புண்ணியம் - சேர்கின்ற மூன்று உலகங்களும் நான்கு வேதங்களும் அளவில்லாத பெருந்தவம் செய்ததனால் நேரே கண்ணுற் காணும்படி வந்துசேர்ந்த புண்ணியங்களானவை யாவையும் ; திரண்டு உள்ளது போல்வது - ஒருங்கு சேர்ந்து உருவெடுத்து நிலைத்ததே போன்றுள்ளதாம் இத்திருமலை என்க.

(வி - ரை) அண்ணல் - பெருமையுடையான். எல்லார்க்கும் மேலானவனாதலால் இது சிவபெருமானையே குறிக்கும். அவன் புண்ணியமூர்த்தியாதலால் அவன் எழுந்தருளியிருப்பதான இத்திருமலையும் புண்ணிய சொரூபமுடையது. "பூதநாயகன் புண்ணிய மூர்த்தியே" (அப்பர்) முதலிய திருவாக்குகள் காண்க.

நண்ணும் மூன்றுலகு-உயிர்கள் உலகங்களிற் புகுந்தே தங்களது வினைகளை ஒழிக்க வேண்டியிருத்தலால் **நண்ணும்** என்றார் - மேல் - நடு - கீழ்-என்ற மூன்று நிலையிலும் உள்ள உலகங்களின் பெரியோர்கள். புண்ணிய அனுபவம் மேலுலகத்திலும் பாவ அனுபவம் கீழுலகத்திலும் செய்யப்பட்டுக் கழிந்தபின் உயிர்கள் நடு உலகமாகிய இந் நில உலகிற் பிறந்து சிவபுண்ணியம் செய்தே அதுகாரணமாக வீடுபெறுவர் என்பது சகல சாத்திரங்களின் முடிந்த முடிபு. ஆதலின் மேல் கீழ் உலகங்களின் தவம் நடுவுலகத்தில் நின்றது. நடுவுலகத்தின் பயன் சிவபுண்ணியமாயிற்று. சிவபுண்ணியங்களின் பயனுய்த்

திருமலை நின்றது என்பது கருத்து. **நான்மறை தவம்** செய்வதாவது மறைக்காடு முதலிய தலங்களில் அருச்சித்து இறைவனைத் தமக்குள்ளே விளங்கும்படி பெறுதல்.

வந்து எய்திய - தவம் செய்ததனால் உருவெடுத்து முன்னேவந்து பொருந்தியது போலும். பெரியோர் வசனமும் வேத வசனமும் பொய்யாகாமற் காட்சிப்படும் பொருட்டு அவர்கள் தவம்செய்ய உருவுடன் ஈசன் இருக்கும் இடமாகியது.

புண்ணியம் திரண்டு உள்ளது - புண்ணியமாவது தவத்தினுக்குரிய செயல். புண்ணியத்தின் நிறம் வெண்மை என்பர். புண்ணியமே உருவெடுத்தாற் போன்றுள்ளது திருமலை என்பது கருத்து. புண்ணியத்தினிடமாக வீற்றிருப்பதுபோலவே இத் திருமலையிலும் இறைவன் வீற்றிருக்கின்றதனால் இதற்குப் புண்ணியத் திரட்சி உவமானமாயிற்று. 2

13. நிலவு மெண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்டளி ராக வெழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை. ௩

(இ - ள்) நிலவும்...தளிர் ஆக - நிலைத்து நின்றுள்ளனவாய் அளவில்லாதனவாகிய தலங்களை தனது ஒளி வீசி விளங்கும் குளிர்ந்த தளிர்களாகக் கொண்டு; எழுந்தது... வல்லிமேல் - முளைத்து எழுந்ததாகிய உலகம் என்கிற ஒப்பற்ற ஒளிவீசும் அழகிய கொடியின் உச்சியிலே; மலரும்...மால்வரை - பூக்கின்ற வெள்ளைப் பூப்போன்றுள்ளது அப்பெரிய திருமலையாகும்.

(வி - ரை) நிலைபெற்ற பல தலங்களையும் தளிர்களாகக் கொண்டு தழைத்துப் படர்வது உலகமாகிய கொடி. அக்கொடியின் உச்சியிற் பூக்கும் வெண்மலர்போன்றது திருக்கயிலைமலை என்க.

கொடிப் பூவாகிய ஒரு வெண்பூவை அடைய விரும்பியவன் அதனைப் பூக்கின்ற கொடியைச் சார்ந்து அதைத் தழைத்துப் படரச்செய்து காத்து அதன்பின் முடிவில் எவ்வாறு பூவைப் பெறுவானோ, அதுபோல, உயிர்கள் தாம் சேரவேண்டிய இடமாகிய திருக்கயிலையை யடைய வேண்டினால், ஞாலத்தை நயந்து அதில் தலங்களிற் படர்ந்து தரிசித்து முடிவில் திருமலையை அடையலாம் என்பது கருத்து.

தளிர் - பிற தலங்கள். ஒவ்வொர் காரணம்பற்றிச் சிவன் வெளிப்பட்டு அருள்வது.

வெண்மலர் - கயிலை. அத்தளிர்களை முன்னாகக் கொண்டு நிரந்தர வாசத் தலமாய் இறைவன் இருப்பது. மலையின் நிறம்பற்றி வெண்மலர் என்றார். "பிறைதவழ் கயிலைக் குன்றம் பிரம ரந்திரமாம்'' என்பது (திருவிளையாடல்). "வடபாற் கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ்பதியே'' (அப்பர் தேவாரம்). "புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறு'' (திருவாசகம்). முதலிய திருவாக்குகள் காண்க. உலகிற் செய்யும் எல்லாச் சிவ தருமங்களும் எல்லாத் தல தரிசனங்களும் இத்திருமலையினைப் பெறும் பொருட்டேயாம் என்பது துணிபு. அப்பர்சுவாமிகள் பல தலங்களையும் தரிசித்துப் படர்ந்து முடிவிலே திருக்கயிலை யாத்திரை செய்து வழிகாட்டியதும் இக்கருத்துப் பற்றியே என்க. 3

14. மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்
கான வீணையின் ஓசையும் காரெதிர்
தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்
வான துந்துபி யார்ப்பு(ம்) மருங்கெலாம். ௪

(இ - ள்) மேன்மை...நாதமும் - மேன்மைதரும் நால்வேதங்களினுடைய நாதமும்; விஞ்சையர்...ஓசையும் - வித்தியாதரர் முதலியோர் கானங்களினாலும் வீணைகளினாலும் செய்கின்ற ஓசைகளும்; கார்...முழக்கமும் - மேகங்களும் யானைக் கூட்டங்களும் ஒன்றற்கொன்று எதிராகச் செய்யும் முழக்கங்களும்; தாஇல்சீர்......ஆர்ப்பும் - குற்றமில்லாத சிறப்புடைய ஆகாய துந்துபிகளின் முழக்கங்களும்; மருங்கெலாம் - அதன் பக்கங்களிலெல்லாம் (நிறைந்துள்ளன).

(வி - ரை) **மேன்மை நான்மறை நாதம்** - சத்தங்கள் இருவகைப்படும். ஒலி எனப்படும் பொருளுடைய சத்தம். (1). ஓசை எனப்படும் பொருளில்லாத சத்தம்.(2). முன்னையது சுத்தமாயையிலிருந்தும், பின்னையது அசுத்த மாயையிலிருந்தும் பிறக்கும். "ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். "ஓம் எனும் பதத்தில் வேதமாதி உற்பவித்திடும் ஆலவித்தி னுதிக்குமாபோல்" என்றபடி நாதப் பிரமத்திலிருந்து வேதம் முதலிய எல்லாச் சாத்திரங்களும் உண்டாயின. ஆதலின் **மறைநாதம்** என்றார். இங்கே நாதம், வேதம் பயிலும் ஓசைகளைக் குறித்தது. தேவர் முனிவர்கள் துதிசெய்யும் வேத வசனங்களால் எழும் நாதத்தைக் குறிக்கும். வேதங்கள் நாத ஒலியால் தாமே முழங்கிக்கொண்டிருக்கும் என்பதுமாம்.

"ஓதுமறை யோர்பிறி துரைத்திடினும் ஓவா
வேதமொழி யாலொலி விளங்கிஎழும் எங்கும்" (31)

"சங்கபட கங்கருவி தாரைமுத லான
எங்கணு மியற்றுப வரின்றியும் இயம்பும்
மங்கல முழக்கொலி மலிந்த மறுகெல்லாம்" (34)

என்று பின்னர்த் திருஞானசம்பந்த நாயனார் புராணத்துக் கூறுவது காண்க. நாதம் மேன்மை தருவதால் '**மேன்மைநாதம்**' என்றார். பின்வரும் ஓசை வகைகளைவிட மேலான நாதம் என்றுரைத்தலும் ஆம். மேன்மையுடைய மறை என்றுமாம்.

விஞ்சையர் - விஞ்சை (வித்தை) - கானம் முதலிய பல வித்தைகளிலும் வல்ல தேவக்கூட்டத்தார். கின்னரர் முதலிய பல வகுப்பார்களையும் உடன்கூட்டிக் கானம் வீணையின் ஓசை என்றார்.

கானவீணை - கானமும், பாடும்போது உடன் வாசிக்கும் வீணை ஓசையும் என்க. வீணைகானம் என ஒன்றாக்கியு முரைப்பர்.

தானமாக்கள் - யானைகள். மேக கர்ச்சனை யுண்டாம்போது யானைகள் எதிராய்ப் பிளிறும். ஆதலின் **காரெதிர்** என்றார். **தானமாக்கள்** என்றதனால் அம்மலைச்சாரலில் வாழும் வேறு பல பிராணிகளையும் கொள்க. கண்ணப்பர் புராணம் 6-வது பாட்டும் பார்க்க.

துந்துபி - ஐவகைத் தேவவாத்தியங்கள். "கடவுள் மால்வரையினுச்சி, அதிர்தரும் ஓசை ஐந்தும் ஆர்கலி முழக்கம் காட்ட" (கண்ணப்பர் புராணம்) காண்க.

இப்பாட்டிலே மறைநாதம் ஒலியையும்; கானம், வீணை, ஓசை, முழக்கம், ஆர்ப்பு, இவைகள் ஓசையையும் குறித்தன. உலகியலிலே பொருளற்ற சத்தங்களே மிகுந்தும் பொருளுள்ள சத்தங்கள் குறைந்தும் காணப்படுவ தியல்பாதலின் ஒலிக்கு ஒன்றும் ஓசைக்கு நான்கும் கூறினார்போலும். நிறைந்துள்ளன என்ற வினைமுற்று வருவித்துரைத்துக்கொள்க. 4

ஆர்ப்ப என்பது பாடபேதம்.

15\. பனிவி சும்பி லமரர் பணிந்துசூழ்
அனித கோடி யணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்னெலாம். ரு

(இ - ள்) பனி...முடி மாலையும் - குளிர்ந்த தேவ உலகத்தில் உள்ள தேவர்கள் வணங்கிச் சூழ்கின்ற அனேகமாகிய கிரீட வரிசையும்; புனிதம்...அரிமாலையும் - தூய கற்பகப் பூக்களாற் கட்டப்பட்டுப் பொன் இழைகள் கூடிய பூமாலைகளும்; முனிவர் அஞ்சலி மாலையும்; முனிவர்கள் கும்பிட்டு நிற்கும் வரிசையும்; முன்னெலாம் - முன் பக்கங்களில் நிறைந்துள்ளன.

(வி - ரை) மேற்பாட்டிலே காதுக்குப் புலப்பட்டு கயிலையின் **மருங்கெலாம்** நிகழ் காட்சி கூறினர். இப்பாட்டிலே கண்ணுக்குப் புலப்பட்டு **முன்னெலாம்** உள்ள காட்சி கூறுகின்றார். அங்கு முன்புறம் காணப்படுவன மூன்றுவகை மாலையாம். அவை அணி முடிமாலை, பொன்அரிமாலை, அஞ்சலிமாலை என்பன. இவற்றில் அரிமாலை பூமாலையாம். ஏனை யிரண்டுமாலையும் வரிசை என்ற பொருளில் வந்தன. அமரர்கள் தத்தமக்கேற்ற கிரீடங்களுடன் வணங்கும்போது வரிசையாய் நின்று முடிசாய்த்து வணங்கவும், ஒரு புறம் முனிவர்கள் நின்று வரிசையாய்க் கைகூப்பி வணங்கவும் உள்ள காட்சியின் வரிசைகளையே மாலைகள் என்றார். திருக்கோயிலின்முன் வரிசையாய்த் தகுதிக்குத் தக்கபடி வகுத்து, நின்று, வணங்கும் ஒழுங்கும் விதியும் குறித்தவாறுமாம். இக்காலத் தில் ஆலய தரிசன விதி தவறித் தாறுமாறாய் நின்று அபசாரமே செய்யும் மக்கள் இதைக் கூர்ந்து கவனிப்பார்களாக.

பனிவிசும்பில் அமரர் - குளிர்ச்சி பொருந்திய தேவலோக வாசிகளாகிய தேவர் கள் சூழும் - என்க. விசும்பிலிருந்தபடியே அமரர் பணியத்தக்கதாய் மிக உயர்ந்த திரு மலை என்று கொண்டு உரைத்தலும் ஆம். இப்பொருளில் அமரர் பனிவிசும்பிற் பணிந்து சூழ் என்று மாறிக் கூட்டுக. சூரபன்மா முதலியோரால் அவ்வப்போது அலைப்புண்டு பனிக்கின்ற (துன்பப்படுகின்ற) விசும்பு என்றுமாம். அவ்வாறு துன்பப் படுகின்ற காலத்தில்தான் கயிலைக்குச் சென்று இறைவனிடம் முறையிட்டுத் தவங் கிடப்பதும், ஏனைக்காலத்தில் மறப்பதும், இந்திரன் முதலிய தேவர் செயலாதல் கந்த புராண முதலியவற்றிற் காண்க. மந்தாகினித் திவலை (ஆகாய கங்கை)யாலும் கற்பகச் சோலை முதலியவற்றாலும் விசும்பிற்குக் குளிர்ச்சியாம். தேவவுலகம் மேல்உலக மாதலா லும் மேலே உயர்ந்து செல்லச்செல்லக் குளிர்ச்சி அதிகமாதலாலும் **பனிவிசும்பு** ஆம். **அமரர்** - (மர் - மரணம்.) மரணமில்லாதவர். மற்ற உயிர்களை நோக்க ஏகதேசத்தில் அதிக காலம் மரணமில்லாதவர்களேயன்றி எக்காலத்தும் இறவாதவர்கள் என்பதல்ல. இறவாதவன் சிவபெருமானாகிய இறைவன் ஒருவனேயாம். "ஈறிலாதவன் ஈசன் ஒரு வனே" (தேவாரம்). நீண்ட ஆயுளுடைமைபற்றி உபசார வழக்கினால் அமரர் (மரண மற்றவர்) எனப்படுவர். நீடித்து மரணத்தை நீக்கிக்கொண்டவர்கள் என்க.

அனிதகோடி - அனிதம் - அனேகம். தேவர்கள் முப்பத்து முக்கோடி என வகுத் திருக்க அனேககோடி என்ற தெவ்வாறெனின்,—"நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு" (திருமுருகாற்றுப்படை) என்றபடி தேவர்கள் நான்கு வகையினராய் அவற்றில் 33 உட்பிரிவுடையராய் உள்ளார். ஆதித்திய வமிசம் 12. உருத்திரவமி சம் 11. வசுக்கள் வமிசம் 8. அச்சுவினி தேவர் வமிசம் 2. இவர்கள் பிரமதேவ சிருட்டியிலே காசிப முனிவரது இருமனைவியருள் அதிதி என்பவள்பால் தோன்றிய வர். திதி என்ற மற்ற மனைவியினிடம் தோன்றியவர் தைத்தியர் என்ற அசுரர். சுர - நுரை. "வாருணி நறவம் பிறந்தது மற்ற துண்டலால் சுரராயினர்" (கூர்மபுராணம்) நுரையாகிய அமிர்தமுண்டதால் சுரர் என்ற பேர்பெற்றனர். 33 கோடியாகிய இவர்க ளுடன் உலகத்திலே புண்ணியங்கள்செய்து தேவர்களாகும் எண்ணில்லாத உயிர்களும் கூடுவதால் அனேக கோடியாகுவர். கயிலையின் முன்பக்கத்தில் வரிசையாக தேவர் களும் முனிவர்களும் தொழுதுநிற்பர் என்பது கருத்து.

கற்பகமாலை - முன்பக்கத்திலே அலங்காரம்செய்யத் தூக்கப்படுவனவும் இறைவன் திருவடிக்குச் சூட்டுதற்காக ஏந்தப்படுவனவும்ஆம். தேவர்கள் அணிந்தனவும்ஆம். பின்னர் "தேன்உறை கற்பகவாச மாலைத் தேவாசிரியன்" (தடுத் - 124) என்று கூறுவதும் காண்க. "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால், துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்" என்ற திருவாசகமும் காண்க. மேலே "மதுமலர் இருகையும் ஏந்தி" (19) என்பதும் காண்க.

16. நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடும் ஐம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம். ௯

(இ - ள்) நீடுதேவர் நிலைகளும் - நீடிய தேவர் பதங்களையும்; வேண்டிடின் - அவசியமாய் வேண்டுமானால்; நாடும் ஐம்பெரும் பூதமும் - உலக காரணமாய் நாடும் ஐம்பெரும் பூதங்களையும்; நாட்டுவ கோடிகோடி குறள்சிறு பூதங்கள் - தாம் எண்ணியபடி நிலைநாட்ட வல்லனவாகிய கோடி கோடியாகிய அனேகம் சிறு குறள்வடிவுள்ள சிவ பூதகணங்கள்; பாடிஆடும் பரப்பது பாங்கு எல்லாம் - பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் உள்ள பரந்த இடங்களையுடையன அத்திருமலையின் பக்க இடங்கள் எல்லாம்.

(வி - ரை) **நீடு தேவர் நிலை** - தேவர்களது நீடுநிலை என மாற்றிப் பொருள் உரைக்க. தேவர் கணங்களும்-என்பது பாடமாயின் தேவகணங்களையும் நாட்டுவ-என்க.

வேண்டிடின் - நடுநிலைத் தீவகமாய், வேண்டிடின் நிலைகளும், வேண்டிடின் பூதங்களும், நாட்டுவ என முன்னும் பின்னுங் கூட்டி முடிக்க.

நாட்டுவ - நாட்டுவன - பெயர். நாட்டுவனவாகிய-நாட்டும் வலியுடைய - பூதங்கள் என்க. மற்றவர்களைப் பார்க்க தேவர்களது நிலைகள் நீடுவன ஆயினும் சிவகணங்களின் வலிமையையும் கால அளவையும் நோக்க அவை குறைந்தனவாகி அழியுந் தன்மையுடையன என்பார் நீடு நிலைகளும் நாட்டுவ என்று சிறப்பும்மை தந்து கூறினார். "கேடிலாப் பேய்க்கணஞ்சூழ்" என்பது திருஞானசம்பந்த நாயனார் தேவாரம். குறிஞ்சி அச்சிறுபாக்கம் - 3.

கோடிகோடி குறட்சிறு பூதங்கள்-இவை சிவகணங்களாகிய பூதங்கள். இவற்றின் எண்ணும் உருவும், வடிவும், அளவும், வலியும் ஆனந்தமும் கூறியவாறு. அப்பர் சுவாமிகளுக்குத் திருத்தோளில் இடபமும் சூலமும் பொறித்ததும், திருஞானசம்பந்த நாயனார்க்கு ஆயிரம் பொன் அடங்கிய உலவாக்கிழி தந்ததும் முதலியவற்றைத் திருவருளாணையின் வழிச் செய்தன இப்பூதங்களேயாம். "ஆளும்பூதங்கள் பாடநின்றாடும் அங்கணன்றனை" (தேவாரம்) என்பது முதலிய திருவாக்குகள் காண்க. சிவபெருமான் பூத நாயகனுதலாலும் அவனது கணங்களாகிய பூதங்கள் அவனது திருமலையைச் சுற்றி இருந்து ஆனந்தித்திருப்பன ஆதலாலும் இவ்வாறு கூறினார். பார்வையளவிலே குறட்சிறு பூதங்களாயினும், ஆணை வலியிலே பெரியன என்பார் **குறட்சிறு** பூதங்கள் **பெரும்**பூதமும் நாட்டுவ என்று இலகு தோன்றக் கூறினார். **வேண்டிடின் நாட்டுவ** என்று சொல்லவே, ஆக்கலும், அளித்தலும், அழித்தலும் செய்யவல்லன என்பது பெற்றும். ஐம்பூதச் சேர்க்கையாலாகிய இவ்வுலகத்தையும் தேவர் நிலைகளாகிய பிரம உலகம், விட்டுணு உலகம், முதலியவற்றையும் நாட்டும் வலிமையுடையன சிவகணங்களாகிய இப்பூதங்கள் என்றபடி. ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆக்கலும், அவற்றின் ஒவ்வொன்றன் மிகுதிப்பாட்டிலே அழித்தலும், படும் இவ்வுலகம். அதனால் உலகத்தார் இவற்றையே பெரிதெனை மயங்கிப் பயந்து இவற்றிற்குப் பூசை முதலியனவும் செய்வர். ஆயின் அப்பூதங்களையே ஆக்கியும் அழித்தும் நாட்டவல்லன இந்தக்

குறட் பூதங்களாம் என்று கூறினமையால் சிவபூதங்களின் சிறப்பும் இவற்றினாற் சேவிக்கப்பெற்ற இறைவனது பெருமையும் உணர்த்தியவாறு.

இப்புராணத்துப் பேசப்பெறும் அடியார்களும் சிவபெருமானது அருள்வழி நின்று திருக்கயிலையிற் கணங்களாகவும் கணநாயகர்களாகவும் பெற்றார்கள். கணநாதநாயனார்,

" தூநறுங் கொன்றை முடியவர் சுடர்நெடுங் கயிலைமால் வரையெய்தி
மானநற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித்தொண்டி னிலைபெற்றார் " 6

சேரமான்பெருமாள்நாயனார்,

" ......நன்மைசேர் கணநாதரா யவர்செயு நயப்புறு தொழில் பூண்டார்... "
—வெள்ளானை - 49.

என்று வருவனவாதி அடியார் பேறுகளைக் காண்க. சிவகணங்களின் பரம்பரையே அடியார் பரம்பரையாகும்- " பூத பரம்பரை பொலிய " என்றமை காண்க. ஆதலின் அடியார்களது வன்மையும் தன்மையும் உடன்கூட்டிக் குறிப்பிட்டவாறுமாம்.

குறட் பூதங்களின் வலிமை கந்தபுராணம் - மகாசாத்தாப்படலம் - மகாகாளர் வருகைப்படலம் முதலிய சரிதங்களிற் காண்க. இவை மண்ணையும் விண்ணையும் நாட்ட வல்லன என்ற பல சரிதங்களையும் கூறும் இன்னும் மற்ற மாபுராணங்கள் இதிகாசங்களிலும் காண்க. காரைக்காலம்மையார் " மற்றொருகண் நெற்றியின்மேல் வைத்தான்றன் பேயாய, நற்கணத்தில் ஒன்றாய நாம்" என்று அற்புதத்திருஅந்தாதியிற் பாராட்டியிருத்தலும் இங்கு நினைவு கூர்க.

இத்திருமலைப் பாங்குகள் எல்லாம் வேண்டிடின் தேவர் நிலைகளும் ஐம்பூதமும் நாட்டுவனவாம் சிறு பூதங்கள் பாடியாடும் பரப்பினையுடையன என்று முடிக்க. குறள் - சிற்றுருவம். 6

17. நாயகன் கழல் சேவிக்க நான்முகன்
மேய கால மலாமையின் மீண்டவன்
தூய மால்வரைச் சோதியின் மூழ்கியோன்
றாய வன்னமுங் காணா தயர்க்குமால். எ

(இ - ள்) நாயகன்...மீண்டு - இறைவனது திருவடிகளைச் சேவிக்கச் சென்ற பிரமதேவர் அப்போது அதற்கு உரிய காலமல்லாத காரணத்தால் திரும்பி வந்து; அவன்... அயர்க்கும் ஆல் - அவ்விறைவனது தூய பெரிய கயிலைமலையினது வெள்ளிய பேரொளியிலே கலந்து அதனோடு ஒன்றாகியதால் தன் ஊர்தியாம் அன்னப்பறவையை வேறுபிரித்துக் காணமுடியாமல் வருந்துவான்.

(வி - ரை) ஆல் - ஆச்சரியக் குறிப்புப்பட நிற்கும் ஒரு சொல்.

நாயகன் - தலைவன். இங்கு எல்லார்க்கும் தலைவனாகிய சிவபெருமானை உணர்த்திற்று. கழல் சேவிக்க மேய நான்முகன்—என மாற்றுக.

காலம் அலாமை - சேவித்தலுக்கு உரிய காலமல்லாததால். இறைவனைச் சேவித்தற்கு அடியவர்களல்லாதார்க்கு ஒவ்வொரு காலம் வரையறுக்கப்பெற்றுள்ளது. அடியவர்கள் எப்போதும் பணிசெய்ய உரியவர்கள். மேய என்பதனைக் காலம் என்பதுடன் சேர்த்து உரைப்பாரும் உண்டு. அப்பொருளில் உட்புகுந்தவனாகிய என்று வருவித்துக்கொள்க. **மீண்டவன்** - என ஒரு சொல்லாக்கி மீண்டவனாகி அயர்க்கும் என்று கூட்டி உரைப்பாருமுளர்.

தூயமால்வரைச்சோதி - மால்வரையின் தூய சோதி என்று மாற்றிப் பொருள் உரைத்துக்கொள்க. தூய்மை வெண்மையின் குறிப்பு. அது முதற்பாட்டிற் குறித்தபடி வெண்டிருநீற்றின் சோதியாதலின் தூய சோதி என்றார்.

மூழ்கி ஒன்றுய - மலையின் வெள்ளிய ஒளியினுட் பொருந்தியதால் தனித்து வேருகக் காணமுடியாதிருத்தல். பொருள் இரண்டாயினும் ஒருதன்மைப்படுதலே ஒன்ருதல் எனப்பட்டது. கண்ஒளியும் கதிர் ஒளியும்போல் ஒன்றித்துக் கலத்தல். இதனையே இரண்டற்றதாகிய அத்துவிதக் கலப்பு என்பர் பெரியோர். ஆன்மாக்களைத் தனது அருட்சோதியிலே இரண்டறக் கலக்கும்படி செய்வான் இறைவன் ; அவனது திருமலையும் அத்தன்மை பெற்றது என்ற குறிப்பும் தோன்றுதல் காண்க.

மால்வரை - பெரியமலை. **மால்** (விட்டுணு) போன்ற மலை என்றும் ஆம். "கடல் கடைந்திடச் சென்றிடும் **வெள்ளைமால்** கடுப்ப" என்றபடி. இப்பொருளில் இது உள் பொருள் உவமமாம். மாலே ஆகிய மலை என்று முரைப்பர். திருமால் சிவபெருமானை இடபமாகத் தாங்கி நின்றமை புராணத்துக் கேட்கின்ருேம்.

"தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ"—**திருவாசகம்**

"அந்தண் வெள்ளிமால் வரையிரண் டாமென அணைந்தோர்
சிந்தை செய்திடச் செங்கண்மால் விடையெதிர் நிற்ப"
—**திருநாவுக்கரசு நாயனுர் புராணம்** - 378

என்று கூறுதல் காண்க.

சோதியின் மூழ்கி ஒன்றுய - "......கனகமலையருகே, போயின காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே" என்பது பொன் வண்ணத்தந்தாதி. பொன்மலையைச் சார்ந்த காகமும் பொன்னிறமாம் என்பது பழமொழி. காக்கையின் கருமையாகிய வேற்று நிறமும் மாற்றப்பெற்றுப் பொன்வண்ண மாகும் என்ருல், வெள்ளிய தூய ஒளியில் அவ் வெள்ளைநிறமே யாகிய அன்னம் மூழ்கி ஒன்ருய்க் கலத்தலும் அதனுல் வேறு காணப்படாமையும் இயல்பேயாம் என்க. 7

வேறு

18. காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்
காலம்பார்த் திருந்ததும் அறியான்
சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையிற்
றுதிக்கையோ னூர்தியைக் கண்டு
மீதெழு பண்டைச் செஞ்சுட ரின்று
வெண்சுட ரானதென் றதன்கீழ்
ஆதியேனமதாய் இடக்கலுற் ருனென்
றதனைவந் தணைதருங் கலுழன். அ

(இ - ள்) காதில்...அறியான் - காதிலே வெண்சங்கக் குழையை அணிந்த இறைவனது பாதங்களைத் தொழுவதற்கு நெடியோனுகிய திருமால் உரிய காலத்தை எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருந்த செய்தியை அறியாதவனுகி; சோதி...கண்டு-வெள்ளை ஒளியுடைய கயிலையின் சாரலில் உள்ள ஒரு முழையிலே விநாயகருடைய வாகனமாகிய பெருச்சாளியைப் பார்த்து ; மீது...என்று - முன் காலத்தில் மேலே எழுந்த செஞ்சுடராகிய அக்கினித்தூணமானது இன்று வெள்ளை யொளித் தூணுய் நிற்பதான எண்ணத்தாலே அதனை ஆதிவெள்ளைப்பன்றி உருவெடுத்து அடிதேடி நிலந்தோண்டி நிற்கின்ருன் என்பதாய்க் கருதி ; அதனை...கலுழன் - கருடன் அப்பெருச்சாளியினிடம் வந்து சேரும்.

(வி - ரை) இது வெள்ளி பாடல் என்பர். அதாவது, ஒரு வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவரால் இடைச் செருகலாய்ச் சேர்க்கப்பட்ட பாட்டு என்று கூறுவர்.

இதன் கருத்தும் பொருளும் மேற்பாட்டையே அனுவதித்துக் கூறியதாக வெள்ளையாகவே காணப்படுகின்றது. மேற் பாட்டிலே பிரமனுக்குச் சொன்ன கருத்தும் பொருளுமே இப்பாட்டில் விட்டுணுவுக்கும் சொல்லப்பட்டது. மேற்பாட்டில் ஊர்தியையுடையவன், ஊர்தியைக் காணாது மயங்குகின்றான். இப்பாட்டில் ஊர்தி, உடையவனைக் காணாது மயங்குகின்றது.

வெண் குழையோன் - சிவபெருமான்.—**நெடியோன்** - விட்டுணு.—**முழை** - மலையிற் பொந்து - பெருந் துவாரம்.

துதிக்கையோன் ஊர்தி - பெருச்சாளி. இது உருவத்தால் பன்றிபோல் தோற்றப்பட்டு விட்டுணுவினது ஆதி வெள்ளைப்பன்றிநிலையைக் கருடனுக்கு நினைப்பூட்டிற்று. **ஆதி ஏனம்** - சுவேதவராகம் எனப் பெறுவது. பெருச்சாளியும் மலையில் ஒளியால் வெள்ளையாய்த் தோன்றியபடியால் இது மாலாகிய வெள்ளைப்பன்றியோ என்று கருடன் எண்ணியது.

கருடன் தனது தலைவனாகிய திருமாலைக் காணாது தேடிற்று. திருமலையடியில் ஒரு வெள்ளிய பெருச்சாளியைக்கண்டு அது வெள்ளைப் பன்றியோ என்று நினைத்தது. முன்னோர்கால் செஞ்சுடராகிய அண்ணாமலையைப் போலவே இது ஒரு வெண்சுடர் மலை என்று நினைத்துத் தனது முன்னை உருவாகிய வெள்ளைப் பன்றியாக மண்ணைத் தோண்டி அடிதேடுகின்றாரோ தன் தலைவன்? என நினைத்து அதனைச் சார்ந்தது; என்பது இப்பாட்டின் கருத்தாம். வெள்ளைப் பன்றியாய் விட்டுணுமூர்த்தி செயல் செய்த கற்பமே சுவேதவராக கற்பம் எனப்படும். 8

19.　அரம்பைய ராடல் முழவுடன் மருங்கி
　　　லருவிகள் எதிரெதிர் முழங்க
　　வரம்பெறு காதல் மனத்துடன் தெய்வ
　　　மதுமல ரிருகையு மேந்தி
　　நிரந்தர மிடைந்த விமான சோபான
　　　நீடுயர் வழியினூ லேறிப்
　　புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப்
　　　பொலிவது திருமலைப் புறம்பு. கூ

(**இ - ள்**) அரம்பையர்...முழங்க - அரம்பை முதலிய தெய்வப் பெண்கள் ஆடலுக்கேற்ப முழக்கும் முழவுகளோடு, பக்கத்தே ஓடும் மலையருவிகள் எதிர் எதிர் இசைப்பனபோலச் சத்திக்க; வரம்பெறும்...ஏந்தி - இறைவனிடத்தே தாங்கள் குறித்த வரங்களைப் பெறவேண்டும் என்னும் ஆசையுடைய மனத்தோடு தேன் நிறைந்த கற்பகப் புதுப்பூக்களை இரண்டு கையிலும் ஏந்திக் கொண்டு; நிரந்தரம்... ஏறி - நெருங்கிய விமானங்களுடன் கூடிய படிவழியேறி வந்து; புரந்தரன்...புறம்பு - இந்திரன் முதலிய தேவர்கள் துதிக்க விளங்குவது அத்திருமலையின் வெளிச் சாரல்.

(**வி - ரை**) **ஆடல் முழவு** - ஆடலுக்கிசைய முழக்கப்படும் முழவு. "வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர" (திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்-திருவையாறு).

வரம்பெறு காதல் மனம் - போகபதங்களின் நாயகர்களாதலின் தங்கள் தங்கள் பதவிகளுக்கு உரிய இன்பங்களைத் தரவும் அவற்றிற்கு வரும் துன்பங்களைப் போக்கவும் வேண்டும் வரம்பெறும் மனம்.

தெய்வ மதுமலர் - கற்பக முதலிய தேவ வுலகத்து மலர்கள். **மதுமலர்** - தேன் நிறைந்த புதுப் பூ.

நிரந்தர மிடைந்த விமான சோபான நீடு உயர் வழி-எங்கும் நெருங்கிய விமானங்களுடன் கூடிய படிகளையுடைய நீண்டு உயர்ந்த வழி. படிவழும் வழியிலே நெருக்கமான மண்டபங்களும் அவற்றிலே விமானங்களும் உண்டு என்க.

புரந்தரன் முதலாம் கடவுளர், மலர், கைவந்திச், சோபான வழியினுல் ஏறிப் போற்றத் திருமலைப் புறம்பு பொலிவது என்று முடிக்க.

இந்திரன், மால், பிரமன் முதலிய பற்பல தேவர்களும் தங்களுக்கு அசுரர்களாலே துன்பம் நேர்ந்தபோதும், பின்னும், அவ்வப்போதும், திருக்கயிலை சென்று வரங்கிடந்து வேண்டியவற்றைப் பெற்ற வரலாறு கந்தபுராணம் முதலிய மாபுராணங்களிற் காண்க.

மேற்கூறிய மூன்று பாட்டுக்களாலும் பிரமன் முதலிய தேவர்கள் இறைவனை வணங்கி வரம்பெறக் காத்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அவ்வாறு அவர்கள் காத்து நிற்பது திருமலையின் வெளிப்புறங்கள் என்றும், இவர்கள் தங்கள் பக்குவத்திற்கேற்பச் சோபானக் கிரமத்திலே சிவபெருமானைப் பூசித்து வரம்பெற உள்ளவர்கள் என்றும், குறித்தவாறு. "தடஞ்சிலாதல சோபானத்தா லேறி வாழ்ந்திமையோர் குழாம் நெருங்கு மணிநீள்வாயில்" என்று தென்கயிலையாகிய திருக்காளத்திக் கோயில்வாயிலைக் கூறுதல் காண்க. (திருஞான - புரா - 1022)

கடவுளர் - தேவர்கள். முழுமுதற் கடவுள் அல்லர். வரம்பெறும் என்றமையானறிக. ஏகதேசத்தில் உபசார வழக்கில் இவர்களும் கடவுளர் எனப் பெற்றூர்கள்.

> "அரியயன் இந்திரன் சந்திரா தித்தர் அமரரெல்லாம்
> உரியநின் கொற்றக் கடைத்தலையார் உணங்காக் கிடந்தார்;
> புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றூர் ;
> எரிதரு செஞ்சடை ஏகம்ப! என்னே திருக்குறிப்பே"

> "உந்திநின் றுருண்றன் ஓலக்கச் சூளைகள் வாய்தல்பற்றித்
> துன்றிநின் றூர்தொல்லை வானவ ரீட்டம் பணியறிவான்
> வந்துநின்று ரயனும் திருமாலும்; மதிற் கச்சியாய் !
> இந்த நின்றேம்; இனி யெங்ஙனமோ வந் திறைஞ்சுவதே"

என்பனவாதி திருவிருத்தங்களையும் காண்க.

இக்கருத்தை மேல்வரும்பாட்டு விளக்குதலும் காண்க. 9

20. வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
  விண்ணவ ரெண்ணிலார் மற்றும்
 காதலால் மிடைந்த முதற்பெருந் தடையாம்
  கதிர்மணிக் கோபுரத் துள்ளார்
 பூதவே தாளப் பெருங்கண நாதர்
  போற்றிடப் பொதுவினின் றுடும்
 நாதனு ராதி தேவனூர் கோயி
  லாயக னந்திஎம் பெருமான். ௧௦

(இ - ள்) வேதநான்முகன்...உள்ளார் - (மேலே கூறியபடி) பிரமன் விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களும் மற்றும் எண்ணில்லாத முனிவர் முதலியோர்களும் வரம்பெறும் ஆசையுடன் நெருங்கிக் கூடித் தடைபட்டு வெளியே காத்திருக்கும் முதற் திருவாயிலின் கோபுரத் துவாரத்திலே வீற்றிருப்பவர்கள் ; பூதம்...நாயகன் - சிவபூதங்களும் வேதாளங்களும் முதலிய கணநாதர்கள் நேரே தரிசித்துத் துதிக்கும்படி

அம்பலத்தே நித்தமாகிய திருக்கூத்து ஆடும் நாதனும் முதற்கடவுளும் ஆகிய சிவ பெருமானுடைய திருக்கோயிலின் அதிகாரியாகிய நந்தி எம்பெருமான்.

(வி - ரை) எம்பெருமான் - திருநந்திதேவர்.

ஆதிதேவனார் கோயில் நாயகன் நந்தியெம்பெருமான் முதற் பெருந்தடையாம் கதிர்மணிக் கோபுரத்து உள்ளார் என்று கூட்டிப் பொருள் கூறுவர். உள்ளார்களும் கணநாதர்களும் போற்றிட...ஆடும் என்று கூட்டி, நாயகன் நந்திபெருமானவர் எனவும் பொருள் உரைப்பர். இவ்விருபொருளுமன்றி இப்பாட்டைக் குளகமாகக்கொண்டு கோபுரத்து உள்ளார்கள் யாவர் எனின் - நாயகன் நந்திஎம்பெருமானும் (வரும்பாட்டிற் காணும்) கண்ணரும் தோளருமாகிய அநேகர் அடியார்களுமாம் - என நந்திதேவரும் அடியார்களும் உள்ளார் என்று முடித்து உரைத்தலும் ஆம். **உள்ளான்** - என்பது பாடமாயின் முதலிற் கூறிய பொருளே கொள்க.

வேத நான்முகன் - வேதங்களை ஓதுபவன். வேதமுதல்வன் என்பதல்ல.

மிடைந்த முதற் பெருந்தடை - நந்திதேவருடைய ஆணைக்குட்பட்டு நின்று அவரது உத்தரவையும் சிவபெருமானது சேவைக்குரிய காலத்தையும் எதிர்பார்த்தவர்களாய்க் காத்துக்கொண்டு நெருங்கிக் கூடியிருக்கும் முதல் திருவாயில். இவ்வாறு பற் பல சமயங்களில் தங்கள் தங்கள் கர்மானுபவம் தீரும் வரை வெகுகாலம் காத்துக்கொண்டிருந்தார்கள் தேவர்கள் என்பது கந்தபுராணத்துக் காண்க.

சிவபெருமானது திருக்கோயில்களில் முதற் கோபுரத் திருவாயிலில் திருநந்திதேவர் எழுந்தருளி யிருப்பது காணலாம். அதன் அமைப்பு இதனால் விளங்கும்.

காதல் - மேற்பாட்டிற் சொன்னபடி தத்தம் பதங்களுக்குள்ள வரம்பெறும் காதல்.

நாயகன் - கோயில் அதிகாரம் பெற்றவர். **நந்திஎம்பெருமான்** - நந்திதேவராகிய எமது பெருமான். சிவகணங்களுக்கு முதல்வராய்க், கோயில் அதிகாரியாய்ச், சிவபெருமானாகிய சர்வாதிகுருவினிடத்துச் சிவாகமம் முதலிய எல்லாச் சாத்திரங்களையும் கேட்ட முதற்சீடராய், அவ்வகையில் தாம் கேட்ட உண்மைப் பொருளை உலகிற்கு உபகரிக்கத் திருக்கயிலாய பரம்பரை ஆசாரியர்களுக்கு முதலாசாரியராய், விளங்குபவர்.

“ நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவ ரென்னோ டெண்மரு மாமே ”

என்ற திருமூலர் திருமந்திரமும், திருநந்தி தேவர்—சனற்குமாரர்—சத்தியஞான தரிசினிகள்—பரஞ்சோதியார்—மெய்கண்ட தேவர்—என்ற சுத்தாத்துவித சைவசித்தாந்த சந்தான பரம்பரை விளக்கமும் இங்கே அறியத்தக்கன.

“ நங்கள் நாதனும் நந்தி ”—(திருமலை - 35) என்று குருமரபு விளக்கிப் பின்னர்க் கூறுவதும் காண்க.

நந்தி - இது சிவபெருமான் பெயர். “ நந்திநாமம் நமச்சிவாய ” என்பன வாதி தேவாரங்கள் காண்க. திருமூலர் இறைவனை நந்தி என்றே கூறும் மரபும் காண்க. “ நந்தியருளாலே ” “ நந்தி அருள் பெற்ற ” “ நந்தி யிணையடி ” என்பன திருமந்திரங்கள். இப்பெயர் அவரது சீடர்களில் முதல்வராய்க் கணநாயகராய்க் கோயிற் றலைமைப் பணியாளராய் உள்ள காரணம்பற்றித் திருநந்தி தேவருக்கு ஆயிற்று.

நந்தி தேவர் வேறு ; இடப தேவர் வேறு. பலர் இவ்விருவரையும் ஒன்றென மயங்குவர். நந்திதேவர்-நெற்றிக்கண், நான்கு தோள், நீலகண்டம், முதலியவற்றுடன் சாரூபம் பெற்றவராய்க் கையிலே உடைவாளும் பிரம்பும் தாங்கியவராய்த் திருக்கோயில் அதிகாரத்துடன் நிற்கும் முதல் அடியார். இடபதேவராவார்-திரிபுர சங்காரத்திலே திருமால் இடப வடிவங்கொண்டு சிவபெருமானைத் தாங்கின தேவர். இந்த இடபமே அடியார்களுக்கு அருள்புரிய இறைவன் எழுந்தருளும்போதெல்லாம் உகந்த ஊர்தியாகும்.

வேதத்துறை இறைவனது கோயில் வாயில் மட்டிலே செலுத்தும் என்றும் சைவத்துறையே அதன் மேல் உள்ளே செலுத்தித் தரிசனம் செய்விப்பது என்றும் குறிப்பிட்டவாறு.

நந்தி - அவிதியசம்பு, சம்புவுக்கு ஒப்பானவன் என்றும் கூறுப. **நந்தி** - நந்துதல் (நாசம்) இல்லாதவர், அழிவில்லாதவர் என்க. 10

21. நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனிய ரனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரா னடியார்
பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையிற் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினாற் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான். கக

(இ - ள்) நெற்றியிற்கண்ணர்...அருள் பெறுவார் - நெற்றிக் கண்ணும் நான்கு தோள்களும் திருநீறு பூசிய மேனியும் உடையவர்களாய், இடபவாகனத்தில் எழுந்தருளும் சிவபெருமானது அடியவர்களாகிப் பெருமானது திருவருளைப் பெறுபவர்களாய், அனேகர் இருந்தனர்; அவர்களுக்கெல்லாம் தலைமைஆம் பணியும் - அவ்வடியார்களுக்கெல்லாம் தலைவராகிய திருப்பணிவிடையும்; மலர் கையில் சுரிகையும் பிரம்பும் - மலர்போன்ற கையிலே உடைவாள் பிரம்பு ஆகிய இவைகளையும்; கற்றைவார்சடையான்...வரைதான் - கற்றையாகக் கட்டிய நீண்ட சடையையுடைய சிவபெருமானது திருஅருளினாலே பெற்றவராகிய நந்தி யெம்பெருமான் காவல்புரிகின்றது இந்தக் கயிலைப் பெருமலையேயாம்.

(வி - ரை) **நெற்றியிற் கண்ணர்...பெறுவார்** - இங்குக் கூறியவர்கள் சிவபெருமானது திருவுருவத்தைப் பெற்ற அடியார்கள்; சாரூபம் பெற்றோர் என்க. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுக்கும் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கு பதவிகளாக வகுத்தது சைவசாத்திரம். எனவே இங்கே குறித்தவை யோகத்தால் அடைந்த பேறு.

யோக நிலையை உலகத்தில் விளக்கிக் காட்டும் ஆசாரியராய் அவதரித்தவர் நம்பிகள். ஆதலின் அவர் எழுந்தருளும் சோதியானது அதுபோலவே யோகநிலையின் பயனைப்பெற்றுச் சாரூபம் கொண்டவர்களாகிய அடியார்களிடையே யோக ஒளியாய்ப் புகுகின்ற நிலை இங்குக் குறிப்பிட்டவாறு: யோக நிலையினர் சாரூபம் பெறுதல் சாத்திரத்துக் காண்க.

சினமலி அறுபகை மிகுபொறி சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு தருபொருள் நியதமும் உணர்பவர்
தனதெழில் உருவது கொடுஅடை தகுபர னுறைவது நகர்மதிற்
கனமரு வியசிவ புரம்நினை பவர்கலை மகள்தர நிகழ்வரே.

—திருச்சிவபுரம் - நட்டபாடை - 5

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரத்தாலும் அறிக. இதில் **மனன் உணர்வொடு நியதமும் உணர்பவர்** என்ற குறிப்பையும் பின்னர் உபமன்னிய முனிவர் **"சிவன் தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான்"** என்பதனையும் நோக்குக.

நெற்றிக்கண் - நான்குதோள் முதலியன இறைவனது உருவம். **அனேகர்** - இவ்வுருவம்பெற்ற முத்தான்மாக்கள் எண்ணில்லாதவர்கள் என்றபடி. **நீறணி மேனியர்**

என்றபடியால் சாரூபம் பெற்றாரும் திருநீறு கண்டிகை முதலிய சிவசின்னங்களைத் தரிக்கும் நியதியுடையார் என்பது அறியப்படும். இவர்களுக்குத் தமது உருவம் தரும் இறைவன் திருமேனியிலும் இவை விளங்குவன. ஆதலின் அன்றோ இவர்கள் இவற்றைப் பெற்றனர்? இதை எண்ணும்போது சரியை கிரியை யோகம் முதலிய எவ்விதத் தகுதியும், படியும் இல்லாதவரும், இக்காலத்தில் வெறும் வாய்ஞானம் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டு சிவசின்னங்களைப் புறக்கணித்துத் திரிபவருமாகிய மாக்களின் நிலைமை பரிதபிக்கத் தக்கதேயாம் என்க.

மற்று அவர்க்கெல்லாம் - அவர்களோடு ஒன்றாயிருந்தும் அவர்களின் வேறாய்த் தலைமையும் பூண்டார் என்று குறித்தது. **மற்று** - அசை என்றொதுக்குவாரும் உளர்.

தலைமையாம் பணி - அவர்கள்போலவே தாமும் சிவ உருவம் பெற்றவராய்ச் சுரிகையும் பிரம்பும் தாங்கிக் கயிலை மலையையும் கோயிலையும் காவல் புரியும் முதன்மையாகிய பணிவிடை. **அனேகர்** என்பது கந்தபுராணத்திலே வீரவாகு தேவருக்கு இளையவர்கள் போரிலே பட்டுத் திருக்கயிலையில் போய் வீற்றிருந்த திருக்கோலத்தால் தெரியலாம்.

பணியும் - அதற்காகச் சுரிகையும் பிரம்பும் பெற்ற என்று வருவித்துரைக்க.

பணியும் சுரிகையும் பிரம்பும் பெற்றான் என்க. **பெற்றான் காப்பது** - பெற்றானால் காக்கப்படுவது என விரிக்க.

பிஞ்ஞகன் - சிவபெருமான் - தலைக்கோல முடையான்.

பெற்றம் - இடபம். "பெற்ற மேல்கொண்ட" என்பதைத் "தம்பிரா"னுடன் கூட்டுக. இதனை அடியார் என்பதனுடன் கூட்டியுரைப்பாருமுளர். அவர்கள் சாரூபமேயன்றி இடபவாகனம் முதலியன பெருமையால் அவ்வுரைபொருந்தாமை உணர்க. **அனேகர்** என்ற பெயரால் அவ்வகையினரைப் பிரித்துக் கூட்டினமையும் காண்க.

அருள் பெறுவார் - சாரூபம் பெற்றவர்களாய் மேலும் ஞானத்தால் அவனது திருவருளைப் பெற எதிர்பார்த்து வழிபட்டுக் கொண்டு இருப்பார்கள் என்க.

வரைதான் - இவரது காவலின் பெருமை பெற்றது திருக்கயிலை மலை ஒன்றே என்க. இவரது காவற் பெருமையை இத்திருமலையின் மேலே தேர் செலுத்த முயன்ற இராவணன் இவரது ஊங்காரமாகிய மூச்சுக் காற்றினாற் பட்ட பாட்டினைக் கூறும் சரிதத்தினாலே கந்தபுராணத்தினுட் காண்க. **தான்** - என்பதை அசையாகக் கொண்டு ஒதுக்குவாரு முளர்.

இப்பாட்டிலே குறித்த சாரூப முதலிய நிலைகளையும் அவற்றிற்குக் காரணமாகிய யோகம் முதலிய நாற்பாதங்களையும் பற்றித் தாயுமானார்,

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்று அருளியிருத்தல் காண்க. ஞானிகள் அடைந்தநிலை சாயுச்சியமாம். இது காணவும் சொல்லவும் முடியாமையால் இதற்கு அடுத்த நிலையாகிய யோகபலனாகிய சாரூபம் இங்குக் கூறப்பெற்றது. இவர்களுக்கு நந்திதேவர் தலைவரென்று சொல்லிய படியாலே இவரும் நெற்றிக்கண், நாற்றோள் முதலியவற்றை யுடையார் என்பது சொல்லாமலே யமையும்.

தம்பிரான் - தமக்குமேல் பிரான் ஒருவருமில்லாமல் தமக்குத் தாமே பிரானாயுள்ளவர். ஆதலின் அவர்க்குப் பிறர் எல்லாரும் அடியவர்களே யாவர். 11

22. கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையிற்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி
யையர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்

மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடையந பாயன்
செய்யகோ லபயன் திருமனத் தோங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு. ௧உ

(இ - ள்) கையில் மான் மழுவர் - தமது இடதுகையில் மானும், வலது கையிலே மழுவும் உடையவராகவும்; கங்கை சூழ்...ஐயர் - கங்கையைச் சூழ்ந்த கரைபோலக் கட்டிய சடை மகுடத்திலே ஒளி வீசும் இளம்பிறையாகிய மூன்றாம் பிறைச் சந்திரனையும், நறிய கொன்றைப் பூமாலையையும் உடைய ஐயராகவும் உள்ள சிவபெருமான்; வீற்றிருக்கும் தன்மையினாலும் - விரும்பி எழுந்தருளி யிருக்கிற தன்மையுடைமையாலும்; அளப்பு அரும் பெருமையினாலும் - அளவிட முடியாத பெருமையுடைமையினாலும்; மெய்...தூய்மையினாலும் - மெய்யினது ஒளி மேன் மேல் ஓங்கி வீசும் தூய்மை உடைமையினாலும்; வென்றி...ஓங்கும் - வெற்றி பொருந்திய வெண்குடையுடைய அநபாயரும், செங்கோல் ஏந்திய அபய சோழரும் ஆகிய அரசரது திருமனம்போல ஓங்குவதாம்; திருக்கயிலாய நீள் சிலம்பு - திருக்கயிலாயம் என்னும் நீண்ட பெரிய மலை.

(வி - ரை) மழுவரும் ஐயருமாகிய பெருமான் வீற்றிருக்கும் தன்மையினாலும், பெருமையினாலும், தூய்மையினாலும், அநபாயர் திருமனம்போலத் திருக்கயிலாயச் சிலம்பு ஓங்கும் என்க.

கையில் மான் மழுவர் - இவைகள் தாருகவனத்து இருடிகள் செய்த யாகத்திலே தோன்றி வந்தன. இவற்றை இறைவன் கையில் தாங்கிய வரலாறுகள் கந்தபுராணம் முதலியவற்றிற் காண்க. இவைகளை இறைவன் தரிப்பதற்கு முன்னே மானும் மழுவும் இல்லாமலே இருந்தனர். இத்திருக்கோலமே சீகாழியில் உள்ள தோணியப்பருடைய திருக்கோல மென்க. "எறிமழுவோ டிளமான்கை யின்றி..." என்பது தேவாரம்.

கங்கை சூழ்சடை - கங்கைக்குக் கரைபோலச் சூழ்ந்த சடை. "நில்லாத நீர்சடை மேல் நிற்பித்தானை" முதலிய தேவாரங்கள் காண்க.

கதிர் இளம் பிறை நறுங் கண்ணி - பிறையும் கொன்றைக் கண்ணியும் என உம்மைத்தொகை விரித்துரைத்துக் கொள்க. பிறையாகிய நறுங்கண்ணி - எனக் கொண்டு சடையிற்றரித்த இளம் பிறை அதிலே சுற்றிய நறுமலர் மாலை போன்றது என உரைப்பினும் ஆம்.

அளப்பரும் பெருமை - கயிலைக்குப் பெருமை உருவத்தாலும், மனத்துக்குப் பெருமை குணத்தாலும், கொள்க. இரண்டும் பெரியனவற்றுள்ளெல்லாம் பெரிதாயுள்ளதொரு பொருளைத் தம்மிடத்தே கொண்டிருத்தலாலும் ஒப்பாயின. மனத்தின் பெருமை தஞ்சை இராசராசேச்சரம் அமைத்த இராசராசதேவர் மனத்தின் பெருமையிலிருந்து கண்கூடாகக் கண்டுகொள்க.

மெய் ஒளி தழைக்கும் தூய்மை - கயிலைக்கு வெண் திருநீற்றின் தூய ஒளி என்றும், மனத்துக்குத் தூய அன்பின் புகழ் ஒளி என்றும் கொள்க. ஊழிக்காலத்தும், என்றும் திருநீற்றின் ஒளியே மெய் ஒளி என்பதும், ஏனைய ஒளிகள் எல்லாம் அழிவன என்பதும்,

"வெந்த சாம்பல் விரையென் பதுதம
தந்த மில்ஒளி யல்லா வொளி எலாம்
வந்து வெந்தற..........." —திருஞான - புரா - 829

என்ற இடத்து விளக்கியது காண்க.

கயிலை - அநபாயர் திருமனம் போன்றது என்பது உவமச் சிலேடை. **மனத்து** - மனம்போல. **ஓங்கும்** - வளரும். சிலம்பு மனத்து ஓங்கும் எனக் கூட்டுக.

மெய் ஒளி - சத்தினுடைய ஒளி - சத்துவம். இதற்கு நிறம் வெண்மை என்ப. (இராசதம் சிவப்பு என்றும்—தாமதம் கருமை என்றும் கூறுப.)

அநபாயர் - இப்புராணம் இயற்றக் காரணரா யிருந்தமைபற்றி அவரை இப்புராணத்து வைத்தமை முன்னர்க் குறிக்கப்பெற்றது. ந+அபாயர் - அபாயமில்லாதவர். தமக்கு அபாயமற்றவர் என்பதோடு பயமுமில்லாதவர்; பிறருக்கும் அபாயத்தையும் பயத்தையும் போக்குபவர் என்பார் அநபாயர் - அபயன் என உடன்கூட்டி யுரைத்தார். **செய்ய கோல்** - செங்கோல். **செய்ய** - செவ்விய; கோணுத.

"கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது" என்பது தேவாரம்.

திருமனம் - திரு - மோட்ச சாம்பிராச்சியமான ஐசுவரியம். "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட" என்ற பிரமாணத்துட் காண்க. அசைதலே தன்மையாக் கொண்ட மனம் சிவபெருமானைப் பதித்தபடியால் அசையாமல் நின்று அசலத்துக்கு ஒப்பாயிற்று.

சிலம்பு - இயற்கையாலே அசையாதது, சிறப்பன்று; சலிப்புள்ள மனம் தன் இயல்பிற்கு மாறாய்ச் சலிப்பில்லாமல் நிற்பது அதனினும் சிறப்பாம் என்பது குறிப்பு. தன்மை - பெருமை - தூய்மைகள் இவ்விரண்டிடத்தும் பொதுத்தன்மைகளாம் என்க.

ஓங்கும் - ஓங்குக என நிகழ்காலத்தாற் கூறினார். "வேந்தனு மோங்குக" என்றபடி, அநபாயரை வாழ்த்தியவாறு மாயிற்று. 12

வேறு

23. அன்ன தன்திருத் தாழ்வரை யின்னிடத்
தின்ன தன்மைய னென்றறி யாச்சிவன்
றன்னை யேயுணர்ந் தார்வந் தழைக்கின்றான்
உன்ன ருஞ்சீ ருபமன் னியமுனி. ௧௩

(இ - ள்) அன்னதன்...இடத்து - மேலே கூறிய தன்மைகளைப் பொருந்திய கயிலாய மலையின் ஒரு சாரலினிடத்தே; இன்ன...தன்னையே - இப்படிப்பட்ட தன்மையுடையான் என்று யாவராலும் அறியப்படாதவராகிய சிவபெருமானையே; உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான் - உணர்ந்துகொண்டு ஆசைபெருக அனுபவித்துக் கொண்டிருக்கிறான்; உன்னரும் சீர் உபமன்னியமுனி - நினைத்தற்கும் அரிய சிறப்பினையுடைய உபமன்னிய முனிவர்.

(வி - ரை) அதன் தாழ்வரை யிடத்து உபமன்னிய முனிவர் சிவன் தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான் என்க. "இன்ன தன்மையன் என்றறி யொண்ணு எம்மானை" என்பது சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்.

அறியாச் சிவன்-அறியப்பெறாத சிவன். செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. சிவன் மனத்தா லுணர்தற்கும் வாக்கினால் ஓதுதற்கும் அரியவன் என்பது, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என முதற்றிருப்பாட்டிலேயே அறிவித்தமை காண்க.

தன்னையே - ஏகாரம் தேற்றம்; பிரிநிலையும் ஆம். சிவனையே யன்றி வேறொருவரையும் உணராதவன்—வணங்காதவன் என்பது.

"சம்பு வின்னடித் தாமரைப் போதலால்
எம்பிரா னிறைஞ் சாய்" (19)

என்று மேலே குறிப்பதையும் காண்க.

" மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது "—திருவாசகம்

" உன்னையல் லால்ஒரு தெய்வம் உள்கேன் "—அப்பர் சுவாமிகள்

" சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம் " ஷெ

" அத்தாஉன் அடியலா லரற்று தென்னா "
—திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

உணர்ந்து - தியானத்திற் கண்டு. அவ்வுணர்வே உருவமாகி. இது மனம் வாசகம் முதலிய கரணங் கடந்த யோகக் காட்சி.

ஆர்வந் தழைக்கின்றான் - அந்த யோகக் காட்சியிலே விளைந்த ஆனந்தத்தில் அழுந்தி நிற்கின்றார்.

இன்ன தன்மையன் என்று அறியாச்சிவன் என்பது சவிகற்பக் காட்சியில் அறிதற்கரியவன்—அதாவது, இப்படியன்—இந்நிறத்தன்—இவ்வண்ணத்தன்—இவன்—இறைவன் என்றெல்லாம் பிரித்துக் காணுதல். இவ்வாறு அறிய இயலாவிடினும், நிருவிகற்ப சமாதியிலே அவன் தம்மை ஆட்கொண்டு அளிக்கும் ஆனந்தத்தில் திளைத்து அனுபவிப்பர் சிவானுபூதிமான்கள் என்பாராய் 'இன்ன தன்மையன்' என்று அறியாச் சிவன் (ஆயினும் அவன்) தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான் என்று கூறினார். இக்கருத்தையே,

" எங்ங னிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அங்ங னிருந்ததென் றுந்தீபற
அறியு மறிவதன் றுந்தீபற " என்று சாத்திரம் பேசும். இதனை,

" ....இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை யாண்டுகொண் டருளிய அற்புத மறியேனே "

என மணிவாசகப் பெருமானும் வியந்து கூறியருளினார்.

இதனாலே " உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான் " என்பது " அறியாச் சிவன் " என்பதனோடு முரணாமை அறிக. இக்கருத்தையே " உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன் " என்றும், " நிலவு லாவிய நீர்மலி வேணியன் " என்றும் முதற் பாட்டிலே கூறினார். விரிவு அப்பாட்டின் உரையில் காண்க.

உன்னரும் சீர் உபமன்னிய முனி - இப்பெரு முனிவரது சீர்கள் உன்னுதற்கும் (நினைத்தற்கும்) அரியன ஆயினும் அவற்றுட் சிலவற்றை வருகின்ற இரண்டு பாட்டுக்களிலும் எடுத்துக் கூறியருளினார். இவரது சீரிற் சிறந்ததாகிய - சிவனை உணர்ந்து ஆர்வம் தழைக்கின்ற - சிறப்பை இங்கு முதலிற் கூறியதன்றி மேலும் தெரிக்கின்றார் என்க. 13

24. யாத வன்றுவ ரைக்கிறை யாகிய
மாத வன்முடி மேலடி வைத்தவன்
பூத நாதன் பொருவருந் தொண்டினுக்
காதி யந்த மிலாமை யடைந்தவன். கச

(இ - ள்) யாதவன்...மாதவன் - (உபமன்னிய முனிவர்) யாதவனும் துவாரகைக்கு அரசனும் ஆகிய கிருட்டின மூர்த்தியினது ; முடிமேல் அடி வைத்தவன் - முடிமேல் தனது பாதங்களைச் சூட்டியவர் ; பூதநாதன் பொரு அரும் தொண்டினுக்கு - பூத நாயகராயுள்ள சிவபெருமானிடத்துத் தாம் செய்யும் ஒப்பற்ற திருத்தொண்டுக்கு ; ஆதி அந்தம் இலாமை அடைந்தவன்-முதலும் இறுதியும் இல்லாத தன்மை பெற்றவர்;

(வி - ரை) பின்னும், அம்முனிவர், மாதவன் முடிமேல் அடிவைத்தவரும் நிரந்தரமான சிவத்தொண்டு பெற்றவரும் ஆம் என்பது. **யாதவன்** - யது மரபிற் பிறந்தவன் - கண்ணன். துவாரகை துவரை என மருவி வந்தது.

முடிமேல் அடிவைத்தவன் : திருவடி தீக்கை செய்தவர் : இது சிவ தீக்கை வகையில் ஒன்று ; கண்ணனுக்கு உபமன்னிய முனிவர் சிவதீக்கை செய்த வரலாறு மாபாரதத்திலே அநுசாசன பருவத்திலே கிருட்டினனுக்குச் சிவதீட்சை செய்த பகுதியுட் காண்க.—கண்ணன் யமுனை யாற்றுக்கரையிலே சிவதீக்கையில்லாது வைதிக மார்க்கத்திலே சிவபூசை செய்தனர். அவர் பூசித்த பின் அந்த மலர்களை யமுனை யாற்றிலே இட்டார்களாக, அவை யமுனையின் வழிப்பட்டுச் சென்றன. அவற்றை உபமன்னிய முனிவர் எடுத்துச் சிவபூசை செய்ய அவை கண்ணன் பூசித்த நின்மாலி யம் என்று கேட்டபோது அவனுக்குச் சிவதீக்கை யில்லை ஆதலின் அவன் பூசித்த பூக்களுக்கு நின்மாலிய தோடமில்லை ; அவை நின்மாலியமாகா ; என்று சொல்லிப் பூசித்து முடித்தனர். அதுகேட்ட கண்ணன் தான் இதுகாறும் செய்த சிவபூசை பய னற்றுப் போனதை எண்ணி வருந்தி அம்முனிவரை யடைந்து சிவதீக்கை செய்து கொண்டனன் - என்பது அதன் சுருக்க வரலாறு.

தொண்டினுக்கு ஆதியந்த மிலாமை யடைந்தவன் : இவர் சிவபெருமானுக்குச் செய்யும் தொண்டு—இங்கே தொடங்கிற்று, இங்கே முடிந்தது—என்றுசொல்ல இய லாதபடி எங்கும் என்றும் இடைவிடாது மனம் வாக்குக் காயங்களினாலே செய்ய நிலைத்து நிற்கும் பேற்றை அடைந்தவர்.

மேற்பாட்டினிறுதியிற் போந்த உபமன்னிய முனிவராகிய அவன்—என எழுவாய் வருவித்து, அவன்—அடி வைத்தவன்—அடைந்தவன்—எனும் குறிப்புவினையாலணை யும்பெயர்ப் பயனிலைகளை முடிக்க. மேல்வரும் பாட்டிலும் இவ்வாறே அவன்—வளர்ந்த வன் என முடிக்க. 14

25. அத்தர் தந்த அருட்பாற் கடலுண்டு
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன் ;
பத்த ராய முனிவர் பல்லாயிரர்
சுத்த யோகிகள் சூழ இருந்துழி. ௧௫

(இ - ள்) அத்தர்...உண்டு - தமது அத்தர் கொடுத்த அருளினாலாகிய திருப்பாற் கடலைப் பருகி ; சித்தம்...வளர்ந்தவன் - மனம் நிறைவுபெற்றுத் தேக்கி அதுவே உருவமாய் வளர்ந்தவர் ; பத்தர்...இருந்து உழி - பத்தர்களாக உள்ள முனிவர்கள் பல ஆயிரவர்கள் சுத்த சைதன்யத்தை அடைந்த யோகிகள் என்ற இவர்கள் தம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க அமர்ந்திருந்த இடத்து.

(வி - ரை) இப்பாட்டு குளகம். வரும் பாட்டிலே தோன்றிட என்பதனுடன் கூட்டி **இருந்துழித் தோன்றிட** எனக் கூட்டி மேலும் முடித்துரைத்துக் கொள்க.

அத்தர் தந்த அருட்பாற்கடலுண்டு...வளர்ந்தவன் - உபமன்னியமுனிவர் குழந் தைப் பருவத்திலே பால்வேண்டி யழுதபோது தந்தையாராகிய வியாக்கிரபாத முனி வர் நடராசரை வேண்ட, அவர் திருப்பாற்கடலையே இக்குழந்தைக்கு உண்ணக் கொடுத் தருளினர் என்பது வரலாறு. இதனைச் சிவரகசியம் கோயிற்புராணம் முதலியவற்றிற் காண்க. "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" என்பது திருவிசைப்பா.

அருட் பாற்கடல் - அருளினாலே அத்தர்தந்த பாற்கடல் எனக் கூட்டுக. **அத்தர்** - தந்தை ; இங்கு யாவர்க்கும் தந்தையாகிய சிவபெருமானைக் குறித்தது. தமது தந்தை யாகிய புலிக்கால்முனிவர் என்றுரைப்பது மொன்று. இப்பொருட்குத் **தந்த** என்பதற்கு இறைவனை வேண்டிப் பெற்றுத் தந்த - என உரைக்க.

முனிவர் - அகப்பற்று புறப்பற்றுக்களை முனிந்தவர் ; **பத்தராய முனிவர்** - பற்றுக் களை முனிந்த அத்தன்மையோடு இறைவனிடத்தே பதிந்த பத்தியையும் வாய்ந்தவர்,

முனிவர்களாகியும் பத்தியில் வராத தாருகவனத்து முனிவர் போன்றாரை வேறு பிரித்தற் பொருட்டுப் **பத்தராய** என்றார். இது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

சுத்த யோகிகள் - சுத்த அவத்தையிலே யோகக் காட்சி கைவரப் பெற்றவர்கள்.

பல்லாயிரர் - எண்ணில்லாதவர்கள். பத்தராயும் முனிவராயும் எண்ணிக்கையில் பல்லாயிரவராயும் உள்ள யோகிகள் என்று சேர்த்தி யுரைத்துக்கொள்க. முனிவரும் யோகிகளும் என எண்ணும்மை விரித்து இருவகையினராகக் கொண்டு உரைத்தலும் ஒன்று. இப்பொருளில் **பல்லாயிரர்** என்பதனைச் சிங்க நோக்காக வைத்துப் பல்லாயிர முனிவர்—பல்லாயிர யோகிகள் என்றுரைத்துக்கொள்க.

சூழ - தம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க.

இருந்துழி - இருந்தபோது, இருந்த இடத்து என இருவகையும் பொருள் கொள்க. இருந்த உழி என்பது இருந்துழி என்றாயிற்று. உழி என்பது காலத்தையும் இடத்தையும் காட்டும் உருபு.

சூழ இருந்தலின் இயல்பை - "அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ" என்னும் சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திரத்துக் காண்க. முத்தராய் அணைந்தோர் தன்மைகளில் அன்பருடன் கூடியிருப்பதும் ஒன்றாதலால் இவ்வாறு எடுத்துக் கூறினார். "ஒருப்படு சிந்தையினார்கள் உடனுறைவின் பயன் பெற்றார்" என்பது முதலிய பல இடங்களிலும் பின்னர் இப்புராணத்திலே, ஆசிரியர் அன்பர்கூட்டத்தின் இயல்பையும் சிறப்பையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆங்காங்கு கண்டுகொள்க. 15

26. அங்க ணோரொளி யாயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்
துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலாம்
'இங்கி தென்கொ லதிசயம்?' என்றலும். ௧௬

(இ - ள்) அங்கண்.........தோன்றிட - அவ்விடத்தே ஒரு பெரிய ஒளியானது ஆயிரம் சூரியர்கள் ஒருங்கே தோன்றி வளரும் பெரிய ஒளிபோல முன்னால் தோன்றவே; துங்க மாதவர்...எலாம் - தூய தவமுனிவர்கள் சூழ இருந்தார்கள் எல்லாரும்; இங்கு...அதிசயம்? என்றலும் - இங்கே இது தோன்றுவது என்ன அதிசயம் கொல்? என்று சொல்லவும்;

(வி - ரை) அங்கண்முன் ஓர் ஒளி ஆயிர ஞாயிறு பொங்கு பேரொளி போன்று தோன்றிட - அவ்விடத்து அவர்கள் முன்பாக ஒரு பெரிய ஒளி தோன்றிற்று—அஃது ஆயிர ஞாயிறுகள் சேர்ந்து மேல்மேல் வளர்ந்து பெருகிய ஒளிபோன்றிருந்தது—என்க. **துங்க மாதவர் - துங்கம்** - தூய்மை. மேற்பாட்டிலே முனிவர் யோகிகள் என்ற இருவகையும் தவத்தால் கிடைக்கின்றன ஆதலின் **மாதவர்** என ஒன்றுசேர்த்துக் கூறினார்.

அதிசயம் - இன்னதென்று தெரிந்து அனுபவிக்கப் பெறும் பெருமித உணர்ச்சியை அதிசயம் என்பர். பெருமித உணர்ச்சி மட்டும் உண்டாகி இன்னதென்று அறியப்படாதது—அற்புதம் என்க. இதனை "அதிசயம் கண்டாமே" என்றும் "அற்புதம் அறியேனே" என்றும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அதிசயப்பத்து - அற்புதப்பத்து என்ற திருவாசகப் பகுதிகளிற் கூறியருளினார். இதன் விரிவை எனது "நீத்தார் பெருமை" என்ற நூலில் விளக்கியுள்ளதனைக் காண்க.

இங்கிதேன் கொல் அதிசயம் என்றலும் - இங்கு யாங்கண்ட அதிசயம் இது என் கொல் என்றனர்; என்று கூறலும்—பேர் ஒளிப் பொருள்கள் பலவற்றினிடையே அவற்றைக் கவரும் மற்றும் ஒரு பேரொளி காணப்படுதலே அதிசயம் எனப் பெற்றது. என்னை? (1) தூயமால் வரைச் **சோதி** எனவும், "மெய்யொளி தழைக்கும் தூய்மை" எனவும், மேலே கூறியபடி பேரொளி யுடையது இத்திருமலை.

(2) அது, "   .   .   .   .
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியை" என்ற சிவமாகிய பேரொளியைத் தாங்கி நிற்கும்.

(3) இக்கயிலைத் தாழ்வரையிலே ஞான ஒளியுடன் விளங்கும் யோகிகள் முனிவர்களிடையே அவர்களது மனங்கவரும் சத்தியுடன் மற்றும் ஒரு பேரொளி தோன்றிற்றாதலின் இது அதிசயமாயிற்று என்க. தட்சிண கயிலாயமாகிய திருக்காளத்தி மலையிலேயும் "ஐந்துமாறடக்கி யுள்ளார் அரும்பெரும் சோதியாலும், எந்தையார் திருக்காளத்தி மலையினி லிரவொன் றில்லை" என்று பின்னர்க் கூறுவதும் இங்கே சிந்திக்கத் தக்கதாம்.

இறைவனே உலகத்திற்கு விளக்கத்தைச் செய்து, காட்டுவிக்கும் கருத்தனாதலின் பேர் ஒளி எனப் பெறுவன். "மாயிருள் ஞால மறுவின்றி விளங்கப் - பல்கதிர் விரிந்தன் றொருமுகம்" என்பது திருமுருகாற்றுப்படை.

ஆயிரம் ஞாயிறு - ஆயிரம் என்றது எண்ணிறந்த - அனேகம் - எனும் பொருளில் வந்தது.

"**ஆயிரம் ஞாயிறு போங்கு பேரொளி**" என்பது சிவபெருமானது பேரொளியாகிய சிவவொளி ; சிவப்பிரகாசம் என்க. "ஆயிர ஞாயிறு போலும் ஆயிரநீண்முடியானும்" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். சுந்தரமூர்த்திகள் சிவபெருமானது பேரொளி போன்ற ஒளியை உடையார் என்பது இங்குக் குறிக்கப்பெற்றது. சிவபெருமான் ஒரு காலத்திலே தமது திருவுருவைக் கண்ணாடியிற் பார்த்து அதில் தோன்றிய உருவத்தை வா என்று அழைக்க, அதுவே சுந்தரராக வந்தது - என்னும் வரலாறும் இங்கே குறிக்கத்தக்கதாம். இதுபற்றிக்,

"கயிலை நாயகன் காமரு தன்னுருப்
பயிலும் ஆடியிற் பார்த்தங் கழைத்தலும்
வெயில்செய் **வெங்கதிர் கோடி விராய்**எனச்
செயிரி லாதமெய்த் **தேசோடும்** தோன்றினார்"

எனும் பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம் (1) பாட்டும் காண்க. அப்பாட்டிலும் "வெங்கதிர்கோடி" எனவும் "மெய்த்தேசு" எனவும் குறித்தல் காண்க. 16

27. அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்
சிந்தி யாவுணர்ந் தம்முனி தென்றிசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்றொண்டன்
எந்தை யாரரு ளாலணை வானென. ௧௭

(**இ - ள்**) அந்தி...உணர்ந்து - மாலையில் வானிற்றோன்றும் பிறைச் சந்திரனைச் சிரத்திலே சூடிய பெருமானது திருவடிகளைத் தியானித்து உண்மை யுணர்ந்தவராய் ; அம்முனி - (மாதவர் கூறக்கேட்ட) அந்த உபமன்னிய முனிவர் ; தென்றிசை...வன்றொண்டன் - (கயிலையிலே யிருந்து) தென்றிசையில் வந்து அவதரித்த நாவலூர் நம்பிகளாகிய புகழ்ச்சி மிக்க வன்றொண்டர் ; எந்தையாரருளால் - எமது பெருமானுடைய திருவருளினாலே ; அணைவான் என - மீண்டும் கயிலைக்கு எழுந்தருள்கின்றார் என்று ;

(**வி - ரை**) "என்று மாதவர் கூறக் கேட்ட அம்முனி" என வருவித்துக்கொள்க. அம்முனி அண்ணல்தாள் சிந்தியா வன்றொண்டன் அணைவான் என உணர்ந்து-என்று கூட்டி முடித்துக்கொள்க. "அணைவான் என" "உணர்ந்து" எனவும், வரும்பாட்டில்

'அணைவான் எனக்" "கைகள் கூப்பி" எனவும் கூட்டித், தீவகமாய்ப் பொருள் விளங்குதலும் காண்க. "அருளால்" என்பது, "அருளால்" "தென்றிசை வந்த" எனவும், 'அருளால்" "அணைவான்" எனவும் தீவகமாய்ப் பொருள் கொள்ள நிற்றலும் காண்க. "...தென்றிசை மீது தோன்றி யம்மெல்லியலாருடன் காதலின்பங் கலந்து அணைவாய் என" (27) என்று அறியப்படுதலால் தென்றிசையில் நம்பிகள் வந்தது திருவருள் ஆணை வழியேயாம். இப்போது வெள்ளை யானையின்மீது திரும்பக் கயிலைக்கு எழுந்தருளுவதும் அவரது ஆணை வழியேயாம்—என்பது "தானெனை முன்படைத்தான்" எனும் திருநொடித்தான்மலைத் தேவாரத்தாலும் அறிகின்றோம்.

அந்தி வான்மதி - அந்தியில் வானில் மேற்கில் முளைக்கின்ற மதி ; பிறைச்சந்திரன். "குடதிசை மதியது சூடு சென்னி"—**தேவாரம்.**

அண்ணல் - பெருமையுடையவன்.

தாள் சிந்தியா உணர்ந்து - தாள்களைச் சிந்தித்து அந்தச் சிந்தனையின் துணையால் உணர்ந்து - என்க.

மதி சூடிய - மாதவர் "இங்கு இது என்கொல் அதிசயம்" என்று கேட்டார்க்கு அதனைத் தெளிவிக்கும் முன்னர் அதனைத் தாம் உணரவேண்டியிருத்தலின் அதற்காக மதிகொண்டு துணிய வேண்டுவார், **மதிசூடிய** அண்ணல் தாள் சிந்தித்தனர்—என்று குறிப்பிட்டவாறு.

சிந்தியா உணர்ந்து - "சிவன்றன்னையே உணர்ந்து" உள்ள முனிவராயினும், இது தெரியும்படித் தனித்துச் சிந்தித்து உணர்ந்தார் என்பது. தோன்றிய சோதியின் வரலாறு தெரியவேண்டியிருந்தது. அவ்வாறு தெரிந்ததை ஏனையோர்க்குச் சொல்லவும் வேண்டியிருந்தது. அருட்சோதியாய்க் கயிலையில் தோன்றிய அது புலனறிவாலும் கலையறிவாலும் உணரலாகாதது. ஏனெனில் இவ்வறிவுகள் கட்டுப்பட்ட சத்தியுடையன. கட்டுப்படாத—எல்லையில்லாத—அறிவினால் உணரவேண்டியவன் இறைவன் ; அவனோடு கலந்த அடியார்களும் அவ்வாறே உள்ளவர்கள். ஆதலின் பதிஞான சிற்சத்தி பதிந்ததனால் உணர்தல்வேண்டி **அண்ணல் தாள் சிந்தியா உணர்ந்து** என்றார்.

" நெறிநீர்மையர் நீள்வானவர் நினையும் நினைவாகி
அறிநீர்மையி லெய்தும்அவர்க் கறியும் அறிவருளிக்
குறிநீர் மையர்..........." —**திருஇடும்பாவனம் - நட்டபாடை - 6.**

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் காண்க.

வன்றொண்டன் - நம்பிகளது பெயர்கள் பலவற்றுள்ளும் இப்பெயரே மிகச் சிறந்தது. அவரது சரித இயல்பு முழுதும் நினைவுறுத்துவது. "மற்றுநீ வன்மைபேசி **வன்றொண்ட**னென்னு நாமம் பெற்றனை" எனப் பின்னர்க்கூறுகின்றபடி இறைவனாலே தரப்பெற்றது. வன்றொண்டரா யிருந்ததனாலே - இறைவனையும் வன்மைபேசவும், விறன்மிண்டர் புறகென்னவும் - அதனால் திருத்தொண்டத்தொகை பாடவும், அதன் துணையால் இப்புராணம் இயற்றவும் - காரணமாயிற்று. " மற்றிதற்குப் பதிகம் வன்றொண்டர்தாம், புற்றிடத்தெம் புராண ரருளினால், சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகை......" என்பது காண்க. தொண்டு இருவகைப்படும். அவை வன்றொண்டு; மென்றொண்டு என்பன. மென்றொண்டு சாத்திர விதி விலக்குகளுக் குட்பட்டு அவற்றோடு இணங்கிச் செய்வதாம் ; இவற்றைக் கடந்து சாத்திர அதீதமாகச் செய்வது வன்றொண்டாம். இது செய்பவர்கள் தற்போதம் சிறிதுமின்றிப் பதிகரணம் அடைந்தவர்கள். இவர்கள் செய்வது யாவும் சிவபுண்ணியமேயாம். சண்டீச நாயனார் பிதாவின் காலை வெட்டினார். அது "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்றபடி புண்ணியமாயிற்று.இத்தன்மை வாய்ந்தவர்களே இவ்வாறு செய்தற்குரியவர்களாம். இது பற்றியே வன்றொண்டர் என்ற இப்பெயராலே சிறப்பாய் இங்குக் குறிப்பிட்டவாறு. 17

28. கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை
மெய்யி லானந்த வாரி விரவிடச்
செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர். ௨அ

(இ - ள்) கைகள்...எழுந்து - (முனிவர் உணர்ந்து) கைகளைச் சிரமேற் குவித்துத் தொழுதுகொண்டே எழுந்தனராகி; அத்திசை......செல்வுழி - பேரொளி தோன்றிய அத்தென்றிசையை நோக்கித் தமது மேனி முழுதும் ஆனந்த புளகம் கடல் போற் கிளரச் சிவந்த நீண்ட சடையையுடைய உபமன்னிய முனிவர் சென்றனர். அவர் அவ்வாறு செல்லவே; ஐயம்...அந்தணர் - அதனால் தமக்குள் எழுந்த சந்தேகம் நீங்கும்படிச் சூழ இருந்த மாதவர்கள் பின்வருமாறு கேட்பாராயினர்.

(வி - ரை) தொழுதெழுந்து "தொழுதெழுவாள்" என்ற குறளிற்போல, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டே எழுந்து - என்றபடி.

அத்திசை - தென்றிசை.

மெய்யில் ஆனந்தவாரி விரவிட - மேனி முழுதும் புளகாங்கிதமும், ஆனந்தக் கண்ணீரும் கடல்போற் பெருக - ஆனந்தமாகிய வெள்ளம் உடம்பிற் பெருக - மனத்துள்ளே உணர்ந்த அவ்வுணர்ச்சி ஆனந்தத்தை விளைத்தது. "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" (குறள்.) ஆனந்தவாரி அன்பைக் காட்டும் அனுமான அடையாளம். கைகள் கூப்பித் தொழுது எழுந்து அத்திசை முனி செல்வுழி என்று கூட்டுக. எதிர் கொண்டு சென்றார் என்க.

செய்ய - சிவந்த. ஐயம் - வரும் பாட்டிற் காண்க.

அந்தணர் - மாதவர். "அந்தணர் என்போர் அறவோர்" என்பது திருக்குறட் பிரமாணமாம். 18

29. "சம்பு வின்னடித் தாமரைப் போதலால்
எம்பிரா னிறைஞ்சா யிஃதென்" னெனத்
"தம்பிரா னைத்தன் னுள்ளம் தழீஇயவன்
நம்பி யாரூர னுந்தொழும் தன்மையான்". ௨௯

(இ - ள்) சம்புவின்...என் ?" என - சிவபெருமானது திருவடிகளைத் தவிர வேறு எவரையும் பணியாத இயல்புடையவரே! இப்போது இந்தச் சோதியைத் தொழுது எழுந்து திசைநோக்கிச் செல்லும் காரணம் என்ன ? எமது தலைவரே! என்று மாதவர்கள் கேட்க; "தம்பி...தன்மையான் - இங்கு வருகின்றவர் தம்பிரானாகிய சிவபெருமானையே தமது உள்ள முழுதும் தழுவிக் கொண்டுள்ளவர்; அவர் நம்பி ஆரூரர் என்னும் பேருடையவர்; அவர் நம்மாற் றொழப்படும் தன்மையுடையவர்." (என்று கூற - என வரும் பாட்டிற் றொடர்ந்து கொள்க.)

(வி - ரை) சம்பு - சுகரூபமாயிருப்பவர். சுகத்தைச் செய்பவன். சிவபெருமான். உயிர்கள் துக்க ரூபிகள் - துக்கம் போக்கிச் சுகத்தைச் செய்வதால் இவனை அடைகிறார்கள். "வஞ்சகமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும், அஞ்சி புனையடைந்தேன் ஐயா பராபரமே" என்பது தாயுமானவர் திருவாக்கு.

சம்பு இன் அடித்தாமரைப் போது - சிவபெருமானது இனிய தாமரை மலர் போன்ற திருவடி. இன்அடி - இனிய திருவடி. அடித்தாமரைப்போது என்பதைப் போது போன்ற அடி என்று மாற்றியுரைத்துக் கொள்க.

இது என் - சம்புவின் திருவடியே யன்றி வேறொன்றையும் வணங்காத தலைவராகிய தேவரீர் இப்போது இச்சோதியை நோக்கிக் கைகூப்பித்தொழுது செல்லும் இது என்ன?

தம்பிரான் - முழுமுதற் கடவுள். தமக்குத் தாமே பிரான். "ஆக்கூரில் தான் றோன்றி யப்பனாரே" தேவாரம். தான்றோன்றி - என்ற பெயரும் காண்க.

உள்ளந் தழீஇயவன் - உள்ளத்திலே இடையீடின்றி முழுதும் நிறையும்படிப் பொருத்தி வைத்தவன். நாம் வணங்கும் தம்பிரானைத் தம்மனத்தே நிறைய வைத்துக் கொண்டிருப்பவர்.

நாம் - சம்புவையன்றி வணங்காத நாம். **நாம் தொழும்** - நம்மாற் றொழப்படும் - தொழும் என்பது பிறவினைப் பொருளில் வந்தது. **தன்மை** - உள்ளந்தழீஇய காரணத்தால் வந்ததென்பது குறிப்பு. 19

30. என்று கூற இறைஞ்சி இயம்புவார்
வென்ற பேரொளி யார்செய் விழுத்தவம்
நன்று கேட்க விரும்பும் நசையினேம்
இன்றெ மக்குரை செய்தருள் என்றலும். ௨௦

(இ - ள்) என்றுகூற - மேலே சொன்னவாறு உபமன்னிய முனிவர் சொல்ல; இறைஞ்சி இயம்புவார் - மாதவர்கள் வணங்கி மேலே சொல்வாராயினர்; வென்ற... அருள் - வெற்றி கொண்ட பெருமையுடைய ஒளியுடையாராகிய இவர் செய்த தூய தவத்தின் வரலாற்றை நன்கு கேட்க விரும்புகின்ற ஆசையுடையோம். இன்றே தேவரீர் அதை எங்களுக்குச் சொல்லி யருளவேண்டும்; என்றலும் - என்று கூறினர். கூறக் கேட்டதும்;

(வி - ரை) வென்ற பேரொளி - (1) ஆயிரஞாயிறு பொங்கு பேரொளி என முன்னர்க் குறிக்கப் பெற்றமையின் எல்லா ஒளிப் பொருள்களையும் வென்ற என்பது. (2) சுத்த யோகிகளாகிய எமது உள்ளத்தையும் கவர்ந்து அதிசயிக்கச்செய்து எமது ஒளியையும் வென்றது என்பதுமாம். எம்மையும் வென்ற என்க. ஐம்புலன்களை வென்ற முனிவர்கள் ஒளியுடன் விளங்குவர் என்பது "ஐந்துமாறடக்கி யுள்ளார் அரும்பெருஞ் சோதி யாலும்" எனப் பின்னர்க் கூறுவது காண்க. (3) சம்புவையன்றி வணங்காத தேவரீரையும் வணங்கச் செய்து வென்ற ஒளி என்றலும் ஒன்று.

விழுத்தவம் - இந்தச் சரிதத்துக்கும், பேரொளிக்கும் மூலகாரணமாகிய தூய தவம்.

நன்று கேட்க விரும்பும் நசை - எங்கட்குக் கேட்கும் விருப்பமும் தேவரீர்க்குச் சொல்லும் ஆற்றலும் நன்று என்க. விரும்புவதாகிய நசை. **நசை** - ஆசை.

இன்று - பின்னே என்பதில்லாமல், கேட்க விருப்பம் உண்டாயின இன்றைக்கே உரை செய்தருள்க என்றபடி. தாமதமாயின் ஆசையும் பிறவும் ஒழியலுமாகும்; ஆதலின் **இன்று உரை** செய் என்றார். "ஒன்றும் **இன்றே** செய்யவும் வேண்டும்" என்றார் பிறரும். 20

31. உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்
வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய
வள்ளல் சாத்து மதுமலர் மாலையும்
அள்ளும் நீறும் எடுத்தணை வானுளன். ௨௧

(இ - ள்) உள்ள...செய்வான் - (மாதவர்கள் கேட்க விரும்பிய விழுத்தவத்தின் வரலாற்றை) உள்ளபடியே உபமன்னிய முனிவர் பின்வருமாறு சொல்வாராயினர்; வெள்ள நீர்...உளன் - கங்கையைச் சடையிலே தரித்த மெய்ப்பொருளாகிய இறைவன் அணிந்து கொள்ளும் மலர் மாலையையும் திருநீற்றையும் எடுத்துக் கொடுப்பவர் ஒருவர் உண்டு.

(வி - ரை) உள்ள வண்ணம் - கூட்டியாவது குறைத்தாவது சொல்லாமல் உள்ளது உள்ளபடியே; உண்மையாக - என்க.

வள்ளல் - வரையாது கொடுப்பவன். என்றும் முட்டுப்படாத ஐசுவரியத்தையுடையான். தனக்கென்று ஒன்றும் வேண்டாது கொடுக்கும் தன்மையு முடையான். அதனால் அவனுக்குத் "தியாகராசன்" என்று பேர்.

மெய்ப்பொருள் - என்றும் உள்ளதாகிய சத்துப்பொருள்; இறைவன். இவனல்லாதன எல்லாம் பொருளல்லாதவையே. அவ்வாறு பொருளல்லாதவற்றைப் பொருள் என்று உணர்ந்து அலைவதுதான் மயக்கம். அதுவே பிறப்புக்குக் காரணம் - எனத் திருவள்ளுவர் "பொருளல்லவற்றை" எனும் திருக்குறளால் அறுதியிட்டார்.

சாத்தும் - இதனை, **சாத்தும்** நீறும் **சாத்தும்** மாலையும் என்று நீறுக்கும் கூட்டுக.

மாலையும் நீறும் - இவற்றைத் தனக்கென வேண்டானாயினும் உலகராகிய உயிர்களின் பொருட்டு அணிந்துகொள்வன் இறைவன்.

> " பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
> ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ "

என்ற திருவாசகம் காண்க.

நீறு - நீற்றப்பெற்றது ; உயிர்களின் வினைகளை நீறு செய்வது. பஸ்மசாபால உபநிடத முதலிய வேதங்களாற் றுதிக்கப்பெற்ற பெருமை வாய்ந்தது. அதுபோலவே திருஞானசம்பந்த நாயனார் திருநீற்றுப் பதிகம் என ஒரு தமிழ்வேதத் தனிப் பதிகத்தாலே இதனைத் துதித்திருப்பதும் காண்க. 21

32. அன்ன வன்பெய ராலால சுந்தரன்
முன்ன மாங்கொரு நாண்முதல் வன்றனக்
கின்ன வாமெனு நாண்மலர் கொய்திடத்
துன்னி னானந் தனவனச் சூழலில். ௨௨

(**இ - ள்**) அன்னவன்...சுந்தரன் - அவர் பெயர் ஆலாலசுந்தரர் என்பதாம் ; முன்னம்...சூழலில் - முன் ஒரு நாள் கயிலையில் இறைவனுக்குச் சாத்துவதற்காய் விதிப்படிக்குள்ள புதுப் பூக்களைக் கொய்து எடுக்கும் பொருட்டுத் திருநந்தன வனத்திலே அவர் சேர்ந்தனர்.

(**வி - ரை**) **ஆலால சுந்தரன்** - ஆலகால விடத்தைச் சிறிதளவாகச் செய்து கையிலே ஏந்திச் சென்று சிவபெருமானிடத்துக் கொடுத்தமையால் இப்பெயர் வந்தது.

> " அன்ன சுந்தரற் காலாலம் ஆழியின்
> முன்னம் முன்னவன் உண்ணமற் றன்னதைத்
> தன்ன கங்கைத் தழீஇக்கொடு நல்கலால்
> துன்னும் ஆலால சுந்தர நாமமே " என்பது பேரூர்ப் புராணம்.

தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெறும்பொருட்டுத் திருப்பாற்கடல் கடைந்ததுவும், அதுகாலை ஆலகால விடம் எழுந்ததுவும், அப்போது தேவர்களைக் காக்க வேண்டி அதனைச் சிவபெருமான் உண்டருளியதோடு சாட்சியாக யாவரும் கண்டு தொழுது உய்யவேண்டிக் கழுத்தின் அளவிலே விளக்கமாக நிறுத்தியதுவும், பிறவும், சிவ—விஷ்ணு—பிரம—முதலிய மாபுராணங்கள் எனும் பதினெண் புராணங்களும் பேசும். ஆதலின் அது எம்மதத்தரும் சம்மதிக்கும் தேற்றமான பொது உண்மையாம்.

நாண்மலர் - அன்றலர்ந்த புதுமலர்.

இன்ன ஆம் எனும் - இவை இவை பெருமானுடைய பூசைக்கு ஆகும் என்று விதிக்கப்பெற்ற - இவ்விதிகள் புட்பவிதி முதலியவற்றுட் காண்க. (வரும் பாட்டிலும் இவ்வாறே கொள்க).

ஆலாலசுந்தரப் பெயர் அன்னவன் முதல்வன் தனக்கு ஆம் மலர் கொய்திட நந்தனவனச் சூழலில் துன்னினான் - எனக் கூட்டி முடிக்க.

கொய்திட - கொய்து வந்து இட. (வரும் பாட்டிலும் இவ்வாறே கொள்க.) **நந்தவனச்சூழல்** - சூழல் (காவல்) பெற்ற நந்தனவனம் என்க. 22

33. *அங்கு முன்னரே யாளுடை நாயகி*
கொங்கு சேர்குழற் காமலர் கொய்திடத்
திங்கள் வாண்முகச் சேடியர் எய்தினார்
பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார். உ௩

(இ - ள்) *அங்கு முன்னரே - அந்த நந்தனவனத்தில் (ஆலாலசுந்தரர் சேர்வதற்கு) முன்னமே ; ஆளுடை.....கொய்திட - உயிர்களை எல்லாம் ஆளுடைய அம்மையாரது குழலுக்கு ஆகின்ற மலர்களைக் கொய்துவந்து இடும்பொருட்டு ; திங்கள்...பூவைமார் - முழுமதிபோன்ற ஒளிவீசும் முகத்தையும் மேன்மேற் பொங்கி எழும் அழகினையும் உடைய பூவைமார்களாகிய சேடியர்கள் இருவர் சேர்ந்தனர்.*

(வி - ரை) ஆளுடை நாயகி - *பார்வதியம்மை-மேற்பாட்டிற் சொன்ன முதல்வனாகி யாவரையும் ஆளுடைய நாயகனது நாயகி. ஆளுடை - ஆளாக உடைய - ஆளும் தன்மை யுடைய.*

கொங்கு சேர் குழல் - *இயற்கையிலே வாசனை சேர்ந்த கூந்தல். இதனைக் "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி" என்ற திருப்பாசுரத்தாலும், திருவிளையாடற் புராணத்துள் நக்கீரர் சரிதத்தாலும் அறிக.*

குழற்கு ஆம் மலர் - *அம்மையார் பூசைக்கு ஆவன என்று விதிக்கப்பெற்ற மலர்.*

பூவைமார் - *பூவைபோன்ற பெண்கள். இச்சேடியர்கள் பெயர் - அனிந்திதை கமலினி என்பது வரும் பாட்டிற் காண்க.*

பொங்குகின்ற கவின் - *புதிது புதிதாய் விளைகின்ற பேரழகு. ஆதலின் அன்று விசேடிக்கக் காரணமாயிற்று என்பது.*

அதற்கு முன்னரே நாயகி குழற்கா மலர் கொய்திடச் சேடியர் எய்தினர் என முடிக்க.

முன்னேமை - என்பதும் பாடம். 23

34. *அந்த மில்சீ ரனிந்திதை யாய்குழற்*
கந்த மாலைக் கமலினி என்பவர்
கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி
வந்து வானவ ரீச ரருளென. உ௪

(இ - ள்) *அந்தமில்சீர்...என்பவர் - (அச்சேடியர்களாவார்) அளவற்ற சிறப்புடைய அனிந்திதை, நுணுகிச் செறிந்த கூந்தலும் மணம் பொருந்திய மாலையும் உடைய கமலினி, என்ற பேருடையார்கள் ; கொந்து...கொய்வுழி - பூங்கொத்துக்களிலே அன்று அலர்ந்த மலர்களைத் தெரிந்து கொய்துகொண்டிருந்தபோது ; வந்து...அருளென - தேவதேவனாகிய சிவபெருமானது திருவருளே இது என்னும் படியாக வந்து ;*

(வி - ரை) *இப்பாட்டு குளகம் - வரும்பாட்டிலே "மனம் போக்கிட" என்ற வினையுடன் தொடர்ந்து பொருள் கொள்க. வந்து மனம் போக்கிடுதலே வினையாய் முடிந்து இச் சரிதத்துக்கும் இப்புராணத்துக்கும் காரணமாயினமை காண்க. அதனைச் சொல்லாற்றலிற் காட்டி அழகுபெற அமைத்தது ஆசிரியரது சிறப்பியல்புகளில் ஒன்று.*

கொந்து கொண்டதிருமலர் - *பூங்கொத்து - பூங்கொத்திலே முன்னாள் அலர்ந்தன வாகிய பழம்பூக்களையும், பின்னாள் அலர நிற்பனவாகிய முகைகளையும் நீக்கி, அன்றலர்ந்த புதுப்பூக்களைக் கொய்தனர் என்பார், "கொந்து கொண்ட திருமலர்" என்றார். மேற் பாட்டிலே "நாண்மலர்" என்றதும் இது.*

வந்து - முன்னே "எய்தி"ச் சேடியர் மலர் கொய்வுழிப் பின்னர் "வந்து" என்பதாம். "அந்துமுன்" என்றதும் காண்க.

அருள் என - அருள்போல - இதனை வரும் பாட்டிலே "மனம்போக்கிட" என்றதனுடன் சேர்த்து முடிக்க. தீவகமாய் " அருள் என " " வந்து " என்று கூட்டலுமாம்.

ஆய்குழற் கந்தமாலைக் கமலினியார் - இவரே திருவாரூரிலே பரவையார் என்ற பேருடன் அவதரித்தனர். இவரை இங்குச் சுந்தரராகிக் கண்ட குழலும் கந்தமாலையுமாகிய இக்காட்சியே தொடர்ந்து, திருவாரூரிலே " தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சூழ" (தடுத்தாட்கொண்ட புராணம் 137) பூங்கோயிலுள்ளாரை வணங்கப் போந்தபோது நம்பிகளாய்க் கண்டனர் என்ற தொடர்ச்சியின் அழகைக் காண்க. 24

35. மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வாரவர் மேன்மனம் போக்கிடக்
காதன் மாதருங் காட்சியிற் கண்ணினார். ௨௫

(இ - ள்) மாதவம்...வாழ்ந்திட - பெருந்தவம் செய்த தென்றிசைப்பூமி வாழ்வடையவும் ; தீதிலா......தர-தீதற்ற திருத்தொண்டத் தொகை என்னும் பொக்கிஷத்தைக் கொடுக்கவும்; போதுவார்......போக்கிட - போவாராகிய ஆலாலசுந்தரர் அச்சேடியர்களின் மேல் மனத்தைச் செலுத்த ; காதல்...கண்ணினார் - அவ்வாறு காதல் பெற்ற அவ்விரு பெண்களும் காட்சித்துறையிலே ஈடுபட்டனர்.

(வி - ரை) தென்றிசை - இந்நில வுலகமாகிய அண்டத்திலே பரதகண்டத்திலே விந்த மலைக்குத் தெற்குத் திசையிலே உள்ள பகுதியாகிய நிலமும் நீரும்.

மாதவம் செய்த தென்றிசை என்றது - இது எல்லாப் புண்ணியங்களுக்கும் மேம்பட்ட சிவபுண்ணியம் செய்ய ஏதுவாயுள்ளதுபற்றி மாதவம் செய்த என்றார்.இதனாலே புண்ணிய பூமி எனப் பெறும். இதனை 31 முதல் 36 வரை உள்ள திருப்பாட்டுக்களிலே ஆசிரியர் உபமன்னியமுனிவரது திருவாக்கிலே அமைத்து விரிக்கின்றார். மேல்-கீழ்-நடு என்ற மூன்றுவகை அண்டங்களிலும் நடுவாகிய பூவுலகம் சிறந்தது. மேல்உலகம் ஆகிய தேவருலகம் புண்ணியலோகம் என்பர். புண்ணியங்களுக் கேற்க இன்பானுபவத்திற்கே உரியது. கீழ் உலகமாகிய நரகலோகம் பாவத்திற்கேற்கத் துன்பானுபவத்துக்கே உரியது. நிலவுலகம் இரண்டுக்கும் உரியதாம் - அதுவேயுமன்றிச் சிவபூசை சிவதர்மங்களுக்கும் ஏற்றதாய் வீட்டுக்கும் வழிதரும். மற்ற இரண்டும் அவ்வாறன்றி அந்தந்த அனுபவங்கள் தீர்ந்ததும் பிறவியிற் செலுத்துவன. இந்தப் பூவுலகத்திலும் வேத சிவாகமங்களும் தமிழ்வேதங்களும் பிறந்து வழங்குதலாலும், புண்ணிய நதிகள் புண்ணிய சிவதலங்களும் உள்ளதாலும் பரதகண்டம் சிறந்தது. இப்பரதகண்டத்திலேயும் வடக்குப் பிரதேசத்திலே புண்ணியநதிக ளிருந்தாலும் எல்லாத் தேவர் இருடிகள் முனிவர் முதலியோர்களும் வந்து பூசித்துப் பேறு பெற்ற தென்றிசை சிறந்ததாம்.

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாருந் திலைவனந் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை யிவைசிவ பூமியே.

—திருமூலர் திருமந்திரம் - திருக்கூத்துத் தரிசனம் - 26

ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்

பேறான வேதா கமமே பிறத்தலால்
மாறாத தென்றிசை வையகஞ் சுத்தமே.—திருமந் - ,, - 34.

என்ற பிரமாணங்களும் காண்க. இவ்வாறு முன்னரே தவஞ் செய்து சிறந்துள்ள தென்றிசையும் ஆலால சுந்தரர் திருவவதாரத்தால் வாழ்வை யடைந்தது என்பார் "(மாதவம்) செய்த தென்றிசை வாழ்ந்திட" என்றார்.

வாழ்ந்திட - முன்னரே மாதவம் செய்து புண்ணிய பூமியாயிற்றாயினும், அந்நிலையின் பெருவாழ்வை அடைந்து மேலும் நிலைத்திருக்கும் பொருட்டு என்க. வாழ்ந்து, (அவ்வாழ்வின் பயனை அத்திசையிற் சேரும் உயிர்களுக்கு) இட - கொடுக்க—என்க.

தீதிலாத் திருத்தொண்டத் தொகை - உயிர்களுக்கு உள்ள ஆணவமாதி தீமைகளையெல்லாம் இல்லையாகச் செய்யும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம். இத்திருப்பதிகம் ஒன்றே தன்னைச் சாதித்துப் பயில்வார்க்கு எல்லாத் தீமையும்போக்கி எல்லா நன்மையும் அருள வல்லது என்றவாறு. இதன் உண்மையைச் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்துக் காண்க.

தீதிலா - என்பதற்குத் தீமையை இல்லையாகச் செய்யும் என்று பொருளுரைக்கப் பெற்றது: சிவஞான போதத்திலே "கல்லானிழல்" என்ற காப்புச் செய்யுளிலே "மலைவில்லார்" என்பதற்கு மலைவை இல்லையாகச் செய்தவர் எனப் பொருள் கண்டதைப் பின் பற்றி. (மலைவு - மயக்கம்).

தொண்டத்தொகை - எல்லாக் காலத்தும், எவ்விடத்தும், உள்ள எல்லாத் தொண்டர்களையும் தொகுத்துக் கூறுவது. பிறிதொன்றினின்றும் எடுத்துத் தொகுத்தது என்ற பொருள் அல்ல.

போதுவார் - தென்றிசையிலே அவதரிக்கப் போதுவாராகிய ஆலால சுந்தரர்.

அவர்மேல் - அவ்விரு சேடியர்மேல்.

போதுவார்...போக்கிட - காரணகாரிய சம்பந்தம்; மனம் போக்குதல் காரணம் - போதுதல் காரியம்.

மனம் போக்குதல் - மனங்கலந்த காட்சி.பின்னர் "காட்சியில்" என்பதும் இது. வாழ்ந்திடவும் தரவும்-போதுவார் - ஈசரருளென வந்து - அவர் மேன் - மனம் போக்கிட - என இவ்விரண்டொட்டும் கூட்டி முடிக்க.

காதல் - அவர் மனம்போக்கக் காரணமாயிருந்த காதல். காதலைக்கொண்ட மாதர்.

மாதரும் - உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. போதுவார் மனம் போக்கியது போலவே மாதரும் - என்க.

காட்சி - அகப்பொருட்டுறைகளிலே தலைவன் தலைவியர் கூட்டத்திலே முதலிலே நிகழ்வது. இதன் விரிவுகளை அகப்பொருளிலக்கணங்களிலேயும் திருச்சிற்றம்பலக் கோவையார் முதற் பாட்டுக்குப் பேராசிரியர் கண்ட உரையிலேயும் பிற இடத்தும் கண்டு கொள்க.

இங்ஙனம் ஆலாலசுந்தரர் மனம் போக்கிக் கண்ட காட்சியின் விளைவாகிய தொடர்ச்சி, காணப்பட்ட அவ்விருவருள், கமலினியார், இத்தென்றிசையில் பரவையாராய் வந்த இடத்துத் திருவாரூரில் நிகழும்: அனிந்திதையார், சங்கிலியாராய் இத்தென்றிசையிலே வந்த இடத்துத் திருவொற்றியூரில் நிகழும். இவற்றை முறையே,

"...நற்பெரும் **பான்மைகூட்ட** நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் **கண்டார்**"
—தடுத் - புரா - 139 எனவும்,

"...முன்புபோலத் திரைநீக்கி முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
மின்போன் மறையுஞ் சங்கிலியார் தம்மை **விதியாற் கண்ணுற்றார்**"
—ஏயர் - புரா - 226

எனவும் கூறியவற்றாலே தெளிக.

காட்சிக்கு மேலே தலைவராகிய சுந்தரர்பால் நிகழும் ஐயம், தெளிதல், மருங்கணை தல், முதலிய பிறதுறைகள் பின்னர்த் தென்றிசையில் திருவாரூரிலும் திருவொற்றி யூரிலும் நிகழ்வன காண்க. தலைவியாகிய அக் காதன்மாதர்பால் காட்சியின்பின் நிக ழும் தொடர்ச்சிகளும் இவ்வாறே கண்டுகொள்க.

காட்சியிற் கண்ணினூர் - காட்சியிலே பட்டார்கள். **கண்ணுதல்** - அமைதல்; படுதல். போதுவார் மனம்போக்க மாதரும் காட்சியிற் கண்ணினூர். இருதிறத்தார் நோக்கமும் ஒத்து ஒரு நோக்காக நிகழ்ந்தன என்றவாறு.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில" எனும் திருக்குறட் கருத்தை இங்கே பெய்து காண்க.

இங்குக் காட்சி மட்டும் நிகழ்ந்ததன்றி மேலே நிகழ்வனவாகிய சொல் முதலியன நிகழ்வ தன் முன்னரே இருதிறத்தாரும் ஒருவர்மேல் ஒருவர்பால் சென்ற தத்தம் மனங்களைத் திருப்பிக்கொண்டு மலர் கொய்து சென்றகன்றனர் என்பார், வருகின்ற பாட்டிலே "முன்னம்", "செல்ல" "அகன்ற" என்று கூறியது காண்க. காட்சியேயன்றி வேறொன்றும் நிகழாவிடினும் மனங் கலந்த இக்காட்சியே வினைக்கு முளையாகிப் பின்னே முளைத்து விளைந்தது காண்க. 25

36. முன்ன மாங்கவன் மொய்ம்முகை நாண்மலர்
என்னை யாட்கொண்ட வீசனுக் கேய்வன
பன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்
அன்ன மன்னவ ருங்கொண் டகன்றபின். ௨௬

(இ - ள்) முன்னம் - முன்னே; ஆங்கவர்......செல்ல - அங்கிருந்து ஆலாலசுந்தரர் வண்டுகள் மொய்க்கும் தருணத்திலே, புதுமலர்களில், என்னை ஆளுடைய இறைவனுக்கு விதிக்கப்பெற்ற பலவற்றையும் கொய்து கொண்டு செல்லவும்; பனிமலர்......அகன்ற பின் - அவ்வண்ணமே குளிர்ந்த பூக்களைக் கொய்து கொண்டு அன்னம் போன்ற அச் சேடியர்களும் போயின பின்னர்;

(வி - ரை) முன்னம் - காட்சியின்மேல் சொல் முதலியன நிகழ்வதன்முன். சேடி யர் அகல்வதன் முன் என்றுமாம். எனவே, அவர்களுக்குப் பின்னர் வந்த சுந்தரர் முன்னரே சென்றனர் என்பதாம்.

மொய்ம்முகை நாண்மலர் - வண்டுகள் மொய்க்கக்கூடியனவாய் அப்போது மல ருந் தன்மை வாய்ந்த அரும்புகள். மொய்ம்முகையாகிய நாண்மலர் - மேலே 34-ம் பாட் டில் "கொந்து கொண்ட திருமலர்" என்பதன் கீழ்க் குறிப்புரை காண்க.

நாண்மலர் - என்பது அலரும் தருணத்தையும், **பன்மலர்** - என்பது மலர்களின் பற்பல தொகை வகைகளையும் குறித்தன. நாண்மலராகப் பன்மலர் கொய்து என்க.

ஏய்வன - ஏய்வனவாகிய. இதனைப் பனிமலர் என்பதனோடும் சேர்த்துக.

பனிமலர் - நாயகன் பூசைக்கு ஏய்வன பலவும், நாயகி பூசனைக்கு ஆகாமையினால் ஆலாலசுந்தரர் கொய்தவை **பன்மலர்** என்று குறித்த ஆசிரியர், சேடியர் கொய்தவை பனிமலர் என்று மட்டும் குறித்தனர் போலும்.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு" எனவும்,

"நாறும்பூவும் தேவர்க்காம் - நாறாப்பூவும் தேவர்க்காம்"

எனவும் வரும் புறனடை விதிகளால், விதிப்படிக்குள்ள பூக்கள் கிடையாதபோது எல் லாப் பூவும் பூசைக்கு ஆகும் என்பது நாயகன் பூசைக்கு உரியது. நாயகி பூசைக்கு அவ்வாறு விதியில்லாமையும் கூறுவர். 26

37. ஆதி மூர்த்தி யவன்றிறம் நோக்கியே
'மாதர் மேன்மனம் வைத்தனை ; தென்புவி
மீது தோன்றியம் மெல்லிய லாருடன்
காத லின்பங் கலந்தணை வா'யென. உஎ

(இ - ள்) ஆதி......நோக்கியே - இறைவன் ஆலாலசுந்தரரது செய்தியைக் கண்டவராய் ; "மாதர்மேல்...அணைவாய்" என - நீ பெண்களின்மேல் மனம் போக்கிவைத்தாய். ஆதலால் தென்றிசையிலே அவதரித்து அந்த மாதர்களிடம் இன்பம் கலந்து பின்னர் இங்கு வந்து அணைவாயாக என்று அருளினர். அருளவே ;

(வி - ரை) ஆதிமூர்த்தி - எல்லாவற்றிற்கும் மூலகாரணனாக நின்ற மூர்த்தி, சிவபெருமான். "அந்தம் ஆதி என்மனார்" என்பது சிவஞானபோதம் முதற்சூத்திரம்.

அவன்திறம் - அவர் மன நிகழ்ச்சியின் தன்மையும், மனம் போக்கிய காட்சி நிகழவும் மற்ற புத்தி சித்தம் முதலிய கரணங்களின் சத்தியால் மேல்ஒன்றும் நிகழாது பரிகரித்துத் திரும்பிய வலிமையும்.

மனம் வைத்தனை - மனம் மட்டுமே போக்கினாய் என்ற குறிப்பு.

நோக்கி - கண்டு - அறிந்து. "தம்மையும் நோக்கிக் கண்டு" என்ற அப்பர் சுவாமிகள் தனித் திருநேரிசையும் காண்க. இறைவர் சர்வஞ்ஞராதலின் தமது எங்கும் நிறைந்த எல்லா மறியும் அறிவினாலே இருந்தபடியே அறிந்தார். "சகஸ்ர சீரிஷாத் புருஷ : சகஸ்ராட்ச" என்பது உபநிடதம்.

"அருள் எங்குமான அளவை யறியார்
அருளை நுகரமு தானதுந் தேரார்
அருளங் கருமத் ததிருக்க முன்னார்
அருளெங்குங் கண்ணன தாரறி வாரே.
—திருமூலர் - 7. திருவருள் வைப்பு - 7

"ஆயிரந் தாமரை போலும் ஆயிரம் சேவடி யானும்" என்ற அப்பர் சுவாமிகள் திருவாரூர்க் காந்தாரப் பதிகத் தேவாரமும் காண்க. (ஆயிரம் - அனேகம் என்பது பொருள்).

காதலின்பம்-பொருள்களின்மேல் வைத்த இச்சை - **காதல்**. அந்த ஆசை காரணமாக அப்பொருள்களைப் பெறும்போது உண்டாவது **இன்பம்**.

இன்பம் கலந்து - இன்பம் மனநிலை. அதற்கு உருவம் முதலியன இல்லை. ஆதலின் இங்குக் குறித்தது மெய்யுறு புணர்ச்சியன்று என்க.

கலந்து அணைவாய் - இன்பம் கலந்து அதன்பின் மீண்டும் இங்கே அணைவாய் - வந்து சேர்வாய். இந்த ஆணையின்படியேதான் அவரும் அக்காரியம் முற்றி மீண்டு அணைகின்றார் என்க. "எந்தையார் அருளால் அணைவான் என" (17) என்று முன்னர்க் கூறியது காண்க. **என்** - என்று ஆணையிட.

மனம் வைத்தனை ஆதலின் தோன்றிக் கலந்து அணைவாய் என்று அருள என முடிக்க. 27

38. கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினன்
'செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்
மையன் மானிட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்'யென. உஅ

(இ - ள்) கைகள்......கலங்கினன் - கைகள் அஞ்சலித்துச் சிரமேற் குவித்துக் கொண்டு ; மனங்கலங்கியவராகி "செய்ய...அருள்செய்" என - "ஐயனே ! செம்மை

யாகிய சிவந்த திருவடிகளைப் பிரிந்து இங்குநின்று நீங்கும் சிறுமையுடையேனாகி மயக்கம் பொருந்திய மானிடப் பிறப்பிற் பிறந்து மயங்கும்போது தேவரீர் வந்து அம்மயக்கத்திலிருந்து தடுத்து என்னை ஆட்கொண்டு அருள்செய்ய வேண்டும்'' என்று வேண்ட...

(வி - ரை) **செய்ய** - செப்பமாகிய - திருந்திய. தன்மைப்பண்பு. செம்மையிலே உயிர்களைச் சேர்த்தவல்ல என்க. செம்பொருள் - வியாபகம் - நிறைவு - திருநின்ற செம்மை எனும் பொருள்.

சே - சிவந்த. நிறப்பண்பு.

செய்ய சேவடி - இயற்கையாகவே செப்பமாகத் திருந்திய சிவந்த திருவடி. இதனை மீமிசை என்பதுபோலக் கொண்டு மிகச் சிவந்த என்றுரைப்பாருமுளர். பொருட் சிறப்பின்றிச் சொற்களைப் பெய்தல் சேக்கிழாரது இயல்பன்று. ஆதலின் அஃது உரையன்றென்பது.

நீங்கும் சிறுமை - பெருமானது ஆணை நிகழ்ந்துவிட்டமையால் **நீங்கின** என்றும், இனிப் பிறப்பினால் நிகழ்வது என்றும், இறந்த காலம் நிகழ்காலம் இரண்டும் குறித்தது. **நீங்கும் சிறுமை** என்பது அறுவகைப் பெயர்களுள் எழுவாய்ப் பெயர்கொண்டது. காயத்தால் நீங்குதலே யன்றி மனத்தால் நீங்குவதல்ல.

மையல் மானிடம் - வேண்டத் தகாததைத் தக்கதென்று மயங்கித் திரியும் மானிடப் பிறவி; "...**மால்** கொடுத்து ஆவி வைத்தார்..."; அப்பர் சுவாமிகள். "...மறக்குமாறிலாத என்னை **மையல்செய்**திம் மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்..."—திருஞான சம்பந்த சுவாமிகள். திருத்துருத்தி - (5.)

கலங்கி நான் என்பதும் பாடம். 28

39. அங்க ணாள னதற்கருள் செய்தபின்
நங்கை மாருட னம்பிமற் றத்திசைத்
தங்கு தோற்றத்தி லின்புற்றுச் சாருமென்
றங்க வன்செய லெல்லா மறைந்தனன். உகூ

(இ - ள்) அங்கணாளன்...பின் : (அவ்வேண்டுகைக்குப்) பெருங் கருணையாளனாகிய இறைவன் அவ்வாறே ஆக என்றருளினார். பின்னர் அதன்படியே; நங்கைமாருடன்...சாரும் என்று - நம்பியும் நங்கைமாரும் முன் சொன்ன அத்தென்றிசையிலே அருள் தங்கிய மானுடப் பிறவியிலே போந்து இன்பங் கலந்து மீண்டும் இங்குச் சார்கின்றார் என்று ; அங்கு அவன்...அறைந்தனன் - அங்கே அவரது வரலாறு முழுமையும் உபமன்னிய முனிவர் சொன்னார்.

(வி - ரை) **அங்க(ண்)ணாளன்** - அழகிய - கண் - உடையான் ; மிகக் கருணையுள்ளான். மிகுந்த கண்ணோட்டம் உடையான். ஆதலின் அவர் வேண்டியது வேண்டியவாறே அருள் செய்தனர் என்பது குறிக்க இப்பெயராற் கூறினார்.

நம்பி - ஆடவருட் சிறந்தவன் : சுந்தரமூர்த்திகளது "நம்பி என்ற திருப்பதிகம்" காண்க ; அதிலே நம்பி என்பது சிவபெருமானை - அவரே எல்லார்க்கும் சிறந்தாராதலின் அவரை நம்பி என்றார். அவரே போல்வாராதலின் ஆலால சுந்தரரும் நம்பி எனப் பெறுவர். "ஆளுடைய நம்பிகள்'' என்ற வழக்கும் காண்க. மேலும் நம்பி என்பது இறைவனது அருச்சகர்களாகிய முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்குரிய மரபுப் பெயர். ஆலால சுந்தராரகச் சென்ற அவர் நம்பியாக அவதரித்துத் திரும்புகின்றார் என்பதும் குறிப்பாம். அருச்சிப்பாரை அரன் எனவே பாவித்தல் விதியாதலின் நம்பி என்ற அரன் பெயர் அருச்சகர் மரபுப் பெயராயிற்று. திருமுதுகுன்றத்திலே இறைவன் சுந்தரமூர்த்திகளுக்கு நம்பி உருவங்கொண்டு காட்சி கொடுத்தார் என்னும்

அப்போது "நம்பி என்ற பதிகம்" நம்பிகள் பாடினார் என்றும் ஒரு பரம்பரை வரலாறு அத்தலத்திலே கேட்கப் பெறுகின்றது.

நங்கைமாருடன் - நங்கைமாருக்கும் இவ்வாறே திருவருள் ஆணை யுண்டாயினமை யால் அவர்களும் தென்றிசையிற் போந்தனர் என்பது கொள்க.

இன்புற்றுச்சாரும் - இன்புறுதல் மேலே "இன்பங் கலந்து" என்ற இடத்துக் காண்க. இன்புற்று அதன் பின் சாரும் எனவும், இன்புற்றும் அவ்வழியே மயங்கி மயங் கிச் செல்லாது சாரும் எனவும், கொள்க. "சார்புணர்ந்து..." என்னும் திருக்குறட் கருத்து இங்கே பொருத்திக் காண்பதற்குச் "சாரும்" என்றார்.

அங்கணுதன் என்றும் பாடம். 29

40. அந்த ணாளரு மாங்கது கேட்டவர்
'பந்த மானிடப் பாற்படு தென்றிசை
இந்த வான்றிசை யெட்டினு மேற்பட
வந்த புண்ணிய மியா'தென மாதவன். ௩0

(இ - ள்) அந்தணாளரும்...கேட்டவர் - அவ்வாறாகிய அது கேட்ட முனிவர்களும் பந்த...மாதவன் - மற்ற திசைகளைப் போலவே, பாசவினைப்பட்ட மானிடர்கள் பிறந்து நிகழ்தற்கிடமாகிய எட்டுத் திசைகளிலும் தென்திசை மேலாக இவர் அங்குப் போந்த தற்கு உரியதாம்படி அது செய்த புண்ணியம் யாது? என்று வினவ, உபமன்னிய முனி வர் மேல்வருமாறு சொல்வாராயினர்.

(வி - ரை) **அந்தணாளர்** - முனிவர் - துறவிகள் ; இங்கே இது கேட்ட அரபத்தர் முதலிய மாதவர்கள், யோகிகள். "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்"—குறள். இது காரணப் பெயர். அழகிய தட்பத்தை ஆள்பவர் - வரம்பின்றி எல்லா உயிர்களிடத்தும் செல்லும் குளிர்ந்த கருணையை ஆள் பவர் ; ஆளுதல் - கையாளுதல் - கொண்டொழுகுதல் என்க. உலகர் இதனை அறிந்துய் யும்படி அவர்கள் மேல் வைத்த கருணையினாலே இவ்வரலாறு மேலும் கேட்டார்கள் என் பது குறிப்பு. அங்கணாளன் அருளை அந்தணாளர் கேட்டார் என்ற சொல்லழகும் காண்க.

பந்த மானிடம் - மேலே மையல்மானிடம் என்றதாம். **பந்தம்** பிறவிக்குச் சுபாவ மான இயற்கை யடைமொழி. ஆலாலசுந்தரர் பந்தப்பட்டார் என்பதல்ல. "பச்சைத்தா ளரவாட்டி" (திருவாசகம்) "புற்றுடரவா" (தேவாரம்) என்பனபோல.

பாற்படு - உருப்படுத்தல். **பாற்படுத்தல்** - உரிய பகுதியிலே செலுத்துதல். "நற்பாற் படுத்தென்னை" என்ற திருவாசகம் காண்க. தொனு - 4. உயிர்களைப் பிறப் பித்துப் பாசம் போக்கிப் பாற்படுத்துவதற்காய் அமைந்த தென்றிசை என்க. **பாற் படுத்துதல்** சிருட்டியின் தத்துவமாம்.

இப்பாட்டு குளகம் - முன்னர் வரும் 37-வது பாட்டிலே, என்று மாதவனாகிய (30) மாமுனிவன் சொன்னபடி என்பதனோடு கூட்டிமுடிக்க.

31 முதல் 36 வரை உள்ள பாட்டுக்களில் தென்றிசையே மற்றத் திசைகளில் மேம் பட்டதற்குரிய காரணம் சொல்லப்பெற்றது. "திசையனைத்தின் பெருமைஎலாம் தென் றிசையே வென்றேற" (திருஞான - புரா - 24) எனப் பின்னருங் கூறுவது காண்க.

மேலே மாமுனிவர் "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திட" என்றாராகலின் முனிவர்கள் இவ்வாறு அதனை விளக்கும்படிக் கேட்டார் என்க.

பந்தமானிடப் பாற்படும் இந்த வான்திசை எட்டினும், தென்திசை மேற்பட என்று மாறிக் கூட்டுக. **மேம்பட** என்பதும் பாடம். 30

41. பொருவ ருந்தவத் தான்புலிக் காலனும்
அருமுனி யெந்தை யர்ச்சித்து முள்ளது

பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்
றொருமை யாளர்வைப் பாம்பதி யோங்குமால். ௩க

42. அத்தி ருப்பதி யின்னமை யாளுடை
மெய்த்த வக்கொடி காண விருப்புட
னித்த னீடிய வம்பலத் தாடும்;மற்
றித்தி றம்பெற லாந்திசை யெத்திசை. ௩௨.

(இ - ள்) பொருவரும்...உள்ளது - (முன்னே பலர் அருச்சித்து வழிபட்டதன்றி) ஒப்பற்ற தவத்தையுடைய வியாக்கிரபாதர் என்னும் எனது தந்தையாரால் அருச்சிக்கப்பெற்றும் உள்ளது; பெருமைசேர்...ஓங்குமால் - அன்றியும், எல்லாப் பெருமைகளும் வந்து அடையும் பெரும்பற்றப்புலியூர் என்ற பேருடன் முனிவர்களுக்கு இருப்பிடமாகி அப்பதி ஓங்கி விளங்கும்.

(இ - ள்) அத்திருப்பதி...ஆடும்-(மேலும்) அத்திருத்தலத்திலே நம்மை ஆட்கொள்ளும் நாயகியாரான சிவகாமசுந்தரி யம்மையார் விருப்புடன் எப்போதும் கண்டுகொண்டிருக்க என்றுமுள்ள திருவம்பலத்திலே நித்தன் உருவுடன் திருக்கூத்து ஆடுகின்றான் ; மற்று...திசை ? - வேறு எந்தத் திசை இதுபோன்ற பெருமைபெற்றுள்ளது ?

(வி - ரை) பெரும் பற்றப் புலியூர் - புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) பூசித்தமையால் இது புலியூர் எனப்பெற்றது. மாமுனிவர்களுக்குப் பெரிய பற்றுக்கோடாய் உள்ளதாதலின்—பெரும்பற்றப்புலியூர் என்பர். பற்றற்றவரும் பற்றுவது என்பதாம். "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்ற திருக்குறளும், "...அறந்தோ ருள்ளப் பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானை...", "பற்றற்றார் சேர்பழம் பதியை" என்ற அப்பர் திருவாக்குகளும் காண்க. இத்தலத்திற்குரிய பற்பல மேன்மைகள் காரணமாக வரும் பற்பல பெயர்களினும் இப்பெயரே சிறந்ததாகலானும், இங்கே இவ்வரலாறு சொல்பவரும் கேட்பவரும் பற்றற்ற முனிவர்களாதலாலும், பற்றற்ற முனிவர்களுக்கே அது பற்றுக்கோடாயினால், மற்ற ஆன்மாக்களுக்கு மேலும் மிகவும் அடைதற்குரியதென்பது விளங்குமாதலாலும், இப்பெயரினையே குறித்துக் கூறினார் என்பது. அப்பர் சுவாமிகள் இத்தலத்தில் முதலிற் பாடிய பெரிய திருத்தாண்டகத் திருப்பதிகத்தை இப்பெயராலே பாடியிருத்தலும் காண்க. அத்திருப்பதிகத்தையே அடியவர்கள் "தஞ்சிந்தை பிரியாத பெரிய திருத்தாண்டகச் செந்தமிழ்" (திருநா - புரா - 175) எனப் பின்னர்க் குறிப்பதும் காண்க. தாம் பாலுக்காகப் பசித்தழுதபோது பாற்கடலையே கொடுத்த நன்றியை முதலிலே நினைவு கூர்ந்தார் என்பதுமாம். (மேலே 15-வது பாட்டிற் காண்க.) வியாக்கிரபாதர் தவஞ்செய்து அருச்சித்த வாலாறு கோயிற் புராணம் முதலியவற்றுட் காண்க.

அர்ச்சித்தும் - உம்மை, இறந்தது தழுவிய எச்ச உம்மை ; "அதற்கு முன்னர்ப் பலர் அருச்சித்துள்ளதுமன்றி" என உரைத்ததாம். இதனை எதிரது தழுவிய எச்ச உம்மை யாக்கி—இதுவேயன்றி மேலும் சொல்லப் பெறும் ஏனைச் சிறப்புக்களையும் உட்கொண்டது—என்று உரைத்தலுமாம்.

பெருமைசேர்-பெருமைகள் யாவும் வந்து புகலடைந்த—என்க. புராண இதிகாசங்களால் மட்டுமே யன்றிக் கைவல்லியம் சாந்தோக்கியம் என்ற உபநிடதங்களால் (வேதம்) துதிக்கப்பெற்று வேத சம்மதமான தலமாகிய பெருமை...விராட்புருடனுக்கு இருதயத்தானமாகிய பெருமை...["நீவிரிருவரும் கண்ட மன்றம் இதயமாம்..." என்ற திருவிளையாடற் புராணம் காண்க]...எல்லாத் தலங்களின் கலைகளும் திருஅத்தயாமத்திலே இங்கே வந்து ஒடுங்கும் பெருமை - சுழுத்தித்தானமாம் பெருமை - சற்புத்திரப்

பேற்றிற்காகத் தவஞ் செய்த அதிதி யம்மையாரது அஞ்சலித்த கையிலே ஆதிசேடன் குமாரராக வந்து விழுந்த காரணத்தால் (பத் - விழுதல் ; அஞ்சலி - கூப்பியகை) பதஞ்சலி எனும் பேர் பெற்ற முனிவர் பூசித்த பெருமை - இப்புராணம் பாடிய சேக்கிழார் பெருமானுக்கு அடியெடுத்துக் கொடுத்தும், உண்ணின் றுணர்த்தியும் உபகரித்த பெருமை - காண முத்தி கொடுக்கும் பெருமை - முதலிய பல பெருமைகளும் உள்ளிட்டுப் **பெருமை சேர்** என்றார். **சேர்** என்றதனால் எதிர்காலமும் கொள்க.

ஒருமையாளர் - "செம்மை வெண்ணீற் றொருமையினார்" (சண்டீசர் புரா - 2) என்ற இடத்திற்போலச் சிவபெருமான் ஒருவரிடத்திலே யன்றி வேறொன்றிலும் சிந்தை செல்லாதவர் எனலுமாம். "ஒருமையால் உலகை வெல்வார்" (தடுத் - புரா - 196) என்பதும் காண்க. தாம் வேறு, இறைவன் வேறு, என்றில்லாமல் பெருமானும் தாமும் அத்துவிதக் கலப்பினாலே ஒரு தன்மைபட்ட மனத்தையுடையவர்களே ஒருமையாளர் எனப் பெறுவர். ஒருமை - ஒன்றுபட்ட தன்மை. "தம்பிரானைத் தன்னுள்ளந் தழீஇயவன்" என்றதும் காண்க. இதனையே "பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும், பெருந்துணையை" என்ற திருத்தாண்டகத்தும் காண்க.

ஒருமையாளர் வைப்பாம் - அருச்சித்த புலிமுனிவர்க்கே யன்றி ஏனை முனிவர்களுக்கும் தில்லைவாழந்தணர் முதலியோர்க்கும் நித்தமாகிய சேமநிதி. **வைப்பாம்** - முக்காலத்து நிகழ்வது என்க.

ஓங்கும் - எக்காலத்தும் வளர்ந்து விளங்கும். 31

(வி - ரை) **மெய்த்தவக் கோடி** - உண்மைத் தவத்திலே முளைத்த கொடிபோல் வாராகிய அம்மையார்.

விருப்புடன் - இடைநிலைத் தீவகமாய், விருப்புடன் காண என்றும், விருப்புடன் ஆடும் என்றும், இரண்டோடும் கூட்டி யுரைக்க. இருவரும் வேண்டுதல் வேண்டாமை யிலாதவராதலின் இங்கே குறித்த **விருப்பு** - உயிர்கள் உய்யவேண்டும் என்று உலகின் மேல் வைத்த கருணையேயாம். தம் பொருட்டன்றிப் பிறர் பொருட்டெழுந்த விருப்பமாம். இதனையே "நமையாளுடை" என்று குறித்தார். இது "சிவ" என்ற இரண்டெழுத்தால் (அட்சரத்துவயம் என்ப) இனிது விளங்கும்.

சி - இறைவன் ; நடனம் செய்வது ; **வ** - சத்தி - நடங்காணும் சத்தி. சிகாரம் இகழ்ச்சி-வெறுப்புக் காட்டும் ஒலி. நாயோட்டு மந்திரம் என்ப. வினையைப் போக்குவது.

வ - வழுவிய மக்களையும் தாய் அணைப்பதுபோல உயிர்களை அணைத்து ஊட்டுவது சத்தியியல்பு. "திருந்து நற்சிவென் றூதறிய கையும், அருந்தவர் வா என்றணைத்த மலர்க் கையும்" என்பது திருமூலர் திருமந்திரம். இதன் விரிவுகளைத் தக்கார் வாய்க் கேட்டுணர்க.

காண - இறைவன் அந்த விருப்புடன் திருக்கூத்தாடவும் அதனைத் தங்கள் ஊனக் கண்ணாற் காண்பதற்கு ஆன்மாக்கள் வலிமையில்லார் ஆதலின், இறைவி தாம் கண்டு அக்காட்சியின் பயனை ஆன்மாக்களாகிய தமது மக்களுக்கு ஊட்டுவர். "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதெனை, நோயுண் மருந்து தாயுண்டாங்கு" என்று குமரகுருபரசுவாமிகள் தேற்றப்பட எடுத்துக் காட்டி யருளினார்.

நீடிய அம்பலம் - அறிவு மயமாய் என்று முள்ளதான சித்து ஆகிய அம்பலம். இதுவே **சிற்றம்பலம்** என்பதாம்.

நித்தன் ஆடும் - அம்பலம் என்றும் நீடுவது. அவனும் நித்தன்-என்றும் உள்ளவன். அவன் ஆட்டமும் முக்காலத்தும் நிகழ்வது. ஆதலின் செய்யும் என்னும் வாய்பாட்டுக் குறிப்பு வினைமுற்றாற் கூறினார்.

எத்திசை - இவ்வினாவிற்கு - பேசி லத்திசை ஒவ்வா பிறதிசை - என்று 36-வது பாட்டிலே விடை போந்தமை காண்க.



சிதம்பரம் கோயில் - மேற்பார்வை II

1. வடக்குக்கோபுரம். 2. மேற்குக்கோபுரம். 3. கனகசபை.
4. சிற்சபை. 5. நிருத்த சபை. 6. சிவகங்கை தீர்த்தம்.



சிதம்பரம் கோயில் - மேற்பார்வை I

1. கிழக்குக்கோபுரம். 2. தெற்குக் கோபுரம். 3. கனகசபை.
4. சிற்சபை. 5. சிவகங்கை.

ஆடும் - என்றதனால் திருக்கூத்து - ஆட்டம் - என்பது பெறப்பட்டது. இதன் இயல்பு திருமூலர் திருமந்திரம் முதலிய சைவத் திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் சிவாகமங்களிலும் கண்டு கொள்க. இதுவே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உயிர்கள் உய்தற் பொருட்டு நித்தமாகச் செய்தருளும் ஐம்பெருந் தொழில்களைக் காட்டும் திருக்கூத்து ஆகிய பஞ்சகிருத்திய நடனம் என்பர்.

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு." என்பது சாத்திரம்.

"இத்தொழிலைந்து நின்மேய்த் தொழிலாக."

என்று துதித்தனர் குமரகுருபர சுவாமிகள்.

"...கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்து கந்தானே." திருமூலர் - 9 - 84

"...தெண்டினிற் சத்தி திருவம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்து கந்தானே." ஷை - 9 - 101

என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. இன்னும் இதன் விரிவுகளை இப்புராணத்திலே அங்கங்கே வந்த வந்த இடங்களிலும் கண்டுகொள்க.

"அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த வொருபெருந் தனிக்கூத்தும்..."
—திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் - 160

எனப் பின்னர்க் கூறியதும் காண்க.

இக்கருத்துக்களைப் புராண முதற்றிருப்பாட்டிலே "அம்பலத் தாடுவான்" என்ற இடத்தும் வைத்துக் கண்டுகொள்க.

31. பெருமை சூழ்—என்பதும் பாடம். 32

43. பூதமி யாவையி னுள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதன் மங்கை யிதய கமலமாம்
மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால். ௩௩

(இ - ள்) பூதம்...போதென - எல்லா உயிர்களிலும் உள்ளே இருந்து இருதய கமலம் மலர்வதுபோல; வேதமூலம்...கமலமாம் - உலகமாகிய காதல் மங்கையினுடைய, பிரணவம் வெளிப்படும் இடமாகிய, இருதய கமலம் என்னும்படி; மாதொர்...மலர்ந்ததால் - தியாகேசர் எழுந்தருளிய திருவாரூர் தென்றிசையிலே மலர்ந்து விளங்குவதாம்.

(வி - ரை) பூதம் - இங்கு ஆன்மாக்களைக் குறித்தது. போது - தாமரை மொட்டு. இங்கு இதய தாமரையைக் குறித்தது. இரத்தாசயம் (Heart) கீழ் நோக்கிய தாமரை மொட்டுப் போன்ற உருவமுடையது என்பர். இதுவே இருதயமெனவும், உள்ளத் தாமரை எனவும் பேசப்பெறுவதாம். உயிர்களது உள்ளக் கமலத்தினிடத்தே வெளிப் படுவது போல இறைவன் பூமிக்கு இதய கமலமாகிய திருவாரூர்ப் புற்றிலே விளங்கு வன் என்பது கருத்து.

வேதமூலம் வெளிப்படும் - வேதமூலம் - பிரணவம். வெளிப்படுதல் - தோன்று தல். பிரணவத்தாற் குறிக்கப்பெறும் பொருளாகிய இறைவன் விளங்குதல். இதனை உவமான உவமேயம் இரண்டிலும் கூட்டுக. வேதமூலம் வெளிப்படும்போதென, அது வெளிப்படும் கமலமாம் ஆரூர் என்க.

வேதமூலம் - என்பது பிரணவம், குடிலை ஓங்காரம் முதலிய பெயர்களாற் பேசப் பெறுவது. சுத்த மாயையின் சொரூபமாகிய நாதமே இதன் உருவம். இதை இயக்குபவன் இறைவன். நாதம் துணைக்காரணமும் இறைவன் நிமித்தகாரணமும் வேதம் காரியமுமாம். "ஓமென்னும் பதமதனில் வேதமாதி உற்பவிக்கும் ஆலவித்தி னுதிக்கு மாபோல்" - சிவதருமோத்தரம் "குடிலை என்னும் தடவய லுப்பண், அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி, வேதமென்னும் பாதவம் வளர்த்தனை..." - குமர குருபர சுவாமிகள். இது ஓம் என்ற சமட்டிநிலை - கூடியநிலை; அகார உகார மகார மாகிய வியட்டி நிலை - பிரிந்த நிலை என்ற இருநிலையை யுடையது. அகாரம் வாய் அங்காத்தல்—இதழ்கள் திறத்தலாலே பிறப்பது; (அ ஆ அங்காப்புடைய - என்பது இலக்கணம்); உகாரம் திறந்த இதழ்கள் குவித்தலால் பிறப்பது; மகாரம் - அந்த இதழ்கள் மூடுவதாற் பிறப்பது - என்பர் இலக்கண நூலோர். எனவே, முன் மூடி யிருந்த இதழ்கள் திறந்து குவிந்து பின் மூடுவதால் வரும் பிரணவம் என்க. இதுவே பிரளயத்தில் இறைவனிடத்து ஒடுங்கியிருந்த உலகம் மீளவும் சிருட்டியில் தோன்றி - நின்று - பின்னரும் அழிதலுமாம். இந்தத் தொழில் முயற்சியிலே எல்லா எழுத்துக்களும் எல்லா எழுத்துக் கூட்டங்களும் பிறப்பதுபோல் பிரணவமாகிய நாத தத்துவத்திலிருந்து எல்லா உலகமும் தோன்றும் என "வேதமூலம் வெளிப்படும்" என்றார்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உண்டு: அண்டமாகியது உலகம்; பிண்ட மாகியது உயிர்கள்; அண்டத்தின் உடம்பு பூமி; பிண்டத்தின் உடம்பு உயிர்கள் தங்கும் உடற்கூடு; பூமியின் இதயம் திருவாரூர்; உயிர்களின் இதயம்போல் பூமிக்குத் திருவாரூர் இதய கமலமாம். உயிர்களின் இதயத்தில் விளங்குவதுபோல் இறைவன் திருவாரூர்ப் பூங்கோயிலிலே புற்றிடம் கொண்டும் தியாகேசனாகவும் வெளிப்படுவன் என்க. உயிர்களுக்கு இதயகமலம்போல் பூமியாகிய மங்கைக்கு இதயகமலமாக விளங்கு வது திருவாரூர் என்பது.

கமலம் - பூவுலகம் ஒரு மங்கை எனவே கொண்டு **பூதேவி** என்றழைப்பர். திரு வாரூருக்கும் அங்கிருக்கும் குளத்துக்கும் கமலாலயம் என்ற பெயரும் உண்டு. இதன் கோயிலுக்குப் **பூங்கோயில்** என்று பெயராம்.

> தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் மேறேறிப்
> பாங்கான வூர்க்கெல்லாஞ் செல்லும் பரமனூர்
> தேங்காவி நாறுந் திருவாரூர்த் தொன்னகரில்
> **பூங்கோயி** லுண்மகிழ்ந்து போகா திருந்தாரே.

எனவரும் அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் **பூங்கோயி**லெனக் குறித்தது அறிக.

"பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்றபடி பூங்கோயில்=(இதயம்) கமலம்+ ஆலயம்=கமலமாகி அமைந்த ஆலயம் என்பதாம்.

பிரமதேவரிடத்திலே நீண்ட ஆயுள் பெற்ற குதிரை முகமுடைய அயக்கிரீவன் என்ற அசுரனைக் கொன்றபின் சார்ங்க மென்னும் தமது வில்லின் ஒரு நுனியிலே சார்ந்து உறங்கிய விட்டுணுமூர்த்தி அவ்வில்லின் நாண் அற்றபடியால் அது கிளம்பவே தலையிழந்தார் எனவும், அதற்காக இங்குத் தவஞ் செய்து இலக்குமி மங்கலம் பெற்றாள் எனவும் தேவீ பாகவதம் கூறுமென்பர்.

மேதினி - பூமி. மது என்னும் அசுரன் விட்டுணுமூர்த்தியினால் சங்கரிக்கப்பட்டு அவனுடைய தசைகள் சேர்ந்து உண்டாகிய காரணம் பற்றி மேதினி என்ற பேர் கொண்டதென்பர்.

மேதினிக்காதன் மங்கை - மேதினியாகிய காதலிக்கப்படும் மங்கை போன்ற பூமி என்க. மேதினியினால் காதலிக்கப்படும் திரு என்கின்ற இலக்குமிதேவி என்றுமாம். சிதம்பரம் ஆகாயமும் திருவாரூர் பிருதிவியும் ஆகிய தலங்களாம். ஆகாயம் முதலாகவும்

பிருதிவி இறுதியாகவும் விளங்குதலால் மேற்பாட்டிலே சிதம்பரத்தையும் இப்பாட்டிலே திருவாரூரையும் சொன்னார் என்பது. இது தோற்றத்தின் முறை.

"மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை மணிதிகழு மம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

என்ற தேவாரமும் காண்க. முன்னோ என்பது ஒடுக்க முறையையும், பின்னோ என்பது தோற்றத்தின் முறையையும் குறிக்கும் என்பர். இவ்விரண்டும் கூறவே, இடைப்பட்ட எல்லாத் தலங்களும் இவற்றுள் அடங்கும் என்பதாம். பிருதிவியாகிய சம்பந்தம் பற்றிக் காஞ்சியையும் சேர்த்து வரும் பாட்டிற் கூறுவது காண்க. ஆகாயத்திற்கு ஒரு தலம் கூறிய முனிவர், பிருதிவிக்கு இரண்டு தலம் கூறுவானேன்? எனின், இரண்டு கண்களும் சேர்ந்து ஒன்றாகிய முழுக்காட்சி தருவதுபோலத் திருவாரூரும் காஞ்சீபுரமும் ஆகிய இரண்டும் கூடிய வழியே பிருதிவியின் முழுத்தன்மையைச் செய்கின்றன. இதனைச் சுந்தரமூர்த்திகள் சரித நிகழ்ச்சியின் துணைகொண்டு பின்வரும் பாட்டின்கீழ் உரைக்கப் பெறுகின்றதும் காண்க. இவ்வாறு இரண்டு பொருள்கள் ஒன்றற்கொன்று சார்பு பெற்று ஒரு முழுப்பொருளை உண்டாக்குவனவாயின் ஆங்கில மொழியில் அவற்றை—Complimentary—சார்ந்து முழுமையாக்குவன—என்பர்.

இவற்றுள் திருவாரூர் சிவத்தன்மை மிகுந்த பிருதிவித் தலம் என்றும், காஞ்சீபுரம் சத்தித்தன்மை மிகுந்த பிருதிவித்தலம் என்றும் கூறுவர். மேலே ஆகாய தத்துவ நிலயமாகிய சிதம்பரத்துக்கு இரண்டு பாட்டுக்கள் கூறினர். ஆகாய தத்துவத்துக்கு இரண்டு தன்மைகள் உண்டு. அவையாவன: ஒடுக்கக் கிரமத்திலே உலகத்தைத் தன்னுள்ளே ஒடுக்கிக்கொள்ளும் சிவத்தன்மை ஒன்று. சிருட்டிக் கிரமத்திலே உலகத்தைத் தன்னிடத்திலிருந்து தோற்றுவிக்கும் சத்தித்தன்மை மற்றொன்று. இவற்றை முறையே சிதம்பரத்துக்குக் கூறிய இரண்டு பாட்டுக்களில் "பெரும்பற்றப் புலியூர்" என்ற முதற் பாட்டில் சிவத்தன்மையையும், "மெய்த்தவக்கொடி காண" என்ற இரண்டாம் பாட்டில் சத்தித் தன்மையும் அறிவித்தார். இவ்விரண்டு தன்மைகளும் பிருதிவியிலும் உள்ளன. இதுவே ஒடுங்கும்போது சிவத்தன்மையும், தோற்றிவரும்போது சத்தித் தன்மையும் மேற்கொள்ளும். இவற்றிலே அந்த பிருதிவிச் சிவத்தன்மையைத் திருவாரூரிலும், பிருதிவிச் சத்தித்தன்மையைக் காஞ்சீபுரத்திலும் காட்டுவார் பிருதிவிக்கு இவ்விரண்டு தலங்களையும் கூறினார். இது சொல்லும் உபமன்னிய முனிவராதிய "துறந்த முனிவர் தொழும் பரவை துணைவ"ராகிய சுந்தரமூர்த்திகள் முதலிய முனிவோர்களது "இதய கமல"த்து விளங்குவது திருவாரூராதலின் அதுவும் முனிவர் போற்றும் பெரும்பற்றப் புலியூர் போன்று சிவத்தன்மை பெற்ற பிருதிவித் தலமாம். "உலகீன்றவள்" வழிபடுதலால் சத்தித் தன்மை பெற்ற பிருதிவித் தலம் காஞ்சீபுரமாம். இதன் குறிப்பை வரும் பாட்டிற் காண்க. 33

யாவையுமுள்ளலர்—என்பதும் பாடம்.

44. எம்பி ராட்டியிவ் வேழுல கீன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தாலெய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சியென்
றும்பர் போற்றும் பதியு முடையது.　　௩௪

(இ - ள்) எம்பிராட்டி...என்று - எமது பெருமாட்டியாயும் இவ்வேழுலகங்களையும் பெற்றெடுத்த தாயாகவும் உள்ள காமாட்சியம்மையார் தமது பெருமானாகிய இறைவனைத் தனித்தவஞ் செய்து வெளிப்படக் கண்டு கம்பையாற்றின் கரையிலே பூசித்த காஞ்சீபுரம் என்னும் பேருடைய; உம்பர்...உடையது—தேவர்களும் வந்து வணங்கும் தலத்தையும் அத்தென்றிசை தன்னுள்ளே உடையதாம்.

(வி - ரை) தென்றிசை - என்ற எழுவாய் வருவித்துரைக்க.

எம்பிராட்டி - எமது தலைவி - பெருமாட்டி. எழுலகு ஈன்றவளாகிய எம்பிராட்டி என்க.

தனித்தவத்தால் எய்தி - ஒப்பற்ற தவஞ் செய்து அது காரணமாக இறைவன் வெளிப்படக் கண்டு அடைந்து ; தனித்துப் போந்து தவம் செய்து என்றுமாம். இத் தவத்தின் வரலாறும்,வழிபட்ட வரலாறும் அதனால் உயிர்கள் அடையும் பேறும் திருக் குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் 49 முதல் 71 வரை உள்ள திருப்பாட்டுக்களினு லும் காஞ்சிப்புராணம் முதலியவற்றானும் அறிக.

கம்பை - ஆறு - இப்போது இது இங்குப் பூமியின்கீழ் ஓடும். பிராட்டி பெரு மானை அவர் வெளிப்பட்ட பிருதிவியிலே தாபித்துப் பூசித்துக்கொண்டு இருக்கும்போது இறைவன் அருளாலே ஆறு பெருகிவர, அம்மை நடுங்கி இறைவனது திருமேனியை ஆற்றின் வெள்ளத்திற் போகாதபடி தழுவிக்கொண்டாள் என்பது சரிதம். கம்பம் - நடுக்கம்; நடுக்கத்தை உண்டாக்கியதால் **கம்பை** எனப்பெற்றதாம். "...வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட, கள்ளக்கம்பனை..." என்ற சுந்தரமூர்த்திகள் தேவாரமும் காண்க. பின்னரும் "வெருக்கொண்டே" (திருக் குறிப்பு - 63) என்பது காண்க.

வழிபடு காஞ்சி - வழிபடப்பெற்ற இடமாகிய காஞ்சி. மேற்காட்டிய சுந்தர மூர்த்திகள் தேவாரப் பதிகத்திலே பாட்டுத்தோறும் "வழிபடப்பெற்ற" என்ற குறிப் பும் காண்க. இத்திருப்பதிகத்தின் உட்குறிப்பைக் காட்டுவதற்கே ஆசிரியர் இவ்வாறு கூறினார் என்றும் சொல்லலாம்.

"...மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி மனையறம் பெருக்குங் கருணையினால்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலி னீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப் பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்"
—திருக்குறிப்பு - 71

என்றபடி இது அம்பிகை விளக்கமாகிய தலம். திருவாரூர், இறைவன் விளக்கமாகிய தலம் என்பது மேலே குறிக்கப்பெற்றது. பின்னும் இவ்வுண்மையைப் பிருதிவித் தல மாகிய திருவொற்றியூரிலே சபதம் தப்பிய காரணத்தால் சுந்தரமூர்த்திகள் இழந்த இரண்டு கண்களில், காஞ்சீபுரத்திலே இடதுகண்ணையும், திருவாரூரிலே வலதுகண்ணை யும் இறைவன் அருளப்பெற்றார் என்ற சரித்திரத்தாலும் அறிகின்றோம். "மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண் கொடுத்தார்" "மூலைச்சுவட்டுக் கோலந்தான், காட்டுதலும்" (ஏயர்கோன் - புரா - 287, 288) என்று புராணம் குறிப்பதும், தேவாரத் திலே இச்சரிதத்தையே நம்பிகள் குறிப்பதும் காண்க. எனவே, இவை யிரண்டும்கூடி ஒன்றாகி முழுக்காட்சி பெறும் தன்மையில் இவற்றது ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டுகொள்க. **காஞ்சி** - கா+அஞ்சி - பிரமனும் சரஸ்வதியும் பூசித்தது என்று பொருள் கூறுவர்.

வழிபட்டது - தம்பொருட்டன்றி உயிர்கள்மேல் வைத்த கருணையினாலே அவை களைச் சிவபூசையிலே வழிப்படுத்தி நன்மை தருதற்பொருட்டே அம்மையார் செய்த னர் ; **"இவ்வேழுலகீன்றவள்"** ஆதலின்—எனக் குறித்தமை காண்க. இது பூசை முடி வில் அம்மையார் கேட்டுப் பெற்ற வரங்களால் அறியலாம்.

தம்பிரான் - (மேலே 19-வது பாட்டிற் காண்க.) தம்மை அம்மை தழுவத் தந்து முலைத்தழும்பும் வளைத்தழும்பும் கொண்டதும் உயிர்கள் போக யோகம் பெற்று உய்ய வேண்டுமென்னும் கருணையே காரணமாம்.

"தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான்..." —திருச்சாழல் - 9.

"துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கடோய் சுவடு
பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே..."—அருட்பத்து - 5.

எனவரும் திருவாசகங்களும் காண்க. 34

45. நங்க ளாதனு நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடரு ளெய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனன்மலர்
செங்கை யாளரை யாறுந் திகழ்வது. ௩௫

(இ - ள்) நங்கள்...பொற்பது - நமது குருநாதனாகிய நந்திதேவர் தவம் செய்து வளர்ந்து நீடிய அருள் பெற்ற பொற்பையுடையதாகிய; கங்கை வேணி...திகழ்வது - கங்கையாறு சடையிலே மலரவும், சிவந்த கையிலே கனல் மலரவும் கொண்ட இறைவனுடைய திருவையாறு என்ற தலமும் இத்தென்றிசையிலே விளங்குவதாம்.

(வி - ரை) **நங்கள் நாதனும் நந்தி** - சிவபெருமானிடத்தே நேரே ஞானோபதேசம் பெற்ற திருநந்திதேவர் அதைச் சனற்குமாரர் முதலிய மாமுனிவர்களுக்குக் குரு பரம்பரையிலே உபதேசித்தருளினார். இவர்கள் திருக்கயிலாயத்தே இருந்து கேட்டு ஞானம் பெற்றனர். இந்த மரபிலிருந்து பூவுலகிலே உபதேசம் பெற்றவர் சைவ சமய சந்தான ஆசாரியர்களின் முதல்வராகிய மெய்கண்ட சுவாமிகள். ஆதலின் நமது உண்மைத் தெய்வச் சைவக் குருமரபிற்குத் திருநந்திதேவரே முதற்குரு ஆவர். ஆதலின் **நங்கள் நாதனும்** என்றார். கயிலையிலே தவஞ்செய்து நிற்கும் முனிவர் கூட்டத்துக்குத் தலைவராகி இச்சரிதம் சொல்லும் உபமன்னிய முனிவர் அக்கயிலையிலே பிஞ்ஞகன்றன் அருள் பெறுவார்க்கெல்லாம் தலைமையாம் பணிபெற்ற கோயில்நாயகனாகிய நந்திபெருமானை **நங்கள் நாதனும்** என்று குறிப்பதும் இயல்பு. "நங்குரு மரபுக்கெல்லா முதற்குரு நாதனாகி" என்ற காஞ்சிப் புராணப் பாட்டும் இக்கருத்தே பற்றியது.

தவஞ்செய்து பொங்குநீடருள் எய்திய பொற்பு - இச்சரிதம் காந்தம்—வாயுசங்கிதை—சிவமகாபுராணம் முதலியவற்றுட் காண்க. இத்தலத்தே சிலாத முனிவர் (சிலா + ஹதர் - கல்லைத் தின்று தீர்ப்பவர்) வரங் கேட்டபடி மதலையாக மக்கள் வயிற்றுட்படாமலே நந்திதேவர் அவதரித்து மகா உருத்திரத்தை 8 கோடி உருச் செபித்துப் பூசித்துச் சுயசை என்ற தேவியை மணம் செய்யப்பெற்றதுடன், சாரூபம்—கணநாயகம் முதலிய மெய்ப் பேறுகளையும் பெற்றுத், **துவிதியசம்பு** என்று பேரும்பெற்று விளங்குகின்றனர். முனிவர் தேவர்கள் பஞ்சாக்கர செபம்செய்து பேறுபெற்றதாற் இது செப்யேசம் என்ற காரணப் பேரும் பெற்றது. அத்தவத்திற் கிடமாய் இப்போதும் மேலைப் பிராகாரத்திலே 7 வில்வமரங்க ளிருப்பதும், அவற்றைக் கடந்து போகக்கூடாதென்பதும், சத்தமின்றி மவுனமாய்ப் போவதும் ஆகிய வழக்கம் நிகழ்வதாம். ஆதலின் மேலும் மேலும் பொங்கி—பெருகி—என்றும் நீடியிருக்கும் அருட்பேறு என்பார் பொங்கு—நீடு—அருள் என்றார். பொற்பது—ஐயாறு—என்று கூட்டிப் பொற்பினை - அழகை - உடையதாகிய ஐயாறு என விரிக்க.

ஐயாறு-ஐந்து ஆறுகள். வடமொழியில் பஞ்சநதம் என்பர். சுவாமிபாத கங்கை—தேவிகங்கை—இடபகங்கை—காவிரி—இவற்றுடன் நந்திதேவர் உவகை ஒரு நதியாக உருவெடுத்துச் சேர்வதால் ஐந்தாறுகள் சேர்வது.

கங்கைவேணி மலரக் கனன்மலர் செங்கையாளர் - கங்கை சடையிலே மலரவும் கனல் கையிலே மலரவும் வைத்த முதல்வர் என்க. மலர்தல் - விரிந்து விளங்குதல். நீரும் தீயும் ஒன்றற்கொன்று விரோதமுள்ளன. நீர் பெருகில் தீ அவிதலும், தீப் பெரு

கில் நீர் சுருங்கலும் ஆம். இவ்விரண்டையும் ஒருங்கே தம்மிடத்தே மலர வைத்தது, தாமே ஆக்கலும் அழித்தலும் வல்ல முழுமுதல் என்று காட்டியபடி. "ஒடுங்கி மலத் துளதாம்" என்ற விதிப்படி உயிர்களையும் உலகத்தையும் சங்காரகாலத்தே தம் மிடத்தே ஒடுங்கவைத்தும், சிருட்டிக் காலத்தே தம்மிடத்திலிருந்து மீளத் தோற்று வித்தும் அருள்பவன். இவற்றுள் "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" என்றபடி தீ சங்காரத்தையும், உலகந்தோன்றி நிற்கத் துணைக் காரணமாகிய நீர் உலகப் பிறப்பு இருப்புக்களையும் உணர்த்தும். இவை யிரண்டையும் தம்மிடத்தே மலர்ந்து தங்கி நிற்க வைத்து, அவ்வத் தொழில்கள் நிகழ்விக்க அவற்றை முறையே ஒவ்வோர் சிறிய அளவிலே உலகில் அருள்விப்பார் என்பார் 'கங்கை வேணிமலரக் கனல் செங்கைமலர் வது' என்றார். மேலும் "பரந்தெழுந்த புனற் கங்கை பனிபோலாகச் செறுத் தானை..." "நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை" என்றபடி உலகை அழிவு செய்ய வந்த கங்கையைச் சடையில் தாங்கியும், உலகைச் சங்கரிக்கும் தீயைக் கையிற் றாங்கியும் தாம் இவற்றால் அழிவுபெறாமல் நிற்பார். இவ்வகைகளாற் போந்த அவரது முழுமுதற் றன்மையும் உலகருக்காக அருளாலே செய்யும் ஐந்தொழில்களும் உணர்வதே சிவ ஞானமாம். இதனையே திரு நந்திதேவர்க்கு உணர்த்தினாராதலின் ஆசிரியர் இங்கே இத் திருஅடையாளங்களாற் பெருமானைக் குறிப்பிட்டு உணர்த்தினார் என்பது.

கனல் மலர் செங்கை - கனல்போல மலர், கனலால் மலர் என உரைத்தலுமாம்.

அழலாட அங்கை சிவந்ததோ? அங்கை
அழகா லழல்சிவந்த வாறோ?—கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாயிதனைச் செப்பு.—**அற்புதத் திருவந்தாதி - 98.**

என்று காரைக்காலம்மையார் இதுகொண்டு இறைவனது முழுமுதற் றன்மையை அழகாக விளக்கியவாறு காண்க. 35

46. தேச மெல்லாம் விளக்கிய தென்றிசை
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்
பூச னைக்குப் பொருந்து மிடம்பல;
பேசி லத்திசை யொவ்வா பிறதிசை. ருசு

(இ - ள்) தேசமெல்லாம்...இடம்பல - (மேற்சொல்லியவையேயன்றி) தென்றிசை யிலே தேசங்களையெல்லாம் விளக்கம் செய்த இறைவரது திருத்தோணிபுரத்துடன் சிவபூசைக்குப் பொருந்திய பல இடங்களும் உள்ளன; (ஆதலின்) பேசில்...திசை - திசைகளின் தாரதம்மியங்களைப்பற்றிப் பேசுவோமானால் அத்தென்றிசைக்குப் பிற திசைகள் ஒப்பாகமாட்டா.

(வி - ரை) பேசில் மேலே 30-வது பாட்டில் கேட்ட "யாது?" என்று பேசில் என வருவித்துக்கொள்க.

தேசமெல்லாம் விளக்கிய - தோணிபுரம் எனக் கூட்டுக. **விளக்கிய** - உண்மை யறியாத தேசத்துக்கு உண்மையை விளங்கச் செய்த. "...தேசமெல்லாம், குரவை யிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தம் குல தீபத்தை..." என்று மாதவச் சிவஞான சுவாமிகள் அருளியபடி திருஞான சம்பந்த சுவாமிகளினாலே உலகத்தை யெல்லாம் விளங்கத் தெருட்டியது தோணிபுரமே என்பதும் குறிப்புப்போலும். பிரள யத்திலே தோணியில் மிதந்து உலகம் விளக்கியது முன்னமே உலகமறியுமன்றோ?

"திசையனைத்தின் பெருமை எல்லாம் தென்றிசையே வென்றேற"
—**திருஞான - புரா - 24.**

என்றபடி அவரது அவதாரத்தினாலே **தென்றிசை** சிறந்ததாம். ஆகாயமாகிய தில்லை

முதல் பிருதிவியாகிய ஆரூர் - காஞ்சி வரை சகல சிவ தலங்களிலும் இறைவன் வெளிப் பட்டு ஆன்மாக்களுக்கு அருளும் முறையும், அவரை அடைந்து உயிர்கள் உய்யும்வகை யும் உணர்த்துவார் ஆசாரியர்களேயாவர். அவர்களிலே முதற்குரவராய்ச் சைவசித்தாந்த சந்தான பரம்பரையின் முதல்வராய்க் கயிலையிலிருந்து போந்த நந்திதேவர் தலமாகிய திருவையாற்றையும், அடுத்தபடியிலே, சித்தாந்த உண்மைகளை நடத்திக்காட்டி உலகர்க்கு வழிகாட்டிச் சைவத் தாபனம் செய்த சைவசமய பரமாசாரிய மூர்த்திகளில் முதலில் வைத்தெண்ணப்படும் திருஞான சம்பந்தப் பெருமான் அவதரித்த சீகாழியையும் கூறினார்.

தேசமெல்லாம் விளக்கிய என்பதைத் தென்றிசைக்குச் சேர்த்து உரைத்தலும் ஒன்று. தென்றிசையில் தில்லை—ஆரூர்—காஞ்சி—ஐயாறு—தோணிபுரத்துடன் இடம் பலவும் உள்ளன என்று முன் பாட்டுக்களுடன் கூட்டி முடிக்க.

பூசனைக்குப் பொருந்தும் இடம்பல - ஆசாரியரால் விளக்கப்பெற்ற உண்மை களின் வழி நடந்து பூசை செய்வதற்கு உரிய பல தலம் என்க. ஆதலின் இம்முறை யிலே இவற்றை இறுதியில் வைத்துப் பொதுவிற் பேசினார். பூசை செய்யும் இடம் எங்கும் இறைவன் வெளிப்பட்டு வருவானாதலின், அவற்றைப் பிரித்துக் கூறலாகாமை யின், இடம்பல என்று சேர்த்துக் கூறியவாறு.

"யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினும்
. . . .
. . . .
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண் டாயினும் ஆக..."

என்ற திருமுருகாற்றுப்படைக் கருத்தும் நோக்குக.

பொருந்தும் இடம்பல - இறைவன் வெளிப்பட வீற்றிருக்கும் மூர்த்திகளும், புண் ணிய நதிகளும், மலைகள் முதலிய தலங்களும், பூவும் நீரும் முதலிய சாதனங்களுமாகிய இவை - பொருந்திய - என்க.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டுநீருண்டு" என்றமையும் காண்க. தட்ப வெப்ப நிலை வேறுபாடுகளாலும் பூசைக்குரிய சாதனங்களில்லாக் குறையினாலும் பிறதிசைகள் பூசனைக்குப் பொருந்தா இடங்கள் என்பது. பிறவியாற் பெறும் பேறு இறைவனைப் பூசித்தலே யாதலின் அதற்குப் பொருந்தும் இடம் உள்ள திசையே சிறந்தது என்பது முடிந்த கருத்தாம். "ஈறுஞ கன்னி" - என முன்னர்க் காட்டிய திருமந்திரமும் இங்குச் சிந்திக்க.

தென்றிசையில் தோணிபுரத்துடன் இடம்பலவும் பொருந்தும்—என்று கூட்டி உரைத்தலுமொன்று.

மேலே கூறித் தொகுத்த ஐந்து தலங்களைச் சிறப்பாய்க் கூறிய காரணங்கள், குறி முதலிய அறிய நிற்குமுறை—ஐந்தெழுத்து நிற்குமுறை—ஐந்தொழிலைக் காட்டுமுறை முதலிய பலவகையாலும் கூறுவர். அவையாவும் "உடன் பூசனைக்குப் பொருந்து மிடம்பல" என்று ஆசிரியர் கூறி முடித்துக் காட்டியதனை உட்கொள்ளாமற் கூறுவன வாம். ஆதலின் அவை உரையன்றென்க. 36

47\. என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியா லடியவர்

துன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றெ னாதர வாலிங் கியம்புகேன். ௩௭

(இ - ள்) என்று...படியால் - மேற்கூறியவாறு உபமன்னிய முனிவர், ஆலால சுந்தரர் வன்றொண்டராகி வரும் செய்கையின் வரலாறுகளை யங்குச் சொல்லியருளினார். அவர் சொல்லியபடியே; அடியவர்...விரி - அடியவர்களுடைய நிறைந்த சிறப்பை விளக்கும் திருத்தொண்டத்தொகையை ஆதாரவாக் கொண்ட விரிநூலாகிய இப்புராணத்தை; இன்று என்...இயம்புகேன் - இப்போது எனது ஆசையினால் இவ்விடத்துச் சொல்லப் புகுகின்றேன். இது (ஆசிரியர்) கூற்று.

(வி - ரை) முனிவர் வன்றொண்டர் செய்கையை அன்று அங்குச் சொன்னபடி அச்செய்தியைப் பற்றியே திருத்தொண்டத் தொகையினைப் பின்பற்றிய விரிநூலாக இன்று இங்கு இயம்புவேன் என்க.

மாமுனி - உபமன்னிய முனிவர். மாமுனி வன்றொண்டர்செய்கையை - என்றும், மாமுனிவன் தொண்டர் செய்கையை-என்றும் இருவகையாகப் பிரித்து முரைக்கலாம்.

செய்கை - செய்த செயல்கள் - வரலாறு; செய்தி - சேதி எனவும் வழங்கும்.

அன்று சொன்னபடியால் - முனிவர்களுக்கு முன் காலத்தில் கயிலாயத்தில் சொன்னார்; அதன்படியே, இது கொண்டு சேக்கிழார் சுவாமிகள் உபமன்னிய பக்த விலாசம் என்ற நூலின் மொழி பெயர்ப்பாக இப்புராணம் பாடினார் என்பர் சிலர். முனிவர்சொன்னபடி—என்பது நூலின் முன்வரலாறும் பூர்வத்திற்சொன்னாரும் கேட்டாரும் இன்னின்னார் என்பது குறித்ததேயன்றி உபமன்னிய பக்த விலாசம் என்ற நூலைக் குறித்ததல்ல என்க. இப்போது காணப்படும் இந்நூல் பெரியபுராணத்திலிருந்து வடமொழியில் மொழி பெயர்க்கப் பெற்றதென்று அறிஞர் பலரும் கருதுகின்றார்கள். பெரியபுராணம் எந்த வடமொழி நூலிலிருந்தும் மொழி பெயர்க்கப்பெற்றதல்ல; அது **தனித்தமிழ் நூல்.** இதற்கு முதல்நூலாகிய திருத்தொண்டத் தொகையும், வழி நூலாகிய நம்பி திருவந்தாதியும் தனித்தமிழ் நூல்களேயாம். திருத்தொண்டத்தொகை **தொகை** நூலாகவும், திருஅந்தாதி **வகை** நூலாகவும், இப்புராணம் அவற்றின் **விரி** நூலாகவும் காண்க. விரி என்று ஆசிரியர் குறிப்பதும் காண்க. அடியார் சரிதங்களை உபமன்னிய முனிவர் பத்தர்குழாங்களுக்குச் சொல்வார் என இறைவன் உமாதேவியாருக்கு அருளிய வரலாறு சிவரகசியத்திலே நவமாம்சத்திலே கூறப்பெற்றதும் காண்க.

இங்கு - என்றதனால் மேலே—அங்கு—என வருவித்துக் கொள்க.

ஆதரவு - ஆசை. "அளவிலாசை துரப்ப" என்ற அவையடக்கம் காண்க. **என் ஆதரவால்** என்றது என்னைத் தாங்கும் ஆதரவாயிருப்பதனால் என்றுமாம். இது நூல் சொன்னார்—கேட்டார்—இவர்களின் பெருமையும் நூல்வரலாறும் முதனூலும் உணர்த்திற்று. "தூக்குசீர்த் திருத்தொண்டத் தோகைவிரி, வாக்கினாற் சொல்ல வல்ல பிரான்" என்பது காஞ்சிப்புராணம். விரி - விரித்து - என்றுரைப்பாருமுளர். 37

தோன்றுசீர்—என்பதும் பாடம்.

48. மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்
புற்றி டத்தெம் புராண ரருளினாற்
சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகையெனப்
பெற்ற நற்பதி கந்தொழப் பெற்றதால். ௩௮

(இ - ள்) மற்று இதற்குப் பதிகம் - இங்கு இவ் விரிநூலுக்குப் பதிகமாக; வன்றொண்டர்...நற்பதிகம் - அவ் வன்றொண்டரே புற்றிடங்கொண்ட பெருமானது திருவருள் பெற்றுச் சொல்லியருளிய மெய்வாக்காகிய திருத்தொண்டத்தொகை என்ற பேர்பெற்ற நற்றிருப்பதிகமே; தொழப்பெற்றதால் - தொழுது மேற்கொள்ளப்பெற்றதாகும்.

(வி - ரை) பதிகம் - *நூற்பொருளைச் சுருக்கி நூன்முகத்திலே சொல்லப்பெறும் பகுதி. இப்பதிகமான திருத்தொண்டத்திருப்பதிகம் இதன்கீழ் அமைக்கப்பெறுகின்றது.*

புற்றிடத்தெம் புராணர் - *திருவாரூரிலே எழுந்தருளிய புற்றிடங் கொண்டார் வன்மீகநாதர்.* **புராணர்** - *மிகப் பழமை வாய்ந்தவர். இவரது பழமையை அப்பர்சுவாமிகள் "முன்னோ பின்னோ திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே" என்று இதற்கென அருளிய ஒரு தனித் திருத்தாண்டகப் பதிகத்தால் அருளிச்செய்தனர். "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருள்" என்ற திருவாசகமும் காண்க.*

அருளினற் சொற்ற வரலாறு - *மேலே தடுத்தாட்கொண்ட புராணத்திலே காண்க. திருவாரூர்ப் பெருமான் "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று அடி எடுத்துக் கொடுக்கப் பாடி முடிக்கப்பெற்றதாம். பிருதிவி தத்துவ நிலயமாகிய திருவாரூரிலே இறைவனிடத்திலிருந்து இவ்வாறு கிளம்பித் தொடங்கிய நாதத்தொகுதியாகிய* **தொகை,** *அது தொடங்கிக் காட்டிய "தில்லை"யிலே இறைவனிடத்திலிருந்து கிளம்பிய "உலகெலாம்" என்ற நாதத் தொகுதியாகிய இப்புராணத்தில் விரிந்து முடிவு பெறும் அழகையும் தகுதியையும் காண்க.*

மெய் - *சத்திய வாக்கு - ஆப்த வசனம். "அன்ன மெய்த்திரு வாக்கெனும் அமுதம்" திருஞான - புரா - 1089 பாட்டிற் காண்க. மெய்வாக்காவது - அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. இதுவே நிறைமொழி - அவரது ஆணை. வரும் பாட்டிலும் "மெய்ப்பதிகம்" என்றமையும் காண்க.*

தொழப்பெற்றது - *தொழுது எடுத்துக் கொள்ளப்பெற்றது. அந்த மெய்வாக்காகிய பொருளையே நான்தொழுது எனது வாக்காகிய இப்புராணத்துக்குப் பதிகமாக அமைத்துக் கொண்டேன் என்றபடி.*

முன்னோர் பொருளை மேற்கொள்ளும்போது அதனைத் தொழுது நன்றி பாராட்டிய பின்னர் மேற்கொள்ளுதல் மரபு.

"சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார், மீது தாழ்ந்து" (திருஞான - புரா - 216) என்பதும் காண்க.

தொழ—நற்பதிகமே—இதற்குப் பதிகமாகப்—பெற்றதால்—என்று கூட்டுக.

பெற்றதாம்—*என்பதும் பாடம்.* 38

49. அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்த நாதனு நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாம லியம்புவாம். ௩௯

(இ - ள்) *அந்த...வகையினால் - அந்தத் திருத்தொண்டத்தொகை என்ற மெய்ப்பதிகத்திலே துதிக்கப்பெற்ற அடியார்களை நமது நாதனாகிய நம்பியாண்டார் நம்பிகள் மனமுவந்து நிறையத் துதித்தருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை* **வகை** *நூலாகவும் வழிநூலாகவும் மேற்கொண்டு ; வந்தவாறு - எமது ஆற்றலிலே திருவருள் புகுந்து கைதந்து வந்தபடி ; வழாமலியம்புவாம் - தவிராமற் சொல்வோமாக.*

அடியார்களை—நம்பி—புகன்ற—வகையினால் இயம்புவாம் எனக.

(வி - ரை) நம்பியாண்டார் நம்பிகள் *திருநாரையூரிலே பொள்ளாப்பிள்ளையாரது திருவருள் பெற்று அதன் வழியே திருமுறைகளைக் காண்பதற்கு உபகரித்த பெரியார். பதினோராம் திருமுறையிலே இவர் அருளிய நூல்களைக் காண்க. திருஞானசம்பந்த சுவாமிகளைத் தமது உபாசனாமூர்த்திகளாகக் கொண்டு அவர் திருவடிகளிலே சிறந்த பத்தி செய்து பல சித்திகளையும் பெற்றனர் என்பது இவரது பதினோராந் திருமுறைப் பிரபந்தங்களால் உணரப் பெறும். பெரியபுராணமாகிய விரிநூலுக்கு* **வகை நூல் உணர்த்தியவாறு.** *தொகை—வகை—விரி—என்று நூல் மூன்றாக வகுக்கப் பெறும்.*

இங்குத் தொகை—விரி நூலாவது மேலே உரைத்தமை காண்க. இனி முதல்—வழி—சார்பு—என மூவகை நூல்களாக வகுத்தபோது இப் புராணம் சார்பு நூலாம். அதற்குத் திரு அந்தாதி வழிநூல் என இங்கு உணர்த்தியவாறுமாம்.

பொள்ளாப் பிள்ளையார் என்பது தமிழில் பொல்லாப் பிள்ளையார் என வழங்கும். பொள்ளல் - தச்சனாற் றொளைக்கப்படுதல். தொளைக்கப்படாமல் தானாய் உண்டானவர். இப்பிள்ளையாரிடத்துக் கேட்டு நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதி சொன்னார். இது நூல் வந்த வழியும் மரபும் உணர்த்திற்று.

வந்தவாறும்—என்பதும் பாடம். 39

50. உலக முய்யவுஞ் சைவநின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி யாரூரர் பாடிய
நிலவு தொண்டர்தங் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புன னாட்டணி கூறுவாம். ௫0

இது திருமலைச் சருக்கத்தில் மேல் வரும் இரண்டாவது பகுதியாகிய திருநாட்டுச் சிறப்புக்குத் தோற்றுவாய் செய்தவாறு. பொருள் தொடர்பும் இதனாலே விளங்கும்.

(இ - ள்) உலகம்...கூட்டம் - உலகில் எல்லா உயிர்களும் உறுதி பெற்று உய்யும் பொருட்டும், சைவத்துறையானது நிலை பெற்று நின்று வளரவும் அளவில்லாத சிறப்புக்களையுடைய நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையிலே துதித்தருளிய என்றும் நின்று நிலவும் திருத்தொண்டர் திருக்கூட்டம்; நிறைந்து உறை...கூறுவாம் - எப்போதும் நிறைந்து உறைவதற்கு இடமாகிக் குலவும் தண் நீராகிய காவிரிபாயும் சோழ நாட்டின் சிறப்பு இனிக் கூறுகின்றோம்.

(வி - ரை) உய்ய—ஓங்க—பாடிய—கூட்டம் என்று கூட்டுக.

ஆரூரர் பாடிய - ஆரூரராற் பாடப்பெற்ற - பிறவினைப் பொருளில் வந்தது.

உலகம் உய்ய - சைவம்நின்றோங்க. உலகம் உய்வதற்குக் காரணம் சைவம் நின்று ஓங்குதலேயாம். ஆதலால் இம்முறையே வைத்தார். "நீதிலாத் திருத்தொண்டத் தொகை" என மேலே (25) கூறியதும் காண்க.

குலவு - குலவு புனல். குலவுதல் கொண்டாடுதல் - யாவராலும் புகழப்பெற்ற புனல் என்க. **குலவு** என்பதனை **நாடு** என்றதனோடு சேர்த்திக் குலவுநாடு என்று உரைத்தலுமாம். கூட்டம் நிறைந்துறைவதனாற் குலவப்பெற்ற நாடு என்க. இது சோழநாடு.

நிலவு தொண்டர் - ஆண்டானாகிய சிவபெருமானைப் போலவே தொண்டர் கூட்டமும் என்றும் நிலை பெற்றது என்றபடி.

தண்புனல் நாடு - குளிர்ந்த நீர் - என்றும் பொய்யாது பெருகும் காவிரிபாயும் நாடு. "பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல் நாடு" சண்டேசுரர்புராணம்-1.

இது சோழநாடாம். "ஒருலகோ ஒரு திசையோ ஒருபதியோ" என்றபடி இப் புராணத்துக் கூறப்பெற்ற தொண்டர்களுடைய நாடுகள் தொண்டை நாடு - சேரநாடு முதலிய நாடுகள் பலவாயிருப்பவும், சோழநாட்டையே இப்புராணத்துக்குரிய நாடாய் உரைத்தது என்னை? என எடுத்துக்கொண்டு, இப்புராணம், திருத்தொண்டர் புராணம் ஆதலாலும், அவர்கள் அனைவரும் திருத்தொண்டத் தொகையிலே தொகுதியாகத் துதிக்கப் பெற்றாராதலாலும், அத்திருத்தொண்டத் தொகையின் விரிவே இப்புராணமாதலாலும், அவர்கள் திருவாரூரிலே தேவாசிரிய மண்டபத்திலே நிலைபெற எழுந்தருள்வார்களாதலாலும், அந்தப் பாடல் பிறந்ததும், அவர்கள் இருந்ததும், ஆகிய சோழநாடும், திருவாரூர்த் திருநகரமுமே, இப்புராணத்திற்கு நாடும் நகரமுமாம் என்பார் "தொண்டர்தங் கூட்டம் நிறைந்துறை - நாட்டணி கூறுவாம்" என்று காரணமும்—தொடர்பும்—காட்டியருளினார். 40

பதிகம்

இப்புராணத்து நாடும் நகரமும் கூறுமுன் பதிகம் அமைகின்றவாறு. நாடு-நகரம்-புராண வரலாறு கூறிய பின் பதிகம் கூறுவது முறையாகவும், இவ்வாறே பின் ஆசிரியர்களான சிவஞான சுவாமிகள் - பரஞ்சோதி முனிவர் - முதலாயினோர் அமைத்திருப்பவும், இங்கு நாடு நகரம் புராண வரலாறுகளின் முன் பதிகம் அமைத்தது என்னை? எனின்-இப்புராணத்துக்கு எல்லா நாடுகளும் நாடாக, அவற்றிற்கு மணி முடி போன்ற திருமலையைச் சொல்லிப் புராண வரலாறும் ஆசிரியர் முன்னர்க் கூறியருளினர். ஆதலின் இதன் அமைதி இங்குப் பொருந்தியவாறு காண்க. இப்புராணத்திற்குப் பதிகமாவது "மற்றிதற்குப் பதிகம்" என்ற மேலைப்பாட்டிலே "திருத்தொண்டத் தொகை" எனப் பெற்ற நற்பதிகமே என்று ஆசிரியர் மேற்கொண்டமை உரைக்கப்பெற்றது. **பதிகமாவது** *இன்னதெனை அப்பாட்டினுரையிற் கூறப் பெற்றது.*

திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகம்

பண் - கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௧

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௨

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த *தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௩

---

*தாதையை—பாடபேதம்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
 திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
 பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி அப்பூதி யடியார்க்கு மடியேன்
 ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கு மடியேன்
 ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௪

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
 மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கு மடியேன்
 ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
 நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
 ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௫

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
 மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
 செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
 கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
 ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௬

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
 பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
 விரிதிரைசூழ் கடனாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
 கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்
 ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௭

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
 கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
 நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
 தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
 ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௮

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
　　காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
　　மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட வாடி
　　பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியேன்
　　ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௯

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
　　பரமனையே பாடுவார் அடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
　　திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
　　முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கு மடியேன்
　　ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. ௧௦

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
　　வரிவளையாண் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
　　திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
　　இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனும் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
　　ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

குறிப்பு :—*இப்பதிகத்தின் பாட்டுக்கள் அந்தந்தப் பாட்டினாற் பெயர் பெற்ற அவ்வச் சருக்கங்களின் தலைப்பிலே பெய்தமைத்துள்ளோம். பாட்டுக்களின் உரைக் குறிப்புக்களை அங்கங்கே கண்டு கொள்க. இத் திருப்பதிகத்தை ஆசிரியர் தமது புராணத்துப் பதிகமாக அமைத்துக்கொண்டமையால் உரைக் குறிப்புகள் தரப்பெறுவனவாம்.*

சுருக்கம் :—*திருமலை என்பது திருக்கயிலைமலையாம். அது தேவர்களும் முனிவரும் பூதகணங்களும் சூழ்ந்திருப்பது. இதனைக் காவல் புரிபவர் நந்தியெம் பெருமான். இதன் ஒரு சாரலில் பல முனிவர் சூழ உபமன்னிய முனிவர் தவம் செய்துகொண்டிருந்தபோது ஒரு நாள் பெரிய சோதி ஒன்று தெற்கில் தோன்றிற்று. அது கண்டு முனிவர் இது என்ன அதிசயம் என்றனர். உபமன்னிய முனிவர் இறைவனைச் சிந்தித்து அந்தச் சோதி கயிலைக்குத் திரும்பி வருகின்ற நம்பியாரூரரின் சோதி என்று உணர்ந்து தொழுதனர். சிவனையன்றி ஒருவரையும் தொழாத அவர் தொழுத காரணத்தை முனிவர் வினவினர். "இங்கு வருகின்றவர் நம்பியாரூரர். சிவசமானமானவர்." என்று சொல்லி "அவர் கயிலையிலிருந்து இரண்டு சேடியரை நந்தனவனத்திற் கண்ட காட்சியின் பொருட்டு, இறைவனது ஆணையின்வழிப் பூவுலகில் அவதரித்து, இறைவனாற் றடுத்தாட்கொள்ளப் பெற்றுத், திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்து, அவ்விரு சேடியர்களையும் மணந்து, பின்னர், இங்குத் திரும்பி வருகின்றார்" என அவர் சரிதம் முழுதும் சொல்லி யருளினர். அவர் அவதரிக்க நேர்ந்த தென்*

திசை இறைவனைப் பூசித்துப் பேறுபெறத்தக்க பல சிவதலங்களையும் உடையது என்று அதன் பெருமையையும் கூறியருளினூர். அன்று அம்முனிவர் அங்குச் சொன்னபடி இங்கு இப்புராணம் சொல்லப் பெறுகின்றது. இதற்குப் பதிகமாவது அத்திருத்தொண் டத் தொகையேயாம். அந்தப் பதிகத்திற் கண்ட அடியார்களை நம்பியாண்டார்நம்பி கள் அருளிய திருவந்தாதியிற் றுதித்த வகையின்படி இச்சரிதங்களை விரித்துக் கூறு கின்றேம் - என்பது இப்பகுதியின் சுருக்கம்.

கற்பனை :—இப்பகுதியிலிருந்து சிவபெருமானே பரம்பொருளாவார் என்பதும், திருத்தொண்டர் சரிதவரலாறு இன்னதென்பதும், சிவபுண்ணியம் செய்யும்போது வேறு நினைவுகள் வரலாகாதென்பதும், தெரிந்துகொள்ளத்தக்கன என்று ஆறுமுக நாவலரவர்கள் தமது பெரியபுராண சூசனத்துட் காட்டியுள்ளார்கள்.

முன்னே செய்த பல கருமங்களுக்கு ஈடாக இப்பிறவி பெற்ற நாம் எதற்காக இப் பிறவி எடுத்தோமோ அதை மறந்து, மேன் மேலும் மயங்கிப், பல கருமங்களும் செய்து மூட்டைகட்டி, மேன் மேலும் பிறவிகளுக்கு இடஞ் செய்துகொண்டே போகிறேம். ஆனல் நாம் அனுபவிக்க வந்த கருமம் எது? புதிதாகத் தேடிக்கொள்ள நின்ற கருமம் எது? என்று நமக்குத் தெரிந்துகொள்ள முடியாது. ஆதலின், நாமும், சுந்தரர் கயிலையில் இறைவனை வேண்டிக் கொண்டதுபோல, வராத புதுக்கருமத்தை நாம் தேட உள்ள சம யத்தில் தடுத்து ஆட்கொள்ளும்படி வேண்டிக் கொள்வோமாயின், வேண்டுவார் வேண்டு வதே கொடுக்கும் இறைவன் அவ்வாறே அருளுவன். நாமும் வந்த காரியம் பார்த்துக் கொண்டு வீடு சேர்வோம். இது இப்பகுதியாற் பெறும் முக்கிய கற்பனைகளில் ஒன்றுகும்.

தினமுறையிற் பாராயணம் செய்வோர் 12—29—பாட்டுக்கள் வாசித்து நிறுத் தக்கூடிய இடங்களாம்.

படம் :—திருமலையின் படம், இமயமலை யாத்திரை செய்துவந்த சுவாமி சிவா னந்தர் எழுதிய புத்தகத்திற் கண்டுள்ளது. மைசூர்க் கருத்தர் செய்த யாத்திரையைப் பற்றிய வரலாறுகளிலும் அது காணப்பெறுகிறது.

திருமலைச் சிறப்பு முற்றும்

திருநாட்டுச் சிறப்பு

51. பாட்டியற் றமிழுரை பயின்ற வெல்லையுட்
கோட்டுயர் பனிவரைக் குன்றி னுச்சியிற்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையா னவில லுற்றனன். க

(இ - ள்) பாட்டியற்...எல்லையுள் - (மேலே கூறிய, நம்பிஆரூரர் பாடிய,) பாட் டாகிய இயற்றமிழுக்குப் பொருளாகப் பரந்த எல்லைக்குள்ளே (காணும் பல நாடுகளுக் குள்); கோட்டுயர்...இயல்பதனை - மலைகளிற் பெரிய இமயமலையினது உயர்ந்த சிகரத் தின் உச்சியிலே, வளர்கின்ற புலிக்கொடியை நாட்டிய சோழர்களால் அரசாளப்பெற்ற காவிரி நாட்டினது சிறப்பு இயல்புகளை; யான் நவிலல் உற்றனன் - நான் சொல்லத் தொடங்குகின்றேன். இது ஆசிரியர் கூற்று.

(வி - ரை) **பாட்டு இயற்றமிழ் உரை பயின்ற எல்லை** - இங்குப் பாட்டு என்பது மேலே - அலகில்சீர் நம்பி ஆரூரர் பாடிய - என்று குறித்த பாட்டு - திருத்தொண்டத் தொகை.

பாட்டு இயற்றமிழ் - பாட்டாகிய இயற்றமிழ் என்க. இயற்றமிழாகிய பாட்டு எனினுமாம். **உரைபயின்ற எல்லை** - அதிற் குறிக்கப்பெற்ற நாடுகளுக்குப் பொருளாய் நின்ற பல பிரதேசங்களும் அடங்கிய. எல்லை - அளவு. இது மிகப் பரந்ததாம். எல்லையுள்—இவற்றுளே—என்று அளவுபடுத்திக் கொண்டு, சோழர்கள் இமயத்திற் புலிக்கொடி நாட்டியதொரு உள் எல்லை கண்டு, அதற்குள்ளும் நின்ற, சோழர் அரசுக்குட்பட்ட பல நாடுகளுள்ளே, காவிரி நாட்டின் இயல்பே இங்குச் சொல்லப் புகுந்தது என்க. இதற்குக் காரணம் மேற்பாட்டிற் சொன்னார். இப்பாட்டிலே நாட்டின் பகுதியையும் அளவுகளையும் குறிப்பிட்டவாறும்.

இவ்வாறன்றி இயற்றமிழ்ப் பாட்டும் உரையும் பயின்ற எல்லை எனக் கொண்டு தமிழ் பயிலும் நாடு என்பதுமாம். பாட்டும் உரையும் என்பது, செய்யுள் வழக்கு - உலக வழக்கு - என்ற இரண்டு வகையிலும் தமிழ் பயிலும் நாடு. வடவேங்கடம் தமிழுக்கு வட எல்லையாக இலக்கணம் கூறுதலின் அதுவரையும் தமிழ்நூலும் செய்யுளும் பயிலும் நாடு. இமயத்தில் உச்சியில் சோழர் புலிக்கொடி நாட்டி வடநாட்டையும் ஆண்டனராதலின் அக்காலம் வேங்கடத்தின் வடக்கே தமிழ் உரைமட்டும் பயின்ற நாடாகும். எனவே, இந்த எல்லைக்குள்ளே வேங்கடத்துக்குத் தெற்கே குமரியும் அதற்கு மேலும் என்க. தலைமை பற்றி இயற்றமிழ் என்றமையால் அதன் இனமாகிய இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்ற இவைகளையும் கொள்க. பாடு - மேம்பாடு—பெருமை—என்று பொருள் உரைத்தலும் ஒன்று. இயற்றமிழின் மேன்மையும் புகழும் பயின்ற (பரந்த) எல்லை என்க.

கோட்டு உயர் பனிவரைக் குன்றின் உச்சி - மலைகளில் உயர்ந்த இமயத்தில் உள்ள பல குன்றங்களிலும் உயர்ந்த ஒன்றின் சிகரத்திலே.

புலி - அவ்வுருவம் தீட்டிய கொடி. புலி பொறித்த கொடிக்கு ஆகுபெயர்.

சூட்டிய வளர்புலிச் சோழர் - புலி சூட்டிய வளர்சோழர் என மாற்றியுரைக்க. ஆசிரியர் காலத்திற் சோழர் அரசு செய்தமையின் **வளர்சோழர்** என நிகழ்காலத்தாற் கூறியதும் வாழ்த்தியதும் ஆம். வளர்கின்ற புலிக் கொடியையுடைய சோழர் என்று கொண்டு, கொடியை வாழ்த்தியதாக உரைத்தலுமாம். "சேவேந்து வெல்கொடியான்" முதலிய திருவாக்குக்களின்படி அரசனை வாழ்த்துவோர் அவனது கொடியை வாழ்த்துவது மரபாம். இமயம்வரை இராசராச சோழர், கங்கை கொண்ட சோழர் முதலாயினோர் தங்கள் ஆணை செலுத்தி அந்த மலைச் சிகரத்திற் புலிபொறித்த வரலாறு மேலே எறிபத்த நாயனார் புராணத்திலும் கூறிப்,

> "புண்டரிகம் பொன்வரைமே லேற்றிப் புவியளிக்கும்
> தண்டரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்" (1)

என்று நிகழ்காலத்துக் குறித்தமை காண்க. இதன் விரிவு திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்திலே,

> '.........கரிகாற் பெருவளத்தோன்
> வன்றிறற்புலி இமயமால் வரைமேல் வைக்க ஏகுவோன்..." (85)

என்ற திருப்பாட்டின்கீழ் உரைக்கப்பெறும்.*

சோழர் காவிரிநாடு - சோழர்களது காவிரி பாயும் நாடு. காவிரிநாடு சோழநாட்டுக்குப் பெயராய் வழங்குவது. சோழர்களுக்கு உரியனவாய்ப் பல நாடுகள் இருப்பவும், அவற்றுள் ஒன்றாகிய காவிரி பாயும் நாட்டையே எடுத்துக்கொண்டு இங்கு நாம் நாட்

*எனது "சேக்கிழார்" என்னும் நூலில் 108 - 109 - 110. பக்கங்களைப் பார்க்க.

டுச் சிறப்பிலே கூறுவாம் என்பார், "சோழர் நாடு" என்னுது "சோழர் காவிரி நாட்டு" என்றனர். நீர்நாடு—புனல்நாடு—காவிரிநாடு—என்னும் பெயர்களைச் சோழநாட்டைக் குறிக்கும் பெயர்களாய்ப் பின்னர்ப் பல இடங்களிலும் ஆசிரியர் வழங்குதல் காண்க.

அன்றியும் காவிரி தோன்றுவதும் வருவதும் வேறு பற்பல நாடுகளாயிருப்பவும், அது பாய்ந்து சிறப்பாய் வளப்படுத்துவது சோழ நாடேயாம்; ஆதலின் **சோழர் காவிரி நாடு** எனக் குறித்தார் என்றுமாம். காவிரி ஏனைய நாடுகளை வளப்படுத்துதல் பிற்காலத் துச் சிறுபான்மை இயல்பாம். **நாட்டு இயல்பு** - நாட்டின் சிறப்பு இயல்பு. க

52. ஆதிமா தவமுனி யகத்தி யன்றரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் றாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாம மொக்குமால். 2

(இ - ள்) ஆதி...தரு - முதன்மைபெற்ற பெருந் தவமுனிவராகிய அகத்திய முனிவர் கொணர்ந்த; பூதநீர்...காவிரி-பூதநீரைக் கமண்டலத்திலிருந்து கவிழ்த்ததனுற் பெருகிய காவிரி யாறுனது ; மாதர்...ஒக்குமால் - அழகிய பூமியாகிய பெண்ணினது பொன் மார்பிலே தாழ்ந்து வளைந்து கிடந்ததாகிய தண்ணிய நீர்மைபெற்று விளங்கும் ஒரு முத்துமாலை போன்றுள்ளது.

(வி - ரை) ஆதி-முதன்மை. இது தவத்திற்கும்-முனிவனுக்கும் ஆம். அவரது தவத் தின் பெருமை கடல் குடித்தல்—விந்தத்தை யடக்குதல்—இராமன் முதலியோர்க்கு அருளுதல்—முதலிய பலவற்றுலும் அறியப்படும். அவரது பெருமை இறைவ னது திருமணத்தின்போது எல்லாத் தேவர் முனிவர் முதலியோரும் கூடிய வடக்குத் திசை தாழ, அதைச் சமனுக்க இறைவனது ஆணையினுல் தாம் ஒருவரே தெற்கிற் போந்து பொதியத்திற் றங்கிச் சமன் ஆக்கினுர் என்பதனுல் அறியப்படும். சிவசமானர் என்று கருதப் பெறுபவர். இவற்றின் விரிந்த வரலாறுகள் கந்தபுராணத்திற் காண்க. தமிழுக்குத் தலையாசிரியராய் எண்ணப்பெறுபவரும் இவரே. இவரது ஆசிரமத்தில் விட்டுணு முதலிய எல்லாத்தேவர்களுக்கும் இடம் வகுத்துச், சிவபெருமானுக்கு மட்டும் இடம் வகுக்காமல் அமைத்தார் என்றும், அதனுல் மற்ற எல்லாத் தேவர்களும் இவரை வந்து அடையவும், இவர் சிவனொருவனையே தாம் தேடி அடையும் தன்மையுடையார் என்றும் வால்மீகி இராமாயணம் பேசும் என்பர்.

பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி - சூரபன்மனுதி அசுரர்களுக்குப் பயந்து இந்திரன் சீகாழியில் புகலடைந்து அங்கே நந்தனவனம் வைத்து இறைவனை வழிபட்டு வருங்கால் அது நீரின்றி வாடியதனுல் விநாயகக் கடவுளை வழிபட்டு வேண்டினன். அப் போது அகத்தியர் தம் கமண்டலத்திலே ஆகாய கங்கையைக் கொண்டு தென்றிசை போந்த சமயம் கொங்குநாட்டிலே விநாயகர் அக்கமண்டலத்தைக் கவிழ்க்க அதுவே காவிரியாகப் பரந்து ஓடிச் சோழநாட்டிற் புகுந்து நந்தனவனத்தைச் செழிக்கச் செய் தது என்பது சரிதம்.

இதன் விரிவும் கந்தபுராணம் கூறும். மேலே காவிரிநாடு என்று தொடங்கினு ராதலின் அந் நாட்டைக் கூறுமுன் அதற்குரிய அந்த ஆற்றின் சிறப்பைக் கூறினுர். நாட்டின் சிறப்புக்குக் குடி வளமும், குடிவளத்துக்கு உழவு வளமும், அதற்கு நீர்வள மும், ஒன்றற்கொன்று இன்றியமையாதன ஆதலின் நாட்டுச் சிறப்பின் முகப்பிலே ஆற் றுச் சிறப்புத் தொடங்கிப் பேசினுர் என்க. இது முதல் 9 பாட்டுக்களில் காவிரிச் சிறப் புக் கூறுகின்றுர். இச்சிறப்புக்கள் யாவும் வேறு எந்த யாற்றினுக்கும் பொருந்தச் சொல்ல இயலாத சிறப்பியல்புகளாதலும் காண்க. யாற்றின் சிறப்பைப் பிறபுலவோர் தனிப்படலங்களாக விரித்துக் கூறுதலும், ஆசிரியர் அதனை வேண்டிய அளவிற் சுருக்கி

யாத்து நின்றமையும் உணர்க. பூதநீர் - ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீர் எனவும், உற்பவத்தைச் செய்கின்ற நீர் (பூ - செனித்தல்) எனவும், கமண்டலத்துள்ளே அடங்கி உருவிற் சிறிதாயினும் வலியிற் பெரிதாய்ப் பூதங்கள் போன்ற நீர் எனவும், பொருள் உரைத்துக்கொள்ளத் தக்கது. **கமண்டலம்**-(தவமுனிவர்கள் தாங்கும்), மூக்குடைய ஒரு சிறு பாத்திரம்; கமண்டலம் பொழிந்த பூதநீர்க்காவிரி என மாற்றுக. **பொழிந்த** - பெருகத் தந்த.

மாதர்மண் மடந்தை பொன்மார்பில் தாழ்ந்தது - **மாதர்** - அழகு. **மண்மடந்தை** - பூமியாகிய தேவி. **பொன்மார்பு** - பொன்னிறமுடைய தனபாரம். மண்ணிற்கு நிறம் பொன்மையும், நீருக்கு நிறம் வெண்மையுமாம். "பொன்பார் புனல்வெண்மை..." என்பது சைவ சாத்திரம். பசுவின் உடல் முழுதும் பால் நிறைவுள்ளதாயினும் அதன் முலையிலே தேற்றம் பெற நிறைந்து வெளிப்படுவது போல, மண் மடந்தை முழுதும் பொன்மையுடையவளாயினும், காவிரி ஒழுகியியலும் உயர்ந்த பகுதியே அப்பொன்மை, தேற்றம் பெற வெளிப்பட்டுத் தோன்றும் என்பார், "**மண் மடந்தை பொன்மார்பில்**" என்றார். காவிரியின் தொடக்கப் பிரதேசத்திலிருந்து (Kolar Gold Fields) இப்பொழுதும் பொன் விளைந்து காண்டலும் இங்குக் குறிக்கற்பாலதாம். "மகளிர்க் குறுப்பிற் சிறந்த உறுப்பாகிய முலை" என்று பேராசிரியர் திருக்கோவையாருரையில் விவரித்தமையும் இங்கு வைத்தெண்ணத்தக்கது. நீருக்கு நிறம் வெண்மை யாதலின் 'நித்திலத் தாமம்' என்றார்.

ஓதநீர் நித்திலம் - சலத்திற் பிறந்த ஒளிநீர்மையுடைய முத்து. கரும்பு - யானை மத்தகம் முதலிய பல இடங்களிலும் முத்துப் பிறக்கும். இங்கு நீரைக் குறித்ததால் அதற்கேற்பச் சலசமுத்தினைக் குறித்தார். உலகினை ஊட்டி வளர்க்கும் தன்மையாலும், எல்லாப் பொருள்களையும் தன்னிடத்திலே தங்கவைத்துத் தோற்றுவித்தலாலும், நிலத்தை மடந்தை என்றார். (பூமி - பூ - பகுதி - செனிப்பிப்பது - எனப் பொருளாதலும் காண்க) இதனை வரும் பாட்டிற் காண்க.

தாழ்ந்த-விரும்பி யணிந்த. **தாழ்தல்**-விரும்புதல். "தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே" என்ற தேவாரமும் காண்க. **தாழ்ந்த** - கீழ் இறங்கி வந்த என்று கொண்டு - மார்பினின்றும் போந்து இறங்கிய - எனக் கூறுதலுமாம். இப்பொருளில் மார்புபோன்ற சைய மலையினின்றும் போந்து கீழே வருகின்ற என்பது கருத்தாகக் கொள்க. இதனால் யாற்றுச் சிறப்பும் நாட்டுச் சிறப்பும் ஒருங்கே கூறத் தொடங்கியவாறு.

53. சையமால் வரைபயில் தலைமை சான்றது ;
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது ;
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது. ௩

(இ - ள்) சையமால்...சான்றது - (மேலும் காவிரியாறு) சையமாகிய பெரியமலையினின்றும் வரும் பெருமையிற் சிறந்தது ; செய்ய...போன்றது - செம்மை செய்யும் பூமகளை வளர்க்கும் செவிலித்தாய் போன்றுள்ளது ; வையகம்...நீரது - உலகில் உள்ள எல்லா வகை உயிர்களையும் வளரச் செய்து தினமும் அவைகள் உய்யும்படிச் சுரந்தும் அளித்தும் ஊட்டுகின்ற நீருடையது.

(வி - ரை) **சையமால்வரை** - பரத கண்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே காவிரிக்கு உற்பத்தித் தானமாய் விளங்கும் மலைத்தொடர் - சையமலை என்பர். இது குடகு நாட்டில் உள்ளது.

செய்ய பூமகள் - மேலே "மண்மடந்தை" என்றதற் கேற்பப் **பூமகள்** என்றார். **செவிலி**-மகள் என்றாராதலின், மகளை வளர்க்கத் தாயர் வேண்டுதலின், ஐவகைத்தாயர்களிலே வளர்க்குந் தன்மையுடைமையாற், காவிரியைச் **செவிலித்தாய்** என்றார்,

நாடோறும் - பெருகிய காலத்து நீர்ப் பெருக்கினாலும், வறந்த காலத்து நீர் ஊற்றினாலும், ஊட்டுதலின் எந்நாளும் என்க. இவ்விரண்டும் சேர்த்துச் "சுரந்தும் அளித்தும் ஊட்டும்" என்றார். "ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்" என்றார் பிறரும்.

நீர்-நீர்மை. சுரந்தும் அளித்தும் ஊட்டி வளர்க்கும் நீர்மை உடையது என்க. **நீரது**-நீரையுடையது என்றுமாம். என்னை ? காவிரியின் நீர் முழுதும் உலகினை ஊட்டி உய்விப்பதற்கே யன்றி மற்ற ஆறுகள் போல வறிதே கடலிற் போதலில்லை ஆதலின். பின்னரும் "கடல் வயிறு நிறையாத காவிரி" (திருமூலர் புரா - 8) என்றனர்.

வையகம் பல் உயிர் வளர்த்து உய்யவே - வையகத்தையும், அதனிலே வாழ்ந்து அதன் போகங்களை நுகரும் உயிர் உடம்புகளையும் வளர்த்தும், உயிர்களை உய்விக்கச் செய்தும் என்றபடி. வையகம் வளர்த்து உயிர் உய்யவே என்க. உயிர்களுக்காக இறைவன் தந்த உடம்பும், கரணங்களும், உலகங்களும், அவற்றின் போகங்களும், வளரும்படிச் செய்தும், அவற்றை உயிர்கள் அனுபவிக்குமாறு செய்தும், சிவத்திலே ஈடுபட்டு உய்யும்படிக் கூட்டுவதற்குத் துணை செய்வது என்பது கருத்து. உயிர்கள் சிவப் பணிவிடையிலே முயல்வதற்கு உரிய பூவும் நீரும் ஆகிய சாதனங்களைத் தருதலேயன்றித், தானும் பூசை செய்து வழிபட்டு ஆன்மாக்களையும் வழிப்படுத்தும் என்பது வரும் 7-வது பாட்டிற் காண்க. இவ்வுதவி என்றும் இன்றியமையாதவென **நாடோறும்** என்றார்.

உய்யவே - இவ்வுலகில் இறந்துபடாமலிருக்கும்படி. "பசும்புற்றலை காண்பரிது" என்றார் நாயனார் - இது எல்லா ஆறுகளுக்கும் பொது இயல்பு. மேலும் அழியாத வாழ்வடைந்து உய்தி பெறும்படி என்பதுமாம். இது காவிரிக்குச் சிறப்பியல்பாம்.

உய்யவே சுரந்து அளித்து ஊட்டு நீரது - சுரத்தலால் பிரமனையும், அளித்தலால் கங்கையையும், ஊட்டுதலால் உமாதேவியையும், உய்யத்துணை செய்தலால் சிவனடியார்களையும் ஒப்பாகுவது காவிரி எனப் பின்னர் இம்முறையிலே 4, 5, 6, 7 திருப்பாட்டுக்களில் விரித்துக் கூறியருளினார். காவிரி இவ்வுலகிற் போந்தது இந்திரன் சிவபூசைக்காகச் சீகாழியில் வைத்த நந்தனவனத்தைக் காப்பாற்றுதற் பொருட்டே என்று மேலே கொள்ளப்பட்டது. காக உருவம் கொண்ட விநாயகப் பெருமான் அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்க்க, அதனின்று பெருகி விரிந்த காரணத்தால் **காவிரி** என்று காரணப் பெயர்பெற்ற தென்பர். கவேர முனிவர் ஆச்சிரமத்தின் வழிவந்தமையால் அவர்பெயரால் காவேரி என்று பெயராயிற்று என்பதும் ஒரு வரலாறு. இது உலகில் வந்தது மலர் வனத்தை வளர்க்கும் காரணம் பற்றியாதலின் அச்சிறப்பு நோக்கி **"வளர்த்து"** எனத் தொடங்கிக் காட்டினார்.

இப்பாட்டிற்குக் 'காவிரி' என்ற எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவித்து உரைக்க. காவிரி—சான்றது—போன்றது—நீரது என்று தனித்தனி முடிக்க. 3

54. மாலினுந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினாற் பல்லுயிர் தருதன் மாண்பினாற்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையாற்
போலுநான் முகனையும் பொன்னி மாநதி.

இது காவிரிக்கும் பிரமனுக்கும் சிலேடைவகையால் ஒப்புமை கூறுவது

(இ - ள்) மாலின் உந்தி...சால்பினால்-(1) (காவிரி) திருமாலின் உந்திச் சுழியாகிய தாமரைபோன்று அலைகள் தன்மேற் சுழித்துவரும் சிறப்பினால்; (2) (பிரமன்) திருமாலின் சுழித்த உந்திக் கமலத்தினின்று பிறத்தலாகிய விசேடத்தால்; பல்லுயிர் தருதல் மாண்பினால் - (1) (காவிரி) பல உயிர்களையும் சாவாது நீர் தந்து காக்கும் மாட்சியினால்; (2) (பிரமன்) பல உயிர்களையும் படைக்கும் மாண்பினால்; கோலம்...கொள்கையால் - (1) (காவிரி) (அகத்திய முனிவரது) அருட்கோலமுடைய கமண்டத்தினாலே தாங்கி வரப்பெற்ற வரலாற்றினால்; (2) (பிரமன்) நற்குண்டிகையைத் தாங்கி நிற்கும் கோலமுடை

யன் எனப் புராணங்கள் கூறும் கொள்கையினுல்; (என்ற இம்மூன்று காரணங்களாலும்) போலும்...நதி - காவிரிநதி நான்முகனுகிய பிரமனையும் போன்றுள்ளது.

(வி - ரை) **பொன்னி மாநதி** - சால்பினுல்—மாண்பினுல்—கொள்கையால்—நான்முகனையும் போலும் என்க.

பிரமதேவர் ஒரு கையில் செப வடமும் ஒருகையில் குண்டிகையும் தாங்கி நிற்பர் என்பது வரலாறு.

மாலின் உந்திச்சுழி மலர்தன்மேல் வருசால்பு - (காவிரிக்கு) மாலின் - பெருமையுடன் (கம்பீரமாக); உந்தி - உந்திக்கொண்டு—(அலைத்துச் சுமந்துகொண்டு); சுழி - சுழியும்; மலர் - மலர்களும்; தன்மேல் வரும் சார்பினுல் - தன்பேரில் வருகின்ற சிறப்பினுல் என்று பொருள் கொள்வதுமாம். இது சிதம்பரம் நடராச ஓதுவார் மூர்த்திகள் தாம் இராமநாதச் செட்டியாரிடம் பெரியபுராணப் பாடம் கேட்டபோது எழுதிவைத்த குறிப்புக்களிற் கண்டது.

நான்முகனையும் போலும் - பிரமனையும் என்ற உம்மை எதிரது தழுவிய எச்ச உம்மை. வரும் பாட்டிற் சொல்லப் பெறுவதுபோலக் கங்கையையே யல்லாமற் பிரமனையும் போலும் என்க. பிரமனுக்குப் பிறப்பு—குணம்—செயல்களால் ஒற்றுமை காணப்பட்டது.

இப்பாட்டும் மேல்வரும் பாட்டும் சொற் சிலேடையால் வந்த ஒப்புமை.

(1) உந்திச் சுழி மலரானது தன்மேல் வரும் எனவும், மலரின்மேல் வரும் எனவும், (2) உயிர் தருதல் நீரினுற் காத்தல் எனவும், உயிர்களுக்குப் புவனமும் தனு கரண முதலியனவும் படைத்தல் (தருதல்) எனவும் (3) குண்டிகையினுல் தாங்கப்பெறுதல் எனவும், குண்டிகையைத் தாங்கும் எனவும், காவிரிக்கும் பிரமனுக்கும் முறையே சிலேடை கண்டுகொள்க.

பல்லுயிர் தருதல் - காவிரி பல்லுயிர் உய்யச் சுரந்தளித்தூட்டும் என மேற்பாட்டிற் கூறியது இங்கு உணர்தற்பாலது.

கோல நற்குண்டிகை தாங்கும் கொள்கை - "அகத்தியன்தரும் பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி" என முன்னர் விரித்தமையும் இங்கு வைத்துக் காண்க. குண்டிகைக்குக் கோலமாவது பெரிய ஆற்றைச் சிறிய தனது உருவத்துக்குள்ளே அடக்கி நின்றதும் அகத்தியமா முனிவரது கையாற் ருங்கப்பெற்றதுமாம். பிரமன் நற்குண்டிகை தாங்கும் கோலமுடைமை - தாங்கும் கோலம் என்ற கொள்கை.

உந்திச் சுழிமேல் வருதல் - விட்டுணுவினின்றும் பிரமன் பிறத்தல் சிருட்டிக் கிரமமாகிய **சால்பு** - தகுதி. அலையும் நுரையும் சுழித்துவருதல் நீர்ப்பெருக்குக்குச் **சால்பு**. அலைகள் வலமாகச் சுழித்தெழுதல் உந்திச்சுழி போன்றிருக்கும் என்பது. திருவலஞ்சுழி என்ற தலப்பெயரும் அதன் காரணமும் காண்க.

உயிர் தருதல் - இரண்டிடத்தும் **மாண்பு** ஆகும். **குண்டிகை தாங்கல்** ஈரிடத்தும் புராண வரலாருகியதொரு **கொள்கையாம்** ஆதலின் **சால்பு — மாண்பு — கொள்கை** என்ற சொற்களாற் குறித்தது காண்க. 4

55. திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியிற்
பொங்குவெண் டலைநுரை பொருது போதலால்
எங்களு யகன்முடி மிசைநின் றேய்ந்திழி
கங்கையாம் பொன்னியாங் கன்னி நீத்தமே. ரு

இது காவிரிக்கும் கங்கைக்கும் சிலேடை வகையால் ஒப்புமை கூறுவது.

(இ - ள்) திங்கள்...உச்சியில் (போதலால்) - (1) (காவிரி) நிலவு தவழும்படி யுயர்ந்த சையமலையின் மீதிருந்து போதருதலால்—(வருதலால்); (2) (கங்கை) நில

வைச் சிரத்திலே சூடிய சிகார வாச்சியனுயுள்ள சிவபெருமானது சடைமுடியிலிருந்து இறங்கி உலகிற் போதருதலால்; பொங்கு...போதலால் - (1) (காவிரி) நீர் வெள்ளம் பொங்கி வருதலால் உளதாகிய வெள்ளிய தலைபோன்று உருண்ட வடிவுடைய நுரைகளை மோதி அடித்துக் கொண்டு வருதலால்; (2) (கங்கை) வெண்டலைகளைப் பொங்கு நுரைபோல மோதி வருதலால்; எங்கள்...கங்கையாம் - எங்கள் தலைவனுகிய சிவபெருமானது திருமுடியிலிருந்து வருகின்ற கங்கையே யாகும்; பொன்னியாம் கன்னி தீர்த்தம் - காவிரியாகிய கன்னியாற்றின் பெருக்கு. ஏ—ஆச்சரியக் குறிப்புப் பெறவரும் அசை. பொன்னியாம் கன்னி தீர்த்தம் கங்கையாம் என்று கூட்டுக.

(வி - ரை) போதலால் என்பதனை உச்சியிற் போதலால் எனவும், பொருது போதலால் எனவும் இரண்டிடத்தும் தனித்தனிக்கூட்டுக. போதல் - போதருதல் - புகுதல் - வருதல் - என்க. வெண்டலை - வெள்+தலை - வெளியிடங்களில் என்றும் கூறுவர்.

முடிச்சிகாரத்துச்சியில் - சிகரம் - சிகாரப் பொருளாயுள்ள இறைவனது உருவத் திருமேனியை (ஆகுபெயராய்) உணர்த்திற்று. சடைமுடியின் நுனியின் மேலிடத்திலிருந்து எனப் பொருள் உரைப்பதும் ஒன்று. அவனது முடி - "சடைமுடி" (திருவிசைப்பா) என்பர். "சுடர்ச்சடை சுற்றி முடித்து" என்றபடி சடைக்கற்றையைச் சுற்றிக் கிரீடமாக அமைத்துள்ளாராதலின் அதன் மேற்பாகத்தின் நுனியில் ஒரு சடையிலிருந்து பனித்துளி போலக் கங்கை இறங்கி உலகிற் பரக்க வருவதாம் என்ற புராண வரலாறு காண்க. காவிரிக்குப் பொருந்த உரைக்கும்போது முடி - சைய மலையின் சிகரங்களில் ஒன்று என்க. முடி - மலைச் சிகரங்களுக்கு முடி என்று இப்போதும் பெயர் வழங்குகின்றது.

கங்கையாம் பொன்னியாம் தென்றிசைக்கு வரும்போது கங்கையிலே தமது கமண்டலத்தில் தீர்த்தம் முகந்து வந்தனர் அகத்தியர்-என்ற கந்தபுராண வரலாறு இவ்வொற்றுமைக்குச் சிறப்புத் தருவது காண்க.

இச்சிறப்புப்பற்றியே கங்கையே காவிரி - காவிரியே கங்கை - எனக் கொள்ளற் பாலது - என்பார் கங்கையாம் பொன்னியாம் எனச் சொல்லினும் ஒற்றுமை நயம் பொருந்தக் கூறினர். "கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின் - ..." எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் போற்றியதும் அறிக. "காவிரி நாடன கழனி நாடு" - எனக் கம்பர் இதனை ஒட்டிக் கூறியதும் காண்க. இப்பாட்டிற் சொல்லும் பொருளும் - என இருவகை ஒப்புமையும் குறித்தபடியாம்.

மிசைநின் றேயிழி—என்பதும் பாடம். 5

56. வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பே ரறங்களும் வளர்க்கு மீகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையி னொழுக்கம் போன்றது. சு

இது காவிரிக்கும் உமை அம்மையாரின் கருணைக்கும் பண்பு ஒப்புமை கூறுவது

(இ - ள்) வண்ணம் நீள்...மேன்மையால் - (1) (காவிரி) அழகிய பெருந்தொடர்ச்சியில் ஒன்றுகிய சையமலையிலிருந்து வந்த மேன்மையினுல்; (2) (நாயகி கருணை ஒழுக்கம்) வண்ணத்தால் எல்லா மலைகளிலும் நீண்ட இமயமலைக்கு மகளாய் உலகிலே வந்த மேம்பாட்டினுல்; எண்ணில்...ஈகையால் - (1) காவிரி அளவற்ற பெரிய அறங்கள் எல்லாவற்றையும் வளரத் துணை செய்து நிற்கும் ஈகையினுலே; (2) (நாயகி கருணை ஒழுக்கம்) எல்லா அறமும் யான் செய்யவேண்டும் என வரங் கேட்டு உயிர்களுக்கு அறமாக்கும் வித்தாக இருநாழி நெற்பெற்று அறம் வளர்த்த பெருங் கொடையினுல்; அண்ணல்... போன்றது-(காவிரியாறனது) இறைவனது ஒரு பாகத்தைத் தம்மதாக ஆக்கிக்கொண்டு

உலகத்தை ஆட்கொண்ட உமாதேவியாருடைய திருவுள்ளத்திலே எல்லா உயிர்களிடத்தும் பரந்து நெகிழும் தன்மையதாம் கருணையுடைய இனிய ஒழுக்கம் போன்றதாம்.

(வி - ரை) காவிரி - எழுவாய் - வருவித்துரைக்க. இப்பாட்டுப் பண்புபற்றி வந்த பொருள் ஒற்றுமையாம். ஆளுடை நாயகியின் கருணை இடையறாது எல்லா உயிர்களிடத்தும் ஒழுகுவது போலக் காவிரியும் ஒழுகுவது என்பது.

உள் நெகிழ் கருணையின் ஒழுக்கம் - உமையம்மையார் இமயமலை யரசன் மகளாய்ப் போந்தமையும், இறைவன்பால் அறம் வளர்க்கும் வித்தாக இருநாழி நெல் பெற்று அறம் வளர்த்தமையும், அவரது பெருங் கருணையின் செய்கையேயாம் என்பது. இக் கருணையானது உயிர்களை வாழ்விக்கும் இச்சையாலே அம்மையாரது திருவுள்ளத்தினின்றும் நெகிழ்ந்து இடையறாது பெருக்கெடுப்பது என்பார், "உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம்" என்றார். இதன் விரிவு திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துட் காண்க. ஒழுக்கம் - இடையறாது ஒழுகி வருவது.

வண்ணம் நீள்வரை - பனிமலை - நீள்வண்ண வரை என்க. உருவினாலும் திருவினாலும் எப்போதும் நீள்வது என்பதாம்.

அண்ணல் பாகத்தை ஆளுடைய - மேன்மையும் ஈகையும் அருளினைப் பற்றியது. அருள் இறைவியின் இயல். எனவே பெருமானது அருள் உயிர்களிடம் செல்வதற்குத் தாமே இறைவியாயிருத்தலின் அருட் பாகத்தை ஆளுடை நாயகி; ஆள்கின்ற முதல்வி: என்றுரைத்தலுமாம். 6

வேறு

57\. வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை யிறைஞ்சலி னீர்ம்பொன்னி
உம்பர் நாயகற் கன்பரு மொக்குமால். எ

இது காவிரிக்கும் அன்பர்களுக்கும் செயல் வகையால் ஒப்புமை கூறுவது

(இ - ள்) வம்புலாம்...வழிபட்டு - வாசனையுடைய மலர்களாலும் நீரினாலும் வழிபாடு செய்து; செம்பொன்...இறைஞ்சலின் - செம்பொன் மணல் சிதறி இருகரையிலும் உள்ள எண்ணில்லாத சிவாலயங்களிலே எமது பெருமானைக் கும்பிடுதலினாலே; ஈர்ம் பொன்னி - நீர்வற்றாத காவிரியாறு; உம்பர்...ஒக்குமால் - தேவதேவனாகிய சிவபெருமானுடைய அடியவர்களையும் போன்றுள்ளது.

(வி - ரை) ஆல் - தேற்றப் பொருளில் வந்த அசைமொழி. காவிரி, மலராலும் நீராலும், வழிபட்டுப், பொன் சிதறிச் சிவாலயங்களைச் சூழ்ந்து வணங்கிச் செல்லுதலால், அக்காரியமே செய்யும் அன்பர்களுக்கு ஒற்றுமை பெறுவதாம்.

அன்பரும் - உம்மை-சிறப்பு உம்மை. தனக்கு உவமையில்லாத இறைவனுக்கு அன்பராவார்களும் அவ்வாறே தமக்கு உவமை யில்லாதவர்கள். "பெருமையாற் றம்மை(யே) ஒப்பார்" என்று பின்னர்க் கூறுதல் காண்க. அசேதனப் பௌதிகப் பொருளாயிருந்தும் அவர்களையும் கூடச் செய்கையால் ஒக்கும் என்ற சிறப்புக் காண்க. இதனை இறந்தது தழுவிய எச்சவும்மையாகக் கொண்டு மேலே கூறிய ஒழுக்கம் போல்வதேயன்றி அன்பரையும் போல்வது என்று உரைப்பதுமாம். ஆளுடை நாயகியின் உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கமே அன்பர்களை வழிப்படுத்திச் சிவபெருமானிடத்திற் சேர்ப்பதாதலின், அதனைப் போன்ற காவிரியும் வழிபட்டுக் காட்டி அவரையும் ஒக்கும் என்று, மேற்பாட்டினைச் சார இதனை வைத்தார்.

வம்பு உலாம் மலர்-அன்றலர்ந்தமையால் மணம் வீசிக்கொண்டிருக்கும் புதுமலர்.

மலர் நீர் - மலரும் நீரும் என் உம்மைத் தொகை. "புண்ணியஞ் செய்வார்க்குப்

பூவுண்டு நீருண்டு" என்பது திருமந்திரம். மலர்களை யிட்ட நீர் என்றுமாம். அருக்கிய நீர், திருமஞ்சன நீர்களின் இலக்கணம் இதுவேயாதல் காண்க.

நீரால் வழிபட்டு இறைஞ்சலின் - நீரால் அருக்கிய ஆசமனம் பாத்தியம் கொடுத்தலும் அபிடேகித்தலும் ஆம். **இறைஞ்சல்** - அடி வீழ்ந்து வணங்குதல். **வழிபடுதல்** - இறைவன் காட்டிய வழியிலே, அல்லது அவனைக் கூடும் வழியிலே படுதல் என்க. வழியே செல்லுதல் என்பது காவிரிக்கு மிகப் பொருந்துமாறும் காண்க. காவிரி தனது இருகரையும் உள்ள அனேக சிவாலயங்களிலும் பூவுடன் சேர்ந்த நீரை எங்கும் நிரம்ப வீசிப் பொன்னையும் தூவி ஆலயங்களைச் சூழ்ந்து செல்வதாகும். ஆதலின் இதனை அன்பர்களைப்போலக் காண்கின்றார் ஆசிரியர். காவிரியின் வடகரையிலும் தென்கரையிலுமே பாடல்பெற்ற தலங்கள் பெரும்பாலும் இருப்பதும் குறிப்பாம்.

தனது முன்னை நிலையாகிய கங்கையாயிருந்தபோது பெருது அகத்தியமா முனிவரது கமண்டலத்திற்றங்கியதனாலே தான்பெற்ற பயனாகிய சிவபுண்ணியத்தின் தொடர்பினாலே பின்னரும் சிவபூசைசெய்து பெரும் பேறுபெற்றது - என்ற குறிப்பும் போதருதல் காண்க. "பொன்பரப்பி மணிவரன்றிப் புனல்பரக்குங் காவேரி" எனப் பின்னர்ச் சேரமான் பெருமாணாயனார் புராணத்துட் கூறியதும் இங்குக் காண்க.

"நுகராரமொ டேலம்மணி செம்பொன் னுரையுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண விடுதண்கரை..."

—திருஞான - தேவாரம் - நட்டபாடை - திருநெய்த்தானம் - 5

"...பனிவரைமீப் பண்ட மெல்லாம் பறித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரந்துவரு மிருகரையுந் தடவா வோடி நின்மலனை வலங்கொண்டு நீள நோக்கித்
திரிந்துலவு..." —திருத்தாண்டகம் - திருமுண்டீச்சரம் - 8

என்ற தேவாரங்களின் கருத்தும் நோக்குக.

செம்பொன் வார்கரை - மண்மடந்தை பொன் மார்பிற் றாழ்வதால் இருமருங்கும் செம்பொன் வார்கரையாயிற்று. பொன் துகளை இருகரையும் வாரி வீசுதலாலும் செம்பொன் வார்கரை - என்பதும் ஆம். பொன்னுடைமையாலே இதற்குப் பொன்னி என்று பெயராயிற்று. இது பற்றி முன் உரைத்தவையும் காண்க.

ஈர்ம்பொன்னி - நீர் மேலும் உள்ளும் நிறைவதனால் ஈரம்மாறாத - என்றபடி.

வம்பலர் மலர்—என்பதும் பாடம். 7

58. வாச நீர்குடை மங்கையர் கொங்கையிற்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதழித் தோடுநீர்
தேசு டைத்தெளி னுந்தெளி வில்லதே. அ

(இ - ள்) வாசநீர்...ஓடுநீர் - (காவிரியானது) வாசனையுடைய அந்நீரிற் குடைந்து ஆடும் பெண்களின் தனபாரங்களிற் பூசிய குங்குமச் சந்தனப் பூச்சுக்களை மேலே வீசும் தனது அலைகளினால் அழித்து ஓடுகின்றபடியால், அந்த நீர்; தேசு...இல்லதே - (மேலே சொல்லிய பல காரணங்களினாலும்) தூய்மையும் ஒளியும் இயல்பின் உள்ள தென்றாலும் தெளிவில்லதாம்.

(வி - ரை) தேசு (தூய்மை - ஒளி) உடைத்தெனினும், குங்குமமும் சாந்தமும் திரைமீது அழித்து ஓடுதலால் - தெளிவில்லது என்க.

வாசநீர் - மேற்பாட்டிற் கூறியாங்கு "வம்புலா மலர் நீர்."

வீசு தெண்டிரை மீது அழித்து ஓடும் - மீது வீசு தெண்டிரையினால் அழித்து என்க. பெண்கள் குளிக்கும்போது தமது மெய்ப்பூச்சுக்களை அழித்துக் கழுவா முன்னரே அவர்களுக்கு அவ்வுதவி செய்வது என்றபடி. ஆற்றுப்பெருக்கின் அலையும், அவர்

கள் குடைந்தாடும் அசைவும் சேர்ந்து பூச்சாகிய சந்தனத்தைத் தானே அழித்தோட வல்லதாயிற்று காவிரி என்க. படிந்தார்க்குத் திருக்குற்றாலத்து அருவி உதவுதல் போல. மேலே கண்டபடி அவர்களுக்கு அவ்வுதவி செய்த தேசு - (புகழ்) பெற்றதெனினும் அப்பூச்சுக்களைக் கலந்ததாலே தெளிவில்லதாயிற்று.

அழித்து வீசு தேண்டிரை மீது ஓடும் - என்று மாற்றிக் கூட்டி யுரைப்பதும் ஆம். அழித்து அவற்றைத் தனக்குள் சேர்த்து அலையுடைய கடலை நோக்கி ஓடுகின்ற என்க. தனது நீர்முழுதும் உயிர்களுக்குத் தந்து பயன் செய் காவிரி - (கடல் வயிறு நிறையாத) - கடலிற் சென்று சேராததென்று முன்னர்க் கண்டாம்; ஆதலின் கடலினை நோக்கிப்போகும் காலம் பெருக்குக் காலமேயாம். எனவே, இப்பாட்டுக் காவிரிப் புது நீரை உணர்த்திற்று. என்று - இப்பொருளில் உரை செய்க.

தெளிவில்லதே - எனினும், **தேசுடைத்து** - என்றும் ஆம்.

மீதிழித்தோடு—என்பதும் பாடம். 8

59. மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால். கூ

(இ - ள்) மா...ஆர்ப்ப - வண்டுகள் எழுந்து ஆரவாரிக்க; வரை...பொங்கிட - மலையினின்று அடித்துக்கொண்டுவரும் புதுப்பூக்களின் தேன் பொங்க; வாவியிற்...தர - அங்கங்கே வாவிகள் நிறைந்த நாட்டுக்கு வளம் தருதற்பொருட்டு; காவிரி...ஓங்குமால் - காவிரிப் பெருக்கினது நீர் கால்வாய்களிற் பரந்து எங்கும் ஓடும்.

(வி - ரை) மா இரைத்து எழுந்து ஆர்ப்ப - வண்டுகள் இரைத்து எழுந்து ஆரவாரிக்க; மிகுந்த ஆரவாரத்துடன் எழுந்து பாடவும். ஆர்ப்ப என்பதற்கு - ஆர்த்து - மிக ஒலித்து - என உரைத்தலுமாம். இப்பொருளில் **விரிந்த** என்ற **வினை** கொண்டு ஆர்த்து விரித்த பூ - என்க.

பூ விரித்த புதுமதுப் பொங்கிட - பூ விரித்ததனால் வெளிப்பட்ட தேன் பொங்க அதனாற் பெருகிய புனல் என்க. ஆர்ப்ப—பொங்கிட—காவிரிப் புனல்—நாடு வாவியிற் பொலி வளந்தரக்—கால்களிற் பரந்து ஓடும் எனக் கூட்டுக. நாட்டின் வளத்திற்கு வாவியும்—வாவிகளுக்குக் கால்களும்—கால்களுக்குக் காவிரிப் புனலும்—அதற்கு மதுவும்—அதற்குப் பூவிரிதலும்—அதற்கு ஆர்த்தலும்—முறை முறையே ஒன்றற்கொன்று முன் நிகழ்ச்சிகளாகிய காரணங்களாக அணி பெற அமைத்தமை காண்க.

வரைதருபூ - மலைப்பூக்கள் மிகுதியும் தேன் உடையன. ஆதலின் அதனைக் கூறினார். காவிரியாறு மலையினின்றும் வருதலின் அத்தேனைக் கொண்டுவரும் - காவிரி நீரின் உருசி - பெருக்கு - குணங்களுக்கு ஒரு வகையாற் காரணங் கற்பித்தவாறு. காவிரியையும் இதுபோன்ற நன்னதிகளையும் சாக்கடை வடிகால்களாக ஆக்கிக் கண்டு மகிழும் இந்நாள் மாக்கள் இதனை எண்ணித் திருந்த ஒழுகுவார்களாயின் நன்மை பெருகும்.

வாவியிற் பொலி நாடு வளந்தர - என்பதை நாடு வாவியிற் பொலி வளந்தர என மாற்றி யுரைக்க. சோழ நாட்டிலே வாவிகள் மிக்கு இருப்பதும் அதனால் நாடு பல வளங்களைப் பெறுதலும் இந்நாளிலும் கண்கூடாகக் காணலாம். ஆனால் இந்நாளில் அவற்றைப் பலவகையிலும் சுகக்கேடு விளைக்கக்கூடிய வழிகளில் உபயோகித்து வருதல் வருந்தத்தக்கது.

காவிரி நீர் கால்களிற் பரந்து வாவிகளை நிரப்பி நாட்டுக்கு வளம் செய்யும். அங்கிருந்து வாவிகளின் மதகுகளின் வழியே வயல்களிற் பாய்ந்து பயிர்க்கூழ் விளைவித்தல் அடுத்த பாட்டிற் காண்க.

மலையிற் றோன்றிய காவிரியாறு சோழ நாட்டிலே செய்யப்படும் பசு புண்ணியங்களாகிய உலக அறங்கள் முதல் சிவபுண்ணியங்கள் வரை எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கும் வழியினை உணர்த்துகின்றார்.

கால் பரந்து - வாய்க்கால்களிற் பரந்து - தனது கால்களினாற் பரந்து - எனச் சிறிய சொற்சிலேடையாக உரைத்திருத்தலும் காண்க.

பூவிரைத்த—என்பதும் பாடம். 9

60. ஒண்டு றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீர்வய லுட்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்தகை யோசைபோ
யண்டர் வானத்தி னப்புறஞ் சாருமால். ௧௦

(இ - ள்) ஒண்...போய் - ஒள்ளிய துறையிலே பெரிய மதகுகளின் வழியே சென்று ; மண்டு...புக - செறிந்த புது வெள்ளம் வயலினுள் புகுதலும் ; வந்து...சாருமால் - அதனை எதிர் கொண்டு அழைப்பதுபோல வந்து மள்ளர்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரித்துக் கைகொட்டி அழைத்த ஓசையானது தேவர்களது ஆகாய உலகத்திற்கும் அதற்கப்புறமும் சென்று சேரும் :

(வி - ரை) துறைத்தலை மாமதகு ஊடுபோய் - அவ்வத்துறைகளில் அமைக்கப் பெற்ற பெரிய மதகுகளுக்குட் புகுந்து அவ்வழியே சென்று.

மண்டுநீர் - மலைப்பண்டங்களும் மேற் காட்டிய பிறவும் கலந்து செறிந்து தெளிதலில்லாத புது நீர். இவ்வாறு பலவும் மண்டுதல் அந்நீரின் செழுமைக்குக் காரணமாம் என்பது உழவு சாத்திரம். பயிர்க்கு உணவாம் பொருள்களும், உடலுக்கு இனிதாம் பொன், தேன் முதலிய பொருள்களும் மிக மண்டுதல் குறிப்பு.

வயல் உள்புக - மனிதர் முயற்சியின்றித் தானே இலகுவிற் புக என்றபடி. இதனைக் காவிரி பாய்தல் உள்ள இடங்களிற் சென்று கண்டு களிப்பர் ஏனையோர். சோழநாட்டிற் காவிரியாறு அணை முதலியவற்றின் உதவியின்றி ஆற்றிலிருந்து நேரே பிரிந்து, காலிலும், காலிலிருந்து மதகின் வழி, வயலிலும் புகுகின்றது. **மதகு** - கால்களின் வரும் நீரைப் பல வயல்களுக்கும் அளவுபடுத்திப் பாய்ச்ச அமைக்கும் கட்டட அமைப்பு.

புக - வந்து - மள்ளர் முயற்சியாற் கொண்டுவரப்படாமல் தானே சென்று உபகரிப்பதென்பார்—நீர்புகவும்—அதன் பின்னர் மள்ளர் எதிர் கொண்டுவந்து என்றார். காவிரியினது உபகாரத்தின் சிறப்பும் இயல்பும் கூறினாராகும்.

எதிர்கொண்ட மள்ளர் - மண்டு நீரினது வரவினை எதிர்வந்து வரவேற்புச்செய்து கைகொட்டித் தம் மகிழ்ச்சியைக் காட்டுகின்றனர் மள்ளர்கள் என்பது குறிப்பு. நீரின்றி உழவு அமையாது ஆதலின் புதுநீர் வரவைக் கண்டு கைகொட்டி மகிழ்ந்தனர் மள்ளர். மகிழ்ச்சிக்கு அறிகுறியாக இக்காலத்துக் கைகொட்டும் வழக்கம் இதனது பரம்பரை மரபின் வந்ததுபோலும்.

குரைத்த கை ஓசை - குரைத்த ஓசையும், கை (தட்டிய) ஓசையும், என்று தனித் தனிக் கூட்டி உரைக்க.

அண்டர் வானம் - அண்டர்கள் வாழும் வானம் ; தேவவுலகம். வயலில் நீர் புக்க பின்னரே உழவர் உழுதொழில் செய்யத் தொடங்குவர். ஆதலின் இப்பாட்டுத் தொடங்கி 25-வது பாட்டுவரை நீர்புகுதல் முதற் போகம் பெறுதல் ஈறாக உழவின் பல பகுதிகளும் முறையே கூறப்பெற்றமை காண்க.

வானத்தின் அப்புறம்-வானத்தினும், அதற்கு அப்புறமும், என உம்மை விரித்து உரைக்க.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

என்பது ஆணையாதலின், சிறப்பும் பூசனையும், வானோர் பெறுதற்கு ஏது உண்டாயின,

அவற்றின் முன் அறிவிப்பாக அவர்களுக்கு உணர்த்துவது போலும் என்பார்—**மள்ளர் துரைத்த கைஓசைபோய் அண்டர் வானத்திற் சாரும்** என்றார்.

அப்புறம் என்றது தேவ உலகத்திற்கு அப்பாற்பட்ட இறைவனுலகை. இந்நாட்டிலே இப்புனலைக் கொண்டும், அதன் விளைவைக் கொண்டும், செய்யப்பெறும் சிவ புண்ணிய விளைவு ஆங்குச் சென்று சேர உள்ளதாதலின் **அப்புறம்** என்றார். இறைவனுலகு தேவஉலகிற்கும் எட்டாது அப்பாற்பட்டதாதலின் அ+புறம்—என்ற அகரச் சேய்மைச் சுட்டினாலே கூறினர்.

காவிரியின் நீர், இம்மை—மறுமை—வீடு என்ற மூன்றிற்கும் துணைக்காரணம் என்பது. நீர் வயலினுள்ளே போய்ப்புக - ஓசை வானத்தினப்புறம் போய்ச் சாரும் என்று அணிபெறக், காரண காரியச் சுவை தரக், கூறுதல் காண்க. 10

61. மாதர் நாறு பறிப்பவர் மாட்சியுஞ்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதை யார்செய் யுழுந ரொழுக்கமுங்
காதல் செய்வதோர் காட்சி மலிந்ததே. கக

(இ - ள்) மாதர்...மாட்சியும் - அழகிய நாற்றுக்களைப் பறிப்பவர்களது மாண்பும்; சீத...செய்கையும் - அழகிய நாற்றுக்களை முடியாகச் சேர்த்து முடிந்து நீரிற் சேர்ப்பவர்களது செய்கைச் சிறப்பும்; ஓதையார்...ஒழுக்கமும் - ஓசை மிகும்படி வயலை உழவர் உழுது பண்படுத்தும் ஒழுக்கமும்; காதல்...மலிந்ததே - கண்டார்க்கு ஆசை மேன்மேல் விளைவிக்க வல்லனவாய் ஒவ்வொன்றும் பெருங் காட்சியாக எங்கும் மலிந்தன.

(வி - ரை) மாட்சியும்—செய்கையும்—ஒழுக்கமும்—காண ஆசை உண்டாக்கும் காட்சிகளாய் அந்நாடு எங்கும் மலிந்தன என்பதாம்.

மாதர் - உழத்தியராகிய பெண்கள். அழகிய என்றுமாம். நாறு பறித்தலும் முடி சேர்த்தலும் செய்பவர் பெண்களே யாதலின், ஒருபுறம், மாதர்களினது இச் செயல்களின் சிறப்பும், மற்றொரு புறம் உழுநர்களின் உழவு ஒழுக்கமும் கூறியவாறு.

ஓதையார்...ஒழுக்கமும் - ஓதையார் - முழக்கத்தினையுடைய - வலிந்த நிலத்தைச் சேறாக்கி உழவு செய்தலின் முயற்சியும் சனத்திரளும் மிகுந்து முழக்கம் உண்டாக்குமாதலால் **ஓதையார் ஒழுக்கம்** என்றார். கடினமாகிய நிலம் ஒழுகுதற்கியலாதது; உழவிட்டுச் சேறான பின்னரே நெகிழ்ந்தோடும் தன்மையுடையதாம் என்பது குறிக்க **உழுநர் ஒழுக்கமும்** என்றார். **ஒழுக்கம்** ஒழுகும்படிச் செய்வது என்ற பொருளுமாதல் காண்க. நாறு பறிக்கும்போது வேர்கள் அறுமலும் இளைய அப்பயிரின் உயிர்களுக்குத் தீங்கு நேராமலும் தொழில் செய்ய வேண்டுதலின் **மாட்சியும்** என்றும், நாறுமுடி சேர்த்துக் கட்டி நீரிலே இடுதல் அவ்வாறன்றிப் புத்திகலவாத வெறும் கையினது செய்கையேயாம் - என்பார், **சேர்ப்பவர் செய்கையும்** என்றும் கூறினர்.

முடி சேர்த்தல் - பறித்த நாற்றுகளை நுனி கட்டிச் சிறு சிறு தொகுதிகளாகச் சேர்த்து முடிந்து கட்டுதல்.

சீதநீர்முடி சேர்த்தல் - முடிகளைச் சீதநீர் சேர்த்தல் என்க. முடிகளை நாறு பறித்த பின் நடுவதற்குள் பழுத்து உலராதபடி நீருள்ள இடத்தில் இட்டு வைத்தல்.

செய் உழுநர் ஒழுக்கம் - செய்யாக உழும் ஒழுக்கம். நாற்று நடுதலுக்குத் தகுதியாம் படி நிலத்தைச் சேறாக உழும் செய்கை. **சேறு—இழுதுசெய்**—என வரும் பாட்டினும் கூறுவது காண்க.

காதல் செய்வதோர் காட்சி - கண்டார்க்கு ஆசை ஊட்டுவதாகிய காட்சி. இங்குக் **காதல்** என்பது, நாறுபறித்தல்—முடி சேர்த்தல்—செய்யுழுதல் என்ற செய்கைகளைக் கண்டார் மனத்து நிகழும் இனிய உணர்வு. இதனை விருப்பமுள்ளார் நேரிற் கண்டு

உணர்க. மேலும் ஆணவச் சேற்றிலே முளைக்கும் ஆன்மாக்களை அங்கிருந்து எடுத்து இறைவன் தனது புவனங்களிற் பதித்துப் போகங்களை ஊட்டிப் பக்குவப்படுத்திச் சிவானந்த பரபோகத்தை விளைவிப்பன் என்பது ஓர் உண்மை. குளவி தான் எடுத்த புழுவை எடுத்த இடத்தில் தனது வடிவமாக்காது தான் கொண்டு போய் வைக்குமிடமாகிய தனது கூட்டிலே ஆக்கும் என்பதும் ஓர் உண்மை. இவ்வுண்மைத் தத்துவக் கருத்துக்களை நாறு முளைக்க விட்ட இடத்திலிருந்து பறித்து, இதற்காகப் பண்படுத்திய சேற்று வயல்களில் நட்டுப் போகம் விளையும்படிச் செய்வனவாகிய இங்குக் குறித்த நாறு பறித்தல் முதலிய செய்கைகள் நினைவூட்டுவனவாம். நினைவூட்டவே, ஆன்மாக்களின் பொருட்டு இறைவன் இவைபோன்று செய்யும் நித்தமாகிய அருட் செயல்கள் பலவும் நினைவுக்கு வரும். வரவே, அவனிடத்துக் **காதல்** விளையும். இதனைக் **காதல் செய்வதோர் காட்சி** என்று குறித்தவாறு. இது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற தேவாரத்திற் குறித்த "காதல்" என்க. இது **செய்** என்ற மொழிக்குப் பொருள் கற்பித்தது போலும்.

சீத நீண்முடி—என்பதும் பாடம். 11

62. உழுத சான்மிக வூறித் தெளிந்தசே
றிழுது செய்யினு ளிந்திர தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். கஉ

(இ - ள்) உழுத...செய்யினுள் - சால் உழுதபின் ஊறச் செய்து தெளிந்த சேறு குழம்பாகப் பண்படுத்தப்பட்ட வயலுள்ளே ; இந்திர...தொழுது - தேவேந்திரனைத் தொழுது; நாறு...பரப்பெலாம் - நாறுநடுபவர் கூட்டமே கெடுதி யில்லாத காவிரிபாயும் நாடு எங்கும் (உள்ளன.)

(வி - ரை) **உழுதசால்**-சால் உழுதலால்; மேற்பாட்டிற் குறித்தபடி செய்யுழுதபின் நீர்பாய்த்திச் சேறுவதற்காக மறுமுறையும் உழுவதற்குச் **சால் உழுதல்** என்று பெயர்.

மிக ஊறித் தெளிந்த சேறு இழுதுசெய் - சால் உழுதலால் உளதாக்கப் பெற்ற சேற்றைச் சில நாள் ஊறித் தெளியும்படி விட்டு வைத்தலால் குழம்பாக ஆக்கப்பட்ட செய் (வயல்கள்.) **செய்யினுள்**...நடுவார் - என்று கூட்டுக.

தொழுது -நடுவார் - இந்திரன் மேகவாகனனாய், மருதநிலக் கடவுளாய், உழவிற்குத் துணைவனாய் இருத்தல் பற்றி அவனைத் தொழுது வணங்கிய பின்னரே நாறு நடத் தொடங்குவர். **பரப்பெல்லாம்** - **தொகுதி** (நிறைந்திருக்கும்) என வருவித்து முடிக்க.

பழுது இல் - தான் வருகின்றதும் நீர் தருகின்றதும் ஆகிய காலம், எப்போதும் தவிர்தல் இல்லாத என்க. "வருநாள் என்றும் பிழையாத் தெய்வப் பொன்னி" என்று பின்னரும் கூறுவர். பழுது இல்லையாகச் செய்கின்ற என்றுரைத்தலுமாம். இப்பொருளில், பழுதாவது, உடம்பின் உறுதிக்குப் பழுதாகிய பசியையும், உயிரின் உறுதிக்குப் பழுதாகிய பாவத்தையும் இல்லையாகச் செய்யத்தக்கதாம் என்க. பழுது - கெடுதி.

மேற்பாட்டிற் சொன்ன நாறு பறித்தல்—முடி சேர்த்தல்—உழுதல்—என்பவையும், இப்பாட்டிற் சொன்ன சால் உழுதல்—சேறு ஊறித் தெளிதல்—இழுதாதல்—தெய்வம் தொழுதல்—நாறு நடுதல்—என்பவையும் உழவுத் தொழிலின் ஒவ்வோர் சிறப்புப் பகுதிகள். (Items of agricultural operations) இவ்வாறே மேலும் காண்க.

இந்திர தெய்வதம் - இந்திரனாகிய தெய்வம். மருத நிலத்தின் தெய்வமும் மக்களும் தொழிலும் கூறியபடி. **காவிரிநாடு** - முதற்பாட்டின் உரையிற் காண்க. 12

வேறு

63. மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையுங் கடைசியர்கள்
தண்டரளஞ் சொரிபணில மிடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையுங் குழலசைய மடநடையின் வரம்பணைவார். ௬௩

(இ - ள்) மண்டு...விரிய - நட்டபின் செறிந்த புதுநீர் பரந்து பாய்ந்து வந்த வயலிலே வளர்ந்த நெல் நாற்றின் முதல் இலை சுருள் விரிந்து காட்ட; கண்டு...கடைசியர்கள் - அப்பருவத்தைக் கண்டு உழவர்கள் இது தான் களைகட்டும் பருவம் என்று காட்ட, அவ்வாறே களையைக் களைந்து செல்லும் உழத்தியர்கள்; தண் தரளம்...அசைவார் - குளிர்ந்த நீர்மையையுடைய முத்துக்களை ஈனும் சங்குகள் தம் காலில் இடறுவதால் தளர்ந்து மெல்ல அசைந்தசைந்து செல்வார்கள்; வண்டலையும்...அணைவார் - வண்டு மொய்க்கும் கூந்தல் அசையுமாறு இளநடை நடந்து அருகில் உள்ள வரம்புகளிற் சேர்வார்கள்.

(வி - ரை) **மண்டு புனல்** - புதுப்புனலாதலின் **மண்டு** என்றார். மேலே 10-வது பாட்டு உரையிற் போல் உரைத்துக் கொள்க. இங்குப் பரந்து பாயும் புனல் அதுவேயாதலின். **புனல் பரந்த வயல்** - நட்ட வயல் நடவின்பின் காய்ந்து விடாதபடி சிறுகிய அளவில் நீர் பரந்து பாய்ந்து வந்த தன்மையால் **பரந்த புனல் வயல்** என்றார். "வெண்ணடவு காய்ந்தால் விதை முதல் காணுது" என்பது உழவர் பழமொழியாம்.

முதலின் சுருள் - முதல் - நெற்பயிர் என்று பொருள் கொண்டு, நெற்பயிரினது சுருள் எனப் பொருள் கூறுவாருமுண்டு.

பதம் காட்ட - நட்ட நாறு முதலில் வெண்மையுற்றுப், பின்னர் வேர் ஊன்ற ஊன்றப் பசுமைத்தாகும். இதனைக் கருநடவு திரும்பும் பருவம் என்பர். பின்னர் அது குருத்து விடும். பின்னர் அச் சுருண்டகுருத்து சுருள் விரியும். இது காண்டலே களை பிடுங்கும் பருவமாம். இது நடவுக்குப் பின்னர் 25 முதல் 30 நாட்கள் வரை செல்லும். இந்நாட்களில் நெற்பயிர்களோடு களைப் பயிரும் உயிர் பெற்று வளரத் தொடங்கும். இப்பதத்துக்கு முன் களை களைந்தால் நெற்பயிர் வேரூன்றுத வகையில் சிதையும். இதன் பின்னரும் களை களையாமல் தாமதித்தால் நெற்பயிரின் உணவைக் களைப்பயிர் உண்டு நெல்லை மெலியச் செய்யும். ஆதலின் முதற் சுருள் விரிதலையே **முதலின்** - முதல் நெல் எனக் கொண்டு நெல்லினது என்றுங் கூறுவர் **பதம்** என்பர்.

மேலே - நாறு பறித்தலும் - முடிசேர்த்தலும் மாதர் செயலாயினது போலக், களை களைதலும் அவர் செய்கையாயிற்று. இவ்வாறே பின்னர்ப் பிறவும் காண்க. உயிர்களைப் பெற்றெடுத்தலும் ஏதங்களைதலும் அருட் சத்தியின் செயலும், போகங்களில் வைத்துக் காத்தளித்தல் சத்தனுடைய செயலுமாதல் இங்குக் குறிப்பிற் காணத்தக்கது.

தாளம் சோரி பணிலம் - முத்துக்களை ஈனும் சங்குகள். **பணிலம்** - சங்கு. காவிரி முத்துக்களை உடைத்தாதல் முன்னர்க் குறிக்கப் பெற்றது. காவிரியை "ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்" என முன்னர்க் கூறினதும் இங்குக் கருதத் தக்கது.

"கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்தங் கீன்றலைக்கும் திருவையாறே."

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரமும் இங்குக் குறிக்க.

இடறி - இடற - இடறுதலால். வயல்களிற் களை களையும்போது அங்குள்ள சங்குகளில் தட்டுண்டு கால் இடறும்; இடறவே, அசைவார் - என்க. **இடைதளர்வார்** - மெல்லிய இடையாதலின். **நடையின்** - நடையோடு - நடையுடன்; அசைந்து மெல்லச் செல்லுதலால் **மட நடையின்** - என்றார்.

உணர்க. மேலும் ஆணவச் சேற்றிலே முளைக்கும் ஆன்மாக்களை அங்கிருந்து எடுத்து இறைவன் தனது புவனங்களிற் பதித்துப் போகங்களை ஊட்டிப் பக்குவப்படுத்திச் சிவானந்த பரபோகத்தை விளைவிப்பன் என்பது ஓர் உண்மை. குளவி தான் எடுத்த புழுவை எடுத்த இடத்தில் தனது வடிவமாக்காது தான் கொண்டு போய் வைக்குமிடமாகிய தனது கூட்டிலே ஆக்கும் என்பதும் ஓர் உண்மை. இவ்வுண்மைத் தத்துவக் கருத்துக்களை நாறு முளைக்க விட்ட இடத்திலிருந்து பறித்து, இதற்காகப் பண்படுத்திய சேற்று வயல்களில் நட்டுப் போகம் விளையும்படிச் செய்வனவாகிய இங்குக் குறித்த நாறு பறித்தல் முதலிய செய்கைகள் நினைவூட்டுவனவாம். நினைவூட்டவே, ஆன்மாக்களின் பொருட்டு இறைவன் இவைபோன்று செய்யும் நித்தமாகிய அருட் செயல்கள் பலவும் நினைவுக்கு வரும். வரவே, அவனிடத்துக் காதல் விளையும். இதனைக் **காதல் செய்வதோர் காட்சி** என்று குறித்தவாறு. இது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற தேவாரத்திற் குறித்த "காதல்" என்க. இது **செய்** என்ற மொழிக்குப் பொருள் கற்பித்தது போலும்.

சீத நீண்முடி—என்பதும் பாடம். 11

62. உழுத சான்மிக வூறித் தெளிந்தசே
றிழுது செய்யினு ளிந்திர தெய்வதம்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம். கஉ

(இ - ள்) உழுத...செய்யினுள் - சால் உழுதபின் ஊறச் செய்து தெளிந்த சேறு குழம்பாகப் பண்படுத்தப்பட்ட வயலுள்ளே; இந்திர...தொழுது - தேவேந்திரனைத் தொழுது; நாறு...பரப்பெலாம் - நாறுநடுபவர் கூட்டமே கெடுதியில்லாத காவிரிபாயும் நாடு எங்கும் (உள்ளன.)

(வி - ரை) **உழுதசால்**-சால் உழுதலால்; மேற்பாட்டிற் குறித்தபடி செய்யுழுதபின் நீர்பாய்த்திச் சேறுவதற்காக மறுமுறையும் உழுவதற்குச் **சால் உழுதல்** என்று பெயர்.

மிக ஊறித் தெளிந்த சேறு இழுதுசெய் - சால் உழுதலால் உளதாக்கப் பெற்ற சேற்றைச் சில நாள் ஊறித் தெளியும்படி விட்டு வைத்தலால் குழம்பாக ஆக்கப்பட்ட செய் (வயல்கள்.) **செய்யினுள்...நடுவார்** - என்று கூட்டுக.

தொழுது -நடுவார் - இந்திரன் மேகவாகனனாய், மருதநிலக் கடவுளாய், உழவிற்குத் துணைவனாய் இருத்தல் பற்றி அவனைத் தொழுது வணங்கிய பின்னரே நாறு நடத் தொடங்குவர். **பரப்பெல்லாம்** - **தொகுதி** (நிறைந்திருக்கும்) என வருவித்து முடிக்க.

பழுது இல் - தான் வருகின்றதும் நீர் தருகின்றதும் ஆகிய காலம், எப்போதும் தவிர்தல் இல்லாத என்க. "வருநாள் என்றும் பிழையாத் தெய்வப் பொன்னி" என்று பின்னரும் கூறுவர். பழுது இல்லையாகச் செய்கின்ற என்றுரைத்தலுமாம். இப்பொருளில், பழுதாவது, உடம்பின் உறுதிக்குப் பழுதாகிய பசியையும், உயிரின் உறுதிக்குப் பழுதாகிய பாவத்தையும் இல்லையாகச் செய்யத்தக்கதாம் என்க. பழுது - கெடுதி.

மேற்பாட்டிற் சொன்ன நாறு பறித்தல்—முடி சேர்த்தல்—உழுதல்—என்பவையும், இப்பாட்டிற் சொன்ன சால் உழுதல்—சேறு ஊறித் தெளிதல்—இழுதாதல்—தெய்வம் தொழுதல்—நாறு நடுதல்—என்பவையும் உழவுத் தொழிலின் ஒவ்வோர் சிறப்புப் பகுதிகள். (Items of agricultural operations) இவ்வாறே மேலும் காண்க.

இந்திர தெய்வதம் - இந்திரனாகிய தெய்வம். மருத நிலத்தின் தெய்வமும் மக்களும் தொழிலும் கூறியபடி. **காவிரிநாடு** - முதற்பாட்டின் உரையிற் காண்க. 12

வேறு

63. மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்டக் களைகளையுங் கடைசியர்கள்
தண்டரளஞ் சொரிபணில மிடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையுங் குழலசைய மடநடையின் வரம்பணைவார். ௬௩

(இ - ள்) மண்டு...விரிய - நட்டபின் செறிந்த புதுநீர் பரந்து பாய்ந்து வந்த வயலிலே வளர்ந்த நெல் நாற்றின் முதல் இலை சுருள் விரிந்து காட்ட; கண்டு...கடைசியர்கள் - அப்பருவத்தைக் கண்டு உழவர்கள் இது தான் களைகட்டும் பருவம் என்று காட்ட, அவ்வாறே களையைக் களைந்து செல்லும் உழத்தியர்கள்; தண் தரளம்...அசைவார் - குளிர்ந்த நீர்மையையுடைய முத்துக்களை ஈனும் சங்குகள் தம் காலில் இடறுவதால் தளர்ந்து மெல்ல அசைந்தசைந்து செல்வார்கள்; வண்டலையும்...அணைவார் - வண்டு மொய்க்கும் கூந்தல் அசையுமாறு இளநடை நடந்து அருகில் உள்ள வரம்புகளிற் சேர்வார்கள்.

(வி - ரை) **மண்டு புனல்** - புதுப்புனலாதலின் **மண்டு** என்றார். மேலே 10-வது பாட்டு உரையிற் போல் உரைத்துக் கொள்க. இங்குப் பரந்து பாயும் புனல் அதுவேயாதலின். **புனல் பரந்த வயல்** - நட்ட வயல் நடவின்பின் காய்ந்து விடாதபடி சிறுகிய அளவில் நீர் பரந்து பாய்ந்து வந்த தன்மையால் **பரந்த புனல் வயல்** என்றார். "வெண்ணடவு காய்ந்தால் விதை முதல் காணாது" என்பது உழவர் பழமொழியாம்.

முதலின் சுருள் - **முதல்** - நெற்பயிர் என்று பொருள் கொண்டு, நெற்பயிரினது சுருள் எனப் பொருள் கூறுவாருமுண்டு.

பதம் காட்ட - நட்ட நாறு முதலில் வெண்மையுற்றுப், பின்னர் வேர் ஊன்ற ஊன்றப் பசுமைத்தாகும். இதனைக் கருநடவு திரும்பும் பருவம் என்பர். பின்னர் அது குருத்து விடும். பின்னர் அச் சுருண்டகுருத்து சுருள் விரியும். இது காண்டலே களை பிடுங்கும் பருவமாம். இது நடவுக்குப் பின்னர் 25 முதல் 30 நாட்கள் வரை செல்லும். இந்நாட்களில் நெற்பயிர்களோடு களைப் பயிரும் உயிர் பெற்று வளரத் தொடங்கும். இப்பதத்துக்கு முன் களை களைந்தால் நெற்பயிர் வேரூன்றாத வகையில் சிதையும். இதன் பின்னரும் களை களையாமல் தாமதித்தால் நெற்பயிரின் உணவைக் களைப்பயிர் உண்டு நெல்லை மெலியச் செய்யும். ஆதலின் முதற் சுருள் விரிதலையே **முதலின்** - முதல் நெல் எனக் கொண்டு நெல்லினது என்றுங் கூறுவர் **பதம்** என்பர்.

மேலே - நாறு பறித்தலும் - முடிசேர்த்தலும் மாதர் செயலாயினது போலக், களை களைதலும் அவர் செய்கையாயிற்று. இவ்வாறே பின்னர்ப் பிறவும் காண்க. உயிர்களைப் பெற்றெடுத்தலும் ஏதங்களைதலும் அருட் சத்தியின் செயலும், போகங்களில் வைத்துக் காத்தளித்தல் சத்தனுடைய செயலுமாதல் இங்குக் குறிப்பிற் காணத்தக்கது.

தாளம் சோரி பணிலம் - முத்துக்களை ஈனும் சங்குகள். **பணிலம்** - சங்கு. காவிரி முத்துக்களை உடைத்தாதல் முன்னர்க் குறிக்கப் பெற்றது. காவிரியை "ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்" என முன்னர்க் கூறினதும் இங்குக் கருதத் தக்கது.

"கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்தங் கீன்றலைக்கும் திருவையாறே."

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரமும் இங்குக் குறிக்க.

இடறி - இடற - இடறுதலால். வயல்களிற் களை களையும்போது அங்குள்ள சங்குகளில் தட்டுண்டு கால் இடறும்; இடறவே, அசைவார் - என்க. **இடைதளர்வார்** - மெல்லிய இடையாதலின். **நடையின்** - நடையோடு - நடையுடன்; அசைந்து மெல்லச் செல்லுதலால் **மட நடையின்** - என்றார்.

அசைவார் - அணைவார் - இவ் வினைமுற்றுக்கள் தனித்தனி வெவ்வேறு செயல்களைக் குறித்துக் **கடைசியர்கள்** என்ற எழுவாயைத் தழுவின: **அசைவார்** - என்பதை முற்றெச்சமாக்கி அசைவாராகி அணைவார் என்றுரைத்தலுமாம்.

அசைதல் - பயிருக்குச் சிதைவுண்டாகாதபடி மெல்லப் போதல்.

வரம்பணைவார்-மேலும் பயிருக்குச் சிதைவாகா வண்ணம் வரம்பினை அணைவார்—சேர்வார்—என்பது குறிப்பு.

குழலலைய—என்பதும் பாடம். 13

64. செங்குவளை பறித்தணிவார் கருங்குழன்மேற் சிறைவண்டை
அங்கைமலர் களைக்கொடுகைத் தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கணுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவ றளவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார். கச

(இ - ள்) செங்குவளை பறித்து அணிவார் - (கடைசியர்கள்) செங்குவளை மலர்களைக் களையாகப் பறித்து அவற்றை அணிந்து கொள்வார்கள்; கருங்குழன்மேல்-தங்கள் கரிய கூந்தலின் மேலே; சிறைவண்டை...அழைப்பார் - சிறை வண்டுகளைத் தமது அங்கையின் மலர்களினாலே போகும்படி ஓட்டுவதால் அவை போகாததுடன் அயலில் இருக்கும் வண்டுகளையும் கூட வரும்படிச்செய்து கொள்வார்; திங்கள்...அயர்வார் - நிலாப்போன்ற நெற்றியிலே வியர்வை யரும்பவும், முல்லை அரும்புகள் போன்ற பற்கள் சிறு நகை யரும்பவும், (களை களைந்த) புதிது பூத்த தாமரை மலரினின்று பொங்கிய தேனை வாய் வைத்து உண்பார்.

(வி - ரை) செங்குவளை - பறித்து அணிவார். குவளை - ஒருவகை நீர்ப்பூ. அது செங்குவளை கருங்குவளை என இருவகைத்து. இவை நீர்நிலைகளிலேயன்றி நீர் செழித்துப் பாயும் காலத்தில் வயல்களிலும் பூக்கும். இங்குக் குறித்தது செங்குவளை. இதனைச் செங்கழுநீர் என்பார். நெற் பயிருக்குப் பிறவற்றைப் போலவே இவையும் களைகளாதலின் இவற்றையும் களைந்தனர் என்பார் **பறித்து** என்றார். ஆனால் இவை உருவினும் மணத்தினும் நிறத்தினும் சிறந்தன ஆதலின் மற்றக் களைகளைப்போல வறிதே போகட்டுவிடாமல், இவற்றை அணிந்துகொண்டு பயன்படுத்தினர்கள் என்பது தோன்ற **அணிவார்** என்றார். குவளையும் பறித்தார் - என்றும், பறித்தும் அணிந்தார் - என்றும், ஈரிடத்தும் தொக்க உம்மை விரித்துரைத்துக் கொள்க.

பொங்குமலர்க் கமலத்தின் புதுமது - கமலப் புது மலரின் பொங்கு மது என மாற்றி உரைக்க. செங்குவளை போலவே களையாகக் களைந்த என்று கூட்டிக்கொள்க. களையாகக் களைந்த என்பது குவளைக்கும் கமலத்துக்கும் வருவித்து உரைக்கப்பட்டது. அல்லாத வழிக் களைகளையச் சென்ற கடைசியர்கள் அக்காரியம் செய்யாது மனம் போனபடி வேறுசெய்து விளையாட்டயர்கின்றார்கள் எனவரும் ஆதலின். செங்குவளையோடு கருங்குவளையும், கமலப் புதுப்பூவுடன் பழம் பூவும் களை களையப்படுமாயினும் அவற்றுள் இவை பயன் பெற்றன என்று கூறியதனால் ஏனைய தள்ளப்பட்டனவாம்.

புதுமது வாய்மடுத் தயர்வார் - செங்குவளை வறிது போகாதபடி பயன்படுத்த அணிந்தது போலவே, வயலிலும் அயலிலும் பூத்த கமலங்களைக் களை பறித்து அவையும் வறிதே போகாது அவற்றின் புதுத்தேனைத் தம் இளைப்புத் தணிய உண்டு களிப்பர் என்று அணியும் சுவையும் குறிப்பும் சொற்சுருக்கமும் பெறக் கூறியவாறு. **அயர்தல்** - உண்டாட்டயர்தல்: உண்டு திளைத்தல். **வாய்மடுத்து** - வாயிலே வைத்து. இது அயரும் வகையைக் கூறியவாறு. இது குறிப்பதற்கே **மது அயர்வார்** என்னாது **மது வாய் மடுத்து அயர்வார்** என்றார். அதாவது மதுவை வேறு கொள்கலத்திற் பெய்து உண்ணாது நேரே வாய் வைத்து உண்பார் என்பது. இந்நாளில் மதுவும் அதுபோல்

வனவும் அருந்துவோர் கலத்தை வாயினுட் பெய்து அருந்துதல் இதின் மரபிலே வழி வழி வந்த வழக்கம் போலும்.

அயர்வார் என்பதற்கு மயங்குவார் - சோர்வார் என்று கூறுவாருமுளர். பறித்த களைக் கமலத்தின் புதிய தேன் வீணாகாது தம் இளைப்பையாற்றிக் கொள்ள விளையாட்டாய்த் தேனை வாய்வைத்து உறிஞ்சி ஆட்டயர்தலேயன்றி மதுவுண்டு மயங்குதல் இங்குப் பொருளன்று என்று விடுக்க. **அணிவார்—அழைப்பார்—அயர்வார்—** என்ற வினைமுற்றுக்கள் தனித்தனி வெவ்வேறு செயல்களைக் குறித்தன. இவை மேற்பாட்டிற்கண்ட கடைசியர்களைத் தனித்தனித் தழுவி நின்றன.

அங்கை கோடு உகைத்து - வர அழைப்பர் - கையாகிய மலரைக் கொண்டு. செங்குவளையை அணிய அதிலுள்ள வண்டுகள் குழலிற் படர்ந்தன; அவற்றைக் கையினால் துரத்தவே கைகளும் மலர் போன்றிருத்தலின் முன் வண்டுகள் போகாததோடு வேறு பக்கத்திருந்தவைகளும் வந்தன. **அங்கை** = அழகியகை ; அல்லது அகங்கை.

அங்கை மலர்க்களைகோடு - என்று பாடம் கொண்டு,அணிந்துகொண்ட மலரோடு கையிலும் மலர் கொண்டார்; அது கமலம்; அதுகொண்டு வண்டு ஓச்ச அதன்மேலும் வண்டு வந்தன; அதனால் அது தேனுடைத்தாதல் அறிந்து அதனை வாய்மடுத்தனர்; அதனால் முறுவல் பூத்தனர் - என்றுரைத்தலும் ஒன்று. அணிவாராய் அழைப்பார் என்றும் அழைப்பாராகி அணிவார் என்றும் கொள்ளத்தக்கது.

வெயர்வு அரும்ப - களை களைந்து வேலைசெய்த சிரமத்தால் என்க. இக்குறிப்பினாலே முன்னர் இளைப்புத்தீரத் தேனை வாய்மடுத்தயர்ந்தார் என்றுரைக்கப்பெற்றதாம்.

சிறு முறுவல் தளவு அரும்ப - தளவு சிறு முறுவல் அரும்ப என்க. **தளவு** - முல்லையரும்பு. இங்கு அதுபோன்ற பல் - என்ற பொருள் குறித்தது. ஆகுபெயர். "நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபடுதல்" என்பது பழமொழி வழக்கு. இவ்வாறு வேலை செய்தும் மனமகிழ்ச்சி யுடையார் என்பார் **முறுவல் அரும்ப** என்றார். மேலே தாம் வண்டு போக்கச்செய்த செயல் அழைக்க ஆயினது நோக்கத் தமக்கே நகை தோன்றிற்று என்பதும் குறிப்பு. கமலத்தின் புது மது உண்ணும் உருசியினாலும் நகை தோன்றும் என்க. **சிறு முறுவல்** - பற்கள் சிறிது தோன்றச் செய்யும் புன்னகை.

கருங்குழன் மேல் - இதனைச் சிங்க நோக்காக மேல் அணிவார் என்றும், மேல் உகைத்து அழைப்பார் என்றும், கூட்டி யுரைத்துக்கொள்க.

வாய்மடுத் தயில்வார் - என்பதும் பாடம். 14

65\. கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்சி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்
அரும்பல்ல முலையென்ன அமுதல்ல மொழியென்ன
வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயலெல்லாம். கரு

(இ - ள்) கரும்பு அல்ல...கரும்பு என்ன - (காண்பவர்கள்) இவை கரும்பு அல்ல நெல்லேயாம்; இவை கமுகு அல்ல கரும்பே ஆகும் எனச் சொல்வதற்கிடமாகிய; வயலெல்லாம் - வயல்களிலெங்கும்; சுரும்பு...பகல் எல்லாம் - வண்டு குடைதலினாற் பரந்த நீல மலரின் துகள் இரவுத் தன்மையைக் காட்டக்கூடிய பகற்போதெல்லாம்; அரும்பு அல்ல...மடந்தையர்கள் - இவை அரும்பு அல்ல - அரும்புபோன்ற முலையே; இவை அமுதல்ல - அமுது போன்ற மொழியே என்று சொல்லத்தக்க இலக்கணம் வாய்ந்த பல்லாயிரம் கடைசியர் மடந்தையர்கள் நிரம்பித் தொழில் செய்திருந்தார்கள்.

(வி - ரை) வளர்ந்துவரும் நெற்பயிரின் வளம்—நெடுமை—முதலியவற்றை ஒருவன் தூரத்தே கண்டு இவை கரும்போ என்று எண்ணிக்கொண்டுவந்து வந்து வயலை அணுகினான்; அணுகியபின் இவை கரும்பென முன் எண்ணியது தவறு; இவை

நெல்லே எனத் துணிந்தனன். இவ்வாறே பிறவும் கொள்க. சில தன்மைகள் உண்மையாலே ஒன்றை ஒரு பொருள் எனத் துணிவானொருவன் பின்னும் அணுகிக் கண்ட காட்சியிலே முன் துணிந்த பொருளுக்கு இயையாத வேறு தன்மைகளைக் கண்டு முன் உணர்ந்தது பிறழ்வு ஞானம் எனத் தெளிவான். இவ்வகையிலே உணரும் ஞானத்தினியல்பு இங்குக் குறிக்கப்பெற்றது.

இப்பொருள்களாகிய நெல்—கரும்பு—மூலை—மொழி—என்பன உவமான ஞானத்தினாலே அவ்வவற்றைப் போன்ற கரும்பு கமுகு முதலியவற்றை நினைவூட்டும் தன்மை வாய்ந்தன. இப்பாட்டிலே பிரத்தியட்சம்—அனுமானம்—உவமானம்—சாத்தம் (ஆகமம்)—என்ற நான்கு தருக்கநூற் பிரமாணங்களாலும் உளதாகும் ஞானத்தினது அளவை யறிவினை மிக உருசிபெற அமைத்திருத்தல் காணத்தக்கது.

ஒப்புமையால் நெல் கரும்பு போலும் என்பது முதலியவையே இங்குக் கருத்து.

நெல்லும் கரும்பும் கமுகும் நீலமும் மருத நிலத்துக்குரிய கருப்பொருள்களாம். கரும்பும் நெல்லும் மாறி மாறி அடுத்தடுத்த வயல்களிற் பயிர் செய்யப்பெறுதலால் தூரத்தே இவற்றிற்கு ஒப்புமை காண்பது இயல்பு.

கரும்பு—நெல்—கமுகு—இவை காணப்படு பொருளும், பகல்—காட்சியின் காலமும், வயல்—அதன் இடமும், கடைசியர்கள்—நிலத்து உரிய மாக்களும் ஆவர் என்பது.

அரும்பல்ல முலை - அவர்கள் தலையிலும் கழுத்திலும் கையிலும் பல மலர்களைக் கண்டானாகிய ஒருவன் முலையினையும் அரும்பு என்றே கொண்டனன் என்பது குறிப்பு. மேற்பாட்டிலே குவளை—கைமலர்—கமலம்—என்று குறித்தவற்றையே தொடர்ந்து அனுவதித்து இங்கு இவை **அரும்பல்ல முலை** - என்றார்.

அமுது - இனிய நாதம் நோயைப் போக்குதலின் அமுதமயமாம். இசை நூலில் அமுதத்தானம், நச்சுத்தானம் முதலியவையும் பேசப்பெறும். தூரத்தே மேலே கூறிய படிக் காட்சிக்குப் புலப்பட்ட நெல் முதலியவைபோலச், செவிக்குப் புலனாகியது அவர்கள் மொழி. அவை மொழியாக உணரப்படாமல் இனிய நாதத் தன்மையை ஊட்டியன என்பது குறிப்பு.

நீலத்துகள் பகல் எல்லாம் அல்ல - அல் - இருள் ; அல்ல - இருளினைச் செய்கின்ற—பெயரெச்சம்-பகல் எனும் பெயர்கொண்டது. இருளினைச்செய்யும் பகற்போது முழுமையும். இந்த அல்ல என்பதற்கும் அன்று எனப் பொருள் கொண்டு இவை நீலத்துகள் அன்று ; ஆனால் அவற்றின் அல்லிகுடை சுரும்பு (வண்டு) என்று உரைப்பாருமுளர். இப்பாட்டில் **அல்ல** என்ற மொழி ஐந்திடங்களில் வருகின்றது. அவற்றில் நான்கிடங்களில் **அன்று** என்றும், ஓர் இடத்தில் வேறு பொருளில் "அல்லினைச் செய்கின்ற" என்றும் பொருள் செய்தல் சிறப்புடைத்து. இவ்வாறு வழங்குதல் இவ்வாசிரியரிடம் காணும் கவிச்சிறப்பியல்புகளில் ஒன்று. மேலே வரும் எறிபத்த நாயனார் புராணம் (3) முதலிய பாட்டுக்களிற் காண்க. இது சொற் பின்வருநிலை என்ற அணி.

(மடந்தையர்) நிறைந்து உளர் என வினைமுற்றுத் தொக்கு நின்றது.

அல்ல பகல் எல்லாம் - பகற் போதாயினும் நீல அல்லினாலே (இருளினாலே) பொருள்கள் மயங்கிக் காண ஏதுவாயிற்று என்பதும் குறிப்பு. பகலிலும் கூட என்ற உம்மை தொக்கது. மாதர்பால் இரவில் மயக்கம் நிகழ்வதன்றிப் பகலிலும் - என்பதும் குறிப்பாம்.

அல்லி - அகவிதழ். (புல்லி—புறவிதழ்.) 15

66. கயல்பாய்பைந் தடநந்தூன் கழிந்தபெருங் கருங்குழிசி
வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி யுலைப்பெய்தங்

கயலாமை யடுப்பேற்றி யரக்காம்பல் நெருப்பூதும்
வயன்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம். ௧௬

(இ - ள்) கயல்பாய்...வியல்வாய் - கயல்மீன்கள் பாயும் தடாகத்தின் கரையிற் கிடக்கும் ஊன் இல்லாத நந்து ஓடுகளைச் சோறுக்கும் சிறுபானையாகவும்; வளை... பெய்து - சங்குகள் ஈன்ற முத்துக்களைப் பூந்தேனை நீராக ஊற்றிய உலையிலே இட்டு; அயல்ஆமை...ஊதும் - பக்கங்களிற் கிடைக்கும் ஆமை ஓடுகளாகிய அடுப்பிலே ஏற்றிச் செவ்வாம்பல் மலர்களைத் தீயாக வைத்து அடுப்பூதுகின்ற செய்கையாகிய; வயன் மாதர்...விளையாட்டு, அங்கு, வரம் பெல்லாம் - கடைசியர்களது சிறு பெண்கள் விளையாடும் செயலே அங்கு வயல் வரம்புகளிலெங்கும் (உண்டு.)

(வி - ரை) அங்கங்கும் உள்ள சிறுவர் சிறுமியர் ஆங்காங்கே கிடைக்கும் பொருள்களிலிருந்தே தமது விளையாட்டுப் பண்டங்களைத் தேடி அமைத்துக் கொள்வது இயல்பு. இவ்வாறே, இங்கும், கடைசியர்கள் களை களைதல் முதலிய உழவுத் தொழிலும் பிறவும் செய்யும் காலங்களிலெல்லாம் அவரது சிறுமியர் வரம்புகளிலே இவ்வாறு விளையாடுவர் என்க. இங்குச் சொன்ன பொருள்கள் பலவும் வயல் வரம்புகளிலே களையாகக் கழித்து ஒதுக்கப்பட்டுக் கிடக்குமாதலின் இவற்றையே சிறுமியர் விளையாட்டுப் பொருள்களாய்க் கொண்டனர். ஆமையோடும் ஊன்கழி நந்து ஓடும் அயலிலும் தடாகத்தின் கரையிலும் உள்ளன. மேலே (13) பாட்டில் தண்தரளம் சொரிபணிலங்களையும், செங்குவளை கமலம் இவற்றையும் குறித்தமை காண்க. ஊட்டி வளர்த்தல் பெண்ணின் கடமையாதலின் இவ்வாறு சிறு சோறு சமைத்தல் சிறு மகளிர்க்கு இயற்கையின் அமையும் விளையாட்டாகும்.

இவ்வாறே அவ்வத் திணைகளிலும் கூறிப் போகும் நிகழ்ச்சிகளையும் மேலே கண்டு கொள்க. திருநாளைப் போவார் நாயனார் புராணம் - கண்ணப்ப நாயனார் புராணம் - அதிபத்த நாயனார் புராணம் - இவைகளில் முறையே மருதம் - குறிஞ்சி - நெய்தல் - திணைகளின் நிகழ்ச்சிகளைக் கூறுதல் காண்க.

பைந்தடம் - பசிய தடாகம். **கருங்குழிசி** - ஊன் கழிந்த நத்தை ஓடு ஆகிய கரிய பானை; நந்து ஓடு நீர்ப்பாசி ஏறிப் பசுமை பொருந்தியதாதலின் கருங்குழிசி போலும் என்க. குழியாக அமைக்கப் பெறுவது குழிசியாம்.

வியல்வாய் - அகன்ற வாய். **வெள்வளை** - (முத்து ஈனும்) வெள்ளிய சங்குகள். இப்பாட்டினாலே அந்நிலத்துச் சிறு மகளிர் விளையாட்டும் கருப்பொருளும் கூறியவாறு.16

67. காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு
மாடெல்லாங் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லா மடவன்னங் குளமெல்லாங் கடலன்ன
நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம். ௧௭

(இ - ள்) காடு எல்லாம் கழை கரும்பு - கழையாகிய கரும்பு எல்லாங் காடாகவுமுள்ளன; கா எல்லாம் குழைக்கு அரும்பு - சோலைகளில் எங்கும் சிறு கிளை சிறுதளிர் தோறும் மலர் அரும்புகள் தோன்றும்; மாடு எல்லாம் கருங்குவளை - பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் அலரும்; வயல் எல்லாம் நெருங்கு வளை - நெருங்கி விளையும் வயல்களில் எங்கும் சங்குகள் கிடக்கும்; கோடு எல்லாம் மட அன்னம் - (வாவிக்)கரை எங்கும் இளமையுடைய அன்னங்கள் உண்டு; குளம் எல்லாம் கடல் அன்ன - குளங்கள் எல்லாம் கடல் போன்ற பரப்பையுடையன; (ஆதலின்) நாடு எல்லாம்...ஒவ்வா நலமெல்லாம் - எந்த நாடும் எந்த நலத்தாலும் சோழநாட்டிற்கு ஒப்பாகாது. (**வாவி - ஆதலின்** என்பன வருவித்துரைக்கப் பட்டன.)

(வி - ரை) காடு எல்லாம் கழை கரும்பு - எங்கும் காடுபோல் கரும்பு விளங்குள்ளன. மனிதர் செயற்கையின் விளைப்பன அன்றித் தாமாகவே தம்மிச்சையாய் மட்டின்றி வளரும் தாவரக் கூட்டமே காடு எனப் பெறுவன. இதனையே ஆங்கிலத்திலும் - Wild growth - Wild cane - Wild paddy - காட்டு நெல் - முதலான பெயர்களாற் கூறுவர். இவ்வாறன்றிக் காடுகளில் கரும்பு உள்ளன என்றுரைப்பாருமுளர்.

ஆனால் இங்கே கரும்பு, மனிதர் விளைக்க விளையினும், வளத்தின் மிகுதியால் மட்டின்றி வளர்ந்து நாற்புறமும் கழைகளாக் கிடப்பதால் கழைக்கரும்பு எல்லாம் காடு என்றார் - காடு போல - என்க. காடு எல்லாம் - ஒழுங்கின்றிக் காடுபோலத் தூரத்தே காணப்படுவன எல்லாம். "செந்தாமரைக் காடனைய மேனி" என்ற திருவாசகமும், "காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாடு" என்ற திருநீலநக்க நாயனார் புராணமும் காண்க. "கடிகமழ் கமலக் காடு பூத்தது" என்ற கம்பர் பாட்டும் நோக்குக.

கழை - கரும்புத் தண்டு. கழை - மூங்கில் எனக் கொண்டு மூங்கில்போற் பருத்து உயர்ந்த கரும்பு என்பதுமாம். மேலேயும் "கமுகல்ல கரும்பென்ன" என்று கூறியதும் காண்க. கழை - கரும்பின் (நாணற் கரும்பு) ஒருவகை என்பதுமாம்.

குழை - சிறு கிளை - சிறு இலை (தளிர்). கிளைதோறும் தளிர்தோறும் அரும்பு வைத்தல் செழுமையின் அறிகுறி என்க.

மாடு - பக்கம். வயற் பக்கங்கள். வயல் நடு நிலைத் தீவகமாய்க் கொண்டு வயல் மாடு எல்லாம் என்க. கருங் குவளை - நீலோற்பலம்.

வயலெல்லாம் நெருங்கு வளை - நெருங்கு வயல் என மாற்றிக் கொள்க. நெருங்கும் (செறிந்த) பயிருடைய வயல் என்க. வளை - சங்குகள். மேலே (13) "தண்டரளம் சொரி பணிலம் இடறி" என்றும், "வெள்வளைத் தரளம்" என்றும், கூறினமையும் காண்க.

கோடு - வாவிக் கரை. வாவிகள் - தாமரை முதலிய நீர்ப்பூக்கள் நீர்ப் பறவைகளுக் கிடமாகி மாக்களும் மக்களும் அருந்தி ஆடற்கிடமாய் உள்ள சிறிய நீர்நிலைகள். சிறுபான்மை பயிருக்கும் உதவும். குளம் - நீர்ப்பாய்ச்சற் கேதுவாய பெரு நீர்நிலைகள்.

கடல் அன்ன - நீர் நிறைந்த பரப்பினாலும் உதவியினாலும் குளங்கள் கடல் போன்றன என்க. கடல் மழையை உதவிப் பயிர் வளர்க்கின்றதுபோலக் குளங்களும் பயிர் வளர்க்கின்றன.

"பாரவன்காண் பாரதனிற் பயிரானான்காண் பயிர் வளர்க்கும் துளியவன்காண் துளியில் நின்ற, நீரவன்காண்..." (திருத்தாண்டகம் - சிவபுரம் - 6) "...எரிநிறைந்தனைய செல்வன் கண்டாய்..." என்பன அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

வெளித் தூரத்தே நின்று கரும்பு என்று நினைத்தவன் பக்கத்தே வந்து கரும்பு அல்ல நெல் என்று உணர்ந்தது முதலிய காட்சியும் உணர்ச்சியும் மேலே 15-வது பாட்டிற் கண்டோம். இனி அவ்வாறு வெளியே யிருந்து கண்டு, வயலுள் வந்த ஒருவன், இங்கிருந்து வெளியே தூரத்தே பார்க்கும்போது, காடெனக் கண்டது, பின்னர்ச் சென்று காடன்றிக் கரும்பாகக் கண்டான்; பின்னரும் அணித்துச் சென்று சென்று சோலையின் அரும்பும் செழுமை கண்டான்; வயலினின்று வெளிச் செல்லும் வரம்பு வழியில் குவளையும் சங்கும் கண்டான்; வெளிப் போந்த அணிமையில் வாவியும் கரையில் அன்னமும் கண்டான் ; பின்னரும் வெளிப் போகக் கடல் போன்ற குளங்கண்டான் ; அதன் அப்புறம் பிற நாடு கண்டு அவை எவையும் இந்நாட்டுக்கு ஒவ்வா என்று தெளிந்து கொண்டான் ; எனத் தொடர்பாய் ஒரு கதை போல வரும் உருசியான இயற்கை வருணனையின் அழகு காண்க.

நாடு எல்லாம்—நலம் எல்லாம் - எந்த நாடும் எந்த நலத்தாலும் என்க. மேல் மூன்றடிகளிற் குறித்த காரணங்களால் எந்நாடும் எந்நலத்தினும் நீர் நாட்டினை ஒவ்வாது என்பது. இங்கு எல்லாம் என்பதற்கு, மேல் மூன்றடிகளிற் கொண்டது போலல்லா

ட

"In the mind of a Hindu, Kailas is always associated with soul-elevating, sublime, spiritual ideas. Kailas Hills are a huge range with a central, beautiful, naturally carved and decorated, shining peak, eternally clad with silvery snow 22,980 feet above the sea-level. Some take the height to be 22,028 feet. This particular peak is in the form of a natural huge Siva Linga (Virat form). This is worshipped as the form of Lord Siva from a distance. There is neither a Temple nor a Poojari nor daily Pooja there. The picturesque and magnanimous scenery of Kailas with its awful solemnity and weird grandeour of landscape is unprecedented in the whole world. The Alpine scenery is nothing, nothing before Kailas. To many the fruition of all earthly desires is the crowning glory of a visit to the sacred places, by which the sins of former births are cleansed and exemption from metempsychosis obtained."

A Trip to Sacred Kailas-Mansarowar,

—*Swami Sivananda.*



திருக்கயிலாய மலை

BY KIND PERMISSION OF MESSRS **GANESH & CO.**, MADRAS

"பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கு மறிவரி யானொன்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை"—பெரியபுராணம்.

மல் ஒரு நாடும் ஒரு நலமும் என்று பொருள் கொள்ளப்பெற்றது. அவ்வாறன்றி ஏனைய வற்றைப் போலவே கொண்டால், சில நாடு சில நலங்களால் ஒவ்வுமென்று தருக்க முறையிற் பொருள் பெற்று இழுக்காகுமாறு உணர்க.

நீர்நாடு - சோழநாடு (காவிரி நீர் பொய்க்காது பெருகிப்பாய்தலால்). நாட்டின் அணியை ஏற்றவாறு இப்பாட்டிலே சொல்லணியாலும் நாட்டியவாறு காண்க. "நாடென்ப நாடா வளத்தன" என்ற குறட்கருத்தை இங்குப் பொருத்திக் காண்க. 17

வேறு

68. ஆலை பாய்பவ ரார்ப்புறு மோலமுஞ்
சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையும்
ஞால மோங்கிய நான்மறை யோதையும்
வேலை யோசையின் மிக்கு விரவுமால். கஅ

(இ - ள்) ஆலை...ஓலமும் - ஆலை பாய்ச்சுபவர் கூவும் சத்தமும்; சோலை...சும்மையும் - சோலைகளிலே வண்டுகள் பல சேர்ந்து செய்யும் சத்தமும்; ஞாலம்...ஓதையும் - உலகத்தை ஓங்கச் செய்யும் வேதச் சத்தமும்; வேலை...விரவுமால் - கடற் சத்தத்தினை விடப் பெரிது முழக்காகிக் கலந்தன.

ஓலமும்—சும்மையும்—ஓதையும்—ஓசையின் மிக்கு விரவும் என்க.

(வி - ரை) பாய்பவர் - பாய்ச்சுபவர். பிறவினை தன்வினையாக வந்தது. **ஆலை பாய்பவர்** - ஆலையிற் பாய்ச்சுபவர். அதாவது ஆலையிற் கரும்பினையும், பிழிந்த சாற்றைக் காய்ச்சு கலன்களிலும், காய்ச்சிய சாற்றினைத் தட்டுகளிலும், கட்டிகளைக் கொள் கலன்களிலும் பாய்ச்சுபவர்; செல வைப்பவர்கள். **ஆர்ப்புறும்** - ஆரவாரம் செய்யும்.

ஓலம்—சும்மை—ஓதை—ஓசை - சத்தத்தின் பற்பல பெயர்கள். பலவேறு வகைச் சத்தங்களைப் பலவேறு பெயர்களாற் குறித்தனர். பின்னரும் இவ்வாறே காண்க. இஃது ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளின் கவித் தனி மாண்புகளில் ஒன்று. கண்ணப்பர் புராணம் - 34; திருக்குறிப்பு - புராணம் - 98 முதலியவற்றைக் காண்க.

சோலைவாய் - சோலையினிடத்து. **வாய்** ஏழாம் வேற்றுமையுருபு. சோலை (யிலே) வண்டு வாயினால் இரைத்தும் எழுந்தும் உண்டாக்கும் சும்மை எனினும் ஆம். வண்டு ஊதுதலினாலும் பறத்தலினாலும் சத்தம் உளதாம்; ஆதலின், இரைத்து எழும் - உம்மைத் தொகையாக்கி இரைத்தும் - எழுந்தும் என்க.

ஞாலம் ஓங்கிய நான்மறை - உலகத்தை மேன்மை பெறச்செய்யும் வேதங்கள். **ஓங்கிய** - ஓங்கச் செய்த எனப் பிறவினைப் பொருளில் வந்தது. மேலே [திருமலைச் சிறப்பு - 4] "மேன்மை நான்மறை நாதமும்" என்ற இடத்துக் காண்க. உலகம் தோன்றி வளர்வதற்குக் காரணமாகிய நாத உருவாகிய வேதம் என்றுமாம். உலக சிருட்டிக்கு நாதமே காரணமாம் என்பது சாத்திர உண்மை. நாதத்தில் விந்துவும் (உருவம்) அதிலிருந்து முறையே பிற தத்துவங்களும் உலகமும் உண்டாகும்.

வேலை ஓசையின் மிக்கு விரவும் - மருதநில ஒழுக்கம் நெய்தல் நிலத்து எல்லை வரை பரவுகின்றது. எனவே, மருதத் தொழிலாகிய கரும்பு அடுகின்ற தொழனியும், மருதச்சோலைகளின் ஓசையும், மருதநிலத்து ஊர்களை அடுத்து வெளிப்புறத்து அமைந்த வேதம்பயி லிடங்களினின்று போந்த மறையோசையும் பயின்று விரவின. இம்மூன்றும் ஒன்று சேரவே, பக்கத்திருந்த கடல் ஓசையினும் மிகுந்திருந்தது என நயம் பெறக் கூறினவாறு.

விரவும் - சும்மை ஓசை பொருளற்ற சத்தங்கள்; **ஓலம்** - ஓதை பொருள் உள்ள சத்தங்கள். இரண்டும் (தனித்தனிப் பொருள் உள்ள ஆயினும்) சேர்ந்தபோது அத் தன்மை போய்ச் சந்தை இரைச்சல்போல் ஒரே சத்தமாகக் கேட்பன,

மருதத்திணையின் தொழிலும், மள்ளர் முதல் மறையோர் வரை அங்குள்ள மக்களின் வகையும் கூறப்பெற்றன. மேலே கமுகல்ல கரும்பு-கழைக்கரும்பு—என்று குறித்த கரும்பினது செய்வினைகளையே தொடர்ந்து தொடங்கி இப்பாட்டிலே கரும்பு முற்றியபின்—ஆலை பாய்பவர்—என எடுக்கப்பெற்றமை காண்க. காவெல்லாம் குழைக் கரும்பு என்றதை அனுவதித்து அவ்வரும்புகள் மலர்ந்தபின் மொய்த்த வண்டுகளின் ஓசையினை வண்டிரைத்தெழ சும்மை என்றார்.

காவிரிப் புதுநீர் வருதல் முதல், முறையே, நாற்று நடுதல்—களை பறித்தல்—பயிர் வளர்தல் முதலிய செயல்களைக் கூறிவந்தமை காண்க. பெரும்பான்மை பற்றி நெல்லுக்குக் கூறியவை அவ்வவற்றிற் கேற்றபடிக் கரும்புக்கும் சோலைக்கும் கொள்க. சோலை பூக்களுக்காகவும் பழங்களுக்காகவும் வைக்கப்பெறுவன. முன்னே, சோலையும், அடுத்துக் கரும்பும், அவற்றை அடுத்து நெல்லும் உள்ளன. இவற்றை அடுத்து, ஊருக்கு வெளியே தடமும், வேள்விச் சாலையும், வேதம் பயிலும் இடங்களும், கல்வி பயிலிடமும் அமையும். இது அந்நாள் மருதத்திணையின் நாடு நகரங்களின் அமைப்பு. இவற்றைக் கடந்த பின்னரே ஊரைச் சேரலாம். சண்டேசுர நாயனார் புராணம் - 3, 4 ,5 பாட்டுக்களும் பிறவும் அங்கங்கே கண்டுகொள்க.

இக்காரணம் பற்றியே "கரும்பல்ல நெல்லென்ன கமுகல்ல கரும்பென்ன" எனவும், "காடெல்லாம் கழைக்கரும்பு கா எல்லாம் குழைக்கரும்பு" எனவும், மேலே கா—கரும்பு—நெல்—இவற்றைச் சேர்த்துக் கூறியதென்க. இதுபற்றியே இப்பாட்டிலும் ஆலையும் சோலையும் மறையோதையும் சேர்த்துக் கூறியவாறும். பின்னரும் களமாலையும் - பெரும் பெயர்ச்சாலையும் (27) - (நாளிகேரம்) செருந்தி முதலியவை பொருந்திய சோலையும் (28) (29) - சேர்த்துக் கூறுவதையும் காண்க. அவ்வப்பயிர்கள் வளர்ந்து பயன்தரும் கால அளவைகளைப் பின்பற்றியே கூறிக் கொண்டு போகும் முறைமையும் காண்க. மரங்கள் நாட்சென்று பலன்தருதலால் பின்னர்க் கூறப்பெற்றமையும் உணர்க. பிறவும் இவ்வாறேயாம். 18

69. அன்ன மாடு மகன்றுறைப் பொய்கையிற்
றுன்னு மேதி படியத் துதைந்தெழுங்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவிற் போலுமால். கக

(இ - ள்) அன்னம்...படிய - அன்னங்கள் விளையாடுகின்ற பெரிய துறைகளையுடைய வாவிகளிலே கூட்டமாகிய எருமைகள் வீழ்ந்து முழுகுதலால்; துதைந்து... பாய்வன - வாளையின் இளமீன்கள் நிரம்ப எழுந்து அருகிலிருக்கும் சோலையின் கமுக மரங்களின் மேற் பாய்கின்ற தோற்றம்; மன்னும்...போலுமால் - எங்கும் பொருந்திய வானத்திலே தோன்றி மறையும் வானவில்லைப் போன்றிருக்கும்.

(வி - ரை) அன்னம் ஆடும் அகன்றுறை - மேலே 17-வது பாட்டில் "கோடெல்லாம் மடவன்னம்" என்றதைத் தொடர்ந்து கொண்டு, அந்த அன்னங்கள் ஆடுகின்ற துறையுடைய பொய்கை என்றார். அன்னம் போன்ற பெண்கள் குளிக்கும் துறை என்றும் கூறுவர்.

துன்னும் மேதி படிய - எருமைகள் கூட்டமாகச் செல்லும் இயல்புடையன. அன்றியும் வாவிகளில் புகுந்து கடிதின் உழக்கி நீண்ட நேரம் கிடக்கும் தன்மையுமுடையன. உருவிற் பெரியனவும் அறிவிற் சிறியனவும் ஆகிய இவை அப்பொய்கையில் வாழ்ந்து விளையாடும் அன்னம் வாளைகளுக்குத் தமது செயலால் இன்னல் விளைப்பன என்பதும் குறிப்பு. இவ்வாறு எருமைபோல உலகிலே பல துறையிலும் உழக்கி ஒழுகிப் பிறர்க்கு இன்னல் தரும் மாக்கள் பலர். அவர்க்கு அறிவுறுத்திய குறிப்புமாம்.

துதைந்தெழுங் கன்னி வாளை - கூட்டமாய் ஒன்றின்பின் ஒன்றாய் எழுவது இள வாளைகளின் இயல்பு. வாளை மிக உயரமுந் தூரமுங் குதித்துப் பாயும் இயல்புடையன. ஆதலின் கன்னிவாளை கமுகின் மேற்பாய்வன என்றார். கமுகு வாவியின் கரை அருகே சோலையில் உள்ளது. மேதிக் கூட்டத்தையும் வாளைக் கூட்டத்தையும் குறிப்பார் முறையே **துன்னும்** என்றும், **துதைந்து** என்றும் அடை கொடுத்துக் கூறினார்.

மன்னும் வான்மிசை வானவில் போலும் - வாளைகள் பல நிறங்களுடன் மின்னுவன. நீரினின்றும் வெளிக்குதித்துப் பாயும்போது சூரிய ஒளியில் அந்நிறங்கள் நீர்நிறத் துள்ளே பலவாகி விளங்கிக் காட்டவே, இவையும் வானவில்லின் ஏழு நிறங்களைப்போல ஒன்றோடொன்று விரவிப் பல நிறங்களைக் காட்டி மின்னும். அன்றியும் பாய்ந்துவரும் வளைவு வில்வட்ட வடிவம்போலும். சோலையும் வாவியும் வானம்போல நீலமுடையன. இவற்றிற்கிடையே வரிசையாய் மின்னும் வாளைகள் வானவில் போன்றன என்க. **வான்** அசையாது நிற்க **வில்** மட்டும் வந்து போகுமாதலின் **மன்னும் வான்** என்றார்.

"மடையில் வாளை பாய மாதரார் குடையும் பொய்கைக் கோலக் காவுளான்"

என்ற தேவாரத்திலும் வாளை பாயும் இயல்பு விளக்கப்பெற்றமை காண்க. 19

70. காவி னிற்பயி லுங்களி வண்டினம்
வாவி யிற்படிந் துண்ணு மலர்மது
மேவி யத்தட மீதெழப் பாய்கயல்
தாவி யப்பொழி லிற்கனி சாடுமால். உ0

(இ - ள்) காவினில்...மது - சோலையிலே பயில்கின்ற வண்டுகள் அடுத்து உள்ள வாவியிலே நீர்ப்பூக்களிலும் படிந்து தேன் உண்ணும்; மேவி...சாடுமால் - அவ்வாறு வண்டுகள் தேனை உண்ணும் வாவியில் வாழ்ந்தும் (அதனுள் அடங்கியிராது) மேலே எழுந்து பாயுந்தன்மையுடைய கயல் மீன்கள் தாவி (வண்டுகள் வந்த) அச்சோலைகளின் இனிய கனிகளின்மேற் பாய்ந்து அவற்றை உதிர்த்துச் சிதைக்கும்.

(வி - ரை) **அத்தடம் - அப்பொழில்.** காவிலே வாழும் வண்டுகள் வாவியிலே வரவும், அதற்காக மாறுகொண்டு பாய்வனபோல அவ்வாவியிலே வாழும் கயல்கள் வண்டுகளின் இருப்பிடமாகிய அச்சோலைகளைச் சூறையிட்டுச் சிதைப்பன போலும்-என்பது குறிப்பு; அந்தத் தடம் - அந்தப் பொழில் என்று சுட்டியவாறு காண்க. வண்டு மலர் மது உண்ண வந்த அந்தத் தடம் என்றும், வந்த வண்டுகளின் இருந்த இடமாகிய அந்தப் பொழில் என்றும் அகரச் சுட்டுக்குப் பொருள் வருவித்துக்கொள்க.

களிவண்டு...பாய் கயல் - தமக்குரிய உணவாகிய தேனை எவ்வகைப் பூக்களிலும் சென்று முயன்று தேடும் வண்டுகள்போலல்லாது, கயல்கள் தாம் வாழுமிடத்துள்ள தேனைத் தாமும் உண்ணாது, பிறர் உண்ணவும் பொறாது, சினந்து, தகாத செய்கை செய்வன - என்று கோபம் எனும் தீக்குணத்தின் செயலை உள்ளுறையாகக் கற்பித்த வாறு. இது குறிக்கக் **களி** வண்டு என்றும், **பாய்** கயல் என்றும் அடைமொழி புணர்த்ததும் குறிக்க.

கனி சாடுதல் - இதனால் தமக்கு ஒரு பயனுமில்லையாயினும், இக்கனிகளாற் பிறர்க்குவரும் பயனை அழித்தல் மாத்திரமே கருதிய செயலாம் என்பது குறிப்பு. மனிதர்களுக்குள்ளும் இவ்வியல்புள்ளார் பலராதலின், அவர்க்கு அறிவுறுத்துவதும் குறிப்பு.

வண்டு உண்ணும்—அவை உண்ணவே—**கயல் சாடும்**—எனவருவித்து உரைக்க.

பயிலும் - சிறப்பாய் வாழுமிடமாகக் கொண்ட.

பயிலல்—படிதல்—இவற்றால் முயற்சியினது சிறப்பும், **பாய்தல்—சாடுதல்** - இவற்றால் சினத்தின் இழிபும் குறித்தவாறு. சோலையும் வாவியும் அடுத்துள்ளன என்பது குறிப்பு. இது முன்னரே விளக்கப்பெற்றது.

களி வண்டு - உயர்ந்த இடத்தில் (சோலையில்) வாழ்ந்து, உயர்ந்த உணவை (தேனை) உண்ணுதலால் உயர்ந்தகுணமும் செயலும் மகிழ்ச்சியுமுடையது என்பார் **களி வண்டு** என்றார். (களி - மயங்கிய - என்று உரைப்பாருமுளர்) இதற்கு மாறாய்த் தாழ்ந்த இடத்திலே (வாவி) வாழ்ந்து, தாழ்ந்த உணவை அழுக்குப் பாசி முதலியன) உண்ணுதலால் தாழ்ந்த குணமும் தாழ்ந்த செயலுமுடையது கயல் மீன் என்பதும் குறிப்பார் **பாய் கயல்** என்றார். இவ்வுண்மையை மனிதர் உலக வாழ்க்கையிலும் பொருத்திக் காண்பது பயன்தரும் என்பதும் குறிக்க. இந்நாட் புதிய சீர்திருத்தங்கள் பேசுவோர் இதனை உய்த்துணர்வாராக. 20

வேறு

71. சாலிநீள் வயலி னோங்கித் தங்கிக ரின்றி மிக்கு
வாலிதாம் வெண்மை யுண்மைக் கருவினும் வளத்த வாகிச்
சூன்முதிர் பயலை கொண்டு சுருள்விரித் தரனுக் கன்பர்
ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்க ளெல்லாம். ௨௧

(இ - ள்) சாலி - நெல்; நீள் வயலின்...விரித்து - நீண்ட வயலிலே ஓங்கி வளர்ந்து, தமக்கு ஒப்பில்லாமல் மிகுந்து, தூயவெள்ளிய உண்மைக் கருவின் வளத்தை உடையனவாகி, சூல் முதிர்வதனால் பசலை அடைந்து, பின்னர்ச் சுருளை விரித்துக் கொண்டு; அரனுக்கு அன்பர் ஆலின சிந்தை போல - இறைவனுக்கு அன்பர்களுடைய நீர்மையுடைய மனம் போலவே; அலர்ந்தன கதிர்கள் எல்லாம் - எல்லாம் கதிர் அலர்ந்தன.

(வி - ரை) நீள்வயலின் சாலி—ஓங்கி—மிக்கு—கருவளத்தவாகி—பயலை கொண்டு-சுருள் விரித்துக் - கதிர் அலர்ந்தன - என்று கூட்டி முடிக்க.

கதிர் அலர்தல் என்பது - ஒரு சொல் நீர்மைத்தாகிக் கதிர்களை அலரச் செய்தன - எனப் பொருள் தரும். மரம் பூப்பூத்தன என்பது போல. இவ்வாறன்றிப் **பயலை கொண்டு** என்பதனைப் பயலை கொள்ள எனக் கொண்டு, சாலி சூல் முதிரவே அதன் பின் சுருள் விரித்துக் கதிர்கள் அலர்ந்தன என்று உரைத்தலுமாம். **பயலை** - பசலை எனவும் வரும். வெண்மையும் பொன்மையும் கலந்ததொரு நிறம்.

மேலே 13-வது பாட்டிலே களை களையப் பெற்ற நெற்பயிர் காலமுறையாலே வளர்ந்து கதிர் விரியும் செயல்களை ஓங்கி முதலிய அவ்வவ்வினை எச்சங்களாலே தொடர்ந்து கூறி இப்பாட்டினாலே குறித்தவாறும்.

இப்பாட்டு, நெற்பயிர் விளைவிற்கும், அரன் அன்பர் சிந்தைக்கும் முற்றுவமையாக அமைந்தமை காண்க.

மேல் வரும் திருப்பாட்டும் இவ்வாறே அமைந்தமையும், இவையிரண்டும் தொடர்நிலையுவமமாய்த் தொடர்ந்து வருதலும் காணத்தக்கது. இதனைப் பின்பற்றிய ஆசிரியர் காஞ்சிப்புராண முடையாராகிய எமது மாதவச் சிவஞான முனிவர் தம் புராணத்து நாட்டுப் படலத்திற் பல பாடல்கள் தொடர்ந்து, தொடர்நிலை உவமம் கூறியவாறும் காண்க.

இனி ஓங்குதல்—மிகுதல்—கருவளம் ஆதல்—பயலை கொள்ளுதல்—சுருள் விரிதல்—கதிர் அலர்தல்—என்ற செயல்கள் ஒவ்வொன்றும் சாலியிலும், அன்பர் சிந்தையிலும் பொருந்துமாறு காண்க.

ஓங்குதல் - சாலி - செழித்து வளர்தல். **அன்பர் சிந்தை** - மேல் ஓங்கிநிற்றல் - உயர்ந்த நோக்கமுடையதாதல். "பெரியோர் உள்ளம் போல, ஓங்குநிலைத் தன்மைய வாய்" (திருக்குறிப்பு-புரா - 88) என்று பின்னர்க் கூறுதல் காண்க.

தந்நிகரின்றி மிகுதல் - சாலி - ஒப்பற்றுத் தூறுபடர்ந்து எழுதல். அன்பர் சிந்தை - ஒப்புயர்வற்ற மேன்மை செறிதல். அன்பினால் "மெய்த்தழைத்து விதிர்ப்புறு சிந்தையார்" முதலியன காண்க.

வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினும் வளத்தன ஆதல் - சாலி=வாலிது, தூய்மை; வெண்மை - வெள்ளிய நிறம்; உண்மை - உட்பதடியில்லாமை; கரு - நெல் ஊறுகின்ற பால். அன்பர் சிந்தை=வாலிது - கலப்பில்லாமை; வெண்மை - புகழ்; உண்மை - மெய்யுடைமை; கரு - உண்மையிலே விளையும் வளம்.

"வாலிதாம் நிலைமை காட்ட"; "மெய்ம்மையின் வேறு கொள்ளாச் சிந்தை"

என்பனவாதி திருவாக்குகள் காண்க.

"அன்பர்க்குச் சொல்லுங்கால்: நிகரற்ற சுத்தமாகிய வெள்ளிய உண்மை ஞானத்திற்கேதுவாயுள்ள சிவத்தைப் பெற்றமையால் வந்த வளமுடையதாகிச் சத்தி பதிதலைப் பெற்றுச் சிவோகம் பாவனையினாலே குவிதலின்றி விரிந்த அன்பர்களது மனதைப் போல. (சூன்முதிர் பயலை கொண்டு - சர்வான்மாக்களையும் பெறுங் கருப்பங் கொண்ட பசிய நிறத்தையுடைய சத்தி பதிதலைப் பெற்று)" இது, தில்லை - நடராச ஓதுவார் அவர்கள் பாடங் கேட்ட குறிப்பிற் கண்டது.

சூல்முதிர் பயலை கொள்ளுதல் - சாலி - கரு முதிர்ந்து பசுமையுடைத்தாதல். அன்பர் சிந்தை-அன்பு முதிர முதிரச் சிவபெருமான் திறத்திலே ஈடுபட்டுத் திருமேனி நிறம் வேறு படுதல். "பயலை மெய்ப்போர்ப்ப", "மெய்ப்பயலை...விளம்பாயே" முதலியவை காண்க.

சுருள் விரிதல் - சாலி - கருவிற்றங்கிச் சுருண்டு பிணைந்திருந்தவை அதினின்றும் வெளிப்பட்டு விரிதல். சிந்தை - தொக்கிருந்த அறிவு வளர்ந்து விரிந்து வெளிப்படுதல். "மனமுகிழ்த்த சுருணீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்" (திருநா-புராணம்) "முகைத்த மலரின் வாசம் போல் சிந்தைமலர உடன்மலரும் செவ்வி யுணர்வு..." (சண்டேசுர நாயனார் புராணம்) முதலியவை காண்க.

நீள் வயல் - சாலி நீளுதற்கிடமாகிய வயல்.

ஆலின அன்பர் சிந்தை - ஆலுதல் - அசைதல். "விதிர்ப்புறு சிந்தையார்" என்றமை காண்க. தான் அசையாது நின்று மேனியின் மெய்ப்பாட்டுக்குக் காரணமாவது. அசைதல் அன்பு முதிர்வினைக் காட்டும் மெய்ப்பாடுகளில் ஒன்று. ஆலின - நீர்மை பொருந்திய - என்றுமாம். இவ்விரண்டு பொருளும் சாலிக்கும் பொருந்துவன. 21

கருவினால் என்றும் பாடம்.

72. பத்தியின் பால ராகிப் பரமனுக் காளா மன்பர்
தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோன்
மொய்த்துநீள் பத்தி யின்பான் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம். உஉ

(இ - ள்) பத்தியின்...போல் - அன்பின் வசப்பட்டவர்களாகி இறைவனுக்கு ஆட்செய்யும் அன்பர்கள் கூடியபோது ஒருவருக்கொருவர் தலை வணங்கி இறைஞ்சுவது போல; மொய்த்தநீள்...வணங்கி - செறிந்து நீண்ட எதிர் எதிராகக் கூடிய வரிசைகளிலே கதிர்களிற் பால் ஊறி முதிர்ந்த வகையினால் தலை வணங்கியவைகளாய்; மற்றை ...எல்லாம் - அந்த அன்பர்களுக்குச் சிவபோகம் விளைவது போலவே நெல் முதிர்ந்து போகம் விளைந்தது.

(வி - ரை) இப்பாட்டு விரியுவமம்.

மொய்த்து - கதிர்களில் இடமின்றி மணிகள் செறிந்து நிறைந்து இருத்தல். நீள் - அவ்வாறு மணி நிறைந்ததே யன்றிக் கதிர்கள் நீண்டு மிருத்தல். பத்தி - வரிசை -

மொய்த்தும் நீண்டும் உள்ள கதிர்கள் வரிசையாகிப் பலவாயிருத்தல். **கதிர்கள் முதிர் தலை வணங்குதல்** - செந்நெல்மணிகளிற் பால் ஊறி மிகுந்து காய்த்து முதிர்தலின் பாரத்தினால் என்க. **அன்பர் தலை வணங்குதல்**-அரனையும் அடியாரையும் வணங்குதற்காகவே தலையை இறைவன் கொடுத்தாராதலின் **தலை வணங்கி** என்றார். "தலையே நீ வணங்காய்" "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்" "வணங்கத் தலைவைத்து" எனவரும் திருவாக்குகள் காண்க.

அன்பர்கள் கூடியபோது ஒருவரை ஒருவர் வணங்கும் வணக்கம் இங்கே குறிக்கப் பெற்றது. இது சைவ சம்பிரதாயம். தலைதூக்கி நிற்றல் அகங்காரத்தையும், தலை தாழ்த்தல் அதன் நீக்கத்தையும், (பணிவு) குறிக்கும்.

வித்தகர்-வாலறிவாளர்கள்-**வித்தகம்** - விஞ்ஞானம். சிவனிடத்தே பதிந்த நிறைந்த அறிவு. **மற்றை வித்தகர்** - மற்றும் அவ்வித்தகர் என்க ; **மற்றும்** - மேலும்.

விளைவு - சிவபோகமும்-நெற்போகமும் என்க. மேற்பாட்டிலே சாலி கதிர் அலர்ந்தன என்றாற் போல இப்பாட்டிலேயும் சாலி பயன் முதிர்ந்து வணங்கி விளைந்தன என்று முடித்துக் காட்டினார். விளைவு - வித்தகம். ஆணவமுற்றும் வலிகெட்டு, முழுதும் ஆளாம் தன்மை இதுவே வணக்கத்தின் முதிர்வு. "வித்தகன் தன்மை ஒன்று மறிந்திலை" என்ற திருவிளையாடற் புராணமும் காண்க.

ஆளாம் அன்பர் வணங்குமாபோல் - என்றமையால் அவ்வணக்கமே பரமனுக்கு ஆளாக்குவிக்கும்—என்ற சாதன விளக்கமும் பெற்றாம். பரமனுக்காளாவார் அரன் போலவே அடியார்களையும் வணங்குவர் என்று அடியார் இலக்கணமும் பெற்றாம்.

"நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்பது சாத்திரம்.

அப்பர்சுவாமிகள் சீகாழியிலே திருஞானசம்பந்த சுவாமிகளைத் தரிசித்தபோதும், சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவாரூரிலே அடியார்கள் எதிர்கொண்டபோதும் இவ்வகைய பிற இடங்களிலும் இவ்வணக்கத்தி னியல்பு காணலாம்.

"...தொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற வணைந்தங் கரசு மெதிர்வந் திறைஞ்ச..."
—திருஞா - புரா - 271

"...பணிந்தவர்தங் கரங்கள் பற்றி எழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி"
—திருநாவு - புரா - 182

"வந்தெதிர் கொண்டு வணங்குவார்முன் வன்றொண்டர் அஞ்சலி கூப்பிவந்து..."
—தடுத் - புரா - 123

இவை நமது சமய ஆசாரியர்கள் நடத்திக் காட்டிய முறையாம்.

"...தேர்ந்த நூற், கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே"

என்றார் பிறரும். ஆயின், அவர் சாலி விளைவிலே, இவ்வாறு முழுதும் அன்பு மயமாய்க் காணமாட்டார், பசும் பாம்பின் தோற்றமும்—மேல்அலார் செல்வமும்—காண்பார் ஆயினர். சிவமே காணும் சேக்கிழார் பெருமானது பத்திக் கண்ணுக்கு நெல் விளைவு முழுதும் சிவவிளைவேயாய்க் காணும் தொடர்நிலை உவமத்தின் அழகு காணத்தக்கதாம்.

18 முதல் 20 வரை பாட்டுக்களிற் கண்ட செயல்களிலிருந்து வேறாய், நெற்போக விளைவாகிய செயலுக்குள் செல்வார், வேறு யாப்பாகிய பாட்டினாற் றொடங்கிச் செல்வதும் காண்க. "தொழுது நாறு நடுவார் தொகுதியே" (12) எனச் சிறு நாற்சீரில் நட்ட நாற்று, "மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரிய" என்று பெரு நாற்சீராய் உயிர் ஊன்றிச் "சாலிநீள் வயலி னோங்கித் தங்கி ரின்றி மிக்கு" என்று அறு

சீராய் வளர்ந்து முற்றிய செய்யுள் யாப்பு அமைதியின் அழகும் கண்டு களிகூரத்தக்கது. சிறு நாற்றுக்கேற்பச் சிறு நாற்சீர்ச் செய்யுளமைதியும் காண்க. 22

73. அரிதரு செந்நெற் சூட்டி னடுக்கிய வடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார். உரு

(இ - ள்) *அரிதரு...சேர்ப்பார்* - அரிகளாற் றரப்பெற்ற செந்நெல்லினது சூடு அடுக்கிய பெரும்போர் சேர்ப்பார்கள்; *பரிவுற...செய்வார்* - பரிவுபடப் பிடித்த பல வகை மீன்களையும் நீண்ட குன்றுபோலக் கூட்டுவர்; *சுரிவளை...உயர்ப்பார்* - புரியாகச் சுரிந்த சங்குகள் ஈன்ற முத்துக்களையும் ஒளிவீசும் குன்றம்போல உயர்த்துக் கூட்டுவார்கள்; *விரிமலர்...வைப்பார்* - விரிந்த மலர்த் தொகுதிகளைத் தேன்வடியச் சேர்த்தி ஒரு புறம் இட்டுவைப்பார்.

(வி - ரை) **அரி - சூடு** - நெல் விளைந்த பின்னர்ச் செய்யப்படுந் தொழில்கள் அரிதல், சூடு அடுக்குதல் முதலியன. இவை நெற்குவை சேர்த்தல் - புற்போர் சேர்த்தல் வரை - இது முதல் மூன்று பாட்டாலும் கூறப் பெற்றன. பெரும்பான்மை பற்றி நாறு நடுதல் முதல் குவை சேர்த்தல் வரை நெல்லையே விரித்துச் சொன்னார். பிற கரும்பு - வாழை - முதலியவையும் இவ்வாறே அவ்வவற்றிற்குப் பொருந்துமாறு அமைத்துக் கொள்க. "சோழ வளநாடு சோறுடைத்து" எனச் சோற்றுச் சிறப்பே மிகுதியாம். அதுவே மக்கட்கு இன்றியமையாதது. அதற்குப் பெரும்பான்மையும் நெல்லே வேண்டப்படுவதாம். ஆதலின் இதன் சிறப்பு இப்பகுதியில் விதந்தோதப் பெற்ற தென்க. ஆயினும் சோற்றுக்கு வேண்டிய இனிப்புத் தரும் கரும்பு முதலியவும், கனிகளும், பூவும், பிறவும் உடன் சேர்த்துக் கூறுதலும் காண்க.

அரி - நெற்கற்றை - முதனிலைத் தொழிற் பெயர் - அரிதலாலே தரப்படும் நெற் கற்றைகளை ஆகுபெய ரிலக்கணத்தாற் குறிக்கும். இது உழவர் இந்நாளிலும் வழங்கும் உயர்ந்த தனித் தமிழ்ச் சொற்களில் ஒன்று. ஒரு முறை கதிர்களைக் கையாற் சேர்த்து அரிதலால் பெறும் கற்றைக்கு, அரி என்பர்.

சூட்டின் அடுக்கல் - பன்மீன் குன்று - முத்தின் பொருப்பு - மலர்க் கற்றை வெற்பு - இவை பலவகைப் பொருள்களையும் பெரு வளம் பெறச் சேர்த்துக் குவிக்கும் மிகுதிப் பாட்டைக் குறிக்கும். அடுக்கல்—குன்று—பொருப்பு—வெற்பு—இவை யாவும் மலை என ஒரு பொருளே குறிப்பன. அளவின் மிகுதியைக் காட்டுதற்கு உவமப் பொருளாய்க் கூறுவது மலையேயாம். ஆயினும் இங்குக் குறித்த வெவ்வேறு பொருள்களுக்கு ஏற்றபடி வெவ்வேறு பெயராற் கூறினமை கூர்ந்து நோக்குக.

அடுக்கல் - மேன்மேல் அடுக்குதலால் உயர்ந்த தென்னும் நயமும், மற்றவற்றை விட அளவிற் பெருமையும் தோன்றச் **சூட்டின் அடுக்கல்** என்றார்.

சூட்டின் அடுக்கல்=சூடு - உழவு தொழிற் பொருள்களின் வழக்கப் பெயர்களில் ஒன்று. அரிகளைப் பெருங்கற்றைகளாய்ச் சேர்த்துக் கூட்டித் தட்டியபோது முதிர்ந்த பெருமணி நெற்கள் பெரும்பாலும் உதிர்ந்துவிடும். இதற்குத் **தலை உதிர்** நெல் என்று பெயர். உதிராது சில மணிகள் பசுமை முதலிய காரணங்களால் பின்னும் கதிர்களில் ஒட்டி எஞ்சி நிற்கும். ஆதலின் இவ்வாறு உதிர்த்த கற்றைகளைப் போர் செய்து குவிப்பர். இதற்குச் **சூடு** அடுக்குதல் என்பது வழக்கப் பெயராம். இவற்றைச் சிலநாட்கழித்து மேதிகளால் மிதிக்கச்செய்து எஞ்சிய நெல்மணிகளை உதிர்த்துச் சேர்ப்பர். இந்நெல்லுக்குச் **சூட்டடி நெல்-சூட்டு நெல்** என்று பெயர். இவை நிறம்-குணம்-உரு-முதலியவற்றால் தலைப்பில் உதிர்ந்த நெல்லுக்குத் தாழ்ந்திருக்கும்; ஆதலின் அதினின்றும் வேறு பிரிப்

பர். இவ்விருவகைகளை மேலே 25-ம் பாட்டிற் காண்க. பின்னும் சூடுபெறச் செய்ய நிற்பதால் இதற்கு இப்பெயர் வந்ததுபோலும்.

பரிவுற - வாழு மிடத்திலிருந்து உயிர்கள் வருந்த எடுக்கப்படுதலால் அத்துன்ப மும் இரக்கமும் தோன்றப் **பரிவுறப்படுத்த** - என்றார். **மீன் படுத்தல்** - படச் செய்தல். கொல்லாமலே, பிடித்து எடுத்தலாலேயே, உயிர் போக்கிக் கிடைக்கும்படி செய்தல் என்க. இது மீன் பிடிக்கும் தொழிலின் வழக்கப் பெயர். அதிபத்த நாயனார் புராணத் துட் காண்க.

படர் நெடுங் குன்று - மீன் படுத்துக் குவித்த பின்னும் சில போது அவை உயிரு டன் தவழ்ந்தும் குதித்தும் நிற்றலால் **படர்** என்றார். **படர்தல்** - செல்லுதல்—போதல்.

விரைவிற் கெடுந்தன்மை புடையதாதலின், குன்றுபோற் குவிப்பினும் விரை விலே செலவாக்கப்படும் எனக் குறிக்கச், சென்று கழியும் (படர்) நீண்ட (நெடும்) குன்று - என்று உரைப்பதுமாம். **குன்று** - மலையிற் சிறியது - அளவாற் சிறுமையும் குணத்தால் இழிபும், தோன்றக் **குன்று** என்றார். **குன்றுதல்** - குறைதல்.

சுரிவளை சொரிந்த முத்து - மேலே 13-வது பாட்டில் "தண்டாளம் சொரி பணி லம்" என்ற கருத்தைத் தொடர்ந்து அனுவதித்து, அந்த முத்துக்களை அரித்துச் சேர்க் கும் கால மிதுவேயாதலால் **சொரிந்த** என்று இறந்த காலத்தாற் குறித்தார்.

சுடர்ப் பெரும் பொருப்பு - முத்திலே பல நிறங்களும் விரவி ஒளிர்வதனுல் சுடர் கள் விட்டு விளங்கி அதனுற் பெரிய மலை என்க. சோதி மலை என்றவாறு. முத்து உரு வத்தாற் சிறியன ஆயினும் சுடராற் பெரியவாயின.

மலர்க் கற்றை வெற்பு - நெல்லோடு பயிராய் விளைந்த கமலம் முதலிய நீர்ப்பூக் களைப் பிரித்து ஒரு புறம் இட்டு வைக்கும் சேர்க்கை, இங்கு வெற்பு எனப்பெற்றது. கற்றையாகிய வெற்பு; வேரி பொழிந்திழி வெற்பு; என்று தனித்தனிக் கூட்டுக.

இழிவெற்பு - முன்னே குறித்த நெல் முதலிய மூன்று பொருள்களும் அவ்வவற் றின் தகுதிக் கேற்ப விரும்பும் விலை பெறுவன; ஆதலின், அவ்வாறு விரும்பப்பெறாத இதனை அவற்றினின்றும் பிரிக்குமாறு, கடைசியிற் கூறுவதுடன், **இழி வெற்பு** என்று நயம்பெறவும் கூறுதல் காண்க. 23

74. சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்குங் கரும்பெரும் பாண்டி லீட்ட
மாலிய முகிலின் கூட்ட மருவரைச் சிமயச் சாரன்
மேல்வலங் கொண்டு சூழுங் காட்சியின் மிக்க தன்றே. உச

(இ - ள்) சாலியின்...சாய்த்து - நெற்கற்றைகள் சூடு குவிந்த பெருமலைபோன்ற போரினை மேலிருந்து அளவாய்ச் சாயச் செய்து; காலிரும்...ஈட்டம் - தோற்றுவிக் கும் பெரிய ஏர்களைச் செலுத்தும் கரிய பெரிய எருமைக் கூட்டங்கள் (வலமாகச் சுற்றி மிதித்துச் சூழும் காட்சியானது); ஆலிய...காட்சியின் - நீர்த்துளி நிறைந்த கருமேகங் கள் பெரிய பொன்மலையின் சாரலின்மேல் வலம் வந்து சுற்றும் காட்சிபோல; மிக்கது அன்றே - விளக்கம் மிக்கு இருந்தது; சூடு மிதிக்கும் அந்நாளிலே.

(வி - ரை) நெற்கதிர்ச்சூட்டுப்போர் பொன்மலைக்கும், அதனைச் சாய்த்து மிதித்துச் சுற்றி வரும் கரிய எருமைக் கூட்டம் பொன்மலைச் சாரலின்மேற் சூழும் கரிய முகிற் கூட்டத்திற்கும் உவமம்.

கற்றை - பல கதிர்கள் சேர்த்துக் கட்டிய கட்டு. **துற்ற தடவரை** - துறு - சேர்த் தல் - பகுதி; துறுத்தலினுல் ஆகிய பெரிய மலைபோன்ற தொகுதி. விரிந்த பலவற் றைச் சுருங்க ஓரிடத்திற் சேர்ப்பது துறுத்தல் என்ப. "எல்லாந் துறுத்தும் பேழைப் பெருவயிறு"—பதினோராந்திருமுறை, மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை 4.

காலிரும் பகடு போக்கும் - கால் இரும்+பகடு+போக்கும் - சாலியைத் தோற்று விக்கும் (உண்டாக்கும் துணைக் காரணங்களில் முதன்மையான) கருவியாகிய பெரிய ஏர்களைச் செலுத்தும் என்க. இது **பாண்டிலின்** அடை. **காலுதல்** - தோற்றுவித்தல். "பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" என்ற பெரும்பாணாற்றுப் படையும் காண்க. **பகடு** - ஏர். "பகடு புரந்தருநர்"—புறநானூறு 35.

கரும்பெரும் பாண்டில் ஈட்டம் - **பாண்டில்** - எருமை. உழவிலும் பிறவற்றிலும் வேலை செய்வதற்கு எருமைகளையே நியோகித்தல் சேக்கிழார் சுவாமிகள் மரபு. எருது களைச் சிவபெருமானுக்கேயன்றி மனிதருக்காகச் செய்யும் வேலைகளில் ஆசிரியர் பயன் படுத்துவதில்லை.

> "......சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக்
> கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றேவிச் சுரபிகுலம்"

என்று இக்கருத்தைச் சண்டேசுர நாயனார் புராணத்துட் (22) கூறியமை காண்க. ஆதலின் இங்குப் **பாண்டில்** என்பதனை எருது எனவும், **காலிரும் பகடு போக்கும்** - என்பதில் **பகடு** என்றதற்கு எருமை எனவும் கொண்டு "வலிந்த கால்களையுடைய பெரிய எருமைக் கடாக்களோடு சேர்த்து நடாத்துகின்ற கரிய எருதுகளின் பெரிய கூட்டம்" என்றும், **பாண்டில்** என்பதை வட்டம் என்று பொருள்கொண்டு வலிய கால்களையுடைய பெரிய எருமைகள் விரைந்து போகும் சுழலால் உண்டாகும் கரிய வட்டத்தின் கூட்டம் என்றும், உரைத்த உரைகள் பொருந்தாமை உணர்க. எருதுகளில் கரியவற்றையே பொறுக்கிச் சேர்த்தலுக்கும், எருமைகளுடன் எருதுகளைச் சேர்த்தலுக்கும் இயைபின்மையும் காண்க.

அன்றியும் பயிர்களைத் தோற்றுவிக்கத் துணை செய்த அவைகளே அவற்றின் போகம் முடிவிலும் பிரிக்கத் துணை செய்வன என்ற நயமும் தோன்றுதல் காண்க.

ஆலிய முகில் - மழைத் துளிகள் பொருந்திய. நீர் நிறைந்த. (அ - ஆறும் வேற்றுமை உருபு) ஆலியை உடைய என்பது பொருள். ஆதலின் கரிய முகில் என்று உரைக்கப்பெற்றது. "வெண்முகிலாய்ப் பரந்தெங்கும் பெய்யுமா மழை" என்றபடி வெண்முகிலும் உளதாயினும் உவமப் பொருளாகிய கரும்பெரும் பாண்டிலுக் கேற்பக் கருமுகில் என்க. ஆலிய அசைவுடைய என்றுமாம். மேலே "ஆலின சிந்தை" என்றது காண்க. ஈட்டம் (சூழும் காட்சி) - மிக்கது என வினைமுடிக்க.

காட்சியின் மிக்கது - காட்சி போல விளங்கிற்று. இங்குக் காட்சி என்றதற்கேற்ப (ஈட்டம்) **சூழும் காட்சி** என முன்னரும் வருவித்துரைக்கப் பெற்றது. இடப்பெறுவது **ஈட்டம்.** இதற்காகக் கொண்டுவந்து ஓரிடத்தில் இடப் பெறுவதனால் **பாண்டிலுக்கு ஈட்டம்** என்றும், காலமும் இடமும் சேரத் தாமே கூடுவதனால் **முகிலின் கூட்டம்** எனவும் குறித்தார்.

சிகரச் சாரல்—என்பதும் பாடம். 24

75. வைதெரிந் தகற்றி யாற்றி மழைப்பெயல் மானத் தூற்றிச்
செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பு மென்னக்
கைவினை மள்ளர் வானங் கரக்கவாக் கியநெற் குன்றான்
மொய்வரை யுலகம் போலு முளரிநீர் மருத வைப்பு. உரு

(இ - ள்) வை...தூற்றி - வைக்கோலைப் பிரித்து எடுத்து வேறிடத்திற் போக்கி நெல்லை மழை தூற்றுவது போலத் தூற்றி; செய்ய...நெற்குன்றால் - சிவந்த பொன் மலையும் வெவ்வேறாகிய நவமணிக் குன்றுகளும் என்று சொல்லும்படி கைத்தொழில் வல்ல மள்ளர்கள் ஆகாயத்தை மறைக்கும்படி உயர்த்திச் சேர்த்த நெற்குன்றுகளால்;

மொய்...வைப்பு - மொய்த்த மலைகள் நிறைந்த நாட்டைப்போல இருந்தது தாமரை பூத்த தடாகங்களையுடைய மருதநிலம்.

(வி - ரை) மேற்பாட்டிற் சொல்லிய செயல்களுக்குமேற் செய்யக்கடவனவாகிய வைக்கோல் அகற்றி உதறுதல்—பதர் போகத் தூற்றுதல்—நெற்களை வகைப்படுத்திப் பிரித்துச் சேர்த்தல் எனும் இச்செயல்களை இப்பாட்டிலே கூறினர்.

பொற்குன்று—நவமணிச்சிலம்பு - செந்நெல்லுக்கும் அதினின்று வேறாகிய வெண்ணெல்—கூட்டுநெல் முதலியவற்றிற்கும் உவமை. செந்நெல்லே சிறந்து மிகுதியாயினமையின் அதனை வேறு பிரித்துப் பொற்குன்று எனவும், மற்றவை வெவ்வேறு நிறத்தனவாய்ச் சிறுசிறு அளவிலே குவிந்தன ஆதலின் நவமணிச் சிலம்பு எனவும் கூறினர். **வேறு** - வெவ்வேறு என்க. **நவமணி** பலவகைகளைக் குறித்தது. செந்நெலின் சிறப்பை அரிவாட்டாய நாயனர் புராணத்திலே காண்க.

சிலம்பு - சிறு குன்றுகள் என்க. ஒருமைப் பன்மை மயக்கம். சாதி ஒருமையுமாம். இவ்வாறன்றி நவமணிகளும் கலந்த ஒரு கலவைக்குன்று என்று ஒருமையின் உரைப்பினுமமையும்.

கைவினை மள்ளர் - மேலே 13 முதல் 16 வரை திருப்பாட்டுக்களிலே கடைசியர்களும் மகளிரும் செய்யும் செயல்களைச் சொல்லியும், களைப்பதம் காட்டல் முதலிய உழவர் செயலுட் சிலவற்றைச் சொல்லியும், காட்டிய ஆசிரியர் மள்ளர்களின் கைவினைத் திறத்தை அவர் செய்தொழில் வகையாலே இப்பாட்டிற் கூறினர். **மள்ளர் கைவினையாவது** தெரிந்து ஆற்றுதல் - தூற்றுதல் - நெல் வகைப்படுத்துச் சேர்த்தல் முதலியன.

தெரிந்து - என்பதனை அகற்றி—தூற்றி—ஆக்கிய—என்ற ஒவ்வொன்றோடும் தனித்தனிக் கூட்டுக. இவர்களது கைவினைத்திறம் நலமில்லாததாயின், நெல் வைக்கோலிற் போகியும், நெல்லும் பதரும் கலந்தும், பலநிற நெற்கள் கலந்தும் ஊறு விளைக்கும்; ஆதலின் **திறம்** என்றார்.

வானம் கரக்க - ஆகாயத்தையும் மறைக்கும்படி உயர்ந்தனவாய். தேவவுலகமும் வெட்கி மறைந்து கொள்ளும்படி என்றுமாம். என்னை? வரும் பாட்டிற் காணுமாறு, இவ்விளைவு கொண்டு அறங்கள் பேணுதல், கடவுட் போற்றுதல் முதலிய செய்கை தேவவுலகத்தில் இன்மையால் அவ்வுலகம் நாணி மறைதற்குக் காரணமாயிற்று என்க. அன்றியும் இந்நெல்லினலே அறமும் பூசனையும் ஆம் - அவற்றால் மழை ஆம் - அதனல் (முகிற் கூட்டம் சேர) வானம் மறையும் என்ற முறையினையும் குறிப்பினலுணர்க.

நெற்குன்று - பலவகை நெற்குவியல்கள். **சிலம்புக்கு** உரைத்ததுபோற் கொள்க.

மருதம் - மருதநிலம் இந்த மலைகள் உள்ளதனுற் குறிஞ்சி நிலம் போலும் என்று நயமும் சுவையும் பெறக் கூறினர் "செந்நெற்குப்பைகள் செம்பொனின் குன்றம் ஒத்தன" என்று கூறி விடுத்தனர் சிந்தாமணியார். அதனேடமையாது சுவாமிகள் இங்குப் பல வகை நெற்குவைகளி னுண்மையை எடுத்துக் காட்டியதன்றியும் மருதத்திலே குறிஞ்சியைக் காணும் திணைமயக்கம் எனும் தமிழ் இலக்கணச் சுவையையும் காட்டியது காண்க. நீர் நாட்டில் இம்மலைகளையன்றி வேறு மலைகளினது அருமையும் இங்குக் குறித்தவாறும் காண்க.

வைப்பு - சேமநிதி. பொன்னும் நவமணிகளும் கூறியதற்கேற்ப **வைப்பு** என்றார். இந்நெல்லே எல்லாச் செல்வமும் சீரும் சிறப்பும் தருமென்பதும் குறிப்பாம். நென்மணி எனும் வழக்கும் குறிக்க. 25

76. அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிக ளெங்கும். ௨௬

(இ - ள்) *அரசுகொள்...ஆற்றி* - (மேலே கூறியவாறு ஆக்கிய நெற்குவைகளில்) அரசர்க்குச் செலுத்த வேண்டிய ஆறில் ஒரு பங்கு கடமையைச் செலுத்திய பின் ; *மிகுதி...தாங்கி* - (மீந்த விளைவைக் கொண்டு) ஆங்கு முதலிற் செய்யக்கடவனவாகிய தருமங்களை விரும்பிச் செய்து, பரவுதற்கரிய கடவுட் பூசையைப் பாராட்டிச் செய்து, தென்புலத்தார்களையும் விருந்தினரையும் ஒழுக்கமுடைய சுற்றத்தாரையும் ஓம்பி, அதனால் ; *விளங்கிய குடிகள் ஓங்கி* - விளக்கம் பெறும் குடிகளால் செழித்து ; *வரை...எங்கும்* - மலை போன்ற மாடங்கள் நீடியுள்ளன அந்நாட்டுப் பதிகள் எல்லாம்.

(வி - ரை) **விளங்கிய குடிகள் ஓங்கி** - குடிகள் விளங்குதற்கும், மேலும் பெருகி ஓங்குதற்கும், காரணம், ஆற்றுதல்—பேணுதல்—போற்றுதல்—தாங்குதலாகிய நற்செய்கைகளேயாகும் என்பது குறிப்பு. முன்னர் விளங்கியதற்கும் பின்னரும் ஓங்கி வளர்தற்கும் இவையே காரணம் என்பார் **குடிகள்** என்பதனை இடையில் வைத்தார்.

அரசுகோள் கடன்கள் ஆற்றுதல் - அரசுக்குச் சேரவேண்டிய பகுதியாகிய ஆறில் ஒருபங்கு இறைப்பொருளின் கடமையைச் செலுத்துதலாம். இறைப் பொருளை முறையாகச் செலுத்துதல் குடிமக்களின் கடமையாதலின் **கடன்** என்றும், அவை காலத்தாலும் இடத்தாலும் மற்றும் பலவாற்றாலும் (வேறு வரி வகைகளும் கூட்டி) மேலும் பலவாய்ப் பின்னரும் அதிகரிப்பனவாதலின் **கடன்கள்** என்றும் கூறினார். இது குடிகளின் கடமைகளில் முதற் கடமையாம் என்பார் தெய்வத்தின் முன்னரும் வைத்து முதலிற் கூறினார். வரிகொடா இயக்கம் முதலிய இக்காலத் தோற்றங்கள் அந்நாள் தமிழ்மக்களுக்கு உடன்பாடன்றாம் என்பது இதனால் விளங்கும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
ஐம்புலத்தா றோம்பல் தலை"

என்ற நாயனார் நியதிப்படி ஒழுகுவோர் இந்நாட்டுமக்கள் என்பதை இப்பாட்டினாற் குறித்தனர்.

"இவ்வைந்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலின் அரசற் கிறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று" என்ற உரையாசிரியர் கூற்றும் காண்க. குடிமக்கள் இக்கடன்களைக் கொடாக்கால் அரசு தாமே கொள்வதற் குரியதாம்—என்ற குறிப்புத் தோன்ற **கோள் கடன்கள்** என்றார். இறைப்பகுதி அரச அங்கத்தையும் உள்ளிட்டதாதலின் **அரசர்** என்னாது **அரசு** என்றதாம்.

அரச இறையை வெள்ளி முதலிய நாணயத்தால் நிச்சயித்து விளைவுகளை வெள்ளி முதலிய நாணயங்களாக மாற்றி அரச இறை செலுத்துதல் இந்நாள் ஆங்கில ஆட்சியின் பிற்கால முறை. முன் நாளிலே விளைவுகளில் ஆறில் ஒரு பங்கே அரசு கொண்டது. ஆதலின் நெல்விளைவு கூறிய உடன் அரசிறை செலுத்தல் கூறினார். இதுவே முறையாம் என்பது அந்நாள் அரசாங்க அமைச்சராகிய ஆசிரியர் கருத்துமாம். பண்டமாற்றிற்கு உதவுதற்காகச் சங்கேதமாய் மனிதர் தரும் சத்தியைப் பெற்றதாய்க், கொள்வோரும் தருவோரும் என்ற இருவர்களின் இடையும், பண்டங்களி னிடையிலும் இடைப் புகுதலேயன்றி வேறு தனக்கென்று பொருளும் நாணயமும் மதிப்பும் அற்றதாய் உள்ள, வெள்ளி—ஈயம்—காகிதம்—முதலிய நாணயமென்ற பேர்கொண்ட பொருள்களை இங்கு ஆசிரியர் அரசுக்கும் குடிகளுக்கும் இடையிட்டுக் கூறினாரில்லை. அக்காலத்துப் பண்டமாற்று முறையும் இவ்வாறேயாம். இதனைத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் முதலியவற்றுட் காண்க. விளைபொருளின் ஒரு பகுதியளவே கொள்ளப்பெறாமல் நாணய மாற்றுக்கொண்டு அரசிறை நியமனம் பெற்ற அன்றைக்கே உழவர்களின் சங்கடங்கள் தொடங்கின என்று பொருள்நூலார் காணும் துணியும் இங்கே வைத்து உணர்தற்பாலதாம்.

மிகுதி கொண்டு - அரசிறைக் கடன்கள் செலுத்தியபின் மீந்ததாகிய விளை பொருட்பகுதி. மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவலன்றித் தங்கா ஆதலினாலும், அரசன் காவலே குடிகட்கு ஐவகைப் பயமும் தீர்த்து அறங்காத்தலுக்குக் காரணமாதலாலும், அதனை யன்றி இவ்விளைவு உண்டாமாறு இல்லையாதலாலும், அரசிறை செலுத்தலே குடிகளின் முதற்கடமை என்றும், அது செலுத்திய மீதமே பிற எல்லாவற்றிற்கும் உதவல்வேண்டும் என்றும் கூறுவார், அதனை முதலில் வைத்ததுமன்றி **மிகுதிகொண்டு** என்றும் வற்புறுத்திக் கூறினார். முன்னைய தமிழ் ஆசிரியர்களுக்கும் இதுவே கருத்தாகு மாறும் காண்க. வரிகொடா இயக்கம், சட்டமறுப்பு முதலிய பின்னாள் நிகழ்ச்சிகளை இதனோடு ஒப்பிட்டு உயர்வு தாழ்வு கண்டுகொள்க.

கடன்கள் - இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கது. பின்வரும் பிறவும் இவ்வாறே காண்க.

கடவுள் - நாயனார் தெய்வம் என்றதும் இது. தெய்வத்தை ஓம்பும் முறை நூல்களில் விதித்தபடி போற்றுதலேயாம். ஆதலின் **போற்றி** என்றார்.

தூவர் - தாய் தந்தை முதலிய முன்னோரும் அவர்க்குப் "பிரதிநிதி"களாகிய தென்புலத்தாரும் ஆம். தென்புலத்தாரைப், " படைப்புக் காலத்தில் அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி " என்பர் பரிமேலழகியார்.

தூவரும் - விருந்தும்—கிளையும் தன்னொடு சேர்த்து தொடர்பு பற்றி வருதலின் இம் மூவகையையும் [தென்புலத்தார்—விருந்து—ஒக்கல்—(குறள்)] ஒன்று சேர்த்துத் **தாங்கி** என்று ஒரே வினை எச்சத்தால் சேர்த்துக் கூறினார்.

அறஞ் செய்தற்கும் இக் குறித்த பிறவினைகள் செய்தற்கும் தான் உளனாக வேண்டுவது இன்றியமையாதாகலின் தன்னைப் பேணுதலும் அறச் செய்கையின் பாற்படும். அன்றியும் விருந்தோம்பலும் சுற்றந்தழுவலும் கூறவே தன்னை ஓம்புதலும் சார்புபற்றிக் கொள்ளநிற்கும். ஆதலின் அதனை வேறுபிரித்துக் கூறினாரில்லை என்க. அறநூலார் " தான் " என்று காட்டியது அறவகையை அளவுபடுத்திக் காட்டி இலக்கணம் வகுத்தற் பொருட்டா மென்க.

பண்பின் விரவிய - நல்லொழுக்கம் பொருந்திய கிளையே தாங்குதற் குரியது. ஆதலின் **பண்பின் விரவிய** என்றார்.

வரைபுரை மாடம் - மலைகளை ஒத்த மாடங்கள். இவை பதிகளின் வாழ்வாரது செல்வத்திற்கு அறிகுறியாகலின் **மலர்ந்துள** என்றார். **மலர்தல்** - விளக்கம் பொருந்தியிருத்தல். விளைவிலே " தான் " கொள்ளநின்ற பகுதி ஆறில் ஒருபங்கே என்க. அந்த ஆறில் ஒன்றிலே, தான், உண்டதுபோக எஞ்சியதைக் கொண்டு செல்வ மாடங்களை அமைத்தார்கள் என்று அவர்களது வாழ்க்கைச் சிறப்பும், அந்நாள் நாட்டுச் சிறப்பும் கூறியவாறு. சோழநாட்டுத் தஞ்சைச் சில்லாக் குடிகள் இந்நாளில் வரிகூடக் கொடுக்க இயலாது படும் சங்கடங்களின் காரணங்களை ஒப்புநோக்கி இங்கு உய்த்துணர்தல் நலம் தருவதாகும்.

எங்கும் - உள்ளன என்ற வினைமுடிபு வருவித்துக் கொள்க. பின்னரும் இவ்வாறே 27 முதல் 33 வரையுள்ள பாட்டுக்களிலும் வருவித்து உரைத்துக் கொள்க. 26

77. கரும்படு களம ராலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ வகிலா விட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமுங் காவு மெங்கும். ௨எ

(இ - ள்) கரும்பு...புகையோ - மள்ளர்கள் கரும்பைக் காய்ச்சுதலால் ஆலைகளினின்றும் எழுகின்ற நறிய புகையோ?; மாதர்...தூபமோ - பெண்கள் தங்கள் தலையிற்

சூட்டிய பூக்களில் மொய்த்த வண்டுகள் எழும்படியாகத் தலைக்கு ஊட்டும் அகிற்றூபமோ ?; யூப...புகையோ - யூபத்தம்பங்களை நட்டு இறைவனை நோக்கி யாகம் செய்யும் பொது அறவேள்விச் சாலைகளிற் காணும் புகையோ ?; (அது காரணமாக) வானின்...முகிலோ - வானிலே கூடும் கருமுகிலின் கூட்டமோ ?; சூழ்வ மாடமும் காவுமெங்கும் - (இன்னதென்றறிய ஒண்ணாதபடி) சூழ்வனவாகிய மாடங்களும் சோலைகளும் எங்கும் உள்ளன.

(வி - ரை) **களமர் - ஆலை** - மள்ளர். (களமர்) கரும்பு அடும் தொழிற்கிடனாகிய ஆலை. **கரும்பு அடுதல்** - கரும்பிற் சாறு பிழிந்து காய்ச்சுதல்.

பெரும்பெயர் - (ஈசுவரன்) மகா வாக்கியம். "தத்துவமசி" முதலிய மகா வாக்கியங்களாலே பேசப் பெறுபவன். "பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு" என்ற சிவஞான போதச் சிறப்புப்பாயிரம் காண்க. **பெரும்பெயர்ச்சாலை** - ஊருக்கு வெளியிலே யூபத்தம்பங்கள் நாட்டி இறைவனை முன்னிட்டுச் செய்யப் பெறும் பொது வேள்விச் சாலைகள். சண்டேசுர நாயனார் புராணம் (4) பாட்டிற் காண்க. இவற்றை அந்தணர்தம் இல்லந்தோறும் செய்யக் கடவனவாகிய நித்திய வேள்விகளினின்றும் பிரித்துணர்ந்து கொள்க. "நாதனுரை முன்னாகவே புரியுநல் வேள்வி" எனப்பின்னருங் கூறினார். **வேள்வி** - வேள் - பகுதி. ஒவ்வோர் விருப்பத்தைக் கொடுப்பது.

வானின்வருங் கருமுகிலோ - இவை வேள்வி காரணமாக வருவன என்பார் **வரும்** என்று கூறி அதனை அடுத்து வைத்தார். "அது காரணமாக" என்பதனை வருவித்துரைக்க.

களமர் ஆலை - மேலே "ஆலை பாய்பவர்" (18) என்ற பாட்டிற் கூறிய செயல்களையே பின்னும் அனுவதித்துக் கூறியது காண்க. **புகையோ—தூபமோ—புகையோ—முகிலோ** இவையாவும் சேர்ந்து இன்னதென்று அறியப்படாமல் என்க. **சூழ்வ மாடமும் காவும் எங்கும்** - சூழ்வன வாகிய மாடங்களும் சோலைகளும் எங்கும் அப்பதிகளில் உள்ளன. பதிகளாவன மேற்பாட்டிலே "மாடநீடி மலர்ந்துள பதிகள்" என்றவையாம். மாடங்களையும் முன்னரே குறித்தவாறு. சோலையும் மாடங்களும் சூழ்வன என்று உரைத்தலும் ஒன்று. இவற்றின் அணிமையும் குறிக்கப்பெற்றதாம்.

"ஆனபுகழ் வேதியர்கள் ஆகுதியின் மீதுபுகை போகி யழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடு துறையே"

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமும் காண்க. 27

78\. நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்த மெங்கும்
கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவ மெங்குந்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாக மெங்கு
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்க மெங்கும். ௨௮

இப்பாட்டினும் அடுத்த பாட்டினும் மேலே சொல்லிய சோலைகளின் விளக்கம் கூறுகின்றார். இவ்வாறு எங்கும்—எங்கும்—என்று அடுக்கிக் கூறி "உள்ளன" என்பதைத் தொக வைத்துச் சொற்சுருக்கம் பெற அழகு செய்தல் ஆசிரியரது சிறப்பியல்புகளில் ஒன்று.

(இ - ள்) வெளிப்படை.

(வி - ரை) **நாளிகேரம்** - தென்னை. **செருந்தி** - மஞ்சட்பூப் பூக்கும் ஒருவகைப் பூமரம். "செருந்தி செம்பொன் மலர் திருநெல் வேலியுறை செல்வர் தாமே"—என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம். செருந்தி என்பதற்கு - வாட்கோரை - மணித்தக்காளி என்றும் உரை கூறுவர். அவை ஈண்டைக்கு ஏலாமையின் விடுக்க.

நாரந்தம் - நாரத்தை. இதன் பூக்களின் மணம் மிகுதிபற்றி **நறுமலர்** என்றார்.

கோளி - அரசு; **சாலம்** - கடம்பு. மரா என்றும் ஆச்சா என்றும் கூறினும்ஆம்; **தமாலம்** - பச்சிலை மரம். "சம்பக மாதவி தமாலங் கருமுகை" என்ற சிலப்பதிகாரம் காண்க.

குளிர் மலர்க் குரவம் - குளிர்ச்சி தரும் மலர்களுடைய குராமரம். இது சிவ பெருமானுக் குகந்தமலர் என்பது "குராமலரோ டராமதியம் சடைமேற் கொண்டார்" என்ற திருத்தாண்டகத்தால் விளங்கும்.

தாள் இரும் போந்து - வலிய பெரிய அடிப்பாகத்தையுடைய பனை. தாள்இரும் - இருந்தாள் என மாற்றுக. பனையின் அடிப்பாகம் பெருத்தும் வலிமை பெற்றும் உள்ள தென்பது. **தாள்** - அடிபக்கம் - "பனந்தாள்", பனையின் அடியில் இறைவன் வீற் றிருத்தலால் வந்த தலப்பேரும் காண்க.

சந்து - சந்தனமரம்; **நாகம்** - குங்கும மரம்; **நீள் இலை வஞ்சி** - நீண்ட இலைகளை யுடைய வஞ்சிமரம்; **காஞ்சி** - காஞ்சிமரம்; **நிறைமலர்க் கோங்கம்** - பூக்கும் காலத்தில் நிறையப் பூக்களையே கொடுக்கும் இயல்புடைய கோங்கமரங்கள். "கோங்கமே குரவமே" என்ற தேவாரமும் காண்க. **நறுமலர்—குளிர்மலர்—தண்மலர்—நிறைமலர்**—என்று அவ்வம் மரங்கள் மலராகிய பயன் தருவன என்பதும், மலர்களின் இயல்பு இத்தன்மை யன என்பதும், சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருத்தல் காண்க.

தாளிரும்போந்து...நீளிலை வஞ்சி - இந்த அடைமொழிகள் இப்பொருள்களின் சிறப்பியல்பை உணர்த்தியவாறு. இதிலும் அடுத்த பாட்டிலும் சோலைகளையே கூறினாரேனும் இப்பாட்டிற் கூறியவை பெரும்பான்மை மனிதரின் முயற்சியின்றித் தாமே நீர்ப் பெருக்கு மிக்குள்ள இடங்களில் முளைத்து வளர்ந்து செறிந்து காணப்படு வனவும் ஏகதேசத்தில் பயன் தருவனவுமாம். வரும் பாட்டிற் காண்பன இத்தனை செறிவில்லாதனவும், மனிதர் முயன்று பயிர்செய்து ஆக்குவனவும், ஒவ்வோரிடங்களில் பிரிந்து பிரிந்து காணப் பெறுவனவும், இவற்றினும் பார்க்க அதிக பலன் தருவனவும், ஆம். ஆதலின் அவற்றை வேறுபிரித்து அடுத்த பாட்டிற் கூறியதுமன்றி, இப்பாட் டிற் பல மரத்தொகுதி சேர்த்துக் கூறியதுபோலக் கூறாது ஓர் அடியிலே மரங்களையும் செடிகளையும் இவ்விரண்டுமுறை "எங்கும்" என்ற சொல்லாற் பிரித்தும் காட்டினார்.28

79. சூதபா டலங்க ளெங்குஞ் சூழ்வழை ஞாழ லெங்கும்
சாதிமா லதிக ளெங்குந் தண்டளிர் நறவ மெங்கும்
மாதவி சரள மெங்கும் வகுளசண் பகங்க ளெங்கும்
போதவிழ் கைதை யெங்கும் பூகபுன் னாக மெங்கும். உகூ

(இ - ள்) வெளிப்படை.

(வி - ரை) **சூத பாடலங்கள்** - சூதங்களும் பாடலங்களும்; உம்மைத்தொகை. **சூதம்** - மா; **பாடலம்** - பாதிரிமரம். **சூழ்வழை** - கொத்திலே மலர்கள் மொய்த்து நிறை யப் பூக்கும் சுரபுன்னை. **சூழ்** - கொத்தில் மலர்கள் நிறைந்து சூழும் இயல்புடைய என்க. **ஞாழல்** - குங்குமப்பூ மரங்கள். **சாதி** - சாதிப்பூ - கொடிப்பூ வகை. இதனைப் பிச்சி என்றும் கூறுவர். **மாலதி** - முல்லை; மல்லிகையுமாம்.

தண்தளிர் நறவம் - அனிச்சம். (இது கோட்டுப்பூ வகை) மிக மெல்லிய இதழ்களை யுடைமையால் **தண் தளிர்** என்றார். "மோப்பக் குழையும் அனிச்சம்" என்பது குறள்.

மாதவி - குருக்கத்தி. **சரளம்** - ஒருவகைத் தேவதாரு; நீண்ட இலையுடையது. "நாக சூத வகுளம் சரளம்" என்று பின்னர் வருதலும் காண்க. (தடுத் - புரா - 93.)

வகுளம் - மகிழமரம். வகுளமும் சண்பகமும் ஆகிய இருவகை மரங்களும் **வகுள சண்பகங்கள்** என்று பன்மையிற் கூறினார். முன்வரும் பன்மைகளும் இவ்வாறே.

போதவிழ் கைதை - மடல்கள் விரிந்த பூக்களையுடைய தாழை. சோற்றின் அவிழ் போன்ற போதுகளையுடைய தாழை என்றுமாம். **பூகம்** - கமுகு. **புன்னாகம்** - புன்னை.

மேலே இந்நாடு பெரும்பான்மை மருதத்திணையாகச் சொன்னாரேனும் மேற் பாட்டிலும் இப்பாட்டிலும் குறித்த பொருள்களாகிய கோட்டுப் பூ—கொடிப்பூவாதி பல வகைப் பூமரம் கொடி முதலியவை மருதம் நெய்தல் முதலிய பல்வகை நிலப் பொருள் களாய் மயங்கியும் விரவியும் வருதல் அந்நாட்டிலே பலவகைத் திணைகளும் விரவியிருத் தலைக் குறிக்கும். திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்திலே தொண்டை நாட்டிற்குச் சொல்லியவாறே இந்நாட்டிற்கும் இவ்வாறே பிறநாடுகளுக்கும் வைத்துக் கண்டுகொள்க. 29

80\. மங்கல வினைக ளெங்கு மணஞ்செய்கம் பலைக ளெங்கும்
பங்கய வதன மெங்கும் பண்களின் மழலை யெங்கும்
பொங்கொளிக் கலன்க ளெங்கும் புதுமலர்ப் பந்த ரெங்குஞ்
செங்கயற் பழன மெங்குந் திருமக ளுறையு ளெங்கும். கூ0

(இ - ள்) வெளிப்படை.

(வி - ரை) **மங்கலவினைகள்** - பலவகை மங்கலச் செயல்கள். **மணஞ்செய் கம் பலை**-அவற்றிலே சிறந்ததாகவும் கம்பலை மிகுதியாகவும் உள்ளதென்று குறிக்க இதனை வேறுபிரித்துக் கூறினார். **கம்பலை** - ஆர்ப்பரிப்பு - முழக்கம். **கம்பலைகள்** என்ற பன்மை, பல மணங்களில் நிகழும் முழக்கங்களின் வெவ்வேறு வகைகளைக் குறித்தது.

பங்கய வதனம் - மேற்கூறிய மணமுதலிய மங்கலங்களிலே கூடி வினை செய்யும் பெண்களின் தாமரைபோன்ற முகங்கள். **பண்களின் மழலை** - அவ்வினைகளில் அவர் கள் மழலையினால் மிழற்றும் பண்ணிசைகள். பெண்களின் இன்சொற்கள் பண்போன் றிருத்தலாலும் அவர்களது மழலையிற் பண்களிருத்தலாலும் இவ்வாறு கூறினார்.

"பண்ணி னேர்மொழி யாள்உமை பங்கர்"—**தேவாரம்.**

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும், பெண்சுமந்த பாகத்தன்"—**திருவாசகம்.**

"பண்ணி னேரும் மொழியாளென் றெடுத்துப் பாடப் பயன்றுய்ப்பான்"

—**திருநாவு - புராணம்.**

முதலிய திருவாக்குகள் காண்க.

கலன்கள் - ஆடவர்களும் மகளிரும் அணியும் அணிகள்.

புதுமலர்ப் பந்தர் - மேற்கூறிய மங்கல வினைகளுக்காகப் போந்து அழகு செய் வன. புதுமலர்ப் பந்தர் இடுதல் மங்கலஞ்செய் வினைகளுள் ஒன்றென்பது,

"பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையுற அறுத்துத் தூங்க நாற்றி"

என்ற திருமுருகாற்றுப்படையாலும் காணப்பெறும்.

"தாதவிழ்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து"—**தடுத் - புரா** - 121.

"தோடு குலவு மலர்மாலை சூழ்ந்த வாசப் பந்தர்களும்"—**திருநா - புரா** - 319.

என்பனவாதி புராணத் திருவாக்குகளும் காண்க.

செங்கயல் பழனம் - செங்கயல் மீன்கள் நிறைந்த வயல்கள்.

திருமகள் உறையுள் - இலக்குமி வாழும் இடம்—இருப்பிடம். மங்கல வினைகள் நிகழும் இடங்கள் யாவும் அந்த வினைகளின் சிறப்புக்களால் இலக்குமிதேவியே வசிக்கும் இடங்களாகத் தோன்றின என்பது. **திருமகள் உறையுள்** - தாமரை என்றுரைப்பினும் அமையும். இப்பொருளில் - பழனம் எங்கெங்கும் தாமரையும் கயலுமாம் - என்க.

முதலில் மங்கலவினைகள் எனப் பொதுப்படக் கூறிப் பின்னர் அவற்றின் நிகழும் கம்பலைகளும், அவற்றில் வினைசெய் பெண்களும், அவர் மழலையும், அவர் அணிகளும், அவ்விடங்களின் அழகும் தொடர்ந்து கூறினாராயிற்று. 30

81. மேகமுங் களிறு மெங்கும் வேதமுங் கிடையு மெங்கும்
யாகமுஞ் சடங்கு மெங்கு மின்பமு மகிழ்வு மெங்கும்
யோகமுந் தவமு மெங்கு மூசலு மறுகு மெங்கும்
போகமும் பொலிவு மெங்கும் புண்ணிய முனிவ ரெங்கும். ௫௧

(இ - ள்) வெளிப்படை.

(வி - ள்) மேகமும் களிறும் - முகில்களும் யானைகளும் ஒருங்கே விரவிக் காணப் பெறுகின்றன. முகிலோ - யானையோ என நிறத்தினாலும் அளவினாலும் முழக்கினாலும் பிரித்துணரப்படாமல் ஐயமுறும்படி பொருந்தின. இவை யிரண்டின் ஓசையும் மங்கல ஓசைகளாம். "காரெதிர் தான மாக்கள் முழக்கமும்" என முன்னரும் கூறினமை காண்க. (திருமலை - 4)

வேதமும் கிடையும் - வேத மோதுதலும் அவைகளை மாணவர் பயிலுதலும் ஆகிய இடங்கள். "ஓது கிடைசூழ் சிறுவர்களும் உதவும் பெருமை யாசானும்" (சண்டேசர் புரா - 3) "ஓது கிடையி னுடன் போவார்" (சண்டேசர் புரா - 17) **கிடை** - மாணாக்கர் பயிலுமிடம். **மறுகு** - தெருக்கள் ; வீதிகள்.

மேகவோசை—யானை ஓசை—வேத ஓசை—இம் மூன்றும் விரவி முழங்குவன என இவற்றை ஓரடியில் வைத்துக் கூறினார்.

"ஆரணங்களே யல்ல மறுகிடை, வார ணங்களும் மாறி முழங்குமால்"—**திருநகர்-10** எனப் பின்னர்க் கூறுவதும் காண்க. யானைப் பந்திகள் நாட்டிலே நகரங்களின் புறத்து அமைவன. அந்நகர்ப்புறங்களிலேயே வேதம் ஓது கிடையும் யூப வேள்விப் பொதுச் சாலைகளும் அமைவன. வேள்வியினால் மேகங்கள் உண்டாவன - ஆதலின், களிறும் - யாகமும்-மேகமும் - ஓரிடத்து நிகழ்பொருள்களாகி இப்பாட்டில் ஒருங்கே கூறப்பட்டன. "வேள்வி நற்பயன் வீழ்புன லாவது" என்ற பிரமாணமும் காண்க.

யாகமும் சடங்கும் - யாகங்களும், அவற்றிலே முன்னும் பின்னும் செய்யும் சடங்குகளும். சண்டேச நாயனார் புராணத்திலே "கோதின் மான்றோற் புரிமுந்நூல்" (3) என்ற பாட்டிலே வேதமும் கிடையும் கூறிய ஆசிரியர் அதனோடு சாரவைத்து அடுத்த "யாக நிலவு" (4) எனும் பாட்டில் "யாகமும்களிறும்" கூறினமையும் இங்கே சிந்திக்கற்பாலது. இந்த யாகங்கள் சிவபெருமானைக் குறித்துச் செய்யப் பெறுவன.

இன்பமும் மகிழ்வும் - "இருமைக்கும் இன்பம் அளிக்"கின்றவையாய்த் "தீது நீங்கச் செய்யப்" பெறுவனவாய் உள்ள யாகங்களைச் செய்ததனாலே உளதாகும் அனுபவமாகிய இன்பமும், மகிழ்வைத்தரும் செயல்களும் என்க. யாகங்களினியல்பு திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் 280—429—திருப்பாட்டுக்களிற் காண்க. **இன்பம்** மனத்தால் அனுபவிக்கப் பெறுவது. **மகிழ்வு** அவ்வுணர்ச்சியாற் புறத்தே நிகழ்வது.

போகமும் பொலிவும் - போகமும் அவற்றுற் புறத்தே தோன்றும் விளக்கமும். இன்பம் மனத்தாலும், போகம் புற இந்திரியங்களாலும் அனுபவிக்கப் பெறுவன. ஆத லின் இவை பின்னர் வைக்கப் பெற்றன. போகமும் பொலிவும் - யாகங்களாலும் யோகங்களாலும் முறையே பயனுய்ப்பெற்ற போகங்களும் அவற்றின் பொலிவும். பொலிவு - விளக்கம்.

யோகமும் தவமும் - மேற்கூறிய யாகங்களேயன்றி, யோக முயற்சிகளும் பிற தவங்களும். இவையும் யாகங்ளைப் போலவே இல்வாழ்வாராற் செய்யப் பெறுவன. யோகத்தினியல்பும் பயனும் ஔவைப்பிராட்டியார் அருளிய விநாயகரகவலிலும், திரு வாதவூரர் புராணம் உபதேசப் பகுதியிலும், பிற நூல்களிலும் காண்க. தவம் - சரியை யாளர் மலர் பறித்தல் - கிரியையாளர் சிவபூசை செய்தல் - முதலியன.

ஊசலும் மறுகும் - (ஆடவர்கள் தவமும் யோகமும் பயில, அவரது) பெண்கள் பயிலும் ஊசலும் அவை பயிலிடமாகிய மறுகும் என்க.

புண்ணிய முனிவர் - மேற் சொல்லிய வேதம்—யாகம்—யோகம்—தவம்—முத லியவற்றுல் போகம் பெற்றுச் சிவ புண்ணியம் செய்யும் முனிவர். இல்வாழ்வாராயினும் போகங்களிலேயே மூழ்கிவிடாது தனி நிற்பார் என்பார் முனிவர் என்றுர். முனிதல் - வெறுத்தல். "இயற்பகை முனிவா வோலம்" முதலிய திருவாக்குக்கள் காண்க.

மேற்பாட்டிலே வீணைகள் - கம்பலைகள் - வதனங்கள் - முதலிய ஒவ்வோர் பொருள் களாகக் குறித்தார். இப்பாட்டிலே இடத்தாற் பொருத்த முற்ற - மேகமுங்களிறும் - என் றும், பொருளாற் பொருத்தம் பெற்றுத் தொடர்புகொண்டு ஒரே பொருளின் தன்மை யுடைய-வேதமும் கிடையும் - யாகமும் சடங்கும் - என்றும், இவ்விரண்டாய்ச் சேர்த் துக் குறித்தார். அவற்றின் தொடர்புகள் கண்டு கொள்க.

வேதம் - ஓதுவோரின்றியே - இறைவன் வாக்காய் நாதப்பிரமமாய் அநாதியே இருப்பதாதலின், வேதமும் கிடையும் - எனப் பிரித்துக் கூறியதாம்.

புண்ணியங்கள் "செய்வோரின்றிச் செய்வினையின்மையின்" என்றபடி அவற் றைச் செய்வோரிடத்தன்றித் தனித்து நில்லாமையால் மேலே சேர்த்துக் கூறிய மற்ற வற்றைப் போலப் புண்ணியமும் முனிவரும் என்னுது புண்ணிய முனிவர் எனப் புண்ணி யத்தை முனிவருக்கு அடை மொழியாக்கிக் கூறியதாம்.

இதுவரை கூறியவை பொருளைப்பற்றி அணி செய்தனவாம். 31

82. பண்டரு விபஞ்சி யெங்கும் பாதசெம் பஞ்சி யெங்கும்
வண்டறை குழல்க ளெங்கும் வளரிசைக் குழல்க ளெங்கும்
தொண்டர்த மிருக்கை யெங்கும் சொல்லுவ திருக்கை யெங்கும்
தண்டலை பலவு மெங்குந் தாதகி பலவு மெங்கும். ௩௨

இதுமுதல் மூன்று பாட்டுக்களில் நாட்டிற்குச் சொல் அணியைச், சொல் அணியி னும் வைத்து நாட்டுகின்றுர் ஆசிரியர்.

(இ - ள்) (அந்நாட்டின் எங்கெங்கும்)பண்தரு விபஞ்சி - பாதசெம்பஞ்சி - திணைக்கு ஏற்ற பண்களைத் தருகின்ற வீணைகளும், பெண்களின் பாதங்களில் ஊட்டிய செம்பஞ் சிக் குழம்பாகிய அணிவகையும் அவற்றின் அடிச்சுவடும் உள்ளன; வண்டு அறை குழல் கள் - வளர் இசைக் குழல்கள் - வண்டுகள் சத்திக்கும் கூந்தல்களும், இசை முழக்கும் வேய்ங்குழல்களும் உள்ளன ; தொண்டர் தம் இருக்கை - சொல்லுவது இருக்கை - தொண்டர்களுடைய இருப்பிடங்களிலே எப்போதும் சொல்லப்பெறுவது வடமொழி தென்மொழி வேதங்களே ; தண்டலை பலவும் - தாதகி பலவும் - சோலைகள் பலவற்றி லும் ஆத்தியும் பலாமரங்களும் விளங்கும்.

(வி - ரை) பாத செம்பஞ்சி எங்கும் என்றதனால் ஆடல் குறித்தவாறு.

"பாடலாடல் இன்னியங்கள் பயிறன் முதலாம் பண்ணையினில்
நீடு மினிய விநோதங்கள் நெருங்கு காலந் தொறுநிகழ
மாடு விரைப்பூந் தருமணஞ்செ யாரா மங்கள் வைகுவித்து"
—கழறிற்றறிவார் நாயனார் புராணம் - 154

என்று பின்னர் எடுத்துரைக்குமாறும் காண்க.

விபஞ்சி - யாழ்வகைகளில் ஒன்று. **வளரிசை** என்றதனை யாழுடனும் சேர்த்துக. யாழுங் குழலும் இன்னிசைக் கருவிகளிற் சிறந்தவையாதலின் அவையிரண்டும் சேர்த்து **யாழ் - இசைக்குழல்** என இங்குப் பேசப்பெற்றன. "குழலினிது யாழினிது" என்று சேர்த்து நாயனார் எடுத்துக் காட்டியமை காண்க. இன்னியங்கள் இயற்றுவோர் அந்நாளில் அவைபோன்றே இனியராகிய பெண்களாதலாலும் - அதுவே தகுதியாதலாலும் - அவர்களையும் உடனே சொல்லிப் பாதாதியாக அலங்கரித்துப் **பாத செம்பஞ்சி** என்றும், **வண்டறை குழல்கள்** என்றும் ஒரு சேரவைத்துப் பேசினாராகும்.

வண்டறை குழல் - வேய்ங் குழற் கானஞ் செய்யும்போது அடுத்துக் கூந்தலில் உள்ள வண்டுகளும் ஒத்துச் சத்தித்தன ஆதலின் இரண்டையும் ஒன்று சேர்த்து **வளரிசை** என்றார் என்பதுமாம்.

இருக்கை - இருப்பிடம். இருக்கு+ஐ (இரண்டாம் வேற்றுமை யுருபு) வேதத்தை என்க. இருக்கு வேதத்துக்குப் பொதுப் பெயர். "தூயகா விரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி" என்ற தேவாரம் காண்க. கைத்தொண்டும் வாய்த்தொண்டும் கூறியவாறு, இவை கூறவே, மனத்தொண்டும் இன்றியமையாது உடனே பெறுதலும் காண்க.

தண்டலை பல - சோலைகளே தொண்டர்க் கிருப்பிடமாகவும், அவ்விடமே வேத கானம் நிகழுமிடமாகவும் உள்ளனவாதலும், அவ்விடங்களே யாழ்-குழல்-ஆடல்-பாடல் - பயிலும் இடமாதலும் குறிப்பிட்டமை காண்க. **தண்டலை** - சோலை. **தாதகி** - ஆத்தி. **பல்வு** - பலா.

இப்பாட்டிற் சொல்லியவை வெறும் சொல்லணியாய்க் கூறிய துணையேயன்றிப் பொருளியல்பில் ஒன்றற்கொன்று வேறுபட்ட பல பொருள்களென வெளித் தோற்றத்தில் தோன்றினும் அழகிய தொடர்புபெற்ற ஒரே உள்ளுறை கொண்டனவாதல் கண்டு களிக்கத் தக்கதாம். அந்நாட்டு மக்களது இன்பவாழ்க்கையின் இயல்பு கூறியவாறு.

இவ்வாறே மேல்வருகின்ற இரண்டு பாட்டினும் கண்டுகொள்க. 32

83. மாடுபோ தகங்க ளெங்கும் வண்டுபோ தகங்க ளெங்கும்
பாடுமம் மனைக ளெங்கும் பயிலுமம் மனைக ளெங்கும்
நீடுகே தனங்க ளெங்கும் நிதிநிகே தனங்க ளெங்கும்
தோடுசூழ் மாலை யெங்குந் துணைவர்சூழ் மாலை யெங்கும். ௩௩

இது சோலைகளினின்றும் போந்து மாளிகைகளைக் கூறுவது

(இ - ள்) வெளிப்படை.

(வி - ரை) **போதகம்** - யானைக் கன்று. **மாடு** - பக்கம். **போது+அகங்கள்** - மலர்களின் உள்ளிடங்கள். போதுகள் அலரும்போது வண்டுகள் குடையும் என்க. **பாடும்+அம்+மனைகள்+எங்கும்** - பாடல்கள் பாடப்பெறும் அழகிய வீடுகளிலே எல்லாம். **அம்** - அந்த என்பதுமாம். **பயிலும்+அம்மனைகள்** - பெண்கள் பயில்கின்ற அம்மனை என்கின்ற விளையாட்டுக்கள். **கேதனம்** - கொடி. **நிதி+நிகேதனம்** - நிதிகள் பலவகையும் நிறைந்த சேம வைப்புகள். பொன்னாற் செய்யப்பெற்ற கோயில் என்றும் கூறுவர். **தோடு** - இதழ்கள் செறிந்த பூக்கள். **சூழ் மாலை** - பூக்கள் சூழ்ந்து பிணைக்கப்பெற்ற

மாலைகள். எந்தும் - எங்கும் அணிந்த. துணைவர் சூழ்மாலை - காதலர் காதலிகள் தொடர்ந்து உள்ள வரிசை. இவைகள் எங்கும் உள்ளன.

அம்மனை - மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. இது இறைவன் புகழ்களை வாயினாற் பாடிக்கொண்டே அம்மனைகளைக் கையில் ஏந்தி மேலே மேலே மாற்றி மாற்றி எறிந்து விளையாடுவதாம். அம்மனைகள் மூன்று முதல் ஐந்து வரை கொள்வர். ஏனைக் கழல் - பந்து முதலிய ஆட்டங்கள் போலவே அம்மனையும் பாடலுடன் சேர்ந்து பயிலப் பெறுவதென்பது,

"தருந்தடக்கை முத்தழலோர் மனைகடோறு மிறைவனது தன்மை பாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே"

என்பனவாதி திருவாக்குக்களால் உணரப்பெறும். இதுபற்றியே "பாடும் அம்மனைகள் எங்கும் பயிலும் அம்மனை" என்று உடன் சேர்த்திக் கூறினார்.

மேற்பாட்டிற் கூறிய சோலைகளிற் பயிலும் வீணை குழல் - இசைகளும் இவ்வாறே இறைவனைப் பற்றியன என்பது தொண்டர் தம்மிருக்கை என்ற குறிப்பாற் காண்க.

இப்பாட்டிலும் குறித்த பொருள்கள் தொடர்பு பெற்று ஓரிடத்து நிகழ்வன. யானைக்கன்றுகள் வளருமிடங்களும், மலர்ச்சோலைகளும் நிறைந்து, இவற்றிற்கிடையே தோன்றும் மனைகள் மாளிகைகள் பலவளங்களும் நிறைந்தனவாய்ப் பெண்கள் விளையாடு மிடமாகவும், நாயகர் நாயகிகள் இன்ப வாழ்வு கொள்ளுமிடமாகவும், உள்ளன.

யானைப்பந்திகள் ஊருக்கு வெளியே உள்ளன என்பது மேலே கண்டோம். யானைக்கன்றுகள் மாளிகைகளின் பக்கம் சோலைகளில் வளர்க்கப் பெறுவன.

கேதனம் - "வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்", "விதானமும் வெண்கொடியுமில்லா வூரும்" என்றபடி கொடிகள் மனைகளின் மேலும், மற்றும் நகரங்களின் பல இடங்களிலும் காணும் மங்கலப் பொருளாம். 33

84. வீதிகள் விழவி னார்ப்பும் விரும்பினர் விருந்தி னார்ப்புஞ்
சாதிக ணெறியிற் றப்பா தனயரு மனையிற் றப்பா
நீதிய புள்ளு மாவு நிலத்திருப் புள்ளு மாவும்
ஓதிய வெழுத்தா மஞ்சு முறுபிணி வரத்தா மஞ்சும். ௩௪

(இ - ள்) வெளிப்படை. விழவு + இன் + ஆர்ப்பு - கோயிற்றிருவிழாக்களினுடைய இனிய முழக்கங்கள்; விரும்பினர் விருந்தின் ஆர்ப்பு - விருப்பமுடன் செய்யப் பெறும் விருந்தோம்பலின் சிறப்பு; இவ்விருவகை ஆர்ப்பும் வீதிகளில் மிக்கன; சாதிகள் நெறியில் தப்பா - எவ்வெச்சாதியில் உள்ளோரும் தத்தமக்கு விதித்த ஒழுக்க நிலைகளிலிருந்து தவறமாட்டார்கள்; தனயரும் மனையிற்றப்பா - வீடுகள் தோறும் (தப்பாமல்) தனயர் உளர்; நீதிய புள்ளும் மாவும் - (பகை முதலிய குண பேதங்களையுடைய) பறவைகளும் விலங்குகளும் அவற்றை ஒழித்துத் தத்தம் வரம்பிலேயே நிற்கும்; நிலத்து இருப்பு உள்ளும்—மாவும் - (அல்லது ஆவும்) - தேவ உலக நிலையாகிய இலக்குமியும் (அல்லது பசு—காமதேனுவும்) இந்நாட்டிலே இருக்க நினைப்பர்; ஓதிய எழுத்து ஆம் அஞ்சும் உறுபிணி-வர-தாம் அஞ்சும் - எல்லா உயிர்களும் எழுத்தாகிய ஐந்தையும் (ஐந்தெழுத்தையும்) ஓதின; (அல்லது ஓதியன ஐந்தெழுத்தேயாம் - எழுத்து அஞ்சும் ஓதிய ஆம்) வரக்கடவனவாகிய சென்மப் பிணியும் உயிர்களைப் பீடிக்க வருவதற்குத் தாம், அக்காரணத்தால், அஞ்சுவன.

(வி - ரை) விழவு - விழா என்பது கடைநெடில் குறுகி விழ என்றாயிற்று. நிலா—நில—நிலவு என்றாற்போல. இங்கு விழ - அல்லது விழவு என்று கொள்க.

விரும்பினர் விருந்தின் - விருந்து விரும்பினரின் ஆர்ப்பு என்க. விரும்பினராகிச் செய்யும் விருந்து என்றுமாம். **விருந்து** - புதுமை. இது ஆகுபெயராய், தொடர்பு பற்றாது புதிதாய் வருவோரை உணர்த்தும். உலக வழக்கிலே இவர்களைச் சுற்றத்தாருடன் ஒன்றாய் மயங்கி வழங்குவர். சுற்றத்தார் தொடர்புபற்றி வருவோர். சுற்றம் வேறு; விருந்து வேறு.

சாதிகள் நிலையிற்றப்பா - சாதி-பிராணிகளுக்குள் ஒருபுடை ஒப்புமையாற் பிரிக்கப் பெறும் பகுப்பு. விலங்கின் சாதி—மக்கட் சாதி—என்பனபோல. மனிதச் சாதிக்குள்ளும் சமூகவாழ்க்கை ஒழுங்குக்கு இன்றியமையாததாய் நிறம்—குணம்—தொழில்—மொழி—பிறப்பு—முதலிய ஒவ்வோர் காரணம்பற்றிய பகுப்புக்களும் **சாதி** எனப்பெறும். இவை முற்கூறிய காரணவகையால் தேயந்தோறும் காலந்தோறும் வேறுபாடுடையன. ஆயினும் மக்களின் கர்ம வேறுபாடுகளும், உடம்பு உயிர் வேறுபாடுகளும் உள்ளவரை இவை எவ்வகையாலாவது எப்பெயராலாவது, இவ்வுலகநடை உள்ளவரையில் இருப்பனவேயாம். இவ்வுலக மக்களை வெள்ளை—கறுப்பு—மஞ்சள் என்ற நிறவேறுபாட்டால் மூன்றாகப் பகுக்கும் ஒரு பெரும் சாதிப்பிரிவை உலகம்பேசி ஒப்புக்கொள்கிறது. இவைபோல்வனவே பிறவும் காண்க. இதன் உள்ளுறை தத்துவங்களை உணராதார் பற்பலவாறு மயங்கிப் பூசலிட்டுக் கலகத்துக்குக் காரணமாவர். இந்நாட்டில் உள்ள சாதி வேறுபாட்டின் சிறப்பியல்புகளை நூல்களின் வாயிலாகவும் உலகியல் வாயிலாகவும் உய்த்துணர்ந்து கொண்டு ஒழுகுதல் நலந்தரும். **சாதிகள் நிலையிற்றப்பா** என்பது அந்தந்தப் பகுப்புக்கு விதித்த ஒழுக்கத்தில் வழுவாது நிற்றலைக் குறித்தது.

தனயர் - குழந்தைகள் எனப் பலவின்பாற் பொருள் தந்து (மகவு என்பதுபோல) தப்பா என்னும் அஃறிணைப் பலர்பால் வினைமுற்றுக் கொண்டது. மனைக்கும் மனை வாழ்க்கைக்கும் நன்கலனாவது மக்கட்பேறேயாம். அவற்றையின்றி வேறு சிறப்புக்கள் ஒன்றும் பயன்படா ஆதலின் **தனயர் மனையிற்றப்பா** என்றார். மனைகள்தோறும் தப்பாமல் மகவுகள் உண்டு என்க.

“ மங்கல மென்ப மனைமாட்சி ; மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு ”

என்பது நாயனார் திருவாக்கு. மேலே “துணைவர்சூழ் மாலை” என்று மனைமாட்சி கூறின ஆசிரியர் இப்பாட்டினால் மக்கட்பேறாகிய மனைமாட்சிக்கு நன்கலனைக் கூறினார்.

நீதிய புள்ளும் மாவும் - அறிவில்லாத பறவைகளும் விலங்குகளும் கூட நீதிபெற ஒழுகின. உம்மை சிறப்பும்மையாம். உம்மையினால் அறிவில்லாத என வருவிக்கப்பெற்றது. **புள்** - ஆகாயவாசிகளாகிய பிராணிகளுக்கும், **மா** - நிலம் நீர் வாசிகளாகிய பிராணிகளுக்கும் குறியீடாகிய சாதிப்பெயர்.

உறுபிணி வரத்தாம் அஞ்சும் - அறிவில்லாத புள்ளும் மாவும் முதலியவற்றின் நீதியாலும் அறிவுள்ள உயிர்களது ஐந்தெழுத்து ஓதுவதாலும், மா - (ஆ) இந்நிலத்தின் ஆசைப்பட்டு இங்கே யிருத்தலானும், இந்நாட்டின் மாக்கள் மக்கள் தேவர் முதலிய எவ்வுயிரையும் பொருந்த உறுபிணி வர அஞ்சுவதாயிற்று. சென்ம முதலாகிய கருமப்பிணி அஞ்சும் என்னவே அதனுள் உடற்பிணியும் அடங்கும்.

நிலத்து இருப்பு உள்ளும் மாவும் (ஆவும்) - இலக்குமியும் காமதேனுவும் விரும்பும் பொருள்கள் இங்கு உள்ளமையாலும், அவர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற தலங்கள் உள்ளமையாலும் இவ்வாறு கூறினார்.

மனையிற்றப்பார்—என்பதும் பாடம். 34

85. நற்றமிழ் வரைப்பி னிங்கு நாம்புகழ் திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்குந்

கொற்றவ னநபா யன்பொற் குடைநிழற் குளிர்வ தென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ. ௫௫

(இ - ள்) *நற்றமிழ்...நாடு - நற்றமிழ் எல்லைக்குள்ளே உள்ள பலவற்றுள்ளும் இப் பகுதியில் நாம் சிறப்பித்துப் பேசும் நாடானது; என்றும்...குளிர்வது-என்றைக்கும் நிலை பெறும்படி அழகிய பெருந் தோள்வலியினாலே, உலகம், எல்லாருக்கும் பொதுவான தென்பதை மாற்றித் தனக்கே உரியதென்று ஆக்கிக் கொண்டு இனிதே காத்து வரு கின்ற வெற்றியரசராகிய* **அநபாயச் சோழரது** *அழகிய வெண்குடை நிழலிலே குளிர்ந்து வாழ்கின்றது ; என்றால் - என்று காண்போமாகில் ; மற்று அதன்...ஆமோ - அந்நாட்டின் பெருமைகளை நம்மாலே அளவுபடுத்திக் கூறுதல் இயலுமோ? (இயலாது).*

(வி - ரை) **நற்றமிழ் வரைப்பு** - *பயில்வோர்க்கு நன்மையே பயக்கும் தமிழ் வழங் கும் எல்லை.* **வரைப்பு** - *ஒரு அளவினால் வரைந்து கொள்ளப் பெற்றது.* **தமிழ்** - *எல்லை-முதலிய குறிப்புக்களை மேலே 51-ம் பாட்டின் கீழ்க் காண்க.*

நாம்புகழ் திருநாடு - *நம்மாற் பாராட்டப் பெறுந் தகைமைவாய்ந்தது என்றுமாம். "பாட்டியற்றமிழ் உரை பயின்ற எல்லையுள்—சோழர் காவிரி நாட்டியல் பதனையான் நவிலலுற்றனன்" என்று இப்பகுதியினை ஆசிரியர் தொடங்கினார். ஆதலின், அதனை இங்கு முடித்துக் காட்டுகின்ற வகையிலே 'நற்றமிழ் வரைப்பில் நாம்புகழ் திருநாடு' என்று கூறினார்.* **நாம்புகழ்** - *மேலே நவில்வதாய்த் தொடங்கி இதுவரை பாராட்டிய-என்பதாம். தமிழ் எல்லைக்குள் நின்ற நாடு பலவற்றுள்ளும் இங்குப் புகழ்வது அந பாயன் குடைக்கீழ்க் குளிரும் சோழநாடேயாம் - என்று குறித்து முடித்தவாறு.*

என்றும் - *எக்காலத்தும்*—**என்றும் காக்கும்** *என முடிக்க.* **என்றும் குளிர்வது** *என்பதும்ஆம். இது அரசனை வாழ்த்தியதாயிற்று.*

பொன் தடம் தோள் - *தோள் வலிமையைத்* **தோள்** *என்பது உபசார வழக்கு.* **குடைநிழல்** - *அரச ஆணையைக் குடையாக உபசரித்துக் கூறுவதும் மரபு.* **தோள் வலிமை**-*அரச அங்கங்களின் வல்லமை. இதுபற்றி எமது மாதவச் சிவஞான சுவாமிகள் கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தியில் "தோள்வலி" என்ற இடத் துக் கூறுவனவும் இங்கு வைத்து உணரற்பாலன.*

பொதுக் கடிதல் - *"பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும் பெருந் துணையை" என்ற தேவாரம் காண்க.*

இனிதுகாக்கும் கொற்றவன் - *இனிமைபெறக் காவல் செய்கின்ற வெற்றி பொருந்திய அரசன். இனிமையல்லாத வழியினும் காத்தற் றொழில்கள் உளவாதலின் அவற்றை நீக்க* **இனிது** *என்றும், இந்நூல் செய்யும் நிகழ்காலத்தே காத்துள்ளாராத லின்* **காக்கும்** *என்றும், தனது செய சீலத்தாற் காக்க வல்லவராதலின்* **கொற்றவன்** *என்றும் கூறினார்.* **கொற்றம்**—*வெற்றி.* **குளிர்வது**—*நிகழ் காலத்தே உள்ளது அவரது ஆட்சியே என்பார், முன்னர் "காக்கும்" என்றதற்கேற்பப் பின்னரும்,* **குளிர்வது** *என்று வினைமுடித்துக் கூறினார்.* **குளிர்வது** - *மகிழ்ச்சி பெற்றிருப்பது.*

அரசன் நாடுகாத்தலின் வகையினை நகரச் சிறப்பு "மாநிலங் காவலனாவான்" என்ற திருப்பாட்டிலே பின்னர் விரித்துக்கூறி, அவ்வாறு காத்து, அரசர்க் கிலக்கியமான மனு வேந்தன் **அநபாயரது வழிமுதல்வான்** *என்று எடுத்துக் காட்டும் வழியால் அநபாயரது செங்கோற் சிறப்பைப், பின்னர் விளக்குவார் ஆசிரியர், இங்கு* **"இனிது காக்கும்"** *எனத் தொடங்கிவைத்துக் காட்டினார்.*

அநபாயன் - *இவ்வரசர்க்கு ஆசிரியர் சேக்கிழார் அமைச்சராயிருந்தனர். இவ்வர சரே இப்புராணம் பாடக் காரணராயிருந்தவர். பாயிரம் (8) திருப்பாட்டிற் காண்க.*

குளிர்வது என்றால்...விளம்பல் ஆமோ - *அநபாயர் ஆட்சியின்கீழ் மகிழ்ந்திருப் பது இந்நாடு என்று காண்போமேயாகில் அதன் பெருமை இனைத்தெனச் சொல்ல*

இயலாது என்க. நல் அரசின்கீழ் வாழ்வதே எல்லாப் பெருமைகளேயும்விட ஒரு நாட்டுக்கு மிக்க பெருமையாம் என்பதும் கருத்து.

"கொடுங்கோ லரசன் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே"

என்றபடி ஒரு நாடு காட்டின் தன்மை நீங்கி, நாடு எனத்தக்கதற்கு நல்வேந்தனே காரணமாம் என்பர் ஆன்றோர். இச் சிறப்பிலே மேலே காட்டிய நீர்ச்சிறப்பு—நிலச் சிறப்பு—குடிச் சிறப்பு—ஒழுக்கச் சிறப்பு—ஓதற் சிறப்பு—மனைச் சிறப்பு—மக்கட் சிறப்பு—அறச் சிறப்பு—சைவச் சிறப்பு—முதலிய எல்லாச் சிறப்புக்களாலும் வரம்புற விளம்பிய பெருமை பெற்றதன்றி, இந்நாடு, அநபாயர் குடை நிழலிலே குளிரும் பெருமையும் பெற்றதுவே அதற்குச் சொல்ல அளவுபடாத பெருமையைத் தந்ததென் பார், "**வரம்புற** விளம்பல் ஆமோ?" என்று எதிர்மறை வினவினுற் கூறினர். ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

என்ற குறளும் காண்க. சோழர் நாட்டின் சிறப்பைச் சோழர் ஆட்சியின் சிறப்புடன் முடித்துக் காட்டியவாறு.

வரைப்பினேங்கும்—என்பதும் பாடம். 35

திருநாட்டுச் சிறப்பு - இது திருமலைச் சருக்கத்தின் இரண்டாவதாகிய பகுதி. சோழநாட்டின் சிறப்பியல்புகளை உரைக்கும் பகுதி என்பது பொருள். திருமலைச்சிறப் பின் இறுதியிற் கூறியவை காண்க.

சுருக்கம் :—இப்பகுதியிற் சோழர்களது காவிரி நாட்டின் செழிப்பும், சிறப்பும் கூறப்பெற்றது. வடக்கில் இமயமலையிலிருந்து தெற்கே வந்த அகத்தியர் கமண்டலத் திற் கொண்டுவந்த நீர் அக்கமண்டலம் கவிழ்க்கப்படக் கொங்கு நாட்டிற்கு அருகிலே பெருகிக் காவிரியாய் ஓடிற்று. அது சோழநாட்டிற் பாய்ந்து அந்நாட்டை வளஞ்செய் யும். அதன் புதுநீர் வயல்களிற் புகப்பெற்று நாறு நடுதல் முதலிய உழவுச் செயல்கள் அந்நாட்டு உழவர், உழத்திகள் மகிழ்ச்சியுடன் செய்து விளைவுப் போகம் பெறுவர். நெல் அந்நாட்டுச் சிறந்த விளைபொருளாம். கரும்பும், வாழையும், கமுகும் மலிந்து விளைவன. பூஞ்சோலைகளும், பழச்சோலைகளும், மரச்சோலைகளும் விளங்கும். மக்கள் மனையறத்தில் மகிழ்ந்து வாழ்ந்தனர். அறநூல் விதித்த விதி விலக்குகளை அறிந்து நல் லொழுக்கத்தில் வாழ்ந்து வந்தனர். இறைவன் கோயில்களின் பூசையும், மக்கள் திரு வைந்தெழுத்து ஓதுதலும் சிறப்பாய்ப் பெருகுதலால் அந்நாடு, பிணி முதலிய கொடுமைகளின்றிச் சுகம் பெற்றிருந்தது. இந்நாடு அநபாயச் சோழரது இனிய ஆட்சி யிற் குளிர்ந்து வாழ்ந்தது.

கற்பனை :— விளைந்த நெற் கதிர்களைப் பார்த்த ஆசிரியர் அவற்றை அன்பு நிறைந்த சிவனடியாராகக் கண்டதுபோல, உலகத்தில் எங்கும் சிவமயமாகப் பார்த்தறி யும்படி நம் மனத்தைப் பழக்க வேண்டும் என்பது முன்னர்க் குறிக்கப் பெற்றது.

குடிகள், தங்கட்குக் கிடைக்கும் விளைவில், முதலில் அரசர் கடன் கொடுத்துப், பின் அவ்விடத்தே கள வேள்வி முதலிய தருமங்கள் செய்து, மீந்ததை ஐந்து பங்காக்கி, அதில் ஒரு பங்குமட்டும் தம் அனுபவத்திற்கு எடுத்துக் கொள்ளத்தக்கவர் - என்ற தரும நூல் விதி உணர்ந்து பின்பற்றத் தக்கது. இவ்வாறு மக்கள் ஒழுகினுல் இக்காலத்துக் கேட்கப்படும் பலவிதமான பொருளாதாரச் சங்கடங்களும் தலையெடுக்க மாட்டா.

விழாக்களும்—சிவ யாகங்களும்—மரபுகளும்—ஒழுக்கங்களும்—மனையற வாழ்க்கை மகிழ்ச்சிகளும் விதிப்படி மல்கி நிலவுதல் நாட்டுக்கு நலம் செய்வன. இவற்றைக்

கைவிட்டுத், திருவள்ளுவரையும் சேக்கிழாரையும் மறந்து விட்டமையே சோழர் காவிரி நாட்டின் இக்காலக் கொடுமைகளுக்குக் காரணமாம் என்பது அறிந்தோர் கருத்து.

திருவைந்தெழுத்தை முறையாகப் பயின்று ஓதுவதினால், பிணியின்றி மக்கள் வாழ்வு பெறுவர் என்பதையும் இந்நாள் மக்கள் கண்டு ஒழுகுதல் வேண்டும்.

இப்பகுதியிற் கண்ட சிறப்பும் செழிப்பும் மகிழ்ச்சியும் ஆசிரியர் காலத்து உண்மையாய்க் கண்டவை. இவை ஒரு சிறிதும் புனைந்துரையல்ல. அந்நிலை மாறி, இவை தமிழ்ப் புலவர் சித்திரித்துக் காட்டும் புனைந்துரையோ, என்று சந்தேகிக்கும்படி இந்நாள் மக்கள் தரித்திரம்—கல்வியில்லாமை—தீயொழுக்கம் முதலியவைகளால் துன்பமே பட்டு அழியும் நிலைக்குக் காரணங்களை இப்புராணத்தின் துணை கொண்டு ஆராய்ந்து தெளிந்து ஒழுகினால் நலமடைவோம்.

அரசாங்க விவசாயப் பண்ணையார் இதிற் குறித்த உழவுத் தொழில் உண்மைகளை ஆராய்ந்து நலம்பெறத் தகுவர்.

முறையாகப் பாராயணஞ் செய்வோர் இப்பகுதியில் எங்கும் நிறுத்தவும் தொடங்கவும் கூடும்.

திருநாட்டுச் சிறப்பு முற்றிற்று

திருவாரூர்த்

திருநகரச் சிறப்பு

86. சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். க

திருவாரூர்த் திருநகரச் சிறப்பு - இது திருமலைச் சருக்கத்திலே மூன்றாவதாகிய பகுதியின் பெயர். முன்னர் நிறுத்தமுறையிலே நாட்டுச் சிறப்பினை அடுத்து நகரத்தின் சிறப்புக் கூறுகின்றார். கயிலைமலையும் சோழநாடும் இப்புராணத்திற்கு உரிய மலையும் நாடுமாகக் கொண்டமைக்குக் காரணம் முன்னர்க் கூறப்பெற்றது. இப்புராணத்திற்குச் சொல் மூலமெனும் திருத்தொண்டத்தொகை எழுந்த இடமும், அதற்குப் பொருளாகிய அடியார் கூட்டம் எழுந்தருளிய இடமும் ஆகிய திருவாரூரே இதற்கு உரிய நகரமாம் என்பதும் முன்னர்ச் சொல்லப்பெற்றது.

இப்பகுதியின் பெயர் பல பதிப்புக்களிலும் ஏட்டுப் பிரதிகளிலும் பற்பலவாறு காணப் பெறுகின்றது. அவை **மநுநீதிச்சோழர் புராணம் - மநுநீதிகண்ட புராணம் - திருநகரச் சிறப்பு - திருவாரூர்ச் சிறப்பு - தேரூர்ந்த புராணம்** - என்பன. இப்பகுதியிற் கூறிய சிறப்புக்களிலே பெரும்பாலுந் தேற்றப்பட எடுத்துக் காட்டிய சரிதம் மனுச் சோழர் செய்தியாதலின், அவ்வாறு பெயர் கண்டார்போலும். ஆயினும் மேலே தலைப்பிற் கண்டதே பெயராகக் கொள்ளத்தக்கதாம். எனக்குக் கிடைத்த பற்பல ஏட்டுப்பிரதிகளிலும் மிக்க ஆதாரவாகக் கொள்ளத்தக்கனவா யிருந்தவை இரண்டு. ஒன்று சிதம்பரத்

திலே எனது ஆசாரிய மூர்த்திகளாகிய ஸ்ரீ முத்துக்கற்பகக் குருக்களையா அவர்கள் வீட்டுப் பழைய பிரதி ; மற்றொன்று திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதி. இவற்றிலே மேலே கண்டவாறு தலைப்புக் குறித்துள்ளது. "திருவாரூர்த் திருநகர்" என்ற முதற் பாட்டின் குறிப்பும் காண்க.

(இ - ள்) சொன்ன...மிக்கது - மேலே ("நாம்புகழ் திருநாடு" என்று முடித்துக் காட்டிச்) சொன்ன சோழநாட்டிலே உள்ள பல நகரங்களிலேயும் மிகப் பழமை வாய்ந்தது ; மன்னும்...வழிபட்டது - நிலைபெறும் இலக்குமி தேவியினால் வழிபடப் பெற்றது ; வன்னி...நகர் - வன்னியும் கங்கையும் நிலாவும் தங்கிய சிவந்த சடைமுடித் தலைவராகிய தியாகேசர் எழுந்தருளிய திருவாரூர்த் திருநகரமாம்.

(வி - ரை) சென்னியார் - திருவாரூர்த் திருநகர் தொன்மையின் மிக்கதும் வழிபட்டதுமாம் என்று கூட்டிமுடிக்க.

சொன்னநாடு - மேலே "காவிரி நாட்டியல் பதனையான் நவில லுற்றனன்" என்று தொடங்கி "நாம்புகழ் திருநாடு" என்று முடித்தவரைப் பல திறத்திலும் நாட்டுச் சிறப்பிலே புகழ்ந்து **சொன்ன** நாடு என்றபடி. பொன்னிநதி பாய்ந்து பொன் மய மாக்கிய நாடு என்றுமாம்.

நாட்டு இடை மிக்கது - அந்நாட்டில் எல்லா நகர்களும் பழமையானவையே. "வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்" (நாடு - 26). அவற்றினுள் மிகப் பழமை வாய்ந்தது என்க.

சொன்ன நாட்டிடை - என்பதற்குப் பொன் (சொன்னம் - பொன்.) உலகமாகிய தேவ வுலகத்தைவிட என்றும், இப்பூவுலகத்திடையே யன்றித் தேவவுலகத்தினிடத்தும் என்றும் உரைப்பதுமாம். இப்பொருளில் **நாட்டு இடை** என்பது ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. தேவ வுலகத்தில் தொன்மை மிகுந்தது என்பதற்கு இத்திருநகரத்தை ஆளும் தியாகராசப் பெருமான் இங்கு நின்றும் போந்து பலகாலம் திருப்பாற் கடலிலே விட்டுணுமூர்த்தியின் மார்பிலேயும், அதன் பின்னர்ப் பலகாலம் தேவ வுலகத்திலேயும், அதன்பின் மீளவும் திருவாரூரிலேயும், எழுந்தருளினார் எனும் சரித வரலாறு ஆதரவாம். "அமரர்நாடாளாதே ஆரூரர் ஆண்ட அயிராவணமே" என்றும் "...நீங்கிய நீர்த்தாமரையா னெடுமாலோடு நில்லாயெம் பெருமானே யென் றங்கேத்தி வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ வளராரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்றும் வரும் திருத்தாண்டகங்களும் பிறவும் காண்க.

மன்னுமாமலராள் - மாமலர் மன்னுவாள் - இலக்குமி. மலராளினால் - என **ஆல்** உருபு தொக்கி நின்றது. மா ஆகிய - மலர்மன்னுவாள் என்பதுமாம்.

வழிபட்டது - வழிபடப் பெற்றது - தொழப்பெற்றது. தன்வினை பிறவினைப் பொருள் கொண்டதாம். மலராள் - இங்கே வழிபட்டுத் தவஞ் செய்தனள். அதனால் தனது மங்கலம் நிலை பெறும் பேற்றை யடைந்தனள். ஆதலின் **மன்னும்** - நிலை பெறும் என்றார். இலக்குமி இந்நகரில் வழிபடும் பொருட்டு நிலைபெற வசிக்கின்ற தாலும் **மன்னும்** என்றுமாம். இவர் வழிபட்ட திருக்குளம் கமலாலயம் என்ப. இதனாலே இந்நகர் திரு—ஆர்—ஊர்—திருவாரூர் என்று பெயர் பெற்றதாகும்.

வன்னி - வன்னித்தழை - இது சிவபெருமான் பூசனைக்குகந்த பத்திரங்களில் ஒன்று. **ஆறு** - கங்கை. மதி - மூன்றாம் பிறைச்சந்திரன்.

வழிபட்டது என்பது இந்நகரின் முற்கூறிய தொன்மைக்கு உரிய பல காரணங் களிலே சிறந்ததாய் நகரப் பெயர்க்குக் காரணமாய் இன்றைக்கும் நிகழ்வதாய் உள்ளது இதுவாதலின் இதனை அடுத்து எடுத்துக் கூறியவாறு.

சென்னியார் - சென்னி என்பது சோழர்க்குரிய பட்டப் பேர்களில் ஒன்று. சோழநாட்டின் இறைவர் என்று குறிக்கச் **சென்னியார்** என்றதுமாம். 1

87. வேத வோசையும் வீணையி னோசையும்
சோதி வானவர் தோத்திர வோசையும்
மாத ராடன் மணிமுழ வோசையும்
கீத வோசையு மாய்க்கிளர் வுற்றவே. ௨

(இ - ள்) வெளிப்படை. வேதம் பயிலும் ஓசை - வீணைகள் வாசிக்கும் ஓசை - சோதி மிகுந்த தேவர்கள் துதிக்கும் ஓசை - பெண்கள் ஆடலிலும் அதற்கு இசைய முழக்கும் முழவுகளிலும் கூடி எழும் ஓசை ஆகிய இவைகள் கீதங்களின் ஓசையுடன் ஒன்றாகி எங்கும் கிளர்ந்து விரவிச் சத்தித்தன. இந்தப் பற்பல சத்த விசேடங்களும் அந்நகரிலே பொருந்திப் பெருங் கிளர்ச்சியைத் தந்தன.

(வி - ரை) இந்நகரிலே கிளரும் பல சத்த விசேடங்களை, இப்பாட்டிலும் வரும் பாட்டிலும் ஓசை - ஒலி என்ற இருபாகுபாடும் விரவவைத்து ஆசிரியர் விளக்கினார்.

வேத வோசை—வீணையின் ஓசை - "வேதத் தொலி கொண்டு வீணை கேட்பார்" (திருத்தாண்டகம்—திருவெண்காடு - 2) என்ற திருவாக்கின்படி வேதமும் வீணையும் ஒருங்கே வைக்கப் பெற்றன. இது சிருட்டிகாலத் தொடக்கத்தைக் குறிக்கும். திருவாரூர்த் திருநகரம் பிருதிவித்தலமாதலும் அதுவே சிருட்டிக்கு ஏதுவாதலும் குறிப்பு. "வருங் கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்ற திருவிருத்தமும் காண்க. வேதவோசை பிரணவ நாதத்தையும், வீணை ஓசை அது கிளம்புமிடத்தையும் குறிக்கும். இவ்வோசைகள் சிருட்டித் தொடக்கத்தில் இறைவனிடத்திலிருந்து தோன்றும் என்க. இனி இவ்வோசைகள் அடியார்கள் இறைவர் திருமுன்பு முழக்கும் வேத கானமும், வாசிக்கும் வீணை ஓசையும் என்று உரைத்தலுமொன்று. சிருட்டி காரியத்தைக் குறிப்பதாகிய திருப்பள்ளியெழுச்சியிலே "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திர மியம்பினர் ஒருபால்" என்று இவ்விரண்டையும் எடுத்துக் கூறிய திருவாசகமும் காண்க.

சோதி வானவர் - ஒளி உருவமுடையாராதலின் **சோதி** என்றார். திவ்விய உருவமுடைமை பற்றியே இவர்கள் **தேவர்** எனப் பெறுவர்.

மாதர் ஆடல் மணிமுழவோசை - மாதர்கள் ஆட அதற்குத் தக்கபடி முழவு முழக்க உண்டாகும் ஓசை. எனவே, ஆடலோசையும் சேர்ந்து ஒன்றியொன்று கலந்து சத்தித்தலால் இரண்டையும் ஒருசேர "ஆடன் முழவோசை" என்று கூட்டி உரைத்தார். உம்மை தொக்கது. **மணி** (முழவு) - இன்னிசைதரும் அழகு. "வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர..." என்பது தேவாரம்.

கீதம் - இசையுடன் கூடிய தமிழ்ப்பாட்டு. இது பெருமானது புகழ்களை இசையுடன்கூட வாயாரப் பாடுவது. "கீதத்தை மிகப்பாடு மடியார்கள்..." (திருப்புள்ளிருக்கு வேளூர்)—"அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும், செந்தமிழ்க் கீதமும்..." (கொல்லிப்பண் - திருமழபாடி - 3) என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரங்களும் "அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தா மருளுமாறே" எனும் அப்பர் தேவாரமும் காண்க. பெண்கள் அம்மனை—கழல்—பந்து முதலிய விளையாட்டு ஆடும்போது கீதத்தையும் கூட்டிப் பாடுவர் என்க. "...மனைகள் தொறும் இறைவனது தன்மை பாடிக், கருந்தடங் கண்ணார் கழல்பந் தம்மானைப் பாட்டயரும்" என்பது தேவாரம்.

கிளர்வுற்றது - நகரம் கிளர்ச்சியை யடைந்தது. வேதம்—வீணை—ஓசைகள் இறைவனது (சிருட்டித்) தொழிலையும், (அவனருளை நோக்கிய வானவர்) தோத்திர ஓசை தேவர் செயலையும், ஆடன் முழவு - கீதம் - மனிதர் செயலையும் குறிப்பன. "...கை ஓசைபோய் அண்டர் வானத்தின் அப்புறம் சாருமால்" என்ற (நாடு - 10) பாட்டின் கீழ் உரைத்தவையும் காண்க. வேள்விச்சாலைகள் நகர்ப்புறத்திலே அமை

வன. (வானவர் - அவ்வேள்விகளிலே வரும் தேவர்கள்.) இவற்றைக் கடந்து சென்றால் புறநகரிலே கூத்தாடும் அரங்குகளும், பின்னர் வீதிகளும், பின்னர் ஆடிடங்களும், மாளிகைகளும் காணலாம். ஆசிரியர் இம்முறையே பின்னர்க் கூறுதல் காண்க. இதுவே அந்நாள் நகர அமைப்பு என்பது நூல்களால் அறியப் பெறும். தேவ உலகில் இருந்த தியாகேசர் இங்கு இருத்தலால் அவரை வழிபடவும், அடியார்களை ஆசிரயித்து நலம் பெறவும், தேவர்கள் இங்கு வந்து கூடுவதும் இயல்பாம். இப்பாட்டிற் கூறியவை **நகர்ப் புற** நிகழ்ச்சிகள். மேல் இரண்டு பாட்டிலும் கூறிப் போந்த பொருள்களை,

> "...கெண்டை கொண்ட லர்ந்த கண்ணி னார்கள் கீத வோசைபோய்
> அண்ட ரண்ட மூட றுக்கும் அந்த ணாரூர் என்பதே"

—திருவிராகம் - பண் - நட்டராகம் - திருவாரூர் - 2

என்ற திருஞானசம்பந்த சுவாமிகளது இத்தலத் தேவாரத்தே காண்க. 2

88. பல்லி யங்கள் பரந்த வொலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை யொலியுடன் மாவொலி
எல்லை யின்றி யெழுந்துள வெங்கணும். ௩

(இ - ள்) வெளிப்படை. பலவகை வாத்திய விசேடங்களின் சத்தங்களோடு, செல்வம் நிறைந்த திருவீதிகளிலே அழகிய தேர்களின் சத்தமும், செழிய யானைச் சத்தமும், குதிரைச் சத்தமும் கூடி அளவில்லாமல் அந்நகர் எங்கும் எழுந்துள்ளன.

(வி - ரை) **ஒலியுடன்** - இயங்களின் (வாத்தியங்கள்) ஒலியை மற்ற தேர், யானை, குதிரைகளின் ஒலியிலிருந்து பிரித்து வேறுபடுத்துக் கூறுவார் (ஒலி) **உடன்** என்ற உருபு கொடுத்துக் கூறினார். யானை ஒலியுடன் என்ற இடத்து உடன் என்பது தேர்—யானை—குதிரை—என்ற சேனை ஒலிகளை ஒன்று சேர்த்ததாம்.

தேர் - யானை - குதிரை அரச அங்கமாகிய சேனைப் பகுதிகள். இந்நகர் சோழர்களின் இராசதானிகளிற் சிறந்ததாய் அவர்களது வாசத்தானமுமாகும். ஆதலின் இவற்றினது ஒலிமிக்கது.

செழுமணித் தேரொலி - தேரும் அதன் அடைமொழிகளும் பிறவும் பின்னே இப்பகுதியிற் கூறப்பெறும் சரித நிகழ்ச்சியை முன்னே காட்டும் முற்குறிப்பாகும். "மாடவீதி", "பொங்கிய தானைசூழ", "...ஆங்கோர் மணிநெடுந்தேர் மேல்ஏறி, அளவில்தேர்த் தானைசூழ அரசுலாம்தெரு..." என்று பின்னர் வருவன காண்க.

உள - என்றதால் அவை இந்நகரில் என்றும் நிலைத்துள்ளமை கூறியதாம்.

பல் இயங்கள் - முன் பாட்டிலே சொல்லிய ஆடலுக்கிசைய முழக்கும் முழவுகளன்றித் தனித்தனி இயக்கும் பலவகை இயங்களை இங்குக் குறித்தார்.

செல்வ வீதி - இவ்வீதிகள் செல்வங்கள் நிறைந்தன என்பதன்றி எல்லாச் செல்வங்களையும் தருவனவும் ஆம். என்னை? எல்லாம் தரும் செல்வத் தியாகேசர் எழுந்தருளி வரும் சிறப்பு வாய்ந்தன ஆதலின். மேலே "பன்மணிவீதி...செந்தாமரை அடிநாறுமால்" என்று சிறப்பித்தலும் காண்க. "மாதவங்கள் நல்கும் திருவீதி நான்கும்" என்று குறிப்பதும் இங்குக் காணத்தக்கதாம். இந்நகரிலே ஒலியும் ஓசையும் விரவி மயங்க நிற்றலால் இவ்விரண்டு பாட்டினும் அவ்விரண்டு பாகுபாட்டையும் விரவவைத்துக் கூறினார். இங்குக் கூறியன **நகர வீதி**களின் முழக்குகள். 3

89. மாட மாளிகை சூளிகை மண்டபங்
கூட சாலைகள் கோபுரந் தெற்றிகள்

நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடன் மாத ரணிசிலம் பார்ப்பன. ௪

(இ - ள்) வெளிப்படை. மாடம் முதல் அரங்கு வரைக் குறித்த பலவகை ஆடிடங்களில் எங்கும் ஆடும் மாதர்கள் அணிந்த சிலம்பும் சத்திப்பன.

(வி - ரை) மாடம் - மாளிகை - சூளிகை - மண்டபம் - கூடம் - சாலைகள் - கோபுரம் - தெற்றிகள் - சாளரம் - அரங்கு இவைகள் வெவ்வேறு ஆடிடங்கள். உம்மைகள் தொக்கன.

அரங்கு எங்கணும்-அரங்குகளும் ஆகிய ஆடிடங்கள் எங்கும்—என்று பெய்துரைத்துக் கொள்க. நகருள்ளே ஆடல் நிகழும் பலவகை இடங்களையும் இப்பாட்டிற் கூறினார். புறநகர்க் கூத்துக்கு வேறாய்ச் சிலம்பொலிக்க ஆடும் உள்நகர் நிகழ்ச்சியை இங்குப் பிரித்துக் கூறியவாறு. ஆதலின் மேற்பாட்டிலே **மணி**முழவு-என்றதில் **மணி** என்பதற்கு மணிச் சிலம்பு என்று உரை கூறுதல் பொருந்தாதுபோலும்.

மாளிகை - செய்குன்று. **தெற்றி** - திண்ணை. **சாளரம்** - (பலகணி) பல கண்களையுடையனவாய் ஆடற்கென்று அமைக்கப் பெற்ற பெரிய ஆடிடங்கள். **நீடு சாளரம்** - மிகுந்த காற்று உட்புகுந்து வீசக்கூடியதாய் அமைக்கப்பெறுவதனால் இதனைக் **காலதர்** என்பர். சிலப்பதிகாரத்துக் காண்க. (கால் - காற்று ; அதர் - வழி). **நீடு** - மான்கண் போன்று நீண்ட - என்க.

அரங்கு - தெருப் பக்கத்து ஆடிடம். "கமழ்தார்வீதித் தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்..." என்ற தேவாரமும் காண்க. "மாட மாளிகை கோபுரங் கூடங்கள் மணியரங் கணிசாலை, பாடு சூழ்மதிற் பைம்பொன்செய் மண்டபம் பரிசொடு பயில்வாய" (திருக்கோட்டூர் - நட்டராகம் - 7) என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமும் இங்குக் குறிக்கப் பெறுவதாம். 4

90. அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கண் மாளிகை யின்றொன் று சம்புவின்
பங்கி னுடிருச் சேடி பரவையா
மங்கை யாரவ தாரஞ்செய் மாளிகை. ௫

(இ - ள்) அங்கு...அளவு - அவ்விடத்தே உரைக்கும் உரைகளுக்கு என்ன அளவிருக்கின்றது?; அப்பதியிலார்...மாளிகை - அங்குள்ள மாளிகைகளிலே பதியிலார் எனும் உருத்திர கணிகையர் மாளிகைகள் பலவற்றுள் ஒன்று, இறைவனது ஒரு பாகத்திலே உள்ள உமை அம்மையாரினது அணுக்கிதை கமலினி என்னும் இரு சேடிமார்களில் ஒருவராகிய கமலினியார் வந்து அவதரிக்க நின்றது என்று சொல்வோமானால்.

(வி - ரை) அன்றியும் அவ்வீதி தூதுபோய் நடந்த திருவடி நாறும் எனின் இதன் பெருமை உரையில் அளவுபடுமோ? என வரும்பாட்டையும் சேர்த்து முடித்தலுமாம்.

அங்கு - அவ்வீதிகளைப்பற்றி - என் உரைக்கு ? என் சொல்வேன் என்றுமாம்.

பதியிலார் - உருத்திர கணிகையர். இது ஒரு குலம். **பதியிலார்** - சிவபெருமானையும் அவனே போன்ற அவனடியார்களையுமே யன்றி வேறுபதி யில்லாதவர். "உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே எங்கணவ ராவார்" எனவும், "எங்கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க, எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க" எனவும் வரும் திருவாசகங்கள் காண்க. இன்னும் இதன் விரிவைப் பின்னர்த் தடுத்தாட்கொண்ட புராணம் 131-ம் பாட்டிற் காண்க.

சம்புவின் பங்கினுள் - சம்பு-சுகத்தைச் செய்பவன் என்பது பகுதிப் பொருள்—சிவபெருமான். சம்புவின் சிவபெருமானுடைய. சம்பு+இன் - சம்புவினது இனிய பங்குக்குடையவள் என்றுமாம். சிவபெருமானது ஒரு பகுதி அம்மையாருடையது ஆயினமையின் பங்கினுள் என்றார். "மாதிருக்கும் பாதியன்" முதலிய எண்ணிறந்த ஆட்சிகள் காண்க.

பங்கினுள் திருச்சேடி - இச்சேடியர்கள் இருவர். இவருட் கமலினியாரே பரவையாராய் வந்து இங்கு அவதரித்தவர். இவ்வரலாறு முன்னர்த் திருமலைச்சிறப்பிற் கூறப்பெற்றது. **பரவையார் ஆம் மங்கை** - பரவையாராக ஆகும் மங்கை கமலினியார்.

அவதாரஞ் செய் மாளிகை - அவதரித்தற் கிடமாகிய திருமாளிகை.

மாளிகையின் ஒன்று - மேற்பாட்டிலே சொல்லப் பெற்ற மாளிகை பலவற்றுள்ளும் பதியிலார் மாளிகை பல. அவற்றில் ஒன்று மங்கையார் அவதரிக்கும் இடம் என்க.

இதுவும் வரும் பாட்டும் இடைநகர் வீதியைச் சொல்வன. 5

91. படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிதான்
இடந்த வேனமு மன்னமுந் தேடுவார்
தொடர்ந்து கொண்டவன் றொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால். கூ

(இ - ள்) படர்ந்த...தான் - பேரொளி வீசும் பல மணிகள் தூக்கிக் கட்டிய,அந்நகரின் அம்மாளிகை இருக்கும், வீதியானது ; இடந்த...தேடுவார் - தோண்டிச் சென்ற பன்றியினாலும் (பறந்து சென்ற) அன்னத்தினாலும் தேடப் பெறுபவராகிய இறைவன்; தொடர்ந்து...நாறுமால் - தாமே வலியத் தொடர்ந்து சென்று ஆளாகக் கொண்ட வன்றொண்டர்க்காக (அந்த மாளிகைக்கு)த் தூதாகப் போய் நடந்து வந்த செந்தாமரை போலும் திருவடி மணம் கமழ்ந்துகொண்டே யிருக்கும்.

(வி - ரை) வீதி - தூதுபோய் - நடந்த - அடி - நாறும் - என்க.

மணிவீதி தான் - மணிகள் கட்டி அலங்கரிக்கப் பெற்ற திருவீதி. இவை அவ்வீதிகளில் எப்போதும் நிகழும் திருவிழாக்களின் பொருட்டுச் செய்யப்பெறும் அலங்காரங்கள். "வீதிகள் தோறும்...சோதிகள் விட்டுச் சுடர்மாமணிகள் ஒளி தோன்ற" என்று இத்திருவீதியினை அப்பர் சுவாமிகள் சிறப்பித்துப் பாடியருளினமை காண்க. இச்சிறப்பு இத்திருவீதி ஒன்றிற்கே உள்ளதென்பது தோன்ற **வீதி தான்** என்றார். இவ்வீதியிற் படர்ந்த பேரொளிச் சிறப்பும் பிறவும் பின்னர் ஏயர்கோனார் புராணத்திற் காண்க. பன்மணிப் பேரொளி படர்ந்த வீதி எனக் கூட்டுக. **வீதிபார்** என்பது பாடமாயின், வீதியானது - பார் இடந்த ஏனம் - எனக் கூட்டுக.

இடந்த ஏனம் - பன்றியுருவுடன் பூமியைத் தோண்டிக் கொண்டு அடிதேடிச் சென்ற விட்டுணுமூர்த்தி.

அன்னம் - (அங்ஙனமே) அன்னவுருவெடுத்து விண்பறந்து முடிதேடிச் சென்ற பிரமதேவர். **பார்இடந்த** ஏனம் என்றமையால் **விண்பறந்த** என அன்னத்திற்குரிய அடைகள் வருவித்துக்கொள்க.

தேடுவார் - (ஏனத்தாலும் அன்னத்தாலும்) தேடப் பெறுபவர். அழல்தூணாய் நின்ற சிவபெருமானது அடிமுடிகளை இவ்வாறு இவர்கள் தேடிச் சென்றும் காண இயலாது நின்ற வரலாறு காந்தமா புராணத்துள் விரித்துக் கூறப்பெறும். இப்புராணமேயன்றி(த் தமிழ்) வேதமாகிய அப்பர் சுவாமிகளது இலிங்க புராணத் திருக்குறுந் தொகைத் திருப்பதிகமும் விரித்துக் கூறும்.

தேடுவார்-தேடப்படுவார் என்பதில் படு விகுதி தொக்கு நின்றது. "இல்வாழ்வான் என்பான்" என்பதுபோல. இதனை வடநூலார் நயக்கு என்பர். இக்கருத்தையே பின்னும் அனுவதித்து (ஏயர்கோ - புரா - 334) பாட்டில் கூறுதலும் காண்க.

தொடர்ந்து கொண்ட - பெருந் தேவர்களாற் றேடப்பெறும் அப்பெருமை வாய்ந்தவராயிருந்தும் தாமே வலியத் தொடர்ந்து ஆளாக்கொண்டவராயும் அப்போது மறுத்து வலிமை பேசி வன்றொண்டர் என்ற பேர்பெற்றவராயும் உள்ள. பிறர் தம்மைத் தேடிச் செல்லத் தாம் இவரைத் தேடித் தொடர்ந்து கொண்டார் என்ற குறிப்பு அடியவர் சிறப்பும் உரைத்ததாம். வன்றொண்டர்க்கு - வன்றொண்டர்க்காக.

தூதுபோய் நடந்த - இவ்வரலாறு பின்னர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்து 323—374-வரை திருப்பாட்டுக்களிற் காண்க.

அவ்வீதி பரவையார் அவதரித்த மாளிகையுடையதேயன்றி, அந்த மாளிகைக்கு அவரிடம் தொண்டர்க்காகத் தூதுபோய்நடந்த மணங் கமழும் பெருமையுமுடையதென அதனை அடுத்துக் கூறி, அந்த உரைக்கேன் என முடித்தபடி.

போயின என்னுது போய் நடந்த என இருமுறை கூறியது ஓரிரவிலே இருமுறை நடந்து தூதுசென்ற சரிதத்தைக் குறித்ததாம். இப்பாட்டிற் கூறிய சிறப்பினை இம்முறையே,

"...அடியிட்ட செந்தமிழின் அருமையிட் டாரூரில் அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டு மடியிட்டு நடைநடந் தருளடிகள் அடியீது முடியீதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே..."

என்று தாயுமானுர் விதந்து பாராட்டியமையும் காண்க.

செந்தாமரை யடிநாறும் - செந்தாமரைபோன்ற திருவடியின் திருமணம் வீசும். தாமரை என்றதற் கேற்ற நாறும் என்ருர். திருவடியைத் தாமரை என்பது வழக்கு. ஒருமுறைக் கிருமுறை தூது நடந்ததனுல் அடி சிவந்த தென்பதும் ஒரு குறிப்பு.

தேடுவார் தேடித் தொடர்ந்துகொண்டது மன்றித், தேடித் தூதும் போனுர் என்ற சுவையும் காண்க. "அணியுடைய நெடுவீதி நடப்பர்போலும் அணியாரூர்த் திருமூலட்டானனுரே" எனத் திருமூலட்டானத்திலே எழுந்தருளியிருப்பதை விட்டுத் திருவீதியிலே வந்து நடந்தும் செல்வர் என்ற கருத்துப்பெற, அப்பர் சுவாமிகள் சுவைபெறக் கூறியருளியமையும் இங்குக் காண்க. 6

92. செங்கண் மாதர் தெருவிற் றெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை யவர்குழற்
பொங்கு கோதையிற் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி யளறு புலர்த்துமால். எ

(இ - ள்) செங்கண்...குழம்பை - சிவந்த கண்களையுடைய பெண்கள் தெருவிலே தெளித்த குங்குமக் குழம்பை; அவர் குழல்...வீழ்ந்து - அவர் கூந்தலிலே அணிந்த புதுப்பூமாலைகளிலிருந்து பூந் தாதுகள் உதிர்ந்து விழுந்து; உடன்...புலர்த்தும் - குழம்பினுடனே அங்குப் பொருந்தி அச்சேற்றை உலரச் செய்யும். ஆல் - அசை.

(வி - ரை) பெண்களுக்குச் செங்கண் அழகினைக் காட்டும். கண் தாமரைபோலும் என்று உவமிப்பர்.

செங்கண்மாதர் தெளித்த குங்குமக் குழம்பு - குங்குமக் குழம்பு தெருவிற் றெளித்தல் அழகின் பொருட்டு. அளறு - குழம்பினுல் உண்டாகிய சேறு. அளறு புலர்த்தும் - தெருவிற் செல்வாரைச் சேறு இழுக்காமல், துகள் புலர்த்தி உபகரிக்கும். தம்மால் விளைந்த இடையூற்றைத் தாமே போக்குதல் என்ற அறவினையின் குறிப்பாம்.

"செழுந்தாதே துகளன...சேறே யிழுக்கின" (திருக்குறிப்பு - 108) என்று பின்னரும் சேர்த்துக் கூறுவது இங்குக் காணத்தக்கது.

கோதை - மாலை. **பொங்குதல்** - மிகுதல். **துகள்** - மாலையின் பூக்களிலிருந்து உதிரும் பூந்தாது ; மகரந்தப் பொடி. இது அதிசயோத்தி அணி என்பர். இதனை ஆசிரியர் தாம் முதலில் எடுத்து வழங்கியதாகத் தெரிகிறது. இறைவன் திருவடி தூது நடந்த மணத்தினைக் குங்குமக் குழம்பு சாத்தி வணங்கினார் என்ற குறிப்பும் மேற்பாட்டைத் தொடர்ந்து தோற்றுவதாம். 7

93. உள்ள மாருரு காதவ ரூர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாந்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். 8

(இ - ள்) உள்ளம் ஆர் உருகாதவர் - யாவர்தாம் மனமுருகாதவர்கள் ?; ஊர்விடை... பூவைகள் - இடபத்திலே எழுந்தருளி வரும் தியாகேசரது திருவாரூரின் தெருப்பக்கங்களிலெல்லாம் தெளியும் ஓசைத் திருப்பதிகங்களைப் பசிய கிளிகள் பாடுவன; அவற்றை நாகண வாய்ப் பறவைகள் கேட்பன.

(வி - ரை) ஆரூர் வீதி மருங்கெலாம் திருப்பதிகங்கள் கிள்ளை பாடுவ—பூவை கேட்பன எனில் யார் தாம் உள்ள முருகாதவர் உளர் ? என்க.

ஊர்விடை வள்ளலார் - விடை ஊர் வள்ளலார் என மாற்றுக. விடையூர்ந்து வரும் வீதி விடங்கராகிய தியாகேசர். வீதிச் சிறப்பைச் சொல்லி வருகின்றாராதலின் அதற்கேற்ப **ஊர்விடை வள்ளலார்** என்று கூறினார்.

வள்ளல் - வரையாது கொடுப்போன். அருளாலும் பொருளாலும் வரையறை யின்மையின் இவரே உண்மை வள்ளலாவர். பிறர்க்கெல்லாம் இது உபசார மொழியேயாம் என்பது கருத்து. இதனாலே வண்மைக் கிறைவர் - தியாகேசர், தியாகராசர் என்று இவர்க்குப் பெயராயிற்று.

மருங்கு எல்லாம் - மேலே சொல்லிய வீதிகளின் பக்கமெல்லாம்.

தெள்ளும் ஓசை - தெளிந்த ஓசையுடைய ; தெளிவிக்கும் ஓசையுடைய என்றுமாம். **தெள்ளுதல்** - தூக்கி எறிதல் என்று கொண்டு, சொல்வோர் கேட்போர்களது வினைகளை ஓடத்தூரக்கும் ஓசை என்றுமாம். இது **தெள்ளு** என்ற சிறுவர் விளையாட்டினுள் வழங்குதல் காண்க. "...என் மனத்தே, உள்ளத் துறுதுயர் ஒன்றொழியாவண்ணமெல்லாம், தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"—என்ற திருவாசக ஆட்சியும் காண்க.

திருப்பதிகங்கள் - சைவ சமய பரமாசாரியர்களான நான்கு பெருமக்களும் காரைக்காலம்மையாரும் அருளியவை. பெரும்பான்மை பத்துப் பாடல்களாலாகியதனாற் பதிகம் எனப் பெற்றன. இப்பெயர் இப்பாடல்களுக்கே காரண இடுகுறி இலக்கணத்தால் வழங்குவது உயர்ந்தோர் வழக்கு. உயர்ந்தோர் மரபின்மையால் ஏனையோர் பாடல்களுக்கு இப்பெயர் வழங்கக் காணின் அவை பொருந்தா என்க.

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி அவர்கட் டாக லான"

என்பது இலக்கணம். திருக்கோயில் - திருவாயில் என்பனபோல இவற்றிற்கும் திருப்பதிகங்கள் என்று உரைத்தலே மரபா மென்று காட்டினார் ஆசிரியர்.

இவை, சொல்வார்க்கும் கேட்பார்க்கும் வினைதெள்ளும் என்பதை, "...தமிழ், சொல்லுவார்க்கும் இவைகேட்பவர்க்குந் துயர்இல்லையே"—திருநாகை-செவ்வழி-(11). "தானுறு கோளு நாளும் அடியாரை வந்து நலியாத வண்ண முரைசெய், ஆன சொன்மாலை"—(கோளறுபதிகம்.) எனும் திருவாக்குக்களின் பிரமாணங்களால் உணர்க.

பைங்கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள் - இக்கிள்ளையும் பூவையும் மக்கள் தத்தம் மாளிகை முதலியவற்றில் வளர்ப்பவை. கிளிகள் தாம் பயிலும் மக்கள்பாற் கேட்ட பழக்கத்தால் பதிகங்களைப் பாடுவன. "சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை" என்பது வழக்கு. "பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை கேட்டு, வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலை யாமே..." என்பது தேவாரம்.

"பண்மொழியா லவன்நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே"

—**திருஞான - சீகாமரம் - 6**

"வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே"—**ஷை-காந்தாரம் - 2**

என்ற தேவாரங்களுங் காண்க.

பூவை - நாகண வாய்ப்பறவை. மக்கள்பாற் கேட்டுப் பயின்றவற்றைக் கிளிகள் பாட அவ்வினத்தைச் சேர்ந்த பூவை கேட்பன என்றார். அன்றியும் பூவையும் இனிய இசையுடையன, ஆதலின் கிளி தாமாகப் பாடும் பதிகச் சுவையை அனுபவித்தன என்பதும் கருத்து. மக்கள் பயிலக் கேட்டுப் பழகுதலோடு, கிளிகளை, இறைவன் பாட்டுப்பாட மக்கள் கற்பிப்பது முண்டு. "சிறையாரும் மடக்கிளியே" என்ற தேவாரத்திலும், "ஏராரிளங்கிளியே" என்னும் திருவாசகத்திலும் கிளியை இறைவனது திருநாமஞ் சொல்லுமாறு கேட்கின்ற கருத்து இங்கே கவனிக்கற்பாலது.

மருங்கெலாம் - வீதிகளின் பக்கங்களில் எல்லாம். (வீதிகள்) இடநோக்கி வருவித்துரைக்க. அந்நாளில் ஆரூரில் எங்கும் அதிகமாகத் தேவாரப் பதிகங்களை மக்கள் பயின்றுவந்தனர் என்பது இப்பாட்டின் உள்ளுறையாக உணரப்படும். இது புராணத்துப் பல இடங்களிலும் காணலாம். இந்நாள் மக்களும் இவ்வாறு ஒழுகின் நலமாம்.

வேதத்தொலியும், வேதப் பொருளும், கேட்ட கிளிகள், வேதம்பயில் கிடைகள் அமைந்த **நகர்ப்புறத்தே** உள்ள சோலைக் கிளிகள். இங்குப் பதிகம்பயில்வன மாளிகைகளில் வளர்க்கப் பெறுவனவாம். அன்றியும் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய ஆசாரியன்மார்கள் காலத்து வேதத் தொலிகளும் வேதப் பொருளும் மிகப் பயிலப் பெற்றன. அதன் பிற்காலத்தே **தேள்ளுமோசைத் திருப்பதிகங்கள்** மிக அதிகமாகப் பயிலப் பெற்றன. திருப்பதிகம் விண்ணப்பம் செய்வாரைச் சோழர்கள் கோயில்களில் நியோகித்ததும் கல்வெட்டுகளால் அறிகின்றோம். ஆதலின் இங்கு நகரச் சிறப்பில் இவ்வாறு கூறினார்.

உள்ளம் ஆர் உருகாதவர் - கிளிகள் பதிகம் பாடப் பூவை கேட்கக் கண்டால் யார் தான் மனமுருகார்? என்பதாம். திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லைக்கு வரும் வழியிலே,

"இவர்தந் திருவடி வதுகண் டதிசய மெனவந் தெதிரா கரவென்றே
சிவமுன் பயின்மொழி பகர்கின் றனவளர் சிறைமென் கிளியொடு சிறுபூவை..."

திருநாவு - புராணம் - (160) எனவும்,

"அஞ்சொற் றிருமறை யவர்முன் பகர்தலும் அவருந் தொழுதுமு னளிகூரு
நெஞ்சிற் பெருகிய மகிழ்வும் காதலும் நிறையன் போடுமுரை தருமோற..."-**ஷை-(161)**

எனவும் பின்னர்க் கூறுதலும் இங்கு வைத்துக் காணத்தக்கது.

"தண்ணென் சோலையெம் மருங்கும் சாருமடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன் பொழியுமால்"

—**முருக நாயனார் புராணம் - (83)**

என்பதும் காண்க.

94. விளக்க மிக்க கலன்கள் விரவலாற்
றுளக்கில் பேரொலி யாற்றுன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல வாறு மடுத்தலால்
அளக்கர் போன்றன வாவண வீதிகள்.

இடைநகரில் கடைவீதிக்கும் கடலுக்கும் சிலேடை வகையால் ஒப்புமை

(இ - ள்) (சிலேடை விரிவு) விளக்கம்...விரவலால் - (1) (ஆவண வீதிகள்) ஒளி மிகுந்த ஆபரணங்கள் பொருந்தியிருத்தலால்; (2) (கடல்) பல்வகை விளக்குகள்கொண்ட மரக்கலன்களை யுடைமையாலே ; துளக்கில் பேரொலியால் - (1) (ஆவண வீதிகள்) அசைவற்ற பெருஞ்சத்தங்களால் ; (2) (கடல்) அலைகளின் அசைதலினாலே உளதாம் பேரிரைச்சலினால்; துன்னு பண்டங்கள்...மடுத்தலால் - (1) (ஆவண வீதிகள்) நெருங்கிய பற்பல சரக்குகளும் பிறவும் வளம்பெறப் பற்பல வகைகளாலே கொண்டிருத்தலினாலே ; (2) (கடல்) மலை காடு நாடு முதலிய பல இடங்களின் பண்டங்களையும் வாரிக் கொணர்ந்த வளங்களுடன் பல ஆறுகள் வந்து சேர்தலாலே ; அளக்கர்...ஆவண வீதிகள் - கடைவீதிகள் கடலைப்போன்றன.

(வி - ரை) **விளக்கம்** - ஆவண வீதிக்கு ஒளி என்றும், கடலுக்கு விளக்குகள் என்றும் கொள்க. மரக்கலங்கள் இரவிலும் செல்வன ஆதலின் ஒளிமிகும் பெருவிளக்குகளைக் கொண்டிருந்தன. அவற்றிற்காகக் கரைகளிலும் பலவகைப் பெருவிளக்குகள் வைக்கப்பெற்றிருத்தலின் அவற்றோடு விரவிய மரக்கலங்கள் என்பதுமாம். **கலங்கரை விளக்கம்** என்ற வழக்கும் காண்க. இவ்விளக்கங்களைப் பட்டினப்பாலையுள்ளே காணலாம். முற்காலத்துத் தமிழ் மக்கள் கடற்செலவுங் கொண்டு வாணிபத்திற் சிறந்திருந்தமை சரிதங்கள் பேசும்.

கலன் - ஆவண வீதிக்கு அணிகலன் என்க ; கடலுக்கு மரக்கலன் என்க.

துளக்கில் - ஆவண வீதிக்கு **துளக்கு இல்** - நீங்காத ; நிலைத்த என்றும், கடலுக்குத் **துளக்கினாலே** அசைதல் - அலைகளினாலே என்றும் கொள்க. **துளக்கில் (பேரொலி)** - (ஆவண வீதியிற் பண்டமாற்றின் பொருட்டுப் பல தேயத்தவரும் பல பண்டங்களும் பல கடைகளும் பொருந்தியதால்) மாறுத - இனம் பிரித்தறியமுடியாதபடி கலந்த ஓரிரைச்சல். சந்தையிரைச்சல் என்ற வழக்கும் காண்க. பட்டினப்பாலையில் இவ்வகைகளின் விவரங் காணலாம். இந்நகர் சோழர்களது தலை நகராதலின் (நமது சென்னைபோல்) ஆவணவீதிச் சிறப்புப் பெரிதாயினமை குறிக்கப் பெற்றதாம்.

துன்னு பண்டங்கள் - ஆவண வீதிக்கு - மணி—பொன்—நெல் முதலிய விளைவுப் பொருள்கள்—உப்பு முதலிய பல பண்டமாற்றுச் சரக்குகள். **வளத்தோடும் பலவாறு மடுத்தல்** - வளம்பெற - கண்ணுக்குப் பார்வையாகப் பலவகைகளிலே வைத்து வாங்கப்பெறுதல் எனவும், கடலுக்கு மலைபடு பண்டம்—காடுபடு பண்டம்—நாடுபடு பண்டங்களின் பல வளங்களையும் வரும் வழியில் வாரிக்கொண்டு ஆறுகள் கடலிலே சேர்தல்—எனவும் கொள்க. **பல்வாறு** என்றும், **பல் ஆறு** என்று பிரித்தும் **உரைக்க.**

கலன் - கலம் - கலனெனை வரும். "கலங்கொள் கடனாகைக் காரோணத்தானே" (திருஞான - குறிஞ்சி - 8) "கலஞ்சமைத்ததற்கு வேண்டும் கம்மியர்", "பொருகடற் கலன்கள் போக்கும் புகழினான் "—காரைக்காலம்மையார் புராணம் (33 - 37) முதலியவைகளையும், சிலப்பதிகாரம்—தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் நூல்களையும் நோக்குக.

95. ஆர ணங்களே யல்ல மறுகிடை
வார ணங்களு மாறி முழங்குமாற்

சீர ணங்கிய தேவர்க ளேயலாற்
றோர ணங்களிற் றாமமுஞ் சூழுமால். கO

இதுவும் மேல்வரும் பாட்டும் உள்நகரின் சிறப்புக் கூறுவன

(இ - ள்) *ஆரணங்களே...முழங்குமால் - வீதிகளிலே வேதங்களேயல்லாமல் யானை களும் எதிரெதிராக முழங்குவன ; சீரணங்கிய...சூழுமால் - சிறப்பாகிய அணங்காடல் முதலியவற்றால் அழைக்கப்பெற்ற, தேவர்களேயன்றித் தோரணங்களிலே மாலைகளும் சூழ்ந்துள்ளன.*

ஆரணமும் வாரணமும் - ஆரணம் *- வேதம்;* **வாரணம்** *- யானை;* **மாறி முழங்குதலாவது** *- வேதங்கள் உச்சசுரமாகிய நிஷாத சுரத்திற் சொல்லப்பெறும்போது யானையின் பிளிறோசை போன்றிருத்தலின், தெருக்களில் எழும் ஓசை, வேத ஓசையும் யானைப் பிளிறோசையும் மாறி ஒன்றற்கொன்று எதிரொலி போல முழங்கும் என்பது. நிஷாதம் - யானையோசை போன்றிருத்தலின் அப்பெயர் பெற்றதாம். இங்கு வேதவோசை அந்தணர்கள் மாளிகைகளிற் பயில்வதும் திருவிழாக்களிற் பின்னே பயின்று வருவது மாம். முழக்கும் யானை அவ்வீதியிற் பயில்வனவும் விழாக்களில் முன்னே செல்வனவுமாம்.*

முன்னர்ப் **புறநகரில்** *''வேத வோசையும்'' என்றும், ''மல்லல் யானை ஒலியுடன்'' என்றும் தனித்தனிக் கூறியதற் கேற்ப இங்கு* **அகநகரிலே** *இவ்விரண்டும் விரவி ஒலித்தல் கூறப் பெற்றது.* **புறநகரிற்** *கூறிய வேதவோசை அங்குள்ள வேள்விச்சாலை ஓது கிடைகளில் முழங்கியவை என முன்னரே உரைக்கப்பெற்றது.*

சீர் அணங்கிய தேவர்கள் *- சிறப்புச் செய்யும் அணங்காடல்விழா எடுத்து அழைக் கப்பெற்ற தேவர்கள். அணங்கிய - அணங்காடலினால் வரவழைக்கப்பெற்ற. '' சீரணங் குற நின்ற செறுவுறு திசைமுகனோடு, நாரணன்......'' (திருஞான-தேவாரம்) காண்க.* **அணங்கு** *- தெய்வத்தன்மை கொண்ட என்றும் கூறுவர்.*

'' பேரணங்காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை...''

—கண்ணப்பர் - புராணம் - (11)

தோரணம் *- விழாவிற்குரியதோர் அமைப்பு.*

தாமமும் சூழ்தல் *- தோரணங்களில் ஒரே அளவாகப் பூமாலைகளை அறுத்து இடை யிடையே தொங்கவைப்பது அணிசெய் சிறப்புக்களில் ஒன்று.*

'' பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற அறுத்துத் தூங்க நாற்றி '' என்பது திருமுருகாற்றுப்படை.

சீர் அணங்கிய தேவர்களேயலால் தாமமும் சூழும் *- தோரணங் கட்டிய விழாவில் தேவர்கள் வந்து குழுமிச் சூழ்வர். மாலைகள் தோரணங்களில் நெருங்கிப் பொருந்தும். தேவர்கள் கால் நிலந் தோயாத இயல்புடையராதலின் மாலைகள்போலத் தோரணங் களைச் சுற்றி அந்தரத்திலே சூழ்வர் என்ற நயப்பாடும் காண்க.* 10

96. *தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்*
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த வின்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொன்னகர். கக

(இ - ள்) *தாழ்ந்த...விரவுவார் - தலையிலிருந்து நிலம்வரை நீண்டு தொங்கிய சடையுடையவர்கள், சைவர்கள், பெருந் தவசிகள், வாழ்வையடைந்த மனமுடையவர் களாகிய முனிவர்கள், வேதியர், விரும்பிய இன்பத் துறைகளிலே பொருந்தியவர்கள் ; (என்ற இவர்கள் பலரும்) சூழ்ந்த...நகர் - சுற்றிச் சூழ்ந்து வாழும் பற்பல வெவ்வேறு இடங்களையுடையது அந்தப் பழமை மிகுந்த திருவாரூர்த் திருநகரம்.*

(வி - ரை) **தாழ்ந்த வேணியர்** - நீண்டநாள் வளர்க்கப்பெற்றதாதலின் **தாழ்ந்தது. தாழ்ந்த** - விரும்பிய என்று பொருள்கொண்டு தாம் விரும்பிய என்றும், பிறர்க்கு விருப்பத்தை விளைவிக்கின்ற என்றும் பொருள் கூறலும் ஒன்று. வரிசை எண் 52-ம் பாட்டின்கீழ் உரையிற் காண்க.

வேணி - சடை - இது சைவத்திற்கே சிறப்பாக உள்ள அடையாளங்களில் ஒன்று. "சைவம் விட்டிட்ட சடை" என்பது திருவிசைப்பா. மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனார் புராணமும் காண்க. சடையான் என்பது சிவபெருமானுக்கே உரிய பெயராம்.

தாழ்ந்த வேணியர் சைவர் - நீண்ட சடை கொண்டவர்களாகியதொரு வகையினரும், பிறரும், ஆகிய சைவர்கள்—காபாலியர்—பாசுபதர் முதலிய பலவேடங்களையுடைய **சைவர்.** சிறுத்தொண்ட நாயனாருக்கு அருள்புரியப் பெருமான் கொண்டருளியது காபாலிச் சைவ வேடம். இதனைப் புராணத்துக் காண்க. "...பம்புசடைத் திருமுனிவர் காபாலக்கையர் பலவேடச் சைவர்......" திருஞான - புராணம் - 1018.

தபோதனர் - தவத்தையே தனமாகவுடையவர். **தனம்** - செல்வம். தவம் - தபம் என வந்தது. தவம் - சரியையாதி சிவபூசை. இது முன்னரே விரிக்கப்பெற்றது.

வாழ்ந்த சிந்தை முனிவர் - உலக இன்பங்களை முனிந்தவர். முனிந்த வாழ்வே பெருவாழ்வென்று நிறைவுகொண்ட சிந்தை. தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்த - என்று முரைப்பர்.

வீழ்ந்த இன்பத் துறையில் விரவுவார் - **வீழ்தல்** - விரும்புதல். "தாம் வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்" என்ற குறளில், "வீழ்வார்" என்பதற்கு **விரும்புவார்** - என ஆசிரியர் பரிமேலழகியர் பொருளுரைத்தமை நோக்குக. இவ்விருப்பங்கள் பெரும்பான்மை மக்களை வீழ்த்துவன எனும் குறிப்பும் பெற இன்பத் துறைக்கு **வீழ்ந்த** என்ற எச்சம் கொடுத்துக் கூறினார். ஆனால் இங்கு உள்ளாரை அவ்விருப்பங்கள் வீழ்த்தாது உயர்த்துவனவேயாம் என்று குறிக்கத் **தபோதனர்; முனிவர், மறையவர்** முதலிய வகையினருடன் கூட்டிக் கூறினார். என்னை? இன்பத்துறையில் விரவுவாராயினும் **தபோதனர் - முனிவர் - மறையோர்**களது தன்மை கொண்டு வாழ்வார்கள் என்ற காரணத்தாலென்க.

> "......ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
> மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
> இவ்வகை இருந்தோ மாயினும் அவ்வகை
> மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
> சிந்தை நின்வழிச் செலுத்தலின் அந்த
> முத்தியும் இழந்திலம் முதல்வ !......"—**பதினோராந்திருமுறை.**

என்று இக்கருத்துக்களைப் பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் 19-வது திருப்பாட்டிலே எடுத்துக் காட்டிப் பாராட்டியிருப்பது இங்கு வைத்துக் காணத்தக்கது. மேலும் திருவாரூர்ப் பிறந்தார்கள் யாவரும், பிறந்த அக்காரணம் பற்றியே, முத்தி பெறும் தகுதியுடையாராதலின், அத்திருநகரிலே முயன்று தவங் கிடந்து முத்தி பெறும் **முனிவர் மறையோர்** முதலிய கூட்டத்துடன் இவர்களையும் கூட்டி உரைத்தனர் என்பதுமாம். **வேணியர்** என்பது துறவிகளையும், **சைவர், தபோதனர்** என்பதுசிவதீக்கை பெற்றுச் சிவபூசை செய்யும் பல ஆச்சிரமங்களிலுமுள்ள சைவர் - ஆதிசைவர் என்ற முனிவர்களையும், **முனிவர்** என்பது எல்லா வருணத்துள்ளும் முனிந்த வாழ்வுடையோரையும், **மறையோர்**—மகா சைவராகிய வேதியரையும், **விரவுவார்** - அரசவீதியிலும் கோயிற்சுற்று விழாவீதியிலும் இருக்கத்தக்க ஏனைய எல்லா இல்வாழ்வார்களையும் குறிக்கும் என்றும் கூறுவர்.

வேணியர் - சைவர் - ஆதிசைவர் எனவும், **வீழ்ந்த இன்பத்துறை** - சிவபெருமானிடத்திலே பதிந்து விழுந்த பேரின்பத்துறை எனவும், இவ்வாறு பிறவும் உரைப்பாருமுளர். சைவராகிய தபோதனர்-என்றும் விரவுவாராகியும் முனிவராயுமுள்ள மறையோர் என்றும் கூட்டி உரைப்பாருமுண்டு. **பல்வேறிடத்தது** என்று கூறுவதால் இங்குக் கூறும் பலரும் பற்பல வகையினர் என்றும், அவர் பலபல வெவ்வேறு இடங்களில் வாழத்தக்கவர் என்றும் அறிகின்றோம். ஆதலின் வெவ்வேறு பெயராற் கூறிய இவ்வகையினரை, எவ்வாற்றானும் சேர்த்துக் கூறாது, வெவ்வேறு வகுப்பினராக உரைத்தலே ஆசிரியர் கருத்தாகக் கொள்க.

சூழ்ந்த - மொய்த்து நெருங்கிய. இடம் பலவேறாயினும் இறைவனது பூங்கோயிலாகிய அகமலர் ஒன்றினையே இவை எல்லாம் சுற்றிச் சூழ்ந்திருந்தன என்பதும், இங்கு வாழும் இவ்வெல்லா வகையினரும் பூங்கோயிலுள்ளாரையே மனத்தாற் சூழ்ந்து கொண்டு வாழ்வார் என்பதும் பெறப்படும். "அனையதனுக்கு அகமலராம் அறவனார் பூங்கோயில்" என்று பின்னர்க் கூறுதலும் காண்க.

பல்வேறிடத்தது - என்றமையால் நகர அமைப்பிலே, ஒழுக்கம்—தொழில்—குலம்-முதலிய எவ்வித வேறுபாட்டையும் பாராட்டாமல் யாவரேனும் யாண்டாயினும் இருத்தற்குரியார்-என்ற இக்காலத்துப் புதுக் கொள்கை, முன்னாள் நகரங்கள் அமைத்த அறிவாளிகளுக்கு உடன்பாடன்று என்பதுணரப்பெறும்.

தொன்னகர் - நகரின் தொன்மை முன்னர் முதற் பாட்டின்கீழ் உரைக்கப்பெற்றது. வேணியர் - சைவர் முதலிய அவ்வர்களது இருப்பிடம் இறைவனது பூங்கோயிலுக்கு அணிமை கருதிய வரிசையிலே அமைக்கப்பெற்றன என்க.

இவ்வகையினராகிய பல வேறுவகைச் சைவர்களும் திருவாரூரில் வாழ்ந்து பெருமானை வழிபட்டு வருகின்றார்கள் என்பதாம்.

> "அருமணித்தடம் பூண்முலை யரம்பையரொ டருளிப்பாடியர்
> உரிமையிற் றொழுவார் உருத்திர பல்கணத்தார்
> விரிசடைவிர திகள்அந்தணர் சைவர்பாசுப தர்கபாலிகள்
> தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே"—**சீகாமரம் - 3**

எனும் அப்பர் சுவாமிகள் தேவாரத்தால் அறியலாம். இதிலே "தெருவினிற் பொலியும்" என்று கூறிய அகநகர் வீதியையே இப்பாட்டில் ஆசிரியர் "சூழ்ந்த பல்வேறிடத்தது" எனக் குறித்தனர். இங்குக் குறித்த **தாழ்ந்த வேணியர், சைவர்,** என்பவர்கள் சைவத்தின் உட்சமயத்தவர்களாம்.

> "...சைவர் பாசுபதர்கள் வணங்கும் சண்பை நகராரே"

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தக்கேசிப் பண் தேவாரமும் காண்க. 11

97\. நிலம கட்கழ கார்தரு நீணுதற்
றிலத மொப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போன்மலர்ந்
தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால். கஉ

(இ - ள்) நிலமகட்கு...பதி - நிலமாகிய மகளுக்கு அழகு நிறைந்த நீண்ட நெற்றியிலே திலதம் போல்வது சோழர்கள் அரசுபுரிந்து வாழும் இந்நகரம்; மலர் மகட்கு... விளங்குமால் - (அதனோடு) மலர்மகளுக்கு (உறையுளாகிய) வளமுடைய தாமரைபோல மலர்ந்து அளவில்லாத சிறப்புடைய இத்திருவாரூர் விளங்கும்.

இது, மேலே கூறிய புறநகர்—இடைநகர்—உண்ணகர்ச் சிறப்புக்களை எல்லாம் தொகுத் துரைப்பது.

(வி - ரை) நிலமகட்குத் திலதம் போன்றதாகிய செம்பியர் வாழ்பதியாகிய அலகில் சீர்த் திருவாரூர் மலர் மகளுக்குத் தாமரைபோல மலர்ந்து விளங்கும் என்று கூட்டுக.

நிலமகள் - பூமிதேவி. மலர்மகள் - சீதேவி ; இலக்குமி. இந்நகர் நிலமகளுக்கு அணியும், மலர்மகளுக்கு இருப்பிடமும், ஆம் என்றதாம்.

அழகு ஆர்தரு நீள்நுதல் - அழகு நிறைந்து நீண்ட நெற்றி எனவே நிலமாகிய மகளுக்குச் சோழ நாடு நீண்ட நெற்றி போன்றும், திருவாரூர் அதன் திலதம் போன்றும் உள்ளன என்க. நுதல் என்றதனால் சோழ நாடு வருவித்து உரைத்துக் கொள்க.

செம்பியர் வாழ் என்றதனாலும், (அக்குறிப்புப் பற்றி) நீள் என்றதனாலும், நுதலின் நீளமும் நாட்டின் நீளமும் குறித்தவாறு. நுதல் - திலதம் - புருவ நடுவாகிய தியானத்தானத்தைக் குறிக்கும். இத்திருநகர் நிலமகளின் திலதம் என்றது - நிலத்தன்மை வாய்ந்து எழுந்து, அவளுக்குத் தியானத்தலம் போன்ற புற்றினிடமாக இறைவன் எழுந்தருளியிருக்கும் குறிப்புப் பற்றி என்க.

அழகு ஆர்தரு - அழகு நிறைவிக்கும். தரு - (கற்பகம்) போல்வதும், நுதல் - திலதம் ஒப்பதும் என்று பிரித்து உம்மைத் தொகையாக உரைப்பதுமாம் ; தரு-விரும்பியதெல்லாம் கொடுத்தல் போல - இந்நகரும் வேண்டியவற்றை எல்லாம் நிலத்தில் வாழ்வாருக்குத் தருதலான் (கொடுக்கும் தியாகேசர் எழுந்தருளி யிருத்தலால்) என்க. செம்பியர் - சோழர்.

மலர் மகட்கு வண்டாமரைபோல் மலர்ந்து. தாமரையிற்போல இத்திருநகரில் என்றும் இலக்குமி வழிபட்டு உறைதலால் மலர்ந்து என்றார். மலராள் வழிபட்டமை முதற் பாட்டிலே கூறினார். மலர்மகள் சரச்சுவதி - என்பாருமுண்டு.

நிலமகள்—மலர்மகள் - இருவரையும் நாயகிகளாக உடைய திருமால் விரும்பி வழிபட்ட தலமாதலாலும், தமது மார்பிலே திருப்பாற்கடலிலே தியானப் பொருளாய் வைத்து வழிபட்ட தியாகேசர் எழுந்தருளி யிருத்தலாலும், திருமாலின் நாயகிகளுக்கும் சிறப்புச் செய்வதாம் என்பதும் குறிப்பாகும்.

"பையஞ் சுடர்விடு நாகப் பள்ளி கொள்வா னுள்ளத்தானும்"

என்ற தேவாரமுங் காண்க. 12

98. அன்ன தொன்னக ருக்கர சாயினான்
துன்னு வெங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீரந பாயன் வழிமுதன்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே. ௧௩

(இ - ள்) அன்ன...ஆயினான்-மேலே சொல்லிய அத்தன்மைகளெல்லாம் பொருந்திய பழமையான திருவாரூர்த் திருநகரத்திலே அரசராய் வீற்றிருந்தான் ; துன்னு வெங்கதிரோன்...வேந்தனே - நெருங்கிய வெங்கதிரவனாகிய சூரியனது மரபிலே தோன்றியவனும், நிலைபெற்ற சிறப்புடைய அநபாயச் சக்கரவர்த்தியின் வழியிலே முன்னவனும் ஆகிய விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த மனுவேந்தனேயாம்.

தோன்றினாய் - வழி முதலாகிய - வேந்தன் - நகருக்கு அரசு ஆயினான்-என்க.

(வி - ரை) தொல்நகர் - திருவாரூர். இதன் தொன்மை முதற்பாட்டிலே உரைக்கப்பெற்றது. அதிற் சொன்னதை அனுவதித்து இங்கும், 11-வது பாட்டிலும், தொன்னகர் என்றமை காண்க. திருவாரூரைச் சொல்கின்றபோதெல்லாம் ஆசிரியருக்கு அதன் தொன்மையே நினைவுக்கு வருகின்றது. தொன்மையில் திளைத்தல் தமிழர்களது சிறப்பு இயல்புகளில் ஒன்றென்பது ஆசிரியர் குறிப்பு. புதுநகர்களைத் தேடிப் பல வகைகளிலும் அல்லற்படுவோர் இக்கருத்தை நோக்குவாராக.

துன்னு வெங்கதிரோன் வழித்தோன்றினன் - **துன்னுவெங்கதிரோன்**-சூரியன். வெம்மை துன்னு கதிரோன் என்க. துன்னுதல் - நெருங்கிப் பொருந்துதல். எழு நிறங்களும் சேர்ந்து வெண்மை ஒன்றேயாய்த் துன்னியதும், அதனுடன் வெப்பத்தையும் கொண்டதுமான கதிர் என்றுரைத்தலும் ஒன்று. **சேங்கதிரோன்** என்பதும் பாடம். **வழித் தோன்ற**லென்றது சோழர்கள் சூரியன் மரபினராதலைக் குறிப்பிட்டதாம்.

மன்னு சீர் அநபாயன் வழி முதல் - மன்னு சீர் என்றது தம் அரசரை வாழ்த்திய வாறு, நிகழ்காலத்து நிலைபெற்றிருப்பதுடன் எதிர்காலத்தும் **மன்னும் சீர்** என்பதாம். இது இப்புராணம் பாடக் காரணரா யிருந்ததுபற்றி இப்புவியரசர்க்குக் கவியரசர் காட்டும் நன்றியுமாம். முன்னர்க் கூறியனவும் பின்னர்க் கூறுவனவும் இவ்வாறே காண்க. சோழர்களது சரிதங்கூறும் இடங்களில் எல்லாம் ஆசிரியருக்கு அநபாயர் நினைவு தோன்றுகின்றது. அரசைத் தாபித்துவைத்தல் அமைச்சர் இயல்பும் நீதியும் நன்றியுமாம் என்க.

வழி-முதல் - இது மனுவேந்தர் சிறப்பை அறிவிக்கும் ஒருவகை. ஆரூர்ச் சிறப்பை மனுச்சோழர் செய்தியினால் அறியவைக்கும் ஆசிரியர் அவ்வரசரது மரபுச் சிறப்பை அந்நாளின் நிகழ்காலச் செய்தியாகிய அநபாயரது சிறப்பினால் அறியவைத்தல் காரணமாக்கொண்டு இங்கு மனுவேந்தரை **அநபாயர் வழிமுதல்** என்றார். மனுவை இடையில் வைத்து அவர் கதிரோன் வழிவந்தவர் என்றும், அவர்பின் அவரது வழி வந்தவர் அநபாயர் என்றும் கூறினார். மனுச்சோழரின் மரபின் தொடக்கப் பெருமைக்காகக் கதிரவனைச் சொன்னாரேனும், அச்சிறப்பைவிட அநபாயரைத் தம்வழியிலே வரப்பெற்றதே மனுவேந்தர்க்கு மிகச்சிறப்பைத் தருவதென்பார் **தோன்றினன்** என்பதனோடு சேர்த்து **வழிமுதல்** என்றுங் கூறினார். 13

99. மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்
கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண வியற்றினன். ௧௪

(இ - ள்) மண்ணில்...காவலான் - (அவ்வேந்தன்) இந்நிலவுலகில் வாழும் எல்லா உயிர்களையும் கண்ணையும் உயிரையும்போலக் காவல் செய்தான் ; விண்ணுளார்... இயற்றினன் - (இவ்வாறு மண்ணவர்க்குப் பயன் செய்தலேயன்றி) அம்மேலுலகில் விண்ணவர்க்கும் அவர் மகிழும்படிப் பல வேள்விகளைச் சிறப்பாகச் செய்தனன்.

(வி - ரை) அவ்வேந்தன்-என்ற எழுவாய் மேற்பாட்டிலிருந்து தொடர்ந்து கொள்ளப்பட்டது. இவ்வாறே வருகின்ற இரண்டு பாட்டுக்களிலும் அதனையே தொடர்ந்து கொண்டு வினைமுடிபு காண்க.

காவலான் இயற்றினன் - வேந்தன்—காவலான்—இயற்றினன்—என்க. இவ்வாறன்றிக் காவலானாகிய வேந்தன் இயற்றினன் எனக் காவலான் என்பதனை வினையாலணையும் பெயராக்கி உரைத்தலுமாம். அதனையே முற்றெச்சமாக்கிக் காவலானாகி இயற்றினன் - காவல் செய்வதற்காக என்று உரைப்பினுமாம்.

வாழ்தரு மன் உயிர் - **வாழ்தரும்** - வாழ்கின்ற. **மன்** - நிலைத்த - மண்ணில் மன்னி வாழ்தரும் உயிர்—என்று கூட்டி யுரைக்க. **வாழ்தரும்** - ஒரு சொல். இவ்வாறன்றி, (இவ்வரசன்) **மண்ணில்** - (தேவ உலகத்திலே தேவர்களுக்கு விரும்பியது கொடுக்கும் கற்பக மரம்போல) நிலவுலகத்திலே, **வாழ் தரு** - வாழும் கற்பகம்; **மன் உயிர்க்கெலாம்**- இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் கேட்டது கொடுக்க - என்று பிரித்து உரைத்தலும் ஆம். மேலே 12-வது பாட்டில் **அழகார் தரு** என்பதற்கு உரைத்ததும் காண்க. இப்

பொருளில் இப்பாட்டில், இவ்வேந்தன் — தரு — காவலான் — இயற்றினான் — என மூன்று பொருள் கூறியதாகக் கொள்க.

உயிர்க்கெலாம் - மனிதர்க்கே யன்றி நடப்பன பறப்பன முதலிய எல்லா உயிர்களுக்கும் காவல் புரிபவன். வேந்தன் தன் அரசின்கீழ் வாழும் எல்லா உயிர்களுக்கும் வரும் துன்பம் போக்கிக் காவல் செய்தல் வேண்டும் என்பது நீதி. இதன் பொருட்டே, தான் அரசு தாங்க நின்றபோது எல்லா உயிர்களும் பேசும் மொழிகளை அறியும் அறிவைக் கழறிற்றறிவார் நாயனார் இறைவனிடத்து வேண்டிப் பெற்றுக்கொண்டார் என்பதும், அதனாலே அவர் அப்பெயர் பெற்றனர் என்பதும், அதுவே தமிழர் அரசநீதி என்பதும், அவர் புராணத்திலே காண்க. உணவின் பொருட்டுப் பிராணிகளைக் கொல்வதை அனுமதித்துச் சட்டமுஞ் செய்யும் இந்நாள் நீதிமுறையுடன் அதனை ஒப்பிட்டு உண்மை தெளிக.

உயிர்க்கெலாம் - என்பதனை நடுநிலைத் தீவகமாய் வைத்து அவற்றிற் கெல்லாம் கற்பகத் தருவாகிக் கொடுத்தலே யல்லாமற் பெருங்காவலும் செய்தவன் என்க. **தரு** - கொடுத்துக் காவல் செய்வது. **பெருங் காவல்** - நன்மை தீமை காட்டி உதவுதல்.

உயிர்க்கெலாம் - பின் வரும் சரிதத்தின் முற்குறிப்பு.

கண்ணும் ஆவியும் ஆம் பெருங்காவல் - தனது கண்ணைக் காப்பது போலவும், தன் உயிரைக் காப்பது போலவும், பிற எல்லா உயிர்களையும் காத்தலே **பெருங் காவல்** என்பது. இது புறக்காவல். கண் ஒளியும் ஆன்ம போதமும் கலந்து உயிர்களுக்குக் காட்சி கொடுத்துக் காப்பது போல, வேந்தனும், நன்மை தீமைகளைக் காட்டி உறுதி தந்து உதவினன் என்று உரைத்தலும்ஆம். இது உட்காவல்; அகக்காவல். எனவே உள்ளும் புறம்பும் காவல் செய்தனன் என்க. சூரியன்,காட்டுகின்ற ஒளியும்,ஆன்மா, காணும் ஒளியுமாம். கண் சடமாகிய ஒளியாதலால் அதனுடன் அறிவொளியாகிய ஆன்ம போதமும் கலந்த பின்பே காட்சி நிகழும். எனவே, கதிரும் ஆன்மாவும் கூடிக் கண்ணைப் பார்க்கும்படிச் செய்து நன்மை தீமைகளைக் காட்டுகின்றன. அதுபோல உலகத்திற்கு உறுதிப் பொருள்களையும் காட்டிக் காவல் செய்தான் என்பது கருத்து. வெங்கதிரோன் கண்ணுக்கு உதவுவது போல, அவன் வழித்தோன்றினாகிய இவ்வேந்தனும் உயிர்களுக்கு உதவினான் என்பார், மேற்பாட்டிலே காட்டிய, **கதிரோன் வழித்தோன்றினான், கண்ணுமாவியுமாம் காவலான்**—என்றார். இக்கருத்தையே பின்னரும் அனுவதித்து முன்னே மனுநீதியினாலே நன்மை தீமைகளைக் காட்டியதைச் சுட்டி அவருடைய பெயரே தன்பெயராயிற்று-என்று கூறுவதும் காண்க. உயிர்கட்கெலாம் பெருங் காவலான்-(பேரரசன்), கண்ணும் ஆவியும் ஆம் (ஆவான்) என்றுரைத்தலும் ஒன்று. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற புறப்பாட்டும் காண்க.

விண்ணுளார் மகிழ்வெய்திட வேள்விகள் - வேள்விகளாலே மழையும், மழையாலே விண்ணவர்க்கு மகிழ்ச்சியும் பூசையும், மன்னுயிர்களுக்கு இருப்பும், ஆக வேண்டுதலின் மண் காவலின் அடுத்து விண்வேள்வியை வைத்து, **மகிழ்வெய்திட** என்றார். அன்றியும் வேள்விகளிலே குறித்த தேவர்கள் அவிர்ப்பாகங்களை உண்டு மகிழ்கின்றார்களாதலின் **மகிழ்வெய்திட** என்றார். மேல் நின்று கீழே ஒளி பரப்பும் சூரியன் போலே இம்மன்னர் கீழே நின்று மேலே மகிழ்ச்சி செய்தார்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக"

என்ற பிரமாணப்படி வேந்தன் ஓங்கவே புனல் விழுவதாம். அது வீழவே வானவர் வாழ்வுமாம் எனப் பெறப்படுதலும் காண்க. அரச நீதியே மழைக்குக் காரணமாகும் என்பது திருக்குறள் முதலிய எல்லாப் பெருநூற் பிரமாணங்களாலும் அறிக.

வேள்விகள் - இவை சிவபெருமானை முன்னாகச் செய்யும் யாகங்கள். "யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும் யாகம்" (சோமாசிமாறநாயனார் புராணம் - 2)

முதலிய திருவாக்குக்கள் காண்க. இவ்வரசர் ஆகமம் சொன்ன முறைமையால் நிபந்தம் ஆராய்ந்தமை மேலே சொல்லப் பெறுதலும் காண்க.

எண்ணிலாதன - எண்இலாதன - அளவில்லாத என்க. **எண் நிலாதன**-ஒரு எண்ணுக்குள்ளே நிற்காதவை எனவுமாம். **எண்**-எண்ணம் ; அது தனக்கென்று ஒரு பயனை உட்கோளாகக் கொண்டு எண்ணிச் செய்வது. இதனைக் காமேட்டி (புத்திர காமேட்டி போல்வன) என்பர். இவ்வேந்தன் செய்த வேள்விகள் அவ்வாறு ஒரு எண்ணம் பற்றிச் செய்யப் பெற்றன அல்ல என்பார் **எண்** இலாதன என்றருமாம். 14

100. கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்ற நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினன். கரு

(இ - ள்) கொற்ற...சூழ்ந்திட - வெற்றி பொருந்திய தனது ஆணைச் சக்கரம் உலகத்தைச் சூழ்ந்து நிற்கவும் ; சுற்று...சூழ்ந்திட - அந்த ஆணையினாலே சுற்றப்பெற்ற அரசர் திறைப்பொருள் தனது கடைவாயிலில் சூழ்ந்துகொண்டு இருக்கவும்; செற்றம்... ஆக்கினன் - கோபத்தை நீக்கிய செம்மையினாலே உண்மையே உருவமாகிய ஆதி மனுச் சக்ரவர்த்தி பெற்ற மனுநீதி என்பதைத் தனது பெயராலே அமைந்ததாக ஆக்கிக்கொண்டான். அதாவது மனுநீதிச் சோழன் என்ற காரணப் பெயரையே தனது இயல்புப் பெயராகப் பெற்றான் என்பதாம்.

(வி - ரை) செம்மையின்—சூழ்ந்திட—சூழ்ந்திட—ஆக்கினன் என்று வினைமுடிவு செய்க.

கொற்ற ஆழி - ஆழி - சக்கரம். அரச ஆணையை ஒரு சக்கரமாகக் கூறுதல் மரபு. செலுத்தியவாறெல்லாம் ஓடிச் சுற்றிச் செல்வதனால் சக்கரம் போன்றது என்க.

ஆழியின் கொற்றமாவது இவனது ஆணையானது எங்குச் செலுத்தினும் வெற்றியே பொருந்தி நிகழ்தல். வேறொன்றினாலும் வாதிக்கப்படாத ஆணை. இதனை ஆக்ஞா என்பர் வடநூலார். "வெட்டாத சக்கரம்" என்பதுபோலக் "கொற்ற ஆழி" என்றார். இறைவனது ஆணைபோல இவ்வரசனது ஆணையும் ஆம் என்பர். அதனாலே அரசரை இறை (இறைமாட்சி) என்று அழைப்பது மரபாயிற்று.

குவலயம் - கு+வலயம். கு - பூமி. **வலயம்** - சுற்று. பூமியின் இவ்வரசனுடைய ஆணை வரம்பாகிய எல்லை.

சுற்று மன்னர் - தனது ஆணையினாற் சுற்றப்பட்டாரும், அன்றி அதற்குட்படாமலே நட்புவேண்டித் தன்னைச் சுற்றிக்கொண்டாரும் ஆகிய அரசர்கள். "ஆழிகுவலயம் சூழ்ந்திட" என்றாராதலின் அதனாற் சூழப்பெற்ற என்பார் **சுற்றும்** என்றார். **சுற்றும்** - சுற்றப்பெறும் - எனப் பிறவினைப் பொருள் கொள்க. இவர்களேயன்றிச் "செல்லாத பல்வேறு தீபத்துச் செங்கோன்மை வல்லாரும்...நட்படைய நடக்கின்றார்" என்ற திருவிளையாடல் - வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத் திருப்பாட்டிற் காணுமாறு, ஆணையினாற் சுற்றப்படாத பலரும் தாமே இவரது நட்பினாற் பயன் பெறும்பொருட்டு இவர் வாயிலிற் சூழ்கின்றார்கள் என்பதும் குறிக்கச் **சுற்றும் மன்னர்** என்றார்.

மன்னர் திறைகடை சூழ்ந்திட - மன்னரும் அவர் கொணரும் திறையும் கடைவாயிலிலே சூழ.

செற்றம் நீக்கிய செம்மையின் - இவ்வாறு ஆழி சூழ்வதும் திறை சூழ்வதும் தமது போர் வலிமையாலன்றி அன்பினால் அமைந்த ஆணை வலிமையினாலே உளதாயிற்று என்பது குறிக்கச் "செற்றம் நீக்கிய செம்மையின்" என்றார். **செற்றம்** - கோபமும்

அதன் வழித்தாய் வரும் தீக்குணங்களும். நீக்கிய தன்னிடத்திலேயும் தன் ஆணை சூழ்ந்த யாவரிடத்திலேயும் இல்லாமற் போக்கிய. உலக வாழ்க்கையிலே விளையும் தீமைகட்குக் காரணமாக நின்ற தீக்குணங்களிலே முதன்மை பெற்றது கோபம் என்பதே. அதனை நீக்கினுற்ருன் உலகத்திலே எல்லா உயிர்களிடத்தேயும் செம்மையாகிய வாழ்வு நிகழும். ஆதலின் **சேற்ற நீக்கிய செம்மையின்** என்ருர். நீங்கிய என்னுது நீக்கிய என்றதனுலும் இக்கருத்தை வலியுறுத்தியபடியாம்.

(செம்மை) **இன்** - செம்மையினுலே. செம்மை காரணமாக. ஏதுப் பொருளில் வந்தது.

மனுப்பெற்ற நீதி - என்றது குல முதல்வனுன மனு அரசன் செலுத்திய நீதியினை அல்லது ஆட்சியினை. இது மனு தர்ம சாத்திரம் என்ற சுமிருதியினேடு மயங்கியறியத் தக்கதன்று. அந்த தரும சாத்திரப் பேர் வழங்குபவர் மனு என்ற பேருடைய இருடியாாவர். இப்பாட்டிலே குறித்தவர் வேந்தர். இருடியர் செய்த அந்த சுமிருதியாகிய மனுதரும சாத்திரம் அக்காலத்துக் கேற்ப வகுக்கப்பெற்றது. ஆதலின் இந்நாளில் பலரும் மயங்கி யறிவது போல அது கொண்டு செற்றமும் பூசலும் விளைத்தல் பொருந்தாது என்க. "செற்ற நீக்கிய செம்மை என்றும்" - "மெய்ம்மனு" என்றும் கூறிய குறிப்புக்கள் ஆசிரியரது தெய்வ வாக்காதலால், அவை இந்நாளில் விளையும் மனுவைப் பற்றிய போராட்டங்களை விலக்கவே எழுந்தன போலவும் தொனிக்கின்றன.

தன்பெயராக்கினுன் - முன் மனுஅரசன் செலுத்திய நீதி ஆட்சியைப் போலவே இவ்வேந்தனும் செலுத்தியதனுல் அப்பெயருடன் சேர்த்துச் சொல்லப் பெற்ருன்.

இக்காலத்துக்கு முன்சொல்லிய அத்தரும சாத்திரம் ஏலாதென்று காலத்திற்கேற்பப் பராசரர் சுமிருதி வகுத்தார் என்றும், அதனுலே, 'கலௌபராசர' என விதித்தனர் என்றும் கூறுவர். இதனுண்மைகளை ஆராய்ந்து தெளிக.

மனு - மன் - நினைத்தல் - (பகுதி) "மனனம்" என்பதும் காண்க. மனு எல்லாராலும் நினைக்கத் தக்கவன், நினைக்கவேண்டியவற்றையே நினைப்பவன் என்பன பொருளாம். அவ்வழி நிற்றலாலே மக்கள் மானிடர் எனப் பெற்ருர் என்பர்.

கோற்ற ஆணை - (கடவுள்) இறைவன் ஆணை - பெரியோர் ஆணை - அரசனுணை - இவை மூன்றும் ஒன்று போலக் காரணம் வினவாமலே விசுவசித்துப் பின்பற்றிக் கீழ்ப்படியத்தக்கன. இவ்வாணைகளைக் கீழ்ப்படிந்த பின்னரே காரணம் தெரியவரும். பெரியோர் - ஆறுவதுசினம் - ஓதுவதொழியேல் - ஔவியம்பேசேல் - என்பனவாதி ஆணைகளை முதலில் தந்தனர். அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடந்தார்க்குத் "தீராக் கோபம் போராய்முடியும்" "ஓதாதார்க்கில்லை உணர்வொடும் ஒழுக்கம்"—"ஔவியம்பேசுதல் ஆக்கத்திற்கழிவு" என்பனவாதி அந்த ஆணைகளுக்குரிய காரணங்களைப் பின்னரே முறையே விரித்து உணர்த்தினது காண்க. குழந்தைகளுக்கு ஆணைகளின் காரணங் காட்டுவதென்பதும், அது தெரிந்த பின்னரே அவை பின்பற்றுவதென்பதும் இல்லை. அவ்வாறு செய்வதாயின் வாழ்க்கை நடைபெருு. குழந்தைப் பக்குவமுடையாரே உலகிற் பலராதலின் உலக ஒழுக்கத்திலும் இவ்வாறே நியதியாம். முதலிலே இவ்வாணைகளைப் பின்பற்றி ஒழுகிய பின்னர் அதன் பயனை அறிந்து அவ்வொழுக்கத்தின் நிலைபெறுதல் வேண்டு மென்பது அறிஞர் துணிபு.

சில பிரதிகளில் இப்பாட்டு இதனை அடுத்த 'பொங்குமாமறை' எனும் பாட்டின் பின் காணப் பெறுகின்றது. 15

101. பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்

கங்கண் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
துங்க வாகமஞ் சொன்ன முறைமையால்.   கக

(இ - ள்) பொங்கும்...நிபந்தம்-(அவ்வரசன்) மேன் மேலும் வளர்கின்ற மறை வடிவினதாகிய புற்றினை இடமாகக் கொண்டு எங்கேயும் ஆகி வீற்றிருக்கும் வன்மீக நாதருடைய பூசனைக்கு வேண்டிய படித்தரங்களை ; ஆராய்ந்துளான்...முறைமையால் - சிவாகமங்களில் விதித்தவாறே ஆராய்ந்து நியமித்தனன்.

(வி - ரை) முறைமையால்—பூசனைக்கு—நிபந்தம்—ஆராய்ந்துளான் எனக் கூட்டி வினைமுடிபு காண்க.

பொங்கும் மாமறைப் புற்று - இறைவனுக்கு இருப்பிடமாகித் தனக்குள் அவனைத் தங்கவைத்துக் காட்டிக் கொண்டிருத்தலால், புற்று மறைவடிவை யுடையது ; ஆதலின் **மறைப்புற்று** என்றார். "மறையே நமது பாதுகையாம்..." என்பனவாதி திருவாக்குக்களின்படி மறை இறைவனுக்கு இடமாகும். அது போலவே இப்புற்றும் அவனுக்கு இடமாயிற்று ஆதலின் மறைக்கு உவமேயமானதாம். வேதம் நாத உருவம். சிவத்திலிருந்து நாதமாகி வேதமாகிப் பின் உலகம் உளதாவது. இது சிருட்டி முறை. இவ்வாறு அனந்தமாய் உலகமாய்ப் பெருகுதலினால் **பொங்கு மா**—மறை என்றார். புற்றும் (பிருதிவி) மண் ஆகி (வளர்ந்து) உலக சிருட்டிக்குத் துணையாகி அதிலிருந்து உலகம் ஆகின்றமையால் உவமேயத்திலும் **பொங்கும்** என்பதன் பொருத்தம் காண்க.

எங்கும் ஆகி இருந்தவர் - புற்றை இடம் கொண்டாராயினும் எங்கும் ஆகி இருந்தவர் எனவும், எங்கும் நிறைந்து இருந்தாராயினும் அன்பர்களின்மீது வைத்த கருணையினால் அவர்கள் தம்மை வழிபடும் பொருட்டு வெளிப்படக் காணப் புற்றிலே இடங்கொண்டு இருப்பவர் எனவும் இருவகையும் கூட்டிப் பொருள் உரைத்துக் கொள்ளத் தக்கது. **எங்கும் இருந்தவர்** - எல்லாம் ஆகி இருந்தவர் என்று இரண்டாகப் பிரித்துப் பொருள் உரைக்க. இதனால் இறைவனது சர்வ வியாபகம் - சர்வ அந்தரியாமித்துவம் - என்ற இலக்கணங்கள் குறிக்கப்பெற்றன.

இருந்தவர் - "சிவ" சத்தத்திற்கு இருத்தல் - கிடத்தல் என்று பொருள் கொண்டு, எங்கும் இருப்பவர்—எல்லாவற்றிலும் பதிந்து கிடப்பவர்—ஆதலின் சிவ பெருமானுக்குப் பெயராயிற்று என்பர். இதனையே எங்கும்—ஆகி—இருந்தவர் என்றார். இப்பொருள் பற்றியே அப்பர் சுவாமிகள், "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி..." எனும் "நின்ற திருத்தாண்டக"த்தை அருளிச் செய்தனர். (**நிற்றல்** - இருத்தல்).

நீதி மன்னன் - என்று அவனது நீதியைக் "கொற்ற ஆழி" எனும் மேற்பாட்டிலே சொல்லி, நீதி மன்னர் கடைப்பிடித்துக் காக்கவேண்டிய சிறந்த ஒழுக்கம் சிவாலய பூசை காத்தலாகிய இதுவே என்பார், அதனை அடுத்து இப்பாட்டிற் கூறினார். சில பிரதிகளிற் காண்கிறபடி இப்பாட்டு அதன்மேல் உள்ளதாயின், விண்ணவர் வேள்விகளை இயற்றியும், புற்றிடங் கொண்டார் பூசனைக்கு நிபந்தம் ஆராய்ந்துவைத்தும், உள்ள அரசன், அதன் துணைகொண்டு, உலகநீதி செலுத்தினான் - என்று முறைப்படுத்துக.

புற்றிடங் கொண்டவர் - எங்குமாகி யிருந்தவர் - என்பதை உம்மைத் தொகையாக்கித் தனது தலைநகராகிய திருவாரூரிலே புற்றிடங்கொண்டார்க்கும், தனது கொற்ற ஆழி சூழும் குவலயத்தில் எங்கும் எங்கும் கோயில் கொண்டவராகி உள்ள அவர்க்கும், பூசனைக்கு நிபந்தம் ஆராய்ந்து வைத்தனர் என்று உரைப்பதுமாம்.

அங்கண் வேண்டும் - அங்கங்கே வேண்டப்பெறும். **நிபந்தம்** - கட்டளைப்படித்தரம்—திரவியங்களின் ஒழுங்கு. நிமந்தம் - நிமிந்தம் - என்றுங் கூறுப.

ஆராய்ந்துளான் - ஆராய்ந்து அதன்படி நியோகித்து வைத்தான். ஆராய்ந்து அவ்வாராய்ச்சியிற் கண்ட துணிபின்படி நின்றவன். **உளான்** - அதன்படி நின்றவன், "கற்க...கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பது ஆணையாகலின்.

முன்னர் வேள்விகள் எவ்வாறு தனக்கென ஒரு எண்ணமிலாது இயற்றினனோ, அதுபோலவே பூசனைக்கு நிபந்தமும் வைத்தான் என்க. என்னை? இவை திருக்கோயில்களிலே செய்யும் பரார்த்த பூசை. இவற்றால்வரும் புண்ணியம் அரசர்க்குமுண்டாயினும் இவை பிறர்பொருட்டுச் செய்வனவாம். அவற்றிற்கு வேண்டிய நிபந்தங்களை அரசர் அந்நாட்களில் அமைத்துவைத்தது, தம்கீழ்வாழும் குடிகள் இனிது வாழும்பொருட்டே.

"ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே"

"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே."

—இரண்டாந்தந்திரம் - 19 - திருக்கோயிலிழிபு - 3 - 4

என்ற திருமந்திரங்களின் பிரமாணத்தான் இதன் உண்மை அறிக. நமது தமிழ் மன்னர்கள் நியோகித்த இக்கோயிற் பூசை நிபந்தங்களை இந்நாளிலும் நமது ஆங்கில மன்னர் காத்து வருவது இக்கருத்துப்பற்றிப் போலும். நமது மன்னர் (Defender of the faith என்ற பட்டத்தைத் தாங்கி நிற்பதும் காண்க.

துங்க ஆகமம் - சிவாகமங்கள். (சிவம் - மங்களம்) இவை இருபத்தெட்டாம்.

சொன்ன முறைமையாவது - நித்தம், நைமித்தியம், காமியம் என்ற மூவகையிலும் அங்கங்களையும் கூட்டி (1) நித்தியம் (2) நித்தியாங்கம் (3) நைமித்தியம் (4) நைமித்தியாங்கம் (5) காமியம் (6) காமித்தியாங்கம் என ஆறுவகைப்படும். காரணம் பற்றாது என்றும் செய்வன நித்தம். நித்திய பூசை முதலியன. ஒரு நிமித்தம்பற்றிச் செய்வன நைமித்தியம் என்பர். இவை திருவிழா முதலியன. ஒரு குறிக்கோள், உட்கிடை, பெறும்படிச் செய்வன காமியமாம். மேலும் இவற்றின் விரிவுகளைத் தக்கார்பாற் கேட்டுணர்ந்து கொள்க.

(13) மனு வேந்தன் அரசாயினன்—தோன்றினன்—(14) காவலான்—இயற்றினன்—(15) ஆக்கினன்—(16) ஆராய்ந்துளான்—என்று பாட்டுக்களில் தொடர்ந்து கொண்டு வினைமுடிபு செய்க.

ஆராய்ந்தனன்—என்பதும் பாடம். 16

வேறு

102. அறம்பொரு ளின்ப மான வறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கு நாளில்
சிறந்தநற் றவத்தாற் றேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தன னுலகம் போற்றப் பேரரிக் குருளை யன்னான். கஎ

(இ - ள்) அறம்...நாளில் - (மனுவேந்தன்) அறமும் பொருளும் இன்பமும் என்ற இவற்றால் ஆகிய தரும வழியிலே உயிர்களை நிறுத்துவித்தும், தானும் நின்றும், இவற்றிற்கு மாறாகிய மறங்களை (பாவ காரணங்களை) அழித்தும், ஏனை அரசர்கள் துதிக்கும்படி உலகத்தைக் காத்து வந்தார். அந்நாளிலே; சிறந்த...அன்னான் - (அவர் புற்றிடங் கொண்டிருந்தவருக்கு ஆகமமுறையிலே வேண்டு நிபந்தமாராய்ந்து) செய்த சிறந்த தவத்தின் பயனாக அவரது தேவியின் அழகிய திருவயிற்றிலே இளஞ்சிங்கம்போல உலகம் போற்றுமாறு மைந்தன் பிறந்தனன்.

(வி - ரை) அறம் பொருள் இன்பம் ஆன அறம் நெறி - அறமும் பொருளும் இன்பமும் என இம்மூன்றும் கூட்டப்பெற்றதாகிய தருமவழி. உறுதிப்பொருள் நான்கினுள் வீடு என்பது "பானை நினைந்து இம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" என்றபடி இவைகளினின்றும் விடுபடுவதாகும்; ஆதலின் அறநூல் வீடொழிந்த இம்மூன்றையுமே எடுத்துக் கூறுவன. ஆசிரியர் பரிமேலழகியார் திருக்குறள் உரைப்பாயிரத்துக் கூறியது காண்க. பொருள் - அறவழியில் ஈட்டப்பெறுவது. "மறத்தாறு கடந்த செங்கோல் வழுதிநின் பொருள்களெல்லாம், அறத்தாற்றின் ஈட்டப்பட்ட அனையவை புனிதமான..." என்ற திருவிளையாடற்புராணம் (வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம்) காண்க. இன்பம் - அறத்தின்வழியே நின்று அனுபவிக்கப் பெறுவது. அவ்வாறு அனுபவிப்பதும் துறந்தார், தென்புலத்தார் முதலாயினர் பொருட்டு; ஆதலின் இன்பம் அறத்திற்குக் காரணமாயிற்று. ஆகவே அறமும் பொருளும் இன்பமும் என்ற இம் மூன்றும் கூடியதே அறமாம் என்பார் அறம் பொருளின்ப மான அறநெறி என்றார்.

நெறி வழாமல் புல்லி - நெறியினின்றும் வழுவாமல்; பிறழாமல் - தான் நெறி வழி வழாமற் புல்லி (பற்றி) நின்றும், (பிறவினைப் பொருளில்) பிறர்களையும் அறநெறி பிறழாமற் புல்லுவித்தும் - என இரு பொருளிலும் கொள்க.

சிறந்த நல் தவம் - இது, இவ்வரசன் மேற்பாட்டிலே கூறியபடிச் சிவபெருமானை முன்னிட்ட தவத்திலே நின்றமை குறித்ததாம்.

"...இம்மை யேதரும் சோறுங் கூறையும் ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே"

என்று சுந்தரமூர்த்திகள் திருப்புகலூர்த் தேவாரத்திலே உறுதியிட்டபடி, இவ்வரசன் செய்த இத்தவம் இவ் வரும்பெறல் மகனைக் கொடுத்து இச்சரிதம் நிகழ்வித்தது மன்றி, வீதி விடங்கப் பெருமானை நேரேகண்டு தரிசிக்கும் பேறும் கொடுத்து, வீட்டுக்கும் காரணமாயிருந்தது. மேலும், இத் திருத்தொண்டர் புராணத்திலே அடியார் திருக்கூட்டத்துடன் சேர்த்துப் பாராட்டப்பெறும் பேற்றையும் தந்தது. இத்தவம் இவ் வுலக நிலையிலே புகழ் தருதலாலே சிறந்தது எனவும், அவ்வுலக நிலையிலே வீடு தருதலாலே நல்லது எனவும் ஆயிற்று - என்பார் சிறந்த—நல்—தவம் என அடைமொழிகள் புணர்த்திக் கூறினார். நல்வினையின் பயனாகவே நன்மக்கட் பேறுண்டாகும். "தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள், தந்தம் வினையான் வரும்" என்பது தமிழ்மறை.

திருமணிவயிற்று - இத்திரு மைந்தன் பிறக்க இடமாயிற்றாதலின் அதனைத் திருவயிறு எனவும், மணிபோன்றான் பிறத்தலின் மணிவயிறு எனவும் கூறினார். தேவி பெயர் "இரத்தினமாலை" என்பர்; மைந்தன் பெயர் "வீதிவிடங்கன்" என்பர்.

மைந்தன் - மைந்து (வல்லமை) உடையான் என்ற காரணத்தால் மைந்தன் என்று சுட்டி யறிவித்தமைக் கேற்பப் "பேரரிக் குருளையன்னான்" என்றனர்.

உலகம் போற்ற - உலகம் இவனைப் பாராட்ட - என்றும், இவன் உலகத்தைக் காப்பாற்ற - என்றும் ஆம்.　　17

103. தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமர னாளுஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த வோதிக்
கவனவாம் புரவி யானை தேர்ப்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே யெனவரும் பண்பின் மிக்கான்.　　௧௭

(இ - ள்) தவம்...குமரன் - (மேலே சொல்லியவாறு சிவத்தை முன்னிட்டு) தவஞ்செய்து பெற்ற ஒப்பில்லாத அரச இளங் குமரன்; நாளும்...ஓதி - தினமும் முயற்சி செய்து சிவத்தை அடைவிக்கும் தெய்வக் கலைகள் பலவற்றையும் திருந்தக் கற்றதனோடு; கவன...கற்று - (தனது குலத்துக்கேற்றவாறு) குதிரை, யானை, தேர், படைக்கலம்

முதலியவற்றின் தொழிற் கல்வியும் பயின்று ; பவம்...பண்பின் - ஆன்மா முன்னர்ச் செய்த பாவங்களின் பயனாக எடுக்கும் இப்பிறவியும் இவனிடத்துப் பாக்கியமே ஆயிற்று-என்று சொல்லத்தக்க தன்மையிலே ; மிக்கான் - மிகுந்து விளங்கினான்.

(வி - ரை) **தவமுயன்று**-மேலே இரண்டு பாட்டுக்களிலும் சொல்லியவாறு அரசன் செய்த சிவதருமமும், சிவபூசையுமே தவமாம். "எங்குமாகி யிருந்தவர்" என்றும், "ஆராய்ந்துளான்" என்றும் குறித்தமையால் இவ்வரசன் தானும் ஆன்மார்த்தமாய்ப் பூசைசெய்து அவ்வொழுக்கத்து நின்றான் என்பதும் கொள்ளப்பெறும்.

நாளும் சிவம் முயன்று அடையும் தெய்வக் கலை-நாளும் முயல்வதனால் சிவத்தை அடைவிக்கும் தெய்வத் தன்மைவாய்ந்த—தெய்வத்தைத் தேடிக் கொடுக்கிற—சிவக் கலைகள். அவை வேதம், சிவாகமம், வேதாங்கம், புராணம், இதிகாசம், ஆயுள் வேத மாதி உபவேதங்கள் முதலியன.

திருந்த ஓதி-திருந்த ஓதுதல் - கசடறக் கற்றல். "கற்கக் கசடற" என்றதிற் காண்க.

படைத் தொழில்கள் - அரச மரபினுக் குரியனவாய், உடம்போடு பற்றி, உலகநிலையில் வேண்டப்படுவன. வில், வாள் முதலிய படைக்கலத் தொழில்கள். சேனைக் குரிய நான்கு அங்கங்களில் மேலே புரவி முதலிய மூன்றும் சுட்டித் தனித்தனிக் கூறிவிட்டதால், **படைத்தொழில்கள்** என்பதில் காலாட்படையும் அடங்கும்.

தொழில்கள் - புரவித்தொழில், யானைத்தொழில், தேர்த்தொழில் என்று தனித் தனிக் கூட்டுக. இதனாலே தொழில்கள் என்று பன்மையிற் கூறினார்.

பவமுயன்றதுவும் பேறே - இப்பிறப்பிற்கு முன்னே செய்த பாவ முயற்சியாலே இவ்வுடம்பு வரும் ; ஆயினும் இப்போது செய்யும் சிவதருமங்களினாலே இவ்வுடம்பும், பிறவியும் பேறே என்று சொல்லத் தகும்—என்றபடி.

"...இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே"

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

"தங்குபிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார்"

என்பது அப்பர் சுவாமிகள் சரிதம். (திருநா - புரா - 312). இங்குப் **பேறே** என்பது இக் கருத்தே பற்றியது. **பண்பின் மிக்கான்** - பண்பின் மிகுதலாவது கற்றதற்குத் தக்க படி நின்று ஒழுகி அத்தன்மை பெறுதல்.

தொழில்கள் கற்று-மேலே தெய்வக்கலை பல ஓதி என்றதற்கு வேறாய்த் தொழில் கள் கற்று என்றார். முன்னர்ச் சொல்லியது உயிரினைப் பற்றியது. தொழில்கள் உடம்பைப் பற்றியன. இச்சிறப்பினாலே **கலை பல திருந்த** என்று முதலிற் கூறினார்.

ஓதி - என்பதனால் "கற்க" என்பதும், **திருந்த** என்பதனால் "கசடற" என்பதும், **கலைபல** என்றும் **தொழில்கள்** என்றும் கூறியதனால் "கற்பவை" என்பதும், **பண்பில் மிக்கான்** என்பதனால் "நிற்க அதற்குத் தக" என்பதும் பெறப்படுதல் காண்க.

தெய்வக் கலை ஓதியும், தொழில்கள் கற்றும், இவ்வாறு "அளவில் தொல்கலைகள் முற்றி - இளவரசுக்கு அணியனானான்" என்று பின்னர்க் கூறுவதால் அரசகுமாரருக்குக் கல்வி இன்றியமையாது வேண்டப்படுவதென்பதும், இது தெய்வக் கலை பல கூடிய கல்விஎன்றும், தொழிற்கல்வி என்றும் இருவகைப்படும் என்பதும் பெற்றோம். அரச ருக்கே கல்விவேண்டுவதானால், ஏனைக் குடிகளுக்கும், யாவருக்கும் அது மிகவும் வேண் டப்படுவது என்பது பெறப்படும். கல்வி முறையில் தொழிற் கல்வியை அடியோடு விட் டும், கலைக் கல்வியில் தெய்வக்கலையை அடியோடு மறந்து விட்டும், அமைந்துள்ள இந்

நாட் கல்விமுறை அறிஞர்களால் முற்றும் வெறுக்கத் தக்கது என்பதும் இங்குப் பெறப் படும். இந்நாள் நாட்டின் கேட்டிற்கு இத்தகைய கல்விமுறையே காரணம் என்பர்.

திருவள்ளுவ நாயனார் "கல்வி", "கல்லாமை" என இரண்டாய்வகுத்து இதனைப் பொருட்பாலில் அரசியலில் இறைமாட்சியினை அடுத்து வைத்துள்ள சிறப்பை இங்கு உன்னுக. 'கல்வி' எனும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய்செய்த ஆசிரியர் பரிமேலழகர் "அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவை யாவன அற நூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கல மென்றிவற்றினூல்களும் முதலாயின. அரசன் அறிவுடைய னாயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன் படுதல் நோக்கி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையிற் பொதுப்படக் கூறுகின்றார்" என்று பாகுபடுத்திக் கூறியதும் இப் பாட்டிலும் வரும்பாட்டிலும் வைத்து உணர்க.

கவன வெம்புரவி—என்பதும் பாடம். 18

104. அளவிறெல் கலைகண் முற்றி யரும்பெறற் றந்தை மிக்க
வுளமகிழ் காதல் கூர வோங்கிய குணத்தா னீடி
யிளவர செனனுந் தன்மை யெய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநா ளொருநாள் மைந்தன். கக

(இ - ள்) அளவில்...முற்றி - (மேற்கூறிய) எல்லையில்லாத பழமையான கலைகள் எல்லாம் நிரம்பப் பெற்றவனாய்; அரும்பெறல்...கூர - பெறலரும் தந்தையார் மனம் மிக மகிழும் ஆசை வளரும்படியாக; ஓங்கிய...நீடி - மேன் மேல் வளரும் நற்குணங்கள் நிறைந்தவனாய்; இளவரசு...ஆகி - இளவரசனும் தகுதியை அடையும் பக்குவம் உடையவனாகி; வளர்...மைந்தன் - ஒளிவளர்கின்ற உதய சூரியன்போல வாழ்ந்தான். அந்நாள்களில் ஒருநாள் மைந்தனானவன்—

(வி - ரை) இப்பாட்டு குளகம். இப்பாட்டில் வரும் **மைந்தன்** என்னும் எழுவாய் வரும்பாட்டிற் **போந்தான்** என்னும் வினைமுற்றோடு முடிந்தது.

அளவில் தொல் கலைகள் - மேற்கூறிய தெய்வக் கலைகளும் தொழிற் கலைகளும்.

முற்றி - மேலே கூறியபடி ஓதியும் கற்றும் நிறைவை அடைந்து, இளவரசாய் நிற் கும் தகுதிபெற முற்றியது என்க.

அரும் பெறல் தந்தை-மேல் 17-ம்பாட்டில் "தவத்தால்" என்பதற்கேற்பக் கூறினார். தந்தையும் மைந்தனும் ஒருவர்க் கொருவர் செய்தபேறு இவ்வாறு குறிக்கப் பெற்றது. "இவன்றந்தை யென்னோற்றான் கொல்..." என்ற திருக்குறளும் இங்கு வைத்துக் காண்க.

காதல் கூர குணத்தால் நீடி - குணம் நீடுதலால் காதல் கூர்ந்து மிருந்து - எனக் காரண காரியப் பொருள் கொள்க. **நீடுதல்** - காரணம். **கூர்தல்** - காரியம்.

இளவர சென்னுந் தன்மை - இளவரசென்பது அரசனுக்கு அடுத்த நிலையில் ஆட்சிக் குரியதொரு பதவி. அரசு தாங்குதற்குரிய எல்லாத் தன்மைகளும் நிரம்பப் பெற்ற பின்னரே இளவரசு என்கின்ற பதவி வழங்கப் பெறும். கண்ணப்ப நாயனார் புராணம், "...அடற்சிலை ஆண்மை முற்றக் கற்றனன்..." (41)

"வண்ண வெஞ்சிலையும் மற்றப் படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல்பொங்கக் கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினர்..." (42)

என்ற திருப்பாட்டுக்களையும், அப்பருவத்தே அவர்க்கு நாகன் பட்டம் சூட்டுதலையும் இங்கு நினைவு கூர்க. (அங்குத் திங்களை உவமித்த சிறப்புப் பின்னர் அவ்விடத்தே எடுத் துக் கூறப்பெறும்.) இளவரசுக்குரிய பருவமும் விதிக்கப் பெற்றதாகும்.

வளரிளம் பரிதி - சந்திரனை உவமித்தால், அவன் ஒருகாற் குறைவன் - ஒருகால் மிகுவன் - ஆதலின் **இளம்பரிதிபோன்று** என்றார். மேலும் இம்மைந்தன் "துன்னு வெங்கதிரோன் வழித்தோன்றல்" என்று முன்னர்க் கூறியபடி, சூரிய மரபில் முளைத்தவன் ஆதலும் குறிக்கப் பெற்றதாம். **இளம்பரிதி** - உதய காலத்து ஞாயிறு.

வளர் - என்றது ஒளியின் வளர்ச்சி.

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு......"

என்பது பதினோராந் திருமுறை (காரைக்கால் அம்மையார் - அற்புதத் திரு அந்தாதி). "சேய இளம் பரிதியென" என்ற திருவிளையாடற் புராணமும் காண்க.

ஒருநாள் - அவன் வாழ் நாளில் இது ஒப்பற்ற ஒரு தனித்த நாளாயிற்று என்க. 19

105. திங்கள்வெண் கவிகை மன்னன் றிருவளர் கோயி னின்று
மங்குறோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்து குங்குமங் குலவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான். ௨0

(இ - ள்) கொங்கலர்...தோளான் - மணம் பொருந்திய பூமாலைகளைச் சாத்திக் கலவைச் சாந்தை அணிந்த தோள்களை யுடைய அவ்வரச குமாரன்; மங்குல்... சூழ - மேகங்கள் படியும்படி உயர்ந்த மாடங்களையுடைய அரசவீதியிலே ஏனைய அரசிளங்குமரர்கள் தன்னைச் சூழ்ந்து வரவும்; பொங்கிய தானை சூழ - மிகுந்த சேனை சூழ்ந்து வரவும்; திங்கள்...நின்று - சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடையை யுடைய அரசரது அரண்மனையினின்றும் புறப்பட்டு; தேர்...போந்தான் - தேரின் மேலேறி விளக்கமான காட்சிபெறச் சென்றான்.

(வி - ரை) **திங்கள் வெண்கவிகை** - மதிக்குடை - மதிபோன்ற குடை. வெண் கொற்றக் குடை என்பர். குடை அரச அங்கத்திற்குரிய பத்து அங்கங்களில் தசாங்கம் ஒன்று என்பர். வறுமை, கொடுமை, பிறவி முதலிய வெப்பங்களின் நீக்கிக் குடை நிழலின்கீழ் வையகத்தைக் குளிர்விப்பதாற் சந்திரனையே இதற்கு உவமான மாக்குவர். குடையை அரசாங்கத்திற்குரிய அறிகுறியாகவும் வழங்குவர்.

கவிகை - கவிக்கப் பெறுவது; குடை. இவ்வரசன் ஞாயிற்று மரபினன் ஆதலின் அவ்வொளியைத் தான் பெற்று விளங்க மேலே மதி கவிந்தது போல—என்ற குறிப்பும் பெறுமாறு "**திங்கள் வெண் கவிகை**" என்றார்.

திருவளர் கோயில் - அரண்மனை- உலகத்திலே திருவை வளர்க்கின்ற காரணத்தாலே **திருவளர் கோயில்** என்றார். வளர் திருக்கோயில் என்று கொண்டு தன்னிடத்திலே வளர்கின்ற திருவையுடைய கோயில் என்றலுமாம். அறநெறி வழாமல் புலியும் மறங்கடிந்தும் வையகம் காத்தலினாலும், புற்றிடங்கொண்டார் பூசை நிபந்தம் ஆராய்ந்தது முதலிய சிவதருமத்தாலும், அரசன் அரண்மனையானது திரு என்றும் நீங்காது **வளரும்** கோயிலாயிற்று.

மங்குல் தோய் மாடம் - மேகங்கள் தவழுமாறு உயர்ந்த மாடங்கள். இது உயர்வு நவிற்சியணி.

" தண்டாமரை மலராளுறை தவளந் நெடுமாடம்
விண்டாங்துவ போலும்மிகு வேணுபுர மதுவே "

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் காண்க.

மன்னிளங் குமரர் சூழ - "சுற்றுமன்னர் திறை கடை சூழ்ந்திட" என முன்னர்த் தந்தையைக் கூறியதற் கேற்ப, இங்கு அரச மைந்தனை "மன்னிளங் குமரர் சூழ" என் றுரைத்தார். குங்குமங் குலவு தோளானை அடுத்துச் சூழ்ந்தார் மன்னிளங்குமரர் என் பார் அவர்களை முன்னேயும், அவ்விரு திறத்தாரையும் சூழ்ந்தன சேனை என்பார் தானை களைப் பின்னேயும் கூறினார் என்க. இவர்களுக்கிடையே அரசகுமாரன் விளங்குவதைப் பாட்டுப் போக்கிலும் இவ்வாறு வைத்துக் கூறியதும் காண்க.

பொங்கிய தானை - சேனையின் மகிழ்ச்சிமிக்க ஆரவாரத்தைப் பொங்கிய என்றார்.

தோளான் - தோளானாகி. **தேர்மிசை** - மாடவீதியில் அரசிளங்குமரன் **உலாவப்** போந்தான் ஆதலின் தேர்மிசைப் போந்தான் என்றார்.

மாடவீதி என்றும், இளங்குமரரும் தானையும் சூழ என்றும், தேர்மிசை என்றும், கூறிய பொருள்களின் உட்கிடையைப் பின்னர் "வளவ நின்புதல்வன்" எனும் 116-ம் (வரிசை) திருப்பாட்டின் கீழ்க் காண்க.

மைந்தன்—சூழ—சூழ—தோளான் (ஆகித்) தேர்மிசை—மாடவீதி—போந்தான் என்க.

மாலை தாழ்ந்த—என்பதும் பாடம். 20

106. பரசுவந் தியர்முன் சூதர் மாகத ரொருபாற் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை யொருபான் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி யொருபால் வென்றி
அரசிளங் குமரன் போது மணிமணி மாடவீதி. உக

(இ - ள்) பரசு...முழங்கொலி ஒருபால் - தனது புகழ் பரவிக்கொண்டு வரும் வந் தியர்கள், சூதர்கள், மாகதர்கள் (ஆகிய இவர்கள்) ஒருபக்கம் வரவும்; தாம் அணிந்த வெள்வளைகளைச் சிந்தும் பெண்கள் ஒருபக்கம் வரவும்; முழங்கி ஒலிக்குமாறு முரசும் சங்கமும் ஒலிப்பவர் ஒருபக்கம் வரவும்; வென்றி...வீதி - வெற்றி பொருந்திய அரச னது இளங் குமரன் அழகிய மணி மாடவீதியில் உலாப் போந்தனன்.

(வி - ரை) **பரசுதல்** - புகழ்களைப் பாடிவருதல். இதனைச் சூதர் மாகதர்களோடும் தனித்தனிக் கூட்டுக. **வந்தியர்**-மங்கலப் பாட்டுக்களினால் வந்திப்போர்—பாணர்—என் பர். வந்தித்தலாலே வந்தியர் என்ப. **சூதர்** - அவ்வப்போது செய்யும் செயல்களைப் பற்றிக் கட்டியங்கூறுவோரும், அரசனைத், தொன்றுதொட்டுத் துயிலெழுப்புங் காலத் தும் பிற சமயங்களினும் பாடுவோரும். இவர்கள் நின்றேத்துவோர். **மாகதர்**-அரசனது வீரச் செயல்களைப் புகழ்ந்து பாடுவோர். இவர்கள் இருந்தேத்துவோர்.

வெள்வளை சிந்துங் குழலார் என்று கூட்டிப் பொருளுரைக்க. குழலார் வெள் வளை சிந்துதல் - இவ்வரசர் போன்ற நாயகனை நாம் அடைவோமோ என்று மனம் வருந்த, அதனால் மேனி இளைத்தல். "கண் களங்கஞ் செய்யக் கைவளை சோர..." பொன்வண்ணத்தந்தாதி 3-வது பாட்டு. "ஏர்பரந்தவின வெள்வளை சோரவென் னுள் ளங் கவர் கள்வன்" (திருஞா - நட்டபாடை - பிரமபுரம் - 3). உத்தம நாயகன் உலா வருங் காலத்து இவ்வாறு மகளிர்க்கு நிகழும் மெய்ப்பாடு கூறுதல் இலக்கிய வழக்காத லின் இது இங்கு கூறப்பட்டது என்க. "...நெறிபல வார்குழலார் மெலிவுற்ற நெடுந் தெருவிற், செறிபல வெள்வளை போயின தாயர்கள் தேடுவரே..." (பதினொ - திரு முறை - பட்டினத்தடிகள் - திருவேகம்ப - திருவந்தாதி - 53.) **வெள்வளை** - சங்குகளி னாற் செய்த வளைகள். "சங்கமரும் முன்கைத் தடமுலையார் மேலெய்வான்" என்ற ஞானவுலாவுங் காண்க. **குழலார்** - நாடகப் பெண்களென்று கூறுவாறுமுளர்.

ஆர்ப்ப முழங்கு ஒலி - ஆர்த்ததனால் எழுந்த ஒலித்தொகுதி. ஒலிப்பவர் - வரு விக்கப்பட்டது. **வென்றி** - அரசனுடைய வெற்றி. "கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்

திட" என்று மேலே கூறியதற் கேற்ப வென்றி என்றார். போதும் - போந்தனன். செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று இறந்தகாலம் குறித்தது. இதனைப் பெயரெச்சமாக்கி - போந்த வீதியில் இவையிவை யிருந்தன - என்றும் கூறுவர்.

குமரன் - பாலியம், யௌவனம், கௌமாரம், வார்த்திகம் என்னும் பருவம் நான் கிலே இளங் கௌமாரப் பருவ மடைந்தவர் என்க.

வந்திகண் ; வந்திகர்—என்பனவும் பாடம். 21

107. தனிப்பெருந் தருமம் தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினி லுண்மைப் பான்மைசோ தித்தா லென்ன
மனித்தர்தன் வரவு காணு வண்ணமோர் வண்ண நல்லான்
புனிற்றிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகி னூடு. ௨௨

(இ - ள்) தனிப் பெரும்...என்ன - ஒப்பற்ற பெருமையுடைய அறக்கடவுள் சிறிதும் கருணையின்றி அரசரது துளங்காத சிந்தையின் உண்மைத் தன்மையைச் சோதித்தற்கு வந்தாற் போல; மனித்தர்...மருகின் ஊடு-தனது வரவைச் சூழ இருந்த பலருள்ளும், அந்த மணிமாட வீதியிலிருந்தாருள்ளும், எந்த மனிதரும் காணுதபடி ஒரு அழகிய பசுவினது மிக இளைய கன்று அவ்வீதியிடைத் துள்ளிப் புகுந்தது.

(வி - ரை) தனிப்பெரும் தருமம் - ஒப்பற்ற பெரிய தருமமாகிய கடவுள் - சிறுமையினும் தனித் தன்மை யுளதாதலின் அதனை நீக்கத் தனித் தருமம் என்னுது தனிப் பெரும் தருமம் என்றார். அவ்வாறு பெருமைக் குணங்கள் கொண்ட பலவற்றினின் றும் பிரித்தற்குத் தனி என்றார்.

தருமம் - இங்குக் குறித்தது இவ்வரசன் புற்றிடங் கொண்டார்க்கு நிபந்தம் முதலியன ஆகம வழி ஆராய்ந்து இயற்றியது முதலிய சிவதருமங்களாலே பிரதிபாதிக்கப் படும் கடவுள் என்க. மிக மேலாகிய சிவ தருமங்களின் முன்னே வேறு பசுபாச தர்மங்கள் எவையும் பொருளாகாமையின் இதனையே தனிப்பெரும் தருமம் என்றார்.

ஓர் தயாவின்றி - ஒருசிறிதும் கருணை யில்லாமல். ஒன்றும் என்பது உம்மை தொக்கது. அறக் கடவுள் மறக் கடவுள் என்னும்படி என்க. தருமக் கடவுளிடத்திலே இருக்க வேண்டிய ஓர் தயாவின்றி. ஓர்தற்கிடமாகிய தயை இல்லாமல் என்பதுமாம். தருமம் எஞ்ஞான்றும் தயவுடன் கூடியிருத்தல் வேண்டும் என்பது எல்லாரும் ஒப்புவதாம்.

பனிப்பில் சிந்தை - அசையாத மனத் திண்மை. "கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திட" நின்றமைக்கும் இதுவே காரணம்; முத்தி பெறுவதற்கும் இதுவே காரணமாயிற்று. என்னை? எல்லாக் கருவி கரணங்களின் தொழிலுக்கும் காரணம் சிந்தையேயாம். அதன் துளக்கம் நீங்கினல், மரம் வேரற்ருற் போல, மீண்டும் கருவி கரணச் செயல்கள் தழையா. அவை தழையாது போகவே மேற்சென்மம் உண்டாகாது என்க.

"துளங்காத சிந்தையராய்த் துறந்தோருள்ளப் பெரும் பயனை..."—தேவாரம்

"மாறி நின்றெனை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து"—திருவாசகம்

"வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர் உள்ளம்"—திருவிளை - புராணம்

"அர்த்தாஸ்ய மனதப் பர :......"—உபநிடதம்

முதலிய திருவாக்குக்கள் காண்க.

தானை என்றதனல் புறக்காவலும், பனிப்பில் சிந்தை என்றதனல் உட்காவலும் உடையான் என்பதாம்.

பனிப்பில் சிந்தையினில் - சிந்தையில்+நில் - சிந்தையில் நிலைபெற்று நிற்கின்ற என்றுமாம். உண்மைப் பான்மை - உள்+மை - என்றும் அழியாது உள்ள பொரு

ளாய்நிற்பது. பான்மை அதன் இயல்பு. அரசனது கலங்கா மனத்திலே நிலைத்துள்ள உள்போருளின்து தன்மை. அது, "கண்ணு மாவியு மாம்பெருங் காவல்" என்று மேலே முதலாவதாக எடுத்துக் கூறிய தன்மை. கழறிற்றறிவார் நாயனாரது உள்ளக் கிடையேபோல, இவ்வரசனும் எல்லாவுயிர்க்குங் காவல்புரிதலே கடமை என்பதைத் தன் உள்ளக்கிடையாய்க் கொண்டவன் என்க.

சோதித்தால் என்ன - சோதிப்பதற்காக வந்தது போல - எல்லாம் அறிந்த அறக் கடவுளுக்கு மன்னனது சிந்தையின் உண்மையைச் சோதித்து அறிய வேண்டியது அவசியமில்லாமையின் **சோதிக்க** என்னுது, **சோதித்தாற் போல** என்றார். இப்புரா ணத்திற் பின்னே பல சரிதங்களிலும், இவ்வாறு நிகழ்கின்றபோது அவ்வவர் உள்ளக் கிடையை உலகினர்க்குக் காட்டுதலே காரணம் என்று ஆசிரியர் காட்டுவர்.

மனித்தர் தன் வரவு காணு - **மனித்தர்** - மனிதர் என்பது எதுகை நோக்கி மனித் தர் என இரட்டித்தது - 'மனித்தப் பிறவியும்' என்பது வாகீசர் திருவாக்கு. அறக் கடவுளின் செயல் வெறும் மனிதரது ஊனக் கண்ணிற்குப் புலப்படாமையின் **காணு வண்ணம்** என்றார்.

வண்ணம் நல் ஆன் - நல்வண்ணம் என்று மாறிக் கூட்டுக. **வண்ணம்** - அழகும் உருவமும். வண்ணமும் நன்மையும் கூடிய என்று உம்மைத் தொகை ஆக்கினும் அமை யும். வண்ண - நல் - கன்று - என்க. **புனிற்று இளம்** - மிக இளமையுடைய. **புனிறு** - ஈன்றணிமை.

துள்ளிப் போந்தது-கன்று மறுகினூடு புகுந்தபடி. நடப்பன என்னும் வகுப்பைச் சேர்ந்த அக்கன்று, நடவாமலும், தொடர்ந்து ஓடாமலும் ஓரிடத்திருந்து மற்றோரிடத் திற்குத் துள்ளிப் புகுந்தது. மனித்தர் அதன்வரவு காணுமைக்குக் காரணங் கூறியவாறு.

அம்மறுகின் ஊடு - அந்தத் தெருவுக்குள்ளே. வழிபோவார் வந்து போதலின் தெரு **மறுகு** என்னப்பட்டது. தெருவின் இடையே வரும் தேர்க்கால் தன்மீது செல் லப்பட்டதைப் பின்னே கூறுகின்றமையின் **மறுகின்** என்னுது **மறுகின் ஊடு** என்றார்.

மறுகின் ஊடே—என்பதும் பாடம். 22

108. அம்புனிற் றாவின் கன்றோ ரபாயத்தி னூடுபோகிச்
செம்பொனின் றேர்க்கான் மீது விசையினாற் செல்லப் பட்டே
உம்பரி னடையக் கண்டங் குருகுதா யலமந் தோடி
வெம்பிடு மலறுஞ் சோரு மெய்ந்நடுக் குற்று வீழும். உஙு

(இ - ள்) அம்...கண்டு - (மேலே சொல்லியவாறு துள்ளிப் போந்த) பசு இளங் கன்று ஒரு அபாயம் நேரத்தக்க வகையிலே குறுக்கே செல்லவே, தேரினது பொற் சக்கரம் தன்மேல் வேகமாகச் செலுத்தப் பெற்று விண்ணுலகை அடைந்தது. அதனைக் கண்டு; அங்கு உருகு...வீழும் - அங்கே மிக மன உருக்கத்தை அடைந்த அதன் தாய்ப் பசு வெம்பிற்று - அலறிற்று - சோர்ந்தது - உடம்பு நடுநடுங்கி வீழ்ந்தது.

(வி - ரை) **அம் - புனிற்று ஆவின் கன்று** - **அம்** - அழகிய. இது கன்றுக்கு அடை மொழி. மேற்பாட்டிலே "வண்ணம் நல் புனிற்று இளம்" என்று கூறியதற் கேற்ப இங்கும் **அம்** என்றார். காண்பார் யார்க்கும் அதன் அழகும் வண்ணமுமே கண்ணுக்கு முன் தோன்றி அதனிடத்திலே இரக்கம் மிகுதி உண்டாக்குதலின் அதனையே வற் புறுத்திக் கூறினார்.

ஓர் அபாயத்தின் ஊடுபோகி - தேர்க்கால் செல்லும் வழியினின்றும் விலகிப் போகாது அதனுட்படுமாறு அபாயத்தினுள்ளே புக்கதனால்.

தேர்க்கால்மீது செல்லப் பட்டு - தேரினது சக்கரம் அதன்மேலே செலுத்தப் பெற்று, அதனால் (இறந்து) பட்டு.

உம்பரின் அடைதல் - இறந்து படுதல். அமங்கலம்பட, இறந்தது - என்னாது மங்கல வழக்கினாற் கூறினார். சிவலோகப் பிராப்தி யடைந்தார் என்று எழுதும் மங்கல வழக்கு இன்றும் காண்போம். இங்குக் கன்றாக வந்தது "இயமனே" என்பர். கன்று தனது உம்பருலகமாகிய இமயலோகம் சேர்ந்தது என்ற சுவைக்குறிப்பும் காண்க.

"ஈசன் பசுவாக எமனொரு கன்றாக
வீசு புகழ்ஆரூர் வீதிவந்த தம்மானை
வீசு புகழ்ஆரூர் வீதிவந்த தாமாயின்
காசளவு பாலும் கறக்குமோ அம்மானை
கன்றைஉதை காலி கறக்குமோ அம்மானை"

என்று பின்னாட் புலவர் உருசிபெறப் பாடியிருத்தலும் காண்க.

உருகு தாய் - கன்றை நினைந்தே உருகும் தலையீற்றுப்பசு. "...கன்றை நினைந் தெழு தாயென வந்த கணக்கது வாகாதே..."—திருவாசகம். "கன்றகல் புனிற்றாப் போல்வர்" என்று கண்ணப்ப நாயனார் புராணத்திலே விளக்கியதுபோல், சிறிதுநேரம் பிரிந்திருத்தல்கூடத் தாங்கமாட்டாது துன்பப்படும் தலையீற்றுப் பசு, தன் கன்றினை இழக்கநேரிட்ட காலத்துச், சொல்ல இயலாதபடி மிகவும் துன்பம் அடையும் - என்பது காட்டுவார் **உருகு தாய்** என்று அடைமொழி புணர்த்திக் கூறினார்.

கண்டு - ஈன்றணிமைத்தாகிய கன்றைத் தனது கண்மறையவும் பொறுத்து அறி யாததாகிய தாய்ப்பசு, என்றுங் காணாத இந்நிலையைக் கண்டால் அடையும் துன்பத் திற்கு அளவில்லை என்பது குறிக்கக் **கண்டு** என்றார். உருகுவது மனத்தின் தொழில் ; அலமறுதல் - ஓடுதல் - வெம்புதல் - அலறுதல் - மெய்நடுங்கிவீழ்தல் - இத்தனை செய்கை களும் மனத் துன்பத்தினால் உளவாகி, அதனைப் புறத்தே விளக்கின. அலமருதல் முதல் வீழ்தல் ஈறாக ஒன்றின்மேல் ஒன்றாய் மேன்மேல் துன்பம் அடர அடர விளைந்து சகி யாது இறுதியில் வீழ்தலுடன் முடிந்தது - என்ற முறைப்பாட்டை நோக்குக. மனதின் உள்ளன்பு காரணமாக நிகழும் நிகழ்ச்சி, அதன் எடுத்துக்காட்டாகப் புறத்தே மெய்ப் பாடுகளை விளைத்தேவிடும். இவைகளே உள் அன்பினைக் காட்டும் அடையாளங்களாம். "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்பது திருக்குறள்.

செல்லப்பட்டங்கு—என்பதும் பாடம். (**அங்கு** - அவ்விடத்தே.) 23

109. மற்றது கண்டு மைந்தன் "வந்ததிங் கபாய" மென்று
சொற்றடு மாறி நெஞ்சிற் றுயருழந் தறிவ ழிந்து
"பெற்றமுங் கன்று மின்றெ னுணர்வெனும் பெருமை மாளச்
செற்றவென் செய்கை" யென்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான். உச

(**இ - ள்**) மற்றது...அறிவழிந்து - மேலே கூறியபடி நிகழ்ந்த அதனை அரசகுமா ரன் கண்டு இங்கு அபாயம் வந்துவிட்டது என்று உரைகுளறி மனத்துன்ப மடைந்து அறிவையிழந்து ; பெற்றமும்...என்று - "இன்று பசுவும் கன்றும் எனது உணர்வாகிய பெருமையை அடியோடு அழியும்படிச் செய்துவிட்டனவே! இதற்கு நான் என்செய வல்லேன்" என்று சொல்லிக்கொண்டே ; தேரில்...வீழ்ந்தான் - தேரிலிருந்தும் இறங்கி வீழ்ந்தனன்.

(**வி - ரை**) **மற்று அது** - மேலே கூறிய அது. **மற்று** அசை என்பாருமுளர்.

நெஞ்சிற்றுயருழந்து - கண்டவுடன் காட்சிப்புலன் அதனையும் அதன் பயனையும் நெஞ்சுக் கறிவுறுத்தும். நெஞ்சம், அதன்பின் அறிவுக்கும், வாக்கு முதலிய புறக் கரணங்களுக்கும் அறிவிக்கவே, உரிய மெய்ப்பாடுகள் நிகழும். இங்கு அவ்வாறு நெஞ்சி னுடைய இடையீடில்லாமலே - அதாவது நெஞ்சின் செயல் குறுக்கிடாமலே - காட்சிப்

புலனே வாக்கிற்கு அறிவுறுத்தியது போலக், 'கண்டு......வந்தது இங்கு அபாயம் என்று சொல் தடுமாறி' என்றார். இது விரைவுபற்றிச் சொல்லப்பட்டது. ஆயினும் நெஞ்சின் செயல்கள் மிக விரைவாய் நிகழ்ந்தன என்க.

வந்தது இங்கு அபாயம் - அபாயம் வந்தது என்னாது, வந்தது அபாயம் என்ற மையே சொல் தடுமாற்றத்தைக் குறிப்பதாம். உள்ளப் பதைபதைப்புக் காரணத்தால், பின்னே வரவேண்டிய வினை முன்னும், விவரணம் பின்னும் வந்தன. கீழ் வீழ்ந்து கை ஒடிந்தவன் - ஒடிந்தது கை என்று அரற்றுதல் போல.

பெற்றமும் கன்றும் - பெற்றம் - பசு. முன்னே புகுந்து இறந்தது கன்றேயாக வும் இதன் பெருந் துன்பத்துக்கும் பழிக்கும் பசுவின் பெருமையே நிலைக்களமாதலின் **பெற்ற**த்தை முன்னே வைத்தார்.

உணர்வெனும் பெருமை மாளச் செற்ற - உணர்வாகிய பெருமை. **உணர்வாவது** சிவக்கலையும் பலகலையும் திருந்த ஓதி முற்றியதால் பாவமுயற்சியின் விளைந்த பிறவி யும் பயனுடையதேயாம் என்று தெரிய உணர்தல். அதன் **பெருமை**-சிவத்தை அடைய நிகழ்ந்த இப்பிறப்பின் பெருமையை எண்ணி மகிழ்ந்திருத்தல்.

மாளச்செற்ற - இவ்வுணர்ச்சியை முழுதும் அழித்துப், பாவத்தின் காரணமாய் வந்த இப்பிறவி மேலும் பெரும்பாவத்துக்கே காரணமாயிற்று என்ற சிறுமையை யூட்டும் உணர்வாக மாற்றியது. அவ்வாறு பெருமையைச் சிறுமையாக மாற்றியதுபற்றி **மாளச் செற்ற** என்றார். சிவனை அடைகின்றதற்குப் பயன்படாது, இப்பிறவி, சிவபிரானுக்கு உகந்த பெருமையுடைய பசுவின் துன்பத்திற்குக் காரணமாய்ச் சிவத்தைப் பெறுதற்கு மாறாகிய நரகம் பெறுதலுக்குக் காரணமாயது எனும் சிறுமை உணர்வாக வந்ததையே குறிக்கப் **பெருமை மாள** என்றார்.

செற்ற - பசு அடையும் துன்பத்தாலும், கன்று இறந்துபட்ட செயலினாலும், இவ் வாறு செறுதலினால் **செற்ற** என்று பன்மையிற் கூறினார். இறந்த கன்றுக்குச் செய லில்லையாயினும் அதன் இறப்பினால் நேர்ந்த செறுதல் என்னும் வினையை அதன்மேல் ஏற்றிக் கூறினார். **மாளச்செற்ற** என்றதனால் பின் சரித நிகழ்ச்சிக் குறிப்பும் பெறப் பட்டதாம். இவ்வாறன்றி, **உணர்வெனும் பெருமை மாள** - என்பதற்குப் பசுவுக்கும் தனக்கும் உணர்வு (அறிவு) ஒன்றில் மட்டும் உள்ள பேதமானது இங்கு உணர்வு எனும் பெருமை - அழிவாகிய பேதம் - உணர்ச்சி யின்றிச் செய்த இக்காரியத்தினால் நீங்க என்று முரைப்பர்.

இழிந்து - கீழே இறங்கி—இழிவை யடைந்தவனாய் என்று உரைத்தலுமாம். பொலிந்து போந்தான் (20) ஆகிய வென்றி அரசிளங்குமரன் இச்செயலினால் **இழிந்து வீழ்ந்தான்** என - இச்செயலின் இழிபை எடுத்துக் கூறியவாறுமாம்.

வீழ்ந்தான் - நிற்க மாட்டாதவனாய் வீழ்ந்தனன். பசு வீழ்ந்தது போலவே இது வும் துன்பமிகுதியால் நிகழ்ந்தது. 24

110\. அலறுபே ராவை நோக்கி யாருயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
மலர்தலை யுலகங் காக்கும் மனுவெனு மெங்கோ மானுக்
குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா வொருவ னென்பான். உரு

(இ - ள்) அலறு...சோரும் - (மேற் சொல்லியவாறு) அலறுகின்ற சிறந்த பசுவை ஒரு புறம் பார்த்து (அதன் உயிர் பதைக்கின்றவாறே அரச குமாரனும்) தனது ஆருயிர் பதைபதைத்துச் சோர்வடைவான் ; நிலம்...நிற்கும் - (மற்றொருபுறம் தன் தேர்க்காலி லிறந்துபட்டு) நிலமிசை வீழ்ந்து கிடக்கும் கன்றைப் பார்த்து விசனத்தால் பெருமூச்சு

விட்டு இரங்கி நிற்பன் ; மலர்தலை...என்பான் - "விரிந்த உலகத்தில் பலவுயிர்களையும் காக்கக் கடவியனும், முன்னைய மனுவே இவர் எனச் சொல்லப்பெறுகின்ற, எனது அரசர் பெருமானுக்கு உலகிலே இல்லாத இப்பெரும் பழிவந்து சேரும்படி நான் அவருக்கு ஒரு மகனாய்ப் பிறந்தேனே" என்று சொல்வானாய்—

இப்பாட்டு குளகம். வரும் பாட்டில் 'சென்றான்' என்னும் வினைமுற்றோடு முடிக்க.

(வி - ரை) **சோரும்** - மனத்தின் செய்கை ; **இறங்கி நிற்கும்** - உடம்பின் செய்கை ; **என்பான்** - வாக்கின் செய்கை. எனவே, பசுவின் வருத்தத்தை மனம் வாக்குக் காயம் எனும் முக்கரணங்களாலும் அரச மைந்தனும் அடைந்தனன் என்க.

மலர்தலை உலகம் காக்கும் - "மன்னுயிருக் கெல்லாம்...பெருங்காவல்" என்று மேலே காட்டிய அரசனது குறிக்கோளாகிய உள்ளக்கிடையை இங்குக் கூறியவாறு.

மனு எனும் - (வரிசை) 100-ம் பாட்டில் "மனுப்பெற்ற நீதி" என்றது.

கோமான் - தந்தை என்னாது **கோமான்** என்றது பசு வதைப்பழிக்குத் தான் காரணமாயினமையின் தனது தந்தை என்று கூறல் தகுதியின்று எனக் கருதியது குறித்து. **கோமான்** - பசுவைப் பாதுகாப்பவன் என்ற குறிப்புங் காண்க.

உலகில் இப்பழி - பின்னர் 36-வது திருப்பாட்டிற் கூறுகின்றபடி அறங்காத்ததனால், இதுவரை இல்லாததாகிய இந்தப்பழி, தன்னாற் காக்கப்பெற்றதும் நீதி மனு என்று பேர்பெறுவதும் ஆகிய உலகிலே, அது மாறிப் பசுவதைத்த பழியாகிய இந்தப் பெரும் பழி. ஆனால் இது அரசனைச் சேர்வதற்கில்லை எனும் பொருள்பெற **உலகு - இல் - பழி** என்றதும் குறிப்பு.

வந்தெய்த - அப்பழி வருதற்குக் காரணமாகிய செயல் ஒன்றும் தாம் செய்யாதிருந்தும், பழி பாவம் வாராது காக்கும் காவலும் நீதியும் புண்ணியமும் செய்திருந்தும், பழி தானே வலிய (துள்ளிப் போந்த வழியே) **வந்து** புகுந்து சேர.

பிறந்தவா - பிறந்தபடி. பிறந்ததனைவிடப் பிறவாமலே இருந்தால் நன்று - என்க.

ஒருவன் - இப்பழிநீக்கப் பசுஉறுதுயர் தானும்எய்தத், தன்னை அரசன் தேர்க்காலில் ஊரும்; ஊர்ந்து விட்டபின் தூயவனுக்கும் மரபுக்குரிய மைந்தன் வேறில்லையே - என்று கவன்று **ஒருவன்** என்றான்.

என்பான் - என்பானாகி. என்று சொல்லிக் கொண்டே (சென்றான்) என்க.

இம்மைந்தன், அரசனைப் போலவே, தன்னுயிர்க் கிரங்காது பசுவுக்குங் கன்றுக்கும் இரங்கித், தன் பொருட்டு வருந்தாது அரசன்புகழுக்குக் குறைவருமென்று வருந்தினான். இதனையே முன்னர்த் "தந்தை காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி" என்று காட்டினார். "நிற்க அதற்குத் தக" என்றதற்கு இவன் இலக்கியமாயினன். 25

111\. வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த வாற்றா லாற்றுவ தறமே யாகில்
எந்தையீ தறியா முன்ன மியற்றுவ னென்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் றிருமறை யவர்முன் சென்றான். உகூ

(இ - ள்) வந்த...இயற்றுவன் என்று - இவ்வாறு வந்துபுகுந்த இப்பழியை மாற்றும் வகையை வேதம் முதலிய நூல்களும், அவற்றின்படி ஒழுகும் வாய்மை அந்தணர்களும் விதிக்கின்றபடி செய்வது தருமமாயிருக்குமானால் எனது தந்தை இதனைத் தெரிவதற்கு முன்னமே அது செய்து முடிப்பன் - என்று துணிந்து ; மைந்தன்... சென்றான் - அரச குமாரன் மனத்தின் மிகுந்த வருத்தத்தைத் தீர்க்கும்படி அந்தணர்களிடம் போயினான்.

(வி - ரை) வந்த இப்பழி மேற்பாட்டிலே 'வந்தெய்த' என்றதையே தொடர்ந்து கொண்டதாம். உரை அங்குக் காண்க.

மறைநூல் வாய்மை அந்தணர் விதித்த ஆற்றல் - வேதங்களும் அவற்றின் அங்கமாகிய நீதிநூல் முதலியவும், அவற்றின் வழியே ஒழுகி அவற்றின் உண்மையை எடுத்துக் கூறும் அந்தணர்களும், விதிக்கின்றபடி. **அந்தணர்** - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அறவோர். பிறிதொரு உயிர்க்கு வந்த துன்பத்தைப் போக்கும் வழி அவ்வுயிர்களிடத்தே செவ்விய தண்ணளிபூண்டு ஒழுகுபவர்க்கே கைவருமாதலால் **அந்தணர்** என்றார். பின்னர், அரசன், அவர்கள் அந்தணர்கள் ஆகாது மறையவர்களே ஆகின்றார்கள் - என்று முடித்துக்காட்டும் குறிப்புப் பெறும்பொருட்டுப் பின்னர் "**மறையவர் முன்**" - என்றார். நூலும் அந்தணரும் விதித்த - உம்மைத்தொகை.

அறமேயாகில் - அவ்வாறு விதித்தபடி மாற்றும்வகை செய்வது அறமாகுமோ? தீர்வுமாகுமோ? என்று ஐயப்பட்டானாதலின் **அறமேயாகில்** என்றான். **ஆகில்** - இது அறநூல் சம்மதிக்குமாகில், நூலின்படி அந்தணர் விதிப்பாராகில், அது கொண்டு இப்பழி தீருமாகில் - என்க.

மாற்றும் வகை - அறநூல் விதிவழி செய்யும் கழுவாய். இதனைப் பிராயச்சித்தம் என்பர். பசுக் கொலைக்குக் கழுவாய் இறந்த பசுவின் தோலைப் போர்த்துக் கொண்டு, ஒரு வேளை உணவு உண்டு, அப்பசு மந்தையில் ஆறு மாதம் வாசம் செய்து, அப்பசுக் கூட்டத்தைக் காப்பாற்றி வருதல் என்பர்.

அறியா முன்னம் இயற்றுவன் - அரசன் அறிந்தால் வருந்துவன் ஆதலின் அவ் வருத்தம் நிகழாதிருக்க **முன்னம்** என்றார். அன்றியும் அவன் அறிந்தபின் தீர்வு தேடிச் செய்தற்குக் காலம் நீட்டிக்குமாதலின், காலமும் பழியும் நீடிக்காதிருக்கும் பொருட்டு **முன்னம்** என்றானுமாம்.

மறையவர் முன் சேன்றான் - தானே தெய்வக்கலை பல திருந்த ஓதியவனாயினும் அறிவழிந்து வீழ்ந்தமையாலும், தன் காரியமே யாதலின் பிறர் சொன்னபடி நிற்றலே பழிநிகழாது காக்கக் காரணமாகின்றமையாலும், மறையோர் முன் சென்றான்.

துயரம் - மேலே குறித்தபடி தன் மனத் துயரமும், அரசனறிந்தால் அவனுக்குளதாம் துயரமும். **தீர்ப்பான்** - தீர்ப்பதற்கு. **பான் விகுதி** - வினையெச்சம். 26

112. தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவாத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினாற் புடைத்த தன்றே.

(இ - ள்) தன்...தரியாதாகி - தன் உயிர்போன்ற கன்று இறந்துபடப் பசு அத் துயரத்தை மேலும் தாங்க முடியாதாகி ; முன்...வார - முன்னே நெருப்பு வீசுதல் போலப் பெருமூச்சுவிட்டு, விம்மிக்கொண்டு, முகத்திலே கண்ணீர் பெருக, (எழுந்து) நடந்து சென்று ; மன்னுயிர்...புடைத்தது - உலகத்தில் நிலைபெற்ற எல்லா உயிர்களையும் காக்கின்ற செங்கோன்மை வல்ல மனு அரசனது அழகிய அரண்மனைவாயிலில் கட்டிய அழகியமணியைத் தன்கொம்பினால் அசைத்து அடித்தது ; அன்றே - அப் போதே.

(வி - ரை) ஆ - தரியாது - உயிர்த்து - விம்மி - சென்று - மணியைப் - புடைத்தது. **வீய** - இறந்துபட. உம்பரின் அடைய (23).

மன்னுயிர் காக்கும் - உலகில் நிலவிய எவ்வகை உயிர்களையும். மேலே (14) "மன்னுயிர்கட் கெலாம்...காவலான்" என்றதும், கீழே (36) "மன்னுயிர் காக்குங் காலை" என்பதுங் காண்க. **காக்கும் மனு** - முன் காத்த மனுவைப்போல இப்போது காக்கும்.

பொற்கோயில் வாயில் பொன்னணிமணி-பொற்கோயில்-அரண்மனை. இலக்குமியைக் கொண்ட திருமால் போன்று காவற்றொழில் செய்யும் அரசன் வாழுமிட மாதலின் **பொற்கோயில்** என்றார். **வாயில்** - வழி. தீமை புகாமைக்கும், நன்மை புகுதற்கும், வழியா யிருத்தலின் வாயில் எனப் பெற்றது. பொற்கோயில், பொன்னணிமணி, என்றதற்கேற்ப இதுவும் பொன்வாயில் என்க.

பொன் அணி மணி - பொன்னினாலே அழகு செய்யப்பட்ட மணி. பொன் அணிபோன்ற - என்றுமாம். இதனை ஆராய்ச்சி மணி என்பர். மணி அடிக்கப்பெற்றால், அது, ஒரு குற்றம் அல்லது அநீதி நிகழ்ந்துவிட்டமையை அறிவிக்கும்; அக்குற்றம் யாவர் செய்தனர் என்ற ஆராய்ச்சி அதினின்று தொடங்கும்; அவ்வாறு ஆராய்ச்சியைக் கிளப்புவதால் அதற்கு ஆராய்ச்சி மணி என்று பெயர். தமது குறையை, மணியடிப்பதன்மூலம் வேறொருவர் உதவியின்றி இலகுவில் தாமே அறிவித்துக்கொள்ளும் பொருட்டு அரண்மனை வாயில் வெளியில் ஒரு மணியைக் கட்டிவைப்பது அந்நாள் அரசர் நீதிமுறை வழக்கங்களில் ஒன்று. இப்பசு அஃறிணையேயாயினும் உயர்திணை போலவே அறிவுபெற்று இச்செயல் செய்தது என அரசர் வியந்து கூறுவார். இது பசுவுருவுடையதேயாயினும் பசுவல்லாது இறைவனது அருளாகிய அறக்கடவுளே யாதலின் அருளை வெளிப்படுக்கும் தேவர்செயலைச்செய்தது - என்பதும் குறிப்பு.

செங்கோல் - ஒருபாற் கோடுதலில்லாது யாவரிடத்தும் ஒரே தன்மையாய் நிகழ்வது. உயிர்த்தல் - விம்மல் - கண்ணீர் வார்தல் என்ற மெய்ப்பாடுகள் துன்பத்திற் போலவே அன்பினாலும் நிகழும். இப்பசுவில் வெளிப்பட்ட இவை துன்பம்போலத் தோற்றினும் முடிவில் அன்பு வெளிப்பாட்டிற்கே யாயினமை காண்க.

"விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண் பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்"

—திருவாரூர் - குறிஞ்சி - 6.

என்று இந்தத் திருவாரூரிலே அன்பினது இலக்கணத்தை அப்பர் சுவாமிகள் எடுத்துக் காட்டி அருளியிருப்பதும் காண்க. 27

113. பழிப்பறை முழக்கோ வார்க்கும் பாவத்தி னொலியோ வேந்தன்
வழித்திரு மைந்த னாவி கொளவரு மறலி யூர்திக்
கழுத்தணி மணியி னார்ப்போ வென்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழு மோசை மன்னன் செவிப்புலம் புக்க போது. ௨௮

(இ - ள்) பழிப்பறை...என்ன - பழியினது பறைமுழக்கமோ? கட்டுமியல்புடைய பாவத்தின் சத்தமோ? அரசனது மரபுக்கு ஒரு மைந்தனாகிய அரசிளங்குமரன் உயிரைக் கைக்கொண்டிருக்க வருகின்ற இயமனுடைய ஊர்தியாகிய எருமைக் கடாவின் கழுத்தில் அணிந்த மணியின் பெருஞ் சத்தமோ? என்று கருதும்படி; தன்...போது - தனது கடை வாயிலிலே இதற்கு முன் கேட்கப் பெறாத மணி ஓசையானது மன்னனது செவிப் புலத்திற் புகுந்தபோது அந்த மணியிலிருந்து ஆர்த்து எழுந்தது.

(வி - ரை) கடைமுன்கேளா-ஓசை - மன்னன்செவிப்புலம்புக்கபோது - முழக்கோ - ஒலியோ - ஆர்ப்போ - என்ன (ஐயுறும்படி) தெழித்து எழும் - என்க.

பழிப்பறை முழக்கோ-பழி+பறை-பழி சாற்றும்பறைமுழக்கமோ. பழிப்பு+அறை எனக் கொண்டு பழிப்பாகிய ஒரு பொருள் தான் இருப்பதை எடுத்துச் சொல்கின்ற சத்தமோ - என்றலுமாம்.

ஆர்க்கும் பாவம் - உயிர்களைக் கட்டும் இயல்பினை உடைய பாவம். "ஆர்த்த பிற வித் துயர்கெட" என்பது திருவாசகம்.

வேந்தன் வழித் திருமைந்தன் - அரசனது வழித்தோன்றலாய் வந்த சிறந்த மகன்.

மணியின் ஆர்ப்போ-"யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே" என்ற படி, மணியின் ஆர்ப்பு - பின்னே வருகின்ற அந்த ஓசையுடைய மணிகட்டிய ஊர்தி யையும், அது தன்னை ஊர்ந்து வருகின்ற மறலியையும், அவன் தன்மைந்தனுயிர்கொள்ள வருதலையும், முறையே குறித்ததோ என்று ஐயத்தை விளைத்ததாம். இதற்குமுன் கேட்ட ஓசைகள் யாவும் அறவோசைகள். இது முன்கேளா ஓசையாதலின் அறத் திற்கு மாறான மற ஓசையேயாம். ஆதலின் மறம் பழியோ? பாவமோ? மறலி வரு கையோ? இவற்றுள் யாதாய் விளைவதோ? என்ற ஐயம் தந்தது. **என்ன** - என்று ஐயுற்று எண்ண.

கடை - முன்வாயில். "புறங்கடை நல்லிசையும் நாட்டும்" என்பது காண்க.

முன்கேளா - இதற்குமுன் கேட்டிராத. இதற்கு முன் அநீதி எதுவும் நடவாத தால், அது பற்றி எழும் மணி ஓசையும் கேளாதாயிற்று. "தூங்கிய மணி" என்று பின்னரும் கூறுதல் காண்க.

ஓசை தெழித்து எழும் - ஓசை - அர்த்தமில்லாத சத்தம். மணி ஓசை அர்த்தமற்ற சத்தமேயாயினும் இங்கு மேலே சொன்ன ஐயங்களை விளைத்ததனால் அர்த்தமுள்ள சத்தமாயிற்று என்பார் ஓசை தெழித்துஎழும் என்றார். **தெழித்தெழுதல்** - பேரோசை யாய் அதட்டி எழுதல்.

செவிப்புலம் புக்கபோது - செவியிலும், அதற்குரிய புலனாகிய சத்தம் என்ற பொறியிலும் புகுந்தபோது. மணி ஓசை முதலிலே செவியிற்புகுந்து - பின்னர் அதன் பொறியாகிய சத்த இந்திரியத்தை உழக்கிப் - பின்னர் அதன் காரணத்தை உசாவியறி யும் மனமாகிய அந்தக்கரணத்தைக் கலக்கிக் - குறித்த ஐயங்களை விளைத்தது என்பார் **செவிப் புலம்** புக்கபோது முழக்கோ - ஒலியோ - ஆர்ப்போ - என்னத்தெழித்தெழும் என்றார்.

பழி மிகவே பாவம் மிகும் - பாவம்மிகவே இயமதண்டனை விளையும் - என்று பழிப்பறை முழக்கோ - பாவத்தின் ஒலியோ - மறலி ஊர்தி மணி ஆர்ப்போ - என இம் முறையில் வைத்து ஓதினார். அன்றியும் இம்மையில் பாவங் காரணமாகப் பழிவிளைந்து இயம தண்டனையில் முடிவுறும். ஆதலின்—ஏனையிரண்டுக்கும் காரணமாகிய பாவத்தை நடுவில் வைத்தார் என்றுமாம். பாவம் வெளித்தோன்றாத மூலகாரணமும், பழியும் இயமதண்டனையும் அதன் விளைவாகித் தோற்றப்படும் காரியமுமாம்.

மணி புடைக்கப்படும் போது இருபுறமும் தனித்தனி இரண்டு ஓசை கிளம்ப எதி ரோசையுடன் மூன்றாகும் எனவும், இவையே இங்கு இம்மூன்றாகக் கூறப்பெற்றன எனவும், இவ்வாறெல்லாம் அணிந்து கூறும் உரைகள் பாட்டின் ஆதாரவில்லாத அணிந் துரைகளேயாம் என்க.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருக்கோயில் வாயிலிலும் ஒரு மணி கட்டி யிருந்ததாம்; திரிபுராதிகளின் கொடுமைக்காற்றாத தேவர்கள் அதனை அடிக்கவே அதன் ஓசை மாறும் முன்னரே திரிபுரங்கள் தீப்பட்டுச் சாம்பராயின - என்று அப்பர்சுவாமிகள் இறைவனது கருணைப்பெருக்கை விளக்கும்படி மிகச் சுவை பெறுமாறு அருளியிருத்தல் இங்கே நினைவு கூர்தற்பாலதாம்.

"மூவா உருவத்து முக்கண் முதல்வமீக் கூரிடும்பை
காவாய் எனக்கடை தூங்கு மணியைக்கை யாலமரர்

நாவா யசைத்த ஒலி, ஒலிமாறிய தில்லையப்பாற்
றீயா யெரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே"—**தனித்திருவிருத்தம்.**

என்பது அவர் திருவாக்கு. முறை யறிவித்தமையால் இங்கு மணியோசையை ஒலி யென்றமை காண்க. இதுபோலவே இங்குக் காவலனும் ஓசை கேட்டதும் முறை செய்தான் - கன்றும் எழுந்தது - பசுவின் துயரமும் நீங்கிய - என்பதும் காண்க. 28

114. ஆங்கது கேட்ட வேந்த னரியணை யிழிந்து போந்து
பூங்கொடி வாயி னண்ணக் காவல ரெதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந் தெய்தி யிறைவ!நின் கொற்ற வாயிற்
றூங்கிய மணியைக் கோட்டாற் றுளக்கிய"தென்று சொன்னார். ௨௯

(இ - ள்) ஆங்கது...நண்ண - அவ்வோசை கேட்ட அரசன் தன் சிங்காசனத்திலிருந்தும் இழிந்து போய் வாயிலில் வந்தான். அவ்வளவிலே ; காவலர்...சொன்னார் - வாயிற்காவலாளர்கள் எதிரே வந்து அவரை வணங்கி "இறைவனே ! இங்கு இது ஓர் பசு வந்து நினது வெற்றி பொருந்திய வாயிலிலே தூங்கும் மணியை எய்தித் தனது கொம்பினால் அசைத்தது" என்று சொன்னார்கள்.

(வி - ரை) **ஆங்கு—அது—கேட்டவேந்தன்** - (தெழித்து) எழுந்த அந்த மணி ஓசையை அங்குக் கேட்ட அரசன். **இழிந்து—போந்து—நண்ண** - இந்நிகழ்ச்சியை நேரிற் **கண்டபோதே** அரசிளங்குமரன் தேரினின்றும் இழிந்து வீழ்ந்ததுபோல, அரசன் **கேட்டபோதே** ஐயுற்று அரியணையினின்றும் இழிந்து புறம்போந்து வாயில் நண்ணினான். இது இவன் இயல்பு. பெருங் காவலான் - என்பது மேலே காண்க.

"கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்", "வளவர்திருக் குலக்கொழுந்து", "கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள் குலம்..." என்பனவாதி தேவாரத் தமிழ்மறைகள் இக்குலத்தைச் சிறப்பித்தமையும் காண்க.

இழிந்து - நீதியே செய்தலினால் அரியணையில் உயர்வுடன் வீற்றிருந்தவன் அந்நிலையினின்றுந் தாழ்ந்து இழிவை அடைந்தனன் என்பதும் குறிப்பு. **இழிதல்** - மேலிருந்து கீழே இறங்குதல். வரிசை 109-ம் பாட்டு உரையிற் காண்க.

கொடி வாயில் - கொடி - அரச அடையாளங்களில் ஒன்று ; தசாங்கத்தொன்று. கொடியுயர்த்துதல் வெற்றி குறிக்கும். **கொற்ற வாயில்** என்றமை காண்க. கொடியைத் தாழ்த்தலும், முடக்குதலும், கொற்றத்தின் மறுதலையைக் குறிப்பனவாம்.

"கொடிநுடங்கு திருவாயிற் புறத்தணைந்தார்" (திருநா - புரா - 86) என்ற பாட்டின் குறிப்பும் ஒப்பு நோக்குக.

எதிரே - அறியும் ஆவல்கொண்டு நண்ணிய அரசரை விட, அவருக்கு அறிவிக்கும் ஆவல் மிகவுடையவராய் அவர் கேட்கும் முன்னரே எதிரே சென்று. **ஈங்கு** - அரசர்களும் வருதற்கு அஞ்சுகின்ற இவ்விடத்தில். **இது** - முன் நிற்கின்ற இது. (முன்னால் நிற்கும் பசுவைச் சுட்டி) இதோ தேவரீர் முன் நிற்கும் இப்பசு - அண்மைச் சுட்டு.

ஓர் பசு - ஒரு பசு ; அசேதனம் என்று இலகுபெறக் கூறினார்கள் என்க. ஒன்றாகிய - தனித்த - ஒப்பற்ற - பசு என்ற குறிப்பும் பெறுகின்றோம். இதற்கு முன் எந்தப்பசுவும் இவ்வாறு செய்யாமையால் இது தனித்ததன்மையாயிற்று என்பதாம். **ஓர்** - வினைத்தொகையாக்கி, ஓர்ந்து தக்கது செய்யும் பசு - என்றுரைத்தலுமாம்.

வந்து - செலுத்துவாரின்றித் தானே வந்து. **எய்தி** - மணியை எய்தி எனக்கூட்டுக.

தூங்கிய மணி - இதுவரை அது அடிபடும் காரணம் நிகழாததால் தூங்கிக்கொண்டிருந்த மணி என்க. தொங்கிய மணி என்றலுமாம். தொங்கவைக்கப்பட்ட - என்ற பிற

வினைப் பொருளில் வரும் **தூக்கிய** எனும் சொல் எதுகைநோக்கித் **தூங்கிய** என மாறித் தன்வினையாக வந்தது என்றுங் கூறுவர். மேற்பாட்டின் உரையிற் குறித்த அப்பர் சுவாமிகள் தேவாரத்திலும் "கடை தூங்கு மணியை" என்றது காண்க.

மணியைக் கோட்டாற் றுளக்கியது - தனது துயரத்தை அரசனுக்கு அறிவித்து அதற்குத் தீர்வு தேடிக்கொள்ளும் பொருட்டுச் "சென்று மணியைக் கோட்டினாற் **புடைத்தது**" என்று (வரிசை 112) கூறிய ஆசிரியர் இங்கு, முன்னிகழ்ச்சியையும் அது பற்றிய பசுவின் செய்கையையும் அறியாத வாயிற்காவலாளர் வாக்கில் வைத்துக் கூறினாராதலின் **புடைத்து** என்னாது **துளக்கியது** என்றார். **புடைத்தல்** - அடித்தல். **துளக்குதல்** - அசைத்தல்.

காவலர் - அரச அரண்மனை வாயிற்காவல் செய்வோர். இவர்கள் முன்னிகழ்ச்சியை அறியாராதலாலும், கண்டது கொண்டு காணாதவற்றை அறியும் ஆற்றல் இல்லாதவராதலாலும், ஓசை கேட்டு அரசன் நண்ணியபோது, மணி ஓசைக்குத் தாம் கண்டதே காரணமாக் கொண்டு இவ்வாறு உரைத்துக், கவலை கொள்ளத்தக்க பொருள் வேறொன்றுமில்லை என்று குறித்தனர். இது கேட்டும், பசுவைக் கண்டும், மணி ஓசைக்குக் காரணம் பசுத் துளக்கியது ஆயினும், அது துளக்கியதற்குக் காரணம் யாது ? என்றறிய அரசன் மனத்தே கவலை கொண்டவனாய், அதனை உணர்த்த வல்லார் மதி நூல் வல்ல அமைச்சரே யாதலின், மேலும் காவலரை நோக்காது, அமைச்சரை நோக்கினார்.

அசேதனமாகிய பசு மணியை எப்படி அடிக்கக்கூடும் ? எனின்,

1. மனிதர் தன் வரவு காணாவண்ணம் கன்றைச் செலுத்தியும், மனிதர் காட்சிப் புலனை மறைத்தும், செய்வித்தது இறைவனது திரோதான சத்தியாகிய மறைப்புச் சத்தியேயாகும். அதுவே பசுவையும் இப்படி அடிக்கச் செய்தது.

2. இறைவனுடைய நீதி என்கிற அறக்கடவுளே இவ்வாறு பசுவாய் வந்தது— என்ற வரலாறும் காணப்பெறும். "தனிப்பெருந் தருமம்" (22) என்றதுங் காண்க.

3. புண்ணிய பாவங்களுக்கு ஈடாகி ஒரு ஆன்மா பலபல உடலெடுக்கும். "இயக்கர் கின்னரர்" என்னும் சுந்தரமூர்த்திகள் தேவாரத்தாலும், மாபுராணங்களாலும், புலி, வானரம், நாகம், ஈ, எறும்பு முதலிய அசேதனங்களும் பூர்வசென்மத்தில் எஞ்சிநின்ற கருமங் காரணமாக இழிந்த பிறவியடைந்தாலும், புண்ணியச் சிறப்பினால் ஈசனை அறிந்து பூசை செய்தன என்று அறிகின்றோம். இவ்வாறு அறிவு விசேடித்த அசேதன உயிர்களும் உண்டு என்று அறியப்படுகின்றபடியால் அதுபோலவே இப்பசுவும் ஆம்.

அசேதனமாய் நில்லாமல் இப்பசு அறிவு விசேடத்தினாற் சிறந்த சேதன உயிரென்று அரசன் முடித்துக் காட்டியதை 40-வது பாட்டிற் காண்க. 29

115. மன்னவ னதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி
என்னிதற் குற்ற தென்பா னமைச்சரை யிகழ்ந்து நோக்க
முன்னுற நிகழ்ந்த வெல்லா மறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறியமைச்சன் மன்னன் றாளிணை தொழுதுசொல்வான். ௩௰

(இ - ள்) மன்னவன்...நோக்க - அரசன் காவலாளர் சொன்னதைக் கேட்டும், தன் முன்னர் வருந்தி நின்ற பசுவை நோக்கியும், அதன் பின்னர் இதற்கு என்ன நேர்ந்தது என்று கேட்டு அறியும் விருப்பத்தாலே அங்கு நின்ற அமைச்சர்களை இகழ்ச்சியோடு நோக்கினான். அவ்வாறு நோக்க ; முன்னுற......சொல்வான் - முன்னமே இந் நிகழ்ச்சி முழுதும் அறிந்த அமைச்சன் அரசனை வணங்கிப் பின்வருமாறு சொல்வானாயினன்.

(வி - ரை) மன்னன்—கேளா—நோக்கி—நோக்க—அமைச்சன் சொல்வான் என்க.

வருந்திய பசு - வாயிற் காவலர் பசுவின் துயரத்தையும் அது மணியடித்த காரணத்தையும் அறியாராய் ஒரு பசு துளக்கியது என்றாராயினும், அரசன், அப்பசு "தரியாதாகி - நெருப்புயிர்த்து - விம்மி - கண்ணீர்வார" நின்றமை கண்டு அதன் துன்பத்தை உணர்ந்தானாதலின் "வருந்திய பசுவை நோக்கி" என்றார். பசுவை நோக்கியும் அதன் வருத்தத்தை நோக்க வலியில்லாத வாயிற்காவலர் முன்பாட்டிலே ஓர் **பசு** என்று அடைமொழி யில்லாது கூறியதும், இப்பாட்டிலே **வருந்திய பசு** என்று கூறியதும் உய்த்துணரத்தக்கன.

என்னிதற்குற்ற தென்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க - கண்ணீரின் மூலம் பசுவின் வருத்தத்தையும், மணியடித்ததின் மூலம் அநீதம் நிகழ்ந்தது என்பதையும், அறிந்த அரசன் அநீதம் நிகழ்ந்தபின் காரணந் தெரியவேண்டிய கடமைப்பாடும், நிகழாமுன் வாராமைக் காக்கவேண்டுங் கடமைப்பாடு முடைய அமைச்சர் இவ்விரு கடமைகளிலும் வழுவினார்கள் என்று தெரிவிக்க இகழ்ந்து நோக்கினார் என்க. அந்த நோக்கம் இகழ்ச்சியைத் தெரிவித்ததன்றி காரணத்தைவிசாரித்ததும் ஆம். "கண்ணிற் சொலிச் செவியினோக்கும் இறைமாட்சி" என்ற இலக்கணமுங் காண்க. கண்ணிற் சொல்லுதல் இங்கு இகழ்ந்த நோக்கத்தாற் பெற்றாம். செவியின் நோக்கினமை மேலே மணியோசை கொண்டு அநீத நிகழ்ச்சியை அறிந்தமையாற் பெறப்படும்.

அமைச்சர் - மந்திரத் தொழில் செய்வோர். அமாத்தியர் என்பது வடமொழி. உடனிருப்பவர் - என்பது பொருளாம். உயிருக்கு இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் கூடவே இருந்து பிரேரேபித்தல் போல, அமைச்சர் அரசர்க்கு உள்ளவர் என்பது சாத்திரம். அமைச்சரை இகழ்ந்து நோக்கி என்றமையால் பசுவை இரங்கி நோக்கினான் என்பது பெறப்படும். அந்நோக்கம் பின்விளையும் நிலையை 33-வது பாட்டில், "தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரும்" என்பதனால் அறிக.

முன்னுற......அமைச்சன் - நல்லமைச்சின் இலக்கணம் முழுதும் அமைந்து தொன்றுதொட்டு வந்தபழநெறியில் உள்ளவன் என்பது பொருள். அமைச்சின் இலக்கணம் திருக்குறளிற் காண்க. நாட்டின் நடப்பு முழுதும் அவ்வப்போதே தானேயறிதலும், பிறராற் கேட்டறிதலும், தொன்றுதொட்டுக் கைவந்த நன்னெறி ஒழுகுதலும், அமைச்சருக்கு இன்றியமையாத இலக்கணங்களாம்.

முதிர்ந்த கேள்வி-எவ்வாற்றாலும் பிழைபடாத கேள்வி. கேள்வியின் இலக்கணமும் அது முதிரும் இயல்பும் திருக்குறளிற் "கேள்வி", "ஒற்று" முதலிய அதிகாரங்களிலே தெளிந்துகொள்க. **முதிர்ந்த கேள்வி**யுடைமை அறிவுடைமைக்குக் காரணமாயிற்று. ஆதலின் **அறிந்துளான்** என்றார். **கேள்வி** என்றதனால் கல்வி முன்னரே பெறப்படும். இங்கு இச்செய்தி அவன் கேட்டறிந்தது என்பது குறிப்பு.

தொன்னெறி அமைச்சர் - தொன்னெறி வருதலும், தொன்னெறி நிற்றலும், ஆகிய இரண்டு பண்பும் கொண்டவன் என்க. அமைச்சர் பண்புகளில் இவ்விரண்டும் மிகவும் இன்றியமையாதன ஆம்; இவையே அரசனையும் குடிகளையும் அந்நெறியில் நிற்பிப்பன ஆதலின். **நெறி** - ஒழுக்கம். இவ்வமைச்சனது தொன்னெறிப் பண்பு வரும் பாட்டிற் காண்க.

என்றென்றமைச்சரை—என்பதும் பாடம். 30

116. வளவனின் புதல்வ னாங்கோர் மணிநெடுந் தேர்மே லேறி
அளவிறேர்த் தானை சூழ வரசுலாந் தெருவிற் போங்கால்
இளையவான் கன்று தேர்க்கா லிடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறு மித்தாய் வந்து விளைத்தநித் தன்மை யென்றான். நக

(இ - ள்) வளவ!...போங்கால் - " அரச ! உம்முடைய புதல்வன் அங்கு ஒரு அழகிய பெரிய தேரின்மேல் ஏறிக்கொண்டு அநேகம் தேர்ப்படைகள் தன்னைச் சூழ்ந்து வர அரசர்கள் உலாச்செல்லும் தெருவிலே உலாப் போகுங்காலத்தில் ; இளைய...என்றான் - இளைய பசுக்கன்று தேர்க்காலினுள்ளே புகுந்து இறந்துபட்டது. அது அவ்வாறாகவே தளர்வுறுகின்ற இந்தத் தாய்ப்பசு இங்கே வந்து இத்தன்மையைச் செய்தது " என்று சொன்னான்.

(வி - ரை) **வளவன்** - சோழன். வளவு - வளைவு உடையவன். வளைவு - வீடு என்று பொருள் தரும். உலகத்தையே தன் சொந்த வீடாக ஆக்கிக்கொண்டு ஆள்பவன். தன் ஆணைச் சக்கரத்தில் உலகை வளைத்து ஆள்பவன் என்னும் பகுதிப் பொருளில் **வளவர்** என்பது அரசர் எல்லாருக்கும் பொதுப் பெயராம். ஆயினும் இது அந்நாளில் பரக்க நாடாண்ட சோழர்க்குக் காரண இடுகுறியாய்ச் சிறப்புப் பெயராயிற்று. "கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திட " என முன்னர்க் கூறியதும் காண்க.

உலக வளவனுதலின் இத்துன்பத்தை வேறெவரும் விளக்க வலியிலராவர் ; இது பிறரால் நேர்ந்ததன்று என்று குறிக்க **வளவ** என்றார்.

புதல்வன் - மகன். பேர் முதலிய வேறு அடையாளமில்லாது கூறினமையால் அரசர்க்கு ஒரே மகனென்பது பெறப்படும். பின்னர் " ஒரு மைந்தன் தன் குலத்துக்குள்ளா னென்பதும் உணரான் " (வரிசை 129) என விரித்துக் கூறுதலும் காண்க. இப்பகுதியில் பிற இடங்களில் **மைந்தன்** என்றும், **மகன்** என்றுங் கூறிய ஆசிரியர் இங்குப் 'புதல்வன் ' என்று மந்திரி கூறுவதாய்க் குறித்தனர். **புதல்வன்** - மூதாதைகளைப் புத் என்னும் நரகத்திலிருந்து எடுப்பவன். மணியோசை கேட்டுப் பழியோ பாவமோ என்று அஞ்சிய அரசனுக்குப், பழியாலும் பாவத்தாலும் நேர்கின்ற நரகத் துன்பத்தினின்று எடுப்பவன் என்று குறிப்பிட்டு **புதல்வன்** என்றார்.

இளைய ஆன்கன்று - " இளங்கன்று பயமறியாது " என்ற பழமொழிப்படி தன்னியல்பின்படியே துள்ளிச் சென்று தானே தனக்கு அபாயத்தை விளைவித்துக்கொண்டது என்பது குறிப்பாம். முன்னும் " இளங்கன்று துள்ளிப் போந்தது" என்றார்.

புகுந்து - தேர்க்காலுக்கும் நிலத்துக்கும் இடையிலே புகுந்து. கன்று, தேர்க்காலினுட் புகுந்து கொண்டதே யன்றித், தேர்க்கால் அதன் மேல் செலுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டபடி.

இறந்ததாகத் தளர்வுறும் - இறந்ததென்று உட்கொண்டு வருந்தும். பின்னர் உயிர் பெறும் கன்றாகலின், இறந்தது இறந்தே படவில்லை ; ஆயினும் இப்போதைக் காட்சிக்கு இறந்ததாய்க் கொண்டு - என்பதும் குறிப்பு. **ஆக** - ஆதலின் என்றலுமாம்.

இத்தன்மை - மணியடித்தது முதல் விடை சொல்லும் அளவும் நிகழ்த்திய தன்மையுடைய செய்கை. **தன்மை** - இங்கு தன்மையுடைய செய்கைக்கு ஆகுபெயர்.

தேர்மேலேறி என்றதனுல் மேலே வரும் அபாயம் தெரிந்து விலக்க முடியாத நிலையென்றும் ; **தானைசூழ** என்றதனுல் அபாயம் வாராது காக்கப் பல காவல்களுமிருந்தன என்றும் ; **அரசுலாந் தெரு** என்றதனுற் பசுக்கூட்டம் செல்லுமிடமன்று - என்றும் ; இவ்வாறே இப்பாட்டிற் குறித்த பொருள்கள் யாவும் இந்நிகழ்ச்சிக்கு அரசகுமாரன் ஒரு சிறிதும் பொறுப்புடையவனன்று என்பதைத் தான் அரசனுக்கு விடை சொல்லு முகத்தாலேயே அறிவிக்குமாறு உட்குறிப்புக்களுடன் மந்திரி கூறினமை காண்க. இது பற்றியே முன்னர் இவனை " **அறிந்துளான் முதிர்ந்த கேள்வித் தோன்னெறி யமைச்சன்** " என்றார். முன் பாட்டிற் கண்ட அரசனது இகழ்ச்சி நோக்கம் அமைச்சர் பலர் மேலும் வீழ்ந்ததாகவும், விடை சொல்வான் **தோன்னெறி அமைச்சன்** ஒருவனே ஆயினன். ஆதலின் இவன் அவருட் சிறந்தவன் என்ற குறிப்புமாம். அமைச்சுத் திறத்தின் சிறப்புக்களெல்லாம் இவ்வமைச்சனிடத்துப் பொருந்தியிருந்ததோடு இவ்

வாசிரியரிடத்தும் பொருந்தியிருந்தமை இங்கே உய்த்து உணர்தற்பாலது. 31

117. அவ்வுரை கேட்ட வேந்த னாவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை யகத்து மிக்கிங்
கிவ்வினை விளைந்த வாறென் றிடருறு மிரங்கு மேங்குஞ்
செவ்விதென் செங்கோ லென்னுந் தெருமருந் தெளியுந் தேறான். ௩உ

(இ - ள்) அவ்வுரை......மிக்கு - அந்த வரலாற்றைக் கேட்ட அரசன் பசுவடைந்த துன்பத்தையே தானுமடைந்தவனாகி விடம் தலையின் மீது ஏறிவிட்டாற் போல உள்ளே வேதனை மிகுந்து ; இங்கு...தேறான் - இங்கு இக்கொடுமை விளைந்தது எவ்வகை என்று துன்பப்படுவான், இரங்குவான், ஏங்குவான், தன் செங்கோல் செவ்விது என்று தன்னையே இகழ்ந்துகொள்வான், மனஞ் சுழல்வான், பின் சிறிது தெளிவு கொள்வான் ; ஆயினும் ஒன்றும் தேற்றத்தை அடையமாட்டாதவனாயினான்.

(வி - ரை) கேட்ட வேந்தன்...துயரம் எய்தி - கேட்டபோதே பசுவினது துன்பத்தைத் தான் அடைந்தான். இது தலையன்பின் திறம். முன்னரே பசுவைக் கண்டானாயினும் அதன் வரலாறு தெரியாமையின் பொதுவகையிற் கவன்றனன். கேட்டவுடன் அதன் துயரத்தையே தானும் அடைந்தான். அவ்வாறு அடைந்தது கண்டதனாலன்றிக் கேட்டதனாலாயிற்று என்றுணர்க. வரிசை 127 பாட்டிலே "இது தனதுறுபே ரிடர்யானும் தாங்குவதே கருமம்" எனத் துணிந்து மகப்பிரிவைத் தானும் அடைய நின்றனன். பசுவின் துன்பத்தை இப்போது அடைந்ததுவே பின் நிகழ்ச்சியிலே அரசனைச் செலுத்திற்று.

வெவ்விடம் தலைக் கொண்டாற்போல் - வெவ்விடம் - கொடியபாம்பின் விடம். விடங்கள் பலவாயினும், வெவ்விடம் என்றதனாலும், தலைக்கொண்டு என்றதனாலும், பாம்பு வருவித்துரைக்கப்பட்டது. ஏழுவேகமும் முற்றித் தலைக்கேறியதுபோல என்க. தீர்த்தற்கு அரிய ஏழாம்வேகமும், அது தலைக்கொள்வதும், அதன் தன்மையும், பிறவும், அப்பூதி நாயனார் புராணத்துக் காண்க. பாம்பினது விடம் தொளைப்பல்லினால் இரத்தத்தினுள் உகுக்கப்பட்டு இரத்தவோட்டத்தினாலே உடம்பு முழுதும் சுற்றும். அவ்வாறு ஒருமுறை சுற்றுவது ஒருவேகம் என்ப. இப்படி ஏழு முறை சுற்றுமாகில் கடைசியில் சுற்றுவது ஏழாம் வேகம் என்பர். ஒவ்வொரு வேகத்துக்கு ஒவ்வொரு தாதுவாக உடம்பின் ஏழு தாதுக்களுள்ளும் விடம் பரவும். ஏழாம் வேகத்திலே தலையினும் எலும்பினும் உள்ள மூளையிலும் பரவும். இதனையே "தலைக்கொண்டாற்போல்" என்றார். இதன் பின் இதற்குத் தீர்வு இல்லை என்பர்.*

போல - அத்தன்மைபோலாயிற்றன்றி அதன்படியே ஆகவில்லை என்பது குறிப்பு.

வேதனை - வேதிக்கச்செய்வது ; மாற்றுவது ; துன்பம். இடருறுதல் - துன்பப்படுதல். இரங்குதல் - கன்றை இழந்த தாயின் வருத்தத்தை நோக்கி இரக்கம் அடைதல்.

ஏங்கும் - துன்பமாய் முடிந்து தீராநோயாயினமையால் ஏங்கினான். தெருமரும் - மனஞ்சுழலும். தெளியும் - அச்சுழற்சியிலிருந்து சிறிது தெளிவுறும். தேறான் - சுழற்சியிற் சிறிது தெளிதலேயல்லாது முற்றும் தெளியான் - துணிபு பெற்றானில்லை.

செவ்விது என் செங்கோல் - செம்மை+கோல்=செங்கோல். பெயர் மாத்திரத்திற் செம்மையாய் இருந்துவிட்டது என்ற இகழ்ச்சி தோன்றக் கூறியதாம்.

ஆவுறு துயர மெய்தி - பசுவினது துயரத்தை எய்தி அதன் வண்ணமே அரசனும் ஆயினான் ஆதலின் இரங்குவன், ஏங்குவன் என்னாது, இரங்கும், ஏங்கும், தெருமரும் முதலிய அஃறிணைக்கும் பொருந்துவதாய வினைமுற்றுக்களாற் கூறினார்.

*சேக்கிழார் - 101 - 103 பக்கங்கள் பார்க்க.

இங்குக் கூறியன அகத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சிகள். இவைகளுக்கேற்ற புறநிகழ்ச்சிகளை வரும் பாட்டிற் காண்க.

இவ்வினை விளைந்த ஆறு என்று இடருறும் - இச்செயல் விளைவதற்குக் காரணம் யாது என்று துன்பப்படுதல். "இப்போது நான்செய்த வினை ஒன்றுங்காணேன். அவ்வாறு என்றால் விளைந்தது அல்லவாயின் இது பிறரால் விளைந்திருத்தல் வேண்டும். என் கீழ்க் குடிகளை யாவராலும் துயரமெய்தாமற் காத்தலே செங்கோ லன்றோ ?" என எண்ணி " என் செங்கோல் செவ்விது !" என்று தன்னையே இகழ்ந்தனர் என்க.

விளைந்த வாவென்று—என்பதும் பாடம். 32

118. மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தி னீடும்
என்னெறி நன்றா லென்னு மென்செய்தாற் றீரு மென்னுந்
தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை யரச னுற்ற துயரமோ ரளவிற் றன்றால். ௩௩

(இ - ள்) மன்னுயிர்...என்னும் - " நிலைபெற்ற உயிர்களை எல்லாம் தீங்கு வாராமற் காத்து உலகம் எல்லார்க்கும் பொதுவா மென்பதின்றி எனக்கே உரியதென்னும்படி தரும வழியே இந்நீண்ட காலம் செலுத்திய எனது அரசாட்சி மிக நன்றாயிருக்கின்றது!" என்று தன்னைத்தானே இகழ்ந்து கூறுவான் ; என்...என்னும் - என்ன செய்தால்தான் இது தீர்வடையப்போகிறது ! என்று சொல்வான் ; தன்...சோரும் - தனது இளங் கன்று காணாத தாய்ப்பசுவைப் பார்த்துச் சோர்வடைவான் ; அந்நிலை... அன்றால் - இவ்வாறு அந்நிலையில் அரசன் அடைந்த துன்பத்திற்கு ஓர் எல்லை இல்லை.

(வி - ரை) உயிர்புரந்து அறத்தில் நீடுதல் - அறத்திலே நிலைத்து நின்று உயிர்களைக் காத்து, அறத்தின் வழியே காவல் புரிதல். இதனாலே " காவலன் " என்ப. இதன் விரிவை " மாநிலம் காவலனாவான் " என்னும் 36-வது பாட்டிற் காண்க.

பொதுக் கடிந்து - இவ்வுலகம் காத்தல் பிறருக்கும் உரியது என்று பொதுவாதலை நீக்கித் தனக்கே உரிமையாக்கிக் கொள்ளுதலை என்க. " பொதுக் கடிந்து இனிது காக்கும் கொற்றவன் " என்பது திருநாட்டுச் சிறப்பு 35-வது பாட்டு.

என்செய்தால் தீரும் - என்பது தீர்வில்லாமை கருதியது. **சோரும்** - அதன் துயரத்தை மாற்றும் வழியில்லையே என்று சோர்வடைந்தான்.

அறத்தின் நீடும் என் நெறி - முன் மனுஅரசர் காலம் முதல் இதுவரை நீடி வந்து அறவழியிலேயே நிலைத்து நின்றதாகிய எனது அரசு.

நீடும் - பின்னரும் அவ்வகையே நீடும் என்பதும் தொனிக் குறிப்பாகும்.

இப்பாட்டிற் குறித்தவை அரசன் தனக்குத் தானே சொல்லியவை. 33

வேறு

119. மந்திரிக ளதுகண்டு மன்னவனை யடிவணங்கிச்
சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றாற்
கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை
யந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்த லறமென்றார். ௩௪

அரசனுக்கு அமைச்சர் சொல்லியது.

(இ - ள்) மந்திரிகள்...வணங்கி - அரசன் அடைந்த அளவில்லாத் துயரத்தை அமைச்சர்கள் கண்டு அவன் பேரருளை நோக்கி வணங்கி ; சிந்தை...அறம் - " அரசே மனம் தளர்ந்து துயரமடைவது இதற்குத் தீர்வாகாது ; (பின் என்னை ? என்பீராயின்)

பசுவதை செய்தார்க்கு அந்தணர்கள் விதித்த வழியே உமது மைந்தனை முறை செய்வதுதான் அறநெறியாகும்" என்று சொன்னார்கள்.

(வி - ரை) அது - முன் சொல்லியவாறு அரசனுற்ற அளவில்லாத துன்பத்தை.

தீர்வன்றல் - முன் பாட்டிலே, அரசன் துயர மிகுதியால் எது செய்யினும் தீராது எனக் கருத்துட்கொண்டு **என் செய்நால் தீரும்?** என்று, தனக்குத்தானே சொல்லிய உட்கருத்தை நோக்காது, வினாவாகக் கொண்டு அமைச்சர் விடை சொல்லியவாறு.

திருஞானசம்பந்தசுவாமிகள் புராணத்திலே, சுரம் நீங்கப்பெற்ற மன்னவன் 'என்னவாது உமக்கு?' என்று இகழ்ந்து சொன்ன வாசகத்தையே வினாவாகக்கொண்டு,

> "என்ன வாது செய்வ தென்று ரைத்த தேவி னுவெனுச்
> சொன்ன வாச கந்தொ டங்கி..." (777)

என்றும், அனல் வாதத்தில் அமணர் தோற்ற பின்பு "நீங்கள் தோற்றிலீர் போலும்" என அரசன் இகழ்ந்து கூறியபோதும்,

> "தென்னவ னகையுட் கொண்டு செப்பிய மாற்றந் தேரார்
> சொன்னது பயனுக் கொண்டு சொல்லுவார்" (794)

என்றும், கூறுகின்ற சொல்லாற்றலையும், பொருள் கொள்ளும் வகைகளையும், இங்கு வைத்துக் காண்க. ஆனால் அங்குக் கண்டது நகைச்சுவை; இது இரக்கச்சுவை.

கோவதை செய்தார்க்கு - இதுபோல் முற்காலத்து நிகழ்ந்தபோது அது செய்தவர்க்கு—என்க. செய்தார்க்குத் தீர்வாக **விதித்த** என்று கூட்டுக.

கொந்து - அலர் - தார் - மைந்தன் - கொத்தாகிய மலர்களின் மாலையணிந்த மகன்.

மறை அந்தணர்கள் விதித்த - எவ்வுயிர்க்கும் ஒப்பச் செந்தண்மை பூண்டொழுகுபவர்கள் ஆதலின் **அந்தணர்** என்றார். இவ்வாறே வரிசை 111 திருப்பாட்டிலும் அந்தணரது நினைவு அரசிளங்குமரன் உள்ளத்து எழுந்ததும் காண்க. அவர்கள் விதிப்பதும் தம் இச்சையாலன்றி மறைநூல் விதியின்படி விதித்தது என்பார், **மறை அந்தணர்கள்** என்றார். மறையும் அந்தணர்களும் விதித்த என்றலுமாம். நிறைமொழி மாந்தர்களாகிய அந்தணர்கள் சொல்லும் ஆணையே மறையாகிக் குறித்த பயனைக் கொடுக்கும்; ஆதலின் அவர்கள் தாமே விதித்தலுக்கும் உரியார் என்பதுமாம்.

வழி நிறுத்தல் - முறையிலே நிற்பித்தல். **அறம்** - தீர்வு வேண்டி அரசன் வினவினான் என்று உட்கொண்ட அமைச்சர்கள் "துயரம் அடைவது இதற்குத் தீர்வு அன்று; வேறு தீர்வில்லாதபோழ்து அறவழிநிறுத்தலே தரும இயல்பு" என்றார்.

தீர்வு - கழுவாய் - பிராயச்சித்தம். இதையே **மாற்றும் வகை** (26) என்றார்.

அறத்தில் நீடும் என்னேறி நன்றல் என்று தன் அரசாட்சியை இகழ்ந்து கூறின அரசனுக்கு அறத்தின் ஆறு இதுவே என்று காட்டுவது அமைச்சரது கடமையாதலின் **நிறுத்தல் அற**மென்று கூறினர் என்பதும் கருத்தாம். **அறம்** - இங்குச் செய்யத் தகுவது - "விதித்தன செய்தல்" என்னும் பொருளில் வந்தது. பின்னரும் (வரிசை 120—122) இதனையே **வழக்கு** என்றமையும் காண்க.

இது பல அமைச்சருள்ளும் முற்பாட்டிற்கூறிய **தோன்னேறி யமைச்சன்** ஒழிந்த மற்ற அமைச்சர்கள் கூறியது போலும். 34

120\. "வழக்கென்று நீர்மொழிந்தான் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ?

இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கின்று நானிசைந்தாற் றருமந்தான் சலியாதோ?" ரு0

121. "மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ?" ருசு

122. "என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தேன்
அன்னியனோ ருயிர்கொன்று லவனைக்கொல் வேனாற்
றொன்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகிற் பெறமொழிந்தீர்! மந்திரிகள்! வழக்"கென்றான். ருஎ

இம்மூன்று பாட்டும் 'அறம் இது' என்ற அமைச்சருக்கு அரசன் கூறியன

120. **(இ-ள்)** வழக்கென்று...மருந்தாமோ? - மறையந்தணர்கள் விதித்த வழி மைந்தனை நிறுத்தலே இதற்குத் தீர்வாகிய வழக்கு-என்று நீங்கள் சொன்னீர்களானால், அது, வலிந்துகொல்லப்பட்டமையால் இளங்கன்றை இழந்து அலறுகின்ற பசுவின் துன்பத்துக்கு மருந்தாகுமோ?; இழக்கின்றேன்...சலியாதோ? - பசு தன்கன்றை இழந்தமைக்குத் தீர்வு ஆகும்படி நான் என் மகனை இழந்துவிடுகின்றேன் என்று கருதி நீங்கள் எல்லோரும் சேர்ந்து சொல்லிய இந்தத் தீமைக்கு நான் உடன்பட்டால் தரும தேவதைதான் சலிப்படையாதோ?. ருரு

121. **(இ-ள்)** (பாட்டு முழுதும் ஒரு முடிபு). (அந்த அரசியற்றருமம் தான் யாதெனில்) நிலத்தின் வாழும் பல உயிர்களையும் காவல் செய்யும்போது, அதற்கு இடையூறாய்த் தன்னாலும், தன் பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், ஏனை உயிர்களாலும் வரும் ஐந்துபயங்களையும் தீர்த்துத் தருமத்தைப் பிறழாமற் பாது காக்கின்றவனே அல்லவா மாநிலங்காவலன் என்ற பெயருக்கு உரிமையுடையவன்?. ருசு

122. **(இ-ள்)** என்மகன்...ஆனால் - என்மகன் செய்த பாதகச் செய்கைக்குப் பரிகாரமாக அறநூல்வழி நிற்பித்தலாகிய தவம் செய்ய இசைந்துகொண்டு, அவ்வாறே அன்னியன் ஒரு உயிரைக் கொன்றால் அதற்குப் பரிகாரமாக அவனைக் கொலை செய்வதே தீர்வு என்று கொன்றுவிடுவேனேயானால்; தொன்...என்றான் - உலகத்திலே பழைய காலத்திலிருந்து வந்த மனுநூல் நீதி, பின்னால் (அதே மரபில் அதே பேர் கொண்ட) ஒரு மனுவரசனாலே அழிக்கப்பட்டது என்று பழிச்சொல் வரும். அவ்வாறு உலகில் வரும் பழியை நான் அடையும்படி நீங்கள் வழக்கு மொழிந்தீர்கள் - என்று அரசன் சொன்னான். ருஎ

120. **(வி-ரை) வலிப்பட்டு** - வலிமை - கொடுமை - செய்யப்பட்டு அதனால் இழந்து என்று கூட்டுக. வலிப்பட்டு மருந்தாமோ என்று கூட்டி அது குற்றந் தீர்க்கும் சத்தி பெற்றுப் பசுவின் நோய்க்கு மருந்தாகுமா? என்றுரைத்தலுமாம். **வலிப்பட்டு** - வருந்தி - எனப் பொருள்கொண்டு, வலிப்பட்டு அலறும் என்று கூட்டியும் உரைப்பர். **நோய் மருந்து** - நோய் தீர்க்கும் மருந்து. நான்காம் வேற்றுமைத் தொகை; பகைமைப்பொருளில் வந்தது. "மற்றிதற்குத் தீர்வு" என்று அமைச்சர் சொல்லியது நோக்கி அரசன் கூறுவதாம்.

மைந்தனை யிழக்கின்றேன் என்று - நான் இப்பசு நோய்க்குத் தீர்வாக அதன் துயரத்தையே தாங்கும்பொருட்டு என் மைந்தனை அவ்வாறே இழக்கத் துணிகின்

றேன் என்று உட்கொண்டு அதை விலக்கக் கருதி என்றபடி. அரசன் உள்ளம் செல்வழியை அவனடைந்த துயரத்தின் மெய்ப்பாடுகளிலிருந்து மதியூகிகளாகிய அமைச்சர் உணர்ந்தனர். அவர்களது உள்ளக் கருத்தை அவர்களது சொல்லிலிருந்து அரசனும் உணர்ந்தான் என்க. **இழக்கின்றேன் இன்று—**என்பதும் பாடம்.

சழக்கு - குற்றம். இங்குக் குற்றம் பொருந்திய வார்த்தை. அறியாமை - என்றுமாம். "இச்சழக்கினின் றேற்றுவார்" வரிசை 542 காண்க. **சழக்கு** - குற்றம் மலிந்த உலக பாசம். பசுவின் துன்பநோக்கி அரசன் அளவிலாத்துயரடைந்து சோர்ந்த போது சிந்தை தளர்ந்தருள வேண்டுவதில்லை எனும் குறிப்புத்தோன்ற "தளர்வது—தீர்வன்று" என்றுராதலின் இதனைச் **சழக்கு** என அரசன் கொண்டனன்.

தருமம் - அறக் கடவுள். **சலித்தல்** - அசைதல். அறம் எக்காலத்தும் எவ்விடத்தும் ஒரே படித்தாய் நிலைபேறு பெற்றுச் செல்வது போய், நிலைத்தலின்றி அசைந்து வருதல். **இசைந்தால்** - இசையமாட்டேன் என்பது குறிப்பு. 35

121 **(வி - ரை)** இப்பாட்டு அரசன் **காவலன்** எனும் தகுதி பெறும் தன்மையை விளக்குவது. இதுவே **எல்லா நாட்டிலும் எல்லா அரசர்க்கும் எல்லாக் காலத்தும் குறிக்கோளாய் இருக்கத் தக்கது.**

அரசர் கடமைகள் முற்றும் இதில் அடங்குவனவாம். அரசாங்கம் முடியரசோ - குடியரசோ - பொதுவரசோ - இன்னும் புதிதாய்க் கிளம்பக்கூடிய எவ்வரசோ ஆயினும் அவையாவும் இதனையே குறிக்கோளாகக் கொள்ளக் கடவ என்பது அறிஞர் துணிபு.

அறங் காப்பான் அல்லனோ மாநிலங் காவலனவான் என்று கூட்டி முடிக்க. **காப்பவனே காவலன்** ஆகின்றான்; ஏனையோர் அரசராயினும் காவலர் ஆகார் என்பது கருத்து.

உயிர் காக்கும் காலை அதற்கு (அக்காவலுக்கு) இடையூறாய்த் தன்னால் - தன் பரிசனத்தால் - பகைத் திறத்தால் - கள்வரால் - உயிரால் - ஆன ஐந்து பயமும் தீர்த்துத் தான் காப்பான் அல்லனோ காவலனவான்? என்று கூட்டி முடிக்க.

அதனுக்கு - அக்காவலுக்கு - நிலத்துக்கு என்று கூறுவாருமுளர்.

இடையூறு - இடையிலே உற்றுச் செல்வதைத் தடுப்பது - என்பது பொருள். காவலாகிய அரச ஆணைக்கும், காக்கப்படும் உயிர்களுக்கும், இடையிலே உற்று அக்காவலாணை தொடர்ந்து செல்லாமல் தடுப்பது.

தன்னால் - மற்ற நான்கு வகைகளாலும் வரும் இடையூற்றை அரசன் தான் தீர்ப்பன். தன்னால் வரும் இடையூற்றைத் தீர்ப்பார் பிறரின்மையின் முதலிலே வாராமற் காக்கப்படுவது தன்னால் நேரக்கூடிய இடையூறேயாகும் - என்ற முதன்மைபற்றித் **தன்னால்** என்று முதலில் வைத்துக் கூறினார். தன்னால் வருவன - இறைப்பொருளை மிகுதி கொள்ளுதல் - அதனை வலிந்து கொள்ளுதல் - கொடுக்க வகையிலாரிடம் கொள்ளுதல் - அல்லவை நீக்கா தொழுகுதல் - காட்சிக்கரியனுதல் - கடுஞ் சொல்லனுதல் - இடிக்கும் துணையாயினார் சொற்களைக் கேட்கப் பொறுக்கும் பண்பிலனுதல் - முதலியன.

"இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருள்
நின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்து மலன்"

"ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றேரான் துணையாத் தெரிதந்தும்—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று"

முதலிய நீதிநெறிவிளக்கச் செய்யுட்களைக் காண்க.

தன் பரிசனத்தால் வருவன - அரசனிடம் அதிகாரம் பெற்றேம் - அரசனது வலிய சார்பு பெற்றேம் - என்ற இறுமாப்பினுல் வரும். இவராலாவன - நியதி மீறிய எவ்வகையான மிகைச் செயல்களுமாம்.

ஊன்மிகு பகைத்திறத்தால் - எவ்வழியிலும் அரச ஆணையின் மிகுந்து மீளும் வலிமை பெற்றபோதே பகைவர் இடையூறு விளைப்பர்; ஆதலின் **திறம்** என்றூர். உட்பகையும் சேர்த்துப் பகைத்திறம் என்றுருமாம்; பகைத்திறத்தாலான பயம் - பசுக் கவர்தல் - கொள்ளையிடல் - மாதர் கற்பழித்தல் முதலியன.

கள்வராலாவன - வழிப்பறி முதலியன. **உயிராலாவன** - புலி - யானை முதலிய வற்றுல் விளைவன. இங்கு மகனுலான பயம் - பரிசனப்பயம் என்ற பகுப்பில் அடங்கும்.

பயந் தீர்த்துக் காத்தலே காவலன் கடமை என்பதை "இத்தனை காலமு நினது சிலைக்கீழ்த் தங்கி **இனிதுண்டு தீங்கின்றி** இருந்தோம்" (கண் - புரா.) காண்க. இந்நாள் ஆங்கிலேய அரசாட்சியிலே நமது நாட்டுக் குற்றத்தீர்வு நீதிச் சட்டமும், குடிகளின் உயிருடம்புகளையும், உடைமைகளையும், காவல் புரிதலையே குறிக்கோளாகக் கொண்டு, உடம்பைப் பொறுத்த குற்றங்கள் - உடைமையைப் பொறுத்த குற்றங்கள் - என்று (Offences against person & offences against property) இரு பெரும் பிரிவுக ளாக வகுத்ததும், அக்குற்றம் செய்தார்க்குத் தண்டம் விதித்ததும், குற்றங்கள் நிகழாமல் குடிகாவல் விதித்ததும், இங்கு வைத்து ஒப்பு நோக்கிக் காணத்தக்கன.

ஆனபயம் - மேற்சொன்னபடி உண்டான பயம். **பயம் ஐந்தும்** - ஐந்து பயமும்.

அறம் காப்போன் - அரசியல் ஆணை இடையருது செல்லவேண்டியதாகிய அற நெறிக்கு இடையூறு வாராமற் காவல் புரிபவன்.

அல்லனே ஆவான் - எனும் வினு அவனேயாவன் என்ற உடன்பாட்டுத் தேற் றப் பொருளில் வந்தது. பிறர் ஆகார் என்று பிரிநிலைக் குறிப்பும் பெற்றும். இப்பாட்டி னுல் நிலங்காவலின் தன்மை கூறியவாறு. 36

122. **(வி - ரை) பாதகம்** - பெரும்பாவம். "நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே" என்ற திருவாக்கும் காண்க.

பாதகங்கள் ஐந்து என்பர். ஆயினும் இங்கு இது அவற்றுள்ளே மிக்கதாகிய கொலை என்ற பொருளில் வந்தது.

இறும் தவம் செய - பெரும் கழுவாய்களாகத் தரும நூல்களில் விதித்த முறை களைச் செய்ய - அதாவது பெரும் பிராயச்சித்தங்களைச் செய்ய.

தவம் - பாதகம் போக்கும் தீர்வாகத் தபிக்கச் செய்வதே இங்குத் **தவம்** எனப் பட்டது. சாந்தராயணம் முதலிய விரதாதிகளும் பிறவுமாம். இம்முறை கிறித்துவர் முதலிய புறச்சமயிகளிடத்தும் வழங்குகின்றது.

இசைந்தேன் - ஒப்புக்கொண்டேனுகி. **அன்னியன்** - என்மகன் அல்லாத பிறன்.

கொன்றல் - கொல்வேனுனல். அன்னியன் ஓர் உயிரைக் கொலை செய்தால் அதற்குத் தீர்வாக அவனைக் கொலை செய்வேனேயாகில்.

தொன்மனு நூல்தொடை - என் குலமுதல்வனுகிய மனுவினுல் தொகுக்கப்பட் டுப் பழங்காலம் முதல் வழங்கிவரும் விதி.

மனுவால் - அவர் வழியிலே வந்த அந்தப் பெயர் கொண்ட என்னுல். தனது இழிவுகுறிக்க அடைமொழிகொடாது **மனு** என்றூர். **துடைப்புண்டது** - அழிக்கப் பட்டது.

வார்த்தை - பழிச்சொல். அதாவது "தொன்மனு தொடுத்தார். பின்மனு துடைத் தார்" என்ற பழிச்சொல். **தொடை** - என்பதனை **மனு** என்பதற்கு அடைமொழியாக்கி, மாலையணிந்த மனு - என்று கூறுவாருமுளர்.

மன்னுலகில் பேற - தான் மனுத்தொடையைத் துடைப்பினும் உலகம் பின்னும் நிலைத்து நிற்பதாதலின் **மன்னுலகு** என்றார். அவ்வார்த்தையும் உலகில் நிலைத்து நிற்கும். **பேற** என்றது நீதி துடைப்பினும் வார்த்தை நிலைக்கும் என்றபடி.

மந்திரிகள் - அண்மை விளி. மந்திரிகளே ! மண்ணுலகில் - வார்த்தை - (யான்) பெற - வழக்கு மொழிந்தீர் என்க.

பெற மொழிந்தீர் - இது மந்திரிகள் வழக்கு - (வழக்கம்) என்று பொருள் கூறுவாருமுளர். இப்பாட்டு முதலிரண்டு அடிகளிலும் - வார்த்தை பெறுதற்குக் காரணங் கூறியவாறு - உமது மொழிகேட்டு அவ்வாறு செய்வேனுனல் - என்க.

மகனும் அன்னியனும் செய்யும் பாதகங்கள் ஒரே தன்மை உடையன ஆயினும் அவற்றிற்குத் தீர்வு மட்டும், செய்தவனைப் பொறுத்து, வெவ்வேறு தன்மையுடையன வானல் அது மனுநூலுக்கு மாறுபாடு என்பதாம். இதனல் இங்குக் குறித்த மனு நூலிலே, குற்றம் செய்தவன் யாவனேயாயினும் செய்த குற்றத்துக் கேற்ற தண்டனை எல்லார்க்கும் ஒருபடித்தாகவே விதித்துள்ளது என்பது விளங்கும். எனவே, இந்நாளிலே காணும் அப்பெயர்கொண்ட நூலின் இயல்பும், அதன்மேல் ஏற்றும் பழியும் நமது மனு வேந்தன் குறிக்கோளாகக் கொண்டு பின்பற்றி ஒழுகிய தமிழரின் நீதியாகிய தொன் மனு நூலுக்குப் பொருந்தாமை அறிக.

இசைந்தே - யன்னியன் - என்பதும் பாடம். 37

123. என்றரச னிகழ்ந்துரைப்ப வெதிர்நின்ற மதியமைச்சர்
நின்றநெறி யுலகின்க ணிதுபோன்முன் னிகழ்ந்ததாற்
பொன்றுவித்தன் மரபன்று மறைமொழிந்த வறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றே தொன்னிலங்கா வலவென்றார். ஙஅ

மறுத்துரைத்த அரசனுக்கு அமைச்சர் சொல்லியது

(இ - ள்) என்று அரசன்...அமைச்சர்-இவ்வாறு அரசன் அமைச்சர்களை நோக்கி அவர் கூற்றுக்களை இகழ்ந்து மறுத்துச் சொல்ல, அதுகேட்டு எதிரே நின்ற மதிகூறும் மந்திரிகள் ; " நின்றநெறி...காவல " என்றார் - " பழமையாய் உலகம் காவல் பூண்ட அரசே ! யாங்கள் சொல்லிய வழியிலே நின்ற நீதிநெறி இவ்வுலகியல் வழக்கிலே இதுபோல் முன் நடந்திருக்கிறது. ஆதலின் இதற்காக அரச குமாரனைக் கொல்வித்தல் மரபல்ல. வேதத்தில் விதித்தபடி அறம் செய்வித்தல் - அதாவது கழுவாய் வகுத்தல் - முற்காலந்தொட்டு வழங்கிவரும் நெறியல்லவா ?" என்று வணங்கிக் கூறினர்.

(வி - ரை) **இகழ்ந்து உரைப்ப** - மேற்பாட்டிற் கூறியபடி இகழ்ச்சியுரை செய்ய.

மதி யமைச்சர் - மதிகூறுங் கடமைப் பாடுடைய அமைச்சர்கள். மதியுடையவர்கள் என்றுமாம். தாங்கள் சொல்லியது இகழக் கூடியது அன்று எனவும், முன்னிகழ்ச்சியும், விதியும், வழக்கமும், ஆகிய ஆதரவுகள் கொண்டே கூறப்பெற்றது எனவும், அமைச்சர் குறித்தனர் என்க. அறியாது சொன்னோம் அல்லோம் என்றபடி.

காவல - 36-வது பாட்டில் மந்திரிகளை நோக்கிக் காவலன் ஆவான் இவன் - என்ற இலக்கணத்தை அரசன் குறித்தானுதலின் - மந்திரிகளும் அப்பெயராலே அவனை விளித்தது அவ்விலக்கணத்தை அறிந்தே விதிநெறி சொல்கின்றேம் என்பார் போல.

அறம் புரிதல் - மொழிந்த அறத்தின் வழி நிறுத்துதல்.

தொன்று தொடுநெறி - பழங்காலம் முதல் வழங்கிக்கொண்டு வந்த நெறி.

பின்வரும் பாட்டின் **தொழுது** என்பதனல், வணங்கி என - இங்கு வருவித்துரைக்கப் பட்டது. 38

124. அவ்வண்ணந் தொழுதுரைத்த வமைச்சர்களை முகநோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேந்தன்
இவ்வண்ணம் பழுதுரைத்தீ ரென்றெரியி னிடைத்தோய்ந்த
செவ்வண்ணக் கமலம்போன் முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான்.

(இ - ள்) அவ்வண்ணம்...நோக்கி - அவ்வாறு வணங்கிச் சொல்லிய அமைச்சர்களைப் பார்த்து; மெய்வண்ணம்...என்று - உண்மையின் தன்மையை உள்ளபடி உணர்ந்த மனு என்கின்ற வலிய வேந்தன் "இவ்வாறு பழுதுரைத்தீர்களே!" என்று சொல்லி; எரியினிடை...உரைப்பான் - தீயிற் றோய்ந்த செந்தாமரைபோலச் சினத்தினால் முகம் சிவந்து பின்னும் சொல்வானாயினன்.

(வி - ரை) மெய்வண்ணம் தெரிந்து உணர்ந்த - மெய் (உண்மை) என்ற பொருளின் தன்மையைக் கல்வி கேள்வி மூலம் தெரிந்து அதனை உணர்ச்சியிலே கைவரப் பெற்ற. தெரிதல் - அறிதல். உணர்தல் - சிந்தித்து உட்கரணங்களின் அனுபவத்தில் வரும்படி கொள்ளுதல்.

மெய்வண்ணம் - வேதத்தில் விதித்த "சத்யம் வத" என்னும் விதி. முன் 22-ம் பாட்டு "உண்மைப் பான்மை" என்ற இடத்து உரை காண்க.

விறல் - மனவலிமை. தேகபலம் - சேனைப்பலம் அல்ல. தனக்குத் துன்பந் தருவதாயினும் உண்மையிலே நிற்கும் வல்லமையைக் குறித்தது. இது உடற்றுன்பத்தை வெல்லும் மனத்தின் சத்தி.

மனு என்னும் விறல் வேந்தன் - உண்மையிலே நிலைத்து நின்ற தொன்மனுவே இவன் என்று சொல்லத்தக்க விறல் பொருந்திய மனுவேந்தன். என்னும் - என்று சொல்லத்தக்க.

இவ்வண்ணம் பழுதுரைத்தீர் - இவ்வண்ணம் - மேற்பாட்டில் அமைச்சர்கள் "தொன்றுதொடுநெறி" என்று கூறியதனை. பழுதுரைத்தீர்-அது பழுதாகும் வகையை வரும் 40, 41, 42 ஆகிய மூன்று திருப்பாட்டுக்களாலும் குறிக்கின்றார்.

எரியினிடைத் தோய்ந்த செவ்வண்ணக் கமலம் - முன்னமே செந்தாமரை போன்ற அழகு பொருந்திய முகம் இப்போது சினத்தால் மேலும் சிவந்தது என்க. எரி - சினத்திற்கு உவமானம். சினத்தால் முகமும் கண்ணும் சிவத்தல் அதன் இயல்பாகிய மெய்ப்பாடு. உவகையிலும் வெகுளியிலும் ஒன்றுபோலவே முகம் மலர்ந்திருத்தல் உத்தம அரச இலக்கணமாதலின், இங்கு அரசர் எரிதோய்ந்த கமலம்போல் முகம் புலர்ந்து செயிர்த்தல் தகுமோ? எனின், இது தன்பொருட்டன்றி உலக காவலின் பொருட்டு அறச்சார்பிலே நிகழ்ந்ததாதலின் தவறாகாது என்க.

"மெய்த்தி ருப்பத மேவென்ற போதிலும்
அத்தி ருத்துறந் தேகென்ற போதிலும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும்..." எனவும்,

"ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா"

எனவும் வரும் இராமாயணக் கருத்துக்களை இங்கு வைத்து ஒப்புநோக்குக.

திறல்வேந்தன் - என்பதும் பாடம்.

125. அவ்வுரையில் வருநெறிக ளவைநிற்க; வறநெறியின்
செவ்வியவுண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்;

எவ்வுலகி லெப்பெற்ற மிப்பெற்றித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி யெறிந்துவிழுந் ததுவிளம்பீர். ௪௦

126. போற்றிசைத்துப் புரந்தரன்மா லயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை யுயிர்கொன்றா னாதலினால் துணிபொருடா
னாற்றவுமற் றவற்கொல்லு மதுவேயா மெனநினைமின். ௪௧

127. எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயலிவ்வான்
மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
தனதுறுபே ரிடர்யானுந் தாங்குவதே கருமமெனை
அனகனரும் பொருடுணிந்தா னமைச்சருமஞ் சினரகன்றார். ௪௨

அரசன் அமைச்சரை நோக்கிச் செயிர்த்துரைத்துத் தனது தீர்மானத்தைக் கூறுதல்

125. (இ - ள்) அவ்வுரையில்...உரைக்கின்றீர் - அமைச்சர்களே! நீங்கள் சொல்லிய அவ்வுரைகளின்படி வரும் விதிகள் ஒருபுறம் நிற்க. தரும வழியின் சிறந்த உண்மைத் தன்மையை மனத்துட் கொள்ளாது நீங்கள் இவ்வாறு மொழிகின்றீர்கள் (அவ்வுண்மைத்தன்மைதான் யாது? என்பீரேல்); எவ்வுலகில்...விளம்பீர் - எந்த உலகத்தில் எந்தப் பசு இத்தகைய துன்பத்தாலே பெருமூச்செறிந்து கதறி வந்து அரசவாயிலின் ஆராய்ச்சிமணியை அசைத்து வீழ்ந்து பதறிற்று? இதனை ஆய்ந்து சொல்லுங்கள். ௪௦

126. (இ - ள்) போற்றி இசைத்து...திருவாரூர் - முன்னே இந்திரன், பிரமன், விட்டுணு முதலிய தேவர்கள் வணங்கும்படி எழுந்தருளியிருந்த வீதிவிடங்கப் பெருமான், அதற்குமுன் மேவியும், இப்பொழுது உறைந்தும், எழுந்தருளியிருக்கும் தலமாகிய திருவாரூரிலே; தோற்றமுடை...நினைமின் - பிறந்த உயிரைக் கொன்றவன் இம்மைந்தன் ஆதலின் அவனைக் கொல்வதே துணியப்படுபொருள் என்று நினைமின். ௪௧

127. (இ - ள்) என மொழிந்து - என்று மேலே சொல்லியவாறு சொல்லிப் பின்னர்; மற்றிதனுக்கு...கருமமென - "இனி இதற்குச் செயக்கடவ செயலாவது இதுவே யாம். இந்தப் பசு மனம் அழிகின்ற துன்பத்தை நீக்க மாட்டாதவனாயினேன். ஆதலின் இது அடைந்த பெருந் துன்பத்தை நானும் தாங்குவதே செய்பொருளாம்" என்று சொல்லி; அனகன்...அகன்றார் - அரசன் செய்தற்கரிய செயலைத் துணிந்து கொண்டான். அதுகண்டு அமைச்சரும் அஞ்சினராகி ஒதுங்கினர். ௪௨

125. (வி - ரை) அவ் உரையில் வருநெறிகள் - முன்னே "மறை அந்தணர்கள் விதித்த முறை" என்றும், "மறை மொழிந்த அறம்" என்றும், மந்திரிகள் குறித்துச் சொல்லிய உரைகளை. அவை நிற்க - அவை ஒருபுறம் ஒதுங்கி நிற்க. இது இகழ்ச்சி குறித்தது. அவை கிடக்கட்டும் - என்று ஒதுக்கியவாறு. என்னிடம் செல்லாது உங்களுடனே நிற்கட்டும் - என்பதும் குறிப்பு.

செவ்விய உண்மைத் திறம் - வெளித் தோற்றத்தாலல்லாமல் உள்ளது உள்ளபடி நிற்கின்ற தன்மை. **நிற்க** என் றொதுக்கியதற்குக் காரணம் இங்குக் கூறினார்; வெளிக் காட்சி ஒன்று, உண்மை மற்றொன்றாகலின். முன்னர் "உண்மைப் பான்மை"(22) "மெய்வண்ணம்" (39) என்றதும் இது. தக்கன் யாகமும் சண்டீசர் சிவபூசையும் போலக் கண்டுகொள்க.

எப்பெற்றம்...மணி எறிந்தது ? - அவ் வுண்மைத் திறத்தைக் கண்டறிந்த வகை.

விளம்பீர் - இல்லை என்று எனக்குத் தெரியும். உண்டானால் நீவிர் விளம்புங்கள் - என்றபடி. மனிதர்க்குரிய அறிவுவிளக்கம் இப்பசுவிற் காணப் பெற்றபடியால் இதன் கன்றைக் கொன்றது சிசுகத்தி எனும் மனிதக்கொலையே போல்வதாம் என்று குறித் தார். அறிவுவிளக்கமே உயர்திணை அஃறிணை என்ற பகுப்புக்குக் காரணம். இங்கு அறிவு விளக்கத்தினாலே அஃறிணையாகிய பசுவும் உயர்திணையின் இடத்தைப் பெற்ற தாம். இது போலவே மாற்றிப் பார்க்கும்போது அறிவுவிளக்கம் இல்லாதவழி உயர் திணையும் அஃறிணையாம். உயிர்ப்பேதம், மரபுப்பேதம் பற்றிச் சீர்திருத்தம் பேசுவோர் இக்கருத்தை ஊன்றி உன்னுவார்களாக. இங்கு அறிவு விளக்கமாவது தனக்கு நேர்ந்த துன்பத்தை வெவ்வுயிர்த்தல் - கதறுதல் முதலிய புறச்செய்கைகளினால் அறியச் செய்வதும், மணி எறிதலால் அதற்குப் பரிகாரம் தேடுதலும் ஆம்.

எறிந்து - அடித்து. அநீதியைக் காட்ட ஓசைபட வேண்டியமணி, அநீதி நிகழ்ந் தும் ஓசை செய்யாமல் இருந்தமையால் தண்டித்து எறியத்தக்கது - என்ற குறிப்பும் தோன்ற, அசைத்து என்னாது **எறிந்து** என்றார். முன் 27-ம் பாட்டிலும் "கோட்டி னாற் புடைத்தது" என்றமையும் காண்க. செயத்தக்கதைச் செய்யாது தூங்குபவரைத் தண்டத்தாற் றட்டி எழுப்புதல்போல, மணியைப் புடைத்தது - என்ற குறிப்பும் "தூங் கிய மணியை" என்றதனாற் பெற்றாம். தண்டினாலே நாதம் கிளம்பும் என்பது சாத்திரம்.

"ஆசான் முன்னே துயில்மா ணவகரைத்
தேசாய தண்டாலே எழுப்பும் செயல்போல்
நேசாய வீசனு நீடா ணவத்தரை
ஏசாத மாயாடன் னாலே யெழுப்புமே.

—திருமூலர் திருமந்திரம் - 8-ம் தந்திரம் - 3 - அவத்தைபேதம் - கீழாலவத்தை - 22

126. (வி - ரை) புரந்தரன் மால் அயன் முதலோர் போற்றிசைத்துப் புகழ்ந் திறைஞ்ச எனக் கூட்டுக. **போற்றிசைத்தல்** - துதித்தல். **புரந்தரன்** - இந்திரன்.

வீற்றிருந்த பெருமான் - தேவர்கள் துதிக்கத் தேவலோகத்தில் இருந்த செய்தியைக் குறிக்கும். முன்னே அங்கிருந்தமையால் இருந்த என்று இறந்தகாலத்தாற் கூறினார். இப் போது திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்றார் என்று குறிக்கப், பின்னர், **உறை திரு வாரூர்** என நிகழ்காலத்தாற் குறிப்பதும் காண்க.

உறை திருவாரூர் - நிலைத்து எழுந்தருளியிருக்கும் இடமாகிய திருவாரூர். தேவ லோகத்திற்குச் செல்லு முன்னும் இங்கு எழுந்தருளியிருந்தாராகலின் **மேவி** என்ப தற்கு - முன் மேவிய - எனப் பொருள்கொள்ளப்பட்டது.

உறை என்ற வினை யெச்சம் மூன்று காலத்துக்கும் பொருந்தும். எனவே, இதற்கு முன்னும் இப்போதும் போல, முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பூசை யுகந்து இனியும் நிலையாக, நிலைத்து இங்கே எழுந்தருளி யிருப்பர் என்பதும் பெறுகின்றாம்.

திருவாரூர்த் தோற்றமுடை உயிர் - முத்திபெறும் நிச்சயமுள்ள பக்குவமடைந்த ஆன்மாக்கள்தான் திருவாரூரிலே பிறக்கும். ஆரூர்ப் பிறக்க முத்தி, தில்லை காண முத்தி, காசியில் இறக்க முத்தி என்பது வரலாறு. திருவாரூரிற் பிறத்தலாலே அவ் வான்மா முத்தியடைதல் நிச்சயம். ஆதலின் அவ்வாறு பிறந்த ஓர் உயிரைக் கொல்லு தல் முத்தனாகும் ஒருவனைக் கொலைசெய்ததாகும். எல்லாக் கொலையும் பெரும் பாவமே என்றாலும், ஆரூர்ப் பிறந்த உயிர்க் கொலை, மிகப் பெரும் பாவம் என்பது கருத்து. "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" எனும் திருவாக்குக் காண்க. இக்கருத்தையே பின்னர்த் "தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவ முடையார்" என்பதும் காண்க. ஆரூர்ப் பிறந்த உயிர்கள் முத்த ஆன்மாக்களாய் நம்மை ஆளாக் கொண்டு உய்யு நெறியிற் செலுத்தும் ஆற்றலுடைய ஆசாரியத்தன்மை

பூண்டிருத்தலால் அவற்றைக் கொல்லுதல் ஆசாரியக்கொலையுமாம். இவ்வாறாகவும் திருவாரூரிலே யிருந்தும் உண்ணுதற் பொருட்டுப் பசுக்களையும் ஏனைப் பிராணிகளையும் கொல்வாரும், கொன்றதைத் தின்பாரும் இக்கருத்துக்களை நோக்குவார்களாக.

ஆற்றவும் துணி பொருள் - இதுவே செய்யத்தக்கது. இதனின் வேறில்லை என்று உடன்பாடு, எதிர்மறை எனும் இருதலையும் துணியப்படும் பொருள்.

மற்று அவர்க்கொல்லுமதுவே - மற்ற அவன் - மற்றவன். மற்ற அவனைக் கொல்வதாகிய அதுவே. **மற்ற அவனை** - என்றது ஆரூரின் உயிர் கொன்றானை **மற்றவன்** என்று ஒதுக்கும் தகுதி நோக்கி. மற்று அவனை என்று உரைத்தலும் ஆம்.

நினைமின் - பன்மை ஏவல் வினைமுற்று. மந்திரிகள் அனைவரையும் நோக்கி ; முன் பாட்டிலே இப்பசு அறிவும் பக்குவமும் முதிர்ந்தது என்று சொல்லி, இப்பாட்டிலே, அஃது எவ்வாறாயினும் திருவாரூர்ப் பிறக்கும் தவமுடையது என்று முடித்துக் காட்டி, **ஆதலினால்,** என, அதுகாரணங் கொண்டு துணிபொருளாய்த் தான்தீர்மானித்ததை, முடிந்த பொருளாக அரசன் உரைக்கின்றானாதலின், ஏவல் வினையாற் கூறினார்.

பழுதுரைத்தீர் - விளம்பீர் - நினைமின் என மந்திரிகளிடம் முடிபு கூறிவிட்டு அதன்படி அரசன் தான் செய்யத் துணிந்த பொருளை இப்பாட்டாற் குறிக்கின்றார். மேலே சொல்லின் துணிபும், இதிற் செயலின் துணிபும் பெற்றாம். 41

127. (வி - ரை) **என மொழிந்து** - மேலே மூன்று பாட்டாலும் கூறியபடி.

இதனுக்கு - நிகழ்ந்துவிட்ட இந்த அநீதிக்குப் பரிகாரமாக. **இதுவே செயல்** - முன் பாட்டிலே எதிர்காலத்திற் றுணியத்தக்க பொருளாய் அமைச்சரிடம் சேய்மைச் சுட்டிலே குறித்த **அதுவே** என்னும் பொருள், இங்கு நிகழ்காலத்துத் துணிகின்ற பொருளாய் அரசன் மனத்து நிகழ்ந்துவிட்டமையால் அண்மைச் சுட்டிலே **இதுவே** என்றாயிற்று.

செயல் - செய்தக்க பொருள். இதனை அல்விகுதி பெற்ற வியங்கோள் வினைமுற்றாகக் கொண்டு தன்னையே நோக்கி இதுவே செய்க எனப் பொருளுரைத்தலும் ஒன்று. வேண்டிக்கோடற் பொருளில் தன்மையிடத்திலும் சிறுபான்மை வியங்கோள் வருமென்பர். "மகனெனல், மக்கட் பதடியெனல்" என்ற திருக்குறள் காண்க.

தாங்குவதே கருமம் - இதனால் அதன் இயல்பும் காரணமும் கூறியவாறு. **தாங்குவதே கருமம்** - ஆதலின், இதனுக்கு இதுவே செயல் எனத் துணிதல்.

மனமழியுந்துயர் - மனம் அழிதற்குக் காரணமாகிய துயர். மனம் அழிவிக்கும் துயர் எனப் பிறவினைப் பொருளில் வந்தது.

இதுதனது - இதனுடைய. **உறுபேரிடர்** - பொருந்தாதாயினும் வந்து உற்றதாகிய பெரிய இடர். உறு இடர் என்றும், பேர் இடர் என்றுந் தனித்தனிக் கூட்டுக.

தாங்குவதே - இடர் பெரிதாயினும் தாங்குவதே என்றபடி.

யானும் - பசு தாங்குவதோடு நானும் என்பது பொருள். எச்ச உம்மை. துயர் அகற்ற மாட்டாத நான், அத்துயரை யானுந் தாங்கிப் பங்கிட்டுக் கொண்டு அதன் துன்பத்தைக் குறைப்பேன் என்று துணிந்தார். தானுந் தாங்குதலினால் துன்பம் குறைவது எவ்வாறு எனின் ? தாம் அனுபவிக்கும் மகிழ்ச்சி பிறர் தம்மோடு அனுபவித்துக் கூறு கொள்ளும்போது இன்பம் மிகுதலும், துயரானது அவ்வாறன்றிப் பிறர் தம்மோடு அனுபவித்துக் கூறுகொள்ளும்போது துன்பங் குறைதலும் இயல்பாம். இஃது அவ்வின்ப துன்பங்களுக்குள்ள இயல்பு. ஆதலின் இப்பசுவின் உறுபேரிடரை அகற்ற இயலாதவழி அத்துயரை நானும் தாங்கி நின்று அதனோடு அனுபவித்துக் கூறு கொண்டு குறைப்பேன் - என்பது அரசன் கருமமெனக் கொண்ட குறிப்பு.

அனகன் - மாசற்றவன் - பாவமில்லாதவன். அனகம் - பாவமின்மை. ந + அகம் = அநகம் ; அநகத்தை உடையவன் அனகன். "அனகனே குமர விநாயக சனக" திருவிசைப்பா.

அவற் கொல்லும் அதுவே செயல் என்று அரசனும் கொலை துணிந்தானாதலின் இச்செயலும் மகன்செயல் போன்று பாவச்செயல் தானே என்று ஐயுறுவார்க்கு இது அவ்வாறு ஆகாது என்க. மகனைப் பாவச் செய்கையின் பொருட்டுத் தண்டித்து அவன் உயிர் நரகத்துட் புகாது அரச தண்டனையின் வழி அதற்கு நற்கதி அளித்தலாலும், பசுவின் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் ஓர் உயிரினது துன்பத்தைக் குறைத்தலாலும், இது அதற்கு மாறாகப் புண்ணியமேயாம் என்க.

இதுபற்றியே இங்கு அரசனை **அனகன்** என்ற பெயராற் கூறினார். குற்றஞ் செய்தார் அரசனாற் றண்டிக்கப்படின் அவர்கள் செய்த பாவத்திற்குரிய நரக தண்டனையிலிருந்து விடுபடுகிறார் என்பது சாத்திரம். **அனகன்** - பேறறிவாளன் என்றுமாம். 42

128. மன்னவன்றன் மைந்தனையங் கழைத்தொருமந் திரிதன்னை
முன்னிவனை யவ்வீதி முரண்டேர்க்கா லூர்கவென
அன்னவனு மதுசெய்யா தகன்றுதன்னா ருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறுகணைந்தான். சங

(**இ - ள்**) மன்னவன்...என - (இவ்வாறு செய்கை துணிந்த அரசன்) தன் மகனை அழைத்துவரச் செய்து ஒரு மந்திரியை நோக்கி "இவனை அந்த வீதியிலே தேர்க்காலின்கீழ்க் கிடத்தித் தேரை இவன்மீதில் ஊர்ந்து விடுக" என்று கட்டளையிட; அன்னவனும்...துறப்ப - அவ்வமைச்சனும் அது செய்யாது போய்த் தன் அரிய உயிர் துறந்தானாக; தன்னுடைய...அணைந்தான்—(அதனையறிந்த அரசன்) தனது குலமகனை (முறை செய்தற்காகத்) தானே கொண்டு அவ்வீதியில் சென்று சேர்ந்தான்.

(**வி - ரை**) **ஒரு மந்திரி** - 'முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சன்' என்று 30-வது பாட்டிற் குறித்த அமைச்சனாவான். அவனது ஒப்பற்ற தன்மை தெரிவிக்க "ஒரு மந்திரி" என்றார். அவனது ஒப்பற்ற தன்மை முன்னே 31-வது பாட்டிலே அவனது சொல்லாலும், இங்கே அவனது செயலாலும் துணியப்படும்.

முன் இவனை - **முன்** - வேறொன்றும் செய்வதற்கு முன். இந்நிகழ்ச்சிக்கு முன்னாய் - காரணனாய் - நின்ற இவனை என்று உரைப்பதும் ஒன்று. முன்னே நிற்கின்ற இவனை என்பதுமாம். **இவன்** - மகனை அழைத்துவந்து தன் முன்னர் வைத்துள்ளானாதலின் **இவன்** என்று அண்மைச் சுட்டினாற் காட்டினான்.

இந்நாள் நீதி முறையிலும் குற்றம் செய்தாரை முன்னர்க் கொணர்ந்து வைத்துக் கொண்டு முறைத் தீர்ப்புச் செய்யும் வழக்கும், அதன் உள்ளுறையும் காண்க.

அவ்வீதி - பசுக்கன்று தேர்க்காலில் ஊரப்பெற்று இறத்தற்கிடமாகிய **அந்த வீதி**. அரசன் தீர்ப்புச் சொல்லிய இடம் அரண்மனை வாயில் ஆதலாலும், கன்று தேர்க்காலில் செலுத்தப்பட்டது அரசர் உலாவும் தெருவாதலாலும், இடவேறுபாடு நோக்கி **அவ்வீதி** எனச் சேய்மைச் சுட்டினாற் கூறினார். கொலை முதலிய பெருங்குற்றம் செய்தாரைப் பிறர்க்கு எடுத்துக்காட்டாக (உதாரணமாக) இருக்கும்பொருட்டு அக்குற்றம் நிகழ்ந்த அந்த இடத்தில் முறை செய்தல் அந்நாள் நீதி வழக்கு. இதனையே சில ஆண்டுகளுக்கு முன்வரை ஆங்கில ஆட்சியினரும் பின்பற்றிக் கொலை, தூக்கு, கசையடித்தல் முதலிய தண்டங்களை வெளிப்படையாகப் பறைசாற்றித் தெருச்சதுக்கங்களில் வைத்து குற்றவாளிகளை முறைசெய்து வந்தனர்.

முரண் தேர்க்கால் ஊர்க - முன்செய்த பாவத்திற்கு முரணாகத் தேர்க்காலின் கீழ்க் கிடத்தி அவன்மேல் தேரை ஊர்ந்துவிடுக. கொலை, முறைசெய்யும் வழி பல இருப்பினும் "செய்தார்க்குச் செய்தபடி தண்டம் விதித்தல்" எனும் தண்டநூல் விதிப்படி கன்று தேர்க்காலில் ஊரப்பட்டபடியே இவனையும் தேர்க்கா லூர்க என்று முறை செய்தானாகும். இறைவன் முறை செய்வதும் இவ்வாறே என்பது சாத்திரம்.

அது செய்யாது தன் உயிர் துறப்ப - இக்குற்றத்திற்குத் தீர்வு அறநூற்படி மகனை நிறுத்துவித்தலே யாம் என்று தாம் அறிந்தவாறு சொல்லிய அமைச்சர்களிலே தலைவனான இவ்வமைச்சனுக்குத் தன் மனதின் உண்மைக்கு மாறுபாடான இச்செயல் செய்ய மனம் ஒருப்படவில்லை. அன்றியும் உலகம் போற்றுங் குணத்தானாய் தவத்தாற் பிறந்த அரச குமாரனையும் தன் எசமானனையும் உள்ள அவனைத் தேர்க்காலில் ஊர்தலாகிய அரிய செய்கையில் அவன் மனம் துணியவில்லை. அரசன் ஆணைப்படி செய்யாமல் இருந்து அதன்பொருட்டு அரசன் தன்னை முறை செய்ய நின்று மானம் அழிதற்கும் ஒருப்படவில்லை. ஆதலின் மனம் துணியாத செய்கையைச் செய்வதைக் காட்டிலும் ("மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிது" என்றபடி) உயிர் துறத்தலே மேலென்று தன்னரிய உயிரையுந் தானே துறந்து கொண்டனனென்கும்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"—(**குறள்**) என்ற நீதியுங் காண்க.

தற்கொலை செய்துகொள்ளல் பெரும் பாவமேயாயினும் தன் உயிரினும் சிறந்ததாய்த் தான்கொண்ட கொள்கையும் மானமும் அழிவுபட வாராமற் காத்தற்கும், (அரசன் ஆணையின்படி இருந்தபோதிலும்) இது கொலையே யாதலின் அதன்பழி வாராமற் காத்தற்கும் உயிர் துறந்தனன். ஆதலின் இது பாவமாதல் இல்லை என்க. இது பின்னர் இவன் உயிர்மீட்சிக்கும் காரணமாதலும் காண்க. இச்செயல் பற்றியே இம்மந்திரியை,

"வேந்துமகத் தேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா—"

என்று மாதவச் சிவஞான சுவாமிகள் விதந்து எடுத்துக் காட்டியிருத்தலும் காண்க.

குலமகன் - குலத்தைத் தன்வழிவழி நீடிக்கச் செய்யவல்ல மகன்.

மகனை அழைத்த அரசன் அவனை விசாரியாமலே தண்டம் விதித்தல் தகுதியாமோ எனின், இந்நிகழ்ச்சி யாவும் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சன் கூறியவாற்றானும், பசு இடரால் வெவ்வுயிர்த்து - கதறி - மணியை யெறிந்து - விழுந்ததனை நேரே கண்டதனாலும் உண்மை தெரிந்து கொண்டான்; ஆதலின் வேறு விசாரணை வேண்டப்பெறவில்லை என்க.

கோண்டு - தண்டம் செய்தற்காக. **மறுகு** - வீதி. 43

129. ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான். சச

(இ - ள்) மனுவேந்தன் - (அவ்வாறு அவ்வீதி அணைந்தானாகிய) மனுவேந்தன்; ஒரு மைந்தன்...உணரான் - தனது குலத்தை வளர்த்து வழிவழிச் செலுத்தற்குரியவனாய்த் தனக்கு மகனாயுள்ளான் இவ்வொருவனே என்ற செய்தியையும் மனத்திலே உணராதவனாகி; தருமம்...கடனென்று - தருமந் - தன் வழியிலே செல்வதே கடமை என்ற ஒரே எண்ணத்தை யுடையவனாய்; தன் மைந்தன்...உற ஊர்ந்தான் - தன் மகனை அவ்வீதியிலே கிடத்தி அவனுடைய மார்பிலே தனது தேர்ச்சக்கரம் ஏறிச் செல்லும்படி தனது தேரை ஊர்ந்தனன்; அருமந்த...எளிதோதான் - உலகத்துக்கு அருமருந்து போன்ற அரசாட்சி செய்வதுதான் செய்தற்கு அரியதோ அல்லது எளியதோ என்பதனை ஒருங்கள்.

(வி - ரை) **ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பது** - இவன் தனக்கு ஒரே மகனாகவும் இவனைத் தேர்க்காலில் ஊர்ந்துவிடில் தனது குலம் வழிவழிச் செல்ல

வேறு மகனில்லாது தன்னோடு நின்றுவிடும் என்ற செய்தி. ஒரு மைந்தனே என்ற ஏகாரம் தொக்கது.

உணரான் - இச்செய்தி அரசன் மனத்தில் எழவேயில்லை. அவன் உணர்ச்சியிற் புகவில்லை என்பார் **உணரான்** என்றார்.

தருமம்தன் வழி செல்கை - அறநெறியிலே செல்லுதலே. **தன்** - அசை. இங்குத் **தருமம் - வழி** என்றது "அறநெறியின் செவ்விய உண்மைத்திறம்" என மேலே கூறிய இயல்பினை. **தன் வழி** என்பதைத் தனது வழியிலே என்று கொண்டு, இது செய்யாவிடின் தருமம் தன்னோடு வழியற்று நின்றுவிடும்; அவ்வாறு நின்றுவிடாது தனக்குப் பின்னும் நிலவுவதாய்த் தன்வழியாக நடந்து செல்லும்படிச் செலுத்துவதே என்றுரைத் தலுமாம். இப்பொருளில் **தன்** என்றது அரசனை. **செல்கை** - செல்லுதலே. ஏகாரம் தொக்குநின்று தேற்றப்பொருளையும் பிரிநிலைப்பொருளையும் தந்தது.

கடன் என்று - உணரானாகி, இக்குறித்த கடமையாகிய ஒன்றினையே செயல் என்று துணிந்து. "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்றவாறு துணிந்தனன். இறைவன் ஆணையிட்ட அறத்தின்வழி நிற்றல் தன்கடன் என்றும் துணிந்தான்.

மருமம் - மார்பு. தன் தேர்ஆழி மைந்தன் மருமம் உற - என மாற்றிக் கூட்டுக. தனது கொற்ற ஆழி அவன் தோளிலே ஏற்றிக் கூட்டுதலுக்கு மாறாகத் தேராழி மருமத்திலே ஊர்ந்தனன் என்று குறிப்பிப்பார் இங்ஙனம் மாற்றிக் காட்டினார் போலும்.

ஊர்ந்தான் மனு வேந்தன் - "வந்தான் கொற்றன்" என்பது போல முடிந்த செய்கையை முன்னர் அறிவித்தற்காகப் பயனிலையை முன்னர்க் கூறி எழுவாயை அடுத்து வைத்துக் காட்டினார். அரசன் துணிந்ததும், அணைந்ததும், ஊர்ந்ததும் ஒன்றன்பின் ஒன்றாய் அடுத்து விரைவில் தொடர்ந்து முடிவு பெற்றன என்பார், 42-வது பாட்டில் "துணிந்தான்" எனவும், 43-வது பாட்டில் "மறுகு அணைந்தான்" எனவும், இப்பாட்டில் "ஊர்ந்தான்" எனவும் தொடர்ந்து கூறினார். அன்றியும் வாக்கியத்தின் இலக்கணப்படி இங்கு எழுவாயாகிய மனுவேந்தனை வாக்கியத் தொடக்கத்தில் வைத்தால், அதற்குரிய பயனிலையாகிய வினைமுற்றுக்கும் அதற்கும் இடையுறுவன பலவாம். செய்வினையும் அரசனும் பிரிவுபெறாமல் ஒன்றாகவே நின்றார்கள் என்பார், **ஊர்ந்தான் - மனுவேந்தன்** - என வினையை முதலிற்கூறி அடுத்துச் செய்வோனைக் கூறினார்.

அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோ? தான் - இது இச்செயலிலிருந்து ஆசிரியர் கற்பிக்கும் கற்பனை. பிறர் எண்ணுவதுபோல எளியதன்று - மிகவும் அரியதேயாம் - என்பது கருத்து. **மற்று** - அறியாதார் நினைக்கிறபடி, என, வினைமாற்றுப் பொருளில் வந்தது. ஓகாரம், **எளிதோ** என்பதில் எதிர்மறையும், **அரிதோ** - என்பதில் உடன்பாடும் குறித்தது.

அருமந்த - அருமருந்தன்ன என்பதன் மரூஉ வழக்கு என்பர் இலக்கண நூலோர். அரிய மருந்துபோன்ற. அருமருந்து நோய்ப்பயம் தீர்த்து மேலும் வாராமற் காப்பது போல அரசாட்சியும் ஐந்து பயத்தையும் தீர்த்து அறத்தைப் பிறழாமற் காப்பதனால் **அருமருந்தன்ன** என்றார். இறைவனை "அடியார்தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை" "அருமந்த நன்மையெலா மடியார்க் கீவர்" என்று துதிக்கும் தேவாரங்களும் காண்க.

அரிச்சந்திரன் தன் மனைவியை மயானத்திலே முறைசெய்த சரிதமும், பொற்கைப் பாண்டியன் தனது கையையே வெட்டித் தன்னையே முறைசெய்த சரிதமும் இங்கு நினைவு கூரத்தக்கன. 44

130. தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான். சரு

(இ - ள்) தண் அளி...பொழிந்தார் - மிகுந்த கருணைபொருந்திய வெண்கொற் றக் குடையுடைய மனுஅரசனது செயற்கரிய செயலைக் கண்டு ஆற்றமாட்டாதவர்க ளாய் மண்ணுலகத்தவர்களாகிய மக்கள் கண்ணீரை மழையாகப் பொழிந்தார்கள் ; விண் ணுலகத்தவர்களாகிய தேவர்கள் புதிய கற்பகப்பூ மழை சொரிந்தார்கள் ; அண்ணல்... வீதிவிடங்கப் பெருமான் - மிகப் பெருமை யுடையானாகிய அவ்வரசன் கண் முன்னே காட்சி கொடுத்துத் தேவர்கள் தொழும்படியாக எழுந்தருளி நின்றார் வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகேசர்.

(வி - ரை) **தண்ணளி** - தடைபடாது எல்லா உயிர்களிடத்தும் செல்லும் குளிர்ந்த கருணை. "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றார் நாயனார். இங்கு அரசன் கருணை காரணமாக அது நிகழ்ந்ததால் " தண் அளி வேந்தன் " என்றார். என்னை ? இச்செயல் அரச குமாரனிடத்தும் கருணையால் நிகழ்ந்ததோ ? எனின், அதுவும் அவன்மேல் வைத்த, அவனுயிர்க்கு உறுதிதரும் அளியினாலேதான் என்பது மேற்பாட்டின் உரையில் காட்டப்பெற்றது. இது அரச தண்டனையினோடு அடியார் விதித்த தண்டனையுமாம். இவ்வரசன் பேரடியார் என்பது அவர் சிவாலயங்களுக்கு ஆகமவிதிவழி நிபந்தமாராய்ந்து, அவற்றின் வழியே தானும் பூசித்து வந்தமையாலும், தியாகேசன் எழுந்தருளிய திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன்றது பெரும்பாவம் என்று உணர்ந்தமையாலும் துணிக. இதனாலன்றோ இவர் சரிதம் அடியார் சரிதங் கூறும் இப்புராணத்தின் தலைப்பிலே கூறப்பெற்றது. இவர், இறைவனை நீதிவடி வுடையவராகக் கொண்டு அவனது நீதியினையே வணங்கி உறுதியை யடைந்தவர். இறைவனுக்குரிய திருவடிவங்களிலே மிகச்சிறந்தது நீதியின் வடிவமே என்பது,

> " இன்னவுரு இன்னநிற மென்றறிவ தேலரிது நீதி பலவும்
> தன்னதுரு வாமென மிகுத்ததவ நீதியொடு தானமர்விடம்......"
> —**திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் - சாதாரி - திருவைகா - 4**

என்பதனாற் காண்க. அடியார்கள் விதிக்கும் தண்டனையும் பெரும் பிராயச்சித்தமாகி உயிரைச் சுத்தமாக்குமென்பது சண்டேசுர நாயனார் விதித்த தண்டனையினால் அவர் பிதா எச்சதத்தன் கழுவாயில்லாத சிவாபராதமாகிய பெரும்பாதகத்தினின்றும் நீங் கிச் சிவலோக மடைந்ததனாற் காண்க.

> " ஞால மறியப் பிழைபுரிந்து நம்ப ரருளா னன்மறையின்
> சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தந் திருக்கையிற்
> கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கிச் சுற்றமுடன்
> மூல முதல்வர் சிவலோக மெய்தப் பெற்றான் முதுமறையோன் "
> —**சண்டேசர் புரா - 58**

இயற்பகை நாயனார் விதித்த தண்டனையினால் அவருடன் பொருத சுற்றத்தார் களும் நற்கதி யடைந்தார்கள் என்றும் காண்கிறோம். " ஏனைய சுற்றத்தாரும் வானிடை யின்பம் பெற்றார் " - (இயற்பகை - புரா - 35). இப்பெருமை கருதியே இதற்கு முன்னும் இங்கும் **வேந்தன்** என்றவர், இப்பாட்டில் அரசனைப் பின்னரும் **"அண்ணல்"** என்று கூறுதல் காண்க.

வெண்குடை - இது அரச அடையாளங்களில் ஒன்று என்பதும், இதன் இயல்பும் முன்னரே குறிக்கப்பட்டன. இதன்கீழ் உலகம் துன்பத்தினின்றும் ஒதுங்கிக் குளிர்ந்து தங்கும் - என்பது வழக்கு. " அநபாயன் **பொற்குடை நிழற் குளிர்வது** " என்று முன் னர்க் கூறியது காண்க.

வெண்மை - குளிர்ச்சி செய்வது சந்திரன்; சந்திரன் நிறம் வெண்மை. ஆதலின் இதன் நிறம் வெண்மையாகக் கூறுதல் வழக்கு. " மதிக்குடை நிழற்ற " முதலிய

திருவாக்குக்களையுங் காண்க. அன்றியும் குடை செவ்வனே நிழல் செய்வதால் வரும் புகழின் அடையாளமுமாம். புகழின் நிறம் வெண்மை என்ப.

அண்ணல் - பெருமை உடையவன். இங்கு அவன் செய்த செயற்கருஞ் செய்கையின் பெருமை குறித்தது.

மழவிடை - **மழ** - என்றைக்கும் இளமையாய் இருப்பது. **விடை** - அறக்கடவுள் "தருமந் தன்வழிச் செல்கை கடனென்று" எனவும், "தனிப்பெருந் தருமந்தான் ஓர் தயாவின்றி" எனவும், "அறநெறியின் செவ்விய உண்மைத் திறம்" எனவும் இப் பகுதியில் விதந்து கூறிய அறமே அறக்கடவுளாகும். இங்கு நிகழ்ந்த செயல் அறத்தினது முறுகிய செயலாய் விளைந்ததாதலின் அறம் வெளிப்படத் தோற்றிற்று. அவ் வறத்தினுள்ளே தனது நீதியாகிய உருவத்துடன் இறைவனும் விளங்கினன்; ஆதலின் **மழவிடைமேல்** என்றார். அறக்கடவுள் தேய்வுறாமல் என்றும் நிலைத்திருத்தலினால் **மழவிடை** எனப் பெறும். கற்ப முடிவினும் தான் முடிவுறாது இறைவனைத் தாங்கி நிற்பது அறக் கடவுளாகிய **விடை** என்பர். சிவபெருமான் விடையின்மேல் வந்தார் என்பது தருமத்தாபனமாகிய காரியத்தில் வெளிப்படுகின்றவர் என்பது கருத்து. "எருதென்றது எருதையன்று ; தருமரூபமென்பது. தருமம் வெளுத்திருத்தலாலும், வஸ்துக்களில் வலிதாதலாலும் தருமத்தின் மேலல்லது ஈசுவரன் ஏறுவனென்று கொண்டான்" எனத் தக்கயாகப்பரணி 453-ம் தாழிசையின் உரைக்கீழ்க் கண்டவாறுமறிக. இனியும் வருமிடந்தோறும் இவ்வாறே காண்க.

விண்ணவர்கள் தொழ - முன்னர்த் தங்கள் தேவ உலகத்தில் வைத்துத் தரிசித்த மூர்த்தியைப் பலநாட் பிரிந்த பின்னர், இன்று, வீதியில் வெளிப்படக் கண்டாராதலின் **விண்ணவர்** மகிழ்ந்து முன்னர்த் தொழுதனர்.

வீதிவிடங்கப் பெருமான் - தியாகேசர். **விடங்கர்** - உளிபடாதவர். **டங்கம்** - உளி. உளியாற் செதுக்கப்படாமல் தானாய் உண்டானவர் - சுயம்பு மூர்த்தி என்றபடி. விடங்கராயும், உள்ளே திருமூலத்தானத்திலே எழுந்தருளியிருக்கும் புற்றிடங் கொண்டாருக்கு வேறாய், அவர் பிரதிநிதியாகி வீதியிலே எழுந்தருளுவர் ஆதலின் **வீதிவிடங்கர்** எனப்பெறுவர்.

தொழ நின்றான் வீதிவிடங்கப் பெருமான் - தொழ நிற்றலாகிய வினை (செயல்) யிலே என்றும் பிரியாது உடன் நிற்பர் ஆதலின் முன்னே நிற்கவேண்டிய எழுவாய் ஆகிய "**வீதிவிடங்கப் பெருமான்**" அச்செயலை அடுத்துப் பின்னே நின்றார். அருள் வினையின் விரைவு பற்றி இவ்வாறு பயனிலை முன்னர்க் கூறப்பட்டது என்பதுமாம். அரசன் தன் மகன் பேரில் மருமத்தில் தோராழி யுறவூர்ந்த செயலும், இறைவன் விடைமேல் நின்ற செயலும், ஒருங்கே நிகழ்ந்தன என்பார், "உறவூர்ந்தான்" என்றும் அதை யடுத்துத் "தொழ நின்றான்" என்றும் கூறினார். மேலே "உறவூர்ந்தான் மனுவேந்தன்" என்ற இடத்துக் கூறிய பொருள்கள் எல்லாம் "தொழ நின்றான் வீதி விடங்கப் பெருமான்" என்ற இவ்விடத்தும் பொருத்திக் கொள்க.

பூமழை சோரிந்தார்—என்பதும் பாடம். 45

131. சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான். சசு

சிவபெருமான் காட்ட அரசர் கண்ட காட்சியையும் பெற்ற அருளையும் விரிக்கின்றது

(இ - ள்) சடை...போற்றிசைப்ப - சடையின் ஒரு பக்கத்து இளம்பிறையும், தனித்து விழிக்கும் இயல்புடைய திருநெற்றியும், இடப்பாகத்திலே உமை

அம்மையாரும், எப்பக்கமும் சூழ்ந்த பெருமைப் பூதகணங்களும் ஆக இக்காட்சியை (இறைவன் காட்ட) அரசர் கண்டு துதித்து நிற்க; விடை...கொடுத்தான் - விடைப் பாகராய் எழுந்தருளிய வீதிவிடங்கப் பெருமான் வல்லமையுடைய அவ்வரசனுக்குத் தமது நிறைந்த அருளைக் கொடுத்தனர்.

(வி - ரை) **சடை** - சிவபெருமானுக்கே உரிய சிறப்பு அடையாளமாம். அதுபற்றிச் சைவத்திற்கே சிறப்பாயுள்ள அடையாளமுமாம். இதனாலே சடையான், கபர்த்தன் என்பன சிவபெருமானுக்குரிய சிறப்புப் பெயர்களாயின. புகழ்ச்சோழ நாயனார் தமது சேனைகள் கொணர்ந்த தலைக் குவியலிலே ஒரு தலையிற் புன்சடை கண்டு அத்தலையைப் பொற்றட்டிலே தாங்கித் தீப்புகுந்தது இக்கருத்தே பற்றியது. "சடையானுக் காளாய்", "சடையா யெனுமால்", "சடையானே தழலாடி" என்பனவாதி எண்ணிறந்த திரு வாக்குக்கள் காண்க. இனியும் வருமிடந்தோறும் இக்கருத்துக்களை நினைவு கூர்ந்து கொள்க. **சடை - விடை** என்பன இறைவன் இலக்கணத்தை விளக்குவன; சடைக்கு இறைவன் ஆதாரமாயும் விடைக்கு ஆதேயமாயும் விளங்குதலால் இவன் ஒருவனே உலகுக்கு ஆதார ஆதேயம் இரண்டுமாவன் - என்று இதனை திரு. பண்டிதமணி - மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் விளக்கியது சித்தாந்தப் பத்திரிகையுட் காண்க.

இளம் பிறை - நிலவைச் சடையின்மீது உலாவவைத்த வரலாறு இறைவனது பெருங் கருணையைக் காட்டும் அடையாளமாம். இது இறைவனது கருணையைத் தேற்றம்பெற உலகினர்க்கு எடுத்துக் காட்டும் சாட்சியுமாகும். அன்றியும் இருள் உலகமாகிய அலைகடலிலே கரை இருக்குமிடங் காட்டி அழைக்கும் உயர்ந்த **கலங் கரை விளக்கமும்** ஆம். ஆதலின் இறைவன் காட்டப், பிறவிக் கடலின் கரையைக் காணும் பேரடியார்களுக்கு இதுவே முதலில் கண்ணுக்குப் புலனாவது வழக்கு. "பித்தா பிறைசூடி" (சுந்தரமூர்த்திகள்), "ஓர் தூவெண் மதிசூடி" (திருஞானசம்பந்த சுவாமி கள்) என்று நமது ஆசாரியர்கள் திருவருள் பெற்ற தொடக்கத்திலே தேற்றம் பெற எடுத்துக் கூறிய அருள் வாக்குக்கள் காண்க. திருவையாற்றிலே கைலாயக் காட்சியை இறைவன் காட்டக் கண்ட அப்பர் சுவாமிகள் "மாதர் பிறைக்கண்ணியினை", "போழி ளங் கண்ணியினை" என ஒவ்வொரு திருப்பாட்டிலேயும், தொடக்கத்தில் இவ்விளம் பிறையை வைத்து அருளிக் காட்டியிருப்பதுங் காண்க. இன்னும் இதுபற்றிக் கீழே தடுத்தாட்கொண்ட புராணத்தே "தெண்ணிலா மலர்ந்த வேணியாய்" என்ற பாட்டின் கீழ்க் காண்க. அன்றியும் இறைவனது திருவுருவத்தின் சிரமுதல் பாதமீறாகத் தரிசிக் கும் காட்சியிலே இதுவே முதலில் நிற்பதால் முதலிற் காட்சிப் படுவதும் வழக்காகும்.

தனிவிழிக்குந் திருநுதலும் - தனிவிழியுடைய திருநெற்றி. நுதலுக்கு விழிக்கின்ற செயலில்லையாயினும் அச்செயலையுடைய கண்ணை யுடைமையால் கண்ணின் செயலை நுதலின் மேல் ஏற்றிக் கூறினார். **நுதல்** - நெற்றி. **தனிவிழித்தலாவது** - ஒருபடித்தா யன்றி விழித்தல்; அதாவது வேண்டும்போது விழித்துப் பிறநேரம் விழியாமை இக் கண்ணினது இயல்பு. ஏனைய இரண்டு விழிகளாகிய இருசுடரும் (சூரிய சந்திரர்கள்) என்றைக்கும் நித்தியமாய் விழிப்பன. இந்த நுதற்கண்ணோ எனின் அவ்வாறன்றி ஒவ்வோர் காலத்து ஆக்கல், அழித்தல், அருளல் முதலிய காரணம் பற்றி விழிப்பது. இதனை அக்கினிக்கண் - தீக்கண் என்பர். அம்பிகை ஒருகாலத்து இறைவனது இரண்டு கண்களையும் மூடியபோது எங்கும் இருள் மூடிவிட, உலகத்திற்கு ஒளி தந்து அருளும்பொருட்டு இக்கண்ணைத் திறந்தனர் என்பது சரிதம். மன்மதனை எரித்து அழிக்கும்பொருட்டு ஒருகாலத்துத் திறந்தனர் என்பதும் ஒரு சரிதம். அப்படித் திறந்த கண்ணே அடியாருங் கண்டு அருள் பெற உள்ளது என்று,

"...செற்றங் கனங்கனைத் தீவிழித்தான் தில்லைச் சிற்றம்பலவன்
நெற்றியிற் கண்கொண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே"

எனும் அப்பர் சுவாமிகள் திருவிருத்தத்தால் உணருகின்றோம். இவ் விழி தேவர்களின் அனுக்கிரகத்தின் பொருட்டு முருகப் பெருமான் அவதரிக்க விழிக்கப் பெற்றதாம்.

எம்மருங்கும் பூதகணம் புடைநெருங்கும் பெருமை - புடை எம்மருங்கும் நெருங்கும் பெருமைப் பூத கணமும் என்று பொருள் கொள்க. பக்கங்களில் எங்கும் நெருங்கும் பெருமையுடைய சிவகணங்கள் என்க. இவற்றின் பெருமை வரிசை 16-வது பாட்டிற் காண்க. இவைகள் எப்பொழுதும் பிரியாது இறைவனைச் சூழப்பெற்று ஆனந்தித்திருப்பனவாதலின் **நெருங்கும் பெருமை** என்றார். உலகங்களெல்லாம் அழியும் சங்கார காலத்திலே இறைவன் திருநடனத்தை உடனிருந்து அம்மையார் காணும் போது இப்பூத கணங்களும் தரிசித்து ஆனந்திப்பன என்பது,

"செப்பேந் திளமுலையாள் காணவோ தீப்படுகாட்
டப்பேய்க் கணமவைதாங் காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தா னங்காந் தழலுமிழு மைவாய
நாகத்தா யாடுந் நடம்"

எனும் அற்புதத் திருவந்தாதி (99)ல் காண்க. பூத பரம்பரையில் நிற்கும் அடியார்களுக்கு அப்பூதங்களுடன் காட்சி கொடுத்தலே முறையாதலும், அத்திருக்கூட்டத்தில் அணைபவர்களே இவ்வடியார்கள் ஆதலும் இங்குக் குறிப்பாகும்.

விடைமருவும் - மேலே "மழவிடைமேல்...நின்றான்" என்ற இடத்துக் காண்க.

விறல் - "மெய்வண்ணம் தெரிந்துணர்ந்து" (39) அவ்வழியே நின்றதாகிய **விறல்.** அப்பாட்டிலும் **விறல் வேந்தன்** என்றது காண்க.

இடமருங்கில் உமையாள் - இறைவனது அருளே உருவமாக உடையார் அம்பிகை என்பர். '**வேந்தர்க்கு அருள் கொடுத்தான்**' என அருளைக்கொடுக்க வருகின்றாராதலின் அருளுருவமாகிய கருணைப் பிராட்டியை உடன்கொண்டு நின்றார் என்பதாம்.

இசைப்ப - இசைக்கும்படி. **கண்டு** - இறைவன் காட்டக் கண்டு. "காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே" என்பது தேவாரம்.

அருள் கொடுத்தான்-தனது அருளே கண்ணாகக் காணும்படித் தன்னையே கொடுத்தான். "தந்ததுன் றன்னை -", "உன்னைத் தந்தனை" என்ற திருவாசகங்கள் காண்க. காட்டக் கண்டார் என்பது, "அருள் கொடுத்தான்" என்பதனால் பெறப்படும். அவனருளே கண்ணாக அவன் கொடுத்து அதனால் காணின் அல்லாது இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று காண முடியாது. ஆதலின்—கண்டு போற்றிசைக்கும் அருளைக் கொடுத்தார் என்க. போற்றக் கொடுத்தலே அருள் என்பதாம். அம்மையாரும் பூதகணமும் தாமுமாக இருக்கக் கண்டும் போற்றியும் இருக்கும்படிக் கொடுப்பதைவிட வேறு அருள் யாது உளது ? வரிசை 1776 காண்க. 46

132. அந்நிலையே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானனென் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ. சஎ

இது அருளின் விளைவையும் அதன் இயல்பையும் கூறிற்று

(இ - ள்) அந்நிலையே...உடன் எழலும் - இறந்த பசுவின் கன்றும், அரசனது உரிமைக் கன்றாகிய மகனும், மந்திரியும் அப்பொழுதே ஒருங்கே உயிர் பெற்றெழுந்தார்

கள். எழுதலும்; இன்ன...வேந்தனும் - அது கண்ட அரசனும் தான் இன்ன தன்மையை யடைந்தான் என்று தானே அறியாதபடி ஆயினன்; யார்க்கும்...உளதோ? (இவ்வாறும் நிகழுமோ எனின்?) எல்லார்க்கும் முன்னவனாகிய இறைவனே முன்னின்றால் முடியாத பொருளும் உண்டோ?. இல்லை என்றபடி.

(வி - ரை) அந்நிலை - காலத்தைக் குறித்தது. அவ்வரசன் - அருள் பெற்றவனாகிய அந்த அரசன் என்று சுட்டிக் காட்டியபடி. அரசன் மன்னுரிமைத் தனிக்கன்று - அரசனது அரசப் பட்டத்துக்கு உரிய ஒப்பற்ற மகன். மன் - அரசாங்கமாகிய நிலை. பசுக்கன்றினுக் கிணையாகக் கொண்டு முறை செய்யப்பட்டானாதலின் கன்று என்றார்.

இன்னபரிசு ஆனான் என்று அறிந்திலன் வேந்தனும் - இத்தன்மைத் தென்று அறிய முடியாத மகிழ்ச்சி என்க. இன்ன தன்மையன் என்றறிவொண்ணா எம்மான் தந்தாதலின் அந்த அருளும் - அதன் விளைவும் - அதனால் உளதாம் மகிழ்ச்சியும் - அவ்வாறேயாம் என்க. முதல் மகிழ்ச்சி ஆன்கன்று உயிர்பெற்று எழுந்ததனாலும் அதனாற் பசுவினது இடர் நீங்கியதனாலும் ஆம் - பின்னர் மகனும் மந்திரியும் உடன் எழுந்ததனால் ஆம். இவை இரண்டும் இன்ன காரணத்தாலாயின என்று அருளை அளந்தறிய இயலாமைபற்றி இவ்வாறு கூறினார்.

வேந்தனும் - சிறப்பும்மை. எச்சவும்மையுமாம். இவ்வினை விளைந்தவா - செவ்விது என் செங்கோல்! - என் நெறி நன்றால்! - என்செய்தாற்றீரும்! - என்று பலவும் எண்ணி இரங்கியும் ஏங்கியும் தெருமந்தும் தெளியாதும் சோர்ந்தும் துயருற்ற அரசனும் இப்போது அவை தீர்ந்து மகிழ்வுற்றான் - அது இன்னபரிசாயிற்று என்று அவனும் தெளியுமாறில்லை என்க. சுற்றும் இருந்த பிறர் அறிந்திலாமையுடன் அரசனும் அறிந்திலன் என்றுரைப்பினும் ஆம்.

பசு உறு பேரிடர் தானும் தாங்குவது தருமம் - என்று துணிந்து அத்துயர் தாங்குதற்காகச் செய்த செயலே, அதற்கு மாறாக அதனாலே அரசனைப் பசுத் தாங்கும் பெரிய இன்பந் தாங்குமாறு செய்தமையின், அதன் பரிசு அறிதற்கரிதாயிற்று.

உடன் எழலும் - பசுக் கன்றும் அரசன் மகனும் மந்திரியும் ஒருங்கே உயிர் பெற்றெழுந்தனர். பசுவின் மனமழியும் துயரகற்ற மாட்டாது வருந்திய மன்னவன் அத்துயரகன்ற பின்னரே மகிழ்ச்சி யடைவான் ஆதலினாலும், தீ நீங்காதவழிப் புகையும் நீங்காமைபோலப், பசுக்கன்று உயிர் பெறாத வழிப் பசுத்துயரும் அது காரணமாய் வந்த அரசன் துயரும் நீங்கும் வழியில்லை ஆதலினாலும், இச்சரித நிகழ்ச்சிகள் யாவைக்கும் காரணமாய் முன் நிகழ்ந்தது ஆன்கன்று உயிர் துறந்ததேயாதலாலும், அது உயிர்பெற்றெழுதலை முதலிற் கூறினார். அரசனாணையின்படி அரச குமாரனை உயிர்நீங்கச் செய்வதை அஞ்சியே மந்திரி உயிர் நீத்தமையால் அக்குமாரன் உயிர் பெற்றெழுந்தது மந்திரி எழுவதற்கு முன்னர் வைத்தோதினார். அரச குமாரன் உயிர் நீத்தது காலத்தாற் பிந்தியதாயினும், அவனுயிரைப் பற்றிய நோக்கமே மந்திரி உயிர் நீத்ததற்குக் காரணமாய் முன்னின்றமை காண்க. இம்மூன்று எழுதல்களும் (ஒருங்கே) உடன் நிகழ்ந்தன வெனினும் காரணகாரிய முறையினால் இம்முறையிலே சொல்லப் பெற்றன. உடன் எழல் - என்பதற்கு உயிருடன் எழுதல் என்று கூறுவாருமுளர்.

யார்க்கும் முன்னவனே - எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமான். முன்னவன் என்றது இறைமைக் குணங்களால் முதல்வனாதலைக் குறித்தது. காலத்தால் முந்தியவன் என்று பொருள் கொள்ளின் அது பதி பசு பாசம் என்ற மூன்று பொருள்களும் அநாதியே உள்ளன எனும் உண்மைக்கு மாறுபடுவதாம்.

யார்க்கும் - மக்கள்-தேவர்-நரகர் - அஃறிணை - ஆகிய எல்லா ஆன்ம வருக்கங்களுக்கும். இவை எல்லாம் பசுவர்க்கத்துட்பட்டு அளவுபட்ட ஆற்றலே உடையன; இச்

செயல் அவை எவையும் செய்யச் சத்தியற்றன. அளவில்லாத ஆற்றலுடைய முன்னவனே செய்ய வல்லவன் என்றபடி.

முடியாத பொருள் உளதோ ? - உயிர் பிரிந்தாரை மீளவும் உயிர்பெறச் செய்தலும் துன்பம் தாங்க எண்ணிச் செயல்செய்தாரை அச்செய்கையாலே அப்போதே அவர் எண்ணாத இன்பந் தாங்கச் செய்தலும் முடியுமோ ? என்று ஐயப்படுவாரை நோக்கி **முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ?** என்று விடை கூறிய வாறு. இது மட்டுமல்ல ; வேறு எதுவும் முடியும் என்பது கருத்து. ஆக்கலும் அழித்தலும் அருளலும் ஒருங்கே செய்யவல்லான். எல்லா உயிர்களையும் தன்னிடம் ஒடுக்கி மீளவும் அவ்வவற்றின் பக்குவம் நோக்கி ; உளவாக வைக்கும் இறைவன் எவனோ அவனே முன்னவன் ; ஆதலின் அவன் செய்தனன் - என்பது.

முன்னவனே - ஏகாரம் அளவுபட்ட பிறரன்றி அளவிலா ஆற்றலுடைய அவனே. எனத் தேற்றமும் பிரிநிலையும் ஆம்.

முன்னின்றால் - முன்னிற்றல் வெளிப்படச் செயல் செய்தல். எல்லாப் பொருளினும் செயலினும் அவனே நிற்கின்றான்—நின்று இயற்றுவிக்கின்றான் என்பது நின்ற திருத்தாண்டகம் முதலிய வேதப் பிரமாணங்களால் அறிகின்றோம். ஆனால் அளவு பட்ட பிறர் செய்தற்கரிதாகிய இவ்வாறான செயல்களில் அவன் பொதுப்பட மறைந்து நிற்றலன்றி வெளிப்பட **முன்னே** நிற்றல் வேண்டும். ஆதலின் முன்னவனே நின்றால். என்னாது **முன் நின்றால்** என்றார்.

உளதோ ? - ஓகாரம் எதிர்மறை. இல்லை என்றபடி. இக்கருத்தையே இப்புராணத்திலே பின்னர் எறிபத்த நாயனார் புராணத்துள் யானையும் பாகரும் எழுந்தது முதலிய, வந்த வந்த இடங்களிலெல்லாம் அமைத்துக் கொள்க. திருஞானசம்பந்த சுவாமிகளும், அப்பர் சுவாமிகளும், சுந்தரமூர்த்திகளும் இறந்தாரை உயிர்ப்பித்த வரலாறுகளும், "...தான் செய்யும் தன்மைகளை ஆக்கியிடும் அன்பர்க்கு அரன்" என்றும், "எனதுரை தனதுரையாக" என்றும் வரும் அருட்பிரமாணங்களால் இவ்வாறே முன்னவனே முன்னின்று செய்தவைகளாம். ஓர் உயிருக்கு ஓர் உடம்பு முதலிற் கொடுத்துப், பின்பு தன்னகத்து ஒடுக்கி, மீளவும் வேறு ஓர் உடம்பு கொடுக்கின்ற இறைவன் அவ்வுயிரை மீண்டும் அவ்வுடம்புக்குள்ளேயே புகுத்தலும், அவ்வுடம்பு உருவமழிந்தபோது அதனை முன்போலச் செய்து மீட்டும் அவ்வுயிரை அதனுள் வைத்தலும் வல்லவனே யாவன் என்க.

"இன்றிருந்து நாளை யிறக்கும் தொழிலுடைய புன்றலைய மாக்க"ளிலே ஒருவனாகிய ஓர் அரசாங்க மனிதனே, " முடியாதது " என்ற சொல் என் அகராதியில் இல்லை-என்று கூறினான் எனச் சரிதம் கேட்டு மயங்கும் மக்கள் இதன் உண்மை கண்டு தெளிவார்களாக.

இப்பாட்டிலே அறிந்திலன் வேந்தனும் என்றதை எச்சவும்மையாகக் கொண்டு மந்திரியும் மகனும் அறிந்திலர்; அரசனும் அறிந்திலன்-என்று உரைத்தலுமாம். "எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர், செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" என்றபடி, **அரசன் கன்று** - உயர்ந்ததை அஃறிணையாக்கல் மரபு பற்றியுமாம். சுவாமிகள் எழுந்தருளியது - இவ்வாறு செய்தருளிற்று - முதலியவை காண்க. 47

133. அடிபணிந்த திருமகனை யாகமுற வெடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயர நீங்கினா னிலவேந்தன்
மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பரவாணீங் கியதன்றே. சஅ

அருள் நிகழ்ச்சியின் மேல் விளைவுகளைக் கூறியது.

(இ - ள்) அடிபணிந்த...நிலவேந்தன் - (அருளின்வழி உயிர்பெற்றெழுந்த அரசிளங் குமாரன் அரசனை அடிபணிந்தான். அவ்வாறு வந்து தன்னை) அடிபணிந்த திரு மைந்தனை அரசன் எடுத்துத் தனது மார்பு பொருந்த அணைத்துப் பெரிதும் மகிழ்ந்து (பசுத் துயரத்தால் விளைந்த) தனது முன்னைப் பெருந் துயரத்தினின்று நீங்கினான்; மடிசுரந்து...நீங்கியது அன்றே - மடியிலே சுரந்து பொழியும் பாலை உயிர் பெற்றுவந்த கன்று மகிழ்ந்துண்ணப் பால்பெருகி வருகின்ற பசுவும் தனது கன்றிழந்த முன்னைத் துன்பத்தினின்றும் அப்பொழுதே நீங்கியது.

(வி - ரை) **அடிபணிந்த-பணிந்த** என்றதனால்—உயிர்பெற்று வந்த மகன் அரசனை முன்னர்ப் பணிந்தான்—என்பது பெற்றாம். கோமானுக்கு வந்த பழியை மாற்றும் வகையறியாது திருமறையோரிடம் தேடிப்போன குமாரன், அவ்வழியைத் தனக்குக் காட்டித், தானே கழுவாயும் செய்து, புனிதனுக்கிய பேருதவிக்காக அடிபணிந்தான்.

ஆகமுற எடுத்தணைத்து - எடுத்து ஆகமுற அணைத்து என்று கூட்டுக. **எடுத்து** - கீழே விழுந்து பணிந்த மகனை எடுத்து மார்பாரத் தழுவிக்கொண்டு.

நெடிது மகிழ்ந்து - பசுவின் துன்பம் நீங்கும்படிக்கும், தனது செங்கோலுக்கு நேர்ந்த பழியை மாற்றும்படிக்கும், இறைவன் செய்த பேரருளுக்கு இம்மகன் கருவியாய் இருந்தான் என்று பெரிதும் மகிழ்ந்து. மகனை மார்பார எடுத்தணைத்தற்கு இம் மகிழ்ச்சியே காரணம் என்க.

அருந்துயரம் - தனக்கு ஒரு துயரும் நேராது, பிறிதொரு உயிராகிய பசுவுக்கு நேர்ந்து, அதனைத்தான் அகற்றமாட்டாது அத்துயரைத் தானும் தாங்கியதால் உண்டாகியது. இது செய்தற்கரிதாயினமையால் **அருந்துயர்** என்க. 42-ம் பாட்டுக் காண்க.

மடிசுரந்து பொழி தீம்பால் - கன்று உயிர்பெற்றுத் தன்னிடம் வரவே பசு அன்பினால் பால் சுரந்தது. இந்த அன்பை வடநூலார் வாத்ஸல்யம் என்பர். சண்டேசுர நாயனார் புராணத்திலே இவ்வியல்பினை,

"...மனைக்கட் கன்று பிரிந்தாலு மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டுருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால்" (30)

என்ற இடத்து விரிவாகக் கண்டுகொள்க.

படி நனைய - அன்பினாற் பால் மிகவும் சுரந்ததாகலின் கன்று உண்ணவும் மீந்து நிலத்தை நனைத்தது என்க.

கன்றும் அரசகுமாரனும் ஒருங்கே உயிர்பெற்று எழுந்தாலும் அரசகுமாரன் உடனே அவ்விடத்தே அடிபணிய அவனை அரசன் தழுவிக்கொண்டனன். கன்று அரசனது கோயில்வாயிலுக்குச் சென்ற பசுவை நாடிப்போய்ப் பால் உண்டது. ஆதலின் முன்னர் நிகழ்ந்த அரசகுமாரன் பணிந்தசெயல் முன்னரும், கன்று பசுவினிடம் சென்று பால் குடித்த செயல் பின்னரும் கூறப்பெற்றன. பசுவும் பருவரல் நீங்கியது - அது கண்டு நில வேந்தனும் துயர் நீங்கினான் என மாறிக் கூட்டி உரைப்பாருமுளர்.

வரும் கன்று - தாயைநோக்கி வரும் கன்று. தாயைக் கன்று தேடி அடைதல் இயல்பாம்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை." என்பது காண்க.

வரும் பசு - கன்றும் அரசனும் இருந்த இடம் நோக்கி வரும் பசு.

பசுவும் - உம்மை எச்ச உம்மை. அரசன் துயரம் நீங்கினதே யன்றிப் பசுவும் நீங்கினது. இரண்டும் ஒரு காலத்து உடன் நிகழ்ச்சியாம்.

பருவரல் - துன்பம் - துயரம்.

அன்றே - அப்பொழுதே. பருவரலினின்றும் அன்றே நீங்கியது என்க. அன்று-ஏ - அசை என்று ஒதுக்குவாருமுளர். 48

134. பொன்றயங்கு மதிலாரூர்ப் பூங்கோயி லமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே யருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்றுமெளி வரும்பெருமை யேழுலகு மெடுத்தேத்தும். சக

(இ - ள்) பொன்...கண்டு - அழகிய மதில் சூழ்ந்த திருவாரூரிலே பூங்கோயிலிலே எழுந்தருளிய இறைவன் வெற்றி பொருந்திய மனுச் சோழருக்குத் திருவீதியிலே காட்சி தந்து தனது பேரருளையுங் கொடுத்து எழுந்தருளிய கருணைத் திறத்தைக் கண்டு; தன்னடியார்க்கு...ஏத்தும் - அவ்விறைவன் என்றும் இவ்வாறே அடியவர்களுக்கு எளிதாக வெளிவந்து அருள்புரியும் பெருமையை ஏழுலகங்களும் எடுத்துத் துதிக்கும்.

(வி - ரை) **பொன் தயங்கு மதில்** - அழகினால் ஒளி வீசும் மதில். **பூங்கோயில்** - திருவாரூர்த் திருக்கோயிலின் பெயர் - பூவின் அகமலர் போன்று இருத்தலின் பூங்கோயில் எனப்பட்டது. இதன் விரிவை வரிசை 43-ம் பாட்டின்கீழ்க் காண்க. இதற்கு "எப்பொழுதும் பூக்களால் பந்தலிட்டிருப்பதால் பூங்கோயில் என்றார்" என்பாருமுளர்.

வென்றி - வெற்றி - மனிதர்களை அடிமைப்படுத்தும் உலகக் கட்டுகள் பலவற்றுள்ளும் மிகுவலிமை உடைத்தாய்க் "கடந்துளார்களும் கடப்பரோ மக்கள் மேற் காதல்" என்று விதந்து கூறப்படுவதாயுள்ள மக்கட்காதலை, இறைவன் பணித்த அறநெறிக்குக் கீழ்ப்படுத்தி, அதுகாரணமாக இறைவன் திருவருளைப் பெற்றதை **வென்றி** என்றார்.

வீதியிலே...திறம்-அரசன்தேர் ஊர்ந்தது கண்டார், அரச குமாரனும் கன்றும் எழுந்ததையுங் கண்டார். இவற்றிற்குக் காரணமாய் இளம் பிறையும் திருநுதலும் கொண்ட கோலத்தைக் கண்டு அரசன் போற்றப் பெருமான்கொடுத்த அருளையுங் கண்டார். ஆதலின் **பெருங்கருணைத் திறம் கண்டு** என்றார்.

பெருங்கருணை - இன்னும் இதன் திறங்களை முன்னர் "**முன்னவனே முன்நின்றால்** முடியாத பொருள் உளதோ" என்ற இடத்துங் காண்க.

தன் அடியார்க்கு என்றும் எளிவரும் பெருமை-"அடியவருக் கெளியானை", "அடியார்க் கடியன் சிற்றம்பலவன்" என வரும் எண்ணிறந்த திருவாக்குக்கள் காண்க. "என்றும் அடியார்க்கு எளிவந்தாய் எந்தாயே" என்ற திருவிளையாடற் புராணமும் குறிக்க.

ஏழுலகும் - ஏழு என்று எண்ணப்பட்ட உலகங்களில் உள்ள அறிவுடையோர். ஏழு வகைப் பிறப்புக்களில் உள்ள அறிவுடை உயிர்கள் என்றுமாம்.

எடுத்து ஏத்தும் - பாராட்டித் துதிக்கும்.

கண்டு...ஏத்தும் - ஏத்தும் என்ற செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்றாற் கூறியதனால் "அன்றுமுதல் இன்றுவரை"யும், இனியும் ஏத்தும் என்க. அந்நாளிலே நேரிற்கண்டார் ஏத்தினர்; அவர் கண்ணாற்கண்டு ஏத்தியதை வழிவழி அதன்பின் காதாற்கேட்டுக்கண்டு ஏத்தும் உலகு. ஆதலின் கண்டு...ஏத்தும் என்பது பிற்காலத்தார்க்கும் பொருந்துவதாயிற்று என்க. என்றும் ஏத்தும் - எனக் கூட்டி உரைத்தலுமாம்.

இவ்வரிய செயலைச் சிலப்பதிகாரம் - மணிமேகலை முதலிய பழந்தமிழ்ப் பெருநூல்கள் எல்லாம் விதந்து எடுத்துப் பேசும்.

"அரும் பெயர்ப் புதல்வனை ஆழியின் மடித்தோன் "—சிலப், வழக்கு, 20.

"கறவை முறை செய் காவலன்."—ஷை. 29.

"மகனை முறை செய்த மன்னன்."—மணிமேகலை.

முதலியவை காண்க. நம் முன்னோர் நீதிமுறையில் வைத்த உயர்ந்த நோக்கம் இதில் விளங்குவதாம். சைவ சாத்திரங்களும் இதனை எடுத்துப் பாராட்டி யுள்ளன,

மனு வேந்தனுக்குப் பெரியபுராணம் தோற்றுவதற்குக் காரணமாய் இருந்தது அநபாயரது தருமமும்—நீதியும்—சால்புமே யாதலின் அவர்க்கு வழிமுதல்வராய் நீதி போற்றிய மனுச்சோழர் செய்தியை 'மன்னு சீரநபாயன் வழிமுதல்' என்று போற்றினர் ஆசிரியர். ஆரூர்ப் பெருமான் எண்ணிறந்தோர்க்கு அருள்புரிந்ததுவே மனுச் சோழர் நீதிக்குக் காரணமாம். அதுவே வழிமுதலாய் அநபாயர் நீதிக்குக் காரணமாயிற்று. அதுவே பெரியபுராணத்துக்குக் காரணமாயிற்று. ஆதலின் திருவாரூர்ச் சிறப்பும் அங்கு இறைவன் அருட் செயல்களும் பலப்பலவாயினும் இதனை இப்பகுதியிலே சிறப்பாய் விதந்து எடுத்து ஓதிப் பிறவற்றை உய்த்துணர வைத்தார் ஆசிரியர்.49

135. இனையவகை யறநெறியி லெண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேற்
புனையுமுரை நம்மளவிற் புகலலாந் தகைமையதோ?
அனையதனுக் ககமலரா மறவனூர் பூங்கோயில். ருO

(இ - ள்) இனையவகை...தகைமையதோ? - இவ்வாறு அறநெறியிலே அளவிலாத உயிர்களுக்கு அருள்செய்து யார்க்கும் முன்னவனாகிய வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளி வீற்றிருந்தருளும் பழமையாகிய அந்நகரத்தைப்பற்றி எடுத்துச் சொல்வது நமது அளவுபட்ட சொல்லாற்றலில் அடங்குமா? அடங்காது; அனையதனுக்கு...பூங்கோயில் - அந்நகரினுக்கு அகமலர் போல் விளங்குவது அறவனாராகிய இறைவன் எழுந்தருளிய பூங்கோயில் என்னும் திருக்கோயிலாம்.

(வி - ரை) **அறநெறியில்** - அறநெறியில் நின்று உய்யுமாறு என்க. இங்கு அறம் எல்லா அறங்களையும் உள்ளிட்டது. இறைவன் இங்கே அரசராக (தியாகராசர்) எழுந்தருளி யிருத்தலால் அரசனுவான் அறங்காப்பான் அல்லனோ - என்று நாம் அறிந்தபடி (36-வது திருப்பாட்டு) இறைவரும் அறநெறியில் அருள்புரிந்து மகிழ்ந்து வீற்றிருக்கின்றார் என்றதாம். நீதியே இறைவன் திரு உருவங்களில் ஒன்றாதல் முன்னரே குறிக்கப்பட்டது. 'அறவாழி அந்தணர்' என்ற குறளும், "அறவனாரடி சென்று சேர்வதற்கு" என்ற சுந்தரர் தேவாரமும் காண்க. இதுபற்றி இப்பாட்டில் **அறவனூர் பூங்கோயில்** என்றும் கூறினர்.

எண்ணிறந்தோர்க்கருள் - உயிர்கள் பல வாதலால் எண்ணிறந்தோர்க்கு என்றார். அவ்வுயிர்கள் தோறும், அவ்வவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே, நின்று இறைவன் செய்யும் அருளும் பலவாதலின் **எண்ணிறந்த** என்பதனை அருளுக்கும் கூட்டி எண்ணிறந்த உயிர்க்கு எண்ணிறந்த அருள் என்க. **முனைவர்** எல்லார்க்கும் முன்னவர். முன்னர் 47-வது திருப்பாட்டில் 'முன்னவனே' என்றதும் இது. இதன் உரை அங்குக் காண்க. "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் - முனைவன்" என்றபடி இவரது இலக்கணத்தை இலக்கணத்துட்காண்க.

மகிழ்ந் தருளப் பெற்றுடைய மூதூர் - மகிழ்ச்சியுடன் இனிது வீற்றிருக்கப் பெற்ற பெருமையுடையது. சிலநாள் திருப்பாற்கடலிலும், சிலநாட் பொன்னுலகத்திலும் எழுந்தருளியிருந்த இத் தியாகேசர் இம்மண்ணுலகத்திலே இந்நகரை விரும்பி நிலைத்து எழுந்தருளியிருக்கின்றாராதலின் இவ்வாறு கூறினர். 'தொன்மையின் மிக்கது' என்று தோற்றுவாய்செய்த பொருளையே முடித்துக் காட்டி **மூதூர்** என்றதுமாம்.

புனையும் உரை - புனைதல் - அணிசெய்தல். அதாவது அழகு செய்யும் உரை. புனைந்துரை அல்லது பாயிரமாய்ச் சொல்லும் கூற்று என்றலுமாம்.

புகலலாம் தகைமையதோ - ஓகாரம் எதிர் மறைப்பொருளில் வந்தது. புகலுந் தகைமையது அல்ல என்றபடி. இதுவரை சொல்லிவந்த அளவிலே திருவாரூர்ச் சிறப்புக்கள் அடங்கிவிடுவன அல்ல. அவை முற்றும் சொல்ல நம்மளவில் அடங்காது

என்று எச்சரித்து ஆசிரியர் இப்பகுதியை முடித்துக்காட்டியபடியாம். பின்னரும் இவ்வாறு முடித்துக் கூறும் இடங்களிலெல்லாம் இக்கருத்தே கொள்க.

அனையதனுக்கு - அனைய அதனுக்கு - அத்தன்மைத்தாகிய மூதூருக்கு என்க. அனைய - என்றது முன்னே கூறிய சிறப்புக்களையெல்லாம் நினைவுகூர்தற் பொருட்டு.

அகமலர் - மலரின் உட்பகுதி. மேலே வண்தாமரை போல் மலர்ந்து (12) என்று உவமித்ததற்கேற்ப இங்கு **அகமலர்** என்றார். தாமரையின் அகமலரே அதன் உயிர் போன்ற உட்பகுதி. அதைச் சுற்றியே கேசரம், இதழ், புல்லிதழ், முதலியன காணப் பெறும். அதுபோலத் திருவாரூரின் நடுவில் அறவனார் பூங்கோயில் உளது. திருக்கோயில் வரை உள்ள சுற்றுவீதி முதலியவைகளை முன்னர் 12-ம் திருப்பாட்டுவரை வரிசைப் படுத்தி உரைத்தமை நினைவு கூர்க. **அதனுக்கு** - அதனிடத்து எனக்கொண்டு, **அகமலர்** - (எல்லாரது) அகத்தில் (உள்ளத்தில்) மலர்வது என்றும், அகமாகிய மலர் என்றும் கூறுவர். 'மேதினிக் காதன்மங்கை இதய கமலமாம்' என்றதும் காண்க.

பூங்கோயில் - அறவனார் எழுந்தருளிய பூங்கோயில் அதனுக்கு அகமலராம் என முடிக்க. இது வரும்பகுதியாகிய திருக்கூட்டச் சிறப்புக்குத் தோற்றுவாய் செய்தவாறு. அப்பகுதி முதற்பாட்டில் 'பூங்கோயில்' என்று தொடங்கிக் கொண்டதுங் காண்க. 50

சுருக்கம் :—சோழ நாட்டுப் பல நகரங்களிலும் திருவாரூர் மிகப் பழமையான சிறந்த நகரம். அதிற் பல மாட மாளிகைகள் உண்டு ; அவற்றில் ஒன்று பரவையார் திருஅவதாரஞ் செய்த மாளிகை. அதன் திருவீதி இறைவன் ஒருகால் இருகால் தூது நடந்து சென்ற சிறப்புடையது. மிக மகிழ்ச்சியுடன் மக்கள் வாழும் இடங்களும் வரிசையாய் அமைவன.

இந்நகரை ஒரு காலத்தில் மனுச்சோழர் அரசு புரிந்தனர். அவர் எல்லா உயிர்களையும் தமது கண்ணையும் உயிரையும் போலக் காத்தலையே கருத்தாகக் கொண்டு அரசாண்டு வந்தார். கோயில்களுக்கு ஒழுங்காய்ப் பூசை நியமித்து நீதியரசு செய்து வந்தனர். அவர் ஆட்சியில் குடிகள் அறங்களின் வழி ஒழுகிப் பொருள் இன்பங்களிலும் சிறந்து மகிழ்ந்து வந்தனர். அவ்வரசனுக்கு ஒரே மகன். அவன் அறிவிலும் கல்வி ஒழுக்கங்களிலும் சிறந்து இளவரசப் பருவம் அடைந்தான். அவன் ஒரு நாள் சேனை சூழத் தேர்மேலேறி அரசுலாந் தெருவில் உலாப்போந்தான். ஓர் இளைய பசுக் கன்று துள்ளிப் புகுந்து அவனது தேர்க்காலினுட்பட்டு இறந்தது. தாய்ப்பசு மிகவும் வருந்தி அரசன் அரண்மனையின் ஆராய்ச்சி மணியை அடித்தது. அரசன் கண்டு வருந்தினான். மந்திரிகள், இதற்காகப் பசுவதை செய்தார்க்குத் தரும நூல்வழியே செய்யும் பிராயச்சித்தம் செய்விக்க வேண்டும் என்றார்கள். அரசன் அதற் கிசையாது "பசுவின் துன்பத்தை நீக்க முடியாத நான் அதன் துன்பத்தையே தாங்கிப் பங்கிட்டுக் கொள்வேன்" என்று துணிந்து தீர்மானித்து மகனை அவ்வீதியிலே கிடத்தி அவன் மார்பிலே தனது தேரை ஊர்ந்து விட்டான். உடனே இறைவன் வெளிப்பட்டு அரசனுக்குக் காட்சி கொடுத்து அருள் செய்தார். இறந்த பசுக்கன்றும், அரச குமாரனும், அவனுக்காக முன்னமே தன் உயிர்விட்ட மந்திரியும் உயிர் பெற்று எழுந்தார்கள். எங்கும் பெருமகிழ்ச்சிபொங்கியது. இவ்வாறு இறைவன் நீதிமுறையிலே அருள்செய்து நிற்கும் அனேகம் பெருமைகளை உடையது திருவாரூர்.

இறைவன் நிலைத்து எழுந்தருளி யிருக்கும் **பூங்கோயில்** திருவாரூர்த் திருநகரத்தின் நடுவிற் சிறந்து விளங்கும்.

தலவிசேடம்:—**திருவாரூர்** - இத்தலம் (S. I. Ry.) தென்னிந்திய இருப்புப்பாதையில் திருவாரூர் சந்தி—என்ற நிலையத்திலிருந்து வடக்கே ஒரு நாழிகையளவில் உள்ளது. **கமலாலயம்** என்னும் சிறந்த தீர்த்தக்குளம் கோயிலுக்கு மேற்கில் உள்ளது. கோயில் **பூங்கோயில்** என்று பேர் பெறும். நமிநந்தியடிகள் நாயனார் நீரால் விளக்கெரித்த தலமாகிய "திருவாரூர் அரநெறி" என்ற பாடல்பெற்ற தலம் இக்கோயிலுக்

குள்ளே, தென்கீழ்த் திசையில் வேறாக உள்ளது. சுவாமி - **வன்மீக நாதர்** (புற்றிடங் கொண்டார்) - **திருமூலட்டான நாதர்** ; தேவியார் - **அல்லியம் பூங்கோதையம்மை** - **கமலாம்பாள்**. கமலாம்பாள் சந்நிதி வேறு. இவ்வாலயம் வடக்குப் பிரகாரத்தில் உள்ளது. இத்தலத்திற்கு 34 தேவாரப் பதிகங்களும், ஏனைய திருமுறைகளில் பல பாடல்களும் உண்டு. **தேவாசிரிய மண்டபம்** அடியார் கூட்டம் நிறைந்துள்ளது. இது திருமுன்றிலில் வெளிப்புறம் உள்ளது. இதனை ஆயிரக்கால் மண்டபம் என்பர். இதிலேதான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார்களை வணங்கி இப்புராணத்திற்கு மூலமாகிய **திருத்தொண்டத்தொகை** அருளினார். திருவாரூர் அடியார் கூட்டத்தின் பெருமை பெற்றது.

'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்குமடியேன்' என்பது தமிழ்வேதம். ஆசாரியர்கள் மூவரும் இத்தலத்தை முதலிற் காணும்போது அடியார்களைத் துதித்தனர். 'வருந்தும் போதெனை வாடல் எனுங் கொலோ' என்று திருஞான சம்பந்த சுவாமிகளும், 'நமக்குண்டு கொல்லோ...தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே' என்று அப்பர் சுவாமிகளும், 'அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், தம்மை எதிர் கொள்ள வந்த அடியார்களை வணங்கித் துதித்துப், பின்னரே திருநகரத்திற் புகுந்தார்கள் என்று அவரவர் சரிதங்களாற் பின்னர் அறிகின்றோம். இங்கு இலக்குமியும் தேவர்களும் பூசித்துப் பேறு பெற்றனர். பஞ்சபூதத்தலங்களில் இது பிருதிவித் தலம். விராட் புருட உருவத்தில் மூலாதாரத் தலமுமாம். தியாகேசர் எழுந்தருளிய சத்த விடங்கத் தலங்களில் முதன்மையானது.* இதில் முன் காலத்துத் திருவாதிரைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அதனை அப்பர்சுவாமிகள் தரிசித்து அதன் சிறப்பைத் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு ஒருதனித் திருப்பதிகத்தினாலே கூறியருளினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருட்டு இறைவன் பல அற்புதங்கள் நடத்தியருளிய தலம்.

கழறிற்றறிவார் நாயனார் எழுந்தருளிய பெருமையும், விறன் மிண்டர் பத்திமையின் விறலும், நமிநந்தியடிகள் நீரால் விளக்கெரித்த திறலும், தண்டியடிகள் கமலாலயக் குளத்தைப் பெருக்கித் திருப்பணிசெய்து கண்பெற்றுச் சமணரைக் கலக்கங் கண்ட வெற்றியும், திருப்பூ மண்டபத்திருந்த பூவினை மோந்தமை பற்றிக் கழற்சிங்க நாயனார் தமது தேவியாரது கையைத் தடிந்த உறைப்பும், செருத்துணை நாயனார் அவ்வம்மையாரது மூக்கை வார்ந்த வீரமும், பிறவும் அவ்வப் புராணங்களிற் காணலாம். தியாகராசர் முன்னே இங்கு எழுந்தருளியிருந்து பின்னர்த் திருப்பாற் கடலிலும் தேவ உலகத்திலும் எழுந்தருளிப் பின்னர் முசுகுந்தச் சக்ரவர்த்தியின் பொருட்டு இங்குவந்து வீற்றிருந்தருளுவர்.

திருக்கோயிலும், திருக்குளமும், செங்கழுநீர் ஓடையும் முறையே ஐயைந்து வேலி நிலப்பரப்புடையன. 'அஞ்சணை வேலியாரூர் ஆதரித்திடங் கொண்டாரே' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு முதலியவை காண்க. இத்தலத்தின் தேரும், திருவிழாவும், கோயிலும், குளமும், எல்லாம் தனித்தனித் தேவாரம்பெற்ற சிறப்புடையன. மூலட்டானருக்கும், வீதிவிடங்கருக்கும் தனிப்பதிகங்களுண்டு. இது திருவாரூருக்கே உரிய தனி மாண்பாம்.

கற்பனை :—(1) இப்பகுதியிற்கூறிய மனுச்சோழர் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்து நீதிமுறை செய்த சரிதம் இங்குக் கல்வெட்டிற் காணப்படுவது மன்றி அதைக் காட்டும் கல் தேரும் - பசுவும் - கன்றும் - மணியும், பிறவுங் கோயிலுக்கு வடகிழக்கில் தனியாய் அமைந்துள்ளன. அவை இப்போது பார்ப்பாரும் கேட்பாருமற்றுக் கிலமாகிப் பாழடைந்த நிலையிலிருப்பதே நீதிநினைவானது நம்முள்ளே ஒடுங்கி மறைந்துபோய் விட்டதென்று

---

*சத்த விடங்கத் தலங்களாவன :—திருவாரூர், திருக்காறாயில், திருக்கோளிலி, திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருவாய்மூர், திருமறைக்காடு என்பன.

மநுச்சரிதங் கண்ட கல்வெட்டு

(A. R. No. 164 : 1894)

On the North wall of the second Prakara of the Thyagaraja Temple at Tiruvarur

திருவாரூர்த் தியாகராசசுவாமி கோயில் 2-ம் பிரகாரம், வடபுறச் சுவரில்

*சுவஸ்திஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப் பாமாலை மலிந்த பரு
மணித்திரள்புயத் திருநிலமடந்தையொடு ஜயமகளிருப்ப—வேதமும் மெய்மை
யும் ஆதியுகம் போலத் தலைத்தலை சிறப்ப வந்தருளி வெலற்கரும் போர்புலி
ஆணை பார்த்திபர் சூட—மண் முழுதுங்களிப்ப மநுநெறி வளர்த்து தன்கோயில்
கொற்றவாயிற் புறத்து மணிநாவொடுங்க—திரிபுவனமுடையாளிவன் திருவுளத்
தருள் முழுதுடையாளொன உடனிருப்பச் செம்பொன் வீரசிம்மாசனத்து
முக்கோக்கிழானடிகள் ளொடும் எழுந்தருளிய கோப்பரகேசரி வர்மனான திரி
புவன சக்கரவர்த்திகள்* **ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு** *யாண்டு ஐஞ்சாவது மிதுன
ஞாயிற்று பூர்வபட்சத்து சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் அத்தமுமான நாள்
340 செயமாணிக்கவளநாட்டு திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர்உடையார் வீதி
விடங்கர் சித்திரைத்திங்கள் திருநாளில் சதைய...திருக்காவணத்தில் சிம்மா
சனத்து எழுந்தருளியிருந்து பதியிலாளர் தியாகவிநோதத்...கண்டருளாநிற்ப
ஸ்ரீகாரியம் சுப்பிரமங்கலமுடையான் மாதவன் இரவியானமானுலைய மூவேந்த
வேளார் விண்ணப்பத்தினால் பதிபாதமூலப்பட்டுடை பஞ்சாசாரிய தேவகன்மி
களுக்கும் கோயிலங்...யார்க்கும் திருவாய்மொழிந்தருளியபடி நம் ஏவலால்
பூலோகராஜ்யஞ் செய்கிற சூர்யபுத்ரன்* **மநு** *தன் புத்ரன் ஏறிவருகிற தேரில்
பசுவின் கன்றகப்பட்டு ப்ரமாதப்பட அதின் மாதாவான சுரபி கண்டு துக்கித்து
மநுவின் வாசலில் மணியை யெறிய அது கேட்டு மநு தன்மந்திரி* **இங்கணாட்டு
பாலையூருடையான் உபயகுலாமலனைப்** *பார்த்து நீ சென்று இதனை அறிந்து...
வாயிற்புறத்து ஒரு பசு மணி எறியா நின்றது என்று சொல்ல அது கேட்டு
மநு புறப்பட்டு பசுவையும் பட்டுக் கிடந்த...படி வினவி தன் புத்ரன் ஏறின
தேரிலே பட்டமை அறிந்து அக்கன்றுக்கு நேராகத் தன் புத்ரன்* **ப்ரியவ்ருத்
தனைத்** *தேரிலே ஊர்ந்து குடுக்கவென்று உபயகுலாமலனுக்குச் சொல்ல அவன்
சந்தாபத்தோடும் புறப்பட்டுத் தன் செவிகளைத் தரையிலே குடைந்து
கொண்டு...துக்கிதனாய் மநு தானே புறப்பட்டு தன் புத்ரனை தானே தேரிலே
ஊர்ந்து குடுக்க அப்போதே நாம் அவனை அநுக்ரகித்துக் கன்றுக்கும் மந்திரிக்
கும் மநுபுத்ரனுக்கும் ஜீவன்குடுக்க அது கண்டு மநுசந்தோஷித்துக் கன்றினை
எடுத்துக் கொண்டு பசுவுக்கு காட்டிக்குடு...ாபிஷேகம் பண்ணி இவனுக்கு
உபயகுலாமலன் மகன்* **சூரியனை** *மந்திரியாக்கி இவனுக்குத் தன் புத்ரன்
மாளிகை...மங்கல...மூரும் குடுத்து மநுவும் உபயகுலாமலனும் தபசினைத் தலை
நின்றமையில் பாலையூர் உடையான் உபயகுலாமலன் வம்சத்தானகிய பாலையூர்
உடையார் சந்திரசேகரனதி விடங்கனான குலோத்துங்கசோழ மகாபலிவாண...
வம்சாதியாக வருகிற மாளிகைமனை பழயபடி மாளிகை ஆக எடுத்துக் குடிவைப்
பிப்பதாக நாம் சொல்ல...இதிலே நித்தமும் நம் அடியார்க்கு சோறு இடப்
பெறவேணுமென்று இவன் நமக்குச் சொன்னமையில் காட்டிப் பெறுவதாக
வும் இம்மாளிகை வம்சாதி ஆகஸ்வமாய் வரு...மாளிகையிலே எழுத்து வெட்டு
வித்துக் கொடுக்கவென்று........பாலையூருடைய உபயகுலாமலன் மநுவின்*

பக்கல் பெற்றுடைய மாளிகைமனை தனக்கும்...நாம் காணியாகத் தந்தோம். இம்மாளிகை பழ - ப...மனைநிலத்துக்கு கீழ்பாற் கெல்லை தூது...முடுக்குக்கு மேற்கும் தென்பாற்கெல்லை...வடக்கும் மேல்பாற்கெல்லை அருமொழீஸ்வர முடையார் தளிச்சேரி பால்நத்தத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை பாலையூருடையான் மாளிகைத்தெருவுக்குத் தெற்கும் இவ்விசைந்தபெருநான்கெல்லை நடவுட்பட்ட மாளிகைமனைகுழி நூற்றிருபதும் இப்பாலையூருடையான் சந்திர சேகரனுதிவிடங்கனுன குலோத்துங்கசோழ மகாபலிவாணராஜனுக்கு வம்சாதியாகஸ்வமானபடி ஸ்ரீமாகேஸ்வரர்க்கும் பதிபாதமூலப்பட்டுடை பஞ்சாசாரிய தேவ கன்மிகளுக்கும்......ர்க்கும் உடையார் வீதிவிடங்கதேவர் திருவாய்மொழி ......கல்வெட்டியது இது. பலமாகேஸ்வர......*

---

*குறிப்பு :—*S. I. I. Vol. V. No. 456*

அரசாங்கப்பதிப்பிற் கண்டபடி வேண்டிய அளவுமட்டும் எடுத்துத் திருத்தி யெழுதப் பெற்றது. இதில் மநுச்சரிதக்குறிப்பும், மந்திரியின் பேரும், மைந்தன் பேரும் காண்க. மநுஅரசரும் மந்திரியும் இச்சரித நிகழ்ச்சியின்பின் தவநிலை நின்ருர் என அறிகின்ருேம். இதனுல் இச்சரித உண்மையை அறிவதுடன் அந்நாள் சாசனங்கள் எழுதும் வழக்கும், முறையும், பிற வரலாறுகளும் அறிகின்ருேம். மநு சூரிய புத்திரன் என்றும், பசு சுரபி என்றும், மந்திரி பேர் இங்கணுட்டுப்பாலையூருடையான் **உபயகுலாமலன்** என்றும், மநுவின் மகன்பேர் **பிரியவிருத்தன்** என்றும், விக்கிரமசோழரது மந்திரியின்பேர் பாலையூர் உடையான் சந்திரசேகரனுதி விடங்கன் என்றும், இவர் உபயகுலாமலன் வம்சத்தில் வந்தவர் என்றும், மநு மந்திரிமகனுக்குத்தந்த மாளிகை விக்கிரமசோழர் காலத்தில் புதுப்பிக்க ஆணையிடப்பட்டதென்றும், அது 120 குழி அளவுள்ளதென்றும் அறிகின்ருேம். இதிற்கண்ட விக்கிரமசோழன் கி. பி. 1118 முதல் 1135 வரை அரசாண்டவர். இவர் மகன் இரண்டாவது **குலோத்துங்கச்சோழர் என்கிற அநபாயச்சோழர்**. இந்தச் சாசனம் 31-5-1123ஆ வெட்டப்பெற்றதாம். இச்சரிதம் விக்கிரமசோழர் காலத்தில் பிரசித்தமாய் வழங்கியதன்றியும், நடித்தும் காட்டப்பெற்றிருக்கவேண்டுமென்றும், இதிற் குறித்த பெயர்கள் சரிதம் நிகழ்ந்த பிற்காலத்து வந்து வழங்கியவைகளாயிருக்கக் கூடுமென்றும், சேக்கிழார் சுவாமிகள் இச்சரிதத்திற் றமது புராண நகரச்சிறப்புக்கு அவசியமானவற்றை மட்டும் கொண்டு கூறிப் போந்தனர் என்றும், சரித ஆசிரியர்கள் கருதுகின்ருர்கள். இங்கணுடு என்பது நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ள ஒரு பிரிவு. பாலையூர் என்பது மந்திரியின் ஊர். அக்காலத்து அரசர்கள் தம் தேவியர்களுடன் சிம்மாசனத்து வீற்றிருப்பது வழக்கம் என்றும் அறிகின்ருேம். மந்திரிக்குத் தந்த மாளிகை அளவு 120 குழி என்றமையால் அது ஏறக்குறைய அரை ஏகர் நிலமாகிறது. அந்நாளிலே பெரிய அளவுள்ள மனை நிலங்களின் இடையில் மாளிகைகள் அமைக்கப்பெற்றன என்று தெரியலாம். இதிற்குறித்த மனைநிலத்துக்குக் கீழ்பாற்கெல்லையில் **தூது** என்று (இதற்குமேல் தொடர்ந்த எழுத்துக்கள் சிதைந்துள்ளன) காண்பதால், தியாகேசர் ஆளுடைய நம்பிகள் பொருட்டுத் தூது நடந்த செய்தியைப்பற்றித் தெருப்பேர் வழங்கி வந்திருக்கும் என ஊகிக்க இடமிருக்கின்றது. பாலையூருடையான் மாளிகைத் தெரு என ஒரு தெருவின் பேர் காண்பதால் ஒரு தெருவில் வாழும் பெரியவர் பேரால் தெருவுக்குப் பேரிடும் வழக்கம் அந்நாளிலுமிருந்தது என்னலாம். கோயில் ஒழுங்கு முறைகளில் மாகேசுவரர்களுக்கு மிக மேலான கௌரவமும் இடமும் அளிக்கப் பெற்றதும் இந்தக் கல்வெட்டினுல் அறிகின்ருேம். மாகேசுவரர்களாவார் சிவாகம விதிப்படி உரிய சிவதீட்சைகள் பெற்றுச் சிவபூசையும் சிவநியமமும் உடைய சைவர்கள். இவர்களை மாகேசுவரர்களாகக் கொண்டு மாகேசுவர பூசை செய்யும் முறையும், விதிகளும் நூல்களுட் காண்க. அந்நாட் கல்வெட்டுக்கள், பன்மாகேசுவர ரட்சை என்று முடிவுபெறும் பெருவழக்கும் காண்க. பதி பாத மூலப் பட்டுடை பஞ்சாசாரிய தேவ கன்மிகள் என்போர் கோயிலில் அகம்படித் தொண்டு செய்து முப்போதுந் திருமேனி தீண்டுதற்குரிய ஆதி சைவர்கள்.

பசு ஆராய்ச்சிமணியைக் கொம்பினுல் அசைத்து அடித்தல்.

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவாத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினுற் புடைத்த தன்றே. (திருவாரூர்)

—வரிசை 112-ம் பாட்டு—பக்கம் 133.

மனுச்சோழர் தேரை மகன்மேற்செல ஊர்தல்.

ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
றருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்.

—வரிசை 129-ம் பாட்டு—பக்கம் 152.

காட்டுவதற்குச் சாட்சியாம். வேறு ஒரு நாட்டில் இவ்வித நிகழ்ச்சி நடைபெற்றிருந்தால் அந்நாட்டவர்கள் அந்த அடையாளங்களைப் பொன்வேலியிட்டுப் போற்றுவர்.

பசுவின் கன்றுக்குத் தம்மகனை ஈடாக்கித் தம் உயிர்போலவே உயர்வு தாழ்வின்றி மன்னுயிர் அனைத்தையும் மனுச்சோழர் காத்தமை எந்த நாட்டு எந்த மன்னரும் எந்த நாளும் படியெடுத் தொழுகற்பாலதாம்.

> "என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயவிசைந்தேன்
> அன்னியனோ ருயிர்கொன்றால் அவனைக்கொல் வேனானால்"

என்பது மிக உயர்ந்த குறிக்கோளை உலகுக்குக் காட்டி மலைமேல் விளக்குப்போல் நிற்கின்றது. இதனை எல்லா அரசாங்கத்தாரும் அதிகாரிகளும் மக்களும் கைக்கொண்டொழுகினால் நீதித்தவறு என்பது எங்கும் எப்போதும் நிகழவே நிகழாது. மனிதர்க்குள்ளும் வருண - நிற - பேதங்களால் நியாய பேதங் கற்பிக்கும் இந்நாள் மக்கள் இதனை ஊன்றி நோக்குவார்களாக.

(2) அன்றியும் தம் அவசர நிமித்தமோ உல்லாச நிமித்தமோ வேகமான இயந்திர வாகனங்களைத் தூர்த்தி மக்கள் முதலிய ஆயிரக் கணக்கான உயிர்களைத் தினமும் ஒரு சிறிது எண்ணமுமின்றிக் கொன்று ஒருகவலையுமின்றி வாழ்ந்துவரும் இந்நாள் மாக்களும் இதனை அழுந்திச் சிந்திப்பார்களாக. உண்ணுதற் பொருட்டு எண்ணிலாத பசுக்களையும் பசுக்கன்றுகளையும் ஏனைப் பிராணிகளையும் கொல்பவரும் கொல்விப்பவரும் இதனைச் சிந்திப்பார்களாயின் உலகிலே கொடுமையும் பாதகமும் நீங்கும்.

(3) தம் பரிசனங்களால் விளையும் துன்பங்களைப் போக்குதல் அரசர்களுக்கும் ஏனையோர்களுக்கும் மிகத் தகுதியான கடமையாம். எனவே, தமது பரிசனங்கள் செய்ததே சரியென்று தாங்குதல் அரசர்க்கும் பிறர்க்கும் நீதியன்று என்பதும் சிந்தித்துக் கடைப்பிடிக்கற்பாலது.

(4) இங்கு மனு அரசன் செலுத்திய நீதியை இந்நாளில் தற்செயலாய் நேரிட்ட மரணம் என்றும், சாமானிய ஒரு மிருக உயிர்க்காக இவ்வாறு செய்தது பித்துப் பிடித்த செயல் என்றும், பலவாறு கூறி, எள்ளி நகையாடி ஒதுக்குவர் அறியார். அந்தோ! உயர்ந்த ஞானமாகிய இந்தக் குறிக்கோளை உணர மாட்டாது தமது அறியாமைக்கு மகிழ்ந்து கிடக்கும் இவர்களது அறியாமையின் வலிமை இரங்கற்பாலதேயாம்.

(5) செங்கோன்மைச் சிறப்பு என்ற தலைப்பின் கீழ் ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பிற் சூசனத்திற் கண்ட பொருள்களையும் தொகுத்துக் காட்டியுள்ள அரும்பெரும் பிரமாணங்களையும் கண்டு தெளிதல் இவ்வுலக நிலையிலேயும் பெரும்பயன் தரும்.

கவனிக்க:—பாராயணஞ் செய்வோர் 18—48 பாட்டுக்களில் நிறுத்தி மேலே தொடங்கலாம்.

திருவாரூர்த் திருநகரச் சிறப்பு முற்றும்

திருக்கூட்டச் சிறப்பு

136. பூத நாயகர் புற்றிடங் கொண்டவர்
ஆதி தேவ ரமர்ந்தபூங் கோயிலிற்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்
மூதெ யிற்றிரு வாயின்முன் னுயைது.

இது தேவாசிரியன் உள்ள இடத்தைக் குறித்தது.

திருக்கூட்டச் சிறப்பு - மேற்பகுதியிலே முடித்துக் காட்டிய பூங்கோயிலிலுள்ள தேவாசிரிய மண்டபத்திலே எழுந்தருளிய அடியார் கூட்டத்தின் சிறப்பை உரைக்கும் பகுதி. இத்திருக்கூட்டத்தையே துதித்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை அருளினமையாலும், அத்தொகைபற்றியே இப்புராணம் எழுந்தமையாலும் இஃது நகரச் சிறப்பினை அடுத்து உரைக்கப்பட்டது. இது பாயிரத்தின் பகுதியாவதும் இதனாலே விளங்கும். இப்புராணத்தின் உள்ளுறையை இப்பகுதி குறித்ததாம். **திருக்கூட்டம்** - மற்றப் பிராணிகளின் தொகுதியை விலக்கி ஒருவருக்கு மேற்பட்ட மக்கள் கூடுவதே கூட்டம் எனப் பெறும். அதனிலும் "திருக்கோயில்", "திருவாசகம்" என்ற இடங்களிற்போல 'திரு' என்ற சிறப்பு அடைமொழியாலே, இது, ஏனைய மக்கட் கூட்டத்தை யெல்லாம் விலக்கிச், சிறப்புடைய சிவனடியார் கூட்டத்தையே குறிக்கும். 'திரு' என்பது 'சிவமே பெறுந்திரு' என்றும் பொருள் தரும். "நின்னன்பருள்ளாஞ் சிவமே பெறுந்திரு வெய்திற்றிலேன்" என்பது திருவாசகம். சிவத்தைத் தம் உள்ளத்தில் நிறுத்தி வழிபடும் அடியார் கூட்டமே திருக்கூட்டமாம். திருக்கூட்டம் சீவன்முத்த நிலையில் இன்றியமையாதெனச் சாத்திரம் பேசும். சிவஞானம் கைவரப்பெற்று வீடடைவதற்கு முன் அடியாருறவு பரபோகந் துய்ப்பதற்குச் சாதகமாகும். "தம்மை விடுத்து, ஆயும் பழைய வடியாரொடுங் கூட்டித், தோயும் பரபோகந் துய்ப்பித்து" எனவரும் குமரகுருபரரது திருவாக்குக் கருதத்தக்கது. "பழைய வடியாரொடுங் கூடாதென் னாயகமே" என்பது திருவாசகம். அவரது சிறப்பு - அவர்களுக்கே உரிய பெருமைக் குணங்கள்.

(இ - ள்) பூதநாயகர்...கோயிலில் - பூத நாயகராகியும்,புற்றில் இடங்கொண்டு வீற்றிருப்பவராயும், ஆதிதேவராயும் உள்ள இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கும் பூங்கோயில் என்னும் திருவாலயத்திலே ; சோதி...முன்னுயைது - விளக்கம் மிகுந்து பேரழகும் பேரொளியும் பொருந்திய திருமுற்றத்திலே மதிலின் திருவாயிலினை அடுத்து முதலில் உள்ளது (தேவாசிரியன்) ;

(விரை) "தேவாசிரியன்" என்னும் வரும் பாட்டிலுள்ள எழுவாய் இப்பாட்டிற்கும் பின்னர் மூன்றாவது திருப்பாட்டிற்கும் இடையிலே, சிங்கநோக்காக அமைந்து முன்னும் பின்னும் சென்று, தேவாசிரியன் - முன்னுயைது - போல்வது என இசைவதாம். மேலும் கீழும் உள்ள உலகங்கள் சேரும் இடம் என்பது குறிப்புப்போலும்.

பூத நாயகர் - பூதகணங்களின் தலைவர். "பூதபதயே நம" என்பது சிவ அட்டோத்தர வாக்கியம். இப்பூதங்களின் வலிமையும் சிறப்பும் முன்னர் வரிசை 16-வது திருப்பாட்டிலும் பிறவிடத்தும் பேசப்பெற்றது. அடியார்களே சிவகணங்களாவார் ; ஆதலின் அடியவர் கூட்டம் பூதபரம்பரை எனப்படும். "பூத பரம்பரை பொலிய" என்ற (திருஞான - புரா - 1) திருவாக்குங் காண்க. இது திருக்கூட்டச் சிறப்புக்கூறும் பகுதியாதலின் அத்திருக்கூட்டத்தின் தலைவர் என்பது தோன்ற முதலிலே "பூதநாயகர்" என்று கூறினார்.



பசு ஆராய்ச்சிமணியைக் கொம்பினுல் அசைத்து அடித்தல்.

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவாத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோன் மனுவின்பொற் கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினுற் புடைத்த தன்றே. (திருவாரூர்)

—வரிசை 112-ம் பாட்டு—பக்கம் 133.



மனுச்சோழர் தேரை மகன்மேற்செல ஊர்தல்.

ஒருமைமந்தன் றன்குலத்துக் குள்ளானெனன் பதுமுணரான்
றருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்.

—வரிசை 129-ம் பாட்டு—பக்கம் 152.

புற்றிடங் கொண்டவர் - வன்மீகநாதர். புற்றை இடமாகக் கொண்டு அதில் விளங்குபவர். இவரே "திருவாரூர்த் திருமூலட்டானனார்", "திருவாரூரில் திரு மூலட்டானத்து எம் செல்வன்" என்பனவாதி தேவாரங்களால் துதிக்கப் பெறுபவர். புற்றிடங்கொண்டு இறைவன் எழுந்தருளிய காரணத்தாலே இது பிருதிவி தலமாத லின் இச்சிறப்பை அடுத்துக் குறித்தவாறு.

ஆதி தேவர் - வரிசை 132 பாட்டிற் கூறிய 'யார்க்கும் முன்னவன்' என்ற கருத்துப் பற்றியது. 'அந்தம் ஆதி' என்னும் சாத்திரப் பிரமாணத்தின்படி ஒடுங்கு மிடமாயுள்ள ஆகாயதத்துவத்திலிருந்து மீளவும் மற்றவை எல்லாம் தோற்றுகின்றபடி யால் ஆகாயதத்துவ நிலையராய் இருந்து இவ்வாறு தோற்றுவிக்கின்ற இறைவனாகிய தில்லையம்பல வாணனை இது உள்ளுறையாகக் கருதியது. இதுபற்றியே புற்றிடங் கொண்ட பெருமான் இத்திருக்கூட்டத்தைப் பாடுகின்ற பாட்டிற்குத் 'தில்லைவாழ் அந் தணர்தம் அடியார்க்கு மடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தார் என்பர். ஆதலின் 'புற்றிடங் கொண்டவர்' என்றதற்கு அடுத்தபடி 'ஆதிதேவர்' என்று குறிப்பித்தவாறு. முதல் தத்துவம் பிருதிவி யாதலால் ஆதிதேவர் என்றார் - எனவும் கூறுவர்.

சோதி மாமணி நீள் சுடர் முன்றில் - **மாமணி** - பேரழகு. **நீள்சுடர்** - பேர் ஒளி. சோதியே ! சுடரே !! சூழ் ஒளிவிளக்கே !!! என்ற திருவாசகம் இங்கே நினைவுகூரத் தக்கது. மணிகளின் ஒளிபரப்பும் திருமுற்றம் என்பாருமுளர். திருமுற்றமாவது தன் னியல்பிலே பிரகாசிப்பதாம். அதிற்கிடக்கும் மணிகள் பருக்கைக்கற்களோடு ஒப்ப எடுத்து எறியத்தக்கன என்று அப்பர் சுவாமிகள் புராணத்தால் அறிகின்றோம். இல்+ முன் - என்றது முன்றில் என வந்தது.

எயில் - மதில். **மூதெயில்** - பழமையான மதில் என்க - தொன்னகரத்தின் தொல் கோயில் ஆதலின் அதற்கேற்ப எயிலையும் மூதெயில் என்றார். 'தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்' என்ற திருவாக்குங் காண்க.

மூதெயில்...முன்னுயது - மதில் திருவாயிலை அடுத்து முன்புறம் உள்ளது. திரு வாயிலைக் கடந்து உட்சென்றவுடன் காணப் பெறுவதும், தரிசிக்க வேண்டுவதும் இது வாம், என்பார் **முன் ஆயது** என்றார்.

முன்னுனது—என்பதும் பாடம். 1

137. பூவார் திசைமுக னிந்திரன் பூமிசை
மாவா முகலத்து மான்முத லானவர்
ஓவா தெவரு நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரிய னெனுந்திருக் காவணம். உ

தேவாசிரியன் என்ற பேர்க்காரணத்தைக் குறித்தது

(இ - ள்) பூவார்......வானவர் - தாமரையில் இருக்கும் பிரமதேவனும், இந்திர னும், இலக்குமியைத் தன் மார்பின்மீது வைத்திருக்கும் விட்டுணுமூர்த்தி முதலிய தேவர்களும் ; ஓவாது...காவணம் - எல்லாரும் நீங்காது நிறைந்து உறைவதற்கு இடமா யுள்ளது 'தேவாசிரியன்' என்னும் பெயருடைய திருமண்டபமாம்.

(வி - ரை) **பூவார் திசைமுகன்** - **பூவார்** - பூ+ஆர் - பூவில் பொருந்திய. தாமரைப் பூவைத் தான் இருக்கும் ஆசனமாகக் கொண்ட. "பூவாய பீடத்தான்"—தேவாரம். பூ என்ற பொதுப்பெயர், வேறுஅடைமொழியில்லாத போழ்து சிறப்புப்பற்றிப் பூக்களிற் சிறந்ததாகிய தாமரையையே குறிக்கும் - பின்னர்ப் 'பூமிசை' என்பதையும் இவ்வாறே கொள்க.

திசைமுகன்-திசைக்கு ஒவ்வொன்றாக நான்குதிசைக்கும் நான்கு முகங்கள் கொண் டவன். நான்முகன் - பிரமன் . பிரமதேவன், தான்படைத்த திலோத்தமை என்னும்

பெண்ணின் அழகைக் காண்பதற்காக நான்கு திசைகளிலும் நான்கு முகங்களைப் பெற்ற கதை புராணங்களுட் கேட்கப் பெறும்.

“ எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவ ளெழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தாற் கண்டான்.''

என்ற திருஞான - புரா - 1109-வது பாட்டுங் காண்க.

பூமிசை - மாவாழ் - அகலத்துமால் - செந்தாமரைப் பூவிலிருக்கும் இலக்குமி வாழுதற் கிடமாகக்கொண்ட மார்பினையுடைய விட்டுணுமூர்த்தி. பூ என்றது இடத்தை நோக்கிச் செந்தாமரையைக் குறித்தது. விட்டுணு தன் தேவியாகிய இலக்குமியை மார்பில் வைத்திருக்கின்றார் என்பது மரபு. இதனையே “பங்கயத்திருந்த பொன்னை ஆகத்தில் ஒருவன் வைத்தான்” என்றார் கம்பர்.

வானவர் எவரும் ஓவாது - என்று மாறிக் கூட்டுக. **ஓவாது** - எப்போதும் நீங்காது. **ஓவுதல்** - நீங்குதல். **நிறைந்து உறைந்து உள்ளது** - நிறைந்தும் உறைந்தும் இருத்தற் கிடமாயுள்ளது. **உறைதல்** - நீடித்துத் தங்குதல்.

உள்ளது தேவாசிரியன் எனும் - உள்ளது; ஆதலின் தேவாசிரியன் எனப் பெறும்; **தேவாசிரியன்** - தேவர்கள் ஆசிரயித்து இருப்பதற்கு இடமாயுள்ளது. அவர் களுக்கு ஆசிரியத் தன்மை பூண்டது. **காவணம்** - மண்டபம்

“ நூறு கோடி பிரமர்கள் நொங்கினர்;
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே ;
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர் ;
ஈறி லாதவ னீச னொருவனே ”

என்பன வாதி திருவாக்குக்களால் அறிகின்றபடி தேவபதங்களெல்லாம் அழியுந்தன்மை யுடையன ; துன்பங்களோடுங் கூடியன. ஆனால் அன்பர்களோ எக்காலத்தும் அழியாத தன்மை பெற்று இன்பத்துடனே இருப்பவர். “இன்பமே எந்நாளுந் துன்பமில்லை”, “அன்பினால் இன்பமார்வார்”. ஆதலின் இவர்களை அடுத்துப் பயன்பெற வேண்டியவர் கள் தேவர்களும் யாவர்களுமாம். அன்றியும் இவர்களது ஏவல்வழி நிற்கவேண்டியவர்கள்.

“ ....வாய்தல் பற்றித்
துன்றி நின்றார் தொல்லை வானவ ரீட்டம் பணியறிவான்
வந்து நின்றார் அயனுந் திருமாலும்...''—அப்பர் சுவாமிகள் தேவாரம்.

இறைவனுடைய திருவாயிலின்முன் காலம்பார்த்துக் காத்திருப்பவர்கள் தேவர்களாவார். அதுபோலவே இறைவனது தன்மையைப் பெற்ற அடியவர்கள் கூடி நிறைந்துள்ள தேவாசிரியன் திருவாயிலிலும் அவர்கள் காத்திருக்கவேண்டிய நியதியும் காண்க.

சோழ நாட்டையும் அதன் பின்னர் அதனுடைய திருவாரூர்த் திருநகரத்தையும் அதன்பின்னர் அந்நகரத்திலுள்ள பூங்கோயிலையும் முறையே காட்டி நம்மைத் தரிசிக்கச் செய்தார் ஆசிரியர். பின்னர்த் தேவாசிரியனையும் காட்டி அதற்கு அப்பெயர் போந்த காரணத்தை அறிவிக்கும் வகையாலே அந்த முறையிலே திருவாயிலில் காத்திருக்கும் தேவர்களைக் காட்டி, உள்ளே அழைத்துச் சென்று அங்கு எழுந்தருளி யிருக்கும் அடி யார்களுடைய தன்மையையும் ஆசிரியர் அறிவித்து அவர்களை நாம் வணங்கும்படி செய்கின்ற முறையையும் காண்க. மேலும் இந்திரன் முதலியோரது பதவிகளை எல்லாம் வெறுத்து ஒதுக்கியவர்கள் இங்கு உள்ளே கூடியிருக்கும் அடியார்கள் என்று அவர்க ளுடைய இயல்பினை முகவுரை ஆக அறிவித்தபடியுமாம். ‘ வீடும் வேண்டா விறலின் விளங்கினர் ’ என்று பின்னர் முடித்துக் காட்டியதையுங் காண்க. 2

138. அரந்தை தீர்க்கு மடியவர் மேனிமே
னிரந்த நீற்றொளி யானிறை தூய்மையாற்

புரந்த வஞ்செழுத் தோசை பொலிதலாற்
பரந்த வாயிரம் பாற்கடல் போல்வது. ங

(இ - ள்) அரந்தை தீர்க்கும்...நீற்றொளியால் - (தேவாசிரியன்) உயிர்களுக்குத் துன்பத்தைப் போக்கும் உபகாரிகளாகிய அங்கு நிறைந்த அடியவர்கள் திருமேனி மேல் ஒழுங்குபெற அணிந்த திருநீற்றின் வெள்ளிய ஒளியாலும் ; நிறை தூய்மையால் - (அவ்வடியவர்கள் மனத்திலே) நிறைந்த பரிசுத்தத்தினாலும் ; புரந்த......பொலிதலால்- (உயிர்களைக்) காக்கவல்லதாய் (அவர்கள் திருவாக்கில் நின்றெழுகின்ற) திருஐந்தெழுத்தின் ஒலி எங்கும் பொருந்துதலாலும் ; பரந்த...போல்வது - பரப்பினையுடைய அநேகம் பாற்கடல்கள் ஒன்று சேர்ந்து உள்ளது போன்றது.

(வி - ரை) தேவாசிரியன் என்னும் எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவிக்க. தேவாசிரியன் - நீற்றொளியால் - தூய்மையால் - ஓசைபொலிதலால் - பாற்கடல் போல்வது என முடிக்க.

அனபாயருடைய திருமனத்தைத் திருக்கைலாயத்திற்கு ஒப்புமை சொல்கின்ற இடத்து, வரிசை - 22-ம் பாட்டில் "தன்மையினாலும் - பெருமையினாலும் - தன்மையினாலும்" என்று தனித்தனிப் பிரித்துக் காட்டியதுபோல, நீற்றொளியால், தூய்மையால், பொலிதலால் என இங்கும் ஆசிரியர் விளக்கியது காணத்தக்கது. மயக்கம் நிகழத்தகாத இடங்களில் சிறிதும் ஐயம் உண்டாகாதபடி தேற்றிக் காட்டுவது ஆசிரியரின் விளங்க வைத்தல் என்னும் சிறப்பு இயல்பு. அடியவர் **மேனிமேல் நீற்றொளி** என்று கூறியதால், அதற்கேற்ப அடியவர் **மனத்துள்** நிறைதூய்மை என்றும், அவர்கள் **வாக்கிற்** பொலி ஓசை என்றும் வருவித்துக் கொள்ளப்பெற்றது. இவை முறையே அவர்களது காயம், மனம், வாக்குக்களின் பொலிவைக் குறிப்பனவாம்.

அரந்தை தீர்க்கும் அடியவர்-தம்மை அடைந்து வழிபடுபவர்க்குத் துன்பங்களின் மிக்க பிறவித் துன்பம் நீங்க உபகரிப்பவர் அடியவராதலின் **தீர்க்கும்** என்றார். **தீர்க்கும் அடி** என்று அடிக்கு அடைமொழியாக்கியும் உரைப்பர். **தீர்க்கும் நீறு** என்றுமுரைப்பர்.

அரந்தை - வலிய துன்பம்; அல்லது பெருந்துன்பம். இங்குப் பிறவித் துன்பத்தைக் குறித்தது. இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றுச் சீவன் முத்தர்களாகிய பெரியோர்களுக்கும் சிவானுபவ நிட்டை நீங்கியபோது ஒரொருகால் உலகத் தோற்றம் உண்டாகும். அப்போது முன்பழக்கவாசனை வசத்தினாலே ஆணவமலம் வந்து தாக்கும். அக்காலத்தில் உடனிருந்து காத்து உபகரிப்பவர்கள் அடியார்களேயாம் என்பது சிவஞானபோதம் 12-ம் சூத்திரத்துக் காட்டிய உண்மை. இக்கருத்துப் பற்றியே மாணிக்கவாசக சுவாமிகள் "அத்தன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே" என்று அருளினார். சீவன்முத்த ஆன்மாக்களுக்கே இவ்வடியவர்கள் உபகரிப்பவர்களென்றால், ஏனைய சாமான்ய ஆன்மாக்களுக்கு இவர்கள் செய்யும் பேருபகாரம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

தீர்க்கும் - வாராமற் பாதுகாக்கும் என்னும் பொருள்பற்றியது. வாராமலே காக்கவல்லவர் எனவே, வந்தபோதும் எளிதிற் காக்கவல்லவர் என்பதும் பெறப்படும். அடியடைதலால் தீர்த்துக்கொள்ளும் என்று பொருள் கூறுவாருமுண்டு.

நிரந்த நீற்று ஒளியால் - **நிரந்த நீறு** - நிரல்பட - ஒழுங்குபெற - பூசிய திருநீறு. அதாவது சிவாகமங்களில் கூறியபடி விதித்த தானங்களிலும், விதித்த அளவிலும், அணிந்த என்பதாம். உச்சி - நெற்றி - மார்பு முதலியவை தானங்கள். நெற்றி - தோள் - மார்பு இவற்றில் ஆறு அங்குலங்களாகவும், உச்சி - கை - முழங்கால் முதலிய இடங்களில் ஒவ்வோரங்குலமாகவும் அணிதல் அளவு எனப்பெறும். திரிபுண்டரமாக அணிதல் - உத்தூளனமாக அணிதல் முதலியவை அணியும்வகை என்பர். இவ்வாறு விதித்த இயல்பிலே விதித்த காலங்களிலே நீறு தரிப்பவர் அடியவர் என்க.

நீற்று ஒளி - திருநீற்றினால் ஆகிய ஒளி. வெண்ணீறே அணியப்பெறுவதாதலின் அவ்வொளி வெண்மையுடையதாம். "புண்ணியர் பூசும் வெண்ணீறு" என்பது வேதம். நீற்றின் வெண்மை பாலின் வெண்மை போன்றுள்ளது. ஆதலின் நீற்றொளி பாற்கடலுக்கு உவமேயமாயிற்று. "...பால் **வெண்ணீறும்**" என்ற அப்பர் சுவாமிகளது கோயிற்றிருவிருத்தத்தையுங் காண்க. (கருமை - செம்மை முதலிய நிறமுடைய நீறு விலக்கப் பெறுவது.)

நிறை தூய்மை-அடியவர் உள்ளத்தே பிறவற்றிற்கு இடந்தராது முழுதும் நிறைந்த பரிசுத்தத் தன்மை. இது அகத்தூய்மை. இது வாய்மையாற் காணப்படும் என்ப. வாய்மை - வாயின் தன்மையாம். வாயின் தன்மையாவது இறைவனை வாழ்த்தி அவன் நாமத்தைப் பரவுதலாம். "நமச்சிவாய வாழ்க" என்று மாணிக்கவாசக சுவாமிகள் அருளியபடி வாழ்த்துதலாவது அவனது திருவைந்தெழுத்தை ஓதுதலேயாம். எனவே, இது அகம் தூய்மையினைக் காட்டும் அடையாளமாகலின் **புரந்த ஐந்தெழுத்தோசை** என்று அடுத்துக் கூறினார். "பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்" என்பதுங் காண்க. மனத்தைத் தூய்மை செய்யும் முறையினை,

"கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாங்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்
பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தைநீ யிருக்க விட்டனன்..."

எனப் பட்டினத்தடிகள் (திருக்கழுமல மும்மணிக்கோவை) விதந்தோதினது காண்க.

பாற்கடலின் **தூய்மை** - இறைவனுடைய தூய திருமஞ்சனத்திற்கு உதவும் சாதி பற்றிப் பாலும் தூய்மையுடையதாம்.

புரந்த அஞ்செழுத்து-உயிர்களைச் சென்ம நோயினின்றும் காத்துவரும் மகாமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்கரம் என்க. மந்திரம் என்பது காப்பது - இரட்சிப்பது - என்னும் பொருளுடையது. இது மகாமந்திரமாகலின் மந்திரங்களினுடைய தன்மையாகிய காத்தல் சிறக்கப்பெற்றது என்பார் **புரந்த அஞ்செழுத்து** என்றார். காக்குந் தன்மை ஒரு மந்திரத்திற்கு உண்டு எனில் அது இதன் தன்மையேயாம்; இது எல்லா மந்திரங்களுக்கும் மேலானதும் ஆதியாயதுமாம் என்பது,

"ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே"—(திருஞா - புரா - 698)

என்ற இடத்துத் தேற்றம் பெற எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். தெப்பம் போன்று பிறவிக்கடலில் ஆழாமற் காக்கின்ற செயலையுடையதாதலின் புணை என்றும் கூறுவர். "அஞ்செழுத்தின் புணைபிடித்து" என்பது திருவாசகம்,

"வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லாம்
நம்புசிவ நாமமெனும் நற்புணை பிடித்தால்
எம்பர னருட்கரை யேறுதுறை யாமால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை யதன்பேர்"

எனத் திருவாதவூரர் புராணம் போற்றியிருத்தலும் காண்க.

அஞ்செழுத்து - காரணம், சூக்குமம், தூலம் என மூன்றாகவும், இன்னும் பலவேறு வகையாகவும் சொல்லப்பெறும். இதன் இயல்புகளைத் திருவாசகம், திருமூலர் திருமந்திரம், மூவர் முதலிகளது தேவாரப் பஞ்சாக்கரப் பதிகங்கள் முதலிய தமிழ் மறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்கள் முதலிய அருள்நூல்களும் எடுத்துப் பேசுவனவாம். இவற்றின் விரிவுகளை நல்லாசிரியரை அடுத்து முறையாய்த் தெரிந்துகொள்க.

நடேசப்பெருமானின் அருள் நடனம் திருவைந்தெழுத்தின் அருள்நிலையே அமைந்தது என்ப. பஞ்சாக்கரத் திருப்பதிகத்தாலே சம்பந்த சுவாமிகள் திருநல்லூர்ப் பெருமணத்திலே, அதைக் கேட்ட ஆன்மாக்கள் அனைவரையும் பிறவியில் வாராமற் செய்து முத்தியிற் செலுத்தி யருளினர். பஞ்சாக்கரத் திருப்பதிகத்தாலே திருநாவுக்கரசு சுவாமிகள் பாசக்கயிறு அறுபட்டுக் கல்லே தெப்பமாகக் கொண்டு கடலினின்றும் கரை சேர்ந்தருளினார். இவையும் மற்ற சரிதங்களும் இங்குப் **புரந்த** என்ற இடத்து நினைவு கூர்தற்பாலன.

"காத லாகிக் கசிந்துகண் ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது"—**திருஞா - தேவாரம்**

"வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து........."

என்று ஆசிரியர் எடுத்துக் காட்டித் தெளிக்கும் தன்மையுங் காண்க.

ஓசை - தனித்தனி ஒவ்வொருவரும் எண்ணிச் சொல்லும்போது ஒலி உருவமாய் நின்ற அந்த மகாமந்திரம் பலர் சொல்லும்போது விரவி ஓசைத் தன்மையில் வரும். ஆதலின் ஓசை என்றார். பாற்கடலின் ஓசை அதனுடைய அலைகளால் ஆயிற்று.

ஆயிரம் - அநேகம் - எண்ணிறந்த - என்பது பொருளாம். அடியவர் ஒவ்வொருவரும் நீற்றொளியும், தூய்மையும், ஓசையும் உடைமையால் ஒவ்வொரு பாற்கடல் போன்றவராவர். ஆதலின் அனேகம் அடியார்கள் உள்ள இக்காரணம் பற்றி அநேகம் பாற்கடல்கள் போன்றிருந்தனர் என்று குறித்தார். பாற்கடலில் பள்ளிகொள்ளும் விட்டுணுவினது உள்ளத்தில் வீற்றிருப்பவராதலாலும் அம்முறையே பாற்கடலிற்றங்குபவராதலின், பாற்கடல்கள்போல் விளங்காநின்றவர்களாகிய அடியவருள்ளங்களில் தங்குபவர் இறைவன் என்பதும் குறிப்பாம். 3

139. அகில காரணர் தாள்பணி வார்கடாம்
அகில லோகமு மாளற் குரியரென்
றகில லோகத்து ளார்க ளடைதலின்
அகில லோகமும் போல்வ ததனிடை. ௪

(இ - ள்) அகில காரணர்...என்று - எல்லா உலகங்களுக்கும் கர்த்தாவாயுள்ள சிவபெருமானது திருவடிகளையே பற்றாகப் பணிபவராய் இங்கு எழுந்தருளியிருக்கும் அடியார்களே எல்லா வுலகங்களையும் ஆட்சி செய்தற்கு உரியார் என்ற காரணத்தால்; அகில லோகத்து......அதன் இடை - எல்லா உலகத்துள்ளார்களும் அவர்களது ஆட்சிக்குள் அமைந்து வணங்க இங்கே வந்து அடைகின்றார்கள். ஆதலின் அத்தேவாசிரியனின் இடமானது எல்லா வுலகங்களையும் ஒன்று சேர்த்தது போன்றுளது.

(வி - ரை) அகில காரணர் - மேல் - கீழ் - நடு ஆகிய எல்லா உலகமும் தோன்றி நின்று ஒடுங்குதற்குக் காரணமாயுள்ளவர் சிவபெருமான். இங்குக் காரணர் என்பது நிமித்த காரணரா யிருக்கும் தன்மையை. "ஒடுங்கி மலத்து உளதாம் அந்த மாதி" முதலிய சித்தாந்த உண்மைகளை இங்கு வைத்துக் காண்க.

பிரமதேவர் சிருட்டி கருத்தா என்பது முதலாகச் சொல்லப் பெறுவது உபசார வழக்கு. இவை ஐந்து தொழில்களும் ஒரே மத்தியமுள்ளனவாகி ஒன்றற்கொன்று விரிந்த ஐந்து சக்கரங்கள் போல உள்ளன என்று "பஞ்சேஹாரே" எனும் வேதவாக்கியம் உணர்த்தும். வெளியே விரிந்து மற்றவற்றை உள்ளடக்கியது சதாசிவ சக்கரம். சதாசிவ மூர்த்தியே இவ்வைந்தொழில் அதிகாரமும் தமக்குள் வைத்துப் பிரமதேவராகிச் சிருட்டித்தொழிலும், விட்டுணுவாகிக் காத்தற் றொழிலும் முதலியவை செய்பவராம். இப்பொருளைத் திருஞான சம்பந்த சுவாமிகளது திருச்சிவபுரம் நட்டபாடைத் திருவிராகப் பதிகம் 1 - 2 - 3 திருப்பாசுரங்களில் விரிவாய்க் காணலாம்.

பணிவார்கள் - ஆளற்குரியர் -

" வானகம் ஆண்டு மந்தாகினி.........", "உலகா ளுறுவீர் தொழுமின்........."

—பதினோராந் திருமுறை - பொன்வண்ணத்தந்தாதி - 12 - 14

என்பனவாதி திருவாக்குக்கள் இங்குவைத்துக் காணத் தக்கன.

தாள் பணிவார்களே உலகாளுதற்கு உரியார் என்ற இக்கருத்தை மூர்த்தி நாயனார் புராணத்திலே "நிலங் காவலுக்கு உரிய அரசனைக் கொண்டு வருக !" என்று ஏவிக் கண்கட்டி விடப்பெற்ற யானை மூர்த்திநாயனாரைத் தன் பிடரியிலேற்றிக்கொண்டு வந்தமையாலும், அவர் திருநீறு - கண்டிகை - சடைமுடி - ஆகிய மூன்று பொருள்களின் துணைகொண்டு ஆண்டமையாலும், பிறவாற்றாலும் அறியலாம். இக்கருத்தே கழறிற்றறிவார் புராணத்தும் பிறவிடத்தும் பெறப்படுதல் காண்க. செங்கோல் முடிமன்னன் ஆணையைத் தேடி அடைந்து அவன் குடைக்கீழ்ச் சிறுமன்னரும் குடிகளும் ஒதுங்குதல் போல இவ்வடியார்களை எல்லா உலகத்தார்களும் அடைவர் என்பதாம்.

அதன் இடை அகில லோகமும் போல்வது என்று கூட்டுக. அக்காவணத்தின் இடைவெளியெல்லாம் எல்லா உலகமும் சேர்ந்து குழுமியதுபோல்வது என்க.

இடை - பெயர். இடைவெளியான இடப்பரப்பு என்ற பொருளில் வந்தது. தேவாசிரியனை மேற்பாட்டிலே "ஆயிரம் பாற்கடல் போல்வது" என்ற ஆசிரியர் இப்பாட்டிலே அதன் இடை எங்கும் அக்கடல்களாற் சூழப்பெறும் உலகங்கள் என்றார்.

தாள் பணிவார் - திருவடியின் நிலையர்களாகிய அடியார்கள் என்றபடி. **அகில லோகமும் ஆளுதல்** - உலகில் எல்லா உயிர்களின்மேலும் வைத்த கருணை நோக்கத்தால் அவர்களைத் தீமையினின்றும் பாதுகாத்து நல்வழிச் செலுத்துதல். "ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே சூழ்க ; வையகமுந் துயர் தீர்க" முதலியவை காண்க. 4

140. அத்தர் வேண்டிமுன் னுண்டவ ரன்பினுன்
மெய்த்த வைந்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினர்
இத்தி றத்தவ ரன்றியு மெண்ணிலார்.

141. மாசி லாத மணிதிகழ் மேனிமேற்
பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்க
டேசி னுலெத் திசையும் விளக்கினர்
பேச வொண்ணப் பெருமை பிறங்கினர்.

இதுமுதல் 6 பாட்டுக்கள் அடியார்களினியல்புகளை வகைப்படுத்திக் கூறுவன.

140. (இ - ள்) அத்தர்...ஆண்டவர் - (இங்கு எழுந்தருளியுள்ள அடியார்கள்) உலகத் தந்தையராகிய சிவபெருமானால் விரும்பி முன்னே ஆட்கொள்ளப்பெற்றவர்கள் ; அன்பினால்...சிந்தையார் - அன்பு மேலீட்டினாலே தம்மேனியில் மயிர்ப்புளகமும் உடற்கம்பமும் நிகழும்படியான மனக் கசிவுள்ளவர்கள் ; கை...கடப்பாட்டினார் - தமது கடமையாகவே கொண்டு கைத்தொண்டு செய்பவர் ; இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார் - இத்தன்மை உடையவர்களுடன் எண்ணிலாத அடியார்கள், (ரு)

141. (இ - ள்) மாசிலாத...புனிதர்கள் - குற்றமற்ற உருத்திராக்கம் பூண்ட தமது திருமேனியிலே மேலே பூசிய திருநீற்றின் தூய்மைபோலவே உள்ளும் புனிதத்தன்மை வாய்ந்தவர்களாம் ; தேசினால்...விளக்கினார் - இவர்கள் தமது ஒளியினால் எவ்வுலகங்களையும் விளக்கஞ் செய்வார்கள் ; பேச...பிறங்கினார் - ஆதலின் இவ்வளவென்று வரையறுத்து வாக்கினாற் கூறமுடியாத பெருமையில் விளங்குபவர்கள். (சு)

140. (வி - ரை) அத்தர் - தந்தை. உலகத்தின் தோற்றம், நிலை, ஒடுக்கங்கட்குக் காரணராதல்பற்றி அத்தர் என்றார். "அத்தர் பியன்மேலிருந்து இன்னிசையா லுரைத்த பனுவல்" என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

வேண்டி முன் ஆண்டவர் - உலகத் தந்தையாராகலின் உலகரை வழிப்படுத்த வேண்டி உலகர் முன்னே வெளிப்பட ஆட்கொள்ளப் பெற்றவர்.

"......................தொண்டரை விளக்கங் காண
நன்னெறி யிதுவா மென்று ஞாலத்தோர் விரும்பி யுய்ய
மந்நெறி காட்டு மாற்றல் அருட்சிவ யோகி யாகி."
—திருநீலகண்ட நாயனார் புராணம் - 10

"........மாயை வண்ணமே கொண்டுதந் தொண்டர்
மறாத வண்ணமுங் காட்டுவான் வந்தார்." —இயற்பகை புரா - 4

"செல்வ மேவிய நாளி விச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்ல னல்குர வான போதினும் வல்ல ரென்றறி விக்கவே."—இளையா-புரா-6

என்பனவாதி திருவாக்குக்களினால் இத்திருக் கூட்டத்திலே உள்ள அடியார்களை அத்தர் வெளிப்பட ஆண்டது அவர்களது பெருமையைக் காட்டி உலகவர்களை வழிப் படுத்த வேண்டியே என்பது விளங்கும். ஆண்டவர் - ஆட்கொள்ளப்பெற்றவர் என்று பிறவினைப் பொருளில் வந்தது. "அகலிடத்தவர் முன் ஆளதாக" என்பது சுந்தரர் தேவாரம்.

அன்பினால் - ஆளாகக் கொண்டதாற் பொங்கி எழுகின்ற அன்பு காரணமாக. அன்பினால் ஆண்டவர் என்றும், அன்பினால் தழைந்து என்றும் ஈரிடத்தும் கூட்டி உரைப்பதுமாம்.

மெய்த் தழைந்து - மெய் - மேனி. தழைந்து - விதிர்ப்பினால் மயிர்க் கூச்செறிந்து பொங்கி. மெய் விதிர்த்தல் - உடல் நடுக்கம் உண்டாதல் ; அன்பு மேலீட்டால் உண்டாகும் மெய்ப்பாடுகளில் ஒன்று. "மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து"—திருவாசகம். விதிர்ப்புறு சிந்தையார் - அன்பின் நிறைவினால் உடலிலே தழைத்த அசைவை உறச் செய்யும் சிந்தையுடையார் என்க. "திருமேனி தன்னில் அசைவும்" என்றுபின்னர்க் கூறுதலுங் காண்க. இவ்விளைவுகளின் தன்மையை,

"...ஐயனார்க் காளாகி யன்புமிக்கு அகங்குழைந்து
மெய்யரும்பி அடிகள்பாதங் கையினாற்றொழும் அடியார்..."

என்ற திருத்தாண்டகத்தால் அறிக.

கைத் திருத்தொண்டு-உழவாரப்பணிவிடை செய்தல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தனவனம் வைத்தல், திருமாலை கட்டுதல் முதலான கைத் திருத்தொண்டு செய்தல். இவை சரியையின்பாற் படும். இதனை "நிலைபெறுமா றெண்ணுதியேல்" எனும் திருத்தாண்டகத்தில் அருளினார் அப்பர் சுவாமிகள்.

கடப்பாடு - கையினாலும் மெய்யினாலும் செய்யும் கடமைப்பாடு. "கைகாள் கூப்பித் தொழீர்", "தலையே நீ வணங்காய்" முதலிய திருவாக்குக்களிற் கண்டபடி அந்தந்த அவயவங்களின் கடமையை நிறைவேற்றல்.

திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய பெரியார் பலரும் கைத் திருத்தொண்டு செய்தல் கை முதலிய புறக் கரணங்களைச் சிவத்திலே தொழிற்படுத்தலாகிய கடமையை நோக்கியே யல்லது இப்பெரியார்கள் சரியை மட்டில் நிற்பவர்கள் என்று கொள்ளற்க என்னும் கருத்தை வைத்துக் **கடப்பாட்டினார்** என்றார். சீவன்முத்தர்களுக்குச் சிவாலய சேவை விதித்த சிவஞானபோதம் 12 - ம் சூத்திரத்தின் கருத்தை நோக்குக. அன்றியும் **கடப்பாடு** என்றதனால் இவர்கள் கைத்தொண்டு செய்தல் ஒரு பலனையும் விரும்பியன்று என்பதும் பெறும். "என்கடன் பணிசெய்து கிடப்பதே"—தேவாரம். "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே"—திருவாசகம். இங்ஙனம் தொண்டு செய்வோர் ஒரு பலனையும் விரும்பிச் செய்யாவிடினும், "செய்வினையும் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும், மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்..." என்று சாக்கிய நாயனார் புராணத்தில் அறிகின்றபடி இவர் செய்யும் கைத்தொண்டுக்கு உரிய பலன் இறைவனால் தரப்பெறுவதாம். இதனையே "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகள், முன்னர் "தன்கடன் அடியேனையுந் தாங்குதல்" என்றருளினார். அவன் தாங்குதலால் பணிசெய்வோம் என்றும், பணிசெய்தலால் தாங்குவன் என்றும் இருவகையும் ஆம். கைத்தொண்டின் பயனைப் "பெரும்புலர் காலை மூழ்கி" எனவும், "விளக்கினார்பெற்ற இன்பம்" எனவும் வரும் அப்பர் சுவாமிகள் தேவாரங்களாலும் பிறவாற்றானும் அறிக. "கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்" எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் பாராட்டியதும் காண்க. இத்தொண்டின் சிறப்பினாலே திருவீழிமிழலையில் அப்பர் சுவாமிகள் வாசியில்லாக் காசு பெற்றனர் என்பதையும் இங்கு நினைப்போமாக.

> "...கைத்தொண்டாகும் அடிமையினால்
> வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்..."—திருநா - புரா - 260

எண்ணிலார் - இப்பாட்டுக் குளகமாய் "எண்ணிலார்" என்னும் எழுவாய் "புனிதர்கள்" என்னும் பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்தது.

"அத்தர் வேண்டி முன் ஆண்டவர்" என்பதற்குச் சிவபெருமானால் விருப்பத்தினாலே முற்காலத்தே ஆட்கொள்ளப் பெற்றவர்கள் என்பாருமுண்டு. "......உறழ்ந்த கல்வி யுடையானும் ஒருவன் வேண்டும் என இருந்து, துறந்த முனிவர் தொழும் பரவைத் துணைவாகினைத் தோழமை கொண்டான்" என்றும், "...பாடும் பணிநீ கூடும்பொருட்டு...நின்னைத் தொண்டனென்னக் கொண்டனன்" என்றும் வருவன வாதி பாட்டுக்களை நோக்கி இவ்வாறு கூறுவர். இது உபசார வழக்கென்க, எல்லா உயிர்களையும் இறைவன் விரும்பி ஆட்கொள்வான் ஆதலால். 5

141. (வி - ரை) **மாசிலாத மணிதிகழ் மேனி** - மாசிலாத மேனி என்று கூட்டுக. மாசிலாத மணி என்று மணியுடன் கூட்டியுரைப்பதுமாம். தன்னைப் பூண்டவர்களது மாசுகளை இல்லையாகச் செய்யும் என்க. அடியவர் திருமேனியில் விளங்கியபோது மணியானது தனது இயல்பாகிய தூய விளக்கத்தின் மேலாயது - என்பார் **மணிதிகழ் மேனி** என்றார் - மணி திகழ்தற்கு இடமாகிய மேனி. **மணி** - உருத்திராக்கமணி ; உருத்

திரமூர்த்தியினுடைய கண்ணினின்றும் தோன்றியது. ஆதலால் உருத்திர - அக்க - மணி என்பர். மாசிலாத நீறு என்று கூட்டி உரைப்பதும் ஒன்று. இதன் விரிவைப் பின்னர்த் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் - 764-ம் திருப்பாட்டின் கீழ்க்காண்க. **நீறுபோல்** - மேலே பூசும் நீற்றின் புனிதம்போல் என்க. "சுத்தம தாவது நீறு" - தேவாரம். நீற்றின் தன்மைகளை முன்னர் வரிசை 138-வது பாட்டின்கீழ்க்காண்க.

உள்ளும் புனிதர் - எச்ச உம்மை. திருநீற்றின் புனிதத் தன்மையை உய்த் துணர வைத்ததாம்.

தேசினால் எத்திசையும் விளக்கினார் - (உட்புனிதராகையால்) **தேசு** - மனத் தூய்மையாலும் அருளினாலும் உண்டாகும் ஒளி. " ஐந்துமாறு அடக்கியுள்ளார் அரும் பெருஞ் சோதி" என்று பின்னர்க் கூறுவதுங் காண்க. நீற்றின் தேசு என்பாருமுளர்.

பேசவொண்ணாப் பெருமை - " அளவில்லாத பெருமையர் " என்று பாயிரத்திற் கூறியதின்கீழ்க் காண்க. இங்குத் திருநீற்றினாலும், உட்புனிதத்தாலும் உளதாம் பெருமை. இது அளவிடற்கரியதாதலின் " பேச வொண்ணாப் பெருமை " என்றார்.

" பேணியணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு " என்பது தேவாரம்.

பெருமை பிறங்கினார் - பெருமையிலே விளங்குகின்றவர்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களில் முதற்பாட்டு அகப்பெருமையும், இரண்டாம் பாட்டுப் புறப்பொலிவையும் விளக்கியதாம். 6

142\. பூத மைந்து நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாண் மறப்பிலார்
ஓது காத லுறைப்பி னெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார். எ

(இ - ள்) பூதம்...மறப்பிலார் - (இறைவன் ஆணைவழியே நிலைபெற்ற) ஐம்பெரும் பூதங்களும் தம் நிலையிற் கலங்கின காலத்தும் (தமது நிலை கலங்காது) உமாதேவியாரை ஒரு பாகத்து வைத்த சிவபெருமானது மலர் போன்ற பாதங்களைத் தம்மனத்தில் மறத்த லில்லாதவர்கள் ; ஓது...நின்றார் - பெரியோர்களால் விதந்து எடுத்து ஓதப் பெற்ற அன்பிலே முனைத்த பத்தி வழியிலே பிறழாது நிலைநின்றவர்கள் ; கோது இலாத... குன்றனார் - குற்றமற்ற குணமலை போன்றவர்.

(வி - ரை) **பூதமைந்து நிலையிற் கலங்கினும்** - உலகம் உயிர் பெற்று (உயிர்ப்பு - மூச்சு) இருக்கும்படி அமைந்த காற்றானது தன்னிலையின் மிக்குப் பெருங் காற்றாக வீசி உலகத்தை அழித்தல் ; இவ்வாறே மற்றப் பூதங்களும், பெருந்தீ, பெரும் வெள்ளம் முதலியனவாக மாறி அழிவு செய்தல்.

இனி இதற்கு இவ்வாறன்றிச் சங்காரத்தில் அந்தந்தப் பூதங்கள் அவ்வவற்றிற்குரிய தன்மாத்திரையில் ஒடுங்கவும், இவ்வாறே சென்று அனைத்தும் மாயையில் ஒடுங்கவும் உள்ள காலத்தும் - என்றும் பொருள் கூறுவர். பிருதிவி - தனது மண் என்ற உருவ நிலை மாறித் தனது **நாற்றம்** எனும் தன்மாத்திரையில் ஒடுங்கும். இவ்வாறே பிறவு மாம். இதனையே இந்நாள் விஞ்ஞான சாத்திரிகள் (Atoms-electrons) அணு - பரமாணு முதலியனவாய்ப் பகுத்துக் கூறுவர். நீர்ப்பெருக்கு மண்ணை நிலை கலக்கும் ; அவ்வாறே நீர்ப்பெருக்கை வடவைத்தீ சுவறச் செய்யும் ; அதனைச் சண்டமாருதம் அவித்துப் பின்னர் அம்முறையே அது முடிவில் ஆகாய (வியாபகம்) நிறைவுக்குள்ளே ஒடுங்கும் ; இவ்வாறு தத்தம் நிலைகளிற் பூதங்கள் கலங்கின காலத்தும் தாம் கலங்காது இறைவன் பாதங்களை மறவாதவர் என்பது இப்பொருளிற் கண்டது.

காதல் உறைப்பின் நெறி நின்றார் - காதல் என்பது நாயகன் நாயகிகளுக்கிடையே உளதாகும் அன்புக்கு உரிய சிறப்புப்பெயர். இதனால் இங்குக் குறித்தது இறைவனுக்குத் தாங்கள் மீளா ஆட்பட்ட நாயகிகளாகவும் அவர் தமது உயிரின் நித்திய நாயகனாகவும் கொண்டு ஒழுகுபவர் இவ் வடியவர்கள் என்பதாம். உலகத்தில் ஏனையநாயகர் நாயகிகள் சிலகாலம் உடற்கூட்டம் மட்டும் பெற்றிருந்து அந்த உடம்போடு ஒழிவர். (இக்காலத்து அதுவரையிற்கூட இல்லாத உலகக் காதல் காண்பதாயிற்று !) ஆனால் இறைவன் நித்தனாய் ஆன்மாவும் நித்தனாய் இருத்தலின் அவன் என்றைக்கும் நீங்காத நித்திய நாயகனாம். இச்சிறப்புத் தோன்ற - **ஓதுகாதல்** - என்றார். அதில் உறைப்புப் பெற நிற்றலாவது "மங்கை காணக்கொடார் மணமாலையை" - அப்பர் சுவாமிகள் திருவிடைமருதூர் தேவாரம்-முதலிய திருவாக்குக்களிற் கண்டபடி இடைவிடாது பயின்று இறைவனிடத்திலே முழுதும் ஈடுபட்டுநிற்றல். அந்தக் காதலிலே பதிந்து அதனால் விழுங்கப்பட்ட நெறியிலே நிற்றல். உலகத்திலே ஆன்மாக்கள் (1) பிராகிருதர்கள் (மாயையினாற் கட்டுப்பட்டவர்கள்), (2) அப்பிராகிருதர்கள் (மாயையினாற் கட்டுப்படாதவர்கள்) என்று இருவகையாவர். அவர்களில் அப்பிராகிருதர்கள் - வைநகிகர்கள் என்றும், சாமுசித்தர் என்றும், இருவகையினர். வைநகிகர்கள் - உலக ஒழுக்கத்திலே விதிவிலக்குகளை அறிந்து அந்நெறியின் ஒழுகி நின்று இடையூறு வந்த காலத்திலேயும் நன்னெறியிற் பதிந்து நிற்பவர். இவர்கள் புகழ்த்துணை நாயனார் போல்வார்களாம். "தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுவார்" பசி வருத்திய போதும் விடாது அந்நெறி ஒழிகிப் பேறுபெற்றது அவர் சரிதம் கூறும். சாமுசித்தராவார், எஞ்சிய வினையின் பொருட்டே திருமேனிதாங்கி மேல்வினை ஒழித்துத் தன் செயலில்லாது ஒழுகி, எல்லாம் சிவன் செயலேயாக நிகழ்பவர். இவர்கள் சண்டீசர் - கண்ணப்பர் - போன்று விதி விலக்குகளைக் கடந்து செய்யும் செயல்களை உடையவர்கள். இயற்பகையார் - கோட்புலியார் - சிறுத்தொண்டர் - செருத்துணையார் முதலிய நாயன்மார்கள் சரிதங்களும் காண்க. **நெறி நிற்றலாவது** - தம் வழியே பத்தியைத் திருப்பிக்கொள்ளாது பத்தி வழியிலே தம்மை நிறுத்திக் கொண்டு ஒழுகுதலாம்.

மலர்த்தாள் மறப்பிலார்...உறைப்பின் நெறிநின்றார் - மறப்பிலராகி நின்றார்கள் எனக் கூட்டி யுரைத்தலுமாம். பூதங்களின் திரிபினால் உலகம் அழிய நேரினும் தாம் கலங்காது தமது முன்னைப் பணிவிடை வழியே நிற்றல். இதனையே,

"வானந் துளங்கிலென்! மண்கம்ப மாகிலென்! மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென்! தண்கடலும்
மீனம் படிலென்! விரிசுடர் வீழிலென்! வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே."

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே."

"கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென்
றென்னொடுஞ் சூளறும் அஞ்சனெஞ் சேயிமை யாதமுக்கட்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீரிப் புகலிடத்தே."

என்பனவாதி அப்பர் சுவாமிகளது தேவாரத் திருவாக்குக்களால் அறிக.

அப்பர் சுவாமிகள் நீற்றறையில் ஊறின்றிக் குளிர்ந்திருந்த காலத்தும், கடலிற் கல்லே தெப்பமாக மிதந்து வந்த காலத்தும், பிற இடத்தும் இக்கருத்தையே காண்க,

"அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதும் இல்லை"

என்பதும் அப்பர் சுவாமிகள் ஆணை. "...........நாணிலமண் பதகருடன், ஒன்றிய மன் னவன்சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே, வென்றவர்......" என்றது இங்கு உணரத்தக்கது.

கோதிலாத குணப்பெருங் குன்று - "குணமெனுங் குன்றேறி நின்றார்" என்றார் திருவள்ளுவரும். குணமெனுங் குன்றைத் தம் கீழ் அடிப்படுத்தி ஏறி மேல்நின்றவர் இவர் என்றதாம். குணங்கள் உயிர்களைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளுந் தன்மையுடை யன. பிறர் அவ்வக் குணங்களின் வசப்பட்டபோது வெவ்வேறு குற்றச் செயல்களைச் செய்வர். குணங்கள் அளவிறந்த செயல்களுக்குக் காரணமாதல் பற்றி அவற்றைப் **பெருங்குன்று** என்றார். ஆனால் அக்குணபேதங்கள் இவ்வடியார்களாகிய உத்தம ரிடத்துத் தங்களது தீமைகளைச் செய்யமாட்டாது ஒழியும் என்பார் **கோதிலாத குணம்** என்றார். எனவே, சத்துவ குணமேயன்றி இராசத - தாமத - குணங்களும் சத்துவ குணமேயாகித் தொழில் செய்வன என்பதுமாயிற்று. "எம்பிரானுக்கு ஆனபணி ஆசிலா நல்லறமாவது அறிய வருமோ உமக்கு" என்று தண்டியடிகள் நாயனார் திருவாரூர்ச் சமணர்களைத் தேற்றி யருளினமையும், சண்டேசுர நாயனார் தந்தையைத் தடிந்தமை யும், எறிபத்த நாயனார் யானையையும் பாகரையுங் கொன்றமையும், இன்னும் இவை போல இப்புராணத்து வருவனவும் சிவபுண்ணியமாகிய நல்வினையே ஆயின கருத்து இங்கே உய்த்துணரற்பாலது. "குணமென்னுங் குன்றேறி" என்னுங் குறளிற் பேசிய நீத்தார்களாகிய முனிவர்களினும் மேம்பட்டு விளங்குவது அடியார்கள் தன்மை. ஆத லின் இது **பெருங்குன்று** எனப் பெற்றது. 7

143. கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார். அ

(இ - ள்) கேடும்......திருவினார் - குறைவதும் மிகுவது மில்லாத நிலைத்த ஐசுவரி யத்தை உடையவர்கள்; ஓடும்......நோக்குவார் - மண் ஓட்டையும் பசும் பொன்னை யும் ஒன்று போலவே எண்ணுபவர்கள்; கூடும்......விளங்கினார் - (இறைவனை மனத் திலே) கூட்டி வைக்கும் அன்பு மேலீட்டினாலே அவனைக் கும்பிடும் பிறப்பு ஒன்றே யன்றி வீட்டையும் விரும்பாத வன்மையுடையார்.

(வி - ரை) கேடும் ஆக்கமும் கெடுதல் - எக்காலத்தும் மிகுதிப்பாடாவது குறைவு பாடாவது இல்லாமல் என்றும் ஒருபடித்தாகவே நிலைத்திருத்தல். இது இவர்கள் அடைந்த திரு(செல்வம்)வின் இயல்பு. உலகிலே ஏனைய மாக்கள் செல்வமாக எண்ணு கின்ற மற்ற ஐசுவரியங்கள் போலல்லாமல் வறுமையாலும் செல்வத்தாலும் வரும் துன்ப இன்ப முனைப்புக்கள் இந்தத் திருவினிடத்தே செயற் படாமற் கெட்டொழியும். ஆத லின் **கெட்ட** என்றார். இத்திருவின் இயல்பும் மற்ற உலகங்களின் ஏனைய இயல்பும் இளையான்குடி மாறநாயனார் புராணத்தும் பிற இடத்துங் காண்க.

திரு - இது இறைவனது தன்மையாய் எக்காலத்தும் இன்பமாகவே நிற்கும் நிலை. இதுவே ஈசுவரத் தன்மை - ஐசுவரியம் - எனப் பெயர் பெறும். "இறவாத இன்ப அன்பு" என்பதும் இது.

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குதல் - **ஓடு** - பிச்சைபுக்கு உண்ணும் நிலையும் **செம்பொன்** - செல்வ நிலையும் குறித்தன. **ஓடு** - பிச்சை எடுக்கும் ஓடு. வறுமையை யாரும் வெறுப்பர்; செல்வத்தை யாரும் விரும்புவர். அடியவர்கள் இவ்வாறன்றி இவ் விரண்டு நிலையிலும் மனம் மாறாது ஒன்று போலவே நின்று தம்பணி செய்து நிற்பர்,

" செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியும் மெய்யினல்
அல்ல னல்கூர வான போதிலும் வல்லர்..."—இளையான் - புரா - 6.

முதலிய நிலைகளைக் காண்க. அன்றியும் - **பொன்னும் ஓடும்** என்ற இரண்டு பதங்களிற்பட்ட உலகப்பொருள்கள் எல்லாம் ஒன்றுபோலவே மனிதர் நன்னெறிக்கு இடைஞ்சல் விளைப்பன என எண்ணி ஒதுக்குவர் என்பதுமாம்.

" புல்லோடுங் கல்லோடும் பொன்னோடு மணியோடுஞ்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த... "

அப்பர் சுவாமிகள் திருப்புகலூரில் திருமுற்றத்திற் கிடந்த பருக்கைக் கற்களோடு நவமணியையும் உழவாரத்தில் ஏந்தி வாவியிற்புக எறிந்தனர் என்பதும், இவை முதலிய பிறவுங் காண்க.

மேலும், ஓட்டினைப்போலப் பொன்னும் மாயா பௌதிகப் பொருளாகிய மண் - எனவும், இவ்வாறே எல்லாப் பொருள்களும் அவ்வவற்றின் தத்துவங்களில் நிற்பன எனவும் கண்டு, தத்துவங்கடந்த இறைவனிடம் மனத்தைச் செலுத்தும் - என்பதுமாம்.

" ஓட்டினை எடுத்து ஆயிரத்தெட்டு மாற்றுக ஒளிவிடும் பொன்னுக்குவீர்..."

என்று [ஒளிவிடும் பொன் - தானே பிரகாசிக்கும் பொன் - சுயம்பிரகாசமுள்ள பொன் - இரேடியம் (Radium) என்பர்.] சித்தர்களின் தன்மையும் வன்மையும் தாயுமானாராற் பேசப்பெறுமாயின் தொண்டர்களின் நிலை சொல்லவுங் கூடுமோ ?

கூடும் அன்பு - இறைவனோடு அந்நியமின்றி ஒட்டிக் கூடுவதற்குக் காரணமாகிய அன்பு. "ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்" என்னும் பண்பே இங்குக் **கூடும்** எனப்பெற்றது. அந்நிலை பெறுதற்கு அன்பே காரணம் ஆதலின் **கூடும்** அன்பு என்றார்.

(அன்பினிற்) கும்பிடல் - கும்பிட்டு நிற்கும் பிறப்பு என்க. இது ஆகுபெயர். மேலே " வீடும் வேண்டா " என்பதற்கேற்பக் கும்பிடும் **பிறப்பே** வேண்டுவர் என்றுரைக்கப் பெற்றது.

வீடு - பிறப்பின்மை ; விடுபடுதல். பிறவித்துன்பத்தினின்று விடுபடுதலே வீடு.

கூடும் அன்பினிற் கும்பிடல் - "காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே " என்று அப்பர் சுவாமிகள் அருளியதும், "நின்றிருவடிக்காம் பவமே யருளு கண்டாய்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் விண்ணப்பித்ததும், " கும்பிடப் பெற்று மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் " என்று வன்றொண்டர் வேண்டியதும் இக்கருத்துப் பற்றியே என்க. " தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார்" என்பது சேக்கிழார் சுவாமிகள் கருத்துமாம்.

இவ்வாறன்றிக் **கும்பிடல்** என்பதற்குக் கூடுமன்பினில் இறைவனையும் உயிர்களையும் தொழுது பயன் கருதாப் பணிசெய்வது என்றும், அது (பயன் கருதாத் தொண்டு) வீட்டினிற் சிறந்ததென்றும், வீட்டில் இன்பம் உண்டென்று எண்ணித் தொண்டு செய்வதும் பயன் கருதுவதாய் முடியும் என்றும், இவ்வாறெல்லாம் தத்தம் மனதுக்கிசைந்தவாறு உரை காண்பாரும் உண்டு. இறைவனைத் தொழுதலே யன்றி உயிர்களையும் தொழுது பயன் கருதாத் தொண்டு செய்தல் என்பது இச்செய்யுளில் எங்குப் பெறுவதோ?. அன்றியும், உயிர்களைத் தொழுதல் பணியாம் என்பதற்கு விதி யாதோ ? அறிகிலோம். உயிர்களிலே பந்தம் நீங்கப்பெற்ற முத்த ஆன்மாக்களும் அடியார்களுமே தொழுவதற்கு உரியார் என்பது ஞான நூல்களின் முடிபு. ஏனைய உயிர்கள் யாவையும் நம்போற் பாசபந்தப்பட்டவையே ; அன்றியும் **கும்பிடல்** என்னும் மொழிக்குப் பயன் கருதாப் பணிசெய்தல் என்னும் பொருள்கொள்ளும் வகையுங் காணப்பெறவில்லை. மரபுபற்றி உரைகூறாது இவ்வாறு அவரவர் கொள்கைகளைச் சைவசமய சாம்பிரதாய சாத்திரங்களிற் புகுத்துவது ஆசிரியர் கருத்துக்கும் நூன்மரபுக்கும் உரைமரபுக்கும் பொருந்தாமை உணர்க.

முன்னர்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலாயத்தில் கும்பிட்டுக்கொண்டு முத்தராய் வாழ்ந்த நிலையைவிட இறைவன் அருள் நடனத்தைக் கும்பிடப்பெற்றதால் இப்பிறவியையே சிறந்ததாகக் கருதினர் என்ற பொருள் இங்கு உணர்ந்து அனுபவிக்கத் தக்கது. இவ்வாறன்றிக் கூடுமன்பினில் கும்பிடுதல் என்பதனுக்கு எல்லா உயிர்களும் இறைவனைக்கூடி இன்பம் அடைக என்னும் கருத்தால் கும்பிடுதல் என்றுரைப்பினும் ஆம். "வையகமுந் துயர் தீர்கவே" என்பனவாதி திருவாக்குக்களின் கருத்தை நோக்குக. 8

144. ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ. ௯

(இ - ள்) ஆரம்...கந்தையே - (மேலும் இங்குள்ள அடியார்கள்) ஆரமாகப் பூண்பது உருத்திராக்க வடமேயாம். ஆடையாக உடுப்பது கந்தை உடையேயாம்; பாரம்... ஒன்றிலார் - அவர் தாம் செய்யும் கடமையாகத் தாங்கிநிற்பது இறைவன் பணியையேயன்றி வேறொன்றுமில்லார்; ஈரஅன்பினர்-(அப்பணியிலே தங்களைச் செலுத்தவல்ல) தண்ணிய அன்பினை மிகவுடையார்; யாதும் குறைவிலார் - ஒன்றினாலுங் குறைவு இல்லாதவர்; வீரம்...தகையதோ - இவர்களது வீரம் என்னால் அளவிட்டுச் சொல்லுந் தகைமையதோ? (அல்ல என்றபடி).

(வி - ரை) ஆரம் - மாலை. உடலுக்கு அணி செய்வது.

கந்தை - கிழிந்த பழைய துணி என்றும், பல துணிகளைச் சேர்த்து இழையோட்டி ஒன்றாகத் தைத்த துணி என்றும் கூறுவர். இங்குக் கூடியிருக்கும் அடியார்கள் உருத்திராக்க மாலைகளைத் தவிர வேறொன்றையும் தமது திருமேனிக்கு அணிகலமாக வேண்டாதவர்கள். உடையின்றி யிருக்க மரபில்லையாதலின் கிழிந்த தைத்த ஒரு கந்தையைத் தவிர வேறொரு உடையையும் விரும்பாதவர்கள். இந்த ஒரு கந்தையைக்கூட மிகை அல்லது சுமை அல்லது பற்று என்று உண்மை அடியார்களாகிய இவர்கள் கருதுவார்கள் என்பது "கந்தை மிகையாங் கருத்து" எனப் பின்னர் அப்பர் சுவாமிகளின் நிலை கூறுதல் காண்க. "கருந்துணி பலதொடுத் திசைத்த, ஒருதுணி யல்லது பிறிதொன்றில்லையாக" என்று இந்நிலையை வேண்டுகின்றனர் குமரகுருபர சுவாமிகள்.

"..........துன்னற் கோவணம் பரிக்கும் ஆடை
சீரெலாம் சிறந்த சாந்தம் தெய்வநீறு அணிபூண் கண்டி"

என்று மாணிக்கவாசக சுவாமிகளின் நிலையைப் பற்றித் திருவிளையாடற் புராணங் கூறும். இவற்றுள் முந்தியதாகிய தெய்வநீற்றை முந்தைமுறையிலே வைத்து முன்னர் 6-வது பாட்டுக்களில் "நீற்றொளியால்", "பூசுநீறுபோல்" என்று பேசினமையால், இங்குக் கூறிற்றிலர். மணி என முன்னர்ப் பொதுவகையாகக் கூறினராயினும் இங்குச் சிறப்பு வகையாகக் கண்டிகையும் கந்தையும் கூறப்பெற்றன.

பாரம் - தம்மாற் செய்தே தீரவேண்டுவதாகிய கடமைப்பாடு; உரிமையாகக் கொள்வது. "ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்" என்னும் திருமூலர் திருமந்திரத்தின் உண்மைப் பொருளை அறியாதார் ஆடை கந்தையேயாயுள்ள ஞானிகளுக்கு நீறும் கண்டிகையும் இறைவன் பூசையும் வேண்டுவதோ என்று ஐயப்படுவர். இறைவரது பணி அவர்க்கும் கடமையாம் என்று அவரது இயல்பு கூறும் வகையினாலே இவர்களது ஐயத்தை நீக்கியவாறு. "ஏகனாகி இறைபணி நிற்க" என்பது சூத்திரம்.

ஈசன் பணி - எல்லா உலகுக்கும் முதல்வனாகிய இறைவன் பணி. இதற்கு - எல்லா உயிர்க்கும் தன்னைப் போலக் கருதிப் பணி புரிதல்; எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை;

பிறர் தீங்கு செய்யினும் அதை அன்புடன் பொறுத்தல் முதலியவை ஆம் என்று உரை கூறுவாரு முண்டு. இவை சீவகாருண்யம் எனும் சாமான்ய பசுதர்மங்களின் பாற்பட்டு சொர்க்க நரகங்களுக்கு ஏதுவாய் உள்ளனவே யன்றி மேலாகிய சிவ புண்ணியமாய் வீட்டுக்குக் காரணமாகா. சண்டேசுர நாயனார், தண்டியடிகள், கோட்புலியார், சத்தியார் முதலியோரின் சரிதங்களில் இவற்றின் உண்மையியல் விளக்கப்பெற்றதும்,இறைவனது அன்பின் முன்னே இவை ஒரு புறம் ஒதுக்கப் பெற்றதும் காண்க. அன்றியும் தேவாசிரிய மண்டபத்துள்ளே எழுந்தருளியுள்ள திருக்கூட்டத்தவராய் இப்புராணத்திற் பேசப்பெறும் அடியார்களது சரிதத்திலே பொருந்தாதனவுமாம். இப்புராணத்துட் பின்னர்க் கூறப்பெற்ற அடியார்கள் சரிதச்சுருக்கமே இப்பகுதியாதலின் அவற்றிற்குப் பொருந்தியதே உரையாகும். ஏனையவை உரையாகா. ஆதலின் பின் சரிதங்களின் உள்ளுறையை நோக்காது உரை கூறுதல் பொருந்தாது என்க. மேற்பாட்டிற் கூறியனவும் காண்க. ஈசன்பணி என்பதற்கு உயிர்கள்பணி என யாண்டும் எவ்வாற்றானும் பொருள் வாராமையும் உணர்க. ஈசன் பணி என்பதனோடு அவன் அடியார் பணியும் இனம்பற்றி உரைத்துக்கொள்வது சாத்திர சம்மதமாகும். ஆனால் எல்லா உயிர்களும் இறைவனது அடிமைகளே யாயினும் அடிமைத் தன்மையை உணராதபோது அவைகள் பந்தப்பட்ட ஆன்மாக்களேயாம். அவற்றினிடத்து இரக்கம் வைத்தலே யன்றி வணக்கம் செலுத்துதல் யாண்டும் விதிக்கப்படாமை யுணர்க. “எவ்வுயிரும் என் உயிர்போல் **எண்ணி யிரங்க**” என்றார் தாயுமானார்.

ஈர அன்பினர் - தண்ணளி. நமது நாட்டு வழக்கமும் அது. அன்பை எப்பொழுதும் குளிர்ந்த நோக்கமுடையதாய்க் காண்பதே மரபு.

யாதுங் குறைவிலார்-ஒன்றாலும் குறைவில்லாதவர். “ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே” முதலிய திருவாக்குக்கள் காண்க. இவர்கள் பாரமாய்ச் செய்யும் ஈசனது பணியிலேயும் யாதும் குறைவிலாது செயும் பேறு பெற்றவர்கள். இறைவன் பணி நிற்கும்போது உள்வாகும் குறைகளை அன்பினாலே நிரப்புவர். ஆதலின் அவர் பணிக்கு எக்காலும் ஒரு குறைவும் இல்லை என்பதாம். ‘‘தேடாதன அன்பினில் நிரப்பி’’ என்ற சண்டேசுரர் புராணமுங் காண்க. ‘‘போதும் பெறாவிடில் பச்சிலையுண்டு புன்லுண்டெங்கும், ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டு’’ என்பது பட்டினத்துச் சுவாமிகள் திருவாக்கு.

வீரம் - தமது கொள்கைக்கும் குறிக்கோளுக்கும் மாறாக எது வரினும் அஞ்சாது எதிர்த்து நின்று வெற்றி பெறுதற்கான மன நிலை. அரசாது கோபங்கொண்ட பட்டத்து யானையை வெட்டி வீழ்த்திய எறிபத்த நாயனார் சரிதமும், கோபமூட்டித் தம்மேலேவப்பட்ட யானையைக் கண்டு “அஞ்சுவ தியாதொன்று மில்லை; அஞ்ச வருவது மில்லை” என்று இருந்து அதனைப் பணிவித்த அப்பர் சுவாமிகள் சரிதமும், திருப்பூமண்டபத்துக் கிடந்த பூவை மோந்த அரசர்தேவியின் மூக்கை அறுத்த செருத்துணை நாயனார் சரிதமும், இவை போல்வன பிறவும் இங்கு வைத்துக் காணின், அன்பர்களின் வீரம் இத்தகையது என விளங்கும். யாதுங் குறைவிலார் என்ற குறைவின்மைக்கு அன்பு காரணமாம். குறைவின்மை வீரத்திற்குக் காரணமாம். இங்கு எழுந்தருளிய அடியார்களே இவ்வீரத்தை உடையார்கள் என்பது பின்னர்த் தடுத்தாட்கொண்ட புராணம் 201-வது பாட்டில் “அழியா, வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனி வேறடியேன்” என்று முடித்துக் காட்டியதால் அறியப்பெறுவதாம். “தறிசெறு களிறுமஞ்சேன், தழல்விழி யுழுவை யஞ்சேன்” அச்சப்பத்து முதலிய திருவாசகத் திருவாக்குக்களையும் நோக்குக. உலகிற் கொள்ளும் ஏனைய எந்த வீரமும் இவர்களது வீரத்தின் முன் நிற்கமாட்டா.

என்னால் விளம்புந் தகையதோ? - இது கூறும் ஆசிரியரே இறைவன் அடியார்களது அன்புக்காகப் பேரரசின் அமைச்சுரிமையைப் பொருட்படுத்தாது விடுத்துப் போந்த மகா வீரர் என்பதைக் கூர்ந்து எண்ணுக.

145. வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்
தாண்ட வப்பெரு மான்றனித் தொண்டர்கள்
நீண்ட தொல்புக ழார்தந் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகே னென்னறிந் தேத்துகேன். ௧0

(இ - ள்) வேண்டும்...வேடத்தர் - (மேலே கூறிய திருவேடப் பொலிவுகளேயன்றித்) தாம் வேண்டினபடியே மேற் கொள்வனவும், (ஆயினும்) கண்டாரும் கேட்டாரும் விரும்பத்தக்கனவுமாகிய பற்பல வேடங்களில் விளங்குவார்கள்; தாண்டவம்...தொண்டர்கள் - (வேடத்தாற் பல பல காட்சியராயினும்) கூத்துடையானுக்கு ஆளாம் தனிப் பெருமையில் ஒன்று போலவே விளங்குபவர்கள்; நீண்ட தொல்புகழார் - (ஆதலின்) மிக நீண்ட - அளவுபடாத - புகழை யுடையவர்களாவார்கள் இத் திருக்கூட்டத்தி லுள்ளவர்கள்; (அவர்) தம் நிலையை...ஏத்துகேன் - இவர்களது தொண்டின் நிலைமைகளை இங்கு இப்புராணத்திலே எடுத்துச்சொல்லி வாழ்த்தப் புகுகின்றேனுகிய யான் என்னென்று அறிந்து துதிப்பேன்.

(வி - ரை) **வேண்டுமாறு விருப்புறும் வேடம்** - மேலே நீறு கண்டிகை கந்தை முதலிய சில திருச்சிறப்புக்களைக் குறித்துக் கூறினர். ஆயினும் தொண்டர் வேடங்கள் இவற்றோடு அமைந்துவிடுமோ என்று சந்தேகிப்பார்க்கு அவ்வாறு அல்லாது அவர் வேண்டியவாறே வேடம் கொள்வர் என்று விளக்கினாராகும்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே..."

சிவத்திருப்பணி செய்தனர் சாக்கிய நாயனர். கந்தை ஆடை தரிக்கும் அடியார்களே அன்றித் தனி முடி கவித்தாளும் புகழ்ச்சோழ நாயனர், கழறிற்றறிவார் நாயனர், நின்றசீர் நெடுமாற நாயனர் முதலியோரும் வீற்றிருப்பர். வேண்டுமாறு வேடத்தராயினும் விருப்பு உறும் என்று மாற்றி, வேண்டுமாறு மேற்கொள்ளும் வேடத்தை உடையவராயினும் அவர்களுக்குள்ளே விருப்பம் உறும் - அதாவது இறைவனிடத்து விருப்பம் - அன்பு - ஒன்றுபோலவே உறும் - பொருந்தும் - என்று முடித்துக் கொள்ளுதலுமாம்.

வேண்டுமாறு விருப்புறு வேடத்தர் என்பதற்கு மேலே சொல்லியவாறன்றிக் கால தேச வர்த்தமானங்களுக்கேற்பப் பல தேசங்களில் பல வேடங்களுங்கொண்டு உலகைக் காக்கும் பெரியார் எனக் கூறுவாருமுண்டு. தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்களாகும் வேடத்தாரைக் குறித்ததே யன்றி அங்ஙனம் தொண்டராகாத வேடத்தாரைப்பற்றி இங்குப் பேச்சில்லாமையால் அது பொருளன்று. அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணத்திலே தமிழ் நாட்டுக்கப்பாலுள்ளாரையும் திருத்தொண்டத் தொகையில் கூறப்பெற்ற தனித்தொண்டர்களுக்கு முன்னும் பின்னும் உள்ளாரையும் குறித்ததாய்ப் பொருள் விளக்கிய ஆசிரியர் "அவர்கள் சேவேந்து வெல்கொடியான் அடியார்கள்" என்று கூறியதினுலும் அறிக. ஆதலின் சிவபெருமானது சார்பினை விடுத்து இப்பாட்டிற்கு உரைசெய்வார் உயிரையின்றி உடலுக்கு உரையிட்டவராவர்.

தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்கள்-**தனி**-என்பதனை இடைநிலைத் தீபகமாக அமைத்துள்ளார். இதனைப் **பெருமானுடனும் தொண்டர்களுடனும்** தனித் தனிச் சேர்க்க. தனிப்பெருமான் - தனித்தொண்டர் - என்க. தனக்குவமையில்லாத தாண்டவப் பெருமான்போலவே இவர்களும் ஒப்பற்றவர்கள் ஆவார்கள். தனித்தொண்டர் என்றதனுல் மேலே கூறிய 3 முதல் 9 வரை ஏழு பாட்டுக்களில் சொல்லப்பெற்றவர்கள் தனியடியார்கள் என்று குறிப்புப் பொருள் உரைப்பார்களும் உண்டு.

நீண்டதோல் புகழார் - இவர்களது புகழ் இடத்தாலுங் காலத்தாலும் பரந்துள்ளது என்பதாம். இடத்தால் நீளமும் காலத்தால் தொன்மையும் ஆகிய புகழ் ஆதலின் **நீண்ட** என்றும், **தோல்** என்றும் கூறினர். சொல்லிலடங்காது நீண்ட என்க.

நிலைமை - நிலைபெற்றிருக்கும் தன்மை. அது "ஓதுகாதல் நெறியின் நிற்றல்".

வாழ்த்துகேன் - ஏத்துகேன் - வாழ்த்துகேன் வினையாலணையும்பெயர். வாழ்த்து வேணுகிய யான் - ஏத்துகேன் என்னும் பயனிலை கொண்டு முடிந்தது.

146\. இந்த மாதவர் கூட்டத்தை யெம்பிரான்
அந்த மில்புக ழாலால சுந்தரன்
சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வாம். கக

(இ - ள்) வெளிப்படை - (மேலே பொது இலக்கணத்தாலும் சிறப்பிலக்கணத்தாலும் எடுத்துக் கூறப்பெற்ற) இந்த மாதவர்களுடைய திருக்கூட்டத்தை எமது பெருமானுகிய அளவில்லாத புகழையுடைய ஆலால சுந்தரர் இவ்வுலகிலே வந்து சுந்தரத் திருத்தொண்டத்தொகைத் தமிழ் பாடிய வரலாற்றை மேலே சொல்லத் தொடங்குகின்ருேம்.

(வி - ரை) **இந்த** - இந்தப் பகுதியில் 3 முதல் 10 வரை திருப்பாட்டுக்களிற் கூறப்பெற்ற. **மாதவர்** - தவஞ் செய்வாரில் தலைமையானவர்.

ஆலால சுந்தரன் வந்து கூட்டத்தைத் தமிழ் பாடிய வண்ணம் என்று கூட்டுக.

வண்ணம் - வரலாறு. வந்து பாடிய வரலாற்றை இனிச் சொல்வோம் என்று அடுத்துக் கூறும் தடுத்தாட்கொண்ட புராணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

வந்து பாடிய வண்ணம் - வந்த வண்ணமும் - பாடிய வண்ணமும் என்று பிரித்து உரைத்துக்கொள்ளத் தக்கது. முன்னர்த் திருமலைச் சிறப்பிலே 29-வது திருப்பாட்டில், "நம்பிமற்றத் திசை, தங்கு தோற்றத்தில்" என்றமட்டில் உபமன்ய முனிவர் தம்மைச் சூழவிருந்த சுத்தயோகியர்களுக்குச் சொல்லியருளினர். ஆலாலசுந்தரர் இப்பூவுலகில் அவதரிக்கக் காரணமாய்க் கயிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மட்டும் அங்கு விரித்துக் கூறினர். ஆலாலசுந்தரர் உலகில் அவதரித்துப் பாடியருளிய திருத்தொண்டத் தொகையில் துதித்த அடியார்களை அதையே பின்பற்றித் துதிக்கின்றேன் என்று ஆசிரியர் தொடங்கிக்கொண்டனர். ஆதலின் கயிலையிலிருந்து வந்து அவதரித்த பின்பு திருத்தொண்டத்தொகை பாடுகின்றவரை இங்குப் பாயிரத்துடன் சேர்த்துச் சொல்ல வேண்டியது அவசியமாயிற்று. அதனைத் தடுத்தாட்கொண்ட புராணத்திலே இங்குப் பாயிரப்பகுதியில் வைத்துக் கூறிப் பின் நூல் தொடங்கி ஓதுவதற்குக் காரணம் கூறியவாறு. முன் பாட்டிலே "ஈண்டு வாழ்த்துகேன்" என்று தமது விரிநூலைத் தொடங்கிக்கொண்ட ஆசிரியர், நூல் சொல்வதற்கு முன்னர்த் தடுத்தாட்கொண்ட புராணத்தை அமைத்ததற்குக் காரணம் இது என்கின்றார். மேலும் ஈண்டு 'வாழ்த்துகேன்' என்று முன் பாட்டில் தொடங்கிக் கொண்டதையே அனுவதித்துத் தடுத்தாட்கொண்டபுராணத்தின் இறுதியில் "எம்பிரான் தமர்கள் திருத்தொண்டேத்தல் உறுகின்றேன்" என்று பின்னரும் தோற்றுவாய் செய்து விரிநூல் தொடங்கிக் கூறப்புகுகின்றதும் காண்க.

'**வந்து பாடிய வண்ண**' மென்றதற்கு மேலே கூறியபடி வண்ணத்தை என்று கொள்ளாது வண்ணத்தின்படி கொண்டு - என்னறிந் தேத்துகேன்? அவர் வந்து பாடிய வண்ணத்தின்படிச் சொல்லுவேன் என்று முன்பாட்டோடு கூட்டி உரை செய்வாருமுண்டு. மேற்காட்டியவாற்ருல் அது பொருளன்றென் றுணர்க.

வந்து - (1) திருக்கயிலையிலிருந்து இதன் பொருட்டு இத்தென்றிசைக்கு **வந்து** என்க. (2) "பண்ணையாரூரில் வருக நம்பால்" எனத் தில்லையிற் கூத்தப்பெருமான்

ஆணையிட்டபடியே ஆரூருக்கு **வந்து** என்பதுமொன்று. (3) "இவர்க்கு (இவ்வடிய வர்க்கு) நான் அடியேனாகப் பண்ணுநாள் எந்நாள்" என்று மனத்தால் துதித்துத் திருக் கோயிலுக்குட் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்கே இறைவர் தந்த எதிர்காட்சி யும் திருவருளும் பெற்றவராய் அவர் அருளின்வழி மீண்டும் தேவாசிரியனுக்கு எதிரே **வந்து** (பாடிய) என்று கொள்ளலும் ஒன்று.

இவற்றுள் கயிலையிலிருந்து வந்த வரலாறு திருமலைச் சிறப்பிலும், தில்லையி லிருந்து வந்ததும் பின்னர்க் கோயிலிலிருந்து வந்ததுமாகிய இரண்டும் பின்னர்த் தடுத்தாட்கொண்ட புராணத்தும் கூறுதலின் இங்கு இஃது அவையிரண்டிற்கும் இடை யில் வைத்து **வந்து பாடிய** என்று கூறியருளினார் ஆகும்.

அந்தமில் புகழ் ஆலால சுந்தரன் - ஆலால சுந்தரர் என்ற பெயரைப்பற்றியும், அவரது புகழின் பெருமையைப் பற்றியும் திருமலைச் சிறப்பு 16, 17, 19, 21, 22 முத லிய திருப்பாட்டுக்களிலும் அவற்றின் உரையிலும் காண்க. இப்பெயர் அவருக்குக் கயி லாயத்தில் வழங்கிய பெயர். இங்கு அவருக்குப் பெரும்பாலும் வழங்கும் பெயர் சுந்தரர் என்பது. ஆலாலசுந்தரராகிக் கயிலையில் இருந்த அவர் இங்குவந்து அவதரித்துச் சுந்தர மூர்த்திகள் என்ற நிலையில் பாடி யருளினார்; ஆதலின் ஆலால சுந்தரன் **சுந்தரத் திருத் தொண்டத்தொகை** பாடியருளிய என்றார். **சுந்தரத் திருத்தொண்டத்தொகை** என்பதற்கு அழகிய திருத்தொண்டத்தொகை எனவும் ஆம். இது பின் வரும் தடுத் தாட்கொண்ட புராணப் பகுதியின் உள்ளுறையைச் சுருக்கி எடுத்துக் காட்டியவாறு. 11

சுருக்கம்:—திருவாரூர் நகரத்துக்கு அகமலர்போல்வது பூங்கோயில். அப்பூங்கோயி லின் திருமதில் வாயிலையடுத்துக் கோவிலுக்குள் முதலிற் காணப்பெறுவது தேவாசிரிய மண்டபமாம். இதின் வாயிலில் எல்லாத்தேவர்களும் கூடிக் காத்திருப்பர். உள்ளே மாத வர்களாகிய அடியார் திருக்கூட்டம் எப்பொழுதும் நிறைந்து எழுந்தருளியிருக்கும். அவ் வடியார்கள் பலப்பலதிறத்தில் உள்ளவர்கள். அவர்கள் **விபூதி உருத்திராக்கம்** அணிந்து திருவைந்தெழுத்தை ஓதுபவர்கள்; அன்பின் மிகுந்தவர்கள்; கைத் திருத்தொண்டு செய்பவர்கள்; எப்பொழுதும் உள்ளம் கலங்காதவர்கள்; விருப்பு வெறுப்பு இல்லாதவர்கள்; கண்டிகையும் கந்தையும் அணிந்து ஒரு குறைவுமில்லாதவர்களாய் இறைவன் பணியே பூண்ட மகாவீரர்கள்; முத்தியிலும் ஆசைப்படாத மனவன்மையுடையவர்கள்; சிவபெரு மானை எப்பொழுதும் மறவாத சிந்தையுடன் அவர் திருத்தொண்டிலே உறைத்து நிற் கின்றவர்கள்; அளவிடற்கரிய பெருமையும் குணமும் உள்ளவர்கள்; தாம் வேண்டிய படி அரசக் கோலம் முதலிய எவ்வேடமும் தாங்கி நிற்பவர்கள். இவர்கள் யாவரும் சிவ பெருமானுடைய உண்மைத் தனித்தொண்டர்களாம். இத்திருக் கூட்டத்தையே ஆலால சுந்தரர் சுந்தரராகி வந்து பாடித் துதித்தருளினார். அத்திருத் தொண்டர்களது வரலாறுகளைப் பேசுவதற்குமுன் ஆலால சுந்தரர் கயிலையிலிருந்து வந்து திருத்தொண் டத்தொகை பாடிய வரையில் இனிச் சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இப்பகுதி இப்புராணத்துள்ள அடியார்களது பெருமைகளைப் பொது வகையால் வடித்து எடுத்துக் காட்டிச் சிறப்பிப்பதாம். இச்சிறப்புக்களைப் பிரித்து அவற் றுள் பின்வரும் ஒவ்வொரு அடியார்களது சரிதத்திலும் அவ்வவர் சரிதத்திற் கேற்றவை களைப் பொருத்திக் கண்டுகொள்ளத் தக்கது. இதிற் கூறியவை அடியார்களது பொது இலக்கணமும் பொது இயல்புகளும் ஆம். பின்னர் அவ்வச் சரிதங்களிற் கூறுவன சிறப் பியல்பும் சிறப்பிலக்கணமுமாம். இப்பகுதி அடியார்களுடைய நிருவிகற்பக்காட்சியாய்ச் சமூக தரிசனமும், பின்னர் அவ்வச் சரிதங்களிற் காண்பது அவ்வவர்களது சவிகற்பக் காட்சியாகிய தனித் தரிசனமும் ஆம்.

கற்பனை:—(1) சிவபெருமானைப் பணிபவர்களே உலகத்தை ஆளற்குரியவர்கள். இவர்களைச் சரணடைந்து அவர்களது வழி நிற்றலே உலகத்தார் உய்வதற்கு ஏற்ற வழியாம். இதை உலகம் பின்பற்றி நடந்து உய்வதாக. மும்மையா லுலகாண்ட மூர்த்தி நாயனார் புராணம் காண்க.

(2) கைத் திருத்தொண்டு செய்தலும் விபூதி உருத்திராக்கம் அணிதலும் தொண்டர்களுக்கு வேண்டப் பெறுவன.

(3) எத்தகைய கலக்கம்வரினும் மனம் திரியாது - கலங்காது - சிவபெருமானை மறவாது, தாம் கைக் கொண்டொழுகிய அன்பின் நெறியிலே ஒரு சிறிதும் பிறழாது, நிலை நிற்க வேண்டும் என்பது அடியார்கள் சிறப்பிலிருந்து தெரிந்து ஒழுகவேண்டிய பெரிய கற்பனையாம். இதனைத் தாம்தாம் கொண்ட உலகநிலையிலே வைத்து ஒழுகுபவர் பலர். ஆனால் இறைவனிடத்துத் தொண்டுசெய்யும் வழியைக் கைக்கொள்ளாமலும், சமயம் போல மாற்றியும், கைவிட்டும் ஒழுகுவர். இறைவனிடத்தே பதித்த அன்பு நெறியில் உறைத்து நின்று ஒழுகுவதே மக்களுக்கு நன்மை தருவதாம். மற்ற உறைப்புக்களெல்லாம் இவ்வாறாகா.

(4) ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்று போலவே பார்க்கும் மனநிலையில் உலகத்தார்கள் பயின்று வருதல் நன்மை தரும். இதுவே உலகப் போராட்டங்கள் எல்லாவற்றிற்கும் மருந்துமாம்.

(5) எளிய வாழ்க்கையும், இறைவனிடத்து அன்பினால் வந்த வீரமும், ஒன்றும் குறைவில்லை என்ற மன நிறைவும் எல்லாரும் அறிந்து பின்பற்றிப் பயன் பெறத்தக்க குணங்களாம்.

திருக்கூட்டச் சிறப்பு முற்றும்.

தடுத்தாட்கொண்ட புராணம்

தடுத்தாட்கொண்ட புராணம் - இறைவன் நம்பியாரூரரைத் தடுத்து ஆளாகக் கொண்ட செய்தியை உரைக்கும் பகுதி. திருமலையிலே இரு சேடியரைக் கண்டது காரணமாக ஆணையின் வழி இங்கு அவதரித்தனர் ஆலாலசுந்தரர். இது தூல காரணம்; தென்றிசை வாழவும் திருத்தொண்டத்தொகை தரவும் அவ்வாறு அந்த இரு மாதர் மேல் மனம்போக்கினர் என்பது அவர் அவதரிக்க நேர்ந்ததன் சூக்குமகாரணம். இந்தக் காரணங்களின் வேறாக, அதாவது செய்யப்போன கருமங்களின் வேறாய், இதர ஆகாமிய வினைகள் தேட நின்றபோது தடுக்க - என்று சுந்தரர் வேண்ட, இறைவன் அவ்வாறே அருளினர் என்று மேலே கண்டோம். இப்பகுதியிற் கண்ட புத்தூர்ச் சடங்கவியார் மகள் இவ்விருசேடியரினும் வேறானவர் ஆதலின் அந்த வரத்தின்படியே இறைவன் வந்து அந்த மணத்தைத் தடுத்துச் சுந்தரரைத் தமது ஆளாகக் கொண்டனர். (28-ம் பாட்டு). இவ்வரலாறு இப்பகுதியிற் கூறும் சிறந்த பொருள். இப்பகுதியிலே பரவையார் திருமணமும், திருத்தொண்டத்தொகை அருளிச்செய்தலும் கூறப் பெறுவன. இவை சுந்தரரது அவதாரக் காரணங்களாயினும் இவை நிகழ்வதற்கு வழி செய்து முன்னர் நிகழ்ந்ததாலும் இது மக்கள் கற்கவேண்டிய சிறந்த கற்பனையாதலாலும் இதற்குப் பரவையார் திருமணச் சிறப்பு என்றாவது, திருத்தொண்டத்தொகை யருளிய சிறப்பு

என்ருவது பெயரிடாமல் இப்பெயரிட்டனர். இதுவே இதனுல் அறியும் சிறந்த கற்பனை என்பது 62-ம் பக்கத்திலே உரைக்கப்பெற்றது.

இப் பகுதியிற் கூறப் பெறும் பொருள் இப் பெயரினுல் விளங்கும். இதன் வரலாற்றுத் தொடக்கத்தைத் திருமலைச் சிறப்பு 28-வது திருப்பாட்டில்,

“செய்ய சேவடி நீங்குஞ் சிறுமையேன்
மையன் மானுட மாய்மயங் கும்வழி
ஐய னேதடுத் தாண்டருள் செய்யென”

என்பதிற் காண்க. ஆணையின் வழி உலகத்தில் அவதரித்த ஆலால சுந்தரர் உலகவழியில் செல்லாது அருள் வழியிலே சென்று நமக்கு வழிகாட்டியாகி விளங்கும் நிலைமைக்கு இறைவன் அவரைத் தடுத்து ஆட்கொண்டதே காரணமாகும். ஆதலின் இதனை ஆசிரியரும் முதற்பாட்டிலே குறித்தமையும் காண்க.

147. கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
வங்கண ரோலை காட்டி யாண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைக ளோடுந் திருமுனைப் பாடி நாடு. க

(இ - ள்) கங்கையும்...தமக்கு நாடு - கங்கை, நிலா, பாம்பு, கொன்றை என்ற இவற்றைத் தம்முடியிலே வைத்த சிவபெருமானுல் ஆளோலை காட்டி வலிய ஆட்கொள்ளப்பெற்றவராகிய ஆலாலசுந்தரர்க்கு (ஆணைவழியே இவ்வுலகில் அவதரிக்க) உரிய நாடாவது; மங்கையர்...திருமுனைப்பாடிநாடு - குளிர்ந்த சந்திரன் போன்ற பெண்களின் முகங்களிலே இருபக்கமும் ஓடிச்சென்று சிறந்த கயல்மீன்கள் போன்ற கண்கள் காதிலணிந்த குழைகளை நாடிச் செல்லும் அழகிய பெண்கள் வாழும் திருமுனைப்பாடி நாடு என்பதாம்.

(வி - ரை) வதன மதியில் செங்கயல் குழைகள் நாடும் மங்கையர் வாழும் திருமுனைப்பாடி நாடு என விரித்துக் கூட்டுக.

கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் - இறைவன் திருமுடியிற் றரிப்பன.

அங்கணர் - அம்+கண்ணர் - அழகிய கண்ணையுடையவர். **கண்** - கருணைக் கண். வரிசை 39-ம் பாட்டின் கீழ்க்காண்க. அங்கணர் ஆதலின் ஆண்டவர் என்பது குறிப்பு. இவ்வாறு ஆண்டது திருக்கயிலாயத்திலே போந்த அருட்செய்தியின் தொடர்ச்சி என்று காட்டுவார் அப்பாட்டிற் கூறிய அப்பெயராலே இங்கும் கூறினுர்.

கங்கை - உலகம் வாழ்வடையும் பொருட்டுக் கங்கையைத் தரித்து வானிலிருந்து இவ்வுலகில் ஆறுக உலவ வைத்ததுபோற் கயிலையிலிருந்து ஆலால சுந்தரரை உலகில் வந்து அவதரிக்கச் செய்து உலகை வாழ்விக்கச் செய்த சரிதக் குறிப்பாம்.

மதியும் பாம்பும் - “பாம்போடு திங்கள் பகைதீர்த்து ஆண்டு” ஒரு சேரவைத்ததுபோல் பரவையார் சங்கிலியார்களின் ஊடல் தீர்த்து ஆலாலசுந்தரருடன் வைத்த சரிதக் குறிப்பு.

கடுக்கை - கொன்றை. பிரணவ உருவமுடையதாதலின் மந்திர சொரூபமாகிய திருத்தொண்டத்தொகையாதி தேவாரங்களை உலகிலே தோற்றுவிக்கச் செய்யும் பேருபகாரம் என்ற குறிப்பும் பெறுகின்றேம்.

ஓலைகாட்டி ஆண்டவர் - இப்பகுதியிற் கூறும் சரித உட்குறிப்பும் முற்குறிப்புமாம். **ஆண்டவர்** - ஆளப்பெற்றவர் - செயப்பாட்டுவினைப் பொருளில் வந்தது.

ஆண்டவர் தமக்குநாடு - அவருக்கு அவதார உரிமையான நாடாகியது. ஓலைகாட்டி ஆண்ட செய்தி பின்னர் உரைப்பாராயினும், அது இப்புராணம் பாடுதற்கு முன் காலத்தே நிகழ்ந்ததாதலின் ஓலை காட்டியாண்டவர் - என இறந்த காலத்தாற் கூறினுர்,

வதன மதி - செங்கயல் குழைகள் நாடும் - நாடு - நாடும் மங்கையர் வாழ்கின்ற திருமுனைப்பாடி நாடு என்க. **வதனமதி** என்பதற்கேற்பக் **கயல்** - கண்களையும், **குழை** - அவற்றை யணிந்த காதுகளையும் குறிக்கும். இது கண்கள் நீண்டிருத்தலைக் கூறிய படியாம். இது பெண்களின் அழகிலக்கணங்களில் ஒன்று. **சீதமதி** என்று தண்ணீர்மை குறித்ததால் கயல்களும் குழைகளும் இருத்தல் இயல்பென வருணித்தவாறு. குழைகள் மகரவடிவாக அமைக்கப்பெறுமாதலின் கயல் மகரங்களை உறவு கொண்டாடுவதுபோலும் என்ற அழகும் பெறுகின்றோம். அன்றியும் இப்பகுதியிலே பின்னர்ச் சரித நிகழ்ச்சியிற் பரவையார் ஆரூர் நம்பிகளைப் "பண்டைவிதி கடைகூட்டக்" கண்களாற் கண்டபின் "எதிர் வந்தவர் யார்?" என்று சேடியை வினவி அவள் சொல்லத் தமது காதுகள் மூலம் அறிந்துகொண்டாராகும். காட்சித் துறையிலே கண்ணால் தலைவனைக் கண்ட தலைவி, பின்னர் அவனை இன்னார் என்று காதாற் கேட்டறிந்து அன்பு செய்வள். ஆதலின் கண்கள் காதுகளை நாடிற்று என்ற குறிப்பை இச்சரித நிகழ்ச்சியிற் காண்போம். அன்றியும் நாட்டின் பொலிவை அதில் வாழ்வாரது பொலிவினால் அறிவித்தலும் இயல்பாம். இவ்வாறன்றி அழகிய பெண்களோடு நாட்டை வருணித்தலின் ஆசிரியர் பெண்ணின்பெருமை பேசினார் என்றும் பிறவும் கூறுவன எவையும் இங்குப் பொருந்தாதன. அது இப்புராண நோக்கங்களில் ஒன்றன்று ; பெண்ணேயாயினும் ஆணேயாயினும் சிவபெருமானிடத்தும் அவன் அடியாரிடத்தும் உள்ள அன்பின் பெருமை கூறுதலே இப்புராணத்தின் நோக்கம் ஆதலின் என்க.

திருமுனைப் பாடி நாடு - "முனைய தரையர்", "முனையரையர்", "முனையர்" என்ற பேருடைய சிற்றரச மரபினரால் ஆளப் பெற்றபடியால் "முனைப்பாடி" என்ற பெயராயிற்று ; சோழர்களாண்டது 'சோழ நாடு' என்பதுபோல. வரிசை 151-வது பாட்டில் " நரசிங்க முனைய ரென்னு நாடுவாழ் அரசர் " என்ற இந்நாட்டு அரசர் பெயரையுங் காண்க. பொது வகையாற் பார்க்கும்போது இந்நாடு இந்நாளிற் காணும் கூடலூர்ச் சில்லாப் பிரதேசம் என்று கூறலாம். இந்நாட்டின் சிறப்புப், பின்னர்த் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே கூறுவாராதலின் இங்கு விரித்துக் கூறவில்லை. முதலிற் கூற நேர்ந்த இவ்விடத்தே கூறாதது என்னை? எனின், இப்பகுதி தனிச் சரிதம் அல்லாமையானும், இது பாயிரத்தில் ஒரு பகுதியேயாய் இப்புராணத்திற்கு முன்வரலாறு சொல்லித் தோற்றுவாய் செய்வது மட்டிலே அமைவதாலும், ஆரூர் நம்பிகளது முன் வரலாற்றிற் கூறியபடித் திருக்கயிலையே இவரது இடமாதலாலும், திருத்தொண்டத் தொகையின் வரலாறு கூறும் இப்பகுதிக்கு உரியது சோழநாடே ஆதலாலும், பிறவாற்றாலும் இந்நாட்டின் சிறப்பு இங்குக் கூறவில்லை என்க. இப்பாட்டில் **மங்கையர் அழகு** கூறியதால் அந்நாட்டு மக்களின் சிறப்பும், வரும்பாட்டில் **நலத்தான் மிக்க** என்றமையால் நாட்டுச் சிறப்பும் உரியதொருவகையாற் கூறியதுமாம். 1

148. பெருகிய நலத்தான் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவ மோங்க வருளினா லவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்க ணீடுந் திருநாவ லூரா மன்றே. ௨

(இ - ள்) பெருகிய......தன்னில் - நீடிய நலங்கள் பலவும் மிகுந்த பெரிய அத் திருமுனைப்பாடி நாட்டிலே ; அருமறை...வளம்பதி - அரிய வைதிக சைவநெறி உலகத்திலே ஓங்கிவளரும் பொருட்டுத் திருவருளினாலே (முன்கூறிய ஆலகாட்டி ஆண்டவர்) அவதரிப்பதற்குப் பொருந்திய பெருந்தவத்தைச் செய்த வளமுடைய பதியாவது ; வாய்மை...ஊராம் - உண்மைநெறி பிறழாத திருமறையவர்கள் நிலைத்துவாழும் திருநாவலூர் ஆகும். அன்று, ஏ - அசை.

(வி - ரை) ஓலை காட்டி ஆண்டவர் என்ற எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவிக்க.

பெருகிய நலம் - உலகுக்கு உதவுவதாகிய நன்மை. இந்த நாடு உதவிய நல மானது நாளும் நாளும் பெருகிக் கொண்டே போவதாம். அந்நலமாவது அருமறைச் சைவம் ஓங்கச் செய்தது. இது ஆரூர் நம்பிகளது அவதாரத்தால் உண்டாகியது. இதுபோலவே இந்நாடானது அருமறைச் சைவத்தின் இன்னொரு ஆசாரிய மூர்த்திகளாகிய அப்பர் சுவாமிகளையும் உலகிற்கு உதவி நலஞ் செய்ததாம். இவ்விரு பெருமக்கள் நலமும் பெருகிக்கொண்டே வருவது ஆதலின் "பெருகிய நலத்தான் மிக்க பெருந்திருநாடு" என்றார். இதனையே "மறந்தரு தீநெறிமாற" எனும் திருநா - புராணம் 11ம்- பாட்டில் விளக்கியருளினார். **பெருகிய** - (மிக்க) **பெருந்திரு** - என்றமையால் எதிர்காலமும் கொள்ளப்பெற்றுப் பின்னர் ஸ்ரீ மெய்கண்ட சுவாமிகள், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் என்ற சைவ சித்தாந்த சந்தான ஆசாரியர்களையும் கொடுத்த பெருமை பெறுவதையும் இங்கு நினைவு கூர்க.

பெருந் திருநாடு - அழியா ஐசுவரியத்தை உடைய நாடு. மேலே சொல்லிய நாடு.

அருமறைச் சைவம் - வேதத்தின் பயனாயுள்ள சைவம். இதுவே வைதிக சைவம் எனப்படும். இதுவே சைவசித்தாந்தம் எனவும் பெறும். "ஓரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த, சாரங் கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது" என்றார் பெரியோரும். "மௌன மோலி அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தி னமர்ந்தது வைதிக சைவம்" என்பர் தாயுமானார். வேதத்தின் பயன் சைவம் என்பதே ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் கருத்து எனச் சண்டேசுரநாயனார் புராணம் 9-வது திருப்பாட்டில் "வேதப் பயனும் சைவமும்போல்" என்பதனால் அறியலாம்.

ஓங்க - அருமறைச் சைவம் நம்பியாரூரரது திரு அவதாரத்தாலே ஓங்கி வளர்ந்ததாம். இதுபற்றித் திருமலைச் சிறப்பிற் கூறியவை காண்க. தென்திசையிலே பல தலங்களும் விளக்கம்பெற்றுச் சிவபெருமானது பணி பெருகியது. திருத்தொண்டத்தொகை அருளினமையால் சிவனடியார் பொலிவு பெருகிற்று. ஆதலின் **அருமறைச் சைவம் ஓங்க அவதரித்த** என்பதாம். இதுபோலவே நமது பரம ஆசாரிய மூர்த்திகளாகிய அப்பமூர்த்திகளும், சம்பந்தப் பெருந்தகையாரும் அவதரித்தமையால் அருமறைச் சைவம் ஓங்கிற்று என்று அவ்வவர் புராணங்களிற் கூறுவதுங் காண்க. "அருமறையின் தூய சிவாகம நெறிவிளங்க" மாணிக்க வாசகப்பெருமான் அவதரித்தார் என்பது திருவாதவூரர் புராணத்திலே காண்க.

அருளினால் - திருமலையிலே ஆதிமூர்த்தி அருளியபடி. வரிசை 37-வது திருப்பாட்டுக் காண்க. ஓங்கும்படி வைத்த அருளினால்.

அவதரித்த-அவதாரம் என்பது இறங்குகை என்ற பதப்பொருள்தரும். திருமலையினின்றும் இங்கு இறங்கி வருகின்றாராதலின் **அவதரித்த** என்றார். அவதரித்தல் என்பது தம்பொருட்டன்றிப் பிறர் பொருட்டுப் பிறப்பை மேற்கொள்ளும் பெரியோர் பிறப்புக்குப் பெயராகும்.

மருவிய தவத்தால் மிக்க வளம்பதி - இப்பதி முன்பு மிகுந்த தவஞ்செய்து தன்னிடத்தே நம்பிகள் அவதரிக்கும் பேறுபெற்றது என்பதாம். முன்னர் "**மாதவம் செய்த** தென்றிசை" என்றதும் காண்க. திருஎருக்கத்தம்புலியூரைப் பற்றி "ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவின் மாதவம் முன்பு செய்தவாறு" எனத் திருஞான சம்பந்தப்பெருந்தகை சொல்லியருளிய கருத்து இங்கு நினைவு கூர்தற்பாலது. பதியிலுள்ளாரது தவம் பதியின் மேல் ஏற்றப்பெற்றது.

"..இதுபாலிசூழ்
நாடு செய்ததவம்! நீடு குன்றைவள நகரி செய்ததவம்! நிகரிலாப்
பீடு செய்தபகி ரதிகு லத்திலகர் சேக்கிழார்செய்த பெருந்தவம்!"

என்ற உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருவாக்கும் காண்க.

வளம்பதி - நாட்டிற் கேற்றபடி பதிதானும் வளங்களையுடையது.

வாய்மை குன்றாமை - மறையவர் குணங்களில் இது சிறந்ததாம். வேதத்தில் விதித்த "தருமம் சர - சத்யம் வத" என்ற இருதருமங்களில் ஒன்று. பின்னர் இப்பகுதியிலே நம்பிகளது திருமணம் இறைவனால் தடுக்கப்பெற்ற சரிதத்திலே மறையவர்களின் குண மேன்மையில் வைத்து இதனைக் கண்டுகொள்க. சரிதப் பின்னிகழ்ச்சியைக் குறிப்பிக்கவே இந்த அடைமொழியாலே மறைவர்களைச் சிறப்பித்தனர்.

நீடும் - என்றும் நிலைத்து வளர்ந்திருப்பதற்கு இடமாகிய.

திருநாவலூர் - திருமுனைப்பாடி நாட்டின் அரசர்கள் வாழ்தற்குரிய தலைநகரங்களில் ஒன்று. இத்தல விவரங்கள் (பின்னர்) வரிசை 224-ம் பாட்டின்கீழ்க் காண்க. 2

149\. மாதொரு பாக னார்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்துட் டோன்றி மேம்படு சடைய னாருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார். ௩

(இ - ள்) மாதொரு...தோன்றி - உமாதேவியாரை ஒருபாகத்தில்வைத்த சிவபெருமானுக்கு வழிவழியாக அகம்படித்தொண்டுசெய்யும் சிவமறையோர் மரபிலே தோன்றியவராய்; மேம்படு...செய்தார் - மேம்பட்டு விளங்கிய சடையனாருக்குக் குற்றமற்ற கற்புடைய இல்வாழ்க்கைக்குரிய மனைவியாராகிய இசைஞானியார் திருவயிற்றினிடமாக உலகம் தீமை நீங்கவும் உய்தி பெறவும் திருவவதாரம்செய்தருளினார் (ஓலைகாட்டி ஆண்டவர்).

ஓலை காட்டி யாண்டவர் என்ற எழுவாய் வருவித்துரைக்க.

(வி - ரை) **மாதொரு...குலம்** - இதுவே ஆதிசைவமரபு. சிவப்பிராமணர் என்பார் இவர்களே. இவர் இன்றைக்கும் திருக்கோயிற் பூசையாகிய அகம்படித் திருத்தொண்டு தவிர வேறு தொழில் செய்யாமை காண்க. இவர்களைப்பற்றிச் "சிவமறையோர் திருக்குலத்தார், அருவிவரை வில்லாளிக்கு அகத்தடிமையா மதனுக், கொருவர்தமை நிகரில்லார்" என்றும், "தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுநாள்" என்றும் புகழ்த்துணை நாயனார் புராணத்திலேயும், (வரிசை 4127-4128)

"எப்போது மினியபிரா னின்னருளா லதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போது மார்வமிகு மன்பினராய்
முப்போது மருச்சிப்பார் முதற்சைவ ராமுனிவர்"

என்றும்,

"............வழிவழியே திருத்தொண்டின்
விரும்பியவர்ச் சனைகள்சிவ வேதியர்க்கே யுரியன..."

என்றும், முப்போதுந் திருமேனிதீண்டுவார் புராணத்திலேயும் கூறியவாற்றால் பிரமதேவர் முகத்திலிருந்து தோன்றிய ஏனை வேதியர்போலல்லாமல் இவர்கள் சிவபெருமானது ஐந்து திருமுகங்களினின்றும் அதிகரித்து வந்தமையும், ஆகமங்களின் வழியே சிவபெருமானை அருச்சிக்க உள்ள இவர்களதுரிமையும், பிறவும் விளங்கும். மகா சைவராகிய ஏனைய வேதியரிடமிருந்து பிரித்து உணர்தற்பொருட்டு 'வழிவழியடிமை செய்யும் வேதியர்' என்றார். இவர்கள் கௌசிகர், காசிபர், அகத்தியர், பரத்துவாசர், கௌதமர் என்ற ஐவரின் கோத்திரங் கொண்டவர்கள்; இவ்வைவரும் இப் பேர்கொண்ட பிரம புத்திரர்கள் அல்லர். இவர்கள் சிவமரபினர். இவர்களுக்கு வேதபாரம்மிய மில்லை என்பாரை நோக்கி மறுக்கும்வகையில் **வேதியர்குலம்** என்றார்.

பிரமதேவர் முகத்தினின்று தோன்றிய வேதியர் வேறு; சிவவேதியர் வேறு. பிரமன் வழித் தோன்றியவரே, தக்கயாகத்தில் வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டும், தாருகாவனத்து இருடிகள் வழிவழிவந்து இறைவனால் தண்டிக்கப்பட்டும், ததீசி முனிவரால் சபிக்கப் பெற்றும் இவ்வழியே உலகில் அதிகரித்து வருபவர்கள். இவர்களது வரலாறு கந்தபுராணம் முதலியவற்றுட் காண்க. சிவவேதியர்களாகிய இவர்கள் முன் சொல்லிய எவ்விதச் சிவாபராதங்களுக்கும் உட்படாதவர்களாய்ச் சிவபெருமானை எப்போதும் ஆன்மார்த்தம் - பரார்த்தம் என்ற இருநிலையிலும் வழிபட்டுச் சிவநெறித் தலைவர்களாய் உள்ளவர்கள். இவர்கள் தம் பெருமை தானறியாத் தன்மையர்களாய் மற்ற அவ்வேதியர்களுக்குத் தாழ்ந்த நிலையில் தம்மை நினைத்தும் ஒழுகியும் வருகின்றார்கள். இவர்கள் பெருமைகளைப்பற்றி மேலே குறித்த நாயன்மார் புராணங்கள் முதலியவற்றிற் காண்க.

வழி வழி அடிமை - தாய்மரபு, தந்தைமரபு என்ற இருமரபும் அடிமை செய்வோராய் வந்தவர். ஆதலின் **வழி** என்னாது **வழிவழி** என்றார். "மழவிடையார்க்கு வழி வழியாளாய்" என்ற திருவிசைப்பா (திருப்பல்லாண்டு) காண்க.

தோன்றி மேம்படு சடையனார் - தாம் அந்த மரபில் தோன்றியதினாலே மேம்பாடு அடைந்தவராதலின் **தோன்றி** என்று இறந்த காலத்தாலும், நம்பிகள் தமது திருமகனாராய் இனி அவதரிப்பாராதலின் **மேம்படு** என்று எதிர்காலத்தாலும் கூறினார். **மேம்படு** என்றதனாலேயே மூன்று காலத்தும் மேம்பாடு அடையும் என்க. **சடையனார்** - இது சிவபெருமானுக்கே சிறப்பாய் உள்ள திருநாமங்களில் ஒன்று. அதனைத் தமக்குப்பெயராக இடப்பெற்றவர் நம்பிகளது தந்தையார். கடவுட் பெயர்களையும் பெரியோர் பெயர்களையும் மக்களுக்கு இடுதல் பண்டை நாள் முதல் நம் நாட்டுப் பழக்கமாம். இவருடைய பிதாவுக்கு **ஆரூரர்** என்ற பெயர் வழங்கியதும், அப்பெயரையே இவர் தமது மைந்தனார்க்கு வைத்ததும் இக்கருத்தே பற்றியன. "ஆரூரன் பேர் முடி வைத்த" - முதலிய தேவாரங்களாலே அறிக. இதுபற்றிப் பின்னரும் காண்க. **சடையான் - சடை** - என்பவைபற்றி வரிசை 131-ம் பாட்டினுரையுட் காண்க. சடையனார்க்கு **மகனாக** என்று வருவித்துக் கொள்க.

ஏதமில் கற்பு - குற்றமற்ற - தீங்கில்லாத. இது கற்புக்கு உரிய இயற்கை யடைமொழி. கற்பின் இயல்பைக் குறிப்பதாம். இதனை **வாழ்க்கை** என்பதனோடு கூட்டி ஏதமில் வாழ்க்கை என்றுரைப்பினுமாம். கற்புக்கும் வாழ்க்கைக்கும் வரக்கூடிய ஏதங்களைத் திருக்குறள் முதலிய அறநூல்களுட் காண்க.

கற்பின் வாழ்க்கை - இல்வாழ்க்கை - இல்லறம். **மனை** - மனைவி - இல்லக்கிழத்தி - வீட்டுக்குரியவள். "வீட்டுக்காரி" என்பது உலக வழக்கு.

இசை ஞானியார் - நம்பிகளது தாயார் பெயர். நம்பிகள் தமது தேவாரங்கள் பலவற்றிலும் தம் தாய் தந்தையர் பெயர்களைக் குறித்துள்ளமை காணப் பெறுவதாம். "நன்சடையன் இசைஞானி சிறுவன்". இசைஞானி யம்மையார் (திருவாரூர்) கமலாபுரத்திலே சிவகோதம கோத்திரத்திலே ஞானசிவாசாரியார் குடும்பத்தில் அவதரித்த மகளாவார் என்பது கல்வெட்டுக்களாற் கிடைக்கும் செய்தி.*

தீதகன்று உலகம் உய்ய - **தீதகன்று** - பாச நீக்கம் பெற்று; **உய்ய** - சிவப்பேறு பெற ; இவை யிரண்டும் வெவ்வேறு நிலைகளைக் குறிக்கும் எனக் காட்ட **உலகம்** என்பதை இவையிரண்டுக்கும் இடையில்வைத்தார். இவை யிரண்டுமே சிவஞானபோதம் 10,11,12-ம் சூத்திரங்களின் கருத்தாவன. உலகத்தாரைத் தீமைபோக்கி உய்விப்பதற்கே நம்பிகள் அவதரித்தார் என்பதை முன்னர்க் கூறினார்.

உலகம் - உயிர்கள். **உய்தல்** - நம்பிகள் நடந்துகாட்டிய சிவ வழிபாட்டில் நிற்பதாலும், சொல்லிக்காட்டிய திருத்தொண்டத்தொகை அருண்மொழி பயில்வதாலுமாம்.

---

*73 of 95 S. I. I. Vol & Vol II P. 153.

அவதாரம் செய்தல்-பிறரை உய்விக்க வருதல். ஆதலின் உலகம் உய்ய அவதரித்தார் என்றார். மேற்பாட்டினுரையிற் காண்க. பிற இடத்தும் இவ்வாறே கொள்க. 3

150. தம்பிரா னருளி னாலே தவத்தினுன் மிக்கார் போற்று
நம்பியா ரூர ரென்றே நாமமுஞ் சாற்றி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனு ணரையின் மின்னத் தெருவிற்றே ருருட்டு நாளில். ௪

151. நரசிங்க முனைய ரென்னு நாடுவா ழரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பாற் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப வன்பினான் மகன்மை கொண்டார். ௫

150. (இ-ள்) தம்பிரான்...சாற்றி-(அவதரித்தாராகிய அவர்) தாம் அடிமை செய்யும் தமது பெருமானது அருளினாலே, மாதவர்களும் போற்றத்தக்க நம்பியாரூரர் என்ற திருநாமம் சூட்டப்பெற்றவராய்; மிக்க...மின்ன - (காவல் தொழிலில்) மிகுந்த ஐம்படையும் சதங்கையும் அணிந்துகொண்டும், அழகிய மணிகளிழைத்த சுட்டி அணிந்துகொண்டும், செம்பொன் நாண் திருவரையில் விளங்கும்படியாக; தெருவில்...நாளில் - தெருவிலே சிறுதேர் உருட்டி விளையாடுகின்ற நாள்களில் (ஒருநாள்), 4

151. (இ-ள்) நரசிங்க......கூர - அந்நாட்டை வாழ்வுபெற அரசுபுரியும் நரசிங்க முனையர் என்னும் அரசர் கண்டு இவரிடத்தே சொல்ல அரிய ஆசை மிகுந்ததனாலே; பயந்தவர்......கொண்டார் - பெற்றோர்களிடம் போய் நண்புரிமையினாலே இக்குழவியினை வேண்டிப் பெற்றுக்கொண்டுபோய்த் தங்கள் மரபில் அரசகுமாரனைப் போன்ற அன்பு மிகுதியினால் தமக்கு மகனாந் தன்மையிலே ஏற்றுக்கொண்டனர். 5

150. (வி-ரை) **தம்பிரான்** - தமக்கு உரிய பெருமான். **அருளினாலே நாமமும் சாற்றி** - என்று கூட்டுக. சாதகர்மம் முதலிய சடங்குகளில் பூர்வ புண்ணியத்தின் வசமாகக் கிடைத்த இப்பிறவி என்று தொடங்கிக் காணும் வழக்கு உண்மையால், இங்கு இவர் அவதரித்து நாமமிடப்பெற்றது முன் புண்ணியப்பயனாகிய **தம்பிரானருளினாலே** என்றார். **அருளினாலே** - அருளைப் பெற்றமையினாலே (நம்பியானவர்) - என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு. **சாற்றி** - சாற்றக்கொண்டு - சாற்றப்பெற்று - என்னும் பொருளில் வந்தது.

தவத்தின் மிக்கார் போற்றும் - போற்றும் நாமம் என்க. உபமன்னிய முனிவர் முதலிய மாமுனிவர்களும் எடுத்துத் துதிக்கின்ற திருப்பேர் ஆதலின் **மிக்கார் போற்றும்** என்றார். **தவத்தினின் மிக்கார்** - மாதவர்கள் - பெருமுனிவர்கள். இது க. சதாசிவஞ் செட்டியார் கண்ட உரை. முனிவர்கள் வெள்ளையானையுடன் வந்து நம்பிகளைத் திருக்கயிலைக்கு அழைத்துச் சென்றமையும், உபமன்னிய முனிவர் "நம்பியாரூரன் நாந்தொழுந் தன்மையான்" என்று எடுத்து வணங்கித் துதித்ததும் இங்கு வைத்துக் காண்க. பெருமிழலைக் குறும்பநாயனார் - கழறிற்றறிவார் நாயனார் - சோமாசிமாற நாயனார் முதலிய பெருமக்கள் போற்றியதும் காண்க.

இவ்வாறன்றிச், சடையனாரும் இசைஞானியாரும் எனக்கொண்டு, 'அவர்கள், தங்கள் தவமிகுதியினால் இவரை மகனாக அடைந்தவர், யாவரும் போற்றும் நாமம் சாத்தி' என்று உரைப்பாரும், **பெற்று** என்று பாடம் கொண்டு **தவத்தினுன் மிக்கார்** அங்குக் கூடியிருந்த பெரியோர் நாமகரணம் செய்து என்றுரைப்பாரும், சடையனார் தமது மகனாகப்பெற்று என்று உரைப்பாரும் ஆகப் பலரும் பலவாறு உரை கண்டனர். சாற்றி -

சாத்தி - சாத்தி - மின்ன - உருட்டு நாளில் என்று வினை எச்சங்கள் ஒரே எழுவாயின் வினைகொண்டு முடியுமாறு பொருள் கொள்ளுதலே சிறப்பென்பர்.

நம்பி ஆருரர் - ஆருரர் - பிள்ளைக்குப் பெற்றோர் இட்ட பெயர். திருவாரூர்ப் பெருமானுக்கு அடிக்குடியாக உள்ள குடியிலே வந்தமையால் இப்பேர் இக்குடியிலே வரும் பிள்ளைகளுக்கு இட்டனர் என்க. "ஆரூரன் பேர் முடிவைத்த...", "திருவாரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த" என்பன வாதி நம்பிகளது தேவாரங்கள் காண்க. இவர் பாட்டனார்க்கும் (பேரனார்) இப்பெயர் இருந்தமை பின்னர் இச்சரிதத்திற் காண லாம். வரிசை 205 பாட்டும் பிறவும் காண்க. **நம்பி** - சிவப்பிராமணர்களின் மரபுக்குரிய பெயர். நம்பியாண்டார் நம்பி - முதலிய பேர்களையும், "நம்பி முதல் திருவலகுவரை" முதலிய வழக்குக்களையும் காண்க.

நாமமும் சாற்றி - சைவர்க்குரிய 16 சடங்குகளில் ஒன்று. நாமகரணம் என்பர்.

ஐம்படை-காத்தற்கடவுளாகிய திருமாலுக்குரிய சங்கு - சக்கரம் - வாள் - தண்டு - வில் என்ற ஐந்து ஆயுதங்களின் உருவங்களிற் பொன் முதலியவற்றால் அணிகள்செய்து சிறுவர்களுக்குக் காவலாக மார்பில் அணிவது. இது பண்டைக் காலமுதல் தமிழர்களின் மரபு. பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்திலே திருமால் காக்க என முதலிற் கூறும் மரபும் காண்க. "ஐம்படையின், பூட்டார் மார்பிற் சிறியமறை புதல்வன்" (நமிநந்தி-புரா-33). "ஐம்படை மார்பிற் காணேன்..." (திருவிளை - மாமனாக - பட). **சதங்கை** - இடையிலும் காலிலும் அணிவது. ஐம்படையும் சதங்கையும் என உம்மைத் தொகை. "ஐம்படைச் சதங்கை" என்ற பதிப்புக்கள் சரியன்று போலும். **சாத்தி** - சாத்தக் கொண்டு.

தேருருட்டுதல் - சிறு தேர் உருட்டி விளையாடுதல். இது பிள்ளைப் பருவங்களில் ஆண்பிள்ளைகட்குரிய விளையாட்டு. இது ஆண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களில் ஒன்றாதல் காண்க. மூன்றாண்டுவரை இப்பருவங்களுக்குரிய வயது என்பர். இதற்கு எழுவாய் அவதரித்தாராகிய அவர் - என மேற்பாட்டிலிருந்து வருவித்துக் கொள்க.(அவர்)- அருளினாலே - நாமமும் சாற்றக் கொண்டு - சாத்தி - சாத்தி - மின்னத் - தேருருட்டு நாளில்.

நாமமும் சாத்தி - என்பதும் பாடம். 4

151. (வி - ரை) **நரசிங்க முனையர்** - அக்காலத்தே திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட அரசர். வரிசை - 147-ம் பாட்டின் கீழ் உரை காண்க. இவர்கள் ஒரு சிற்றரச மரபினைச் சேர்ந்தவர். பின்னர் நரசிங்க முனையரைய நாயனார் புராணத்திலே "திரு முனைப்பாடி, நாடாளுங் காவலனார் நரசிங்க முனையரையர்" (1), "இம்முனையர் பெருந் தகையார்" (2) என்பதுங் காண்க.

காதல் கூர - ஆசை மிகுந்ததனாலே. இவர் சுந்தரராதலால் இவரது பேரழகினாலே ஆசைகொண்டார். **பயந்தவர்** - பெற்றோர் (சடையனார்).

விரவிய நண்பினாலே - முன்னரே அவரிடம் தமக்கு விரவியிருந்த நண்புரிமையினாலே என்க. அவ்வாறல்லாத வழி அரசர் குடிகளிடம் மகனைக் கேட்டலும், பெற்றோர் மனமொத்துத் தருதலும் இல்லையாம் ; அது வலிந்து கோடலின்பாற்பட்டுப் பகையாசின் செயலாய் முடியும் ; ஆதலால் **நண்பினாலே வேண்டினர் பெற்று** என்றார்.

வேண்டினர் பெற்று - வேண்டிப் பெற்று. வினைமுற்று எச்சப்பொருளில் வந்தது. முற்றெச்ச மென்பர். **அரசிளங்குமரற் கேற்ப** - தன் குமாரனை வளர்த்தல்போல.

அன்பினால் மகன்மை - அன்புக்குரிய மகனாந் தன்மை. அபிமான புத்திரன் என்பர். வரும்பாட்டிற் **காதற் பிள்ளை** என்பதும் காண்க. எனவே, நம்பிஆரூரர் பெற்றோர்க்கு மகனாகவும், அரசனுக்கு மகனாந் தன்மையுடையராகவும் வளர்ந்தனர், இதனைப் பின்னர் வரும் பாட்டிலும், 19-வது பாட்டிலும் காண்க.

நாடுவாழ் அரசர் - நாடு தன்கீழ், இனிது வாழும்படி அரசுபுரிபவர். இந்நரசிங்க முனையரையரே இப்புராணத்துக் கூறும் நாயன்மார்களின் ஒருவர் என்றும் கூறுவர், இது ஆராயத்தக்கது. இச்சரிதப் பகுதி,

"நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு மூர்அணி நாவலூர்..."
—திருவெண்ணெய்நல்லூரும் திருநாவலூரும் - 11

என்ற நம்பிகள் தேவாரத்தாலும் அறியப்பெறுவதாம். இப்பாட்டினால் அந்தணர் குலத்தவரை அரசர் மனைகளிற் பிள்ளையாய் வளர்ப்பது அந்நாள் வழக்கங்களில் ஒன்று என்று தெரிகிறது. இந்நாளிலும் கொச்சி முதலிய சில சுதேசங்களின் அரசர்கள் பிராமணருடன் சமமான உணவுரிமை முதலியன பெற்று நிகழ்வது இவ்வழக்கத்தின் எச்சம் போலும்.

வேண்டினர் பெற்று - மகன்மை கொண்டார் - வேண்டுதல் - தரப்பெறுதல் - கொள்ளுதல் இவை தருமசாத்திரப்படி மகனைப் பெறுதற்குரிய அங்கங்கள். 5

152. பெருமைசா லரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னுந் தங்கள்
வருமுறை மரபின் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி யளவிறுல் கலைக ளாய்ந்து
திருமலி சிறப்பி னோங்கிச் சீர்மணப் பருவஞ் சேர்ந்தார். சு

(இ - ள்) பெருமை...வளர்ந்து - பெருமை சான்ற அரசரது அன்புக்குரிய மகனை பின்னரும் தமது சைவ அந்தணர் மரபுக்குரிய ஒழுக்கத்திலே நின்று வளர்ந்து; மங்கலம்...ஆய்ந்து - அவ்வொழுக்கத்திற்குரியபடி உரிய வயதளவிலே பூணூல் சாத்தும் சடங்கும் பள்ளியில் வைக்கும் சடங்கும் செய்யப் பெற்றாராய் அளவற்ற கலைகளை எல்லாம் ஆராய்ந்து; திருமலி சிறப்பின் ஓங்கி - அந்தக் கலைஞானங்களாகிய கல்விச் செல்வமும், அன்பினாற் கொண்ட அரசகுமாரனுக்குரிய பொருட் செல்வமும் கூடி மிகுந்த சிறப்பினால் உயர்ந்து; சீர்...சேர்ந்தார் - சீருடைய மணஞ்செய் பருவத்தை அடைந்தார் :

(வி - ரை) **பெருமைசால்** - பெருமை பொருந்திய - பெருமை மிகுந்த.

பிள்ளையாய்ப் பின்னும் - அரசரது காதலுக்குரிய பிள்ளையாயின பின்னரும். உம்மை சிறப்பும்மை. அரசர் பிள்ளையாயின பின்னரும் தமது குலத்துக்கு உரிய ஒழுக்கத்தைக் கைவிடாது கொண்டனர். செல்வம் - பதவி முதலிய, உடம்போடு போய்விடத்தக்க, உலகப்பெருமைகள் வந்தபோது, உயிரோடு செல்லும் குல ஒழுக்கத்தை வழுவ விட்டுவிடுவார் அனேகர். அதுபோலல்லாமல் - என்று குறிக்கப் **பின்னரும்** என்று சிறப்பும்மை தந்து கூறி உலகுக்கு அறிவுறுத்தினார் ஆசிரியர்.

மங்கலஞ் செய் கோலத்து முந்நூல் சாத்தி - உபநயனமாகிய சடங்கு முடித்துப் பூணூல் சாத்தக் கொண்டு. இதன் விரிவுகள் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்திலே,

"தோலோடு நூல் தாங்கினர்..." (263)

"உபநயன முறைமையாகும் இருபிறப்பினிலைமையினைச் சடங்குகாட்டி..." 264

என்று வரும் பாட்டுக்களிற் காண்க. இங்குக் குறித்த (வித்தியாரம்பம் என்ற) கலை பயிற்றுவித்தல் ஐந்தாவது வயதிலும், உபநயனம் என்ற பூணூல் சாத்துதல் ஏழாவது வயதிலும் செய்யப் பெறுவன.

"ஐந்து வருடம் அவர்க்கணைய...செவ்வியுணர்வு சிறந்ததால்"—சண்டீ - புரா - 13

"நிகழும் முறைமை யாண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை யுபநயனப் பொருவில் சடங்கு முடித்து" ஷை 14.

உபநயனம் முடிந்தபின் தாங்குவது பிரமசரியநிலை.

"..............................குழைக் குடுமி யலையக் குலவுமான்
றோலு நூலுஞ் சிறுமார்பிற் றுவள அரைக்கோ வணஞ்சுடர..."—சண்டீ - 25

என்றதும், அமர்நீதி நாயனார் புராணம், 7, 8, 9, பாட்டுக்களும், பிறவும் இந்நிலைக்குரிய திருவேடத்தின் இயல்பை நன்கு விளக்குவன.

சிகை - திருநீறு - முந்நூல் - மான்றோல் - முஞ்சிப்புல் திரித்து முடிந்த அரைநாண் - கோவணவுடை - பவித்திரம் முதலியன இக்கோலத்திற்குரிய அங்கங்கள். இக்கோலங்களைவிட்டு இவற்றிற்கு மாறாய் இக்காலத்துச் சிகை கத்திரித்தல் முதலிய அலங்கோலங்களைத் தாங்கித் திரியும் வேதியர் கோலம் யாவும் அமங்கலக்கோலம் என்பது **மங்கலஞ் செய்கோலம்** என்பதனாற் காண்க. இதனை இந்நாள் மக்கள் உய்த்துணர்ந்து திருந்த ஒழுகுவார்களாக.

உபநயனம் என்பது (உப+நயனம் - மேலும் பெறும் கண்.) இயல்பாய் உள்ள இரண்டு கண்களுடன் மேலாகிய ஒரு கண்வருதல். இது புருவமத்தியில் தியானத்தால் திறக்கப்படுவது. மேனோக்கிய நெற்றிக்கண். இது சிவபெருமானுக்கே உரியது. பஞ்சசிகை - பூணூல் - மான்றோல் முதலியனவும் அவ்வாறே அவருக்கே உரிய கோலங்கள் இந்தக் கோலம் செய்தலால் சிவக்கோலமாயிற்று. சிவம் - மங்கலம் என்ற பொருளும் தருதலால் இதனை **மங்கலஞ் செய்கோலத்து** என்றார். இந்நிலைக்குரிய **முந்நூலைச்** சொல்லவே மற்றவையெல்லாம் உடன்கொள்ளப்பெறும். (துவம் - ஏவ - பிராமண :) நீயே சிவ(னே) ஒருவனே பிராமணன் என்பது வேதம்.

மறை முந்நூல் - மறைவிதிவழி வேத இதய மந்திரமாகிய காயத்திரி மந்திர உபதேசத்தோடு தாங்கும் முந்நூல். **காயத்திரி** என்பதற்கு அடைந்தோரது வினைமுளையை வறுத்துச் சென்மமில்லாது செய்வது என்று பொருள் கூறுவர். காயத்திரியினாற் குறிக்கப்பெறுபவன் சிவபெருமானே என்க. இதனுள் நின்ற - பர்க்க - பதத்திற்கு அவரே உரியவர் என்பது "உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாதலின்" என்ற அரதத்த சிவாசாரியார் ஆணைமொழியினாற் காண்க.

அளவில் தொல்கலைகள் ஆய்ந்து - கரையில்லனவும் பண்டைநாட் டொடங்கி வருவனவும் ஆகிய கலைகள். இவற்றை முற்ற ஆய்ந்து விளக்கினவர் நமது நம்பியாரூரரே யாவர் என்பது. இவர்க்கு நாவலர் என்ற பெயர் வந்ததுங் காண்க. "உறழ்ந்த கல்வியுடையானு மொருவன் வேண்டுமென விருந்து...நினைத்தொழுமை கொண்டான்..." என்று இதனையே எடுத்துக் காட்டினார் சிவப்பிரகாச சுவாமிகள்.

மணப்பருவம் - தமிழர் இலக்கண அமைவின்படி இது ஆண்மக்களுக்குப் பதினாறு வயதின் அளவினதாம் - எனவே, நம்பிகள் சிறுதேர் உருட்டிய மூன்று வயது முதல் மணப்பருவமாகிய பதினாறு வயது வரை அரசர் அரண்மனையிலே காதற் பிள்ளையாய் வளர்ந்த சரிதம் இப்பாட்டாற் கூறப்பெற்றது. பிள்ளையாய்ப் பின்னும் - வைகி - சாத்தி ஆய்ந்து - ஓங்கிச் - சேர்ந்தார் என்று முடிக்க.

சீர்மணம் - இந்த மணம் அதற்காகச் செய்யப்பெற்ற சடங்குகளினளவில் நின்றது என்பதும் குறிப்பாம். **சீர்மணம்** - நம்பி ஆரூரர் இனி மேற்கொள்ளும் திருமணம் இறைவனே வலிய வந்து அடிமை கொள்வதற்கு ஏதுவாயிருத்தலால் **சீர்** என்னும் அடைகொடுத்து ஓதினார் - என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு.　6

153. **தந்தையார் சடைய னார்தந் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துட் டங்க ளரும்பெறு மரபுக் கேற்ப**

வந்ததோர் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் றன்பாற்
செந்திரு வனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார். எ

(இ - ள்) வெளிப்படை. (ஆரூரருக்கு மணப்பருவம் வரவே) சடையனார் தமது குலத்துக்கேற்குமாறு புத்தூரிலே சிவமறையோர் மரபிலே பழங்குடியிலே வந்த சடங்கவி சிவாசாரியாரின் மகளைத் தம் மகனுக்கு மணம் பேசுதற்கு முதியோரிடம் சொல்லியனுப்பினார்.

(வி - ரை) **தந்தையார் சடையனார்**-தந்தையாராகிய சடையனார். காதற்றந்தையாம் நரசிங்க முனையரையர் உளராதலின் **தந்தையார்** என்றதனோடமையாது **சடையனார்** என்று சேர்த்துக் கூறினார். **தனித் திருமகன்** - ஒப்பற்றவராயும் திருவை உலகத்திற்குத் தருவாராயும் உள்ள மகன். **திரு** - திருநின்ற செம்மை நெறி.

குலத்துள் தங்கள் அரும்பெருமரபு - கன்னியை மணம்பேசுதலிலே குலமும் மரபும் முதலிற் பேசற்பாலன என்பது முன்னோர் வழக்கமும் அறநூல் விதியும் முறைமையுமாம். பின்வரும் பாட்டும் காண்க. ஆணும் பெண்ணுமேயன்றி வேறொரு விதியும் அறியாது இந்நாட் சிலர் கூவுதல் விதிக்கும் மதிக்கும் மாறாகியதென்க.

"மற்றை மறையோன் றிருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்"
—சண்டேசர் - புரா - 11

"அரும்பெறன் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள்"—கண் - புரா - 9

"புகழனார் தமக்குரிமைப் பொருவில் குலக்குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார்..."—திருநா - புரா - 17

"குணம் பேசிக் குலம் பேசி..."—ஷை - 24

முதலிய பலவும் காண்க. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" என்ற திருமுருகாற்றுப்படையும் இங்கு உய்த்துணர்தற்பாலது.

மணத்திறம் - மணமகளாகப் பெறும் விருப்பம். **செப்பிவிடுதல்** - இது மணத்திற்கு முதற்படியாக நிகழும் செயல். இது ஆன்றோர் மரபு. கந்தபுராணத்தில் பார்வதியம்மையை மணம்பேச எழு இருடியர் சென்றது காண்க. இது இந்நாள் நாகரிகமென்ற பேரால் அருகி வருதல் வருந்தத்தக்கது. இதற்கும் ஏனைய முன்னை ஒழுக்கங்களுக்கும் மாறாய் மணத்திறத்திலே இந்நாள் நடக்கும் கோரச் செயல்கள் நாகரிகமென்ற பேர்கொண்ட அநாகரிகக் கோரச் செயல்களென்பர் அறிவுடையோர்.

முதியோரிடம் - என்றது வரும் பாட்டிலிருந்து வருவித் துரைக்கப்பட்டது. "மேலோரைச் செலவிட்டார்" (திருநா - புரா - 23) என்பது காண்க.

வந்ததோல் சிறப்பில் - என்பதும் பாடம். 7

154. குலமுத லறிவின் மிக்கார் கோத்திர முறையுந் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை யேற்று
மலர்தரு முகத்த னாகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி யொத்த பண்பினா லன்பு நேர்ந்தான். அ

(இ - ள்) வெளிப்படை. குலம் - குடி - முதலிய அறிவுகளிற் சிறந்த முதியோர் அவ்வாறே சென்று சடையனார் சொல்லிய மணத்திறத்தை அறிவிப்ப, அந்நன்மையை ஏற்றுக்கொண்டவராய்ச் சடங்கவிசிவாசாரியர் முகமலர்ச்சியுடன் மணத்திற்கு வேண்டுவனவாகிய பல உண்மைகளையும் பேசி ஒப்புமை பெற்றதனாலே தம் மகளை மணஞ் செய்து தருவதாக அன்புடன் இசைந்தார்.

(வி - ரை) குலமுதல் அறிவு - குலத்திற் கின்றியமையாத அறிவு. குலம் முத லியவற்றின் அறிவு என்றுமாம்.

கோத்திர முறை - கோத்திரம் - குலத்தின் உட்பிரிவு. அதன் முறை - மணஞ்செய் கோத்திரமும் கிளைக்கோத்திரமும் பிரவரமும் அவை அல்லாதவாறும். கோத்திரமும் பிறமுறைகளையும் என்றும் கூறுவர்.

நலமிகுமுதியோர் - இருதிறத்தார்க்கும் நன்மை மிகும்படிச் செய்வோர். மிகும் - மிகுவிக்கும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது. மிக்கோரும் தேர்ந்தோரும் ஆகிய முதியோர் என்க. இந்நாளிலே கைக்கூலிக்காக ஒருபுடை பேசும் கலியாணத்தரகர் அந்நாளில் இலர்.

நன்மை ஏற்றல் - மனத்தின் செய்கை. மலர்தருமுகம் - அதுகாரணமாகப் புறத் தில் நிகழும் மெய்ப்பாடு. ஏற்று - (சொல்லின் நன்மையை) யங்கீகரித்து.

மணம்புரி செயலின் வாய்மை பல - பெயர் - கணம்-நூல் முதலியவாக விதித்த மணப் பொருத்தங்களும் நிமித்தம் முதலிய பிறவுமாம்.

ஒத்த பண்பு - அவை வாய்மை விதிக்கு மாறுபடாது இணங்கி யிருத்தல்.

அன்பு நேர்ந்தான் - அன்பு நிகழும் மணச்செயலுக்கு இசைந்தான் என்றலுமாம்.

அறிவின்மிக்க - அறிவுமிக்க—என்பனவும் பாடம். 8

155. மற்றவ ணிசைந்த வார்த்தை கேட்டவர் வள்ள றன்னைப்
பெற்றவர் தம்பாற் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
யுற்றதோர் மகிழ்ச்சி யெய்தி மணவினை யுவந்து சாற்றிக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்தநா ளோலை விட்டார். கூ

(இ - ள்) வெளிப்படை. இசைந்ததனை அவ்வாறு கேட்ட முதியோர் ஆரூரரைப் பெற்றோரிடம் சென்று அறிவித்தனர். அவர் மனமிக மகிழ்ந்து, ஆரூரர் காதற் றந்தையாகிய அரசர் சிறப்புக் கேற்றபடி திருமணத்தை அறிவிக்குமாறு குறித்து எழு திய நாளோலையைப் பெண்வீட்டாருக்கு அனுப்பினார்கள்.

(வி - ரை) கேட்டவர் - மணத்திறம் செப்பிப் பெண்கேட்க வந்தவர். இந்த வார்த்தையை நேரே கேட்டவர் என்றலுமாம்.

வள்ளல்-நம்பிஆரூரர். தென்றிசை வாழ்ந்திடவும் தீதகன்றுலகமுய்யவும் தேவார அருண்மொழிகளை வரையாது கொடுப்பவர். உலகமுய்யும் வழிகளை அருள்பவர்.

கொற்றவர் திருவுக்கேற்பக் குறித்த - நாளோலையிற் குறித்த பொருள்கள் நம்பி யாரூரைப் பெற்ற சடையனாரது மரபுக் கேற்பனவோ ? அன்றிக் காதற் றந்தையாகிய நரசிங்கமுனையரையர் தகுதிக் கேற்பனவோ என்று ஐயம் நிகழ்த்துவோரை நோக்கி இவ்வாறு கூறினார்.

நாளோலை - ஒரு சொல் நீர்மைத்தாய் மணநாளும் ஓரையும் குறித்தெழுதிய ஓலை யைக் குறித்தது. இது மணமகன் வீட்டார் மணமகள் வீட்டார்க்கு எழுதுவது. இவற் றின் விரிவைத் திருஞானசம்பந்த நாயனார் புராணத்துட் காண்க.

குறித்த - நாள் குறித்து. நாள் ஓலை என்று பிரித்து, ஓலை குறித்து என்றும் அரசர் திருவுக்கேற்ப நாள் என்றும் கூட்டி உரை கூறுவாருமுளர்.

குறித்துநாள்—என்பதும் பாடம். 9

156. மங்கலம் பொலியச் செய்த மணவினை யோலை யேந்தி
அங்கயற் கண்ணி னாரு மாடவர் பலரு மீண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினா ரெதிரே வந்து
பங்கய வதனி மாரு மைந்தரும் பணிந்து கொண்டார். க0

(இ - ள்) வெளிப்படை. மங்கலமாகச் செய்த நாளோலையை மணமகன் வீட்டிலிருந்து மங்கலப் பெண்களும் ஆடவர்களும் ஏந்திக் கொண்டு புத்தூருக்குச் செல்ல மணமகள் வீட்டிலிருந்து அவ்வாறே மங்கலப் பெண்களும் ஆடவர்களும் எதிர்கொண்டு வந்து பணிந்து அதை ஏற்றுக் கொண்டார்கள்.

(வி - ரை) இவை நாளோலை விடுத்தல் - எடுத்தல் - ஏற்றல் - ஆகிய முறைகளாம். **மங்கலம்...மணவினை ஓலை** - மங்கலங்களை விளக்கமுறச்செய்துள்ள மணநிகழ்ச்சிகளைக் காட்டும் ஓலை. சொற்களில் அமங்கலப்பொருள் வாராதபடி எழுதுதல் - ஓலையைச் செம்மைசெய்து மஞ்சட் பூசுதல் முதலியன.

ஏந்தி - மங்கலப் பெண்கள் பூ முதலிய மங்கலப் பொருள்களை ஏந்திச் செல்லுதலும், அவ்வாறே பெண் வீட்டார் எதிரே வந்து பணிந்து அவற்றை ஏற்றுக் கொள்ளுதலும் இதற்கு உரிய சடங்கு.

அங்கயற் கண்ணினார் - பங்கய வதனிமார் - ஈண்டுச் சுமங்கிலிகளைக் குறித்து நின்றன. பெண்ணைநோக்கிச் செல்லுதலினால் **கண்ணினார்** என்று கண்ணையும், முக மலர்ந்து ஏற்றுக் கொள்ளுதலினால் **வதனிமார்** என்று முகத்தையும் குறித்தவாறு. இப்பெண்கள் சதிபதிகளாகச் சேர்ந்துசெல்வதும் வந்துஏற்றலும் வழக்கு ஆதலின் **கண்ணினாரும் ஆடவர் பலரும்** என்றும், **வதனிமாரும் மைந்தரும்** என்றும் கூட்டி உரைத்தார். **ஆடவர் - மைந்தர்** - மங்கலங்களிலே காணக் கூடாத கூன் குருடு இல்லாத உத்தம இலக்கணமுடையார். **கொண்டார்** - ஏற்றுக்கொண்டார்.

கொங்கலர் சோலை மூதூர் - வாசனை வீசும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த பழமை பொருந்திய புத்தூர். இதன் பேர் புத்தூர் ஆயினும் பழமையான புகழுடையதென்பார் **மூதூர்** என்றார். 10

157. மகிழ்ச்சியான் மணமீக் கூறி மங்கல வினைக ளெல்லாம்
புகழ்ச்சியாற் பொலிந்து தோன்றப் போற்றிய தொழில ராகி
இகழ்ச்சியொன் றானு மின்றி யேந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்த ரீண்டி நீண்முளை சாத்தி னார்கள். கக

(இ - ள்) வெளிப்படை. (அவ்வாறு ஏற்றுக்கொண்ட மணமகள் வீட்டு) மைந்தர்கள் மண நாளோலைபெற்ற உறுதியான மகிழ்ச்சியினாலே அத்திருமணச் செய்தியை மேலும் மேலும் எல்லார்க்கும் எடுத்துச் சொல்லி மணத்திற்குரியனவாய் முன்னர்ச் செய்யப் பெறவேண்டிய எல்லாச் சுபகாரியங்களையும் விளக்கமுற விரும்பிச் செய்வார்களாயினர்; எவ்வாற்றானும் குறைசொல்லக் கூடாத வகையாலே பூமாலைகளாலே அலங்கரிக்கப் பெற்ற பந்தர் அமைத்து அதிற் கூடி முளை தரிக்கும் சடங்கினைச் செய்தார்கள்.

(வி - ரை) மைந்தர்—கூறி—ஆகிப்—பந்தர் நிகழ்ச்சியின்—ஈண்டிச்—சாத்தினார்கள்—என்று கூட்டுக.

மணமீக்கூறி - மணச் செய்தியைப் பெருமகிழ்ச்சி காரணமாக எல்லாருக்கும் எடுத்துச் சொல்லி.

போற்றிய தொழிலர் - போற்றிய - பாராட்டிய. போற்றுதல் மனம் வாக்குக்களாலும், தொழில் மெய்யினாலும் ஆம். போற்றியதாகிய தொழில் - என்றும் கூறுவர். **தொழில்** - பந்தர்நிகழ்ச்சி - முளை சாத்தல் முதலியன.

இகழ்ச்சியொன்றானும் இன்றி - ஒன்றினாலும் குறைவின்றி. **இகழ்ச்சி** - அதற்குக் காரணமான குறை எனும் பொருளில் வந்தது. **இன்றிச் சாத்தினார்கள்** என வினை முடிபு செய்க.

பூமாலைப்பந்தர் - மங்கல வினைப்பந்தர். தோரணம் முதலியவற்றிற் பூமாலைகளை அளவு பெறத் தொங்க விட்டு அலங்கரித்தல் முன்னாள் வழக்கு. உண்மைப் பூவிற்கு மாறாய்ப் பூப்போன்ற வடிவிற் போலியாய் அமைத்த காகிதப் பூக்களால் அலங்கரித்து மகிழும் இக்காலத்தவர் இதன் பெருமையை உணரார். பூ போலியாகவே அலங்கார மும் அதனுள் விளையும் எல்லாம் போலியாய் ஒழிதல் கண்கூடு. போலிகளில் மகிழும் மனப்பான்மை இக்காலத்து மல்கி வருதல் வருந்தத்தக்கது.

முளை சாத்துதல் - இதனை வடநூலார் அங்குரார்ப்பணம் என்பர். இது மண நாளுக்கு முன் ஏழாநாட் செய்யப்பெறும் சடங்கு. "நன்னிலைமைத் திருநாளுக் கெழு நாளா நன்னாளிற்...புனிதமுளை பூரித்தார்" (1173) திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமி கள் புராணம். இது, சந்திரனை அதிதெய்வமாக வைத்த கும்பத்தினருகிலே பாலிற் கலந்த நவதானியங்களை மந்திரத்தோடு பாலிகைகளிடத்திற் பெய்து மண்ணிட்டு வளர்த்தல் என்பர் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள். துவாதசாதித்தர்களுக்காக 12 பாலிகைகள் வைத்து அவற்றில் மந்திரத்தோடு எடுத்த புற்றுமண் முதலியவை நிரப்பி அவற்றில் முளைவிடுமாறு தானிய மணிகளைத் தெளித்துப் பெய்தல். முளை விடுமாறு தானிய விதைகளைச் சாத்துதல் என்க. **சாத்துதல்** - சார்த்துதல். மண் நீர் இவை பொருந்தச் சேர்த்தல். இது மரபுப்பெயர். இந்த முளைகளின் வளர்ச்சியே சுபங் களுக்கு நல்ல அறிகுறியாகக் கருதப்பெறுதலின் **நீண்முளை** என்றார். இது திருவிழா கும்பாபிடேகம் முதலிய எல்லா மங்கலங்களிலும் முதலிற் செய்யப்பெறுவது.

மைந்தர் - முன்பாட்டில் மணமகள் வீட்டிலிருந்து வந்து நாளோலை ஏற்றுக் கொண்ட **மைந்தர்.** இது மணமகள் வீட்டில் நடப்பது என்று குறிக்க அப்பெயரா லேயே தொடர்ந்து கூறினார். வரும்பாட்டிலும் "மாதினைப் பயந்தார்" என்று தொடர்ந்து கூறுதல் காண்க. 11

158. மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத்
துணர்மலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னானைப்
புணர்மணத் திருநாண் முன்னாட் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொனாண் காப்புச் சேர்த்தார்.

(இ - ள்) மணவினை...செய்ய - (இவ்வாறு புத்தூரில்) மணமகளைப் பெற்றவர்கள் மணத்திற்குரிய மங்கலவினைகளைச் செய்ய; துணர்...சேர்த்தார் - (திருநாவலூரில்) சேர்கின்ற திருமணநாளுக்கு முன்னாளிலே முரசு முதலிய மங்கல இயங்கள் சத்திக்க மலர்மாலைகளையணிந்த தோள்களுடைய நம்பியாரூரரை (பெற்றார்கள்) வாழ்த்தி விதிப் படி பொன் நாணைக் காப்புக்கட்டுவித்தார்கள்.

(வி - ரை) **காப்புச் சேர்த்தல்** - மணமக்களுக்கு மணத்திற்கு முன்னாளில் தனித் தனி அவரவர் வீட்டில் மங்கலஞ்செய்து காப்புக்கட்டுதலாகிய சடங்கு. இரட்சாபந்த னம் என்பது வடநூல் வழக்கு. இது முதனாளிற் பகலில் நிகழ்வது.

மணவினைக்கு அமைந்த செய்கை மாதினைப் பயந்தோர் செய்ய - கல்யாணம் பெண் வீட்டில் நிகழ்வதாகலின் அதற்கு வேண்டியவை எல்லாம் செய்தல் பெற்றோர் கடமையாம்.

துணர் மலர்க் கோதை தாமம் சுரும்பு அணை தோளினான் - இதழ்களை உடைய மலர்களாற் கோதை தாமம் ஆகத் தொடுத்தனவும் வண்டுகள் மொய்ப்பனவுமாகிய மாலை அணிந்த தோளுடைய நம்பி. **கோதை** - **தாமம்** - மாலை வகைகள். முருக நாயனார் புராணம் 7-வது பாட்டும் பிறவும் காண்க. **சுரும்பு அணை கோதை** என்க. புதுப்பூ மாலையாதலின் சுரும்பு அணைவன.

புணர் மணத்திருநாள் - மணம்புணர் திருநாள் என்று மாற்றுக. **பொருந்திய விதி** - இந்தச் சடங்கிற்கு ஏற்ற நூல்விதி.

பணைமுரசு - பெருத்தமுரசு. மணமுரசு. ஒருவகை வாத்திய விசேடமுமாம். முதன்மை பற்றி முரசு கூறவே ஏனைய இயங்களையும் கொள்க. **பணை** - பண்ணை எனக் கொண்டு மற்றைய பலவும் கூடிய என்றுரைத்தலுமாம்.

பொன் நாண் - பொற்கயிறு. **காப்புச் சேர்த்தல்** - காவலாக மணமகனுக்கு வலது கையிலும் மணமகளுக்கு இடது கையிலும் கயிறு கட்டுதல். அதுமுதல் மணம் முடிந்து காப்பவிழ்க்கும் வரை மணமக்களை எந்தத் தீமையும் அணுகாதபடி காவல் செய்வதாக லின் **காப்பு** எனப் பெறும். திருநீற்றுக்காப்பு முதலிய காப்புக்களிலிருந்து பிரித்து அறிதற்பொருட்டுப் **பொன் நாண் காப்பு** என்றார். முன்னர் "மாதினைப் பயந்தார் செய்ய" என்று பிரித்துக் கூறினமையால், சேர்த்தார் - என்பதற்கு மணமகனைப் பெற்றார் என்ற எழுவாய் வருவித்துரைக்கப் பெற்றது.

"...வேறுபல காப்பு மிகை"—**திருஞா - புரா** - 43

"...வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபிற்றங்கள்
புரையில் தொன்மரபுக் கேற்பப் பொருந்துவ..."—**கண் - புரா** - 18

முதலியவை காண்க.

துணைமலர்—என்பதும் பாடம். 12

159. மாமறை விதிவ ழாமன் மணத்துறைக் கடன்க ளாற்றித்
தூமறை மூதூர்க் கங்குன் மங்கலந் துவன்றி யார்ப்பத்
தேமரு தொடையன் மார்பன் றிருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவ னுதயஞ் செய்தான். கங

(இ - ள்) மாமறை...ஆர்ப்ப - (காப்புச் சேர்த்தபின், திருநாவலூரிலே அன்றிரவு மறை நூல் விதிப்படி செய்யவேண்டிய ஏனைச் சடங்குகள் யாவும் தவறாது செய்து கொண்டு மங்கல வாத்தியங்கள் கலந்து சத்தித்துக்கொண்டிருக்க; தேமரு...செய் தான் - தேன் பொருந்திய மலர்மாலை யணிந்த நம்பிஆரூரரது திருமணக்கோலத்தைக் காணும் ஆசையுடையவன் போல ஞாயிறு உதயமாயினன்.

(வி - ரை) இரவு முழுதும் மணச்சடங்குகள் நிகழ, இரவி உதயமாயினன்.

கங்குல் - மணநாளுக்கு முன் நாள் இரவு - எனவே முன் பாட்டிற் சொன்ன காப்புச்சேர்த்தல் பகலில் நிகழ்ந்தது என்பது பெறப்பட்டது.

காமுறு மனத்தான்போல் - இதனைத் தற்குறிப்பேற்ற அணி என்பர். இது அணியே என்று குறிக்கப் **போல** என்றார். இத்திருமணம் முற்றுப்பெறாது இறைவ னூற் றடுக்கப் பெறுதல் பின்னர்ச் சரிதத்திற் காண்போம். ஆதலின் **திருமணங் காண** என்னாது **திருமணக்கோலங்காண** என்றார்.

ஞாயிறு எழுதல் - ஞாயிறு படிதல் - முதலியவற்றை வருணித்துச் சொல்லுதல் பெருங்காவிய இலக்கணங்களில் ஒன்று. ஆதலின் இப்புராணமாகிய பெருங் காவியத் தலைவராகிய நம்பிஆரூரர் திருமணத்தை ஒட்டி இங்குச் சூரிய **உதயம்** வருணிக்கப் பெற்றதாம். அடியார்களின் களிப்பிலே தாம் களித்தலும் பிறவும் காவிய ஆசிரியரது மனக்குறிப்பாம். அதனை இங்கு இரவிமேல் ஏற்றிக் கூறுதலின் இது உண்மையிலே தற்குறிப்பேற்றமாயிற்று. **காமம்+உறு** காமுறு என மருவிற்று. **காமம்** இங்கு ஆசை குறித்தது.

"உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை யிளைப்பஞ்சி னூன்போலக்

கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன்..."—திருநா - புரா - 192

என்று ஞாயிறுபடுதலைக் குறித்தது காண்க.

மறைமுதூர் - மறை முழக்கம் நீங்காத பழவூர். **துவன்றி ஆர்ப்ப** - விகற்பமின்றி ஒன்றுபோலப் பொருந்தி நிறைந்து சத்திக்க.

தேமருதோடையல் - புதிய நாண்மலர்களாலாகிய மாலை. **மார்பர்** - நம்பிஆரூரர். முன் பாட்டில் **தோளினூர்** என்றது காண்க. ஒவ்வோர் சடங்கிலும் புதிய மாலைகளை யணிதல் வழக்கு. 13

160. காலைசெய் வினைகண் முற்றிக் கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையு முன்னர் விதிமணக் கோலங் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பி னுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சனச்சாலை புக்கான். கச

(இ - ள்) வெளிப்படை. காலைக்கடன்களை முடித்தபின், சோதிடர்கள் குறித்த நல்வேளை வருவதற்கு முன்னுகவே, விதிப்படிச் செய்யும் மணக்கோலங் கொள்வதற்காகப், பூணூல் அசைந்து விளங்கும் மார்பினையும் நுணுகிய கேள்வியையுமுடைய மேலோராகிய நம்பியாரூரர் மணிமாலையும் மலர்மாலையும் விளங்கத் திருமஞ்சனசாலையிற் புகுந்தார்.

(வி - ரை) **காலை செய்வினைகள்** - காலையில் எழுந்ததும் செய்யக்கடவனவாகிய நித்திய கடமைகள். **செய்வினை** - செய்யக்கடவனவாம் வினை.

கணிதநூற் புலவர் - சோதிடர். காலங்கணித்து நன்னாளும் நல்வேளையும் நிச்சயிப்பவர். **வேளை** - பொழுது. இங்கு, குறித்த நல்வேளை என்க.

விதிமணம் - இயற்கை மணத்தினின்றும் வேறுதலின் **விதிமணம்** என்றார். நூல்களில் விதித்த சடங்குகளுடன் பெற்றோர்களாற் றரப்பெற்றுச் செய்யும் மணம். (இயற்கை மணம் - தலைவன் தலைவியர் தாமே கொள்வது). **மணக்கோலம்** - மணமகனுக்குரிய மணக்கோலம். **நூல் அசைந்து இலங்கு மார்பு** - நூல் அசைவதாலும் பிற அரச அணிகளாலும் விளங்கும் மார்பு. **நுணங்கிய கேள்வி மேலோன்** - மிக நுணுகிய பொருள்களிலும் கேள்வியினுல் மேம்பட்டவர். **மார்பு** - மேனி வனப்பும், **கேள்வி** - அறிவின் வனப்பும் குறித்து நின்றன.

மாலை - தார் - மணிமாலை. மலர்மாலை - மாலை விகற்பங்கள் என்பதுமாம்.

மார்பன் நுணங்கிய—என்பதும் பாடம். 14

161. வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை யடுத்த தூநீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர்ப் பருமணிப் பைம்பொற் றிண்கால்
ஆசனத் தணிநீ ராட்டி யரிசனஞ் சாத்தி யன்பால்
ஈசனுக் கினியார் மேனி யெழில்பெற விளக்கி னூர்கள். கரு

(இ - ள்) வாசநெய்...பாங்கர் - வாசனையுடைய நெய்ப்புகை யூட்டிய பாத்திரத்தில் உரிய மலர்களையும் வாசனைப் பண்டங்களையும் பெய்த தூயநீரை நிரப்பி, அதன் பக்கத்திலே ; பருமணி...ஆசனத்து - இடப்பெற்ற பொன் அரியாசனத்திலே (எழுந்தருளுவித்து) ; அணி...விளக்கினூர்கள் - அன்பினுலே இறைவனுக்கு இனியவராகிய நம்பியாரூரை நீராட்டிச் சுண்ணம் சாத்தி அவரது திருமேனி மேலும் அழகு பொருந்தும்படியாக விளக்கினூர்கள்.

(வி - ரை) **வாசநெய் ஊட்டி** - பாத்திரம் சுத்தியாக்கற்பொருட்டு நெய்ப்புகை ஊட்டுதல் மரபு. இதற்கு, வாசனைத் தைலத்தை ஆட்டி என்றும் பொருள் உரைப்பார்,

அரிசனம் - (கத்தூரி) மஞ்சட் கலந்த வாசனைத்தூள் - திருப்பொற் சுண்ணம். போகந்தருதல் இதன்செயல் என்பர்.

ஆசனத்து அணிநீர் ஆட்டி - ஆசனத்திலே அமர்த்தி நீராட்டுதல் பெரியோர்களை மஞ்சனமாட்டும் முறை.

ஈசனுக்கு இனியார் - சிவபெருமானுக்கு இனிய தோழராவார். எல்லாவுயிர்களும் ஈசனுக்கு இனிமையுடையனவாயினும் அன்பர்கள் மிக இனியர் ஆதலின் **அன்பால் இனியான்** என்றார். **அன்பால் விளக்கினார்கள்** - என்று கூட்டலுமாம்.

மலர் விரை - மலர்களும் விரையும். உம்மைத் தொகை. விரை பொருந்திய மலர் என்றும், மலரின் விரை என்றுமுரைப்பாருமுளர். திருமஞ்சனநீரிலே வில்வம் பாதிரிப் பூ முதலிய பூக்களையும், விலாமிச்சை ஏலம் பசுங்கர்ப்பூரம் முதலிய விரைகளையும் இடுதல் மரபாம். இதன் இலக்கணத்தை,

> "பரிதிகுணக் கெழுமுன்னர்ப் பன்னிரண்டு புதுச்சாலின்
> மருவுபுதுப் புனல்துகிலான் வடித்தெடுத்து மணல்பரப்பி
> இருவிநிறை தொறும்வல முதலான திரவியங்கள்
> பெருகுவிரை மலரோடு பெய்துமனு வாலமைத்து..."—**மநதவரைப்படலம்**-30

என்ற பேரூர்ப்புராணத்தா லறிக.

தூநீர்ப்பாசனம் - முதலாக விரித்துக் கூறியது இவ்வாறு வரும் இலக்கணங்களை யுடையதெனக் குறித்தபடியாம். குளிக்கும் நீரைக் கங்கை, யமுனை, சிவபாதநீர், சண்முகபாதநீர் முதலியனவாகத் தியானித்தல் மரபாம். ஆதலின் **தூநீர்** என்றார்.

"கங்கை யாடிலென்...எங்கு மீசனெனுதவர்க் கில்லையே"—**தேவாரம்**. 15

162. அகில்விரைத் தூப மேய்ந்த வணிகொள்பட் டாடை சாத்தி
முகினுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி யீரம் புலர்த்தித்தன் தூய செங்கை
யுகிர்நுதி முறையிற் போக்கி யொளிர்நறுஞ் சிகழி யார்த்தான். கசு

(இ - ள்) அகில்...சாத்தி - (நீராட்டிய பின்னர்) அகிற்புகை கமழும் அழகிய பட்டாடை சாத்தி; முகில்நுழை...புலர்த்தி-கைவல்லானொருவன் முன்கையிற் கொண்ட வெள்ளைத் துகிலை நம்பிகளது நீண்ட கரிய குடுமியினுள்ளே, முகிலுக்குள் நுழையும் வெண்மதிபோலச் செலுத்தி ஈரம் போக்கி; தன்தூய...போக்கி - தனது கையின் நக நுனியினாலே குஞ்சியின் சிக்கறுத்து; ஒளிர்...ஆர்த்தான் - விளங்கிய சிகழியைக் கட்டி முடித்தான்.

(வி - ரை) அகில் - தூபம் - ஆடைகளுக்குப் புகையிடுதல் வாசனைப் பொருட்டும், அவற்றைக் காத்தற் பொருட்டுமாம்.

முகில் நுழை மதியம் போல - கரிய நீண்ட குடுமியின் இடையே முன்கையிற் சுற்றிய வெண்டுகில் கொண்டு ஈரம் புலர்த்துதல் கரியமுகிலினிடையே நுழையும் வெண்மதி போன்றிருந்தது என்றார். குடுமி கத்திரித்து ஆரவாரிக்கும் இக்காலத்து மணமக்களுக்கு இது விளங்காத உவமானமாம். அவர் இப்பாட்டின் சுவை அறிந்து அனுபவித்த லியலாதாகும்.

கைவலான் - இவ்வாறு பணிவிடை செய்வதிற் கைதேர்ந்தவன். மணமகனின் தோழன். குஞ்சி ஈரம் புலர்த்தல், சிக்கறுத்தல்,சிகழிசேர்த்து முடித்துக்கட்டுதல் முதலிய பணிகள் செய்வதிற் கைத்தேர்ச்சி வேண்டப்பெறுமென்க. எனவே, நம்பி ஆரூரர்க்கு நீண்ட கரிய குடுமி வளர்ந்து விளக்கமுற்றிருந்தது என்பதாம்.

உகிர்நுதி - நகத்தின்நுனி. விரலைவிட்டு மயிர்ச்சிக்கறுத்து. **சிகழி** - முடிப்பு. **ஆர்த்தான்** - செய்தான். முடித்துக் கட்டினான். 16

163. தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்ட வமைந்தசந் தனச்சே றாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்முறை முந்நூன் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான். கஎ

164. தூமலர்ப் பிணையன் மாலை துணரிணர்க் கண்ணி கோதை
தாமமென் றினைய வேறு தகுதியா லமையச் சாத்தி
மாமணி யணிந்த தூய வளரொளி யிருள்கால் சீக்கு
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலங் கொண்டான். கஅ

163. (இ - ள்) தூநறும்...ஆட்டி - தூய நறிய பச்சைக் கர்ப்பூரச் சுண்ணத்துடன் அழகிய பூக்களிலிருந்து ஆகிய தண் பனிநீர் கூட்டிச் செய்த சந்தனக் குழம்பைப் பூசி; மான்மதம்...சாத்தி-கத்தூரி சேர்ந்த கலவைச் சாந்தையும் அணிவித்து ; பான்முறை... கையான்-அதன்பின் விதிப்படி அணியும் பூணூலை மார்பிலும் பவித்திரத்தைக் கையிலும் விளங்கவைக்க, அவ்வாறு பவித்திரங்கொண்ட கையினராகிய (நம்பி ஆரூரர்). கஎ

164. (இ - ள்) தூமலர்ப்பிணையல்...சாத்தி - தூய மலர்களால் ஆகிய பிணையல் - மாலை - கண்ணி - கோதை - தாமம் என்ற பலவகை மலர்மாலைகளையும் சாத்த அணிந்து; மாமணி...சாத்தி - ஒளி மிகுந்த மணிகளிழைத்த தூய பொன்மணி மாலைகளையும் சாத்த அணிந்து ; நன்...கொண்டான் - நல்ல திருமணக்கோலத்தை மேற்கொண்டனர். கஅ

163. (வி - ரை) இப்பாட்டுக் குளகம். கையான் என்பது வரும்பாட்டில் கோலங் கொண்டான் என்பதனுடன் முடிகின்றது.

தூ நறும் பசும் கர்ப்பூரம் - தூய்மை - கொழுப்பு முதலிய அநுசிதமான பிற பொருட்கள் கலவாமை. **நறுமை** - நல்வாசனை மிகுதி. **பசுமை** - நிறமும் குணமுங் குறித்தது. **சுண்ணம்** - தூள்.

வண்ணப்போதில் ஆன்தண்பனிநீர் - அழகிய பன்னீர் முதலிய மலர்களிலிருந்து வடித்தெடுத்த பனிநீர். **போதில்** - போதுகளிலிருந்து. **மான்மதம்** - கத்தூரி.

பான்முறை முந்நூல் - மறைப்பான்மையின் அணியும் பூணூல். **பான்மறை** என்பது பாடமாயினும் இதுவே பொருளாம்.

பவித்திரம் - பரிசுத்தம் என்பது பதப்பொருள். இங்கு அதனைச் செய்யும் பொருளுக்காயிற்று. காப்புச் சேர்த்தபின் நடைபெறும் மணச் சடங்குகள் எல்லாம் சங்கற்ப பூர்வமாய்ச் செய்யப்பெறுமாதலின் அதற்கேற்பப் பவித்திரமணிந்தே செய்யப்பெற வேண்டுமென்பது விதி. **பவித்திரம்** ஓர்வகை முடிப்புடனே தருப்பை - பொன் - முதலியவற்றாற் செய்து கைவிரலில் அணிவது. அவ்விரலுக்குப் பவித்திரவிரல் என்று பெயருமாம்.

17

164. (வி - ரை) **பிணையல் மாலை** - முதலியன தொடுக்கும்வகை. வடிவு-செறிவு- அணியும் இடம் - முதலியவற்றின் வேறுபாடுகளினால் வெவ்வேறு பெயரால் வழங்கும் பல வகைப்பட்ட மலர்மாலைகள். இவற்றின் விரிவை முருகநாயனார் புராணத்துட் காண்க.

இருள் கால் சீக்கும் - இருளை முழுதும் போக்குகின்ற-அதாவது ஒளி வீசுகின்ற. **நாமம்நீள்** - நீள் நாமம் என மாற்றிக் கூட்டுக. பெரும்பேர் படைத்த. **நாமம்** - புகழ். "போற்ற பெரியோனே" என்ற பேரூர்த் திருப்புகழ் காண்க. கோதை தாமம்-(வரிசை 158), மாலையுந் தாரும் (வரிசை 160) என முன்னர்ச் சுட்டிக் கூறிய இருவகை மாலைகளையும் இங்கு விளங்க வைத்து விரிவாய்க் கூறினார். மணவாளக் கோலமாதலின் பலவகையும் அணிதல் இயல்பு. அன்றியும் இது நம்பிகளை இறை

வனுக்கு அடிமையாக்கும் நித்திய மங்கலக்கோலமாய்ப் பின்னர் நிகழ்வதாலும் இவ்வாறு சிறப்பித்துக் கூறினார்.

நன்மணக்கோலம் - இந்தக் கோலங்கொண்ட மணம் நிகழாது விடினும் அதனை விட நித்திய மங்கலமாகிய பெருமணத்தை - நித்திய நாயகனைக் கொள்ளும் அடிமைத்திறத்தை - விளைப்பதால் இதனை **நன்மணக் கோலம்** என்றார். 18

163. **கூட்டியமைத்த**—என்பதும் பாடம்.

165. மன்னவர் திருவுந் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
றன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார்.

(இ - ள்) மன்னவர்...பொங்க - (மேற் சொல்லியபடி) அரசர் பெருங் கோலத்தின் அழகிய காட்சியும் தமக்குரிய வைதிகப் பெருங் கோலத்தின் அழகிய காட்சியும் மேன் மேலும் கூடிக் கண்டாரை விரும்பும்படிச் செய்ய; நன்னகர் விழவு கொள்ள - அந்நகர் முழுதும் மணவிழாக் கொண்டாடவும்; நம்பி...சாத்தி - இறைவனது திருவடிகளைத் தம் மனத்திலே எண்ணித் திருநீறு அணிந்து கொண்டவராய்; பொன்...போந்தார் - பொன்னால் அழகாக அலங்கரிக்கப் பெற்ற நல்லிலக்கணங்களுடன் கூடிய குதிரையின்மேல் ஏறிச் சென்றார்.

(வி - ரை) திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் - இங்கே நம்பி ஆரூரினது இருதிறக் காட்சியும் கண்டாரை விரும்பச் செய்தன என்பார் இருதிருவும் **பொங்க** என்றார்.

தங்கள் - மன்னவர் திருவானது தங்களுக்கு உரித்தல்லாமையாலும், அரசர் காதற் பிள்ளையாய்க் கொண்டதனாலே மட்டும் பெற்றமையானும், **தங்கள்** என்பதனை வைதிகத்திருவுடன் சேர்த்துக் கூறினார்.

மன்னவர்திரு - தாமம் - கலன்கள் முதலியன. இதனை மேற்பாட்டிற் கூறினார். **வைதிகத்திரு** - முந்நூல் - பவித்திரம் முதலியன. இதனை அதற்கு மேற்பாட்டிற் கூறினார். இவ்விரண்டும் ஒன்று சேர்ந்து நம்பிகளிடத்துப் பொருந்தியமையால் குளகமாக்கி அவ்விரண்டு பாட்டுக்களையும் ஒன்றாய்ச் சேர்த்து முடித்தார்.

புரவிமேல் கொண்டு - மணமகன் குதிரையின்மீது போந்து மணவீட்டுக்கு வருதல் அந்நாள் வழக்கு. இந்நாளிலும் சில கூட்டங்களில் இவ்வழக்கம் உண்டு.

யோகப்புரவி - யோகம் - கூடுதல். நற்சுழி - முதலிய நல்லிலக்கணங்கள் எல்லாம் கூடிய. சுபத்தை விளக்கும் சுழிகளையுடைய. சரியையாதி நாற்பாதத்துள்ளும் நம்பியாரூரர் யோகபாதத்தை விளக்கவந்த மூர்த்திகளாதலும் குறிப்புப் போலும். யோகநிலையை வாசி - பரி - புரவி - என்று குறிப்பர் திருமூலதேவர்.

தகுந் திருநீறு சாத்தி - மேலே சொல்லிய இருவகைத்திருவுக்கும் வேறாய், அவற்றிற்கு மேற்பட்டு, அவற்றை அணிந்த பின்னர் மேலே அணியத்தகுவதாய், இறைவன் திருவடி நினைவுடன் அவனது நாமமந்திரத்துடன் அணியத்தகுவதாய், உள்ள ஏற்றங் கருதித் **தகும்** திருநீறு - என்றார். மேலே சொல்லியவை பிறர் சாத்தத் தாம் அணிந்தனர். அவ்வாறன்றித் திருநீற்றைத் தாமே விதிப்படி அணிந்தனர். ஏனைவற்றினும் பார்க்க இவர்க்கு இது மிகத் தகுவதென்றலுமாம் என்க. திருமலையில் இறைவனுக்கு **நீறு** எடுத்து அணைவாராயினமையும் குறிக்கும்.

அடிமனத்துட் கொண்டு - ஆட்கொள்ள நின்ற சரிதத்தின் முற்குறிப்பு. அடிகளை **உட்கொண்டு** புரவி **மேற்கொண்டு** என்ற சுவையையும் குறிப்பையும் காண்க. 19

166. இயம்பல துவைப்ப வெங்கு மேத்தொலி யெடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை யொலியி னோங்க
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
யுயர்ந்தவா கனயா னங்கண் மிசைக்கொண்டா ருழைய ரானார். உ0

(இ - ள்) இயம்பல...விரும்ப - பலவகை வாத்தியங்களும் முழங்கவும், எங்கும் சிறப்புச் சொல்லும் (சத்தம்) ஒலி பெருகவும், மங்கலப் பெண்கள் விருப்பத்துடன் பல்லாண்டு வாழ்த்தவும், வேத வொலிகள் மேலெழுந்து ஓங்கவும், உலகத்தார் வியப்பும் விருப்பமும் கொள்ளவும்; வந்து...ஆனார் - மண எழுச்சி காண வந்து கூடியவர் யாவர்க்கும் மகிழ்ச்சி செய்து சுற்றத்தார்கள் அவரவர் தத்தமக்கேற்ற உயர்ந்த பல்லக்கு முதலிய வாகனங்களின்மீது ஏறிக்கொண்டார்கள்.

(வி - ரை) துவைப்ப - எடுப்ப - போற்ற - ஓங்க - விரும்ப - இன்பஞ் செய்து - உழையரானார் - மிசைக் கொண்டார் - என்று முடிக்க.

துவைப்ப - இயங்களை முழக்க. **எடுப்ப** - பின்னர் **மாதர் போற்ற** என்பதனால் இவர்கள் பலவகை ஏத்துச் சொல்வோர் ; மாகதர் - வந்தியர் முதலியோர். நம்பிஆரூரர் மன்னவர் திருவுமுடையாராதலின் இவர்களும் கூடினர் என்க.

ஏத்தொலி - ஏத்துகின்றதால் எழும் ஒலி. புகழ்களைச் சொல்லும் மொழிகள் **ஏத்து** - எனப் பெறுவன. **பல்லாண்டு** - மங்கல மாதர்கள் போற்றும் மங்கல வாழ்த்து.

நான் மறை ஒலியின் ஓங்க - ஒலியே உருவமாய் உள்ள வேதப்பகுதிகளை உரிய உயர்ந்த சுரங்களோடு மறையவர் சொல்ல. இவை மணம் முதலிய சுபங்களிற் சொல்லும் வேதப்பகுதிகள்.

வாகன யானங்கள் - சிவிகைகளும் பிறவுமாகிய வாகனங்கள் என்க. சிவிகைகளாகிய வாகனங்கள் என்றலுமாம்.

உழையர் - பக்கத்தே சூழ்ந்து வரவேண்டியவராகிய சுற்றத்தார்களும் பரிசனமும். உடன் இருக்கவேண்டியவராதலின் **உழையர்** என்றார். சுற்றியிருத்தலின் சுற்றம் என்பது பெயராம். "சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல்" என்பது குறள்.

இன்பம் செய்தே...மிசைக்கொண்டார் - என்று கூட்டுக. வந்தவர்களுக்கு இன்பமாகிய பாராட்டுகளைச் செய்தபின் யானங்களில் ஏறினர்.

இன்பம் - இனிய மனத்தோடு, சொல்லும் உபசரிப்புச் சொற்களும், செய்யும் செயல்களுமாம். **செயல்** - தாம்பூலம் முதலிய வழங்கி உபசரித்தல். 20

167. மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையுஞ் சூழ்ந்த மைந்தருந் துவன்றிச் சூதும்
பங்கய முகையுஞ் சாய்த்துப் பணைத்தெழுந் தணியின் மிக்க
குங்கும முலையி னாரும் பரந்தெழு கொள்கைத் தாகி. உக

168. அருங்கடி யெழுந்த போதி னார்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலு மிலங்கொளி மணிக ளாலும்
நெருங்கிய பீலிச் சோலை நீனிறத் தரங்கத் தாலுங்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே. உஉ

167. (இ - ள்) மங்கல...ஒடு - மங்கலமாகிய கீதங்களையும் நாதமே உருவாகிய மறைகளையும் பாடும் பிராமணர் கூட்டங்களுடன் ; தொங்கலும்...முலையினாரும் - மலர் மாலைகளையும் பொன்அரிமாலைகளையும் வேறு வாசனைகளையும் அணிந்த ஆடவர்களும் நெருங்கிப் பணைத்துஎழுந்து தாமரை யரும்பையும் சூதாடுகருவியையும் வென்று, அணி

களையும் குங்குமப்பூக் குழம்பையுமணிந்த தனங்களையுடைய பெண்களும் கூடி ; பரந்து எழு கொள்கைத்தாகி - மிக்கெழுந்த தன்மையுடனே, ௨௧

168. (இ - ள்) அருங்கடி எழுந்தபோதில் - அரிய திருமண எழுச்சி புறப்பட்ட போது ; ஆர்த்த...தரங்கத்தாலும் - சத்தித்த வெள்ளிய சங்குவளைகளாலும், பெருமையுடைய குழை மகரங்களினாலும், ஒளி விளங்கு மணிகளினாலும் நெருங்கி ஏந்திச் சென்ற மயிற்பீலிக் குஞ்சங்களின் நீலநிறமுடைய அலைகளினாலும் ; கருங்கடல்... பொலிந்தது அன்றே - அந்நாளிலே (அப்போதே) கரிய கடல் கிளர்ந்து செல்லும் காட்சிபோல விளங்கிற்று. ௨௨

167. (வி - ரை) இப்பாட்டுக் குளகம். கொள்கைத்தாகி அருங்கடி எழுந்தபோதில் பொலிந்தது - என வரும் பாட்டினுடன் கூட்டி முடிக்க.

மங்கல கீத நாத மறையவர் குழாங்கள் - மங்கல கீத மறையவரும், நாத (வேத) மறையவரும் ஆகிய கூட்டங்கள் எனப் பிரித்துக் கூட்டுக. கீதநாதம் - "மறையினொலி கீதமொடு பாடுவன..." என்ற தேவாரமும் காண்க. (திருஞான - சாதாரி - திருப்பட்டீச்சரம் - 6) இவ்விரண்டனையும் பாடுவோர் வெவ்வேறு கூட்டத்தினராதலின் **குழாங்கள்** என்று பன்மையிற் கூறினார். **மங்கலகீதம்** - பொருளாலும் பாடும் இசையினாலும் மங்கலமுடைய கீதங்கள். இவை தமிழ்க் கீதங்கள். வரிசை 87-ம் பாட்டின்கீழ்க் காண்க (பக். 105). இவை இசையால் மங்கலமுடைமையாவது : இச்சமயங்களில் சோகச்சுவை தரும் மோகனம் முகாரி போன்ற இராகங்களிற் பாடலாகாதென்பது முதலிய விதிகளின்படிப் பாடுதல். **நாதம்** - இங்கு நாத உருவாகிய வேதங்களைக் குறித்தது. வேதத்திலும் மங்கல சாகைகள் - அமங்கல சாகைகள் உண்டு. ஆதலின் **மங்கலம்** என்றதை **நாதத்**திற்கும் சேர்க்க. இவ்வாறன்றி மங்கல கீதங்களையுடைய நாதம் என்று ஒன்றுசேர்த்து உரைப்பதுமாம். 'வேதத்தை மங்கலத்துக்குரிய கீத வோசையோடு ஓதும் மறையவர்' என்பது இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு. **தோங்கல்** - பொன்மாலை முதலிய அணி. **விரை** - வாசனையுடைய மலர்மாலையும் பிற வாசனைப் பண்டங்களும் என்றும் உரைப்பர். வாசனைப் பண்டங்கள் ஐந்து என்பர்.

துவன்றிப்-பரந்து - என்று கூட்டுக. **துவன்றி** - நெருங்கி. இதனைத் துவன்றி எழுந்து மிக்க - முலை - என்று கூட்டியும் உரைப்பர். "ஈர்க்கிடை போகா இளமுலை" என்பது திருவாசகம். "இடையீர் போகா விளமுலை" என்பது தேவாரம். **பணைத்து எழுதல்** - நெருங்கி நிமிர்ந்து எழுதல்.

சாய்த்து - வெற்றி கொண்டதனால் தலை வணங்கப் பண்ணி ; உருவம் - திரட்சி - குவிவு - நிறம் - முதலியவைகளால் மிக்கிருத்தல். சாய்த்து - எழுந்து - மிக்க என்பதாம்.

சூது - சூதாடு கருவி வகைகளில் ஒன்று. ஆகு பெயர். **அணியின் மிக்க** - அவற்றின்மேல் அணிந்த அணிகளினும் அழகு மிகுந்த என்றலுமாம். **மைந்தரும் முலையினரும் துவன்றிப் பரந்து எழுகொள்கையை உடையதாய்** - **கொள்கை** - ஈண்டுத் தன்மையை உணர்த்திற்று. வரிசை 156 பாட்டு உரை காண்க.

குழாங்கள் சூழ்ந்து—என்பதும் பாடம். 21

168. (வி - ரை) இப்பாட்டு மண எழுச்சிக்கும்கருங்கடற் கிளர்ச்சிக்கும் சிலேடை. **கடி** - மணம். இங்கு மணக்கூட்டத்தைக் குறித்தது. ஆகுபெயர்.

மணஎழுச்சி—ஆர்த்த வெள்வளைகள் - பெண்கள் அணிந்த ஒலியுடைய சங்கு வளையல்கள். **குழை மகரம்** - மகரக் குழை. ஆண்மக்கள் அணிந்த மகர வடிவுடைய குண்டலங்கள். இது ஆதி சைவருக்கு உரிய காதணியாம். பெண்கள் அணிந்த காதணியின் மகரங்கள் என்றுமுரைப்பார். **இலங்கொளி மணிகள்** - இவ்விருவரும் சிறார்களும் பூண்ட அணிகளிலுள்ள ஒளி விளங்கும் மணிகள். **ஒளியிலங்கு** என்று மாற்றுக.

கிழ வேதியராக வந்த கோலம்

மணம்தவிர்ந்த புத்தூர்

சடங்கவி சிவாசாரியார் வீடு



மணம்தவிர்ந்த புத்தூர்

திருமணம் தவிர்ந்த இடம். தற்போது ஆலயமாகக் காணப்படுகின்றது.

—வரிசை 169-ம் பாட்டு—பக்கம் 205.

நெருங்கிய பீலிச்சோலை நீல் நிறந் தூங்கும் - நீலநிறமுடைய அலைபோல நெருங்கித் தூங்கிய மயிற்பீலிக் குஞ்சங்கள்.

கருங்கடல்—ஆர்த்த வெள்வளைகள்-நாதவொலியைத் தம்முள் அடக்கி ஒலிக்கும் பெண் சங்குகள். சூல்கொண்டு வயிறுளைந்து சத்தித்தனவுமாம். **இருங்குழை மகரம்** - பெரிய வாயினையுடைய பெரிய மகர மீன்கள். **பீலிச்சோலை நீல் நிறந் தூங்கும்**-மயிற் பீலிக் குஞ்சங்களின் வரிசையை ஒத்த கருநிறமுடைய அலைகள். பிறண்டும் இது போலவே ஆசிரியர் கடலுக்குக் கூட்டத்தை உவமித்ததையுங் காணலாம்.

"இரண்டுநில வின்கடல்கள் ஒன்றாகி எழுந்தனபோல் இசைந்த வன்றே"

முதலிய திருப்பாடல்களைக் காண்க. இது பின்னர் முற்றுப்பெறாத மணமாய் முடித லின் கடலின் கருமைபற்றிச் சிலேடை சொல்லியது குறிப்பாம். மெய்ப்பொருள் நாய ஞர் புராணம் - 8 (வரிசை 474) பாட்டின் கீழ்க் காண்க. கற்பனையாகக் காட்டும் கடல் களின் வேறு பிரித்துணர்தற்குக் **கருங்கடல்** என்றார்.

நீலநீர்த் தூங்கும்—என்பதும் பாடம். 22

169. நெருங்குதூ ரியங்க ளேங்க நிரைத்தசா மரைக ளோங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிணங்குபூங் கொடிக ளாட
வருங்கடி மணம்வந் தெய்த வன்றுதொட் டென்று மன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூ ராமால். உ௯

(இ - ள்) நெருங்கு...எய்த - நெருங்கி முழங்கும் வாத்தியங்கள் ஒலிக்கவும், வரி சையின் வீசப்பெறும் சாமரைகள் மேலே கிளர்ந்து வரவும், பெரிய குடைகள் நெருங் கிச் செல்லவும், ஒன்றோடொன்று பிணங்குவன போலப் பலவகையுள்ள அழகிய கொடிகள் ஆடவும், ஆக இவ்வண்ணமாக அந்தப் புதிய திருமண எழுச்சி புத்தூர் வந்து சேர்ந்தது ; அன்று...ஆம் - அதனாலே அன்று முதலாக என்றைக்கும் அன்பிலே வருகின்ற ஆதிசைவ மறையோர் குலத்தவர் வாழும் புத்தூரானது **மணம் வந்த புத்தூர்** என்று பெயர் பெற்றதாம். ஆல் - அசை.

இப்பாட்டு மண எழுச்சி திருநாவலூரிலிருந்து புத்தூர் வந்த சிறப்பு உரைத்தது.

(வி - ரை) ஏங்க - ஓங்க - செல்ல - ஆட - எய்த - (அதனால்) புத்தூர் ஆம் - என்க.

நெருங்கு தூரியங்கள் - இங்கு **நெருங்கு** என்பது பல வாத்தியங்களும் ஒன்றோ டொன்று மாறுபடாது ஓசை ஒன்றித்து இயைந்து முழங்கவேண்டுதலைக் குறித்தது.

நிரைத்த சாமரை - சாமரைகள் வரிசைப்பட ஒன்றுபோல இரட்டுதலின் **நிரைத்த** என்றார். **நிரை** - வரிசை. **பெருங்குடை மிடைந்து** - ஒன்றோடொன்று சேர்ந்து நிழல் செய்யவேண்டுதலின் **மிடைந்து** என்றார்.

பிணங்கு பூங்கொடிகள் - கொடிகள் ஆகாயத்தில் காற்றினால் அசைந்து ஆடும் போது ஒன்றுபோலவே ஆடாமையின் அவை பிணங்குவன போல இருந்தன என்று குறித்தவாறு. காற்றினால் அசைவும் ஏந்திச் செல்வோரின் அசைவும் சேர்ந்து கொடிக ளிடத்து மிகவும் அசைவுண்டாதலின் **ஆட** என்றதாம்.

கடிமணம் - கடி - புதுமை - இதுவரை மணமக்கள் காத்துவந்த பிரமசரிய கன்னியா நிலைகளின் வேறாய்ப் புதிய நிலையை விளைத்தலின் **கடிமணம்** என்பர். **கடி** - காவல் எனக் கொண்டு இருவரும் தத்தமக்கு விதித்த நிலைகளைக் காத்தலைக் குறிக்கும் என்றும் கூறுவர். இனி, **கடி** - பின்னர்க் கடியப்படும் - தடுக்கப்படும் - அரிய மணம் என்ற குறிப்பும் பெறுதல் காண்க. மேற்பாட்டிலும் **அருங்கடி** என்று குறித்த தும் காண்க. **ஏங்க - பிணங்கு** என்றவைகளும் பிறசரிதக் குறிப்புக்களாதல் காண்க.

அரும் - கடியப்படுதலிலும் அருமையாவது திருமலையிலே ஆலாலசுந்தரராய் நின்று பெற்ற வரத்தின்படி திருவருள் விளைவு பெறுதலின் சிறப்பாம். (வரிசை 38, 39 பாட்டுக்கள் காண்க.) இவ்வாறு எல்லா உயிர்களும் வேண்டிப் பெற்றுத் தங்கள் தங்கள் பிராரத்தம் மட்டும் அனுபவித்துச் செல்லவும் ஆகாமியம் மேன்மேல் ஏறாது தடுக்கவும் பெறுதல் அருமையாம். ஆதலின் இது அருமையாய்க் கடியப்பெற்ற மணம் என்று கற்பித்தபடியாம். 62-வது பக்கம் கற்பனை காண்க.

அன்பின் வரும் குலமறையோர் - சிவபெருமானுக்கு அன்பினாலே வழிவழி அடிமை செய்யவும், உலக நிலையிலே வேறொன்றும் செய்யாதிருக்கவும், வரப்பெற்ற குலத்தாராகிய சிவவேதியர்.

புத்தூர் - அதன் இயற்பெயர் - **மணம் வந்த புத்தூர்.** இந்தத் திருமணத்தின் அரிய கோல எழுச்சி வந்ததாற் போந்த காரணப்பெயர். இந்நாளிலும் இஃது இப் பெயராலேயே (**மணந் தவிர்ந்த புத்தூர்** என்று மருவி) அழைக்கப் பெறுகிறது. அஃது "அன்றுதொட் டென்றும் ஆமால்" என்ற ஆசிரியரது ஆசியின் பயனும். இவ்வாறே திருப்பெருமண நல்லூர்க்கும் பெயர் வந்த காரணமும் காண்க.

சாமரைகள் தோரை—என்பதும் பாடம். (மணிக் குஞ்சங்கள் கட்டிய). 23

170. நிறைகுடந் தூப தீப நெருங்குபா லிகைக ளேந்தி
நறைமல ரறுகு சுண்ண நறும்பொரி பலவும் வீசி
யுறைமலி கலவைச் சாந்தி னுறுபுன றெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளன் மணமெதிர் கொள்ள வந்தார். உச

(இ - ள்) வெளிப்படை. (புத்தூரின்) மறையவர்களும் மடவார்களும் - நிறை குடம் - தூபம் - விளக்கு - முளைப் பாலிகைகள் முதலிய மங்கலப் பொருள்களை ஏந்திக் கொண்டும், மலர் - அறுகு - பொற்சுண்ணப்பொடி பொரி - முதலியவற்றை இறைத்துக் கொண்டும், சந்தனங் கலந்த பனிநீர் தெளித்துக்கொண்டும், மண எழுச்சியிற் போந்த வர்களை எதிர்கொண்டு வந்தார்கள்.

(வி - ரை) மறையவரும் மடவாரும் - ஏந்தி - வீசி - தெளித்து - எதிர்கொள்ள வந்தார் - என முடிக்க. இவ்வாறு திருவிழா முதலியவற்றில் எதிர்கொள்ளுதல் அந் நாள் மரபு.

நிறைகுடம் - பூரண கும்பம் என்பர். இவை முதலியவை ஏந்திவரும் மங்கலப் பொருள்கள்.

நெருங்கு பாலிகை - ["நீண்முளை சாத்தினார்கள்" என வரிசை 157-ம் பாட்டிற் கண்ட] முளைகள் நெருங்கி முளைத்து வளர்ந்த முளைப்பாலிகைகள். மலர் - அறுகு - சுண்ணம் - பொரி முதலியவற்றைக் கலந்து வீசுதல் மங்கல மரபுகளில் ஒன்று. **பலவும்** என்றதனால் இவற்றோடு பிற பொருள்களும் சேர்த்தல் குறிப்பிட்டதாம்.

உறைமலி கலவைச் சாந்து - கலவை சேர்த்து உறைத்த மணமிக்க சந்தனம். **உறுபுனல் தெளித்து** - அந்தச் சந்தனம் சேர்ந்த பனிநீரைத் தெளித்தல். இது இக்காலத்தும் வழக்கமாம். **தெளித்து** - எழுச்சியிற் போந்தார்மீது தெளித்து. 24

171. கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண வென்பார்
பெண்களி லுயர நோற்றாள் சடங்கவி பேதை யென்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்
பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடு வார்கள். உரு

(இ - ள்) கண்கள்...என்பார் - (வேறு மடவார்) காளைபோன்ற இவரைக் காண அளவிலாத கண்கள் வேண்டும் என்று சொல்வார் சிலர்; பெண்களில்...என்பார் - சடங்

கவி சிவாசாரியாரின் மகளே (இவரை மணக்க நின்றமையால்) பெண்களிலெல்லாம் மிக நோற்றவள் என்பார் சிலர் ; மண்...என்பார் - உலகம் மகிழத்தக்க இந்த மணத்தைக் காணப்பெற்றதால் நாம் பெருவாழ்வை யடைந்தோம் என்று சிலர் சொல்வர் ; பண்களின்...ஆடுவார்கள் - சிலர் பண்களினால் நிறைந்த கீதம் பாடுவாரும் ஆடுவாருமாயினர்.

(வி - ரை) இதுவும் வரும்பாட்டும் மண எழுச்சியுடன் போந்த மணமகனாகிய நம்பிஆரூரரைப் புத்தூர் மறையவர் மடவார் கண்டு சொல்லியவற்றைக் குறிப்பன.

கண்கள் எண்ணிலாத வேண்டும் - இவரது பேரழகை முற்றுங் காண இரு கண்கள் போதா ; அளவற்ற கண்கள் வேண்டும் என்றதாம். நம்பிகள் சிவபெருமானது அழகு திரண்டு வந்த திருவுரு உடையாராதலின் இவ்வாறு கூறினார்கள். சுந்தரர் என்ற பேரும் காண்க. இளமையிலே இவரது அழகு அந்நாடுவாழ் அரசராதுள்ளத்தை கவர்ந்து கொண்ட சரிதமும் காண்க.

உயர நோற்றாள் - நாம் ஒருவாற்றாற் காணும் பேறு பெற்றோம். அவ்வாறன்றி இவரைத் தன் நாயகனாகவே பெற்றுக் காணும் பேறு நம்முட் சடங்கவி மகளுக்குக் கிடைத்தது அவளது முன்னைத் தவத்தாலே என்றதாம். **உயர** - உயரும் பொருட்டு என்றலுமாம்.

வாழ்ந்தோம் - நமக்கும் காணும் வாழ்வு கிடைத்தலாற் கண்பெற்ற பயனடைந்தோம். "வாழ்ந்தன கண்க ளென்பார்"—**திருஞா - புரா** - 803. என்று திருஞான சம்பந்த சுவாமிகளைக் கண்ட மாதர் மைந்தர் சொல்லியதும் காண்க. இவ்வாறு மண மகனைக் கண்டு பாராட்டுதல் கற்பிலக்கணத்துக்கு இழுக்கில்லாமை யறிக.

காண்பார் பலருள்ளே ஒருசிலர் ஒன்று சொல்ல, வேறு சிலர் அதைத் தொடர்ந்து மேலே சொல்லிக் காணும் கருத்து இப்பாட்டினும் வரும்பாட்டினும், இன்னும் இவ்வாறு வரும் இடங்களினும் கண்டு கொள்க. 25

172\. ஆண்டகை யருளி னோக்கின் வெள்ளத்து ளலைந்தோ மென்பார்
தாண்டிய பரியு நம்பாற் றகுதியி னடந்த தென்பார்
பூண்டயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி யென்பார்
ஈண்டிய மடவார் கூட்ட மின்னன விசைப்பச் சென்றார். உசு

(இ - ள்) வெளிப்படை. ஆண்தகையாகிய இவரது அருள் நோக்கப் பெருக்கில் அகப்பட்டு மீளும் வகை யறியாது நின்றோம் என்றார் சிலர் ; இவர் ஏறிவரும் குதிரையும் தகுதிபெற நம்மிடம் போந்தது என்றார் சிலர் ; அணிகள் பூண்ட இவரே நாம் கண்டு வாழும் புண்ணிய மூர்த்தி என்றார் சிலர் ; அங்குக் கூடிய பலப்பல மடவாரும் இவ்வாறு பாராட்டிப் பேச நம்பியாரூரர் சென்றனர்.

(வி - ரை) **ஆண்டகை** - ஆண்மக்களிலேமிக்க பெருந்தகை. **அருளின் நோக்கின் வெள்ளம்** - பார்வையாகிய அருள்வெள்ளம். தம்பிரான் தோழராதலின் **அருள்** என்றார். **அலைதல்** - கரை காணாது திளைத்தல். **அருள் இல் நோக்கம்** - அருளில்லாத நோக்கம் என்று முரைப்பர், அருளுடன்கூடிய நோக்கமாயின் **அலைந்தோ** மென்னாராதலின்.

தாண்டிய பரியும் நம்பால் தகுதியின் அடைந்தது - பிற இடங்களிலெல்லாம் தாண்டிச் செல்லும் தன்மையுடைய அவரது குதிரையும் நமது தகுதி நோக்கி அவ்வாறு தாண்டிச் செல்லாமல் நமக்கு இவரது காட்சி தரும் பொருட்டு **நடந்து** வந்தது என்பார் **தாண்டிய பரியும் நடந்தது** என்றார்.

தகுதியில் - அருள் பெறுவார் தகுதிக் கேற்றபடி என்றுரைத்தலுமாம். நமது மென்மை, விருப்பம் முதலிய தகுதிநோக்கி, "வேண்டுநடை நடக்கும் வெள்ளேறே"

என்ற தேவாரமும் காண்க. அருளின் ஆண்டகையைப் பரித்ததாதலின் அதன் தகுதிக்கேற்ப என்றுமாம்.

பூண் தயங்கு இவன் - அணிகள் கிடந்தசையும் மேனியுடைய இவர். இவரது இயற்கை யழகு பூண்களுக்கு இல்லாமையால் அவை தயங்குதற்கு இடமாகிய மேனி யுடையார் என்றதும் குறிப்பு.

காணும் புண்ணிய மூர்த்தி - காணத்தகுந்த புண்ணிய சொரூபர். புண்ணியமே உருவானவர் சிவபெருமான் ; ஆனால் அவர் காணப்பெறாதவர்; இவரோ அவ்வாறன்றிக் காணப்பெறுபவர் என்றுரைத்தலுமாம்.

மேற்பாட்டிலே **மணங் கண்டு வாழ்ந்தோம்** என்ற பெண்கள் தாம் கண்டது போலவே அவரும் யாவரையும் அருளுடன் கண்டனராதலின் அக்காட்சியில் கரை காணாது அலைந்தனர்; அவ்வாறு அலைவாரிடம் பரியும் நடந்து சேர்ந்தது ; சேரவே அவரது காட்சியை நேரே கண்டு இவனே காணும் புண்ணியமூர்த்தி என்றனர் - என இக்கருத்துக்களை ஒன்றுபடுத்தி உரைத்துக் கொள்க.

ஈண்டிய - மணங் காணத் திரண்டு கூடிய. **இன்னன** - இவற்றையும் மற்றும் இவ் வாறான பலவற்றையும். **இசைப்பச் சென்றார்** - இசைத்துக்கொண்டிருக்கத் தாம் சென்றனர்.

"பெருகொளி முத்தின் பைம்பொற் சிவிகைமேற் பிள்ளையார்தாம்
வருமழ கென்னே என்பார்......"—**திருஞான - புரா - 803**

என்றது முதலாக வரும் கருத்துக்களை இங்கு வைத்து நோக்குக.

தாண்டியமாவும்—தகுதியினடைந்தது—என்பனவும் பாடங்கள். 26

173. வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்க மெங்கும்
பெருமழைக் குலத்தி னார்ப்பப் பரிமிசை யிழிந்து பேணும்
ஒருமணத் திறத்தி னங்கு நிகழ்ந்தது மொழிவே னுய்ந்தேன். உஎ

(இ - ள்) வரும்...வள்ளலார் - இவ்வாறு மணக்கோலத்துடன் வரும் எமது வள்ள லாகிய நம்பியாரூரர் ; தெள்ளும்...சென்று - மிகவும் வாசனை வீசும் மணப்பந்தரின் முன் சென்று ; வெண்...இழிந்து - எங்கும் வெண்சங்கங்கள் மேகம்போல முழங்கக் குதிரையினின்றும் இறங்கி ; பேணும்...உய்ந்தேன் - உட்புகுந்து பேணியதாகிய அந்த ஒரு மணத்திலே நிகழ்ந்த செய்தியை இனி எடுத்துச் சொல்வேனாகி அதனால் நான் உய்தியடைந்தேன்.

(வி - ரை) **வரும் மணக்கோலம்** - மேற்சொல்லியவாறு கண்டோர் மனங் கவர வருகின்ற மணக்கோலம். **எங்கள் வள்ளலார்** - வரிசை 155 பாட்டின்கீழ்க் காண்க. **வாசத் திருமணப் பந்தர்** - அலங்கரித்த பூமாலைகளின் வாசனை பொருந்திய பந்தர். திரு வாசம் செய்யும் மணப்பந்தர் என்றலுமாம் பின்னர்த் தேவதேவன் எழுந்தருளும் பந்த ராதலின்.

வெண்சங்கம் ஆர்ப்ப - நித்திய பூசையிலும், மணமுதலிய பெருவிழாக்களிலும், திருவிழாக்களிலும் மங்கல வோசைகளுடன் வெண்சங்க மூதுதல் மரபு.

"நிலவெண் சங்கும் பறையு மார்ப்ப..."—**திருநா - தேவாரம் - குறிஞ்சி - ஆரூர் - 5**

"...விருப்போடு வெண்சங்க மூதா ஆரும்..."—**தனித் திருத்தாண்டகம் - 5**

"...மொய்குழலார் தம்மை - நடுச்சங்க நல்விலங்கு பூட்டும்..."—**பட்டினத்தடிகள்** முதலிய திருவாக்குக்கள் காண்க.

பெருமழைக் குலத்தின் ஆர்ப்ப - பெரும்பெயல் மேகத்தின் ஓசைபோல முழங்க. **மழைக்குலம்** - மேகக் கூட்டம். அதன் ஓசைக்கு ஆகுபெயர்.

பரிமிசை இறங்கி - குதிரையின் மேலிருந்து இறங்கி. **பேணும் ஒரு மணத்திறம்**- பேணியிருந்ததாகிய அந்த ஒப்பற்ற மணத்திலே பரியினின்று இழிந்து நம்பிகள் பந்தரில் சென்று அமர்ந்தனர்; மணவினை தொடங்க அமைந்தனர்; அவ்வாறு அமைந்த மணத்திறத்திலே—என்று இடையின் நிகழ்ச்சி வினை முற்றுக்கள் தொக்கு நின்றன. இங்குத் தொடங்கும் மணமாகிய வினை மேலே சரித நிகழ்ச்சியிலே முற்றுப்பெறாது தொகுவதாகலின் இப்பாட்டிலும் வினை முற்றுக்கள் வெளிப்படாது தொக்கு நின்று பேணும் என எச்சமாய் நின்ற அழகு காணத்தக்கது.

மொழிவேன் - உய்ந்தேன் - இனி மொழிவேன்; ஆதலின் (இப்போதே) உய்தி பெற்றேன். மொழிவது எதிர்காலமாயினும் அதனாலே தாம் பெறும் பேறு உறுதியாய் விரைவின் வருவதாதலின் **உய்ந்தேன்** என இறந்த காலத்தாற் கூறினார்.

"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்,"

என்பது இலக்கணம். 27

வேறு

174. ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற வெழுந்துமிகு கீழுற வகழ்ந்து
மாலுமிரு வர்க்குமரி யாரொருவர் வந்தார். உஅ

(இ - ள்) ஆலும்...மொழியால் - சத்திக்கின்ற வேதங்களாற் சூழப்பெற்ற கயிலைத் திருமலையிலே அருட்கண்ணுடைமையால் அருளிச்செய்த சால்புடைய அருண்மொழியின்படியே; வழி...கொள்வான் - தடுத்தாட்கொண்டு வழிப்படுத்தும் பொருட்டு; மேலுற...வந்தார் - மேலே எழுந்து பறந்தும் கீழே அகழ்ந்துபோயும் மயங்கிய பிரம விட்டுணுக்களுக்கு அரியவராகிய ஒருவராம் இறைவர் வந்தார்.

(வி - ரை) ஆலும் - சத்திக்கின்ற - நாதவடிவாகிய. **மறைசூழ்** - திருக்கயிலையைத், துதிக்கின்ற வகையாலே நாதவடிவாய் மறைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதாம். நாதத்தின்மீது சிவன் விளங்குவன் என்பது சாத்திரம்.

அருள் செய்த சாலும்மொழி - ஆலாலசுந்தரர்க்குக் கொடுத்த திருவாக்கு - திருமலைச் சிறப்பு - 27, 28, 29 பாட்டுக்கள் காண்க.

வழிதடுத்து அடிமை கொள்வான் - தடுத்து வழிஅடிமை-என மாற்றுக. ஆன்மா வழுவிப்போகும் வழியிலிருந்து தடுத்து அடிமை என்றுமாம். தடுத்து அடிமையாக்கிக் கொள்ளும் பொருட்டு என்க.

மேலுற எழுந்து - பிரமன் அன்னமாகிப் பறந்து சிவபிரானது முடிதேடச் சென்ற சரிதங் குறித்தது.

மிகு கீழ் உற அகழ்ந்து - பன்றியாய் நிலந்தோண்டி விட்டுணு சிவபிரானது அடி தேடச் சென்ற சரிதங் குறித்தது.

மாலும் இருவர் - மயங்கி நின்ற - தருக்கி நின்ற இருவர். நாம் அறிவோம் என்ற அகந்தையாலே தேடிய இருபெருந்தேவர்க்கும் அரியாரயின பெருமான் தமது அருளை வேண்டிப் பெற்றவரைத் தாமே வலிந்து தடுத்தாட்கொள்ள வந்தார் என அடியவர் பெருமையையும் கருணையின் எளிமையையும் குறித்தவாறு. "விளவார் கனிபட நூறிய

கடல்வண்ணனும்..." என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தாலும், அப்பர் சுவாமிகளது இலிங்கபுராணக் குறுந்தொகைத் திருப்பதிகத்தாலும்,

"...இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழற் றிருவுரு வாகி யாழத்
தடுக்கிய வெழும் எடுத்தனன் எடுத்தெடுத்
தூழி யூழி கீழுறக் கிளைத்தும்
காண்பதற் கரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய
பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
காண்டி லாதநின் கதிர்நெடு முடியும்"

என்ற (பதினொராந் திருமுறை) பட்டினத்தடிகள் திருவாக்காலும், பிற பிரமாணங்களாலும் இவ்வரலாற்றின் தன்மை அறியப்பெறும். இதனைப் பின்னர் "வழுவாய மனத்தாலே மாலாய மாலயனும்" என்று திருஞான-புரா-78 - பாட்டிலே விளக்கி யருளினார் ஆசிரியர். அவ்வாறு பெருந்தேவர்க்கும் அரியனாகிய பெருமான் அன்புசெய்வார்க் கெளியனென,

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய—வல்லதனால்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு வரன்"

என்ற சாத்திரத்தால் அறியலாம். அகந்தை கொண்ட இருவர்க்கும் அரியவர், தாமே அன்புடைய ஒருவர்க்கு எளியவராயினமையும், அவர்கள் தேடவும் ஒளித்தவர் இவர் மறுப்பவும் விடாது வழக்கிட்டுப் பற்றியமையும் குறிப்பு.

ஒருவர் - ஒப்பற்றவர். தனக்குவமை யில்லாதவர். ஒருவராய்த் தனித்து வந்தார் என்றலுமாம்.

மாலு மயனுக்கு மரியார்—என்பதும் பாடம். 28

175. கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மெனச்சூழ்
புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மாடே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. உ௯

(இ - ள்) கண்...எய்த - இரு கண்ணுக்கும் இடையில் உள்ள ஒரு நெற்றிக்கண்ணை மறைத்துச் சூழ்ந்த ஒளியுடைய வெண்துகில்போல் நெற்றியிலே தூய திருநீறு விளங்கவும்; தண்மதி...சழங்க - குளிர்ந்த பிறைச்சந்திரன் முதிர்ந்து கதிர் சாய்ந்த தன்மை போல வெள்ளிய நரை மயிர் முடிப்பு விழுந்து அசைந்து கிடக்கவும் (எய்தி);

(வி - ரை) இப்பாட்டும் மேல் வரும் இரண்டு பாட்டுக்களும் குளகமாகி 32, 33-ம் பாட்டுக்களிலே எய்தி - வந்து - என்றன் வினைமுடிவு பெறுகின்றன. முடிவு 33 பாட்டின்கீழ்க் காண்க.

கண் இடை கரந்த - இடைக்கண் என மாற்றி, இடையில் உள்ள நெற்றிக்கண்ணை மறைத்த என்க. இடை - இடைக் காலத்தே - இப்போதைக்கு எனக் கொண்டு, தமக்கே சிறப்பாக உள்ள நெற்றிக் கண்ணை இவ்வாறு வரும் பொருட்டு இப்போது மறைத்து என்றுரைப்பதுமாம். இடைக் கதிர்க்கண் கரந்த - என மாற்றி இடையிலே உள்ள தீக்கண்ணை மறைத்த என்றுரைப்பினுமாம்.

கரந்த வெண்பட மெனச் சூழ் - கரந்த சூழ்வெண் படம் என மாற்றிக் கண்ணை மூடி மறைத்து அதைச் சூழ்ந்த வெண்துகில் போல என்க.* **படம்** - துகில்-துணி. **சூழ் நுதல்** - என்று கூட்டி உரைத்தலுமாம்.

புண்ணியம் - நுதல் - புனிதம் - நீறு பொலிவெய்த - புண்ணியப் புனித நீறு நுதலிலே பொலிவெய்த என மாற்றி யுரைக்க. **புண்ணியம்** - "புண்ணியமாவது நீறு"; **புனிதம்** - "சுத்திதருவது நீறு" (தேவாரம்.)

புண்ணியம் சூழ் நுதல் - புண்ணியங்கள் யாவையும் திரண்டு தமக்குரிய இடமாய் வந்து சூழ்ந்த நெற்றி என்றுரைத்தலுமாம். **நுதல்** - நெற்றி. நுதலில் நீறு கண்ணை மறைத்த வெண்துகில் போன்றது என்க.

மதி முதிர்தல் - பிறை வளர்ந்து முழு மதியாதல். **மாடே** - பக்கத்திலே. **கதிர் சாய்வது** - கதிர்களைக் கற்றையாக விட்டுச் சாய்வது.

வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க - வெள்ளிய நரை மயிர் முடிந்து தொங்கவிட்டிருப்பது விழுந்து கழுத்திடையில் அசைய.

நரை - நரைமயிர், ஆகுபெயர். **சழங்க** - கிடந்தசைய. கழுத்தளவில் விழுந்தசையும் நரை மயிர் முடி இறைவன் சடையில் தரித்த பிறை முதிர்ந்து கதிர்களை நீட்டிக் கீழே சாய்வது போல என்க. இவரது மூப்புக் கோலத்துக் கேற்பப் பிறையும் முதிர்ந்து சாய்வதென்றது குறிப்பு. கதிர்கள் முதிர முதிரச் சாய்தலை யடைவது இயல்பாம். கோலம் மாற்றிக் கொண்டதற்கேற்ப இப்பாட்டில் முடிபுகளும் மாற்றியுரைத்தல் காணத்தக்கது.

சாய்வதென மீதே—என்பதும் பாடம். 29

176. காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின்மிசை நூலினொடு தோளின்
மீதுபுனை யுத்தரிய வெண்டுகி லுடங்க
ஆதப மறைக்குடை யணிக்கரம் விளங்க. ௩௦

(இ - ள்) காதில்...தாழ - காதிலே உருத்திராக்கத்தாலாகிய குழைகள் தாழ்ந்து விளங்கவும்; சோதி...நுடங்க - ஒளியும் அழகும் பொருந்திய மார்பின் மேலே அணிந்த பூணூலுடன் தோளின்மேல் உத்தரியமாக வணிந்த வெள்ளிய துகிலும் அசைந்து விளங்கவும்; ஆதப மணிக்குடை...விளங்க - கையிலே வெயிலை மறைக்கும் மறையாகிய குடை விளங்கவும்;

(வி - ரை) கண்டிகை-உருத்திராக்கமணிகளாலாகிய வடம். கண்டிகையாகிய குழை என்க. உருத்திராக்கத்தைக் காதிலே குழையாக அணிவது சைவ மரபு. ஆறுகட்டி-என்பர். **வடிந்த குழை** - தொங்கிய குழை. **வடிந்த காதில்** என்பதுமாம். தொங்கிய காதிலே குழைகள் தாழும்படி அணிதல் முன்னுள் வழக்கு. இரண்டு கந்திருவர்கள் குழை வடிவாகச் சிவபெருமான் காதிலே அமர்ந்துள்ளார்கள் என்பது சரிதம்.

சோதி மணிமார்பு - திருநீற்றினால் ஒளியும் கண்டிகையினால் அழகும் - உடைய மார்பு. தோளிலிருந்து மார்பிலே கிடந்த நூலும் துகிலும் அசைய. தோளிலே நூல் தோற்றாது உத்தரியத்தின் கீழ்க் கிடத்தலால் **தோளின்மீது புனை** என்பதனை **உத்தரியத்துடன்** சேர்த்துக் கூறினார். **கழல் தள்ளுறு நடை கொள்ள** - எனப்பின்னர்க் கூறுவதால் தலையும் மார்பும் மேனியும் அசைந்தன; அவை அசையவே நரைமுடி சழங்கிற்று; நூலும் துகிலும் நுடங்கின.

ஆதப மறைக்குடை - **ஆதபன்** - ஆதவன் - சூரியன். "அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்" என்றது போலச் சூரிய கிரணத்தினின்றும் காக்கும் மறை

*இவ் வுவமானம் கண் வைத்தியசாலையிற் காண்போர்க்கு இனிது விளங்கும்.

யாகிய குடை. மறையே இறைவனுக்கு எல்லாமாம் என்பது சாத்திரம். "மறையே நமது கோவணமாம்..." என்ற திருவிளையாடற் புராணம் காண்க. மறைக்கின்ற தொழிலுடைமையால் மறைக்கு அப்பெயராயிற்று. ஆதலின் மறைக்குடை என்ற நயம்பெற அப்பெயராற் கூறினர். இது இவ்வாறு மறைப்பது உயிர்களைப் பிறவி வெயிலிலிருந்து மறைத்துக் காத்தற் பொருட்டாம். **கரம்** - கரத்திலே. இறைவன் கையிலே கொண்டு திருமுடிமேற் கவித்த குடையின் சிறப்பை,

"பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்"

—பதினோராந் திருமுறை - கோயினான் மணிமாலை - 1

என்ற திருப்பாட்டாலறிக.

மறைக்குடை - மறைக்கின்ற குடை என்பாருமுண்டு.

மார்பின்சை—என்பதும் பாடம். 30

177. பண்டிசரி கோவண வுடைப்பழமை கூரக்
கொண்டதொர் சழங்கலுடை யார்ந்தழகு கொள்ள
வெண்டுகி லுடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழ றள்ளுநடை கொள்ள. நக

(இ - ள்) பண்டி...கூர-வயிற்றிலிருந்து சரிந்த கோவண உடையினது பழைமை மிகும்படி அதன்மேல் அணிந்துகொண்ட அசைந்த உடை பொருந்திநின்று அழகு செய்யவும்; வெண் துகில்...கொள்ள - வெள்ளை ஆடையும் தருப்பையும் நுனியிலே முடிந்துவிட்ட மூங்கிற்றண்டு மற்றொரு கையிலே தாங்கிக்கொண்டு, வரும்போது கால்கள் மூப்பினால் நிலைபெறாது தள்ளாடிய நடைகொள்ளவும்;

(வி - ரை) இப்பாட்டும் வரும்பாட்டும் இறைவன் தாங்கிவந்த, மனைவியின் நீக் கொண்ட வானப்பிரத்த நிலைக் கோலத்தை உணர்த்தின. வானப்பிரத்த மிரண்டனுள் இதனை விபத்நீக வானப்பிரத்த ஆச்சிரமமென்பர் வடநூலார். மூப்புக் கோலத்திற் கேற்பப் **பண்டிசரி கோவணம்** என்றார்.

கோவணம் - மறையே இறைவனது கோவணமாம். இறையும் மறையும் மூன்னைப் பழம்பொருள்களாதலால் **கோவண வுடைப்பழமை** என்றார்.

"மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ"

என்பது திருவாசகம்.

"ஒங்கு கோவணப் பெருமையை யுள்ளவா றுமக்கே
ஈங்கு நான்சொல்ல வேண்டுவ தில்லை"—**அமர்நீதி - புரா - 14**

சழங்கலுடை - கோவண உடையும் அதற்கேற்ப அதன்மேல் அணிந்த அசைகின்ற ஆடையும் என்க. "அருமறைநூற் கோவணத்தின் மிசைஅசையுந் திருவுடையும்" (மானக் - புரா - 24). திருமேனி அசைவினால் தளர்ந்து வழிகின்ற ஆடை.

ஒருகை - குடை ஒருகையிற்கொண்டு மற்றொரு கையிலே தண்டுகொண்டு என்க. இது தள்ளாடிய நடைக்கு ஊன்று கோலாகவும் துகிலுக்கும் குசைக்கும் இடமாகவும் உதவுவதாம். **குசை** - தருப்பை. 31

178. மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ

மெய்த்தநெறி வைதிகம் விளைத்தமுத லேயோ
இத்தகைய வேடமென வையமுற வெய்தி. ௩௨

(இ - ள்) இத்தகைய வேடம் - இவ்வாறு கண்ட திருவேடமானது ; மொய்த்து... வடிவேயோ - செறிந்து வளர்கின்ற பேரழகே முதிர்ந்து மூப்பாகிய வடிவமோ ; அத் தகைய...படிவமேயோ - அன்றி அவ்வாறு உள்ள மூப்பினது உண்மை உருவமோ ; மெய்த்த...முதலேயோ - அன்றி உண்மை வைதிக நெறியை உலகில் விளைவித்த மூலப்பொருளோ ; என...எய்தி - என்று அங்குக் கண்டார் யாவரும் ஐயம் கொள்ளும் படியாக வந்து ;

(வி - ரை) அழகு மூத்த வடிவு - மூப்பினால் அழகை இழப்பது உலக இயல்பு. இவ்வடிவம் அவ்வாறன்றி அழகே முதிர்ந்து மூத்தது என்று சொல்லும்படி தோன் றிய வடிவம். இனி, அழகு எப்போதும் மூப்படையாது என்றால் இது அழகிய மூப்பின் வடிவமேயோ என்னும்படி என்பார் அத்தகைய (அழகிய) மூப்பின் வடிவமோ என்றார்.

விளைத்த முதல் - வைதிக நெறியை உலகத்திற்கு விளைவித்துக் கொடுத்த மூலம். வேதத்தைக் கொடுத்தாராதலின் அந்நெறியை விளைத்த முதல் என்றார். முதல் - மூல முதல்வன் என்ற குறிப்புமாம். இத்தகைய வேடம் - நேரே அணிமையிற் கண் டார்களாதலின் அண்மைச் சுட்டினாற் கூறினார். வையமுற - பூமியிலே - என்றலுமாம். விளைந்த முதல்—என்பதும் பாடம். 32

179. வந்துதிரு மாமறை மணத்தொழி றொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்
றிந்தமொழி கேண்மினெதிர் யாவர்களு மென்றான்
முந்தைமறை யாயிர மொழிந்ததிரு வாயான். ௩௩

(இ - ள்) வந்து...நின்று - (அவ்வாறு எய்தி) வந்து மணந் தொடங்கும் பந்தரிலே நம்பியாரூரர் எதிரிலே சபையின் முன்னர் நின்றுகொண்டு ; முந்தை...வாயான் - பழைமையாகிய அளவில்லாத வேதங்களைச் சொல்லிய வாயினையுடைய சிவபெருமான்; இந்த...என்றான் - "யாவர்களும் யான் சொல்லப்போகிற இந்த மொழிகளைக் கேளுங் கள்!" என்று சொன்னார்.

(வி - ரை) எய்த - சழங்க - (29)-தாழ - நுடங்க - விளங்க - (30) - கூர - கொள்ள- கொள்ள - (31) - எய்தி - (32) - வந்து - நின்று - வாயான் என்றான் - (33) என முடிவு செய்க.

திருமாமறை மணத்தொழில் - வேத மந்திரங்களுடன் ஆகம விதிப்படி செய்யும் கலியாண முயற்சிகள். வரிசை 173-ல் மணத்திறம் என்றதும் இது.

தொடங்கும் பந்தர் - எனவே தொடங்கினார்களே யன்றி இதுவரைச் சடங்குகள் ஒன்றும் செய்யப்பெறவில்லை என்பதாம்.

மறை ஆயிரம் - அனந்த வேதம் - "அநந்தாவை வேதா :" என்பது பிரமாணம். ஆயிரம் - அளவிலாத - எண்ணிலாத-எனும் பொருளில் வந்தது. எண்ணுப் பெயரல்ல. "ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்..." என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

முந்தை மறை - வேதம் நாத உருவுடையதாதலின் முதன்மையுடையதாம் வரிசை 177-ல் பழைமை என்ற இடத்துக் காண்க.

எதிர் - எதிரிலே. வரிசை 183-ம் பாட்டிலே பின்னர் "இந்நாவலனார் ஊரான் என்று சுட்டுகின்றதும் காண்க.

நம்பி எதிர் - நம்பிக்கு எதிராக - நம்பிக்கு மாறாக. எதிர்மொழி என்பது உங்கள் கருத்துக்கெல்லாம் மாறாய் உள்ளது இந்த மொழி என்று குறிப்பிட்டதுமாம். 33

180. என்றுரைசெ யந்தணனை யெண்ணின்மறை யோரும்
மன்றல்வினை மங்கல மடங்கலனை யானும்
'நன்றுமது நல்வரவு நங்கடவ' மென்றே
'நின்றதிவ ணீர்மொழிமி னீர்மொழிவ' தென்றார். ௩௪

(இ - ள்) என்று...அனையானும் - இவ்வாறு சொன்ன அந்தணனை அங்கிருந்த அநேக வேதியர்களும் மணமகனாகிய நம்பி ஆரூரரும் நோக்கி; 'நன்று...என்றார்' 'உமது வரவு நல்வரவு. அது எமக்கு மிக நன்று. அது யாங்கள் செய்த தவப்பயனும்' என்று சொல்லி, 'நீர்மொழிவதாகச் சொன்ன பொருளைச் சொல்லுமின்' என்றார்கள்.

(வி - ரை) என்று - மேலே இவர் 'எதிர் யாவரும் இந்தமொழி கேண்மின்' என்றதை.

எண்ணில் - அளவில்லாத. இவர் மொழிவது மணத்திற்கு மாறாய் முடியும் என்ற எண்ணமில்லாத என்பதும் குறிப்பு.

மன்றல் வினை மங்கல மடங்கல் அனையான்-மணஞ் செய்தற்கமைந்த சிங்க ஏறு போன்ற நம்பி ஆரூரர். இளமையும், வளர்ப்பும், காலமும், (பின்னர் ஓலை கீறும் வரை) சரித நிகழ்ச்சிக் குறிப்பும் நோக்கி இவ்வாறு உவமித்தார்.

மன்றல் வினை - மணச் செயலில் அமைந்தமட்டிலே. பின்னே, விழைவுறு மனம் கொள்வர் (48); பின்பு காந்தத்தின் பின் இரும்புபோல ஈர்க்கப்பெற்றுச் செல்வர் (50); பின் எண்ணமிக்கிருப்பர் (54); அதன் மேல் அவர் பின்பு செல்வர் (65); பெருவிருப் போடும் அழைப்பர் (66); இறுதியில் ஈன்ற ஆன்கனைப்புக் கேட்ட கன்றுபோல் அங்கம் புளகமாவர் (68); ஆதலின், மடங்கல் போலிருந்தது, மணவினைக்கு அமைந்த மட்டிலே என்பது குறிப்பாம். மங்கல மன்றல் வினை எனக் கூட்டுக.

இவண் இந்த - இங்கே நீர் வந்து நின்ற வரலாறு பற்றி நீர் மொழிவதை மொழி மின் என்க. 34

181. பிஞ்ஞகனு நாவலர் பெருந்தகையை நோக்கி
'என்னிடையு நின்னிடையு நின்றவிசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயறி' என்றான். ௩௫

(இ - ள்) பிஞ்ஞகனும்...நோக்கி - சடைக் கோலத்தை மறைத்து வந்த வேதியரும் நாவலூர் நம்பிகளைப் பார்த்து; 'என்னிடையும்...முயறி' என்றான் - 'எனக்கும் உனக்கும் முற்காலத்தே நின்ற இசைவின் மூலம் உளதாகிய ஒரு பெரு வழக்கைத் தீர்த்து அதன் பின் நீ உனது வேள்வியைச் செய்ய முயலுக' என்று சொன்னார்.

(வி - ரை) பிஞ்ஞகன் - தலைக்கோல முடையவன். பிஞ்சம் - மயிற்பீலி. தலையில் மயில் இறகு வைத்துக் கோலஞ் செய்வது உலக வழக்கு. அதுபோலப்-பிறை - நகுதலை கொக்கிறகு முதலியவைகளைக் கற்றைச் சடைமுடியிலே தரித்த தலைக்கோலமுடையான். தலைமாலையே தலைக்கோலமாய் ஏனைய எல்லார் தலைக்கோலங்களும் இறுதியுற்ற நாளிலும் தான் அழியாத கோலமாய் நிகழ்வதால் இது சிவபெருமானுக்குப் பெயரா யிற்றென்பர்.

நாவலர் பெருந்தகை - திருநாவலூரில் வந்த பெருந்தகையார். நாவலர் - நாவன்மை யுடையர் என்றலுமாம். மறையோரும் மடங்கலனையானும் மொழிமின் என்று கேட்கவும், நம்பியை நோக்கி இது சொன்னார் வழக்கு உள்ளது அவரிடத்தே என்றறி வித்தற்கு. முன்னேயும் (33) நம்பியெதிர் பன்னுசபை முன்னின்று என்றமை காண்க. முன் நின்ற இசைவால் யான் உடையது ஓர் பெரு வழக்கு என்று மாற்றிக்கொள்க.

நின்ற - நிலைபெற்றுள்ள. **இசைவு** - இசைவினாலே ; ஒப்பந்தத்தினாலே. வழக்குப் பல மூலங்களிலிருந்து கிளம்பும். அவற்றில் இது இசைவிலே நின்று உண்டாகிய வழக்கு என்றார். ஒப்பந்த வழக்கு என்க. (Cause based on agreement என்பர் நவீனர்). **இசைவு** - மனமிசைந்து செய்துகொண்ட உடன்படிக்கை. **முன் நின்ற இசைவு** - எனக்கும் உனக்கும் முன்னே நின்றுள்ள ஒப்பந்தம். வரிசை 198-ன் கீழ்க்காண்க.

முன் உடைய - (1) எல்லாருக்கும் முன்னே ; அநாதியே. ஆண்டவனாகிய (எசமான) இசைவு என்னிடமும், அடியானாகிய இசைவு உன்னிடமும் அநாதியே உள்ளன. (2) முன்னாள் - திருக்கயிலாயச் சரித நிகழ்ச்சியிற் போந்த அருண்மொழி. திருமலைச் சிறப்பு - 28, 29.

வழக்கு - (1) இசைவாயிருந்தாலும் இப்போது நீ ஒப்பாதிருக்கும் நிலையில் வழக்காயிற்று. (2) வழக்கம் - ஆன்மாக்கள் அநாதியே இறைவனுக்கு அடிமை என்று வழங்கும் வழக்கம்.

முடித்தே - வழக்கை நிலைநாட்டிய பின்பே - தீர்த்த பின்பே.

வேள்வி - நெருப்பு வளர்த்துச் செய்யப்படும் சடங்கு. இங்கு மணம். **வேள்** - பகுதி - விருப்பம். உலகிலே எல்லா விருப்பங்களுக்கும் இடமாகிய மணம். முடித்தபின் நின் விருப்பம் எதுவோ அதை - என்ற குறிப்புமாம். **முயறி** - முயலுதி - வேள்வியைச் செய்ய முயற்சி செய்வாயாக. 35

182. நெற்றிவிழி யான்மொழிய நின்றநிக ரில்லான்
'உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேன்
மற்றது முடித்தலதி யான்வதுவை செய்யேன் ;
முற்றவிது சொல்லு'கென வெல்லைமுடி வில்லான். ௩௬

*183. 'ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ' தென்றான்
தேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான். ௩௭

182. (இ - ள்) நெற்றி...இல்லான் - நெற்றிக் கண்ணை மறைத்து வந்த வேதியர் இவ்வாறு சொல்ல ஒப்பற்ற பெருந்தகையாம் நம்பி அவரை நோக்கி ; 'உற்றதொர்... சொல்லுக' என - 'என்னிடத்துப் பொருந்திய தொருவழக்கு உனக்கு உண்டானால் அதனை முடித்தபின்பல்லாமல் நான் மணஞ்செய்ய மாட்டேன் ; ஆதலின் இதனை முடிவுபெறச் சொல்லுக' என்று சொல்ல ; எல்லை முடிவில்லான் - அளவும் முடிவுமில்லாத அவ்விறைவன். ௩௬

183. (இ - ள்) "ஆவது...மொழிவது" என்றான் - 'நான் சொல்லுவதாவது இதுவே ; மறையோர்களே ! இந்த நாவலூர் நம்பி எனது அடிமையாவன் ; இதுவே நான் சொல்லவந்த வழக்கு' என்றார் ; தேவரையும்...எம்மான் - தேவர்களையும் பிரமவிட்டுணு முதலிய பெருந்திருவுடையோர் யாவர்களையும் தனியாக அடிமையாகவுடையானாகிய எம்பெருமான். ௩௭

இவ்விரண்டு பாட்டும் ஒரு முடிபு கொண்டன. விழியான் மொழிய, நிகரில்லான்...சொல்லுகென, முடிவில்லானாகிய எம்மான்...என்றான் எனக் கூட்டி முடிக்க.

182. (வி - ரை) **நெற்றி விழியான்** - நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான். கண்ணுதல். இப்போது அதனை விழிக்காமல் வந்தவன் - விழியாதவன் - என்ற எதிர்மறைக் குறிப்பும் காண்க. "கண்ணிடை கரந்த" என வரிசை 175 பாட்டிற்கூறியதும் காண்க.

வதுவை - மணம் ; கலியாணம்.

முற்ற இது சொல்லுக-வழக்கு முடித்தலது வதுவைசெய்யேன் ஆதலின் தொடங்கிய இது (இவ்வதுவை) முற்றுப்பெறும்படி சொல்க. உன் வழக்கு வெற்றியாய் முற்றுமாறும் என் அடிமை முற்றுமாறும் சொல்க என்ற குறிப்பும் காண்க.

நிகர் இல்லான் - தமக்கு ஒப்பார் ஒருவருமில்லாதவர். இப்புராண காவியத் தலைவராதலும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவரே காவியத் தலைவராதற்குரியார் ஆதலும் குறிப்பாம். இவ்வாறு வல்வழக்கிட்டு ஆட்கொள்ளப் பெற்றமையாலும் தோழராயினமையாலும் பிறவாற்றாலும் தமக்கு ஒருவரும் ஒப்பில்லாதவராயினர்.

எல்லை முடிவு இல்லான் - ஆதியந்த மில்லாதவர்; அளவைகளைக் கடந்தவர்; எதனாலும் அளக்கலாகாதவர்.

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"—**திருவாசகம்**

"இன்னவுரு வின்னநிற மென்றுணர்வ தேலரிது"—**தேவாரம்**

முதலிய பிரமாணங்கள் காண்க. 36

183. (வி - ரை) **ஆவது இது** - மேலே "முற்ற இது சொல்லுக" என்றதையே தொடர்ந்து, நம்பி 'சொல்லுக **இது**' என்ற இது **இதுவேயாம்** என்றார். **இதுவே ஆவது** - "உலகில் இதுவே எல்லா உயிர்க்கும் ஆக்கம் தருவது. மற்றவை எல்லாம் அல்லவை" என்று கூட்டத்தாரை நோக்கிச் சொல்லி, அதன்மேற் சொல்வாராய் நம்பியைச் சிறப்புறச் சுட்டி 'இந்நாவலூரான் என் அடியான்' என்று அநுவதித்துக் கூறினார்.

வேறடிமையா உடைய - (1) வேறு வேறு - தனித்தனி - அடிமைகளாக உடைய. (2) நம்பிகளை அடிமையாக்கொண்ட திறத்தினின்று வேறுபட்டதாகிய மற்றொருவகையாலே என்ற குறிப்பு.

யாவரையும் வேறடிமையா வுடையான் - என்றதனால் அவரது அளத்தற்கரிய பெருமையையும் அவரால் வலிந்து வேண்டப்பெற்ற இவரது சிறப்பும் உணர்த்தியவாறு. அவர்கள் அடிமைத்திறம் வேறு; அவர்கள் தூர அடிமைகள்; "வாய்தல்பற்றித் துன்றி நின்றார் தொல்லை வானவர் கூட்டம் பணியறிவான், வந்துநின்ற ரயனும் திருமாலும்..." - அப்பர் தேவாரம். இவர் அணுக்கத்தொண்டர் என்பதும் குறிப்பு. "இவன் **மற்றென் அடியான்** என விலக்கும், சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்" என்ற நம்பிகள் திருப்புன்கூர்த் தேவாரம் இங்கு நினைவுகூரத்தக்கது. 37

வேறு

184. என்றா னிறையோ னதுகேட்டவ ரெம்ம ருங்கு
நின்றா ரிருந்தா ரிவனென்னினைந் தான்கொ லென்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார்திரு நாவ லூரா
னன்றுன் மறையோன் மொழியென்றெதிர் நோக்கி நக்கான். ௩அ

(இ - ள்) என்றான் இறையோன் அதுகேட்டவர் - முதல்வன் இவ்வாறு சொல்லியதைக் கேட்டவர்களாகிய; எம்மருங்கும்...சிரித்தார் - பந்தலிலே எங்கும் நின்றார்களும் இருந்தவர்களும் "இவர் என்ன எண்ணி இது சொன்னார்" என்று அவர் பக்கத்துப் போனார்களும் வெகுண்டார்களும் சிரித்தார்களுமாயினர்; திருநாவலூரான்...நக்கான் - நாவலூர் நம்பிகள் 'இம்மறையோன் மொழி நன்றாயிருக்கிறது' என்று அவரெதிரே இகழ்ச்சி தோன்றச் சிரித்தார்.

(வி - ரை) **என்றான்...எம்மான்** என மேற்பாட்டிலே முடித்ததையே மீளவும் '**என்றான் இறையோன்**' என எடுத்துக்கொண்டது அவர் செயலின் உறுதியையும்

பெருமையையும் உணர்த்தற்கு. என்றன் அது என்றது வினைமுற்று எச்சப்பொருளில் வந்தது.

இறையோன் - முதல்வன்; எசமானன். மேற்பாட்டிலே 'யாவரையும் அடிமையாவுடையான்' என்றார். இவர்கள் அதனை உணராது மேற்செயல் செய்கின்றார்களாதலின் அதனைக் குறிக்க **இறையோன்** என்ற பெயராற் கூறினார்.

நின்றார் - இருந்தார் - மணப் பந்தரில் இடம் பெறாது சுற்றும் எம்மருங்கும் நின்றவர்களும் இடம் பெற்று அதனுள் வீற்றிருந்தவர்களும். சென்றார் முதலிய வினைமுற்றுக்களில் தொக்க உம்மை விரித்து, ஆயினர் என ஆக்கச் சொல் வருவித்து உரைக்க.

இவன் - என் - நினைந்தான் - மேலே (வரிசை 180) சென்றார் முதலியவை பலரும் செய்த பலவேறு செயல்கள். உமது நல்வரவு எனப் பன்மையிற் கூறிய இவர்கள் இங்கு ஒருமையிற் கூறியது இகழ்ச்சியையும் வெகுளியையும் குறித்தது.

நன்றால் மறையோன் மொழி . வேதங்களைச் சொன்ன இவனது இம்மொழி மிக நன்றாயிருக்கிறது என்ற இகழ்ச்சிக் கூற்று எதிர்மறை குறித்தது - நன்றன்று - என்பது வெளிப் பொருள். பின்னர் நன்மையே பயப்பதாம் - என்ற ஒரு உட்பொருள் குறிப்பதும் காண்க.

எதிர் நோக்கி - 'இவன் என் அடியான்' என்று தம்மைச் சுட்டிக் கூறியதற்கு மாறாக. முன்னும், "**நம்பி எதிர்**" - (179 - வரிசை) **நாவலர் பெருந்தகையை நோக்கி** - (181 - வரிசை) - என இவரையே நோக்கி என்றதால் தாமும் அவரை எதிர் நோக்கி என்க. அவர் முகத்தை நேராகப் பார்த்து - என்றலுமாம். இவர்களது மனக்குழப்பங் குறிக்க இதுவும் வரும் பாட்டும் ஏற்றபடி வேறு யாப்பினால் உறுதல் கவியழகு. 38

185. நக்கான் முகநோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும்
மிக்கான் மிசையுத் தரியத்துகி லுங்கி மேற்சென்
றக்காலமுன் றந்தைதன் றந்தையா ளோலை யீதால்
இக்காரி யத்தைநீ யின்று சிரித்ததென் னேட வென்ன. ௩௯

வேறு

186. மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாற் சிரிப்பு நீங்கி
ஆசிலந் தணர்கள் வேறோ ரந்தணர்க் கடிமை யாதல்
பேசவின் றுன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோ னென்றார். ௪௦

185. (இ - ள்) நக்கான்...சென்று - அவ்வாறு சிரித்த நம்பிகள் முகத்தை நேரே பார்த்து, நடுங்கித் தள்ளாடிக் கொண்டு இறைவன் கீழே சரிந்த உத்தரியத்தை மேலே எடுத்து இட்டுத் தாங்கிக் கொண்டு அணுகச் சென்று; 'அக்காலம்...ஏட' என்ன - 'இதோ! அந்நாளிலே உனது தந்தையின் தந்தை எழுதிக் கொடுத்த ஆள் ஓலை உள்ளது. இன்று நான் சொன்ன இக்காரியத்தை இகழ்ந்து நீ சிரித்தது என்ன? ஏடா!' என்று சொல்ல. ௩௯

186. (இ - ள்) மாசிலா...நோக்கி - குற்றமற்ற சிவவேதியர் மரபிலே வந்த நம்பிகள் வேதியரைப் பார்த்து; நேசம்...நீங்கி - முன்னம் அன்பு தொடர்ந்து வந்ததனாலே ஒருவாறு உள்ளம் நெகிழப்பெற்றுச் சிரிப்பு நீங்கி; "ஆசில்...மறையோன்" என்றார் - "குற்றமற்ற சிவவேதியர்கள் வேறு ஒரு அந்தணர்க்கு அடிமையாவர் என்னும் வார்த்தை பேசுவதை இன்றைக்கு உம்மிடத்தேதான் கேட்டோம்; மறையோனே நீ பித்தனோ?" என்று கேட்டார். ௪௦

185. (வி - ரை) இப்பாட்டுக் குளகம். மிக்கான் - என்ன—வள்ளல் - என்றார் - எனக்கூட்டி முடிக்க.

முகநோக்கி - " இவன் அடியான் " என்று (வரிசை 183) சபையோரைப் பார்த்துச் சொன்ன அவர் இப்போது நக்காராகிய நம்பியை நேரே நோக்கிச் சொன்னார்.

நடுங்கி நுடங்கி - கோபக்கிளர்ச்சியால் நடுங்குதலும் மூப்பினால் நுடங்குதலும் உண்டாயின. "தள்ளுநடைகொள்ள" (வரிசை 177) என்றமையும் காண்க.

யார்க்கும் மிக்கான் - எல்லார்க்கும் மிகுந்தவன். மாசங்கார காலத்தில் யாவரும் ஒடுங்கவும் தான் மிகுந்து நிற்பவன். மிக்கான் - மேலானவன் என்றலுமாம்,

மிசை உத்தரியத்துகில் தாங்கி - அசைவினாலே சரிந்த உத்தரியத்தை மேலே எடுத்து இட்டு. முன்னரும் மீதுபூனை - வேண்டுகில் நுடங்க என்றது காண்க. (வரிசை 176) கோபித்து வழக்குமேற் கொள்வார் உத்தரியத்தை இழுத்து மேலே இட்டுக் கொள்ளும் இயல்பும் குறித்தவாறு.

அக்காலம் - முன்னே - இன்னதென்றறியப்படாத அநாதி காலம் என்பது குறிப்பு. தந்தைதன் தந்தை - முன்னோர். இங்குப் பேரன் (பாட்டன்) என்பது வெளிப்பொருள் - "எம்பிரான் எந்தை தந்தை தந்தையெங் கூட்டமெல்லாம்" ஏயர்கோன் - புரா - 392, " என்றாயோ டென்னப்பன் ஏழேழ்பிறவியும், அன்றே சிவனுக் கெழுதிய வாவணம்" என்ற திருமூலர் திருமந்திரம், முதலிய திருவாக்குக்கள் காண்க.

இக்காரியம் - அநாதியே அடிமையாகிய மூலகாரணத்தால் நிகழ்ந்ததாதலால் காரியம் என்றார். ஏட - அடிமைகளை அழைக்கும் வழக்குப்பற்றிய விளிச்சொல்.

ஏடவென்றார்—ஏடவென்றன்—என்பனவும் பாடபேதங்கள். 39

186. (வி - ரை) மாசிலா மரபு-குற்றமில்லாத குலம். ஆன்மாக்களின் பாசத்தைப் போக்கச் சிவபூசையை மரபுத் தொழிலாகக் கொண்டதும்,வேறு தொழில் செய்யாததுமான ஆதிசைவ மரபு. மாசு - பாசம். உயிர்களுக்குப் பாசத்தை இல்லையாகச் செய்யும் மரபு. இந்த மரபு ஒன்றே பரார்த்த சிவபூசைக்கு உரியதாம் என்ற ஆகமநூற்றுணிபும் குறித்தவாறு.வரிசை 149 பாட்டினுரை காண்க. இதற்கேற்பப் பின்னும் ஆசிலந்தணர்கள் என்றமையும் காண்க.

நேசம்முன் கிடந்தசிந்தை நேகிழ்ச்சி - முன் நேசம் கிடந்த - என மாற்றுக. பண்டு தொட்டு அன்பு பதிந்து கிடந்த காரணத்தால், அவ்வேதியர் தமது முகத்தை நேர் நோக்கியவுடனே அதனாலே தாக்குண்டு சிறிது சிந்தை நெகிழ்ந்தது. நெகிழவே, இகழ்ச்சிச் சிரிப்பு நீங்கியது. "முந்தையறிவின் றொடர்ச்சியினால் முகைத்த மலரின் வாசம் போல், சிந்தைமலர உடன்மலரும் செவ்வியுணர்வு" என்றதும் காண்க. (சண்டே - புரா. 13)

ஆதல் பேச - ஆதலைப் பேச. உன்னைக் கேட்டோம் - உன்னை இன்று பேசக் கேட்டோம். இன்று - இதுவரை இவ்வாறு சொல்வாருமில்லை. பேச - எனவே அது சாத்திர வழக்கன்று எனக் குறித்தவாறு. சாதி வரம்புகள் இறைவன் வகுத்த சாத்திர விதிகளுக்கு உட்பட்டன. அதுவேயுமன்றி உலக நிலைபேற்றுக்கும் மேன்மேற் செல்லும் நிலைக்கும் இன்றியமையாது வேண்டப் பெறுவனவுமாம். அவை முற்காலத்திலேயன்றி இக்காலத்தும் உள்ளனவே.இவ்வழக்கினாலே 'சாதி வரம்பை அழிக்க வேண்டுமென்பது ஆண்டவன் திருவுள்ளம் போலும்' என்று சிலர் கருதுகின்றார்கள். அது சரியன்று. அது ஆண்டவன் திருவுள்ளமாயின் நம்பிகள் காலத்துக்குப் பின் இதுவரை சாதி வரம்புகள் நிலைத்திருக்கமாட்டா. அன்றியும் இதனால் இறைவன் சாதிவரம்பை அழிப்பதற்குமாறாக உறுதிப்படுத்தவே கருதினான் என்பது பின் நிகழ்ச்சி

களால் அறிக. இக்காலத்து நவீனக் கிளர்ச்சிகளில் மனம் பதிந்து கொள்ளுதலால் இவ்வாறு முன்னோர் நூல்களிற் நம் புதுக்கொள்கைகளைப் புகுத்தல் முறையன்று.

கண்டோம்...(பித்தனே மறையோன்) **என்ன**—என்பதும் பாடம். 40

187. பித்தனு மாகப் பின்னும் பேயனு மாக நீயின்
றெத்தனை தீங்கு சொன்னா யாதுமற் றவற்றா னாணேன்
அத்தனைக் கென்னை யொன்று மறிந்திலை யாகி னின்று
வித்தகம் பேச வேண்டா பணிசெய வேண்டு மென்றார். சக

(இ - ள்) வெளிப்படை. (அதுகேட்டு வேதியர்) 'நான் நீ சொல்லியபடி பித்தனானாலும் சரி; அதனோடு பேயனானாலும் சரி; நீ இன்னும் இன்று இவ்வாறு எவ்வளவு தீயமொழிகளைச் சொன்னபோதிலும் நான் ஒன்றினாலும் வெட்கமடைந்து நிற்கமாட்டேன். இவ்வளவுக்கும் நீ என் தன்மை ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லையானால் வித்தகம் பேசவேண்டாம். யான் இட்ட பணி செய்யவேண்டும்' என்று சொன்னார்.

(வி - ரை) பித்தன் - பித்துப்பிடித்தவன் - பித்த மேலீட்டினால் மதிமயக்கம் தரும் நோய் கொண்டவன். " ஒத்தொவ் வாதன செய்துழல் வாரொரு, பித்தர் காணும் பெருமா னடிகளே "—அப்பர் தேவாரம். **பின்னும் பேயன்** - அதன்மேலும் பேயாற் பிடிக்கப் பட்டவன்; பேய்கோட்பட்டவன். **பித்து** - உள்நோய். **பேய்க்கோள்** - வெளி நோய். **பேயன்** - பேய்க்கணங்களை யுடையவன் என்பதும் குறிப்பு.

எத்தனை தீங்கு சொன்னாய் - **தீங்கு** - தீயசொல் குறித்தது. **சொன்னாய்** - சொல்வாயானாலும். எதிர்காலப் பொருளில் வந்தது. **இன்று** - நம்பிகள் இன்று பின்னர்ச் சொல்லப்போகும் சொற்களை எதிர்பார்த்துக் கூறியது போன்ற குறிப்பு.

நாணேன் - அடியாரிடத்திலே வசவும் அடியும் பட்டுப் பழகியவராதலின் நாணிலி யாயினர். 'உழைதரு...கண்டன் - குணமிலி - மானிடன் - தேய்மதியன் - பழைதரு மாபரன்-என்றென் றறைவன் பழிப்பினையே' (46) எனவும், 'நின்னைச் சிரிப்பிப்பனே' (48) எனவும், ' பிச்சனென் றேசுவனே ' (49) எனவும் வரும் நீத்தல் விண்ணப்பத் திருவாசகங்களும் அன்ன பிற திருவாக்குக்களும் காண்க.

வித்தகம் - கேலி - கெட்டித்தனமான பேச்சு. நின்று பேசவேண்டா - பணி செய்து பின்னர் நீ அவ்வாறு பேசலாம்; அவற்றை நான் ஒப்புவேன் எனப் பின்னர் நம்பிகள் தோழமையால் அருளும் தேவாரங்களைக் குறித்தவாறு. 41

188. 'கண்டதோர் வடிவா லுள்ளங் காதல்செய் துருகா நிற்கும் ;
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமு முடனே யாக்கும் ;
உண்டொரா ளோலை யென்னு மதனுண்மை யறிவே' னென்று
தொண்டனா ரோலை காட்டு கென்றனர் துணைவ னாரை. சஉ

(இ - ள்) ' கண்டதோர்...அறிவேன் ' என்று - 'நான் கண்ட இக்கிழவேதியரின் திருவடிவின் அழகிலே ஈடுபட்டு என்மனம் ஆசையால் உருகுகின்றது; ஆனால் அதற்கு மாறாய், அவர் தாம் மேற்கொண்ட பித்த வார்த்தைகள் கோபத்தை அதனுடனேயே ஒருமித்து விளைக்கின்றன ; ஆதலின் இவ்விரண்டு வழியிலும் சென்று விடாமல் ஒரு ஆள் ஓலை உண்டு என்று இவர் சொன்ன அதன் உண்மையை ஆராய்ந்தறிவேனாக' என்று எண்ணி ; தொண்டனார்...துணைவனாரை - 'ஐயா நீர் சொல்லிய ஆள் ஓலையைக் காட்டுக' என்று தொண்டனார் (தமது உயிர்த்)துணைவனாராகிய வேதியரைக் கேட்டனர்.

(வி - ரை) கண்டது ஓர் வடிவு - இவரது திருவடிவம் கண்டாரைக் காதலிக்கச் செய்யும் தன்மை மேலே 29, 32 பாட்டுக்களிற் கூறினார். ' கண்டார் காதலிக்கும் கண

நாத னெங் காளத்தியாய்' என்பது நம்பிகள் தேவாரம். திருவேடங் கண்டபோதே அன்பு செய்து மனமுருகும் தன்மையை அணைந்தோர் தன்மையில் வைத்துச் சைவ சாத்திரம் விதந்து பேசும். இது முன்னைப் பக்குவமடைந்த உயிர்களுக்கன்றி உண்டாகாது. **ஓர்** - ஒப்பற்ற. தனக்குவமை யில்லாதான் வடிவாதலின் **ஓர்வடிவு** என்றார். வடிவு கண்டதும் உருகியது முன்தொடர்பு பற்றியாம். **நேச முன்கிடந்த சிந்தை நெகிழ்ச்சி** எனமேலே குறித்தது காண்க.

உண்மையறிவேன் - காதலும் கோபமும் உடனே வரினும் "காய்த லுவத்தல் அகற்றி ஒரு பொருட்கண், ஆய்தலறிவுடையார் கண்ணதே"—என்ற நீதிப்படி காதலுட் படாமலும், கோபத்திற்படாமலும் நடுநின்று ஆய்ந்து உண்மையறிவேன் என்று துணிந்தார்.

தொண்டனூர் - முன்னை நிலையிலே தொண்டு செய்தவர்; அது காரணமாய்க் கண்டபோதே காதல் செய்து உருகினாராதலின் அக்குறிப்புத் தோன்றத் **தொண்டனூர்** என்றார். **துணைவனூர்** - இவர் மையன் மானுடமாய் மயங்கும்வழித் துணைசெய்து தடுத்து ஆட்கொள்ள வந்தவராதலின் **துணைவனூர்** என்றார். மாறுபட்டவராகக் காணப் படினும் இணங்கிய **துணைவரே** என்றபடி. உயிர்த்துணைவர் என்ற குறிப்புமாம். 42

189. 'ஓலைகாட்' டென்று நம்பி யுரைக்க'நீ யோலை காணற்
பாலையோ வவைமுன் காட்டப் பணிசெயற் பாலை' யென்ற
வேலையி னுவ லூரர் வெகுண்டுமேல் விரைந்து சென்று
மாலயன் றொடரா தானை வலிந்துபின் றொடர லுற்றார். ௪௩

(இ - ள்) ஓலை...உரைக்க - இவ்வாறு 'ஓலை காட்டு' என்று நம்பி சொல்லவும்; நீ...வேலையில் - (அது கேட்ட வேதியர்) 'நீ ஓலைபார்த்தறியத் தகுதியுள்ளவனு? (அல்ல); சபை முன்னே காட்ட அவர் முடிவுகூறியபின் அதன்படி பணிசெய்தற்கு மட்டும் தக்கவன்' என்று சொன்ன அளவிலே; நாவலூரார்...தொடரலுற்றார் - நாவ லூர் நம்பிகள் கோபித்து மேற்கிளம்பிச் சென்று பிரமவிட்டுணுக்களுக்கு மெட்டாத அவ்விறைவனை வலிந்து தொடரலாயினர்.

(வி - ரை) நீ...பாலை - இது பின் நிகழ உள்ள சரிதமுடிபை இறைவன் முன் னரே நம்பிக்குச் சொல்லியதாம்.

பாலையோ - வன்மையுடையவனு?. தக்கவனு?. எதிர்மறைப் பொருளில் வந்த வினு. அல்லை - என்றபடி.

பாலை - ஆனல் நான் எதற்குத் தகுதி யுடையவன்? என்பாயேல், பணிசெய்யவே வல்லவன் என்றபடி.

வேலையில் - வேளையில். **என்ற** - வேதியர் எனும் எழுவாய் தொக்கு நின்றது.

வெகுண்டு - கர்மத்தை ஊட்டிக் கழிப்பிக்கும் பொருட்டு இறைவனது திரோ தான சத்தி, (திரைத்தன்மை வாய்ந்தது - திரோதானம்) அதாவது மறைப்புச் சத்தி தொழில் செய்தலாலே, **பணிசெயற் பாலை** என்று அறிவிப்பவும் அறியாராகிக் கோபங் கொண்டார் என்க. மாங்காய் முதலிற் பிஞ்சாகி உவர்த்துப், பின் காயாகிப் புளித்துப், பின் பழமாகி இனித்தல் போல, இறைவன் செயலாகிய இதுவும், முதலில் இங்கே வெறுப்பும் வெகுளியும் உண்டாக்கிப், பின் இதுவே அருட் சத்தியாக மாறி, அருட்டுறையிலே இன்பம் பயந்தது காண்க. உண்மை யறிவேன் என்று மேற்கொண்ட உள்ள நேர்மை கோபமேலீட்டால் அழிந்து உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கு சினமாய் எழுந்தது. ஆதலின் செய்வது தவிர்வது அறியாது பின்வருமாறு செய்தனர் என்க.

வலிந்து - வலிமை செய்ய எண்ணி - அதாவது அவர் கையிலிருந்த ஓலையை வலிமையிற் பறிக்க எண்ணி. **தொடராதான்** - தொடர்ந்து எட்டமுடியாதவன்.

தொடரலுற்றார் - தொடர்ந்து பிடிக்கலாயினர். 43

190. ஆவணம் பறிக்கச் சென்ற வளவினி லந்த ணாளன்
காவணத் திடையே யோடக் கடிதுபின் றொடர்ந்து நம்பி
பூவணத் தவரை யுற்று ரவரலாற் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்.? சச

(இ - ள்) ஆவணம்...அளவினில் - இவ்வாறு ஓலையை வலிந்து பறிக்கும்படி நம்பி ஆரூரர் சென்றபோது ; அந்தணாளன்...ஓட - அந்தணாளன் மணப்பந்தரினுள்ளே ஓடவும் ; கடிது...உற்றார் - அந்தப் பூவணத்தவரை விரைவாய்ப் பின்தொடர்ந்து சேர்ந்து பிடித்தனர் ; அவரலால்...வல்லார் ?-திரிபுர மெரித்த மலைவில்லவராகிய அவரை நம்பிக எல்லாது வேறு யாவர் தாம் தொடர்ந்து எட்ட வல்லார் ? (ஒருவருமில்லை என்றபடி.)

(வி - ரை) **ஆவணம்** - ஓலை. இங்கே அவர் 'ஆளோலை யீதால்' என்று குறித்த அடிமை ஓலை.

அந்தணாளன் - எல்லா உயிர்களிடத்தும் ஒப்பச் செந்தண்மை பூண்டு ஏற்றபடி அருளுதலால் இவரே அந்தணாளராவார் என்க.

காவணம் - பொதுப்பெயர். இங்கு மணப்பந்தரைக் குறித்தது.

பூவணத்தவர் - பூ - அழகிய - வண்ணத்தவர் - திருமேனியுடையார். கண்டார் மனங்கவரும் அழகிய வண்ணமுடையார். மேலே 32, 42 பாட்டுக்களிற் கூறியதற்கேற்பப் **பூவணத்தவர்** என்றார். திருப்பூவணத் தலத்திலே எழுந்தருளிய இறைவர் என்றுரைத்தலுமாம். (பூவணம் - பூவின் தன்மை) பூவும் மணமும் போன்று பிரிவின்றி வியாபித்தவர் என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு.

புரங்கள் செற்ற ஏவணச் சிலை - திரிபுரங்களை அழித்த அம்பு பொருந்திய வில். **சிலை** - வில் என்றும், மலை என்றும் இருபொருளும் பெற நின்றது. **ஏ**-அம்பு. திரிபுர மெரித்தகாலையில் மேருமலையே சிவபெருமானது திருக்கரத்தில் வில்லாக அமைந்தது என்பது சரிதம்.

ஏவணச் சிலை - சிலையினின்றும் புறம் போகாமற் கூடியிருந்தே காரியம் நிகழ்ந்து விட்டமையால் எரித்த காலத்தும் அம்புடன் கூடிய சிலை என்பார் **ஏவணச் சிலையினர்** என்றார். "ஓரம்பே முப்புர முந்தீபற; ஒன்றும் பெருமிகை யுந்தீபற" என்ற திருவாசகமும், "ஏவணச் சிலையினாரை யாவரே எழுதுவாரே" என்ற அப்பர் தேவாரமும் காண்க. இவ்வாறு செற்றது பிறர் யார்க்கும் அரிய செயல் என்பது,

"குன்ற வார்சிலை நாண ராவரி வாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே......"

—**சீகாமரம் - திருவாமாத்தூர் - 1**

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தாற் காண்க.

"மூவ ருயிர்வாழ முப்புரமு நீறாக, ஏவர் பொருதா ரிமையோரில்"

என்று பாராட்டினர் பிற்காலப் புலவரும். தொடர்ந்து எட்ட யார் வல்லார் என்று மாற்றுக. மும்மல காரியமான முப்புரங்களையும் எரித்தவராதலின் வெகுளியுடையாரால் அணுகப்பெறார். ஆயினும் இங்கு நம்பிஆரூரர் வெகுண்டு தொடரலுற்றார்க்கு அணுகப் பெற்றனர் இது அக்குற்றங்களின் பாற்பட்டதன்றாதலின். வெகுண்டு தொடர்ந்தார் பிறர் யாவரேயாயினும் எட்டமாட்டாத பெருமான் வெகுண்டு தொடர்ந்த நம்பிக்கு எட்டினாராதலின் அவரலால் யார் வல்லார் என்று இவ்வாறு கூறினர். பிறர் காணப் பெறுமை **மாலயன் தொடராதாரை** என மேற்பாட்டிற் குறித்தார். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றபடி திருவருள் கூட்டியவழியே நிகழ்ந்ததாதலின் இவ் வெகுளி குற்றமாய் அருளை மறைக்காது அருளை எட்டச் செய்தது. 44

191. மறைகளா யினமுன் போற்றி மலர்ப்பதம் பற்றி நின்ற
இறைவனைத் தொடர்ந்து பற்றி யெழுதுமா ளோலை வாங்கி
அறைகழ லண்ண லாளா யந்தணர் செய்த லென்ன
முறையெனக் கீறி யிட்டான்; முறையிட்டான் முடிவி லாதான். சுரு

(இ - ள்) மறைகள்...பற்றி - வேதங்களாயின எல்லாம் முன் துதித்துத் தமது மலர்போன்ற பாதங்களைப் பற்றிக்கொள்ள நின்ற அவ் இறைவனைத் தொடர்ந்து பற்றிக்கொண்டு; எழுதும் ஆளோலை வாங்கி - அவர் கையிலிருந்த அடிமை யோலையை வலிந்து பிடுங்கி; ஆளாய்...முறையென - (ஆசில்) அந்தணர் பிறர்க்கு ஆளாய்ப் பணி செய்தல் என்ன முறைமையின் வந்தது? என்று சொல்லி; அறைகழல் அண்ணல் - சத்திக்கின்ற வீரக்கழல் அணிந்த பெருமை சான்ற நம்பிகள்; கீறியிட்டான் - அவ் வோலையைக் கிழித்துவிட்டனர்; முறையிட்டான் முடிவிலாதான் - முடிவில்லாதவனாகிய இறைவன் முறையிடலாயினன்.

(வி - ரை) மறைகளாயின...இறைவன்-"மறைகளாயின நான்கும்..." என்ற நம்பிகளது திருவானைக்காத் தேவாரத்தின் சொற்றொடரும் பொருளும் எடுத்தாண்டனர்.

மறைகள் போற்றிப் பற்றிநின்ற - என்றது, வேதத்தின் பகுதிகளாகிய அதிமந்திரங்கள் - பிராமணங்கள் முதலிய வேத வசனங்களாலும், வேதாந்தங்களாகிய உபநிடதங்களாலும் சொல்லப்பெறும் பரமசிவனது சொரூபங்களைத் தன்னுளடக்கிக்கொண்டிருத்தல். பிரமாணங்கள் அல்லது அளவைகள் எல்லாவற்றையும் கடந்துநிற்கும் இறைவனை வேதம் எப்படிச் சொல்லும்? எனில், இறைவனுக்கு உரிய சொரூபம் தடத்தம் என்ற இரண்டு நிலைகளிலே தடத்த இலக்கணங்களை வேதம் சொல்லும் என்க.

முன்போற்றி - 'நம' சத்தத்தை முன் வைத்தலாலே நமஸ்கரித்துத் துதித்துப் பொதுவகையால் எல்லாக் கடவுளரையும் அறிவிக்குமாயினும் அவர்க்குள்ளே முதன்மையில் வைத்துப் பேசுவதால் பொதுவகையில் இறைவனைப் போற்றுதலாம்.

மலர்ப்பதம் பற்றிநின்றது - அவ்வாறு பொதுவணக்கமே யன்றிச் சிறப்புவகையாலே - நான் சொல்லியவர்க்குள்ளே இவர் தலைவர்-என்று எடுத்துக் காட்டுதல். அதனாலே **இறைவன்** என்றறிவித்ததாம். முன்போற்றி, அவ்வாறு போற்றிய பயனால் சிலம்புகளாய்ப் பற்றப்பட்டு நின்ற—என்பது இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு.

முறை-முறை - இவையிரண்டும் வெவ்வேறு பொருளில் வந்தன. **என்னமுறை?** - இது என்ன முறைமை - நீதி. **முறையிட்டான்** - முறை சொன்னான். இச்செய்கை முறையோ என்று ஓலமிட்டுக் கேட்டான். என்ன முறை என்றார்க்கு இது முடிவிலாதான் இட்டதாகிய முறை என்றறிவித்தார் என்றலுமாம். **என்ன முறை?** - என்ன நியாயம் பற்றி?

முடிவிலாதான் - கடவுள். எல்லாவற்றையும் கடந்து நின்றவன் - எல்லையில்லாதவன். காலத்தாலே - இடத்தாலே - அறிவு இச்சை செயல்களாலே - இன்னும் எல்லவற்றாலேயும் முடிவு காணமுடியாதவன்.

அறைகழல் அண்ணல் - சத்திக்கின்ற கழல் என்னும் காலணியணிந்த பெருமையுடைய நம்பிகள். மணமகனாதலாலும், மன்னவர் திருவுடையாராதலாலும் **அறைகழ லணிந்தார்** என்க. இதற்குச் சத்திக்கின்ற சிலம்பணிந்த சேவடியுடைய சிவபெருமான் என்று பொருள்கொண்டு அண்ணலுக்கு ஆளாய அவ்வந்தணர் வேறு பிறர்க்கும் ஆட்செய்தல் என்னமுறை? என்று பொருளுரைப்பாரு முண்டு. இப்பொருளில் நம்பி என்ற எழுவாய் தொக்குநின்றது. **ஆளாய் அந்தணர் செய்தல்**-ஆசில் அந்தணர் வேறோர் அந்தணர்க்கு ஆளாகச் செய்யும் இவ்வோலையின் செய்கை.

கீறியிடுதல் - கிழித்தெறிதல். 'கீறு கோவண மன்று' (அமர்நீதி - புரா - 24) முதலிய வழக்குக்கள் காண்க.

192. அருமறை முறையிட் டின்னு மறிவதற் கரியான் பற்றி
யொருமுறை முறையோ வென்ன வுழைநின்றார் விலக்கி யிந்தப்
பெருமுறை யுலகி லில்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரேநீ ரெங்குளீர் செப்பு மென்றார். ௪௯

(இ - ள்) அருமறை...என்ன - அரிய வேதங்கள் எல்லாம் ஓலமிட்டுத் தேடியும் இன்னும் எட்டியறியப்பெறாத இறைவன் நம்பியாரூரரைப் பிடித்துக்கொண்டு ஒரு தரம் இது முறையோ என்று ஓலமிடவும்; உழைநின்றார்...என்றார் - சுற்றுமிருந்த சுற்றத்தார் இவ்விருவரையும் விலக்கிவிட்டு (வேதியரை நோக்கி) 'இவ்வாறு உலகப் பெருவழக்கிலே இதுவரை இல்லாத ஒரு புது வழக்கினை மேற்கொண்டு பிணக்கம் (மாறுபாடு) செய்கின்ற மறைமுனிவரே! நீவிர்தாம் எங்குள்ளவர்? சொல்லும்' என்று கேட்டார்கள்.

(வி - ரை) **மறைமுறையிட்டு இன்னும் அறிவதற்கரியான்** - வேதம் பிரணவத்திலும், பிரணவம் நாதத்திலும் தோன்றும். இறைவனோ தத்துவங் கடந்தவன் - தத்துவாதீதன். ஆதலின் வேதம் அறியாதென்பர்.

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானதெல்லாம் பாச ஞானம்...... " (2) எனவும்,
"பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞா னத்தாலே
நேசமொடு முள்ளத்தே நாடி......" (1) **சித்தியார் - 9 - சூத்திரம்**

எனவும் வரும் சாத்திரமும் காண்க.

அருமறை - எழுதுதற்கரிய, முழுதும் உணர்தற்கரிய மறை. **மறை முறையிடுத** லாவது - இறைவனது இறைமைக் குணங்களை எடுத்து எடுத்துக் கூறித் துதித்தல். "அல்லை யீதல்லை யீதென அருமறைகளும் அன்மைச் சொல்லினாற் றுதித்திளைக்கும்" என்பது திருவிளையாடல்.

முறையோ - இது அநீதி நிகழ்ந்தபோது பொறாது அது செய்தாரைக் குறித்துச் சொல்லும் ஓலச்சொல். 'முக்கணா முறையோ மறையோதீ' என்றநம்பிகள் தேவாரமும் காண்க. இத்தேவாரத்திலும் முறையிடும்போது மறைகளால் முறையிட்டு ஓதப்பெறுபவன் என்று குறிப்பதும் கவனிக்க.

பற்றி - இதுவரை இவன் அடியான் என்ற சொல்லாற் பற்றியவர் இப்போது செயலாலும் கையினாற் பற்றினார். தீமைசெய்தாரை இவ்வாறு கையாற் பிடித்து முறையிடுதல் வழக்கு மேலிடுதற் கென்க. இது உலக வழக்கிற் காண்க. முன்பாட்டிற் கூறியபடி நம்பி இறைவனைத் தொடர்ந்து பற்றினாராதலின் இறைவனும் அவரைப் பற்றினார் என்பதும் இங்குக் காண்க. கிழிபட்ட ஓலையைப் பிடித்துக்கொண்டு என்பாருமுளர். மூலவோலை காட்டி எனப் பின்னர்க் கூறுதலின் அது பொருளன்று.

இந்தப் பெருமுறை உலகில் இல்லா நெறி - உலகியல் வழக்கில் இல்லாத புது வழக்கு. இது பெருமான் கயிலையில் அருளிய சாலுமொழியால் விளைந்ததேயன்றி உலக வழக்கில் வந்ததன்று. உலகத்திற்கு ஆட்பட்டு உழலும் சிறு நெறிகளிற் சேர்தலில்லாத பெருநெறி என்றதும் குறிப்பாம். இக்குறிப்புக்கு உலகில் இல்லா இந்தப் பெருமுறை நெறி என்று கூட்டுக. 'சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்' என்பது திருவாசகம்.

உழைநின்றார் - பக்கத்திலே மணப்பந்தரிலே சூழ்ந்த வேதியர். வரிசை 166-ம் பாட்டில் **உழையர்** என்றதும் காண்க.

விலக்கி - இறைவனது பற்றிலிருந்து நம்பிஆரூரை விலக்கிவிட்டு, "சுற்ற மென்னும் தொல்பசுக் குழாங்கள்-பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்" என்ற திருவாசகமும் காண்க. பெரும் பற்றாகிய இறைவன் தாமே வலியப் பற்றவும் அதை இடையிட்டு விலக்கினூர் என்பது குறிப்பு.

பிணங்குதல்-மாறுபடுதல்; வேறுபடுதல். 'யாவையுஞ் சூனியம் சத்தெதிராதலின்' என்பது சாத்திரம். உலகமும் உலகச் சார்பும் இறைவன் முன் நில்லாது பிணங்கும். இறைவன் உலகத்தைப் பிணங்குவன்.

எங்குளீர்? - இது இருவகை யறியாமையை வெளிப்படுத்தியது. (1) இங்குக் கண்முன் இருப்பவராயினும் காணுமை. (2) எங்கு மிருப்பாரை எங்குளீர் என்றமை. 46

193. என்றலு நின்ற வைய 'ரிங்குளே னிருப்புஞ் சேய்த்த
தன்றிந்த வெண்ணெய் நல்லூ ரதுநிற்க வறத்தா றின்றி
வன்றிறல் செய்தென் கையி லாவணம் வலிய வாங்கி
நின்றிவன் கிழித்துத் தானே நிரப்பினு னடிமை' யென்றான். சஎ

(இ - ள்) என்றலும் - உழைநின்றார் இவ்வாறு கேட்டலும்; நின்ற...என்றான் - நின்ற ஐயர் 'நான் இங்கிருப்பவன்தான்; எனது இருப்பிடம் நெடுந்தூரமுள்ள தல்ல. இதோ அணிமையில் இருக்கும் திருவெண்ணெய் நல்லூராகும்; அது நிற்க; நீதி வழி தவறி என் கையிலிருந்து ஓலையை வலிமைசெய்து பிடுங்கிக் கிழித்ததனுலேயே தான் அடிமை என்ற உண்மையை இவன் உறுதிப்படுத்திவிட்டான்' என்றார்.

(வி - ரை) **நின்ற ஐயர்** - எல்லாமாய் எங்குமாய் நின்ற இறைவன். இந்நிலையின் பெருமையை அப்பர் சுவாமிகளருளிய 'நின்ற திருத்தாண்டக'த் திருப்பதிகத்திற் காண்க. இது இறைவனது வியாபகநிலை. அவ்வாறு எங்கும் நிற்பான் என்பதும், அங்ஙன நின்றாலும் உயிர்கள் அவனை அறியா என்பதும், 'தாவியவனுடனிருந்தும் காணுத தற்பரன்' (திருக்கோளிலி) என்றும், "அங்கங்கே நின்றான்" என்றும், 'வேறாய் உடனானான்' (திருவீழிமிழலை) என்றும், வரும் தேவாரங்களாலறிக. **ஐயர்** - பெருமையை உடையவர். "ஐயர்! நீரவதரித்திட" - திருஞா - புரா - 179.

சேய்த்ததன்று - அங்கங்கேயும் நின்றானுதலின் இருப்பும் சேய்மை யன்று, அணிமையே என்பார் **இந்த** எனும் அண்மைச் சுட்டினுற் குறித்தார்.

நிரப்பினுன் - நிரூபித்து விட்டான். அடிமை என்ற செய்தியை முற்ற விளக்கம் செய்து விட்டான்.

சேயதன்று—என்பதும் பாடம். 47

194. குழைமறை காதி னானைக் கோதிலா ரூரர் நோக்கிப்
பழையமன் றாடி போலு மிவனென்று, பண்பின் மிக்க
விழைவுறு மனமும் பொங்க, 'வெண்ணெய்நல் லூரா யேலுன்
பிழைநெறி வழக்கை யாங்கே பேசநீ போதா' யென்றார். சஅ

(இ - ள்) குழை...நோக்கி - மறைத்த குழைக் காதினையுடைய வேதியரைக் குற்றமற்ற நம்பிஆரூரர் பார்த்து; பழைய...என்று - இவன் பழைய மன்றாடி போலும் என்று தம்முட் கொண்டு; விழைவுறும்...என்றார் - முன் அன்பின் தன்மைமிக்குப் பொருந்திய மனத்திலே அதனுல் நெகிழ்ந்த ஆசை மேன்மேல் அதிகரிக்க 'ஐயா நீ திருவெண்ணெய் நல்லூரிலே இருப்பவனுனல் நீ மேற்கொண்டு வந்த இந்தப் பிழை நெறி வழக்கை அங்கே பேசப் போதுவாயாக!' என்றார்.

(வி - ரை) **குழைமறை காதினான்** - மறைகுழை - மறைந்த குழை என மாற்றுக. தந்தருவ உருவத்தை மறைத்துக் குழையாக அமைந்த காதினையுடையவன். இரண்டு



திருத்துறையூர்

—வரிசை 225-ம் பாட்டு—பக்கம் 225.



வழக்கு வென்ற திருவம்பலம்—திருவெண்ணெய்நல்லூர்

குலோத்துங்கச் சோழரால் கட்டப்பட்டது

கத்திருவர்கள் தம் இசையை இறைவர் எப்போதும் கேட்குமாறு வரம்பெற்றுக் குழையாக அமைந்தனர் என்பது வரலாறு. குண்டலத்தை மறைத்துவந்த ஆண்டவன் என்று உரை கூறுவாருமுண்டு. "காதிலணி கண்டிகை வடிந்த குழைதாழ". (வரிசை 176) என்றதனால் காதில் ஒரு குழை திகழ்ந்தது என்க.

பழையமன்றாடி - வழக்கிடுதலே தொழிலாக உடையவன். வழக்கே தொழிலாகக் கைதேர்ந்தவன். மன்றிலே (சபை) ஆடுபவன் என்றது குறிப்பு. பழையவற்றிற் கெல்லாம் பழைமையானவன் ஆதலின் **பழைய** என்று குறிப்பித்தபடி.

விழைவுறு மனமும் பொங்க - ஆசை கொள்ளும் மனம் கோபத்தாற் பொங்க - என்றுரைப்பாரு முண்டு. 'விற் பிடித்து, நீர் கிழிய வெய்த வடுப்போல மாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்' என்றபடி உழை நின்றார் விலக்கியவுடன் மாறிவிட்டதாதலின் இன்னும் சினம் மேலும் பொங்குவது இலக்கணமாகாது.

வெண்ணெய் நல்லூருக்குப் போதாய் என்று வழக்கிற்கு அறைகூவி ஆரூரர் முற்பட்டு அழைத்தது, வேறுவேறு இடங்களிற் பிறழப்பேசினும் ஒருவன் தன்னை அறிந்த ஊரிலே பேசத் துணியான் என்ற நியாயம் பற்றி.

பிழை நெறி வழக்கு - (1) பிழையாகிய வழியிலேபட்ட வழக்கு. (2) உயிர்களை எல்லாம் அடிமை யாக்கிப் பிழைக்கச் செய்யுமாறு வழிகாட்டும் வழக்கு. பிழைக்கச் செய்தல் - உய்யச் செய்தல். பிழைக்க வைக்கும் வழி.

விழைவுறு மனம் - முன் பதிந்து கிடந்த அன்பு இப்போது அவர் ஆட்கொள்ள வந்த கருணையினாலே தாக்குண்டுப் பொங்கி எழுந்த மனம் என்க.

ஆங்கே பேச - வழக்கு விசாரிக்குமிடம் வழக்கிடப்பட்டார் இருக்குமிடமாம் என்பது இக்காலத்துச் சட்டம். அதுபோலவே அந்நாளிலும் நியதி. அப்படி யிருந்தும் வழக்கிடப்பட்டார் இசைந்தால் வழக்குத் தொடர்ந்தவன் (வாதி) இருக்கும் இடத்தும் விசாரிக்கலா மென்பது இதனாற் புலனாகும். 48

195. வேதிய னதனைக் கேளா 'வெண்ணெய்நல் லூரி லேநீ
போதினு நன்று மற்றப் புனிதநான் மறையோர் முன்னர்
ஆதியின் மூல வோலை காட்டிநீ யடிமை யாதல்
சாதிப்ப' னென்று முன்னே தண்டுமுன் றூன்றிச் சென்றான். சகூ

(இ - ள்) வெளிப்படை. ஆரூரர் சொன்னதை மறையவர் கேட்டு 'நீ வெண்ணெய் நல்லூரிலே போந்தாலும் நல்லதே; அவ்வூரிலுள்ள தூய வேதியர்களின் முன்பு ஆதியில் எழுதித் தரப்பெற்ற மூலவோலையைக் காட்டி எனக்கு நீ அடிமைதான் என்பதைச் சாதித்துக் காட்டுவேன்' என்று சொல்லிக்கொண்டு தண்டு ஊன்றி முன்னே சென்றார்.

(வி - ரை) **வெண்ணெய்நல்லூரிலே போதினும் நன்று** - அங்குப் போனாலும் எனக்கு நல்லதே; நீ எண்ணியபடி அதில் எனக்கு ஒன்றும் இழுக்காவதில்லை. உம்மை சிறப்பும்மை. இங்கு இருப்பினும் நன்று; அங்கும் நன்று என்றலுமாம். இப்பொருளில் எச்ச உம்மை. யான் எங்கும் உள்ளவனாதலின் என் வழக்கும் எங்கும் நன்கு செல்லும் என்பது குறிப்பு.

மற்று அப் புனிதம் நான்மறையோர் - 'இவன் என்னினைந்தான் கொல்?' என்று என் வழக்கைக் கேட்டலும் சென்று வெகுண்டு சிரித்த இவ்வூர் வேதியர் போலாது (வரிசை 184) மற்று அவ்வூர் வேதியர் என் வழக்கைத் தக்கவாறு ஏற்கும் புனிதம் பெற்றவர். இக்கருத்துப்பற்றியே "வேதிய ளாமோ என்றது வெண்ணெய்நல்லூர்ச், சோதி வழக்கே புகழ்ந்தார் சோமேசா..." என்று வியந்து பாராட்டி இவர்களை முதுமொழிக்கு நல்லிலக்கியமாக்கினார் எமது மாதவச் சிவஞான சுவாமிகள்.

ஆதியில் மூல ஓலை - முதலில் எழுதப்பெற்றது; அதனோடு மூல ஓலையுமாம். பிறி தொன்றினைப் பார்த்துப் படியெடுத்து எழுதப்பெற்றதன்று. (இக்கால வழக்குப்படி நகல் அன்று ; அசல் ஓலை).

" என்றுமே யென்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்றாய் உலகம் படைத்தவன் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே "—திருமூலர்.

' பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களை '—திருக்குடமூக்கு - 1. (அப்பர்)

என்ற திருவாக்குக்கள் காண்க. மூலவோலை - ஓலை கிழித்துவிடப்பட்டமையால் எனது சாட்சி போய்விட்டது என்று எண்ணவேண்டாம் எனக் குறிக்க இதனைச் சுட்டினார்.

சாதிப்பன் - வழக்குச் செய்யப் பின்வாங்கமாட்டேன் ; இங்குப்போலவே அங் கும் சாதிப்பன்.

முன்னே தண்டு முன் தூங்கிச் சென்றான் - தண்டு தாங்கி முன்னே சென்றார். இவர்க்கு முன் தண்டு சென்றது.

கேட்டு—என்பதும் பாடம். 49

196. செல்லுநான் மறையோன் றன்பின் றிரிமுகக் காந்தஞ் சேர்ந்த
வல்லிரும் பணையு மாபோல் வள்ள லுங் கடிது சென்றான்
எல்லையில் சுற்றத் தாரு மிதுவென்னா மென்று செல்ல
நல்லவந் தணர்கள் வாழும் வெண்ணெய்நல் லூரை நண்ணி, ருo

197. வேதபா ரகரின் மிக்கார் விளங்குபே ரவைமுன் சென்று
நாதனு மறையோன் 'சொல்லு நாவலூ ராரூ ரன்றான்
காதலென் னடியா னென்னக் காட்டிய வோலை கீறி
மூதறி வீர்முன் போந்தா னிதுமற்றென் முறைப்பா' டென்றான். ருக

196. (இ - ள்) செல்லும்...சென்றான் - அவ்வாறு செல்லும் வேதியர் பின்னே வேறுபடுத்துகின்ற முகமுடைய காந்தத்தின் பின்னர் இரும்பு இழுத்துச் செலுத்தப் பட்டு அணைவதுபோல நம்பி ஆரூரரும் (தம் வசமின்றியே) விரைவிற் சென்றனர் ; எல்லையில்...செல்ல - கூடியிருந்த சுற்றத்தார்களும் 'இது யாதாய் முடிவதோ !' என்ற ஐயத்துடன் தொடர்ந்து வர ; நல்ல...நண்ணி - நல்ல அந்தணர்கள் வாழுதற்கிடமாகிய திருவெண்ணெய்நல்லூரை அடைந்து. ருo

197. (இ - ள்) வேதபாரகரின்...சென்று - வேதியர்களிற் சிறந்தவர்கள் கூடி விளங்கிய பெருஞ்சபையின் முன்னே போய் ; நாதனும் மறையோன் - தலைவராகிய வேதியர் ; 'சொல்லும் நாவலூர்...முறைப்பாடு' என்றான் - யாவரும் பாராட்டுதற் குரிய திருநாவலூரில் வந்த நம்பி ஆரூரன் தான் எனது விருப்பமுடைய அடிமை என்பதற்குச் சான்று காட்டிய ஓலையைக் கிழித்துவிட்டுப் பெரிய அறிவுடையீராகிய உங்கள் முன் போந்துள்ளான் ; இதுவே எனது முறைப்பாடாகும்' என்று சொன்னார்.

196. (வி - ரை) இதுவும் வரும் பாட்டும் ஒரு முடிபு பெற்றன. நாதனும் மறை யோன் - வெண்ணெய்நல்லூரை நண்ணி - அவைமுன் சென்று - இது என் முறைப் பாடு - என்றான் என்க.

திரிமுகக் காந்தம் - திரிக்கும் முகத்தையுடைய காந்தம். இழுக்கும் சத்தியைத் தன் முகத்தே கொண்டது. இரும்புக்குள்ளே முன்னர்த் தொக்கு நின்றதொரு சத்தி

யைப் பிரித்து, அசைவுபெற்றுத் தன்முகமாக வரும் செயலை உண்டாக்கி, அதன் முன் நிலையைத் திரிக்கும் முகமுடைமையின் இப்பெயர் பெற்றது. காந்தத்திலே முன் விரவியிருந்த இழுக்கும் சத்தியும், இரும்பிலே முன் விரவியிருந்த இழுக்கப்பெறும் சத்தியும் பிரிந்து எதிரெதிர் ஒருமுகமாகத் தொழிற்பட்டு நெருங்கிவரும். இதனை Magnetism என்பது பௌதிக சாத்திரம். இதன் விவரம் அந்தச் சாத்திரங்களுட் காண்க.

காந்தம் சேர்ந்த வல்இரும்பு அணையுமாபோல் - முன்னே வலிதாய் அசையாதிருந்த இரும்பு காந்தத்தைச் சேர்ந்தவுடன் அணைவதுபோல். அணைவது இரும்பின் தொழில். தானாய் அணையாது காந்தத்தினால் இழுக்கப்படுதலின் அணையும் என்க.

கடிது சென்றான் - தானே செல்லாது வேதியரால் இழுக்கப்பெற்று விரைந்து சென்றனர்.

நல்ல அந்தணர் - முன் பாட்டிலே **புனித நான்மறையோர்** என்றதற்கேற்ப இங்கும் இவ்வாறு கூறினார்.

திருமுகக் காந்தம்—என்பதும், **நாதநான்**—என்பதும் பாடங்களாம். 50

197. (வி - ரை) **வேதபாரகர்** - வேதம் வல்ல சிறந்தவர்கள்; (அவரின்) **மிக்கார்**- அவர்களிலும் மிக்க சிறப்புடையவர்கள். **பேரவை** - பெருஞ்சபை; நீதிமன்றம். நீதிச் சபையிலே வீற்றிருந்து வழக்கு விசாரிக்கும் உரிமையுடையவர்கள். அவ்வூரவரால் தெரிந்தெடுக்கப்பெற்றவர்களாதலின் **வேதபாரகரின் மிக்காராயினர்**. இது முன்னாளில் நமது நாட்டுக் கிராமச் சபைகளின் அமைப்பு. இச்சபைகள் அங்கங்கு நீதி வழங்கல் முதலிய பல பொதுக் காரியங்களையும் செய்யும் உரிமை பெற்றிருந்தன என்பது கல்வெட்டுக்களாலும் சரிதங்களாலும் அறியும் செய்தியாம். இத்தகைய கிராமச் சபைகளைப் பற்றித் திருநீலகண்ட நாயனார் புராணம் - சண்டீச நாயனார் புராணம் முதலியவைகளிலும் காண்க.* இவை இப்போது அருகினமை வருந்தத்தக்கது.

நாதனும் மறையோன் - நாத தத்துவ நிலையனாய் நாதத்திலிருந்து தோன்றிய வேதங்களில் துதிக்கப்பெறுபவன். பேரவையில் உள்ளார் வேதபாரகரின் மிக்காராயினும், இவர் நாதத்திற்கும் வேதத்திற்கும் உடையவராதலின் இவர் வழக்கே அவர்க்கும் உடன்பாடாய் முடியுமென்பது குறிப்பு.

சொல்லும் நாவலூர் ஆரூரன்-யாவராலும் எடுத்துச் சொல்லப்பெற்ற நாவலூரில் நம்பிஆரூரன். மறையோன் சொல்லும் என்று கூட்டி மறையோன் சொல்வானாயினன் என்று பொருளுரைப்பாரு முண்டு. பின்னர் **என்றான்** என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்திருத்தலின் அது பொருந்தாதென்க.

காதல் என் அடியான் - (1) நான் காதல் கொண்டவன். (2) இவன் காதலிக்காமலிருந்தும் என்னால் இச்சிக்கப்பெற்றவன். (3) முன் என்மேற் காதல்கொண்டு மாலையும் நீறும் எடுத்து அணைந்த அடியான் எனப் பல பொருளும் பெறுவது காண்க.

என்னைக் காட்டிய - என்ற சொல்லிற்கு ஆதரவாய்க் காட்டிய - என்று காட்டிய.

போந்தான் - இங்கே வழக்குப் பேச அவனே என்னை அழைத்துப் போந்தான். 'வழக்கை ஆங்கே பேசநீ போதாய்' என்று மேலே கூறினாராதலின் அதற்கேற்பப் '**போந்தான்**' என்றார். நானாக உங்கள்முன் வரவில்லை. அவன் இழுக்கவே நான் இங்கு வந்தேன் என்ற குறிப்பு.

முறைப்பாடு-முறையிடும் பொருள். நவீனர் (Complaint-Plaint) பிராது என்பர்.

அடியானாக—என்பதும் பாடம். 51

---

*சேக்கிழார் 70-வது பக்கம் பார்க்க.

198. அந்தண ரவையின் மிக்கார் 'மறையவ ரடிமை யாதல்
இந்தமா நிலத்தி லில்லை யென்சொன்ன யையா!' வென்றார்;
'வந்தவா றிசைவே யன்றோ வழக்கிவன் கிழித்த வோலை
தந்தைதன் றந்தை நேர்ந்த' தென்றனன் றனியாய் நின்றான். ருஉ

(இ - ள்) அந்தணர்...என்றார்-அவ்வந்தணரது சபையிலே தலைவர்கள் இதுகேட்டு, 'ஐயா! மறையவர் பிறருக்கு அடிமையாகும் செய்தி இந்த உலகத்திலே இல்லை; (அவ்வாறிருக்க நீ புதுமையாகச்) சொன்னவாறு என்ன?' என்று கேட்டார்கள்; வந்தவாறு...நின்றான் - அதற்குத் தனியாய் நின்ற வேதியர் 'இந்த வழக்கு வந்த விதம் இசைவின் மூலமாக அல்லவா? அந்த இசைவைக் காட்டும் சான்றாகி இவனாற் கிழிக்கப்பட்ட ஓலை இவனது தந்தையின் தந்தை (இசைந்து அடிமையை) ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்ததாம்' என்றனர்.

(வி - ரை) **அந்தணர் அவையின் மிக்கார்** - அச்சபையின் தலைவர்கள். வேத பாரகரின் மிக்கார் என்று முன்னர்க் கூறியதுங் காண்க.

மறையவர் அடிமையாதல் இந்த மாநிலத்தில் இல்லை - **மறையவர்** என்றதனால் இது வைதிக நிலையில் இல்லை என்பதும், **நிலத்தில்** என்றதனால் இது உலக நிலையிலும் இல்லை என்பதும் குறித்தவாறு. சாத்திர நிலை - உலகநிலை என்ற இரண்டிலும் உமது பேச்சு மறுக்கப்படுகின்றது என்பது. 'அறிவனூற் பொருளும், உலகநூல் வழக்குமென இருபொருளும் நுதலி எடுத்துக்கொண்டனர்' என்று பேராசிரியர் திருக்கோவையாருரையிற் கூறியமை காண்க.

வந்தவாறு இசைவே அன்றோ வழக்கு - வழக்கு வந்தவாறு இசைவே யன்றோ என்று மாற்றிக் கூட்டுக. **இசைவு வழக்கு** என்பது வழக்கு வகைகளில் ஒன்று. சில வழக்குகள் தருமநூல் தாயநூல் உலகநூல் என்றிவற்றின் விதிகளின்படி வரும். சில இசைவு அஃதாவது ஒப்புதலின் மேற்கிளம்பும். இவ்வழக்கு மேற்சொல்லிய நூல்களின் வழியேயன்றி இசைவுப்பட்டதாம் என்றார். அந்தணர் அவையின் மிக்கார் கூற்றை நாதனும் மறையோன் உடன்பட்டு மறுத்தாராயிற்று. இதனால் அந்நாளில் வழக்கு மூலங்கள் அறியப்பெறுகின்றன. பொது உரிமைகளின்பேரில் நூல் வழக்குப்படி வரும் வழக்குகள், (Causes based on Common law rights etc) ஒப்பந்தப்படி வரும் வழக்குகள், (Causes based on agreement) என்று இக்காலத்தவர் வகுக்கும் வழக்கு முறையும் காண்க. எனவே இவை தமிழர்க்குப் புதியனவல்ல என்பதறியலாம். **வந்தவாறு இசைவு** - நான் இங்கு வந்தது திருமலையில் நான் அருளியது பற்றியல்லவா? இது என் வழக்கம் என்ற குறிப்பும் காண்க.

நேர்ந்தது - இசைந்தது. எழுதிக் கொடுத்தது என்னாது (உண்மையின் மாறுபடாது) நேர்ந்தது என்ற குறிப்புக் காண்க.

தனியாய் நின்றான் - (1) தம்மோடு சேர்ந்து பேச அக்கூட்டத்தில் ஒருவரும் இல்லாமல் தனித்து நின்றவன். (2) ஒப்புயர்வற்றவன்; தனக்குவமையில்லாதான். (3) வழக்கிலும் ஒருவராலும் சொல்லப்படாத தனிமையுடையவன்.

தந்தைதன் தந்தை - பாட்டனார். **பேரன்** என்பது அக்கால வழக்கு. மகன் மகனுக்கு இப்பேரை இட்டு வழங்கும் வழக்கு ப் பற்றி எழுந்த பேர். 'உங்கள் பேரனார்' என்று வரிசை 206-ம் பாட்டிற் காண்க. 52

199. 'இசைவினா லெழுது மோலை காட்டினா னாகி லின்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி யாமோ?
தசையெலா மொடுங்க மூத்தான் வழக்கினைச் சாரச் சொன்னான்;
அசைவிலா ரூர னெண்ண மென்?' னென்றா ரவையின் மிக்கார். ருஈ

(இ - ள்) வெளிப்படை. (வேதியர் சொல்லக் கேட்ட) சபையின் மிக்கார், நம்பி ஆரூரரை நோக்கி 'இசைவுப்படி எழுதிய ஓலையை இவர் காட்டினால் இன்று விரைவிற் பற்றிக் கிழிப்பது உமக்கு வெற்றிதரும் செயலாமோ? தசை எல்லாம் ஒடுங்குமாறு மிக மூத்தாராகிய இவர் தமது வழக்கைப் பொருந்த எடுத்துச் சொன்னார். ஆரூரரே! இதற்கு உமது கருத்து என்ன ?' என்று கேட்டனர்.

(வி - ரை) **இசைவினால் எழுதும் ஓலை** - உமது தந்தையின் தந்தை இசைந்து நேர்ந்ததென்று இவர் சொல்லும் ஓலை.

கிழிப்பது வெற்றியாமோ - கிழித்தலாகிய உமது செய்கை இவர் வழக்கிற்குத் துணை செய்து உமக்குத் தோல்வி தருமேயன்றி வெற்றி தராது என்றபடி. **ஆமோ** - எதிர்மறைப் பொருளில் வந்த வினா. ஆகாது - என்பதாம். 'கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை' (வரிசை - 193) - என வேதியர் முன்னர்க் கூறிய நியாயத்தைப் பற்றி அவையின் மிக்காரும் கூறியவாறு. இது வழக்கு நிதானிக்கும் நீதிமுறை.

தசை எலாம் ஒடுங்க மூத்தான் - உடம்பிலே தசை முழுதும் வற்றிப்போய் வெறும் எலும்பும் தோலுமாகும்படி மூப்பு அடைந்தவன். தனது விசுவத் திருமேனியிலே மாயையால் உண்டாய் விரிந்த இவ்வுலக முழுமையும் தன்னுள்ளே ஒடுங்கவும் மேலும் தான் நிற்கும் பழமையுடையான் என்பது தொனிப்பொருளாம். "தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்" என்பது சூத்திரம். "மூத்தானை உலகுக் கெல்லாம்" என்பது நம்பிகள் தேவாரம். பின்னர் "திசையறியா வகைசெய்த தென்னுடைய மூப்புக்காண்" என்றதும் (வரிசை 232) காண்க. 'தானுடத் தசையாடும்' என்பது முதுமொழி.

சால - காண்டல் - கருதல் - உரை என்ற மூன்று அளவைகளுக்கும் பொருந்த.

அசைவில் - வேதியர் வழக்கினாலும் தமது செய்கையாலும் விளைந்த விளைவுகளாலே மயங்கி இன்னது செய்வதென்று ஒன்றும் தோன்றாமல் பதுமைபோல் அசைவற்று நின்ற என்றபடி. வரும்பாட்டில் 'மனத்தினாலுணர்தற் கெட்டா மாயை என் சொல்லுகேன் யான்? எனக்கிது தெளிய ஒண்ணாது' என்பது காண்க.

எண்ணம் என் ? - 'நீர் இத்தனைக்கும் ஒன்றும் பேசாமல் அசைவற்று நிற்கின் நீரே - உமது மனத்திலே ஏதோ எண்ணமிட்டுக் கொண்டு இவ்விதம் நிற்பதாகத் தோன்றுகின்றது. இதற்கு உத்தரமாய் நீர் உட்கொண்ட அந்த எண்ணம் யாது?' என்றார். "எண்ணம் மிக்கான்" என வரும்பாட்டிற் குறித்ததும் காண்க.

அவையின் மிக்கார் - முன்பாட்டுக்களின் உரையிற் காண்க. சபையிற் பேசும் உரிமையாளர். 53

200. 'அனைத்துநூ லுணர்ந்தீ! ராதி சைவனென் றறிவீ! ரென்னைத்
தனக்குவே றடிமை யென்றிவ் வந்தணன் சாதித் தானேல்
மனத்தினா லுணர்தற் கெட்டா மாயை!யென் சொல்லு கேன்யான் ?
எனக்கிது தெளிய வொண்ணா' தென்றன னெண்ண மிக்கான். ருச

(இ - ள்) வெளிப்படை. இதற்கு எண்ணம்மிக்கு அசைவின்றி நின்ற ஆரூரர் 'எல்லா நூல்களும் உணர்ந்த சபையோர்களே ! நீங்கள் என்னை ஆதிசைவன் என்று அறிந்துள்ளீர்கள்; அப்படியிருக்க இவ்வந்தணன் என்னைத் தனக்கு வேறு அடிமை என்று சொல்வானானால் இது என் மனத்திற் கெட்டாத மாயையாயுள்ளது. எனக்கு இதனை இன்னபடி எனத் தெளிந்து அறிந்து சொல்லக்கூடவில்லை' என்று சொன்னார்.

(வி - ரை) **அனைத்து நூலுணர்ந்தீர்** - இது சபையாரை விளிக்கும் முறை. இக் காலத்து நீதிபதிகளை இவ்வாறு விளிக்கும் முறையும் காண்க.* வழக்கிடுவோர் சபை

*Your Honour - Your Lordship - என்னும் ஏனைய மேன்மையும் பெருமையுங் கருதாது, நூலுணர்தலே நீதிபதிக்கு இலக்கணமாகக் கொண்டது அந்நாள் வழக்கு.

யார்களின் நோக்கத்தைத் தங்கள் பக்கமாக்கவேண்டி இவ்வாறு புகழ்ந்து கூறுதல் வழக்கமாம். அன்றியும் 'புனித நான்மறையோர்', 'நல்ல அந்தணர்', என்று இறைவனே இவர்களைப் புகழ்ந்துள்ளதும் காண்க. நூல் வழக்கும் இசைவு வழக்கும் என்ற இரண்டும் நீதி நூல்களிற் பேசப்பட்டிருத்தலின், நீங்கள் எல்லா நூல்களையும் உணர்ந்தவர்களாதலின், எனது இவ்வழக்கை உணர்ந்து உண்மை காண்பீர்கள் என்றபடியுமாம். 'மூதறிவீர்' என்று (வரிசை 197) - வேதியர் கூறியதும் காண்க.

ஆதிசைவர் - சிவப்பிராமணர். வரிசை 149-ம் பாட்டின் கீழ்க் காண்க. சிவன் அநாதி சைவன். ஆதி சைவர் அநாதி சைவனாகிய சிவபெருமானுக்கே ஆளானவர்கள். வேறு ஒருவருக்கும் ஆளாகாதவர்கள்.

அறிவீர் - நீங்களே அறிவீர்கள். நான் சொல்லவேண்டுவதில்லை. வேறு வகையில் நிரூபிக்கவும் வேண்டியதில்லை. நீதிச் சபையினரே அறிந்துகொள்ளக்கிடந்தது. A fact which the court can take judicial notice of and which does not require proof என்பர் இந்நாள் வழக்கர்.

தனக்கு வேறடிமை - பிறாது அடிமைத்திறத்தினின்றும் வேறுபட்ட விசேடத் தன்மையுடைய அடிமைத்திறம். முன்னரும் **வேறடிமை** (வரிசை 183) என்றது காண்க. வரிசை 197-ல் **காதல் என் அடியான்** என்ற குறிப்பும் உன்னுக.

சாதித்தானேல் - அப்படியிருந்தும் இல்லாததொரு பொருளை உண்டென இவன் சாதனையாய்ச் சொன்னால்.

மனத்தினால் உணர்தற்கெட்டா மாயை - இவன் சாதிக்கும் சாதனை எவருடைய மனத்தினாலும் எட்டமுடியாத மாயையாம். உலகெலாம் உணர்ந்தோதற்கரியவனது செயலாதலின் இதுவும் மனத்தினாலுணர்தற் கெட்டாதாயிற்று. மனம், ஞான கர்ம இந்திரியங்களுக்கு மேலாய் நின்று அவற்றை இயக்கும்; மனத்தை ஆன்ம அறிவு இயக்கும்; ஆன்ம அறிவை மாயை விளக்கும்; அம்மாயையையுடையவன் மகேசன்; அவனே இவ்வந்தணனாதலின் இவன் செய்கை "மனத்தினா லுணர்தற்கெட்டாமாயை" ஆயிற்று என்க.

எனக்கு இது தெளிய ஒண்ணாது - எவரும் மனத்தாலும் நினைக்கக்கூடாத ஒரு புதுமையை இவர் வாயாற் சொல்லவும் - பலர் கேட்க அறைகூவவும் - அதற்கு ஒரு ஓலை காட்டவும் - பின்னும் சபைமுன் சாதனையாக வழக்கிடவும் - நிகழ்வதைக் கண்ணுற் கண்டாராதலின் இதனை மனத்திற்குமெட்டா மாயையே என்றார். ஆதலின் இது **தெளியமுடியவில்லை** என்றாராகும்.

எண்ணம் மிக்கான் - சூழலில் அகப்பட்டாராதலின் அதினின்றும் வெளியேறும் வழிதேடிக் கவலை கொண்டார். 54

201. அவ்வுரை யவையின் முன்பு நம்பியா ரூரர் சொல்லச்
செவ்விய மறையோர் நின்ற திருமறை முனியை நோக்கி
'இவ்வுல கின்க ணீயின் றிவரையுன் னடிமை யென்ற
வெவ்வுரை யெம்முன் பேற்ற வேண்டு'மென் றுரைத்து மீண்டும்; ௫௫

202. 'ஆட்சியி லாவ ணத்தி லன்றிமற் றயலார் தங்கள்
காட்சியின் மூன்றி லொன்று காட்டுவா' யென்ன, 'முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை படியோலை; மூல வோலை
மாட்சியிற் காட்ட வைத்தே' னென்றனன் மாயை வல்லான். ௫௬

201. (இ - ள்) அவ்வுரை...சொல்ல - நம்பி ஆரூரர் சபையின் முன்னே இவ்வாறு சொல்லிவிடவே; செவ்விய மறையோர்...உரைத்து - அச்சபையிலிருந்த செம்மையந்தணர்கள் நின்றவராகிய திருமறை முனிவரைப் பார்த்து 'இந்த உலகத்

திலே நீ இன்று இவரை உனது அடிமை என்ற வகை வழக்கை எங்கள் முன்பு நிரூபித்துக் காட்டவேண்டும்' என்று சொல்லி; மீண்டும் - மேலும் (சொல்வாராயினர்). ௫௫

202. (இ - ள்) 'ஆட்சியில்...காட்டுவாய்' என்ன - அவ்வாறு நிரூபிக்கவேண்டுமானால் அதற்கு 'ஆட்சி - ஆவணம் - அயலார்களது காட்சி என்ற மூன்றுவகைச் சாட்சியங்களில் ஒன்று காட்டவேண்டும்' என்று சொல்ல; முன்னே...வல்லான் - மாயை வல்லானாகிய வேதியர் '(அந்த மூன்று வகையில் நான் காட்ட நின்றது ஆவணமே; ஆனால்) முன்னே மணப்பந்தரிற் கோபத்தால் ஆரூரன் கிழித்தது படியோலையே; மூலவோலையை நீதிச்சபைமுன் காட்டுதற்காகச் சேமமாய்வைத்துள்ளேன்' என்றார். ௫௬

201. (வி - ரை) அவை - சபை. இங்கு நீதிமன்றம்.

செவ்விய மறையோர் - அந்தணரவையின் மிக்கார் - வேதபாரகரின் மிக்கார் - என்று முன்னர்க் கூறியதற்கேற்ப இவ்வாறு கூறினார். செம்மைக் குணமுடையோர். ஒருபால்பற்றிச் செல்லா நடுநிலையே மனச்செம்மையாம்.

நின்ற திருமறைமுனி - (1) முன்னே வழக்குத் தொடுத்து நின்ற மறைமுனிவர் (2) அருமறை முடிவில் நடுவினிற் சிரத்தில் நின்ற முனி (3) நின்ற திருத்தாண்டக முதலிய வேதங்களிலே சொல்லியவாறு எல்லாமாய் நிறைந்து நின்ற முனிவர்.

இவ்வுலகின்கண்...வெவ்வுரை - **இவ்வுலகின்கண்** - உலகியலில் நிகழாதது; **நீ** - உன்னைத்தவிர வேறு எவரும் சொல்லாதது; **அடிமை என்று** - அடிமையல்லாதாரை அடிமையாக்கியது; **வெவ்வுரை** - காதால் கேட்கவும் தகாதது; என்றிவ்வாறு சொற்றோறும் பொருளழுத்தம் பெறக் கூறினார்.

எம்முன்பு ஏற்றவேண்டும் - எமது சபை முன்னர் நிரூபிக்கும் பொறுப்பு உம்முடைய பேரில் உள்ளது. Burden of proof என்பர் நவீனர்.

மீண்டும் - எம்முன்பு ஏற்றவேண்டும் என்று சொல்லியதைத் தொடர்ந்து, அவ்வாறு ஏற்றுதற்கு இன்னின்னவற்றை நீ காட்டுதல் வேண்டும் என்று நியாய வரம்புகளை அறிவித்துக் காட்டியவாறு. இது நியாய விமரிசனம் செய்து காட்டும் முறை. நீதிச் சபையாரது கடமைகளில் ஒன்று. 'ஏற்றவேண்டும்; அதற்காக' என்று தொடங்கிப் பின் வருமாறு விவரிக்கின்றார்கள்.

இவ்வுலகின்கணின்றிங்கிவரை—என்பதும் பாடம். 55

202. (வி - ரை) ஆட்சி - ஆவணம் - காட்சி - என்பன மூன்றும் அக்காலத்தில் தமிழர் நீதிமுறையிற் பொருள் நிச்சயிக்க உதவும் மூவகைச்சாட்சியங்களாம்* இதுமுதல் வரிசை 209-ம் பாட்டு வரை அந்நாள் நீதிச் சபையார் வழக்கு விசாரித்து முடிவு செய்யும் நீதிமுறைகள் செவ்வனே உணர்த்தப்பெற்றன. அந்த முறை எவ்வாற்றானும் இந்நாள் மிக உயர்வாகக் கருதப்படும் நமது நீதிமுறைக்கு ஒரு சிறிதும் பின்னிடாமையும் காணத்தக்கது. அதனினும் பலவகையில் உயர்ந்து காணப்பெறும். இந்நாள் நீதிமுறையிற் காணும் பொருட்செலவு - காலநீட்டிப்பு - முதலிய பல குறைகளும் அந்நாள் நீதிமுறையில் நேரிடாமையும் காணலாம்.

ஆட்சி - அடிப்பட்ட சான்றோரிடத்துத் தொன்றுதொட்டு வழங்கி வருவதும், அதுகாரணம்பற்றி யாவராலும் ஒப்புக்கொள்ளப் பெறுவதுமான உலக வழக்கு. இவ்வழக்குக்கு ஆட்சியில்லை என்று "**இந்த மாநிலத்திலில்லை**" (வரிசை 198) என முன்னரே கூறினார்களேனும், வழக்கு ஏற்றும் முறைகளைத் தெரிவிக்கும் நியாயம்பற்றி இங்குப் பொது வகையில் உள்ள எல்லாச் சாட்சியங்களையும் கூறியவாறு.

ஆவணம் - வழக்கின் பகுதிகளைக் காட்டக்கூடிய விவரங்கள் எழுதப்பெற்ற ஓலைகள். இதனையே - இசைவினால் எழுதும் ஓலை - என்றும், ஓலை தந்தைதன் தந்தை நேர்ந்தது என்றும் - முன்னர்க் குறித்தனர்.

---

*சேக்கிழார் 64 முதல் 70 பக்கங்களைப் பார்க்க.

மற்று அயலார் தங்கள் காட்சி - வழக்கின் பகுதிகளிற் பிறர் தாங்கண்டதைச் சொல்வது - இதனை ஆவணச் சாட்சியின் (documentary evidence) வேறு பிரித்து வாய்மொழிச் சாட்சி என்பர் (oral evidence) நவீனர். தாம் தாம் கண்டதைச் சொல்வதே இவ்வகைச் சாட்சியாம் என்னக் **காட்சி** என இதற்குப் பெயர் வழங்கினர். ஒருவர் சொல்லக் கேட்டது சாட்சியாகாதென்பதாம். (Hearsay is not evidence).

மூட்சி - மூண்ட கோபம். ஆரம்பம் - தொடக்கம் - என்றலுமாம்.

படிஓலை - பிறிது ஒன்றினைப் பார்த்து அதன்படி எடுத்து எழுதிக்கொண்ட பிரதிஓலை - (copy - நகல் என்பர்.) மூலஓலை - முதலில் எழுதி முடித்துக் கையொப்பமிட்ட ஆதரவு - (orginal - அசல் என்பர்).

மாட்சி - நீதிமன்ற முன்னிலை. Hon'ble court - your Honour என்பர் இந்நாள் வழக்கர்.

இல் - ஆட்சியில் - ஆவணத்தில் - காட்சியில் - என்றமூன்றிடத்தும் தனித்தனி எண்ணுப் பொருளில் வந்தன.

ஓலை - ஆட்சி - ஆவணம் - காட்சி - மூன்றில் ஒன்று காட்டுக என்ற சபையோர் முன் வேதியர் 'முன்னரே வந்தவாறு இசைவேயன்றோ?' என்றதனால் இதற்கு ஆட்சியில்லை; தந்தைதன் தந்தை நேர்ந்ததென்றமையால் நீண்ட காலத்துக்கு முற்பட்டமையின் அயலார் காட்சியுமில்லை; ஆவணம் ஒன்றே எஞ்சியது; அதனைக் கொண்டு என் வழக்கை உம்முன் ஏற்றப் போகிறேன்' என்று குறித்துக் காட்டித் தொடங்கிக் கொண்டார். அவ்வோலைதானும் கிழிபட்டதே எனச் சபையார் ஐயப்படுவர் என உட்கொண்டு 'இவன் கிழித்த ஓலை படியோலை' என்று கூறி மேற்செல்கின்றார். அன்றியும் மூலஓலைகளே நீதிசபையில் வேண்டப்படுவனவே யன்றிப் படியோலையல்ல என்ற முறைமையும் குறித்தவாறு. Direct evidence - என்பர் நவீனர்.

வைத்தேன் - சேமித்து வைத்தேன். கருத்தா ஆதலின் நியமித்தேன் என்ற குறிப்புமாம். 'விண்ணு மண்ணகம் முழுதும் யாவையும் **வைச்சு** வாங்குவாய்' என்ற திருவாசகம் காண்க. 'எல்லாந் தான்**வைத்து** வாங்க வல்லான்' - திருநீலகண்ட நாயனார் புராணம் - (20) - என்பதும் காண்க.

மாயை வல்லான்-மூலவோலையைப்பற்றி முன்னர்ச் சொல்லாது சபையார் முன்பு புதிதாய்க் கற்பித்துச் சொன்னார் என்ற பிழை வாராமை கருதி, "ஆதியில் மூலவோலை காட்டி நீ அடிமையாதல், சாதிப்பன்..." (வரிசை 95) என்று முன்னரே புத்தூரில் மணப் பந்தரிலிருந்து வெளிவரும்போதே எடுத்துக்கொண்டமை காண்க. உயிர்களை ஊட்டும்பொருட்டு அவைகட்கு வேண்டியவாறே, மாயையிலிருந்து எல்லாப் புவனங்களையும் படைப்பவன் இது செய்தல் வியப்பன்று என்று குறிப்பார் **மாயை வல்லான்** என்றார். யாவரையும் தனது மாயையினுட்படச் செய்து தான் அதிற்படாமல் மாயாதீதனாய் விளங்குதலால் **வல்லான்** என்றார். 56

203. 'வல்லையேற் காட்டிங்' கென்ன 'மறையவன் வலிசெய் யாமற்
சொல்லநீர் வல்லீ ராகிற் காட்டுவே' னென்று சொல்லச்
செல்வநான் மறையோர் 'நாங்க டீங்குற வொட்டோ' மென்றார்;
அல்லநீர்த் தாள நின்று ராவணங் கொண்டு சென்றார். ருள

(இ - ள்) 'வல்லையேல்...என்ன - 'அவ்வாறு மூலவோலை காட்ட முடியுமானால் இங்குக் காட்டுக' என்றலும்; 'மறையவன்...சொல்ல - 'நம்பியாரூரன் முன்போல் வலாற்காரம் செய்து பழுது செய்துவிடாமலிருக்கும்படி நீங்கள் சொல்ல வல்லீரானால் காட்டுவேன்' என்று சொல்ல; செல்வ நான்மறையோர்...என்றார் - திருமறையோர்களாகிய சபையோர்'நாங்கள் முன்புபோல் இங்குச் சாட்சியோலைக்குத் தீங்குவர விடமாட்டோம்'

என்று உறுதி கூறினர்; அல்லல்...சென்றார் - துன்பந் தீர்த்துத் தடுத்தாட்கொள்ள என்று கொண்டு நின்ற இறைவனார் ஓலையைக் கையிலே எடுத்துக்கொண்டு சபையோரின் முன்னே சென்றார்.

(வி - ரை) மறையோர் - என்ன—ஆளநின்றார் - என்றுசொல்ல—(அவர்கள்) என்றார்; (இவர்) - சென்றார் - என்று முடிக்க.

வல்லையேற் காட்டு இங்கு - உன்னால் முடியுமானால் இங்குக் காட்டுக. முடியாதென்பது உட்குறிப்பு. முன்பாட்டிற் குறித்தபடி அவன் வல்லானாயினும் இவர்கள் அவனது வன்மையை யறியாது **வல்லையேல்** என்றார் என்பது குறிப்பு.

என்ன - சொல்ல-என்ற வினைகளுக்கு மறையோர் - நின்றார்-என்னும் எழுவாய்கள் முறையே பின்னர் வந்தன.

மறையவன் - நம்பி ஆரூரன். வந்தவேதியர் என்றுரைப்பாருமுளர்.

வலிசெய்யாமல் - முன்போல வலிந்து பற்றிக் கிழித்துவிடாமல்.

வல்லீர் ஆகில் - அவன் அரசர் காதல்மகன் ஆதலின் நீங்கள் சொல்லவல்லீர் ஆவிரோ என்று ஐயப்பட்டார் போன்று - **ஆகில்** என்றார். அவர்கள் **வல்லையேல்** என்றதற்கேற்ப இவரும் **வல்லீராகில்** என்று சுட்டினாராகும்.

தீங்குற வோட்டோம் - சொல்வது மட்டுமல்ல; மற்றும் எவ்வாற்றானும் தீமை நிகழாமற் றடுத்துப் பாதுகாப்போம் என்று உறுதி கூறியவாறு.

அல்லல்-சிவபிரானது செய்யசேவடி நீங்கும் சிறுமையுட்பட்டு, மையன் மானுடமாய் மயங்கி, உலகிலே உழல, மணத்திற் கமைந்துநின்ற துன்பம்.

தீர்த்து ஆள நின்றன் - தீர்த்தல் - இங்கு வாராமற் றடுத்தல் என்ற பொருளில் வந்தது. கயிலையில் அருள்செய்த சாலுமொழியால் அந்த அல்லல் வாராமல் தடுத்தாட்கொள்ள வந்து நின்றவன். உலகிலே எல்லா உயிர்கட்கும் பிறவித் துன்பம் தீர்த்து ஆள்வதற் கமைந்துநின்ற இறைவன் என்பதும் குறிப்பு. "வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று போதுநான் வினைக்கேடன்..." என்ற திருவாசகக் கருத்துங் காண்க.

சென்றன் - தான் நின்று முறையிட்ட தானத்தைப் பெயர்ந்து சபையார் முன்பு ஓலை காட்டச் சென்றான்.

செல்வ நான்மறையோர் - கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வங்களிலும் உயர்ந்தோராதலின் பொருளாசையாலேனும், அறியாமையாலேனும், பிழைபடத் தீர்ப்புச் சொல்லாதவர் என்ற குறிப்பு. "செல்வ முயர்கின்ற செல்வர்வாழ் தில்லை" என்ற தேவாரமும் காண்க. 57

204. இருண்மறை மிடற்றேன் கையி லோலைகண் டவையோ ரேவ
அருள்பெறு கரணத் தானு மாவணந் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்ததன் றொன்மை நோக்கித்
தெருள்பெறு சபையோர் கேட்ப வாசகஞ் செப்பு கின்றான். ௫அ

(இ - ள்) இருள்மறை...ஏவ - திருநீலகண்டத்தை மறைத்து வந்தவனாகிய வேதியன் கையில் எடுத்து நீட்டிய ஓலையைச் சபையோர் கண்டு ஏவினதனாலே; அருள்பெறு...செப்புகின்றான் - சபையில் உள்ள அருளைப் பெற்ற கரணத்தானும் அந்த ஆவணத்தை உரியவாறு தொழுது வாங்கி, அதனை வைத்துச் சுருட்டியிருந்த உறையை எடுத்துச், சுருளோலையை விரித்து, முதலில் அதன் பழைமையைப் பரிசோதித்து அறிந்துகொண்டு, அறிவு பெற்றவர்களாகிய சபையினர் யாவரும் கேட்கும்படி அதன் வாசகத்தைப் பின் வருமாறு படித்துச் சொல்வானாயினன்.

(வி - ரை) இருள் - திருநீலகண்டம். இருண்ட நிறம் விடத்திற்காகி அதன்பின் அது தங்கிய கண்டத்திற்காகியது. இருமடியாகுபெயர் என்பர். இருள்மறை மிடற்றோன் - திருநீலகண்டத்தை மறைத்த மிடற்றொடும் வந்த வேதியன்.

அருள்பெறு காரணத்தான் - கரணத்தான் - கருணீகன் - கணக்கன் என்பர். சபையாரின் உத்தரவின்படி அதன் காரியங்களைப் பார்க்கும் கணக்கன். (இந்நாளில் Clerk of the court - Clerk of the crown. என்பதுபோல). கரணத்தான் இறைவன் தந்த இந்த ஓலையைக் கையில் வாங்கவும் பார்க்கவும் வாசிக்கவும் திருவருட்பேறு பெற்ற உட்கரண புறக்கரணங்களை உடையவன் என்பதும் குறிப்பு. ஆதலின் அருள்பெறு என்றார்.

தொழுது வாங்குதல் - அந்நாள் நீதித்தலத்தார் வழக்கர்களிடம் நடந்துகொண்ட ஒழுக்க முறைகளில் ஒன்று.

சுருள்பெறுமடியை நீக்கி - ஆவணமாகிய (ஆதாரவாகிய) ஓலைச்சுருளைக் காப்பாற்றுதற்கு அதன்மேல் சுருட்டிக் கோத்த உறையாகிய மற்றொரு ஓலைச் சுருளை எடுத்து.

அதன் தொன்மை நோக்கி - இவர் சொல்கிறபடி அது பழைமையான ஓலைதானா என்பதை அதன் இயல்பினைச் சோதித்தறிந்து. பழைமை நோக்குதல்.*

தெருள்பெறு சபையோர் - இந்த அருள்வழக்கை ஒக்கத் தீர்ப்பதற்குரிய அறிவை இறைவனால் தரப்பெற்றவர்களாகிய சபையினர்.

வாசகம் - குறித்த ஒரு பொருளை வாச்சியமாக உட்கொண்டு நிற்பது. உயிர்கள் இறைவனுக்கு எப்பிறப்பிலும் வீட்டிலும் அடிமைகளே என்ற உண்மைப் பொருளை வாச்சியமாகக் கொண்டிருத்தலின் இதுவே வாசகம் என்ற சொல்லிற்குயர்ந்த உரிய பொருளாம்.

விரித்தனன்—என்பதும் பாடம். 58

205. "அருமறை நாவ லாதி சைவனா ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னெ ழுத்து." ௫௯

(இ - ள்) "அருமறை...செய்கை - மறையோர் வாழும் திருநாவலூரிலே ஆதிசைவ மரபிலே ஆரூரன் என்ற நான் இதன்மூலம் யாவருமறிய எழுதிவைக்கும் செய்தி யாவது; பெருமுனி...ஓலை - பெருமுனிவராய்த் திருவெண்ணெய்நல்லூரிலே உள்ள பித்தனுக்கு நானும் என்வழி மரபிலே வருபவர்களும் வழிவழியாய்த் தொண்டு செய்து வருவோம் என்பதற்காக உடன்பட்டு இந்த ஓலையை; இருமையால்...எழுத்து - மனமும் செய்கையும் இசைந்து எழுதிக் கொடுத்தேன்; இதற்கு இது என் கை எழுத்து."

(வி - ரை) வேதியர் காட்டிய ஆளோலையின் வாசகம். இது அவ்வோலையிற் கண்டு கரணத்தான் சபையோர்முன் வாசித்தது. இருதிறத்தாரின் ஊரும் குலமும் பேரும் பிறவும் விவரித்து எழுதி, உடன்படும் பொருளையும் எழுதிக், கைச்சாத்திட்டுச், சாட்சிகளும் இட்டு முன்னாட் பத்திரம் எழுதும் மரபு இதிற் காணப் பெறும்.

அருமறை நாவல் - அரிய மறைநூல் வல்லார் வாழும் திருநாவலூர்.

ஆரூரன் - இது நம்பிகளது பேரனார் (பாட்டனார்) பெயர். தனது பெயரைத் தன் மகன் மகனுக்குத் தருதலால் இவரைப் பேரனார் என்பது முன்னாள் மரபு. "உங்கள் பேரனார்" என வரும்பாட்டிற் கூறுவது காண்க. திருவாரூர்ப் பெருமானது பெயரை

*To satisfy about its antiquity - to see if it is a genuine ancient document என்பர் நவீனர்.

அவரது அடிக்குடியாகிய நம்பிகளது மரபிலே பிள்ளைகளுக்கு இட்டு அழைத்து வந்தனர். 'ஆரூர்த் திருமூலத்தானத்தே அடிப்பேராரூரன்' (11) என்ற நம்பிகளது செந்துருத்திப்பண் தேவாரமும், பிறவும் காண்க. வரிசை 150-ம் பாட்டின்கீழ் உரை காண்க. கடவுளர், பெரியோர், பெயர்களைப் பிள்ளைகளுக்கு இட்டு வழங்குதல் தொன்று தொட்டு ஆன்றோரிடம் வழங்கும் நமது நாட்டு வழக்கு. இதுவும் இக்காலம் அருகிவருதல் வருந்தத் தக்கதாம்.

செய்கை - மனமிசைந்து கருதிச் செய்தது. Solemn act என்பர் நவீனர்.

இருமையால் - மனமும் செய்கையும் ஒத்து - உள்ளும் புறமும் ஒருமித்து. மனம் வேறு, செய்கை வேறுயில்லாமல் - மனப்பூர்வமாய் - என்றபடி. 59

206. வாசகங் கேட்ட பின்னர் மற்றுமே லெழுத்திட் டார்கள்
ஆசிலா வெழுத்தை நோக்கி யவையொக்கு மென்ற பின்னர்
மாசிலா மறையோ 'ரையா மற்றுங்கள் பேர னூர்தந்
தேசுடை யெழுத்தே யாகிற் றெளியப்பார்த் தறிமி' னென்றார். ௬0

(இ - ள்) வாசகம் கேட்ட பின்னர் - இவ்வாறு கரணன் வாசித்த ஓலை வாசகத்தைக் கேட்டபின்; மற்றும்...பின்னர் - எழுதிக் கொடுத்தவரது கைஎழுத்துக்குப் பின், சாட்சியிட்டவர்களது கை எழுத்துக்களையும் பார்த்து, அவை சரியாயிருப்பக் கண்டபின்பு; மாசிலா...என்றார் - குற்றமற்ற சபையார்கள் நம்பி ஆரூரரைப் பார்த்து 'ஐயா! இவ்வோலை உங்கள் பாட்டனாருடைய உண்மையான எழுத்தாயிருந்தால் அதனைத் தெளிய முழுதும் சோதித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்' என்றார்கள்.

(வி - ரை) **மேலெழுத்திட்டார்கள்** - சாட்சிக்காகக் கையொப்பமிட்டவர்கள். எழுதிக் கொடுப்பவர் கைச்சாத்துக்கு மேலே எழுதப்படுவதால் சாட்சி ஒப்பத்தை '**மேலெழுத்து**' என்பது அந்நாள் வழங்கிய பெயர். (attestation).

பேரனூர் - பாட்டனார். முன் பாட்டின் உரை காண்க.

ஆசிலா எழுத்தை நோக்குதல் - அவை அவர்களது எழுத்துத்தானு என்று ஆராய்ந்தறிதல்; அல்லது அவற்றைப் பிற நிரூபகங்களால் அவையேயாம் என்று துணிதல். இந்நாள் வழக்கர் இதனை Proof of attestation என்பர்.

அவை ஒக்கும் - அவை உண்மையே - சரியே - அவர்களுடையனவே. ஆவணத்தில் முதலிற் கண்டு நிச்சயிப்பது மேலெழுத்துக்களின் உண்மையே என்பது அந்நாள் நீதி விமரிசன முறையாம்.

பின்னர் - முறைசொன்னேரின் - வாதியின் - வாய்மொழியையும் சாட்சியத்தையும் ஆய்ந்து தெளிந்த பின்னர், முறை சொல்லப்பட்டோரை - பிரதிவாதியை - நோக்கி அவர் வாய்மொழியையும் சாட்சியையும் கேட்பது முறையாம் என்ற நீதி முறை பற்றிச் சபையார் **பின்னர்** நம்பிகளை வினவினபடியாம். நம்பிஆரூரரை நோக்கி என்பது வருவித்துக்கொள்க.

மாசிலா மறையோர் - புனித நான்மறையோர் - நல்ல அந்தணர்-செவ்விய மறையோர் - செல்வ நான்மறையோர் - என்றவைகளுக்கேற்ப இவ்வாறு கூறினர். உலகம் வழங்கும் வழக்கை நியமிக்கும் இறைவனது வழக்கையே உண்மையில் நின்று தீர்க்குமாறு அவனருளாலே "தெருள்பெற்றவர்" களாதலின் இவ்வாறு பன்முறையும்கூறினர்.

மற்று உங்கள் பேரனூர் - உங்களைப்போல அடிமையை மறுத்து வழக்கிடாது இசைவு தந்த பாட்டனார். (பேரனூர் - பாட்டனார்.)

தேசுடை எழுத்து - உண்மை விளங்கும் கை எழுத்து. **தேசு** - விளக்கம் - ஒளி.

தெளியப்பார்த்து அறிமின் - தெளிவு பெறுமாறு நன்குபார்த்து ஊன்றி அறியுங்கள். வரிசை 200-ம் பாட்டிலே "எனக்கிது தெளிய வொண்ணாது" என்று தமது அறிவுக்கு இவ்வழக்கின் உண்மை புலப்படாமை கூறிச் சபையாரிடம் தம்மை ஒப்புவித்தாராதலின், அதனைத்தொடர்ந்து இவ்வழக்கில் இவ்வொரு செய்தியைத் தெரிந்து கொள்ளுங்கள் என்றார். **பார்த்து அறிமின்**-கண்ணுற்பார்த்து மனத்தால் ஊன்றியறிந்து தெளிமின் என்க.

அறிதீர்—என்பதும் பாடம். 60

207. அந்தணர் கூற 'வின்னு மாளோலை யிவனே காண்பான்
தந்தைதன் றந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தவா வணத்தி னோடு மெழுத்துநீ ரொப்பு நோக்கி
வந்தது மொழிமி' னென்றான் வலியவாட் கொள்ளும் வள்ளல். சுக

(இ - ள்) அந்தணர் கூற - அந்தணர்கள் இவ்வாறு கூற; 'இன்னும்...மொழிமின்'- 'இந்த ஆளோலை கண்டு தெளிதற்கு இன்னும் இவனோ வல்லவன்? இவனது பாட்டன் தான் எழுதிய வேறு கைச்சாத்துக் கிடைக்குமானால் அதை வரவழைத்து இந்த ஓலையின் கையெழுத்துடன் அதனை நீங்கள் ஒத்துப்பார்த்து உங்கள் மனதிற்கு நியாயம் என வருவதைத் தீர்ப்பாகக் கூறுங்கள்'; என்றான்...வள்ளல் - என்று வலிய ஆட்கொள்வாராகிய வள்ளல் தானே முந்திக்கொண்டு சொன்னார்.

(வி - ரை) அந்தணர்-எல்லாரிடத்திலும் செந்தண்மை பூண்டு ஒழுகுவோராதலின் இங்கு நம்பியாரூரரிடத்திலும் வைத்த தட்பத்தால் இவ்வாறு கேட்டனர் என்பதாம்.

இன்னும் - 'மனத்தினுலுணர்தற்கெட்டா மாயை' - 'எனக்கிது தெளியவொண்ணாது' என்று முன்னரே சொல்லித் தனது மாட்டாமையை வெளிப்பட அறிவித்திருந்தும், இந்த எழுத்தைப் பார்த்து அறியமாட்டா இளைஞராயிருந்தும், இன்னும் அவரைக் கேட்கின்றீர்களே என்ற குறிப்பு.

இவனே - ஏகாரம் எதிர்மறை வினாப்பொருளில் வந்தது.

தான் முன் எழுது வேறு கைச்சாத்து - தானே தன் கைப்பட எழுதிய கை எழுத்து - genuine and admitted signature and hand writing-என்பர் நவீனர். மேற்பாட்டிலும் 'பேரனூர் **தம்** தேசுடை எழுத்தே' என்றதும் காண்க. இவ்வோலையில் உள்ளது பாட்டனார் தாமே எழுதியதா? அல்லது வேறொருவர் அவர் கை எழுத்துப்போல எழுதிவிட்டதா? என்பது கேள்வியாதலின் அதனை நிச்சயிக்க அவர் **தாமே** எழுதிய வேறு கைச்சாத்தைக்கொண்டு ஒத்துப்பார்க்க என்றார். இது நீதி முறை ஆராய்ச்சிகளில் ஒன்றாய் இந்நாளிலும் கையாளப்படுவது.

இங்கு வேதியர் 'தந்தைதன் தந்தை **தான்** எழுது வேறு கைச்சாத்து' என்று சொல்லியது, இவ்வோலையில் உள்ளது தனது மாயை வல்லமையால் உண்டாகியதாயினும் அவர் **தானே** எழுதியதனோடு ஒப்பிட்டால் சரியாயிருக்கும் என்னும் குறிப்புமாம்.

உண்டாகில் - இருந்தால் அதனை வரவழைத்து - என வருவித்துக்கொள்க.

எழுத்து - நீர் ஒப்பு நோக்கி - நீர் அந்த எழுத்தை இந்த ஆவணத்தின் எழுத்தினோடு ஒப்புப்பார்த்து.

வந்தது - உங்கள் மனத்திற்றோன்றி வாக்கில் வந்தபடி. உங்களுள் நானிருந்து பிரேரித்து வாக்கில் வரச்செய்ய அவ்வாறு வந்தது எதுவோ அதனை என்றதும் குறிப்பு.

வலிய ஆட்கொள்ளும் வள்ளல் - இவ்வழக்கினால் நம்பியாரூரரையும், இந்த முறை அறிவித்து நல்வழிப்படுத்துதலாலே சபையாரையும், இதுவேயுமன்றி இதன் மூலம் எல்லா உயிர்களையும் அவை வேண்டாமலே தாமே வலிய ஆட்கொண்டு ஈடேற்

றுவதே தொழிலாகக் கொண்ட வள்ளற்றன்மை யுடையான். 'தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே' என்பது நம்பிகள் தேவாரம். 61

208. திரண்டமா மறையோர் தாமுந் திருநாவ லூரர் கோமுன்
மருண்டது தெளிய மற்ற மறையவ னெழுத்தா லோலை
அரண்டரு காப்பில் வேறொன் றழைத்துட னொப்பு நோக்கி
'இரண்டுமொத் திருந்த தென்னே யினிச்செய லில்லை' யென்றார்.௨௦௮

(இ - ள்) திரண்ட...தாமும்-சபையினரும் அவ்வாறு செய்வதென்று இசைந்து; திருநாவலூரர்...நோக்கி - முன்னே நம்பி ஆரூரர் கொண்ட மருட்சி நீங்குமாறு அவரது பாட்டனார் தாமே எழுதிய வேறு ஓலையைத் தகுந்த பாதுகாவலில் வைக்கப் பட்டிருந்த இடத்திலிருந்து வரவழைத்து அதன் எழுத்தை வேதியர் காட்டிய ஓலை யின் எழுத்துடன் ஒத்துப் பார்த்து; இரண்டும்...என்றார் - 'இரண்டு எழுத்துக்களும் ஒன்றுபோலவேயிருந்தன; என்னே! இனி வேறு யாம் செய்யக்கடவன ஒன்றுமில்லை.' என்று சொன்னார்கள்.

(வி - ரை) **திரண்ட மாமறையோர்** - கூடிய சபையோர்.

திருநாவலூரர் கோ - நம்பியாரூரர். **முன் மருண்டது** - மேலே (வ. 200) **மாயை இது தெளியவொண்ணாது** - என்ற மருட்சி. நாவலூரர் கோ முன்பாக ஓலையை வர வழைத்து என்று கூட்டியுரைத்தலும் ஒன்று.

மற்ற மறையவன் - மேலே (வ. 206) **மற்று உங்கள் பேரனார்** என்ற இடத்திற் போல உரைத்துக் கொள்க. மற்று + அ + மறையவன் என்க.

எழுத்தால் ஓலை - அவரே எழுதிய ஓலை. மேற்பாட்டின் உரையில் **தான்வேறெழுது** என்ற இடத்துக் காண்க.

அரண்தரு காப்பு - ஊர்ப் பொதுமன்றங்களிலே சேமித்துப் பாதுகாவலில் வைக் கப்பெற்றது. இது அந்நாள் வழக்கு. இக்காலத்து அரசாங்கப் பத்திரப் பதிவு அதி காரிகள் குடிமக்களது கை எழுத்துக்களைப் பாதுகாக்கும் முறையையும், பத்திரங்களைப் புகைப்படம் பிடித்துப் பிரதி செய்து காக்கும் புதுமுறையையும் நோக்குக. இது போன்ற, இதனினும் மேன்மையான, ஒருமுறை பண்டை நாளிலே தமிழர்களிடை வழங்கி வந்தமை சரிதங்களில் அறியக் கிடக்கின்றது.

அரண்தரு காப்பு - வேறொருவர் மாற்றக்கூடாத காவல். Safe custody என்பது இந்நாள் வழக்கு. இதற்கு அவரது வீட்டில் பாதுகாவலில் வைத்திருந்த என்று உரைப்பாருமுண்டு.

உடன் ஒப்புநோக்கி - இது இரண்டினும் உள்ள எழுத்துக்களையும் கைச்சாத்துக் களையும் ஒத்துப் பார்த்து. Comparison of handwriting and signature என்பர் நவீனர். **இரண்டும்** - எழுத்தும் கைச்சாத்தும்.

என்னே! - (ஒன்றுபோலவே இருந்தது;) என்ன அதிசயம்!

இனிச் செயல் இல்லை - இவ்வழக்கு விசாரணையில் நீதி முறைப்படி இனி நாம் செய்யவேண்டிய செயல் வேறு ஒன்றுமில்லை. நீதியில் விதித்த எல்லா வகையாலும் தேர்ந்து முடித்தோம் என்றபடி. இவ்வழக்கு விசாரணையில் முன்னர்க் குறித்த எல் லாச் செயல்களையும் குறிப்பிட்டபடியாம். இவ்வாறன்றிச் **செயல்** என்பதற்கு நம் செயல் ஒன்றுமில்லை; இனி எல்லாம் சிவன் செயலே என்று பொருளுரைப்பாரு முண்டு. அது பொருந்தாமை யறிக. 62

*209. 'நான்மறை முனிவ னார்க்கு நம்பியா ரூரர் தோற்றீர்
பான்மையி னேவல் செய்தல் கட'னென்று பண்பின் மிக்க

மேன்மையோர் விளம்ப நம்பி 'விதிமுறை யிதுவே யாகில்
யானிதற் கிசையே னென்ன விசையுமோ' வென்று நின்றார். ௬௯

(இ - ள்) நான்மறை...விளம்ப - (இவ்வாறு நீதிமுறை விசாரணையை முடித்துக் கொண்டு) சபையோர் 'நம்பியாரூரரே! நீர் இவ்வழக்கிலே நான்மறை முனிவருக்குத் தோற்றுவிட்டீர்; பான்மையினாலே அவருக்கு நீர் ஏவல் செய்தலே உமது கடமை யாகும்' என்று தீர்ப்புச் சொல்ல; நம்பி...நின்றார் - (அதுகேட்ட) நம்பி 'இதுவே விதி முறையாகிய முடிபானால் நான் இதற்கு இசையமாட்டேன் என்று சொல்லக் கூடுமோ? கூடாது' என்று அமைந்து நின்றார்.

(வி-ரை) பான்மையில் - (1) அவர் ஏவல்கொள்ளும் தன்மைப்படி. ஏவலை அவர் இட்டபான்மையிற் செய்தல் கடமை என்க. (2) முன் ஊழ் விதியினாலே. பான்மை - நியதி - ஊழ் என்பன ஒருபொருட் சொற்கள். இப்பொருளில் முன் பான்மையினாலே இப்போது ஏவல் செய்தல் கடன் என்க.

பண்பில் மிக்க மேன்மையோர் - மேலே செவ்விய மறையோர் - என்பது முதலாக விதந்து கூறியதற்கேற்ப இங்கும் நீதி முதலிய பெருமைகளால் மிகுந்த மேன்மையுடையோர் என்றார். **பண்பு** - வேதியர் பிறர்க்கு ஆளாதல் தகுமோ என்று மாறுபாடு கொண்டு ஒருதலைச் சார்புபற்றாமல் வழக்கை நீதிமுறையிலே தீர்த்த தன்மை. வேதியர்களும் நீதிமன்றத்தவர்களும் இவ்வாறு தமது குலம் முதலியவற்றை ஒதுக்கிவைத்துத் தாம் வேறாக நின்று நீதி வழக்கறுத்தல் அருமை என்பது குறிப்பு. தமது குலத்துக்கு விதிக்காததும் ஆட்சியில்லாததும் ஒவ்வாததும் ஆகிய தீர்ப்பாயிருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது நியாயம் சொல்லுதல் **மேன்மை** எனப்பெற்றது.

விதிமுறை இதுவே ஆகில்-முன் நின்ற விதியும்,நீதிமன்றத்தவர் சொன்ன முறையும், கூடி முடிந்தது இந்த முடிபேயானால். விதியும் முறையும். உம்மைத்தொகை.

இசையேன் என்ன இசையுமோ - சொல்லணி. உட்படமாட்டேன் என்று சொல்லுதல் பொருந்துமோ? பொருந்தாது என்றபடி.

நின்றார் - தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நின்றார். ஒன்றின்மேலொன்றாகப் பல நீதி மன்றங்கள் ஏறினும் அவற்றின் தீர்ப்புக்குள் அமையாது கொக்கரித்து நிற்பது இக் காலத்து மாக்களின் ஆணவப் பெருக்கின் இயல்பு. அதனை, இங்குக் குலம் - நலம் - இளமை - காலம் முதலிய எல்லாவற்றையும் விட்டு ஒழித்து, ஆணவத்தினை முற்றும் அடிப்படுத்திச், சபையார் தீர்ப்புக்கு உட்பட்டு, ஆட்செய்ய இசைந்து நின்ற நம்பிகளின் உண்மை நிலையுடன் ஒப்பு நோக்கி உண்மை கண்டு பின்பற்றத்தக்கது.

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாத்தில்லைக் கண்டேனே.

என்ற திருவாசகக் கருத்துக்களை ஓர்ந்து நோக்குக. சாதி - குலம் - முதலிய பாகுபாடுகள் உலக நிலைக்கு வேண்டப்பெறுவன என்றும், உலகினர்க்கு ஆளாதல் ஒழிந்து இறைவனுக்கு ஆட்செய்யும் நிலைபேறு கைவந்தபோதே அவை கீழ்ப்பட்டு வெல்லப்பட்டு ஒழியும் என்றும், அப்போதே ஆணவம் அறவே ஒழிந்து இன்பநிலை வரும் என்றும், இவற்றால் விளங்குதல் காண்க. இவ் வகை - தொகை - நிலைகளை அறியாதார் இவ்வரலாற்றினால் உலக ஆட்சியும் வழக்கும் வீழ்ந்துபட்டன என்று கூறுவர். அது பொருந்தாமையறிக. 63

210\. திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
'யருமுனி! நீமுன் காட்டு மாவண மதனி லெங்கள்

பெருமைசேர் பதியே யாகப் பேசிய துனக்கிவ் வூரில்
வருமுறை மனையு நீடு வாழ்க்கையுங் காட்டு' கென்றார். ௬௪

(இ - ள்) திருமிகு...நோக்கி - அதன்பின் திருமிக்க சபையோர் நின்ற வேதியரைப் பார்த்து; 'அருமுனி !...காட்டுக' என்றார் - அரிய முனிவரே! நீர் முன்னே காட்டிய ஓலையில் எங்கள் பெருமையுடைய திருவெண்ணெய் நல்லூரே உமது ஊராக எழுதியிருந்தது ; அஃதுண்மையாயின் இவ்வூரில் உமக்குப் பழைமையாக வரும் வீட்டையும், தொன்றுதொட்டு நீண்ட வாழ்க்கையையும் காட்டுவீராக!, என்றுகேட்டார்கள்.

(வி - ரை) நம்பி ஆரூரர் சபையினர் தீர்ப்புக்கு உட்பட்டு அமைந்து நின்றபின் தமது தீர்ப்பு நடைமுறைக்கு வருவதொன்றாயின் இவ்வேதியருக்கு இவ்வூரில் வீடும் வாழ்க்கையும் வேண்டுமே? அவை யிருந்தாலன்றோ அடிமையிருத்தலும் கூடும்? நம்பியும் இவருக்கு ஆட்செய்ய இயலும் ; இல்லையேல் தமது தீர்ப்பு (நிறைவேற்ற) இயலாததாய்க் கழியும்; கழியின், நடைபெறும் ஆட்சிக்கு மாறாகிய தம்தீர்ப்பைத் தாமே திருத்தவும் கூடும் ; நம்பிகள் இந்தச் சழக்கினின்று ஏறவும் கூடும் - என்ற குறிப்புக்களுடன் இவ்வாறு கேட்டனர் போலும்.

திருமிகு மறையோர் - ஈசுரத்தன்மை மிகும் பக்குவமுடைய மறையோர். வேதியனாய் வந்தவனே இறைவன் என்று விரைவிற் கண்டு அனுபவிக்கும் பேறுபெற நின்றவர்கள் ஆதலின் **திருமிகும்** என்றார். 'செல்வமுயர்கின்ற செல்வர்' என்பது தேவாரம்.

நின்ற செழுமறை முனி - (1) தமது வழக்கு வென்று செழித்த முகத்துடன் நின்ற மறை முனிவர். (2) முன்பாட்டிலே வெல்லப்பெற்று **நின்றார்** என்ற நம்பிகள் போல, வென்று **நின்ற**. (3) சபையோரிலும் யாவரிலும் புகுந்து இயக்கி **நின்ற**. எங்கள் பதியே உமக்குப் பதியாக ஆவணத்திற் பேசப்பெற்றது என்று கூட்டுக.

பெருமைசேர் பதி - திருவெண்ணெய் நல்லூர். சிவபெருமான் வெளிப்பட வீற்றிருக்கும் பெருமை. **பெருமைசேர்** - இத்திருத்தலத்தைத் தேடிச் சென்று பெருமை சேர்ந்தது என்க. இறைவனாகிய நீரே கிழ வேதியராய் வந்து நியாயம் தேடி அடைந்த பெருமை இன்று சேர்ந்தது என்ற குறிப்புமாம். **எங்கள் பதி** - அந்தணர்க்குள்ள தமது ஊர் அபிமானத்தை விளக்கும்.

உமக்கு - உமது. எங்கள் பதியே உமது பதியாக எனவும் ; இவ்வூரில் **உமக்கு** மனையும் வாழ்க்கையும் காட்டுக எனவும், நடுநிலைத்தீபமாய் நின்று, இயைவது காண்க.

வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் - 'யானும் என்பால் **வருமுறை** மரபுளோரும் வழித்தொண்டு செய்வோம்' என்று ஓலையிற் கண்டமையால் நம்பிகளது பாட்டனார் (பேரனார்) நாள்முதல் இதுவரை பழைமையாய் வரும் வீடும் வாழ்க்கையும்.

வாழ்க்கை - வாழ்வின் அடையாளங்கள் - ஆகுபெயர். இவ்வடையாளங்களைக் கருவூர்த்தேவர் திருக்களந்தை ஆதித்தேச்சரத் திருவிசைப்பாப் பதிகத்தினுட் காண்க. 64

211. பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவ 'ரென்னை
யொருவரு மறியீ ராகிற் போது'மென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்கு ழாமு நம்பியும் பின்பு செல்லத்
திருவருட் டுறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார். ௬௫

(இ - ள்) பொருவரும்...உரைத்து-ஒப்பற்ற வழக்குப் பேசி வெற்றிகொண்ட புண்ணிய முனிவர் அந்தணர்களைப்பார்த்து 'என்னை நீவிர் ஒருவரும் அறியீர்களானால் என்னுடன் வாருங்கள் ; என்மனையும் வாழ்க்கையும் காட்டுகின்றேன்' என்று சொல்லி ; சூழ்ந்த...புக்கார் - சுற்றி நிறைந்து அவ்வூரில் இருந்த அந்தணர்களும் வந்த அந்தணர்களும் நம்பிகளும் தம் பின்வர முன்னேபோய்த் **திருவருட்டுறை** என்ற திருக்கோயிலுக்

குள்ளே புகுந்தார்; கண்டிலர் திகைத்து நின்றார் - அதன்பின் அவர்கள் எவரும் அவரைக் காணாராயினர் ; ஆதலின் திகைத்து நின்றார்கள்.

(வி - ரை) **பொருவரும்** - ஒப்பற்ற. **பொருவுதல்** - ஒப்பாயிருத்தல். 'பெருமுறை யுலகில் இல்லாநெறி' (வரிசை 192) யாதலின் ஒப்பற்றதாயிற்று. இவ்வுலகில் இதற்கு ஒப்பாகச் சொல்லக்கூடியது வேறொன்றுமில்லை என்றபடி. **பொரு** - மாறுகொள்ளுதல் எனக்கொண்டு, மாறுசொல்லக்கூடாத - மறுக்கமுடியாத - என்றுரைத்தலுமாம். 'உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே' என்று நம்பிகள் அருளுவதும் காண்க.

புண்ணிய முனிவர் - புண்ணியங்களுக்கெல்லாம் பயனாக உள்ளவர். புண்ணியங் களையே தமது உருவமாக உடையவர் என்றலுமாம். 'புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்' என்ற அப்பர் சுவாமிகள் அருள்வாக்கும் காண்க.

ஒருவரும் - அங்குப் புத்தூரில் நம்பியும், மணப்பந்தரில் இருந்த வேதியர் எவரும் அறியாதிருந்ததன்றி இங்குச் சபையில் இருந்த வேதியர் எவரும்.

குழாமும் நம்பியும் - மறையவர் கூட்டத்திலிருந்து நம்பிகளைப் பிரித்து ஓதினார் ; அவரை அவர்களினின்றும், உலகினின்றும் பிரித்து ஆட்கொள்ளவே இறைவர் எழுந் தருளினார் ஆதலாலும், இனி அவர்களை விட்டு நம்பிகளே இறைவனைத் தனித் தொடர்ந்து அழைத்து ஆட்செய்து வாழப்போகின்றாராதலாலும் என்க.

திருவருட்டுறை - திருவெண்ணெய்நல்லூர்க் கோயிலின் பெயர். திருப்பெண்ணா கடத்திலே திருத்தூங்கானைமாடம் என்பதும், திருச்சாத்த மங்கையிலே அயவந்தி என் பதும் அவ்வத் திருக்கோயில்களுக்குப் பெயராதல் போலக் காண்க. **துறையே புக்கார்** - அருளாகிய துறையிலே ஒளிப்பவர் இறைவனாதல் குறிப்பு. பவக்கடலிலே வீழ்ந்தாரைத் துறையிலே ஏற்றும் தோணியாக இறைவனைக் கூறுவர் பெரியோர். "இடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங் கிளைக்கின்றேற் கக்கரைக்கே யேற வாங்கும் தோணியை..." (திருவா வடுதுறை - தாண்டகம் - 4). தோணிக்காரர் இருப்பதும், தொழில் செய்வதும் துறை யிலேதான். தோணி தான் துறையிலே நின்று தன்னை அடைந்தோரைத் துறை சேர்த்திக் கரையேற்றுவதுபோல இறைவனும் இவ்வருட்டுறையிலே உலகத்தாரைக் கரை ஏற்றும்பொருட்டுச் சமயாசாரியராகிய ஆரூர நம்பிகளையும், சந்தான ஆசாரிய ரான மெய்கண்டாரையும் கரை ஏற்றினார். **திருத்துறையூரிலே** அருணந்திசிவாசாரி யாரை ஏற்றினார். இத்துறைகளிற் பெரிதாகிய **திருப்பெருந்துறையிலே** மாணிக்க வாசகரை ஏற்றினார். 'பெருந்துறைப்பெருந் தோணி பற்றி யுகைத்தலும்' என்ற திரு வாசகமும் காண்க. அப்பரைத் திருவையாற்றிலே 'நெடுநீரினின்றேற நினைந்தருளிய' (திருவிருத்தம் - 3-4.) அவரே, பிரமபுரத்திலே பிள்ளையாரைப் பொய்கைக்கரையிலே 'அறியாப் பருவத்தே எடுத்த' தோணியப்பராம் என்பதும் இங்கு வைத்துக் காண்க.

கண்டிலர் - அவர் தன் அருளால் வெளிப்பட்டபோது காட்டக் காண்டலும், அவர் அருளால் ஒளித்துக் காட்டாதபோது காணாமையும் உயிர்களின் இயல்பு. 'காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே, காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே' என்பது அப்பர் திருவாக்கு. இங்கு வேதியராய்க் கண்முன் நின்றபோது அவர் இறைவர் என்று ஒரு வரும் அறியாமையும், அவர் காணாது மறைந்தபோது இறைவர் என்று உணர்தலும் காண்க. அப்பர் திருவாக்கின் உண்மை இதில் உய்த்து உணர்ந்தனுபவிக்கத்தக்கது.

கண்டிலர் திகைத்து நின்றார் - குழாமும் நம்பியும் என்ற எழுவாய் வருவித்துக் கொள்க. கண்டிலர் ஆதலின்திகைத்தார். கண்முன்னே நேரே காணவும், பற்றவும், பேசவும், ஏசவும், வழக்கிடவும் பொருளாய் நின்றவன் உடனே காணப்படாமையினால் திகைப்பு உண்டாயிற்று. **நின்றார்** - ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்றார். வரிசை 209-ல் நம்பிகள் நின்றார்; 210-ல் மறைமுனிவர் நின்றார் ; இங்கு மறையவர் குழாமும் நம்பியும் நின்றார் ; என்ற தொடர்பும் இவற்றுள் வேறுபாடும் கண்டுகொள்க.

212. எம்பிரான் கோயி னண்ண 'விலங்குநூன் மார்ப னெங்க
ணம்பர்தங் கோயில் புக்க தென்கொலோ' வென்று நம்பி
தம்பெரு விருப்பி னோடு தனிதொடர்ந் தழைப்ப மாதோ
டும்பரின் விடைமேற் றோன்றி யவர்தமக் குணர்த்த லுற்றார். ௬௬

(இ - ள்) எம்பிரான் கோயில் நண்ண - கிழவேதியராய் வந்த சிவபெருமான் அந்தத் திருவருட்டுறைக் கோயிலுள்ளே போகவும்; இலங்குநூன்...என்று - இவ்வந்தணர் எங்கள் பெருமானது கோயிலுக்குள் புகுந்த தென்கொல்? என்று ஐயுற்று; நம்பி...அழைப்ப - நம்பிகள் மறையவர் குழாத்திலிருந்து பிரிந்து முன்போந்து மிகுந்த விருப்பத்துடன் அவரைத் தனியாகக் கோயிலுள்ளே தொடர்ந்து அழைக்க; மாதோடு... உற்றார் - ஆகாயவெளியிலே உமையம்மையாரோடு இடபவாகனத்திலே எழுந்தருளி வெளிப்பட்டுப் பின் வருமாறு அவருக்கு உண்மையை உணர்த்தியருளலாயினர்.

(வி - ரை) **எம்பிரான்** - எல்லாருக்கும் தலைவர். அக்கோயில் எனச் சுட்டு வருவித்து அக்கோயில் எம்பிரான் நண்ண என மாற்றி பொருள் கொள்ளத்தக்கது.

இலங்குநூன் மார்பர் - 'சோதிமணி மார்பினசை நூலினொடு' (வரிசை 176) என்று முன் கண்டபடி விளக்கம்பெற்றுக் கண்டாரைக் கவரும் பூணூலை மார்பிலே உடையவர்.

எங்கள் நம்பர் - நாங்கள் (ஆதிசைவர்) வழிவழியடிமை செய்யப்பெற்ற எசமானர். இன்று வந்தவர் தந்தைதந்தைநாள்முதற் புதிதின் ஆட்கொண்டவர்; இக்கோயிலுள்ளவரோ ஆதி வழிவழி ஆட்கொண்ட இறைவர். புதிய தலைவர் பழைய தலைவரின் கோயில் புக்கதென்கொலோ? என்றபடி.

பெருவிருப்பு - 'நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியாலே' முன்னிருந்து தோன்றி வளர்ந்த பெரிய விருப்பம். முன்னர்ச் சிறிது சிறிதாய்த் தோன்றி மறைந்தது போலாது இங்கு முற்றிய ஞானம் விளங்கவும் மறைப்பு நீங்கவும் பெருவிருப்பினோடு அழைத்தார். அவரும் வெளிப்பட்டார்.

தனி தொடர்ந்து - ஏனைய மறையவர் குழாம் திகைத்து வெளியே நிற்கவும், தாம் மட்டும் தனியாகப் பின்பற்றித் தொடர்ந்து உட்சென்று என்க. 'யாவரையும் வேறடிமையாவுடைய எம்மான்' அவர்களிலிருந்து நம்பிகளைத் தனியாகப் பிரித்து 'இவன் மற்றென் அடியான்' என வழக்கிட்டு ஆட்கொண்டமையால் மற்றவர்களை விட்டு இவர் தனி தொடர்ந்தார். இவரோடு தொடர்ந்து அழைத்துக் காணும் தகுதியுடையார் பிறரில்லை. 'அவரலாற் புரங்கள் செற்ற, ஏவணச் சிலையினாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்' என்று முன்னர்க் குறித்தமையும் காண்க. **யான் எனது** என்ற இவ்வுலகத்திலிருந்து பிரித்து ஆட்கொள்ளுதலே இறைவன் செயலாதலும் காண்க.

மாதோடு உம்பரின் விடைமேல் தோன்றி - உம்பரில் விடைமேல் மாதோடு தோன்றி என மாற்றிக்கொள்க. முன்னே வந்தது திரோதானமாகிய மறைப்புச்சத்தியுடனும். அதனாலே பக்குவப்படுத்தப்பெற்ற உயிர்க்கு அருள வருகின்றாராதலின் இப்போது அருட்சத்தியுடன் அருட்டுறையிலே வெளிப்பட்டு வந்தார். **உம்பர்** - ஞான ஆகாய வெளி.

அவர் தமக்கு - இப்போது தோன்றலும் உணர்த்தலும் நம்பிகளுக்கே யன்றி முன்போல ஏனைய மறையவர் கூட்டத்துக்குமன்று என்பதாம். ஏகாரம் தொக்கது.

உணர்த்தல் - திகைத்து நின்று விருப்புடன் அழைத்தார்க்கு உண்மை உணர்த்தல் கடனாதலின் உணர்த்துவாராயினர். 'அறிவிக்கவன்றி யறியா வுளங்கள்' என்பது உயிர்களின் சிறப்பிலக்கணம். இறைவன் உணர்த்தினாலன்றி உயிர்கள் உணரும் வழியில்லையாதலின் இதுவரை நிகழ்ச்சிகளின் தத்துவத்தையும் வரலாற்றையும் உணர்த்தியருளினர். 66

213. "முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் மேவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாந்தடுத் தாண்டோ" மென்றார். கூஎ

(இ - ள்) வெளிப்படை. 'முன்நிலையிலே கயிலையிலே நீ நமக்குத் தொண்டு செய்தவன்; மாதர்மேல் மனம் வைத்ததனாலே நமது கட்டளையின்படி இப்பிறவியை அடைந்தாய்; துன்பந் தரும் இவ்வுலக வாழ்க்கை உன்னைத் தொடராதபடி அங்கே அருளிய சாலுமொழியினாலே உன்னைத் தொடர்ந்துவந்து அந்தணர்கள் முன்னிலையில் நாமே தடுத்தாட்கொண்டோம்' என்று உண்மை உணர்த்தி யருளினார்.

(வி - ரை) **முன்பு** - இப்பிறப்பிற்கு முன் உள்ள நிலை. **பின்பு** - வேட்கை கூர்ந்த பின்பு; அதுகாரணமாக.

தொண்டன் - தொண்டு செய்தவன். மலர்மாலையும் அள்ளும்நீறும் எடுத்தனைத லாகிய தொண்டு. (வரிசை 31). 'சுந்தரனைத் துணைக்கவரி வீசக்கொண்டார்' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின் துணைகொண்டு பெருமானுக்குக் கவரி வீசுதலாகிய தொண்டும் செய்திருந்தார் என்றும் கூறுவர்.

முன்னிய வேட்கைகூர - முன்னுதல் - நினைத்தல். 'மனம் வைத்தனை' (வரிசை 37.) **வேட்கை** - காதல். மாதர்மேற் செல்லும் ஆசை. 'நின் வேட்கை தீர வாழிமண் மேல் விளையாடுவாய்' என்று பின்னர்க் கூறுதலும் காண்க. (வரிசை 273)

கூர்தல் - பொருந்துதல். மிகுதலுமாம். மாதரை நினைத்த செயல் பொருந்தியதனாலே. கயிலையில் நினைப்புமட்டும் நிகழ்ந்தது. அதுவே கருமத்துக்கு மூல மாயிற்று. அது பிறப்பிற்கு வழியாயிற்று.

நம் ஏவலாலே - 'தென்புவிமீது தோன்றுக' என்ற கட்டளை. (வரிசை 37) 'இம்மண்ணுலகின் னருளுக வகுத்தனை' என்பது நம்பிகள் தேவாரம். (திருநெல் வாயிலரத்துறை - இந்தளம் - 2)

மண்ணின்மீது - நிலவுலகிலே - தென்றிசையிலே. இதை நடுநிலைத் தீபமாய் மண்ணின்மீது பிறந்தனை என்றும், மண்ணின்மீது துன்புறு வாழ்க்கை என்றும் கூட்டுக.

துன்புறு வாழ்க்கை - 'தென்புவி, மீதுதோன்றி அம்மெல்லியலாருடன் காத லின்பம் கலந்து பின் அணைவாய்' (வரிசை - 37) என்று நாம் ஏவிய வாழ்க்கை உன்னைத் துன்பத்தினின்று விடுவிப்பது; ஆனால் இப்போது தடுத்த மணவாழ்க்கை அதற்கு வேறாய்த் துன்பத்தில் மேன்மேலும் இருத்தும் வாழ்க்கை. இன்பம்போலக் காட்டி உண்மையிலே துன்பமா யிருக்கிற வாழ்க்கை என்றபடி. எனவே மக்கள் உலக வாழ்வின் துறைகளிலே ஈடுபடும்போது இது துன்பறு வாழ்வா? அன்றித் துன்புறு வாழ்வா? என்று உணர இறைவனை வேண்டக் கடவர்.

தொடர்வறத் தொடர்ந்து வந்து - தொடக்குப் பற்றறதபடிக் கூடவே வந்து. 'வாழ்வற வாழ்வித்த மருந்தே' என்பது திருவாசகம்.

நன்புல மறையோர் - முன்பாட்டுக்களில் மறையோரைக் கூறியதற்கேற்ப இங்கும் இவ்வாறு கூறினார். 'மறையவர் பெற்ற சாபம் நின்னையும் மயக்குறாதோ?' என்று கந்தபுராணத்துட் கூறியபடி ததீசி முனிவர் சாபத்திலே பட்டுப் புன்புல மறையோராய்த் திரியாதபடி உண்மையிலே நின்ற நற்புலத்தை உடையார். **புலம்** - அறிவு.

தடுத்தாண்டோம் - இதுகாறும் நிகழ்ந்த அடிமை வழக்கின் நியதியும், பயனும் உணர்த்தியவாறு. தடுத்த மணம் இன்பமாய்த் தோன்றினும் துன்புறு வாழ்க்கை என்றும், அடிமை வழக்குத் துன்பமாய்த் தோன்றினும் 'இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந், துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய், அன்பமைத்து'த் (திருவாசகம்-

திருவெண்பா-10) தருவதென்றும் அதன் தத்துவத்தை உணர்த்தினர். 'ஒருவராயிரு மூவருமாயவென் - குருவதாய குழகன்' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின்படி, இறைவன் உயிர்களுக்கு உண்மை உணர்த்தி ஆட்கொள்கின்ற, தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று வகைகளிலே, இது முன்னிலையில் உணர்த்தியதாம். இவ்வாறே பின்னரும் வருமிடங்களிற் கண்டுகொள்க. 67

214. என்றெழு மோசை கேளா வீன்றவான் கனைப்புக் கேட்ட
கன்றுபோற் கதறி நம்பி கரசர ணாதி யங்கந்
துன்றிய புளக மாகத் தொழுதகை தலைமே லாக
'மன்றுளீர் செயலோ வந்து வலியவாட் கொண்ட' தென்றார். ௬அ

(இ-ள்) நம்பி - நம்பியாரூரர்; என்று...கதறி - ஆண்டோம் என்று இறைவர் உம்பரின் எழுவித்த ஒலியைக் கேட்டுத் தாய்ப்பசுவின் கனைப்பைக் கேட்ட கன்றுபோலக் கதறி; காசரணாதி...ஆக - கைகால் முதலிய திருமேனியெங்கும் புளகம் கொள்ளத் தலைமேற் கைகள் கூப்பிக்கொண்டு; மன்றுளீர்...என்றார் - 'ஆளல்லேன் என்று மறுத்த என்னை வலிய ஆட்கொண்டது மன்றுளே கூத்தாடும் தேவரீரது அருட்செய்கையோ?' என்றார்.

(வி-ரை) எழும் ஓசை - இறைவர் எழுவித்ததாதலின் எழும் என்பதைப் பிறவினைப் பொருளிற் கொள்க. இறைவர் ஓசையை எழுவிக்க, அது நம்பிகள்பால் மறைந்திருந்த முன் உணர்ச்சியை எழுவித்தது.

ஈன்றஆன் கனைப்புக் கேட்ட கன்று - பசுவும் கன்றும் என்பதும், தாய்ப்பசுவின் அன்பு என்பதும், பல விடத்தும் பயின்றுவரும் உவமானப் பொருள்களாம். ஆயின் இவற்றை ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் வைத்தாளும் முறை தனித்த பெருமையும் அழகுமுடையதாம். 'மன்னவ குமாரனென்று உணர்த்தவிட்டு' - என்ற சிவஞான போதத்து எட்டாஞ் சூத்திரக் கருத்தும் இங்குப் போதருதல் காண்க. இங்கே இறைவனைத் தாய்ப்பசுவாகவும் நம்பிகளைக் கன்றாகவும் காட்டினார். இதுபோலவே,

"கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றாப்போல்'—**கழறிற்**-135

எனப் பின்னரும் வகுத்தார். ஆனால் கண்ணப்ப நாயனார் புராணத்திலே 'கன்றகல் புனிற்றாப் போல்வர்' என இம்முறையை ஆண்டைக் கேற்ப அமைத்திருத்தல் காண்க. இத்தாய்ப்பசு ஆங்குக் கன்றாயிற்று; கண்ணப்பதேவர் அதனைக் காத்து வளர்க்கும் தாயாயினர். இவ்வுவமானத்தின் அழகை உற்று நோக்குக. விரிவு அங்குக் காண்க.

கன்றுபோற் கதறி - பிரிந்த தாய் கனைக்கக்கேட்ட கன்று கதறுவதுபோற் கதறி.

புளகம் - மயிர்க்கூச்செறிதல் - மயிர் சிலிர்த்தல். இது ஆனந்தத்தாலும் அற்புதத்தின் உணர்ச்சியாலும் நிகழ்வது.

மன்றுளீர் செயலோ - அதிசயக் குறிப்பு. 'யான் முன் அறியாமற் போனேனே' "யானதறியாதே கெட்டேன் உன்னால் ஒன்றுங் குறைவில்லை." என்றெல்லாம் மனத்திலே எண்ணி ஏசறுதற் குறிப்பு. **பழைய மன்றாடி போலும்** என்று தாம் முன்னே அறியாது வெகுண்டு கூறியது உண்மையாய் முடிந்தது கண்டு அதிசயப்பட்டார்.

நம்பி - கேளா - கன்றுபோற் கதறி - புளகமாக - மேலாக - செயலோ - என்றார் என்று கூட்டி முடிக்க. 68

215. எண்ணிய வோசை யைந்தும் விசும்பிடை நிறைய வெங்கும்
விண்ணவர் பொழிபூ மாரி மேதினி நிறைந்து விம்ம

மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளு முழங்கி யார்ப்ப
அண்ணலை யோலை காட்டி யாண்டவ ரருளிச் செய்வார். ௬௯

216. 'மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை ; நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு ; மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு' கென்றார் தூமறை பாடும் வாயான். ௭0

215. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு கண்ட திருவருள் வெளிப்பாட்டினாலே ஆகாயத்தில் ஐந்து தேவ துந்துபிகளும் நிறைந்து முழங்கின. தேவர்கள் கற்பகப்பூமாரி பொழிந்தனர். நிலவுலகத்துள்ளோர் மகிழ்ந்தனர். வேதங்கள் சத்தித்தன. ஓலை காட்டி நம்பியை ஆண்ட அவ்விறைவர் மேல் வருமாறு அருளிச் செய்வாராயினர். ௬௯

216. (இ - ள்) வெளிப்படை. 'நீ மறுத்து நம்மிடம் வலிந்து பேசியதால் **வன்றொண்டன்** என்று பெயர் பெற்றாய். நமக்கு அன்பினாலே சிறந்த அர்ச்சனையாவது நம்மைத் துதிக்கும் பாடல்களேயாம். ஆதலால் இவ்வுலகத்திலே நம்மைத் துதித்துத் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுவாயாக!' என்று மறைபாடும் தமது திருவாக்கினாலே நம்பிகளை நோக்கிச் சொல்லியருளினார். ௭0

215. (வி - ரை) இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. விம்ம - பொங்க - ஆர்ப்ப - ஆண்டவர் - தூமறைபாடும் வாயான் - அருளிச் செய்வாராய்ப் பாடுக என்றார் என்று கூட்டி முடிக்க. **வாயார்** என்பது பாடமாயின் உம்மைத்தொகையாக்கி, ஆண்டவரும் - வாயாரும் - அருளிச்செய்வாராய்ப் - பாடுக - என்றார் என்க.

எண்ணிய ஓசை ஐந்து - திருவருள் வெளிப்பாடு முதலிய அற்புதங்கள் நிகழும் போதெல்லாம் தாமே முழங்கும் என்று சிறப்பாய் எண்ணப்பட்ட தோற்கருவி முதலிய ஐவகையான வாத்தியங்கள். 'சங்கபட கங்கருவி தாரைமுத லான, எங்கணுமி யற்று பவ ரின்றியு மியம்பும், மங்கல முழக்கொலி' என்றதும் (திருஞா - புரா - 33) காண்க.

மேதினி நிறைந்து விம்ம - (தேவர்கள்மேலிருந்து பொழியும் பூமாரி) நிலவுலகில் நிறைய. பூவுலகினின்று போந்த ஓசையைந்தும் விசும்பு சென்று நிறைய, அதற்குப் பிரதியாய் விண்ணினின்று போந்த பூமாரி மேதினி நிறைந்ததென்ற அழகு காண்க.

மறைகளும் முழங்கி யார்ப்ப - வேத வொலிகள் பிறர் இயற்றாமலே நாதத்திலிருந்து வெளிப்பட்டு முழங்கி ஒலிக்க.

"ஓதுமறை யோர்பிறி துரைத்திடினு மோவா
வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும்"

என்று திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதார நிகழ்ச்சியிற் கூறியதும் காண்க.

அண்ணல் - பெருமையுடையவர்; நம்பிகள்.

ஆண்டவர் - தடுத்தாட்கொண்டருளிய சிவபெருமான். 69

216. (வி - ரை) **வன்மைபேசி** - 'பித்தனோ மறையோன்' என்பனவாதி வலிந்த பேச்சும் ஏச்சும் பேசிய காரணத்தால் **வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை** - **வன்றொண்டன்** என்ற பேரை நாம் தரப்பெற்றாய். இறைவன் தரப்பெற்றதால் இப்பெயரை விருப்புடன் ஏற்று நம்பிகள் பல இடங்களிலும் எடுத்துப் பாராட்டியிருத்தல் காணலாம். '......அடியேனைத் தாமாட்கொண்டநாட் சபைமுன், **வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர் வாழ்வு தந்தார்...**' (நம்பிகள் தேவாரம் - திருநாவலூர் - 2) முதலியவை காண்க. இதுபோலவே நம்பிகள் சரித நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அவரது தேவாரத் திருவாக்குக்களாகிய அகச்சான்றுகளாலே மிகத் தேற்றமாய் விளங்குதல் காணத் தக்கதாம். இவ்வாறே,

"...பாவுற் றலர்செந் தமிழின் சொல்வளப் பதிகத் தொடைபா டியபான் மையினல்
நாவுக் கரசென் றுலகே ழினுநின் னன்ஞ மநயப் புறமன் னுக"

என்று திருநாவுக்கரசருக்கு இறைவன் திருநாமஞ் சூட்டியதும், அவ்வாறே மாணிக்க வாசக சுவாமிகளுக்கு அருளியதும் காண்க. இவை தீட்சா நாமம் எனப்பெறும். (ஆரூர்நம்பி என்பது பெற்ரேர் இட்ட பிள்ளைத் திருநாமம்.)

நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க அர்ச்சனை பாட்டே - வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத எமக்கும் யாம் விரும்பி ஏற்றுக்கொள்ளும் பணிவிடை யாவது எம்மைப் பாடும் தோத்திரமேயாம்.

அர்ச்சனை - இங்குத் தொண்டுசெய்யும் பலவகை வழிபாடுகளையும் உட்கொண்ட பொதுப்பெயராய் நின்றது. 'அருச்சனை வயலுளன்பு வித்திட்டு' (திருவண்டப்பகுதி) என்ற திருவாசகம் காண்க. அன்பிலிருந்து ஊறிப் பெருகியதும் அதனலே சிறப்பின் மிகுந்தனவும் ஆகிய பாட்டு என இவற்றைப் **பாட்டுக்கு** அடைமொழியாக்கி உரைக்க. என்னை வலிய ஆட்கொண்டது **மன்றுளீர் செயல்** என்று தெளிந்த நம்பிகளுக்குத் தம்முடைய பணியாவது இன்னதென்று காட்டியவாறு. அன்பு மிகுதியினலே தாமே மேல் எழுந்து வழியும் பாட்டே சிறந்ததாய் இறைவன் மகிழ்ந்து அருளுவன் என்க.

'கோழைமிட றககவி கோளுமில வாகவிசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழு மீசன்' —**திருவைகா** - 1

என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

"உண்ணிறைந் தெழுந்த தேனு மொழிவின்றி யாரா வன்பிற்
றிண்ணனர் திருக்கா ளத்தி நாயனர்க் கினிய செய்கை
யெண்ணிய விவைகொலாம்......"—**கண் - புரா** - 110

என்ற திருப்பாட்டையும் நோக்குக.

மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக - இம் மண்ணுலகிலே நாம் விரும்பி எழுந்தருளிய தானங்கள்தோறும் சொல் தமிழ்ப் பாட்டுக்களால் நம்மைப் பாடுக.

தூமறை பாடும் வாயான் - ஆன்மாக்கள் தம்மை யறிந்து அடையும்பொருட்டு மறைகளைத் தாமே வகுத்துப் பாடிய திருவாயினலே. ஆன் - மூன்ரும் வேற்றுமை யுருபு. **வாயார்** என்பது பாடமாயின் வாயினையுடையார் என்ருர் என்க. மறைபாடு வார் இவரது தமிழ்ப் பாட்டை விரும்பினர் என இவற்றின் பெருமையையும், அதனி னும் பார்க்கத் தமக்கு இவற்றில் மிக விருப்பமுடைமையையும், இவற்றின் பயன் மிகுதியையும் காட்டியவாறு. நால்வர் நான்மணிமாலைக் கருத்துக்களை நோக்குக.

நாம் மறை சொன்னேம். நீ அதனையே யொத்த தமிழ்ப்பாட்டுக்களை உனக்குள் ளிருந்து சொல்லும் எமதுரையேயாக உலகமுய்யப் பாடுக என்றபடி.

'ஆரியந் தமிழோடிசையானவன்', 'பாடலினேசையும் மறையினேசையும்' என் பனவாதி தேவாரங்களிலே அப்பர் சுவாமிகள் இவற்றைச் சேர்த்தி அருளியிருப்பதும் காண்க. 'அளப்பில கீதஞ் சொன்னர்க் கடிகடா மருளுமாறே' என்ற பயனுங் காண்க.

வாயார்—என்பதும் பாடம். 70

217. தேடிய வயனு மாலுந் தெளிவுரு தைந்தெ ழுத்தும்
பாடிய பொருளா யுள்ளான் 'பாடுவாய் நம்மை' யென்ன
நாடிய மனத்த ராகி நம்பியா ரூரர் மன்றுள்
ஆடிய செய்ய தாளை யஞ்சலி கூப்பி நின்று. எக

218. 'வேதிய ஞகி யென்னை வழக்கினல் வெல்ல வந்த
ஊதிய மறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட

கோதிலா வமுதே யின்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை யறிந்தென் சொல்லிப் பாடுகே' னெனமொ ழிந்தார். ௭௨

217. (இ - ள்) வெளிப்படை. பிரமவிட்டுணுக்கள் தேடிக்காணாது பின்னர்த் திருவைந்தெழுத்தைப் பாடித் துதித்துக் கண்ட பொருளாயுள்ள இறைவன் இவ்வாறு 'நம்மைப் பாடுக' என்று சொல்ல, அக்கட்டளைப்படி பாடும் வகையைச் சிந்தித்த மனத்தோடு நம்பியாரூரர் சிதம்பரத்திலே சிற்சபையிலே திருக்கூத்தாடும் சீபாதங்களை நினைத்துக் கைகூப்பி நின்று, ௭௧

218. (இ - ள்) வெளிப்படை. 'மறையவனாக உருவெடுத்து வந்து என்னை வழக்கிட்டு வெல்வதற்கென்று வந்த அருட்செயலினால் எனக்கு உள்ள இலாபத்தை அறியாமலிருந்தேன். இருந்தும் எனக்கு அவ்வறியாமையைப் போக்கி உனது உதவியை உணர்ந்து உய்யும் வகையைக் காட்டி உய்வித்த குற்றமில்லா அமிர்தமே! உனது குணங்களாகிய பெருங் கடலிலே எதை அறிந்து என்ன சொல்லிப் பாட வல்லேன்?' என்று விண்ணப்பித்து நின்றார். ௭௨

217. (வி - ரை) **தெளிவுறாது - பாடிய - பொருள்** - தேடிக் காணாது நின்றபின், காண முடியாமையின் காரணத்தைத் தெளியக்கூடாதவர்களாய் சீபஞ்சாக்கரத்தாலே துதிக்க அதற்குரிய பொருளாய் வெளிப்பட்டு விளங்குபவர். '**தெளிவுற ஐந்தெழுத்து**' என்பது பாடமாயின் தெளிவுறுப் பொருள், பாடிய பொருள் எனப் பிரித்துக் கூட்டியுரைத்துக் கொள்க. தெளிவுறுத எழுத்து என்று உரைத்தலுமாம். "தேடிச் சென்ற இருவரும் காணாது மயங்கிச் சீபஞ்சாக்கரத்தைப் பாடித் துதிக்க அப்பொழுது ஆங்கு வெளிப்பட்டருளிய அப்பஞ்சாக்கரப் பொருளாயுள்ளவன்; அல்லது அகங்காரத்தால் தேடி முன் காணாது அலைந்தவர்கள் பின் அகந்தை விட்டுத் துதித்தால் காணலாமென்று தங்களுள்ளே தெளிவுற்றுப் பஞ்சாக்கரத்தைப் பாடித் துதிக்க எனினும் அமையும்." இது இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு.

தேடிய சரிதம் கந்தபுராணத்தும், இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையினும் காண்க. இலிங்கத் திருமேனியின் தத்துவம், சீபஞ்சாக்கரத்தின் தத்துவம் முதலியவற்றை நல் ஆசிரியர்பால் முறைப்படிக் கேட்டு உணர்க.

பாடியபொருள் - பாடிய - துதித்த. ஐந்தெழுத்துப் பாட்டாகி உள்ள தன்மையை அவ்வெழுத்துக்களின் பொருள் எடுத்துரைக்கும் திருமூலர் திருமந்திரம் - மெய்கண்ட சாத்திரங்கள் முதலிய ஞான நூல்களிற் காண்க. அந்தப் பாட்டிற் குறிக்கப் பெற்ற வாச்சியப் பொருள் சிவபெருமானே என்பதாம். அதனாற் றியானிக்கப் பெறும் பொருள் அது குறிக்கும் பொருள் என்க. 'சிவனெனுநாமந் தனக்கே உடைய செம்மேனி எம்மான்' என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

உள்ளான் - என்றும் எங்கும் உள்ளவன். சத்தாகி உள்ளவன்.

பாடுவாய் நம்மை என்ன - ஆதிமந்திரமாகிய ஐந்தெழுத்தாற் பாடப்பெற்ற பொருளாவான் 'நம்மைப் பாடுக' என்று கேட்டமையால் இப்பாட்டின் இயல்பும் உயர்வும் தெரித்தவாறு.

நாடிய - 'நம்மைப் பாடுவாய் என்று பணித்தனரே! நாம் எதை யறிந்து பாடுவோம்? என்று நாடுகின்ற -' என்பது இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு. பாடுதற்குரிய சொல்லும் பொருளும் நாடினார் என்பதும், அவர் வேண்டியவாறு அவற்றையே இறைவன் அருளினார் என்பதும் பின்வரும் இரண்டு பாட்டுக்களாலும் அறியலாம்.

மன்றுள் ஆடிய செய்ய தாள் - மன்று - மெய்ஞ்ஞானம். விராட்புருடனது இதயத்தானம். 'மெய்ஞ்ஞானமேயான அம்பலம்' எனப் பின்னர்க் கூறுவது காண்க.

ஆடிய தாள் - மன்றினிடமாக 'உண்ணிறைந்ததோர் ஆனந்த ஒரு பெருந் திருக்கூத்து.' **செய்ய** - செம்மையைத் தருகின்ற. ஆடுகின்ற காலிற் சிலம்போசையே ஆன்

மாக்களுக்கு இறைவனை உணர்த்துகின்றது. உயிர்கள் எங்கிருப்பினும் அவைகளுக்கு உண்மையறிவையூட்டுவது திருச்சிற்றம்பலத்தேயாடும் தாள்களேயாதலின் திருவெண்ணெய்நல்லூரிற் பாடும்பரிசு நாடிய நம்பிகள் மன்றுள் ஆடிய தாளை வணங்கினுர்.

தேளிவுறு வைந்தேழுத்து-என்பதும்; நம்மை யேன்றுன் - என்பதும் பாடங்கள். 71

218. (வி - ரை) ஊதியம் அறியா தேனுக்கு - உனது வழக்கினுல் கிடைக்க நின்ற பெரிய இலாபத்தை அறியாது 'பித்தனே மறையோன்', (வரிசை 186) 'என்ன முறை', (வரிசை 191) 'பிழைநெறி வழக்கு,' (வரிசை 194) என்றெல்லாம் மறுத்து வலிமை செய்த எனக்கு.

உணர்வு தந்து உய்யக்கோண்ட - 'முன்பு நீநமக்குத் தொண்டன்' (வரிசை 213) என்பனவாதி உண்மைகளை உணர்த்தி உய்வித்த.

கோதிலா அமுதே - அமுதம் என்ற பேரால் வழங்கும் தேவர்களது மருந்து மீளவும் குற்றத்தை (இறப்பும் பிறப்பும்) உண்டாக்கும். ஆனுல் இவ்வமுது கோதினை முற்றும் இல்லையாகச் செய்யும் என்றபடி. 'கோதிலாவமுதே யருள்பெருகு கோலமே...' (திருவாவடுதுறை - தக்கேசி - 8) என்பது நம்பிகள் தேவாரம்.

யாதினை அறிந்து என் சோல்லிப் பாடுகேன் ? - எதை அறிந்து என்ன என்று சொல்லிப் - பாடுவேன். சொல்லும் பொருளும் கடந்து 'உணர்ந்தோதற்கரியவனுதலின்' இவ்வாறு வேண்டினர். முதற் பாட்டின் உரையிற் காண்க. அவனை யறிதற்கும் துதித்தற்கும் அவனே உணர்த்தல் வேண்டும் என்பது சாத்திரம்.

இறைவனைப்போலவே அவனடியார்களும் அவ்வியல்பே வாய்ந்தவர்களாம். இங்கு இறைவனைப் பாடுதற்குப் பொருளும் சொல்லும் பெறுதற்கு அவனை வேண்டிப் பெற்றது போலவே, பின்னர்த் திருவாரூரில் 'அடியார்களைப் பணிந்து நிறைசொன்மாலை பாடு' (வரிசை-343) என்று இறைவன் பணிக்க, நம்பியாரூரர் 'இன்னவாறு இன்னபண் பென்றேத்துகேன்? அதற்கு யானுர்? பன்னுபாமாலைபாடும் பரிசெனக்கு அருள் செய்' (வரிசை - 344) என்று வேண்ட இறைவன் 'தில்லைவா ழந்தணர்த மடியார்க்கும் அடியேன் ' (வரிசை - 345) என்று சொல்லும் பொருளும் எடுத்துக் கொடுத்து அருளியதும் காண்க. அடியார்களும் இறைவனைப் போன்றவர்களே என்பது திருஞானசம்பந்த சுவாமிகளது திருமயிலைப் பூம்பாவைத் திருப்பதிகத்தின் கருத்தாம் என ஆசிரியர் ' மண்ணினிற் பிறந்தார் ' என்ற பாட்டினுல் விளக்கியுள்ளார். விரிவு ஆங்குக் காண்க. இதனை இப்புராணத்துள் யாண்டும் காணலாம்.

வேதியனுகி - வேதிப்பவனுகி-அறியாதேனை அவ்வறியாமையிலிருந்து வேதித்து உணர்வு தருபவனுகி - என்பதும் குறிப்பு.

பேருங்கடல் - பெருங்கடல் போன்றது - இங்கு அளவின்மை குறித்து நின்றது. இவ்வாறு இறைவன் தம்மை வலிய ஆட்கொண்ட அருட்குணம் பயன்றூக்காது செய்த உதவியாதலின் குணப் பேருங்கடல் என்றூர். திருக்குறளுட் காண்க. 72

219. அன்பனை யருளி னேக்கி யங்கண ரருளிச் செய்வார்
'முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனை யாத லாலே
என்பெயர் பித்த னென்றே பாடுவா' யென்றூர்; நின்ற
வன்பெருந் தொண்ட ராண்ட வள்ளலைப் பாட லுற்றூர். எ௩

(இ - ள்) அன்பனை...செய்வார் - இவ்வாறு வேண்டிய அன்பராகிய வன்றெண்டரை இறைவர் அருட்பார்வை செய்து அருளிச் செய்வாராகி; 'முன்பு... என்றூர்' - 'நீ முன் மணப்பந்தலிலே என்னைப் 'பித்தனே மறையோன் ' என்று சொன்னுய். ஆதலால் என் பெயர் பித்தன் என்றே வைத்துப் பாடுவாயாக ' என்றூர் ;

நின்ற...உற்றார் - அவர் அருளை வேண்டி நின்ற வன்றொண்டரும் தம்மை ஆட்கொண்ட இறைவனை அவ்வாறே பாடலாயினர்.

(வி - ரை) அருளின் நோக்கி - அவர் கேட்டதைத் தரும் வகை அருட்பார்வை செய்து அப்பார்வையாலே தம்மைப் பாடுதற்குரிய பொருளை உணர்த்தினார் என்க. ஆசாரியருடைய அருட்பார்வையே 'பார்த்த பார்வையால் இரும்புண்டநீரென' அறியாமை முழுதும்போக்கி, முழுஅறிவையும் தரும் என்பது சாத்திர உண்மை. அருள் நோக்கம் செய்வார் அதற்கு உரிய கண்ணுடையவரேயாதல் வேண்டுதலின் அங்கணர் என்றார். முன்னே வேதியராய் வெருளின் நோக்கியது போலல்லாமல் இப்போது அங்கணராய் அருளின் நோக்கினார் என்க.

அருளின் நோக்கி - அருளிச்செய்தார் - முன்னையது அருள் பார்வை ; பின்னையது உபதேசம். இவை தீக்கைமுறை. சொற்றமிழ்பாடிச் சிவார்ச்சனை செய்க என்று பணித்தாராதலின் அதற்குரிய சிவதீக்கையும் செய்தல் வேண்டுமென்ற ஆகமவிதிபற்றி என்க.

அன்பனை அருளின் நோக்கி - 'அருள் என்னும் அன்பு ஈன் குழவி' என்ற (குறள்) ஆணையின்படி அன்பு முதிர்ந்தபோதே அருள்வெளிப்படும். ஆதலின் வன்றொண்டர் அன்புடையாராயினபோது அருள் வெளிப்பட்டதென்பார் 'அன்பனை அருளின் நோக்கி' என்றார்.

'பித்தனென்றே பாடுவாய்' - பாடுதற்குச் சொல்லும் பொருளும் வேண்டினார்க்குப் பொருளை அருட்பார்வையா லுணர்த்தினாராதலின், எஞ்சிய, சொல்லை இதனால் உணர்த்தினாராயிற்று.

முன்பு பித்தன் என்று மொழிந்தனை - பித்தனென்றேபாடு - யார் யார் எவ்வெவ்வாறு இறைவனைப் பாவிக்கின்றார்களோ அவரவர்க்கு அவ்வவ்வாறே நின்று அருளுவன் சிவன் என்னும் உண்மை யுணர்த்தற்கு. இறைவனை வேடனாய் எண்ணிய விசயனை வேடுவனே யாக்கியருள் செய்தமை காண்க. 'ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்' என்பது அப்பர் திருவாக்கு.

நின்ற - அவ்வழியிலே அமைந்து நின்ற. வன்பெருந்தொண்டர் - பெரு வன்றொண்டர். வள்ளல் - வரையாது கொடுப்போன். ஆளல்ல என்று மறுத்துக் கொடுமொழி கூறினும் விடாதுபற்றி ஆண்டமையே வள்ளற்குணமாம். 73

வேறு

220\. கொத்தார்மலர்க் குழலாளொரு கூறாயடி யவர்பால்
மெய்த்தாயினு மினியானையவ் வியனாவலர் பெருமான்
'பித்தாபிறை சூடி'யெனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார். எச

221\. முறையால்வரு மதுரத்துடன் மொழியிந்தள முதலிற்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்
நிறைபாணியி னிசைகோள்புணர் நீடும்புகல் வகையால்
இறையான்மகி ழிசைபாடின னெல்லாநிக ரில்லான். எரு

220\. (இ - ள்) வெளிப்படை. உமையம்மையாரை ஒரு பாகத்து வைத்து (அதனால்) அடியவர்களிடத்துத் தாயினுஞ் சிறந்த இனிமை செய்கின்றவராகிய சிவபெருமானை, அவர் ஆணையிட்டவாறே நாவலூர் நம்பிகள் 'பித்தா பிறைசூடி' என்று தொடங்கும் பெரிதாகிய திருப்பதிகத்தை இந்நிலவுலக முதலாகிய எல்லா உலகங்களும் உய்யும்படித் தொடங்கினாராகி, எசு

221. (இ - ள்) முறையால் வரும் - பண்ணிலக்கணம் பதினொன்றில் முறைமை யிலே வருகின்ற ; மருதத்துடன் மொழி - நாற்பெரும் பண்களில் மருதத்தின் திறத்த தாகக் கூறப்பட்ட ; இந்தளம் - மருதயாழ்த்திறம் நான்கனுள் வடுகு என்னும் இந்தளத் திலே ; முதலில் - முதல் என்னும் இசைப்பாகுபாட்டினுலும் ; குறையா நிலை - நால்வகை நிலையினும் நிலைப்படுத்தித் தாய்தாகக் காட்டும் தன்மையிலே ; மும் மைப்படி - வலிவும் மெலிவும் சமனுமென்னும் தானநிலையையுடைய இசைக்கூறுபாடு களுக்கு இசைய; கூடும் கிழமையினல்-பொருந்திய கிழமையினுலும் ; நிறை பாணியின்- தாள விகற்பங்களிலே நிறைந்த அளவுள்ள தாளத்துடன் ; இசை கோள் புணர் - முற் கூறிய பதினொன்றுலும் பண்ணினீர்மையை அறிந்து, அறிந்தவண்ணம் அவ்விலக்கணம் முழுதும் நிரம்பும்படி ; நீடும் புகல் வகையால் - அசையா மரபில் நீடிச் சென்று பயன் தந்து சொல்லப்பெறும் யாழ்த்திறன் வகையிலே ; இறையான்...இல்லான் - இறைவன் மகிழும் தமிழ் இசைப்பாட்டைத் தமக்கு ஒருவரும் ஒன்றுலும் நிகரில்லாத புலமையோ ராகிய நம்பிகள் பாடியருளினுர். எரு

220. (வி - ரை) கோத்தார்மலர்க் குழலாள் - கொத்தாய் நிறைந்து மலர்ந்த கொன்றை மலரிற்றோன்றும் கனிபோன்ற குழலையுடைய உமையம்மையார். வலப்பால் இறைவன் சடையிலே தரித்த கொன்றை மலர்கள் மலர்ந்து தரும் பயனுகிய அவற் றின் கனிகள் போன்றது அம்மையாரின் நீலக் குழல் என்க. மலர் அதில் உண்டாகும் கனிக்கு ஆகுபெயர். 'பிறந்தவழிக் கூறலும்' என்ற தொல்காப்பியம் காண்க. கொத்தாய் மலர்தல் கொன்றையின் இயல்பாம்.

"சடைமேலக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும்—முடிமேல்
வலப்பாலக் கோல மதிவைத்தான் றன்பங்கிற்
குலப்பாவை நீலக் குழல்"—அற்புதத் திருவந்தாதி - 50

என்ற காரைக்காலம்மையார் திருவாக்குக் காண்க. ஐயன் தமது மலர்ந்த அருட் பயன் றர அம்மையாருடன் வந்தாராகலின் இவ்வாறு கூறினுர். கொத்தாகிய மலர்மாலைகளை யணிந்த குழல் என்றலுமாம்.

கூறாய்...இனியானை - இனியனுதற்குக் காரணங் கூறியவாறு. அம்மையார் அருளே திருமேனியா யுடையார். அடியார்களுக்கு அருள்செய்ய வெளிப்படும்போ தெல்லாம் அம்மையாருடனே அப்பனுர் எழுந்தருளுவர். ஆதலின் இனியானுய் இருத் தல் அம்மையார் ஒரு கூறாய் வெளிப்பட்டபோதே நிகழ்வதாம் என்க. அடியார்க்கு இனியான் எனவே, அடியர் அல்லார்க்கு அல்லாதவன் என்பர். 'அல்லாதார்க் கல்லாத வேதியனை'—திருவாசகம். இறைவன் எல்லா உயிர்களுக்கும் ஒப்ப அருள்செய்வானுயி னும் அடியார்களிடத்துத் தாயினும் சிறந்து இனிமை செய்வன்.

மெய்த்தாயினும் இனியார் - உண்மையிலே தாயாவாரைவிட இனிமையே செய்பவர். மெய்த்தாய் - தாயரேயாயினும் உண்மையில் பிள்ளைக்கு ஆவனவற்றை அறிந்து செய்யும் அறிவும் ஆற்றலும் இல்லாமையால் அதற்குக் கேடுசூழ்வர் பலர்; அவர் போலன்றி உண்மையிலே தாய்த்தன்மை வாய்ந்த இனியவர் ; அவரினும் மேம்பட்டு என்றும் எங்கும் இனிமையே செய்வார். மெய் - உடம்பு எனக்கொண்டு, உடம்பின் தாய் இவ்வொரு பிறப்பிலே ஒரோவழி இனிமை செய்வாள் ; இவர் உயிரின் தாயாய் உயிர்க்குயிராய் இருந்து எழுபிறப்பும் என்றும் இனிமை செய்வார் என்றுரைத்தலு மொன்று. அன்றியும் அந்த உடம்பினை வாராமலே செய்து 'தாயொடு தான்படும் துக்கசாகரத் தொல்லையில் பிழை'ப்பிக்கும் இனியான் என்றலுமாம். இதனையே,

"என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாளொரு வன்னுளன்"—திருஇன்னம்பர் தேவாரம்

"பானிலீனைர் தூட்டும் தாயினுஞ் சாலப்பரிந்து......"

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"—திருவாசகம்

முதலிய எண்ணிறந்த திருவாக்குக்கள் வற்புறுத்துவன.

அவ்வியனாவலர் பெருமான் - வரிசை 181-ம் பாட்டில் 'நாவலர் பெருந்தகை' என்ற இடத்துக் காண்க. **வியன்** - பெரிய. இயல்நாவலர் எனக் கொண்டுரைத்தலு மொன்று. 'எத்தகைய பெரியோர்களும் குறித்தறியும் கோமான்' என்பது தோன்ற அகரச்சுட்டு வருவித்துக் கூறினர் என்பர் ரூ. சுப்பராய நாயகர்.

'பித்தா பிறைசூடி' என - முன்னே புத்தூரில் மணப்பந்தரிலே 'பித்தர்' என்றது அறியாமையாற் கூறியது. அறிந்தபின் அவ்வாறு கூறுதல் அபசாரம். ஆயினும் அவ்வாறே பாடும்படி ஆணையிட்டபடியால் இப்போது 'பித்தா' என்றேன். இங்கு யான் அறிந்துகொண்டபடி நீ பித்தன் அன்று. 'பிறை சூடியவனே' - 'மதித்தலைவனே'. 'பிறைசூடியதாலே எடுத்துக்காட்டும் கருணையே காரணமாகப் பித்தன்போல வந்தவனே - என்ற உட்குறிப்புக்களைக் காட்டப் **பிறைசூடி** என அடுத்துவைத்தார். ஆதலின் ஆசிரியர் 'பித்தா' எனப் பெரிதாம் பதிகம் என்னாது 'பித்தா பிறைசூடி' என்பதனையும் உடன்சேர்த்து, என - என்று கூறினர். **பித்தா** - அடியவர்களைத் தொடர்ந்து ஆட்கொள்ளுவதிலே பித்துக்கொண்டார்போலத் திரிபவன். தன்பாற் பித்துக்கொண்டாரிடம் தான் பித்துக்கொண்டவன். இதன் உண்மை, இறைவன் கருணையினாற் செய்யும் திருவிளையாடல்களிலெங்கும் விளங்கும். '**பித்தா பிறைசூடி**' எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவெருக்கத்தம்புலியூர்த் தேவாரத்திலருளியதும், 'பேய்பாட நடமாடும் **பித்தன்** றன்னை' என்று அப்பர்சுவாமிகள் திருநாரையூர்த் திருத்தாண்டகத்தில் அருளியதும் காண்க.

பெரிதாம் திருப்பதிகம் - பாசுரம் பத்துக்கொண்டதாற் பதிகம் என்னும் பாடற்றொகுதியேயாயினும் பொருளாலும் பயனாலும் மிகப் பெருமை வாய்ந்தது. **பெரிதாம்**- பெரிதாக ஆக்குவிக்கும் என்றலுமாம். அஃதாவது தன்னைப் பயில்வார்க்கு உய்யும்வழி தருதல். அதனாலே **இத்தாரணி முதலாம் உலகு** எல்லாம் உய்ய என்றார். 'பித்தா' என்ற குற்றத்தையே குணமாகக் கொண்டு அருள்செய்ததாதலின் இதுவே **பெரிதாம் திருப்பதிக**மாயிற்று என்பர் சிவ ஸ்ரீ அகரம் - அமிர்தேஸ்வர சிவாசாரியார் அவர்கள்.

தாரணி முதலாம் உலகு - ஏனை மேல் கீழ் உலகங்களைப்போலல்லாது கருமங்களுக் கீடாய நன்மை தீமைகளை நுகர்தற்கிடமாயும் சிவபூசை செய்து பிறவி நீங்கப்பெறுதற் கிடமாயு மிருத்தலால், நடுவணதாகிய தாரணியை முன்வைத்து, இகரமாகிய அண்மைச் சுட்டும் தந்து, 'இத்தாரணி முதலாம் உலகு எல்லாம்' என்றார்.

எடுத்தார் - வினைமுற்று எச்சப்பொருளில் வந்தது. தொடங்கினராகி என்க. இது வரும் பாட்டிலே '**பாடினன்**' என்றதனோடு முடியும். 74

221. (வி - ரை) **முறையால்** - முறைமையினாலே ; இங்குக் கூறிய **முதல், கிழமை** முதலியவை இசைப்புலவன் ஆளத்தி வைத்த பண்ணின் நீர்மையை யறியும் பதினொரு பாகுபாடுகளைக் குறிப்பன. அவையாவன : முதல் - முறை - முடிவு - நிறை - குறை - கிழமை - வலிவு - மெலிவு - சமன் - வரையறை - நீர்மை - என்பன. இவற்றின் விரிவு சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை அடியார்க்கு நல்லார் உரை முதலியவற்றுட் காண்க.

மருதத்துடன் - **மருதம்** - பாலை - குறிஞ்சி - மருதம் - செவ்வழி என்ற நாற்பெரும் பண்களில் ஒன்று. இது மருத நிலத்துக்குரியது - காலையிற் பாடத்தக்கது என்பர். 'மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தனர்' - புறம் - 149 காண்க,

இந்தளம் - நவிர் - வடுகு - வஞ்சி - செய்திறம் - என்னும் மருதயாழ்த்திறன் (பெரும் பிரிவு) நான்கிலே ஒன்றாகிய **வடுகு** என்றும், மருதயாழ்த்திறன் வகை (உட்பிரிவு) பதினாறில் **இந்தளம்** என்றும் வழங்கும் பண்ணிலே. (பிங்கல நிகண்டு-இசைவகை பக் - 170, 171). **இந்தளம்** - பகற்பண் பத்தில் ஒன்று. காலை 10 நாழிகை முதல் 12 நாழிகை எல்லைக்குள் பாடத்தக்கது. நம்பிகளை இறைவன் ஆட்கொண்டருளியநேரத்தை இதினின்றும் தெரியலாம் என்பது சிலர் கருத்து.

முதலில் - **முதல்** - மேற்குறித்த இசைப்பாகுபாடு பதினொன்றில் ஒன்று.

குறையா நிலை - வண்ணக் கூறுபாடு - தாளக் கூறுபாடு - பாலை நிலை - பண்ணு நிலை - என்ற நான்கினையும் நிலைப்படுத்தித் தூய்தாகக் காட்டும் தன்மைகள். இவையும் இசையின் பாகுபாடுகளாம். சிலப் - அரங் - 26 'சீரும்' என்றதன் கீழ் உரை காண்க. அதற்குள்ள சுரங்களைத் தத்தமக்குள்ள மாத்திரையிற் குறையாமலிருக்க வைத்து - என்று கூறுவாருமுண்டு.

மும்மைப்படி - வலிவும் மெலிவும் சமனும் என்ற தானநிலையினையுடைய இசைக் கூறுபாடுகளுக்கெல்லாம் பண்ணினீர்மை குன்றாமல். (சிலப் - அரங் - 93 - 94 உரை.) இதற்கு எடுத்தல் படுத்தல் நலிதல் எனவும், தாரம், மந்தாரம், மத்திமம் (ஆனாயர் புரா - 27) எனவும் பொருள் கூறுவர்.

கூடும் கிழமையினால் - '...தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்
கிளிமுத லாகிய **வேதிர்படு கிழமையும்**'

(சிலப் - அரங் - 85, 86, 87 உரை) என்று கூறியபடி கூடிய கிழமையாகிய இசைப் பாகுபாட்டுடனே.

நிறை பாணியின் - **பாணி** - தாளம். 'கொட்டும் அசையும் தூக்கு மளவும், ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்'. (சிலப் - அரங் - 16) இவை மாத்திரைப் பெயர்கள். கொட்டு அரை மாத்திரை; அதற்கு வடிவு - க; அசை ஒரு மாத்திரை; வடிவு - எ; தூக்கு இரண்டு மாத்திரை; வடிவு - உ; அளவு மூன்று மாத்திரை; வடிவு ஃ; ... இவற்றின் றொழில்: கொட்டு - அமுக்குதல்; அசை - தாக்கி எழுதல்; தூக்கு - தாக்கித் தூக்குதல்; அளவு - தாக்கின ஓசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல். **பாணி** - அரைமாத்திரையுடைய ஏகதாள முதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதிலோசனமீறாகக் கூறப்பெற்ற நாற்பத்தொரு தாளமும், சச்சபுட முதலான பஞ்சதாளமும், பிறவும், தாளவிகற்பங்களும் ஆம் என்பர்.

இசைகோள் புணர் - பண்ணிலக்கணம் பதினொன்றும் நிரம்பும் என்க. 'பண்ணீர்மையை மேற்சொன்ன பதினொரு பாகுபாட்டினும் அறிந்து, அறிந்த வண்ணம் அவன் தாளநிலை எய்தவைத்த நிறம் தன் கவியினிடத்தே தோன்றும்படி' என்ற அடியார்க்கு நல்லார் உரை காண்க. (சிலப் - அரங் - 41, 42). **இசைகோள்** - நிறைதாளம் - என்றும் கூறுவர்.

நீடும்புகல் வகையால்-அசையா மரபிலே பகைமொழியாற் றடுக்கப்படாத அளவில் நீடு சென்று பயன்றருவதாய் உரிய யாழ்த்திறன் வகையினாலே. **புகல்** - மகிழ்ச்சி நீடிய மகிழ்ச்சியை விளைவிக்கும் வகையால்-என்றலுமாம். "போரெனிற் புகல்மறவர்"-(புறம்)

இறையான் மகிழ் இசை - "நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அர்ச்சனை பாட்டே யாகும்" ; "ஆதலாற் சொற்றமிழ் பாடுக" (வரிசை 216) என்று இறைவன் கூறிய இசையுடன் கூடிய தமிழ்ப்பாட்டு. **இசை** - 'இசை யென்பது நரம்பு அடைவால் உரைக்கப்பட்ட பதினொராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன் றாகிய ஆதியிசை' என்றும், 'பல இயற்பாக்களுடனே நிறத்தை **இசைத்தலால்** இசை யென்று பெயராம்' (சிலப் - அரங்- 45 - உரை) என்றும் கூறுவர் அடியார்க்கு

நல்லார். "நிறம்பயில் இசையுடன் பாடி" (திருஞான - புரா - 241) என்பதும் இங்கு ஆராயத்தக்கது. மேற்கூறிய இசையிலக்கணங்களுள் ஈண்டைக்கமைவன ஏற்ற பெற்றி வைத்துக் கண்டுகொள்ளத்தக்கது.

தமிழ் - இங்குக் குறித்த **தமிழ்ப்**பாட்டாவது 'வடவெழுத்தொரீஇ வந்த தமிழ் எழுத்தானே உறழ்ந்து கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும், இயலிசை நாடகமென்னும் மூவகைத் தமிழும்' என்பது அடியார்க்கு நல்லாருரை. 'ஆரியந் தமிழோ டிசையான வன்'. - தேவாரம்.

எல்லாம் நிகரில்லான் - ஒருவரும் ஒன்றுலும் நிகரில்லாதவராகிய நம்பிகள் - வரிசை 67-ம் பாட்டினுரையில் '**நாடு எல்லாம் - நலமெல்லாம்**' என்றதின் கீழ் உரைத்தாங்கு உரைத்துக் கொள்க.

" இப்பாட்டிற்குப் பின்வருமாறும் பொருள் கூறுவதுண்டு. "முதலில்" என்பது முதல் "இசைகோள் புணர்" என்பது வரையிலுமே மாறுபாடு ; அப்பகுதிக்கு மட்டும் பொருள் வருமாறு :—**முதலில் குறையாநிலை மும்மைப்படி** - (ஓர் அடியிலுள்ள நான்கு சீர்களிலே) முதலிலே, குறைவில்லாத நிலைமையுடைய சீர்கள் மூன்று முறை ; **கூடும்கிழமையினுல்** - பொருந்திய உரிமையினுல் ; **நிறை பாணியின்** - மேலே நிறைவுபெறும் தாளத்திற்கு ஏற்ப ; **இசைகோள் புணர்** - இசை கொள்ளுதற்குரிய குறைந்த சீரானது பொருந்தும். **குறையாநிலை மும்மைப்படி** யென்பது கனிச்சீர்க ளாகிய முன் மூன்றையும். **முதலிற் குறையாநிலை** யென்றமையாற் பின்பு குறைந்த தென்பது பெறப்பட்டது ; அது நான்காம் சீராகிய மாச்சீராகும் " என்பது மகாமகோ பாத்தியாய டாக்டர் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் முக்கனியும் மாவும் சீர்பெற எழுதிச் சிறப்பித்ததாம்.

நாவலர் பெருமான் (ஆகிய) - எல்லாம் நிகரில்லான் - இனியானை - பதிகம் - உய - எடுத்தார் (ஆகி) முறையால் - மருதத்துடன் - இந்தளத்தில் - முதலினுலும் - மும்மைப் படி கூடும்கிழமையினுலும் - நிறைபாணியின் - வகையாலும் - தமிழ் இசை பாடினன் என்று இவ்விரண்டு பாட்டும் தொடர்ந்து கூட்டிப் பொருளுரைத்துக் கொள்க. அன்றி-இல் - ஆல் - என்ற உருபுகள் ஓடுப் பொருளில் வந்தனவாகக் கொண்டு முதலி னேடும், கிழமையோடும், வகையினேடும் பாடினன் எனப் பொருள் கோடலும் ஆம். இவ்வுருபுகள் இப்பொருளில் வருதலை "தூங்கு கையான் ஓங்கு நடைய" என்ற புறப் பாட்டாலறிக. இந்தளப்பண்ணுக்குரிய இராகம் - நாதநாமக்கிரியை என்பர்.

இப்பாட்டினுலே இப்பதிகப் பண்ணுக்குரிய இசையிலக்கணமும் பொருளும் பயனும் முதலிய எல்லாம் சொல்லியவாறு. தேவாரப் பதிகத்தைப்பற்றி இப்புராணத் தில் முதலிற் கூற நேர்ந்த இடம் இதுவாதலின் அத்தமிழிசையின் பண் அமைதி முற்றும் குறித்தனர்.* இவ்வாறே பிறவும் கண்டுகொள்க என்று வைத்தவாறுயிற்று. இது மிடற்றிசை. இதுபோலவே குழலிசை யிலக்கணத்தை விரிவாய் ஆறுயநாயனுர்

*இங்ஙனம் மூலாதாரந் தொடங்கி எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசை யென்றும் - பண்ணென்றும் பெயராம்.

> பாவோ டணைதல் இசையென்ருர் பண்ணென்ருர்
> மேவார் பெருந்தான மெட்டானும்—பாவா
> யெடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிப்
> படுத்தமையாற் பண்ணென்று பார் '

பெருந்தான மெட்டினும் கிரியைக ளெட்டாலும் **பண்ணிப் படுத்தலாற் பண் ணென்று பெயராயிற்று**. பெருந்தான மெட்டாவன : நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணக்கு, உதடு, பல், தலை என இவை. கிரியைகளெட்டாவன : எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என இவை.

புராணத்தும், அதன்மேல் யாழினுக்குரிய சிறப்பியல்பைத் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணங்களிலும் கூறினர். **முறையால்வரு மதுரத்துடன்** என்றும், **மருத்தத்துடன்** என்றும் பாடங் கொண்டு, படிப்படியாய் உயர்ந்து வருகின்ற சுரவின்னியாஸ விசேஷங்களால் உண்டாகிற நயப்புடன் என்றும், முறைமையால் வரும் இனிமையுடன் என்றும், கூடும் **கிழமையினல்** என்பதற்குப் பொருந்தும் உரிமையோடு என்றும், பிறவாறும், பொருள் கூறுவாரும் உண்டு. **மதுரம்**-மிடற்றுப் பாட்டு என்றும் கூறுவர்.

பதிகம் (பண் - இந்தளம்) திருவெண்ணெய்நல்லூர்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே. (1)

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - பித்தனே! பிறைசூடி! பெருமானே! அருளாளா! எந்த வகையாலும் உன்னை மறவாமல் நினைக்கின்றேனாகிய என் மனத்தினுள்ளே உன்னைப் பதியவைத்து விட்டாய்; பெண்ணையாற்றின் தென்கரையிலே திருவெண்ணெய் நல்லூரிலே திருவருட்டுறை எனுந் திருக்கோயிலிலே எழுந்தருளிய எனது அத்தனே! ஆயா! அன்னே! அடிகேள்! ஆதீ! அண்ணா! ஆனாய்! ஆற்றாய்! அழகா! உனக்கு இப்போது ஆளாயினேன். முன்பு ஆளல்லேன் என்று மறுத்தேன்; இனி அவ்வாறு மறுக்க முடியுமோ? முடியாது - என்றதாம். இப்பதிகம் முழுதும் நம்பிகளது சரிதக் குறிப்பாய் இப்புராணப் பகுதிக்கு அகச்சான்றாதல் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்புக்கள் - (1) **எத்தான் மறவாதே** - நம்பிகள் திருப்புக்கொளியூர் அவிநாசிப் பதிகத்திலே 'எத்தான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே' என்றமை காண்க. **எத்தான்**-எந்தக் காரணத்தாலும். (3) பொன், மணி, வயிரம் இவற்றை அலைய மோதி வாரி எடுத்துக் கொண்டு அதனால் விளங்கும் பெண்ணை. (4) **பெற்றம்** - எருது. ஊர்தி - வாகனம். **ஊர்தீ** - ஊர்கின்றவன். (5) **பண்டம்** - முத்தி. **ஆதன்** - ஆப்தன் ஆத்தன் என்று கொண்டு ஆத்தனாகிய உனது உடைமையாயினேன் என்க. (7) இது இறைவனது எல்லாமான எங்கும் நிறைந்த இலக்கணமுணர்த்திற்று. **ஆனாய் உனக்கு** - மேற்கூறியபடி எல்லாமாய் நின்ற நீயே திருவருட்டுறையுள்ளும் உளன் ஆயினாய். நீ ஒருவனே ஆனவன்; ஏனையாவும் துணை அல்லாதவை-என்றலுமாம். (8) **ஏற்றார்** - உன்னை எதிர்த்தவர்கள்; **செக்கர் வான் நீர் ஏற்றாய்** - செக்கர் வான் போன்ற சடையிலே கங்கை நீரை ஏற்றவனே. 'மாலையின் தாங்குருவே போலும் சடைக்கற்றை' (அற்புதத் திருவந்தாதி); ஆறு - வழி. **ஆற்றாய்** - வழிகாட்டுபவன். **என லாமே** - என்ற ஏகாரங்கள் வினாப்பொருளில் வந்தன.

தலவிசேடம் - இத்தலம் விழுப்புரம் - திருச்சிராப்பள்ளி இருப்புப்பாதையில் திருவெண்ணெய்நல்லூர் ரோடு என்ற நிலையத்திலிருந்து வடக்கே 4 நாழிகை அளவில் மட்சாலையில் அடையத்தக்கது. மாம்பழப்பட்டு நிலையத்திலிருந்து தெற்கே மட்சாலையில் 6 நாழிகையளவிலும் அடையத்தக்கதாம். ஆனால் இடையில் பெண்ணையாற்றுக்குப் பால

றும் பரிசிலும் இல்லை. உமாதேவியார் பசு வெண்ணெயாலே கோட்டை யமைத்து அத னிடையில் தவவேள்விசெய்து அருள்பெற்ற தலமாதலின் இப்பெயர் பெற்றதென்பது வீரசிங்காதன புராண வரலாறென்பர். இங்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் தரிசித்துப் பாடியதாகப் புராணம் கூறும். பதிகம் இறந்துபட்டது போலும். 'பெண்ணை அருட்டுறை தண் பெண்ணாகடம்' என்ற க்ஷேத்திரக்கோவை காண்க. இங்குச் சைவ சமய சந்தானசாரியர் நால்வரில் முதல்வரான மெய்கண்ட சுவாமிகள் திருக்கயிலையி னின்று ஆகாயவழி போந்த பரஞ்சோதியாரிடம் உபதேசம் பெற்றுச் சிவஞானபோத சாத்திரம்செய்து அருளினர். இவருக்கு அருள்செய்த மூர்த்தி பொல்லாப் பிள்ளை யார். **சுவாமி** - தடுத்தாட் கொண்ட தேவர் - கிருபாபுரீசர் - எனப்பெறுவர். **தேவி யார்** - வேற்கண் மங்கையம்மை. திருவாயிலுக்கு மேலே 'மாதோடு உம்பரின் விடை மேற்றோன்றி' நம்பிகளுக்குக் காட்சி தந்த திருவுருவம் தனி மாடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. **ஆறு** - பெண்ணை. இது முன் ஓடிய வழிதான் இப்போது மலட்டாறு என்று அழைக்கப்பெற்று இத்தலத்துக்கு வடக்கே $\frac{1}{4}$ நாழிகை யளவில் உள்ளது. நீரின்மையாலே இப்பெயர் பெற்றது போலும். அன்றி மலாடு என்ற நாடுபற்றி இப் பெயர் பெற்றதென்றும் கருதுவர். பெண்ணை இப்போது பழம்பெண்ணைக்கு வடக்கே 2 நாழிகை யளவில் ஓடுகின்றது. இது நடுநாட்டில் 14-வது தலம்.

மதுரத்துடன்—மருத்தத்துடன்—புகழ் வகையால்—என்பனவும் பாடங்கள். 75

222. சொல்லார்தமி ழிசைபாடிய தொண்டன்றனை 'யின்னும்
பல்லாறுல கினினம்புகழ் பா' டென்றுறு பரிவி
னல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புர மெய்தானருள் செய்தான். எசு

(இ - ள்) சொல்...தனை - இவ்வாறு தம்மைச் சொற்றமிழ் இசைப்பதிகத்தினுற் பாடிய ஆளாகிய நம்பிகளை ; இன்னும்...என்று - 'இனிமேலும் இவ்வாறே பல வகைக ளாலும் உலகத்திலே நமது புகழ்களைப் பாடுவாயாக' என்று ; நல்லார்...நம்பன் - நல்ல வர் வாழ்தற்கிடமாகிய திருவெண்ணெய்நல்லூரில் அருட்டுறையிலே மேவிய இறைவ னும்; எல்லா...எய்தான் - எல்லாவுலகங்களும் உணர்ந்துய்தற்பொருட்டுத் திரிபுரங்களை எரித்தவனுமாகிய பெருமான் ; உறு பரிவின் அருள் செய்தான் - உறும் கருணைப் பெருக்கினுலே ஆணையிட்டு எழுந்தருளினர்.

(வி - ரை) சொல்லார் தமிழ் இசை - சொல்லும் தமிழும் இசையும் நிறைந்த பதிகம் - ஆகுபெயர். 'சொற்றமிழ் பாடுக' (வரிசை 216) 'திருப்பதிகம்' (வரிசை 220) 'இசைபாடினன்' (வரிசை 221) என்று கூறியவற்றைத் தொகுத்து முடித்துக் காட்டிய வாறு. உரை அவ்வவற்றின் கீழ்க் காண்க. **சொல்** - இதுவே சொல் ; வேறு எச்சொல் லும் பொருந்தா என்னும்படி உள்ள சொல். 'சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை - வெல்லுஞ்சொ லின்மை யறிந்து' என்பது குறள். **ஆர்** - பொருந்திய. இறைவனது புகழ் என்னும் பொருள் பொருந்திய சொல் என்றலுமாம்.

பல்லாறு உலகினில் - உலகினிலே பலவாறுகளாலும் நம் புகழ்களைப்பாடுக. இறை வன் புகழ்கள் பலவானமையாலும் உயிர்களும் அவற்றின் பக்குவங்களும் பலவானமை யாலும் பாட்டும் பலவாயின. **பல்லாறு** - வேறு பல வழிகளிலே செல்லும் உலகத்திலே என்று உரைத்தலுமாம். பற்பல தலங்களிலும் சென்று பலவாற்றாலும் பாடுக. 'மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திட' (வரிசை 35) என்றதும், 'உலகெல்லாமுய' (வரிசை 220) என்றதும் காண்க.

உறுபரிவில் - உயிர்கள் இத்திருப்பாட்டுக்களை உணர்ந்து பாடித் தம்மையடைந்து உய்யவேண்டுமென்ற கருணையினால். **உறு** - தம்மை உறவேண்டுமென்ற. உயிர்களின்

மேல் உற்ற என்றலுமாம். **எல்லா உலகுய்ய - உறு பரிவில்** என்று கூட்டி உரைக்க. **உலகு** - முற்றும்மை தொக்கது. **உலகு** - ஈண்டு உயிர்களைக் குறித்தது.

நம்பன் - நம்பி அடையத்தக்கவன். நம்பி என்ற பெயரும் இதுவே.

புரமெய்தான் - உயிர்களை மும்மலமும் நீக்கி ஆட்கொள்ளும் தமது இயல்பைத் தெரிக்குமுகத்தாலே திரிபுரங்களையும் எரித்தழித்தவன். 'முப்புர மாவது மும்மல காரியம்' என்றருளினார் திருமூலதேவர். தான் செய்யும் தன்மைகளை நம்பிகளுக்கும் ஆக்கி, உயிர்களின் மலநீக்கத்தின் பொருட்டே நம்பிகளையும் பாடும்படி ஆணையிட்டான் என்பது குறிப்பார் **புரமெய்தான் அருள் செய்தான்** என்று சிறப்பாற் கூறினார். நம்பனும் எய்தானுமாகிய இறைவன் என்க. நம்பன் - எய்தான் - உறுபரிவில் - தொண்டன் றனை - பாடு என்று - அருள்செய்தான் என்று கூட்டுக. அருள்செய்து எழுந்தருளிப் போயினார் என வருவித்துரைக்க. 76

*223. அயலோர்தவ முயல்வார்பிற ரன்றேமண மழியுஞ்
செயலானிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை யொழியாதுணர் வழியிற்
பெயராதுயர் சிவலோகமு மெளிதாம்வகை பெற்றாள். எ எ

(இ - ள்) அயல்...பிறர் - பிறவாகிய தாமறிந்த தவங்களிலே முயல்பவர் பிறர்; அன்றே...செயலால் - மணத்தொழிலை தொடங்கிய அன்றைக்கே அழியும் செயலினாலே; நிகழ்புத்தூர்...மகளும் - விளங்குகின்ற புத்தூரிலே வந்த சடங்கவி சிவாசாரியாரின் மகளாரும்; உயர்...பெயராது - உயர்ந்த நாவலவூரராகிய தமது ஒப்பற்ற நாதரையே நீங்காது மனத்திலே தியானித்து வைத்திருக்கும் வழியினாலே அவரையும் நீங்காது நின்றவராய்; உயர்...பெற்றாள் - உயர்ந்த சிவலோகத்தை எளிதாயடையும் வகையையும் பெற்றார்.

(வி - ரை) **அயலோர் தவம் முயல்வார் பிறர்** - இது கவிக்கூற்று. நாயகனையற்ற பிறர் இவ்வாறு செய்தற்கயலாகிய ஓரோர் பிற தவங்களைச் செய்வர். அவை கைமை நோன்பிற்கு உரியனவாய் நூல்களில் விதித்த தவச் செயல்களாம். அவற்றை அவர் தம் நாயகனை இழந்தாராகக் கருதி வருந்திச் செய்து பல காலங்கள் கழித்துப் பல வேறு பலன்களை அடைவர். இவ்வம்மையாரோ, அவ்வாறன்றித் தமது நாயகராகிய திருநாவலூர் நம்பிகளைத் தம்மோடு இருப்பவராகவே கருதி இடைவிடாது சிந்தைக்குள் வைத்தவகையாலே அவரையும் பிரியாதவராய், அவ்வழியாலே சிவலோகமும் பெற்றார் எனக் குறித்தபடி. **செயலால்** - செயல் காரணமாக, (உடனிருக்கமாட்டாதவராய்) **உணர்வழியிற் பெயராது** என்க. **அன்று** - ஏ - என்பவற்றை அசையாக்கி ஓதுக்குவாருமுண்டு.

மகளும்...பெற்றார் - நம்பியும் பெற்றார் - மகளும் பெற்றார் என்க. உம்மை - எச்ச உம்மை. **ஒழியாது** - இடைவிடாது. இடத்தினாலன்றி உணர்ச்சியாலும் காலத்தினாலும் நீங்காது என்க. **சிவலோகமும்** - நாயகனைப் பெயராது பெற்றதுமன்றிச் சிவலோகமும் பெற்றார். உம்மை எச்சவும்மை - சிறப்பும்மையுமாம். எவ்வுலகத்தையும் சேர ஒரு வழிவேண்டும்; இவ்வம்மையார் நாதனை ஒழியாதுணர் வழியினாலே சிவலோகத்தை எளிதாகப் பெற்றார் என்க.

உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியில் - நம்பிகளும் நாவலனாராகிய தனிநாதனை 'மறவாதே நினைக்கின்றேன்' என்று கூறியபடி ஒழியாதுணர்வழியாலே சிவவாழ்வு பெற்றார். (நாவலனூர்க்கிடம் - திருநாவலூர் (1) நம்பிதேவாரம்.) அவர் நாயகியாரும் அவ்வாறே நாவலவூரராகிய தமது தனிநாதனை ஒழியாதுணர்வழியிற் சிவவாழ்வினை எளிதிற் பெற்றார் என்ற சிலேடைப் பொருளும் காண்க. மகளும் - நாதனை -

உணர்வழியிற் பெயராது - சிவலோகமும் - எளிதாம் வகை பெற்றாள் ; அயலோர்தவம் முயல்வார் பிறர் - என்று கூட்டியுரைக்க.

பின் வருபவை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீமத் - முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் உபகரித்த உரைக் குறிப்புக்கள் :—

" **அன்றே** - மங்கலநாண் தரிக்கப்பெற்று மெய்யுறு கூட்டத்தாற் பெயராதிருத் தற் கேதுவாகிய மாமறை மணத்தொழில் தொடங்கப்பெற்ற அத்திருநாளிற்றானே.

மணம் அழியும் செயலால் - அன்புறு வாழ்க்கை தொடர்தற்குரிய மணத்தொழில் சிதைத்தற்கேதுவாகிய அநுக்கிரக கிருத்தியத்தால். **மணம்** - ஈண்டுச் சடங்கை யுணர்த்தி நின்றது. **அழியும்** என்னும் பெயரெச்சம் கருவிப் பொருள் கொண்டது.

நிகழ் புத்தூர் - நம்பிகளது திருச்சரிதம் விளங்கும் எக்காலத்தும் எவ்விடத்தும் தானும் விளங்கும் புத்தூரின் கண்ணே.

வருசிவ வேதியன் மகளும் - பண்டைப் பவத்திற் றவஞ்செய்து பெற்ற திருவரு ளால் வீடுபெறவந்த அதற்குரிய நற்சார்பாகிய சிவமறையோரான சடங்கவி சிவாசாரி யார் திருமகளாரும். **வரு** என்னும் நிலைமொழி அடையடுத்த **மகள்** என்னும் பெயர் கொண்டு முடிந்தது. **சிவவேதியன்** - சிவ சிருட்டியில் வந்த வேதியன். **வேதியன் மகள்** - நான்காவது வேற்றுமை தொக்கது. உம்மை இறந்தது தழீஇய எச்சம்.

உயர் நாவலர் - மாதவஞ் செய்த தென்றிசைக்குத் தீதிலாத் திருத்தொண்டத் தொகை தந்தவர் அவதரிக்கப் பெற்றமையால் மேம்பாடுற்ற திருநாவலூராருக்கு ; நான்காவது வேற்றுமை விரித்துரைக்க.

தனி நாதனை - சம்புவின் அடித்தாமரைப் போதலால் இறைஞ்சாதவராகிய உப மன்னிய முனிவராலும் இறைஞ்சப்பெறும் சிறப்பு வாய்ந்த பரமாசாரியராகிய ஆரூ டைய நம்பிகளையே. பிரிநிலை ஏகாரம் தொக்கது.

ஒழியாதுணர் வழியிற் பெயராது - இடையறவின்றி உணர்தல் வாயிலாகப் பிறி வறியாது முயங்கி, அது காரணமாக ; இன் - ஏதுப் பொருட்டு. **பெயராது** - காரியங் காரணமாக உபசரிக்கப்பட்டது. இவ்வினை யெச்சம் - ' திருநடங் கும்பிடப்பெற்று ' என்புழிப்போல ஏதுப் பொருளில் வந்தது.

உயர் சிவலோகம் எளிதாம் வகையும் பெற்றாள் - மாயா புவனங்கள் அனைத்தி னும் உயர்ந்த நித்திய மங்கலமாகிய வீட்டுலகத்தை முயன்று வருந்தாது பெறும் உபாயமும் பெற்றவரானார். உம்மை - **வகை** என்பதனுடன் கூட்டி உரைக்க. உபாய மாவது தனி நாதனார் திருவுருவத்தை உள்ளப்புண்டரிகத்து வைத்து வழிபடுதல்.

பிறர் - அவ்வுபாயம் பெறுதற்குரிய முன்பு செய் தவமில்லாதார்; **அயல் ஓர் தவம் முயல்வார்** - அதனின் வேறாகிய தாமறிந்ததொரு தவத்தைச் செய்வார். **ஓர்தல்** - அறிதல்."

இப்பாட்டால் ஆசிரியர் இவ்வம்மையாரது பிற்சரிதங் கூறி முடித்துக்கொண்டது மன்றி, ஏனையோரைப்போல, இவ்வம்மையார் தம் நாயகனை உடம்பு நாயகனாகக் கொள்ளாது தியானப்பொருளாகிய உயிர்நாதனாகக்கொண்டு ஒழுகினமையால் அவரை யும் பிரியாது, பெறற்கரிய சிவலோக வழியும் பெற்றார் என்று இவரதுவாழ்க்கையி னுயர்வையுங் காட்டினார். இவ்வாழ்வு பெற உபகரித்து நின்றமையால் அம்மையாரை விட்டு நீங்கினார் என்ற சொல் நம்பிஆரூராரிடத்துச் சாராமையுங் காட்டியவாறு. திலகவதியம்மையார் சரிதமும் இங்கு வைத்து உணர்தற்பாலதாம். இவ்வுண்மைகளை உணராது, ஒரு கணவனிறப்பவும், அல்லது இருக்கவும், ஒன்றன்பின் ஒன்றாகப் பல மணங்களையும் நிகழ்த்தலாம் என்று கூவும் நவீன உணர்ச்சிக்காரர்கள் இச்சரிதங்களை உய்த்து ஓர்ந்து ஒழுகுவார்களாக.*

---

*சேக்கிழார் - 79-வது பக்கம் பார்க்க.



திருவெண்ணெய்நல்லூர்

திருவருட்டுறை

—வரிசை 224-ம் பாட்டு—பக்கம் 257.



திருநாவலூர்

நம்பிகளது தியானமே சிவலோகத்தைத் தரும் சிவபுண்ணியமாம் என்பதும் இதனாற் காட்டியவாறு. பெருமிழலைக் குறும்பநாயனார் சரிதமும் காண்க. 77

வேறு

224. நாவலர்கோ னாரூரன் றனைவெண்ணெய் நல்லூரின்
மேவுமருட் டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் றனைப்பணிந்து திருப்பதிகம் பாடினார். எஅ

(இ - ள்) வெளிப்படை. திருநாவலூரராகிய நம்பிஆரூரர் தம்மை வெண்ணெய் நல்லூரிலே திருவருட்டுறையிலே எழுந்தருளியவர் வேதியராகி வந்து ஆட்கொண்ட பின், பூக்கள் மலர்கின்ற பொய்கைகளையுடைய திருநாவலூரிலே போந்து தேவதேவனாகி இறைவனைப் பணிந்து தேவாரத்திருப்பதிகம் பாடினார்.

(வி - ரை) அருட்டுறை அமர்ந்த வேதியர் - வேதியராய் வந்து திருவருட்டுறையிலே அமர்ந்தவர். **அமர்தல்** - விரும்பி வீற்றிருத்தல். 'பூவலரும் தடம் பொய்கைத் திருநாவலூர்' - 'செய்யார் கமலமலர் நாவலூர் மன்னன்' என்பது நம்பிகள் தேவாரம்.

திருப்பதிகம் பாடினார் - (கோவலனான்முகன்) என்ற தொடக்கத்தையுடையதாய் நட்டராகப் பண்ணில் அமைந்த தேவாரத் திருப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகம் ஒன்றே இத்தலத்திற்கு உள்ளது.

பதிகம் - (பண் - நட்டராகம்) - திருவெண்ணெய்நல்லூரும் - திருநாவலூரும்

திருச்சிற்றம்பலம்

கோவல னான்முகன் வானவர் கோனுங்குற் றேவல்செய்ய
மேவலர் முப்புரந் தீயெழு வித்தவ னோரம்பினால்
ஏவல னார்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்கொண்ட
நாவல னார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. (1)

நாதனுக் கூர்நமக் கூர்நர சிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு மூரணி நாவலூரென்
றோதநற் றக்கவன் றொண்ட னாரூர னுரைத்ததமிழ்
காதலித் துங்கற்றுங் கேட்பவர் தம்வினை கட்டறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - திருநாவலூரிலே எழுந்தருளிய இறைவனே புத்தூரில் வேதியராகி வந்து வழக்கிட்டு, நான் வன்மைகள் பேசவும் விடாது, என்னைத் திருவெண்ணெய் நல்லூரிலே சபை முன்னே கொண்டு வைத்து ஓலை காட்டி ஆளாகக் கொண்டருளியவன் என்பதாம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு - 'பித்தனென்றே பாடுவாய்' என்ற ஆணையின்படி பாடிய முதற் பதிகத்துக்குப்பின், 'இன்னும் பல்லாறுலகினில் நம்புகழ் பாடு' என்ற ஆணையின்படி பாடியது இதுவே முதற் பதிகம். நம்பிகள் பாடிய தேவாரப் பதிகங்களில் இரண்டாவது பதிகம். தம்மை இறைவன் தடுத்தாட்கொண்ட தொடக்கத்திற் பாடிய பதிகமாகையால் அவ்வரலாறு முழுமையும் இதில் விரிவாகச் சொல்லித் துதித்திருப்பது காணத்தக்கதாம். நம்பிகள் சரிதத்திலே இப்பகுதிக்கு அகச்சான்று மிகவும் இதிற் காணலாம். அத்தொடர்புபற்றி இப்பதிகத்துக்குத் திருவெண்ணெய்நல்லூரும் - திருநாவலூரும் என்று பேரிட்டு உள்ளார்கள்.

"வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்கொண்ட நாவலனார்" 1

"தன்மையினு லடியேனைத் தாமாட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றேண்ட னேன்பதோர் வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந் தென்னைப்போ கம்புணர்த்த
நன்மையினுர்" 2

"ஆவணத்தால்...வெண்ணெய்நல்லூரில் வைத்தெனை யாளுங்கொண்டார்..." 5

"வாயாடி மாமறை யோதியோர் வேதியனுகி வந்து..." 8

"அடக்கங்கொண் டாவணங் காட்டி நல்வெண்ணெயூ ராளுங்கொண்டார்..."

"நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு மூர்அணிநாவலூர்" 11

என்பன நம்பிகள் சரிதத்துக்கு இப்பதிகத்துக் காணும் அகச் சான்றுகளாம்.

தல விசேடம் - நம்பிகளது திருவவதாரத் தலம். சடைய நாயனுரும் இசைஞானி யம்மையாரும் இல் வாழ்க்கை நடத்தி வழிபட்டு நம்பிகளைப் பெற்றுப் பேறடைந்த தலம். விழுப்புரம் திருச்சிராப்பள்ளி இருப்புப் பாதையில் திருவெண்ணெய்நல்லூர் ரோடு நிலையத்தினின்றும் (பக் - 253) திருவெண்ணெய் நல்லூரடைந்து, தென்கிழக்கில் 5 நாழிகையளவில் அடையத் தக்கது. பண்ணுருட்டி நிலையத்திலிருந்து மேற்கே உளுந்தூர்ப்பேட்டை வழியாய்த் திருமுதுகுன்றத்துக்குப் போகும் கற்சாலையில் 10 மைல் உள்ளது. நடு நாட்டில் 8-வது தலம். சுவாமி-நாவலேசுவரர். தேவியார்-சுந்தராம்பிகை. இத்தலம் இப்போது திருநாமநல்லூர் என வழங்கப்பெறுகிறது. தலத்தின் மரம் நாவன் மரமானதால் இப்பெயரெய்தியதென்பர்.

சரிதப் பிற ஆதாரவுகள் - **தடுத்தாட்கொண்ட தேவர்**[1] - **தடுத்தாட்கொண்ட நாயனுர்**[2] - **தடுத்தாட்கொண்ட நல்லூர்**[3] - என்பன திருவெண்ணெய் நல்லூர்க் கிருபாபுரீசுரர் ஆலயத்திற் கல்வெட்டுக்களிற் கண்ட பெயர்கள். அவற்றுள் **வழக்குவென்ற திருவம்பலம்**[4] என்ற பெயர் காணும் கல்வெட்டிலே குலோத்துங்கச் சோழன் ஆட்சி 29-வது ஆண்டில் வழக்குவென்ற அம்பலம் கல்மண்டபமாகக் கட்டுவதற்காகச் சில குடிகளின் வீடுகளை எடுத்துக்கொண்டு வேறு இடம் தந்த செய்தியை அறிகின்றேம். பின்னும் அக்கோயிலிற் கோப்பெருஞ்சோழன் 27-வது ஆண்டு[5] (28-3-1268) செதுக்கிய கல்வெட்டிலே **பிச்சன் என்று பாடச் சொன்னுன்** என்ற பெரும்பொருள் கிடைக்கின்றது. **ஆலால சுந்தரப் பெருந்தெரு**[6] - பெருமாள் **ஆலால சுந்தரப் பெருமாள்**[7] என்ற பெயர்களும் கல்வெட்டுக்களால் அறிகின்றேம். 78

225. சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து 'தீவினையால்
அவநெறியிற் செல்லாமே தடுத்தாண்டா யடியேற்குத்
தவநெறிதந் தரு'ளென்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம் பாடினுர். எகூ

(இ - ள்) சிவன்...அணைந்து - திருநாவலூரிலிருந்து சென்று சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்துறையூரை அணைந்து; தம்பிரான் முன்னின்று - தமது இறைவன் திருமுன்பு நின்று அவரை விளித்து; 'தீவினையால்...அருள்' என்று - 'எனது தீவினைப் பயனுல் அவநெறியிலே செல்லாமல் என்னைத் தடுத்து ஆளாகக் கொண்டருளினுய்! அடியேனுக்கு இனிச் செல்லக் கடவதாகிய தவநெறியைத் தந்தருளவேண்டும்' என்ற வேண்டுகையாகிய குறிப்பினையுடையதாய்; பவநெறிக்கு...

[1] 423 - 21. [2] (1301 A. D.) 430 - 21. [3] 435 - 21. [4] 441 - 21. [5] 431-21.
[6] 435 - 21. [7] 437 - 21.

பாடினர் - எல்லா உயிர்களையும் பவநெறியினின்று விலக்கி யாளக்கூடிய திருப்பதிகத் தினைப் பாடினர்.

(வி - ரை) சென்று - அங்ஙனம் பாடிய நம்பிகள் திருநாவலூரிலிருந்து சென்று என வருவித்துக் கொள்க.

தீவினையால் அவநெறியே செல்லாமே தடுத்தாண்டாய் - இவ்வரலாறு மேலே திருமலைச் சிறப்பிலும் இப்பகுதியில் முன்னரும் காண்க. **தீவினை** - தீ முன்னர்ச் செய் யப்படும் மணவேள்வி என்பர் ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள்.

தவநெறி - சிவபூசையிற் செல்லும் வழி. புலன் வழிச் செல்லாது மனத்தை ஒன்றுவித்துச் சிவபெருமானை இடைவிடாது நினைத்தலும் பூசித்தலுமே தவநெறியாம். உட்பூசை புறப்பூசை முதலாகச் சிவாகமங்களிற் கூறியபடி சிவபூசை செய்யப்பெறு வது. 'தவமுயல்வோர் மலர் பறிப்ப' என்ற தேவாரங் காண்க. நம்பிகள் வேண்டி யதும், இறைவன் அதற்கிசைந்து கொடுத்தருளியதும், அதன்பின் நம்பிகள் நின்ற தும், இதுவே என்பது வரும்பாட்டிற் காண்க.

பவநெறிக்கு விலக்காகும் திருப்பதிகம் - இதுவரை வந்த பவநெறிக்கு விலக் காகிய தவநெறி கொடுப்பதேயன்றி, இனிமேலும் பவநெறி வாராமல் விலக்கிக் காப்ப தும் இத்திருப்பதிகப் பயனும் - என்பார் **விலக்கு ஆகும்** என்றார்.

இப்பதிகம் நம்பிகளுக்குத் தவநெறி தந்ததுமன்றி இதனைக் கற்றுப் பயின்று ஒழுகும் உலகினர் யாவருக்கும் பாசநீக்கம் செய்து தவநெறி தருவதாம். இது,

'பொய்யாத்தமிழ் ஊர னுரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறி தானே'

என்ற அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பினால் அறியலாம். **பொய்யாத் தமிழ்** - கருதி யது கருதியவாறு கொடுத்தேவிடும் தமிழ். சத்தாகிய சிவனைக் காட்டும் பதிகமும் சத் தாகிய உண்மையேயாம். ஆதலின் அவை எஞ்ஞான்றும் பொய்க்கின்றதில்லை. 'வாய் மை குலவுதலால்' (திருஞான - புரா - 981); 'நாவின் வாய்மையிற் போற்றினர் ஞான சம்பந்தர்' (ஷை புரா - 1079); 'போதியோ என்னும், அன்னமெய்த் திருவாக்குஎனும் அமுதம்' (ஷை புரா - 1089) முதலியவை காண்க. இவை ஆன்மபோதமின்றிச் சிவ போதத்தாலே சிவனேயாய் நின்று பாடப்பெற்றதனால் என்றும் பொய்யாதன. ஆத லின் இறைவனைப்போலவே இவையும் **பவநெறிக்கு விலக்காவனவாம்.**

தவநெறி தந்தருள் - என்று வேண்டுதல் தகுதியா? 'வீடும் வேண்டா விறலின் விளங்கினர்' (வரிசை 143) என்று மேலே வடித்தெடுத்துக்கூறிய அடியார் இலக்கணத் துடன் மாறுபடுமே? எனின் மாறுபடாது. கருமங்களே பிறவிக்குக் காரணமாயினும் அங்ஙனங் காரணமாகிய பிராரத்தங்களையே அனுபவித்துக் கழிப்பதற்கும், மேலும் ஆகா மியங்கள் வந்து ஏறாமலிருப்பதற்கும் கருமங்கள் செய்யப்படவேண்டுவனவாம். ஆனால் இக்கருமங்கள் மேலும் கருமங்களைச் சேர்ப்பதற்கன்றி, முன்னை வினையைத் தொலைப்ப தற்காகச் செய்தல்வேண்டும். அதற்காகவே 'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும்' என்றபடி கருவி கரணங்களை இறைவன் தந்தருளினதலின் ஒருகருமங்களும் செய்யாதிருத்தலும் கூடாது. இக்கருமப் பாகுபாட்டை அறிந்து செய் வதே நம்பிகளின் சரித தத்துவம். முன்னர்த் திருமலைச் சிறப்பின் இறுதியிற் கற்பனை யிற் கூறியது காண்க. இவ்வாறு அறிந்து பெறுவதற்கு அவநெறியில் கருவிகரணங்கள் செலுத்தப்படாமல், சிவநெறியிற் புகுவிக்கும் தவநெறியிலே மட்டும் செலுத்தப்பெற வேண்டும். அப்போது பிராரத்தம் மட்டும் உடலூழாய் அனுபவித்துக் கழிக்கப்படும். ஆதலின் தவநெறி வேண்டியது வீடும் வேண்டாத இலக்கணத்துடன் மாறுபடாது.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்றபடி 'ஊனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே' என்றது வேண்டாமையை வேண்டியதேயன்றிப் பிறிதன்று என்க. இக்கருத்துப் பற்றியே,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்"

"துஞ்சும் போதுநின் னாமத் திருவெழுத்
தஞ்சுந் தோன்ற வருளு மையாறரே"

"எழுத்தைந்தும், சாமன் றுரைக்கத் தருதிகண்டா யெங்கள் சங்கரனே"

"துஞ்சம்போ தாக வந்து துணையெனக் காகி நின்று
அஞ்சலென் றருள வேண்டு மாவடு துறை யுளானே"

"சங்கொத்த மேனிச் செல்வா சாதனா ளுயே னுன்னை
யெங்குற்றா யென்ற போதா லிங்குற்றே னென்கண்டாயே"

"உன்குரை கழற்கே, கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்பனவாதி தமிழ்மறைத் திருவாக்குக்கள் எழுந்தன என்க.

நம்பிகள் வேண்டிக்கொள்ளும் பிற இடங்களிலும் இவ்வாறே கொள்க. பெண்ணும் பொன்னும் முதலியவை வேண்டுவதாகக் காணும் இடங்களிலெல்லாம் பிராரத்தம் கழியக் கருவி கரணங்கள் பயன்பெறற் பொருட்டாகிய இக்கருத்தே கொள்க. இவை யாவும் உலகர்க் கறிவுறுத்தி உய்யக்கொள்ளும் பயனைக் குறித்தன என்பது ஆசாரிய இலக்கணமுமாம்.

முன்னின்று பாடினார் - பதிகமுழுதும் அத்தா! என்பது முதலாக விளித்து இறைவனை முன்னிலைப்படுத்தி 'ஊனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே' என்று கேட்கப்பெற்றதனால் **முன்னின்று** என்றார்.

பதிகம் (பண் - தக்கராகம்) **திருத்துறையூர்**

திருச்சிற்றம்பலம்

மலையா ரருவித் திரண்மா மணியுந்திக்
குலையா ரக்கொணர்ந் தெற்றியோர் பெண்ணைவடபால்
கலையா ரல்குற் கன்னியரா டுந்துறையூர்த்
தலைவா வுனை **வேண்டிக், கொள்வேன்**றவ நெறியே. (1)

செய்யார் கமலம்மலர் நாவலூர் மன்னன்
கையாற் றொழுதேத்தப் படுந்துறை யூர்மேல்
பொய்யாத் தமிழூர னுரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்க டவநெறி தானே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - இப்பாட்டின் கருத்தாம். 'அடியேன் அவநெறியிற் செல்லாமே திருவருட் டுறையிலே தடுத்தாண்டாய்; இனி நான் செல்லவேண்டிய தவநெறி தந்தருளத் திருத்துறையூர்த் தலைவா உனை **வேண்டி**, வேண்டியவாறே நீ தர, அதனைப் பெற்று **மேற்கோள்வேன்**' என்பது. உனைத் தவநெறி வேண்டி, நீ தர, அதனைக் கைக்கொள்வேன் என்க. அவநெறி தடுப்பது ஒருதுறை - அருட்டுறை; தவநெறி கொடுப்பது ஒருதுறை - திருத்துறையூர். இவை யிரண்டு பயனுமே சைவ சித்தாந்தத்தின் இருபெரும் பயன்களாகிய பாசநீக்கமும் சிவப்பேறுமாகக் கருதப்பெறுவன.

பதிகப் பாட்டுக் குறிப்பு - **பெண்ணை வடபால்** - இத்தலம் பெண்ணையாற்றிற்கு வடகரையிலுள்ளது. **வேண்டிக் கொள்வேன்** - வேண்டிப் பெற்றுப் பின்னர்க் கைக்

கொள்வேன். தலைவா! அத்தா! எந்தாய்! விரும்பா! வேடா! சிட்டா! நாதா! ஐயா! அண்ணு! தேவா! என்ற விளிகளை நோக்குக.

விரும்பா - விரும்புபவன்; **வேடா** - ஒரு வேடமுமில்லாதவனுயினும் வேடம் (உருவம்) கொண்டு துறையூரில் உள்ளவன் (வேள்+தா = விரும்பியதைத் தருபவன் என்றலுமாம்); **சிட்டா** - பெரியோன். கொட்டாட்டொடு பாட்டொலி - கொட்டும் ஆட்டும் பாட்டும் ஆகிய இவை பூசையின் முடிவில் நிகழ்த்தப்பெறுவன. 'கொட்டாட்டுப் பாட்டுப் பூசாந்தம்"—தக்கயாகப்பரணி. **விரும்பா** - விரும்பப் பெறுபவன் - என்றலுமாம்.

தலவிசேடம் - இது நடுநாட்டுத் தலங்களிலே 15-வது தலம். இப்போது திருத்தலூர் - திருத்தளூர் என வழங்குவது. இதற்கு நம்பிகள் திருப்பதிகம் ஒன்றே உள்ளது. சைவசமய சந்தான ஆசாரியர்களில் ஒருவராகிய சகலாகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரியாரது அவதாரத் தலம். அருணந்தி சிவாசாரியர் சந்நிதி கோவிலுக்கு எதிரில் உள்ளது. **சுவாமி** - துறையூர்நாதர். **தேவியார்** - பூங்கோதைநாயகி. சிட்டகுரு நாதர் - சிவலோக நாயகி என்றுங் கூறுவர். **தவநெறியுடையார்** - என்று கல்வெட்டுக்களிற் காணப்பெறும். இத்தலம் திருத்துறையூர் என்ற நிலயத்திலிருந்து நேர் மேற்கில் ½ நாழிகை தூரத்தில் அடையத்தக்கது. 79

226. புலனொன்றும் படிதவத்திற் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூ ரமர்ந்தருளு
நிலவுந்தண் புனலுமொளிர் நீள்சடையோன் றிருப்பாத
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்றொண்டர் அ0

(இ - ள்) புலன்...அருள் - நம்பிகள் வேண்டியபடியே புலன்கள் தத்தம் வழிகளிலே போகாமல் ஒருவழிப்படியும் தவத்திலே இடையறாது செல்லும் நெறியை இறைவன் கொடுத்தருளவும்; அலர்...வன்றொண்டர் - அதன்படி அதனையே மேற்கொண்டு, நம்பிகள், பூக்கள் நிறைந்த நறிய சோலைகள் சூழ்ந்த திருத்துறையூரிலே விரும்பி வீற்றிருக்கின்ற, பிறையும் கங்கையும் விளங்குதற் கிடமாகிய நீண்ட சடையினையுடைய பெருமானது திருப்பாத மலர்களை, மனத்திலே கொண்டு, வாக்கினுற் போற்றிக், கைகளா லார வந்தனைசெய்து, சிவபூசை செய்தனர்.

(வி - ரை) புலனொன்றும் படிதவத்திற் புரிந்த நெறி - மேற்பாட்டிலே நம்பிகள் வேண்டிய தவநெறியின் இயல்பை விளக்கியவாறு. **புலன் ஒன்றுதலாவது** - பலப்பல வகை மாறித் தத்தமக் கேற்றவாறு செல்லுதலை விட்டு ஒடுங்கி ஒருவழிச் செல்லுதல். **படி** - படிதல் - மேலெழாது கீழ்ப்படிதல். 'மாறிநின் றெனைமயக்கிடும் வஞ்சப்புலனைந்தின் வழியடைத்து' என்பது திருவாசகம்.

ஒன்றும் தவம், படி தவம் - எனப் பிரித்துக் கூட்டுக. ஒன்றும்படியாகத் தவத்திலே புரிந்த - என்று கூட்டி உரைப்பதுமொன்று. **புரிதல்** - இடைவிடாது நினைத்தல். 'புகழ் புரிந்தார்' என்ற குறளிற் காண்க. **புரிந்த** - முன்னே திருக்கயிலையிற் செய்திருந்த என்றலுமாம்.

அருள - வந்தித்தார் - வேண்ட - வேண்டியபடியே இறைவன் அருள - அதனையே மேற்கொள்வாராய், அதன்படியே வன்றொண்டர் வந்தித்தார். அவ்வியல்பினதாகிய தவநெறியைக் கைக்கொண்டு நின்றொழுகிய ஒழுக்கம் இதுவே எனக் குறித்தபடி.

அமர்ந்தருளும் - மேலே - அருட்டுறையமர்ந்த (வரிசை. 224) என்ற இடத்திற் போல இங்கும் கொள்க. **அருளும்** - **சடையோன்** என்று கூட்டுக.

பாத மலர் - பாதமாகிய மலர். அதனை உள்ளத்தே கொண்டு என்க. இதனுல் உட்பூசையும், போற்றிசைத்து வந்தித்தார் என்றதனுற் புறப்பூசையும் குறித்தவாறு. புலன் ஒன்றவே முக்காரணங்களாலும் வழிபாடு செய்தனர் என்க. நம்பிகள் ஆன்

மார்த்த பரார்த்தங்களாகிய இருவகைப் பூசைக்குமுரிய ஆதிசைவ ராதலும் உணர்க. இங்கு இத்தவநெறியை இறைவனே கொடுக்க அந்த அதிகாரம் பெற்றனர் என்க. பாதத்தை மலரினால் - என்று பொருள் கூறுவாருமுண்டு.

"அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கி ஞானப்
புகலுடையோர் தமதுள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்"

என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம். 80

227. திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமா னமர்ந்தருளும்
பொருத்தமா மிடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்
நிருத்தனார் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினால் வழிக்கொள்வான் மனங்கொண்டார். அக

(இ-ள்) திருத்துறையூர்தனைப் பணிந்து - திருத்துறையூரை வணங்கி அங்கு நின்றும் புறப்பட்டுச்; சிவபெருமான்...இறைஞ்சி-சிவபெருமான் விரும்பி எழுந்தருளி யிருப்பனவாகிய இடையில் உள்ள அவரது பூசனைக்குப் பொருந்திய பல தலங்களிலும் சென்று பெருமானை வணங்கி; பொற்புலியூர்...நினைவுற்று - சிதம்பரத்திலே கூத்தனாரது திருக்கூத்தைக் கண்டு வணங்குதற்கு எண்ணங் கொண்டவராய்; வருத்தம்... மனங்கொண்டார் - அவ்வெண்ணத்தால் வருத்தம் மிகுவிக்கும் ஆசை மேற்கொள்ள அதனாலே புறப்பட்டு வழிச்செல்ல மனம் வைத்தார்.

(வி-ரை) **திருத்துறையூர்தனைப் பணிந்து** - இறைவனை வணங்கியபின், அங்கிருந்து புறப்படுவார் வெளிப்போந்து, அத்திருத் தலத்தை முறைமையால் வணங்கிச் சென்று. இவ்வாறே பல தலங்களிலும் காண்க.

அமர்ந்து அருளும் பொருத்தமாம் இடம் பல - சிவபெருமான் உயிர்களுக்கு அருளும் பொருட்டு ஒவ்வோர் காரணங்களால் ஓரோர் இடங்களில் வெளிப்பட்டு அங்கங்கே விரும்பி வீற்றிருப்பர்; அவ்வகையிலே அவரை வழிபடற்குரிய பொருத்தங்கள் உள்ள இடம். 'பூசனைக்குப் பொருந்து மிடம்பல' என்று முன்னர்க் குறித்தது காண்க. (திருமலைச் சிறப்பு). இங்குக் குறித்தன திருத்துறையூரிலிருந்து திருத்தில்லைக்குச் செல்கின்ற வழியிடையிலேயுள்ள தலங்கள். அவை திருவதிகை,திருமாணிகுழி முதலியன. வரும்பாட்டுக்களிற் காண்க. அவற்றின் பொருத்தங்கள் அவ்வவற்றின் தல விசேடங்களுட் காண்க. ஒரு தலத்தைக் குறித்து வழிச்செல்வார் இடையில் உள்ள தலங்களையும் வணங்கிச் செல்ல வேண்டுதல் முறையாம்.

பொற்புலியூர்-பொன்னம்பலம் உள்ள பெரும்பற்றப்புலியூர். உயிர்கள் பொன்னே போற் போற்றத்தக்க புலியூர் என்றலுமாம்.

நிருத்தனார் திருக்கூத்து—நிருத்தம் - **கூத்து** - ஒரு பொருள் குறிப்பன. ஏனைத் தலங்களிலே நிருத்தனார் அருள் ஆடலின் ஒவ்வோர் பகுதியே நிகழ்வதாகவும், இங்கு ஐந்தொழில் ஆடல் முற்றும் நிகழ்வதாம். இங்குக் கூத்தன் கூத்தியற்றுதலே தொழிலாக நின்றான். ஆதலின் **நிருத்தனைத் தொழுவதற்கு** என்னாது **திருக்கூத்துத் தொழுவதற்கு** என்றார். நிருத்தனைத் தொழுதல் உயிர்களால் இயலாது. கூத்தைத் தொழுதலே யியலும். 'அத்தாவுன் ஆடல்காண்பான்' 'கூத்தாவுன் கூத்துக் காண்பான்' என்ற அப்பர் சுவாமிகள் தேவாரத்தின் உள்ளுறை காண்க. திருக்கூத்துத் தரிசனம் என்ற திருமந்திரப் பகுதியில் இதன் இயலும் பயனும் காண்க. முன்னர் விளக்கியதும் காண்க.

வருத்தமிகு காதல் - ஆசைகொண்ட பொருளை அடைவதற்கு உளதாம் தாமத முதலியவற்றால் ஆசை அதிகரிக்க வருத்தமும் மிகுதல் இயல்பு. அவ்வாறு வருத்தத்தை மிகுவிக்கும் காதல் என்க.

" ....தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினு லொருபட்டங் காதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினல் வந்தவ்வூர் மருங்கணைந்தார் "

என்ற திருநாளைப்போவார் புராணம் (16) காண்க.

வழிக்கொள்வான் - வழிக்கொள்ள - புறப்பட்டுச் செல்ல. வான் ஈற்று வினையெச்சம். 81

228. மலைவளர்சந் தகில்பீலி மலர்பரப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற்பெண்ணை யாறுகடந் தேறியபின்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார். அஉ

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு மனங்கொண்ட வன்றொண்டர் புறப்பட்டுப் பெண்ணையாற்றைக் கடந்து கரையேறியபின் மாலைப்பொழுதிலே திருவதிகை வீரட்டானத்தின் புற எல்லையை அணைந்தார்.

(வி - ரை) மலை...ஆறு-மலையிலே வளரும் சந்தனம் அகில் என்னும் மரங்களையும், மயிற்பீலியையும், மலர்களையும், வாரிக்கொண்டு எங்கும் பரப்பி மணிகளைக் கொழித்து அலைகளுடன் ஓடிவரும் குளிர்ந்த நீர்ப் பரப்பினையுடைய பெண்ணையாறு என ஆற்றின் செயலும் தன்மையும் கூறியவாறு. அகில் - சந்து - பீலி முதலியன மலைபடு பண்டங்களாம். மலர்கள் மலையிலும் முல்லைப்புறவங்களிலும் சோலைகளிலே உள்ளன. இவற்றை வாரிக்கொண்டு தான்புகுந்து செல்லும் மருதநிலமுழுதும் பரப்பி ஓடுதல் பெருவெள்ளமுடைய பெண்ணையாற்றின் இலக்கணமாம். **மணிகொழித்தல்** - அதன் செல்வப் பெருக்கையும், **அலைதருதல்**-நீரின் பெருக்கையும் குறிக்கும். இதனுல் அதன் பிறப்பிடச் சிறப்பும், புகுமிடத்திற்குத் தரும் பயனும் கூறினர். பெண்களின் இலக்கணமும் இதுவேயாம். **பெண்ணை** என்ற பேரும் காண்க. இவ்வாறு வருணனையிலே பொருட்சிறப்பினை உள்ளுறையாகக் கூறுதல் மகா கவியின் தன்மை.

இனி, இவ்வாறே திருவெண்ணெய்நல்லூரிலும் திருத்துறையூரிலும் பெற்ற பெருவெள்ள அருட்செல்வத் தவநெறியை நம்பிகளும் இனித் தாம் புகும் திசைகளிலெங்கும் பரப்பிச் செல்வார் என்ற உள்ளுறையின் குறிப்பும் காண்க.

இயற்கைப் பொருள்களின் வருணனை (தன்மை நவிற்சியணி)யிலே ஒவ்வோர் கால் இவ்வாறு சரிதப் போக்கின் தன்மையைக் குறிப்பது மகா கவிகளுட் பெரியோர்களிலே காணும் தன்மையாம்.

" தாயினே ரிரங்கும் தலைவவோ வென்றுந் தமியனேன் றுணைவவோ வென்று
நாயினே னிருந்து புலம்பினு லிரங்கி நலம்புரி பரமர்தங் கோயில்
வாயினே ரரும்பு மணிமுருக் கலர வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே "

—கருவூர்த்தேவர்

என்ற திருவிசைப்பாவிலே வாய்போற் சிவந்து அலர்ந்த முருக்கம்பூவின் வேண்டுதலுக்கிரங்கி மாந்தளிர் தீமேனியனுகிய சிவம்போல அலர்ந்து காட்டும் காட்சியையுடைய திருத்தில்லை, என்று, பின்னிரண்டடிகளிற் சொல்லிய வருணனை, நாயினேன்-தலைவ!-துணைவ! எனவாயினுற் புலம்ப வெளிப்பட்டு நடம்புரி பரமர்கோயில் என்ற கருத்தைக் குறிப்பிற் காட்டுவது காண்க.

கடந்து ஏறியபின் - பெண்ணையாற்றினை வடகரையினின்றும் போந்து கடந்து தென்கரையை ஏறிய பின்பு. மேலே சொன்ன தன்மையிலேயும் இவர் அதனைக்

கடந்து மேற்சென்றார் என்பதும் குறிப்பாம். ஆறு தான் புகுமிடத்துக்கே உதவும்; இவரோ எல்லா வுலகும் உய்யச் செய்தார்; ஆதலின் இவர் தன்மை மிகுந்தது என்க.

நிலவு பசும் புரவி நெடுந்தேர் இரவி-நாள்களினாலே உலகு நிலவுதற்குக் காரணமாய் ஏழு குதிரை பூண்ட பெருந்தேர் மீது வரும் ஞாயிறு. நிலவு இரவி, தேர் இரவி என்று பிரித்து உரைக்க. ஞாயிற்றின் செலவினாலே நாள் பகுக்கப்படும். பகுத்தலே பகல் என்பது. ஞாயிற்றினது ஒளியும் வெப்பமும் கதிர்களுமே பகலைப் பாகுபாடுசெய்து உயிர்களை வளர்ப்பதோடு உலகங்களைக் கால தத்துவத்திலே செல்ல வைப்பன். ஆதலின் உலகு நிலவுதற்கு ஏதுவாகிய இரவி என்க. உலகு - என நிலவுதற்கெழுவாய் வருவித்துக் கொள்க. சூரியனது தேர்க் குதிரைகள் ஏழு என்பது மரபு. அவை முறையே நீலம் முதல் சிவப்பு இறுதியாக *ஏழுநிறமுடையன என்றும், நிறங்களே புரவிகளாகக் கூறப்பெறுவன என்றும் சொல்வர். இந்நிறங்கள் சூரிய கதிரின் பகுத்த தோற்றமாகிய இந்திர வில்லில் காணப் பெறுவன.

பசும்புரவி - இவ்வேழின் இடையில் நிற்பது பசுமையாம். இது சிங்க நோக்காக முன் மூன்றையும் பின் மூன்றையும் தழுவி ஏழினையும் குறிக்கும். ஆதலின் ஏழு நிறப் புரவி யிருப்பவும், **பசும்புரவி** என்றார். **பசுமை** - புதுமை என்றும் கூறுவர்.

நெடுந்தேர் - பல அண்டங்களிலும் செல்லும்படி நீண்ட கதிர்களின் தொகுதி.

இரவிமேல் கடலிற்சேல அணையும்பொழுது - பொழுது இறங்கும் மாலைக்காலம். மாலை முதலிய கால வருணனை கூறுதல் காவிய இலக்கணங்களில் ஒன்று. வரிசை 159 பாட்டில் இரவி எழுதல் கூறுதலும், இவ்வாறே பிறவும் காண்க. அணைதல் என்ற சொல் சேக்கிழார் சுவாமிகளின் அழகிய அரிய சொல் ஆட்சிகளில் ஒன்று. இதன் சொற் சுவையும் பொருட் பொலிவும் நோக்கிக் களிக்க.

காலமளக்கும் கருவிகளாகிய ஞாயிறு முதலிய உருவப் பொருள்களும் தத்தம் தொழிற்பாட்டிற்கு அருவப் பொருளாகிய காலம் என்னும் தொழில் முதனிலையை (காரகத்தை) அவாய் நிற்கும் என்பார் இரவி...அணையும் **பொழுது** அணைய - என்றார். அணையும் என்னும் பெயரெச்சம் கருவிப்பெயர் கொண்டது. இது ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் உரைக் குறிப்பு.

இலது பசும்புரவி—என்பதும் பாடம். 82

229. 'உடையவர சுலகேத்து முழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியைமிதித்
தடையுமதற் கஞ்சுவ'னென் றந்நகரிற் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடம்புகுந்தார். அரு

(இ - ள்) வெளிப்படை. 'ஆளுடைய அரசுகளாய், உலகங்கள் ஏத்துகின்ற உழவாரப் படையினை உடைய திருநாவுக்கரசர் இறைவனுக்குக் கையாற் றிருத்தொண்டுகளை விரும்பிச் செய்த பெருந் தலமாகிய இதனுள் காலால் மிதித்துச் செல்வதற்கு நான் அஞ்சுகின்றேன்' என்ற எண்ணத்தால், அத்திருநகரத்தினுட் புகாமல், அதன் புறத்தே உள்ள சித்தவட மடத்திலே புக்கு நம்பிகள் எழுந்தருளினர்.

(வி - ரை) திருநாவுக்கரசு சுவாமிகளைச் சொல்ல வந்த முதல் இடம் இதுவேயாதலின், உலகத்தோடு சேர்ந்து தாமும் அவரைத் தொழுது, தம்மை உடையவராகக் கொண்டு துதித்து, ஆசிரியர் குறித்துப்போந்த நயம் கூர்ந்து நோக்கத்தக்கது.

---

*இவை Vibgyor என்ற ஆங்கிலக் குறியீட்டு மொழியின் ஏழு எழுத்துக்களாலும் உணர்த்துவர் நவீன பௌதிக நூலோர். Voilet - Indigo - Blue - **Green** - Yellow - Orange - Red.

உடைய அரசு - இறைவனாலே ஆளாகக் கொண்டுடைய அரசுகள். ஆளுடைய பிள்ளையார் என்ற இடத்து (திருஞான - புரா - 69) ஆசிரியர் ஆளுடைய - என்றதன் பொருளை விரித்திருத்தல் காண்க. ஆளுடைய அரசுகள் என்க.

உலகேத்தும் உழவாரப் படையாளி - உலகம் (உயர்ந்தோர் - ஞானிகள்) துதிக்கின்ற தன்மையுடைய உழவாரப் படையை ஏந்தியவர். உலகம் ஏத்தும் உழவாரம் எனவும், உலகம் ஏத்தும் ஆளி எனவும் கூட்டி உரைத்தலுமாம்.

உழவாரம் - கல் புல் முள் முதலியவற்றைத் திருவீதிகளிலிருந்தும், திருமுற்றங்களிலிருந்தும், எடுத்துச் சுத்தமாக்குவதற்கு அரசுகள் எப்போதும் கையில் ஏந்தியிருந்த படை. இது வேளாளர்க்கே உரியதொரு படைக்கலமாம். சிவநெறியிலே செல்வோர்க்கு நேரும் இடையூறுகளைப் போக்கும் கருவியாக அரசுகள் காட்டி உலகை வழிப்படுத்தினாராதலின் **உலகேத்தும் உழவாரம்** என்றார்.

"ஏரின் சிவபோக மிங்கிவர்க்கே யென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ"—**தாயுமானசுவாமிகள்.**

"உழவாரத்திண் படையறாத் திருக்காமும்"—**மாதவச் சிவஞான சுவாமிகள்.**

என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

அஞ்சுவன் - நிகழ்காலத்தில் வந்தது. அரசுகள் கைத்தொண்டு செய்த தலத்தை மிதிக்க அஞ்சுகின்றேன் என்று நம்பிகள் எண்ணினாராதலின், மாலைக்காலமாயினும் திருவதிகை நகரத்திற் புகாது மடத்தில் எழுந்தருளினார். இதுவே அடியவர்க்கடியாராய் ஒழுகும் இயல்பும் சிறப்புமாம். இவ்வொழுக்கத்தினை உலகில் நடத்திக் காட்டித் தீதிலாத் திருத்தொண்டத்தொகை தர வந்தவர் நம்பிகள். இவ்வாறே பின்னரும் திருஞானசம்பந்த சுவாமிகள் அவதரித்த திருத்தலமாகிய சீகாழிக்குள் செல்லாது நம்பிகள் வெளியே நின்று துதித்து இறைவன் காட்சி கொடுக்கப்பெற்றுச் சென்ற சரிதமும், காரைக்காலம்மையார் தலையால் நடந்துசென்ற தலத்தை மிதித்து அடைய அஞ்சித் திருஞானசம்பந்த சுவாமிகள் புறத்து வேறோர் பதியிலே எழுந்தருளியிருந்து துதித்த சரிதமும் காண்க. ("இம்மையிலே"—திருஞா - புரா - 1009)

சித்தவடமடம் - திருவதிகைக்கு வடமேற்கில் 3 நாழிகை யளவில் உள்ளதொரு பழைமையாகிய பொதுத் திருமடம். திருவதிகைப் புறநகருக்கு வெளியே உள்ள வயல்களுக்கு அப்பால் உள்ளதாதலின் **புறம்பணையின்** என்றார். **புறம்பணை** - முன்பின்னாகத் தொக்கது. நம்பிகள்பரிசனங்களுடன் எழுந்தருளிய பெருமையும், அன்றிரவு இறைவன் கிழவேதியனாக வந்து தாமும் கூடவே பள்ளிகொண்டு நம்பிகளது திருமுடிமேல் இருமுறை தமது திருவடி சூட்டிய பெருமையும், இங்கிருந்தே நம்பிகள் 'தம்மானை யறியாத சாதியார்' என்ற திருப்பதிகத்தைத் திருவதிகை இறைவன்மீது பாடிய பெருமையும் உடையது. அப்பர்சுவாமிகளால் 'சித்தவடமு மதிகைச் சேணுயர் வீரட்டம்' (திருவதிகை - காந்தாரம் - 3) என்று பாடப்பெற்ற பெருஞ்சிறப்புடையது. இது இப்போது கோட்டாலம்பாக்கம் என வழங்கப்பெறுகின்றது. இவ்விடத்து ஒரு சிவாலயம் உண்டு. திருத்துறையூரிலிருந்து 3 நாழியளவில் உள்ள இதற்கும், இதிலிருந்து திருவதிகைக்கும் நேர்ப்பாதை உண்டு.

கைத்தொண்டு விரும்பும் - இடையறாது பொழிகண்ணீர் மழையும், வாக்கிலே ஈறின்றி எழும் தீந்தமிழின் மாலைகளும், அன்புடைத் தொண்டர்க்கமுதரும்பி யின்னல்களையும் திருத்தாள்களையே சார்வாகும் திருமனமும், உடையார் அப்பர் சுவாமிகள்; ஆயினும், அவற்றோடு கைத்தொண்டு செய்தலை மிக விரும்பிச் செய்தனர். ஆதலின் உழவாரப் படையினை எப்போதும் தாங்கிச் சென்றார். 83

230. வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்றொண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடையெங்கு மிடைகின்ற
பரிசனமுந் துயில்கொள்ளப் பள்ளியமர்ந் தருளினார். அச

(இ - ள்) வெளிப்படை. சோலைசூழ்ந்த அந்தச் சித்தவடத் திருமடத்திலே நம்பிகள் திருவீரட்டானேசுவரருடைய திருப்பாதங்களையே இடைவிடாது சிந்தித்துக் கொண்டவராகித் தம்மைச் சூழப்பொருந்திய பரிசனங்கள் துயிலப் பள்ளிகொண்டருளினார்.

(வி - ரை) **சோலைசூழ்மடம்** - பூசைக்கும், தவத்திற்கும், ஏற்ற அமைப்புக்கள் கிடைத்தலாலே பூஞ்சோலைகளினிடையே திருமடங்கள் அமைத்தல் வழக்கு. மடங்கள் முதலில் அமையப் பின்னரே சோலைகள் அமைவதால் **சோலைசூழ்மடம்** என்றார். **வரிவளர்** - (1) வரிகளையுடைய - (2) வரிசையாகிய - (3) வரிப்பாட்டுகளைப் பாடும் - வண்டுகள் என்க.

புரிவுடைய - இடைவிடாது நினைக்கின்ற. "புகழ்புரிந்தார்" (குறள்.) உட்புகாமையாலே நேரே தரிசிக்கப்பெறாது அவற்றையே சிந்தித்துக் கொண்டிருந்த மனம். இது மனத்தினியல்பு. இறைவன் பாதங்களைத் தம் முடிமேலே சூட்ட வேண்டுமென்று எப்போதும் எண்ணிக்கொண்டிருந்தார் நம்பிகள் என்பது,

"எம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்"

என்ற தேவாரத்தால் அறியலாம்.

புடையெங்கும் மிடைகின்ற பரிசனமும் - எண்ணில்லாதவர்களாய்ச் சுற்றி எங்கும் நெருங்கிச் சூழ்ந்த பரிசனங்கள். பரிசனமும் - உம்மை எதிரது தழீஇயது. இத்தனைபேரும் அறியாமே பின்னர் இறைவன் வருகின்றாராதலின் அதன் அருமை காண இவ்வாறு விதந்து கூறினார்.

விரிதிரைநீர்க் கெடில் வட வீரட்டானத்து இறை - இது நம்பிகள் இங்கு அருளிய 'எறிகெடில வடவீரட் டானத் துறைவானை' என்ற திருப்பதிக மகுடப் பகுதியின் பொருள். 84

231. அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளு மங்கணரு
முதுவடிவின் மறையவராய் முன்னொருவ ரறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து பூந்தாரான் றிருமுடிமேற்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போற்பயின்றார். அரு

(இ - ள்) வெளிப்படை. நம்பிகள் தமது தாளை நினைத்துப் பள்ளியமர்ந்ததைக் கண்டு திருவீரட்டானேசுவரர் கிழமறையவராகிய உருவத்துடன் முன்னே ஒருவரும் அறியாதபடி அந்தப் பொதுமடத்தினுள்ளே புகுந்து நம்பிகளது திருமுடியின் மேலே தமது தாமரை மலர்போன்ற திருவடிகளை வைத்துத் தாமும் பள்ளிகொள்வாரைப் போன்று காட்டினார்.

(வி - ரை) **அதுகண்டு** - தமது திருவடிகளை முடிமேல் வைக்கப்பெறவேண்டுமென்னும் ஆசையுடன் பள்ளியமர்ந்ததைக் கண்டு. வேண்டுவார் வேண்டியாங்கு அருளுவாராதலின் அதனைக் கண்டு பின்வருமாறு செய்தருளினார் என்க.

கண்டு அருளும் அங்கணர் - அவரது ஆசைகண்டமையினாலே அவர் விரும்பியதையே தரவேண்டுமென்ற அங்கண்மையுடையார். தாள் புரிந்தார்க்குத் தாள்களையே அருளும் கருணையுடையார் என்க.

"வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்ற தேவாரமும் காண்க. 'அந்நிலை யவர்தாம் வேண்டு மதனையே யருளவேண்டி' (வரிசை - 341. இப்புரா - 195) என்று பின்னர்ச் சாக்கிரத்திலே திருவடிகளை அருளியதும் காண்க.

முதுவடிவின் - தாம் எப்போதும் பூண்டு பழகிய பழைய வடிவாகிய கிழ மறையவர் கோலம். முதுமறையவராகியது அவர் இயல்பு. அதனை வடிவாகக் கொண்டு வெளிப் பட்டார் என்பார் **முதுவடிவின்** மறையவராய் என்றார். எல்லார்க்கும் முன்னவனாத லின் முதுமையார் ஆயினர். வரும்பாட்டில் **என்னுடைய மூப்பு** என்பதும் காண்க.

முன்ஒருவர் அறியாமே - **முன்** - (1) நம்பிகள் அறிவதற்குமுன். (2) இறைவர் அறி விப்பதற்குமுன். **ஒருவரும்** - உம்மை தொக்கி நின்றது.

பொதுமடம் - பொதியில். 'மன்றமும் பொதியிலும்' (திருமுருகாற்றுப்படை) அடியார்கள் எல்லாருக்கும் பொதுவாக அமைத்தபடியால் இறைவனும் அவ்வேடந் தாங்கி உள்ளே புக இடமுண்டாயிற்று என்று குறிப்பார் பொதுமடம் என்றார்.

பூந்தாரான் - தாமரைப்பூ மாலை யணிந்த நம்பிகள். **பூ** - சிறப்புப்பற்றித் தாமரை யைக் குறித்ததுடன், அந்தணராகிய நம்பிகளது மரபுக்கு உரிய திருவடையாள மாலையுங் குறித்ததாம். 'அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்' (நம்பிகள் தேவாரம் - பழ மண்ணிப் படிக்கரை - 10).

திருமுடிமேல் - 'என் முடிமேல் வைத்திடுமென்னும் ஆசை' கொண்டாராதலின் முடிமேல் வைத்தார். அன்றியும் இறைவனது தாள்களை வைக்குமிடம் திரு முடியேயாம். 'குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்' (அப்பர்சுவாமிகள் தேவாரம்.)

பதுமமலர்த் தாள் - தாமரைபோன்ற திருவடிகள். தாமரைமாலை யணிந்தார்க்கு முடியிற் சூட்டுவதுந் தாமரையே என்னும் தகுதி குறித்தபடியுமாம். பதும முதலிய இரேகை முத்திரைகள் அமைந்து முழுஇலக்கணமும் வாய்ந்த திருவடிகள் என்றலு மாம். 'திருவடியிற் றிருப்பஞ்ச முத்திரையுந் திகழ்ந்திலங்க' (மானக்கஞ்சாற நாயனார் புராணம் - 24) என்றமை காண்க. தவநெறி தந்தருளிய இறைவர் அதன் பின்னர் முறைப்படி திருவடி தீக்கையும் செய்தார் எனக.

பள்ளிகொள்வார் போல் பயின்றார் - உண்மையிற் பள்ளிக்கொண்டாரல்லர். அவ்வாறு நடித்துக் காட்டினார்- **பயிலுதல்** - இங்குப் பாவனை காட்டுதல் என்ற பொருளில் வந்தது. நித்தியமாகிய ஐந்தொழிலை எப்போதும் செய்பவராதலின் பள்ளி கொண்டறியார். ஆதலின் அவ்வாறு செய்வார்போலே பயின்றார். முன்பாட்டிலே ஆரூரர் '**பள்ளியமர்ந்தருளினார்**' என்றதும் காண்க. 85

232. அந்நிலையா ரூரனுணர்ந் 'தருமறையோ யுன்னடியென்
சென்னியில்வைத் தனை'யென்னத் 'திசையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்கா' ணென்றருள வதற்கிசைந்து
தன்முடியப் பால்வைத்தே துயிலமர்ந்தான் றமிழ்நாதன். அசு

(இ - ள்) அந்நிலை...என்ன - அந்த நிலையை நம்பி ஆரூரர் தெரிந்து அவரை நோக்கி 'அருமறையோனே! உன் அடிகளை என் முடிமேல் வைத்தனையே!' என்று சொல்ல ; திசை...என்றருள-அதற்கு அவர் 'என்னுடைய மூப்பு என்னைத் திசைதெரி யாமற் செய்து விட்டது' என்று விடை சொல்லவே ; அதற்கிசைந்து...தமிழ் நாதன்- தமிழ் நாதனாகிய ஆரூரர் அதனை ஒப்புக்கொண்டு தமது திருமுடியை அப்பால் வேறி டத்திலே வைத்துத் துயில் கொண்டார்.

(வி - ரை) **திசை அறியா வகை செய்தது என்னுடைய மூப்புக்காண்** - உனது முடியிருந்த திசையை என்னை அறியாமற் செய்து விட்டது என்னுடைய மூப்பு என் பது வெளிப் பொருள். **காண்** - எனது மூப்பினைக் காண்பாய். இனி, நான் உன் முடி

யிற் கால் வைக்கும் இறைவன்; நீமட்டுமல்ல; எத்திசையில் உள்ள எவர்களும் என்னை இன்ன தன்மையன் என்றறிய முடியாமற் செய்து விட்டது எனது 'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய பழைமை; இதனை நீ (நாம் காட்டக்) காண் பாய்' என்பது உட்பொருள்.

தன்முடி அப்பால் வைத்தே - மிக மூப்பு அடைந்த அவர் தாளை அப்புறம் வைக்கச் சொல்லி அவரை வருத்தாது. அவர் சொன்னதற்கு இசைந்து விட்டாராதலாலே தம்முடியை வேறு புறமாக வைத்து.

துயில் அமர்ந்தான் தமிழ் நாதன் - தேவாரத் தமிழ் நாதர். நம்பிகள். முன்னர் 'உயர் நாவலர் தனிநாதனை' (வரிசை 223) என்றதும் காண்க.

துயிலமர்ந்தான்-துயில் கொண்டருளினார். **துயில**-துயில் கொள்ள ; **அமர்ந்தான்** என்றலுமாம். நம்பிகளை முன்னர் வந்தித்தார், மனங்கொண்டார், புறத்தணைந்தார், மடம் புகுந்தார், பள்ளியமர்ந்தருளினார் எனவும், பின்னர்ப் பாடினார், எனவும், பன்மையிற் கூறிய ஆசிரியர் இங்கு நம்பிகள் இறைவனை ஒருமையிலே ஒரு வேதியனாகவே எண்ணிப் பேசும் இடத்துக் கேற்ப, ஆரூரன் - தன்முடி - அமர்ந்தான் - நாதன் என ஒருமையிற் பேசியிருத்தல் உய்த்துணரத்தக்கது. 86

233. அங்குமவன் றிருமுடிமேன் மீட்டுமவர் தாணீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவ லூராளி
'யிங்கென்னைப் பலகாலு மிதித்தனைநீ யா'ரென்னக்
கங்கைசடைக் கரந்தபிரா 'னறிந்திலையோ' வெனக்கரந்தான். அஎ

(இ - ள்) அங்கும்...நீட்ட - (நம்பிகள் தமது திருமுடியை அப்பால் வைத்துத் துயிலமர்ந்த) அவ்விடத்திலேயும் மீண்டும் அவர் தமது திருவடிகளை அவரது முடியின் மேல் நீட்டவே ; செங்கயல்...என்ன - கயல் மீன்கள் பாய்தற் கிடமாகிய வாவிகள் சூழ்ந்த திருநாவலூரின் நம்பிகள் அவரை நோக்கி 'இங்கு என்னைப் பல முறையும் மிதித்தாய்; நீ யார் ?' என்று சினந்து கேட்க ; கங்கை...கரந்தான் - கங்கையைச் சடையிலே ஒளித்த இறைவன் 'என்னை நீ இன்னும் அறியவில்லையா?' என்று சொல்லி மறைந்தருளினார்.

(வி - ரை) **செங்கயல்பாய் தடம்**-தடம்-பொய்கை. கயல்கள் பொய்கையிலிருந்து போர் செய்யும் இயல்புடன் தாவிக் குதிப்பனவாம். நம்பிகளது முன்பாட்டிற் கண்ட மன நிலைக்கும் இப்பாட்டிற் காணும் மன நிலைக்கும் ஏற்ற குறிப்புக் காட்டுமாறு **கயல் பாய் தடம்புடை சூழ்** - என்றார். கயல்களின் இயல்பும் குணமும் (வரிசை - 70) முன்னர்க் 'காவினிற் பயிலும்' என்ற பாட்டின்கீழ்க் காண்க.

திருநாவலூராளி - திருநாவலூரின் தலைவர். 'தென்னாவலர்கோன்' (நம்பிகள் தேவாரம் - திருநெல்வாயிலரத்துறை - 10).

முடிமேல் தாள் நீட்ட - தாள் தலையிற் பொருந்தும்படி நீட்டுதலும்.

பலகாலும் மிதித்தனை - முன்னே தாள்வைத்தது மூப்பினால் என்று எண்ணியது தவறு ; இப்போது செய்த செயலினாலே அதுவும் வேண்டுமென்றே **மிதித்த** செயலே என்பது குறிப்பு.

நீ யார் ? - முன்னர் 'அருமறையோய் ! உன் அடி என் சென்னியில் வைத்தனை' என்றார். 'மூப்புக்காண்' என்றதற்கிசைந்து அவரை ஒன்றும் சொல்லாது தன்முடி அப்பால் வைத்தே துயிலமர்ந்தார். ஆயின் இப்போது 'நீயார்' என்று கேட்டது நம்பிகள் கொண்ட சீற்றத்தைக் குறித்தது. சீற்றம் முன்னிருந்த நிறையினை மாற்றியது காண்க.

அறிந்திலையோ ? - ஒருவரும் அறியாமே இங்கு வந்து பள்ளியமர்ந்த செயலிலே அறியலாம். நாமே தடுத்து ஆளாக்கொண்டமையால் உனது முடியிலே அடி சூட்டுவார் பிறரிலர் என்று அறியலாம். இன்னும் அறிந்திலையோ ? என்க.

காந்தான்-காட்டிய உருவத் திருமேனியை மறைத்தருளினர். மறைந்து நிற்றலே இவரது இயல்பு என முன்னர் 'முதுவடிவின் மறையவராய்' என்றதற்கேற்பக் கங்கை சடைக் காந்த செயலேயும் குறித்தார். 'அறிந்திலேயோ' என்ற விஞவினுலும் காந்த தாகிய செயலினுலும் தம்மை அறிவித்தபடியாம். வரிசை 211-ம் பாட்டிலே கண் டிலர் - என்பதன் உரை காண்க.

மீண்டும்—மிதித்தநீ—என்பனவும் பாடங்கள்.　　87

234. 'செம்மாந்திங் கியானறியா தென்செய்தே' னெனத்தெளிந்து
'தம்மானை யறியாத சாதியா ருளரே'யென்
றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைம்மாவி னுரியானைக் கழல்பணிந்து பாடினர்.　　அஅ

(இ - ள்) வெளிப்படை. என் இறுமாப்பினுலே யான் எனது இறைவனை அறியாது என்ன செய்துவிட்டேன்! என்று வருந்தித், 'தம்மானை யறியாத சாதியா ருளரே' என்று தொடங்கும் திருப்பதிகத்தினுலே திருவதிகை வீரட்டானேசுவா ருடைய திருப்பாதங்களை வணங்கித் துதித்துப் பாடினர்.

(வி - ரை) செம்மாந்து - இறுமாப்படைந்து - பெருமிதமடைந்து.

"சிம்மாந்து சிம்புளித்து..." நம்பிகள் தேவாரம் - திருக்கருப்பறியலூர் - 1.

"சீரூர்பாட லாட லருத செம்மாப் பார்ந்து..."

—அப்பர் சுவாமிகள் - திருவாரூர் - குறிஞ்சி - 10.

என்ற திருவாக்குக்கள் காண்க. 'என்னைப் பலகாலும் மிதித்தனை' என்று கூறியதில் யான் என்னும் இறுமாப்பு என் அடிமைத் தன்மையை மறக்கச் செய்தது. என்னை அறியாததாலே, தலைவனுகிய உன்னையும் அறியாமற் செய்து, 'நீ யார்' என்று சினந்து கேட்கச் செய்தது எனது செம்மாப்பு.

'தம்மானை அறியாத சாதியார் உளரே' - இது உண்மையுணர்ந்தவுடனே நம்பிகள் பாடிய திருப்பதிகத்தின் முதற்குறிப்பு. தமது தலைவனையும் அறிந்துகொள்ளாத வகுப்பாரும் உலகத்தில் உண்டோ? சாதியார் - வகுப்பினர் - வகையிலே பட்டவர் - அறியாத வகையினர். சாதி - வகுப்பு என்ற பொருளில் வந்தது. தமது தலைவனைத் - தம்மை ஆளாகக்கொண்டு காக்கின்றவனைத் - தமது நலங்கருதியேனும் யாவரும் அறிவர். அவ்வாறு அறியாத வகையினர் உலகில் இல்லை என்றபடி. உளரே - ஏகார வினு இல்லை என்ற விடைகுறித்து நின்றது. வேறு ஒருவரும் இல்லை; ஆயினும் யான் ஒரு வன் இறைவனை யறியாது இறைபோதும் இகழ்வன்போலும் என்பது பதிகக் கருத்து.

கைம்மாவின் உரியானை-யானையை உரித்துப் போர்த்தவன். யானை மதமுடைமை யின் ஆணவத்தைக் குறிக்கும். தலைவனை நீ யார் என்று கேட்பித்த தமது ஆணவத்தை ஒழித்தவன் என்ற குறிப்புப்பெற நம்பிகள் தேவாரத்திற் காணும் இச்சொற்றொடரை ஆசிரியர் எடுத்தாண்டு இங்குப் பெய்த சிறப்புக் காணத்தக்கது.

கழல் பணிந்து பாடினர் - முன்னர் மறைப்பினுலே 'பலகாலும் மிதித்தனை' என வெறுத்த அந்தக் கழலேயே மறைப்பு நீக்கம்பெற்ற இப்போது பணிந்து துதித்தார்.

பதிகம்　　(பண் - கொல்லிக்கௌவாணம்)　　திருவதிகை வீரட்டானம்

திருச்சிற்றம்பலம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்

தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னு
மாசையால் வாழ்கின்ற வறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போலி யானே. 1

என்பினையே கலனாக வணிந்தானை யெங்க
ளெருதேறும் பெருமானை யிசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன்
வன்றொண்ட னாரூரன் மதியாது சொன்ன
வன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தப்
பெருமானை யதிகைமா நகருள்வாழ் பவனை
யென்பொன்னை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போலி யானே. 10

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு :—வலிய வந்து தமது திருமுடிமேற் பலமுறையும் திருவடி சூட்டிய தலைவனை அறியாது சிறிது இறுமாப்படைந்து மதியாது பல சொல்லி இகழ்ந்தேன். இது தகுமோ ? என்பதாம். 'இறைபோதும் இகழ்வன்போல் யானே ?' என்ற பதிகத்து மகுடம் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) **எம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல் வைத்திடு மென்னு மாசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்** - இது திருவடி தீக்கையிலே நம்பிகள் ஆசை வைத்திருந்ததைக் குறிக்கும் " இறைதாள் புரிவுடைய மனத்தினராய் " (வரிசை 230) என்ற சரிதத்துக்கு அகச்சான்றும். **அறிவிலா நாயேன்** - முன்னர் வழக்கு இட்டபோது அறியாததுபோலவே இன்றும் இறைவர் தாமே வெளிவந்தபோதும் அறியாமலிருந்ததற் கிரங்கிய கூற்று. (2) **முன்னே எம்பெருமானை மறந்தேன்கொல் மறவா தொழிந்தேன்கொல் மறவாத சிந்தையால் வாழ்வேன்.** இதுவும் நம்பிகளது அறிவு நிலையை மிக நன்றாக உணர்த்தும் அகச்சான்றும். ' நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே - னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்' என்றும், ' பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை ' என்றும் வரும் அப்பர் சுவாமிகள் திருவாக்குக்களை இங்கு வைத்து உன்னுக. (**என் கோல்** - என்பதும் பாடம்.) **அமரப்படுவான்** - நினைக்கப்படுபவன். (3) **வளராத பிறையும் வரியரவும் உடன்றுயில வைத்தாளும் எந்தை** - உடன்றுயில - ஒன்றாய் வாழ ; **வளராத பிறை** -

'மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமே லாகந்
தெறுமென்று தேய்ந்துழலு மாவா—உறுவான்
தளரமீ தோடுமேற் றனதனை யஞ்சி
வளருமோ பிள்ளை மதி '—**காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி** - 36

காண்க. (4) **நாற்றனத் தொருவனை** - 'இது நாலா நிலையாகிய சிவயோகத்தைக் குறிக்கும் என்பர். "நாற்றனத் தொருவனை - என்பது திருக்களிற்றுப்படி. நின்மல துரிய நிலையே தசகாரியத்துள் சிவயோகநிலை. சிவம் தெளிவாக விளங்கும் நிலை இதுவே. (இது ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் உரைக்குறிப்பு). நம்பிகள் ஞான யோக நெறியை விளக்கவந்த ஆசாரியராதலும் காண்க. ' தேடுவன் றேடுவன் செம் மலர்ப்பாதங்க ளாடொறும், நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்" (திருவாமாத்தூர் - 9) என்ற நம்பிகள் தேவார முதலியனவும் காணத்தக்கன. **நானுய பரனை** - இதற்கு 'என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய வீசன்' என்ற கருத்துக் கொள்ளுதல் சிறப்பாகத் தோன்றுகின்றது. " புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்த்து,

மிக்க போகம் விதியால் விளைத்திங், கெற்பணி யாளா வெனைப்பிரி யாதே, யோடி மீள் கென வாடல் பார்த்திட், டென்வழி நின்றன னெந்தை", "என்வழி யிற்றை ஞான்று மிருந்தரு டன்னைப் போலத், தன்வழி யெற்றை ஞான்றுந் தங்குமந் நிலைமை" என்பன இருபா இருபஃது - தணிகைப் புராணம் - இதுவும், ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் உரைக்குறிப்பு.

"பத்திப்போர் வித்திட்டே பரந்த வைம்புலன்கள் வாய்ப்
பாலே போகா மேகாவாப் பகையறு வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள் வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொரு நெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம் பொருள்
சேர்வார் தாமே தானகச் செயுமவன்."

திருக்கழுமலம் - திருத்தாளச்சதி - 7. என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரமும் காண்க. இதில் "நாலந்தக் கரணமுமொரு நெறியாய்ச் சித்திக்கே யுய்த்திட்டு' என்பதனை "மறவாத சிந்தையால் வாழ்வேன்" என்றதனோடு வைத்துக் காண்க. (6) 'வானோர் தம்மானைத் தலைமகனை', 'வெண்ணீறு சண்ணித்த மேனி' இச்சொற்றொடர்கள் முறையே, அப்பர் சுவாமிகளது திருவாரூர் 'பொய்ம்மாய' என்ற திருத்தாண்டகத்தையும், திருவாரூர்ப் பழமொழித் (கார்தாரம்) திருப்பதிகம் 'மெய் யெலாம்' என்ற பாட்டினையும் நினைவூட்டுகின்றன. உடைய அரசு கைத்தொண்டு செய்த தலம் என்று உட்புகாது தங்கிய நம்பிகள் அவர்களது தேவாரங்களை எண்ணினர்போலும். **சண்ணித்தல்** - நிறையப் பூசுதல் (9) **கருந்தாள** - பெரிய வலிய கரிய கால்களை உடைய; **பெரியகண் மூன்று** - சூரியன், சந்திரன், அக்கினி என்ற உருவிலும் வலியிலும் பெரியனவாகிய மூன்று கண்கள். (10) **இசைஞானி** - என்ற தமது தாயாரின் பெயரையும், **சிறுவன்** - என்று தமது வயதையும், (மணஞ்செய்பவரும் 16 வயது என்பதிலக்கணம்) **நாவலூர்க்கோன்** எனத் தமது தலத்தையும், **வன்றொண்டன், ஆரூரன்** - என முறையே தமக்கு இறைவனும் பெற்றோரும் அளித்த பெயர்களையும், **மதியாது சொன்ன** இப்பதிகம் பாடிநின்ற சரிதக் குறிப்பையும்பெற வைத்திருத்தல்காண்க. இவ்வாறே பின்வரும் பதிகங்களிலும் கண்டுகொள்க.

நலவிசேடம் - அட்டவீரட்டங்களில் ஒன்று. திரிபுரமெரித்த வீரம் நிகழ்ந்த தலம். அப்பர் சுவாமிகளை ஆட்கொண்ட வரலாறு அப்புராணத்துக் காண்க. திலகவதியம்மையார் திருப்பணி செய்தமர்ந்த தலம். இவர்களது திருவுருவங்கள் இங்கு அமைத்துப் பூசிக்கப் பெறுகின்றன. திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு இறைவன் இங்கு முன்னே எதிர்காட்சி கொடுக்க 'ஆடும் வீரட்டானத்தே' என்ற குறிப்புடன் பதிகம் பாடியருளினர். இறைவனது இலிங்க அருட்டிருமேனி மிக உன்னதமாய் விளங்குவது. **தீர்த்தம்** - கெடிலநதி. **சுவாமி** - திரிபுராந்தகேசுவரர். **தேவியார்** - திரிபுரசுந்தரி. இது நடுநாட்டுத் தலங்களில் 7-வது தலம். கெடில நதியின் வடகரையில் உள்ளதென்பது பதிகத்துக் காண்க. திருப்பதிகங்கள் 8. மூவர் பதிகங்களுமுண்டு. பண்ணுருட்டி இருப்புப்பாதை நிலயத்திலிருந்து கிழக்கே ஒரு நாழிகையளவில் அடையத்தக்கது. 88

235. பொன்றிரளு மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளும்
மின்றிரண்ட வெண்முத்தும் விரைமலரு நறுங்குறடும்
வன்றிரைக ளாற்கொணர்ந்து திருவதிகை வழிபடலாற்
றென்றிசையிற் கங்கையெனுந் திருக்கெடிலந் திளைத்தாடி. அகூ

236. அங்கணரை யடிபோற்றி யங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித்தோண் மாவலிதன்
மங்கலவேள் வியிற்பண்டு வாமனனாய் மண்ணிரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணி குழியணைந்தார். ௩௰

235. (இ - ள்) வெளிப்படை. பொன்னையும், மணிகளையும், யானைக்கொம்புகளையும், முத்துக்களையும், மலர்களையும், சந்தனக்கட்டைகளையும் அலைகளாற் கொண்டு வந்து திருவதிகையை வழிபடுகின்றதனாலே **தென்றிசைக் கங்கை** என்று சொல்லப் பெறும் திருக்கெடில நதியிலே மகிழ்ந்து மூழ்கி, நம்பிகள், ௩௯

236. (இ - ள்) வெளிப்படை. பெருமானை அடி வணங்கி, அங்கு நின்றும் புறப்பட்டு, அந்தத் திருநதியின் தென்கரையின் வழியே போய், மாபலிச்சக்கரவர்த்தியினிடம் வாமன உருவத்துடன் சென்று மூன்றடி மண் யாசித்து அவனைப் பாதலத் தழுத்திய விட்டுணுமூர்த்தி பூசித்த தலமாகிய திருமாணிகுழியை அணைந்தனர். ௩௰

235. (வி - ரை) பொன் - மணி - முத்து - மலர் - நறுங்குறடு - இவை இறைவனது பூசைக்குரிய பண்டங்கள். இவற்றை நீரிலே இட்டு இறைவனைத் திருமஞ்சனமாட்டி அர்க்கிய பாத்திய ஆசமன முதலியன கொடுத்து வழிபடுதல் ஆகம விதியாம். யானைக் கொம்புகள் இறைவன் எழுந்தருளுவதற்குப் பல்லக்கு முதலியவை செய்ய உதவும். இவைகளைத் தனது நீர்ப்பெருக்கிலே கொண்டுவந்து திருவதிகைத் தலத்தை வழிபடுகின்றது போன்றது கெடிலநதி. **வழிபடல்** - வழியிலே செல்லுதல் என்ற பொருளும் காண்க.

மணி - பின்னே சொல்லும் முத்தும், கடலிலேபடும் பவளமுமொழிந்த ஏனை இரத்தினங்கள். கங்கையும், இறைவன் வழிபாட்டிற்கு இமயச்சாரற் பண்டங்களை வாரிக்கொண்டு வந்து, யாண்டும் யாரும் யாவும் பயன்படுத்துதற்குரியதாய், விளங்குவதோடு சிவபெருமானது சடையிலும் பெருகி, என்றும் திருமஞ்சனமாட்டுதலால் கெடிலம் போன்றது என்றார். இமயம் பொன்மலை என்பர். பொன் முதலியவற்றை வாரிக் கொணர்தலும் வழிபடுதலும் இரண்டிற்கும் பொதுத் தன்மையாம். கங்கை வட திசையில் உள்ளதாதலின் கெடிலத்தைத் '**தென்றிசையிற் கங்கையெனும்**' என்றார்.

"...தென்றிசைக், கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே"

என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்குக்கு இங்குப் பொருள் காட்டியவாறு. 'பொன்னி, உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்' என்ற (வரிசை 57) திருப்பாட்டும் உரையும் இங்கு வைத்துக்காண்க.

பொன்றிரள் - பொற்றாள் - பொற்சன்னம். பொன் பிரித்துணரப்படாமல் மணலோடு கலந்து வருதலின் **திரள்** என்றார். **மணித்திரள்** - பலவகை மணிகளின்தொகுதி. பல வகையும் பிரித்துணரப்படாமையானும், முறுக வாங்கிக் கடைந்தெடுக்கப்பட்ட பின்னரே மணிச்சோதி தோன்றி இன்னவென்று அறியப்படுதலானும், அதன்முன்னர் ஆற்றிலே அலைத்து வரும்போது வெறுங் கற்கூட்டங்களுடன் வைத்தெண்ணப் படுதலானும், மணிகளையும், **திரள்** என்றார். எனவே, பொன்னும் மணியும் அறியப்படாத கூட்டமாயினமையின் **திரள்** என்ற ஒருமைத் தொகுதியாற் கூறினாராயிற்று.

முத்து - மலர் - குறடு - இவை சாதி ஒருமை. இவையும் தொகுதியாயினும் அறியப்பட்ட கூட்டமாயினமையின், அவ்வாறு **திரள்** என்னாது, சாதி ஒருமைத் தொகுதியால் உம்மை கொடுத்துக் கூறினார். **கோடுகள்** - தொகுதியாய் வராது சிலவாய்த் தனித் தனி எண்ணி யறியப்படும் தகுதிபற்றிப் பன்மையாற் கூறியபடி.

பொரு கரி-போர் செய்யும் குணமுடைய யானைகள். யானைகள் போர்தொடங்குமாயின் இறக்கும்வரை விடாது போர் செய்யும் இயல்புடையன. ஆதலின் **பொருகரி** என்று சிறப்பித்தார்.

வெண் கோடுகளும் மின் திரண்ட வெண்முத்தும் - வெள்ளிய யானைக்கொம்புகளும், முழு ஒளியும் பெற்றுத் திரண்டு விளைந்து அவற்றிலிருந்து வெளிப்பட்ட வெண்முத்துக்களும். யானைகள் போர் செய்தலால் ஒடிந்துபட்ட கொம்புகள். முத்துப் பலவிடத்தும் பிறக்கும். இங்கு வருவன, குறிஞ்சிப் பொருள்களுள், யானைக்கொம்பிற் பிறப்பன என்று குறிப்பார், மணித்திரளினின்று வேறு பிரித்துக் கோடுகளுடன் சேர்த்துக் கூறினர்.

விரைமலரும் நறுங்குறடும் - வாசனையுடைய புது மலர்களும், நறுமணங் கமழும் சந்தனக்கட்டைகளும். இவை இரண்டும் வாசனைப்பொருளும், முன் மூன்றும் (பொன்-மணி - முத்து) ஒளிப்பொருள்களுமாயின. 89

236. (வி - ரை) **அங்கணரை அடிபோற்றி** - கெடில வடகரையினின்றே வீரட்டானேசுவரரைப் பூசித்து-அஃதாவது அவரை ஆவாகித்துச் சிவபூசை பண்ணி. மேலே 'நீள்சடையோன் திருப்பாத மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார்' (வரிசை-226) என்றமை காண்க. தாம் நகருட் புகாதிருந்தும், மறுத்தும், வலியத் திருவடி சூட்டியமையால் அந்த **அடி**களைப் போற்றினர். ஆதலின் அங்கணரைப் போற்றி என்னாது, **அடி போற்றி** என்றார். வரும் பாட்டிலே **தென்கரைபோய்** என்றமையாலும், திருவதிகை கெடிலநதியின் வடகரையில் உள்ளமையாலும், இங்குப் போற்றியது வடகரையினின்று என்க. நம்பிகள் அதிகைநகருட் புகாமை துணிந்தாராதலின் கரையினின்றே போற்றினர் என்றும் கொள்க.

அங்ககன்று - அங்கு நின்றும் நீங்கி- ஐந்தாம் வேற்றுமையுருபு தொக்கது.

போர் வலித்தோள் மாவலி - மாவலி என்ற பெயரின் காரணங் காட்டியவாறு. போரிற் பெரும் வலிமை படைத்தவனாதலின் **மாவலி** எனப்பட்டான்.

திருமறைக்காட்டிலே ஒரு எலி திருக்கோயிலில் விளக்கிலிருந்த நெய்யை உண்ணப் புக்கபோது மூக்குச் சுட்டிட அதனால் தானறியாமலே திரியைத் தூண்டிவிட்டது. அந்தப் புண்ணியவசத்தால் சக்கரவர்த்தியின் ஆணையும் திறனும் பெற்று **மாவலி**யாய்ப் பிறந்தது என்ற சரிதம் புராணங்களிற் கேட்கப்பெறும்.

> "நிறைமறைக் காடு தன்னி னீண்டெரி தீபந் தன்னைக்
> கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
> நிறைகடன் மண்ணும் விண்ணு நீண்டவா னுலகு மெல்லாங்
> குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கைவீ ரட்ட னாரே"
>
> —**அப்பர் சுவாமிகள் தேவாரம்**

என்ற திருநேரிசை காண்க.

மங்கல வேள்வி - சிவன் மங்கலத்தைச் செய்பவன். அவனை நோக்கிச் செய்யப் பெற்றதாதலின் மங்கலவேள்வி என்றார். வேள்வி செய்தான் இறந்துபட்டது அமங்கல மன்றோ எனின், அன்று; உலகங்காக்கும் தேவனாகிய விட்டுணுமூர்த்தியேவந்து இரந்து கேட்கநிகழ்ந்ததாலும் அதனால் அழியாப்புகழ்பெற்றமையாலும் மங்கலவேள்வியாமென்க.

வாமனனாய் மண் இரந்த - விட்டுணுமூர்த்தி வாமன உருவத்துடன் - குற்றுருவுடைய பிரமசாரியாய் வேள்வியில் வந்து மாவலியினிடம் மூன்று அடி மண் யாசித்துப் பெற்றுப், பின் வளர்ந்து, அவனைப் பாதலத் தழுத்தினர் என்ற சரிதமும் புராணங்களுட் காண்க. "அடியளந்தான் தாஅயதெல்லாம்" என்பது திருக்குறள்.

> "மறுமா னுருவாய் மற்றிணை யின்றி வானோரைச்
> செறுமா வலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
> குறுமா ணுருவன் றற்குறி யாகக் கொண்டாடும்
> கறுமா கண்டன்"—**குறிஞ்சி - திருக்கண்ணார் கோயில் - 5**

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரமும் காண்க,

செங்கணவன் வழிபட்ட திருமாணிகுழி - சிவந்த கண்ணுடைய திருமால் அப் பழி நீங்கும்பொருட்டுச் சிவபூசை செய்த திருமாணிகுழி என்ற தலத்தை. **திருமாணி குழி** என்ற தலப் பேரின் காரணமும் முன் வரலாறும் குறிப்பித்த அழகினை நோக்குக. **மாணி** - பிரமசாரி; **குழி** - தலம். வாமனனாகிய பிரமசாரி பூசித்த தலம் என்க. உத் தம குணங்களுடையானும் சிவபத்தனுமான மாவலியை யாதொரு குற்றமுமின்றியே, தேவர்கள் வேண்டுதலுக்காக வஞ்சித்து அழித்தமையால் உளதாகும் பழியைப் போக் கிக்கொள்ளத் திருமால் இறைவனை வழிபட்டார் என்பது சிவபுராணங்களிற் கண்டது. குற்றுருவத்தோடு விளைத்த கேட்டினைச் சீர்ப்படுத்திக்கொள்ள அவ்வுருவத்தோடு பூசித்தவகையை,

> ' நித்தநிய மத்தொழில னாகிநெடு மால்குறள னாகிமிகவும்
> சித்தம தொருக்கிவழி பாடுசெய நின்றசிவ லோகனிடமாம் ''

என்ற (ஆளுடைய பிள்ளையாரது - சாதாரிப்பண் - 4) இத்தலத் தேவாரத்திற் காண்க. இங்குக் **குழி** என்பது **தங்குமிடம் - தலம்** என்ற பொருளில் வந்தது அரதைப்பெரும் பாழி என்பதிற் **பாழி** என்றதுபோல. இந்தத் தலத்துக்கு நம்பிகள் அருளிய திருப் பதிகம் இப்போது கிடைத்திலது - இறந்துபட்டதுபோலும்.

தலவிசேடம் - **திருமாணிகுழி** - நடுநாட்டுத் தலங்களில் 17-வது தலம். இது திருப் பாதிரிப்புலியூரிலிருந்து மேற்கே 5 நாழிகை சென்று தெற்கில் அரைநாழிகை கடந்து சென்றால் கருடநதியின் தென்கரையில் உள்ளது. நம்பிகள் திருவதிகையி லிருந்து சென்று இதனை அடைந்தவழி வேறு. தலசரிதக் குறிப்புக்கள் மேலே உரைக் கப்பெற்றன. **சுவாமி** - மாணிக்கவரதர். **தேவியார்** - மாணிக்கவல்லி. 90

237. பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் றினைநகரை வணங்கினர்வண் டமிழ்பாடி
நரம்புடையா ழொலிமுழவி னாதவொலி வேதவொலி
யரம்பையர்தங் கீதவொலி யறாத்தில்லை மருங்கணைந்தார். ௯௧

(இ - ள்) பரம்பொருளை...போய் - அங்கே முழுமுதற் பொருளாகிய சிவபெரு மானைப் பணிந்து அவரது பாதங்களை வந்தித்துக் கொண்டுபோய்; பணிந்தவர்க்கு... பாடி - தம்மை வணங்கியவர்களுக்கு வேண்டும் வரங்களைத் தருபவராகிய இறைவன் எழுந்தருளிய திருத்தினைநகரை வணங்கித் திருப்பதிகம் பாடிய பின்னர்; நரம்பு... அணைந்தார் - நரம்புகளையுடைய யாழின் ஒலியும், முழவின் ஒலியும், வேத ஒலியும், அரம்பையர் பாடும் கீதவொலியும் இடையறாது முழங்கும் திருத்தில்லையின் எல்லை யைச் சென்று சேர்ந்தார்.

(வி - ரை) **பரம்பொருளைப் பணிந்து தாள்பரவி** - பணிந்தது சிவபெருமானை. பரவியது அவரது சீபாதங்களை. அப்பாதங்களே தமது முடிமேல் நின்று சிவதீக்கை செய்தருளினமையால் அந்நன்றியின் பொருட்டுப் பரவினார். முன்பாட்டுக் காண்க. திருவடியாவன ஞானசத்தி கிரியாசத்திஎன்பன. இவையே திருவடியாக உபசரிக்கப் பெறும். இதன்விரிவைத் திருமூலர் திருமந்திரம் முதலிய ஞானசாத்திரங்களுட் காண்க.

> '' திருவடி யேசிவ மாவது தேரிற்
> றிருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கிற்
> றிருவடி யேசெல் கதியது செப்பிற்
> றிருவடி யேதஞ்ச முட்டெளி வோர்க்கே ''

—திருமந்திரம் - முதற்றந்திரம் - உபதேசம் - 26

பணிந்தவர்க்கு வரந்தருவான் - (தினைநகரை - பாடி) - நீடுவதாகக் கருதி உழன்று திரியும் மானிடயாக்கை அழியத்தக்கது. இதனைப் பொருளென்று கருதாது சென்று

அடைந்தால், திருத்தினைநக ருள்ளே நின்ற சிவக்கொழுந்து அழியா வரத்தைத் தருவார் - என்ற பதிகக் கருத்தை இவ்வாறு குறிப்பிட்டார். பதிகத்தை நோக்குக. "நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து நீங்கலாமென்று மனத்தினைத் தெருட்டி......சிவக்கொழுந்தினைத் திருவடியிணைதான்......வன்றொண்டனூரனுரைத்ததமிழ்..." என்ற திருக்கடைக் காப்பினையும் காண்க.

தினைநகரை வணங்கினர் வண்தமிழ்பாடி - தலத்தைக் கண்டபோதே, இதனுட் சென்றடைக ; அடையிற் பிறவியொழியும் - என்று இப்பதிகம் பாடினர். இது தலத்தின் புறத்தே நின்று தலத்தைப் பாடியது. ஆதலின் **நகரை வணங்கி - தமிழ்பாடி** - என்றார். **சென்று அடை மனனே** என்ற தேவார மகுடத்தினுல் உள்ளே சென்று அடையு முன் பாடியது என்பது பெறப்பட்டது. இவ்வாறே மேல் வரும் தேவாரங்களிலும் உய்த்துணர்க. தேவாரம் சரித ஆதாரவாயினமையும் காண்க.

தமது மனத்தைத் தெருட்டுவதுபோல உட்கொண்டு உலகினர்க்கு வழிகாட்டும் வண்மையுடைமையின் **வண்தமிழ்** ஆயிற்று. வணங்கினராகிப் பாடி - முற்றெச்சம்.

யாழ் ஒலி - முழவொலி - வேதவொலி - கீதவொலி - பொருள் உள்ள சத்தமாகிய வேத கீத ஒலிகளுடன் அவ்வாறல்லாத யாழும் முழவும் சேர்த்து ஒலியென்றதென்னை ? எனின்: **யாழ்** - 'இன்னிசை வீணையர் யாழின ரொருபால், இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்' என்ற திருவாசகத்தின்படி யாழிசையோடு சேர்த்து இறைவன் புகழ் பாடிக்கொண்டு அன்பர்கள் எங்கும் நிறைவதால் துதியுடன்சேர இதுவும் ஒலி எனப்பெற்றது ; **முழவு** - 'ஒருவன் கீகரி காடரங்காக, மாவை நோக்கியோர் மாநட மகிழ மணிமுழா முழக்கவ் வருள்செய்த, தேவதேவ' என்ற நம்பிகள் (திருப்புன்கூர் 8) தேவாரத்தின்படி இறைவனது அருள் நடனத்திற்கேற்ப இது முழக்கப்பெறுதலின், இதுவும் செம்பொருள் பொருந்தலின், அதனோடு சேர்த்து ஒலி எனப்பெற்றது. இன்றும் தில்லைக்கூத்தன் திருமுன்னர் ஏற்றபெற்றி முழா முழக்கி வழிபாடு நடைபெறும்போது இதனைக் கண்டு உண்மை உணரத்தக்கதாம். 'மிகநல்ல வீணைதடவி' (கோளறு பதிகம் 1), 'வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே' (அப்பர்-பொதுத் திருவிருத்தம்), 'மற்றொருகை வீணை யேந்தி' (திருஞான - திருநணு - 2), 'மழலை வீணையர்' ("வலஞ்சுழி-9), 'கொடுகொட்டி வீணை முரல' ("கனிபள்ளி-7) என்பன வாதிய திருவாக்குக்களின்படி ஐந்தொழில் அருள் நடனத்திலே சிருட்டித் தொழிற்காக இறைவன் எழுப்பும் பொருள்குறித்த வீணை ஒலியும், அவனிடத்திலிருந்து உண்டாகும் நாதமும், அவன் சொன்ன நாத உருவமாகிய வேதமும், அதுநோக்கித் தேவர்கள் நிறைதலின் அரம்பையர் கீதமும் என்றும் இடையறாமல் திகழும் தில்லை - என்பது குறிப்பாம்.

"வேத மலிந்தவொலி விழவின்னொலி வீணையொலி
கீத மலிந்துடனே கிளர..." (திருஞான - பஞ்சமம் - பிரமபுரம் 7)

"சொலவல வேதம் சொலவல கீதம்..." (திருஞான-குறிஞ்சி-திருச்சிராப்பள்ளி 8)

முதலிய திருவாக்குக்கள் காண்க. இப்பாட்டிற் குறித்த கீதஒலி தமிழிலே பண்ணிசையுடன் பாடும் தோத்திர ஒலி. வரிசை 87-ம் பாட்டும் உரையும் காண்க.

பதிகம் (பண் - தக்கேசி) திருத்தினைநகர்.

திருச்சிற்றம்பலம்

நீறு தாங்கிய திருநுத லானை நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையி னானைக் குற்ற மில்லியைக் கற்றையஞ் சடைமே
லாறு தாங்கிய வழகனை யமரர்க் கரிய சோதியை வரிவரா லுகளுஞ்
சேறு தாங்கிய திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.(1)

நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து நீங்க லாமென்று மனத்தினைத் தெருட்டிச்
சேடு லாம்பொழிற் றிருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைத் திருவடி யிணைதான்
நாடெ லாம்புகழ் நாவலூ ராளி நம்பி வன்றொண்ட னூர னுரைத்த
பாட லாந்தமிழ் பத்திவை வல்லார் முத்தி யாவது பரகதிப் பயனே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு-மேலே "பணிந்தவர்க்கு வரந்தருவான்." என்றதன் கீழ்க் காண்க.

பதிகப்பாட்டுக்குறிப்பு - (1) '**திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சேன்றடை மனனே**' இது பதிகத்தின் மகுடம். **சிவக்கொழுந்து** - தலத்துச் சுவாமி பெயர் - சிவக்கொழுந்தீசர். எங்கும் பரந்து நிறைந்த சிவம் இங்கு முளைத்தெழுந்ததால் **சிவக்கொழுந்தென்பர்.** (3) **ஒப்பிலா முலையுமை**-தல அம்மையார் பெயர். (7) **தன்னிலாசறு சித்தமுமின்றித் தவமுமின்று** - தவத்துக்கு அடிப்படை மாசிலா மனம் என்பது. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்பது குறள். இப்பாட்டிற் குறித்தது அகப்புறச் சமயச் சைவர் தவவேடம். (10) இப்பாட்டுப் பதிகக் கருத்தைத் தொகுத்துரைப்பதாம். இது மேலே விரிக்கப்பெற்றது. (**திருவடியிணைத்தாள்—என்பதும்** பாடம்.) இது தக்கேசிப் பண்ணில் அமைந்த நம்பிகளது முதற்பதிகம். இப்பதிக யாப்பமைதியிலும் இசையமைதியிலும் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் மிகவும் ஈடுபட்டு அனுபவித்தமைக்கு அடையாளமாக இதுவரை சொல்லிவந்ததை மாற்றித், தில்லை யாத்திரை சொல்லத் தொடங்கும் அடுத்த பாட்டு முதல் இதன் யாப்பினிசையிலே அமைத்துப் பாடியிருத்தல் காணத்தக்கது.

தலவிசேடம் - இது நடுநாட்டில் 5-வது தலம். பள்ளச் சாதியில் அவதரித்த பெரியான் என்ற சிவனடியார் தினைப்புனம் உழுதுகொண்டிருக்கும்போது இறைவன் அங்குவந்து சோறு கேட்க, அதன்பொருட்டு அவர் ஊருக்குப்போய்த் திரும்புவதற்குள், தினைவித்தி முற்றி விளைந்திருக்கச் செய்த காரணத்தால் இத்தலம் இப்பெயர் எய்தியது என்பது தலசரிதம். சுவாமி, தேவியார் பெயர்கள் மேலே குறிக்கப்பெற்றன. சுவாமிக்குத் திருநீசர் என்றும், அம்மையாருக்கு இளங்கொம்பன்னாள் என்றும் பெயர் கூறுவர். இதற்கும் நம்பிகள் பதிகம் ஒன்றே உள்ளது. இது ஆலப்பாக்கம் நிலயத்திலிருந்து தென்மேற்கே மட்சாலையில் 5 நாழிகையிலும், பரங்கிப்பேட்டை நிலயத்திலிருந்து வடமேற்கே 7 நாழிகையிலும் உள்ளது. 91

வேறு

238. தேம லங்கலணி மாமணி மார்பிற்
செம்ம லங்கயல்கள் செங்கம லத்திண்
பூம லங்கவெதிர் பாய்வன மாடே
புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குக டடம்பணை சூழுந்
தன்ம ருங்குதொழு வார்கட மும்மை
மாம லங்களற வீடரு டில்லை
மல்ல லம்பதியி னெல்லை வணங்கி. கூஉ

239. நாக சூதவகு ளஞ்சர ளஞ்சூழ் நாளி கேரமில வங்க நரந்தம் [ருங்கி
பூக ஞாழல்குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சிபல வெங்குநெ
மேக சாலமலி சோலைக ளாகி மீது கோகில மிடைந்து மிழற்றப்
போக பூமியினு மிக்கு விளங்கும் பூம்பு றம்பணை கடந்து புகுந்தார்.

238. (இ - ள்) தேம்...செம்மல் - தேன்பொருந்திய புதிய தாமரை மலர் மாலையும் அணியாகிய சிறந்த மணிமாலையும் அணிந்த மார்பினையுடைய நம்பிகள்; அங்கயல்கள் ...தன்மருங்கு-திண்மையுடைய செந்தாமரைப்பூக்கள் அசையும்படி அழகிய கயல்மீன்கள் எதிர்பாய, (அதனாலே) பக்கத்தில் வண்டுகளும் நீர்ப்பறவைகளும் சத்திக்கும், அலைகளையுடைய வெள்ளிய சங்குகளுள்ள வாவியினின்றும் அசையும் மலங்கு மீன்கள் பரந்த வயல்களிற் சூழ்தற்கிடமாகிய தனது மருங்கிலே; தொழுவார்கள்...வணங்கி - போந்து வணங்குபவர்களுடைய மூன்று மலங்களையும் போக்கி வீட்டினை அருள்கின்ற தில்லை என்னும் செழும் பதியினது திருவெல்லையை வணங்கிக்கொண்டு அதன்பின், ௬௨

239. (இ - ள்) நாகம்...நெருங்கி - நாவல் - மா - முதலிய மரங்கள் எவ்விடத்தும் செறிந்து; மேகசாலம்...மிழற்ற - மேக மண்டலம் வரை ஓங்கி வளர்ந்த சோலைகளாகி அவற்றில் குயில்கள் கூவ; போகபூமியினும்...புகுந்தார் - தேவலோகத்தைவிட மிகப் பொலிவுடன் விளங்கும் அழகிய புறம்பணையையும் கடந்து உட்புகுந்தார். ௬௩

238. (வி - ரை) இவையிரண்டு பாட்டும் ஒரு முடிபு பெற்றன. செம்மல் - எல்லை வணங்கி - புறம்பணை கடந்து - புகுந்தார் - என முடிக்க.

தேம் அலங்கல்-தேன் பொருந்திய என்றதனாற் புதிய எனவும், அந்தணர்க்குரிய திருவடையாள மாலையாதலின் தாமரை எனவும் உரைக்க. மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொங்கிய கோலமுடையராய் முன்னர்க் கூறியதற்கேற்ப அலங்கலும் மணி மாலையும் அணிந்த மார்பர் என்றார். **செம்மல்** - பெருமையுடையவர் - நம்பிகள்.

அம் கயல்கள் செங்கமலத் திண் பூ மலங்க எதிர்பாய்வன மாடே - பூமலங்க எதிர் அம் கயல்கள் பாய்வன மாடு என்று மாற்றுக. திண்ணிய தாமரைப் பூக்கள் அசையும்படி கயல்மீன்கள் எதிர் எதிர் பாய அந்த இடத்தில். அழகாலும் வடிவாலும் பிறழ்ச்சியாலும் பெண்களின் கண்களுக்கு உவமிக்கப் பெறுதலால் **அங்கயல்கள்** என்றார். **எதிர்த்துப் பாய்தல்** கயல்மீனின் இயல்பு. 'மேவி யத்தட மீதெழப் பாய்கயல்' என்று முன்னர்க் கூறியதும் (வரிசை 70) காண்க. **பாய்வன**-பாய்தலினாலே - பாய. இதனைச் சொற்றிரியினும் பொருடிரியாவினைக் குறையாய் வந்த முற்றெச்சம் என்பர் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள். **தண்பூ** என்பது பாடமாயின் குளிர்ந்த பூ என்க.

புள் அலம்பு - வண்டு முதலியனவும் நீர்ப்பறவைகளும் சத்திக்க. கயல்பாய்தலால் பூ அசைந்தன. அதனால் மலரில் இருந்தனவும் பிறவுமாகிய பறவை சத்தித்துப் பறந்தன. இவ்விரண்டினாலும் அலைகள் பெருகின. **திரை** - அலை.

வாவி - தடாகம். இவ்வாறு நிகழ்தற்கிடமாகிய வாவி. இவை தாமரை முதலிய நீர்ப் பூக்கள் நிறைந்தன. தலைமைபற்றிக் கமலத்தைக் கூறினாராயினும் ஏனைச் செங்கழுநீர் முதலியனவும் கொள்க.

வெள்வளை - தாம் மலங்குகள் தடம்பணை சூழும் - அலைகளின் பெருக்கினால் உந்தப்பெற்று வளைகளும் அசையும் மலங்குகளும் வாவியிலிருந்து அருகில் உள்ள வயல்களிற் சூழ்ந்தன. வாவித்திரையால் வெள்வளை - மலங்கு - சூழும் என்று மாற்றுக.

"வாளைபாய மலங்கிளங்கயல் வரிவராலுகளுங் கழனி"—**திருப்பனையூர்-சீகாமரம்-(4)** என்ற நம்பிகள் தேவாரங் காண்க.

கயல்கள் நம்பி வரும் திசைநோக்கி எதிர் பாய்ந்தன. **மலங்குகள்** நம்பி புகும்திசை காட்டிப் பணைசூழ்ந்தன என்ற நயமும் காண்க. வாவித்தாமரை அம்மிறினைத் தொடர்புடையன என்று முனிந்து கயல்கள் நம்பிகளது மார்பிற்றாமரையில் எதிர்பாய என்ற உட்குறிப்பும் காணத்தக்கது. ஆதாரத் தானங்களாகிய காரண பங்கயங்களைத் தாக்கி மேலெழுந்து பாயும் - உலகத்தை எதிர்த்துப் பாயும்-ஞானயோகநாட்டம். 'மணிவண்டு தும்பிவளை' என்னும் (புள்-வளை) நாதங்களைக் கண்டுகொண்டுபோய் மேலே ஆறின்றிப் பாயும் அருங்குளத்தின் தடம்பணையிலே சூழ்ந்து தங்கும் என்றதொரு ஞானயோகப் பொருளும் இங்குத் தொனிப் பொருள்வகையாற் கிடைக்குமென்பர் ஸ்ரீ திருவாலங்காட்

டேச் சுவாமிகள். இங்குப் புறத்துக் காணும் இயற்கைக் காட்சி ஞானநாட்டமுள்ள நம்பி களுக்கு அகத்தே ஞான யோகக் காட்சியை நினைவூட்டிற்று என்றலுமாம்.

தன்மருங்கு - தன் என்றது எல்லை என்றதைத் தழுவிநின்றது. தில்லை எல்லையே தன் பக்கம் வந்து தொழுவார்க்கு மலநீக்கம்செய்து முத்தி தரவல்லது என்பதாம். **தன்** என்பதனைத் **தில்லையைத்** தழுவியதாக உரைப்பினு மமையும். **தன்மருங்கு** என் பது பாடமாயின் வாவியாலும் வயல்களாலும் குளிர்ந்த அவ்விடத்தே என்க.

மும்மை மாமலங்கள் - ஆணவமாதி மூன்று வலிய பாசங்கள். **மும்மலங்கள் அறு தலாவது, கன்ம மலத்திற்** சஞ்சிதம் அத்துவ சுத்தியாலும், உடல் முகந்து கொண்ட பிராரத்தம் அநுபவத்தாலும், ஆகாமியம் சிவஞானத்தாலும் அழியவும் ; அஃதழியவே, **மாயாமலம்** ஞாயிற்றின் ஒளிமுன் விளக்குப்போலச் சிவசத்தியிலடங்கவும் ; **ஆணவ மலம்** ஞாயிற்றின்முன் இருள்போலச் சிவசந்நிதியின் முன்னர் வலியழிந்து கிடக்க வும் பெற்றுக்கெடுதல். வீடருள் எல்லை என்க. வீடருள் தில்லை என்று கூட்டி யுரைத் தலுமாம்.

எல்லை - தில்லைக்கு நாற்புறமும் பத்து நாழிகையளவில் அத்திருநகரின் அளவு காட்டும் குறித்த இடம். வெளியிலிருந்து புகுவோர்க்கு அங்கிருந்து திருநகரம் தொடங்குதலால் அவை எல்லை எனப் பெறுவன. தில்லைக்குட் புகும் அன்பர்கள் அவ்வத்திசையில் எல்லையில் வணங்கிப் புகுதல் மரபு.

"...நடமாடியதிரு வெல்லைப்பால், மேவித் தலமுற மெய்யிற் றொழுதபின்..."
—திருநா - புரா - 157

"...மல்கு தேவரே முதலனைத் துயிர்களும் வணங்கவேண் டினவெல்லாம்
நல்கு தில்லைசூழ் திருவெல்லை பணிந்தனர் ஞானவா ரமுதுண்டார்"
—திருஞான - புரா - 147

உயிர்கள், இங்கு வருமுன் தமக்கு இருந்த பசுத்தன்மை இங்கு வந்தவுடன் திரியப் பெற்றுச், சிவத்தின் தன்மை அடையும் என்பதை 'மும்மைமா மலங்களற வீடருள்' என உரைத்தாராதலின், சரித முன்பகுதி சொல்லிவந்த யாப்பினின்று வேறுய்த் **திரிபு** என்ற சொல்லணியில் இப்பாட்டும் உரைக்கப்பெற்றது போலும். 92

239. (வி - ரை) **நாகம்** - நாவல் ; **சூதம்** - மா; **வகுளம்**-மகிழ் ; **சூழ் நாளிகேரம்**- சூழ்ந்து வளர்ந்த தென்னை மரங்கள் ; **நாரத்தம்** - நாரத்தமரம் ; **பூகம்** - கமுகு ; **ஞாழல்** - குங்குமமரம் ; **மதூகம்** - இலுப்பை மரம். **குளிர்வாழை** - தண்ணீரை மிக உண்டு குளிர்ச்சிக்குக் காரணமாதலின் குளிர்வாழை என்றார். **போதுஉறும் வஞ்சி** - நெருங் கித் தழைக்கும் வஞ்சி மரங்கள். கிளைகளை வெட்டி நடவே தழைத்துச் செறிந்து வளர்தலால் **போதுஉறும்** என்றார். **நெருங்கி** - நெருங்க - நெருங்குதலால்.

மேக சாலமலி சோலைகளாகி - மேகக்கூட்டம் தங்கும் பெரிய சோலைகளாகி ; **போகபூமி** - பரதகண்டத்துக்குப் புறம்பாயுள்ள கிம்புருட கண்ட முதலியன என்பர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்.

பூம்புறம்பணை - மேற்கூறியவாறு அழகிய புறநகரின் அமைப்புக்களாகிய வயல் முதலியன. இப்பாட்டிற் கூறிய மரங்கள் பலவும் இறைவன் பூசனைக்கு வேண்டப் பெறுவனவாய்—நிவேதனம், தாம்பூலம், முகவாசம், திருமஞ்சனம், திருவிளக்கு முதலியனவற்றிற்குப் பயன்படுதல் காண்க.

மீது கோகிலமிடைந்து மிழற்ற - மரங்களின் மேலிருந்து குயிற்கூட்டங்கள் இனி மையாய்க் கூவ. இங்குக் குறித்த குயில்கள், 'கீதமினிய குயிலே!' என்று விளித்து மணிவாசகப்பெருமானார் 'ஆதிகுணம் ஒன்றுமில்லான் அந்தமிலான் வரக்கூவாய்!' என்று ஆணையிட்டுப் பயிற்றிய பரம்பரையில் வந்த குயில்கள். இதனுலன்றே இப்பரம் பரையில் முன்னே வந்தவை திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தில்லை தரிசிக்க எழுந்

தருளியபோது உலகத்தாரைக் கூவி அவரைத் தரிசித்து உய்யுமாறு அழைத்தன என்று ஆசிரியர் பின்னர்க் கூறுகின்றார்.

"அறிவிற் பெரியவ ரயனெற் பணைவய லவைபிற் படும்வகை யணைகின்றார்
பிறவிப் பவநெறி விடுவீ ரிருவினை பெருகித் தொடர்பிணி யுறுபாசம்
பறிவுற் றிடவணை யுமினென் றிருபுடை பயில்சூழ் சினைமிசை குயில்கூவும்"
—திருநா - புரா - 159
93

என்றது காண்க.

240. வன்னி கொன்றைவழை சண்பக மார
மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரங்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை
கற்பு பாடலங் கூவிள யோங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவ
றுதைந்த நந்திகர வீர மிடைந்த
பன்ம லர்ப்புனித நந்தன வனங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான். ௯௪

(இ - ள்) வெளிப்படை. வன்னி - கொன்றை முதலிய பூமரங்கள் ஓங்கியும், சாதி-முதலிய பூக்கொடிகள் நிரம்பியும், நந்தியாவட்டம் முதலிய பூச்செடிகள் நெருங்கியும் உள்ள தூய நந்தனவனங்களைப் பணிந்துகொண்டு நம்பிகள் மேற்சென்றார்.

(வி - ரை) பன்மலர்ப் புனித நந்தனவனங்கள் - இறைவனது பூசனைக்கு ஏற்ற பூ - இலை வேர்-முதலியவற்றைத் தருபவை நந்தனவனங்களாம். கோட்டுப்பூ-கொடிப் பூ - நிலப்பூ - நீர்ப்பூ - என மலர்கள் நான்கு வகைப்படும். இவற்றுள் **செங்கமலத் திண்பூ-வாவி**-என்று மேலே (வரிசை 238) நீர்ப்பூக்களைக் கூறியதனால் ஏனை மூன்று வகைகளுமே இங்குக் கூறினர்.

வன்னி - கொன்றை - வழை (சுரபுன்னை) **- சண்பகம் - ஆரம்** (சந்தனம் அல்லது ஆத்தி) **- மலர்ப்பலாசு** (முருக்கு) **- செருந்தி - கன்னிகாரம்** (கோங்கு) **- குரவம்** (குரா) **- கற்பு** - (கற்பகம்) **- பாடலம்** - (பாதிரி) **- கூவிளம்** (வில்வம்) என்ற இவை பூவும் இலையும் தரும் மரங்கள். சந்தனம் மெய்ப்பூச்சுக்கும் உதவும். **கூவிளம்-வன்னி - ஆரம்** இவற்றின் இலைகள் பூசைக்குச் சிறப்பாய் உரியன. **செருந்தி**-சிவபூசைக்குரியதாய் மஞ்சட்பூ மலரும் ஒரு சிறுமரம். அது வாட்கோரைக்கும் மணித்தக்காளிக்கும் பெயர் என்றும் கூறுவாருமுண்டு. அவை ஈண்டைக்குப் பொருந்தாமை யறிக.

"செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே"
"செருந்தி, காலை யேகன கம்மலர் கின்றசாய்க் காடே"

எனவரும் தேவாரங்கள் காண்க. **குராமலர்** இறைவனுக் குகந்ததாம். 'குராமலரோ டராமதியம் சடைமேற் கொண்டார்' என்பது திருத்தாண்டகம். குரா என்பது **குரவம்** என நின்றது. ஆத்தி - குரா முதலியவை நீர்ச்செழிப்புள்ள புறவங்களில் வளர்வன. ஆத்தியின் மலரும் தளிரும் சிவபூசைக்காவன.

"ஆத்தி மலருஞ் செழுந்தளிரு முதலா வருகு வளர்புறவிற்
பூத்த மலர்க டாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேற்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம்..."—**சண்டேசர் புராணம் - 33**

வேறுவகைப் பலாசும் உளதாதலின் **மலர்ப்பலாசு** என்று பிரித்தோதினார். **கற்பு** - கற்பகம். (பாரிசாதம்) என்பர். கற்பு பாடலம் என்று அடைமொழியாக்கிப் பாதிரியின்வகை என்றும் கூறுவர்,

இக்காலத்து நந்தனவனத் திருப்பணி செய்யும் அன்பர்கள் இதனைக் கண்டு இவ்வகை மரங்களை வைத்து வளர்த்தல் மிகப் பயன் தரும் சிவபுண்ணியமாம். கோட்டுப் பூக்களைத் தரும் நந்தன வனங்களை இந்நாளிற் காணல் அரிதாயினமை வருந்தத் தக்கது.

ஓங்கி - மேலெழுந்து - உயர வளர்ந்து. இது மரங்களின் தன்மை. இதனால் மரவகைகளைப் பிரித்து இனிக் கொடிவகைகளைக் கூறுதல் குறிக்க.

துன்னுசாதி - மருமாலதி - மௌவல் - இவை சாதி - மல்லிகை - முல்லை என்ற கொடிப் பூவகை. **துன்னும்** என்றது மேற்கூறிய மரச்சாதியிலிருந்து பிரிக்கும் அடைமொழியாவதுடன் இக்கொடிகளினது செறிந்து வளரும் தன்மையும் குறிக்கும்.

துதைந்த நந்தி (நந்தியாவட்டம்) - **கரவீரம்** (அலரி) இவை நிலப்பூச் செடிவகை. **துதைந்த** என்ற அடைமொழியால் இவ்வினம் பிரிக்கப்பெற்றது. செடிகளின் தன்மை குறித்தவாறுமாம்.

புனித நந்தன வனங்கள் - 'புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு' என்றபடி இறைவன் பூசனைக்கு உரிய இன்றியமையாத பொருள்களை இவை உதவுபவையாதலானும், இங்குள்ள மரம் முதலியவை இச்சிவபுண்ணியம் செய்தலே யன்றி ஒரு பாவமும் செய்யாத புண்ணிய உருவமான ஓரறிவுயிர்க ளாதலானும் **புனித** என்றார்.

பணிந்து சென்றனன் - மேற்கூறியவாற்றால் அவை சிவபுண்ணியப் பொருள்களாதலின் அவற்றை வணங்கவேண்டிய தகுதி காட்டப்பெற்றது. மிகப் புனிதமாகிய உயிர்களே தவ விசேடத்தால் சிவபூசனைக்குரிய பூமரம், செடி, கொடிகளாக இருப்பவையாம். இவ்வகைச் சென்ம மெடுக்குமாறு ஒரு முனிவர் வரம்பெற்ற சரிதமும் சிவரகசியத்துக் கேட்கப்பெறும்.

மணங் கமழ் தாரான் - வாசனையுடைய திருவடையாள மாலையாகிய தாமரை மாலை யணிந்த நம்பிகள். இவ்வாறே மேலே நீர்ப்பூத் தரும் வாவிகளைக் குறிக்கும் போதும் '**தேமலங்கலணி மாமணி மார்பிற் செம்மல்**' என்று கூறியதும் காண்க.

கற்பபாடலம் - என்பதும் பாடம். 94

241. இடம ருங்குதனி நாயகி காண
வேழ்பெ ரும்புவன முய்ய வெடுத்து
நடந வின்றருள் சிலம்பொலி போற்று
நான்ம றைப்பதியை நாளும்வ ணங்கக்
கடல்வ லங்கொள்வது போற்புடை சூழுங்
காட்சி மேவிமிகு சேட்செல வோங்குந்
தடம ருங்குவளர் மஞ்சிவ ரிஞ்சித்
தண்கி டங்கையெதிர் கண்டும கிழ்ந்தார். கூரு

(இ - ள்) இடமருங்கு...காண - இடப்பாகத்தே உள்ள சிவகாமசுந்தரி யம்மையார் காண ; ஏழ்...உய்ய - ஏழுலக உயிர்களும் உய்திபெற ; எடுத்து...பதியை - எடுத்துக் கூத்தாடி யருளும் திருச்சிலம்பொலி போற்றுகின்ற நான்மறைகளும் துதிக்கும் இத்தலத்தை ; நாளும்...மேவி - நாமும் தினமும் வலங்கொண்டு வணங்குவோம் என்ற கருத்துடன் கடலானது சூழ்ந்து வளைந்தது போன்ற காட்சி மிக்கதாய் ; மிகுசேட்செல...கிடங்கை - மிக உயரப்போய் மேகந் தவழ்தற்கிடமாகிய திருமதிற் புறத்துள்ள குளிர்ந்த அகழியை ; எதிர் கண்டு மகிழ்ந்தார் - நம்பிகள் செல்லும் வழியிலே எதிரிலே பார்த்து மகிழ்ச்சி யடைந்தார்.

(வி - ரை) **நாயகி காண - புவனமுய்ய** - உலக முய்வது நாயகி காண்பதன் பயனும் என்பது சாத்திரம். வரிசை 42-ம் பாட்டினையும் உரையினையும் காண்க; **ஏழ் பெரும் புவனமுய்ய** - ஏழாகிய உலகங்களிலுள்ள எழுவகைத் தோற்றத்தனவாகிய உயிர்களும் உய்திபெற - என விரித்துப் பொருள் கொள்ளத்தக்கது. புவனம் - ஆகுபெயர்.

எடுத்து நடநவின்றருள் சிலம்பொலி - (குஞ்சித்த சேவடியைத்) தூக்கிக் கூத்து ஆடுவதால் எழுகின்ற சிலம்பின் ஒலி. திருவடியை - என, எடுத்து - என்பதற்குச் செயப்படுபொருள் வருவித்துரைக்க. தூக்கிய பாதத்தில் அணிந்த சிலம்பு நடஞ்செய்த லால் ஒலிக்கும் என்க. **எடுத்து** - உயிர்களைப் பவத்திற் சேராவகை யெடுத்து என்றலு மாம். இது சிருட்டித் தொடக்கம். நாதத்தாற் சிருட்டி தொடங்குதலின் அது சிலம் பொலி எனப்பெறும்.—நாதத்துக்குக் காரணமாகிய சுத்தமாயை தனக்குத் தாரகமாகிய அத்தன் றருள்களாகிய ஞானக் கிரியா சத்திகளி னடங்கிநின்று தன் காரியமாகிய அத னைத் (நாதத்தைத்) தோற்றுவிக்கும். ஆதலின் சுத்தமாயை சிலம்பும், நாதஞ் சிலம் பொலியுமாமென வழங்கப்பெறும். நல்வீணை, ஒலி என்பதும் அது. "திருச்சிலம் போசை யொலிவழியே சென்று, நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற" (திருவுந்தி யார்.) "சீரார் திருவடித் திண்சிலம்பு" (திருவாசகம்.)—இது ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் உரைக்குறிப்பு.

சிலம்பொலி போற்றும் - அச்சிலம்பொலியை என்றும் வணங்குகின்ற. 'சிலம் பொலியுடன் போய்ப், புக்கழுந்தினர்' என்ற திருவாதவூரர் புராணம் காண்க.

நான்மறைப்பதி - வேதங்களாலே துதிக்கப்பெறும் தலம். வேதம் விதித்த அறங் களை வளர்க்குந் தலம் என்றலுமாம். "வேதங்க டொழுதேத்தும் விளங்கு தில்லை" என்ற திருவாசகமும், 'கற்றாங் கெரியோம்பி' என்ற தேவாரமும் காண்க.

கடல்வலங் கொள்வதுபோற் புடைசூழுங் காட்சி - கடலே தில்லையைச் சூழும் அகழியாக வந்ததோ என்ற காட்சி. அகழி - மிகுந்த பரப்பும் ஆழமும் உடைமை குறித்தவாறு.

நாளும் வணங்க - நித்தமும் வணங்கும்பொருட்டு வலமாகச் சுற்றிவருவதுபோல. வணங்கி நாமும் உய்வோம் என்ற கருத்துடையதுபோல. இது தற்குறிப்பேற்றம் என்னும் அணி. கடல் தில்லைக்கு 10 நாழிகை யளவில் உள்ளது. 'ஒவ்வோர் விசேடத் திருநாட்களில் இறைவன் கடற்கரைத் தீர்த்தத்திற்கு எழுந்தருளும்போது அவரை யும் உடன்செல்லும் அடியவர்களையும் வணங்கக் கிடைக்கும் பேறுமட்டும் போதாது; எப்போதும் (தினமும்) வணங்கிக்கொண்டே கிடப்போம்' என்னும் கருத்துடன் வலங் கொள்வதுபோல என்று குறிக்க **நாளும்** என்றார். 'கழிசூழ் தில்லையுள்' என்ற தேவார மும் காண்க. கொள்ளிடமும் - கழிகளும் - கிழக்கு, தெற்கு, வடக்கு என்றமூன்று புறமும் சூழ்ந்து இன்றும் காணப்படும். மேற்கில் இருந்தது பிற்காலத்துத் தூர்ந்து விட்டதுபோலும். நாற்புறத் திருவாயில்களும் இதனை வலியுறுத்தும். 95

242. மன்று ளாடுமது வின்னசை யாலே
மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே
குன்று போலுமணி மாமதில் சூழுங்
குண்ட கழ்க்கமல வண்டலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித்
தூய நீறுபுனை தொண்டர்க ளென்னச்
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு
சிந்தை யன்பொடு திளைத்தெதிர் சென்றார். ௯௬

(இ - ள்) மன்றுள்...மருங்கே - திருவம்பலத்திலே ஆடுகின்ற தேனின் ஆசையால் உள்ளே வேதங்கள் அரற்ற அதன் வெளிப்பக்கத்தே; குன்றுபோலும்...வண்டு - மலை போலுயர்ந்த மதிலைச் சூழ்ந்து ஆழ்ந்த அகழியின் மலர்ந்த தாமரையிலிருந்த வண்டு கள்; அலர்கைதை...ஆகி - மேல்எழுந்து தாழைமலரிற் செறிந்த மகரந்தத்திலே படிந்த மேனியுடையனவாகி; தூய...கண்டு - அதனாலே புனிதமாகிய திருநீறு பூசிய சிவனடி

யார்களைப் போன்ற தோற்றத்தோடு போய்ப்போய் முரல்கின்ற காட்சியைக் கண்டு ; சிந்தை...சென்றார் - நம்பிகள் மனத்திலே மிகுந்த அன்பிலே மூழ்கி மேற்சென்றனர்.

(வி -ரை) கடல்வலங் கொள்வதுபோலச் சூழ்ந்த கழியின் காட்சி நம்பிகளுக்கு மகிழ்ச்சியை விளைத்தது. அதன்மேல் அங்குள்ள வண்டுகள் நீறுபூனைந்த அடியார் போல முரல்கின்ற காட்சி பேரன்பை விளைத்தலின் நம்பிகள் அதிலே திளைத்தார்.

மறைச்சுரும்பு - கமல வண்டு.

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் உபதேசித்தருளிய சுரும்பரின் வழிவழி மரபில் வந்தவை இந்த வண்டுகள். ஆதலின் உள்ளே மன்றினில் நிறைந்த மதுவை அளவு படாது உண்ணும் **மறைச்சுரும்பர்** எடுத்துப்பாட, அதுபோலவே புறத்தே உள்ள நாமும் செய்வோம் என்று **கமலவண்டு** அச்செயலுக்குத் தக்க வேடமாகிய நீறு பூண்டு அடியார் கோலத்துடன் சென்று சென்று முரல்கின்றன என்பது குறிப்பு.

மதுவின் நசையாலே - சிறுசிறு துளியாய்ப் பல பூக்களிற் போய் உண்டும் நிரம் பாது நாவிற்கு மட்டும் சிறிதுகாலம் இனிமை தருவதும், அதிக முண்டால் நோய் தரு வதுமான தேனைத் தேடி அலையாது, பெருந்திரளாக ஒரே இடத்தில் நுகரத்தக்கதாய் எல்லா இந்திரியங்களுக்கும் உயிருக்கும் எப்போதும் இனிமை தருவதாய் உள்ள பெருந் தேனை உண்ணுவோம் என்ற **நசை**. இதுபோன்ற பல பொருள்களையும் இங்கு உய்த் துணர்க. 'இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து, மதுமலரீக்கண் மொய்த்து மருங்கெழுமொலி கொல் என்றான்' எனப் பின்னர்க் கண்ணப்ப நாயனார் புராணத்துக் (101) கூறுவதன் உட்கிடையையும் இங்கு வைத்து உன்னிக் களிகூர்க. அதன் விரிவு அங்குக் காண்க.

கமல வண்டு - தாமரைப் பூக்களிற் றேனுண்ட வண்டு. **கைதை** - தாழை. இங்குத் தாழையின் பூவை உணர்த்திற்று ; முதற்பெயர் சினைக்காயிற்று. கமலம் மருதப் பொருள் ; கைதை நெய்தற் பொருள் ; கமல வண்டு கைதையின் நீற்றைப் புனைதல் மருதத்திற்கும் நெய்தலுக்கும் திணைமயக்கம் கூறியதென்பர் புலவர். தில்லை, மருதமும் நெய்தலும் கூடிய நிலத்துள்ளதும் காண்க.

கைதை துன்று நீறுபுனை மேனிய ஆகி தூய நீறுபுனை தொண்டர்கள் என்ன - வண்டுகள் தாழைப் பூவினுட் போந்து வெளிவரும்போது அதனுட் பொருந்திய மகரந் தம் தமது உடம்பிற் றோய்ந்து வரும். அப்போது காண்போர்க்கு முழுநீறு பூசிய அடிய வர்களைப் போன்று தோன்றும். **கைதையில் துன்றுநீறு** - உண்மையும் தூய்மையுமில் லாத மாயா காரியப் பொருள். ஆனால் உண்மையான தூய திருநீற்றின் தோற்றம்மட்டும் பொருந்தியது. ஆதலின் இதனைத் **துன்று** நீறு எனவும், அதனைத் **தூய நீறு** எனவும் கூறினார். பொருள்கள் காண்போரின் மனப்பான்மைக் கேற்றவாறு நினைவுண்டாக்கு தல் இயல்பு. திருவரத்துறை நாதர் அளித்த முத்துப்பல்லக்கின் ஒளியைக் கண்ட போது ஆளுடைய பிள்ளையார்க்கு அது திருநீற்றின் ஒளியை நினைவூட்டியது. "வெண் ணீற்றொளி போற்றி நின்று" என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்.

"சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலை யாமே."

என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும் இங்கு நினைவு கூர்க.

இத்தேவாரத்தில் **வேறாயஉரு** என்ற கருத்தைத் தொடர்ந்தே ஆசிரியர் இங்குத் 'தூயநீறுபுனை தொண்டர்கள்' என்று உவமித்தார். மகரந்தம் பூசியநிலை தொண்டர்

நிலையினின்று வேறு தன்மையுடைய தென்க. உண்மைத் தூயநீறுபூசி மகிழ்ந்து பயனடைய அறியாத இந்நாண்மக்கள் நீற்றின் போலியான பல தூள்களைத் தங்கள் முகங்களிற் றூவிக் களிப்பர். அவர் இவ்வுவமானத்தின் உட்கருத்தை உன்னுவார்களாக. இவ்வுவமானத்தில் நீறு பூசுதல் - களித்தல் - மறைபாடுதல், தொண்டர்க்கும் வண்டுக்கும் பொதுத் தன்மைகளாம். இக்கருத்தையே தொடர்ந்து பின்னர்த் 'தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால்' (9) என்று திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்துக் கூறுதல் காண்க. 96

243. பார்வி ளங்கவளர் நான்மறை நாதம்
பயின்ற பண்புமிக வெண்கொடி யாடுஞ்
சீர்வி ளங்குமணி நாவொலி யாலுந்
திசைக ணான்கெதிர் புறப்பட லாலுந்
தார்வி ளங்குவரை மார்பின யன்பொற்
சதுர்மு கங்களென லாயின தில்லை
ஊர்வி ளங்குதிரு வாயில்க ணான்கி
னுத்த ரத்திசை வாயின்மு னெய்தி. ௯௭

244. அன்பின் வந்தெதிர் கொண்டசீ ரடியா
ரவர்க ளோநம்பி யாரூரர் தாமோ
முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா
முறைமை யாலெதிர் வணங்கி மகிழ்ந்து
பின்பு கும்பிடும் விருப்பி னிறைந்து
பெருகு நாவனக ரார்பெரு மானும்
பொன்பி றங்குமணி மாளிகை நீடும்
பொருவி றந்ததிரு வீதி புகுந்தார். ௯௮

243. (இ - ள்) பார்...பண்புமிக - உலகம் விளக்க மடைய வளர்க்கப் பெறும் நால் வேத நாதங்கள் பயின்ற தன்மை மிகுந்து நிற்க; வெண்கொடி...ஒலியாலும் - வெண்கொடி ஆடும் சிறப்புடனே மணிநாவின் ஒலி எழுவதாலும்; திசைகள்...புறப்படலாலும்-நான்கு திசைகளிலேயும் எதிர்முகமாகப் புறப்படுகின்றதனாலும்; தார்...நான்கில் - மாலைகளணிந்த அகன்ற மார்புடைய பிரமதேவரது பொன்னிறம் பொருந்திய நான்கு முகங்களே இவை என்று சொல்லப் பெறுவனவாகிய தில்லைப்பதியின் விளக்கம் மிக்க திருவாயில்கள் நான்கிலே; உத்தரத்திசை...எய்தி - வடக்குத் திருவாயின் முன்பு (நம்பிகள்) சேர்ந்து, ௯௭

244 (இ - ள்) அன்பின்...மகிழ்ந்து - அன்பினாலே வந்து எதிர்கொண்ட சிறந்த அடியார்கள் தாமோ, அல்லது நம்பியாரூரர் தாமோ இவர்கள் ஒருவரை ஒருவர் வணங்கும்போது முன்னால் வணங்கினர் யாவர் என்று அறியப்படாத முறைமையினாலே எதிர் எதிர் வணங்கி அதன் பயனாக மகிழ்ச்சியடைந்தவராய்; பின்பு...நிறைந்து - அதன் பின்னர் ஆனந்தக்கூத்தரைக் கும்பிடும் விருப்பமிக்கு; பெருகு...புகுந்தார் - பெருந்திருநாவலூர் நம்பிகளும் பொன்னால் விளங்கிய அழகிய மாளிகை நீடிய ஒப்பற்ற திருவீதியினுள்ளே புகுந்தார். ௯௮

243. (வி - ரை) **அயன்பொற் சதுர்முகங்களெனலாயின-வாயில்கள் நான்கின்** - தில்லையின் நான்கு திருவாயில்களும் அவற்றின் நான்கு சிகரங்களும் பிரமதேவரின் நான்கு முகங்களைப் போன்றன என்று சிலேடை வகையாற் கூறினார். **திருவாயில்கள்** -

திசைக்கொன்றாக நான்கு திசையிலும் நான்கு முகமாய் அமைந்தன. அவற்றிலே வேதம் பயில்வோர் பயில்கின்ற மறைநாதம் மிகுந்து உள்ளது. வெண்கொடி ஆடுகின்றது - நாவின் அசைதலால் மணிஒலி எழுவது. **பிரமதேவர்** - சிலேடைப் பொருள் வெளிப்படை-நான்கு முகத்தையுடையவராய், வாயிலே வெண்கொடி (கலைமகள்) குடிகொண்டு விளங்க மறை பயின்றவராய் அழகிய நாவில் மறையொலி விளங்க இருப்பர்.

பொற்சதுர்முகங்கள் - பொன் - பிரமதேவர் பொன்னிறமுடையவர் என்பர். இரண்ணிய கருப்பன் என்பது இவர் பெயர்களில் ஒன்று. அவர் சிரத்திற்றரித்த பொன்முடியினது பொன் என்றலுமாம்.

வாயில் - வழி. இது சொல்லணி. சதுர்முகன் வாயிலே தான் மறைபயின்ற நாவொலியும் வெண்கொடியும் விளங்கும்.

வெண்கோடி - தூய்மையும் அழகும் பெறத்திருவிழாவிற் கட்டப்பெறுவன.

"வீதிகள் தோறும் வெண்கொடி யோடு விதானங்கள்"—**அப்பர் - திருவாரூர்.**

"விதானமும் வெண்கொடியு மில்லா ஊரும்...ஊரல்ல"—**திருத்தாண்டகம்.**

"வெண்கொடிசேர் நெடுமாடம்"—**திருஞான - கர்ந்தாரம் - திருக்கடம்பூர் - 1**

முதலிய திருவாக்குக்கள் காண்க. வெண்கொடி. சமாதானத்தைக் காட்டும் அறிகுறியாய்ப் போர்முறையில் இன்றும் வழங்குவது காண்க.*

மறைநாதம் பயின்ற பண்புமிக - "நாதவொலி வேதவொலி அறாத்தில்லை" என்று முன்னரே (வரிசை - 237) குறித்ததும் காண்க. நான்மறைகள் எப்போதும் இங்கு உலகம் உய்யப் பயிலப்பெறுவனவாம். "**பார்விளங்கவளர்**" என்று காரணங் காட்டியவாறு. "கற்றாங் கெரியோம்பிக் **கலியை வாராமே செற்றார்**" முதலிய எண்ணிறந்த திருவாக்குக்கள் காண்க. **வளர்** - வளர்கின்ற. வளர்க்கின்ற என்றலுமாம்.

மணிநாவொலி - திருவாயிலில் தூக்கிய மணிகளினது நாக்களால் எழும்பும் ஒலி. இவை அவ்வக்கால வழிபாடுகளின்போது ஒலிக்கப்பெற்று மக்களுக்கு அந்நினைவை யூட்டி அறிவுறுத்துகின்றதனால் ஒலி எனலாயின. "கடைதூங்கு **மணியைக்** கையாலமரார், நாவா யசைத்த ஒலி" என்பது அப்பர் சுவாமிகள் பொதுத் திருவிருத்தம்.

உத்தரத் திருவாயில் - நம்பிகள் திருத்தினை நகரை வணங்கி வழிக்கொண்டு வடக்கிலிருந்து வருகின்றாராதலின் வடக்குத் திருவாயிலின் வழியாய்ப் புகுந்தனர் எனப்பெற்றது. இதுபோலவே ஆளுடையபிள்ளையார் தெற்குத் திருவாயிலாலும், அப்பர் சுவாமிகள் மேற்குத் திருவாயிலாலும் உட்புகுந்தனர் என்பது அவ்வவர் சரிதம்.

வாயில்கள் நான்கின் - தில்லைத் திருமன்றிலே இறைவனது திருநடங் கண்டு பேறுபெறும் உயிர்கள் இந்நான்கு திருவாயில்களிலே ஒன்றின் வழியே தான் திருக்கோயிலினுட் புகுதல்வேண்டும். இவை சரியையாதி நான்கினையும் குறிக்கும். அந்நான்கே இறைவனை அடையும் வழிகளாகச் சாத்திரங்கள் கூறும். இவ்வழிகளில் ஒவ்வொன்றினைச் சிறப்பாய் விளக்கவந்த நமது ஆசாரியன்மார்கள் மேலே கண்டவாறு இவ்வாயில்களிலே ஒவ்வோர் வழியே புகுந்தமையும் காண்க. **வருநான்மறை; கொடியாலும்; மணிமார்பின்; புலப்படலாலும்; என்வாயின;**—என்பனவும் பாடங்கள். 97

244. (வி - ரை) இதுவும் முன்பாட்டும் ஒரு முடிபு கொண்டன. நாவலகாரர் பெருமானும் - சதுர்முகங்க ளெனலாயின - திருவாயில்கள் நான்கில் உத்தரத்திசை வாயில்முன் எய்தி - முறைமையால் எதிர்வணங்கி - மகிழ்ந்து - நிறைந்து - திருவீதி புகுந்தார் என்று கூட்டிமுடிக்க.

எதிர்கோண்ட சீர்அடியார் - நம்பிகள் வரவுகேட்டு அன்பினாலே தூண்டப்பெற்றுத் தில்லையின் அடியவர்கள் அவரை எதிர்கொண்டு வரவேற்க வடக்குத் திருவாயிலின் முன்பு முன்னரே கூடியிருந்தார்கள் என்பது பெற்றாம்.

*கறுப்புக்கொடி இதற்கு மாறான எண்ணங்களைக் காட்டுதற்கு வழங்குவதும் காண்க.

முன்பிறைஞ்சினர் யாவர் என்றறியா முறைமையால் எதிர்வணங்கி - அடியார்களும் நம்பிகளும் எதிர்காட்சி பெற்றவுடன் ஒரே காலத்தில் ஒருவரை ஒருவர் வணங்கினார்கள். இவர்களுள் யாவர் முன்னே வணங்கினார்கள் என்பதறியப்படாததாம். **அறியா** - அறியப்படாத. செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. **முறைமை** - இதுவே அடியவர்களைக் கண்டபோது வணங்கும் முறை என்பதாம்.

பின்பு தும்பிடும் விருப்பில் - இறைவனை என்பது வருவித்துரைக்க. **பின்பு** - அடியவர் வணக்கம் முன்பும், ஆண்டவன் வணக்கம் பின்பும் நிகழும் முறைமையும் காண்க. இக்கருத்தின் விரிவைத் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் 1023-ம் பாட்டிலே "விமலரையும் உடன்கண்ட விருப்பும் பொங்க" என்ற இடத்துக் காண்க.

பொன்பிறங்கு மணிமாளிகை நீடும் - தில்லைவாழந்தணரின் முதல்வராகிய நடராசர் எழுந்தருளிய பொன்மாளிகையும், அவரோ டொத்தே வாழுந் தன்மையாளராகிய ஏனைத் தில்லைவாழந்தணர்களின் அழகியமாளிகைகளும் என்றும் நீடியுள்ள.

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லை......"—**திருஞான - குறிஞ்சி - கோயில் - 5**

முதலிய தேவாராதி அருட்பாக்கள் பெற்ற மாளிகைகளாதலின் **பொன்பிறங்கு மணிமாளிகை** என்றார்.

பொருவிறந்த திருவீதி புகுந்தார் - ஒப்பற்ற திருவீதி. நம்பிகள் உத்தரத் திருவாயிலின் வழியே போந்து திருவீதியிற் புகுந்தமையே இச்சரிதத்திற் சிறந்ததொரு தனிச்செய்தியாக அதுவே ஒரு சிவதல யாத்திரையின் பயன் தரும் சிறப்பு நோக்கி ஆசிரியர் எடுத்துக் கூறினார். இது அத்திருவீதியின் சிறப்பியல்பாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தில்லைக்கெழுந்தருளியபோது இத்திருவீதிகளைத் தொழுது, பின்னை, அவற்றில் தங்கி இருக்க அஞ்சித், திருவேட்களத்திலே எழுந்தருளியிருந்தனர் என்பது சரிதம். மாதவங்கள் செய்யும் பலனை இத்திருவீதிகள் தருவன.

"........................மாதவங்கள்
நல்குந் திருவீதி நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறமஞ்சு வார்சண்பை யாண்டகையார்"—**திருஞான-புரா - 165**

அப்பர் சுவாமிகள் இத்திருவீதிகளிலே கைகளாற்றிருப்பணி செய்ததோடு, தமது தூயபொன் மேனியினால் அவற்றிற் புரண்டு வலம்வந்து விடைகொண்டு சென்றார்.

"பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டுவலங் கொண்டு போந்தே"
திருநா - புரா - 179

எனவே **பொருவிறந்ததிருவீதி** என்று குறித்ததுடன் வரும் பாட்டில் அதன் காரணமும் இயல்பும் ஆசிரியர் விரித்துக் கூறுவாராயினர்.

பொருவிகந்த திருவாயில்—என்பதும் பாடம். 98

245. அங்கண் மாமறை முழங்கு மருங்கே
யாட ரம்பைய ரரங்கு முழங்கு
மங்குல் வானின்மிசை யைந்து முழங்கும்
வாச மாலைகளின் வண்டு முழங்கும்
பொங்கு மன்பருவி கண்பொழி தொண்டர்
போற்றி சைக்குமொலி யெங்கு முழங்குந்
திங்க டங்குசடை கங்கை முழங்குந்
தேவ தேவர்புரி யுந்திரு வீதி. கக

(இ - ள்) திங்கள்...திருவீதி - பிறைச் சந்திரன் தங்குதற்கிடமாகிய சடையிலே கங்கை முழங்குகின்ற தேவதேவராகிய நடராசர் விரும்பி எழுந்தருளும் அத்திருவீதி

யின் ; அங்கண்மாமறை முழங்கும் - இடமெங்கும் நான்மறை முழங்குவன ; மருங்கே ஐந்தும் முழங்கும் - அவற்றின் பக்கத்தே அரம்பையர் ஆடல்முழக்கம் செய்ய ஐந்து தேவதுந்துபிகளும் முழங்குவன ; வாச...முழங்கும் - மணம்பொருந்திய புதிய பூமாலை களிலே வண்டுகளின் பாடல்கள் முழங்குவன; பொங்கும்...எங்கும் முழங்கும் - அன்பினுற் பொங்கி வழியும் கண்ணீரையுடைய அடியார்கள் போற்றித் துதிக்கும் ஒலி எங்கேயும் முழக்கம் செய்வன.

(வி - ரை) திருவீதி - அங்கண் - மறை முழங்கும் - மருங்கே அரங்கு முழங்கும் - ஐந்து முழங்கும் - வண்டு முழங்கும் - ஒலி எங்கு முழங்கும் - என்று கூட்டி முடிக்க. மேலே வரிசை 237 - பாட்டில் யாழொலி - முழவின் நாதவொலி - வேதவொலி - அரம்பையர் கீதவொலி அருத்தில்லை என்றதனை இங்கு விரித்துக் கூறினர்.

மருங்கே - பூசுரர்களோடு சுரர்களும் பக்கம்பக்கமாக விரவியிருத்தலால் மாமறை முழங்கும் மருங்கே அரம்பையர் அரங்கும் வான்மிசை ஐந்தும் உடன் கூறினர்.

வாசமாலைகள் - இறைவனுக்காக அடியவர்கள் தொடுத்த மாலைகள்.

பொங்கும் அன்பு அருவி கண்பொழி தொண்டர் - அன்பு பொங்கும் கண்பொழி அருவித் தொண்டர் என்க. அருவிபோலக் கண்களிலிருந்து நீர் பெருகுதல் அன்பினது இலக்கணங்களில் ஒன்று. அதுவே மனத்தினுள் இருக்கும் காணப்படாத அன்பைக் கருதல்அளவையினாலே காட்டும் அடையாளம் என்றருளினர் திருவள்ளுவதேவர். ' அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் ' என்பது குறள்.

" மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாருந் திருவடிவும் "

" நைந்துருகிப் பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் "

என்பனவாதி திருவாக்குக்களால் ஆசிரியர் தொண்டர் திருவேடத்தின் சிறப்பியல்பாக இதனை உணர்த்துமாறு காண்க. திருவேடத்தின் இலக்கணத்திற்கு இவற்றையே உதாரணமாக எமது மாதவச் சிவஞான முனிவர் சிவஞானபோதச் சிற்றுரை 12-ம் சூத்திர உரையில், எடுத்துக் காட்டியவாறும் காண்க.

போற்றிசைக்கும் ஒலி - முன்னே கூறிய முழக்கங்களிலிருந்து பிரித்துக் காணும் பொருட்டு ஒலி என்று கூறினர்.

எங்கும் முழங்கும் - முன் கூறிய முழக்கங்கள் அத்திரு வீதியிலே ஓரோர் பகுதியிலே நிகழ்வனவாகவும் அன்பர் போற்று மொலி எங்கும் முழங்கும் என்றார். அன்பர்கள் அத்திருவீதிகளிலே வலம் வந்து துதித்து நிறைந்துள்ளார்கள் என்பதாம். இது இன்றைக்கும் கண்டு களிப்பதோர் காட்சி.

கங்கை முழங்கும் - கங்கை தனது ஆயிரமாமுகத்தினொடு உலகில் வீழாமல் சடைக்குள்ளேயே அடங்கி அங்கு முழங்கி நிற்பதாம். இங்கு முழங்கும் என்னும் பெயரெச்சம் தேவ தேவர் என்னும் ஏதுப்பெயர் கொண்டது. "மணியிரத மூர்ந்த மழவிளங் களிறு" என்றதிற்போல. இப்பாட்டில் மேலே வரும் ஏனைய முழங்கும் - என்பவை வினைமுற்றுக்கள். இவ்வாறு ஒரு சொல்லைப் பல முறைகளில் வழங்குவது ஆசிரியரின் அழகிய சொல்லணியாகிய சிறப்பியல்புகளில் ஒன்றும். எறிபத்த நாயனார் புராணம் 3-வது பாட்டும் பிறவும் காண்க.*

புரியும்-விரும்பி எழுந்தருளும். நடராசர் தேரில் எழுந்தருளும் சிறப்புடையது.99

246. போக நீடுநிதி மன்னவன் மன்னும்
புரங்க ளொப்பன வரம்பில வோங்கி
மாக முன்பருகு கின்றன போலு
மாளி கைக்குல மிடைந்த பதாகை

*சேக்கிழார் - 121, 122, 123 பக்கங்களைப் பார்க்க.

யோக சிந்தைமறை யோர்கள் வளர்க்கு
மோம தூமமுயர் வானி லடுப்ப
மேக பந்திகளின் மீதிடை யெங்கு
மின்னு டங்குவன வென்ன விளங்கும். ௧௦௦

(இ - ள்) போகம்...பதாகை - எவ்வகைப் போகங்களையும் கொண்டு உள்ள குபேர பட்டினங்களைப் போன்று தனித்தனி விளங்கும் அளவில்லாதனவாய் மிக உயர்ந்து மேக மண்டலத்தைத் தம்முள் அடக்குகின்றனபோல உள்ள மாளிகைக் கூட்டங்களில் மேலே கட்டப்பெற்ற செறிந்த கூட்டமாகிய கொடிகள்; யோக சிந்தை... அடுப்ப - அந்த மாளிகைகளில் உறையும் மறையவர்கள் யோக சிந்தையால் வளர்க்கின்ற ஓமப்புகை ஆகாயத்தை அளாவிச் செல்ல; மேகபந்தி...விளங்கும் - மேகக்கூட்டங்களின் இடையிலே எங்கும் மின்னற் கொடிகள்போல விளங்குவன.

(வி - ரை) மாளிகைக் குலம் - ஒவ்வொரு மாளிகையும் தனித்தனி ஒவ்வொரு அளகாபுரியைப்போல் விளங்கின. இதனைச் "செல்வ நெடு மாடம்" என்ற இத்தலத் தேவாரத்தே திருஞானசம்பந்த சுவாமிகள் ஏழு செல்வப்பதம் அமைத்துச், 'செல்வம் **உயர்கின்ற**' என்று ஆசிபுரிந்ததன் பயனாக இன்றைக்கும் இது காணத்தக்கதாகும். ஆசிரியரும் இங்கு **விளங்கும்** என்றதும் காண்க.

மாகம் முன் பருகுகின்றன போலும் - மாகத்தைச் சிறிதாக்கித் தன்னுள் அடக்கிக் காட்டும் அளவு உயர்ந்து போதலின் பருகுகின்றன போலும் என்றார். "தவளம் நெடு மாடம்...விண்டாங்குவ போலும்." என்ற தேவாரமும் காண்க. **மாகம்** - வானம்.

யோக சிந்தை - யோகம் - கூடுதல்: இறைவனைக் கூடும் வழியில் செல்லும் மனம். **மறையவர்** - அந்த மனத்தோடு இறைவனை முன்னாகச் செய்யும் சிவவேள்வி வளர்ப்பவர்கள். 'கற்றாங் கெரி யோம்பி' என்றபடி, யோக சிந்தை மறையோராதலின் எரி வளர்ப்பார் என்பது குறிப்பாம். தில்லை - தகராகாயத்தலமும் இருதயத்தலமும் ஆதலின் இறைவனைத் தகரோபாசனையின் வழியே சிந்தையில் வைத்துக் கூட்டியவர்கள்.

ஓம தூமம் - வானில் அடுப்ப...மேக பந்திகளின் - ஓமப்புகை வானிற் சேர்தலால் உளதாகும் மேகக் கூட்டங்களினிடையே. **அடுப்ப** - பொருந்த. ஓமப்புகை வானிற்கு அடுப்பன - பொருந்துவன. [பிற புகைகள் (இயந்திரங்களின் புகை) அவ்வாறு அடுக்காதன] ஓமப்புகை ஆகிய மேகம் - புகையின் விளைவாம் மேகம் - என இரு பொருளும் கொள்க. ஓமம் மேகத்துக்குக் காரணமாதல் குறித்தவாறுமாம்.

"மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே"—**திருஞா - தேவா - குறிஞ்சி. (5)**

"மங்குறோய் மாடச் சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரும் ஆகுதிப் புகைப்பா றாறும்"
—துங்குலிய - புரா - 4.

என்பனவாதி திருவாக்குக்களின் உள்ளுறைகளையும் நோக்குக.

மீதிடை எங்கும் மின் நுடங்குவன என்ன - மேலே இடை எங்கும் மின்னல்கள் அசைவன போல. மேகங்களினிடையில் மின்னல்கள் அசைதல் இயல்பாம். 100

247. ஆடு தோகைபுடை நாசிக டோறு
மரணி தந்தசுட ராகுதி தோறு
மாடு தாமமணி வாயில்க டோறு
மங்க லக்கலசம் வேதிகை தோறுஞ்

சேடு கொண்டவொளி தேர்நிரை தோறுஞ்
செந்நெ லன்னமலை சாலைக டோறு
நீடு தண்புனல்கள் பந்தர்க டோறு
நிறைந்த தேவர்கண நீளிடை தோறும். கO௪

(இ - ள்) ஆடு...தோறும்-கோபுர நாசிப்பக்கங்களில் எங்கேயும் ஆடுகின்ற மயில்கள்; அரணி...தோறும் - யாகங்களில் எங்கும் அரணியினாற் கடைந்தெடுக்கப்பெற்ற நெருப்பு; மாடு...தோறும் - இருபக்கமும் மாலைகள் தூக்கியன; வாயில்களில் எல்லாம் திண்ணைகள் தோறும் மங்கலக் கலசங்கள்; சேடு...தோறும் - தேர்க்கூட்டங்களிலெங்கும் பெரிய ஒளி; செந்நெல்...தோறும் - அன்ன சாலைகளிலெங்கும் செந்நெல்லரிசிச் சோற்று மலைகள்; நீடு...தோறும் - தண்ணீர்ப்பந்தர்களிலெல்லாம் எப்போதும் நிரம்பிய குளிர்ந்த தண்ணீர் வகைகள்; நிறைந்த...தோறும் - வீதியின் அயலிடங்களில் எங்கும் நிறைந்த தேவக்கூட்டங்கள்; (உள்ளன)

(வி - ரை) வினைச்சொல் உள்ளன என்று வருவித்துரைக்க. திருநாட்டுச் சிறப்பு, வரிசை - 78 முதல் 83 வரை பாட்டுக்கள் பார்க்க.

திருவீதியிற் புகுந்தவர், மேலே உயரக்கண்ட காட்சி மேற்பாட்டிற் கூறிய ஆசிரியர் கீழே வீதியிற்காண்பது இப்பாட்டிற் கூறினார்.

ஆடுதோகை - மேற்பாட்டிலே பகற்காலங்களில் ஓமப்புகையே மேகங் காட்டுவன என்றாராதலின், கார் கண்டு களிக்கும் மயில்கள் அந்த மேகங்களிற் களித்து, ஓங்கி உயர்ந்த இடமாகிய கோபுர நாசிகளிலே தங்கி ஆடி மகிழும் என்று இங்குக் குறித்தார். மயங்கு மாலை நேரங்களிலும் மழைக் காலங்களிலும் மயில்கள் கோபுர வாயில்களின் மேலே தங்கிக் கூவும் இயற்கை காண்க. சோலைகளுக்குள்ளே நகரம் விளங்குவதால் மயில்களைக் கூறினார். **நாசி** - கோபுர நிலைகளின் மேல் வைக்கப் பெறும் முகங்கள். ஆடுதல் மயிலுக்குரிய சிறப்பியல்பாதலின் **ஆடுதோகை** என்றார். "கூவும் குயில்கள் ஆடும் மயில்கள் இன்சொற் கிளிப்பிள்ளை" என அவ்வவற்றின் சிறப்பியல்பைத் தொகுத்துக் கூறும் ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. **தோகை** அதனையுடைய மயிலுக்கு ஆயிற்று - சினை ஆகுபெயர். ஆடுகின்ற காலத்து விரிந்து அழகு செய்வது அதுவேயாதலும் குறிப்பு.

அரணி - தீக்கடைக்கோல். மரக்கோலாற் கடைந்து தீயுண்டாக்குதல் அக்கால வழக்கு. "விறகிற்றீயினன்...முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும், 'மரக்கடை தீக்கோல் பண்ணி' (கண் - புரா-99) என்ற புராணமும் காண்க. வழக்கம் பற்றியும் தூய்மை பற்றியும் இதுவே யாகங்களிற் கொள்ளப்பெறும். விரிவு ஆகமங்களுட் காண்க.

இவ்வாறன்றி நெருப்பெல்லாமொன்று என்னும் இக்காலத்தார் நினைப்பு அறியாமையாம். உண்டாகும் இடம்-பற்றி எரியும் விறகு முதலிய பற்றுக்கோடு-தங்குமிடம் முதலிய வெவ்வேறு காரணங்களினால் தீயும் வெவ்வேறு குணந் தரும். நவீனத்திற் காணும் நெருப்புக் குச்சி - மின்சாரம் முதலியவை தோன்று மிடத்தால் வேறு வேறு குணம் தருவன. புளிய மரத் தீக்கும் வேப்ப மரத் தீக்கும் உள்ள வேறுபாட்டை மருத்துவ நூல்களுட் காண்க. இவை பற்றுக் கோட்டால் வரும் வேறுபாடாம். தங்குமிட வகையால் ஈமத் தீக்கும் யாகத் தீக்கும் உள்ள வேற்றுமை சுருதி, யுக்தி, அனுபவ மூன்றாலும் அறியலாம். "உம்பர் தொழ எழுஞ் சிவ மந்திர ஓமத்தால், உற்பவித்த சிவாங்கியினில்" (முழுநீறு - புரா. 2) முதலியவை காண்க. தீக் கடைக்கோல் வழக்கொழிந்த இந் நாளிலும் சிவயாகங்களிலே சூரிய காந்தத்தாலே சூரிய கிரணத்தினின்றும் தீயை எடுத்து வேள்வி தொடங்கும் வழக்கும் காண்க.

நீடு தேவர் கணம் நீள் இடை தோறும் - ஆகுதிகளைக் கொள்ளத் தேவர்கணம் இருக்கும் தொடர்பு பற்றி அடுத்து வைத்துக் கூறினர்.

மங்கலக் கலசம் - நிறை குடம். பூரண கும்பம் என்பர் வட நூலார். வாயில்களிலே தூக்கிய தாமங்களும், வேதிகைகளிலே மங்கலக் கலசங்களும், தில்லையில் இன்றைக்கும் பார்த்து மகிழும் காட்சியாய் விளங்குவன. **வேதிகை** - திண்ணை.

தேர்களில் ஒளி - தேர்களிலே உள்ள மணி முதலிய அலங்காரங்களும், உயரத் தூக்கிய பெருவிளக்குகளும் ஆம். இவை பகலிலும் இரவிலும் தேருக்கும் வீதிக்கும் ஒளி தருவன.

சேந் நெல் - குணம் முதலிய விசேட நோக்கிச் செந்நெல் அன்னம் என்றார். கார்நெல் தாழ்ந்ததாம். இதன் விரிவை அரிவாட்டாய நாயனார் புராணத்துட் காண்க.

அன்ன மலை சாலை - மலைபோன்ற அளவிற் சமைத்து அளிக்கும் அன்னசாலை. தில்லையிலே இப்பெருமை இன்றும் கண்ணாரக் காணக்கிடைப்பதாம். இஃது "அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்" என்ற அப்பர் சுவாமிகளின் ஆசியின் பயன் போலும்.

நீடு தண்புனல்கள் பந்தர் - தண்புனல்கள் நீடு பந்தர். தாகத்திற்கு வேட்பனவாம் பலவகைப்பானங்களைக் குறிக்கப் **புனல்கள்** என்று பன்மையாற் கூறினர். குளிர்ந்த நீர்களே பருகத்தக்கன. இப்போது வழங்கும் கொடிய குடிப்பழக்கமாகக் காபி முதலிய சூட்டுப்பானங்கள் பருகத் தகாதன என்பது **தண்புனல்கள்** என்றதனுல் பெற்றும். புனலேயன்றி வேறு வகைக் குடிகள் தகாதவையே என்பார் **புனல்கள்** என்றார். பசியும் தாகமும் அடுத்தடுத்து உள்ளனவாதலின், அவ்வேட்கைகளைத் தீர்க்க உதவும் அன்னசாலைகளும் நீர்ச்சாலைகளும், இப்பாட்டிலே அடுத்தடுத்து வைக்கப்பெற்றன. சோறில்லாத அன்ன சத்திரங்களும் நீரில்லாத நீர்ப்பந்தர் நீர்த்தொட்டிகளும் மலியக் காணும் இந்நாள்மக்கள் இக்கருத்துக்களைக் கூர்ந்து நோக்குவார்களாயிற் பயனுண்டாம்.

தேர்நிறை தோறும்—அன்னமலி சாலைகள்—என்பனவும் பாடங்கள். 101

248. எண்ணில் பேருல கனைத்தினு முள்ள
வெல்லை யில்லழகு சொல்லிய வெல்லா
மண்ணி லிப்பதியில் வந்தன வென்ன
மங்க லம்பொலி வளத்தன வாகிப்
புண்ணி யப்புனித வன்பர்கண் முன்பு
புகழ்ந்து பாடல்புரி பொற்பின் விளங்கும்
அண்ண லாடுதிரு வம்பலஞ் சூழ்ந்த
வம்பொன் வீதியினை நம்பி வணங்கி, ௧0௨

249. மால யன்சத மகன்பெருந் தேவர்
மற்று முள்ளவர்கண் முற்று நெருங்கிச்
சீல மாமுனிவர் சென்றுமுன் றுன்னித்
திருப்பி ரம்பினடி கொண்டு திளைத்துக்
கால நேர்படுதல் பார்த்தய னிற்பக்
காத லன்பர்கண நாதர் புகும்பொற்
கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக்
குவித்த செங்கைதலை மேற்கொடு புக்கார். ௧0௩

248. (இ - ள்) எண்ணில்...ஆகி - எண்ணில்லாத பெரிய உலகங்கள் எல்லாவற்றினும் உள்ள எல்லையில்லாத அழகுகள் என்று சொல்லப்பெற்றவை யெல்லாம் ஒருங்கே திரண்டு பூவுலகத்தே இத்தலத்திலே வந்து கூடின என்று சொல்லும்படி மங்கலம்

பொருந்தும் வளங்களையுடையனவாய்; புண்ணிய...வணங்கி - புண்ணியப் புனித அன்பர்கள் முன்னர்ப் புகழ்ந்து பாடும் அழகிலே விளங்கி, இறைவன் ஆடுகின்ற திருவம்பலத்தைச் சூழ்ந்திருக்கும் உள்வீதியினை நம்பிகள் வணங்கிக் கொண்டுபோய், ௧0௨

249. (இ - ள்) மாலயன்...நெருங்கி - விட்டுணு, பிரமன், இந்திரன் ஆகிய பெருந்தேவர்களும், மற்றுமுள்ள தேவர்களும் முழுதும் நெருங்கி; சீல...துன்னி-தவ சீலமுடைய பெருமுனிவர்கள் முன்னே சென்று சேர்ந்து; திருப்பிரம்பின்...நிற்ப - உரிய காலமல்லாமையால் உள்ளே செல்லமாட்டாதவர்களாய்க் காவல்நாயகராகிய நந்திதேவரது ஆணைப்பிரம்பினது அடி மேலேபட அதனிலே திளைத்தவர்களாய் உரிய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு பக்கங்களிலே ஒதுங்கி நிற்க; காதல்...வாயில்-காதலினால் மிகுந்த அன்பர்களும் கணநாதர்களும் தடையின்றி உள்ளேசெல்லும் அழகிய திருவாயிலை; இறைஞ்சி...புக்கார் - வணங்கி உச்சியிற் குவித்த கைகளோடும் அதன் உள்ளே புகுந்தனர். ௧0௩

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு பெற்றன. மங்கலம் பொலிவளத்தனவாகி - பொற்பின்விளங்கும் - சூழ்ந்த வீதியினை - வணங்கி; தேவர் நெருங்கி-முனிவர் துன்னி அயல்நிற்ப - அன்பர் - கணநாதர்-புகும் வாயிலிறைஞ்சிக் குவித்த கை தலைமேற் கொடு-நம்பி - புக்கார் என்று கூட்டி முடித்துக் கொள்க.

248. (வி-ரை) இப்பாட்டிற் கூறியது அம்பலஞ் சூழ்ந்த அகவீதியின் நிகழ்ச்சியாம்.

பேருலகு அனைத்தினும் - மேலேழும் கீழேழுமாகிய உலகுகள். எண்ணில்லாத அண்டங்கள் என்றலுமாம். கந்தபுராணம் அண்டகோசப்படலம் முதலியவற்றுட் காண்க. இறைவனைத் தரிசிக்கவும் அவிகொள்ளவும் எல்லாத் தேவர்களும் வந்தனராதலின் அவ்வவர் உலகங்களின் அழகுகள் எல்லாம் வந்தன என்ற குறிப்பு.

வளத்தன - மேற்பாட்டிற் சிறப்பாய்க் குறித்துச் சொல்லப்பெற்றவையேயன்றி எங்கும் உள்ள எல்லா அழகுகளும் கூடிய வளங்களை யுடையன. **எல்லாம்**-எல்லாமும். முற்றும்மை தொக்கது.

புகழ்ந்து பாடல்புரி பொற்பு - இது மேலே சொல்லிய ஏனை உலகெங்கும் இல்லாத சிறப்பியல்பாதலின் **அழகு சொல்லிய எல்லாமும்** என்ற முற்றும்மையில் அடங்காது. ஆதலின் **பொற்பு** எனத் தில்லைக்கே உரிய சிறப்பியல்பாய் வேறு பிரித்துக் கூறினர். மேலே வரிசை 245-ல் "தொண்டர் போற்றிசைக்கு மொலி" என்றது தேவதேவர் எழுந்தருளும் தேர்வீதியின் நிகழ்ச்சி.

புண்ணியப் புனித அன்பர்-புண்ணியமும் புனிதமும் அன்பும் ஒருங்கே நிறையப் பெற்றவர்கள். புண்ணியர், புனிதர், அன்பர் எனவும், புண்ணிய அன்பர், புனித அன்பர் எனவும், புண்ணியப்புனித அன்பர் எனவும் உரிய பலவகையிற் பிரித்துரைத்தலுமாம்.

முன்பு - அன்பர்களும், சிவகணநாதர்களும். தேவர், முனிவர் முதலிய எல்லாருக்கும் முன்னே நிற்கவும் எல்லாக் காலத்தும் சேவிக்கவும் உரிமையுடையார் என்பதும் ஆம். வரிசை 17, 18, 20 பாட்டுக்களையும் 'தொண்டர்கள்பின் உம்பர்குழாம் மல்கு திருக் காளத்தி மாமலை' (திருநா - புரா - 343), 'வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணி நீள்வாயில் மருங்கிறைஞ்சி யுட்புகுந்து' (திருஞான - புரா - 1023) முதலிய திருப்பாட்டுக்களையும் காண்க. **முன்பு** - என்பதன் விரிவை அடுத்த பாட்டிற் கூறினர்.

முன்பு - முற்காலத்து என்று உரைப்பது மொன்று.

இத் திருவீதி அம்பலத்தை அடுத்துச் சூழ்ந்ததாதலின் இதனைக் கண்டவுடனே இதிற் போந்து பாடிய பேரன்பர்களின் நினைவு உண்டாவது இயல்பாம். திருமூலர் - மாணிக்க வாசகர் - திருஞான சம்பந்தர் - திருநாவுக்கரசர் - ஐயடிகள் காடவர்கோன் - முதலிய நாயன்மார்களை இங்கு நினைவூட்டியவாறு. வேதம் - உபநிடதங்கள் - சிவாகசியம் - திருமூலர் திருமந்திரம் - திருவாசகம் - தேவாரம் முதலிய எல்லாம் இதனைப் பாடுகின்ற தன்மை நினைவூட்டப்பெற்றதாம்.

249. (வி - ரை) மேற் பாட்டிலே முன்பு என்றதை இவ்வாறு என விரித்து இப் பாட்டிற் கூறுகின்றார்.

சதமகன் - (சதம் - நூறு : மகம் - யாகம்) இந்திரன் - நூறு யாகங்கள் செய்து அப் பதவி பெறுதலாற் போந்த பெயர். 'நூறுபல் வேள்விமுற்றிய' (திருமுருகாற்றுப்படை).

பெருந் தேவர் மற்றும் உள்ளவர்கள் - மாலும் அயனும் சதமகனும் இவர் போன்ற அக்கினி - இயமன் - முதலிய பெருந் தேவர்களும் இன்னும் உள்ள இயக்கர் முதலிய தேவக் கூட்டத்தார்களும் - என உம்மை விரித்துரைத்துக் கொள்க.

முற்றும் - எல்லாரும். **மற்றும் உள்ளவர்கள்** என்பது தேவக் கூட்டங்களின் வகைகளையும், **முற்றும்** என்பது அவர்களில் ஒருவரும் ஒழியாமல் யாவரும் என்ற தொகையையும் காட்டியது.

சீலமா முனிவர் சென்று முன் துன்னி - தேவர் கூட்டங்களைக் கடந்து முன்னுறச் சென்று நிற்கத் தக்கார் மனன சீலம் பொருந்தும் பெரு முனிவர்களாவர் என்பதாம். இவர்கள் முன்னும், இவ்வாறு இல்லாது தேவபோகங்களை அனுபவிக்கும் தேவர்கள் பின்னும், இருக்கத்தக்க முறையைக் குறித்தபடி.

திருப்பிரம்பினடி கொண்டு திளைத்து - இறைவன் முன்னர்த் தரிசிக்க வருவோர்களைக் காலமும் முறைமையும் பார்த்துச் செல்லவிடுப்பதும், விடாது தடுப்பதும், திருநந்தி தேவர் ஆணை; அவர் தமது கையிற்றாங்கிய பிரம்பினாலே முறைசெய்து ஆணை நடாத்துவர்; அப்போது அப்பிரம்பின் அடி தாக்கும் - என்பது வரிசை 20, 21 பாட்டுக்களிற்காண்க. **அடிகொண்டு** என்றதனாற் றடுக்கப்பட்டுநின்றார் என்பது குறிப்பு. **திளைத்தல்** - பிரம்பினடியினால் வருந்தாது இது எம்மேற் படும்பேறு கிடைத்ததே என்று ஆனந்தித்து அனுபவித்தல். "கோவே கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே" என்ற திருவாசகக் கருத்தும் காண்க. இங்குப் போந்த கருத்தை "பங்கயக் தளவ நாளும் வேத்திரப் படைபொ றுத்த, செங்கையெம் பெருமானந்தி" என்று காஞ்சிப்புராணமுடையார் அழகுபெற எடுத்துக் கூறியிருத்தல் காண்க. **திளைத்து** - வருந்தி என்று பொருளுரைப்பாருமுளர். அது பொருந்தாமை யறிக.

கால நேர்படுதல் பார்த்து - தரிசிக்க உரிய காலத்தை எதிர்பார்த்து.

அயல் நிற்ப - அன்பர் - கணநாதர் புகும் வாயில் - தேவர் முனிவர் முதலியோர் திருவாயிலிலே காலம்பார்த்துப் புறத்தே நிற்கவும், அன்பர்களும் கணநாதர்களும் தடையின்றி உள்ளே புகுவதாகிய திருவாயில். ஏனையோர் தரிசித்து வரம்பெற்றுச் செல்வோராகவும், இவர்கள் ஆசையற்றுப் பணிசெய்து கிடப்போராகவும் உள்ளார். ஆதலின் இவர்கள் எக்காலத்தும் நீங்காது இறைவனிடத்திலே இருப்பவர் என்பது. திருவாயிலின் சிறப்பைச் சொல்லும் முகத்தானே அடியவர்களின் ஏற்றமும் சிறப்பும் கூறிய உள்ளுறைக் குறிப்பை உன்னித் தெளிக்க.

"......அம்பலத் தானைப் பழித்துமும்மைத்
தீயின தாற்றல் சிரங்கண் ணிழந்து திசைதிசைதாம்
போயின வெல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே" (234)

என்ற திருக்கோவைப் பாட்டின் சுவையையும் இங்கு வைத்துக்காண்க.　　　　103

வேறு

250. பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகையின்
பிறங்குபே ரம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்

அருமறை முதலி னடுவினிற் கடையி
லன்பர்தஞ் சிந்தையி லலர்ந்த
திருவளர் ரொளிசூழ் திருச்சிற்றம் பலமுன்
றிருவணுக் கன்றிரு வாயில். கO௪

(இ - ள்) பெருமதில்...பின்னர்-பெரியமதில் சூழ்ந்த செம்பொன்மாளிகையையும் பேரம்பல மேருவையும் விதிப்படி வலஞ்செய்து வணங்கியபின்பு; வணங்கிய...வாயில்-மகிழ்ச்சியோடும் மேலும் சென்று வணங்கும்பொருட்டு, நம்பிகள், வேதத்தின் முதல் இடை கடைகளிலேயும், அன்பர் சிந்தைகளிலேயும்,விளங்குகின்ற திருவளர்ஒளிசூழ்ந்த திருச்சிற்றம்பலத்தின் முன்னே உள்ள **திருவணுக்கன்திருவாயில்** புகுந்தனர்.

(வி - ரை) செம்பொன் மாளிகை - பொன்னம்பலம் - திருச்சிற்றம்பலம். தேவர்களும் இரணியவருமரும் முதலாகப் பலரும் இந்நாள் வரைப் பலப் பல காலங்களிலே திருச்சிற்றம்பல மாளிகையைப் பொன் வேய்ந்தனர் என்பது சரிதங்களாலறியப்படும்.

"முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் **தூயசெம் பொன்னினால்**
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனே" —**கோயில் - குறுந் - 8**

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

மாளிகை - திருமாளிகைப்பத்தி என்றுரைப்பின், திருமதிலுடன் சேர்ந்த என்க.

மின்பிறங்கு பேரம்பல மேரு - சிவவொளி விளங்கும் **பேரம்பலம்** ஆகிய மேரு.

வணங்கிய மகிழ்வோடும் புகுந்தார் - **வணங்கிய** - வணங்கும் பொருட்டு. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; புகுந்தார் என்ற வினைகொண்டு முடிந்தது. வணங்கும் பொருட்டு மகிழ்ச்சியோடும் புகுந்தனர். **வணங்கிய** - பெயரெச்சமாக்கி, பேரம்பலத்தை இறைஞ்சியதால் உண்டாகிய மகிழ்ச்சியோடும் என்றுரைத்தலுமாம்.

மின்பிறங்கு பேரம்பல மேரு - சிவவொளி விளங்கும் மேரு ஆகிய பேரம்பலம். செம்பொன் மாளிகையாகி ஒளிவிளங்கும் பேரம்பலம் என்று உரைத்தலுமாம். "அம்பலம் செம்பொற் கோயில் கொண்டாட வல்லானே" (திருவிசைப்பா.) "சேயவன் திருப்பேரம்பலம் செய்ய, தூய பொன்னணி சோழன்..." (வரிசை - 8) என்று பாராட்டியபடி அநபாயச் சோழர் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்தாராதலின் அதை நினைவூட்டும் வகையிலே இவ்வாறு கூறுத லியல்பேயாம். மேரு பொன் மலையெனப் பெறுவதுங் காண்க. **மேரு**-பேரம்பல மென்கிற மேரு-என்பர் இராமநாதச் செட்டியார்.

"இடைபிங் கலையிம வானோ டிலங்கை, நடுநின்ற **மேரு** நடுவாஞ் சுழுனை
கடவுந் **தில்லைவனங்** கைகண்ட மூலம், படர்வொன்றி யென்றும் பரமாம் பரமே"
"**மேரு** நடுநாடி மிக்கிடை பிங்கலை, கூரு மிமவா னிலங்கைக் குறியுறுஞ்
சாருந் **தில்லைவனத்** தண்மாம லயத்தூ, டேறுஞ் சுழுனை யிவைசிவ பூமியே"
"பூதல **மேருப்** புறத்தான தெக்கணம், ஓது மிடைபிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயிறிரு வம்பலம், ஏதமில் பூதாண்டத் தெல்லையி னீறே"

என்ற திருமந்திரப் பொருள்களைத் தக்கார்வாய்க் கேட்டு இங்குவைத்துக் கண்டு கொள்க. இலங்கை - இடைகலை; இமயம் - பிங்கலை; தில்லை - சுழுமுனை - (மேரு - நடுநாடி) என்பர்.

"வலங்கைமான் மழுவோன் போற்றும் வாளர வரசை நோக்கி
யலைந்திடும் பிண்ட மண்ட மவைசம மாதலாலே
யிலங்கைநே ரிடைபோ மற்றை யிலங்குபிங் கலையா நாடி
நலங்கிள ரிமய நேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி"

" நாடரு நடுவி னுடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணு மன்னுமம் பலமொன் றுண்டங்
காடுது மென்று மென்று மென்னையா ளுடைய வையன் " (71)

—பதஞ்சலிச் சருக்கம்

என்ற கோயிற் புராணமும் காண்க.

மேரு - வலங்கொண்டு இறைஞ்சிய பின்னர் - திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலம்முன் அணுக்கன் திருவாயில் புகுந்தார் என்பதாம். சுழுமுனையைக் கடந்து அதன் மேல் விளங்குவது சிவஞான ஒளியாதலின் மேருவலங் கொண்டு சிற்றம்பல வாயில் புகுந்தார் என்று கூறியவாறு.

இப்பாட்டிலே மின்பிறங்கு **பேரம்பலம்** - திருவளர் ஒளிசூழ் **திருச்சிற்றம்பலம்** என்று கூறப்பெற்ற இரண்டு அம்பலங்களும் இன்றும் அன்பர்கள் சென்று தரிசிக்க விளங்குகின்றன. **பேரம்பலம்** - சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ நாயகர்கள் எப் போதும் எழுந்தருளி யிருக்கும் மன்றம். **சிற்றம்பலம்** - கூத்துடையானாகிய சபா நாயகர் எழுந்தருளி யிருக்கும் பொன்மன்றம்; இது திருமாளிகைப் பத்தி திருமதில் களாற் சூழப்பெற்றிருக்கும். இவை யிரண்டும் திருமூலட்டானநாத ராலயத்திற்குத் தெற்கே உள்ளன.

அருமறை முதலில் நடுவினிற் கடையில் அன்பர்தஞ் சிந்தையில் அலர்ந்த - இதனை (1) மறைமுதல், நடு, கடைகளில் அலர்ந்த - எனவும், (2) அன்பர் சிந்தையில் அலர்ந்த எனவும், பிரித்துத், திருச்சிற்றம்பலம் அலர்ந்த இரண்டிடங்களையும் கூறிய தாகக் கொள்க. " அருமறைச் சிரத்தின் மேலாஞ் சிற்பர வியோம மாகும் திருச்சிற் றம்பலம் " (தில்லைவாழந்தணர் புராணம் - 2.)

மறையின் முதல் - நடு - கடைகளில் அலர்ந்த - திருச்சிற்றம்பலம் பிரணவ உருவ மாய் விளங்குதலாலும், அது சமட்டி - சேர்ந்தநிலை - **ஓம்**, வியட்டி - பிரிந்தநிலை - **அ - உ - ம்** என்ற இரண்டு நிலையிலும் வேதங்களில் முதல் நடு முடிவுகளில் அமைந்து உச் சரிக்கப்படுதலாலும் இவ்வாறு கூறினார்.

திருச்சிற்றம்பலம் - மெய்ஞ்ஞானமேயான அம்பலம். பிரணவம், ஈசன் மேவரு பீடமாய் எல்லா எழுத்துக்கும் மறைகட்கும் முதலாயுள்ளது. அம்பலம் - சித்து; பிர ணவம் - (அதனை நோக்கச்) சடம்; அம்பலம் - பிரணவத்துக்கு உயிராய் அதனை இயக்குவது; பிரணவம் - அதனால் இயங்குவது. ஆதலின் சிவனருள் பெறுதோரால் உண்மைப்பொரு ளறிதற்கரிய வேதங்களின் முதல் - இடை - கடைகளில் திருச்சிற்றம் பலத்தைத் தனக்கு உட்பொருளாகவுடைய பிரணவம் அமைந்திருக்கின்றது. ஞானப் புகலுடைய அன்பர் உள்ளப் புண்டரிகத்தில் முதல்வனார் செய்யும் கூத்துக்கிடமாக விரிகின்றது. ஆதலின் **அருமறை...சிந்தையில் அலர்ந்த** - என்றார்.

இவ்வம்பலம் மறை முதல் இடை கடைகளில் பிரணவ வாயிலாக அன்றி நேரே அலர்வதில்லை. ஆதலின் அந்த மறைகளை ஓதுங்கால் பிரணவத்தையே அவ்வவ்விடங் களில் ஓதுதல் மரபு. "ஓமென்று மறைபயில்வார்" என்ற தேவாரமும் காண்க.

கந்தபுராணம் - அயனைச் சிறைபுரி படலத்திலே (8) " என்று நான்முகன்...... மறையெவற்றிற்கு மாதியில் நவில்வான், நின்ற தோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்" என்றதும் காண்க. **வியட்டி** நிலையில் - **அகாரம்** இருக்குவேதத்தின் முதலி லும் (அக்நி மீளே), **உகாரம்** எசுர்வேதத்தின் நடுவிலும் (யோநிஸ் சமுத்திரோபிந்து), **மகாரம்** சாமவேதத்தின் முடிபிலும் (சமாநம்வரம்) விளங்குவதென்று பெரியோர் கூறுவர். தகராகாயத்தைக் குறிக்கும் **தகரத்தோடு** ஓ என்ற உயிர் கூடிய **தோ** - (**தோடு** உடைய) என்று தொடங்கிய தெய்வத்தமிழ்த் திருமுறை, உலகெலாம் என்றதில் **ம்** என்றதுடன் முடிபு பெற்றிருத்தலும் இங்கு உணரத் தக்கது.

சிந்தையில் - சிந்தை என்பதற்குச் சீவனென்றும், சீவனுக்குச் சிந்தை என்றும் வந்திடும். **சிந்தை** - சிவஞானத்தால் விளங்கிய ஆன்ம அறிவு என்க. அவ்வறிவினுள்ளே விரிந்து விளங்கும் திருச்சிற்றம்பலத்திலே இறைவன் பிண்டத்துச் செய்யும் திருக் கூத்து நிகழும். அவ்வானந்தக் கூத்தை அவ்வியல்பிற் கும்பிட்டுச் சிவபோதத்தாலே அருளிய தமிழ் மறைகளின் முத லிடை கடைகளிலே பிரணவத்தினுட்பொருளாகிய 'திருச்சிற்றம்பலம்' என்பதைக் கூறித் தொடங்குதலும் முடித்தலும் அமைவுடைத்து என்பது பெரியோர் துணிபு.

"என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானே"

"ஊனில்வருந் திருக்கூத்தை, அவ்வியல்பிற் கும்பிட்டு"

எனவும் வரும் திருவாக்குக்களும் காண்க.

சிந்தையில் - உள்ளக் கமலத்தில் என்றலுமாம். மலர்மிசை ஏகினான் என்ற குற ளில் 'அன்பானினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின்' என்று உரை கூறியது காண்க. 'நீவிர் இருவருங் கண்ட மன்ற மிதயமாம்' (திருவிளையாடற்புராணம்) என்றபடி திருச்சிற்றம்பலம் இதயத் தானமாவதும் உணர்க.

அன்பர் சிந்தையில் அலர்வதனை - அப்பர் சுவாமிகள்,

"நாடி நாரண னுன்முக னென்றிவர், தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத், தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே."

என்று சுவையும் உறுதியும் பெற அருளியது காண்க.

"அந்தியின் மறைநான் காரணம் பொதிந்த வரும்பெறன் மறைப்பொருள் மறையோர்
சிந்தையி லநம்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம் பலமே"

எனக் கருவூர்த்தேவர் திருவிசைப்பாவினும் காண்க.

திருவளர் ஒளிசூழ் - **திருவளர்** - யாவர் யாவர் இவ்வொளியினது காட்சி எல்லைக்குட் படுகின்றார்களோ அவ்வவர்களிடத்தெல்லாம் அருளாகிய திரு வளர்க்கப்பெறுகின்றது. **ஒளி** -

"விளங்கொளி யாய்நின்ற விகிர்த னிருந்த
துளங்கொளி பாசத்துட் டோங்கிருள் சேராக்
களங்கிரு ணட்டமே கண்ணுத லாட
விளங்கொளி யுன்மனத் தொன்றி நின்றானே."—ஒளி - 43

முதலியனவாகித் திருமூலர் திருமந்திரம் ஒன்பதாந் தந்திரம் **ஒளி** என்ற பகுதியில் உள்ளனவும்,

"புறத்துளா காசம் புவன முலகம்
அகத்துளா காசமெம் மாதி யறிவு
சிவத்துளா காசஞ் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துளா காசந் தானஞ் சமாதியே."—ஷை **ஆகாசப்பேறு** - 9

முதலிய பகுதியில் உள்ளனவும் பிறவும் தக்கார் வாய்க்கேட்டு ஈண்டுவைத் துணரத்தக் கன. **ஒளிசூழ்** - ஒளியை உள்ளே வைத்து அதனைச் சுற்றிச் சூழ்ந்த திருச்சிற்றம்பலம் என்றலுமாம். இப்பொருளில் **ஒளி** என்பது கூத்தப் பிரானை. ஞாயிற்றைச் சூழ்ந்த கதிர் போல ஒளியினாற் சூழப்பெற்ற திருச்சிற்றம்பலம் என்றலுமாம். இப்பொருளில் ஒளி என்றது திருச்சிற்றம்பலத்தினது விளக்கச் சத்தியாம்.

சிற்றம்பலம் - சிறுமை - அம்பலம் என்ற இருசொற் புணர்ந்த தொடர்மொழி. சிறுமை - இங்கு நுண்மை - (சூக்குமம்). சிவசத்தியை நோக்க மற்ற இருவகை மாயா காரியப் பொருளுந் தூலப் பொருள்களேயாம். தடையிலா ஞானமாகிய சிவசத்தி சொரூபமே அம்பலமாகலின் அது சிற்றம்பலம் எனப்பெறும். இச்சிறுமையை வட நூலார் **தகரம்** என்ப.—ஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் குறிப்பு.

"அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த வொருபெருந் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங் களிப்பு..." (திருஞான-புரா - 160)

என்ற திருப்பாட்டிலே இதன் பொருளை உய்த்துணர்க. இது சிவஞான ஒளியானதால் **வளர் ஒளி** எனப் பெற்றது. ஒளிகள் ஞாயிறு முதலாகப் பலவாம். ஞாயிறு படரிற் காண்பது கண்ணொளி; அதன்மேல் ஆன்மவொளி; அதன்மேல் சிவஞானவொளி. இதுவே தனக்குமேல் ஒன்று மில்லாததும், மற்றெல்லா ஒளிக்கும் ஒளிதந்து இயக்குவதும் ஆகிய முற்றொளியாம்.

"ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தணிதரு மொளியாகி" (திருத்தப்படலம் 63) என்ற பேரூர்ப் புராணமும் காண்க.

மேலும் இதன் விரிவுகளைத் தக்கார்வாய்க் கேட்டுணர்க.

திருவணுக்கன் திருவாயில் - இறைவன் ஆடுமிடத்திற் கருகில் உள்ளது. இதற்கப்புறம் வேறு வாயில்கள் இல்லை. அகத்தும் புறத்தும் இறைவனைக் காணக் கடந்துசெல்ல வேண்டிய எண்ணிறந்த வாயில்களிலே உள்ளிருந்து கணக்கிடும்போது முதற் றிருவாயில். அணுக்கத் தொண்டர்களே உட்புகக் கூடியதாதலின் இப்பெயர் பெற்றதென்றலுமாம். இது அம்பலஞ் சூழ்ந்த மாளிகைப் பத்தியிற் கிழக்குத் திருவாயில் போலும்.

பெருமகிழ்—நடுவினிற் சிரத்தில்—என்பனவும் பாடங்கள். 104

251. வையகம் பொலிய மறைச்சிலம் பாற்ற
மன்றுளே மாலயன் றேட
ஐயர்தாம் வெளியே யாடுகின் றுரை
யஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ வந்தக்
கரணமோ கலந்தவன் புந்தச்
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
றிருக்களிற் றுப்படி மருங்கு. கருரு

(இ - ள்) வையகம்...ஆடுகின்றுரை - பிரம விட்டுணுக்கள் தேட, உலகம் விளங்க, வேதச் சிலம்பு ஒலிப்ப, அம்பலத்தினுள் வெளியே திருக்கூத்து இயற்றும், அந்த இறைவனை; அஞ்சலி...உந்த - மலர்த்தியும் குவித்தும் கூப்பிய கைகளும், ஆனந்தித்த கண்களும், இவற்றின் உட்கலந்த அந்தக்கரணங்களும், கொண்டவராய் அன்பினாலே உந்திச் செலுத்தப்பெற்று; செய்தவம்...மருங்கு - செய்யும் தவத்திற் பெரியோராகிய நம்பிகள் திருக்களிற்றுப்படியின் பக்கத்திலே சென்று தாழ்ந்து எழுந்தனர்.

(வி - ரை) **வையகம் பொலிய** ஆடுகின்றுரை; **சிலம்பாற்ற** ஆடுகின்றுரை; **மாலயன் தேட** ஆடுகின்றுரை எனத் தனித்தனி கூட்டுக. **பொலிய** என்பதனை **ஆற்ற** என்றதுடன் கூட்டி வையகம் பொலியும் பொருட்டுச் சிலம்பு சத்திக்க என்றுரைத்தலுமாம். **வையகம்**-அதிலுள்ள உயிர்களுக்கு ஆகுபெயர். **பொலிய**-பயனடைய.

மன்றுளே - வெளியே - மாலயன் தேடு அவ்வையர் வெளியே மன்றினுள் வையகம் பொலிய மறைச்சிலம்பாற்ற ஆடுகின்றுரை என்று கூட்டுக. தேடு - அ - ஐயர். அகரச்சுட்டுப் பெருமை குறித்தது. வகரம் விகாரத்தாற் றொக்கது. **தேட** ஆடுகின்றுரை என்று கொண்டு உரைப்பினும் அமையும்.

தாம் - உயிர்களிடத்து வைத்த இரக்கத்தாலே தம்மை ஆட்டுவார் பிறரின்றித் தாமே யாடுகின்றுர் என்க. மேற் பாட்டினுரை காண்க. **வெளியே** - "வெளியாய் வெளியதன் வெளியாய் வெளியதன் வெளியின் வெளிநட நவில்கின்றுன்" என்பது பேரூர்ப் புராணம்.

வையகம் போலிய - இன்பத் துன்பங்களாகிய போகங்களை மட்டும் நுகர்தற் கிடமாகிய சுவர்க்க நரக உலகங்கள்போலாது, சிவகருமஞ் செய்து முத்தி யடைதற்குரிய இடமாதலின் **வையகம் போலிய** என்றார்.

"...கயிலை புல்லென வெறிவிசும்பு வறிதாக - இம்ப ருய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர் - அருநடங் குயிற்று மாதிவா னவனே"
—கோயினான்மணிமாலை - பதினோராந் திருமுறை

என்று பட்டினத்தடிகள் அருளியதும் காண்க. அவ்வுலகங்களினுள்ளார் போக முடிவிலே இங்குவந்து பிறந்து சிவகருமஞ் செய்தே முத்தி யடையவேண்டுதலின் பூமியிற் பிறவாது நாள் கழிக்கின்றோமே என்று ஏங்குவர் எனப், "புவனியிற் போய்ப்பிறவாமையி னாளும், போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று" திருவாசகத்துட் கூறியதும் காண்க. "க்ஷீணே புண்யே மத்ய லோகம் விசந்தி" என்பது உபநிடதம்.

மறைச்சிலம்பு அரற்ற - நாதமாகிய சிலம்பு ஒலிக்க. வேதம் நாத சொரூபமானது. அதுவே இறைவன் காற்சிலம்பாம். நாதத்திலிருந்து விருத்தியாய் வேதம் தோன்றும். குடிலையின் வழியே புவனங்கள் தோன்றும். அவ்வாறு தோன்றிய புவனங்களிற் பிறந்த உயிர்களுக்கு வேதமே வழிகாட்டும். இறைவன் வேதாந்தத்து விளங்குபவன்; ஆதலின் அவன் காலில் நிற்பது நாதமாகிய சிலம்பு என்க.

"ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை யாதிநூ லையும்வகுத்துச்
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்து..."**—தாயுமானூர்.**

ஐயர் தாம் வெளியே ஆடுகின்றாரை - ஐயராய்த் தாமேயாய் வெளியில் ஆடுகின்ற இறைவனை. **அஞ்சலி மலர்த்தி குவித்த** - அஞ்சலியாக மலரச்செய்து கூப்பிய.

முன் குவித்த கைகளோ - கண்களோ - அந்தக்கரணமோ - அன்பு உந்த - அன்பு தூண்டுதலினாலே மனம் முதலிய உட்கரணங்கள் தொழில் செய்யும் - பின்னர் அவை ஏவுதலினால் கண் காணும் - கண்டதனால் அதன்பின் கைகுவியும்; ஆனால் இவை இங்கே தவயோக முயற்சியினாலே ஒருங்கே நிகழ்ந்தமையாலே, அம்முறையிற் கூறாது மாற்றிக் கூறினார். ஒன்றன்பின் ஒன்றாய்ப் பின்னே நிகழவேண்டியவை அவ்வாறன்றி முன்னே நிகழ்ந்தன என்பார் **முன்** என்றார். நிருவிகற்பம் சவிகற்பம் என்ற காட்சியிரண்டனுள்ளே முதலிற் கண்டபோது பொது நோக்காகிய நிருவிகற்பக் காட்சி நிகழும். பின் மனதோடு கலந்து உற்றறிதல் உண்டாகும். அதன்பின் இன்னது செய்தல் வேண்டுமென்பது தோன்றும். பின்னரே அச்செயல் நிகழும். இந்த நான்கு வகை நிகழ்ச்சிகளும் கருப்பூரத்திலே தீப்பற்றுதல்போல் தீவிரதர பத்தி யுடையார்க்கு எது முன்னர் நிகழ்ந்ததென் றறியமுடியாதபடி விரைவிலே நிகழும். இந்த விரைவையும் அற்புதத்தையுமே கைகளோ-கண்களோ-கரணமோ-என்ற ஓகாரங்களாற் கூறினார்.

குவித்த - திளைத்த - கலந்த என்பவற்றை மேலே கூறியபடி பெயரெச்சங்களாகக் கொள்ளாமல் அன்பு உந்தக் கைகள் குவித்த; கண்கள் திளைத்தன; அந்தக் காரணங்கள் கலந்தன; என வினைமுற்றாக்கி உரைத்தலுமாம்.

திளைத்த கண்களோ - இங்கே நிருவிகற்பக் காட்சியுடன் ஒருங்கே சவிகற்பக் காட்சியும் நிகழ அதன் வழியே செயலும் நிகழ்ந்தது.

கண்கள் திளைத்தன - கண்டு அவ்வானந்தக் காட்சியிலே மாறாது நிலைத்தன. கண்ணொளியும், அதனுடன் கலந்த உயிர்ப்போதமும், அதனுடன் ஒன்றித்த சிவசத்தியும் கூடியவழியே காட்சியுண்டாம். ஆயின் ஏனைக்காட்சிகள் "ஒருபுலன் நுகரும்போதங் கொன்றிலை யொன்றின் பாலும்வருபயன் மாறிமாறி வந்திடும்" என்றபடி மாறும். ஈண்டு

இக்கண்களோ, முன்னமே அக்காட்சி வசப்பட்டு அதிலே நிலைபெற்ற சிந்தை கலந்தனவாதலின் மாறாது திளைத்தன என்க. இதனையே

"குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன் குரைகழலே" "காணப் பெற்றால்" "கண்களாற் பின்னைப் பேய்த் தொண்டர் காண்ப தென்னே" என்று அப்பர் சுவாமிகள் அருளியவை காண்க. "என்கண்ணு ளெப்போதும் வருகின்றவே" (20) என்றது பொன்வண்ணத்தந்தாதி.

அந்தக் கரணமோ கலந்த - உட்கரணங்கள் நான்கு. சித்தம், மனம், அகங்காரம், புத்தி என்பன. உயிர் - சித்தமாய் நின்று இது யாதாகற்பாலது எனச் சிந்திக்கும்; அதன்பின் மனமாய் நின்று இஃது இன்னதாகற்பாலது எனப் பற்றும்; அதன்பின் அகங்காரம் இது ஆமோ? அன்றோ? இதனை இன்னதெனத் தெளிவேன் யானெனத் தெளிவு பிறவாதெழும்; அதன் பின்னர்ப் புத்தியாய் நின்று இஃது இன்னதெனத் தெளியும்; இவ்வகை வெவ்வேறாய் முற்றுப்பெறாத செய்கையுடையன வல்லாதபடி முன்பயிற்சியாலே ஒருங்கே முற்றிய செய்கையுடையன ஆயின என்க. இவற்றின் மேல்விளைவை வரும் பாட்டிற் காண்க. உட்கரணங்களின் தொழிற்பாட்டு முறையைச் சிவஞானபோதம் 4-ம் சூத்திரம் "சித்தாய்ச் சித்தம்" என்ற வெண்பாவின்கீழ் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையிற் காண்க.

அன்பு உந்தச் சென்று தாழ்ந்து எழுந்தான் - அன்பினாலே உந்தப்பெற்றுச், சென்றனர் - தாழ்ந்தனர் - எழுந்தனர் என்க. மேலே சொல்லியபடி குவித்த கைகளும், திளைத்த கண்களும், கலந்த கரணமுமாகிச் சென்று என்க.

அன்பு உந்த - என்றதைச் சிங்க நோக்காகக் கொண்டு, குவித்தல் முதலிய மேற்செயல்களுக்கும் கூட்டுக. **உந்துதல்** - விரைந்து தள்ளுதல்.

செய்தவம் பெரியோன் - பண்டு செய்த நற்றவத்தாற் பெரியரானவர்.

திருக்களிற்றுப்படி - யானைத் துதிக்கை வடிவுடையனவாகிய திரணைகள் இரண்டு புறமும் அமைந்துள்ள ஐந்து படிகள். இவ்வைந்தையும் ஏறிக் கடந்து சென்றால் அருட் பெருங் கூத்தனைக் காணலாம். களிற்றுக்கை சூழ்ந்தமையால் இது இப்பெயர் பெற்றது. களிற்றுக்கை பிரணவத்தையும்,ஐந்து படிகள் திருவைந்தெழுத்தையும் குறிக்கும். ஐந்தெழுத்தால் அறியப்பெறுபவன் அவை குறிக்கும் ஐந்தொழில் ஆனந்தக் கூத்தனாதலை அவற்றின்மேற் காணும் இறைவனது திருவுருவம் இயம்பும்.

இக் களிற்றுக்கை எடுத்து நடராசர் திருப்பாதத்தே வைத்தமையால் காரணப் பேர் பெற்றது திருக்களிற்றுப்படியார் என்ற சைவசித்தாந்த சாத்திரம்.

(திருவணுக்கன் றிருவாயில் புகுந்த) பெரியோன் - அன்பு உந்தச் சென்று - ஆடுகின்றாரை - மருங்கு - தாழ்ந்து - எழுந்தான் என்று கூட்டிமுடிக்க.

போலிய - விருத்தியுற. **ஆடுகின்றார்** - அங்ஙனம் ஆடுகின்ற அவரை (அருட்பேற்றினை வேண்டுங் குறிப்பால்) மலர்த்திச் சந்நிதியில் அஞ்சலித்த கைகளையோ? தரிசித்ததினால் வந்த இன்பத்திற் றிளைக்கும் கண்களையோ? தியானிக்கின்ற காரணங்களையோ? இவைகளில் எதனையோ அன்பானது செலுத்தத் தவத்தாற் பெரிய நாயனார் படிமருங்கு போய் வணங்கி எழுந்தார்" என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு.

சிலம்பார்ப்ப—முன்போற்றும்—என்பனவும் பாடங்கள். 105

252. ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக

இந்துவாழ் சடையா னாடு மானந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். கo௬

(இ - ள்) ஐந்து...கொள்ள - ஐந்தாகப் பெயரும் அறிவுகளை எல்லாம் கண்களே தமதாக்கிக்கொள்ள ; அளப்பரும்...ஆக - அளவிடற்கரிய நான்கு காரணங்களின் செயல்கள் எல்லாம் சித்தம் என்ற ஒன்றின் செயலேயாக; குணம்...ஆக - மூன்று குணங்களும் சுத்த சாத்துவிகம் என்ற ஒன்றேயாகி நிற்க ; இந்து...திளைத்து - சந்திரன் வாழும் சடையினையுடைய இறைவன் ஆடுகின்ற அளவும் ஒப்பும் அற்றதாகிய பெருநடனத்தினால் தம்மிடம் நிகழ்ந்த பேரின்பக் கடலிலே திளைத்து ; மாறிலா...மகிழ்ந்தார் - இணையற்ற பெருமகிழ்ச்சியிலே மலர்ந்தாராயினர்.

(வி - ரை) [குறிப்பு :—திருச்செந்தில் முருகப்பெருமான தருள்வழியே சென்ற குமாரகுருபர சுவாமிகளுடைய வாக்கு வன்மை, தருமபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் முன்னர்த் தடைபட்டதன்மூலம் அவரே ஞானகுரு என்று காட்டித்தரக் காரணமாயிருந்தது இத் திருப்பாட்டேயாம் என்பது சரிதம். ஆதலின் இதன் பொருளை விளக்குதல் விதிப்படி ஞானோபதேசமும் குருவருளும் பெற்ற அநுபூதிமான்களுக்கே கூடுவதன்றி என்போன்ற எளியோர்க்கு இயல்வதன்று.]

ஐந்துபேர் அறிவு - ஐந்துவகையாக ஐந்து வழிகளிலே பெயர்கின்ற அறிவு. அறிவு ஒன்றேயாயினும் ஐந்து வெவ்வேறு புலன்வழியே சென்று, ஐந்து வெவ்வேறு பொறிகளின்மூலம் ஐந்து வெவ்வேறு பொருள்களை அறியுமாதலின் ஐந்தறிவாம்.

கண்களே கொள்ள - ஐம்பொறி வழி அறியும் ஐம்புல அறிவும் கண்ணாகிய ஒரு பொறிவழி யறியும் காட்சியறிவின் மட்டிலே அமைந்துநிற்க. அதாவது ஏனைய, மூக்கு, நாக்கு, மெய், செவிகளின் வழியே அவற்றின் புலன்களிடத்து அறிவு செல்லாமையின் இவை நான்குந் தொழிற்படவில்லை. அதாவது: கண் கண்டுகொண்டே நிற்கக், காது கேளாது - மூக்கு முகராது - என்றபடி. கண்களே - ஏகாரம் பிரிநிலை. ஐந்திலே ஏனைய நான்கினையும் பிரித்து நின்றது. சிந்தையே - சாத்துவிகமே - என்பவற்றையும் இவ்வாறே கொள்க.

"வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க
நீயொன்று செய்ய லுறுதி நெடுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் றெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே"—ஆறுந்தந்திரம் - 111

என்று திருமூலர் சுவைபெறச் சொன்ன திருமந்திரப் பொருளை இங்கே உன்னுக.

"மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே
யூறி நின்றென்னு ளெழுபரஞ் சோதி......"

என்ற திருவாசகப் பொருளையும் இங்குக் கூர்ந்து நோக்குக.

ஐந்து - இங்கே ஐந்து என்பதில் ஐகாரம் அஞ்சு என்றதிற்போல எதுகை நோக்கிக் குற்றெழுத்து மாத்திரையாய் நின்றது. "ஈரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப" என்றபடி இது இரண்டு மாத்திரை இசைக்குமாயினும் செய்யுள் விகாரமாய் இங்கு ஒரு மாத்திரையே கொள்க.

மேற்பாட்டிலே கைகளோ கண்களோ கரணமோ என்ற ஐயப்பாட்டை உணர்த்த ஓகாரங்களாற் கூறிய ஆசிரியர், அஞ்சலித்துத் தாழ்ந்ததன் பயனாக, இங்கே ஐயத்தை நீக்கித் தெளிவுறுத்த ஏகாரங்களாற் கூறிய அழகும் பொருளாழமும் உய்த்துணர்க.

மேலும், மேற்பாட்டிலே மலர்த்தி என்ற பிறவினை அவ்வாறு மலர்த்தியதன் பயனாக அப்பெரியோன் இப்பாட்டிலே தன்வினையாக மலர்ந்தாராயினமையும் நோக்குக. **மலர்த்துதல்** - இறைபணி வழுவாது நிற்கும் துரியநிலை. **மலர்தல்** - போதநிலை முடிந்த துரியாதீத நிலை.

கண்களுக்குச் சொல்லியவாறே **காணங்கள் நான்கும் சிந்தையேயாக** என்ற இடத்து அந்தக்கரணங்கள் நான்கினுள்ளே ஒழிந்த ஏனைய சிந்தை அகங்கார முதலியவைகள் தொழிற் படாது, நான்கும் சிந்தையின் தொழிலேயாகி நிற்க எனவும்; **குணமோரு மூன்றும் திருந்து சாத்துவிகமே யாக** - சாத்துவிகம், இராசதம், தாமதம், என்ற மூன்று குணங்களில் ஏனையிரண்டும் தொழிற்படாமல் சாத்துவிகத்துள் அடங்கி நின்றன எனவும் கொள்க.

கண்களே கொள்ள - என்றதனால் புறக் கருவிகளாகிய பொறிகள் அடைந்த நிலையும், **சிந்தையேயாக** - என்றதனால் அவற்றைக் கலக்கும் அகக்கரணங்கள் பெற்ற நிலையும், **சாத்துவிகமேயாக** - என்றதனால் அந்தக்கரண புறக்கரணங்களைத் தூண்டிப் பிரேரிக்கும் முக்குணங்கள் உற்ற நிலையும் உணர்த்தினார். முழுதும் சாத்துவிகத்தினாலே தூண்டப் பெற்ற சிந்தையுடன் கலந்த கண்ணின் காட்சி மயமேயாகிய அத்தன்மையுடன் ஆனந்தக் கூத்தின் வந்த இன்ப வெள்ளத்திலே நிலைத்து மகிழ்ந்தனர் ஆரூர் நம்பிகள் என்க.

குணம் மூன்றும் கரணம் நான்கினைத் தூண்டத் தனித்தனிப் பன்னிரண்டு நிலைகள் உண்டாம். இவை வெவ்வேறாய் ஐம்பொறி புலன்வழிக் கலக்க மேலும் பல செயல்கள் உண்டாம். இவற்றிலே பிற எல்லாம் ஒழித்துச் சாத்துவிகந் தூண்டக் கிளம்பிய மனநிலை கலந்த கண்ணின் செயல் ஒன்றே இங்குக் குறித்ததாம்.

“நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித்
தறியிருந் தாற்போலத் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.”—ஐந்தாம் தந்திரம் - யோகம் 1.

என்று திருமூலர் திருமந்திரத்திற் கண்ட இலக்கணத்தையும்,

கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகிற் புடைத்துக் கொடிதா மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேல்
மண்டு காத லருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்.

சண்டீசர் புராணம் - 49.

என்று இப்புராணத்துட் கண்ட இலக்கியத்தையும் இங்கு வைத்துக் காண்க.

இந்துவாழ் சடையான் - சந்திரன் வாழ்வடைதற்கு ஏற்ற இடமாகிய சடையினை உடையான். சடையை அடைந்ததனால் சந்திரன் தனக்குத் தக்கன் சாபத்தால் வந்த குறை நோயும், இறப்பும், தீரப்பெற்றதுமன்றிப் பகைத் தீர்வும் ஏற்றமும் பெற்று நிலவினமையாலே **வாழ்** என்றார். “பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்” முதலிய திருவாக்குக்கள் காண்க.

ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்து-ஆடும் கூத்து, ஆனந்தக் கூத்து, எல்லையில் கூத்து, தனிக்கூத்து, பெருங் கூத்து எனத் தனித்தனிக் கூட்டி உரைத்துக் கொள்க. இவை “இடிப்பாரையில்லாத வந்த ஏமரா மன்னன்” என்புழிப் போலப் பெயரெச்ச அடுக்கு. மேற்பாட்டிற் குறித்தபடி வெளியே ஆடுகின்றாரைக் கண்களே கொண்டதனால் **ஆடும்** கூத்து என முதலிற் கூறினார். கண்டதன் விளைவு **ஆனந்த** மாதலின் அதனை அதற்கு அடுத்தும், அது அம்மட்டோடு நிற்கும் அளவுபடாமையின் **எல்லையில்** என்பதனை அதற்கு அடுத்தும், இது ஐங்கலைகளின் அதி தெய்வங்களையும்

அதிட்டித்துப் பெத்த நிலையில் ஆடுங்கூத்து ஆகிய ஊனநடனம் போலாது மோனந்த மாமுனிவர்க்கு மும்மலத்தை மோசித்த முத்திநிலையிற் செய்யும் ஞானநடன மாதலின் **தனி** என்பதனை அதற்கடுத்தும், இதற்குமேல் வேறொன்றின்மையின் **பெரும்** என்றதனை அதற்கடுத்தும் வைத்தார். பிறரை அதிட்டித்தலின்றித் தானே செய்தலின் தனிக்கூத்தென்பதாம்.

இக்கூத்தையே "மன்னுசிற் றம்பலத்தே, ஆதியு முடிவுமில்லா வற்புதத் தனிக் கூத்தாடும், நாதனார்" (வரிசை - 360) என்று ஆசிரியர் பின்னர்ப் போற்றியதுங் காண்க. ஆடுங்கூத்து இருவகைப்படும். அவை சாந்திக்கூத்து, விநோதக் கூத்து என்பன. "அவைதாம், சாந்திக்கூத்தும் விநோதக் கூத்துமென், றாய்ந்துற வகுத்தன னகத்தியன் றானே" என அடியார்க்குநல்லார் சிலப்பதிகார வுரையிற் காட்டியது காண்க. இறைவனாடும் கூத்து சாந்திக்கூத்தின் பாற்படும். அவன் இன்ப சொரூபனாதலின் அவனதாடலும் இன்பம் பயப்பதாம். உயிர்களை ஆனந்தத்தி லழுத்திவைக்குஞ் செயலுடைமையான் அது ஆனந்தக் கூத்தாயிற்று. அது இறைவனைப்போன்று முதல் நடு ஈறு அற்றதாதலின் எல்லையில் கூத்தெனப்பெற்றது. கூத்தாடுவோர் பல முத்திரைகளைக் காட்டுதல்போல இறைவனும் தமது இரு திருக்கரங்களில் உடுக்கையும், அங்கியும் பிடித்துக் காட்டியும், அபயவரத திருக்கரங்களைக் காட்டியும், ஒரு திருவடி முயலகனை மிதித்தும், மற்றொன்றைத் தூக்கிக் காட்டியும், தாமே சிருட்டி, திதி, சங்காரம், திரோதம், அநுக்கிரகம் எனும் பஞ்சகிருத்தியங்களைச் செய்ய வல்லவர் எனப் புலப்படுத்துவாராயினர். இரு கால்களினாலாடாது ஒற்றைக் காலினால் புரியும் தாண்டவம் செய்பவராயினர். பிறர்போல் இருநிலத்தினின் றாடாது ஆகாய வெளியிலாடும் கோலமுடையவரானார். ஆடுவோர்பிறருக்கு நட்டுவனின்றியமையாதவனும். ஆயின் இறைவன் தாமே உயிர்களை யாட்டிவைக்கும் விறலுடையாராய்த் தன்னிற் றொழிற் படுத்துவோன் வேறொருவனில்லாமையான் நட்டுவனார் ஒருவனைப் பெற்றாரில்லை. "நட்டுவனாரை யறிகிலேன்" என வரும் பழமலையந்தாதிச் செய்யுள் காண்க. ஆதலினாலும் இது தனிக்கூத்தாயிற்று.

இவ்வாறே **பேரின்ப வெள்ளம்** - **மாறிலா மகிழ்ச்சி** என்ற இடங்களிலும் அடைமொழிகளை விரித்துரைத்துக் கொள்க, **ஆனந்தக்** கூத்தாகலின் தனது தன்மையேயாகிய **பேரின்ப வெள்ளத்தையும்**, **தனிக்கூத்தா**தலின் **மாறிலா மகிழ்ச்சி**யையும் விளைத்ததென்க.

கூத்தின் வந்த - கூத்தினால் உளதாகிய. **பேரின்பம்** - அக்கூத்தைத் தரிசித்து அதன் வயப்பட்டு அதன் இயல்பிலே அத்துவிதமாய் ஒன்றித்து அனுபவித்து நிற்றலால் உளதாகும் இன்பம். ஏனைய இன்பங்கள் எல்லாம் இதன் முன்னர்ச் சிறியனவாய் ஒழிதலின் சிற்றின்பமாம். இது ஒன்றே பேரின்பம் என்க.

கண்கள் - **கரணங்கள்** - **குணம்**. மேற்பாட்டிலே கூறிய (அஞ்சலி மலர்த்தற்கு வேண்டிய) கை, கண், கரணம் என்ற மூன்றனுள்ளே, கூத்தின் இன்பத்திலே திளைத்தற்கு அறிவுக் கருவிகளே வேண்டப்படுதலின், அசைவுக் கருவியாகிய கைகளைத் தவிர்த்து ஏனை இரண்டையுமே கொண்டு, அவற்றைத் தூண்டும் குணத்துடன் கூட்டி மூன்றாகக் கூறினார்.

மறைச்சிலம்பார்க்கக் கேட்டமையின் அவ்வொலியைப் பற்றிக்கொண்டே மன்றினுட் சென்றார்; அங்கு ஆடுகின்றாரைக் கண்கள் முகந்து கொண்டன; பிறவிக் கடலுள்ளே திசையறியாது தவிப்பார்க்குக் கரையைத் தூரத்திலிருந்தே காட்டியழைக்கும் கலங்கரைவிளக்கம் போல உச்சியின்மீது விளங்கும் நிலா முதலிற் காட்சிப் பட்டது. பின் சுற்றுமுற்றும் பார்க்க எல்லை காண முடியாத இனிய **பெருங்கூத்தா**யிருந்தது; இதன் காரணம் அறியக் கீழே பார்த்தபோது முன் கேட்ட சிலம்பொலிக்கு

இடமும் ஆடுதற்குக் கருவியுமாகிய தூக்கிய திருவடி புலப்பட்டது ; அதனால் முன் கரையறியாது திகைத்த துன்பவெள்ளம்போய் இன்ப வெள்ளம் சூழ்ந்து பெரு மகிழ்ச்சியை விளைத்தது என்று தொடர்ந்து உரைத்துக் கொள்க. இக்கூத்தின் இயல்பைத் திருமூலர் திருமந்திரம் - ஒன்பதாந் தந்திரம் - திருக்கூத்துத் தரிசனப் பகுதியில் விரிவாகக் காண்க. மேலும் தக்கார்வாய்க் கேட்டுத் தெளிக.

மலர்ந்தார் என்ற வினைக்குப் 'பெரியோன்' எனும் எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவித்துரைக்கப்பட்டது. "பஞ்சப் பொறிகளினறிவும் கட்பொறியிற் செல்ல, கரணங் களெல்லாஞ் சிந்தையிலடங்க,முக்குணங்களுஞ் சாத்துவிகத்திலடங்கக், கூத்தினால் வந்த பேரின்ப சாகரத்தின் மூழ்கி ஒப்பற்ற மகிழ்ச்சியினால் முகமலர்ந்தார்" • இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு.

அன்றியும், அறியப்படும் பொருள்களின் பெருமை சிறுமைகளுக்கேற்ப அவற்றை அறிகின்ற அறிவும் பேரறிவு சிற்றறிவெனப்படும். திருவடி ஞானமாகிய 'உணர்வி னோர்பெற வரும் சிவபோகத்தை' அறிகின்ற ஐம்பொறியறிவும் கறங்கோலைபோல மாறிமாறி வரும் நினைப்பு மறப்பாகிய சகல கேவலங்களின்றி ஒழிவின்றியழுந்தி யறித லாற் பேரறிவேயாம் ;

பாலை நெய்தல் பாடியது முதலியனவாக விதந்தோதிய கரணங்கள், 'காணுங் கா ணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணுமடியார்' கரணங்களாதலின், அவை 'நந்தங் கரணம்போலல்லாமை'யின் அளப்பருங் கரணங்கள் எனப்பெற்றன ;

முக்குணங்களும், முத்திக்கே விக்கத்தே முடிக்குமியல்பினின்றுந் திருந்தி அதற் கனுகூலமாக முடிக்குமியல்பினிற்றலின் திருந்து சாத்துவிகமேயாக என்றார் - என்று உரைப்பினுமமையும்,—எனவும் கூறுவர். இஃது ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளது உரைக் குறிப்பு. 106

253. "தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன் றிருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு வாலிதா மின்பமா" மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக் கைமல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

(இ - ள்) கண்ணில்...குவித்து - (மகிழ்ச்சியின் மலர்ந்த பெரியார்) கண்களினின்று ஆனந்தமாரி அருவிபோலச் சொரியக் கைகளைத் தலைமேற் கூப்பிக்கொண்டு ; தெண் ணிலா...என்று - "நிலா மலர்ந்த சடையவனே ! (பொதுவகையால் பிறவி துன்ப முடைத்தென் றுணரப்படினும்) உனது திருக்கூத்துக் கும்பிடும் வாழ்வுபெற்று இவ் வுலகத்தில் வந்த மானிடப் பிறப்பே எனக்கு நல்ல இன்பமாயிற்று" என்று ; பண்ணி னால்...பணிந்தார் - பண்ணிரம்பி அறிதற்கரிய தேவாரத் திருப்பதிகம் பாடிப் பரவிப் பணிந்தார்.

(வி - ரை) தெண்ணிலா மலர்ந்த வேணி - தெள்-தெளிந்த ; இறைவனை அடைந் தால்தான் உய்யலாம் என்று மதிதெளிந்த. மலர்ந்த - தெளிந்து அவ்வாறே அடைந்து வளர்ந்த. மலர்ந்தவேணி - மலர்தற்கிடமாகிய சடை. தெள் - நிலா இவ்வுண்மை பிறரும் கண்டு தெளியக்கிடந்த நிலா என்றலுமாம். தூயதாகிய - தெள்ளியதாகிய - நிலா என்றுரைப்பினும் பொருந்தும். குவிந்துபோயின தன்மை நீங்கி விரிந்ததால் மலர்ந்த என்றார். திருக்களிற்றுப்படி மருங்கிலே சென்றவுடன் கலங்கரை விளக்கம் போல முதலில் நம்பிகளுக்குக் காட்சிப்பட்டது நிலவே என மேலே இந்து வாழ்சடையான் என்ற இடத்துக் கண்டோம். அக்கருத்தினாலே அதனைப்பற்றியே துதிக்கின்றார் என்க.

கும்பிடப்பெற்று - கும்பிடும் பேறுபெறுதலினாலே. மண்ணிலே வந்த பிறவி - இவ்வுலகத்தில் வந்து பிறந்த பிறப்பு. கயிலையிலிருந்து இங்கு அவதரித்து வந்தமை யால் வந்த என்றார்.

பிறவியே வாலிதாம் இன்பம் - பிறப்பே தூய இன்பம் தருவதாம். **பிறவியே** - முன் கயிலையில் இருந்த நிலையினும் பார்க்க இப்பிறவியே. ஏகாரம் பிரிநிலை. தேற்றமும் ஆம். முன்னிருந்ததும் இன்பமேயாயினும் **திருநடம் கும்பிடப் பெற்ற இப் பிறப்பு நிலை** - (மேலாகிய) **வாலிதாம்** இன்பம் என இன்பத்துக்கு அடைமொழி கொடுத்துக் கூறினர். " தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார் " (திருநா - புரா - 312) முதலிய திருவாக்குக்கள் காண்க. வரிசை 2-ம் பாட்டின் கீழ்க் காண்க.

என்று - மேலே கூறியது ஆரூர் நம்பிகள் இங்குப்பாடிய பதிகத்தின் உட்குறிப்பு அல்லது மகுடமாய் இருத்தல் வேண்டும் என்பது குறிப்பாம். இவ்வாறே திருப் பேரூரிலே நம்பிகள் கும்பிட்டுப் பாடிய போதும் ஆசிரியர்,

"பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார் புரிநடங் கும்பிடப் பெற்றால்
என்னினிப் புறம்போ யெய்துவ தென்று.—ஏயர்கோன் - புரா - 91

எனக் குறித்ததும் காண்க. இவை யிரண்டு பதிகங்களும் இப்போது கிடைத்தில.[1]

கண்ணில் ஆனந்த அருவி நீர் - ஆனந்த அனுபவத்தால்வரும் கண்ணீர். ஆனந்தக் கூத்தின் பேரின்ப வெள்ளத்திலே திளைத்தாராதலின் அந்தஆனந்தம் உள்ளே நிறைந்தது. கண்ணீர் முதலியன அதனைப் புறத்துக் காட்டும் மெய்ப்பாடுகள்.

பாடினர் பரவினர் - என்பன முற்றெச்சமாய்ப் பாடிப் பரவி என்ற பொருளில் வந்தன. "பாட்டும் பாடிப் பரவித் திரிவார்" என்ற தேவாரங் காண்க.

இப்பாட்டைத் திருநாவுக்கரசு நாயனார் தில்லைத் திருக்கூத்துக் கும்பிட்டபோது நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறும் " கையுந் தலைமிசை புனையஞ் சலியன... " (திருநா - புரா - 167.) என்றும், அவ்வாறே ஆளுடைய பிள்ளையார் கும்பிட்ட நிகழ்ச்சி கூறும் " உணர்வி னேர்பெற வரும்சிவ போகத்தை " (திருஞா - புரா - 161) என்றும், வரும் திருப்பாட்டுக்களுடன் வைத்துக் காண்க.

நிலாவை மலரவைத்தலிலே, அது பிறர் எவராலும் செய்தற்கருமையினால் வரம்பிலாற்றலுடைமையும், கருணையே பற்றிச் செய்தமையினால் பேரருளுடைமையும், சுத்தமாக்கியமையினால் தூய உடம்பினனாதலும், இவ்வாறே ஏனையவும், ஆக, இறைவனது எண் குணங்களும் குறித்தவாறு. 107

*254. தடுத்துமுன் னாண்ட தொண்டனார் முன்பு
தனிப்பெருந் தாண்டவம் புரிய
வெடுத்தசே வடியா ரருளினாற் 'றாள
மெறிபுனன் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணப் பண்ணையா ரூரில்
வருகநம் பா'லென வானில்
அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதங்
கேட்டலு மதுவுணர்ந் தெழுந்தார். ௧௦௮

(இ - ள்) தடுத்து...அருளினால் - முன்னே தடுத்து ஆட்கொண்டநம்பிகள் முன்னர் ஒப்பற்ற பெருங்கூத்துப்புரியத் தூக்கிய திருவடியுடைய பெருமானது திருவருளினாலே; தாளம்...என -'முத்துக்களை அலைத்துவரும் காவிரியாற் பெருகிய வளமுடைய வயல்கள் சூழ்ந்த திருவாரூரிலே நம்மிடம் வருக' என்று ; வானில்...கேட்டலும் - அப்

[1] சில பதிப்புக்களில் இவ்விடத்தில் "மடித்தாடும்" என்ற திருப்பதிகத்தைப் பதித்துள்ளார்கள். அது இப்போது பாடியதல்ல. ஏயர்கோன் - புரா - 115-ம் பாட்டுப் பார்க்க.

போது ஆகாயத்தில் வந்து எழுந்ததாகிய ஒரு நாதத்தைக் கேட்டதும்; அது உணர்ந்து எழுந்தார் - நம்பிகள் அதனை உணர்ந்து மேலெழுந்தனர்.

(வி - ரை) **தடுத்து முன் ஆண்ட** - முன்னே இறைவனால் தடுத்து ஆளாகக் கொள்ளப்பெற்ற. **ஆண்ட** - ஆளப்பெற்ற. செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. **முன்** - முன்னாளிலே. **முன்பு** - முன்பாக. **தாண்டவம் புரிய எடுத்த சேவடியார்** - நித்தியமாக நடம்புரிதற்காகத் தூக்கிய சேவடி. நடனம், காலைப் பெயர்த்த பின்பே நிகழும்; ஆதலின் **தாண்டவம் புரிய எடுத்த** - என்றார். வேறு செயல்களின் பொருட்டும் அடிபெயர்த்தல் உளதாதலின் அவற்றினின்றும் பிரிக்கத் **தாண்டவம் புரிய** என்றபடி.

தனிப்பெரும் - நித்தியமாய் எங்கும் நிகழும் நடனமேயாயினும் அன்று நம்பிகள் முன்பு விசேடமாய் ஆடிய கூத்து என்பார் **தனிப்பெரும்** என்ற அடைகொடுத்துக் கூறினார். ஒப்பற்ற பெருங் கூத்து என்க. "ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்து", "திருநடம்" என முன்னர்க் கூறியதும் காண்க.

வானில் அடுத்த போதினில் வந்து எழுந்தது ஓர் நாதம் - **வானில்** - நாதம் எழுந்த இடத்தையும், **அடுத்த போதினில்** - எழுந்த காலத்தையும் குறிக்கும். அடுத்த போதினில் - பணிந்ததற்கு அடுத்த காலத்திலே - அதிவிரைவிலே - பணிந்தவுடனே.

உணர்ந்தெழுந்தார் - பணிந்தவர் எழுவதற்கு முன்னே நாதம் எழுந்தது. அதனைக் கேட்டு உணர்ந்த பின்னர் நம்பிகள் எழுந்தார்.

வானில் நாதம் எழுதலும் - ஆசிரியர் இப்புராணம் பாடுதற்கு நடராசர் முதலெடுத்துக் கொடுத்ததனை "வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய பொருள்" (வரிசை 9) என்று பாராட்டி யிருத்தலை இங்கு வைத்துக் காண்க.

வானில் - சித்ஆகாயம் - ஞானகாயம் எனக் கொண்டு, சிதாகாயத்திலிருந்து கிளம்பிய நாதம், அது அடுத்துத் தொழில் செய்யும் இடமாகிய தியானத் தலமாம் இதய குகை (போது - இதய கமலம்)யில் வந்தெழுந்தது என்றுரைத்தலுமாம். இப்பொருளில் **அடுத்த போதினில்** - ஞானகாயம் அடுத்து நிறைந்த இடமாகிய தாமரைமொட்டு (போது)ப்போன்ற இருதயமலரில் வந்து எழுந்த நாதம் என்றுரைக்க.

எழுந்தார் - திளைத்து மலர்ந்து அழுந்திய சிவானுபவத்திலிருந்து எழுந்தார்-என்றும், பணிந்தவர் (107) அந்நிலையினின்றும் எழுந்தார் என்றும் உரைக்க.

கேட்டலும்-முன்,ஐந்துஅறிவுங் கண்களேகொள்ள இருந்த நிலையிலிருந்து எழுந்து கேட்டல்மூலம் அறிவு வெளிப்பட்டது. இறைவன் நாதம் கேட்பிக்க நம்பிகள்கேட்டார்.

உணர்ந்து - கரண நான்கும் சிந்தையேயாக இருந்த நிலையிலிருந்து எழுந்தாராதலின் புத்திதத்துவம் தொழிற்படவே **உணர்ந்து** என்றார். 108

255. ஆடுகின் றவர்பே ரருளினா னிகழ்ந்த
வப்பணி சென்னிமேற் கொண்டு
சூடுதங் கரங்க ளஞ்சலி கொண்டு
தொழுந்தொறும் புறவிடை கொண்டு
மாடுபே ரொளியின் வளருமம் பலத்தை
வலங்கொண்டு வணங்கினர் போந்து
நீடுவான் பணிய வுயர்ந்தபொன் வரைபோ
னிலையெழு கோபுரங் கடந்து, ௧0௬

256. நின்றுகோ புரத்தை நிலமுறப் பணிந்து
நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகினூ டேகி
மன்னிய திருப்பதி யதனிற்

றென்றிசை வாயில் கடந்துமுன் போந்து
சேட்படு திருவெல்லை யிறைஞ்சிக்
கொன்றை வார்சடையா னருளையே நினைவார்
கொள்ளிடத் திருநதி கடந்தார். ௧௧௦

255. (இ - ள்) ஆடுகின்றவர்...மேற்கொண்டு - கூத்தர் பெருங் கருணையினாலே உண்டாகிய அந்தக் கட்டளையைத் தலைமேற் கொண்டவராய்; சூடு...கொண்டு - தமது கைகளைச் சிரத்திற் கூப்பி வணங்கிக்கொண்டு; தொழும்...விடைகொண்டு - தொழுது விடைபெற்றுக்கொண்டு; மாடு...வலங்கொண்டு - செய்கின்ற பேரொளியுடைய வளர்கின்ற திருச்சிற்றம்பலத்தை வலஞ்செய்து; வணங்கினர் போந்து - வணங்கிப் புறம் போந்து; நீடு...கடந்து - நீண்ட வானமும் சுருங்கியதாக உயர்ந்த பொன்மலைபோல நிலையினின்றும் எழுந்த தெற்குக் கோபுரத்தைக் கடந்து, ௧௦௯

256. (இ - ள்) நின்று...பணிந்து - கோபுரவாயிலிற்கு வெளியே நின்றுகொண்டு கோபுரத்தைக் கீழே வீழ்ந்து எட்டுறுப்பும் நிலத்திற் பொருந்த வணங்கி; நெடும்... வணங்கி-நீண்ட அகவீதியை வணங்கி; மன்றலார்...ஏகி - செழித்த செல்வ வீதிகளின் வழியே சென்று; மன்னிய...கடந்து-நிலைத்த அந்தத் திருத்தலத்தினது தென்றிசை வாயிலைக் கடந்து; முன்...இறைஞ்சி - முன்னே போய் நகரின் புறத்தே உள்ள தெற்குத் திருவெல்லையை வணங்கி, அதன் பின்னர்; கொன்றை...கடந்தார் - கொன்றை யணிந்த சடையினையுடைய இறைவரது திருவருளையே சிந்தித்தவராகிக் கொள்ளிடத் திருநதியைக் கடந்தார். ௧௧௦

255. (வி . ரை) **அப்பணி** - 'ஆரூரில் வருக நம்பால்' என்ற அந்தக் கட்டளை. **சென்னிமேற்கொண்டு** - மிக உயர்ந்த பொருளாதலின் தலையின்மேல் கொண்டார்.

தொழுந்தோறும் - முன்னே உட்புகும்போது தொழுது தொழுது சென்ற இடங்களாகிய திருக்களிற்றுப்படி, திருவணுக்கன் திருவாயில், திருவாயில் முதலியவற்றை உள்ளேயிருந்து திரும்பி வரும்போதும் இம்முறையே தனித்தனித் தொழுது தொழுது வருதலால் **தொழுந்தோறும்** என்றார். அங்கங்கும் விடைபெற்றுக் கடந்தார்.

புறவிடை - புறத்தே செல்ல விடை. பின்றிரும்பிச் சென்று விடைகொண்டு என்ற கருத்துமாம். "பிந்திப் பிந்தி விண்ணெறி முன்னுகின்றான்" - "பின்றிரும்பிச் சென்றான்" என்ற தணிகைப் புராணம் நந்தியுபதேசப் படலம் 144 - 145 காண்க.

மாடு பேரொளியின் வளரும் அம்பலம் - **மாடு** - செய்கின்ற - நிலவ வைக்கின்ற. பேரொளியின் மாடு அம்பலம் என்று மாற்றுக. செய்யும் பேரொளி. **மாடுதல்** - செய்தல் என்ற பொருளில் முன் வழங்கியதொரு சொல். உலகத்துக்குப் பேரொளி செய்கின்ற - உலகத்தைப் பேரொளியின் வைக்கின்ற என்க. இது இப் பொருளில் வழக்காறு அருகியது. தமிழிலிருந்து போந்து இச்சொல் இப்பொருளில் கன்னட மொழியில் வழங்குகிறது.

"ஏடுமலி கொன்றைவள ரிந்துவொடு வன்னி
மாடவல செஞ்சடையெம் மைந்தனிட மென்பர்"

—**திருநள்ளாறு - (திருவிராகம் - இந்தளம்) 1**

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் காண்க. **மாடு** என்பதைப் பெயர்ச் சொல்லாகக் கொண்டு பொன் என்றும், பக்கம் என்றும் கூறுவாருமுண்டு.

வணங்கினர் போந்து - வணங்கிச் சென்று. **வணங்கினர்**-முற்றெச்சம். வணங்கி.

வான்பணிய - உயர்ச்சிபெற்ற ஆகாயமும் இதிற்றாழும்படி - அதாவது மிகவும் உயர்ந்த. உயர்வு சிறப்பு உம்மைதொக்கது. **வான்** - தேவர்கள் - தேவவுலகம் என்று

கொண்டு அவர்கள் பணிய என்றுரைப்பினுமாம். பணிய - பணியும்பொருட்டு எனக் கொண்டு பணிய எழும் என்று கூட்டி யுரைத்தலுமாம்.

பொன்வரைபோல் - கோபுரத்தின் சிகரங்களிலே பொற்பூச்சிட்டு உயர்ந்து விளங்குதல் குறிப்பாம்.

நிலைஎழு கோபுரம் - வான் பணியுமாறு தன்னிலையிலே நின்று எழுந்ததாகிய உட்கோபுரம். எழுநிலை என்று மாற்றி ஏழு நிலை (வாயில்)களையுடைய எனவுரைப்பதுமாம்.

256. (வி - ரை) **நின்று** - கோபுரவாயிலைக் கடந்து வெளியே நின்று.

திருவீதியை வணங்கி - இஃது அம்பலம் சூழ்ந்த அகவீதி. மேலே 'அண்ணலாடு திருவம்பலஞ் சூழ்ந்த வம்பொன்வீதி' என்று வரிசை 248-ல் கூறியதுங் காண்க.

மன்றல் ஆர் செல்வ மறுகு - **மன்றல்** - திருவிழா. **செல்வ மறுகு** - இது 'செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கி' விளங்குகின்ற தேர்வீதி.

அருளையே நினைவார் - தடுத்தாட்கொண்டும், தவநெறி தந்தும், தமக்கு முன்னர்ச் செய்தனவும், 'ஆரூரில் வருகநம்பால்' என்று இப்போது அம்பலத்தே அருள்செய்ததும் ஆகிய கருணையினையே. ஏகாரம் - பிரிநிலை. வேறொன்றையும் நினையாதவராய். தேற்றமுமாம்.

நினைவார் - கடந்தார் - நினைவிலே வைப்பாராய்க் கடந்தார்.

சேண்படு திருவெல்லை - வரிசை 238-ம் பாட்டிலே 'தில்லை மல்லலம் பதியி னெல்லை' என்ற இடத்துக்காண்க. தில்லையின் நாற்புறமுஞ் சூழ்ந்த நான்கு எல்லையாவன கிழக்குக் கடலும், தெற்குக் கொள்ளிடத் திருநதியின் வடகரையும், மேற்கு நாகசேரியும், வடக்குத் திருமணிமுத்தாறுமாம் என்ப.

இவ்விரண்டு பாட்டும் ஒரு முடிபு கொண்டன. 'செய்தவம் பெரியோராகிய' அவர் எனத் தோன்றா எழுவாய் வருவித்துக்கொள்க. அவர் - சென்னிமேற் கொண்டு - அஞ்சலிகொண்டு - விடைகொண்டு - வலங்கொண்டு - போந்து - கடந்து - பணிந்து - வணங்கி - ஏகி - கடந்து - முன்போந்து - இறைஞ்சி - அருளையே நினைவார் - நதிகடந்தார் - என முடிபுசெய்க. அருளையே நினைவார் என்றதனை எழுவாயாக்கி அவர் கடந்தார் என்று கூட்டியுரைப்பினுமமையும். இச்செய்கைகள் நம்பிகள் இத்திருத்தலத்தை அரிதின் நீங்கிய பெருமை குறித்தன. தலத்தை வணங்கி விடைகொள்ளும் முறையும் குறித்தபடி. '**தொழுந்தோறும் புறவிடை கொண்டு**' என்றதனை இப்பாட்டிற் கண்ட கோபுரம் - வீதி - மறுகு - வாயில் - எல்லை - நதி என்பனவற்றிற்கும் கொள்க.

கொள்ளிடம் - இதற்குக் **கலங்கொள்ளிடம்** என்ற பேர் கல்வெட்டுக்களிற் காணப் பெறுகின்றது. சோழமன்னர்கள் கடலிலிருந்து தமது நாட்டிற்குள் **மரக்கலங்கள்** வருவதற்காக அகலமும் ஆழமும்பெற அமைத்ததாதலின் இப்பெயர் பெற்றதென்பர். கலங்கொள்ளிடம் என்பது முதற்குறையாய்க் **கொள்ளிடம்** என வழங்குகின்றது. பெயர்க் காரணப்பொருளாகிய கலங்கள் மறையவே, சொல்லும் மறைந்தது போலும். 110

வேறு

257. புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூ லணிமார்பர்
அறம்பயந்தா டிருமுலைப்பா லமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென முற்றுலகிற்
சிறந்தபுகழ்க் கழுமலமாந் திருப்பதியைச் சென்றணைந்தார். ௧௧௧

(இ - ள்) புறந்தருவார் போற்றிசைப்ப - பரிசனங்களாகிய அடியார்கள் தம்மைத் துதித்துக்கொண்டு வர; புரிமுந்நூல் அணிமார்பர் - முப்புரியாகிய பூணூலை யணிந்த மார்பினையுடைய நம்பிகள்; அறம்பயந்தாள்...சென்றணைந்தார் - தருமங்களை எல்லாம் தந்தவளாகிய உமாதேவியாரின் திருமுலைப்பாலாகிய அமுதத்தினை உண்டு வளர்ந்த

திருஞானசம்பந்த சுவாமிகள் அவதரித்த பெரும்பேற்றைப்பெற்ற திருத்தலம் இது என்று எவ்வுலகினும் சிறந்த புகழ்வாய்ந்த கழுமலம் என்ற திருத்தலத்தினைச் சென்று சேர்ந்தார்.

(வி - ரை) **புறந்தருவார்** - நம்பிகளது திருமேனியைப் பாதுகாப்பவர்கள் - பரிசனங்கள். **போற்றிசைப்ப** - தமக்கு இப்பணிவிடை செய்யக் கொடுத்து ஆட்கொள்கின்ற தனுலே போற்ற.

அறம் பயந்தாள் - தருமங்களுக்கெல்லாம் பிறப்பிடமாகிய உமாதேவியார். எல்லாத் தருமங்களையும் வளர்த்து உலகுக்கீந்தவள். திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணம் 71-ம் பாட்டும் பிறவும் காண்க.

திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்தவர் - திருஞானசம்பந்த சுவாமிகள்.

கழுமலம் - சீகாழி; இதற்குப் பிரமபுரம் முதலாகப் பன்னிரண்டு திருப்பெயர்களிருப்பவும் (திருஞான - புரா - 14) நம்பிகள் இங்கு அருளிய திருப்பதிகத்திலே இப்பெயராலே பாட்டுத் தோறும் மகுடம் அமைத்துக் "கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே" என்றமைபற்றி அதனை நினைவூட்ட இப்பெயராற் கூறினர். இப்பெயர்களைப் பற்றிய விரிவை ஆளுடைய பிள்ளையார் புராணம் 14-ம் பாட்டின் கீழ்க்காண்க. **சிறந்த புகழ்** - சீகாழியின் பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் புகழைப் பற்றி எழுந்தன. அவற்றுள்ளே **கழுமலம்** என்ற பெயர்க்குக் காரணமாகிய புகழே சிறந்ததெனக. "...சிவனைத், தொழுதுலகி விழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்." (திருப்பிரமபுரம் - சாதாரி - வழிமொழித் திருவிராகம் - 12) என்று திருஞானசம்பந்த சுவாமிகள் இப்பெயர்க் காரணத்தை அருளியிருக்கின்றபடி, மனிதர்கள் அடைந்து ஞானம் பெறுதலாலே தமது மும்மை மலங்களையும் கழுவப்பெற றுய்யத் தருதலால் இப்பெயரே அதன் **சிறந்தபுகழ்** என்றார். மேலும், "துயரி லங்குமுல கிற்பல வூழிக டோன்றும்பொழு தெல்லாம், பெயரி லங்குபிர மாபுரம்." (பிரமபுரம்-நட்டபாடை - 8) என்றபடி இப்பெயர்கள் ஒவ்வோர் ஊழியிலும் ஒவ்வொன்றாகப் போந்தன. பிரமபுரம் முதலாகக் கழுமலம் ஈறாகக், குறித்த வரிசையிலே, கால வரிசைப்படிப் போந்தமையால் இறுதியாகப் போந்த பெயர் இதுவேயாம். இவ்வரிசை பற்றியே இவற்றைப் பயில வேண்டுமென ஆளுடைய பிள்ளையார் வகுத்தருளினர். இம்முறை வைப்பை வழிமொழித் திருவிராகம், திருஏகபாதம், திருமாலைமாற்று - திருக்கோமூத்திரி - திருஎழுகூற் றிருக்கை முதலிய தேவாரங்களிற் காண்க. அதனுலே அவ்வரிசையிலே ஆசிரியர் அமைத்துக் காட்டியிருப்பதும் காண்க. (திருஞா - புரா - 14) இப்பெயரின் பொருள் பற்றியே "அம்மலங்கழீஇ" "அன்பரொடுமரீஇ" என்ற ஞான சாத்திரக் கருத்து மனத்துள் எழ, அதுவே ஆளுடைய பிள்ளையார் அவதரித்த தலம் என்ற நினைவை எழுவிக்க, அதுவே அதனுள் மிதித்தல் தகாது என்ற எண்ணத்தை விளைவிக்க, மேற் சரிதம் நிகழ்ந்து, இப்பெயராலே நம்பிகள் தேவாரம் அருளக் காரணமாயிற்று போலும். இக்குறிப்புக்களை எல்லாம் ஆசிரியர் இப்பாட்டிற் காட்டியிருத்தல்கண்டு மகிழ்க.

பிறந்தருளும் பெரும்பேறு - பிறந்து உலகுக்கு ஆசாரியர் பெருமானுய் அருள்செய்தற் கிடமாகிய பெரும்பேறு; இறைவன் எழுந்தருளி யிருக்கும் பேற்றுடனே பிள்ளையார் பிறந்தருளும் பெரியபேறு இத்தலத்திற்குச் சிறப்பாயமைந்த தென்பது குறிப்பு. பிறந்தருளியது உலகம் மலங்கழுவுதற்குக் காரணமாம். அதற்கு ஞானம் பெற்றது காரணமாம். அதற்கு அமுதம் உண்டது காரணமாம். அதற்கு அவ்வமுத மீந்த அன்னையார் அறம் பயந்தமை காரணமாம். ஆதலின் இவை யெல்லாம் குறிப்பார் "அறம்பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்தவர்தாம் பிறந்தருளும் பெரும்பேறு" எனவும் அதனுலே "முற்றுலகிற் சிறந்த புகழ்க் கழுமலம்" எனவும் கூறினர்.

முற்றுலகிற் சிறந்தபுகழ் - எல்லா உலகங்களிலும் இதுவே சிறப்பாகிய புகழ். வேறொன்றிற்கு மில்லாத சிறப்பு.

கழுமலமாம் - **ஆம்** - இன்றும் மலங்கழுவும் அத்தன்மை செய்வதாகிய. 111

258. 'பிள்ளையார் திருவவதா ரஞ்செய்த பெரும்புகலி
யுள்ளுநான் மிதியே'னென் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுதின் மங்கையிடங்
கொள்ளுமால் விடையானு மெதிர்காட்சி கொடுத்தருள. ககஉ

259. மண்டியபே ரன்பினால் வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
'தெண்டிரைவே லையின்மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படி'யென்று
பண்டருமின் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார். ககங

258. (இ - ள்) பிள்ளையார்...என்று - ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்த பெரும்பேறு பெற்ற புகலி என்னும் இத்தலத்தின் எல்லைக்குள்ளேயும் காலால் மிதித்து அடியெடுத்து வைக்கமாட்டேன் என்ற கருத்தையுடையவராய்; ஊரெல்லை... பொழுது - அத்தலத்தின் எல்லைக்குப் புறம்பே நின்று வணங்கி அதனை நம்பிகள் வல மாகச் சுற்றிவரும்போது; மங்கை...அருள - உமாதேவியாருடன் இடபவாகனத்தின் மேல் எழுந்தருளி இறைவன் அவருக்கு எதிர்காட்சி கொடுத்தருளவே, ககஉ

259. (இ - ள்) மண்டிய...இறைஞ்சி - நம்பிகளும் மிக்கெழுந்த பேரன்பினாலே வணங்கி நின்று; தெண்திரை...பாடினார் - 'ஊழியிலே கடலில் மிதந்த திருத்தோணி புரத்தின் இறைவரைக் கயிலையில் அவர் வீற்றிருக்கும் அப்பரிசே நான்கண்டு வணங்கி என் மனத்துள்ளே தரிக்க வைத்துக்கொண்டேன்' என்ற கருத்துடைய பண்ணிரம்பிய இன்னிசையுடைய தக்கேசிப்பண்ணிலமைந்த திருப்பதிகத்தைப் பாடியருளினார். ககங

258. (வி - ரை) **பிள்ளையார்** - திருஞானசம்பந்த சுவாமிகள். ஆளுடையபிள்ளை யார் என்றது பிள்ளையார் என நின்றது. (அடிமைநெறி-)தாசமார்க்கம் முதலியனவாகச் சொல்லப்பெற்ற நான்கு வழிகளிலே சற்புத்திரமார்க்கம் என்னும் நன்மகன்நெறியை விளக்க வந்தவராதலானும், உலகத் தாயாகிய உமையம்மையார் திருமுலைப்பால் அமு துண்டு வளர்ந்தாராதலானும் இவர் **பிள்ளையார்** எனப்பெற்றார்.

அவதாரம் செய்த பெரும்புகலி - அவதரிக்கும் இடமாகப் பெரும்பேறு பெற்ற புகலி என்னும் தலம். **செய்த** - செய்தற்கிடமாகிய. பெயரெச்சம்; இடப்பெயர் கொண்டது. "பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென" என்று மேற்பாட்டிலே குறித்த மையுங் காண்க. **பெரும்புகலி** - சூரபன்மனாதி அசுரர்க்குப் பயந்து இந்திரன் இதிற் புகலடைந்து மறைந்துறைந்து உய்ந்த தலமாதலின் **புகலி** - புகலடைந்த இடம்-என்ற பேர் பெற்றது. உலகில் உள்ள ஏனை எல்லா இடங்களினும் மேம்பட்ட பெரிய புகலிடமாயுள்ளது. பெரும்பற்றப்புலியூர் என்றமைபோல.

உள்ளும் நான் மிதியேன்-எல்லைக்குள்ளேயும் அடி வைக்கமாட்டேன். தன்னுட் புகலுற்றாரைக் காக்குந் தன்மையுடையது இப்புகலியேயாயினும், அப்பேறு பெறா விடினும்விடுக-பிள்ளையார் அவதரித்த தலத்தைமிதியேன் என்று துணிந்து நின்றமை நம்பிகள் பிள்ளையாரிடத்தே வைத்த பேரன்பின் உறைப்பினை விளக்குகின்றது. **உள்ளும்** - உம்மை சிறப்பும்மை. புகலியேயாயினும் அதனுள்ளும். இனி, உடைய அரசு கைத்தொண்டு விரும்பு பதியை மிதித்தடையுமதற்கஞ்சிப் புகுதாமைபோலவே புகலியுள்ளும் - என்று கொண்டு இறந்தது தழீஇய எச்சவும்மை யென்றலுமாம்.

ஊர் எல்லைப் புறம் - ஊரின் எல்லைக்குப் புறம்பே - வெளியே. இதற்குப் புற எல்லை என்றுரைப்பாருமுளர்.

வள்ளலார் - உலகர் உய்யும் வகையை வரையாது கொடுப்போர்; ஞானவள்ளல்.

மங்கை இடங்கொள்ளு மால்விடையான் - என்றது நம்பிகளுக்குக் காட்டிய எதிர்காட்சியின் திருக்கோலத்தை. இவரே திருத்தோணியிலே பெரிய நாயகியாருடன் வீற்றிருக்கும் அம்மையப்பராம். திருஞானசம்பந்த சுவாமியினிடத்து வைத்த அன்பினாலே தலத்துட்புகாது நம்பிகள் வெளி நின்றாராதலின் அவரை ஆட்கொண்ட திருக்கோலமாகிய தோடுடைய செவியனாய் விடையேறி நம்பிகளுக்கு எதிரே வந்து காட்சியருளினார் என்பது குறிப்பு. வரும் பாட்டில் 'திருத்தோணி புரத்தாரைக் கண்டுகொண்டேன்' என்பதும் காண்க. **எதிர்** - எதிரிலே - முன்பாக. 112

259. (வி - ரை) **மண்டிய பேரன்பு** - செறிந்து நிறைந்த பேரன்பு. பிள்ளையாரிடத்தே வைத்த அன்பானது முற்றியவகையாலே தாம் உள்ளே சென்று இறைவரை வணங்காதிருப்பவும் தம்மை நோக்கி வெளிவந்து இறைவரே எதிர்காட்சி தரச்செய்த தாதலின் மண்டிய பேரன்பாயிற்று. முன்னர்த் திருவதிகையிலே ஆளுடைய அரசுகளினிடத்து வைத்த அன்பு சித்தவட மடத்திலே இறைவனை எழுந்தருளுவித்துத் (துயிலுநிலையிற்) திருவடி சூட்டச் செய்தது. இங்குப் பிள்ளையார்பால் வைத்த அன்பு சாக்கிரத்திலே இறைவன் தரிசனத்தைக் கூட்டிற்று. ஆதலின் மேலும் மேலும் செறிந்து நிறைந்தது என்பார் **மண்டிய பேர் அன்பு** என்றார்.

நின்றிறைஞ்சி - இறைஞ்சி நின்று என மாற்றியுரைக்க.

வேலையின் மிதந்த திருத்தோணி புரத்தாரை - ஊழிப் பெருவெள்ளத்திலே ஆழாது மிதந்த காரணத்தாலே திருத்தோணிபுரம் என்னும் தலத்தில் எழுந்தருளிய இறைவரை. "கடல்கொள மிதந்த" என்ற நம்பிகளது இத்தலத் தேவாரங் குறித்த படியாம்.

"நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை யுலகங் கீழ்முதற் றாழ்ந்திங்
கொன்றா வந்த குன்றா வெள்ளம்"

—**பதினோராம் திருமுறை - பட்டினத்தடிகள் திருக்கழுமல மும்மணிக்கோவை 1**

என்றபடி பெருவெள்ளமாதலின் தெண்டிரை வேலையின் என்றார்.

கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்றிருந்தபடி - இது நம்பிகளது தேவாரப் பதிகத்தின் கருத்து. "கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே" என்ற பதிகத்து மகுடம் காண்க. கயிலையில் நாயகன் தமக்குச் செய்த பேரருட்டிறங்களையும் அவனது அருளின் பொதுத்தன்மைகளையும் கூறி அவன் கயிலையில் வீற்றிருந்தவண்ணமாக இங்குத் திருத்தோணிபுரத்தாரைக் கண்டுகொண்டேன் என்பது பதிகக் கருத்தாம். வீற்றிருந்த படியாகத் தோணிபுரத்தாரைக் கண்டுகொண்டேன் என்க. **கண்டு கொண்டேன்** - கண்களாற் கண்டு மனத்திலே தரிக்க வைத்துக்கொண்டேன். "வேண்டிக் கொள்வேன் தவநெறியே" என்பதுபோல. (பக்கம் 260)

பண்தரும் இன் இசை பயின்ற திருப்பதிகம் - பண் - இசை - பதிகம் முதலியவற்றின் இலக்கணங்களை வரிசை 221-ம் திருப்பாட்டின் கீழ்க் காண்க. பண்ணின் சீர்மையைத் தருகின்ற இனிய இசை மிக்கு விரவிய திருப்பதிகம். **பயிலுதல்** - இங்கு மிக்கு விரவுதல் என்ற பொருளில் வந்தது. முன்னர்ச் சொல்லிய இலக்கணம் முழுதும் நிரம்பிய திருப்பதிகம் என்றபடி.

நகர்க் கண்டுகொண்டேன் - நகரைக் காணவே, அந்த நகரத்துக் காட்சியிலே வெளியிலே அவனைக் கண்டேன் என்க. நகர்க் கண்டேன் என்றதனால் உள்ளே சென்று திருக்கோயிலுள்ளே தரிசிக்கவில்லை என்பதும், நகரின் புறத்தே எதிர்காட்சி

காட்டக் கண்டார் என்பதும் அறியக் கிடக்கின்றன. இது சரிதக் குறிப்பாகிய அகச் சான்று என்க.

பதிகம்　　(பண் - தக்கேசி)　　திருக்கழுமலம்

திருச்சிற்றம்பலம்

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத்
　தன்னரு டந்தவெந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
　வருபுனல் சடையிடை வைத்தவெம் மானை
யேதிலென் மனத்துக்கோ ரிரும்புண்ட நீரை
　யெண்வகை யொருவனை யெங்கள்பி ரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
　கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.　(1)

செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
　விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட்
டழுமலர்க் கண்ணிணை யடியவர்க் கல்லா
　லறிவரி தவன்றிரு வடியிணை யிரண்டுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் ரேன்
　சடையன்றன் காதலன் பாடிய பத்துந்
தொழுமல ரெடுத்தகை யடியவர் தம்மைத்
　துன்பமு மிடும்பையுஞ் சூழகி லாவே.　(10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—மேலே கயிலையில் வீற்றிருந்தபடி திருத்தோணிபுரத்தாரை நகர்ப்புறத்தே கண்டுகொண்டேன் என்பது. முன்னர் உரைத்தது காண்க. "அவன் திரு வடி யிரண்டும் கழுமல வளநகர்க் கண்டுகொண்ரேன் சடையன்றன் காதலன் பாடிய" என்ற திருக்கடைக் காப்பு இச்சரித நிகழ்ச்சியையும் பதிகக் குறிப்பையும் தெளிவுறக் காட்டுதல் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) **சாதலும் பிறத்தலும் தவிர்த்து** - இவ்வுலகத்து இறப்பும் பிறப்பும் இனி இல்லையாம்படிச் செய்து. பிறந்தார் இறத்தலும், அதன் பின் பிறத்தலும் இயல்பாதலின் இம்முறை வைத்தார். "தோற்றமுண்டேல் மரண முண்டு" நம்பிகள் தேவாரம். "மரணம் பிறப்பு என்று", "சாதல் பிறப்பென்னுந் தடஞ்சுழி" என்ற திருவாசகங்கள் காண்க. உலக வாழ்வின் மேல்வினை விளையாமல் கயிலையில் வரம் பெற்றார் நம்பிகள் ஆதலின் பிறத்தல் தவிர்த்து என்றார். யோக நெறி யால் சாதல் இல்லையாம். "துஞ்சுதல் மாற்றுவித்து" (கொடித்தான்மலை - 6) நம்பிகள் தேவாரம். "களையா வுடலோடு சேரமான் ஆரூரன்" (திருவிசைப்பா) "மானவ யாக்கை யொடு"(11-ந்திருமுறை).**ஏதிலென் மனத்துக்கு ஓர் இரும்புண்டநீரை:**-என் மனதுக்கு இரும்பினுல் உண்ணப்பட்ட நீரின் தன்மை கொடுத்தவனை. தனது தன்மையினுல் என் தன்மையைப் போக்கிச் சுவறச் செய்தவன். **இரும்பு** - காய்ச்சிய இரும்பு. "பார்த்த பார் வையா விரும்புண்ட நீரெனப் பருகும் தீர்த்தன் "-திருவிளை-புரா-"இரும்புண்ட நீர்"-பழமொழி. (2) மற்றொரு துணை - தொழப்பட்ட சுடரையன்றி வேறொரு துணை. **மறு மைக்கும்** - இம்மையிலேயன்றி மறுமையிலும். **மறவாவரம்** கயிலையில் கேட்ட வரமும், எத்தான் மறவாதே - என முதலிற் பாடிப் பெற்றதும், தவநெறி வேண்டிப் பெற்றதும் முதலியன. **கற்பனை** - பலபல நெறிகளினின்றும் முறையாய்க் கற்றுக்கொள்ளும் படிப் பினை. **முறைமுறை**-படிப்படியாக. (3) **கனவிடை விரவி விழித்து எங்கும் காணுது**-அவன்

நினைவாகவே யிருத்தலின் கனவிற்கண்டேன் - விழித்துக் கனவிழந்து வருந்தினேன். அகப்பொருட்டுறை-(4) மழைக்கு அரும்பும்-கார்காலத்துப் பூக்கும். பிழைத்து ஒருகால் இனிப்போய்ப் பிறவாமை பெற்றேன் - முன் கயிலையிற் பிழைசெய்து இப்பிறவிபெற் றதுபோல இதிலும் பிழைசெய்து மீண்டும் பிறவாமல் தடுத்தாட்கொள்ளப்பெற்ற பெருமை. இதில் நம்பிகள் முன் சரிதக் குறிப்புக் காண்க. பெற்றதார்பெறுவார் - அருளிலே திளைத்தல். 'ஆர்பெறுவா ரச்சோவே'. திருவாசகம்-"ஆரும் பெறாத வறிவு பெற்றேன்" திருவிசைப்பா. (5) விதியாலே-பண்டைவிதியால் - ஆகமங்களின் விதித்த படி. (7) பாவவும்...தொழவும்-கண்டு நான் அவ்வாறு செய்யாமல். 'முயல்வலை யானை படும்'' பழமொழி. முயல்பிடிக்க விரித்த வலை ஒருக்கால் யானையையும் கட்டும். சாயலுள் அடைதல் - அவர் சாயலுள் என் சாயல் அடங்கும்படிப் பின்பற்றுதல்-முயல்-முதனிலைத் தொழிற்பெயராய் முயற்சியையும் குறிக்கும். புயல் - உலக நிலைபேற்றுக் குக் காரணம். திரு - நிலைபேற்றினால் உளதாகும் பொருள். பொன் - ஒளி ; மின் - உரு மின் ஒளி காணமுடியாது; ஆதலின் உருவமட்டும் மின்போலவும் ஒளி பொன்போலவும் உள்ள பொருள் - சிவபூசையில் அந்தரியாகப் பூசை வரலாற்றுட் காண்க. "புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்" (திருமந்திரம் - 9). மறையிடைத் துணிந்தவர் - வேதங்கள் துணிந்து வைத்த பொருள். மனையிடை - உயிருக்குள் உயிராய் உள்ளே. வஞ்சனை - உடனிருந்துங் காணாது ஒளித்திருத்தல் - மாயத்துறை உலக வாழ்வு. உள தாக - உண்மை எனவே கொண்டு. [இப்பாட்டுத் திருஞானசம்பந்த சுவாமிகள் சரிதத் தைக் குறிப்பதெனக் கூறுவாருமுண்டு] (10) அழுமவர்க்கல்லால் அறிவரிதாகிய அவன் திருவடியிரண்டும். "அழுமவர்க் கன்பர்போலும்" (அப்பர் தேவாரம்.) துன்பமும் அதற் குக் காரணமாகிய இடும்பையும். பத்தும்பாடி மலர் எடுத்துத் தொழும் கை அடியவர் என்க.

தலவிசேடம்:—திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்துட் காண்க. சீகாழி என்ற நிலயத்திலிருந்து தென்கிழக்கில் ¾ நாழிகை யளவில் அடையலாம். 113

260. இருக்கோல மிடும்பெருமா னெதிர்நின்று மெழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க வாரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதஞ் சூழ்புறவப் பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச் செந்தமிழ்மா லைகள்பாடி. கககச

261. தேனார்க்கு மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனாப்பே ரன்புமிக வடிபணிந்து தமிழ்பாடி
மானார்க்குங் கரதலத்தார் மகிழ்ந்தவிடம் பலவணங்கிக்
கானார்க்கு மலர்த்தடஞ்சூழ் காவிரியின் கரையணைந்தார். கககரு

260. (இ - ள்) இருக்கு...நீங்க - வேதங்கள் கூவியழைக்கும் பெருமான் இவ்வாறு எதிர் காட்சி தந்து மறைந்தருளவும் நம்பிகள் வெருக்கொண்டவராய்ப் பின்னர்த் தெளி வடைந்து ; ஆரூர்...விரும்பி - திருவாரூரை வழிக்கொள்ள விருப்பமுற்று ; பெருக்கு... போய் - கடல் சூழ்ந்த புறவமாகிய அத்தலத்தினை வணங்கிச்சென்று ; திருக்கோலக்கா... பாடி - திருக்கோலக்கா என்னும் தலத்தை யடைந்து இறைவனைத் தரிசித்துத் திருப் பதிகம்பாடி, கககச

261. (இ - ள்) வெளிப்படை. தேன்பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருப்புன் கூர்ச் சிவலோக நாதரிடத்து மிக்க அன்பினாலே சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிச் சென்று, இவ்வாறே இறைவன் எழுந்தருளிய தலம் பலவும் வணங்கிச் சென்று, பூந்தடங்கள் சூழ்ந்த காவிரி நதிக்கரையினை யணைந்தார். கககரு

260. (**வி - ரை**) இப்பாட்டுக் குளகம். வரும் பாட்டில் அணைந்தார் என்ற வினை கொண்டு முடிந்தது. ஆரூர் மேற்செல்லும் மனத்தின் விரைவை ஒரே முடிபு கொண்ட இப்பாட்டுக்களும் காட்டின போலும். நம்பிகள் என எழுவாய் வருவித்துரைக்க.

இருக்கு ஒலம் இடும் பெருமான் - இருக்கு ஓலிடுதற்கேதுவாகிய பெருமை (இறைமைத்தன்மை)யையுடையான் என்க. **இடும்** என்னும் பெயரெச்சம் **பெருமான்** என்னும் ஏதுப்பெயர் கொண்டது. இன்ன தன்மையன் என்றறிய முடியாமல் இது வல்ல, இது வல்ல என்று வேதங்கள் துதித்து ஓலமிடப்பெற்ற இறைவன். **இடும்** - இடப்பெறும். செயப்பாட்டு பிறவினைப் பொருளில் வந்தது என்றலுமாம். **இருக்கு** - இங்கு வேதங்களுக்குப் பொதுப் பெயராய் நின்றது. "தூய காவிரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி" என்ற தேவாரம் காண்க. **ஓலம்** - என்பது அம் ஈறு குறைந்து நிற்றலும் வழக்கு. அபயமிட்டழைத்தற் குறிப்பாயதோர் சொல்.

எதிர் நின்றும் எழுந்தருள - எதிர் காட்சி கொடுத்த நிலையினின்று மறைந்தருள.

வெருக் கோளுற்று அது நீங்க - காட்சி தந்த இறைவன் எழுந்தருளிவிட்டமையால் சடுதியில் வெருக்கொண்டு, விரைவில் வெரு நீங்க. **வெருக்கோள்** - அச்சத்தினுலே சடுதியில் தோன்றுவதும் விரைவில் மாறுவதுமாமொரு மெய்ப்பாடு என்பர். வெருவினுற் கொள்ளப்பட்டது. உலக வழக்கில் **விருக்கென்று** (பயந்தேன்-விழுந்தேன்) என வழங்குகிறது. திருவடி நினைந்திட்டுக் கண்டு அழுமலர்க் கண்ணிணையுடன் நின்ற நம்பிகள் அக்காட்சி மறையவும் உடனே வெருக் கொண்டார். வெருக் கொள்ளுதல் அன்பின் மெய்ப்பாடுகளில் ஒன்றுமாம். "விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டு வார்" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க. (திருவாரூர் - குறிஞ்சி-6) தில்லைக் கூத்தர் பணித்தவாறே ஆரூர் செல்கின்ற நம்பிகள் கழுமலப் புறத்தே கயிலைக் காட்சி கண்டு தம்மை மறந்து திளைத்து நின்றார். காட்சி மறைய வெருக்கொண்டார். அது உடன் மாறவும், முன்னைச் செலவு நினைவுக்கு வர, முன்போல ஆரூர் மேற்செல விருப்பம் வந்தது - என்பார், **வெருக்கோள் உற்று, அது நீங்க, ஆரூர் மேற்செல விரும்பி** - என்று தொடர்ந்து கூறினார்.

பெருக்கு ஓதம் சூழ் புறவம் - ஓதப் பெருக்குச்சூழ் என்க. ஊழியில் நீர்ப்பெருக்கினுற் சூழப் பெற்று மிதக்கும் புறவம் என்ற பதி. "கடல்கொள மிதந்த கழுமல வள நகர்" என்ற நம்பிகள் திருப்பதிகக் குறிப்பினை நினைவு கூர்க. **புறவம்** - பேர்க்காரணமும் பிறவிசேடமும் பின்னர்த் திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்துக் காண்க. முன்னர்ப் பெரும்புகலி என்றதற் கேற்பப் **பெரும்பதி** என்றார்.

பதியை வணங்கி - பதியினுட்புகாது புறத்தே வலம் வந்தா ராதலின் பதியை வணங்கிப் போய் என்றார்.

திருக்கோலக்கா - இத்திருப்பாட்டு இத்தலப் பெயரினுக்கு ஏற்ற எதுகையாக எடுத்துக் கொண்டமைந்தது போலும். அப்பூதி நாயனார் புராணம் (11) "ஒருகுன்ற வில்லாரை" என்ற பாட்டினையும் நோக்குக.

தலவிசேடம்-இது சீகாழிக்கு மேற்கே ஒரு நாழிகையளவில் உள்ளது. ஆளுடைய பிள்ளையார் ஞானம் பெற்றபின் அடுத்த நாளிலே தமது முதல் தலயாத்திரை செய்த தலம். அவருக்கு ஐந்தெழுத்து எழுதிய பொற்றாளம் இங்கு இறைவன் கொடுத்தருளினர். **தேவியார்** அதற்கு ஓசை கொடுத்த காரணத்தால் **ஓசை கொடுத்த நாயகி** எனப் பெறுவர். **சுவாமி** - தாளங்கொடுத்த காரணத்தாலே **திருத்தாளமுடையார்** எனப்பெறுவர். இத்தலமும் திருத்தாளமுடையார் கோயில் எனவும் பெறும். இதன் விரிவு பின்னர்த் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்துட் காண்க.

செந்தமிழ் மாலைகள் பாடி - இம்முறை நம்பிகள் பாடிய தேவாரங்கள் கிடைத்தில. அவை இறந்து பட்டன போலும். இத்தலத்துக்கு இப்போது நமக்குக் கிடைத்

துள்ள "புற்றில் வாளர வார்த்த பிரானை" என்ற தக்கேசிப் பண்ணில் அமைந்த திருப் பதிகம் பின்னர் நம்பிகள் திருக்குருகாவூருக்குச் செல்லும் போது பாடிய தென்று ஆசிரியர் அறிவிக்க நாம் அறிகின்றோம். (ஏயர்கோ - புரா - 154) **மாலைகள்** - பல பதிகங்களையேனும் அல்லது ஒரு பதிகத்துள்ள பாட்டுக்களையேனும் குறிக்கும். பதிகத்துப் பாட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாலை என வழங்கப்பெறுவதும் உளதாம். "ஆதரித் தழைத்திட்ட விம்மாலை" (பதிகம்) - நம்பிகள் தேவாரம் - திருநீடூர்-தக்கேசி-10. "சிறந்தமாலை கொடைஞ்சி ஞெடைஞ்சும்" (பதிகப் பாட்டு) ஷெ திருநள்ளாறு-தக்கேசி-10. பதிகப் பாடல்களையே பனுவல் என்றுரைப்பதும் வழக்காம்.

261. (வி - ரை) **தேன்ஆர்க்கும் மலர்ச்சோலை** - வண்டுகள் பாடுதற் கிடமாகிய பூஞ்சோலைகள்.

திருப்புன்கூர் - புன்கு மரம் தலவிருட்சமாதலின் இப்பெயர் பெற்றது.

தல விசேடம் - சீகாழிக்குத் தென்மேற்கில் $1\frac{3}{4}$ நாழிகை யளவில் உள்ளது. திருநாளைப்போவார் நாயனார் இத்தலத்தை அடைந்து புறம்பேநின்று வணங்கிக் கொண்டு திருக்கோயிலுக்கு மேல்பால் திருக்குளம் வெட்டித் திருப்பணி செய்தனர். அவர் அவதரித்த **ஆதனூர்** இதற்குத் தென்கிழக்கில் 2 நாழிகை யளவில் உள்ளது. நம்பிகளின் நண்புபெற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனார் 'அதிகமாயின திருப்பணி யனேகமும் செய்த' அபிமானத் தலம். இந்நாயனாரின் தலமாகிய திருப்பெருமங்கலம் இதற்கு வடக்கே ஒரு நாழிகையளவில் அடையத்தக்கது. **சுவாமி** - சிவலோகநாதர். **தேவியார்** - சொக்கநாயகி. இன்னும் இத்தல விசேட விரிவுகள் பின்னர்க் காண்க. இத்தலத்தையும் திருநீடூரையும் ஒரே பதிகத்துட் சேர்த்து அப்பர் சுவாமிகள் திருத் தாண்டகம் அருளிச்செய்தது ஆராயத்தக்கது.

ஆனுப்பேர் அன்புமிக - குறையாத பேரன்பு மேன்மேல் வளர.

அடிபணிந்து தமிழ்பாடி-இம்முறையில் தரிசித்து நம்பிகள் பாடியருளிய தேவாரம் கிடைத்திலது. இறந்துபட்டது போலும். இப்போது கிடைக்கும் இத்தலத்து நம்பிகள் தேவாரம் "அந்தணாளன்" என்ற தக்கேசிப் பண்ணில் அமைந்த பதிகம் ஏயர் கோன் கலிக்காம நாயனாரின் நட்புப்பெற்ற பின்னர் அவருடன் சென்று தரிசித்த போது நம்பிகள் பாடியதென்க. ஏயர்கோன் - புரா - 406 பாட்டுப் பார்க்க.

மான்ஆர்க்கும் கரதலத்தார் - அபிசார யாகத்திலே எழுந்து முனிவர் ஏவியதும், தனது சத்தத்தால் உலகை அழிக்க வல்லதுமாகிய மானைச், சிவபெருமான் கைவிரல் நுனியில் ஏந்தி, உலகை அழியாமல் தமது செவியிலே சத்தித்திருக்குமாறு வைத்தார் என்பது வரலாறு. "நின்செவி யிற்பாணி மான்ஒலியு மேற்றிலையோ" - சோணசைல மாலை. **ஆர்த்தல்** - சத்தித்து ஆரவாரித்தல் - பேரொலி செய்தல்.

இடம்பல - திருப்புன்கூருக்கும் காவிரியின் கரைக்கும் இடையில் உள்ள தலங்கள். திருக்கஞ்சாறூர் - திருநீடூர் - முதலியன.

கான்ஆர்க்கும் மலர்த்தடம் சூழ் காவிரி - வாசனை மிகுந்த நீர்ப்பூக்கள் நிறைந்த வாவிகளைச் சுற்றி அவற்றை நிரப்பிக்கொண்டு செல்லும் காவிரி யாறு. நீர்ப்பூக்களில் செங்கழுநீர் - தாமரை முதலியன மிகுந்த வாசனை யுடையன.

அடியடைந்து - மலர்ச்சோலைக் காவிரியின்—என்பனவும் பாடங்கள். 115

262. வம்புலா மலரலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னிப் பயில்தீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீ
ரம்பர்மா காளத்தி னமர்ந்தபிரா னடிபணிந்தார். ௧௧௬

(இ - ள்) வெளிப்படை. மலர்களையும் மணிகளையும் கொண்டு வழியிலே இரு கரையிலும் பொன்பரப்பிச் செல்லும் காவிரியின் தீர்த்தத்திலே (நம்பிகள்) தோய்ந்து

குளித்து இறைவன் எழுந்தருளிய திருமயிலாடுதுறையை வணங்கிக்கொண்டு சென்று திருவம்பர் மாகாளத்தினை யடைந்து இறைவனது திருவடிகளை வணங்கினார்.

நம்பிகள் என்ற எழுவாய் வருவித்துரைக்க.

(வி - ரை) **வம்பு உலாம் மலர்** - மணந் தங்கிய புதிய பூக்கள்.

மலர் அலைய மணி கொழித்து வந்து இழியும் - மலர் அலைய இழியும் என்றும், மணிகொழித்து வந்து இழியும் என்றும் பிரித்துக் கூட்டி யுரைக்க. மலர்கள் இலகுவான பொருள்களாதலின் நீர்ப் பெருக்கின் மேலே அலைகளால் அலைப்புண்டு வருவதால் **மலர் அலைய** என்றார். மணிகள் அவ்வாறன்றிக் கனத்த பொருள்களாதலின் நீர் ஓட்டத்தின் வேகத்தாற் கீழ்ப்புறத்தே அவ்வவற்றின் கனத்துக்குத் தக்கவாறு தனித்தனிப் பிரித்து மெல்லக் கொண்டுவரப் பெறுதலின் **கொழித்து வந்து** என்றார்.

பைம்பொன்வார் கரைப்பொன்னி - பொற்சன்னமாகிய தூள்களை ஒதுக்கும் இருகரைகளையுடைய காவிரி. **பொன்னி** என்ற பேர்க்காரணம் குறித்து அப்பெயராற் கூறியவாறு. முன்னரும் (வரிசை - 57) "செம்பொன் வார்கரை...ஈர்ம்பொன்னி" என்றமை காண்க.

பயில் தீர்த்தம் - சிவபெருமானை வழிபட்டுப் பயிலும் தீர்த்தம். "வம்புலா மலர் நீரால் வழிபட்டு எண்ணில் சிவாலயத்து எம்பிரானை இறைஞ்"சிச் (வரிசை-57) செல்லுதலாலே தான் சிவார்ச்சனையிற் பயில்வதன்றித், தனது நீரினாலே அடியார்களுக்கு உதவி, அவர்களையும் சிவவழிபாட்டிற் பயிலச் செய்கின்ற தீர்த்தம் என்றலும் பொருந்தும். இப்பொருட்குப் **பயில்** என்பதனைப் பயில்விக்கும் என்று பிறவினையாகக் கொள்க. இவ்வாறன்றிப் " பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யாதளிக்கும் புனனாட்டு " (சண்டீசர் - புரா - 1) என்றபடி, என்றும் மாறாமல் பயிலும் நீர் என்றும், உலகத்தை ஊட்டி நின்று நிலவச் செய்யும் நீர் எனவும் உரைப்பாருமுண்டு.

படிந்தாடி - நீருட்புகுந்து நீராடல். "பூத்திகழும் பொய்கை குடைந்து", "மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக், கையாற் குடைந்து குடைந்து " (திருவெம்பாவை) எனவரும் திருவாசகங்கள் காண்க.

மயிலாடுதுறை - தலவிசேடம் - அம்மையார் மயிலுருவமாய்ப் பூசித்த தலமாதலின் இப்பேர் பெற்றது. (திருமயிலாப்பூரும் இக்காரணத்தாலே பேர் பெற்ற தலமாதலும் காண்க). இப்போது மாயவரம் என மருவி வழங்கும். மாயூரம், கௌரிமாயூரம் என்ற தலம் இதுவே. மாயவரம் (டவுன்) நிலயத்திலிருந்து வடக்கே ½ நாழிகையில் உள்ளது. மாயவரம் சந்தி - நிலயத்திலிருந்து கிழக்கே கற்சாலையில் இரண்டு நாழிகை யளவில் உள்ளது. இதன் தலவிசேட வரலாறுகள் பின்னர்க் காண்க.

பதிகம் - நம்பிகள் இத்தலத்தும் திருஅம்பர்மாகாளத்திலும் பாடியருளிய பதிகங்கள் கிடைத்தில. இறந்தனபோலும்.

அம்பர்மாகாளம் - தலவிசேடம் - அம்பன் - அம்பாசுரன் என்ற அரக்கர்களைக் கொன்ற பழி நீங்கும்படிக் காளி பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றதென்பர். இது கோயில் மாகாளம் எனவும் வழங்கப்பெறும். சோமாசிமாற நாயனார் யாகஞ் செய்த தலம். இங்கு வைகாசி மாதத்தில் இத்திருவிழா மிகச் சிறப்பாய் நடைபெறுகின்றது. விரிவு அப்புராணத்துட் காண்க. இங்கு மகாகாளர் என்ற இருடியும் பூசித்துப் பேறு பெற்றனர் என்பர். இது அரசலாறு என வழங்கும் அரிசொல் ஆற்றின் கரையில் உள்ளது. இந்த யாறு, அரி (விட்டுணு) சொற்படி அவர் பூசை செய்தற்காகக் காவிரியினின்றும் பிரிந்து வந்த ஒரு கிளைநதி. இத்தலம் பேரளம் - திருவாரூர் இருப்புப்பாதை வழியில் பூந்தோட்டம் என்ற நிலயத்திலிருந்து கிழக்கே மட்சாலை வழி 1½ நாழிகை யளவில் அடையத்தக்கது. இதன் கிழக்கே ½ நாழிகை தூரத்தில் திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில் என்ற மாடக்கோயில் உள்ளது.

மலர்மாலை—அம்பொன் மாகாளத்தின்—என்பனவும் பாடங்கள். 116

263. மின்னார்செஞ் சடையண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி முதல்வன்ற னருணினைந்து
பொன்னாரு முத்தரியம் புரிமுந்நூ லணிமார்பர்
தென்னாவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார். ௧௧௭

(இ - ள்) வெளிப்படை. ஒளி பொருந்திய சிவந்த சடையினையுடைய இறைவன் விரும்பி வீற்றிருக்கும் திருப்புகலூரை முதலில் பணிந்து துதித்து இறைவனது திருவருளினையே நினைந்துகொண்டவராய்ப், பொன்னாடையாகிய உத்தரியத்தினையும் முப்புரியாகிய பூணூலையும் அணிந்த மார்பினையுடையாரும்,திருநாவலூரர் பெருமானுமாகிய நம்பிகள் சென்று திருவாரூரினை அணைந்தார்.

(வி - ரை) மின்னார் செஞ்சடை - ஒளி வீசும் சிவந்த சடை - "மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை" (1), "எரிகின்ற தீயொத் துளசடை யீசற்கு" (67) எனவரும் பொன்வண்ணத்தந்தாதி யுரைகளும், "மாலையின் தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை" என்ற அற்புதத் திருவந்தாதியும் காண்க.

விரும்பு - உயிர்களுக்கு அருள் புரியும் பொருட்டு வெளிப்பட்டு வீற்றிருக்கும் இடமாக விரும்பிய **திருப்புகலூர். தலவிசேடம்** - அப்பர்சுவாமிகள் இறைவனைச் சரண்புகுந்து திருவடி யடைந்த தலம். பிறவிவேதனைக் கஞ்சிய ஆன்மாக்கள் புகலடையும் தலம். சரண்யபுரம் என்றும் வழங்கப்பெறும்.

"தன்னைச் சரணென்று தாளடைந் தேன்றன் னடியடையப்
புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினைக் கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே"

என்ற அப்பர் சுவாமிகள் திருவிருத்தங் காண்க. நம்பிகளுக்காகச் செங்கல் செழும்பொன்னாகச் செய்தருளிய சரிதம் பின்னர்க் காண்க. முருக நாயனார் திருப்பணிசெய்து பேறு பெற்றதும் பிறவரலாறுகளும் பின்னர்ப் பல சரிதங்களிலும் காண்க.

முன்னாகப்பணிந்து ஏத்தி - இது முதல் முறையாகத் தரிசித்து வணங்கித் துதித்ததாம்.பின் ஒரு முறை தரிசித்துப் பணிந்தேத்திச் செங்கல் பொன்னாகப் பெறுவர் ஆதலின் **முன்னாக** என்றார். **ஏத்தி** - திருப்பதிகம் பாடித் துதித்து - இம்முறை பாடிய பதிகம் கிடைத்திலது. இறந்ததுபோலும். நம்பிகளது "தம்மையே புகழ்ந்து" என்ற இத்தலத்துப் பதிகம் பின்முறையிற் பாடியது. வரலாறு பின்னர்க் காண்க. (ஏயர் - புரா-51)

முதல்வன் தன் அருள்-'ஆரூரில் வருக நம்பால்' என்று தில்லைக் கூத்தர் அருளிய ஆணை. (வரிசை - 108) "அருளையே நினைவார்" என முன்னர்க் கூறியதும் காண்க. (வரிசை - 110)

பொன்னாரும் உத்தரியம் - பொன்னிழை கொண்டு நெய்த மேலாடை. பீதாம்பரம் என்பர். உத்தரியமும் நூலும் என உம்மைத் தொகை.

முந்நூல் - மூன்றாகப் புரிந்து முறுக்கப்பட்ட பூணு நூல்.

தென்நாவலூராளி-தென்றிசையில் மிகுந்த திருநாவலூரின் தலைவர். நாவலூரார். **தென்** - அழகு என்றலுமாம்.

அணைந்தார் - திருவாயிற் புறத்தினை அடைந்தார். (வரிசை 122 பாட்டிற் காண்க.)

264. தேராரு நெடுவீதித் திருவாரூர் வாழ்வாருக்
'காராத காதலினம் மாரூர னாமழைக்க
வாராநின் றானவனை மகிழ்ந்தெதிர்கொள் வீ'ரென்று
நீராருஞ் சடைமுடிமே னிலவணிந்தா ரருள்செய்தார். ௧௧௮

(இ - ள்) வெளிப்படை. தேரின் அழகு நிறைந்த திருவீதிகளையுடைய திருவாரூரிலே வாழ்கின்ற அன்பர்களுக்கு 'மிக்க காதலுடைய நமது நம்பியாரூரன் நாம் அழைக்க இங்கு வருகின்றான். அவனை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டழைத்து வருக' என்று, கங்கை யணிந்த சடையிலே நிலவையும் அணிந்த இறைவன் அருளிச்செய்தார்.

(வி - ரை) ஆராத காதலின் ஆரூரன் நாம் அழைக்கக் காதலின் வாரா நின்றான்; அவனை எதிர் கொள்வீர் என்று ஆரூர் வாழ்வாருக்கு நிலவணிந்தார் அருள் செய்தார்.

தேராரு நெடுவீதி - "ஆழித்தேர் வித்தகனை நான் கண்ட தாரூரே" என்று தேவாரப் பாடல் பெற்ற தேர் சிறந்து விளங்கும் நீண்ட வீதி. "திருவாரூர்த் தேரழகு" என்பது பழமொழியாயிற்று.

வாழ்வார் - வாழ்வினை யுடையார். திருவாரூரிலே பிறக்கும் பெருமைத் தவமுடையார். பிறத்தலாலே பேரின்ப முத்திப் பெருவாழ்வு பெற்றார்.

ஆராத காதல் - இறைவனிடத்தே என்றும் தணியாத ஆசையினை யுடையார். பின்னர் "என்பொனை என் மணியை", "என்னுயிர்க்கின்னமுதை", "எண்ணிய கண் குளிர", "என்றன் மனங்குளிர", "என்று கொல் எய்துவதே", "எத்தனை நாள் பிரிந் திருக்கேன்", "அணி ஆரூரானை மறக்கலுமாமே" என்றெல்லாம் பாராட்டுகின்ற தணியாத ஆசையுடையவராதலின் **ஆராத காதல்** என்றார். இதற்குக் குறைவில்லாத பத்தி என்று பொருளுரைப்பர் மகாலிங்கையர் அவர்கள்.

நாம் அழைக்க - ஆரூரில் வருக நம்பால் எனத் தில்லையில் நாம் அழைத்ததனால் அதற்குட்பட்டவராய். ஆரூரரிடத்துத் தமக்குள்ள அன்பின் திறத்தை வெளிப்படுத்த **நம்** ஆரூரன் என்றும், **நாம்** அழைக்க என்றும் இறைவன் அருளினார் என்பர் ஆலால சுந்தரம் பிள்ளை அவர்கள்.

எதிர் கொள்வீர் - தாமே அழைத்ததற் கேற்ற பரிசால் எதிர்கொள்ள வேண்டிய பண்பு பற்றியும், திருத்தொண்டத் தொகையினாலும் இவ்வடியார்களை நோக்கிக் "கரையும் கடலும்" என்று பாடியருளும் திருப்பதிகத்தாலும் அடியார் பெருமையாகிய சேமநிதி உலகமுய்ய வெளிப்பட வேண்டிய நியதி பற்றியும் அடியார்களுக்கு இறைவன் இவ்வாறு அருளினார் என்க. "நீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போதுவார்" (வரிசை - 35) என்று மேலே கூறியமை காண்க.

திருவாரூர் அடியார் பெருமை வெளிப்படும் தலமாதலைப் பின்னர், வரிசை 269-ம் பாட்டின் உரையிற் காண்க. 118

265. தம்பிரா னருள்செய்யத் திருத்தொண்ட ரதுசாற்றி
'யெம்பிரா னாரூடா னிருந்தபரி சிதுவானு
னம்பிரா னாராவா ரவரன்றே' யெனு நலத்தா
லும்பர்நா டிழிந்ததெனை வெதிர்கொள்ள வுடனெழுந்தார். ௧௧௯

(இ - ள்) தம்பிரான் அருள் செய்ய - தமது பெருமானாகிய தியாகேசர் இவ்வாறு அருளிச் செய்யவே; திருத்தொண்டர்......நலத்தால் - திருவாரூர் வாழ்வார்களாகிய திருத்தொண்டர்கள் தாம் தாம் கேட்ட அவ்வாணையை மற்றவர்களும் அறிய எடுத்துச் சொல்லி 'எமது பெருமானது நிறைந்த திருவருள் இருந்த தன்மை இதுவே யாமாயின் எமது பெருமானுவாரும் அந்தத் திருவாரூரரே யன்றோ' என்று கொண்ட நன்மையினாலே; உம்பர் நாடு...எழுந்தார் - தேவர் உலகே இங்கு இழிந்துவிட்டதோ என்று சொல்லும்படியாக எதிர் கொண்டழைக்க உடனே முற்பட்டனர்.

(வி - ரை) **அது சாற்றி** - தாந்தாங் கண்ட கனவை ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொள்ளுதல். கனு வருவித்துரைக்க.

அருள் இருந்த பரிசு - அழைத்தும், எதிர் கொள்ள ஆணை யிட்டதும் ஆகிய இவை.

எம்பிரான் ஆர்அருள் - எமது பிரானது நிறைந்த அருள். பிரானுடைய அருள் என்றலுமாம்.

நம்பிரானுர் - ஆவார் - அவர் - நமது தலைவராகிய திருவாரூரர் அந்தத் திருவாரூரரே ஆவார். அடிப்பேர் கொண்ட பேர்மாத்திரையா னன்றி உண்மையில் அவர் தன்மையே பெற்றவராவார்.

உம்பர் நாடு இழிந்ததேன் - தேவ லோகம் தியாகேசரைத் தன்னுள் நீண்ட காலம் வைத்து உபசரித்த சிறப்புக்கூட இச்சிறப்பிற்கு இழிந்தது - குறைந்தது - என்று சொல்லும்படி என்றுரைத்தலுமாம்.

உடன் எழுந்தார் - விரைவிலே தொடங்கினுர். ஒன்று சேர்ந்து எழுந்தனர் - புறப்பட்டார் என்றலுமாம்.

அருள் புரிய—என்பதும் பாடம். 119

266. மாளிகைகண் மண்டபங்கண் மருங்குபெருங் கொடிநெருங்கத்
தாளினெடுந் தோரணமுந் தழைக்கமுகுங் குழைத்தொடையு
நீளிலைய கதலிகளு நிறைந்தபசும் பொற்கும்பும்
ஒளிநெடு மணிவிளக்கு முயர்வாயி றொறுநிரைத்தார். கஉ0

(இ - ள்) (அங்ஙனம் முற்பட்ட அவர்கள்) மாளிகைகள்...நெருங்க - மாளிகைகளிலும் மண்டபங்களிலும் நீண்டு உயர்ந்த கொடிகளை மேற்பக்கத்திலே நெருங்கும்படி அமைத்து; தாளின்...நிரைத்தார் - அடிப்பக்கத்திலே நீண்ட தோரணங்களையும் (காய்க்குப் பயன் படாதனவாய்) இலைகளடர்ந்த கமுகு வகைகளையும் தழைகளாற் றொடுக்கப்பட்ட மாலைகளையும் நீண்ட இலைகளையுடைய வாழை மரங்களையும் நீர் நிறைந்த பசும் பொற் கலசங்களையும் வரிசைப்பட வைத்த மணிகளாலாகிய விளக்குகளையும் ஓங்கிய வாயில்கள் எங்கும் ஒழுங்குபெற வரிசையாய் அமைத்தார்கள்.

(வி - ரை) எழுந்த அவர்கள் என்ற எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவிக்க.

மாளிகைகள் - தனி யிருப்புக்கள் ; **மண்டபங்கள்** பொது இருக்கைகள்.

தாளின் - அடிப்பக்கத்திலே. தாளின் என்றதனுற் கொடிகள் மேற் பக்கத்தே நெருங்கின என்க. மெய்ப்பொருள் - புரா - 8 பாட்டுப் பார்க்க. தாளின்-கால்கள் நாட்டி அவற்றிலே - என்பாரு முண்டு.

தழைக் கமுகும் - காய்க்காகவன்றி அலங்காரத்திற் கென்றே செறிவாய்ப் பயிராக்கப் பெற்று இலைகள் அடர்ந்து வளர்ந்த கமுகு. கமுகுத் தழையும் - என மாற்றி உரைத்தலுமாம்.

குழைத் தொடை - குழை - மாவிலை முதலியன. இலைகளைக் கொண்டு தொடுத்த மாலைகள். பலவகை மாலைகளையும் அளவாய் அறுத்துத் தொங்க வைத்தல் அலங்கார வகைகளில் ஒன்று. "பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையுற அறுத்துத் தூங்க நாற்றி" என்ற திருமுருகாற்றுப்படை காண்க.

ஒளி - வரிசை. ஒளி என்பது எதுகை நோக்கி முதல் நீண்டு வந்தது என்று உரைத்தலுமாம். இரத்தினங்கள் பதித்த தீபங்கள் என்றும், ஒரு முழுமாணிக்கத்தாற் செய்யப்பட்ட விளக்கு என்றும் கூறுவர் மகாலிங்கையர். "சேடு கொண்டவொளி தேர்நிரை தோறும்" (வரிசை - 247) என்றதும் காண்க.

உயர் வாயில் - வாயில்கள் - நன்மை உட்புக விடுக்கவும், தீமை உட்புகாமல் தடுக்கவும் உதவும் உயர்வுடைய வாயில். ஓங்கிய பெரிய வாயில்கள் என்றுரைத்தலுமாம்.

"..பெரியோர் உள்ளம் போல
ஒங்குநிலைத் தன்மையவாய், அகில முய்ய வுமைபாக ரருள்செய்த வொழுக்க மல்லாற்
நீங்குநெறி யடையாத தடையு மாகி........."—திருக்குறிப்பு - புரா - 88

நிரைத்தார் - வரிசைப்பட அமைத்தார்கள். 120

267. சோதிமணி வேதிகைக ணேறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங் குளிர்தரள மணிபரப்பித்
தாதவிழ்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகளுண் டுகளடங்க விரைப்பனிநீர் மிகத்தெளித்தார். கஉக

(இ - ள்) சோதி......நீவி - ஒளியும் அழகும் பொருந்திய திண்ணைகளைத் தூய வாசனை உடைய சந்தனக் குழம்பினாலே அழகு பெற மெழுகி; கோதில்...பரப்பி - குற்றமற்ற பொரியும் நறும்பொற் சுண்ணப் பொடியும் நீர்மையுடைய முத்துக்களும் ஏனைய மணிகளும் என்றிவற்றைக் கோலமாய்ப் பரப்பி வைத்து; தாதவிழ்...சமைத்து - பூந் துகள் அப்போதவிழ்ந் தலருந் தருணத்திற் றொடுத்த பூமாலைகளாலியன்ற குளிர்ந்த பூப்பந்தர்களும் இட்டு; வீதிகள்...தெளித்தார்-வீதிகளிலே தூசி அடங்குமாறு வாசனை யுடைய பனி நீரை மிகவும் தெளித்தார்கள்.

(வி - ரை) வாயில்களுக்கு அடுத்து உள்ள திண்ணைகளில் சந்தனத்தால் மெழுகிப் பொற்சுண்ண முதலியவற்றாற் கோலம் பரப்பிப் புதுப்பூப்பந்தர் இட்டு வீதிகளிற் பனிநீர் தெளித்தார்கள் என்க.

குளிர் தரளம்-குளிர்ச்சியைத் தரும் நீர்மை மிகுந்த முத்துத் தண்ணிய நீரோட்ட முடையது என்பர். தண்ணீரிற் பிறந்தது என்றுரைத்தலு மொன்று.

தரளமணி - தரளமும் ஏனை மணிகளும். முத்தினின்றும் ஏனையவற்றைப் பிரித்த கருத்து மேலே வரிசை 235-ம் பாட்டின் கீழ்க் காண்க. தரளமாகிய மணி என்றுரைத்தலுமாம்.

பொற் சுண்ணம் - கடவுளர்திருமஞ்சனம் முதலியவற்றிற்கு விரை மஞ்சள் ஆதிய வற்றால் ஆக்கப்பெறும் தூள்.

தொடை மாலை - மேற்பாட்டிலே சொல்லிய குழைத்தொடை வேறு. அது வெளி அலங்காரத்துக்காகத் தழை முதலியவைகளால் ஆக்கப்பெற்றுத் தோரணங் களிலே தொங்க வைக்கப்படுவது. இங்குக் கூறியது பூமாலைகளால் பந்தராகக் கலசத் திண்ணை முதலிய தானங்களின் மேற்கட்டிபோல அமைக்கப் பெறுவது.

சாந்து - குளிர் தரளம் - தண்பந்தர் - பனிநீர் இவை குளிர்ச்சிதரும் பொருள்கள். வெப்ப மிகுந்த நமது நாட்டு வழக்குப் பற்றிக் குளிர்ச்சிப் பொருள்களைக் கொண்டு வரவேற்றல் முறையாம். இதனைத் தேசாசாரம் என்பர். இதற்கு மாறாய்க் குளிர்ந்த மேனாடு முதலியவற்றில் இவ்வாறன்றிச் சூட்டுப் பொருள்களையே வரவேற்புக்குரியன வாய்க் கொள்வதும், சூடான வரவேற்பு (Warm reception) என்று கூறி மகிழ்வதும் நாட்டு வழக்காதல் காண்க. அதனை நாமும் பின்பற்றுவது நம்நாட்டிற்கடாத செயலாம்.

தாதிவர்பூந்—பனிநீர் மிசை விட்டார்—என்பனவும் பாடங்கள். 121

268. மங்கலகீ தம்பாட மழைநிகர்தூ ரியமுழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறு நடம்பயில
நங்கள்பிரான் றிருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயினீ டிருவாயிற் புறமுறவந் தெதிர்கொண்டார். கஉஉ

(இ - ள்) வெளிப்படை. மங்கல கீதங்கள் பாட, தூரியங்கள் முழங்க, ஆடற் பெண்கள் நடம் பயில, திருவாரூர் வாழும் அடியவர்கள் மதிற்புற வாயிலில் வந்து நம்பிகளை எதிர் கொண்டு வரவேற்றார்கள்.

(வி - ரை) பாடுவோரைக் கீதம் பாடச் செய்தும், முழக்குவோரைத் தூரியம் முழக்கச் செய்தும், ஆடற் பெண்களை நடம்பயிலச் செய்தும் ஆரூர் வாழ்வார் நகரின் மதிற்புற வாயிலில் நம்பிகளை எதிர்கொண்டார் என்க. பாடுவோர் - முழக்குவோர்கள் - வருவித்துரைக்க.

பாட - முழங்க - பயில - என்பவற்றை மேற்பாட்டுக்களிலே கொண்டதற்கேற்ப இவற்றைப் பாடுவித்து - முழக்குவித்து - பயில்வித்து எனப் பிறவினைப் பொருளாகக் கொள்க. இங்ஙனமன்றி நகரச் சிறப்பியல்பாலே அவை அவை தத்தம்படியாகவே பாட - முழங்க - பயில - வாழ்வார் எதிர்கொண்டார் என்றுரைப்பினுமாம். வரிசை 87, 88, 89 பாட்டுக்கள் காண்க.

மழை நிகர் தூரியம் - மேக கர்ச்சனைபோன்று முழங்கும் பேரிகைகள். மழை அதற்குக் காரணமான மேகத்தைக் குறித்ததாகிப், பின் அதன் முழக்குக்கு ஆயிற்று. இருமடியாகுபெயர்.

செங்கயற்கண் முற்று இழையார் - சிவந்த கயல்மீன் போன்ற கண்ணுடையராய் முழுதும் வேலைப்பாடமைந்த அணிபூண்ட ஆடற்பெண்கள். **இழையார்** என்ற பொதுப் பெயர் நடம்பயில என்ற இடம் நோக்கி ஆடற் பெண்களைக் குறித்தது.

நடம் பயில்-பாடலுக்கும் தூரிய முழக்கிற்கும் பொருந்தும் வகையில் நடம் ஆட.

"காந்தார மிசைபரப்பிக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவை யாறே"

என்ற தேவாரத்தினை இங்கு வைத்துக் காண்க.

முன் - முன்னே வந்து. நம்பிகள் வருதற்கு முன்பே வாயிற்புறம் வந்து.

வாயிற்புறம் வந்து - இது தலத்தின் வெளித் திருவாயில். மேலே வரிசை 266-ம் பாட்டிற் குறித்த உயர் வாயில்களிலிருந்து பிரித்துணர்த்துதற்குப் "**போங்கோயில்நீள் திருவாயில்**" என்று அடைகொடுத்துக் கூறினார். 122

வே று

269. வந்தெதிர் கொண்டு வணங்கு வார்முன்
வன்றொண்ட ரஞ்சலி கூப்பி வந்து
சிந்தை களிப்புற வீதி யூடு
செல்வார் திருத்தொண்டர் தம்மை நோக்கி
"யெந்தை யிருப்பது மாரு ரவ
ரெம்மையு மாள்வரோ கேளீ" ரென்னுஞ்
சந்த விசைப்பதி கங்கள் பாடித்
தம்பெரு மான்றிரு வாயில் சார்ந்தார். ௧௨௩

(இ - ள்) வந்து...செல்வார் - மேலே கண்டவாறு வாயிற்புறத்துத் தம் முன்வந்து தம்மை யெதிர்கொண்டு வணங்குபவர்களாகிய திருவாரூரின் அடியவர்களை, அவர் தம்மை வணங்குதற்கு முன்னரே தாம் கை குவித்து வணங்கி அவர்களுடன் கலந்து வந்து இருதிறத்தார்க்கும் மனமகிழ்ச்சி பொங்க முன்னே சொன்னவாறு தம்மை வரவேற்க அலங்கரிக்கப்பெற்று விளங்கும் திருவீதியினுள்ளே செல்வாராய நம்பிகள்; திருத்தொண்டர்...பாடி - இறைவன் ஆணையின்படி தம்மை வரவேற்க வந்த அந்த

அடியவர்களை முன்னிலைப்படுத்திக்கொண்டு, "எமது பெருமான் விரும்பி எழுந்தருளி யிருப்பது இத்திருவாரூரேயாகும்; அப்பெருமான் எம்மையும் ஆட்கொண்டருளு வரோ? கேளுங்கள்!" என்ற கருத்துக்கொண்ட மகுடத்தையுடைய சந்தமும் இசையும் பொருந்திய காந்தாரப் பண்ணிலமைந்த திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு; தம்பெரு மான் திருவாயில் சார்ந்தார். தமக்கும் அவர்கட்கும் பெருமானாகிய புற்றிடங்கொண்டா ரது கோயில் திருவாயிலை அடைந்தார்.

(வி - ரை) **வணங்குவார்** - மேற்பாட்டிலே எதிர்கொண்டார் என்றதற்கு எதிர் கொண்டு வணங்கினார்கள் எனக் கொள்க. அவ்வாறு வணங்கினாராகிய அடியார்கள்.

முன் - அடியவர்களும் தாங்கள் முன்னே வணங்கினார்கள். அவர்கள் வணங்கு முன்னே நம்பிகள் அஞ்சலி கூப்பினார்கள். இது இவர்கள் தாம் தாம் முன்னம் வணங் குதல் வேண்டுமென்று கொண்ட கருத்தினை விளக்கியது. வரிசை 244-ம் பாட்டில் "முன் பிறைஞ்சினரியாவ ரென்றறியா முறைமையாலெதிர் வணங்கி" என்றதும் இது. அடியவர்கள் முன்னர் என்று இடத்தைக் குறிப்பதாகக் கொள்ளினும் அமையும்.

அஞ்சலி கூப்பி - தம் கைகளை அஞ்சலியாகச் சிரமேற் குவித்து.

சிந்தை களிப்புற - கூத்தப் பெருமான் ஆணையிட்ட திருஆரூர்த் தலத்தையடைந் தோம் எனவும், ஆரூர்ப் பெருமான் ஆணையின்படிப் போந்த இவ்வடியவர்களை வணங்கப் பெற்றோம் எனவும் நம்பிகள் மனமகிழ்ந்தார். "நம்பிரானாராவார் அவரே" என்று துணிந்து எதிர் கொண்ட அடியவர்கள் இந்த நம்பிகளைக் கிடைத்து வணங்கப் பெற் றோம் என்று சிந்தை களிப்புறுமாறு என்பதுமாம்.

"எந்தை யிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" - இது அத் திருப்பதிகத்தின் மகுடம். இதுவே அப்பதிகத்தின் கருத்தாம். இதனை "எந்தை யிருப் பது மாரூர் அவர் எம்மையு மாள்வரோ கேளீர்! என்று சிந்தை செயுந்திறம் வல் லான்..." என நம்பிகள் அதன் திருக்கடைக்காப்பில் வைத்தருளினர். ஆதலின் அத னையே ஆசிரியர் இங்குத் தலைப்பெய்து வைத்துக் காட்டினர் என்க.

எம்மையும் - அடியவர்கள் முன்பு நம்பிகள் தம்மைத் தாழ்த்திக் கூறிக் கொண்ட படியாம். உம்மை இழிவு சிறப்பு. மிகக் கடையேனாய், ஆட்கொள்ளப் பெறும் தகுதி பெறாத என்னையும். என்னையும் என்போல்வாரையும் என்று உளப்படுத்தி **எம்மை** எனப் பன்மையாற் கூறினார். "என்னையும்வந் தாண்டு கொண்டான்"—"நம்மையு மோர் பொருளாக்கி" என்பனவாதி திருவாசகங்களையும், "என்னையு மடியனாக்கி"— என்ற கந்தபுராணத்தையும் காண்க.

கேளீர் - நீங்கள் பழ அடியீர்கள். திருவாரூரிலே பிறக்கும் பெருமைத் தவமுடை யீர்கள்; எனது தகுதியின்மை நோக்கி இகழாது, உங்கள் உரிமையாலே உங்களது விண்ணப்பத்திற் கிணங்கி, என்னை ஆள்வரோ? அதைப் பழகிய நீங்கள் அவரிடம்கேட் டுச் சொல்லுங்கள் என்ற குறிப்பாம்.

இவ்வாறே திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாரூரைத் தரிசிக்க எழுந்தருளிய போது தம்மை எதிர்கொண்ட அடியார்களை நோக்கி, உங்கள் இறைவனாகிய "திருவாரூ ரான், வருந்தும் போதெனை வாடல் எனுங் கொலோ" என்று வினவித் திருப்பதிகம் பாடியருளினர். அப்பர் சுவாமிகளும் இவ்வாறே அடியவர்களை வினவி "நமக்குண்டு கொலோ...ஆரூர் அவிர்சடையான்...தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" என்று பாடி யருளினர். அடிமைத் திறத்தின் சிறப்புப் பொருந்திய தலம் திருவாரூர் என்பது இங்கே **"திருத்தொண்டத் தொகை"** பாடியருளப் பெற்றமையாலும், "திலவு தொண்டர்தங் கூட்ட நிறைந்துறை"யத் தேவர்கள் வணங்கி நிற்கும் **தேவாசிரியன்** விளங்குகின்றமையாலும் காணப் பெறும். இத்தலத்தே வாழ்வாராம் அடியார்களின் சிறப்பாவது இறைவனால் முன்னமே ஆட்கொள்ளப் பெற்று இனியுமோர் பிறப்பில்

லாத பக்குவான்மாக்களே இங்குப் பிறக்கும் பேறுபெறுகின்றார் என்பதாம். இங்குப் பிறப்பிற் செலுத்துகின்றமையாலே இறைவன் இவர்களை முத்தியிற் செலுத்துகின்றான். இதனாலே "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கு மடியேன்" என இவர்கள் திருத்தொண்டத் தொகையிலே தனியாகத் துதிக்கப்பெற்றனர். 'ஆரூர்ப் பிறக்க முத்தி' என்பது பழமொழி. "பிறந்தவர் பிறவாப் பெரும்பதி யகத்தும்" என்றார் கல்லாடனாரும். இவர்கள் முன்னமே இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற முத்தான்மாக்களாதலின் மேலே காட்டியபடி மூன்று ஆசாரியன்மார்களும் இந்த அடியவர்களை வினவிப் பதிகம் பாடிப் பின்னரே தலத்துட் சென்று ஆண்டானைப் பாடி யருளினர் என்க.

"பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ?"

என்ற திருவாசகக் கருத்தையும் இங்கு வைத்துக் காண்க.

சந்த இசைத் திருப்பதிகங்கள் - பதிகமாவது பத்துத் திருப்பாட்டுக்களின் தொகுதியாதலின் பன்மையாற் கூறினார். மேற்கூறிய சிறப்புப் பற்றிய பன்மை என்று கொள்ளலுமாம். தேவாரப் பதிகத்தின் ஒவ்வோர் திருப்பாட்டையுமே பதிகம் என்றும், பனுவல் என்றும் கூறும் வழக்கும் உண்டு. "திருப்பதிகம் விண்ணப்பம் செய்வார்" என்று தேவாரம் ஓதுபவர்களைக் கல்வெட்டுக்களிற் குறித்தமையும் காண்க. சந்தமும் இசையும் கூடிய திருப்பதிகம் என்க. "சந்த மிசையொடும் வல்லார்" என்று இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் நம்பிகள் அருளியதை ஆசிரியர் இவ்வாறு எடுத்துக் காட்டியபடி.

பதிகம் (பண் - காந்தாரம்) திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

கரையுங் கடலு மலையுங் காலையு மாலையு மெல்லாம்
உரையில் விரவி வருவா னொருவ னுருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க் கெல்லாம்
அரைய னிருப்பது மாரூ ரவ ரெம்மையு மாள்வரோ கேளீர். (1)

'எந்தை யிருப்பது மாரூ ரவ ரெம்மையு மாள்வரோ' வென்று
சிந்தை செயுந்திறம் வல்லான் றிருமரு வுந்திர டோளான்
மந்த முழவ மியம்பும் வளவய லாவலா ரூரன்
சந்த மிசையொடும் வல்லார் தாம்புக ழெய்துவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—மேலே குறிக்கப் பெற்றது. அரையன் - இனியன் - எல்லை - இறைவன் - ஆதி - அருத்தன் - எந்தை - அண்டன் - அமரன் - ஈசன் - இருப்பதுவும் இத்திருவாரூர். அவர் எம்மையும் ஆள்வாரோ? அவருடன் பழகிய நீங்கள் கேட்டு எமக்குச் சொல்லுங்கள் என்பதாம்.

பதிகப்பாட்டுக்குறிப்பு:—(1) **கரை-கடல்-மலை-கரை**-மருதத்தையும் முல்லையையும், **கடல்** - நெய்தலையும், **மலை** - குறிஞ்சியையும், **காலையும் மாலையும்** - கால வகைகளையும் குறிக்கும். **எல்லாம்** - எல்லா இடத்திலும் எல்லாக் காலத்தும். நம்பிகள் மறவா மனம் பெற்றதும், தவநெறி பெற்றதும் ஆகிய முன் சரிதங் காண்க.

உரையில் விரவி வருவான் - பேச்செல்லாம் அவன் புகழேயாம்.

வானவர் - தேவர்க்கு அரையனானமை தேவலோகத்தில் இறைவனாய் எழுந்தருளியதாற் காண்க. தானவர்க்கரையன் என்பது சூரபதுமன், இராவணன் முதலியவர் வலிமை எல்லாம் இறைவ னருளினாற்பெற்ற வரத்தின் வலிமையே என்பதாம்.

எல்லாம் - எல்லா வகையாலும் ஏனை எல்லாருக்கும் என்றலுமாம். (2) **தனியன் என்று எள்கி யறியேன்** - நகைச் சுவை. இறைவன் தனித்தவன். "நின்னுவார் பிற ரின்றிநீயே ஆனாய்", "ஏகமேவ நத்துவிதீயம்" முதலிய வேதங்கள் காண்க. **உகப்பன்** - இகழாமையே யன்றி உகத்தலும் பெரிதும் செய்வன்; அன்றியும். **எள்கி** - இகழ்ந்து - **முனிபவர் தம்மை முனிவன்** - இகழ்வாரை முனிந்து இகழ்வேன். சத்தி நாயனார், சண் டேச நாயனார் முதலிய பெரியார் சரிதங்கள் காண்க. **முகம்** - முகமன். உண்மையற்ற உபசாரமொழி. **கழகின் சோலை ஆநூர்** என்று கூட்டுக. (3) **குலா** - பெருமகிழ்ச்சி யினையும் அதன் மெய்ப்பாட்டையும் காட்டுவதோர் சொல். "குலாத்தில்லை யாண் டான்", "குலாப்பத்து" என்பவை காண்க. இங்கு ஆடம்பரமொழி என்ற பொருளில் வந்தது. **கற்ற பெரும் புலவாணர்** - மனமடங்கக் கற்றுத் தம்மை யடையும் புலத்திற் சிறந்தோர். **எல்லை** - மறைகளால் எல்லாப் பொருள்கட்கும் எல்லையாக - முடிந்த இட மாகக் - கூறும் பொருள், "உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார்"(திருநாளைப் புரா - 35) "அலகின் கலையின் பொருட்கெல்லை யாடுங்கழலே" (சண்டேசர் புராணம்-15) (4) **நெறி - அறிவு - செறிவு - நீதி** - மக்கள்பால் அமைய வேண்டுவனவாகிய நல்லன. **பொல்லேன்** - இவைகள் என்பால் நன்மையாய் அமையாது தீநெறி முதலியன வாக நின்றேன். "சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றி" - திருவாச கம், ஆனந்தமாலை, 3. **மிறை** - **தறி** - சொல், செயல்களின் இழிபு. **வேண்டிற்று** - மனம் போன போக்கு. (5) **நிட்கண்டகம்** - ஒருபாற் கோடாமை. **நமர் பிறரென்பதறியேன்.** (9) என்பதும் காண்க. (8) **மிண்டர்க்கு மிண்டலாற் பேசேன்.** "இட்டார்க் கிட்டபடி" என்பது பழமொழி. இது நம்பிகளது உள்ள நிலையையும், பேச்சு நிலையையும் உணர்த் தும். (10) **ஆரையுமன்றி யுரைப்பேன்** - "ஒருவரை மதியா துறுமைகள் செய்து மூடியு முறைப்பனாய்த் திரிவேன்" (திருமுல்லைவாயில்) (11) முதலிய நம்பிகளது தேவாரங்கள் காண்க. **என்று** - பதிகக் கருத்தைக் குறித்தது.

தலவிசேடம் - திருநகரச் சிறப்பின் இறுதியில் 163, 164 பக்கங்கள் பார்க்க. சோழ மன்னர்களின் தலை நகரங்களில் ஒன்று. அவர்கள் முடிசூட்டிக் கொள்ளும் தலங் களான ஐந்து நகரங்களில் ஒன்று. (சண்டேசர் புராணம் - 8) தேவாரங்களை வெளிப்படுத் திய அபயகுலசேகர சோழரும் இப்புராணம் பாடுவித்த அநபாயச் சோழரும் எழுந்தருளி ஆட்சி புரிந்த தலம். 123

270. வானுற நீடிரு வாயி னேக்கி மண்ணுற வைந்துறுப் பால்வ ணங்கித்
தேனுறை கற்பக வாச மாலைத் தேவா சிரியன் றொழுதி றைஞ்சி
யூனு முயிரு முருக்கு மன்பா லுச்சி குவித்தசெங் கைக ளோடுந்
தூநறுங் கொன்றையன் மூலட்டானஞ் சூழ்திரு மாளிகை வாயில் புக்கார்.

(இ - ள்) வெளிப்படை. நீண்ட திருவாயிலை நோக்கிக் கீழ்வீழ்ந்து வணங்கித் தேவாசிரியனைத் தொழுது இறைஞ்சி, அன்பினாலே உச்சியிற் கைகள் கூப்பி இறை வன் எழுந்தருளிய திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலினுட் புகுந்தார்.

(வி - ரை) **வானுற நீள்திருவாயில்** - பூங்கோயிலின் திருவாயில். மேலே சொல் லிய " உயர் வாயில் " (வரிசை 266), " நீள்திருவாயில் " (வரிசை 268) என்பவை வேறு. இதனை **வான் உற நீள் திரு** என்ற அடைமொழிகளாற் பிரித்துக் காட்டியவாறு. முன் குறித்தவற்றின் அடைமொழிகளை நோக்குக. **வானுற-மண்ணுற** என்ற சொற் சுவையும் சிறப்பும் காண்க. **நோக்கி** - தரிசித்து. **ஐந்துறுப்பால் வணங்கி** - **ஐந்து உறுப்பாவன்** - தலையும் கைகளிரண்டும் கால்களிரண்டுமாம். இவை நிலத்திற் பொருந்த வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம் என்பர். **வாயில்** - தூலலிங்கமாகிய

கோபுரத்தின் கீழ் அமைந்து, திருக்கோயிலின் முகமாதலின் அதனை வணங்குதல் முறைமையாம்.

தேனுறை கற்பக வாச மாலைத் தேவாசிரியன் - மாலை வாசம் என்று மாற்றுக. கற்பக மாலை வாசம் கமழும் என்க. மாலை என்பதனைத் தேவாசிரியன் என்றதில் உள்ள தேவர்களுக்கு அடையாக்கிக் கற்பகப் புதுப்பூ அணிந்த தேவர்கள் காத்திருக்கும் மண்டபம் என்றலுமாம். கற்பகப் பூமாலைகள் தூக்கியிருக்கும் தேவாசிரிய மண்டபம் என்றுரைப்பாரு முண்டு. **தொழுது இறைஞ்சி** - முதலிலே கைகள் கூப்பி அஞ்சலி செய்து பின்னர், எட்டுறுப்பு - ஐந்துறுப்புக்களும் நிலத்திற் பொருந்த வணங்கி.

ஊனும் உயிரும் உருக்கும் அன்பால் - அன்பு ஊனையும் உயிரையும் உருக்க வல்லது. இதனைத் தொடர்புடையார் மாட்டு நிகழ்வதோர் உள்ள நிகழ்ச்சி என்பர். உள்ளத்தே நிகழ்வது உடம்பைப் பற்றும் ; கண்ணீர் வார்தல் முதலிய மெய்ப்பாடுகளை விளக்கும் ; உடம்போடு நில்லாது உயிரையும் பற்றும். " ஊனையு மென்பினையு முருக்கா நின்ற ஒண்மையனே ", "என்பே யுருக...எனை யுருக்கி" எனவரும் திருவாசகங்கள் காண்க.

கொன்றையன் - சிவபெருமான். கொன்றை சிவபெருமானுக்குச் சிறப்பாய் உரிய பூ. " இதழியுமுடன் கூறினர் - திருவடையாளமாலை யாதலின்" என்று மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான சித்தியாருரையிற் கூறியது காண்க. பிரணவ உருவமா யமைந்து, சிவபிரானே பிரணவவாச்சியன் என்றறிவிப்பது.

திருமூலட்டானம் - புற்றிடங்கொண்டார் எழுந்தருளியிருக்கும் இடம். (கோயில்). திருமூலட்டானம் என்பது திருத்தில்லையிலும் திருவாரூரிலும் உள்ள விசேடத் தலங்கள். தில்லையில் நடராசர் எழுந்தருளிய சபைக்கு வடபால் வேறாகத் திருமூலநாதர் எழுந்தருளி யிருக்கும் திருமூலட்டானம் போல, இங்குத் தியாகேசர் எழுந்தருளி யிருக்கும் இடம் வேறு ; புற்றிடங்கொண்டார் எழுந்தருளியிருக்கும் திருமூலட்டானம் வேறு.

சூழ் திருமாளிகை - திருமூலட்டானத்தைச் சுற்றி உள்ள மண்டபம். திருமாளிகைப் பத்தி என்பர். **திருமாளிகை வாயில்** - இது முன் சொன்ன **வான் உற நீள் திரு வாயிலின்** வேறு. 124

271. புற்றிடங் கொண்ட புராதனனைப்
பூங்கோயில் மேய பிரானை யார்க்கும்
பற்றிட மாய பரம்பொருளைப்
பார்ப்பதி பாகனைப் பங்க யத்தாள்
அர்ச்சனை செய்ய வருள்புரிந்த
வண்ணலை மண்மிசை வீழ்ந்தி றைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோனு டம்பா
னன்மையின் றன்மையை மெய்ம்மை பெற்றார். ௧௨௫

(இ - ள்) புற்று...புராதனனை - புற்றினைத் தாம் விரும்பி வெளிப்பட வாழும் இடமாகக் கொண்டருளும் பழமையான பெருமானை ; பூங்கோயில்...பிரானை - பூங்கோயிலிலே எழுந்தருளிய பெருமானை ; யார்க்கும்...பரம்பொருளை - எல்லாவுயிர்களுக்கும் பற்றுக்கோடாகிய முழுமுதற் கடவுளை ; பார்ப்பதி பாகனை - பார்வதியைப் பாகத்தில் வைத்தவனை ; பங்கயத்தாள்...அண்ணலை - தாமரைபோன்ற தமது சீபாதங்களை அருச்சிக்கும் பேற்றைத் தமக்குக் கொடுத்தருளிய பெருமையுடையவனை ; மண்மிசை...பெற்றார் - தரையில் விழுந்து வணங்கி நல்ல தமிழ் வல்லவராகிய திருநாவலூரர்பெருமான் இவ்வுடம்பு எடுத்ததனால் அடையவேண்டிய நற்பயனை உண்மையாகவே அடைந்தார்.

(வி - ரை) **புற்றிடங் கொண்ட புராதனனை**-புற்றிலே என்றைக்கும் வெளிப்பட எழுந்தருளினார் என்றறியக்கூடாதபடி மிகப் பழமையாயுள்ளவன்.

"மாடமொடு மாளிகைகண் மல்கு தில்லை மணிதிகழு மம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே"
"தேசமுமை யறிவதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

எனவரும் திருத்தாண்டகங்களின் பொருளை உற்று நோக்குக. **புராதனன்** - மிகப் பழமை வாய்ந்தவன். "மூலத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி"-(திருத்தாண்டகம்) "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" - (திருவாசகம்). புற்றிடங் கொண்டவனும் பழமையுடையவனும் என்றுரைத்தலுமாம்.

யார்க்கும் பற்றிடமாய பரம்பொருள் - மக்கள், தேவர், நாகர் முதலிய எவ்வுயிர்க்கும் தன்னையன்றி வேறு பற்றுக்கோடு இல்லாத பெரும் பொருளாவான்.

பங்கயத்தாள் அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணல் - முன்னே கயிலையில் மலர்மாலையும் நீறும் எடுத்து அணைந்து அருச்சிக்க அருளினார்; இங்கு வழிவழியடிமை செய்யும் வேதியர் குலத்திற்றோன்ற அருளினார்; 'பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று அருளிப் "பித்தா" என்று தொடக்கமும் கொடுத்து அருளினார்; பின்னர்த் தவநெறி தந்து தம்மைப் பூசை செய்ய அருளினார்; இவ்வகையாக அருள்புரிந்த பெரியவன் - இவ்வாறு எண்ணி யிறைஞ்சிய வழியே பின்னரும் "மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந் தன்பர் சிந்தை யலர்ந்தசெந் தாமரை", "பூத நாதநின் புண்டரி கப்பதம்" எனப் போற்றி யருச்சிக்கும்படிப் பெற்று அத்துதியின் துணையானே, அவ்வழி நின்று, திருத்தொண்டத்தொகை பாடியருளக் காரணமாயினமையும் குறிக்க. இனி இவ்வாறன்றிப் **பங்கயத்தாள்** என்றதைத் "தாமரையினாள்" எனக் கொண்டு இலக்குமி இத்தலத்தே தவஞ்செய்ய அவளுக்கு அருள்புரிந்த அண்ணல் என்று உரைப்பினுமமையும். வரிசை 86-ல் **மாமலராள் வழிபட்டது** என்றமை காண்க.

உடம்பால் நன்மையை - உடம்புடன் கூடிய பிறவி எடுத்ததனால் உளதாம் உறுதிப்பயனை. "ஊனடைந்த உடம்பின் பிறவியே, தானடைந்த உறுதியைச் சாருமால்" என்றது காண்க.

மெய்ம்மை - மெய்யி(உடம்பு)னது உறுதிப்பயன். இவ்வாறே உள்ளத்தின் உறுதிப் பயனுக்கு உண்மை என்றும், வாயின் உறுதிக்கு வாய்மை என்றும் வருவன காண்க. இவை மனம் வாக்குக் காயம் என்ற மூன்றின் சத்திய நிலைகளுக்குப் பெயராகக் கூறப்படும். நம்பிகள் இவ்வுடம்பு எடுத்ததின் உறுதிப் பயனாவது "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர" வருதலாம் என்றறிந்தோம். அது இங்குத் திருவாரூரிலே தான் இப்போது நிகழப்போவதாம். ஆதலின் நன்மையின் தன்மையைப் பெற்றார் என்றமையாது **மெய்ம்மை பெற்றார்** என்றார்.

உடம்பின் தன்மை பிராரத்தத்தை அனுபவித்தலும், சிவதருமங்களைச் செய்து மேலும் பிறவிவாராமற் செய்துகொள்ளுதலுமாம். கருவுற்ற நாள் முதலாக அடையப் பெறுதலால் பிராரத்தம் என்ற காரணப்பெயர் வந்தது. பிராரத்தம் அனுபவித்த பின்னர் மேலும் வினைகள் ஏறாதிருக்கவேண்டும். ஆதலின் உடம்பின் முயற்சி யாவும் சிவதருமத்திலே செலுத்தப் பெறவேண்டும் என்பதாம். ஆதலின் உடம்பால் (ஆன) நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார் என்றார்.

272. அன்பு பெருக வுருகி யுள்ள
மலையவட் டாங்கபஞ் சாங்க மாக
முன்பு முறைமையி னால்வ ணங்கி
முடிவிலாக் காதன் முதிர வோங்கி

நன்புல னாகிய வைந்து மொன்றி
நாயகன் சேவடி யெய்தப் பெற்ற
வின்பவெள் ளத்திடை மூழ்கி நின்றே
யின்னிசை வண்டமிழ் மாலை பாட, ௧௨௬

273. வாழிய மாமறைப் புற்றி டங்கொண்
மன்னவ னாரரு ளாலோர் வாக்குத்
'தோழமை யாக வுனக்கு நம்மைத்
தந்தனம்' நாமுன்பு தொண்டு கொண்ட
வேள்வியி லன்றுநீ கொண்ட கோல
மென்றும் புனைந்துநின் வேட்கை தீர
வாழிமண் மேல்விளை யாடுவா"யென்
றாரூரர் கேட்க வெழுந்த தன்றே. ௧௨௭

272. (இ - ள்) வெளிப்படை. அன்பு பெருகியதால் உள்ளம் உருகி அலையத் திருமூலட்டான நாதர் முன்னர் எட்டுறுப்பினாலும் ஐந்துறுப்பினாலும் விதிப்படி வணங்கி, அளவற்ற ஆசை மேன்மேற் பெருக, நல்லனவாகிய தமது ஐம்புலன்களும் ஒற்றித்து நிற்க, இறைவனது திருவடியை அடையப்பெற்ற அதனால் உண்டாகிய இன்பப் பெருக்கிலே முழுகி அதில் நிலைத்து நின்று நம்பிகள் இனிய பண்ணிரம்பியதும் வண்மை பொருந்தியதுமாகிய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியபோது, ௧௨௬

273. (இ - ள்) வெளிப்படை. உயிர்கள் தம்மை வழிபட்டு வாழ்வடையும் பொருட்டுப் பெரிய வேதங்களின் உருவாகிய புற்றை இடமாகக்கொண்டு எழுந்தருளிய இறைவனது நிறைந்த திருவருளினாலே "நம்மையே தோழனாக உனக்குத் தந்துள்ளோம்; நாம் முன்னே உன்னைத் தடுத்து ஆட்கொண்ட கல்யாணத்திலே அன்றைக்கு நீ கொண்டிருந்த மணக்கோலத்தையே என்றைக்கும் பூண்டவனாகி உனது ஆசை தீரும்படி இந்நிலவுலகத்திலே விளையாடுவாயாக; நீவாழி" என்று ஒரு வாக்கு நம்பியாரூரர் (பாடிய) அப்பொழுதே கேட்கும்படி எழுந்தது. ௧௨௭

272. (வி - ரை) இவ்விரண்டு பாட்டும் ஒரு முடிபு கொண்டன. **அன்பு பெருக** - 269-ல் சொல்லிய **ஊனு** முயிரு முருக்கும் அன்பு தானாய்ப் பெருக்கெடுத்ததனால். **உள்ளம் அலைய** - முன் உலக வழியிலே அலைந்த உள்ளம், இங்கு, அன்பின் வழியே சென்று அப்பெருக்கிலே கரைகாணாது அலைய என்க. நம்பிகள் என்ற எழுவாய் வருவிக்க.

முன்பு அட்டாங்க பஞ்சாங்கமாக முறைமையினால் வணங்கி - அட்டாங்கமாக வணங்கும் முறை - தலை (1), கைகள் (2), காதுகள் (2), நெற்றி (1), கால்கள் (2) ஆக எட்டு உறுப்புக்களும் நிலத்திற் பொருந்துமாறு வணங்குதல். பஞ்சாங்கமாக வணங்கும் முறை மேலே (வரிசை 269) உரைக்கப்பெற்றது. முன் அட்டாங்கமாகவும் பின் பஞ்சாங்கமாகவும் ஆக இவ்வாறு மூன்றுமுறை, ஐந்து முறை முதலாக வணங்குதல் வேண்டுமென்பது விதி. இவ்விரண்டும் சேர்ந்தது ஒரு வணக்கமாதலின் அட்டாங்க பஞ்சாங்கமென்று சேர்த்துக் கூறினார். அவற்றில் முன்னர்ச் செய்யப்பெறுவதாதலின் அட்டாங்கத்தை முதலில் வைத்தார். (பெண்கள் அட்டாங்க வணக்கம் செய்யலாகாது.) திருக்கோயிலிலே இறைவனைத் தவிர வேறு ஒருவரையும் அஞ்சலி செய்யாமை, தூபி முதலியவற்றின் நிழலை மிதியாமை முதலிய பல விதிமுறைகளையும் உள்ளிட்டு **முறைமையினால்** என்றார்.

முடிவிலாக் காதல் முதிரவோங்கி - **காதல்** - நாயகன் நாயகிகளினிடையே உளதாம் அன்புக்குக் காதல் என்று பேர். இவ்வாறே பிரேமை, நண்பு, வாத்சல்லி

யம் முதலியன வெவ்வேறுவகையிற் செல்லும் அன்பின் வகைகளைக் குறித்தல் காண்க. முதலிலே, மேற்பாட்டிலே, புராதனன் - பிரான் - பரம்பொருள் - பாகன் - அண்ணல் என்று, இறைவன் எனும் பொதுவகையாலே நிகழ்ந்த அன்புகொண்டு வணங்கினார். இப்போது அந்த அன்பு பெருகி உள்ளம் அதில் சிக்குண்டு அலைந்து மேன்மேல் முதிரவே, ஆன்மாக்கள் எல்லாம் நாயகிகள் ஆகவும், இறைவன் அவர்களது நாயகனாக வும் உள்ள பாவனை முதிர்ந்தது ; ஆகலின் " **நாயகன்** சேவடி எய்தப்பெற்ற இன்பம்" என்று **நாயகன்** எனும் பெயராற் கூறினார். "நாயகன் சேவடிதைவருஞ் சிந்தையும் " எனக் கூறுவதும் (திருநா - புரா - 140) காண்க. நாயகன் சேவடி தைவருதல் (தடவு தல் - வருடுதல்) நாயகியின் இயல். " செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கமலக் கரத் தால் வருடச் சிவந்தன" என்பது (திருமாற்பேறு) திருவிருத்தம். நாயகன் - என்ப தற்கு - இயவுள் - இயக்குபவன் என்றும், ஞான **நாயகன்** - என்பதற்கு உயிரறிவைச் செலுத்துபவன் - என்றும் பொருள் கூறுவர்.

நன்புலனாகிய ஐந்தும் ஒன்றி - "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள " என்று கூறியபடி ஐம்புலனும் ஒன்றித்து அனுபவிக்கப் படுவதோர் இன்பம் உண்டு ; அது சிறியது ; சிற்றின்பம் என்பர். ஆயின், இங்குக் குறித்த இதுவும் ஐம்புலன்களும் ஒன்றித்து அனுபவிக்கப்பெறுவதாயினும் அவ்வா றின்றிப் பெரிதாய், நன்மை தருவதாய், அழியாததாய் உள்ளது ; ஆதலின் **நன்புல னாகிய ஐந்தும்** என்றார். ஐம்புலன்களே உலகவழிச் செல்லும்போது தீமையும், இறைவன்வழிச் செல்லும்போது நன்மையும் பயப்பனவாம் என்க. " ...ஐம்புலன்க ளார, வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை, மாலமுதப் பெருங்கடலே" என்ற திருவாசகமும் (திருச்சதகம்) காண்க.

இன்ப வெள்ளம் - ஏனைச் சிற்றின்பம்போ லல்லாது இன்பத்திலே கரைகாண முடியாத பெருமை யுடைத்தாதலால் **வெள்ளம்** என்றதாம். இதனை அனுபவித்தல் கன்மேந்திரிய ஞானேந்திரியங்களுக்கும் அந்தக்கரணங்களுக்கும் ஆன்மபோதத்துக் கும் எட்டாது இவை ஒருமைப்பாடு பெற்றவழி - ஐந்தும் ஒன்றி - அனுபவிக்கப்படுவ தாதலின் **மூழ்கி** என்றார். இதனானே இத்தமிழ்கள் இறைவன் வாக்கேயாமென்க.

பாட - பாடுதலும். வினையெச்சம். வரும்பாட்டிலே ஒரு வாக்கு எழுந்தது என்ற தோடு முடிந்தது. **எழுந்தது** - ஆரூரர் கேட்க அருளால் எழுந்தது. அசரீரியாய் ஞான ஆகாயத்திலிருந்து போந்தது. 126

273. (வி - ரை) **வாழிய** - வாழும்பொருட்டு. உயிர்கள் வாழ என்று வருவித்துக் கொள்க. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இதற்கு, இவ்வாறன்றி வாழிய - வாழ்க - நம்பியாரூரரை வாழ்த்தியவாறு என்றும், பின்னரும் " வாழிமண் மேல்" என வருதலால் இருமுறை வாழ்த்தினார் என்றும், கூறுவாரும்; வாழிய என்ப தனை அசை என்று ஒதுக்குவாரும் ; மேன்மை பொருந்திய என்றுரை கூறுவாரும் உண்டு. இருமுறை வாழ்த்தவேண்டியதின்மையானும், இறைவனது வாக்கு ஒரு தொடர்பாய் வருதலானும், பிறவாற்றானும் இவைபொருளன்றென்க.

மாமறைப் புற்று - மா - பெரிய. தமக்குமேற் பிரமாணமில்லாமல் தமக்குத் தாமே பிரமாணமாயுள்ளது. வேதங்களாகிய புற்று. இறைவன் வேதங்களுட் குடியிருந் தருளுவன் என்பது கருத்து. மாமறைப் புற்று வாழிய இடங்கொள் - என மாற்றி மறைப்புற்றைத் தாம் வாழுமிடமாக் கொண்ட என வுரைப்பினுமாம்.

புற்று இடங்கொள் - உள்ளிருக்கும் பொருளை மறைத்துப் பொதிந்து மேல் மூடி யிருப்பது புற்றினது இயல்பு. அவற்றை இறைவனது இருப்பிடமாக உணராதார்க்கு அவை உண்மைப்பொருளை உணர்த்தாமையின் மறைப்புற்று என்பதாம்.

"வேத மோதிலென்? சாத்திரங் கேட்கிலென்? - நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்?
ஓதி யங்கமோ ராறு முணரிலென்? - ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே"

என்ற அப்பர் சுவாமிகளது பாவநாசக் குறுந்தொகைப் பதிகக் கருத்தை உன்னுக. புற்றின் உள்ளே வாழும் பொருள் நீலகண்ட மணியாகித் துன்பத்துக்கும் இன்பத் துக்கும் காரணமாயிருத்தல் மறைப்புற்றென்று உபசரிப்பர். "துன்பமு மாயின்ப மாயினார்க்கு" - திருவாசகம்.

மன்னவனாருள் - இறைவனது நிறைந்த திரு அருள். மன்னவனாரது அருள் என்றலுமாம்.

ஓர் வாக்கு - அசரீரியாக வானில் எழும் நாதம். வரிசை 254 பாட்டுக் காண்க. "வழுவா வோசை முழுதுநின் வாய்மொழி" என்று பட்டினத்தடிகள் அருளிய பதினொராந் திருமுறை காண்க.

தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம் - நாம் உனக்கு நம்மைத் தோழமை யாகத் தந்தனம் என மாற்றிக்கொள்க. நம்பிகள் தமக்கு இறைவனைத் தோழமையாகப் பெற்ற வரலாறு அவர் தேவாரத்துப் பலவிடத்தும் காணலாம்.

"என்னுடைய தோழனுமாய்" - திருவாரூர் - பழம்பஞ்சுரம் - 10. "என்றனை யாள் தோழனை" - திருக்கானப்பேர் - புறநீர்மை - 9. "தன்னைத் தோழமை யருளித், தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும், நாதனை" - திருநள்ளாறு - தக்கேசி-8. முதலிய பலவும் காண்க. இக்காரணம் பற்றியே நம்பிகளைத் "தம்பிரான் தோழர்" என்ற பேரால் அடியவர்கள் வழங்கினார்கள் என்பது வரிசை 275-ம் பாட்டிற் காண்க. சைவ நால்வழிகளிலே நம்பிகள் தோழர்நெறியை விளக்க வந்தவர் என்பதும் காண்க. **தந்தனம்** -"தாவென் கிளவி ஒப்போன் கூற்றே" (தொல் - சொல் - எச்சவியல் - 50) என்பது விதி. தோழமை என்பது ஒப்புமைபற்றி உண்டாகும் உரிமையாதலின் **தந்த னம்** என்ற சொல்லாற் கூறினார். நம்பிகள் இறைவனது திருவுருவேயாய் வந்தமை வரிசை 26-ம் பாட்டின் கீழ்க் காண்க. **தந்தனம்** - 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்றும், 'தந்ததுன் றன்னை' என்றும் அருளியபடி அவரே தாராவிடில் உயிர்கள் பெறுமாறில்லை; ஆதலின் **நம்மைத் தந்தனம்** என்றார்.

எவ்வுயிர்க்கும் ஈசன் தோழனாய் உடனிருப்பார்; ஆயினும், "தாவியவனுடனிருந் தும் காணாத தற்பரன்" என்றபடி உயிர்கள் அவனை அறிவதில்லை. அவ்வாறன்றி இவர் அறியும்படி தந்தது இவர் பெருமையை உலகறிந்து உய்வதற்கு என்க. இறைவன் தம்மையே ஆரூரருக்குத் தோழமையாகத் தந்துவிட்டாராதலின் பின்னர்ப் பரவை யார் திருமணம், சங்கிலியார் திருமணம், பரவையார் ஊடல் தீர்த்தல் முதலியவற்றில் பாங்கற்கூட்டம் முதலிய அகப்பொருட்டுறைகளிலே சரித நிகழ்ச்சிகளின் அமைவு காணப்பெறும். பின்னும் இதனாலே நம்பிகள் செயல் தோழர் செயலேயாதலுமாம்.

நாம் முன்பு தொண்டு கொண்ட - முன்பு உன்னை நாம் கிழவேதியராய் வந்து தடுத்துத் தொண்டனாகக் கொண்ட.

வேள்வியில் - மணத்திலே. வேட்டற்குரியதாதலின் மணம் வேள்வி எனப் பெற்றது. "காட்டுதல் வேள்விக்கோலம்", "திருவேள்விக்குடியிற் நிகழ்மணவாளநற் கோலம்" (திருஞானபுரா - 291) "தென்னவர் கோன் மகளாரைத் திருவேட்டு" (கழ றிற்று - புரா 92) முதலியவை காண்க. எனவே, வேள்வியில்லாதது மணமாகாதென்க.

அன்று நீ கொண்ட கோலம் - "மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க"க் கொண்ட **திருமணக் கோலம்**. வரிசை 163-164 பாட்டுக்கள் பார்க்க.

நின்வேட்கைதீர-வேட்கை-வேட்டல் செய்யும் தொழில். **தீர** - இனி அத்தொழில் உனக்கு நிகழாதபடி (தடுத்தாட்கொள்ளப் பெற்றமையால்). நீ மண்மீது இருந்தாலும் இனி அவ்விதமான வேள்வி முதலிய உலகத் தொடக்குகள் நிகழாதபடி என்க. இனி, **வேட்கைதீர** என்பதற்கு என்பால் வைத்த ஆசை எல்லாம் அநுபவித்து மனஅமைதி

உண்டாம்படி என்றுரைத்தலுமாம். ஆசைதீர - ஆசை கொண்ட பொருள் போதும் என்று அமையும்படி. "ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்" (திரு ஞான - தேவாரம் - காந்தாரம்-கடவூர் மயானம் (7) என்றது காண்க. மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடப் போந்தனராவர் நம்பிகள் ஆதலின் இப்பொருளில், மண் மேல் என்பதற்கு " இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு " என்ற ஆசையால் "பூசனைக்குப் பொருந்துமிடம் பல"வற்றிலும் சென்று போற்றி வாழ்ந்து உலகத்தை வாழச் செய்வதனாலே தம்முடைய ஆசை முற்றப்பெற என்க. இந்த ஆசைகளாவன மணிவாசகனார் 'ஆசைப்பத்திலே' சொல்லியருளிய ஆசைகளேயாம்.

மண்ணின்மேல் - கர்மபூமியாய் - மேன்மேலே கருமத்துக்குக் காரணமாய் உள்ள இம்மண்ணுலகிலே. நீ அவ்வாறு தொடக்குண்ணாமல் என்பது குறிப்பு.

விளையாடுதல் - மண்ணிற் பிறப்புத் தீமை என்று துன்பமுறாமல், இன்பமென் றுணர்ந்து, "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று மகிழ்ந்து அனுபவித்தல். தர்மியதியில் நிற்றல் என்றலுமாம். "ஈவிளையாட" என்ற திருக்கோவை (133)ப் பாசுரங் காண்க.

அன்றே - தொழுது இன்னிசைபாடிய அன்றையதினமே. இதை அசையாக உரைப்பாருமுண்டு.

இவ்வாறின்றி 'வேட்கைதீர' என்பதற்குத் திருக்கயிலை நந்தனவனத்தில் கொண்ட ஆசையாகிய காதல் தீரும்படி என்று பொருளுரைப்பாருமுளர். அதற்கு மண்மேல் விளையாடுதல் அவசியமின்மையாலும், இங்குப் புற்றிடங் கொண்டார் வாக்கன்றியே திருக்கயிலை ஆணையின்படி அவை நிகழ்வன ஆதலானும், நம்பிகள் உலக வாழ்வுற்று அவ்வாசைதீர விளையாடுதல் பொருளன்மையானும், பிறவாற்றானும் அது பொருந் தாமை உணர்க. 127

274. கேட்க விரும்பிவன் றொண்ட ரென்றுங்
கேடிலா தானை யிறைஞ்சி நின்றே
"யாட்கொள வந்த மறையவனே!
யாரூ ரமர்ந்த வருமணியே!
வாட்கயல் கொண்டகண் மங்கை பங்கா!
மற்றுன் பெரிய கருணை யன்றே
நாட்கம லப்பதந் தந்த தின்று
நாயினே னைப்பொரு ளாக" வென்றார். ௧௨௮

(இ - ள்) கேட்க...நின்றே - திருவாக்குக்கேட்டலும் நம்பிகள் எக்காலத்தும் அழி வில்லாதவராகிய புற்றிடங் கொண்டாரை மிக்க விருப்பத்துடன் வணங்கி நின்று; "ஆட்கொள...ஆக"-"(அன்று உலகுக் காளாவதைத் தடுத்து) உனக்கு ஆளாகக் கொள் ளும்படி வந்தருளிய மறையவனே! (இன்றும் அது போலவே ஆளாகக் கொள்ளத்) திருவாரூரிலே விரும்பி எழுந்தருளிய அரிய மணிபோல்பவரே! வாளின் தன்மையும் கயல் மீனின் தன்மையும் தம்மிடத்தே வைத்துக் கொண்ட கண்களையுடைய உமை அம்மை பங்கரே! நாய் போன்ற என்னையும் ஒரு பொருளாக மதித்து (அன்றுபோ லவே) இன்றும் உனது புதிதலர்ந்த பாத தாமரையாகிய அருளைத் தந்த செயல் (எனது தகுதியாலன்றித்) தேவரீரது பெருங் கருணையா லல்லவா நேர்ந்தது"? ; என் றார் - என்று துதித்தார்.

(வி - ரை) கேட்க - விரும்பி - இறைஞ்சிநின்று மறையவனே - மணியே - பங்கா தந்தது - கருணை யன்றே என்றார் என வினைமுடிவு செய்க.

விரும்பி - விருப்பம் மிகுந்தவராய்.

என்றும் கேடிலாதான் - நித்தியமாக உள்ளவன் - அழிவில்லாதவன். ஆன்மாக்களும் கேடிலாதவையாயினும் அவை எடுக்கும் அழியும் தன்மை வாய்ந்த உடம்பின் சார்புபற்றி அவையும் கேடடையும் என்று உபசரிக்கப் பெறும். இறைவன் அவ்வாறு கேடிலாதவன் என்க.

ஆரூர் அமர்ந்த - திருவாரூரை விரும்பி எழுந்தருளியிருந்த.

"அமரர்நா டாளாதே யாரூ ராண்ட வயிராவணமே"

"மாதோர் பாகந் திருவினுள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"—**திருவாரூர்-திருத்தாண்டகம்**

என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

அருமணியே - புற்றிலே அரவின் மணியிருத்தல் இயல்பாதலின் **மணியே** என்றார்.

வாட் கயல் கொண்ட கண் - உயிர்களின் மலம் அறுத்தலால் வாளின் தன்மையும், அருட்பார்வையாற் கட்டு நீக்கி (மீன் தனது முட்டைகளைப் பார்த்தலாலே அவற்றுட் கட்டுண்டு இருக்கும் குஞ்சுகளைக் கட்டு நீங்கி வெளிவந்து குஞ்சுகளாகக் குலாவச் செய்தல்போல) நிலவச்செய்தலால் மீன் பார்வைத் தன்மையும் ஒருசேரத் தன்னிடத்தே கொண்ட கண்களையுடையார் உமாதேவியார். பாசநீக்கமும் சிவப்பேறும் என்ற இரண்டும் தருவது திருவருளே யாதலின் வாளும் கயலும் என இரண்டு உவமை கூறினார். உருவத்தால் வாள் போன்ற தாயினும் செயலால் கயலின் தன்மை கொண்ட என்றுரைத்தலுமாம். முன் தடுத்தாட்கொண்டது பாசநீக்கமாகிய வாளின் தன்மையும், தன்னையே தந்து அநுபவிக்கச் செய்தது சிவப்பேறாகிய கயலின் தன்மையுமாதலின் இவற்றை முறையே மேலே கூறிய **மறையவனுக்கும் மணிக்கும்** பொருத்திப் பொருள் உரைத்துக் கொள்க. வாள்-கயல்-இவ்விரண்டின் நலத்தையும் கொண்ட கண் என்பது இராமநாதச் செட்டியார் குறிப்பு.

மற்று உன் பெரிய கருணையன்றே பதம் தந்தது இன்று-(மற்று - வேறாக. பொது நோக்காலன்றி என்மேற்) சிறப்பாக வைத்த உனது பெருங்கருணையே நீ தோழனாய் இப்பெருமையாகிய உனது திருவடித்துணையைத் தந்தது என்றபடியாம். நமது தகுதியின்மையையும் சிறுமையையும்,(அங்ஙனமாகவும் பிழைபொறுத்து மீளா ஆளாக ஆளும்) அவரது கருணையின் பெருமையையும் எண்ணவேதான் அவர்பால் அன்பு பெருகி நாம் உய்ய ஏதுவாகும் என்பது.

"அத்தாவுன் னடியேனை யன்பா லார்த்தா
யருளோக்கிற் றீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயே னாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ? ஐய! வையோ!!
எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே"
—**அப்பர் சுவாமிகள் - பொதுத் திருத்தாண்டகம்**

"வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவனே"—**திருவாசகம் - அடைக்கலப்பத்து**

என்று வருவனவாதி திருவாக்குக்கள் காண்க.

நாயினேனைப் பொருளாக - நாய் போன்ற என்னையும் ஒரு பொருட்படுத்தி. பொருளில்லாத நான் ஒரு பொருள் ஆகும்படி என்றுரைத்தலுமாம். "நாயினேனை நலமலி தில்லையுட், கோலமார்தரு பொதுவினில் வருகென" (கீர்த்தித் திருவகவல்.)

"நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருளாக்கித்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்"—திருப்பூவல்லி - 3.
"நாயிற் கடையா நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்"—குழைத்தபத்து-8
"நாய்சிவிகை யேற்றுவித்த வம்மை"—அச்சோப்பத்து - 6.

எனவரும் திருவாசகங்கள் காண்க. உண்ணத் தக்க பொருள் இருப்பவும், மலம் உண்பது நாய்க் குணம். இறைவன் தந்த அறிவும், நூலும், நற்சார்பும் இருக்கவும், தீச்சார்பாகிய உலகை அனுபவிக்கும் உயிர் இயல்புபற்றி நாயை உவமிப்பது பெரியோர் கொள்கை. ஆனால் நாய்க்குள்ளதொரு நற்குணமாகிய எசமான விசுவாசம் ஒன்றும் தம்மிடமில்லை என்றும் வருந்துவர் பெரியோர்.

"நாய்வயி னுள்ள குணமுமில் லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன்"—திருக்கோவையார் - 343.

பதம் தந்தது - திருவடி அருட்சொரூபமாவது. இறைவனது அருட்சத்தியே திருவடியாகக் கூறப்பெறும். ஆதலின் அருள்செய்த தென்பது பதந்தந்த தென்றார்.

"திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்ச முட்டெளி வார்க்கே"
—திருமூலர் திருமந்திரம் - உபதேசம் - 26.

என்றபடி கருணையினால் உமது திருவருளையே தந்தாய் என்பதாம்.

இன்று - நான் உனைத் தரிசித்த இப்போதே. 128

275. என்று பலமுறை யால்வ ணங்கி
யெய்திய வுள்ளக் களிப்பி னோடும்
வென்றி யடல்விடை போன டந்து
வீதி விடங்கப் பெருமான் முன்பு
சென்று தொழுது துதித்து வாழ்ந்து
திருமா ளிகைவலஞ் செய்து போந்தார்;
அன்று முதலடி யார்க ளெல்லாந்
தம்பிரான் றோழ ரென்றே யறைந்தார். ௧௨௯

(இ - ள்) வெளிப்படை. என்று துதித்துப் பலமுறையாலும் வணங்கி, மிக்க மனமகிழ்ச்சியுடனே வெற்றிபொருந்திய போரேறு நடப்பதுபோலத் (திருமூலட்டானநாதர் சந்நிதியிலிருந்து) நடந்து சென்று வீதிவிடங்கராகிய தியாகேசர் சந்நிதியிற் போய், வணங்கியும் துதித்தும் அதனால் வாழ்வடைந்தவராய்த் திருமாளிகையை வலஞ் செய்து (நம்பிகள்) வெளிப்போந்தார். அதுமுதல் அடியார்கள் எல்லாரும் நம்பிகளுக்குத் **தம்பிரான்றோழர்** என்ற பெயரையே வழங்கினார்கள்.

(வி - ரை) என்று - மேற் சொல்லியவாறு துதித்து.

பலமுறையால்-அட்டாங்கபஞ்சாங்கமாகப்பலமுறையாலும். முற்றும்மைதொக்கது.

எய்திய - அவ்வணக்கத்தால் உண்டாகிய.

வென்றி அடல்விடைபோல் நடந்து - அடையா தாரைப்பொருது வெற்றிகொண்டு அடைந்தாரைக் காக்கும் (பெருமானது) இடபத்தின் நடைபோல நடந்தார். இது சிவபெருமானைத் தமக்குஉற்ற (என்றும் நீங்காத) தோழராகப்பெற்ற பெருமைகொண்ட உள்ள நிகழ்ச்சியினால் உளதாகிய புறநிகழ்ச்சி. "ஏறுபோற் பீடுநடை" - என்ற திருக்குறளுங் காண்க.

"அண்ணல் அரண் முரண் ஏறும்"—அப்பர் சுவாமிகள் - திருவதிகை.

"போரேற்றை விலங்கவருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்"—திருநாளை - புரா-17 எனவரும் திருவாக்குக்களின் கருத்துக்களை உன்னுக. அடல் - அடுதல்; போர்செய்து விலக்கல். அடலினால் வென்றிதரும் விடை. வென்றி விடை - அடல்விடை-எனக் கூட்டுக. "அடல் வேண்டு மைந்தன் புலத்தை" (குறள்). அடல் - வலிமை எனக்கொண்டு வென்றி தரும் வலிமையுடைய விடை என்றுரைப்பதுமாம்.

நடந்து - இன்ப வெள்ளத்திடைத் திளைத்து மூழ்கி அவ்வாறே பெயராது நின்றவர் இப்போது அதினின்றும் பெயர்ந்து நடந்தனர். மூழ்கி நின்ற நம்பிகளை இறைவன் கேட்பித்த வாக்கு எழுப்பி நடக்கச்செய்யவே, புற்றிடங் கொண்டாராகிய திருமூலட்டானர் சந்நிதியிலிருந்து தியாகேசர் சந்நிதிவரை சென்ற நிலையை **நடந்து** என்று குறிப்பித்தார்.

வீதிவிடங்கப் பெருமான் - தியாகேசர். திருமூலட்டானத்திலே இறைவனது அருவுருவத் திருமேனியைத் தரிசித்து அதன்பின் உருவத் திருமேனி தாங்கிய தியாகேசரைத் தரிசிப்பது முறை. அருவுருவத்தினின்று உருவந் தோன்றுமென்பது சாத்திரம். இத்திருவுருவம் சிவபெருமானது 25 மூர்த்தங்களிற் சிறப்பாக வைத்தெண்ணப் பெறுவதாகிய சோமாஸ்கந்த மூர்த்தமாம். வீதியில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரியும் தியாகேசர் "விடைமருவும் பெருமா"னாய் வருவாராதலின், அவரைத் தரிசித்துத் தமக்குள் இருத்திக்கொள்ளச் செல்லும் நம்பிகள் **விடைபோல் நடந்து** சென்றார் என்ற சிறப்பை நோக்குக. அவரைத் தமக்குள்ளே எப்போதும் எழுந்தருளுவித்துத் தாங்கிக்கொண்டு உலகுக்கு உபகரிக்க வருகின்றார் நம்பிகள் என்பது குறிப்பு. வரிசை 130-ம் பாட்டின் உரை காண்க.

தொழுது - துதித்து - வாழ்ந்து - தொழுதல் - உடம்பின் செயல்; **துதித்தல்** - வாக்கின் செயல்; **வாழ்தல்** - இவரை அடையப்பெற்றோம் என்று மகிழும் மனத்தின் நிகழ்ச்சி; மனம் வாக்குக் காயமாகிய மூன்றின் செயலும் கூறியபடி. 'இவரை அடையப் பெறாது பலர் தமது பொய்வாழ்வை மெய்யாக் கருதி இறக்கின்றார்; நாம் இவரை அடைந்து வாழ்ந்தோம்' என்ற அனுபவம் குறித்ததாம். "உன் பொற்பாத மடையப் பெற்றால் அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே" (திருவானைக்கா - திருத்தாண்டகம்); "வாழ்ந்தனம் என்று...ஏனையோர் வாழும் வாழ்க்கையும்" (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை) முதலியவற்றின் கருத்துக்களை நோக்குக. "இம்மையும் பயவா தம்மையு முதவாது, செச்சைக் கண்டத் தொத்தூன் போல, வாழ்வோர் வாழ்க்கையும் உலகுடைத்து" - (ஞானமிர்தம்)

திருமாளிகை வலஞ் செய்து - வரிசை 270-ல் கூறிய திருமாளிகையாம். திருமாளிகையை வலம் வந்தபின்பு உள்ளே சென்று பெருமானைத் தரிசித்தலும், தரிசித்தன் பின்பு அவ்வாறே வலம் வந்து வெளிப்போதலும் சிவாலயதரிசன விதியாம்.

தம்பிரான்றோழர் - தமது முதல்வனையே தமக்குத் தோழனுமாகப் பெற்றவர். தம்பிரானுக்குத் தோழர் - என்றுரைப்பாருமுண்டு. 129

276. மைவளர் கண்ட ரருளி னாலே
வண்டமிழ் நாவலர் தம்பெ ருமான்
சைவ விடங்கி னணிபு னைந்து
சாந்தமு மாலையுந் தாரு மாகி
மெய்வளர் கோலமெல் லாம்பொ லிய
மிக்க விழுத்தவ வேந்த ரென்னத்
தெய்வ மணிப்புற்று ளாரைப் பாடித்
திளைத்து மகிழ்வொடுஞ் செல்லா நின்றார். ௧௩௦

(இ - ள்) வெளிப்படை. இறைவனது திருவருளினாலே நம்பிகள் ஆதிசைவருக்குரிய சுந்தர வேடங்களை மேற்கொண்டு, சந்தனம், மணிமாலை, பூமாலை என்ற இவற்றையும் பூண்டு, இவ்வாறு மெய்வளர் கோலங்களெல்லாம் விளங்க, மிக்க தூய தவவேந்தர் இவரேயென்று சொல்லுமாறு தெய்வ மணிப் புற்றிடங்கொண்டாரை அன்றுமுதல் நாள்தோறும் சென்று வணங்கிப் பாடித் துதித்து அதனாலுண்டாகிய இன்பத்திலே மூழ்கி வாழ்ந்து வருகின்றார்.

(வி - ரை) **வண்டமிழ்** - விரும்பியவர் விரும்பியவற்றை வரையாது கொடுக்கும் வள்ளற் றன்மையுடைய தமிழ். (இதனை நம்பிகள் சரிதத்திற் பின் நிகழ்ச்சிகளால் அறிக.) நம்பிகளுக்குத் தந்ததோடு அன்றுமுதல் இன்றுவரை அதனைப் பத்தியாற் பயிலும் அன்பர் எல்லாருக்கும் அவ்வாறே கொடுத்து வருதல் கண்கூடு. "மீளா அடிமை" எனும் திருப்பதிகத்தை முறையாகப் பயின்று கண் பெற்றாரையும், "தம்மையேபுகழ்ந்து" என்ற பதிகத்தாற் பொன்பெற்றாரையும், இவ்வாறே பிறர் பலரையும் இன்றைக்கும் காணலாம்.

சைவ விடங்கின் அணி - திருநீறு, உருத்திராக்கம், மகரக்குழை முதலிய ஆதிசைவத் திருவேடங்கள், பூணூல் முதலியன. இவை வைதிகவேடம். **விடங்கு** - அழகு. "சுந்தர வேடங்களாற் றுரிசேசெயுந் தொண்டனெனை", "விடங்காகித் திரிவ தென்னே" என்ற நம்பிகள் தேவாரங்கள் காண்க.

சாந்தமும் எல்லாம் - சந்தனம், மணிமாலை, பூமாலை, பொற்பட்டு முதலியன. இவை வேந்தர்க்குரிய வேடம்.

இவை இரண்டுமே புனைந்து முன்னர்த் திருமணத்திலே விளங்கினார். "மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க" என்றமை காண்க. அன்று கொண்ட கோலத்தையே புனைந்து மண்மேல் விளையாடுமாறு இறைவன் ஆணையிட்டமையின் அதன்படி ஆரூரர் வாழ்ந்ததை அறிவித்தவாறு.

மெய்வளர் கோலம் - நம்பிகள் கொண்டது சத்தாகிய கோலங்கள். கண்டார் உள்ளத்தே மெய்மையை (சத்துப்பொருளை) வளர்த்தற்குத் துணையாயுள்ள கோலம். பிறர் செய்யும் உடம்பின் அலங்காரங்கள் எல்லாம் கண்டாரை உலக இன்பத்தில் வீழ்த்த வல்லனவேயன்றி உண்மையை உணர்த்தமாட்டா.

மிக்க விழுத்தவவேந்தர் - தவமாவது சிவபூசையே யாதலின் சைவவிடங்கின் திருவேடத்தாரைத் **தவவேந்தர்** என்றார். தவவேடமும் மன்னவர் திருவும் கொண்ட கோலமாதலின் **தவவேந்தர்** என்ற பெயராற் கூறினார். அழியத் தக்கவையாகி, அடியவரால் அருவருத்துத் தள்ளப்படும் பயன்களைத் தரும் ஏனைய தவங்கள் போல மலநடையாய்க் கழியாது, இறவாத இன்பவெள்ளந் தரும் அருள்நடையாகிய பாலுணர்வினா லுணரும் மெய்த்தவமாதலின் **விழுத்தவம்** என்றும், அத்தவமுடையாரெல்லாம் எமது குலதெய்வமெனப் போற்றுந் தலைமை பெற்றவராதலின் நம்பிகளைத் **தவவேந்தர்** என்றும் கூறினார் என்றலுமாம்.

உள்ளே தவமும், புறத்தே கோலமும் உடையார் என்பாருமுளர். தவஞ் செய்வாரில் தலைமை பெற்றவர் என்று உரைத்தலுமாம். பெருமிழலைக் குறும்பரெனும் பரமயோகியார் இவரை வழிபட்டதனாலே இறைவனை யடைந்தமையாலும், பிறவாற்றாலும் இது அறியப்படும். "அறந்த முனிவர் தொழும்பரவை துணைவா" என்ற சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கும் காண்க.

தெய்வமணிப்புற்று - மணித்தெய்வம் உள்ள புற்று என்றுரைத்தலுமாம். அதில் உள்ளார் திருமூலட்டானநாதர். வன்மீகநாதர் இவரொன்றும், தியாகேசப் பெருமான் இவரொன்றும் பிரித்து வேறாய்த் தரிசிக்க உள்ள மூர்த்திகள். இவ்விரண்டு மூர்த்திகளையும் ஒன்றாக மயங்கி உரை கூறுவாருமுண்டு.

திளைத்து மகிழ்வோடும் - திளைத்தல் இன்பத்திலே மூழ்குதல். அப்போது யான் மகிழ்கின்றேன் என்ற உணர்ச்சி உண்டாகாது. அதன் பின் அஃது உணரப்பெற்று மகிழ்ச்சியை விளைவிக்குமாதலின், திளைத்து அதனுலுளதாம் மகிழ்ச்சியுடன்-என்க.

செல்லா நின்றர் - இவ்வாழ்வு பல நாளும் நிகழ்ந்து வருகின்றதாதலின் நிகழ் காலத்திற் கூறினர். 130

வேறு

277. இதற்குமுன் னெல்லை யில்லாத் திருநக ரிதனுள் வந்து
முதற்பெருங் கயிலை யாதி முதல்வர்தம் பங்கி னாட்குப்
பொதுக்கடிந் துரிமை செய்யும் பூங்குழற் சேடி மாரிற்
கதித்தபூ ணேந்து கொங்கைக் கமலினி யவத ரித்தாள். ௩௩௧

(இ - ள்) வெளிப்படை. நம்பிகள் திருவாரூர்க்கு எழுந்தருளுதற்கு முன் காலத்திலே, அளவுட்படாத இத்திருவாரூர் நகரத்திலே வந்து, ஆதிகயிலையில் இறைவனது பங்குடையாளாகிய உமாதேவியார்க்குச் சிறப்பாக ஏவல்செய்யும் இரண்டு சேடிமாருள்ளே, கமலினியார் அவதரித்தார்.

(வி - ரை) **எல்லையில்லாத் திருநகர் இதனுள்** - காலத்தாலும் பிறவாற்றாலும் அளவிடமுடியாத இத்திருநகரத்தினுள்ளே. இதன் அளவுபடாத் தன்மை முன்னே உரைக்கப்பட்டது. இத்தலத் திருத்தாண்டகத்தும் திருநகரச் சிறப்பிலும் மீண்டும் காண்க. சிவஞானப் பெருமை அளவின்றி நிறைந்த இந்தத் தலத்திலே என்பர் மகாலிங்கையர்.

முதற்பெருங் கயிலை - முதன்மையாகிய பெருமையுடைய கயிலாயமலை. எல்லாத் தேவரிடங்களுக்கு முதலாய்ப் பெருமை பொருந்திய கைலாசகிரி என்பாருமுண்டு.

ஆதிமுதல்வர் - "மூல முதல்வர் சிவலோக மெய்தப் பெற்றான்" (சண்டீசர் - புரா - 58) என்றது காண்க. ஆதிகாரணராகிய சிவபெருமான். அந்தத்திற்குக் காரணராயிருக்கும் அதனாலே ஆதி - தொடக்கத்தும் - காரணரானவர். ஆதிபகவன் என்புழிப் போல இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இனிச், "சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதாம்" என்பதுபற்றி ஆதிசத்தியொடு கூடிய முதல்வன் என்பாருமுளர்.

பங்கினாள் - ஒரு பாகத்தையுடைய உமாதேவியார்.

பொதுக் கடிந்து உரிமை செய்யும் பூங்குழல் சேடிமார் - பணிசெய்தல் தமக்கும் பிறர்க்கும் பொதுவாய் உரியது என்றதை நீக்கித் தமக்கே சிறப்பாய் உரியதாக்கிக் கொண்டு பணிசெய்யும் சேடியர்கள் இருவர். அவர்கள் அநிந்திதை, கமலினி என்பார். **பொதுக்கடிந்து** என்பதற்கு உமாதேவியார்க்கே பணிவிடைசெய்து மற்றையோர்க்குச் செய்தலை யொழிக்கும் என்றலுமாம். "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும் பெருந்துணையை" என்பது திருத்தாண்டகம். "வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்" வரிசை 85.

கதித்த - (கதிர்) ஒளிவீசும் - பிரகாசிக்கின்ற. **கதித்த** - என்று பாடங்கொண்டு பெரிதாய் ஓங்கிய என்று பொருள் கூறுவாருமுண்டு. இப்பொருள் **ஏந்து** என்றமையாலே பெறப்படும்.

கமலினி - கமலையாகிய ஆரூரில் கமலினியார் வந்தவதரித்தல் பொருந்துவதே.

இரு சேடியர் திருக்கயிலையிலிருந்து ஆணையின்வழிப் பூவுலகில் வந்த வரலாறு முன்னர்த் திருமலைச் சிறப்பிற் காண்க. இவர்கள் வந்த காரியம் நிறைவேறி மீண்டும் திருக்கயிலையில் அம்மையாரது சேடியர்களாய் அமர்ந்தனர் என்பது வெள்ளானைச் சருக்கம் 50-வது பாட்டிற் காண்க. இவ்விரு சேடியர்களில் மற்றவராகிய அநிந்திதை

யார் திருவொற்றியூரிலே சங்கிலியாராய் நிகழ்ந்த வரலாறு ஏயர்கோன்கலிக்காம நாய
ஞர் புராணத்துட் (206-269) காண்க. 131

278\. கதிர்மணி பிறந்த தென்ன வுருத்திர கணிகை மாராம்
பதியிலார் குலத்திற் றோன்றிப் பரவையா ரென்னு நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோ ரான்ற
மதியணி புனித னன்னாண் மங்கல வணியாற் சாற்றி, ௧௫௨

279\. பரவினர் காப்புப் போற்றிப் பயில்பெருஞ் சுற்றந் திங்கள்
விரவிய பருவந் தோறும் விழாவணி யெடுப்ப மிக்கோர்
வரமலர் மங்கை யிங்கு வந்தன ளென்று சிந்தை
தரவரு மகிழ்ச்சி பொங்கத் தளர்நடைப் பருவஞ் சேர்ந்தார். ௧௫௩

278\. (இ - ள்) கதிர்...தோன்றி - (அவ்வாறு அவதரித்த அவர்) கதிர்மணி பிறந்ததுபோல உருத்திர கணிகைகள் என்று சொல்லப்பெற்ற பதியிலாளர் குலத்திலே அவதரித்து; பரவையார்...சாற்றி - பரவையார் என்கிற நாமத்தைச் சாத்திரவிதிப்படி வந்த விளக்கத்தினால் மிக்க பெரியோர்கள், பிறையணிந்த தூய இறைவனது நாளாகிய திருவாதிரை நாளிலே, மங்கல அணிகள் செய்து சாற்றக்கொண்டு,

279\. (இ - ள்) பரவினர்...எடுப்ப - பயின்ற பெருஞ்சுற்றத்தார்கள் கூடி உரிய தெய்வங்களைக் (பிறந்த முதற்றிங்களிலே) குழவியைக் காக்குமாறு துதித்து (அதன் பின்) அந்தந்த மாதங்களிற் கூடுகின்ற அவ்வப் பருவங்களிலெல்லாம் உரிய விழாக்களை அணிபெறச் செய்ய; மிக்கோர்...பொங்க - அறிவான் மிகுந்தோர் செந்தாமரை மலரில் விளங்கும் இலக்குமியே இங்கு வந்து அவதரித்தனள் என்று மனமிக மகிழ; தளர்... சேர்ந்தார் - தளர்நடைப்பருவத்தை அடைந்தார்.

278\. (வி - ரை) இப்பாட்டிலே, பேரிடுதல் - நாட்செய்தல் என்ற சடங்குகளைக் கூறினார். இவற்றை நாமகரணம், சாதகர்மம் என்பர் வடநூலார்.

கதிர்மணி பிறந்ததென்ன - (குலத்திலே) சிறந்த ஒளியுடைய மணிபிறந்தது போல. உருத்திரகணிகையர் குலத்தவர் யாவரும் அரன்சார்பும், அடியார் சார்பும் உடையர் ஆதலின் அவரனைவரும் மணிகளே. அவர்களுள்ளே சிறந்தமணி பிறந்ததுபோலத் தோன்றி என்க. 'முறுக வாங்கிக் கடைய' மணியிற் சோதி (கதிர்) பிறப்பதுபோல, இவர் அக்குலமாகிய மணியின் தவத்தாற் பிறந்தார் என்றுரைத்தலுமாம்.

உருத்திரகணிகைமாராம் பதியிலார்குலம்-உருத்திரகணிகையர் என்ற பேருடைய பதியிலாதார் மரபு. இவர்கள் மரபு வேறு; சேரிப்பரத்தையர் மரபு வேறு. இவர்கள் செய்து வந்த கோயிற்பணிகளிற் சிலவற்றைப் பின்னாளிற் பரத்தையர் கைக்கொண்டனர் என்று சொல்ல இடமுண்டு.* விரிவு காமிகாகமம், ஆசாரிய லட்சணப் படலம் 225 முதல் 350 வரை சுலோகங்களிலும், பிற உரிய நூல்களிலும் காண்க.

---

*இவைபற்றிப் பற்பலவாறு ஆராய்ச்சிகள் எழுந்து பெருமயக்கிற் கிடந்தன. இவ்விருசாராரையுமின்றிப் பெண்கள் தம்மை இறைவன் பணிக்கே ஒப்புவித்துத் துறவு பூண்டு ஒழுகியவர்களுமுண்டு. அன்னார் எக்குலத்தாராயினும் ஆகலாம். அவர் மேற்கூறிய இருமரபினருடன் மயங்கியறிதற்பாலரல்லர். முதலிற் பெண்டிர் துறவிகளாயிருந்து, பின்னர் மரபு வளர்ச்சிக்குரிய உருத்திரகணிகையராகி, அதன்பின் அவர்களே நாளடைவில் இழிதொழிற் பரத்தையர் குலத்தவராயினர் என்று கூறுவாருமுண்டு. இவையெல்லாம் ஒரு கருத்தை வைத்துக் கொண்டு அதற்கேற்பச் செய்திகளைப் பொருத்தி முடிபுகள் செய்யும் தவறான ஆராய்ச்சிமுறையாம். பரத்தையர் சேரியும், பரத்தையிற் பிரிவும் தொல்காப்பிய முதலிய மிகப் பழந்தமிழ் நூல்களிற் பல்லாயிர

இச்சை ஞானம் கிரியை என்ற சிவசத்திகள் மூவரின் நூபுரச் சத்தத்திலிருந்து முறையே உருத்திரகணிகை, உருத்திரகன்னிகை, உருத்திரதாசி என்ற மூவகையார் உண்டானார்கள் என்று காமிகாகமம் பேசும். இவர்களது இலக்கணங்களையும் ஒழுக்கங்களையும், இவர்கள் ஆலயங்களில் முறையே செய்யவேண்டிய திருப்பணிகளையும், ஆங்கு விரிவாய்க் காணலாம். உருத்திரகணிகை,மகாமண்டபம் முதல் கருப்பாவரணப்பிராகாரம் வரை திருவலகு திருமெழுக்கு இட்டுப் பஞ்சசூர்ணங்களினால் அலங்கரித்துச், சுத்தமாயிருந்து, பூசை நேரங்களில் தீபங்களை ஏந்தியும், கானம் செய்தும், நிர்த்தனம் செய்தும், உபசரிக்கத்தக்கவள். சுத்தம், மிசிரம், கேவலம் என்ற மூவகை நிர்த்தனங்களிலே சுத்தநிர்த்தனமே உருத்திரகணிகைக்கு விதிக்கப்பெற்றது. ஆசாரியனால் பொட்டு அணியப் பெற்று அவனை நாயகனாகக்கொள்வதும் இவளுக்கு உரியதாம். இன்னும் இவ்வாறே துர்க்கை இலக்குமி சரச்சுவதி என்ற இவர்களுடைய பாதச் சிலம்பொலியினின்றும் முறையே இராசகணிகை, கிராமகன்னிகை, தாசி என்பவர்கள் உண்டானார்கள் எனவும், இவர்கள் இலக்கணம், கடமை, வாழ்க்கைத் திறம், மரபுவளர்ச்சி முதலியவை இன்ன எனவும் ஆங்கே விரிவாய்க் கூறப்பெற்றுள்ளன.

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்" (9)

"எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க" (19)

என வரும் திருவெம்பாவைத் திருவாசகங்களையும் காண்க.

"வெண்மதியின் கொழுந்தணிந்த வீதிவிடங்கப் பெருமான்
ஒண்ணுதலார் புடைபரந்த வோலக்க மதனிடையே
பண்ணமரு மொழிப்பரவை யார்பாட லாடற்னைக்
கண்ணுறமுன் கண்டுகொண்டார் போலக் கருதினார்"—ஏயர் - புரா - 271

என்றதனால் இம்மரபினர் செய்யும் கோயிற் பணி விளங்கும். பின்னர்ப் பரவையாருக்கும் நம்பிகளுக்கும் கலியாணம் நிகழ்த்தும்படி அடியார்களை ஏவ, அவ்வாறே மணம் நிகழ்ந்தது என்பதனால் இத்தகைய கலியாணங்கள் இக்குலத்திலே அந்நாளில் வழங்கி வந்தமை உணரப்பெறும். "அன்றங் கவர்மன் றலைநீர் செயும்", "மங்கை பரவை தன்னைத் தந்தோம்", "அணியஃ தாரு ரன்பான் மணம்", "பரவை வதுவை தருநீர் மையினால் நிகழச் செய்தார்" என வருவன காண்க.

உண்மை இவ்வாறாகவே, பண்டைநாளில் இவர்களுக்கு மரபு வளர்ச்சி கிடையாது என்றும், உலக வாழ்விற்குத் தகுதியற்ற பெண்கள் இறைவனையே பதியாகக் கொண்டொழுகினர் என்றும், பின் மற்றும் சிலர் அவர்களோடு கலத்தலாகி உலக இன்பம் துய்த்துக்கொண்டு இறைபணி செய்ய எண்ணினர் என்றும், பின்னாளிற் கோயிற்றலைவர்களின் அடக்குமுறையால் கொடுமைக்கு ஆளாகி நாளடைவில் வேசையராயினர் என்றும் இவ்வாறு எழுந்த ஆராய்ச்சிகள் உண்மை நிலைக்கு மாறானவை என்று காணலாம்.

ஆண்டுகளின் முன்னரே பேசப்பெற்றன. "ஏமப்பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும், தாமே செல்லுந் தாயரு முளரே", "...பரத்தையி னகற்சியிற் பரிந்தோட் குறுகி, யிரத்தலுந் தெளித்தலு மெனவிரு வகையோ, டுரைத்திற நாட்டங் கிழவோன் மேன" என்பன முதலிய தொல்காப்பிய அகத்திணையியற் சூத்திரங்களையும், அவற்றின்கீழ் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையையுங் காண்க. இவற்றிற் கிலக்கியங்களாகிய திருச்சிற்றம்பலக் கோவையார் முதலியவற்றிற் காணும் பரத்தையிற்பிரிவு முதலிய துறைகளையுங் காண்க.

பதியிலார் குலங்கள் மேற்கூறியவாறு பலவாதலின் அவற்றினுள்ளே பிரித்துக் காட்ட **உருத்திர கணிகைமாராம்** என்று கூறினார்; பிறிதி னியைபு நீக்கிய விசேடணம். **பதியிலாளர்** - என்பது கல்வெட்டுக்களிற் கண்ட பெயர்.

"உருத்திரகணிகையர் பரமசிவனுக்குத் தாங்கள் செய்யவேண்டிய ஊழியஞ் செய்துகொண்டு மணமின்றி ஒருவரையே கணவராக வுடையவர்கள். இக்காலத்தில் அந்த நடை தவறிற்று" என்பது திரு. மகாலிங்கையர் உரை. "தனக்கொரு நாயகனில்லாத உருத்திரனைப்போல் இவ்வுலகில் தமக்கு நாயகனைக் கொள்ளாமல் உருத்திர நாயகியை நாயகமாகக் கொண்டிருக்கும் உருத்திர கணிகையர்களுடைய குலம்' என்பர் திரு. ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள். "உருத்திரகணிகையர் - வேசியர்க்கு வேறாய் மணமின்றி உயர்ந்த சாதியர்களில் ஒருவனைக் கணவனாகக் கொண்டு பூசா காலத்தில் சுத்த நிருத்தஞ் செய்யும் மகளிர்கள்" என்பது ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரையிற் கண்டது. பதியிலார் குலம் என்பதற்குத் "தங்கட்கு ஒரு நாயகனையும் எய்தாதவர்களாகிய உருத்திர கணிகையர் குலம்" என்று பொருள்கூறி "இதனாற் பல புருடரைச் சேர்ந்து விபசரிக்கும் வேசியரையே உருத்திர கணிகையாக மயங்கியது அஸங்கதமாயிற்று. விபசாரஞ் செய்வோர் வேசியரே யன்றித் தாசியரன்று. அவ்வேசியரைத் தாசியராகக் கோடல் தவறு. காலகதியால் பிரகிருதத்தில் வேசியரே தாசியராக நியமிக்கப்படுகின்றனர். தாசியரும் வேசித் தொழில் புரிகின்றனர். இவ்வநிஷ்டாசாரம் பிரமாண மாகாது..." என்று மேற்கோளும் காட்டினர் திரு. சு. சுப்பராய நாயகர் அவர்கள். இவ்வுரைகளை மேலே காட்டிய முதனூற்பிரமாணங்களுடன் ஒப்புநோக்கி உண்மை தெளிக.

குலத்தில் தோன்றி - குலத்தில் ஒருவருக்கு மகளாய் அவதரித்து. இவரது தாயார் பெயர் கூறப்படாததாலும் குலத்தில் என்றமட்டிலே கூறப்பெற்றதன்றி ஒருத்தி வயிற்றில் என்று கூறப்பெறாததாலும் பரவையார் ஒரு தாய்வயிற்றினல்லாது அயோநிசராக அவதரித்தார் என்று கொள்வாருமுண்டு. முன்னர்க்கூறிய நம்பிகள் திரு அவதாரமும், அதுபற்றிய அவர்களது தேவாரங்களும், பின்னர் வரும் சங்கிலியார் திரு அவதாரமும் ஒப்புநோக்கிக் காணப்புகின் இக்கொள்கை வலியுடைத்தன்று என்பதாம்.

விதியுளி விளக்கத்தால் - நூல்களில் விதித்தபடி விளங்கினவாறு. இவை நாம கரணத்துக்கு உரிய நூல்விதிகள். இதனை இடைநிலைத் தீவகமாய்ச் சாதகருமத்துக்கும் கொள்க.

மேதகு சான்றோர் - மேன்மை பெற்ற தக்க பெரியோர் பேர்வைத்தலும் சாதகருமம் செய்தலும் கற்றுத் தேர்ந்த பெரியாரைக் கொண்டு செய்தல் முறை. சுற்றத்தார்கள் பிள்ளைக்குரிய பிறபருவவிழாக்கள் செய்தற்குரியர் என்பது வரும்பாட்டிற் காண்க.

மதியணி புனிதன்-சிவபெருமான். **நன்னாள்** - அவனுக்குரிய நாள்-திருவாதிரை. உருத்திரகணிகையாதலின் உருத்திரனுக்குரிய இந்நாளைக் குறித்தனர் என்பர்.

நாமம் - நாமகரணச்சடங்கினையும், **நன்னாள்** - அது செய்த நாளையும் குறிக்கும். **சாற்றி** - சாற்ற. "நாமகரணத்தழகு நாள்பெற நிறுத்தி" திருஞான - புரா - 41. என்றது காண்க. 132

279. (வி - ரை) **பரவினர்** - பரவினராகி. முற்றெச்சம்.

காப்புப் போற்றி - **காப்பு** - காவல்செய்வது. இப்பருவத்தில் குழவிக்குச் சிறு தெய்வங்களால் இடையூறு நேராதபடி பலவகைக் காப்புக்களிடுவர்; நெற்றியில் பலவகைத் திலதமும் இடுவர். அறிந்தோர் இவைகட்கெல்லாம் மேலான பெருங்காப்பாகிய திருநீற்றை நெற்றியிலிடுவர்.

"வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியி னிறுத்தி நிறைவித்தார்"—**திருஞான - புரா - 43**

"நந்தகோபரும் வந்து குழந்தையை (கண்ணனை) எடுத்துக்கொண்டு கோமய சூர்ணத்தை அதன் சிரசில் காப்பாக வைத்து" என்ற விஷ்ணு புராணம் - பூதனையின் வதம். 307 ம் பக்கம் வரி 11 - 12 காண்க. கோமய சூர்ணம் - விபூதி - என்று அதன் கீழ்க் குறித்திருத்தலும் காண்க. "காப்பிட வாராய்! காப்பிட வாராய்!" என்ற நாலாயிரப் பிரபந்தம் பெரியாழ்வார் திருமொழி காப்பிடற் பதிகத்தாலும் யசோதை கண்ணனுக்குத் திருநீற்றுக் காப்பணிந்தமை புலனும். திருநீற்றுக்கு உள்ள இரட்சை என்ற பெயரும் இதனை விளக்கும்.

இப்பருவத்தைத் திருமால் முதலிய தேவர்களை விளித்து "இக்குழவியைக் காக்க" என்று வேண்டித், தாயரும் தாதியரும் துதிப்பதாகக், காப்புப் பருவம் என்று வகுப்பது பிள்ளைத்தமிழ் நூல்களின் மரபு.

திங்கள் விரவிய பருவம் தோறும் - மூன்றும் மாதம் முதல் மூவெழு திங்கள் வரைச் செங்கீரை முதலியனவாக வரும் பருவங்கள். இவற்றின் விரிவு இலக்கண நூல்களுட் காண்க. கண்ணப்பநாயனார் புராணத்தும், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தும் ஆசிரியர் கூறுவதும் காண்க. "நவிலு முத்திங்கள் முதலா நயந்த மூவெழு திங்க ளளவினிற் கேட்பிக்கு நன்மையதெனப் புகல்வரே" (அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்).

விழா அணியெடுப்ப - அவ்வப் பருவங்களுக்குரிய விழாக்களை அழகுறச் செய்ய.

மிக்கோர் - அறிவின் மிகுந்தோர். விழாஅணி எடுப்போர் சுற்றத்தாராக, ஏனை அறிவோரும் மகிழ்ச்சி பொங்கினர் என்பது.

வரமலர் மங்கை இங்கு வந்தனள் - முன்னர் இத்தலத்தே தவஞ்செய்து வரம் பெற்ற இலக்குமி தேவியே மீளவும் இக்குடியிலே நேரே வந்திருக்கின்றனளோ என்ற மகிழ்ச்சி. உவம வுருபின்றிக் கூறியது மகிழ்ச்சியின் மீக்கூர்தலைக் குறித்தது. "மன்னு மாமலராள் வழிபட்டது" என்று திருநகரச் சிறப்பைத் தொடக்கஞ்செய்து ஆசிரியர் அறிவித்தமை காண்க.

தளர்நடைப் பருவம் - குழந்தைகள் தத்தடியிட்டுத் தள்ளாடி நடக்கத் தொடங்கும் பருவம்.

> "வளர்பருவ முறையாண்டு வளர்வதன்முன் மலர்வரிவண்
> டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடனலையச் செங்கின்று
> கிளரொளிக்கிங் கிணியெடுப்பக் கீழ்மைநெறிச் சமயங்க
> டளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினார்" 50

என்று திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் ஆசிரியர் இதனை வகைப்படுத்திச் சுவைபெறக் கூறியது காண்க. பிரபுலிங்கலீலையில் சிவப்பிரகாச சுவாமிகள் இப்பருவங்களி னியல்பை அழகாக எடுத்துக் கூறியதும் காண்க.

(கமலினியார்) தோன்றி - சான்றோர் நாமஞ் சாற்ற - சுற்றம் பரவினராகிப் போற்றி அணியெடுப்ப - மிக்கோர் மகிழ்ச்சி பொங்கப் - பருவஞ் சேர்ந்தார் என்று தொடர்ந்து முடித்துக்கொள்க.

பருவஞ்செய்து—என்பதும் பாடம். 133

280\. மானிளம் பிணையோ? தெய்வ வளரிள முகையோ? வாசத்
தேனிளம் பதமோ? வேலைத் திரையிளம் பவள வல்லிக்
கானிளங் கொடியோ? திங்கட் கதிரிளங் கொழுந்தோ? காமன்
றனிளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ வென்ன. ௧௩௪

281\. நாடுமின் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க
ஆடுமென் கழங்கும் பந்து மம்மனை யூச லின்ன

பாடுமின் னிசையுந் தங்கள் பனிமலை வல்லி பாதங்
கூடுமன் புருகப் பாடுங் கொள்கையோர் குறிப்புத் தோன்ற. ௩௩௫

282. பிள்ளைமைப் பருவ மீதாம் பேதைமைப் பருவ நீங்கி
யள்ளுதற் கமைந்த பொற்பா லநங்கன்மெய்த் தனங்க ளீட்டங்
கொள்ளமிக் குயர்வ போன்று கொங்கைகோங் கரும்பை வீழ்ப்ப
வுள்ளமெய்த் தன்மை முன்னை யுண்மையுந் தோன்ற வுய்ப்பார். ௩௩௬

இம்மூன்று பாட்டும் ஒரு முடிபு கொண்டன. (அவ்வாறு தளர்நடைப் பருவஞ் சேர்ந்த பாவையார்) பிணையோ, முகையோ, பதமோ, கொடியோ, கொழுந்தோ, தனுவோ என்ன - நாடும் - பொற்பு வாய்ப்பு - வளர்ந்து பொங்க - ஆடும் கழங்கு, பந்து, அம்மனை, ஊசல், இன்ன - பாடும் இசை - பாதம் கூடும் கொள்கைக் குறிப்புத் தோன்றப் - பேதைமைப் பருவம் நீங்கிப் - பொற்பால் - கொங்கை அரும்பை வீழ்ப்ப - முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பாராயினர் என இம்மூன்று பாட்டும் தொடர்ந்து கூட்டி முடித்துக் கொள்க.

தளர்நடைப் பருவஞ் சேர்ந்த அவர், இளமைப் பருவம் அடைந்தமை ஒருபாட்டாலும், அதினின்றும் உரிய விளையாட்டும் பாட்டும் முதலிய பயிற்சி பெற்று வளர்ந்த வளர்ச்சி அடுத்த பாட்டாலும், அவ்வளர்ச்சி நிறைந்து பெண்மை தெருண்ட முற்றிய நிலை அதற்கடுத்த பாட்டாலும் கூறினர். முதற் கூறியது பிள்ளைமைப் பருவம்; அடுத்தது பேதைமைப் பருவம்; அடுத்தது அறிந்த பருவம். தொடர்ந்து செல்லும் வளர்ச்சியை ஒரு தொடர்பாய்த் தொடர்ந்து முடியும் பாட்டுக்களாற் குறித்த அழகை நோக்குக. வளர்ச்சிக்குரிய இடையீட்டுக் காலந் தந்து செல்லும் பாட்டுக்களின் அமைவும் காண்க.

280. (இ - ள்) மானிளம் பிணையோ? - இளமையுடைய பெண்மானோ?; தெய்வ வளர் இளம் முகையோ? - வளர்ச்சியைப் பெற உள்ள தெய்வப் பூவின் இளம் அரும்போ?; வாசத் தேன் இளம் பதமோ? - வாசனையையுடைய தேனினது முதிராத இளம் பதமோ?; வேலைத் திரை இளம் பவளவல்லிக் கான்இளம் கொடியோ? - கடலின் அலைகளில் உள்ள இளம் பவளக்கொடிகளில் விளைந்த அழகிய இளம் பவளக் கொடியோ?; திங்கட் கதிர் இளம் கொழுந்தோ? - சந்திர கிரணத்தின் முதலில் முளைக்கும் இளங் கொழுந்தோ?; காமன் தான் இளம்பருவம் கற்கும் தனி இளம் தனுவோ? - மன்மதனே இளம் பருவத்திற் றனது போர்த் தொழில் கற்கும் ஒப்பற்ற இளமையாகிய வில்லோ?; என்ன - என்னும்படி. ௩௩௪

281. (இ - ள்) நாடும் - (மேலே கூறியவாறு சுற்றமும் மிக்கோரும் பிணையோ - முகையோ...என்று) நாடி யறியும்படி; இன்பொற்பு...பொங்க-இனிய அழகு பொருந்திய தன்மை நாளும் நாளும் மேன்மேல் வளர்ந்து அதிகரிக்கும்படி; ஆடும் மென் கழங்கும் - பந்தும் - அம்மனை - ஊசல் இன்ன - ஆடுகின்ற மெல்லிய கழற்சிக் காய்களும், பந்தும், அம்மனையும் - ஊசலும் என்றிவை முதலிய விளையாட்டுக்களிலே; பாடும் இன்னிசையும்...தோன்ற - அவற்றோடு சேர்த்துப் பாடப்பெறும் இனிய கீதங்களைத் தங்களுக்குச் சிறப்பாய் உரிய நாயகியாராகிய இமய மலைக்கொடி (உமாதேவி)யாருடைய பாதங்களைக் கூடுகின்ற அன்பினாலே ஊனும் உயிரும் உருகும்படிப் பாடும் கொள்கையின் ஒரு குறிப்புக் கேட்பாருக்குத் தோன்ற; ௩௩௫

282. (இ - ள்) பிள்ளைமை...நீங்கி - மேலே சொல்லிய பிள்ளைப் பருவமாகிய ஐந்தாண்டுவரை உள்ள பருவத்தின்மேல் வருவதாகிய பேதைப் பருவமுங் கடந்து; அள்ளுதற்கு...வீழ்ப்ப - அள்ளி எடுத்துக் கொள்ளும் விருப்பத்தையுண்டாக்கும் அழகினுடன் மன்மதனுடைய மெய்யாகிய தனங்களின் குவியலை ஏற்றுக் கொள்ளும்

பொருட்டு மிகவும் உயர்ந்து வளர்வன போலத் தனங்கள் கோங்கு அரும்புகளை வெல்லும்படியாக வளரவும்; (உடல் வளர்ச்சி இவ்வாறாக); உள்ளம்...தோன்ற - மனத்தினது உண்மை யியல்பானது முன்னே தாம் அம்மையாரின் சேடியாராயிருந்த உண்மையும் குறிப்பாய் ஓரோர்கால் தோன்றவும்; உய்ப்பார் - வாழ்வார். ௧௩௯

280. (வி - ரை) - இளம்பிணை - இளமுகை - இளம்பதம் - இளங்கொடி - இளங்கொழுந்து - இளந்தனு இவை பரவையாரின் இளம்பருவத்து அவயவங்களுக்கு உவமப் பொருள்கள். இவை ஓகாரங்களால் பிரித்துத் தெரிவிக்கப் பெற்றன. **பிணை** - கண்ணுக்கும், **முகை** - முலைக்கும், **பதம்** - மொழிக்கும், **கொடி** - இடைக்கும், **கொழுந்து** - நுதலுக்கும், **தனு** - புருவத்திற்கும் உவமப் பொருள்களாமென்பர். உவமேயங்கள் சொல்லப் பெறாமல் தொக்கி நின்றன. ஆயினும் உவமப் பொருள்களின் தன்மையால் அவற்றை வருவித்து உரைத்துக் கொள்க. தளர்நடைப் பருவத்தின் பின் பரவையாரை அவ்விளம் பருவத்தே கண்ட சுற்றமும் மிக்கோரும், அவரது அந்தந்த அவயவங்களின் அழகை வியந்து, இது கண்ணோ பிணையோ - இது முலையோ முகையோ - என்றிவ்வாறு நாடும்படி அவரது அழகு இருந்தது என, இவற்றை "என்ன - நாடு மின் பொற்பு" என்று வரும்பாட்டுடன் கூட்டி முடித்துக் கொள்க.

இளம் - என்ற மொழியை எட்டு முறை இப்பாட்டில், அடுக்கிவருவது தெரியாத வண்ணம், அழகுற அமைத்து வைத்தது மிக அழகிய சொற்பொருட் பின்வருநிலையணியாம். இவ்வமைப்புத் தெய்வச் சேக்கிழார் பெருமானது தெய்வக் கவித்திறத்தைத் திறம்பெறக் காட்டுவதொன்றும். இளம் பவள வல்லி என்றது இளங்கொடிக்கும், இளம் பருவங்கற்கும் என்றது இளந்தநுவுக்கும் அடைமொழிகளாம்.

மான் இளம்பிணையோ? - இளமான் பிணையின் கண்ணோக்கமோ என்க. "மான் மாற விழிக்கும்" என்ற திருவாக்கும் காண்க.

தெய்வ வளர் இளமுகை - தெய்வத்தன்மையும் வளர்ச்சியும் கொண்ட கோங்கின் இள அரும்பு. இதனைக் கற்பகமலரின் அரும்பென்றும், தாமரை அரும்பு என்றும் உரைப்பினுமாம். மிக இளம் பருவமாகவே கொங்கை தோற்றா. ஆதலின் **வளர்** - இனி வளர்வன என்றார். பெண்மைக்குச் சிறப்பாய் உரிய அவயவமாதலின் வெளிப்படத் தோற்றாத போதும் உவமை கூறினார். "திருவளர் தாமரை சீர்வளர் காவிகள்" என்ற திருக்கோவையாரிற் "கோங்கு" என்றதற்குப் பேராசிரியர் உரைத்தமை காண்க. இதன் முதன்மைபற்றி இதற்குத் 'தெய்வ' என்ற அடைமொழி கொடுத்துக் கூறினார். **திருக்கைலாய ஞான உலா**விலே (பதினொராந் திருமுறை.)

"பேதைப் பருவம் பிரியாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள் - தீதில்
இடையாலு மெக்கழுத்த மாட்டா ணலஞ்சேர்
உடையாலு முள்ளுருக்க கில்லாள் - நடையாலும்
கௌவைநோய் காளையரைச் செய்யாள் **கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யுந் தொழில்பூணாள்** - செவ்வனேர்
நோக்கிலும் நோய்நோக்க நோக்காடன் செவ்வாயின்
வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள் - பூக்குழலும்
பாடவர் தோன்ற முடியா ளிளவேய்த்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள் - நாடோறும்
ஒன்றுரைத் தொன்றுன்னி யொன்றுசெய் தொன்றின்கட்
சென்ற மனத்தனளாஞ் சேயிழையாள்"

எனவரும் பொருள்களை இத் திருப்பாட்டின் கருத்துடன் வைத்துன்னுக.

"விழியாற் பிணையாம்"—திருக்கோவையார்.

"துகிர்மேனி" பவளம்போலும் நிறத்தினையும்—பட்டினப்பாலை - நச் - 148.

"பவளப் பாவையின் இளங்கொடி"—மணிமேகலை - 4 - 124 - 5.

"கோங்கு முகைத்தன்ன குவிமுலை"—அகம் - 240 - 11.

"கோங்கின் குவிமுகி ழிளமுலை"—திருமுரு - 34 - 5.

என்றிவற்றை இப்பாட்டிற் பொருத்திக் கண்டுகொள்க.

வாசத்தேன் இளம் பதமோ - தேன் அவ்வப் பூக்களின் வாசனையும், கூடுகட்டி ஈட்டப்பெறும் மரம் செடிகளின் வாசனையும் கலந்துள்ளதாதலின் **வாசத்தேன்** என்றார். வேப்பமரத்தில் வைக்கும் தேனுக்கு இளங்கைப்பும் அவ்வாசனையு முடைமை காண்க. பிணையோ? முகையோ? என்பவைகட் கேற்ப மாற்றி இளம்பதத் தேனோ என்று கூட்டுக. இங்குத் **தேன்** என்றது தேன் போன்ற வாயூறலோடு கலந்து வரும் தேன் போன்ற சொல்லை.

> "புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீரில்
> உண்ணனைந் தமுத மூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல்
> வண்ணமென் குதலைச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார்" - 22

என்ற கண்ணப்ப நாயனார் புராணம் காண்க. வாயினுக்கும் வாசனை யுண்டென்பது "தீங்கனிவாய் கமழும் ஆம்பலம் போதுளவோ அளிகாள்! நும் அகன்பணையே" என்ற திருக்கோவையாரிற் காண்க. பூவிலே தேன் இருப்பதும் இயல்பாம்.

வேலைத் திரை இளம் பவள வல்லிக் கான் இளங்கோடியோ? - கடல் அலைகளில் விளங்கும் இளம் பவளத்தின் இளங்கொடியோ?. "துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை" என்ற நம்பிகளது திருத்தொண்டத்தொகைத் தேவாரமும் காண்க. **இளம் பவள வல்லி** என்றது முதிராத இளஞ் சிவப்பு வாய்ந்த பவளக் கொடியை. **இளங் கோடி** என்றது அப்பவளக் கொடியினின்று கிளைத்து வந்ததொரு இளங்கொடியை. **கான்** - அழகு. "இளங்கொடி போல் நுடங்குமிடை ஏழை" என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம் காண்க. **கான்** - கூட்டம் - எனக்கொண்டு, பவளக்கொடிக் கூட்டங்களினுள்ளே ஓரிளங்கொடியோ - என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு. கொடியை இடைக்கு உவமானமாகக் கூறுதல் மரபு. இவ்வாறன்றி இதனை இதழுக்கு உவமானமாகக் கொள்வது மொன்று. அப்பொருளில் **இளம்பவள வல்லி** மேலிதழும் அதனைத் தொடர்ந்து நிற்கும் **கான் இளங்கோடி** கீழ் இதழுக்கும் ஆகுமென்க. வளைவாய் அசைந்து செல்லும் தன்மையால் பவளக்கொடி இதழாம் என்பர். **கான்** - மணம் என்று கொண்டு மணங் கமழ்கின்ற பவளக்கொடியோ என்றலுமாம்.

திங்கட்கதிர் இளங்கோழுந்தோ - திங்களின் கொழுந்து - பிறை. திங்கள் அதிலிருந்து வளர்வதாதலின் கொழுந்தென்ப. கொழுந்தெனவே இளமை பெறப்படினும் இளங்கொழுந்து என்றது மிக்க இளமையைக் காட்டிற்று.

காமன் தான் இளம்பருவம் கற்கும் தனியிளம் தநுவோ? - காமன் தானும் என்க. எதுகை நோக்கி உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. சிவபெருமானையும் அவனடியார்களையுமன்றி ஏனை எல்லா உயிர்களையும் அவன்பாற்பெற்ற ஆணைகொண்டு ஆட்சி செய்வானாதலின் **தானும்** என்று சிறப்பித்தார்.

இளம் பருவம் கற்கும் - இளம் பருவத்திலே கற்றற்குரிய. "இளமையிற்கல்" என்றபடி காமனும் தன் இளமையில் பின்னர் தனதாட்சிக்குரிய வில்வித்தை கற்பானாயினன்; **என்ன** - அதற்கு உரிய வில் இதுதானோ என்றையுறும்படி. **தனி இளம் தநு** -

ஒப்பற்ற இளங் கரும்பு வில். மேலே கூறிய சிறப்பு நோக்கி அவனது வில்லும் **தனி** என்று சிறப்பிக்கப் பெற்றது. இளம் பருவத்திலே பயில உதவுதலேயன்றி, அவ்வில், தனது அடுதற் றொழில் செய்யவில்லை யென்பார் **கற்கும்** என்றார். மேலே காட்டிய ஞானவுலாவின் வைத்து இவற்றின் பொருள்களை எல்லாம் உய்த்துணர்க.

மான் இளம் பிணை - அம்பும் (புருவம்), தனுவும் தகுதிபெற ஆசிரியர் அமைத்தமை காண்க.

வில்லில் அம்பு பூட்டப்பெறாமல் அம்பு வேறு, வில் வேறாக வளர்ந்தன ஆதலின் இவை ஒருசேர வைக்கப்பெறாமல், இவை வளர்ந்து சேரப் போதிய காலம் தரும் பொருட்டு இடையில் பல பொருள்கள் வைக்கப்பெற்றனபோலும். கண்ணுக்குவமையாகிய தாமரை, நீலம் முதலியன மன்மதன் மலரம்புகளாதல் காண்க. சுற்றத்தாரும் மிக்கோரும் காணும் இளம் பருவத்திற் பூட்டப்பெறாத இந்த **விற்பூட்டு**, வளர்ந்து தகுதி பெற்றுப் பின்னர் நம்பிகள் காணும்போது ஒன்றுசேர்ந்து ஓரிடத்திலே பூட்டப் பெற்றதும் காண்க. "கற்பகத்தின் பூங்கொம்போ" என்ற 140-வது திருப்பாட்டிலே "விற் குவளை" என்று வில்லிற் குவளை சேர்ந்தது காணப்பெறும்.

இப்பாட்டிற் சொல்லிய, தொழில் செய்யாத இளம் பொருள்கள் அனைத்தும் அப்பாட்டிலே "வில் குவளை பவளம் மலர் மதி பூத்த விரைக்கொடியோ" என்று முதிர்ந்து தொழில் செய்தமையும் காண்க. " இருநோக்கிவள் உண்கண் உள்ளது " என்றபடி இளம் பிணைக்கு இருநோக்கில்லாமையின் தனுவும் தனியிளந் தனுவாய் ஒன்றேயாயிற்று. " செருவெழுந் தனுவ தொன்றுஞ் சேமவில் லொன்றும் " என்று பின்னர் வருவதுபோலச் சொல்லுதற்கு இங்குச் செரு (போர்) எழுகின்றதில்லாமல், காமன் இப்போதுதான் இளம் பருவம் விற்பிடித்துக் கற்கின்றானாதலால், போர் வில் இல்லையாகும். எனவே, சேம வில்லும் வேண்டப்படாதாயிற்று.

இப்பாட்டிற் கூறிய இளமை முழுமையும், என்றும் இளையோனாகிய முருகனுக்கே யுரியதாம். அவனது என்றும் முதிராத இளமையை " மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி " என்று திருமுருகாற்றுப்படை துதிக்கின்றது. அவ்விள நலத்தின் பிரதி விம்பமே இப்பாட்டிற் குறித்ததென்க. வரிசை 286 முதல் 290 வரையுள்ள பாட்டுக்களின் குறிப்புக்களைப் பார்க்க. இவ்வாறன்றி, **மானிளம்பிணை** - இளமையாலும், பிள்ளையாயிருத்தலாலும், கண் - இனிய நாதத்(சத்தத்)தையும், [" வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கு " (நீத்தல் விண்ணப்பம் - திருவாசகம்)=மிக மருண்ட பார்வையுடையார் என] **இளமுகை** - முகம் - கற்பகத்தினது மலராது இனி மலர இருக்கும் மலர்-கந்தத்தையும், **இளம்பதம்** - சொல் - இனி முழுமையும் இனிக்க இருக்கும் சொல்-சுவையையும், **இளங்கொடி** - தேக காந்தி-உருவத்தையும், **திங்கட் கொழுந்து** - நுதல் - பரிசத்தையும், குறிப்பாகக் கொண்டு "கண்டு கேட்டு" எனும் திருக்குறளுக்கு இலக்கியமாய் விளங்கியது பரவையாராது இளம் பருவம் என்றும், தனு இவ்வைந்தும் சேர்ந்து தொகுத்த வகையைக் காட்டிய தென்றும் கூறுவாரும், இவற்றிற் சில மாற்றிக் கூறுவாரும் உண்டு.

தநு உடம்பிற்குப் பெயராதலுங் காண்க. 134

281. (வி - ரை) **நாடும் மின் பொற்பு** - நாடுகின்ற மின்னல் போன்ற அழகு எனவும் கூறுவர். "வாய்ந்த மின்னை மடந்தைய ராக்கி" - நைடதம்.

ஆடும் - பொதுவினை. கழங்கு முதலிய நான்கினோடும் கூட்டுக. அம்மனையும் ஊசலும் என உம்மை தொக்கி நின்றன. சிறப்பும்மையுமாம். ஆடுகின்ற இவ்விளையாட்டுக்களை ஆடும்போதே பாடப் பெறுகின்ற இசையும் என்பார் **பாடும் இன்னிசையும்** - என்றார். கழல் முதலியவை ஆடும்போது பாடிக்கொண்டு ஆடுதல் வழக்கு. கழல் - பந்து - அம்மானை - ஊசல் இவை மகளிர் விளையாட்டுக்கள். இவை பெண்பாற் பிள்ளைத்

தமிழ்க்குச் சிறப்பாய் உரிய பகுதிகளாதல் காண்க. பாட்டு மனத்துக்கும், ஆடல் உடலுக்கும், அன்பு உயிருக்கும் உறுதி கொடுப்பனவாமாறும் காண்க.

பனிமலை வல்லி பாதங்கூடும் அன்பு உருகப்பாடும் கோள்கை ஓர் குறிப்புத் தோன்ற(ப் பாடும் இசையும்) - அவ்வாறு பாடவதும் இக்குறிப்பு ஒரோர்கால் தோன்றுமாறு பாடும் என்க. பெண்கள் விளையாடும் இந்த விளையாட்டுக்களின் போது இறைவனையும் இறைவியையும் பாடிக் கொண்டு ஆடுதல் அக்கால வழக்கு. இந்நாளிலும் பாட்டுண்டு. ஆனால் அவை பொருளற்றனவாய், உலகப் பற்றுக்களிலே செலுத்துவனவாய் இருக்கும்.

"தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறு மிறைவனது தன்மை பாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மனைப் பாட்டயருங் கழுமலமே"

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் மேகராகக் குறிஞ்சிப் பதிகத்தையும்,

"நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்"

"குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்."

"அஞ்சொலாள் தன்னோடுங் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ"

என்ற திருவாசகங்களையும் பிற திருவாக்குக்களையும் காண்க.

தங்கள் பனிமலை வல்லி - முன்னை அநிந்திதையாராகித் தம்முடன் கூடிப் பணிசெய்தாரையும் சேர்த்துத் தங்கள் என்றார். திருவாசகத்திற் குறிப்பித்தபடி தம் போன்ற பிற எல்லாரையும் உளப்படுத்தியதுமாம்.

பாதம் கூடும் - பிரிந்து வந்தாராதலின் அப்பிரிவு நீங்கிக் கூடும் என்க.

கோள்கைக் குறிப்புத் தோன்ற - ஒரோர்கால் இவர் பாடும் பாடல்கள் பிள்ளைப் பருவத்திற் சொல்லும் மரபின் மட்டிலே நில்லாமல், மேலும் இவ்வாறு அதற்கயலான ஒரு குறிப்பும் தோன்ற நிகழ்ந்தன என்றபடி. **ஓர்** - ஓர்கின்ற - நினைக்கின்ற என்றலுமாம். ஓர் கொள்கைக் குறிப்பு எனமாற்றி உரைப்பினுமமையும்.

"தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய்"

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம் (55) காண்க.

மென்கழங்கு - இலகுவான கழற்சிக்காய். **பந்து** - கழங்கை விடச் சிறிது கனத்தது. **அம்மனை** - அதைவிடக் கனமுள்ளது. இவை பருவ வளர்ச்சிக் கேற்றபடி அமைந்தமை காண்க. இவ்வாறன்றி, **ஆடும்** - ஆடுவர்; **பாடும்** - பாடுவர்; **பாடுங் கோள்கையோர்** - பாடுகின்ற பெரியோர் - என்று இப்பாட்டை முடித்துக் கூறுவர் மகாலிங்கையர். 135

282. **(வி - ரை)** வரிசை 279-ம் பாட்டில் ஓராண்டு வரை உள்ள வளர்ச்சி கூறினார். 280-ல் அதன்மேல் 5 ஆண்டுவரை வளர்ச்சி கூறப்பெற்றது. 281, 282 பாட்டுக்களிற் பிள்ளை, பேதை என்ற பருவங்களைச் சொல்லிய ஆசிரியர், இனி, இவற்றிற்கு மேலுள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தைப் பருவங்களை 282-ம் பாட்டிற் கூறுகின்றார். **பேதை** - அறியாத பருவம்; பெதும்பை - அறிந்தும் அறியாமலும் உள்ளது;

மங்கை - அறிந்தது; மடந்தை - அறிந்து நாயகன்மேற் காதல் கொண்டது; அரிவை - நாயகனிடத்து இன்பந் துய்ப்பது; தெரிவை - இன்பம் பெருகுவது; பேரிளம் பெண் - மீள முதல் நிலையடைந்தது போன்று முற்றிய இளம் பெண் - இந்த இன்பத்திற் பயன்படாமையின் இளம் பெண் என்பர். இப்பருவங்களின் இயல்புகளைத் திருக்கைலாய ஞானவுலாவிலும், உலா இலக்கணங்களிலும் காண்க. பருவங்களின் இயல்பு மேலே குறிக்கப்பட்டதாம்.

அள்ளூறு கமைந்த பொற்பு - அள்ளி எடுத்துக் கொள்ள அமைந்தது போன்ற அழகு. **மெய்** - உடம்பிலே என்றுரைப்பாருமுண்டு.

"அள்ளிக் கொள்வன்ன குறுமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையால்"—(**பழம்பாட்டு**)

"அழகிய பிரானோ என்னு அள்ளிமுத்தங் கொண்டு"

என்ற திருவிளையாடற் புராணங் (இரசவாதம் செய்த படலம். 29.) காண்க.

அநங்கன் மெய்த்தனங்கள் ஈட்டம் கொள்ள மிக்குயர்தல் - மன்மதன் தேடும் மெய்த்தனங்களை ஈட்டிப் பெருக்க வைத்தலால், அவற்றைச் சேமித்து வைக்கும்கொள் கலமாகிய பாத்திரமும் வளர வேண்டியதுபோல. தனங்கள் ஈட்டம் கொள்ளவே இவையும் ஈட்டம் கொண்டுயர்தல் வேண்டுமென்ற இயல்பு குறித்ததாம். **தனங்கள் - ஈட்டம்** (பெருக்கு) **கொள்ளும்** என்ற சொற்பொருட் சுவை பெறப்படுதல் காண்க. மன்மதன் தேடிய உண்மையான திரவியக் குவையைப் பெற்றுக் கொள்ள உயர்ந்த தனங்கள் என்பது மகாலிங்கையர் உரை. இளம்பருவம் தனுத் தொழில் கற்ற காமன் அக்கல்வியின் பயனாய் ஈட்டியபொருள் என்ற குறிப்பும் காண்க.

கோங்கு அரும்பை வீழ்ப்ப - முன்னே அரும்போ என்று சொல்லும்படி ஒரு புடை ஒப்பாயிருந்தன; இப்போது உயர்ந்த தன்மையால் அதனை வென்றன என்பது கருத்து. பிறவற்றை விடுத்துக் கொங்கைகளைக் குறித்தது பெண் தன்மைக்குரிய அங்கங்களிற் றலைமை யாதல் பற்றி. அது பற்றியே கோங்குக்கு அடைமொழி கொடாமலே கூறியதுமாம்.

உள்ள மெய்த்தன்மை - பொருந்திய மற்ற உடற்பகுதிகளிலேயும் வளர்ச்சித் தன்மை என்றுரைத்தலுமாம். அதில் முன்னை உண்மையும் தோன்றுவதாவது மேலே கொங்கைக்குக் கூறியது போன்ற இயல்பையே கொண்டது என்றபடி. இதற்கு மனம் பரிசுத்தமாயிருக்கும் தன்மை என்றும், **முன்னை உண்மையும் தோன்ற** - என்பதற்குக் கைலாசத்தில் தாம் பார்வதியார்க்கு உண்மைத் தோழியா யிருந்த தன்மையும் யாவர்க்கும் தோன்றும்படி என்றும் உரை கூறுவர் மகாலிங்கையர்.

உய்ப்பார் - செலுத்துவாராயினர் - வாழ்நாளைக் கொண்டு செலுத்தினர். "கண்ணுதலைத் தொழுமன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப" என்றதும் காண்க.

உயர்வு போன்ற—என்பதும் பாடம். 136

283. பாங்கியர் மருங்கு சூழப் படரொளி மறுகு சூழத்
தேங்கமழ் குழலின் வாசந் திசையெலாஞ் சென்று சூழ
வோங்குபூங் கோயி லுள்ளா ரொருவரை யன்பி னோடும்
பூங்கழல் வணங்க வென்றும் போதுவா ரொருநாட் போந்தார். ௧௩௭

(இ - ள்) வெளிப்படை. தம் தோழியர்கள் தம்மைச் சூழ்ந்துவரத், தமது கூந்தலின் மணம் எல்லாத் திக்கிலும் சென்று நிறையப், பூங்கோயிலுள் வீற்றிருக்கும் இறைவனை வணங்கும் பொருட்டுப் படர்கின்ற ஒளியுடைய திருவீதியைச் சூழ்ந்து என்றும் செல்பவராகிய பரவையார் ஒருநாள் வழக்கம்போற் போயினர்.

(வி - ரை) ஒருவரை அன்பினோடு கழல் வணங்க என்றும் போதுவார் - ஒருநாள்- பாங்கியர் சூழப் - போந்தார் - என்று கூட்டுக.

வரிசை 277-வது பாட்டில் பரவையாரது திருவவதாரமும், வரிசை 278 முதல் 283 வரை வளர்ச்சியும், செயலும் கூறினார். அவதரித்து வளர்ந்ததின் பயன் பனிமலை வல்லிபாதம் கூட இறைவனை வழிபடுதலே யாதலின் இந்த ஆறு திருப்பாட்டுக்களும் தொடர்ந்த முடிபாய்க் கூறின அழகு காணத்தக்கது.

சூழ - என்ற சொல் அழகுபெறச் சொற்பின் வருநிலையாய் அடுக்கி அமைத்திருத்தல் அநுபவிக்கத்தக்கது. இது ஆசிரியரின் சிறப்பியல்புகளில் ஒன்றும் என்பது முன்னர்க் கூறப்பெற்றது. தோழிகள் தம்மைச் சூழவும், தம் குழல்வாசம் திசை எல்லாம் சூழவுமாகத், தாம் தெருவு சூழப் போந்தார் என்க.

படர் ஒளி - திருநகரச் சிறப்பிலே "படர்ந்த பேரொளிப் பன்மணி வீதி" என்றமை காண்க. படர்தற் குரித்தாய் ஒளியுடைய மறுகு என்க. **மறுகு சூழ்தல்** - திருவீதியை வலம்வந்து செல்லுதல்.

குழலின் வாசம் - முதற்சாதிப் பெண்டிர்க்குக் குழலின் இயற்கையாய் அமைந்த வாசம். தருமிக்குப் பொற்கிழி அளித்த திருவிளையாடலாலும், "கொங்குதேர் வாழ்க்கை" என்ற திருப்பாசுரத்தாலும் அறிக. பரவையார் உமையம்மையாரது சேடியாராதலின் இவ்வியல்பு இவர்க்கும் அடுத்த தொன்றென்று உணர்க. பூக்கள் சூட்டிய செயற்கையாற் கூடிய வாசம் என்றுரைப்பாருமுண்டு. எல்லார்க்கும் ஒத்தலின் இங்கு இப்புராணத்திற்கு உரிய தலைவியர்களில் முதல்விக்கு அவ்வுரை சிறப்பின்மை காண்க. குழலின் தேங்கமழ் வாசம் என்று கூட்டுக.

ஓங்கு பூங்கோயில் - அருட்செயலால் ஓங்கிய (மிகுந்த) பூங்கோயில். **உள்ளார்** - அங்கே என்றும் நிலைத்து உள்ளவர்.

ஒருவர் - தனக்குவமை இல்லாதவர் ஆதலின் ஒருவர் என்க. பதி ஒருவரே என்பது வேதாகமங்களின் முடிபு.

போதுவார் - போதுவாராகிய பரவையார். வினையாலணையும் பெயர்.

ஒருநாள் - வணங்கிச் சென்ற பலநாளில் ஒருநாளாய்க் காண ; **ஒரு** - ஒப்பற்ற என்றலுமாம். பரவையார் அவதாரப் பயன் பெறுநாளாதலின் இது ஒப்பற்ற நாளாகு மென்பது வரும் நிகழ்ச்சியில் காண்க. 137

284\. அணிசிலம் படிகள் "பார்வென் றடிப்படுத் தன"வென் றார்ப்ப,
மணிகிளர் காஞ்சி யல்குல் வரியர வுலகை வென்ற
துணிவுகொண் டார்ப்ப, மஞ்சு சுரிகுழற் கழிய "விண்ணும்
பணியு"மென் றினவண் டார்ப்பப் பரவையார் போதும் போதில்,

285\. புற்றிடம் விரும்பி னாரைப் போற்றினர் தொழுது செல்வார்
சுற்றிய பரிச னங்கள் சூழவா ரூடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார். ௧௩௯

284\. **(இ - ள்)** அணிசிலம்பு...ஆர்ப்ப - (பாதங்களிலே) அணிந்த சிலம்புகள் "இந்தப் பாதங்கள் இம்மண்ணுலகத்தை வெற்றி கொண்டு அடிப்படுத்தன" என்று சொல்வது போன்று சத்திக்கவும் ; மணி கிளர்...ஆர்ப்ப-மணிகளுடன் விளங்கும் காஞ்சி எனும் அணியானது அரவு உலகாகிய கீழுலகத்தை நிதம்பம் வெற்றி கொண்ட துணிவுடன் கிளர்ச்சி செய்யவும் ; மஞ்சு...ஆர்ப்ப - சுருண்ட கூந்தலுக்கு மேகம் தோற்றுவிட்டமையால் விண்ணுலகமும் பணியும் என்று கூட்டமாகிய வண்டுகள் முழங்கவும் ; பரவையார் போதும் போதில்-பரவையம்மையார் மேற்சொல்லியபடி மறுகில் போகும்போது, ௧௩௮

285. (இ - ள்) புற்று இடம்...செல்வார் - புற்றையே தாம் வாழுமிடமாக விரும்பி எழுந்தருளிய இறைவனைத் துதித்து வணங்கிய பின், பரிசனங்கள் சுற்றிச் சூழ்ந்து வரச் செல்லும் நம்பிகள்; நற்பெரும் பான்மை கூட்ட - பெரிய நல்ல ஊழ்வினை கூட்டி வைத்தமையாலே ; நகை பொதிந்து...கண்டார் - மகிழ்ச்சிக் குறியாகிய புன்முறுவலுடன் விளங்கும் சிவந்த வாயையும், வில்லை ஒத்த நுதலின் கீழே வேலொத்த கண்களையும் உடைய ஒளிசெய்து விளங்கும் ஆபரணங்களைப் பூண்ட பரவையாரைக் கண்டார். ௧௩௯

பரவையார் போதும் போதில் - தொழுது - சூழச் செல்வாராகிய நம்பி அந்த விளங்கிழை யவரைக் கண்டார் என்று இரண்டு பாட்டுக்களையும் கூட்டி முடிக்க. மேற் பாட்டில் பரவையார் இறைவனை வணங்கப் போதலும், பின் பாட்டில் நம்பிகள் அவரை வணங்கித் திரும்பி வருதலும், இடையில் இருவரும் ஊழாகிய தெய்வங் கூட்டக் காணலும் கூறப்பெற்றன.

284. (வி - ரை) **வணங்கப் பரவையார் மறுகுசூழப் போதும் போதில்** - மூன்று அங்கங்கள் முறையே மூன்று உலகங்களை வென்றதற்கு அடையாளமாக, மூன்று பொருள்கள் ஆர்த்தன. மேலும் - நடுவும் - கீழும் உள்ளன மூவுலகங்கள் என்பர். இவையே சுவர்க்க மத்திய பாதலமாம். மூவுலகையும் வெல்லுதலாவது இம்மூன்று உலகத்திலும் இவருக்கு ஒப்பாரும் மிக்காருமில்லையாதல். தமிழ் நூற்களின்படி இதுவே பாட்டுடைத்தலைவியினது இலக்கணமாதலின் இவ்வாறு கூறினர். ஒவ்வோர் உலகை வென்றதற்கு ஒவ்வோர் பகுதி காரணமும் உதாரணமு மாயிற்று. பரவையாரது **அடிகள்** மண்ணை அடிப்படுத்தி மிதித்தற் றொழிலாலும், அல்குல் அரவுலகை அரவரசாகிய நாகத்தினும் மிக்க வடிவினாலும், காஞ்சியில் உள்ளனபோன்ற மணிகள் அரவுகளில் இல்லாமையினாலும், **குழல்** மேகத்தின் மிக்க நிறத்தாலும் வென்றதை, முறையே, அங்கங்குள்ள சிலம்பும் - காஞ்சியும் - வண்டுகளும் தெரிவித்து ஆர்த்தன என்க. மண் அடிப்பட்டது ; விண்பணிந்தது; ஆனால் அரவுலகு உறுதியாய் வெல்லப்பட்டது ; ஆதலின் இதைத் தெரிவிக்குமாறு **'துணிவு கொண்டு காஞ்சி ஆர்க்க'** என்றமை காண்க. அல்குல் பெண்மைத் தானமாதலின் **வென்று துணிவு கொண்டு** எனச் சிறப்புத் தோன்றக் கூறியபடி. "பையரா வசைத்த வல்குல்" என்ற திருவிருத்தம் (அப்பர் - கோயில்) ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. **விண்** - புண்ணியத்தால் வரும் இன்பானுபவமும், **மண்** - புண்ணிய பாவங்களால் வரும் மிச்சிரமாகிய கலப்பு அனுபவமும் பெறும் இடங்கள் ஆதலின் இவற்றைக் கீழ்ப்படுத்தலே அமையும். ஆனால் அரவுலகு என்ற கீழுலகம் பாவத்தால் விளையும் துன்பானுபவத்திற்கே உரியதாதலின் அது முற்றும் வெல்லப்பட்டொழிதல் வேண்டும் என்பதுபற்றி **"வென்று துணிவுகொண்டு"** என்றதாம். **துணிவுகொண்டு** - அடியும் குழலும்போல வெளித் தோற்றாது, அல்குலினது செயல் காஞ்சி யணியின் தன்மையால் அனுமானித்துத் துணியப்படு பொருளாதலும் குறிப்பாம். அடி - அல்குல் - குழல் - பாதாதிகேச வருணனை. மண்ணும் அரவுலகும் அன்றி விண்ணும் என்ற பொருளில்வந்த இறந்தது தழுவிய எச்சவும்மை. சிறப்பும்மையுமாம். பரவையார் என்ற பெண்மணியின் அவதாரத்தால் சிவத்துவம் விளங்க நரகலோகம் தூர்ந்து ஒழியக்காரணமாயிற்று என்ற குறிப்பும் காண்க. இதனால் பரவையார் மறுகுசூழ ஒருவரை வணங்கப்போந்த நடைச் சிறப்பும், பயனும் கூறியபடி. 138

285. (வி - ரை) **ஆளுடைய நம்பி**-சிவபெருமானாலே ஆட்கொள்ளப்பெறும் பேற்றினை உடைய நம்பிகள். இவ்வாறே ஆளுடையஅரசு, ஆளுடையபிள்ளையார் ஆளுடையஅடிகள் என வருவனவும் காண்க. "உடைய அரசுலகேத்து முழவாரப்

படையாளி", "என்றூர் உடைய பிள்ளையார்" முதலிய திருவாக்குக்கள் காண்க. "யாவர்க்குந் தந்தைதாய் யெனுமிவரிப் படியளித்தார் - ஆவதனு லாளுடைய பிள்ளை யாராய்" திருஞா - புரா - 69.

போற்றினர் தொழுது செல்வார் - நம்பி - கண்டார் - போற்றித் தொழுது செல்வாராகிய நம்பிகள் விளங்கிழையவரைக் கண்டார்.

நற்பெரும் பான்மை - நியதி - தெய்வம் - பால்-பான்மை - விதி - ஊழ் முதலியன ஒரு பொருள் கொண்டன. திருக்குறளில் ஊழ் என்ற அதிகாரத்தில் ஆசிரியர் பரிமேலழகர் உரைத்தவையும் பிறவும் காண்க. இதுபற்றியே,

"**பண்டைவிதி கடைக்கூட்டப்** பரவையா ருங்கண்டார்" (வரிசை 298.)

"மின்போன் மறையும் சங்கிலியார் தம்மை விதியாற் **கண்ணுற்றர்**"

—ஏயர்கோன் - புரா - 226

என்றமையும் காண்க.

நல் - பெரும் - பான்மை - நல்ல பெரிய ஊழ்வினை. ஊழ் நல்லவாதலாவது தீப் பயன் தாராது நற்பயனை நிகழ்வித்தல். **பெரும்பான்மை**யாவது யாராலும் விலக்க லாகாத பெரிய வன்மையுடைமை. நற்பான்மையாவது ஈசன் அருள். இங்கே பான்மை என்றது முன்னர்த் திருக்கயிலையின் நிகழ்ந்த இறைவனது திருவாணையை. (திருமலைச்சிறப்பிற் காண்க).

கூட்ட-கயிலை ஆணை மண்ணிற் கூட்ட, வெண்ணெய்நல்லூர் ஆணை பிற தலங்களிற் கூட்ட, தில்லையின் ஆணை திருவாரூரிற் கூட்ட, திருஆரூரர் ஆணை தெருவிற் கூட்ட இந்நிகழ்ச்சி கூடக் கூட்டிற்று என்றபடி.

பான்மை கூட்டக் கண்டார் - "காட்டுவித்தால் ஆரொருவர் காணுதாரே" என்ற படி முன்னைய பான்மை கூட்டுவித்துக் காட்டுவித்ததாதலின் அதன் வழியே கண்டார் என்க. இதனுலே அது கூட்டியும் காட்டியும் வைக்காதவழிப் பிறர் யாவர்களையும் காதலின்வழிக் கண்டாரல்லர் என்பதும் குறிப்பு. (சடங்கவியாரது மகளாரையும், கோட்புலியாரது இரு மகளிர்களையும் அவ்வாறு காணுமையும் இங்கு வைத்துக் காண்க.)

நகை - புன்முறுவல். இது மகிழ்ச்சியின் அறிகுறி. நகை என்பது ஆகுபெயராய்ப் பல்வரிசையை யுணர்த்தியதென்று கூறுவாருமுண்டு.

பொதிந்து - வெளித்தோற்றுமல் உள்ளே சேமித்துச் சிறக்க வைத்து.

நகைபொதிந்து இலங்கு செவ்வாய் விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழையவர் - பரவையாரது இயற்கை செயற்கை என்ற இருவகைத் தெய்வீக அழகுகளையும் காட்சிபெற வைத்தவாறு. நம்பிகள் காட்சிக்குக் கவர்ச்சியுற முதலிற் புலப்பட்டது நகை. அதன் பின்னரே அதற்கிடமாகிய செவ்வாய் தோன்றிற்று. இவை யிரண்டினுல் அக்காட்சியை அவர் உள்ளத்தே ஊன்ற வைத்தன மேலே கண்ட வில்லும் வேலும் ஆம். ஆதலின் இம்முறை வைத்தார். ஊறுசெய்து உறுத்தியன ஆதலின் படையாகக் கூறியவாறு. **வில்** கைவிட்டகலாது தொழில் செய்வதுபோல் நுதலும் தானிருந்தபடியே செயல் விளைத்தது ஆதலின் **வில்** என்றூர். **வேல்** உடையாரால் எறியப்பட்டு ஏவப்பட்டாரிடம் போய்ச் செயல் விளைக்கும் ; ஆதலின் **கண்ணை வேல்** என்றூர். இங்குக் **கண்** என்றது கண்ணின் தொழிலாகிய பார்வையை. அந்தக் கண்ணுல் பரவையாருங் கண்டாராதலின் (143) "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள், என்ன பயனு மில" என்ற திருக்குறளிற் கண்டவாறு நிகழ்ச்சி உண்டாயிற்று என்க. இக்காரணம் பற்றியே வரும்பாட்டில் **விற்றுவளை** என ஒரு சேர வைத்து எண்ணியபடியாம்.

இப்பாட்டுக் **காட்சி** என்னும் அகப்பொருட்டுறை. இத்துறைக்கு ஞானுர்த்தம் சற்குரு தரிசனம் என்ப.　　139

286. "கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்றன் பெருவாழ்வோ?
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியே"னென் றதிசயித்தார். ௧௪௦

(இ - ள்) கற்பகத்தின் பூங்கொம்போ? - (இங்கே நான் காணும் இப்பொருள்) கற்பக மரத்தினது பூக்களோடு கூடிய கொம்போ?; காமன் தன் பெருவாழ்வோ?-மன்மதன் தனதுபெரிய வாழ்வாய்க்கொண்ட பொருளோ?; பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? - அழகு என்ற பொருள் செய்த புண்ணியத்தின் பயனாய் விளைந்த புண்ணிய விளைவோ?; புயல் சுமந்து - மேகத்தை மேலே சுமந்து கொண்டும்; வில் - குவளை-பவளம் - மலர் - மதி - பூத்த விரைக் கொடியோ? - வில்லையும், நீலோற்பல மலரையும், பவளத்தையும், தாமரையையும், நிலாவையும் அழகு பெற அங்கங்களாகக் கொண்டும் விளங்கும் ஒரு வாசனைக் கொடியோ?; அற்புதமோ - மேலே சொல்லிய இவைகளில் இன்னதென்றோ அல்லது இவற்றோடு அடங்காமையின் வேறொன்றென்றோ துணியக் கூடாத அற்புதப் பொருளோ?; சிவன் அருளோ - (ஒன்றினாலும் உவமிக்கப் பெறாத) இறைவனது திருவருள்தானோ?; அறியேன் என்று அதிசயித்தார் - இது இன்னதென்று அறியேன் என்று அதிசயங் கொண்டார்.

(வி - ரை) இது, காட்சியின் பின் அற்புதத்தால், அவ்வாறு கண்ட பொருள் இவற்றுள் எதுவோ என்று ஐயப்பட்டுக் கூறுதலாகிய ஐயம் என்ற அகப்பொருட்டுறையாம்.

முன் இளம் பருவத்தே பரவையாரைக் கண்ட சுற்றத்தாரும் மிக்கோரும் "மாணிளம் பிணையோ" என்பது முதலாகக் கண்ட இளநலங்கள் யாவும் இப்போது அவ்வாறே முதிர்ந்து தத்தம் தொழில்களைச் செய்யவல்ல நலங்களாய் விளங்கிய நிலையை நம்பிகள் கண்டார். அவைகளை நம்பிகள் கண்டபடியை இப்பாட்டிற் கூறுகின்றார்.

கற்பகத்தின் பூங்கொம்போ? - தெய்வப் பூக்களின் மணத்துடன் இப்பொருள் விளங்குதலின் கற்பகத்தினது இனிய பூங்கொம்புதானோ? என்றார். இனி இக்காட்சி தெய்வத்தன்மை வாய்ந்ததேயன்றி மண்ணுலகிலே காணக்கூடியதன்று; ஆதலின் முதலில் **கற்பகம்** என்று நினைத்தார். கற்பகம் நினைத்ததெல்லாம் தரும் மரம் ஆதலின் எனக்கும் அவ்வாறு அளிக்குமோ என்ற விருப்பம் குறிப்பாகும் என்றும் கூறுவர். கற்பு+அகத்து+இன்+பூ+கொம்பு என்று பிரித்துக் கற்பினை அகத்தே கொண்ட இனிய பூ மலர்தற் கிடமாகிய கொம்பு என்று ஒரு தொனிப் பொருளும் பெறுதல் காண்க. கொம்பு என முதலிற் காட்சியிற்றோன்ற, அதன் இலக்கணம் முழுதும் இங்குக் கொம்பு என்று கண்ட பொருளில் அமையாமை கண்டார்க்கு, அதுவோ? அல்லது இது பெண்ணோ? என்று பின் தோன்ற, இங்ஙனம் இருபொருளும் பெறக் கூறினார் என்க.

காமன்தன் பெருவாழ்வோ - காமன் தான் பெருவாழ்வடைதற்குக் காரணமாகக் கொண்டொழுகும் பொருளோ? காமன் இளம் பருவம் கற்கும் தனியிளந்தனு இவரிடத்துப் பெற்றானதலாலும், அதனையன்றி அவன் ஆணை நடத்துதல் அமையாதாதலானும் அவனது **பெருவாழ்வோ** என்றார். வாழ்வுக்குக் குறிக்கோளாக (இலட்சியமாக) உள்ள பொருளை **வாழ்வு** என்று உபசரித்துக் கூறினார். "மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன" (மெய்ப்பொருள்-புரா-12) என்று கூறுதல்காண்க. காமன் வாழ்வு பெற்று நிலைப்பதற்குரிய பொருள் பலவாயிருக்கவும், அவற்றுள் எல்லாம் இது தலைமை பெற்றது என்பார் **பெருவாழ்வு** என்றார். திருக்கோவையாருரையிலே "உருவளர் காமன்றன் வென்றிக் கொடி என்றது நுதல்விழிக்குத் தோற்று உருவிழப்பதன் முன் மடியா வாணையனாய் நின்றுயர்த்த கொடியை" என்று பேராசிரியர் உரைத்த பொருள் இங்குப் பொருத்திக் கண்டு சுவைக்கத்தக்கது.

பொற்பு உடைய புண்ணியத்தின் புண்ணியமோ? - அழகிய புண்ணியங்களின் விளைந்த பெரும் புண்ணிய விளைவோ? அல்லது அழகு என்றதொரு பொருள் செய்த புண்ணியத்தின் பயன் பலவாகவும் அவற்றுள்ளே சிறந்த புண்ணியப் பயனோ? என்றபடி.

> "மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
> அத்தகைய மூப்பென்னும் அதன்படிவ மேயோ" (வரிசை 178)

என்ற பாட்டின் பொருளையும் அழகையும் இங்கே பொருத்திக் காண்க.

புயல்சுமந்து - வில்-குவளை - பவளம் - மலர் - மதி - பூத்த விரைக்கோடியோ?- மேகத்தைத் தலையில் சுமந்துகொண்டு, வில்லையும், குவளை மலரையும், பவளத்தையும், தாமரையையும், சந்திரனையும் போன்றவைகளைத் தனது பூக்களாகக் கொண்டு பூத்த தொரு வாசனைக் கொடியோ? என்க. கொடியின் வேறாய், அதன் அங்கமல்லாது, தலையிலே தாங்கி நிற்கும் சுமைபோல்வதால் **சுமந்து** என்று பிரித்துக் கூறினர். **சுமந்து** என்றதனாற் கூந்தலின் செறிவும், நிறைவும் குறிக்கப்பெற்றன. **புயல்**-'பயிர் வளர்க்குந் துளியவன்காண்' என்றபடி, கீழே கூறும் கொடி பூத்தற்கு இன்றியமையாது முதற்கண் வேண்டப்படுவது எனுங் குறிப்பினால் முதற்கண்ணே கூறியதுமாம். **புயல் - கூந்தல்.** பின்னர் வருவன கொடியின் அங்கங்களாய் அக்கொடியினின்று வேறாகாது ஒன்றாய் விளைதலின் அவற்றைப் **பூத்து** என்றதாம். அவையே : **வில்-புருவம் ; குவளை-கண் ; பவளம்-இதழ்** (வாய்); (கோங்கு) **மலர்** - முலை ; **மதி** (பிறைச்சந்திரன்) - நுதல் என மேலே பெண்ணோ என்ற ஐயத்திற்கு உரிய அங்க இலக்கணங்களுடன் பொருத்திக் காண்க.

> " திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
> குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
> மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி..."

என்ற திருக்கோவையாரையும் அதன் கீழ்ப் பேராசிரியர் உரைத்தவற்றையும் இங்குப் "பூத்த விரைக்கொடி" என்றதின் வைத்துத் தமிழின் சுவை கண்டு களிக்க.

விரைக்கோடி - மேலே கண்ட அங்கங்களாகிய பொருள்கள் உருவக் காட்சியாய்க் கண்ணுக்குப் புலனானவை. அன்றி இக்கொடி வாசனையும் தந்தது என்பார் **விரைக் கோடியோ** என்றார். மணமிலாப் பூக்கொடிகளைக் காட்சியளவில் கண்டுகளிக்கும் மக்களும் உளராதலின் இது இவ்வாறன்றிப் பூத்தலுடன் விரையும் தரும் கொடி என்றார்.

'மலர்மதி' என்று கொண்டு நிறைவாய் மலர்ந்த முழுமதி எனக் கூறினுமாம். **கோடி** - அம்மையாரது உடம்பு. கொடியை இடையென்று கொள்வாருமுண்டு. மேற் கூறியவற்றோடு ஒன்றாகாது அவற்றிற்கு வேறாகிய இருப்பிடமாதல் வேண்டும் ஆதலின் அது உரையன்றென்க. வில் முதலிய ஏனைய அங்கங்களாகிய பூக்களைப் பூத்துநிற்பதும், மணம் வீசுவதும் இக்கொடி என்பார் **பூத்த விரைக்கோடி** என்றார். அவ்வங்கங்களிலே முன்னர் (வரிசை 280) அம்மையாரது இளங்காட்சியில் கண்ட மானிளம்பிணை-**குவளை** யாகவும் ; வளர் இளமுகை-**மலரா**கவும் ; வாசத்தேனிளம்பதம்-**விரைக் கோடியா**கவும்; வேலைத்திரையிளம் பவளவல்லிக் கானிளங்கொடி - **பூத்த பவளமா**கவும் ; திங்கட் கதிர் இளங்கொழுந்து **மதி**யாகவும் ; தனியிளந்தனு - போர்த்தகுதி பெற்ற **வில்லா**கவும் முதிர்ந்து விளைந்து இப்பாட்டில் நம்பிகள் உள்ளத்தே தொழில்செய்தல் காண்க. விற்பூட்டிற்குத் தகுதிபெற நின்றனவாய்ப் பூட்டாமல் நின்ற முன்பாட்டிற் கண்ட இரு பொருள்களும் இங்குப் பூட்டிக்கொண்டு விற்குவளையாயினமையும் காண்க. **மலர்** - தாமரை எனக்கொண்டு முகம் என்றுரைப்பாரு முண்டு.

அற்புதமோ - பெருமிதமும் மகிழ்ச்சியும் தருவதொரு உள்ள நிகழ்ச்சி. அது இன்னதென்றறியப்படாமல் அனுபவிக்கப்பெறும்போது **அற்புதம்** என்று பெயர்

பெறும். "அற்புதம் அறியேனே" என்ற (திருவாசகம்) அற்புதப்பத்துக் காண்க. அதனாலே "**அறியேன்**" என்று பின்னர்க் கூறினார் என்க.

சிவனருளோ? - சிவனுக்கே ஆளாய்ப் பின்னர், அவன் அருள் வழியே சென்று வாழ்கின்ற என்னை இவ்வாறு அற்புதப்படுத்துவது அவனருளல்லாது பிறிது ஒன்றினாலும் இயலாது எனும் துணிவு உடையாராதலின் **சிவனருளோ?** என்றார்.

அறியேன் - இது ஐயம் என்ற துறையாதலின் ஐயத்தின் இலக்கணமாகிய அறிவும் அறியாமையும் கலந்த உள்ள நிகழ்ச்சியைக் குறிக்கின்றமை உணர்க. கொம்போ - வாழ்வோ - புண்ணியமோ - கொடியோ - அற்புதமோ - இவற்றில் ஒன்றோ, அன்றி முற்றும் கலந்ததோ, பிறிதோ என்று அறிவும், துணிவுபடாமையின் அறியாமையும், கூடி **அறியேன்** எனப் பெற்றது.

அதிசயித்தார் - இதுவும் அற்புதம் போலவே பெருமிதமும் இன்பமும் கலந்ததொரு உள்ள நிகழ்ச்சியேயாயினும் இன்னதென்று அறிந்து அனுபவிக்கப் பெறும். "அதிசயம் கண்டாமே" என்ற (திருவாசகம்) அதிசயப்பத்து முடிபுகளைக் காண்க.

மேலே சொல்லிய கருத்துக்கள் நம்பிகளது உள்ள நிகழ்ச்சிகளாம். மனதுக்குப் புலனாய் அறிந்து உரைக்கப்படுதலின் **அதிசயித்தார்** என்பதாம்.*

முதலில் தெய்வ மணமும், தெய்வ வொளியும், தெய்வ அழகும் கொண்ட ஒரு பொருள் நம்பிகளது காட்சிக்குட்பட்டது. அதனைக் கொம்போ என்றார். பின்னர் அதன் அழகு மிகுதி நோக்கிக் காமன் வாழ்வோ என்றார். அந்த அழகு வெறுங் கீழ் நிலைப்பட்டதாய்த் தோன்றாமல் புண்ணிய விளைவாய்ப் புலனானமையின் '**புண்ணியமோ**" என்றார். இவ்வளவும் நிருவிகற்பமாகிய பொதுக் காட்சியாம். இனி அவ்வாறு மணமும் அழகும் ஒளியும் பிரித்துணர்ந்து இன்னின்னவற்றால் விளைந்தன வென்று கூறுபடுத்தி அறியும் உள்ளநிலை உண்டானபடியால் '**வில் துவளை பவள மலர் மதிபூத்த விரைக் கொடியோ**' என்ற சவிகற்பமாகிய சிறப்புக் காட்சியாயிற்று. இவ்விரண்டினோடு அமையாமையின் அற்புதமாயிற்று. அதன் பின்னர் அவனருளே யன்றி வேறு பற்றுக்கோடு தமக்கின்மையின் முன்னினைவின் குறிப்புத் தோன்றவே சிவனருளோ? என்ற மன நிகழ்ச்சியாயிற்று. ஓகாரங்கள் ஆறும் ஐயப் பொருள் கொண்டன. இவையே மேலே வரிசை 280 திருப்பாட்டில் வந்தமையுங் காண்க. **சிவனருளோ** என்றது முன்னர்த் திருப்பாட்டில் "...உள்ள மெய்த்தன்மை முன்னை உண்மையும் தோன்ற வுய்ப்பார்" என்ற (வரிசை 282) பொருளால் விளைந்த ஐயப்பாடாகிய உள்ள நிகழ்ச்சி என்க. 140

287. "ஓவியநான் முகனெழுத வொண்ணாமை யுள்ளத்தான்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ?
மூவுலகின் பயனாகி முன்னின்ற" தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்றார்; நடுநின்றார் படைமதனார். ௧௪௧

(இ - ள்) ஓவியம்...விளக்கோ-பிரமதேவன் இவ்வகையான ஒரு சித்திரப்படத்தை எழுத முடியாமையினாலே பொருந்திய தனது வருத்தம் நிறைவுகொள்ளுமாறு உள்ளத்திலே படைத்ததொரு அழகிய விளக்கமோ?; மூவுலகின்...நின்றது - மேல் கீழ் நடு என்னும் மூன்று உலகங்களாலும் பெறும் பயனேயாய் என் முன் இங்கே நின்றது; என...நின்றார் - என்று எண்ணமிட்டவராய்த் (தொழுது செல்வாராகிய) நாவலர்பெருமான் (மேற்செல்கின்றதை நிறுத்திவிட்டு) நின்றனர்; நடு நின்றார் படை மதனார்-படை ஏந்திய மன்மதன் (இவ்வாறு கண்டு ஐயமுற்ற நம்பிகளுக்கும் அவரால் காணப்பெற்ற நங்கைக்கும்) நடுவே நின்றார்.

*அற்புதம் - அதிசயம் - இவற்றின் விரிவு எனது "சேத்தார் பெருமை அல்லது, மாணிக்கவாசகர்" 185-ம் பக்கத்திற் காண்க.

(வி - ரை) ஓவியம் நான்முகன் எழுதவொண்ணுமை - நான்முகன் ஓவியம் எழுத ஒண்ணுமையால் - (மாட்டாமையால்).

கட்டடம் முதலியவற்றிற்குக் கீற்று வரைவு எழுதிக்கொள்ளுதல் போல ஒருவன் ஒரு பொருளைச் செய்யவேண்டுமாயின் அதன் உருவத்தை முதற்கண் ஒரு படத்தில் வரைந்து கொள்ளுதல் வேண்டும்.

இங்கே கண்ட இப்பொருளையும் படைத்தற்கடவுளாகிய பிரமன் தானே படைத்திருத்தல் வேண்டும்? அவ்வாறு படைக்கு முன் இது எங்குமில்லாததொரு அரிய பொருளாய்க், கொம்பும் கொடியும் வாழ்வும் அருளுமாகிய அற்புதப்பொருளாய், அதுவும் வில் முதலியன பூத்த விரைக்கொடியாய் நிற்றலின், இதற்கு முதலில் ஓர் ஓவியம் எழுதிக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வோவியம் புறத்தே படத்தில் வரைவதற்கு முன்னர் அதன் உருவத்தை உள்ளத்தில் நன்றாய் எழுதிக்கொண்டன்றே பின்னர்ப் புறத்தில் படத்தில் கையால் எழுதல் கூடும். இவ்வுருவோ அவ்வாறு உள்ளத்திலும்எழுத இயலாததொன்றாம். எனவே, புறத்தே காணத்தால் எழுதக் கூடாமை தானே பெறப்படும். ஆதலின் **மனம்** முதலிய அந்தக்கரணங்களால் மிக முயன்று வருத்தப்பட்டு உண்டாக்கியதொரு மணியாகிய விளக்கமோ? முழுதும் பேரழகின் உருவமாய் மனத்தால் நினைத்து நினைத்து விதித்ததோ? என்றபடி.

"யாழுமெழுதி" என்ற திருக்கோவையார்ப் பாட்டிலே (79) "இளமாம்போழு மெழுதிற்றெர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே" என்னும் பொருள் நுணுக்கங்களை இங்கு வைத்துச் சுவை காண்க. அவயவ மெழுத லரிதென விலக்கல் என்ற துறைப்பொருளையுங் குறிக்க.

"உள்ளக்கிழியி னுருவெழுதி" எனும் அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகமும் காண்க. அது திருவாரூர்ப் பெருமானது தோத்திரமாதலின், மேலே **சிவனருளோ** என்ற நம்பிகளுக்கு இத்தேவாரத்திற் கண்டபடி அவனது தனிமை தோன்ற, அவனது அருளின் தனிமையும் அவ்வாறேயாகும் என்பது தோன்றிற்று; தோன்றவே இவ்வருட்பொருள் பிரமன் "உள்ளக் கிழியில் உருவெழுத" இயலாமை தோன்றிற்று; "**ஓவியம் நான்முகன் எழுத ஒண்ணுமை உள்ளத்தான்**" என்றார்.

மணி - செயற்கையால் அமையாது இயல்பாய் ஒளியுடைத்தாதலின் **மணி** என்றார். பரவையாரும் அதுபோலவே இயல்பான ஒளியும், மேனி முழுமையும் பேரழகும் வாய்ந்தவர் என்பது கருத்து.

விளக்கு - மணியின் தன்மையோடமையாது விளக்கின் றன்மையும் கூடியது. மணி. ஒளியுடையதாயினும் சூரியன் முதலிய பிறிதொரு ஒளிப்பொருளின் முன்பே ஒளிதரும். விளக்கோ தன் பக்கலிலே இருளைக் கொண்டது. இவ்விரண்டுமின்றி இது முழுதும் ஒளியாய்த் தன்னை விளக்க வேறு பொருள் வேண்டாமையின் **மணிவிளக்கு** என்றார்.

நான்முகன் - எழுத - ஒண்ணுமை(யால்) - உள்ளத்தால் - விதித்த - என்க. ஒண்ணுததாகிய உள்ளத்துடன் விதித்த - என்றும், ஒண்ணுத உள்ளத்தானுகி விதித்த - என்றும் உரைத்தலுமாம். கண்டவுடன் இவ்வளவும் விளக்கியதாதலின் **விளக்கோ** என்றார்.

நான்முகன் - இதன் பொருள் பின்னர்த் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம் "எண்ணிலாண் டெய்தும் வேதா" என்ற 1110-வது திருப்பாட்டிற் காண்க.

மூவுலகின் பயனுகி - மூவுலகின் உள்ளாரும் பாராட்டும் அழகிய புண்ணியப் பொருளாகி. பார் - அரவுலகு - விண் என்ற மூவுலகும் வெல்லப்பெற்றமை வரிசை 284 திருப்பாட்டிற் கூறினமைக்கேற்ப **மூவுலகின் பயனுகி** என்றார்.

மூவுலகிலுள்ளாரும் புவனியிற் பிறந்து சிவபூசை, அடியார்பூசை செய்தே கடைத்தேற வேண்டியவர்கள்; அவ்வாறு செய்தற்கு மாதவஞ்செய்த **தென்றிசை** வாழ்ந்

சிறப்பு திடத் தீதிலாத் திருத்தொண்டத்தொகைதர நம்பிகள் இங்கு வருமாறு ஆணையிட்ட அருள் நிகழ்வதற்கு இப்பொருளை ஆங்கே கண்ட காட்சியே காரணமாய் அதன் பயனே இதுவாயிற்று என்பார், 'மூவுலகின் பயனாகி' என்றார்.

சிவனருளோ என்று ஐயுற்றார்க்கு அதனை விளக்கும் கருவி வேண்டுவதாம் ; அவ் விளக்கும் இதுவே என **மணிவிளக்கோ** என்றார். அவ்வாறு சிவனருள் விளக்கமாயின் அதற்குப் பயன் வேண்டும் ; அப்பயனும் இதுவேயாம் என்று முடித்தவாறு. வரிசை 276-ல் கண்டபடி வழிபட்டு வந்த தெய்வமணிப் புற்றினுள்ள மணியின் விளக்கமோ என்றலுமாம்.

நாவலர் காவலர் - திருநாவலூரில் அவதரித்த பெருமான். தமிழ் நாவலர் தலைவர் என்பதும் ஆம். நாவலராதலின் இவ்வாறு இப்பொருளைத் தமிழ் விளக்கத்தாலே விளங் கக் கண்டார் என்பது குறிப்பு.

நாவலர் நின்றார் - (தொழுது செல்வாராகிய நம்பிகள்) கண்டார் (வரிசை 285) - (கண்டு) அதிசயித்தார் (வரிசை 285) - நினைந்து நின்றார் - என்க.

நடுநின்றார் படைமதனார் - மலரம்பும் கரும்புவில்லும் பிறவும் படையாகக் கொண்டு உலக முழுதும் எல்லா உயிர்களிடத்தும் ஆணைசெலுத்தும் மதனார், இங்குக், கண்ட நம்பிக்கும் காணப்பட்ட நங்கைக்கும் நடுவே நின்றாராயினார். இருவரிடமும் தொழில் செய்ய ஏற்ற இடம் இருவர்க்கும் நடுநிற்றலேயாதலின் இடம் தேர்ந்து நின்றாராயினார். ஒருபாற் கோடாது நடுநிலையாய் நின்றார் என்றலுமாம். தலைவன் தலைவியர் கூடியவழி சேர் நின்று ஒரு தொழிலும் செய்யாமல் நிற்றலும், பிரிந்து தனித்தவழித் தொழில் செய்தலும் மதனனுடைய இயல்பு ஆதலின் இங்கே 'நடு நின்றார்' என்றார். பின்னர் "வாளிதொடுப்பதே" என்று நம்பிகளும் (வரிசை 310) "படைமன்மதனார் புடைநின் றகலார்" என நங்கை பரவையாரும் (வரிசை 322) கூறுவன காண்க.

இத்திருப்பாட்டிலே 'நான்முகன் ஓவியம் எழுத ஒண்ணாமை' என்றது பிரமன் ஒருக்கால் பெண் சிருட்டித் தொழில் கைவாராதபோது இறைவனையும் இறைவியையும் வழிபட்டு அது கைவரப்பெற்றான் என்ற (காஞ்சிப்புராணம் - தழுவக்குழைந்த படலம்) சரிதத்தைக் குறிப்பதாகக் கூறுவாருமுண்டு. 141

288. தண்டரள மணித்தோடுந் தகைத்தோடுங் கடைபிறழுங்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளரொளிப்பூ ணுரவோனை
யண்டர்பிரான் திருவருளா லயலறியா மனம்விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார். ௧௪௨

(இ - ள்) *தண்தரளம்...கண்வியப்ப* - குளிர்ந்த முத்தும், மணிகளும் இழைத்த தோடுகளையும் தாண்டி ஓடும் தன்மைவாய்ந்த கடை பிறழ்கின்ற கெண்டை மீன் போன்ற வடிவமைந்த கண்கள் வியப்படைய ; *கிளர்...உரவோனை* - எழுந்து வீசும் ஒளியணிகளணிந்த நம்பிகளை ; *அண்டர்...விரும்ப*-தேவதேவனாகிய சிவபிரானது திரு வருளினாலே, (அவனருளை யல்லாது) வேறொன்றையும் இதுவரை அறியாத தமது மனம் விருப்பத்தையடைய ; *பண்டைவிதி...கண்டார்* - முன் கயிலாயத்தில் பெரு மான் விதித்த ஆணை இருதலையும் சேரும்படிக் கூட்டுவித்ததாதலின் பரவையம்மை யாரும் கண்டாராயினர்.

(வி - ரை) **நெடுங்கண் வியப்ப** - காதளவோடுதலும், பிறழ்தலும் அழகிய பெண் களின் கண்களுக்கியல்பாம். "மானிளம் பிணையோ", "விற்குவளை" என்று முன்னரும் முதலிற் சுட்டியதுபோல, இங்கும் கண்ணையே முதலிற் சுட்டியது கண் அழகின் பெருமை குறித்து. அவ்வாறு நம்பிகளையும் வியக்கச்செய்த இக்கண்களே இப்போது தாம் வியப்படைய என்க. இது நம்பிகளின் அழகினைத் தெருட்டியபடியுமாம். **தோடும்**

என்றதனால் காதின் அளவும் என்று குறித்தபடி. ஓடும் - பிறழுங் கெண்டை என்றதனால் கண்ணின் நீண்ட அளவும், செயலும், உருவமும் குறித்தபடி. புறத்தே கண் கண்டதைக் கட்பொறி வாயிலாக உணர்ந்த மனம் வாயிலாகப் புத்தி யுணர்ந்து அது ஆன்மாவுக்கு உணர்த்தியபின் ஆன்மா வியத்தல் முறை. ஆயின் இச்செயல்கள் இங்கு விரைவின் ஒன்றினொன்று விரவி நிகழ்ந்தமையின் வியத்தற்றொழிலைக் கண்ணின்மேல் ஏற்றிக்கூறினார்.

கடைபிறழும் கெண்டை - நீர் விளிம்புகளின்மேற் பிறழ்தல் கெண்டைக் கியல்பு. இதுவரை கட்டுப்பட்ட எல்லையினில் கண்ட காட்சிகளின் வரம்பிலிருந்து வெளிப்பட்டு வேறு வகைக் காட்சி கண்டதனாற் **கடை பிறழும்** என்று குறித்தார். நீர் ஊறுதற் கிடமாகிய இமைகளின் கடை வரையில் பிறழுமாதலிற் கெண்டை ஈண்டுக் கண்களுக்கு மிகப் பொருந்திய உவமையாதல் காண்க.

நெடுங்கண் - இங்குக் கூறுங் **கண்டார்** என்ற காட்சிக்குக் கருவி கண்ணேயாதலின் அதனைக் கூறினார். இக்காட்சியின் சிறப்பு நோக்கி இவ்வளவு அடைகொடுத்தோதியவாறும்.

கிளர் ஒளிப் பூண் உரவோனை - எழுந்து வீசும் ஒளியுடைய அணிகளை அணிந்த திண்மையான பேர் அறிஞராகிய நம்பிகளை. சைவ விடங்கின் அணி புனைந்து சாந்தமும் - மாலையும் - தாருமாகி - மெய்வளர் கோல மெல்லாம் பொலியச் செல்வார் இவரைக் கண்டு அதிசயித்து நின்றாராதலின், வழியே சென்று கொண்டிருந்த ஓர் ஒளி நின்றதும் அது யாவர் கண்ணினும் படுவது இயல்பாதலாலும் **கிளர் ஒளிப் பூண் உரவோனைக்** கண்டார் என்று குறிப்பித்தார். மைந்தர்க்கு மார்பமே விளக்கம் பெறுதல் அமைவாதலானும் "மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப், பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்" என்றதுபோல அவரது மார்பமே விளக்கமாகப் பரவையார்க்குப் புலனானமையும் குறிப்பு. பின்னரும் "முன்னே வந்தெதிர் தோன்று முருகனோ" (வரிசை. 289) என்பதும் காண்க.

உரவோன் - அறிவின் வலியுடையவன். "உரன் என்னும் தோட்டியான்" என்னும் குறள் காண்க. அறிவின் வலியராயினும் பரவையார் திறத்து மெலிந்தமை சிவனருட் பிரேரணையாம். **உரம்** - மார்பு எனக்கொண்டு பூணணிந்த மார்பினையுடையோன் என்று பொருள் கொள்ளலுமாம். **உரம்** - அறிவு. (பரிமேலழகர்) 'உரத்தின் வளம்பெருக்கி' - நன்னூல்.

அருளால்-இதுவரை கடை பிறழாத கெண்டைக் கண் இப்போது கண்டது அருளாலேயன்றிப் பிறிதொன்றாலன்று என்பது. பூங்கோயில் உள்ளவரை வணங்கப்போதுவார் அவ்வாறு போதும்போது " கண்ணவனை யல்லாது காணா " (11-ம் திருமுறை - ஆதியுலா) "கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க" (திருவாசகம் - திருவெம்பாவை) என்றவாறு வேறு ஒன்றையும் காணல் செய்யாதாதலின், இங்கு உரவோனைக் கண்டது அவனருளியதே என்பார் **அருளால்** என்று குறித்தார்.

அயல் அறியா மனம் விரும்ப-அவனருளையே யன்றிப் பிறிதொன்றிற் சென்றறியாத மனத்தினிடத்தே இதனில் விருப்பம் செல்லுமாறு. பிறநாயகரையறியா மனமானது விரும்புதலாலும் - என்பது இராமநாதச் செட்டியார் குறிப்பு.

அயலறியா மணம் என்பது பாடமாயின் காதன் மணமாகிய அகப்பொருள் துறையிலே விருப்பம் செல்ல என்க.

கடை கூட்ட - முடித்துவைக்க. பிரிந்ததைக் கூட்டி வைக்க. இவ்வாறு விதி கூட்டும் கூட்டத்தின் இயல்பை இறையனார் அகப்பொருள் உரையிற் காண்க. கீழ் கடலிலிட்ட ஒரு நுகத் துளையில் மேல்கடலிலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போல் என்று இதற்கு உவமை கூறுவர். வில்லினது பிரிந்து நின்ற இருகடையும் எவ்வாறு

நாணினாற் கூடுமோ அவ்வாறு விதியாகிய கூட்டுங் காரணத்தால் கூடுவதால் **கடை கூட்ட** எனப் பெற்றது. **கடை கூட்டுதல்** - அநுபவத்திற்குக் கொண்டு வருதல் என்பதுமாம்.

> வளைபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
> றுளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
> கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
> விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே.

எனவரும் திருக்கோவைச் செய்யுளின் கருத்தை யுன்னுக.

பரவை யாரும் - உம்மை, நம்பிகள் "வேற்கண் விளங்கிழையவரைக் கண்டார்" என்றதோடு, பரவையாரும் "உரவோனைக் கண்டார்" எனப்பொருள் தருதலின் இறந்தது **தழுவிய** எச்ச உம்மையாம். இருவர் நோக்கும் தழுவாதவழி, நோக்குதலாற் பயன் இல்லையாதலின் உம்மை கொடுத்துக் கூறியவாறு. இதன் இயல்பு "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்" என்ற குறளிற் காணப்பெறும் என்பது முன்னர்க் குறிக்கப் பெற்றது. இத்திருப்பாட்டுப் பரவையார்பால் நிகழ்ந்த **காட்சி** என்னுந்துறை. நம்பிகள் பால் நிகழ்ந்த **காட்சி** (285) திருப்பாட்டில் காண்க.

அயலறியா மணம் விரும்பி—என்பதும் பாடம். 142

289. கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப
விண்கொள்ளாப் பேரொளியா னெதிர்நோக்கு மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடமச் சம்பயிர்ப்பை வலிந்தெழலும். ௧௪௩

290. "முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ? பெருகொளியாற்
றன்னேரின் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே!யென் மனந்திரித்த விவன்யாரோ?" வெனநினைந்தார். ௧௪௪

289. (இ - ள்) கண்கொள்ளா...பேரொளியான் - கண்பார்வைக்கு அடங்காத (கண் காணக் கூசும்படி மிகுந்த) அழகு பொழிந்த திருமேனியிலே வீசும் கிரணங்களின் விரிவு ஆகாயத்தினும்பட்டு அடங்காது பெருகுகின்ற பெரிய ஒளி உருவமுடைய நம்பிகளை; எதிர் நோக்கும் மெல் இயலுக்கு - அவர் கண்ட நோக்குடன் ஒன்றுபட எதிரே நோக்குகின்ற மென்மையாகிய இயலை வாய்ந்த பரவையாருக்கு; எண் கொள்ளாக் காதலின் - மனத்தில் அடக்க முடியாத; முன்பு...எழலும் - இதற்குமுன் இவ்வுலகில் அனுபவத்தில் வாராத ஒரு புதிய விருப்பமானது இந்த உலகத்து உள்ளார் எவரும் இதுவரை காப்பாற்றிக்கொள்ளாத அளவிலே தாம் கைக்கொண்டு ஒழுகிய; நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பு என்ற பெண்மைக் குணங்கள் நான்கினையும் அடக்கி மேலே எழுந்தவுடன், ௧௪௩

290. (இ - ள்) முன்னே...பெருகு ஒளியால் - என் முன்னே பெருகி வளரும் பேரொளிப் பிழம்பாய்த் தானாகவே வந்து தோன்றும் முருகப் பெருமானோ?; தன் நேர் இல் மாரனோ - தனக்கு எவரும் நிகரில்லாத மன்மதனோ?; தார்மார்பின் விஞ்சையனோ? - வாடாமாலை யணிந்த விஞ்சையர்களில் ஒருவனோ?; மின்...உடையவனோ? - மின்னலை ஒத்த சிவந்த சடையையுடைய சிவபிரானது மெய்யருளைப் பெற்றவனோ?- என்னே...யாரோ - எனது மனத்தைத் திரித்த இவன் யாவனோ; என நினைந்தார் - என்று பலவும் நினைந்தார் (பரவையார்). ௧௪௪

இவ்விரண்டு பாட்டும் ஒருமுடிபு கொண்டன.

289. (வி - ரை) கவின் பொழிந்த திருமேனி கண்கொள்ளாக் கதிர் விரிப்ப என்றது அழகிய மேனியானது கண் கூசுமாறு கதிர்களை விரித்தலாலே. "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு, ஓவற விமைக்குஞ் சேண் விளங் கவிரொளி" என்ற திருமுருகாற்றுப்படைக் கருத்தை நோக்குக.

விண் கொள்ளாப் பேரொளியான் - கதிர் விரித்தலால் சூரியன்முதலிய பெரிய ஒளிப்பொருள்களின் ஒளிக்கெல்லாம் இடந்தந்திருந்த விண்ணும் இதைக் கொள்ள இடம் போதாது என்று சொல்லும்படி மிகுந்த பேர் ஒளியை உடையவன். அநேக கோடி இளஞ்சூரியர் விளங்குவதுபோன்ற சோபை என்க.

எதிர் நோக்கும்-அவர் நோக்கொடு இவர் நோக்குப் பொருந்த நோக்கியதால் **எதிர்** என்றார். "நோக்கொடு நோக்கு ஒக்க" என்க.

வேட்கை, நாணம் மடம் அச்சம் பயிர்ப்பை வலிந்து எழலும்-நாணம் முதலிய வற்றை வேட்கை வென்று மேலெழுந்தது. ஒரு பெண் நாயகனைப் பெறும் முறையிலே நாணம் முதலியவற்றை இழத்தல் இழுக்காகாது என்க.

வேட்கை - வேள் - பகுதி. விருப்பம். இஃது எல்லாவகை விருப்பத்தின்மேலும் செல்லுமாயினும், இங்கு ஒருவனை ஒருத்தி விரும்பும் மன விருப்பமாகிய காதலின் மேல் நின்றதைக் குறிக்க **எண் கொள்ளாக் காதலின்** என்றார். **எண் கொள்ளா** - எண்ணத்திற் கொள்ளப்படாத.

முன்பு எய்தாதது ஒரு வேட்கை - இதற்கு முன் இவ்விருப்பம் இவர் மனத்து நிகழ்ந்ததில்லை. எனவே தலைவன்பாற் சென்ற காதலாகிய உள்ளநிகழ்ச்சி குறித்தவாறு.

நாண் முதலிய நான்கும் மகளிர்க்கு இயல்பாயமைந்த குணங்களாம். **நாணம்** - மகளிர் இயற்கை. **மடம்** - அறிவிக்க அறிதலும், அவ்வாறு அறிந்ததை விடாது பற்றுதலும் ஆம் என்ப. **அச்சம்** - வெளிப்படை. **பயிர்ப்பு** - முன் பயிலாத பொருளில் அருவருப்பு.

மண்கொள்ளா - மேலே சொல்லியவாறன்றி, இதுவரை மண்ணுலகத்துள்ளே எப்பொருளாலும் கவர்ந்துகொள்ளப்பெறாத என்றலுமாம். 143

290. (வி - ரை) இஃது ஐயம் என்ற அகப்பொருளமைந்த துறை. வரிசை 286-ம் பாட்டில் நம்பிகள் மனத்தே நிகழ்ந்ததுபோல் இது பரவையார் மனத்தே **காட்சியின்** பின் நிகழ்ந்ததாம். **முன்னே வந்து** - நான் காணுமுன்னே தானே வலிய வந்து. என் முன் என்று கூறுவாருமுண்டு. **பின்னர் எதிர் தோன்றும்** என்றமையால் அது பொருளன்றென்க.

எதிர் தோன்றும் முருகனோ? - முருகன்தான் இவ்வாறு கண்கொண்டு காணமுடியாத அழகுடைய கதிரை வீசும் மேனியுடையான் என்ற நினைவினால் முருகனோ என்னும் உணர்வு முதலில் உண்டாகியது. கவின்பொழிந்த திருமேனியாதலின் **முருகனோ** என்றார். "ஆயிரங்கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாக மேயின" என்ற கந்தபுராணங் காண்க.

தன்னேரின் மாரனோ? - பின்னர்ப், பெருகொளியின்கீழ் அமைந்த அழகினைக் காணவே அழகுடைய உருவமுடையானொரு மன்மதனோ? என எண்ணினார். முருகன் தமது பெண்மை நலம் கவர எழுந்தருள ஏதுவில்லை; எனவே **மாரனோ** என்று அடுத்து நினைந்தார். இவ்வழகு மாரனது அழகின் மேம்பட்டு உருவுடன் கூடி விளங்குதலின் **தன் நேரின் மாரனோ?** என்றார்.

தார்மார்பின் விஞ்சையனோ? - சைவவிடங்கின் அணியும், சாந்தமும், மாலையும், தாருமாகி (276) முன்பெய்தாத காதல் வேட்கை எழச் செய்தமையின் **தார்மார்பின் விஞ்சையனோ** என்றார். **விஞ்சை** - வித்தை; **விஞ்சையன்** - வித்தியாதரனுமாம். **விஞ்சை**-வித்தை - போலி. **தார்** - மார்பின் மாலை. "உருள்பூந் தண்டார் புரளு மார்பி

னன்"—திருமுருகாற்றுப்படை. "வண்ண மார்பிற் றருங் கொன்றை"—(புறம்) "இந்திர ஞாலம்போல வந்தருளி, யெவ்வெவர் தன்மையும் தன்வயிற்படுத்துத், தானே யாகிய தயாபர னெம்மிறை" என்பது விஞ்சையின் இயல்பு. உருத்திரகணிகையராய் அடியவர்க்கு ஆளாம் தன்மையராயினும் இதுவரை எந்த அடியார்பாலும் எய்தாத வேட்கை விளைவித்தமையின் இந்தச் சைவவிடங்கு **விஞ்சையனோ**? என்ற குறிப்பாம். மேலே கண்டவாற்றால் முருகனுமன்று; மாரனுமன்று; என்னவே இவன் வேறு விஞ்சை வல்லவனோ என்று அடுத்து நினைந்தார்.

மெய்யருள் பெற்று உடையவனோ? - தங்கள் பனிமலை வல்லிபாதம் கூடும் அன்புருக்ப் பாடும் கொள்கையுடன், உள்ள மெய்த்தன்மை முன்னை உண்மையும் தோன்ற வாழும் (282) என்னை இந்நிலை செய்தலின் அவனருள் பெற்றவனே யாதல்வேண்டும் என்றார். அருள்பெற்றார்க்கன்றி என் பெண்மையை வலிந்தெழ இயலாது; ஆதலின் இவன் அருள் பெற்று அதனால் என்னை உடையவனாதல் வேண்டும் என்பது குறிப்பு.

என்னே! - ஆச்சரியக் குறிப்பு. இதுவரை திரியாது, நாண் முதலியவற்றை மண் கொள்ளாவகை காத்து, இறைவனிடத்தே செலுத்திய எனது மனத்தையும் என்றபடி. உயர்வு சிறப்பு உம்மை தொக்கது. நாற்குணச் சிறப்பு விகாரத்தாற் றொக்க தற்கேற்ப அதனால் நிறைவு பெற்றிருந்த மனத்தின் சிறப்பும்மையும் தொக்கது போலும்.

இவன் யாரோ? - முருகன் இச்செயலுக் கிசையான். மாரனும் விஞ்சையனுமோ அடியாரிடத்துச் செயல் செய வலியிலர். ஆதலின் அருள் பெற்றுடையார் ஒருவரே யாதல்வேண்டும். ஆயின் இவர் இன்னார் என்ற துணிவு பெறமாட்டாமையின் **யாரோ**? என்றார். ஒரு நாயகனைப் பலர் மணத்தல் இந்நாட்டுத் தொன்றுதொட்டு வந்த நெறியாதலின் இத்தலைவி, முன்னே ஒவ்வொரு தலைவியரை மணந்த முருகன் மாரன் முதலிய ஒருவரோ என நினைத்தல் இழுக்காகாது. ஆயின் ஒரு தலைவியைக் கண்டு காதல் கொள்ளும் தலைவன் அவளைப் பிறர் நாயகிபோன்றாள் எனக் கருதுதல் தகாதது ஆம். அது கற்பிலக்கணத்திற்கும் காதல் முறைக்கும் வழுவாம். அதுபற்றியே பேர் குறியாது முன்னர் (வரிசை 286) "கொம்போ!", "வாழ்வோ?", "புண்ணியமோ?", "கொடியோ?' என்றமை காண்க. ஆதலின் "கற்பகத்தின் பூங்கொம்போ..." என்ற பாட்டில் தெய்வயானை - இரதி - முதலிய பொருள்களைக் கூட்டி யுரைத்தல் பொருந்தா உரை என்க.

'கற்பகத்தின் பூங்கொம்போ' என்று நம்பிகள் நினைத்தமைக்கேற்பவே, பூத்தல் ஒழிந்து பாழ்பட்டுக் கிடந்த அதனைப் பூக்கச்செய்தவன் விண் குடியேற்றிய முருகனே யாதலால் **முருகனோ** என்ற நினைவு பரவையார் மனத்து எதிர் உருவமாய்க் கிளம்பியது. " காமன் பெருவாழ்வு " எனும் நம்பிகளின் நினைவு **மாரனைப்** பரவையார் மனத்திற் புகுத்தியது. நம்பிகள் " பொற்பின் புண்ணியமோ " என்றமை (சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கும் புண்ணியமுடையார் விஞ்சையராதலின்) **விஞ்சையனோ** என்ற கருத்தை விளைத்தது. "யாழுடையார் மணம்" என்ற திருக்கோவை-7. காண்க. சிவனருளோ என்று நம்பிகள் முடித்தமையே அவர் **மெய்யருள் பெற்றுடையவனோ** எனுந் தன்மையைப் பரவையார் உள்ளப் பளிங்கிற் பதித்தது. இந்நினைவுகள் முன் இல்லாது, இப்போது பளிங்கிற் பவளம் பதித்ததுபோல மனத்திற் பதித்தமையால் மனந்**திரித்த** எனப் பெற்றதாம்.

அவர் **அறியேன்** என்றபடி இவர் **யாரோ** என்றார். ஆயினும் அருள் பெற்றவனே என்ற துணிபுபற்றி இதனை ஐயத்தின் முடிபாக இறுதியிற் குறித்தார்.

(கண்டாராய்ப்) பேரொளியான் எதிர் நோக்கும் மெல்லியலுக்கு ஒரு வேட்கை எழலும் "முருகனோ? மாரனோ? விஞ்சையனோ? உடையவனோ? இவன் யாரோ?" என நினைந்தார் என இவ்விரண்டு பாட்டையும் தொடர்ந்து முடித்துக் கொள்க. 144

291. அண்ணலவன் றன்மருங்கே யளவிறந்த காதலினா
லுண்ணிறையுங் குணநான்கு மொருபுடைசாய்ந் தனவெனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தன் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழுமன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப, ௧௪௫

292. பாங்கோடிச் சிலைவளைத்துப் படையனங்கன் விடுபாணந்
தாங்கோலி யெம்மருங்குந் தடைசெய்ய மடவாலுந்
தேங்கோதை மலர்க்குழன்மேற் சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயி லமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்புகுந்தாள். ௧௪௬

291. (இ - ள்) அண்ணல்...........எனினும் - பெருமையுடையாராகிய நம்பிகளி டத்தே கொண்ட எல்லை யில்லாத காதல் காரணமாக, முன்னே தமது மனத்திலே நிறைவு பெற்றிருந்த நாண்.முதலிய பெண்மைக் குணங்கள் நான்கும் ஒரு பக்கமாகச் சாய்ந்து ஒதுங்கினபோதிலும்; வண்ணம்.........உய்ப்ப - அழகிய மலரின் மணம் பொருந்திய கரிய கூந்தலை யுடைய மடமையுடைய கொடி போன்ற பரவையாரை வலிமையுடையாராக ஆக்குவித்து, நெற்றிக் கண்ணையுடைய பெருமானைச் சென்று தொழவேண்டும் என்ற இறையன்பே பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டு செல்லும் படி வழிப்படுத்திக் கொண்டு போக, ௧௪௫

292. (இ - ள்) பாங்கு......செய்ய - சுற்றும் ஓடிப்போய் வில்லை வளைத்துப் போர் நிலையணுகிய மன்மதன் எய்யும் அம்புகள் பலவும்கூடித் தம்மைச்சுற்றிக்கொண்டு எப்பக் கமும் தடை செய்யவும்; (அத்தடைகளை அன்பு கைக்கொண்ட துணையாற் கடந்து) மடவாலும்...புகுந்தாள்-பரவையாரும், கூந்தல் அணிந்த தேன்பொருந்திய புதிய மலர் களாகிய கோதையின்மேல் சிறகருடைய வண்டுகள் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கச் சென்று பூங்கோயில் என்ற ஆலயத்தே எழுந்தருளிய இறைவனது திருவாலயத் துள்ளே போய்ப் புகுந்தார். ௧௪௬

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிவு கொண்டன. காதலினால் - குணநான்கும்-சாய்ந்தன-எனினும்-அன்பே மடக்கொடியை வலிதாக்கிக் - கைக்கொண்டு செலவுய்ப்ப - பாணம்-எம்மருங்கும் தடை செய்ய(வும்)-(அந்த) மடவாலும்-ஆர்ப்பப் - பிரான்-கோயில் போய்ப் புகுந்தாள் - என்று முடிக்க.

291. (வி - ரை) **அளவிறந்த காதல்** - முன் எண் கோள்ளாக் காதலின் என் றமை காண்க.

உள் நிறையும் குணம் நான்கும் ஒருபுடை சாய்ந்தன எனினும்-பரவையார் மனத் துள்ளே வேறொன்றும் புகுதற்கு இடந்தராத வண்ணம் நாற்குணமும் நிறைந்திருந் தன; இப்போது ஆற்றில் வெள்ளம் வந்தபோது நாணல் சாய்ந்தது போல அந்நாணம் முதலியன ஒரு புறம் சாய்ந்து காதல் வெள்ளத்திற்கு இடங்கொடுத்தன; தாமும் அக லாமல் இருந்தன என்பார் அகன்றன என்னாது **ஒருபுடை சாய்ந்தன** என்றார்.

எனினும் - மேற்பட்டுப் புகுந்த காதலின்மேலும் வலிமையுடையதாயிற்று என்ற இறையன்பினது மிக்க வலிமையைக் குறித்தது.

கொடி - துவளுந் தன்மையுடையது ஆதலின் **கொடி** என்றார். முன்னரே தலை யிற் பாரமுடையது என்பார் கூந்தலைக் குறித்தார். "புயல் சுமந்து......**பூத்த விரைக் கொடியோ**" என்ற வரிசை 286 திருப்பாட்டுக் கேற்ப இங்கும் **கூந்தற் கொடி** எனப் பெற்றார். **கொடி** என்பது கொடி போன்ற பரவையாருக்கு வந்தது. ஆகுபெயர்.

வலிதாக்கி - வலிமை யுடையவராக ஆக்குவித்து. தனது வசமிழந்த நிலையில் இருந்தாராதலின் **வலிதாக்கி** என்று அஃறிணையாற் சுட்டப் பெற்றதாம். **வலிதாக்கி**

உய்ப்ப - என்று கூட்டுக. தொழுகின்ற செயலுக்கு ஏற்றபடி சத்தியுடையதாக ஆக்காவிடில் அங்குச் செயல் செய்யுமாறில்லை ஆதலின் **உய்த்தலின்முன் வலிதாக்கி** என்றார்.

கண்ணுதலைத் தொழுமன்பு - தம் மனத்தை மாறுபடுத்திய மாரன் செயலுக்கு மருந்து அவனை எரித்த கண்களையுடைய இறைவனே யாதலின் அக்குறிப்புப் பரவையார் மனத்திற்றோன்றவே செல்லும் வலிபெற்றார் ; ஆதலின் **கண்ணுதலைத் தொழும் அன்பே உய்ப்ப** என்று சுட்டினார்.

கைக்கொண்டு செல வுய்ப்ப வலியிழந்தாரைக் கையைப்பிடித்துச் செலுத்துமாறுபோல அன்பு பரவையாரைப்பற்றிக் கொண்டுபோய் உள்ளே உய்ப்பவும் (செலுத்தவும்) என்க. 145

292. (வி - ரை) **பாங்கு** - பக்கமாக. **ஓடி** - மேலே வரிசை 287-வது திருப்பாட்டில் சொல்லியபடி நடு நின்றவாறே மனந்திரித்த மன்மதன் இப்போது இவர் வலிபெற்றுத் தன்னை வென்று சென்று விட்டார் என்ற நாணத்தால் நிலைபெயர்ந்து ஓடிப் பாணம் விட்டு அவர் எம்மருங்கும் செல்வதைத் தடை செய்தான் என்பது.

கோலி - வளைத்துக்கொண்டு - குறிவைத்து வளைத்து. " இருநில முழுதுந் தனதெனக் கோலி "—நன்னூல்.

மடவரல் - பெண். மடமையை யுடையாள். உம்மை, இவள் மடவரலேயாயினும் இவளைக் கைக்கொண்ட அன்பின் துணையாலே புகுந்தாள் என்ற குறிப்புக் காட்டும் சிறப்பும்மையாம்.

தேங்கோதை மலர்க் குழல்மேல் - குழலின் தேமலர்க் கோதைமேல் என்று மாற்றுக.

தேங்கமழ் குழலின் வாசம் திசையெலாம் சென்று சூழப் போந்தார் என்று வரிசை 283 திருப்பாட்டிற் கண்டோமாதலின் இடையுற்ற இந்நினைவுகளிலிருந்து முன்னினைவைப் புதுப்பிக்க இவ்வாறு கூறினார்.

வண்டார்த்தல் - பரவையார் போய்ப் புகுந்தாராதலின் நிலை மாறுபாட்டில் தடைப்படுதலும் செல்லலும் ஆகிய அசைவினால் உண்டாகும் செயல்.

" வளைசிலம்ப வார்கழல்கள், ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்ப "
—**திருவாசகம் - திருவெம்பாவை - 12.**

முன்னர் "விண்ணும் பணியும்" என்று ஆர்த்த வண்டுகள், இப்பொழுது பரவையாரை அன்பு கைக்கொண்டு பூங்கோயிலுட் புக வலிதாக்கிச் செலுத்தக்கண்டு அதனைத் தடை செய்ய மாரன் பாணங்கள் வலியற்றன என்று ஆரவாரித்தன. காமன் அவ்விண்ணவரில் ஒருவனே ஆதல் காண்க. அவன் வலிமை ஒதுக்கப்பட்டமை கண்டார்த்தன என்பது குறிப்பு. மதனன் வில்லிற்குச் சுரும்பு நாண் உண்மையும் கருதுக.

பூங்கோயில் - முன்னர் வரிசை 283-ல் பூங்கோயிலுள்ளார் என உரைத்ததையே தொடர்ந்து கூறியது நடைத்தொடர்பைக் குறித்தது. உரை முன்னர்க் காண்க.

பொற்கோயில் - இலக்குமி வரம் பெற்றமை குறிப்பாம். கோயிலும் அதன் பெயரும் கூறியபடியால் கூறியது கூறலாகாமை யுணர்க.

நாவலர் காவலர் **நின்றார்** என நம்பிகள் காட்சியில் ஈடுபட்டு **நின்றமை** கூறிய ஆசிரியர் பரவையாரும் அவ்வாறு நின்றார் என்னாது **நினைந்தார் (144) புகுந்தார்** என, நில்லாமலே செல்லுதல் கூறியது பரவையாரது பெண்மைக் குணத்தின் திண்மையைக் காட்டியபடியாம்.

போய்ப்புக்காள்—என்பதும் பாடம். 146

293. வன்றொண்ட ரதுகண்டு"என் மனங்கொண்ட மயிலியலி
னின்றொண்டைச் செங்கனிவா யிளங்கொடிதான் யார்?"என்ன

வன்றங்கு முன்னின்ற "ரவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியா" ரெனச்செப்ப, கஉ௭

294. "பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர்பரவை யாயினா டிருவுருவின் மென்சாய
லேர்பரவை யிடைப்பட்ட வென்னுசை யெழுபரவை", கஉ௮

295. என்றினைய பலவுநினைந் தெம்பெருமா னருள்வகையான்
முன்றொடர்ந்து வருங்காதன் முறைமையினாற் றொடக்குண்டு
"நன்றெனையாட் கொண்டவர்பா னண்ணுவ"னென் றுண்மகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த் தேவர்பிரான் கோயில்புக, கஉ௯

296. பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலினின் றொருமருங்கு புறப்பட்டார்.
விரவுபெருங் காதலினான் மெல்லியலார் தமைவேண்டி
யரவினா ரம்புனைந்தா ரடிபணிந்தா ராரூரர். க௩0

293. (இ - ள்) வன்றொண்டர்......என்ன - அவ்வாறு பரவையார் பூங்கோயில் போய்ப்புக்கதை நம்பிகள் பார்த்து "எனது மனதைத் தனது இடமாகக் கொண்ட மயில் போன்ற சாயலையும், இனிய கொவ்வைச் செங்கனிபோன்ற வாயையும் உடைய இளங்கொடி போன்ற இப்பெண் யார்?" என்று கேட்ப; அன்று......செப்ப-அப்போது அவ்விடத்தில் அவர் முன் நின்ற அடியார்கள் "அவர் தாம் **நங்கை பரவையார்** என்ற பேருடையவர் ; தேவத் தன்மை வாய்ந்தவர்களுக்கும் போய் அடைவதற்கு அரியவர்" என்று சொல்ல ; கஉ௭

294. (இ - ள்) பேர்பரவை - இவரது பேர் நங்கை பரவை ; பெண்மையினில் - இவரிடத்துக் காணும் பெண்மைக் குணங்களைக் கூறுமிடத்து ; பெரு உம்பர் அவை விரும்பு அல்குலார் பரவு ஐ - பெரிய தேவர் சபை விரும்புகின்ற திலோத்தமை முதலிய அரம்பையர்களும் துதிக்கத் தக்க தெய்வமாம் ; அணிதிகழும் மணிமுறுவல் அரும்பர் அவை - மேலே தொங்கிய மூக்கினணியில் உள்ள முத்துக்களினும் மேம்பட்டு விளங்கும் அழகிய பல்வரிசையோ முல்லையரும்புகளேயாம் ; சீர் பரவு ஐ ஆயினாள் - (சீர் - இலக்குமியும், பரவு - விரும்பும், ஐ - அழகு, ஆயினாள் - உடையவர்) இலக்குமியும் விரும்பும் அழகுடையார்; திருவுருவு இன் மென் சாயல்-கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமுடைய இவரது உருவத்துடைய இனிய மெல்லிய சாயலின் ; ஏர் பரவை இடைப்பட்ட - அழகிய பரவுதலிடையில் அகப்பட்ட; என் ஆசை எழுபரவை - எனது விருப்பமானது எழுகடல் போன்றதாம், கஉ௮

295. (இ - ள்) வெளிப்படை. மேலே குறித்தபடி பாராட்டி இவைபோன்ற பல எண்ணங்களையும் நினைந்தவராய், எமது இறைவன் அருளிய வழியினாலே, முன்னிருந்தே தொடர்ச்சியாய் வரும் காதலாகிய தொல் விதியினாலே கட்டுப்பட்டவராய், "நன்றாக என்னை ஆளாகக் கொண்ட இறைவனிடத்தே சென்று சேர்வேன்" என்ற கருத்துடனே, உள்ளத்திலே மகிழ்ச்சியுடன் செல்வாராய் ஆளுடைய நம்பிகளும் போய்த் தேவதேவனாகிய இறைவனது திருக்கோயில் புகுதலும் ; கஉ௯

296. (இ - ள்) வெளிப்படை. (பொற்கோயில் போய்ப் புக்க) பரவையார் அதனை வலமாக வந்து இறைவனைத் தொழுது துதித்துத் தமது வழக்கப்படி வழிபாட்டை முடித்துக்கொண்டு, நம்பிகள் கோயில் புகும் முன்பே, இறைவனது திருக்கோயிலிலிருந்து

வேறு ஒரு பக்கமாக வெளிச் சென்றார். தம்மிடத்தே வந்து பொருந்திய பெரிய வேட்கையினாலே மென்மையாகிய இயலுடைய பரவையாரைத் தமக்குத் தரும்படியாக நம்பியாரூரர் பாம்பு மாலைகள் பூண்ட பரமனாரது திருவடிகளை வணங்கினார். ௧௫௦

இந்நான்கு பாட்டுக்களும் ஒரு முடிபுகொண்டன.

வன்றொண்டர் - கண்டு - 'இளங்கொடி - யார் ?' என்ன, - முன்னின்றார் - 'பரவையார் - அரியார்' எனச் செப்ப, - நம்பியும் - 'பேர்பரவை...என்ஆசை எழுபரவை' என்று பலவும் நினைந்து - தொடக்குண்டு - 'ஆட்கொண்டவர்பால் நண்ணுவன்' என்று உண்மகிழ்ந்து - கோயில்புகப்,-பரவையார் - முன்னரே - ஒரு மருங்கு - கோயிலினின்று-புறப்பட்டார், - மெல்லியலார் தமைவேண்டி - ஆரூரர் - ஆரம் புனைந்தாரது-அடிபணிந்தார் - எனத் தொடர்ந்து முடித்துரைத்துக் கொள்க.

293. (வி - ரை) **மனம்கொண்ட** - மனத்தைத் தன்வசமாக்கி யிடங்கொண்ட.

இளங்கொடி-முன்னர் **விரைக்கொடி-மடக்கொடி** என்றதற்கேற்ப **இளங்கொடி** என்றார். இங்கு **இளங்கொடி** என்பது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழியாய்க் கொடிபோன்றாரைக் குறித்தலின் **யார்?** என்ற வினைமுடிபு கொண்டது.

யார் என்ன ? - யாரோ என்று முன்னர் **அதிசயித்தும்** (286) **நினைந்தும்** (290) நின்றவர் இப்போது தமக்குள்ளே **யார் ?** என்றார். ஒருவரையும் நோக்கிக் கேட்கா விடினும், அது சொல்லாய்க் கேட்கப்படவே அப்போது அவ்விடத்து முன்னே நின்றார் விடைசொன்னார் என்றபடி. மனங்கொண்ட மயிலியல் முதலியன பிறர்பால் அறிவிப்பது மரபன்று என்க.

நங்கை பரவையார் - பெண்மையிற் சிறந்தாரை **நங்கை** என்பது மரபு. **நங்கை பரவை** என்பதே இவரை அழைத்த மரபுபோலும். தஞ்சை இராசராசச் சக்கரவர்த்தியார் தமது இராசராசேச்சுரத்திலே தாபித்துள்ள இவரது செப்புப் படிமத்தில் "நங்கை பரவை" என்று பெயர் தீட்டப்பெற்றிருத்தலும் அறிக.

உம்பர் தரத்தார்க்கும் சேர்வரியார் - யார் ? என்று கேட்டார்க்குப் பேரோடு, தன்மையும் உரைத்தல் மரபாதலின் **அரியார்** என்று அறிவித்தனர் என்க. உம்பர் தரத்தும் யார்க்கும் சேர்வரியார் என்க. மக்கள் தேவர் நரகர் என்ற மூவகை உயர் திணையிலும் தேவர் உயர்ந்தோர் ; அவர் தரத்திலே உள்ளார்க்கும் என உம்மை உயர்வு சிறப்பு. உயர்திணை எல்லாம் அடங்கும்பொருட்டுத் தேவரே - அன்றி அவர் தரத்தாரே-யாவரேயாயினும் என்பார் **தரத்தும் ஆர்க்கும்** என்றார். உம்மை தொக்கது.

உம்பரின் மேலாயினவர் விட்டுணுமூர்த்தி ; அவருக்குக் கிருட்டிணாவதாரத்திற் சிவதீக்கை செய்து அவர்முடிமேல் அடிவைத்தவர் உபமன்னிய முனிவர் (வரிசை 24); அவரால் துதிக்கப் பெறுபவர் நம்பிகள். இவர் அவர்க்கே உரியர் அல்லாது உம்பர் தரத்தார்க்கும் சேர்வரியார் என்றபடி. 147

294. (வி - ரை) **பரவை** - தலைவனுக்குத் தலைவியினது பெயர் கேட்டலும் அதில் ஓர் விருப்பம் நிகழ்வது ஒரு அகப்பொருள் உண்மை. பெயர் வினாதல் என்ற துறையில் வரும் பாட்டுக்களைக் காண்க. அவ்வாறே **பரவையார்** என்ற பெயர் கேட்டலும் நம்பிகள் நாவலர் காவலராதலின் அப்பெயரிற் சென்ற விருப்பத்தை இவ்வாறு அறிவிக்கின்றார். ஒரு பாட்டில் **எழுபரவை** அடக்கிய நாவலர் என்று சேக்கிழார் சுவாமிகளை மகாவித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளார்கள். "முறையினொரு சிறுதுக்கி னெழுபரவை யும்புக முடித்துற நிறுத்தா னிவன் மொழியெங்க டம்பிரான் வல்லப முணர்ந்திலகொல்"—சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத் தமிழ். இதில் உள்ள **பரவை** எழு என்பதை ஆசிரியர் "என் ஆசை **எழுபரவை**" என்று முடித்து இரட்டுற மொழிந்து காட்டியதும் ஒரு அழகாம். கடல்கள் ஏழென்பர்.

எழுபரவை - மதியைக் காண எழுகின்ற கடல் என்று கொண்டு கரைகடந்து பொங்கும் கடல்போன்றதென்பதுமாம். அழகின் பரப்பினுட்பட்ட ஆசை எழுகடல் போல் பரந்தது. எனவே கடல் கரையினுட் படாததுபோல ஆசை அழகின் பரப்பினுட் படாதென்பது.

நடையும், முறுவலும், அழகும், சாயலுமே வெளித் தோற்றப்படுவனவாய்த் தமது விருப்பத்தை முன்னமே கவர்ந்தன ஆதலின் பெயர்கேட்ட விருப்பத்துடன் இவற்றையே நம்பிகள் சேர்த்துக் கூறியவாறு. முறுவல் தோன்ற இருத்தல் உள்ள நிறைந்த மகிழ்ச்சியின் மெய்க்குறி.

பரவையிடை - பரவுதலைக் கொண்ட தன்மையினிடத்தே. வலைப்பரப்பின் இடை மீன் படுதல்போல, என் ஆசை இவரது அழகின் பரப்பினுட்பட்டதாயினும் எழுகடல் போன்றது.

இவள் பேர் பரவை. இவளது பெண்மைக் குணங்களைப் பற்றிப் பேசின் இவர் திலோத்தமை முதலிய தேவப் பெண்களும் தொழக்கூடிய தெய்வம்போன்றார். முல்லையரும்புபோன்ற முறுவலுடையார். இலக்குமி விரும்பும் அழகும் பெற்றார். இவரது சாயலாகிய பரப்பிலே பட்ட எனது ஆசை எழுகடலினும் பெரிதாய் வளர்கின்றது என்பது திரண்ட பொருள். **பேர உம்பர் அவ்வை** - தேவர்களுக்குத் தாய் போன்றவள் என்றலுமாம். இப்பொருளில் அவ்வை என்பது அவை என்றாயிற்று.

விரும்பு அல்குல் ஆர்பு அரவு ஐ - விரும்பும் நிதம்பம் பொருந்திய வளர்ச்சியிலே பாம்பின் அரசு போலும் என்று கூறுதலும் ஒன்று. 'அல்குல் அரவுலகை வென்ற துணிவு கொண்டார்ப்ப' என்று முன்னர்க் கூறியதும் (284) காண்க. அரவுலகு என்பது வடிவத்திற்கும், உடன்பட்டார் படும் விடத்தன்மைக்கும் ஆம். இது வெளிக் காணப் படா உறுப்பாயினும் பெண்மைக்குரிய அவயவமாய் நோய்செய்தல் பொருந்திய சிறப்பு இயல்பு பற்றியே எடுத்துக் கூறப்படுவது தமிழ்க் கவியியல்களில் ஒன்று.

சீர்பரவையாயினுள் என்பதற்குச் சிறப்புடைய பரவை என்ற கூத்துடைய இலக்குமி போன்றாள் என்று பொருள் கூறுவாருமுண்டு. இது பொருந்தாமை மேலே வரிசை 290 பாட்டின் கீழுள்ள உரைக் குறிப்பிற் காண்க.

ஆர் பரவை - என்ற அடி முற்றுமோனை.

அணிதிகழ் - அணியிற்றிகழ் என ஐந்தனுருபு விரித்துரைக்கப்பட்டது. முத்து மூக்கணியிற் றிருங்குவதன் அழகைச் சிவப்பிரகாச சுவாமிகள்,

"தன்னை நிந்தைசெய் வெண்ணகை மேற்பழி சார
மன்னி யங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்னி றந்திடு வேனென ஞான்றுகொள் முறைமை
யென்ன வெண்மணி மூக்கணி யொருத்திநின் றிட்டாள்"

—மாயை பூசைகதி - 18

என்று பிரபுலிங்கலீலையில், அழகிய கற்பனையின் மூலம் அறிவித்திருத்தல் காண்க. **அணி திகழும்** - அழகு விளங்கும் என்றலுமாம்.

மணிமுறுவல் - மணி போன்ற பல் என்றுரைப்பதும் ஆம். **மணி** - முத்து.

பரவையார் உருத்திர கணிகையராய் வீதி விடங்கப் பெருமானது திருவோலக்கத்தில் பாடல் ஆடல்களுக்கே உரியவர் என்பது பின்னர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 271-வது பாட்டில் காண்க. வீதிவிடங்கப் பெருமானாகிய தியாகராசர் தேவருலகில் அரசு வீற்றிருந்தார். இவர்பால் அங்கு ஆடற்குரிய பெண்கள் தேவமாதர்கள். அம்மையாரது சேடியாராய் அருளின்வழி இங்கு அவதரித்து இவர்முன் ஆடல் புரியும் பரவையாரை அவர்கள் பரவுதல் இயல்பு என்பார் உம்பர் அவை பரவு ஐ (ஐ - தெய்வம்) என்றார். இங்குத் தேவர்கள் வந்து தொழக் காத்திருப்பதும் காண்க.

295. (வி - ரை) அருள்வகையால் முன் தொடர்ந்து வரும் காதல் முறைமை - திருமலைச் சருக்கத்திற் கூறியவாறு திருக்கயிலாயத்தின் நிகழ்ச்சியினாலே சிவபெருமானது ஆணை வழியே தொடர்புபற்றி வருவது என்றபடி. நம்பி தொடக்குண்டமை அருள்பற்றிய தொடர்பே யன்றிப் பிற ஆன்மாக்கள்போலப் பிறவித் தொடக்கல்ல என்று அவரது தன்மை உணர்த்தியவாறு.

நினைந்து - தொடக்குண்டு - உண்மகிழ்ந்து - சென்று போய்ப்புக - என்று கூட்டி முடிக்க.

தொடக்குண்டார்க்கு வருந்தலே முறையாயினும் தம்மை ஆட்கொண்ட பெரியானை நினைக்கவே அது மகிழ்ச்சி உண்டாக்கியது என்பார் **உண்மகிழ்ந்து** என்றார்.

நன்று எனை ஆட்கொண்டவர் - நன்றாக - எனது நன்மையின் பொருட்டே-என்னைத் திருவெண்ணெய் நல்லூரில் ஆளாகக் கொண்டவர். ஆள்களுக்குத் தமக்கென்று செயல் செய்துகொள்ளும் உரிமையும் வலிமையும் இல்லையாதலின் ஆளாய்க் கொண்டவுடன் ஒரு மணம் விலக்கப்பட்டது ; ஆயின் அருட்குறிப்பின் வழி நிகழ்ந்த இவ் வேட்கையினையும் உள்ளிருந்தே அறிபவனாகி என்னை ஆளாகக்கொண்டவனே முற்றுவிக்க உரியவன் என்பது குறிப்பு. ஆளுக்கு வேண்டுவனவற்றை, அவனை ஆளாக் கொண்டவனே செய்தல் வேண்டும் என்ற முறையைக் குறிக்க **எனையாட்கொண்டவர் பால் நண்ணுவன்** என்றார்.

உடைய நம்பி - ஆளுடைய நம்பி. பெருமானுக்கு ஆளாந்தன்மையுடைய நம்பி (285). **ஆட்கொண்டவர்** என்றதற்கேற்ப (ஆள்) **உடைய நம்பி** என்றார். இறைவனைத் தோழமையாகப்பெற்ற உரிமையுடைய நம்பி என்றலுமாம். (273)

நம்பியும் - பரவையார் புகுந்ததுபோல நம்பியும் புக. இறந்தது தழுவிய எச்ச உம்மை. இருவருக்கும் பற்றுக்கோடு அவ்வொருவரே என்பது குறிப்பு. 149

296. (வி - ரை) **ஒருமருங்கு** - ஒரு - வேறு ஒரு. நம்பி புகுந்த மருங்கு அல்லாமல் வேறொரு மருங்கு என்க. வேறு-வருவித்துரைக்கப்பட்டது பின்னர்க் கோயிலில் இருவர்க்கும் காட்சிநிகழவில்லை ஆதலின். (முன்னர்க்கூறிய காட்சித்துறை தொழுது சென்ற நம்பிகள் தொழச்செல்லும் பரவையாரை மறுகிலே கண்டபோது நிகழ்ந்ததாம்.)

மெல்லியலார் தமைவேண்டி - முன்னரே போற்றினர் (தமது நியதிப்படி) தொழுது சென்றாராதலின், பின்னர் வந்து **மெல்லியலார் தமைவேண்டிப் பணிந்தார்**என்றார். முன்னர்ச்செய்தது நிட்காமிய வழிபாடு என்றும், பின்னர் நிகழ்ந்தது காமியத்தின் பாற்பட்டது என்றும் கூறுப. இறைவனிடத்துக் காமியவழிபாடு செய்யலாகாது என்பாரை நோக்கி, அவரருள் வகையால் முன் தொடர்ந்து வந்து விரவிய பெருங்காதல் காரணத்தால் இஃது ஆம் என்று குறித்தார் என்க.

புரவலனார் - புரத்தலிலே வல்லவர். தம்மை எம்மையினும் காப்பவர் இதனினும் காத்தளிப்பார் என்ற குறிப்பு. 150

297. அவ்வாறு பணிந்தேத்தி யணியாரூர் மணிப்புற்றின்
மைவாழுந் திருமிடற்று வானவர்பா னின்றும்போந்
"தெவ்வாறு சென்றாளென் னின்னுயிரா மன்ன"மெனச்
செவ்வாய்வெண் ணகைக்கொடியைத் தேடுவா ராயினார். ௩௱௫௧

(இ - ள்) வெளிப்படை. மெல்லியலார் தமை வேண்டிய அவ்வகையிலே வணங்கித் துதித்து, அழகிய திருவாரூரில் மணிப் புற்றிலே யிடங்கொண்ட திருநீலகண்டப் பெருமானிடத்திலிருந்து சென்று, "எங்கே சென்றனள் எனது இனிய உயிர்போன்ற அன்னமாகிய பரவை" என்று, அந்தச் சிவந்த வாயையும், வெள்ளிய நகையையும் உடைய கொடிபோன்ற பரவையாரைத் தேட முற்பட்டார் நம்பிகள்.

(வி - ரை) அணியாரூர் மணிப்புற்று-"*தாளமெறி புனன் மறிதிரைப் பொன்னி, மடுத்த நீள் வண்ணப் பண்ணையாரூர்*" *என முன்னர்க்* (வ. 254) *கூறியதற்கேற்ப* "*அணியாரூர்*" *என்றார். மணிப்புற்று வரிசை* 276-*பாட்டில்* **தெய்வ மணிப்புற்றுள்ளார்** *என்ற இடத்து உரைக் குறிப்புக் காண்க.*

மை வாழும் திருமிடற்று வானவர் - *விடம் வாழ்தற்கிடமாகிய திருக்கண்டத்தை யுடைய தேவதேவன் என்க. மை என்றது கருமைப்பண்பை யுணர்த்தும் பெயர்; கருமையுடைய விடத்திற்கு ஆகு பெயராயிற்று.* "*கருகு மையிரு ளின்கணம்*" (*இளை யான்குடி - புரா* - 15) *என்புழி மிகக்கரிய இருள் என்பது கருத்து.*

வாழும் *என்னும் பெயரெச்சம்* **மிடறு** *என்னும் இடப்பெயர் கொண்டது. மையி னுக்கு வாழ்வாவது உயிர்கள் பயந்து அருவருத்து ஒதுக்கும் பொருளாகுமியல்பு மாறி விரும்பி வழிபடும் ஏற்றம்பெற்ற பொருளாதல். இனித், திருநீலகண்டமானது விடந் தோன்றிய ஞான்று தேவர்களை வாழ்வித்ததேயன்றி என்ஞான்றும் உயிர்கள் தன் னைக்கண்டு சிவபெருமானது முழுமுதற்றன்மையை உணர்ந்துய்யுமாறு செய்து அவை களை வாழ்வித்தலின்,* **வாழ்விக்கும் திருமிடற்று** *எனப் பிறவினை விகுதி தொக்கது என்பதும் ஒன்று. மையினால் உயிர்களை வாழ்விக்கும் என்க.*

> "*புவனங்க ளுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்*
> *தவநின்று தடுத்த தென்னத் தகைந்ததுதான் றரித்த தென்று*
> *சிவனெந்தை கண்டந் தன்னைத் திருநீல கண்ட மென்பார்*"
>
> **—திருநீலகண்ட நாயனார் புராணம் - 4**

என்று பின்னர்க் கூறுதல் காண்க. இதனைப் "*பேதியா ஆணை*" *என்று திருநீலகண்ட நாயனார் கொண்டு வாழ்வுபெற்றமையும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்* "*அவ் வினைக்கிவ்வினை*" *என்ற திருநீலகண்டத் திருப்பதிகத்தால் ஆணையிட்டுக் கொங்கிற் பனிநோய் தீர்ப்பித்து உலகிற்கு உறுதிகூறி வாழ்வு கொடுத்ததுவும், இங்கே நினைவு கூர்தற்குரியன. மலத்தைப் போக்கி மரணத்தைத் தவிர்த்தல் இறைமைக்குண மாதலின் அதனைத் தேற்றம் பெற உயிர்களுக்கு எப்போதும் நினைவூட்டுமாறு இதனை இறைவன் தமது செம்மேனியிலே கண்டத்திற் றோன்ற மணிமறுப்போல வைத்தார் என்பது நூற்றுணிபு.* **மை** - *ஆகுபெயராய்க் கரிய மேகத்தையும் குறிக்கும். இதனாலே மேகமும் (காத்தற்றொழிலும்), விடமும் (அழித்தற் றொழிலும்) சேர்ந்து* **வாழும்** - *என்ற சொல்லாற் குறித்துக் காட்டியவாறு என்றுங் கூறுவர்.* "*மிடறே, நஞ் சகந் துவன்றி யமிர்து பிலிற்றுமே*" *என்பது பதினொராந் திருமுறை. (சிவபெரு - திருமும்மணி - 4)*

> "*இருளின் உருவென்கோ? மாமேக மென்கோ?*
> *மருளின் மணிநீல மென்கோ?—அருளெமக்கு*
> *நன்றுடையாய்! செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்*
> *ஒன்றுடையாய்! கண்டத் தொளி*"
>
> **—காரைக்காலம்மையார் - அற்புதத்திருவந்தாதி** - 88 *காண்க.*

மை *என்ற விடத்தினால் தங்கள் வாழ்வுகளை இழக்க நின்ற ஏனைத் தேவர்களி னின்று பிரித்துணர்த்த ஆசிரியர்* **மைவாழுந் திருமிடற்று வானவர்** *என்று அடைமொழி கொடுத்துச் சிறப்புரைத்தார்.*

உயிராம் அன்னம் - எவ்வாறு சென்றாள் *எனத் தம் உயிரையே தேடிப் பெற நின்ற ஆரூரர்க்கு உயிரைத்தரும் இயைபுடைமையால்* **மைவாழும் திருமிடறு** *நினைவுக்கு வரும் இயல்பும் காண்க.* 151

வேறு

298\. பாசமாம் வினைப் பற்றறுப் பான்மிகு
மாசை மேலுமொ ராசை யளிப்பதோர்

தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
வீச னாரரு ளெங்கெறிச் சென்றதே. ௧௫௬௨

(இ - ள்) பாசமாம்...மன்னி - பாசமாகிய வினைக்கட்டினை அறுப்பதற்காக என்னிடத்து மிக்கு எழுகின்றதாகிய இறைவன் பணியிற்கொண்ட ஆசையையும் (கீழ்ப் படுத்தி) அதற்குமேலும் ஓர் ஆசையைக்கொடுக்கின்ற ஒப்பற்ற ஒளியொடு பொருந்தி ; என் சிந்தை...சென்றதே - மயங்காத என் சிந்தையும் மயக்கத்தை அடையும்படியாக இறைவனது நிறைந்த திருவருள் (உருவமாகிய பரவை) எவ்வழி போயிற்று. (ஏ - அசை. ஆச்சரியக் குறிப்புமாம்)

(வி - ரை) பாசம் - கட்டு (பச் - கட்டு. பகுதி). கட்டப்படுவது பசு என்க. ஆன்மாவும் வியாபக முடையதாயினும் பாசக்கட்டினாலே தான் கட்டுப்பட்டதாயிற்று. இது ஆணவமாகிய சகசமலத்தைக் குறிக்கும் என்பர். பாசம் - கயிறு

வினைப்பற்று - வினையினது தொடர்பு. வினைத்தொடர்பே உயிர்களைக் கட்டுவது என்பது சாத்திரம்.

அறுப்பான் - அறுக்கும் பொருட்டு. பாசமாகிய வினையினது தொடர்பை நீக்கும் பொருட்டு. பான் - வினையெச்சவிகுதி- அறுப்பான் என்பதனைப் பெயர்ச்சொல்லாகக் கொண்டு வினைப்பற்றறுப்பா னாகிய சிவபெருமானைக் குறிப்பதாகக் கொண்டு, அவன் அளிப்பது ஓர் ஆசை என் றுரைப்பாருமுண்டு. பின்னர் ஈசனார் அருள் என வருவதால் அது பொருந்தா தென்க. பாசக்கயிறு என்றதற்கேற்ப அறுப்பான் என்றார்.

பற்றறுப்பான் உள்ளத்தில் மிக்கு எழுகின்ற ஆசைகொண்டு முயல்கின்றேனாகிய என்னுள்ளே அதனையும் மேலிடுவதொரு ஆசையை அளிக்கும் ஒளியுடன் என் சிந்தை மயக்கிய ஈசனது நிறைந்த அருளாகிய பரவையார் என்பது பொருளாம். ஈசனாரது அருள் என்றுரைப்பினுமாம்.

பாசம் ஆம் வினைப்பற்று - முன் கயிலையில் காட்சியிற் கண்ணினரான வினைப் பற்று ஒரு பாசமாகப் பரிணமித்ததாம் என்றபடி. அதனை அறுக்கும் ஆசை - அதனைத் தீர்த்து மீளா நெறியை மீண்டும் அடையும் ஆசை. அதனால் முன்னர்த் திருத்துறை யூரில் தவநெறி வேண்டிப் பெற்றமையும் காண்க.

பற்றறுப்பான் மிகும் ஆசை-திருவாசகம் ஆசைப்பத்திலே சொல்லிய ஆசைகள்.

மேலும் ஓர் ஆசை - அந்த ஆசையையும் கீழ்த்தங்கச் செய்து மேற்கிளம்புவது.

அளிக்கும் தேசின் மன்னி - கொடுக்கின்ற பெரும் ஒளியில் நிலை பெற்று. தேசு - மனங்கவரும் ஒளியுரு.

மயக்குற - ஒன்றை மற்றொன்றாகத் திரியக்காணும் உணர்வு மயக்கம். ஒரு ஆசை மேலும் ஒரு ஆசை என இரண்டும் தருதலின் மயக்குற என்றபடியாம். பாசமும் மயக்கும் ; அருளும் மயக்கும். ஆனால் அருளானது பிறவியை அறுக்கும் வகையிலே மயக்கும் ; மற்றையது பிறவியைத் தரும் வகையிலே மயக்கம் செய்யும் என்க.

ஈசன் ஆர் அருள்-அருளால் தடுத்தாளப் பெற்று அருள்வழி நிற்பேனை அருளே யன்றிப் பாசம் மயக்குமாறில்லை ; ஆதலின் இதுவும் அருளேயாதல் வேண்டுமென்ற துணிபு பற்றி, மயக்கியதாயினும் ஆரருள் என்று கூறப்பட்டதாம்.

இவ்வாறு மேல்வரும் இரண்டு பாட்டுக்களிலும் " எம்பிரானருள் ", " எந்தையா ரருள் " என்றமையும் இக்கருத்தே பற்றியன. சிவனருளோ என்று (வரிசை 286) முன்கூறியதும் காண்க.

அருள் சென்றது - அருள் வழித்தாகியே வந்தவராய்த் துணிந்த பரவையாரை, அருள் என்றதற்கேற்பச் சென்றது என்ற அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்றினாற் கூறப்பெற்றதாம். அருளால் வந்த உருவினை அருளென்றது உபசார வழக்கு.

மன்னி - நிலைபெற்று - நிறைந்து. தேசு **மன்ன** என்று பாடங் கொள்வாருமுளர். அடுத்துவரும் பாட்டுக்களில் 'ஒல்கி' (299) என்றும், 'விழித்து' (300) என்றும் கூறு மவற்றுக்கேற்ப இங்கும் **மன்னி** எனவே பாடங் கொள்ளல் சிறப்புடைத்தாம். 152

299. உம்பர் நாயகர் தங்கழ லல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியி னொல்கியின்
றெம்பி ரானரு ளெங்கெறிச் சென்றதே. ௧௫௩

(இ - ள்) உம்பர்......அறியேனை - தேவதேவராகிய இறைவருடைய திருவடிகளையே அல்லாமல் பிறிதொன்றையும் நம்பும்நெறி பயிலாத என்னை; நடுக்குற... ஒல்கி - நடுக்கம் பொருந்தும்படியாக வலிந்த மயக்கத்தைத் தந்து கொடிபோல் அசைந்து; இன்று...சென்றது - இன்று என்முன் வந்த எமது பெருமானது அருள் வண்ணமாகிய பரவை எந்த வழியே போயிற்று?; (ஏ - அசை)

(வி - ரை) **உம்பர்** - மேலுலகத்தவர்; தேவர்கள்.

கழல் - கழல்களையே என்க. **கழல்**-சாதியொருமை. வேற்றுமை யுருபும் பிரிநிலை ஏகாரமும் விகாரத்தாற்றொக்கன.

அல்லது அறியேனை-அல்லாமல் வேறொன்றையும் அறியேன் என்று நம்புதற்குச் செயப்படுபொருள் வருவித்து உரைக்க. கழலே அறிவேனை என்ற உடன்பாட்டிற் கூறுவதினும் கழலே யல்லாது வேறு அறியேன் என இரண்டு எதிர்மறைகளிற் பெற்ற உடன்பாட்டுப்பொருள் அதிக வலிமையுடைமையின் இதனால் நம்பிகளது மன உறுதியின் வலிமை காட்டப்பெற்றதாம். "அரியறியா மலர்க் கழல்கள் அறியாமை அறியாதார்" (மானக்கஞ்சாறநாயனார் புரா - 10) என்றதுபோலக் காண்க.

வம்புமால் - வலிந்து தரப்பெற்ற மயக்கம். "வம்பு பழுத்து உடலம் மாண்டிங்ஙன் போகாமே" (குலாப்பத்து - 6-திருவாசகம்) "வம்பென ஆண்டுகொண்டான் ஒருவனே தீர்ப்பான் வந்து" (ஏயர்கோன் - 392) முதலிய திருவாக்குக்கள் காண்க. வம்புக்காய் என்பது காலமல்லாக் காலத்திற் றரும் காய் கனி முதலியவற்றிற்கு வரும் உலக வழக்கச் சொல்லாதலும் காண்க. வன்பு என்பது வம்பு என்றாயிற்று என்பர்.

இவ்வாறன்றி வம்பு என்பதற்கு புதிய - நிலையில்லாத - என்று பொருள் கூறுதலுமாம். "வம்பமாரியைக் காரென" என்ற திருக்கோவையார் காண்க.

மால் செய்து - மயக்கத்தை மனத்தில் வரச் செய்து. செய்து - செய்வித்து எனப் பிறவினை வினைப் பொருளில் வந்தது.

வல்லியின்ஒல்கி-கொடிபோல் துவளுதல்-அசைதல்."மதிபூத்த விரைக்கொடியோ" (வரிசை-286),"செங்கனிவாய் இளங்கொடி"(வரிசை-193) என்று முன்னர்க் கூறியதுங் காண்க. அருள்,வல்லியின்(கொடிபோல்)ஒல்கி எங்கெறிச்சென்றது என்க. மேற்பாட்டில் பற்றறுப்பான் மிகும் ஆசைகொண்ட யான் அதன்பொருட்டு நாயகர் கழலே நம்பி வாழ்வேன் என்ற கருத்தால் **நம்புமாறறியேன்** என்று தொடர்ந்து நினைந்தார் என இப்பாட்டிற் கூறியபடியாம். இதனையே தொடர்ந்து, வரும் பாட்டிலே, அவ்வாறு நம்பியதற்குப் பயன் அவர்கழல் பந்தம் வீடுதரும் என்று கூறுவதும் காண்க. 153

300. பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை யாரவு முன்னுமென் சிந்தையை
வந்து மால்செய்து மானென வேவிழித்
தெந்தை யாரரு ளெங்கெறிச் சென்றதே. ௧௫௪

(இ - ள்) பந்தம்...சிந்தையை - பந்தத்தையும் வீட்டையும் தரும் இறைவனது சீபாதங்களை என்னுள்ளே பொருந்தி நிறையும்படி எண்ணுகின்ற எனது சித்தத்திற்

குள்ளே ; வந்து...விழித்து - தானேவந்து புகுந்து மயக்கத்தைச் செய்து மான்போலப் பார்வை செய்து ; எந்தையார்...சென்றது ? எமது இறைவனது அருளுருவாகிய பாவை எங்கே சென்றது, (ஏ - அசை)

(வி - ரை) **பந்தம்** - மறைப்பு. இது அநாதியாய மூலமலத்தின் காரியம். இங்குப் **பந்தம் தரும் பரமன்** - என்றது என்னை எனின், கையில் ஏந்திய தீயின் சூட்டினை நிகழவொட்டாது தனக்கு மாறுகிய மந்திரம் உச்சரிக்குங்காறும் தடுத்து நிற்கும் குளிகைபோல, அம்முதல்வனது பெருங்கருணை உயிர்களிடத்தில் ஒருங்கே நிகழா வண்ணந் தடுத்து நிற்கும் உயிர்க்குற்றமாகிய அவ்வம் மலசத்தியின் வழியே நின்று அவற்றை நடாத்துவதாகிய அவனது சங்கற்பமே அன்றிப் பிறிதில்லை என்பது பெறப் படும். ஆதலின் வினைநுகர்ச்சிக்கண் அதன்வழி நின்று நடாத்துவதாகிய முதல்வனது சங்கற்பமே இங்குப் **பந்தம்** - மறைப்பு எனப்படும். "பந்தமுமாய் வீடு மாயினார்க்கு" (திருப்பொற் - 20), "பந்தமும் வீடும் படைப்போன் காண்க" (திருவண்டப்பகுதி - 52) என்ற திருவாசகங்களும் இக்கருத்தேபற்றியன. எனவே பந்தம் தருதலும் பரமன் றொழிலாதல் காண்க. இதனாலன்றே, உயிர்களுக்கு அறிவும் தொழிலும் இடை யிடையே விளங்கியும் அடங்கியும் படிமுறையிலே மேற்பட்டு நிகழ்வதுமாம்.

வீடு - விடு என்னும் பகுதி முதல் நீண்ட முதனிலைத் தொழிற்பெயர். (விடுதலை யைச் செய்வது.) **பரமன் வீடு தருதலாவது** - உயிர்களை மீட்சியின்றித் தன்னுள்ளே இலயிக்கச் செய்தல். மறைப்பு - அருள் - என்பனவே இங்குப் **பந்தம் வீடு** எனப்பெற் றன. ஆகமங்களில் முதல்வனுக்குக் கூறிய இலயம், போகம், அதிகாரம் என்ற முத் தொழிலுடன் மறைப்பு - அருள் - என இரண்டும் கூட்டி ஐந்தொழில் என்பர். இவையே, மறைப்புத் திதியிலும், வீடு சங்காரத்திலும் அடங்குதல்பற்றி முத்தொழில் என்று தொகுத்துக் கூறப்படும். மறைப்பினுள் ஏனை மூன்றும் அடங்குதல்பற்றி இவையே **பந்தம் வீடு** என இரண்டு தொழிலாக வைத்து ஓதப்படும் என, இப்பாட் டினையே உதகரித்து, ஆசிரியர் எமது மாதவச் சிவஞான சுவாமிகள் மாபாடியம் இரண் டாம் சூத்திரத்தில் "போக்கு வரவு புரிய" என்றதன்கீழ்க் கூறிப்போந்தமை காண்க. விரிவு அங்குக் கண்டுகொள்க.

கழல் - திருவடி. சிவபிரானது ஞானக்கிரியா சத்திகளே திருவடியாக உபசரித் துக் கூறப்படும். **கழல்** - வீரத்திற்கறிகுறியாக ஆடவர் அணிவதோர் காலணி. ஆகுபெய ராய் அடியை உணர்த்திற்று.

சிந்தை ஆரவும் உன்னும் என்சிந்தையை வந்து மால்செய்து-"எண்ணார எண் ணத்தால் எண்ணியும்" எனும் அற்புதத் திருவந்தாதி காண்க. முதற் **சிந்தை** எண் ணுதலாகிய தொழிலின்மேலும், இரண்டாவது **சிந்தை** அதனைச் செய்யும் கரணத்தின் மேலும் வந்தன. **ஆரவும்** - நிறைவெய்த. சிந்தையும் ஆர என உம்மை பிரித்துக் கூட்டுக. **சிந்தையை...செய்து - வந்து** - சிந்தைக்குள்ளும் வந்து அதனை மயங்கச் செய்து. எனது எண்ணம் முழுதும் கழலின் எண்ணமே நிறைவாய் இருந்தபோதிலும் அதற்குள்ளும் இடம்செய்து புகுந்து, அதனோடு நில்லாமல், மாலும் செய்தது என்க. கழல் நிறைவு உள்ள இடத்தில் வேறொன்றும் வருமாறு இல்லையாதலின் இதுவும் **ஆர் அருளே** என்பது குறிப்பாம்.

மானென்னவே விழித்து-ஒன்றுநோய் நோக்கு என்றபடி இந்நோக்கு மால் செய்தது என்பார் - மால்செய்து **விழித்து** என்றார். விழித்து மால்செய்து என்று கூட்டியுரைக்க. "மானிளம் பிணையோ" என்றும், "விற்குவளை" என்றும் முன்னர்க் குறித்தமை காண்க.

சிந்தை யார்வுற...சிந்தையை—வேல்விழித்து—என்பனவும் பாடங்கள். 154

301. என்று சாலவு மாற்றல "ரென் னுயிர்
நின்ற தெங்"கென நித்திலப் பூண்முலை

மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின், ௧௫௫

302. காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடு முரையியம் பாதிருந்
"தாவி நல்குவ ராரூரை யாண்டவர்
பூவின் மங்கையைத் தந்"தெனும் போழ்தினில், ௧௫௬

303. "நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை யின்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடந்" தென்பபோற்
பூட்டு மேழ்பரித் தேரோன் கடல்புக, ௧௫௭

304. எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுண் மாலை தமியோர் பனிப்புற. ௧௫௮

301. (இ - ள்) என்று...என - மேலே குறித்தபடி பலவும் சொல்லி மிகவும் தரியாராய் எனது உயிர் (பரவை) எங்குச் சென்று நின்றது என்று; நித்திலம்... சேர்ந்தபின் - முத்துக்கள் அழுத்திய அணிகள் பூண்ட முலையினையும், வாசனை பொருந்திய அழகிய கூந்தலையும் உடைய வஞ்சிக்கொடி போன்றவராகிய பரவையாரைத் தேடுதற்காகப் போய்த் தேவாசிரிய மண்டபத்தை அடைந்த பின்னர், ௧௫௫

302. (இ - ள்) காவிநேர்வரும்...இருந்து - கருங்குவளை மலரே நேராக எதிராய் வருகின்றதோ என்று சொல்லத்தக்க கண்களையுடைய பரவையாரைப் பெறுவாராகிய நம்பிகள் ஒருவரிடமும் ஒரு பேச்சும் பேசாமல் அங்கு வீற்றிருந்து; ஆவி நல்குவர்... போழ்தினில்-("அமரர் நாடாளாதே") ஆரூரைத் தமக்குத் தலைநகராக வைத்து ஆட்சி புரிபவராகிய இறைவன் அழகுடைய இனிய பரவையை எனக்குத் தந்து அதன்மூலம் எனது உயிரையும் எனக்குத் தருவர்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதில், ௧௫௬

303. (இ - ள்) வெளிப்படை. (உலகில்) நல்ல புகழை நாட்டும் திருநாவலூராராகிய நம்பிகளது மனம் விரும்பிய மின்போன்ற இடையினையுடைய பரவையாராகிய இனிய அமுதத்தைக் கடலைக் கடந்துபோய்க் காட்டுவேன் என்று செல்வதுபோல, வெவ்வேறாகிய ஏழு நிறக் குதிரைகள் பூட்டிய தேரில்வரும் சூரியன் மேல்கடலிற் செல்ல (சூரியன் அத்தமிக்க), ௧௫௭

304. (இ - ள்) எய்தும்...செல - பிரியாமல் தம்மோடு பொருந்திய மென்மைத் தன்மையுடைய பெட்டைகளுடன்கூடிப் பல இடத்தும் இரைதேடி உண்டு பொய்கையிலே பகற் காலத்தை உண்டாட்டயர்ந்து இனிதாகக் கழித்த பறவையினங்கள் தாம் தாம் ஒடுங்கும் கூடுகளைச் சென்று அடையவும்; தமியோர் பனிப் புற - (அப்பறவைகளைப்போலத் தத்தம் துணையுடன் கூடி இணையாயின்றித்) தனித்துள்ளார் பயந்து நடுங்கவும்; பையுள் மாலை வந்தது - பிரிந்தார்க்குத் துன்பஞ்செய்யும் தன்மையுடைய மாலைப்போது வந்து கூடிற்று. ௧௫௮

இந்நான்கு பாட்டுக்களும் மேற்கூறிய மூன்று பாட்டுக்களின் கருத்தைத் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன. (அருள் எந்நெறிச் சென்றதே?) - என்று - ஆற்றலர் - என, - வஞ்சியைத் தேடுவான் சென்று - சேர்ந்தபின், - நண்ணுவான் -

இருந்து, - எனும் போழ்தினில் - தேரோன் கடல்புக, - புள்ளினம் சேக்கைகள் மேற் செல, - தமியோர் பனிப்புற, - பையுண்மாலை வந்தது - என்று கூட்டிமுடிக்க.

301. (வி - ரை) என்று - மேலே கூறிய மூன்று பாட்டுக்களிலும் குறித்தபடி சொல்லி. **என் உயிர் நின்றது எங்கு என** - எனது உயிர்போன்ற பரவை எங்கு நின்றது என்று சொல்லி. எனது உயிரே இப்போது என் உடலிலில்லாது புறம்பே வேறொன் றிற் சென்று தங்கியது போன்றதாம். அவ்வொன்று எங்கு நின்றது என்பதும் குறிப்பு. வரும் பாட்டில் உயிர்போன்றாரை உயிர் என்று உருவகப்படுத்திக் கூறிய தால் நின்றார் என்னாது **நின்றது** என்றார். அப்படி என் உடலிலிருந்து சென்றிருப்ப தாகத் தோற்றும் என் உயிரைத் திருவாரூர் இறைவர் எனக்கு அளித்துக் காப்பார் என்பார் **ஆவி நல்குவர்** என்றமையுங் காண்க. உயிர்போன்ற பரவையாரைக் கொடுத் தால் எனக்கு உயிர் கொடுத்தவராவர் என்பது.

வஞ்சி - காட்சி காட்டி மறைத்தமையால் வஞ்சிக்கும் தொழிலுடையவர் போன்ற னர் என்பது குறிக்க **வஞ்சி** என்ற பெயராற் கூறினார். "பஞ்சிற் றிருந்தடி நோவப் போயெனை, வஞ்சித்திருந்த மணியறை யிதுவே" (ஆளுடைய பிள்ளையார் - திருமும் மணி - 16.) என்ற பதினொராந் திருமுறையும் காண்க.

தேடுவான் சென்று - தேடும் பொருட்டுப் போய்.

தேவாசிரியனைச் சேர்ந்தபின் - தேவாசிரிய மண்டபத்தை அடைந்தபின். கொடி யாகிய அது (அருள்) எங்நெறிச் சென்றதே (298 - 299 - 300) என்று தேடுவான் சென்று பின் தேவாசிரியனைச் சேர்ந்தார் ; அதன்பின். (தேவாசிரியன்-137 பார்க்க).

மன்றலங்குழல்—என்பதும் பாடம். 155

302. (வி - ரை) **காவி நேர்வரும் கண்ணி** - கண்ணுக்கு நீலமலர் உவமானமாம். ஆதலால் நேர் (ஒப்பு) பெற்று வருகின்ற. **கண்ணி** - கண்களையுடையவள். (280) 'மானிளம் பிணை'யாய் இளமையிலிருந்து பின்னர் (286) 'விற்குவளை'யாயினதையே நம்பிகள் கண்டாராதலாலும், அவ்வாறு 'கடை பிறழுங் (288) கெண்டை நெடுங்கண் வியப்ப உரவோனைப் பரவையாருங் கண்டார்' ஆதலாலும், காவிபோன்று தம் எதிர் **வரும்கண்** என்றார். காவி - நீலம். மன்மதன் அம்புகள் ஐந்தில் கடைசியாக வரு வது காவி. **வரும்கண்** என்னவே முன்னை நான்கு அம்புகளும் நடுகின்ற படைமதனன் விட்டாயிற்று என்பது குறிப்பு. "மலர்நீலங், கொல்லுமத னம்பின் குணம்" என்பது அதன் இலக்கணம் ஆதலின் "என்னுயிர் நின்றது எங்கு" என்றும், "மங்கையைத் தந்து ஆவியையும் நல்குவர்" என்றும் குறிப்பிட்டார் என்க.

ஆரூரை ஆண்டவர் - "அமரர் நாடாளாதே ஆரூராண்ட" - திருத்தாண்டகம்.

பூவின் மங்கை - பூ - அழகிய, இன் - இனிய, மங்கை - பரவை - மங்கைப் பருவமுடையார் என்பதும் ஆம். "அவளும் பன்னீராட்டைப் பிராயத்தளாய்" என்று பெண் மக்களின் மணப்பருவம் கூறும் தமிழ் இலக்கணமும் காண்க. பதுமினி சாதிப் பெண் என்றலுமொன்று. **பூவின் மங்கை** - திருமகள் போன்ற பரவை என்று உரைப் பாருமுளர். அவ்வுரை பொருந்தாமை மேலே காட்டினும். 286-290 பாட்டுக்களின் உரை காண்க. பூவின் மங்கை என்றதனால் முன்னம் கயிலையிற் பூக்கொய்யுங்காற் கண்ட கம லினியாரை என்ற குறிப்புமாம். 156

303. (வி - ரை) **நாட்டும் நல்இசை நாவலூரான்**-நல் இசையை (உலகில்) நாட்டும் திருநாவலூரார் என்று கூட்டிப் பொருள் உரைக்க.

சிவபெருமானது புகழையும் அடியார் புகழையும் உலகில் நிலவச் செய்வதற்கே அவதாரஞ் செய்தாராகலின் **நல்லிசை நாட்டும் நாவலூரான்** என்றார். "மாதவஞ் செய்த தென்திசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போதுவார்" என்று முதலிற் குறித்தமை காண்க. "பொருள்சேர் புகழ்" என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரைத்ததுபோல, ஏனையோர் இசைகள் ஒன்றும் முற்றும் நல்லன ஆகாமையின் அரன்

புகழும் அவன் அடியார் புகழுமே நல்இசை எனப்பெறும். இவ்வாறன்றி (சிந்தை ஆரவும் உன்னும்) என் சிந்தையில் வந்து மால் செய்து என்றதற் கேற்பச், சிந்தைக்கு அடைமொழியாக்கி, நல்லிசை நாட்டும் சிந்தை என்று கூறுதலும் ஒன்று.

மின்னிடை - அன்மொழித்தொகை.

கடலைக் கடந்து அமுதத்தினைக் காட்டுவன் - எனக் கூட்டுக. (மிருதம் - மரணம்) அமுதம் - மரணத்தைப் போக்கி உயிரைக் கொடுப்பது. அமுதமலை கடலுக்கு அப்புறம் உள்ளது என்றும், அது வந்தால் இறந்தாரும் உயிர் பெறுவர் என்றும் பெரு நூல்கள் பேசும். கந்தபுராணம், இராமாயணம் முதலியவற்றிற் காண்க. மின்னிடையமுதத்தினைக் கடலைக் கடந்து காட்டுவன் என்பதுபோற் கடல்புக - என்க. உருவகமும் தற்குறிப்பேற்றமும் வந்த கலவையணி. சூரியன் இச்சமயம் நம்பிகளுக்குத் தன்னாலான பணி செய்து அவரது அருளைப்பெற எண்ணினான் என்ற குறிப்பாம். வானவர் தொண்டர்களுக்குப் பின் நின்று பயன்பெறும் கூட்டத்தார் என்பது இப்புராணத்துப் போந்த துணிபு.

> "தேமரு தொடையல் மார்பன் திருமணக் கோலங் காணக்
> காமுறு மனத்தான் போலக் கதிரவ னுதயஞ் செய்தான்"

என முன்னர் இப்புராணத்திற் (159) கூறிய குறிப்பும் நோக்குக.

ஆரூரை ஆண்டவர் ஆவி நல்குவர் என்று நம்பிகள் எண்ணிய போழ்தில் ஆவி நல்குதல் ஐந்தொழில் செய்யும் அவ்விறைவனால் அன்றிப் பிறரால் இயலாது. ஆயினும் அதற்குத் துணை செய்வோம் என்று சூரியன் கருதிக் கடல் புக்கான் என்பார் **காட்டுவன் கடலைக் கடந்து** என்பதுபோல் - என்றார்.

> "கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்போதில்"
> —கண்ணப்ப நாயனார் புராணம் - 134

> "தெருணெறி நீர்மையிற் சிரத்திற் றாங்கிட
> வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம்"—திருநா. புரா - 130

முதலிய பல இடங்களும், வெள்ளையானைச் சருக்கத்தே நம்பிகளை "இந்திரன் மால் பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம் வலஞ்செய்து வந்தெதிர்கொ"ண்டு வெள்ளை யானையில் ஏற்றிக் கயிலைக்கு அழைத்துச் சென்றதும் பிறவும் காண்க. "அலைகடலாலரையன் னலர்கொண்டு முன்வந்திறைஞ்ச" என்ற நம்பிகள் தேவாரத்தில் வருணன் நம்பிகளை வணங்கியமை அறிகின்றோம்.

கடலைக் கடைந்து - என்று பாடங் கொண்டு, கடலைக் கடைந்து அமுதங் காட்டுவன் என்று பாற்கடல் கடைந்து தேவர் அமுதம்பெற்ற சரிதத்திற் கேற்பப் பொருள் கூறுவாருமுண்டு. ஒரு வகையாற் கூறப்படுதலன்றிச் சூரியன் கடலைக் கடைந்தான் என்பது அச்சரிதத்திற் கேட்கப் படாமையானும் பிறவாற்றானும் அது பொருளன்றென்க. **கடலைக் கடந்து காட்டுவன்**-மேல்கடல் கடந்தாற் கீழ்கடலிற் தோற்றுவன். அதுவே உதயம் எனப்படும். மறுநாள் பரவையார் மணம் நிகழ்தலின் கடல் கடந்து காட்டுவன் என்பதும் குறிப்பாம்.

என்பபோல்-என்பது போல. **என்பது** என்னும் தொழிற்பெயர் கடைகுறைந்து **என்ப** என நின்றது.

ஏழ்பரித் தேரோன் - சூரியன் தேரில் ஏழு குதிரைகள் பூட்டப் பெற்றுள்ளன என்றும், அவை எழுநிறமுடையன என்றும் புராணங்கள் கூறும். எழுநிறமுடைய சப்தா என்ற குதிரை பூட்டபெற்றதென்றும் கூறுவர். நீலம் முதல் சிவப்பு ஈறாகவுள்ள எழுநிறங்களின் சேர்க்கையே சூரியனது வெண்கதிர் ஆகும். இவையே வானவில்லிற் காணப் பெறும் ஏழ்நிறங்களாம். கதிர்களாலே உலகில் போந்து ஒளி

செய்கின்றானுதலால் இவ்வேழ்பரித்தேர் செல்வதாய் உபசரித்துக் கூறுவது தமிழ் நூல் மரபென்பர். **பூட்டும் ஏழ்பரி** என்றதனால் அவை ஏழும் ஒன்றுசேர்ந்து கட்டப் பெற்றதாய் உள்ளதாகும் ஞாயிற்றின் கதிர் என்பது குறிப்பாம். கைக்கிளையிற் கவல்வார்க்கு இரவு கடல்போன்றதாம்; ஆதலின் நானும் (இரவாகிய) **கடல் கடந்து காட்டுவன்** என்ற தொனிப் பொருள் பெறுமாறும் காண்க.

கடல்புக - உபசாரவழக்கு. கடலுட்புகுவது போலச் செல்ல. 157

304. (வி - ரை) இப்பாட்டில் இயற்கை என்னும் தன்மை நவிற்சி யணி ததும்பிச் சிறந்து விளங்குதல் அறிந்தனுபவிக்கத்தக்கதாம். மாலை - புள்ளினம் சேக்கை மேற் செலவும் - தமியோர் பனிப்புறவும் - வந்தது என்று கூட்டுக.

எய்தும் என்றமையாலே பறவைக்கூட்டம் தத்தம் பெடைகளோடு கூடி இரை தேர்ந்துவாழும் இயல்பினையும், **மென்பெடை** என்றதனால் அவற்றிலே பெட்டைகளுக்குக் காட்டப்பெறும் அன்பினியல்பையும், **இரை தேர்ந்து உண்டு** எனவே பறவைகளின் இரையாகிய தானிய மணிகளும், மீன்முதலியனவும் பிறவும் அங்கங்குச்சென்று ஒவ்வொன்றாய் அவ்வவற்றாற் றனித்தனி தெரிந்து உண்ணப் பெறவேண்டுவதாகிய இயல்பினையும், **பொய்கையிற் பகல் போக்கிய** என்றமையால் உணவு கிடைக்குமிடம் பொய்கை என்னும் இயல்போடு இக்காலத்தும் மக்கள் விரும்பிச்செல்வதுபோல் வேனிற் கால இன்பவாழ்க்கைக்கு உரியது **பொய்கை** எனும் இயல்பினையும், **வைகுசேக்கைகள்** - என்றமையால் பறவைகள் தத்தமக்கு வீடுகளாகக் கூடுகட்டி அவற்றிற் பள்ளி முதலியவையும் அமைத்துச் சுகவாழ்வு வாழும் இயல்பினையும், **மேற்செல** என்றமையால் மாலைக்காலம் ஆனவுடன் பறவைகள் கூடுநோக்கிச் செல்லும் இயல்பினையும், **புள்இனம்** என்றதனாலே அவை கூட்டம் கூட்டமாய் வாழும் இயல்பினையும், இனமாய்க் கூடியபோதே இன்பமுறும் இயல்பினையும், பிறவற்றையும், எடுத்துக் காட்டுவதாய், இவ்வாறு இயற்கை அழகு நிரம்ப இப்பாட்டுத் தன் சிறிய உருவத்திற் கண்ணாடிபோலப் பெரிதும் விளங்குதல் கண்டு மகிழ்க.

பையுள் மாலை - சேர்ந்தார் - பிரிந்தார் - என்பதின்றியே, மாலையின் பொது இலக்கணம் இருள் தருவதாதலின் **பையுள்மாலை** என்றார்.

தமியோர் பனிப்புஉற - (தமி-தனி); **தமியோர்** - துணையுடன் கூடாமல் தனித்து வாழ்பவர். அவரவர் தனித்திருந்தாலும் தத்தம் துணையைப் பொருந்திய உள்ளத்தாராதலாலும், அதுவே பனிப்புறுதற்குக் காரணமாதலாலும் **தமியோர்** என்று பன்மை விகுதிபெற்றது. தனித்து வாழ்வோர். பலரும் என்று உரைத்தலுமாம். எல்லார்க்கும் பையுள் செய்வது மாலையின் பொது இலக்கணமும், தமியோரைப் பனிப்புறச் செய்தல் அதன் சிறப்பு இலக்கணமுமாம். தனித்து வழிச்செல்வோரும், வீட்டில் துணையின்றித் தனித்து வாழ்வோரும் பொருள் வகையிலும் நடுக்கமுறுதல் உலகியல்பிற் காண்க. **தமியோர்** என்பது இங்கே தனித்து நின்ற நம்பிகள் - பரவையார் எனும் இவ்விருவரும் என்று சிறப்பாலும் பொருள் தருதலும் காண்க.

ஏழ்பரித் தேரோன் கடல்புக மாலை வந்தது என்க. காரண காரியப் பொருளில் வந்ததாம். கடல்புகுதல் காலத்தின் ஒரு பகுதியின் தொழில். மாலைவருதல் காலப் பகுதி மற்றொன்றின் தொழில். இவற்றில் (கடல்புகுதலாகிய) ஒன்றையே (மாலை வருதலாகிய) மற்றொன்றாக மயங்கி யறிதல் கூடாததாம். ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு குணமுடைமையின் இவை தனித்தனிக் காலக் கூற்றின் வெவ்வேறு பொருள் ஆகிய பகுதிகள் என்பது.

> "வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
> சுருங்கிட வறிந்த புள்ளின் சூழ்சிலம் போசை கேட்டு" —**கண் - புரா** - 123

என்று பின்னர்க் கூறுமிடத்துங் காண்க.

இவ்வாறே வடமொழியிலும் போசராசர் சபையில் ஒரு கவி "சூரியன் மேல்கடல் விழுந்தான்" என்ன, அதுகேட்ட ஒரு பெண்கவி "பறவைகள் மரப்பொந்துகளில் அடைந்தன" என்ன, இரண்டுங் கேட்ட காளிதாச மகா கவி "மதனன் தனித்த யுவ - யுவதிகளிடம் மெல்ல அடைவான்" என்றார் எனக் கூறியதாக உள்ள கவியின் அழகும் இங்கு வைத்துக் காண்க.

மேற்சேல - பனிப்புற - மாலை வந்தது - என்று இரண்டும் சேரச் சொன்னமையின் மாலையாகிய ஒரு பொருளே அவரவர் பக்குவ நோக்கிச், சேர்ந்தார்க்கு விருப்பும், பிரிந்தார்க்குப் பனிப்பும் தருவதாம் எனக் குறிப்பித்த அழகு காண்க. இரண்டு செயலும் செய்வது ஒரே பொருள் என்பார் **மேற்சேல்**வுக்கும் **பனிப்புறு**தலுக்கும், இடையில் **மாலை**யை வைத்துக் கூறினார். பிரிந்த வழியே பனிப்புளதாம் எனும் அகப்பொருளைக் குறிக்க, **இனம் சேக்கை மேற்சேல** என்பதினின்றும் பையுள் **மாலை**யை இடையிற் கொடுத்துப் **பனிப்புற** என்று பிரித்துக் கூறினார்.

பனித்தல் - நடுக்கமுறுதல்; நோயுறுதல். புறத்தே மாலையின் குளிராலும், அகத்தே வேட்கையின் வெப்பத்தாலும் நோயுறுதல் ஈண்டுக் கருதப்பெற்றது.

மேற்சேல - இரைதேரும்போதும், உண்ணும்போதும், பொய்கையில் ஆடல் பாடல் புரியும்போதும் என்றிவ்வாறு பகல்முழுதும், பின்னர் மாலையிற் சேக்கைக்குச் செல்லும்போதும், இரவிலும், எப்போதும் இணைபிரியாது ஆனந்தமாக வாழும் பறவைகளின் வாழ்வு, ஓரோர் காலத்துமட்டும் இணையாகக்கூடி வாழும் மனிதர் வாழ்வை விட மகிழ்ச்சி தருவது என்ற பொருளும் குறிப்பாற் பெறுவது காண்க. **இணை பிரிந்தோர்** - அவ்வாறு பிரியாது கூடி மகிழ்வோரைக் காணில் தம் துன்பம் மிகப் பெறுவர் என்பது உலக இயல். புள்ளினம் பெடையோடு பொய்கையிற் பகல் போக்கிச் சேக்கை மேற்செல்ல, அது கண்டு **தமியோர் பனிப்புற** - என்றுரைத்தலுமாம்.

> "சுற்றம் பலமின்மை காட்டித்தன் றொல்கழ றந்ததொல்லோன்
> சிற்றம் பலமனை யாள்பர மன்றுதிண் கோட்டின்வண்ணப்
> புற்றங் குதர்ந்துநன் றூகொடும் பொன்னூர் மணிபுலம்பக்
> கொற்ற மருவுகொல் லேறுசெல் லாநின்ற கூர்ஞ்செக்கரே" (346)

> "நீகண் டனையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
> சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
> வாய்வண் டனையதொர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
> பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே" (84)

என்ற திருக்கோவையார்த் திருவாக்குக்களின் கருத்துக்களும் காண்க. 158

305\. பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்மரன்
அஞ்செ ழுத்து முணரா வறிவிலோர்
நெஞ்சு மென்ன விருண்டது நீண்டவான். ௧௫௯

(இ - ள்) வெளிப்படை. பஞ்சினும் மெல்லிய பாதங்களையுடைய பாவைபோன்றாரது உள்ளமும், வஞ்சனை செய்யும் மாக்களுடைய வலிய வினையும், அரனுடைய திருவைந்தெழுத்தையுமெண்ணாத மடவோர்களது நெஞ்சும், போல நீண்ட பெரிய வானம் இருளடைந்தது.

(வி - ரை) பாவையர் உள்ளம் - பாவையர் - பாவைபோன்ற விலைமாதரை என்பர். **பஞ்சின் மெல்லடி** - "மைவிழியார் மனையகல்" என்புழிப்போல விலைமாதர்களின் வஞ்சனைக் கோலத்தைச் சுட்டியது. பின்னர் (307) "தம் **ஆருயிர்,** வரன்கை

நீண்ட மலர்குல மாதர்போல்" எனக் குலமகளிர் இயல்பை வேறுவைத்துக் காட்டியதும் காண்க. இனி, இவ்வாறன்றிப் "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்றபடி பொது இலக்கணத்தாற் பேதைமை யுடைமையினாலும், பெண்மைக்குரிய நாற்குணங்களில் ஒன்றாகிய மடமையினை யுடைமையினாலும், எவ்வகையானும் இழிவு குறிக்காமலே பெண்மைப் பொதுப்பெயராக இதனைக் கூறுவாருமுண்டு.

வஞ்ச மாக்கள்தம் வல்வினையும் - வல்வினை மாக்கள் வஞ்சமும் என்று உம்மையைப் பிரித்துக் கூட்டி உரைத்தலுமாம். முன் வினையின் பயனாகி வரும் வஞ்சம் மேன்மேலும் வினையை விளைத்தலால் **வஞ்ச மாக்கள் வல்வினை** என்றார். "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" என்றதும் காண்க. "வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடியார்கள்" என்று பின்னர்க் கூறுவதுங் காண்க. வஞ்சமுடைமையால் மக்கள் **மாக்கள்** எனப்பெற்றனர். ஐயறிவுடைய மிருகங்கள் போன்றார் என்பது குறிப்பு. விலக்கலாகாமையின் **வல்வினை** என்றார்.

அரன் அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் - **அரன்** - ஆன்மாக்களுடைய பாசங்களை அரிப்பவன். அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் - அஞ்செழுத்தை உணரப்பெறாத மடவோர் என்க. "மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரம் தன்னி லொன்று வல் லாரையுஞ் சாரலே" என்று இயமன் றூதர்க்கு அப்பர் சுவாமிகள் இட்ட ஆணையும் காண்க. "விதி எண்ணு மஞ்செழுத்தே" என்றபடி எழுத்து அறிவினுள்ளே உணரப் பெறுவ தொன்றாதலின் **உணரா அறிவிலோர்** என்றார். இத்திருவைந்தெழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் - பொருளும் - உள்ளீடும் - நிற்குமுறை - ஓதுமுறை முதலியனவும் உண்டு. இதனை "எவ்வெவ்கோட் படுபொருளும்" என்ற குரு தோத்திரத்திலே குறித்தருளினர் எமது மாதவச் சிவஞான சுவாமிகள். அஞ்செழுத்தின் வகையும் பெருமைகளும் நூல்களிற் பேசப்பெறுவன. சைவாசாரியர்பாற் கேட்கத்தக்கன. "நாயோட்டு மந்திரம்" என்று அதன் பெயர்தானும் சொல்லலாகாது என அறிவிப்பர் திருமூலதேவர். மூவர் முதலிகள் கருணையினாற் பஞ்சாக்கரப் பதிகங்களை அருளினர். மணிவாசகப் பெருமானார் "நமச்சிவாய வாழ்க", "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்" முதலிய திருவாசகங்களில் பஞ்சாக்கரங்களை அருளினர் என்பர்.

உணரா நெஞ்சும் - அகவிளக்காகி இருள் கெடுப்பது ஐந்தெழுத்தாதலின் அது ஏற்றப்பெறாத நெஞ்சு இருண்டிருக்கும் என்பது குறிப்பு.

இருண்டது நீண்ட வான்—தேரோன் கடல்புக மாலை வந்தது; காலம் செல்ல நீண்ட வான் இருண்டது என்க. பின்வரும் நான்கு திருப்பாசுரங்களில் அதன் மேல் நிலா முளைத்தலும், அதன் செயலும், தன்மையும், ஆரூரர் நிலையும், கூறுகின்றார். அதன்மேல் நான்கு திருப்பாசுரங்களில் காமனையும் அவனது படைகளாகக் கருதப் பெறும் மதி, கடல், தென்றல் இவைகளையும் நோக்கி நம்பிகள் கூறும் கைக்கிளைக் கூற்றுக்களாக உள்ள அகப்பொருள் நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளார். இரவு காமனது படையாட்சிக்குரிய காலமாம். இவ்வாறே பரவையார்பால் நிகழும் அகப்பொருட் செயல்களை 315 முதல் 323 வரையுள்ள திருப்பாட்டுக்களில் அறிவித்துள்ளார் ஆசிரியர்.

பெரிய புராணமாகிய பெருங்காவியத்திற்கு நம்பிகள் தலைவராகவும், பரவையாரும் சங்கிலியாரும் தலைவியர்களாகவும் உள்ளார்கள். அவர்களிடையே நிகழும் அகப்பொருள் நிகழ்ச்சிகளையும், திருமணங்களையும் காவிய அங்கங்களாகிய இலக்கணம் பற்றி ஆசிரியர் இவ்விரண்டு இடங்களிலும் எடுத்து விரித்துரைத்தனர்.*

சேக்கிழார் பெருமானது புராணத்திலே உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அறிவித்துள்ளபடி சிந்தாமணியின் சிற்றின்பச் சுவையிலே சிக்குண்ட அநபாயருக்கு அடியார் சரிதங்களின் பெருமையை எடுத்துக்கூறியபின், அவர் விருப்பின்படி இப்புராணம் பாடி

*இதன்விரிவை எனது "சேக்கிழார்" என்ற நூலில் 3-ம் பகுதியிற் காண்க.

யருளிய ஆசிரியர் தாமே அகப் பொருட் சுவைகளை இதில் விரவ வைத்தது என்னே? என்று ஆசங்கிப்பார்க்குப் பெருங் காவிய அங்கங்களாகிய இலக்கணம்பற்றித் தலைவன் தலைவியரிடத்து இந்நிகழ்ச்சிகளை ஓரோர் இடத்துக் குறித்ததே யன்றி மற்றில்லை என்று அமைவுகூறி விடுக்க. "சிவமேமணக்குஞ் செய்யுளெல்லாம்" என்று பின்னாட் புலவர் பாராட்டியமைக்கு இங்குக் குறித்த அகப்பொருட்சுவைப் பாட்டுக்கள் சிறந்த உதாரணங்களாதலும் கவனிக்க. 159

306. "மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பார்"ரென்று
நறும லர்க்கங்கு னங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா. ௩௧0

(இ - ள்) மறுவில்...என்று - "குற்றமற்ற சிந்தையையுடையாராகிய வன்றொண்டரும் இவ்வாறு வருத்தமுறுவாரானால், இற்றுவிடுமோ என்று கூறுந்தன்மைய தாய்த் துவள்கின்ற சிற்றிடையுடைய பெண்களுக்குத் தப்பி யாவர் பிழைக்கவல்லவருளர்?" என்ற கருத்துடன்; நறுமலர்...நிலா - வாசனையுடைய பூக்களை அணிந்த இரவு என்னும்பெண் முன்னே கொண்டதாகிய புன்சிரிப்புத் தானோ இது என்று காணும்படி வெள்ளிய இளஞ்சந்திரன் ஒளி வீசிற்று.

(வி - ரை) **முகிழ்த்தது**-இரவியொளி போமளவும் விளங்காதிருந்த சந்திரன் அவ்வொளிபோய் மாலைவந்து இருண்டதும், இரவில் முன்பகுதியிலே ஒளிவீசிவிளங்கிற்று. **முகிழ்த்தல்** - அலர்தல். அரும்பாயிருந்தது விரிதல் போன்றதாதலின் **முகிழ்த்தது** என்றார். இரவின் முற்பகுதியில் நிலவு இளவொளி வீசிற்று என்பது கருத்து. பின்னர் முதிர் ஒளி வீசுதலை "நீற்றின் பேரொளிபோன்றது நீள் நிலா" என 308-ம் திருப்பாட்டிற் கூறுதல் காண்க.

முன் கொண்ட - முன்பகுதியிலே இத்தோற்ற முறுதலால் **முன் கொண்ட முறுவல்** என்றார். இவ்வாறு பிறரை எள்ளும் நங்கையர் ஒருபுறமாய் மறைந்து சிரிப்பதுபோலன்றி வெளிப்பட முன்னே முறுவல் பூத்தனள் என்பதும் ஓர்குறிப்பு. ஆயின் அது முழுச்சிரிப்பாய் நிகழின், பெரியார்பால் அபசாரப்படுவோ மென்றஞ்சினள் போலக் **கொண்ட புன்முறுவல்** என்றார்.

வன்றொண்டர் - இறைவன் விரும்பி வலிய ஆட்கொள்ளும் பெருமைபெற்ற இவரே இவ்வாறு வருந்துவாரானால் என்க. உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

இரவிலே முற்பகுதியில் நிலாமுகிழ்த்தல் இவ் வுட்கருத்துடன் கொண்ட புன்முறுவல்போன் றிருந்தது எனத் தற்குறிப்பேற்ற அணி.

மறுவில் - உலகத்தில் இவ்வாறு வருந்தும் பிறருடன் ஒருங்கே வைத்து எண்ணத் தகாது என்பார் **மறுவில் சிந்தை** என்றார். ஈசனருளாலே முன்னை நியதியின்படி நிகழ்வதாதலின் குற்றமற்றவராயினார் என்பது குறிப்பு.

இறும் மருங்குல் - இடை சிறுத்திருத்தல் பெண்களின் அழகிலக்கணங்களி லொன்று.

நறுமலர்க் கங்குல் நங்கை - கங்குல் நங்கையாயின் மலர் சூடுமோ என்பாரை நோக்கி நறியமலர் பலவுஞ் சூடுவள் என்றார். மாலையிலே மலர்கள் அலர்வன என்னும் இயல்பு குறித்த தன்மையணி. 160

307. அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் மாருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர்போற்

பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்க டீண்ட வலர்ந்த கயிரவம். ௧௬௧

(இ - ள்) அரந்தை செய்வார்க்கு அழுங்கி - வன்மை செய்யும் புல்லர்க்கு வருந்தி; தம்...போல் - தமது உயிர்க்காதலர் தம்மைத் தொட்டபோது மலர்ச்சி யடையும் குல நலம் படைத்த பெண்கள்போல்; பரந்த...ஒல்கி - எங்கும் பரந்து வெம்மை செய்யும் சூரியன் கதிர்க் கைகள் படும்போது மலராது வாடிக்குவிந்து; பனி...கயிரவம்-குளிர்ந்த சந்திரனுடைய கதிர்க் கைகள் தீண்டியபோது ஆம்பல்கள் மலர்ந்தன.

(வி - ரை) பின்மாலையும் - முன்னிலாவும் முறையே கூறிய ஆசிரியர் அவற்றின் பின் நிகழ்வனவாகிய ஆம்பல் மலர்தலும் நிலா முதிர்தலும் அம்முறையே கூறுகின்றார்.

கயிரவம் - ஆம்பல் மலர்கள். இவை பகலிற் குவிந்து இரவில் மலரும் இயல்பு கொண்ட பூக்கள். மேற்பாட்டிற் கண்டவாறு, அன்று இரவு வந்து, நிலா முகிழ்க்கவே ஆம்பல் அலர்ந்ததை இவ்வாறு குலமாதரின் உவமான முகத்தால் ஆசிரியர் அழகுற வருணித்தல் காணத்தக்கது. **செய்வார்க்கு** என்ற இடத்துச் செய்வார் கை தீண்டற்கு என்றும், **பகற்கு** என்ற இடத்துப் பகலவன் கரங்கள் தீண்ட என்றும் இடநோக்கி வருவித்துரைத்துக் கொள்க.

செய்வார்க்கு - செய்வார் செய்யும் அரந்தைகட்கு என்க.

வரன் - தன்னாலே வரிக்கப் பெற்றவன் - மணமகன்.

குலமாதர் - குலம் என்பது இயல்பு குறித்து நின்றது.

பகற்கு - பகலைச் செய்யும் சூரியன் கதிர் தீண்டலுக்கு ஆகுபெயர். 161

308. தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோ
யாற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா. ௧௬௨

(இ - ள்) தோற்றும்......தந்து - இவ்வுலகில் பிறக்குமாறு இறைவன் காட்டும் உயிர்களுக்கெல்லாம் தூய்மையையும், பலராலும் எடுத்துச் சொல்லப் பெறும் இன்பத்தையும், குளிர்ச்சியையும் கொடுத்துச் செல்வதே யன்றி; போய்...பரந்து - பிற எல்லா அண்டங்களிலும் சென்று பரவி நிலவுகின்ற; அண்ணல்......நீள்நிலா-பெருமை யுடைய இறைவனது திருநீற்றினது வெள்ளிய பெரிய ஒளிபோன்று நீண்ட ஒளிவிடும் நிலவு விளங்கலாயிற்று.

(வி - ரை) நிலா - தூய்மையே சாற்றும் இன்பமும் தண்மையும் தந்து - போய் - பரந்து - நீற்றின் பேரொளி போன்றது என்று கூட்டுக. நிலாவுக்கும் நீற்றுக்கும் உவமம். நம்பிகளது சிவக்கண்ணிற்கு நிலவின் ஒளி சிவவொளிவீசும் திருநீற்றை நினைவு கூர்விக்கு மாதலின் இங்குத் திருநீற்றொளியினை உவமை செய்தார் என்க.

திருஞான சம்பந்தப் பெருந்தகையார் திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச் சிவிகை பெற்றபோது அதன் ஒளி வெண்ணீற்றின் ஒளியை ஒத்திருத்தலின் அதனைப் போற்றினார் என்று பின்னர்க் காண்போம்.

"சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றோதி யாரு ளாதலின் அஞ்செழுத்
தோதி யேறினா ருய்ய வுலகெலாம்"—திருஞா - புரா - 216

திருப்புகலூரிலிருந்து திருஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு சுவாமிகளது வரவுகேட்டு அடியார்களுடன் எதிர்கொண்டபோது இருதிறத்துத் திருநீற்றுத் தொண்

டர் குழாமும் ஒன்று கூடிய செயல் "இரண்டு நிலவின் கடல்கள் ஒன்றாகி அணைந்தன போல் இசைந்த வன்றே" என்று எடுத்துக் கூறுவர் ஆசிரியர். இங்கு நிலவு நீற்றை நினைவு கூர்வித்தபடி, அங்கு நீறு நிலவை நினைவு கூர்வித்தமையும் காண்க. பார்த்தவிடமெல்லாம் பரவெளியாய்த் தோன்றும் பெரியார்து சிவக்கண்ணுக்கு எல்லாம் சிவமயமாகவே காணுமாறும் உணர்க.

நிலா-தோற்று மன் உயிர்கட்கெல்லாம் தூய்மையே சாற்றும் இன்பமும் தண்மையும் தந்து-இந்நிலவுலகத்தில் சிருட்டிக்கப்படும் எல்லா **உயிர்த் தோற்றங்களுக்கும்,** தூய்மை-இன்பம்-தண்மை என்ற இவற்றையெல்லாங் கொடுத்தல் நிலவின் இயல்பு. அஃதன்றியும், மற்றும் மேலும் கீழும் உள்ள அண்டங்களினும் தன் இயல்பைப் பரப்பி நிற்றலும் அதன் பண்பாம். இதனால் இது திருநீற்றின் பேரொளியினைப் போன்றது. என்னை ? நிலாப்போலவே திருநீறும் தோற்றம் பெறும் உயிர்களுக்கெல்லாம் தூய்மையும் இன்பமும் தண்மையும் தருவதாம் ; எல்லா அண்டங்களிலும் தனது ஆணை பரப்புவதுமாம். நிலாவானது தோற்றம் பெறும் உயிர்களின் உடம்புக்கு அளிக்கும் இயல்பைத் திருநீறானது உயிர்களுக்கு அளிப்பதாம். நிலா, தோற்றம் பெறும் உடம்புகளுக்குத் தூய்மை - இன்பம் - தண்மை தந்து வளர்க்குமென்ப. சூரியன் உயிர் தங்குவதற்குரிய வெப்பம் கொடுப்பன். சந்திரன் உடம்பு வளர்ச்சிக்கு உரிய தண்மையும் பிறவும் தருவன் என்பது உலகநூற் றுணிபு. சைவர்க்கு விதித்த சடங்குகளில் முளைசாத்துதலாகிய சடங்கிற் சந்திரனுக்குரிய பகுதிகளையே சிவாகமங்களிற் கூறப்படுதலும் காண்க.

தோற்றும் மன்னுயிர்கட் கெலாம் - என்பதனை நிலவுக்குக் கூட்டும்போது மன்னுயிர் தோற்றும் அவைக்கெல்லாம் என்றும், நீற்றிற்கு ஆக்கும்போது தோற்றும் மன் உயிர்க்கு எல்லாம் எனவும் கூட்டி உரைத்துக் கொள்க.

நீறு - உயிர்க்குத் தூய்மை தருதல் கட்டிய பாசத்தினின்றும் நீக்குதலாம். **இன்பம் தருதலாவது** பிறப்பிறப்புக்களால் வரும் துன்பம் நீக்கிப் பேரின்பம் தருதல். **தண்மைதருதலாவது** "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர் துன்னும் நிழலாவன" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின்படி பாச வெப்பத்தினின்றும் நீக்கிச் சிவனடித் தண்ணிழலிற் சேர்த்தல். **சாற்றும்** - இதுவேயின்பம், பிறவெல்லாம் துன்பம் என நூல்களிற் பேசப்பெறும். **நீறு** சத்தியின் இயல்புடையதாதலின் உயிர்களுக்குத் தூய்மை முதலியன தரும் என்பர். " பராவணமாவது நீறு" என்பது தமிழ்மறை.

அண்ணல் வெண்ணீறு - அண்ணல் பூசும் திருவெண்ணீறு. " பூசுவதும் வெண்ணீறு " - (திருவாசகம்) திருச்சாழல். " வெந்த சாம்பல் விரையெனப் பூசியே " (திருஞான. திருப்பாசுரம் 3). "திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்ப" (**திருநா. புரா** - 67). "திருவளர் நீறுகொண்டு திருக்கையாற்றடவி" (**திருஞான - புராணம் -** 765) என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

நீற்றின் பேரொளி - திருநீற்றினது இனிய பெரிய சிவவொளி என்க.

" வெந்த சாம்பல் விரையென் பதுதம
தந்த மில்லொளி யல்லா வொளியெல்லாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்தமாக் கொண்ட வண்ணம்......"—**திருஞான - புரா** - 828

எல்லா ஒளிகளும் மங்கிய காலத்தும் நின்று, " ஒளியாயொளியதன் ஒளியாயொளியதன் ஒளியுந்தணிதரும் ஒளியா"கும் பேரொளிப்பிழம்பான இறைவனது திருமேனியினின்று ஒளிசெய்தலானும் பிறவாற்றானும் **நீற்றின் பேரொளி** என்றார். 162

309. வாவி புள்ளொலி மாறிய மாலையில்
நாவ லூரரு நங்கை பரவையாம்

பாவை தந்த படர்பெருங் காதலு
மாவி சூழ்ந்த தனிமையு மாயினர். ௧௬௩

(இ - ள்) வாவி...மாலையில் - பொய்கைகளில் (பகல் போக்கிய புள்ளினம் சென்று மாலையிற் சேக்கைகளிற் சேர்ந்தன ஆதலால்) அப்புள்ளினத்தின் ஒலிமாறிய காலமாகிய மாலைப்போதில்; நாவலூராரும் - நாவலூர் நம்பிகளும்; நங்கை......ஆயினர் - நங்கை பரவையார் தமக்குக் கொடுத்த படரும் தன்மைத்தாகிய பெருங்காதலும் தன் உயிரைச் சூழ்ந்துபற்றிய தனிமையும் உடையராயினர்.

(வி - ரை) **வாவிபுள் ஒலி மாறிய மாலையில்** - புள்ளொலி வாவியில் மாறிய மாலைப்போதில். இதன் காரணமும் இயலும் வரிசை 304-ம் திருப்பாட்டிற் காண்க. **மாற்றிய** - எனப் பாடங்கொண்டு மாற்றிவிட்ட மாலைக்காலம் எனக் காலத்தின் செயலாகக் கூறுவாருமுண்டு.

நாவலூராரும் - சிறப்பும்மை. "மறுவில் சிந்தை வன்றொண்டர்" (306).

நங்கை பரவையாம் பாவை - நங்கை பரவை என்பது அவர் பெயராம். "அவர் நங்கை பரவையார்" (293) என்றதன் உரைக் குறிப்பைக் காண்க. **பாவை** - பாவை போன்ற பெண்; **தந்த படர் பெருங்காதல்** - பாவை தந்ததேயாயினும், காதலானது உள்ள மெங்கும் **படர்ந்து** செல்வதால் **பெருங்காதலா**யிற்று. **படர்காதல் - படர்** - துன்பம் எனக்கொண்டு பிரிவினால் துன்பத்தைத் தருங் காதல் என்றுரைப்பதுமாம். இதுவே பரவையார் கூடியவழி இன்பம் ஆகுவதுமாம்.

ஆவி சூழ்ந்த தனிமையும் - தமது ஆவியைச் சூழ்ந்த தனியாந் தன்மையும். அஃதாவது ஆவி இங்கு நின்றும் பரவையாரிடம் போயினமையால் 'ஆவி நல்குவர்' என ஆரூர்ப் பெருமானை வேண்டிக் கொண்டனர் நம்பிகள் (302). ஆனால் ஆவி நல்காது (பரவையாரைத் தாராது) பெருமான் தாமே தனியாய்த் துணையிருந்தார் என்பது. **ஆவி சூழ்ந்த தனிமை**யாவது இறைவன் உயிர்க்குள் உயிராய்க் கலந்து சூழ்ந்து நிற்குந்தன்மை. இங்கு ஆவி வேறிடமிருந்தமையின் முன் அதனைச் சூழ்ந்திருந்த அவன் தனியனாயிருந்தான். **தனிமை** - தனிப்பொருளாந் தன்மை. தோழர் தனியராயினமையின் தாமும் தனியர் ஆயினர் என்பதும் குறிப்பாம். நாவலூரார் காதலும் தனிமையும் ஆயினர் என்று முடிக்க. பாவையில்லாது அது தந்த காதல் மட்டும் இருந்தது; ஆவியில்லாது அது சூழ்ந்த தனிமைமட்டும் இருந்தது; பாவை உண்டாயின் ஆவியும் உளதாம்; அப்போது தனிமையும் நீங்கும் என்க. "தமியனேன் தனிமை நீங்குதற்கே" என்ற திருவிசைப்பாக் கருத்தையுங் காண்க. காதலோடு தனித்து முன்னர்க் கூறியபடி யாவரோடும் உரையியம்பாது இருந்தனர் நம்பிகள் என்க. 163

310. "தந்தி ருக்கண் ணெரிதழ லிற்பட்டு
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளி தொடுப்பதே!
எந்தை யாரரு ளிவ்வண்ண மோ?" வென்பார். ௧௬௪

இதுமுதல் 4 பாட்டுக்களில் முன் யாவரோடும் உரை இயம்பாதிருந்த நம்பிகள், தனிமையாகக் காதல் மேன்மேற் படர்ந்து பெருகியபோது அக்காதலைத் துன்பமயமாக்கும் பொருள்களை நோக்கி, இயம்பும் உரைகளைக் கூறுகின்றார். காதற் றுன்பமிகுதியால் இவ்வாறு தனிமையில் இயம்புவது இயல்பு. அது அத்துன்ப மிகுதிப் பாட்டைக் காட்டும். அதனைக் குறிக்க மேற்பாட்டில் **படர்பெருங் காதல்** என்று கூறியதென்க.

இது மன்மதனைக் குறித்துக் கூறியது. **மன்மதோபாலம்பனம்** என்பர்.

(இ - ள்) எந்தையார் தம் திருக்கண்...தொடுப்பதே - எந்தையார்தமது நெற்றித் திருக்கண்ணின் தீயிலே பட்டு வெந்துபோன மன்மதன் வெளிப்பட உருக்கொண்டு இங்கு என் முன்னே வந்து நின்று அம்பு எய்வதா ? (தொடுக்க வன்மையு முடைய வனுவதா ?); அருள்இவ்வண்ணமோ ? - அவரது திருவருளும் இத்தன்மை யுடைய தாமோ ? ; என்பார் - என்று உட்கொண்டு இயம்பி, மேலும் மொழிவாராயினர்.

(வி - ரை) **திருக்கண்** - கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்க முடைமை யால் திருக்கண் என்றார். " நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப தென்னே " என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. (கோயிற்றிருவிருத்தம் 8) " நெற்றியிற் றிகழ்ந்த ஒற்றை நாட்டமும் " என அருளினர் பட்டினத்தடிகள்.. இது சிவபெருமானுக்கே உரியதாதலின் வேறு அடைமொழியின்றித் **திருக்கண்** என்றார்.

எரிதழல் - பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம். " இருநோக் கிவளுண்கண் உள்ள " என்றபடி இக்கண்ணின் தழலுக்கு எரிக்காது குளிர்ச்சி செய்து காக்கும் குணமுமிருத்தலின் அதனின்றும் பிரித்து வேறு தன்மையைக் கொண்ட **தழல்** என் றார். அடுக்களையின்கீழ் வைத்த தழல் பாகம் செய்தும், கூரையில் வைத்த தழல் வீட்டை எரித்தும் தொழில் செய்தல்போலக் காண்க. ஆதலின் தீ சுடும் என்று கூறும் பொருளியல்புக்கும் மாறுபாடிலாமையுங் காண்க.

வெளியே உருச்செய்து - வெந்த காமன் பின்னர் உயிர் பெற்றானாயினும் உரு விலனேயாவன். ஆனால் இவன் அவ்வாறன்றி உருவத்துடன் கூடினன் என்க. உருவத் துடன் கூடுதலாவது, செயல் மிகுதியால் உருத் தோன்றுதல்.

என்முன் - என் முன்னால் வரவுங்கூடாத இவன் என் முன்னரும் வர வல்லனாய். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

வாளி தொடுப்பதே - முன் வருதலே பெருங் காரியம் ; அதன் மேலும் வாளியும் தொடுக்க வல்லனுவதா ? என்க. வருதலேயன்றி என இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது.

எந்தையார் அருள் இவ்வண்ணமோ-எமது தலைவனாருடைய திருவருளும் இவ்வா றுவதொன்றோ ? திருவருளின் முன் வரவும், நிற்கவும், வாளிதொடவும் மாட்டாதவன் மதனன். தம்பிரான் தம்மையே தோழனாகத் தந்த திருவருள் நிரம்பிய என்முன் வந்து நின்று வாளி தொடுப்பதாயினன். அவனன்றி ஓர் அணுவு மசையாதாதலின் இதுவும் அவர் திருவருளின் ஒரு வண்ணமோ ? என்பது. எந்தையுடைய ஆர் (நிரம்பிய) அருள் என்றலுமாம்.　164

311\. " ஆர்த்தி கண்டுமென் மேனின் றழற்கதிர்
தூர்ப்ப தே !யெனைத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங் கங்கை நீண்முடிச்
சாத்தும் வெண்மதி போன்றிலை தண்மதி!. "　௧௬௫

இது சந்திரனை நோக்கிக் கூறிய கூற்று. **சந்திரோபாலம்பனம்** என்பர்.

(இ - ள்) ஆர்த்தி......தூர்ப்பதே!-துன்பத்தைக் கண்ட பின்னும் மேலும்மேலும், எப்போதும் போல் உனது போக்கின்படியே போகாமல் நின்று, உனது இயல்பான குளிர்ந்த கிரணமல்லாது இயல்புக்கு மாறான வெப்பக் கதிர்களைத் தூவுவதா! ; எனை... போன்றிலை - எனைத் தடுத்து ஆளாகக் கொண்ட இறைவன் தனது நீர்மை பொருந் திய அலைகளையுடைய நெடிய கங்கை சூடிய நீண்ட முடியிலே அருளினால் எடுத்து அணிந்து கொண்ட வெள்ளிய சந்திரனைப்போல் நீ அமைந்தா யில்லையே ; தண்மதி! - ஏ ! குளிர்ந்த இயல்பினையுடைய சந்திரனே! (தண்மதி - அண்மை விளி).

(வி - ரை) ஆர்த்தி-துன்பம். பாவை தந்த படர்பெருங் காதலால் விளைந்தது. காத லின் நிறைவு, தலைவன் தலைவியர் சேர்ந்தபோது இன்பமாயும், அதுவே பிரிந்தபோது துன்பமாயும் விளைவதாம். இங்குத் துன்பத்தின்மேல் நின்றது. ஆர்தலால் உண்டாவது ஆர்த்தியாம்.

கண்டும் - கண்ட பின்னரும். ஒருவன் மற்றொருவனுடைய துன்பங் காண்பா னாயின் அவன்பால் இரக்கங் கொள்வான் ; அங்ஙனங் கொள்ளாவிடினும் மேலும் துன் பஞ் செய்யமாட்டான் ; ஆனால் நீயோ எனது துன்பத்தைக் கண்டுங்கூட இவ்வாறு அழற்கதிர் தூர்ப்பதே என உம்மையின் பொருள் விரிக்க.

மேன்மேல் நின்று அழற்கதிர் தூர்ப்பதே-மேல் தூர்ப்பதே ; மேலும் தூர்ப்பதே; நின்று தூர்ப்பதே ; அழற்கதிர் தூர்ப்பதே என ஒவ்வொன்றுடனும் கூட்டுக. ஒருகால் துன்பம் செய்வானும் தான் செய்து விட்ட துன்பத்தின் விளைவு கண்டபோது பின்ன ருஞ் செய்ய ஒருப்படா தொழிவான். நீ அவ்வாறன்றி மேலும் மேலும் செய்வா னாயினை. **நின்று** - உனது ஆகாயவழிச் செலவிலே போகும் போக்கையும் நிறுத்தி நின்று தூர்ப்பதோ ?. **அழற்கதிர்** - அதுவும் உனது இயல்பாகிய குளிர்க் கதிர் வீசாமல் அழற்கதிர் வீசுவதாயினை. **தூர்ப்பதே**-தூர்ப்பதோ?என ஏகாரம் வினாப்பொருள் குறித் தது. கதிர் ஒன்றிரண்டல்லாது அநேகமாய் என்னை அதிலே மூழ்கும்படித் தூவுவதோ என்க. 'என்மேல் நின்று' என்று கூறுவாரு முண்டு. இவ்வழற் கதிர் தூர்க்கும் நிலைவைக் கண்டவுடன் தமது இறைவனது முடிமீதுள்ள குளிர்நிலா நினைவுக்கு வந்தது ; வரவே அதை "எனைத் தொண்டு கொண்டு ஆண்டவர் நீர்த்தரங்க நெடுங் கங்கை நீண்முடிச் சாத்தும் வெண்மதி " என்று வாயார, மனதார, வாழ்த்தித் தம்மைக் குளிர்வித்து ஆற்றிக் கொள்கின்றார் நம்பிகள். எமது இறைவன் தமது சிரத்தில் வைத்த தனாலே உயர்ந்தவனாகிய நீ - என்று முன் தொடர்பை அவனுக்கு நினைவூட்டியவாறு. எனது ஆர்த்தி நிலையதைக்கண்டும் என்மேல் நின்று - என்று உரைத்தலுமாம்.

நீர்த்தரங்கம் - நீர் நிறைதலால் உள்ள அலைகள். தண்ணிய நீர்மை கொண்ட அலை கள் என்றலுமாம்.

நெடுங்கங்கை - கங்கை வெள்ளத்தின் அளவிடலாகாத பெருமை கூறியவாறு.

"நிலைதளர ஆயிரமா முகத்தி னோடு,
பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு "—**திருப்பூந்துருத்தி - 1**

"கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்,
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும் "—**திருப்பூவணம் - 5**

"பகீரதற்காய் வானோர் வேண்டப் படர்ந்திழியும்
புனற்கங்கை பனிபோ லாகச், செறுத்தானை "—**திருவீழிமிழலை - 10**

என்பனவாதி திருத்தாண்டகத் திருவாக்குக்கள் காண்க.

நீண்முடி - நீண்ட சடையாகிய முடி. இது சிவபெருமானுக்கே உரிய சைவத் திருவடையாளங்களில் ஒன்று. இதன் விரிவு மும்மையாலுலகாண்ட மூர்த்தியார் புராணத்துக் காண்க. "சடைமுடி சாட்டியக்குடியார்க்கு " என்பது திருவிசைப்பா. பிரமனுங் காணுமே **நீண்ட** திருமுடி எனினுமமையும். " போதார் புனைமுடியும் எல் லாப் பொருண்முடிவே " என்னும் திருவாசகத்தின்படி எல்லா அளவைகளையும் கடந்து நீளநீளச் செல்லும் திருமுடி என்றுரைத்தலும் பொருந்தும்.

சாத்தும் வெண்மதி - இயல்பிலே குளிர்ந்த அமுத உருவாகிய சந்திரன் கங்கை யின் சார்பினால் மேலும்மேலும் அதிக குளிர்ச்சி பெறுவன் என்பது குறிப்பு.

தண்மதி - தண்ணிய இயல்புட னிருக்கத்தக்க மதி. தண்ணிய இயல்புடையவ னாகிய மதியாயினும் அவ்வாறின்றி இயல்புக்கு மாறாய் அழற்கதிர் தூர்ப்பதே என்க. 165

312. அடுத்து மேன்மே லலைத்தெழு மாழியே
தடுத்து முன்னெனை யாண்டவர் தாமுணக்
கடுத்த நஞ்சுன் றரங்கக் கரங்களா
லெடுத்து நீட்டுநீ யென்னையின் றென்செயாய் ? ௩௧௨

இது கடலை நோக்கிக் கூறியது. சமுத்திரோபாலம்பனம் என்பர்.

(இ - ள்) அடுத்து...ஆழியே - மேலும்மேலும் அடுத்து அலைகளை வீசி எழுகின்ற கடலே ; தடுத்து...நீட்டுநீ - பிறதேவர்களை எல்லாம் துன்புறுத்திய நஞ்சை, என்னை முன்னே தடுத்து ஆட்கொண்ட இறைவனே உண்ணும்படி உன் அலைகளாகிய கைகளினாலே எடுத்து நீட்டிக் கொடுத்த நீ ; என்னை இன்று என்செயாய் ? - என்னை இன்றைக்கு என்ன செய்யமாட்டாய் ?

(வி-ரை) அடுத்து மேல்மேல் அலைத்து எழும் - கடலினது ஆரவார மிகுதி கூறியவாறு. பிரிந்தார்க்கு வருத்தம் மிகச் செய்வது கடலின் ஆரவாரமென்பது அகப்பொருளிற் காணும் உண்மைக் குறிப்பாம்.

அலைத்து எழும் - ஆழியே ! அலைத் தெழுதலே உனது இயல்பாயிற்று. ஆதலின் பிறரையும் அலைத்தல் உனது தொழிலுமாயிற்று. உன்னையே அலைத்து எழுவதன்றிப் பிறரையும் அடுத்தடுத்து மேன்மேலும் அலைப்பாயாயினுய் என்றபடி.

எனையாண்டவர் தாம் உண - எனையாண்டவர்க்கும், அவர் தாமே உண்ணும்படி. உயர்வு சிறப்பு உம்மை தொக்கது. தாம் - அவர் தாமே. எவரும் தாங்கலாகாமையில் அவர் தாமே உண்ண.

எடுத்து நீட்டு நீ - உண்பதற்கு நஞ்சு கொடுக்கின்றோமே என்று சிறிதும் மறைவும், நாணமும், அச்சமுமின்றி வெளிப்படையாய் எடுத்து நீட்டிய நீ.

என்னை - நானே நேரிற் பெற்றுக்கொண்டு போயினேன். (ஆலாலசுந்தரன் என்ற பெயர்க்காரணம் காண்க.) ஆதலின் உன் தன்மை நேரில் அறிந்துள்ளேனாகிய என்னை என்க. என் தலைவனுக்கே வெளிப்பட நஞ்சு கொடுத்த நீ என்னை என்ன தான் செய்யமாட்டாய் என்ற குறிப்பு.

இன்று-இன்றைக்கு. நாளை மணம் நிகழ்ந்த பின் ஒன்றும் செய்ய இயலாது என்க.

313. பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடைச்
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினிற்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோ?தமிழ் மாருதம் ! ௩௧௩

இது தென்றலை நோக்கிக் கூறிய கூற்று.

(இ - ள்) தமிழ் மாருதம்! - இனிய தென்றலே!; பிறந்தது...மலயத்திடை-நீ பிறந்தது எங்கள் பெருமானாகிய இறைவனுடைய பொதிய மலையிலேயாம் ; சிறந்து...... புறம்பணைத் தடம் - (அவ்வாறு பிறந்த இடத்தினின்று இங்குச் சிறப்புப்பெற்று வந்து) சேர்ந்த வழியாவது தெய்வத் தன்மை பொருந்திய சோழநாட்டுத் தடாகங்களின் வழியாம் ; பொங்கு...எங்கோ ? - (இவ்வாறாகவும்) தீக் காற்று வீசும்படியாக நீ வன்மை பழகியது எங்கேயோ ? (மாருதம் - அண்மைவிளி).

(வி-ரை) தமிழ் - இனிமை. இனிய மொழியாதலின் தமிழ் மொழிக்குக் காரணப் பெயராய் வந்ததென்பர். "தமிழ் தழீஇய சாயல்" என்றதும் காண்க. மலயத்திலே தமிழ் முனியிருத்தலின் அங்கே பிறந்த மாருதம் தமிழ் மாருதமாயிற்று என்று கொண்டு தமிழுடன் பயின்ற மாருதம் என்றுரைத்தலுமொன்று.

எங்கள் பிரான்-எமது இறைவனுடைய மலையிலே பிறந்தனையாதலின் அந்நண் புரிமையால் எங்களுக்கு இடையூறு செய்தலாகாது என்ற குறிப்பு. **பிரான்**-தண்ணிய அருளுடையான். பெருமான் என்பதன்மரூஉ என்றுங் கூறுவர். "சுழலார் துயர் வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னும் நிழலா"கும் திருவடிகளையுடையவன்.

மலயம் - பிறனது குளிர்ந்த சார்பன்றியும் தன் இயல்பாலேயும் குளிர்ந்தது. எனவே நீ பிறந்த இடம் இருவகைக் குளிர்ச்சி பொருந்தியது என்க.

சிறந்து அணைந்தது - நீ புகுந்த இடமானது நீர் நாட்டினிற் புறம்பணைத் தடம். காவிரி கால்களாய்ப் பிரிந்து ஓடும் நீர்களாலும், நிற்கும் நீர் நிலைகளாகிய புறம்பணைகளாலும் இருவகையிலும் குளிர்ந்தது நீ புகுந்த இடம். இந்நீர் தெய்வத்தன்மை பொருந்தியதாதலின் நீ பிறந்த மலையத்தைப்போலவே இதுவும் இரண்டு வகையிலும் குளிர்ந்தது.

பொங்கு அழல் வீசிட - அழலின் தன்மை பொருந்திப் பெருகி வீசும்படியாக. நீ பிறந்த இடமும் புகுந்த இடமும் தண்மையுடையனவாகவும் அழலையுளதாக்கிப் பொங்க வைத்து வீசுமாறு. அழல் - நெருப்பு. அழல் போன்ற வெங்கதிர்களைக் குறித்தது. ஆகுபெயர்.

மறம் பயின்றது - வன்மை பழகியது. வீசிடும்படிச் செய்யும் வன்மை. பிறந்த இடமும், புகுந்த இடமுமல்லாது பயிலுதற்கு வேறு இடமில்லையாதலின் **வேறு எங்கோ?** என்று வினவினர். பிறந்ததும் புகுந்ததுமாகிய இடத்தினல்லாது பிறக்கு முன்னரே பொருந்திப் பயின்ற தென்பையேல் நீ **தமிழ்** இயல் உடையாய்; ஆதலின் மறம் உனதியற்கை யன்று என்பார் **தமிழ் மாருதம்** என்று கூறி முடித்தனர். தமிழ் நாவலராதலின் குறிப்பாய் அத்தொடர்புகாட்டத் **தமிழ் மாருதம்** என்றாரென்பதுமாம்.

வரிசை 310 திருப்பாட்டிலே முடித்த **என்பார்** எனும் எதிர்கால வினைமுற்றை முறையே 311-312-313 பாட்டுக்கள் ஒவ்வொன்றினிறுதியிலும் - தண்மதி! என்பார்- என் செயாய்? என்பார் - மாருதம்! என்பார் - எனக்கூட்டி முடித்துக்கொள்க. நம்பிகள் சொல்பவை அன்றிரவு ஆரூர்ப்பெருமான் திருவருள் செய்கின்றவரையில் நிகழ்ந்து கொண்டிருந்தனவாகலின் **என்பார்** என எதிர்கால வினைகொண்டு முடித்தார். 167

314. இன்ன தன்மைய பின்னுமி யம்புவான்
மன்னு காதல னாகிய வள்ளல்பாற்
றன்ன ரும்பெற னெஞ்சு தயங்கப்போம்
அன்ன மன்னவள் செய்கை யறைகுவாம். ௧௬௮

(இ - ள்) இன்ன...வள்ளல்பால்-(மேலே சொன்னவையேயன்றி) இவைபோன்ற தன்மையுடைய மொழிகளை மேலும் சொல்வதற்குப்பொருந்திய காதலை யுடையாராகிய அருட்கொடையாளராம் நம்பிகளிடத்தே; தன்னரும்...அறைகுவாம் - தனது பெறற்கரிய மனம் பின்னின்று தயங்கிவர முன்சென்றவராகிய அன்னம்போன்ற பரவை நாச்சியாரது செயலின் திறங்களை இனிச் சொல்வோம்.

(வி - ரை) இப்பாட்டுக் கவிக்கூற்று.

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான் மன்னுகாதலன் - மேலே சொல்லியவை போன்றவற்றை மேலும் சொல்வதற்குப் பொருந்திய காதலை யுடையவன். பின்னரும் இயம்புதல் - மதி - கடல் - மாருதம் போலவே பிரிந்தார்க்குக் காதலைப் பெருக்கும் குயில் முதலியவற்றைச் சொல்லுதல்.

இயம்ப மன்னும் காதலன் செய்கையும், அவர்பால் நெஞ்சு தயங்கப் போம் பரவையார் செய்கையும் நிகழ்ச்சியில் ஒன்றாகவே கலந்து ஒருசேர நிகழ்தலின் நம்பிகள் செய்கை முற்றாது தொடரப் பரவையார் செய்கையை எடுத்துக்கூறுதல் காண்க.

பின்னர் இருவர் செய்கையும் 326-வது திருப்பாட்டில் ஒருசேர வைத்துக் கூட்டித் திருவருளின் வழிச் செய்யப்பெறும் அவர்களது திருமணத்துடன் முடிபு பெற வைத்த அழகும் நோக்கத் தக்கதாம்.

காதலனுகிய வள்ளல் - ஏனையோர் காதல்போல் அவரது காதல் தம்பொருட்டன்றி உலகிற்கு வரையாது கொடுக்கும் வள்ளற்றன்மைக்காக நிகழ்ந்ததாதலின் **காதலனுகிய வள்ளல்** என்ற பெயரோடு சேர்த்துக் கூறினர்.

" மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வாரவர் மேன்மனம் போக்கிட "—வரிசை - 35

என்று கூறிய முன் தொடர்பைக் காண்க.

"தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்"(சண்டீசர்-60) எனப் பின்னர் இப்புராணத்துக் கூறுவதுங் காண்க. **வள்ளல்** - நம்பிகள். வள்ளல் பால் நெஞ்சு தயங்க(த்தான்) போம் என்க.

தயங்குதல் - மனவேகம் என்னும்படி விரைந்து தொடர்ந்தே வருந் தன்மையுடைய மனம் அவ்வாறு விரைந்து வராமல் பின் தங்கி வருதல். வள்ளல்பாற் சென்ற நெஞ்சு திரும்பிவரப் பின்னடைந்தது என்க. தான் முன்னர்ப் பூங்கோயில் போய்ப்புக்காராயினும் தமது மனம் நம்பிகளிடத்தே சிறிது தயங்கிப் போந்தது என்பதாம்.

போம் அன்னம் அன்னவள் - போம் - நெஞ்சு திரும்பும்வரை நிற்க இயலாதவராயும், போக (நெஞ்சு) மனமில்லாதவராயும் தடைப்பட்டுப்போகும் என்க. நெஞ்சு தயங்கவே அதனலே தடைப்பட்ட நடையாதலின் இயல்பான அன்னநடையாயிற்று என்பார் அன்னமன்னவள் என்ற நடை குறித்த உவமையாலே பரவையாரைக் குறித்தார்.

அரும் பேறல் நெஞ்சு - பெறல் அரும் நெஞ்சு என மாற்றிக் கொள்க. உமை அம்மையாருக்குப் பொதுக்கடிந்துரிமை (277) செய்ததும், தங்கள் பனிமலை வல்லி பாதம் கூடும் அன்புருகப் பாடும் கொள்கை (281) யுடையதும், அதன் பொருட்டுப் பூங்கோயிலுள்ளாரை அன்பினேடும் பூங்கழல் வணங்க என்றும் போதுவதாயும் (283) உள்ள **நெஞ்சு**. அரிய தவத்தாற் பெற்ற நெஞ்சாதலின் **அரும்பேறல் நெஞ்சு** என்றார்.

'பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கின், நல்லறிவு சற்றே நகும்' என்பதன் உண்மை நோக்குக. 'அரும் பெறல்' என்பதற்குப் 'பிறரிடம் புகாத' என்று உரை கொள்வாருமுண்டு. அது பொருந்தாமை காண்க.

செய்கை - செயலும் சொல்லும். இவை பின்னர், வரிசை 324 வரை உள்ள திருப்பாட்டுக்களிற் கூறப்பெற்றுள்ளன. 168

வேறு

315\. கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கணவனைமுன்
பெறுவாள் போல
இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ வெய்துபெருங்
காத லோடுந்
தனங்கொண்டு தளர்மருங்குற் பரவையும்வன் றொண்டர்பாற்
றனித்துச் சென்ற
மனங்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு தன்மணிமா
ளிகையைச் சார்ந்தாள். ௧௬௮

(இ - ள்) கனங்கொண்ட......பெறுவாள்போல் - மேகத்தின் தன்மை கொண்ட அழகிய திருநீலகண்டமுடைய தியாகேசரது திருவடிகளை வணங்கி (அவ்வணக்கத்தின்

பயனுகப் பெற்ற அவரது திருவருளின் மூலம்) கணவனை மேலே பெறுபவள் போல; இனம் கொண்ட......பரவையாரும் - தம்மோடு ஒத்து வாழும் தன்மையுடைய தோழியர்கள் தம்மைச் சுற்றி வரவும், தம்மிடம் புதிதாய் வந்தடைந்த காதலுடனே தனபாரங் கொண்டு தளர்வுற்ற இடையையுடைய பரவையாரும் ; வன்ரெண்டர்பால்...... சார்ந்தாள் - வன்ரெண்டராகிய நம்பிகளிடத்தே தம்மையும் சேடியரையும் விட்டுத் தனியாகப் போய்த் திரும்பும்போது தமது மனமானது சேர்த்துக்கொண்டு வந்த பெரிதாகிய மயலையும் மேற்கொண்டவராய்த் தமது அழகிய திருமாளிகையைச் சார்ந்தார்.

(வி - ரை) **கனம் கொண்ட மணிகண்டர் - கனம்** - மேகம். இங்கு அதன் தன்மையைக் குறித்தது. **கனம் கொண்ட கண்டர்** - மேகத்தின் கருமை, கொடை, உலகம் காத்தல் முதலிய எல்லாத் தன்மைகளுக்கும் இருப்பிடமாதல். வரிசை 297 திருப்பாட்டின் கீழ் " மைவாழுந் திருமிடற்று வானவன் " என்றதன் உரைக்குறிப்பைப் பார்க்க.

வணங்கிக் கணவனைப் பெறுவாள்போலப் - பரவையும் - சூழக் - காதலோடு - மயலும்கொண்டு மாளிகையைச் சார்ந்தாள் என்று கூட்டி முடிக்க.

கழல் வணங்கிக் கணவனை முன்பெறுவாள்போல் - முன் பெறுவாள் - முன் - காலமுன் வருங்காலத்திலே என்க. போலச் சார்ந்தாள் என்க.

" அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல் "

என்னும் திருவெம்பாவைக் கருத்துங் காண்க.

முன்னே சென்று வணங்குதற்கும் பின்னே கணவனைப் பெறுதற்கும் இடையில் மாளிகை சார்தல் நிகழ்ந்ததாதலின் வணங்கினதாகிய காரணத்தையும் பெறுவதாகிய காரியத்தையும் கூட்டுவிக்கும் தொழில்போல் மாளிகை சார்தல் நிகழ்ந்ததாம் என்பார் **போல்** - என்றார்.

இனங்கொண்ட - தம்மைப்போலவே தம்மிடத்து இனியராய் ஒன்றுய்க் கூடிய தன்மை கொண்ட.

எய்து பெருங்காதல் - (எண் கொள்ளாக் காதலினுல், முன்பு எய்தாமல் - 289) இன்று புதிதாய் எய்திய ஒரு பெரிய விருப்பம்.

தனங்கொண்டு தளர் மருங்குல்-முன்னரே பணைத்ததோடு, தனங்கள், காதலினுற் பின்னரும் பணைத்த காரணத்தால் மேலும் தளர்ந்த இடை. " அனங்கன்மெய்த் தனங்க ளீட்டங் கொள்ள மிக்குயர்வ போன்று " (282) என்று முன்னர்க் கூறியதற் கேற்பக் காதலோடுந் தனங் கொண்டு என்றார்.

தனித்துச் சென்ற மனம் - இனமான சேடியர் புடைசூழத் தாம் செல்லினும், தமது மனம் தனித்து அவர்பாற் போயிற்று என்பது குறிப்பு.

மனம் கொண்டு வரும் பெரிய மயல் - தனித்துச் சென்றதாயினும் தாங்கலாகாப் பெருஞ் சுமையைக் கொண்டுவந்தது என்பதாம். **கொண்டுவரும்**-ஒரு சொன்னீர்மைத் தாய்ப் பெற்றுச் சுமந்து வரும் என்ற பொருளில் வந்தது. **மனம் - கொண்டு** - தயங்கப் போன நெஞ்சை மீள அழைத்துக்கொண்டு. போயினது மனம் ஒன்றேயாயினும் வரும் போது மயலும் மனமுமாக இரண்டாயிற்று என்க.

பரவையும் - நம்பிகள் தேவாசிரியனைச் சார்ந்ததுபோலப் பரவையும் மாளிகை சார்ந்தாள் - என எச்சவும்மை.

316. சீறடிமே னூபுரங்க ளறிந்தனபோற் சிறிதளவே
யொலிப்ப முன்னர்
வேறொருவ ருடன்பேசாண் மெல்லவடி யொதுங்கிமா
ளிகையின் மேலால்
ஏறிமர கதத்தூணத் திலங்குமணி வேதிகையி
னலங்கொள் பொற்கான்
மாறின்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா முன்றின்மருங்
கிருந்தாள் வந்து. ௩௧0

(இ - ள்) சீறடிமேல்...ஒலிப்ப - (மாளிகை சார்ந்த பரவையார்) தமது சிறிய பாதங்களில் மேலே அணிந்த சிலம்புகள் அவரது மனத்தினுள்ளே நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொண்டனபோல் அதற்குத் தக்கவாறு மெல்லச் சத்திக்க; முன்னர் வேறொருவருடன்...மேலால் ஏறி - தம்முன் நிற்கும் வேறு ஒருவருடனும் பேசாதவராய் மெதுவாய் அடிமேலடிவைத்துச் சென்று மாளிகையின் உப்பரிகையின் மேல் ஏறிப் போய்; மரகதத் தூண்...இருந்தாள் வந்து - மரகதத்தால் அமைந்த தூண்களுடன் விளங்கிய அழகிய திண்ணையின்மேல் ஒப்பற்ற பூம்படுக்கை மீது அழகிய நிலாமுற்றத்தினருகிலே வந்து வீற்றிருந்தார்.

(வி - ரை) ஏறி - மணிநிலா முன்றின் மருங்கு வேதிகையின் - சேக்கைமிசை - வந்து - இருந்தாள் - எனக்கூட்டி முடிக்க.

சீறடி - சிறிய அடி; சிறுமைஅடி - **சீறடி** என நின்றது. சிறுமை என்றதில் **மை** விகுதிகெட்டு முதல் நீண்டு புணர்ந்து முடிந்தது.

நூபுரங்கள் அறிந்தனபோற் சிறிதளவே ஒலிப்ப - இது தற்குறிப்பேற்ற அணி. பரவையாரின் மனநிலையை அறிந்தனபோல என்று செயப்படுபொருளை வருவித்துரைக்க. சிறிதளவே ஒலித்தலாவது அவற்றின் இயல்பான ஒலி எழாமல் சிறு ஒலியின் அளவில் ஒலித்து நிற்றல். பரவையாரது மயல் அவரை விரைந்து நடக்க இயலாமற் செய்ததனாலே அவர் மெல்ல அடிபெயர்த்து நடந்தனர்; அதனால் சிலம்புகள் மெல்லச் சத்தித்தன. அதனைச் சிலம்புகளின்மேல் ஏற்றி அவை அறிந்தனபோல் சிறிதளவு ஒலித்தன என்றார். இச்சிறிய ஒலியின் காரணத்தைக் கூறுவார் பின்னர் **மெல்ல அடியொதுங்கி** என்றனர். தமது தலைவருடைய உளவை அறிந்த பணியாளர் அதனை எவ்வாறு பாதுகாத்து நடந்துகொள்வார்களோ, அதுபோற் சிலம்புகளும் பரவையாரது மனநிலையை உணர்ந்தபோது இச்சமயம் நாம் பேரொலி செய்து பிறர் கவனத்தை அழைக்காமலும், வருந்திய இறைவிக்கு மேலும் வருத்தந் தராமலும் அடங்கி ஒழுகவேண்டு மென்பனபோலத் தமக்கியல்பான ஒலியை அடக்கிக்கொள்வன போலச் சிறிதளவாய் மெல்ல ஒலித்தன என்பது குறிப்பு.

வேறொருவருடன் பேசாள் - மற்றுச் சூழ இருந்த தாதியர் ஒருவருடனும் பேசாதவராகி. மெல்ல அடிபெயர்த்தலும், வாய் பேசாமலிருத்தலும், ஒருசிறைத் தனித்திருத்தலும் மனநோயின் மெய்ப்பாடுகளாம். இவ்வாறே நம்பிகளும் "யாவரோடும் உரையியம்பாதிருந்"தார் என்றதும் (வரிசை 302) காண்க.

மேலால் ஏறி - மாளிகையின் மேலிடமாகிய உப்பரிகையின் முற்றம். மாளிகை மீது இலேசாக ஏறிச் செல்லும் இயலுக்கு மாறாய் அன்று மெல்ல அடிபெயர்த்து ஏற நின்றதால் நீட்டிப்பை உணர்த்தற்கு ஆசிரியர் மேல் ஏறி என்னாது **மேலால் ஏறி** என்று உருபு விரித்து உணர்த்தினர்.

மரகதத் தூணத்து இலங்கும் மணிவேதிகையில் - மரகதத் தூண்களுடன் விளங்கும் மணிகளிழைத்த திண்ணையிலே.

நலங்கோள் போற்கால் மாறில் மலர்ச்சேக்கை - நன்றாய் அமைக்கப்பெற்ற பொற்கால்களையுடைய ஒப்பற்ற புதுப் பூக்கள் பரப்பிய படுக்கை. படுக்கையில் மெல்லிய நறுமணமுள்ள புது மலர்களைப் பரப்புதல் உயர் வாழ்வுடையார் வழக்கு. "இப் போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ" என்ற திருவாசகம் (திருவெம்பாவை-2) காண்க.

மணி நிலா முன்றில் - அழகிய நிலா முற்றம். மணி என்பதை முன்றிலுடன் சேர்க்க. மனமகிழ்ந்து இன்பவாழ்வு வாழ்தற்குத் தக்கவாறு அழகாய் (மாடத்தின் மேற் புறம்) அமைந்த மேன்முற்றம். மரகதத் தூணும், மணிவேதிகையும், பொற்காலும், மலர்ச் சேக்கையும், மணிமுற்றமும் தாம் ஒவ்வொன்றும் தத்தமக்கியன்ற குளிர்ச்சி தந்து நிலவின் தண்மைக்குத் துணைசெய்து இன்பம் பெருக்கும் துணைக்கருவிகளாம்.

இருந்தாள் வந்து - வந்து இருந்தாள். முன்றில் மருங்கு வந்து வேதிகையிற் சேக்கைமிசை இருந்தாள் என மாற்றிக் கூட்டுக. இச்செய்கையை இம்முறையிற் சொல்லாது மாறிச் சொன்னது பரவையாரது மனத் தடுமாற்றத்தையும், மெல்லச் சென்றவர் எப்போது ஓரிடத்திற் கிடப்போம் என்று செல்வார் போல விரைந்து சேக்கையில் இருந்தார் எனச் செல்லலின் தாமதத்தையும், இருத்தலின் விரைவையும் குறித்தது. **வந்து** என்ற செயலுக்கு முன் **இருந்தாள்** என்று கூறியிருக்கும் அழகையும் நோக்குக. காதல் நோய் உள்ளே வெப்பஞ் செய்தலின் அதனை ஆற்றக் குளிர்ந்த நிலாமணி முற்றத்துச்சென்று மலர்ச்சேக்கையில் இருந்தார் என்க. 170

317. அவ்வளவி லருகிருந்த சேடிதனை முகநோக்கி
"யாரூ ராண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போ மறுதெதிர்வந்
தவரார்?" றென்ன,
"இவ்வுலகி லந்தணரா யிருவர்தே டொருவர்தா
மெதிர்நின் றாண்ட
சைவமுதற் றிருத்தொண்டர் ; தம்பிரான் றோழனார் ;
நம்பி" யென்றாள். ௩௧௭

(இ - ள்) அவ்வளவில்......என்ன - அப்போது பக்கத்தில் இருந்த தோழியைப் பார்த்துத் "திருவாரூரை ஆளும் நீலகண்டராகிய தியாகராசப் பெருமானை நாம் தொழச் செல்லும்போது வழியிலே எதிரில் வந்தவர் யாவர்?" என்று (பரவையார்) கேட்க; இவ்வுலகில்......என்றாள் - "அவரே பிரமன் மால் முதலிய பெருந் தேவர்களுக்கும் காணுதற்கரியவராகிய ஒருவர் (சிவபெருமான்) இவ்வுலகிலே அந்தணராய் உருக்கொண்டு வந்து மாறுபட்டார் போலக் காட்டி நின்று வழக்கிட்டு ஆட்கொள்ளப் பெற்ற சைவ முதலாந் திருத்தொண்டராயும், தம்பிரான் றோழராயும், உள்ள ஆளுடைய நம்பிகள் ஆவார்" என்று சொன்னாள்.

(வி - ரை) **அருகிருந்த சேடி** - சேடியார் பலருள்ளும், தனித்தபோதும் உடனிருக்கும் உரிமைபெற்றுக் கூட இருந்த பாங்கி என்க. அதுவரையும் வேறொருவருடனும் பேசாமலிருந்த பரவையார், மேலும் மனம் ஆற்றாமையாலும், அப்போது தனித்து அருகு இருந்த பாங்கியின் உரிமையாலும், சேடியை நோக்கித் தமது மனத்தை வெளிப்படுத்தும் முறையிலே பேசி, 'எதிர் வந்தவர் யாவர்?' எனக் கேட்டார் என்க.

ஆரூர் ஆண்ட-தியாகராசர் ஆனதால் ஆட்சி அரசுரிமையாயிற்று என்பார் **ஆண்ட** என்றார். எக்காலத்தும் ஆளுகின்ற என நிகழ்காலப் பொருளில் வந்தது.

மைவிரவு கண்டர் - விடம்போல் மேல் ஏறிச் சாருந் தன்மை செய்கின்ற இவ் வேதனையைக் காக்க வல்லவர் என்பது குறிப்பு.

போமறுகு எதிர் வந்தவர் - போகின்ற வழியிலே அதனிற் குறுக்கிட்டு அதிலிருந்து மனமாற்றத்தைத் தரத் தக்கவாறு எதிரிலே போந்தவர்.

இருவர் தேடு ஒருவர் - சொல்லணி. பெருந் தேவரும் தேடித் தம்மை எதிர் நின்று காணமுடியாதார், அவர்தாமே எதிராய் வந்து நின்று. அவ்விருவராலும் காண்டற்கரியாராகியும் இவர் காணும்படி எளிமை காட்டித் தாமே வந்த எனவும், எதிர் வந்து இவர் மறுப்பவும் ஆளாக் கொண்ட எனவும் நம்பிகளது பெருமை குறிப்பித்தபடி.

எதிர் நின்று - எதிராவார்-மாறுபட்டார்-போல் வழக்கிட்டு நின்று. எதிரிலே நின்று என்றலுமாம்.

ஆண்ட - ஆளாக வலிந்து கொண்ட "தேவரையும் மாலயன் முதற்றிருவின் மிக்கார், யாவரையும் வேறடிமை யாவுடைய எம்மான்" என் அடியான் (வரிசை 83) என்று வழக்கிட்டு ஆண்டு கொண்ட வரலாறு மேலே காண்க.

சைவ முதல் திருத்தொண்டர் - சைவத் திறத்திற்கே அடிப்படையான பெருந்தொண்டர். பூதபரம்பரையை விளக்கும் பெருமையுடையார். என்னை? ஏனைத் தொண்டர்கள் இறைவனைத் தாம் பற்றி யிருப்பாராக, இவர் மறுக்கவும் இறைவனால் விடாது வலிந்து பற்றப்பெற்றுத் தொண்டு செய்யுந் தன்மையாலும், திருத்தொண்டத் தொகையை அருளி, அடியார் பெருமை விளக்கிய முதல்வராயினமையாலும் **முதற் றிருத்தொண்டர்** என்றார் என்பது. **சைவ முதல்** - ஆதி சைவர் எனக் கூறுவாருமுண்டு. அது பின்னர் நம்பி என்று கூறுவதாற் பெறப்படுதலின் உரையன்றென்க.

தம்பிரான் தோழனார் - திருத்தொண்டரேயன்றித் தோழரும் ஆகியுள்ளார் என்க. **தம்பிரான்** - உமக்கு நாயகராகிய ஆரூர்ப் பெருமான் "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" என்று அருள் செய்ததுமன்றி, மணக்கோலத்துடன் மண்மேல் விளையாடுவாய் என்றும் அருளப்பெற்ற பெருமையுடையார் என அவர்க்கும் பரவையார்க்கும் உள்ள இடையீட்டையும், உரிமையையும், தகுதியையும் குறிப்பித்தவாறு.

நம்பி - அவரது மரபைக் குறித்தபடி. எனவே, பாங்கி தன் தலைவியின் உட்குறிப்பினையும் மன நெகிழ்ச்சியையும் அறிந்தாளாதலின் அதற்குத் தக்கபடி **யார்** என்ற கேள்விக்கு அவரது பேரடியாராம் பெருமையும், அவர்க்குந் தமக்குமுள்ள உரிமையும், மரபினால் மணக்க உரிமை உடைமையும் குறித்த அமைதியும் அழகும் காண்க. உருத்திர கணிகையர் ஆசாரிய பரம்பரைக்கு உரிமையாதல் ஆகமங்களுட் காண்க. விரிவு முன்னர் வரிசை 278 பாட்டின் உரையிற் காண்க. 171

318. என்றவுரை கேட்டலுமே "யெம்பிரான் றமரேயோ!"
வென்று முன்னம்
வன்றொண்டர் பால்வைத்த மனக்காத லளவின்றி
வளர்ந்து பொங்க
நின்றநிறை நாண்முதலாங் குணங்களுட னீங்கவுயி
ரொன்றுந் தாங்கி
மின்றயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்லணைமேல்
வீழ்ந்த போது; ௧௭௨

319. ஆரநறுஞ் சேறாட்டி யரும்பனிநீர் நறுந்திவலை
யருகு வீசி
ஈரவிளந் தளிர்க்குளிரி படுத்துமட வார்செய்த
விவையு மெல்லாம்

பேரழலி னெய்சொரிந்தா லொத்தன ;மற் றதன்மீது
சமிதை யென்ன
மாரனுந்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி மலர்வாளி
சொரிந்தான் வந்து. கஎ௩

318. (இ - ள்) என்ற உரை...வளர்ந்து பொங்க - என்று சேடி சொன்ன விடையைக்கேட்ட வுடனே "அவர் எமது இறைவராகிய தியாகேசருடைய தமரேயோ?" என்று சொல்லி, அச்சொல் வாய்ப்பட்டு நிறையுமுன்னே, வன்றொண்டரிடம் மனத்திலே கொண்ட காதல் அளவுகடந்து மேலே பொங்கியதனாலே; நின்ற...தாங்கி - முன்னே தம்மிடம் நிலைபெற்று நின்ற நிறையும் நாணம் முதலிய நான்கு குணங்களும் ஒருமித்து நீங்க, உயிர் ஒன்றை மட்டும் ஆற்றாது பாரமாய்த் தாங்கிக்கொண்டு; மின் தயங்கு...போது-மின்னல்போலத் துவள்கின்ற நுண்ணிய இடையினையுடையாராகிய பரவையார் பெருமூச்செறிந்து மெல்லிய பூம்படுக்கையில் வீழ்ந்தார் ; அப்போது, கஎ௨

319. (இ - ள்) ஆரம்...படுத்து - மணமுடைய கலவைச் சந்தனச் சேற்றைப் பூசியும், அரிய மணமுடைய பனிநீரை மழைபோலச் சிறு துளிகளாகப் பக்கங்களிலெல்லாம் வீசித்தெளித்தும், குளிரியினது ஈரமுள்ள இளந்தளிர்களை இட்டும்; மடவார்... ஒத்தன - (இவ்வாறாகத்) தோழிப் பெண்கள்செய்த இவைகளும் இவைபோன்றன பிறவுமாகிய எல்லா உபசாரங்களும் முன்னரே பெரு நெருப்பாய் மூண்ட அதன்மேல் அதனை வளர்க்குமாறு நெய்யையும் சொரிந்தது போலாயின ; அதன்மீது...வந்து - அதன்மேலும் அவ்வழலைப் பின்னும் வளர்க்க வுணவு தருவதுபோல மன்மதனும் வந்து தனது ஒப்பற்ற வில்லின் வலிமையைக் காட்டிப் பூவாகிய அம்புகளை மேன்மேலும் எய்தான். கஎ௩

கேட்டலும் - "எம்பிரான் தமரேயோ" என்று முன்னம் - பொங்க - நீங்க - தாங்கி - நுண்இடையாள் - உயிர்த்து - வீழ்ந்தபோது - ஆட்டி - வீசிப் - படுத்துச் - செய்த - எல்லாம் - ஒத்தன ; மாரனும் - காட்டி - வாளி சொரிந்தான் - என இவ்விரண்டு பாட்டும் கூட்டி முடித்துக்கொள்க.

318. (வி - ரை) **என்று முன்னம்** - என்று வாய்விட்டுச் சொன்னார் ; அச்சொல் சொல்லி முடியுமுன்னே எனப் பிரித்து உரைத்துக் கொள்க. இச்சொல்லும் பிற் செயல்களும் ஒருங்கு நிகழ்ந்த விரைவை உணர்த்த **என்று முன்னம்** என்றார். "தென்னா வென்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்" என்ற (திருவெம்பாவை - 7) திருவாசகம் காண்க.

வன்றொண்டர் - சேடி "எதிர் நின்றாண்ட திருத்தொண்டர்" என்றமைக்கேற்ப **வன்றொண்டர்** என்றார்.

பால் வைத்த மனக்காதல் - வன்றொண்டரிடம் மனம்வைத்ததால் நிகழ்ந்த காதல் - வைத்தமனத்திலே நிகழ்ந்தகாதல் ; என மனத்தை இருவகையும் கூட்டுக.

அளவின்றி வளர்ந்து பொங்க - எம்பிரான் தமர் - என்ற உணர்ச்சி காதலை வளரச்செய்து மேலும் பொங்கச் செய்தது. பரவையாரது அன்பின் திறமுணர்த்தியதாம். தாம் தமர்க்கு உரியவர் என்ற உணர்ச்சி காதல் பொங்குதற்குக் காரணமாம்.

நின்ற - இதற்கு முன்னெல்லாம் தம்மிடத்தே நிலைபெற்று நின்ற. **நின்ற** என இறந்தகாலக்குறியாற் கூறியதால் இப்போது துணையில்லாது ஒதுங்கியமை குறித்தார்.

நிறை நாண் முதலாந் துணைங்களுடன் நீங்க - நிறை என்னும் ஒழுக்கமானது அதற்குப் பற்றுக்கோடாகிய நாணம் முதலிய நாற்குணங்களுடனே ஒரு சேர நீங்க. **நிறை** என்பது அடக்க வேண்டியவற்றை மனதிலே அடக்கி ஒழுகுதலாகிய மகளிர்க்குரிய இயல்பாகிய ஒழுக்கம். அது நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு

குணங்களைப்பற்றி நின்று செலுத்தப்பெறும். இவ்விரண்டும் ஒருங்கே நீங்கியன என்பார் **உடன் நீங்க** என்றார். **நீங்க** - துணையாய் நில்லாது ஒதுங்கி நிற்க.

நிறை என்பதனை நிறைந்த என்றும், உடல் நீங்க என்றும் கொண்டு உடம்பினின் றும் நீங்க என்பாருமுண்டு. உடல் அந்தக்கரண, புறக்கரண முதலியவற்றின் தொகுதி யாதலின், குணங்கள் நீங்கி என்றும், பின்னர் உயிர் ஒன்றுந் தாங்கி என்றும் கூறவே உடல் நீங்காது உடலில் உயிர்மட்டும் தாங்கி நிற்க ஏனை உயிர்க்குணங்கள் நீங்கின என் பது குறிக்கப் பெற்றதாம்.

ஒன்றும் - ஒன்றுமட்டும். ஏனையவெல்லாம் நீங்கியன. முற்றும்மை.

மின்தயங்கு - மின்போலத் துவள்கின்ற. இடையின் முன்வா ஆற்றாது மின்னை யும் தயங்கச் செய்கின்ற என்றலுமாம்.

நுண்ணிடையாள் - மேற் காதற்பாரம் மிக்குப் பொங்கவே இடையின் நுண்மை யால் இருக்கலாற்றாது வீழ்ந்தார் என்பது குறிப்பு.

வெவ்வுயிர்த்து மேல் அணைமேல் வீழ்ந்தபோது - பெருமூச்சு விடுதலும், வீழ் தலும் மன ஆற்றாமையின் மெய்ப்பாடுகளாம். நடக்க முடியாமல் மெல்ல அடியொதுங்கி மாளிகை ஏறி வந்து மலர்ச் சேக்கையில் இருந்தவர், இப்போது காதல்நோய் மிக அவ் வாறு இருக்கவும் ஆற்றாது விழுந்தார் என்க.

மேல்லணை - மெல்லிய மலர்களும் தூவியும் பரப்பிய படுக்கை. 172

319. (வி - ரை) **ஆரம் நறும் சேறு** - **ஆரம்** - சந்தனம். அதன் இயற்கைமணத்தை மிகச்செய்ய வாசனைக் கலவை கூட்டியதால் **நறும் சேறு** என்றார். **சேறு** - குழம்பு.

பனிநீர் நறுந்திவலை அருகுவீசி - பனிநீர் மணத்தாலும் மென்மையாலும் மிக்கது. அதனையும் மிகுதியாய்ச் சொரிந்தால் ஆற்றார் என்று சிறு துளிகளாய் அருகெல்லாம் தெளித்தார் என்க. துளிகளின் சிற்றளவினால் உண்டாம் குணம்பற்றியும், தண்மையும் மணமும் மிகப் பரப்பப்பெறுந்தன்மைபற்றியும் **நறும் திவலை** என்றார்.

ஈர இளந்தளிர்க் குளிரி படுத்து - **குளிரி** - நீர்க்குளிரி என்ற ஒரு கொடி. அதன் குளிர்ந்த இளந்தளிர் பரப்பி. குளிரச் செய்யுங் காரணத்தால் **குளிரி** எனக் காரணப் பேர் பெற்றது. அதன் தளிர்; அதுவும் இளந்தளிர்; அவையும் ஈரமுடையன; என அடை மொழிகளாற் றண்மையைப் பெருக்கியவாறு காண்க. **தளிர் குளிர** என்பது பாட மாயின் உரிய இளந்தளிர்களைக் குளிர்ச்சி பெறுமாறு என்று பொருள் கொள்க.

படுத்து - இட்டுப் பரப்பி. **மடவார்** - பெண்கள். இவை பயனின்மையோடமை யாது மாறான பயன் தருவதை உணராத மடமையோர் என்ற குறிப்புமாம்.

ஆரச்சேறும், பனிநீர்த் திவலையும், குளிரித்தளிரும் புறவெப்பத்தை மாற்றும் உபசாரப் பொருள்களாம். இவை, கூடினோர்க்கு இன்பமும், கூடாதார்க்குத் துன்பமும் செய்வன.

இவையும் எல்லாம் - (ஆட்டியும், வீசியும், படுத்தும்) இவைகளேயன்றி அவர்கள் செய்த இவைபோல்வன பிறவும் ஆகிய எல்லாம். அவை விசிறி வீசுதல் முதலியன. இவற்றை வடநூலார் சைத்தியோபசாரம் என்பர்.

பேர் அழலின் நேய் சோரிந்தால் ஒத்தன - **பேர் அழல்** - பெருந்தழல். அதில் நெய் சொரிதல் அதனை வளர்க்குமேயன்றித் தணிக்காததுபோல, இவையும் பரவை யார்க்கு உள்ளே மிக எரிந்து நின்ற ஆசைத் தீயை வளர்த்தன. காதலாகிய தீ கடுஞ் சுரம்போல் மிகச் சுடுந்தன்மையுடைய தென்பார் **பேரழலுக்கு** ஒப்பிட்டார்.

சமிதை - வேள்வித் தீயில் இடும் பல வளார்களுக்குப் பரிபாடையாக வழங்கும் பெயர். பரவையார் மனத்துள் வளர்ந்து எரியும் காதல் தீயும் வன்றொண்டரை வேட்ட லாகிய (வேள்வி - விரும்புதலால் விளைவது - தொழிற் பெயர்) வேள்வித் தீயாகலின் அதற்கேற்ப நெய்யும் சமிதையும் உவமிக்கப்பெற்றன. நெய் சொரிதலும் சமிதையிட லும் வேள்விக்கு உறுப்பாதலுங் காண்க. மணத்தை வேள்வி என்றலும் காண்க.

சோரிந்தான் வந்து - மேலே "இருந்தாள் வந்து" என்றதற் குரைத்தபடி கொள்க. **சோரிதல்** - மிகுதியாகப் பெய்தல். மழை சொரிந்தது - என்புழிப்போல.

பெருஞ்சிலையின் வலிமை காட்டிச் சோரிந்தான்-மதனனது வில் சிவபெருமான் ஒருவரிடத்தேயன்றிப் பிறர் எல்லாரிடமும் சென்று செயல் புரியும் வன்மை யுடைத்தாதலின் **பெருஞ்சிலையின் வலி** என்றார். **பெருமை** - தோலாத தன்மை. பரவையாரின் திருமணம் இறைவன் நியதியின் வழியே நிகழ்வ தொன்றாதலின் மாரன் அம்புகளின் செயல் எல்லாம் அந்நியதிக்குத் துணைசெய்த மட்டிலே அமைந்து நின்று, சிலைவலியாகிய வில் வித்தை காட்டிய அளவே நின்றன என்பார் **வலிகாட்டிச் சோரிந்தான்** என்றார். சொரிதலின் பயன் அவ்வளவே என்க. இத்திருமணம் மதனன் செயலாகிய காமத்தின் காரணமாக நிகழ்ந்ததல்ல என்பது குறிக்கக் **காட்டி** என்றார்.

தளிர்தளிரப்—என்பதும் பாடம். 173

320. மலரமளித் துயிலாற்றாள் ; வருந்தென்றன் மருங்காற்றாண் ;
மங்குல் வானி
னிலவுமிழுந் தழலாற்றா ; ணிறையாற்றும் பொறையாற்றா ;
ணீர்மை யோடுங்
கலவமயி லெனவெழுந்து கருங்குழலின் பரமாற்றாக்
கைய ளாகி
யிலவவிதழ்ச் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்றா மையின்வறிதே
யின்ன சொன்னாள். கஎச

(இ - ள்) மலர்...தழல் ஆற்றாள் - [பூம்படுக்கையிலே வீழ்ந்த பரவையார் - 318] அந்த மலர் அமளியிலே படுத்துத் துயிலைச் செய்யாதவராய்; நிலாமுற்றத்திலே துயிலை விளைக்கக் கூடியதாய்த் தமது பக்கத்திலே வந்து மெல்லென வீசும் தென்றற் காற்றுத் தமதுமேலே பட அதனையும் பொறாதவராயினர் ; மேகங்கள் தவழும் ஆகாயத்திலிருந்து ஒளிவீசும் நிலாவினுடைய கதிர்கள் நெருப்பை உமிழ்தலால் அவ்வெப்பத்தையும் பொறுக்க முடியாதவராயினர் ; நிறை...ஆற்றாள் - தமக்குரிய தன்மையோடு காக்கின்ற பெண்மைக் குணமாகிய நிறையைக் கொண்டுசெலுத்த வல்ல பொறை எனும் சத்தியைத் தாங்க இயலாதவராயினர் ; நீர்மையோடும்...ஆகி - (மலரணையில் வீழ்ந்து கிடந்தவர்) இக்குணத்துடன் சிறிய தோகைமயிலைப்போல எழுந்து தமது கரிய கூந்தலின் பாரத்தையுந் தாங்கமுடியாத நிலையுடையாராய் ; இலவ...சொன்னாள் - இலவம் பூப்போன்று இயல்பிலேயே சிவந்த வாய் நெகிழ்ந்து தரிக்கலாகாத வருத்தத்தாலே தமக்குத் தாமே பின்வருமாறு சொல்வார் ஆயினார்.

(வி - ரை) நிலா முற்றமும், மலர் அமளியும், தென்றலும் உடற்கின்பம் செய்து, துயில்வர உதவி, ஏனோர்க்கெல்லாம் இன்பம் தரும் பொருள்கள். ஆயின் இணைபிரிந்தார்க்குக் காதல்நோய் மனத்தில் வளர்ந்து பொங்குதலால் இவையே துன்பந்தருவன ஆயின என்பதை விளக்க, **ஆற்றாள் ஆற்றாள்** எனத் தனித்தனி ஒவ்வொன்றுடனும் கூட்டி உரைத்தார்.

மலர் அமளித் துயில் - மலர் பரப்பிய அமளியிலே துயிலுதல். **அமளி** - படுக்கை. முன்னரும் **மலர்ச்சேக்கை** என்றதும் காண்க.

வரும் தென்றல் - மேலே 283-ம் திருப்பாட்டிற் கண்டபடி மலையத்திற் பிறந்து நீர்நாட்டின்வழி அணைந்தும், நம்பிகள்பாலும் அழல் வீசி **வருகின்ற** தென்றல் என்க.

மங்குல் வானில் நிலவு உமிழ் தழல் - நிலவு குளிர்ந்தது ; அது வரும் வழியும் குளிர்ந்த மேகமண்டலமாம்; எனவே மிகக் குளிர்ச்சி விளைக்கவேண்டிய பொருள் என்பது குறிக்க **மங்குல் வானில் நிலவு** என்றார்.

நிறையாற்றும் பொறை - நிறையாகிய ஒழுக்கத்தைக் கொண்டுசெலுத்தக்கூடிய பொறையை.

கலவ மயில் - குழற்பாரம் மயிற்றோகையை ஒத்திருந்தது என்க. **கலவம்** - தோகை. மயில் சிறிதாயினும் பெருந்தோகையின் பாரத்தைத் தாங்கும். இந்த மயிலோ (மயில் போன்றாரோ) குழலின் பாரமும் தாங்க இயலாதபடி அவ்வளவில் மெல்லியள் ஆயினள் என்பார் **கையள் ஆகி** என்றார்.

செந்துவர் வாய் - செவ்விய பவளம்போன்ற நிறமுடைய வாய். "செந்துவர்வாய்க் கருங்கண் வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்", "செந்துவர் வாயுமைபங்கன்" என்ற திருவாக்குக்கள் காண்க.

வாய் நெகிழ்தல் - வாயினை இயல்பாலே திறந்து சொல்லாமல் இதழ்கள் மெல்ல அசைந்து நெகிழச் சொற்கள் தடுமாறிச் சொல்லத் தொடங்குதல்.

வறிதே - தமக்குத்தாமே. ஒருபயன் குறித்து எவரையும் நோக்கிக் கூறாது ஆற்றாமையாலே சாற்றுதலின் **வறிதே** என்றார். **வறிது** - பயனின்மை. அலக்ஷ்ய வாக் என்றார் காளிதாசர். (குமாரசம்பவம்) **வறிது** - சிறிது என்றலுமாம்.

இன்ன - பின்வருபவை.

பொறையாற்று நீர்மை—என்பதும் பாடம். 174

வேறு

321\. "கந்தங் கமழ்மென் குழலீ! ரிதுவென்?
கலைவாண் மதியங் கனல்வா னெனையிச்
சந்தின் றழலைப் பனிநீ ரளவித்
தடவுங் கொடியீர்! தவிரீர்! தவிரீர்!
வந்திங் குலவுந் நிலவும் விரையார்
மலயா னிலமும் மெரியாய் வருமால்;
அந்தண் புனலும் மரவும் விரவுஞ்
சடையா னருள்பெற் றுடையா ரருளார்." ௧எ௫

(இ - ள்) கந்தம்...கனல்வான் எனை - வாசனை வீசும் மெல்லிய கூந்தலையுடைய சேடியர்களே! இது என்ன ஆச்சரியம்! அமிர்த கலைகளுடைய ஒளிவீசும் சந்திரனோ என்னைச் சுடுவானாயினன்; இச்சந்தின்...தவிரீர்-இந்தச் சந்தனக் குழம்பைப் பனிநீருடன் கலந்து என்மேல் பூசுகின்ற கொடியீர்களே! நீவிரோ இச்செயலைத் தவிரீர்! தவிரீர்; வந்து...வரும் ஆல் - இங்குவந்து உலாவி நிற்கும் தென்றலோ தீயுருவமாய் வருகின்றது; அம்...அருளார் - அழகிய குளிர்ந்த கங்கைப் புனலையும் பாம்பையும் ஒருங்கே தம்மிடத்து வைத்த சடையவராம் சிவபெருமானது அருள்பெற்று என்னை உடையாராகிய நம்பிகளோ என்பால் அருள் செய்கின்றாரில்லை.

(வி - ரை) **கலைவாண் மதியம் கனல்வான்** - அமுத கலைகளால் ஒளி வீசுபவன் அதற்கு மாறாகக் கனல் வீசுகின்றான் என்றதாம். திணை வழுவமைதி. **கனல்வான்** - வானீற்றுத் தொழிற்பெயராகக் கொண்டு கனலுதல் என்றுரைத்தலுமாம். **எனை** - யாது காரணம்பற்றி என்று பொருள் கூறுவாருமுண்டு. விரகத்தாற் கூறும் மொழியாதலின் திணையும் காலமும் மயங்கக் கூறினார் என்றலுமாம்.

சந்தின் தழலைப் பனிநீர் அளவித் தடவும் கோடியீர்! - **சந்து** - சந்தனம். மேலே "ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகு வீசி" எனச் சொன்ன உபசாரம் இங்கே குறிக்கப் பெற்றது. நீங்கள் தடவுகின்றது சந்தனம் அளைந்த நீராயில்லாமல் நெருப்பையே தடவுகின்றதா யிருக்கிறதே.

கோடியீர்! - ஆதலின் நீங்கள் கொடியவர்களே! தடவும் கொடிபோல்பவர்களே என்பதுமாம்.

தவிரீர்! தவிரீர்! - அடுக்கு ஆற்றாமையின் மிகுதியைக் குறித்தது. தவிர மாட்டீர்கள். விடாது செய்கின்றீர்கள்! என்க. தவிருங்கள், தவிருங்கள் என்று வியங்கோளாக அடுக்கிய குறிப்புமாம்.

வந்திங்கு உலவும் மலயானிலம் - மேலே வரும் தென்றல் என்ற இடத்துக் காண்க. **மலய அனிலம்** - பொதிய மலையிலிருந்து வரும் காற்று.

அந்தண் புனலும் அரவும் விரவும் சடையார்-விடமுள்ள அரவு வைத்தாரேனும் விடத்தாலும் தீயாலும் அவிந்தாரையும் பிழைப்பிக்க வல்ல அழகிய தண்ணிய கங்கை நீரையும் உடனே வைத்தார். அவரருள் பெற்றாரும் அத்தன்மையாரே ஆதல் வேண்டும் என்பது குறிப்பாம்.

தத்தம் இயல்புக்கு மாறாகி நின்ற நிலாவின் கனலும், சங்கின் தழலும், மலயானிலத்தின் எரியும், ஆக மூன்று தீயுங்கூடிச் சுடுகின்ற என்னைக் காக்க வல்லது அந்தண் புனலுடையார் அருள்பெற்றுடையாரது அருளே. அவரும் இவை போலவே அவ்வருளியலுக்கு மாறாகி விட்டாரோ என்பது குறிப்பு.

அருள் பெற்றுடையார் - அருளைப் பெற்ற அதனால் என்னையுடையவர் என்க. "தம்பிரான் றோழனர்" என்று உயிர்ப்பாங்கி அறிவிக்க உணர்ந்த குறிப்பு. 175

322. "புலரும் படியன் றிர;வென் னளவும்
பொறையும் நிறையும் மிறையுந் தரியா;
வுலருந் தனமும் மனமும்; வினையே
னொருவே னளவோ பெருவாழ் வுரையீர்!
பலரும் புரியுந் துயர்தா னிதுவோ?
படைமன் மதனார் புடைநின் றகலார்!
அலருந் நிலவும் மலரும் முடியா
ரருள்பெற் றுடையா ரவரோ வறியார்." ௧எ௬

(இ - ள்) புலரும்......அளவும் - என்னைப் பொறுத்தமட்டிலே இவ்விரவு விடிகின்றபாடில்லை; பொறையும்...தரியா - தாங்கும் சத்தியும் காக்கும் சத்தியும் சிறிதும் தங்கா ஆயின; உலரும் தனமும் மனமும் - தனபாரங்களும் மனமும் உலர்ந்து போகின்றன; வினையேன்...உரையீர் - இத்தனை பெருவாழ்வுகளும் (துன்ப அநுபவங்களும்) தீவினையேனாகிய என் ஒருத்தியின் அளவிலே தானா இயலவேண்டும்? சொல்லுங்கள்; பலரும்...இதுவோ - பலபேரும் சேர்ந்து செய்யும் தொழில் இவ்வாறு துன்பம் செய்வது தானா? (ஒருவர் போலவே பலரும் துன்பமே செய்வதா?); படை...அகலார் - மன்மதன் என் பக்கத்திலே நின்று படை செலுத்துதலை ஒழிகின்றிலர்; அலரும்...அறியார் - கொன்றைப் பூவும் சந்திரனும் மலர்தற்கிடமாகிய திருமுடியுடையாரது திருவருள் பெற்று என்னை உடையாராகிய நம்பிகளோ நான் படும் துன்பத்தை அறியாதவராயினர்.

(வி - ரை) புலரும்படியன்று இரவு என் அளவும் - மற்றெல்லார்க்கும் அளவுபட்டு விரைவில் விடியும் தன்மையுடைய இரவு என் அளவில்மட்டும் புலராமலே நிற்கின்றது. இரவிலே இத்துன்பப்படுவோர் பகல் வரில் தம் முன்னைநிலை பெறுவர். ஆதலின் பகலை விரும்பும் இயல்புபற்றி இரவு புலராது நீட்டித்தலைக் குறித்து வருந்தினர். இரவு நீட்டித்தலாவது ஆற்றாமையினால் ஒரு கணமும் ஊழியாய்த் தோன்றுதல். "ஊழியிற் பெரிதால் நாழிகை யென்னும்" (திவ்யப்).

உலரும் தனமும் மனமும் - மனம் உலர்தலால் உடம்பும் உலர்வதாம்; ஆதலின் உடன்சேர்த்துக் கூறினர்.

வினையேன் ஒருவேன் அளவோ பெருவாழ்வு உரையீர் - பெருவாழ்வு-இகழ்ச்சிக் குறிப்பினாலே துன்ப மிகுதியைக் குறித்தது. இவ்வாழ்வு என் ஒருத்தியின் அளவே நிகழ வேண்டுவதா? **ஒருவேன்** என்பதனை நீங்கமாட்டேன் (ஒருவுதல் - நீங்குதல்) எனக்கொண்டு முன்வரும் உலரும் தனமும் மனமும் நீங்கமாட்டேனாயினேன் என்றுரைத்தலும் ஒன்று. இவ்வுரைக்கு இவ்வளவுதானா எனது பெருவாழ்வாய் முடிந்தது என்று முடித்துக்கொள்க. **பெருவாழ் வுரையீர்** - நான் வாழும் வழியைச் சொல்லுங்கள் என்று முரைப்பர்.

பலரும் புரியும் துயர்தான் இதுவோ - ஒருவர்தாம் துன்பஞ் செய்வாராயின் பிறர் அதனை விலக்குதலே அறநெறியா யிருப்பவும், அவ்வாறு செய்யாமலும், அவ்வாறு விலக்காவிட்டாலும் வாளா இராமலும், அவருடன் சேர்ந்து தாமும் துன்பஞ் செய்வதோ அற இயல்பு? என்க.

அலரும் நிலவும் மலரும் முடியார் - அலர்-சிவபெருமானுக்குரிய கொன்றை மலர். இது கார்காலத்தைக் குறிப்பது. காதல் நிகழ்ந்து பெருகும் காலம் அதுவேயாம். **நிலா** காதலை மிகுவிப்பது. **மலர்தல்** - சிறந்து பெருகுதல். இவ்விரண்டும் பெருகச் செய்தலின் அவர் திருவருள் காதலாய் மேன்மேல் விளைகின்றது. அதற்கு மருந்து அவர் அருளேயாதலின் அவரருள் பெற்றுடையார் அறிந்தால் தாம்பெற்ற திருவருளை எனக்குக் கொடுத்து ஆற்றுவர். அவரோ அறியாதிருக்கின்றார். நீங்களாவது அறிவியுங்கள் என்பார்போலக் குறிப்பித்தவாறு. அறிந்தால் அருளுவர் என்பது குறிப்பு.

ஆற்றாமையால் வாய் நெகிழ்ந்து வறிதே சொல்லும் சொற்களாயினமையால் இச் செய்யுட்கள் ஒரு தொடர்ச்சிபெற்று வாராது வெவ்வேறு பல பொருள்களைக் குறித்த தனிச் சிறுசிறு சொற்றொடர்களாக முடிந்துவரும் யாப்பமைதியும், சொல்லமைதியும், கொண்டுவிளங்கும் அழகு காண்க. இத்தகைய பொருளமைதிகொண்ட "கூற்றாயின வாறு", "சடையாயெனுமால்" என்ற தேவாரப் பதிகங்களின் அமைதியையும் இங்கு வைத்துக் காண்க. 176

323. "தேருங் கொடியும் மிடையும் மறுகிற்
றிருவா ரூரீர்! நீரே யல்லால்
ஆரென் றுயரம் மறிவா? ரடிகே!
ளடியே னயரும் படியோ விதுதான்?
நீரும் பிறையும் பொறிவா ளரவின்
னிரையுந் நிரைவெண் டலையின் புடையே
யூருஞ் சடையீர்! விடைமேல் வருவீ
ருமதன் பிலர்போல் யானோ வுறுவேன்?" ௧௭௭

(இ - ள்) தேரும்...அடிகேள்! - தேர்களுங் கொடிகளுமாகி நிறைந்து விளங்கும் வீதிகளையுடைய திருவாரூரில் எழுந்தருளிய இறைவரே நீரேயல்லாமல் என் துன்பங்களை அறியவல்லார் யாவர்? அடிகளே!; அடியேன்...இதுதான் - அடியேன் வருந்தும் அளவும் இவ்வளவே!; நீரும்...வருவீர் - கங்கையும், மதியும், புள்ளிகளையுடைய வாள் போன்ற பாம்புக் கூட்டங்களும், வரிசையான வெண்தலைகளின் பக்கங்களில் ஊர்ந்து தவழ்தற்கிடமாகிய சடையையுடையவரே! இடபத்தின்மீது எழுந்தருளுபவரே!; உமது ...உறுவேன்? - உம்மிடம் அன்பிலாதவர்கள்போல யானோ இத்துன்பத்தைப்படுவது?

(வி - ரை) **தேரும் கொடியும் மிடையும் மறுகில் திருவாரூரீர்** - திருவாரூர் தேர் அழகுக்குப் பேர் போனது. "விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்" என்

றும், "வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்" என்றும், நித்திய நைமித்தி கங்கள் இரண்டிலும் கொடி சிறந்துவிளங்கும் தன்மையை அப்பர் சுவாமிகள் பாராட்டியதும் இத்தலமே. ஆதலின் தேரும் கொடியும் மிடையும் எனச்சேர்த்துக் கூறினார்.

திருவாரூரீர் நீரே - என்பதனைத் திருவாரூர்ப் பெருமானுக்கும், ஆரூர் நம்பிகளுக்கும் பொருந்துமாறு இரட்டுற மொழிந்து கொள்ளலும் ஆம்.

நீரும் பிறையும் அரவின் நிரையும் நிரைவெண் தலையின் புடையே ஊரும் - "தெழித்தோடுங் கங்கைத் திரை" என்றபடி கங்கை, பிறை, அரவு என்ற மூன்றும் தவழ்ந்து ஊரும் தன்மை உடையனவாதல் காண்க.

நிரை வெண்தலை - வரிசையான வெண்தலைகளாலான தலைமாலை. "தலைக்குத் தலைமாலை யணிந்த தென்னே" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக்களத் தேவாரம் காண்க.

விடைமேல் வருவீர் - விடை தரும உருவமானது. அதனை மேற்கொண்டு வருதலாவது இறைவன் தருமத்தைச் செலுத்த வெளிப்படுதல். **வருவீர்** என்பதனைச் **சடையீர்** என்பது போல விளியாகக் கொள்க. அன்றி வருவீராக என்று வியங்கோள் விண்ணப்பமாகக் கொண்டு இனிமேலாவது விடைமேல் வந்து என்னைக் காக்கக் கடவீர் என உரைத்தலுமாம். பகைப் பொருள்களைப் பகை தீர்த்து ஒன்று சேர்க்கும் செயல் காண இருந்தும் தருமத்தைச் செலுத்தும் நீர், இப்போது இப்பொருள்கள் இயற்கை மாறி எனக்கு இன்னல் செய்யப் பார்த்தும் பகைதீர்த்து ஆளாதிருத்தல் அழகன்று என்பது.

திருவாருரார்—என்பதும் பாடம். 177

324. என்றின் னனவே பலவும் புகலு
மிருளா ரளகச் சுருளோ தியையும்
வன்றொண் டரையும் படிமேல் வரமுன்
பருள்வா னருளும் வகையார் நினைவார் ?
சென்றும் பர்களும் பணியுஞ் செல்வத்
திருவா ரூர்வாழ் பெருமா னடிகள்
"அன்றங் கவர்மன் றலைநீர் செயு"மென்
றடியா ரறியும் படியா லருளி, ௧௭அ

325. மன்னும் புகழ்நா வலர்கோன் மகிழ
"மங்கை பரவை தன்னைத் தந்தோம் ;
இன்னவ் வகைநம் மடியா ரறியும்
படியே யுரைசெய் தனம்;"மென் றருளிப்
பொன்னின் புரிபுன் சடையன் விடையன்
பொருமா கரியின் னுரிவை புனைவான்
அன்னந் நடையாள் பரவைக் "கணிய
தாரூ ரன்பான் மண"மென் றருள, ௧௭௯

326. காமத் துயரிற் கவல்வார் நெஞ்சிற்
கரையில் லிருளுங் கங்குற் கழிபோம்
யாமத் திருளும் புலரக் கதிரோ
னெழுகா லையில்வந் தடியார் கூடிச்

சேமத் துணையா மவர்பே ரருளைத்
தொழுதே திருநா வலர்கோன் மகிழத்
தாமக் குழலாள் பரவை வதுவை
தருநீர் மையினு னிகழச் செய்தார். கஅ0

324. (இ - ள்) என்று...நினைவார் - என்று இவ்வாறாகிய சொற்களையே மேலும் பலவாகச் சொல்கின்ற இருண்ட மேகம்போலக் கருமையுடைத்தாய் அளகமாய் உரு வமைந்த சுருண்ட கூந்தலையுடைய பரவையாரையும் நம்பிகளையும் இவ்வுலகில் வரு மாறு அருளிச்செய்த சிவபெருமான் இப்போது அருள் செய்யும் வகையை யாவரே நினைக்க வல்லவராவர்?; சென்று...அடிகள் - தேவர்களும் வந்து தொழுகின்ற செல்வம் நிறைந்த திருவாரூரிலே வாழ்கின்ற தியாகேசப் பெருமான்; அன்று...அருளி - "அன் றைக்கே திருவாரூரிலே (தம்மாற் படிமேல் வர அருளிச்செய்யப்பெற்றாராகிய) அவ் விருவருக்கும் திருமணத்தை நீங்கள் செய்யுங்கள்" என்று திருவாரூரின் **அடியார்கள்** தெரியும்படியாகக் கனவில் அருளிச்செய்து, கஎஅ

325. (இ-ள்) மன்னும்...அருளி - "மங்கைபரவையை உனக்கு நாயகியாகக்கொடுத் தோம். இவ்வாறு நாம் கொடுத்தருளிய செயலைத்திருவாரூரிலே வாழும் நமது அடியார் கள் அறியும்படியும் அருளிச்செய்துள்ளோம்." என்று நிலைத்த புகழுடையாராகிய திருநாவலூர் **நம்பிகள்** மகிழுமாறு அவர் கனவிலே அருளிச்செய்து (பின்னர்); பொன் னின்...அருள - பொன்னைப் புரிசெய்தாற்போன்ற சடையினையும், இடபத்தினையும், போர்வல்ல பெரிய யானைத்தோலின் போர்வையினையும் உடைய தியாகேசப்பெருமான் **பரவை**யாரது கனவிலும் எழுந்தருளி "நம்பியாரூரனுக்கும் உனக்கும் மணம் விரை விலே நிகழ்வதாம்" என்று அருளிச்செய்ய, கஎகூ

326. (இ - ள்) காமத்துயரில்...புலர - ஒருவரை யொருவர் காதலித்து அது கை கூடி முற்றுப்பெறாத துன்பத்தால் தனித்தனி வருந்திய நம்பியார், பரவையார் எனும் இருவருடைய நெஞ்சில் நிறைந்து முடிவின்றி யிருந்த ஆற்றாமையாகிய இருளும், அவ் விரவு மெல்லக் கழிந்து செல்லும் யாமங்களாகிய இருளும் நீங்க; கதிரோன்... தொழுதே - சூரியன் உதிக்குங் காலமாகிய அதிகாலையில் கனவில் உணர்த்தியருளப் பெற்ற திருவாரூர் அடியார்கள் எல்லாரும் கூடித், தம் அடியார்களுக்கு உற்றவிடத் துதவும் வைப்பாகிய - துணையாகிய தம்பெருமானது பேரருளைத் தொழுது வாழ்த்தி; திருநாவலர்கோன்...நிகழச் செய்தார் - திருநாவலூர் நம்பிகள் மகிழுமாறு மாலையணிந்த கூந்தலுடைய பரவையாரது கல்யாணத்தை அதற்குத் தக்க சிறப்பினாலே நிகழ்த்துவித் தார்கள். கஅ0

இம்மூன்று பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன. என்று-பலவும்-புகலும்-ஓதியை யும் - வன்றொண்டரையும் - வர - முன்பு-அருள்வான்-வகை யார்நினைவார்? ; அடிகள் - "அவர் மன்றலை நீர் செயும்" என்று அடியார் அறியும்படி அருளித்-"தந்தனம்; உரை செய்தனம்" என்று - நாவலர்கோன் மகிழ அருளி - பரவைக்கு "அணியது மணம்" - என்றருள; புலர - எழுகாலையில் - அடியார் கூடித்-தொழுதே - நாவலர்கோன் மகிழப்- பரவை வதுவை - நிகழச் செய்தார் - என்று தொடர்ந்து முடித்துக்கொள்க.

324. (வி - ரை) என்று - 321, 322, 323 பாட்டுக்களிற் கூறியபடி.

இன்னன - இவைபோல்வன.

இருளார் அளகச் சுருள் ஓதி - **இருள்** - நிறம் - **அளகம்** - குழலை முடிக்கும் ஐந்து வகையில் ஒன்று. இதனாலே அதற்கு ஐம்பால் என்று பெயர் கூறுவர். **சுருள்** - கரு மணல் ஒழுக்குப் போன்று சுருண்டு சுருண்டு செல்லும் இயல்பு. ஓதி - கூந்தல். **சுருள்** ஓதி வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இக்கூந்தலையே தேவ

ருலகத்தை வென்றதென்று முன்னர்ச் சிறப்பித்தமை காண்க. "மஞ்சு சூரிகுழற்கு அழிய விண்ணும் பணியும்" (284).

படிமேல் வர முன்பு அருள்வான் - முன்னர்த் திருக்கயிலாயத்தில் நிகழ்ந்தது. திருமலைச்சிறப்பிற் காண்க.

அருள்வான் அருளும் வகை (யை) யார் நினைவார் - **அருள்வான் அருளும் வகை** - "வகுத்தான் வகுத்த வகை" என்ற குறளிற்போலக் கொள்க. இவ்வுலகில் இவ்விருவரையும் வரும்படியாக அருளிய இறைவன் பின்னும் அருள் செய்யும் வகைகளை யாவர் அறிய வல்லார் ?. "காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே - காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்ற திருவாக்கின்படி அவன் உணர்த்த உணர்தலே எல்லா உயிர்களுக்கும் இயல்பாதலின் **யார் நினைவார் ?** என்றார். இவர்கள் முன்னாளில் வந்த தன்மையும், இந்நாளில் வருந்தும் தன்மையும், பின் நாள் மணந்து வாழுந் தன்மையும் அவர் அறிவிக்கவே யாவரும் அறிவாராயினர் என்க. ஒருவரும் தாமே யறியும் ஆற்றலிலர்; ஆதலின் **அறியும்படியால் அருள்வாராயினர்** என்க.

உம்பர்களும் பணியும் செல்வம் - தேவ உலகத்திலே பலகாலம் இந்திரனது நாயகராய்த் தேவர்கள் வழிபட வீற்றிருந்த தியாகேசர் அதனைவிட்டு இவ்வுலகிலே போந்து ஆரூரை ஆட்சி புரிகின்றாராதலின் அவர்கள் பேறுபெற இங்கு வந்து தரிசித்துச் செல்கின்றார் என்ற குறிப்பு.

செல்வத் திருவாரூர் - "செல்வ நெடுமாடம்" என்ற தேவாரத் திருப்பாட்டிலே திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய செல்வம் நிறைந்த சிற்றம்பலம் போலவே திருவாரூரும் நிறைந்ததாம்.

"..................அணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே"

எனும் கோயில் - புக்கதிருத்தாண்டகத்தின்படி இவரே திருச்சிற்றம்பலத்தாராதலினாலும், தம்மை அடைந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் காரணப்பேர் பூண்ட தியாகேசர் வாழ்வதாதலினாலும் **செல்வத் திருவாரூர்** என்றார். செல்வந்தரும் இலக்குமி வரம்பெற்ற **ஊர்** என்பதும் குறிப்பு.

அன்று அங்கு - விடியற் காலத்திலே நிகழும் கனவின் அருள் விரைவிற் பயன் றருவதாம். ஆதலின், **அன்று** - அந்நாளிலே, **அங்கு** - அவ்வூரிலே, திருமணம் செய்க எனக் காலமும் இடமும் வகுத்தவாறு.

அவர் மன்றலை - அடியார் கனவிலே இறைவர் தாம் ஆட்கொண்ட அவ்விருவரையும் சுட்டியருளியபடியால், **அவர்**-ஆட்கொள்ளப்பெற்ற **அவர்** என்க. சேய்மைச் சுட்டு.

நீர் செயும் - நீங்கள் நிகழச் செய்யுங்கள். அவ்விருவரும் அடியாராதலாலும், பரவையார் உருத்திர கணிகையாராதலாலும், உருத்திர கணத்தவராகிய அடியவர்களே அவரது திருமணத்தை நிகழ்த்தும் உரிமை யுடையாராதலாலும் அடியார்க்கு அருளிய தென்க. 178

325. (வி - ரை) **மங்கை பரவை**-பரவையாராகிய மங்கை. மங்கைப் பருவத்தைக் குறித்ததுமாம். பெண்களுக்குப்பன்னீராண்டு மணப்பருவமாதல் இலக்கணத்துட்காண்க.

தந்தோம் - யாவரையும் அடிமையாகக் கொண்ட பொது உரிமையே யன்றிப் பரவையார் உருத்திர கணிகையாராதலின் அவரைக் கொடுக்க உருத்திரராகிய தமக்குச் சிறப்பு உரிமையும் ஆதல் குறித்தபடி.

நம் அடியார் அறியும்படியே உரை செய்தனம் - பரவையைக் கொடுத்தோம் என்ற மாத்திரத்தானே மகட்கொடை நிகழ்ந்து முற்றியது. பெற்றோர் தாச் சுற்றத்தார் கல்யாணச் சடங்குகளை முடிக்கும் வகையிலே, சடங்குகளை முடிக்கும்படியாக அடியார்களுக்குத் தெரிவித்தோம் என்றபடி. **தந்தோம்** என்ற மகட்கொடையை உலகிலே நிகழச் செய்விக்கும் வழியை ஆரூரர்க்கு வகுத்துக் காட்டியவாறு.

புனைவான் - என்ற இப்பாட்டின் ஒரே எழுவாய் "என்றருளி" - "என்றருள" என இருவகையிலும் பொருந்தி முடிபுகொண்டவாறு காண்க. அவ்வொருவரே இவ் விருவரையும்பற்றி நின்று கூட்டுவித்து அருள்செய்யும் அருளமைதியின் குறிப்பு.

பொன்னின்.........புனைவான் - பரவையார் இவரது திருவுருவை நினைந்து நினைந்து கவன்ற அவ்வுருவோடு காட்சி யளித்தார் என்பது குறிப்பு. வரிசை 323-வது திருப்பாட்டுக் காண்க. "ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே, அவ்வுருவாய் நிற் கின்ற அருளுந் தோன்றும்" என்பது தேவாரம் (திருப்பூவணத் திருத்தாண்டகம் 10).

பொன்னின் புரி புன்சடை - பொன்னாற் புரித்ததுபோல நிறமும் ஒளியும் வடிவு முடைய சிறுசடை. "பொன் நவில் புன்சடையா னடியின் நீழல்" என்ற வாகீசர் திருவாரூர் அரநெறித் தேவாரம் காண்க. "பொன்புரிந்த புன்சடைக்கு"-குமரகுருபரர்.

326. **(வி - ரை) காமத் துயரிற் கவல்வார்** - உலகில் பிறர் கவன்றுழலும் காமத் துயர்போல அவற்றுடன் ஒன்றாக வைத்து இது மயங்கி யுரைத்தற்பாலதன்று. முன் தொடர்புபற்றி இது அருள் வகையால் தொடர்ந்து வருதலால் என்பது.

கரையில் இருளும் - இது கைக்கிளைக் காதற் பெருக்கு. **இருள்** என உருவகப்படுத் தப் பெற்றது. இவர்களது மனத்திலே பெருமானது நினைவு நின்றிருந்தபடியால் இது அகவிருள் அல்ல. திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலே,

"நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும்
மாறவரும் திருப்பள்ளி யெழுச்சி"

என்றதனோடு இதனை ஒத்துப் பார்க்க. "மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற, பொங் கிய இருள்" என்று கூறியதும் (10) காண்க.

கங்குல் கழிபோம் யாமத்து இருளும் புலா - "புலரும் படியன்று இரவு" என்று பரவையார் கூறி வருந்தியதாகிய அவ்விருளும் புலர என்க. இரவு ஒவ்வோர் யாமமாகக் கழிய இருள் புலர.

கதிரோன் எழுகாலை - கங்குல் இருள் புலரவும், கதிரவன் எழவும் உள்ளதாகிய அதிகாலை என்க. எனவே அடியார்கள் தாந்தாங் கண்ட கனுக்களை எண்ணி, அது கண்ட பின், தமது முதற் கடமையாக, அதிகாலையிலேயே கூடித் தொழுதனர். **எழுகாலை** - எழுந்து வரும் என எதிர் காலமானதால் இன்னும் சூரியன் உதயமாகவில்லை; அவன் எழும் செயல் இருள் போதலால் விளங்கிற்று என்னும் செயல் குறித்தது.

சேமத் துணையாம் அவர் - "அடியவர்க் கெய்ப்பினில் வைப்பு", "அடியவ ரெய்ப்பினில் வைப்பாக் கருதிவைத்த, நிதியே" (பதினொராந் திருமுறை) என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. **சேமம்** - சேர்த்து வைத்த உலவாக்கிழி - சேமம் செய்யும் துணை என்றலுமாம். அடியார் நெஞ்சிற்சேமித்து (புதைத்து) வைத்து, வேண்டும்போது உதவும்படி எடுக்க அருள்பவர்.

தகுநீர்மை - அருளுக்கும், அவருக்கும், தமக்கும் தகுந்த தன்மை. **திருநாவலூர்க் கோன் - தாமக்குழலாள்** - இவற்றில் **திரு, தாமம்** என்ற அடைமொழிகள் மங்கல மணக்கோலத்தின் நிலையைக் குறித்தன. 180

வேறு

*327.　தென்னாவ லூர்மன்னன் றேவர்பிரான் றிருவருளான்
மின்னாருங் கொடிமருங்குற் பரவையெனும் மெல்லியறன்
பொன்னாரு முலையோங்கற் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்.　　௩௨௭

(இ - ள்) தென் நாவலூர் மன்னன் - அழகிய திருநாவலூரர்; தேவர் பிரான் திருவருளால் - தியாகேசப் பெருமானது திருவருளினாலே; மின்...சார்வாக - மின்ன

லின் தன்மை வாய்ந்த கொடிபோன்ற இடையையுடைய பரவையார் என்னும் மெல் லியலாரது பொன்னணி பூண்ட இரண்டு தனங்களாகிய மலைகளின் நெருங்கிய சிகரங் களையே அரணாகக் கொண்டு; பன்னாளும் பயில் யோகம் - பல நாள்களும் பயில் யோகத்தை; பரம்பரையின் விரும்பினார்-அதற்குரிய வழிவழித் தருமத்திலே விரும்பிப் பயில்வாராயினார்.

(வி -ரை) தென்நாவலூர் மன்னன் - வட நாவலூர் என ஒன்றில்லாமையால் ஈண்டுத் தென் - தெற்கு - எனப் பொருளுரைத்தல் சிறவாததாம்.

முலை ஓங்கல் புணர்துவடே சார்வாகப் பன்னாளும் பயில்யோகம் - மலைகளின் உச்சி சார்ந்து தவஞ்செய்தல் யோகிகளின் செயல். யோகம்-(யுக் பகுதி) சேர்தல் - கூடு தல் என்பது பொருள். (Yoke என்பதும் அப்பகுதியிலேவந்தது.) அது இரண்டு ஆன்மாக் களின் கூட்டத்திலே சிற்றின்பம் எனப் பேர்பெறும். நாயகன் நாயகி பாவனையில் ஆன்மாவாகிய நாயகி உயிர்த்தலைவனாகிய ஈசனைக் கூடுதல் பேரின்பம் எனப்பெறும்.

பிராணவாயுவை அடக்கிச் சுழுமுனையின் வழியே பிரமரந்திரத்திற் செலுத்தித் துவாதசாந்தத்திலே விந்துச் சோதியாகிய ஒளியைத் தரிசித்து அக்காட்சியிலே அழுந்தி அதன்மயமாய் நிற்றல் சிவயோகம் எனப்பெறும். இதன் இயல்பைத் திருவாத ஆரடிகள் புராணம் உபதேசப்படலம் - திருமந்திரம் - முதலியவற்றிற் காண்க.

துவடே சார்வாக யோகம் விரும்பினார் - முலையே துவடாயிற்று. அதன் சார்வே யோகமாயிற்று; அது பரம்பரை விருப்பமாய் விளைந்ததேயன்றி வேறு செயலுக்குக் காரணமாகவில்லை என்பது.

> " பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கு
> முற்ற வரும்பரி சுந்தீபற
> முளையாது மாயையென் றுந்தீபற"—திருவுந்தியார்.

மின் ஆரும் கோடி மருங்குல் மேல் இயல்-'விரைக் கொடியோ' என முன்னர்க் கூறியதற்கேற்ப இங்கும் கொடியாகக் கூறினார். மின் ஆர்தல் - மின்னலைப் போன்று (துவளவும்) இயக்கமும் - வளைவும் - மென்மையும் - ஒளியும் - உடைமை.

பொன் ஆரும் முலை ஓங்கல் புணர் துவடே சார்வாக-பொன் ஆரும் பொன் அணி கள் அணிந்த. அழகிய என்றலுமாம். முலை ஓங்கல்-பருத்து வளர்ந்திருத்தலின் முலையை மலைக்கு உவமிப்பது வழக்கு. புணர் துவடு-இரண்டு தனங்களும் ஒன்றுபட்ட தன்மைய வாய், "இடையீர் போகா இளமுலை மாதர்", "ஈர்க்கிடை போகா இளமுலை" என்றபடி சேர்ந்து உயர்ந்து இருப்பன. துவடு-ஓங்கலின் மேலிடம். துவடே சார்வாக - அவையே பற்றாக. யோகபாவனை நிகழ்வதற்கு இவையே பற்றாக இருந்தன. இவைகளே யோக பாவனையை நிகழ்த்தின என்பது. திருவாலவாயிலிலே சிவபாதவிருதயரைக் கண்ட போது அவர்சார்புபற்றித் திருத்தோணியப்பரைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் நினைவுற்றமையும்,

> [" அவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப்
> பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார்"—திருஞான - புரா - 879]

பாண்டி நாட்டு விசயத்தின் பின்னர்ச் சீகாழியிலே தமது திருமாளிகையிற் போந்த போது தமது தாயார் அடி வணங்கியகாலைத் தோணியில் வீற்றிருக்கும் பெரிய நாச்சி யாராகிய தாயரை மனங் கொண்டமையும், [திருஞான - புரா - 958 -

> " அங்க ணைந்தரு மறைக்குலத் தாயர்வந் தடிவணங் கிடத்தாமுந்
> துங்க நீள்பெருந் தோணியிற் றாயர்தாண் மனங்கொளத் தொழுவாராய்"]

இங்கு நினைவுகூர்தற்பாலன. நம்பிகளது யோக பரம்பரை விருப்பத்திற்கே முலைக் குவடுகள் சார்பா யிருந்தனவன்றி ஏனையோர் போலச் சிற்றின்ப விருப்பிற்குக் காரண மாகவில்லை என்பது. 'குணமென்னுங் குன்றேறி நின்றார்' என்பது குறள்.

யோகம் பரம்பரையின் விரும்பினர் - சரியையாதி நான்கனுள் யோகபாதத்தை விளக்க வந்தவர் நம்பிகள். இவரை வழிபட்டுக் கதிபெற்றாராகிய பெருமிழலைக்குறும்ப நாயனார் யோகத்தின் வழியே இவரை (நம்பிகளை) முன்னடைந்தனர். "நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்" என்பனவாதி நம்பிகள் தேவாரத் திருவாக்குக்களையும் காண்க. ஆதலின் இவ்வாறன்றி இங்குக் குறித்த **யோகம், பரம்பரை** என்பதற்குச் சிற்றின்பப் பொருள்கொண்டு மனம்போனவாறெல்லாம் உரைத்த உரைகள் பலவும் உரையாகாமையறிக.

யோகம் - கூட்டம் என்பது. கூட்டங்களில் எல்லாம் மிக உயர்ந்த கூட்டமாகிய இறைவனது கூட்டமே - சிவபெருமான் அளிக்கும் முத்தி நிலையே - இங்குக் குறிக்கப் பெற்றது. யோகம் விரும்பிப் பயின்ற வகை வரும்பாட்டிற் காண்க.

பிராரத்த அனுபவ மாத்திரையாகவே உடம்பு தாங்கும் சீவன் முத்தர்க்கு உலகானுபவங்களாகிய பிராரத்தங்கள் உடலூழாய்க் கழிந்து படுவனவேயன்றி மேல் வினைக்கு மூலமாகாமை அறியப்படும். **மூலை ஓங்கற் புணர்துவடு சார்வாக** முன்பயில் யோகத்தின் மேலதே விருப்பமாயிற்று என்ற உண்மை, **சார்வாக யோகம் விரும்பினர்** என்பதனாற் பெறப்படும். 329-ம் பாட்டின் உரை காண்க. 181

328. தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார். ௧௮௨

(இ - ள்) தன்னை...மலர்வித்து - (நாவலூர் மன்னன் தம்மை ஆளாக உடைய சிவபெருமானது பாததாமரைகளைத் தலைக்கு அணியாக மேற் சூட்டியும், மனத்தினுள் நினைத்தும் ; திருப்பதிகம்...சாத்தி - திருப்பதிகமாகிய தமிழ்ச் சொற்றொடை மாலைகள் பலவற்றை அருளியும் ; பரவை...செல்கின்றார் - பரவை எனும் தேவியாருடன் கூடி விளையாடி வருவாராயினார்.

(வி - ரை) நாவலூர் மன்னன் எனும் எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவிக்கப் பட்டது.

மலர் சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்து - மலரைச் சென்னியிற் சூட்டுதலும், மனத்தில் மலரச் செய்தலுமாம். சென்னியிற் சூட்டுதல் சென்னியில் வைத்துச் சிந்தித்தல். "சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழும்" - திருவாசகம். "சிரஸி ஸம்சிந்த்ய" என ஆகமங்கள் விதிக்கும். சிந்தையில் மலர்வித்தலாவது மனத்திலே முழுதும் மலர்ந்து பயன்தருமாறு செய்தல். இவ்வாறு ஈரிடத்தும் மலர்வித்தல் ஒரு செயல். அதன் பயனாக, அவ்வாறு வைத்துச் சிந்தித்தலினாலே, திருப்பதிகமாகிய **பன்னு தமிழ்த் தொடைமாலை**பலவும் போந்தன. அவற்றையே இறைவனுக்குச்சாத்தினார்.

"புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்"—**சித்தியார் - பரபக்கம்**

மலர்வித்து - சாத்திக் கொண்டே விளையாடியும் செல்கின்றமையால் மேலே யோகம் பரம்பரையின் விரும்பினார் என்றது சிவயோகத்திலே நிலைத்த உணர்ச்சி பிறழாமலே வாழ்ந்தனர் என்பது பெறப்படும். திருமலையிலே "மெல்லிய லாருடன் காத லின்பம் கலந்து" எனவும், திருவாரூரிலே "நின்வேட்கை தீர வாழி மண்மேல் விளையாடுவாய்" எனவும் பெருமான் நம்பிகளுக்குத் திருவருள் புரிந்தவை இங்கு "மின்னியலார் உடன் கூடி விளையாடிச் செல்கின்றார்" என்பதனுடன் வைத்து உணர்தற் பாலன. **மலர்வித்து** என்பது தம்மிடத்தும், **சாத்துதல்** என்பது பிரானிடத்தும் நிகழ்ந்தமையால் பிரித்துக் கூறினார்.

செல்கின்றார் - வாழ்ந்து வருகின்றார் என்னும் பொருளில் வந்தது. வாழி மண் மேல் விளையாடுவாய் என்று முன்னர்க் கூறியதற் கேற்ப இப்பொருள் கொள்ளப் பெற்றது. 182

வேறு

329. மாதுடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலைப்
போதலர் வாவி மாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்கள்
நாதர்பூங் கோயி னண்ணிக் கும்பிடும் விருப்பா னம்பி, ௧௮௩

330. அந்தரத் தமரர் போற்று மணிகிள ராடை சாத்திச்
சந்தனத் தளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச்
சுந்தரச் சுழியஞ் சாத்திச் சுடர்மணிக் கலன்கள் சாத்தி
யிந்திரத் திருவின் மேலா மெழின்மிக விளங்கித் தோன்ற, ௧௮௪

331. கையினிற் புனைபொற் கோலுங் காதினி விலங்கு தோடு
மெய்யினிற் றவளு நூலு நெற்றியின் விளங்கு நீறு
மையணுக் கழுகி தாமென் றுயிழை மகளிர் போற்றச்
சைவமெய்த் திருவின் கோலந் தழைப்பவீ தியினைச் சார்ந்தார். ௧௮௫

329. (இ - ள்) மாதுடன் கூட வைகி-பரவையாரோடு சேர்ந்து வாழ்ந்து இருந்து; மாளிகை......இழிந்து - மாளிகையின் பக்கத்திலே, சோலையில், நீர்ப்பூக்கள் மலர்ந்து விளங்கும் தடாகத்தின் சார்பில், செய்குன்றின் பக்கத்தில், ஒரு திண்ணையில், குளிர்ந்த முத்து விதானத்தின்கீழ் அமைந்திருந்த அழகிய ஆதனத்திலிருந்து இறங்கிச்சென்று; நாதர்...நம்பி - தங்களுடைய இறைவர் எழுந்தருளிய பூங்கோயிலை அடைந்து கும்பிட வேண்டும் என்ற விருப்பத்துடன் நம்பிகள், ௧௮௩

330. (இ - ள்) வெளிப்படை. தேவர்களும் துதிக்கும் அழகிய ஆடை அணிந்து, குங்குமப்பூக் கலந்த சந்தனக் குழம்பை அணிந்து, அழகிய சுழியத்தினைத் தலையில் அணிந்து, ஒளிவீசும் மணிகளழுத்திய அணிகலன்களையும் அணிந்து, இந்திரச் செல்வக் காட்சியின் மேம்பட்ட அழகு மிகவும் பொலிந்து தோன்றவும், ௧௮௪

331. (இ - ள்) வெளிப்படை. கையிலே தாங்கிய பொற்கோலும், காதுகளிலே விளங்கிய கவசகுண்டலங்களும், மார்பிலே துவண்டு அசையும் பூணூலும், நெற்றியிலே விளக்கஞ்செய்யும் திருநீறும் கண்ட பெண்கள் "இப்பெருமானுக்கு இக்கோலமே மிக அழகு செய்வதாம்" என்று துதிக்குமாறு திருவீதியினை அடைந்தார். ௧௮௫

329. (வி - ரை) கூட வைகுதல் - உடன் வாழ்தல். கூடவைகி - சேர்ந்து. மேற்பாட்டிற் கூறியவாறு சேர்ந்து விளையாடி வாழ்ந்து வைகுவார், ஒருநாள் பின் வருமாறு செய்தார் என்க.

மாளிகை...செழும் தவிசு - மாளிகை - சோலை - வாவி - செய்குன்று - தெற்றி - பந்தர் - இவை தவிசுக்கு விசேடணமாகிய அடைமொழிகளாய் அந்தத் தவிசின் உயர்வையும், அதனிலிருந்தோர் அதை விட்டு இலகுவில் நீங்கலாகாத அருமையும் குறித்து நின்றன. தவிசு செழுமையாய் இருந்தது; அது சீதளத் தரளப் பந்தர்க்கீழ் அமைந்திருந்தது; மேற்பந்தரும் கீழ்த் தவிசும் ஒரு தெற்றியில் அமைக்கப் பெற்றன; அத்தெற்றி ஒரு செய்குன்றின் புடையிருந்தது; செய்குன்று வாவியின் மாடு அமைந்தது; வாவி சோலையினிடை இருந்தது; சோலைதானும் மாளிகை மருங்கு நின்றது எனத் தொடர்ந்து காண்க.

இவ்வாறன்றி மாளிகை சோலை முதலியனவற்றைத் தனித்தனி எண்ணும்மை கொடுத்து மாளிகையிலும், சோலையிலும், ஆசனத்திலும் மாதுடன் கூடவைகி என்று உரை கூறுவாருமுண்டு. வைகி என்பது மேற்பாட்டிலே முடித்த விளையாடிச் செல்கின்றார் என்பதைத் தொடர்ந்து அனுவதித்து மேற்கொண்டார் ஆதலானும், **இழிந்து** என்பது இவற்றிலே தவிசு ஒன்றுக்கேயன்றி ஏனைய மாளிகை சோலை முதலியவற்றிற்குப் பொருந்தாமையானும் அஃது உரை அன்றென்பது.

சோலை - வாவி - செய்குன்று முதலிய இப்பொருள்கள், கூடிய நாயகன் நாயகிகள் அனுபவிக்கும் உலக அனுபவப் பொருள்களாம். மேலும் பரவையார் (கமலினியார்), சங்கிலியார் (அநிந்திதையார்) இவர்களின்பொருட்டே சுந்தரமூர்த்திகள் ஆணைவழி அவதரித்து அவர்களின்வழியே வேட்கைதீர மணக்கோலத்துடன் மண்மேல் விளையாடி வருகின்றார் ஆதலானும் இவை இவரது அனுபோகங்களுக்கு மிக உரியவாயின. பின்னர்ச் சேரமான் பெருமாள் நாயனார் நம்பிகளுக்குச் செய்யும் உபசாரங்களினும் இவ்வுண்மை காணப்பெறும்.

" திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி
யொருவரை மதியா துறுமைகள் செய்து மூடியு முறைப்பனாய்த் திரிவேன் "
—தக்கேசி - திருமுல்லைவாயில் - 1

என்ற நம்பிகள் தேவாரக் கருத்தினையும் காண்க. எந்த மகனும் விட்டுநீங்கலாகாத உலக இன்பப் பொருள்களாகிய சோலை - வாவி - செய்குன்று - தவிசு இவைகளின் இடையேயும் பூங்கோயில் சென்று கும்பிடும் விருப்பமே நம்பிகளுக்கு மிக்கு எழுந்தது என்று கூறியவதனால் " பிரான் சரணார விந்தமலர் சிந்தையினும் சென்னியினும் மலர் வித்து...கூடி விளையாடிச் செல்கின்றார் " என்று மேற்பாட்டில் கூறியதின் உண்மை விளக்கப்பெற்றது.

சோலை - வாவி - முதலிய பல விசேடண அடுக்கு அத்தவிசினது பிணிக்கும் தன்மையின் வன்மையைக் காட்டி நின்றது. **இழிந்து** - அது கும்பிடும் விருப்பினைவிட இழிந்ததாக நம்பிகள் கருதினார் என்பதும் குறிப்புப் பொருள். செழுந்தவிசில் இருந்தபோதே நம்பிகளது மனம் அதிற் பற்றாது கும்பிடும் விருப்பம் மேலிட்டிருந்தது என்க.

எல்லார் உயிர்க்கும் இச்சை, அறிவு, செயல் என்ற மூன்று சத்திகள் உண்டு. இவை மூன்றும் வேலை செய்கின்றமட்டிலே மேல் நிகழ்ச்சிகள் நிகழும். பொருள்களை முதலில் நிருவிகற்பக் காட்சியாகக் கண்ட உயிருக்கு அதிலே புத்தி கலந்து தொழில் செய்தபோது சவிகற்பக் காட்சி நிகழும். அதன்பின் அதில் ஞானம் உண்டாம். பின் அதில் இச்சை நிகழும். இங்கு நம்பிகளது அறிவிச்சை செயல்கள் அவ்வாறு தொடர்ந்து நிகழாது பரவையார் சார்வும், சோலை வாவி முதலிய பொருள்களும், கண்டபோது அவற்றின் சார்பினாலே முன்னை அறிவும் இச்சையும் செயலுமாகத் தொடர்ந்து நிகழ்ந்து **கும்பிடும் விருப்பை** எழுப்பப் பின்னர்த் திருத்தொண்டத் தொகை அருள ஏதுவாயினமை குறிக்கத்தக்கது. அதுவே அவரது அவதார தத்துவம்.

" மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப், போதுவார் "

என முன்னர்க் கூறியமை காண்க. தவிசிழிந்து கும்பிடும் விருப்பால் நம்பிகள் பூங்கோயில் போந்ததன் உண்மை இவ்வாறுணரத் தக்கதாம்.

உலகத்தில் நிற்கும்போதே சிவஞானிகளின் அறிவு இச்சை செயல்கள் உலகச் சார்பிலே செல்லாது சிவச்சார்பிலே செல்வனவாம். அவர்கள் உலகத்தைப் பாரார். அவர்களதுகண் விழித்தே யிருக்குமாயினும் உலகத்தை நோக்காது ; உண்முகமாகவே நோக்கி நிற்றலால் உலகத்தார்க்குக் குருடாகவே காணும். " விழித்த கண்குரு டாய்த்திரி வீரரும் பலரால் " என்பது இவர்களது இயல்பு. உயிர்களுக்கு

உடம்புகள் அவ்வவற்றின் கருமத்திற்கீடாய் வரும்; அவ்வுடம்புகளே மேலும் கருமத்திற்குக் காரணமாயும் இருக்கும். ஆனால் சிவஞானிகளுக்கோ எனில் பிராரத்த வினையைத் தொலைப்பதன் பொருட்டுமட்டுமே செயல் செய்யக் காரணமாக உடம்புகள் பயன்படும். அவை மேல் விளைவுக்கு வித்தாகா. சூரிய வெளிச்சத்திலே விளக்கு ஏற்றிச் செய்யப்படும் கிரியைகளில் விளக்கின்காரியம் பயனற்றொழியச் சூரியஒளியி னுதவி கொண்டே அவை செய்யப்படுவதுபோலச் சிவாஞ்ஞையாகிய அருள்நெறியிலே அதன் முன்னிலையிற் செய்யப்படும் அந்தப் பிராரத்த அநுபவம் செயலற்று நிற்கும். இங்கு நம்பிகள் செயலும் அவ்வாறே காண்க.

"அவனே தானே யாகிய வந்நெறி, யேக னாகி யிறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என்று சிவஞானபோதம் பத்தாஞ்சூத்திரம் வகுத்தும், அதன் கீழ் "அவனருளா லல்ல தொன்றையுஞ் செய்யா னாகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியா வாகலான்" என்று அருளியதுங் காண்க. பசுபாசங்களினியல்புகளை உள்ளவாறுணர்ந்து, செய்வனவெல்லாம் அவனருள் வழிநின்று செய்யப்படும் செயலாகக் கண்டுகொண் டிருப்பாராயின், அவ்விறைபணியாகிய அடிமைத்திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை அவர்க்குப் பந்தமாதலில்லை; பிராரத்தவினையுந் தன்னைக் கூட்டுவிக்கும் முதல்வன் சந்நிதியில் உடலூழாய் ஒழிவதன்றி, ஏனையோர்க்குப்போல அவர்க்கு ஆதலில்லை யாகலான். பெருங்காயமிட்டு எடுத்தொழிந்த கலத்திலே அதன் வாசனை மங்கிப்போய் மெலிதாய் நாறுமாறுபோல, நானவனென்றெண்ணிச் சிவோகம்பாவனை செய்தறியும் ஞானிக்குப் பிராரத்த வினையும் அதற்கிடமாகிய உடம்பு முதலிய மாயேயமும் வாசனை மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்குமாயினும், அவ்வழி யேறுவதாகிய ஆகாமியவினை பிறவிக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றிக் கெட்டொழியும். ஒளி இருளைத் தூக்குமாறுபோல அவ்வுணர்வு ஆகாமியத்தைத் தூக்கும் என்று இக்கருத்தை விரித்து மாபாடியத்திலே எமது மாதவச் சிவஞான சுவாமிகள் உரைத்தருளியவற்றையுங் காண்க. விரிவு அங்குக் கண்டுகொள்க.

பின்னர் வரும் சங்கிலியார் திருமணச் செய்திகளையும், அங்கு நம்பிகள் "புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட நாலத்தைக், கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றுணர்ந் திருந்தார் காதலினால்" என்று கூறும் (ஏயர்கோன் - புரா - 267) பகுதிகளையும் இவ்வாறே கண்டுகொள்க.

வெளிமுகம் - உண்முகம் என்ற இருவகை நிலைகளையும் குறிப்பதற்காகப் "பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்" என்று மிக அழகுபெற ஒரே அடியிற் குறித்த ஆசிரியர், முன்பாட்டிலே அவற்றைப் பிரித்து "மலர்வித்து......விளையாடிச் செல்கின்றார்" என விரித்தனர். அதன் விளைவை இப்பாட்டிலே "கூட வைகிச் செழுந்தவிசிழிந்து கும்பிடும் விருப்பால் நம்பி" என்று காட்டி, விளையாட்டு விளையாட்டின்மட்டிலே நிற்க, விருப்பம் பெருமானிடத்தே பதிந்து கிடந்ததை விரித்தோதினார்.

சரணாரவிந்தமலர் சிந்தையிலும் சென்னியிலும் மலர்வித்ததனால் கும்பிடும் விருப்பம் நிகழ்ந்தது. **கும்பிடுதல்** நனவில் நிகழ்வது. **மலர்வித்தல்** அதனோடு கனவு முதலிய நிலைகளினும் நிகழ்வது. **சென்னி** ஆயிரம் இதழுடையதாய் மேனோக்கி மலர்ந்த தாமரை போன்றதாகவும், **சிந்தை** - குவிந்த தாமரை போன்றதாகவும் கூறுவர். இதுபற்றியன்றே பட்டினத்தடிகள் முதலிய பெருஞானிகளும் திருக்கோயில் வாயில் காத்திருந்தனர் என்க.

தங்கள் நாதர் - உரிமையின் மிகுதி காட்டிற்று. பரவையாருக்கும் தமக்கும் நாதர் என்றலுமாம்.

"பண்மயத்த மொழிப்பாவை சங்கிலிக்கும் எனக்கும் பற்ருய பெருமானே" என வரும் நம்பிகள் திருவாக்குங் காண்க. 183

330. (வி - ரை) ஆடையும் - கலவையும் - சூழியமும் - கலன்களும் சாத்திய அழகிய கோலம் **இந்திரத்திருவின்** மேம்பட்டு விளங்கிற்று என்பது. அதைவிட மேலாகியதனால் **அமரர் போற்ற** என்ருர். அன்றியும் இந்திரன் முதலிய தேவர்கள் எப்போதும் அடியார்களைப் போற்றற்குரியவர்களாம். மேலும் "இந்திரன் மால் பிரமன் னெழிலார் மிகு தேவரெல்லாம்" வெள்ளையானையுடன் வந்து நம்பிகளை எதிர்கொண்டு வணங்கித் திருக்கயிலைக்கு அழைத்துச் சென்ருர் என்றும் பின்னர்க் காண்போம். ஆயினும் இப்போது நம்பிகள் அவரது திருவவதாரத்தின் பயனுகிய "நீதி லாத்திருத் தொண்டத் தொகை தரு"வதற்காகச் செல்கின்றமையாலும், தாங்கள் இதுவரை ஆசிரயித்து வாயில் காத்துக்கொண்டிருந்த தேவாசிரிய மண்டபத்துள்ளே எழுந்தருளிய அடியார்களை எல்லாம் துதிப்பதன் மூலம் உலகிற்கும் தமக்கும் அவர்களது பெருமையை விளங்கும்படி அறிவுறுத்தப் போகின்றமையாலும் அவர்கள் இங்குப் போற்றியது சிறப்பு வணக்கமாம்.

சூழியம் - ஆண்மக்களின் கிரீட விசேடங்களில் ஒன்று. அதுபோலவே பெண் மக்களின் கிரீட விசேடம் சூடாமணி யென்பர்.

எழில்பெற - நம்பிகளது காரணப்பேர் சுந்தரர் என்பதும், மணக்கோலத்துடன் மண்மேல் விளையாடுவாய் என இறைவன் ஆணையிட்டனர் என்பதும் குறித்தவாறு.

நம்பிகள் - "மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க" மணக்கோலங் கொண்டா (165) ராதலின் அக்கோலத்துடன் விளையாடச் செல்கின்ருர்க்கு இங்கும் மன்னவர் திருவைக் குறித்தனர். வரும் பாட்டிலே வைதிகத் திருவைத் குறிப்பதும், இவை யிரண்டும் நம்பிகளாகிய ஒருவரிடத்தே கூடியமையின் இவ்விரு பாட்டுக்களும் குளகமாய் முன்பாட்டிற் காணும் "நம்பி" என்ற எழுவாய்கொண்டு முடிபுபெற்றிருப்பதும், மன்னவர் கோலத்தின் மேம்பட்டது வைதிகக் கோலமென அதற்குமேல் இதனை வைத்துக் காட்டியிருப்பதும் கண்டு களிக்க.

இந்திரத் திருவின் மேலாம் - இந்திரத் திருவானது வெறும் போகங்களுக்கு இடமாகித் துன்பர் தந்து மீண்டும் மீண்டும் பிறவியிற் சேர்த்தும். ஆனுல் நம்பிகளிடத்து அத்திரு தான் விளங்கப்பெற்றபோது அவ்வாறின்றி இன்பத்துக்கே ஏதுவாய் மீளா நெறியாகிய முத்தியிற் சேர்க்கும். ஆதலின் **மேலாம்** என்ருர். 184

331. (வி - ரை) தவிசிழிந்து - கும்பிடும் விருப்பால் நம்பி - தோன்ற-தழைப்ப - வீதியைச் சார்ந்தார் என்று முடிக்க.

புனை - புனைந்த. அழகிய வேலைத்திறம் பலவும் சேர்ந்த. புனைந்த கோல் என்க. கோலும் - தோடும் - நீறும் (ஆகவுள்ள) கோலம் - போற்ற - தழைப்ப என்று கூட்டி முடிக்க.

மேற்பாட்டிற் சொல்லிய மன்னவர் திருவுக்கு ஏற்ப இப்பாட்டிலே வைதிகத் திருவின் கோலம் விரித்துக் கூறியபடி. கோலும், தோடும், நூலும், நீறும் **தாங்கி** என ஒரு சொல் வருவித்துரைக்க. இக்கோலம் என்றும் நம்பிகளுக்குரியதாய் அவர்களாலே நித்தியமாய்த் தாங்கப்பெற்றதாதலின் இதனைச் **சாத்தி** என்பது முதலிய வினைச்சொற் கொடாதுகூறினுர். மேற்பாட்டிற்கூறிய மன்னர்கோலம் வேண்டும்போது மேற்கொள்வதாதலின் ஆடை சாத்தி - கலவை சாத்தி - என்பனவாக **சாத்தி** எனும் வினைச்சொற் புணர்த்திக்கூறினுர்.

அழகிது - அழகு எனும் பண்படியாகப் பிறந்த குறிப்புவினை. இக்கோலம் மிக அழகுடையது என்று போற்ற. அழகு இது என்று பிரித்துக் கோல் ஆகிய இது அழகு - நீறு ஆகிய இது அழகு என்று தனித்தனி ஒவ்வொன்றையும் போற்றியதாகக்

கொள்ளினும் அமையும். இப்பொருட்கு ஒவ்வொன்றினும் தனித்தனி சென்று இயைவதால் அழகிவை என்னுது அழகிது என ஒருமையாற் கூறியதாம்.

சைவ மெய்த்திருவின் கோலம் - இந்திரத்திரு என வாளா கூறிய அக்கோலத்தினின்றும் வேறுபடுத்தி இதன் உயர்வு தெரிக்குமாறு **மெய் - திரு - இன்** என்ற அடைமொழி கொடுத்துக் கூறினார். இதுவே மெய்க்கோலமாதலின் ஏனைய இந்திரத்திரு முதலிய எல்லாம் பொய் என்று குறித்தபடி. இதுவே அழகுடையதுமாம் என்றபடி.

கோலம் - மேற்பாட்டிலே கண்ட இந்திரத்திருக் கோலமாய்க்கருதத்தக்கதன்றாதலின் இதனையே கோலம் என்று கூறினார். இது அழிவில்லாததாதலினாலும், சிவத்தின் சார்பு பெறுதலானும் இது மெய்த்திருவின்கோலமாயிற்று. ஆயினும் நம்பிகள் ஏன் இந்திரத்திருவின் எழில் பெறப்பூண்டார்? எனின் அது (187) இறைவனது ஆணையாதலாலும், பிராரத்தவாசனையை இதனுடன் தொலைக்கும் வகையினாலும் என்க.

திரு - கண்டாரால் விரும்பப்படுவதாதலின் கண்ட மகளிர் "**அழகிது**" எனப் போற்றினர். **இன்கோலம்** - நெற்றியில் விளங்கும் நீற்றினால் நிறைவுபெற்று உலகை விளக்கம் செய்வதாதலின் சைவமெய்த்திருவுடைய இனிய கோலமாயிற்று.

"காண வினியது நீறு கவினைத் தருவது நீறு"

"பூச வினியது நீறு......பேச வினியது நீறு"

என்பனவாதி தேவாரத் திருவாக்கின் பொருளை இங்கு வைத்துணர்க.

உயிர்க்கோலமான இம் மெய்த்திருக்கோலத்தைப் புறக்கணித்து ஏனை ஆடை ஆபரணங்களையும், வாகன முதலிய சடங்களையும் பெரிதாய் எண்ணி வீண்நாள் போக்கும் இந்நாள் மாக்கள் 'சைவமெய்த் திருவின்கோலம்' என்று ஆசிரியர் இடித்துக் கூறி எடுத்துக்காட்டிய இதன் உண்மையை உற்றுநோக்கி உணர்ந்து உய்வார்களாக.

தழைப்ப - தழைக்கும்பொருட்டு. நம்பிகள் அன்று திருவீதியினைச் சார்ந்ததன் பயன் குறிப்பிட்டவாறு. **தீதிலாத் திருத்தொண்டத்தொகை**"யை அன்றைக்கே உலகத்திற்குத் தருதலும், அதனால் சைவமெய்க்கோலம் என்றும் தழைக்க உளதாதலும், நிகழ்தலின் **தழைப்ப** என்றார்.

பொற்சேண்டும்—என்பதும் பாடம். 185

332\. நாவலூர் வந்த சைவ நற்றவக் களிறே! யென்று,
மேவலர் புரங்கள் செற்ற விடையவர்க் கன்ப! வென்றுந்,
தாவில்சீர்ப் பெருமை யாரூர் மறையவர் தலைவ! வென்று,
மேவினர் இரண்டு பாலும் வேறுவே றுயம் போற்ற, கஅசு

333\. கைக்கடா குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள் பயின்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் சூழ
மைத்தடங் கண்ணி னார்கண் மறுகநீண் மறுகில் வந்தார். கஅஎ

332\. (இ - ள்) "நாவலூர்...களிறே" என்றும்-"சைவத்தினது நல்ல தவத்தினது பயனாகித் திருநாவலூரில் அவதரித்த களிறு போன்றவரே" எனவும்; மேவலர்... அன்ப" என்றும் - "பகைவரது திரிபுரங்களையும் எரித்த விடையவராகிய சிவபெருமானிடத்து மிக்க அன்புடையவரே" எனவும்; "தாவில்......தலைவ" என்றும் - "குற்றமற்ற சிறப்பும் பெருமையும் உடைய திருவாரூர் வேதியர் பெருமானே" எனவும்; மேவினர்......போற்ற - இரண்டு பக்கமும் வேறு வேறாய் மேவினராகிச் சூழ்ந்த பரிசனங்களும் மகளிர் கூட்டமும் துதிக்க,

333. (இ - ள்) கைக்கடா...பயிற்றிச் செல்ல - கையிற் பிடித்துப் பழக்கும் கடா - குரங்கு-கோழி - சிவல் - கவுதாரி என்றிவற்றைப் பிடித்துக் கொண்டு இருபக்கங்களிலேயும்,முன்னேயும் செல்கின்றவர்கள் அப்பிராணிகளைப் பயிற்றிய சொற்களைச் சொல்லிப் போகவும்; மிக்க...சூழ - பூக்கள் நிறைந்த பூக்கூடைகள் கொண்டு போவாரும், வாசனைப் பண்டத்துடன் கூடிய வெள்ளிலை முதலியவற்றை ஏந்தும் அடைப்பைக்காரரும் சூழ்ந்து வரவும்; மைத்தடம்...மறுக - மையணிந்த விசாலமான கண்களையுடைய பெண்கள் மயங்கவும்; நீள்மறுகில் வந்தார் - நீண்ட தெரு வழியாக (நம்பிகள்) வந்தார்கள்.

332. (வி-ரை) சைவ நல் தவக் களிறு-சைவம் தவஞ்செய்து இவரை ஆசாரியராகப் பெற்றது. களிறு - சைவம் என்பது ஒரு சமயம் என்பதனோடு அமையாது சமயாதீதமாயும் விளங்குவதாம். "சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்துமேற் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்று தாயுமானூர் கூறுவதை நோக்குக. நிலை கடந்த அக்கொள்கையை ஒருவரும் நேரே காணுதல் இயலாது. அதற்காக அது தானே ஓர் உரு எடுத்து வந்தால், தனக்குமேற் பெரியது வேறொன்றில்லாத அது, பெரிய யானையை ஒத்திருக்கும் என்பார் களிறே என்றூர். யானை மதமுடையதாதலின் (யான் + ஐ = யான் என்றதை உடையது. தன்னை உயர்வாகக் கருதுவது) சைவம் இவரைப் பெற்றதால் தன்னை உயர்வாகக் கருதியது என்பது. தலைதூக்கிச் செல்லும் இராசாங்கத் தமர்ந்தது. இறைவனே "உறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டுமென இருந்து" இவரைப் பெற்றூர் என்று சிவப்பிரகாச சுவாமிகள் பாராட்டினர்.

புரங்கள் செற்ற விடையவர்-திரிபுரமெரித்த காலத்திலே திருமால் இடபமாய்த் தாங்கினூர்; ஆதலின் இரண்டு பொருள்களையும் ஒன்றுபடுத்திக் கூறினூர்.

"தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினூன் திருமால்காண் சாழலோ"

என்பது திருவாசகம்.

தாவில் சீர்ப் பெருமை ஆரூர் - குற்றமற்ற சிறப்பாவது தன்பாற் பிறந்தார் எல்லாரும் முத்தியடைதல். பெருமையாவது அச்சிறப்புப் பிறிதொன்றிற்கு மில்லாமை. சீர்ப்பெருமை என்பதனைத் தலைவன் என்பதற்கு அடைமொழியாக்கி உரைப்பது மொன்று.

ஆரூர் மறையவர் தலைவ! - ஆரூரில் எழுந்தருளிய வேதியர் பெருமானே!

மேவினர்...போற்ற-இரண்டு பாலும் வேறு வேறு மேவினரும், ஆயமும் போற்ற என்று கூட்டுக. மேவினராகிய ஆயம் வேறு வேறாகப்போற்ற என்று உரைத்தலும் ஆம். ஆயம் - மகளிர் கூட்டம்.

வேறு வேறயும் போற்ற - வேறு வேறகப் போற்ற - என்பனவும் பாடங்கள். 186

333. (வி - ரை) கடா - குரங்கு - கவுதாரி - இவற்றைப் பயிற்றிப்போய்ப் பெரியோர் திருமுன் காட்டிச் சன்மானம் பெறுதல் அந்நாளில் அரசர் சமூகத்திற். பெருவழக்காம். இந்திரத்திருவின் மேலாம் கோலத்துடன் சென்றதற்கேற்ப இதனையும் கூறினூர். கை என்பதனைப் பற்றி என்றதனோடு கூட்டிக் கைப்பற்றிப் பயிற்றிச் செல்ல என்றுரைத்தலுமாம். கடா - ஆட்டுக்கடா. தகர்ப்பாய்ச்சல் முதலிய காணுதல் அரசர் விளையாட்டுப் பொழுது போக்குக்கள். இவைகளைப் பின்னர்க் காண்க.

பயின்மொழி பயிற்றிச்செல்ல - பெரியோரைச் சூழ்ந்த கூட்டத்தில் வரும் போது அதற்கேற்ப வருதல் வேண்டுமாதலின் முன்னர்ப் பயிற்றிப் பழக்கிய நன்மொழிகளால் அவைகளை வழிப்படுத்திச் செல்ல என்க. இவை யுடன்செல்லுதல் உலாச் சிறப்பின்பொருட்டுமாம். திருநகரச் சிறப்பு 21-ம் திருப்பாட்டுக் காண்க. தகர் வென்றி - சிவல் வென்றி முதலிய புறப்பொருட்டுறைகளையுங் காண்க.

பூம்பிடகை கொள்வோர் - அடைப்பையோர் - பூவும் - தாம்பூலமும் ஆகிய இரு வகைப் பொருள்களையும் வேண்டும்போது கொடுக்க ஆயத்தமாய்ப் பக்கத்தே நிற்பார். பிடகையும் அடைப்பையும் தாங்கிவருவர். அடைப்பையோர் - அடைப்பைக்காரர்கள்.

மறுக - மறுகுதல் - மயங்குதல். நம்பிகளது கோலப்பொலிவின் மூழ்கி வசமிழத்தல். "புலமறுகும் சிலமறுகு" என்பது காண்க. இது சிறந்த தலைவனது பவனி யிலக்கணம்பற்றிக் கூறியவாறு. 187

334. போலங்கலம் புரவி பண்ணிப் போதுவார் முன்பு போத
விலங்கொளி வலயப் பொற்றோ ளிடையிடை மிடைந்து தொங்க
னலங்கிளர் நீழல் சூழ நான்மறை முனிவ ரோடும்
அலங்கலந் தோளி னன்வந் தணைந்தன னண்ணல் கோயில். ௧௮௮

(இ - ள்) வெளிப்படை. அழகிய அணிகள் பூண்ட ஆடற் குதிரைகளை ஆடச் செய்து வருவார் முன்பு செல்லவும், ஒளிவீசும் வாகுவலயங்களை அணிந்த தோள்களின்மீது இடையிடை நெருங்கக் கட்டியதால் மயிற்பீலிக்குஞ்சங்களின் நன்மைதரும் நிழல் சூழவும், மாலையணிந்த அழகிய தோள்களையுடைய நம்பிகள் வேத முனிவர்களுடனே, வந்து தியாகேசரது திருக்கோயிலை அணைந்தார்.

(வி - ரை) **போலங்கலம் புரவி பண்ணிப் போதுவார்** - குதிரை போல உருச்செய்து அதன்மேல் இருப்பதுபோல ஆடிச் செல்லும் ஆட்டக்காரர். பொய்க்காற் குதிரை யென்பர். இது இந்நாளும் பெரும்பாலும் தஞ்சைச் சில்லாவிற் பெரிய நகர் வலங்களிற் காணப் பெறும்; **முன்புபோத** - கடா முதலியவற்றிற்கு முன்னேசெல்ல; **பின்புபோத** - என்பது பாடமாயின் உண்மைப் பிராணிகளான கடா முதலியவை முன்னும், பிராணி போன்றனவாகலின் இவை பின்னும் போயின என்க. அன்றியும் கோயிலுக்கு அணிமையிற் செல்லும்போது இவை பின் செல்வதும் முறையாம். பொன்னணிகளாற் குதிரையை அலங்கரித்து வருபவர் பின்னே வர - நாயனார் தங்கள் நாதனைக் கும்பிட்டுத் திரும்பி வரும்போது இவர்ந்து வருதற்பொருட்டுப் புரவியைப் பொன் னணிகளாற் புனைந்து கொண்டு வருவோர் பின்பு போத—என்பது சித்தாந்தச் செல்வர் - சொக்கலிங்கச் செட்டியார் உரைக்குறிப்பு.

மிடைந்து - மிடைவதனால். தொங்கல் இடையிடைமிடைந்து நலங்கிளர் நீழல் - என்று கூட்டுக. மயிற் பிஞ்சங்கள் விசிறி போன்ற வடிவினவாய்ப் பித்த சாந்தியான உபசாரத்தின் பொருட்டுத் தாங்கப் பெறுவன. அதனால் **நலங்கிளர் நீழல்** என்றார். மிடைந்து கிளரும் என்க. **தொங்கல்** - அரதனமாலை எனவும், **நீழல்** - ஒளி எனவும் கூறுவாருமுளர்.

அலங்கலந் தோளினன்-அலங்கல் - திருவடையாளமாலை. ஆணையின்படி மணக் கோலத்தோடு செல்கின்றாராதலின் மாலையணிந்த தோளினன் என்றார்.

அண்ணல் - வரையாது கொடுக்கும் தியாகேசராதலின் **அண்ணல்** என்றதாம். பின்னர் நம்பிகள் காண வெளியே வந்து எதிர் காட்சி கொடுத்தும், திருத்தொண்டர்களது வழித்தொண்டுகளை உண்ணின்று உணர்த்தியும், அவர்களைப் பாடுக என்று ஆணையிட்டும், அதற்குத் தாமே அடியெடுத்துக் கொடுத்தும், உலகிற்கு உய்யும் வழி காட்டிப் பேரருள் செய்ததும் குறிக்க.

கடா முதலியனவற்றைப் பற்றிச் செல்லும் கடையோர் முதல் முனிவர்கள் வரை உள்ள எல்லாத் தரத்தவர்களும் போற்றும் பெருந்தகையுடையார் நம்பிகள் என்பதும் இவ்விரண்டு பாட்டுக்களின் குறிப்பாம்.

முனிவரோடும் - ஏனையோரெல்லாம் சூழ்ந்தும் முன்னும் பின்னும் வரவும், அவர்களிற் கலவாது முனிவர்களோடும் கோயில் அணைந்தார் என்க. கோயில் அணையும் போது உடன் அணையத்தக்கார் முனிவரேயாதலின்; "மெய்த்தவர் சூழ வலங் கொண்டு

திருமுன் மேவுவார்" (ஐயர்கோன் - புரா - 89) என்று பின்னர்க் கூறுதல் காண்க. "துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா" என்றார் சிவப்பிரகாச சுவாமிகள். மேலே கூறிய "இந்திரத் திரு"விற்குள்ளே நின்றும் அதிற் சிறிதும்படாது மனத்தை இறைவன்பாற் செலுத்திய யோக நிலையினர் நம்பிகள். முனிவர்களோ உலகைத் துறந்தும் இறைவனிடத்து மனப்பற்று நிலைக்கப் பெறாது முயல்வோர். ஆதலின் முனிவர் நம்பிகளைச் சூழ்ந்து சென்றனர் என்க. 188

335. கண்ணுதல் கோயிற் றேவா சிரியனுங் காவ ணத்து
விண்ணவ ரொழிய மண்மேன் மிக்கசீ ரடியார் கூடி
யெண்ணிலா ரிருந்த போதி "லிவர்க்கியா னடியே னாகப்
பண்ணுநா ளெந்நா?" ளென்று பரமர்தாள் பரவிச் சென்றார். கஅசு

(இ - ள்) வெளிப்படை. இறைவனது பூங்கோயிலின் மணிமுற்றத்திலே திருவாயிலின் முன்னாக உள்ள **தேவாசிரியன்** என்னும் பெயருடைய மண்டபத்திலே, வாயிலில் ஆசிரயித்துக் கூடியிருக்கும் தேவர்கள் ஒருபுறம் நிற்க, இப்பூவுலகில் அவதரித்துச் சிறப்பு மிகுந்த அடியார்கள் சேர்ந்து அளவில்லாதவர்கள் இருந்தபோது "இவர்களுக்கெல்லாம் என்னை அடியான் ஆகும்படி செய்கின்ற நாளும் எந்நாளோ ?" என்ற கருத்துடனே இறைவனது பாதங்களைத் துதித்து நம்பிகள் செல்வாராயினர்.

(வி - ரை) அடியார் எண்ணிலார் கூடியிருந்தபோதில் - என்று கூட்டுக.

விண்ணவர் ஒழிய - தேவர்கள் சிவனடியார்களை வணங்கும் தன்மையுடையார். **காவணத்து விண்ணவர் ஒழிய** - என்றது காவணத்திலே தேவர்கள் தாந்தாம் நன்மை பெறும்பொருட்டு அடியார்களது கருணையை எதிர்பார்த்து முன்னே காத்துக்கொண்டிருக்கின்றார்கள்; அவர்கள் நிற்க என்பதாம். "அண்டர்பெருமான் றொண்டர்கழல் அமரர் பணியும் அணியாரூர்" என்றதும் காண்க. **ஒழிய** - ஒருபுறம் ஒதுங்கி நின்றொழிய. "தேவர் ஒதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்" என்பதும் காண்க.

யான் அடியானாக - யான் அடியவனாக ஆகும்வகையை; என்னை அடியானாகப் பண்ணும்நாள் என்க,

என்று - என்று கருதிக்கொண்டு. அரனுக்குப்போலவே அடியார்க்கும் ஆளாகும் தன்மை அரன் அருளாலே விளைவதொன்றாதலின் **அடியேனாகப் பண்ணும் நாள்** என்றார்.

விண்ணவர் ஒழிய - என்றும், **மிக்கசீர் அடியார்**-என்றும் கூறிய அதனால் தேவர் பதங்கள் அழியுந் தன்மையன என்பதும், "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்" என்றபடி அவற்றை அடியார்கள் வேண்டாதவர்கள் என்பதும், அவற்றை வேண்டாததோடு வீடும் வேண்டா விறலின் விளங்கிய அடியவர்களே இந்த மண்டபத்துள் வீற்றிருப்போர் என்பதும் குறிக்கப்பெற்றன. இதன் விரிவு திருக்கூட்டச் சிறப்பிற் காண்க. விண்ணவர்களும் அரனடியவர்களேயாயினும் அவர்களினடிமைத்திறம் வேறு ; இந்த அடியார் கூட்டத்தின் திறம் வேறு என்பதும் **ஒழிய** என்றதனாற் பெறப்படும். வரிசை 183-ம் பாட்டிற் காண்க.

காவணத்துள் - பணிய—என்பனவும் பாடங்கள். 189

336. "அடியவர்க் கடிய னாவே" னென்னுமா தரவு கூரக்
கொடிநெடுங் கொற்ற வாயில் பணிந்துகை குவித்துப் புக்கார்;
கடிகொள்பூங் கொன்றை வேய்ந்தா ரவர்க்கெதிர் காணக் காட்டும்
படியெதிர் தோன்றி நிற்கப், பாதங்கள் பணிந்து பூண்டு, கஅ௦

வேறு

337. "மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்ந்
தன்பர் சிந்தை யலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
வென்ற ரத்து மளித்தெதிர் நின்றன;" ௩௩௯

338. "ஞால முய்ய நடமன்று ளாடின;
கால னுருயிர் மாளக் கறுத்தன;
மாலை தாழ்குழன் மாமலை யாள்செங்கை !
சீல மாக வருடச் சிவந்தன," ௩௩௨

339. "நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன ;
வேதி யாதவர் தம்மைவே திப்பன ;
சோதி யாயெழுஞ் சோதியுட் சோதிய ;
வாதி மாலவன் காணு வளவின ;" ௩௩௩

340. "வேத வாரண மேற்கொண் டிருந்தன ;
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன ;
வேத மானவை தீர்க்க விசைந்தன ;
பூத நாதநின் புண்டரீ கப்பதம்." ௩௩௪

வேறு

341. இன்னவா றேத்து நம்பிக் கேறுசே வகனூர் தாமும்
அந்நிலை யவர்தாம் வேண்டு மதனையே யருள வேண்டி
மன்னுசீ ரடியார் தங்கள் வழித்தொண்டை யுணர நல்கிப்
பின்னையு மவர்க டங்கள் பெருமையை யருளிச் செய்வார். ௩௩௫

336. (இ - ள்) வெளிப்படை. 'நான் இந்த அடியார்களுக்கு அடியேனுவேன்' என்னும் அன்பு தமது திருவுள்ளத்திலே மேலிட்டெழக், கொடிகள் கட்டியதாய், நெடியதாய், வெற்றியே தருவதாய் உள்ள உட்கோபுரத் திருவாயிலைப் பணிந்து, கைகளைச் சிரமேற் கூப்பிக்கொண்டு, திருக்கோயிலினுள்ளே நம்பிகள் புகுந்தார். (அப்போது) மணமும் அழகும் உடைய கொன்றை மலரைச்சூடிய தியாகேசர் அவர் எதிர்காட்சி காணக் காட்டுமாறு அவர்க்கு எதிரே தோன்றி நிற்க(க் கண்டு) அவரது சீபாதங்களை வணங்கி அவற்றைச் சிரமேற்றாங்கிக் கொண்டவராய் ; (பின் வரும் நான்கு திருப்பாட்டுக்களிற் கூறியவாறு துதிப்பாராயினர்). ௩௩௦

337. (இ - ள்) வெளிப்படை. "நிலைபெறுகின்ற பெருந்திருவைத் தருகின்ற அளவில்லாத வேதங்களாகிய வண்டுகள் மொய்த்து ஒலிப்ப, அன்பால் நினைவாராது உள்ளச் செந்தாமரையிலே (ஊறுகின்ற) நல்ல பெரிய **பரமானந்தம்** என்கின்ற நல்ல தேனைப் பெறத் தகுதியில்லாத எனது தரத்திலேயும், பெறும்படி கொடுத்து எதிரே தாமே போந்து நின்றன ;" ௩௩௧

338. (இ - ள்) வெளிப்படை. "உலகம் உய்யும்பொருட்டு ஐந்தொழிற் பெருங் கூத்தைத் திருஅம்பலத்திலே ஆடின ; இயமனது உயிர்போகும்படி கோபித்தன ; மாலையணிந்த கூந்தலையுடைய உமையம்மையார் தமது செங்கையினாலே உபசரித்துத் தடவச் சிவந்து காட்டின ;" ௩௩௨

339. (இ - ள்) வெளிப்படை. "நீதியில் நிற்கும் தவமுடையார்களது மனத்திலே ஒளி வீசி விளங்குவன; அறியாதவர்களையும் அறிவித்துத் திருத்துவன; ஒளிப் பொருள்களுக் கெல்லாம் ஒளிகொடுத்து அவற்றின் மேலும் எழுந்து விளங்கும் ஒளியா யுள்ளன; ஒரு காலத்துத் தோன்றும் இயல்பினராகிய மாலினாலே காணமுடியாத அளவையுடையன;" ௧௧௩

340. (இ - ள்) வெளிப்படை. "வேதங்களாகிய யானையின்மீது நிற்பன; அறி யாமை யுடையேனாகிய நான் செய்த பிழைகளைப் பொறுத்தருளி என்னை ஆளாகக் கொண்டன; (மேலும் வரக்கடவனவாகிய) குற்றங்களை எல்லாம் போக்கவும் இசைந்து நின்றன பூத கணங்களின் தலைவராகிய தேவரீரது தாமரைபோன்ற சீபாதங்கள்."

341. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு போற்றுகின்ற நம்பிகளுக்கு இடப ஏற்றின் தலைவராகிய பெருமானும் அந்நிலையிலே அவர் வேண்டிய அப்பொருளையே அவருக்கு அருள் செய்வதற்காக, நிலைபெற்ற சிறப்புப்பொருந்திய அடியார்களது வழி வழியாக வரும் திருத்தொண்டின் திறங்களை உணரும் அறிவு கொடுத்து (அறியச் செய்து) மேலும் அவர்களது பெருமைகளைத் தாமே அருளிச் செய்வாராயினர். ௧௧௫

இந்த ஆறு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. (அலங்கலந் தோளினன்-334)- ஆதரவுகூர - வாயில் புக்கார்; - கொன்றை வேய்ந்தார் - அவர்க்கு எதிர் - காட்டும்படி - தோன்றி நிற்கப் - பாதங்கள் - பணிந்துபூண்டு - "நின்-பதம் - எதிர் நின்றன;-ஆடின;- கறுத்தன;-சிவந்தன;-பொலிந்தன;-வேதிப்பன;-சோதிய; - அளவின; - இருந்தன; - ஆண்டன;-இசைந்தன" (என்று) இன்னவாறு ஏத்தும் நம்பிக்குச் - சேவகனர்-அருள வேண்டி - நல்கி - அருளிச் செய்வார் - என்று தொடர்ந்து முடித்துக் கொள்க.

336. (வி - ரை) **ஆதரவுகூர** - அன்புமிக. **ஆதரவு** - சார்பிலே எழும் விருப்பம். **கூர்தல்** - மிகுதல்.

கோடி நெடுங் கோற்ற வாயில் - **கோடி** - கோபுரங்களின் மீதும் வாயில்களின் மீதும் வெண் கொடிகள் உயர்த்திக் கட்டுதல் மரபு. "வெண்கொடியாடும்" என்று முன் னர்க் (243) கூறியதும் காண்க. **நெடும்** - பெரியோர் உள்ளம்போல ஓங்கிய. "விளங் கும் வாயில், அப்பதியில் வாழ்பெரியோர் உள்ளம்போல, ஓங்குநிலைத் தன்மையவாய்" (திருக்குறிப்பு. புரா. 88) என்பது காண்க. **கோற்றம்** - வாயில் வெற்றி பொருந்திய தாதல் - அதாவது எஞ்ஞான்றும் தீமை உள்ளே வாராமற் காத்தல். "உலகுய்ய உமை பாகர் அருள் செய்த வொழுக்கமல்லாற், நீங்குநெறி யடையாத தடையுமாகி" (திருக் குறிப்பு - புரா - 88) என்பது காண்க. **வாயில்** - இது தேவாசிரியனை வணங்கியதும் திருக்கோயிலுனுள்ளே புகும் முதற்றிருவாயில். 166-பக்கம் - படம் பார்க்க.

காணக் காட்டும்படி - காணுமாறு காட்டும்படி. இறைவன் காட்டுவித்தாலன்றி உயிர்கள் காணா; ஆதலின் **காணக் காட்டும்** என்றார். "காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்பது தேவாரம். நம்பிகள் காணு மாறு காட்டுவதற்காக எதிரே தோன்றி நிற்க என்க.

பாதங்கள் - எதிர் நின்றனவாகிய திருவடிகள். இவையே சத்தியின் வியாபகம். இவற்றைக் காணுமாறு காட்டிய வகையினாலே இவ்வியாபகத்திலே நிறைந்தவர்களாயும், திருவடி நிலையர்களாதலின் அடியவர்கள் எனுங் காரணப் பெயர் பெற்றாராயுமுள்ள அடியவர்களின் தன்மையும், அவர்கள் பெற்ற பேறும் உணர்த்தியவாறாயிற்று. அந்த ஆதரவுடன் நம்பிகள் உட்புக்காராதலின் அவர் வேண்டிய அதனையே தரும்படி இறை வன் தமது பாதங்களைக் காணக் காட்டினர். முன்னர் "அந்நிலை யவர்தாம் வேண்டு மத னையே அருள வேண்டி" என்றது இக்கருத்துப்பற்றியே என்க.

பூண்டு - தலைக்குப் பூணாகச் சூடிக்கொண்டு. *190

குறிப்பு. *இப்பாட்டின் கீழ்த் திருநெல்வேலிச் சுவடிகள் சிலவற்றில் 16 பாட்டுக் கள் அதிகமாகவும் இடைச் செருகலாகவும் காணப்படுகின்றன. அவற்றை இப்புரா ணத்திறுதியில் அநுபந்தத்திற் காண்க.

337. (வி - ரை) **மன் பெரும் திரு மா மறை** - மன்னுதல் - நிலைபெறுதல். **பெரும்** - எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்றலாற் பெரிய என்றார். **திரு** - "திரு நின்ற செம்மை" என்றபடி செம்மைக்கு ஏதுவாகிய பொருளைத் தன்னுட் கொண்டு தருகின்றனவாய் விளங்குதலால் திரு (மாமறை) என்றார். திரு - என்றும் வாராத செல்வம். பசு நூல்களாற் கூறப்படும் திருவெல்லாம் நிலைபெறாதனவாய்ச் சிறுமையுமுடையன; மாமறை கூறுநெறியாற் பெறுந் திருவே நிலைபேறும் பெருமையுமுடைய திருவாமாதலின் அது **மன்பெருந்திரு** எனப்பட்டது. **மா** - அளவிடற்கரிதாம்படி விரிந்த. நிலைத்த - பெரிய - திருவைப்பொருந்தித் - தருகின்ற - அளவில்லாத மறை - என்க. வேதங்கள் நான்காயினமையின் அடைமொழிகளும் நான்காயின போலும்.

மறை வண்டு சூழ்ந்து-வேதமாகியவண்டுகள் மதுஉண்ணும் ஆசையாற் சுற்றிக்கிடக்க. **சூழ்ந்து** - செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் செய என் வாய்பாட்டெச்சமாகி உபசாரத்தால் ஒலிப்ப எனப் பொருள் தந்து நின்றது. சூழ்ந்த - மது என்று கூட்டுக. சங்கரன் மதுபோல மதுவைச் செய்தலால் மதுகரம் என்பர். செய்தல் - சேர்த்தல். "மாமறைகள், சொன்ன துறைதொறுந் தூப்பொரு ளாயின" என்பது அப்பர் சுவாமிகள் (திருஇன்னம்பர் - 1) தேவாரம்.

சூழ்ந்த என்றமையால் இவற்றின் இடையிலே **மது** விளங்கும் என்பதாம். எசுர் வேதத்தின் இருதயத்திலே விளங்குவன **சிவ** என்னும் இரண்டெழுத்துக்கள் (அட்சரத்துவயம்) எனப் பெரியோர்கள் துதித்திருத்தல் காண்க. "எழுதரிய மறைச்சுரும்பு கிடந்து புறத்தலம்ப" என்பது திருவிளையாடல். **சூழ்ந்து** - என்றதனால் சுற்றிப்புறத்துக் கிடப்பதேயாம் எனவும், அகத்திற் சுவைப்பது அன்பர் சிந்தை எனவும், அப்பாதம் சிந்தைத்தாமரையிலே தேனாக ஊறி அனுபவிக்கப்பெறுவன எனவும் குறித்ததாம். **மறைசூழ்ந்து** - பாதத்தை அகப்படுத்துமாறு சூழ்ச்சிசெய்ய என்பதும் குறிப்பு.

"மன்று ளாடும்மது வின்னசை யாலே மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே" (242) என்று முன்னர்க் கூறியதும் காண்க. "பண்டைமறை வண்டாரற்ற" என்றார் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

அன்பர் சிந்தை அலர்ந்த செந்தாமரை -

"கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்
பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தை நீயிருக்க விட்டனன்..." **திருக்கழுமல மும்மணிக்கோவை - 4**

என்ற பட்டினத்தடிகள் திருவாக்குக் காண்க.

"அன்புடைத் தொண்டர்க் கமுதருத்தி, யின்னல் களைவன"

"சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன், முந்திப் பொழிவன"

என்பன அப்பர் சுவாமிகள் திருவிருத்தங்கள். இவ்வலர்ந்த தாமரையிலே ஊறுவது இறைவனது திருவடியாகிய **மது** - தேன். அது தருவது **பரமானந்த** அநுபவமாம்.

இவ்வாறன்றிச் சிந்தையிலே அலர்ந்த செந்தாமரை எனக் கொண்டு சிந்தையை அந்தத் தாமரைபூக்கும் நீர் நிலையாகக் கூறுவாருமுண்டு.

"...அன்பர் இதய மென்னும், செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத் தேன் றதும்பு தெய்வக் கஞ்சத், தொழுதகு சிற்றடி..." (விருத்தகுமார பாலரான படலம்) என்று திருவிளையாடற் புராணமுடையார் இதற்குப் பொருள் கூறியிருத்தலும் காண்க. ஆயின் இங்குச் சிந்தைக்குரிய ஓடையாகிய உவமானமும், தாமரைக்குச் சிந்தையாகிய உவமேயமும் வருவித்துரைக்க நின்றன. முன் கொண்ட பொருளிலே **மறை வண்டு-சிந்தைத் தாமரை - ஆனந்த மது** - என உவமான உவமேயங்கள் இயல்பிற் பொருந்தி நிற்

பன. அன்றியும் மது தாமரையினுட்கலந்து அது அலரஅலர உள்ளே ஊறுவதுபோலச் சிந்தையுட் கலந்த திருவடியே அன்பு முதிர முதிர ஆனந்தமாய் ஊற்றெடுப்பதாம். இங்குத் திருவடியைக் காட்டக் கண்ட நம்பிகள் அத்திருவடிகளையே "தன்னை நினையத் தருகின்றான்" (பதினொராந் திருமுறை) என்று நம்பியாண்டார் நம்பிகள் அருளியபடி மதுவாகிய தம்மையே அளித்ததாகப் போற்றுவதுங்காண்க. எனவே திருவடியையே மதுவாகக் கூறினர் என்பது.

நன் பெரும் பரமானந்த நன்மது - வேதத்திலே ஏனைத் தேவர்கள் பெயரோடு சேர்த்து விஷ்ணுவானந்தம் - அக்கினியானந்தம்-இந்திரானந்தம் முதலியன கேட்கப் பெறுமையானும், சிவானந்தம் ஒன்றே கேட்கப்பெறுதலானும், சிவானந்தமே **பரமானந்தம்** என்க. ஆதலின் பிரமானந்தம் என்பதிற் பிரமசத்தமானது பிரமனைக் குறிக்காது பரப்பிரமமாகிய சிவத்தையே குறிப்பதாம் என்றுங் காண்க. **நன்** - என்ற இரண்டில் முன்னையது **ஆனந்தத்திற்கும்**, பின்னையது **மதுவுக்கும்** அடைகளாம். **பரமானந்தமாவது** - உயர்வு ஒப்பு இல்லாததும் அழிவில்லாததும் ஆகிய சிவத்துவ விளக்கமாம். அதனை அழுந்தியறிதலே அநுபவமெனப்படும். "இன்பமே எந்நாளுந் துன்பமில்லை" என்றது திருவாக்கு.

என்தரத்தும் அளித்து-பெறச் சிறிதும் தரமில்லாத என்னிடத்திலேயும். உம்மை இழிவு சிறப்பு. **அளித்து** - கொடுத்து. அளியினாற் (கருணையினாற்) கொடுத்து எனவும் குறிப்பிட்ட அழகு காண்க.

> " என்னையு மாளுந்தன்மைக் கெந்தையெம் பெருமா னீசன்
> றன்னரு ளிருந்த வண்ணம்..."—(**திருஞான - புரா** - 226)

என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. பெருமானது அருளிப்பாடுகள் தம்மிடம் வெளிப்பட நிகழக் கண்டபோது தமது சிறுமையையும், அவரது அளவிறந்த பெருமையையும் எண்ணி எண்ணி ஆராமைப்பட்டு அநுபவித்தல் பெரியோ ரியல்பு.

> " இத்தனையும் எம்பரமோ வைய! ஐயோ!
> எம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே"

என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும்,

> "யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
> யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
> பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கு..." என்ற திருவாசகமுங் காண்க.

வண்டுசூழ்—என்பதும் பாடம். 191

338. (வி - ரை) **நடம்** - ஐந்தொழிற் பெருங்கூத்து. இதனையே அற்புதக் கூத்து - ஆனந்தக்கூத்து - பொற்றில்லைக்கூத்து என்று பலவாறும் வகுத்துப் புகழ்ந்து ஆணையிட்டனர் திருமூலதேவ நாயனர். (திருமந்திரம் ஒன்பதாந் தந்திரம் பார்க்க).

ஞாலம் உய்ய - உயிர்கள் கடைத்தேறி உய்யும்படியாகப் படைத்தல் - காத்தல் - அழித்தல் - மறைத்தல் - அருளல் என்னும் ஐம்பெருந் தொழில்களும் இறைவன் செய்கின்றான்; ஆதலின் **ஞாலம் உய்ய** என்றார். இவையே தோற்றம்-நிலை-இறுதி-மறைப்பு - அருள் எனவும் கூறப்பெறும். இவற்றைப் புரிதலையே **நடம் ஆடினா** என்பர். **ஞாலம்** - உயிர்களின்மேல் நின்றது. இவற்றின் விரிவு முன்னர் 42-ம் பாட்டிலும், இன்னும் வந்த பிற இடங்களிலும் கண்டுகொள்க.

உய்ய நடம் ஆடின் - ஞாலம் - சேதனம் - அசேதனம் என இருவகைப்படும். அவற்றுள்ளே அசேதனம், சேதனத்தின் அநுபவத்திற்கே உரியது. சேதனமாகிய உயிர்கள் மலத்தாற் கட்டுப்பட்டன. மல மறைப்பு - இருள். இவ்விருள் மிக வலிமை வாய்ந்தது. அது தானாய் அகலாது; உயிரோ அதனை அகற்ற வலிமையற்றது; ஆதலின் இயல்பாகவே மலமற்றவனும் எல்லாம்வல்லவனும் ஒருவன் வேண்டும். அவன்

தனக்கென்று உருவமோ செயலோ வேண்டாதவன். ஆதலின் அவன் உருவத்தையும் செயலையும் மேற்கொண்டால் அது ஞாலமுய்யவே கொள்வானாதல் வேண்டும். கட்டுண்டு கிடக்கும் உயிர்க்கு அதனைப்பற்றிய கட்டு நீங்கும்பொருட்டுக் கருவிகாரணங்கள் வேண்டும்; அவற்றுக்காக உடம்பு தருதல் வேண்டும்; உடம்பு நிற்பதற்காகப் புவனங்களும், அவற்றிலே புசித்து அநுபவித்திருக்கப் போகங்களும் தருதல் வேண்டும்; இவற்றை மூலகாரணப் பொருளினின்று படைத்துத் தருதல் சிருட்டி எனப்படும். அவற்றை நிலைக்கச் செய்தல் திதி - காத்தல் எனப்பெறும். இளைப்பாற்றுதற்காக ஒடுக்குதலையே சங்காரம் என்பர். இதன்மேல் இவைகளின் வினைநுகர்ச்சியிலே அதன் வழிநின்று நடத்தித் தன்னிற் கூட்டுதல் முறையே மறைப்பு - அருள் எனப் பெறுவன. இவ்வைந்தையும் இறைவன் சங்கற்ப மாத்திரத்தாலே-நினைப்பு மாத்திரத்தாலே - செய்வன். இதனை அருட் கூத்தென்றும், அருள் விளையாட்டென்றும் உபசரித்துக் கூறுவர். இதனையே இங்கு நம்பிகள் **ஞாலம் உய்ய நடம் ஆடினன்** என்றார். சூரியனது சந்நிதி மாத்திரத்திலே வாவிகளில் உள்ள தாமரைகள் மலர்தலும், மலர்ந்தவாறே இருத்தலும், குவிதலும் நிகழ்வதுபோல இறைவனது சந்நிதி மாத்திரத்தானே இவை நிகழ்வன ஆதலின் **ஆடினன்** என்றார். ஆடுதல் இறைவன் தொழில்; ஆயினும் ஆடுதற்குரியன பாதங்கள் ஆதலின் **பதம் ஆடினன்** என்றார். பதம் - சிவசத்தி ; அஃதொன்றேயாயினும் அறிதலும் செய்தலுமாகிய தொழில் வேறுபாடுபற்றி ஞானங் கிரியை என இரண்டாதலின் **ஆடினன்** எனப் பன்மையாகக் கூறினார்.

காலன் ஆர் உயிர் மாளக் கறுத்தன - ஆருயிர் - மிகு வலிமை படைத்த உயிர். காலனாகிய உயிர் என்றுரைப்பாருமுண்டு. காலனுக்கு ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாலன்றி **ஆர்** விகுதி புணர்த்தற்கு இயைபின்மை ஓர்க. **கறுத்தல்** - கோபித்தல். "மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். "என்னடியா னுயிரைவவ்வே லென்றடற் கூற்றுதைத்த, பொன்னடி" என்ற தேவாரமுங் காண்க. இறைவனது ஆணையின்வழி அவரவர் காலத்தைக் கணக்கிட்டுப் போவானாதலின் **காலன்** என்ப. அடியார்கள் காலனையுங் கடந்தவர்கள்.

> காலனையும் வென்றோங் கடுநரகங் கைகழன்றோம்
> மேலை யிருவினையும் வேரறுத்தோங்—கோல
> வரணா ரவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
> சரணா விந்தங்கள் சார்ந்து.—**அற்புதத் திருவந்தாதி** - 81

என்ற காரைக்காலம்மையார் திருவாக்குக் காண்க. தனது அதிகார வரம்புகடந்து போய் அப்பிராகிருத புவனத்திலே உள்ள அடியார்களிடம், சென்றானாதலின் உதைபட்டான் என்க. பாதமிரண்டாதலின் கோபப் பிரசாதமென்ற இரண்டு அருட் குணமும் குறிக்கக் **கறுத்தன - சிவந்தன** எனக் கறுத்தல் சிவத்தல் இரண்டும் கூறப்பெற்றன.

மாமலையாள் செங்கை சீலமாக வருட - வருட வேண்டிய முறையால் வருடுதல் **சீலமாக** எனப் பெற்றது. வருடுதல் - உபசரித்தல். இது ஒருவகை வழிபாட்டு முறை. உரிய மரியாதையோடு மெல்லென வருடவும் - என்க. **வருட** - வருடவும் ; சிறப்பும்மை தொக்கது.

> "மன்னு மலைமகள் கையால் வருடின"

> "செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கம லக்கரத்தால்
> வருடச் சிவந்தன மாற்பே றுடையான் மலரடியே"

என்பன அப்பர் சுவாமிகள் திருவாக்கு. சீலமாகும் பொருட்டுவருட என்றுரைத்தலுமொன்று. முன்னே கறுத்தன ; பின்னே வருடச் சிவந்தன என்பது அணி. 192

339. (வி - ரை) **நீதி** என்பது ஆகமசீலம். **தவம்** - சிவபூசையாம். **நீதிமாதவர் நெஞ்சிற் பொலிவன** - என்றது நியதிப்படி - அதாவது சிவபெருமான் திருவாக்காகிய

சிவ ஆகமங்களின் விதித்தபடி பூசை செய்வோர்களது மனத்திலே விளக்கமாக எழுந்தருளியிருப்பன் சிவன் என்பதாம். ஆகமசீலர்க்கு அருள் நல்கும் பெருமானுடைய புண்டரீகப் பதமாதலின், அச்சீலமாகிய மாதவமுடையார் நெஞ்சிலே அவர் நினைந்த வாறே பொலிந்தன. "கற்றூர்க ளுற்றேருங் காட்சியானை" (தேவாரம்); "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை", "அளிவள ருள்ளத் தானந்தக் கனியே" (திருவிசைப்பா); முதலிய திருவாக்குக்கள் காண்க. இறைவன் எல்லா இடத்திலும் இருப்பானுயினும் சிவ ஞானிகளிடம் விளக்கமாக வீற்றிருப்பன் என்பது. ஏனையோர்களிடத்து விளங்கப் பெருது இருப்பன் என்க.

வேதியாதவர் தம்மை வேதிப்பன - வேறுபடாது மலத்துளழுந்திக் கேவலத்துக் கிடப்போரை வேறுபடுத்திச் சகலத்துளாக்குவன. வேதியாமலிருத்தல்-அறியாமலிருத்தல். **வித்** - அறி; பகுதி. எனவே **வேதியாதவர்** - அறியாதவர்கள் என்க. அறியாதவர்களாதலின் அறிந்தவர்களைப் போல இறைவனை அடையும் சொல்லும் செயலும் இல்லாதவர்களாதலின் அவர்களை அறியும்படிச்செய்தல் இறைவன் அருட்டொழில் ஆதலால் **வேதிப்பன** - என்றூர். **வேதித்தல்** - அறிவித்தல். " கல்லாதார் மனத்தணுகாக் கடவுடன்னை", "மற்றவரறியா மாணிக்க மலையை " முதலிய திருவாக்குக்களிலே முன்னைய தற்கடுத்து இத்தன்மையைப் பேசியிருத்தல் காண்க. தெரிந்து பூசிப்போரிடத்துப் பொலிந்தும், தெரியாது வாளா கிடப்போரை அறிவித்தும் அருள் செய்வன இரண்டு பாதங்கள் என்க. அறியாதவனை அறிவிக்கும் அருட்டிறம் திருவிளையாடற் புராணத்திலே மாபாதகந் தீர்த்த படலத்தில் இறைவன் அம்மையாருக்குச் சொல்வதாக உள்ள பகுதியிற் காண்க.

இனி - **வேதிப்பன** - என்பதற்குப் பேதிக்கச் செய்வன - மாற்றுவன - என்றுரைத்தலுமாம். மாற்றுவது வேதி எனப்படும். இது தரிசவேதி - பரிச வேதி என இருவகைப்படும்.

> " தாக்க வேத கத்திரும்(பு) - ஆக்க முற்ற பொன்னென
> நீக்க மற்ற விருண்மலம் - வீக்க மற்று விட்டதே"

என்றது காண்க. ஆணவத்திற் கட்டுண்டுகிடப்போரை அதிலிருந்து பரிசம் - நோக்கு - பாவனை முதலிய தீக்கைகளால் மாறச் செய்வன. பரிசத்தாலே கட்டுநீங்கும் கோழி முட்டையும், பார்வையால் நீங்கும் மீன்முட்டையும், பாவனையால் (நினைவினுல்) நீங்கும் ஆமை முட்டையும், இவற்றிற்கு உதாரணங்களாகக் கூறுப.

சோதியாய் எழும் சோதி - எழுந்து விளங்கும் சூரியன் - சந்திரன் - அக்கினி - என்பனவே ஒளிப்பொருள்களாம். இவையே சோதி என்பன. சூரியனும் சந்திரனும் சொல்லவே ஏனையவிண்மீன்களும், அக்கினி கூறப்படவே ஏனைவிளக்குகளும் அடங்கும். இவை தாமே ஒளிகொடுப்பன அல்ல. இவற்றுள்ளே நின்று ஒளிகொடுப்பவன் இறைவன். அவன் பிறிதொன்றினுனன்றித் தானே ஒளியுடையவன்; ஆதலின் சுயஞ் சோதியாவன். அவனை ஒளியுருவுடையவனுகவே நினைப்பது சிவாகமங்களின் றுணிபு. சிவபூசை விதியில் சூரிய பூசையிலே சூரியமண்டலத்திடையில் விளங்கும் ஒளியுருவனுகிய சதாசிவ மூர்த்தியைப் பூசிக்கும் முறையைச் சைவாசாரியர்களிடம் கேட்டுணர்க.

சோதியுட் சோதிய - சோதிகளிலே மிகுந்த சோதி என்றும், சோதிகளுக்குள்ளே நின்று அவற்றிற்கு ஒளிதரும் சோதி என்றும் கொள்க. "ஒளியா யொளியதன் ஒளி" என அடுக்கிக் கூறுவதுங் காண்க. மும்மலங்களுஞ் சடமாயொழியவே, அவைகளினின்று நீங்கிச் சுத்தமாய் மேம்படும் ஆன்ம ஞானவொளியுடன் ஒளியாகி அதனை விளக்குவன. " சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே "—சித்தியார். "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு "—கந்தர் அலங்காரம்.

ஆதிமாலவன் காணு அளவின் - பன்றியாய்ச் சென்று திருவடி தேடிக் காணு தவர் திருமாலே யாதலானும், இங்குக் கூறுவது அந்தப் புண்டரீகப் பதமேயாத லானும் **மாலவன்** என்ற பாடமே சிறந்ததாம். **ஆதி** - தொடக்கம் - தோன்றுதல். "ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" என்றபடி இறைவன் ஒருவனே ஆதியும் அந்தமுமில் லாதவன்; அநாதியாயுள்ளவன். தமக்கு ஒரு ஆதியை-தொடக்கத்தை - உடையார் அநா தியை அறியார். ஆதலின் **ஆதி மாலவன் காணு அளவின** என்றார். "ஆதியுமந்தமு மில்லா வரும்பெருஞ் சோதி" என்பது திருவாசகம். பெருஞ் சோதியேயாயினும் சிலர் காணப்பெறுமலிருப்பது அவர்களது பக்குவத்தாலாம் என்பது அப்பர் சுவாமிகள் அரு ளிய இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையிலே காண்க. "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்ற திருவாசகமும் காண்க. சோதியாய் எழும் மூன்று சோதியும் இறைவ னது மூன்று கண்களாம். கண்கள் கருவிகளேயாதலின் இவற்றுள்ளே உயிரின் செயல் கலந்தாலன்றி இவைகட்குச் செயல் இல்லை. இம்மூன்றினுள்ளும் **உட்சோதியாயிருந்து** இறைவன் அவற்றிற்கு ஒளி தருவன் என்பதும் குறிப்பு. கறுத்தனவாயினும் சிவந்தன; பொலிந்தனவாயினும் வேதிப்பன; சோதியவாயினும் காணு வளவின; என அணி பெறத் தொடர்ந்து அதித்த சுவையும் காண்க. **வேதிப்பன** - என்ற கருத்து "குரு டர்க்கு முன்னே குடிகொண் டிருப்பன" என்ற திருவிருத்தத்திலும், **மாலவன் காணு** - என்ற கருத்து "கருடத் தனிப்பாகன் காண்டற் கரியன" என்ற திருவிருத் தத்திலும் அப்பர் சுவாமிகள் அருளியமை காண்க. **சோதிய** - என்பது "சோதியாய் நிறைந்தான் சுடர்ச்சோதியுட் சோதியான்" (திருவையாறு - இந்தளம் - 7) என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்துட் காண்க.

பொலிவன—மாலயன்—என்பனவும் பாடங்கள். 193

340. (வி - ரை) **வேத வாரண மேற்கொண்டிருந்தன** - வேதங்கள் இறைவனை மேற்கொண்டு போற்றுகின்றன என்பது. வேதத்தில் விளங்கும் திருவடி என்க. **வாரணம்**- யானை. யானைபோலப் பெருமையும் விளக்கமும் தருதலால் **வேதம் வாரணம்** எனப் பெற்றது. **ஆரணம்** - வேதம் எனக் கொண்டு வேதமாகிய ஆரணம் எனக் கூறுவாரும், **ஆரணம்** - வேதத்தின் ஞானபாகமாகிய உபநிடதமென்று கூறுவாரும் உண்டு. **வார ணம்** - குதிரை எனக்கொண்டு வேதமாகிய குதிரையின்மேல் என்றுங் கூறுப. இறை வன் மாணிக்கவாசகர் பொருட்டு வேதக் குதிரையின்மேற் குதிரைச் சேவகனாகி வந் தான் என்ற சரிதமும், "பண்ணியல், வைதிகப் புரவியும்" (பதினொராந் திருமுறை - கோயினுன்மணி - 4) முதலிய திருவாக்குக்களையும் இங்கு எடுத்துக் கூறுவர். ஆயின் குதிரைக்கு வாரணம் என்ற வழக்குப் பெருநூல்களிற் காண்பதரிதாம்.

"ஆரணங்களே யல்ல மறுகிடை வாரணங்களும் மாறி முழங்குமால்" என முன்னர்க் கூறுதலும், வேதங்கள் நிஷாதசுரத்திற் பயிலப்பெறுதலும் இங்கு வைத்துணரத் தக் கன. நிஷாதம் - யானையின் பிளிற்றோசை. "மலைக்கொளானை" என்ற திருக்கடவூர்த் திருக்குறுந்தொகையிலே அப்பர் சுவாமிகள் இறைவனைக் "கலைக்கை யானை கண்டீர்", "கள்ளவானை கண்டீர்" முதலாகப் பதிக முழுதும் யானையாகவே காட்டியதும், "வேத மாகிய வெஞ்சுடரானையார்" என்றருளியதும் காண்க.

செய்பிழை பொறுத்தாண்டன - இதன் விரிவு முன்னர்த் திருமலைச் சிறப்பின் வரலாற்றிலும், தடுத்தாட்கொண்ட வரலாற்றிலும் காண்க. **செய்பிழை** - செய்த பிழை என இறந்த காலப் பொருளில் வந்தது. "பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

ஏதமானவை தீர்க்க இசைந்தன - முன் செய்த பிழை பொறுத் தாண்டது போலவே, இனி வருங்காலத்திற் செய்யக்கடவனவாகிய பிழைகளையும், அவற்றால் வரக் கடவனவாகிய ஏதங்களையும் தீர்த்தாள இசைந்து நின்றன. **இசைதல்** - ஒருப்படுதல்; முன்னே பிழையைப் பொறுத்ததுபோலவே பின்னர் வரும் ஏதங்களையும் தீர்க்க

இப்போதே உடன்பட்டன என்க. "ஏதந்தீர் நெறியைப் பெற்றேன்" (343) என்பதும் காண்க. முன்னே திருக்கயிலையில் ஏதந்தீர்க்க இசைந்தன ; ஆதலின் பேதையேன் செய் பிழைபொறுத்தாண்டன என்று கூட்டியுரைத்தலுமாம். என் பிழையைப் பொறுத்தாண்டதேயன்றி எல்லா உயிர்க்கும் ஏதம் தீர்க்க இசைந்தன என்றலு மொன்று. " ஆரூத வானந்தத் தடியார் செய்த வனுசாரம் பொறுத்தருளி யவர்மே லென்றுஞ் சீரூத பெருமானை " என்ற திருத்தாண்டகம் காண்க. " யான்செய்யும் அரிசுகளுக் குடனுகி " என்ற நம்பிகள் தேவாரமும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

பூதநாத ! - சிவபூத கணங்களின் தலைவனே !. பூதபதயேநம : என்பது சிவாஷ்டோத்திரம். பூதங்களாற் சூழப்பட்டு நடம்புரிதல் சிவபெருமானுக்கே யுரியது. இப் பூதங்களின் இயல்பும் வலிமையும் முன்னர் 16-ம் திருப்பாட்டிற் காண்க. " பூத நாயகர் புற்றிடங் கொண்டவர் " (136) என முன்னர் இத்திருவாரூர்ப் பெருமானைக் குறித்ததும் நினைவுகூர்க. "ஆளும் பூதங்கள் பாடநின் றாடும் அங்க ணன்றனை" முதலிய எண்ணிறந்த திருவாக்குக்களும் காண்க. பூதங்கள் தாருகவனத்து இருடிகள் மாருகச் செய்த ஆபிசார யாகத்திற் றோன்றின என்றும், அவற்றைத் தம்மைச் சேவித்துச் சூழ்ந்து நிற்க இறைவன் ஆணையிட்டான் என்றும் புராணங்கள் கூறும்.

புண்டரீகப்பதம் - அடியும் அடியவர்களும் இணைந்து நிற்றலின் அன்பால் நினைவார்களது உள்ளக்கமலத்தே விரைந்து சென்று நிற்கும் திருவடி என்க. அடியவர்களுக்கு ஆளாந்தன்மையை வேண்டியே திருவடியைத் துதித்தாராதலின் அவர்களது உள்ளக்கமலத்தே விரைந்து சேரும் தன்மையனவாகவே அவற்றைத் துதித்தார் என்பது குறிப்பாம். " அன்பர் சிந்தை யலர்ந்த செந்தாமரை " என்று தொடங்கிய நம்பிகள் அதனையே அநுவதித்து முடித்தார் என்க. தாமரைபோன்ற பாதம் என்பதும் ஆம்.

" பொலம்புண்ட ரீகப் புதுமலர் போல்வன", " தூக்கமலத் தன்ன வடிவின "

என்பனவாதி அப்பர் சுவாமிகள் திருவாக்குக்கள் காண்க.

இந்நான்கு திருப்பாட்டுக்களிலும் **நின் புண்டரீகப்பதம்** என்ற ஒரே எழுவாய் **எதிர் நின்றன** என்பது முதல் **இசைந்தன** என்பதுவரைப் பதினொரு தனி வினைமுற்றுக்களைக் கொண்டு முடிந்தது காண்க. பஞ்சப்பிரம சடங்கமாகிய பதினொரு மந்திரங்களாலே இறைவனைக் கொண்டு துதிக்கும் சிவாகம மரபும் காண்க. இவையே பின்னர்த் திருத்தொண்டத்தொகையின் பதினொரு பாசுரங்களாகப் போந்தன என்பர் ஆலால சுந்தரம் பிள்ளை. பதம் எதிர் நின்றன - ஆடின - என்னுது, இறுதியில் நிற்கவேண்டிய பயனிலைகள் முன்னும், முன்னிற்கவேண்டிய எழுவாய் இறுதியிலும் வந்தன. மலையின் மேலே சகடங்களை ஏற்றும் இயந்திரம் பின்னின்று தள்ளுதல்போன்ற மரபுபற்றிப் போலும். " எழுவா யிறுவா யிலாதன " என்று அப்பர் சுவாமிகள் இத்திருவடிகளின் இலக்கணம் வகுத்ததும் காண்க. 194

341. (வி - ரை) **ஏறு சேவகன்** - எருதின்மேல் வரும் சேவகன். எருதைக் கொடியாக உயர்த்திய சேவகன் என்றலுமாம். எல்லாரிலும் உயர்ந்த சேவகன் என்பது ஒரு பழைய உரைக்குறிப்பு. **சேவகன்** - சேவைக்கு இலக்கியமானவன், தலைவன். அடியவர்க்கு ஏவல் செய்வான்போல வேலை செய்தலின் ஆள் என்றலுமாம். நம்பிகளுக்குத் திருக்கச்சூரில் சோறு இரந்து கொண்டு வந்து கொடுத்ததும், விறகு விற்றதும் முதலிய அருளிப்பாடுகளை நோக்குக.

" இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் **சேவகனை** "

என்ற திருவெம்பாவையும் காண்க. **சேவகன்** - வீரன் என்றலுமாம். இறைவனை வேதம் வீரன் என்பதும் காண்க. ஏறு உடைய சேவகன் என்ற பொருளில் "நாடு கிழவோன்", "கறைமிடறணியல்" என்புழிப்போல் ஒற்றிரட்டாதாயிற்று - என்பர்.

வேண்டும் அதனையே அருள வேண்டி - "வேண்டுவோர் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்பது இறைவனது இலக்கணம். "இவர்க்கியா னடியேனுகப், பண்ணுநா ளெந்நாள்? என்று பரமர் தாள்பரவிச் சென்ருர்" (335) நம்பிகள் ஆதலின் அதனையே அருள்வதற்காக என்பது. "வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ"—திருவாசகம்.

மன்னுசீர் அடியார் - மன்னும் அடியார் என்க. இறைவன் நித்தன்; அதுபோலவே அவன் அடியார்களும் நித்தர் என்பதாம். **மன்னும்** என்பதனைச் **சீர்** என்பதற் கடைமொழியாக்கி அடியார்களது நிலைபெற்ற சீர் என்றுரைப்பதுமாம். ஏனையோர் சீர்கள் மன்னுவன அல்ல; அவை ஒன்றும் நிலையா; ஆதலின் அடியார்கள் சீரே **மன்னு சீர்** எனப்பெறும். "பொருள் சேர் புகழ்" என்ற இடத்துப் பரிமேலழகர் உரை காண்க.

> "செல்வமொடு பிறந்தோர், தேசொடு திகழ்ந்தோர்,
> கல்வியிற் சிறந்தோர், கடுந்திறன் மிகுந்தோர்,
> கொடையிற் பொலிந்தோர், படையிற் பயின்ருேர்,
> குலத்தி னுயர்ந்தோர், நலத்தினின் வந்தோர்,
> ஏனையரெங் குலத்தின ரிறந்தோ ரனையவர்
> பேரு நின்றில போலும்"—**கோயினான்மணிமாலை** - 28

என்ற பட்டினத்தடிகள் திருவாக்குக் காண்க.

சீர்-சிறப்புக்கள்-கீர்த்திகள். சிவரகசியத்திலே இவ்வடியவர்கள் வருவார்கள் என்று இறைவன் உமாதேவியாருக்கு உணர்த்தியருளினர்; கந்தர் அதனைச் சைகிஷ்வ்ய முனிவருக்கு அருளினர்; பொல்லாப்பிள்ளையார் இவர்களது பெருமைகளை நம்பியாண்டார் நம்பிகளுக்கு உபதேசித்தருளினர்; உபமன்னியர் முதலிய முனிவர்களும் நந்திதேவர் முதலிய கணநாதர்களும் துதித்துள்ளார்கள்; இன்றைக்கும் பலரும் இவர்களை வணங்கி யடைந்து வாழ்கின்ருர்கள் என்பனவாதி சிறப்புக்கள்.

வழித்தொண்டு - வழிவழியாக இடையருது தொடர்ந்துவரும் திருத்தொண்டு. "பூதபரம்பரை பொலிய" என்றமை காண்க.

> "வழிவழி யாளாகும் வண்ண மருளெங்கள் வானவனே"
> "வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த பழவடியார்"

முதலிய திருவாக்குக்கள் காண்க.

உணர நல்கி - அவனைப்போலவே, அவன் உணர்த்தினலன்றி உணரவும் ஓதவும் படாத இலக்கணமுடையார் அவனடியார்கள்; ஆதலின் அவன் **உணர நல்கினன்**. 195

342. "பெருமையாற் றம்மை யொப்பார்; பேணலா லெம்மைப் பெற்ருர்;
ஒருமையா லுலகை வெல்வார்; ஊனமே லொன்று மில்லார்;
அருமையா நிலையி னின்ருர்; ரன்பினு லின்ப மார்வார்;
இருமையுங் கடந்து நின்ருர்; ரிவரைநீ யடைவா" யென்று, கசுகூசு

343. நாதனு ரருளிச் செய்ய, நம்பியா ரூரர் "நானிங்
கேதந்தீர் நெறியைப் பெற்றே" னென்றெதிர் வணங்கிப் போற்ற,
"நீதியா லவர்க டம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மை யாலே பா"டென வண்ணல் கூற. கசுகூள

344. தன்னையா ளுடைய நாதன் றானருள் செய்யக் கேட்டுச்
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப் பாடி நாடர்
“இன்னவா றின்ன பண்பென் றேத்துகே ? னதற்கி யானார் ?
பன்னுபா மாலை பாடும் பரிசெனக் கருள்செ” யென்ன. ௧௯௮

வேறு

345. தோல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லறீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
“தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியே”னென்
றெல்லையில்வண் “புகழாரை யெடுத்திசைப்பா மொழி” யென்றார்.

342. (இ - ள்) வெளிப்படை. “பெருமையினாலே தமக்குத்தாமே ஒப்பாவார்கள் ; பேணுதற்றன்மையினாலே எம்மைத் தமக்கே உரிமையாகப் பெற்றார்கள் ; எம்மோடொன்றித்து நின்ற நிலையினாலே உலகத்தை வெல்வார் ; அதனால் மேலே வரக்கடவனவாகிய ஊனங்கள் ஒன்றுமில்லாதவர் ; பிறர் எவரும் நிற்றற்கரிய நிலையிலே நின்றவர்கள்; அன்பு நிறைதலினாலே இன்பத்தையே நிறையத் துய்ப்பவர்கள்; இம்மை மறுமைகளைக் கடந்த நிலை பெற்றவர்கள் ; இத்தகையினராகிய இந்த அடியவர்களை நீ சேர்வாயாக” என்று, ௧௯௬

343. (இ - ள்) வெளிப்படை. (இறைவன் அருளிச்செய்தாராக) நம்பிகள் “நான் குற்றந்தீர் நெறியை இங்கு அடையப்பெற்றுய்ந்தேன்” என்று துதித்து எதிர்வணங்கி நிற்க, “விதிப்படி இவர்களை நீ வணங்கி நிறைசொன்மாலையைக் குற்றமில்லாத உண்மைத்தன்மையாலே அவர்களைப் பாடுவாயாக” என்று இறைவன் அருளிச்செய்ய, ௧௯௭

344. (இ - ள்) வெளிப்படை. தம்மை ஆளாகக்கொண்ட பெருமான் தாமே இவ்வாறு அருளிச்செய்த ஆணையைக் கேட்டவராய் அவரைத் தலையார வணங்கி நின்ற நம்பிகள் “அவ்வாறு இவர்களை நிறைசொன்மாலை பாடுதற்கு இன்னபடி பாடுவது என்றும், இன்ன பண்பினைப் பாடுவது என்றும் எவ்வாறு அறிந்து துதிப்பேன்? அத்திருத்தொண்டினுக்கு நான் என்ன தகுதியுடையேன்? இவர்களை நிறைசொன்மாலை பாடும் தன்மையை நீயே எனக்குத் தந்தருளிச் செய்தல் வேண்டும்” என்று வேண்டி நிற்க,

345. (இ - ள்) வெளிப்படை. பழைய பெரிய இமய மலையிலே வந்த தூயவளை ஒரு பாகத்திலே யுடைய இறைவன், உலகம் துன்பநீங்கி உய்தற் பொருட்டு வேதங்களை அருளிச்செய்த தமது திருவாக்கினாலே **“தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்”** என்று தொடங்கி எல்லையில்லாப் பெரும்புகழுடையார்களாகிய இவ்வடியார்களை எடுத்துத் துதித்துப் புகழ்மாலை பாடுவாயாக! என்றருளிச்செய்தார். ௧௯௯

இந்நான்கு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன. “ஒப்பார் - பெற்றார் - வெல்வார் - இல்லார் - நின்றார் - ஆர்வார் - நின்றார் (ஆகிய) இவரை நீ அடைவாய்” என்று நாதனார் அருளிச்செய்ய ; ஆரூரர் - “பெற்றேன்” - என்று - போற்ற ; “பாடு” என அண்ணல் கூறக் ; - கேட்டுத்-திருமுனைப்பாடிநாடர் - “பரிசெனக் கருள்செய்” என்ன;- திருப்பாகன் - திருவாக்கால் - “அடியேன்” என்று - இசைப்பா மொழி” என்றான் - எனத் தொடர்ந்து முடித்துக்கொள்க.

342. (வி - ரை) **பெருமையால் தம்மை ஒப்பார் - பெருமை** - மகிமை. இவர்களது பெருமையாவது பிறர் எவரும் செய்தற்கரிய செயல் பலவும் செய்ய வல்லவராதல். “செயற்கரிய செய்வார் பெரியர்”—குறள். “செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசிலர், எய்தற் கரியதனை யெய்தினர்கள்” என்பது சாத்திரம். (திருக்களிற்று-61)

பஞ்சம் வந்து உலகமெல்லாம் வருந்துங் காலத்தும் தாம் அஞ்சாது பெருஞ் சோற்று மலை ஈந்து உயிர்களைக் காத்ததும், "பிறந்தார் பெறும்பயன் இரண்டில் அடியார்க் கமுதுசெய்வித்தல் ஒன்றுமாயின் நீவா" எனச் சூளுரைத்து ஒரு பாட்டுப்பாடிய அளவில், எலும்பு உயிரும் வடிவமும் பெற்றெழச் செய்ததும், இன்னோரன்ன பிறவும் இவர்களது பெருமையாம். இவற்றை முன்னர்த் திருக்கூட்டச்சிறப்பிலே, "பூதமைந்து நிலையிற் கலங்கினு, மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்" என்பது முதலாக வடித்தெடுத்து வகுத்தருளினமை காண்க. பின்னர் ஒவ்வோர் சரிதத்துங் காண்க.

தம்மை ஒப்பார் - தம்மையே தமக்கு ஒப்பாகப் பெற்றார். பிறர் ஒருவரும் ஒவ்வார் என்க. பிரிநிலை ஏகாரம் தொக்கது. "தனக்கு உவமை யில்லாதான்" என்பது எமது தன்மை; "எம்மை அடைந்த அடியார்களாகிய இவர்களுக்கும் அதுவே தன்மை" என்று இறைவன் அறிவித்தபடியாம். இப்பெருமைகளை இப்புராணத்திலே ஒவ்வோர் நாயன்மார் சரிதத்திலும் தனித்தனி விரிவாகக் கண்டுணர்ந்து கொள்க.

பேணலால் எம்மைப் பெற்றார் - பேணுதல் - குழவியைத் தாய் பேணுமாறு போற்றுதல்; என்றும் இடைவிடாது சிந்தித்து வாழ்தல். "வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்" என்ற காரைக்காலம்மையார் புராணம் (58) காண்க. **எம்மைப் பெறுதலாவது** - எம்மைத் தமக்கே உரிய உடைமைப் பொருளாகப் பெறுதல். நாம் அவர்களது அன்புக்குள்ளாவோம்; எம்மை அடைய வேண்டுபவர்கள் அவர்களை அடைந்து, அவர்கள் வழிப்படுத்த எம்மை வழிபட்டு, அவர்கள்தர எம்மை அடையக்கடவர் என்றபடி. "படமாடக் கோயிற் பரமர் - நடமாடக் கோயில் நம்பர்" என்ற திருமூலர் திருமந்திரங் காண்க. அடியார்களைப் பேணலால் அடியடைந்த சிறுத்தொண்டர், அப்பூதியார், குலச்சிறையார் முதலிய நாயன்மார் சரிதங்கள் காண்க. **பேணுதல்**-உவப்பன செய்து வழிபடுதல். "பெரியாரைப் பேணி"—குறள்-(443) உரை.

ஒருமையால் உலகை வெல்வார் - ஒருமை - உணர்ச்சியினால் இறைவனோடு ஒற்றித்திருத்தல். "ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்" என்பது தேவாரம். இதனையே "மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவிதம்" என்றார் தாயுமானார். இறைவனோடு ஒன்றிய இடத்து உலகம் அவ்வுயிரைப் பற்றாது அருளுள் அடங்கி நிற்கும்; ஆதலின், உலகைவெல்வார் என்றார். உலக பாசக்கேடுகளின் பற்றிலிருந்து விடுபட இது ஒன்றே வழி என்று ஒருமையால் என இரட்டுற மொழிந்தவாறுமாம்.

ஊனம் மேல் ஒன்றுமில்லார் - ஊனம் - குறித்ததொன் றாகமாட்டாக் குறைவு. யாதுங்குறைவிலார் என்றதும்அது. 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' என்பன திருக்குறள் ஆணை. உடம்பே ஊனமாவது. ஏனை ஊனங்கள் உடம்போ டொடுங்குவன. உடம்பெடுத்தலே-பிறவியே-ஊனங்கட்கெல்லாம் காரணமும் தாயகமுமாவது. உயிருக்கு வரும் ஊனமாவது உடம்பெடுக்கும் பிறவி. இவர்கள் பேணலால் எம்மைப் பெற்றாராதலின் பிறவி வாராமற் செய்துகொண்டார். ஆதலின் மேல் ஊனம் ஒன்றுமில்லாராயினர்.

அருமையாம் நிலை - பிறரால் அடைதற்கரிய நிலை.

அன்பினால் இன்பம் ஆர்வார் - அன்பு காரணமாக இன்பம் உளதாம். "இன்பமே யென்னுடை யன்பே", "இறவாத வின்ப அன்பு வேண்டி" முதலிய திருவாக்குக்கள் காண்க.

இருமையும் கடந்து நின்றார் - இருமை - இம்மை மறுமை என்பன. அவை இம்மை என்னும் இவ்வுலகப்பிறப்பு நிலையும், மறுமை என்னும் சுவர்க்க நரகப் பிறப்பு நிலையும் ஆம். இறைவனைப் பற்றிநின்ற நிலையினாலே இவ்வுலக நிலையையும், சுவர்க்காதி போகங்களைப் பொருளல்ல வென்றொதுக்கியதால் மறுமையும் கடந்தவர். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு", "போகம் வேண்டி வேண்டிலேன்பு ரந்த ராதி யின்பமும்", "சுவர்க்கங்கள் பொருளலவே", "உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்". (திருவாசகம்)

"நின், றிருவடி பிடித்து வெருவால் விட்டு
மக்களு மனைவியு மொக்கலுந் திருவும்
பொருளெனை நினையா தன்னரு ளினைநினைந்
திந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தன ராதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி யோவாத்
தகவெனு மரிவையைத் தழீஇ மகவெனப்
பல்லுயி ரனைத்தையு மொக்கப் பார்க்குநின்
தெய்வக் கடவுட் டொண்டர்"

—பதினோராந் திருமுறை - திருவிடை - மும்மணி - 7

முதலிய திருவாக்குக்களிற் கண்ட இலக்கணங்களும், அவற்றிற் கிலக்கியமாய் விளங்கும் சிறுத்தொண்டர், இயற்பகையார் முதலிய நாயன்மார் சரிதங்களும் காண்க.

இருமை - "இருமை வகை தெரிந்து" என்ற குறளிற் பரிமேலழகியார் இருமை யென்பதற்குப் பிறப்பு வீடென்று உரைகண்டார். வீட்டைக் கடந்த நிலை வேறின்மை யாலும், இங்கு இருமையுங்கடந்து என்றமையாலும் ஈண்டு மேலே கண்டவாறுரைக்கப் பெற்றது. இருமை - எண் குறித்ததாகக் கொண்டு பிறப்பும் இறப்புங் கடந்த பேரா வியற்கை பெற்றூர் என்றலுமாம்.

"பெத்தத்துந் தன்பணி யில்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி யில்லை முறைமையால்
அத்தற் கிரண்டு மருளா லளித்தலாற்
பத்திப் பட்டோர்க்குப் பணியொன்று மில்லையே"—எட்டாந் திரு - 507

என்ற திருமூலர் திருமந்திரக் கருத்தினைக்கொண்டு இவர்நிலையினை இவ்வாறுரைத் தலும் ஒருவகையாற் பொருந்துவதாம். "வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" என்ற தும் காண்க.

இவ்வாறன்றி இதற்கு இருவினைகளையும், இன்ப துன்பங்களையும், பிறப்பிறப்புக் களையும், ஒழித்தவர் என்று கூறுவாருமுண்டு.

இவரை - அண்மைச் சுட்டு. இதோ இங்கு முன்னர்த் தேவாசிரியனிற் கூடி யிருக்கும் இவர் எனக் காட்டிக் குறித்தபடியாம்.

அடைதல் - அடிமையாகச் சேர்ந்து அவர்களோடணைதல். 196

343. **(வி - ரை) ஏதம் தீர் நெறி** - குற்றங்கள் தீர்தற் கேதுவாகிய நெறி. "ஏத மானவை தீர்க்க விசைந்தன" (339) என்றமை காண்க. இங்கு **நெறி** என்றது அடிய வர் கூட்டத்து அணைவதனை. இது சிவஞானபோதம் 12-ம் சூத்திரத்திலே விதந்து பேசப் பெறுவதாம். இப்புராணத்தி னுட்பொருளாய் விளங்குவது இதுவே.மலந்தீர்ந்த சீவன்முத்தர்க்கும் வாசனுமலத்தையும் வாராமற்காத்துதவுவது அடியார் கூட்டமேயாம் என்பது சாத்திரம். **தீர்த்தல்** - தீர்தற் கேதுவாதல்.

நீதியால் - அடியவர் வணக்கத்திற்குச் சாத்திரங்களில் விதித்தபடி.

"ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்
டவர்கரும முன்கரும மாகச் செய்து

கூசிமொழிந் தருண்ஞானக் குறியி னின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே"

எனவரும் சிவஞானசித்தியார் முதலிய சாத்திரவிலக்கணங்களிலும், இளையான்குடி மாற நாயனர் முதலியோர் சரிதவிலக்கியங்களிலும் கண்ட நீதி.

நிறை சோன் மாலை - நிறை சொல் - "அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி" என்பர் பரிமேலழகர். ஈண்டு இம்மொழிகள் தம்முடைய பயன்களைப் பயந்தேவிடுதலாவது தேவாரத் திருவாக்குக்களின் விளையும் உறுதிப் பயன்களாம். முதலைவாய்ப் பிள்ளை அழைத்தல் முதலியவற்றிற் கண்டுகொள்க.

கோதிலா வாய்மை - குற்றங்களை இல்லையாகச் செய்யும் உண்மைத் தன்மை. "வாய்மையெனப் படுவது யாதெனில் யாதொன்றுந், தீமையிலாத சொலல்" என்னும் குறளும், அதில் தீமையிலாத—என்பதற்குத் தீமைபயவாத என்ற உரையும் இங்கு வைத்துக் காண்க. "நாவின் **வாய்மையாற்** போற்றினர்" (திருஞான - புரா - 1078), "போதியோ வென்னும் - அன்னமெய்த் **திருவாக்கெனு** மமுதம்" (ஷெ 1088), "குரும்பை யாண்பனையீனும் என்னும் **வாய்மை** குலவுதலால்" (ஷெ 980) முதலிய ஆணைகளின் இலக்கணத்தை நோக்குக.

சோன்மாலை - சொல்லாலாகிய மாலை.

கோதிலா வாய்மையாலே பாடு -

"......நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்......" (216)

என முன்னர்த் தம்மைப் பாடுமாறு ஆணையிட்ட பரமன், இப்போது அதுபோலவே தம் திருவாக்கினால், தமக்கும் தம் அடியவர்க்கும் பேதமின்மையை விளக்கி, "இவர்களை நிறைசொன் மாலை பாடுக" என்றருளியது காண்க. தம்மைச் **சொற்றமிழ்** பாடுக என்றவர், அவர்களை **நிறைசொன் மாலை** பாடு என அடைகொடுத்துக் **கூறியது** அவர்களது ஏற்றத்தை எடுத்துக் காட்டியபடியாம். 197

344. (வி - ரை) **இன்னவாறு** - அவர்களது வரலாறு இன்னது. **இன்னபண்பு** - அவர்களது தன்மை இன்னது. **ஏத்துகேன்** - இவை இன்ன என்றறியாமையால் எவ்வாறு ஏத்தவல்லேன்?

அதற்கு யான் ஆர் - அவ்வாறு ஏத்துவதற்கு என்ன உரிமை - என்ன தகுதி "நான் ஆரென் னுள்ளமார்?...என்னை ஆண்டிலனேல்" என்ற திருவாசகம் காண்க.

பாடும் பரிசு எனக்கு அருள்செய் - "உன்றன் குணப்பெருங்கடலை நாயேன், யாதினை யறிந்தென் சொல்லிப் பாடுகேன்" (218) என மொழிந்து முன்னர்க் கேட்டதும், ஆண்டானைப்போலவே அடியாரும் உணரவும் ஓதவும் படாராதலின் அதற்கு இறைவனை வேண்டிப் பெறுதலும் உய்த்துணர்க. 198

345. (வி - ரை) **தொல்லை...பாகன்** - **தொல்லை** பழமை; **மால்வரை** - பெரிய மலை; **தூயாள்** - தூய்மைகட்கெல்லாம் இடமானவள்; கருணையே திருமேனியாதலின் தூயாள் என்றார். பாட்டுக்குரிய கருணையுடன் அருள்செய்தார் என்றது குறிப்பு. "சத்தி யருளன்றிச் சத்தனருளின்றாம்" (திருமூலர்) என்றபடி தான் சத்தியுடையானுகி அருளினன் என்றலுமாம். அருணாதவொலியாய் மந்திரமாய் அருளப்பெறும் அப்பாட்டுக்கு அருட்சத்தியுடன்கூடிய உருவினனாகித் தோற்றுவாய் செய்தருளினன் என்ற கருத்துமாம். "மூவனை...படியெழுதலாகாத மங்கையோடு மேவனை" எனத் திருவாலவாய்த் திருத்தாண்டகத்திலே அம்மையாரது நாத உருவத்தைத் துதித்தமைகாண்க.

அல்லல்தீர்ந்து உலகு உய்ய - உலகு உய்யமறையளித்த - என்றும், உலகு உய்யப் பாடுக - என்றும் இரண்டிடத்தும் இயைத்துப் பொருளுரைத்துக் கொள்க. உலகுய்ய

மறையளித்தலாவது தருமங்களை விதித்தலும், நமகம் சமகம் உருத்திரம் முதலியவற்றால் இறைவனது இலக்கணங்களை ஒருவகையாற் காட்டி நிற்றலும் ஆம். இவற்றை அறிந் தொழுகுவதனால் உலகம் உய்யுமென்பது. **மறையளித்த திருவாக்கால்** அடியெடுத்துச் சொன்னார் என்றமையால் இதுவும் மறையேயாம் என்று எடுத்துக்காட்டியவாறு. மறை யளித்தவர் அதனோடமையாது இதனைச் சொன்னார் எனவே, அதனினும் சிறந்ததாய், அடியார்களைத் துதித்தும்,ஆண்டான் அடியார் இலக்கணங்களை நேரே எடுத்துக்கூறியும் விளங்கும் இதன் சிறப்பையுங் குறித்துக் காட்டியபடியாம்.

உலகு உய்ய மொழி என்று காட்டியவிடத்துத் "தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர" (35), "தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பணித்த திருவாளன்" (சண்டேசர் - 60) முதலிய திருவாக்குக்களை நினைவுகூர்க. இதனால் உலகம் உய்தலாவது அடியவர் கூட்டத்தைச் சார்ந்து அவர்களது சத்பாவனைப்பயன் பெறுதலும், அத னால் ஆகாமியம் மேலும் ஏறாது காத்துக் கொள்ளுதலும், வாசனாமலம் தாக்காது காவல் பெறுதலும் முதலியனவாம். விரிவு சிவஞானபோதம் 12-ம்சூத்திரத்துட் காண்க.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் - இது தியாகேசர் அடி எடுத்துக் கொடுத்த முதல். "என்பெயர் **பித்தனென்றே** பாடுவாய்" (219) என முன் னர்த் தம்மைப்பாடுதற்குப் **பித்தன்**என்ற ஒருமொழியே சாலும் என எடுத்துக்கொடுத்த இறைவன், தம் அடியாரைப் பாடுதற்கு இவ்வாறு இப்பாட்டின் ஒரு பாதி அடியினை முதலாக எடுத்துத் தந்தருளினது அடியார் பெருமையையும், அவர்களைப் பாராட்டும் முறையையும் உணர்த்துதற்காம். அந்தணர்க்கடியேன் என்னாது **அந்தணர்தம் அடியார்க் கும் அடியேன்** என்றது அடியவரின் அருமையும் பெருமையும் குறித்தற்கு. "ஆசை யொடும் அரனடியாரடியாரை யடைந்திட்டு" என்ற சாத்திரமும் இக்கருத்தேபற்றியது. வைணவர்வழிபாட்டு முறையில் இவ்வாறே பல அடுக்கிக் கூறுவதும் காண்க.

தில்லை வாழ் அந்தணர் - நடராசரை முதல்வராகக் கொண்ட தில்லைமூவாயிர முனிவர். அந்தணர் என்றது "அறவாழியந்தணன்" என்ற குறளிற் போலவும், "திரு மார்பன் முதலாய தேவருக்கெல் லாமறையோன் சிவனே யாமென், றொருவாய்மை மறைகரைந்தது" (பேரூர்ப் புராணம்) என்றபடி வேதங்களில் விதித்தது போலவும் முதற்கண் இறைவனை உணர்த்தும். அதன்பின் இரட்டுற மொழிதலால் மூவாயிர முனி வோரையும் உணர்த்தும். இதன் விரிவு தில்லைவாழந்தணர் புராணத்துட் காண்க.

எல்லையில் வண்புகழ் - அளவு கடந்த வள்ளற்றன்மையால் வந்த புகழ். "அள விலா வடியார் புகழ்" (5) எனப் பாயிரத்துட்கூறியதுங் காண்க. "இது பெரும் பாலும் ஈதல்பற்றி வருதலின் அதன் பின் வைக்கப்பட்டது" எனப் புகழ் என்ற அதி காரத்தின் வைப்பு முறையைப் பரிமேலழகியார் விளக்கினார். **வண்புகழார்** - வள்ளன் மையால்-வரையாது கொடுத்தலாற் போந்த கீர்த்தியையுடையார் என்க. "சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலியார்" முதலிய நாயன்மார் சரிதங்களாலே இதன் உண்மை தெளிக. சீர்கொண்ட புகழ் என்பதனை "ஞாலமார் புகழின் மிக்கார் - சாலுமீகைத் திறத்திற் சிறந்த சீரார்"—(சிறப்புலி - புராணம். 3) என்று பின்னர் ஆசிரியர் விளக்கி யருளியதும் காண்க.

இசைப்பா-இசைகளைத் தம்முட்கொண்ட பாட்டு. சிவபெருமானது இசைகளைக் (புகழ்களைக்) கொண்ட பாட்டு. திருவிசைப்பா என வழங்குவதும் காண்க.

பாகன் - திருவாக்கால் - அடியேன் என்று எடுத்துப் - புகழாரை - இசைப்பா - உலகுய்ய - மொழி - என்றார் எனக் கூட்டியுரைக்க. 199

346\. மன்னுசீர் வயலாரூர் மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற வடிவணங்கித் திருவருண்மேற் கொள்பொழுதின்

முன்னமா லயனறியா முதல்வர்தா மெழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பாற் சார்வதனுக் கணைகின்றார், ௨௦௦

347. தூரத்தே திருக்கூட்டம் பலமுறையாற் றொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
வீரத்தா ரெல்லார்க்குந் தனித்தனிவே "றடியே"னென்
றார்வத்தாற் றிருத்தொண்டத் தொகைப்பதிக மருள்செய்வார், ௨௦௧

348. தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளாற் றிருத்தொண்டத் தொகையான திருப்பதிக
மும்பர்பிரான் றானருளு முணர்வுபெற வுலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார். ௨௦௨

346. (இ-ள்) வெளிப்படை. நிலைபெற்ற சிறப்புடைய வயல்களாற் சூழப்பெற்ற திருவாரூர்த் தியாகேசரது பாதங்களில் தமது முடி பொருந்தும்படி வணங்கி, அவரது திருவருளை மேற் கொண்டிருந்த பொழுதிலே, பிரம விட்டுணுக்களால் நினைக்கவும் முடியாத அம்முதல்வர் எழுந்தருளினாராக; அதனைக்கண்டு நம்பிகள், தேவாசிரியனிற் கூடியிருக்கும் அடியார்களிடத்தே சார்வதற்கு அங்கு அணைவாராகி, ௨௦௦

347. (இ-ள்) வெளிப்படை. அடியார் திருக்கூட்டத்தைத் தூரத்து நின்றே பல முறையாலும் வணங்கியும், அன்பின் மிகுதியினாலே மீண்டும் தாழ்ந்தெழுந்தும், பின்னர் அருகேபோய் நின்றுகொண்டு, எக்காலத்தும் அழியாத வீரமுடையார்களாகிய அவர்கள் ஒவ்வொருவர்க்கும் தனித்தனியாக அவ்வவர் திருப்பெயர் சொல்லி இவர்க்கு அடியேன், இவர்க்கு அடியேன் என்றும், பின்னர் அதற்கு வேறாகத் தொகுதியாய்க் குறித்து இத்தொகுதியார்க்கு அடியேன் என்றும் துதித்து மேன்மேல் எழுகின்ற ஆசையினால் திருத்தொண்டத்தொகை என்ற பேர்பெற்ற திருப்பதிகத்தை நம்பிகள் அருளிச் செய்வாராய், ௨௦௧

348. (இ-ள்) வெளிப்படை. தமது இறைவன் எடுத்துக்கொடுத்த மொழிகளையே முதலாக வைத்துத் தொடங்கிய தமிழ்ப் பாமாலையாய்ச் செம்பொருள் கொண்டு திருத்தொண்டத் தொகையாகிய திருப்பதிகத்தை அந்த இறைவனே அருளும் உணர்வுபெறுதலால் உலகம் ஏத்துமாறு எமது தலைவராகிய வன்றொண்டர் பாடி முடித்து அத்திருக்கூட்டத்தின் முன்னர் வணங்கினார். ௨௦௨

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு முடிவு கொண்டன. மன்னவரை - வணங்கி - மேற்கொள் பொழுதில் - முதல்வர்-எழுந்தருளச் - சார்வதனுக்கு அணைகின்றாராய்த் - தொழுது - தாழ்ந்து - எழுந்து - சென்று - எய்தி - நின்று - தனித்தனி - வேறு - அடியேன் என்று - பதிகம் அருள் செய்வார் - முதலாக - மாலை - பொருளால் - பெற-ஏத்தப்பாடி - வன்றொண்டர் - எதிர்பணிந்தார்-என்று தொடர்ந்து முடித்துக்கொள்க.

346. (வி-ரை) **ஆரூர் மன்னவர்** - தியாகராசர். "ஆரூர் ஆண்ட" (தேவாரம்)

திருவருள் மேற்கொள் பொழுது - தாம் பெற்ற அத்திருவருளின் வழியாய் நின்ற போது-திருவருளாணையின்படியே பாடத் தொடங்கியபோது என்பர்.

அந்நிலை கண்டு - "அவர்க்கெதிர் காணக் காட்டும் படியெதிர் தோன்றி நிற்கும்" (336) நிலையை இதுவரை கண்டுகொண்டிருந்த நம்பிகள் இப்போது அவர் அக்காட்சியை மறைத்து எழுந்தருளிவிட்ட அந்த நிலையினைக் கண்டு. **எழுந்தருள** என்பது இறைவன் முன் காட்டிய வெளிப்பாட்டு நிலையினை மறைத்துத் தமது வியாபக நிலையினுட்போகும் நிலையைக் குறிக்கும் சைவசம்பிரதாய வழக்கு. "என்றெழுந்தருளினாரே" (திருநீலகண்ட

நாயனார்புராணம்-42) "எழுந்தருளினரையர்" (அமர்நீதிபுரா - 47) முதலிய பல இடத்தும் காண்க. இவ்வாறன்றி, இதற்கு இறைவன் கோயிலுக்குள் எழுந்தருளினரோ, அன்றித் தேவாசிரியனுக்கு எழுந்தருளினரோ என்றெல்லாம் எடுத்துக்கொண்டு உரை கூறுவது மரபன் றென்க.

அடியவர்பாற் சார்வதனுக்கு அணைகின்றார் - ஆண்டவனது சார்பு நேரே காணுவாறு மறைந்தருளியமை கண்டனர்; அதுகாலை அடுத்த சார்பு அவனடியார்களாகிய இவர்களேயாம் என்று கொண்டனராய் இவர்களைச் சார அணைகின்றார் என்பதும் குறிப்பு.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்பது குறள். இக்குறளுட் போந்த உண்மையை இங்கு வைத்துக் கண்டு களிக்க. இக்குறளினைத் திருக்கயிலாய ஞான உலாவிலும், நெஞ்சுவிடுதூது என்ற ஞான சாத்திரத்திலும் வைத்து ஆளப் பெற்றுள்ளதே இதன் பெருமையை விளக்கும். சாரவேண்டிய அடியையும் அடியாரையும் சார்ந்தவர்களே, தாம் இப்போது சார்ந்து நின்ற உலகச் சார்பை ஒழித்துப் பிறவித்துன்ப நீங்குவர் என்பதாம். இதனால் அணைந்தோர் தன்மையை விளக்கியவாறு.

அணைகின்றார் என்ற சொல்லினழகும் நோக்குக.

சார்பு - சைவசித்தாந்தத்திலே சிறப்பாய்ப் பேசப்பெறும் அரிய உண்மையை விளக்குவதோர் சொல். உயிர் சார்ந்ததன் வண்ணமே தன்வண்ணமாய்க் கொண்டு நிற்கும் என்பது சைவசித்தாந்த உண்மை. "மாந்தர்க், கினத்தியல்ப தாகு மறிவு" (குறள்) என்பதும் இப்பொருள் பற்றியது.

"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ"—**தாயுமானார்**

முதலிய திருவாக்குக்கள் காண்க. **சார்தல்** என்னும் இவ்வரிய பொருளையும் சொல்லையும் இப்புராணத்துட் பின்னர்க் காணும் பல இடங்களிலும் இவ்வாறே பொருள் கொண்டு உய்த்துணர்ந்து கொள்க.

அணைகின்றார் - அணைந்தார் தன்மைகளை சிவஞானபோதம் 12-ம் சூத்திரம் பேசும். எதிர் காட்சி கண்ட முதற்றிருவாயிலிலிருந்து தேவாசிரியனை நோக்கி வருகின்றாராகி - அணைகின்றாராகி - முற்றெச்சம்.

செல்வதனுக்கு—என்பதும் பாடம். 200

347. **(வி - ரை) திருக்கூட்டம்** - கூட்டம்-கூடியிருந்த அடியவர்களைக் குறித்தது - ஆகுபெயர். இத்திருக் கூட்டத்தின் இயல்பும் விரிவும் முன்னர்த் திருக்கூட்டச் சிறப்பிற் காண்க. **அதனைத் தூரத்தே தொழுதல்** - அதன் பெருமையும், அதனை நோக்கத் தமது சிறுமையும், அதனை வணங்கும் முறையும் குறித்ததாம். திருக்கூட்டம் பேணுதேகும் ஊரனுக்கும் புறகு என்று வெகுண்ட விறன்மிண்டர் மகிழுமாறு **தூரத்தே தொழுதார்** என்பாரும், இது அவரது கோபத்தின் மிகுதி குறித்தது என்பாருமுண்டு.

பல முறையால் தொழுது - மனம் - மொழி - மெய் என்ற மூவகை வணக்கமும், மூன்றுறுப்பு - ஐந்துறுப்பு - எட்டுறுப்பு - என்னும் பலவகை உடல் வணக்கமும், இவை ஒன்றுக்கு மேற்பட மீளமீளச் செய்தலாகத் தொகையின்மிக்க வணக்கமும் அடக்கிப் **பல முறையால்** என்றார். "மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்குகின்றார்" என்றதும் காண்க. (திருஞான - புரா - 1023)

அன்பு சேரத் தாழ்தல் - மேன்மேல் அன்பு கூர்தலால் மீண்டும் மீண்டும் வீழ்ந்தெழுந்து வணங்குதல். **சேர** - சேர்தலால்; சேரும் பொருட்டு என்றுரைத்தலுமாம் **தாழ்ந்து** - விரும்பி என்றுரைப்பினுமாம்.

நின்று - (வன்றொண்டர்) நின்று அருள் செய்தார் என்று கூட்டுக. அடியார்கள் வீற்றிருக்க அவர்களின் முன் நின்று துதிக்கும் முறை குறித்தவாறு.

நின்று என்பதனைத் தத்தமது சித்த நிலைகளிலேயும் ஒழுக்கத்திலேயும் நிலை பெற்று நின்று அந்நிலைகளினின்றும் சிறிதும் பிறழாத வீரமுடையார், என அடியார்களுடன் கூட்டியுரைத்தலு மொன்று. "சித்தநிலை திரியாது செய்பணியின் றலைநின்றோர்" - (திருநா-புரா - 422) முதலிய திருவாக்குக்கள் காண்க. "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம், மலையினும் மாணப்பெரிது" என்பது குறள். "வானந் துளங்கிலென்?" என்றது அப்பர் சுவாமிகள் தேவாரம். "வீர மென்னால் விளம்புந் தகையதோ" (144) என்றதும் இங்கு நினைவு கூர்க. விரிவு ஆண்டுக் காண்க.

தனித் தனி வேறு அடியேன் என்று - தனித்தனியும் வேறும் என உம்மைத் தொகையாக்கித் தனித்தனி அடியேன் என்றும், அதற்கு வேறாய்த் தொகுதி குறித்து அடியேன் என்றும் உரைக்க. தனியடியார், தொகையடியார் என்ற இருபகுப்பும் குறிக்க இவ்வாறு கூறினார். இவ்வாறு கொள்ளாக்கால் **வேறு** என்றது கூறியதுகூறலாய் வேறு பொருள் பெறாது நிற்றலறிக. "பத்தராய்ப் பணிவார்கள்" என்று தொடங்கும் பாசுரத்திற் குறித்த அடியார்களைத் தொகையடியார்கள் என்பது வழக்கு.

ஆர்வத்தால் - ஆர்வம் - அடியார் வணக்கத்தில் மேன்மேல் எழும் ஆசை. இதுவரை ஆரூரில் அம்மானுக்கு ஆளாய்ப் பணிசெய்யப்பெற்ற ஆரூரனாகிய அடியேன் இன்று தில்லைவாழ் அந்தணர்த மடியார்க்கு மடியேனாகப்பெற்றேன் - பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியனாகப் பெற்றேன்-பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேனாயினேன் - சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியனானேன்-எனது இவ்வடிமைத்திறத்தைக் கேட்டுவப்பாரும் ஆரூர் அம்மானுக்கன்பராவார் என்று மேலும் மேலும் பாராட்டிப் போற்றி உலகினுக் குறுதிகூறுதல் ஆசைப்பாட்டின் மிகுதி காட்டிற்று. இது இத்திருப்பதிகம் அருளியபோது நம்பிகளின் உள்ளநிலை குறித்தது.

தொழுது - தாழ்ந்து - எழுந்து - சென்று - எய்தி - நின்று - என்பன நம்பிகளது அரிய வணக்கத்தின் பற்பல செயல்களையும் தனிச் சொற்களாற் பிரித்து எடுத்துக் காட்டியவாறு. **திருத்தொண்டத் தொகைப்பதிகம்**-பதிகத்தின் பெயர் குறித்தபடியாம். திருநீற்றுப்பதிகம் என்பது போல. **தனித்தனி வே றடியே னென்று** - அப்பதிகத்தின் அமைப்பும் நுதலியபொருளும் குறித்ததாம். **வீரத்தார்** - பதிகத்துப் பாடப்பெற்றோர் தன்மை காட்டியபடி. **எல்லார்க்கும்** - எல்லாக்காலத்தும் எல்லா இடத்தும்உள்ள இத் தன்மையரெல்லாருக்கும் என விரித்துரைக்க. விரிவு அப்பாலுமடிச்சார்ந்த அடியார் புராணத்துட் காண்க.

நின்றிறைஞ்சியா - அருள்செய்தார்—என்பனவும் பாடங்கள். 201

348. (வி - ரை) **தம்பெருமான்** - தம்மை ஆட்கொண்டு பணித்த இறைவன். முன்னர்த் திருக்கயிலையிலும்,பின்னர்த் திருவெண்ணெய் நல்லூரிற்றொடங்கி இங்குப் போந்தவரையிலும் பணிகொண்டவர்.

மொழி - தொடர்மொழி. "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்பதாம். **முதலாக**-அதனையே தொடக்கமாகக் கொண்டு என்க. கைமுதல் - விதைமுதல் - என்பன போலக் காரணமாகிய ஊதியமாக - மூலதனமாக - என்றுரைத்தலுமாம்.

தமிழ்மாலை - நிறை சொன்மாலை (343) எனும் தமிழ்ப்பாட்டுக்களா லாகிய மாலை. இது பதிகத்தின் தொடையைக் குறித்தது. **செம்பொருளால்**-இது பதிகப் பொருளைக் குறித்தது. எனவே சொல்லும் பொருளும் குறித்தபடியாம். **செம்பொருள்** - செம்மையைத் தரும் பொருள். **செம்மை** - சிவத்தன்மை - முத்தி. " திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட" என்ற இப்பதிகம் நான்காவது பாசுரங் காண்க.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு" என்பது குறள்.

"செம்மைபெற வெடுத்ததிருத் தோடுடைய செவியனெனு
மெய்ம்மைமொழித் திருப்பதிகம்"—(திருஞான - புரா - 76)

"தீதுறு பிறவிப் பாசந் தீர்த்தல்செம் பொருளாக் கொண்டு"—(ஷை 1245)

முதலிய திருவாக்குக்கள் காண்க.

சைவசமய பரமாசாரிய மூர்த்திகளது தேவார திருவாசகங்களின் பயன் பிறவி நீங்கி வீடடைவதேயாம் என்பது ஆன்றோர் துணிபு. ஆதலின் **செம்பொருளால்** என இத்திருப்பதிகத்துக்குப் பொருள்கண்டார் ஆசிரியர்.

திருத்தொண்டத் தொகையான் - திருத்தொண்டர்களது வரலாறும் பண்பும் இன்ன என்று தொகுத்துக் கூறுவதான. முன்பாட்டிற் கண்டது பதிகப்பெயர். இங்குக் கூறியது அதன் பொருளமைதியும் விவரணமுமாம். **தொகையான்**-தொகைக் கூற்று ஆயின. **திருப்பதிகம்** - பத்துப்பாட்டுக்கொண்ட பாமாலை பதிகம் எனப்பெறும். இது பொதுவிலக்கணத்தாலே, சிறுபான்மை 11-12-பாட்டுக்கொண்ட பாமாலைகளுக்கும் பொருந்த வழங்குவது. இங்கு 11 திருப்பாட்டுக் கொண்ட இத்தமிழ்மாலை பதிக மெனப்பெற்றது. **பதிகம்** - முன்னர் (48) இப்புராணத்திற்குப் பதிகமாய்க் கொள்ளப் பெற்றதென்று உரைத்தலுமாம்.

உம்பர் பிரான் தான் அருளும் உணர்வுபெற உலகு ஏத்த - **உம்பர் பிரான்**-தேவ வுலகிலே அரசு வீற்றிருந்தருளிய தியாகேசர். அவர் அருளிச்செய்த உண்மை யறிவினை உண்முகமாகப் பெற்றதனாலே அதனை உலகம் ஓதி உய்யும்பொருட்டுப் பாடி என்க. மொழிஎடுத்துக் கொடுத்தருளு முன்னரே பொருள்களை உண்ணின்று உணர்த்தினார் - என்பது "மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை யுணர நல்கி" (341) என மேலே கூறியதனாற் பெற்றாம்.

எனவே திருத்தொண்டத் தொகைப்பொருள் யாவும் இறைவன் அருளிய பதி ஞானத்தாற் பாடியதாலும், அவனே தந்த மொழிகொண்டு பாடியதாலும் அது முற்றும் தியாகேசருடைய வாக்கேயாய்ப் பதிவாக்காகிய வேதமே என்பது துணியப்பெறும்.

பெற பாடி - பெறுதலினாலே அதன் துணைகொண்டு பாடி. **உலகேத்த** - உலகம் அறிந்து ஓதித் துதித்து உய்யும்படி. இதுவே நம்பிகளது அவதார தத்துவமுமாம் என்பது, "தீதிலாத்திருத் தொண்டத் தொகைதரப் போதுவார்" (35) என்று முன்னர்க் கூறப்பெற்றது.

அவர் - வீரத்தார்களான அத்திருத்தொண்டர்கள்.

வன்றொண்டர் - மன்னவரைச் சென்னியுற அடிவணங்கியவராகிய (346) அந்த வன்றொண்டர். தொண்டர் எதிர் பணிந்தார் என்று உரைத்துக்கொள்க.

தொகையான்ற—என்பதும் பாடம்.　　202

திருத்தொண்டத்தொகைத்திருப்பதிகம்

இப்பதிகம் முன்னர்த் திருமலைச்சிறப்பின் இறுதியில் "**பதிகம்**" என்ற தலைப் புடன் 59, 60, 61 பக்கங்களில் தரப்பெற்றுள்ளது.

பதிகக் குறிப்பு:—தேவாசிரியனில் எழுந்தருளிய அடியார்களுக்குத் தனித்தனி வேறடியேன் என்று அவர்களை வணங்கித் துதித்தபடியாம்.

மேலே 347-ம் பாட்டில் **ஆர்வத்தால்** என்றதன் கீழ் உரைக்குறிப்புப் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—பின்னர் ஒவ்வோர் அடியார் புராணத் தலைப்பிலும் கண்டுகொள்க. சிற்சில குறிப்புக்கள் மட்டும் இங்குத் தரப்பெறுவன.

1. இல்லையே என்னாத - சரிதக்குறிப்பு. வேல்லுமா மிகவல்ல · இக்கருத்தை ஆசிரியர் "வேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்" என்று விரித்தருளி னர். குன்றையார் - செங்குன்றூர் என்னும் நகரில் வந்தவர். முல்லையந் தார் - வணிகர்க் குரிய மாலை. 2. இலைமலிந்த வேல் - பரசு. மங்கை - திருமங்கலம். 3. மும்மை - திரு நீறு - கண்டிகை-சடைமுடி. "மெய்ம்மையே திருமேனி...அடியேன்" இப்பாசுரத்தின் ஒன்றறை அடியிற்றுதித்தது சண்டீசர் அரனுர் மகனுரான சிறப்புப்பற்றிப்போலும். "வம்பறு வரிவண்டு...அடியேன்" என்ற 5-வது பாசுரத்தில் ஆளுடைய பிள்ளையா ரைத் துதித்திருப்பதும் காண்க. 4. திருநின்ற செம்மை - சிவத்தன்மை. பெருநம்பி - இதனை ஆசிரியர் புராணத்து விரித்தது காண்க. பேயார் - பேயுருவம் வேண்டிப் பெற்ற காரைக்காலம்மையார். விரிவு புராணத்துட் காண்க. 5. அடியலாற் பேணு எம் பிரான் - " ஈசன் கழலே பேணுஞ் சம்பந்தன் "—காந்தாரம் - சம்பந் - சீகாழி - 11. " அண்ணல் சரிதைகள் பரவிநின் றுருகு சம்பந்தன் "—குறிஞ்சி - திருவிடைச் சுரம் - 11 ; " கழுமலம் விரும்பிய கோயில் கொண்டவர்மேல், வலிகெழு மன மிக வைத்தவன் மறைசேர் வருங்கலை ஞானசம்பந்தன் "—குறிஞ்சி-திருக்கழுமலம்-11. "கைச்சிறு மறியவன் கழலலாற் பேணுக் கருத்துடை ஞானசம்பந்தன்"—குறிஞ்சி - சம்பந் - அச்சிறுபாக்கம் - 11. என்ற தேவாரங்கள் காண்க. நாட்டமிகு தண்டி - சரிதக் குறிப்பாகும். நம்பிரான் திருமூலன் - சைவசித்தாந்த மரபிலே ஆகமந் தமிழில் மொழிந்த பெருமான் என்பது குறிப்பு. அம்பரான் - திருஅம்பர் நகரினை யுடையார். 6. கழலே மறவாது - "சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே...மறவாமை தலை நின்றார்" என இதனை ஆசிரியர் இப்புராணத்துள் விரித்தமை காண்க. சீர்கொண்ட புகழ் வள்ளல்-விரிவு புராணத்துட் காணப்பெறும். கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார் - "பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க், குரிமையி னுரிமையி னுதவி"— திருமுகப்பாசுரம்-பதினொராந்திருமுறை·"தண்டாதகொடை" கழறிற் - புராணம் (14.) 7. பொய்யடிமையில்லாத புலவர் - " பொய்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர், பரணர்நக் கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர் - அரன் சேவடிக்கே... - கவி பல பாடும் புலவர்கள்" என்பது நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதி. கருவூர்த்துஞ்சிய - கைதடிந்த வரிசிலையான் - சரிதக்குறிப்புக்கள். 8. " நிறைக்கொண்ட...அடியேன் - சரிதக்குறிப்பு. 9. காக்கின்ற பெருமான் - திகழ்காலத்தாற் கூறியது குறிக்க. பொன் னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணை - வழிவழி யகம்படித் தொண்டுரிமை பூண்ட ஆதிசைவர். 10. தொகையடியார்களைத் துதித்தது இப்பாசுரம். 11. தென்னவனு யுல காண்ட செங்கணூர் - சரிதக்குறிப்பு. "திம்ப நறுந்தொங்கற் கோச்செங்கணுன்"-திருத் தொண்டர் திருவந்தாதி. அன்பராவார் - பதிகப்பயன் குறித்தது.

தலவிசேடம் - முன்னர்க் காண்க. (163 - 164 - பக்கங்கள் பார்க்க.)

349. உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தி னடுவணைந்தார்
தம்பிரான் றோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே
யெம்பிரான் றமர்கடிருத் தொண்டேத்த லுறுகின்றேன். உ0௯

(இ - ள்) உம்பர் நாயகர்...அணைந்தார் - இறைவனது அடியவர்கள் மிக மகிழ்ச்சி யடைய ஆரூர் நம்பிகள் அத்திருக்கூட்டத்துட் சென்று அணைந்தனர். தம்பிரான்... உறுகின்றேன் - தம்பிரானும் தோழருமாகிய அவர்கள் சொல்லிய அத்தமிழ்த் திருப் பதிகங்காட்டிய அம்முறையிலே தனித்தனியாய் விரித்து,இறைவனுக்குகந்தவர்களாகிய அடியார்களது திருத்தொண்டின் வரலாறுகளையும் தன்மைகளையும் எடுத்துக்கூறித் துதிக்க முற்படுகின்றேன். (இது ஆசிரியர் கூற்று).

(வி - ரை) உம்பர் நாயகரடியார் பேருவகை தாமெய்த - **உம்பர் நாயகர்** - தேவர் கட்கரசு செய்வார். "உம்பர்கட்கரசே" - திருவாசகம். முதலில் நம்பிகள் "இவர்க்கு நான் அடியேனுகப் பண்ணும் நாள் எந்நாள்" (335) என்று சிந்தித்துத் தூரத்தே தொழுதுபோய்,பின்னர்ப் பெருமான் அருள்பெற்று,அவர்பாற் சாரவணைந்து வணங்கி, அவன் அருளிய வழியே மொழிந்து தனித்தனி துதித்து வணங்கினுர். முன்னர்ப் பொதுவகையான் மகிழ்ந்திருந்த அவர்கள், இப்போது பேருவகை எய்தினுர் என்க. நம்பிகள் தேவாசிரியனை முன்னரும் வணங்கிப் போந்தனர் என்பது,"தேனுறை கற்பக வாசமாலைத் தேவாசிரியன் ருெழுதிறைஞ்சி" (270). "சென்று தேவாசிரியனைச் சேர்ந்தபின்" (301) என்பவற்ருற் பெறப்பட்டது. முன்னர் வெருண்ட விறன்மிண்டரும் இதனுல் மிகமகிழ என்று கூறுவாரும், உம்பர் நாயகரும் அடியாரும் என்று கூறுவாருமுண்டு.

திருக்கூட்டத்தின் நடு அணைந்தார் - "அடியேனுன் னடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" (திருவாசகம்) என்றபடி விண்ணப்பித்து, அவனருளாலே அடியார் திறமுணர்ந்து பாடி வணங்கி, அவர் அருளால் அவ்வடியார் நடுவுள் அணைந்து அவருள் தாமும் ஒருவராயினுர் என்க. அடியார் கூட்டத்தில் அணைவதே சைவசித்தாந்தத்துட் சிவப்பேற்றின் எல்லையாகக் குறிக்கப் பெறும் பேறு என்ப. இதன் விரிவு ஞான சாத்திரங்களுட் காண்க. இதுவே சிவஞான போதம் 12-ம் சூத்திரத்துப் பேசப் பெறுவதாம்.

தம்பிரான் தோழர் அவர் தாம் மொழிந்த தமிழ் - தம்பிரானும் தோழரும் ஆகிய அவர்கள் சேர்ந்து மொழிந்த திருப்பதிகம். இது திருத்தொண்டத் தொகை. இப்பதிகத்திலே "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்ற தொடர் தம்பிரானுடையதாதலாலும், இதனை ஓதும் "உணர்வு" அவன் அருளியதாதலாலும், இஃது இருவரும் அத்துவிதமாய்க் கலந்த நிலையில் மொழிந்த தமிழ் என்க. இச்சிறப்பு வேறெந்த மொழிக்கு மில்லாமையும் உணர்க. **தமிழ்** - இருமடியாகுபெயராய்ப் பதிகத்தை யுணர்த்திற்று. **தம்பிரான் ருேழர்** - உம்மைத் தொகை. இவ்வாறன்றித் தம்பிரான்ருேழர் என்ற பேர்பெற்ற நம்பிகள் என்றுரைத்தலுமொன்று. (275) முன்னரும் "திருத்தொண்டத் தொகைத் தமிழ்" (146) என்றது காண்க.

தமிழ் முறையே - இஃது இப்புராண அமைப்பில் ஆசிரியர் பின்பற்றிச் செல்லும் பகுப்பு, உட்பிரிவு முதலிய வகையினை உணர்த்திற்று. இப்பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாட்டின் முதற்சொற்ருெடரே ஒவ்வோர் சருக்கத்தின் பெயராம். இவ்வாறு தில்லைவாழந்தணர் சருக்கம் முதல் மன்னியசீர்ச் சருக்கம்வரை பதினெரு சருக்கங்கள் ஆயின. இவற்றுடன் முதலிற் றிருமலைச் சருக்கமும், இறுதியில் வெள்ளானைச் சருக்கமுங் கூடிப் பதின்மூன்று சருக்கங்கள் கொண்டது இப்புராணம். அந்தந்தச் சருக்கத்தினுள்ளும் அவ்வப்பதிகப்பாட்டிற் கூறித் தொழப் பெற்ற அடியார்களின் சரிதம் அவ்வரிசையிலே விரித்துக் கூறப் பெற்றன. 16, 17 பக்கங்கள் பார்க்க.

எம்பிரான் தமர்கள் - தம்மவர் என்பது தமர் என வழங்கியது ; நம்மவர் - நமர் - என வருவதுபோல, சிவனடியார்களே எம்பெருமான் றமர்களாவார். "எம்பிரான் றமரேயோ என்னு முன்னம்"—(318), "கருமிடற்று மறையவனுர் தமராய கழலேயர் பெருமகன்" (மானக்கஞ்சாறர் புராணம் - 16), "தத்தா நமர்என" (மெய்ப் - புரா - 16), "நந்தமரூரன்" றொடித்தான்மலை - 9. முதலியன காண்க.

திருத்தொண்டு - தொண்டு செய்த வரலாறு, பண்பு முதலியன. **ஏத்தலுறுகின்றேன்** - விரிநூலாகச் சொல்லத் தொடங்குகின்றேன். "திருத்தொண்டத் தொகைவிரியின்றெ ழுதா வாலிங் கியம்புகேன்" (47) என்றதுங் காண்க.

சுருக்கம் :—146-ம் திருப்பாட்டில் ஆலால சுந்தரர் இறைவனது ஆணையின்படி தென்றிசைக்குட்போந்து திருத்தொண்டத் தொகைத் தமிழ் பாடிய வண்ணம் உரைசெய்வாம் என்று ஆசிரியர் எடுத்துக் கொண்டனர். அவ்வரலாறு இப்புராணத்துட் கூறப்பெறுவதாம். 182, 183 பக்கங்கள் பார்க்க.

திருக்கயிலையிலிருந்து ஆலாலசுந்தரர் தென்றிசையிற் போந்து அவதரிக்கும் பேறு பெற்றது திருமுனைப்பாடி நாடு. இவர் அவதரித்த ஊர் திருநாவலூர். அப்பதியிலே ஆதிசைவ மரபிலே **சடையனார்** என்ற பெரியாருக்கும் அவரது கற்புடை மனைவியாராகிய **இசைஞானிப் பிராட்டியாருக்கும்** திருமகனாராய்த் தீதகன்று உலகம் உய்யும்பொருட்டு இவர் அவதாரமாயினார். **நம்பியாரூரர்** என்ற பிள்ளைத் திருநாமம் சூட்டப்பெற்றுப் பல அணிகலன்கள் சாத்தித் தெருவிலே சிறுதேர் உருட்டி விளையாடிவரும் ஒருநாள் இவரை அந்நாட்டு அரசர் நரசிங்கமுனையரையர் கண்டனர். இவரது பொலிவு அவர் மனத்தைக் கவர்ந்தது. பெற்றோர்களிடம் கேட்டுப் பெற்று இவரைத் தமது காதன்மகனாகக் கொண்டு வளர்ப்பாராயினர். இவருக்கு மணப்பருவம் வந்தது. பெற்றோர்கள் தங்கள் மரபுக்கேற்பப் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாரது மகளாரை மணம்பேசிக் கலியாணம்நிகழ்த்த மணப்பந்தரில் யாவரும் கூடினார்கள். "மையல் மானுடமாய் மயங்கும்போது தடுத்தாட்கொள்வோம்" (39) என்று தாம் அருளியமொழியின்படியே இவரைத் தடுத்தாட்கொள்வதற்காக இறைவன் ஒருகிழவேதியர் உருவங்கொண்டு மணப்பந்தரில் வந்து, "இந்நாவலூர் ஆரூரன் என் அடியான்; என் வழக்கை முடித்துப் பின்னரே மணஞ்செய்தல் வேண்டும்" என வழக்கிட்டு அதற்கு ஆதாரவாக இவரது தந்தைதன்தந்தை தந்த ஆளோலை உண்டு என்று மேலிட்டனர்; வழக்கு மேலிடவே நம்பிகள் அவரைப் பித்தனோ என்று கூறி வெகுண்டு, அவரைத் தொடர்ந்து பற்றி, அவர் கையிலிருந்த ஓலையைக் கீறியிட அவர் ஓலமிட்டனர். இவ்வழக்கினைத் தீர்ப்பதற்கு அனைவரும் திரண்டு **திருவெண்ணெய்நல்லூர்** நீதி மன்றத்திற்குச் செல்ல, அங்குக் கிழவேதியர் தம்வழக்கையும் முன்நிகழ்ச்சியையும் சொல்லி முறையிட்டனர். ஆரூர்நம்பிகள் "நான் ஆதிசைவன்; இவ்வந்தணன் என்னை அடிமை என்ற வழக்கு மனத்தினு லுணர்தற்கெட்டா மாயையாயிருக்கிறது" என்றனர். நீதிமன்றத்தவர் முறைப்படி இவ்வழக்கை ஆய்ந்தனர். "முன்கிழிபட்ட ஓலை படியோலை-மூலவோலை வேறாக உண்டு" என்று கிழவேதியர் சொல்லி மூலவோலை காட்டினர். அதனை விதிப்படி ஆராய்ந்து, 'அது நம்பியாரது பேரனார் (பாட்டன்) தந்ததுதான்; நம்பி வேதியருக்கு ஆட்செய்ய வேண்டுவதே முறை' என்று விதித்தனர். அவ்வாறாட் செய்வதற்குத் தமது நீடு வாழ்க்கை காட்டுதற்காக வேதியர், அனைவரும் பின்றொடரச் சென்று திருவெண்ணெய்நல்லூர் ஆலயமாகிய திருவருட்டுறையிலே புகுந்து மறைந்தனர். நம்பிகள் திகைத்து நின்று அழைத்தனர். மறைந்த வேதியர் இடபவாகனத்திலே உமாதேவியாருடன் ஆகாயத்திலே தோன்றி, "நம்பிகளை நோக்கி "நீ முன்பு நமக்குத் தொண்டன்; நம் ஏவலால் மண்ணிற் பிறந்தனை; மண்ணின் வாழ்க்கைத்துன்பம் உன்னைத் தொடராதபடி வந்து நாமே தடுத்தாட்கொண்டோம்" என்று அருளிச்செய்து, "நம்மை வன்மை பேசியபடியால் உனக்கு **வன்றொண்டன்** என்னும் நாமம் தந்தோம்; நம்மை இவ்வுலகிலே பாடுவாயாக!" என்று ஆணையிட்டனர். நம்பிகள் "நான் யாதினை அறிந்து என்ன என்று சொல்லிப் பாடுவேன்?" என்று கேட்க, "நீ முன்பு நம்மைச் சொல்லியபடி என் பெயர் **பித்தன்** என்றே பாடுவாய்" என்றருளினர். அவ்வாறே "**பித்தா பிறைசூடி**" என்று தொடங்கும் திருப்பதிகத்தை நம்பிகள் பாடியருளினர். "இதுபோலவே இவ்வுலகில் பலவாற்றாலும் நமது புகழைப் பாடுவாயாக" என்று இறைவன் அருளினர். இங்கிது நிற்க, அங்கு மணப்பந்தலில் மணமகளாயமர்ந்து, மணந்தவிர்ந்த, சடங்கவி மகளாரும் திருநாவலூர் நம்பிகளை ஒழியாது உணர்ந்துநின்ற வழியினாலே சிவலோகத்தை எளிதில் அடைந்தார்.

நம்பியாரூரரது முதல் தலயாத்திரை. (தடுத்தாட்கொண்ட புராணம்)
திருவெண்ணெய்நல்லூர் முதல் திருவாரூர் வரை



கோவை இராவ்சாகிபு திரு C. M. இராமசந்திர செட்டியார், B.A., B.L., அவர்கள் தொகுத்தது.

நம்பிகள் அதன்பின் **திருநாவலூர்** சென்று வணங்கித் திருப்பதிகம் பாடினர். **திருத்துறையூர்** சென்று வணங்கித் தமக்குத் தவநெறி தரவேண்டுமென்று இறைவனை வேண்டிப் பதிகம்பாடி அவ்வாறே அருளப்பெற்றனர். அங்கிருந்து **திருத்தில்லையிலே** ஆனந்தக் கூத்தாது திருக்கூத்தை வணங்கும் ஆசையினாலே வழிக்கொண்டனர்.

மாலைக்காலம்வரத் **திருவதிகைப்** புறம்பணையை அடைந்த இவர், "இத்திருத் தலமானது திருநாவுக்கரசு சுவாமிகள் கைத்திருத்தொண்டு செய்த தலம். ஆதலின் இதனை மிதிக்க அஞ்சுகின்றேன்" என்று உட்கொண்டு, அந்நகருட் புகுதாது புறத்திலே உள்ள **சித்தவட மடத்திலே** பரிசனங்களுடன் பள்ளியமர்ந்தருளினர். இரவிலே இறைவர், ஒருவருமறியாமல் உள்ளே புகுந்து தாமும் பள்ளிகொண்டு நம்பிகளது திருமுடிமேல் ஒருமுறைக் கிருமுறை தமது காலை நீட்டினர். இவர் சினந்து "நீ யார்?" என்று வினவினர். அவர் "என்னை அறியாயோ?" என்றுசொல்லி மறையவே, "**தம்மானை யறியாத சாதியார் உளரே**" என்ற பதிகத்தைப் பாடித் துதித்தனர். அங்கிருந்து கெடில நதி கடந்து **திருமாணிகுழி, திருத்தினைநகர்** என்ற தலங்களை வணங்கிக்கொண்டு திருத்தில்லையை அடைந்து நடேசப்பெருமானை வணங்கிப் பதிகம் பாடிப் பணிந்தனர். அப்போது "திருவாரூரில் நம்மிடம் வருக" என்றொரு வாக்கு ஆகாயத்தினின்றும் எழுந்ததைக் கேட்டனர். அதன்படியே புறப்பட்டுக் கொள்ளிடத் திருநதி கடந்து போய்ச் **சீகாழியை** யடைந்தனர்; அது ஆளுடைய பிள்ளையார் அவதரித்த தலமாதலின் அதன் உள்ளும் மிதிக்கலாகாது என்று புறத்தே நின்று வணங்கினர். பெருமான் இவருக்கு அங்கே காட்சி கொடுத்தருளப்பெற்றுக் "கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே" என்ற மகுடத்தையுடைய திருப்பதிகம் பாடித் துதித்தனர். பின்பு **திருக்கோலக்கா, திருப்புன்கூர்** முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு காவிரிக் கரையை அணைந்து நீராடிச் சென்று அதன்கரை மருங்கே உள்ள **திருஅம்பர்மாகாளம், திருப்புகலூர்** முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு **திருவாரூரை** அடைந்தார்.

முன்னரே தியாகேசர் அவ்வூரின் அடியவர்கட்கு "நம் ஆரூரன் நாம் அழைக்க இங்கு வருகின்றான்; அவனை மகிழ்ந்து எதிர்கொள்வீர்" என்றருளியபடியே மிகச் சிறப்புடன் அடியார்கள் நம்பிகளை எதிர்கொண்டனர். அவர்களை நோக்கி "உங்கள் பெருமான் எம்மையும் ஆள்வரோ" என்று பதிகம்பாடி வணங்கிப்போய்த் திருமூலட்டானநாதரையும், தியாகேசரையும் தரிசித்துப் பதிகம்பாடினர். அப்போது "நம்மை உனக்குத்தோழமையாகத்தந்தோம்; நீ மணக்கோலத்துடன் மண்மேல் விளையாடிவருவாயாக" என்று ஓர் அசரீரிவாக்குக் கேட்க, நம்பிகள் பணிந்து கொண்டு அன்று முதல் அவ்வாறே மணக்கோலத்துடன் திருவாரூரரை நாள்தோறும் தரிசித்துவந்தார். அன்று முதல் இவருக்குத் **தம்பிரான் றோழர்** என்று பெயர் வழங்கியது.

இதற்கு முன்னரே, திருக்கயிலையினின்றும், ஆணையின் வழியே, பூவுலகிற் போந்த சேடியர் இருவரிற், **கமலினியார்** இங்குத் திருவாரூரில் உருத்திரகணிகையர் மரபில் அவதரித்துப் **பரவையார்** என்ற நாமம்பூண்டு சிறப்புடன் வளர்ந்து தினந்தோறும் திருவாரூர்ப் பெருமானைத் தரிசித்து வருவாராயினர். அவ்வாறு நிகழும் நாள்களில் ஒருநாள் நம்பிகள் தரிசித்துக் கோயிலினின்று வரும்போது, தரிசிக்கச் சென்றுகொண்டிருந்த பரவையாரைக் கண்டனர். அவரும் இவரைக்காணவே, முன்தொடர்பினாலே இருவர் மனத்திலும் ஒருவர் மேல் ஒருவர் காதல் நிகழ்ந்தது. திருவாரூர்ப் பெருமானது திருவருளினாலே அவ்வூர் அடியவர்கள் இருவர்க்கும் திருமணம் நிகழ்வித்தனர். நம்பிகள் மகிழ்ந்து விளையாடியும் திருவாரூரரைத் தரிசித்தும் வருவாராயினர். ஒருநாள் அவ்வாறு திருக்கோயிலுக்குச் செல்பவர் "தேவாசிரியனில் வீற்றிருக்கும் அடியார்களுக்கு நான் அடியேனாகப் பண்ணும் நாள் எந்நாள்" என்று இறைவனை வணங்கினர். இறைவன் எதிர்காட்சி கொடுத்து, அடியார்களைப் பாடும்படிப் பணித்து, அவர்களது பெருமைகளை எடுத்துச் சொல்லி, அவர்களது வழித்தொண்டின் வரலாறுகளையும்

தன்மைகளையும் உணர்த்தி, அவர்களைப் பாடுவதற்காகத் "**தில்லைவா ழந்தணர்த மடி யார்க்கு மடியேன்**" என்று அடியெடுத்துக் கொடுத்தருளினர். அவ்வாறே தொடங்கி நம்பிகள் திருத்தொண்டத்தொகை என்ற திருப்பதிகத்தை உலகமுய்யப்பாடி, அடியார்களை வணங்கி அவர்கள் மகிழுமாறு அவர்கள் நடுவுள் அணைந்து வீற்றிருந்தனர்.

அவர்சொல்லிய தமிழ்முறையிலே அந்த அடியவர்களது திருத்தொண்டின் வரலாறுகளை விரித்துக்கூறித் துதிக்க முயல்கின்றேன் என்பது.

கற்பனை:—(1) ஒவ்வோர் உயிரும் தான் பிறவி எடுக்க நேர்ந்த கருமங்களையே அநுபவித்துக் கழித்தல்வேண்டும் என்றும், மேலும் மேலும் வினைகள் வந்து சேரும்படி மனம் செல்லும்போது தடுத்து ஆட்கொள்ளவேண்டும் என்றும் இறைவனை வணங்கி வரம்பெறுதல் வேண்டும். இதுவே இப்பகுதியிற் சிறந்த கற்பனையாம் என்பது முன்னர் 62-184 - 185 பக்கக்களிற் காட்டப் பெற்றது.

(2) குழந்தைகளுக்குத் தாந்தாம் வழிபடு கடவுளரின் பேரை வைத்து வழங்குதல் சிறந்த பயன் றரும். நம்பிகள் திருவாரூர்த் திருமூலத்தான நாதரின் அடிப்பேர் வைத்தழைக்கப்பெற்ற அதனால் யாவரும் பெற்ற பெரும்பேறு காண்க.

(3) மன்னவர் திருவில் வளர்ந்த காலத்தும் குலவொழுக்கத்தினை விடாமற் பாதுகாத்துக்கொண்டனர் நம்பிகள் என்பது இந்நாள் மாக்கள் உணர்ந்து பின்பற்றத்தக்க சிறந்தகற்பனை. காரணமின்றியும், அற்பகாரணங்கொண்டும், தத்தம் குலவொழுக்கங்களைக் கைவிட்டு அலங்கோல வாழ்க்கையிற் றிரிந்து அலைந்து கெடுவது இந்நாளிற் பெருவழக்காய்விட்டது. நரசிங்கமுனையரையர் காதன்மகனாய் வளர்ந்த நம்பிகள் தமது வைதிக மரபில் வைகிய பெருமையை உலகம் உணரக்கடவது. 192, 193 பக்கங்கள் பார்க்க.

(4) மணமுதலியவற்றிலே சடங்குகள் வேண்டியதில்லை என்போர் நம்பிகளது திருமணத்திற் போந்த விதிச் சடங்குகளை அறிந்து பின்பற்றக் கடவர்.

(5) உலகிலில்லா வழக்கு மேலிட்டுக் கல்யாணப் பந்தரிற் கலகம் செய்யப்போந்த கிழவேதியரிடம் நம்பிகளும் மறையோரும் நீதிசபையினரும் நடந்து கொண்ட வணக்க வொழுக்கம் உலகம் அறிந்து பின்பற்றற்குரியதாம்.

(6) இந்த மாநிலத்தில் இல்லா வழக்கென்றும், தமது குலத்துக்கு இழிபு தரும் வழக்கென்றும் உணர்ந்தும் திருவெண்ணெய்நல்லூர் நீதிமன்ற வேதியர் துலைக்கோல் போல் நின்று ஒருபாற் கோடுதலின்றி வழக்கை ஆய்ந்து தீர்த்தது இந்நாள் நீதிமன்ற உலகம் பெரிதும் உணர்ந்து பின் பற்றத் தகுந்ததாம். 225-ம் பக்கம் பார்க்க.

(7) தடுத்தாட்கொள்ளப் பெற்ற நம்பிகள் பின்னரும் தவநெறி வேண்டிப் பெற்றது உயிர்கள் உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மை.

(8) மணந்தவிர்ந்த பின் சடங்கவியாரதுமகளார் நம்பிகளையே உணர்ந்துநின்று, அதன் வழியே சிவலோகமும்பெற்ற பேறு இந்நாட் சீர்திருத்தம் பேசுவோர் உணர்ந்து கொள்ளத்தக்கது. இதுவே உலகம் பின்பற்றி ஒழுகத் தக்க உயர் வழியாம். திலகவதியம்மையார் சரிதமும் காண்க.

(9) திருவதிகையிலும், திருக்கழுமலத்திலும் உள்ளேயும் மிதிக்கலாகாது என்று நம்பிகள் புறத்துநின்றே தொழுது சென்ற உயர்நெறியை உலகம் உணர்ந்து உய்வதாக. திருத்தலங்களுட்சென்று வாழ்வோர் அதனுள்ளே போந்திடினும், அங்கு அநுசிதங்களையேனும் செய்யாது விடுதல் பெரும் புண்ணியமாம். தலங்களில் வாழ்வோர் தாமும், அங்குக் கடவுள் நினைப்பும், பெரியோர் நினைப்பும் இன்றியே நின்று வருதல் பெரும்பாவமுமாம்.

(10) இறைவனது திருநடங் கும்பிடப் பெற்று மண்ணில் வந்த பிறவியே இன்பம்; அவ்வாறு பெறாத பிறவிகள் மேன்மேலும் துன்பத்துக்கே ஏதுவாவன - பேசாத நாள் எல்லாம் பிறவாநாள்-என்பது நம்பிகள் திருத்தில்லைத் தரிசனத்திற்கண்ட பேறு.

(11) பண்டை விதி கடைகூட்ட நிகழ்வனவாம் மணம் முதலிய உலகானுபவங்கள் கருமக் கழிவுக்கும், இறுதியில் வீட்டுக்கும் காரணமாம். அவ்வாறன்றி ஐம்புலன்வழியே சென்று நிகழ்வனவாகிய கருமங்கள் பிறவிக்குக் காரணமாம். உலகானுபவங்களை இறைவ னருள் வழியே நின்று அனுபவித்தலே முறை.

(12) **அடியார் சிறப்பும், வணக்கமும் மனிதப் பிறவிக்குப் பேறு தருவன என்பது இப்பகுதியின் மட்டுமன்றி, இப்புராண முழுமையிலும் போந்த சிறந்த தனிக் கற்பனையாம். அானிலும் அடுத்த துணையாவர் அடியவர்களேயாம்.**

திருமலைச்சருக்கத்தின் வைப்புமுறை:—*நான்முகத்துப் பாயிரமுரைக்கப்பெற்றது. நான்மங்கலம்செய்து கடவுள் வணக்கத்துடன் தொடங்கிய ஆசிரியர் இந்நூற்பெயர்* **திருத்தொண்டர் புராணம்** *ஆம் எனத் தோற்றுவாய்செய்து எடுத்துக்கொண்டனர். இப்புராணத்திற்கு முதல் திருத்தொண்டத் தொகை. அது நம்பியாரூரரால் அருளப் பெற்றது. அவர் கயிலையினின்றும் அதுதரும் பொருட்டே இங்கு வந்தனர். அவ்வரலாற்றைத் திருமலைச் சிறப்பிற் கூறினார். தொண்டர்கூட்டமே இந்நூற் பொருளாதலின் தொண்டர்தங் கூட்ட நிறைந்துறை நாடாகிய சோழநாட்டுச் சிறப்பை அதற்கடுத்தும், அந்நாட்டிலே தொன்மையின் மிக்கதாய் அக்கூட்டம் நிறைந்துறைவதாய் உள்ள திருவாரூர்ச் சிறப்பை அதனையடுத்தும் உரைத்தார். அத்திருக்கூட்டத்தின் சிறப்புக்களை வடித்து எடுத்துத் தொடக்கத்திற்காட்டும் வகையால், அந்நகரில் உள்ள பூங்கோயிலையும் அதில் அவர்கள் எழுந்தருளியுள்ள தேவாசிரியனையும், அங்கு நிறைந்த அவர்தம் பெருமைகளையும் திருக்கூட்டச் சிறப்பிற் பேசினார். ஆலாலசுந்தரர் வந்து இக்கூட்டத்தைத் தொழுது திருத்தொண்டத்தொகை பாடிய வரலாற்றை அதனை அடுத்துத் தடுத்தாட்கொண்ட புராணத்திற் கூறினார். இதுவே திருமலைச் சருக்கத்தின் அமைப்பாம்.*

இனி இத்திருத்தொண்டத் தொகையான தமிழின் முறையே இப்புராணத்தை அமைவுபடுத்திக் கூறுகின்றேன் என்று மேற்கொண்டனர் ஆசிரியர்.

இம்முறையிலே பின்னர்வரும் சருக்கங்களின் அமைவும், சருக்கங்களுட் புராணங்களின் அமைவும் கண்டுகொள்க.

நம்பிகள் சரித அமைப்பு - *திருமலையினின்று ஆணையின் வழியே போந்த நம்பிகளது சரிதம் திருமலையினிகழ்ந்த முற்பகுதியைத் திருமலைச் சிறப்பிற் கூறினார்; அங்கு நின்றும் தென்றிசையிற் போந்து, திருவாரூர் சேர்ந்து, திருத்தொண்டத் தொகை அருளி, அடியார் நடுவுள் அணைந்த வரையிலே தடுத்தாட்கொண்ட புராணத்துட்கூறினார்; இனி அங்கு நின்றும் புறப்பட்டு மாதவஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத் திருப்பேரூர், திருத்தில்லை முதலிய பல தலங்களினும்சென்று தரிசித்து, உலகமுய்யப் பதிகம் பாடித், திருவொற்றியூரிலே* **சங்கிலியாரை** *மணந்து, மீளவும் திருவாரூரை அடைந்து,* **பின்னர் ஏயர்கோன் கலிக்காம நாயனாரது** *நட்புப்பெறும்வரை அந்நாயனார் புராணத்திற்பேசி, அதன் பின்னர்ப் பலதலங்களையும் தரிசித்துக்* **கழறிற்றறிவார் நாயனார்** *நட்புப்பெற்று மீண்டும் திருவாரூர்வந்து அமரும்வரை அவர் புராணத்திற் பாடி, அதன் பின்னர்ச்செய்த தலயாத்திரையிலே திருவவிநாசியிற்சேர்ந்து முதலைவாயிற்பிள்ளை தருவித்துத் தந்து, கழறிற்றறிவார்பால் திருவஞ்சைக்களஞ்சார்ந்து, அங்கு இறைவனிடம்முத்தி விண்ணப்பம்செய்து, பதிகம்பாடி இறைவன் ஆணையின்படிப் போந்த வெள்ளை யானையிலேறிக், கழறிற்றறிவாருடன் மீளத் திருக்கயிலை அடைந்து, தமது திருப்பணியிற்றலைநின்றவரையில் இறுதியில் வெள்ளையானைச் சருக்கத்திற் பாடியருளினார் ஆசிரியர் என்க.*

"ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே" என்று பாட்டுத்தோறும் விரவித் திருத்தொண்டத் தொகை முழுதும் நம்பிகளது சரிதம் பரந்தமையால் அதன் வழித்தாய் வந்த விரிநூலாகிய இப்புராணத்திலும் அவ்வாறே புராணம் முற்றும் அவர் சரிதம் விரவி நிறைவெய்துவதும் காண்க.

தடுத்தாட்கொண்ட புராணம் முற்றிற்று.

திருமலைச் சருக்கம் முற்றிற்று.

அநுபந்தம்

336-ம் பாட்டின் பின் இதன்கீழ்க் குறித்த பாட்டுக்கள் இடைச்செருகலாய்த் திருநெல்வேலியிற் கிடைத்த சில பிரதிகளிலிருக்கின்றன. (பக்கம் 405)

1. வன்றொண்டர் காதல் கண்டு மழவிடை யுகைத்த நாதர், முன்றொண்ட ராக வாண்ட முதனம்பி யாரூ ரர்க்குச், சென்றங்குப் பேறு மிக்க திருத்தொண்டர் தம்பாற் சேர, வொன்றும்பண் பருள வேண்டி யொருதொண்ட ரருளிச் செய்தார்.

விடையுடையார் தாழும்—சென்றங்கு போற்று—தொண்டர் வெதுளச் செய் தார்—என்பன பாடபேதங்கள்.

2. பெருந்தவத் தொண்ட ரான பெருவிறன் மிண்ட ரென்பா, ரிருந்தவக் குழாத்தி னின்று மெதிர்செயிர்த் தெழுந்து நின்றே, யருந்தவப் பெரியோர் தம்மைப் பணிந்தணை யாது போன, வருந்தவ றுடைய வேட மற்றிவ னார்கொ லென்று.

வேறு

3. பக்க மேவரு வார்கள் பலருடன், புக்க போது பொருவிறன் மிண்டர்தா, மிக்கெ ழுந்த வெகுளியா னம்பிபாற், றக்க வல்லன சாலவுஞ் சொல்லினார்.

4. சொன்ன தொண்டரை நோக்கிமெய்த் தொண்டரால், மன்னி நீடி வளர் பெருங் கூட்டத்து, முன்னி ருந்தா ரொருவர் மொழிகின்றா, ரின்ன சொல்ல இயல் பல வாமென்று. **நீடு**—பாடபேதம்.

5. ஓலை காட்டி யுடையவர் முன்னின்று, ஞால முய்யவாட் கொண்டரு ணம்பி யைச், சீல மும்மறி யாதிவை செப்பினீர், கோல மேகண்டு கூறலா மோவென்றார்.

ஞாலமேற்க—பாடபேதம்.

6. என்று கூற விகழ்ந்து விறன்மிண்டர், நன்று சாலவு நம்பெரு மக்கள்வந், தொன்று கூட்ட முணரா வொருவனை, யன்று தம்பிரா னாள்வ தழகிதால்.

7. கருந்த டங்கண்ணி பங்கர்தங் காதல்கு, ழருந்த வத்தடி யாரை யணைவின்றிப், புரிந்த பண்பினிற் றூர்த்தன் புறகெனா, விருந்த தொண்டர் திருக்கதை சாத்துகேன்.

திருக்கை சாற்றும் என்—திருக்கதை சாத்துமேன்—என்பன பாடபேதங்கள்.

8. வெம்பி நீர்மொழி யேல்விறன் மிண்டரே, நம்பியா ரூரர் தாமுமந் நாயனார், அம்பொன் மாளிகை யாரூ ரமர்ந்தரு, டம்பி ரான்றோழ னாரவர் தாமென.

நம்பியாரூரர் காணும்—பாடபேதம்.

9. தோழ ராயினுந் தொண்டரே யாயினும், ஆழி மாலயன் காணா வருட்கழல், சூழு மெய்யடி யாரைத் தொடர்வின்றி, வாழு மூரன் பிரானாக வைத்திலம்.

சூழ—பிரானாதல்—என்பனவும் பாடபேதங்கள்.

10. இன்ன வாறடி யார்புற கென்றபி, னன்ன வாறறிந் தஞ்சியா ரூரர்தா, மின்னு வார்சடை வேதியன் றாடொழப், பொன்ன வாமணிப் பூங்கோயில் சார்தலும்.

என்றபின்—பாடபேதம்.

11. பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவ, ரங்கு காட்சி கொடுத்தரு ளாமையி, னிங்கும் பேறெனக் கிவ்வண்ண மோவென்பா, ரெங்குந் தேடி யழிவற் றியம்புவார்.

12. என்னை யாட்கொண்ட வீசனு மாயெனக், கன்னை யாயறி வாயமு தாயினாய், பொன்னை யார்ந்த புரிசடைப் புண்ணியா, வுன்னை யானிங்குக் காணே னொளித்தியோ.

13. வெள்ள நீர்பரந் தோங்கும் விரிசடை, வள்ள லேமலை யாள்மண வாளனே, தெள்ளு மாமறை யின்றெளி வாகியெ, னுள்ள மேபுகுந் தாயிங் கொளித்தியோ.

14. ஈச னேயெனக் கெய்ப்பினில் வைப்பெனப், பேச லாகும் பெரும்பொரு ளாயினாய், தேச னேசிவ னேசிவ லோகனே, நேச னேயெனை யானுண ரேனென்று.

15. தோழ ராகிநற் சுற்றமு மாயடி, நீழ றந்தளிப் பாயெதிர் நீங்கவு, மாழி யொன்ற வடியார் முனியவும், வாழி வன்றொண்டர் சால வருந்தினார்.

எதிர் நீங்கவும்—ஆழி போன்ற—என்பன பாடபேதங்கள்.

16. வேண்டி யாட்கொண் டவனுடைத் தொண்டரை, யாண்ட நாயகர் வாவென் றருள்செய்து, காண்ட கும்படி காட்சி கொடுத்தலும், பூண்டு கொண்டவர் பொன்னடி யேத்துவார்.

கொண்ட வீறுடை—நாயகர் அவர்—அடி போற்றுவார்—என்பன பாடபேதங்கள்.

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது

தில்லைவாழந்தணர் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே.

திருத்தொண்டத்தொகை. (1)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழந்தணர் புராணம்

தொகை

"தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்;" **திருத்தொண்டத்தொகை**

வகை

"செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கண் மூன்றினு மும்பரி னூரெரித்த
அப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த
துப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்தமைச் சொல்லுதுமே"
திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

350. ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. க

தில்லைவாழந்தணர் சருக்கம் :—திருத்தொண்டத் தொகையில் "தில்லைவாழந்தணர்" என்று தொடங்கும் பாசுரத்திற் போற்றப் பெற்ற அடியார்களது வரலாறுகளைக் கூறும் பகுதி. அப்பாசுரம் மேலே தரப்பெற்றது. அவ்வடியார்களாவார், தில்லைவாழந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருளார், விறன்மிண்டர், அமர்நீதியார் என்ற எழுவர். இவ்வெழுவர்களின் வரலாறுகள் இம்முறையிலே இச்சருக்கத்துட் பேசப் பெறுகின்றன. பின் வரும் சருக்கங்களின் அடைவும், அவ்வச்சருக்கங்களினுட் பேசப் பெறும் அடியார்புராணங்களினடைவும் இவ்வாறே கண்டுகொள்க. இனி இம்முறையே இச்சருக்கத்து முதலில் ஆசிரியர் தில்லைவாழந்தணர் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தில்லைவாழந்தணர் புராணம் :—திருத்தொண்டத் தொகையிற் றுதிக்கப் பெற்ற தில்லைவாழந்தணர் என்போரது தன்மைகளைக் கூறும் பகுதி. இப்பெயர் **திருத்தொண்டர் சீபுராணம்** என்று சில பிரதிகளில் உள்ளது. இதற்குத் தொகை வகை நூல்களாகிய, முதனூல் வழிநூல்களாகிய திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதிகளின் பகுதிகள் தலைப்பிற் றரப்பெற்றன. இவ்வாறே பின்னருங் கண்டுகொள்க.

தொகை-முதனூல். இது திருவாரூர்த் தியாகேசர் திருவாக்கு. தில்லையில்வாழும் அந்தணர் தமது அடியார்களுக்கும் நான் அடியேனுயுள்ளேன் என்பது.

வாழந்தணர்-வினைத்தொகை. இவர்கள் பண்டு மின்று மென்று முள்ளாராதலின் முக்காலத்தும் வரும் வினைத்தொகையாற் கூறியவாறு. **தம் அடியார்** - தமக்கே உரிய அடிமை செய்பவர். **அடியார்க்கும்** - உம்மை எச்சவும்மை. அந்தணர்க்கேயன்றி அடியார்க்கும் என்க. அந்தணரது இயலும், அவர் அடியாரியலும் புராணத்துள் வேறு வேறு விரித்திருத்தல் காண்க.

வகைநூல்-முதனூலிற்கண்ட **தில்லை** என்றது வகைநூலிற் "செப்பத் தகுபுகழ்த் தில்லைப்பதி" எனவும், விரிநூலுள்ளே "போதியா நிற்குந் தில்லை", "அகலிடத்

துயர்ந்த தில்லை'' எனவும் விரிக்கப்பெற்றன. **அந்தணர்** என்ற முதனூல் "எரித்த அப்பர்" - "அமுதத் திருநடர்" - "பிறையணிந்த துப்பர்" என விரிந்தது. மறையோர் - உரிமைத் தொழில் புரிவோர் எனக் கூட்டுக. **சொல்லுதும்** - துதிப்போம். **தம் அடியார்** - என்ற முதனூல் "உரிமைத்தொழில் புரிவோர்" என வகைநூலிலும், "திருத்தனுக்குரிய தொண்டாம் பேற்றினர்", "அடித்தவம்", "கோயிலுள்ளா வகம்படித் தொண்டு", "நடம்புரிவார்க் காளாம் திரு", "தாங்கள் போற்றிட" என்று விரிநூலிலும் விரிந்தமை காண்க.

350. **(இ - ள்)** ஆதியாய் நடுவுமாகி - ஆதியாகியதுடன் நடுவும் ஆகி ; அளவிலா அளவும் ஆகி - பாசஞான பசுஞானங்களால் அளந்தறியப்படாது, சிவஞானத்தால் அறியப்படும் பொருளாகி ; சோதியாய் உணர்வும் ஆகி - காட்டும் அறிவாகிய ஒளியும், அது காட்டக் காண்கின்ற அறிவுமாகி ; தோன்றிய பொருளும்...ஏகம் ஆகி-இருவகை மாயைகளினின்றுந் தோன்றிய எப்பொருளும் ஆகி அவை யனைத்தினும் அத்துவித மாய்க் கலந்ததொரு பொருளேயாகி ; பெண்ணும் ஆய் ஆணும் ஆகி - பெண்ணும் ஆய் அதனோடு இணைந்த ஆணுமாகி ; போதியா நிற்கும்...போற்றி - போதித்து நிற்கும் தில்லையின் பொதுவிலே ஆடுகின்ற திருக்கூத்து எம்மாற் போற்றப் பெறுவது ! போற்றப் பெறுவது !!

(வி - ரை) ஆகி - ஆகி - ஆகி - ஆகி - ஆகி - ஆகிப் - போதியா நிற்கும் - நடம் - போற்றி என்று முடிக்க.

ஆதியாய் - எல்லா உலகங்களுக்கும் தோற்றுதற் கருத்தாவாய். "அந்தம் ஆதி" என்று உண்மைநூலிற் கண்டவாறு, மாசங்கார காலத்திலே எல்லா உலகங்களும் சங்கார கருத்தாவாகிய இறைவனிடத்தே ஒடுங்கி நின்று மீளவும் சிருட்டிக் காலத்திலே அவனிடத்தினின்றும் தோன்றி உளவாம் என்பது முடிபு. "ஒடுங்கி மலத்துளதாம்" - சிவஞானபோதம் 1-ம் சூத்திரம். **ஆதி** - தொடக்கம் ; மீளத்தோன்றுதற்கிடமாய் நிற்கின்ற நிலையைக் குறித்தது. முதலிற் சங்கார கருத்தாவாகிய தன்னிடத்திலே உலகம் எல்லாம் ஒடுங்கச் செய்தலாலே சங்கார கருத்தாவும், பின்னர் மீளத்தோன்ற நிற்றலாலே சிருட்டி கருத்தாவும் தானே ஆகியவன் என்பது **ஆதி** என்பதனாற் பெற்றாம். "படைப்பாதித் தொழிலும்" (1-ம் சூத்திரம் - 74) என்ற சித்தியாரில் படைப்பாகிய ஆதித் தொழில் என்று உரைகண்டமையும் காண்க.

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேவரமுங்
கருங்கடல் வண்ணன் களேவர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.

என்ற அப்பர் சுவாமிகள் திருவிருத்தம்,

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவன்........."—**திருச்சிவபுரம் - நட்டபாடை - 1**

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம் முதலிய திருவாக்குக்களைக் காண்க. இவ்வாறன்றி **ஆதி** என்பதற்கு முதற்காரணர் என்று கூறுவாருமுண்டு. குடத்திற்கு மண் முதற்காரணமாவதுபோல உலகத்துக்கு இறைவன் முதற் காரணமாதல் இல்லை என்பது ஞானநூல்களின் முடிபு ; ஆதலின் அது பொருந்தாமை யறிக. **நடுவும்**-தோற்றம் - நிலை - ஒடுக்கம் என்னும் மூன்றில் நடுவில் நின்றதாகிய உலக நிலைபேற்றுக்குந் தானே கருத்தாவாகி. **ஆதியாய்** என்றதனாலே தோற்றம் ஒடுக்கம் இரண்டிற்கும் கருத்தாவாதல் பெற்றாம் ; எஞ்சிய நடுவுக்கும் அவனே கருத்தா என்பது இங்குக் கூறினர்.

எச்சவும்மைகள் எண்ணும்மைகளுமாகி நின்றன. இங்கு நடு - என்றது திதி கருத்தா என்க. ஆதியாய் நடுவும் ஆகி - உலகச்சிருட்டி திதி சங்கார மூன்றும் இத்தில்லைத் திருநடனத்தினுலே ஆவன என்பது. திரோபவ அனுக்கிரகங்கள் இவற்றுள்ளே அடங்குவன. எனவே இந்நடம் ஐந்தொழில் நடனம் என்பதை உபதேசித்தருளியபடி.

அளவிலா அளவும் ஆகி - ஆன்ம சிற்சத்தியே அளவை யெனப்படும் பிரமாணம்; ஏனையவை பிரமேயமாகிய பொருள்கள். இவை பவுட்கரத்தும் சிவஞானபாடியத்தும் விளக்கப்பட்டன. இங்கு அளவு என்னுந் தொழிற் பெயரிரண்டும் ஆகுபெயர். பசு பாச ஞானங்களாகிய சுட்டுணர்வால் அறியப்படும் பொருளும், எவ்வாற்றாலும் அறியப் படாத பொருளும் அசத்தாம். ஆதலின் சிவஞானங் காட்டக்காணும் ஆன்ம சிற்சத்தி யாகிய அளவையால் பரம்பொருள் அறிந்தநுபவிக்கப்படும் பொருளேயாம்.

சோதியாய் உணர்வும் ஆகி - சோதி - காட்டும் புற ஒளி; உணர்வு - அவ்வாறு காட்டப்பெற்றுக்காணும் உயிருணர்வு.

தோன்றிய பொருளும் ஆகி - அவ்வாறுணர்த்த உணரும் அறிவினுல் உணரப் பெறும் பொருட் பிரபஞ்சமெல்லாம் தானே வியாபித்து நின்று.

" அறிகின்ற, மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாச
மப்பொருளுந் தானே யவன் "—அற்புதத் திருவந்தாதி - 20

என்ற காரைக்கால் அம்மையார் திருவாக்கும் காண்க.

பேதியா ஏகம் ஆகி - தோன்றிய பொருள்களினுட் பேதமற அத்துவிதமாய்க் கலந்து நின்றதொரு பொருள் ஆகி. சொற்பிரபஞ்சம் - பொருட் பிரபஞ்சம் என்ற இருவகை உலகமும். அதாவது " உரையின் வரையும் பொருளின் அளவு, மிருவகைப் பட்ட வெல்லையும்" (கோயினுன்-4). சுத்த அசுத்த மாயைகளினின்று தோற்றுவிக்கும் இறைவன் தான் அவற்றோடு அன்னியமின்றிக் கலந்து நிற்கும் நிலையை இங்குக் குறித்தபடி.

பெண்ணுமாய் ஆணும் ஆகி - சத்தியும் சிவமுமாய் உலகெலா நிறைந்து நிற்கும் தன்மை. இவ்வாறு இறைவன் தன்னுள்ளே சத்தி சிவமென இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலாலேதான், பலவேறு வகைப்பட்ட உயிர் வடிவங்களெல்லாம் குறியாலும் குணத்தாலும் ஆண் பெண் எனப் பேர்பெற்று அந்தந்த யோனிக்குள்ளே இருவேறுவகையா யடங்கித் தம்முட் கூடிக் களித்து வாழ்கின்றன. " அச்செலாம் இலிங்காங்க பகாங்கமாம்படி சிவமும் சத்தியுங் கொண்டருளிய பீடவிலிங்க வடிவமே அங்ஙனம் இருவேறு வகைப்பட வைத்ததனைக் கண்கூடாக அறியச்செய்தல் சான்று" என்று எமது மாதவச் சிவஞான சுவாமிகள் உரைத்தமை காண்க.

" சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப், பன்மை யோனிகள் யாவையும் பயில்வன "
—திருநா - புரா - 374

சத்தியும் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முணர்குண குணியுமாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்.
—சிவஞான சித்தியார். (1-ம் சூத்திரம் - 69)

இதனையே " தொன்மைக் கோலம் " என்றருளியது திருவாசகம். (திருக்கோத் தும்பி - 18).

போதியா நிற்கும் - போதித்து நிற்கின்ற. போதித்துக்கொண்டு இறைவன் என் றும் நித்தியமாய் நிற்கின்ற. மேலே கூறியவாறு ஆதி முதலியனவாய் ஆகின்றதெதற்கு? என்றும், அதன் பயன் யாது? என்றும், வினவுவாரை நோக்கித் தனது அத்தன்மை களை உயிர்களுக்கு உணர்த்தி உய்விக்கும் பொருட்டு நிற்கும் நிலையே இந்நிலைகள்

எனவும், அதுவே இத்திருநடம் எனவும் உணர்த்தினர். இத்திருக்கூத்தினால் இவை போதிக்கப்பெறுதல் நல்லாசிரியர்கள் உணர்த்தத், திருமூலர் திருமந்திரம் (திருக்கூத் தூத்தரிசனம்), சிவஞானபோதம் முதலிய ஞானசாத்திரங்களுள்ளே தெளிந்து கொள்க. 252 முதலிய பாட்டுக்களினும் இன்னும்வரும் இடங்களினும் காண்க.

தில்லை-தில்லை என்ற நகரம். தில்லை என்னு மரமடர்ந்த காடாயிருந்தமை பற்றி இதற்கு இப்பெயர் வந்தது. தில்வம் என்னும் வடமொழி, தமிழில் தில்லை என வந்தது. மரத்தின் பெயர் அது நிறைந்த காட்டுக்காகிப், பின்னர் அக்காடிருந்த இடத்தில் அமைந்த நகரத்துக்காயிற்று. **பொது** - அந்நகரிலே அமைந்த அம்பலம் - சபை. **நடம்** - அச்சபையில் நிகழும் திருக்கூத்து.

“ தில்லை மாநகர் போற்றி ; தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி ; யம்பலத்
தாடு நாடகம் போற்றி ”

என்று கோயினான்மணிமாலையிற் (40) பட்டினத்தடிகள் போற்றியதும் காண்க.

போற்றி - போற்றப் பெறுவது. ஊருணி என்பதனுட்போல இகரம் செயப்படு பொருள் விகுதி. வாழியவென்பது வாழி என வந்தாற்போல யகரங்கெட்டுவந்த வியங்கோள் வினை முற்றெனக்கொண்டு காக்க எனப்பொருள் கொள்ளலும் பொருந்தும்.

இப்பாட்டிலே, **ஆதி** - பிரமா ; **நடு** - விட்டுணு ; **அளவு** - இறுதியாகிய உருத்திரன் ; **சோதியா யுணர்வுமாகியவன்** - உயிர்களுக்கு மாயா சத்தியால் மறைப்புச் செய்யும் திரோதானசத்தியையுடைய மகேசுரன் ; **தோன்றிய பொருள்**-அச்சத்தி தோன்று தற் கிடமாகிய சாதாக்கியம் - சதாசிவமூர்த்தி என்று கூறுவாறுமுண்டு. 1

351. கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி. உ

(இ - ள்) கற்பனை...சோதி - பசுஞான பாசஞானங்களாற் கற்பிக்கப்பெற்ற அளவைகளை எல்லாம்கடந்து நின்ற, முன்பாட்டிற் கூறிய அந்தச் சோதிப் பொருளானது ; கருணையே உருவம் ஆகி - அருளே திருமேனியாகக்கொண்டு; அற்புதக் கோலம் நீடி - அறிதற்கரிய அற்புதமாகிய கோலத்திலே நீடி ; அருமறைச் சிரத்தின்...நின்று - அரிய வேதசிரசாகிய உபநிடதங்களின் உச்சியில் உணர்த்தப்படும் ஞானாகாயத்தின் வடிவமேயாகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்திலே நிலைத்து நின்று ; பொற்புடன்... போற்றி - அழகுடனே திருக்கூத்துச் செய்கின்ற பூப்போன்றதும் கழலை யணிந்ததும் ஆகிய திருவடி நம்மாற் போற்றப்பெறுவது ! போற்றப்பெறுவது ! !

(வி - ரை) **கற்பனை கடந்த சோதி** - **கற்பனை** - கற்பிக்கப் பெறுவதெல்லாம் கற்பனை எனப்படும். உருவமாகிய கற்பனைக்கு முதற்காரணமாகிய மாயையைக் கடந்த ஞானவடிவம் என்றும், பல சமயவாதிகளும் தத்தமக்குத் தோன்றியவாறே புனைந்துரைத்த கற்பனையைக் கடந்த சோதி என்றும், சதாசிவம் மகேசுரம் முதலிய நிட்கள சகள மூர்த்திபேதங்களைக் கடந்த ஒளியுருவன் என்றும் பலவாறுரை கூறுவாருமுளர். தனக்குமேல் ஒருவரிருந்து கற்பித்தலின்றித் தானே எல்லாவற்றையுங் கற்பிக்கின்ற சுயம்பிரகாசமாகிய சோதி என்பது கருத்து. **கற்பனை** - பாவனையுமாம்.

“ முத்தியு ஞானமும் வானவ ரறியா முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை ”—**சுந்தரர் - தக்கேசி - திருக்கழுமலம் - 2**

“ இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே ”—முதலிய தேவாரங்களும்,

"கதியெனப் பாழைக் கடந்தந்தக் கற்பனை
யுதறிய பாழி லொடுங்குகின் றேனே"—எட்டாந் தந் - 376

என்ற திருமந்திரம் முதலிய திருவாக்குக்களுங் காண்க.

சோதி - மேற்பாட்டிலே **சோதியாய் உணர்வுமாகி** என்ற அந்தச் **சோதியைத்** தொடர்ந்து எடுத்துக்கொண்டார். இப்பாட்டிற் கூறிய கருத்தையே,

"ஆரணங்கள் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகி"

என்று கோயிற் புராணத்திலே உமாபதியார் பொருள் விரித்துரைத்தது காண்க.

கருணையே உருவம் ஆகி - தனக்கென ஒன்றும் வேண்டாது உயிர்களின் மேல் வைத்த அருளே திருமேனியாகக் கொண்டு. ஆதி நடு முதலாகச் சொல்லப்பட்ட அவர் திருமேனி தாங்கி நிற்றற்குக் காரணமும் திருமேனியின் அமைவும் கூறியவாறு.

"செப்பிய மூன்றும் நந்தம், கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே"

என்பது ஞான சாத்திரம்.

அற்புதக் கோலம் நீடி - இன்னதென்று உணரவும் ஓதவும் படாததோர் இன் பானுபவத்தைத் தரும் திருக்கோலத்திலே நிலைத்து.

"அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே"—கருவூர்த்தேவர் - கங்கை - 3

"பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப் பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந் திருவுரு விருந்தவா பாரீர்"
—பூந்துருத்தி - திருவாரூர் - 2

என்ற திருவிசைப்பாக்கள் காண்க. **அற்புதமாவது** - இன்னதென்று சுட்டியறியப் படாது அதுவாய்நின்று அனுபவிக்கப் பெறுவதோர் இன்பானுபவம். 286 பாட்டு உரை காண்க.

அருமறைச்சிரம் - வேதசிரம் எனப்படும் உபநிடதம்.

மேலாம் சிற்பர வியோமம் - அது பிறத்தற்கும் மீள ஒடுங்குதற்கும் நிலைக்களனாகிய ஞானாகாயம் என்னும் நாதப் பிரமம். இதனையே சித்பரமாம் அம்பரம் என்றருளினார் கோயிற்புராண முடையார். சித்தென்ற சொல்லுக்குப் பின்னதாகிய வியோமம். **வியோமம்** - அம்பரம் - ஆகாயம். **பரம்** - பின். **சிற்பரவியோமம் ஆம் திருச்சிற்றம்பலம்** என்றது ஞானாகாயமேயாகிய அம்பலம்.

"அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த வொருபெருந் திருக்கூத்தும்"
—திருஞான - புரா - 160

என்று பின்னர் இதனையே ஆசிரியர் விரித்துரைத்ததும் காண்க.

பூங்கழல் - அழகிய கழலையணிந்த திருவடி என்றலுமாம். முன்பாட்டிற் றுதித்தது இறைவனது நிட்களத் திருமேனியை யென்றும், இப்பாட்டிற் கூறியது அவனது சகளத்திருமேனியை யென்றும் கூறுவர். முதற்பாட்டிலே **நடம்போற்றி** என்றும், இப் பாட்டிலே **நடஞ்செய்யும் பூங்கழல் போற்றி** என்றும் கூறியதையும் காண்க.

கழல் - காலணி மணிவடம். "அரன்கழல் செலுமே" (8-ம் சூத்) என்றதுபோலத் திருவடியைக் **கழல்** என்றலுமாம். "கழலணிதற்கேதுவாகிய வெற்றிப்பாட்டைக் **கழல்** என உபசரித்தார்" என்பது மாபாடியம். "கள்ளவினை—வென்று பிறப்பறுக்கச் சாத் தியவீ ரக்கழலும்"—போற்றிப்பஃறொடை. தில்லைவாழந்தணர் புராணத் தொடக்கத்திலே இவ்விரண்டு பாட்டும் கூத்தப்பெருமானது துதியாகக் கூறினமை என்னெனில் இவர் தில்லைவாழந்தணர்களில் ஒருவராயும் அவர்களில் முதல்வராயும் இருக்கும் உண்மைபற்றி என்க.

"நாமிவரி லொருவரெனுந், தேவர்க டேவன செல்வம்"

என்று கோயிற்புராணமுடையார் மூவாயிர முனிவர் துதியிற் குறித்துள்ளதும் காண்க.

சோதியின் - கழல் என்றியையும். 2

352. போற்றிநீ டில்லை வாழந் தணர்திறம் புகல லுற்றேன் ;
நீற்றினா னிறைந்த கோல நிருத்தனுக் குரிய தொண்டாம்
பேற்றினார் ; பெருமைக் கெல்லை யாயினார் பேணி வாழும்
ஆற்றினார் ; பெருகு மன்பா லடித்தவம் புரிந்து வாழ்வார் ; ௩

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு கூத்தப் பெருமானது கழலைத் துதித்துக் கொண்டு (அதன் துணையாலே) அவரை முதல்வராகக் கொண்டுள்ள வழி வழி நீண்டு வளர்ந்துவரும் தில்லைவாழந்தணர்களின் தன்மையினைச் சொல்லப்புகுகின்றேன்; இவர்கள்திருநீற்றினாலே நிறைந்த திருக்கோலத்தையுடைய கூத்தப் பெருமானுக்கு உரிமையாகிய திருத்தொண்டாகும் பேறுபெற்றவர்கள்; எல்லாப் பெருமைகளுக்கும் வரம்பாயுள்ளவர்களும் வழிபட்டு வாழ்தற்கேதுவாகிய ஒழுக்கத்திலே தலைநின்றவர்கள் ; மேன்மேலும் பெருகிவளரும் அன்பினாலே திருவடியையே பற்றுக்கோடாகக்கொண்டு தவம் செய்து வாழ்வார்கள்;

(வி - ரை) **போற்றி** - அந்தணர்களையே போற்றி அவர் திறம் புகலலுற்றேன் என்று கூறுவாருமுண்டு. **நீள் தில்லை வாழந்தணர்** - நடேசரை முதல்வராகவும் தம்மி லொருவராகவும்கொண்டு அன்றுமுத லின்றுவரை வழிவழி வளர்ந்துவரும் மூவாயிர முனிவர்கள்.

"நாவிரவு மறையினராய் நாமிவரி லொருவரெனுந்
தேவர்க டேவன செல்வச் செல்வர்களாய்த் திகழ்வேள்வி
பாவுநெறி பலசெய்யும் பான்மையராய் மேன்மையராம்
மூவுலகுந் தொழுமூவா யிரமுனிவ ரடிபோற்றி"

என்பது கோயிற் புராணம்.

திறம் - தன்மை. "இன்னபண்பு" (344) என்றுரைத்த பண்பு. பண்டு மின்றும் என்றும் நீடியிருக்கின்றாராதலின் ஒவ்வொருவர்க்கும் வரலாறு கூறாது அவர்களின் பொதுப்பண்பு மட்டும் உரைக்கலாகும் என அதனையே இப்பகுதியிற் கூறுகின்றாராதலின் திறம் என்றார்.

நீற்றினால் நிறைந்த கோலம் - "பூசுவதும் வெண்ணீறு"—(திருவாசகம்), "நீறு சேர்வதொர் மேனியர்"—(தேவாரம்) முதலிய திருவாக்குக்கள் காண்க.

உரிய தொண்டு ஆம் பேற்றினார் - அவனுக்கே சிறப்பாய் உரிய எனவும், தமக்கே சிறப்பாய் உரிய எனவும் இருதிறமும் சிறப்பு உரிமையாதலின் உரிய எனப் பொதுப் படக் கூறினார். இதனையே **தம் அடியார்** என்று முதனூலும், **உரிமைத்தொழில் புரிவோர்** என்று வழிநூலும் பேசினமை காண்க.

தொண்டு ஆம் பேறு - தொண்டு செய்வதினும் பெரிய பேறு வேறின்மையால் **ஆம்பேறு** என்றார். இச்சிறப்புப்பற்றியே திருஞானசம்பந்த சுவாமிகள் இவர்களைத் தேவாரத்தில் வைத்துத் துதித்ததும் காண்க.

"ஆடுங்கழற் கணுக்க **ராம்பே றதிசயிப்பார்**"—திருஞான - புரா - 168

"நீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக் கண்டவந் நிலையெல்லாங்
கூடு மாறுகோத் தவர்தொழு தேத்துசிற் றம்பல மெனக்கூறி"—ஷை 174

என்ற இடத்துக் கூறப்பெற்றமையும் கூர்ந்து நோக்குக.

பெருமைக்கு எல்லை ஆயினார் - பெருமைகளுக்கு வரம்பாய் நின்ற பெரியோர். பெருமைகளெல்லாம் இவர்களது அளவிலே உட்பட்டு மேற்செல்ல மாட்டாது நின்றன

என்று சொல்லத்தக்க பெரியோர். ஆயினர் - ஆயினர்களும். சிறப்பும்மை தொக்கது. ஆயினர் - ஆற்றினர் எனத் தனித்தனி பிரித்து இவர்களுக்கே கூட்டி முடித்தலு மொன்று.

ஆற்றினர் - ஆறு - ஒழுக்கம். இங்கு நல்லொழுக்கத்தின் மேனின்றது. "நல் லொழுக்கந் தலைநின்றார்" (திருநீல - புரா - 31). ஒழுக்கத்தினை மேற்கொண்டவர்.

பெருகும் - மேன்மேற் பெருகிச் செல்லும். அடித்தவம் - திருவடியையே பற்றுக் கோடாகக் கொண்டு அதனை அடையச்செய்யும் பூசை. "கொய்து பத்தர்மல ரும்புன லுங்கொடு தூவித்துதிசெய்து, மெய்தவத்தின் முயல்வார்"—திருஞா - நட்டபாடை - திருப்புகலூர் - (10)

வாழ்வார் - அத்தவத்தையே தமது வாழ்வாகக் கொண்டவர்கள்.

முன்னிரண்டு பாட்டுக்களிலும் இப்பாட்டினுங் கூட்டி ஐந்து முறை போற்றி என்றது ஐந்தொழில் நடனத்தைத் திருவைந்தெழுத்தாற் போற்றியது குறிப்பாம்.

இறைவனுக்கு உரிய தொண்டினைச் செய்யும் இவ்வுரிமைச் சிறப்புப்பற்றியே இவர்களைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தமது திருப்பதிகத்திலே முதலில் வைத்துப் பாடியருளினர் என, "ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால், வாழிதிருத் தில்லைவாழந்தணரை முன்வைத்தே" (162) என்று பின்னர் ஆசிரியர் அறிவித்தனர். 3

353. பொங்கிய திருவி னீடும் பொற்புடைப் பணிக ளேந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளாற் றுதித்து மற்றுந்
தங்களுக் கேற்ற பண்பிற் றரும்பணி தலைநின் றுய்த்தே
யங்கணர் கோயி லுள்ளா வகம்படித் தொண்டு செய்வார்; ச

(இ - ள்) வெளிப்படை. பெருகுகின்ற செல்வத்திற் சிறந்த அழகிய திருவாபரணங்களை விதிப்படி அழகுபெற இறைவனது திருமேனியிற் சாத்தி அலங்கரித்து, வேத மொழிகளாலே தோத்திரஞ் செய்து, தாம் செய்தற்கேற்றனவாகிய உரிய பிற பணிகளையும் சிறக்கச் செய்து, இறைவன் திருக்கோயிலுக்குள்ளே அகம்படிமைத் திருத் தொண்டுகளைச் செய்து வருவார்கள் (இவர்கள்);

(வி - ரை) திரு - கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். இது அப்பணிகளின் உள்ள மணிகள், வேலைப்பாடு முதலிய சிறப்பாலும், அவை இறைவனுக்குரிய தன்மையாலும், அவன் திருமேனியைச் சிங்காரித்து அழகுபார்க்கும் வண்ணம் அடியார்கள் மனத்தே விளைக்கும் விருப்பினாலும் மிகச் சிறந்தனவாயின. ஆதலின் பொங்கிய திருவின் நீடும் என்றார். திரு - அருட் செல்வமெனவும், பணி - தொண்டு எனவும் கொண்டு, அருட் செல்வத்தின் மேம்பட்ட திருத்தொண்டுகளை மேற்கொண்டு என்று கூறுதலுமொன்று. அடித்தவம் புரிந்து வாழ்வார் என மேற்பாட்டிற் கூறிய தனைத் தொடர்ந்து விரித்தபடியாம். ஏந்தி - இக்காலத்தும் பூசைமுறை யுடையோர் பொற்பணிகள் அணிவதாலும், ஏந்தி எனத் தன் வினையிற் கூறலாலும், பணிகள் ஏந்தி - பணிகளை அணிந்துகொண்டு - என இதனை அந்தணர்க்கே ஏற்றிக்கூறுவாரு முண்டு.

மங்கலத் தொழில்கள் - அணிகள், மணிகள், ஆடை, மாலை முதலியவற்றை அணிந்து அலங்கரித்தல்.

மறைகளாற் றுதித்து -

"பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையாற்
றுணிந்தமறை மொழியாலே துதிசெய்து"—கண் - புரா - 140

என்றது காண்க. இவை வேதத்தின் துதி வசனங்களாகிய நமக சமகங்கள், உருத்

திரம், இறைவனது தன்மை கூறும் உபநிடத வசனங்கள், சிவாகம வசனங்கள், தேவார திருவாசக முதலிய தமிழ்மறைகள் முதலியனவாம்.

மங்கலத் தொழில்கள் - என்றமையால் ஆகமவிதிப்படிக்குரிய ஆவாகனாதி எல்லாப் பூசாங்கங்களும், **மற்றும் தரும்பணி** என்றமையாற் சாமரம், விசிறி, முதலிய உபசாரங்களும் கொள்க. **மங்கலத் தொழில்கள்** என்றது நித்திய பூசையும், விழாச் சிறப்புக்களுமாம்.

அகம்படித் தொண்டு - திருக்கோயிலுக்குள்ளேயும், இறைவனது திருமேனியைச் சார்ந்து அணித்தேயும் செய்யப்பெறும் அபிடேகம் முதலிய திருப்பணிகள்.

"அருவரைவில் லாளிதனக் ககத்தடிமை யாமதனுக்
கொருவர்தமை நிகரில்லார்"—**புகழ்த்துணை - புரா** - 1

திருக்கோயிலுள்ளிடமன்றிப் புற முன்றில்களிலும், வெளிப்புறத்தினிலும் திருவலகு திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், கீதம் பாடுதல், ஆடுதல், திருவீதியலங்கரித்தல் முதலியன **புறத்தொண்டு** எனப்பெறும். "நாளைப், போவா னவனும் புறத் திருத் தொண்டன்" என்றதும் காண்க. 4

354. வருமுறை யெரிமூன் றோம்பி மன்னுயி ரருளான் மல்கத்
தருமமே பொருளாக் கொண்டு தத்துவ நெறியிற் செல்லும்
அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார் ;
திருநடம் புரிவார்க் காளாந் திருவினாற் பொலிந்த சீரார் ; ரு

(இ - ள்) வெளிப்படை. அறத்தையே பொருளெனக் கைக்கொண்டு, தத்துவ வழியிலே செல்கின்ற, நால்வேதங்களையும் ஆறங்கங்களையும் மிகப் பயின்று அவற்றிலே வல்லாராய், உலகம் அருள்பெற்று வாழும்பொருட்டு, விதிமுறையில் வரும் ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று எரிகளையும் வழுவாது வளர்த்துக் காத்து, அருள்நடம் புரியும் இறைவனுக்கு ஆட்செய்யப்பெற்ற அருட்செல்வத்தினாலே சிறந்துவிளங்கும் சீர்மையுடையாராவர் (இவ்வந்தணர்கள்) ;

(வி - ரை) வருமுறை - உண்மை நூல்களில் விதித்த முறையிலே வருகின்ற. முறை வரும் என மாற்றி உரைக்க.

எரிமூன்று - மூன்றுவகைப்பட்ட எரி. அவற்றுள் **ஆகவனீயம்** - தேவர்களுக்காக யாகசாலையின் வடகிழக்கில் நாற்கோணக் குண்டத்தில் வளர்க்கப்படுவது. தெற்கில் அரைச்சந்திர வடிவமான குண்டமிட்டு அதில் வளர்க்கப்பெறுவதால் **தட்சிணாக்கினி** எனப் பேர் பெற்றது பிதிரர்களுக் குரியதென்பர். **காருகபத்தியம்** ஆகவனீயத்தை அடுத்து வட்ட வடிவமைந்த குண்டமிட்டு வளர்க்கப் பெற்று, இல்வாழ்வோரால் ஓம்பப் பெறுவதால் அப்பெயர் பெற்றது. **எரி மூன்று** - வைதிகாக்கினி, சைவாக்கினி, வைந்தவாக்கினி என்பதுமொன்று.

ஓம்பி - இறக்கும்வரை காக்கப் பெறுவது. இறந்தால் அக்கிரியைக்கும் இதுவே உதவுவது.

மன்னுயிர் - உலகிற் பிறக்கும் உயிர் யாவையும். **மன்** - நிலைத்தல். உயிர்கள் நித்தமாதலின் **மன்னுயிர்** என்றார். "நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்"—**திருமுருகாற்றுப்படை.**

தருமமே பொருளாக் கொண்டு - அறத்தையே குறிக்கோளாக உட்கொண்டு.

ஆறு அங்கம்-இவை வேதத்துக்கு அங்கமாகப் பொருந்துவன. **ஆறங்கம்**-சிக்கை, கற்பசூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பன. இவற்றைக் கற்று நிரம்பிய பின்னரே வேதம் ஓதல் வேண்டும் என்பது விதி. **பயின்று வல்லார்** - "கற்க; கசடற" என்றபடி பயின்றது மாத்திரமன்றி அதில் மிகுவன்மையும்

படைத்துள்ளார். **தருமம்** - பூருவ மீமாஞ்சையிற்கண்ட யாகாதிகருமமும், **தத்துவ நெறி** - உத்தர மீமாஞ்சையிற் கண்ட பிரமோபாசனையும் குறித்தது.

ஆளாம் திருவினாற் பொலிந்த சீர்-ஆள் ஆகும் திரு அருட் செல்வம். "ஆட்பால வர்க்கருளும் வண்ணம்" - சம்பந்தர். தருமமே பொருளாக் கொண்டு...செல்லும் அரு மறை...பயின்று வல்லாராய், அருளான் மன்னுயிர் மல்க...ஓம்பி-ஆளாம் திருவினால்... சீரார் - என்று கூட்டி முடிக்க. கொண்டு செல்லும் அருமறை என்க. "அதாதோ தர்ம ஜிஜ்ஞாசா" என்பது தருமமீமாஞ்சை. "அதாதோ பிரம்ம ஜிஜ்ஞாசா" என்பது பிரம மீமாஞ்சை.

தத்துவ நெறி - "இலகு மெய்ந்நெறி". சிவமாகிய பரதத்துவத்தை அடைதற் குரிய நெறியிற் சென்று முற்றுதலின் **தத்துவ நெறியிற் செல்லும்...மறை** என்றார். இவர்களை முன்வைத்துப் பாடியபோது மன்னுயிர்கள் அருளால் மல்க எரியோம்பும் இச்சிறப்பையே திருஞான சம்பந்த சுவாமிகள்,

"கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே, செற்றார்"

எனத் தில்லை முதற் பதிகத்தில் முதலில் வைத்தோதியருளினார். ஓதுதலும், ஓதிய படியே நிற்றலும் வல்லார் என்க. "கற்க...நிற்க அதற்குத் தக" என்ற நீதிக்கிலக்கிய மாவார் என்பது. 5

355. மறுவிலா மரபின் வந்து மாறிலா வொழுக்கம் பூண்டார் ;
அறுதொழி லாட்சி யாலே யருங்கலி நீக்கி யுள்ளார் ;
உறுவது நீற்றின் செல்வ மெனக்கொளு முள்ள மிக்கார் ;
பெறுவது சிவன்பா லன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார் ; ௬

(இ - ள்) மறுவிலா...பூண்டார் - (இவர்கள்) குற்றமற்ற மரபிலே வழிவழியாக வந்ததன்றியும் இடையறாத நல்லொழுக்கத்தை மேற்கொண்டவர்கள்; அறுதொழில்... உள்ளார்-தமக்குரிய ஓதல் முதலிய ஆறு தொழில்களையும் விதிப்படி செய்து வருகின் றமையாலே உலகத்தின் உயிர்கட்கெல்லாம் கலியை வாராமற் பாதுகாத்தவர்கள் ; உறு வது...மிக்கார் - தாம் பெறக்கடவதாகிய உறுதிப்பயன் திருநீற்றின் நெறியாலாகிய அருட்செல்வமே என்று கொண்டொழுகி மிக்கெழும் ஆசையுள்ளவர்கள் ; பெறு வது...வாழ்வார்-சிவபெருமானிடத்துத் தாம் பெறத்தக்க பெரும்பேறாவது அவன் திரு வடியிலே பதிந்த அன்பொன்றுமேயாம் என்று கொண்ட பெருவாழ்வுடையார்கள் ;

(வி - ரை) மறுவிலா மரபு - தாய் தந்தை என்ற இருமரபும் வழிவழிச் சுட்டியறி யத் தக்கவாறு தூயராம் தன்மை குறித்தது. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" என்றார் நக்கீரதேவர்.

மாறிலா ஒழுக்கம் - மாறுதல் - இடையறுதல் - அஃதில்லாது நிலைபெற்று நின்று ஒழுகும் ஒழுக்கம். "நிலையிற்றிரியாது"—குறள். நிகரில்லாத என்றலுமாம்.

அறுதொழில் - அந்தணர்க்குரியனவாய் நூல்களில் விதித்த ஓதல் முதலிய ஆறு தொழில்கள். **ஆட்சி** - இவற்றைத் திறம்பட வழுவாதியற்றல். முன் குறித்த ஒழுக்க மின்னதென்று கூறியபடி.

அருங்கலி நீக்கி - இது இவர்களது தொழிலால் உலகம் பெறும் பயன் குறித்தது. தம்மிடமும் கலி வாராமல் நீக்கியவர் என்றலுமாம். "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" என்றும், "செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச், செல்வ மதி தோயச் செல்வ முயர்கின்ற, செல்வர்வாழ் தில்லை" என்றும் இதனையே திருஞான சம்பந்த சுவாமிகள் அருளியமை காண்க. கற்றல் - ஓதல் ஓதுவித்தலும், எரியோம்பல் - வேட்டல் வேட்பித்தலும், கலிசெறுதல் - ஈதல் ஏற்றலும் என இங்குக் கூறிய அறு

தொழிலும் கருதியது காண்க. ஓதல் - வேதசிவாகமமாதி சிவநூல்களை ஓதுதல். வேட்டல் - சிவபெருமானை நோக்கிச் செய்யும் சிவவேள்விகளை யியற்றல்.

உறுவது - தாம் அடையக் கருதுவது. உயிர்கள் அடையத்தக்க தென்பதுமாம். தமது தொழிலொழுக்கத்தாலே பிறர்க்குரிய பயன் கலிநீக்குதலாகவே, தாம் உறுவது நீற்றின் செல்வமும், தாம் குறிக்கோளாகக் கொண்ட பேறு அன்பும் ஆகக் கொண்டவர் என்க. நீற்றின் செல்வச் சிறப்பும் இயல்பும் திருநீற்றுப் பதிகத்துட் காண்க.

பேறுவது சிவன்பா லன்பாம் பேறு - வேதத்திற் சொல்லப்பெற்ற பிரமானந் தம் சிவானந்தமே எனக் குறித்தொழுகுதல். "சிவம் சதுர்த்தம் சாந்தம் அத்வைதம் மன்யந்தே" என்ற வேதவிதிப்படிச் சிவனையே நினைந்து ஒழுகுதல். இதனையே "பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும் பெருந்துணையை" என்றருளினர் அப்பர் சுவாமிகள். பேணுதல் - வழிபடுதல். 6

356\. ஞானமே முதலா நான்கு நவையறத் தெரிந்து மிக்கார்;
தானமுந் தவமும் வல்லார்; தகுதியின் பகுதி சார்ந்தார்;
ஊனமே லொன்று மில்லா; ருலகெலாம் புகழ்ந்து போற்று
மானமும் பொறையுந் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்; எ

(இ - ள்) ஞானமே...மிக்கார்-ஞானம் முதலாகவைத்து எண்ணப்பட்ட நான்கினை யும் குற்றம் நீங்கத் தெரிந்து அவற்றிலே மிகுதியும் திறமை பெற்றுள்ளவர்கள்; தான மும்...வல்லார் - தானத்திலும் தவத்திலும் சிறந்தவர்கள்; தகுதியின் பகுதி சார்ந்தார்- எல்லாவற்றிலும் தக்கவற்றையே சார்ந்தவர்கள்; ஊனமேல் ஒன்றுமில்லார் - ஒருகுறை வும் இல்லாதவர்கள்; உலகெலாம்...வாழ்வார் - உலகங்களெல்லாம் போற்றும் மானத் தினையும் பொறுமையினையும் மேற்கொண்டு இல்லறத்தை வழுவாது இயற்றி வாழ்கின் றவர்கள் (இவர்கள்);

(வி - ரை) ஞானமே முதலா நான்கு - ஞானம் - யோகம் - கிரியை - சரியை என்பன. ஞானத்தை முதலாக வைத்துச் சொன்ன தென்னையெனின், ஞானமே கனி-பலன் என்பர். அதுவே முடிந்த பயனும். ஆயின் இந்தப் பலனைப் பெறுதற்கு முன், கனியை வேண்டுவோன் ஒருவன் கனியே தனது விருப்பில் முதன்மை பெற்ற தாயினும் அதற்கு முன்னதாக காயும், மலரும், அரும்பும் இன்றியமையாது வேண்டப் படுதலின் அவற்றை முன்னர்க் காப்பவனுவன். அதுபோலவே இதுவுமாதலின் முதலா நான்கும் என்றார். முதல் - முதன்மையாகக் கொள்ளப்பட்டது.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்றார் தாயுமானார். இக்கருத்துப் பற்றியே திருமூல நாயனார் புராணத்துள்,

"ஞானமுத னான்குமலர் நற்றிருமந் திரமாலை" (26)

"நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையிவை" (28)

என்று ஆசிரியர் வரம்புபடுத்திக் கூறியருளினர். இவ்வாறறியாது ஞானமுதல் நான்கு என்றதற்கு ஞானத்தை அந்தமாகவுடைய நான்கென்று கூறுவாருமுளர். முதல்-அந்த மென்று பொருள்படாமை காண்க. ஞானம் முதல் நான்கும் நான்கு பாதம் - நெறி - என்பர். இவையே சன்மார்க்கம் - சகமார்க்கம் - புத்திரமார்க்கம் - தாசமார்க்கம் என்று கூறுவர். இவற்றின் விரிவுகளைத் திருமந்திரத்துட் காண்க.

நவையற - ஐயந்திரிபு நீங்க. நவையறும் பொருட்டு என்று கூறலுமாம். "கற்கக் கசடற" என்ற இடத்து விபரீதவையங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருட னும் பலகாலும் பயிறல் என்றுரைத்தது காண்க.

தானம் - சற்பாத்திரமறிந்து செய்தல். அதாவது சிவஞானிகளிடத்துச் செய்தல்.

" அகர மாயிர மந்தணர்க் கீயிலென் ? - சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென் ?,
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு - நிகரிலை யென்பது நிச்சயந் தானே "
—ஏழாந் தந்திரம் - 157

" திலமத் தனையே சிவஞானிக் கீந்தால் - பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்-பலமுமற் றேபர போகமுங் குன்றுமே"
—இரண்டாந் தந்திரம் - 165

முதலிய திருமந்திரங்கள் காண்க.

தவம் - சிவபூசை. முன்னர் உரைத்தவை காண்க. தவங்களிற் சிறந்ததாய்ச் சிவனை நேரே கூட்டுவதால் தவமாவது சிவபூசை என்க. **மிக்கார் தானம்** எனக்கூட்டி (நூல்) வல்லார்கள் உரைத்த பகுதிப்படி தானம் தவம் சார்ந்தவர் எனக் கூட்டி யுரைத்தனர் மகாலிங்கையர்.

ஊனம் - குற்றம் - அதனலாகிய பிறவி. **இல்லார்** - பிறவி விதையைத் தானந் தவமாதிகளால் மேல் முளையாது செய்தவர். 342 பார்க்க.

மானம் - " மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் "—குறள்

என்றபடி உயிர் கொடுத்தும் தமது கொள்கையைத் தவறாது காப்பவர்.

பொறை - " பொறையுடைய பூமிநீ ராணய் போற்றி "
—ஸ்ரீகயிலாயம் - போற்றித் திருத்தாண்டகம் - 5

என்றபடி பூமி பொறையுடைமைக்கு இலக்கியமாவது.

" அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை " என்றார் நாயனர்.

மனையறம் - இல்லறம். இது, " இல்லற மல்லது நல்லற மன்று ", " முயல்வாருளெல்லாந் தலை ", " புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன் ", " நோற்பாரி னேன்மை யுடைத்து ", " வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பனவாதி புகழ்களாலே பெரியோர் பாராட்டும் பண்புடையதாய், நூல்களில் விதித்தபடி ஒழுகும் இல்வாழ்க்கையாம். 7

357. செம்மையாற் றணிந்த சிந்தைத் தெய்வவே தியர்க ளானார்
மும்மையா யிரவர் தாங்கள் போற்றிட முதல்வ னாரை
இம்மையே பெற்று வாழ்வா ; ரினிப்பெறும் பேறொன் றில்லார் ;
தம்மையே தமக்கொப் பான நிலைமையாற் றலைமை சார்ந்தார் ; அ

(இ - ள்) வெளிப்படை. செம்மைத் தன்மையின் நிறைவினாலே ஆணவ நீங்கித் தணிவுபெற்ற சிந்தையுடைய தெய்வத்தன்மை வாய்ந்த மூவாயிர வேதியர்கள் இம்மையிலேயே இறைவனைத் தாம் போற்றி வாழும்படிக் கைவசமாகக் கிடைக்கப்பெற்று வாழ்கின்றவர்கள் ; ஆதலின் அவர்கள் இனிப் பெறுவதாய இதனின் மிக்க பேறு வேறில்லாதவர்களாயினர் ; மேற்கூறிய எல்லாவற்றாலும் தமக்கு நிகரானர் தாமேயல்லாது பிறரில்லை என்ன நிலைபெற்று அந்நிலையிலே தலைசிறந்தவர்கள் ;

(வி - ரை) **செம்மை** - திருநின்ற செம்மை - சிவத்தன்மை. அதனாற் **றணிந்த சிந்தை.** சிந்தையிற் சிவத்தன்மை நிறைய நிறைய ஆணவத்தன்மை வலி குறைந்துபடும். ஆணவம் வெப்பமிக்கு மேலெழு மியல்புடையதாதலின் தீயது என்பார் அது வலி குறைந்த நிலையைத் **தணிந்த** என்றார்.

" தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார்"—கண்-புரா-140

முதலிய திருவாக்குக்கள் காண்க. **செம்மை** என்பதற்கு ஒழுக்கம் என்றும், இல்லற

நடத்தும் செவ்வழி என்றும் கூறுவாருமுண்டு. செம்மையின் நிறைவு பெறுவதன் வழிகள் மேலே கூறப்பெற்றன.

தெய்வ வேதியர்கள் - தெய்வத்தன்மையுடைய வேதியர். சீவன்முத்தநிலை யடைந்தவர்கள் என்று கூறுவாருமுண்டு. சிந்தையையுடைய வேதியரெனவே சிந்தை என்றது அந்தக்கரணத்தை எனவும், தணிந்த என்ற பெயரெச்சம் வினைமுதற் பெயர் கொண்டு முடிதலின் தணிதல் - தண்ணளியுடையதாதல் எனவும், ஆகவே, எவ்வுயிர்க்குஞ் செவ்விய தண்ணளி செய்யுஞ் சிந்தையையுடைய வேதியர் - தெய்வவேதியர் - எனத் தனித்தனிக் கூட்டி முடிக்கப்படும் என்பாரும் உண்டு. நடேசரைத் தங்களி லொருவராகப் பெற்றமையால் தெய்வ வேதியர் என்றலுமாம்.

மும்மையாயிரவர் - இவர்களின் தொகை குறித்தவாறு. தில்லைமூவாயிரவர் என்பர். "முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கும் மூர்த்தி யென்னப், பட்டானை"— **சுந்தரர் தேவாரம் - குறிஞ்சி - கோயில் - (7).**

முதல்வனுரை இம்மையே பெற்று வாழ்வார்-யாவர்க்கும் தலைவராய் ஐந்தொழில் புரிந்து உலகத்தை ஆட்டுவிக்கும் இறைவனை இப்பிறப்பிலேயே தமக்குரிய ஆன்ம நாயகராகக் கைவரப்பெற்று பூசை புரிந்து வாழ்வார்.

இனிப்பெறும் பேறு ஒன்று இல்லார் - சிவப்பேறு என்பதே உயிர்கள் பெறும் முடிந்த பயன் என்று ஞானநூல்கள் முடிபு கூறுகின்றன. அதனை இப்பிறப்பிலே பெற்ற உயிர், இனி, மேலே பெறக்கடவதாகிய பேறு வேறு ஒன்றும் இல்லை. என்பது. வாழ்வார் ஆதலின் இல்லார் ஆயினர் என்க. **ஒன்று** - ஒன்றும் - உம்மை தொக்கது.

தம்மையே தமக்கொப்பான நிலை - "தனக்குவமை யில்லாதான்", "ஓர் உவம னில்லி" என்பனவாதி திருவாக்குக்களால் கூறப்பெற்ற இறைவனது தன்மைகளில் ஒன்று. இறைவனைப் பெற்றுவிட்டமையால் இவர்களும் அத்தன்மையினராயினர் என்பது. உயிர் சார்ந்ததன் வண்ணமாமாதலின் சிவத்தைச் சாரப்பெற்றபோது அதன் தன்மை பெற்றதென்பார் **தம்மையே தமக்கொப்பான நிலை** என்றார்.

தலைமை சார்தல் - இந்நிலை பெற்றார் பலருள்ளும் சிறந்து விளங்குதல். முதல்வரான நடராசர் ஒருவரையே மூவாயிரவரும் தத்தமது ஆன்மநாயகராகக் கொண்டு அவரையன்றி வேறு சார்பின்றிப் பூசிக்கும் பேறு பெற்றவர்கள் என்றவாறு.

பெற்று வாழ்ந்தார்—என்பதும் பாடம். 8

358. இன்றிவர் பெருமை யெம்மா லியம்பலா மெல்லைத் தாமோ?
தென்றமிழ்ப் பயனா யுள்ள திருத்தொண்டத் தொகைமுன் பாட
வன்றுவன் றொண்டர் தம்மை யருளிய வாரூ ரண்ணன்
முன்றிரு வாக்காற் கோத்த முதற்பொரு ளானா ரென்றால். ௯

(இ - ள்) இன்றிவர்...ஆமோ - இன்று இவர்களது பெருமைகள் எம்மாற் சொல்லப்பெறும் எல்லையுட் படுவனவோ? (படா. என்னையெனின்); தென்றமிழ்ப்பயன்... பாட-**தென்றமிழின் பயனேயாய்** விளங்குகின்ற **திருத்தொண்டத்தொகை** பாடுதற்கு; அன்று வன்றொண்டன்...ஆனால்-முன்னாள் வன்றொண்டராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு ஆணைதந்து அடியெடுத்துக் கொடுத்தருளிய திருவாரூர்த் தியாகேசர் தொடக்கஞ்செய்து தந்து முதலிலே கோத்த "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்ற சொற்றொடராற் குறித்த பொருளாவார் இவர்களே என்று காண்போமானால்.

(வி - ரை) **இன்று** - இப்போது - மேற்கொண்டு நின்ற இப்போது.

முதற் பொருள் - திருத்தொண்டத் தொகையிலே கோத்துத் துதித்த அடியார் திருக்கூட்டத்தில் முதலில் பேசப்பெற்ற பொருள் நடராசராகிய முதல்வரைக் **குறித்து**

வைத்தமையாலும், தொடக்கத்து வைத்தமையாலும் **முதற்பொருள்** என்றார். இங்குப் **பொருள்** என்றதைச் "செம்பொருள்", "மெய்ப்பொருள்" என்றவற்றிற்போலக் கொள்க.

திருவாக்கு - திருவைத் தரும் வாக்கு - உயிர்களுக்கு மெய்ப்பொருள் கூறி வழிப் படுத்தி அவர்களை முத்தியிற் செலுத்தும் வாக்கு. திரு - முத்திச் செல்வம். "அல்லறீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்" (345) என இதனை முன்னர் விரித்துணர்த்தினார்.

வன்றொண்டர் தம்மை யருளிய ஆரூரண்ணல் - முன்னர், "நீதியா லவர்க டம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை, கோதிலா வாய்மை யாலே பாடெனா"க் கூறியதைக் குறித்தது (343). **அருளிய** - பணித்தருளிய.

தென்றமிழ்ப் பயனுள்ள திருத்தொண்டத்தொகை - அழகும் இனிமையும் கொண்ட தமிழ்மொழியின் பயன் திருத்தொண்டத் தொகையேயாம் என்க. **தென்** - அழகு - இனிமை. தீந்தமிழ் என்பதும் அது. அழகு - எழுத்தமைப்பு, சொல்லியல்பு, பொருளமைதி முதலிய பலவற்றாலும் பிற மொழிகளுக்கில்லாத அழகு பொருந்துதல். இனிமை - இனிய பொருளைத் தருதல். இவற்றின் விரிவுகள் எமது மாதவச் சிவ ஞான சுவாமிகள் அருளிய முதற்சூத்திர விருத்தி முதலிய நூல்களில் வல்லார்வாய்க் கேட்கத்தக்கன. **பயன்**-பேறு-தமிழினாற் றாப்பெறும் உறுதிப்பொருள். தமிழ்நூல்கள் பலவுங் கற்பார் எல்லா வளனும் பெற்று அது காரணமாக இறைவனடியா ரடிசார்தலே அக்கல்வியினாற் போந்த பயனும் என்பது. "கற்றதனா லாய பயனென்கொல் வாலறி வன், நற்றா டொழாஅ ரெனின்?" என்று வினாவின் மூலம் உறுதி கூறியருளினார் பொய்யாமொழியார். "மந்தி போற்றிரிந் தாரி யத்தொடு **செந்த மிழ்ப்பய** னறிகிலா - அந்தகர்" என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம். (திருவாலவாய்-கொல்லி-4) "வாயிருந்தமி ழேபடித் தாளுறா வாயிரஞ் சமண்" என்று தமிழ்ப்பயன் ஆளாதலே என முடித்துக் காட்டியருளினார் அப்பர் சுவாமிகள். (குறுந்-பழையாறை வடதளி-9) "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்" என்று (திருஞான - புரா - 1088) பொருள் வகையில்வைத்து ஆசிரியர் காட்டி, அப்பொருளைக் கூறும் சொல் இதுவே என்றருளிய படியாம். **பயன்** - சிவஞானபோதம் பயனியலில் முடிந்த பயனாகக் கூறும் அணைந் தோர் தன்மை என்ற பன்னிரண்டாம் சூத்திரப்பொருள் இத்திருத்தொண்டத்தொகை யாற்போந்த பொருளேயாதலின் **தென்றமிழ்ப்பயன்** என்றார்.

தொகை முன் பாட - தொகையின் முன் வைத்துத் தொடங்கிப் பாட.

ஆமோ-ஓகாரம்-எதிர்மறை. "தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான சங்கரன்" அடியேன் என்று தமது திருவாக்காற் கூறுதற்கு இவர்கள் பொருளாயினார் என்றால் என்பது கருத்து.

வன்றொண்டர் தம்மைத்-தொகை - பாட - அருளிய ஆரூரண்ணல் - முன் - திரு வாக்கால் கோத்த - முதற்பொருள் ஆனார் என்றால் - இவர் பெருமை எம்மால் இயம்ப லாம் எல்லைத்தாமோ? என்று கூட்டி யுரைக்க.

இயம்பலாம் பெருமை—என்பதும் பாடம். 9

359\. அகலிடத் துயர்ந்த தில்லை யந்தண ரகில மெல்லாம்
புகழ்திரு மறையோ ரென்றும் பொதுநடம் போற்றி வாழ !
நிகழ்திரு நீல கண்டக் குயவனார் நீடு வாய்மை
திகழுமன் புடைய தொண்டர் செய்தவங் கூற லுற்றும். ௧௦

(இ - ள்) அகலிடத்து...வாழ! - பரந்த உலகிலே உயர்வுடைய தில்லைவாழந்த ணர்களாகிய உலகம் எல்லாம் புகழ்ந்து போற்றும் செல்வத் தெய்வ வேதியர்கள் நித்த மும் தில்லைச் சிற்றம்பலத்தின் அத்தனது அருணடனத்தைப் பேணிப் போற்றி வாழ் வார்களாக! நிகழ்...உற்றும் - திருநீலகண்டம் என்ற பெயரோடு நிகழ்ச்சி பெற்ற

குயவனாராகிய நீடு செலுத்திய வாய்மைத்தன்மை விளங்குதற்கிடமாகிய அன்புடைய தொண்டனார் செய்தவத்தின் வரலாற்றினைச் சொல்லப் புகுகின்றோம்.

(வி - ரை) உயர்ந்த அந்தணராதலின் அகிலம் புகழ் வேதியராயினர் என்க. **உயர்ந்த** என்பதனைத் தில்லைக்கு அடையாக்கி, ஆகாய தத்துவ நிலயமான தலமாதலின் உலகில் உயர்ந்ததாகிய தில்லை என்றுரைத்தலுமாம். வேதாகம புராணேதிகாசங்களாலும், தமிழ் மறைகளாலுந் துதிக்கப்படும் உயர்வு என்றலுமாம்.

அகிலமெல்லாம் புகழ்தல் - மேற்கூறிய பண்புகளாலாகியது. திருஞானசம்பந்த சுவாமிகள் தில்லைவாழந்தணர்களைச் சிவகணநாதர்களாய்க் கண்டு தேவாரத்திலே வைத்துத் துதித்த வரலாறு அவர் புராணத்துட் காண்க. (திருஞா - புரா - 170).

என்றும் - எக்காலத்திலும். என்றும் வாழ எனக் கூட்டுக.

நிகழ் திருநீலகண்டக் குயவனார் - நிகழ் - "திருநீல கண்டத்துக் குயவனார்" என்ற திருத்தொண்டத் தொகையின் பொருளைக் குறித்தது. **நீடு வாய்மை திகழும் அன்பு** - ஒரு ஆயுள் அளவும் கைக்கொண்டு செலுத்தப்பெற்ற உண்மைத் திறத்தினாலே விளக்கம்பெற்ற அன்பு. இவற்றின் விரிவு அப்புராணத்துட் காணப்பெறும்.

செய் தவம் - தவம் -

"அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கி ஞானப்
புகலுடையோர்"—**திருஞான - மேகராகக் குறிஞ்சி - திருவீழி** - 6

என்றபடிக்குள்ள தவநிலை பூண்டு வாழ்தல். சரிதம் இதனை விரித்துக் கூறும்.

நிகழ் - நீடு - என்பன வினைத்தொகைகள். அவ்வவையும் முக்காலத்தும் செல்லும் திறமை நோக்கிக் கூறிய அழகு காண்க. இங்குக் கூறிய இவையும், **செய்தவம்** என்றதும் திருநீலகண்ட நாயனாரது சரித தத்துவங்களாமாறும் உய்த்துணர்க.

போற்றி வாழ - இப்புராண முதல் இரண்டு பாட்டிலும் கண்டவாறு போற்றியும் பின்னர்க் குறித்தவாறு பேணியும் வாழ்தல். "போற்றிநீ டில்லை வாழந்தணர்" (352) என்ற இடத்து மேலே கண்டவாறு போற்றிக்கொண்டு வழி வழியாய் என்றும் நீடி வருகின்ற என்பார் **என்றும் போற்றி வாழ** என்று கூறி முடித்தார். அகிலமெல்லாம் புகழ் என்றதனாலே ஆசிரியர் தாமும் அவர்களைப் போற்றி முடித்தனர்.

எடுத்துக்கொண்ட புராணத்தை முடித்துக் காட்டி இனி வரும் புராணத்துக்குத் தோற்றுவாய் செய்தார். இவ்வாறே வரும் புராணங்கள் தோறும் கண்டுகொள்க. முடித்துக் காட்டுவதிலும், தோற்றுவாய் செய்வதிலும், அவ்வப்புராண சரித தத்துவங்களை எல்லாம் சுருங்கத் தொகுத்துக் காட்டி விளக்கும் அழகும் கண்டுகொள்க.

வாழ்க—என்பதும் பாடம். 10

சுருக்கம் :—உலகெலா நிறைந்தும், அறிவித்தும், நிற்கும் ஐந்தொழில் நடனம் போற்றப் பெறுவது; அந்நடனம் செய்கின்ற பூங்கழல் போற்றப் பெறுவது. இதனைப் போற்றி வாழ்கின்றவர்களாகிய தில்லைவாழந்தணர்கள் இறைவனது திருவடித் தொண்டிலே உரிமை பூண்டு ஒழுகுகின்றவர்கள்; இறைவனது திருமேனியை அலங்கரிப்பவர்; மறைகளாற்றுதிப்பவர்கள்; இன்னும் திருக்கோயிலினுள்ளே செய்யப்பெறும் அகம்படித் தொண்டுகள் செய்பவர்கள்; உலகம் அருள் பெற்றோங்குமாறு மூன்றெரியும் விதிப்படி வளர்த்து வருபவர்; நான்கு வேதமும் ஆறங்கமும் வல்லவர்; தூயமரபில் வந்த தூய ஒழுக்கமுடையவர்; அறு தொழிலாற் கலியை வாராமே நீக்கியவர்; திருநீற்றின் செல்வமே பற்றுக்கோடென்றும், சிவபெருமானிடத்துப் பதிந்த அன்பே பெறும் பேறு என்றும் கொண்டொழுகுபவர்; ஞான முதலாகிய நான்கு முணர்ந்தவர்; தானத்திலும் தவத்திலும் வல்லவர்கள்; மானமும் பொறுமையும் தாங்கிய இல்லறத்தினிற்பவர்; இம்மையிலேயே இறைவனைக் கிடைக்கப் பெற்றவர்; தமக்கொப்பில்லாதவர்கள்; திருத்தொண்டத் தொகையின் முதலில் வைத்துத் திருவாரூர்ப் பெருமான் திருவாக்கி

ஞற் சொல்லப்பெற்ற பெருமையுடையார்கள்; இவர்கள் என்றும் பொதுநடம் போற்றி வாழ்வாராக !

கற்பனை :—1. இறைவனது ஐந்தொழிற் றிருக்கூத்தினைச் சகள நிட்கள வழி பாடுகளால் திருத்தில்லை யம்பலத்தில் கண்டு வழிபடுதல் சிறப்புத் தருவதாகும்.

2. அடித்தவம், அகம்படித் தொண்டு, ஆளாந் திரு இவற்றின் சிறப்பியல்புகள் உணர்ந்து போற்றத் தக்கன.

3. மானமும் பொறையும் தாங்கிய மனையறமே சிறந்தது.

4. நான்மறை ஆறங்கம் பயின்று வருதலும், மரபுக்கு மறு வாராமற் காத்தலும், நல் ஒழுக்கத்து நிற்றலும், ஞான முதலிய நான்கும் தெரிதலும், தானமும் தவமும் சார்தலும், தருமமே பொருளாக் கொள்ளுதலும், அந்தணர்க்குப் பொதுமையாலும், தில்லைவாழந்தணர்க்குச் சிறப்பாயும் உரியன.

5. உயிர்கள் உறுவது திருநீற்றின் செல்வம் ; பெறுவது சிவன்பாலன்பாம் பேறு.

6. இம்மையே முதல்வரைப் போற்றப் பெற்று வாழ்வார்கள் இனிப் பெறத்தக்க பேறு வேறில்லையாம்.

7. பிறர் எண்ணுகின்றபடி வேதவிதியாகிய வைதிக வொழுக்கமட்டு மல்லாமல் அதனின் மேற்பட்ட ஆகமவிதியாகிய சைவசித்தாந்தத் திருநீற்றின் நெறியும், அடித் தவமும், சிவஞானமும் தில்லைவாழந்தணர்க்குரியன.

தில்லைவாழந்தணர் புராணம் முற்றிற்று.

2. திருநீலகண்ட நாயனார் புராணம்

தொகை

“ திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன் ”—**திருத்தொண்டத்தொகை**

வகை

“ சொல்லச் சிவன்றிரு வாணைதன் றூமொழி தோணசையை
யொல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளொடி டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே ”

—**திருத்தொண்டர் திருவந்தாதி**

விரி

360. வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார் ;
மாதொரு பாக நோக்கி மல்குசிற் றம்ப லத்தே
ஆதியு முடிவு மில்லா வற்புதத் தனிக்கூத் தாடு
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடு நலத்தின் மிக்கார் ; க

புராணம் :—திருநீலகண்டம் என்ற பெயரோடுங் கூடிய நாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. இங்குப் புராணம் என்பது சருக்கத்தின் உட்பகுதியைக் குறித்து நின்றது. திருத்தொண்டத்தொகையிற் கண்டவாறே நிறுத்த முறையிலே

தில்லைவாழந்தணர் சருக்கத்தில் இரண்டாவது திருநீலகண்டத்துக் குயவனார் சரிதம் கூறத் தொடங்குகின்றார்.

தொகை :—**திருநீலகண்டத்துக் குயவனார்** - திருநீலகண்டம் என்ற பெயரையே தமது பெயராகக் கூடியவரும், குயவர் குலத்திலே வந்தவரும் ஆகிய பெரியார். இது அவருக்கு உலக வழக்கில் வழங்கிய காரணப்பேர் ஆதலின் **கண்டத்துக்** குயவனார் என அத்துச்சாரியை புணர்த்தி யோதியருளினார்.

இப்பேர் வந்த காரணம் 363-366 பாட்டுக்களிற் காண்க. நாயனாரது இயற்பேர் வேறு. மரபும், பெயர்வந்த காரணமும், சரிதக்குறிப்பும் திருத்தொண்டத்தொகையாகிய முதனூலிற் குறிப்பிட்டவாறு கண்டுகொள்க.

வகை :—"சிவன்றிருவாணை" - அண்ணலாராணை - 403. **தன் தூமொழி** - தாம் ஆர்வம் வைத்து எப்பொழுதும் போற்றிச் சொல்லி வந்த மொழி என்ற பொருளும் பெற நின்றது ; **தன் தூமொழி** - மனைவியார். தூமொழி சொல்ல என்றும், தூமொழி தோள் என்றும் ஈரிடத்தும் இயைக்க ; ஒல்லை - ஆணை கேட்டவுடன் ; திருவாணை உய்த்த வகையிலே மூப்பு வருங்காறும் மனைவியின் இன்பத்தையே யன்றி, வேறு எந்த மாதரின் ஆசை நினைவையும் துறந்தனர் எனவும், திருவருளால் மீளவும் இளமை பெற்றனர் எனவும், அவர் தில்லையில் வாழ்ந்தனர் எனவும் சரிதங் குறித்தவாறு காண்க. "திருநீலகண்டக் குயவன்" - முதனூல் ஆட்சி.

360. (இ - ள்) வேதியர்...வந்தார் - மேலே விரித்துச் சொல்லிய அந்தணர்கள் வாழ்கின்ற தில்லை என்கின்ற தொல்பெரும் பதியிலே அவதரித்தவர்; மாது...மிக்கார் - உமையம்மையா ரமர்ந்த ஒரு பாகத்தை நோக்கிக்கொண்டு,நிறைந்த திருச்சிற்றம்பலத்தி னிடமாக நின்று, ஆதியுமந்தமுமில்லாத அற்புதத் தனித் திருக்கூத்தினை ஆடுகின்ற இறைவனது திருவடிகளையே போற்றி வழிபட்டு வருகின்ற நல்லொழுக்கத்திலே தலை சிறந்தவர்.

(வி - ரை) வேதியர் தில்லை மூதூர் - நாயனாரது சரிதத்திற்குரிய நாட்டுச் சிறப்பும், நகரச்சிறப்பும், அதன் குடிச்சிறப்பும் உரைத்தபின் முன் புராணத்திற்கூறிய பொருளைத் தொடர்ந்துகொண்டு அந்த வேதியர் என அனுவதித்து எடுத்துக்கொண் டதுமாம். **மூதூர்** - பழம் பதி.

வேட்கோவர் - குயவர். மண்ணிலே குல உரிமைத் தொழில் செய்பவர் என்பது பொருள்.

மாதொருபாக நோக்கி - அம்மையார் இருக்கும் இடப்பாகத்தைத் திருவருளினாலே நோக்கம்செய்துகொண்டு. நோக்கி ஆடும் நாதனார் என முடிக்க. "வலப்பா னாட்ட மிடப் பா னோக்க" என்பது **திருவிடைமருதூர் மும்மணிக்கோவை (1). நோக்குதல்**-அருளினை அம்மையார் வழியே உயிர்க்குழவிகள் பெற்றுய்யும்படி பார்த்தல். **ஒரு பாகம்** - ஏற் புழிக்கோடல் என்ற விதியால் இங்கு இடப்பாகம் என்று கொள்க.

மல்கு சிற்றம்பலம் - எங்கும் - என்றும் - நிறைவுற்ற ஞானாகாயம்.

ஆதியும் முடிவுமில்லா - இன்னகாலத்திலே, இன்ன இடத்திலே தோன்றிற்று. முடிவுபெறும் என்பதில்லாத - காலத்தையும் இடத்தையும் கடந்த. ஆதியுமுடிவுமில் லாத கூத்து - என இயையும்.

கூத்து - ஐந்தொழிற் றிருக்கூத்து. இது என்றும் நித்தியமாய் உள்ளது. " திகழ் பதியாம் ஈசனது நடத்தொழிலும்...அறுதி" என்றனர் உமாபதி சிவாசாரியார்.

ஆதியு முடிவு மில்லா நாதனார் என்று கூட்டியுரைத்தலுமாம். **அற்புதம் - தனி** - என்பன கூத்திற்குரிய அடைமொழிகள். **அற்புதம்** - 351 ம் பாட்டிற் காண்க. **அற் புதம்** - ஞானமுமாம். **தனி** - தனி முதல்வன் இயற்றுவதாலும், பிறர் இயற்றுதற் கிய லாமையாலும் **தனி** என்றார். இக்கூத்தின் இயல்பு முன்னர் உரைக்கப்பட்டது.

வாழ்த்தி - "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்றபடி, "நாதன் றாள் வாழ்க" என வாழ்த்துதல் திருவடிக்கீழ் வாழும் வாழ்வருளும் பொருட்டு.

நலம் - வீடுபேறு. நலந்தருவதனை நலமென்றது உபசாரம். இவ்வழிபாடு ஒன்றே நலந்தருவதாம் என்றதாம். இப்பாட்டினுக்குத் தொண்டர் என்று மேற்பாட்டிற் கூறிய அவர் என எழுவாய் வருவித்துக் கொள்க.

மன்னுசிற்றம்பலத்தே—என்பதும் பாடம். 1

361. பொய்கடிந் தறத்தின் வாழ்வார் ; புனற்சடை முடியார்க் கன்பா
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பி னின்றார் ;
வையகம் போற்றுஞ் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார் ;
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார் ; ௨

(இ - ள்) பொய்...வாழ்வார் - (முன்பாட்டிற் கூறிய அவர்) பொய்மையை ஒழித்து அறநெறியிலே வாழ்பவர் ; புனல்...நின்றார் - கங்கையைத் தரித்த முடியையுடைய சிவபெருமானது உண்மை யடியார்களுக்கு வேண்டுவனவாகிய பணிவிடைகளைச் செய்யும் விருப்ப மிக்க ஒழுக்கமுடையார் ; வையகம்...வாழ்வார் - உலகிலே சிறந்ததாகக் கொண்டொழுகப்பெறும் இல்லறத்தை விதிப்படி வழுவாது செய்து வாழ்பவர் ; சைவ...நீரார் - சைவத்தின் உண்மைச் செல்வத்தின் சார்பே பொருளாவது என்று உணர்ந்து சார்ந்து ஒழுகும் தன்மையுடையவர் ;

(வி - ரை) **பொய் கடிந்து அறத்தின் வாழ்தல்** - மெய்ப்பொருள் இதுவென்றும் பொய்ப்பொருள் இதுவென்றும் உணர்ந்து பொய்யினைத் தள்ளி உண்மை நெறியாகிய சிவநெறியிலே வாழ்பவர். **அறம்** - ஈண்டுச் சைவ நல்லறங்களின் மேனின்றது. பின்னர் **மனையறம்** வேறு பிரித்துச் சொல்லப் பெறுதலின், இங்குக் குறித்த **அறம்** உலக நிலையின் வைக்கும் அறங்களின் வேறாகிய பதிதருமம் எனப் பெறும் சிவதருமங்கள் என்க.

அன்பாம் மேய்யடியார்கட்கான பணி - உண்மை யடியார்கள். அன்பாகிய உண்மைத் தன்மையில் நிலை பெற்றவர்கள். பொய்யடியார் என்பதொன்றில்லாமையின் **அன்பாமெய்** என்பது இயல்பு குறித்து நின்றது. **ஆனபணி** - வேண்டுவன - ஆவன - ஆகிய பணிவிடைகள் தம்மாற் செய்யத் தக்கன. இப்பணிவிடையே இச்சரித நிகழ்ச்சிக்குக் காரணமாயினமையால் இதனை இங்குச் சிறப்பித்து எடுத்துக் கூறினார். இவ்வாறே ஏனைச் சரிதங்களிலுங் கண்டு கொள்க.

வையகம் போற்றும் செய்கை மனையறம் - உலகிற் பெரியோர்கள் சிறந்தன என்று கொள்ளும் விருந்தோம்பல் முதலிய செயல்களைச் செய்தற்குரியதான இல்வாழ்க்கை. **வையகம் போற்றும் செய்கை** என்றதற்கு நீதிநூல்களில் விரித்தவாறு வையகத்துள்ள துறந்தார் முதலிய யாவர்க்கும், ஏனை எல்லா வுயிர்க்கும் பற்றுக்கோடாய் நின்று பாதுகாக்கும் செய்கை என்றுரைத்தலுமாம்.

சைவ மேய்த் திருவின் சார்வு - சைவச் செல்வமாகிய திருநீறு-கண்டிகை-சடைமுடி - சீபஞ்சாக்கரம் முதலிய உண்மைச் சார்புகள். "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்" என்ற **குறள்** காண்க. "அஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக் கொண்ட நாயன்மார்"—**காஞ்சிப் புராணம்.**

பொருள் - உண்மைப் பொருள். இதுவே பொருள் ; ஏனையவெல்லாம் பொருள் அன்று - என்று சார்ந்தார் என்க. " பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் - மருளானும் மாணாப் பிறப்பு " என்பது **குறள்.** **நீரார்** - நீர்மையுடையவர்.

முடியார்க்கன்பர்—என்பதும் பாடம். 2

362. அளவிலா மரபின் வந்த மட்கல மமுதுக் காக்கி
வளரிளந் திங்கட் கண்ணி மன்றுளா ரடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க வோடளித் தொழுகு நாளின்
இளமைமீ தூர வின்பத் துறையினி லெளிய ரானார்.

(இ - ள்) அளவிலா...ஆக்கி - (அவர்) அளவுட்படாத பரம்பரையில் தமது மரபு வழியே நின்று செய்துவந்த தொழிலிலே செய்யும் மட்கலங்களைத் தமது இல்வாழ்க்கையின் சீவனத்துக்கு ஆகிய அளவில் மட்டுமே ஆக்கிக்கொண்டு ; வளர்...ஓடளித்து - வளர் பிறையை அணிந்த இறைவனடியார்கள் வேண்டிய பலிப்பாத்திரங்களை அவர்கள் எப்போதும் மகிழ்ந்து கொள்ளும்படி நிறையக் கொடுத்து; ஒழுகு நாளில் - ஒழுகி வருகின்ற நாளிலே ; இளமை...ஆனார் - இளமை மீதூர்தலினால் சிற்றின்பத் துறையிலே எளியராயினார்.

(வி - ரை) அளவிலா மரபின் வந்த-அளவு காணமுடியாதபடி தொன்றுதொட்டு வழங்கி வந்த மட்கலத்தொழில். அளவிட முடியாத பயனுடையதாய், " ஆரியன் குலாலனாகி வாக்கின னுலகமெல்லாம் " என்றபடி, இறைவனது சிருட்டித் தொழிலுக்கு இணை சொல்லத்தக்க மரபில் வந்ததாய் உள்ள என்றுரைத்தலுமொன்று.

அமுதுக்காக்கி-அமுது சமைத்தற்காக வேண்டிய பற்பல வகைகளிலும் படைத்து என்று உரை கூறுவாருமுண்டு. தமது அமுதுக்கு - சீவனத்துக்காக மட்கலங்களையும், அடியார்க்கு உதவ ஓடுகளையும் - பலிப்பாத்திரம் முதலியவையும்-செய்து வந்தார் என்பதே சிறந்த பொருளாம். தமது குலத்துக்குரிய அளவிலா மட்பாண்டங்களைச் சீவனார்த்தமாக வினைந்து என்பது இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு.

வளர் இளந் திங்கட் கண்ணி மன்றுளார் - வளர் திங்கள் எனவும், இளந்திங்கள் எனவும் கூட்டுக. முன்னர்த் தேய்ந்து வந்தது வளர்ச்சி பெறுவதாய் என்க. இளந் திங்கள் - பிறைச்சந்திரன். "மாதர் பிறைக்கண்ணி யானை", "போழிளங் கண்ணியினானை", "வளர்மதிக் கண்ணியி னானை" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரங்கள் (திருவையாறு - காந்தாரம்) காண்க. திங்களைத் தலையிற் சூட்டிய மாலைபோல அணிந்தவன். உளமகிழ் சிறப்பின்-உள்ளம் மகிழத்தக்க சிறப்பினாலே. மல்க - நிறைய. மகிழ் சிறப்பின் உளம் மல்க என்று மாற்றிக் கூட்டியுரைத்தலுமாம்.

இளமை மீதூர - இளமை மீதூரப்பெற்றதனாலே. மீதூர - மிகுதிப்பாட்டை அடைந்ததனாலே. இன்பத்துறை-இங்குச் சிற்றின்பப் பகுதியாகிய காமச்செயல்களைக் குறித்து நின்றது.

எளியரானார் - அது வலிமைபெறத் தாம் அதன் ஆட்சிக்குட்பட்டு எளியராக ஆயினார். ஆயினவகை பின்பாட்டிற் குறித்தார். பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் நூல்களிற் றடுக்கப்பட்டதாயினும் எளியராயினமையில் அதனை விலக்கலாகாதவராயினார்.

இளமை மீதூர என்பதற்குக் கழிந்த இளமை பிறர்போலக் கழிந்தே போகாது மீளவும் பெறும்படியாக ; மீது - மேலும் ; ஊர - வர - என்ற சரிதக்குறிப்புப் பொருளும் தொனித்தல் காண்க. என்றும் மன்றுளார் உளமகிழ் சிறப்பின் மல்க அடியார்க்கு ஓடளித்து என்று கூட்டி யுரைத்தலுமொன்று.

அளவிலாப் பொருளின்—மரபின் வாழ்க்கை—என்பனவும் பாடங்கள். 3

363. அவர்தங்கண் மனைவி யாரு மருந்ததிக் கற்பின் மிக்கார் ;
புவனங்க ளுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவமின்று தடுத்த தென்னத் தகைந்துதான் றரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத் "திருநீல கண்டம்" மென்பார். ச

(இ - ள்) *அவர்...மிக்கார் - அவர் தமது மனைவியாரும் அருந்ததியின் மிக்க கற்பினை யுடையாராகப் பெற்றார் ; புவனங்கள்...என்று - உலகம் உய்யும்பொருட்டு இறைவன் பாற்கடலிற் பொங்கி மேலெழுந்த விடத்தை அமுதுசெய்ய (அது உள்ளே சென்று மறைந்து படாமல் எமக்கெல்லாம் அறிகுறியாக விளங்கி இருக்கும்படி) யாங்கள் செய்த தவப்பேறுதான் அம்மட்டில் நிற்கும்படித் தடுத்ததோ என்று சொல்லும் படியாக இந்தக் கண்டமல்லவா அதனைத் தடுத்துத் தானே தரித்து நிற்கிறது என்ற கருத்தினாலே ; சிவன்...என்பார் - சிவபெருமானாகிய எமது இறைவனது கழுத்தையே எப்போதும் எண்ணுபவராய்த் திருநீலகண்டம் என்று போற்றி வருவார்.*

(வி - ரை) **அருந்ததிக் கற்பின் மிக்கார்** - *அருந்ததியின் கற்பு மிக்கார் - என மாற்றி உரைக்க. அருந்ததியின் - அருந்ததியின் மேம்பட்ட. இங்ஙனமன்றி அருந்ததியைப்போலும் கற்பின் மேம்பட்டவர் என்றுரைத்தலுமொன்று.*

புவனங்களுய்யத் தரித்ததென்று - *என்று கூட்டுக. நஞ்சுண்டது தேவர்களின் பொருட்டேயாயினும் அதனைக் கழுத்தளவில் நிறுத்தித் தரித்தது தமது கருணையை எல்லாப் புவனங்களிலும் உள்ள எல்லா உயிர்களும் உணர்ந்து உய்யும்பொருட்டாதலின்,* **உய்யத்தரித்தது** *என்றார். "பொங்கி நின்றெழுந்த கட னஞ்சினைப், பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்" என்பது முதலிய சைவத் தெய்வத் திருவாக்குக்கள் எங்கெங்கும் இக்கருணைத் திறத்தினைத் தேற்றம்பெறப் போற்றி முழக்குதல் காண்க.*

தகைந்து - *தகைவுசெய்து - தடுத்து.*

திருநீலகண்டம் - *இத்திருப்பெயரின் ஆணையாலே பதிக முழுதும் ஆணையிட்டு ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த திருநீலகண்டத் திருப்பதிகமுங் காண்க.*

அவர் - *முன்பாட்டிற் சொல்லியபடி எளியராளாராகிய அவர் என்று சுட்டு விரித்துரைத்துக் கொள்க. திருநீலகண்டம் என்பார் (ஆகிய) அவர் என்று வினையாலணையும் பெயராக்கிக் கூட்டியுரைப்பார் சுப்பராய நாயகர்.*

என்பார் - *எளியராயின அவரே முன்னர்ச் சொல்லிய நலத்தின் வந்தார் - விருப்பின் நின்றார் - சாரும் நீரார் என்ற இயல்புகளுடன் " திருநீலகண்டம் " என்பாரு மானார் என்க. இங்ஙனமன்றி மனைவியார் - மிக்கார் - திருநீலகண்டமென்பார் - என இச்செயலை மனைவியார்க்காக்கி யுரைப்பது மகாலிங்கையர், ஆலாலசுந்தரம் பிள்ளை இவர்களதுரைகள். இப்பாட்டிலே* **அவர் தங்கண்** *என முன் பாட்டுக்களைத் தொடர்ந்து கூறுவதனோடு, நாயனாரது இயல்புகளையே தொடர்ந்து கூறிச் செல்கின்றார் ; நாயனார்க்கே இதுபற்றிய காரணப்பேர் போந்தமை முன்னரும் (359) பின்னரும் பெறப்படுகின்றது; "திருநீலகண்டத்துக் குயவனார்" என்று முதனூல் (திருத்தொண்டத் தொகை) விதித்தது ; ஆதலின் திருநீலகண்டம் என்று பத்திசெய் துரைக்கும் இவ்வியல்பு நாயனார்க்கு உரைக்கப்பெறுதலே தகுதியாம். " என்பார் ஆன தங்கேள்வர்" என்று இப்பாட்டையும் வரும்பாட்டையும் குளகமாகத் தொடர்ந்து பொருள் கூறுவர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள். "ஆதியார் நீலகண்டத் தளவுதாங் கொண்ட ஆர்வம்" எனப் பின்னர்க் (366) கூறுவதும் இக்கருத்தையே வலியுறுத்தும். அன்றியும் ஆணையிடுபவர் ஆணையிடப் பெறுபவர்க்குகந்த பொருள் குறித்து அதன் மீது ஆணையிடுதலே மரபு. 'உன் குலதெய்வத்தாணை', 'உன் அப்பன் ஆணை' முதலிய வழக்குக்களும் காண்க. நாயனார் திருநீலகண்டத்திற் பற்று மிக்குப் பயின்ற பண்பினாலே யன்றோ மனைவியார் அதனைக் கூறி ஆணையிட்ட வுடன், "தாங்கொண்ட ஆர்வ" த்தினாலே "பேதியா ஆணைகேட்ட பெரியவர்" அதனை ஆயுள்முழுதும் கடவாது உய்த்ததும் ஆம் என்க. இன்னும் பலவாற்றாலும் இதுவே பொருள் என்க.*

சிவன் எந்தை - *சிவனாகிய எந்தை நஞ்சுண்டதாலும் கழுத்திற் றரித்ததாலும் யாமெல்லாம் உளமாயினோம் என்ற கருத்துத் தோன்ற இங்குச்* **சிவனெந்தை** *என்ற சொல்லாற் போற்றினார். "அத்தன் முத்தன் சிவன்" (358) என்ற திருக்கோவையாரில்*

உலகத்துள்ளா ரெல்லாருக்குந் தந்தை ; எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன்" என்று பேராசிரியர் உரைத்தமை காண்க.

திருநீலகண்டம் - தேவர்கள் சாவா மருந்தாகிய அமுதம்பெற வேண்டித் திருப் பாற் கடலைக் கடைந்தனர். அங்ஙனம் கடைவதற்கு மேருமலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டனர். கடையவே வாசுகி வருத்தமிக்கு நஞ்சுமிழ்ந் தது. அது தேவர்களை வருத்திற்று. முன்னர் வெள்ளை நிறமுடைய திருமால் மேனி கறுகினர். பொன்னிறத்தவரான பிரமர் புகை நிறமாயினர். தேவர்கள் இறைவனைத் துதித்து ஓலமிட அவர் அந்த நஞ்சினை உண்டு கழுத்தளவில் நிறுத்தித் தேவரைக் காத் தனர். அந்த நஞ்சு இருத்தலின் இறைவனது கண்டம் நீலகண்டமாயிற்று என்பது வர லாறு. இச்சரிதம் மாபுராணங்கள் எல்லாவற்றிலும் பேசப் பெற்றது.

"அடியாரா மிமையவர்தங் கூட்ட முய்ய அலைகடல்வாய் நஞ்சுண்ட வமுதே" —**திருநா - புரா**-476 முதலிய பல திருவாக்குக்களும் காண்க.

கற்பின் மிக்கார் - கற்பு - கணவனூர் வழி நிற்கும் பெண்ணியல்பு."கற்பெனப் படு வது சொற்றிறம் பாமை" என்பது பழமொழி. மேல்வரும் இரண்டு பாட்டுக்களிற் காணும் மனைவியாரது செயல் கற்பிலக்கணத்திற்கு மாறுபட்டதன்று என்பது குறிப்பு.

அருந்ததி - வசிட்டரது மனைவி. கற்பினிற் சிறந்தவள். வரம் பெற்று அப்பெயர் பூண்ட ஒரு விண்மீனாகி நிற்கின்றாள் எனவும், கற்பினுக் குதாரணமாகக் கொள்ளப் பெறுபவள் எனவும் புராணங்கள் கூறும். கல்யாணச் சடங்குகளில் அருந்ததி காணும் வழக்கும் காண்க. 4

364. ஆனதங் கேள்வ ரங்கோர் பரத்தைபா லணைந்து நண்ண
மானமுன் பொருது வந்த வூடலான் மனையின் வாழ்க்கை
யேனைய வெல்லாஞ் செய்தே யுடனுறை விசையா ராஞர்
தேனலர் கமலப் போதிற் றிருவினு முருவ மிக்கார். ரு

(இ - ள்) தேன்அலர்...மிக்கார் - தேன் பொருந்திய செந்தாமரையின் விளங்கும் இலக்குமியைவிட அழகிற் சிறந்த மனைவியார் ; ஆன...நண்ண - மேலே குறித்த இயல் புடையாராயின தமது கணவனூர் ஒரு நாள் ஒரு பரத்தையிடம் அணைந்து, மனையில் வந்தாராக ; மானம்...ஊடலால் - அதனால் எழுந்த மானத்தினாலே வந்த மன வருத் தத்தை ஆற்றமாட்டாதவராகி மேற்கொண்ட ஊடலினால் ; மனையின்...ஆனார் - மனை வாழ்க்கையிலே செய்யவேண்டுவனவாகிய எல்லாக் கடமைகளையும் விதிப்படிச் செய்து முடித்தும் கணவனூருடன் மெய்யுறுபுணர்ச்சி ஒன்றினை மட்டும் இசையாதவராயினார்.

(வி - ரை) ஆன - ஆயின. மேற்சொன்ன தன்மைகளையுடையவரான என வரு வித்துரைக்க. உயிர் இறைவனைச் சார்தற்காகிய தன்மையெல்லாமுடையாரான என்று பொதுப்பட வுரைத்தலு மொன்று.

கேள்வர்-கணவர். கேண்மைக்கு உரியவர். அவரது பகுக்கப்படாத நண்பு தமக்கே உரியவர். அதனைப் பகிர்ந்து வேறொருத்திக்குக் கொடுத்தனர் என மானம் விளைந்த தாதலின் அதுகுறிக்கக் **கேள்வர்** என்ற சொல்லாற் கூறினார்.

பரத்தை - விலைமாது. சேரிப்பரத்தை என்பது பழந் தமிழ்நூல் வழக்கு. **அங்கு** - அந்நாளில் ஒருநாள். காலத்தைக் குறித்தது. இடங் குறித்ததாகக் கொண்டு அத் தெருவில் உள்ள என்றுரை கூறுவாருமுண்டு. அவமதி கொண்டலையும் இந்நாளிற் போலன்றி, முன்னாளில், யாண்டும் யாரும் இருத்தற்குரியரல்லர் எனக்கொண்டு ஒழுகி வந்தனர் ; பரத்தையர் தெரு, புறநகரில் ஒரு புறமாக அமைவதாம் ; ஏனைக் குடிமக்கள் வாழும் தெருவில் அவர் வாழ்தற்கியைபுமில்லை; ஆதலின் அது பொருந்தாதென்க.

மானமுன் பொருது - மானம் - எக்காலத்தினும் தமது நிலையிற் றிரியாமை யும், தாழ்வு வந்தவழி வாழாமையும் ஆம். இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாத

தாம் என்று மணக்குடவரும், இது குடிப்பிறப்பினை நிறுத்துதலுடையதெனப் பரிமே லழகரும் சிறப்பித்துரைப்பர். தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார் மாட்டுச் செல்லாமையும், இளிவரவுபொறாமையுமென இது மூன்று வகைப்படுமென் பர். **மானமுன் பொறாது** - மானத்திற்குத் தாழ்வு வந்தவழி அதனைத் தாங்கலாற்றாது. "இளிவரின் வாழாத மானம்" என்ற குறளும் இக்கருத்துப் பற்றியது. இளிவரின் வாழாத என்றதற்குத் தமக்கோ ரிழிவுவந்தவழிப் பொறுத்து உயிர் வாழாது என்ற பரிமேலழகர் உரையும் காண்க. இங்கு நாயனாரின் மனைவியார் இளிவரவாகக் கொண் டது தாம் தமது நாயகரின் பகுக்கப்படாத நண்பினுக்கு உரியராந்தன்மை யிழந்தவ ராகக் கருதியதேயாம். உடனுறைவாகிய புணர்ச்சிக்கு இசையாமை ஒன்றே இங்கு இளிவரின் வாழாத மானமாய் மனைவியார் கொண்டனர். அது ஊடலிற் செலுத்த, அது ஆணையிற் செலுத்த, மேற்சரிதம் நிகழ்ந்தது என்க.

பொறாது வந்த - இளிவரவு பொறுக்கலாற்றாமையால் வந்த.

ஊடல் - பிணங்கி நிற்றல். இதனையே புலவி என்றும் சொல்வது வழக்கு. ஊடல்-புலந்த செயலின் மேலும், புலவி - புலந்த சொல்லின் மேலும் வழங்கும். இது இன் பத்திற்கின்றியமையாதென்பர். "ஊடுதல் காமத்திற் கின்பம்", "துனியும் புலவியு மில் லாயிற் காமங் - கனியுங் கருக்காயு மற்று"—குறள். "...நின்சேயிழையார், நலஞ்செய்த புல்லங்கண் மாட்டேந் தொடல்விடு நற்கலையே" என்பது திருக்கோவையார் (358). ஊடலுவகை - புலவி - முதலிய அகப்பொருளிலக்கணங்களில் இதன் இயல்புகளையும், இது கற்பிலக்கணத்துடன் முரணுமையும் அறிந்து கொள்க.

"ஆயின் இவ்வூடல் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்" என்ற தன்மையி னின்று மாறி, இங்குப் பின்னர் காம இன்பக் கூடுதலுக்குக் காரணமாகா தொழிந்த துடன் அதனை இப்பிறப்பின் ஆயுளளவு மிழத்தற்கே ஏதுவாயிற்றே? எனின், அற்றன்று. ஏனையோரிடத்து நிகழும் ஊடல் கூடல்கள் இளமை நின்றபோதே நிற் பனவாய், இப்பிறப்பின் சிற்றின்பத்துக்கும் பின்னர் முறையே மூப்புச் சாக்காடுகளுக் கும் காரணமாய் ஒழிவன; இவ்வூடலோ எனின், மரணம் பிறப்பென்றிவை யிரண்டின் மயக்கறுத்தற்கும், மீளப்பெற்ற மாறா இளமைக்கும் அதனோடு கூடி யனுபவிக்கும் என் றும்மாறாத பேரின்பத்துக்கும், காரணமாயிற்று என இதன் சிறப்பினை அறிந்துகொள்க.

ஏனைய - மெய்யுறு புணர்ச்சி ஒன்றினையொழிந்த மற்றையவை. அவையாவன : நாயகனைப் பேணுதல், விருந்தோம்பல் முதலிய மனைவாழ்க்கைக்குரிய பிற கடமைகள்.

உடனுறைவு - மெய்யுறு புணர்ச்சி - இணைவிழைச்சு என்பர்.

தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம் மிக்கார் - இது நாயனாரது மனைவியாரின் பருவமும் உருவமும் திகழ்ந்த அழகின் உயர்வைக் குறித்தது. **தேனலர் கமலப் போது** - வண்டுகளால் அலர்த்தப்பெற்ற புதிதாய் அன்றலர்ந்த தாமரைப் பூ. தேன் பொருந்திப் புதிதாய் அலர்ந்த என்றலுமாம். **போதில் திரு** - இலக்குமி. இங்கு உருவ மிகுதியே உவமானமாகக் கொண்டமையின் கமலப்போதி லிருக்கும் இருவரில் திரு என்பது இலக்குமியைக் குறித்தது. **திரு** - "கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும்" என்றபடி கல்விச் செல்வியையும் குறிக்கு மாயினும் இலக்குமியின் பொதுப் பெயராக வழங்குவதும் காண்க.

திருவினும் - திருவைக் காட்டிலும். **உருவம்** - உருவத்தினால் - அழகினால். உருபு தொக்கது. இது இங்கு இவரது அழகின் மிகுதி குறித்தது. நாயகனுக்குரிய கடப்பாட் டின்படி இவ்வழகிய நாயகியாரைப் புலவி தீர்த்துக் கூடி யின்பந்துய்த்து வாழும் இன்பத்தினையும் வெறுத்து அடிப்படுத்தித், "திருநீல கண்டம்" என்ற ஆணையொன் றினையே பாதுகாத்த நாயனாரது திருத்தொண்டி னுறைப்பையும் திண்மையொழுக்க நடைசெலுத்திய வலிமையையும் காட்டியபடியாம். இவ்வாறன்றி "இத்தகை அழகு வாய்ந்த அம்மையாரிருப்ப நாயனார் பரத்தையரை விரும்பியது தவறு என்பது

குறிப்பு" என்று விசேடமுரைப்பது பொருந்தாமை யறிக. ஆயின் அழகில்லா மனைவியரை நீத்துப் பரத்தையிற் சேர்தல் தகுதி யென்னவரும். பரத்தையர்களைப் பொருட்பெண்டிர் - வரைவின் மகளிர் முதலிய பெயர்களால் முன்னூல்களில் வழங்குவர். இவரோடணைதல் உலக நீதிநூல்களால் விலக்கப்பட்டதே.

"இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"—குறள்.

முதலிய விதிகள் காண்க. ஆயின் இங்கு இச்சரிதத்தின் குறிக்கோளை மறந்து இவ்வாறு சாமானிய உலக ஒழுக்க நூல்களின் விதி விலக்குக்களை அளவையாகக் கொண்டு ஆராய்ந்து முடிபு கூறுதல் ஈண்டைக்குப் பொருந்தாத ஆராய்ச்சி என்பது அறிந்தோர் முடிபு. மூர்க்க நாயனார் சூதாடி வந்த பொருளால் இறைவனடியாரை ஊட்டினார். கண்ணப்ப நாயனார் வேட்டையாடி உயிர்க்கொலை செய்து இறைவனை ஊட்டினார். கோட்புலி நாயனார் இறைவனை ஊட்டும் திருவமுதுக்கு வைத்த நெல்லை உண்டு அவனது ஆணை பிழைத்த கிளைஞரைக் கொன்றனர். இவற்றை எந்த நூல் விதிப்படி அளவை காண்பது? உலகத்திலே இருந்தும் அதனைக் கடந்த நிலையில் வாழ்ந்து, பார்வைக்கு மட்டும் ஏனை மனிதர்போல நின்ற பெருமக்களுக்குச் சாமானிய உயிர்களுக்கு விதித்த உலகநீதி விதிகள் யாங்ஙனம் பொருந்தும்?

இறைவனது "திருநீலகண்டம்" என்ற ஒரு சொல்லாகிய பேதியா ஆணை கேட்ட உடனே, இருவரும் அவ்வில்லத்தைவிட்டு நீங்காது ஒருங்கு வாழ்ந்தும், அப்போது தமக்கிருந்த இளமை மீதூர வின்பத் துறையினிலெளியராந் தன்மையையும், மனைவியாரது திருவினுமுருவ மிக்க எழிலைத் துய்க்கும் உரிமையினையுந், திருமால் முதலிய தேவருங் கடத்தற்கரிய காமத்தின் வலிமையையுங் கடந்து, மூப்பு வரும்வரை நாள் கழித்து வாழ்ந்த நாயனாரது தன்மையை அளந்து குறைவு நிறைவு காணுதற்கு இந்த உலக விதி விலக்கு இலக்கணங்களா அளவு கோல்களாகும்? நவீன ஆராய்ச்சியாளர்கள் இவ்வாறான தவறுகிய ஆராய்ச்சித் துறையிற்சென்று உண்மை நாயன்மார்களாகிய எந்தம் பெருமக்களின் சிவவாழ்க்கையிலே தவறுகண்டு அபசாரப்படாமலிருப்பதே முறையாம். மேலும், நாயனாரது இச்செயலே இச்சரித நிகழ்ச்சிக்குக் காரணமாயினமையும் காண்க.

பரத்தையிற் பிரிவு - என்பது தமிழின் முந்து நூல்களிற்கண்ட முறை. அதன் முறையும் இயல்பும் அமைவும் அகத்தமிழ் இலக்கணங்களுட் காண்க. இது தலைவன் தனக்கின்பம் வேண்டிப் பிரிந்து பரத்தையிற் சேர்தலன்று என்பது அகத்தமிழ் இலக்கணம். "**பரத்தையிற் பிரிதல்** என்பது தலைமகளை வரைந்தெய்திய பின்னர், வைகலும் பாலே நுகர்வானொருவன் இடையே புளிங்காடியு நுகர்ந்து அதனினிமை யறிந்தாற்போல, அவனுகர்ச்சியினிமை யறிதற்குப் புறப்பெண்டிர்மாட்டுப் பிரியா நிற்றல். அல்லதூஉம் பண்ணும் பாடலு முதலாயின காட்டிப் புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தாற் றூனெல்லார்க்குந் தலைவனுகலின் அவர்க்கு மின்பஞ் செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம். அல்லதூஉம் தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரிதல் என்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கின்பம் வேண்டிப் பிரிவனுயின், "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணே யுள" என்பதனுல், இவளுக்குத் தலைமகளென்னும் பெயரோடு மாறுபட்டுத் தனது பெருமையோடு மாறுபடா நிற்கும்" என்று பேராசிரியர் உரைத்தமையும் காண்க. இதனைக் குறிக்கவே இங்கு ஆசிரியர் "திருவினு முருவ மிக்கார்" என்றதாம். "பரத்தைபா லணைந்து" என்றது நாயனார் பரத்தையைக் கூடினூர் என்பதன்று எனப் பொருள் கூறுவாருமுண்டு. எங்ஙனமாயினும் மேற்கூறிய உரையாளரின் விசேட ஆராய்ச்சித் **தவறு** நாயனார்பாற் சாராமை உணரப்படும். இவ்வாராய்ச்சி தமிழ் இலக்கண இலக்கியங்களிற் கூறிய ஒப்பாரு மிக்காருமில்லாத தலைமகனுக்கெல்லாந் தவறு கூட்டியதும் காண்க.

பொறுத்து வந்த—போநதுவந்த—உநவின் மிக்கார்—என்பனவும் பாடங்கள். 5

365. மூண்டவப் புலவி தீர்க்க வன்பனார் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயற் பொற்கொடி யனையார் தம்மை
வேண்டுவ விரந்து கூறி மெய்யுற வணையும் போதில்
"தீண்டுவீ ராயி னெம்மைத் திருநீல கண்ட" மென்றார். சு

(இ - ள்) மூண்ட அப்புலவி தீர்க்க - (மானமுன் பொருது வந்து) மூண்டதாகிய அப்புலவியைத் தீர்த்துக் கூடும்பொருட்டு; அன்பனார்...போதில் - அன்புடையாராகிய நாயனார் தமது அழகிய மனைவியார் முன்னேபோய் வேண்டுவனவற்றை யெல்லாம் பணிவுடன் இரந்து சொல்லி அதனால் அவர் அப்புலவி தீர்ந்தார் என்று கொண்டு அவரது திருமேனியைத் தழுவப்புக்கபோது; தீண்டுவீர்...என்றார்-நீர் எம்மைத் தீண்டுவீ ரானால் திருநீலகண்டத்தின் ஆணை நம்மேல் இருக்கக் கடவது என்று ஆணையிட்டனர்.

(வி - ரை) மூண்ட - நாயகர் பரத்தைபாலணைந்து நண்ணியதால் மானமுன் பொருது வந்து மூண்ட என வருவிக்க. அப்புலவி - முன்னே ஊடல் என்று குறித்த அந்தப் புலவி.

அன்பனார் - அன்பு - தொடர்புடையார்பால் நிகழ்வதோர் உள்ள நிகழ்ச்சி. மனைவியாரது ஊடலினால் தமது அன்புநிலை திரியாது அவர்பால் அகப்பொருளிலக் கணப்படி அது காரணமாக மேலும் மிகப்பெற்றவர். இறைவனிடத்தே அன்பு மிக்கவர் என்றலுமாம்.

பூண் தயங்கு இளமென் சாயல் பொற்கொடி அனையார் - அணிகள் இவரது அழ கினுக்குத் தோற்றுப்போய்ப் பின்னிடுகின்றன. தயங்குதல் - பின்னடைதல். பூண்கள் விளங்குகின்ற என்றுரைத்தலுமாம். பூண்கள் தயங்குந் தன்மை பெற்று, இளமையும் மென்மையுமுடைய சாயலுடையராய்ப், பொற்கொடி போல்வாராகிய அவர். திருவினு முருவமிக்கார் ஆயின மனைவியாரது இளநலத்திலே ஈடுபட்டமூழ்ந்தினார் நாயனார் என் பார் அவரது அத்தன்மைகளிலே நாயனாரைப் பிணித்தன இவை இவை என அடுக் கிக் கூறினார். சாயல் - ஐந்து பொறிகளாலும் நுகரப்பெறும் மென்மை என்பர். இது தலைவியிலக்கணமாதல் முன்னர்க் குறிக்கப் பெற்றது.

வேண்டுவ - அவர்பால் தாம் வேண்டுவனவாகிய பொறை முதலியவற்றை. இரந்து கூறி - யாசிப்பார் போலப் பணிந்து சொல்லி.

"மனைவி யுயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியு ளுரிய"

என்பது இலக்கணம். (தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பொருளியல் - 33) "படிறுவவேங் - கானூன் றொடறொட ரேல்விடு தீண்டலெங் கைத்தலமே" என்ற திருக்கோவையா (390) ருங் காண்க.

மெய்யுற அணைதல் - அவரது மேனியினோடு தமது மேனியுறத் தழுவுதற்கு நெருங்குதல். தீண்டுவீ ராயின் எம்மைத் திருநீல கண்டம் - எம்மைத் தொடுவீரானால் திருநீலகண்டத்தின் ஆணை உம்மைத் தடுப்பதாக. திருநீலகண்டத்தின்மேல் ஆணையிட்டு எம்மைத் தொடாதீர் எனத் தடுக்கின்றேன் என்பது. ஆணை - பேசப்பெற்றார் மேற் கொண்டு கடக்கலாகாததோர் சத்தி. "இத்தவன் போகப்பெற்ற திறைவன தாணை" (மெய்ப்பொருள்-18), "நடுவிரு ளாடு மெந்தை நனிபள்ளி யுள்க வினைகெடுத லாணை நமதே", "ஆனசொன் மாலை யோது மடியார்கள் வானி லரசாள்வ ராணை நமதே" முத லிய திருவாக்குக்கள் காண்க.

எம்மை - "மனைவி யுயர்வும்" என்ற இலக்கணப்படி புலவியுள் மனைவியாரின் உயர்வு தோன்ற வழங்கிய ஒருமைப் பன்மை. இதனை நாயனார் சாதி குறித்த உளப் பாட்டுத் தன்மைப் பன்மையாக ஏற்று நிகழ்த்திய வரலாறு வரும்பாட்டிற் காண்க.

புலவிநீக்க—தீண்டுவீரானீர்—என்பனவும் பாடங்கள்.

366. ஆதியார் நீல கண்டத் தளவுதாங் கொண்ட வார்வம்
பேதியா வாணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி,
யேதிலார் போல நோக்கி, "யெம்மையென் றதனுன் மற்றை
மாதரார் தமையு மென்றன் மனத்தினுந் தீண்டேன்" னென்றார். ௭

(இ - ள்) ஆதியார்...பெரியவர் - முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருநீலகண்டத்தின் அளவிலே தாம்மேற்கொண்ட ஆசையானது வேறெதனுலும் அதனைக் கடக்கச் செய்யலாற்றாத திருவாணையைக் கேட்ட பெரியோராகிய நாயனார்; பெயர்ந்து...நோக்கி - (மெய்யுற அணையும் முயற்சியிலிருந்து) ஒதுங்கிப்போய், அம்மையாரைத் தமது மனைவியாராகப் பாராது அயலாரைப் போல உட்கொண்டு நோக்கி; "எம்மை"...என்றார்-("என்னை" என்னாது) "எம்மை என்று உளப்பாட்டுப் பன்மையாகக் கூறியதனுல் உம்மையேயன்றி உம்மினத்தைச்சேர்ந்த ஏனைய மாதரார் எவரையும் எனது மனத்தாலும் இனித் தீண்டமாட்டேன்" என்றார்.

(வி - ரை) நீலகண்டத் தளவுகொண்ட ஆர்வம் - நீலகண்டத்தினிடத்தே மேற்கொண்டு வைத்துள்ள ஆசை. பேதியா ஆணை - அவ்வாறு வைத்த ஆசையினுலே வேறு எவ்வாற்றானும் கடக்க முடியாத - தாண்டிச் செல்ல முடியாத - ஆணை. பேதியா - ஆர்வம் ஒரு சிறிதும் வேறுபடாத பெரியவர் என்று கூட்டி யுரைப்பர் ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள். ஆர்வம் பேதியா - மனைவியாரிடத்துத் தாம் கொண்ட ஆசை பேதிக்கும்படி என்றும், கண்டத்தினிடத்தே தாம் வைத்த ஆர்வம் பேதியாமலிருக்கும் பொருட்டு என்றும் பற்பலவாறு உரைகள் கூறுவாருமுண்டு. அவை யொன்றும் பொருந்தாமை உணர்ந்து கொள்க.

பெரியவர் - சிவபெருமானொருவரையேயன்றிப், பெருந்தேவரும் பிறர் யாவரும் வெல்லுதற்கரிய காமவிச்சையை ஆணையின் வரம்பிலே நின்று வென்றமையால் செய்தற்கரிய செயல் செய்தவராயினார் நாயனார்; அதுபற்றி இங்குப் பெரியவர் என்றார். முன்னர்க் கேள்வர் (364) என்றும், அன்பனார் (365) என்றும் அவ்வவ்விடத்துக்குப் பொருந்த உரைத்தமை காண்க. அவரே இங்கு இப்புராணத்துட்டுதிக்கப்பெறுந் தகுதியராய்ப் பெரியராயின தன்மையும் இதனுல் குறிக்கப் பெற்றது.

ஏதிலார் போல - ஒரு சம்பந்தமுமில்லாத அயலார். இதற்கு அயலான் மனைவி போல என்றுரை கூறுவாருமுண்டு. அது மரபன்றாம்; ஆதலிற் பொருந்தா தென்க.

மனத்தினுந் தீண்டேன்-மனத்திற்றீண்டுதல்-நினைத்தல்; தீண்டநினைத்தலும் தீண்டுதலின் பயனை விளைத்தேவிடும். நினைப்பே கருமமாகி வினைக்கு முளையாகு மென்பது சாத்திரம். ஆலாலசுந்தரர் திருக்கயிலாயத்தில் மாதர் மேன் மனம்போக்கிய செயலே அவர் உலகில் அவதரிக்கக் காரணமாயிற்று என்பது முன்னர்த் திருமலைச் சருக்கத்திற் கேட்கப் பெற்றது. எனவே, மனத்தாற் றீண்டுதலும் ஆணை கடத்தலேயாமாதலின் அதுவும் செய்யேன் என்பார் இவ்வாறு கூறினார்.

மாதரார் தமையும் - உம்மைத் தீண்டாமையேயன்றி என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. மனத்தினும்-செய்கையிற் றீண்டாமையே யன்றி என இதுவும் எச்சவும்மை. மனத்திற் றீண்டாமை இங்குக் காம நோக்கத்தின் அனுபவப் பொருளாய் எண்ணுமை மாத்திரையாய் நின்றது. வேறெவ்வாற்றானும் நினையாமை குறித்ததன்று என்பதனை நோக்கி - என்றும், வரும் பாட்டில் போற்றிச் செய்தே என்றும், வருவன வற்றாலுணர்க.

எம்மை - என்று மனைவியார் கூறி ஆணை யிட்டது நாயனாரை நல்வழிப்படுத்தற்கேயாம் என்றும், நாயனார் நீலகண்டத்தின் ஆர்வத்தாலே, எம்மை என்ற சொல்லாற்றல் கொண்டு பெண்கள் எவர்மேலும் காமநோக்கம் செலுத்தாமற் செய்த பெருமைக்குத் துணை நின்ற பெருமை மனைவியார்க்குரியது என்றும், இப்புராணத்திற்

பெண்ணின் பெருமை விளங்குவது என்றும் வந்தவாறு ஆராய்ச்சியுரை கூறுவாரு முண்டு. தம் கேள்வர் ஒரு பரத்தையால் அணைந்ததனால் மானமுன்பொருது வந்த ஊடலாலே மனைவியார் புலந்ததும் ஆணையிட்டதும் ஆம் நாயனாரை நல்வழிப்படுத்தும் எண்ணத்துடன் அவர் இது செய்தார் என்பது யாண்டும் பெறப்படுதலில்லை. நாயனார் பெண்களின்மேல் வரும் காம நோக்கத்தைத் துறக்க மனைவியார் எவ்வாறு துணை செய்தனர் என்பதும் காணப்பெறவில்லை. அது கருதி நீலகண்ட ஆணையிட்டார் என்பது பெறப்படாமை காண்க. இப்புராணத்திலே எவ்வாற்றானும் நாயனார் பெருமையே விளங்குவதாம். இது விளங்கத் அணைநிற்றலேயன்றி மற்றுப் பெண்ணின் பெருமை விளங்கக் கண்டிலேம். இப்புராணச் சரித அமைவும் நோக்கமும் அதுவன்று என்க. அற்றாயின் இதனைத் திருநீலகண்ட நாயனார் புராணமென்னாது, திருநீலகண்டர் மனைவியார் புராணமென்றே கூறவேண்டிவரும். எனவே, இவ்வாராய்ச்சியுரைகள் பொருந்தா என்க.

தம்மையேன்றான்—என்பதும் பாடம். 7

367. கற்புறு மனைவி யாருங் கணவனார்க் கான வெல்லாம்
பொற்புற மெய்யு றாமற் பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா ரங்க ணிருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி யின்மை யயலறி யாமை வாழ்ந்தார். அ

(இ - ள்) கற்புறு...செய்தே - கற்புடைய மனைவியாரும் தமது நாயகருக்கு வேண்டுவனவாகிய எல்லாப் பணிவிடைகளையும் அழகு பெறவும், ஆனால், தமது மேனி அவரது மேனியிற் றீண்டாமலும், இல்வாழ்க்கையிற் பொருந்தும் செய்கைகளைச் சோர்வுபடாது காத்துச் செய்துவந்தாராக; இற்புறம்பு...வைகி - தமது வீட்டைவிட்டு வெளியிலே நீங்காது, அவ்வொரு வீட்டினுள்ளே இருவரும் தனித்தனி வாழ்வார்களாகி; அற்புறு...வாழ்ந்தார் - அன்பு செலுத்தும் மெய்யுறு புணர்ச்சி ஒன்றுமட்டும் இல்லாது வாழும் தன்மையை அயலார் ஒருவரும் தெரியாதவாறு வாழ்ந்து வந்தார்கள்.

(வி - ரை) கற்புறு மனைவியார்-தான் இருக்க - தங்கியிருத்தற்கேற்ற-இடமிதுவே என்று கற்பு வந்து சேருதற்குரிய மனைவியார். அருந்ததிக் கற்பின் மிக்கார் - (363) என முன்னர்க் கூறியது இவரது கற்பின்றிறம் புலவி கொண்டபோது திறம்பாத நிலையைக்குறித்தது. தமது புலவியின் மிகுதிப்பாட்டிலே சொன்ன ஆணையாலே, இவ்வாறு, இல்வாழ்க்கையிற் சிறப்புத் தன்மையாகிய மெய்யுறு புணர்ச்சியையும், அதனாற்பெற நின்ற நன்கலனாகிய மக்கட்பேற்றையும் இழக்க நேர்ந்தது. இவ்வகையாலே வாழ்க்கைப் பயனுக்குதவாது தாம் கணவனாராற் றுறக்கப்பட நேரிட்டபோதிலும் கற்பு நிலையிற்றிரியாது கணவனார்க்கானவற்றை யெல்லாம் போற்றிச்செய்து வாழ்ந்த சிறப்பினை உணர்த்தற்கு மீண்டும் **கற்புறு மனைவியார்** என அநுவதித்துக் காட்டியவாறு.

பொற்புற மெய்யுறமல் - அழகுபடச் செய்தனர்; ஆனால் அவ்வாறு செய்தலிலே இருவரும் மேற்கொண்ட ஆணைவழியே நிற்பார் உடம்பு படாமற் செய்தார் என்க. பொற்பு உறவும், மெய் உறாமலும் என்ற சொல்லழகும் காண்க.

பொருந்துவ - மெய்யுறாமற் செய்யத் தக்கவையும், இல்வாழ்க்கையின் விதிப்படி பொருந்தியவையும். **போற்றிச் செய்ய** - விருப்பத்தோடும் எவ்வகையிலும் தாழ்வுபடாமலும் காத்துச் செய்து.

இற்புறம்பு ஒழியார் - தமது வீட்டினின்றும் வெளியிற் செல்லாதவர்களாகி. **ஒழியார்** - ஒழியாராகி. முற்றெச்சம். **ஒழியாராய் வைகி** - என இயையும்.

அங்கண் - அவ்வொரு வீட்டினுள்ளே. **வேறு** - வெவ்வேறாய். வேறு வேறாய், **வைகி** - இல்வாழ்க்கை நடத்தி வாழ்ந்து.

அற்புறு புணர்ச்சி - நாயகன் நாயகிகள் தம்முள் அன்பு செலுத்தலும், அன்பு மிகுதலும் நிகழ்தற்குக் காரணமாகிய மெய்யுறு புணர்ச்சி. இணை விழைச்சு என்பர். அன்பு - எதுகை நோக்கி அற்பு என நின்றது.

அயலறியாமை வாழ்ந்தார் - பிறர் எவரும் அறியாதவாறு. அயல் வீட்டாரும் தெரியாதவாறு. இந்நிகழ்ச்சி ஒருநாளிரவு இவ்விருவர்க்குள்ளும் நிகழ்ந்த அந்தரங்க மாம். நாயகன் நாயகிக்குள் நிகழும் ஊடல் முதலிய அகவொழுக்கங்களைப் பிறரறிய வைத்தல் உயர் குடிப்பிறந்தார் மரபன்று. நல்லொழுக்கமு மன்று. அன்றியும் திரு நீலகண்டத்தின் வைத்த ஆர்வம் நாயனாரும், அவரை அந்த ஆர்வமுற ஆண்ட இறைவ னும் அறிய நின்ற அந்தரங்கம். அதன் வலிமையாலே, வலிய காமத்தைக் கடக்கச்செய்த தும் அவ்விறைவன் பேரால் நிகழ்ந்த ஆணை. இவற்றையும் பிறர் அறிய வைத்தல் மர பன்று. "அருளுடையா ரளித்தருளுஞ் - செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்" (27) என்ற காரைக்காலம்மையார் புராணம் காண்க.

இது காரணம் பற்றியே பின்னர்த் தில்லைவாழந்தணர் நீர்ப்பின்பின்னரும் "தீண்டாமை செப்ப மாட்டார்" (36) என இச்சரிதத்துக் கூறலும் காண்க. அய லறியாது வாழ்ந்த, ஆணைபோற்றிய, இவ்வுண்மை வாழ்வினை உலகமறிந்து உய்யும்படி இறைவனே வந்து அறிவிக்க நின்றது என்பது இச்சரித நிகழ்ச்சியாதலின் அயலறி யாது வாழ்ந்ததே சரித நிகழ்ச்சியின் உள்ளுறையான தத்துவங்களி லொன்றாம். பின்னர்க் குளக்கரையில் இறைவனதாணை வழியே பாரோர் கேட்ப நாயனார் சொல்லு தலும் காண்க (397). நாயகன் நாயகிகளினிடை நிகழும் ஒரு சிறிய அகப்பொருளும் ஊர்தூற்ற நின்று இல்லதுமுள்ளதுமாக ஊரலர் பெருக வாழும் இந்நாள் மாக்களது தகாத பொய்யொழுக்கத்தினை இம்மெய்யொழுக்கத்தின் தூய நெறியினோடு ஒத்து நோக்கி உலகம் உண்மை கண்டு உய்வதாக.

பொற்புறுமெய்—போற்றிச் செய்தே—ஒழியாது—என்பனவும் பாடங்கள். 8

368. இளமையின் மிக்கு ளார்க ளிருவரு மறிய நின்ற
அளவில்சீ ராணை போற்றி யாண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி யிளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்து மன்பு தம்பிரான் றிறத்துச் சாயார். கூ

(இ - ள்) இளமையின்...செல்ல - இளமைப் பருவம் மிகுந்த அவ்விருவர் மட் டிலே தெரிய நிகழ்ந்து, அயலார் அறியாது நின்றதாகிய அளவற்ற சிறப்பையுடைய அந்த ஆணையைக் கடவாமற் காப்பாற்றிக் கொண்டு, இவ்வண்ணமாய்ப் பலப்பல ஆண்டு கள் சென்றுவிட்டனவாக; வளமலி...சாயார் - உடல்வள முதலிய வளங்களால் மலிந்த இளமைப் பருவம் நீங்கி, உரிய வடிவமைந்த மூப்புப் பருவம் வந்து, அதனாலே தளர்ச்சி யுற்று, உடல் கோலிற் சாய்ந்து நடக்கும் தன்மை வந்ததாயினும், தமது பெருமானது திறத்திலே தாம் வைத்த அன்பு சாய்ந்து கெடாத தன்மையில் விளங்கினார்கள்.

(வி - ரை) இளமையில் மிக்குளார்கள் - நாயனார் இளமை மீதூரவின்பத்துறை யினி லெளியராயினமை (362) முன்னர் உரைக்கப் பெற்றது. மனைவியார் அவருக்கு இளையாராதலின் அவரின் மிகுந்த இளமையுடையார். எனவே, **இருவரும் இளமை யின் மிக்குளார்கள்** என்றார். தம்மின் மூத்த பெண்டிரை மணத்தல் நூல்களால் விலக் கப்பட்டதன்றி அந்நாள் வழக்கிலுமில்லையாதல் உணர்க.

இருவரும் அறிய - அயலறியாமை மேலே உரைக்கப்பட்டது. ஆதலின் இவ்விரு வருமே அறிய என்றார். பிரிநிலை ஏகாரம் தொக்கது.

அறிய நின்ற - அறிய நிகழ்ந்ததுமட்டுமன்றி அவ்வாறே நின்று வந்த தென்பது.

அளவில் சீர் ஆணை - திருநீலகண்டத்தினது சிறப்பின் அளவே அதன் பேரால் நிகழ்ந்த ஆணையின் அளவுமாம். புவனங்க ளுய்ய நின்று நிகழ்வது நீலகண்டமாதலின் அதனைப்போலவே அதன் ஆணையும் அளவற்ற சிறப்புடையதாயிற்று.

ஆணை போற்றி - ஆணையின் வரம்பு கடவாமற் றமது ஒழுக்கத்தைப் பாதுகாத்து. **போற்றுதல்**-காப்பாற்றுதல் என்ற பொருளில் வந்தது. "பொருடனைப் போற்றிவாழ்" என்றாற்போல.

வளமலி யிளமை - உடல்வளம், உட்கரண புறக்கரணங்களின் வளம், செயலின் வளம் முதலிய எல்லா வளமும் நிரம்பித் ததும்பும் இளமைப் பருவம். **நீங்கி** - நீங்குத லால்; நீங்கவே.

வடிவுறு மூப்பு வந்து - இளமை நீங்குதல் ஒரு நிலை; மூப்பு வருதல் மற்றொரு நிலை. ஆதலின் **நீங்கி - வந்து** என்றார். யாவர் யாவர் எத்தெந்தத் தன்மையினராயி னும் உலகிலே ஊனடைந்த உடம்பின்பிறவி பெற்றார் எல்லாரும் காலமுறையிலே அவ்வவ்வுடலினியல்பாக இளமையும், மூப்பு - பிணி - சாக்காடு என்றிவைகளையும் வரப் பெற்று ஒழிவர் என்பது நியதி. "தொன்றுதொடு நிலையாமை, மேயவினைப் பயத்தாலே யிவ்வுலகை விட்டகல"—(திருநா - புரா - 27.)

வடிவுறு மூப்பு - வடிவிலே நாள்கள் செலச்செல உறக்கடவதாகிய மூப்பு. **வந்து**- உரிய காலத்திலே வந்து சேர்ந்ததனாலே; வரவே. **வடிவுறு** என்பதனை இளமைக்கு அடையாக்கி வடிவுறு வளமலியிளமை என்று கூட்டியுரைப்பாருமுண்டு. **வந்து சாய்ந் தும்** - வருதலாற் சாய்ந்தும் என முடிக்க. **வடிவுறு மூப்பு** - அழகிய மூப்பு என் றுரைத்தலுமொன்று. இளமையை விதிப்படிச் செலுத்தி வாழாதார்க்கு மூப்பு விரை வில் வருதலுடன், அவர்களது உருவத்தின் அழகினை அழித்து விகாரப்படுத்தியும்விடும் என்பது உடல் நூற்றுணிபும் ஒழுக்கநூற் றுணிபுமாம். இங்கு நாயனார் - மனைவியார் - இவர்களது வாழ்க்கை உடற்புணர்ச்சியும், அது காரணமாகவரும் தாதுக்குறை முதலி யனவும் இன்றியே சென்றதாதலின் உரு வழியாமலே மூப்பு வந்தது. ஆதலின் காலத்தால் வந்த அந்த மூப்பும் அழகுபெற நின்றது என்பதாம்.

> "மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ,
> வத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ" (178) என்றது காண்க.

தளர்வோடு சாய்ந்தும் - உடலிலே தளர்ச்சி, அதனால் வலி குறைந்து சாய்ந்து தண்டூன்றிச் செல்லும் நடை முதலிய தன்மைகள் பெற்றும். "ஒடுகின்ற நீர்மை ஒழிதலுமே", "குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி, நொந்திருமி யேங்கி நுரைத்தேறி", "காலைவடி வொழிந்து கையுறவோ டையுறவாய், நாளு மணுகி நலியா முன்", "குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல், பயிலப் புகாமுன்னம்" என் பனவாதி திருவாக்குக்களால் ஐயடிகள் காடவர்கோனயனார் இதன் தன்மைகளை மிகத் தேற்றம்பெறத் தமது க்ஷேத்திரத் திருவெண்பாவில் அருளியிருத்தல் காண்க. **சாய்ந் தும் - சாயார்** - உடல் தளர்ந்தபோதிலும் அன்பிலே தளராமல் நின்றார். "தனித்தொரு தண்டூன்றி மெய்தளரா முன்னம்" (திருத்தாண்டகம்). **தம்பிரான் திறத்து** - தமது இறைவனாகிய பெருமானிடத்து. தம்பிரானிடத்து வைத்த அன்பிலே ஒரு சிறிதும் தளராது நின்றார். **திறம்** - திருநீலகண்டம் உலகமுய்ய வைத்த அருளின் திறம்.

அறியாநின்ற—என்பதும் பாடம். 9

369. இந்நெறி யொழுகு நாளி லெரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் றானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி யிதுவா மென்று ஞாலத்தார் விரும்பி யுய்யும்
அந்நெறி காட்டு மாற்றா லருட்சிவ யோகி யாகி, கO

வேறு

370. கீளொடு கோவணஞ் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேற்
றோளொடு மார்பிடைத் துவளு நூலுட
னீளொளி வளர்திரு முண்ட நெற்றியும், ௧௧

371. நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவு மேம்பட
விடும்பலிப் பாத்திர மேந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையை நண்ணினார். ௧௨

369. (இ - ள்) வெளிப்படை. இவர்கள் மேலே குறித்த இந்த நெறியிலே வாழ்கின்ற நாளிலே, எரியானது தளிர்விட்டு நீண்டதோ என்னும்படி வளர்ந்து ஒளி வீசுகின்ற சடையையுடைய சிவபெருமானும், தமது தொண்டராகிய நாயனாரது உண்மைத் தன்மையைக் கண்டு உலகத்தார் இதுவே நன்னெறியாம் என்றறிந்து விரும்பிக் கைக்கொண்டு உய்யச் செய்யும் அந்நெறியினைக் காட்டும் வகையினாலே அருட்சிவ யோகியாராகிய கோலத்தைத் தாங்கிக்கொண்டு, (அக்கோலத்திலே), ௧௦

370. (இ - ள்) வெளிப்படை. கீளும் கோவணமும் சாத்திக்கொண்டு, அழிவின்மையைச் செய்கின்ற ஒளி வீசுகின்ற திருநீற்றின் பூச்சினாலே விளங்குகின்ற திருமேனியில் தோளிலும் மார்பிலும் விழுந்து துவள்கின்ற பூணூலணிந்து கொண்டதுடன், விரிகின்ற அந்த நீற்றொளியே வளரும் திருமுண்டமாகிய நெற்றியும், ௧௧

371. (இ - ள்) வெளிப்படை. தமது இயல்பாகிய நீண்ட சடை மறைந்திட அதனிடத்தே நெறித்துச் சுருண்ட பம்பை மயிரும், திருவாயிலே ஒளிவீசும் வெண்ணிலவு போன்ற புன்முறுவலும் கொண்டு, உயர்வடையும் பொருட்டுப் பலியை இடுதற்கிடமாகிய திருவோட்டினை ஏந்திய கையை யுடையாராகி, நடந்துவந்து திருநீலகண்டக் குயவனாரது வீட்டை அடைந்தனர். ௧௨

369. (வி - ரை) **எரிதளிர்த்தென்ன நீண்ட மின்னொளிர் சடை**-நெருப்புத் தளிர்விட்டு நீண்டு வளர்ந்ததுபோல மின்னி விளங்குகின்ற சடை. "பொலிந்திலங்கு மின்வண்ண மெவ்வண்ணம் வீழ்சடை" என்பது பொன்வண்ணத்தந்தாதி (1). "அழனி ரொழுகி யனைய சடையும்"—கௌசிகம் - திருச்சோற்றுத்துறை - (1) - என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். தளிரை வாட்டும் எரி தானே தளிர்த்ததுபோல என்க. முன்னே எரிந்ததுபோலக் காணப்படினும் பின்னே தளிர்த்தது என இச்சரிதப் பின் நிகழ்ச்சிக் குறிப்பாம். முன்னர் இறைவன் சினந்து பேசலும், பின்னர் அருள்வதும், நாயனாரது இளமை கழிந்து முதுமை வருதலும், பின்னர் அவ்விளமை மீளத் தளிர்க்கப்பெறுதலும் சரிதத்துக் காண்க.

விளக்கம் காண -'நகரங்காண் படலம்' என்றதிற்போலக் **காண-செய்ய-விளக்கஞ் செய்தற்பொருட்டு**-என்க. ஞாலத்தார் உய்யும் நெறி காட்டுமாற்றால் தொண்டரை விளக்கம் செய்தற்பொருட்டு என்பது. முன்பெல்லாம் அயலறியாவகை ஆணை போற்றினாராதலின் விளக்கஞ்செய்து உய்யுநெறி காட்டுதல் இறைவர் கடனாயிற்று. தான் எல்லாக் காலத்தும் எல்லா விடத்தும் எல்லாம் அறிபவன் ஆதலின் தான் காண அல்லது சோதிக்க என்பது பொருளன்றாம். காண வேண்டுவதும், சோதித்தறிய வேண்டுவதும் தனக்கு அவசியமில்லை என்க.

"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண வுள்ளத்தைக் கண்டு காட்டலி
னயரா வன்பி னரன்கழல் செலுமே"—**சிவஞானபோதம் - சூத்திரம் - 11**

இச்சூத்திரத்தின் கீழ் ஆசிரியர் எமது மாதவச் சிவஞான சுவாமிகள் "அறிவிக்க அறியு மியல்புடைய அவ்வான்மா விடயத்தை யறியும்படி முதல்வன் அதனோடொருங் கியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான்" என்று பிண்டப் பொழிப்புரைத்து, அதன்கீழ், "அறிவானுந்தானே அறிவிப்பான்றானே" என்றோதிய அம்மை (காரைக் காலம்மையார் அற்புதத் திருவந்தாதி - 20) "அறிவா யறிகின்றான்றானே" எனவு மோதியதூஉமென்க" என எடுத்துக் காட்டியருளினார். இவ்வுண்மைகளை இங்கு வைத்துணரக் காட்டுமாற்றால் (உலகருடன் கலந்து நின்று) தானும் காண என்றதும் உன்னுக. உயிர்களுக்கு நெறி காட்டித் தான் தொண்டரை விளக்கங் கண்டான் என்ப தும் கருத்து. இவ்வாறே மேலும் - வரும் புராணங்களிலும் காண்க.

நன்னெறி...காட்டும் ஆற்றல் - இது நன்னெறியாம் என்று விரும்பி ஞாலத் தார் உய்யும் அந்நெறி காட்டும் ஆற்றால் என்று மாற்றுக. **இதுவே** - என ஏகாரம் விரித் துரைக்க.

நன்னெறி என்று - நல்ல வழி எனக் கண்டு; **விரும்பி** - விரும்பிப் பின்பற்றி; **உய்யும் அந்நெறி** - விரும்புகின்றதனாலும் பின்பற்றுவதனாலும் அவர்களை உய்விக்கும் அந்த வழியை.

காட்டும் ஆற்றல் - காட்டுகின்ற வகையினாலே - காட்டுவதற்காக; கண்ணுக்குப் பொருளைக் காட்டும் கதிர் ஒளிபோல இறைவன் காட்டினாலன்றி உயிர்கள் காணா ஆத லால் **காட்டும் ஆற்றல்** என்றார். தொண்டரை விளக்கஞ் செய்தல் ஞாலத்தார்க்கு நெறி காட்டற்பொருட்டே என்பதாம். **ஞாலத்தார்** - உயிர்கள். வானிடத்தவரும் மண்மேல் வந்தே உய்தி பெறவேண்டுதலின் அச்சிறப்புத் தோன்ற ஞாலத்தார் என் றார். **அந்நெறி** என்ற சேய்மைச் சுட்டு முடிவில் அடையப்பெறும் உய்தியாகிய பயனை யும், **இதுவாம்** என்ற அண்மைச் சுட்டு அப்பயனை விளைவித்துத் தருவதாய் இங்குக் காட்டப்பெற்ற சாதனத்தையும் குறித்தன.

இதுவாம் - உலகப் பற்றுக்கள் எவையாயினும் இறைவ னன்பினைநோக்க அவை யாவும் கீழ்ப்படுத்தத்தக்கன என்பது. **இது** - பத்தி வைராக்கியத்தைக் குறித்தது என் றும், பெண்ணை ஆணும், ஆணைப் பெண்ணும் நீத்துறைவதைக் குறித்ததன்று என் றும் உரைகூறுவாருமுளர். இது இப்புராணமுழுமையும் காணும் குறிக்கோளைக்குறிக் கொள்ளாது கூறுவதாம். இறைவனன்புக்குமுன், மனைவியின்பமோ, மக்களின்பமோ அன்றித் தந்தையோ, கண்ணோ, தலையோ எவையும் மேலாகக் கொள்ளப்படமாட்டா என்பதே திருத்தொண்டர்களின் வாழ்க்கைத் தத்துவமாம். உலகம் ஒருபுறம் கீழ் இழுக்க நிற்கவும், இறைவன் மற்றொருபுறம் மேல் உயர்த்த நிற்கவும் உயிர்கள் உலகத் தைத் தாழ்த்தி இறைவனைப்பிடித்து நின்று உயர்ந்த சரிதங்களே இப்புராணத்துட் காணப்பெறுவன. ஈண்டு இறைவனது பெயராலெழுந்ததோர் ஆணைச் சொல்லே ஆயுள் முழுதும் இளமைச் செயல்களையும் காமத்தையும் முழுதும் அறுத்து நீத்துறை வதைச் செய்வித்தது. ஐம்புலவின்பங்களை இறையன்புக்குமுன் ஒழியச் செய்வதே இங்கு **நன்னெறி இதுவாம்** என்றதாம். "அடல்வேண்டு மைந்தன் புலத்தை" என்ற துங் காண்க.

அருட்சிவயோகி ஆகி - அருளுடைய சிவத்தன்மை விளங்கும் யோகிக் கோல முடையாராகத் திருமேனிதாங்கி. அதனைப் பின்வரும் இரண்டுபாட்டுக்களும் கூறும்.10

370. (வி - ரை) **கீளோடு கோவணஞ் சாத்தி** - **கீள்** - தகட்டுவடிவாக நூலினால் செய்து அரைஞாணுகக் கட்டுவதற்கமைந்தது. "கீளார் கோவணமும் திருநீறு மெய்பூசி" சுந்தரர்-நட்டராகம்-திருமழபாடி-2, "சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள், உடை யுங் கொண்ட உருவம்" சம்பந்தர் - தக்கராகம் - திருக்கோலக்கா-1, "கீளலா லுடையு மில்லை"—அப்பர் - திருநேரிசை - திருவையாறு - 7. முதலிய திருவாக்குக்கள் காண்க. இது கோவணத்துடன் சேர்த்தமைப்பதனால் ஒடு விகுதி சேர்த்துச் **சாத்தி**

என ஒருவினைமுடிபு படுத்திக் கூறினர். யோகியாய் வருதலின் கீளும் கோவணமுமே யன்றி வேறு உடையில்லை என்றார். "கீளுடையும் கொண்ட உருவம்" என்ற தேவா ரத்துக் கூறியதும் காண்க. கோவணத்தினியல்பு அமர்நீதியார் புராணத்துட் காண்க.

கேடிலா வாள்விடு நீற்றொளி - கேடிலா ஒளி என்றும், **கேடிலா நீறு** - என்றும் கூட்ட அமையும். ஏனை ஒளிகள் யாவும் கேடுறுவன; கேட்டினைச் செய்வன. ஆயின் இவ்வொளி ஒன்றே, தான் கெடாதிருப்பதுடன் காண்பார்க்குக் கேடு தவிர்ப்பதாம். திருநீற்றின் தன்மையும் இதுவேயாம். இதுபற்றி யன்றே இறைவனது திருவருட் கொடையாகிய முத்துச் சிவிகையின் தூய தண்ணிய ஒளியினைக் கண்டபோது அவ் வருள் ஒளி திருநீற்றொளி எனக் கண்டு வணங்கினர் ஆளுடைய பிள்ளையார். "வெண் ணீற்றொளி போற்றி" - திருஞான - புரா - 216. **வாள்விடு மேனி** - என்று கூட்டி யுரைத்தலுமாம். **மலர்ந்த** - மலர்தற்கிடமாகிய.

நீளொளிவளர் திருமுண்ட நெற்றி - திருமுண்ட நீளொளிவளர் நெற்றி என மாற் றுக. **திருமுண்டம்** - திரிபுண்டரமாக—மூன்று கீற்றுக்களாகத்—தரிக்கும் திருநீறு. திரி புண்டரம் என்பது திருமுண்டமென மருவிற்று என்பர். மேனிமேல் நீறு பரவி விரவு தலின் **மலர்ந்த** என்றார். நெற்றியிற் கீற்றுக்களாய்த் தொக்குக் கூர்ந்து நீண்டு விளங் குதலின் **நீள்ஒளிவளர்முண்டம்** என்றார்."முண்டநிறை நெற்றி" (மானக் - புரா - 22).

371. (வி - ரை) **நெடுஞ்சடை** - நீண்டு விரிந்து தொங்கும் சடைக்கற்றை; **கரந்திட** - மறைந்துநிற்க, அதனிடத்தில்; **நெறித்த** - அலைகள்போலச் சுருண்டு சுருண்டு கிடந்த; **பம்பை** - கீழ் வீழ்ந்து தொங்காமல் தூறுயுள்ள தலைமயிர். சடையிருக்க வேண்டிய இடத்திலே பம்பையிருந்தது என்க.

விடுங்கதிர் முறுவல் வெண்ணிலவும் - வெண்ணிலவுக் கதிர்விடும் முறுவலும் எனமாற்றுக. இவரது முறுவல் திரிபுர மெரித்த எரிவீசுவது. ஆயின் அவ்வாறன்றி இங்கு நிலவுக் கதிர்வீசிற்று என்பதாம். **முறுவல் வெண்ணிலவும்** என்பதனை நெற்றி யும் பம்பையும் என்றதற் கேற்ப **நிலவு முறுவலும்** என்று மாற்றி உரைக்கப்பட்டது. உம்மை பிரித்துக் கூட்டுக.

"கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்"—**கோயிற்றிருவிருத்தம்** - 4

"சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப தென்னே"
—**கோயிற்றிருவிருத்தம்** - 7 காண்க.

இத்தேவாரத்திலே "திரிபுர மூன்றுஞ் செந்தீயின் வேவ எரித்த இறைவன்" என்று இந்த முறுவலின் மற்றை யியல்பையும் உடனே குறித்தவாறு காண்க.

"அருள்பொழியுந் திருமுகத்தி னணிமுறுவ னிலவெறிப்ப"
—**சிறுத்தொண்டர் புராணம்** - 35

எனப் பின்னர்க் கூறுவதும் இங்கு வைத்துன்னுக.

மேம்பட - நெற்றியும் - பம்பையும் - முறுவலும்-மேம்பட என்று கூட்டி யுரைக்க. **மேம்பட** - விளக்கமுறத் தாங்கிக் கொண்டு. **மேம்பட** - மேம்படும் பொருட்டு என்று பொருள் கொண்டு அதற்காக இடும் பலிப்பாத்திரம் என்று கூட்டி யுரைப்பினுமாம். இந்தப் பலிப்பாத்திரத்திற்குட் பிச்சை யிடுவோர் மேன்மை யடைவர் என்பது பின்னர்த் "தன்னுழைத் துன்னிய யாவையுந் தூய்மை செய்வது" (375) என்ற இடத் துக் காண்க.

நடந்து - தமக்குரிய விடையாகிய ஊர்தியின்றிக் காலால் நடந்து சென்று. விடை யின்மேல் வருவது, பின்னர், வெளிப்பட அருள் புரியுங் காலத்துக் காண்க. "துணை யுடன் விடைமேற் கண்டார்" (399). "பெற்ற மூர்வதுமின்றி" (8) என்ற இளையான் குடிமாற நாயனார் புராணமும், இவ்வாறே வரும் பிற இடங்களுங் காண்க.

சடையும் - கீளும் - கோவணமும் - திருநீறும் - திருமுண்டமும் - நூலும் - **பிச் சைப்** பாத்திரமும் சிவயோகிகளது அடையாளங்கள் என்க. இவைகளையே மேற்காட்

டிய தேவாரப் பிரமாணங்களினும் குறித்தமை காண்க. யோகியர்க்கு நீற்றுப் பூச்சு வேண்டுவதில்லை என்று திரியும் அவயோகியர்கள் இவ்வுண்மைத் தவச் சிவயோகக் கோலத்தியல்பு கண்டு திருந்துவார்களாக.

நாளில் - சடையோன் - ஞாலத்தார் - உய்யும் அந்நெறி காட்டுமாற்ருல் - தானும் தொண்டரை - விளக்கங் காணச் - சிவயோகியாகி - சாத்தி - வாள்விடு - மேனிமேல் - திருமுண்ட நெற்றியும் - பம்பையும் - முறுவலும் - மேம்பட - இடும் பலிப்பாத்திர மேந்துகையராய் - நடந்து - வேட்கோவர்மனையை நண்ணினூர் - என இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து முடித்துக் கொள்க. 12

372. நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காத லன்பர்தாம்
புண்ணியத் தொண்டரா மென்று போற்றிசெய்
தெண்ணிய வகையினு லெதிர்கொண் டேத்தினூர். கஉ

(இ - ள்) வெளிப்படை. மேலே கூறியவாறு நண்ணிய தவக்கோலம் பூண்ட சிவ யோக நாதரைக் கண்ணாரக் கண்ட ஆசைமிகுந்த அன்பனூர், இவர் புண்ணியத் தொண்டரேயாம் என்ற கருத்துடன் துதித்து நினைத்திருந்த வகையினுக் கேற்ப எதிர் கொண்டு சென்று வணங்கித் துதித்தார்.

(வி - ரை) தவச் சிவயோகநாதர்-தவக்கோலமுடைய சிவயோகியார். **தவம் நண்ணிய** செய்த தவத்தினூலே நண்ணிய என்று கூட்டியுரைத்தலுமாம். **யோகநாதர்**-யோகிகளுளெல்லாம் பெரியவர் - தலைவர். யோகத்தாற் கிடைக்கும் பொருளாகிய இறைவர் என்றதும் குறிப்பாம்.

கண்ணுற நோக்கிய - கண்களினூலே ஆர நோக்கிய. "கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும்" என்ற அம்மையார் திருவந்தாதியும் காண்க. இது குறிக்கவே **நோக்கிய** என்றதனேடமையாது **கண்ணுற நோக்கிய** என்ருர். **கண் காதலுற நோக்கிய அன்பர்** என்று கூட்டி உரைத்தலுமாம்.

காதலன்பர் - மெய்யடியார்கட் கான பணிசெயும் விருப்பினின்றவரான (361) தொண்டர். **காதல்** - நாயகன் நாயகிகளிடத்து நிகழ்வது. அடியார்களே தமது நாயகர்கள் - தலைவர்களாவார் எனக் கொண்டு ஒழுகும் ஆசையாதலால் **காதல்** என்ற சொல்லாற் கூறினூர்.

"உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்" (9)
"எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க" (19)

என்ற (திருவெம்பாவை) திருவாசகங்கள் காண்க.

"ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்டு" என்பது சாத்திரம்.

புண்ணியத் தொண்டராம் - புண்ணியஞ் செய்தமையாலே தொண்டராகப் பெற்ருர் இவராகும். நாம் செய்த புண்ணியத்தினூலே போந்த தொண்டர் - அடிமை செய்யும் புண்ணியமுதவும் தொண்டர் - என்றலுமாம். **புண்ணியம்** - இங்குச் சிவ புண்ணியம் குறித்தது.

போற்றிசெய்து எண்ணிய வகையினூல்-மனத்தாற் றுதித்துக்கொண்டு இதுவரை அன்பர் பணிசெய்வதிலே தாம் எண்ணியிருந்த எல்லா வகையாலும். வழக்கமாய் அன்பர்களைப் போற்றி எண்ணியிருந்த வகையினூலே என்றலுமாம். "நித்தமாகிய பத்திமுன் கூர" - (442) காண்க. **எதிர்கொண்டு**-எதிர்கொண்டு சென்று. அவர் முன்னர் வரவேற்கச் சென்று. **ஏத்தினூர்** - உபசார மொழிகூறித் துதித்தார்.

"கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின்"
—இளையான்குடியார் - புராணம் - (3) என்றமை காண்க.

போற்றி செய்து என்பது கண்டவுடனே தாமிருந்தநிலையில் மனத்தாலும் வாக்காலும் துதித்தல்; ஏத்தினரென்பது அவர்முன்னர்ச் சென்று உபசரித்துத்துதித்தல். தொண்டர்தாம்—எண்ணிய வுவகையால்—என்பனவும் பாடங்கள். 13

373. பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்
றுறையுளி லணைந்துபே ருவகை கூர்ந்திட
முறைமையின் வழிபட மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின், கச

374. "எம்பிரான்! யான்செயும் பணியெ?" தென்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ள ரெண்டனு;
ரும்பர்நா யகனு"மில் வோடுன் பால்வைத்து
நம்பி! நீ தருகநாம் வேண்டும் போ" தென்று. கரு

375. "தன்னையொப் பரியது; தலத்துத் தன்னுழைத்
துன்னிய யாவையுந் தூய்மை செய்வது;
பொன்னினு மணியினும் போற்ற வேண்டுவ;
தின்னதன் மையதிது; வாங்கு நீ" யென. கசு

376. தொல்லைவேட் கோவர்தங் குலத்துட் டோன்றிய
மல்குசீர்த் தொண்டனார் வணங்கி வாங்கிக்கொண்
டொல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறு
மெல்லையில் வைத்துவந் திறையை யெய்தினார். கள

373. (இ - ள்) வெளிப்படை. பிறை வளர்தற்கிடமாகிய சடைமுடியினையுடைய இறைவனை அவரது தொண்டராம் என்று கொண்டு, தம் வீட்டிலே அழைத்து வந்து சேர்த்து, மிக மகிழ்ச்சி கூரும்படி முறைப்படி வழிபாடு செய்வதில் நூல்களில் விதித்த முறைப்படி பூசைகளை யெல்லாம் உள்ளம் நிறைந்த பெரிய விருப்பத்துடனே செய்து அவர்முன்னே வணங்கிக் கூசி நின்றுகொண்டு, பின்னர், கச

374. (இ - ள்) வெளிப்படை. "எமது நாயகரே! இனி யான்செய்யக் கடவதாகிய பணிவிடை யாது? அருளிச் செய்தல் வேண்டும்;" என்று வாசனைவீசும் கொன்றை மலர் தரித்த சடையையுடைய வள்ளலாகிய சிவபெருமானது தொண்டனார் சொன்னார்; தேவ தேவனாகிய சிவயோகியாரும் "நம்பியே! இந்த ஓட்டினை நீ உன்னிடம் வைத்திருந்து நாம் வேண்டும்போது மீளத் தருவாயாக!" என்று சொல்லி, கரு

375. (இ - ள்) வெளிப்படை. தனக்கு ஒப்பாக வேறொன்று மில்லாதது; தனதிடத்தினுள்ளே பொருந்திய பொருள்கள் எல்லாவற்றையும் சுத்தமாக்குவது; பொன்னையும் மணியையும்விட மிகக் காக்கவேண்டுவது; இத்தகைய தன்மையுடையது; இதனை வாங்குவாயாக! என்று சொல்ல, கசு

376. (இ - ள்) வெளிப்படை. பழமையாய் வழிவழி வரும் குயவர் குலத்தின் தோன்றலாகிய மிகுகின்ற சிறப்புடைய தொண்டனார் வணங்கி அதனை வாங்கிக் கொண்டு விரைந்து சென்று, தமது அந்த வீட்டில் ஒரு தனியிடத்துக் காவல் பொருந்தும் இடத்தில் சேமித்து வைத்து மீண்டு இறைவரை யடைந்தனர். கள

373. (வி - ரை) **பிறைவளர் சடைமுடி** - சடையினையுடைய இத்திருமுடியிற் சேர்ந்த அதனால் பிறை தனது குறை நோய் நீங்கப்பெற்றதேயன்றி வளர்தலையும் பெற்றதென்பது சரிதம். "மதிவளர் சடைமுடி" (4). என்றதும் காண்க. "துணிவளர் திங்க ளொளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்து" முதலிய எண்ணிறந்த தமிழ் வேதங்களும் இதனை எடுத்துத் தேற்றம்பெறத் துதிப்பதும் காண்க. **சடைமுடி**-"சடைமுடி சாட்டியக் குடியார்க்கு"—திருவிசைப்பா.

பிரான் - தலைவர். "இவரலா தில்லையோ பிரானார்"—சுந்தரர் - திருப்பாச்சிலாச் சிராமம்.

தொண்டர் என்று - இவர் ஒரு அடியவரேயாவர் என்று கருதி. அடியவர்களை அரன் எனவே கொண்டு வழிபடுக என்று சாத்திரம் விதிக்கும். "மாலற நேய மலிந்த வர் வேடமும், ஆலயந் தானு மரனெனத் தொழுமே"—சிவஞானபோதம் 12-ம் சூத்திரம். ஆயின் இங்கு அவ்வாறன்றி அரனை அடியாராகக் கொண்டு வழிபட்டனர் நாயனார் என அதை எடுத்துக் காட்டியவாறு.

உறையுள் - உறைவதற்கிடமாயுள்ளது - வீடு. **அணைந்து** - கொண்டணைந்து.

பேருவகை கூர்ந்திட - மிகுகாதல் பெருகும்படி. கூர்தல் - மிகுந்து நிறைதல். தாம் உவகை கூர என்றும், அவர் உவகை கூர என்றும் ஈரிடத்தும் இயைய நின்றது.

முறைமையில் வழிபட - அடியவர் அரனேயாவார் எனக் கொள்ளும் முறைமையால் அரனுக்குரியபடியே பூசை செய்ய. **மொழிந்த** - நூல்களால் விதிக்கப்பெற்ற. நூல்கள் தொக்கி நின்றது. மொழிந்த - மொழியப்பட்ட. செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது.

நிறைபெரு விருப்பொடு செய்து - உளமகிழ் சிறப்பின் மல்க ஒடளித்தலாலே (362) முன்னர் நிறைந்த விருப்பு, இங்குப் பெருகிற்று என்பார் **நிறை பெரு விருப்பு** என்றார். **விருப்பொடு செய்து** - விருப்பு - மனநிகழ்ச்சி; **செய்து** - காயத்தின் செயல். மனம் வாக்குக் காயமாகிய மூன்றில் ஏத்தினார் (372) என முன்னர் வாக்கின் தொழில் கூறப்பெற்றதால் இங்கு ஏனை இரண்டின் செயலுமே கூறப்பெற்றன. எனவே, முக்கரணங்களாலும் முறைமையின் வழிபட்டார் என்க.

நின்றபின் - அடியார்கள் முன்னர் அமர்ந்திருக்கலாகாது நின்று என்க. வணங்கிப் பணி கேட்கும் முறைமையின் நின்று, அதன் பின்னே, என்றனர் என வரும் பாட்டினோடு வினைமுடிபு செய்க. 14

374. (வி - ரை) **எம்பிரான்!** - எங்கள் பெருமானே!-நாயகரே!-அண்மைவிளி.

யான் செயும் பணி எது-செயும் பணி - தேவரீர்பாற் செய்யக்கடவதாகிய பணி. **பணி எது** - நூல்கள் மொழிந்த பூசைகள் யானறிவகையா லியற்றினேன்; மேற்செயத் தக்க பணி மொழிந்தருள்க என்றபடி. தேவரீர் என்னிடம் வேண்டியது யாது என்பதற்கு நான் செயும்பணி யாது என்றது பெரியோர்களிடம் விண்ணப்பிக்கும் சம்பிரதாயமான மரியாதைக் கூற்று.

வம்புலா மலர் - இடத்திற் கேற்ப மலர் என்ற பொதுப் பெயர் கொன்றை குறித்தது.

வள்ளல் - தலைவரே அடியார் வேடம்பூண்டு வந்தருளியதால் வள்ளல் என்றார்.

வைத்து உன்பால் நம்பி! நீ தருக - நம்பி - ஆடவரிற் சிறந்தவனே! - அண்மை விளி. நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் ஆதலின் உன்னிடம் ஒப்புவிக்கின்றேன் - என்பது குறிக்க இப்பெயராற் கூறினார். **நம்பி வைத்தும்** - நம்பிக்கையாக வைக்கின்றோம்-என்பது இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பு. 15

375. (வி - ரை) **தன்னை ஒப்பு அரியது** - பிறபொருள் எவற்றிற்கும் இதனை ஒப்பாகும் தன்மை அரியது. "தனக்குவமை யில்லாதான்" என்ற எமது தன்மை போன்றதே யாம் வைத்திருக்கும் இதன் தன்மையுமாம் என்பது குறிப்பு.

தலத்துத் தன்னுழைத் துன்னிய - தனது இடத்தினுள்ளே பொருந்திய. தன் தலத்துழைத் துன்னிய என்று மாற்றுக. இவ்வுலகில் தன்னிடம் பொருந்தும் என்றுரைப்பாரு முண்டு. **தலம்** - இப்பாத்திரத்தில் பலியை இடும் இயைபு உள்ள பரப்பு. அதிகார எல்லை என்பர் நவீனர். அந்தப் பரப்பு இவ்வுலகமேயன்றி எல்லா வுலகமுஞ் சென்று விரிந்தது என்பது இதன் தத்துவமாம்.

துன்னிய யாவையும் தூய்மை செய்வது - துன்னிய பொருள்கள் தூய்மையற்றவையேயாயினும் அவற்றை யெல்லாம் சுத்தமாக்குவது. **யாவையும்** - எல்லாவற்றையும். உயிர்கள் தமது கன்மங்களை எல்லாம் தன்வசமாக ஒப்புவித்துத் - தனக்கே அர்ப்பணம் செய்தபோது இறைவன் அவற்றைப் புனிதமாக்கி அவ்வுயிர்களைஈடேற்றுவன் என்பது சாத்திரம். "துள்ளு மறியா மனது பலி கொடுத்தேன்" என்றது தாயுமானுர் பாட்டு. உயிர்கள் இறைவன் பரமாகச் செய்யும் எல்லாம் ஏற்றுக்கொள்ளும் தன்மையே அவனது பலிப்பாத்திரம் எனப்படும்.

பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவது - பொன்னையும் மணியையும் பார்க்கிலும் அதிகமாகப் பாராட்டிக் காக்க வேண்டிய பொருள். "ஓடும் செம்பொனு மொக்கவே நோக்குவார்"களும், "புல்லோடுங் கல்லோடும் பொன்னேடு மணியோடுஞ் சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த நல்லோர்"களும் ஆகிய அடியார்கள் விரும்பிக் கையிற் கொள்வது இவ்வோடேயாம். "ஓடுங் கவந்தியுமே யுறவென்றிட்டுள் கசிந்து" என்ற திருவாசகமும் (குலாப்பத்து - 1.) காண்க. **போற்றுதல்**-வழிபடுதல் எனக் கொண்டு பொன்னும் மணியும் கொண்டு இதனைப் பூசிக்க வேண்டுவது என்றுரைப்பாருமுண்டு. இதனைக் கேட்ட நாயனுர் இவ்வோட்டினைப் பெற்று "மனையில் ஓர் மருங்கு காப்புறும் எல்லையில் வைத்து" வந்தனர் - (377) என்றதால், **போற்றல்** என்பதற்குக் காப்பாற்றல் என்று பொருள் கொள்ளுதலே சிறந்ததாம்.

தூய்மை செய்வது; ஆதலின் ஒப்பரியது; ஆதலின் போற்ற வேண்டுவது எனக் காரணகாரியமாகத் தொடர்ந்து பொருள் கொள்க.

இன்ன தன்மையது இது - மேலே கூறியவற்றை முடித்துக்காட்டியபடி. "இன்ன தன்மைய னென்றறி யொண்ணு எம்மான்" தனது பலிப்பாத்திரத்தின் தன்மை தன்னை ஒப்பரியதாகிய இது எனக் காட்டியதன் அழகு காண்க.

"பிச்சைய தேற்முன் பிரமன் றலைதன்னிற்
பிச்சைய தேற்றுன் பிரியா வறஞ் செய்யப்
பிச்சைய தேற்றுன் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தேற்றுன் பிரமன்பர மாகவே"

என்ற திருமூலர் திருமந்திர (ஏழாந் தந்திரம் - 184)மும் பிறவுங் காண்க. "பாத்திர மறிந்து பிச்சை யிடு" என்ற பழமொழி தன்பாற் பொருந்தியவற்றை யெல்லாம் தூய்தாக்கும் தன்மையுடைய இது போன்ற ஓட்டினைப் பற்றியதாம் என்பதும் குறிப்பு.

வாங்கு நீ - மேலே கண்ட தன்மையுடைய சற்பாத்திரமாகிய இதனை வாங்கும் தகுதியுள்ள சற்பாத்திரம் நீயேயாவாய் என்றதொரு குறிப்பும் காண்க. **வாங்கு** - ஏவல். இவ்வோடு உன்பால் வைத்து நாம் வேண்டும்போது தருக என்று மேற்பாட்டிலே சொல்லி விட்டாராதலின், இங்கு **வாங்கு** என்ற மட்டிற் கூறினுர். வாங்கி வைத்துத் தருக என்று நாம் சொன்னேம். ஆனுல் அதன்படி தருதல் உன்னுல் இயலப்போகின்றதில்லை. வாங்குதல்மட்டும் செய்வாய் என்று குறிப்பதற்கு இங்கு **வாங்கு** என்றதனே டமைந்தனர் என்றலுமாம்.

என - என்று சொல்லி, அதனைக் கொடுக்க என்க.

இங்கு அதனைக் கொடுக்க என்றது இசையெச்சம். இப்போது இறைவர் தரும் இந்த அருள் மறைந்து நிற்பதுபோலச் சொல்லும் மறைந்து நின்றதுபோலும்.

பின்னர் "என்றும் இவ்விளமை நீங்காது நம்பால் விருப்புடனிருக்க" என (401) வெளிப்பட்டுச் செய்யும் அருள் வெளிப்படச் சொல்லப்பெறுதலும் காண்க.

376. (வி - ரை) **தொல்லை** - பழமையாய் வழி வழி வருகின்ற. வேட்கோவர் தந் தொல்லைக்குலம் எனக் கூட்டியுரைக்க. இவ்வாறு இக் குலநலத்தையும் பழமையையும் கூறியது, இந்நாயனார் ஒருவரையே குலம்பற்றித் தேற்றம் பெற முதனூலிற் "திருநீலகண்டத்துக் குயவனார்" என எடுத்துக் காட்டித் துதித்தமையால் என்க. இதுபற்றியே முன் புராணத்திறுதியில் தோற்றுவாய் செய்த இடத்தே "திருநீலகண்டக் குயவனார்' (350) என்று காட்டிய ஆசிரியர் "தில்லைமூதூர் வேட்கோவர்" (360), "வேட்கோவர் தம்மனை" (371), "திருந்து வேட்கோவர்" (378), "வேட்கோவர்" (388), "இந்த வேட்கோவன்" (391), "நிறையுடைய வேட்கோவர்" (392), எனப் பல இடத்திலும் குலச்சிறப்புக் காட்டிச் செல்லுதல் காண்க. மனிதன் வீடுகட்டி வாழவும், சோறு சமைத்து உண்ணவும் தொடங்கிய அன்று முதலே அவனுக்கு ஓடும் கலனும் தந்து உதவிசெய்யத் தொடங்கியது இக்குலம்; மேலும் துறந்தார்க்குந் துணையாய் நின்றதாம்; மற்றும் கொடுமை என்பது சிறிதும் கலவாத தொழிலுமாம் என்பன வாதி சிறப்புக்களும் நோக்கி இவ்வாறு ஆசிரியர் கூறிப் போந்தனர் என்க.

மல்குசீர் - மல்குதல் - மிகுதல் - நிறைதல். கடத்தற்கரிய காமப்பிணியையும் திருநீல கண்டத்தின் ஆணையாலே கடந்தது முன்கால நிகழ்ச்சி; பெறுதற்கரிய திருவோட்டினைப் பெறுவது இப்போது நிகழ்கால நிகழ்ச்சி; இறைவன் வெளிப்பட மீளவும் இளமைபெற்று மீளா நெறியடைதல் இனிவரும் எதிர்கால நிகழ்ச்சி - என முக்காலத்தினும் மிகுதலினால் **மல்குசீர்** என முக்கால வினைத்தொகையாற் கூறினார்.

வணங்கி வாங்கிக்கொண்டு - **வணங்கி** - பெரியோர்களின் ஏவலை வணங்கி ஏற்றுக் கொள்ளும் முறைப்படி தலைவணங்கி. **கொண்டு** - ஏற்றுக் கொண்டு.

ஒல்லையின் - விரைந்து சென்று. பெரியோர்களின் ஏவலை யியற்றுதலின் மேற்கொள்ள வேண்டிய விரைவு குறித்தது. சென்று என்பது தொக்கி நின்றது. சென்றமை காணார், திரும்பி வந்தமை மட்டும் கண்டார் எனச் செய்கையின் விரைவு குறிப்பார் **சென்று** என்பதனைத் தொகவைத்தார்.

மனையில் - வீட்டிற்குள்ளே. **ஓர்மருங்கு** - அதற்குரிய ஒரு தனியிடத்தில். **காப்புறும் எல்லை** - அதனுள்ளும் காவல் பொருந்திய தொருவகை. (பொன் - மணி முதலியவைகளை வைக்கக் கூடிய பெட்டி என்பர் மகாலிங்கையர்.) இம் மூன்றினும் யோகியார் சொல்லிய எச்சரிக்கையை நாயனார் பின்பற்றி ஓட்டினைப் போற்றிய அருமை கூறிய படியாம்.*

இறையை எய்தினார் - யோகியார் மனையில் இருக்கவே அவர் திருமுன்பே அவரது ஆணையை நிறைவேற்றி வந்தார் நாயனார் என்பது குறிப்பு. உம்பர் நாயக (374) னாகிய அந்தஇறையை எனவும்,வள்ளல்தொண்டனாராகிய (374) அத்தொண்டனார் எனவும் சுட்டுவருவித்துக் கூட்டியுரைத்துக் கொள்க. தொண்டனார் - பிரானைத்தொண்டரென்று - கொண்டணைந்து - பூசைகள் செய்து - பின் - "பணி எது?" என்றனர்; உம்பர்நாயகனும்—"இவ்வோடு - வைத்துத் - தருக" என்று (கூறி) அரியது - செய்வது - வேண்டுவது - இது; வாங்குநீ" என, (அத்) தொண்டனார் - வணங்கி - வாங்கி - வைத்து - வந்து - (அந்த) இறையை - எய்தினார் என்று இந்நான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க.　　17

*மனை - தமது உடல்; ஓர் மருங்கு - மனம்; காப்புறும் எல்லை - திருநீலகண்ட ஆணை போற்றிய உணர்வு; வைத்து - அவ்விடத்தே அது போலவே இதனையும் கொண்டு; இறையை எய்தினார் - அதனால் இறைவனைக் கூடினார், என இப்பாட்டில் உள்ளுறை பொருள் காண்பாரு முண்டு.

*377. வைத்தபின் மறையவ ராகி வந்தரு
ணித்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்;
அத்தர்தா மம்பல மணைய மேவினார். ௧௮

(இ - ள்) வைத்தபின்...மீண்டனர் - அவ்வாறு வைத்து எய்திய பின்னர், யோகியாராக வந்த இறைவர் அவ்விடம் விட்டுப் பெயர்ந்தாராகவே, இதுவரை நின்று பணிகேட்ட தொண்டனாரும் அவருடனே போய் வெளியே சென்று வழிவிட்டு விடைபெற்றுக் கொண்டு தமது வீட்டிற்குத் திரும்பினார்; அத்தர்...மேவினார் - இறைவரும் தமது சிதாகாயமாகிய திருவம்பலத்திலே எழுந்தருளினார்.

(வி - ரை) வைத்தபின் - வந்து முன்போல நின்றுபணி கேட்ட தொண்டரும் - நித்தனார் நீங்கிட - உடன்போய் - உய்த்து - விடைகொண்டு - மீண்டனர் - என்று கூட்டுக.

நின்ற தொண்டர் - பெரியோர் முன்பு இருத்தல் ஆகாதென்ற விதிப்படி, இதுவரை, நின்று பணிகேட்ட நாயனார். "நின்றபின்" என (373) முன்னரும் கூறினார்.

வந்தருள் - அருள்புரியத் திருவேடம் தரித்து வந்தவர் என்ற குறிப்பாம்.

நீங்கிட - அவ்விடத்தினின்று புறப்பட்டு எழுந்தருள.

உய்த்துடன் போய் விடைகொண்டு மீண்டனர் - அவருடன் சென்று வழிவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பினார்.

உய்த்து - வழிவிட்டு. பெரியோர்கள் மீளும்போது அவர்கள் பின் தொடர்ந்து நடந்து சென்று வழிவிட்டு அவரனுமதி பெற்று வருதல் ஆன்றோரொழுக்கமாம்.

அம்பலம் - எங்கும் நிறைந்ததாயுள்ள அறிவொளியே அம்பலமாம். **அம்பலம் அணைய மேவினார்**-என்பது யோகியாராய் எல்லாருங் காண வெளிப்பட்ட அந்த நிலையிலிருந்து கண்ணுக்குத் தோற்றாத நிலையினாரானார் என்ற பொருளில் வந்தது. இது தில்லையின் நிகழ்ந்ததாதலின் அங்குத் திருவம்பலத்திலே எழுந்தருளினார் என் 18
றுரைத்தலுமாம்.

வேறு

378. சாலநாள் கழிந்த பின்பு தலைவனார் தாமுன் வைத்த
கோலமா ரோடு தன்னைக் குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை யென்றுந் திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதா நிலைமை காட்ட முன்புபோல் மனையில் வந்தார். ௧௯

(இ - ள்) சால நாள் கழிந்த பின்பு - (இவ்வாறு மேவின பின்னர்ப்) பல நாள்கள் சென்ற பின்பு; தலைவனார் - இறைவனார்; தாம் முன்...போக்கி - தாம் முன்னாளில் நாயனாரிடம் கொடுத்து வைத்த அழகிய திருவோட்டினை அது வைக்கப்பெற்ற குறித்த இடத்தினின்றும் அகன்று போகும்படிப் பண்ணி; சீலமார்...காட்ட - சிவநெறி காத்து வாழும் சிறப்பொழுக்கத்திலே எப்போதும் திருத்தமாய் நின்ற குயவனாரிடம் விளங்கிய உண்மைத் தன்மையை உலகினர்க்குக் காட்டுவதற்காக; முன்பு...வந்தார் - முன்பு வந்தது போலவே அவரது மனையிலே எழுந்தருளி வந்தார்.

(வி - ரை) நாள்கழிந்த பின்பு - தலைவனார் - முன்வைத்த - ஓடு தன்னைப் - போக்கி - வேட்கோவர் - நிலைமைகாட்ட - மனையில் - முன்புபோல் - வந்தார் - என்று கூட்டுக.

தலைவனார் - முதல்வர். எல்லார்க்குந் தலைவர்.

வைத்த - வைத்துத் தருக (374) என்று வைப்பித்த. வைத்த ஓடுதன்னை என்றியையும். **வைத்த** - வைப்பித்த எனப் பிறவினை விகுதி விரித்துரைக்க. **கோலம்**

முன் (375) கூறிய கோலம். துறியிடத்தகல் - துறியிடம் - மனையிலோர் மருங்கு காப்புறும் எல்லை என்று (376) குறித்துக் கூறிய இடம். இடத்து அகல - இடத்தினின்றும் அகல. நீக்கப்பொருளில் ஐந்தாம் வேற்றுமை உருபு தொக்கது. இவ்வாறன்றி, நாயனார் மனையிலிருந்து தாம் குறித்த வேறிடத்திற்கு அகலும்படி என்றுரைப்பாருமுளர்.

சீலமார் கொள்கை - 360 - 361, திருப்பாட்டுக்களிற் குறித்த சிறந்த நல்லொழுக்கங்கள். **கொள்கை என்றும் திருந்து-சீலம்** கொண்டொழுகுவதிலே எப்போதும் திருந்தி நின்றவர். **சீலம்** - நல்லொழுக்கம். **திருந்துதல்** - வழுவாதியற்றுதல்.

வேட்கோவர் தம்பால் - வேட்கோவரிடம் உள்ள நிலைமை என்று இயையும். தம்பால் மனையில் வந்தார் என்று இயைத் துரைப்பாருமுண்டு.

வாலிதாம் நிலைமை - தூயதாகிய மெய்ம்மை நிறைந்து விளங்கிய நிலை. "வாலிதாம் வெண்மை யுண்மைக் கருவினும் வளத்த"(71) என முன்னர் அரனன்பர் சிந்தையைக் குறித்ததும் காண்க. "வாலறிவன்" என்ற குறளுக்கு மெய்யுணர்வினையுடையான் (பரிமேலழகர்) என்றும், விளங்கின அறிவினையுடையான்(மணக்குடவர்) என்றும் உரை கூறினமையும் காண்க. அஃதாவது பிறர் யாவராலும் விலக்கற்கரிய காமத்தை விலக்கி, ஆணைபோற்றி, இளமை முழுதும் கழிய, முதுமையின் விளங்கிய உள்ளநிலையாம். இதனையே " நீடுவாய்மை திகழுமன்பு" - (359) என முன்னும் "அயலறியாத வண்ணம் அண்ணலாராணையுய்த்த மயலில் சீர்" (403) எனப் பின்னும் போற்றினார்.

காட்ட - காட்டும் பொருட்டு. இதன் விரிவு (369) முன்னர்க் "காட்டும் ஆற்றால்" என்ற இடத்துக் காண்க.

முன்பு போல் - முன்பு தாங்கி வந்த அவ்வேடத்துடனே - முன்வந்தது போலவே. நிலை காட்டுதற்காக முன்னே ஓட்டினைத் தந்தனர். (இப்போது அதனைப் போக்கிய பின்) தாம் மேற் கொண்ட காட்டுந்தொழில் முற்றும் பொருட்டு முன்போலவே வந்தார் என்க.

முன்பு வைத்த—என்பதும் பாடம். 19

379. வந்தபின் றொண்ட ரூரு மெதிர்வழி பாடு செய்து
"சிந்தைசெய் தருளிற் றெங்கள்செய் தவ" மென்று நிற்ப,
"முந்தைநா ளுன்பால் வைத்த மொய்யொளி விளங்கு மோடு
தந்துநில்" லென்று னெல்லாந் தான்வைத்து வாங்க வல்லான். ௨௦

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு இறைவன் முன்புபோல் வந்தபின் நாயனாரும் (முன்புபோல) எதிர் கொண்டு அழைத்து வந்து விதிப்படி வழிபாடு செய்து, "தேவரீர் அடியேனை நினைந்து எழுந்தருளியது யாங்கள் செய்த தவமே" என்று கூறி மொழிந்து நின்றாராக; எல்லாப் பொருள்களையும் தானே வைக்கவும் மீள வாங்கவும் வல்லாராகிய அவ்விறைவர், "முன்னாள் உன்னிடம் நான் கொடுத்து வைப்பித்த மிக்க ஒளி விளங்கும் ஓட்டினைத் தந்து நிற்பாயாக" என்றார்.

(வி - ரை) **தொண்டனாரும்** - தலைவனார் முன்பு வந்தது போலவே வந்தாராகத் தொண்டனாரும் அப்போது செய்தது போலவே வழிபட்டார் என்க. உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

எதிர் - எதிரே. எதிர் கொண்டு அழைத்து உபசரித்து. **சிந்தை செய்தருளிற்று எங்கள் செய்தவம்** - **சிந்தை செய்தருளுதல்** - நினைத்தல். "எங்களையு நினைந்தருளிற் றெனவியம்ப" (ஏயர்கோன் - புரா - 126) என்றது காண்க.

எங்கள் - தம்மையும் தம்மனைவியாரையு முள்ளிட்டுப் பன்மையிற் கூறினார். இவர்களது இல்வாழ்க்கைத்திறம் (367) முன் உரைக்கப்பட்டமை காண்க. **எங்கள்** என்றது நாயனாரையும் அடியார்களையும் உள்ளிட்டதென்று கூறுவாருமுண்டு. **செய்தவம்**-

முன்னரும் செய்தவம் (359) என்றமை காண்க. நாயனாரும் அம்மையாரும் செய்த தவத்தினைவிடப் பெரியதும் அரியதும் வேறில்லை என்க.

நிற்ப - எதிரே வணங்கி முறைமையின் நின்றாராக. முன்னரும் **நின்றபின்** (373) "நின்ற தொண்டர்" (377) என்றது காண்க.

மோய் ஒளி விளங்கும் ஓடு - முன்னர்க் (375) கூறிய அரிய தன்மையில் விளக்கம் மிக்குத் திகழும் திருஓடு. **கோலமார் ஓடு** என்று மேலே கூறியது காண்க. **மோய்த்தல்** - தொகுதியாய்க் கூடுதல்.

தந்து நில் - தருக நாம் வேண்டும்போதென்று கொடுத்த அதனை இப்போது நாம் வேண்டினோமாக, மீளத் தந்து அதன்பின் என்பால் நிற்பாயாக. **நில்** - நிற்பாய் என்றபடி. தம்முன் நின்ற அவரை இப்போது நிற்பதனோடன்றித் தந்த பின் **நில்** என்றவாறு. **நில்**-பின்னர்ச் சரித முடிவில் என்பால் நிலைத்து நிற்பாயாக என்ற குறிப்புமாம்.

எல்லாந் தான் வைத்து வாங்க வல்லான் - "விச்சு தன்றியே விளைவு செய்குவாய் விண்ணு மண்ணகம் முழுதும் யாவையும், வைச்சு வாங்குவாய்" (திருச்சதகம் - 96) என்ற திருவாசகம் காண்க. தனதுடைமையாகிய சுத்தாசுத்த மாயைகளிலிருந்து எல்லா உலகங்களையும், அவற்றின்கண் அனுபவ பதார்த்தங்களையும், அவற்றை அனுபவிக்கத்தக்க கரணங்களையும், அக்கரணங்களையுடைய உடம்புகளையும் தோற்றுவித்து உயிர்களுக்குக் கொடுத்து, உயிர்களின் மலங்களைப் போக்கிப் பின்னர், மீளவும் அவ்வுலக முதலியவற்றை அம்முதற் காரணங்களிலே ஒடுங்கும்படிச் செய்யவல்லவன் இறைவன். என்பது உண்மைநூற்றுணிபு. **வைத்து** என்பது உலக முதலியவற்றை அவ்வவற்றிற் குரியபடி நிலைபெறவைத்தல் குறித்தது. **வாங்க** என்றது அவற்றை அவ்வவற்றினிடமிருந்து மீளத் தன்னிடத்தேயுள்ள மாயைகளில் ஒடுக்கி வாங்கிக்கொள்வதைக் குறித்தது. "தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்" (நட்டபாடை - திருநெய்த்தானம் - 3) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. "ஒடுங்கி மலத்துளதாம்; அந்தமாதி" என்பது சிவஞானபோதம். எல்லாம் வைத்து வாங்க வல்லவனாதல் தலைவனுக்கே யமையுமாதலின் இவ்விடத்து மேற்பாட்டிலே **தலைவனார்** என்ற சொல்லாற்கூறினார். எவ்வெவுயிர்க்கும் வேண்டிய எவ்வெப் பொருளையும் வைத்து வாங்கவல்லவன் இவ்வொரு திருவோட்டினை நாயனார்பால் வைத்து மீள வாங்குதல் பெரிதன்று என்பது.

இங்கு மண்ணாலாகிய இத்திருவோட்டினை ஏந்திய கையராய் (371) வந்தமை சிருட்டி காரியங் குறித்தது. சிருட்டியிற்பட்ட உயிர்கள் யாவையும் மலநீக்கம் பெற்றுச் சுத்தமாக்கப்படுமென்ற குறிப்பைத் "தன்னுழைத் துன்னிய யாவும் தூய்மை செய்வது" (375) என்று சொல்லிக் காட்டினார். இங்கு **வைத்தல்** சிருட்டியையும், **வாங்குதல்** சங்காரத்தையும் குறித்தன. 20

380. என்றவர் விரைந்து கூற, விருந்தவ ரீந்த வோடு
சென்றுமுன் கொணர்வான் புக்கார்; கண்டிலர்; திகைத்து நோக்கி
நின்றவர் தம்மைக் கேட்டார்; நேடியும் காணார்; மாயை
யொன்றுமங் கறிந்தி லார்தா முரைப்பதொன் றின்றி நின்றார். உக

(இ - ள்) என்று...புக்கார் - (மேற்பாட்டிற் கூறியபடி) அவர் மிகவிரைவாகிய அதிகாரத்துடன் சொல்லுதலும், அந்தப் பெரிய யோகியார் கொடுத்த திருவோட்டினை விரைந்து சென்று கொண்டு வருவதற்காக வீட்டினுட் புகுந்தார் (தொண்டனார்); கண்டிலர்-அதனைத் தான் வைத்த காப்புறும் எல்லையிற் காணாதவராயினர்; திகைத்து... கேட்டார் - (அதனாலே) மதிமயங்கி நோக்கி அங்கு நின்றாரையும் கேட்டார்; (அவர்களும் அறியாராகவே) நேடியும் காணார் - தாமே பிற இடங்களிலும் தேடிப் பார்த்தும் அதனைக் காணாராயினர்;. மாயை...நின்றார் - அது காணாது போயின மாயையினை

இன்னவாறென்று ஒன்றும் அங்கு அறியாதவராகி மேலே யோகியார்பால் உரைக்கும் மொழி ஒன்றும் பெருதவராகி மனைக்குள் அவ்விடத்திலேயே நின்றார்.

(வி - ரை) என்று - ஓடு தந்து நில் என்று. விரைந்துகூற - விரைவில் நிறைவேற்றுங் கட்டளையாகச் சொல்ல.

இருந் தவர் - பெரிய தவசியார். யோகியார்- "தவச் சிவயோகநாதர்" (382) என்றது காண்க. தவத்திற் கிலக்காய் நின்றவர் என்பாருமுண்டு.

கொணர்வான் புக்கார் - கொணரும் பொருட்டு. வானீற்று வினையெச்சம்.

திகைத்து நோக்கி - அறிவுமயங்கி வழி ஒன்றும் தோன்றாது நிற்றல்; அறிவு மயங்கியபோது உளதாம் மெய்ப்பாடு. நோக்கி என்றது ஒன்றனையும் குறித்துப் பார்க்கும் நோக்கமன்று; மயங்கிய பார்வையைக் குறித்தது.

நின்றவர் - பக்கத்தில் நின்ற மனைவியார் என்று கூறுவாருமுண்டு.

கேட்டார் - ஓடு போயின வகையைக் கேட்டறிதலையும்,நேடியும் காணார்-அதனைத் தாமே கண்டறிதலையும் குறித்தது.

மாயை ஒன்றும் அங்கு அறிந்திலார் - மாயைஒன்றும் - இஃது இறைவன் தனது மாயாசத்தி அருட்சத்திகளாலே வைத்து வாங்கிய செயல் என்ப தொருசிறிதும். ஒன்றும் - ஒரு கூறாயினும். அங்கு - அவ்விடத்து; அப்போது என்றலுமாம். இங்கு அறிந்திலாதார் ஆகிய நாயனார் இதன் விளக்கத்தைப் பின்னர்க் குளக்கரையிலே இறைவன் மறைந்தபோது வானத்தில் விடைமேற் கண்டனர் என்பது காண்க. (399 - 400) அங்கு - திரோதான மறைப்பினாலே ஓட்டினை அகலப்போக்கிக் காணாமற்செய்த அவ்விடத்திலே. அங்குஅறிந்திலார் - வேறிடத்திலே பின்னர் அறிந்தார்என்பது குறிப்பு.

உரைப்ப தொன்றின்றி - சொல்லும்வகை ஒன்றுமில்லாமல். ஒன்றும் என்றதில் முற்றும்மை தொக்கது. நின்றார் - திகைத்த விடத்தே மேற்செய்வதறியாது நின்று விடுதல் குறித்தது.

அறிந்திலாதார்—என்பதும் பாடம். 21

381. மறையவ னாகி நின்ற மலைமகள் கேள்வன் றானும்
உறையுளிற் புக்கு நின்ற வொருபெருந் தொண்டர் கேட்ப
"இறையிலிங் கெய்தப் புக்காய்! தாழ்த்ததென் ?" னென்ன, வந்து
கறைமறை மிடற்றி னானைக் கைதொழு துரைக்க லுற்றார். ௨௨

382. "இழையணி முந்நூன் மார்பி னெந்தை!நீர் தந்து போன
விழைதகு மோடு வைத்த வேறிடந் தேடிக் காணேன் ;
பழையமற் றதனி னல்ல பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெரும!"வென் றிறைஞ்சி நின்றார்.

381. (இ - ள்) மறையவனாகி...என்ன - மறையவர் வேடந் தாங்கி வந்து நின்ற பார்வதி பாகனாகிய அவரும், வீட்டினுள்ளே புகுந்து மேற்சொன்னவாறு மயங்கி நின்ற ஒப்பற்ற பெரிய தொண்டர் கேட்கும்படி "விரைவில் இங்குத் திரும்பி வர உள்ளே புகுந்தவனே! இவ்வளவும் தாமதித்த காரணமென்ன?" என்று உரக்கக் கேட்க; வந்து...உற்றார் - உடனே (அத்தொண்டனார்) வெளியே திரும்பிவந்து, விடக்கறுப்பை மறைத்த மிடறுடைய யோகியாரைக் கைகூப்பித் தொழுது, பின் வருமாறு சொல்வாராயினார். ௨௨

382. (இ - ள்) வெளிப்படை. "இழைகளாலாகிய அழகிய முந்நூலணிந்த மார்பையுடைய எமது தந்தை போல்பவரே! நீர் என்னிடம் கொடுத்துப் போயின விரும்பத் தக்க திருவோட்டினை அது வைக்கப்பெற்ற இடத்தினும் பிற இடங்களினும் தேடியும்

கண்டிலேன் ; ஆதலால், பழையதாகிய மற்ற (கெட்டு ஒழிந்த) அதனைவிட நல்லதொரு வேறு புதிய பாத்திரங் கொடுப்பன் ; அதனை யேற்றுக்கொண்டு உமது பாத்திரத்தைக் காணது போக்கிய இந்தப் பிழையைப் பொறுத்தருள வேண்டும், எமது இறைவரே !'' என்று சொல்லி வணங்கி நின்றார். ௨௫

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

381. (வி - ரை) **மறையவன்** - தனது உண்மைத் தன்மையை மறைத்து வந்தவன் என்பதும் குறிப்பு. **நின்ற** - எங்கும் நிறைந்து நின்ற என்பதும் குறிப்பு. நின்ற திருத்தாண்டகம் காண்க.

மலைமகள் கேள்வன் - இப்போது யோகியாய் வந்தாராயினும் பின்னர் உமையம்மையாருடன் வந்து அளவிலின்பத்திருத்துபவர் என்பது குறிப்பு.

உறையுள் - வீட்டிற்குள் அவ்வோட்டினை வைத்த காப்புறு மெல்லை.

நின்ற - நின்ற கேள்வன் நின்ற தொண்டர் கேட்பக் கூறினார் என்றதொரு நயமும் காண்க.

இறையில் இங்கு எய்தப் புக்காய் - **இறையில்** - மிக விரைவில். **எய்த** - மீள வருதற்காக. வருவான்போல என்றலுமாம். வருகின்றேனென்று சொல்லி என்பாருமுண்டு. **புக்காய்** - புகுந்தவனே! விளி; புகுந்தவனாகிய நீ என்றலுமாம்.

என்ன - உரத்துக் கூவ. **தந்து நில்** என முன்னர் விரைந்து கூறியதற்கேற்ப உரைத்துக் கொள்க. பின்னரும் இவ்வாறே ''செயிர்த்து நோக்கி'' (383) எனவும், '' பழிக்குநீ யொன்று நாணாய் '' (385) எனவும், “சிந்தைவலித்திருக்கின்றாய்'' (389) எனவும் கூறுவன காண்க.

வந்து - தவசியார் நின்ற இடத்தில் மீள வந்து.

கறை மறை மிடற்றினன் - தாம் காதலித்து எப்போதும் சொல்லிப் பத்திசெய்து ஏத்தி வந்த திருநீலகண்டத்தை மறைத்து வந்தவன். அதன்பால் வைத்த பத்தியின் உறைப்பினாலே வெளி வந்தது ; ஆயினும் சிறிது போழ்து மறைந்து நின்றது. “கண்முன் வருதியானப் பொருள்'' (திருஞான - புரா - 265) என்றாற் போலக் கொள்க.

உரைக்கலுற்றார் - உரைப்பாராகி; முற்றெச்சம். என்று இறைஞ்சி நின்றார்-என்ற வரும்பாட்டின் வினைமுற்றுக் கொண்டு முடிந்தது. தொண்டர் என்ற எழுவாய் வருவித்துரைக்க. 22

382. (வி - ரை) **இழை அணி முந்நூல்** - “ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை'' என்ற அப்பர் சுவாமிகள் (விடந்தீர்த்த பதிகம் - 9) தேவாரம் காண்க. **அணி** - அழகிய. **இழை முந்நூலணிமார்பின்** - என மாற்றி அணிந்த மார்பின் - என்றலுமாம்.

எந்தை - சிறுவர்செய்த பிழைகளைப் பொறுத்தருள் செய்வது பெற்றோர் கடமை என்ற குறிப்பில் இங்கு **எந்தை** என்றார்; பெரியோர்க்கும் அதுவே கடமை என்று பின்னர்ப் பெருமு என்று கூறி முடித்தார்.

விழுதரும் ஓடு - பொன் மணி முதலியவற்றை விழுமியதாரும் விழுமியத்தருவதாகிய ஓடு. இதன் தன்மையை நீர் தெரிவித்தபடி (375) பொன்னினு மணியினும் போற்ற வேண்டுவதென யான் அறிந்து கொண்டதென்க.

வைத்த வேறிடம் - வைத்த இடம், வேறிடம் எனத் தனித் தனிக் கூட்டி எண்ணும்மை விரித்துரைக்க. வேறாகக் காப்புற வைத்தஇடம் என்றலுமாம். நீர் இப்போது அகலப்போக்கி வைத்திருக்கும் இடத்தின் வேறாகிய இடம் என்ற குறிப்புமாம்.

பழய மற்றதனின்-பழமையாகியதும், காணாது போனதுமாகிய அதனினும். **நல்ல பாத்திரம்** - புதியதும் நல்லதும் நீடு செல்வதுமாகிய வேறு ஒரு பாத்திரம். 384-ம் பாட்டில் இக்கருத்தை நாயனாரே விளங்க உரைத்தல் காண்க.

கொண்டு - ஏற்றுக்கொண்டு. அதனைக் கொண்டதுபோலவே இதனைக் கைக் கொண்டு.

இப்பிழை - காவல்செய்ய ஒப்புவித்த பொருளைக் காணாமற் போக்கிய இந்தப் பிழை. கேள்வன்றானும் - தொண்டர் கேட்பப் - "புக்காய்? தாழ்த்ததென்? என்னத்; (தொண்டரும்) வந்து - தொழுது - உரைப்பாராய் - "எந்தை! - ஓடு - தேடிக் காணேன் - நல்ல பாத்திரந் தருவன் - கொண்டு - இப்பிழை - பொறுக்கவேண்டும்" என்று (கூறி) இறைஞ்சி நின்றார் - என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

விழைதரும்—என்பதும் பாடம். 23

383. சென்னியால் வணங்கி நின்ற தொண்டரைச் செயிர்த்து நோக்கி
"என்னிது மொழிந்த வாநீ? யான்வைத்த மண்ணோ டன்றிப்
பொன்னினா லமைத்துத் தந்தா யாயினுங் கொள்ளேன்; போற்ற
முன்னைநான் வைத்த வோடே கொண்டுவா" என்றான் முன்னோன்.

(இ - ள்) வெளிப்படை. தலையினால் வணங்கிநின்ற நாயனாரைக் கோபித்தார் போலப்பார்த்து, "நீ சொன்னபடிதான் யாது? யான்வைத்த மண்ணாலாகிய ஓட்டினைத் தவிரப் பொன்னினாற் செய்ததொன்று தந்தாயானாலும் அதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். முன்னாளில் நான் வைத்த அவ்வோட்டினையே கொண்டுவா" என்று யாவர்க்கும் முன்னோனாகிய அந்தயோகியார் கூறினார்.

(வி - ரை) **செயிர்த்து நோக்கி** - கோபித்தார் போலப்பார்த்து. இவரது செயிர்த்த நோக்கம் மன்மதனை யெரித்ததாதலின் அவ்வாறன்றிக், கோபித்தார்போல நோக்கி. உண்மையில் இஃது திரோதானத்தில் வந்த அருட்பார்வையாம். "நெற்றியிற் கண் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப தென்னே"—(கோயிற்றிருவிருத்தம் 6) என அப்பர் சுவாமிகள் இதனை விளக்கியருளியதும் காண்க.

என் இது மொழிந்தவா நீ - நீ இது மொழிந்தவா என்? என மாற்றி யுரைக்க. **இது** - இவ்வாறு. **மொழிந்தவா** - மொழிந்தவாறு.

மண்ணோடன்றி...பொன்னினால்...கொள்ளேன் - "ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" என்றபடி, உலகம் விரும்பும் பொன்னை விரும்புத லில்லாமையால் விருப்பையும், உலகம் வெறுக்கும் ஓட்டை வெறுத்தலில்லாமையால் வெறுப்பையும், வென்றவர்கள் அடியார். இதுவே வேண்டுதல் வேண்டாமையிலாத சிவயோக நிலையும் எமது நிலையுமாம் என்பது குறிப்பு.

போற்ற - போற்றும்படி - காப்பாற்றும்படி. போற்ற வேண்டுவது (375) என்றமை காண்க.

முன்னோன் - எல்லார்க்கும் முன்னவன் - முதல்வன். "வைத்த மண்ணோடு" என்றும், "நான் வைத்த வோடே" என்றும் இருமுறை கூறியது கோபமொழி குறித்தது. அது குறிக்கவே ஆசிரியரும் **என்றான் முன்னோன்** என எழுவாய் பயனிலை மாறிவைத்தார் என்க. வரும் பாட்டிலும் இவ்வாறே வைத்திருத்தலுங் காண்க.

முதலில் **யான் வைத்த மண் ஓடு** என்றது உன்பால் வைத்த எனவும், பின்னர் **முன்னை நான் வைத்த ஓடு** என்றது உன்னிடமிருந்து வேறு வழியால் வாங்கிக் குறியிடத் தகலப் போக்கி வைத்த எனவும் குறிப்புப் பெறுதலும் காண்க.

வணங்கிச் சொன்ன—என்பதும் பாடம். 24

384. கேடிலாப் பெரியோ! யென்பால் வைத்தது கெடுத லாலே
நாடியுங் காணேன்; வேறு நல்லதோ ரோடு சால

நீடுசெல் வதுதா னென்று தருகின்றே னெனவுங் கொள்ளா
தூடிநின் றுரைத்த தென்ற னுணர்வெலா மொழித்த" தென்ன ;

385. "ஆவதென்? நின்பால் வைத்த வடைக்கலப் பொருளை வௌவிப்
பாவகம் பலவுஞ் செய்து பழிக்குநீ யொன்று நாணாய்!;
யாவருங் காண வுன்னை வளைத்துநான் கொண்டே யன்றிப்
போவதுஞ் செய்யே" னென்றான் புண்ணியப் பொருளாய் நின்றான்.

384. (இ - ள்) வெளிப்படை. "என்றுங் கெடுதல் இல்லாத பெரியோனே! என்னிடம் நீர் தந்தது காணமற்போனபடியினாலே, எங்கும் தேடியும் நான் அதனைக் கண்டிலேன்; அதனினும் நல்லதாய் மிக நீண்ட நாள்கள் நின்று பயன்படத்தக்க தனையே தெரிந்து வேறாகவே ஒன்று தருகின்றேனென்று நான் இறைஞ்சிக்கூறியதனை யும் தேவரீர் ஏற்றுக் கொள்ளாது கோபித்து நின்று சொல்லிய இவ்வுரை எனது உணர்வு முழுமையையும் ஒழித்து விட்டது" என்று நாயனார் கூற, ௨௫

385. (இ - ள்) வெளிப்படை. "உன்னால் இனி ஆகக் கடவது என்ன இருக்கிறது? உன்னிடம் அடைக்கலமாக ஒப்புவித்த ஓட்டினைக் களவு செய்து, பலப்பல வஞ்ச நடிப்புச் செய்து அதனால் வரும் பழிக்கு ஒரு சிறிதும் நாணமடையாதவனாயினாய்; யாவரும் காணும்படியாக உன்னை வளைத்துப் பற்றி (எனது பாத்திரத்தை வாங்கிக் கொண்டே யல்லாமல் இங்கு நின்று ஓர் அடி பெயர்த்து) போவதுங்கூடச் செய்ய மாட்டேன்" என்று புண்ணியங்களுக்கெல்லாம் பொருளாய் நின்ற இறைவன் கூறினார்.

384. (வி - ரை) கேடிலாப் பெரியோய்! - இறைவன் என்ற குறிப்புப் பொருளும் காண்க. தோற்றமில்லாதவன்; ஆதலின் கேடுமில்லாதவன். உயிர்களுங் கேடில்லாதவை; ஆயின் அவை சிறியவை; அணுத்தன்மையடைந்தன. இவரோ "அணுத்தருந் தன்மையிலையோன் காண்க" (திருவாசகம் - திருவண்டப்பகுதி) என்றபடிப் பெரியவர் என்பது குறிப்பு. முன்னர்ப் 'பெரும!' என்றதை விரித்துக் கூறியது வெளிப்பொருள்.

என்பால் வைத்தது கேடுதலாலே - **வைத்தது** - வைத்த அது. **அது**-அவ்வோடு. **கேடுதல்** - காணமற்போதல். பின்னரும் "பெயர்ந்து கரந்தது" (393) என்றது காண்க. "அகலப்போக்கி" (378) என்றமையால் மறைந்து போயினமை கருதப்பட்டது. **கேடுதல்** - அழிதல் என்ற பொருளில் வந்ததன்று. பொருள்களுக்கு உருமாற்றமேயன்றிச் சொரூப அழிவு கூறுதல் சைவசித்தாந்தக் கருத்துமன்று. கேடிலாதாய்! நீ வைத்ததும் கெடத்தகாததேயாம். பின் என்னையோ எனின், என்பால் வைத்த அந்நிலைமை தான் மாறிற்று என்பது குறிப்பாம். **நாடியும் காணேன்** - எங்கும் கண்ணாற் பார்த்துத் தேடியும், மனத்தால் நாடித் தேடியும் அறிதற்கரிதாயிற்று. "மனத்தினா லுணர்தற் கெட்டா மாயை" (200) என்றபடி. இறைவன் எல்லாம் வைத்து வாங்கும் (உலகத் தோற்ற நிலை யிறுதிகளாகிய) அருட்செயல்கள் உயிர்களின் அளவுபட்ட மனம் முதலிய காரணங்களா லறியப்படா என்பது குறிப்பு. "உலகெலாந் தேடியுங் காணேன்" என்ற (அருட்பத்து - 2.) திருவாசகங் காண்க.

வேறு - அதனைப் போன்றதாகிய நற்பண்புகளுடையதாய், ஆனால் - அதனின் வேறாகியது. **நல்லது - நீடு செல்வது** - பண்புகள். **ஓர்** - ஒப்பற்ற என்றும், ஒன்று ஒன்றாகிய எண் என்றும் குறித்தபடி. **சாலநீடு** - மிகவும் அதிகநாள். காலமிகுதி குறிக்கச் **சால** என்றமையாது **சாலநீடு** என்றார். **வேறு ஒன்று** எனக்கூட்டுக. **செல்வது தான்** - செல்வதுவே என்று தேற்றப் பொருள் குறித்தது.

ஊடி நின்று உரைத்தது - **ஊடி** - கோபித்து. முன்னர்ச் **செயிர்த்து நோக்கி** (383) என்றது காண்க. **நின்று** - பிழை பொறுக்குமாறு வேண்டியும் தணியாது

கோபத்திலேயே நிலைத்து நின்று. உட்காராமல் நின்றுகொண்டு என்றலுமாம். ஊடி உரைத்தது - நின்று உரைத்தது எனப் பிரித்துக் கூட்டுக. ஊடலால் விளைந்த (364) இச்சரித நிகழ்ச்சியை ஊடலினாலே வெளிப்படுத்தித் தீர்த்தற்காக நிற்பார்போல ஊடி நின்று என்பதும் குறிப்பு.

என்ன - என்று சொல்ல. தொண்டர் என்ற எழுவாய் தொக்கி நின்றது. ஆன்ம போதம் எழாமல் முற்றும் மறைந்து நின்ற நிலையாதலின் எழுவாயும் மறைந்து நின்றது போலும். 25

385. (வி - ரை) **ஆவது என்?** - உயிர் அறிவு முழுதும் ஒழிந்தது என்று விட்டமையால் பசு போதங்கெட்டவழி மேற் செயலாவது என்ன உளது என்பது குறிப்பு.

பாவகம் பலவும் செய்து - இங்குப் பாவிக்கும் செயலின்மே னின்றது. ஒன்றை வேறொன்றாக எண்ணிச் செய்யும் தொழிலே பாவனை எனப்படும். இது தானே பாவித்துச் செய்தலும், பிறரை அவ்வாறு பாவிக்கும்படிச் செய்தலும் என இருவகைப்படும். சிவோகம் பாவனை - தன்னையே சிவமாமாறு எண்ணுதல் எனப்படும். இங்குப் பாவகம் என்றது பிறர் தன்னை உண்மையினின்று மாறுபட்ட நிலையில் எண்ணுமாறு காட்டும் செயல் குறித்தது. வஞ்சித்துக் காட்டும் இயல்பு. பாசாங்கு என்பது உலக வழக்கு.

பழிக்கு நீ ஒன்று நாணாய் - வஞ்சிக்கப் பட்டோரும் பிறரும் இவ்வஞ்சனை வெளிப்பட்டபின் பழிப்பர்; அந்தப் பழிக்குஅஞ்சி ஒதுங்குதல் நாணம்-பழியச்சம் எனப்படும்; உன்னிடத்தில் அதுவுமில்லை என்றபடியாம்.

பாவகம் பலவும் செய்து - என்ற இடத்துத் திருநீலகண்டத்தின்வைத்த உறைப்பேறிய பாவனை யுபாசனையினாலே உலகப்பற்றை வென்றார் என்பதும், **பழிக்கு நீ ஒன்று நாணாய்**-என்ற விடத்து "நாடவர் பழித்துரை பூணதுவாக" என்றாற்போல அப்பாவனையினாலேவரும் உலகநிலைப் பழிக்கு அஞ்சார் என்பதும் குறிப்பிற் போந்தமை காண்க.

யாவரும்காண - நாயனாரது விளக்கம் உலகம் காணக் காட்டுமாறு (369) வந்தவராதலின் **யாவருங் காண** என்று குறிப்பித்தார்.

வளைத்து நான்கொண்டே யன்றிப் போவதும் செய்யேன் - உன்னையும் உன் மனைவியையும் சேர்த்துப் பிடித்துக் குடும்பத்துடன் என் உலகத்திற்கு உடன்கொண்டு போவதன்றி இங்கு நின்று அகல்வதில்லை என்ற பிற்சரிதக் குறிப்பும் காண்க.

போவதும்செய்யேன் - இங்குநின்றும் பெயர மாட்டேன். கொண்டே அன்றிப் போகேன் என்ற இரண்டு எதிர்மறைகளும் ஏகாரமும் கொண்டே போவேன் என ஓர் உறுதிப்பாடு பற்றிய உடன்பாட்டுப் பொருள் குறித்தன.

புண்ணியப் பொருளாய் நின்றான் - உயர்வாகிய பதிபுண்ணியம் செய்யும் யாவரும் பெறும் பொருளாக நின்றவர். புண்ணியங்களின் குறிக் கோளானவர்.

நின்றான் - நிலைபெற்றிருப்பவர். நீங்க இயலாமையின் **நின்றான்** என்றார். நாயனார் இதுவரை செய்த புண்ணியம் எல்லாவற்றிற்கும் இவரே பொருளாயினார் என்ற குறிப்புமாம். 26

386. "வளத்தினான் மிக்க வோடு வௌவினே னல்லேன்; றானல்லை
உளத்தினுங் களவி லாமைக் கென்செய்கே? னுரையு" மென்னக்;
களத்துநஞ் சொளித்து நின்றான் "காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினின் மூழ்கிப் போ"வென் றருளினான் கொடுமை யில்லான்.

(இ - ள்) வளத்தினால்...என்ன - "உமது மிகவும் வளம்பொருந்திய ஓட்டினை நான் களவு செய்தவனல்லன்; செயலிலே களவில்லாமையேயன்றி என் மனத்திலேயும் அதுபற்றிய களவாகிய எண்ணம் இல்லாமையைக் காட்டுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள்" என்று நாயனார் சொல்ல; களத்து...இல்லான் -

தமது கழுத்தின்மட்டிலே நின்ற விடத்தினை மறைத்து வந்தாராகிய யோகியார், "(அதனைக் காட்டுதற்காக) உன் ஆசைக்குரிய மகனைப்பிடித்துக்கொண்டு குளத்திலே மூழ்கித் தந்து செல்வாயாக" என்று கொடுமை யில்லாதவரேயாகிச் சொன்னார்.

(வி - ரை) **வளத்தினான் மிக்க** - நீர் முன்னர்த் தெரிவித்த மிகுந்த வளங்கள். **உளத்தினும்** - செயலில் களவில்லாமையேயன்றி. இறந்தது தழுவிய எச்சவும்மை. **ஒல்லை** - விரைவில்; ஒல்லையில் என்செய்கேன் என்று கூட்டுக. ஒல்லையில் உரையும் என்று கூட்டி யுரைப்பாருமுண்டு. ஒல்லை - சிறிதும் - அற்பமும் - எனப் பொருள் கொண்டு சிறிதும் களவிலாமைக்கு என்றும் உரை கூறுவர். **உளத்தினும் களவு இலாமை** - களவு செய்தல்வேண்டுமென்ற எண்ணமும் மனத்தில் நிகழாமை. இந்நாட் குற்றச் சட்டத்திலும், களவுசெய்யவேண்டுமென்ற எண்ணத்தாற் செய்வதே களவுக் குற்றமாமென்று விதித்தமை காண்க.

இலாமைக்கு - இல்லாததைக் காட்டுதற்கு - தெரிவித்தற்கு. உள்ளத்தின் நிகழ்ச்சி வேறுவகையாலே தெரிவித்தாலன்றித் தெரியாததலின் அதனை விளங்கக் காட்ட என்செய்கேன் என்று கேட்டனர்.

களத்து நஞ்சு ஒளித்து நின்றான் - முன்னரும் "கறை மறை மிடற்றினான்" (381) என்றமை காண்க. திருநீலகண்டத்திலே பத்தி செய்தாரை விளக்க வந்தாராதலின் அது பற்றியே பல முறையும் எடுத்துக் கூறினார். அதனை மறைத்து வந்தமையே அதனிடத்து அவர் செய்த பத்தியை விளக்குதற் கேதுவானதால் இவ்வாறு **நஞ்சு ஒளித்து நின்றான்** என்றார்.

குளத்தினின் மூழ்கிப்போ - நீரில் மூழ்கிச் சத்தியம் பண்ணுதல் உலக வழக்கு. நீர், நெருப்பு முதலியன இறைவனது அட்ட மூர்த்தங்களாகிய திருமேனிகளாம். ஆதலின் நெருப்பிலே தாண்டுதல் - நெருப்பிலே கைநீட்டுதல் - நீரில் முழுகுதல் முதலியவை இறைவன் திருமுன்னர்ச் சத்தியம் பண்ணுதலாம் என்க. கோயில் வாசலிலும், சந்நிதியிலெதிரிலும் செய்யும் வழக்கமும் காண்க. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலே திருவொற்றியூரில் சுந்தரமூர்த்திகள் சபதம்செய்த சரிதப்பகுதியில் இவற்றினியல்பும், வலிமையும், பிறவும் காண்க. **மூழ்கிப்போ** - முழுகி உனது களவிலாமையைச் சொல்லித் தந்து போவாயாக. "மூழ்கியுந்தாரான்" (391) "மூழ்கித் தருகின்றேன்" (395) எனப் பின்னருங் கூறுவர்.

கொடுமை யில்லான் - யோகியாரது இச்சொல்லும் செயலும் மிகக் கொடியனவாகக் காணினும், அவை கொடியன அல்லவாய்த் தொண்டரை விளக்கங்காணும் இரக்கத்தாலே செய்த அருளிப்பாடுகளேயாம் என்பார் **கொடுமையில்லான்** என்றும், **அருளினான்** என்றும் கூறினார். இதற்காகத் தாம் செய்யும் பாவகங்கள் பலவற்றையும் அவர்மேல் ஏற்றிக் கூறியனவும் அதுபற்றியேயாம் என்க. 27

387. "ஐயர்!நீ ரருளிச் செய்த வண்ணமியான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வ னில்லை; யென்செய்கேன்? புகலு"மென்ன;
"மையறு சிறப்பின் மிக்க மனையவ டன்னைப் பற்றி
மொய்யலர் வாவிப் புக்கு மூழ்குவா" யெனமொ ழிந்தார். உஅ

(இ - ள்) **ஐயர்...என்ன**-"ஐயரே! நீர் அருள்செய்தபடிச் சத்தியம் செய்வதற்குப் பொய்மையில்லாத சிறப்புடைய மகனில்லை. ஆதலின் வேறு யாது செய்ய வேண்டும்? சொல்லுங்கள்" என்று நாயனார் சொல்ல; **மையறு...மொழிந்தார்** - குற்றமற்ற சிறப்பிலே மிகுந்த உனது மனைவியைப் பிடித்துக் கொண்டு நிறைந்த பூக்களை யுடைய குளத்திலே மூழ்கித் தருவாயாக என்று யோகியார் சொன்னார்.

(வி - ரை) பொய்யில்சீர்ப் புதல்வன் - நீர் கேட்குமாறு நான் பொய்யில்லாத வன் என்பதை விளக்கும் சிறப்புப் பொருந்திய மகன் என்பது குறிப்பு. பொய்யில்சீர் - பொய்மையை இல்லையாக்கும் சிறப்பு. மகனால் உண்டாகும் சிறப்புக்களைத் திருக்குறள் மக்கட்பேறு என்ற அதிகாரத்தும், பிற இடத்தும் அறிந்து கொள்க. மகன் தந்தைக் காற்று முதவிகளுள் இதுவுமொன்றாதல் வழக்கு.

மையறு சிறப்பின் மிக்க மனையவள் - மகனில்லையேல் அவன் உதவுவது போலவே இதனில் உம்மீது குற்றமில்லை என்று விளக்கும் சிறப்பு என்றதும் குறிப்பு.

மை அறு சிறப்பு - குற்றத்தைப் போக்குகின்ற சிறப்பு. இதற்குக் கற்பிற் சிறந்த என்றுரைத்தலுமாம். மனையவளின் சிறப்பும் இயலும் வாழ்க்கைத்துணைநலம் என்ற திருக்குறட் பகுதியிலும், பிற இடங்களிலும் கண்டு கொள்க. மனையவள் - வீட்டுக்கு உடையவள். இல்லாள் - மனைவி முதலிய பல பெயர்களும் இப்பொருளே குறிப்பன. இல்வாழ்க்கை என்பது அதற்குடையவளாகிய நன்மனைக் கிழத்தியை யன்றி யில்லை யாகும். இதுவே நமது நாட்டு வழக்கு. இதனால் நம் நாட்டவராகிய தமிழர் பெண் மைக்கு உரிய உயர்வைக் குறிக்கொண்டுள்ளார் என்பது தேற்றமாம்.

தன்னைப் பற்றி - தனது கையைப் பிடித்துக் கொண்டு. "அந்தளிர்ச்செங் கைப் பற்றி" (389), "தன்மனைவி கைப்பற்றி வந்துமூழ் கியுந்தாரான்" (391), என்பன காண்க. "காதலுன் மகனைப் பற்றி" (387), "உடன்மூழ்க" (388), மனைவியோடு மூழ்கு தல் (399); "மாதைத் தீண்டிக் கொண்டு" (397) என்ற இடங்களிலும் இவ்வாறே பொருள் கொள்க. 28

வேறு

388. கங்கைநதி கரந்தசடை கரந்தருளி யெதிர்நின்ற
வெங்கண்விடை யவரருள, வேட்கோவ ருரைசெய்வார்
"எங்களிலோர் சபதத்தா லுடன்மூழ்க லிசைவில்லை;
பொங்குபுனல் யான்மூழ்கித் தருகின்றேன்; போதுமென; உகூ

389. "தந்ததுமுன் றாராதே, கொள்ளாமைக் குன்மனைவி
யந்தளிர்ச்செங் கைப்பற்றி யலைபுனலின் மூழ்காதே,
சிந்தைவலித் திருக்கின்றாய்!; தில்லைவா ழந்தணர்கள்
வந்திருந்த திருந்தவையின் மன்னுவன்யா" னெனச்சென்றார். ௩௦

388. (இ - ள்) வெளிப்படை. கங்கை ஒளித்திருத்தற் கிடமாகிய சடையினை மறைத்து அருளி எதிரே நின்றவராகிய வெங்கண்ணுடைய இடபத்தை வாகனமாக உடையவராகிய இறைவர் இவ்வாறு அருளிச் செய்தாராகக், குயவனார் அதற்குப் பிரதி யாகச் சொல்வாராய், "எங்களுக்குள்ளே நிகழ்ந்ததொரு சபதத்தினாலே நான் என்மனை வியார் கையைப்பற்றிக் கொண்டு உடன் மூழ்க இயலவில்லை; எனது குற்றமின்மையை விளக்கும்படிப் புனலிலே நானே மூழ்கிக் கொடுக்கின்றேன்; வாரும்" என்று சொல்ல;

389. (இ - ள்) வெளிப்படை. அதனைக் கேட்ட இறைவர் "நான் உன்னிடம் ஒப்புவித்த பொருளை முன்னே மீளத்தாராமலும், அல்லது அதனை நீ களவு செய்ய வில்லை என்றுகாட்ட உனது மனைவியின் அழகிய தளிர்போன்ற கையைப்பிடித்துப் புன லில் மூழ்கித்தாராமலும், உன்மனதில் மிகவும் வன்கண்மை கொண்டிருக்கின்றாய்!; இதற் காக நான் தில்லைவாழந்தணர்கள் கூடிய திருந்திய சபையிலே போய் இருப்பேன்" என்று சென்றார். ௩௦

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

388. (வி - ரை) கங்கை நதி கரந்த சடை கரந்து - கரந்த சடை - கங்கை நதியின் மிகுதிப்பாடு குறைந்து ஒளிந்து கொள்வதற்கிடமாகிய சடை. கரந்த - கரத்தலைச்

செய்தற் கிடமாகிய. **கரந்து** - மறைத்து. "நெடுஞ்சடை கரந்திட" (371) என்றது காண்க. தனது அருள் வெள்ளத்தினை வெளிப்படப் பின்னர்த் தருவான் இங்கு மறைந்து நின்றனராதலின் அருள் வெள்ளமேயாகிய கங்கை தங்கிய சடையினையும் மறைத்து நின்றனர் என்பது குறிப்பு. பின்னர் அருள் வெளிப்பட நிற்கும்போது சடை வெளிப்படும்; அது வெளிப்படவே கங்கையும் வெளிப்படும் என்க.

அருளி - கருணை செய்து. **எதிர் நின்று** - தமது எங்கும் பரந்து கரந்த நிலையினின் றும் வெளிப்பட்டு எதிரே வந்து நின்ற. "மறையவனுகி நின்று" (381) என்றதும் காண்க.

வெங்கண் விடை - வெம்மை - இரட்டுற மொழிதலால் **வெம்மை** - விருப்பம் எனக் கொண்டு அடைந்தாரை விரும்பும் எனவும்; **வெம்மை**-கோபம் எனக் கொண்டு, அடையலரைக் கோபிக்கும் எனவும் இருபொருளும் கொள்க. "அண்ண லரண் முரண் ஏறும்" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க. சடையும் விடையும் கரந்து அருளி நின்ற அவர் எனக் கூட்டியுரைத்தலுமாம்.

அருள - சொல்ல; **எங்களில்** - எனக்கும் என்மனைவிக்குமிடையே. **சபதத்தால் உடன் மூழ்க இசைவு இல்லை** - மனைவியைத் தீண்டுதலை முன்னே நிகழ்ந்த ஒரு சபதம் தடுத்தது. இப்போது நீர் கேட்கும் இந்தச் சபதத்திற்காகத் தீண்டின் முன்னைச் சப தத்தைக் கடந்தவனுவேன். சபதங்கடந்த நிலையில் நான் செய்யும் இச்சபதம் இசைவு பெறுது; ஆதலின் - என்க.

மூழ்க இசைவு இல்லை - மூழ்குதல் இசையாது - பொருந்தாது. **யான்** - யானே. **போதும்** - போதுவீர். சபதத்தை ஏற்றுக்கொள்ள வருவீராக. **போதும்** - அமையும் என்றலுமாம். **என** - என்று சொல்ல.

நீர் நெருப்பு இவற்றுற் பிரமாணஞ்செய்தல் இறைவன் முன்னர்ச் செய்யப்பட்ட னவேயாம்; ஆதலால் ஏனையோர் அவ்வாறு கேட்டல் சாலும்; அவற்றைத் திருமேனி யாக்கொண்ட இறைவனே கேட்டல் சாலாது என்று குறிப்பிப்பார் **கங்கைநதி கரந்த சடை கரந்து** என்று குறிப்பிட்டார் என்ப. 29

389. (வி - ரை) **தந்தது** - வைக்கத் தந்ததாகிய பொருளை. இரண்டாம் வேற் றுமை உருபு தொக்கது. **முன்** - என் முன்னே. நான் கேட்கு முன்னே; முதற் கடமையாக என்ற குறிப்புக்களுமாம். **தாராதே** - மீளத் தாராமல். "நீ தருக நாம் வேண்டும்போ" தென்று (374) நாம் கூறிக் கொடுத்தபடித் தாராமல்.

கொள்ளாமைக்கு - தந்த பொருளைக் களவாக எடுத்துக்கொள்ளாமையைக் காட்டு தற்கு. கொள்ளாமை அதனைக் காட்டும் வகைக்காயிற்று.

சிந்தை வலித்திருக்கின்றாய் - மனவலிமை யுடையனுயிருக்கின்றாய். மனவுறைப் பின் மிகுதியினுலே காமத்தை அறவே வென்றவனு யிருக்கின்றாய் என்பதும் குறிப்பு.

வந்திருந்த திருந்து அவை - வந்து நியாயம்பேசக் கூடியிருந்த திருந்திய சபை. **திருந்து அவை** - **திருந்து** என்றதன் காரணம் வரும்பாட்டிற் கூறினர். **பேரவையின்** என்பது பாடமாயின் பெருஞ்சபை என்க. பேரம்பலம் என்றலுமாம். இந்நாளிலும் தில்லை மறையோர் பேரம்பலத்திலே கூடி வழக்குக்களைப் பேசி முடிவுசெய்யும் வழக்க முங் காண்க.

மன்னுவன் யான் - அவர்கள் சபையின் நாதனுய் இருக்கின்றவன் நானே என் பதும் குறிப்பு.

எனச் சொன்னர்—என்பதும் பாடம். 30

390. நல்லொழுக்கந் தலைநின்றூர், நான்மறையின் றுறைபோனர்,
தில்லைவா ழந்தணர்கள் வந்திருந்த திருந்தவையின்
எல்லையிலான் முன்செல்ல, விருந்தொண்ட ரவர்தாமு
மல்குபெருங் காதலினுல் வழக்குமே லிட்டணைந்தார். ௩௧

(இ - ள்) வெளிப்படை. நல்லொழுக்கத்திலே சிறந்தவர்களும், நால்வேத நெறிகளிலும் முற்றவும் வல்லவர்களும் ஆகிய தில்லைவாழந்தணர்கள் வந்து கூடியிருந்த திருந்திய சபையிலே, தனக்கு ஓர் அளவு இல்லாதாராகிய இறைவர் முன்னே சென்றாராகப், பெரிய தொண்டராகிய திருநீலகண்டரும் மிகப்பெரிய ஆசையினாலே இழுக்கப்பெற்று யோகியார் தொடர்ந்த வழக்கினாலே மேலிடப்பட்டாராய் (அவர் பின்னே அங்கே) தாமும் சென்று அணைந்தனர்.

(வி - ரை) **தலை நின்றார் - துறை போனார்** - இவை முன்னர்த் தில்லைவாழந்தணர் புராணத்திலே (354, 355) கூறப்பெற்றன. விரிவு ஆண்டுக் காண்க. முன்னர்க் கூறியபடி உள்ள ஒழுக்கத்திற் சிறந்தார்களும் நான்மறையின்றுறை முற்றப் போனவர்களும் ஆகிய என வருவித் துரைத்துக் கொள்க. **தலை நின்றார்** - தலைமையாக நின்றார். **துறைபோனார்** - துறைமுற்றவும் பயின்று வல்லவராயினார். **போனார்** - அதன் எல்லை முடிபுவரைப் பயின்றவர் என்பதாம்.

திருந்து அவை - சபை திருந்தி யிருத்தலாவது ஒருபால் கோடிச் சொல்லாமலிருத்தலே. "என் பெறினும் - பால்பற்றிச் சொல்லா விடுதல்" - என்றார் முன்னோரும். அறிவினாலும் ஒழுக்கத்தாலும் நிறைந்தார்கூடிய சபை. ஒழுக்கம் நிறைந்தாராதலின் தாம் அறிந்து பிழைபடச் செய்யார்; துறை போனாராதலின் அறியாமையினாலே பிழைபடச் செய்யார்; ஆதலின் இருவகையிலும் பிழைபடாமற் றிருந்திய சபை என்க.

வந்திருந்த-வந்து கூடியிருந்த-நியாய விசாரணையின்பொருட்டு வந்து சேர்ந்திருந்த என்பதாம். சபையைக் **கோஷ்டி** என்ற வடநூல் வழக்கு இக்கருத்தே பற்றியது. ஞான வாக்குடையார் ஒன்றுசேர்ந்து கூடிய கூட்டம் என்க.

எல்லையிலான் - "ஆதியு முடிவுமில்லா அற்புதத் தனிக்கூத்தாடு நாதனார்" என இப்புராணத் தொடக்கத்துக் கூறியது காண்க. தனது அருளாலும் திருவாலும் அளவுட் படாதவன். நான் மறையின் துறைபோகி, ஒழுக்கந் தலைநின்ற அவர்கள் எவரும் அறிதற்கரியவனாய் நின்றானதலின் இங்கு **எல்லையிலான்** என்றார்.

இருந் தொண்டர் . செய்தற்கரிய செயல் செய்து அத்தொண்டினாலே சிறந்தவர். திருநீலகண்டத்தினுக்குரிய தொண்டிலே தமது இளமை முதலிய யாவையும் கீழ்ப்படுத்தியவராதலால் **இருந்தொண்டர்** என்றார். **தாமும்** - யோகியார் அணைந்ததேயன்றி இவர்தாமும் - என இறந்தது தழுவிய எச்சவும்மை.

மல்கு பெருங்காதலினால் - செயிர்த்து நோக்கிக் கொடிய மொழி புகன்று தம்மைப் பழி சுமத்தினாரே என்பதில்லாது, அவர்மேற் காதல்பெருகி மிகுகின்றதால். "கண்டதோர் வடிவாலுள்ளங் காதல்செய்துருகாநின்ற" (388) சுந்தரமூர்த்திகள், கிழவேதியராகிவந்த இறைவர்பின்னே "திரிமுகக் காந்தஞ் சேர்ந்த - வல்லிரும் பணையுமா போல்......கடிது சென்றார்" என முன்னர்க்கண்டது போலவே, இங்கு நாயனாரும் காதலினால் அவர்பின்னே அணைந்தனர்.

வழக்கு மேலிட்டு - வழக்கினாலே மேலிடப் பட்டாராய்; வழக்குத் தொடரப்பட்டாராய். பிரதி வாதியாகி என்பர் நவீனர்.

வழக்கின்மேலிட்டு—என்பதும் பாடம்.   31

391. அந்தணனா மெந்தைபிரா னருமறையோர் முன்பகர்வான்
"இந்தவேட் கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் ; கெடுத்தானேற், றன்மனைவி கைப்பற்றி
வந்தமூழ் கியுந்தாரான் ; வலிசெய்கின் றா"னென்றார். ௩௨

(இ - ள்) வெளிப்படை. அந்தணனாக வந்த எமது பெருமான், தில்லைவாழந்தணர்கள் முன்னே சென்று சொல்வாராகி "இந்தக் குயவன் தன்னிடம் நான் ஒப்புவித்து

வைத்த பாத்திரத்தைத் திருப்பித் தரமாட்டான்; அதைப் போக்கிவிட்டானாயின், அவ்வுண்மையைக் காட்டுதற்குத் தனது மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கிக் கொடுக்கவு மாட்டான் ; இவ்வாறு வலிமை செய்கின்றான்'' என்றார்.

(வி - ரை) அந்தணனும் - வேதங்கள் சிவன் ஒருவனே பிராமணன் என முழங்கும்; அத்தகைய அந்தணனும் பெருமான். நாயனாரது விளக்கத்தை ஞாலத்தார் விரும்பி உய்யும் அந்நெறிகாட்டும் பொருட்டு (369) வந்தவராதலின் அழகிய தண்மையை எவ்வுயிர்களுக்கும் செய்பவனுகிவந்த பிரான் என்றலுமாம். இவர் தம்மோடொத்தே வாழுந் தன்மையாளராய் நான் மறையின் துறைபோனார்களாம் மறையோரிடமே முறை சொன்னார். ஆயின் அறிவுக்கும் மாயைக்கும் அதிபதியாகிய இவர்முன் இதனுண்மையறிய மாட்டாது அவர்களும் மயங்கி "மருவிய மனைவியோடு மூழ்குதல் வழக்கே" (394) எனத் தீர்க்கப் போகின்றார்கள். பதிஞானத்தின் முன்னர்ப் பாசஞானம் வலியிழந்து நிற்கும் என்றபடியாம்.

பகர்வான் - முறைப்பாடு சொல்வாராய், என்றார் - என முடிக்க. முற்றெச்சம்.

இந்த வேட்கோவன் - நாயனாரும் வழக்கு மேலிட்டுச் சபைமுன் அணைந்து முன்னின்றாராதலின் இந்த - இதோ உங்கள்முன் நிற்கின்ற - எனச் சுட்டிக் காட்டி அண்மைச் சுட்டினாற் கூறினார். வழக்கிடப்பட்டார் நியாயசபை அல்லது அரச நீதியின் பேரால் முறையிடப் பட்டபோது, அதனுக்குட்பட்டுத் தாமே தம்மேல் வழக்கிடுவோரைத் தொடர்ந்து சென்று நீதி மன்றத்தினர் முன் நின்று தமது முறையையும் விளம்பித் தீர்ப்புக்கேட்டு நிற்றல் அந்நாளில் தமிழ்மக்களின் சமூக நிலை. இந்நாளில் நீதிமன்றத்தில் வருமாறு எத்தனை கட்டளைகள் வரினும் அவற்றிற்கெல்லாம் தப்பி மீறி நிற்கும் நாகரிக மெனப்படும் நமது சமூக நிலையினுடன் இதனை ஒத்துநோக்கி உலகம் திருத்தமடைக. திருவிளையாடற் புராணத்திலே அரசன் பேரால் பார்ப்பனன் முறையிட்டு வேடனைக் குற்றம் சாட்டியபோது அவனைத் தொடர்ந்து அரசன்முன்னர்த் தானே போந்த வேடன் செயலையும் இங்கு வைத்து உன்னுக. முன்னர் வல் வழக்கிட்ட கிழவேதியரைத் தொடர்ந்து வன்றொண்டரும் மணப்பந்தலில் இருந்த சுற்றத்தாரும் மணத் தொழிலை விட்டுத் திருவெண்ணெய்நல்லூர் நீதிமன்றத்தினை அணைந்தமையும், பிறவும் காண்க.

வைத்த - காவலாக வைத்துத் தரும்படிக் கொடுத்த - ஒப்புவித்த.

தந்தொழியான் - தரவும் மாட்டான். **கெடுத்தானேல்** - தாராமைக்குக் காரணமாக இவன் சொல்கிறபடி உண்மையிலே அதனைப் போக்கிவிட்டானாயின், அதனைக் காட்ட என வருவித்துக் கொள்க.

மூழ்கியுந் தாரான் - மூழ்கிச் சபதம் செய்துகொடுக்கவு மாட்டான். இவ்விரண்டிலொன்று செய்தால் என் வழக்குத் தீரும் ; இவற்றிலொன்றும் பெறாது உங்கள்முன் வழக்கிட வந்தேன் என்பதாம். அந்நாள் வழக்குக்கள் செல்லுமுறையும், வழக்குக்களைச் சபையினர் விசாரித்துத் தீர்க்கு முறையும் இங்கு விளங்குகின்றன. முறை கேட்ட சபையினர் வழக்கிடப்பெற்றாரைக் கேட்கும் முறை 392, 393-ம் பாட்டுக்களிலும், அவர்களது தீர்ப்பு 394-ம் பாட்டிலும் காண்க. இவற்றின் விரிவு முன்னர்த் தடுத்தாட்கொண்ட புராணத்துட் காண்க.

வலி செய்கின்றன் - என்னிடம் இவ்வாறு வன்கண்மை செய்கின்றான். அன்புக் கெளியனை என்பாலே வலிய அன்பு செய்கின்றான் என்றது குறிப்பு. 32

392\. நறைகமழுஞ் சடைமுடியு நாற்றோளு முக்கண்ணுங்
கறைமருவுந் திருமிடறுங் கரந்தருளி யெதிர்நின்ற
மறையவனித் திறமொழிய; மாமறையோ ருரைசெய்வார்
" நிறையுடைய வேட்கோவர்! நீர்மொழியும் புகுந்த ''தென, ௩௩

393. "நீணிதியா மிதுவென்று நின்றவிவர் தருமோடு
பேணிநான் வைத்தவிடம் பெயர்ந்துகரந் ததுகாணேன் ;
பூணணிநூன் மணிமார்பீர் ! புகுந்தபரி சிது "வென்று
சேணிடையுந் தீங்கடையாத் திருத்தொண்ட ருரைசெய்தார். ௩௪

392. (இ - ள்) வெளிப்படை. (தமக்குரியனவாகிய) வாசனை வீசுகின்ற சடைமுடியினையும், நான்கு தோள்களையும், மூன்று கண்களையும், திருநீலகண்டத்தினையும் மறைத்துக் கொண்டு, கருணைசெய்து எதிரே வெளிப்பட்டு நின்ற வேதியர் இவ்வாறு சொல்லத், தில்லைவாழந்தணர்கள் சொல்வாராகி, "நிறையுடைய வேட்கோவரே ! உள்ளபடி நடந்த செய்தியை நீர் மொழிவீராக" என்று கூற, ௩௩

393. (இ - ள்) வெளிப்படை. "அணியாக நூல்பூண்ட அழகிய மார்பினையுடைய அந்தணர்களே! இது நீள் நிதியேயாம் என்று சொல்லி இங்கு நிற்கின்ற இவர் என்னிடம் தந்த திருவோடு நான் அதனை மிகவும் காவலாகவைத்த இடத்தினின்றும் எவ்வாறோ பெயர்ந்து மறைந்து விட்டது ; இதுவே நடந்த செய்கையாம்" என்று தீமை என்பது தம்மைத் தூரத்தினும் அணுக முடியாத திருத்தொண்டர் சொன்னார். ௩௪

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

392. (வி - ரை) **சடைமுடி - நாற்றோள் - முக்கண் - கறைமிடறு** - இவை சிவபெருமானுக்கே உரிய திருமேனியின் அருள் அடையாளங்கள்.

நறை கமழும் சடைமுடி - கொன்றை மலரின் மணம் வீசுகின்ற சடை. **நறை கமழும்** - என்றதனாற் கொன்றைமலர் வருவித்துரைக்க. "வம்புலா மலர்ச் சடை" (374) எனமுன்னருங் கூறியதுகாண்க. சடைகரக்கு முன்னமே அதிற்சூடிய கொன்றை கரந்தது. ஆயின் அதன் வாசனை கரவாது தாக்கிச் சடையினுடன் கரக்க நின்றது போலும். தம்முடனே தோன்றுநிலையினவாகிய இவை மறைந்தும், எப்பொருளினும் மறைந்த நிலையினராகிய தாம் எதிர் நின்றும் போந்தனர் என்ற அணியும் காண்க. **அருளி** - அருளிப்பாட்டினைச்செய்து. **கரந்தருளி** என ஒருசொல்லாக்கியு முரைப்பர்.

மறையவன் - மறைத்து நின்றவன். மறைந்து நின்றவனுமாயினவன் என்றது குறிப்பு. தனது செயலை நாயனார் மேலேற்றி மறைமொழி புகன்றவன் என்பதுமாம்.

மாமறையோர் - அவனது மாயையினுட்பட்டு உண்மை யறியமாட்டாது மறைப்புண்டவர்.

சடை முடியும், முக்கண்ணும், நாற்றோளும், திருமிடறும் கரந்தாரை அந்த மறைப்பு நீக்கி ஆசிரியர் நம்மைத் தரிசிக்கச் செய்த திறம் உய்த்துணர்க.

நிறையுடைய வேட்கோவர்! - சால்புடையாராகிய வேட்கோவரே! **நிறை** - சால்பு. மனவுறுதியுடைய என்றும் கூறுப. தீக்குணங்கள் வாராமையும், நற்குணங்கள் நிறைதலும் உடையவர் எனவும், சத்தியவாக்குடையர் எனவும் இதற்குப் பொருள் கூறுவாருமுண்டு. நாங்கள் நீவிர் நிறையுடையீர் என அறிந்திருக்கின்ற வேட்கோவரே. வேட்கோவர்! அண்மைவிளி. இந்த வேட்கோவன்பால் - என மேற்பாட்டிற் கூறியது காண்க.

புகுந்தது - உண்மை. நடந்த செயலை உள்ளபடியே. 33

393. (வி - ரை) **"நீள்நிதியாம் இது" என்று** - இது ஓட்டினைக் கொடுத்தபோது யோகியார் இவ்வாறு சொல்லி அதனைக் கொடுத்தார் என்று நாயனார் கூறுவதாம். இதனால் நாயனாரது உண்மைத் தன்மையும் நிறையும் நன்கு புலனாம். யோகியார் சொல்லாததும் வழக்கிலே தமக்கு விரோதமானதுமாகிய செய்தியை நாயனார் சொல்வது அவர் சத்தியத்தின்கட் கொண்டிருந்த மனவலிமையைக் காட்டுவதாம். "பொன்னினுமணியினும் போற்ற வேண்டுவது" (375) என்று யோகியார் கூறியதை நாயனார் இங்குக் குறித்துச் சொல்லியவாறு. அவரும் அவ்வாறு கூறினார்; ஆதலின் அதுகேட்ட

யானும் அதனை நினைத்தே அதற்குத் தக்கவாறு அவ்வோட்டினைப் பேணிக் காப்புறு மெல்லையில் வைத்தேன் என்று குறிப்பார் **பேணி நான் வைத்த இடம்** - என்றார். **இடம்** - இடத்தினின்றும். ஐந்தாம்வேற்றுமையுருபு தொக்கது.

பெயர்ந்து கரந்தது - அது சடப்பொருளாயினும் சேம இடத்தினின்றும் தான் உயிர் பெற்றுக் கால் பெற்று நகர்ந்ததுபோல மறைந்தது என்பது குறிப்பு.

நீதியாம் இவர் - என்று கூட்டி யுரைப்பினுமாம்.

இவர் - யோகியாராகிய இறைவர். சுட்டியறியப்படாத இறைவன் அடியார்வேடந் தாங்கி வந்தானாதலின் சுட்டி யறியவும்பட்டான்.

சேணிடையும்-தூரத்திலேயும்; நீங்கு என்பது எவ்வாற்றானும் நெருங்க முடியாத. இவர் அயல் ஒருவரும் அறியாத அதியந்தரங்கத் தானத்திலேயும் இறைவன் சந்நிதி உள்ளது என்று கொண்டு பயந்து ஆணை காத்து மனத்தினும் தீண்டேன் என்று நின்ற வாராதலின், நீங்கு எவ்வாற்றானும் இவரை அடையாமை பெறப்படும். 34

வேறு

394. திருவுடை யந்தணாளர் செப்புவார் "திகழ்ந்த நீற்றி
னுருவுடை யிவர்தாம் வைத்த வோட்டினைக் கெடுத்தீ ரானாற்,
றருமிவர் 'குளத்தின் மூழ்கித் தருக'வென் றுரைத்தா ராகின்,
மருவிய மனைவி யோடு மூழ்குதல் வழக்கே" யென்றார். ௩௫

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு இருவர் மொழியுங்கேட்ட தில்லைவாழந்தணர் கள் தீர்ப்புச் சொல்வார்களாய், (நாயனாரைப் பார்த்துத்) "திருநீறு புனைந்த கோலத் தினையுடைய இவர் தாமே உம்மிடத்து வைத்த ஓட்டினை நீர் கெட்டுப் போக்கிவிட்டீ ரானால், நீர் சொல்வதை ஒப்புக் கொள்வதற்காக அவ்வோட்டினைத் தந்த இவரே உம் மைக் குளத்திலே முழுகித் தருமாறு கேட்பாராகில், இவர் கேட்டவாறே உமதன்புக் குரிய மனைவியுடனே குளத்தில் மூழ்கித்தருதலே வழக்காம்" என்றார்கள்.

(வி - ரை) **திருவுடை அந்தணாளர்** - கல்வி - செல்வம் என இவற்றோடு அருட் செல்வமுமுடையார். "செல்வர் வாழ்தில்லை" என்றருளினர் ஆளுடைய பிள்ளையார். இவர்களது திரு உலகுக் குதவுவது. "உலகுக்கெல்லாந், திருவுடையந்தணர்" என் றருளினர் (கோயிற் றிருவிருத்தம் - 2) ஆளுடைய அரசுகள்.

திகழ்ந்தநீற்றின் உருவுடை யிவர் - நீறுதிகழ்ந்த இனிய உருவம். நீறு திகழ்ந்த கோலம் அந்தணர்களை வசீகரித்ததாம். "சேலும் கயலும்" - என்ற திருவிசைப்பாக் காண்க. "கேடிலா வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனி" (370) என இவரது நீறு பொலிந்த கோலத்தை எடுத்து முன்னர்க் கூறியதும் காண்க. நீறு திகழ்வதற்கிட மாகிய, நீற்றினாற்றிகழ்ந்த என்று பிரித்துக்கூட்டி யுரைத்தலுமாம். "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்"—**திருவாரூர் - அப்பர் சுவாமிகள். இவர்** - நாய னார் மேலே சுட்டியறிந்தது போலவே அந்தணரும் அறிந்து சுட்டினார்கள். **வைத்த** - ஒப்புவித்த. **யான் வைத்த** - (391) என்றது காண்க.

கெடுத்தீரானால் - கெட்டுப் போக்கி விட்டீர் என்பதுண்மையானால்.

தரும்இவர் - ஓடு தந்தவராக நீர் ஒப்புக்கொண்ட இவர். **உருவுடையிவர்** - என்றது முறைப்பாடு சொன்னவர் என்ற இந் நிலையினையும், **தரும்இவர்** - என்றது ஒப்புவித்த வர் என்ற அந்நிலையினையும் குறித்தது.

உரைத்தாராகில் - ஓடேவேண்டும் - என்ற நிலையினின்றிறங்கி, உம்மிடம் பிர மாணம் பெற்றுக்கொள்ளச் சம்மதித்துக் கேட்டாரானால்.

வழக்கே - அறநூல் வழக்கு. இது அந்நாள் வழக்குமுறை. பிரமாணஞ் செய்த லோ அல்லது ஒப்புவித்த பொருளுக்கு ஈடுசெய்து தருதலோ இவ்விரண்டிலொன்றினை



இளமையாக்கினார் கோயில் என்னும்
திருப்புலீச்சுரம்.
கோயிலும், (நாயனாரும் மனைவியாரும் மூழ்கித்தந்த) குளமும்—396.



திருநீலகண்ட நாயனாரும், அவரது மனைவியாரும்.
[முதுமையும், மீளப்பெற்ற இளமையுமாகிய கோலங்கள்.]
(திருக்குளத்திற் கண்டபடி—398.)

வழக்கிடப் பட்டார் தமது எண்ணம்போல் செய்யலாம் என்பது இந்நாள்வழக்குமுறை. வழக்கிடுவோர் கேட்டபடிச்சபதம்செய்தே தீரவேண்டும் என இந்நாள் வழக்குச்சட்டம் வற்புறுத்துவதில்லை. எனவே, இந்நாளைவிட முன்னாளில் தமிழ்நாட்டு வழக்குமுறை குடிகளின் பொருளுரிமையை அதிகமாகக் காத்துவந்ததென்பது விளங்கும்.

வழக்கே - இது சபையினர் கூறிய முடிபு. அவர் ஓடு தந்ததை நீர் ஒப்புக்கொண்டீர்; ஆனால் நீர் அதனைக் கெடுத்ததாகச் சொல்கிறீர்; ஆதலின் பிரமாணம்செய்து உமது வாக்கை நீரே உறுதிப்படுத்தல் வேண்டும் என்ற நீதிமுறை குறித்தபடி. 35

395. அருந்தவத் தொண்டர் தாமு மந்தணர் மொழியக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத் தீண்டாமை செப்ப மாட்டார்,
"பொருந்திய வகையான் மூழ்கித் தருகின்றேன் போது"மென்று
பெருந்தவ முனிவரோடும் பெயர்ந்துதம் மனையைச் சார்ந்தார். ௬௬

(இ - ள்) வெளிப்படை. அரிய தவஞ் செய்வாராகிய நாயனாரும் இவ்வாறு தில்லைவாழந்தணர்கள் கூறிய தீர்ப்பைக்கேட்டு, (அவர்களிடம்) திருத்தம் பொருந்திய தமது மனைவியாரைத் தாம் தீண்டக்கூடாத நிலையைச் சொல்ல மாட்டாதவராகி, (வழக்கிலே வென்ற) பெருந்தவ முனிவரைப் பார்த்து "பொருத்தமானபடி நான் மூழ்கித் தருகின்றேன் - வருவீராக" என்று சொல்லி அவரோடுகூட அங்கிருந்து தமது மனையை அடைந்தார்.

(வி - ரை) **மொழிய** - முடிபைச் சொல்ல.

திருந்திய - "அருந்ததிக் கற்பின் மிக்கார்" (363), "கற்புறு மனைவியார்" (367) என்றபடிக் கற்பினாலும் அன்பினாலும் திருந்தி மெய் தீண்டாது நின்றும் கணவனார்க் கானவெல்லாம் பொருந்துவ போற்றிச்செய்துவந்த என்பதாம்.

செப்பமாட்டார் - தாம் திருவாணை போற்றிய செய்தி அயலறியாமை வாழ்ந்தாராதலின் இங்கும் நாயனார் அதனைச் சொல்ல மாட்டாதவராயினர். சொல்லினும் அவர் ஒப்பாது தமது உண்மைத் தன்மையினில் ஐயமுறுவர்; யோகியாரும் அவ்வுண்மை தெளியாது மேலும் பிணங்கி வருந்துவர்; அவரை மேலும் வருந்த வைத்துப் பின்னும் பிழைபடுதல் சரியன்று; இதனை முன் சொல்லியும் (388) யோகியார் கேளாது வழக்கிட்டாராதலின் அதனையே பின்னரும் சொல்லுதல் ஏற்குமாறில்லை என்பனவாதி காரணங்களாலே **செப்பமாட்டார்** என்றவாறு. **பொருந்திய வகையான்** - பெரியோராணை, அரசனாணை, ஈசுவராணை என ஆணைகள் பல திறப்படும். பெரியோராணையினும் அதன் துணைகொண்டு நடப்பதும் அதனை நிறுத்தவல்லதுமாகிய அரசனாணை பெரிது; இவை எவற்றினும் ஈசுவராணை பெரியது; இங்குத் தாம் கைக்கொண்டொழுகியது ஈசுவராணை; இப்போது பிறந்தது அரச நீதியின் ஆணை; எனவே, இவற்றுட் பெரிதாகிய ஈசுவராணைக்கு மாறுபடாமல் எந்த அளவில் அதனுட்பட்ட அரசநீதியாணை பொருந்துமோ அந்த அளவில் என்பது கருத்து. **வகையான்**-வகையினாலே. **வகை - யான்** - என்று பிரித்து வகையில் யான் மூழ்கித் தருகின்றேன் என்றலுமாம்.

பெயர்ந்து - சபதம் செய்தற்காக அச்சபையினிடத்தினின்றும் பெயர்ந்து.

மனையைச் சார்ந்தார் - தீர்ப்பின்படி மூழ்கித்தர மனைவியாரை உடனழைத்துச் செல்வதற்காக.

பெருந்தவ முனிவர் - அவரும் தவத்தொண்டர்; இவரும் தவமுனிவர் என்றதாம். "தவச்சிவயோக நாதர்" (372) என்றதும் காண்க.

அரும்பெருந் தொண்டர்—என்பதும் பாடம். 36

396. மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவுந் திருப்புலீச் சுரத்து முன்னர்

நனைமலர்ச் சோலை வாவி நண்ணித்தம் முண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டி னிருதலை பிடித்துப் புக்கார். ௩௭

(இ - ள்) வெளிப்படை. தம் வீட்டிலிருந்து மனைவியாரையும் உடன் அழைத்துக்கொண்டு வேதியராகிய சிவயோகியார் முன்னே, பிரமாணம் செய்யும் பொருட்டு, இடபவாகனராகிய சிவபெருமான் எழுந்தருளிய திருப்புலீச்சுரம் என்னும் திருவாலயத்தின் முன்பு அமைந்துள்ள மலர்ச்சோலை சூழ்ந்த வாவியினை அடைந்து, தாம் கைக்கொண்டொழுகிய திருவாணை காக்கும் உண்மைத் தன்மையினைக் காப்பாற்றுவாராகி அதற்கு மாறுபடாமற் பொருந்திய வகையாலே சபதமும் செய்யும் பொருட்டு அழகிய மூங்கிற்றண்டின் இருதலையையும் முறையே நாயனாரும் மனைவியாருமாகப் பிடித்துக் கொண்டு மூழ்கித் தரும்படித் துணிந்து வாவியினுள்ளே புகுந்தனர்.

(வி - ரை) **மறைச்சிவ யோகியார்** - மறைகளாற் பேசப்பட்டவர். **தம்மைக் கொண்டு** - தம்முடன் மனைவியாரையுங் கொண்டு. **யோகியார் முன்** - அவரது திருமுன்பு - அவர் காணும்படி. முன் நண்ணி என்று கூட்டி, அவர் நண்ணுமுன்னர்த் தாம் விரைந்து நண்ணி என்றுரைத்தலுமாம். **முன்** - அயலறியாதபடி அந்தரங்கமாக நிகழ்ந்த சபதத்தையும் நீரே அறிவீர்; இதனையும் நீரே காண்பீர் என்ற குறிப்பு.

சினவிடைப்பாகர் - "வெங்கண் விடையவர்" (388) என முன்னருங் கூறினர்.

***திருப்புலீச்சரம்** - தில்லையில் நடராசர் கோயிலுக்குச் சிறிது தூரத்தில் மேல்பால் உள்ளதொரு சிவாலயம். வியாக்கிரபாத மாமுனிவர் தமது ஆன்மார்த்தமாய்த் தாபித்துப் பூசை செய்த கோயிலாதலால் இப்பெயரெய்தியது; புலிக்கால் முனிவர் பூசித்ததால் **புலீச்சுரம்** என்பர். தாடகை பூசித்தது தாடகேச்சுரம்; அனங்கர் பூசித்தது அனங்கேச்சுரம் என்பனபோலக் கொள்க. இத்திருக்கோயிலில் தமது முடியினையே விளக்காயெரித்துப் பேறுபெற்றனர் கணம்புல்ல நாயனார் என்பது பின்னர் அறிக. இப்புராண நிகழ்ச்சி காரணமாக இதனை இளமையாக்கினார் கோயில் - இளமை நாயனார் கோயில் எனவும் வழங்குவர்.

" தடமா மலர்கொண் டுவணங் கியருந் தாவா முனிதில் லைவனச் சரியே
குடபா லணைவான் மணமா மலருங் குளமுங் கரையுந் தளமுங் குறுகித்
திடமார் தருவே நிழலா வெழிலார் சிவலிங் கமிருத் தியருத் தியொடங்
கிடமா கவிரண் டிடமும் பணிவுற் றிறையே துணையா கவிருந் தமர்நாள்"

—**வியாக்கிரபாதச் சருக்கம் - 14**

என்ற கோயிற்புராணங் காண்க.

முன்னர் - திருக்கோயிலுக்கு வெளியே அதன் எதிரில் உள்ள.

†**நனைமலர்ச் சோலை வாவி** - தேன்பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைசூழ்ந்த குளம். மேலே காட்டிய கோயிற் புராணத்திலே "மணமா மலருங் குளமும்" என்றதும் காண்க. இங்ஙனமன்றிச் சோலைபோல மலர்ந்த நீர்ப்பூக்களையுடைய வாவி என்றுரைப்பாருமுளர். அது பொருந்தாமை யறிக. இக்குளம் வியாக்கிரபாத தீர்த்தம் எனவும், இளமை நாயனார் குளம் எனவும் பெயர்பெறும். இது தில்லையில் இறைவன் சிறப்புக் காலங்களில் எழுந்தருளித் தீர்த்தங் கொடுக்கும் பத்துத் தீர்த்தங்களில் ஒன்று.

*(1) இத்திருக்கோயிலில் சில ஆண்டுகளின் முன்னர் நடைபெற்ற கும்பாபிடேக காலத்தில் பெருந்தீ உண்டாகி அனேக அன்பர்கள் முடியும் உடலும் எரிந்து இறைவனடி சேர்ந்தனர். இதிற் காணும் படம் கும்பாபிடேக காலத்தில் எடுக்கப் பெற்றது.

†(2) இக்குளத்தில் நாயனார் - மனைவியார் இவர்கள் மூழ்கும்போது நின்ற முதுமைக் கோலமும், பின்னர்த் திருவருளால் மீளப் பெற்ற இளமைக் கோலமும் குளக்கரையில் தீட்டப்பெற்றுள்ளன. இச்சிறப்பு நோக்கிக் கோயிற்புராணத்திலே "குளமுங் கரையும்" என்றது காண்க. இத்திருக்கோலங்களைப் படத்திற் காண்க.

சிவகங்கை, பரமானந்தகூபம், புலிமடு, அனந்ததீர்த்தம், நாகசேரி, பிரமதீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல், குய்யதீர்த்தம் (கடல்) என்பன வனை ஒன்பதாம்.

தம் உண்மை காப்பார் - உண்மை - உள்ளத்தினுள் வைத்து ஒழுகிய திருநீலகண்ட ஆணை.

காப்பார் - அதன் வரம்பு கடவாமற் பாதுகாப்பவராகி. முற்றெச்சம். காப்பார் புக்கார் என்று கூட்டி முடிக்க.

புனைமணி வேணுத் தண்டு - வடிவுறு மூப்பு வந்து தளர்வொடு சாய்ந்து நின்றார் (368) நாயனார் ஆதலின் அதன் பொருட்டுத் தாம் தாங்கி ஊன்றி நின்ற வேணுத் தண்டு என்க. "குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி" என்ற பதினோராந் திருமுறை காண்க. (ஐயடிகள் - க்ஷேத்திர வெண்பா - 3) தண்டு கிழக்கோலத்துக்குரியது. **புனை** - கையிற் கொண்ட ; **மணி** - அழகிய. நாயனார் கையிற்றாங்கியதால் சிறப்புப் பெற்றது. மணிகளையுடைய என்றுரைப்பாருமுண்டு. மூங்கில் முத்தீன்பதென்பதுமாம்.

இருதலை பிடித்து - உண்மை காக்கும் பொருட்டுத் தீண்டாதிருத்தலும், அதனுடன் பொருந்திய வகையால், மூழ்கித்தரும் பொருட்டுத் தீண்டுதலும் ஆக இருவகையினையும் கைக்கொண்டு என்ற குறிப்பும் காண்க.

புக்கார் - மூழ்கப் புகுந்தார். அணிவு பற்றிய முயற்சியினின்றார். 37

397. தண்டிரு தலையும் பற்றிப் புகுமவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் "மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீ" ரென்னக், கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதஞ் செய்கை சொல்லி மூழ்கினர் பழுதிலாதார். ௩அ

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு மூங்கிற்றண்டின் இருதலைகளையும் பிடித்து மூழ்கப்புகும் அவரைப்பார்த்து வெள்ளிய திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்து நின்ற மறையவர் "மனைவியாரைத் தீண்டிக் கைப்பிடித்து மூழ்கித் தருவீராக!" என்று சொல்ல, எவ்வகையானும் குற்றமில்லாதவராகிய நாயனார், தாம் மனைவியைத் தீண்டி மூழ்கக் கூடாமையை உலகர் கேட்டறியும் படியாகத் தமது பழஞ்செய்தியைச் சொல்லித் தாம் முன்துணிந்த அவ்வாறே குளத்தினுள் மூழ்கினார்.

(வி - ரை) **புகுமவர் தம்மை** - மேற்பாட்டிற் கூறியபடிப் புக்காராகிய அத் திருநீலகண்ட நாயனாரை.

வெண்டிருநீற்று முண்ட வேதியர் - "நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும்" (370) என முன்னர்க் கூறியது காண்க.

வேதியர் - மறையவர் - யோகியார். வேதிக்கச் செய்பவர் என்று பொருள் கூறலுமாம். "வேதி யாதவர் தம்மை வேதிப்பன்" (339) என்ற இடத்துக் காண்க. அற்புறு புணர்ச்சி யின்மை அயலறி யாமை வாழ்ந்து (367) அண்ணலாராணையை அயலறியாமையுய்த்த நாயனாரை இப்போது வேதித்துத் தமது பண்டைச் செய்கையைப் பாரோர் கேட்கச் சொல்லும்படிச் செய்கின்றார் என்ற குறிப்புத் தோன்ற இங்கு **வேதியர்** என்ற பெயராற் கூறினார்.

மாதை உடன் தீண்டிக்கொண்டு மூழ்கீர் - எனமாற்றி உரைத்துக்கொள்க. **உடன்** மூங்கிலின் இருதலை பிடித்தலாலன்றி நேரே கைப்பிடித்து.

மூழ்கீர் - மூழ்குவீராக.

கூடாமை பாரோர் கேட்க - கூடாமை - யோகியார் சொல்லியபடி மூழ்கக் கூடாத தன்காரணத்தை - இரண்டாம் வேற்றுமை உருபுவிரிக்க.

கேட்க - தம்பாலே கேட்டறியும்படியாக. இதுநாள்வரை இவர்தம் செய்கையை உலகர் கண்டும் அறியார் ; கேட்டும் அறியார். இப்போது இவர்பாலே கேட்கும்

கேள்வி ஞானத்தாலே அறியுமாறு. தீண்டிக்கொண்டு உடன் மூழ்காமையே இங்குக் கேட்பிக்க நின்ற பொருள் ; அதற்குத் தீண்டாமை காரணம் ; அதற்குத் திருநீலகண் டத்தின்மேல் வைத்த ஆணை காரணம்; அதற்குத் தாம் திருநீலகண்டத்தின்பாற் பத்தி செய்தமையும் பரத்தை பாலணைந்ததும் காரணம்; என இவ்வாறு தீண்டி மூழ்கக்கூடா மையை விளக்கும் பொருட்டு நாயனார் பண்டு நிகழ்ந்த செய்கையெல்லாம் சொல்ல வேண்டியதாயிற்று. ஆதலின் **பண்டு தம் செய்கை சொல்லி** என்றார். **செய்கை** - நிகழ்ச்சி - செய்கையெல்லாம். கேட்கச் - சொல்லி என இசைக்க.

ஆயின் இதுகாறும் நாயனார் தமதுசெய்கையைப் பாரோர் அறியாமை வாழ்ந்ததன் காரணம் என்னை ? எனின், உலகர் அறிந்தால் தமது அறியாமையாலே பலவும் சொல் லிச் செந்நெறியினின்று தம்மைப் பிறழவைக்க முயன்று பலவகையானும் இடர்ப் படுத்துவர். இதுபற்றியே மகனைக் கறி சமைக்க முற்பட்ட சிறுத்தொண்ட நாயனார் தமது செய்கை செய்வதனை உலகர் காணில் அறியாமையால் இடர்ப்படுத்துவர் என்று மறைவிற்கொண்டுவைத்து அதனைச் செய்தனர் என்றறிகின்றோம். உலகர் அறியாமை யையுடையர் என்பதாம்.

"ஒன்று மனத்தா ரிருவர்களு முலக மறியா வணமறைவிற் சென்றுபுக்கு"
—**சிறுத்தொண்டர் புராணம் - 62**

அன்றியும் திரு ஆணையைப் போற்றும் இந்நிகழ்ச்சி இறைவனருள் வழியே நின்ற தாமும் அவ்விறைவனுமே யறிய நின்றது. இறைவனதருள் தம்பாற் செல்லும் அருளிப்பாடுகளை வெளிப்படுத்தல் முறையன்று என்பது நூற்றுணிபும் மரபுமாம். "அருளுடையா ரளித்தருளுஞ், செவ்விய **பேரருள் விளம்புந் திறமன்றென் றுரை** செய்யார்" என்ற **காரைக்காலம்மையார் புராணமும்** (27) காண்க.

இவ்வாறு உலகறியாது நிகழும் ஒழுக்கத்தில் நிற்கும் நாயனாரது செயலில் இறை வனது திரோதான சத்தியும் உடனிருந்து உதவியது. இப்போது அதுவெளிப்படும் சமயம் வந்தபோது பாரோர் கேட்கச்செல்லும் அந்நெறியிலே அவர் நிற்குமாறு இறை வர் அருள்நோக்கம் வைத்து யோகியாராய்வந்து ஆணையிட்டார். இதுபற்றியே "கங்கை நதி கரந்தசடை கரந்தருளி" (388), "கறைமருவுந் திருமிடறுங் கரந்தருளி" (392) என முன்னர்க் குறித்தனர். அருட்சத்தி பதியவே வெள்ளத்திற்பட்ட துரும்பு போல உயிர் தன் வசமிழந்து அருள்வழியே நிற்கும். அதனால் இங்கு முன்னர் அய லறியாது ஆணை உய்த்த நாயனார் இப்போது பாரோர் கேட்கப் பண்டுதஞ் செய்கை வெளிப்படச் சொன்னார் என்க.

பாரோர் கேட்க - சபதம் செய்வதைக் காணக்கூடிய உலகத்தாரும் அவர்கள் மூலம் பின்னர்க் கேட்கும் உலகரும் கேட்டறியும்படியாக. இந்நாளிலும் இவ்வாறு நீதிமன்றம் - கோயிற் சந்நிதி முதலிய ஆணையிடுகின்ற இடங்களில் உலகர் திரண்டு கூடும் இயல்பும் காண்க.

மூழ்கினார் - தண்டின் இருதலையும்பற்றிக்கொண்டு மூழ்கித் தந்தார்.

பழுதிலாதார் - நாயனார் சரிதத்தின் முன் நிகழ்ச்சிகளில் எவ்வாற்றானும் பழுதில் லாதவர். இதன் பின் நிகழ்ச்சியானும் பழுதில்லாதவராயினர். "சேணிடையுந் தீங் கடையாத் திருத்தொண்டர்" (393) என்றதும் காண்க. "இளமை மீதூர இன்பத் துறையினி லெளிய" ராய் ஒரு பரத்தைபாலணைந்தமையானும் பழுதில்லாதவர்; "மற்றை மாதரார் தமையுமென்றன் மனத்தினும் தீண்டேன்" என்றமையானும் பழுதில்லா தார் ; "அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்த" அதனானும் பழுதில் லாரே ; மூழ்கித் தந்தமையாலே யோகியார் "உன்பால் வைத்த அடைக்கலப்பொருளை வெளவிப் பாவகம் பலவுஞ்செய்து பழிக்கு நீ யொன்று நாணாய்" என்று கூறிச் சுமத் திய பாவகமாகிய பழுதும் இல்லாதாரேயாயினர்; இனியும் தாம் பிறவியாகிய பழுதினை யில்லையாக்கி மீளாநெறியிலே இறைவன்பால் என்றும் இளமையோடிருக்க நிற்கின்று

ராதலின் முற்றும் பழுதிலாதாரேயாயினர் என்று இதுபோலவே முழுமையும் கண்டு கொள்க. இவ்வாறே, உடன் மூழ்கிய மனைவியாரிடத்திலேயும் முக்காலத்தும் பழுதி லாத் திறத்தினை வைத்துக் கண்டுகொள்க. 38

398. வாவியின் மூழ்கி யேறுங் கணவரு மனைவி யாரு
மேவிய மூப்பு நீங்கி விருப்புறு மிளமை பெற்றுத்,
தேவரு முனிவர் தாமுஞ் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற. ௩௯

399. அந்நிலை யவரைக் காணு மதிசயங் கண்டா ரெல்லா
முன்னிலை நின்ற வேத முதல்வரைக் கண்டா ரில்லை;
இந்நிலை யிருந்த வண்ண மென்னென மருண்டு நின்றார்
துன்னிய விசும்பி னூடு துணையுடன் விடைமேற் கண்டார். ௪0

398. (இ - ள்) வெளிப்படை. குளத்திலே மூழ்கித் தந்து கரையேறுகின்ற கண வரும் அவர் தம் மனைவியாரும் அதற்கு முன்பு தம்பால் மேவியிருந்த மூப்பு நீங்கப் பெற்று விருப்பமுறும் இளமையைப் பெற்றார்களாகித், தேவர்களும் முனிவர்களும் இவ்வற்புதங் காரணமாகப் பொழிந்த கற்பகப் பூமழையிலே மேலும் மூழ்குவார்போலத் தோன்றவும், ௩௯

339. (இ-ள்) வெளிப்படை. அந்தநிலையிலேநின்ற அவ்விருவரையுங் காணப்பெற்ற தாகிய அதிசயத்தைக் கண்கூடாகக் கண்ட உலகர் எல்லாரும் முன்னிலையாய் நின் றிருந்த வேதியராகிய இறையவரைக் கண்டாரில்லை; இவ்வாறு நிகழ்ந்த வண்ணந்தான் யாது? என மருட்சியை யடைந்தனராகிப் பின்னர்ப் பொருந்திய ஆகாய வெளிக் குள்ளே தமது துணைவியான உமை யம்மையாருடன் இடபவாகனத்தின்மேற் காட்சி தரக் கண்டார். ௪0

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

398. (வி - ரை) மூழ்கி ஏறும் - மூழ்கித்தந்து பின் கரையேறினார்கள்; அவ்வாறு ஏறும் என விரித்துக்கொள்க. பிறவிக்கடலிற் றப்பி ஏறிய என்ற குறிப்புமாம். **கணவர்**- கண்ணவர்; எப்போதும் இம்மையிலும் அம்மையிலும் எம்மையிலும் பிரியாது உட னிற்பவர். சரிதப் பின்நிகழ்ச்சி காண்க. "அன்னவரே யெங்**கணவ**ராவார்"—**திருவெம் பாவை**. "இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்பன்"—**திருநா - புரா** - 32. என்று திலக வதியம்மையார் துணிந்தமையாற், கணவர் உடல்நாயகரேயன்றி உயிர்த்துணைவருமாம் என்பது பெறப்படும். "கற்புறு மனைவியாருங் **கணவனார்**க் கான வெல்லாம்" (367) என இளமையிற் கூறிய **கணவர்** என்ற சொல்லால் இங்கு முதுமையிலுங் கூறியதுங் குறிக்க.

மேவிய மூப்பு - மனித உடலியல்புபற்றித் தம்பாற் பொருந்திய மூப்பு. "வடி வுறு மூப்பு வந்து" (368) என்ற இடத்துக் காண்க.

விருப்புறு மிளமை பெற்று - யாவரும் எப்போதும் விருப்பமுறும் இளமை. நாயனார் விரும்பியதென்பதன்று. **விருப்புறும்** - சாதியடை என்பர். இவ்வாறு மூப்பு நீங்கி மீளப்பெற்ற நீங்கா இளமையை யாவரும் விரும்புவது மனித இயல்பேயாம். யாவரும் ஆசைப்படத்தக்க இளமைப் பருவமும் அதற்குரிய கோலமும். மூப்பு நீங்கு தல் வேறு; இளமை வருதல் வேறு. (368) முன்னர் உரைத்தாங்குக் கண்டுகொள்க.

தேவரும் முனிவர் தாமும் - தேவர்கள் திவ்விய தேகமுடையார். **தாமும்** - உலகை விட்ட நிலையில் உள்ள முனிவரும் - சிறப்பும்மை. **சிறப்பொடு** - சிறக்கும் வகையாலே. இத்திருவருள் வெளிப்பாட்டினை உலகம் உணர்ந்துய்யக்கடவது என்று பாராட்டிக் காட்டி உபகரிக்கும் வகையாலே.

பொழியும் தெய்வப்பூவின் மாமழை - பெய்த கற்பகப் பூமாரி. திருவருள் வெளிப்பாடு, பெரியார் அவதாரம் முதலிய நன்னிகழ்ச்சிகளைத் தேவர் முதலிய ஆத்தர்கள் கண்டு பாராட்டிக் காட்டும் நிகழ்ச்சிகளில் இதுவுமொன்று. "வானவர் பூவின் மாரி பொழிந்தனர்"—கண் - புரா - 184 முதலியன காண்க. **பூவின்** - பூப்பெய்தலாகிய இனிய என்றலுமாம். **மீள மூழ்குவார்போன்று** - யோகியார் கேட்ட வுண்மைக் கிருமுறை அடையாளமாதல் போல என்ற குறிப்புமாம். 39

399. (வி - ரை) **அந்நிலை காணும் அதிசயம் கண்டார்** - பாரோர் கேட்பப் பண்டு தஞ்செய்கை சொல்லி மூழ்கினார் நாயனார். அவ்வாறு கேட்ட உலகர் எல்லாம் கேட்டதுடனில்லாமல் இவ்வாறு இருவரையும் காணும் அதிசயத்தையும் கண்டார். தொண்டரை விளக்கங்காண உலகர்க்கு நெறிகாட்ட வந்த யோகியார் காட்டிய அந்நிலையிலே அவரைக் காணும் எனவும் கூட்டி விரித்துக்கொள்க. "அதிசயங் கண்டாமே" என அதிசயப்பத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளியதும் இங்கு வைத்துக் காண, **அதிசயங் கண்டார்** என்றார்.

முன்னிலை நின்ற வேத முதல்வர் - **முன்னிலை நின்ற** - முன்னிலையாக நின்ற - முன்னிலையாக வந்தவருக்குள்ளே மறைந்து நின்ற என்றலுமாம். **வேத முதல்வர்** - வேதம் நாதத்தின் காரியமாகிய வாக்கு ரூபமாயுள்ளது. வேதத்துக்குக் கருத்தா, வேதத்தாற் றுணியப்படும் கருத்தா என இருதிறமும் விரித்துக்கொள்க. "சாத்திர யோனித்துவாத்" என்ற வியாச சூத்திரப்பொருளும் காண்க. ஆதலின் **முதல்வர்** என்றார்.

கண்டாரெல்லாம்...கண்டாரில்லை - முன்னிலையாக நின்ற யோகியாரைக் கண்டார் எல்லாரும் முதல்வரைக் கண்டாரில்லை. எனவே, சிலர் கண்டார் என்பதாம். அவராவார் - நாயனாரும் மனைவியாருமாம்; இவர்களே அவரைக் காணத்தக்க பக்குவான்மாக்களாம். அன்றியும் இவர்களை உலகுக்கு விளக்கங்காட்டி அருளவே இறைவன் எழுந்தருளினார். ஆதலின் இவ்விருவருமே கண்டார் - பிறர் கண்டாரில்லை. இவர் கண்டார் எனப் பின்னர் விரித்துக் கூறுதலும் காண்க.

துன்னிய விசும்பினூடு - நான்கு பூதங்களிலும் வியாபகமுடைய ஆகாயத்திலே - கலந்த சிதாகாயத்திலே. (இது ஞானிகளாகிய பக்குவிகளுக்கு மட்டும் தரிசனமாவதாம். **துணை** - அருட்சத்தியாகிய உமையம்மையாருடன். **விடை** - அற உருவமானது. "ஏலவார் குழலா டன்னோ டிடபவா கனனுய்த் தோன்றி"—**இளையான்குடியார் புரா** - 25, "தன்றுணை யுடனே வானிற் றலைவனை விடைமேற் கண்டார்"—**இயற்பகையார் புரா**-31 முதலிய பலவிடத்தும் இவ்வாறே காண்க. இவையே அருட்சொரூபமாகையால், அடியார்பால் அருள் வெளிப்பாடு நிகழும்போதெல்லாம் இவ்வாறே இறைவன் எழுந்தருளுவதியல்பு.

இந்நிலை யிருந்த வண்ணம் என்னென மருண்டு நின்றார் - முன்னால் நின்றிருந்த வேதியர் காணாது போயினர்; முன் இருந்த மூப்பும் போயிற்று; முன்னர்க் கழிந்து மறைந்து போயின இளமை காணப்பெற்று வந்திருந்தது; என இந்நிலைமையா யிருந்த தன்மை. **என் என** - விளைந்த வண்ணம் எவ்வண்ணமென்று. **மருண்டு**-அறிந்தும் அறியாதும் நிற்கின்றதொரு மயக்க நிலையினையுடையராய். **நின்றார்**-தெளிய இயலாது மேற் செயலின்றி நின்றவராகிய நாயனார். வினையாலணையும் பெயர்.

முன்னிலை நின்ற முதல்வர் - என எப்பொருட்கும் சர்வசாட்சியாய் எல்லாப்பொருளுக்குள்ளும் நிறைந்து நின்றவன் என்ற கருத்துமாம்.

நின்றார் - என்றது நாயனார் செய்வதறியாது மருண்டு நின்ற நாயனார் நிலைகுறித்தது. முன்னரும் பலமுறை நின்ற நிலைவேறு; இங்கு நின்ற நிலைவேறு. முன் நின்றவை இவன் இறைவன், இது அவன் செயல் என்று அறியாது நின்ற நிலை. "நின்றபின்" (373); "நின்ற தொண்டரும்" (377); "உரைப்ப தொன்றின்றி நின்றார்" (380)

"இறைஞ்சி நின்றார்" (382); என்ற இடங்கள் காண்க. இங்கு நின்றது அறிவுமறியாமையும் கலந்த நிலை. அதனால் மருண்டு என்றார். "முன்னின்ற தெருட்சி மருட்சியினுள் முதல்வன் கருணைக் கடன் மூழ்கினரே" (திருநா - புரா - 71) என்றது காண்க. வரும் பாட்டில் "போற்றி நின்றார்" (400) என்றது அறிந்த நிலை குறித்தது. இவ்வாறு இம்மூன்று நிலைகளினியல்பும் இவற்றில் ஆன்ம போதம் நிகழுநிலையும் இறைவனருட்சத்தி நிறைந்து ஆன்ம சிற்சத்தியைக் கொண்டுசெலுத்தி யியக்கு நிலையும் அறிந்து கொள்க. குரு இயல்பும் அருளியல்பும் ஆன்ம இயல்பும் இச்சரிதத்தால் விளக்கம்பெற்று உயிர்கள் கடைப்பிடித் தொழுகும் நெறி காட்டப் பெறுதலால் " மின்னொளிர் சடையோனானும் தொண்டரை விளக்கங் காண, நன்னெறி யிதுவாமென்று ஞாலத்தோர் விரும்பி யுய்யும் அந்நெறி காட்டுமாற்றால்" குருவாகி வந்தார் என்று முன்னர்க் குறித்தது (369) காண்க.

அதிசயங் கண்டார் மருண்டு நின்றார் எனக் கூட்டி யுரைப்பாரு முளர். 40

400. கண்டனர்; கைக ளாரத் தொழுதனர்; கலந்த காத
லண்டரு மேத்தி னார்க; ளன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரும் மனைவி யாருந் தொழுதுடன் போற்றி நின்றார். ௪௪

(இ - ள்) வெளிப்படை. கண்ணாரக் கண்டார்கள்; கைகள் நிறைந்து திருப்தியடையக் கும்பிட்டார்கள்; அன்பருடைய பெருமையைப் பார்த்து விருப்ப மிகுந்த தேவர்களும் துதித்தார்கள்; ஆகாயத்திலே பொருந்திய அழகிய திருக்கோலத்தினை வெளிப்படக் காட்டி இடபவாகனத்தின் மேல் எழுந்தருளி வந்த இறைவரை நாயனாரும் மனைவியாரும் தொழுது கொண்டிருந்ததுடன் துதித்துக் கொண்டும் நின்றார்கள்.

(வி - ரை) **கண்டனர்** - விடைமேற் கண்டார் கண்ணாரக் கண்டனர். " கண்ணாரக் கண்டு மென் கையாரக் கூப்பியும், எண்ணார வெண்ணத்தா லெண்ணியும்"—என்ற அம்மையார் அற்புதத் திருவந்தாதி காண்க. முன்னர் "விடைமேற் கண்டார்" என்றது நிருவிகற்பமாகிய பொதுக்காட்சி; யோகியாரைக் காணாதும், தந்நிலைமை மாறியும் மருண்டு நின்றவர்கள் மேலே ஒரு காட்சி கண்டனர். கண்டதும் இவையெல்லாம் இறைவனது திருவருட்செயலேயென்று தெளிந்தவர்களாய்க் கண்ணாரக்கண்டு கொண்டு நின்றார்கள். முன் கண்டது வாயிற் காட்சி; இது அதனைச் சிந்தித்துத் தெளிந்த அனுபவக் காட்சி.

கைகளாரத் தொழுதனர் - மனநிறைவுபெறக் கைகளாற் கும்பிட்டு நின்றனர்.

கலந்த காதல் அண்டரும் - போக பதங்களை விரும்பி யாகாதிகளைச்செய்து அவற்றிலே முழுகி இன்ப துன்பங்களை அனுபவித்து நின்ற தேவர்களும், தமது நிலைகளினெல்லாம் பெரிதாகிய இந்நிலையினைக் கண்டு இதிலே ஆசை கொண்டவர்களாகி அன்பர்தம் பெருமை நோக்கிக் கலந்த காதலால் ஏத்தினார்கள் என்று கூட்டியுரைக்க. காதல் கலந்த அண்டரும் நோக்கி ஏத்தினார்கள் என்றுரைத்தலுமாம். காதல் கலந்த அன்பர் பெருமை என்று கூட்டி யுரைப்பாருமுண்டு.

அன்பர்தம் பெருமை நோக்கி - நாயனாரது பெருமைகண்டு. திரு ஆணைகாத்த உறைப்பினாலே பிறரெவரும் கடத்தற்கரிய காமக்கடலைக் கடந்து தாம்கொண்ட சபதத்தைக் கடைபோகக் காத்தும் இறைவனை வெளிப்படக் கண்டும் மீள இளமை பெற்றுத் திருவருட் பெருஞ் செல்வத்து மூழ்கிய பெருமையைப் பார்த்து. அன்பின் பெருமையே எப்பொருட்கு மேலாய் விளங்குகின்றது கண்டு.

விண்தரும் பொலிவு காட்டி - விண் - ஞானாகாயம். **தரும்** - பக்குவமுடைய ஞான நாட்டம் பெற்றவர்களுக்குத் தருகின்ற. **பொலிவு** - பொலிந்து வெளிப்பட்ட திருக்கோலம். **தரும்** - கருணை தருகின்ற என்றுரைப்பாருமுண்டு.

தொழுதுடன் போற்றி நின்றார் - கண்ணாரக் கண்டும் கைகளாரத் தொழுதும்நின்றதுடனே, மனதாரத் துதித்துக்கொண்டும் நின்றார்கள். **போற்றுதல்**-இறைவன் தம்பாற் செய்த பேரருளின்திறத்தினை வியந்து பாராட்டுதல். "எத்தனையு மரியநீ யெளியையானாய்;...இத்தனையு மெம்பரமோ? ஐய! ஐயோ! எம்பெருமான் திருக்கருணை யிருந்தவாறே!" (திருத்தாண்டகம்.) என்றெல்லாம் அவரது அளவுகடந்த அருள் வெள்ளத்தினை எண்ணி யெண்ணித் துதித்தல்.

மேலே உரைத்தவாறன்றி இப்பாட்டிலே கண்டனர் - தொழுதனர் என்றவற்றிற்கு அதிசயங்கண்டாராய் முதல்வரைக் காணாது நின்ற பிற உலகர் என்று பொருள் கூறுவாரும் உண்டு. நாயனாரும் மனைவியாரும் மட்டுமே திருவருட் பெருக்குக் இலக்காகி அதனைக் கண்களால் முகந்துகொண்டு போற்றியவராவர். இறைவனது அருட்காட்சியின் வெளிப்பாடு பக்குவப்பட்ட ஆன்மாக்களே யன்றி ஏனையோர் தேவரேயாயினும் காண்டலரிது என்பது உண்மை நூல்களின் துணிபு. இங்கு இறைவன் இடப வாகனத்தின்மீது உமை யம்மையாரோடு எழுந்தருளிய விண்டரும் பொலிவுபெற்ற காட்சி நாயனாருக்கும் மனைவியாருக்குமே காட்டினார். அவர்களே கண்டுதொழுது போற்றி நின்றார்கள் என்றுரைப்பதே பொருளாம். ஏனை உலகரும் தேவரும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாகிய யோகியார் சொற் செயல்களும், நாயனார் சொற் செயல்களும், மூழ்கி ஏறி முதுமைபோ யிளமை பெற்றமையும் முதலியவற்றையே கண்டார்கள். அருட்காட்சி நாயனாரு மனைவியாருமே கண்டார் என்க. திருஞானசம்பந்த நாயனார் புராணத்திலே இறைவனை ஆகாயத்தில் நேரேகண்டு தோடுடைய செவியன் முதலாகிய திரு அடையாளங்களாலே இவன் என்னை யிதுசெய்த எம்மான் என்று ஆளுடைய பிள்ளையார் பாடியருளினர். ஆனால் விண்ணிற்காட்டிய இறைவன்கோலத்தை அவரது தந்தையாரும் கண்டிலர்; ஏனையோருங் கண்டிலர்; ஏனை நிகழ்ச்சிகளை மட்டுமே கண்டனர்.

"தானு வினைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனு நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணி புரத்திறை தன்னரு ளாத றுணிந்தார்வம்
பேணு மனத்தொடு முன்புகு காதலர் பின்சென்றார்"—திருஞான - புரா - 86.

என்றது காண்க. விரிவு அங்குக் காண்க. அரிய தவஞ் செய்து ஆளுடைய பிள்ளையாரைத் தமக்கு மகனாராகப் பெற்ற சிவபாதவிருதயரும் காணக் கூடாத காட்சியைச் சாமானிய உலகர்களா காணவல்லவர்? எனவே, இப்பாட்டிற்கு யாவரும் தேவரும்இறைவனது அருட்கோல வெளிப்பாட்டைக் கண்டனர், தொழுதனர், என்றுரைக்கும் உரைகள் ஒன்றும் பொருந்தாதன என்றொழிக. இறைவன் தொண்டரை விளக்கங் காண ஞாலத்தார்க்கு நெறி காட்டவே யோகியாராய் வந்தார் என்றமையுங் காண்க.

விண்டரும் - என்பதனை விண்டு அரும் எனப் பிரித்துரைப்பாருமுளர். 41

401. மன்றுளே திருக்கூத் தாடி யடியவர் மனைக டோறுஞ்
சென்றவர் நிலைமை காட்டுந் தேவர்க டேவர் தாமும்
"வென்றவைம் புலனான் மிக்கீர்! விருப்புட னிருக்க நம்பா
லென்றுமிவ் விளமை நீங்கா" தென்றெழுந் தருளினாரே. சஉ

(இ - ள்) வெளிப்படை. திருவம்பலத்திலே திருக்கூத்து ஆடி, அடியார்களது மனைகள் தோறும் போய் அவர்களது உண்மை நிலையினை உலகறியக் காட்டுகின்ற தேவ தேவராகிய சிவபெருமானும், (நாயனாரையும் மனைவியாரையும் நோக்கி) "வென்று அடிப்படுத்தப்பட்ட ஐம்புலன்களினாலே மிக்கு விளங்குபவர்களே! நீங்கள் இப்போது எமதருளால் மீளப் பெற்ற இந்த இளமை என்றும் நீங்காத நிலையுடன் எம்மிடத்திலே

இருப்பீர்களாக!" என்று அருளிச்செய்து தமது நிறைவு நிலையினுள்ளே எழுந்தருளிப் போயினார்.

(வி - ரை) மன்றுளே திருக்கூத்து ஆடி - மன்றினியல்பு, திருக்கூத்தினியல்பு, ஆடும் இயல்பு முதலியன முன்னர் 350, 351 திருப்பாட்டுக்களிலும் பிற இடங்களினும் உரைக்கப் பெற்றன.

அடியவர் மனைகள்தோறும் சென்று - "அமர்நீதியார் திருமடங்குறுக"—அமர்நீதி புரா-9.

" ....திருமனையி லொருவழியே
தெள்ளுதிரை நீருலக முய்வதற்கு மற்றவர்த
முள்ளநிலைப் பொருளாய உம்பர்பிரான் றுமணைவார்"
—**மாணக்கஞ்சாறர் - புரா - 21**

" கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து "
—**சிறுத்தொண்டர் - புரா - 36**

முதலியவை காண்க. அடியவர்கள் இருக்குமிடந்தோறும் தாமே சென்று வலிய அவர்களை ஆட்கொள்ளுந் திறத்தாலே உலகத்தையும் அறிவுறுத்தி ஆட்கொள்வது எமது பெருமானது அருட் பெருக்கின் இயல்பு. உயிர்களை வழிப்படுத்தி ஆட்படு நெறியிற் செலுத்தும் இதுவே அவரது ஐந்தொழிற் றிருக்கூத்தினியலும் பொருளுமாம். ஆதலின் "**திருக்கூத்தாடிச் - சென்று - காட்டும்**" என்று தொடர்புபடுத்திக் கூறினார்.

" இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை"—**திருவெம்பாவை - 13**

" பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடி றொறுமெழுந் தருளிய பரனே "—திருப்பள்ளியெழுச்சி - 8

என்ற திருவாசகங்களின் சொல்லும், பொருளும், கருத்தும் இங்கு வைத்து நினைவு கூர் தற்பாலன.

அவர் நிலைமை காட்டும் - அடியவர் நிலையை உலகுக்குக் காட்டுவித்து உலகரை நன்னெறியிற் செலுத்தும். "உய்யும் அந்நெறி காட்டுமாற்றால்" என்றவிடத்துக் காண்க.

தேவர்கள் தேவர் - தேவர்களெல்லவரும் அடியவர் முன் வர லாற்றாதவர்கள்; தொண்டர்களின் பின்னே நின்று அவர்களை ஆசிரயித்துப் பயன்பெற வேண்டியவர்கள். இது முன்னர் விளக்கப்பெற்றது. ஆதலின் **தேவர்கடேவரே** முன் வந்து அருள் புரியவல்லார் என்பது.

வென்ற ஐம்புலனால் மிக்கீர் - ஐம்புலன்களும் வெல்லப்பட்டமையால் இவர்கள் சொல்வழி அவை ஏவல் கேட்டு அமைந்து நின்றன. ஏனையோர்களை, அவை, தம்மைப் பின்பற்றி நடக்குமாறு கீழ்ப்படுத்தித் தாம் மேலோங்கி நிற்பன. ஆதலின் ஏனையோர்களது நிலைகள் கீழ்ப்பட்டனவே. இவர்களோ ஐம்புலனை வென்றதனால் நிலைமையில் மேலோங்கியவர்கள். " தம்மை யைந்து புலனும் பின்செல்லுந் தகையார் "—**சண்டேசர் புரா** - 2 என்றது காண்க. **வென்ற** - வெல்லப்பட்ட. **மிக்கீர்** - மேலெழுந்தவர்.

"ஐந்தவித்தான்" என்ற குறளில் புலன்களிற் செல்கின்ற அவாவைந்தனையும் அடக்கினான் எனப் பரிமேலழகரும், நுகர்ச்சியாகிய ஐந்தினையும் துறந்தான் என மணக்குடவரும் உரை விரித்தது காண்க. எனவே புலன்களைந்தும் நின்றன; ஆயின் அவற்றிற் செல்லும் அவாவும், அது காரணமாக வரும் நுகர்ச்சியும் இல்லையாயின என்க. இங்கு நாயனாரிடத்தும் மனைவியாரிடத்தும் ஐம்புலனும் இருந்தன. மெய்யுறு புணர்ச்சி ஒன்றொழிய இல்வாழ்வாரும் அடியாரும் செய்யும் எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றினர். புலன்கள் தம் செயலற்று இவர்கள் வசமாய்த் தாழ்ந்து நின்றன என்பதாம். ஐம்புலன்களையும் ஒடுக்கி அசைவற்றிருக்கும் யோகநிலை வேறு; அவற்றை

அடிப்படுத்தித் தம்வழி நிறுத்தி அவற்றின்கட் செல்லுமவாவை இறை வழிபாட்டிற் செலுத்தி நிற்றல் வேறு.

"வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறும்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி"

என்ற திருவிளையாடற்புராணமும் காண்க.

இருக்க - வியங்கோள் - இருப்பீர்களாக. இவ்விளமை நீங்காது விருப்புடன் நம்பால் என்றுமிருக்க என்றியைத்துக்கொள்க. என்றும் மாறுபாடின்றி ஒரு தன்மையினுகவுள்ள இறைவன்பா லிருப்பவர்களே என்றும் மாறுபடாத இளமையோடிருக்க வல்லவர்கள். காலகாலனது சார்பினுலே அவர்கள் காலத்தை - மரணத்தை - வென்றவர்களாகலான் என்பது. அன்றியும் ஏனையோர் யாவரையும் சாகச்செய்யும் விடத்தை உண்டு சாவாமலும் மூவாமலும் இருக்கும் சிவபெருமானொருவனே மூவாத இளமை தர வல்லவன் என்றலுமாம். "சாவா மூவாச் சிங்கமே"—**திருப்புகலூர்த் திருத்தாண்டகம் - 2.**

விஷ்ணு, பிரமன், இந்திரன், சந்திரன் முதலிய தேவர்களும் அவ்வவர் சரிதங்களால் அறியக் கிடக்கின்றபடி, ஐம்புலன் வெல்லமாட்டாது ஒவ்வோர் குற்றங்களுக்காளாயினர்; இங்கு நமது நாயனுரும் மனைவியாருமே புலன் வென்று மிக்கார்கள் என்பார், இவ்விடத்துத் தேவர்கள் தேவன் என்ற பெயராற் கூறினுர் என்ற குறிப்புமாம். இதுவரை "**நின்று**"ராகிய அவரை இருக்க என்றுர் என்ற குறிப்புமாம். 42

402. விறலுடைத் தொண்ட ஞரும் வெண்ணகைச் செவ்வாய் மென்றோ
ளறலியற் கூந்த லாரா மனைவியு மருளி ஞர்ந்த
திறலுடைச் செய்கை செய்து சிவலோக மதனை யெய்திப்
பெறலரு மிளமை பெற்றுப் பேரின்ப முற்று ரன்றே. ௪௩

(இ - ள்) வெளிப்படை. வலிமைபெற்ற தொண்டரும் மனைவியாரும் அருளினுல் நிறைந்த திறமையான அரிய செய்கை செய்து மேலே கூறியபடி அதன் விளைவாகிய சிவலோகத்தை யடைந்து பிறர் எவராலும் பெறுதற்கரிய இளமையைப் பெற்றுர்களாய் அப்போதே பேரின்பத்தை அடைந்து விளங்கினுர்கள்.

(வி-ரை) விறலுடைத் தொண்டனுர் - விறல் - வலிமை. புலனை வென்றது விறல். "வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்" என்றதும் காண்க. இஃது வேண்டாமை என்கின்ற திண்மையால் வரும் என்றுர் நாயனுர். "விறலீனும் வேண்டாமை யென்னுஞ் செருக்கு"—குறள்.

வெண்ணகைச் செவ்வாய் மென்றேள் அறல் இயல் கூந்தலார் ஆம் மனைவியும்- இது மனைவியார் மீளப்பெற்ற இளமைக் கோலத்தியல்பு கூறியதாம். வெள்ளிய நகையினை-பற்களை-யுடைய சிவந்த வாயினையும், மெல்லிய தோள்களையும், கருமணல் ஒழுக்குப் போன்ற கூந்தலையும் பெற்ற இளமை உடையவராய் ஆன மனைவியாரும். **வெண்ணகை** - வெள்ளிய பல்வரிசை. **நகை** - நகைப்பு. அதனைச் செய்யும் பல்லுக்காயிற்று. **அறல் இயல்** - கருமணலின் ஒழுக்குப் போன்ற தன்மை. **ஆம்** - ஆயின.

செய்து - எய்தி - செய்தல் - காரணம்; எய்துதல் காரியம், விளைவு. செய்ததனுல் எய்தி யென்க.

தொண்டரும் மனைவியும் - செய்து - எய்திப் பெற்று - அன்றே - பேரின்ப முற்றுர் என முடிக்க.

அருளின் ஆர்ந்த திறலுடைச் செய்கை - அருளிலே நிறைவுபெற்ற செய்கை - திறலுடைச் செய்கை என்று கூட்டியுரைத்துக் கொள்க. அருளினுலே நிறைவு பெற்றதாகிய திறல் என்றுரைப்பினுமாம். **அருளின் ஆர்தலாவது** - திருவருள் வசத்திற்கே

யன்றி வேறொன்றற்கும் இடந்தராமை. திறல் உடைச் செய்கை - பிறர் எவராலும் செய்யலாகாத அரியசெய்கை. செயற்கருமையே திறல் எனப்பட்டது. சிவலோகமதனை எய்தி - மேற்பாட்டிலே "நம்பாலிருக்க" என்று இறைவன் அருளியமையாலே அன்றே சிவலோகத்தை யடைந்தனர். நம்பால் என்றது சிவலோகம். ஈண்டுச் சிவலோகம் என்றது சுத்த மாயாபுவனத்தை; அதுவே மீண்டு வாராத முத்தியுலகமாதலின் என்க. இது நாற்பதவிகளுட் சாலோகபதவி. "நலமிகு சிவலோகத்தில், ஊனமில் தொண்டர் கும்பிட் டெனுறை பெருமை பெற்றார்" என இவ்வாறே இயற்பகை நாயனார் புராணத் திற் (35) கூறியதுங் காண்க.

பேறல்கும் இளமை - பிறர் யாவராலும் பெறுதற்கரியதாய் முதுமையின் பின் மீளப் பெற்றமையாலும், ஏனை இளமைகள் போலல்லாமல் என்றும் நீங்காதிருக்கு நிலைமையாலும் இதனைப் பேறல்கும் என்றார். அன்றியும் திருவாணை என்று நிகழ்ந் ததோ அன்றைக்கிருந்த அந்த இளமையே மீளப் பெற்றமையும் குறிப்பாம்.

பேரின்பம்-நமது சாமானிய பசுகரணங்களால் அனுபவிக்கப்பெறும் இன்பங்கள் யாவும் சிற்றின்பங்களாம். அவை சிறிதளவே நிற்பன; முடிவில் துன்பத்துக் கேது வாவன. ஆனால் தமது கரணங்கள் சிவனருட்பெருக்கினாலே சிவகரணங்களாக மாறப் பெற்ற இவர்கள் அடைந்தது காலம், இடம் முதலிய எந்த அளவைகளாலும் அளவு படாததாய் உள்ளது; பேரானந்தம், பிரமானந்தம், சிவானந்தம் முதலிய பெயர்களால் வேதங்களிற் பேசப்படும் பெருமையுடையது. அன்று - ஏ அசை என்றொருதுக்குவாரு முண்டு.

> "பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கே
> முற்ற வரும்பரி சுந்தீபற, முளையாது மாயையென் றுந்தீபற"
>
> —திருவுந்தியார் - 33

என்று சாத்திரங் கூறிய தொருநிலை. ஆயின் இங்கு நாயனார் சிற்றின்பத்தைத் துறந்து திருநீலகண்டத் தியானத்திலே முனைத்தனுபவித்து வாழ்ந்து முடிவில் பேரின்பநிலை யடைந்தனர். 43

403. அயலறி யாத வண்ண மண்ணலா ராணை யுய்த்த
மயலில்சீர்த் தொண்ட னாரை யானறி வகையால் வாழ்த்திப்,
புயல்வளர் மாட நீடும் பூம்புகார் வணிகர் பொய்யில்
செயலியற் பகையார் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன். ௪௪

(இ - ள்) வெளிப்படை. அயலார் ஒருவரும் அறியாத வகையாலே இறைவனது திருநீலகண்டத் திருவாணையைக் கடவாது பாதுகாத்து வாழ்ந்தவரும், உலக மயக்கத் துட் படாது நீங்கியவரும் ஆகிய சிறப்புடைய திருநீலகண்ட நாயனாரை யான் அறிந்த அளவினாலே வாழ்த்தி, அவர் புராணத்தை நிறைவுசெய்து கொண்டு, அத்துணையாலே, மேகங்கள் தவழ்ந்து தங்கும்படி உயர்ந்த மாடங்கள் நீடிய அழகிய புகார்நகரம் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகராகிய பொய்மை என்பதில்லாத செயல் புரியும் இயற்பகைநாயனார் செய்த திருத்தொண்டினைச் சொல்லத் தொடங்குகிறேன்.

(வி - ரை) இதனால் இதுவரைச் சொல்லிவந்த புராணத்தை முடித்துக்காட்டி, இனிச் சொல்லப்புகும் புராணத்திற்குத் தோற்றுவாய் செய்தார்.

அயலறியாத வண்ணம் அண்ணலார் ஆணை உய்த்த - இதுவே இப்புராணத்தின் உள்ளுறையாகிய தத்துவமாம். ஆணைஉய்த்தல் ஒன்றும், அதனை அயலறியாமல் வைத்தது ஒன்றும், ஆகிய இவ்விரண்டையும் காட்டவே இறைவன் வந்தனர். ஆணை யுய்த்தல் - எதனை இழக்கவரினும் ஆணையின் வரம்புகடவாமற் பாதுகாத்தல். உய்த்தல் கொண்டு செலுத்துதல். அயலறியாமை வாழ்ந்தார் (367) என முன்னரும் இத

லைக் குறித்தமை காண்க. இப்புராணத்திற்கு முன்னர்த் தோற்றுவாய் செய்த விடத்து "நிகழ் திருநீலகண்டக் குயவனுர்", 'நீடு வாய்மை திகழுமன்புடைய", "செய் தவம்", (359) என்று தொடங்கிக் காட்டியவை இவையே என்று தொகுத்துக் காட் டியவாறு காண்க. திருநீலகண்டம்=அண்ணலாரானை ; நீடு வாய்மை=உய்த்தல் ; செய்தவம்=அயலறியாது வாழ்ந்தது என்றிவ்வாறு கண்டுகொள்க.

மயலில் - ஏனையோர் யாவரையும் மயக்கி வீழ்த்தும் வலிய உலகமயக்கமாகிய காமத்தினைத் தம்மிடம் இல்லாது செய்த. **இல்** - இல்லையாகச் செய்த.

சீர் - தமக்கே சிறப்பாயுரிய சிறப்பு.

யானறிவகையால் வாழ்த்தி - செய்தவங் கூறலுற்றும் (356) என்று தொடங்கிய யான் அதனை முற்றவுங் கூறினேனல்லேன் - யான் என் அறிவின் அளவிலே போந்த வகையாலே வாழ்த்தி முடித்துக் கொண்டேன். **வாழ்த்தி**-இச்சரிதப் பெருமை நிலவி வளர்வதாக என்று துதித்து. இவ்வாறே முன்னரும் " போற்றிவாழ " (359) என்றமை காண்க.

"அருந்தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந் தருபரிசா லுரைசெய்தேன்" என்றதுபோல வரும் புராணங்கள்தோறும் இவ்வாறே கண்டு கொள்க.

புயல் வளர் மாடம் - மேகந்தவழும்படி உயர்ந்தோங்கிய மாடம். "தவளநெடு மாடம்...விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம்" - திருஞான - நட்டபாடை - (1) முதலியன காண்க. இது மாடங்களின் உயர்வு குறித்தது.

நீடும் - பெருமையின் அளவாலும் காலத்தாலும் நீண்டிருக்கும்.

பூம்புகார் - புகார் - காவிரிப்பூம்பட்டினத்தின் பெயர். **பூ** - அழகு - செல்வம் முதலியன குறித்த அடைமொழி. பூம்புகலூர் என்றதுபோல. " பூம்புகார்ச் சாய்க் காடே பதியாக வுடையானும் "-திருஞான-சீகாமரம் (2) முதலியபலவும் காண்க. **புகார்** என்றதனை ஆளுடைய பிள்ளையார்,

" மண்புகார் ; வான்புகுவர் ; மனமிளையார் ; பசியாலுங்
கண்புகார் ; பிணியறியார் ; கற்றருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா ; வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே "

என்று விரித்தருளி யிருப்பது காண்க.

பொய்யில் செயல் - பொய்மை யில்லாத உள்ளத்தாலே என்றும் செய்கின்ற செயலையுடைய. **இயற்பகையார்** - திருநீலகண்டர் எனப் பெயர் போந்தது போலப் போந்த காரணப்பெயர் என்பர். இஃதவரியற் பெயராய் நிகழ்ந்தது.

செய்த திருத்தொண்டு - சரித வரலாறு.

மயலிலாத் தொண்டனுரை—என்பதும் பாடம். 44

சுருக்கம்:—சிதம்பரத் தலத்திலே குயவர் குலத்தில் அவதரித்தவர் ஒரு பெரியார். இவர் நடராசப் பெருமானை நியதியாக வழிபடுதலைக் கைக்கொண்டவர்; பொய்மை ஒழித்த அறவழியிலே வாழ்கின்றவர் ; சிவனடியார்களுக்கான எந்தப் பணிவிடையும் செய்யும் விருப்பிலே நின்றவர்;சைவத்தின் உண்மைச் சார்பே மக்கள்அடையும் பொரு ளாவது என்று சார்ந்து ஒழுகும் தன்மையுடையவர். வழிவழி வரும் தமது குலத் தொழிலை விடாது செய்து வருவாராய்,மட்கலங்களைச் செய்யும் தொழிலைத் தமது சீவ னத்துக்காகும் அளவில் ஆக்கிக் கொண்டு, விரும்பிய சிவனடியார்களுக்கெல்லாம் பிச் சைப் பாத்திரமாகிய திருவோடுகளைக் கொடுத்து வந்தார். இவ்வாறொழுகி வரும் நாளி லே மிகுந்த இளமைப் பருவங் காரணமாகச் சிற்றின்பத் துறையிலே தம்மை எளிய ராக ஆக்கிக்கொண் டொழுகுவாராயினர். அவர் மனைவியார் கற்பிலும் அழகிலும்

சிறந்தவர். இப்பெரியார் சிவபெருமானது திருநீலகண்டத்தினிடத்திலே மிகுந்த பத்தி செய்து அதனையே எப்போதும் துதித்துச் சொல்லி வருபவர்.

ஒரு நாள் இவர் ஒரு பரத்தையினிடமணைந்து நண்ணினர். அதனால் மனைவியார் மானம் பொறாது ஊடல் கொண்டவராகி, இல்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாம் செய்தேயும்,இவரோடு உடனுறைவதற்கு மட்டும் இசையாதவராயினர்.அவரைப் புலவி தீர்த்துக் கூடும் பொருட்டு இவர் வேண்டியவற்றைச் சொல்லி அவரை அணையத் துணிந்தபோது, அவர் "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டனர். அது கேட்ட பெரியார் உடனே பெயர்ந்து நீங்கி அயலார்போல அவரைப் பார்த்து, "எம்மை என்று சொன்னதனால் உம்மையேயன்றி மற்ற மாதரார் தம்மையும் என் மனத்தினாலுந் தீண்டமாட்டேன்" என்று சூள் உரைத்தனர். மனைவியார் தம் கணவர்க்கு வேண்டிய இல்வாழ்வுக்குரிய ஏனைஎல்லாக் காரியங்களையும் செய்துவர, இவ்விருவரும் திருவாணையைக் காத்து மெய்யுறு புணர்ச்சி ஒன்று மட்டுமின்றி, இந் நிகழ்ச்சியை அயலார் ஒருவரும் அறியாதபடி, ஒரு வீட்டிலே உடன் வாழ்ந்து இல்லறம் நடத்திக் கொண்டு வந்தனர். இவ்வாறு ஆண்டுகள் பலவும் கழிந்தன ; இவர்களது இளமையும் கழிந்தது ; இருவரும் மூப்படைந்து உடல் தளர்ந்தனர் ; ஆயினும் இறைவனன்பினில் ஒரு சிறிதும் தளர்ந்தாரில்லை. இவர்களதன்மை உலகமறியச் செய்து உலகுக்கு நன்னெறி காட்டுவதற்காக இறைவன் கீளும் கோவணமுஞ் சாத்தி, நீறு பூசி, வெண்ணூல் பூண்டு, பம்பை மயிர்த்தலையுடையாராகிய ஒரு சிவயோகியாராக உருவெடுத்துக் கொண்டு கையில் ஒரு திருவோட்டினை ஏந்திக் கொண்டு நடந்து வந்து இவரது திருமனையை நண்ணினர். அவரை இவர் உரிய வகையால் உபசரித்து "நான் செயும் பணிவிடை யாது?" என்ன, அவர் "எனது இந்தத் திருவோடு மிக அரியது ; தன்னிடம் வந்த எல்லாவற்றையும் தூய தாக்குவது ; இதனை வாங்கி உன்னிடம் வைத்து நாம் வேண்டும்போது தருக" என்று கூறித் தம் திருவோட்டினைக் கொடுத்தனர். இவரும் அவ்வண்ணமே அதனை வாங்கிக் காவல் பொருந்திய ஒரு தனியிடத்துச் சேமித்து வைத்து வந்து சிவயோகியாரிடம் விடை பெற்று மீண்டனர். இவ்வாறு சிவயோகியார் வந்து நாள் பல கழிந்தன. இறைவன் அத்திருவோட்டினை வைத்த குறியிடத்தினின்று அகலப் போக்கி விட்டனர். பின்பு ஒரு நாள் யோகியார் மீண்டு வந்து இவரிடம் தமது திருவோட்டினைத் தரும்படிக் கேட்டனர். இவர் அதனைத் தேடிக் காணாது திகைத்தனர். மிகவும் பயந்து சிவயோகியாரிடம் வந்து அவ்வோடு கெட்டுப் போய் விட்டபடியால் அதற்குப் பிரதியாகத் தம்மிடம் உள்ள வேறு நல்லதொரு திருவோடு பெற்றுக் கொள்ளும்படி வேண்டினர். யோகியார் சினந்து "நான் வைத்த அடைக்கலப் பொருளைக் களவு செய்து இவ்வாறு பாவகம் பலவும் செய்கின்றாய் ! என் ஓட்டினை நீ கெடுத்து விட்டது உண்மையாயின் உன் மகனைக் கைப்பற்றிக் குளத்தில் மூழ்கிச் சபதம் செய்க" என்றனர். நாயனார், தமக்கு மகனில்லை என்ன, "ஆயின் மனைவியார் கைப்பற்றி மூழ்கித் தருக" என்று கேட்டனர் யோகியார். அதற்கு "எங்களில் நிகழ்ந்த ஒரு சபதத்தால் நீர் கேட்டவாறு உடன் மூழ்க இசைவில்லை; புனலில் யானே மூழ்கித் தருகின்றேன்; வாரும்" என்று நாயனார் கூற, யோகியார் மிகச் சினந்து தில்லை வாழந்தணர் வந்து கூடிய சபையிற் சென்று முறையிட்டனர். அவர்கள் இருவரையும் விசாரித்து, யோகியார் கேட்டவாறு மனைவியைப் பற்றி மூழ்கித் தருதலே நீதி வழக்கு என்று தீர்த்தனர். பொருந்தும் வகையினாலே மூழ்கித் தருவதாய்ச் சொல்லி நாயனார் மனைவியாரையும் உடன் கொண்டு திருப்புலீச்சரத்தின் முன்னர்த் திருக்குளத்தில் இறங்கி மூங்கிற்றண்டி னிருதலையும் தானும் மனைவியாருமாகப் பற்றி மூழ்கப் புக்கனர். யோகியார் "மனைவி கைப்பற்றி மூழ்கீர்" என்று கேட்டனர். அப்போது இவர் தமது பழஞ் செய்கையை உலக மறிய எடுத்துச் சொல்லி மூழ்கிக் கொடுத்தனர்.

இவ்வாறு மூழ்கிக் கரையேறும்போது இருவரும் ஆணை நிகழ்ந்த முன்னை நாளி லிருந்த அந்த இளமைபெற்று விளங்கினர். தேவர்களும் முனிவர்களும் கற்பகப் பூமழை பொழிந்தனர். யோகியாராய் வந்த இறைவன் மறைந்து ஆகாயத்தில் விடையின்மீது உமையம்மையாருடன் அவ்விருவருக்கும் காட்சி தந்தருளினர். இவர்க ளிருவரும் கண்டு போற்றித் தொழுது நிற்க, "ஐம்புலனும் வென்று மிக்கீர்களே! இவ்விளமை யுடன் என்றும் நம்பால் இருப்பீர்களாக!" என்று அருள்செய்து எழுந்தருளினர். செயற்கரிய செய்கைசெய்து சிவலோகத்திற் சேர்ந்து இவர்கள் என்றும் நீங்கா இளமை யுடன் பேரின்ப முற்றார்கள்.

திருநீலகண்டத்தினிடத்தே பத்திசெய்து, அத்திருவாணை போற்றிச் செயற் கருஞ் செய்கைசெய்து சிறந்து பேறுபெற்றதனாலே, இப்பெரியார் **திருநீலகண்ட நாய னார்** எனப் பெயர் பெற்றார்.

கற்பனை :—1. அடியவர் கூட்டத்திற் குலம்பற்றிய பெருமை சிறுமை எண்ண வருவதின்றாம். "நாடவர் நாடறிகின்ற, குலமிலராகக் குலமதுண்டாக" - என்றது ஆளுடைய பிள்ளையார் தேவாரம்.

2. ஒவ்வொருவரும் அவ்வவர்க்குரிய குலத்தொழிலையும் குலவொழுக்கத்தையும் கைவிடாமற் பின்பற்றி வாழத்தக்கவர்.

3. குலத்தொழில் - அல்லது வேறு தொழில் செய்வோர், அதனைத் தம் சீவனத் துக்கும் இல்வாழ்க்கை நிலைக்கும் அவசியமான அளவுக்கே அமைத்துக்கொண்டு ஏனைக்காலத்தையும் முயற்சியையும் சிவபெருமான்பாலிலும் சிவனடியார்பாலிலும் செலுத்தக்கடவர். இந்நாளில் மக்கள் பேராசையுட்பட்டு அலைவதுபோல் மேலும் மேலும் எல்லையின்றித் தொழில்செய்து பொருளீட்டிக் காலங்கழித்துக்கொண்டு அரனினைவும் அடியார் நினைவுமின்றி இறந்தொழிவது முறையன்று.

4. பரத்தையர் கேண்மை நூல்களாலே கடியப்பட்ட தீயொழுக்கமாம்.

5. நாயகனது பரத்தையர் கேண்மையான ஒழுக்கம் நாயகிகள்பால் மானம் பொறாத ஊடலை விளைக்கும். இது கற்புக்கிழுக்கன்று.

6. இறைவனது திருநீலகண்டம் யாவராலும் பாராட்டிப் பத்தி செய்தற்குரியது. அது புவனங்களை யெல்லாம் அழிவில்லாமலும் கேடு வராமலும் காத்த இறைவனது அருட்செயலை விளக்கி அதனை உலகமறிந்துய்ய வைத்த அருளடையாளம்.

"பழனத்தரசை யெஃறிவிமையோர், படிறு மொழிந்து பருகக் கொடுத்துப் பரவை நஞ்ச, மிடறு தடுத்தது வும்மடி யேங்கள் விதிவசமே"—என்ற பதினொராந் திருமுறை யும் (சிவபெருமான் திருவந்தாதி - 28) காண்க.

7. இறைவன் ஏந்திய திருவோடு மிகப் பெருமையுடையது. அது உலகமுய்ய ஏந்தப் பெறுவதாம். சிவஞானிகள் தாங்கும் திருவோடும் இத்தன்மையதேயாம்.

8. காமம் கொடியது. அதன்வழிப் பட்டோர்க்கு அது எல்லாத் தீமைகளையும் விளைக்க வல்லது. அது யாவராலும் வெலற்கரியது. இறைவன் சார்பும் அடியவர் சார் பும் பெற்றுத் திருத்தொண்டில் உறைப்புடைய அடியவர்க்கே காமத்தை வெல்லுதல் இயலுமே யன்றித் தேவர்க்கும் அரியதாம். விட்டுணு, பிரமன், இந்திரன், சந்திரன், பல முனிவர்கள் முதலியோர் சரிதங்களைக் காணில் இதன் உண்மையும், இந்த நாயனா ரது அளவிலா மேன்மையும் விளங்கும். இளமை மிக்க இந்நாயனாரும் மனைவியாரும் ஒரே வீட்டினுள் வாழ்ந்தும் காமத்தை அறவே துறந்து ஆயுள் முழுதும் திருவாணை யினையே காத்த அரிய பெருமை உலகம் போற்றத் தக்கது. "மாது சொன்ன சூளா லிளமை துறக்க வல்லலே னல்லன்" என்று தவராச சிங்கமாகிய பட்டினத்தடிகளும் பாராட்டியது இப்பெருமை.

9. மனைவியிடத்தும் விதிவழியே நின்று மக்கட்பேற்றினைக் குறித்தே ("வரையா நாளின் மகப்பேறு குறித்து") மெய்யுறு புணர்ச்சி கொள்ளத் தக்கது. இறைவ னுணைவலியின் முன்னர் அதுவும் அடிப்படுத்தி ஒதுக்கத் தக்கதாம். ஏனைய எல்லா உலகானுபவங்களும் இவ்வாறே கொள்ளத் தக்கன. இதுவே மக்கள் **அறிந்து விரும்பிக் கைக்கொண்டு உய்யு நன்னெறியாம்.**

10. ஒழுக்கம், புகழும் பெருமையும் விரும்பி மனிதர் சாட்சியாகக் காக்கப்படுவ தன்று. எங்குமுள்ள இறைவனைச் சாட்சியாக வைத்து உள்ளும், புறம்பும், எஞ்ஞான் றும், எவ்விடத்தும் ஒன்று போலவே பாதுகாக்கத்தக்கது.

11. சிற்றின்பம் சிறிது; பேரின்பம் பெரிது. இறைவனிடத்தே பதிந்த அன் புக்காகச் சிற்றின்பந் துறந்தவர் என்று மழியாப் பேரின்ப மடைகுவர்.

2. திருநீலகண்ட நாயனார் புராணம் முற்றும்.

3. இயற்பகை நாயனார் புராணம்

தொகை

" இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன் "—திருத்தொண்டத்தொகை

வகை

" செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சிவன்றவனாய்க்
கைதவம் பேசி"நின் காதலி யைத்தரு" கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட் டினத்து ளியற்பகையே."
—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

வேறு

404. சென்னி வெண்குடை நீடந பாயன்
திருக்கு லம்புகழ்பெ ருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர வியல்பினி லளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம். க

புராணம்:—இயற்பகை என்ற பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்த முறையானே தில்லைவாழந்தணர் சருக்கத்திலே மூன்றாவதாய் இயற்பகை நாயனார் சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:—இல்லையே என்னாத - தம்மிடத்துள்ளதெதனையும் சிவபெருமானது அடியவர் வேண்டினால் கொடுப்பதில்லை என்று சொல்லாத. இதன் விரிவு 405, 409,

410-ம் பாட்டுக்களிற் காண்க. இல்லை என்னாத தன்மையே விரும்பினவர் என்றலுமாம். 411-ம் பாட்டிற் காண்க. இதுவே இச்சரித நிகழ்ச்சியும் உள்ளுறையுமாம். **இயற்பகைக்கும்** - இயற்பகை என்ற பெயருடைய பெரியவர்க்கும். உம்மை எண்ணும்மை. முன் துதித்தவர்க்கேயன்றி இவர்க்கும் என எச்சவும்மையுமாம். மேல் வரும் பிறவும் இவ்வாறே காண்க.

வகை:—**செய் தவர்**-சிவபெருமானுக்கு அடிமை செய்யும் தவமுடையார். தவம் செய்வார் சிவனடியார்கள். இதனையே "மறைச் சிலம்படியார் மிக்க சீரடியார்கள்"(405), "கொன்றைவார் சடையா னடியார்கள்" (409) என்று விரிநூல் விரித்துக் கூறும். **வேண்டிய தியாதுங் கோடுப்ப** - தம்பால் அடியார் வேண்டுவ தெதுவாயினும் அதனை மறாது கொடுத்து வருவாராக. **யாதும்** - முற்றும்மை. **தவனாய்** - நீறுபூசி அடியவர் வேடம் பூண்டவனாய். "தூயநீறு பொன் மேனியில் விளங்க" (407) என்பது விரிநூல். **கைதவம்** - கீழ்மைச் சொல். பெரியோர் பேசத் தகாத வார்த்தை. பொய்ம்மொழி யென்றலுமாம். "கைதவ மறையோர்" (409) என்பது விரிநூல். "கைதவம் பேச மாட்டேன் என்று கைதவனுஞ் சொன்னான்" (திருஞான - புரா - 749). "**நின் காதலியைத் தருக**" என்றதுவே கைதவம் எனப்பெற்றது. "மன்னு காதலுன் மனைவியை வேண்டி வந்தது இங்கென" (410) என்றது விரிநூல். **வாய்ந்த பெரும் புகழ் வந்து எய்திய** - பொருந்திய பெரிய புகழானது தேடி வந்து அடைந்த. தனக்குத் தக்க இடமென்று சேர்ந்த. எய்திய பட்டினம் எனவும், எய்திய இயற்பகை எனவும் இருவகையும் இயைக்கத் தக்கது. இயற்பகையாருக்கு வந்தெய்திய புகழாவது "செயற்கருஞ் செய்கை செய்த தீரன்" (432) என்று இறைவனாற் புகழ்ந்தழைக்கப் பெறுதல். காவிரிக்கும், பட்டினத்துக்குமுரிய புகழ் இப்புராணம் முதற் பாட்டிற் காண்க.

பேரும் பண்பும் சரித நிகழ்ச்சிக் குறிப்பும் முதனூல் பேசிற்று. ஊரும், பேரும், தன்மையும், சரித நிகழ்ச்சியும், பயனும் வகைநூல் தொகுத்துக் கூறிற்று. இவற்றை விரிநூல் விரித்துரைத்தவாறு புராணத்துட் கண்டு கொள்க.

404. **(இ - ள்)** சென்னி...வயல்-சோழ மரபிலே நீடுகின்ற வெண்கொற்றக்குடையுடைய அநபாயச் சக்கரவர்த்தியினது திருக்குலத்து முன்னோர்களாகிய சோழ அரசர்கள் புகழ்பெருக்கிய சிறப்பில் நிலைத்த பழைய புகழுடைய மருதத்தைச் சார்ந்த நீர்நாட்டிலே உள்ள வயல்களில், வளம்தர...தீர்த்தம் - வளங்கள் பெருகும்படி இயல்பாயளித்த காவிரியின் மிகுந்த நீர் பாய்தலாலே கடலையும் தூயதாகச் செய்யும் ஒரு நல்ல நீண்ட பெரிய தீர்த்தத்தை; முன்...நகரம் - முன்னே பெற்றுடையது வளத்தினையுடைய புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம் என்னும் நகரமாம்.

(வி - ரை) சேன்னி - சோழர்களின் மரபுப் பெயர். "புனிதர் பொற்றாள் சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கார்" (எறிபத்தர் புராணம்-53.) என்றது காண்க. **சேன்னி** - தலை - எனக் கொண்டு முடியின் மீது குடைநீடு என்று கூட்டியுரைப்பாருமுண்டு. குடை சென்னிமீதன்றி நிழற்றாதாதலின் மரபுப் பெயராய்க் கூறலே சிறப்பாம். "சென்னிநீ டநபாயன்" (புகழ்ச்சோழர் புராணம் - 8) காண்க.

வேண்குடை நீடு அநபாயன் திருக்குலம் - வெண்குடையும் செங்கோலும் அரசாணையின் அடையாளங்கள். **நீடு**-நிகழ்காலத்தில் நீடிச் சிறக்க இருக்கின்ற. இப்புராணம் பாடுவித்த நன்றியின் பொருட்டு என்றும் நீடும் என அரசனை வாழ்த்தியவாறுமாயிற்று. வடநூலார் உபகார சுமிருதி என்பர். **அநபாயன் திருக்குலம்** - நிகழ்காலத்திற் கண்டு அனுபவிக்கும் பெரியாரைக் கொண்டு, அவர் தம் முன்னோரைச் சிறக்க அறிவித்தல் ஒரு சிறப்புவகை. "மகன் றந்தைக் காற்று முதவி, யிவன் றந்தை,என்னோற்றான்கொல் லென்னுஞ் சொல்" என்றார் நாயனார். இப்புராணத்தினுள்ளே சோழ அரசரைக் குறிக்கும்போது இவ்வாறு அநபாயரைச் சுட்டி அவர் தம் மரபின் முந்தையோர் எனக் கூறுவது ஆசிரியர் வழக்கு.

காவிரி சங்கமத்துறை
—பாட்டு - 404. பக்கம் - 497.



திருச்சாய்க்காடு - கோயில்
—பாட்டு - 429. பக்கம் - 530.

முன்னரும் "சீர் அநபாயன் வழி முதல்" (98) என்றதும் அதனுரையும் காண்க. இங்கு நீடு அநபாயன் என்றது போல முன்னரும் "மன்னுசீர் அநபாயன்" என்றார்.

"மன்னிய அநபா யன்சீர் மரபின்மா நகர மாகும்"—எறிபத்தர் புராணம் - 2.

"மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதியைந்து"—சண்டீசர் புராணம் - 8.

"நீடநபாயன் திருக்குலத்து வழிமுதலோர்"—புகழ்ச்சோழர் புராணம் - 8.

"அநபாயன், முந்தைவருங் குலமுதலோன்"—கோச் - சோழர் - புரா - 14.

எனப் பின்னரும் இவ்வாறே கூறுவனவும் காண்க.

புகழ் பெருக்கிய சிறப்பின் மன்னு தொல்புகழ் - **மன்னு** - நிலைபெற்ற. **தொல்**- பழைமையாகிய. இந்நாடு பழைமையாகிய மிக்க புகழினை யுடையது; அதனை இத்திருக் குலம் பெருகச் செய்தது; இது அந்நாட்டுக்குரிய சிறப்பாம் என்றபடி. குலம் நாட்டின் புகழ்பெருக்குத லாவது நாட்டினை அறத்தின் வழி ஆணை செலுத்திச் சிவபெருமான் திறத்திலே நிற்கச் செய்தல்.

"பொன்னி வளம் பெருக வளவர் குலம் பெருக்கும்"—எனவும்,

"தங்கள் பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினரை"—எனவும்,

வரும் மங்கையர்க்கரசியார் புராணமும், பிறவும் காண்க.

மருத நீர் நாட்டு வயல் - நீர் நாட்டு மருத வயல் என்க. **நீர்நாடு** என்பதைச் சோழ நாட்டுக்குச் சிறப்பாய் வழங்குவர் ஆசிரியர். "செங்கண் வளவன் பிறந்த சீர்நாடு நீர் நாடு" என்றது காண்க. இந்நாட்டிலே உள்ள நிலம் பலவற்றினும் மருதத்திணையின் பாற்பட்ட வயல்கள் என்பதாம்.

வயல் வளந்தர இயல்பினி னளித்து - **வயல்** - வயல்கள். சாதி யொருமை. **தர** - தரும்படியாக. **இயல்பினின்** - வேறு செயற்கையாகிய முயற்சிகளின்றித் தன் னியல்பிலே. "மண்டுநீர் வயலுட்புக" (60) - என்ற விடத்துங்காண்க. காவிரி யாற்றிலிருந்து நேர் கிளைகளாய்க் கால்கள் பிரிந்து பாய்வது இதன் சிறப்பியல்பாம் என்பார் **இயல்பினின்** என்றார். **இயல்பினின்** என்பது காலமும் கிரமமும் தவறாத இயல்புமாம். **அளித்து** - கருணையினாலே கொடுத்து என்ற குறிப்புமாம்.

"செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது;
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது"—(53)

என்றதும் காண்க. **அளித்து** - காலமும் இடமும் தகுதியும் நோக்கி யளிக்கும் நிதானங் குறித்தது. "தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர்போல" - என்ற திரு விளையாடற் புராணம் காண்க. **பாய்ந்து** - மிக்கநீர் வடியாமல் அங்குத் தங்குமாயின் பயிர்க்குத் தீமை பயக்குமாதலின் அது தங்காது வெளிப்பாயும் விரைவு குறிக்கப் **பாய்ந்து** என்ற நயமுங் காண்க. **மிக்கநீர்** - அளித்து மீந்த - எஞ்சிய நீர். மழைக் காலத்து நீர்ப்பெருக்கு மிகும் வெள்ளநீர் என்றலுமாம். வெள்ளமிகும் நாள்களிலே தான் காவிரிநீர் கடலுட்பாய்வது. அதுவும் மேட்டூர் அணை - முதலிய தேக்கங்கள் உண்டாகிய இந்நாளில் அரிதாயிற்று. எனவே, பாசன வடிகாலாகக் காவிரியின் வடிந்த மிகுதி நீரே கடலொடு கலக்கும் என்க. "மத்த யானையின் கோடும்வண் பீலியும் வாரித், தத்து நீர்ப்பொன்னி சாகர மேவுசாய்க் காடே"—என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும் காண்க. **பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக்குவதோர் நன்னெடும் பெருந்தீர்த்தம்** - **பாய்ந்து** - ஆக்குவதோர் - தீர்த்தம் என்க. **பாய்ந்து** - பாய்தலால்; **புணரி** - கடல். எல்லா ஆறுகளும் இதன்பால் வந்து சேர்வதால் - புணர்வதால் -

புணரி எனப்படும். "நதீநாம் சாகரோகதி:" என்பர் வடநூலார். எல்லாத் தீர்த்தங் களுக்கும் பிறப்பிடமாக உள்ளது என்பதுமாம்.

"பெருந்தீர்த்த மெவற்றினுக்கும் பிறப்பிடமாய்" (திருஞான - புரா - 58) என்றதும் காண்க. "அந்த மாதி" என்பது சாத்திர உண்மை. யாது யாண்டு ஒடுங்கு கின்றதோ அஃது ஆண்டுப் பிறக்கும் என்க. **புணரி தன்னையும்** - உயர்வு சிறப்பும்மை. "கடல் பெரிது மண்ணீரு மாகாது" என்றபடிக்கொண்டு இழிவு சிறப்பும்மையாக்கி யுரைத்தலுமாம். **புனிதமாக்குவது** - விருத்திராசுர சம்பந்தத்தில் இந்திரனுக்குவந்த பழியின் சாபவிமோசனமாக அப்பழியை நான்கு கூறுக்கவே, அதில் ஒரு கூறு நீரில் நுரையாகப் போந்தது என்பது புராண வரலாறு. அன்றியும் கடல்நீர் மிக்க உவர்ப்பி னாலும் குடிக்கவும் குளிக்கவும் தகுதியற்றதாம். இவ்வாறு புனிதமற்றதாதலின், குறித்த சில புண்ணிய காலங்களில்மட்டும் கடல்நீர் குளிக்கத்தக்கதாம்.

"மாசிக் கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவார முதலியன காண்க. ஆயின் இங்குக் காவிரியின் மிக்க நீர் பாய்வத னாலே அந்த இடத்திலே காவிரி சங்க முகத்துறை எனப் பேர்பெற்றுப் புனிதமாகிக் கடல், எப்போதும் நீராடும் பெரும் புண்ணிய தீர்த்தமாயிற்று. ஆதலின் புனிதமாக்கு வது என்றார். உடற்றூய்மைக்கும் உதவாத கடல், இதன் சம்பந்தத்தால் உயிரையும் தூய்மை செய்யத்தக்கதாயிற்று என்க.

நன் - நெடும் - பெரும் - நன்மை - நெடுமை - பெருமை என்ற மூன்று பண்புங் கொண்ட. **தீர்த்தம்** - தூய்மை செய்வது என்பது பொருள். தீர்த்தன் - புனிதமாக்கு பவன் சிவபெருமான். "நாமார்த்தாடும் தீர்த்தன்"—திருவாசகம்.

முன்னுடைய - முகப்பிலே கொண்ட. முதன்மையாகக் கொண்ட.

"மேதினிக்கு வளநிறைத்தே, கடல் வயிறு நிறையாத காவிரி"—(திருமூலர் புரா ணம் - 8). என்று பின்னர் ஆசிரியர் கூறுவதனோடு இங்குக் கூறிய கருத்து முரணுமோ எனின், முரணாது: கடல் வயிறு நிறையத் தராது உலகுக்குபகரித்த **மிக்கநீர்** பாய்ந்து புனிதமாக்குவது என்று கூறுதலானென்க. மிக்க நீரையும் வீணாக்காது உபகரிக்கும் காவிரியின் சிறப்புக் கருதப்பட்டது.

இப்பாட்டினால் இப்புராணத்திற்குரிய நாட்டுச் சிறப்பு, யாற்றுச் சிறப்பு, நகரச் சிறப்பு, நகரஅமைப்பு முதலிய பலவும் கூறிப்போந்த அழகு கண்டு களிக்கத்தக்கது.

வளம் புகார் - எல்லா வளத்தானும் மிகுந்த காவிரிப்பூம்பட்டினம். இது சிலப் பதிகாரம் முதலிய பழந் தமிழ் இலக்கியங்களிற் புகழ்ந்து பாராட்டப் பெற்றது. விரிவு ஆண்டுக் காண்க. தமிழ் அரசும் நாகரிகமும் மிக்குச் சிறந்த மிகப் பழங்காலத்து மிக்க பெருமையுடன் விளங்கியது. இதன் பழைய நாகரிகத்தை நோக்க இந்நாள் நவீன நாக ரிகங்களும் பின்னிடுவனவாம் என்பர். பூம்புகார்ச் சாய்க்காடு - தலவிசேடங் காண்க. நாட்டு - நலம் - சிறந்தது - நகரம் - என்று கூட்டி யுரைத்தலுமாம். 1

405. அக்கு லப்பதிக் குடிமுதல் வணிகர்;
அளவில் செல்வத்து வளமையி னமைந்தார்;
செக்கர் வெண்பிறைச் சடையவ ரடிமைத்
திறத்தின் மிக்கவர்; மறைச்சிலம் படியார்
மிக்க சீரடி யார்கள்யா ரெனினும்
வேண்டும் யாவையு மில்லையேன் னாதே
இக்க டற்படி நிகழமுன் கொடுக்கு
மியல்பி னின்றவர்; உலகியற் பகையார். உ

(இ - ள்) அக்குலப்பதி...வணிகர் - அந்த வளம்பதியிலே நிலைத்து வாழ்வாராகிய முதல் வணிக மரபினர் (இப்புராணத்திற்குரிய நாயனார்); அளவில்...அமைந்தார் - அள

வில்லாத செல்வத்தினால் வந்த எல்லா வளங்களையும் உடையவரானார்; செக்கர்...மிக்கவர் - சிவந்த மாலைக் காலத்தில் விளங்கும் பிறைச் சந்திரனைச் சூடிய சடையையுடைய சிவபெருமானுடைய அடிமைத் திறத்திற் சிறந்தவர்; மறைச்சிலம்பு...நின்றவர் - வேதங்களாகிய சிலம்புகள் ஒலிக்கும் திருவடிகளை யுடையார் பெரும் சிறப்புடைய அடியவர்கள் யாவரேயாயினும், அவர்கள் வேண்டியவை எவையேயாயினும் **இல்லையென்னாதே** கடல் சூழ்ந்த இந்த உலகிலே விளக்கமுற முன்னே கொடுக்கும் தன்மையிலே நிலைத்து நின்றவர்; உலகியற்பகையார்-இவ்வுலகிலே **இயற்பகையார்** என்ற திருநாமமுடையவர்.

(வி - ரை) **குலப்பதி** - பெருமையும் வளமும் மிகுந்த நகரம். "குலவெஞ்சிலையால்" - திருஞான - தேவா - தக்கேசி - திருப்பழனம் - 5, "குலவரையே சிலையாக"- திருநா - தேவா - காந்தாரம் - திருவேகம்பம் - 10. முதலியவை காண்க. மேலே **வளம் புகார்** என்றதும் காண்க. அப்பதிக் குலக்குடி முதல் - என்று கூட்டியுரைப்பதுமொன்று.

வணிகர்களாவார் நற்குடிநாற்பத் தெண்ணாயிரவர். அவர்கள் இப்பர், கவிப்பர், பெருங்குடிவாணிபர் என மூன்று வகையினர். இவ்வகையிலே மூன்றாவதுவகையினர்.

அளவில் செல்வம் - உலகச் செல்வம் சிவனடிமைத்திறத்தில் ஒழுகாதவிடத்திற் செல்வமாகாது; இன்னலுக்கே யேதுவாகும். ஆதலின் இதனையடுத்துச் செக்கர்... மிக்கவர் என உடன் சேர்த்துக் கூறினார். அடியாரிடத்து அன்பு செய்யாக்கால் "ஈசனுக் கன்பிலார் அடியவர்க்கன் பில்லார்"—(சிவஞான சித்தியார் 12 - ம் சூத்திரம் - 2) என்றபடி ஈசனிடத்தும் அன்பு இல்லையாய் முடியும்; ஆதலின் அடியார்பா லன்பும் அடுத்து வைத்தோதினார்.

செல்வத்து வளமையினமைந்தார் - செல்வங்களின் எல்லாவகையும் தொகையும் அடங்கச் **செல்வத்தினமைந்தார்** என்றதனோடமையாது **வளமையின்** என்றார். செல்வம் படைத்தோர்க்கு அடிமைத்திறம் அமைதல் அருமையாதலின் இதனை முன்னர்க் கூறினார். **அமைந்தாராயினும் மிக்கவர்** என்க.

செக்கர் - சிவந்த அந்திமாலை. அது செக்கரிற்றோன்றும் வெள்ளிய பிறை எனவும், செக்கரே போலும் வெண்பிறை சூடிய சடை எனவும் இருவழியும் கூட்டி உரைக்க நின்றது. "மாலையின், றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை" என்பது அற்புதத்திருவந்தாதி. **அடிமைத்திறத்தின் மிக்கவர்** - இவ்வாறு மிக்கவகையை மேலே **முன் கொடுக்கு மியல்பி னின்றவர்** என விரித்துக் கூறினார்.

மறைச் சிலம்படியார் - வேதங்களை இறைவன் பாதங்களிற் சிலம்புகளாக ஒலிப்பன என்பது வழக்கு. வேதங்கள் இறைவனிலக்கணங்களையே தம்முட்கொண்டு ஒலிப்பன என்பது கருத்து. சிலம்படியாரது சீரடியார்கள் - என ஆறும் வேற்றுமையுருபு விரித்துரைக்க. இச்சரித நிகழ்ச்சி குறித்துச் சிலம்படியாரோ அன்றி அவரது அடியார்களோ இவர்களில் யாவரேனும் என்றுரைத்தலும் ஆம்.

யாவரேனும் - குலம், குறி, குணம் முதலிய பேதங்காணாது பொது வகையால் எல்லா அடியாரிடமும் செல்லும் அன்புபற்றி முற்றும்மை தந்து **யாரேனும்** என்றார்.

"எவரேனுந் தாமாக விலாடத் திட்டதிருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி"

என்பது திருத்தாண்டகம்.

"நலமில ராக நலமதுண் டாக நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாக" என்றும்,

"கணங்களாய் வரினுந் தமியராய் வரினும் மடியவர் தங்களைக் கண்டாற்
குணங்கொடு பணியும்" என்றும்,

இன்னும் பலவாறும் ஆளுடைய பிள்ளையார் தமது திருவாலவாய்த் தேவாரத்திலே இவ்வுண்மையை விரித்தருளினர்.

வேண்டும் யாவையும் - வேண்டுவனவற்றைக் கொடுத்தலே சிறப்பு ; விரும்பி வேண்டாத பொருள் தருதல் எத்துணைப் பெரிதாயினும் அது சிறந்த கொடையாகாது என்பர் பெரியோர். இதனை "நாடிய பொருள்" என்ற இடத்துத் தமது கம்ப ராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தியில் ஆசிரியர் எமது மாதவச் சிவஞான சுவாமிகள் விரித்தது காண்க. "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"— என்ற திருத்தாண்டகமுங் காண்க. **யாவையும்** - விரும்பியன வெவையாயினும். கொடுக்கத்தக்கது, தகாதது என்பதின்றி. இது பிற்சரிதக்குறிப்பு.

இல்லை என்னுதே இக்கடற்படி நிகழ முன் கொடுக்கும் - இது, "இல்லையே என்னாத" - என்ற முதனூலின் விரிவுரையாம். இக்கடற்படி - கடல் சூழ்ந்த இந்த நிலவுலகம். **நிகழ** - சிவதருமவியல் நின்று நிலவுமாறு. "அடியாரவர் வான்புகழ் நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்" - என்றதும் காண்க. **முன் கொடுக்கும் - முன்** - வேண்டுவார் முன்பு-இடங்குறித்தது. காலங்குறித்ததாகக் கொண்டு, அவர் வேண்டு முன்னரே குறிப்பறிந்து கொடுக்கும் என்றலுமாம். "யானே முன் செய்குற்றேவல், ஒன்றிது தன்னை யென்னை யுடையவ ரருளிச் செய்ய நின்றது பிழையாம்"—(414), எனப் பின்னர்க் கூறும் வரலாற்றில் இதன் விரிவு காண்க.

இயல்பின் நின்றவர் - இது தாமாக முயன்று மேற்கொண்டு நின்றதோர் ஒழுக்கம் என்னலாகாது, இஃதவரியல்பு என்னும்படி, அதில் நிலைத்து நின்றவர். இஃதவர் பெயரின் பொருள் விரித்தவாறு.

உலகியற் பகையார் - உலகில் விளங்கிய **இயற்பகையார்** என்ற திருப்பெயர் பூண்டவர். அவர் நின்றது இயல்பு - ஆயின் அந்நிலையை உலகம் இயலுக்குப் பகையாகக் கருதியது என்பது குறிப்பு.

இயற்பகையார் - இது அவரது இயற்பெயர். காரண இடுகுறியாய் நிகழ்ந்தது போலும். இஃதவரது இயற்பெயரென்பது பின்னர் "இயற்பகை பித்தனானல்" (416); "இயற்பகை வெல்லும்" - (419); "இயற்பகை முனிவா வோலம்" - (432); என்பன வாதி வழக்குக்களாலறியலாம். எல்லா உடைமைகளையும் எனது எனது எனக்கொள்ளும் உலக இயல்புக்குப் பகைமையுடையார் எனவும், எல்லாவற்றையும் எம்பிரான் அடியவருடைமை எனக் கொள்ளும் உண்மையியலுக்குப் பகைமையில்லார் எனவும், உடன்பாட்டினும் எதிர்மறையினும் பொருந்தும்படி **இயற்பகையார்** என்றார். 2

406. ஆறு சூடிய வையர்மெய் யடிமை
யளவி லாததோ ருளநிறை யருளா
னீறு சேர்திரு மேனியர் மனத்து
நினைத்த யாவையும் வினைப்பட முடித்து
மாறி லாதநன் னெறியினில் விளங்கு
மனைய றம்புரி மகிழ்ச்சியின் வந்த
பேறெ லாமவ ரேவின செய்யும்
பெருமை யேயெனப் பேணிவாழ் நாளில், ௩

407. ஆயு நுண்பொரு ளாகியும் வெளியே
யம்ப லத்துநின் றாடுவா ரும்பர்
நாய கிக்குமஃ தறியவோ? பிரியா
நங்கை தானறி யாமையோ? வறியோந்

தூய நீறுபொன் மேனியில் விளங்கத்
தூர்த்த வேடமுந் தோன்றவே தியராய்
மாய வண்ணமே கொண்டுதந் தொண்டர்
மறுத வண்ணமுங் காட்டுவான் வந்தார். ச

406. (இ - ள்) ஆறு...முடித்து - கங்கையைச் சடையிற்சூடிய இறைவனது உண்மையாகிய அடிமைத் திறத்திலே அளவுபடாததாய் உள்ளத்திலே அருள் நிறைதலினாலே, நீறு பொருந்திய திருமேனியையுடைய அடியவர்கள் தமது மனத்திலே எண்ணிய எல்லாவற்றையும் செய்கையிலே நிறைவேற்றிக் கொடுத்து; மாறிலாத...என - மாறுபெறாத நல்வழியிற் சிறந்த இல்லறத்தின் வாழ்கின்றதால்வருகின்ற சிறப்புக்களெல்லாம் அவ்வடியவர்கள் இடுகின்ற ஏவல் எவையோ அவற்றைச் செய்து முடிக்கும் பெருமையேயாம் என்று கொண்டு; பேணி வாழ்நாளில் - அக்கொள்கையின் வழியினின்று தவறுமற் பாதுகாத்து வாழ்ந்து வருகின்ற நாளிலே; ந

407. (இ - ள்) ஆயும்...ஆடுவார் - சிவஞானத்தானாராய்தற்குரிய மிக்க நுண்பொருளே யாகியும் யாவருங் காண வெளிப்படையாய்த் திருச்சிற்றம்பலத்தில் நின்று ஆடுகின்ற இறைவர்; உம்பர் நாயகிக்கும்...அறியோம்-மேலாந் தலத்தில் விளங்குகின்ற தமது நாயகியாராகிய உமாதேவியார் தாம் இவ்வாறு கோலங்கொண்டு வந்து செய்யும் செயலை அறியும்படியாகவோ?; அல்லது அவர் அதனை அறியாத வகையிலோ?; இன்னவாறென்று நாம் அறியோம்; தூய...வேதியராய் - தூயதாகிய திருநீறு தமது பொன்மேனியிலே விளக்கம் பெறவும், (அதற்கு மாறாகத்) தூர்த்த வேடமும் அத்திருமேனியிலே வெளிப்படையாய்த் தோன்றவும், ஒரு வேதியராக உருவங் கொண்டு; மாயை...வந்தார்-தமது மறைப்பினிற் போந்த உருவத்தினையே மேற்கொண்டு (உலகத்தார் காண அதனைக் காட்டுதலே யன்றித்) தமது தொண்டராகிய இயற்பகையார் அடியவர் வேண்டியவை எவையேயாயினும் இல்லை யென்னுது கொடுக்கும் இயல்பினையும் காட்டும் பொருட்டு வந்தார். ச

406. (வி - ரை) **ஆறு சூடிய** - சடையில் என்பது வருவித்துரைக்க. ஆறு சூடுதல் உயிர்கள் பால் வைத்த கருணையைக் காட்டுவது. "ஆறு தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்" என்றதற்குக் கங்கையின் செருக்கடக்கிப் பிறையை வாழ்வித்த பெருமான் என்ற பொழிப்புரை காண்க.

ஐயர் அடிமை - ஐயரது அடிமைத்திறம் என ஆறும் வேற்றுமை யுருபு விரிக்க. மெய்யடிமை - உளத்தில் - ஐயர் நிறைக்கும் அருள் எனக் கூட்டியுரைப்பினு மமையும்.

ஐயர் - பெருமை யுடையவர்.

மெய் அடிமை அளவிலாததோர் உளநிறை அருள் - **மெய் அடிமை** - எவ்வித வஞ்சனையுமின்றி உண்மையாகிய அடிமை செய்தல். யாவரும் அடிமைகளேயாயினும் அதனை நினைப்பதில்லை. நான் என்பதனை முற்றும் அவர்க்கே ஆளாகச் செய்யும் அடிமைத் திறம்.

அளவிலாததோர் உளம் - இவ்வடிமைத் திறம் இம்மட்டிற் செல்லும், இவ்வளவிற்கு மேற் செல்லாது என்றதொரு அளவுட்படாது எல்லையின்றிச் செல்கின்ற மனப்பான்மை. "அளவு படாததோ ரன்போ டையுா றடைகின்ற போது" என்று அப்பர் சுவாமிகள் அருளியதும் காண்க.

நிறை அருள் - அன்பினாலே அடிமைத் திறம் வரும். அடிமை அளவின்றிச் செல்லுதலாலே அது அருளாய் நிறையும். அடிமையால் அருள்நிறை எனக் காரணகாரியமாகக் கொள்க. "அருளென்னும் அன்பீன் குழவி" என்றார் நாயனார். ஆதலின் நிறை அன்பென்னாது **நிறை அருள்** என்றார். **நிறை அருளால்** - அருள் நிறைதலால் - என மாற்றி யுரைக்க.

அருளால் - முடித்து எனக் கூட்டுக. அவ்வாறு முடித்தற்கும் பேறெலாம் பெருமையே எனப் பேணிவாழ்தற்கும் அருள் நிறைந்ததே காரணமாம்என்பதாயிற்று.

அருளால் நீறுசேர்திருமேனியர் - என்று கூட்டி, அருளின் வழி நின்று நீறுபூசிய மேனியராகிய அடியவர் என்றுரைப்பது மொன்று.

மேனியர்தம் மனத்து அருளால் நினைத்த - என்று கூட்டி, தமக்கென்று ஒன்றும் கருதாது இறைவன்றிருவருள் வழியே நிற்கின்ற அடியவர்கள் அவ்வருள் எழுவித்த குறிப்பின்படி நினைத்த என்றுரைத்தலுமாம்.

நீறுசேர்திருமேனியர் - மாறின்றித் திருநீறு தன்னியல்பாகப் பொருந்திய விளக்க முற்ற மேனி.

சேர்தல் - இயல்பிற் பொருந்துதல் - மேனியின் இயலும் நீற்றினியல்பும் தம்மிற் பொருந்துதலாம். "நீறுசேர்வதோர் மேனியர்" (மேகராகக்குறிஞ்சி - திருப்பாய்த் துறை - 1) என்று ஆளுடைய பிள்ளையார் ஆண்டவனுக்குச் சொல்லிய திருவாக்கினை ஆசிரியர் இங்கு அடியவர்க்காக்கி எடுத்தாண்ட அழகு கண்டு களிக்க. ஆண்டவனே இங்கு அடியவர் வேடத்தாலணையும் சரிதக்குறிப்பாம்.

மனத்து நினைத்த - தூயநீறு சேர்ந்த மேனியுள் நின்ற மனமும் தூயதாம்; அதனுள் நினைத்தவை யாவும் தூயனவாம் என்பது குறிப்பு. "பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்" (141) என முன்னர்க் கூறிய இலக்கணங் காண்க.

யாவையும்-முற்றும்மை. நினைத்தவை எவையேயாயினும். சரிதநிகழ்ச்சிக்குறிப்பு.

வினைப்பட முடித்து - நினைத்தவை தொழிற்படுமாறு செய்து கொடுத்து; எண்ணம்-தொழிலாக-செயலாக மாறும்படிச் செய்து; எண்ணம் அடியாருள்ளத்தே நிகழ்ந்தது, உடனே அது இவரிடத்துத் தொழிலாய்ப் புறத்தே முற்றியது என்னும்படி. அவர் நினைப்பும் இவர் செயலும் ஒன்றேயாய் விளைய. ஒற்றுமையும் விரைவும் குறித்தது.

மாறிலாத - ஒப்பற்ற. மறுக்கமுடியாத என்றலுமாம். நன்னெறியினில்வந்த மனையறம் - இல்லறத்திற்கு இலக்கணமாய் நூல்களில் விதித்த வழிகளில் தவறாது நடந்து வரும் இல்வாழ்க்கை. இதனைத் திருக்குறள் முதலிய நீதிநூல்களுட்காண்க. மனையறம்-மகிழ்ச்சியின் வந்த பேறெலாம்.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு - நல்லாற்றி னின்ற துணை"-

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு-மில்வாழ்வா னென்பான் றுணை"-

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
ஐம்புலத்தா றோம்பல் தலை"—திருக்குறள்.

என்பனவாதி நியதிகளின்படி நடத்தலால் மகிழ்ச்சியுளதாம். அதனால் விளையும் பயனும் பலவாம். இவையே பேறு எனப்பட்டது. மகிழ்ச்சியாவது ஈத்துவக்குமின்பமும் - மனைவி மக்கள் ஒக்கல் முதலியோரால் வருவனவுமாம்.

வந்த பேறெலாம் - செய்யும் பெருமையேயாம். இப்பெருமையே பெரிதாவதன்றி ஏனைய வெவையும் பொருளன்று என்று கூட்டிக்கொள்க.

பேணி - அக்கொள்கை தவறாது பாதுகாத்து. மேலே நீதிநூல்களிற் கூறிய மனையற நியதிகளும் இல்வாழ்க்கையின் பயனேயாயினும் இவை பசுதர்மங்களேயாம்; சாமான்யமானவையும் அழியக்கூடியவையும் ஆகிய தேவ போகங்களையே தரும்; பொன்விலங்கே போல நின்று முத்திபெறுதலைத் தடுக்கு மியல்புடையன; ஆதலின் இவை பந்தமேயாம்; எனவே, இவை சாதாரண பலனையாயொழிவன. இவ்வாறன்றி அடியார்பணியோ எனின் பதிபுண்ணியமாய் ஞானத்திற் கேதுவாய்ச் சிவானுபவந் தந்து சிவசாயுச்சிய நித்திய இன்பத்துக் கேதுவாம். ஆதலின் பேறெலாம் பெருமையே எனப் பேணினர் என்பது கருத்து. அவர் ஏவின - அவ்வடியவர்களால் ஏவப் பெற்றன. அவர் - முன்சொன்ன நீறுசேர் திருமேனியரைச் சுட்டியது. ஏவின-

செயப்பாட்டு வினைப்பொருளில்வந்தது. அடியார்பணி அடியவர்க்காதலோடு ஆண்டானுக்குமாவன ஆதலின் அதனையே பேணினார் என்க. மிக்க சீர் அடியார் - (405) என மேற்பாட்டிற் கூறியதும் காண்க.

இப்பாட்டிற்கு இயற்பகையார் என்ற எழுவாய் வருவித்துரைக்க.

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

வினைப்படி—விளங்க—என்பனவும் பாடங்கள். 3

407. (வி - ரை) ஆயுநுண்பொருளாகியும் - ஆய்ந்து ஆய்ந்து அறியத்தக்க நுண்பொருளாய் எஞ்சிச் செல்லும் தன்மையுடையாராகியும். ஆகியும் வெளியே ஆடுவார் என்று கூட்டுக.

"அணோ ரணீயாம்"—வேதம்.

"பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிபே"—திருவாசகம்

"அணுவோ ரண்டமாஞ் சிறுமை கொண்டு"—திருவிசைப்பா.

என்பன தமிழ் வேதம்.

"அணுக்க ளெல்லாம் அண்டங் களாக"—திருவிளையாடற் புராணம்.

ஆயும்-இஃது ஆணவ சொரூபமான யான் எனது என உயிரறிவுகொண்டு,ஆராய்கின்றேன் - அறிகின்றேன் - என்னும் ஆராய்ச்சியன்று. ஆணவத்தை முற்றிலும் அடிப்படுத்தி அவன் அறிவிக்க அறிகின்றேன் - என்னும் பரஞான சிற்சத்தி ஒளியின் உதவியால் அறிகின்ற ஆராய்ச்சி இங்குக் கருதப்பெற்றது.

"அருளும் வண்ணமு மாதி மாண்பும் - கேட்பான் புகிலள வில்லை",
"எதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச் - சோதிக்க வேண்டா"
என்னும் திருப்பாசுரங்களின் விரிவுரையில்,
"ஓது மெல்லை யுலப்பில வாதலின் - யாது மாராய்ச்சி யில்லை"—திருஞான-புரா-833,
"இன்ன தன்மை யேது எடுத்துக்காட் - டன்ன வாற்று ளளப்பிலன்"—ஷை - 835.

என்று ஆசிரியர் அருளியமை காண்க. ஆய்தல்...உள்ளதனுணுக்கம் என்று தொல்காப்பியர் கூறலின் மிக்க நுண் பொருளாகியும் என்றுரைத்தலுமாம்.

ஆகியும் - ஆடுவார் - மனம் வாக்குகளுக் கெட்டாததாயும் சிவஞானத்தால் அறியப்பெறுவதாயும் உள்ள நுண் பொருளேயாயினும் திருவம்பலத்தினிடத்தே தாமாக வெளிப்பட்டு எல்லா உயிர்களும் உய்யுமாறு அருட் கூத்தாடுவார். "உலகெலா முணர்ந்தோதற் கரியவன்...அம்பலத் தாடுவான்" என இப்புராணத் தொடக்கத்திற் கூறியது காண்க. "அரங்கிடை நூலறிவாள ரறியப்படாத தோர்கூத்து"—(திருவதிகை - காந்தாரம்-6.) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமுங் காண்க.

ஆராய்வார் காணுமை நுண் பொருளாகியும், அங்ஙனம் ஆராய்ச்சி செய்யாது பணிவார் காண வெளிப்பட அம்பலத்து ஆடுவார் என்று உரை கூறுவர் ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள். உம்பர் நாயகிக்கும்...அறியோம் - இது கவிக்கூற்று. இங்கு இறைவன் திருமேனி தாங்கிவரும் இயல்பினைப்பற்றி முன் ஆயுநுண் பொருளாகியும் என்ற தற்கேற்ப ஓர் ஆராய்ச்சி செய்கின்றார். இவர் திருமேனி தாங்கி வருவதில் ஒன்றற்கொன்று மாறுபட்ட இவ்விரண்டியல்புகள் காணப்பெறுகின்றன; ஆயுநுண் பொருளாவார் வெளியே யாடுவாருமாயினர்; ஒருருவு மில்லார் ஒரு வேடங் கொண்டார்; தூர்த்த வேடமுடைய பொன்மேனியில் தூயநீறும் விளங்கிற்று; இவர்தாம் இவ்வாறு வருங்கால் தமது பங்குடைய உமையம்மையார் அறிய வந்தனரோ? அன்றி அறியாமை வந்தனரோ? எனின் அறிய வருவாராயின், இவர் இங்குப் பிறர் மனைவியாரை வேண்டிச் செல்வதற்கு அவர் உடன்பட்டிரார்; அவர் அறியாது வந்தாரெனின் உடன்

பிரியாது இருப்பாராதலின் அஃதுமியலாது; ஆதலின் இதனை இன்னவாறெனத் துணிய அறியோம் என்றார்.

அருட்சத்தியும் திரோதான சத்தியும் ஒருங்கே தொழிற்பட்டன என்ற கருத்தால் இவ்வாறு கூறப்பெற்றது போலும்.

நாயனார் இயற்பகையாராயினமையால் தாமும் தமது இயலுக்கு மாறாக இத் தன்மையில் வெளிப்பட்டு அருளினர் என இங்கு நினைவு கூர்ந்தவாறும்.

"தம்மேலைச் சார்புணர்ந்தோ? சாரும்பிள்ளைமை தானோ?"—திருஞான-புரா-63.

"ஆய பொழுது தம்பெருமா னருளா லேயோ? மேனியின்மேல்
ஏயு மசைவி னயர்வாலோ? வறியோம்"—ஏயர்கோன் - புரா - 250.

என்றிவைபோலப் பின்னர்க் கூறுவனவற்றையும் இங்கு வைத்து ஒப்பு நோக்குக.

தூயநீறு - "சுத்தம தாவது நீறு" என்றவாறு தான் தூய்மையுடையதாகும். அதனோடு யாவற்றையும் தூய்மை செய்வதுமாம்.

பொன்மேனி - அழகிய மேனி. பொன் போன்ற மேனி என்றலுமாம். "பொன்னார் மேனியனே", "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி" - என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. **தூர்த்த வேடமுந் தோன்ற**-அதனோடு அதற்கு மாறாகத் தூய தல்லாத தூர்த்த வேடமும் ஒருங்கே காண. உம்மை இழிவு சிறப்பு.

தூர்த்தவேடம் - பரஸ்திரீகமனம் செய்யும் காமந்தோன்றும் அடையாளங்கள் விளங்கும் கோலம். அவை நகக்குறி - பற்குறி - மஞ்சட்பூச்சுக்குறி முதலியன. **தூர்த்தன்** - காமவசப்பட்ட இயல்புடன் இழிந்த செயல் செய்பவன். தூர்த்த வேடத்தின் இழிபினைப் போக்க அதற்குப் பரிகாரமாக அந்த மேனியிலே நீறு அணிந்ததுபோல என்ற குறிப்புமாம்.

வேதியராய் - இவ்வேடங்கொண்டு இச்செயல் புரிவதும் இவர்க்கே உரியது என்று காட்டுவார் வேதியரானார் போலும்.

மாய வண்ணமே கொண்டு - பிறரறிய இயலாதபடித் தம்மை மறைத்துக் கொண்ட இவ்வுருவந் தாங்கிக்கொண்டு. **மாயம்** - வஞ்சனை; மறைவு.

மறுத வண்ணமும் - வேண்டும் யாவையும் இல்லையென்னுதே முன் கொடுக்கும் இயல்பினையும், தமது மாயை வண்ணத்தைக் காட்டுதலேயன்றி மறுத வண்ணத்தையும் - என - உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

காட்டுவான் - உலகத்தார்க்குக் காட்டி அடியார் பெருமையை அறிவுறுத்தி உய்விக்கும்பொருட்டு. (368) உரை காண்க. (அவர் - இயற்பகையார்) அருளால்-முடித்து-பெருமையே - எனப் பேணி வாழ்நாளில் - ஆடுவார் - விளங்கத் - தோன்ற - வேதியராய்க் - கொண்டு - காட்டுவான் - வந்தார். (அவ்வாறு வந்தது) நாயகி அறியவோ - அறியாமலோ - அறியோம் - எனக் கூட்டி முடிக்க.

ஆய நுண்பொருள்—**மாயைவண்ணமே**—என்பனவும் பாடங்கள். 4

408. வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின்
மருங்கி யற்பகை யார்மனை புகுத
"வெந்தை யெம்பிரா னடியவ ரணைந்தா"
ரென்று நின்றதோ ரின்பவா தரவாற்
சிந்தை யன்பொடு சென்றெதிர் வணங்கிச்
சிறப்பின் மிக்கவர்ச் சனைகண்முன் செய்து
"முந்தை யெம்பெருந் தவத்தினு லென்கோ
முனிவ ரிங்கெழுந் தருளிய" தென்றார். ௫

(இ - ள்) வெளிப்படை. (மேலே சொல்லியவாறு)வந்து புகாரிலே வணிகர் தெருவிலே ஒரு பக்கத்தே உள்ள இயற்பகையார் திருமனையிலே அவ்வேதியராகிய இறைவன் புகவே, 'எமது தந்தையும் இறைவனுமாகிய அடியவரே அணைந்தனர்' என்று கொண்டு, எப்போதும் தமது மனத்திலே நிலைத்து நின்ற இன்பமுடைய ஆதரவினாலே எழுந்த அன்புடனே எதிர்கொண்டு போய் வணங்கி, அழைத்துவந்து, சிறப்பின் மிகுந்த அருச்சனை வழிபாடுகளையெல்லாம் செய்துமுடித்து, "எனது முன்னோர்களும் அடியேனும் செய்த பெருந் தவத்தின் பயனாகவோ பெரு முனிவராகிய தேவரீர் இங்கு எழுந்தருளி வரப்பெற்றது" என முகமன் மொழிந்து நின்றார்.

(வி - ரை) என்று சிந்தை நின்றதோர் ஆதரவு எனக் கூட்டுக.

தண்புகார் - வளமும் அழகும் பொருந்தியதால் **தண்புகார்** என்றார். காவிரி சேரும் கடற்கரையிலுள்ளமையால் **தண்** புகார் என்றார் எனினுமமையும். **பூம் புகார்** என்பதுங் காண்க.

வணிகர்தம்மறுகு-வணிகர்கள் வாழுந் தெரு. வணிக வீதி. இத்தெருவின் சிறப்பினையும் இயல்பினையும் சிலப்பதிகார முதலிய பழந்தமிழ் நூல்களுட் காண்க. இந்நகரின் வாணிகச் சிறப்புப் **பட்டினப்பாலை**யுள் விதந்து பேசப்பெற்றுள்ளது.

ஒவ்வோர் வருணத்தாரும், (வருணம்பற்றி யல்லாது) தொழில் முதலிய வேறு காரணம்பற்றித் தனித்தனிக் கூடி வாழும் பல்வேறு வகுப்பினரும், வசித்து வாழ்வதற்குத் தனித்தனி வீதிகள் அமைப்பது முன்னாள் வழக்கு. இவற்றினியல்பைத் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்திற் காண்க. இது உலக நிலையிற் கலந்த மக்கள் தத்தம் நிலையில் நின்று இன்ப வாழ்வு வாழ்வதற்கு ஏற்றதோர் நல் வழக்கு. இதன் நன்மைகளை அறியாது இகழ்வோர் பலர். இந்நாள் நகர அமைப்பில் இதன் உள்ளுறையான தத்துவத்தை யுணர்ந்து பின் பற்றுதல்வேண்டும். அவ்வாறில்லாது இவ்வழக்காறொழிந்து வருதல் வருந்தத்தக்கதாம்.

எந்தை யெம்பிரான் அடியவர் - எந்தை - எமது தந்தை; **பிரான்** - பெருமான் - தலைவன். எந்தையாகிய பிரான் என்றலுமாம். பிரானது அடியவர் என ஆறும் வேற்றுமைத் தொகை. பிரானே அடியவர் வேடத்தில் அணைந்தார் என்ற உண்மை, நாயனார் சிந்தையிலே தாக்க, எழுந்த குறிப்புமாம். "வேடமும் அரனெனத் தொழுமே" என்பது சாத்திரமாதலின் நாயனார் தமது நிலையான ஒழுக்க இயல்பின்படி (406) இங்கு அடியவரை அரனெனவேகொண்டு வணங்கினர் என்க.

நின்றதோர் இன்ப ஆதரவு - சிந்தையில் நின்றது - என்று கூட்டுக. **நின்றது** - இயல்பாய் நிலைத்தது. இன்பத்தை ஆதரித்தெழுந்த அன்பு - இன்பந்தரும் ஆதரவு. தமது கொள்கையைத் தாங்கி நிற்கும் சத்தியே **ஆதரவு** எனப்பெறும். "ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந்தவர்" (திருஞான - தேவா - நட்டராகம் - திருவலஞ்சுழி - 11), "உன்னையல்லா லடையாதெனை தாதரவே" (திருஞான - தேவா - கௌசிகம் - திருவான்மியூர்) முதலிய திருவாக்குக்களும் காண்க.

இன்ப ஆதரவால் சிந்தை யன்பொடு சென்று - இன்பமும் அன்பும் பிரியா இயல்பினையுடையன. "இறவாத வின்ப வன்பு", "முடிவிலா இன்பமான அன்பினை யெடுத்துக்காட்ட", "இன்பமே என்னுடை யன்பே" முதலியவை காண்க.

அன்பொடு சென்றெதிர் வணங்கி - அன்புக் கடையாளம் எதிர்சென்று வணங்குதல் முதலியன.

முந்தை யெம்பெருந் தவத்தினால் என்கோ?-முற்காலத்துச்செய்த எங்கள் பெருந் தவத்தின் காரணமாக. இப்போது இதனைப் பெறத்தக்க தவம் யாதும் யாங்கள் செய்திலோம்; ஆயினும் இது நிகழ்தலின் முன் செய்ததோ என்றார். எமது முந்தைகள் - முன்னோர்கள் - செய்த பெருந்தவங் காரணமாக என்றலுமாம். "நீயான், வலஞ்

செய்து வணங்கவெளி வந்தவிது முந்தென், குலஞ்செய்தவ மென்றினிது கூற" —கையடைப்படலம் - (6) என்று கம்பர் இக்கருத்தையே விரித்திருத்தல் காண்க. **என்கோ** - என்று சொல்லுவேனோ ? - என்பேனோ ? ஐயப்பாட்டினையும் தெளிவையும் உணர்த்திய வினா. என் - பகுதி ; கு - தன்மை யொருமை விகுதி; ஓ - வினா.

என் - கோமுனிவர் - எனப் பிரித்து எனது இறைவனாகிய பெருமுனிவர் - முனிவர் தலைவனார் - எழுந்தருளியது முந்தையெம் பெருந்தவத்தினாலாயது எனக் கூட்டியுரைத்தலுமொன்று. இப்பொருட்கு-**ஆயது** என்ற வினைச்சொல் தொக்கி நின்றது.

முனிவர் - இவர் தூர்த்த வேடத்துடன் வந்தாரேனும், குலம் - குணம் முதலியவற்றைப் பாராது, 'அடிமைத் திறத்தை"யே நோக்கி வந்திக்குமியல்புடையர் நாயனாராதலின் மறைச்சிவ வேடத்தையே பாராட்டி **முனிவர்** என்றார்.

என்கோல்—தவத்தினாலே கோல்—என்பனவும் பாடங்கள். 5

409. என்று கூறிய வியற்பகை யார்முன்
னெய்தி நின்றவக் கைதவ மறையோர்
"கொன்றை வார்சடை யாரடி யார்கள்
குறித்து வேண்டின குணமெனக் கொண்டே
யொன்று நீரெதிர் மறுதுவந் தளிக்கு
முண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி
இன்று நானிங்கு வந்தன னதனுக்
கிசைய லாமெனி லியம்பலா" மென்றார். ௬

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு கூறிய இயற்பகையார் முன்னே, வந்து நின்றவராகிய அந்தத் தூர்த்தவேடவேதியர் "கொன்றை சூடிய சடையையுடையபெருமானடியார்கள் எண்ணி வேண்டியவை எவையேனும் அவை குணமாம் என்றேகொண்டு அவர் வேண்டியவை ஒன்றையும் மறுக்காது விருப்பத்துடன் கொடுக்கும் உண்மைத் தன்மையைக்கேட்டு உம்மிடத்தே ஒரு பொருளை வேண்டி இன்று இங்கு நான் வந்தேன் ; அதற்கு நீர் இசையக் கூடுமாயின் சொல்லலாகும்" என்று கூறினார்.

(வி - ரை) கைதவ மறையோர் - கைதவம் - கீழ்மைத் தன்மை. இது, வந்த பெருமானுக்காவது மறையோருக்காவது பொருந்தியதன்று. தாங்கி வந்த தூர்த்த வேடம் உண்மையை மறைத்ததாதலின் அதற்கடையாயிற்று. **சடையார் அடியார்கள்** - ஆறும் வேற்றுமைத் தொகை. சடையாரும் அடியார்களும் என உம்மைத் தொகையாக்கி இச்சரித நிகழ்ச்சிக் குறிப்பாகக் கொள்ளினும் அமையும். 405 காண்க.

குறித்து வேண்டின - இவரை உய்விக்க எண்ணியதொரு குறிக்கோளை உட்கொண்டு இவர்பால் வேண்டியவற்றை யெல்லாம். குறிக்கோளை உட்கொள்ளுதலாவது இவர் பொருளை இறைவனுக்கும் அடியார்க்கும் ஆக ஆக்கி இவர்க்கு நன்மை பயத்தலேயாம். ஆதலின் **வேண்டின்** - என்றமையாது **குறித்து வேண்டின்** என்றார். **வேண்டின்** - இரண்டாம் வேற்றுமைத் தொகை. **குணமென** - குணமல்லாவிடினும் - குணமாகக் காணப்படாவிடினும். பின் நிகழ்ச்சிக் குறிப்பு.

மறுது உவந்து அளிக்கும்-மறுக்காது அளித்தலேயன்றி, விருப்புடனுமளித்தலே பயன்தரும் என்பது நூற்றுணிபு. ஆதலின் **மறுது அளிக்கும்** - என்றதனோடமையாது **உவந்தளிக்கும்** - என்றார். "சிவனையுன்னிச் செம்பொன் விருப்புடனீ வார்பெறுக வீடு" என்ற பெரியோர் வாக்கும் காண்க.

உண்மை கேட்டு - உண்மை - உள்ளத்தின் தன்மை. **அளிக்கும் உண்மை** - அளிப்பதாகிய செயலுக்குக் காரணமாயிருந்த மனப்பான்மை. **கொடுக்குமியல்பு**-405 என்றதிற் காண்க.

"அளித்த, வார்த்தை கேட்டுநுன் மலரடி யடைந்தேன்"—(1)
"இன்பமி யானுங் கேட்டுநின் னிணையடி யடைந்தேன்"—(6)
"பெருமையும் பெற்ற, பெற்றி கேட்டுநின் பெய்கழ லடைந்தேன்"—(7)

என்பனவாதி நம்பிகளது தேவாரங்கள் காண்க. [—தக்கேசி - திருநின்றியூர்

இவ்வாறு தமது பேரருட் டிறங்களைக்கேட்டு உயிர்கள் தம்மை வேண்டிவந்து அடைந்துய்ய நின்ற இறைவன், இங்கு இவ்வடியவர்பால்வந்து, அவர் அளிக்கும் பெருமை கேட்டு அதனை வேண்டி வந்ததாகக் கூறி எளியராய்வந்த பெருங்கருணைத் திறத்தினை உன்னுக. வேண்டுவார் வேண்டுவதேயீயும் கருணைநிதி தம்மைப்போலவே தம் அடியார்க்கு வேண்டியதேயீயும் இவரைக்காண வந்ததும் ஒரு சிறப்பாம்.

இப்பாட்டு மேலே காட்டிய நம்பிகளது தேவாரங்களின் யாப்பமைதியும் கருத்தமைதியும்கொண்டு விளங்குதலும் காண்க.

கேட்டு - எல்லா உயிர்க்குள்ளேயும் உயிர்க்குயிராகி உடனிருந்தே அறியும் இறைவன் இங்குக் **கேட்டு** என்றருளியதும் ஒரு வியப்பேயாம். நாயனாரது இவ்வுண்மைத் தன்மையை யினி யாவரும் விளங்கக்கேட்டு உய்யச்செய்விப்பதற்காகத் தாம் **கேட்டார்** என்க. **காட்டுவான் வந்தார்** - 407 என்றதிற் காண்க.

ஒன்று வேண்டி - **வேண்டி** - வேண்டுதல் வேண்டாமையிலானாயினும் நாயனார்க்கும் மனைவியார்க்கும் அருளவும், உலகர்க்கு உண்மை காட்டவும் இங்கு ஒன்றை வேண்டினான். **ஒன்றுவேண்டி** என்பதற்கு அவ்வாறருள்வதாகிய ஒரு பயனைக்குறித்து என்ற குறிப்புமாம். **ஒன்று** - இரத்தலின் இழிபு குறித்து முதலில் அப்பொருள் இன்னதென்று குறியாமற் கூறியபடியாம். "நல்லா றெனினுங் கொளல்தீது" என்றார் நாயனார். இரத்தலை நோக்கிக் குறளாய் அங்கங் குறுகிய மால், அது தீர்ந்ததும் வளர்ந்தனர் என்று அழகுபட எடுத்துக்கூறினர் கம்பரும்.

இசையலாமெனின் - உவந்தளிக்க இசையக்கூடுமானால். நான் வேண்டிய அவ்வொன்று உலகிற் பிறர் எவராலும் குணமெனக்கொண்டு உவந்தளிக்க இயலாததென்பது குறிப்பாம். **எனின்** - பிறர்க்குக் கூடாமை குறித்தது. 6

410. என்ன வவ்வுரை கேட்டியற் பகையார்
"யாது மொன்றுமென் பக்கலுண் டாகி
லன்ன தெம்பிரா னடியவ ருடைமை;
யைய மில்லை; நீ ரருள்செயு" மென்ன,
"மன்னு காதலுன் மனைவியை வேண்டி
வந்த திங்"கென வங்கண ரெதிரே
சொன்ன போதிலு முன்னையின் மகிழ்ந்து
தூய தொண்டனார் தொழுதுரை செய்வார். ௭

411. "இதுவெ னக்குமுன் புள்ளதே வேண்டி
யெம்பி ரான்செய்த பேறெனக்" கென்னாக்
கதுமெ னச்சென்று தம்மனை வாழ்க்கைக்
கற்பின் மேம்படு காதலி யாரை
"விதிம ணக்குல மடந்தை!யின் றுனையிம்
மெய்த்த வர்க்குநான் கொடுத்தன" னென்ன,
மதும லர்க்குழன் மனைவியார் கலங்கி,
மனந்தெளிந்தபின் மற்றிது மொழிவார். ௮

*412. "இன்று நீரென்னை யருள்செய்த திதுவே
லென்னு யிர்க்கொரு நாதர்நீ ருரைத்த
தொன்றை நான்செயு மத்தனை யல்லா
லுரிமை வேறுள தோவெனக் " கென்று
தன்ற னிப்பெருங் கணவரை வணங்கத்,
தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்,
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்.

410. (இ - ள்) என்ன...என்ன - வேதியர் இவ்வாறு சொல்ல, அதனைக் கேட்டு இயற்பகையார் "நீர் வேண்டியதொன்று எப்பொருளேயாயினும் அஃது என்னிடத்தே உள்ள பொருளாகில், அது எம்பிரா னடியவருடைமையேயாம்; இதில் சிறிதேனும் ஐயம் இல்லை; நீர் வேண்டிய பொருளை இன்னதென அருளிச் செய்வீராக!" என்று சொல்ல; மன்னுகாதல்...என - "நிலைபெற்ற காதலின் உனது மனைவியைப் பெற வேண்டி நான் இங்கு வந்ததாம்" என்று வேதியர் சொல்ல; அங்கணர்...செய்வார். (காணாக் காலத்துப் புறத்திலேயும் சொல்லத் தகாத இம்மொழிகளை) அங்கணர் நேர் எதிரே நின்று சொல்லிய போதிலும் (அதனையும் கேட்டுப் பொறுத்து நின்றதனோ டமையாது) முன்னைவிட மிக மகிழ்ச்சி யுடையராய்த் தூய தொண்டராகிய நாயனார் அவரை மேலும் தொழுது சொல்வாராகி, ௭

411. (இ - ள்) இது...என்னா - "என்னிடம் முன்பே உள்ளதொரு பொருளையே வேண்டிய வகையினாலே எம்பிரான் எனக்குத் தந்த பேறு இது!" என்று சொல்லி; கதுமென...என்ன - நாயனார் விரைவிலே மனையினுட் சென்று, தமது மனைவாழ்க்கைக் குரியாராயும், கற்பிற் சிறந்தாராயும், தம் காதலுக்குரியாராயும் உள்ள தமது மனைவியாரை நோக்கி, "விதியினாலே மணஞ்செய்யப் பெற்ற எனது குல மடந்தையே! இன்று உன்னை இங்கே வந்துள்ள இவ்வுண்மைத் தவசியாருக்கு நான் கொடுத்துவிட்டேன்" என்று சொல்ல; மதுமலர்...மொழிவார் - தேன் பொருந்திய புதிய பூக்களைச் சூடிய கூந்தலையுடைய மனைவியார் அதனைக் கேட்டலும் கலங்கிப் பின் தெளிந்து கொண்டு சொல்வாராகி, ௮

412. (இ - ள்) இன்று...கணவரை வணங்க - "நீர் இன்றைக்கு எனக்கு அருளிச் செய்த கட்டளை இதுவேயானால், எனது உயிர் நாதராகிய நீர் அருளிச்செய்ததெதுவேயாகிலும் அஃதொன்றை அவ்வாறே செய்வதைத் தவிர எனக்கு வேறு உரிமையுண்டோ?" என்று சொல்லித் தமது ஒப்பற்ற பெரியாராகிய கணவரை வணங்க; தாழ்ந்து...எதிர் வணங்க - அவ்வாறு வணங்கிய மனைவியாரைப் பணிந்து நாயனார் தாமும் எதிர் வணங்க; சென்று...பெரியாள் - போய் மாதவருடைய திருவடியைப் பணிந்து திகைப்புடன் நின்றார் திருவினும் பெரியாராகிய அவ்வம்மையார். ௯

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து சென்று முடிகின்றன.

என்ன - கேட்டு இயற்பகையார், "யாதும் - உடைமை; - அருள்செயும்" என்ன - "உன் மனைவியை வேண்டி வந்ததிங்"கென ; - மகிழ்ந்து - தொண்டனார் - உரை செய்வார் - "இது...எனக்கு" என்னா ;-சென்று - காதலியாரை, "மடந்தை - உனை - தவர்க்குக் கொடுத்தனன்" என்ன ; - மனைவியார்-கலங்கி - தெளிந்து - மொழிவார் - "இன்று அருள் செய்த திதுவேல் - உரிமை வேறுளதோ?" என்று வணங்க ; - தொண்டனார் - எதிர் வணங்க ; - சென்று - பணிந்து - திகைத்து நின்றனள் ; - பெரியாள் - என இம் மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க.

410. (வி - ரை) **யாதும் ஒன்றும்** - எவ்வகை உயர்ந்த நான் பிரியக் கூடாத தாயினும் ; அஃது தனித்த ஒன்றேயாயினும்.

எம்பிரா னடியவர் உடைமை - எனது பெருமானதும் அடியவரதும் என்க. உம்மைத் தொகை. மறைச்சிலம்படியார் மிக்க சீரடியார்-(405) ; எம்பிரா னடியவர்-(408) ; சடையாரடியார்கள்-(409) ; என்ற இடங்களிலும் இவ்வாறே கூறியதும் காண்க. அடியவராகி நின்ற தேவரீராகிய எம்பிரானது உடைமை என்ற குறிப்புமாம்.

உலகில் எல்லா உயிர்களும் சிவனுக்கு அடிமைகளே ; உயிரல்லாதவை யெல்லாம் அவனது உடைமையே; "எல்லா முன்னடிமையே, எல்லா முன்னுடைமையே" என்பது பெரியோர் வாக்கு. ஆதலின் என்ன தென்று ஒருடைமையுமில்லை ; நான் அடிமையாதலின் சொத்துக்குச் சுதந்தர மில்லேன் ; என்னிட மிருப்பவை என்னை ஆளாக உடைய இறைவனுடையன ; அவனடியாருடையன என்பது கருத்து.

ஐயமில்லை - "இசையலா மெனின்" என்ற உமது மொழி ஐயத்தை உட்கொண்டுள்ளது ; அவ்வாறு ஐயத்தினை என் திறத்திலே தேவரீர் கொள்ள வேண்டுவதில்லை.

அருள் செயும் - இது, அடியார்கள் தம்பக்கல் பெறுவன வெல்லாம் தம்மைப் பயன்படுத்தி ஆளாக்கித் தமக்கு அவர்கள் செய்யும் அருளேயாம் என்று கொண்டொழுகிய நாயனாரது இயல்பு குறித்த மொழி. "பேறெ லாமவ ரேவின செய்யும் பெருமையே யெனப் பேணிவாழ்" (406) எனக் குறித்ததும் காண்க.

இங்கு இறைவன் தம்பால் மனைவியாரை வேண்டிப் பெறுவதனால் "தக்க பெருகிய **அருளின்டு** பேறளிக்"கவும் (437), உலகர்க்கு அடிமைத் திறத்தினைக் காட்டி உய்விக்கவும் வந்துள்ளாராதலின் அவ்வருட் குறிப்புத் தோன்ற **அங்கணர்** என்றார். புறகிலும் சொல்லவும் தகாததும், நினைக்கவும் தகாததும், நெறி தவறிய செயல் குறித்ததும் ஆகிய பழிச்சொல்லை எதிரிலே வெளிப்படையாய்ச் சொல்லும் வன்கண்மை யுடையராயினும் இஃது நாயனார் - மனைவியார் - உலகர் முதலிய யாவர் மாட்டும் வைத்த **அங்கண்மை**யாகிய அருளையே உட்கொண்டதாகும் என்பார் இங்கு அவ்வன்கண்மை சொல்லியவிடத்து வேதியரை **அங்கணர்** என்ற பெயராற் குறித்தார்.

எதிரே சொன்ன போதிலும் - புறகிலும் சொல்லத் தகாதது என்பார் **எதிரே** என்றும், மனத்தில் நினைக்கவும் தகாததை வாயினாற் சொன்னார் என்பார் **சொன்ன** என்றும் கூறினார்.

முன்னையின் மகிழ்ந்து - முன்னை மகிழ்ந்ததினும் மிக்க பெரு மகிழ்ச்சி கொண்டு. முன்னை மகிழ்ந்ததென்றது "எந்தை யெம்பிரானடியவ ரணைந்தார்" (408) என்ற மகிழ்ச்சியை. **முன்னை** - இவ்வாறு கேட்பதற்கு முன் என்பர் மகாலிங்கையர். பெரு மகிழ்ச்சிக்குக் காரணம் தம்பால் உள்ள பொருளையே வேண்டியதாம். இதனை வரும் பாட்டில் நாயனாரே விளங்கக் கூறுதல் காண்க.

தொழுது - மீண்டும் தொழுதது தம்பால் இல்லாத பொருளைக் கேட்டு, "இல்லை" என்ற சொல்லைத் தம் வாக்கில் வரும் நிலையும், அடியவர் வேண்டியது கொடுத்து மகிழச் செய்யாத நிலையும், தம்பாற் சாராத வகையிலே, உள்ளதொரு பொருளையே வேண்டி உபகரித்ததற்காக மீண்டும் தொழுதார். முன்னர்த் தொழுத வகை 408-ம் பாட்டிற் காண்க.

மன்னு காதல் - இதனை முதனிலைத் தீவகமாக்கி, உன் காதல் நிலைபெற்ற பொருளாகிய உனது மனைவி என நாயனார்க்குக் கூட்டியும், மன்னுகாதலின் வேண்டி என்று இயைத்து, உன் மனைவியை எனது மன்னிய காதலின் வேண்டி என வேதியர்க்குக் கூட்டியும் உரைத்தலுமாம். சரித நிகழ்ச்சியிற்போலக் **காதல்** என்ற சொல்லும் ஈரிடத்தும் பொருந்த வைத்திருப்பதன் அழகு காண்க.

தூய தொண்டனார் - தூய துறவிகட்கும் தூயரானவர்.

யாதும் - உயர்வு சிறப்பும்மை. **ஒன்றும்** - முற்றும்மை.

முன்னையின் - *சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.*

அந்தணர்—*என்பதும் பாடம்.* 7

411. **(வி - ரை)** *முன்பு உள்ளதே வேண்டி எம்பிரான் எனக்குத் தந்த பேறு இது - என மாற்றி உரைத்துக் கொள்க.*

எம்பிரான் - *பிரானுகவே நான் கொள்ளும் வேதியராகிய நீர்.* **எம்பிரான்** - *பெருமானுகிய இறைவன் எனக் கொண்டு இவரை இவ்வாறு என்பால் உள்ளதே வேண்டுமாறு இயக்கியது இறைவன் தந்த பேறு என்றுரைப்பாரு முளர்.*

கதுமெனச் சென்று - *இச்செயல் அடியார் வேண்டுவதனை அளித்தலில் நாயனூர்க்கிருந்த ஆர்வமும் விரைவும் குறித்தவாறு. மொழியும் செயலும் ஒருங்கே நிகழ்ந்தன என்பதாம். ஒழுக்கத்தாலும் அன்பினுலும் குறைவுடையாளாயின் கணவன் அவளை நீத்துக் கொடுத்துவிடவும் கூடும். இவரோ கற்பின் மேம்பட்டவர்; காதலியார்; எனவே, இவ்விரைவு அடியார்க்களித்தலில் உள்ள தீவிரம்பற்றி எழுந்த தென்க.*

தம்...காதலியாரை - **தம்** - *தமக்கே உரிய;* **மனைவாழ்க்கை** - *இல்வாழ்க்கைக் குரிய. இல்லற இயலில் விதிக்கப் பெற்றபடி எல்லா அறங்களும் இயல்வதற்கு நாயகனுக்குத் துணை நிற்பார் என்றது குறிப்பு. "மனைக்கடனுடைய திருவெண்காட்டம்மை" (சிறுத்-புரா-38), "மனையறத்தின் வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கை"(ஷெ 17) என்பவை காண்க.* **கற்பின்மேம்படு** - *கற்பிலக்கணத்திற் சிறந்த.* **காதலியார்** - *காதலுக் கிருப்பிடமாவார்; இவற்றுலெல்லாம் நாயனூரது கொடைப் பொருளின் அருமை குறித்தவாறு. பின்னர் மனைவியார் இப்பணியை ஏற்று மேற்கொண்டமைக்குக் காரணமாக வரும்பாட்டிற் கூறுவதற்குத் தோற்றுவாய் செய்தவாறுமாம்.*

விதிமணக் குலமடந்தை - *மடந்தையே !; அண்மைவிளி மணஞ்செய் காலத்தில், 'உமது சொற் கடவாது நடந்து வருவேன்' என்று நாயகி வாக்குறுதி செய்யும் திருமண நூல் விதியை இங்குக் குறித்து மனைவியார்க்கு நாயனூர் சிறப்பாக நினைப்பூட்டியவாறு. சொற்றிறம்பாமை கடன் என்பது குறிப்பாம்.* **குலமடந்தை** - *குடிப்பிறப்பாலும் திறம்பாமை அமையும் என்ற குறிப்புமாம்.*

மெய்த்தவர் - *தூர்த்த வேடமாகிய மாறுபாடு கருதி, நீறு பூசிய உண்மைத் திருவேடத்தை ஒதுக்காது பாதுகாத்தற் பொருட்டு* **மெய்த்தவர்** *என்றூர். "சீலமிலரே யெனினுந் திருநீறு சேர்ந்தாரை, ஞாலமிகழ்ந் தருநரக நண்ணுமெ லெண்ணுவார்" (நரசிங்கமுனையர் புராணம் - 7) எனப் பின்னர்க் கூறுவதும் காண்க.* **மடந்தை** - *பருவங் குறித்த தென்றுரைப்பாரு முண்டு.*

கலங்கி - *கடைபோகக் கைக்கொண்டு காப்பேன் என்று மணஞ்செய் காலத்து நாயகன் கூறிய நூல் விதிவழி நின்ற சொல்லுக்குக் கெடுதி நேருமோ என்றும், கற்பிலக்கணத்துடன் மாறுபடுமோ என்றும், ஐம்பெரும் பாவங்களில் ஒன்றுய் நூல்களால் விலக்கப்பட்டதாகிய பிறன்மனை நயந்தமை எனும் தீமை இவ்வடியவரைச் சாருமோ என்றும் கலங்கினூர் என்க.*

மனந் தெளிந்த பின் - *கணவனூர் ஆணை வழி நிற்றலே கடன் என்றும், அவ்வாறு அதன்வழி நில்லாதிருப்பதே தவறுனதென்றும் தெளிந்த பின்னர். இவ்வாறே "அன்னவரு மிரங்கிப் பின் மகிழ்ந்து" (கண் - புரா - 45.) என்றதும் காண்க.*

கலங்கினதற்கும் தெளிந்ததற்கும் வேறுவேறு வகைகளாகப் பொருள் கூறுவாருமுண்டு. இதுவரை அடியார்க்குரிமையாக்கத் தகுதியற்றதாகிய குற்றமுள்ள பொருளாய்த் தம்மை எண்ணினூர் என்று கலங்கினூர் எனவும், தகாதமொழி கேட்டலிற் கலங்கினூர் எனவும், இஃது உலகிலில்லாச் செயல் என்று எண்ணந் தோன்றியது பற்றிக் கலங்கினூர் எனவும் இன்ன பிறவுங் கூறுவர். குற்ற நீங்கியவராகக் கொண்டு அடியார்க் குரிய பொருளாந் தகுதி கண்டார் எனத் தெளிந்தார் என்றும், உலகவழி நின்று ஒன்

றும் கருதலாகாது ; இது திருவருள் நிகழ்ச்சியேயாக இருத்தல் வேண்டும் ; மேலே விளைவதைப் பார்ப்போம் என்று தெளிந்தனர் என்றும் பிறவாறும் உரைப்பர். இவை யீண்டைக்குப் பொருந்தா என்க.

எம்பிரான் தந்த—கற்பு மேம்படு—மொழிந்தார்—என்பனவும் பாடங்கள். 8

412. (வி - ரை) இன்று - இத்தனை காலமும் பணிக்கப்பெற்ற எத்தனையோ பணி கட்கெல்லாம் தேவரீரது சொல்வழி அமைந்து நின்றதுபோலவே இன்றைக்கு நிகழ்ந்த இந்தக் கட்டளை என்றதாம். அருள் செய்தது - அடியேன் உய்யும்படித் தேடித் தந்த திருவருளுருவமாகிய செயல்.

உயிர்க்கொரு நாதர் - உலகிலே ஏனைக் கணவர்கள் உடம்பு நாயகர்களாக மட்டும் நின்றொழிவர்; தேவரீர் அவ்வாறல்லாது என் உடம்பிற்கே யன்றி உயிருக்கும் ஒப்பற்ற நாதராய் உயிர்க்குறுதி செய்தீர் ; உயிர் உடம்பினும் சிறந்தது ; ஆதலின் உடல் பற்றிய இக்கட்டளையை மறுக்ககில்லேன். உரைத்த தொன்றை நான் செயும் அத்தனை யல்லால் உரிமை வேறுளதோ எனக்கு - "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பது விதி. ஈண்டுச் சொல் என்பது இறைவன், பெரியோர் முதலியோரது சொற்களைப் பொதுவகையானும், கணவனது சொல்லைச் சிறப்புவகையானும் குறிக்கும். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என இக்கற்பிலக்கணத்தை மேம்பட விரித்துரைத்தார் நாயனார். மேற்பாட்டிலே தெளிந்த வகை இதுவெனக் குறித்தவாறு. இந்நாட் பெருவாரியாகப் பெண்ணுரிமை பற்றிப் பேசுவோர் இதனைக் குறிப்பாராக.

இவ்விடத்து, நாயனார் பெருமையினும் மனைவியார் பெருமையே சாலச் சிறந்தது என்றும், அந்நாளில் காமநூல்கள் பரவியிருந்தன என்றும், பெண்களை வெறுங் காமப் பொருளாகக் கருதியது அந்நாள் உலகம் என்றும், அவர்கள் வெறுங் காமப்பொருளல்லாது அவர்களிடத்து அதற்கு மேலாகிய இறைமை தாய்மைத் தன்மை விளங்கக் காண்பதை நாயனார் மூலம் உலகிற்கு அறிவுறுத்தலே கடவுளது அருணோக்கம் என்றும், இன்ன பிறவும் ஆராய்ச்சிகள் செய்வாருமுண்டு. அவை ஒன்றும் ஈண்டைக்குப் பொருந்தாமை யறிந்து கொள்க. அடியார் வேட்டதளித்தலே சிறந்தது ; பெறற்கருங் கற்பிற்காதலிதானும் அவ்வாறளிக்கப் பெறும் சிறப்பினை நோக்கத் தாழ்ந்தவள்; இக் காதற் பொருளையும் மற்றெதனையும் கொடுத்து அதனைப் பெறுதல் தகும் ; இதுவே உயிர்களுக்கு வீடுபேறு தரும் உறுதிப் பொருள் என்று கொண்டு ஒழுகுதல் நாயனாரது வாழ்க்கைத்திறம். கணவனார் கருத்தமைந்து நிற்றல் கற்பிலக்கணமாம் என்பது நாயகியாரது வாழ்க்கைத்திறம். இவையே இந்நிகழ்ச்சியில் உலகிற்கு அறிவுறுத்தல் ஈண்டுத் திருவருட் செயல் என்பதாம். "தம்தொண்டர் மருத வண்ணமுங் காட்டுவான் வந்தார்" (407) என்று முன்னரே இச்சரித தத்துவத்தை ஆசிரியர் குறித்தமை காண்க. இங்குத் தொண்டர் மறுத - என்பது மனைவியாரையும் உள்ளிட்ட குறிப்பும் காண்க.

அந்நாளில் காம நூல்கள் பரவி யிருந்தன என்பதும் பொருந்துவதன்றும். முன்னாளில் காம நூல் முறைப்பட வகுத்தனர் ; அதனில் விதி விலக்குகளும் பிறவும் வகுத்தனர். ஆனால் இந்நாளிலோ எவ்வித வரையறையும், விதிவிலக்குகளும், முறையுமின்றிக் காமப்பேச்சும், காமம் பெருக்கும் எண்ணங்களும், அவ்வகைக் கதைகளும், காட்சிகளும், செயல்களும் எங்கும் தங்குதடையின்றிப் பெருகித் தலை விரி கோலமாய் மக்களைத் தடுமாறச் செய்வது அறிந்தோர் யாவர்க்கும் நன்கு புலனும்.

வணங்க - இதுவரைத் தம்மை ஆட்கொண்டு காத்தமைபோல இங்குக் கடைபோகக் காத்து உயிர்க்குறுதியாகிய செயலிற் பணித்தமை பற்றிக் கணவனாரை வணங்கினார். அவர்பணியி னின்றமைக் கடையாளமாக வணங்கினார் என்பதுமாம்.

தன் தனிப்பெருங் கணவரை - கற்பிலக்கணங் காத்த மனைவியார் நாயனாரை ஒப்புயர்வற்ற கணவராகவே கொண்டு அந்நிலையிலே வணங்கினார் என்பார் பெருங் கணவரை என்று குறித்தார்.

எதிர் வணங்க - "இல்லையே யென்னாத" தமது திருத்தொண்டின் இயல்பை இந்நிலையிலே தமது சொல் மறாது காத்தமை பற்றியும், அவ்வாறிசைந்தமையினாலே அவர் மாதவர்க்குரிமையான பொருளாயினமை பற்றியும் நாயனாரும் அவரை எதிர் வணக்கஞ் செய்தனர் என்க.

மாதவன் - "இம் மெய்த்தவர்க்குக் கொடுத்தனன்" என்று கணவனார் அறிவித்தனராதலின் அவர் அறிவிக்க அறிந்த மனைவியார் அவ்வாறே கொண்டனர் என்பார் **மாதவன்** என்றார்.

திகைத்து - இஃது பெண்மையின் இயல்புக் குணங்களில் ஒன்றாகிய **பயிர்ப்புப்** பற்றியாம். கற்புடையார்க்குப் பயிலாதவற்றி லருவருப்புண்மைபற்றி இஃதாம் என்பர். நூல்களில் விதித்த பெண்மைக்குரிய நாற்பெருங் குணங்களும் பெண்களினின்று நீங்கி வருவதே இயல்பு எனக் கொண்டொழுகும் இக்காலத்தே இதற்குப் பொருள் விளங்காததாம்.

முன்னர்க் **கலங்கித் தெளிந்து** (411) என்ற இடத்திற் போலவே இங்கும் வேறு பலவாறும் பொருள் கூறுவாரு முண்டு. திகைத்தலாவது சிவபத்தராய் இருக்கிறவர்கள் ஆகம சாஸ்திரத்திற்கு விரோதமாகப் பிறருடைய மனைவியைக் கேட்கமாட்டார்கள்; ஆனால் பத்தியைப் பரிசோதிப்பதற்காக இங்ஙனம் வந்திருக்கலா மெனவும், வேறு மதஸ்தர்கள் கபட வேஷங் கொண்டு கவர்ந்து கொள்வதற்கு வந்தார்களோ எனவும் சந்தேகப்படுதலாம் என்பர் மகாலிங்கையர். பணிந்தபோது தம்மை நோக்கி ஏற்காது நாயனாரையே நோக்கினார் தவசியார்; ஆதலின் தம்மிடம் குற்றமெதுவோ உளதென்று திகைத்தனர் என்பர் ஆலாலசுந்தரம் பிள்ளை. இவற்றின் பொருத்தங்களை ஆய்ந்துணர்ந்து கொள்க.

திருவினும் பெரியாள் - **திரு** - இலக்குமி. அவர் தம்மைவேண்டித் தவஞ்செய்வார் எத்தன்மையராயினும் அவர்பாலெல்லாம் அடைகுவர்; சிறந்தாரிடத்து விசேட விதியாகச் சிறப்பு வகையாலே காணப்படுவதன்றிப் பொதுவகையாலே பெரும்பான்மைத் தாழ்ந்தாரிடத்தே பட்டுப் பெரும்பான்மை இழிதொழிற்படுவர். அம்மையாரதிலக்கணம் அவ்வாறன்றி அத்திருவினும் மேம்பட்டு, அரன் பாலும் அடியார்பாலும் சார்ந்து சிறப்புற்றது என்பது கருத்து. இன்-ஐந்தாம் வேற்றுமை உருபு. எல்லைப் பொருளில் வந்தது.

திருவினும் - திருவினாலும் - என ஐந்தாம் வேற்றுமை ஏதுப்பொருளில் வந்ததாகக் கொண்டு, **திரு** - வீடுபேற்றுக்குக் காரணமாகிய ஐசுவரியத்தன்மையானும் பெரிதுஞ் சிறந்தவர் என உரைத்தலுமாம். உம்மை கணவனார் கருத்தமைதலாகிய உலகச் சார்பின் கற்பு நிலையிலே பெரியரா யிருந்து தமக்கும் கணவர்க்கும் உறுதி தந்ததேயன்றி என இறந்தது தழுவிய எச்சவும்மை. தமக்கும் தமது கணவனாருக்கும் தமது இவ்வொழுக்கத்தால் தரும் முத்திச் சார்பாகிய ஐசுவரியத்தாலும் பெரியவர் என்க. "திருவுடைமனைவியாரை" (438) என்றதும் காண்க. "உருவிலான் பெருமையையுளங்கொளாதவத் திருவிலார்" (காந்தாரபஞ்சமம் - திருப்பைஞ்ஞீலி - 2), என்று ஆளுடைய பிள்ளையார் திரு என்பதனை விளக்கி யருளியதும் காண்க.

இங்கு நாயனார் மனைவியாரைத் தந்ததும், மனைவியார் அதனை ஏற்று நின்றதும் உலகியலுக்கொவ்வாத தெனவும், இச்சரிதம் உலக வாழ்க்கைக்குதவாத தொன்றெனவும் பலவாறு பிதற்றுவாரு முளர். நாயனார்க்கு இயற்பகையார் என்ற பேர் வழங்குவதையும் இவர்கள் மறந்து பேசுவர். இச்சரிதம் உயர்ந்ததோர் குறிக்கோளை உட்கொண்டு விளங்குவதென்பதை அவர் அறியார். "...இல்லாளை, யன்னியர் தோள் சேர்த்தி யரும்பொருளை யீட்டியிழி, கன்னியர்தோள் சேருங் கலிகாலம்" என்றது முதலாக இக்காலக் கொடுமையைப்பற்றி ஒரு பெரியார் கூறி வருந்திய உண்மைகள்

இங்கு நினைவு கூர்தற்பாலன. மணம், இருவர் உயிருள்ள வரையும் நிகழ்வதோர் உறுதிச் செயல் என்பதொழிந்து, மனமுள்ளவரை நிகழத்தக்கதும் தவறி நிகழத்தக்கதும் ஆவதாம் என்ற எண்ணம் தம்முட் பரவிவரும் இந்நாள் மாக்கள் தமது ஊனக் கண்கொண்டு இச்சரிதத்தை ஆய்ந்து தெளிய வல்லரல்லரென விடுக்க.

நீரென்னை யருள்—ஒன்றை நான்செய்வ தல்துமை யல்லால்—என்பனவும் பாடங்கள். 9

413. மாது தன்னைமுன் கொடுத்தமா தவர்தா
மனம கிழ்ந்துபே ருவகையின் மலர்ந்தே,
"யாது நானினிச் செய்பணி?" யென்றே
யிறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச்
சாதி வேதிய ராகிய தலைவர்
"தைய றன்னையான் றனிக்கொடு போகக்
காதன் மேவிய சுற்றமும் பதியுங்
கடக்க நீதுணை போதுக!" வென்றார். ௧0

(இ - ள்) வெளிப்படை. மனைவியாரை முன்னர்க் கொடுத்த மாதவராகிய நாயனார் முன்னையினும் மனமகிழ்ச்சியுடன் பேருவகையிற் சிறந்து, அவரை நோக்கி 'இனிமேல் நான் செய் பணியாது?" என்று கூறிப் பணிந்து நிற்க, அவரை எதிர் நோக்கி இயல்பிலே வேதியராகிய தலைவனார் "இத்தையலை நான் தனியாகக் கொண்டு செல்லும்போது (இவள்பாலும் உன்பாலும்) ஆசையுடைய சுற்றத்தாரையும் இப்பதியவர்களையும் நான் கடந்து செல்ல நீ துணையாகப் போதுவாயாக!" என்று கூறினார்.

(வி - ரை) மாதவர் - "செய்தனவே தவமாக்கும்" அத்தனே **மெய்த்தவ** ராகி வந்து ஏற்றாராதலின் அவர்க்கு மாதினைக் கொடுத்ததே **மாதவ**மாயிற்று. "பரனுணர் வினா லுணரும் **மெய்த்தவரை** மேவா வினை" - என்புழிப்போலக் **கொடுத்த** என்ற பெயரெச்சம் அத்தொழிலை யுணர்த்திற்று. இஃது ஒரு பெரியா ருரைக்குறிப்பு. வந்த மாதவரைப் போலவே நாயனாரும் மாதவரேயாம் என்பது குறிப்பு. அவர் இரு மாதரையுடையராயும் தம்மாதரை மறைத்து வேடத்தால் மாதவராய் வேறு மாதினை விரும்பியவர்; இவர் ஒரு மாதினையுடையராயும் அவர்பால் வேட்கை விடுத்த மாதவர் என்று குறிப்புக் கொள்வாருமுண்டு.

மனமகிழ்ந்து பேருவகையின் மலர்ந்தே - முன்னரே **முன்னையின் மகிழ்ந்த** - (410) நாயனார் தாம் கொடுத்த கொடை, அம்மையார் செயலின் நிறைவெய்தியது கண்டபோது அதனினும் பெரியதோர் அளவிடற்கரிய மகிழ்ச்சி பெற்று உவகையிற் சிறந்தார் என்பதாம். "ஈத்துவக்கும் இன்பம்" என்றார் நாயனாரும்.

மலர்தல் - எல்லாக் கரணங்களும் உவகையிற் சிறத்தல். "மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" (252) என்ற இடத்துக் காண்க.

இனிச் செய்பணி - இப்போது செய்தது முன் பணித்த பணி. இனிமேற் செய்யும் பணி யாது? என்பதாம்.

மாதவராய் நின்றவர் தம்மை - என்று கூட்டிக் கொள்க. **நின்றவர் தம்** - நின்ற அவர்தம். **எதிர் நோக்கி** - "எதிரே சொன்ன போதிலும்" (410) என்ற இடத்திற் போலவே இங்கும் அவரை நேரிற் பார்த்து என்க. புறத்தினும் கூறத்தகாத மொழி என்பது குறிப்பாம்.

சாதிவேதியர் - இங்குச் **சாதி** என்றது இயல்பு என்ற பொருளில் வந்தது. சாதிமுத்து, சாதி மாம்பழம் முதலிய வழக்குகள் காண்க. "சாதியார் பளிங்கினொடு" (காந்தாரபஞ்சமம் - கோயில் - 7) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் முதலிய

ஆட்சி வழக்கும் காண்க. சாதி - உயர்வு என்று கொண்டு, திருமாலாதியர்க்கும் வேதியர் - என்றலுமாம். "வானோரந்தணனா்" என்ற திருவாக்கும் காண்க.

இங்கு வந்தவர், வேதியராகிய கோலத்தால் மட்டு மன்றி இயல்பாலே வேதியர் என்க. பிறப்பு வேதியர் - சிறப்பு வேதியர் - என்று பகுத்தும், பிறப்பு வேதியர் பின்னரே தோன்றினர் என்றும், இன்னபிறவும் இங்கு ஆராயப்புகும் உரைகள் ஈண்டைக்குப் பொருந்தா என்க.

"பசுபோதக் கவளமிடக் களித்துண்டு" என்றபடி உயிர்கள் தமது ஆன்மபோதங்களையெல்லாம் தரவாங்கும் இயல்பாகிய **ஏற்றல்** என்கிற வேதியர் குணம் இயல்பிற் பொருந்துவது சிவபிரானுக்கேயாம்.

உபநயனம், பஞ்சசிகை, தோல், நூல் முதலிய வேதியர் கோலங்களும் சிவபெருமானுக்கே இயல்பிற் பொருந்துவன. 152-ம் பாட்டினுரை காண்க. நீ ஒருவனே பிராமணன் - என்று சிவபெருமானை வேதங்கள் பேசும். ஏனைய விட்டுணு முதலிய தேவர்களுக்கு வெவ்வேறு வருணங்கள் கூறப்பெற்றன.

ஆயின் இரத்தலின் இழிபு இவ்வேதியராகிய இறைவனைச் சாராதோ? எனின் - சாராது; இவர் வாங்குவது, தன் பொருட்டன்றி உயிர்களாகிய நமக்குத் தரும் பொருட்டே செய்யப் பெறுதலின் என்க.

"பரந்துல கேழும் படைத்த பிரானை, யிரந்துணி யென்பர்க; ளெற்றுக் கிரக்கும்?,
கிரந்தர மாக நினையு மடியார், இரந்துண்டு தன்கழ லெட்டச்செய் தானே."

என்பது திருமூலர் திருமந்திரம். —ஏழாந் தந்திரம் - 185.

தலைவர் - எல்லா உயிர்களையும் தம்மடிமையாக உடையவர். முதல்வராதலின் கொண்டு போதற்குரியர் என்பது குறிப்பு.

தனிக்கோடு போக - சிவபெருமான் எல்லா வுயிர்களிடத்தும் கலந்து நிற்பவர்; ஆதலின் வேறு எவரும் தனியாயுள்ளா ரிலர். இவரோ அவ்வாறு கலந்தும் தான் தனியாயு மிருப்பவர். ஆதலின் **தனிக்கோடு** என்றார். **போக** - போகும் பொருட்டு என்றலுமாம்.

காதல் - இங்கு இவர்கள் மேல் சுற்றத்தாரும் பதியவரும் வைத்த பற்றினைக் குறித்தது. **பதி** - பதியிலுள்ளார்க்கு ஆகுபெயர். **கடக்க** - அவர்கள் செய்யக் கூடிய தடைகளை யெல்லாம் கடந்து செல்ல.

துணை போதுக - பின்னர் "நண்ணிய மனைவியோடு நம்முடன் போது கென்று" (436) நாயனாரையும் உடன் கொண்டு போகின்றார் எனும் நிகழ்ச்சிக் குறிப்பு.

கடக்க - சுற்றம், பதி - என்ற இப்பற்றுக்களையும் நீ விட்டொழிய என்ற உட்குறிப்பும் காண்க. 10

வேறு

414\. என்றவ ரருளிச் செய்ய "யானேமுன் செய்குற் றேவ
லொன்றிது தன்னை யென்னை யுடையவ ரருளிச் செய்ய
நின்றது பிழையா" மென் று நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்றிக ழுறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி, கக

415\. வாளொடு பலகை யேந்தி வந்தெதிர் வணங்கி மிக்க
ஆளரி யேறு போல்வா ரவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே யாகப் போயினா் துன்னி னாரை
நீளிடைப் படமுன் கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார். கஉ

414. (இ - ள்) வெளிப்படை. அவ்வேதியர் அவ்வாறு அருளிச் செய்தாராக, "இவர் எடுத்துரைக்கு முன்னரே உணர்ந்து நானே செய்யக் கடவதொன்றாம் குற்றேவல் இது; இதனை என்னை உடையாராகிய இம்மாதவர் எடுத்துச் சொல்லுமளவும் செய்யாது தாமதித்து நின்றது என்மேற் பிழையாம்" என்று தமக்குள் நினைந்தவராய் மனையினுள்ளே வேறிடத்திலே சென்று, பொன் திகழும் நல்ல ஆடையை அணிந்து கொண்டு, அதன் மேல் அழகிய கச்சினையும் வீக்கிக் கட்டிக் கொண்டு, கக

415. (இ - ள்) வெளிப்படை. வாளும் பலகையும் ஏந்தியவராய் மீண்டு எதிரே வந்து வணங்கி வீரம் மிக்க ஆண் சிங்கம் போன்ற நாயனார், தம்மை மறுத்து எதிர்ந்து வந்தவர்களை யெல்லாம் நெருங்கி அடர்த்து நிலத்தில் வீழ்த்த நேர்வாராய், மாதவர் - அம்மையார் எனும் அவ்விருவரையும் தமக்கு முன்னே போகச் செய்து தாம் பின்னே போயினார். கஉ

414. (வி - ரை) **முன்** - இவர் எடுத்துக் காட்டி ஏவும் முன்னரே. இச்செயலால் இது விளையும் என உணர்ந்து முன்னமே.

செய் குற்றேவல் - செய்யக் கடவதாகிய சிறு பணி.

என்னை உடையவர் - தம்மையும் தம்பக்கல் உள்ளவைகளையும் அரனுக்கும், அடியவர்க்கும் உடைமையாகக் கொண்டு ஒழுகுபவர் நாயனார். "அன்ன தெம்பிரா னடியவருடைமை"—(410). என்றமை காண்க. "அன்றே என்ற னாவியும் உடலும் உடைமையெல்லாமும், குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ?" என்ற **திருவாசகமும்** காண்க.

உடையவர் - ஆளாக உடையவர். ஆளாயினவன் தன் தலைவனுக்கான பணிகளை யெல்லாம் அவன் ஏவா முன்னமே அறிந்து செய்யக் கடவன்; ஆதலின் அவர் சொல்லுமளவும் செய்யாது நின்றது பிழை என்பது குறிப்பு.

நினைந்து - தமக்குள்ளே கொண்டு. மனநிகழ்ச்சி.

வேறிடத்து - மனையினிடத்து ஆடை முதலியன அணிதற்குரியதான தனியிடம். Dressing Room என்பர் நவீனர். நாயனார் "அளவில் செல்வத்து வளமையி னமைந்தார்"(405) ஆதலின் இவரது மனையிலே உரிய ஒவ்வோர் செயலுக்கும் ஒவ்வோர் தனியிடங்கள் அமையப் பெற்றன என்க.

வேறிடம் - போர்க்கோலங் கொள்ளுதற்குரிய பொருள்கள் வைத்திருக்குமிடம் என்றும், ஆயுதசாலை என்றும் கூறுவாரு முண்டு. ஒருவகையாற் கொள்ளப்படுவதல்லது பொது வகையாற் படைத்தொழில் வணிகர்க்குரிய மரபுத்தொழிலன்று.

பொன்திகழ் அறுவை - பொன்னூலினு லமைந்து விளங்கிய உடை. (பொற் சரிகை என்பது இந்நாள் வழக்கு). **அறுவை**-நெய்யுந் தறியினின்றும் அறுத்தெடுத்தலின் **அறுவை** என்பர்; துணித்தெடுத்தலின் துணி என்பது போல.

கச்சு - இடையிலே துணி அவிழ்ந்து நழுவாமல் வலுப்படுத்தவும், உடை யசைவினாற் போரில் இடையூறு நேர்படா வண்ணம் உடையை அமைவுபடுத்தி நிறுத்தவும், இறுக்கிக் கட்டுவதோர் உடை வகை. அறுவை **சாத்தி** எனவும், கச்சு **வீக்கி** எனவும் வேறுபடக் கூறிய வகை காண்க.

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன. என்று அவர் அருளிச்செய்ய-யானே முன் செய் ஏவல் - இது தன்னை அருளிச் செய்ய நின்றது பிழை - என்று - நினைந்து - புக்குச் - சாத்தி - வீக்கி - ஏந்தி - வந்து - எதிர் வணங்கி - அவரை முன் போக்கிப் - பின்னே - அரியேறு போல்வார் - துன்னினாரை முன் கூடி வீழ்த்த நேர்வார் - துணையாகப் - போயினார் - என்று கூட்டி முடிக்க. 11

415. (வி - ரை) **வாளோடு பலகை ஏந்தி** - வாளும் பலகையும் போர்க்கருவிகள். **வாள்** - எதிர்த்தாரை ஒறுக்கவும், **பலகை** - அவரினின்று தம்மைக் காத்துக் கொள்ள

வும் பயன்படுவன. Offensive and defensive weapons என்பர் நவீனர். பலகையி னியல்பும் பயன்படும் வகையும் எறிபத்த நாயனார் புராணத்திலும், பிறண்டும் காண்க. பரப்புடைய வட்டமாய் வெளியிற் குவிந்த வடிவுடன் உட்புறம் கைப்பிடிக்கும் அமைப் புடன் கூடியது. வெளிக்குவிந்த சதுரமாய் அமைவதுமுண்டு.

வாள் வலக்கையிலும், பலகை இடக்கையிலும் ஏந்தி என்க.

வந்து - வேறிடத்துப் புக்கவர் முன்னையிடத்திற்கு மீண்டும் வந்து.

ஆள் அரியேறு - ஆள் - பிற எல்லாப் பிராணிகளையும் ஆள்கின்ற - ஆளுந்தன்மை யுடைய. ஆண்மையும் வீரமும் குறித்த உவமை. **ஏறு** - ஆண்.

முன் போக்கி - காவல் செய்வதற்காகத் தாம் பின்னே போயினர் என்க.

துன்னினுரை - இச்செயலைத் தடுக்க என வருவித்துக் கொள்க. **துன்னினுரை** - துன்னுவாரை என எதிர்காலங் குறித்தது.

நீளிடைப் படமுன் கூடி - நெடுந் தூரத்திற் காணினும் முன்சென்று கிடைத்து.

நிலத்திடை வீழ்த்த - இச்செயலுக்கு இடையூறாக மேற்போந்து வாராமல் தங்கு மாறு நிலத்தில் வீழ்ந்து கிடக்கும்படிச் செய்து ஒதுக்குவதே கருத்தல்லாமற் கொல் வது கருத்தன்று என்பது குறிப்பு.

நேர்வார் - இறந்த காலப் பொருளில் வந்த முற்றெச்சம். நேர்ந்தாராகி. ஒருப்பட் டாராகி - ஆயத்தமுடையாராகி. நேர்வாராய்ப் போயினுர் என்று முடிக்க.

தோளிணை துணையேயாக - வேறொருவரும் தமக்குத் துணையாக வேண்டாதவ ராகி. அரியேறு போல்வாராதலின் தமது தோளேயன்றித் துணை வேறு வேண்டாராயி னர். அரி தன் கையே துணையாக யானையையும் அறைந்து வெல்வதாதலின் அரி யேறு போன்ற இவரும் தோளிணையே துணையாக் கொண்டார் என்க. தோளிணையே துணையாக என்று ஏகாரம் பிரித்துக் கூட்டுக. வேதியர் 'தம்மைத் துணைபோதுக' (413) என்றழைக்கவே, அவர்க்குத் துணை தாமும் தமக்குத் துணை தமது தோளிணையும் ஆக என்ற நயமும் காண்க.

வாளோடு பலகை யேந்தி - என்றதனால் அந்நாளிற் பலரும் பொதுவாக ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தனர் எனவும், இந்நாளிற்போலன்றி ஆயுதங்களை யாவருடைய அனுமதியுமின்றிக் குற்றந் தவிர்க்கவும் தன்னைக் காக்கவும் உபயோகித்து வரக்கூடிய வர்களா யிருந்தனர் எனவும், வணிகர்களும் படைத்தொழில் போர்த்தொழில் பயின் றிருந்தனர் எனவும் அறிகின்றோம். எனவே, முன்னுள் நாகரிக நிலையினின்றும், ஆண் மை நிலையினின்றும் இந்நாள் மக்களாகிய நாம் நாகரிகத்தில் உயர்ந்து வருகின்றோ மென்றெண்ணிக்கொண்டே அத்துணையும் *கீழே இறங்கி வருகின்றோம் என்பதறிவாளி கள் கருத்து. 12

416. மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரும்
"இனையதொன் றியாரே செய்தார்? இயற்பகை பித்த னானாற்
புனையிழை தன்னைக் கொண்டு போவதா மொருவ?" னென்று
துணைபெரும் பழியை மீட்பான் றொடர்வதற் கெழுந்து சூழ்வார், கங

417. வேலொடு வில்லும் வாளுஞ் சுரிகையு மெடுத்து மிக்க
காலென விசையிற் சென்று கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கு மீண்டிப் பரந்தவார்ப் பரவம் பொங்க
மால்கடல் கிளர்ந்த தென்ன வந்தெதிர் வளைத்துக் கொண்டார். கச

*எனது சேக்கிழார் 50 - 51 பக்கங்கள் பார்க்க.

416. (இ - ள்) மனைவியார்...என்று - மனைவியாராகிய அம்மையாரது சுற்றத்தார்களும், வள்ளலாராகிய நாயனாரது சுற்றத்தார்களும் "இது போன்றதொரு செயலை யார்தான் இதுவரைச் செய்தார்கள் ? வேறு ஒருவரும் செய்யாத செய்கை செய்யுமாறு இயற்பகையார் பித்தம் கொண்டு விட்டானானால் அது காரணமாக மனைவியாரைக் கொண்டு ஒருவன் போய் விடுவதாகுமா?" என்று கருதி ; துனை...சூழ்வார் - இச்செயலால் உற்ற பெரும் பழியினின்றும் மீட்பதற்காக அவரைப் பற்றித் தொடர்வதற்குக் கூடி எழுந்து சூழ்வார்களாகி, ௧௬

417. (இ - ள்) வெளிப்படை. வேலுடனே வில்லும் வாளும் சுரிகையும் என்றிவற்றை எடுத்துக்கொண்டு, அளவில் மிக்கு எழும் காற்றினைப்போல வேகமாகப் போய்க் காவல்பொருந்திய அந்தப் பட்டினத்தின்புறத்திலே சென்று நெருங்கிப் பரந்த ஆரவாரத்துடன் பெருங் கடல்தான் பொங்கிக் கிளர்ந்ததோ என்னும்படி எதிரில் வந்து வளைத்துக் கொண்டார்கள். ௧௭

416. (வி - ரை) **வள்ளலார்** - கொடுத்தற்கரிய மனைவியைக் கொடுத்தும் விடுத்தும் புரிந்த கொடைச் சிறப்பு நோக்கி இங்கு **வள்ளலார்** என்ற பெயரால் கூறினார். **வள்ளல்** - வரையாது கொடுப்போன். அதனினும் மிக்க சிறப்புத் தோன்ற, **வள்ளல்** என்றமையாது, பன்மையாக்கி **வள்ளலார்** என்றார்.

பித்தனானால் - நாட்டவர் பிறரெவரும் செய்யாத பழிச் செயலைக் கூசாது வெளிப்படையாய்ச் செய்த அதனால் அவன் பித்தனேபோன்றனன்; அவ்வாறு அவன் பித்தனேயாயினும்.

புனையிழை - இழை - இழைகளாலாகிய அணிகளுக்கு ஆகுபெயர். **புனையிழை** - அணிகள் புனைந்த அம்மையாரைக் குறித்த அன்மொழித் தொகை.

வணிகர்களாயினமையின் அணிகளின் விலையைக் கருதினார்கள் என இங்கு விசேடவுரை காண்பாரு முண்டு. பின் நிகழ்ச்சிகளால் ஆசிரியர்க்கேனும், சுற்றத்தார்க்கேனும் அது கருத்தன்றென்று விளங்கும். பழி போக்குவதே அவர்கள் கருதியதாம்.

துனை பெரும் பழியை - துனை - துன்னுவதாகிய (துன் - பகுதி) ; **பழியை** - பழியினின்றும். வேற்றுமையுருபு மயக்கம். **மீட்பான்** - மீட்பதற்கு - மீட்கும் பொருட்டு. பானீற்று வினையெச்சம். பழியினின்றும் நாயனாரையும் மனைவியாரையும் குலத்தையும் மீட்க - விடுவிக்க. பழிவிட (418) என்று கூறுவதும் காண்க.

சூழ்வார் - முற்றெச்சம். சூழ்வார் - எதிர்வளைத்துக் கொண்டார் என முடிக்க.

யாரேசெய்தார் - ஒருவரும் செய்தாரிலர். வினா எதிர் மறைப் பொருளில் வந்தது.

418. (வி - ரை) **வேலோடு வில்லும் வாளும் சுரிகையும் எடுத்து** - இப்படைகளை உரிய வகையில் தாங்கிக் கொண்டு. **சுரிகை** - குற்றுடைவாள். **வாள்** தூரத்திலும் **சுரிகை** நெருக்கத்திலும் பயன்படுவன. சுரிகையாற் குத்துவர் ; வாளினால் வீசி வெட்டுவர். காதன் மேவிய சுற்றத்தார் இவ்வாறு படையேந்தித் தடுக்க வருவர் என்று எதிர் நோக்கியே நாயனார் தாம் முன்னரே வாளும் பலகையும் ஏந்தி வந்தனர். நாயனார் ஒருவரே யாதலினாலும், மிக்க வலியுடையார் ஆதலினாலும் அவர்க்கு வாள் ஒன்றேபோதியதாயிற்று. இவர்கள் பலராதலால் பலபடை எடுத்து வந்தனர். அன்றியும் ஒரே படைகொண்டு பலவும் செய்ய வலியிலர் என்பதுமாம். இவர்கள் அனைவரும் நாயனார் ஒருவர்க்குத் தோற்றொழிதல் பின்னர்க் காண்க. மாட்டாரே பலவற்றைக் கைக்கொள்வர். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழி. அன்றியும் இவை எவற்றினுக்கும் மேலாய்ச் சிவன்பாலே தம்மை ஒப்புவித்த அடியாரை யாவரும் வெல்லவல்லரல்லர் என்பது கைகண்டவுண்மை. திருநாவுக்கரசர் முதலிய பெரியோர் சரிதங்களைக் காண்க.

"ஒருவர் தமர்நாம், அஞ்சுவது யாதொன்று மில்லை, அஞ்ச வருவது மில்லை" ;

"என் உளமே புகுந்த அதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே, ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே" முதலிய தேவாரங்களும் காண்க.

"ஆராலு மென்னை யமட்ட வொட்டாதினிச், சீரார் பிரான் வந்தென் சிந்தை புகுந்தனன்"—ஒன்பதாந் தந்திரம் - 312, என்பது திருமந்திரம்.

"வீரமென்னால் விளம்புந் தகையதோ?" (144) என்றதும் காண்க. இதுபற்றித் திருக்கூட்டச் சிறப்பிற் கண்ட பகுதிகளும் நினைவுகூர்க.

வேல் - வேல் கையினின்றும் எறியப்பட்டுப் பகைவன்பால் விடுத்தும், அவ்வாறு எறியப்படாது கையிற் கொண்டும் இருவழியும் தொழிற்படுவது. இது ஒருவகைப் படை. அவ்வாறில்லாது, வில் - வாள் - சுரிகை - முதலியன உடையவன் கையினின் றகலாது நின்றே தொழிற்படுவன. இவை மற்றொரு வகைப் படை. ஆதலின் இவ்வேறு பாடு குறிக்க **வேலோடு** என்று ஒடுக் கொடுத்து அதனைத் தனிப் பிரித்துக் கூறினார். கையினின்று விலகித் தொழில் செய்வன, விலகாது தொழிற்படுவன என்ற இப் பொருள் பற்றியே அஸ்திரம் - சஸ்திரம் என வகைப்படுத்திக் கூறுவர் வடநூலார். எனவே, இங்கு எல்லாவகைப் படைகளும் கூறியதாம்.

கடி நகர் - புகார் நகரம் - காவிரிப்பூம்பட்டினம். இது சோழ மன்னர்களின் தலை நகரங்களில் ஒன்றாய்ப் பல வகையாலும் சிறந்து விளங்கினமையால் மதில் முதலிய பல வகைக் காவலும் பெற்றிருந்ததைக் குறிக்கக் **கடிநகர்** என்றார். இங்குப் பழியினின்று மீட்குஞ் செய்கை கூறுமிடமாதலின் காவல் மிகுதி குறித்த அடைமொழி தந்ததாம்.

சூழ்வார் - எதிர் வளைத்துக் கொண்டார் - நகரினின்றும் இவர்கள் வெளிப்புறப் படுவதன்முன், சுற்றி வளைத்துக்கொள்ள முன்னும், மருங்கும் சென்று சூழ்ந்து வளைத் துக் கொண்டார்கள் என்க.

ஆர்ப்பரவம் - ஆர்ப்பும் அரவமும். படைகளின் ஓசை - பலரும் கூடி விரைவிற் செல்லும் கிளர்ச்சியின் ஓசை, இவர்கள் சொல்லோசை முதலிய பல வகை ஓசைகளும் சேர்ந்து விரவுவது குறிக்க **ஆர்ப்பு - அரவம்** - எனப் பல சொற்களாற் கூறினார். ஆர வாரம் என்றலு மொன்று. ஆர்ப்பரவமானது கடல் பொங்கிக் கிளர்ந்தது என்னும்படி யாக - என உரைத்தலுமாம்.

பொங்க—என்பதும் பாடம். 14

418. வழிவிடுந் துணைபின் போத வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக் காரிகை யுடன்போம் போதி
"லழிதகன்! போகேல்; லீண்ட வருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீபோ" வென்று பகர்ந்தெதிர் நிரந்து வந்தார். கரு

(**இ - ள்**) வெளிப்படை. வழி காத்து விடும் துணையாகி வந்த நாயனார் பின்னே வர, வழித்துணையாகி யுள்ளவராகிய வேதியர் மிகப் பெருங் காதலை வெளிக் காட்டிக் கொண்டு அம்மையாருடன் போகும் போதிலே, "அழிதகையோனே! நீ போகாதே; (நில்); இங்கு எமது அரிய குலக்கொடியாகிய அம்மையாரை விடுத்து, இங்கு உனது செயலால் விளைந்த பழி விட்டொழியுமாறு நீ போவாயாக" என்று சொல்லி எதிரிலே கூட்டமாகக் கூடி வந்தார்கள்.

(**வி - ரை**) **வழிவிடுந்துணை** - சுற்றமும் பதியும் துன்பஞ் செய்யாது காத்து, வழி கடக்கும் அளவும் துணையாக வந்து, வழிவிட்டனுப்பு மட்டுந் துணையாவார். இது நாய னாரைக் குறித்தது. உலகில் எல்லாக் கணவர்களும் இவ்வகையிலே பட்டவர்களேயாகிப் பிறவிப்பயணத்தில் ஏகதேசத்தில் தத்தம் ஆயுள் வரையிலே துணைநின்று பின்

விடுகின்றவர்களேயாவர். அதுவும் அருகி இந்நாளிலே ஆயுளுள்ள போதே விடுகின்ற செயலும் மிகுந்து வருகின்றது.

ஆனால் இவ்வாறு நாயனார்போல **வழிவிடுந் துணையாவார்** எவருமிலர். **வழி** - உயிர் இறைவனைக் கூடும் வழியிலே; **விடும் துணை** - செலுத்தி விடும் துணையாவார் - என்றுரைத்தலுமாம்.

வழித்துணை - உயிர்கள் செல்லும் அளவற்ற பிறவிப் பயணந்தோறும் சென்று சென்று அவ்வழி எவற்றிலும் துணையாவார். இறைவனுக்கு மார்க்கசகாயர் என்ற பேரும் காண்க. "வானநாடனே - **வழித்துணை** மருந்தே" என்பனவாதி தமிழ் வேதங்களும் காண்க. ஆண்டானும் அடியார்களும் ஒன்றுபோலவே உயிர்க்குறுதிசெய்து வழி செலுத்துவார்களாதலின் இங்கு இருவருக்கும் வழியும் துணையும் சேர்த்துக் கூறிய அழகு காண்க.

கழிபெருங் காதல் - மிகப்பெரிய ஆசை. **காதல்** - இங்குப் பெண்கள் மேல் நிகழும் ஆசை குறித்தது. **கழி** - **பெரும்** - மிகுதிகாட்டிய அடுக்கு. **கழி** - கழிகின்ற எனப் பெயரெச்சமாக்கிக், காட்டினமட்டில் நிகழ்ந்து இனிப் பின்னர் விரைவிற் கழியக் காண்கின்ற என்றுரைப்பினும் அமையும். உயிர்நாயகனாகி, உயிர்களுக்குறுதி செய்தலிலே மிகவும் காதலுடையவன் என்ற இயல்பும் குறித்தபடி.

காரிகை - நாயனார் வேதியர்க்குக் கொடுத்து விட்டாராதலின் அதன் பின்னர்க், **காரிகை, மாது, தையல்** என்ற சொற்களாற் பெரும்பாலும் கூறியது காண்க.

அழிதகன் - துன்மார்க்கன் - அறநூல்களாற் றடுக்கப்பட்டவற்றையே செய்பவன். **குலக்கொடி** - குலவிளக்கான கொடிபோல்வாள். முன்னரும் **குலமடந்தை** - (411) என்றார்.

பழிவிட - **பழி** - அறநூல்களில் விலக்கப்பட்ட செயல்கள் செய்வதால் இம்மையில் வரும் இழிபு. பழிச் செயலினால் விளைவது பாவம். "பழியஞ்சிப் பாத்தூண்" என்ற குறளும் அதன் கீழ் உரையும் காண்க. தமது குலத்துக்கு இச்செயலால் வரும் உலகப்பழிப்பினை வாராது காத்தலையே இவர்கள் கருதினார்கள். ஆதலின் **குலக்கொடியை** - என்றனர்: "அனைபெரும் பழியை மீட்பான்" (416) என அவர்களது கருத்தை முன்னர்க் குறித்ததனையும், "நாடுறு பழியுமொன்னார் நகையையு நாணும்" (421) எனப் பின்னர் அவர்கள் கூறுவதனையும் காண்க.

இங்குக் குறித்த பழியாவது தம் மனைவியைப் பிறர்க்குக் கொடுத்தார் என நாயனார்க்கும்; தம் கணவனையன்றி அன்னியரைச் சார்ந்தார் என மனைவியார்க்கும்; இக்குலத்தவர் இது செய்தார் எனக் குலத்தவர்க்கும்; இப்பதி - இந்நாடு இது கண்டது எனப்பதிக்கும் நாட்டுக்கும்; இவ்வடிமைத்திறம் இதற்குக் காரணமாயிற்று - இவ்வேடந்தரித்தார் இது செய்தார் என அவ்வடிமைத்திறத்திற்கும் வேடத்தார்க்கும்; வரும் பழியாம். இன்ன பிறவும் இவ்வாறு தனித்தனி வைத்துக் கண்டு கொள்க. இவையெல்லாம் உட்கொண்டு உலகத்தார் பேசும் பலவகைப் பழியும் கருதிப் **பழிவிட** என்றார். **விட** - நாயனார் கொடுக்கவும் வேதியர் பெற்றுப் போகவும் நிகழ்ந்தபோதே பழியும் நிகழ்ந்து விட்டது; ஆயின் அது நீங்குமாறு செய்வதே கருமம்; ஆதலின் வந்தபழி **விடும்படியாக** நீர் செய்யும் என்றார்கள். கிரகணம் விடும் நேரம் என்ற வழக்கிற்போலக் காண்க. **பழிவிடநீபோ என்று** - பழிநீங்குமாறு செய்; அதுவே உன் கடன்; கொடியை இங்கு விட்டு, நீமட்டும் போ என்றதாம். நேர்ந்தபழி அவ்வாறு நீ மட்டும் போதலினாலே நீங்கி விடும் என்பது கருத்து. முன்னர்ப் **போகேல்** என்றது கொண்டு போகாதே என்றதாம்.

எதிர்நிரந்து - எதிராக நெருங்கிக் காட்டி - வேதியர் தப்பிப் போகாதபடிக் கூடினார்கள். "வந்து எதிர்வளைத்துக் கொண்டார்" (417) என்றது காண்க.

இங்குப் பழிவிட - என்ற கருத்தை "எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ் ஞான்றும், விளியாது நிற்கும் பழி"; "பகைபாவ மச்சம் பழியென நான்கு மிகவாவா மில்லிறப்பான் கண்" என்ற திருக்குறள்களில் நாயனர் வற்புறுத்தியிருத்தல் காண்க.

தகவு அழிந்தவன் என்பது அழிதகன் எனமாறி வந்த தென்றும், கொடி படருந் தன்மை யுடையது போலக், குலம் படர்தற் குரியார் மங்கையாராகலின் குலக்கொடி என்றூர் என்றும் கூறுவர் ஆலால சுந்தரம் பிள்ளை. அழிதகன் - மிகுந்த பாவத்தை யுடையவன். அழிது - கெட்டது; அகம் - பாவம்; அகமென்பதனோடு வினை முதற் பொருளில் வந்த அன்விகுதி புணர்ந்து நிலை மொழியீற்று மகரமும் விகுதி அகரமும் கெட்டு அகன் என நின்றது என்பர் மாகாலிங்கையர்.

நிரைந்து—என்பதும் பாடம். 15

419. மறைமுனி யஞ்சி னன்போன் மாதினைப் பார்க்க மாதும்
"இறைவனே! யஞ்ச வேண்டா; வியற்பகை வெல்லு" மென்ன;
வறைகழ லண்ணல் கேளா "வடியனே னவரை யெல்லாந்
தறையிடைப் படுத்து கின்றேன்; றளர்ந்தருள் செய்யே"லென்று, ௧௬

420. பெருவிற லாளி யென்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
யொருவரு மெதிர்நில் லாமே யோடிப்போய்ப் பிழையு; மன்றே
லெரிசுடர் வாளிற் கூறுய்த் துடிக்கின்றீ "ரென்று நேர்ந்தார். ௧௭

419. (இ - ள்) வெளிப்படை - (அவர்கள் அவ்வாறு வருதல் கண்டு) மறைமுனி வர் பயந்தவர்போலக் காட்டி அம்மையாரைப் பார்க்கவே, அவரும் " தலைவரே! பயப் படவேண்டாம்; அவர்களை இயற்பகை வெல்லும்" என்று சொல்ல; இதனைச் சத்திக் கும் வீரக் கழலணிந்த பெருமையுடையாராகிய நாயனர் கேட்டு, "அடியேன் அவர்களை எல்லாம், உமக்கு இடையூறு செய்யாமல் நிலத்தில் வீழ்த்தி விடுகின்றேன்; தேவரீர் தளரவேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே, ௧௬

420. (இ - ள்) வெளிப்படை.' பெரிய வலிய ஆண்சிங்கம் போலக் கண்களிலே கோபத்தீப் பொறி பறக்கும்படிப் பார்வைசெய்து, தமது குலம் அவமானமடைந்தமை காரணமாக வந்த பரந்த பெரிய சுற்றத்தார்களை நோக்கி, "நீங்கள் ஒருவரும் இங்கு என் எதிரில் நில்லாமல் ஓடிப்போய் உயிர் தப்பிப் பிழைத்துக் கொள்ளுங்கள்; அப்ப டிச் செய்யா விட்டால் தீப் போல எரிகின்ற எனது வாளினலே துண்டாக வெட்டப் பட்டுத் துடிக்கப் போகின்றீர்" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் முன்னுகப் போர்முகத்தராய்ச் சேர்ந்தார். ௧௭

419. (வி - ரை) மறைமுனி - மறைகளாற் பேசப்பெற்ற முனிவர் - சிவபெருமான். "பொறிவாயி லைந்தவித்தான்"—(குறள்); "நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந் தும், வென்றானை"—(திருவீழி - திருத்தாண்டகம் - 3) முதலிய திருவாக்குக்களில் இறைவனது முனிவராந்தன்மை விதந்து பேசப் பெற்றிருத்தல் காண்க. முனி வராந்தன்மையை மறைத்துத் தூர்த்த வேடந்தாங்கி வந்தவர் என்றுரைத்தலுமாம். பின்னருந் தவமுனி (430) என்றதும் காண்க.

அஞ்சினன் போல் - உண்மையில் அஞ்சினரன்று; கொண்ட வேடத்திற்கும், வந்த செயலுக்கும் ஏற்ப முன்னர்க் கழிபெருங்காதல் காட்டியது (418) போலவே இங்கு அச்சமுங் காட்டினர்.

மாதினைப் பார்த்தது சுற்றத்தார் வந்த போதும் அம்மை மனந்திரியாமையை உதகரிக்கக் காட்டுவதற்கு.

இறைவனே - கணவர் பணியை ஏற்றுச் சென்று நின்றவராதலின் வேதியரைத் தலைவராகக் கொண்டதற்கேற்ப **இறைவன்** என்று விளித்தார். எல்லார்க்கும் இறைவன் என்ற குறிப்புமாம்.

இயற்பகை வெல்லும் - நாயகிகள் தமது கணவர் பெயரைச் சொல்லலாகாது என்பது விதியும் வழக்குமாம். இங்கு அம்மையார் இப்போது தாம் வேதியரது உடைமைப் பொருளாயினமையாலே நாயனாரிடத்து அவர் தமது கணவர் என்ற நினைப்பினை அறவே ஒழித்து நின்றனர். ஆதலின் அவர் பேராற்கூறியபடியாம். **வெல்லும்** - பலர்பா லொழிந்த நாற்பாலிலும் பொருந்துவதாகிய செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்றாற் கூறிய அழகினைச் சிந்திக்க.

அறைகழல் அண்ணல் - வீரமும் பெருமையும் ஒருங்கே உடையார் என்பது குறிப்பு. **கழல்** - வீரங்குறித்தது.

துறை - எதுகை நோக்கித் துரைஎன்பது துறைஎனவல்லினமாய் வந்தது.

தளர்ந்தருள் செய்யேல் - அருள் செய்தல் இங்கு உபசாரங் குறித்த மொழிமாத்திரமாய் நின்றது. தளரேல் என்க.

அறை கழலன்பர்—என்பதும் பாடம். 16

420 - (வி - ரை) **பெருவிறல் ஆளி** - மேலே **அறைகழலண்ணல்** (419) என்றதற் கேற்ற உவமானங் கூறியவாறு. முன்னரும் **ஆளி யேறு போல்வார்** (415) என்றமை காண்க. பிராணிகளிற் றலைமைபெற்ற சிங்கம் ஒன்றே வீரத்தினும் பெருமையினும் ஒருங்கே சிறந்ததாம். தமது வீரமே பெரிதாக் கருதி இளிவந்த செயல்கள் செய்யாமையே பெருமையாம். பின்னர் "ஆண்டகை வீரர் தாமே அனைவர்க்கு மனைவ ராகி" (425) என்பதுங் காண்க.

பிறங்கு எரி சிதற நோக்கி - கோபங்கொண்டபோது கண் சிவக்கும் - மிகச் சிவக்கவே அது பொரி பறக்கும் நெருப்புப்போலும் என்பது வழக்கு.

பிறங்கு - விளங்கிய. யார்க்கும் தேற்றமாக. **எரிசிதற** - பொறி பறக்கின்றதோ என்னும்படி.

பரிப்வப்பட்டுவந்த - பரிபவம் - அவமானம்; இழிவு. தமக்கும் தம் குலத்துக்கும் இதனால் இழிபு வந்ததென்று கருதி, அவமானத்திற்குள்ளாகி. "நின்சீர் பங்கப் படுத்தவன் போகப் பரிபவந் தீரு முனக்கு" (திருநா - புராணம் - 121)

படர்பெரும் சுற்றம் - பல பக்கமுஞ் சூழ்ந்து வந்தாராதலின் **படர்** என்றார்.

ஒருவரும் - வந்த அனைவரும்; ஒருவரும் ஒழியாமே. **பிழையும்** - உயிர்தப்பிப் பிழைத்துக்கொள்ளுங்கள். **அன்றேல்** - அப்படி ஓடிப்போகாவிடில்.

எரிசுடர்வாள் - சுடர் எரிகின்றதுபோல் விளக்கமாகிய வாள். இஃது வாளின் ஒளி குறித்தது. உடையவனது சினத்தைப் படையின்மேல் ஏற்றிக் கோபம் மிக்கெழும் வாள் என்று கூறலுமொன்று.

கூறுய்த் துடிக்கின்றீர் - பல கூறுகத் துண்டிக்கப்பட்டு வருந்துவீர். **கூறு** - பகுதி. ஒன்றாயிருந்த உடலும் அங்கங்களும் பலவாகக் கூறுபடுத்தப் பெறுதல். **துடிக்கின்றீர்** - வருத்தமிகுதி துடிப்பினைத் தருவதாம். எதிர்காலப் பொருளில் வந்த நிகழ்கால வினைமுற்று; துண்டமான அங்கங்கள் பின்னர்ச் சிலநேரம் துடித்தலும் காண்க. **நேர்ந்தார்** - போர்முனைபவராக எதிர்த்து நின்றார்.

போர் தொடங்குவோர் அதன்முன்னே பகைவருக்கு இறுதி முறையாக எச்சரிக்கை சொல்லும் போர் நீதியினைப் பற்றியது இப்பாட்டின் கருத்து. போர் செய்யு முன் சாம பேதங்களை எடுத்துச் சொல்வதும் அறமாம்.

துணிகின்றீர்—நோர்ந்தார்—என்பனவும் பாடங்கள். 17

421. "ஏடா!நீ யென்செய் தாயால்? இத்திற மியம்பு கின்றாய்;
நாடுறு பழியு மொன்னார் நகையையு நாணு; யின்று

பாடவ முரைப்ப துன்றன் மனைவியைப் பனவற் கீந்தோ?
கூடவே மடிவ தன்றிக் கொடுக்கயா மொட்டோ" மென்றார். கஅ

(இ - ள்) வெளிப்படை. (நாயனார் இவ்வாறு சொல்லிப் போர்க்கு நேரவே) சுற்றத்தார்கள், " ஏட! நீ என்ன காரியம் செய்தனை? இந்நாட்டவர்க்கு உன் செய்கையால் வருகின்ற பழியினையும், பகைவர் இகழ்ந்து நகைப்பதனையும் கண்டு நாணமடைகின்றாயில்லை; மனைவியை வேதியனுக்குக் கொடுத்துவிட்டோ நீ உனது வலிமையைப் புகழ்ந்து சமர்த்துக் கூறுவது? இக்காரியத்தில் இறக்க நேரினும் நாங்கள் ஒருசேர இறந்துபடுவதல்லாமல் நீ உன் மனைவியை வேதியனுக்குக் கொடுக்க விடமாட்டோம்" என்று கூறினார்கள்.

(வி - ரை) ஏட! - இகழ்ச்சி குறித்த விளிச்சொல். தோழனை விளிக்கும் முன்னிலைச் சொல் என்று கொள்வாருமுண்டு.

நாடு உறுபழி - நாட்டில் உனக்கு நட்பாயினார்க்கு வரும் பழி. **ஒன்னார்** - பகையாயினார். **பழியும்** - இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கது.

பாடவம் - புகழ் என்றலுமாம்.

கூடவே மடிவதன்றி - பின் நிகழ்ச்சியின் முற்குறிப்பு. தம் மழிவு தம் வாக்கிலே பிறந்தது. இஃதோர் உலகியல்பு. இவ்வாறே "அணைந்தன ரெங்களை வாதினில் வெல்ல" (திருஞா - புரா - 685) முதலிய பல இடங்களிலும் அவ்வவர் வாக்கிலே வரும் முற்குறிப்பு மொழிகளைக் காண்க.

கூடவே மடிவது - உன்னோடுங்கூடவே நாங்களும் என்றுரைப்பாருமுளர்.

கொடுக்க - நீ கொடுக்க. **ஒட்டோம்** - நாங்கள் சம்மதிக்கமாட்டோம்; விடமாட்டோம். **ஒட்டு** - இணங்குதலைக் குறிப்பதோர் வினைச்சொல்.

யாம் கொடுக்க ஒட்டோம் என்பது அவர்களது மனத்தின் நிலையாகிய கோபங் கருதி நிலைமாறிக் **கொடுக்க யாம் ஒட்டோ**மென வந்தது. மோனை கருதியதுமாம்.

மணஞ் செய்காலத்தில் - வேள்வித்தீ - தேவர்கள் - சுற்றத்தார் முதலிய அனைவர் முன்னிலையிலும் அவர்களைச் சாட்சியாக வைத்து இந்தப் பெண்ணை மணஞ் செய்தது ஆயுள்வரை அறவழியிலே வைத்துக் காக்கவேயல்லாமல், அறம் பிறழ்ந்து பிறர்க்குக் கொடுத்துவிட அன்று; ஆதலின் இது எங்கள் சம்மதியன்றி நிறைவு பெறாது இதற்கு நாங்கள் இணங்கமாட்டோம் என்ற தொடர்புபற்றிக் கூறினார்கள்.

இத்திறல்—என்பதும் பாடம். 18

422\. மற்றவர் சொன்ன மாற்றங் கேட்டலு மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க"வுங்க ளுடற்றுணி யெங்குஞ் சிந்தி
முற்றநும் முயிரை யெல்லாம் முதல்விசும் பேற்றிக் கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவ"னென் றெழுந்தார் நல்லோர். கக

(இ - ள்) வெளிப்படை. மற்றவர்களாகிய சுற்றத்தார்கள் இவ்வாறு சொல்லிய சொல்லைக் கேட்டவுடன் நல்லோராகிய நாயனார் தமது மனத்திலே கோபம் முன்னே பொங்கியெழ, அவர்களை நோக்கி, "உங்கள் உடல்களைத் துணித்து அத்துண்டங்களை எங்கும் சிந்தி உங்களுயிரை யெல்லாம் முன்னே விண்ணிலேற்றிக்கொண்டு அதன் பின்னர் இந்த நற்றவரைப் போகவிடுவேன்" என்று எழுந்தனர்

(வி - ரை) **மற்றவர்** - நாயனாரது அடிமைத் திறத்தினை மறுத்து எழுந்தவர் என்றது குறிப்பு. அருட்டிறனுக்கு அயலார். நாயனாரை இங்கு நல்லோர் என்ற ஆசிரியர், அவரை மறுத்தெழுந்தாரைத் தீயோர் என்னாது **மற்றவர்** என்ற சொல்லமைதி

காண்க. "கொல்லா விரதமொன்று கொண்டவரே **நல்லோர்; மற்** **றல்லாதார்** யாரோ அறியேன்" என்ற தாயுமானார் பாட்டி னமைப்பினை இங்கு வைத்துக் காண்க.

நல்லோர் - இங்கு நாயனார் கிளைஞரைக் கொல்லப்போகின்றனரேனும் கொலை செய்வது அவர் கருத்தன்று; சிவபுண்ணியத்தைத் தடுக்கும் பாவத்தினின்றும் இவர்களை விலக்கி இவர்களுயிரையும் நல்வழிச் செலுத்தி வேதியரை வழிச்செல விடுக்கும் சிவபுண்ணியமே கருதியதாம். ஆதலின் இவர் **நல்லோரே** என்பது குறிப்பு. "பாதகமே சோறு பற்றினவா" முதலிய திருவாக்குக்களும், சண்டீச நாயனார் சரிதமும் இங்கு நினைவு கூர்க. கொலை - இன்னின்ன இடத்துக் குற்றமாம் என்றும், இன்னின்ன இடத்துக் குற்றமாகாது என்றும் தெளிவது சைவத் திறமாம். இதன் தத்துவத்தை அறியாது பிறர் பலவுங் கூறுவர். அவை ஒன்றும் பொருளன்றென்று விடுக்க.

மனத்தின் வந்த செற்றம் முன் பொங்க - "மூர்த்தைய வுரையிற் சொன்ன பொறைமுத லவையும் விட்டுச், சிந்தையிற் செற்ற முன்னூர் தீக்குணந் தலைநின்றார்கள்" (திருஞா - புரா - 634) என்றபடி, இஃது இராசதம் தாமத முதலிய ஆன்ம குண பேதங்களான் வந்த **செற்ற** மன்றாதலின், சினத்திற்குரிய இழிபு இங்கு நாயனாரைப் பற்றா தொழிந்தது. சிவபுண்ணியத்திற்கு நேர்ந்த இடையூற்றினை ஒழித்து அப்புண்ணியத்தை முற்றுவிக்க எழுந்தது; ஆதலின் வெகுளாமை பற்றிய நீதிநூல் விதிகள் இங்குப் பொருந்தாமை அறிக. இப்புராணத்திலே இன்னும் வரும் தொண்டர் செயல்கள் பலவும் இவ்வாறே காண்க. இங்கெழுந்த செற்றத்தின் விளைவாக இறுதியிற் சுற்றத்தாரும் குற்றநீங்கப்பெற்று **வானிடையின்பம் பெற்றார்**; நாயனார் **சிவலோகத்திற் கும்பிட்டுடனுறை பெருமை** பெற்றார் (438) என்பதும் காண்க.

உடற்றுணி - உடல் துணிக்கப்படுதலாற் போந்த துண்டங்கள்; துணிக்கப்பெறுவன துணி எனப்பட்டன. **எங்கும்** - இவ்விடத்தில் எதிர்ந்த அங்கங்கேயும்.

முற்று நும் உயிரை எல்லாம் - இங்குத் தடுத்து வளைக்கும் உங்கள் எல்லாருடைய உயிர்களையும். **முற்றும்** - முற்றுகை செய்யும்; முழுதும் என்பாரு முண்டு. **முதல் விசும்பு ஏற்றிக்கொண்டு** - **முதல்** - முதலில்; **விசும்பு** - வான உலகம். இங்கு இயமனுலகம் - வீரசுவர்க்கம் - குறித்தது. **வானிடையின்பம்** (438) என்றது காண்க.

விசும்பேற்றுதல் - கொல்லுதல் குறித்த மங்கல வழக்கு என்பதும் ஆம். எனது செயலால் நீங்கள் உயிரிழக்கநேரினும் அதுவும் உங்களுக்கு நன்மையே என்றதாம்.

நற்றவர் தம்மை - சுற்றத்தவர் எண்ணுகின்றபடி இவர் தூர்த்த வேடமும், பிறன்மனை நயக்கும் அவச்செயலும் உடையார் அல்லர் என்றது குறிப்பு. **நற்றவர்** - **நல்லோர்** - வேதியர் - நாயனார். இருவரிடத்தும் உண்மையில் படிற்றொழுக்கமும் அநீதமுமில்லை என்றதாம்.

போகவிடுவேன் - எனது கொடைப் பொருளாகிய இ[illegible]ண்ணுடன் என்றது தொக்கி நின்றது. "கொடுக்க யாம் ஒட்டோம்" என்ற மறுதலை மொழிக்கு மாறாய், அற்றன்று-உங்களை நீக்கிக்கொண்டு, அவரைப் போகவிடுவேன் என்ற துணிபு குறித்தது.

எழுந்தார் - இதுவரை நின்று பேசியவர் மேலெழுந்து போர்தொடங்கினர். 19

423. நேர்ந்தவ ரெதிர்ந்த போது நிறைந்தவச் சுற்றத் தாருஞ்
சார்ந்தவர் முன்பு செல்லார் ஊர்தியைக் கொண்டு பெற்ற
மூர்ந்தவர் படிமேற் செல்ல வுற்றெதி ருடன்று பொங்கி
யார்ந்தவெஞ் சினத்தான் மேற்சென் றடர்த்தெதிர் தடுத்தா ரன்றே.

(இ - ள்) வெளிப்படை. போர்க்கு நேர்ந்து நாயனார் எதிர்த்தபோது, கூடி நிறைந்த அந்தச் சுற்றத்தார்களும், இவ்வாறு சார்ந்த அவர் முன்பு செல்லாமல், எப்போதும் எருதினை ஊர்ந்து வருபவராகிய வேதியர், இங்கு அம்மையாரை உடன்

கொண்டு நிலத்தில் நடந்து செல்ல, அவரை அப்பொழுதே எதிர்த்துப் பொங்கிய பெருங் கோபத்தாலே மேற்பாய்ந்து எதிரிலே போய்த் தடுத்தார்கள்.

(வி - ரை) **நேர்ந்தவர்** - மேலே சொல்லியபடி எழுந்து போரினை நேர்ந்த அவர்.

சார்ந்தவர் - தம்மை வெட்டி வீழ்த்தி விலக்குதலைத் துணிந்து தம்பாற் சார்ந்தவர்.

தம்முன் செல்லார் - இவனோடு போர் செய்யின், அதற்குள், அவர் தமது பெண்ணைக் கொண்டுபோய்விடுவர் ; ஆதலின் முதலில் அவரைத் தடுத்துப் பெண்ணை மீட்டுக்கொண்டு, பின்னர் வேண்டுமாயின் இவனுக்குரியன செய்வோம் என்று அவர்கள் கருதி, நாயனார் தங்கள்மேல் எழுந்தபோதும் அவர் மேலே தாமும் அடாது விட்டு, வேதியர்மேற் சென்று தடுத்தார்கள். அன்றியும் 'இயற்பகை பித்தனானால்' (416) என்று முன்னரே நாயனாரைப் பித்துப் பிடித்தவர் எனத் துணிந்துவிட்டார்களாதலின் பித்தனுடன் போர்செய்தல் அறிவோர்செய லன்றென்றுகொண்டு தங்கருமமே கருதினார்கள் என்பதுமாம்.

பெற்றம் ஊர்ந்தவர் - இப்போது அதனை ஊர்ந்துவராமல் படிமேற் செல்ல.

தையலைக் கொண்டு - அம்மையாரையும் உடன்கொண்டு. "கழிபெருங் காதல் காட்டிக் காரிகை உடன்போம் போதில்" (418) என்றது காண்க. **தையல்** - உமையம்மையாரை ஒரு பாகத்துக் கொண்டு எப்போதும் இடபவாகனத்து வருபவர் என்றுரைத்தலுமாம். **ஊர்ந்தவர்** என்றதனால் இப்போதவ்வாறில்லாது வந்தவர் என்றதாம். "தன்றுணை யுடனே வானிற் றலைவனை விடைமேற் கண்டார்" (434) எனப் பின்னர் இறுதியில் இக்கோலத்தைக் காட்டுதல் காண்க.

உடன்று - பகைத்து - எதிர்த்து. **பொங்கி ஆர்ந்த** - உள்ளே பொங்கி நிறைந்த. **அடர்ந்து** - நெருங்கிக் கிடைத்து. **அன்றே** - நாயனார் எதிர்த்தபொழுதே. விரைவு குறித்தது. இதனை அசையென்றெடுக்குவாருமுளர்.

நிறைதவச் சுற்றத்தாரும்—என்பதும் பாடம். 20

424. சென்றவர் தடுத்த போதி லியற்பகை யார்முன் சீறி
வன்றுணை வாளே யாகச் சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளுந் தாளுந் தலைகளுந் துணித்து வீழ்த்து
வென்றடு புலியே றென்ன வமர்விளை யாட்டின் மிக்கார். உக

(இ - ள்) வெளிப்படை. சுற்றத்தார்கள் வேதியரின் மேற்சென்று தடுத்த போதில் இயற்பகை நாயனார் முன்சீறித், தமது வாளினையே தமக்கு வலிய துணையாகக் கொண்டு, இடம்வலமாகச் சாரிகை மாறிமாறி வந்து, எதிர்த்து நெருங்கி வந்தவர்களுடைய தோள்களும் கால்களும் தலைகளும் உடலினின்று கூறாகத் துண்டங்களாகும்படி வெட்டி நிலத்தில் விழும்படிச் செய்து, வெற்றி கொண்டு அடுதல் புரியும் ஆண் புலியினைப்போலப் போர் விளையாட்டிலே தாமே மிக்கவராகச் சிறந்து நின்றார்.

(வி - ரை) **முன்சீறி** - தடுப்பதற்கு முன்னே அவர்கள்மேற் சீறி. தாம் சுற்றத்தார்கள்மேல் எழவும், அவர்கள் தம்மை விட்டுத் தம்மாற் பத்தி செய்யப்பட்ட வேதியர் மேற் சென்றதனைப் பொறாராய்ச் சீறினார். தமக்கு வருவதைவிடத் தம்மாற் போற்றப்பட்டார்க்கு வரும் ஏதத்தை மிக அஞ்சிக் காப்பது அன்பின் தன்மை. எல்லாந் தம்மையே நயப்பது அன்பில்லாத சீழோர் தன்மை. "அன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு" என்பது குறள். **சீறி** - பெருங் கோபத்தாற் பாய்ந்து.

வன்றுணை வாளேயாக - தோளிணை துணையேயாக. (415) என முன்னர்க் கூறினாரேனும், அத்தோளுக்கு உற்ற வலிய துணை வாளேயாயிற்று. வாளினாலன்றித் தோள்களாற் றுணித்தல் இயலாது. ஆதலின் தோள் தமக்குத் துணையாகவும், தோளுக்கு **வலிய துணை வாளே**யாக என்றார். **வன்** - வலிய - பெரிய - பகைவரைக்

கொல்லும் வலிமைபெற்ற. வன்செயல் செய்தலால் **வன்றுணை** என்றார். மற்ற ஒரு கையில் ஏந்திய **பலகை** (415) **வன்றுணை**யாகாது தற்காப்பு மாத்திரமாகிய எளிய துணையேயாம். ஆதலின் **வாளே** என்றார். ஏகாரம் பிரிநிலையும் தேற்றமுமாம். “ எரிசுடர் வாளிற் கூறாய் ” (420) என்றதுங் காண்க.

சாரிகை மாறிவந்து - சாரி - சரி - பகுதி ; சரித்தலால் நிகழ்வது ; **கை** - இடம் ; வலத்திலும் இடத்திலுமாக விரைந்து மாறிமாறிச் சுற்றி வருதல் **சாரிகை** எனப்படும்.

தோளும் தாளும் தலைகளும் துணித்து - முதலிற் றுணிக்கப்படுவது பகைவனின் படையேந்திய தோள்; தோள் துண்டிக்கப்பட்ட பின்னரும் கால்களால் நடந்தும் ஓடியும் மேல்விழுந்தும் அடர்ப்பாரைக் கால்களைத் துணித்தல் தகும் ; அதன் பின்னரும் அடங்காது பகையில் மிகுந்து கேடுசூழ்வாரை அவசியமாயின் தலை துணித்தல் தகும்; ஆதலின் இம்முறை வைத்தார். நாயனார்க்குக் கொல்வது கருத்தன்று. சுற்றத்தார் செய்த இடையூற்றினை நீக்கி விலக்கிக் கொள்வதே கருத்தாம் என்பது முன்னர் உரைக்கப்பட்டது (420) ; **துணித்தலும் - வீழ்த்தலும்** அவ்வாறு விலக்குதற்கு இன்றியமையாத அந்த அளவின் மட்டுமே அமைந்து நின்றன என்க.

தாம் இக்கருத்தில் அமைந்து நிற்பவும், அவர்கள் அவ்வளவில் அமையாது தீங்கு செய்தலில் முனைத்தபோது தமது முன்னைக் கருத்தின் நோக்கத்தினையும் தாண்டி மேற் சென்று கொல்ல வேண்டி வந்தது ; ஆதலின் **வென்று அடு புலி ஏறு என்ன** என்றார். புலி பசியின்றியும் (தேவையின்றியும்) எதிர்ப்பட்ட பிராணிகளை மேற்பாய்ந்து கொல்லும் ; சிங்கம் அவ்வாறன்றிப் பசித்தபோதல்லாமற் கொல்லாது. ஆதலின் முன்னர் “ஆளரிபோல்வார்” (415), “பெருவிறல் ஆளி யென்ன” (420) எனச் சிங்கத்தினை உவமை கூறிய ஆசிரியர் இங்கு நாயனாரைப் புலிக்கு உவமித்தார். அரியேற்றினும் புலி யேறு கோபத்தாற் சீறிப் பாய்ந்து போர் செய்தலிற் சிறந்தது. **வென்றடு** - அடுதலும், அதனால் வெற்றியும் ஒருங்கே நிகழ்வன. சிறப்புப் பற்றிக் காரியத்தை முன்னர் வைத்தார். அட்டு வெல்லும் என மாற்றிக் கொள்க. அடுதலிலும் வெற்றி பெறுதலினுமே நாயனார் புலியினைப் போன்றார் என்பது குறிப்பு. முன்னர் அரிபோன்றார்; இங்குப்புலிபோன்று செயல் செய்தனர் என்க.வென்றபின் அடுதல் பேடிகள் செயலாம்.

துணித்து வீழ்த்து - “வாளிற் கூறாய்” (420) என்றும், “உங்கள் உடற்றுணி எங்கும் சிந்தி” என்றும் கூறியபடி இங்குத் துணித்தனர். **வீழ்த்து** - அந்த அங்கங்களை முற்றும் கூறுபடுத்தியதனால் அவை நிலத்தில் விழும்படிச் செய்து. துணித்து அவர்களை வீழ்த்து என்றுரைப்பினுமாம்.

அமர் விளையாட்டின் - இந்தப் போர்க் காரியத்தைப் பெரு முயற்சியின்றி விளையாட்டாகவே செய்தனர் என்பது குறிப்பு.

மிக்கார் - இவரொருவரே காணப்பட்டனர் - மிகுந்து நின்றவராயினர். ஏனையோர் காணப்படார் என்பதும் குறிப்பு. “தாமே நின்றார்” (427) எனப் பின்னர்க் கூறுவது காண்க.

சாரியை—என்பதும் பாடம்.

21

425. மூண்டுமுன் பலராய் வந்தார் தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைக டோறும் வேறுவே றமர்செய் போழ்தி
லாண்டகை வீரர் தாமே யனைவர்க்கும் மனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து கலந்துமுன் றுணித்து வீழ்த்தார். ௨௨

(இ - ள்) வெளிப்படை. இந்தப் போரிலே,பலர் ஒன்று சேர்ந்து எதிர்ப்பவர்களாயும், தனித்தனியாய் வந்து எதிர்ப்பவர்களாயும், சுற்றத்தார் தத்தமக்கு வேண்டிய அவ்வத் திசையிலே வந்தெதிர்த்துப் போர் செய்யும் அவ்வப் போழ்தில், ஆண்மை மிக்க

நாயனார் ஒருவர் தாமே அவ்வத்திறத்தாரையும் தாம் ஒருவரேயாக எதிர்த்து, அவர்கள் அங்கங்கும் தம்மைக் காணத் தக்க விசையினாலே சாரிகையாக அவர்கள்மேற் பாய்ந்து அவர்களுடன் போரிற் கலந்து முன்னே அவ்வவர்களையும் துண்டங்களாக்கி நிலத்தில் வீழ்த்தினார்.

(வி - ரை) மேற்பாட்டிற் பொதுப்படக் கூறிய நாயனாரது அமர் விளையாட்டின் திறத்தினை இப்பாட்டு விரித்துக் கூறியதுடன் மூண்டபோரின் விரைவையும் செலவையும் குறித்தது.

மூண்டு வந்தார் - மூட்டினார்கள் - கூடியும் தனித்தும் போரில் எதிர்த்தவர்கள். **வேண்டிய திசைகள்** - தத்தமக்கு ஏற்றபடி அவர்கள் கொண்ட அவ்வவ்விடம் (Advantagious positions). **வேறு வேறமர்செய்** - அவர்கள் பல திசைகளினின்றும் தனித்தனி இவ்வொருவரையே குறித்தடர்த்துப் போர்செய்கின்ற.

ஆண்டகை வீரர்தாமே - மிக்க ஆண்டன்மையுடைய வீரராதலின் இவ்வொருவர் தாமாகவே. போரில் இவர் மிக்கதற்குக் காரணங் கூறியவாறு.

அனைவர்க்கும் அனைவராகி - அவர்களனைவருக்கும் அங்கங்கும் காணப்பட்டு எதிர்த்து நிற்றலால் இவ்வொருவரே அவ்வளவு பேர்களாயினார் என்று சொல்லும்படி.

காண்டகு விசையிற் பாய்ந்து - காண்தகும் - அவரவரும் இவரை அங்கங்கும் காணத்தக்க.

விசை - வேகம். ஒரு பொருளை வேகமாகச் சுழற்றும்போது அவ்வொன்றே கூறுபடாது தொடர்ந்ததொரு வட்டமாக எங்கும் இருப்பதாக அவ்வேகத்தாற் காணுமாறு போல. **விசையிற் பாய்ந்து** - அங்கங்கும் அனைவர்க்கும் இவ்வொருவரே காணப்பட்டதற்கு விசையிற் பாய்ந்ததே காரணமாம் என்பது.

பாய்ந்து - கலந்து - துணித்து - வீழ்த்தார் - இவை போரில் ஒவ்வோர் கணத்திலே பிரித்தறியாத வகையிலே நிகழ்ந்த செயல்கள். இச்செயல்களைத் தனி வினையெச்சங்களாற் குறித்தார். இவைகளைத் தனித்தனிக் காணாது வீழ்த்தலாகிய முடிந்த ஒரு செயலே காணத்தக்கதாயிற்று என்பார் இவ்வினையெச்சங்களை யெல்லாந் தொடர்ந்து கொண்டு செலுத்தி, **வீழ்த்தார்** என்றதொரு வினைமுற்றுடன் முடித்துக் காட்டிய அழகு காண்க. அவ் வினைமுற்றுடன் போர்வினையும் முற்றியதென்பதாம்.

முன் - அவ்வவர்களும் இது தெரிந்து தம்மை அடர்ப்பதன் முன்னே.

துணித்து வீழ்த்தார் - வீழ்த்தி விலக்குவதே கருத்தாயினமை காண்க. 22

426. சோரிந்தன குடல்க ளெங்குந்; துணிந்தன உடல்க ளெங்கும்;
விரிந்தன தலைக ளெங்கும்; மிடைந்தன கழுகு மெங்கும்;
எரிந்தன விழிக ளெங்கும்; எதிர்ப்பவ ரொருவ ரின்றித்
திரிந்தனர் களனி லெங்குஞ் சிவன்கழல் புனைந்த வீரர். ௨௩

(இ - ள்) வெளிப்படை. அந்தப் போர்க்களத்தினிலெங்கெங்கும், எதிர்த்த சுற்றத்தார், பிறர் இவர்களின் குடல்கள் சொரிந்து கிடந்தன; உடல்கள் துணிபட்டுக் கிடந்தன; தலைகள் விரிந்து கிடந்தன; கழுகுகளும் கூடின; கண்கள் எரிந்தன; சிவபெருமான் திருவடிகளையே தரித்த வீரராகிய நாயனார் ஒருவரே தம்மை மேல் எதிர்ப்பார்கள் ஒருவருமில்லாமல் தாம் தனியாகத் திரிந்துவந்தனர்.

(வி - ரை) போரின் முடிபினையும் அதன் பின் போர்க்களத்தின் நிலையினையும் நேரிற் காண்பது போல நமக்குக் காட்டுவது இத்திருப்பாட்டு. தன்மையணியிலே மிக அழகுபெற அமைந்த இதன் அழகினைக் கண்டுகளிக்க.

சொரிந்தன முதலிய வினைமுற்றுக்கள் வாக்கிய அமைப்பிலே பின்னே வர வேண்டியவை தத்தம் எழுவாய்களின் முன்னே வந்தன. காண்பார் முதலிற் கண்டது

சொரிதல் - துணிதல் - முதலிய முற்றியவினைகளையே. சொரிந்தன - துணிந்தன - கண்டார் பின்னரே அவ்வவ்வினைப்பட்டன யாவை எனப் பார்த்தபோது அவை குடல்கள் முதலியனவாகக் கண்டார் என அப்போரின் விசையினையும் முடிவினையும் குறித்தபடி.

எங்கும் - என்ற சொல் இப்பாட்டிற் பலமுறை வந்து களத்திற் பல இடத்தும் வேறு வேறு நிகழ்ந்த பல செயல்களையும் பிரித்துக் காட்டி நிற்கும் அழகு காண்க.

இவ்வாறு ஒரு சொல்லைச் செய்யுள் அழகு பொருந்தப் பலமுறை அடுக்கிப் பல பொருள்களையும் தேற்றப்பட வைத்துக் காட்டுவது ஆசிரியரின் சிறப்பியல்புகளில் ஒன்று. முன்னர் நாட்டுப்படலம் முதலியவற்றிற் காண்க.

குடல்கள் - குழாய்போன்று நீண்டு தொங்கும் இயல்புடையன ஆதலின் **சொரிந்தன** என்றார். அன்றியும் இவை வயிற்றுடன் இணைத்த பகுதியன; ஆதலின் துண்டிக்கப்பட்டபோது உள்ளிருந்த உணவுப் பகுதிகளை வெளிச் **சொரிந்தன** என்றலுமாம்.

தலைகள் - அவற்றிற் கட்டி நின்ற தலைக்கட்டுகள் விலக **விரிந்து** கிடந்தன. மயிர் முடிகள் அவிழ விரிந்தனவுமாம்.

கழுதும் - அறுபட்ட துண்டங்களின் நிணங்களைத் தின்னக்கூடின. கழுகுக் கூட்டங்கள் கூடும் அளவுக்குப் பிணங்கள் நிறைந்தன என்ற குறிப்பு. உம்மை - சிறப்பும்மை. **உம்** - அசை என்றுரைக்குவாருமுண்டு.

எரிந்தன விழிகள் - முன்னர் "உடன்று பொங்கி ஆர்த்த வெஞ்சினத்தால் மேற் சென்றடர்த்தார்" (423) ஆதலின் அவர்களது கண்கள் கோபத் தீச் சிந்தின. அந்நிலையிலே தலைகள் துண்டமாயின; ஆகவே பின்னரும் விழிகள் அவ்வாறே எரிந்து நின்றன என்றபடியாம். கழுகு மிடைதலுக்குப் பின்னர் விழிகள் எரிதலைப்பற்றிக் கூறுவதனாலே, **கழுதும்** என்ற உம்மையால், அவற்றிற் கினமாகிய காகம் - நரி - பேய் முதலியவற்றையுங் கொண்டு, அற்றுவீழ்ந்த தலைகளினின்றும் அவை கண்களைத் தோண்டித் தின்னப் போயினபோதும் அக்கண்கள் எரிந்துகொண்டிருந்த காட்சியை இங்குக் குறித்தனர் என்றுரைத்தலுமாம். "கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை" என்ற திருமுருகாற்றுப்படை காண்க.

> "அடன்முனை மறவர் மடிந்தவ ரலர்முக முயிருள வென்றுறு
> படர்சிறை சுலவுக ருங்கொடி படர்வன சுழல்வன துன்றலில்
> விடுசுடர் விழிக ளிரும்புசெய் வினைஞர்த முலையின் முகம்பொதி
> புடைமிடை கரியிடை தங்கிய புகைவிடு தழலை நிகர்ந்தன"
>
> —ஏனாதிநாயனார் - புரா - 23

என்ற இடத்து இக்கருத்தை விளங்கக் காண்க.

எதிர்ப்பவர் ஒருவர் இன்றி - எதிர்த்தவர் யாவரும் இவ்வாறு விலக்கித் தொலைக்கப்பட்டார் என்பதாம். யாரும் எதிர்ப்பவரில்லாது செய்யும் வல்லமையின் காரணம் இவர் **சிவன் கழல் புனைந்த**மையே என்பார் அதனை எடுத்துக் கூறினார். ஒருவரும் இன்றி என்க. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

திரிந்தனர் களனில் - காண்டகு விசையிற் பாய்ந்துவந்த வேகமடங்கவும், இன்னும் யாவராயினும் வருவாருளரோ என்று காணவும் ஆக, எதிர்ப்பவரின்றியும் பின்னரும் சில போது திரிந்தனர். தொடக்கத்திலே சாரிகை மாறி **வந்து** என்றும், பின்னர் விசையிற் **பாய்ந்து** என்றும், முடிவில் **திரிந்தனர்** என்றும் அவ்வவ் வேகத்திற் கேற்றவாறு குறித்த அழகும் காண்க. **எங்கும் சிவன்கழல் புனைந்த** - எவ்விடத்தும் சிவனையே எண்ணிய என்று வேறுமோர் பொருள்கொள்ளவைத்ததும் ஓர் அழகாம்.

எதிர்ந்தவர்—என்பதும் பாடம்.

427. மாடலை குருதி பொங்க மடிந்தசெங் களத்தி னின்று
மாடுறு செயலின் வந்த கிளைஞரோ டணைந்தார் தம்மில்
ஓடினு ருள்ளா ருய்ந்த ர; ரொழிந்தவ ரொழிந்தே மாண்டார்;
நீடிய வாளுந் தாமு நின்றவர் தாமே நின்றார். உச

(இ - ள்) வெளிப்படை (அறுபட்ட உடற்றுண்டங்களின்) பக்கத்திலே அலை போல விட்டுவிட்டு இரத்தப் பெருக்கானது மேன்மேற் பொங்க, இவ்வாறு மடிந்த சிவந்த போர்க்களத்தினின்று, எதிர்த்தழிக்கும் செயல் மேற்கொண்டு வந்த சுற்றத்தாருடனே, அணைந்தவர்கள் எல்லாரிலும், ஓடிப்போய்த் தப்பிப் பிழைக்க நின்றவர் மட்டும் உயிர் தப்பினார்கள்; இவர்களொழிய ஓடிப்போகாமல் அங்கு நின்ற பிறர் எல்லாரும் மடிந்தே போயினர்; தமக்கு ஒரே துணையாக நிலைபெற்ற அவ்வாளினை யேந்தி நின்ற நாயனார் தாமே தனியாக எஞ்சி நின்றார்.

(வி - ரை) **மாடலை குருதி பொங்க** - உடல்களின் துண்டங்களிலிருந்து இரத்தம் இடையிட்டுப் பொங்கி வழிந்துகொண்டிருந்தது என்க.

பொங்குதல் - இரத்தாசயம் - இரத்தக்குழாய்கள் முதலிய உள் அமைப்புக்கள் சுருங்கி, உள்ளே ஓடிக்கொண்டிருந்த இரத்தத்தை வெளிப்படுத்தும் செய்கையாம். ஒரே தொடர்பாய் வராது இடையீடுபட்டு வருதலின் அலை போல் என்றார். அலை போல இடையிட்டுவரினும் அளவிற் பெருகிற்று என்பார் **பொங்க** என்றார். அலையுடைய வெள்ளம்போல இரத்த வெள்ளம் பெருகி ஓடிற்று என்று கூறுவாருமுளர்.

செங்களம் - எங்கும் இரத்தம் சிந்துதலினாற் சிவந்த களம்.

ஆடுறு செயல் - அடு - பகுதி. அடுதல் - நாசமாக்குதல். பகுதி முதல் நீண்டது. அடுதல் உற்ற (பொருந்திய) செயல்.

கிளைஞரோ டணைந்தார் தம்மில் - கிளைஞர் தம்மில், அவரோ டணைந்தார் தம்மில் என்று தனித்தனிக் கூட்டுக. "காதன் மேவிய சுற்றமும் பதியும் கடக்க" (413), "நாடுறு பழியும்" (421) என முன்னர்க் கூறினமையாற், கிளைஞரிடத்தும் இவர்களிடத்தும் பரிவு கொண்டும், நாட்டுக்கு வரும் பழிக்கு அஞ்சியும் சுற்றத்தோடு உடன் வந்தார் வேறு பலருமாவர்.

இவ்வாறு **தம்மில்** என்றதனைப் பிரித்துக் கூட்டாது கிளைஞரோ டணைந்தவர்களில் எனக் கொண்டு, "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்"; "மான மழிந்தபின் வாழாமை முன்னினிது" என்றபடி உயிரினும் மானமே பெரிதென வந்த கிளைஞர் (421) ஒருவரும் ஓடிற்றிலராக, அவர்களோடணைந்தவர்களிற் சிலரே உயிர் தப்பி ஓடினர் என்றுரைத்தலுமாம்.

ஓடினார் உள்ளார் உய்ந்தார் - உயிரிழத்தற்கு அஞ்சித் தப்பி ஓடினவர்களே உள்ளாராகி உய்ந்தவர்கள். **உள்ளார்** - முற்றெச்சம்.

ஒழிந்தவர் - ஓடாது ஒழிந்தவர். **ஒழிந்தவர் ஒழிந்தே** - சொற்பின் வருநிலை. **ஒழிந்தே மாண்டார்** - தீர்க்கப்பட்டே உயிர் நீத்தார். ஏகாரம் - தேற்றம்.

நீடிய வாள் - வலிமையாலும் புகழினாலும் நீடிய வாள். "எரிசுடர்வாள்" (420). **வாளும் தாமும் நின்றவர்** - தொடக்கத்தில் **வன்றுணைவாளேயாக** ஏந்தித் தாமே தனியாய்ப் பிறர் ஒருவரும் துணையின்றி நின்ற நாயனார். **நீடியதாமும்** என்று நாயனார்க்கும் கூட்டியுரைத்தலுமாம்.

தாமே நின்றார் - ஏகாரம் தேற்றம். முன்னே தனியாய் நின்ற அவரே முடிவிலும் தனியாய் நின்றார். ஏகாரம் பிரிநிலையுமாம். 24

428. திருவுடை மனைவி யாரைக் கொடுத்திடைச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்ற மெல்லாம் வாளினாற் றுணித்து மாட்டி

அருமறை முனியை நோக்கி "அடிக ணீர் அஞ்சா வண்ணம்
பொருவருங் கான நீங்க விடுவ"னென் றுடனே போந்தார். ௨௫

(இ - ள்) வெளிப்படை. (நின்றாராகிய நாயனார்) திருவினையுடைய மனைவியாரைச் சிவவேட வேதியர்க்குக் கொடுத்து, அக்கொடை நிறைவேறுதற்கு இடையூறாக முற்பட்டு வந்த பெருஞ் சுற்றத்தாரை யெல்லாம் வாளினாலே துணித்து மாள்வித்து, அதன்பின் நாயனார் அருமறை முனிவரைப் பார்த்து 'அடிகளே! நீர் பயப்படாதபடி ஒப்பற்ற இந்தச் சோலையினைக் கடந்து செல்லுமாறு நான் துணையாய் வந்து வழிவிட்டனுப்புவேன்' என்று சொல்லி அவருடன் போயினார்.

(வி - ரை) நின்றாராகிய நாயனார் - எழுவாய் வருவிக்க. (நின்றார்) - கொடுத்து - மாட்டி - நோக்கி - என்று - போந்தார் - என முடிக்க.

திருவுடை - திரு - அருட்டிரு. "திருவினும் பெரியாள்" (412) என்ற விடத்துக் காண்க. கொடுப்பதற்கு முன் இருந்த நிலை குறித்ததாதலின் **மனைவியார்** என்றார். தமக்குத் திருநிறைந்த மனைவியாரா யிருந்தவரை.

இடைச் செறுத்து - இடையிலே கோபித்து என்றுரைப்பதுமாம். **முன்பு வரு** - **முன்பு** - எதிராக. இடங் குறித்தது. "எதிர் வளைத்துக் கொண்டார்" (417), "எதிர் நிரந்து வந்தார்" (418), "அடர்ந்தெதிர் தடுத்தார்" (423) என முன்னர்க் கூறியன காண்க. **முன்பு** - காலங் குறித்ததாகக் கொண்டு முன்னே என உரைத்தலுமாம். **பெருஞ் சுற்றம்** - வலிமையாலும், மானத்தாலும், தொகையாலும் பெரிய.

அருமறைமுனி - "மறை முனி" (419) என்ற விடத்துக் காண்க.

அடிகள்! - அண்மை விளி - **அடிகள்** - உலகப் பற்றினை விட்டு இறைவனைப் பற்றிய தகுதியாற் பெரிய முனிவர்க் கமைவதோர் மரபுப் பெயர். "வாகீசத் திருவடியாங் காபாலி யடியவர்" (திருநா - புரா - 109), 'திருவாதவூரடிகள்' என்பனவாதி வழக்குக்கள் காண்க. இது, எந்த வரம்பும் மரபும் தகுதியும் பற்றாது மனம்போனவாறு இந்நாளில் வழங்குவதோர் சொல்லா யொழிந்தது.

பொருவருங் கானம் - கானம் என்பதைக் காடு என்றும், ஆரணியம் என்றும், பொருள் கொண்டனர் முன்னுரைகாரர். காவிரிப்பூம்பட்டினம் அந்நாளிற் சிறந்து விளங்கிய பெரிய துறைமுகப் பட்டினம். கான நீங்கி அணைந்த (429) சாய்க்காடும் பெரிய ஊர். இரண்டும் மிக நெருங்கியுள்ளன-"காவிரிப்பூம் பட்டினத்துச் சாய்க்காடு" "பூம்புகார்ச் சாய்க்காடு" என்று இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துரைக்கும் தேவாரங்கள் காண்க. இவ்விரண்டுக்கு மிடையில் பெருங்காடு இருத்தல் கூடாமையின் அவ்வுரைகளின் பொருத்தம் ஆராயத்தக்கது. பெருநகர்களின் புறத்துச் சோலைகளிருப்பதும் காண்க.

கான நீங்க விடுவேன் - எதிர்த்துவந்தார் சிலர் களத்தினின்று தப்பி ஓடினார். அவர்களும், அவர்களன்றி வேறுயாரேனும் கானத்தில் ஒளித்திருந்து இடையூறு விளைக்கவுங்கூடும் என இவ்வாறு அஞ்சாதபடி, இக்கானங் கடக்கத் துணை போந்து வழிச்செலவிடுவேன் என்றபடியாம். "கடக்க நீதுணை போதுக" (413) என வேதியர் கூறியதைப் பின்னும் மேற்கொண்டு முன் எச்சரிக்கையாக நாயனார் கூறியதாம். "யானே முன்செய் குற்றேவல்" என முன்னர்க் கூறியதுங் காண்க.

கொடுத்திட—மாற்றி—என்பனவும் பாடங்கள். 25

429. இருவரா லறிய வொண்ணா வொருவர்பின் செல்லு மேழை
பொருதிறல் வீரர் பின்பு போதமுன் போகும் போதி
லருமறை முனிவர் சாய்க்கா டதன்மருங் கணைய மேவித்
திருமலி தோளி னானை "மீள்"எனச் செப்பி னானே. ௨௬

(இ - ள்) வெளிப்படை. இருவரால் அறியப்படாத ஒருவராகிய மறை முனிவரின் பின்னே செல்லும் அம்மையார், எதிர்த்தாரைப் பொருது வெல்லும் வலிய வீரராகிய நாயனார் தம்பின் போக, முன்னே போகும் போதில், அருமறை முனிவராகிய வேதியர், திருச்சாய்க்காட்டின் பக்கத்திலே சாரச் சேர்ந்ததும் வீரம் பொருந்திய தோள்களையுடைய நாயனாரை "நீ இனித் திரும்பிப்போ" என்று சொல்லி விடை கொடுத்தார்.

(வி - ரை) கான நீங்கும் வழியிடை மூவரும் போயின வரிசையை இப்பாட்டுக் கூறிற்று. ஒருவர்க்குப் பின் செல்லும் ஏழை, வீரர் தமது பின்புவரத், தாம் அவர்க்கு முன் போகும்போது என்க. பின் செல்லும் ஏழை முன் போகும்போது எனக் கூட்டுக. நாயனார்க்குப் பின்னே வரவேண்டியவரான மனைவியார், அவரைப் பின் பற்றியதனாலே (சொல்வழி நடந்தமையால்) அவர்க்கு முன் போகப்பெற்றார் என்பதும், அவர்க்கு முன்பே இறைவரைக் கூடப்பெற்றனர் என்பதும் குறிப்பு. **இருவரால் அறியவொண்ணு** - பிரம விட்டுணுக்கள் அறியமாட்டாத ஒப்பற்றவர். இருவர் கூடியும் அறியாத ஒருவர் என்ற நயமும் காண்க. **இருவர்** - நாயனாரும் தேவியாரும் என்பாருமுண்டு.

ஏழை - தமக்கென்று செயல் செய்யமாட்டாதவர். பணம் - வலிமை - துணை முதலியவற்றுற் குறைபாடுடையார்க்கு வழங்குவது. "ஏழை யடியார்கள் யாவை சொன சொன்மகிழு மீசனிடமாம்"—(சம்பந்தர் - சாதாரி - திருவைகாவூர் - 1) "ஏழை யடியோமை யாண்டு கொண்ட நயம்"—(திருவாசகம் - திருப்பொற்சுண்ணம் - 18) எனும் அருட்பாக்களைக் காண்க. இங்கு அம்மையாரைக் குறித்தது. "ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்"—(திருவெம்பாவை - 8). அபலைகள் என்று பெண்களைக் கூறும் வழக்கும் காண்க. முன்னே இறைவரும் பின்னே நாயனாரும் ஆக இருபுறமும் (இகபர மிரண்டினிலும்) காக்கப்பெற்றனர் அம்மையார் என்பதும் குறிப்பு.

பொருதிறல் வீரர்—"ஆண்டகை வீரர்" (425), "சிவன் கழல் புனைந்த வீரர்" (426) என்றமைக்கேற்ப ஈண்டும் வீரத்தன்மைபற்றியே இவ்வாறு குறித்தார். மனைவி - சுற்றம் - பதி முதலிய பற்றுக்கள் அத்தனையும் துறந்தொழிந்தது மன்றி, அவை பின்னரும் பற்றவந்தபோது ஒருவராகவே துணிந்தெறிந்த ஆண்மைபற்றி **வீரம்** புகழப்பெற்றதென்க. பற்றறுதலே பெரு வீரமாம். இதுபற்றியே "வீரமென்னால் விளம்புந் தகையதோ" (144) என்று அடியார்களது பொதுவிலக்கணங் கூறியது காண்க. விரிவு ஆண்டுக் காண்க. பின்னரும் வந்த வந்த இடங்களிலும் இவ்வாறே கண்டுகொள்க.

திருமலிதோளினன் - இதுவும் வீரம்பற்றியதேயாம். **திரு - வீர** இலக்குமி. எல்லாத் திருவுக்கும் மேலாகிய அருட்டிரு என்றலுமாம். **மீள்** - பெருங்கொடைதந்து பெருஞ் செயலும் செய்த நாயனாரை வேறொன்றும் கூறாது வாளா **மீள்** எனக் கட்டளையிட்டதும், அவர் அதன்படி மீண்டவகையும் (430), நாயனாது **வண்ணம்** உலகறியக்காட்டிய கருணைத்திறமே என்பது இங்குக் குறித்துணர்ந்துகொள்ளத்தக்கது.

*430. தவமுனி தன்னை மீளச் சொன்னபின் தலையா லார
வவன்மலர்ப் பதங்கள் சூடி யஞ்சலி கூப்பி நின்று
புவனமுன் றுய்ய வந்த பூசுரன் றன்னை யேத்தி
"இவனருள் பெறப்பெற் றே"னென் றியற்பகை யாரு மீண்டார். உஎ

(இ - ள்) வெளிப்படை. தவமுனிவராகிய வேதியர் தம்மைத் திரும்பிப்போகச் சொன்ன பின்பு, (கீழ் வீழ்ந்து) அவர் பாதங்களைத் தலையாரச் சூடி வணங்கிப், பின்

கையார அஞ்சலித்துக் கும்பிட்டுப் பின் நின்று, மூவுலகமும் உய்யும்படி எழுந்தருளிய அவ்வேதியரை வாயாரத் துதித்து, "இவரது திருவருளைப் பெறும் பேற்றினை அடைந்தேன்' என்று இயற்பகையார் மீண்டனர்.

(வி - ரை) **தவமுனி** - தவமுனிவராகக் கோலங் கொண்டுவந்த வேதியர். முன்னரும் **முனி** என்றதும் காண்க. **தன்னை** - தம்மை. நாயனார் தம்மைத் தமக்குள் எண்ணிய எண்ணங் குறிப்பதால் ஒருமையிற் கூறினார். ஒருமைப் பன்மை மயக்கம் எனக் கொள்ளினு மமையும். **தன்** - அசையெனக் கொண்டு, **தவமுனி தன்னை** - நாயனாரை என்றுரைப்பாரு முண்டு.

தலையால் ஆர - "தலையாரக் கும்பிட்டு" என்பது தேவாரம். **ஆர** - நிறைய; திருப்தி பெற. **அஞ்சலி** - கைகூப்பி வணங்குதல்.

நின்று - ஏத்தி - என்று கூட்டி முடிக்க. எட்டுறுப்பு ஐந்துறுப்புக்களால் வணங்கியபின் எழுந்து நின்றுகொண்டு துதித்தல் முறை. தலையால் ஆர என்றதனால், அதற்கேற்பக், கையாரக் **கூப்பி** - எனவும் வாயார **ஏத்தி** எனவும், மனமார **வாழ்த்தி** எனவும் வருவித்துரைத்துக்கொள்க.

புவனம் மூன்று உய்ய - மூவுலகத்துள்ளாரும் தொண்டர் நிலைமை யறிந்துய்யுமாறு காட்ட வேதியர் வேடங் கொண்டு இங்கு இறைவன் வந்தாராதலின் இவ்வாறு கூறினார். (407) பார்க்க. தொண்டினிலை யறிந்து ஒழுகுவதே உயிர்கள் உய்யும் வழி என்பது சாத்திரங்களின் முடிபு. **புவனம் மூன்று** - மேல் நடு கீழ் என்பன. அவன் - அவள் - அது - என மூன்று பகுப்பாகப் படைக்கப்பட்ட உலகம் என்றலுமாம். "அவனவளது வெனுமவை" என்பது சூத்திரம் (சிவஞானபோதம்). மூன்றும் என்ற முற்றும்மை தொக்கது.

இவனருள் பெறப்பெற்றேன் - அடியார் மனநிரம்பும் வரை அவர் வேண்டுவன இல்லை என்னாதே மாறாது கொடுத்து அவர்களது இன்முகங் கண்டுகளிப்பதுவே நாயனார் கைக்கொண்ட கொள்கை. (405—406) "**மீள்**" என்று வேதியர் கொடுத்த விடை அவரது மனநிறைவாகிய அருளைக் காட்டியதென்றும், அவனருள் பெறுவதே பேறு என்றும் நாயனார் கருதினார் என்பதாம். இது நாயனாரது மனநிகழ்ச்சி.

எனவே, வேதியர் தம்மை "**மீள்**" என்ற அளவிலே, நாயனார் மனத்தாலும் வாக்காலும், காயத்தாலும் ஆர்ந்த ஒருப்பட்ட வணக்கம் செய்து தமக்கு இப்பேறளித்தவரிடம் விடைபெற்று மீண்டமை இப்பாட்டாற் கூறப்பெற்றது.

"**மீள்**" பாசமுற்றுமற்றனவாகவே, இனி உலகப் பிறவியிலிருந்து மீள்க என்ற பின்நிகழ்ச்சிக் குறிப்புமாம்.　　27

431. செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர் போக;
மைதிகழ் கண்ட னெண்டோண் மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
"பொய்தரு முள்ள மில்லான் பார்க்கிலன் போனு" னென்று
மெய்தரு சிந்தை யாரை மீளவு மழைக்க லுற்றான்.　　௨௮

(இ - ள்) வெளிப்படை. பிறர் எவராலுஞ் செய்தற்கரிய பெருஞ் செய்கை செய்த நல்ல தொண்டராகிய இயற்பகையார் இவ்வாறு மீண்டு போகத், திருநீலகண்டனும் எண்டோள்களையுடைய மறையவனுமாகிய இறைவன் அவரை மகிழ்ச்சியுடன் பார்த்து, "பொய்மை பொருந்திய உள்ளமில்லாதவன்; திரும்பிப் பார்த்தல் கூடச் செய்யாது போயினன்" என்று அந்த மெய்யன்பு கொண்ட மனத்தாராகிய நாயனாரை மீண்டும் அழைப்பாராயினார்.

(வி - ரை) அழைக்கலுற்ற வகை வரும் பாட்டிற் காண்க.

செய்வதற்கரிய செய்கை செய்த - "செயற்கரிய செய்வார் பெரியர்"—குறள். "செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்து சிலர், எய்தற் கரியதனை யெய்தினார்"—திருக்

களிற்றுப்படியார் 61. பற்று விடுதல் - அடியார் வேண்டியவை யாவையேனும் மறாது கொடுத்தல் - பற்றுக்களை எறிந்து விலக்குதல் - திரும்பிப் பாராது போதல் முதலிய ஒவ்வொன்றும் செய்தற்கரியனவேயாம். சாமுசித்தர் - வைனயிகர் - எனப் பெரியார் இருவகையினர். வைனயிகர் இப்பிறவியிலே உத்தம சென்மமெடுத்து நூல் விதிவழி நின்றொழுகி மேல்வழிச் செல்வார்; சாமுசித்தர் அவ்வாறன்றி முற்பிறவியிலே எல்லாக் கருமமுமுடித்து ஒரு காரணம்பற்றி இச்சென்மத்திற் போந்தவர்- இவர்கள் உடம்பெடுத்த அக்காரணம் பற்றியவழியே வந்தகரும முடித்து மேல் விளைவின்றி முத்தியிற் செல்வார். இவர் செய்யும் செயல்கள் எல்லாம் இறைவன் செயலாகவே நிகழும். இங்கு இந்நாயனாரும் சாமுசித்தராதலின் இவர் செயல் சிவன்பால் நின்ற செயலேயாயிற்று. எனவே, அது பிறர் எவராலும் செய்வதற்கரிய செயலாயிற்று என்க. ஆதலின் **நற்றொண்டர்** என்றார்.

மறையவன் - மைதிகழ் கண்டத்தையும் எண்டோள்களையும் மறைத்து வந்தவன் என்ற குறிப்புமாம். இங்கு வேதியர் அழைத்ததை மட்டும் நாயனார் **கேட்டனரே**யன்றி முன் கண்ட நிலையில் வேதியரை இனிக் காணார்; மைதிகழ் கண்டமும் எண்டோளு முடைய மறையவனாகவே அடுத்த நிலை காணப்போகின்றார்; ஆதலின் இங்கு இவ்வாறு குறித்தார்.

மகிழ்ந்து நோக்கி - அருட்பார்வை செய்து, இதுவரைத் திரோதானசத்தி பதிந்த நோக்கமே செய்தனர்; இங்கு அது அருட்சத்தியாக மாறி அருணோக்கம் செய்தார்.

பொய்தரும் உள்ளம் இல்லான் - **பொய்மை** - ஆணவ முதலிய மலங்களின் செயல் உயிர்களைப் பொய்மை செய்து தீமையிற் புகுத்தும். அவ்வாறுள்ள செயலைத் தரும் உள்ளம் இல்லையாயினவர் - பாசநீக்கம் பெற்றவர் என்றதாம். **பார்க்கிலன் போனான்** - **பார்க்கிலன்** - முற்றெச்சம். திரும்பிக்கூடப் பார்க்காமற் போயினான். மனத்தில் முன்னைப்பற்றுக்கள் பதிந்த வாசனையும் அறவே ஒழிந்தன என்பது குறிப்பு.

மெய் தரு சிந்தையார் - முன்னைப் பாசநீக்கம் பெற்று வாசனாமலமும் ஒழிந்த பின் சிவப்பேறு பெற நின்றவர். **மெய்** - சத்து. இறைவன் சத்தாவான். அசத்தினை யில்லையாக்கிச் சத்துப் பொருள் தனது செயலைத் தரும் சிந்தையார் என்பது.

மீளவும் - முன்னர் அழைத்துப் பணிகொண்டமையே யன்றி மீட்டும். உம்மை - இறந்தது தழுவிய எச்சவும்மை - **மீளவும்** - மீட்டும் மீட்டும் என்றுரைத்தலுமாம். மீள மீள அடுக்கி அழைக்கும் வகை வரும் பாட்டிற் காண்க. நகரம் நோக்கிப்போயின போக்கிலே நின்றும் மீள்வதனோடு இவ்வுலகினின்று தம்முடன் நலமிகு சிவலோகத் திற்கு மீளவும் என்ற குறிப்புமாம். 28

432\. "இயற்பகை முனிவா வோலம்! ஈண்டுநீ வருவா யோலம்!
அயர்ப்பிலா தானே யோலம்! அன்பனே யோலம்! ஓலம்!
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே யோலம்!" என்றான்
மயக்கறு மறையோ லிட்டு மாலயன் றேட நின்றான். ௨௯

(இ - ள்) வெளிப்படை. மயக்கமறும் மறைகள் பன்முறையும் தம்மை நோக்கி ஓலமிட்டுப் பிரம விட்டுணுக்கள் தேடுமாறு நின்ற பெருமையுடையானாகிய அவ்விறைவன் "இயற்பகை முனிவனே ஓலம்!; இங்கே நீ வருவாய் ஓலம்!; எப்போதும் எமது சிந்தனை மறவாதவனே ஓலம்!; அன்புடையவனே ஓலம்! ஓலம்!; பிறர் எவரும் செய்தற் கரிய செய்கை செய்த தீரமுடையானே ஓலம்! என்று தான் பன்முறையும் ஓலமிட் டழைத்தான்.

(வி - ரை) **ஓலம்** - அச்சம் நேர்ந்தவிடத்து (அபயம் - அடைக்கலம் என்று) அதனைத் தீர்க்குமாறு உயர்ந்தாரை விளிப்பதோர் விளியிடைச் சொல்.

இயற்பகை முனிவா - "காமனை முனிந்து" என்றபடி உலகப் பற்றுக்களை யெல்லாம் அறவே முனிந்து ஒதுக்கியவராதலின் **முனிவா** என்றார். அவரது முனிவாராந் தன்மையைப் புவன மூன்றுக்குங் காட்டியதொழில் நிறைவெய்திய இடமாதலின் இங்கு (இச்செயலான் இவர் முனிவராயினர் என **முனிவர்**) என்று முடித்துக் காட்டியபடியாம். இவ்வாறு முடித்ததன் காரணம் பின்னர் ஒவ்வொன்றாய்க் கூறுகின்றதும் காண்க. **"முனிவர்"**-(408); **"மாதவன்"** - (412); **மறைமுனி**-(419); **நற்றவர்** - (422); **முனிவன்**-(429); **தவமுனி**-(430) என முன்னர் **முனித்தன்மை**யாலே குறிக்கப்பெற்ற இறைவன், "தான் செய்யுந் தன்மைகளும் ஆக்கியிடு மன்பர்க்கவன்"—(திருக்களிற்றுப்படியார் - 69) என்றபடி தமது தன்மையே தமது அன்பர்க்கும் ஆயினமை இங்குக் குறித்துக் காட்டியவாறு. **முனிவரால் முனிவா** எனப் போற்றப் பெற்றவர் பெரு முனிவர் என்க.

மீண்டு நீ வருவாய் - 'நீ புகுமிடம் நீ இப்போது குறித்துச் செல்லும் நகரமன்று. நாம் இருக்கும் இந்த இடமே' என்பதாம். **மீண்டு நீ வருவாய்** - என்று கூறுதலும் ஒன்று. 'பிறரால் எளிதின் மீளக்கூடாத இவ்வுலகத்திலிருந்து மீண்டு எமது நலமிகும் உலகத்திற்கு மீண்டு வா' என்ற குறிப்புமாம். **மீளவும்**-(431) என்ற இடத்துக் காண்க.

அயர்ப்பிலாதானே - எந்தக் காலத்தும் எவ்விடத்திலும் சிவனையும் அவனடியாரையும் மறவாமல் நின்று, இல்லை என்னாத விரதங் காத்தவனே! **அயர்ப்பு** - மறதி - சோர்வு.

"அங்கொருநா ளருளாலே யயர்த்துண்ணப் புகுகின்று
ரெங்கள்பிரான் றனையெறியா **தயர்த்தேன்** யானெனை"—**சாக்கியர் - புரா - 15.**

அன்பனே ஓலம் ஓலம் - தம்மிடத்தும் அடியாரிடத்தும் அன்பு நிறைந்தவனே. அன்பு ஒன்றே எல்லாற்றிற்கும் காரணமான சிறப்புடையதாதலின் ஏனைய இடத்து **ஓலம்** என்று ஒரு முறை அறைகூவியவர் அன்பனே ஓலம் ஓலம் என இங்கு இருமுறை அடுக்கிக் கூவினர். இறைவன் தம்மையே ஒப்புவித்த பொருள் **அன்பு** ஒன்றுதான். "பத்திவலையிற் படுவோன் காண்க" என்பது திருவாசகம். "பத்திரனடிமையென்றான்" எனத் திருவிளையாடலில் பாணபத்திரருக்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்டமையும் காண்க. "அன்பே சிவமாவ தாரு மறிகிலர்" என்பது திருமந்திரம். அன்பிலே கலந்துகொண்டு இரண்டற நிற்பவர் ஆதலின் அன்பனுக்கு இருமுறை ஓலமிட்டனர் என்க.

செயற்கருஞ் செய்கை செய்த தீரனே - மேற்பாட்டிலுரைத்தவை காண்க. மேற்பாட்டில் ஆசிரியர் தம் வாக்கினால் நாயனாரது அரிய செய்கையைப் பாராட்டினார். இங்கு இறைவனும் அவ்வாறு பாராட்டியதனைத் தெரிவிக்கின்றார்.

மயக்கறும் மறை ஓலிட்டு - **மயக்கம்** - மோகம். உயிர்களுக்கு உள்ள மயக்கம் போக்கி உண்மை உணர்த்துவது வேதம். **அறும் மறை** - ஏதுப்பெயர்கொண்ட பெயரெச்சம். அறுதற்குக்காரணமாயின - மறை. **ஓலிட்டு** - ஓலமிட்டு என்பது ஓலிட்டு என நின்றது. செய்து என்னும் வாய்பாட்டுவினையெச்சம் செயவென்னும் வாய்பாட்டு எச்சமாகப் பொருள் தந்து நின்றது. ஓலிடவும், தேடவும் நின்றான் என்று கூட்டுக. மறை ஓலிடுதலாவது எல்லா வகையானும் சொல்லியும் இறைவன் தன்மை தன்னளவுட் படாமல் இளைத்து நின்று விடுதல்.

இகலி நின்ற பிரமவிட்டுணுக்களினிடையே நான்கு வேதங்களும் வெளிப்பட்டு நீவிர் இருவரில் ஒருவரும் பரமல்லர் என்று பல சரிதங்களைச் சொல்லி முறையிடவும் என எச்சமாக்கி உரைத்தலும் ஆம்.

நாதரூபமாகிய மறை நாதாந்தனாகிய இறைவனை ஓலமிட்டு அமைதல் இயல்பாம்.

மறை ஓலிட்டு - மறைச்சொற்களால் ஓலமிட்டு, மாலயன் தேட என்று இவ்விரண்டினையும் ஒன்றுகூட்டி யுரைப்பாருமுண்டு.

மறை ஒலிடவும் நின்றான் நாயனாரைக் கூவி ஓலமிட்டான் என இவரது பெருமை கூறியவாறு. மறைவழி நின்ற முனிவர் பெரியர்; அவரினும் அவர்களால் வழிபடப்பெற்ற வேதம் பெரிது; அவற்றினும், அவ்வேதத்தால் வழிபடப் பெற்றவனும் அதைச் சொன்னவனுமாகிய இறைவன் பெரியன்; அவனும் ஓலமிட நின்றார் இந்நாயனார் என இவரது உயர்வு குறித்தார். இது குறிக்கவே முன்னர் **முனிவர்** என்றனர். ஐந்தவித்த முனிவனாகிய கௌதமனினும் அங்ஙனம் அவியாது நின்றே உலகச்சார்பை விட்டு அறுத்த நாயனார் ஆற்றல் மிகப் பெரிதென்க.

முனிவராதலே வருவாய் என்றழைக்கக் காரணம்; அயராமையே முனிவராதற்குக் காரணம்; அன்பு அதற்கு அடிப்படை; அதுவே செயற்கரிய செய்கை செய்வித்தது எனத் தொடர்புபடுத்திக் கொள்க.

ஈண்ட - எனப் பாடங் கொள்ளின் என்னை அடைய என்றுரைக்க.

அறுபகையும் செற்றவர் நாயனாராதலின் ஆறுவகைப்பட ஓலங் கூறியது போலும். 29

433. அழைத்தபே ரோசை கேளா "வடியனேன் வந்தேன்! வந்தேன்!"
பிழைத்தவ ருளரே லின்னும் பெருவலித் தடக்கை வாளி
னிழைத்தவ ராகின் றாரென் றியற்பகை யார்வந் தெய்தக்,
குழைப்பொலி காதி னானு மறைந்தனன் கோலங் கொள்வான். ௩௦

(இ - ள்) வெளிப்படை. (இவ்வாறு) அழைத்த பேரோசையைக் கேட்டு இயற்பகையார், "அடியேன் இதோ வந்து விட்டேன்! வந்து விட்டேன்! இன்னும் பிழைத்தவர்களாய் உம்மைத் தடுப்பவர்கள் யாரேனும் இருந்தார்களானால் எனது மிக வலிய கையில் ஏந்திய மிக வலிய வாளினால் வெட்டுண்டவராகின்றார்கள்" என்று சொல்லி வந்து சேர்தலும், குழை விளங்கிய காதினையுடைய இறைவனும் அவருக்கு அருள் செய்யும் பொருட்டு அருட்சத்தி வெளிப்படக் கோலம் கொள்வாராய் மறைந்தனன்.

(வி - ரை) **பேரோசை** - உரத்த சத்தத்தால் ஓலமிட்டார் என்பது. எங்கும் நிறைந்த நாத உருவனாகிய இறைவனது ஒலியாதலின் எங்கும் நிறைந்த பேரோசையாயிற்று என்க. இவர் செய்கை புவன மூன்றுய்ய நிகழ்ந்தது என முன்னர்க் குறித்ததும் காண்க. இயற்பகை முனிவா - என்பதாதியாகப் **பேர்** குறித்த ஓலமாகிய ஓசை என்றுரைத்தலுமாம்.

வந்தேன்! வந்தேன்! - மிக விரைவுபற்றி வருவேன் என்னாது இறந்த காலத்திலே **வந்தேன்** - எனக் கூறினதோடமையாது இருமுறை அடுக்கியும் கூறினார்.

"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்."—**வினையியல் - 44.**

"விரை சொல்லடுக்கே மூன்றுவரம் பாகும்."—**எச்சவியல் - 28.**

என்ற தொல்காப்பியச் சூத்திரங்கள் காண்க.

பிழைத்தவர் - பிழை செய்தவர் எனவும், முன்னரே ஒழிந்தே மாளாமல் தப்பிப் பிழைத்தவர் எனவும், இருபொருளுங் கொள்க.

பெருவலித்தடக்கை வாளின் - பெரு வலி தட என்னும் அடைமொழிகளைக் கையினுக்கும் வாளினுக்கும் தனித்தனிக் கூட்டுக. **வாளின்** - வாளினால்.

இழைத்தவர் - வாளினால் இழைத்தவர் - இழைக்கப்பெற்றவர். செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. வாளின் இழைத்தல் - வெட்டித் துண்டித்தல்.

ஆகின்றார் - எதிர்காலத்து நிகழும் பொருள் நிகழ்காலத்தாற் கூறியது நிச்சயம் - உறுதி என்னும் பொருட்டு.

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை."—வினையியல் - 48.

என்பது தொல்காப்பியம்.

வாளால் இழைத்தவராகின்றார். அது உறுதி - தெளிந்த பொருள் - என்றது தற்புகழ்ச்சியாகாது; போர் முதலியவற்றில் இவ்வாறு கூறல் மரபும் இயல்புமாம். வேதியர்க்குத் தேற்றமும், பிழைத்த பகைவருளரேல் அவர்க்கு அச்சமும் தருதலே கருத்தாதலின் இஃதமையுமென்க.

என்று - வந்து - எய்த - சொல்லல் - வருதல் - எய்துதல் (சேர்தல்) மூன்றும் ஒருங்கே நிகழ்ந்தன. **எய்த - மறைந்தனன்** - அவ்வாறே அவர் சேர்தலும் இவர் மறைதலும் ஒருங்கே நிகழ்ந்தன.

குழை - சங்கக்குழை. **குழைப்பொலிகாது** - குழையைப் பொலிவித்த காது.

கோலங் கொள்வான் - முன் பூண்டு வந்ததும் ஒரு கோலமேயாயினும் அது மாய வண்ணமாகித் தந்தொண்டர் மருத வண்ணத்தை உலகர்க்குக் காட்டக் கொண்டதாம். அக்கோலங் கொண்ட செயல் முற்றவே அதனை மறைத்தனர். இனிக் கொள்ளும் கோலம் நாயனார்க்கும் மனைவியார்க்கும் அருளக் கொள்வது. **கொள்வான்** - வானீற்று வினையெச்சம். கொள்ளும் பொருட்டு என்க. மறைந்த விரைவுபற்றி வினைமுற்றை முன்னர்க் கூறி அதனைக் கொண்டு முடியும் வினையெச்சத்தைப் பின்னர் வைத்தார். வேதியக்கோலம் திரோதானசத்தி கூடியது. இனிக் கொள்ளும் கோலம் அருட்சத்தியுடன் கூடியது. அக்கோலம் வரும் பாட்டிற் காண்க. உம்மை இறந்தது தழுவியது. 30

434. சென்றவர் முனியைக் காணார்; சேயிழை தன்னைக் கண்டார்;
பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்ததென்னத்
தன்றுணை யுடனே வானிற் றலைவனை விடைமேற் கண்டார்;
நின்றிலர்; தொழுது வீழ்ந்தார்; நிலத்தினின் றெழுந்தார்; சேர்ந்தார்.

435 "சொல்லுவ தறியேன்! வாழி! தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி" யென்ன. ௩௨

436. விண்ணிடை நின்ற வெள்ளை விடையவ ரடியார் தம்மை
எண்ணிய வுலகு தன்னி லிப்படி நம்பா லன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம்; பழுதி லாதாய்!
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போது" கென்று. ௩௩

437. திருவளர் சிறப்பின் மிக்க திருத்தொண்டர் தமக்குந் தேற்ற
மருவிய தெய்வக் கற்பின் மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய வருளி னீடு பேறளித் திமையோ ரேத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது வதனுட் புக்கார். ௩௪

434. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு சொல்லிச் சென்று சேர்ந்தாராகிய நாயனார் சிவவேட முனிவரை அங்குக் கண்டிலர்; ஆனால் அம்மையாரை மட்டுங்

கண்டார் ; விளங்கும் பொன்மலை ஒன்று வெள்ளிக்குன்றின் மேலே அழகுற விளங்கிய தென்னும்படி தன்றுணைவியாகிய உமையம்மையாருடன் ஆகாயத்திலே தலைவனை இடபவாகனத்தின் மேலே கண்டார் ; கண்டதும் நின்றாரிலர் ; நிலத்தில் வீழ்ந்து அவரைத் தொழுதார் ; பின்னர் எழுந்தார்; அதன் பின் அவரைத் துதிக்க முற்பட்டாராகி,

435. (இ - ள்) வெளிப்படை. "தேவரீரைத் துதித்துச் சொல்லுவதின்னதென்று அறியேன் ; நீர் செய்த திருவருள் வாழக்கடவது ; எனக்காகத் தோற்றிய தோற்றம் போற்றப் பெறுவது ; விரைவாக வந்து அருள் செய்து எளியேனை உமது வழியடியனாக ஆட்கொண்டீர் - அச்செயல் போற்றப்பெறுவது ; எல்லையில்லாத பேரின்ப வெள்ளத்தை எனக்குத் தந்து அருளிச் செய்தீர் - அச்செயல் போற்றப் பெறுவது; தில்லையம்பலத்திலே திருக்கூத்தாடுகின்ற தேவரீரது சேவடிகள் போற்றப் பெறுவன " என்று துதிக்க, ௩௨

436. (இ - ள்) வெளிப்படை. ஆகாயத்திலே நின்ற வெள்ளை விடையினை உடையாராகிய இறைவன் தமது அடியவராகிய நாயனாரை நோக்கி " எண்ணிய உலகிலே இவ்வாறு நம்மிடம் நீ செலுத்திய அன்பினைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தோம். குற்றமில்லாதவனே ! நண்ணிய மனைவியுடனே நம்முடன் போதுவாயாக!" என்று அருளிச் செய்து, ௩௩

437. (இ - ள்) வெளிப்படை. அருட்டிரு வளர்கின்ற சிறப்பு மிகுந்த திருத்தொண்டருக்கும், தேற்றமுடைய தெய்வக்கற்பிற் சிறந்த மனைவியார்க்கும் தக்கவாறு பெருகிய அருளில் நீடுகின்ற முத்திப்பேற்றினை அளித்து, அதன் பின், இவ்வருளின் திறத்தினைத் தேவர்கள் துதி செய்ய, அவ்விடைப்பாகராகிய இறைவர் தாம் என்றும் நிலைத்திருக்கின்ற தமது சிதாகாய நிறைவாகிய பொன்னம்பலத்தினுள்ளே எழுந்தருளினர். ௩௪

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன. சென்றவர் - காணார் ; - கண்டார் ; - நின்றிலர் ; - வீழ்ந்தார் ; - எழுந்தார் ; - நேர்ந்தார் (ஆகி) - "அறியேன் - வாழி - போற்றி - போற்றி - போற்றி - போற்றி" என்ன - விடையவர் - பாகர் - அடியார் தம்மை (நோக்கி) - "மகிழ்ந்தனம் - பழுதிலாதாய்! - போதுக" - என்று (அருளி) - எத்தப் - பொதுவதனுட் புக்கார் எனத் தொடர்ந்து முடித்துக் கொள்க.

434. (வி - ரை) **சென்றவர்** - வந்தெய்திய இயற்பகையார். **முனி** - இறைவர்.

பொன் திகழ் பொருப்பு - இறைவன். பொன் வண்ண மேனியன் என்பதாம். **பொருப்பு** - இறைவனது பேருருவுக்கு உவமை.

வெள்ளிக் குன்று - குன்று போலப் பெரிய வெள்ளை விடை. "வெள்ளிக்குன்றம் தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை" —(பொன்வண்ணத்தந்தாதி-1) தூய நீறு பொன் மேனியில் விளங்க - (407 என)க்கூறிய வேதியர் வண்ணமே, இங்கு விடைமேல் வந்த வண்ணமாதலின் **பொன்திகழ்** - என்றார். **பொருப்பு** . பெருமலை ; **குன்று** - அளவிற் சிறிய மலை. இறைவனுக்கும் விடைக்கும் தக முறையே பொருந்த உவமைகள். பவளமே இறைவனது நிறம் என்பர். " வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும், தெள்ளு பேரொளிப் பவள வெற்பென" —(திருநா - புரா-379) ஆயின் இங்குப் **பொன்திகழ் பொருப்பு** என்ற தென்னையெனின், "பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்" —(திருவிருத்தம்-கோயில்) "பவளமே திருவுடம் பதனிற் றவளமே களபம் " —(திருவிசைப்பா - கருவூரார் - களந்தை - 5) என்ப ஆதலின் செந்நிறத்தின் மேல் விளங்கும் வெண்மை அதனை ஒருவகைப் பொன்மை யாக்கும் என்பது நிறங்களின் தொகுதிப்பண்பாம். செம்பொன் - என்னும் வழக்கும் காண்க. நாயனாரை வசீகரித்தது அவரது பொன்மேனியில் விளங்கிய தூயநீறே (407) ஆதலின் அதனையே இங்குக் குறித்தார்.

தன்றுணை-சத்த னருடரிற் சத்தி யருளுண்டாஞ், சத்தி யருடரிற் சத்த னருளுண் டாம்'' (திருமந்திரம் - மூதற்றந்திரம் - 220); "உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையா ணடுவு ணீயிருத்தி" (திருவாசகம்) முதலிய திருவாக்குக்கள் காண்க. இறை வனே டென்றும் பிரியாது "எத்திறமீச னிற்ப னத்திற மவளு நிற்பள்" என்றபடித் துணையாய் நிற்கும் சிற்சத்தியாகிய உமாதேவியார் என்க.

வானில் - ஞானாகாயம். நாயனார்க்கும் அம்மையார்க்கும் புலனாவது. (200) பார்க்க.

தலைவன் - உலகறியக்காட்டி உய்வித்தலும், ஆளாகக் கொள்ளுதலும் தலைவன் செயல் ஆதலின் இங்கு இப்பெயராற் கூறினார். எல்லார்க்கும் மேலாகிய - தனக்கு மேற் பிறரொருவரில்லாத - தலைவன். "சேர்ந்தறியாக் கையான்"—**திருவாசகம்.**

துணை - விடை - இவை அருட்கோலத்தின் வெளிப்படுவன. (371—399) உரை காண்க.

காணார் - கண்டார் - கண்டார் - வீழ்ந்தார் - எழுந்தார். நாயனாரிடத்து அங்கு விரைவின் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழ்ந்த ஒவ்வோர் முற்றிய வினையையும் ஒவ்வோர் வினைமுற்றாற் கூறிப் போந்த அழகு காண்க. பகைவரைக் கண்டு ஒறுக்க நாயனார் விரைந்து வந்தனர்; சுற்றுமுற்றும் பார்க்கப் பகைவரைக் காணார்; வேதியரையுங் காணார்; ஆயின் அம்மையாரை மட்டிற் றனிக்கண்டார்; இதன் வகையறியமாட்டா ராய் மேலே பார்க்கத் தலைவனைக் கண்டார். தாம் நினைத்து வந்த எண்ணம் முற்றும் மாறின. ஆயின் தலைவனைக் கண்ட மகிழ்ச்சிப் பெருக்கினாலே தாங்கி நிற்கமாட்டா ராய் நிலத்தில் வீழ்ந்தார்; பின்னர் எழுந்தார் என அவரது தொடர்பாகிய மனநிகழ்ச்சி களை இச்செயல்களின் வைத்துக் கண்டுகொள்ளுமாறு யாத்த அழகு குறிக்க.

நேர்ந்தார் - நேர்தல் - முற்படுதல்; முற்றெச்சம். நேர்ந்தாராகி - என்ன (435) என்றதனுடன் முடிந்தது. வினை முற்றாகக் கொள்ளினு மமையும்.

இப்பாட்டிற்கு எழுவாய் வருவிக்க. 31

435. (வி - ரை) **சொல்லுவது** - சொல்லுதற்கு உரியதை. வகர இடைநிலை பெற்ற, துவ்வீற்றுத் தொழிற்பெயர். இரண்டனுருபு தொக்கது. "செய்வ தறியாச் சிறுநாயேன்" என்புழிப்போல. உரியதை என ஒரு சொல் வருவித்துரைக்கப் பட்டது. இறைவனது பெருங்கருணைத்திறம் மிகச் சடுதியில் தமக்கு வெளிப்படக் கண்ட மகிழ்ச்சிப் பெருக்கிலே இன்னது சொலற்குரியது என்றறியவாரது. ஆத லின் **அறியேன்** என்றார். "மூண்ட பெருமகிழ்ச்சியினால் முன்செய்வ தறியாதே" (அப்பூதி - புரா - 19) என்றது காண்க. இது மனம் வாக்கு முதலிய கரணங்களின் உட்டொடர்பாகிய இயல்பு. பதிமுதுநிலை வாக்கிறந்ததாதலின் சொல்லுவதறியேன் என்றார் என்பதுமாம்.

தோற்றிய தோற்றம் - முன்னும் இப்போதும் ஐம்பொறிகளாலும் அநுபவிக்கும் படி காட்டிய எல்லாவகைத் தோற்றங்களையும் குறித்தது. "உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி யுருவின்கண், அணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினை யெனப்போற்றி" (திருஞான - புரா - 161) என்றது காண்க. **தோற்றிய தோற்றம்** - உனக்கு ஆளாகும்படி வந்த இப்பிறவி எனக்கு ஊதியஞ் செய் ததனால் போற்றி என்றலுமாம். "வந்த பிறப்பை வணங்குவாம்" (சண்டீசர் புரா-60) காண்க.

என்னை வழித் தொண்டு கொண்டாய் - என்னை - தொண்டாகப் பற்றாத என்னையும். இழிவு சிறப்பும்மை தொக்கது. "என்னையு மடியனாக்கி"—**கந்தபுரா ணம். வழித்தொண்டு கொண்டாய்** - வழிவழித் தொண்டர்க்குரிய அருளினைச் செய்து ஆட்கொண்டாய். **வல்லை** - அருளின் விரைவு குறித்தது.

எல்லையில் இன்ப வெள்ளம் - இறைவன் திருவருள் அளவுபடாததோர் "பேரின்ப வெள்ளப் பெருக்காறு" என்பர். வெள்ளத்தை அருள் செய்தலாவது

படுகுழியில் ஆழ்ந்து கிடப்போனை வெள்ளந் தேக்கி மேலே மிதந்துவரச் செய்து கரையேற்றி இன்பத்தில் விடுப்பதுபோன்றதாம். "எருத பெருந்திட ரேறிடகின், றங்குங் கருணைப் பெருவெள் ளமிடத் தருமோ"—திருநா - புரா - 72.

தில்லையம்பலத்துளாடும் சேவடி - சிதாகாசத் திருக்கூத்து ; ஐந்தொழிலிலே இறுதிக்கண்ணதாகிய அருட்டிறம் இங்குக் காட்டினபடியால் ஐந்தொழில் நடனம் செய்யும் சேவடியைப் போற்றினர். வானில் என்று ஞானகாயத்தைக் கூறினபடியால் அம்பலக் கூத்தைப் போற்றினர் என்றலுமாம். 32

436. (வி - ரை) வெள்ளை விடையவர் - ஆகாயத்தில் பொன்றிகழ் பொருப்பும் வெள்ளிக் குன்றுமாக வெளிப்பட்டுநின்ற இறைவர். இவர் என்றும் விடைப்பாகரே யாவர் ; ஆயின் பக்குவிகளுக்கே வெளிப்படுவர் ; அவ்வாறு வெளிப்பட்டு நின்ற கோலம் என்பார் விண்ணிடை நின்று என்றார். என்றுமுள்ள கோலமும் அதுவே என்பார், வரும் பாட்டிற் போநவிடைப்பாகர் என்றார். நின்ற விடையவராகிய விடைப்பாகர் - என்று - விளித்து - புக்கார் - எனக் கூட்டி முடிக்க.

எண்ணிய வுலகு - "புவனியிற் போய்ப்பிற வாமையி னாளும் போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற வாறு" (திருவாசகம்) என்று திருமால் முதலிய தேவர்களும் எண்ணக்கிடந்த இவ்வுலகம். இது சிவபூசை செய்து இறைவனை யடையும் சாதனமாதலின் அச்சிறப்பு நோக்கி அறிவோர் யாவரும் எண்ணக் கிடந்த என்றபடியாம். "காணப்பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே", "கண்டின்புற, வின்னம் பாலிக்குமோ விப்பிறவியே" என்று அப்பர் சுவாமிகள் அருளியதும் காண்க. மேல் கீழ் நடு என்றெண்ணப்பட்ட என்றுரைப்பாருமுண்டு.

எண்ணிய - செய்திய வென்னும் வாய்பாட்டு வினை யெச்சமாகக் கொண்டு எண்ணும் பொருட்டு - உயிர்கள் பாராட்டியுய்யும் பொருட்டு என்றலுமாம்.

இப்படி - நீ செயற்கரும் செய்கை செய்த இந்தப்படி.

அன்பு பண்ணிய பரிவு - அன்பினாலே பண்ணிய பரிந்த செயல். பரிவு - பரிந்த செயலுக்கு ஆகுபெயர். கண்டு - "காட்டுவான்" - (407), "விளக்கம் காண", "நெறி காட்டும் ஆற்றால்" (368) என்ற பாட்டுக்களின் உரை காண்க. இவ்வாறன்றி இறைவன் நாயனாரைச் சோதித்தார் என்றும், அச்சோதனையில் நாயனார் முழுவெற்றி பெற்றனர் என்றும், அது பற்றியே அவரை இயற்பகை முனிவா என்று விளித்தார் என்றும் பல வாறு உரை கூறுவர். முற்றறிவுடைய இறைவன் சோதித்தறிய வேண்டாமையின் இவை பொருளன் றென்க.

பழுதிலாதாய் - எக்காலத்தும் குற்றம் என்பதில்லாதவனே. முனிவர் எனப் பேருடையோர் பலர்க்கும் ஒவ்வொரு பழுதுண்டு; ஒருவகையானும் பழுதில்லாதவனே.

நண்ணிய மனைவி - இச்சரித நிகழ்ச்சிக்குக் காரணமாய்ப் பொருந்திய மனைவி. "மன்னு காதலுன் மனைவி"யாய் நண்ணிய எனவும், "என்னுயிர்க் கொருநாதர் நீருரைத்த தொன்றை நான்செயு மத்தனையல்லா லுரிமை வேறுளதோ வெனக்கு" (412) என்று தேற்றம் மருவிய தெய்வக் கற்பின் நண்ணிய எனவும், உன்னாற் கொடுக்கப் பெற்று உன் சொல்வழி கடவாது என்பால் நண்ணிய எனவும் பலவகையும் கூட்டி உரைக்க வைத்த அழகு காண்க.

மனைவியோடு நம்முடன் போதுக - நீ வழிப்படுத்த மனைவி முன்னரே நம்முடன் போயினள் ; ஆதலின் அவளை உடன் போதுக என்று சொல்லுதல் வேண்டா ; நண்ணிய மனைவி போதுவதோடு நம்முடன் நீயும் போதுக என்பது. நீயும் என வருவிக்க. ஒடு-மூன்றாம் வேற்றுமை உருபு. இவ்வொன்றனையே உருபாகக் கொண்டு மூன்றாம் வேற்றுமைக்கு ஒடு வேற்றுமை எனப் பெயர் கூறுவர் தொல்காப்பியர். "வினை

"முதல் கருவி யனைமுதற் றதுவே" என இதற்குப் பொருள் கூறி, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடுகளிலே "அதனொ டியைந்த வொருவினைக் கிளவி" என்று வகுக்கும் வகையிலே வைத்து இங்குப் பொருள் கொள்க. "செய்வோன் காரணஞ் செயத்தகு கருவி யெய்திய தொழின்முத லியைபுடைத் ததன்பொருள்" என்பர் ஆசிரியர் அகத்தியனார். ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான் என்புழிப் போலக் கொள்க. இதனை உடனிகழ்ச்சிப் பொருள் என்று தனிப்பொருளாகக் கொள்வர் நன்னூலார். "கருவி கருத்தா வுடனிகழ்வதன் பொருள்"—நன்னூல். கொடியொடு துவக்குண்டான் என்புழிப்போல வினைமுதற்பொருளுங் கொள்ளுவர். எங்ஙனமாயினும் மனைவியாரிடத்துச் சிறப்பினைச் சார்த்தி ஒடு விகுதிக்குப் பொருள் தர அமைந்த சிறப்புக் காண்க. ஒடுவின் நீட்டமே ஓடு என்னும் உருபாம். மனைவியாரிடம் சார்த்திய சிறப்பாவது நாயனாரது அடிமைத் திறத்தின் நிகழ்ச்சிக்கு உற்ற கருவியா யிருந்தமையானும், பத்திரகிரியாரும் சேந்தனாரும் தம்மை வழிப்படுத்திய பட்டினத்தடிகளின் முன்னரே பேறு பெற்றமை போல, நாயனார் பெறற்கு முன்னர்ப் பேறு பெற்றமையானும் அமையும்.

போதுக - அகர வீறு கெட்டது.

பரிவு நோக்கி—என்பதும் பாடம். 33

437. **(வி - ரை) திருவளர் சிறப்பு** - நாயனாரின்மூலம் தொண்டின் உண்மை நிலையினை உலகுக்கு இறைவன் காட்டி யருளினனாதலால் அருட்டிரு உலகிலே வளர்ச்சிபெற்றது என்க.

தேற்றம் மருவிய - முன்னர்க் கலங்கிப் பின்னர் மனந்தெளிந்து கற்பின் நிலை இது எனக் கடைப்பிடித்தவராதலின் (411, 412) **தேற்றம் மருவிய** என்றார். **தேற்றம்** - தெளிந்த நிலை. கற்புநிலையிற் றேறித் தெளிந்தவர் என்றலுமாம். **தேற்றம்** - சிறப்பு என்ற பொருளும் பெற நின்றது. கற்பின் றேற்றமே நாயனார் பணித்த பணியிலே அம்மையா ரிசைந்தொழுகியதற்கும், மேற்சரித நிகழ்ச்சிக்கும் காரணமாயிற்று. ஆதலின் இங்கு அதனை எடுத்துக் காட்டி அதனால் அம்மையாரைச் சுட்டிக் கூறினார்.

தக்க - அவ்வவர் பக்குவத்துக்குத் தக்கவாறு.

பெருகிய அருளின் நீடு பேறு - அருளிலே திளைத்து நிலைத்து வாழும் வீடுபேறு.

பொற்பொது - எங்கும் நிறைவாகிய உண்மையும் அறிவும் ஆனந்தமுமாகிய நிலை.

புக்கார் - வெளிப்பட்ட நிலையிலிருந்து வியாபக நிலையினுட் புகுந்தனர்.

இமையோர் ஏத்த - எப்போதும் துதித்துப் பழகி அருளியல்பினைச் செம்மையாய் அறிந்தாராதலின் அவர் ஏத்த என்றார். "அமரரெல்லாம் பொருளார் கவி சொல்ல"—**பொன்வண்ணத்தந்தாதி-25.**

தோற்ற மருவிய—என்பதும் பாடம். 34

438. வானவர் பூவின் மாரி பொழியமா மறைக ளார்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நலமிகு சிவலோ கத்தில்
ஊனமி றொண்டர் கும்பிட் டுடனுறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத் தாரும் வானிடை யின்பம் பெற்றார். ௩௫

(இ - ள்) தேவர்கள் பூமழை பொழியவும், பெரிய வேதங்கள் ஒலிக்கவும், ஞானமா முனிவர்கள் துதிக்கவும், நன்மை மிகுந்த சிவலோகத்திலே இந்த ஊனமற்ற திருத்தொண்டராகிய இயற்பகை நாயனார், (முன்னே சேர்ந்த மனைவியாரோடு) இறைவனுடன் நீங்காமல் இருக்கும் பெருமை பெற்றனர். இவர்களுடன் பகைத்துப் போர்செய்து இறந்துபட்ட மற்றச் சுற்றத்தார்களும் வீரசுவர்க்கத்தின் இன்பத்தைப் பெற்றார்கள்.

(வி - ரை) பூவின் மாரி - (398) பார்க்க.

மறைகளார்ப்ப - வானவர் ஒரோர் காலம் தாம் கற்ற மறை விதிகளை மறந்தும், அரன் பெருமைகளை மறந்தும் அபசாரப்படுவர். மறைகள் ஈசனருளியல்பினை எஞ்

ஞான்றும் ஒரு படித்தாகவே துதிக்கும்; பிறர்க்கும் புகட்டும். எனவே, இது வான வர் பூமழைக்கு மேற்பட்டதாதலின் அடுத்துக் கூறினர். ஞான முனிவர் மறைமுடி வில் விளங்கும் ஞானச் சுவானுபூதிமான்களாதலின் அடுத்துக் கூறப்பெற்றனர். மறைகள் சொல்வாரின்றியே வேத வொலிகள் மிகுந்தன என்க. இது பெரு நன்மை களும் பெரிய அருளிப்பாடுகளும் நேர்ந்தபோது நிகழ்வது. "ஓதுமறை யோர்பிறி துரைத்திடினு மோவா, வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும்" (31), "தாரை முதலான, எங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பும், மங்கல முழக்கொலி மலிந்த மறு கெல்லாம்" (33) என்ற திருஞானசம்பந்த நாயனர் அவதாரத்திற் போந்த நிகழ்ச்சிகள் காண்க.

ஊனமில் தொண்டர்-பசுபோதமில்லையாகப்பெற்ற தொண்டினையுடைய நாயனர். **ஊனம்** - பசுபோதம். ஊனக்கண் பாசம் - என்ற சிவஞானபோதங் காண்க.

நலமிகு சிவலோகத்தில் - சிவானந்த போகமே வளர்கின்ற அபரமுத்தித் தான மாகிய சுத்தபுவனத்திலே. **நலமே** எனப் பிரிநிலை ஏகாரம் விரித்துரைக்க. **கும்பிடுதல்**- ஒங்குணர்வி னுள்ளடங்கி நிற்றல். **உடனுறைதல்** - இரண்டற்று நிற்றல். **பெருமை** - பேரின்பம்.

சுற்றத்தாரும் வானிடை யின்பம் பெற்றார் - வானிடை யின்பம் - இது வீர சுவர்க்கம் என்பர். நாயனர் (தொண்டர்) பெற்ற சிவலோகத்தில் கும்பிட்டு உடனுறை பெருமை என்றது வேறு - இவர்கள் (சுற்றத்தார்) பெற்ற வானிடை யின்பம் வேறு. முன்னையது "போரா வொழியாப் பிரிவில்லா மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே"—(திருவாசகம் - பிரார்த்தனைப் பத்து - 6) என்றபடி யுள்ளநிலை. **சுற்றத்தா ரும்** - உம்மை இழிவு சிறப்பு. இறந்தது தழுவியது என்றுமுரைப்பர். சுற்றத்தார்களும் வானிடை யின்பம் பெறக் காரணம் அவர்கள் தரும வழியினைப் பற்றி யொழுகியமை யாலும், நாயனரிடத்தும் அம்மையாரிடத்தும் தம்மிடத்தும் குலப்பழி சாராது காக்கப் பரிவுகொண் டணைந்தமையாலும், அந்தத் தருமச் செயலிலே தமது உயிரையுங் கொடுக்கத் துணிந்தமையாலும், நாயனர் கையின் தூய வாளினாலே தண்டிக்கப் பெற் றமையாலும் ஆயிற்று என்க. 35

439. இன்புறு தாரந் தன்னை யீசனுக் கன்ப ரென்றே
துன்புறு துதவுந் தொண்டர் பெருமையைத் தொழுது வாழ்த்தி
யன்புறு மனத்தா னாத னடியவர்க் கன்பு நீடு
மன்புக ழிளைசை மாறன் வளத்தினை வழுத்த லுற்றேன். ௩௬

(இ - ள்) வெளிப்படை. இதுவரைச் சொல்லி வந்தபடி, இன்பமுறும் தமது மனைவியை இவர் இறைவனடியார் என்ற அடிமைத்திறத்தையே நினைந்து யாதொரு கவலையுமின்றி இல்லை யென்னது கொடுத்தளித்த தொண்டராகிய இயற்பகையாரது தொண்டின் பெருமையைத் தொழுது வாழ்த்திக்கொண்டு, அதன் துணையாலே, இனி, அன்பு கொண்ட மனத்தினல் இறைவனடியார்களிடத்திலே அன்பு நீடிய நிலை பெற்ற புகழுடைய **இளையான்குடியிலே** வந்த **மாற** நாயனருடைய அன்பின் வளத்தைத் துதிக்கத் தொடங்குகின்றேன்.

(வி - ரை) இன்புறுதாரந் தன்னை...உதவும் - இச்சரிதத்தை முடித்துக் காட்டி மேல் வருஞ் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தவாறு. 423 உரை பார்க்க. அங்ஙனம் முடித்துக் காட்டும் வகையிலே இச்சரிதத்தின் உள்ளுறை சாரமான தத்துவத்தைச் சுருக்கி எடுத்து வடித்துக் காட்டிய அழகு காண்க. தாமின்புறக்கொண்ட தாரத்தை இறைவன் அடிமைத் திறமே கருதி அடியார்க்கு எவ்விதக் கவலையுமின்றிக் கொடுத் ததே இதன் முடிந்த பொருளாகக் கூறப் பெற்றது.

நாதனடியவர்க் கன்புநீடும் - மேல்வருஞ் சரிதமாகிய இளையான்குடி மாற நாயனார் சரித தத்துவத்தைச் சுருக்கிக் காட்டித் தோற்றுவாய் செய்தவாறு. வறுமைவந்த காலத்திலும் மாறாது அடியாரிடத்தில் அன்பு நீடியிருப்பது அவர் சரித உள்ளுறையாம். **வளம்** - வளஞ் சுருங்கிய காலத்தும் மனஞ் சுருங்காமல் நின்று வளமுடையாராகிய செயலைச் செய்தமை புராணத்திலே காண்க. "**வளஞ்** சுருங்கியும் மனஞ் சுருங்குதலின்றி" (446). ஆதலின் இங்கு **வளத்தினைச்** சிறப்பிற் குறித்துக் கூறினார்.

இளைசை - இளையான் குடி என்பதன் மரூஉ. தஞ்சாவூர் தஞ்சை என்றாற்போல. இப்பதியினைப் பற்றிய விவரம் வரும் புராணத்துட் காண்க.

மாறன் - நாயனார் பெயர்.

———— 36

சுருக்கம்:—சோழநாட்டிலே காவிரி கடலொடு கலக்கும் கரையிலே உள்ளது பழமையாகிய **புகார்** என்னும் **காவிரிப்பூம்பட்டினம்.** காவிரியின் நாடுபாய்ந்து மிக்க நீர் அங்குக் கலப்பதால் கடல் காவேரிச் சங்கமுகம் என்றதொரு தீர்த்தமாய் என்றும் நிலவும். அந்நகரத்திலே முதல் வணிகர் குலத்திலே **இயற்பகையார்** என்ற பேருடைய ஒரு பெரியார் இருந்தார். அவர் சிவனடியார்கள் யாவரேயாயினும், அவர்கள் தம்மிடத்து வேண்டிய பொருள் எதுவேயாயினும், **இல்லை யென்னாதே** கொடுக்கும் அதனைத் தம் இயல்பாகக் கொண்டு அதுவே தமது குற்றமற்ற ஒப்பற்ற இல்வாழ்க்கையின் பேறு ஆகும் எனக் கொண்டு வாழ்ந்துவந்தனர்.

அந்நாளில் இறைவன், தூயநீறு பூசிய மேனியில் தூர்த்த வேடமும் விளங்கும் ஒரு வேதியராகக் கோலங்கொண்டு, தமது தொண்டனார் **இல்லையென்னாது** கொடுக்குமியல்பினை உலகுக்குக் காட்டி உய்விக்க எண்ணி, எழுந்தருளி வந்து இயற்பகையார் வீட்டினுட் புகுந்தார். அவர் இவரை எதிர்கொண்டு "தேவரீர் எழுந்தருளியது முந்தையெம் பெருந்தவம்" என்று முகமன் பல கூறி வரவேற்றனர். மறையோர் இயற்பகையாரை நோக்கிச் "சிவனடியார்கள் குறித்து வேண்டிய பொருளைக் குணமெனவே கொண்டு ஒன்றினையும் **இல்லை யென்னாது** நீர் கொடுக்கும் உண்மையைக் கேட்டு உம்மிடத்து ஒரு பொருளை வேண்டி வந்தோம்; அதனைக் கொடுக்க இசையலாம் என்றாற் சொல்லலாம்" என்றார். அதுகேட்ட இயற்பகையார் "எந்தப் பொருளும் என்னிடத்துள்ளதேயானால் அது சிவனடியார்களுடைமையேயாம்; சந்தேகமில்லை; தேவரீர் அருளிச் செய்யலாம்" என்றார். வேதியர் "உன் காதல் மனைவியை வேண்டி வந்தேன்" என்றார்.

புறத்திலும் சொல்லத்தகாத இம்மொழியை வேதியர், எதிரே நின்று சொன்ன போதிலும், முன்னையினும் மகிழ்ந்து இயற்பகையார், "என்னிடம் உள்ள பொருளையே கேட்டது தேவரீர் எனக்குச் செய்த பேறு" என்று சொல்லி, விரைந்து மனையுட் புகுந்து தம் மனைவியாரைப் பார்த்து "விதி மணக்குல மடந்தையே! இன்று உன்னை இம்மெய்த்தவர்க்குக் கொடுத்தேன்" என்றார். மனைவியார் அதுகேட்டுக் கலங்கிப் பின் தெளிந்து, "என் உயிர்நாதராகிய நீர் சொல்லியதெதுவோ அதனைச் செய்வதைத் தவிர வேறு உரிமை எனக்கு உண்டோ?" என்று சொல்லித் தம் கணவரை வணங்கினார். அவரும் இவரை எதிர் வணங்கினார். அம்மையார் போய் மாதவரைப் பணிந்து அவர் பக்கத்திலே நின்றார். இவ்வாறு கொடுத்து மகிழ்ந்த நாயனார் "இனி அடியேன் செய்யவேண்டிய பணிவிடை யாது?" என்று வேதியரைக் கேட்க, அவர் "நான் இப் பெண்ணைத் தனியாய்க் கொண்டுபோகும்போது சுற்றத்தாராலும் ஊரவராலும் இடையூறு நேராதபடி நீ துணை போதுக" என்றார். "முன்னர் அறிந்து நானே செய்ய வேண்டிய இப்பணியைத் தேவரீர் சொல்லும்வரை தாழ்த்தது பிழை" என்று சொல்லி உட்சென்று கச்சு அணிந்து, வாளும் பலகையும் தாங்கி, வீரத்துடன் இயற்பகையார் புறப்பட்டு, வேதியரையும் முன்னே அம்மையாரையும் போகவிட்டுத், தாம் துணையாகப் பின்னே போந்தனர்.

இதுகேட்டுச் சுற்றத்தாரும் ஊரவரும் "இவ்வாறு யாவர் செய்தார்? இயற்பகை பித்தனேயாம்; ஆயின் அதுகாரணமாகப் பெண்ணை ஒருவன் கொண்டுபோவதா?" என்று பழிவாராமற் காக்கும்பொருட்டு, வேல் - வாள் - சுரிகை முதலிய படைகளை ஏந்திக்கொண்டு மிகவும் ஆர்ப்பரித்துப் பரவி "அழிதகனே! நீ போகாதே நில்; எம் குலக் கொடியாகிய பெண்ணைவிட்டு நீ போ" என்று சொல்லி எதிர்த்துவந்தார்கள். வேதியர் அஞ்சினார்போல அம்மையாரைப் பார்த்தார். அம்மையார் "இறைவனே! அஞ்சவேண்டா; இயற்பகை வெல்லும்" என்றார். இதனையெல்லாம் இயற்பகையார் கேட்டு "அடியேன் அவர்களை யெல்லாம் வீழ்த்துகின்றேன்; தளரவேண்டா" என்று சொல்லிக் கிட்டிவந்து சுற்றத்தார்களைக் கோபித்துப் பார்த்து "நீங்கள் ஒருவரும் எதிர் நில்லாமல் ஓடிப்போய்ப் பிழையுங்கள். இல்லாவிட்டால் எனது வாளினாற் கூறுக்கப் பட்டுத் துடிக்கின்றீர்" என்று எச்சரித்தார். அதற்கு அவர்கள் "எடா! நீ என்ன காரியம் செய்தாய்? இப்படிச் சொல்லுகின்றாய். நாட்டவர் பழியையும் பகைவர் நகையினையும்பற்றி நாணுகின்றாயில்லை. உன் மனைவியை வேதியர்க்குக் கொடுத்து விட்டா இப்படி வீரம் பேசுகின்றாய்? நாங்களும் கூடவே மாண்டுபோவதே யல்லாமல் அவளை நீ கொடுக்க நாங்கள் சம்மதிக்கமாட்டோம்" என்றார்கள்.

இயற்பகையார் கடுங்கோபங் கொண்டு, "உங்களை யெல்லாம் துண்டித்து வீழ்த்திச் சுவர்க்கத்துக் கேற்றி விட்டு இத்தவசியைப் போக விடுவேன்" என்றெழுந்தார். அவர் களோ இவர்மேற் செல்லாது, பெண்ணைக் கொண்டு போகும் வேதியர் மேற் சென்று எதிர்த்துத் தடுத்தார்கள். இயற்பகையார் சீறி அவர்கள்மேற் பாய்ந்து வாளுந் தாமுமே யாக அத்தனை பேருக்கும் அத்தனை பேராய் விரைந்து இடசாரி வலசாரியாக மாறி வந்து அவர்களை யெல்லாம் கையும் காலும் தலையுமாகத் துண்டித்து வீழ்த்தினார். அவர்களுள் உயிர்க்குத் தப்பி ஓடினவர்களே பிழைத்தனர்; ஒழிந்தவர் ஒழிந்தே மாண்டனர்.

அதன்பின் வேதியரை நோக்கித் "தேவரீர் அஞ்சாது இந்தச் சோலையைக் கடக்க நான் துணை வந்து வழிவிடுவேன்" என்று சொல்லி நாயனார் கூடவே போயி னார். முன்னே வேதியரும், பின்னர் அம்மையாரும், அவர் பின்னே இயற்பகையாரு மாகச் சென்று சோலை கடந்து திருச்சாய்க்காடு என்னும் தலத்தை அணையவே, வேதி யர் இயற்பகையாரை நோக்கி "இனி நீ மீள்க" என்றார். அவரும் இவரது பாதங்களைப் பொருந்தப் பணிந்து "இவரது திருவருள் பெறப் பெற்றேன்" என்று மகிழ்ந்து மீண்டார்.

இவ்வாறு அவர் போகவே வேதியர் மகிழ்ந்து நோக்கி, "பொய்ம்மையில்லாத மன முடையான்; திரும்பிக்கூடப் பாராமற் போயினான்" என்று அவரை மீளவும் "இயற் பகை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்!" என்று பன்முறை ஓலமிட்டுக் கூவி அழைத்தனர். அவர் அது கேட்டு "அடியேன் இதோ வந்தேன்! வந்தேன்! இன் னும் பிழைத்தவர்களுண்டானால் என் வாளினால் வெட்டுண்கிறார்கள்" என்று சொல் லிக் கொண்டே விரைந்து மீண்டு வந்தார். அப்போதே வேதியர் மறைந்தனர். வந்த வர் வேதியரைக் காணவில்லை; அம்மையாரைமட்டும் கண்டார்; வானிலே விடையின் மேல் உமையம்மையாரும் தாமுமாக இறைவன் காட்சிதரக் கண்டார்; வீழ்ந்தனர்; எழுந்தனர்; பன்முறையும் பல்வகையும் போற்றி! போற்றி! என்று துதித்தனர். இறைவன் தமக்குச் செய்த பேரருளைப் போற்றி நின்றனர்.

இறைவன் தொண்டரை நோக்கி, "இவ்வாறு உலகிலே நீ நம்மிடத்துப் பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தோம்; நண்ணிய மனைவியோடு நம்முடன் போதுக!" என்று அரு ளிச் செய்து இவர்க்குத் தக்க பேறு தந்து பொன்னம்பலத்திலே எழுந்தருளினார். தேவர்கள் பூமழை பொழிந்தனர். மறைகள் ஆர்த்தன. ஞான முனிவர் போற்றினர்.

தொண்டனார் சிவலோகத்திலே கும்பிட்டு உடன் உறையும் பெருமை பெற்றார். மற்றைச் சுற்றத்தார்களும் சுவர்க்க இன்பம் பெற்றார்கள்.

தலவிசேடம் :—(1) திருச்சாய்க்காடு - இது காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காடு எனவும், புகார்ச்சாய்க்காடு எனவும் வழங்கும். பட்டினத்தை அடுத்து உள்ளதால், இவ்வாறு வழங்குவது மரபாம். "காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம்" என்பதும் காண்க. மாடக் கோயில்களுள் ஒன்று. காசிக்கு ஒப்பாகச் சேர்த்துச் சொல்லப் பெறுகிற திருமறைக்காடு முதலிய ஆறு தலங்களுள் ஒன்று. இக்கோயில் இந்திரனாற் புதுக்கிப் பூசித்து சிறப்புச் செய்யப்பெற்றது என்பது வரலாறு. மிகப் பழந் தமிழ் நூல்களில் இதன் வரலாறுகள் பலவும் காணலாம்.

இக்கோயிலில் முன் மாளிகையில் **இயற்பகை நாயனாரதும் அவரது மனைவியாரதும்** ஆகிய பழந் திருவுருவங்கள் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளன.

இதற்குப் பதிகம் 4. சீகாழிக்குத் தென்கிழக்கில் ஒன்பது நாழிகை வழி கற்சாலை மட்சாலை வழிகளாகச் சென்றால் இதனை அடையலாம். மாயூரத்திலிருந்து வரும் வழியில் திருவிளநகர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு சென்றும் இதனை அடையலாம்.

(2) **புகார் - காவிரிப்பூம்பட்டினம்** - இது முன்காலத்துச் சோழர்கள் தலைநகரங்களில் ஒன்றாயும், அவர்கள் முடிசூட்டிக்கொள்ளும் சிறந்த ஐந்து நகரங்களில் ஒன்றாகவும் விளங்கியது. பட்டினப்பாலை சிலப்பதிகாரம் முதலிய மிகப்பழந் தமிழ்நூல்களில் இதன் சிறப்புக்கள் அழகாகப் பேசப்பெற்றுள்ளன.

இப்பட்டினத்திலே சிவபெருமானுக்கும் முருகக்கடவுளுக்கும் முதன்மையாக வைத்துப் பழம்பெருங் கோயில்கள் விளங்கின என்பது பழந்தமிழ் நூற்களில் அறியக் கிடக்கின்றது. "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்", "அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்" என்பது சிலப்பதிகாரம் (இந்திர விழாவெடுத்த காதை - 169, 170). "நுதல்விழி நாட்டத்து இறைவன் முதலாப் பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறா" என்பது மணிமேகலை. இவர்கள் கண்ட கோயில்கள் இந்நூல்களின் காலத்துப் பின்னரும், திருஞானசம்பந்த சுவாமிகளது எழுந்தருளுகைக்கு முன்னரும் நிகழ்ந்த கடல் கோள்களினாலே நகரம் அழிபட்டபோது கடல் கொள்ளப்பெற்றிருக்க வேண்டுமென்று ஊகிக்கக் கிடக்கின்றது. இதுபற்றியே ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் இப்புராணத் தொடக்கத்தில் தீர்த்தச் சிறப்பு ஒன்றனையே கூறிப் போந்தமையுங் காண்க.

கற்பனை :—காவிரியின் நாடு பாய்ந்து மிக்க நீரும் வீணாகாது கடலுட் பாய்ந்து, உடலைக் கழுவவும் உதவாத அக்கடலினை, உயிரைக் கழுவும் தீர்த்தமாக்கியதுபோல மனிதர் முழுமையும் பிறர்க்குதவும் உதவியே செய்தல்வேண்டும். தமது எப்பொருளினும் ஒரு சிறிதும் வீணாக்காது பிறர்க்குதவி புரிதலிற் செலுத்தல்வேண்டும்.

2. சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றை இல்லையென்னாது கொடுத்தல் சிறந்த பதிதருமமாம்.

3. சிவனடியார் நினைத்தவற்றை முடித்து அவர்களை மகிழ்விப்பதுவே இல்வாழ்க்கையின் சிறந்த பேறு.

4. பெண்கள் தம் கணவர்களைத் தம் உடம்புமட்டில் நாயகர்களாகக் கொண்டொழியாது உயிர் நாயகர்களாகக் கொண்டு அவர்கள் சொல்லியதெதுவோ அதன்படி செய்து அவ்வழி ஒழுகிவருதல் வேண்டும். அதுவே உண்மைக் கற்புநிலையின் பெருமையும் பெண்களின் உரிமையும் ஆம். "உரிமை வேறுளதோ எனக்கு?" (412)

5. குலவொழுக்கம் - குலநலம் என்பவை பாராட்டிப் பாதுகாத்தற் குரியன. குலத்துக்குப் பழி வாராமற் காத்தல் அக்குலனுடையார்க்கெல்லாம் வேண்டற்பாலது.

6. குலநலங் காத்தலும், குலப்பழி வாராமற் காத்தலும் உயிரினும் சிறந்தது. உயிர் கொடுத்தேனும் மானங்காத்தல் வேண்டும்.

7. இவ்வுலக தருமங்களிலே பிறன்மனை நயத்தல் ஒருவனுக்குப் பெரும்பழி. ஒருவன் தன் மனைவியைப் பிறருக்கீதல் அவனுக்குப் பெரும்பழி. ஒருவன் மனைவி வேறொருவனுடன் வாழ்தல் அவளுக்குப் பெரும் பழி. இவை அவ்வக் குடும்பங்களையே யன்றிக் குலத்தினையும் நாட்டினையும் பற்றும். இவ்வகைகளை ஒன்றுங் கருதாது பலவகையிலும் பழியே பெருக்கி மானத்தைச் சுருக்கி மனம்போன வழியே பெரிதென வாழும் இந்நாள் உலகம் இச்சரிதத்திற் சுற்றத்தாரும் நாட்டவரும் கொண்ட கொள் கையும் செய்த செயலும் கண்டு திருந்தத்தக்கது.

8. அறநூல் வழியே அவரவர் கொண்ட கொள்கைகள் கடைபோகக் காத்தற் குரியன. சமயம்போலக் கொள்கைகளை மாற்றி வாழும் இந்நாள் மக்களின் வாழ்க்கை இதுகண்டு திருந்தத்தக்கது.

9. உலக நீதிகளினும் உலக அறங்களினும் சிவதருமங்கள் மேம்பட்டன. இல்வாழ்க்கை முதலிய உலக அறங்கள் அவை குறித்த உலக அளவு வரையிலே கொள் ளத்தக்கன. உலக வாழ்வில் தாமரையிலையிலே தண்ணீர்போலப் பற்று வையாது கொண்டு வாழ்தல் உயிர்களுக்கு மேம்படும் வழி தரும். இச் சரிதத்தில் சுற்றத்தார் செயல் உலக நிலையில் வாழ்க்கையின் குறிக்கோளைக் கற்பிக்கும். இவ்வுலக வாழ்வின் உயர்ந்த குறிக்கோளை நாயனார்பாற் கண்டு உலகம் கடைப்பிடிக்கத்தக்கது.

10. "அகன்ஞாலத் தகத்துட் டோன்றி, வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும், பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும், பெருந்துணை" என்றபடி மனைவி, மக்கள், சுற்றம் முதலிய வனைச் சார்புகள் சிவச்சார்புகளின் முன்னே அறுத் தொழித்த இடத்தே சிவன் வெளிப்பட்டு வழித்துணையாவன். "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்", "தலைப்பட்டார் தீரத் துறந்தார், மயங்கி வலைப்பட்டார் மற்றை யவர்"—**குறள்.**

11. நீறு - கண்டிகை - முதலிய சிவசாதனங்களிலே வயமாக்கப் பெற்ற மன முடையாரது செயல்கள் சாமானிய பசுபோத உலகநீதி கொண்டு அளக்கப்படா.

12. துன்பத்துக் கேதுவாகிய வெறுங் காமமாதி உலகானுபவங்களிலே ஒன்றொன் றில் மயங்கியோர் அவ்வவற்றிற் சிக்குண்டு அவையே பெரிதாகக்கொண்டு செய்யும் அடாத செயல்களும் படும்பாடும் பெரிதாம். அதனைவிட்டு அவ் வுயர்வாழ்வினிலே உலகில்வைத்த அந்த ஆர்வத்திற் சிறிது செலுத்துவார்களாயின் உய்ந்து மேற்செல்வர். "தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த தயாவை நூறுயிரங் கூறிட், டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக் கமருல களிக்குநின் பெருமை"—**திருவிசைப்பா.**

13. "பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்," இனியனுய்த் தன்னடைந்தார்க் கருள்புரிவன் சிவன். சிவனடியார்களது திருவேடத்திலே சிவனைக் கண்டு வழிபடில் சிவனே அங்கு நின்று அருள் புரிவன்.

14. இளமங்கையர் தோளிற் பூசிய சாந்து முதலியன காமுகரை வயமாக்குதல் போல அடியார்கள் மேல் நின்ற நீறு கண்டிகை முதலிய சிவசாதனங்கள் அன்புடை யார்களைத் தம்வயப்படுத்தி ஈடுபடச் செய்யும்.

15. "உருப்பொ லாதவ ரிழிகுலத் தவர்நல் லொழுக்க மில்லவ ரொன்றுநம் மள வில், விருப்பி லாதவ ரெனினுமெய்ந் நீறு மிக்க சாதன வேடமுங் கண்டாற், றரிப்பி லாதுசென் றெதிருற வணங்கித் தக்க போனக மளித்தவர்க் களிதா, விருப்பர் தாமவ ரடியவர்க் கடியா ரென்பர் யானென தெனுஞ்செருக் கறுப்பார்" என்று **திருவாதவூரடிகள்** புராணத்து உபதேசிக்கப் பெற்ற உண்மை இங்கு அதிதீவிரதர பக்குவ முடைய நாயனார் சரிதத்தில் வைத்துக் கண்டு இதன் பெருமை உலகம் உணர்ந்துய்யு நெறி கடைப்பிடித் தொழுகுவதாக. ஆறுமுக நாவலரவர்கள் எழுதிய சூசனங் காண்க.

3. இயற்பகை நாயனார் புராணம் முற்றிற்று.

4. இளையான்குடி மாறநாயனார் புராணம்

தொகை

"இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்"—திருத்தொண்டத்தொகை

வகை

"இயலா விடைச்சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனையலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன்செழுநீர்க்
கயலா ரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே"

—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

வேறு

440. அம்பொ னீடிய வம்ப லத்தினி லாடு வாரடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்துயர் சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையி னீடு சூத்திர நற்கு லஞ்செய் தவத்தினா
லிம்பர் ஞாலம் விளக்கி னாரிளை யான்கு டிப்பதி மாறனார்.

புராணம் :—இளையான்குடியிலே அவதரித்த மாறன் என்ற பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்த முறையானே இச் சருக்கத்து நான்காவது இளையான்குடிமாற நாயனார் சரிதங் கூறத் தொடங்குகின்றார். இளையான் றன்குடிமாற நாயனார் புராணம் என்பது மகாலிங்கையர் பதிப்பு.

தொகை :—இளையான் தன் குடி மாறன் - இளையான்குடிஎன்னும் பதியிலே அவதரித்த மாறன் என்னும் பெயருடையார். தன் - இளையான் எனும் பெயர்கொண்டு தனது பெயர் பூண்ட குடி என்க. இளையானது குடி என்றலுமாம். மாறன் - இந் நாயனாரது பெயர். அடியார்க்கும்-மாறனுக்கடியனாவதன்றி அவரடியார்க்கும். "தொண்டர் தொண்டர்க்குத் தொழும்பாய்த் திரிய" (பட்டினத்தடிகள்.)

வகை :—இயலா இடை - பொருள் - காலம் - வசதி முதலிய பலவகையாலும் அமுதளிக்க இயலாதிருந்த இடத்தே. (445, 446) ; மாதவர் - (447, 448).

இன்னமுதா விதைத்த - மேலைக்கு இன்னமுதாக ஆகுமாறு முளைக்கும்படி விதைத்த. (452) முளைவித்து - வயலிலே முளைக்காகத் தெளித்துவைத்த முளை கொண்ட வித்து நெல். (452) வாரி - வாரிக்கொண்டுவந்து கொடுத்து. மனைஅலக்கு - வீட்டுக்கூரை அலக்கினால் வறுத்து ; அலக்கே விறகா மூட்டி வறுத்து. (458, 459) ; வறுத்து - வறுக்கச்செய்து. செயலார் - புன்செய்க் குழிகளில் முளைக்கவிட்ட. பயிர்-கீரை முதலிய கறிப் பயிர். விழுத் தீங்கறி - தூய இனிய கறி வகைகளாக. (461) ; ஆக்கும் அவன் - ஆக்குவிக்குப்பவன் - (460) ஏவுதற்கருத்தா.

செழுநீர்க் கயலார் இளையான் குடியுடை மாறன் - செழிப்புள்ள நீரில் கயல்கள் நிறைதற் கிடமாகிய இளையான்குடியைத் தமது பதியாக உடைய மாறனார்.

எம் கற்பகமே - எமக்கு - அடியார்களுக்கு - நினைத்தவையெல்லாம் தரும் இயல்புடைய கற்பகமே யாவார் ; எம் கற்பகமே - (465) உரை காண்க. இப்பாட்டிற் கூறியன. நாயனாரது ஊரும், பேரும், வறுமையிலும் அடியவர்க்கு நெல்வாரி வறுத்துப் பயிர்க்கறி யாக்கும் அடிமைத்திறமும், சரிதப்பயனும் கூறப்பெற்றன.

ஊரும்பெருமே முதனூலிற் கண்டன. எனவே, முதனூல், வகைநூற் பொருள்கள் விரிநூலில் விரிந்தவாறு மேலே பாட்டு எண்களாற் குறிக்கப்பெற்றன. விரிவு புராணத்துட் காண்க.

440. (இ - ள்) அம்பொன்...சூடுவார் - அழகிய பொன்னினால் வேய்ந்து நீடிய அம்பலத்திலே ஆடுகின்ற கூத்தரது திருவடிகளை எப்போதும் சிரத்திற் சூடிக்கொள்பவர்; தம்பிரான்...தரித்துளார் - சிவபெருமானது அடிமைத்திறத்திலே உயர்ந்த சால்பினுள்ளதாகிய மேன்மை தம்மதாகத் தரித்து வாழ்பவர்; நம்பு வாய்மையில்...மாறனார் - நம்பிக்கைக்குரியதாகிய நீடிய சூத்திர நற்குலஞ் செய்த தவங் காரணமாக அவதரித்து இந்நிலவுலகத்தை விளக்கஞ் செய்தார்; **இளையான்குடி** என்னும் பதியிலே அவதரித்த **மாறனார்** என்ற பெயருடைய பெரியவர்.

(வி - ரை) **அம்பொன் நீடிய அம்பலம்** - பொன்னம்பலம்.

பொன் நீடிய - அவ்வக்காலங்களிலே பற்பலராலும் பொன்னால் வேயப்பெற்றமையாலே நீடிவரும். முதலில் தேவர்கள் நடந் தரிசித்துப் பொன் வேய்ந்தனர். அதன் பின்னர் இரணியவருமச் சக்கரவர்த்தி வேய்ந்தனர். "முழுதும் வானுல கத்துள தேவர்கள், தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினா, லெழுதி வேய்ந்தசிற் றம்பலக் கூத்தன்" (திருக்குறுந்தொகை - கோயில் - 8) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமுங் காண்க. **நீடிய** என்றதன் பயனும் அதன் பின்னர் அநபாயச் சக்கரவர்த்தி முதலிய பலரும், இந்நாள்வரையும் பொன்வேய்ந்து நீடி வருதல் கண் கூடு.

ஆடுவார் அடி சூடுவார் - ஆடுவாரது திரு அடிமலர்களைத் தமது முடியிலே சூட்டிக் கொள்பவர். **சூடுவார்** என்றதனால் அடிகளை மலர்களாகவும், சூடுமிடம் முடியாகவும் வருவித்துரைக்க. "குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்"—**அப்பர் - திருப்பழனம்-10.**

தம்பிரான் - தமக்குமேற் பிரானில்லாதவர். தமக்குத் தாமே பிரான்.

உயர் சால்பின் மேன்மை தரித்துளார் - அன்பு - நாண் - ஒப்புரவு கண்ணோட்டம் - வாய்மை என்ற ஐந்தானியன்று சிறந்த சால்பு என்ற தன்மையானது அடிமைத் திறத்தினைச் சார்ந்ததனாலே உயர்ந்து மேம்பட, அதனைத் தம்மிடத்துச் சாரும்படி தரித்துள்ளவர்.

நம்பு வாய்மை - நம்புதற்குக் காரணமாகிய வாய்மை. மேலே கூறியபடி சால்பினுக்கு உரிய ஐந்து குணங்களும் அதனைத் தாங்கும் தூண்கள் என்பர். ஆயினும் ஏனைய நான்கும் வாய்மையைச் சாரவே சிறப்புப் பெறுவன என்று குறிக்க "வாய்மையோ டைந்துசால் பூன்றிய தூண்" என ஓடு விகுதி கூட்டி உரைத்தார் திருவள்ளுவ நாயனார்.

அக்கருத்துப் பற்றியே இங்கு ஆசிரியர் **நம்பு வாய்மையின்** என்று பிரித்து விதந்து எடுத்துக் கூறினார். **வாய்மையின் நீடு சூத்திர நற்குலம்** - வாய்மைத் தன்மையிலே நீடி வருகின்ற சூத்திரன் என்ற பெயரா லறியப் பெறும் நல்ல குலம். **நல்** - நல்ல. நலம் - சுத்தம். சூத்ரா சுத்த குலோத்பவா : என்பது சிவாகமம். சூத்திரப் பெயர் இங்கு உழுதொழிலாளரைக் குறித்தது. இதற்குத் தாசி மகன் என்பவாதி பொருள் கொண்டு இஃதிங்கு இடைச் செருகலாய்ப் போந்த தென்றும் இங்கு மேழியர் என்ற சொல் இருக்க வேண்டுமென்றும் மற்றும் பலவாறு மலைவுறுவார் பலர். சூத்திரன் என்ற வருணப் பெயர் அவ்வாறு இழிபொருளில் வந்தமை பெருவழக்கிற் காணலாகாது. "தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல நன்மை சான்ற நலம்" (வாயிலார் புராணம் - 6) என்று ஆசிரியர் பின்னரும் இக்குலப் பெருமையைச் சிறப்பித்தமை காண்க. உழுதொழிலாளர்களைச் சூத்திரர் எனவும், நான்காம் வருணத்தவர் எனவும் பேசுதல் ஆசிரியர் காலத்தில் வழக்கா யிருந்தது. அப்பெயரால் ஏதும் இழிபு குறித்திருப்பின் ஆசிரியர் அதனை ஆண்டிரார். இங்குச் சற்சூத்திரர் - அசற் சூத்திரர் - என

இருபிரிவுபடுத்திப் பேசுவாருமுண்டு. எங்ஙனமாயினும் இங்கு ஏர்த்தொழில் புரியுங் குலமாகவே இப்பெயராற் போந்த குலம் சுட்டப் பெற்றது. "ஏரின் மல்கு வளத்தி னால் வரும்" என்று அடுத்த பாட்டிலே தொடர்ந்து கூறுவது காண்க. இப்புராணத் துள்ளே மற்றும் பல நாயன்மார்களை **வேளாண்** குலத்தவர் எனக் குறித்த ஆசிரி யர் இங்கு ஏர்த்தொழிலே செய்யும் இந்நாயனார் சூத்திர நற்குலத்தவர் என்று குறித்தலின் வேற்றுமை ஒன்றும் காணப் பெறவில்லை. வேளாளரை வாய் மையின் மேன்மைபற்றி அறிவிப்பது ஆசிரியர் மரபு. உழுதுண்போர் - உழுவித் துண்போர் என்ற பாகுபாடு கருதி இவ்வாறு வேறு வேறாகக் குறிக்கப்பெற்றதோ என்று ஐயங்கொள்வாருமுண்டு. "பின்னவர் சதுர்த்தர் பெருக்காளர் வளமையர் - மன்னுமுத் தொழிலர் மண்மகள் புதல்வர் - உழவ ரேரினர் வாணர் காராளர் - வினைஞர் மேழியர் வேளாள ரென்றிவை - தொகுபெய ரெல்லாஞ் சூத்திரர் பெயரே"—(பிங்கல நிகண்டு - ஐந்தாவது ஆடவர்வகை - பெயர்ப்பிரிவு - 55). இப்பெயர் பற்றி இந்நாளில் எழும் பல்வகைப் பூசல்களையும் இப்புராணத்தின் எல்லைக்குட் கொண்டு புகுத்தி இடர்ப் படுதற்கு யாதோரியைபு மின்றென்க.

குலஞ்செய் தவத்தினால் - ஞாலம் விளக்கினார் - குலஞ்செய்த தவப்பேறாக அதி னில் வந்தவதரித்து இவ்வுலகை வாழ்வித்தவர் என்க. 408 உரை காண்க. குலம் தவம் செய்து இவரைத் தன்னிடத்துப் பெற்றதென்பதாம்.

***இளையான்குடிப்பதி** - இளையான்குடியின் தலைவராவார் என்றலுமாம். **பதி** - முதல்வர் - தலைவர்.

தவத்தினார்—என்பதும் பாடம். 1

441. ஏரின் மல்கு வளத்தி னால்வரு மெல்லை யில்லதோர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய வன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன் கொள்வார், உ

---

*இளையான்குடி - இது சோழநாட்டில் திருநள்ளாற்றுக்கு மேற்கே 2 நாழிகை யளவில் உள்ளது என்றும், பத்தகுடி என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து ¾ நாழிகையில் மட்சாலையில் இதனை யடையலாம் என்றும் சிலர் கூறுவர். இவ்வூரில் பழைய சிவாலயமு மொன்றுண்டு. புராணத்து வரும் நாற்றங்கால் கோயிலுக்குத் தெற்கில் உள்ளது. இதனை முளைவாரிக்குட்டை - முளைவாரி நாற்றங்கால் என வழங்குகின்றனர். சோழமண்டல சதகமும் இப்பதி சோழநாட்டிலுள்ளதாகப் பேசு கின்றது.

தொண்டைமண்டல சதகத்தார் இச்சரிதப் பெருமை தொண்டைநாட்டிற் குறித் தாகப் பேசுகின்றார்.

மதுரையை யடுத்து இராமநாதபுரம் சில்லாவைச் சேர்ந்த பரமகுடிக்கு வட கிழக்கில் 7 நாழிகை யளவில் இப்பெயரால் உள்ள ஊரே இப்புராணத்திற் குறிக்கப் பெற்றதென்று மற்றும் சிலர் கருதுகின்றனர். இவ்வூரில் "**முளைவாரி யமுதளித்த நாற்றங்கால்**" என்ற பெயரால் ஒரு சர்வ மானிய நிலம் வழங்கிவரப்பெறுகின்றது என் றும், இவ்வூரில் உள்ள பழைய சிவாலயத்தில் முளை வாரி யமுதளித்த விழா நடந்து வந்ததென்றும், **மாறன்** என்ற பெயர் பாண்டியர் மரபுக்குரியதென்றும், வைணவ ஆசாரியரான **மாறனும்** பாண்டியநாட்டவரே என்றும் கூறுவர்.

ஆசிரியர் இப்பதிக்குரியது எந்த நாடு என்று கூறவில்லை. இது இன்னதெனத் துணியக்கூடவில்லை.

442. ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதொர் தன்மையா
னேர வந்தவர் யாவ ராயினு நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்
தீர மென்மது ரப்ப தம்பரி வெய்த முன்னுரை செய்தபின், ௩

443. *கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினி லொப்பிலா
வண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி லமுது செய்ய வளித்துளார். ௪

441. (இ - ள்) வெளிப்படை. ஏர்த்தொழிலால் நிறைந்து பெருகும் உழவு வளங்களினாலே வரும் உணவும், அவை கொண்டு ஆக்கப் பெறும் அளவில்லாத பிற செல்வமும், கங்கை தங்கிய சடையாரடியவர்கள் திறத்திலே நிறைந்ததாகிய ஒரும் சிறப்பினின் மிக்க அன்பினது மேன்மை திருந்தும்படி நிலைத்த மனமும் உலகிலே வளர்ந்து நிலவுமாறு விரும்பி, அவைகளைத் தாம் பெற்றதனாலாகிய நீடிய பயனை அடைவாராய்,

442. (இ - ள்) வெளிப்படை. ஆரமும் எலும்பும் அணிந்த ஐயரது அன்பர்கள் என்ற ஒரே தன்மையினை உட்கொண்டு, அதுவே காரணமாக வைத்து, முன்னே வந்தவர்கள் யாவரேயாயினும் உறுதியாகி நிலைத்த பத்தி கூர வந்து எதிர் கொண்டு அழைத்துக் கை குவித்து எதிரே வணக்கமாக நின்று அவர்கள் கேட்குமாறு குளிர்ந்த அன்பான இனிய மொழிகளை அவர்கள் அன்பு கொள்ளுமாறு சொல்லி அதன் பின்,

443. (இ - ள்) வெளிப்படை. அவர்களைத் தமது மனைக்குள்ளே, அழைத்துக் கொண்டு வந்து புகுந்து, குலவுகின்ற அவர்களது திருவடிகளை விளக்கி, மிகுந்த ஆசையினாலே ஆசனத்தில் எழுந்தருளுவித்து, அருச்சித்து, அதன்பின் நான்கு விதத்தில் இயன்ற ஆறுசுவை யுணவுகளையும், ஒப்பில்லாத சிவபெருமா னடியவர்க ளிச்சையில் அமுது செய்தருளுமாறு கொடுத்துள்ளார். ௪

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

441. (வி - ரை) **ஏரின் மல்குவளம்** - ஏர்த்தொழிலால் உளவாம் மிக்க விளைவு. **ஏர்** - ஆகுபெயராய் ஏர்த்தொழிலாகிய உழவைக் குறித்தது. **வளம்** - விளைவு.

செல்வம் - விளைவினாலே தரப்படும் பலவகை உணவுப் பொருள்களும், விளைவுகொண்டு பெறும் பிற எல்லாவகைச் செல்வங்களும் ஆம். உழவே எனை எல்லாச் செல்வங்களுக்கும் காரணமாதல் குறிப்பு. ஏரின்றெனில் விளைவு - உணவு - இல்லை ; அஃதின்றேல் உயிரில்லை என்பர்; ஆதலின் **எல்லையில்லதோர்** என்றார். எல்லாவகையு மடங்க **மல்குவளம்** என்றார்.

ஓர் - ஒப்பற்ற. "உழுவா ருலகத்தார்க் காணி யஃதாற்றா, தெழுவாரை யெல்லாம் பொறுத்து", "சுழன்று மேர்ப்பின்ன துலகம் அதனா லுழந்து முழவே தலை", "பல குடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர், அலகுடை நீழ லவர்" என்பனவாதி உண்மைக் கூற்றுக்களைக் காண்க. ஏரின் வளத்தாலே உலகம் இயல்கின்றது. பொன் முதலிய வேறு எவ்வகையிற் சிறக்கினும் உழவில்லையேல் உலகம் உணவின்றி யிறக்கும். இவ்வுண்மையை இந்நாள் உலகம் மறந்து அலைந்து பேய்போற் பிற பலவற்றின் பின்னே திரிகின்றது ; ஏருக்குத் தீமையும் புரிகின்றது ; இதனால் ஏர்வளம் சுருங்கவும், அது பிற வளங்களைத் தரமாட்டாது வாடவும் வைக்கும் இந்நாள் உலகநிலை பெரிதும் வருந்தத்தக்கது. உலகம் ஏர்க்கண்ணே திரும்பித் திருந்தி யுய்வதாக.

நீரின்மல்கிய வேணியார் - **நீர்** - கங்கை. மல்கிய நீரின் வேணி என மாற்றிக் கொள்க. **நீரின்மல்கிய** - உலகத்திற்காதாரவாகிய முற்கூறிய ஏரின் வளத்திற் காதா

வாகிய நீரின் மல்கிய என்று குறிப்பார் இதனை அடுத்துவைத்த அழகு காண்க. அந்நீருக்கும் ஆதரவு இறைவனதருளே என்பது குறிப்பாம். "ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும், வாரி வளங்குன்றிக் கால்" என நாயனார் கூறுவதும் காண்க. இப் பொருத்தங்களை இம்முறையே,

> "பாரவன்காண் பாரதனிற் பயிரா னுன்காண்
> பயிர்வளர்க்குந் துளியவன்காண் துளியி னின்ற
> நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித்தான்காண்
> நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
> வேரவன்காண்..."—**திருத்தாண்டகம் திருச்சிவபுரம் - 6.**

என்று அப்பர் சுவாமிகள் அருளியிருப்பதும் காண்க. (இங்குப் பரிசாக நிலவேந்தர் நினைவுறுதலாவது தமது நீதி முறைக்காக இறைவன் கருணை கூர்ந்து வானம் வழங்கச் செய்து தம் கீழ்உள்ள உயிர்களை வாழுமாறு செய்கின்றானென் றெண்ணுதல்.)

வேணியார் அடியார் திறத்து - வேணி - ஒன்றோடொன்று கூடிக்கொண்டிருப் பது. வேணியாரது அடியார்களின் திறத்திலே. வேற்றுமை யுருபுகள் விரிக்க. **திருந்த** - திருத்தமாக இருக்கும்படி.

பாரின் மல்க விரும்பி - "நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்" என்றபடி உலகினரும் செல்வமும் சிவசிந்தையும் பெற்று என்றும் பெருகி நீடுக என்று விரும்பி. "பூதபரம்பரை பொலிய", "மன்றுளா ரடியாரவர் வான்புகழ், நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்" என்ற புராணத் திருவாக்குக்கள் காண்க. இதனானே, **இம்பர் ஞாலம் விளக்கினார்** என மேற் பாட்டிற் கூறியதும் காண்க.

மற்றவை பெற்ற நீடு பயன் - மற்று அந்தச் செல்வமும் சிந்தையும் தாம் பெற் றதனால் உளதாகிய நீடிய பயன். "கற்றதனாலாய பயன்" **(குறள்)** என்புழிப் போலக் கொள்க. **நீடுபயன்**-தம்மோ டொழியாது பின்னரும் வழிவழி நீடி வருவதாகிய பயன். அவை பெற்ற பயன் தாம் அடியவர்களைப் பேணுவதனோ டொழியின், அது தம்மோடு நின்று விடும் - தாம் பேணுவது போலப் பாரின் மல்கப் பிறரும் பேணுவாராயின் அப் பயன் நீடி வரும் - என எண்ணி, உலகில் யாவரும் செல்வமும் சிவசிந்தையும் பெற்று அடியாரைப் பேணி ஒழுகி உய்யக் கடவர் என்றதனையே **விரும்பி** வந்த நாயனார் செய்தவற்றை மேல் வரும் இரண்டு பாட்டுக்களிற் கூறுகின்றார்.

இவ்வாறு பாரின் மல்க விரும்பி வந்தமை காரணமாகவே, பின்னர், இவர் சிவப் பேறு எய்திய காலத்து "இருநிதிக் கிழவன்றானே, முன்பெரு நிதிய மேந்தி மொழி வழி யேவல்கேட்ப வின்பமார்ந் திருக்க" என்று இறைவன் அருளினன் என்பதும் காண்க. (461) விரிவு ஆண்டுக் காண்க.

செல்வமும் சிவசிந்தையும் தாம் பெற்றதன் நீடுபயன் கொள்வார் அவ்வாறே உலக மும் பெற்று மல்க விரும்பிய நாயனாரது **மனத்தின்** றொழில் இப்பாட்டாற் கூறினார். அங்ஙனங் கொண்ட மனத்தோடுபசரித்த **வாக்கின்** றொழில் வரும் பாட்டாலும், பாதம் விளக்கி அருச்சித்து அமுதூட்டுவதாகிய **காயத்தின்** றொழில் அதன்மேல் வரும் பாட்டாலும் கூறுகின்றார்.

சிவபூசை அடியார் பூசைகளில் மன முதலாயின முக்கரணங்களும் ஒன்ற வழி படும் முறையும், மாகேசுவர பூசை முறையும் வகுத்துக் காட்டியவாறுமாம். மாகேசுவர பூசையிலே மாகேசுரர்கள் செய்யும் ஆசீர்வாதத்தின் பலனாலே உலகிலே செல்வமும் சிவசிந்தனையும் பெருகி நிலவும் என்பது.

நீடுபயன் - காலத்தால் நீடுவதன்றி அளவினாலும் நீடுவதாம் - பெரியதாம். அரன் பூசையினும் அடியார் பூசை இரட்டைப் பயனுடைய தென்பது ஆகமங்கள் மொழிந்த உண்மை. "படமாடக் கோயிற் பகவற் கொன்றீயி, னடமாடக் கோயி னம்பர்க்கங் காகா;

நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற், படமாடக் கோயிற் பகவற்க தாமே" (ஏழாந் தந்திரம் - 154) என்பது திருமூலர் திருமந்திரம். "கபாலீச்சர மமர்ந்தான், ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க், கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்" என்ற ஆளுடைய பிள்ளையார் திருமயிலைத் தேவாரத்தையும், அதனை வடித்தெடுத்துக் காட்டிய "மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூடு, மண்ணலா ரடியார்தமை யமுதுசெய் வித்தல், கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல், உண்மையா மெனி னுலகர்முன் வருக" (திருஞா - புரா - 1088) என்ற புராணத் திருவாக்கும், "வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி, நாத னுரையு மவரடி யாரையு நயந்து, பாத வர்ச்சனை புரிவதும் பணிவது மென்றே, காத லாலவை யிரண்டுமே செய்கருத் துடையார்" (திருநீலநக்கர் புராணம் - 5) என்ற புராணமும் இங்கு நினைவுகூரத் தக்கன.

பயன்கொள்வார் - அளித்துளார் - எனக் கூட்டி முடிக்க.

இதனை வினைமுற்றாகக் கொண்டு விரும்பி - (விரும்பியதனாலே) அவை பெற்ற நீடு பயனைக் கொள்வாராயினர் என முடிப்பாரு முண்டு.

திருந்தி - மற்றிவை - என்பனவும் பாடங்கள். 2

442. **(வி - ரை) ஆரம்** - ஆத்தி. ஆரமும் என்பும் என உம்மைத்தொகை. **ஆரம்**-மாலை எனக் கொண்டு ஆரமாக எலும்பை அணிந்த என்றலுமாம். **என்பு** - எலும்பு. சங்கார காலத்து இறந்தொழிந்த பிரமன்மா லிருவரது எலும்புகள். **என்பு புனைந்த ஐயர்** என்றது அவ்வெலும்புடைய உடம்புடன் வாழ்ந்த பிரமன் விட்டுணு முதலிய பெருந் தேவர் பலரும் இறந்தொழிந்த காலத்தும் தாம் நித்தியராய் உள்ள பெருமை யுடையார் என்றதாம். **ஐயர்** - பெருமையுடையார்.

"பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போ
யிருங்கடன் மூடி யிறக்கு; மிறந்தான் களேவரமுங்
கருங்கடல் வண்ணன் களேவர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"

"கங்காள மாமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ"

என்ற திருவாக்குகள் காண்க. "எலும்புங் கபாலமு மேந்தில னாகில், எலும்புங் கபாலமு மிற்றுமண் ணாமே" என்ற திருமந்திரப்படி இவர் ஏந்திப் புனைந்ததனால் அவை இற்றுப்போகாது நின்றன. நித்தராகிய இவ்வையரது அன்பர்களும் அவன் சார்பினாலே தாமும் நித்தராவார்; தம்மை அடைந்தாரையும் நித்தர்களாக்குவார்; ஆத லின் **அன்பர் என்பதோர் தன்மையை** நாடினர் என்பது குறிப்பு. **அன்பர் என்ப தோர் தன்மையால்** - பிரிநிலை யேகாரம் தொக்கது. அன்பர் என்ற ஒரேதன்மையி னாலே தேற்றமுமாம். தன்மை என்றதனால் வேடம், பாவனை, செயல் என்பனவும் கொள்ளப்பெறும்.

நேர - தம் முன்பு; நேராக. தாம் நேர்மை அடைய - நேர்படுமாறு என்றலுமாம். "சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன்"—திருவாசகம்.

யாவராயினும் - முற்றும்மை. **யாரேனினும்** - (405) என்றதும் அதன்கீழ் உரை யும் காண்க. **நித்தமாகிய** - இயல்பாகிய - மாறுதலில்லாத.

பத்திமுன் கூர - தம்மிடத்திலே நித்தியமாய் - இயல்பாய் - அமைந்த அடியார் பத்தி இங்கு முன்னே சிறப்பாய்க் கூர்ந்து கூடிற்று. கருணை கூர்ந்து - அன்பு கூர்ந்து என்பனபோலக் காண்க. **வந்து - எதிர்கொண்டு-குவித்து - நின்று** என்பன வினவி மொழி கூறுவதன் முன் நடந்துகொள்ளும் முறை. வினையெச்சங்கள் ஒவ் வோர் தனிச்செயல் குறித்தன.

ஈரமேன் மதுரப்பதம் - **ஈரம்** - அன்பு - அன்பு கலந்த மெல்லிய இனிய சொற்கள். "இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ், செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" என்னும் குறள் இதற்கிலக்கணங் கூறிற்று. அன்பொடு கலத்தல் - அன்பினை வெளிப்படுத்தல் என்றார் பரிமேலழகர்.

பரிவெய்த-அன்பர்கள் தம்மிடத்துக் கருணை கூரும்படி. **முன்உரை செய்தபின் - முன்** - அவர்கள் முன்பு. எதிர்கொண்டு கைகுவித்து நிற்றலுக்குமுன் என்றலுமாம். வாக்கு இன்னுரை முன் சொல்லிக்கொண்டே செல்ல, அதனுடன் எதிர்கொள்ளுதலும் கைகுவித்தலும் நிகழ்ந்தன. ஆயினும் அன்பர்கள் கண்ணுக்கு அச்செயல்கள் முன்னர்த் தோன்றின ; மொழிகள் பின்னரே கேட்டன. காட்சிப் புலப்படுக்கும் ஒளியலைகள் வேகத்தால் மிக்கனவும், செவிப்புலப்படுக்கும் ஓசையலைகள் வேகத்தால் அவற்றினும் மிகக் குறைந்தனவுமா மென்பர் விஞ்ஞான நூலார். அற்றன்றிச் செவிப் புலனாமோசை உண்டாய விடத்திலிருந்து கடல் அலைபோலப் பரம்பரையின் வந்து செவிப்பொறிக்கு விடயமாம். கண்ணிந்திரியம் ஒளியாற் சேய்மைக் கண்ணுஞ் சென்று தன் விடயத்தை விரைந்தறியும் ஆதலாலெனக்க. ஆதலின் அம்முறையே கண்ட செயலை முன்னர்க் கூறிக் கேட்ட சொல்லைப் பின்னர்க் கூறினார்.

மென்மதுரப்பதம் உரைசெய்தலாவது அவர் முன்னர்க் கூசிமொழிதல் - அவரை உயர்த்தியும் தம்மைத் தாழ்த்தியும் கூறுதல் முதலியன. "நாதனடியா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார், ஆதலினாற் சிறுத்தொண்ட ரானகிழ்ந்தார்" (சிறுத் - புரா - 15), "பூதிசா தனத்தவர்முன் போற்றப் போதே ணுயிடினும், நாதனடியார் கருணையினு லருளிச் செய்வர் நாளென்று" (ஷெ 45) முதலிய இலக்கியங் காண்க. 3

443. (வி - ரை) **கொண்டுவந்து** - அழைத்துக்கொண்டுவந்து. **குலாவு பாதம்** - மோட்ச சாதனமாகக் குலவுகின்ற ; கொண்டாடப்பெறுகின்ற. குலாப்பத்து - குலாத் தில்லை என்பன காண்க. விளங்குகின்ற என்றலுமாம்.

பாதம் விளக்கி - இது பாத்தியம் எனப்பெறும். பாத்தியம் - அர்க்கியம் - ஆசமனம் - அருச்சனை முதலியன வழிபாட்டின் அங்கங்கள். விரிவு ஆகமங்களுட் காண்க. சிவபூசைக்குரியவை அடியார் பூசையாகிய மாகேசுவர பூசைக்குமாம். இவை சோடசோபசார மென்பர். அடியார்க் கமுதளிக்கும் பூசையிற் பாதம் விளக்கும் நியதியும் அது காரணமாகப் பெற்றபேறும் திருப்பெண்ணாகடத்துக் கலிக்கம்ப நாயனார் சரிதத்திற் காண்க.

மண்டு காதலின் - நூல்களில் விதித்தபடி இயற்றுவதென்ற மட்டில் அமைந்து விடாது மனத்திலே மிக்கெழுந்த ஆசையினாலே.

உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்திறத்தினில்-நாலு விதத்திலும் ஆறு சுவைத் திறத்திலும் இயன்ற உண்டி என்க. **நாலு வித உண்டி** - உட்கொள்ளும் வகைக்குத் தக்கவாறு உண்டி நான்கு வகையாகப் பிரிக்கப்படும். அவை - உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்பவையாம். ஆறுசுவை - கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்பவை. மருந்துநூல் முறைப்படி உடற்கூற்றின் பற்பல தாதுக்களின் சத்துக்களுக்கும் பலவேறுவகைச் சுவைகள் வேண்டப்பெறுவன என்பர்.

ஒப்பிலா - ஒப்பற்ற - ஒப்பிலா நாயகர் எனவும், ஒப்பிலாத் தொண்டர் எனவும், ஒப்பிலா இச்சை எனவும் கூட்டி உரைக்க நின்றது.

நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய - நாயகருடைய தொண்டர்கள் தமது இச்சையின்படி அமுதுசெய்ய. தொண்டர்களது இச்சையிலே நாயகர் நின்று அமுதுசெய்யும்படி என்றலுமாம். நாயகரும் தொண்டரும் அமுதுசெய்ய என்று உம்மைத்தொகையாக்கி உரைத்தலுமாம். இச்சையின்படி அமுதுசெய்ய அளித்தலாவது - அவ்வவரும் வேண்டியன வேண்டியவாறே பெற்றுண்ண அளித்தல். **அளித்துளார்** - அன்புடன் கொடுத்து உளாராயினார் என்றது குறிப்பு. **அளித்து**-(404) பார்க்க.

இப்பாட்டால் அடியார்களை உபசரித்து மாகேசுவர பூசை செய்யும் முறை கூறப் பெற்றது.

ஈரமென் மதுரப்பதம் பரிவேய்த முன் உரைசெய்த பின் செய்யவேண்டுவன இவை என்க.

இன்றைக்கும் மாகேசுவர பூசைகளிலே இத்திருப்பாட்டினையே பெரும்பாலும் ஓதித் துதித்துப் பூசிக்கும் வழக்கமும் காண்க. இவ்வாறு பூசிக்கப்பெற்ற அடியார்களான மாகேசுரர்கள் செய்யும் ஆசீர்வாதமும் அதன் பயனும் வரும் பாட்டாற் கூறினர். மல்கி எழுகின்ற சீரினைச் செய்யும் இப்பூசைக்குரிய யாப்பாக ஆசிரியர் இப்பகுதியை எழுசீர் விருத்தத்தாற் பாடியருளிய அழகும் காண்க.

திறத்தன—என்பதும் பாடம். 4

444. ஆளு நாயக ரன்ப ரானவ ரளவி லாருள மகிழவே
நாளு நாளு நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையி னன்மையா
னீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வ நிலாவியெண்
டோளி னூரள கைக்கி ருத்திய தோழ னேரென வாழுநாள், ௫

445. செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்ல னல்குர வான போதிலும் வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொறு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக வுன்னி னார்தில்லை மன்னினர். ௬

444. (இ - ள்) வெளிப்படை. எல்லா உயிர்களையும் தமக்கு ஆளாக உடைய இறைவனது அன்பராயினர்கள் அளவில்லாதவர்கள் மனமகிழ்ந்து ஒவ்வோர் நாளும் பெருகிக் கூடிவந்து திருவமுது செய்து இவருடைய அன்பினை அனுபவித்த தன்மையின் பயனாகிய நன்மையினாலே, நீளும் பெருஞ் செல்வங்களின் பரப்பும், நெருங்கு செல்வங்களும் நீடித்துப் பெருக்கெடுக்க, எண்டோளராகிய சிவபெருமான் அளகாபுரியினை ஆளும்படி அமைத்த தமது தோழனாகிய குபேரனே இவர் என்று சொல்லும்படி நாயனார் வாழ்ந்து வருகின்ற நாளிலே, ௫

445. (இ - ள்) செல்வம்......அறிவிக்கவே - செல்வங்கள் மிகுந்திருக்கும் காலத்திலே இச்செய்கைகள் செய்வதன்றியும், மெய்யினாலே துன்பம் தரும் தரித்திரம் வந்த காலத்திலும் இச்செயல் செய்ய இவர் வல்லராவர் என்ற உண்மையை உலகுக்கு அறிவிக்கும் பொருட்டாகவே; மல்லல்...மன்னினர் - செழித்து நீடிவந்த அச்செல்வங்கள் மெல்ல மறைந்துபோய் நாடோறும் மாறி வந்து, பின் விரைவிலே வறுமையாகிய நிலை வந்து சேருமாறு தில்லையில் மன்னிய இறைவனார் திருவுளஞ் செய்தனர். ௬

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. நுகர்ந்த - நன்மையால் - செல்வம் - நிலாவித் - தோழனார் - என - வாழுநாள் - அறிவிக்கவே - செல்வம் - மாறி வந்து - வறுமைப்பதம்புக - மன்னினர் - உன்னினர் - என முடிக்க.

444. (வி - ரை) நாயகரன்பரானவர் - முன்னர், வேணியார் அடியார் (441), ஐயர் அன்பர் (442), நாயகர் தொண்டர் (443), என்று கூறியதுபோலவே இங்கும் கூறினர். அரனுக்கும் அடியார்க்கும் வேற்றுமை தொக நிற்பதும் அமைபாம். நாயகரும் அன்பரும் என்று உம்மைத் தொகையாக்கி அன்பர்களுக்குள்ளே நின்று நாயகரும் அமுது கொண்டருளியமை குறிப்பாம். இச்சரித நிகழ்ச்சியிலே அடியாராகி நாயகரே அமுது கொள்ள வந்தமையும் குறித்தது.

அளவிலார் - வகையாலும் தொகையாலும் மட்டுமன்றிப், பெருமையினாலும் அளவுட்படாதவர்கள். 5-ம் பாட்டும் உரையும் காண்க.

தன்மையின் நன்மையால் - தன்மையினால் உளதாகிய நன்மை காரணமாக.

நீளுமா நிதியின் பரப்பு - நீளும் - மா - பரப்பு - என்பன செல்வங்களின் வகை தொகைகளின் பெருமை குறித்த அடைமொழிகள். இவை நிலம் முதலிய பலவுங் குறிப்பன. **நெருங்கு செல்வம்** - இது, பொன் மணி முதலிய பிற செல்வ மெல்லாம் குறிக்கும். பரப்பும் - செல்வமும் - உம்மைத் தொகை.

எண்தோளினார் - சிவபெருமான். "எண்டோள் வீசிநின் றாடும் பிரான்"—திருவங்கமாலை. **அளகைக் கிருத்திய தோழனார்** - தோளினார் இருத்திய தோழனார் என்க. அளகை - குபேரனது தலைநகர். இருத்திய-அளகையில் அரசு செலுத்தும்படி வைத்த. **தோழனார்** - குபேரனைச் சிவபெருமான் றோழர் என்பது வழக்கு. "மித்திரவச் சிரவணற்கு விருப்பர் போலும்"—திருத்தாண்டகம். **என** - என்று சொல்லும்படி. 5

445. (வி - ரை) **செல்வம் மேவிய** - அடியார் பூசையின் நன்மையாற் செல்வம் வந்து பொருந்திய.

மெய்யினால் நல்குரவான போதிலும் - அது காரணமாக (அருள் காரணமாக) வறுமை வந்து பொருந்திய காலத்திலும். செல்வமும் வறுமையும் திருவருளினாலே வந்தெய்துவன; இவற்றுள் எது வந்தெய்தினும் தமது நிலையினின்றும் பிறழாது உண்மைக் கொள்கையினிற்றல் உணர்ந்தோர் கடன் என்பது நூற்றுணிபு.

வல்லர் - செல்வம் வந்த காலத்து அடியார் பூசை செய்வதற்கு அடியார் திறத்து நிறைந்த திருந்திய சிந்தை வேண்டும்; நல்குரவு வந்தபோது அது செய்தற்கு அதனினும் பெரியதோர் வன்மைவேண்டும் என்பார் **வல்லர்** என்றார். **அறிவிக்கவே** - உலகம் அறிந்துய்யும்படி மன்னுயிர்கட்கறிவிப்பதற்கு. இதன் விரிவு **ஞாலத்தார் விரும்பியுய்யும் அந்நெறி காட்டுமாற்றால்** - (368), **காட்டுவான்** - (407) என முன்னர்க் கூறிய இடங்களிற் காண்க. ஏகாரம், அதன் பொருட்டாகவே எனப் பிரிநிலைப் பொருளில் வந்தது. அடியார்களுக்கு வரும் வறுமை முதலிய துன்பம்போலக் காண்பனவெல்லாம் இறைவனருளால் இவ்வாறு ஒவ்வோர் நற்காரணம்பற்றி வருவனவேயன்றி வேறன்று. பிராரத்த முதலியவற்றை அனுபவிப்பித்துக் கழிக்குமுகத்தானும், அல்லது அன்பினை வலிமையுடையதாக்கு முகத்தானும், இன்ன பிறவாற்றானும் வருவன. இவ்வாறு வரும் இன்னல்போன்ற தோற்றங்களைக் கண்டு மயங்கி அடிமைத்திறத்திலே அபசாரப் படாதிருத்தல் அறிவோர் கடன் என்று குறிக்க இங்கு **அறிவிக்கவே** என்றறிவித்தார் ஆசிரியர் என்க.

மல்லல் நீடிய செல்வம் - மல்லல் - வளப்பம்; செழிப்பு. **மல்லற் செல்வம் - நீடிய செல்வம்** எனப் பிரித்து மேற்பாட்டிற் குறித்த இருவகைக்கும் பொருந்தும்படி உரைத்துக்கொள்க.

மெல்ல மறைந்து - நாடோறும் மாறி வந்து - மெல்ல மறைதலாவது மறைந்துபோம் தன்மை அறிய இயலாதபடி ஒவ்வொன்றாக மறைதல்; **நாள்தோறும் மாறி** - மறைந்த செல்வம் திரும்பிவருதல் என்பதின்றி நாள்தோறும் செல்வம் போய் வறுமையாய் மாற்றப்பெற்று என்பது குறித்தது. **வந்து** - அங்ஙனம் மாறுதல் தொடர்பாய் நிகழ்ந்தது என்றதாம்.

ஒல்லையில் - விரைவிலே. இஃது மெல்ல என்பது முதலாகக் குறித்தவற்றோடு முரணுமோ வெனின் முரணாது; என்னை?; விரைவில் வருவது வறுமைப்பதமே யன்றி வறுமை யன்று; செல்வம் மறைந்த செயலுடனே சார்ந்து வறுமைப்பதமும் விரைவில் ஒட்டியே நிகழ இறைவன் நினைத்தமையே இங்குக் கூறினார். வறுமை வந்த நிலை வரும் பாட்டிற் கூறினார். **வறுமைப்பதம்** - செல்வஞ் சுருங்கு நிலை.

உன்னினார் தில்லை மன்னினார் - பிரபுவின் சிருட்டி காரியம் அவனது நினைப்பு மாத்திரையானே நிகழும் என்பது வேதம். ஆதலின், **உன்னினார்** என்றார். **தில்லை**

மன்னினார் - அம்பலத்தில் அருளாகிய ஐந்தொழிற் கூத்தியற்றுபவர். **மன்னினார்** - நிலைத்துள்ளார். படைத்தல் முதல் அருளல் வரை இவ்வைந் தொழிலு முடையா ளாதலின் முதலிற் செல்வம் மேவச் செய்த அவனே அச்செல்வத்தை மாறவும் செய்தனன் என்பது குறிப்பு.

ஆரம் - என்பு - புனைந்த - (442) என்ற இடத்தும் தழைத்தலாகிய ஆத்தியும் வறட்சியாகிய எலும்பும் உடன் கூறிய குறிப்பும் காண்க. 6

446. இன்ன வாறு வளஞ்சு ருங்கவு மெம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்கு தலின்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறி யிறுக்க வுள்ள கடன்க டக்கன கொண்டுபின்
முன்னை மாறி றிருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினார். எ

(இ - ள்) வெளிப்படை. இப்படியாகத் தமது செல்வங்கள் சுருங்கியபோதிலும், எமது பெருமானும், இளையான்குடியின் தலைவரும் ஆகிய **மாறனார்** மனநிலை சிறிதும் சுருங்காமல் நின்று, தம்மிடம் இருப்பனவற்றை மாற்றியும் தன்னை மாறிக் கொடுக்கத் தக்கனவாகிய கடன்களை வாங்கியும், பின்னும், முன்னர்ச் செய்துவந்த ஒப்பற்ற அடியார் பூசையாகிய திருப்பணியிலே மேலும் முறுகிய நிலைமையை உடையவராயினார்.

(வி - ரை) **இன்னவாறு** - தில்லை மன்னினார் உன்னுதலும் அதனால் வளஞ் சுருங்கியதும் ஒன்றினொன்று இடையீடு பெறாது உடனிகழ்ந்தன. இறைவனது நினைப்பே உலகப் படைப்பு மறைப்பு முதலிய செயலாதலின், அந்நினைப்பாகிய கார ணத்திற்கும் அதன் காரியமாகிய மறைவுக்கும் இடையில் காலதாமதம் முதலிய வேறொன்றுமில்லை. ஆதலின் உன்னினார் - சுருங்கிற்று - சுருங்கவும் என்று சுருங்கிய செயலை வேறு பிரித்துக் கூறாராயினர். மேலும் செல்வப்பெருக்கைப் பெருக்கிக் கூறுவாரன்றிச் சுருங்கியது முதலிய செயல்களைத் தம் வாக்காற் பிரித்துக் கூறுதல் ஆசிரியர் மரபுமன்று. **சுருங்கிய** செயல் முற்றாய் நிற்காது, பின்னர்ப் **பெருகிய** செய லாய் முற்றியதாகிறது (465). ஆதலின் அதனை முற்றிய செயலேயாக வினைமுற்றாற் கூறாது எஞ்சிய செயலாகச் **சுருங்கவும்** என வினையெச்சமாக உரைத்துச் சென்றார் என்றலுமாம்.

இளையான்குடி மன்னன் - **இளையான் குடிப்பதி** - (440) என்றதும் காண்க. **மன்னன்** என்றதனால் இவர் அவ்வூரில் ஒரு சிற்றரசராகவோ குறுநிலமன்னராகவோ இருந்தனர் என்றும், **மாறன்** - என்றது பாண்டிநாட்டு அரசின் வழக்குப் பெயரென் றும், பிறவும் இங்கு ஆராய்ச்சி செய்வாருமுண்டு. **மாறன்** என்பது அந்நாள் வேளா ளர் கொண்டு வழங்கியதோர் பெயர்போலும். 'வல்லங்கிழான் மாறன்' என்பது வேளா ளர்க்குரிய பெயராய்ப் பேராசிரியர் தொல்காப்பியம் - மரபியல். "ஊரும் பெயரும்" (74) என்ற சூத்திர உரையில் உதாரணங் காட்டியதும் காண்க. வளஞ்சுருங்கிக் கடன் வாங்கு நிலைமையிலே அவர்க்கு ஊர்த்தலைமை சிறப்பாகப் பெறப்படாமை உணர்க. ஊரிற் பெரியார் எனக் கொள்ளுதல் சிறப்புடைத்தென்பர். "கலையார் கலிக்கா ழியர்மன்னன்", "புகலி வேந்தன்", "வளர்நா வலர்கோன் நம்பியா ரூரன்" என்பனவாதி திருவாக்குகள் காண்க. **மன்னன்** - முன்னர் வளம் பெருகிய காலத்தன்றி வளஞ்சுருங்கிய காலத்து இங்கு **மன்னன்** என்றதன் காரணம் **மனஞ் சுருங்குதலின்றி** என்றதனாற் கூறினார். "செல்வ மென்பது சிந்தையி னிறைவே" என்பது பெரியார் பாட்டு. ஆதலின் மனஞ் சுருங்குதலில்லாத துணை யானே எல்லாச் செல்வமுமுடையார் ஆதலின் **மன்னன்** எனப் பெற்றதாம். எல்லா முடையாரும் செய்யலாகாத அரிய செய்கையினை இவர் வளமில்லாக் காலத்துச் செய்ய

வல்லராதல் இந்த மனத்தை உடைமையானேயாம் என்பது பின்னர்க் காண்க. வல்லர் என மேற்பாட்டிற் கூறிய குறிப்பும் காண்க.

மன்நீ சுருங்குதலில்லாமை - செல்வமில்லாமை கருதி அடியார் பூசையைச் சுருக்க எண்ணுது, உள்ள காலத்துச் செய்ததுபோலவே, செய்தல்வேண்டுமென்று மனத்தில் ஆர்வமிக வுடையராய்ச் செயல் புரிதல். பூசலார் நாயனுர் சரிதங் காண்க.

உள்ளன மாறியும் - உள்ளவற்றை விற்றுப் பூசைக்கான பொருள்களைப் பண்டமாற்றுவகையாலே பெற்றும். **மாறி** - பண்டமாற்றுக் குறித்தது. இது **நெருங்கு செல்வ** மென (444) முன்னர்க் கூறிய செல்வ வகையைப் பற்றியது.

இறுக்க உள்ள கடன்கள் என்றது இவ்வாறு பண்டமாற்றுவகையில் நேரே பூசைப் பொருள்களாக மாறுதலன்றி நிலம் முதலிய (444) மற்றைச் செல்வத்தின்மீது கடன்கள் பெற்று அவ்வாறு பெற்ற பொருளைக் கொண்டு பூசைப் பண்டங்களை விலக்குப் பெறும்வகை குறித்தது. மாறி இறுக்கத் தக்கனவாய் உள்ள கடன்கள் என மாற்றி உரைக்க. இவை குறிப்பிட்ட வகையாலே திருப்பிக்கொடுக்க உடன்பட்டு நிலம் முதலியவற்றின்மீது வாங்கப்பெறும் ஒற்றி முதலிய கடன்களாம். **தன்னை மாறி இறுக்க** - கடன் இறுத்தலாவது கடன்பட்ட பொருளை மீளத் தருதல். **மாறியிறுக்கத்தக்கன** என்றது ஒற்றிவைத்த பொருளை ஒற்றி என்ற தன்மையை மாற்றி அதன் உரிமை நீக்கி விலைப்பட்டது எனும் தன்மையடையும்படி மாற்றியும் அது கொண்டு கடனைத் திருப்பிக்கொடுத்தல். **தன்னை**-பொருள் கொடுத்து மீட்கும் உரிமை தன்னை. (Right of redemption - Right to redeem)

மாறி - மாறியும். எண்ணும்மை தொக்கது. **தன்னை மாறி** - அந்நாளில் அடிமை விற்கும் வழக்குண்மையின், தன்னையும் விற்று என்று உரை கூறுவாருமுண்டு. அடிமையாகத் தம்மை விற்றுப் பொருள்கொள்வதும் கடனுதலின் அது மேலும் கடனுவதன்றிக் கடனிறுத்தலாகாது ; அடிமையாகத் தம்மை விற்ருற் பின்பு, சுதந்தரமின்மையின் முன்னைத் திருப்பணி செய்தலு மியலாது ; அன்றியும் இங்கு நாயனுர்க்கு விளைநிலமும் வீடும் எஞ்சியிருக்கக் காண்கின்ருே மாதலின் அவற்றை விற்றலின் முன் தம்மை விற்றல் கூடாதாம். அவ்வுரையின் பொருத்தம் ஆராய்க.

பின் - கடன்கொண்ட பின்னும். சிறப்பும்மை தொக்கது. **பின் தன்னை மாறி** எனக் கூட்டிக் கடன்கொண்டபின் என்றுரைப்பாரு முண்டு.

முன்னை - முன்செய்த. **மாறில் திருப்பணி** - ஒப்பற்ற அடியார் பூசை இங்கு இறைவன் பணியோடொப்பத் திருப்பணி எனப் பெற்றது குறிக்க.

முதிர்ந்த கொள்கையர் - உறைப்புடைய நிலையினர். இவரது கொள்கையும் அது பற்றி நிகழும் செயலும், வறுமை காரணமாகத் தளர்ச்சியடையாது முதிர்ச்சி யடைந்தது என்க. செய்கை குறையினும் கோட்பாடு மிக்க உறைப்புற்றது என்பார் **கொள்கையர்** என்ருர். மிகச் சிறிய வருத்த முதலியவும் வந்தவுடனே தாம் செய்யும் இறைபணி அடியார் பணிகளிற் பிறழ்ந்துவிடும் இந்நாட் பேதை உலகர்க்கு அறிவுறுத்திய வகை காண்க. இதனை **அறிவிக்கவே** இறைவன் நினைந்தனன் என்றதும் காண்க.

முதிர்ந்த செய்கையர்—என்பதும் பாடம். 7

447\. மற்ற வர்செய லின்ன தன்மைய தாக மாலய னுனவக்
கொற்ற வேனமு மன்ன முந்தெரி யாத கொள்கைய ராயினுர்
பெற்ற மூர்வது மின்றி நீடிய பேதை யாளுட னின்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞால முய்ந்திட நண்ணினுர். அ

(இ - ள்) வெளிப்படை. மற்று அந்நாயனுரது செய்கைகள் இத்தன்மையினவாகி நிற்க ; விட்டுணுவும் பிரமனும் ஆகிய அந்த வெற்றியுடைய பன்றியும் அன்னமும்

அறியாத கொள்கையினரான இறைவனார், இடபவாகனத்தை மேற்கொள்வது மில்லாமல், என்றும் தம்முடன் நீடியுள்ள உமாதேவியார் உடனில்லாமல், ஒரு நல்ல தவசியாரின் திருவேடத்தினையே மேற்கொண்டு இவ்வுலக முய்யும்பொருட்டு எழுந்தருளி வந்தனர்.

(வி - ரை) மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்தது. மேற்பாட்டில் நாயனாரது செயலைக் கூறிய ஆசிரியர் இங்கு இறைவனது செயலைக் கூறத் தொடங்குகின்றார்.

செயல் - செய்கை. **தன்மையது** - மேற்பாட்டிற் குறித்த கொள்கையை உட்கொண்ட தன்மையுடையது.

மால்அயன்ஆன அக் கோற்ற ஏனமும் அன்னமும் தெரியாத - நிரனிறையாக்கி மாலான ஏனமும் அயனான அன்னமும் எனக் கொள்க. ஏனமாயின மாலும் அன்னமாயின அயனும் என மாற்றிக் கூட்டியுரைக்க. **கோற்ற ஏனம்** - பன்றியாய்ப் பூமியை அகழ்ந்து அடிதேடிச்சென்ற விட்டுணு நெடுந்தூரஞ் சென்றும் அதனை யறியமாட்டாதவராய் இளைத்துத் தமது மாட்டாமையை உணர்ந்து மீண்டு வந்து இறைவனை வழிபட்டேத்தி உய்ந்தனர்; ஆனாற் பிரமன் அவ்வாறன்றி முடிகண்டேனென்று பொய்ம்மொழிந்து சாபம் பெற்றனர் என்ற சரிதம் காந்தமாபுராணத்துட் பேசப்பெற்றது. ஆதலின் ஏனத்திற்குக் **கோற்றமுடைய** என்ற அடைகொடுத்துக் கூறிய ஆசிரியர் அன்னத்தை வாளா கூறினார். மாட்டாமையை உணர்வதே **கோற்ற**மென்க. **அ** - பண்டறி சுட்டு. தேற்றங் குறித்ததுமாம்.

தெரியாத கொள்கையர் - தெரியப்படாத தன்மையினையுடையார். செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. **கொள்கை** - தன்மை. மற்று அவரது (நாயனார்) **கொள்கை** மேற்பாட்டிலும், அவரைச் சுட்டி அறிவிக்கும் இவரது **கொள்கை** இப்பாட்டிலும் கூறிய நயம் காண்க. நாயனாரது பெருமை காட்டியவாறு.

இனி, இரட்டுற மொழிதலால், **ஏனம்** - பாத்திரம்; **அன்னம்** - சோறு; **தெரியாத** - கண்டறியாத; **கொள்கையராயினர்** - தன்மையுடையாராகி, என உரைத்து உண்கலத்தினையும் உணவையும் இல்லாத தன்மையிலே என்று சரித நிகழ்ச்சிக் குறிப்புங் காண்க. (**ஏனம்** - உண்கலம் - பாத்திரம். உலக வழக்கு)

பெற்றமும் பேதையாளும் - உடன்கூடிய கோலம் பின்னர் அருள்புரியும் வெளிப்பாட்டிற் காணத்தக்கதாதலின் இங்கு **இன்றி** - **இன்றி** என்றார். அறக்கடவுளும் அருட்பிராட்டியும் இங்கு நாயனாரது வறுமை நிலை காண உடன் வராததும் பொருந்துவதேயாம். "ஏலவார் குழலா டன்னோ டிடபவா கனனாய்த் தோன்றி" (463) என்பது காண்க. 399 - 407 முதலிய திருப்பாட்டுக்களும் இதுபற்றி முன்னர் உரைத்தவையும் நினைவு கூர்க. நாயனார்க்கு விரைந்து அருள்செய்யக் கருதித் தேவியையும் ஊர்தியையும் மறந்து புறப்பட்டுவந்தனர் என்பாருமுண்டு. இது பொருந்தாமை தேற்றம். "கருதுவார் தங்களுக்கு, வானலா தருளு மில்லை வார்குழல் மங்கையோடும், ஆனலா லூர்வ தில்லை ஐயனை யாற னார்க்கே" என்ற திருநேரிசையுங் காண்க.

ஓர் நற்றவத்தவர் - **ஓர்** - ஒப்பற்ற. பிறர் ஓர்தற்குரிய என்றலுமாம். **நற்றவம்** - வீடுபேறு குறித்த தவம். நலமென்னப் பெற்றவற்றுளெல்லாந் தலையாய நலம் வீடுபேறாதலின் அதனைப் பயக்குந் தவம் **நற்றவ** மெனப்பெற்றது. பகைவரைக் கொல்லுதற்பொருட்டுந் தவஞ்செய்தலுண்மையின், அதனை நீக்குதற்பொருட்டு **நற்றவ**மென்றார். சைவத் தவவேடமே **நற்றவவேடம்**. மெய்த்தவம் என வருவதும் அது. சமணர் முதலாயினோர் தவத்தைப் பொய்த்தவமென்பதுங் காண்க - இஃதோர் பெரியாருரைக் குறிப்பு.

ஞால முய்ந்திட - உயிர்களுக்கு **அறிவிக்கவே** (445) இறைவன் இவ்வேடங் கொண்டு வந்தாராதலின் **உய்ந்திட** என்றார்.

வேறு

448\. மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசிதலைக் கொள்வது
பாரித் தில்ல மடைத்தபின் பண்புற
வேரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். சு

(இ - ள்) (அவ்வாறு நண்ணிய காலமாகிய) மாரி...இரவினில் - மழைக் காலத்தில் ஒரு நாள் இரவிலே; வைகி - (உறக்கமின்றி) விழித்திருந்து; ஓர் தாரிப்பின்றி - வேறு ஓர் ஆதரவு மில்லாமையினாலே; பசி...பாரித்து - மீதூர்வதாகிய பசி மேலும் அதிகரிக்கப் பெற்று; இல்லமடைத்தபின் - வீட்டுக் கதவினைத் தாழிட்டு அடைத்த பின்னர்; பண்புற - உற்ற பண்பினாலே; வேரி...கொண்டனன் - தேன் பொருந்திய மாலையணிந்த மாறனார் (நண்ணிய நற்றவராகிய) விருந்தினரை எதிர் கொண்டு வரவேற்றனர்.

(வி - ரை) **மாரிக்காலத்து இரவினில்** - மழைக்கால நாட்களில் இரவு மிக்க இருள் கொண்டிருக்கும். மழையும் இருளும் கூடி, மக்கள் வெளிச் செல்லக் கூடாதபடி தடுக்கும் என்பது குறிப்பு. நாயனார் பேறடைந்த திருநாள் ஆவணி மாதத்து மக நாளாதலும் காண்க.

வைகி - இரவினிற் படுத்துறங்க வேண்டுவோர் அவ்வா றுறங்காமல் விழித்திருந்தனர் என்பது. பட்டினி யிருந்து என்பாரு முண்டு. வைகித் தாரிப்பின்மையால் பாரிக்கப்பெற்று அடைத்தபின் - எனக் கூட்டுக.

ஓர் தாரிப்பு இன்றி - ஓர் ஆதரவு மில்லாமையினாலே. **இன்றி** - இன்மையால். **தாரிப்பு** - தரிப்பு என்றது முதல் நீண்டது. தரிக்கும் ஆதரவு - உதவி. தம்மைத் தாங்கக் கூடியவர் யாவருமின்றி என்க. விருந்துபசரிக்க எவ்வகையானும் உதவி பெறாமை குறித்தது. இதனைப் **பசி** என்றதனுடன் கூட்டி அடக்க முடியாத - தாங்க முடியாத - பசி என்பாரு முண்டு. இப்பொருட்கு **இன்றி** - இன்றிய - இல்லாத - முடியாத என்று பெயரெச்சமாக்கிக் கொள்வர்.

பசிதலைக் கொள்வது பாரித்து - பாரித்து - பாரிக்க - அதிகரிக்க என்க. பசிமீதூரும் நிலை மேன்மேலும் அதிகரிக்க. செய்ய என்பது செய்து எனத் திரிந்து நின்றது. பெற்று - என ஒரு சொல் வருவித்துரைக்க.

பாரித்தல் - அதிகரித்தல். "சைவ நெறி பாரித்தன்றி" - திருநா - புரா - 288.

இதனைப் பரித்து என்பதன் முதனீண்ட விகாரமாகக் கொண்டு, தாங்கிக் கொண்டு என்றுரைப்பாரு முண்டு. இஃது தாமே பசிமீதூரப் பெற்றார் தம்மையடைந்த விருந்தினரை ஊட்டல் அமையாதென்பது குறித்தது.

இல்லம் அடைத்த பின் - இது நாயனார் விருந்தெதிர் கொண்ட நேரங் குறித்தது. இரவு முதிர்ந்து நள்ளிரவாகிய மிக்க அகாலத்தில் வேறு எவரும் விருந்து புறந்தரார் என்பது குறித்தது. தமது இல்லமேயன்றி ஊர் அடங்கிய நிலையும் குறிப்பிட்டபடியாம். **இல்லம் அடைத்தபின் நண்ணினார்** என மேற்பாட்டுடன் கூட்டியுரைப்பர் இராமநாதச் செட்டியார்.

வேரித்தாரான்-வேரி-தேன்; தார் - இங்கு வேளாளர்க்குரிய குவளை மலராலாகிய அடையாளமாலை குறித்தது. காகிதம் முதலிய இயற்கைமண மில்லாத போலியான பொய் மாலைகளை அணிந்து மகிழும் இந்நாட் போலிமாக்கள் **வேரித்தாரான்** என்ற இதனைக் குறிக்கொண்டு திருந்துவார்களாக.

விருந்து எதிர் கொண்டனன் - இல்லக்கதவுதாழிட்டு அடைத்த பின் நண்ணிய நற்றவர், 'பசித்து விருந்துவந்தேம்' எனக்கதவைத் தட்டினார் எனவும், நாயனார் இத்

தனை இன்னல்களுக்கு மிடையிலே கதவுதிறந்து, வந்த விருந்தினை உள்ளமும் முகமும் மலர்ந்து உரிய உண்மைவகையிலே வரவேற்று எதிர்கொண்டார் எனவும் வருவித் துரைத்துக் கொள்க. **பண்புற** - விருந்தோம்பலுக்கு ஏற்ற பண்பு பொருந்தும்படி. அகனமர்ந்த அன்போடு முகமும் மலர்ந்து உரிய பண்பினாலே வரவேற்றல் குறித்தது. இதன் இயல்புகளெல்லாம் நீதிநூல்களுட் காண்க.

பண்பு உற - வீடுபெறும் பண்பு தம்மை உறும்படியாக - அத்தன்மை தம்மை உற்றதனாலே - என்ற பின்நிகழ்ச்சிக் குறிப்புமாம்.

இல்லம் அடைந்த பின் என்பது பாடமாயின் நண்ணிய தவசியார், ஓர் தாரிப்பு மில்லாது பசிதலைக்கொண் டிதிரிக்கப் பெற்றாராய் நாயனாரது இல்லத்தையடையவே அவர் பண்புற அவ்விருந்தை எதிர் கொண்டனர் என்றுரைத்துக் கொள்க. இப் பொருளில் தாரிப்பின்றிப் பசிதலைக் கொள்வது என்பன நற்றவத்தவர் நிலைகுறித் தது. இது பின்னர்த் **தீரவே பசித்தார்** - (449) - என்றதனோடும் பொருந்துமாறும் காண்க. இப்பொருள் சிறந்ததாகக் காண்கின்றது. ஆயினும் பெரும்பான்மை கொண் டுள்ள பாடத்துக் கேற்ப முன்னர் உரைக்கப் பெற்றது.

விருந்து - புதுமை; புதியராய் வந்தார்மே னின்றது. இங்கு முன் எந்நாளும் கண்டிராத புதுநிலைமை குறித்தது. "இம்மடத்திற் காணும் படியிலாத நீர்" - (**அமர் நீதி - புரா** - 10), என்றது காண்க. முன்னெல்லாம் அடியாருடன் கலந்து வந்தனரே யன்றித் தனித்துத் தாமே எழுந்தருளியதில்லையாதலின் இது புதுமை என்பார் **விருந்து** என்றார். எதிர்கொண்டு வரவேற்றலை **ஆவாகனம்** என்பது வழக்கு. 9

449. ஈர மேனியை நீக்கி யிடங்கொடுத்
தார வின்னமு தூட்டுதற் காசையாற்
றார மாதரை நோக்கித் "தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்" னென்று, ௧0

450. "நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசி றகவுற
வமைக்கு மாறெங்ங னே?யணங் கே!"யென ; ௧௧

451. மாது கூறுவண் "மற்றொன் றுங் காண்கிலேன் ;
ஏதி லாரு மினித்தரு வாரில்லை;
போதும் வைகிற்றுப் ; போமிடம் வேறிலை ;
தீது செய்வினை யேற்கென் செய ?"லென் று ; ௧௨

452. "செல்ல னீங்கப் பகல்வித் தியசெந்நென்
மல்ல னீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகு ; மற்
றல்ல தொன்றறி யே"னென் றயர்வுற ; ௧௩

453. மற்ற மாற்ற மனைவியார் கூறமுன்
பெற்ற செல்வ மெனப்பெரி துண்மகிழ்ந்
துற்ற காதலி னாலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார், ௧௪

454. பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்ப ணறிவருங் கங்குருள்
கருகு மையிரு ளின்கணங் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம், கரு

455. எண்ணு மிவ்வுல கத்தவர் யாவருந்
துண்ணெ னும்படி தோன்றமுன் றோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து, கசு

456. உள்ள மன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லாரிளை யான்குடி மாறனார். கள

449. (இ - ள்) வெளிப்படை. (முதலில்) அவரது திருமேனியை ஈரம் போக்கிப் பின் அவர் எழுந்தருளியிருக்க ஓர் இடங்கொடுத்து, அதன் பின், அவர்தம் மனநிறைவு கொள்ளுமாறு அமுதூட்டுதற்கு ஆசைகொண்டமையினாலே, தமது தாரமாகிய அம்மையாரை நோக்கி, "இந்தத் தபோதனர் தீரப்பசித்துள்ளார்; நாம் செய்வதென்னே" என்று பின்னரும், ௧௦

450. (இ - ள்) வெளிப்படை. "முன்னர் இங்கு நமக்கே உணவில்லை என்பதுண்மையே யாயினும் இமயமலை பெற்ற குலக்கொடி யாகிய பார்வதியின் பாகர்க்கினியவர் தமக்கு நாம் இனிய உணவு தக்கபடி அமைத்தல் வேண்டும்; அது செய்யும் வழியாது? அணங்கே!" என்று நாயனார் கூற, கக

451. (இ - ள்) வெளிப்படை. அதற்கு அம்மையார் விடைகூறுவாராய் "அதனுக்கு வழிவேறொன்றுங் காண்கிலேன்; பிறர் எவரும் இனிக்கொடுப்பவர்களில்லை; காலமுங் கழிந்து நள்ளிரவாயிற்று; மற்றும் சென்று தேடக்கூடிய பிறஇடங்களும் ஒன்றுமில்லை; தீவினையேனுக்கு இனி யென்ன செயலுளது?" என்று சொல்லிப் பின்னரும், கஉ

452. (இ - ள்) வெளிப்படை. செல்லல் நீங்குமாறு இன்று பகலில் வயலிலே விதைத்த செழிய நீர் முளை நெல்லைத் தேவரீர் வாரிக்கொண்டு வந்து கொடுப்பீர்களானால், அடியேன் வல்ல வகையாலே அமுது சமைத்தலும் ஆகும்; இதனைத் தவிர்த்து வேறொரு வழியும் அறியேன்" என்று கூறி வருந்தினாராக; க௩

453. (இ - ள்) வெளிப்படை. மற்று அம்மொழிகளை மனைவியார் சொல்லக் கேட்டலும் நாயனார் முன்னே தேடிவைத்திருந்த செல்வம் பெற்றவர் போன்று மிகவும் மனமகிழ்ந்து பொருந்திய ஆசையினாலே நீர் சூழ்ந்த தமது வயலுக்கு முளைவாரிக் கொண்டுவரப் போவதற்கு ஒருப்பட்டுத் தொடங்குவாராகி; கச

454. (இ - ள்) வெளிப்படை. வான வெளியிலே விளங்கப் பெருகுமழை பொழிதலாலே பக்கங்களும் இடை வெளியும் அறிய இயலாதபடி இருண்ட நள்ளிரவானது கருகிய மைபோன்ற இருட்கூட்டம் தனது செறிவு விட்டு உருகுகின்றது போன்று அந்நேரத்தே உலகெலாந் தோன்றியதாகவே, கரு

455. (இ - ள்) வெளிப்படை. அதனை இவ்வுலகத்தவர் வேறு எவரும் மனத்தால் எண்ணவும் துண்ணென நடுக்கமுறும் வகை தோன்றவே, அவ்வாறு அவ்விருள் கண்

முன்னே புலப்படுங் காலத்தில் நீடிய வண்ணமுடைய மைக்குழம்பே யிதுவாம் என்று கொண்டு வெளிப்புறப்பட இயலாதபடி இருள் செறிந்த நடுயாமத்திலே, ௧௬

456. (இ - ள்) வெளிப்படை. தமது உள்ளத்தை அன்பானது தன்வசப்படுத்திக் கொண்டு ஊக்கந் தந்து செலுத்தத் தாம் வாரிக் கொணரும் முளைநெல்லைக் கொள்ளத் தக்கதொரு பெரிய இறைகூடையைத் தலைமேற் கவித்துக் கொண்டு குறிவழியே சென்று நீர்ப்பறவைகள் தூங்கும் அந்த வயலுக்குட் புகுமாறு **வள்ளலாராகிய இளையான் குடிமாறனார்** போயினார். ௧௭

இந்த எட்டுத் திருப்பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுபடுத்திப் பொருள் கொள்ளத்தக்கன. இவற்றுள், முதல் ஐந்து செய்யுட்களும் ஒரு முடிபு கொண்டனவாக வும், ஆறுவது பாட்டுத் தனி முடிபு கொண்டதாகவும், ஏழாவது எட்டாவது பாட்டுக் கள் தனி முடிபு கொண்டனவாகவும் கொண்டு உரைப்பாரு முண்டு.

449. (வி - ரை) **ஈரமேனியை நீக்கி** - மேனி ஈரத்தை நீக்கி. இரண்டனுருபைப் பிரித்துக் கூட்டி மாற்றுக.

இடங்கொடுத்து - வந்தவர் எழுந்தருளியிருத்தற்கு ஒரு இடம் கொடுத்து. இதனைத் **தாபனம்** என்பது சைவ சம்பிரதாயம்.

இன்னமுது ஆர ஊட்டுதற்கு என்று மாற்றி யுரைத்துக் கொள்க. அவர் மனமகிழ எனவும், தமது மனமார எனவும் இருவழியும் கூட்டி யுரைக்கத் தக்கது.

தாரமாதர் - தாரமாகிய அம்மையார். **தாரம்** - மனைவி. பெறற்கரிய மாதரார் என்றலுமாம்.

தபோதனர் தீரவே பசித்தார் - **தபோதனர்** - தவத்தையே தனமாக உடையவர். தவமாகிய செல்வத்தை யுடையார். **தவம்** - சிவபூசை. **தீரவே பசித்தார்** - அறப்பசித்தார் - மிகவும் பசியுடையாராயினர். "தண்டறு சிந்தைத் **தபோதனர்** தாமகிழ்ந், துண்டது மூன்று புவனமு முண்டது" என்ற திருமூலர் திருமந்திரத்தின்படி, (ஏழாந் தந்திரம் - மாகேசுவர பூசை - 155), அடியார் உண்ட வுணவு மூவுலகத்தினும் உயிர்களுக்குப் பசி தீர்க்கும். என்னை? இவர்கள் உண்ணவே, இவர்க்குள்ளே நிறைந்த இறைவன் உண்கின்றான்; அவன் உண்ணவே, அவன் உயிர்க்குயிராய் நிறைந்த மூவுலகத்துயிர்களுக்கும் அவ்வுணவு ஆகின்றது என்க.

தீரவே பசித்தார் - நாம் இனிப் பசிப்பிணி இல்லாமற் றீரும்படி - அதாவது பசிப் பிணியுடன் கூடிய பிறவி யறும்படி என்ற குறிப்பும் காண்க. அவர் மிகப் பசித்து வந்த விருந்தினர் என நாயனார் அறிந்த வகை மேலே "பசிதலைக் கொள்வது" (448) என்றதன் கீழ்க் குறிக்கப் பெற்றது. 10

450. (வி - ரை) **நமக்கு முன்பு இங்கு உணவு இல்லை ஆயினும்** - இதனைத் தெரிந்தே தாம் கேட்பதனை மனைவியார் அறியும்படி முன்னுரையாக இதனைச் சொல்லி நாயனார் தொடங்கியவாறு. தாம் கேட்கும் வினவுக்கு இஃதே யோர் விடையாகக் கூடுமாதலின் அது தவிர்த்து வேறு விடையினை எதிர்பார்த்தவராய் இதனை எடுத்துக் கூறினார் என்ற குறிப்புமாம்.

இமக்குலக் கொடிபாகர்க்கு இனியவர் தமக்கு - குலக்கொடி - 418 - பாட்டுப் பார்க்க. **இமம்** - பனி. இங்குப் பனியால் மூடப் பெற்றதாற் காரணப்பேர் பெற்ற இமய மலைக்காயிற்று. ஆகுபெயர். **கொடி** - கொடிபோன்றார்-பார்வதியம்மையார். ஆகுபெயர். **பாகர்க்கு இனியவர் தமக்கு** - ஒரு பாகத்தே உடைய சிவபெருமானுக்கு இனியாராயின அடியார்க்கு. இனி இதனை இச்சரித நிகழ்ச்சி குறித்து, பாகர்க்கு-இனியவர் தமக்கு- என ஒருபொருள்குறித்துத் தனித்தனி வேற்றுமை யுருபு விரித்த இரண்டு தொடராகக் கொண்டு, இறைவனையே குறிப்பதாக உரைத்தலுமாம். பாகரும் இனியவரும் ஆகிய இவருக்கு என்க. "என்னி லும்மினி யாரொரு வன்னுளன்", "தேனைத்தெனக்

இனியான்'' என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. இவ்வாறு வேற்றுமை உருபுகள் பன்முறைத் தனித்தனி விரித்து வருவதும் வழக்காம். "உம்பரி னூரெரித்த, அப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறையணிந்த, அப்பர்க்கு" - (திருத்தொண்டர் திருவந்தாதி (1), "செய்ய சடைக்கற்றை, நம்பர்க் கும்பர்க் கமுதளித்து நஞ்சை யமுது செய்த வருக்கு" - (மூர்க்கர் - புரா - 2) முதலிய திருவாக்குக்கள் காண்க. இறைவனுக்கு இனியாராகிய அடியவர்களே உயிர்களுக்கு இனியாராவர். உயிர்களுக்கு இனியாராவார் களே இறைவனுக்கு இனியாராவர்.

"இகத்தும் பரத்து மினியாரைக் காணேன்"—சிறுத்தொண்ட நாயனார் புரா - 77

தகவுற - அடியார் பூசைக்கு ஏற்ற தகைமை பொருந்தும்படி.

அணங்கே - தெய்வப்பெண்ணே!. வழி ஒன்றுந் தோன்றாது நிற்கின்ற இச்சமயம் எனக்கு உதவினால் உன்னைத் தேவப்பெண் என்று கருதுவேன் என்ற குறிப்பு. 11

451. (வி-ரை) **மற்றொன்றுங் காண்கிலேன்**-மற்று ஒன்றும் - என்றதனால் ஒன்று உள்ளது; அதனைத் தவிர வேறு ஒன்றும்-என்பது. அவ்வொன்று வரும் பாட்டிற் கூறு கின்றார். அவ்வொன்றினையன்றி மற்ற வழிகளாக எண்ணக்கூடியவற்றை எல்லாம் இப்பாட்டிற் றனித்தனி கூறிக் கழித்து அவ்வொன்றினையே முடிபாகக் கூறும் காரணமும் காட்டிய அழகு காண்க.

ஏதிலார் - அயலார். வேறு எதும் தொடர்பு இல்லாதவர்.

இனி - இதுவரைத் தன்னை மாறி யிறுக்க உள்ள கடன்கள் தக்கனவுங் கொண்டு (446) விட்டமையின் இனிக் கடன் வாங்க இயலாமை குறித்தவாறு.

போதும் வைகிற்று - வைகுதல் இங்கு நீட்டித்து விட்டமை குறித்தது. **போது** - பொழுது. அகாலமாயினமை வேறிடம் போகக்கூடாமைக்குக் காரணமாம்.

இடம் வேறு - இவ்வூரன்றிப் பிற ஊரினும் என்ற குறிப்புமாம்.

தீதுசெய் வினையேற்த என் செயல்? - தாமும் தம் நாயகரும் மனத்தில் எண்ணிய படி அடியார் பூசைக்கு அமுதமைக்க இயலாமையின், இல்லாளின் கடமையாகிய இதற்குரிய தாம் செய்த தீவினையின் பயனாகவே கருதி மனைவியார் வருந்துகிறார். 12

452. (வி - ரை) **செல்லல் நீங்க - செல்லல்** - துன்பம். அடியார்க் கமுதளிக்க நெல் இல்லை என்று தாங்கள்படும் துன்பம். இந்நெல் பயிராய் விளைந்து, பின்னராவது நீங்குமாறு. **செல்லல்** - செல்லுதல் - போதல் எனக் கொண்டு நாம் இந்தப் பிறவியிற் போகும் செயல் நீங்குமாறு. அதாவது இன்று அடியார்க்களித்தலால் பிறவியறுமாறு என்று குறிப்பிற் கூறலுமொன்று. செல்லல் நீங்க வித்தி என்றும், செல்லல் நீங்க வாரிக்கொடுவந்தால் என்றும், செல்லல் நீங்க ஆக்கலுமாகும் என்றும் கூட்டி முடித் தலுமாம்.

பகல்வித்திய செந்நெல் - அன்று பகல்தான் நாற்றுக்குத் தெளித்த செந்நெல். மாரிக் காலமாதலின் அன்று பகலில் மழைபெய்து நின்றதும் வயலைச் சேறிட்டு நாற்றுக்காக நெல் தெளித்துவந்தனர்; அதுவும் செந்நெல் என்றபடி. செந்நெல்லே அரன் பூசைக்கும் அடியார் பூசைக்கும் சிறப்பா யுரியதாம். அரிவாட்டாய நாயனார் புராணத்துட் காண்க. கார்நெல் சிறப்பன்று. குணத்தினுங் குறைபாடுடையதாம். **வித்திய** - நாற்றுக்காகச் செறிவாய்த் தெளித்த.

மல்லல் நீர்முளை - செழித்த நீரினால் நெல் ஊறிப் பருத்து முளைக்கத் தொடங்கி யிருக்குமாதலின் முளை என்றார். முளைக்கும் பதத்திலுள்ள செந்நெல் என்க.

வல்லவாறு அமுதாக்கலும் ஆம் - ஊறி முளைக்குந் தருணத்தில் உள்ள நெல் அமுதுக்குச் சிறக்க அமைவதன்று; ஆயினும் நானறிந்த வகையாலே அதனைப் பண் படுத்தி அமுதாக்குவேன் என்பது. **வல்லவாறு**-முன் பழகிய கைத் தேர்ச்சி குறித்தது. "கைம்மை வினையினால் வேறு வேறு கறியமுதாக்கி" (461) என்பதும் காண்க.

மற் றல்லதோன்றறியேன் - முன்னர் மற்றொன்றுங் காண்கிலேன் என மேற் பாட்டிற் றொடங்கிய மனைவியார் அதனையே அனுவதித்து மேற்கேள்விக் கிடமின்றி முடித்துக் காட்டியவாறு. **அயர்வுற** - வருந்த - அடியார்க் கமுதளிப்பதில் இவ்வாறு நேரிட்ட குறைபாடுடைய தமது நிலை குறித்து வருந்தினார். 13

453. (வி - ரை) **மற்று அம்மாற்றம்** - இதனைத் தவிர மற்ற ஒன்றும் வழி காண்கிலேன் என்று மனைவியார் முடித்துக் கூறிய மொழி.

முன் பெற்ற செல்வம் - முன்னே தேடி வைத்தமையால் இப்போது பெற்ற செல்வம். கொடுத்து வைத்திருந்த செல்வம் என்பது வழக்கு. **முன்பெற்ற செல்வம்** என இதற்கு முன் தாம் பெற்றிருந்த செல்வ நிலை மீண்டும் பெற்றாற்போல என்பாரு முண்டு. **உண்மகிழ்ந்து** - உபாயம் அறிந்தமையால் உளத்தில் மகிழ் சிறந்தார். **உற்ற காதலினால்** - அடியாரிடத்துப் பொருந்த வைத்த ஆசையினால்.

ஒருப்பட்டனர் - ஒருமைப்பட்ட மனத்தினராகிய நாயனார். இதனை வினைமுற் றாக்கித், தொடங்குவார் ஒருப்பட்டனர் என முடிப்பாரு முண்டு.

சுற்று நீர் வயல் - சூழ்ந்த நீரையுடைய வயல். **சுற்று நீர்** - வினைத்தொகை. 14

454. (வி - ரை) **வானம் பிறங்கப் பெருமழை பொழிந்து** என மாற்றி உரைத் துக்கொள்க.

வானம் - ஆகாயம். வானம் பிறங்க மழை பொழிதலாவது ஆகாயவெளி முற்றும் மின்னிச் செறிந்து மழை பொழிதல். **வானம்** - மேகம் எனக் கொண்டு பெருமேகங்கள் மிக மழை பெய்த என உரைப்பாரு முண்டு. **பொழிந்து** - பொழிதலால். **அருகு - நாப்பண்** - உம்மைத் தொகை. அருகும் நாப்பண்ணும் என விரிக்க. **அருகு** - பக்கம். **நாப்பண்** - இடை. **அறிவரும் கங்குல்** - இது நேர்வழி யென்றும் இதுபக்கம் என்றும், இது வழி என்றும் இது குழி என்றும் அறியக் கூடாதபடி இருள்செறிந்த இரவு. **இருள்** - உவமானத்துக்கேற்ப வருவித்தமைத்துக் கொள்க.

கருதும் மையிருளின்கணங் கட்டுவிட்டுருகுகின்றது போன்றது - **கருதும்** - கருமை யைச் செய்கின்ற; கருமையையுடைய. **மையிருளின் கணம்** - மைபோன்ற கரு மைச் செறிவுடைய இருட்கூட்டம். மையும், கருமையும், கணமும் ஆகிய மூன்று அடைமொழிகளுங் கூடி, இருள் என்னும் ஒரு பொருள் வேறொன்றும் தன்னுள் நுழையாதபடி கட்டியாய்ச் செறிந்த தன்மையைக் குறித்தன.

செறிந்தும் - இளகியும் - வியாபித்தும் உள்ள தன்மைகளினாலே பொருள்கள் மூன்று நிலைகளை அடையும் என்று பௌதிக நூலார் கூறுவர். இவற்றைப் பனிக் கட்டி - தண்ணீர் - நீராவி என, நீர் என்றதொரு பொருளே முறையே கட்டி நிலை - உருகியநிலை - ஆவியாகிய நிலை புறுவதிற் காட்டுவர். இங்கு மேற்கூறிய மூன்று அடைமொழிகளினாலே முறையே இருளின் பரந்த நிலையும், குறுகிய நிலை யும், இறுகிய நிலையும் குறிப்பிட்டவாறு காண்க. அடுத்த பாட்டில் **மைக்குழம்பு** என்ற விடத்தும் காண்க. நாயனார் நெல் வாரிவருதற்குப் புறப்பட்ட அந்த நேரத்தில் சூழ்ந்த (கணம்) **கட்டியான இருள்**, நாயனாரது அன்பின் உறைப்பினால் தனது கட்டுத் தன்மையை விட்டு உருகி ஊடுருவிச் செல்ல இடந் தந்தது என்ற குறிப்புங் காண்க.

போன்றது உலகெலாம் - போன்றதாகிய உலகத்திலெங்கணும். நாயனார் புறப் பட்ட அவ்வரிய செயலினாலே, உண்மையை மறைத்துநின்ற ஆணவ இருளின் செறிந்த வன்மையானது தனது கட்டுவிட்டு உலகமெல்லாம் உயிர்கள் நல்லுணர்ச்சி பெறக் காரணமாயது என்பதோர் உட்குறிப்புங் காண்க. "காரிட்ட ஆணவக் கருவறையில்" என்ற தாயுமானார் பாடலையும் பார்க்க. ஆணவம் இருண்மலம் எனப்பட்டதும் இங் குக் குறிக்க. வலிய இருளினுட் சிக்கி யலைகின்ற உலகினர்க்கு அவ்விருளின் வலியை நீக்கி அன்பின் திறத்தைக் காட்டுதற்கே இறைவன் இங்கு வந்தாரென்பது முன்

னர்க் குறிக்கப்பட்டது. உருகுகின்றது அன்பின் செயலாதலும் இங்கு உணர்ந்து அனுபவிக்கத் தக்கதாம். இந்த உண்மையை ஊன்றிக் காட்டுதற் பொருட்டே ஆசிரியர் சேக்கிழார் பெருமான் இறைவனார் தமக்கு எடுத்துக் கொடுத்த முதலாகிய "**உலகெலாம்**" என்ற மகாமந்திரத்தை இங்கு அமைத்தார் என்பர். **கட்டுவிட்டு** என்பது பாசநீக்கக் கருத்தினைக் குறிப்பதுங் காண்க.

கனம்—என்பதும் பாடம். 15

455. (வி - ரை) **எண்ணும் இவ்வுலகத்தவர்** - அருட் செறிவை நோக்காது இருட் செறிவை நோக்குகின்ற ஏனைய உயிர்கள். **யாவரும்** - பிறர் யாவரும். **துண்ணெனும்படி**-நடுங்கும்படி. **தோன்ற**-தோன்றவே ; **முன்தோன்றிடில்** - (இருளுட்புக) முற்பட்டபோது - புறப்பட்டால் ;

வண்ண நீடிய மைக்குழம்பாமென நண்ணல் செய்யா - இருள் தனது பரந்த நிலையின் மேலும் செறிவு கொண்டு குழம்பின் உருப்பெற்ற மையேயாம் என்று கருதி உட்புகாத. இவ்வுருவம் மிக்க, மைக்குழம்பினுருவமே என்று கொண்டு என்றலுமாம். **என** என்னும் செயவெனெச்சம் செய்தெனெச்சப் பொருளில் வந்தது. **நடுவிநாள் யாமத்து** - இருள் நடு யாமத்து என்று மாற்றுக. இருள் மைக்குழம்புபோன்ற செறிவு போற் காணப்பெற்றது என்பது கருத்து. **தோன்றமுன் தோய்ந்திடில்** என்று பாடங் கொண்டு அதற்கேற்பக் கூறுவாரு முண்டு. 16

456. (வி - ரை) **உள்ளம் அன்புகொண்டு ஊக்க** - அன்பைத் துணைக்கொண்டு உள்ளம் (தன்னை - நாயனாரை) ஊக்க என்றலுமாம்.

பேர் இடா - பெரிய இறைகூடை. **கோள்ள** - தாம் வாரிக் கொணர்கின்ற முளை நெல்லைப் பெய்து கொள்ள.

முன்கவித்து - தலையின்மேல் முன்புறமாகக் கவித்துக்கொண்டு.

***குறியின்வழி** - முன் நடந்து பழகியதாகிய பழக்கத்தின் குறிப்பின் வழியே. அக்குறிப்பே யன்றி வேறு எவ்விதக் குறிப்பும் தமக்குத் துணையாகக் கொண்டு செல்லுதலின்றி என்க. கண்ணினால் வழியும் குழியும் அறியமுடியாத இருள் என முன்னர்க் கூறியபடியால் இங்கு நாயனார் தமது மனையிலிருந்து வயலுக்குச் சென்ற செய்கைக்கு அவரது கால்கள் முதலிய புறக்கரணங்களும், மனம் முதலிய உட்கரணங்களும் முன்னர்ச் சென்று சென்று பழகிய குறிப்பே துணை செய்தது என்றதாம். இதனையே இங்குக் **குறியின் வழி** யென்றார். **காலினாற் றடவிச் சேன்று** எனப் பின்னர்க் கூறுதலுங் காண்க. **குறி** - குறிக்கப்படுவது ; அடையாளம். செயப்படு பொருள் விகுதிதொக்க சொல். வயல்புக்கு முளைநெல் வாரிவருதலே குறியாகக் கொண்டு அதன் வழியே போயினார்.

குறியின் வழி - குறி - நீர்மை - நியதியெனக் கொண்டு இறைவன் இவரது நிலை காட்ட நினைத்து எழுந்தருளி வந்து செலுத்திய குறியின் வழியே வசப்பட்டவராய்ச் சென்று என்றலுமாம். "கொண்ட கருத்தின் கண்ணேக்குங் **குறிப்பேயன்றி**" (1) "குழிவாயதனிற் **குறிநட்டு**" (5) என்ற தண்டியடிகணாயனார் புராண ஆட்சிகளையும் இங்கு வைத்துணர்க.

***தூக்கச் சரிப்பு** என்பதொரு நோய் (Somnombulism). அதனாற் பீடிக்கப் பட்ட ஒருவன் தூங்கிக்கொண்டே எழுந்து முன்வைத்த ஒரு குறிப்பின் வழியே ஒழுங்காய்ச் சென்று மீண்டுவந் துறங்குவன் என்பது மருத்துவ நூலார் கண்ட உண்மை. அஃதும் முன் தூக்க நிலையில் தொடர்ந்து வைத்ததொரு குறியின் வழியே நிகழ்வதாம். மனவலிமையின் தத்துவமுணர்ந்தாரே இங்குக் கண்ணுக்கு உருத் தெரியாத நள்ளிருளிலே குறியின் வழியே நாயனார் வயல்புக்க அரிய செயலின் தத்துவத்தை நன்கு உணரவல்லார்.

வள்ளலார் - நாயனாரது வள்ளற்றன்மை இவ்வரிய செயலாலே முற்றும் விளக்க மாதலின் இங்கு இப்பெயராற் கூறினர். **வள்ளல்** என்றதோ டமையாது **ஆர்** விகுதியும் தந்த அருமை காண்க.

செய்வதென் ? என்று - அணங்கே ? எங்ஙனே ? என ; மாது - என்று - ஆரும் என்றயர்வுற ; மகிழ்ந்து - தொடங்குவார் - கங்குல் - போன்றதுலகெலாம் - யாமத்து - அன்பு - ஊக்க - இடா - கவித்து - வயல்புகப் - போயினர் - வள்ளலார் - மாறனர் - என்று இவ்வெட்டுப் பாட்டுக்களையும் தொடர்ந்து முடிவுபடுத்திக் கொள்க.

கங்குல்தான் உருகுகின்றது போன்றதாகிய உலகெலாம் யாவரும் நண்ணல் செய்யா நடுயாமத்திலே என 454, 455 பாட்டுக்களின் கருத்துக்களைத் தொடர்பு படுத்துக. "இருளிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" (திருவாசகம்), "எண்ணில் புன்மாக்க ளுறங்கிரு ணடுநல்யாமத்து" (கருவூரார் திருவிசைப்பா) முதலிய திருவாக்குக்களின் கருத்துக்களையும் இங்கு நினைவு கூர்க. 17

457. காலி னூற்றட விச்சென்று கைகளாற்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். ௧௮

(இ - ள்) வெளிப்படை. கால்களினாலே வழியைத் தடவி அறிந்துபோய், வயலினுள்ளே மழைநீரின் வழியே மிதந்து ஒரு வழிச்சார்ந்த நெல் வெண்முளைகளைக் கைகளினாலே சேர்த்து வாரி எடுத்து இறைகூடை நிறையக் கொண்டு, கூடையை மேலே தூக்கி யெடுத்துத் தலையிற் சுமந்து கொண்டவராய் மிக விரைவிலே மனைக்கு மீண்டு வந்தனர்.

(வி - ரை) **காலினூற்றடவிச் சென்று** - முன்னர்க் குறியின் வழி வயல்புக்க நாயனார் வயலினுள்ளே வரப்புக்களின் மீது செல்லும் வழியைக் காலினூற்றடவி அறிந்து சென்றனர் என்றலுமாம். அங்ஙனம் தொடர்ந்து செல்லாதபோது நழுவி வயலினுட் சேற்றில் விழக்காரணமாதலின் **தடவிக் (கொண்டே) சென்று** என்றார்.

சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன - அன்று பகலில் வித்திய நெல்லாதலின் ஊறி முளைக்கத் தொடங்கின. கிளம்பும்போது முளை வெண்ணிறமுடையனவாம். வித்தியபின் 30 நாழிகையளவில் நெல் முளைக்கத் தொடங்கும் என்பது உழவு நூற் றுணிபு. **நீர்வழிச் சார்ந்தன** - நாற்றுக்காகப் பகலில் வித்தியதாயினும் அதன் பின் பெருவானம் பிறங்க மழை பொழிந்தமையால் மிதந்து காற்றினால் ஒரு புறம் வரப்புக்களினோரம் ஒதுக்கப்பட்டுச் சார்ந்தவைகளை. இரண்டனுருபு விரிக்க.

கோலி - பலவற்றையும் ஒன்று சேர்த்து ; **வாரி** - சேர்த்தவற்றைக் கைகளால் வாரி எடுத்து ; **கொண்டு** - இடாவிற் கொண்டு.

கோலி - வாரி - கொண்டு - எடுத்து - சுமந்து என்ற வினையெச்சங்கள் தனித் தனி ஒவ்வோர் செயல்களைக் குறித்தன. இத்தனிச் செயல்களை ஒவ்வோர் சொற்களால் அடுக்கி விரைந்து கூறிச் சென்றமை குறிக்க. **ஒல்லை மீண்டனர்** - விரைவில் மனைக்குத் திரும்பினர்.

குறியின் வழி வயல்புகப் போயின வேகத்தை விடத் திரும்பும்போது அடியார் பசித்திருப்பார் என்ற கவலையினால் சிறிதும் தாமதமின்றி மிக விரைவினின் மீண்டார் என்பார் **ஒல்லை** என்றார். அடியார் பசியை ஆற்றுவதில் நாயனார் வைத்த உறைப்பும், அதன் பொருட்டு அவரும் மனைவியாரும் செய்த அருஞ் செயல்களும் மிக விரைந்து சென்றன என்பது குறிக்க இப்பகுதியை மிகச் சிறிய அளவு கொண்ட கலிவிருத்தங்களால் அமைத்து ஒரே தொடர்பாகச் செலுத்தி ஆசிரியர் விரைந்து கூறி முடித்த யாப்பின் அமைதியும், அழகும், நயமும் கண்டு களிக்க.

(இறைவன்) ஞாலம் உய்ந்திட நண்ணினூர் (447) என்றதன் பின் அமைந்த இப் பத்துத் திருப்பாட்டுக்களும் "பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்" (திரு வெம்பாவை - 3) என்ற திருவாக்கின்படி அன்பராது பத்திலக்கணங்களுக்கும் குறியீ டாவன போலும். 18

வேறு

458. வந்தபின் மனைவி யாரும் வாய்தலி னின்று வாங்கிச்
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி
"வெந்தழ லடுப்பின் மாட்ட விறகில்லை" யென்ன, மேலோர்
அந்தமில் மனையி னீடு மலக்கினை யறுத்து வீழ்த்தார். ௧௬

(இ - ள்) வெளிப்படை. நாயனார் மீண்டு மனைக்கு வந்தபின், மனைவியார் மனை வாய்தலினின்று அவர் கொணர்ந்த நென்முளை நிறைந்த இறை கூடையை வாங்கிக் கொண்டு, மனத்திலே மிக்க விருப்பமுடையாராய், நென்முளையிற் படிந்திருந்த சேற்றை நீரினாலே கழுவி ஊற்றியபின் தமது நாயகரிடம் "இந்நெல்லைப் பக்குவப்படுத் தற்கு அடுப்பில் எரிக்க விறகில்லை" என்று கூற, மேன்மை யுடையோராகிய நாயனார், அந்தமற்ற மனையிலே நீடிய கூரையை விறகின் பொருட்டு அறுத்துத் தள்ளினார்.

(வி - ரை) **வாய்தலின் நின்று வாங்கி** - நாயனார் முளைவாரிக் கொணர்ந்த பின் தம்மாற் சிறிதும் தாமதம் நிகழலாகாது என்று அந்நெல்லை எதிர்பார்த்த வண்ணம், அவர் போய்த் திரும்பும் வரை மனைவியார் மனைவாய்தற் புறத்துக் காத்து நின்றிருந் தனர் என்க.

சிந்தையில் விரும்பி - அடியவரை அமுது செய்வித்தலில் மனத்தில் மிக்கெழுந்த விருப்பத்துடன், அமுது படைக்கும் சாதனமாகிய நெல் தமது கையிற் புக்கு நின்றமை யால், இனிச் செய்ய வேண்டுவன தமது செய்கையே யாதலின் அதனை மிக விரும்பிச் செய்தனர் என்பது குறிப்பு.

நீரிற் சேற்றினை அலம்பி - சேற்றினை நீரில் அலம்பி என மாற்றுக. நென் முளை கள் சேற்றிலிருந்து வாரிக் கொணரப் பெற்றபடியால் அவற்றிற் படிந்திருந்த சேற்றை என்க. நென் முளைகளின் என வருவிக்க. **அலம்பி** - கழுவி. அலம்புதல் நீரின் இயல் பும் குணமுமாம். "அலம்பலம்பாவரு தண்புனல்" (திருவாரூர்த் திருவிருத்தம்), "அலம் பார் புனற்றில்லை" (திருவாசகம் - திருத்தெள்ளேணம் - 20.) முதலியன காண்க.

அடுப்பில் தழல் மாட்ட என மாற்றிக் கொள்க. **மேலோர்** - முளைவாரிக் கொணர்ந்தபோது **வள்ளலார்** என்ற ஆசிரியர் இங்குக் குடியிருக்கும் வீட்டுக்கூரையை அறுத்து வீழ்த்தியபோது **மேலோர்** என்றமை யுன்னுக. தமக்கு இவ்வுலகத்துப் போகம் இல்லாது, மேலாகிய வீட்டினைப் பெற நின்றவர் என்பது குறிப்பு.

அந்தமில் மனை - மனைக்குக் கூரையே இன்றியமையாத அங்கமாம். கூரையே வீட்டுக்கு வீடாந்தன்மை யளிப்பது. அதுவே வெயில் - பனி-மழை முதலிய துன்பங் களினின்றும் விடுதி தருவது. அதனானே வீடு வீடாந்தன்மை பெறும். கூரையில்லாத மனை குட்டிச்சுவர்களின் தொகுதியேயாம் என்பர்.

இங்குக் கூரையை அறுத்து வீழ்த்தியபோது அந்த மனையினது உலக நிலையில் வீடாந் தன்மைக்கு அந்தம் - இறுதி - நேர்ந்தது என்பர். ஆயின் இங்கு ஆசிரியர் இத னானே அது **அந்தமின்மனை**யாயிற்று என்றார். அஃதாவது அந்தமில்லாத - என் றென்றும் அழியாப் புகழ்பெற்ற - என்பதாம். இச்செயலே அதற்கு வேறெந்த மனைக்கு மில்லாத அந்தமில்லாத தன்மை செய்வித்தது என்பதும், இந்த மனையே மேல் அழியா வீடாகிய நிலை பெறத் துணைநின்றது என்பதும் குறிப்பு. **அந்தம்** - அழகு எனக்கொண்டு அழகில்லாத மனை - செல்வமின்றிய மனை - பல இடங்களிலும் இலமா

யின மனை என்றுரைகொள்வாரு முண்டு. நீடும் - முன் பழங்காலம்முதல் நீடி வந்த. அலக்கு - கூரையின் சட்டம் - மூங்கில் - வரிச்சு முதலியன.

மூட்ட—என்பதும் பாடம்.

459. முறித்தவை யடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசி யாக்கி வாக்கிய வுலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
"கறிக்கினி யென்செய் கோ"மென் றிறைஞ்சினர் கணவ னாரை. ௨0

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு வெட்டி வீழ்த்திய அக்கூரை வரிச்சுக்களை முறித்து அடுப்பிலே நெருப்பு மூட்டி அதில் நென்முளைகளைப் பதமாக வறுத்த பின்னர், அதனை அரிசியாகக் குற்றியெடுத்துச் சுத்தம் செய்து, நீர் பெய்துவைத்த உலையிலே இட்டுச் சிறிதும் வெறுப்பிற் கிடந்தராத வண்ணம் இனிய அமுது சமைத்து வைத்து, அதன்பின்னர் மிகச்சிறந்த கற்பின் றிறத்திலே மேம்பட்ட மனைவியார் "கறிவகை களுக்கு இனி என்ன செய்வோம்?" என்று சொல்லித் தமது கணவனாரை வணங்கினர்.

(வி - ரை) முறித்து அவை அடுப்பின் மாட்டி - அவை முறித்து அடுப்பின் மாட்டி என மாற்றுக.

அவை - அவற்றை. முன் பாட்டிற் கண்டவாறு நாயனர் அறுத்து வீழ்த்திய அந்த அலக்குக்களை. இரண்டனுருபு விரிக்க. அலக்கினை அறுத்து வீழ்த்தல் நாயனர் செயலாக, அவற்றை முறித்துமாட்டல் மனைவியார் செயலாயினமை காண்க. மாட்டி - நெருப்பு மூட்டி. முளை வித்து - முளைக்கும் தருணத்தில் வாரிக் கொணர்ந்த வித்து நெல். "சாலி நென்முளை" (457)

பதமுன் கொள்ள - ஈர நீங்கக் குற்றி அரிசியாகச் செய்யத்தக்க பதம்.

முன்கொள்ள - பதம் கொண்டவுடனே. பதம் முறுகிக் கெடாத முன்னர். முறித்தல் - மாட்டல் - வறுத்தல் - பெய்தல் இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு தனிச் செயல்கள். இவற்றை அன்பர் பசிநோக்கி மனைவியாரும் நாயனரும் தத்தமக் கேற்றவாறு பகிர்ந்து விரைந்து முடித்தவண்ணம் ஆசிரியரும் இப்பாட்டில் ஒவ்வோர் சொற்களால் விரைந்து செலுத்திக் கூறியருளிய அழகும் நயமும் காண்க. முக்காற் பாட்டில் அமுதமைப்பின் முக்காலும் நிரம்பியதுங் காண்க.

கறி - அமுதுடன்கூடச் சேர்த்துண்ணும் பதார்த்த வகை. "உண்டி நாலு விதத்திலாறு சுவைத் திறத்தினில்" (443) என முன்னர்க் கூறியதுங் காண்க. "கறி யமுதங் குதவாதே திருவமுது கைகூட" காரைக்காலம்மையார் புராணம் (19).

என் செய்வோமென் றிறைஞ்சினர் கணவனாரை - முன்னர்த் "தபோதனர் நீரவே பசித்தனராகச்" செய்வதென்? (449) எனவும், "இன்னடிசில் தகவுற அமைக்குமாறு எங்ஙனே" (450) எனவும் நாயனர் மனைவியாரை வினவியதற் கேற்ப, இங்கு மனைவியார் "கறிக்கு இனியென் செய்வோம்?" என்று வினவுகின்றார். இவ்விரு பெருமக்களும் ஒன்றுகூடி நடத்திய இல்வாழ்க்கைத் திறனும், அடியார் பூசை செய்தலில் இருவர் மனமும் ஒன்றித்துக் கூடி நிகழ்ந்த ஒருமைப்பாடும் நன்கு புலனும். "மருவிய காதன் மனையாளும் தானும், இருவரும் பூண்டர்ப்பி னல்லால்" எனவும், "காத லிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" எனவும் பிற்றை நாட் புலவர்கள் பாடியன இங்கு நினைவு கூரத்தக்கன.

"இல்லதென் இல்லவள் மாண்பானு ; லுள்ளதென் ? இல்லவள் மாணுக் கடை" என்பது பொய்யா மொழியார் வாக்கு. இத்தகைய உயர் குறிக்கோளை நமது நன்னாட்டினன்றி வேறெந்நாட்டினுங் காண்பதரிது. இவ்வுயர் குறிக்கோள்களை உட்

கொண்ட இல்வாழ்க்கையே இகத்தும் பரத்தும் உயர்வு தருவதாம். ஆயினும் இந்நாட் சிலர் இதன் உயர்வை யறியாது நமது நாட்டு வாழ்வு பெண்களை அடிமைப்படுத்திய தென்றும், நமது நாகரிகத்தில் பெண்ணுரிமை பாதுகாக்கப் பெறவில்லை யென்றும் பலவாறு கூறி யொழிவது வருந்தத்தக்கதாம். அவர் கூற்றுக்கள் இச்சரித நிகழ்ச்சித் துணை கொண்டு ஆராய்ந்து தெளியத்தக்கனவாம்.

இறைஞ்சினார் - வணங்கிக் கேட்டனர். இஃது கற்புடை மங்கையர்க்குரிய ஒழுக்க முறை குறித்தது. I beg to state - I beg to remain, sir, your most obedient servant என்றெல்லாம் பொருளற்ற மொழிகளைப் பயனற்று எழுதிப் பழகிய இந்நாள் மக்களுக்கு இங்கு **இறைஞ்சினார் கணவனாரை** என்பது ஒரு புதுமையாகக் காணப் பெறும். இஃது மனமார்ந்த உண்மை யொழுக்க நிலை குறித்தெழுந்த பழைய வழக்கு.

பூம்பு—என்பதும் பாடம்.

460. "வழிவரு மிளைப்பி னோடும் வருத்திய பசியி னாலே
யழிவுறு மைய" னென்னு மன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க, உக

461. மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினாற் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று, உஉ

462. கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
"யிணையிலா தவரை யீண்ட வமுதுசெய் விப்போ" மென்ன
உணர்வினா லுணர வொண்ணா வொருவரை யுணர்த்த வேண்டி
யணையமுன் சென்று நின்றங் கவர்துயி லகற்ற லுற்றார். உங

460. (இ - ள்) வெளிப்படை. "வழி வந்ததாலுளதாகும் இளைப்பினுடனே அதன் முன்னரே வருத்திய பசியினாலே எமது ஐயன் வருந்தும்" என்கின்ற அன்பினின் மிக்குச் சென்று தமது கொல்லையிலே, முளைக்கவைத்த குழிகளினின்றும் மேலே கிளம்பும் பருவம் உறாத சிறிய இலைக்கறிப் பயிர்களைக் கையினாற் றடவிப் பாசப் பழிமுதலை அறவே பறிப்பவர்போல அவற்றை வேரோடும் பிடுங்கி வந்து கறிக்காக (நாயனார்) மனைவியார் கையிற் கொடுக்க, உக

461. (இ - ள்) வெளிப்படை. மனைவியார் தமது கணவர் மனமகிழ்ச்சியுடன் தந்த கறிகளை இலை வேறு தண்டு வேறு முதலியனவாக ஆய்ந்தெடுத்துக் கறிக்கானவற்றை நீரினாலே கழுவி, அதற்கேற்ற தூய பாத்திரத்திலே யிட்டு, முன் பழகிய தமது கைப்பழக்கத்தினாலே வெவ்வேறாகப் பலவகைக் கறிகளாகச் சமைத்துப், பழைய நினைவினால் உளதாகிய குறையை எண்ணி ஒருவாறு மனந் தேர்ந்துகொண்டு, திருவமுது வகைகளை முற்ற அமைத்து எழுந்து நின்று, உஉ

462. (இ - ள்) வெளிப்படை. கணவனாரை நோக்கிக் கறிகளும் அமுதும் எல்லாம் சமைத்தாயின வகைகளைக் காட்டிப் பின் "ஒப்பற்றவரை நாம் இப்போதே விரைந்து அமுது செய்விப்போம்" என்று சொல்ல; உணர்வினால் உணரவொண்ணா ஒருவராகிய அவரை உணர்த்தும் பொருட்டு அவர் பக்கலில் அணைய முன்னே சென்று நின்றுகொண்டு நாயனார் அங்கே அவரைத் துயிலுணர்த்தலுற்றார். உங

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

460. (வி - ரை) **வழிவரும் இளைப்பு**-வழி வருதலாலுளதாகிய இளைப்பு-அயர்ச்சி. **ஒடும்** - உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றனுருபு. வழிவருதலென்னும் புறத்து நிகழ்ச்சியாகிய அயர்ச்சியுடன் உள்ளிருந்து வருத்திய பசியும் என்க. எனவே உள்ளும் புறமுமாக இருவழியானும் அடியவர் வருந்தினர் என்று அவர்பாற் சென்ற அன்பு காரணமாக நாயனார் கவலைகொண்ட அருமைப்பாடு குறித்தது.

வருத்திய - வழிவரும் அயர்ச்சி சேர்தற்கு முன்னரே உண்ணின்று வருத்தம் செய்த. **ஐயன்** பெரியோன். "எழுந்தருள் பெரியோய்" (463) என்பதுங் காண்க.

அன்பினிற் பொலிந்து சென்று - அன்பு நிறைதலால் மிகக் கவலைகொண்டு விரைந்துபோய். இது நாயனார் பயிர்களைப் பறிப்பதற்குச் சென்ற விரைவினையும், அதுபோழ்து அவரது மன நிலையையும் குறித்தது. ஒவ்வோர் கணமும் அடியவர் பசியதிகரித்தலைப் பொருட்களாக இவ்விருவரும் செய்த செயல்களின் தன்மை குறித்தபடியாம்.

குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் - **புன்செய்ப் பயிர்** - கீரை முதலிய இலைக்கறிப் பயிர். இவை புன்செய் நிலத்தில் பயிரிடப்பெறுவன. **குழி நிரம்பாத** - பயிர்கள் இடப்பெற்ற குழிகளின் அளவுக்கு மேற்பட்ட உயரம் மேலே வளர்ந்து வராத. இங்குக் குறித்த பயிர் பூசணி - சுரை முதலியன என்றுரைப்பாருமுண்டு. பூசணி - சுரை முதலிய செடிகள் குழிகளளவுக்கு மேல் வராத பக்குவத்திலேயும், மற்றெந்தக் காலத்தும் கறியாகப் பயன்படுவன அல்லவாதலின் அவை உரையன்றென்க.

புன்செய் - வீட்டுக் கொல்லையாக நாயனார் பயன்படுத்திய புன்செய் நிலம்.

நாயனார் முளை வாரிவந்தது நெல் விளையும் நன்செய் நிலமென்றும், கறிக்காகும் குறும்பயிர் பறித்து வந்தது அவரது மனையை அடுத்துக் கொல்லைப் பயிர் செய்துவந்த புன்செய் நிலமென்றும் அறியலாம். இப்போது பரம குடியை அடுத்த **இளையான் குடி** என்னும் இவ்வூரில் வீட்டு மனைகளின் அடுத்து இங்குக் குறித்த **புன்செய் மேடு** என்று வழங்கும் ஒரு புன்செய் இடமும், அதனை அடுத்து இது குறித்த **முளைவாரி அமுதளித்த வயல்** என வழங்கும் நன்செய் நிலமும் இன்னுங் காணப்பெறுகின்றன. இவ்விரண்டு நிலங்களினும் நாயனார் நென்முளையும், பயிரும் மேல் விளையாமல் வாரியும் பறித்தும் விட்டபடியால் இன்றைக்கும் ஒன்றும் விளையாமலிருந்து வருகின்றன என்பது அவ்வூரார் சொல்லத் தெரியும் செய்தியாம். இவற்றை வேலியிட்டுப் பாது காத்து உலகிற்கு அறிவிக்குமாறு கல்வெட்டு முதலிய, நினைவின் அடையாளங்கள் பொறித்துக் காவல்செய்து போற்றுதல் சைவர்களின் முதற்கடமைகளில் ஒன்றும்.

தடவி - குழி நிரம்பாத குற்றளவுடைமையானும், நள்ளிருட் காலமாதலானும் அக்குறும் பயிர்களைத் தடவிப் பறிக்க வேண்டியதாயிற்று என்க. **பாசப் பழிமுதல் பறிப்பார்போல்** - நாயனார் பறித்தவை குறும்பயிர் அன்று; அவை அவரது பாசத்தின் பழிமுதல் பறித்தலே போல நின்றன என்றார். **பாசப் பழிமுதல்** - ஆணவமாகிய சகல மலத்திற்கும் வேராகி நிற்கும் மூலமலம் என்பர். "யாக்கை தன்பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றுமற" (154) என்ற கண்ணப்ப நாயனார் புராணமுங் காண்க. பிற்காலத்துச் செல்லல் நீங்குதற்காக வித்தியிருந்த நெல்முளை வாரியதனோ வித்துமேல் விளையாமல் செய்த செயல் ஆகாமிய கர்மங்களைக் கழித்தலும், குறும்பயிர் வேருடன் பறித்ததனுனே பிராரத்த வினைகளை அழித்தலும், மனையின் அலக்குக்களை அறுத்து மேலும் புவன போகங்களை இல்லாமல் வீட்டியதனுலே சஞ்சித கர்மங்களை அழித்தலும் குறிக்கப்பெற்றன என்று இங்கு விசேடங் காண்பாருமுண்டு. இவை ஆணவமாதி மும்மலங்களின் அழிவு குறித்தன என்பாருமுண்டு. இவையெல்லாம் தக்கார்வாய்க் கேட்டுணரத்தக்கன. **முதல்** - மூலவேர்.

பறிப்பார்போல் - இங்கு போல என்ற உவமவுருபு பயன்பற்றித் தோன்றிச் சிறப்பு நிலைக்களமாயின உவமம் என்பர். உவமிக்கப்பட்ட பொருளும் உவமையும்



இளையான்குடி மாறரும்
அவர் மனைவியாரும்

முளைவாரி
யமுதளித்த
நாற்றங்கால்
—பக்கம்— ருகாஅ



அடியார்
வேட்டுச் செய்
யும் நந்தனை
கழும்

நாயனுர் புன்செ
ய்க்குறும் பயிர்
பறித்த கொல்லை
யும் அவர் வீடு
இருந்த இடமும்
அடியார் வேட்
டுச் செய்னன்ப
—பக்கம்— ருகாஅ

பண்பினால் ஒன்றேயாயின ஒற்றுமை நிலைகுறித்து நின்ற அழகும் காண்க. "விளைத்த அன்புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்" (கண் - புரா - 123), "ஆணை யாஞ் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர் நீணிலை மலையை யேறி" (சேடி புரா - 105), "கும்பிட்ட பயன் காண்பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந் தார்" (திருஞான - புரா - 1023) என்பனவாதி வழக்காறுகளை இங்கு வைத்துக் காண்க. குறும்பயிர்கள் வேரோடு பறிக்கப்பெற்றபடியால் பாசப் பழிமுதல் என்றார். 21

461. (வி - ரை) **கோழுநர்** - கணவர் (459); **மனமகிழ்கறிகள்** - இங்குத் திருவமு துக்காக வேண்டப்பெறுவனவற்றுள் இறுதியாயின கறிவகையும் முட்டுப்படாமற் கைகூடியமையாலே திருப்பணி முற்றுப் பெறக் கிடைத்ததென்று எண்ணினார். ஆத லின் **மனமகிழ்கறிகள்** எனப் பெற்றது. **ஆய்ந்து** - குறும்பயிரின் பல பகுதிகளிலே வேர் முதலிய ஆகாத பகுதிகளும், கீரை முதலிய ஆகும் பகுதிகளும், இலைக்கறி முத லிய ஆகும் பகுதிகளிலே நோய், பழுப்பு, புழுவெட்டு முதலியன இல்லாத பகுதிகளும் ஆகியவற்றை ஆராய்ந்து தெரிந்து பாகுபடுத்தி. **கழுவி** - இலைக்கறிகளைச் செம்மையாகக் கழுவிய பின்னரே அடுப்பில் வேவிக்க வேண்டுமென்பது பாகநூல் விதியும், மருத்துவ நூல் விதியுமாம்.

தக்க புனித பாத்திரம் - கறிவகைகளுக்கு ஒத்தனவும் அடுதலிலே, கைப்பு முத லிய பகைப்பயன் படாதனவுமாகிய பாத்திரந் தெரிந்து கொள்ளுதல் வேண்டுவதும் அந்நூல்களின் விதியாம்; ஆதலின் **தக்க - புனித** என அடை கொடுத்துக் கூறினார். பாத்திரம் புனித மற்றவழிக் கறிகள் பகைப்பயன் படுவனவாம் என்க. **தக்க** என்றத னால் கறிகளின் தன்மைக்கு மாறுபடாமல் ஒத்தது என்றும், **புனித** என்றதனால் அப் பாத்திரந்தானும் தூய்தாக்கப் பெற்ற என்றும் குறித்தபடி.

கைம்மை வினையினால் - கைப்பழக்கத் தேர்ச்சித் திறத்தினாலே.

வேறு வேறு கறியமுது - ஒரே வகைக் குறும்பயிர்களை இலைவேறு, தண்டுவேறு, முதலியவாகப் பொரிக்கறி, துவட்டல், புளிக்கறி முதலிய பலவகையாக ஆக்கின கறிகள்.

பண்டை நினைவினாற் குறையை நேர்ந்து - முன்னர்ச் செல்வமுற்ற காலத்திலே இன்னும் பற்பல வகையாக உண்டிகள் "நாலு விதத்தி லாறு சுவைத் திறத்தன" (443) வாகச் சமைத்து அடியார்க் கமுதளித்து வந்த நற்பெரு நிலை நினைவிற்கு வர, அக் குறையை இப்போது உள்ள மட்டில் கைம்மை வினையினாலே இத்தனைபடியாக இவை களை அமைத்து அடியார்க்கமுதாக்கப் பெற்றோமே என்ற மன நிறைவினாலே நிரப்பிக் கொண்டு. 22

462. (வி - ரை) **கறியமுதான காட்டி** - கைம்மை வினையினாற் செய்த பலவகை யமுதுகளையும் வகைப்பட நாயனார்க்கு மனைவியார் காட்டினார். அடியவர்க்குப் படைக் கும் முன்னர் அவற்றைக் கணவர்க்குக் காட்டி அவரது உடன்பாட்டைப் பெறுத லுடன் அவரது யோசனையையுங் கலந்து அவசியமாயின் திருத்த வேண்டியவற்றை முன்னெச்சரிக்கையாகத் திருத்திக் கொள்ள எண்ணி அவர்க்குக் காட்டியபடியாம். இஃது இல்லறத்துக்குரிய ஒரு நற்பண்பு. இக்காலத்து இல்வாழ்வார் எத்தனைபேர் இவ்வழி நிற்கின்றார்கள் என்பதுணர்தற்பாலது.

இணையிலாதவர் - "தனக்குவமை யில்லாதான்" என்பது குறள். "ஒப்புடைய னல்லன், ஒருவனல்லன்", "ஒப்புனக்கில்லா ஒருவனே", "இணையொருவர் தாமல் லால் யாருமில்லார்" முதலிய திருவாக்குக்களுங் காண்க. ஒப்பற்றவன் இறைவன் ஒருவனேயாம். இங்கு நாயனார் வந்த அடியவரைத் தம் நியதிப்படி ஆண்டவர் என்றே கொண்டு அமுதூட்ட எண்ணினாராதலின் அடியவரை **இணையிலாதவர்** எனக் கூறி னார். உண்மையில் அவர் இறைவனேயாதலைப் பின்னரே உணரப் பெறுகின்றனர்.

ஈண்ட - விரைவில். **என்ன** - என்று கொண்டு.

உணர்வினுல் உணர ஒண்ணு ஒருவர் - ஆன்மபோத உணர்ச்சிகளால் அறியப் படாதவர். சிவஞான சிற்சத்தியின் உதவியால் அறியப்பெறுபவர். "உலகெலா முணர்ந்தோதற்கரியவன்", "உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்" முதலிய திருவாக்குக்கள் இங்கு நினைவுகூரத் தக்கன.

உணர்த்தவேண்டி - துயிலெழுப்பி, அமுது ஆக்கப்பெற்றதையும், அவரை யூட்டத் தாம் கவலை கொண்டுள்ளதையும் அறிவிக்க. பிறர் உணர்வினுல் உணர வொண்ணுதா ராயினும் தாம் எல்லாவற்றையும் உணர்ந்தவராதலின் அவரை எவரும் உணர்த்தல் வேண்டா. அவரது அந்தத் தன்மையினையும் உயிர்கள் உணர ஒண்ணுதன என்பதும் குறிப்பு. **அணைய முன் சென்று** - அவரது திருவடிப்பேற்றை அணையுமாறு முற்பட்டு என்ற சரித நிகழ்ச்சிக் குறிப்புமாம்.

துயில் அகற்றலுற்றார் - அவரைக் கூவி அழைத்து அமுதுண்ண அழைத்தார். இதன் விரிவு வரும் பாட்டிற் கூறுகின்றார். 23

463. "அழுந்திய விடருற் ணீங்கி யடியனே னுய்ய வென்பால்
எழுந்தருள் பெரியோ! யீண்ட வமுதுசெய் தருள்க" வென்று
தொழும்பனு ருரைத்த போதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார். ௨௪

(இ - ள்) வெளிப்படை. "அடியேன் அழுந்தியுள்ள இடரினின்றும் நீங்கி உய் யும் பொருட்டாகவே என்பாற் கருணை கூர்ந்து எழுந்தருளிய பெரியோரே! இங்கு விரைவிலே எழுந்து அமுது செய்தருளுக" என்று அடித்தொண்டு பூண்ட நாயனர் சொன்னபோது, அடியவராய் வந்த அவர் ஒரு சோதிப்பிழம்பாய் எழுந்து தோன்றவே, செழிய திருமனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார்.

(வி - ரை) அழுந்திய இடர் - பற்பல பிறவிகளிற் செய்த கன்மத்துக்கீடாய்த் துன் பத்துக்கே காரணமாகி அழுந்திய இப்பிறவி என்னும் பெருந்துன்பம். **இடருள் நீங்கி** - **உள்** - இடரினின்றும் என்க. ஐந்தாம் வேற்றுமை நீக்கப்பொருளில் வந்த ஏழனுருபு.

உய்ய என்பால் எழுந்தருள் பெரியோய் - அடியவர், தங்கட்கென்று பசி முதலிய எந்தக் குறைபாடுமிலராகவும், சிவனடியாரைச் சீராட்டுந் திறம் தமக்குத் தந்து உய்விக் கவே தம்பக்கல் எழுந்தருளுகின்றார்கள் என்று கொண்டு இதுவரை அடியவர் பூசை செய்துவந்த நாயனரது மனநிலை குறித்தவாறு.

பெரியோய்-எனக்கருளும் பொருட்டு வந்த பெருமை யுடையாய் என்க. **ஈண்ட** - விரைவுப் பொருளில் வருவதோரிடைச் சொல். **தொழும்பனர்** - மிகத் தாழ்ந்த மீளா ஆட்பட்ட தொண்டர்.

சோதியாய் எழுந்து - வந்த அடியவர் என வருவித்துக்கொள்க. **செழுந்திரு மனைவியார்** - எல்லாத் திருவும் உடையார் என்பது. **திகைத்து நின்றார்** - தாம் எண் ணியவாறு அடியாரை அமுதூட்டும் பணி முற்றுப்பெறவில்லை என்ற திகைப்பு என்பர். அடியவராய் வந்த பெரியார் சோதியாய்த் தோன்றவே அடியாரைக் காணவில்லை யென்ற அச்சமும், அவர் உருவம் மாறிச் சோதியாய்த் தோன்றிய வகையின் அச்சமும் நமது நாயனரையும் மனைவியாரையும் திகைப்பித்தன என்றலே அமையும் என்க.

திகைத்தல் - இன்னதெனத் துணியாமை. மறைந்ததும் தோன்றியதும் இன்ன தென்று துணியக்கூடா நிலையில் மயக்கம் விளைத்தன. "திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்" (தக்கேசி - திருப்புன்கூர் - 6), "திகைத்தாற்றேற்ற வேண் டாவோ", "தேறும் வகைநீ திகைப்புநீ" - முதலியவை காண்க. தேற்றம் திகைப்புக் கெதிராய பண்பு.

"நாதன் வடிவு ஒரு சோதியாகச் சாலவே மயங்குவார்க்கு" (464) என வரும் பாட்டில் இதனை விளக்கியதும் காண்க. அந்த மயக்கம் தீர்த்துத் தம் காட்சி காட்டி

அருண்மொழி அருளும் வகையும் பின்னர்க் கூறுதல் காண்க. முன்னர் வந்தது இறைவனது சங்கமமாகிய திருமேனி. சோதியாய்க் கண்டது "சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத் திகழொளி" யுருவாம் இலிங்கத் திருமேனி. பின்னர்க் காண்பது மகேசுர பேதமாகிய உருவத் திருமேனி. இம்மூன்று திருமேனிகளையும் தாமே கொண்டு எழுந்தருளி ஒரே காலத்தில் நாயனார்க்கு இறைவன் வெளிப்பட்டு அருள் புரிந்ததனாலே நாயனாரது பெருமையும், அவர் செய்துவந்த அடியார் பூசைப் பயனும், அடியார் அளவிலார் உளமகிழப் பூசை கொண்டதன் பயனும் உலகம் தேற்றம்பெற உணர்ந்துய்ய வைத்ததலே இறைவன் திருவுள்ளமாம். "அறிவிக்கவே" (445) என்றதும் காண்க. 24

464. மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் றான்ம கிழ்ந்தே
யேலவார் குழலா டன்னே டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி, உரு

465. "அன்பனே! யன்பர் பூசை யளித்தநீ யணங்கி னோடும்
என்பெரு முலக மெய்தி, யிருநிதிக் கிழவன் றானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி யேவல் கேட்ப,
வின்பமார்ந் திருக்க" வென்றே யருள்செய்தா னெவர்க்கு மிக்கான்.

464. (இ - ள்) வெளிப்படை. திருமாலுக்கும் அயனுக்கும் அரியவராகிய நாதன் கொண்டு எழுந்தருளி வந்த அடியார்வடிவமானது ஒரு சோதியாய்த் தோன்றவே, அது கண்டு மயங்கி நின்ற திருத்தொண்டர்க்கு உணர்த்தும் பொருட்டுச் சங்கரனார் தாமே மகிழ்ந்தவராகி, வாசனை பொருந்திய நீண்ட கூந்தலையுடைய உமாதேவியாருடனே இடபவாகனத்தின்மீது வெளிப்படக் காணும்படி எழுந்தருளி வந்து, சீலம் பொருந்திய அடியார்பூசையினைச் செய்து வந்த நாயனாரை நோக்கி, உரு

465. (இ-ள்) வெளிப்படை. "அன்புடையவனே! அன்பர்களது பூசையினைச் சிறிதும் வழுவாது காத்துச் செய்து வந்த நீ உனது மனைவியோடும் எமது பேருலகத்திலே சேர்ந்து, குபேரன்றானே முன்னர்ப் பெரு நிதிகளை ஏந்தி உன் சொல்வழியே ஏவல் கேட்டு நிற்க, இணையில்லாத பேரின்பம் நுகர்ந்துகொண்டு நித்தியமாய் வாழக்கடவாய்" என்றே யாருக்கும் மிக்காராகிய சிவபெருமான் அருளிச் செய்தார். உசு

464. (வி - ரை) **மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதியாக - நாதன் வடிவு -** இறைவன் நாயனார் பொருட்டுக் கொண்டெழுந்தருளிய அடியவர் திருவேடம். **ஒரு -** ஒப்பற்ற. **வடிவு - சோதியாக** - வடிவமே மறைந்து சோதியாய்த் தோன்ற. **மாலயற் கரிய** என்றதனைச் **சோதி** என்றதற்கடையாகச் சேர்த்தி யுரைத்தலும் சிறப்பாம். முன் ஒருநாட் கொண்ட "தங்குலவு சோதித் தனியுருவம்" மாலுக்கும் அயனுக்கும் அறிதற்கரியதாயிற்று. இன்று கொண்டதும் சோதியுருவமேயாயினும் அடியவராகிய நாயனார்க்கும் மனைவியார்க்கும் காண்டற்கெளியதாயிற்று. "ஒளிகொள் மேனி யுடையாயும்ப ராளீயென், றளிய ராகி யழுதுற் றூறு மடியார்கட், கெளியா னமரர்க் கரியான்" (காந்தாரம் - திருவெண்காடு - 6) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் முதலிய எண்ணிறந்த திருவாக்குக்கள் காண்க. இக்கருத்தையே "மாலய னவக் கொற்றவேனமும் அன்ன முந்தெரி யாத கொள்கைய ராயினார்"(447) என்று முற்குறிப்பாகக் கூறியருளியதுங் காண்க.

ஆக - ஆயினதாலே. **சாலவே மயங்குவார்** - மயங்குதல் - அறிவு வியாபார்யா திருத்தல். இது திகைப்பின் மிகுதியால் உண்டாவது. **சங்கரன்** - சுகத்தைச் செய்ப

வன். இங்கு மயக்கந் தீர்த்தலுடன், இவர்களை வன்பிறவி வேதனை தீர்த்து என்றும் மாறாத பேரின்பஞ் செய்கின்றானாதலின் இப்பெயராற் கூறினார்.

தான் மகிழ்ந்தே - அருண் மீக்கூர்ந்து தந்த வெளிப்பாட்டினைக் குறித்தது. "சலமிலன் சங்கரன்" (அப்பர் சுவாமிகள் - காந்தார பஞ்சமம் - நமச்சிவாயத் திருப்பதிகம்) என்றபடி இறைவன் வேண்டுதல் வேண்டாமை யிலாதவன்; ஆதலின் **மிக மகிழ்தல்** அருளின் வெளிப்பாட்டினைக் குறித்தது என்க. வெளிப்பாடாவது பின்வருமாறு அடியார் காணும்படி உமையம்மையாருடன் இடபவாகனத்து வெளிப்பட்டுக் காட்சி தந்து அருளல். **தான்** - தானே - பிறர் வேண்டுதலின்றியே. ஏகாரம் தொக்கது.

ஏலம் வார் குழல் - **ஏலம்** - வாசனை. இங்கு உமையம்மையார் கூந்தலுக்குரிய இயற்கை மணங் குறித்தது. "ஏல வார்குழ லாளுமை நங்கை" (சுந்தரர் - தக்கேசி - கச்சி - 1) காண்க. **ஏலம்** - மயிர்ச் சாந்து எனவும், **வார்** - வாரி அலங்கரிக்கப்பெற்ற எனவும் உரை கூறுவாருமுண்டு. **குழலாளோடு இடபவாகனனாய்** - (434) பார்க்க. மனைவியாரையும் உடன்கொண்டு செல்வார் உமாதேவியாருடன் எழுந்தருளியது போலும். சிறுத் - புரா - 84 காண்க.

சீலம் - நல்லொழுக்கம். சீலமார் பூசை. இங்கு விதிப்படி புரிந்த அடியவர் பூசை குறித்தது. பூசை என்று பொதுப்படக் கூறுவதனால் அடியவர் பூசைக்குள்ளே நிறைந்த ஆண்டவன் பூசையும் உட்கொண்டதாம். 25

465. (வி - ரை) **அன்பனே** - எம்மிடத்து வைத்த அன்பினாலே எமது அடியவர்களிடத்து அன்பு மிக்கவனே. "அருளெனும் அன்பீன் குழவி" என்றபடி இந்த அன்பே இங்கு அருளாய் விளைந்தபடி காண்க.

அன்பர்பூசை அளித்த நீ - அன்பு நிறைதலாகிய காரணத்தால் விளைந்தது அன்பர்பூசையாகிய காரியம் என்க.

அளித்தல் - வளம் சுருங்கியபோதும் என்றும் விடாது பாதுகாத்துச் செலுத்துதல். **அணங்கு** - தெய்வத் தன்மை வாய்ந்த பெண். இங்கு மனைவியாரைக் குறித்தது. "எங்ஙனே அணங்கே!" (450) என்றதும் காண்க.

அணங்கினோடும் நீ யெய்தி - அடியார் பூசைக்கு உரிய அமுது படைத்து உய்த்தது மனைவியாரது கற்பின் திறத்தாலே நிகழ்ந்ததாதலின், அச்சிறப்புப் பற்றி, ஓடு உருபை மனைவியாருடன் சார்த்தி, **அணங்கினோடும் நீ எய்தியிருக்க** என்றருளினார். "நண்ணிய மனைவியோடு நம்முடன் போதுக" என்ற விடத்துங் காண்க.

நம்பெரு முலகம் - "நலமிகு சிவலோகம்" (438) என்றதன் கீழ்க் காண்க.

இருநிதிக் கிழவன் - குபேரன். **தானே ஏந்தி** என்றது பிற கணங்களன்றிக் குபேரன் தானே பெருநிதியம் ஏந்தி நின்று என்பதாம். **பெருநிதியம்** - எடுக்க வெடுக்கக் குறையாத சங்கநிதி - பதுமநிதி என்பன.

மொழிவழி யேவல் கேட்ப - உனது சொல் வழிப்பட்டு நின்று, நீ ஏவின பணி செய்து வர. சிவலோகத்திலே இந்நாயனார்க்குக் குபேரனது **பெருநிதியத்தா** லாவது என்னையோ வெனின்? செல்வமும், அடியார் திறத்து அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும், பாரின் மல்க விரும்பி, அக்கொள்கையினின்றே அடியவர் பூசை செய்து வந்தனர் நாயனார்; அவரது எண்ணம் நிறைவேறுக என்று அடியவர்கள் நாளு நாளும் வாழ்த்தினர்; அதன் பயனை உலகிற்குக் கொடுத்துப் பாரிலே நித்தமும் செல்வமும் சிந்தையும் நீடி வருவதற்காக, இறைவன், இவர் சொல்வழிக் குபேரதேவன் நிதிய மேந்தி ஏவல் கேட்டு நிற்குமாறு அருளினார் என்பதாம். நாயனார் சிவகணங்களிலொருவராய்ச் சிவலோகத்தில் எழுந்தருளி யிருந்து உலகிலே செல்வமும் சிவசிந்தையும் நீடி வருமாறு அடியவர்க்கு இன்றும் என்றும் அருள் புரிந்து வருகின்றார் என்க. 442 உரை காண்க. **இன்பம்** அடியார் கூட்டத்தில் வாழும் பேரின்பம்.

எவர்க்கும் மிக்கான் - முழுமுதல்வன் - சிவபெருமான். சோதியாக - மயங்கு வார்க்கு - சங்கரன் - எவர்க்குமிக்கான் - மகிழ்ந்தே - தோன்றி - நோக்கி - அன்பனே - நீ - அணங்கினேடும் - உலகம் எய்தி-கிழவன்முனே - ஏவல் கேட்ப - இன்பமார்ந்திருக்க என்றே - அருள் செய்தான் என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடிக்க.

இருப்பீராமேன்றருள்—என்பதும் பாடம். 26

466. இப்பரி சிவர்க்குத் தக்க வகையினு லின்ப நல்கி
முப்புரஞ் செற்று ரன்பர் முன்பெழுந் தருளிப் போனுர்
அப்பெரி யவர்தந் தூய வடியிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்ப லுற்றேன். உஎ

(இ - ள்) வெளிப்படை. இப்பரிசாக இவர்க்குத் தகுந்த வகையினுலே இன்பங் கொடுத்துப் பின்பு திரிபுர மெரித்த இறைவனுர் அன்பரின் முன்பு தோன்றிய வெளிப்பாட்டு நிலையினின்றும் தமது வியாபக நிலைக்குள் எழுந்தருளிப் போயினுர். அந்தப் பெரியவராகிய இளையான்குடி **மாற** நாயனுருடைய தூய திருவடியிணைகளை எமது தலைமேற் சூடிக்கொண்டு, அத்துணைகொண்டு **மெய்ப்பொருள்** என்ற பேருடைய சேதிநாட்டரசரது செய்தியைச் சொல்லப் புகுகின்றேன்.

(வி - ரை) இது கவிக்கூற்று. இதுவரை சொல்லிவந்த சரிதத்தை முடித்துக் காட்டி மேல்வருஞ் சரிதத்திற்குத் தோற்றுவாய் செய்தபடி.

இப்பரிசு - மேலே சரிதத்திற் கூறியபடியாலே. **தக்க வகையினுல்**-இவர் செய்த திருத்தொண்டிற்குத் தகுந்த வகையினுலே. அது மேற்பாட்டிற் காண்க.

முப்புரஞ் செற்றூர் - அடியாரது மும்மலங்களையும் நீக்கி அடியவரை அளவில்லா ஆனந்தத்தில் வைக்க வந்த நிலையாதலின் இப்பெயராற் குறித்தார். "முப்புரமாவது மும்மல காரியம்"—என்பது திருமந்திரம். **முன்பு** - முன்பு நின்றும். ஐந்தனுருபு விரிக்க. **எழுந்தருளிப் போனுர்** - வெளிப்பாட்டு நிலையினின்றும் நிறைவு நிலையினுள் மறைந்தனர். **பெரியார்** - செய்தற்கரிய செயல் செய்தார்.

தலைமேற் கொண்டு விளம்பலுற்றேன் - அடியார் புகழ் அளவிடற்கரிதென்று கூறிய யான், இப்பெரியவரைத் துதித்து அவர் பாதந் தலைவைத்த புண்ணியத்தின் துணை கொண்டு சொல்லலுற்றேன் என்பது.

சேதி வேந்தன் - சேதி - நாட்டுப் பெயர். **மெய்ப்பொருள்** - நாயனுர் பெயர். **செயல்** - செய்கை; சரிதம். 27

சுருக்கம் :—**இளையான்குடி**யிலே வாய்மையில் நீடிய சூத்திர நற்குலத்திலே **மாறனுர்** என்ற பேருடைய பெரியார் அரனிடத்திலும் அடியாரிடத்திலும் அன்பு மிகுந்து விளங்கினுர். அவர் உழவுத் தொழிலால் வரும் செல்வமும், அடியார் பூசை செய்தல் வேண்டுமென்ற சிந்தையும் தாம் பெற்றவர். அதுபோலவே உலகர் யாவரும் பெற்று வாழவேண்டுமென்ற விருப்பமுடையராய், இவ்விரண்டும் பெற்றதனுலுளதாம் நீடுபயன் கொள்வாராகிச், சிவனடியார்கள் யாவரேயாயினும் தம்முன்னர் வருவார்களாயின் அவர்களடியார்களாவார் என்பதொரு திறத்தையே நினைத்து, அவர்களை எதிர்கொண்டழைத்துத், தமது மனைக்குக் கொண்டுவந்து, பாதம் விளக்கி, ஆசனத்தில் இருத்திப், பூசித்து, நான்கு வகையாலும் ஆறு சுவையாலும் அமைத்த நல்ல உணவூட்டி வந்தார். இவ்வாறு நாளுநாளும் எண்ணில்லாத அடியார்கள் வந்து மாகேசுவர பூசை கொண்டு மகிழ்ந்து ஆசீர்வதித்துச் சென்றதன் பயனுகக் குபேரன்போலச் செல்வங்களெல்லாம் நிறையப் பெற்றவராய் **மாறனுர்** வாழ்ந்து வருவாராயினுர்.

செல்வம்மிக்க நாளிலே இப்படியாகச் செய்வதன்றியும்,உண்மையாகவே வறுமை வந்து துன்பம் நேரிட்ட காலத்தும் இப்படியே செய்ய இவர் வல்லவர் என்று **உலகத்**

துக்கு அறிவிக்கும் பொருட்டுச் சிவபெருமான் இவரது செல்வங்களை நாள்தோறும் மெல்ல மறைந்து போகும்படி திருவுளங்கொண்டனர். இவ்வாறு வளங்களெல்லாம் சுருங்கவும், இளையான்குடி மன்னராகிய **மாறனார்** தம் மனஞ் சுருங்குதலின்றித், தமது பொருள்களை மாறியும் கடன்கள் கொண்டும் முன் செய்துவந்த அடியார் பூசையாகிய ஒப்பற்ற திருப்பணியிலே முதிர்ந்த கொள்கையராய்ச் செயல்புரிந்து வந்தனர்.

இந்நாளி லொருநாள் **உலகம் உய்யும்** பொருட்டு ஒரு நற்றவத்தவர் வேடமே கொண்டு இறைவன் இவர் மனைக்கு எழுந்தருளி வந்தனர். அக்காலம், மழைக்காலத்து ஒருநாளில் நள்ளிரவாய், ஊணுமுறக்கமுமின்றி, வேறு ஆதரவுமின்றி, மனைவாய்தல் அடைக்கப்பட்டிருந்த காலமாயிருந்தது. அக்காலத்தேயும் நாயனார் கதவைத் திறந்து வந்த விருந்தை எதிர்கொண்டு அழைத்துத் திருமேனியை ஈரம் போக்கி, ஆசனம் தந்து, அமரச்செய்தபின் அவர்க்கு உணவூட்ட எண்ணினார்.

"முன்பு நமக்கு உணவில்லை! ஆயினும் இவ்வடியவரை யமுதூட்டல் எங்ஙனே?" என மனைவியாரை வினவினார் நாயனார். அவர் "மற்றொன்றுங் காண்கிலேன்; நேரம் அகாலமாயிற்று; தருபவரும் வேறு எவருமிலர்; போமிடமும் வேறில்லை; வயலிலே இன்று பகலில் விதைத்த நென்முளைகளை வாரிக்கொண்டுவந்தால் வல்லபடி அமுதமைத்தலுங் கூடும்" என்றனர். வானம் பிறங்க மழைபெய்து,வழியிது பக்கமிது என்று தெரியாதபடி மைக்குழம்பு போன்ற இருள் சூழ்ந்த அந்த நள்ளிரவிலே ஒரு பெரிய இறைகூடையைத் தலையிலே கவிழ்த்துக்கொண்டு கால்களினாற்றடவி முன் பழக்கக் குறியினாலே வயலுட்சென்று நீரில் மிதந்து வரப்போரங்களிற் சார்ந்திருந்த நென்முளைகளை வாரிக் கூடையிற் கொண்டுவந்து, நாயனார், மனைவாயிலில் தம்மை எதிர்நோக்கி நின்ற மனைவியாரிடம் கொடுத்தனர். மனைவியார் விறகில்லை என்ன, வீட்டுக் கூரையின் அலக்குகளையறுத்து வீழ்த்து நாயனார் விறகாக்கினார். மனைவியார் நென்முளையை வறுத்து, அரிசியாக்கி, அமுதாக்கினர். வீட்டுக்கொல்லையிற் குழிநிரம்பாத புன்செய்ப் பயிர்களைப் பாசப்பழிமுதல் பறிப்பவர்போல வேரோடும் பறித்துத்தர, அவற்றை மனைவியார் தமது கைவினைப் பழக்கத்தால் பற்பல கறிவகைகளாகச் சமைத்தனர்.

பின்னர் அங்குத் துயில்கொண்டார் போன்று பள்ளிகொண்ட அரனடியவர்பாலன்பாகச் சென்று "அழுந்திய இடருள் நீங்கி அடியேன் உய்யும்பொருட்டு என்னிடம் எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுதுசெய்தருள்க" என்று துயிலுணர்த்தினார். அவர் வடிவம் ஒரு சோதியாய்த் தோன்றிற்று. அன்பரும் மனைவியாரும் திகைத்து நின்றனர். இறைவன் விண்ணிலே விடையின்மேல் உமையம்மையாருடன் எழுந்தருளிக் காட்சிதந்து, "அன்பனே! அடியார் பூசை பாதுகாத்தளித்த நீ மனைவியோடும் எமது உலகத்திற் சேர்ந்து, குபேரனே பெருநிதியம் ஏந்தி உன் சொல்வழி முன்னின்று ஏவல் கேட்ப, இன்பம்பெற்று இருக்க" என அருளிச்செய் தெழுந்தருளினார்.

தல விசேடம் - முன்னர் உரைக்கப்பெற்றது. 547, 568 - பக்கங்கள் பார்க்க.

***கற்பனை** - 1. ஏரின் செல்வம் எல்லையில்லாத வளங்களையும் சிறப்பையும் தருவது. அதனைப் புறக்கணித்து ஒதுக்காது பாதுகாத்துப் போற்றுதல் வேண்டும்.

2. செல்வமும் சிவசிந்தனையும் பெற்று அவ்வொழுக்கத்து நிற்றல் சிறந்தது.

3. சிவனடியார் பூசையும் அவர்க்கன்போடமுதூட்டலும் சிறந்த புண்ணியமாம். இதனிற் சிறந்த புண்ணியம் வேறில்லை.

***கற்பனை** - கற்பித்தல். தொழிற் பெயர். ஆகு பெயராய்க் கற்பிக்கப்பெறும் நீதிகளின்மேல் நின்றது. "முத்தியு ஞானமும் வானவ ரறியா முறை முறை பலபல நெறிகளுங்காட்டிக், கற்பனை கற்பித்த கடவுளை." என்ற நம்பிகள் தேவாரமுங் காண்க. கற்பனை என்பது இல்லாததனைக் கற்பித்துக் கூறும் புனைந்துரை என்று பொருள் தருமோ என் றையுற்றுச் சில அன்பர்கள் வினவியதனால் இக்குறிப்பு எழுதப்பெற்றது.

4. "அகர மாயிர மந்தணர்க் கீயிலென் ?; சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென் ?; பகரு ஞானி பகலூண் பலத்துக்கு, நிகரில்லை யென்பது நிச்சயந் தானே" ; "ஆறிடு வேள்வி யருமறை நூலவர், கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதி, னீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலே, பேறெனி லோர்பிடி பேறது வாமே" (திருமூலர் திருமந்திரம்) என்பனவாதி விதிகளுக்கு இச்சரிதம் இலக்கியமாய் நிற்பதுடன் அடியவர் பூசையின் பயனையும் இனிது விளக்குவதாம்.

5. செல்வமுள்ள காலத்துச் சிவபூசையும் அடியார் பூசையும் பேணுதல்போலவே, வறுமை வந்த காலத்தும் அவை தளராது மிகப் போற்றற் குரியன. அங்கே சிவன் வெளிப்பட்டருளுவன்.

6. செல்வமுள்ளபோது சிறிதளவிற் செய்த சிவப் பணிவிடைகளையும் சிறிய துன்பம் முதலியன நேர்ந்தபோது சிவனை நொந்து கைவிடுவார் பலர். அது செய்ய லாகாது. எஞ்ஞான்றும் உயிர்களுக்கு நலமே செய்பவராய், நன்றே யுடையாராய்த் தீயதிலாதாராய், உயிர்களுக்கு அவற்றினுமினியராய் உள்ள சிவபெருமானை எத்துணை யானும் நோபவர் தமக்கு இடர் தேடியவரே யாவர். செல்வமும் வறுமையும் இறைவன் றிருவருள் வழியே வருவன என்றும், அவற்றுள் வறுமை நமது நன்மைக்கே காரண மாய் வருவது என்றும் உணர்ந்தொழுகுதல் வேண்டும். "விரைந்தாளு நல்குரவே "; "நோவுளார் வாயுளான்" முதலிய திருவாக்குக்களின் உண்மையைச் இச்சரிதத்தின் வைத்து உணர்ந்து நாள்தோறும் மக்கள் தமது உலக ஒழுக்கத்திற் பின்பற்றக் கடவர்.

7. உண்மை உணர்ந்தோர் தமக்கு எவ்வளவு பெரிய இடர்களும் துன்பங்களும் வந்த போதிலும் சிவபெருமானிடத்திலும் சிவனடியாரிடத்திலும் வைத்த அன்பினிற் சிறிதுங் குறைவுபடா தொழுகுவர்.

8. தமக்கே உணவில்லாதிருந்த நிலையிலே, பெருமழையிலும் பேரிருளிலும் பாதி நள்ளிரவிலும் வயலினுட்சென்றும், அன்று விதைத்த நென்முளைகளை வாரி யமு தாக்கியும், விறகுக்காக வீட்டுக் கூரையை அறுத்தும், புன்செய்க் குறும்பயிர்களை வேரோடும் பறித்துக் கறிவகைகளாக்கியும் மனதார அமுதுபடைக்க முற்பட்ட நாயனார்-மனைவியார் இவர்களது அன்பின்றிறத்தில் ஒரு சிறிதளவேனும் உணர்ந்து உலகம் பின் பற்றுமாறுற் கடைத்தேறி யுய்யும்.

9. நாயனாரும் மனைவியாரும் மிக்க செல்வத்திலேயும், அது மாறிய மிக்க வறுமை யிலேயும் கொண்டுசெலுத்திய இல்வாழ்க்கை நலத்தில் ஆயிரங் கூறில் ஒரு கூறேனும் இந்நாள் மக்கள் தத்தம் இல்வாழ்க்கையிற் கைக்கொண்டு வாழ்கின்றார்களா ? என்பது அவ்வவர் வாழ்க்கையினை நோக்கிச் சிந்திக்கத்தக்கது. "இல்லானை - இல்லாளும் வேண்டாள் ; ஈன்றெடுத்த தாய்வேண்டாள் ; செல்லா தவன்வாயிற் சொல் " ; "இல் லாரை யெல்லாரு மெள்ளுவர் "; "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை "; முதலிய உலக நீதியின் நிலைகளை யெல்லாம் அடிப்படுத்தி வென்று, இகத்திலேயும் பரத்திலேயும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் வரச்செய்த மனைவியாரது கற்பின் திண்மையும், இவ் விருவரது அன்பின் உறைப்பும் உலகம் பல்காற் சிந்தித்துய்வதாக.

ஒன்றுக்கும் கட்டுப்படாத அடங்காத் தனமே வீடு பேறு என்ற பேய்த்தனமாகிய பித்துக்கொண்டலையும் இந்நாளின் நாகரிகப்பேர் கொண்ட பேயுலகம் இச்சரிதத்திற் கண்ட, வறுமையிற் செம்மை பெற்றதாய், மாசற்றதாய்த், தூயதாய், மனமொத்ததாய் நிகழ்ந்த இல்வாழ்க்கை நிலையினைச் சிந்தித்துச் சிந்தித்துத் திருந்தி உய்வதாக.

10. விளைநிலமும், வீடும், வருங்கால வாழ்வுக்கென்ற பிற ஆதாவுகள் முதலிய பற்றுக்களும் அற்ற இடமே ஒருவனுக்கு வீடு பேற்றின் நிலை தருவதாம். "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் " (குறள்) ; "யானெனதென் றற்ற விடமே திருவடியா" (கந்தர் கலிவெண்பா) முதலிய திருவாக்குக்களின் உண்மை இங்கு விளங்கக் காணலாம்.

நிலையாத வாழ்வினைத் தந்து நிலைத்த வாழ்வினைக் கொள்ளுதல் பேருதியமான வாணிபமுமாம். "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர்?" என வாதவூரடிகள் அருளியபடி, முளைத்த நெல்லும், ஓட்டைவீடும், குறும் பயிரும் கொண்டு, இங்குச், சாவா அமுதமும், நிலைத்த வீடும், நெடுநிதியமும் தந்த இச்சரிதம் உலகர்க்கு அருங்கற்பனை கற்பித்தாள்வ தொன்றாகும்.

11. சிவனடியார் பூசை இவ்வுலகத்திலேயும் எல்லாச் செல்வங்களையும் தரும்; (444). அம்மையிலே பேரின்பமுந் தரும். (465) "இம்மை வானவர் செல்வம் விளைத் திடும்; அம்மை யேற்பிற வித்துயர் நீக்கிடும்;" (திருக்குறுந்தொகை - திருவிடைமருதூர்-4) "இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ஏத்த லாமிடர் கெடலுமாம்,அம்மையே சிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே" (நம்பிகள்-கொல்லி-திருப்புகலூர்-1) என்ற தமிழ் மறைகளிற் கண்ட உண்மைகள் அரன் பூசைக்குரியன. அதுபோலவே அரனடியார் பூசைக்கு முரித்தாயினவாம்.

12. சிவனடியார் வேடங்களைச் சிவனெனவே கொண்டு வழிபடுதல் வேண்டும். "செம்மலர்ந்தவர் வேடமு,மாலயந் தானு மரனெனத் தொழுமே"— **சிவஞானபோதம்-12-ம் சூத்திரம்.** இதன் தத்துவத்தை மேல்வருஞ் சரிதத்தினுங் காண்க. அடியார் பூசை யளிக்கும் முறையினை இச்சரிதத்தினின்றும் உலகம் உணர்ந்தொழுகி யுய்வதாக.

இளையான்குடி மாறநாயனார் புராணம் முற்றும்.

5. மெய்ப்பொருணாயனார் புராணம்

தொகை

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்"
—திருத்தொண்டத் தொகை

வகை

"கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன் றன்னை யவனைச் செறப்புக லுந்திருவாய்
மற்றவன் "**நத்தா! நமரே**" யெனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் **சேதிபன்** மெய்ப்பொரு ளாமென்று பேசுவரே"
—**திருத்தொண்டர் திருவந்தாதி**

விரி

467. சேதிநன் னாட்டி னீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார்; க

468. அரசிய னெறியின் வந்த வறநெறி வழாமற் புல்லி
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகண் மாற்றி
யுரைதிறம் பாத நீதி யோங்குநீர் மையினின் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையா னன்பர் வேடமே சிந்தை செய்வார். உ



திருஅறையணி நல்லூர் - பெண்ணையாற்றின் வடகரை.
(மலைமேல் உள்ளது)



திருக்கோவலூர் - பெண்ணையாற்றின் தென்கரை.

பாட்டு 467—பக்கம் 576

469. மங்கையைப் பாக மாக வுடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி யேழிசைப் பாட லாடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்,
தங்கணா யகனுக் கன்பர் தாளலாற் சார்பொன் றில்லார், ௩

470. தேடிய மாடு நீடு செல்வமுந் தில்லை மன்றுள்
ஆடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். ௪

புராணம் :—மெய்ப்பொருள் என்ற பேருடைய நாயனாரது சரிதமும் பண்புங் கூறும் பகுதி. திருத்த முறையானே தில்லைவாழந்தணர் சருக்கத்திலே ஐந்தாவதாக மெய்ப்பொருணயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை :—**வெல்லும் ஆ மிகவல்ல** - வெல்லும் வழியிலே மிகவும் வல்லவ ராகிய. ஆ - ஆறு - வழி. ஆறு என்பது ஈறு கெட்டு ஆ என நின்றது. வென்ற வல் லமையின் விரிவு 481-ம் திருப்பாட்டிற் காண்க. **மெய்ப்பொருள்** - நாயனாரது பெயர்.

வகை :—**கற்ற...பொய்த்தவன்** - வீட்டுநூலாகிய ஆகமங்கற்ற நல்ல உண்மைத் தவனைப்போலப் பொய் வேடம் பூண்ட முத்தநாதன் என்பவன் (473—478) ; **காய் சினத்தாற் செற்றவன் தன்னை** - (பல முறையும் இகலிப் போரிற் பரிபவப்பட்டுப் போனதால்) வெஞ்சினங்கொண்டு (வஞ்சனையினாலே) தம்மைச் செற்றவனை (472—481) ; **அவனைச் சேறப் புகலும்** - (தமது காவலாளனாகிய தத்தன்) அவனை வாளினால் எறியப் புகும்போது ; “ **தத்தா நமரே** ”......**பெற்றவன்** - “ தத்தா ! இவர் நமரே ” எனத் தமது திருவாக்கினாற் சொல்லித் தடுத்து (482) ; (அவனை வேறு எவரும் அடரா வண்ணம் கொண்டு போய்விடச் சொல்லியும், அவ்வாறு விட்ட வார்த்தை கேட்குமளவும் சோர்கின்ற உயிரைத் தாங்கியும், அது கேட்டபின் இறைவ னது திருவடிகளைச் சிந்தித்தும்) சிவலோக மடைந்தவர் (488 - 489) ; **சேதிபன் - மெய்ப்பொருளா மென்று பேசுவரே** - சேதிநாட் டரசராகிய **மெய்ப்பொருணயனா** ரென்றே (அறிந்தோர்) சொல்வர். இங்கு அறிந்தோர் என்ற எழுவாயும், **அவனைச் சேறப்புகலும்** - என்ற இடத்துத் தத்தன் என்ற எழுவாயும் வருவிக்க. **கற்ற** - கற்பவற்றுள்ளே தலையாகிய வீட்டுநூலாகிய ஆகமம், கற்ற என்க. (478, 479) ; **புகலும்** - புகுதலும் ; **வானுலகம்** - வானோர்க்கும் எய்துதற்கரிய உயர்ந்த உலகமாகிய சிவலோகம். “**தத்தா நமரே**” - இச்சொற்றொடர் கல்வெட்டு முதலியவை களினும் கண்டது. விரிவு 482-ம் திருப்பாட்டின் கீழ்க் காண்க.

எனப் பேசுவரே - எனவே பேசுவர். ஏகாரம் பிரித்துக் கூட்டுக. ஏகாரம் தேற்றங் குறித்தது. இதனை அசையென் றுரைக்குவாரு முண்டு.

நாடும், பேரும், முறையே **சேதிபன் - மெய்ப்பொருள்** - என்று குறித்தபடி (467, 472). பேரும், பண்பும், சரிதக் குறிப்பும் முதனூலிற் கண்டது. **வெல்லுமாமிகவல்ல**- என்றதனாற் பகையரசனும், பகைமையும், பல போர்களில் வெற்றியும், வஞ்சனையிலும் வெற்றிபெற்ற நேர்மையும் முதனூல் குறிப்பிற் கூறிற்று.

நாடும், பகைவன் வஞ்சித்த திறமும், வஞ்சனையை அடிமைத்திறம் பேணிய வகை யாலே வென்ற திறமும், காவலாளன் பேரும், அவனது திறமும், பிறவும் வகைநூல் பேசிற்று.

அவை விரிநூலில் விரிந்தவகை பாட்டு எண்களாற் குறிக்கப்பெற்றது. விரிவு புராணத்துட் காண்க.

467. (இ - ள்) வெளிப்படை. நன்மை பொருந்திய சேதி நாட்டிலே திருக்கோவலூரிலே நிலைபெற்ற அரசு செலுத்தி வாழ்ந்து, உமாதேவியாரை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமானிடத்தில் வைத்த அன்பிலே வழிவழியாக வருகின்ற மலாடர் கோமானாகிய மெய்ப்பொருணாயனார், வேத நன்னெறியினது உண்மைத்திறம் உலகிலே விளக்கமடையும்படி மேன்மை பூண்டவராய் மிக்க அன்பினாலே இறைவனது அடியார்களது கருத்தறிந்து அவர்களுக்கு ஏவல் செய்துவருவாராகியும், க

468. (இ - ள்) வெளிப்படை. அரசியல் நெறியிலே வந்த அற வழிகளில் வழுவாமற் பாதுகாத்து, மலைபோலுயர்ந்த தமது தோள் வலிமையாற் பகைவர்களைப் போரில் வென்று மாற்றி, முன்னோர் மொழிந்தவற்றினின்றும் சிறிதும் பிறழாது ஓங்குகின்ற நீதிநிலையிலே சிறந்தவராகியும், அலை பொருந்திய கங்கையைச் சடையிலே தரித்த இறைவனது அடியார் வேடத்தினையே சிந்தையுட் கொண்டவராகியும்; உ

469. (இ - ள்) வெளிப்படை. உமாதேவியாரை ஒரு பாகத்தேயுடைய சிவபெருமான் வெளிப்பட்டு வீற்றிருக்கும் கோயில்கள் எங்கெங்கும் பூசைகள் வழுவாது நீடி நடைபெற்று வரும்படியாகவும், ஏழிசைப்பாடலும் ஆடலும் பொங்கிய சிறப்புக்களிலே மிகவும் பொருந்தி நிகழும்படியாகவும், வழுவாது செய்து வழிபட்டு வாழ்வாராகியும், தங்கள் நாயகரன்பர்களது திருவடிகளையே யன்றி வேறு சார்பில்லாதவராகியும், ங

470. (இ - ள்) வெளிப்படை. தமது அரசுரிமையிலே தேடியனவாகிய பொருள்களும் நீடு செல்வங்களும் திருத்தில்லையிலே ஐந்தொழி லருட்கூத்தியற்றும் பெருமானது அன்பர்க்கே யாவனவாகும் என்று நாடிய மனத்துடனே, தம்மை யாட்கொள்ளும் நாயன்மார்களாகிய அரனடியவர்கள் அணைந்தபோது கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவற அச்செல்வங்களை வேண்டுமாறு கொடுத்து வந்தார். ச

467. (வி - ரை) **சேதி நன்னாட்டுத் திருக்கோவலூர்** - **சேதி** - நாட்டின் பெயர். **திருக்கோவலூர்** - நகரின் பெயர். எனவே, இப்புராணத்திற்குரிய நாடும் நகரமும் கூறியவாறு. **நன் - நீடு** - என்பன முறையே அவற்றின் சிறப்புக் கூறியன. **மலாடர் - வழிவரும் - ஏவல் செய்வார்** - எனக் கூறியவாற்றால் அந்நாட்டு மக்கட் சிறப்பும், அரச மரபுச் சிறப்பும், அரசரும் அவரது பண்பும் என்ற இவற்றை எடுத்துரைத்தார்.

சேதிநாடு - இது நடுநாட்டின் ஒரு சிறு உட்பகுதியாம். தொண்டைநாட்டுக்கும் சோழநாட்டுக்கும் நடுவில் உள்ளதாதலின் நடுநாடு எனப் பெறும். தொண்டைநாடும் அதன் வடக்கில் உள்ள வடநாடும், சோழநாடும் அதன் தெற்கில் உள்ள தென்னாடு எனப் பெறும் பாண்டிநாடும் என்ற பலவற்றுள்ளும் நடுவில் உள்ளது இந்நடுநாடு என்றலும் பொருந்தும். இந் நடுநாட்டினுள், வழிவழி வந்த பல சிற்றரச மரபினர்களால் ஆளப்பெற்ற பல உட்பகுதிகளான சிறு நாடுகள் உண்டு. அவற்றிலே **சேதிநாடு** ஒன்று. நாட்டினை ஆளும் அரசமரபினர் பேரால் வழங்கும் சோழநாடு, பாண்டிநாடு என்பனபோல, இந்நாட்டினை ஆளும் சேதியர் மரபுப்பேரால் **சேதிநாடு** எனும் பேரும் வந்தது என்பர். திருவிசைப்பாப் பாடிய **சேதிராயர்** இம்மரபில் வந்த அரசர்களில் ஒருவர் என்ப.

மலாடர் கோமான் - இந்தச் சிற்றரச மரபு வழியிலே மலையமான், நத்தமான், சுருதிமான் என மூன்று உட்பிரிவினர் உள்ளார் எனவும், அவர்களில் மெய்ப்பொருணாயனார் **மலையமான்** என்ற பிரிவினைச் சேர்ந்தவர் எனவும் கூறுவர். சோழன் நாடு சோணாடு என வந்ததுபோல, மலையமான் நாடு **மலாடு** என மருவி வந்ததென்பர். புணரியற் புறனடையானே மரூஉ வழக்கிற்கு இலக்கணங்களில் இதனைப் புலவர் உதாரணங் காட்டுவதும் காண்க. திருநாவலூரில் அரசு செலுத்திய நரசிங்கமுனையரைய நாயனார் இம்மூன்றுட்பிரிவுகளில் ஒன்றனைச் சார்ந்தவர் என்று கூறுவாருமுண்டு. சுருதிமான் மரபினர்க்கு மூப்பர் என்ற பேரும் உண்டென்பர். முனையதரையர் என்பதே முனை

யரையர் என்றாயிற்றென்றும், அம்மரபும் இவற்றுடன் விரவியதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுப. இவற்றின் விரிவெல்லாம் சரித்திர ஆராய்ச்சியிற் கண்டு தெளிக.

சேதி நன்னாட்டு - **நன்** - சேதி என்ற பெயருக்கும் அதனைக் கொண்டுமுடியும் நாடு என்ற பெயருக்கும் இடையில் வந்த பண்பு குறித்த இடைப்பிறவரல் என்பர் இலக்கண நூலார். "தூய மாதவஞ் செய்தது தொண்டை நன் னாடு" என்புழிப்போலக் கொள்க. "உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும், பெயர்வினை யிடைப்பிற வரலுமா **மேற்பன**" என்பது இலக்கணம். ஏற்பனவே இடைப்பிறவரலாய் வரும் என்றதனாலே இந்நாட்டுக்கு **நன்மையே** ஏற்றதென்பது கருத்தாம். நன்மையாவது நாடாவளங்கள் மிகுதலோடு, நலங்களுள் மிக்கதாகிய வீடுபேற்றுக்குரிய நலமும் மிகுதல்.

நீடு திருக்கோவலூர் - திரு நீடு கோவலூர் என மாற்றியுரைத்துக்கொள்க. **திரு** - சைவத்திரு. கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்பர் பேராசிரியர்.

கோவலூர் - சிவபெருமான் வீரஞ் செய்த எட்டுத் தலங்களுள் ஒன்றாய் அந்தகாசுரனைச் சங்கரித்ததலம். இதனைத் **திருக்கு - ஒவல் - ஊர்** - எனப் பிரித்து அறியாமையை ஒழித்து உயிர்களுக்கு அருள் புரியும் தலம் என்று தலமான்மியங் கூறும். எனவே உயிர்களுக்கு ஊனத்தை நீக்கி அருளும் தன்மை நீடிய **ஊர்** என்க. "கோவலூர், வினையை வென்ற வேடத்தான் வீரட்டானஞ்", "கோவலூர்தனுள் வீடுகாட்டு நெறியினான் வீரட்டானம்" என்ற ஆளுடைய பிள்ளையாரது இத்தலத் தேவாரங்கள் காண்க.

மன்னி - இவ்வரச மரபு நெடுங்காலமாக நிலைபெற்று வழிவழி இந்நகரைத் தமது தலைநகராகக் கொண்டு அரசளித்தது என்பதாம்.

அன்பின் வழிவரும் - இரு மரபிலேயும் சிவனடியார்களான பரம்பரையில் வழி வழி வந்த சைவ மரபினர் என்க. "வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த, பழவடியார்" என்பது திருவிசைப்பா. **மாதொரு பாகர் அன்பின் வழிவரும்** - "அருளென் னும் அன்பீன்குழவி" என்றபடி இங்கு, அன்பு என்றது, **அருளின்** மூலத்தைக் குறித்ததாகக் கொண்டு, பாகர் உயிர்களின்மேல் வைத்த அருண் மூலத்தினானே அதன் வழி உலகில் வளர்ந்து வருகின்ற என்றுரைத்தலுமாம். "நாரையூர் அன்பனுக்கு" 'அன்பர் கோயி லெதிர்கொள் பாடி" முதலிய தேவார ஆட்சிகளும் காண்க. பல பிறவிகளிலேயும் சிவனுக்கு அன்பு செய்த வழி எனவும், சிவன் வைத்த அருண் மூல வழியிலே வந்த எனவும் இருவழியும் உரைக்க நின்றது.

வேத நன்னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு - சித்தாந்த சைவம் வேத நெறிகளையெல்லாம் தன்னுள்ளே அங்கமாய் அடங்கத் தான் இவற்றுள் அடங்காது முழுமுதற் றன்மை பெற்று விளங்குவது. "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்க" என்ற புராணங் காண்க. வேதத்திற் சொல்லிய பலவும் சைவத்தின் அங்கமாவன. அங்கங்கள் விளங்கவே முழுமையும் விளங்குவதாம். "வேதமோது நெறியினான் வீரட்டானம்" என்ற இத்தலத் தேவாரங் காண்க.

வேதநெறி என்னாது வேத நன்னெறி எனவும், அதனோடமையாது **வேத நன்னெறியின் வாய்மை** எனவும் கூறியது வேதங்களின் உள்ளுறை உண்மையான சைவத்திறத்தினைக் குறித்தது. "வேத உள்ளுறையாவன" அரனடியார் பூசையும், அரன் பூசையுமே எனத் திருநீலநக்க நாயனார் புராணத்துக் கூறியதும் காண்க.

வேதநெறி விளங்கிட **மேன்மை** பூண்ட இவ்வரசர் பொதுப்பட அதனுள் விதித்த எல்லா அறங்களையுங் காவல் புரிந்தனரேனும், தாம் **காதலால் ஈசர்க்கன்பர் கருத்தறிந்தேவல் செய்வா** ராயினார் என்றதாம். அரசராதலின் எல்லா அறங்களையுங் காக்குங் கடப்பாடுடையர்; ஆயினும், அவற்றின் உண்மைநிலையினைத் தம் ஒழுக்கத்திலே வைத்து உலகில் நடந்து காட்டினார் என்பது. **விளங்கிட** - தாம் நிற்பதனோடு உலகினையும் நிறுத்தும் பொருட்டு - விளங்கச் செய்ய. **விளங்கிடம் மேன்மை** - விளங்கும் இடமாகச் சுட்டி யறியத்தக்க மேன்மை என்றலுமாம்.

காதலால் - ஆசையினாலே. பிறிதோர் பயன் கருதாது உள்ளெழுந்த ஆசையே காரணமாக.

கருத்தறிந்து - அவர் கருதியவற்றை, அவர்கள் சொல்லாமல் தாமே குறிப்பின் அறிந்து. "புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத் திண்மை" என்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் 112 பாட்டுக் காண்க. 1

468. **(வி - ரை) அரசியல் நெறியில் வந்த அறநெறி** - அரசியல் செல்லும் வழியினைப்பற்றி அறநூல்களில் விதித்த ஒழுக்கம். இதுபற்றித் திருவள்ளுவர் திருக்குறளுட் கூறியனவும், பிறவும் இங்கு வைத்துக் காண்க. அரசியல் நெறியில் அறநெறியல்லாதனவும் வருவது உலகத்திற் காணப்படுதலின், **அரசியல்நெறி** யென்றதனோடமையாது அதில் **வந்த அறநெறி** என்றார். "கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற், கடும்புலி வாழுங் காடு நன்றே", "ஆறலைக்கும் வேடலன் வேந்து மலன்", என்பனவாதி நீதிநூல் உரைகள் காண்க.

கருணையே உருவமாகிய நமது அப்பர் சுவாமிகளைச் சமண் சமயச் சார்பில் நின்றவனாகி, அலைத்துச், செயல் புரிந்த அரசனைப் "பெருகுசினக் கொடுங்கோலான்", "பூபாலர் செயன்மேற்கொள் புலைத்தொழிலோன்" என்றும், மூர்த்திநாயனாரது திருப்பணிக்கு முட்டுப்பாடு செய்த வடுகக் கருநாட மன்னனைக் "கொடுங்கோன்மை செய்வான்" என்றும், அரசியலறத்தினின்ற அமைச்சர் பெருமானாகிய ஆசிரியர் சுட்டியது காண்க. "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்" என்றபடி மேலல்லாராகியும் மேல்நாட்டார் என்ற பேரால் இந்நாளில் அறியப்பட்ட இத்தாலியர், உருசியர், சர்மானியர், சுபெயினர் முதலிய பல நாட்டவரும் அரசிய லென்ற பேராற் செய்யும் பற்பல கொடுங்கோன்மைக் கொலைச் செயல்களையும் இங்கு வைத்து உண்மை காண்க.

வரை நெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி - **மாற்றலர் முனைகள் வென்று மாற்றி** என்று மாற்றிக்கொள்க. **தோள்** - படை முதலிய அங்கங்களுக்கே யன்றித், தம் தோள் வலிமைக்கும் குறியாய் நின்றது. **வரைநெடுந்தோள்** - மலைபோலுயர்ந்து நீண்டதோள். மலைபோலிருத்தலாவது சலியாதிருத்தலும், உயர்ந்து பெருமைகொண்டிருத்தலும் முதலியன. "தோள்வலி கூறுவோர்க்கே" என்றவிடத்துச் சங்கோத்தர விருத்தியிலே எமது மாதவச் சிவஞானசுவாமிகள் உரைத்தவை இங்கு நினைவுகூரத் தக்கன. அறநெறி வழாமற் புல்லி நின்ற இவ்வரசர்க்கு மாற்றலர் முனைகள் வென்று மாற்றுதற்குற்ற காரணமென்னை? எனின், தமது நாட்டினைக் கைப்பற்றுதற்கு அறநெறி தவறிப் பிற அரசர் படையெடுப்பின் தற்காத்துக் கொள்ளுதற் பொருட்டும், அவசியமாயின இடத்துப் பிற அரசரை அறநெறி நிறுத்துதற் பொருட்டும் போர் நிகழுமாதலின் வென்று மாற்றுதல் வேண்டற்பாலதாயிற்றென்க. **வென்று** என்றதைத் தற்காப்பிலும், **மாற்றி** என்றதைப் பிறரது அறம் பிறழ்தலை மாற்றுதலினும் கொள்க.

வென்று - இச்சரிதப் பின் நிகழ்ச்சியின் முற்குறிப்பாம்.

உரை திறம்பாத நீதி - அரசியலறத்தினைப்பற்றி முன்னோர் உரைத்த உரைகளினின்றும் பிறழாதவகை செலுத்திய நீதி. இதுவும் சரித நிகழ்ச்சியின் முடிபினைப் பற்றிய முற்குறிப்பாதலும் காண்க. இதற்குச் சத்திய நெறியினின்றும் திறம்பாத எனவும், சொன்ன சொற்றவறாத எனவும் பொருள் கொள்வாருமுண்டு.

திரை செய்நீர் - அலை பொருந்திய கங்கை.

அன்பர் வேடமே சிந்தை செய்வார் - **வேடமே** - சிவனடியார்களது திருவேடத்தினையே கருதி வழிப்பட்டனர். ஏகாரம் பிரிநிலை. குலம், குணம் முதலிய பிறிதொன்றினையும் சிந்தித்தலிலர் என்க. இதுவும் பிற்சரித நிகழ்ச்சிக் கேதுக்கூறிய முற்குறிப்பாம். வேடமொன்றனையே யன்றிப் பிறவற்றைச் சிந்தித்தால், இவர் மெய்யடியார், இவர் பொய்யடியார் - எனப் பலவகையானும் வேறுபாடுபடுத்தும் நிலை

வருமாதலின் அது வாராமற் காக்கும் ஒழுக்கத்தில் நின்றமையானும், இச்சரிதத்தில் இவர், பின்னர்த், தம்மை அடர்த்தானைப் பகைவன் என்று காணாது அவன் தாங்கிய வேடத்தினையே மெய்ப்பொருளெனத் தொழுதனராதலானும், அதுவே மெய்ப் பொருள் என்று கொண்டதே இவரது சரித உண்மையாதலானும் **வேடமே** *என்று தேற்றம் பெறக்கூறியவாறுமாம். மேலும் அரசாங்கத்திற்குரியதாய் விதித்த வேடந் தாங்கி வந்தோனை அவ்வேடத்தினை நோக்கி இயல்பில் அவன்பால் அரசாங்கத்திற் குரிய வணக்கம் செலுத்துவோமே யன்றி, அவனது குணம் குலம் முதலியவற்றைக் கண்ட பின்னர் வணங்கும் வழக்கின்மைபோல, அடியவர் வேடமே சிந்தித்து வழி படுதற்குரியது என்ற கொள்கை குறித்ததுமாம்.*

அரசியல் நெறியில் வந்த அறநெறி வழாமற் புலி *என்றதனால் இவர் சைவச் சார்புடையரேனும் தமது அரசின்கீழ் வாழும் எல்லா வகையினரையும் கோட்டமின் றிக் காத்துவந்தார் என்க.*

"கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது" என்பது அப்பர் சுவாமிகள் தேவா ரம். நமது ஆங்கில அரசர் தாம் கிறித்துவமதச் சார்புடையரேனும் பிற எல்லாச் சம யங்களையும் காவல் புரிந்துவரும் அறநெறி முறையும் இங்குவைத்துக் காண்க. இதுவே நமது முந்தை நல்லரசர் கண்டு கைக்கொண் டொழுகிய முறை என்பது **அரசியல் நெறியின் வந்த** *என்றதனாற் பெற்றாம். "அறங்காப்பான்" (121) என்றதுங் காண்க.*

மாற்றலர் முனைகண் மாற்றி *என்றதனாற் பகைவரால் வரும்பயத்தை வாராமற் காக்கும் அரசர் கடமை குறிக்கப் பெற்றது (121) எனவும், அது புறக் காவலினையும்,* **நீதி ஓங்கும் நீர்மை** *என்றது அகக் கரணத்தாற் செய்யும் உட்காவலினையும் குறிக்கும் எனவும்,* **வேடமே சிந்தை செய்வார்** *என்றது அவர் தம் உயிர்க்குச் செய்து கொண்ட காவலினைக் குறிப்பதென்றும் கூறுவாருமுளர்.*

வந்திங் கறநெறி—*என்பதும் பாடம்.*　　2

469. (வி - ரை) **மங்கையைப் பாகமாக உடையவர்** - *சிவபெருமான்.* **மன்னும் கோயில் எங்கணும்** - *நிலை பெற்று வெளிப்பட்டு அருளும் கோயில்கள் எங்கெங்கேயும் "எத்தானத்தும், நிலவுபெருங் கோயில்பல கண்டாற் றொண்டீர், கலிவலி மிக்கோனைக் கால்விரலாற் செற்ற கயிலாய நாதனையே காண லாமே", " இந்துசே கரனுறையு மலை கண் மற்று மேத்துவோ மிடர்கெடநின் றேத்து வோமே", "கள்ளார்ந்த கொன்றையா னின்ற வாறுங், குளங்,களங்,கா வெனவனைத்துங் கூறு வோமே" என்று பலவகையாலும் அப்பர் சுவாமிகள் காட்டி யருளிய கோயில்களும்,* **நின்றதிருத்** *தாண்டகத்திலே "இரு நிலனாய்த் தீயாகி" முதலியனவாக இறைவன் வடிவுகொண்டு நின்ற நிலைகளும் இறை வனை வணங்கிப் பூசித்தற்குரியனவாம். திருமுருகாற்றுப்படையிலே " வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட, ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே, ஆண்டாண் டாயினு மாக" என உரைத்தபடியுங் காண்க.*

எங்கணும் *என்றதனால் "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறாக" என்றபடி சிவபெருமானை முதலாக வைத்துப் பிற எல்லாத் தெய்வக் கோட்டங்களும் உள்ளிட்டுரைத்துக் கொள்ளலுமாம். அவ்வவர் நிலைக்குத் தக்க வாறு எல்லாத் தெய்வங்களுமாய் நின்று வருபவன் சிவபெருமானே என்பது துணிபாத லின் இதனில் முழுமுதற் கடவுள் வழிபாட்டுக்குப் போந்ததோர் இழுக்குமின்றென்க. அரசனாவான் எல்லாக் கோயில்களையுங் காவல் புரியுங் கடமை பூண்டவன் என்பது அறநூற்றுணிபாம். இது பற்றி நமது முன்னோரரசில் நிகழ்ந்தனவும், நம்நாட்டு இந்நாள் அரசில் நிகழ்கின்றனவும் ஆகிய அரசியல் முறைகளையும் இங்கு வைத்துக் காண்க.*

பூசைநீடி - *நித்திய வழிபாடு தவறாமலும், காலங்கள் தவறாமலும் நீடித்து நிகழ்ந்து வரச் செய்து.* **சிறப்பு** - *நைமித்திக மென்பர் - திருவிழாக்கள். இவை நித்தியத்தில்*

நோக்கூடிய குறைகள் தீர அவ்வப்போது செய்யப் பெறுவன. "சிறப்பொடு பூசனை" திருக்குறள். 101-ம் பாட்டின்கீழ் உரைத்தவை காண்க.

ஏழிசைப் பாட லாடல் - இவை நித்தியபூசையிற் பொதுவகையானும், சிறப்பிலே மிகச் சிறப்பு வகையானும் கொள்ளுதற்குரியன. ஏழிசையுடைய பாட்டுக்களும், பாட்டுடன் கூடிய ஆடல்களும் என உம்மை விரிக்க. இவை நித்திய நைமித்திக மெனும் இரண்டிற்கு முரியவாகலின் இரண்டிற்கு மிடையில் வைத்தார். 101-ம் பாட்டும் உரையும் காண்க. பாடலாடல் பூசைச் சிறப்பின் அங்கங்களாம். ஏயர்கோனார் புராணம் - 271 - முதலியனவும் காண்க.

போற்றுதல் புரிந்து வாழ்வார் - சிவாலய முதலாகக் கோயில்களைப் போற்றுதல் அரசர்க்குரிய கடனென்பதனைப் பின்னர் நமிநந்தியார் புராணம் 19, 20 பாட்டுக்களில் விரித்துக் கூறியதும் காண்க. **போற்றுதல்** - பாதுகாத்தல். **புரிந்து** - (போற்றுதலைச்) செய்து என்க. இடைவிடாது சொல்லுதல் என்றலுமாம். **வாழ்வார்**-அதனையே தமக்கு வாழ்வாகவும் கொண்டவர். **தங்கணாயகனுக்கு அன்பர் தாள் அலால் சார்பு ஒன்று இல்லார்** - **தங்கணாயகர்** - தாம் வழிவழிச் சிவனடிமைத் திறத்திலே வந்தாராதலின் தமது நாயகராகக் கொண்ட சிவபெருமான் என்க. **தங்கள்** - வழிவழி உரிமை குறித்தது. "மீளா வடிமை உமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே" என்ற நம்பிகளது தேவாரங் காண்க. "மாதொருபாகரன்பின் வழிவரும்" (467) என்றதுங் காண்க.

சார்பு - இறைவனது சார்பிலே வழிவழி வந்த இவர், இவ்வுலகிலே வெளிப்படக் குலவும் சார்பாக அன்பர் தாள்களையே பற்றி ஒழுகினார் எனவும், அந்தச் சார்பினைத் தவிர வேறு சார்பு ஒன்றினையுஞ் சார்பாகக் கருதுவாரல்லர் எனவும் கூறியபடியாம். அன்பர் வேடத்தின் வழிபாட்டினையே தமக்குத் தமதுயிரினுஞ் சிறந்ததாகக் கொண்ட வரலாறு இச்சரிதம் என்ற முற்குறிப்புமாம். அன்பர் தாள்களைத் தம்மினுந் தமக் கினிய சார்பாகக் கொண்டு வாழ்பவர் என்க. "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரு நோய்" எனத் திருவள்ளுவநாயனார் மெய்யுணர்தலுட் கூறிய உண்மையினையே மெய்ப்பொருளாகிய இந்நாயனார் கடைப்பிடித்து ஒழுகினார் என்ற பொருத்தமுங் காண்க.

பாகமாக வைத்தவர்—என்பதும் பாடம். 3

470. **(வி - ரை) தேடிய மாடு** - அறச் சார்பிலே செலுத்திய அரசியலில் தாம் தமது நாளிலே தேடி வைத்த நிதி. "மறத்தாறு கடந்த செங்கோல் வழுதி! நின் பொருள்க ளெல்லாம் அறத்தாற்றி னீட்டப் பட்ட" என்பது திருவிளையாடற் புராணம்.

நீடு செல்வம் - தமக்கு முன் முந்தையரசர் வைத்துப் பெருகி நீடிவந்துள்ள சேமநிதி முதலியன. தேடியதால் நீடிய என்றலுமாம். **மாடு** - பொன், மணி முதலியவையும், **நீடு செல்வம்** - நிலம் முதலியவையும் என்றுரைப்பாரு முண்டு.

தில்லை மன்றுள் ஆடிய பெருமான்- தாம் தமது ஆன்மார்த்த நாயகராகக் கொண்டு வழிப்பட்ட ஸ்ரீ நடேசப் பெருமான். "புரவலன் மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்தான்" (489) என்றதுங் காண்க. விரிவு ஆண்டுக் காண்க.

அன்பர்க் காவனவாதும் - செல்வ முதலியவை யாவும் அடியார்க் காவனவே யாம். அன்பர்க்காவனவே ஆகும் - ஆகாதன பொருளல்லனவாம் என்றுரைத்தலுமாம்.

நாடிய மனத்தினோடு - கொடுத்துவந்தார் என்று முடிக்க. **நாடிய மனம்** - உண்மையிலே நாட்டங்கொண்டு அதில் நிலைத்த மனம். **நாயன்மார்**-தம்மை ஆளுடைத் தலைவர்களாகிய அடியார்கள். **நாயனார்** - சிவபெருமான் பெயர். அது அவனையே போன்றவர்களாதலின் அவனடியார்களுக்காயிற்று. முன் உரைத்தவை காண்க.

கூடிய மகிழ்ச்சி - அவர்களது பெறற்கரிய சேர்க்கை தம்பாற் கூடப்பெற்றதால் உளதாம் மகிழ்ச்சி. **கூடிய** - அளவிற் பெருகிக் கூடிய என்றலுமாம். **குறைவற** -

கொடையிற் குறைபாடின்றி. தமது பிறவியாகிய குறைவு அறும்படி என்றலுமாம். அடியார்கள் "ஒன்றினாற் குறைவுடையோம் அல்லோம்" என்ற நிறைவுடையராத லின் அவர்களது குறைவு அறும்படி என்றுரைப்பது பொருந்தாதென்க.

கொடுத்து வந்தார் - கொடுத்தலைத் தமது நியதியாக மேற்கொண்டு ஒழுகிவந்த னர். **கொடுத்து உவந்தார்** - "ஈத்துவக்கு மின்பம்" என்றபடி, கொடுத்து, அவ்வாறு கொடுத்ததினாலே மகிழ்வடைந்தார் என்றலுமாம்.

இந்நான்கு பாட்டுக்களும் ஒரு முடிபுகொண்டன. நாட்டு - ஊரின் - மன்னி - வரும் - மலாடர் கோமான் - பூண்டு - செய்வார் - காத்து - மாற்றி மிக்கார் - செய்வார் - கோயில் - நீடி மல்கப் - புரிந்து வாழ்வார் - இல்லார் - என்று - மனத்தினோடு - கொடுத்துவந்தார், எனத் தொடர்ந்து முடித்துக்கொள்க.

செய்வார் - மிக்கார் - வாழ்வார் - இல்லார் என்பன அவரது மனநிலையான கொள்கையின் **இயல்பையும், கொடுத்துவந்தார்** என்பது அக்கொள்கையின்படி அவர் செய்துவந்த திருத்தொண்டின் **செயலையும்** குறித்தன. வேத உள்ளுறை அரன் பூசை யும் அடியார் பூசையும் போற்றுதலே யாமென அதன் வாய்மை **விளங்கிட** மேன்மை பூண்ட நாயனார் செய்த அவ்விரண்டிலே, அரன் பூசை போற்றுதல் **கோயில் எங்கு னும் மல்கப் போற்றுதல் புரிந்து** என்றதனாலும், அடியார் பூசை போற்றுதல் **நாயன் மார் அணைந்தபோது கொடுத்து வந்தார்** என்றதனாலும் உரைக்கப் பெற்றன. இவ் விரண்டினுள்ளும் அன்பர் பூசையிலே திருவேடத்தினையே சிறக்கச் சிந்தையில் வைத்து "நேய மலிந்தவர் வேடமும் அரனெனத் தொழுமே" என்ற விதிக்கிணங்கத் தொழுதனர் என்பதும், அது இச்சரித விளைவாகிய உள்ளுறையாமென்பதும் குறித்து **ஏவல் செய்வார் - சிந்தை செய்வார்** என முதலில் விதந்து எடுத்துக் காட்டப்பெற்ற தாம். **சிந்தை செய்வார்** என்றது மனத்தாலும், **போற்றுதல் புரிந்து வாழ்வார்** என் பது வாக்கினாலும், **ஏவல் செய்வார் - கொடுத்துவந்தார்** என்பன காயத்தாலும் நிகழ்ந்த குறிப்பும் காண்க.

கொடுத்து வாழ்ந்தார்—என்பதும் பாடம். 4

471. இன்னவா றொழுகு நாளி லிகற்றிறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லு மாசையா லமர்மேற் கொண்டு
பொன்னணி யோடை யானை பொருபரி காலாள் மற்றும்
பன்முறை யிழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான். ரு

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு இவர் ஒழுகி வருகின்ற காலத்திலே ஓர் அர சன் இவருடன் பகை கொண்டு இவரை வெல்லும் ஆசையினாலே, போரில் எதிர்த்து வந்து தன்னுடைய பொன்னாலியன்ற முகபடாம் அணிந்த யானை, போர்க் குதிரை, காலாள் முதலிய பலவற்றையும் பலமுறை இழந்தவனாய்த் தோற்று அவமானமடைந்து போயினான்.

(வி - ரை) இகல் திறம் புரிந்து - உண்மையில் இகலுக்கு எவ்வித நேர்மையான காரணமுமின்றி இகலும் நிலையைத் தானே வருவித்துக் கொண்டு. 468-ல் கூறியபடி நாயனார் **மாற்றலரைப்** போரில் வெற்றி கொண்டது அறத்தின் காரணம்பற்றி எழுந்த தாம். இங்குக் குறித்த ஓர் மன்னன் **இகல்திறம் புரிந்தது,** அவ்வாறின்றி,வலிந்தசெயல் மேற்கொண்டமை குறித்தது. **புரிந்து** - அறவழி நில்லாது இகலும் திறத்தையே சிந் தித்தவனாய் நின்றான் என்பது குறிப்பு. இதற்கு அறம்பற்றாத மண்ணாசையே காரணம் என்பார் பின்னர் **ஆசையால்** என்றார். அறவழி நிற்கும் செங்கோலரசரைப் பிற அர சர் நேசப்பான்மை பூண்டொழுகுதல் அரசநீதி யியலாம்.

"புல்லாதார் முரணடக்கிப் பொருள்கவர்வா ரென்பதெவன்?
செல்லாத பல்வேறு தீபத்துச் செங்கோன்மை

வல்லாருந் தத்தமதேத் தரியபொருள் வரவிடுத்து
நல்லாரா யொப்புரவு நட்படைய நடக்கின்றார்''

என்ற (வாதவூரடிகளுக் குபதேசித்த படலம் 8) திருவிளையாடற் புராணப் பாட்டிலே இவ்விரண்டு நிலைகளும் நன்கு விளங்குதல் காண்க.

ஓர் மன்னன் - பேர் தானும் சொல்லத் தகாதவன் என்று குறிப்பார் இங்கு **ஓர் மன்னன்** என்ற இலேசினாற் கூறினார். "வடுகக் கருநாடர் காவன்,மானப் படைமன்னன் வலிந்து நிலங் கொள்வானாய்" (11) என்ற மூர்த்தி நாயனார் புராணத்தும் அந்தக் கொடுங்கோ லரசனை இவ்வாறே குறித்ததும் காண்க. **ஆசையால் அமர்மேற் கொண்டு**- அவனது ஆசையினைத் தவிர அமர்மேற் கொள்ளுதற்கு அரச நீதியில் விதிக்கப்பெற்ற வேறு காரணமொன்று மின்றென்பது. பல முறையும் தோற்றும் அறிவு வாராமையால் அம்முயற்சியிலே கிட்டினானதலின் "ஆசை வெட்க மறியாது" என்ற பழமொழிப்படி பேராசையின் வசப்பட்டான் என்றலுமாம்.

அமர்மேற் கொண்டு - இகலிப் போர் செய்து. **யானை - பரி - ஆள் - மற்றும்** - நால் வகைச் சேனைகளையும் குறித்தன. இவைகளை இழந்து தோற்றுப் பரிபவப்பட்டுப் போனான் என்றதனாலே, போரில் வெற்றி கொள்வார் தோற்றுப்போன அரசனது சேனைகளில், இறந்துபட்டனவும் புறங்காட்டி யோடியனவும் போக, எஞ்சியவற்றைத் தம் வசமாக்கிப் பிடித்துக் கொள்ளும் மரபு பற்றி நாயனார் கைக்கொண்டனர் என்ப.

பரிபவம் - அவமானம். "பரிபவப்பட்டுவந்த படர்பெருஞ் சுற்றத்தார்" (420) என்ற பாட்டின் உரை பார்க்க. **பொரு பரி**-போர்க் குதிரைகள். **பொன்னணியோடை யானை** - யானைகளை அலங்கரித்துப் போரிற் செலுத்துதல் அந்நாள் வழக்கு. யானைப்படை இந்நாளிற் காண்டலரிது. ஆயின் சேனைக்குரிய நால்வகையினும் யானையையே சிறப்பாகக் கொண்டனர் வீரரிற் சிறந்த நமது முன்னோர். "யானை யுடைய படைகாண்டல் முன்னினிதே" என்றதுங் காண்க. கந்தபுராணம், இராமா யணம் முதலிய பழஞ் சரிதங்களில் நிகழ்ந்த போர்களிலும் யானைப்போரின் பெருமை காண்க. பலவகை இயந்திரங்களுக்குள்ளே மறைந்துகொண்டு, இணையான வலியிலார் மீதும், துணையில்லார் மீதும் குண்டுகள் பாய்ச்சியும், விடக்காற்று வீசியும் பேடிப் போராகிய அநாகரீகப்போர் செய்யும் இந்நாள் 'நாகரீக' மாக்கள் யானைப் போரின் வீரத்தை அறிய வலியிலர் என்க. யானை, குதிரை, காலாள் என்று குறித்தவாற்றால் **தேரையும்** உடன் கொள்க. **மற்றும்** - போருக்குரிய பிற வசதி, உணவு, பண்டம் முதலியன. **இழந்து, தோற்று, பட்டு** - இவை வெவ்வேறான பல செயல்கள்; **போனான்** என்ற வினைமுற்றுக் கொண்டு முடிந்தன. இவற்றுடன் அவனது போர்ச் செயல் வினையும் முற்றியதாம். அவன் இனிச் செய்யத் தொடங்கியது மாயப்போராம். நால் வகைச் சேனைப்போரில் நாயனார் வென்ற வகை இப்பாட்டாற் கூறினார். இனி வரும் மாயப்படைப்போரிலும் நாயனாரே வெல்கின்றார். "ஆன நீற்றுக்கவசம் அடையப் புகுமின்கள்" என்ற திருவாசகப்படி, வேணியும் நீறுமாகிய கவசமே துணையாகக் கொண்டு நாயனார் மாயப்படை வாராமல் வெல்லும் செய்தி 481-ம் பாட்டிற் கூறு கின்றார். விரிவு ஆண்டுக் காண்க. எனவே இருவகைப் போரிலும் நாயனார் வெல்ல வல்லவராயினார். இதனையே "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" என்று முதனூல் அருளியது என்க.

472. இப்படி யிழந்த மாற்றா னிகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீல மறிந்துவெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே யற்றத்தில் வெல்வா னாகச்
செப்பரு நிலைமை யெண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான். ௬

473. மெய்யெலா நீறு பூசி வேணிகண் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன். எ

472. (இ - ள்) வெளிப்படை. இப்படி யிழந்தவனாகிய அந்தப் பகையரசன் போர்முனையிலே நாயனாரை வெல்லமாட்டாதவனாகி, மெய்ப்பொருள் வேந்தராகிய நாயனாரது சைவசீலத்தைத் தெரிந்துகொண்டு, திருநீறு சாத்திக் கொள்வதாகிய அந்தப் பெரிய வேடந் தரித்தே, வஞ்சனையினாலே வெல்லவேண்டுமென்ற,வாக்கினாற் சொல்லவுங்கூடாததாகிய, அந்த நிலைமையை மனதில் எண்ணிக்கொண்டு திருக்கோவலூரினுட் சேரும் பொருட்டு, சு

473. (இ - ள்) வெளிப்படை. தன் உடம்பெல்லாம் திருநீறு பூசிக்கொண்டு, சடைகளை முடித்துக் கட்டிக்கொண்டு,கையிலே படையை மறைத்துவைத்துப் புத்தகம் போற்கட்டிய புத்தகப்பையை எடுத்து ஏந்திக்கொண்டு, மையினை உள்ளே பொதிந்து வைத்து வெளியே ஒளியினைச் செய்யும் விளக்கே என்று சொல்லும்படி, மனத்தினுள்ளே வஞ்சனையைப் பொதிந்து வைத்துப் பொய்யினை மறைத்த தவவேடங் கொண்டு அந்நகரினுள்ளே முத்தநாதன் என்ற அவ்வரசன் புகுந்தனன். எ

472. (வி - ரை) இப்படி யிழந்த - மேலே கூறியபடி பலமுறையும் பரிபவமடையும்படி சேனையை யிழந்த. இப்படி-இந்தப் படி பூமியை அதாவது நாடு கவரும் உலக நலத்தை என்றுரைத்தலுமொன்று. பின்னர்ச் செய்யும் வஞ்சனையாலே மேலுலகம் இழத்தலே யன்றி இந்தப் படியாகிய பூமியின் நலத்தினையும் என்று எதிரது தழுவிய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கதென்க.

மாட்டான்-மாட்டாதவனாய். எச்சமுற்று. மாட்டானாய்எண்ணி என்றுகூட்டிமுடிக்க.

மெய்ப்பொருள் வேந்தன் - இதுவே நாயனாரின் பெயர் குறித்த முதல் இடமாம். ஆதலின் சீலத்துடனும் வெண்ணீற்றுடனும் சாத்தி இவ்வடியினை அமைத்த அமைதி குறிக்க. சீலம் - நல்லொழுக்கம். மெய்ப்பொருளாவது வேடமே என்று கொண்டொழுகியதே அவர்தம் சீரிய கொள்கை பூண்ட நல் ஒழுக்கமாம். 468 காண்க. அறிந்து - தெரிந்து.

வெண்ணீறு சாத்தும் அப் பெருவேடம் - அ - உயர்வு குறித்த சுட்டு. வேதங்களால் விதந்து பேசப்பெற்ற அந்த. பெருவேடம் - பெருமை தங்கிய - பெருமை தருகின்ற என்றதாம். "பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு" என்பன வாதியாக வரும் தமிழ் வேதமுங் காண்க. அற்றத்தில் - வஞ்சனையினால்.

வெல்வானாகச் செப்பரு நிலைமை - வஞ்சனையால் வெல்வேனாவேன் என்று வாக்கிற் சொல்லவுந் தகாத நிலையினை மனத்தினால் நினைத்து. சொன்னாலும் நரகந் தருவதாம் என்றபடி. வெல்வானாக - வெல்வான்போல. உண்மையில் வெல்வதில்லையென்ற குறிப்புமாம். எண்ணி - அவ்வாறே துணிந்து. சேர்வான் - வானீற்று வினையெச்சம். சேர்வதற்காக - சேரும்பொருட்டு. சேர்வானாகி என முற்றெச்சமாக்கி யுரைத்தலுமாம். சேர்வான் - பூசி - கட்டி - ஏந்திப்-புகுந்தனன் என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க.

செல்வான்—என்பதும் பாடம். 6

473. (வி - ரை) நீறு - வேணி - புத்தகம் இவை சிவசாதனங்களாய், அன்புடையாரை ஆட்படுத்து மியல்புடைய அடையாளங்கள். நீறும் வேணியும் கண்டிகையுமே திருவடையாளமாக வைத்தரசாண்ட மூர்த்தி நாயனார் சரிதமுங் காண்க.

மெய்யெலாம் நீறு பூசி - முழுத் தவ வேடம் பூண எண்ணினானாதலின் முழுநீறு பூசிய முனிவர்போல உடம்பெங்கும் நீறு பூசினான். முன்னர் நீறு பூசியவ னன்றாத

வின் தரிக்கத்தக்க இடமிது தகாத இடம் இது என்று அறியாதவனாய் மெய்யெலாம் பூசினான் என்ற குறிப்புமாம். **வேணிகள் முடித்துக் கட்டி** - தனது குடுமியினைச் சடைகள்போலத் திரித்து அவற்றைத் தொகுத்துச் சடைமுடியாக்கி. **முடித்துக் கட்டுதல்** - தலைமேல் முடிபோலக் கூப்பி நிற்கும்படி கட்டி முடிதல். **வேணி** - சடை. நீறும் வேணியும் முன்னர் இவன் உடையனாயின், அவை சைவ அடையாளமாதலின், நாயனார் அவ்வேடத்தை வழிப்பட்டொழுகி யிருப்பாரே யன்றிப் பகைப்பட்டுப் போர்செய்திரார்; எனவே இவற்றை இவன் புதிதாகத் தாங்கினவனாம். நாடிழந்தவன் பலநாள் காட்டில் மறைந்து சடைவளர்த்தான் என்பாருமுண்டு.

படைகரந்த புத்தகக் கவளி ஏந்தி - தான் நினைத்த வஞ்சனைச் செய்கையைச் செய்தற்குக் கருவியாகிய படையை மறைத்து அதனையே ஒரு புத்தகம் போல கவளிகையிற் கட்டி எடுத்து. படையை மறைத்தற்கும், இதுவும் ஒரு சைவ அடையாளமென வஞ்சித்தற்கும் என இருவகையும் கருதிப் படைகரந்த கவளி யாக்கினான் என்பதாம்.

மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்து - மையாகிய நீல நிறத்தைத் தனக்குள் வைத்தும், அதனைச் சுற்றி விளக்கத்தினைச் செய்து ஒளிரும் விளக்குப் போல, மனத்தினுள்ளே கறுப்பாகிய வஞ்ச எண்ணம் பொதிந்து வைத்துக் கொண்டு விளக்கஞ் செய்யும் நீறு முதலிய தவவேடத்தைப் புறத்தே விளங்க வைத்தானென்க. எரியும் திரியைச் சுற்றிப் பெரிய நீலச்குப்பாயம் போன்று குவிந்து மேனோக்கியதொரு மை சூழ்ந்து கொண்டிருப்பது காணலாம். அதன் வெளியிற் சூழ்ந்து விளக்கின் சிவந்த சுடர் எரிவதுங் காணலாம். அந்தச் சிவந்த எரிசுடரின் மேற்பகுதியினைச் சுற்றி வெண்சுடர்க் கொழுந்தையுங் காணலாம். எனவே ஒவ்வொரு விளக்கின் சுடரும் திரியினைச் சுற்றிய நீலக் குப்பாயம், அதன்மேற் செஞ்சுடர், அதன்மேல் வெண்சுடர் என மூன்று பகுதிகளை யுடையது. விளக்குச் சுடர் எரிவதற்கு ஆதாரவானது நெய். அது உருகி நெய்யாவியாக மாறும். அது நீல நிறத்துடன் நின்று திரியைச் சுற்றிய சுடரினது உட்பாகமாய், நெருப்புக்கு விறகு உதவுவதுபோல,விளக்குச்சுடர் எரிவதற்குக் காரணமாய் உதவுகின்றது. ஆகவே சுடரின் நிலைப்பகுதியான உட்கறுப்பே அதன் விளக்கத்துக்குக் காரணமாம். இங்கு முத்தநாதன் கொண்ட தவவேடத்திற்கு அவன் தனது மனத்தினுட் கொண்ட வஞ்சக் கறுப்பே காரணமாயிற்று என இவ்வரிய வுவமத்தின் அழகினை விரித்துக் கண்டுகொள்க. "நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணி மிடற்றான்"(அப்பர்சுவாமிகள்-கோயில்-திருவிருத்தம்-4) முதலிய திருவாக்குக்கள் காண்க. விளக்கும் இருளும் என்ற முரண்பட்ட இரண்டு பொருளுக்கு ஏற்ற இந்த உரிய அரிய உவமானம் ஆசிரியர் சேக்கிழார் பெருமானது தெய்வ மணக்கும் செய்யுள்களிற் காணும் அரிய உவமங்களில் ஒன்று. இஃது வேறு எந்தக் கவிகளிடத்தும் காணுதலரிது. இதன் அருமையினை உன்னிக் களிக்க.

இவ்வாறன்றி **மை** - என்பதற்கு நிழலாகிய இருள் என்று பொருள் கொண்டு தன் கீழே இருளாகிய நிழலைக் கொண்ட விளக்கு என்றுரைப்பாரு முண்டு. விளக்குள்ள பக்கம் நிழலுண்டு என்ற பழமொழியுங் காட்டுவர். மற்றுஞ் சிலர் இதனை இல்பொருளுவமையென் றெடுக்கினர். சுடருட் பொதிந்து மறைந்து நிற்கும் மைநிறங்கொண்ட புகையினை உட்கொண்டு என்பாருமுண்டு.

பொய்தவ வேடம் - பொய்த்தவம் என்றது எதுகை நோக்கிப் பொய்தவமென நின்றது. பொய்யானது தவவேடங் கொண்டு இவனுடன் வந்ததென்க. பொய்யினைக் கொண்டு உதவி செய்து கொள்ளத் தவவேட முடன்வந்தது என்றலுமாம். **நீறு-வேணி** என்னும் சைவத் தெய்வத் தவவேடம் என்றும் மெய்யேயாம்; அவ்வேடம் பொய்யாவதில்லை. "மெய்த்தவவேடமே மெய்ப்பொருளெனத் தொழுது வென்றார்" (481)என்று

இச்சரிதத் தத்துவத்தினையும் உண்மையினையும் பின்னர்ச் சுட்டுவதும் காண்க. " நற்றவத்தவர் வேடமே கொடு " (447) என்ற இடத்துங் காண்க.

முத்த நாதன் - இஃது அந்த மாற்றலனுகிய அரசன் பெயர். இவன் கடையனும் என்று குறிப்பார் இங்கு அவன் செய்தியைக் கூறிய மூன்று பாட்டினும் **பொய்** எனத் தொடங்கும் அடியின் கடையில் இவன் பெயரை ஆசிரியர் வைத்துக் காட்டிய அழகு குறிக்க. இவ்வாறன்றி முத்தன் - முக்தன் - மூடன் அறிவினின்றும் விடுபட்டவன் - விலகியவன் என்றும், இது அவன் பெயரன்றென்றும், ஆசிரியர் இவ்வாறு தானே அவனுக்கு ஒரு பெயர் தந்து கூறினுரென்றும் கொள்வர் திரு. ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள். ஆசிரியர் இவ்வாறு அவனுக்கு ஒரு புனைபெயர் தந்து கூறப் போதிய காரணமில்லை எனவும், ஆசிரியர் வைத்துக் கூறுவதாயின் இப்பெயராற் புனைந்துரைக்க இயைபில்லை எனவும் தோன்றுகிறது. இது அந்நாளிற் புறச்சமயிகள் தம் வழக்கிற் கொண்ட பெயர்களில் ஒன்று போலும்.

இங்குத் திருநீறு எரிக்குந் தன்மையாலே மாயாமலத்தையும், விரிந்த சடையை முடித்தலால் விரிந்து செல்லும் கன்மமலத்தையும், ஞானத்தின் உறையுளாகிய புத்தகத்தால் அறியாமையாகிய ஆணவமலத்தையும் போக்குவதாகிய ஞானுசாரிய அடையாளங்களைத் தாங்குவதே இத்தவவேடமாம் என்ற கருத்தும் இங்கு வைத்துக்காண்பர். இவை யெல்லாம் உரிய தேசிகர்பாற் கேட்டுணரத்தக்கன. தாம் பாசத்தினீங்கி நல்லுணர்வு பெற்றுரே பிறரை வழிப்படுத்தத் தக்கார். அல்லாதார் "குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக், குருடுங் குருடுங் குழிவிழுமாறே", "தன்னை யறிந்த தத்துவ ஞானிகள், முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள், பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள், சென்னியில் வைத்த சிவனருளாலே" என்பன திருமூலர் திருமந்திரங்கள். அங்ஙனமாகவும் இங்கு இம்மாற்றலன் கொண்ட **பொய்த்தவவேடம்** நற்பயன் தந்த தெங்ஙனமோ? எனின், இங்குப் பயன் செய்தது வேடமே யன்றி அவனன்று. அவ்வேடத்தினைத் தாங்கும் குற்றி அல்லது புல்லுருவம் போன்றே அவன் நின்றுன். வேடத்தின்பாலே நாயனுர் கொண்டொழுகிய அன்பின் உறைப்பானது இவன் செயலால் பின்னரும் உறுதி பெற்றுப் பயன் கொடுத்து நின்றது என்க.

முத்திநாதன்—புத்திநாதன்—என்பனவும் பாடங்கள். 7

474. மாதவ வேடங் கொண்ட வன்கணுன் மாடந் தோறுங்
கோதைசூ ழளக பாரக் குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிக ளாடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயிற் றிருமணி வாயில் சேர்ந்தான். அ

(இ - ள்) மாதவ...வன்கணுன் - பெரிய தவவேடந் தாங்கிய அவ் வன்னெஞ்சுடையவன்; மாடம்...போகி - மாடங்கள் எங்கேயும் மாலை சுற்றிய கூந்தலையும் குழையினையும் உடைய கொடிகள் ஆட, அவற்றின் மேலே ஒளிவிளங்கும் வெண் கொடிகள் அசைகின்றதற்கிடமாகிய, விளக்கம் பொருந்திய, நீண்டவீதியிலே சென்று; சேதியர்...சேர்ந்தான் - சேதிநாட் டரசர்பெருமானுராகிய மெய்ப்பொருணயனுரது அரண்மனையின் அழகிய திருவாயிலை யடைந்தான்.

(வி - ரை) வன்கணுன் - தவவேடத்தினுள் மறைந்து வஞ்சிக்க எண்ணியது வன்கண்மையாம். **சேப்பரு நிலைமை** (472) என்றதுங் காண்க. திருக்கோவலூரிற் சேர்வான் - புகுந்தனன் - முத்தநாதன் - புகுந்த - அவ் வன்கண்ணுன் - மறுகிற் போகிக் கோயில் வாயில் சேர்ந்தான் - எனத் தொடர்புபடுத்திக்கொள்க.

மாடந்தோறும்...மறுகு - ஒவ்வொரு மாடங்களினும் அளகபாரக் கொடியும் அவற்றின் மீதே சோதி வெண்கொடிகளும் ஆடுகின்றன; அவ்வகை மாடங்களை நிறைந்த

மறுகு என்க. அரசரது அரண்மனைக்குப் போகும் மறுகாதலானும், அவ்வரசரது தலை நகராதலானும் எங்கும் மாடங்கள் நிறைந்திருந்தன. இது அவற்றின் செல்வங் குறித்தது.

அளகபாரக் கோடி என்றதனால் பெண்களின் ஆடல்பாடலாதி இன்பமும், **குழைக்கோடி** என்றதனாற் பொன்மணி முதலிய செல்வமுங் குறிக்கப் பெற்றன.

சோதிவெண்கோடி - திருவிழா முதலிய தெய்வச் சிறப்புக் குறிக்கப்பெற்றன. இங்கு முத்தநாதன் வந்தது இரவாகும். இரவிலும் விளங்குவது வெண்மையாதலானும், வெண்மை திருநீற்றின் சோதியாதலானும் **சோதி வெண் கோடி** என்றார். வெண் சோதிக் கொடி என்று மாற்றுக. **அளகபாரக் குழைக்கோடி** என்றது ஆடற் பெண்கள். பெண் கொடியும் - வெண்கொடியும் என இரண்டும் கொடிகளாம்.

பெண் கொடிகள் மாடங்களிலுள்ள ஆடரங்குகளிலாடுவர். வெண்கொடிகள் மாடங்களின்மீது ஆடுவன. "காந்தாரம் இசைபயப்பிக் காரிகையார் பண்பாடக் • கவினார் வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடும் திருவையாறே" முதலிய திருவாக்குக்கள் காண்க. இவ்விரு கொடிகளுள்ளே மாடங்களில் ஆடரங்கிலே ஆடும் கொடிகளின் ஒருறுப்புக் (குழல்) கறுப்பாம். இவை மனத்தினுட் கறுப்பு வைத்துப் புகுந்த முத்தநாதனது களவை அறிந்து அவனை அந்த மாடங்கள் கறுப்புக் கொடிகள் காட்டி "வெளியேறுக" என்பனபோல அசைந்தன என்பதும், இக்கறுப்புக்கொடிகளின் மீது ஆடும் **சோதிவெண் கோடிகள்** "உனது உட்கறுப்பின் மேலே விளங்கும் வெண்ணீறும் சடைமுடியுமாகிய திருவேடமே வெற்றிபெறும். வெற்றி எம்முடையதே. இதினும் நீ தோற்பாய்" என்று அறிவிப்பனபோலக் கறுப்புக் கொடிகளைக் கீழ்ப்படுத்தி, மீது சோதியுடன் வெண்கொடி **ஆடின** என்பதும் குறிப்புக்களாகத் தன்மை நவிற்சி யணியிலே வைத்து ஆசிரியர் விரித்துக்காட்டிய அழகு கண்டு களிக்க. கறுப்புக்கொடி, உள்வருவோரை வரவேற்காது வெறுத்து வெளிப்போகச் சொல்லும் குறியாக இந்நாளிலும் வழங்கும் வழக்குங் காண்க. இனி, கறுப்பும் வெண்மையுமாயின கொடிகளைத் தன் மனக் கறுப்பும் வெண்ணீறும்போலவே கண்ணாடியிற்போல முத்தநாதன் எங்குந் தன் வண்ணமே கண்டான். அவ்வாறு காண்பவன் தன் மனத்துட் பொதிந்த வஞ்சனையினாலே அகத்தினழகு முகத்திற் றெரியும் என்றபடி முகம் பொலிவிழந்து சென்றானாகவும், மாடங்கள் அவ்வாறில்லாது தன்னை வெற்றிகொண்டன போன்று **சுடர்விட்டு** அழகுடன் விளங்கக் கண்டுகொண்டு சென்றான் என்பது மொரு குறிப்பாம். இதனை எட்டாவது பாட்டாக வைத்தோதிய குறிப்புங் காண்க.

சேதியர் பெருமான் - சேதிநாட்டவரின் தலைவராகிய நாயனார். **கோயில்** - அரண்மனை. **திருமணிவாயில்** - திரு - அருட்டிரு. **மணி** - அழகு. **மணித் திருவாயில்** என்க. மணி கட்டிய வாயில் என்றலுமாம். (112) 8

475. கடையுடைக் காவ லாளர் கைதொழு தேற நின்றே
"யுடையவர் தாமே வந்தா; ருள்ளெழுந் தருளு" மென்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்
"இடைதெரிந் தருள வேண்டுந்; துயில்கொளு மிறைவ" னென்றான். ௯

(இ - ள்) கடையுடை...என்ன - அரண்மனையின் பல வாயில்களிலும் காவல் செய்து நின்ற காவலாளர்கள் முத்தநாதன் உட்புகுந்தது கண்டு அவனைக் கைதொழுது விலகி நின்று எங்களை யாளுடையவராகிய அடியவர் தாமே வந்தனர் என்று "உள்ளே எழுந்தருள்வீராக" என்று சொல்ல; தடை...பின்பு - அவ்வாறே அரண்மனையின் பல வாயில்களையும் தாண்டிச் சென்ற பின்னர்; தனித்தடை...என்றான் - கடைசியாயுள்ள தனி வாயிலினைக் காவல்புரிந்து நின்ற **தத்தன்** என்பான் "சமயம் நோக்கித் தேவரீர்

அருள்புரிய வேண்டும்; எமது இறைவன் துயில்கொள்கின்றனராகும்" என்று சொன்னன்.

(வி - ரை) கடையுடைக் காவலாளர் - கடை - வாயிற்கடை. அதனைக் காவலாக உடைய காவலாளிகள். உண்மை யறியும் ஊகமுமிலாதவர்கள் என்ற குறிப்பினல் **கடையுடை**யென இலேசினுற் கூறியது காண்க. **ஏற்நின்றே** - எட்டி விலகி நின்று கொண்டு. இஃது அடியார்களிடத்து நடந்துகொள்ளும் மரபு. **உடையவர் தாமே வந்தார்** - "காதலா லீசர்க் கன்பர் கருந்தறிந் தேவல் செய்வார்" (463)என முன்னர்க் கூறியதுகாண்க. எனவே அடியார்களே தம்மை ஆளாக உடையவர்கள் எனக்கொண்டு அரசர் ஒழுகியபடியால் அரசரது காவலாளர்களும் அவ்வாறே ஒழுகுவோர், இங்குத் தவ வேடம் பூண்ட முத்தநாதனை, **உடையவர்** - தம்மை யாளாகவுடைய அரசரை ஆளாக உடையவர் - என எண்ணிக்கொண்டனர் என்க. **உடையவர்** - இறைவன் என்பாரு முண்டு. **தாமே** - தேடி வருந்தாமல் தாமாகவே. **உடையவர்தாமே** - தாம் என்பதை அசையாக்கி இறைவரே என்று கூட்டி யுரைப்பாரு முண்டு. ஏகாரம் தேற்றம்.

தடை - வாயில் "உமைபாக ரருள்செய்த ஒழுக்க மல்லால் தீங்குநெறி யடையாத தடையு மாகி" (திருக்குறிப்பு - புரா-88) என்று வாயில்களைப்பற்றிக்கூறியதை இங்கு வைத்துக் காண்க.

தனித்தடை - இதற்குமேல் வேறுவாயில் இல்லாதது; இது கடைசி வாயில் என்க. இறைவன் கோயில்களில் இதனைத் திருவணுக்கன் திருவாயில் என்பர். **தத்தன்** - அங்குக் காவல் செய்திருந்த காவலாளரின் பெயர். இப்பெயர் கல்வெட்டுக்கள் முதலிய பழய ஆதரவுகளிலுங் காணப்பெறுவது. **இடை** - சமயம் - அருள்புரிதற் கேற்ற காலம்.

தெரிந்து அருள வேண்டும் என்பது இறைவன் துயில்வதனலே அடியார்க் கேற்ற வாறு பணி செய்ய இயலாமையின் அபசாரம் நிகழும்; அன்றியும் அடியார் அரசனுக்குச் செய்யும் அருளும் செல்லுமாறில்லாது தடை நேரும்; ஆதலின் இருபுறமும் தவறு நேராதபடி **இடை தெரிந்தருள வேண்டும்** என்றான் என்க. **அருள வேண்டும்** என்பது அடியார்க்குரிய வணக்கஞ் செய்யாமை முதலிய பிழைகளால் முனிவுறாது பொறுத்து, வேறு ஏற்ற சமயத்தில் அருள் புரிக என வேண்டினபடியுமாம்.

துயில் கொளும் இறைவன் - இது தக்க இடையன்று என்று குறித்தற்கு உரிய காரணங் கூறியபடி. **இறைவன்** - அரசன். **இடைதெரிந்தருள** என்றதனல் "இது ஏற்ற சமயமன்று. ஆதலின் உட்புகாது நிற்க!" என்ற தடை மொழியை அடியவர்க்குரிய பணிவு வரம்பு பிறழாது மரபில் நின்று தத்தன் அறிவித்தபடியாம். "மன்ன னெப்படி மன்னுயிரப்படி" என்றபடி அரசன் போலவே அவரது ஏவலாளரும் ஒழுகியது காண்க. இறைவன் துயில்கொளும் ஆதலின் இஃது ஏற்ற இடையன்று எனத் தெரிந்தருள் புரிய வேண்டும் என முறைப்பட மாற்றி யுரைக்க. இடை யின்மையை முதலிற் றெரிவித்து, அவன் வாயில் கடப்பதனைத் தடுக்க வேண்டிய விரைவு பற்றி மாற்றி "இடை தெரிந்து" என முன்னர்க் கூறினன். **இடை தெரிந்து** - இடையின்மையைத் தெரிந்து என எதிர்மறையைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. "நின்றிடுநீயு" மென்றே அவனையு நீக்கி (476) எனவும், "மறைத்தவன் புகுந்த போதே" (482) எனவும் பின்னர்க் கூறுவனவற்றால் தத்தன் அவனை உட்புகாது தடுக்கும் மொழியினையே இவ்வாறு **இடை தெரிந்தருள** என்று வினயமாய்க் கூறினன் என்றறிக. **தனித்தடை நின்ற தத்தன்** என்ற சொல்லாற்றற் குறிப்புங் காண்க.

தொழுதேத்தி நின்றே—என்பதும் பாடம். 9

476\. என்றவன் கூறக் கேட்டே "யானவற் குறுதி கூற
நின்றிடு நீயு" மென்றே யவனையு நீக்கிப் புக்குப்

பொன்றிகழ் பள்ளிக் கட்டிற் புரவலன் றுயில மாடே
மன்றலங் குழன்மென் சாயன் மாதேவி யிருப்பக் கண்டான். ௧௦

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு தடைமொழிகளைத் தத்தன் சொல்லக் கேட்டேயும், முத்தநாதன் "நான் அவ்வரசனுக்கு உறுதி கூறப் புக்கேனாதலின், நீயும் இங்குத் தடை செய்யாமல் வேறு நின்றிடுக" என்றே சொல்லி, இவ்வாறு அவனையும் நீக்கி உட்புகுந்து, பொன்னால் விளங்கும் பள்ளிக் கட்டிலில் அரசர் துயில, அவர் பக்கவிலே வாசனையுடைய அழகிய கூந்தலையும் மெல்லிய சாயலையும் உடைய அரசமாதேவி யிருப்பக் கண்டான்.

(வி - ரை) **கேட்டே** - கேட்டேயும். **யான் அவற்கு உறுதி கூற** - நான் அரசனுக்கு உறுதியாகிய மொழியினை உபதேசம் செய்ய. **கூற** என்றதனால் **உறுதி** என்றது உறுதி பயக்கும் மொழியினைக் குறித்தது. **கூற** - கூற வந்தேனாதலால்.

கூற நின்றிடு - கூறுதற்குத் தடை செய்யாமல் நின்றிடு. நீ என்னை'உட்செல்லாது நில்' எனக் குறிப்பிற் றடை செய்தனை; நான் உன்னை '**நின்றிடு நீயும்**' என வெளிப்படையின் ஏவுகின்றேன் என்ற அதிகாரத்தை முத்தநாதன் அவன்மேற் சொள்ளவும், தத்தன் அது கேட்டு அமைந்து நிற்கவும், அவற்கு என அரசனை ஒருமையிற் சுட்டிக் கூறவும், இயைந்தது இங்குத் திருவேடத்தினாலாய திறன் என்ற நுணுக்கங் காண்க. **நின்றிடு நீயும்** - ஏனைக் கடையுடைக் காவலாளரெல்லாம் நின்றதுபோல நீயும் நின்றிடுக. **நீயும்** - இறந்தது தழுவிய எச்சவும்மை. **அவனையும் நீக்கி** - அவனது தடையையும் தவிர்த்து. **புக்கு** - தனித்தடை தாண்டிப் பள்ளியறையினுட் புகுந்து. **பொன்றிகழ்** - பொன்னு லிழைக்கப் பெற்று விளங்கும். **பள்ளிக் கட்டில்** - பள்ளி கொள்ளும் மஞ்சத்திடையே. ஏழனுருபு தொக்கது. **கட்டில்** - கட்டிய இல் - வீடு - போன்றது.

புரவலன் - உலகம் புரத்தலில் வல்லவன் - அரசன். **மாடே** - அவன் பக்கத்தில்.

மன்றலங்குழல் - **மன்றல்** - வாசனை. அணிந்த மாலையாலாயது வாசமாம். "நாறு பூங்கோதை" (479) காண்க. கற்புடை மகளிர் கூந்தல் இயற்கைமண முடையது என்பதுமாம். **மாதேவி** - அரசன் பட்டத்திற்குரிய பெருந்தேவி.

இருப்ப - அரசன் துயிலவும், அவன் பக்கத்தில் தேவி யிருக்கவும். "அடிவருடிப் பின்றூங்கி முன் எழும் பேதையே" என்றபடி நாயகன் துயிலும் வரை அவனுக்கு அடி வருடுதல், விசிறி வீசுதல் முதலிய உபசாரம் செய்து இருந்து பின்னரே தாம் தூங்குதல் கடமையாதலின் **புரவலன் துயில - மாதேவி யிருப்ப** என்றார். "மன்னுமலைமகள் கையால் வருடின", "செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கம லக்கரத்தால் வருடச் சிவப்பன", "சுரும்பொடுவண் டணங்குங் குழலி யணியார் வளைக்கரங் கூப்பி நின்று, வணங்கும் பொழுதும் வருடும் பொழுதும்" என்பனவாதி திருவிருத்தத் திருவாக்குக்களும் இவ்வுபசாரங் குறித்தெழுந்தன.

யானிவற்கு—என்பதும் பாடம். 10

477. கண்டுசென் றணையும் போது கதுமென விழிந்து தேவி
வண்டலர் மாலை யானை யெழுப்பிட வுணர்ந்து மன்னன்
"அண்டர்நா யகனார் தொண்ட ரா"மெனக் குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று, ௧௧

478. "மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
விங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ?" வென்று கூற,
"வுங்கணு யகனார் முன்ன முரைத்தவா கமநூன் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தே னியம்ப" வென்றான். ௧௨

477. (இ - ள்) வெளிப்படை. அவ்வாறு கண்ட பின்னும் உள்ளே சென்று பக்கத்திலே போகும்போது, அதனைக் கண்டு மாதேவி விரைந்து எழுந்து, வண்டு அலர்தற்கிடமாகிய மாலையணிந்த அரசரை எழுப்பினாராக, அரசர் உணர்ந்து, "தேவதேவனாகிய சிவபெருமானது தொண்டராம் இங்கு வந்தவர்" எனத் தலைமேற் செங்கை கூப்பிக்கொண்டு பள்ளிவிட்டெழுந்து எதிரிலே சென்று அடியார் வணக்கத்திலே நியதியாகத் தாம் கொண்ட கொள்கையின்படி வணங்கி நின்று, ௧௧

478. (இ - ள்) வெளிப்படை. "மங்கலம் பெருக மற்றும் எனது வாழ்வே வந்து அணைந்தது என்னும்படி இங்குத் தேவரீர் எழுந்தருளும் பேறு வாய்க்கப்பெற்ற தென்கொல்?" என்று சொல்ல, "உங்கள் நாயகராகிய இறைவனார் முன் சொல்லிய ஆகம நூல் இம்மண்ணுலகத்தின் மேலே எங்கும் இல்லாததாகிய ஒன்று உமக்கு இயம்புதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று (முத்தநாதன்) சொன்னான். ௧௨

477. (வி - ரை) **கண்டு சென்று அணையும் போதில்-கண்டு** - கண்டும். மன்னன் துயிலவும் மாடே மாதேவி யிருப்பவும் கண்டும். இழிவு சிறப்பும்மை தொக்கது. **சென்று - அணையும்** - இவ்வாறு காண்பான் எவனும் கண்டபோதே நின்று, விரைவில் மீளத் திரும்புவானன்றி மேற் செல்லான்; இவனோ கண்டும் சென்றான் - பக்கத்தே அணைவானுமாயினன் என ஒவ்வாத செயல்கள் இரண்டு குறித்தன.

கதுமென - கதும் - ஒலிக்குறிப்பினால் விரைவு குறிப்பதோர் சொல்.

எழுந்து - முன் "இருப்பக் கண்டான்" என்றபடி, இருந்த தேவி எழுந்தார். **உணர்ந்து** - துயிலுணர்ந்து; அதனோடு தொண்டரா மென உணர்ந்து என்றும் கூட்டுக.

குவித்த செங்கை கொண்டெழுந்து - தொண்டராம் என உணர்ச்சி வந்தவுடனே கைகள் கூப்பினர். முன் பழக்க நியதியினாலே எழுதலாகிய செயலுக்கு முன்னர்க் கைகூப்பிய செயல் நிகழ்ந்தது. அங்ஙனம் கூப்பிய கையுடன் எழுந்தார். **உணர்ந்து** என முன்னர்க் கூறியமையாலே துயில் நீங்கிச் சாக்கிராவத்தையிலே புக்கனர் என்பதாயிற்று. உயிருணர்வு சாக்கிரத்தே வந்த பின்னர் நிகழ்ந்த செயல்களிலே முன்னர் நிகழ்ந்தது கைகூப்புதல்; பின்னரே உடல் எழுதலும் பிறவும் நிகழ்ந்தன. எழுந்த பின் தொழுதாராயின் அம்மட்டில் தொழுதலைத் தாமதித்தாராவர் என்பதாம். ஆதலின் உணர்வு பெற்றபின் சிறிதும் தாழாது கைகூப்பினார் என்க. "கொழுநற் றொழு தெழுவாள்" (குறள்) என்ற இடத்துப் பரிமேலழகர் "தொழாநின்று துயிலெழுவாள்" என வுரைத்துத், "தெய்வந் தொழுதற்கு மனந் தெளிவது துயிலெழுங் காலத்தாகலின் தொழுதெழுவாள் என்றார். தொழாநின்று என்பது தொழுதெனத் திரிந்து நின்றது" என விசேடமுங் கூறினார். "தொழுதெழுவார் வினைவள நீறெழ" (118) என்ற திருக்கோவையாருக்குப் பேராசிரியரும் அவ்வாறே "தொழாநின்று துயிலெழுவாருடைய வினையினது பெருக்கம் பொடியாக" என்று உரை கூறித், "தொழுதெழுவாரென்றது துயிலெழுங் காலத்தல்லது முன்னுணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார்" என்று விசேடமுங் கூறினார். இவ்விருவருரையும் மறுத்துப் பிரயோக விவேகநூலார் "தொழுதெழுவாள்" என்றது எழுந்து தொழுவாள் என முன்பினாகப் பொருள்படுமென்றார். இம்மூவரும் எழுதல் என்பதற்குத் துயிலெழுதல் என்றே பொருள் கொண்டனர். இங்கு ஆசிரியர் எவ்வித ஐயப்பாட்டிற்கு மிடமின்றி **உணர்ந்து** என்றதனால் துயில் எனும் அவத்தையிலிருந்து மனம் முதலிய உட்கரணங்கள் (சாக்கிராவத்தை) விழிப்பினுள் வருதலைக் கூறிப், பின்னர், அவ்வாறு உணர்ந்து துயில் நீங்கிய மனத்தால் இயக்கப்பெற்ற கை முதலிய புறக்கரணங்களின் எழுதலினைக் "குவித்த செங்கை கொண்டெழுந்து" என்பதனால் விளங்கக் கூறினார். கருவிகளொடு கூடாமையே துயிலல். அவற்றொடு கூடுதலே உணர்தல்.

தொண்டராம் - உண்மையிற் றொண்டரன்றென்பது குறிப்பு.

குவித்த செங்கை கொண்டெழுந்து - கூப்பிய கைகளைக் கண்டார்களே யன்றி அதன் முன்னே கைகூப்பிய தொழிலை எவரும் கண்டாரில்லை என்பது குறிப்பு. இஃது கைகூப்புதலின் விரைவுபற்றிக் கூறியதாம். ஆதலின் கைகுவித்துக் கொண்டு என்னாது, **குவித்த செங்கை கொண்டு** என்றார். "கருங்குழற்கற்றை மேற்குவி கைத் தளி ருடையார்" (திருஞா - புரா - 670) என்றதுங் காண்க.

கொள்கையின் வணங்கி - கருத்தறிந் தேவல்செய்தும், அன்பர் தாளலாற் சார் பொன்றில்லா தொழுகியும் கைக்கொண்டுவந்த தமது கொள்கையின்படி வணக்கஞ் செய்து. **வணங்கி** - ஐந்துறுப்பு முதலியனவாய் விதிப்படி செய்யும் வணக்கங்கள்.

நின்று - அடியவர்கள் முன்பு அமராது, நின்று பணிகேட்கு முறைப்படி நின்று கொண்டு. **நின்று** என்ற வினையெச்சம் வரும்பாட்டிற் **கூற** என்றதனுடன் முடிந்தது.

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. கண்டு - சென்று - அணை யும்போது - தேவி - எழுந்து - எழுப்பிட - மன்னன் உணர்ந்து - எழுந்து - சென்று - வணங்கி நின்று - "என்கொலோ" என்று கூற - " நூல் - இயம்பக் - கொடுவந்தேன்"- என்றான் - என முடித்துக்கொள்க. **வன்கணான்**—என்ற எழுவாய் தொக்கது.

இழிந்து தேவி—கொண்டிழிந்து—என்பனவும் பாடங்கள். 11

478. **(வி - ரை) - மங்கலம் பெருக மற்று என் வாழ்வு வந்து அணைந்தது - மங் கலம் பெருக** - இஃது மங்கல வழக்காகப் பின் நிகழ்ச்சிக் குறிப்பாய்ப் பிறிதொரு அமங்கலப் பொருள் தொனிப்பதும் காண்க. **வாழ்வு வந்து** - வாழ்வே ஓர் உருப் பெற்று என் முயற்சியின்றித் தானே வந்தது - வாழ்வுக்கு இறுதி எல்லையாக வந்து என்ற குறிப்புமாம்.

அருளப் பெற்றதென் கொலோ? - தேவரீர் இதுபோழ்திலே இங்குவந்த காரியம் யாது? என்ற சொன்னயமும், அடியார்பால் வணங்கி வினவும் மரபும் காண்க.

உங்கள் நாயகனார் - இங்கு **உங்கள்** என்பது மிக்க உரிமைப்பாடு குறிப்பதோர் வழக்கு. " இசையாழ் **உங்க** ளிறைவருக்கிங் கியற்றும் " (திருஞான - புரா - 132); " அப்பர்! **உங்கள்** தம்பிரானாரைநீர் பாடிரென்ன " (திருநா - புரா - 186) - என்ற இடங்களில் தமக்கு உரிமையுள்ள தோணியப்பரை, ஆளுடைய பிள்ளையார், திருநீல கண்ட யாழ்ப்பாணருக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும் தம்மிலும் உரிமையுடையா ராக்கி உரைத்த சொல்லாட்சிகள் காண்க. உலக வழக்கிலேயும் பெண்கள் தமக்குரிய நாயகனைப்பற்றிப் பேசும்போது முன்னிற்பாருக்கு அவனது மிக்க உரிமை புலப்படு மாறு உங்கள்அண்ணன்-உங்கள் மைத்துனர்-என்று குறிக்கும் வழக்கும் காண்க. ஆயின் இங்கு முத்தநாதன் அந்நாயனார்க்குத் தொடர்பில்லாமற் புறம்பாயினவன் என்று குறிப்புத் தருதலுங் காண்க.

முன்னம் - சிருட்டியாரம்பத்திலே. **ஆகம நூல்** - ஆகமம். (1) உயிர்களின் பாசம் போக்கி வீடு தருவது, (2) பதிபசுபாச இயல் தெரித்து உண்மை உணர்த்துவது என இருவகையிலும் இதற்குப் பொருள் கூறுவர்.

மண்மேல் எங்குமில்லாதது - இவன் எந்தியபடையாகிய நூல் உண்மையில் மண்மேலன்றி, விண், பாதலங்களிலும் எங்கும் இல்லாததொன்றேயாம். அப்படையினை ஆக்கிய கரும்பொன்னும் மண்ணினுள் இருப்பதன்றி **மண்மேல்** உள்ளதன்று என் பதுமாம். மண்மேல் ஒருவரும் இதுவரை அறியாதது என்றலுமாம்.

இயம்பக் கொடுவந்தேன் - என்று மாற்றுக. இவ்வாறன்றிச் சொன்மாறிக் கூறு தல் அவனது உள்ளக்கரவினால் உளதாகிய தடுமாற்றங் குறித்தது. இதனால் உறுதி பயக்கும் ஞானங்கள் காலமிடம் கருதாது எக்காலத்தும் எவ்விடத்தும் கேட்கத்தக்கன என்ற விதியினை அவன் குறித்து உரைத்தான் என்பது. 12

479. "பேறெனக் கிதன்மே லுண்டோ? பிரானருள் செய்த விந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டு"மென்ன,
"நாறுபூங் கோதை மாது தவிரவே நானு நீயும்
வேறிடத் திருக்க வேண்டு" மென்றவன் விளம்ப வேந்தன். ௧௩

480. திருமக ளென்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய வந்தப் புரத்திடைப் போக வேவித்,
தருதவ வேடத் தானைத் தவிசின்மே லிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி "யினியருள் செய்யு" மென்றார். ௧௪

479. (இ - ள்) வெளிப்படை. "எனக்கு இதனின் மேலாம் பேறு வேறுண்டோ? இறைவன் அருளிச்செய்த இந்த மாறில்லாத ஆகமத்தை வாசித்து அருளிச் செய்யவேண்டும்" என்று அரசர் சொல்ல, "வாசனையுடைய பூமாலை யணிந்த தேவியாரும் இவ்விடத்துநின்று நீங்கவே, நானும் நீயும் தனியாகிய இடத்தில் இருத்தல் வேண்டும்" என்று அவன் சொல்ல, அரசர், ௧௩

480. (இ - ள்) வெளிப்படை. திருமகளே இவர் என்று சொல்லத்தக்கவாறு அங்குநின்ற தேவியாரைப் பார்த்து அந்தப்புரத்தினிற் போகும்படி மனதார எண்ணி ஏவியபின், புனைந்த தவவேடமுடைய அவனை ஆசனத்தின்மேல் இருக்கும்படி செய்து, தாம் இருநிலத்திலே வீற்றிருந்து கொண்டு, துதித்து, " இனி அருள்செய்ய வேண்டும் " என்றார். ௧௪

479. (வி - ரை) **பேறு எனக்கு இதன்மேல் உண்டோ?** - ஆகம ஞான உபதேசத்தின் மிக்க பேறு இல்லை, எல்லா நலன்களிலும் மிக்கதாகிய வீடுபேற்றைத் தருதலான் என்பதாம். இங்கு இவன் செய்யும் செயல் பாதகமேயாயினும், அது நாயனார் கொண்ட அன்பின் திறத்தாலே அப்பயனையே விளைத்து, "அருட்கழ னீழல்சேரக் கொண்டவா றிடையறாமற் கும்பிடுங் கொள்கை" (489) யினையே பயந்ததும் காண்க.

மாறில் ஆகமம் - எதிரும் இணையும் இல்லாத ஆகமம். தமக்குள் ஒன்றற்கொன்று மாறுபடாத வேதங்கள் தாமும் இறைவனருளியனவேயாயினும் அவை உயிர்களின் பக்குவபேத நோக்கிப் பல தெய்வங்களையும் பேசும். அவை வெளித்தோற்றத்தில் மாறுபடுவனவாகக் காணப்படினும் ஞானசாரியார்களால் ஒப்புக் காணத்தக்கன. ஆயின் ஆகமங்களோ அவ்வாறன்றி எவ்வாற்றானும் தமக்குள் மாறுபடாதனவும், முழுமையும் உண்மையேயாகி உண்மை நிலையிற் சிறிதும் மாறுபடாதனவுமாம்.

வாசித்து அருள் செயவேண்டும் - முன்னர் அவன் இயம்பக் கொடுவந்தேன் (478)என்றமையால் அவ்வாறே வாசித்துப் பொருள்கூறி உபதேசித்தருள்புரிக என்றார்.

மாது தவிரவே - மாதும் இங்கு நின்று நீங்கவே. எச்சஉம்மை தொக்கது. சிறப்பும்மை தொக்கது என்றலுமாம். **வேறு இடம்** - தனியிடம்.

இனி, **பேறெனக் கிதன்மே லுண்டோ** - இப்போது நீ எண்ணிய வஞ்சனையை முடித்துவிடப் போகின்றாயாதலின், இதுவரை நாயன்மாரை வழிபட்டு வந்த பேறு எனக்கு இனிமேல் உளதாகுமோ? இல்லை எனவும்; **நாறு பூங்கோதை மாது தவிர** - மாது கோதை தவிர - அதாவது நாயனார் அருட்கழனீழல் சேரப்போகின்றமையால் இவ்வுலக நிலையிலே பூமாலை சூடும் தன்மை (சுமங்கலித்துவம்) தேவி தவிர்வாராக எனவும்; **நானும் நீயும் வேறிடத்திருக்க வேண்டும்** - இச்செயலின் பின், நான் சிவனடியார்பால் அபசாரப்பட்ட பெரும் பாவத்திற்காக எரிவாய் நரகத்திற் புகவும், நீ இறைவனருட்கழ னீழலாகிய பேரின்பத்திற் புகவும் ஆக, இங்கு ஓரிடத்திலிருந்த நாமிருவேமும் இனி வெவ்வேறான இடங்களில் இருக்கவேண்டும் எனவும், இப்பாட்டு

முழுமையும் முற்குறிப்பு எனும் தொனிப்பொருளுடன் மிளிர்வது காணத்தக்கது. **வேறிடம்** - வெவ்வேறிடம். "இருவரும் வேறு வைகி" (366) என்றதுங் காண்க. 13

480. **(வி - ரை) திருமகள் என்ன நின்ற தேவியார்** - பட்டத்துக்குரிய அரசமா தேவியாராதலின், அரசு - செல்வம் - வீரம் - முதலியவை அதிட்டிக்கும் ஐசுவரியம் பலவும் உருப்பெற்று இவரிடம் சேர்தலாலே திருமகளே இவர் என்று சொல்லத் தக்கவர். அந்தப்புரத்திடைப் போகப் புரிவுடன் விரைய ஏவி என மாற்றுக. **புரிவுடன்** - ஆகம நூல் உபதேசத்தின் உறுதிப் பயனைச் சிந்தித்து என்க. **விரைய** - உபதேசம் தாழ்க்காதபடி விரைய ஏவினார். அந்தப்புரத்திடை விரையப்போக என்று கூட்டியுரைத்தலுமாம். இச்சரித நிகழ்ச்சியில், இனி,இவற்றினின்றும் விலகி அந்தப்புரத்திடையே போய் நிற்கும் நிலை தேவியாரடைதலும் குறிப்பு.

தரு தவ வேடம் - இயல்பானன்றி வஞ்சனையாற் புனைந்து தானே தந்துகொண்ட தவ வேடம். நாயனார்க்கு அருட்கழனிழல் சேர்ந்து இடையறுமற் கும்பிடும்கொள்கை **தரும் தவ வேடம்** என்பது குறிப்பு.

தவிசின் மேலிருத்தித் தாமும் இருநிலத் திருந்து - இஃது ஆசாரியனிடத்து ஞானோபதேசம் பெறும்போது விதிப்படி இருக்கும் நிலை. **தாமும் இருந்து** - அடியார் முன் நின்று பணிகேட்கு மியல்புடைய தாமும், உபதேச மொழியினை இருந்து கேட்கும் நிலைபற்றி, அவ்வாறு நில்லாமல் அமர்ந்திருந்து. உம்மை - எச்சவும்மை. **போற்றி** - உறுதிப்பயன் றரும் உபதேசம் பெறுமுன் ஆசாரியரைத் துதித்தல் முறை.

பரிவுடன்—என்பதும் பாடம். 14

481. கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தக மவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதிற்
பத்திரம் வாங்கித் தான்முன் னினைந்தவப் பரிசே செய்ய
"மெய்த்தவ வேட மேமெய்ப் பொரு"ளெனத் தொழுது வென்றார். கரு

(இ - ள்) வெளிப்படை. கையில் வைத்திருந்த வஞ்சனையாகச் செய்த புத்தகப் பையை மடிமேல் வைத்துப் புத்தகத்தை அவிழ்ப்பவன் போல அவிழ்த்து, அவர் வணங்குஞ் சமயம் பார்த்து, அதனுள்ளே கரந்து வைத்திருந்த படையை எடுத்து ஓங்கித் தான் முன்னர் நினைத்து வந்த அவ்வண்ணமே செய்தானாக; "உண்மைத் தவவேடமே மெய்ப்பொருளாம்" என்று தொழுது வென்றார் (அரசர்).

(வி - ரை) வஞ்சக் கவளிகை - வஞ்சனையாற் புத்தகப்பை போன்று செய்த **கவளிகை** - ஈறுகெட்டு முன்னர்ப் "படைகரந்த புத்தகக் கவளி" (473) என வந்தது.

போன்று - போன்றிருந்து - போலப்பாவனை செய்துகொண்டிருந்து. **புரிந்தவர்** - புரிந்த அவர் என்றது புரிந்தவர் என நின்றது. **புரிதல்** - இடைவிடாது நினைத்தல். விரும்புதலுமாம். "வேடமே சிந்தை செய்வார்" - (468).

புரிதல் - செய்தல் எனக் கொண்டு, மேலே சொல்லியவாறு அரன்பணியும் அடியவர் பணியும் செய்தாரும், இவ்வஞ்சகனையும் காலபேதம் முதலிய எதனையும் நோக்காது வேடமே கருதிப் பணிந்து நூல் கேட்கத் துணிந்தாரும் என்றலுமாம்.

பத்திரம் - படை. **வாங்கி** - விசையில் ஓச்சி. எடுத்து என்றலுமாம்.

தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய - சிவனடியார்களுக்கு வரும் ஏதங்களைத் தம் வாக்கினாலும் சொல்லலாகாது என்பது ஆசிரியர் மரபு. இங்குப் பகைவன் நாயனார்பாற் செய்த தீங்கினைச் சொல்லலும் மாபாவம் என்று கொண்டு **அவன் நினைத்தபடியே செய்தான்** என்ற ஆசிரியரின் மனப்பான்மையும் உறுதிப்பாடுங் காண்க.

இவ்வாறன்றிக் கொலையைத் தம் வாக்காற் சொல்லலாகாது என்றது ஆசிரியர் கொள்கை எனக் கூறுவாருமுண்டு. கொலையையும் போரையும் வேட்டையையும் இயற்பகை நாயனார், புகழ்ச்சோழ நாயனார், கண்ணப்ப நாயனார் புராணங்களிலும் பிற இடங்களிலும் ஆசிரியர் விரிவாய்க் கூறுதல் காண்க. ஆதலின் அடியவர்க்கு வரும் ஏதத்தை விரித்துக் கூறலாகாதென்பதே ஆசிரியரின் கொள்கை என்க. "முன் னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்" (40) என்ற ஏனாதி நாயனார் புராண மும் பிறவுங் காண்க.

"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" - இது நாயனார் கொண்டொழுகிய கொள்கையும், அப்போது எண்ணிய எண்ணமும், சொன்ன மொழியுமாம். உண்மைத் தவவேடம் என்று பேசப்பெற்ற திருநீறு - சடைமுடி - முதலியவற்றைப் பூண்ட சிவத் திருவேடமே மெய்ப்பொருளாம். மெய்த்தவ வேடம் - மெய் - சத்தாகிய நித்தப் பொருள்; மெய்ப்பொருள் - மெய்யினை - சத்தினை அடைவிக்கும் பொருள். வேடமே பொருளாவது; ஏனைய பொருளல்ல என்பதாம்.

தவவேடம் - நீறு, கண்டிகை, சடைமுடி என்ற மூன்றையும் அரசர் திருவேட மாக் கொண்டு மூர்த்தி நாயனார் அரசாண்டதுவும் இங்கு நினைவு கூர்க. "மாலற நேய மலிந்தவர் வேடமும், ஆலயந் தானு மரனெனத் தொழுமே" என்ற சிவஞானபோதம் 12-ம் சூத்திரத்தில் இத் திருவேடத்தி னியல்பும் திருவேட வழிபாட்டின் பயனும் விரித்துரைக்கப்பெற்றதாம். விரிவு ஆண்டுக் காண்க.

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொன்
மேய செவ்வாயும்"

உடைய திருநாவுக்கரசு நாயனாரை "அந்தமிலாத் திருவேடத் தரசு" என்றதும், இத் திருவேடங் கண்ட ஆளுடைய பிள்ளையார் "தொண்டர் திருவேட நேரே தோன் றியதென்று தொழு"தனர் என்றதும் காண்க.

இத் திருவேடங்கள் நித்தனாகிய இறைவனது திருமேனியிற் றரிப்பவையாதலால் இவையும் நித்தப் பொருளாம். திருநீறு மாசங்கார காலத்தில் இறைவன் றிருமேனியிற் றரிப்பது. இவற்றைக் கண்டபோது இறைவனது இயலும், அவனது அழியாத் தன்மையும், உலகத்தின் அழியுந் தன்மையும், பிறவும் தோன்றும். தோன்றவே அவன்பால் அன்புகொண்டு உயிர் உறுதிப்பயன் பெறும்.

திருநெல்வாயிலரத்துறையிலே இறைவன் அருளிய முத்துச் சிவிகையினைக் கண்ட ஆளுடையபிள்ளையார் அதனிற் போந்த திருநீற்றி னொளியினை வணங்கினார் என்பதும் காண்க. "சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார், மீது தாழ்ந்துவெண் ணீற் றொளி போற்றிநின்று" - திருஞான - புராணம் 216.

மழையினால் உவர்மண் கரைந்து மேனி வெளுத்த வண்ணான் தம்மெதிரே வரக் கண்டபோது அதனைத் திருநீற்றுவேடமாகக் கொண்டு யானையினின்றும் இறங்கி அவனைச் சேரமான்பெருமாணயனார் வணங்கினார்; அவன் "யாரென் றடியேனை எண்ணி யது ? அடியேன்அடி வண்ணான்" என்னச், சேரர் பிரான் "அடியேன் அடிச்சேரன் ; திருநீற்று வாரவேட நினைப்பித்தீர் வருந்தா தேகும்" என்றார் எனச் சரிதங் கூறுவதும் காண்க (சேரமான் பெருமாணயனார் புராணம் - 17, 18, 19.) "ஆனையாமென நீறுகண் "டடிச் சேர" னென்னும், சேனு லாவுசீர்ச் சேரனார்" (திருக்குறிப்பு - புராணம் - 4) என்று இதனையே ஆசிரியர் விதந்தெடுத்தோதுதலுங் காண்க.

மெய்ப்பொருள் - உண்மைத் தன்மையை - அழியா நிலைமையை - அடைவிப்பது.

" ஞானத் திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மே
லூனத் திரளை நீக்குமதுவு முண்மைப் பொருள் போலும் "—தக்கேசி - 3

என்ற ஆளுடைய பிள்ளையாரது திருவண்ணாமலைத் தேவாரமுங் காண்க.

" இனிப் பத்தாது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக்கண்டு வழிபடுக " வென்றவிடத்து, (சிவஞானபோதம் - 12-ம் சூத்திரம் - மூன்றாமதிகரணம்) மெய்யுணர்வுடையார்க்கு எவ்விடத்தும் பாகுபாடின்றிப் பரமேசுரனெனக் காணுதலே பொருத்த முடைமையாலும், நின்ற திருத்தாண்டகம் முதலியவற்றுள்ளும் அவ்வாறே அருளிச் செய்தலாலும், வேதத்திலே திருவுருத்திரத்தினுள் பகுப்பில்லாது உயிர்ப் பொருள் உயிரில்லாப் பொருள்களை யெல்லாம் தனித்தனி எடுத்து ஓதி வழிபாடு கூறு கின்றமையாலும் இங்கு இவ்விடங்களில் மாத்திரையே பரமேசுரனெனக் கண்டு வழி படுக என்று கூறியது எங்ஙனம் பொருந்துமெனும் ஆசங்கையை எடுத்துக்கொண்டு, அதற்குச் சமாதானங் கூறும் வகையிலே " அவன்மற் றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே, அல்லாதவிடத் தப்பிரகாசமாய் நிற்றலான் " என ஏதுக் கூறியதும் காண்க. அதாவது முதல்வன் எங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டிடத்து மாத்திரையே தயிரி னெய்போல விளங்கி நிலைபெற்று, ஏனையிடங்களிற் பாலினெய்போல வெளிப் படாது நிற்கின்றானுதலா லென்றதாம்.

" வாக்கு மனாதீதமாய் நின்ற பரம்பொருள் உலகத்தார் தன்னை அறியும்படி கருணைசெய்து தனது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன்னன்பர்க்குக் கொடுத்து அவர்களிடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குதலானும், அவர் தம்மைச் சோகம்பாவனையால் உணரச் செய்தலானும், அவரை ஒரு குறியின்க ணிறுத்தித் தனது வியாபகத்துக்குள்ளாக இருத்துதலானும், குறியிறந்து நின்று தன்னை உள்ளவாறுணரும் அன்பாளராகிய அவர்மாட்டுத் தயிரின் கண்ணதாகிய நெய் போல விளங்கித் தோன்றும்; பாசக் கட்டுடையார்க்கு இவ்வியல்பில்லாமையான் அவர்மாட்டுப் பாலின் கண்ணதாகிய நெய்போல விளங்காது நிற்கும் " என்று உதாரணத்தினுள் எமது மாதவச் சிவஞான சுவாமிகள் மாபாடியத்துள் விரித்துள்ள தும் காண்க. இங்கு நாயனார் சீவன்முத்தராதலின் வேடத்தைச் சிவனென வழி பட்டனர். சீவன்முத்தரது செயல்களைப், பிறர் எவ்வா றுணரவல்லார்? இங்கு நாயனார் வேடத்தினையே வழிபட்டனர். அவ்வேடந் தாங்கிவந்தவனைப் பொய் தவ வேடங் கொண்டு வந்தவனும், பன்முறை யிழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போன பகைவனுமான முத்தநாதனென்று கொண்டாரல்லர். வேடத்தைக் காணாது வேடங் கொண்டானைக் காணும் உலகர் இதன் தத்துவ முணரமாட்டார் என்க. கலிக்கம்ப நாயனார் சரித உள்ளுறையும் இங்குக் காண்க.

தொழுது - வேடத்தினை அரனெனத் தொழுது வழிபட்டு.

வென்றார் - அவ்வேடந் தாங்கி வந்த முத்தநாதனது வஞ்சகத்தினை வென்றார்.

அன்பர் கருத்தறிந்து ஏவல் செய்தும் (467), அன்பர் வேடமே சிந்தை செய்தும் (463), அவ் வேடத்தார்க்குக் குறைவறக் கொடுத்துவந்தும் (470), ஒழுகிய தமது கொள்கை நிலையினின்றும், தாழாது தம்முயிர்க்கிறுதி வந்த இந்தச் சமயத்திலும், திண்மையுடையராய் நின்று வெற்றியடைந்தனர். பகைவனோ தனது நிலையினை விட்டு இவரது கொள்கையினுட்பட்டுத் திருவேடந் தாங்கி வந்தமையினாலே தோல்வியே பெற்றான். இச்சமயத்து நாயனார் இவ்வாறு வேடத்தினையே மெய்ப் பொருள் என்று கொள்ளாது வேடந்தாங்கியவனைத் தமது பகைவன் என்று கொண் டிருப்பாராயின் அவர் கொள்கையினின்றும் வழுவித் தோற்றவராவர் என்பதாம்.

இக்கருத்தினையே " வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள் " என்று முதனூல் மிக அழகாகப் பேசிற்று. படைகொடு போரிலே வென்றார்; வேடங் கொண்டு வஞ்

சனையினும் வென்றார். முன்னையதில் அடர்த்து வென்றார்; பின்னையதில் **தொழுது வென்றார்** என்க. "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந், தகுதியான் **வென்று விடல்**" எனுந் திருக்குறளுக் கிலக்கியமானதுங் காண்க.

இக்கொள்கையினை இன்னும் விரிவாக ஏனாதி நாயனார் புராணத்தும் காண்க. 15

482. மறைத்தவன் புகுந்த போதே மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி வாளினா லெறிய லுற்றான்;
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையாற்
றறைப்பட லளவிற் "றத்தா! நமர்" எனத் தடுத்து வீழ்ந்தார். கசு

(இ - ள்) வெளிப்படை. மறைத்தவன் உள்ளே புகுந்த போதே, அங்கே மனம் வைத்துப் பார்த்திருந்தவனாகிய **தத்தன்** மிக விரைவில் அவ்விடத்திற் கூடி வாளினாலே அவனை வெட்ட முற்பட்டான்; மிகவும் இரத்தம் பெருகுதலால் விழுகின்றவராகிய நாயனார், தாம் தரையில் வீழ்கின்ற அந்த அளவுக்குள் தமது நீண்ட கையினால் **"தத்தா! நமரேகாண்"** என்று சொல்லி அவன் செய்கையைத் தடுத்து வீழ்ந்தார்.

(வி - ரை) **மறைத்தவன்** - (1) மறைத்தவன் - மறைகளிற் சொல்லிய தவத்திரு வேடந்தாங்கியவன்; (2) தவவேடத்திற்குள்ளே தன்னை மறைத்துக்கொண்டவன்; (3) "நின்றிடு நீயும்" என்று தன்னையு மறுத்துப் புகுந்தவன் எனப் பலவும் உரைக்க அமைத்த அழகு காண்க. இவையே மனம் அங்கு வைக்கக் காரணமாயின என்க.

அங்கு மனம் வைத்த என மாற்றுக. **மனம் வைத்தல்** - அதுவே கருத்தாக மனத்துட் கொள்ளுதல். "பொன்னடிக்கே **மனம் வைத்த** புகழ்த்துணை" என்பது திருத்தொண்டத்தொகை.

இறைப்பொழுது - கணப்பொழுது - நொடி - மாத்திரை. இது தனது காவற் கடமை செய்வதில் தத்தனுக் கிருந்த தீவிரதரம் உணர்த்துகின்றது.

நிறைத்த செங்குருதி சோர வீழ்கின்றார் - முத்தநாதன் பத்திரம் வாங்கிச் செய்த செயலால் நாயனாரது திருமேனியினின்றும் நிறையக் குருதி சோர்ந்து, அதனால், அவர் வீழ்கின்றாராக. **செங்குருதி** - செம்மை இயற்கை யடைமொழி. **குருதி** - செம்புண் ணீர். **சோர** - சோர்தலால்; **குருதி சோர்தல்** - இரத்தம் வடிதல். உடலினின்றும் இரத்தம் பெருக வெளிவருவது மிக்க அயர்ச்சிக்கும், இறுதியில் இறப்புக்கும் காரண மாம் என்பது உடல் நூற்றுணிபு. Death due to Hemorrage and loss of blood என்பர் நவீன மருத்துவர். இரத்தம் உயிர் நிலைப்பதற்கு ஆதாரவாம்; அதன் கழிவு உயிர் போதற்குக் காரணமாம் என்பர். இரத்தத்தை Life blood என்ற ஆங்கில வழக்கும் காண்க.

வீழ்கின்றார் - உபதேசங் கேட்கத் தாம் இருநிலத்திருந்தவர் அவ்வாறிருக்கவுமாட் டாதவராகிக், குருதி சோர்தலால் தரையிலே வீழ்வாராயினவர். நிகழ்கால வினையா லணையும் பெயர். வீழ்கின்றாராகிய நாயனார் (தடுத்து) வீழ்ந்தார் என்ற வினைமுற்றுக் கொண்டு முடிந்தது. வீழத் தொடங்கிய அவர் வீழ்தலாகிய அச்செயல் முற்றுமுன், தத்தனைக் கையாற்றடுத்துவிட்டு அதன் பின் வீழ்ந்தார். வீழ்தலின் தொடக்கத்துக் கும் முடிவுக்கு மிடையில் தடுக்கும் சொல்லும் செயலும் நிகழ்ந்தன. குருதி சோர வீழ்கின்ற அந்நிலையினும் அவரது மனம், மொழி, மெய் என்ற முக்கரணங்களினுடைய, நினைக்கவுமரிய, உண்மை நிலையினை இவை காட்டியவாறு கண்டுகொள்க.

நீண்ட கை - கை நீண்டிருத்தல், அரசுச் செல்வமுணர்த்தும் உறுப்பிலக்கணமென வும், அது வள்ளற்றன்மை குறிக்கும் எனவும் கூறுவர். ஆஜானுபாகு - என்பது வடநூல் வழக்கு. பெருங் கொடையாளியைப்பற்றிப் பேசுவோர் "அவனுக்குக் கை நீளம்" என்று கூறுவதும் ஒரு பழமொழியாயிற்று. **நீண்டகை** என்பது இங்குக் **துறைவறக்**

கொடுத்து வந்த (470) கொடையிற் சிறந்த கை என்க. இங்கு நாயனார் திருவேடத் தாரின் குறிப்பின்படி தம் உயிரினையே ஒப்புக்கொடுத்ததுமன்றி, அவ்வஞ்சகனுக்கு உயிர்ப்பிச்சையுங் கொடுத்தலின் இவரது மிக்க வள்ளற்றன்மையின் மிக்கதுமுண்டோ? அதுபற்றியே **நீண்டகை** என இங்குச் சிறப்பித்தவாறு.

தத்தா ! நமர் - " தத்தனே ! நீ இவரை வேற்றவர் என்று கருதி வாளினால் எறியலுற்றாய். அற்றன்று. இவர் நம்மவரே " என்று வாக்கினாற் கூறினார். ஆதலின் நீ உன் செயலினைத் தவிர்தி என்பது குறிப்பு. அதனைக் கையினாற் செய்து முடித்தார் என்க. **என** - வாக்கினாற் சொல்லிக், கையாற் **றடுத்து** என்று கூட்டுக.

தத்தாநமர் - நமர் - நம்மவர் என்றது **நமர்** என நின்றது. இது பழஞ் சாசன வெட்டுக்களிற் கண்ட தொடர். இராசராசச் சோழர் எடுத்த தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயிலில் அமைத்த நாயன்மார் படிமங்கள் பலவற்றில் இந்நாயனார் திருவுருவமும் ஒன்றாம். இதனில் "**தத்தா நமரே காண் என்ற மெய்ப்பொருளனார்**" என்று பெயர் பொறித்துள்ளார். இச்சொற்றொடரை வகைநூலாரும் " தத்தா நமரே ! எனச் சொல்லி " என்று எடுத்தாண்டுள்ளார். இதனையே ஆசிரியர் இங்குத் தலைப் பெய்து வைத்தனர். சரித்திரத்தின் முன் ஆதாரவுகளை ஆசிரியர் போற்றும் அரிய முறை காண்க. நாயனார் இங்குச் செய்த அரிய செயல் " கொல்லாமை ", " எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமை"," அஹிம்சை" என்ற பொது அறத்தின் பாற்படும் என்று ஆராய்ச்சி செய்வாருமுண்டு. வேதங்களில் விதித்த " தர்மம் சர", " அஹிம்சா பரமோ தர்மா " என்ற அறங்கள் வேறு; " கொல்லாவிரதம் ", "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்துவிடல்" முதலியனவாக நமது பெரியோர்கள் விதித்தனவும், " ஒரு கன்னத்தில் ஒருவன் அடித்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு" முதலியனவாகப் பிறநாடுகளிலும் பிறரும் உரைத்த உபதேசங்களும் இவ்வாறே வேறாவன. இங்கு நாயனார் " தத்தா! நமர் " எனத் தடுத்ததின் கொள்கை வேறு. இவைகள் ஒன்றாக மயங்கி உணரற்பாலனவல்ல. முன்னே குறித்தவை சாமானிய உலக நீதியாகிய **பசு** தருமங்கள். இங்கு நாயனார் செயலுக்கு அடிப்படையாய் நின்றது "திருவேடமே மெய்ப்பொருள்" என்றும், "திருவேடத்தார் கருத்தறிந்து ஏவல் செய்தல்" என்றும் கொண்ட கொள்கையைக் காத்தலாகிய **பதி** தருமம். இந்நாயனார்பால் முன் எதிர்த்துப் போர்செய்த இந்த முத்தநாதன் தனது யானை முதலிய சேனைகளைப் " பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப்பட்டுப் போனான் " என்பதனையும், அந்தப் போர்களில் எத்தனை பேர் உயிர் துறந்தனர் என்பதனையும் இங்கு நினைவு கூர்ந்தால் நாயனார் கொண்ட அறத்தின் உண்மைநிலை புலப்படும். திருவேடந் தாங்காது வந்திருப்பின் முத்தநாதன் நிலை எவ்வாறிருந்திருக்கும் என்பதைச் சிந்திப்பின் இவற்றின் வேறுபாடு நன்கு புலனாம். சாமானிய உலக நீதிகளின் மேம்பட்டு, உலகிறந்த சிவபுவனத்திற் சஞ்சரித்து, வெளிப்பார்வைக்கு மட்டும் உலகர் போல, உண்டுடுத்து, அரசர்முதல் ஆள்வரை பல நிலைகளிலும் வாழ்ந்து, உலகை வாழ்வித்த எந்தம் பெருமக்களின் வாழ்க்கை நிலையினை உலக நீதிகளான அற விதிகளைக் கொண்டு அளத்தல் நம்மை உண்மை நெறியினின்றும் வழுக்கிவிடுவதனோடு அபசாரத்திற்கும் இடம் தரும். 16

483. வேதனை யெய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனுந் தத்தன் றானுந் தலையினால் வணங்கித் தாங்கி
"யாதுநான் செய்கே?" னென்ன, "வெம்பிரா னடியார் போக
வீதிடை விலக்கா வண்ணங் கொண்டுபோய் விடுநீ" யென்றார். ௧௭

(இ - ள்) வெளிப்படை. வேதனைப்பட்டு வீழ்ந்த அரசர் கட்டளையினாலே இவ்வாறு தனது செய்கையினின்றும் தடுத்து விலக்கப்பட்ட அடிமையாகிய தத்தனும்,

அரசரது ஏவலைத் தலையால் வணங்கி ஏற்று அதன்படி அமைந்து நின்றவனாய், வீழ்ந்த அரசரைத் தாங்கி அணைத்துக்கொண்டு, "யாது நான் செய்தல் வேண்டும்" எனப் பணிவுடன் கேட்க "எம்பிரானுடைய அடியாராகிய இவர் திரும்பிச் செல்லும் வழியில் எவரும் மேற்சென்று வழி தடுக்காத வகையிலே காவல்புரிந்து இவரைக் கொண்டுபோய் நீ விடுவாயாக" என்று சொன்னார்.

(வி - ரை) **வேதனை** - சங்கடம். செங்குருதி மிகுதியும் சோர்வதனாலும், முத்த நாதன் செய்கையினாலும் நேரிட்ட துன்பமும் சோர்வும்.

விலக்கப்பட்ட தாதன் - நமர் என வாயினாற் சொல்லியும், நீண்ட கையினாற் றடுத்தும் விலக்கப்பெற்ற அடியான். தான் துணிந்தபடி முத்தநாதனை வாளினா லெறியும் செய்கையிலிருந்து விலக்கப்பட்ட. **தாதன்** - அடிமை. இது தாசன் என வழங்கும். ஆண்டான் கட்டளைப்படி நடப்பது தவிர அடிமைக்கு வேறு செயலில்லை என்பது குறிப்பு.

தலையினால் வணங்கி - அவரது கட்டளையைத் தலையார வணங்கி ஏற்றுக் கொண்டு. தலையால் வணங்குதல் உடன்பட்டு அமைந்து நிற்கும் அடையாளமாம். ஆங்கிலத்திலும் I bow to your decision என்று கூறும் வழக்கும் காண்க.

தாங்கி - வீழ்ந்த அரசரைக் கையினாலே அமைத்துச் சிரத்தைத் தாங்கி. அவர் இட்ட கட்டளையைச் சிரமேற் றாங்கி என்றுரைப்பாருமுண்டு.

யாது நான் செய்கேன் - நான் இதுவே செய்யத்தக்கது என்று துணிந்து முற் பட்ட செயலைத் தேவரீர் விலக்கிவிட்டீர்; ஆதலின் இனிச் செய்யத்தக்கது யாது? அருள் செய்க என்று கேட்டபடியாம்.

எம்பிரானடியார் - இறைவனடியாராகிய இவர், சுட்டுத் தொக்குநின்றது. முன் நின்ற இவரே யன்றி, இனி எந்த அடியவரேயாயினும், அவர் கருத்துப்படி போதற் குற்ற தடைவிலக்கி வழிவிடுக என்று இனிவருங் காலத்திற்கும் ஏற்குமாறு உபதேசித் துக் கட்டளையிட்ட குறிப்புமாம். "பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" (488) என்று அரசர் **ஆயத்தார்க்கும் - காதலார்க்கும்** வெளிப்படையாக இவ்வாறு உபதேசித் தமை பின்னர்க் காண்க. ஆதலின் தாதனாகிய தத்தனுக்கும் அதுவே கட்டளையாயிற்று.

போக - அவர் கருத்துப்படியே போக. **மீது** - அவரது செலவில் குறுக்கிட்டு இடை யூறாக இவர்மீது. **இடைவிலக்கா வண்ணம்** - வழிமறித்துத் துன்பஞ் செய்யாதபடி.

கொண்டுபோய் - இப்பணியைப் பிறர்பால் விடாது நீயே கூடச் சென்று காவல் புரிந்துகொண்டுபோய் என்க. தனித் தடையாகிய அணுக்கன் வாயில் காப்போனாய், அரசரது நம்பிக்கைக் குரியவனாய், அறிவும் வீரமும் உடையானாய் உள்ளானாதலின் நீயே கொண்டுபோய்விடு என்றார். **நீ** - நீயே. பிரிநிலை ஏகாரம் தொக்கது. **விடு** - காவ லாய் விட்டு வருக. **விட்டபின்** (485), **விட்டனன்** (487), என்பனவுங் காண்க. **விட்ட பின்** (485) என்பதன்கீழ் விசேட உரை பார்க்க. 17

484. அத்திற மறிந்தா ரெல்லா "மரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் றன்னைக் கொல்வோ" மெனப்புடை சூழ்ந்த போது
தத்தனு மவரை யெல்லாந் தடுத்துடன் கொண்டு போவான்
"இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை" யென்றான். ௧௮

(இ - ள்) வெளிப்படை. அச்செய்தியை அறிந்தவர்கள் எல்லாம் "எமது அரச னுக்குத் தீங்குசெய்த இந்தப் பொய்த்தவனைக் கொன்றிடுவோம்" என்று எழுந்து பக் கத்திற் சூழ்ந்தபோது, தத்தனும் அவர்களை எல்லாம் தடுத்து, அவனைத் தன்னுடன் கொண்டுபோகின்றவனாய், அவர்களை நோக்கி "இத்தவன் இவ்வாறு(உயிருடன்)போகப் பெற்ற காரணமாவது இறைவனது ஆணையே யாகும்" என்று சொன்னான்.

(வி - ரை) **அத்திறம்** - வேடத்தால் வஞ்சித்த செய்கை.

அறிந்தார் - கேட்டு அறிந்த ஊரவரும் அரசியலாயத்தாரும். **எல்லாம் சூழ்ந்த போது** - எல்லாருக்கும் அரசனிடம் இருந்த அன்பு குறித்தது. **புடை சூழ்ந்த** - சுற்றிலும் கூடி நெருங்கிய. **தடுத்து உடன் கொண்டு போவான்** - இடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு என்ற அரசனாணையின் வழி நின்றான் என்பது குறித்தது.

கொண்டு போவான் - பெயர். என்றான் என்னும் வினைகொண்டு முடிந்தது.

இத்தவன் போகப் பெற்றது இறைவனது ஆணை - "நீங்கள் சூழ்ந்து கொல்லும் வரை நேர்ந்திராது. அங்கு எனது வாளினைத் தப்பி, இவன் அங்கு நின்றும் நீங்கள் பார்க்கும் வரை போகும்படி வாய்த்தது அரசனிட்ட கட்டளையாலாயிற்று. இனிப் போகப் பெறுதலும் அவ்வாறே" என்று குறித்தபடியாம். **இத்தவன்** - பிறர் கூறியது போல இவனும் பொய்த்தவன் என்று கூறவில்லை, தனது அரசர் "நமர்" என்றுகூறிய கட்டளையின் அமைந்தவனாதலின் என்க. இதனையே இவன் "இறைவனதாணை" என்றான். **இறைவன்** - அரசன். முழுமுதலாம் சிவபெருமான் என்றுரைத்து, இவைகள் சிவபெருமானது ஆணையாகிய நியதியின் நிகழ்ந்தன என்ற குறிப்புமாம். 18

485. அவ்வழி யவர்க ளெல்லா மஞ்சியே யகல நீங்கச்
செவ்விய நெறியிற் றத்தன் றிருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவா ளேந்தி யாளாருக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் றன்னை விட்டபின் மீண்டு போந்தான்.

(இ - ள்) வெளிப்படை. (தத்தன் சொல்லிய) அதன் வழிப்பட்டு அமைந்தவர்களாகி அவர்கள் எல்லாம் பயந்து அகல நீங்கினார்களாக, தத்தன் சிறந்த வழியிலே திருநகரத்தைக் கடந்து போய்க், கையிலே கூர்மையுடைய நீண்ட வாளினை ஏந்திக் காவல் செய்து, ஆட்கள் யாரும் அணுக முடியாத காட்டினை அடையவும், அவ்விடத்திலே வெவ்வினைக் கொடியவனாகிய அவனை விட்டு, அதன்பின் மீண்டு வந்தான்.

(வி - ரை) **அவ்வழி** - தத்தன் "**இறைவனதாணை**" என்று சொல்லிய ஆணையின் வழி. அரசனாணையைக் குடிகள் அன்புடன் ஏற்று அதற்குள் எவ்வளவு தூரம் அமைந்து நின்றொழுகினார்கள் என்பது இதனால் விளங்கும்.

அகல நீங்க - புடை சூழ்ந்தவர்கள் இது கேட்டவுடன் முதலில் விலகி நின்றார்கள். பின்னர் அங்கிருந்து நீங்கினார்கள். **அஞ்சியே** - அரசாணைக்கு மாறாக அறியாமையினாலே அவனைக் கொல்ல முற்பட்டோம் என்றும், தவவேடத்தானைக் கொன்று சிவாபராதம் தேடிக் கொள்ள முற்பட்டோம் என்றும் அஞ்சினார்கள். அவர்கள் துணிந்து வந்து "கொல்வோம் எனச் சூழ்ந்த" அவ்வழியினின்றும் அகல என்றுரைத்தலுமாம்.

செவ்விய நெறியிற் றத்தன் - செம்மை நெறியிலே நின்றவனாகிய தத்தன். திருநகர் செவ்விய நெறியிற் கடந்து என்று கூட்டி நகரத்தை நல்ல வழியினாலே கடந்து என்றுரைப்பாருமுண்டு. நகரத்தின் நெறிகள் என்றது தெருக்களை. இவற்றின் செம்மை முன்னர் (474) உரைக்கப் பெற்றது. ஆதலின் மீண்டும் உரைத்தல் அமைவின்றாம். அன்றியும் அத்திருநகரின் நெறிகள் யாவும் செம்மை யுடையனவேயாம். இங்குச் சொல்லியபடி செந்நெறியிலே அமைந்து நின்ற நகரத்தார் பிறரெல்லாரையும் கடந்து என்றலுமாம். இப்பொருட்கு **நகர்** - என்றது நகர மாந்தரை என்க.

திருநகர் - அரசனது தலைநகராதலானும் இறைவனது வீரட்டங்களில் ஒன்றாய திருத்தலமாதலானும் **திருநகர்** எனப்பெற்றது. தன்னையடைந்தார்க்கெல்லாம் அருட்டிருவை அளிக்கவல்ல நகர் என்க.

வடி நெடுவாள் கை ஏந்தி என மாற்றிக் கொள்க. யாரேனும் மிகச்சடுதியில் வந்து தடுக்கக் கூடுமாதலின் அப்போதும் விரைவில் உதவும் பொருட்டு வாளினை உறைநீக்கிக் கையில் ஏந்திக்கொண்டு காவல் புரிந்து. வடி - வடித்ததாற் கூர்மையுடைய.

ஆள் உறக்கானம் - இவனை வழிதடுத்து விலக்கக் கூடியவராகிய எந்த ஆளும் வரக்கூடாத தூரத்தேயுள்ள காடு. இது நகர்ப்புறத்தே உள்ளது. இதனால் அவனைத் தத்தன் நகரங்கடந்தும் பின்னரும் சிறிது தூரம் சென்று காடாரம்பமாகிய இடம் வரை சேமமாகக் கொண்டுபோய் விட்டான் என்பதாம். கானம் - சேதி நாட்டினைக் கடந்த எல்லை என்பாருமுண்டு. அரசனது கிடக்கை நிலையிலே அத்தனை தூரம் சென்று திரும்புதல் கூடாமையின் இது பொருளன் றென்க.

ஆளுறக் கானம் இவன் மனிதர் வழங்குதலில்லாது விலங்குகளே வாழுங் காட்டிற்கே உரியவன் எனும் குறிப்புப் பொருள் பெற நிற்பதும், கொடிய ஒருவனை ஆளில்லாக்காட்டில் விடவேண்டும் என்று பழமொழியாக்க் கூறுவதும் காண்க.

வெவ்வினைக் கொடியோன்-வெவ்வியதீவினையே உருவமாகிய கொடும்பாதகன். வேடமே சிந்தை செய்வாராகிய நாயனார், இவனை "நமர்" என்று கொண்டாராயினும், அது அவரதுகொள்கை நிலையினின்று அவர்காணும் மட்டில் நின்று, அவருக்கு உய்திப் பயன் தருவதற் கேதுவாயிற்று. அன்றி, இவனது உண்மைநிலையைக் குறித்ததன்று. இவனது நிலையினின்று பார்க்கின், இவன் தீவினையாளனாகிய கொடியவனேயாகித் தீவாய் நரகத்திற் புகுதற்கே உரியவனும். ஆதலின் ஆசிரியர் இங்கு இவனை இவ்வாறு கூறினார். (479) உரைபார்க்க.

தன்னை - அவன்தன்னை இவன் விட்டபின் என்றும், இவன்தன்னை அவன் விட்டபின் என்றும் இருவழியும் உரைக்க நின்றது. கொடியோன் தத்தனைவிடுதலாவது - இறைவனதாணையால் இக்கொடியோனையும் காவல்புரிந்து உடன் கொண்டு போய்விடும் நிலையிற் கூடிய தத்தன் அக்கொடியவனது சேர்க்கையின் றும் விடுபடுதல். தன் - அசையென்றெருதுக்கு வாருமுளர்.

விட்டபின் - உண்மையாகவே அவன் விடவேண்டியவன் தான். "ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லார் ; எவ்வுயிர்க்கு மன்பில்லார்; தமக்குமன் பில்லார்; பேசுவதென் ? அறிவிலாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப்பினொடு மிறப்பினொடும் பிணங்கிடுவர் ; விடுநீ;" (சிவஞான சித்தியார் - 12-ம் சூத்திரம்-2) என்ற சாத்திர உண்மையை இங்கு வைத்துக் காண்க.

மீண்டு - அரசரிடம் மீண்டு. அவனது தொடக்கினின்றும் மீட்சியடைந்து என்ற குறிப்புமாம்.

போந்தான் - தத்தன் என்ற எழுவாய் வருவிக்க. 19

486. மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற வாவி தாங்குங்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பி னின்றான். ௨௦

(இ - ள்) வெளிப்படை. மற்றும் தத்தன் காவல் புரிந்து கொண்டுபோயின வஞ்ச வேட முடையான் மேல், எதிர்த்து அடாவருகின்றவர்களை யெல்லாம் தடுத்து விலக்கித், தீங்கு இல்லா வழியிலே விட்டதாகிய நற் சொல்லைக் கேட்பதற்காகவே, சோர்ந்து போய்க் கொண்டிருக்கின்ற உயிரைத், தாங்கியிருந்த அரசர் திருமுன்பு சென்றான், அவ் அரசர் பெருமானது குறிப்பிலே நின்றான் (தத்தன்).

(வி - ரை) மற்று அவன் - மற்று வஞ்சனை வேடத்தான் என இயைக்க. அவன் கொண்டு போன மற்ற வஞ்சனை வேடத்தான் என்பதாம். மற்று - வினை மாற்றுப்

பொருளில் வந்ததாகக் கொண்டு, அங்கே அவன் அவனை விட்டு மீண்டான். மற்று இங்கு அச்சொற்றிறம் கேட்க வேண்டி என உரைத்தலுமாம்.

கொண்டு போன - பிறாற் றுன்பம் சேராமற் காவல் செய்துவிட உடன் கொண்டு போன.

வஞ்சனை வேடத்தான் - திருவேடத்தை வஞ்சனையாலே புனைந்து தாங்கியவன். **தீதிலா நெறியில்** - அரசனைத் தீங்கு செய்தமை பற்றி வேறு எவரும் இவனைக்கிட்டித் தீமை செய்யலாகாத வழியிலே. **தீதிலா** - தீமை வரக்கூடாத.

சொற்றிறம் - திறச் சொல் என மாற்றி நற்சொல் என்று பொருள் கொள்வர். சொல்லினது திறமையாவது நன்மை. அமைச்சர் - சேனைகள் - நகரமாந்தர் முதலிய அனைவரையும் விலக்கிச் செல்லுதல் மிகத் திறமையான செயலாதலின், அவ்வாறு செய்த தத்தனது திறம்பட்ட சொல் என்றலுமாம்.

கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும் - கேட்பதனையே விரும்பி அதன் பொருட்டுத் தம் உயிரைத் தாங்கி நின்ற. ஒரு செய்தியின் உறுதியினை உயிர்க் கீடாகக் கொண்டவர் அது நிறைவேறு மளவும் உயிர் நீங்கார் என்பது ஒரு கொள்கை. அதன் உண்மையை இங்குக் காண்க. **சோர்கின்ற ஆவி** - நிறைத்த செங்குருதி சோர்தலாலே அயர்ச்சி பெற்று வீழ்ந்தார். அதன் பின்னரும் அக்குருதி தொடர்ந்து வெளி வந்து சோரச் சோர அதனுடனே ஆவியும் சோர்ந்துகொண்டு வந்தது. அவ்வாறு சோரும் ஆவியைத் தமது மன உறுதியினாலே சோராமற் றாங்கினார். **தாங்கும் கோற்றவன்** - உடலை விட்டுப் போகும் உயிரைச் சொற் கேட்கும்வரை போகாமல் நிறுத்தித் தாங்கிய வெற்றிப் பாடுடைய சதுராராதலின் அச்சிறப்புத் தோன்ற இங்குக் **கோற்றவன்** என்று குறித்தார். **வெல்லு மாமிக வல்ல** - என்ற முதனூற் சிறப்பு இங்கு மிகக் காண்க. பகைவனைப் போரினும் வென்றார்; அவன் வஞ்சனையையும் வேடந் தொழுது வென்றார்; அதன்மேல் பகைவனைத் தாம் தீங்கு செய்யாது விட்டதனோடு அவனை வாளிறு லெறியலுற்ற தத்தனைத் தடுத்ததும் ஓர் வெற்றியாம். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயஞ் செய்து விடல்" (குறள்) என்ற நீதியின் படியும் இது வெற்றியா மென்க. (இங்கும் விடல் என்றது குறிக்க.) அதன்மேலும் வேறு எவரும் "மீதிடை விலக்கா வண்ணங் கொண்டு போய்விடு" என்று பணித்தது அதனினும் பெரிய வெற்றியாம். அதன்பின் அவ்வாறு விட்ட சொற்றிறங் கேட்கவேண்டிச் சோர்கின்ற ஆவியைப் போகாமே தடுத்துத் தாங்கி நின்ற வெற்றியின் பெருமை சொல்லொணாததாம். இதனையே பின்னர் "நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில் என்னுரை செய்தேனை" (490) என்று முடித்துக் காட்டினார் என்க. இந்த வெற்றிகளெல்லாம் குறிக்க இங்குக் **கோற்றவன்** என்ற கவித்துவச் சுவை காண்க.

சென்றான் கோமகன் குறிப்பின் நின்றான் - **நின்றான்** - பெயர். நின்றானாகிய தத்தன் என இறந்தகால வினையாலணையும் பெயராக்கி, (அனையவன்) சென்றான் என முடித்துக்கொள்க. **குறிப்பு** - குறித்த கொள்கையின் கட்டளை. **சென்றான்**; (அது முடித்தபின்னர், மேலும் அவரது குறிப்பு அறிய) முன்னர் **நின்றான்** என இரண்டையும் வினைமுற்றுக்களாகக் கொண்டுரைப்பாரும், **சென்றான்** என்பதை முற்றெச்சமாக்கிச், சென்றானாகி - போய் - என்றுரைப்பாரு முண்டு. 20

487. சென்றடி வணங்கி நின்று "செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்" னென்று கூற,
"வின்றெனக் கையன் செய்த தியார்செய வல்லா" ரென்று
நின்றவன் றன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார். உக

(இ - ள்) வெளிப்படை. சென்று அரசரை அடிவணங்கி நின்றுகொண்டு, "செய்த தவவேடங் கொண்டதனாலே வென்றவனைக் காவல்செய்து, கட்டளைப்படி கொண்டுபோய் விட்டனன்" என்று (தத்தன்) சொல்ல, "இன்று எனக்கு ஐயனாகிய நீ செய்ததுபோல யாவர் செய்யவல்லவர்?" என்று (அவனுக்கு நன்றி கூறுமுகத்தால்) நன்மொழி கூறி, (வணங்கி) நின்றானாகிய அவனை நோக்கி, நிறைந்த பெருங் கருணை கூர்ந்தார் (அரசர்).

(வி - ரை) அடிவணங்கி நின்று - சென்றவுடனே அரசர் முன்பு முறைப்படி கீழ் வீழ்ந்து வணங்கிப் பின் எழுந்து நின்றுகொண்டு.

செய்தவ வேடங் கொண்டு - செய் - வேடம் - (முத்தநாதனிடத்து) இயல்பாய் மேற்கொள்ளப்பெறாது வஞ்சிக்கப் புனைந்து செய்துகொண்ட வேடம் (473). (நாயனாரிடத்து) அன்புடையாரிடத்து வசீகரித்தலைச் செய்கின்ற திருவேடம்.

கொண்டு வென்றவன் - வேடத்தினைத் துணை கொண்டு வென்றவனாகத் தன்னை எண்ணிக்கொண்டவன். முத்தநாதன் - படைகொண்டு இகலினால் வெல்ல மாட்டான், அற்றத்தில் வெல்வானாக எண்ணி வந்தவன், முன் நினைந்த அப்பரிசே செய்தானாதலின் தான் கருதியபடி வென்றவனாகவே தன்னை எண்ணிக் கொண்ட அவன். உண்மையில் அவன் வென்றவனல்லன் என்றபடியை அரசர் பணிக்க அறிந்து கொண்டவனாதலின் அதனை இங்குக் குறிப்பிட்டுக் கூறினான் தத்தன். பகைவனது வஞ்சச்செயல், வேடத்தின் துணையானே முற்றிய பின்னும் அவ்வேடத்தின் துணை யானே அவன் உயிருடன் தப்பிப் போகவும் கூடியது என்ற செய்தி இன்னும் தத்த னுடைய மனத்தில் ஊன்றி நின்றமையாலே அதனையே சுட்டினான் என்றலுமாம்.

இன்று - எனக்கு - ஐயன் - செய்தது - யார் - செய - வல்லார்? - இதுபோழ்து அரசர் கூறிய இந்த நன்மொழியில் ஒவ்வொரு சொல்லும் மிகப் பொருத்தமும் பொரு ளாழமும் உடைமை குறிக்க.

இன்று எனக்கு - நான் வன்மையனாய் அரசியலில் வீற்றிருக்கும்போது அச்சம் - தந்நலம் முதலிய பல காரணங்களால் யாவரும் என் மொழிவழி நிற்பர்; நான் வலி யிழந்து குருதி சோர வீழ்ந்து சிறிது போதில் ஆவியும் சோர நின்ற இன்று இச்சம யத்தில் என் மொழிவழி நிற்றல் அரிது; ஐயன் பகைவன் என்று வாளால் எறியலுற்ற உன் கருத்துக்கு மாறான இப்பணியை இன்று சொற்கடவாது இயற்றலினால் நீ பெரிய னாயினை; ஐயன் - முன்னிலை குறித்த படர்க்கைச் சொல். பெருமையும் அருமையுங் குறித்தது; தாதனாகிய தத்தனை ஐயன் - என்றது அவன் தம்பாற் செய்து நிறைவேற் றின கடமையின் நன்மைக்காகவும், வேடம் போற்றிய முறையைக் கடைபோகக் காத்தவுதவிக்காகவும் நன்றி பாராட்டிய அருமைப்பாடும் குறித்தது; செய்தது - (சிலர் செய்வேன் என்று சொல்லுவர்; ஆயின் செய்யார்;) நீ சொல்லியபடியே செய்து முடித் தனை; யார்செய வல்லார்? என்ற வினா எதிர் மறை குறித்தது. நீயே செய்ய வல்லாய் என்ற உடன்பாட்டினும், வேறு எவரும் செய்கலார் எனும் எதிர்மறைக் கூற்று உறுதிப் பாடுடையது; யார் வல்லார்? என்ற வினா அதனினும் மிகவும் உறுதி உணர்த்தும் வழக்கு.

என்று - என்று தம் திருவாக்கினாலே அருண்மொழி கூறி; நோக்கி - கண்ணி னாலே அருட்பார்வை செய்து; நிறை பெருங் கருணை கூர்ந்தார் - தம் திருவுள்ள நிறைந்த பெரிய தண்ணருளை அவனிடத்துச் செய்தார். இவை முறையே மொழி, மெய், மனம் என்னும் மூன்று கரணங்களாலும் தத்தனை நாயனார் ஆசீர்வதித்து அரு ளிய தன்மை குறித்தன. தத்தன் பெற்றது பெரும் பேறன்றோ? 21

488. அரசிய லாயத் தார்க்கு மழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் "விதியி னாலே

பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பி" ரென்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். உஉ

(இ - ள்) வெளிப்படை. தமக்குப் பின் அரசியல் நடத்து முறைமையில் வரும் இளவரசர், அமைச்சர் முதலியவர்க்கும், தம்மிடத்துக் காதலால் மனம் வருந்தும் தேவிமார், ஏனைச் சுற்றத்தார் முதலியோர்க்கும், பொருந்திய செய்தியைக் கூறுவாராகி "விதியினாலே பரவப்பெற்ற திருநீற்றினிடத்து வைத்த அன்பினையே சோர்வு வாராது பாதுகாத்து உலகிலே கொண்டு செலுத்தக் கடவீர்" என்று உறுதி மொழிக் கட்டளையைக் கூறியபின், அரசர், திருமன்றிலே அருட் கூத்தாடுகின்ற பூங்கழலணிந்த எடுத்த திருவடியைச் சிந்தித்திருந்தனர்.

(வி - ரை) முன் பாட்டிற் கண்டபடி திருவேடத்தையும் வேடத்தாரையும் காத்து வந்த கொள்கையைக் கடைபோகச் செலுத்துதலே தமது முதற் கடமையாக எண்ணிச், சோர்கின்ற ஆவியைத் தாங்கினார்.

திருவேடத்தின் பின், இரண்டாவதாகத் தமது அரசுரிமைக் கடமையை வைத் தெண்ணியவராய் அரசியலாயத்தாரைக் கொண்டனர்; அதன் பின்னரே தம்பாற் காதலுடைய - உடல் உறவுடைய - தேவிமார் முதலிய சுற்றத்தாரை வைத்தெண்ணினார். இதுபற்றியே, ஆவி சோர்கின்ற இச்சமயத்தில், முதலில் நாயனாரது அருளோக்கத்திற் கிலக்காயினவன் தத்தன் என்று முன்பாட்டிற் கூறிய ஆசிரியர், இப்பாட்டிலே அரசியல் ஆயத்தாரை அதனை அடுத்தும், விரவிய காதலாரை அதற்கடுத்தும் வைத்தோதினார். அடியார் பணி முதலிலும், அரசியலாகிய நாட்டின் காரியம் அதற்குப் பின்னரும், குடும்பப் பொருள் இறுதியிலும் வைக்கற்பாலன என்பது ஆசிரியர் கருத்துமாகும். அரசியல் ஆயத்தாரும் காதலாரும் கொண்டொழுகும்படி அரசர் பணித்ததும் தம் கொள்கையாகிய வேடமே சிந்தித்தலொன்றேயாம் என்பதும் குறிக்க.

அரசியல் ஆயத்தார் - அரசியலைச் செலுத்தும் தொகுதியவர். அரசும் அங்கமு மாகிய யாவும் இதனுள் அடங்கும். இவற்றின் விரிவு திருக்குறள் முதலிய நீதி நூல்களுட் காண்க. **அழிவுறுங் காதலார்** - தம்மிடத்து வைத்த காதலாற் பரிந்து, தம் நிலைக்கழிந்து, இத்தகைய தலைவரைப் பிரிய நேரிடுகின்றதே யென்று கவலைப்பட்டு அழியும் தேவிமார், மக்கள் முதலிய சுற்றத்தார். **ஆயத்தார்** - மக்கள் முதலிய சுற்றத்தார் என்றும், **காதலார்** மந்திரி முதலாயினார் என்று முரைப்பாருமுண்டு.

விரவிய செய்கை - நடந்த செய்தியையும், இனி நடைபெற வேண்டுவதாய்ப் பொருந்திய செய்தியையும் என்க.

விளம்புவார் - எதிர்கால வினையாலணையும் பெயர். சொல்வாராகி. **என்று** என்பதனோடு முடிந்தது.

விதியினாலே - இங்கு நிகழ்ந்த செய்தி விதியின் காரணமாய் விளைந்தது. **விதி** - "திருவேடத்தை அரனெனத் தொழுக" என்று ஆகமம் விதித்த விதி. இதனால் இதுவரை நேர்ந்த செய்தி முற்றும் அடங்க ஒரு சொல்லிற் சுருக்கி அறிவித்ததனோடு அமைதியும் கூறியவாறு. நிகழ்ந்தது என்ற வினைமுற்றுத் தொக்கி நின்றது. நியதிப்படி என்றலுமாம். **விதியினாலே பரவிய** என்று கூட்டி விதிப்படி இதுவரை நான்போற்றி வந்த - என்றுரைத்தலுமாம். நான் - எழுவாய் வருவிக்க. **பரவிய** - வேதங்களாலே பரவப்பெற்ற.

திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர் - திருநீறும் ஏனைத்திருவேடமும் எனுமிவற்றில் வைத்த அன்பின் ஒழுக்கத்தைச் சோர்வுபடாமல் காத்து உலகத்திற் செலுத்தி வருவீர்களாக! இதுவே, இந்த, முடிவுறும் நிலையில் நான் உங்களுக்குச் சொல்லத்தக்க உறுதிப் பொருள். இஃதொன்றனையே ஆயத்தார், காதலார் எனு மிருதிறத்தார்க்கும் அரசர் உறுதி கூறியவாறு காண்க. இஃதொன்றினைக் குறிக்கோளாகக் கொண் டொழுகுதலே அனைவர்க்கும் திருவருளின்பம் தரும் என்பது நாயனாரது துணிபாம்.

வேடத்திற்றலைமை பெற்ற நீற்றினைச் சொல்லவே ஏனைய வேடங்களும் உடன் கொள்ளப் பெறும்.

என்று - என்று சொல்லி. இவ்வாறு தனது கடமைகள் யாவும் நிறைவேற்றிமுடித்துக் கொண்டு, அதன்பின், இறுதியாக. **புரவலர்** - காத்தலின் வல்லவர் - அரசர். இங்கு இப்பெயராற் கூறியது மேற்கூறிய பற்பலவகைக் கடமைகளையும் பாதுகாக்கும் வழியிற் காத்துநின்றமை குறித்ததாம்.

மன்றுளாடும் பூங்கழல் - சிற்றம்பலத்திலே அருட்கூத்தாடும் அம்பலவாணனது அழகிய கழலணிந்த திருவடி. **ஆடும் கழல்** என்றமையால் எடுத்தபாதம் என்க. அதுவே ஆடுகின்ற திருவடியாம்.

இங்கு அரசர் தாம் ஆன்மார்த்தமாய்க் கொண்டு தினமும் பூசித்து வந்த சிற்றம்பலவாணன் திருவடிகளைச் சிந்தித்தார் என்க. முன்னர் "தேடிய மாடு நீடு செல்வமுந் **தில்லை மன்றுள் ஆடிய** - பெருமா னன்பர்க் காவன வாகும்" (470) என்றதும், வரும் பாட்டில் "அவர்முன் நம்மைக் கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி" என்பதும் காண்க. இவ்வாறே கழறிற்றறிவார் நாயனார் சிற்றம்பலவாணனைத் தினமும் பூசித்துத் திருச்சிலம்பொலி கேட்ட சரிதமும் இங்கு நினைவு கூர்க.

இவ்வுடல் விட்டு உயிர் பிரிந்துபோம் பொழுது இறைவனை நினைத்தல் வேண்டும். சாங்காலத்து வரும் எண்ணப்படியே ஒருவன் பின்னர் ஆகின்றான் என்பர். "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைமே லுந்தி, அலமந்த போதா"கிய அப்போது, தனது மரணவேதனையினாலும், அறிவு மயக்கத்தாலும், தன்பிரிவு பற்றித் தன் முன்னின்று, தொடர்புடைய பிறர் படுகின்ற துன்பங் காண்பதாலும், பிறவாற்றாலும் இது எளிதிற் கூடுவதன்று. இதுபற்றியே ஒருவன் இறக்குங்காலத்துச் சூழ இருப்பவர் சிந்தனை முகத்திற்றேக்கி அழுதல் முதலியன செய்யாது தேவாரந் திருவாசக முதலிய அருட்பாட்டுக்களை ஓதிக் கொண்டிருத்தல் வேண்டு மென்று பெரியோர் கூறுவர்.

ஆயின் இவ்வாறு ஆவி பிரியும்போது இறைவனை நினைக்கப் பெறுதல் நெடுங்காலம் இறைவனை எண்ணி யெண்ணி வேண்டிக் கொண்டதன் பலனுக்கே இறைவன் அருளினாற் பெற வேண்டிய தொன்றா மல்லது எவரும் அக்காலத்துத் தாமாகச் செய்து கொள்ளத் தக்கதன்று; பிறர்தர வருவது மன்று. இதன் அருமையும் பெருமையும் பற்றியன்றே, கர்தை மிகையாங் கருத்துடையராய், முழுத்துறவு வேந்தராய், இறைவனிடத்துத் தம்பொருட்டு எவ்வாறும் வேண்டாதவராய் உள்ள எமது பரமாசாரிய ஞான மூர்த்திகளாகிய அப்பர் சுவாமிகளும் இவ்வொருவரத்தினையே பல விடத்தும் இறைவன்பால் மன்றாடி வேண்டினார்.

"அஞ்சும்போ தாக வந்து துணையெனக் காகி நின்று
அஞ்சலென் றருள வேண்டு மாவடு துறையு ளானே,"

"அஞ்சும் போதுநின் னுமைத் திருவெழுத்
தஞ்சந் தோன்ற வருளுமை யாறரே,"

"சாமன் றுரைக்கத் தருதிகண் டாயெங்கள் சங்கரனே"

முதலிய பற்பல தேவாரங்கள் காண்க. இங்கு நாயனாரும் பன்னாட் பூசித்துத் தியானித்தும் பிரார்த்தித்ததன் பயனாகவே இச்சமயத்து "மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்யப் பெற்ற"தும், இறைவன் "அவர்முன் நம்மைக் கண்டவா றெதிரே நின்று" அருளியதும் கூடிற்று என்றதாம்.

செய்கை எல்லாம்—என்பதும் பாடம்.

489. தொண்டனார்க் கிமையப் பாவை துணைவனா ரவர்முன் றம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி, மிக்க
வண்டவா னவர்கட் கெட்டா வருட்கழ னீழல் சேரக்
கொண்டவா றிடைய றாமற் கும்பிடுங் கொள்கை யீந்தார். ௨௬

(இ - ள்) வெளிப்படை. சிந்தை செய்த தொண்டனாருக்குப் பார்வதி யம்மையார் கொழுநராகிய சிவபெருமான் அவர் முன் பன்னாளும் தம்மைக் கருத்தினில்வைத்துக் கண்டிருந்த வண்ணமே வெளிப்பட அவர் எதிரிலே வந்து காட்சி கொடுத்து அருள் புரிந்து, மிகுந்த தேவர்களுக்கும் எட்டாத தமது அருளாகிய சீபாதநீழல் சேரும் படி அருள் கொடுத்து, இடையறாமற் கும்பிட்டிருக்கும் பேற்றினையும் ஈந்தருளினார்.

(வி - ரை) **தொண்டனார்** - இறைவனது தொண்டனாராகவே தம்மை வைத்துச் சிந்தை செய்தாராதலின், முன் "**கோற்றவன்**" (486) "**புரவலர்**" (488) என்று அவ்வந்நிலைக்கேற்றவாறு குறித்த ஆசிரியர், இங்குத் **தொண்டனார்** என்று வழங்கிய அழகுந் தகுதியுங் காண்க. **தொண்டனார்** என்றதற் கேற்ப இறைவன் கழனீழலிலே **இடையறாமற் கும்பிடுங் கொள்கையீந்ததும்** காண்க. **இமயப்பாவை துணைவனார்** - சிவகாமவல்லியாருடன் வெளிப்பட்டுத் தந்த காட்சியினை விரித்தவாறு. **அவர் முன் தம்மைக் கண்டவாறு** - முன்னாட் பன்னாளும் சிந்தித்தும் வந்தித்தும் அகத்தே கண்டிருந்தபடி. தில்லையம்பல வாணரையே ஆன்மார்த்த நாயகராக வழிபட்டு வந்தவர் நாயனாராதலின் அவரே அம்மையாருடன் எழுந்தருளிக் காட்சி தந்தனர் என்க. இக் காரணம் பற்றியே இடபவாகனங் கூறிற்றிலர் போலும்.

எதிரே நின்று காட்சி தந்து அருளி - முன் உள்ளப் புண்டரிகத்துள்ளிருந்து காட்சி தந்தருளினவர், இப்போது அகம்புற மென்பதின்றி யாங்கணும் விரிந்து நின்று காணுமாறு காட்சி யளித்தருளி. **அவ்வாறு** - காட்சி தந்தருளியவாறு. "விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியன், உறவு கோனட் டுணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே", "நெஞ்சுண்டென் னினைவாகி நின்றான் றன்னை" (திருநாரையூர்த் திருத்தாண்டகம் - 2), "இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே" முதலிய திருவாக்குக்கள் காண்க.

மிக்க அண்டவானவர்கட் கெட்டா அருட் கழல் - மக்கள், தேவர், நாகர் எனு மூவகை உயர்திணையிலும், புலமை, ஆயுள், தவம், ஒளி முதலிய பலவற்றாலும் மிகுந்த தேவர்களுக்கும் எட்டமுடியாத கழல். உயர்வு சிறப்பும்மை தொக்கது. **அண்ட வானவர்** - அண்டங்களாகிய மேலுலகங்களை ஆட்சி புரியும் வானவர்கள். பிரமன் - விட்டுணு - இந்திரன் முதலியோர். "யாரேனுந் தன்னடியார்க் கணியான் றன்னை, யமரர்களுக் கறிவரிய வளவி லானை" (கோயிற் றிருத்தாண்டகம் - 8) முதலியவை காண்க.

கழல் நீழல் - திருவடி வியாபகத்தின் நிறைவே நீழல் எனப்பெறும். பிறவித் துன்பமாகிய வெயிலுக்கு மறைவு தந்து ஆற்றுவிக்கும் நிழல். வெயிலின் வெப்ப மாற்றும் நிழல்போலத் துன்ப நீக்கி யின்பமான தண்மை தருவதனாலே நீழல் என்று உருவகப்படுத்திப் பேசப்பெறும். "தண்ணிழலாம்பதி" என்பது சிவஞானபோதச் சூத்திரம். "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னு, நிழலா வன......ஐயாற னடித்தலமே" என்ற திருவிருத்தத்தில் அப்பர் சுவாமிகள் இவ்வுருவகத்தை முற்றும் விரித்தருள்வது காண்க. நிழல் நீழல் என முதனீண்டது. **நீழல் சேரக்கொண்டு** - திருவருள் வியாபகத்தில் அவர் கலந்திருக்க ஏற்றுக்கொண்டு. "முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்றபடி ஆடுங் கழலே முத்திநிலையாம். அதனையே அவர் வந்திந்தார்; அதனையே சிந்தித்தார். ஆதலின் இறைவன் அதனையே அவர் சேரக்கொண்டார் என்க.

இடையறாக் கும்பிடுங் கொள்கை - இதுவே சைவ சித்தாந்தத்தின்படி முத்தியினதிலக்கணமாம். முத்தி நிலையினும் உயிர் இறைவனுக்கு அடிமையேயாகி அவனைக் கும்பிட்டு இன்புற்றிருக்கும் என்பது. "மறக்குமாறிலாத வென்னை" என்ற ஆளுடைய பிள்ளையார் திருத்தருத்தித் தேவாரமும், "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" என்ற ஆளுடைய பிள்ளையார் புராணமுங் காண்க. இடைவிடாது சிந்தித்துக்கொண்டிருத்தல். "குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்" (**சிவஞான சித்தியார்**). **கொள்கை** - கும்பிடுதலை உட்கொண்ட நிலை.

கொண்டவா விடை—**கொண்டவரிடை**—என்பனவும் பாடங்கள். 23

490. இன்னுயிர் செகுக்கக் கண்டு மெம்பிரா னன்ப ரென்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னி
லென்னுரை செய்தே னாக; விகல்விறன் மிண்டர் பொற்றாள்
சென்னிவைத் தவர்முன் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன்.

(**இ - ள்**) இன்னுயிர்...ஆக - (பகைவனை பொய்த்தவ வேடத்தான் தமது) இனிய உயிரைப் பிரிக்கும் செகுத்தல் செய்யக் கண்ட பின்னும் இவன் தாங்கிய திருவேடத்தாலே எம்பிரான் அன்பனேயாவான் என உட்கொண்டு, திருவேடமே சிந்தை செய்வதாகிய தாம் கொண்ட நன்னெறியினைச் சோர்வுபடாது பாதுகாத்தளித்த சேதிநாட்டரசராகிய **மெய்ப்பொருணயனாரது** பெருமையில் எனது ஆற்றலினுட்பட்ட சிறிதளவே ஈண்டுச் சொல்லினேனாக; அவர் பொற்றாள் சென்னி வைத்து - அந்த நாயனாரது பொன்னடிகளைத் தலைமேற் சூடி அத்துணை கொண்டு; இகல் விறன்மிண்டர் முன்செய்த திருத்தொண்டு செப்பலுற்றேன் - (அடிமைத் திறத்தல்லாதார் எனத் தாம் கண்டவர்களை) இகல்புரியும் விறன்மிண்ட நாயனார் முன்னே செய்த திருத்தொண்டின் வரலாற்றினையும் பண்பினையும் சொல்லத் துணிகின்றேன்.

(**வி - ரை**) **இன்னுயிர்** - எந்தப் பிராணிக்கும் தனதுயிரினும் இனியதும் சிறந்ததும் வேறில்லை. "என்னில் யாரு மெனக்கினி யாரில்லை" என்பது தேவாரம். யாவர்க்கு மினியதா யிருந்த தமது உயிர் என்ற குறிப்புமாம்.

உயிர் செகுக்கக் கண்டும் - **செகுக்க** - சிதைக்க. இங்குச் செகுத்தது உடலையே யாயினும் அச்செயல் உடலினின்றும் உயிரைப் பிரிக்கும் காரியத்தை விளைத்தது; ஆதலின் உடல் செகுக்க என்னாது **உயிர் செகுக்க** என்றார். உயிர்க்கிடனாகிய உடலைச் செகுத்து, அதற்கிடனாகாமற் செய்து என்க. உயிர் அவயமுடையதன்றாதலின் அதனைச் செகுத்தலியலா தென்பது. உயிர் செகுத்தபின் காண்டல் முதலிய செயல்களில்லையாதலின் **செகுக்கக் கண்டும்** என்பது உடலினைச் செகுத்தலால் இன்னுயிரினைப் பிரிக்க நின்ற செயலினைத் தாமே கண்டும் என்று பொருள் கொள்க. செகுப்பதற்கு முன் காத்ததே யன்றிக், கண்ட பின்னும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

நன்னெறி - திருவேடத்தினையும் திருவேடத்தாரையும் அரனெனவே தொழும் நெறி. **அன்பர் என்றே** - அன்பல்லாத செயல் கண்டும் அன்பனல்லாதானையும் அன்பர் எனவே திருவேடங்காரணமாக உட்கொண்டு. ஏகாரம் தேற்றம்.

என்னுரை செய்தேனாக - அந்தப் பெருமையின் பெரிய அளவுக்குரிய உரை செய்ய மாட்டாதவனாதலின் என்னுரையேயாய் எனது ஆற்றலுட்பட்ட சிற்றுரையே செய்தேன் என்றது ஆசிரியர் கூற்று.

அவர் பொற்றாள் சென்னி வைத்து, இகல் விறன்மிண்டர் செய்த திருத்தொண்டு செப்ப லுற்றேன் என மாற்றி உரைத்துக் கொள்க. ஒவ்வோர் புராணத்திறுதியிலும் அந்த நாயனாரைத் துதித்து, அவர் சரிதம் சொல்லிய புண்ணியத் துணை கொண்டு,

முறையானே அடுத்து வரும் நாயனார் சரிதங் கூறப்புகுகின்றேன் என்று முன் சரிதத்தை முடித்துக் காட்டி, வருஞ் சரிதத்திற்குத் தோற்றுவாய் செய்தல் ஆசிரியரது பெரு வழக்கான மரபாம். அது பற்றி இங்ஙனம் மாற்றி உரைக்கப் பெற்றது. அவ்வாறல்லாது சொற்கிடக்கை முறையிலே வைத்து, விறன்மிண்ட நாயனார் திருவடியினையே துதித்துச் சூடிக்கொண்டு அவர் சரிதம் சொல்லப்புகுகின்றேன் என உரைப்பினு மிழுக்கில்லை. திருத்தொண்டத் தொகைக்குக் காரணரா யிருந்த சிறப்புப் பற்றி ஆசிரியர் இவ்வாறு கூறினார் போலும். "அருந்தமிழாகரர் சரிதை யடியேனுக் கவர் பாதந் தரும் பரிசாலுரை செய்தேன்" முதலியவையுங் காண்க. 24

சுருக்கம்:—சேதிநாட்டிலே திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு மலையமான் என்னும் பரம்பரைச்சைவ அரசமரபினர் நாடாண்டு வந்தனர். அந்த மரபில் அவதரித்தவர் **மெய்ப்பொருணாயனார்.** அவர் வேதநெறியின் வாய்மை விளங்க ஒழுகுபவர்; சிவனடியார் கருத்தறிந்து அவர்களுக்கு ஏவல் செய்வார்; அரசியல் அறநெறி காத்துப் பகையரசர்களைத் தமது வன்மையினாற் செயிப்பார்; **அன்பர் திருவேடமே சிந்தை செய்வார்**; சிவபெருமான் திருக்கோயில்கள் எங்கேயும் நித்திய பூசையும் திருவிழாக்களும் வழாமல் நடைபெறச் செய்து வாழ்வார்; அடியார்களது திருவடிகளை யன்றி வேறு சார்பில்லார்; தமது செல்வங்கள் எல்லாம் அடியார்களுடையனவே எனக் கொண்டவராய் அடியார்கள் வந்தபோது மகிழ்ச்சியுடன் குறைவறக் கொடுத்து வருவாராயினார்.

இவ்வாறொழுகு நாளில், ஒரு அரசன், இவரை வெல்லும் ஆசையினாலே போரிலே இவரை எதிர்த்துப் பல முறையும் தோல்வியுற்றுத் தனது சேனைகளையு மிழந்து அவமானப்பட்டுப் போனான். இப்படி யிழந்த பகைவன், நேரிற் போர் செய்து வெல்லமாட்டாதவனாய், மெய்ப்பொருள் மன்னரது சைவ சீலத்தை யறிந்து, திருநீறு சாத்தும் அப்பெருவேடங் கொண்டு வஞ்சனையினால் வெல்ல வேண்டுமென்று, சொல்லவுந் தகாத நிலையை யெண்ணி, அதற்காக உடம்பு முழுதும் திருநீறு பூசி, சடைமுடித்துக் கட்டிக் கையிலே படையை மறைத்துக் கட்டிய புத்தகப் பையை ஏந்திக்கொண்டு, மையை உட்பொதிந்த விளக்குப்போல மனத்துள்ளே வஞ்சக்கறுப்பு வைத்துப், பொய்தவ வேடம் கொண்டு முத்தநாதன் என்ற அவ்வரசன் திருக்கோவலூரினுட் புகுந்தவனாய், ஆடற் பெண் கொடிகளும் மேலே வெண்கொடிகளும் ஆடும் மாடங்கள் நிறைந்த திருவீதி வழியே சென்று அரசரது அரண்மனை வாயில் சேர்ந்தான். வாயிற் காவலர்கள் அடியவர்தாமே எழுந்தருளினர் என்று உள்ளே புகவிட்டனர். பலவாயிலும் புகுந்த பின்னர்க் கடைசிவாயிலிற் காவல் செய்திருந்த **தத்தன்** "சமய நோக்கி அருள் புரிய வேண்டும்; இறைவன் துயில் கொள்ளும்" என்றான். "நான் இவற்கு உறுதி கூற வந்தேன், ஆதலின் ஏனையோர் போல நீயும் நில்" என்று அவனையும் கடந்து உட்புகுந்தான். கட்டிலிலே அரசர் துயிலவும் பக்கத்தே மாதேவி யிருப்பவுங் கண்டும் பக்கத்துச் சென்றணைந்தனன். அதுகண்டு மாதேவி எழுந்து அவரை எழுப்பினர். சிவனடியார் வந்தனராகும் என்றுணர்ந்த மன்னர் கைகூப்பித் தொழுதெழுந்து வணங்கி நின்று "மங்கலம்பெருக என்வாழ்வு வந்தணைந்தது போல இங்கு அடிகள் வந்தருளியது யாது கருதியோ?" என்று கூற, அவன், "உங்கள் நாயனார் முன்னே அருளிய ஆகம நூல் மண்மேல் எங்கும் இல்லாததொன்று உனக்கு உபதேசிக்கக் கொண்டுவந்தேன்" என்றான். "இதன் மேல் வேறு பேறும் எனக்குண்டோ? இறைவன் அருளிய ஆகமத்தை வாசித் தருள் செய்க!" என அரசர் கேட்க, அவன், "தேவியார் இங்கிருப்பது தவிரவும், நானும் நீயும் (அதற்காக) வேறிடத்திலே இருக்க வேண்டும்" என்றான். அவ்வாறே அரசர் மாதேவியாரை விரைவாக அந்தப்புரத்திடைப் போக ஏவிப், பின், தவவேடத்தானை ஆசனத்தில் இருத்தித், தாம் நிலத்திலே இருந்து கொண்டு, "இனி அருள்

செய்க !" என்றார். அவன் புத்தகப்பையை அவிழ்ப்பவன் போல இருந்து, அவர் வணங்கியபோது படையை எடுத்துத் தான் முன் நினைந்த அக்கொடிய செயலைச்செய்ய, "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனத்தொழுது, அரசரே வென்றார். மறைத்த வன் புகுந்தபோதே அங்கு மனம்வைத்திருந்த தத்தன் நொடிப்பொழுதில் அவனை வாளினால் எறியப்புக்கான். மிகுதியும் இரத்தம் சோர்தலால் வீழ்கின்ற அரசர் தமது நீண்டகையினால் "தத்தா ! நமரேகாண்" என்று சொல்லி அவனைத் தடுத்து வீழ்ந்தார். "இனி நான் யாது செய்கேன் ?" என்று தத்தன் கேட்க, அரசர், "அடியார் போகும் போது யாரும் இடைவிலக்காதபடி கொண்டு போய் விடுநீ"என்றார். இதனை அறிந்தார் பலரும் வழியிலே மறித்து "அரசரைத் தீங்குசெய்த பொய்த்தவனைக் கொல்வோம்" எனச் சுற்றிச்சூழ்ந்தனர். "இவன் போகப்பெற்றது அரசரது ஆணையாகும்" என்று தத்தன் அவர்களையெல்லாம் விலக்கி, ஆள் அணுகாத கானம் சேர அவனைவிட்டு, மீண்டு வந்து அரசரை வணங்கி நின்று, "செய்தவ வேடங்கொண்டு வென்றவனுக்கு இடையூறின்றிக் கொண்டுபோய் விட்டேன் " என்றான். அது கேட்பதற்காகவே, சோர்கின்ற உயிரைப் போகாதே தடுத்துத் தாங்கி யிருந்த அரசர் "இன்று எனக்கு ஐயன் செய்தது யார்செய்ய வல்லவர் ?" என்று நன் மொழிகூறி, அரசியல் ஆயத் தார்க்கும் காதலார்க்கும் " விதியினாலே திருநீற்றன்பு நெறியைப் பாதுகாத்துச் செலுத்துவீர்க ளாக" என்று உறுதி கூறியபின் அம்பலக்கூத்தரது ஆடும் கழலைச் சிந்தித்தார்.

இறையவன் தம்மை முன் அவர் கண்டவாறே எதிரே நின்று காட்சி தந்து அவரைத் தேவர்க்கும் அரிய தமது அருட்கழல் நீழல் சேரும்படிக் கொண்டு தம்மை இடையறாமற் கும்பிடுங் கொள்கையை ஈந்தருளினர்.

தல விசேடம் - முன்னர் 494-ம் திருப்பாட்டின் கீழ் உரைத்தவை காண்க. பெண்ணையாற்றின் தென்கரையில் இவ்வாலயம் உள்ளது. மேற்குமுகமான சந்நிதி. பதிகம் 2. சுவாமி **வீரட்ட நாதர்** எனவும், அம்பிகை **சிவாநந்தவல்லி** எனவும் பெறு வர். இத்தலம் திருக்கோவலூர் எனும் இருப்புப்பாதை நிலயத்திலிருந்து வடக்கு $\frac{1}{4}$ நாழிகை யளவில் திருவறையணிநல்லூரை அடைந்து பெண்ணையாற்றைக் கடந்து அதன் தென்கரையிற் சேரத்தக்கது. **கோவலூர்** - ஊர்ப்பெயர். **வீரட்டானம்** திருக்கோயிலின் பெயர். ' கோவலூர்தனுள் - வீரட்டானஞ் சேர்துமே " என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங்கள் காண்க. இத்தலம் ஊனடைந்த உடம்பின் பிறவி நீக்கி, வீடளிக்குந் தன்மையுடைய தென்பது, இதற்குள்ள இரண்டு தேவாரப் பதிகங்களி னுட்குறிப்பாகும். தேவாரக் குறிப்புக்கள் ஆளுடைய பிள்ளையார் - அப்பர் சுவாமிகள் சரிதங்களுட் காண்க. இங்குப் **பெண்ணையாறு** உடல் நோயும் உயிர் நோயும் தீர்க்கும் புனித தீர்த்தமாம். இங்கு ஆற்றின் கரையின் மேலிருந்து திருவண்ணாமலைச் சிகரந் தரிசிக்கலாம்.

கற்பனை:—1. அரசியல் அறநெறி வழாமற் காத்தலும், குடிகளைப் பகைவர் முத லிய ஐந்து பயங்களினின்றும் காத்தலும், நீதிவிதிப்படி அரசியற்றலும் அரசர் கடன்.

2. அன்பர் வேடம் அரனெனச் சிந்தித்துத் தொழுதற்குரியது.

3. வேத வாய்மை காத்தலும், இறைவன் கோயில்களிலெங்கும் நித்திய பூசையும் சிறப்பும் வழாது நடைபெறச் செய்வதும் அரசர்களது முக்கிய கடமைகளாம்.

4. "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்ற பழமொழிப்படி மன்னரது ஒழுக் கமே குடிகளிடத்தும், ஏனைய சுற்றத்தார் ஆயத்தார்களிடமும் பரவும். ஆதலின் மன்ன ரும், உலக உயர் நிலையில் உள்ள பிறரும் நல்லொழுக்க முடையராய் வாழ்தல் வேண் டும். அவர்கள் தவறி நடந்தால் உலகமுந் தவறி நடக்கும். அந்தப் பழியும் பாவமும் அவர்கள் மேலதேயாகும். இங்கு நாயனாரது காவலாளர் முதலியோர் செய்கைகளும், கருத்தும் அரசரது ஒழுக்கத்தினையே பின்பற்றி நின்றதுகண்டு உலகம் திருந்துக.

5. நாயகரது பக்கத்திருந்து, அவர்க்கு வேண்டும் பணி செய்து, பின் றுயிலுதல் கற்புடை நாயகிகள் கடன்.

6. ஆகமங்களே உயிர்களை உயர்கதியிற் செலுத்த வல்லன. இவை பதி, பசு, பாச விலக்கணங்களை உணர்த்தி ஞானத்திற் கேதுவாவன. ஆகம உண்மைகளின் வைத்த உறைப்பே, இங்குக் காலபேதமும் இடபேதமும் நோக்காது நாயனார் திரு வேடத்தினையே நோக்கி வஞ்ச வேடத்தானைப் பணியவும், இச்சரித நிகழவுங் காரண மாயிற்று என்பது சிந்திக்கத் தக்கது. ஆகம உணர்ச்சி பிற எல்லாவற்றினும் மேம் பட்டது.

7. பெரியோர்க்கு வரும் இடுக்கண்களையும் ஏதங்களையும் வாயினாற் சொல்லவும் தகாது. சொல்லுதலும் பாவமும் பழியும் பயக்கும்.

8. காவலாளர் தம் தலைவனது மெய்காவலிற் கண்ணுங் கருத்துமாய்க் காரியஞ் செய்தொழுகுதல் வேண்டும்.

9. காவலாளரும் ஏவலாளர் பிறரும், தலைவர் பணித்தது தமது கருத்துக்கு மாறு படினும் அவர் பணித்தபடியே அப்பணியிற் றலைநின்று உண்மையில் ஒழுகுதல் வேண்டும்.

10. குடிகளும் ஆயத்தார் முதலிய பிறரும் அரசாணையின் வழி அஞ்சி, அதன்கீழ் அமைந்துநின் றொழுகுதல்வேண்டும்.

11. வலிமையுள்ளபோது ஏவல் கேட்டியற்றலினும் வலியிழந்த காலத்துக் கேட் டொழுகுதல் சாலச் சிறந்தது.

12. திருநீற்றன்பு நெறியையே அரசாங்கத்தாரும், பிறர் யாவரும், பாதுகாத் துய்த்தல் நலந் தருவது.

13. உயிர்போகுங் காலத்து இறைவனை எண்ணிச் சிந்தித்தல் உயிர்க்கு உறுதி பயக்கும். அது பன்னாட் பயின்ற சிவசிந்தனையின் பயனாகத் திருவருளினாற் கூடுவ தன்றி வேறெந்த வகையாலும் கைகூடாது. அவ்வாறு சிந்திக்கவே சிவன் வெளிப் பட்டு அருளுவன்.

14. இடையறாமற் கும்பிட்டிருத்தல் வீட்டின்பமாம்.

மெய்ப்பொருணாயனார் புராணம் முற்றிற்று.

௬. விறன்மிண்ட நாயனார் புராணம்

தொகை

"விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்"

—திருத்தொண்டத்தொகை

வகை

"பேசும் பெருமையவ் வாரூ ரனையும் பிரானவனு
மீசன் றனையும் "புறகுதட்" டென்றவ னீசனுக்கே
நேச னெனக்கும் பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்ற மேய விறன்மிண்டனே"

—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

வேறு

491. விரைசெய் நறும்பூந் தொடையிதழி வேணி யார்தங் கழல்பரசிப்
பரசு பெறுமா தவமுனிவன் பரசி ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனுந் திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனு முடன்பெருகி மல்கு நாடு மலைநாடு. ௧

புராணம்:—விறன்மிண்டர் எனும் பேருடைய நாயனாரது சரிதவரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்த முறையானே இச்சருக்கத்து ஆறாவது விறன்மிண்ட நாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:—விரிகின்ற பொழில்கள் சூழும் **திருச் செங்குன்றூரில்** அவதரித்தவராகிய **விறன் மிண்டருக்கு** நான் அடியேனாவேன். **விரி - சூழ்** - வினைத் தொகைகள். **குன்றை** - திருச்செங்குன்றூர். **குன்றையார்**-அதில் அவதரித்தவர். **விரிபொழில் சூழ்** - நகரச் சிறப்புக் குறித்தது. **விறன் மிண்டர்** - இஃது நாயனாரது இயற்பெயரோ? அன்றி அவர் செய்த திருத் தொண்டின் விறலும் மிண்டும் கண்டு, அவைகாரணமாக வழங்கிய பெயரோ? என்பது சிந்திக்கத் தக்கது. இப்பெயரே சரிதங் குறிப்பதும் (496) காண்க.

வகை:—**பேசும் பெருமை** - திருத்தொண்டர்களது பெருமைகளைப் பேசுவதாகிய பெருமை. இவையே பேசத் தக்கவற்றுட் சிறந்தனவாகலான் என்பது. தேவர் முனிவர்களும் மற்றும் யாவர்களும் புகழ்ந்து பேசிப் போற்றுகின்ற பெருமையுடைய என்றலுமாம். சரிதங் காண்க. **அவ்வாரூரனையும்** - அகரச் சுட்டுச் சிறப்புக் குறித்தது. உம்மை உயர்வு சிறப்பு. **பிரானவனும் ஈசன்றனையும்** - ஆரூரரை ஆண்ட தியாகேசராகிய எல்லாருக்குமிறைவரையும். **பிரான்** - ஆரூரருக்குப்பிரான். ஆரூரருக்கு என்பது வருவிக்க. இஃது சிறப்பின்மேற் சிறப்புக்குறித்தது. **பேசும் பெருமை** என்றதனைப் பிரான் என்பதனோடுங் கூட்டுக. "**புறகுதட்டு என்றவன்**" - இவர்கள் அடியார் திருக்கூட்டத்திற்குப் புறம்பாவார் என்று சொல்லிய திண்மையுடையார். **ஈசனுக்கே நேசன்** - புறகுதட்டென்ற அந்த இறைவனுக்கே அன்புடையவன். புறகுதட்டென்றதற்குக் காரணம் அடியார்பாலும் அவருள்ளிருக்கும் அவ்விறைவன் பாலுங் கொண்ட நேசம் என்பது. முன்னர்ப் "புறகு" என்றதன் பின் தியாகேசர் வெளிப்பட்டுவர அவரருள் கொண்டு திருத்தொண்டத் தொகைபாடி அடியார்களைத் துதித்த **பின்** ஈசனுக்கேயும் நம்பிகட்கேயும் நேசன் என உரைத்தலுமாம். **ஈசனுக்கே** என்றதனால், தொடர்ச்சியும் சிறப்பும் பற்றி அடியார்க்கே என்பதனையும் உடன் வருவித்துக் கொள்க. **எனக்கும் பிரான்** - என்னையும் ஆண்ட தலைவர். உம்மை இழிவுசிறப்பு. **மனைக்கேபுக...விறன்மிண்டனே**-மனைகளுக்குள்ளே புகும்படி நீடிய தென்றற்காற்று வீச ஆதரவாயுள்ள பொழில் சூழ்ந்த ஊராகிய திருச்செங்குன்றூரில் அவதரித்த விறன்மிண்டரேயாவர். நகரின் செல்வமும் சிறப்பும் குறித்தது. ஏகாரம் இரண்டும் தேற்றம். விறன்மிண்டனே - என்றவன் - நேசன் - பிரான் - எனமுடிக்க. பெயர்ப்பயனிலைகள் கொண்டு முடிந்தது.

இதனால் நகரும், நகரச் சிறப்பும், நாயனாரது பேரும், அவர் செய்த திருத்தொண்டின் திண்மையும், வரலாறும், பண்பும் உரைத்தது காண்க. **விரி பொழில்சூழ்** என்ற முதனூல் இங்கு **மனைக்கே......பொழில்** எனவும், விரிநூல் 491-ல் கூறியபடியும் விரிந்தன. **புறகு தட்டென்றவன்** எனும் சரித வரலாறு 497, 488-லும், **நேசன்** என்றது 494-499-லும், **எனக்கும் பிரான்** - என்றது 500-லும், விரிநூலில் விரிந்தன.

491. (இ - ள்) விரைசெய்......பெறுநாடு - வாசனையுடைய கொன்றை மாலை தரித்த சடையினையுடைய சிவபெருமானது திருவடிகளைப் பூசித்துப், பெருந் தவஞ் செய்து, பரசு பெற்ற காரணத்தால் **பரசிராமன்** எனப் பேர்பெற்ற முனிவன் பெற்ற நாடு; திரைசெய்...மலைநாடு - அலைகளை யுடைய கடலிலே படும் பெருவளங்களும், திருந்து நிலங்களின் செழித்த வளங்களும், மலைகளினுடைய இனிய வளங்களும் ஒரு சேரப் பெருகி மிகுகின்ற நாடாகிய மலை நாடாகும்.

(வி - ரை) விரைசெய்-சுற்றிலும் வாசங் கமழும்படி செய்கின்ற. **நறும் விரைசெய் இதழி** என மாற்றிக் கூட்டுக. **நறும் விரை** - மிக்க மணம் - நன்மணம். **நறும்** - அழகிய என்றுரைப்பாரும், பிரணவம் போன்றிருத்தலால் மந்திரமணம் என்பாருமுண்டு. **தோடை இதழி** - தொடுத்ததுபோலச் சரமாகப் பூக்குங் கொன்றை.**இதழித்தோடை** என மாற்றி மாலையாகத் தொடுத்த கொன்றை என்றுரைப்பினுமாம். **இதழி வேணியார்** - சிவபெருமான். **வேணி** - சடை. கொன்றையும் வேணியும் சிவபெருமானுக்கே சிறப்பாயுரிய அடையாளங்கள்.

கழல் பரசிப் பரசு பெறும் மாதவ முனிவன் பரசிராமன் - **பரசி** - துதித்து - முனிவனது பேர்க்காரணமும், சரிதமும், அவன் பெருமையுங் குறித்தபடி. **பரசு** - மழு வாயுதம். **பரசிராமன்**-பரசும் இராமன் எனவும், பரசுபெற்ற இராமன் எனவும் இருவழியும் சரிதக்குறிப்புப் பெற நின்ற இப்பெயரின் அழகிய ஆட்சியைக் காண்க. தசரதராமனி னின்றும் வேறு பிரித்துணர இம்முனிவனைப் **பரசிராமன்** என அடை கொடுத்தே வழங்குவர்.

இவன் பரசுபெற்ற சரிதம் புராணங்களுட் கேட்கப்பெறும். இம்முனிவன், தனது தந்தையாகிய சமதக்கினி முனிவனைக் கார்த்தவீரியன் கொன்றதற்காகப் பழிவாங்கும் பொருட்டு அவனையும் அவன் மரபினரையும் கொல்வேன் என்று சூள்கொண்டு, சிவபிரானைக் குறித்து மாதவஞ் செய்தான் ; சிவனருளினாலே பரசாயுதம் பெற்றான் ; அதன் துணையாலே, தான் எண்ணியபடியே கொன்று பழிவாங்கிய மன்னர்களின் இரத்தத்தைக் கொண்டு பிதிர்தருப்பணஞ் செய்து தன் மூதாதைகளை மகிழ்வித்தான் என்பது. இதன் விரிவு காஞ்சிப் புராணம் பரசிராமீசப்படலம் முதலியவற்றிற் காண்க.

பெறு நாடு - இம்முனிவன் வருணனிடமிருந்து பெற்ற நாடு மலை நாடு. இதுவும் ஒரு சரிதங்குறித்தது. புராணங்களுட் காண்க. முன்கண்டவாறு பலரையுங் கொன்றதனால் முனிவனைப் பழிசூழ்ந்தது. அது நீங்குமாறு முனிவன் ஒரு நாடு கண்டு அதனை வேதியர்க்குத் தர எண்ணி மழுவைத் தென்றிசைக் கடலில் வீசினான். வீசவே வருணன் விலக இந்நாடு உண்டாக, அதனையே மறையவர்க்குத் தந்தனன் என்பது வரலாறு. முனிவன், அரசர்களைக் கொன்று தானே நாடாண்டிருந்து, அந்நாடுகளைத் தானம்செய்து, பின் இந்நாடு கண்டு, அதனில் ஆட்சி புரிந்து வேதியர்க் கீந்தனன் என்பதும் வரலாறு.

இவ்வரலாறுகளைப் புராண கதை என்று இலேசாகக் கூறி ஒதுக்குவாருமுண்டு. இராமாயணமும் பரசிராமனது சரிதமும் பெருமையும் கூறும். "ஊழிக்கடை முடிவிற்றனி யுமைகேள்வனை யொப்ப" என்பது முதலாகப் பலவாற்றானும் இராமாயணத்தில் பாராட்டப் பெற்றது காண்க. இம்மலைநாடு இன்றைக்கும் பரசிராம க்ஷேத்திரம் எனவழங்கி வருவதும், அது (மழைவளம்), நீர் வளம், நிலவளம், குடிவளம், மக்கள் ஒழுக்கம் முதலிய பல வாற்றானுஞ், சூழஉள்ள ஏனை நாடுகளினின்று வேறாகத் தனித்தன்மை பெற்று விளங்குவதும், அதனில் வேதியரும் அவரது வைதிக ஒழுக்கமும் நின்று நிலவித் தேற்றமாக விளங்குவதும், பிறவும் ஊன்றிக் காண்போர் இச்சரித உண்மைக்கு ஆதரவு காண்பர். **பரசுபெறு மாதவ முனிவன் பரசிராமன் பெறு நாடு** - வேணியார் கழல் பரசி பரசு பெற்றான். அப்பரசு கொண்டு நாடு பெற்றான். ஆதலின் இன்ன வகை

யால் நாடு பெற்றான் எனக் குறியாது பெருநாடு என வாளா கூறினார். அதனாற் பெறும் என வருவிக்க.

திரை செய்கடலின் பெருவளன் - கடல்படு பொருள்களாகிய முத்து முதலிய மணிகளும், உப்பு முதலிய விளை பொருள்களும், மீன் முதலிய வுணவுப்பண்டங்களும் பிறவுமாம். இவை மனிதர் விளைக்காது தாமாய்க் கடலிலும், கடற் புறத்தும் விளைந்து பெருந் தொகுதியாகப் பெற நிற்பது பற்றிப் **பெருவளன்** என்றார். **திரை செய்கடல்** - அலைகளுடைமை கடலுக்குச் சிறப்பிலக்கணமாம். "திரைகட லோடியுந் திரவியந் தேடு" என்றது நீதி நூல். "படர்திரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி" என்ற காரைக்காலம்மையார் புராணமுங் (32) காண்க.

திருந்து நிலனின் செழுவளன் - இவை மருதநிலத்து விளைபொருள்களாகிய நெல் - வாழை - மா - பலா - தென்னை - முதலிய பெரும்பலன்களைக் குறித்தன. நிலச் செழிப்புடையதும், இப்பலன்கள் மிகுதியும் செழிப்புடன் பெருக உண்டாவதும் மலைநாடு என்பது இன்றைக்கும் தேற்றமாம். வானம் பிறங்கக் காலந் தவறாது பெய்ய, அதுகொண்டே விளைதரும் நாடு இந்நாடேயாம் எனின் அஃதொக்கும். இங்கு மலைச்சரிவுகளிலும் நன்செய் விளைவு காண்பது வேறெங்கும் காணாத காட்சியாம். மனிதரால் வயல், ஏரி, வாய்க்கால், அணைமுதலிய பலவகையானும் சாதனம்பெற்று அது காரணமாகப் பெறும் விளைவு போலல்லாது, இங்கு நிலமும் மழையும் தாமாகவே திருந்தப் பொருந்திச் செழித்த வளந்தருவன என்பார் **திருந்து** என்றும், **செழு** என்றும் கூறினார்.

வரை இன் வளம் - **வரை** - மலை. **இன்** - இனிய. மலைபடுபொருள்களாகிய அகில், சந்தனம், தேன், மணி முதலியன. இவை, மலைகளில் இயல்பின் உண்டாகி இனிமை தருவன ஆதலின் அடைமொழியில்லாது வாளா **வரை** என்றார். அதனோடு **வரை**க்குச் சாரியையுமாகி வளத்திற்கு அடைமொழியுமாகிய **இன்** என்ற சொல் அமைத்த அழகுகாண்க. நாடு, மலைநாடு ஆதலின் அந்த முதன்மை கருதி **வரைக்கு** அடையில்லாது கூறினார் எனினுமாம்.

உடன் பெருகி மல்கு நாடு மலை நாடு-மலைநாடு எனப் பேர் பெறுதலின், குறிஞ்சித் திணையின் பண்பு ஒன்றே இங்குப்பெருகும் எனவும், நானிலப் பகுதியில் ஏனைத் திணைகளின் பண்பு இன்றாம் எனவும் ஐயம் வருமாதலின், அதனை எதிர்நோக்கி இங்கு ஏனைத் திணைவளமும் பெருகி மிகும் என்றார்.மலைகள் மிகுதலால்,மிகுதிபற்றி **மலைநாடு** எனப் பேர் பெறினும், மருதம், நெய்தல் என்ற திணைப் பகுதி வளங்களுமுடையதென்றார். வரையும் திருந்து நிலனும் பொருந்தக் கூறியதனால் இடைப்பட்ட முல்லையும் உடன்கொள்ளப் பெறுமென்பர்.

திரைசெய்கடல் எனவும், **வரையின்** எனவும் கூறிய பகுதிகள்போலாது,**திருந்து-நிலனின் - செழு - வளன்** என்ற அடைச்சிறப்பால் இவற்றுள்ளே நிலத்து வளமே மிகுந்தது என்ற குறிப்புமாம். இது **விரிபொழில்சூழ்** என்ற முதனூற் பொருளையும், "மனைக்கே புகநீடு தென்றல் வீசும் **பொழில்**" என்ற வகைநூற் கருத்தையும் விரித்ததாம். பின்னர்க் கூறும் நகரச் சிறப்பிற்குத் தோற்றுவாய் செய்ததுமாம். கடற்கரையுடையதாய், மலைகள் விரவிய செழிய நிலப்பரப்புடைய நாடு என அதன் அமைப்பும் குறித்தபடி காண்க. மனைகள்தோறும் பொழிலிருத்தலும் இந்நாட்டுக் காட்சியாம்.

பெருகி மல்கும் - ஒவ்வொன்றும் தனித்தனிப் பெருகியும் ஒன்று சேர்ந்து மிக மல்கியும் உள்ளன.

கழறிற்றறிவார் நாயனாரும் ஆளுடைய நம்பிகளும் இந்நாட்டினின்றபடி திருக்கயிலைக் கெழுந்தருளினார்களாதலானும், அவர்கள் அங்கெழுந்தருளியதை உபமன்னிய முனிவர் கண்டு முனிவர்களுக்குச் சொல்லிய வரலாற்றில் இப்புராணம் தொடங்குவதாதலானும், இந்நாட்டைப் பற்றி முதன் முறையாகக் கூற வந்த இந்த இடத்துக்

கேற்பச் சுருக்கியும் விரித்தும் நாட்டு வளங்கூறியபடி கண்டு கொள்க. மலை நாட்டுச் சிறப்பின் விரிவு கழறிற்றறிவார் நாயனார் புராணம், வெள்ளானைச் சருக்கம் முதலிய இடங்களிற் காண்க. இவ்வளங்கள் தனித்தனிப் **பெருகும்** அவ்வவ்விடங்களில் வைத்து இப்பாட்டாற் கூறிய ஆசிரியர், அவை **உடன் பெருகி மல்கும்** வகையை நகரச் சிறப்புடன்கொண்டு வைத்து வரும்பாட்டாற் கூறிய திறமும் காண்க. 1

கழல் பரவி—என்பதும் பாடம்.

492. வாரி சொரியுங் கதிர்முத்தும் வயல்மென் கரும்பிற் படுமுத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும் வேழ மருப்பி னொளிர்முத்தும்
மூர லெனச்சொல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்குஞ்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்றூர், ௨

493. என்னும் பெயரின் விளங்கியுல கேறும் பெருமை யுடையதுதான்
அன்னம் பயிலும் வயலுழவி னமைந்த வளத்தா லாய்ந்தமறை
சொன்ன நெறியின் வழியொழுகுந் தூய குடிமைத் தலைநின்றார்
மன்னுங் குலத்தின் மாமறைநூன் மரபிற் பெரியோர் வாழ்பதியாம்.

492. (இ - ள்) வெளிப்படை. கடலில் மிகவும் சொரிய விளைகின்ற ஒளிவீசும் முத்துக்களையும், வயலின் விளைகின்ற கரும்பிலே படுகின்ற முத்துக்களையும், மூங்கில்களில் விளைகின்ற குளிர்ச்சியுடைய முத்துக்களையும், யானைக்கோடுகளிற் பிறக்கும் விளக்கமுடைய முத்துக்களையும் இம்முத்துக்களே இவர்களது பல்வரிசைகள் என்று சொல்லத்தக்க வெண்முத்துப் போன்ற நகையினையுடைய பெண்கள் வகைதெரிந்து முறைப்படக்கோக்கின்ற சிறப்புடைய, சேரர்களது திருநாட்டிலே உள்ள பல ஊர்களினும் முன்வைத்து எண்ணும்படி சிறந்த பழமையான ஊராகிய, திருச்செங்குன்றூர், ௨

493. (இ - ள்) என்னும்......தான் -(செங்குன்றூர்) என்கின்ற பெயரால் விளக்கம் பெற்று உலகு ஏறும் பெருமைதான் உடையது ; அன்னம்......வளத்தால் - அன்னங்கள் பயிலும் வயல்களில் உழவு தொழிலால் அமைகின்ற வளத்தினைக் கொண்டு; ஆய்ந்த......நின்றார் - (உண்மையறிவோர்) ஆய்ந்த மறைகளின் விதித்த வழிகளில் நடந்து வரும் தூய்மையான குடிமைத் திறத்திலே தலைசிறந்து விளங்கிநின்றார்கள் ; மன்னும்......பெரியோர் - நிலை பெற்ற குலத்திலே அப்பெருமறை நூல்களிற் கூறும் மரபிலே பெரியோர்கள்; வாழ்பதியாம் - வாழ்தற் கிடமாகிய ஊராகும். ௩

இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து ஒருமுடிபு படுத்தி உரைத்துக் கொள்க. ஊர்களின் - முன் - சிறந்த மூதூர் (ஆகிச்) செங்குன்றூர் - என்னும் பெயரின் விளங்கிப்-பெருமைஉடையதுதான் - பெரியோர் வாழ்பதியாம் எனத் தொடர்புபடுத்திக் கொள்க.

492. (வி - ரை) முன்பாட்டிற் சொல்லிய கடல், நிலன், வரை வளங்களிலே சிறந்த வளத்தினை அவ்வந்நிலங்களில் முறைப்படவைத்து வளப்படுத்திக் காட்டுகிறபடி காண்க. முத்துக்கள் பற்பல இடங்களிற் பிறக்கு மென்பது நூற்றுணிபு. முன்குறித்த இம் மூன்றிடங்களினும் வரும் ஏனைய வளங்கள் நிற்க, **முத்து** என்ப தொருவளனே இங்கு இம் மூன்றிடங்களினும் விளையவும், அவை ஊர்களின் வந்து **உடன்பெருகிமல்க**வும் உள்ள சிறப்புக் கூறுகின்றது காண்க. திரைசெய் **கடலின்** வளனுக்கு இங்கு **வாரி சொரியும் கதிர்முத்தும்** என்றும், திருந்து **நிலனின்** செழுவளனுக்கு **வயல்மென் கரும்பிற் படுமுத்தும்** என்றும், **வரையின்** வளனுக்கு **வேரல்விளையுங் குளிர்முத்தும் வேழமருப்பின் ஒளிர்முத்தும்** என்றும் முறையே வகுத்துக் காட்டினார்.

முத்து என்றதொரு வளனைக் காட்டவே இதுபோலவே பிறவும் காண்க எனக் கூறியதாயிற்று. மலை நாடாதலின் அச்சிறப்பு நோக்கி அதற்கு வேரன் முத்தும் வேழ



திருநாரையூர் ஆலயம் - பின்புறமிருந்து பார்வை.

வலதுபுறமிருந்து:—1. சுப்பிரமணியர் கோயில் 2. சுவாமி கோயில்.
3. சண்டீசர் கோயில். 4. கனகசபை.
5. (முன்புறம்) கிழக்குக்கோபுரம். விமானங்களின் பார்வை.

திருச்செங்குன்றூர்

முத்தும் என இரட்டிப்பு வளன் கூறினார். வேரல் - மூங்கில். வேழம் - யானை. இவ் விரண்டும் குறிஞ்சிநிலக் கருப்பொருள்கள். இவற்றின் வரும் முத்துக்கள் அப்பொருள் களிற் படும் வளன்களாம்.

வாரி சொரியும் கதிர் முத்தும் - **சொரியும்** - மிகுதி காட்டிற்று. திருமறைக்காடு முதலிய முத்துக் குளிக்கும் கடற்றுறைகளில் அவ்வப்பருவ காலங்களில் இவை மிகுதி யாய்ச் சொரியும் காட்சி காணத்தக்கது. "உப்பளத்தின், முன்றி றேறுஞ் சிறுமட வார் முத்தங் கொழிக்கு மறைக்காட்டு" (திருநா - புரா - 264) முதலியவை காண்க.

வயல் மென் கரும்பிற் படும் முத்து - திருந்து நிலனின் செழுவளன் என்றதற் கேற்ப, அவ்வாறு திருந்திய வயல்களில் விளைத்த கரும்பு திருந்த விளைந்து மனிதர் கைப்படும் முத்து. **படுதல்** - விளைதல், கைப்படுதல் என இருபொருளுங் கொள்ள நின்றது. வயலின் விளைகின்ற கரும்புக ளத்தனையிலும் காண்பரிதாகிக் குறித்த சில வற்றில் மட்டும் விளைவதாம். அவைதானும் மனிதர் கைப்படுதல் மிக அரிதாம். ஆதலிற் **படும்** என்றார்.

வேரல் விளையும் குளிர் முத்தும் வேழமருப்பின் ஒளிர் முத்தும் - ஒரோர் காலத் தன்றி இவை மனிதர் கையில் அங்கங்குக் கிடைப்பரிதாய் மலைகளில் உதிர்க்கப்பட்டு மழை வெள்ளத்தின் வழி, ஆறுகளில் அடித்துக்கொண்டுவரப் பெறும் நாட்டு வளன்கள். **கதிர்** முத்து, **படு** முத்து, **குளிர்** முத்து, **ஒளிர்** முத்து என்ற நால்வகை அடைமொழி களின் வேறுபாடு அவ்வம் முத்துக்களுக்குரிய சிறப்பியல்புகள் குறித்து நின்றது. கடன் முத்தம் சலசம் எனப்படும். நீரிற் பிறப்பதால் நீரோட்டம் என்ற கதிர்ப் பரப்பு உடை யது. இவை இப்பி சங்குகளிற் பிறப்பன. கரும்பிற்படும் முத்தம் இறுகிக் கடினமானது. "கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய வகம்பாயுங் கழுமலமே" (மேகராகக் குறிஞ்சி - 6) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமுங் காண்க. மூங்கின் முத்துக் குளிர்ந்த கிர ணங்களும், யானை முத்துத் தொகுதியாய்க் கூடிய ஒளியும் உடையன என்பர். இவற் றின் விரிவுகள் திருவிளையாடற் புராணம் மாணிக்கம் விற்ற படலத்துள்ளும் பின் னும் இவைகட்குரிய கலைஞான நூல்களுள்ளும் கண்டு கொள்க.

முன்பாட்டினும் இப்பாட்டினும் கடலினின்றும் நாடு சென்று, அங்கு நின்று மலையேறிச் செல்லும் பொருள் வைப்பு முறையும் காண்க. உயிர்களை, அவை வீழ்ந்து நின்ற கடலாழத்தினின்றும் ஏற்றி மலையுச்சியிற் சேர்த்தி வைக்கும் நாடு என்பது உட்குறிப்புப் போலும். இது பற்றியே வரும்பாட்டில் "உலகேறும் பெருமை யுடை யதுதான்" என்றதும் காண்க. "திருத்தொண்டத் தொகையா லுலகு விளங்க வரும், பேறு தனக்குக் காரணராம்" (501) என முடித்துக் காட்டியபடி, இந்நாயனார் உல கிற் குதவிய பேறு இந்நாட்டின் நன்மைக்குப் பொருத்தமுடைத்து எனப் பொருந்தக் காட்டிய குறிப்பும் காண்க. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனக் கூறும் வைப்பு முறையை (திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தும் பிற இடங்களிலும் காண்க.) மாற்றி நெய்தலை முதலாக வைத்துக் கூறியதற்கும் இதுவே கருத்துப் போலும். அன்றியும், இந்நாடு மழு வீசியதாற், கடலினின்றும் போந்துபெற்ற நாடாத லின் அப்பிறப்பிடத்தின் சிறப்பும் பண்பும் தோன்ற நெய்தலை முதலிற் கூறினார் என் றலுமாம். ,சிருட்டி முறையிலும் நீரினின்றே நிலனுண்டாவதா மென்பர்.

தீதிலாத் திருத்தொண்டத் தொகை (35) என்ற இடத்துப்பார்க்க. வளன் பலவற் றுள்ளும் முத்துக்களை எடுத்துக் கூறிச் சிறப்புரைத்ததும் அக்குறிப்பினைப் பற்றியதே யாம். என்னை?. **முத்து** - விடுபடுவது என்ற பொருள் தருதலானும், **முத்தி**யும் அக்கார ணம்பற்றியே அப்பெயர் பெறுதலானும், இங்கு இந்நாடு நெய்தலேயாக - மருதமேயாக- குறிஞ்சியேயாக - எங்கணும் உயிர்களுக்கு வீடுபேற்றினையே காட்டும் முத்திப்பொருள் தருவதாம் எனப் பொருத்திக் கூறியபடி. திருமணங் காண வந்தார்க்கெல்லாம் முத்திப் பேறளித்த எமது ஆளுடைய பிள்ளையாருக்குத் திருமண அணிகலன் முற்றும் முத்துக்

களாற் செய்து குறியிட்டுக் காட்டிய ஆசிரியர் திறமுங் காண்க. (திருஞான - புரா 1211 முதல் 1216 வரை திருப்பாட்டுக்கள்). அச்சிறப்பினை இங்கு வைத்து இதன் உள்ளுறை சிறப்பையும் அணி நலனையுங்கண்டு களிக்க. உயிர்களின் நால்வகைத் தோற்றமும், அவை பெறும் நால்வகைப் பேறும் குறிக்க நால்வகை முத்துக் கூறினார் என்றலுமாம். முல்லையும் உடன்கொள்ளப்படுமென்று முன்னர்க் குறித்ததற் கேற்பக் குறிஞ்சி (வரை)க்கு இரண்டு முத்துக்கள் கூறிய பொருத்தமுங்காண்க.

மூரல் எனச்சோல் வெண்முத்த நகையார் - இம்முத்துக்கள் இவர்களின் மூரலேயாம் என்று உவமிக்கப் பெறுகின்ற பல்வரிசையினையுடைய பெண்கள். **மூரல்** - புன்முறுவல். பற்கள் முத்துப்போல்வன என்றுவமிப்பது வழக்கு. முத்துக்கள் பல் போல்வன என்ற சிறப்புக்காண்க. **நகை**-ஆகுபெயராய்ப் பல் வரிசையை உணர்த்திற்று.

அறிவில்லாத பொருள்கள் ஆகிய கடல், கரும்பு, மூங்கில், யானைக் கோடு இவை தாமும் அந்நாட்டில் முத்துடையனவாயின், அறிவும் உயிரும் உள்ள பெண்களும் முத்துடையவர்களேயாம் என்றார். அம்முத்துக்கள் எவையும் எமது மூரலுக்கு ஒப்பாகா என அவைகளைக் கண்டு அவர் நகைக்கின்றனர் என்ற நயமுங்காண்க.

தேர்ந்து முறைகோக்கும் - ஒளி - வடிவு - கனம் - கதிர் என்பனவற்றின் வேற்றுமை ஒற்றுமைகளைத் தெரிந்து எம்முறையில் முறைப்படுத்திக் கோத்தால் அழகும், அதிக மதிப்பும் பெறுமோ அம்முறையிற் கோக்கின்ற. இப்பாட்டாலே அந்நாட்டுக் கருப்பொருள் உரிப்பொருள்களின் சிறப்பும், நீர்வளம், நிலவளம், பொருள் வளம், மக்கட்சிறப்பு, தொழில் முதலிய பலவும் அழகுபெற ஆசிரியர் முறை கோத்து அமைத்தது கண்டு களிக்க. 2

493. **(வி - ரை) என்னும்** - செங்குன்றூர் என்கின்ற. செம்மை பெற்றகுன்றுகளின் ஊர், எனப் பெயர்ப்பொருள் பெறுதலின், இது, காரணம்பற்றிய இடுகுறியாகவும் அமைந்த தென்பார், **என்னும்** என்றார். **பெயரின் விளங்கி** - தன் பெயரினாலேயே இது மலை நாட்டின் பல ஊர்களிலும் அந்நாட்டுக் குரிய சிறப்புக்கள் பலவற்றுடன் விளங்குவது என்க. **ஊர்களின் முன் சிறந்த மூதூர்** என்றதும் இக்குறிப்புப் பற்றியேயாம். பெயர்மட்டினன்றிப் பெருமையிலும் சிறந்தது. **செங்குன்றூர்**-செம்மை-சிவத்தன்மையின் குறிப்புமாம்.

உலகு ஏறும் பெருமையுடையது தான் - உலகை மிக ஏற்றமடையச் செய்யும் பெருமை தானேயுடையது. உலகை வாழச்செய்து ஈடேற்றும் பெருமை. மேற்பாட்டின் கீழ் உரைத்தவை காண்க. தான் உடையது என மாற்றுக. **தானே** - பிரிநிலை ஏகாரம் தொக்கது. தேற்றேகாரம் எனினுமாம். உலகிலே மேன்மேல் அதிகரிக்கும் பெருமை என்றலுமாம்.

உழவின் அமைந்த வளத்தால் - முதனிலைத் தீபமாக்கி உழவின் வளத்தாற் குடிமைத் தலை நின்றார் எனவும், உழவின் வளத்தால் மரபிற் பெரியோர் எனவும் இரண்டிடத்தும் கூட்டி யுரைக்க. உழவுத் தொழில் மறையோர்க்கு விதித்தலின்று. ஆயின் இந்நாடு பரசிராம முனிவனால் மறையோர்க்குத் தானமாகத் தரப்பெற்றமையால் மறையோர் நிலத்துக் குரிமைபெற்ற கிழவராயினர். ஆதலின் நிலக்கிழமை பூண்டார் **உழவு வளத்தால் மன்னுவதியல்பாம்**. ஆயினும் இவர்கள் உழவு தங்கட்குரிய தொழிலன்றாகவே, நிலத்தை உழவு தொழிற் குரியோராகிய வேளாள மக்களிடம் ஒப்புவித்து அவர் தரும் மேலுரிமைப் பங்கு வருவாயைத் தமதாகக் கொண்டு நிலைத்து வாழ்வார். அவ்வாறு இவர்களின்கீழ் உழவுசெய்யும் வேளாண் மக்களும் தாந்தாம் உழுகின்ற நிலத்தை ஆளும் உரிமையுடையாராயும் மறையவர்பாற் குடிமை பெற்றாராயும் வாழ்வார். இருதிறத்தினரும் நில உரிமையுடையாராய்த் தொடர்புற்று இந்நாட்டில் விளங்குதல் இன்றைக்கும் காணப்பெறும். இருவரும் **உழவின் வளத்தாலே** வாழ்வார். இவ்விருதிறத்தாரது நில உரிமையின் விரிவுகள் இந்நாட்டு நில உரிமைச் சட்டத்தினுட் கண்டுகொள்க.

இருவரும் மறைவழி நிற்பாரே யாவர். வேளாளர்கள் மறை சொன்ன வழி ஒழுகுவர்; மறையோர் அம்மரபினர். மறையோர் தம்மதாகப்பெற்ற நிலக்கிழவராயிருக்கவும், அவர்களை முன்னர்க் கூறாது, அவரின்கீழ்க் குடிமைத் தலைநின்ற வேளாளரை முன்னர்க் கூறியது என்னை? எனின், மறையோராவார் "அறுதொழி லாட்சி யாலே யருங்கலி நீக்கி யுள்ளார்" என்றபடி அறுதொழில் உரிமையாகக் கொண்டு அவற்றானே வாழ்வு நடத்துவார்; இந்நாட்டு மறையோர் அவ்வாறல்லாது உழவு வளத்தால் வாழ்வர். மறையோர்க்கு யாண்டும் உழவுத்தொழிலுரிமையின்றாதலின் அதற்கு உழவுக்குரிய வேளாண் குடிமையாள ரின்றியமையாது முதற்கண் வேண்டப்பெறுவர். வளத்தால் மன்னும் குலம் என்றதும் காண்க. குடிமைத்தலை நின்றோரே இவர்களை மன்னவைப்பர் என்றுமிற்று. "உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா, தெழுவாரை யெல்லாம் பொறுத்து" - குறள். ஆதலின் அவர்களை முன்னர்க் கூறினார். அவர்களும் இவர்கள் போல நாட்டு நிலத்தின் வாழும் உரிமை பெற்றாராதலுடன் அவர்கள் இந்நாட்டு மக்கட்டொகுதியிற் பெரும்பான்மையோரும் இவர்கள் சிறுபான்மையோருமாவர். மேலும் இப்புராண நாயகராகிய நாயனார் வேளாளராதலும் ஒருகுறிப்பாம். இக்குறியினைத் திருஞான சம்பந்த சுவாமிகள், திருநீலநக்க நாயனார், சண்டீச நாயனார் முதலியோர் புராணங்களிலும், மற்றும் பலவற்றிலும் உய்த்துணர்ந்து கொள்க.

அன்னம் பயிலும் வயல் உழவின் வளம் - அன்னங்கள் வயல்களிற் பயிலுதல் நீர்வளங் குறித்தது. **அன்னம்** - சோறு எனக் கொண்டு, உழவின் வளத்தாற் சோறளிக்கும் பெருமை அந்நாட்டு இவ்விரு மக்களிடையும் மிகப் பயின்று விளங்குகின்றது என்றலுமாம். மறையோர் அன்னம் பயிலப் பெறுதல் இன்றைக்கும் இந்நாட்டிற் போல வேறெந்நாட்டினும் காண்பரிதாம். **உழவின் வளம்** - இந்நாட்டு வளம் பலவற்றினும் வேறெந்த வளனும் உழவுவளனுக் கொப்பாகா தென்பது குறிப்பு. "உழந்தும் உழவே தலை"—**குறள்.** உழவிலேமட்டில் அமைந்த வளம் என்க. பிரிநிலை ஏகாரம் தொக்கது. **அமைந்த வளம்** - பிறதொழில்களினும் வளங்கள் படினும் அவை அமையா வளமாம். **ஆய்ந்த மறை** - உண்மைப் பொருளை ஆய்ந்து ஆய்ந்து உணர்த்துகின்ற மறைகள். **ஆய்தல்** - தெரிந்து சிக்கறுத்தல். அவை **சொன்ன நெறி**யாவது இல்வாழ்வார் முதலிய நிலையினர்க்கும், வேளாளர் முதலிய மரபினர்க்கும் விதித்தனவும் விலக்கியனவுமாகிய நெறிகள். இவை திருக்குறள் முதலிய நீதிநூல்களில் அறம் பொருள் இன்பம் என்ற முப்பகுதியினும் வைத்துக் காண்க.

ஒழுகும் தூய குடிமை-ஒழுகுதலாற்றூய்மைபெற்ற குடிகளாகுந் தன்மை. **குடிமை** - ஒன்றன் கீழ் நிலைத்து வாழும் தன்மை. ஊர்க்குடி - அடிக்குடி என்பனவாதி வழக்குக்கள் காண்க. "கீதத்தை மிகப்பாடு மடியார்கள் **குடியாகப்**, பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி", "பண்ணொன்ற விசைபாடு மடியார்கள் **குடியாக**, மண்ணின்றி விண்கொடுக்கு மணிகண்டன்" என்ற ஆளுடைய பிள்ளையாரது திருப்புள்ளிருக்கு வேளூர்த் தேவாரங்கள் காண்க.

தலைநின்றார் - தலையிலே நின்றார் - தலைமையிற் சிறந்து நிலைபெற்றார். **தலைநின்றார் - பெரியோர்** - உம்மைத் தொகை. நின்றாரும் பெரியோரும் வாழ்பதி என்க.

நிலவுரிமையாளர் இவ்விருவருமே யாதலின் இவர்களைக் குறித்தார். நால்வகை மரபில் முதலும் இறுதியும் கூறவே, இடைப்பட்ட மற்ற இரண்டுமரபும் இவற்றுடன் கொள்ளப்படுமென்று கொண்டு, "குறியில் நான்கு குலத்தின"ரையும் இங்குக் குறித்ததாகக் கொள்வாருமுண்டு. தலைநின்றாராகிய பெரியோர் எனப் பண்புத்தொடராகக் கூட்டி மறையவர் என்ற ஒரு மரபினரையே குறித்ததாகக் கொள்வாருமுளர்.

குலத்தின் - குலத்தினும். எச்சவும்மை தொக்கது. முன்கூறியவர்க்கு மறை ஒழுக்கம் மட்டில் அமைந்ததாக, இவர்களுக்கு அதனுடன் மறைக்குலமரபும் உடன் அமைந்தது என்பதாம். மறையொழுக்கம் மறையவர்களிடம் இன்றும் பெருவழக்கில்

நிலவுவது இந்நாட்டிலே காணப்பெறுவதாகும். இவர்கள் நம்பூதிரிகள் எனவும் போற்றிகள் எனவும் பெறுவர்.

தில்லை மூவாயிரவர் போன்று, திருச்செங்குன்றூரிலும் மூவாயிர வேதியர்கள் இருந்தனர் என்றும் கூறுவர். "மனக்கொள்சீர் மூவாயிரவர் வண்சிவனு மயனுந் தானு மொப்பார் வாழ், கனக்கொள்திண் மாடத் திருச்செங்குன்றூரிற் றிருச்சிற்று றதனுட் கண்டேனே", "அமர்ந்த தண்பழனத் திருச்செங்குன்றூரிற் றிருச்சிற்றாற் றங்கரையானை, யமர்ந்த சீர்மூவாயிரவர் வேதியர்கள் தம்பதி யவனி தேவர்வாழ்" என்ற நம்மாழ்வார் பாசுரங்கள் காண்க.

வாழ்பதி ஆம் - (செங்குன்றூர்) வாழும்பதி; அதுவே ஆகும் தன்மை பெற்றது. **வாழ்பதி** - முக்கால வினைத்தொகை. அவ்வாழ்வு முக்காலத்தும் நிலைத்ததென்பதாம்.

பதி - மக்களுள்ளத்தே தன் பெருமை பதிய நிற்றலாலும், பதியின் மொழியாகிய மறைவழி நின்று உலகையும் பதியின் வழி நிறுத்தும் பெரியாரைத் தன்பாற் கொண்டு பதியின் பெருமை விளங்க நிற்றலானும், **பதி** என்ற பெயராற் குறித்தார். 3

494. அப்பொற் பதியி னிடைவேளாண் குலத்தை விளக்க வவதரித்தார்;
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
யெப்பற் றினையு மறவெறிவா ; ரெல்லை தெரிய வொண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையா ரெம்பிரானார்; விறன்மிண்டர். ௪

(இ - ள்) வெளிப்படை. அந்த அழகிய பதியிலே வேளாண் குலத்தை விளக்கம் செய்ய அவதரித்தார்; சொல்லுதற்கரிய பெருஞ் சீர்த்தியையுடைய சிவபெருமானாரின் சேவடிகளையே பற்றுக்கோடாகக் கொண்டு ஏனைய எல்லாப் பற்றுக்களையும் அற எறிவார்; எல்லையிட வொண்ணாதார் உண்மை யடியார்களிடத்து அன்புமிக உடையவர்; எமது பெருமானாராகிய **விறன்மிண்டர்.**

(வி - ரை) பொன்பதி - பொன் - அழகு. திருவுடைமையுமாம். இவற்றின் காரணம் முன்னர் உரைக்கப்பெற்றது.

வேளாண் குலத்தை விளக்க - வேளாளர் என்ற குலம் இவர் அதனுள் வந்தவதரிக்கப் பெற்றமையால் விளக்கமடைந்தது. வேளாளர் குலத்திற்கு முன்னரிருந்த அளவிலாத பெருமைகளினும், திருத்தொண்டத் தொகையை உலகம் பெற்றுய்தற்குக் காரணராயிருந்த இவரைத் தன்னுட் பெற்றது அக்குலத்திற்கு மிகப் பெருமையும் விளக்கமும் தந்தது என்க. "ஆசின் மறைக், கைப்படுத்த சீலத்துக் கவுணியர் கோத்திரம்விளங்கச், செப்புநெறி வழிவந்தார் சிவபாத விருதயர்" (திருஞான - புரா - 15), "கானவர் குலம் விளங்கத் தத்தைபாற் கருப்ப நீட" (கண் - புரா - 13) முதலிய திருவாக்குக்கள் காண்க.

செப்பற்கரிய பெருஞ் சீர்த்திச் சிவனார் - செப்பற்கரிய - "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என முதற் கண்ணே ஓதினார். "யதோ வாசோ நிவர்த்தந்தே" - (எதினின்றும் வாக்குக்கள் திரும்பிவிடுகின்றனவோ)-என்னும் மறைமுடியால் **செப்பற்** கருமை உணரப்படும். **பெரும்** - மிகச்சிறியதும் செப்பரிதாமாதலின் அதனை விலக்கப் **பெரும்** என்றார். **சீர்த்தி** - இச் சீர்த்திகளை மறைகள் பற்பலவாறு பேசித் தினைத் துணர்த்தும். **சிவம்** என்ற சொல் இருத்தல் - கிடத்தல் எனப் பொருள் தருதலால், எங்கும் இருப்பது - எங்கும் பதிந்து கிடப்பது எனப் பொருள் கொண்டு சிவபெருமானது எல்லா மறியுந் தன்மை, ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருக்குந் தன்மை முதலிய பல சீர்த்திகளையும் மறைகள் பேசும். வேதங்களுள்ளே திருவுருத்திரமும், "மண்ணாகி விண்ணாகி மலையு மாகி வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகி", "மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை மலையல்லை கடலல்லை வாயு வல்லை", (வாகீசர்)

என்பன முதலிய எண்ணிறந்த தமிழ் மறைகளும் இறைவன் எல்லாமாய் அல்லனுமாய் நின்றருளும் இச்சீர்த்தியை மிக விதந்து பேசுகின்றன. இறைவன் உயிர்களுக்கருள்புரியும் சீர்த்தியே அவனது சீர்த்திகளுள் மிகச் சிறந்ததாம். மாணிக்கவாசக சுவாமிகள் கீர்த்தித் திருவகவலுள்ளே இதனை விரித்துப் பாராட்டியிருத்தலை இங்குக் காண்க.

இனி, வேதம் முகமனால் பிரமன் விட்டுணு முதலிய தெய்வங்களின் புகழ்களையும் பேசும். ஆனால் அவை இறைமைக் குணங்கள் முற்றும் உடையரல்லாதாரை அவையுடைய ரெனப் பேசுதலால் பொருள் சேராவாம். அவை அவற்றினும் வலிமையுடைய கூற்றுக்களாற் பாதிக்கப்பட்டு இறுதியில் **சிவனது சீர்த்தியே** பெரிதாய்ப் பேசப் பெறும். பிரமனை, அயன் - அசன் - பிறப்பில்லாதான் என உபசரிக்கும் கூற்று, பிரமன் விட்டுணு உந்தியிற் பிறந்தான் என்றபோது பொருள் சேராப் புகழாயொழியும். அவ்வாறே விட்டுணுவைப் பேசும் நாராயண உபநிடதம், நாராயணன் ஆத்மா - அவர் சத்தியம் - அவர் முதலில் இருந்தவர் - அவரே இந்திரன் - என்றெல்லாம் புகழும். ஆயின் முடிவில் (நாராயண பரோத்யாதா) அவர் தியானிக்கிறவர்; சிவனொருவனே தியானிக்கத்தக்கவர்; தியானிக்கப்படுபவர். (சிவனேகோத்யேய:) என முடிக்கின்றபோது முன்னர்க் கூறிய புகழ்கள் பொருள்சேராவாம். "பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள் வானுள்ளத் தான்", "திருமாலகத்தான்", "தொழப்படுந் தேவர் தொழப் படுவானை", "சேர்ந்தறியாக் கையான்", "தன்னுற் றொழப்படு வாரில்லை தானே", என்பனவாதி எண்ணிறந்த தமிழ் மறைகளும் இக்கருத்தே பற்றியன.—இவை திரு. க. சதாசிவ செட்டியா ரவர்கள் உரைக் குறிப்புக்கள்.

சிவனார் - ஆர் விகுதி உயர்வு குறித்தது.

செய்ய கழல் - சேவடி "அரவணையான் சிந்தித் தரற்றும்மடி" என்பது முதலாகத் திருவடித் திருத்தாண்டகத்திற் கூறியன காண்க. **கழல்** - உபசாரம். திருவருள் நிறைவே திருவடியாகக் கூறப்பெறும். இறைவனுக்குத் திருமேனி கற்பிக்கப் பெறும்போது திருவடியும் கற்பிக்கப் பெறுமென்க. திருவடியே சிவசத்தியாம் - அதுவே தாரகமாவது. **செய்ய** - செம்மையுடைய - வீடுபேறுதரும் - என்ற பொருளில் வந்தது. **செய்ய** - சிவந்த எனக் கூறலுமாம். எல்லாரும் மலரிட்டு அருச்சித்து வணங்குதலாற் சிவந்ததாம். "தேவரெல்லாந் தொழச் சிவந்த செந்தாள் முக்கட் செங் கரும்பே" - **தாயுமானார்**; "நின்போ லமரர்கள் நீண்முடி சாய்த்து நிரைந்துகுத்த, பைம் போ தழக்கிப் பவளந் தழைப்பன" - (**அப்பர்சுவாமிகள் - திருவிருத்தம்**). அருச்சித்த மலர்களினின்றும் தேன்பாய்ந்து சிவந்தது என்பது மொரு கருத்து. "சிறந்து வானோ, ரினந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற வினமலர்கள் போதவிழ்ந்து மது வாய்ப் பில்கி, நனைந்தனைய திருவடி" (**திருநல்லூர்த் திருத்தாண்டகம்**).

கழல்பற்றி எப்பற்றினையும் அற எறிவார் - பற்றத்தக்கது கழலேயாம் என்பது. அதனைப் பற்றுவதும் பிற எல்லாப் பற்றுக்களும் அறுதற்கேயாம். பிற பற்றுக்களற்ற போதே திருவடிப் பற்று உளதாம். திருவடிப் பற்று உளதாகப் பிற பற்றுக்கள் அறும். இவ்விரண்டும் திருவருளால் உண்டாகவேண்டும் என்க. "முதல்வன் பாதமே பற்றா நின்றாரைப் பற்றா பாவமே" என்ற தேவாரமும் காண்க. **எப்பற்றினையும்** - யான் எனது என்ற அகப்பற்று, புறப்பற்றுக்களனைத்தையும்; தேவலோக நரகலோக பூலோகப் பற்றுக்களையும். "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்த ராதி யின்பமும், ஏக நின் கழலிணை யலாதிலேன்" (திருச்சதகம் - 72) என்பது திருவாசகம். உம்மை முற்றும்மை; கழற்பற்று ஒன்றொழித்து வேறு எல்லாப் பற்றுக்களையும். **எப்பற்றினையும்** என்றதனால் "வீடும் வேண்டா **விறலின்** விளங்கினார்", "ஈசனோ டாசை யறுமின்" என்றபடி நிராசையாகிய தொண்டர் நிலையும் கொள்ளப்பெறும். இந் நாயனார் இறைவனிடத்து வீடும் வேண்டா **விறலை** உடையாராய், அவனையும் **புற** கென்ற

திறத்தைக் காண்க. **அற எறிவார்** - அற - அறவே - முழுதும். அறும்படியாக என்றலு மாம். எறிவார் - எறிவாராயினர்.

எல்லை தெரிய ஒண்ணுதார் - பொருளின் அளவால் அளக்கலாகாதவருடைய. முன் **சேப்பற்கரிய** என்றது உரையின் வரையால் அளக்கலாகாமை குறித்தது. இதனை நாயனுர்க்குக் கூட்டி அளவிடமுடியாத பெருமையுடையவர் என்றுரைப்பாருமுண்டு. எல்லை தெரிய ஒண்ணு இறைவன் கழல்பற்றியவராதலின் இவரும் அத்தன்மையினரே.

மேய்ப்பத்தர்கள் - உண்மை யன்பர்கள். மெய்ப்பொருளுயனுர் போலல்லாது இந்நாயனுர் உண்மையன்பர்கள்பாலே பத்தி செய்வார். ஆயின் இவர் **வேடத்தைச் சிந்தை செய்யாரோ** எனின், வேடத்துடன் உண்மை யன்பும் உடன்சேர்த்தி எண்ணி அன்பு செய்வார் என்க. இது இவரது சரிதக் குறிப்பாகும். நம்பியாரூரரையும் அவரை ஆட்கொண்ட பெருமானையும் புறகு என்று கூறவல்ல விறல் படைத்தவராத லின் இவரது திருவுள்ளம் **மெய்ப் பத்தர்கள்பாற் பரிவுடையது** என்ருர். **பரி வுடைமை** - அன்பு பூண்டொழுகுதல்.

எம்பிரானுர் - எமது பெருமானுர். தலைவர் என்று ஆசிரியர் இங்குக் குறித்த தன் காரணம் 501-ம் பாட்டிற் காண்க. இப்புராணத்திற்கு முதனூலாகிய திருத் தொண்டத் தொகை இவராலே உலகம் பெறுதற்குக் காரணமாயிற்று என்ற நன்றி கருதி வணங்கினுர் என்க. அதனுலே தொண்டர்கூட்டமும் அவர் புகழும் உல கெலாம் எங்கும் நிலவி நின்றதென்பதுமாம்.

அவதரித்தார் - எறிவார் - உடையார் - பிரானுர் - விறன்மிண்டர் என முடிக்க. எண்ணும்மைகள் தொக்கன. நாயனுரது பெயரை முதலிற் கூற நேர்ந்தபோது, இவ் விடத்து **"மேய்ப்பத்தர்கள்"** அடியின் அடியில் ஆசிரியர் அமைத்துக்காட்டி, நாயனுரது உண்மை நிலையைக் குறித்த அழகு காண்க. 473 - உரை பார்க்க. மெய்ப்பத்தர்கள்பாற் பரிவுடைமையே **"கூட்டம் பேணு தேதும் ஊரனுக்கும் புறகு"** என்று நாயனுர் கூறக் காரணமாயிற் றென்பதும், இதுவும் இச்சரிதக் குறிப்பாம் என்பதும் இங்குக் காண்க. வரும் பாட்டும், 498-ம் பாட்டும் காண்க. 4

495. நதியு மதியும் புனைந்தசடை நம்பர் விரும்பி நலஞ்சிறந்த
பதிக ளெங்குங் கும்பிட்டுப் படருங் காதல் வழிச்செல்வார்
முதிரு மன்பிற் பெருந்தொண்டர் முறைமை நீடு திருக்கூட்டத்
தெதிர்முன் பரவு மருள்பெற்றே யிறைவர் பாதந் தொழப்பெற்ருர்.

(இ - ள்) வெளிப்படை. கங்கையையும் பிறைச்சந்திரனையும் சூடிய சடையினை யுடைய சிவபெருமான் விரும்பி வெளிப்பட் டருள்வதால் நன்மையிற் சிறந்த திருப் பதிகள் எங்கெங்கும் கும்பிட்டுச் செல்லும் ஆசையினுல் வழிச்செல்வாராய், (அவ்வாறு கும்பிடுகின்ற முறையிலே) முதிர்ந்த அன்புடையார்களாகிய பெருந் திருத்தொண்டர் களது திருக்கூட்டத்தின் எதிரே முன்னர்த் துதித்துப், பின்பே இறைவரது திருப் பாதங்களைத் தொழும் பேறு பெற்ருர்.

(வி - ரை) நம்பர் - நம்பி அடைதற்குரியார். "நம்புவார்க் கன்பர் போலு நாகவீச் சரவ னுரே" என்ற திருநேரிசை காண்க. இவர்பால் வைத்த நம்பிக்கை எஞ்ஞான் றும் எவ்விடத்தும் யாவர்க்கும் பொய் போவதில்லை என்பது. "நாளுமற் றவர்க்கு நல்கு நம்பர்தா மளக்கி னன்றி"—**எறிபத்தர் புராணம்** - 56.

விரும்பி நலஞ்சிறந்த பதிகள் - விரும்பி - விரும்ப. விரும்புதலால். விரும்பி வெளிப்பட வீற்றிருந்தருள்வதனுல். **நலஞ்சிறத்தலாவது** வெளிப்பட்டருளிய அன்று முத லின்றுவரை அடைந்தார்க் கெல்லாம் அவ்வவர்க் கேற்றபடி சிறந்த நன்மை தந்து விளங்குதல்.

எங்கும் கும்பிட்டுப் படருங் காதல் வழிச் செல்வார் - சிவத் தலங்கள் தோறும் சென்று வழிபடும் ஆசையினாற் புறப்பட்டுப் போவார். சிவத் தலயாத்திரை செய்தலின் அவசியமும் பயனுங் குறித்தவாறு. இறைவன் விருப்பு வெறுப்பில்லாதவனாகவே ஒவ்வொரு தலம் அவன் விரும்பி வீற்றிருந்தருளும் இடமாயிற் றென்ற தென்னையோ? எனின், பசுவின் உடம்பில் இரத்தத்துடன் கலந்து எங்கும் பரவும் அமுதமாகிய பால் அதன்மடியிலே சுரக்கின்றது போல, இறைவன், சில இடங்களிலே குறித்த காரணத்தின் பொருட்டுக் குறித்தபடி வெளி வருவன் என்க. திருவானைக்காவிலே வெண்ணாவலின் கீழ் வெளிப்பட்டு யானைக்கு அருளிய பின் "செழுநீர்த் திரளாக" இன்றும் வீற்றிருந்தருள்கின்றார் என்பது போலக் கண்டு கொள்க. புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயில் போன்ற அவ்வத்தலங்களில் அவ்வச் சிறப்புத் தோன்ற அருள் புரிந்து விளங்குதலுங் காண்க. ஒரு தலத்திற் கும்பிடுதலே அமையும்; எங்குஞ் சென்று கும்பிடுதல் எற்றுக்கு? எனின் மேற்சொல்லியவாறு ஒவ்வோர் தலங்கள் ஒவ்வோர் வெளிப்பாட்டிற் சிறந்து விளங்குதலின் அவ்வப்பயன் குறித்தார் அவ்வத்தலங்களைக் கும்பிடுதல் அமையும். பலதலமும் படர்ந்து பரவுவோர் எல்லாப் பயனுமெய்துவர். அன்றியும் தலவழிபாடு, இறைவன் இங்குள்ளான், அங்குள்ளான் என்று செல்லச் செல்ல அவன் எங்குமுள்ளான் எனக் கண்டு வழிபடக் காரணமாம்.

> "மூர்த்திதலந் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர்
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பது தாயுமானார் வாக்கு. இத்தல யாத்திரையின் பயனையும் இன்றியமையாச் சிறப்பையும் உலகிற் கறிவுறுத்தும் பொருட்டே நமது பரமாசாரிய மூர்த்திகளாகிய ஆளுடைய பிள்ளையார் முதலியோர் யாவரும் தலங்கள் தோறும் படர்ந்து வழிபட்டு உலகிற்கு உபதேசித்துச் சென்றனர். அவர்கள் சென்று காட்டிய தலங்களே இன்றைக்கும் பாடல்பெற்ற தலங்கள் எனச் சிறப்பா யறியப்பெற்றுத் தம்மை அடைந்து விதிப்படி வழிபட்டோர்க்கு எல்லா நன்மைகளையும் இன்றைக்கும் சிறக்க அளித்து விளங்குகின்றன. "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்ற சிவஞான போதப்படி உத்தமமான சிவஞானிகளும் சீவன்முத்தர்களுமான பட்டினத்தடிகள் முதலாயினார்களும் தலயாத்திரையைக் கைக்கொண் டொழுகி நின்றனர். வைணவ ஆசாரியர்களும் இக்கருத்தையே தழுவி ஒழுகிநின்றமையும் காண்க. கிறித்தவர், முகமதியர் முதலிய பிற சமயவாதிகளும் தத்தம் ஆசாரியன்மார்கள் சென்ற வழியே அவ்வப்பயன் கருதித் தலயாத்திரை செய்யும் மரபும் குறிக்க. பல ஊரும் செல்லும் யாத்திரை நற்பயன் தரும் என்ற உலகநிலை யொழுக்கக் கொள்கையும் காண்க. எனவே சிவத்தலயாத்திரையின் இன்றியமையாச் சிறப்பையும் பயனையும் பற்றி இற்றை நாள் வினவுதல் அறியாமையேயாம். ஆயினும் இந்நாண் மக்கள் சிறந்த ஊதியமான இச்சிவத்தல யாத்திரையினைக் கைவிட்டுப் பலபட அலைந்து ஒழுகிவருகின்றமை இந்நாட் புது "நாகரிக"த்தின் தீயபயன்களில் ஒன்றென்றே கருதுவோம். தலயாத்திரை செய்வோரிற் பலரும் ஆரவாரத்தன்மையினராகிச் சென்று வருகின்றனரேயன்றி உண்மை வழிபாட்டின் திறனறியாது செய்கின்றனர். தலயாத்திரை நெறியும் திருக்கோயில் வழிபாடும் உள்ளபடி நடைபெறுமாயின் நமது திருக்கோயில்கள் பலவும் இப்போது நாம் காணுமாறு கேட்பாரற்ற கிலமான நிலைமையில் இரா என்பது திண்ணம்! விறன்மிண்ட நாயனாரும் நமது பரமாசாரியர்களும் நடந்து காட்டிய நல்வழியினை அறிந்து இனியாவது நம்மவர்கள் உள்ளபடி பின்பற்றி ஒழுகி **நலஞ்சிறப்** பார்களாக!

முதிரு மன்பிற் பெருந்தொண்டர் - தொண்டு புரிந்து வருதலாலே இறைவனிடத்து அன்பு மேன்மேல் முதிர்ந்து வரும் என்பது. இடைவிடாது தைலதாரை

போல ஒழுகிவரும் அன்பு என்றலுமாம். "இடையறா அன்புனக்கென், னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே"—திருவாசகம். **பெருந் தொண்டர்** - தொண்டிற் சிறந்த பெரியார். "உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னை"—திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம்.

முறைமை நீடு திருக்கூட்டம் - திருத்தொண்டின் முறைமையிலே நீடி வருகின்ற தொண்டர்களின் திருக்கூட்டம்.

"திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதில்
இரண்டுநில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோ லிசைந்த வன்றே"
—திருநா - புரா - 233.

"மண்மேல் மிக்கசீ ரடியார்"—தடுத் - புரா - 189.

என்பன முதலாகப் பாராட்டப்பெற்ற திருக்கூட்டம்.

முன் பரவும் அருள் பெற்றே இறைவர் பாதம் தொழப் பெற்றார் - தொண்டர் கூட்டத்தைப் பணிதலை முதலாவதாகவும், இறைவனைப் பணிதலை அதற்கடுத்து இரண்டாவதாகவும் கொண்டொழுகியவர் இந்நாயனார். **தொழப் பெற்றார்** என்றதனால் இவ்வாறு வரம் பெற்றவர் என்பாருமுண்டு. தொண்டர்களே முதலிற் றொழுதற் குரியார் என்பது. இவர்கள், தொண்டிலே தாம் ஈடுபட்டுப் பழகியவர்களாய்த், தம்மை அடைந்தாரையும் அவ்வாறு ஈடுபடச் செய்து இறைவன்பாற் செலுத்துவிக்கும் கருணையும் ஆற்றலும் உடையார். திருவாரூரைத் தரிசிக்க அணையும்போது ஆளுடையபிள்ளையாரும் ஆளுடைய அரசுகளும் ஆளுடைய நம்பிகளும் தம்மை எதிர்கொண்டு வணங்கிய திருத்தொண்டர் கூட்டத்தைப் பரவித் தொழுது திருப்பதிகம் பாடி, அதன்பின்னரே இறைவனது திருமுன் சென்று வணங்கிய முறையும் பிறவும் இங்கு வைத்துக் காண்க.

முன் பரவும் அருள் பெற்றே-அங்ஙனம் பரவுதற்கும் திருவருள் கூட்டவேண்டும் என்க. ஏகாரம் தேற்றம். **முன்** - திருமுன்பு என்றலுமாம். 5

496. பொன்றாழ் அருவி மலைநாடு கடந்து கடல்சூழ் புவியெங்குஞ்
சென்றா ளுடையா ரடியவர்தந் திண்மை யொழுக்க நடைசெலுத்தி,
வன்றாண் மேருச் சிலைவளைத்துப் புரங்கள் செற்ற வைதிகத்தேர்
நின்றா ரிருந்த திருவாரூர் பணிந்தார் நிகரொன் றில்லாதார். ௬

(இ - ள்) பொன்தாழ்...செலுத்தி - பொன் கொழிக்கும் அருவிகளையுடைய மலைநாட்டினைக் கடந்து, கடல்சூழ்ந்த உலகில் எங்கெங்கும் வழிச் சென்று, இறைவனடியார் திண்மை யொழுக்கநடை நிலைபெறச் செலுத்தி ; வன்தாள்...பணிந்தார் - வலிய அடியினையுடைய மேருமலையை வில்லாக வளைத்துத் திரிபுரங்களை அழித்த வைதிகத் தேரின்மீது நின்றாராகிய சிவபெருமான் வீற்றிருந்த திருவாரூரைச் சென்று பணிந்தார் ; நிகர் ஒன்று இல்லாதார் - யாரும் எவ்வாற்றானும் தமக்கு ஒப்பில்லாதவராகிய விறன்மிண்ட நாயனார்.

(வி - ரை) பொன் தாழ் அருவி - மலைகளினின்றும் கீழ் ஓடிவரும்போது அருவிகள் பொற்பொடிகளை நீரில் அடித்து வருகின்றன என்க. அருவிகள் ஓடுமிடத்துக் கீழ் மணலிற் பொன் தாழ்ந்து படிந்துள்ளது என்றலுமாம்.

ஆள் உடையார் - யாவரையும் தமக்கு ஆளாக உடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். "தேவரையும் மாலயன் முதற்றிருவின் மிக்கார், யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான்" (183) என்றதுங் காண்க. **ஆளுடையார் அடியார்**-உடையாரது அடியவர் என ஆறும் வேற்றுமைத் தொகை என்க. **தம் திண்மை ஒழுக்கம்** - அவர் தமக்கே உரிய திண்ணிய நல்லொழுக்கம் - அடிமைத் திறம். இதனையே

"திருத்தொண்டினுறைப்பு"—அப்பூதி - புரா - 13, "அடியுறைப்பு"—திருஞான - புரா - 1083. எனக் கூறுவது காண்க.

ஆளுடையாருடையவும் அடியவருடையவும் என உம்மைத் தொகையாக்கியுரைப் பினுமமையும். இவ்விரண்டும் பற்றிய இச்சரித நிகழ்ச்சியை மேல் வரும் இரண்டு பாட்டுக்களினும் கூறுதல் காண்க. விதிப்படி இறைவனை வணங்குதலும், அடியாரைப் போற்றுதலும் என்ற இவ்விரண்டுமே திண்மை யொழுக்கமாம். தாம்இதனின் வழுவாதியற்றலுடன், பிறர் இதில் வழுவக் கண்டபோது வற்புறுத்தி, விறலும் மிண்டுங் கொண்டு அவர்களைத் திருந்தச் செய்தலே இங்குத் திண்மை ஒழுக்க நடைசெலுத்தி எனப் பெற்றது. செலுத்தி-நடையிலே தம்மைச் செலுத்தியும், பிறரையும் நடையினிற் செலுத்துவித்தும் என இருபொருளும் பெற நின்றது. இது சரிதக் குறிப்பு. எவ்வாறு செலுத்தினார் என்றதற் குதாரணம் வரும்பாட்டிற் குறித்தபடி.

அடியாரை முன்னர்ப் பரவும் ஒழுக்கமுடையாராதலின் இதனைமுதலிற் கூறினார்.

வன்தாள் மேருச் சிலை - வன் - தாள் - வலியதாள் என்பது அசலம். சலியாத் தன்மை குறித்தது. "நிலையிற்றிரியா" திருத்தல் என்பது குறள். சிலை - மலை. வலிய தாளுடைமை ஏனைய எல்லா மலைகளுக்கும் பொதுவிலக்கணமாயினும் மேரு மலைக்குச் சிறப்பிலக்கணமாம். "மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை, கூருமிவ் வானி னிலங்கைக் குறியுறுஞ் சாருந் திலைவனந் தண்மா மலயத்தூ, டேறுஞ் சுழுனை யிவைசிவ பூமியே" (9-ம் தந்திரம் 99), "மேருவி னோடே விரிகதிர் மண்டலம்" (8-ம் தந்திரம்-344)முதலிய திருமந்திரங்கள் காண்க. மேரு, தான் அசையா திருப்ப, இதனைச் சுற்றி ஞாயிறு முதலிய அண்டங்களும் பூமியும் சுழல்வன என்றும், இதுவே பொன்மலை என்றும், இதன் பெருமையைப் பலவாறு சாத்திரங்களும் புராணங்களும் பேசும். யோக நூல்களும் இதன் பெருமையை விதந்து பேசுவன. **சிலை வளைத்து** - இறைவன் திரிபுர சம்மார காலத்து மேருமலையினையே வில்லாக வளைத்துப் பிடித்தனர் என்பது வரலாறு. சிலை வளைத்தது மாத்திரமேயன்றி அதனின்றும் அம்பு ஒன்றும் எய்யப் பெறுமலே புரமெரித்த காரியம் நிகழ்ந்தது என்பார் **வளைத்துச் சேற்ற** என்று குறித்தார். "வளைந்தது வில்லு விளைந்தது பூசல், உளைந்தன முப்புர முந்தீபற, ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற" என்பது திருவாசகம். சிலை - வன்மையுடையதாய் அசலமாயினும், இறைவன் கையில் வளைக்கப் பெற்றதென இறைவனது வரம்பிலாற்றலுடைமை விளக்கப் பெற்றது. சிலை - வில் என்று கொண்டு மேருவை வில்லாக வளைத்து என்றலுமாம்.

வைதிகத்தேர் - வேதங்களாகிய குதிரைகள் பூண்டதேர். சிவனைத் தெய்வமாக வுடையது சைவம் என்பது போல வேதங்களைக் குதிரையாக உடையது **வைதிகம்** எனத் தத்திதாந்த பதமென்பது வடமொழி வழக்கு. "வானோ, ரெல்லா மொருதேராயயன் **மறைபூட்டிநின்** றுய்ப்ப" - (பண் - நட்டபாடை - திருவீழிமிழலை - 6.) என்பது ஆளுடைய பிள்ளையார் தேவாரம். இழுத்துச் செல்லும் ஊர்தியினாலே தேரின்பேர் வந்தது. குதிரைவண்டி - மாட்டுவண்டி - புகைவண்டி என்ற வழக்குகள் காண்க. "முப்புரம் வெந்தவிய வைதிகத்தே ரேறிய வேறு சேவகனே"—திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா - கோயில் - 10.

தேர் நின்றார் இருந்த திருவாரூர் - வேதங்கள் சிவனையே மேற்கொள்வன - வேறெவரையும் மேற்கொள்ளா ஆதலின் வைதிகத்தேர் நின்றார். வேத சிரத்திலே நின்றவர். **நிற்றல்** - நீங்காது நிலைத்து இருத்தல். "எங்குஞ் சிவனென **நின்றாய்** போற்றி - "எம்மடிக **ணின்ற**வாறே" என்ற திருத்தாண்டகத் திருவாக்குக்கள் காண்க. வேதங்களில் **நின்ற** அவர் திருவாரூரில் **இருந்தார்** என்ற நயமும் காண்க. வேதத்தில் நிற்பதினும் திருவாரூரில் இருப்பதில் விருப்புடையார் என்பது குறிப்பு. "செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி திருமூலட்டானனே போற்றி போற்றி", "சிலையா லன்றெயி லெரித்த சிவனே போற்றித் திருமூலட்டானனே போற்றி போற்றி" முதலிய

திருவாரூர்த் திருத்தாண்டகங்களிற் புரமெரித்த ஞான்று வேத இருதயத்தில் விளங்கிய சிவனையே திருவாரூர்த் திருமூலட்டானத் தெழுந்தருளி யிருந்தாராக அப்பர் சுவாமிகள் போற்றியிருத்தல் காண்க. திரிபுரமெரித்த வரலாறு மாபுராணங்கள் கூறும்.

"குன்ற வார்சிலை நாண ராவரி வாளி கூரெரி காற்றின் மும்மதில், வென்றவா றெங்ஙனே" என்ற திருவாமாத்தூர் - (பண் சீகாமரம்) ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், "சாம்பு கண்டில மேகம்பர் தங்கையில், ஓரம்பே முப்புர முந்தீபற, ஒன்றும் பெருமிகை யுந்தீபற", "தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும், அச்சு முறிந்தவா றுந்தீபற, அழிந்தன முப்புர முந்தீபற" என்ற திருவாசகங்களும் காண்க. "நாணென்று நஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம், பாணந்தான் மண்டின்ற பாணமே - தாணுவே, சீராரு மாரூர்ச் சிவனேநீ யெப்படியோ, நேரார் புரமெரித்த நேர்" என்று பின்னுட் புலவர் பாராட்டியதும் காண்க. அச்சு முறிந்த தேராதலின் நின்றார் என்ற சுவையும் காணத் தக்கது. இருந்து என்றதனால் தேரில் நிற்பதற்கு முன்னமே ஆரூரில் எழுந்தருளியவர் என்பதும் குறிப்பு. இது திருவாரூரின் பழமை காட்டும். "புரமெரித்த முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்ற திருத்தாண்டகமும் சிந்திக்க.

நிகர் ஒன்று இல்லாதார் - சகல சாத்திரங்களின் உள்ளுறையுண்மை அடியார் பணியேயாம் என்றதைக் காட்டும் திருத்தொண்டத் தொகையை உலகுக்கு உபகரிக்க வந்தவர் ஆதலின் நிகரில்லார். தனக்கு நிகரில்லாத - உவமனில்லாத இறைவனை அடைந்தாராதலின் தமக்கு நிகர் ஒன்றில்லாதாராயினர் என்றலுமாம். **ஒன்று** - ஒன்றேனும் - முற்றும்மை தொக்கது. 6

497. திருவார் பெருமை திகழ்கின்ற "தேவா சிரிய னிடைப்பொலிந்து
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையா [ருளாற்
தொருவா றேதுங்கும் வன்றொண்டன் "புறகேன் றுரைப்பச் சிவன
பெருகா நின்ற பெரும்பேறு பெற்றார் ; மற்றும் பெறநின்றார், எ

498. சேணார் மேருச் சிலைவளைத்த சிவனா ரடியார் திருக்கூட்டம்
பேணா தேகு மூரனுக்கும் "பிரானாந் தன்மைப் பிறைசூடிப்
பூணா ரரவம் புனைந்தார்க்கும் புற"கென் றுரைப்ப மற்றவர்பாற்
கோணா வருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார். அ

497. (இ-ள்) வெளிப்படை. அருட்டிரு நிறைந்த பெருமை எந்நாளும் விளங்குகின்ற தேவாசிரிய மண்டபத்திற் பொலிந்து பொருந்தி வீற்றிருக்கின்ற சிவனடியார்களைத் தொழுது, அவர்கள் பால் வந்து அணையாமல் ஒரு புறமாக ஒதுங்கிச் செல்லும் **வன்றொண்டன் புறகு** என்று உரைப்பதற்குச் சிவபெருமா னருளினாற் பெருகுகின்ற பெரிய பேறு பெற்றார் இந்நாயனார். அதுவேயுமன்றி மேலும் பெறுதற்கமைந்து நின்றாராகி, எ

498. (இ - ள்) வெளிப்படை. சேணிடையிலும் உயர்ந்து நிறைந்த மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானடியார் திருக்கூட்டம் பேணாது செல்லும் நம்பியாரூரருக்கும் அவரை ஆண்ட தலைவராந் தன்மையுடைய,பிறையைச் சிரத்திற்சூடிப் பாம்பை அணியாக அணிந்த பெருமானுக்கும் **புறகு** என்றுரைப்ப மற்ற அவர்களிடமே கோணாத அருளைப் பெற்றார். இதனின் வேறு பெருமையும் யாவர் சொல்ல வல்லார் ? அ

497. (வி - ரை) **திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியன் - திரு** - அருட்டிரு. **ஆர் பெருமை** - அடைந்தாரை உய்விக்கவல்ல திருநீறு - கண்டிகை - பஞ்சாக்கரம் முதலிய சாதனங்களும், இவைபூண்டொழுகும் சீர் அடியார்களும் எப்போதும் இடையறாது விளங்குதல் குறித்தது. இவை பற்றி முன்னர்த் திருக்கூட்டச் சிறப்பிலே

சிறப்புற 136 - 137 - 138 - 139 - திருப்பாட்டுக்களில் உரைத்தவை காண்க. **தேவாசிரியன்** - 137 உரைபார்க்க. **மாவா ழுகலந்து மால்** என்றதனால் இங்குத் திரு என்றதும் இலக்குமியைக் குறித்தது என்றுரைப்பாருமுண்டு.

பொலிந்து - சிவசாதனங்களாலே பொலிவு பெற்று "புரந்த வைந்தெழுத் தோசை பொலிதலால்" (138) என்றதும் காண்க. இச்சிவசாதனங்கள் ஆன்மாக்களைத் தம்வசமாக்கிக் கொள்ள இறைவனால் அருளப்பெற்றவை. களவு செய்வானொருவன் மிகு செல்வமுடையோனை மந்திரத்தாலும், மருந்தாலும், தந்திரத்தாலும் பேதித்துத் தன்வசமாக்கி அவன் பொருளை வெளவுதல்போல இறைவனும் திருநீறென்கிற மருந்தாலும், ஸ்ரீபஞ்சாக்கரம் என்கிற மந்திரத்தாலும், சொரூபமென்கிற தந்திரத்தாலும் ஆன்மாக்களைப் பேதித்துத் தன்வசமாக்கி அவரவர் வினைகளை யபகரிக்கின்றான். "கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில், வெள்ள வெளியாமென் றுந்தீபற, வீடு மெளிதாமென் றுந்தீபற"—**திருவுந்தியார் - 23.**

தொழுது வந்து அணையாது ஒருவாறு ஒதுங்கும் வன்றொண்டன் - நம்பியாரூரர் திருவாரூரில் தினமும் பூங்கோயிலுக்குச் சென்று இறைஞ்சி வருகின்ற நியதிப்படி ஒரு நாட் செல்வார் (328, 329, 165.) "இங்குத் தேவாசிரியனிற் கூடி எழுந்தருளியிருக்கும் அடியார்களுக்கு என்னை அடியேனாகப் பண்ணுநாள் எந்நாளோ?" என்று இறைவர் பாதங்களைச் சிந்தித்துக் கொண்டே திருக் கோயிலினுட் சென்றார் (335). இறைவரும் அவர்தாம் வேண்டுமதனையே அருள வேண்டித் திருவாயிலின் நேரே எழுந்தருளி வந்து, எதிர் காட்சி தந்து, இவர்கள் பெருமைகளைத் தேற்றிப், பாடென்று பணித்து, அதற்குத் "தில்லை வாழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்று அடியும் எடுத்துக் கொடுத்தருளினர். 336 முதல் 345 வரை திருப்பாட்டுக்கள் பார்க்க. அதன் வழியே எடுத்து நம்பிகள் இவ்வடியவர்களுக் கெல்லாம் தனித்தனி வேறடியேன் என்று திருத்தொண்டத்தொகை பாடித் தொழுது திருக் கூட்டத்தின் நடுவணைந் தார் (348) என்ற வரலாறு தடுத்தாட் கொண்ட புராணத்தினுட் காண்க. இவ்வரலாற்றின் சரித நிகழ்ச்சியிலே நம்பிகள் திருக்கோயிலினுட் சென்றபோது எழுந்தது (335) இப்பாட்டிற் கண்ட விறன்மிண்ட நாயனாரின் செற்றம் பற்றிய செய்தி.

அங்கு ஒருபுறம் நம்பி ஆரூரர் இவ்வடியவர்களுக்கு ஆளாகப் பண்ணுநாள் எந்நாள் என்று இறைவனை வேண்டி நேரே கோயிலினுட் செல்கின்றார்; அதனை நோக்கி இங்குத் தேவாசிரியனில் இருந்த **விறன்மிண்ட நாயனார்** நம்பிகள் திருக்கூட்டம் தொழுது வந்து அணையாது ஒருவாறு ஒதுங்கி உட் செல்கின்றார் என்று சினந்து மொழிகின்றார். திருக்கூட்டத் தெதிர்முன் பரவும் அருள்பெற்றே பின் இறைவர் பாதந் தொழப் பெற்றார் விறன்மிண்டர். (495) அந்நியதியே விதியெனக்கொண்ட அவர் அதன்வழி ஒழுகாது உட்சென்றது பற்றி நம்பிகள்பாற் சினந்தார். நம்பிகளும், அடியாரை வணங்கி அணையா விடினும், அடியாரைப் பணிய வேண்டியே இறைவனைத் தொழ உட் சென்றனர். எனவே, இருவர் கருத்தும் அடியார்பணி என்ற ஒருவழியிலே படிந்திருந்தன என்க. ஆயின் கருத்தினைப் பின்பற்றிய புற வழிபாடு நிகழாமையின் "**புறகு**" என்ற மொழியும் எழுந்தது. இருவருள்ளும் உயிர்க்குயிராய் உடன் இருந்த இறைவன் இருவர் கருத்தையும் முற்றுவித்துத் திருத்தொண்டின் திறத்தை உலகம் உய்ய உணர்த்தி யருளினார் என்பதனை ஈண்டுச் சிந்திக்க.

அணையாது ஒருவாறு ஒதுங்கும் - அணைந்தோர் அடியவர்கள். அவரை அணைதல் சீவன் முத்தர் நிலை என்பது சாத்திரம். "அன்பரொடு மரீஇ" - **சிவஞானபோதம்.** அவ்வாறு அணையாது நேரே உட்சென்று ஒதுங்கும். அடியார் வழியே நேர் வழி; பிறவழிகள் ஒதுங்கிய தூரவழியாம் என்பது இந்நாயனார் கொள்கை. ஆதலின் அடியார் தம்மைத் தொழுது வந்தணையாது இறைவரை வணங்கச் செல்லுதலை ஒதுங்கும் என்றெடுக்கின்றார் நாயனார்.

புறகு - புறம்பாவான்.

பெருகாநின்ற பெரும் பேறு - பேறு - பாக்கியம். இப்பேறு பெரியது. இயல்பிற் பெரிதா யிருப்பதுடன் பின்னும் மேன்மேலும் பெருகி வளர்கின்றது என்க. **பெருகுதலின்** விரிவு மேல்வரும் இரண்டு பாட்டுக்களும் குறித்தன. அவை யன்றியும் திருத்தொண்டத் தொகையால் உலகம் என்றும் உய்ந்து நிகழ்கின்றதும் குறிப்பாம்.

அவர்பாற் பேறு பெற்றார் - புறகு என்று நாயனார் சொல்லியதும் திருவருளாலே ஆகியதாம். "அகில காரணர் தாள்பணி வார்கடாம், அகில லோகமு மாளற் குரியர்" (139) என்றபடி அடியவர்களே முதல்வராவார் என்பது இந்நாயனார் கொள்கை. அதற் கிணங்க இறைவரும் உலகம் உய்யத் திருத்தொண்டத்தொகையினைத் தோற்றுவிப்பதும், நம்பிகளைத் திருக்கூட்டத்தினுட் கூட்டுவிப்பதும் ஆகிய இரண்டினையும் தாமே செய்வதினும் இந்நாயனாரைக் கொண்டு செய்விப்பது தக்கதென்று திருவுளம் பற்றி இவ்வாறு இவர் சொல்லுமாறு செய்தனர் என்க.

மற்றும் பேற நின்றார் - **மற்றும்** - வன்றொண்டர் புறகென்றதேயன்றி அவருக்குப் பிரானாகியவரும் புறகு என்பது. இதுவும் திருவருள் வழியே நிகழ்வதாகலின், **மற்றும்** - என எண்ணும்மை கொடுத்தோதினார். அதனோடு மேலும், "அல்லல் தீர்ந்துலகுய்ய மறையளித்த" தமது திருவாக்கினாலே இறைவர் "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று அடியார்க் கடிமைத்திறம் தாமே வகுத்தருளப் பெற்றதும் (345), அவ்வருட்டுணை கொண்டு, அதுவே உண்ணின்று உணர்த்திப் பாடுவிக்க (348) நம்பிகள் திருத்தொண்டத்தொகை பாடித் தொழுது திருக்கூட்டத்தி னடுவண் வந்து அணையப் பெற்றதும் (349) ஆகிய பேறுகளுமாம். **பேற நின்றார்** - இனிப்பெறுதற்குரியராய் நின்றார்.

சீரடியார்—புறம் பேன்றுரைப்ப—என்பனவும் பாடங்கள். 7

498. **(வி - ரை) சேணார்மேருச் சிலை வளைத்த** - நெடுந் சேய்மைக் கண்ணும் சென்று ஓங்குகின்ற மேருவாகிய மலையை வில்லாக வளைத்த. **சேண்** - நெடுந்தூரம் ஆகாயத்தை அளாவி என்றுரைப்பாரு முண்டு. மிக மேலும் மிகக் கீழும் சென்று, அண்ட கோளகையின் நடுவாகி விளங்குவது **மேரு** என்பர். **சிலை** - மலை என்று கொண்டு மேருவாகிய மலையை வளைத்த எனவும், **சிலை** - வில் எனக் கொண்டு மேருவை வில்லாக வளைத்த எனவும், இருவழியும் கொள்ளத் தக்கது. 496 பார்க்க.

சிவனார் அடியார் - சிவனாரது அடியார். வேற்றுமைத் தொகை.

திருக்கூட்டம் பேணாது - இரண்டாம் வேற்றுமைத் தொகை. திருக்கூட்டத்தைப் பேணாது செல்லும். தொழுது வந்தணையாது என்றதும் காண்க.

பேணுதல் - உரிய வகையில் பாராட்டுதல். ஊரனுக்கும் - புனைந்தார்க்கும் புறகு என்றுரைக்க எனக் கூட்டுக. ஊரனுக்கும் புனைந்தார்க்கும் திருக்கூட்டம் புறகு என்றுரைக்க எனக் கூட்டி உரை கூறுவாரு முண்டு. திருக்கூட்டத்திற்கு ஊரனையும் பிரானையும் புற கென்றதே யன்றி அவர்களுக்குத் திருக்கூட்டத்தைப் புறகென்றல் பொருந்தாதென்று அதனை மறுப்பாரு முண்டு. அவர்க்கு இவர் புறகாயினும் இவர்க்கு அவர் புறகாயினும் பொருள் ஒன்றேயென விடை கூறுவாரு முண்டு.

ஊரனுக்கும் - எண்ணுப் பொருளோடு உம்மை இழிவு சிறப்புப் பொருளும் பெற நின்றது. **உரைப்ப** - உரைக்கத் தக்கபடியாக.

மற்று அவர் பால் - மற்று - மற்றும் - மேலும் - முன்பெற்ற அருளோடு. இதனையே மேற்பாட்டில் **மற்றும் பேற நின்றார்** என்று குறித்தது காண்க. **அவர் பால்** - தாம் புறகென்று கூறிய நம்பிகளிடத்தும் பிரானிடத்தும் என்றலுமாம். நம்பிகளிடத்துக் கோணு அருள் பெற்றதாவது " விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்" என்று திருத்தொண்டத்தொகைப் பாட்டினுள்ளே தொழப் பெற்றது.

கோணு அருள் - என்றுமென்றும் எவ்விடத்தும் கோடுதல் இல்லாத திருவருள்.

இனியார் மற்றுப் பெருமை கூறுவார்? - என மாற்றுக. **இனி** - இதன் மேலும் - இனியும்; **மற்று** - வேறு மொரு; **யார் கூறுவார்** என்றது யாவரும் கூற வலியிலர் எனக் குறித்தது. இவ் விளுவழக்கின் உறுதிப்பாடு முன்னர் உரைக்கப்பட்டது.

இனியார் பெருமை கூறுவார் - இனியவர்களாகிய அடியவர்களது பெருமை கூறுவாராயினர் என்றலுமாம். அவர்பாற் கோணு வருளைப் பெற்ற தெங்ஙனமெனில் இறைவரே அடியார் பெருமைகளை எடுத்துச் சொல்லவும் (341, 342), திருத்தொண் டத் தொகைக்கு முதலெடுத்துக் கொடுக்கவும் (345), நம்பிகள் தொகை பாடித் துதிக் கவும் (347) உள்ள நிலை பெற்றதாம். திருத்தொண்டத் தொகையிலே பிரானும் நம்பி களும் அடியார் பெருமை கூறியது காண்க. 349 உரை பார்க்க. **இனி யார்** - அடியவர் கள். "இகத்தும் பரத்து மினியார்"—**சிறுத்தொண்டர் புராணம் - 77.**

இங்கு நாயனார் நம்பியை யாண்ட இறைவனுக்கும் புறகு என்றது தீயதன்றோ எனின், அஃது அடியார்பாற் சென்ற பத்திமையின் திண்மை யொழுக்கத்தால் உளதா யிற்று; அன்றியும் அவ்வாறு சொல்லும் அடியார்பத்தியின் உறைப்புடைய அடியா ரும் உளர் என உலகிற்கு இவர் மூலம் அறிவுறுத்த இவர் வாக்கில் அவ்வாறு நிகழ்த் தச் செய்தது இறைவன் திருவுள்ளம் போலும். ஆதலின் பிரானும் புறகென்றுரைப்ப அருளைப் பெற்றார் என்றார். "ஈசனே டாயினும் ஆசையறு மின்கள்" என்ற திருமந் திரமும் இங்குச் சிந்திக்கத் தக்கது.

மற்று இரண்டும் அசையென்றெடுக்குவாரு முண்டு. 8

499. ஞால முய்ய நாமுய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீல முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்
ஓல மிடவு முணர்வரியா "ரடியா ருடனுமுள" தென்றால்,
ஆல மமுது செய்தபிரா னடியார் பெருமை யறிந்தாரார்? ௯

(இ - ள்) வெளிப்படை. உலகம் உய்ய, நாம் உய்ய, சைவ நல்வழியினது சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகையை முன்னே நம்பிகள் பாடச், செழிய மறைகள் ஓலமிட்டும் உணர்தற்கரியாராகிய சிவபெருமான் "நாம் உள்ளது அடியார்களுடனே யாம்" என்று சொல்வாரானால், விடத்தை அமுதமாக்கிய இறைவனடியார் பெரு மையை யாவர் அறிந்தவர்கள்?

(வி - ரை) திருத்தொண்டத்தொகை நம்பி பாட என்று மாற்றிக்கூட்டுக. தொகை பாடியதனாற் சைவ நன்னெறியின் சீலம் உய்ந்தது; அது உய்யவே நாம் உய்ந்தோம்; நாம் உய்யவே ஞாலமும் உய்ந்தது என்று காரியகாரணத் தொடர்புபடுத்துக.

சைவ நல் நெறி - நல் - இடைப்பிறவரல். 467 பார்க்க. **நெறியின் சீலம்** - அதன் நல்லொழுக்கம்; இங்கு அடியார் பணியைக் குறித்தது. அதுவே இப்புராணத்தினுள் எடுத்துக் காட்டப்பெறும் உயர் குறிக்கோளாம். உண்மை நூல்களின் உட்குறிப்புமாம். "ஞாலந் தான்பர வப்படு கின்ற நான்மறை யங்க மோதிய நாவன், **சீலந் தான்** பெரி தும் மிகவல்ல சிறுவன்வன் ஒருண்டன்"—**சுந்தரர் - தக்கேசி - திருவொற்றியூர் - 10.**

சீலம் உய்ய - இவ்வொழுக்கம் உலகத்திலே நிலை பெற. நிலைபெறுதல் திருத் தொண்டத் தொகையினால் உண்டாயது என்பதாம். சீலம் நிலைபெறுதலாவது, "சென்ற காலத்தின் பழுதிலாத் திறனு மினியெதிர் காலத்தின் சிறப்பும், இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனு லெற்றைக்குந் திருவருளுடையேம்" என்று குலச்சிறை நாய னார் ஆளுடைய பிள்ளையாரைத் துதித்தவாறு, திருத்தொண்டத்தொகை பாடப்பெற்ற அதனால் எல்லாக் காலத்தும் எல்லாவிடத்தும் உள்ள எல்லா அடியார்களும் துதிக்கப் பெற்றார்கள். அதனாலே அவர்களெல்லாருடைய திருவருளுக்கும் எவ்விடத்தும் எஞ் ஞான்றும் இதனைத் துதித்தார்களெல்லாரும் இலக்காகி உய்கின்றனர் என்பதாம்.

நாம் உய்ய - நாம் - அத் திருத்தொண்டத் தொகையினை அருளிய நம்பிகளைப் பரமாசாரிய மரபிலே வைத்துத் தொழுதொழுகும் அடியார்களாகிய சைவ சித்தாந்த மரபினர். நம்பிகளது தொகைக்கு விரிநூலாகிய இப்புராணத்தைக் கேட்டு அநுசந்திக்கும் நாம் என்றலுமாம். ஆசாரியரது உபதேசப் பயன் முதற்கண்ணே அவரை ஆசாரியராகக் கொண்டொழுகும் பரம்பரையினர்க்கே யாகும்; ஆதலின் **சீலமுய்ய** என்றதற்கடுத்து **நாம் உய்ய** என்றார்.

ஞாலம் உய்ய - சைவ மரபொன்றே "தாமின்புறுவ துலகின் புறக்கண்டு காமுறு" வதாகலின் அதனை அடுத்து நம்மால் சைவ சித்தாந்த மரபினாலே **ஞால முய்ய** என்றார். என்னை? "நான் பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்" (திருமூலர் திருமந்திரம்), "ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே" (ஆளுடைய பிள்ளையார் திருப்பாசுரம்), "மன்று ளாரடி யாரவர் வான்புகழ், நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்" (பெரியபுராணம்) முதலிய பெருந் திருவாக்குக்கள் சைவ மரபினன்றி மற்றுக் காண்ட லரிதாமென்க. "திருத்தொண்டத் தொகையா லுலகு விளங்க" (501), என்றதும் காண்க.

"பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்த னிறைபுகழா
னேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னுளதாய்த்திக் குவலயமே "
—11-ம் திருமுறை - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - 80

என்ற நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கும் இங்கு வைத்துக் கருதத் தக்கது.

முன்பாட - தேவாசிரியனில் எழுந்தருளிய திருக்கூட்டத்தின் முன்னர். "தூரத்தே திருக்கூட்டம் பல முறையாற் றொழுதன்பு, சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்று" (347), "வன்றொண்டர் பாடியவ ரெதிர் பணிந்தார்" (348) என்பன காண்க. **செழுமறைகள்** - **செழு** - நாதத்திற் செழித்த.

ஓலமிடவு முணர்வரியார் - "மயக்கறு மறையோலிட்டு மாலயன் றேட நின்றான்" (432) உரை பார்க்க. பலவாறு சொல்லியும், அன்மைச் சொல்லினாற் றுதித்தும், முடிவு காணாது இளைத்துச் சாந்தி வாசகத்துடன் நின்று விடுவது மறை யென்ப.

"அடியார் உடன் நாம் உளது" என்றல் - நாம் உள்ளது அடியார்களுடனேயாம். விறன்மிண்டர் உரைத்தபடி நாம் இருப்பது அவர்களுக்குப் புறம்பேயன்று, உடனேயாம், என இறைவன் கூறியருளியபடி. இது இறைவன் அடியாருடனே கலந்து நிற்கும் அத்துவிதத் தன்மை குறித்தது. ஆயின் இறைவன் எங்கும் கலந்து நிற்றலின் இந்நிலை அடியார்க்குமட்டுமே யன்றி எல்லார்க்கு மொக்குமே? யெனின் ஒவ்வாது; அடியார்களுடன் வெளிப்பட உடனாய் நிற்பன் என்க. அவருரை தனதுரையேயாக உரைப்பன்; அவர் செயல் தன் செயலேயாகச் செய்வன்; அவர் கரணங்களைத் தனது சிவகரணங்களே யாக்குவன். "தான் செய்யுந் தன்மைகளும் ஆக்கியி டுமன்பர்க் கவன்" என்பது சாத்திரம். இவ்வாறு கலந்துள்ளமையாலே அடியாருடன் உள்ள தன்றித், "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என முதல் எடுத்துக் கொடுத்ததனாலும் இறைவன் அடியாருடன் உளராயினர். தில்லைவாழ் அந்தணர்களில் இறைவன் ஒருவராதலையும், **அடியேன்** என்றதையும் குறிக்க.

வன்றொண்டன் புறகென்றுரைப்ப, புனைந்தார்க்கும் புறகென்றுரைப்பப் பெற்றார்; (அதற்கு) நம்பிதொகைபாட, அரியார் அடியாருடனும் உளதென்றால் பெருமை அறிந்தாரார்? என 497, 498, 499 பாட்டுக்களை முடித்துக் கண்டுகொள்க.

இவ்வாறன்றித், தொகை முன்பாட (விறன்மிண்டர்) "அடியார் உடனும்" என்றது உளதாயிற்று. அதாவது தொகைபாடு முன் **புறகு** என்ற அவரே, அது பாடிய

பின் **உடன்** என்று கூறினார். முன்னர்ப் புறகு என்னவும், பின்னர் **உடன்** என்னவும் அவரே வல்லர் என்று பொருள் கூறுவாருமுண்டு. இறைவனார் முதலடியாராய் அடியாருடனிருக்கும் சீர்மையைப் பெற்றுள்ளது (இத்தொகை) என்றால் என்றுரைப்பாருமுண்டு. **ஞாலமுய்ய** என்பது வேதநெறி என்றும், **நாமுய்ய** என்பது ஆகமநெறியாகிய பத்திநெறி என்றும், இவ்விரண்டின் சீலங்களை உலகுக்குணர்த்துவது **சைவநெறி** என்றும், வேதநெறியால் வாக்கும், சைவநெறியால் காயமும், பத்திநெறியால் மனமும் நெறிப்பட்டொழுகும் முறை காட்டுவது திருத்தொண்டத்தொகை என்றும் இங்கு விசேடங் கூறுவாருமுண்டு.

என்றால் - என்று காண்போமானால். **ஆலமமுது செய்தபிரான் அடியார் பெருமை**- மரணத்தைத் தரும் விடத்தினையே மரணம் போக்கும் அமுதமாகச் செய்தவன். "ஆலத்தி னாலமிர் தாக்கிய கோன்" என்றது திருக்கோவையார். **அமுது செய்த** - உண்ட என்றலுமாம். ஆலத்தை அமுதமாகச் செய்ததுபோல், **புறகு** என்ற தீய மொழியினைக் கொண்டே திருத்தொண்டத்தொகையினையும், அடியார் உடனும் உளது என்ற அருண்மொழியினையும் ஆக்கிய அருளாளன் என்பது குறிக்க இங்கு இச்சிறப்பாற் கூறினார்.

பிரான்அடியார் பெருமை - விறன்மிண்டரது பெருமை. ஆலத்தை அமுதமாக்கிய தமது பிரானைப்போலவே, புறகு என்ற நம்பிகளைப் பேரடியாராகவும் தேசமுய்யத் திருத்தொண்டத்தொகை முன்பணித்த ஆசாரியராகவும் ஆக்கிய பெருமையுடையார் என்பது குறிப்பு. அடியார் என்று பொதுப்படக் கூறியதனால் இது போன்றே எல்லா அடியார்களது பெருமையுமாம் என்பதும் குறிப்பு.

பிரானடியார் - இங்கு தேவாசிரியனிலே இருந்து புறகென்ற விறண்மிண்டர் பெருமை என்றும், அங்கு அம்மொழி கேட்டுப் பிழை யுடன்பட்டார் போன்று உடனும் உளது எனவும்; தனித்தனி வேறு அடியேன் எனவும், கூறிய பிரானும் அடியாரும் (நம்பிகளும்) ஆகிய இவர் பெருமை என்றும் இருதிறமும் குறிக்கவைத்த அழகும் காண்க. **யார்** என்ற வினா ஒருவருமிலர் என்ற எதிர்மறை விடை குறித்தது.

உடனு முளமென்றால்—என்பதும் பாடம். 9

500. ஒக்க நெடுநா ளிவ்வுலகி லுயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றித் தொண்டுபெற்ற விறன்மிண்டர்
தக்க வகையாற் றம்பெருமா னருளி னாலே தாணிழற்கீழ்
மிக்க கணநா யகராகுந் தன்மை பெற்று விளங்கினார். ௧௦

(இ - ள்) வெளிப்படை. இதுபோலவே பல காலம் இவ்வுலகிலே உயர்ந்த பெருந்தன்மைகள் யாவும் கூடிய நிலையாகிய சைவநெறியினைப் பாதுகாத்துத் திருத்தொண்டு செய்யும் பேறு பெற்று வாழ்ந்த **விறன்மிண்ட நாயனார்** தமது திருத்தொண்டினுக்குப் பொருந்திய வகையினாலே கணநாயகராகும் நிலைமையினைப் பெற்றுத் திருவடிநிழற்கீழ் விளங்கினார்.

(வி - ரை) **ஒக்க** - மேலே கண்ட வகைகளைப்போலவே. **பெருந்தன்மை தொக்க சைவநெறி** என மாற்றுக. பெரியன யாவையும் தொகுதியாகக் கூடிய நெறி சைவநெறியேயாம் என்பது. இது திருத்தொண்டத் தொகையாற் போந்த நெறி குறித்தது.

நிலைமை நெறி - நிலைமையே இந்நெறியாம் என்க.

போற்றி - பாதுகாத்து. துதித்து என்றலுமாம்.

தொண்டு பெற்ற - நெறி போற்றுதலாகிய திருத்தொண்டினைச் செய்யும் பேறு பெற்ற. **பெற்ற** - "திருக்கூட்டத் தெதிர்முன்பரவு மருள்பெற்றே யிறைவர் பாதந் தொழப் பெற்றார்" (495), "புறகென் றுரைப்பச் சிவனருளாற் பெருகா நின்ற பெரும்

பேறு பெற்றார் ; மற்றும் பேறு நின்றார்'' (497) என்பன காண்க. இத்தொண்டினை இறைவ னருளாலே தரப் பெற்றவர். “ அவனருளாலே அவன்றாள் வணங்கி '' என் பது திருவாசகம்.

தக்க வகை - இவர் செய்து வந்த திருத்தொண்டினுக்குப் பொருந்திய வகை. தகுதியாவது சரியையாதி வழிகளிற் றொண்டு செய்வோர்க்கு உரிய சாலோக முதலி யனவாகச் சாத்திரங்களில் கூறிய வகை.

அருளினாலே தன்மை பெற்று - அருளாலே தொண்டு பெற்ற அதனால் அவ் வருளினாலே இறுதியில் இத்தன்மை பெற்று. **மிக்க** - மேன்மையான. **கணநாயகர்** - சிவகணங்களின் தலைவர். தொண்டர்களின் நெறி போற்றி இங்குத் தலைமை பெற்ற தொண்டினுக் கேற்க அங்கும் கணநாயகராயினர் என்பது. “தூநறுங் கொன்றை முடி யவர் சுடர்நெடுங் கயிலைமால் வரையெய்தி, மான நற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித் தொண்டி னிலைபெற்றார்'' (6) என்ற கணநாத நாயனார் புராண உள்ளுறையுங் காண்க.

தாள் நிழல் - 489 பார்க்க. 10

501\. வேறு பிறிதென்? திருத்தொண்டத் தொகையா லுலகு விளங்கவரும்
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்மிண் டரைப்பெருமை
கூறு மளவென் னளவிற்றே ?; யவர்தாள் சென்னி மேற்கொண்டே
யாறை வணிக ரமர்நீதி யன்பர் செய்கை யறைகுவாம். கக

(இ - ள்) வெளிப்படை. பல வேறு மற்றும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய தென்னை?; **திருத்தொண்டத்**தொகை கிடைக்கப் பெற்ற அதனாலே உலகம் விளங்க வரும் பெரும் பேற்றினுக்குக் காரணராகும் தலைவராகிய **விறன்மிண்ட நாயனாரின்** பெருமையை எடுத்துச் சொல்லும் அளவு என் அளவுக்குள் அமையுமோ? அவர் திரு வடியைத் தலைமேற் சூடிக் கொண்டே அத்துணைகொண்டு, பழயாறை வணிகராகிய **அமர்நீதி நாயனாரது** திருத்தொண்டின் பண்பும் வரலாறுங் கூறுவோம்.

(வி - ரை) இது ஆசிரியர் கூற்று. இப்புராணத்தை முடித்துக் காட்டி, மேல் வரும் புராணத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

திருத்தொண்டத் தொகை..........பெருமை - இந் நாயனாரின் சரிதத்தையும் அதன் உள்ளுறையையும் வடித்து எடுத்து முடித்துக் காட்டியபடி.

தொகையால் உலகு விளங்க வரும் பேறு - ஞாலமுய்ய (499) என்ற இடத் துக் காண்க. “ ஈச னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழவெடுத்துத், தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்'' (சண்டீசர் புரா - 60) என்றதும் காண்க. 35 - உரை பார்க்க.

காரணர் - நம்பிகள் பாடுதற்கு நிமித்த காரணராயிருந்தவர்.

கூறும் அளவு என் அளவிற்றே ? - சொல்கின்ற சொல்லாற்றலின் அளவு எனது ஆற்றலுட்பட அமையுமோ ? அமையாது. ஏகாரம் வினா. எதிர்மறைப் பொருள் குறித் தது. **இனி யார் பெருமை கூறுவார்** - (498), **பெருமை யறிந்தாரார்** - (499) என முன்னருங் கூறினார். இப்புராணத்திற்கு முதனூலாயுள்ள திருத்தொண்டத் தொகைக் குக் காரணராகிய சிறப்புப்பற்றித் தேற்றம் பெறப் பின்னரும் அதனையே எடுத்துக் காட்டி முடித்தவாறு. 490 உரை பார்க்க.

ஆறை - **பழையாறை** என்றது முதல் குறைந்து **ஆறை** என நின்றது. ஆறை வடதளி, ஆறை மேற்றளி என்ற வழக்குக்களும் காண்க. **வணிகர் - அன்பர்** - வணிகர் குலத்தினராகிய அன்பர். **அமர்நீதி** - நாயனாரது பெயர். 11

சுருக்கம்:—சிவபெருமானைப் பரவிப் பரசுபெற்ற பரசிராமர் பெற்ற நாடு சேரர்களுக்குரிய **மலைநாடாம்.** அதில் **திருச்செங்குன்றூர்** பழைமையாகிய செழித்த ஊர். அவ்வூரில் வேளாளர் மரபிலே குல விளக்காக அவதரித்தவர் **விறன்மிண்ட நாயனார்.** அவர் சிவபெருமான் திருவடியே பற்றாகக் கொண்டு மற்றப் பற்றுக்களை யெல்லாம் அறவெறிவார்; மெய்யடியார்களிடத் தன்புடையார்; இறைவன் எழுந்தருளிய தலங்கள்தோறும் சென்று வழிபடும் ஆசையாற் புறப்பட்டுச் செல்வாராய் அங்கங்கும் அடியார் திருக்கூட்டத்தை முன்னர்ப் பணிந்து பின்னர் இறைவரைப் பணியும் நியதி பூண்டவர். இவ்வாறு செல்பவர் மலைநாடு கடந்துசென்று சிவதலங்கள் பலவற்றையும் வணங்கி அங்கங்கும் அடியார் பத்தியாகிய திண்ணிய ஒழுக்கநடைசெலுத்தித் திருவாரூரையடைந்து பணிந்திருந்தார். அங்குத் தினமும் இறைவனைத் தொழுது செல்லும் நம்பிஆரூரர் ஒருநாள் தேவாசிரியனில் எழுந்தருளிய அடியார்களைத் தொழுது வந்தணையாது மனத்துட் கொண்டே ஒருவாறு ஒதுங்கி, நேரே இறைவனைத் தொழத் திருக்கோயிலினுட் சென்றனர். அது கண்டு, விறன்மிண்ட நாயனார், **வன்றொண்டர் புறகு** என்றும், 'அவருக்குப் பிரானாகிய இறைவனும் **புறகு**' என்றும் திருவருளாலே உரைக்கப்பெற்றார். அதனால் உலகமுய்ய நம்பிகள் திருத்தொண்டத்தொகை பாடித் திருக்கூட்டத்தைத் தொழுதணைந்தார். இறைவனும் "அடியார் உடன் நாம் உளது" என்றருளினர். எம்பிரானடியார் பெருமை யாவரே அறியவல்லார்?

இவ்வாறு பலநாள் சைவநெறி பாதுகாத்துத் திருத்தொண்டு செய்திருந்த விறன்மிண்ட நாயனார் அதற்குத் தக்க வகையினாலே, திருவருளினாலே, மேன்மையுடைய கணநாயகராகும் தன்மை பெற்று, இறைவர் திருவடிக்கீழ் வாழுமின்பம் பெற்று விளங்கினார்.

திருத்தொண்டத்தொகை பெற்றதனாலே உலகம் விளங்கக் காரணராகிய விறன்மிண்ட நாயனாரது பெருமையைச் சொல்லும் அளவு எம் அளவினுள் அமையுமோ? அமையாது.*

---

*நாயனார் சரிதத்தின் தலவழக்குக் குறிப்புக்கள்

நாயனார் திருவாரூரில் மடவளாகம் வடக்குத் தேர் வீதியில் அவரது மடம் என்று இப்போதும் வழங்குகிற இடத்தில் திருமடம் அமைத்து வாழ்வாராயினர். திருவாரூரையும், அவரையாண்ட தியாகேசரையும் புறகென்று நாயனார் சொல்லியபின், திருக்கோயில் இரண்டாம் ஆவரணத்தின் மதிற்சுவரை ஒட்டி வடக்குத் திருவாயிலுக்கு நேரே தியாகேசர் வன்றொண்டர்க்குக் காட்சி தந்தருளினர். அதனைக் குறிக்க இப்போது அங்கு 'ஒட்டுத் தியாகர் கோயில்' என்றொரு சிறு ஆலயம் உண்டு. இதனை நினைந்தே நம்பிகள் "ஒட்டி யாட்கொண்டு போயொளித் திட்ட உச்சிப் போதனை" என்று பதிகத்திற் குறித்தனர் போலும். இவ்வாறு ஒளிந்து ஒட்டிக் காட்சி தந்தது கண்ட விறன்மிண்டர் வெகுண்டு, திருவாரூரில் இனி அடி யெடுத்து வைப்பதில்லை என்றசூள் உரைத்து மனைவியாருடன் திருவாரூரினின்றும் புறப்பட்டு அதன் எல்லை கடந்து வடக்கே புத்தாற்றங் கரையில் ஒரு பந்தல் அமைத்து அங்கே அடியவர் பூசை நடத்தி வந்தார். அந்த இடமே இப்பொழுது **ஆண்டிப் பந்தல்** என வழங்குவது. திருவாரூர் - நன்னிலம் பாதையில் திருவாரூரிலிருந்து 5 நாழிகை யளவில் உள்ளது. இப்படியிருக்கும் நாளில் வரும் எந்த அடியாராவது திருவாரூர் என்றால் அவரது கால்களை மழுவினால் வெட்டும் சபதம் பூண்டிருந்தார். ஒரு நாள் இறைவரே அடியராக எழுந்தருளி வந்து, "நாமிருப்பது நிறை செல்வத் திருவாரூர்' என்ன, அவரது கால்களைத் துணிப்பதற்கு மழுவுடன் நாயனார் துரத்த, அவர் முன்னே ஓட, இருவரும் திருவாரூர் எல்லைக்குள் வந்து சேர, அவர் "வந்தோ மிப்பால்" என்று சொல்லி யிருந்தனர். தாம் சபதங்கடந்தமையால் நாயனார் தம் கால்களைத் தாமே வெட்டிக் கொண்டனர். இறைவர் மறைந்து, நாயனார்க்கும் மனைவியார்க்கும் காட்சி தந்து பேறளித்தனர். அந்த இடத்தில் நாயனாரது திருவுருவமும் காட்சி தந்த கோலமும் உள்ளன. "**வந்தோமிப்**

தல விசேடம் :—திருச்செங்குன்றூர். இத்தலம் திருவாங்கூர் இராச்சியத்திலே கொல்லம் என்ற மேல்கடற் றுறைமுக நிலயத்திலிருந்து கிழக்கே 10 நாழிகை யளவிலும் தென்காசியிலிருந்து 48 நாழிகையிலும் உள்ளது **கோட்டகாரக்கரை** என்ற இருப்புப்பாதை நிலயம். அங்கு நின்றும் வடக்கே போகும் **பெருவழி** (Central trunk Road) என்ற கற்சாலை வழியாய் 25 நாழிகை யளவில் இது அடையத்தக்கது. கோட்டயத்துக்கும் கொட்டாரக்கரைக்கும் இடையில் உள்ளது. வடக்கிலிருந்து கொச்சி வழியாய் வருகின்றவர்கள் **எர்ணகுளம்** என்ற இருப்புப்பாதை நிலயத்திலிருந்து தெற்கில் மேற்குறித்த **பெருவழி**யிலே ஏற்றுமானூர் (ஏற்றின்மேல்-இடபத்தின்மேல் - வரும் சிவனூர்) - கோட்டயம் - செங்கணச்சேரி - திருவில்லா - என்ற ஊர்களைக் கடந்து திருச்செங்குன்றூரை அடையலாம். எர்ணகுளத்திலிருந்து ஏறக்குறைய 55 நாழிகை யளவு தூரமுண்டு. இருவழியும் மோட்டார் பஸ் வசதியுண்டு. பரசிராமர் கண்டு வேதியர்க் களித்த இந்நாட்டு 64 ஊர்களில் இவ்வூர் தெற்குக் கோடியில் உள்ளது. இதனை இப்போது **செங்கண்ணூர்** என மலையாளர் வழங்குவர். சிவாலயமும் அதில் உள்ள பகவதி என்ற அம்மையார் ஆலயமும் *பிரசித்தம். விரிவுகள் திருவிதாங்கூர் சமஸ்தான வெளியீட்டில் (Travancore State Manual) கண்டு கொள்க. இது ஒரு வைப்புத் தலம். "கொடுங்கோளூ ரஞ்சைக்களம் செங்குன்றூர்" என மலைநாட்டுத் தலங்களை வரிசைப்படுத்தி அப்பமூர்த்திகள் க்ஷேத்திரத் திருத்தாண்டகத்தில் கூறியது காண்க.

491 பாட்டிலே கூறியபடி பரசிராமன் பெற்ற நாடாகிய மலைநாடு முற்காலத்திலே தமிழ் மூவேந்தர்களில் ஒருவராகிய சேரர்குல மன்னர்களால் ஆளப்பெற்றுச்

பால்" என வழங்கிய அவ்விடம் இப்போது "**வெண்டாம்பாலை**" என மருவி வழங்குகின்றது. வடக்குத் திருவாரூர் எனவும், தென்திருவாரூர் எனவும் இரண்டு வேறு பகுப்புடையது திருவாரூராகும். இன்றும் அரசாங்கக் கணக்கில் இரண்டும் வேறு கிராமங்களாகப் பதிவு செய்துள்ளார்கள். இப்போது திருவாரூர் என வழங்குவதும், பூங்கோயில் என்னும் திருக்கோயில் அமைந்துள்ளதும் தென்திருவாரூராம். "தென்திருவாரூர்புக் கெந்தைபிரானாரை யென்றுகொல் லெய்துவதே" என்ற நம்பிகள் தேவாரம் காண்க. வடதிருவாரூரின் தெற்கெல்லையாவது திருவாரூரின் வடக்கில் இராசாத் தெரு (சம்பந்தமூர்த்திப் பிள்ளையார் தெரு)வுக்கு வடக்கேயுள்ள வாய்க்காலேயாம். அதிலிருந்து வடக்கே **வெண்டாம்பாலை**வரை வடதிருவாரூராம். இங்குக் கால்வாய்க்கு வடக்கே சில தெருக்களும், புதுத் தெருவும், காவிமனைகளும் உண்டு. ஏனைய வெல்லாம் கழனிகளாக மாறிவிட்டன.

இக்குறிப்புக்கள் சைவத் திருவாளர் திருவாரூர்ப் போலீசு இன்ஸ்பெக்டர் குடிசைக்கிழார் அ. சிதம்பரனாரால் தரப்பெற்றன. குறிப்பு:—இவற்றிற் புராணத்துடன் மாறுபடாதன கொண்டு ஏனையவற்றைக் கர்ண பரம்பரை வழக்கென்று விடுக்க. (பதிப்பாசிரியர்)

*பகவதி உற்சவமூர்த்திக்கு 28 நாள் கொண்ட விசேடத் திருவிழா உண்டு. ஓராண்டில் எட்டு அல்லது பத்துமுறை பூப்பு உற்சவம் என்றதொரு சிறப்பும் உண்டு. அக்காலத்தில் அந்த உற்சவ மூர்த்தியின் வஸ்திரத்தில் பூப்புக் கறைகள் காணப்படுமாம். அக்காலத்து மூன்று நாட்கள் கோயில் திருக்காப்பிட்டு அம்மூர்த்தியை வெளியே உரிய இடத்து வைத்திருந்து பிற்றை நாள் அபிடேக முதலிய சுத்தங்கள்செய்து முடித்துக் கோயிற்பூசை நடத்துவது வழக்கம். இதன் புதுமை நோக்கிய (Col. Munro) **மன்றோ** என்ற அரசாங்க அதிகாரி இதனை நம்பாமல் இதற்குரிய செலவை அனுமதிக்க மறுத்தனர் என்றும், பின்னர் இதன் உண்மையை உரியவர்களாற் றெளிந்து கொண்டு இச்செலவைப் பதிவு (நிரந்தரத்திட்டம்) எழுத உத்தரவிட்டார் என்றும் வரலாறு கேட்கப் பெறுகின்றது. விரிவுகள் Travancore manual Vol. II Chapter VIII Religion என்ற இடத்துப் பார்க்க.

சேரநாடு என்ற பேரால் அறியப்பெற்று முழுத் தமிழ் நாடாயிருந்தது. இதனை ஆண்ட சேரன் செங்குட்டுவனும், அவரது இளவலாகிய இளங்கோவடிகளும், சேரமான் பெருமாணாயனாரும், மற்றும் பிறரும் பழுத்த செந்தமிழ் மன்னர்களேயாம். சேரமான் பெருமாணாயனாருக்குப் பின், இப்போதைக்கு ஏறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன், தமிழ் மொழியினின்றும் பிறந்து ஆரியத்துடன் கலந்த **மலையாள** மொழி பேணும் நாடாக இந்நாடு மாறி நடைபெற்று வருகின்றது.

பரசிராமன் நாடு பெற்ற வரலாறு 494 பாட்டின் கீழ்க் காண்க. "மொய்த்த சீர் முந்நூற் றறுபது வேலி மூன்று நூறுவே தியரொடு நுனக்கு, வொத்த பொன்மணிக் கலசங்க ளேந்தி யோங்கு நின்றியூ ரென் றுனக் களிப்பப், பத்தி செய்தவப் பரசிராமற்குப் பாதங் காட்டிய நீதி" (தக்கேசி) என்ற நம்பிகள் தேவாரத்திற் கூறியது இப்பரசிராமர் வேதியர்க்கு நாடு தானங் கொடுத்த செய்தியைக் குறித்ததோ? அன்றி, அப்பதிகத் தாற் போற்றிய திருநின்றியூரைப் பற்றியதோர் தல சரிதமோ என்பதாராயத்தக்கது. அப்பரசிராமர் இவர் தாமோ என்பதும் ஆராயத்தக்கதாம்.

இத்தலம் கொங்கு நாட்டுத் தலமாகிய **திருக்கொடிமாடச் செங்குன்றூர்** என்ற **திருச்செங்கோடு** என்பதனோடு ஒன்றாய் மயங்கற்பாலதன்று.

கற்பனை:—தவத்தின் வலிமை பெரிது. சிவபெருமானை நோக்கிச் செய்யும் தவங்கள் எவராலும் மாற்றொண்ணாத பெரும் பயன்களைத் தரவல்லன. இவ்வாறு இங்குப் பரசிராமர் நோற்றுப் பெற்ற பரசாயுதத்தின் தடுக்கலாகாத பெருவலிமை யளத்தற்கரிது. கந்தபுராணம், பாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்களிலே அவ்வவரும் சிவன்பாற் பெற்ற பெரும் படைக்கலங்களே பெருவலி படைத்தன என்பது நன்குணரலாம். இத்தவத்தாலே பகைவரை வெல்லல், நாடு பெறுதல், விண்ணவரை யேவல் கொள்ளுதல் முதலிய பலவும் பெறலாம். இது பற்றியே "அவன் றவஞ் செப்பற் பாற்றோ?" என்பது முதலாகக் கந்தபுராணம் முதலியவற்றுள் இத் தவவலிமை விதந்து பேசப் பெறும்.

2. வேளாளர் மறை சொன்ன வழியொழுகிக் குடிமையின் றூய்மையில் நிற்க.

3. சிவன் கழற் பற்றினையே பற்றுக. பிற பற்றுக்களை அத்துணைகொண்டு எறிக.

4. சிவனாரது உண்மை யன்பர்களிடத்துப் பத்திசெய்து பணிந்தொழுகுக. சிவஞானிகளுடன் கூடுக; சிவனன்பர்களைச் சிவனெனவே கொண்டு வழிபடுக; தம்முடன் இணங்குவோர்களைச் சிவனை மறப்பித்துத் தீய நெறியிலே செலுத்திப் பிறவியிலே வீழ்த்தும் அஞ்ஞானிகளோடு இணங்கா தொழிக. "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை - யறப்பித்துப், பத்த ரினத் தாய்ப் பரனுணர்வி னாலுணரும், மெய்த்தவரை மேவா வினை" என்ற சிவஞான போதம் காண்க.

5. சிவனடியார்கள், இறைவனைப் பணியு முன்னர்ப் பேணிப் பணியத் தக்கார்.

6. அடியாரைத் தொழாது இறைவனை வணங்குவோர் திருக்கூட்டத்தை இகழ்ந்தவராகித் திருக்கூட்டத்திற்குப் புறம்பாகு நிலையினர்.

7. அடியார் பத்தி கொண்டொழுகுவோர் தன்னையும் தன்னா லாட் கொள்ளப் பெற்றாரையும் புறகு எனினும், தம் அடியார்பால் வைத்த அருளினாலே அதற்கும் மகிழ்ந்து அருள்கொடுத்து உடன்வீற்றிருக்கும் பெருங்கருணையாளன் சிவன்.

8. அடியார் பத்தியின் வசப்பட்டுச் செய்யப்படும் செயல்கள் குற்றமாகா. அச் செயல்கள் சிவன் றானே ஆவேசித்துச் செய்தனவாம்.

9. சிவதல யாத்திரை செய்தல் சிறந்தது. அது எல்லா நலன்களையுந் தரும்.

10. திருத்தொண்டத் தொகையானது உலகம் உய்யத் தந்த பெரும் பேறாகும்.

விறன்மிண்ட நாயனார் புராணம் முற்றும்.

7. அமர்நீதி நாயனார் புராணம்

தொகை

அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்—**திருத்தொண்டத் தொகை**

வகை

மிண்டும் பொழிற்பழை யாறை யமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்குநல் லூரின்முன் "**கோவண நேர்**
கொண்டிங் கரு"*ளென்று தன்பெருஞ் செல்வமுந் தன்னையுந்தன்*
றுண்ட மதிநுத லாளையு மீந்த தொழிலினனே.

—**திருத்தொண்டர் திருவந்தாதி - 7**

விரி

வேறு

502. சீரி னீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரி னீடிய பெருமைசேர் பதிபழை யாறை. க

புராணம்:—*நிறுத்த முறையானே, இச் சருக்கத்து ஏழாவது* **அமர்நீதியார்** *என்ற பேருடைய நாயனாரது புராணங் கூறத் தொடங்குகின்றார். இது அவரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி.*

தொகை:—*அகவிதழ்களோடு கூடிய மெல்லிய முல்லை மலர்மாலை யணிந்த வணிகர் குலத்தவராகிய அமர்நீதி நாயனாருக்கு நான் அடியேனாவேன்.*

அல்லி - *அகவிதழ்.* (புல்லி - புறவிதழ்.) புறவிதழ் வேறாக இல்லாமல் முற்றும் அகவிதழ்போலே அமைந்தது முல்லை மலரின் சிறப்பிலக்கணம். அகமும் புறமும் ஒன்றேயாயிருக்கும் அமர்நீதியாரின் பெருமை குறிக்க இச் சிறப்பினாற் கூறினார். "உள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா யுருகாதால்" என்ற திருவாசகக் கருத்தும் காண்க. **முல்லை** - வணிகர்க்குரிய அடையாள மாலையாம். இதனால் நாயனாரது மரபும் இயலும் குறித்தபடி. **மென்முல்லை** - முல்லைமலர்கள் மிகமென்மையுடையன வாயினும் மண மிக்கனவும், நெடுநாணின்று பூத் தருவனவும், மலர் மிகத் தருவனவுமாம்.

"செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை **முல்லை மெல்லரும் பீனுங்** குற்றாலம்"—**குறிஞ்சி - 3.**

என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. **தார்** - இன்பத்திற்குரியதோர் அடையாள மாலை.

வகை:—**மிண்டும்...அமர்நீதி** - நெருங்கிய சோலைகள் சூழ்ந்த பழையாறையில் அவதரித்த அமர்நீதி நாயனார்; **வெண்பொடியின்...பிராற்கு** - திருவெண்ணீற்றைத் திரிபுண்டரமாக நெற்றியிலே தரித்த சிவபெருமானுக்கு; **நல்லூரின்** - திருநல்லூரிலே; **முன்...என்று** - முன் நீர் என்னிடம் தந்துவைத்த கோவணம், வைத்த விடத்தினின்று காணாமற் போய்விட்டதனாலே, அதற்கு நேராக உள்ள பொருளினைக் கொண்டு இங்கு என்பிழை பொறுத்தருள வேண்டுமென்று; **தன்...தொழிலினனே** - தம்முடைய பெருஞ் செல்வங்களையும், தம்மையும், தமது பிறைபோன்ற நெற்றியையுடைய மனைவியாரையும் துலையிலேற்றித் தந்த தொழிலுடையவரேயாம்.

மீண்டும் பொழில் - மரங்களின் செறிவினாலும், தேன் - மணம் முதலியவற்றாலும் நெருங்கிய சோலைகள். இதனைக் "காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து" (502) என விரித்தது விரிநூல். **வெண்பொடி** - திருநீறு. **முண்டம்** - திரிபுண்டரமாக நீறு தரித்தல் (508). **தரித்த நல்லூரின் பிரானுக்கு** என மாற்றி யுரைக்க. **நல்லூரின்** என்பதனைச் சிங்கநோக்காக வைத்து, **நல்லூரின் ஈந்த** என்று கூட்டியுரைக்கினுமமையும். **கோவணநேர் கொண்டிங்கருளென்று** - இதன் விரிவு 529 முதல் 533 வரை உள்ள பாட்டுக்களிலும், **பெருஞ் செல்வம்...தொழிலினானே** - விரிவு 533 முதல் 545 வரை உள்ள பாட்டுக்களிலும் காண்க. **நேர்கொண்டு** - சமனாக - நேராக உள்ள பொருளை ஏற்றுக்கொண்டு. **தன்னையுந் தன் துணை மதிநுதலாளையும்** - என்றதனாற் சிறிய புதல்வனையும் உடன்கொள்க. 541 - 543 - 447 பாட்டுக்கள் பார்க்க. 548-ல் **குடும்பமும்** என்றதும் காண்க.

502. (இ - ள்) வெளிப்படை. சிறப்பிலே நீடிய சோழர்களது, **காவிரிபாயும் நன்னாட்டிலே**, மேகத்தின் அமைந்த, களிப்புடைய வண்டுகள் மொய்த்த, பூஞ்சோலைகளாற் சூழப்பெற்றும், தேர்களோடு கூடிய செழிய மணியுடைய வீதிகளாலே சிறக்கப்பெற்றும், உலகில் நீடி நிலைத்த பெருமைசேர் பதியாவது **பழையாறை** என்பதாம்.

(வி - ரை) **சீரின் நீடிய** - சீரால் நீடப்பெற்றது அதன் சிறப்பாலே என்க. **சீராவது** தங்கள் பொங்கொளி வெண் திருநீற்றுச் சிறப்பை எங்கும் பரப்புதல். நீடிய செம்பியர் எனவும், நீடிய நாடு எனவும் இருவழியும் கூட்டியுரைக்க நின்றது.

செம்பியர் - சோழர்கள். சிபிச்சக்கரவர்த்தியின் வழியிலே வந்தவர்கள். "துலையிற் புறவி னிறையளித்த சோழர்"—(கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் - 1).

பொன்னி - நன் - நாடு - காவிரி பாய்தலால் நன்மை மிக்க நாடு. இவற்றின் விரிவு முன்னர்த் திருநாட்டுச்சிறப்பில் உரைக்கப்பெற்றது. "வம்புலா மலர் நீரால் வழிபட்டு" (57) என்ற திருப்பாட்டிற் குறித்தது இந்நன்மைகளின் தேற்றம்.

காரின் மேவிய அளி - வண்டுக் கூட்டங்கள் மேகம் போன்று பொருந்தியன என்க. "சுரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்" (65) என்ற இடத்துக் காண்க. அங்கு விரித்துக் கூறிய இந்நாட்டுச் சிறப்பை ஆசிரியர் அழகுபெற நினைப்பித்த குறிப்புக் காண்க. **காரின் மேவிய பொழில்** என்று கூட்டி மேகமண்டலத்தை அளாவிய பூஞ்சோலைகள் என்றுரைப்பாருமுண்டு. **களிஅளி** - தேனுண்பதனாற் களிப்புடைய வண்டுகள். சோலைகள் சூழ்தல் மழைச் சிறப்புத்தரும் என்பர்.

பொழில் சூழ்ந்து - பொழில்களாற் சூழப்பெற்று. செயப்பாட்டுவினைப் பொருளில் வந்தது. சூழ்ந்து - சிறந்து - பெருமைசேர் பதி - எனக் கூட்டி முடிக்க.

தேரின் மேவிய செழுமணி வீதிகள் - தேரின் மேவிய மணி எனவும், தேரின் மேவிய வீதி எனவும் கூட்டி உரைக்கத்தக்கது. தேர்களில் மணிகள் கட்டுதல் வழக்கு. **மணி** - அழகு. "வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ" (திருஞான - புரா - 25), "படர்ந்த பேரொளிப் பன்மணி வீதி" (91) முதலியவை காண்க. **வீதிகளின் செழுமை** செல்வப் பொலிவாலும் மக்கட்பொலிவாலும் ஆம்.

தேர் - பழையாறை என்ற இத்திருநகருடன் வடதளியும் மேற்றளியும் கூடுதலால் அவற்றின் திருவிழாக்களிற் சேரும் தேர்களைக் குறித்தது. அரசர்களின் தேர்களும், சிறார்கள் ஆடும் சிறு தேர்களும் கூட்டித் தேரின் மேவிய செழுமை சிறந்தது என்றலுமாம். "ஆழிமணிச் சிறுதேருந் தவ்விரதப் பொடியாடும், வாழிவளர் மறைச் சிறார் நெருங்கியுள மணிமறுகு" (திருஞான - புரா - 11) என்பது காண்க.

நீடிய பெருமை சேர் - காலத்தாலும் இடத்தாலும் நீடு செல்லும் பல பெருமைகளும் இப்பதியினைத் தேடிவந்து **சேர்ந்தன** என்க.

பழையாறை - இதனைப் பற்றிய குறிப்புக்கள் தலவிசேடத்திற் காண்க.

காரினீடிய—தேரினீடிய—என்பனவும் பாடங்கள்.

503. மன்னு மப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னு முத்துநன் மணிகளும் பூந்துகின் முதலா
வெந்நி லத்தினு முள்ளன வருவளத் தியல்பா
லந்நி லைக்கண்மிக் கவரமர் நீதியா ரென்பார். ௨

(இ - ள்) வெளிப்படை. நிலைத்த அந்தப் பதியிலே வணிகர்களுக்குரிய குலத்திலே வந்து அவதரித்தவர்; பொன்னும் முத்தும் ஏனைய நன்மணிகளும், பிற பூந்துகில் முதலியனவுமாக எல்லா நிலத்தினின்றும் வருகின்ற வளங்கள் மிகுதியாய்ப் பெற்ற இயல்பினால் அவ்வாணிப நிலையிலே மிகுந்தவர் அமர்நீதியார் என்று சொல்லப்படுபவர்.

(வி - ரை) **மன்னும் அப்பதி** - மேற்பாட்டிலே **பாரின் நீடிய பெருமை சேர்** என்றபடி நிலைத்த அந்தப் பதி.

வணிகர் தம் குலம் - வாணிபம் செய்தற்குரியதாகிய அந்த மரபு.

பொன்னும் முத்தும் நன்மணிகளும் - பொன்னும் - பொன்வேறு; முத்து முதலிய மணிகள் வேறு. உம்மை அதனின் வேறாகிய என எச்சப் பொருள் குறித்தது. **முத்தும் நன்மணிகளும்** - எண்ணும்மை. முத்தும் நன்மணிகளில் ஒன்றாயினும் அவை பிறக்கும் பலவகையிடங்களினின்றும் தனித்தனி முழுமணிகளாகவே விடுபட்டுப் பிறத்தலானும், ஏனைய மணிகள்போல முறுக வாங்கிக் கடைதலானன்றி இயல்பானே ஒளி பரப்புதலானும், மற்றும் பலவகையானும் தனித்தன்மைப்படுதலின், **நன்மணி களும்** என ஏனைய மணிகளை ஒன்று சேர்த்துத் தொகுத்து அத்தொகுதியினின்றும், முத்தினை உம்மை தந்து வேறு பிரித்துக் கூறினார். 493-ம் பாட்டுக் காண்க. **நன்மணி களும்** - இந்நாளிற் கண்ணாடியா லியன்று செயற்கையாற் காணும் பலவகை யிழிந்த போலி மணிகள் போலாது இயற்கையான் விளைந்து உயர்ந்த குணமுடையன என்பார் **நன்மணி** என்றார். 539 பார்க்க.

பூந்துகில் - பட்டு முதலிய துகில் வருக்கங்கள். 536 - 537 பாட்டுக்கள் பார்க்க. உம்மை தொக்கது. **முதலா** - பொன், மணி முதலியவற்றின் வாணிபம் ஒரு புறமும், பட்டு, ஆடை முதலிய வேறு பலவகை வாணிபம் மற்றொரு புறமுமாக நடாத்தி அதனால் வளத்தில் மிக்கவர் என்க. **பூந்துகில் முதலா** என முதன்மைக் குறிப்புக்கொடுத்தோதியது இச்சரித நிகழ்ச்சிக் குறிப்பு.

எந்நிலத்தினும் வரும் வளம் - ஒவ்வோர் பொருள்கள் ஒவ்வோர் நிலத்துக்குரியனவாம். ஆயினும் அவை யாவும் வாணிபப் பொருட்டால் இங்கு வந்து கூடியன என்க. இவற்றினியல்பு பட்டினப்பாலை முதலிய நூல்களுட் காண்க. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் (44) முதலியனவும் காண்க. **எந்நிலம்** என்றதனால் யவனம் முதலிய பிற நாடுகளும் கொள்க. **உள்ளன** - முற்றும்மை தொக்கது.

வளத்து இயல்பால் அந்நிலைக்கண் - அந்தந்த வளங்களின் தன்மைக் கேற்றவாறு அந்தந்த வாணிப நிலைமையிலே. **மிக்கவர்** - மிக்க ஊதியம் பெற்று விளங்கியவர்.

என்பார் - எனப்படுவார். 'இல்வாழ்வா னென்பான்' என்ற குறளிற்போலக் கொள்க. செயப்படு பொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது என்பர் பரிமேலழகர். எனப்படுவான் எனற்பாலது செயப்பாட்டு வினைப் பொருளுணர்த்தும் படு விகுதி தொக்கு என்பான் என நின்றதென்பர் பிரயோக விவேக நூலார். தொல்காப்பியச் சூத்திர விருத்தியிலும் இவ்வாறே கூறினர்.

2

504. சிந்தை செய்வது சிவன்கழ லல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்த மடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினால் வரும்பயன் கொள்வார். ௩



பழையாறைத் திருமேற்றளி
(கருப்பக்கிரகம்)



பாட்டு 502—பக்கம் ௯௩௪



பழையாறை வடதளி (மாடக்கோயில்)
(நேர்முகக் காட்சி)



திருநல்லூர் - (உட்புறம்)
ஆளுடைய அரசுக்குத் திருவடி தீக்கை
செய்த இடம்.
பாட்டு 505—பக்கம் ௯௩௭

505. முக்க ணக்கரா முதல்வனு ரவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க வன்பர்க ளமுதுசெய் திருமடஞ் சமைத்தார்
தொக்க சுற்றமுந் தாமும்வந் தணைந்தனர் தூயோர். ச

504. (இ - ள்) வெளிப்படை. (அவர்) தமது மனத்தினுள் எஞ்ஞான்றும் வைத்துத் தியானிப்பது சிவபெருமான் திருவடியேயன்றி வேறொன்று மில்லாதவர்; அந்தி மாலையின் செவ்வான வண்ணராகிய சிவபெருமானுக்கே உரியவர்களாம் அடியார்களைத் திருவமுது செய்வித்து, அவர்கள் கருத்தறிந்து அதற்கேற்பக் கந்தையும் கீளும் உடையும் உதவி, (அதன் பயனாகத்) தம்பால் வந்த செல்வத்தினது வளங்களினாலே தாம் இவ்வுலகிற் பிறவி பெற்று வருதலானுளதாகிய உறுதிப் பயனைக் கொள்வாராய், ௩

505. (இ - ள்) வெளிப்படை. மூன்றுகண்ணுடையாராய், நக்கராய் உள்ள முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருநல்லூரிலே மிகுந்த சிறப்புவளரும் திருவிழாவை விருப்பத்துடன் சேவித்து, அடியார்கள் அமுது செய்தற்குத் தக்க திருமடத்தை அமைத்தார். (அதன்பின்,) கூடிய சுற்றத்தாரும் தாமுமாய்த், தூயவராகிய நாயனார் திருநல்லூரினை வந்து அடைந்தனர். ச

504. (வி - ரை) இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு படுத்திப் பொருள் கொள்ளத்தக்கன. **சிந்தை செய்வது** - சிந்திப்பது.

கழல் அல்லதொன்றில்லார் - இரண்டு எதிர்மறைகள் தேற்றப் பொருளில் உறுதி பெற்றதோர் உடன்பாட்டுப் பொருள் குறித்தன. "அதுவல்ல தூதிய மில்லை யுயிர்க்கு" (குறள்) என்றாற்போற் கழலினையல்லாது வேறொன்றினையும் இல்லாதவர். இதன் திறத்தை 544-ம் பாட்டில் விரிவாய்க் காண்க.

அந்தி வண்ணர் - அந்தி - மாலை. அது அக்காலத்திற்றோன்றும் செவ்வான வொளிக்காயிற்று. ஆகுபெயர். "செவ்வான வண்ணர்"—**தேவாரம். தீ** என்பது தி எனக் குறுகிநின்றதென்று கொண்டு **அம் - தீ** - அழகிய தீ நிறம் என உரைத்தலுமொன்று. "அழல் வண்ண வண்ணர்", "எரிபோன் மேனிப் பிரான்", "செந்தீ வண்ணர்", "தீவண்ணர் திறம்" முதலிய திருவாக்குக்கள் காண்க.

கந்தை - பொந்தை. நாலைந்து ஒன்றன்மேலொன்றாக வைத்து நூலிழைகளோட்டப்பட்டிருக்கும் போர்வை வஸ்திரம். **கீள்** - அரைநாணுக்குப் பதிலாகத் துறவிகள் கட்டிக் கொள்வது என்பர் காஞ்சிபுரம் வித்வான் சபாபதி முதலியார். **கந்தை** - கிழிந்த ஆடை என்றலுமாம். "கந்தை மிகையாங் கருத்தும்"—**திருஞான - புரா - 270.** "சாம்பற் பூச்சுங்கீ ளுடையுங் கொண்ட வுருவம்"—**திருக்கோலக்காத் தேவாரம் - 1. உடை** - இடையில் உடுக்கும் துகில். ஐகாரம் - செயப்படுபொருளில் வந்த விகுதி. உடுக்கப்படுவது.

கோவணம் - அற்றத்தை மறைக்கக் கீளுடன் இணைத்துக் கட்டுவது. இது நால்விரல் அகலத்தும், ஐவிரல் அகலத்தும் கொள்ளப்படும். "நால்விரற் கோவணவாடை," "ஐவிரற் கோவணம்" என்பன தேவாரம். இச்சரிதம் கோவணத்தினின்று விளைவதாகலின், பலவகை உடைகளிலும் இதனைத் தேற்றம்பெற இறுதியில் வைத்தார்.

கருத்தறிந்து உதவி - அடியார்கள் வேண்டுதலிலராதலால், அவர்களது கருத்தைத் தாமே அறிந்து என்க. திருக்குறிப்புத் தொண்டநாயனார் சரிதங்காண்க.

வந்த செல்வம் - "எந்நிலத்தினும் உள்ளன வருவளம்" என்றபடி பல நிலங்களினின்றும் வந்த செல்வங்கள். முன்னம் இறைவனைப் பூசித்ததன் பயனாய்த் தம்மிடம் **வந்த செல்வம்** என்றலுமாம். **வளத்தினால்** - அவற்றின் வாணிபத்தின் விளையும் வளங்களைக் கொண்டு. **ஆல்** - மூன்றாம் வேற்றுமை உருபு; கருவிப்பொருளில் வந்தது,

வரும்பயன் - இவ்வுலகில் வருதலாலுளதாகிய உறுதிப்பயன். பயனை வளத்தினுற் கொள்வார் என்க.

கொள்வார் - கொள்வாராகி - அடைவாராகி முற்றெச்சம். கொள்வார் - அமுது செய்வித்து - வணங்கிச் - சமைத்தார் எனக் கூட்டி முடிக்க. 3

505. (வி - ரை) **முக்கண் நக்கராம் முதல்வனார் - முக்கண்** - சோமன் - சூரியன் - அக்கினி என்பன இறைவனது முக்கண் எனப் பெறுவன. **நக்கர்** - கோவணமுமின்றியுள்ள திருவாணமான திருவுருவம். **முதல்வனார்** - யாவர்க்கும் தலைவராகிய சிவபெருமான். மூன்று கண்ணும் நக்கராய உருவமும் அவரது முதன்மைத் தன்மை குறிப்பன. என்னை ? முக்கண்கள் முழு ஒளி யுருவத்தையும், நக்கவுருவம் பிறவெல்லாம் மேற்கொண்ட உடைமாத்திரையா யொழியத், தாம் ஒருவரே எஞ்சிநிற்கும் நிலையையும் குறிக்கும். இவரது அற்றத்தை மறைக்கும் கோவணம் வேதமாதலின்,அஃதில்லாத நக்க வுருவம் வேதத்தினுள் விளங்குவதும், வேதங் கடந்ததும் ஆகிய நாதாந்தமாகிய சொரூபம் என்க. **நக்கராம் அவர்** - நக்கனாகிய அவர். சுட்டுப் பெயர் உயர்வு குறித்து வந்தது. "சிவனவனென் சிந்தையுள்" என்புழிப் போல.

அவர் திருநல்லூர் - அவர் விரும்பி வெளிப்பட வீற்றிருக்கும் திருநல்லூர். "தேறப் படத்திரு நல்லூ ரகத்தே சிவனிருந்தான்", "வடபாற் கயிலையுந் தென்பானல்லூருந்தம் வாழ்பதியே" என்ற திருவிருத்தங்கள் காண்க. **நல்லூரின் முதல்வனாரது திருவிழா** என்று கூட்டுக.

திருவிழா விருப்புடன் வணங்குதலும், அன்ப ரமுதுசெய் திருமடஞ் சமைத்து அவர்களை அமுது செய்வித்தலும் என்னுமிரண்டுமே தாம் வருபயனும் என்று கொண்டனர் அமர்நீதியார். "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும், அண்ண லாரடியார்தமை யமுதுசெய் வித்தல், கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல், உண்மையாம்" என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் புராணமும், அவரது திருமயிலைத் தேவாரமும் காண்க. இதுபற்றியே இங்கு நாயனார் திருவிழா வணங்கியதும், திருமடஞ்சமைத்ததும், அமுதளித்தலும் ஆயின. 506 - பார்க்க.

மிக்க சீர்வளர் திருவிழா - திருவிழா மிகுந்த சிறப்புக்களுடன் கூடியிருந்தது என்பதாம். அவை பலவற்றையும் "முத்துவிதானம்" என்ற (குறிஞ்சிப்பண்) திருவாரூர்ப் பதிகத்தில் அப்பர்சுவாமிகள் எடுத்தருளி யிருப்பது காண்க. சீர்களின் மிக்கதாகிய வீடுபேற்றினுக்குக் காரணமாகி மக்கட்கு உறுதி தரும் திருவிழா. சீரினை வளர்க்கும் விழா என உரைப்பினுமமையும்.

அன்பர்கள் அமுதுசெய் தக்க திருமடம் என மாற்றிக் கூட்டுக. அன்பர்களிலே, தக்கார், தகவிலர் என்ற பாகுபாடின்மையால் **தக்க** என்பதனை அன்பர்களுக்கு அடைமொழியாக்கி உரைப்பது பொருந்தாதென்க. **தக்க அன்பினை உடையார்** - இறைவனை அடைவிக்கத்தக்க அன்பு எனக் கொண்டு இயற்கை குறித்த அடைமொழியாக உரைப்பாருமுண்டு. திருமடத்திற்குத் தகுதியாவது இடத்தாலும், பிறவசதிகளாலும், வரும் அன்பர்க்குத் தக்கவாறு அமைதல். 513 பார்க்க. **திருமடம்** - இறைவன் எழுந்தருளுமிடம் திருக்கோயில் எனப் பெறுவதுபோலவே, அவனது அடியார்கள் எழுந்தருளுமிடமும் **திருமடம்** என்று கூறப்பெறும். "திங்களு ஞாயிறுந் தோயுந் திருமட மாங்கொன்று செய்தார்" (திருநா - புரா - 389), "அமைச்சனார் திருமடங் காட்ட" (676), "செங்கமலத் திருமடமற் றிது" - (877) - திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் - முதலிய ஆட்சிகள் காண்க.

தொக்க சுற்றமும் தாமும் - **தொக்க** - தம்மைச் சுற்றிக் கூடிய. சுற்றியிருப்பது சுற்றம். மனைவி மக்கள் முதலியோர். "சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்ற பயன்"—**குறள்**. சுற்றமுந் தாமும் வந்து அணைந்தனர் என்

றதனாற் றமது ஊராகிய பழையாறையை விட்டுத் திருநல்லூரில் விழாச் சேவித்து அடியார்க்கமுது அளித்து இருக்கும் பொருட்டு வந்து குடிபுகுந்தனர் என்பதாம். தாம் இருக்கும் இடத்துச் சுற்றமுஞ் சுற்றும்; (வாணிபத்தின்) வருவளத்தியல்பால் மிக்கவராதலின் சுற்றந்தழுவும் கடமைப்பாடு முடையார்; சுற்றத்தாரையும் இறைவன் பணியிலும் அடியார் பணியிலும் ஈடுபடுத்தும் கருத்துமுடையார்; சுற்றத்தாரும் அவ்வாறே ஈடுபடும் கருத்தினர்; ஆதலின் சுற்றமும் தாமும் வந்தணைந்தனர் என்க. இந்நாயனார் இல்லறத்தில் நல்வாழ்வு வாழ்ந்தாராதலின் இல்வாழ்வாரால் ஓம்பப் பெறும் ஐவரில் ஒருவராகிய சுற்றத்தாரைத் தழுவி விளங்கினார் என்றலுமாம். "தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங், கைம்புலத்தா றோம்ப றலை"—**குறள்.** பழையாறை தமது பிறந்த ஊரும், தொழில் நிகழ்ந்த ஊரும் ஆயினும் அதைவிடுத்து, இறைபணியும் அடியார்க் கமுதுபடைக்கும் பணியும் கருதித் திருநல்லூரிற் குடிபுகுந்தது நாயனாரது அன்பின் உறைப்பினைக் காட்டிற்று. மனைவியாரும் மகனும் நாயனாருடன் துலையிலேறிச் சிவபுரியணைதலின் **சுற்றமும்** என்று குறிப்பிட்டவாறு.

தூயோர் - மன மொழி மெய்களாற் றூய்மையுடையார். 527-ல் கண்ட நிகழ்ச்சியுடன் இதனை வைத்துப் பார்க்க.

அணைந்தனராகிச் சமைப்பார் என, அணைந்தனர் என்றதை முற்றெச்சமாக்கி யுரைப்பாரு முண்டு. பணிசெய்து இருக்கைக்குத் திருமடஞ்சமைத்த பின்னரே சுற்றமுந் தாமும் வந்து அணைதல் உளதாம்; ஆதலின் அவ்வுரை பொருந்தா தென்க. சிவதருமங்களைப் பிறர்பால் விடாது தாமே நேரிற் கண்டு செய்தல் வேண்டுமென்னும் விதி பற்றி நாயனார் திருநல்லூரிற் குடிபுகுந்தனர் என்க. 4

506. மருவு மன்பொடு வணங்கின ர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாவணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகு மின்பமோ டமுதுசெய் திடவருள் பேணி
யுருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை யொருநாள், ரு

507. பிறைத்த ளிர்ச்சடைப் பெருந்தகைப் பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த வன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி, சு

508. செய்ய புன்சடை கரந்ததோர் திருமுடிச் சிகையுஞ்
சைவ வெண்டிரு நீற்றுமுண் டத்தொளித் தழைப்பும்
மெய்யின் வெண்புரி நூலுடன் விளங்குமான் றோலுங்
கையின் மன்னிய பவித்திர மாகதக் கதிரும், எ

509. முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய வரையிற்
றஞ்ச மாமறைக் கோவண வாடையின் றசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்க
ணெஞ்சி னீங்கிடா வடிமலர் நீணிலம் பொலிய, அ

510. கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருகத்
தொண்ட ரன்பெனுந் தூநெறி வெளிப்படுப் பாராய்த்
தண்டின் மீதிரு கோவண நீற்றுப்பை தருப்பை
கொண்டு வந்தமர் நீதியார் திருமடங் குறுக, கூ

511. வடிவு காண்டலு மனத்தினு முகமிக மலர்ந்து,
கடிது வந்தெதிர் வணங்கி,"யிம் மடத்தினிற் காணும்
படியி லாதநீ ரணையமுன் பயிறவ மென்னோ
வடிய னேன்செய்த?" தென்றன ரமர்நீதி யன்பர். ௧௦

506. (இ - ள்) வெளிப்படை. பொருந்திய அன்பினோடு வணங்கினராய்த், திருநீலகண்டராகிய இறைவன் எழுந்தருளியிருக்கும் திருநல்லூரின் திருவிழாச் சிறப்பைச் சேவித்துக்கொண்டும், திருமடத்திலே அடியார்கள் மேன்மேலும் பெருகும் இன்பத்தோடு அமுது செய்திட அருள்பேணிக் கொண்டும், உருகிய மனமுடையவராய் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து உறைகின்ற நாள்களில் ஒருநாள், ௫

507. (இ - ள்) வெளிப்படை. பிறையாகிய தளிரைச் சூடிய சடையினையுடைய பெருந்தகையாகிய பெருந்திருநல்லூரில் எழுந்தருளிய திருநீலகண்டராகிய இறைவனார், தமது கோவணத்தின் பெருமையை முன்காட்டி, அதன்மூலம், நிறைந்த அன்புடைய திருத்தொண்டர்க்கு நீடிய அருள் கொடுக்கும்பொருட்டு, வேதியர் குலத்து ஒரு பிரமசாரியின் வடிவுடையராகி, ௬

508. (இ - ள்) வெளிப்படை. சிவந்த சிறு சடையை மறைத்ததாகிய திருமுடிச் சிகையும், சைவத்திற்குரிய திருவெண்ணீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்த தனது ஒளியின் தழைப்பும், திருமேனியில் வெண்மையான புரிகளுடைய பூணூலுடன் விளங்கும் மான்றோலும், கையில் (உரிய விரலிற்) பொருந்திய மரகதக் கதிர்விட்டு நீண்ட பவித்திரமும், ௭

509. (இ - ள்) வெளிப்படை. முஞ்சிப் புல்லைத் திரித்த வடத்தினை முடிந்து அரைஞாணகச் சாத்திய இடையிலே, தஞ்சமாம் மறையாகிய கோவண ஆடையின் பிணிப்பும் கொண்ட கோலமுடையவராகி, வஞ்சனையுடைய தீவினையாகிய கறுப்பு அறும் மனத்தினையுடைய அடியார்களது நெஞ்சிலே நீங்காது பொருந்திய திருவடி மலர்கள் நீண்ட நிலத்திலே பொலிய, ௮

510. (இ - ள்) வெளிப்படை. கண்டவர்கள் யாவர்க்கும் மிகுகின்ற ஆசையினாலே மனம் கரைந்து உருகும்படியாகத், தொண்டருடைய அன்பு என்னும் தூய நெறியினை வெளிப்படுத்துவாராகித், (தம் கையிலே தாங்கிய) தண்டிலே இரண்டு கோவணமும், திருநீற்றுப் பையும், தருப்பையுங் கொண்டு நடந்து வந்து, அமர்நீதியாரது திருமடத்தினை யடையவே, ௯

511. (இ - ள்) வெளிப்படை. அவரது திரு வடிவத்தைக் கண்டவுடனே, உள்ளே மலர்ந்த மனத்தைவிட முகமானது மிகவும் மலர்ச்சியடைந்து, விரைந்து எதிரே வந்து வணங்கி, " இந்த மடத்தினிலே முன்பு காணும்படி யில்லாத நீர் இன்று அடியேன் வெளிப்படக் காணுமாறு வந்தணைவதற்காக முன்னே அடியேன் பயில்தவம் செய்தது என்னோ ?" என்று அமர்நீதி யன்பர் சொன்னார். ௧௦

506. (வி - ரை) இந்த ஆறு திருப் பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. " குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும் " (குடந்தைக் கீழ்க்கோட்டம் - 10) என்றபடி அறுகுண முடைய பகவன் ஆட்கொள்ள உருவெடுத்து வருதலின் ஆறு பாட்டுக்களாற் கூறினார் போலும்.

மருவும் அன்போடு - அங்ஙனம் திருநல்லூரை வந்து மருவியதற்குற்ற நிறைந்த அன்பினொடு. **வணங்கினர்** - வணங்கினராகி - முற்றெச்சம். வணங்கினர் சேவித்து எனக் கூட்டி முடிக்க.

மணிகண்டர் - மணி - நீலமணி. அதன் நிறத்திற்காயிற்று. மணி நிறம் போன்ற நிறமுடைய கழுத்தினை யுடையவர். "நீலமா மணிகண்டத் தெண்டோ ளானே"—**தேவாரம். மணி** யென்ற பொதுப்பெயர் இடநோக்கி இங்கு நீலமணி குறித்தது. **மணி** - அழகு என்றலுமாம்.

நல்லூர் மணிகண்டர் திருவிழா என மாற்றுக. **அணி** - சிறப்புக்கள். **மிக்க சீர் வளர்** (505) என்ற இடத்துக் காண்க. விழாவின் சிறப்புக்களை எண்ணி எண்ணி இன்புற்றுச் சேவித்தல் திருவிழா அணி சேவித்து எனப் பெற்றது. விழாவையும் அதன் அணியையும் என்றும்மைத்தொகை யாக்கி யுரைப்பினு மமையும்.

அருள்பேணி - "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றபடி சிவபெருமானை வணங்குதற்கு அவனருள் வேண்டப்பெறுதல்போலவே, அவனது அடியார் இன்பமோடமுது செய்திடுதற்கும் அவனருள் வேண்டப் பெறும். ஆதலின் 'அருளைப் பேணி' என்றார். **பேணி** - பாராட்டி - வந்தித்து.

உருகு சிந்தையின் - அடியார்க் கமுது செய்விக்கும்படி திருவருள் கூட்டி வைத்தலின், அவ்வாறு தம்பால் இறைவன் கருணை கூர்ந்ததை எண்ணி எண்ணி மனமுருகினார் என்க. "அத்தா வுன்னடியேனை யன்பா லார்த்தாய்", "எத்தனையும் அரிய நீ யெளிமை யானாய்", "எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்", "இத்தனையு மெம்பரமோ ஐய வையோ! எம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே" என்று பலவாறும் எண்ணி யெண்ணி உருகி நிற்றல்.

மகிழ்ந்து - அருள்பேணி மனமுருகுதலால் உளதாம் உள்ள நிகழ்ச்சி. **உறை நாளில்** - இத்திருப்பணிகள் செய்து வாழ்ந்து வருகின்ற நாள்களிலே. **ஒரு** - இறைவனடி கூட்டப் பெறுதலால் ஒப்பற்ற என்பது குறிப்பு.

அடியவர் கேளாமலே அவரவர் குறிப்பறிந்து, உடை, உணவு, உறையுள் என்ற மூன்றும் அளித்து அவர்கள் இன்பமடையப் பார்த்துத் தாம் இன்புற்று மகிழ்ந்திருந்தனர். இவற்றிற்காகவே திருமடமுஞ் சமைத்துத் தாமும் திருநல்லூரில் வந்தணைந்தனர் என்க. 5

507. (வி - ரை) **பிறைத் தளிர்ச் சடை** - பிறையைத் தளிர்போலச் சூடிய சடை. இலையாக மேலும் வளர நிற்பது தளிராதலின், சடையைச் சார்ந்ததனால் முழுமதியாக வளரநின்ற **பிறையைத் தளிர்** என்றார். பிறையும் ஆத்தியின் றளிரும் சூடிய என்று உம்மைத் தொகை யாக்கி உரைப்பாருமுண்டு. "பிறை மல்கு செஞ்சடை" என்ற இத்தலத் தேவாரக் குறிப்பும் காண்க.

பெருந்தகை - பெரியதனு ளெல்லாம் பெரிதான தகைமையுடைய. இறைவனது பெருந்தகைமை யாவது உயிர்கள் எத்தனை பிழை செய்யினும் வெறுத்துத் தள்ளாது பொறுத்து அவைகளிடத்து மேலும் கருணை செய்து கொண்டே யிருத்தல். "வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினாற், பொறுப்பவனே", பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி", முதலிய திருவாசகங்களும், "மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற், கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும்" என்ற புராணமும் காண்க. "பேதையா ளவளொடும் **பெருந்தகை யிருந்ததே"—திருஞான - தோணி - கோல்லி - 2.** "**பெருந்தகையைப்** பெறற்கரிய மாணிக்கத்தை"—**திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் - 1.**

பெருந் திருநல்லூர் - அவனும் பெருந்தகை; அவனது ஊரும் பெரியது; திருவும் நலமும் தருவது என்பது குறிப்பு.

கறைக் களத்திறை - மணிகண்டர் - (506) என முன்னர்க் கூறியது காண்க. "நஞ்சணி கண்ட நல்லூருறை நம்பர்" என்பது இத்தலத் தேவாரம். திருநீலகண்டம் அவரது பெருந்தகைமையும் கருணையும் காட்டி நிற்கும் அடையாளமாம். "ஆர்ந்த நஞ்

சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி", "பொங்கி நின்றெழுந்த கடனஞ்சினைப் பங்கி யுண்டதோர் தெய்வ முண்டோ சொலாய்" முதலிய திருவாக்குக்கள் காண்க.

கோவணப் பெருமை முன் காட்டி - கோவணப் பெருமை காட்டுதல் பின்னர் இச்சரித நிகழ்ச்சியிற் காண்க. 536 - 545 பாட்டுக்கள் பார்க்க. தறந்தோராலும் விரும்பப் பெறும் பெருமை, அதனைத் தரிக்கும் அன்பர் பெருமை, அதன் பெருமை முதலியன. இதனைக் காட்டவே இறைவனும் தாம் இல்வாழ்வார் என்ற நிலையினின் றும் பிரமசாரியா யிறங்கி வந்தனர். **முன்** - தோற்றமாக - யாவரு மறியுமாறு - முன் னிலையில் விளங்க. அன்பர்க் கருள் கொடுப்பதன் முன் என்றலுமாம்.

நிறைந்த அன்புடைத் தொண்டர் - இனி மேலும் கொள்ளுதற் கிடமில்லாதபடி நிறைவித்த அன்பு. "நிரந்த வன்பாய வன்பர்" என்பது திருவாசகம். "விளைத்தவன் புமிழ்வார் போல"— **கண் - புரா** - 123. **நீடருள் - அருள் பேணி** என்றபடி இதுவரை ஈந்ததும் அருளேயாம்; ஆயின் இனித் தருவது நீடுகின்ற அருள். அளவு, காலம், அனு பவம், இன்பம் முதலியவற்றுற் குறைவில்லா திருத்தல் **நீடு** எனப் பெறும். மாளா இன்பம், மீளா நெறி முதலியனவாகப் பேசப் பெறும் வீட்டின்பம். "போரா வொழி யாப் பிரிவில்லா மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே" என்பதுதிருவாசகம்.

கொடுப்பான் - பானீற்று வினை யெச்சம். கொடுக்கும் பொருட்டு.

மறைக் குலத்தோரு பிரமசாரியின் வடிவாகி - **மறைக்குலத்து** - வேதியர் குலத் திலே. குறியில் நான்கு குலங்களில் முதல் மூன்றிலும் பிரமசரிய முதலிய நிலைகள் நூல்களில் வகுக்கப் பெறுமாதலின் அவற்றுள் ஏனை யிரண்டு குலங்களையும் நீக்குதற்கு **மறைக்குலத்து** என்றார். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். பின்னர்த் **துன்று வேதி யர் தூய்மையி னமைப்பது முளதால்** (513) என்றதும் காண்க.

ஒரு - ஒப்பற்ற. **பிரமசாரி** - பிரம உபாசனை நிலையிலே சரிக்கின்றவன் - "வேதத்தை ஓதுகின்றவன். அவனுடைய செய்கையாவது: பிராமணன், க்ஷத் திரியன், வைசியன் இம்மூன்று சாதியில் ஒரு பாலன் உபநயனம் ஆனவுடனே பாக்கு வெற்றிலை தின்னுமலும், சந்தனந்தரித்தல் பூச்சூடுதல் இல்லாமலும், இடையில் ஒரு வஸ்திரத்தை மாத்திரஞ் சுற்றிக் கொண்டு அயலூரில் உள்ள பிராமண அக்கிரகாரத்தில் சென்று, இராக் காலத்தில் தருப்பையைக் கீழே பரப்பி அதன் மேற் படுத்துக் கொண்டு, பிட்சையாகக் கொண்ட அன்னத்தைப் புசித்துத், தகுந்த குருவி னிடத்தில் கலியாணம் செய்யத்தக்க காலம் வருகின்ற அளவும் வேத அத்தியயனம் பண்ணிக்கொண் டிருத்தல்" என்பர் மகாலிங்கையர். இது நாற்பத்தெட்டு வயது எல்லை வரை நீடிக்கு மென்பர். "அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண், டாறி னிற் கழிப்பிய வறனவில் கொள்கை"—**திருமுருகாற்றுப்படை**. இவ் வியல்பின் இயன்ற உண்மைப் பிரமசரிய நிலை இந்நாளில் எங்கேனும் காணக்கிடைக்குமா என்பது அறிவாளிகள் கருதத்தக்கதாம். 6

508. **(வி - ரை) செய்ய**-சிவந்த. **புன்சடை** - சிறுசடை. மென்மையான - மிருது வான - என்பாருமுண்டு.

சடை கரந்தது ஓர் திருமுடிச் சிகையும் - சடையை மறைத்து அதன் இடத்திலே திருமுடிச் சிகையைக் கொண்டு. **முடிச்சிகை** - பிரமசரியக் கோலத்துக் குரியது. **கரந் தது** - வெளிக்காட்டாமல் மறைத்ததாகிய. "கண்ணிடை கரந்தகதிர் வெண்பட மென" (175); "சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து"—**திருவிளையாடற் புராணம்**. விரித்தசடையை முடித்தசிகையாகக் கொண்டு என்பாருமுண்டு. **சிகை** - குடுமி.

சைவ வெண் திரு நீற்று முண்டம் - சைவத்துக்கே சிறப்பாயுரிய அடையாள மாய் மூன்று கீற்று வடிவமாய் நெற்றியில் இட்ட திருநீற்றுக் காப்பு. **திருமுண்டம்** - திரிபுண்டரம் என்பதன் மரூஉ வென்பர். **நீற்றுத்திருமுண்டம்** என மாற்றுக. **முண்டம்**

நெற்றி என்றலுமாம். 'செஞ்செவே யாண்டு கொண்டான் திருமுண்டம்' - **திருவாசகம் - அச்சப்பத்து. ஒளித்தழைப்பு** - ஒளியின் மிகுதி. **திருநீற்று முண்டம்** எல்லா ஆச்சிரமங்களுக்குமுரியதாய் வேதம் விதித்தது. **நூலுடன் விளங்கு மான்றோல்** - மான்றோலைப் பூணூலுடன் தரித்தல் பிரமசரியக் கோலத்திற்குரிய அடையாளங்களுள் ஒன்று. பூணூலுடன் ஓரங்குல நீளம் மான்றோல் தரிப்பது வழக்கு. 152 உரை பார்க்க.

கையில் - வலது கையில் அதற்குரிய அணிமிகைவிரலில். இச்சிறப்புரிமை நோக்கி இதனைப் பவித்திர விரல் என்பர்.

கை - அதின் விரல்களுக்காகி, அவற்றில் உரிய ஒரு விரலுக்காயிற்று.

மரகதக் கதிர்ப் பவித்திரமும் என மாற்றுக. உலராத பச்சைத் தருப்பையாற் புதிதின் முடிந்து புனைந்ததாதலின் மரகதக் கதிர்போன்ற ஒளி விடுவது என்றார். பவித்திரத்தின் முடிப்பு மரகத மணியும், அதன் நீண்டபாகம் மணியின் கதிருமாமென்க.

ஒண்சடை—என்பதும் பாடம். 7

509. (வி - ரை) **முஞ்சி...அரையில்** - முஞ்சி என்ற தருப்பைப் புல்லை அரை நாணாகத் திரித்துச் சாத்திய இடையிலே. முஞ்சியரைஞாணும் பிரமசரியத்துக் குரியது. **முஞ்சி** - வைதிக வழக்கிற் கொள்ளப்பெற்ற ஏழுவகைத் தருப்பைகளில் ஒன்று. நூல் பட்டு முதலிய கயிறுகளைப் பிரமசாரி அரைஞாணாகக் கட்டக்கூடாது என்பது விதி.

தஞ்சம் ஆம் மறைக் கோவணம் - தம்மையே ஓலமிட்டுத் தஞ்சமாகி யடைந்த வேதம். "மயக்கறு மறையோ லிட்டு மாலயன் றேட நின்றான்" (432). யாவர்க்குந் தஞ்சமாகிய மறை என்றலுமாம். இச் சரித நிகழ்ச்சிக்குத் தஞ்சமாகியது கோவணம் என்ற குறிப்புமாம். **மறைக்கோவணம்** - 515 உரை பார்க்க.

வஞ்ச வல்வினைக் கறுப்பு - வஞ்சனையால் விளைகின்ற வலிய வினையாகிய கறை. ஆணவமலம். **அறும் மனத்து அடியார்கள்** - ஆணவம் அறும்படி, யான் எனது என்னும் செருக்கறத் - திருவடியை வணங்கும் மனமுடைய அன்பர்கள். திருவடியிலே மனம் வைத்திருத்தலால் வினைக்கறுப்பு அறப்பெற்றவர்கள். **அறும் மனம்** - அறப்பெற்ற மனம்.

நெஞ்சில் நீங்கிடா அடிமலர் - அவர்களது நெஞ்சிலிருந்து அகலாது நிலைத்திருக்கின்ற திருவடிக் கமலங்கள். "யானெனதென் றற்ற விடமே திருவடியா" என்றபடி தன்னை வணங்கிய இடத்து நிலைபேறுபெற்றது இறைவன் திருவருள் வியாபகம் என்க. "அஞ்சிடைக் கண்டு கனவின் றலைத்தொழு தேறகவன்றான், நெஞ்சிடை நின்றக லான்பல காலமு நின்றனனே" (4) "கண்ணுளு நெஞ்சத் தகத்து முளகழற் சேவடியே" (5) என்ற இத்தலத் திருவிருத்தங்களுங் காண்க. **வல்வினை** - வலிமை விலக்கற்கருமை குறித்தது.

வஞ்சம் - வஞ்சனை. இது ஐம்புலன்களின் சேட்டையால் விளைவது "புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய", (சிவபுராணம்); "மாறி நின்றெனை மயக்கிடும் வஞ்சப் புலனைந் தின்வழி" (கோயிற்றிருப்பதிகம்) முதலிய திருவாசகங்கள் காண்க. "வஞ்ச மாக்கடம் வல்வினையும்" (159).

நெஞ்சில் நீங்கிடா அடிமலர் - "மலர்மிசை யேகினான்" என்ற குறளும் அதற்குப் பரிமேலழகர் உரையும் பார்க்க.

நிலம் பொலிய - நிலத்தின்மேல் விளங்க. நிலத்தைப் பொலிவிக்க எனச் செயப்பாட்டு வினையாக்கி யுரைப்பினுமாம். **பொலிய** - **வந்து** என முடிக்க.

ஆடையின் அசைவும்—என்பதும் பாடம். 8

510. (வி - ரை) **கண்டவர்க்கு உறு காதலின்** - பார்த்தவர்களுக்கெல்லாம் உற்ற காதலினாலே. **கண்டவர்** - மேற்சொல்லிய திருக்கோலம் முழுதும் கண்டவர்கள்.

"கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சி யான்காண்"—திருத்தாண்டகம். "கண்ணாரக் கண்டும்"—அற்புதத் திருவந்தாதி.

வெளிப் படுப்பாராய் - யாவருமறிய வெளிப்படும்படி செய்வாராய்.

தண்டின் மீது - பிரமசரியக் கோலத்துக்குரியதாய்த் தாம் கையிற்றாங்கி வந்த தண்டின் மேலே. **தண்டு** - பலாசத் தண்டு.

இரு கோவணம் - மாற்றித் தரித்துக்கொள்ள இரண்டு கோவணங்கள் தண்டிற்றாங்கி வருவதும் ஒரு வழக்கு. நாயனார்பாற் கொடுத்து மறைக்க ஒன்றும், தராசில் இட்டு நிறுக்க மற்றொன்றும் ஆக இச்சரித நிகழ்ச்சிக்கு இரு கோவணம் வேண்டப் பெறுவதும் குறிப்பு. (514) பார்க்க.

நீற்றுப் பை - மான்றோல் முதலியன போலத் திருநீற்றுப் பை தாங்குதலும், பிரமசாரியின் சிவக்கோலத்துக்குரிய அடையாளமாம். "பூதிப் பையர்", "பொக்கணமும் புலித்தோலும்", "மனச் செவ்வன்பர் பவமாற்றுந் திருநீற்றுப் பொக்கணமும்" முதலிய திருவாக்குக்கள் காண்க. திருநீறு எப்போதும் பிரமசரிய முதலிய நால்வகை ஆச்சிரமத்தார்களும் அணியத் தக்கதாம். விபூதி தரித்து ஓதுதலே மந்திர உச்சாரணத்தின் பலன் தரும் என்பர். பிரமசாரி எப்போதும் வேதம் ஓதுபவனாதலின் அவன் நெற்றியில் எப்போதும் திருநீறு விளங்க அணிதல் வேண்டும். இது பற்றியே முன்னர்த் "திருநீற்று முண்டத்தோளித் தழைப்பும்" என்று தேற்றம் பெறக் குறித்துக் காட்டினார்.*

தருப்பை - பிரமசாரிகள் தருப்பைப் பாயில் துயிலுதல் வேண்டும் என்பது விதி. அதன் பொருட்டும், பவித்திர முடிதல் முதலிய காரியங்களின் பொருட்டும் தருப்பை தாங்குதல் வழக்கு.

கொண்டு - தண்டின் மீது முடிந்து கொண்டு. **வந்து** - அடிமலர் நிலம் பொலிய நடந்து வந்து; திருமுடிச்சிகை முதல் அடிமலர் வரை கேசாதிபாதமாக மேற்பாட்டுக்களிற் கண்டவை அவரது திருமேனிக் கோலங்கள். இங்குக் கூறிய தண்டும் அதன் மேற்கட்டிய இருகோவணங்களும் திருநீற்றுப்பையும் தருப்பையும் அவ்வாறன்றி இச்சரித நிகழ்ச்சிக் கருவிகளாக அவர் தாங்கியவை. ஆதலின் இவற்றை வேறு பிரித்துக் கூறினார். **வெளிப்படுப்பாராய் - கொண்டு** - என்றதுங் குறிக்க. 9

511. **(வி - ரை) வடிவு** - (பிரமசரிய நிலை இவரையன்றி யில்லையாதலின்) மேற்சொல்லிய நிரம்பிய இலக்கணங்களுடைய பிரமசாரியின் வடிவம்.

காண்டலும் - தரிசித்தவுடனே. புறக்கண்ணாற் காணக்கூடாதவராயினும் இங்குக் காணக்கூடியபடி வந்ததனாலே காண்டலும். உருவமில்லாதான் உருவங் கொண்டு வந்தமையால் அவ்வுருவங் காண்டலும் என்ற கருத்துமாம். "கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருக" (510)க் கொண்டு வந்த, "உருவினு லன்றியே யுருவு செய்த", திருவடிவம் காண்டலும் என அருமை பெறக் காட்டியவாறு. இதுவே மனத்திற் பெருமகிழ்ச்சிக்கும், அதனுன், மிக முகமலர்ச்சிக்கும் காரணமாயினதும் குறித்தபடி.

மனத்தினும் மிக முகம் மலர்ந்து காண்டலும் என்றபடி காண்பது முகத்திலிருக்கும் கண்களாலேயாயினும், அவை தாமாகக் காண்பதில்லை. கண்கள் உட்கரணங்களுக்கு அறிவிக்க, அவை ஆன்மபோதத்திற்கும், அது ஆன்மாவுக்கும் முறையே அறிவிக்க, இறைவன் உடனிருந்து காட்ட, இம்முறையிலே ஆன்மா அறியவே பின்னர் மனம் மகிழ்ந்து மலரும்; அதன்பின் அது காரணமாக முகம்மலரும். முன் மலர்தலின் மனத்தை முன்னர்க் கூறினார்.

---

*சாம்பலிற் புரண்டாற் பாவந் தீரும் எனப் புறமதமாம் கிறித்துவ நூலாகிய விவிலிய நூலிலுங் கூறும்.

மனத்தினும் - மனம் மலர்தலைக் காட்டினும். உம்மை உயர்வு சிறப்பு. **மிக** - மலரும் செயலில் மிகும்படியாக. முகம் தன்னை மலரச் செய்த மனத்தினைவிடத் தான் மிக்கிருக்கவேண்டுமென்று மலர்ந்தது என்க. "அகத்தின் அழகு முகத்திற் றெரியும்" என்பது பழமொழி.

கடிது எதிர்வந்து வணங்கி என்று மாற்றுக. இவை மனமகிழ்ந்த உபசாரத்தின் குறிகள். **மனத்தினும் - வணங்கி - என்றனர்** - என்றவற்றால் முறையே மனம், மெய், மொழியாகிய முக்கரணங்களாலும் இறைவனாகிய பிரமசாரியை நாயனார் வழிபட்டமை கூறப்பெற்றது காண்க.

இம்மடத்தினில்...செய்தது - இம்மடத்தினிற் காணும்படியிலாத நீர் என்றது இதுவரை உம்மைப்போன்றார் ஒருவரும் இம்மடத்தினில் வரக்கண்டதில்லை என்றதாம். தேவரீர் எழுந்தருளும் பெருமைக்கு இம்மடம் தகுதியுள்ளதன்று என்றதுமாம். இதுவரை அடியார்களுட் கலந்து நின்று வருதலேயன்றி இவ்வாறு வெளியாகக் காணும்படி வரவில்லை என்ற உண்மையின் குறிப்புமாம். 443-444 உரை பார்க்க. **அணைய** - அடியார்களுள்ளே கலந்து வந்தது போய், வெளிப்பட்டு அணைய. **அணைய** - அணைவதற்குக் காரணமாக. **பயில் தவம்** - பயிலத்தக்க - இதற்கென்று பயிலுமாறு நூல்களில் விதித்த - தவம். **செய்த பயில் தவம் என்னோ?** என மாற்றிக் கூட்டுக. 408 காண்க. முன்செய்த நற்றவங் காரணமாகவல்லாது பெரியவர் வரும் பேறு கிடைக்காதென்ற நியதி குறித்தது.

முகமிக—என்பதும் பாடம். 10

பிரமசாரியின் வடிவாகி - திருமுடிச் சிகையும் - நீற்றுத் தழைப்பும் - நூலுடன் மான்றோலும் - பவித்திரமும் - கோவண ஆடையின் றசைவும் - (கொண்டு) அடிமலர் - நிலம் பொலிய - வந்து - திருமடங் குறுக - (அவ்)வடிவு காண்டலும் - மலர்ந்து - எதிர் வந்து - வணங்கி - "பயில்தவம் என்னோ அடியனேன் செய்தது?" என்றனர் அன்பர் - என இவ்வைந்து பாட்டுக்களையுந் தொடர்ந்துமுடிக்க.

512. பேணு மன்பரை நோக்கி "நீர் பெருகிய அடியார்க்
கூணு மேன்மையி லூட்டிநற் கந்தைகீ ளுடைகள்
யாணர் வெண்கிழிக் கோவண மீதல்கேட் டும்மைக்
காண வந்தன" மென்றனன் கண்ணுதற் கரந்தோன். ௧௧

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு வழிபடும் அன்பரை நோக்கி, "நீர், (அன்பினாற்)பெருகிய அடியவர்களுக்கு மேன்மையில் உணவும் ஊட்டிக், கந்தை - கீள் - உடை ஆகிய இவைகளையும், புதிய வெள்ளிய உயர்ந்த கோவணங்களையும் கொடுத்தல் கேட்டு உம்மைக் காணவந்தோம்" என்று நெற்றிக்கண்ணை மறைத்துவந்த இறைவர் சொன்னார்.

(வி - ரை) **பேணும்** - வழிபடுகின்ற. "பேணியநற் பிறைதவழ்செஞ் சடையினானை"—(திருவாவடுதுறை - திருத்தாண்டகம்), "பேணித் தொழுமவர் பொன்னுலகாள"—(திருவையாறு - திருவிருத்தம்) என்ற தேவாரங்கள் காண்க. முன்னர் "அருள் பேணி" (506) என்றதுங் குறிக்க.

பெருகிய - ஒரு அடியாருக்கு இடம், உணவு, உடை முதலிய எல்லாம் உதவுதல் கேட்டுப் பல அடியார்களும் அணைவார்களாயினமையால் அளவினிற் பெருகிய என்றலுமாம். "ஆளு நாயக ரன்ப ரானவ ரளவி லாருள மகிழவே" (444).

மேன்மையில் ஊட்டி - மேன்மையாக ஊட்டுவித்து.

மேன்மையில் ஊணும் என்று கூட்டி உண்வின் சிறப்புரைத்ததாகக் கொள்ளினு மமையும். ஊட்டுதலின் சிறப்பும், உணவின் சிறப்பும் 442, 443 திருப்பாட்டுக்களிற் பார்க்க. **ஊட்டி** - ஊண்பித்து. தாய் குழந்தையை ஊட்டுவதுபோலக்;

காலம் - அளவு - தகைமை - விருப்பு முதலியன அறிந்து அன்போடு உண்ணச் செய்து என்பதாம். "பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து" என்ற திருவாசகங் காண்க. உண்பது அடியவர் செயல் என்று காண இயலாதபடி அவர் உண்பது இவர் ஊட்டுவதாகிய செயலேயாய் நின்றது எனக் குறிக்கும் பிறவினைக் கூற்றிற் கூறிய சுவை காண்க.

கந்தை முதலியன 504 பார்க்க. **கந்தை**யாவது கிழிந்த துணிகள் பல சேர்த்துத் தைத்த பொந்தையேயாயினும் பற்றற்ற அடியார்கள் இதனையே வேண்டுவாராதலானும், வேண்டுவார் வேண்டியது தருதலே சிறந்த கொடையாதலானும், அதனையே உதவினர் என்ப.

யாணர் வெண்கிழிக் கோவணம் - இச்சரித நிகழ்ச்சிக்குக் கோவணம் காரணமாதலின் இதனை உடை வகைகளினின்று வேறு பிரித்து, **யாணர்** - **வெண்** - **கிழி** - என மூன்று அடைமொழிகள் தந்து சிறப்பித்துக் கூறினர். **யாணர்** - புதிய - அழகிய - நல்ல என்றலுமாம். **கிழி**-கிழி போன்ற. **கிழி**-பொன் முடிப்பு. எழுதுபடம் என்றலுமாம்.

உம்மைக் காண - உம்முடைய தொண்டின் விளக்கங் கண்டு உலகிற்குக் காட்டும் பொருட்டு என்க. **விளக்கங் காண** - 369 பார்க்க. ஒன்றை வாங்கவாவது, கொண்டு போகவாவது அன்று ; காணமட்டும் என்ற குறிப்புமாம். "சும்மா உங்களைப் பார்க்க வந்தேன்" என்னும் உலக வழக்கும் காண்க.

காண - கண்ணுதற் கரந்தோன் - காண வந்தவன் கண்ணைத் திறந்து வராமல் அதனைக் கரந்து வந்தான் என்ற நயமுங் காண்க. அக் கண் அடியாரிடத்துக் காட்டாது மறைத்தருளுங் கண் என்ற குறிப்புமாம்.

ஈவது கேட்டு - என்பதும் பாடம். 11

513. என்று தம்பிரா னருள்செய "வித்திரு மடத்தே
நன்று நான்மறை நற்றவ ரமுதுசெய் தருளத்
துன்று வேதியர் தூய்மையி னமைப்பது முளதா
லின்று நீருமிங் கமுதுசெய் தருளு"மென் றிறைஞ்ச, ௧௨

514. வணங்கு மன்பரை நோக்கியம் மறையவ ரிசைந்தே
"யணங்கு நீர்ப்பொன்னி யாடிநான் வரமழை வரினு
முணங்கு கோவணம் வைத்துநீர் தாரு"மென் றொருவெண்
குணங்கொள் கோவணந் தண்டினி லவிழ்த்தது கொடுப்பார், ௧௩

515. "ஓங்கு கோவணப் பெருமையை யுள்ளவா றுமக்கே
யீங்கு நான்சொல்ல வேண்டுவ தில்லைநீ ரிதனை
வாங்கி நான்வரு மளவுமும் மிடத்திக ழாதே
யாங்கு வைத்துநீர் தாரு"மென் றவர்கையிற் கொடுத்தார். ௧௪

513. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு தமது பெருமானாகிய இறைவர் அருளிச் செய்ய, "இந்தத் திருமடத்திலே நன்றாகப் பெரிய நான்மறைத் தவசீலர்கள் அமுது செய்தருளத் தக்கபடி, நிறைந்த வேதியர்கள் தூயதாக அமைப்பதும் உண்டு ; ஆதலால் இன்று நீரும் இங்கு அமுது செய்தருளல் வேண்டும்" என்று சொல்லி நாயனார் அவரை வணங்க, ௧௨

514. (இ - ள்) வெளிப்படை. அவ்வாறு வணங்கிய அன்பரைப் பிரமசாரியாக வந்த அந்த வேதியர் நோக்கி அவர் வேண்டுதலுக் கிசைந்தவராய், "அணங்கு நீரை யுடைய காவிரியில் நீராடி நான் வரும்போது மழைவர நேர்ந்தாலும், (அப்போது உதவ) உலர்ந்த இக்கோவணத்தை உம்மிடத்தில் வைத்து நீர் தருவீராக!" என்று

கூறிக், குணமுடைய வெள்ளிய கோவணத்தைத் தண்டிலிருந்து அவிழ்த்து அதனைக் கொடுப்பாராகி, ௬௩

515. (இ - ள்) வெளிப்படை. (குணத்தினல்) ஓங்கு கோவணத்தின் பெருமையை உள்ளபடி உமக்கே இங்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை; நீர், இதை வாங்கி நான் நீராடித் திரும்பி வரும் வரையில் உம்மிடத்தில் இகழ்ந்துவிடாமற் காப்பாற்றி ஆங்கு வைத்து நீர் திருப்பித் தருவீராக!" என்று சொல்லி அதனை அந்நாயனருடைய கையிலே கொடுத்தார். ௬௪

513. (வி - ரை) **திருமடம்** - தாமே சமைத்த மடமாயினும் அடியார்கள் தங்கி அமுது செய்தும், கோவண முதலியன பெற்றும் ஒழுகிய புண்ணியம் விளைதற்கிடமாதலின் திரு என்ற அடைமொழி தந்து சிறப்பித்தார். (505) பார்க்க.

நன்று - நன்றாக. நன்று அமுது செய்தருள எனக் கூட்டுக. நன்று அமைப்பதும் எனக் கூட்டி யுரைப்பதுமாம். **நன்று** - நல்ல எனப் பொருள்கொண்டு மறைக்கு இயற்கை யடைமொழியாக்கி யுரைத்தலுமொன்று.

நான்மறைப் பெருந்தவர் - மறையவர் குலத்து வந்த பெருந்தவஞ் செய்யும் முனிவர்கள். இவரது பிரமசரிய வடிவம் இவர் மறைவழி நோற்கும் பெருந்தவமுடையார் எனத் தெரிவித்ததாதலின் உம்மைப் போலப் பெருந்தவ முனிவரும் அமுது செய்ய என்றார். வரும் பாட்டிலும் அம் **மறையவர்** என்றதும் காண்க.

அமுது செய்தருள - அமுது செய்ய. அமுது செய்தலே அருளிப்பாடு ஆதலின் **செய்தருள** என்றார். அமுது செய்து அதன் பயனாக அருளினைச் செய்ய என்று இச் சரிதப் பின் நிகழ்ச்சி நோக்கி உரைப்பினுமாம்.

துன்று வேதியர் - அதற்கென்று பொருந்திய வேதியர்கள். இவர்களும் அக் குலத்து வந்தார்களாயினும் அமுதமைக்கும் தொழில் பூண்டார் என்பது. இற்றைநாள் வேதியர் பலர் இத்தொழில் செய்தலுங் காண்க.(திருஞான - புரா - 567, ஏயர்கோன் - புரா - 175 பார்க்க.)

தூய்மையி னமைப்பதும் - மறைப் பெருந்தவர்களுக்கு அவர்களது தவத்திற்கும் சீலத்துக்கும் ஏற்றவாறு தூயதாக ஆக்குவது என்றபடி. உம்மை பிற அடியவர்க்கு அமைப்பதின் வேறாக என்று இறந்தது தழுவிய எச்சவும்மை. எனவே மறைப் பெருந்தவர்க்கும் பிறர்க்கும் வெவ்வேறாக அமுது திருமடத்தில் அமைக்கும் நியதி யுண்டென்பது பெறப்படுகின்றது. இற்றை நாள்வரை இந்நாட்டில் அவ்வழக்குண்மையும் காணப்படும்.

நீரும் - இம்மடத்தினிற் காணும்படி யில்லாத (511) நீரும் என உயர்வு சிறப்புத் தோன்ற நின்ற எச்ச உம்மை. அமுது வேண்டாத - அமுதுண்ணாத - நீரும் அமுது செய்யும் என்ற குறிப்புமாம்.

அமுது செய்தருளும் - தேவர்கள் அமுதைத் தமக்கென்று வைத்து உமக்கு நஞ்சு ஊட்டினார்கள்; அடியேன் அவ்வாறன்றி அமுதத்தை உமக்கு ஊட்ட அமைகின்றேன் என்ற குறிப்புமாம். (கண்ணப்பர் புராணம் - 32 பார்க்க)

என்று இறைஞ்ச - என்று சொல்லிப் பின்னர்க் குறையிரந்து வணங்க.

பெருந்தவர்—என்பதும் பாடம். 12

514. (வி - ரை) **வணங்கும்** - மேற்கூறியவாறு, அமுதுண்ண வேண்டுமென்று குறையிரந்து நின்று வணங்கிய.

அன்பரை - குறையிரந்ததும் வணங்கியதும் அன்புகாரணமாக என்பது குறிப்பார் **அன்பர்** என்றார்.

மறையவர் - மறைகளை ஓதும் பிரமசாரியாய் வந்தவர் - மறைக்குடையவர் - மறை சொன்னவர். மறையாற் சொல்லப்பட்டவர் என்றலுமாம். தமது உண்மை வேடத்

தைப் பிரமசாரி வேடத்தினுள் மறைத்து நின்றவர் என்ற குறிப்புமாம். **புன்சடை கரந்த** - (508) முதலியன காண்க.

இசைந்தே - அவரது வேண்டுதலுக்குத் தமது இசைவை யுணர்த்திய பின். மொழியாலன்றித் தலையசைவு முதலிய மெய்ப்பாடுகளாலும், பின்னர்க் கூறும் மொழியின் குறிப்பாலும் இசைவு உணர்த்தப்பெற்றது.

அணங்குநீர்ப் பொன்னி - தெய்வத்தன்மை பொருந்திய, பொய்யாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி. காவிரியின் தெய்வத்தன்மையானது திருக்கைலாயத்தில் உள்ள பொன்னி என்ற தீர்த்தத்திலிருந்து ஒரு கமண்டலம் அகத்தியரால் கொள்ளப்பெற்று வந்து பெருகிய வரலாற்றிலிருந்து விளங்கும். சரிதம் கந்தபுராணத்துட் காண்க. கமண்டலத்தினின்றும் பெருகி உலகிற் போந்த பின்னர் மலர் நீரால் வழிபட்டு இரு கரையிலும் எண்ணில் சிவாலயத்து எம்பிரானை இறைஞ்சலினாலும் (57) தெய்வத்தன்மை பெற்றதாம். பொய்யாத நீரையுடையதால் **நீர்ப்பொன்னி** என்றார். "பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்" - **சண்டீசர் புராணம்** (1). **பொன்னி** - பொற்பொடிகளை மலையினின்றும் வாரி வருதலாற் பொன்னின் குணம் விரவிய காரணத்தாற் **பொன்னி** எனப் பெறும். **அணங்கு** - அழகிய - தெளிவுடைய - என்பாருமுண்டு. உலகூட்டி வளர்க்கும் நீரையுடைமையால் ஆறுகளைப் பெண் என வழங்கும் வழக்கும் காண்க. பவானி, கோதாவிரி, கன்னி, குமரி முதலியவை காண்க. அணங்கு - பெண் எனக் கொண்டு பொன்னி என்ற எமது தாயாகிய பெண்ணின் பாற் கொண்ட நீரினாற் பெருகிய பொன்னி எனவும் உரைத்தலுமாம். அணங்கின் நீர் என்க. பொன்னியாகிய அணங்கின் நீராடி எனவும் கூட்டி யுரைக்க நின்றது.

பொன்னி ஆடி நான் வர - நீவிர் வேண்டியவாறு திருமடத்தில் அமுது செய்தற்கு முன்னர் நீராடல் வேண்டுமாதலின் அதற்காகப், பொன்னி ஆடிவா என்று தனது இசைவினைக் குறிப்பிற் கூறியவாறு.

மழைவரினும் - இஃது முதுவேனிலாகிய ஆனிமாத மாதலின் மழை வருதற் கேதுவில்லை ; ஒருவேளை வந்தாலும் என்க. உம்மை எச்சவும்மை. நாயனார் திருவடிப் பேறு பெறும் இந்நாள் ஆனிமாதப் பூர நாள் என்பது காண்க. மழை வாராவிடின் தண்டின்மேலுள்ள மற்றொரு கோவணமே உதவும் ; வரினும் இதுவுதவுவதாக என்று கூறியதுமாம். **உணங்கு** - காய்ந்த - உலர்ந்த.

வெண் குணங்கோள்கோவணம் - வெண்கோவணம், குணங்கொள் கோவணம் எனத்தனித்தனிப் பிரித்துக்கூட்டுக. **குணம்** - இங்கு நிறங்குறிப்பதாகக்கொண்டு வெண்ணிறங் கொண்ட கோவணம் என ஒன்று சேர்த்தி யுரைப்பாருமுண்டு. இக்கோவணம் மறையேயாமாதலானும், மறை இறைவனது வாலறிவாகிய மெய்ஞ்ஞானத்தினின்றும் வெளிப்பட்ட நாத காரியமாகி அதன் குணமே கொள்ளுமாதலானும் (பிறப்பிடத்தின்) வாலிய குணங்கொள் கோவணம் என்ற குறிப்புமாம். "வாலறிவன்" என்ற குறளில் மெய்யுணர்வினை யுடையான் எனப் பரிமேலழகர் உரை கூறியது காண்க.

தண்டு - இவர் கையிற் றூங்கி வந்தது. (510) பார்க்க. **தண்டினில்** - தண்டினின்றும். **அவிழ்த்து** - தண்டிலிருந்த கோவண மிரண்டினுளொன்றை அவிழ்த்து. எஞ்சிய கோவணம் இவர் திரும்பிவரும்போது நனைந்து ஈரமாயினமை பின்னர்க் காண்க. (520). இறைவர் தந்த கோவணம் அருளுருவாதலின் மலசம்பந்தமாகிய தற்போதத்தை வாட்டி நின்மலமாகிய அன்பினைத் தருவதாம். நின்மலமாதலின் **வெண்** என்றும் மலத்தை வாட்டுதலின் **உணங்கு** என்றும் குறித்தார் என்றுரைப்பாரு முண்டு.

கொடுப்பார் - முற்றெச்சம். வரும்பாட்டில் **என்று கொடுத்தார்** என்றதனுடன் முடிந்தது.

515. (வி - ரை) கோவணத்தின் ஓங்கு பெருமையை என மாற்றுக. ஓங்குதல் - பிறவற்றை யெல்லாந் தாழச் செய்து தான் மேலோங்கிப் புகழால் மிகுதல். "புவனம் யாவையு நேர்நிலா வென்பது புகழோ?"(540)என்று இதனையே பின்னர் விரித்தனர்.

ஓங்கு கோவணம் என்று கொண்டு, கோவணம் வேதம்; வேதம் நாத உருவமாய் மேலோங்கி நின்று ஏனைய வெல்லாம் தன்னினின்று பிறக்க நிற்பது என்று உரைப்பினு மமையும். "மன்னுகலை துன்னு பொருள் மறைநான்கே வான்சரடாத், தன்னையே கோவணமாய்ச் சாத்தினன்காண் சாழலோ" என்ற திருவாசகத்திற் கோவணப் பெருமையை விரித்தவாறு காண்க. "அருமறைநூற் கோவணத்தின்" (மானக்கஞ்சாறர் புராணம் - 24), "மறையே நமது கோவணமாம்" (திருவிளையாடற் புராணம்) என்பன காண்க.

ஈங்கு நான் சொல்ல வேண்டியதில்லை - நீர் கோவணப் பெருமையை அறிந்து அடியார்க் களித்துவருகின்றீராதலின் நான் சொல்லித் தெரியவேண்டுவதில்லை. ஈங்கு - இவ்விடத்தில். இப்போது என்றலுமாம்.

இப்பெருமையைப் பின்னர் நான் சொல்லாமல் நீரே அறிந்து கொள்ளப் போகின்றீர் என்பதும் குறிப்பு.

வரும் அளவும் - நீராடித் திரும்பி வரும் வரையிலும்.

இகழாதே - உம்மிடத்தில் உள்ள அளவற்ற கோவணங்களைப் போன்றதே யிதுவுமாம் என்று இகழ்ச்சியாகக் காணாது காவல் செய்து.

ஆங்கு - காவலுள்ள தனியிடத்தில். சுட்டுச் சிறப்புக் குறித்தது.

நீர் வாங்கி......வைத்து......நீர்தாரும் என, நீர் என்றதனை இருமுறையும்வைத்ததென்னை? எனின், வாங்குதலும் வைத்தலும் நீர் செய்வீர். நான் வாங்குகின்றேன், நான் வைக்கின்றேன் என்ற ஆன்ம போதத்துடன் செய்யும் செயல் நீர் செய்வீர். ஆனாற் பின்னர் அக்கோவணத்தைத் திருப்பித் தருகின்ற செயல் உம்முடைய செயலாக நீர் செய்யப் போவதில்லை. தற்போத மிழந்த நிலையில் உம்மையே நீர் தந்து கோவணத்துக்கு நேர் கண்டு கொள்ளப் போகின்றீர் என்பது குறிப்பாம். நீர்-வாங்கி-வைத்து, என்றது உயிரின் தற்போத நிலை. "யாவையும் வைச்சு வாங்குவாய்"—திருவாசகம். "எல்லாந் தான்வைத்து வாங்க வல்லான்" (379) என்றபடி வைத்தலும் வாங்குதலும் எனது தொழில். ஆனால் நீர் வாங்குவதாயும் வைப்பதாகவும் எண்ணி வாங்கி வைக்கின்றீர் என்ற குறிப்பாம். வைத்தல் - வாங்குதல் என்ற சொல்லாட்சிகள் காண்க. வைத்தல் - சிருட்டி; வாங்குதல் - ஒடுக்கம். இங்கு வாங்கி - வைத்து - தாரும் என்றது கோவணத்தின் மறைவினையும், பின்னர் நாயனார் இறைவனில் ஒடுங்குவதனையும் குறித்து நின்றன என்பர்.

நீர்தாரும் என்றது பரவசமாகித் தற்போதமிழந்து சிவம் விளங்கிய நிலை. "இருதிறன் அறிவுள திரண்டலா வான்மா" என்பது சாத்திரம். வாங்கி - வைத்து - என்ற வினைகளுக்கு எழுவாயாய் நின்ற நீர் என்றதின் தன்மை வேறு; தாரும் - என்ற வினைக்கு எழுவாயாய் நிற்கும் நீர் என்றதின் தன்மை வேறு. ஆதலின் உயிர் ஒன்றேயாகவும், சார்புபற்றித் தன்மை வேறுபாடு நோக்கி இருமுறை கூறினார் என்க. "இப்பி றப்பினி லிணைமலர் கொய்துநா னியல்பொடு மஞ்செழுத் தோதித், தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான் றடமுலை யார்தங்கண், மைப்பு லாங்கண்ணு லேறுண்டு கிடப்பேனை" என்ற திருவாசகத்தில் நான் என்றது இருமுறையும் ஆளப் பெற்றது காண்க.

சொல்ல வேண்டுவதில்லை - இதனை வாங்கி வைத்துத் தாரும் என்றது இதன் பெருமை ஒருபுற மிருக்க, ஒப்புவித்த பொருள் பெரிதேயாக, அன்றிச், சிறிதேயாக, அதனைக் காப்பாற்றித் திருப்பித் தருதல் உமது கடமை என்பதும் குறிப்பாம்.　　14

516. கோடுத்த கோவணங் கைக்கொண்டு கோதிலா வன்பர்
"கடுப்பி லிங்கெழுந் தருளுநீர் குளித்"தெனக் கங்கை
மடுத்த தும்பிய வளர்சடை மறைத்தவம் மறையோ
ரடுத்த தெண்டிரைப் பொன்னிநீ ராடவென் றகன்றார். ௧௫

(இ - ள்) வெளிப்படை. (மறையவர்) கொடுத்த கோவணத்தை வாங்கிக் கொண்டு குற்றமற்ற அன்பராகிய நாயனார் "நீர் குளித்து விரைவில் இங்கெழுந்தருளுக" என்று சொல்ல, மடுவாகக் கங்கையாறு தங்கிய வளர்சடையினை மறைத்தவராகிய அந்த மறையவர் அடுத்துள்ள தெள்ளிய அலைகளையுடைய காவிரி நீர் ஆட என்று அகன்றனர்.

(வி - ரை) **கைக் கொண்டு** - கையில் வாங்கிக் கொண்டு. இவ்வாறு இவர் கைக் கொண்ட செயலிலே பின்னர், "கோவணங் கொண்டதற் கெதிர்வே ழொன்று கொள்கென" (526); "கோவணங் கொள்வது அணிந்தோ ?" (527) என்று பலவாறும் இறைவன் இவரைக் கூறுகிறபடி எவ்விதக் குற்றமுமில்லை என்று குறிப்பார் போன்று இங்குக் "**கைக்கொண்டு கோதிலா அன்பர்**" என்று சேர்த்துக் கூறினார்.

கடுப்பில் - விரைவிலே. இது அவரை அமுது ஊட்டுவிப்பதில் நாயனார்க்கிருந்த ஆர்வ மிகுதி காட்டிற்று.

மடுக் கங்கை - கங்கை ஆழமாகிய நீர்நிலை என்க. "திறைகயத் தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும், யானைநிழல் காண்பரிது" என்றது நீதி நூல். உலகத்தைத் தன்னுள் மூழ்குவிக்கு மளவிற் பெருகுங் கங்கையானது ஒரு மடுவினளவில் நின்று **ததும்பிய** என்க. "நிலைதளர ஆயிரமா முகத்தி னோடும், பாய்ந்தொருத்தி படர்சடைமேற் பயிலக் கண்டு" (பலவகைத் திருத்தாண்டகம் - 1), "பகீரதற்காய் வானோர் வேண்டப் பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாகச் செறுத்தானை" (திருவீழிமிழலை - 10) என்பன காண்க.

ததும்பிய - மடுவின் அளவில் அமைந்து சடையினுள் நிறைந்ததாயினும் நிரம்பி வழிவது போல ஆருக வழிந்து உலகில் உபகரிக்கும். **ததும்பிய** - ததும்புதற்கிடமாகிய. இவர் நீராடி வருவேன் என்பதும், நாயனார் அவ்வாறே குளித்து வருக என்பதும் கங்கையை மறைத்த செயலினால் உளவாயினவாதலின் இங்கு அதனைக் கூறினார்.

வளர் சடை-வளரும் தன்மையுடைய சடை. அடியவர்கள் தமது மனத்தினுள்ளே அதன் உபகாரத்தன்மை நோக்கிப் பாராட்டி எப்போதும் வாழ்த்த வளர்ந்துகொண்டிருக்கும் சடை என்றலுமாம். (தன்னிடத்துத் தங்கித் ததும்பிய கங்கையினால் உலகத்தை - தன்பாற் றங்கிய குறைப் பிறையை - நிறைவாக்கி) வளர்க்கின்ற என்றலும் பொருந்தும்.

மறைத்த அம் மறையோர் - "செய்ய புன்சடை கரந்தோர் திருமுடிச் சிகையும்" (508) என இதனையே முன்னரும் குறித்தது காண்க. நீராடச் செல்லுங்கால், 'மழைவரின் உதவும் பொருட்டுக் கோவணத்தை வைத்துக் காத்துக் கொடு' என்றதினின்றே இச்சரித நிகழ்ச்சி தொடங்குதலின் அச்சிறப்பு நோக்கிக் கங்கை கரந்த சடையினைப் பின்னரும் கூறினார். மறைத்ததனால் மறையோர் என்றும், சடை மறைத்தார் கோவணத்தையும் மறைத்தார் என்றும் குறிப்புக்கள் பெற நின்றது காண்க. மறைத்த - கள்ளமாகிய - ஒளித்த - தன்மை யிவரிடத்து நின்றதேயன்றி அன்பரிடத்தில் ஒரு சிறிதும் இல்லை என்று குறிப்பார் அன்பரைக் **கோதிலா அன்பர்** என்ற ஆசிரியர், இவரை, **மறைத்த மறையோர்** என்றார். பின்னரும் **கோவணக் கள்வர்** (520) என்பதுங் காண்க.

அடுத்த - நகருக்குப் பக்கத்திலே உள்ள. நீராடற்கடுத்த - பொருந்தியதாகிய என்றும், மறைத்த அந்தக் கங்கை நீரே வந்து பொருந்திய - அடுத்த - என்றும் கூறலுமாம். யாவரும் வந்து படிந்தாடிச் சுத்தம்பெறும் கங்கையை மறைத்து வந்தாராதலின்

அதற்கடுத்தபடியில் உயர்ந்த காவிரியாட என்றுரைப்பதுமாம். காவிரி தன்னுட் படிந்தாடினோர்க்குத் துன்பம் போக்கி இன்பந் தருதலிற் சிறந்ததாம். அதுபற்றியே **தெண்** - **திரை** - என்ற அடைமொழிகளாலுஞ் சிறப்பித்தார். இத்தகைய சிறப்புடைய காவிரியை அதன் பெருமை யறியாது இந்நாள் மாக்கள் பலவகையாலுந் தங்களுடைய விதி தவறிய தீ நடக்கையினாலே அசுத்தப்படுத்தி இது நீராடற் கடுத்ததன்று - குளிக்கக்கூடாது - இந்நீர் குடிக்கக்கூடாது என்று விளம்பரமுஞ் செய்யலாயினர்! என்ன கொடுமை!. காவிரியின் சிறப்பு - 52 முதல் 57 வரை திருப்பாட்டுக்களிற் காண்க.

நீர் ஆட என்று - நீராட என்று காரணங் காட்டுதலே யன்றி உண்மையில் நீராடப் போக வன்று என்பது குறிப்பு. நீர் ஆடாமலே நனைந்து வந்தணைந்தார் (518) என்று காண்க. ஆயின் இவர் விரும்பி ஆடுவது அன்பர்களது அன்பாகிய தூய நீரே யாம் என்பது (519) அடுத்துக் கூறப்பெற்றதும் காண்க.

அகன்றார் - அங்கு வெளிப்பட்டு நின்ற தோற்றத்தை மறைத்தனர். எவ்விடத்தினின்றும் அகல்வது எங்கும் நிறைந்த இறைவர்க்குக் கூடாதென்க. "நீங்கினா ரெப்பொருளு நீங்காத நிலைமையினார்" (ஏயர்கோன் - புரா - 180) முதலிய திருவாக்குக்கள் காண்க. 15

ஆடுதற் ககன்றார்—என்பதும் பாடம்.

*517. தந்த கோவணம் வாங்கிய தனிப்பெருந் தொண்டர்
முந்தை யந்தணர் மொழிகொண்டு முன்புதாங் கொடுக்குங்
கந்தை கீளுடை கோவண மன்றியோர் காப்புச்
சிந்தை செய்துவே றிடத்தொரு சேமத்து வைத்தார். ௧௬

(இ - ள்) வெளிப்படை. (பிரமசாரியார்) தந்த கோவணத்தை வாங்கிய ஒப்பற்ற பெருந்தொண்டர் முந்தையந்தணராகிய அவரது மொழியினைக் கொண்டவராய், இதற்கு முன் தான் அடியார்களுக்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கும் கந்தை - கீள் - உடை - கோவணம் எனு மிவற்றை வைத்த இடத்தினன்றி ஒரு காவலுள்ள இடமாய் மனத்தில் ஆலோசித்து அவ்வாறே தனியான ஓரிடத்தில் ஒப்பற்ற சேமத்தில் அதனை வைத்தார்.

(வி - ரை) **தந்த கோவணம் வாங்கிய தனிப்பெரும் தொண்டர்** - முன்னர்க் "**கொடுத்த** கோவணங் கைக்கொண்டு கோதிலா **வன்பர்**" என்ற ஆசிரியர் இங்குத் **தந்த** - என்றும், **தொண்டர்** - என்றும் கூறினார். **கொடு** என்பது மிக்கோனுரையும், **தா** என்பது ஒப்போனுரையுமா மென்பதிலக்கணம். இறைவர் கொடுத்தபோது அவர் கொடுப்பாராயும் நாயனார் ஏற்போராயு மிருந்தமையால் **கொண்ட அன்பர்** என்றார். கொள்வதற்கு அன்பே காரணமாயினமையின் **அன்பர்** என்றதாம். அவ்வாறு கொண்ட பின்னர் அந்நிலை மாறி அதனைத் திருப்பித் தரும் நிலையிலே நாயனார் தருவோரும் அவர் பெறுவோருமாயினர். கோவணமோ திருப்பித் தரப்படாமல், நாயனார், கோவணத்துக்கு ஒப்பாக ஒப்புவித்துத் தன்னையே தந்தமையால் ஒப்புமை மொழியாகிய **தந்த** கோவணம் வாங்கிய **தொண்டர்** என்றார். பின்னரும் "நான் **தந்த** கோவணத்தை" (520) "நீர் **தந்த** கோவணத்தை" (524), "உம்மையிற் **றா**" (532) என்றமை காண்க. முதிர்ந்த **அன்பின்** விளைவே **தொண்டா** மென்பதாம். "முதிரு மன்புடைத் **தொண்டர்**" (519), "கொண்ட வன்பினிற் குறைபடா அடியவரடிமைத், **தொண்டு** மொத்தலால்" (545) என்ற இடங்களில் இக்கருத்தினை விளங்கக் காண்க. முன்னர்க் **கோதிலா அன்பர்** என்றதற் கேற்ப, அதன் முதிர்ந்த நிலைமையில் **தனிப்பெருந்தொண்டர்** என்றார். சிறுமையிலுந் தனிமை யுண்டாதலின் அதனை விலக்கத் **தனிப் பெரும்** என்றார்.

முந்தை அந்தணர் - அந்தணர்கட்கெல்லாம் முற்பட்டவர். தந்தை - தந்தைதன் றந்தை - அவர் தந்தை - என்றிவ்வாறு போயின முடிவில் முதலிலே நிற்பவர். அந்த ணன் என்னும் பிரமனிடம் கச்சியபர் முதலிய முனிவர் தோன்றி அவர்மூலம் உலகில் தோற்றமுளதாதலால் அவன் பிதா மகன் எனப்படுவான்; அவனுக்குப் பிதா விட் டுணு; அவற்கும் பிதா இவர்; ஆதலின், முந்தை - முன்னேனாகிய - அந்தணர் என்ற குறிப்புமாம். அந்தணர்கட்கெல்லாம் மூல அந்தணராகிய பிரமாவைப் படைத்து வேதங்களை அவருக்கு ஓதுவித்த அந்தணர் சிவபெருமான் என்பது உபநிடதம்.

மொழிகொண்டு - காப்பில் வைக்கும்படி சொல்லிய சொல்லினை யேற்றுக் கொண்டு. அவர் **மொழி**யாகிய மறையேயாம் கோவணத்தினைக் கொண்டு என்றலு மாம். **கொடுக்கும்** - அடியார்களுக்குக் கொடுக்கும்.

கோவணம் அன்றி - கோவணம் முதலியன வைத்த இடமல்லாது. பொருளின் பெயர் அது வைத்திருக்குமிடத்திற்கு ஆகுபெயர்.

ஓர் காப்புச் சிந்தைசெய்து - தனியான காவல்பெற்ற நிலையினைச் சிந்தித்து.

வேறிடத்து - அவ்வாறு சிந்தித்து நிச்சயித்த தனியிடத்திலே. **வேறு** - தனி. **காப்பு** - காவல்பெற்ற இடத்துக்காயிற்று. **வேறிடத்து** - 479 பார்க்க. **சிந்தைசெய்து** என்பது நாயனார் இதனைச் செம்மைபெறச் சிந்தித்த சிறப்பு உணர்த்திற்று.

ஒரு சேமத்து - ஒப்பில்லாத மிக்க காவலிலே. இடமும் தனிமை; அவ்விடத் துக் காவலும் தனிமை. ஆதலின் **ஓர் காப்பு** என்ற பின்னரும் **ஒரு சேமத்து** என் றது கூறியது கூறலாகாமை உணர்க. 16

518. போன வேதியர் வைத்தகோ வணத்தினைப் போக்கிப்
பான லந்துறைப் பொன்னிநீர் படிந்துவந் தாரோ?
தூந றுஞ்சடைக் கங்கைநீர் தோய்ந்துவந் தாரோ?
வான நீர்மழை பொழிந்திட நனைந்துவந் தணைந்தார். கஎ

(இ - ள்) வெளிப்படை. போயின வேதியர், (நாயனார் காப்பிற் சேமத்து) வைத்த கோவணத்தைப் போகச்செய்துவிட்டுப், பின்னர், நீலோற்பலங்கள் மலர்தற் கிடமாகிய அழகிய துறைகளையுடைய காவிரியின் நீர்மூழ்கித் திரும்பினாரோ? அது வன்றித் தூய மணமுடைய சடையில் உள்ள கங்கைநீர் தோய்ந்து வந்தாரோ? அறி யோம்; ஆனால் ஆகாயத்தினின்றும் வரும் நீராகிய மழை பொழிய அதில் நனைந்து வந்து சேர்ந்தனர்.

(வி - ரை) **போன வேதியர்...போக்கி** - என்ற நயம் காண்க. பிறர் அறிய விய லாது தாம் போயினது போலவே, அதனையும் பிறர் அறியாமற் போகச் செய்து. **போக்கி** - உலகங்களை யெல்லாம் சங்கார காலத்தில் காரணமாகிய மாயையில் ஒடுக்கிக் காணமற் செய்கின்ற இறைவனுக்கு இக்கோவணத்தைப்போக்கி ஒடுக்குவது பெரிதோ என்க. சிருட்டியில் முதற்காரணமாகிய அருவப் பொருளினின்றும் காரியங்கள் உருவ மாகித் தோன்றும். ஒடுங்குங்கால் உருவமாகிய காரியங்கள் அருவமாகிய காரண ரூப மாய் மறையும் என்றது சாத்திர உண்மை. **போக்கி** என்பது இங்குக் காண இயலாத படி தன் காரணத்தினுள் மறையச் செய்து எனும் பொருளில் வந்தது.

பானல் அம் துறை-பானல்-நீலோற்பலம். காவிரித் துறைகளில் அந்நீர் பாய்ந்து நிற்கும் பல கயங்களிலும் கரைகளிலும் நீலம் முதலிய நீர்ப்பூக்கள் மலரும். **பால்-நல்- அம் - நீர்த்துறைப் பொன்னி** என்று மாற்றிப் பிரித்துப் பால் போன்ற, உண்ணுந் தன்மையும், தூய்மையும், தெளிவும் கொண்ட, நீரையுடைய நல்ல அழகிய துறைகளை யுடைய காவிரி என்றுரைப்பினும் அமையும். "வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொ றும், உய்யவே சுரந்தளித் தூட்டு **நீரது**" (53) என இக்கருத்துப் பற்றியே முன்னர்க்

கூறியதுங் காண்க. **படிந்து வந்தாரோ ? தோய்ந்து வந்தாரோ?** - ஓகாரங்கள் இரண்டும் ஐயங்குறித்தன. இவர் காவிரியாட என்று அகன்றதே (516) யன்றி, அதில் ஆடினாரல்லர் ; கங்கை மடுத்ததும்பிய வளர்சடை மறைத்து வந்தாராதலின் (516) சடைக் கங்கை நீரும் தோய்ந்திலர் என்பது. காவிரியும் கங்கை போலவே கைலாயத்தினின்ற எழு பெரு நதிகளுள் ஒன்றாதலின் இரண்டையும் ஒன்றுபடுத்திக் கூறினார். "கங்கையாம் பொன்னியாங் கன்னி நீத்தமே" (55) என்றதுங் காண்க. "கங்கை யாடிலென் காவிரி யாடிலென்" என இவ்விரண்டினையுமே தொடர்புபடுத்தி யருளினார் அப்பர் சுவாமிகள். காவிரி நிலத்தில் ஆழ ஓடி வருதலின் அதில் ஆடவேண்டுவோர் அதனுள் வீழ்ந்துபடிய வேண்டுதலின், அதனிற் **படிந்து** என்றும், கங்கை அவ்வாறு படிதல் வேண்டுதலின்றிச் சிரமிசைச் சடையினின்று வடிந்து திருமேனியைத் தோய்விக்குமாதலின் அதனிற் **றோய்ந்து** என்றும் கூறினார்.

"ஆடிநான்வர மழைவரினும்" (514) என்று கூறினாராதலின், அதன்படி ஆடி வரும்போது மழையில் நனைந்து வந்தார் என்றபடியாம். மழைநீரால் நனைந்து வந்தது மட்டும் கண்டார்களன்றி, முன்னர் நீராடிய செயல் யாவருங் கண்டிலர். ஆனால் அவர் சத்திய உருவராதலின் சொல்லிய வாக்குத் தவிராது நீராடியே வந்திருத்தல் வேண்டும். ஆயின் அவர் அவ்வாறு ஆடியது காவிரியோ? கங்கையோ? இவற்றுள் இதுவென்று அறியோம் என்றபடியாம். காவிரி, இவ்வுலகத்துள்ளதாலும், "தூய காவிரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி" (திருநேரிசை) என்றபடி அதுவே அவர் ஆடுதற்கடுத்ததாலும், அதனை முன்னர்க் கூறினார்.

தூநறும் சடை - சடைக்குத் **தூய்மை** - கங்கையாலும், **நறுமை**-மணம் - அதனிற் சூட்டிய கொன்றை மலராலுமாம். சடைக்கே தன்னியல்பில் தூய்மையும் நறுமையு முண்டெனினு மொக்கும். **சடைத் தூநறுங் கங்கை நீர்** என மாற்றி இவற்றைக் கங்கை நீருக்கு அடையாக்கினு மமையும். திருமஞ்சன நீருக்கு இவை யிரண்டும் அமையவேண்டுவன என்க.

மழை பொழிந்திட - (அவ்வாறு பொழிந்த) **வான நீரில் நனைந்து** என மாற்றிக் கொள்க. வானத்தில் நீராக உருப்பெற்ற மேகம் மழையாய்ப் பொழிந்திட அதில் நனைந்து என்றலுமாம். வானநீரே கங்கைநீரும் காவிரிநீரும் ஆம்; ஆதலின் அதில் நனையவே இந்நதிகளில் தோய்ந்தது முடன்கொள்ளப்படுமென்பதும் குறிப்பாகும்.

வந்து அணைந்தார் - நாயனார் திருமடத்திற்கு வந்துசேர்ந்தனர். 17

519. கதிரி ளம்பிறைக் கண்ணியர் நண்ணிய பொழுதின்
முதிரு மன்புடைத் தொண்டர்தா முறைமையின் முன்னே
யதிக நன்மையி னறுசுவைத் திருவமு தாக்கி
யெதிரெ ழுந்துசென் றிறைஞ்சிட நிறைந்தநூன் மார்பர், ௧௮

520. தொண்ட ரன்பெனுந் தூயநீ ராடுதல் வேண்டி
"மண்டு தண்புனல் மூழ்கிய வீரத்தை மாற்றத்
தண்டின் மேலுள தீரநான் றந்தகோ வணத்தைக்
கொண்டு வாரு"மென் றுரைத்தனர் கோவணக் கள்வர். ௧௯

519. (இ - ள்) வெளிப்படை. ஒளியுடைய இளம்பிறையை மாலையாகச் சூடிய இறைவர் வந்து சேர்ந்தபோது முதிரும் அன்புடைய தொண்டராகிய நாயனார், தாம், அவர் வருவதற்கு முன்னே முறையின்படி அதிக நன்மையிலே ஆறு சுவையும் பொருந்தத் திருவமுது ஆக்குவித்து, அவர் வந்தணைந்ததும் எழுந்து அவரை எதிர் கொண்டு போய் வணங்கி நிற்க, நிறைந்த நூலணிந்த மார்பினையுடைய அவர், ௧௮

620. (இ - ள்) வெளிப்படை. தொண்டருடைய அன்பு என்னும் தூய நீரினை ஆட விரும்பி, அவரை நோக்கிச், "செறிந்த குளிர்ந்த நீரிலே முழுகப்பெற்றதனால் ஈரமுடைய கோவணத்தை மாற்றுதற்குத், தண்டின் மேலுள்ளது ஈரமாகிய கோவண மாதலின், நான் தந்த கோவணத்தைக் கொண்டு வருவீராக !" என்றுரைத்தார். கோவணக் கள்வர். கக

519. (வி - ரை) **கதிர் இளம் பிறைக் கண்ணியர்** - முன் "பிறைத் தளிர்ச் சடைப் பெருந்தகை (507) என்றதுங் காண்க. "கோவணப் பெருமை முன்காட்டி அருள் கொடுப்பான்" என்று கூறியபடி, முன் பெருமைகாட்டவும் பின் அருள் கொடுக்கவும் தொடங்கிய சமயம் இதுவாதலின், இங்கும், **கதிர் இளம் பிறைக்கண்ணியர்** எனச் சிறப்பித்து அதனையே அநுவதித்துக் கூறினார். முன்னர்த் **தளிரா**யிருந்த பிறை, இப்போது அருள் விளக்கம் வருங் காலமாதலின் **கதிர்ப்**பிறையாகி **முதிர்**ந்தமையும் குறிக்க. **தளிர்** பின்னர்க் **கதிர்** விடுதல் இயல்பாம். அன்பு முதிரப் பிறையும் முதிர்ந்து கதிரீன்றது என்று குறிக்க முதிருமன்புடைத் **தொண்டனார்** என்ற நயமுங் காண்க. **பிறைக் கண்ணி** - அருளினைக் குறிக்கும். திருவையாற்றிற் கைலாயக் காட்சி கண்டபோது அப்பர்சுவாமிகள் அருளிய "மாதர் **பிறைக் கண்ணியானை**" என்ற பதிகத்திற் பாசுரந்தோறும் இதனைக் குறித்தல் காண்க. தமது பாதத்தினை வந்தடைந்த பிறையைக் காத்து முடிமேல் ஏற்றி உலகுக்குக் கருணை விளக்கம் செய்தலின் அதுபோலவே, முன் அன்புகொண்டு "சிந்தை செய்வது சிவன் **கழல்** அல்லதொன்றில்லார்" (504) என்றபடி தமது திருவடியிற் பணிதலே கடன்பூண்டு கிடந்த அன்பரை நீடருள் கொடுத்துச் சழக்கினின்றேற்றித் (542) துலையே விமானமாகி மேற்செல்லச் சிவபுரியணைவிக்கும் (549) செயல் தொடங்கிய இதுபோழ்து அருளுடையானமாகிய **கதிர் இளம் பிறைக்கண்ணி** யுடையோனாக இறைவனைச் சுவைபெற அறிவித்தார் ஆசிரியர்.

"சுற்றமொடு பற்றவை துயக்கற வறுத்துக்
குற்றமில் குணத்திெனாடு கூடுமடி யார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே"—**பண்-இந்தளம்-திருவிராகம்-1.**

என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரக் கருத்தினை இங்கு வைத்துக் காண்க.

தாம்...ஆக்கி - **தாம்** - தாமே முன்னின்று. அமுது அமைக்கத் துன்றும் வேதியர் வழக்கம்போல் அமைப்பர் என்று விட்டுவிடாது, தாமே ஆவனவற்றைக்கவனித்து. **தாம்** - அசையென் றுரைக்குவாருமுளர்.

முறைமையின் - எந்த முறைமையிற் கண்காணித்தல் கூடுமோ அந்த முறைமையிலே - அமுது அமைக்கும் பாகநூல் முறைப்படி என்றுரைப்பினுமாம். **முன்னே** - பிரமசாரியார் நீராடித் திரும்பி வரும் முன்பே. **அதிக நன்மையின்** - என்றும் அமைக்கும் படியினும் மேலாக அதிக நலம் பெறுவதாக. உண்மையில் இன்று அமைத்த திருவமுதினை அவர்க்கென்று நாயனார் எண்ணிய எண்ணத்தினுள்ளே நின்று இறைவர் ஏற்று, இவர்க்கு நன்மைகளிலெல்லாம் மிக்கதாகிய தமதுலகம் பெறுவித்தலின், முன் அமைத்த அமுதுகளிலெல்லாம் இஃது **அதிக நன்மையின்** அமைத்ததேயாயினமையும் காண்க. "வெவ்வேறியல்பினின்" - **கண் - புரா** - 167. **அறுசுவைத் திருவமுது** (443).

ஆக்கி - ஆக்குவித்து. பிறவினை விகுதி தொக்கது. "குடியொன்றி" யென்ற குறளிற் போல.

இறைஞ்சிட - "கடப்பில் இங்கெழுந்தருளும் நீர் குளித்து" (516) எனத் தாம் வேண்டியபடியே எழுந்தருளிய கருணைக்காக வணங்கினார்.

நூல் நிறைந்த மார்பர் என மாற்றுக. "மெய்யில் வெண்புரி நூலுடன் விளங்கு மான்றோலும்" (508) விளங்கியபடியால் இவ்வாறு கூறினார். **நிறைதல்** - விதிப்படி உள்ள இலக்கணங்களால் நிறைவு பெறுதல். 18

520. (வி - ரை) **தொண்டர் அன்பு எனும் தூயநீர் ஆடுதல் வேண்டி** - மிகப் புனிதம் செய்வதாகிய காவிரி நீரோ, அன்றிக் கங்கை நீரோ ஆடி, வானநீரினும் நனைந்த அவர் அவை பழுதாம் என்றும், தூய்மை போதா என்றும், எண்ணியவர் போல, அவற்றினும் மிக்க புனிதமாகிய தொண்டர் அன்பு என்னும் நீரினில் ஆட விரும்பிப் பின்வருமாறு செயல் செய்தனர் என்க.

"பவனன் பணிசெய வருணன் புனல்கொடு பணிமா றவுமவை பழுதாமென்
றெவருந் தொழுதெழு மடியார் திருவல கிடுவார் குளிர்புனல் விடுவார்கள்" (163)

என்ற திருநாவுக்கரசு நாயனார் புராணமும் இங்கு நினைவு கூர்க. "புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீ"ரினை "விளைத்தவன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்ட" கண்ணப்ப நாயனார் செய்தியை இங்கு நினைவு கூர்க. "சேயமே தயிர்நெய் பாலா நிறையநீ ரமைய வாட்டி" - (திருநேரிசை), "அன்பர் வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை" - (திருவிசைப்பா) முதலியவை காண்க.

அன்பெனுந் தூயநீர் ஆடுதல் - அன்பு வெளிப்படக் கண்டு மகிழ்ந்து ஏற்று அருள் கொடுத்தல். **வேண்டி** - வேண்டுதலும் வேண்டாமையும் இல்லானாகிய இறைவன் வேண்டுவது அன்பு ஒன்றேயாம் என்க. வேண்டி - உரைத்தனர் என முடிக்க. உரைத்ததன் பயனாகத் தூய அன்பின் வெளிப்பாடு நிகழ்ந்ததென்க.

தூய நீராடுதல் - நீரானது இறைவனது அங்கத்திற் றோய்தலாலே பரிசுத்தமடைவதாம். "செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே", "சென்றாடுந் தீர்த்தங்களானார் தாமே" என்பன சுருதி. அவனுடைய தோய்தலில்லாத நீர் பரிசுத்தத்தைச் செய்யா. அவை வெறும் பௌதிகமா யெண்ணத்தக்கன. "கங்கை யாடிலென் காவிரி யாடிலென்? ஒங்கு மாகட லோதநீ ராடிலென்?" என இங்கு இவர் நனைந்த நீர்களைப்பற்றியே அப்பர் சுவாமிகள் அருளினார். (கடல் நீரே மழை நீராம்). மழையில் நனைந்த அபரிசுத்தத்தினை மாற்ற அன்பெனுந் **தூய நீராடுதல் வேண்டினார்** போன்றனர் என்றதும் குறிப்பாம். இறைவனது திருவிழாப் புறப்பாடுகளில் மழையில் நனைய நேரிட்டால் புண்ணியாகம் செய்து அபிடேகித்துப் பவித்திரம் செய்யும் ஆகம விதிகளும் காண்க.

மண்டு தண்புனல் - மண்டுபுனல், தண்புனல் எனத் தனித்தனிப் பிரித்துக் கூட்டுக. மண்டுபுனல் மூழ்குதல் காவிரி (கங்கை?) யாடுதலையும், தண்புனல் மூழ்குதல் வான்மழை நீரில் நனைதலையும் குறிக்கும்.

உளது ஈரம் - உள்ளது ஈரமாகிய கோவணம்; ஆதலின் அது ஈரத்தை மாற்ற வலியிலது என்றது குறிப்பு. **ஈரம்** - ஈரமாகிய கோவணம். ஆகுபெயர்.

கோவணக் கள்வர் - திருவுருத்திரம் இறைவனைக் கள்வனே உனக்கு நமஸ்காரம் - கள்வர் தலைவனே உனக்கு நமஸ்காரம் - என்று பேசுகின்றது. "என் உள்ளங் கவர் கள்வன்", "தாவிய வனுடனிருந்துங் காணாத தற்பரன்" என்பன ஆளுடைய பிள்ளையார் திருவாக்குக்கள். "ஒளிக்குஞ் சோரனைக் கண்டன,மார்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற், றாடளை யிடுமின், சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின், பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்தும்" — **திருவாசகம் - திருவண்டப்பகுதி.**

இங்குக் கோவணம் இவர் பொருளேயாயினும் நாயனாரிடத்து ஒப்புவித்த பொருளாயினமையின் அவரை அறியாது போக்கி அவரைப் பிழையுட்படுத்தியது கள்ளமாம். ஆதலின் **கள்வர்** என்றார். **கோவணக் கள்வர்** - கோவணத்தின்மூலம் கள்ளச்செயல் செய்தவர்.

கண்ணியர் நண்ணியபொழுதில் - தொண்டர் - முன்னே - ஆக்கி - இறைஞ்சிட, - மார்பர் - கள்வர் - வேண்டி - "கோவணத்தைக் கொண்டு வாரும்" என்றுரைத்தனர் என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்துரைத்துக் கொள்க.

மேலது மீரம் - *என்பதும் பாடம்.* 19

521\. *ஐயர் கைதவ மறிவுறு தவர்கடி தணுகி*
யெய்தி நோக்குறக் கோவண மிருந்தவே றிடத்தின்
மையில் சிந்தையர் கண்டிலர் ; "வைத்தகோ வணமுன்
செய்த தென்"னென்று திகைத்தனர் தேடுவா ரானார். ௨௦

(இ - ள்) *வெளிப்படை. ஐயருடைய கள்ளங் காரணமாக, அறிவு பெறுதவராகிய நாயனார் விரைந்து உள்ளே சென்று நோக்கவே, தனியிடத்திற் சேமத்தில் வைத்திருந்த அவரது கோவணத்தைக் கண்டிலர் ; "நான் முன்னே இங்குச் சேமத்தில் வைத்த கோவணம் செய்ததென்னை ?" என்று திகைத்து அதனைத் தேடுவாராயினர்.*

(வி - ரை) **ஐயர்** - *பெருமையுடையவர்.* **கைதவம்** - *பொய்மை - வஞ்சம்.* **ஐயர் கைதவம்** - *ஐயராகியிருந்தும் செய்த கைதவம். முரண் அணி. "கைதவம் பேச மாட்டேன்"—திருஞான புரா - 749. கோவணத்தை - வைத்த இடத்தில் இல்லையாகச் செய்து, அதனை அவர் அறியாமற் செய்து, பின் தேடவும் செய்து, இல்லையென்று சொல்லவும் செய்த செயல் கைதவம் எனப்பட்டது.* **கைதவம்** - *இங்கு மறைப்புச் சத்தியாம். இறைவன் அறிவிக்கவே உயிர்கள் அறியும். அவன் அருளால் அறிவியாவிடில் அறியா. "காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே ; காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்றருளினார் அப்பர் சுவாமிகள். பின்னர் உண்மையை இறைவர் காட்டியருளும் நிலையை "அங்கணர் அருளால்" (542) என்பது காண்க. இங்கு மறைப்பு என்னும் திரோதான சத்தியாகி நின்றதே பின்னர் அருட் சத்தியாய் விளைந்தது என்ற ஞான சாத்திர உண்மையும் காண்க.*

அறிவுறுதவர் - *மறைப்புச் சத்தி தொழிற் பட்டமையால் அறிவுபெறுதவராகி. அறிவுறுதவர் தேடுவாரானார் என முடிக்க.*

இருந்த வேறிடத்தில் - *"ஓர் காப்புச் சிந்தைசெய்து* **வேறிடத்து** *ஒரு சேமத்தில் வைத்தார்" (517) என்றபடி தாம் வைத்த தனியிடத்தில்.* **மையில் சிந்தை** - *அழுக்காறு அவா வெகுளி முதலியவற்றி லொன்று மில்லாத சிந்தை. இவை சிந்தைக் குற்றங்களாம். தாமே சிறிது போழ்திற்கு முன் காப்புச் சிந்தித்து வேறிடத்துச் சேமத்தில் வைத்தனராதலின் ஐயம் முதலிய எவையும் நேர்தற்கியல்பில்லை என்றபடி. இதுவேயுமன்றி எஞ்ஞான்றும் எக்குற்றமும் சேராத தூய சிந்தையுடையார் என்றலுமாம்.*

வைத்த கோவண முன் செய்தது என் ? - **வைத்த** - *தாமே சிந்தித்து வைத்த.* **முன்** - *வைத்த எனவும், முன்செய்தது - தாம்தேடும் முன்னர்ச் செய்தது எனவும் இரு வழியும் கூட்டியுரைக்க நின்றது. தாம் முன்னர்ச் செய்தது என்றது இவ்விடத்து வைத்தேனோ அன்றி வேறிடத்து வைத்தேனோ என்றுரைப்பாருமுளர்.* **மையில் சிந்தையார்** *என்றதனால் இவ்வையத்திற்கிடமில்லை என்க.*

கோவணம் செய்தது - *தாம் செய்ததல்ல ; பிறர் செய்ததுமல்ல ; ஆதலின் கோவணம் தானே செய்ததாகல் வேண்டுமென்பதாம். அக்கோவணத்திற்கே இவ்வாறு மறைவு செய்து சரிக்கும் செயல் உண்டென்று ஐயங்கொண்டார் போன்று வரும் பாட்டிலும் "கோவணம் போயின நெறிமேற் றப்பியது" என்பதும் காண்க. நாம் செய்ததென்ன ? நம்மைக் கோவணம் செய்ததென்ன ? என்றுரைப்பாருமுண்டு.*

திகைத்தனர் - *463 பார்க்க. துணியக்கூடாத நிலையிலே திகைத்தனராகித் தேடினார்.*

எய்த முன்சென்று—*என்பதும் பாடம்.* 20

522. "பொங்கு வெண்கிழிக் கோவணம் போயின நெறிமேற்
சங்கை யின்றியே தப்பின" தென்றுதஞ் சரக்கி
லெங்கு நாடியுங் கண்டில ; ரென்செய்வார்!; நின்று ;
ரங்கண் வேதியர் பெருந்தொடக் கினிலகப் பட்டார். உக

(இ - ள்) வெளிப்படை. (ஐயாது) "பொங்கு வெண்கிழிக் கோவணம் போன வழியிலே சந்தேகமில்லாமற் றப்பிவிட்டது" என முடிவு கொண்டு, தமது துகில் முதலிய சரக்குக்களிலேயும் எங்கும் நாடியறிந்தும் கண்டிலர்; என் செய்வார்; (ஒன்றுந் தோன்றாது) நின்றார்; அங்கண் வேதியருடைய பெரிய தொடக்கிலே **அகப்பட்டார்.**

(வி - ரை) **பொங்கு வெண் கிழிக் கோவணம்** - பெருமை பொங்கும் என்க. "ஓங்கு கோவணப் பெருமை" (515) என அவர் கூறியதனை நினைவுட்கொண்ட நாயனார் இங்குப் **பொங்கு கோவணம்** என எண்ணினார். வெண்மையாகிய கிழி போன்ற கோவணம். "யாணர் வெண்கிழிக் கோவணம்" (512) என்றதுங் காண்க; கிழித்தலாற் பெற்ற கோவணமென்றலுமாம். "அக் கிழித்த கோவணம்" (532)

போயின நெறி மேல் - போதல் - புகுதல் ; புக்க வழியிலே. தாம் வைக்கப் புகுந்த அந்த வழியிலே. **மேல்** - இல் என்ற ஐந்தனுருபாக நீக்கப் பொருளில் வந்தது. நெறியில் - நெறியினின்றும் - தப்பினது என்க. **போயின நெறி** - தன் இனமென்று போயிருக்கும் என்ற வழி எனுங் குறிப்புமாம். **தப்பினது** - தவறி வீழ்ந்ததோ என ஐயவினாக் குறித்த ஓகாரம் விகாரத்தாற் றொக்கது.

தம் சரக்கில் - தம்மதாகத் தாம் கொண்டிருந்த துகில், கீள், உடை, கோவணம் முதலிய சரக்குக்களிலே.

எங்கும் - எல்லாவற்றிலும் - எவ்விடத்தும். "எந்நிலத்தினும் உள்ளன வருவளத் தியல்பால் அந்நிலைக்கண் மிக்க" (503) வாணிபம் வாய்த்தவர் ஆதலின், தாம் வைத்திருந்த சரக்குப் பலவற்றுள்ளே எங்கும். உம்மை முற்றும்மை. ஒன்றும் ஓரிடமும் ஒழியாது.

நாடியும் - தாம் தேடியும் கருதிப் பார்த்தும். பிறரால் நாடுவித்தும் என்றலுமாம். உம்மை சிறப்பும்மை.

அங்கண் வேதியர் - அழகிய அருட்கண்ணுடைய இறைவர். "காண வந்தனம்"- (512) என்று அவரே கூறினாராதலின், அவ்வாறு காண அருட்கண்ணுடன் வந்தார் என்றது குறிப்பாம். அஃது அருட்கண் என்பார் "கண்ணுதற் கரந்தோன்" என்றதனுலுங் குறித்தார்.

வேதியர் - வேதிப்பவர் என்ற குறிப்புமாம். **வேதித்தல்** - அடியவர்களது உலகச் சார்பினை யெல்லாம் தம் வசமாக்கித் தம் சார்பினை யவர்க்களித்து அவர் தன்மையினை மாற்றுதல். தரிசன வேதி - பரிசன வேதி என்பன காண்க. இங்கு வேதிக்கத் தொடங்குகின்றாராதலின் **வேதியர்** என்ற சொல்லாற் கூறினார். **வேதியர்** - மறையோர் என்றலுமாம். "வேதியாதவர்தம்மை வேதிப்பன" (339).

பெருந்தொடக்கு - **தொடக்கு** - தொட்டுப் பற்றிக்கொள்வது. பெருந்தொடக்காவது அதன் பற்றினின்றும் மீள முடியாதது. இறைவனாற் பற்றப்பட்ட நிலை மீளா நெறியேயாம். **பெருந்தொடக்கு** மாயை என்பாருமுண்டு.

அகப்பட்டார் - தொடக்கின் அகத்தே பட்டவர் - அதனுட் சிக்கியவர்.

அவர் - கண்டிலர் - நின்றார் எனப் பெயர்ச் சொற்களாகவும், **கண்டிலர்** - **நின்றார்**- அகப்பட்டார் என வினைமுற்றுக்களாகவும் உரைக்க நின்ற நயம் காண்க. வினை முற்றாகிய வழிப் பெயர் மயங்கும் தன்மை இப்பெருந் தொடக்கின் றன்மையாம் என்பதும் உன்னுக. வேதியர் பெருந் தொடக்கினில் **அகப்பட்டார்** ஆதலின், அதன் பயனாக உலகத் தொடக்கினின்றும் **புறப்பட்டார்** எனக் காரணகாரிய முறைப்படுத்தி, இப்பாட்

டில் **அகப்பட்டார்** என்ற ஆசிரியர் வரும் பாட்டிற் **புறப்பட்டார்** என முடித்த நயமும் உள்ளுறையுங் காண்க. 21

523. மனைவி யாரொடு மன்னிய கிளைஞருந் தாமு
மினைய தொன்றுவந் தெய்திய தெனவிடர் கூர்ந்து
நினைவ தொன்றிலர் வருந்தினர் ; நிற்கவு மாட்டார் ;
புனைய வேறொரு கோவணங் கொடுபுறப் பட்டார். ௨௨

(இ - ள்) வெளிப்படை. மனைவியாரோடும் மற்றும் பொருந்திய சுற்றத்தாருந் தாருமாக இப்படிப்பட்டதொரு நிகழ்ச்சி வந்து சேர்ந்ததே என்று மிகுந்த துன்ப மடைந்து வேறு நினைக்கத்தக்கதொன்று மில்லாதார் வருந்தினார்; இந்நிலையில் உள்ளே நிற்கவும் மாட்டார்; மறையவர் புனைந்துகொள்வதற்கு வேறொரு கோவணத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

(வி - ரை) **மனைவியாரோடு** - மனைவியார் இடர்கூர்ந்த நிலையினை ஒடுவிகுதி தந்து பிரித்தார். அவரும் தாமும் அலையின் முகத்தாற் சிவபுரி யடைய நின்றனர் ; மன்னிய கிளைஞர் அவ்வாறன்றி இவர்களாலே பொருந்திய வகையால் இடர் கூர்ந்த மட்டில் அமைந்து நின்றனர் என்பது கருத்து. உம்மைக ளிரண்டும் எண்ணும்மைகள்.

இனையது ஒன்று - வாங்கி வைத்த பொருள் தப்பியதாக, மறையவர் பொருளுக் குத்தரவு சொல்ல நேர்ந்ததும், தம்மால் அவர்க் கிடர் நேர்ந்ததும் ஆகிய நிலை.

வந்து எய்தியது - தாம் தேடிக் கொள்ளாமல் அதுவே தம்மையும் மீறி வந்து சேர்ந்தது என்ற குறிப்பு. தனது கவனத்தையும் காவலையும் கடந்து இந்நிலை வந்த தாகலின் **வந்து** என்றார்.

இடர் கூர்ந்து - **கூர்தல்** - மிகுதல். துன்பத்தால் மிகுதிப்பட்டு. **கூர்ந்து** - கூரப் பட்டு. கூர்தலால் என்றலுமாம்.

நினைவது ஒன்று இலர் - வந்து எய்திய இதனை நீக்கும் வழியாக நினையத் தக் கது ஒன்றும் இல்லாராய். **ஒன்று** - ஒன்றும். முற்றும்மை தொக்கது. **இலர்** - இல்லா தவராகி. முற்றெச்சம்.

வருந்தினர் - இது அவர் மனமடைந்த நிலை.

நிற்கவும் மாட்டார்-வருத்த மிகுதிப்படவே நின்றிடுதல்வேண்டும்; ஆயின் நிற்கவு மாட்டாராயினர் என்க. இது அவர் உடல் அடைந்த நிலை. அடியார் ஈரக் கோவண மாற்றகில்லாது குளிரால் வருந்துவரே என்று தாமதிக்க மாட்டாதவராய். வேறு செய்ய மாட்டாமையுடன் நிற்கவும் மாட்டார் என்க. உம்மை எச்சவும்மை.

புனைய - மறையவர் ஈரக் கோவணத்தை மாற்றிப் புனைந்துகொள்ள என்று இவர் எண்ணியது மாத்திரமேயன்றி அவர் புனையவில்லை என்றது குறிப்பு.

வேறொரு - அவர் தந்த கோவணத்தின் வேறாகிய தொன்று.

புறப்பட்டார் - மனையினுள்ளிருந்து வெளியே வந்தனர். இங்குப் புறத்திற் பட் டார் என்பது தாம் தம்மதென்று எண்ணிய மனை, பொருள் முதலிய உலகச் சார்பு கள் எல்லாவற்றிற்கும் புறம்பாய்ப்போந்து, அவற்றையும் தம்மையும் சிவச்சார்புபடுத் தும் நிலை கூடிய தன்மை குறித்தது. இங்குப் **புறப்பட்டா**ராகிய நாயனார் பின்னர் உட் பட்டாரில்லை ; மனை பொருள் முதலியவற்றினுள் **அகப்படவில்லை** என்பதும் குறிக்க. இதுபற்றியே மேற்பாட்டினுள் "வேதியர்பெருந் தொடக்கினுள் **அகப்பட்டார்**" என்று குறித்தமையும் உன்னுக. 22

524. அத்தர் முன்புசென் "றடிக!ணீர் தந்தகோ வணத்தை
வைத்தி டத்துநான் கண்டிலன் ; மற்றுமோ ரிடத்தி

லுய்த்தொ ளித்தன ரில்லை ;யஃ தொழிந்தவா றறியே ;
னித்த கைத்தவே றதிசயங் கண்டிலே'' னென்று, உ௩

525. "வேறு நல்லதோர் கோவணம் விரும்பிமுன் கொணர்ந்தேன் ;
கீறு கோவண மன்று;நெய் தமைத்தது; கிளர்கோ
ணீறு சாத்திய நெற்றியீர் ! மற்றது கொண்டு
மாறு சாத்தியென் பிழைபொறுப் பீ''ரென வணங்க, உ௪

526. நின்ற வேதியர் வெகுண் "டமர் நீதியார்! நிலைமை
நன்று!; சாலவு நாளிடை கழிந்தது மன்று;
வின்று நான்வைத்த கோவணங் கொண்டதற் கெதிர்வே
றொன்று கொள்கென வுரைப்பதே! நீ'' ரென வுரையா, உ௫

527. "நல்ல கோவணங் கொடுப்பனென் றுலகின்மே லொருஞ்
சொல்லு வித்ததென் கோவணங் கொள்வது துணிந்தோ ?
வொல்லை யீங்குறு வாணிப மழகிதே யுமக்! ''கென்
றெல்லை யில்லவ னெரிதுள்ளி னுலென வெகுண்டான். உ௬

524. (இ - ள்) வெளிப்படை. அத்தர் முன்பு சென்று, "அடிகளே ! நீர் தந்த கோவணத்தைச் சேமத்தில் வைத்த இடத்தில் நான் கண்டிலேன் ; அதனை வேறிடத்தில் வைத்து ஒளித்தார் பிறருமில்லை ; அஃது மறைந்துபோயினவாறு அறிகிலேன் ; இத்தன்மைத்தாகிய அதிசயம் வேறு நான் கண்டதில்லை'' என்று கூறி, உ௩

525. (இ - ள்) வெளிப்படை. "வேறு நல்ல கோவணத்தை, ஈரம் மாற்றி நீர் தரித்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பத்துடன் முன் கொணர்ந்துள்ளேன் ; அது கிழித்த கோவணமன்று ; கோவணமாகவே நெய்ததாம். அசுத்தங்களையெல்லாம் கிளரச் செய்து போக்கிச் சுத்தமாகக் கொள்ளும் திருநீற்றினைச் சாத்திய நெற்றியுடையீரே ! உமது ஈரமாகிய மற்றைக் கோவணத்தைக் களைந்து, அதற்கு மாற்றாக இதனைச் சாத்திக்கொண்டு, எனது பிழையினைப் பொறுத்தருள்க !'' என்று சொல்லி வணங்க, உ௪

526. (இ - ள்) வெளிப்படை. நின்ற வேதியர், "அமர்நீதியாரே ! நீர் சொல்லும் நிலை மிக நன்று !; இடையில் அதிக நாள்கள் கழிந்ததுமில்லையே !; இன்றைக்கு நான் உம்மிடத்தில் கொடுத்து வைத்த கோவணத்தை நீரே கொண்டு, அதற்கு எதிராக வேறு ஒரு கோவணங் கொள்க என்று சொல்வதா ?'' என்று சொல்லி, உ௫

527. (இ - ள்) வெளிப்படை. "நல்ல கோவணந் தருகின்றேன் என்று உலகிலே பல நாளும் சொல்லச் செய்வது எனது கோவணத்தைக் கொள்வதற்குத் துணிந்துதானோ ? விரைவாக நீர் இங்குச் செய்த வாணிபம் உமக்கு அழகிதே!'' என்று கூறி, எல்லையிலாதவராகிய இறைவர் எரிதுள்ளினாற் போலச் சினந்தார். உ௬

524. (வி - ரை) அடிகள் ! - பெரியீர் - அண்மைவிளி. இம்மடத்தினிற் காணும் படி யிலாத நீர்'' (511), "இன்று நீரும் இங்கமுது செய்தருளும்'' (513), "கடுப் பிலிங்கெழுந் தருளுநீர்'' (515) என முன்னர் விளித்த நாயனார் இங்கு "அடிகள் !'' என்றது தமது பிழையினைப் பொறுக்கும் பொருட்டு அதற்குத் தக்க பெருந் தன்மையினை உடையாராக வேதியரை விளித்ததாம். "என்பிழை பொறுப்பீர் !'' என வரும் பாட்டில் முடித்ததும், "சிறிய என்பெரும் பிழைபொறுத் தருள்செய்வீர்'' (528) என்றதுங் காண்க. "பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி''

(திருச்சதகம் - 66) என்று மணிவாசகனார் பெரியவர் கடமைக்கு வரையறை கூறி யருளியது காண்க.

நான் வைத்திடம் - வைத்த இடம் என்றது வைத்திடம் எனப் பெயரெச்ச ஈறு தொக்கு நின்றது. நானே சிந்தித்துச் சேமத்தில் வைத்த அந்த இடம். நான் வைத்த என்றும், நான் கண்டிலன் என்றும் இருவழியும் கூட்டுக.

மற்றும் - நான் வைத்த சேமமாகிய இடமன்றி வேறு. **உய்த்து** - புகுத்தி. நானே வைத்த இடத்தில் அஃது காணப்படவில்லை; வேறிடத்தில் அதனை ஒளித்து வைப்பார் பிறருமில்லை; அதுவோ அசேதனமாதலின் தானே போதலு மியலாது; ஆதலின் அஃதொழிந்தபடி யின்னதென்றறியேன் என்பதாம்.

வேறு அதிசயம் கண்டிலேன் - இவ்வதிசயம் கண்டேன்; இஃதன்றி, இங்குக் கண்டதுபோன்ற வேறோர் அதிசயம் கண்டேனில்லை. அதிசயம் - அற்புதம் என் பனவற்றைப்பற்றி முன்னர் உரைத்தவை காண்க.

நானொளித்தவாறு—அஃதொளித்தவாறு—என்பனவும் பாடங்கள். 23

525. **(வி - ரை) வேறு நல்ல** - அடிகள் தந்ததுபோல நல்லதன்று; ஆயினும் அதனைத் தவிர்த்து வேறுள்ள எல்லாவற்றினும் நல்லது. **ஓர் கோவணம்** - நல்ல தன்மையில் ஒப்பற்றது. **விரும்பி** - நீர் ஈரம் மாற்றி அணிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பி, அவ்வாறு விரும்பிய காரணத்தால். **முன்** - முன்னர். நீர் தந்த கோவணம் போயின நெறியின் அதைத் தேடி அடையும் முயற்சி முற்று **முன்னர்**, அதனை விடுத்து முதலாவதாக. பின்னர்ச் செய்வன பல வுள்ளன என்ற குறிப்புமாம்.

கீறு கோவணம் அன்று - நெய்து அமைத்தது - "யாணர் வெண்கிழிக் கோவ ணம்" (512), "பொங்கு வெண்கிழிக் கோவணம்" (522) என்று முன்னர்க் குறித்த படி அக்கோவணங்கள் கிழித்தெடுத்த வகையினைச் சேர்ந்தவை. இஃது அவ்வாறன்றித் தனிக்கோவணமாகவே நெய்து பெற்றது என்பதாம். கிழி கோவணத்துக்கு நெய்த கோவணம் உயர்வுடைத்து என்ற கருத்து.

கிளர் கோள் நீறு சாத்திய நெற்றியீர் - கிளரச்செய்து தன்னதாக்கிக் கொண்ட நீற்றினைச் சாத்திய நெற்றியுடையீர்! கிளர்நீறு - கொள்நீறு எனத் தனிப் பிரித்துக் கூட்டுக. இங்குக் **கிளரச்**செய்தல் ஆன்மாக்களது மலங்களை யெரித்தல். **கொள்ளுதல்** - அழியாத் தன்மைசெய்து தன் மயமாக்கிக் கொள்ளுதல். "அருத்தம தாவது நீறு; அவல மறுப்பது நீறு" என்ற தமிழ் வேதம் காண்க.

மற்றது - தேவரீரிடம் உள்ள ஈரக்கோவணத்தை. இரண்டாம் வேற்றுமைத் தொகை.

மாறுசாத்தி - ஈரத்திற்கு மாற்றான காய்ந்த கோவணத்தைத் தரித்துக்கொண்டு.

என்பிழை - இங்கு நாயனார் ஏதும் பிழை செய்யாவிடினும் தாம் பிழை செய்த தாகவே உட்கொண்டு என் பிழை பொறுப்பீர் என்றார். **பிழை** - புத்தி பூர்வம், அபுத்தி பூர்வம் என இருவகைப்படும். இங்கு அது எவ்வகைத்தேயாயினும், தமக்கு உள்ள உத்தரவாதத் தன்மையில் வேறுபடுமேயன்றித், தம்மால் பிழை செய்யப்பட் டார்க்கு ஒன்றுபோலவே யிடர்செய்யு மாதலின் தாம் ஒன்றும் அறியக்கூடாதபடி நிகழ்ந்த இதனைப் **பிழை**யென்று கூறினார். அவ்விடர் சிவனடியாராகிய ஒரு தவசியார் பாற் செய்யப்பட்டதென்றபோது பெரும் பிழையுமாம் என்று நாயனார் கருதினார் "சிறிய என் பெரும் பிழை" என்றும், "அடியேன் அறிய வந்ததொன் றன்று" என் றும் (528) பின்னர் நாயனார் கூறுவது காண்க.

வணங்க - உடலை வளைத்து (குனிந்து) இறைஞ்ச. வணங்குதல் - வளைதல் - இழி தல். முன்னர் இத்தவசியாரே புகழ்ந்துரைத்தபடி, அடியார்க்குக் கோவணங்கொடுத்த பெருமையின் உயர்வைப் பெரியவருடைய கோவணம் போக்கிய சிறுமை தாழ்த்தி விட்டது. ஆதலின் **வணங்க** என்றார். 24

526. (வி - ரை) **நின்ற வேதியர்**-அங்கு ஈரக்கோவணத்துடன் நின்ற மறையவர். **அமர்நீதியார்!** - அமர்நீதியாரே! - அண்மை விளி. **நிலைமை நன்று!** - நீர் கூறிய படிக்கு உள்ள உம்முடைய நிலைமை நன்றாயிருக்கின்றது!. **நன்று!**-ஆச்சரியக் குறிப்பு. நன்றன்று என எதிர்மறை குறித்தது. உடன்பாட்டுத் தொனிப் பொருளும்பெறக் கூறிய சுவை காண்க.

சாலவும் நன்று - மிகவும் நன்று எனக் கூட்டியுரைப்பதுமொன்று.

நாள் சாலவும் இடை கழிந்ததும் அன்றால் என மாற்றியுரைக்க. நான் தந்ததற்கும் இங்கு அதனைக் காணவில்லை என்று நீர் சொல்வதற்கும் இடையில் பல நாள்கள் கழிந்ததில்லை. உம்மை - இழிவு சிறப்பு. **இடைகழிதல்** - இடையிற் செல்லுதல். **சாலவும்**-மிகுதியும். "சாலநாள் கழிந்த பின்னர்" (378) என்றதனோடு இதனை ஒப்பிடுக. "சாராதே சாலநாள் போக்கி னேனே" - **திருத்தலையாலங்காட்டுத் திருத்தாண்டகம்.**

இன்று - சாலவு நாளிடை கழிந்ததுமன்று என்றதனையே, அநுவதித்து இன்று நான் வைத்த என்று வற்புறுத்தியபடி.

கோண்டு - கைக்கொண்டு. 516 - காண்க. வாங்கிக்கொண்டு - பெற்றுக்கொண்டு - ஒப்புக்கொண்டு - என்க. **கோண்டு** - இங்கு, மறைத்துக்கொண்டு - களவு செய்து என்ற மற்றொரு பொருளும் பெறப் பிரமசாரியார் கூறியது காண்க.

அதற்கெதிர் - எதிராக - பிரதியாக - ஒப்பாக. மாறு சாத்தி - (525) என்று நாயனார் சொல்லிய அதனையே அநுவதித்து எதிர் என்றார்.

வேறு ஒன்று - வேறு நல்லது ஓர் கோவணம் (525) என்பதனையே பின்பற்றிக் கூறியபடி. - **ஒன்று கோள்கேன உரைப்பதே நீர்?** - இஃதொன்று மட்டோ? உம்மையும் உம்முடையதென்ற எல்லாமும் கொண்டு செல்ல உள்ளேன். அங்ஙனமாகவும் நீர் ஒன்று கொள்க எனச் சொல்வதென்னை? என்ற குறிப்புமாம். ஏகாரம் வினா. ஆச்சரியக் குறிப்பும் பெற நின்றது. **நீர் உரைப்பதே** என மாற்றுக. சினக் குறிப்புப் பற்றி எழுவாய் பயனிலைகளை நிலைமாறி வழங்கினர். **உரையா** - உரைத்து.

உரைப்பதேன்—என்பதும் பாடம். 25

527. (வி - ரை) **நல்ல...சோல்லுவித்தது** - நாயனார் உலகில் தமது செயலைத் தாமே விளம்பரப்படுத்தியதாகக் கூறியவாறு. விளம்பரப்படுத்தலே (Advertisement) வியாபார முறை என்ப திந்நாள் மக்களுக்குச் சொல்லவேண்டுவதில்லை யன்றோ? **சோல்லுவித்தது** - பலரும் எடுத்துச் சொல்லும்படி செய்தது. **உலகின்மேல்** - உலகிலே மேற்போக்காக. மேன்மையாக என்றலுமாம்.

கோடுப்பன் என்று சோல்லுவித்தது...கோள்வது துணிந்தோ? - கொடுப்பதும் கொள்வதுமே வாணிபத் தொழிற்குரியன. "கொடுப்பதுங் குறைபடாது கொள்வது மிகைபடாது" என்ற தமிழ் இலக்கியமும் இங்கு நினைவு கூர்க. இக்கருத்தினைத் தொடர்ந்தே பின்னரும் " ஈங்குறு வாணிபம் அழகிதே " என்றார். இங்கு மறையவர் நாயனாரது குலத்தொழிலையும் சுட்டி இழித்துக் காட்டுவதுபோலக் கூறியது தமது மிக்க வெகுட்சியையும் அறிவித்து, அவர் செயலை மிக இழிவுபடுத்துவது போன்று காட்டி, அதற்கும் கீழ்ப்பட்டுநின்ற அவரது அன்பின் பெருமை காட்டுதற்காம்.

அழகிதே - அழகன்று. எதிர்மறை குறித்தது. **நிலைமை நன்று** (526) என்றது போல உடன்பாட்டுப் பொருட் குறிப்பும் பெறக்கூறிய சுவை காண்க.

எல்லையில்லவன் - அளவுட்படாதவன். " அளவிலா அளவுமாகி " முதலியனவாக முன்னர் உரைத்தனவுங் காண்க.

எரிதுள்ளினால் என வேதுண்டான் - கோப மிக்கவழிக் கண்கள் தீப்பொறி பறக்க உள்ளனபோலச் சிவக்கும். இது மிகு கோபத்தினதியல்பு என்பர். தீயும் சிவந்து மிகுதியும் பற்றியவழிப் பொறி பறக்க நிற்கும். **ஆதலின் - எரிதுள்ளினலேன** - தீப்

பொறி பறக்க மிகுவதுபோல என்றதாம். இதனைக் "கதமிக் கெரிகதிரின் முன்னிருள் போல்" என்ற சிவஞானபோதம் 10-ம் சூத்திர உதாரண வெண்பாவினுரையில் "ஒப்புமைபற்றிக் கதமிக் கேரிகதிர் என்றார். ஒப்புமையாதல் "எல்லை யில்லவ னெரிதுள்ளிறுலென வெகுண்டான் என்றதனுனுமறிக" என்று சிவஞானபோத மாபாடியத்துள் விளக்கியருளினுர் எமது மாதவச் சிவஞான சுவாமிகள். 26

528. மறிக ரந்துதண் டேந்திய மறையவர் வெகுளப்
பொறிக லங்கிய வுணர்வின ராய்முகம் புலர்ந்து
"சிறிய வென்பெரும் பிழைபொறுத் தருள்செய்வீ! ரடியே
னறிய வந்ததொன் றன்"றென வடிபணிந் தயர்வார்; ௨௭

529. "செயத்த கும்பணி செய்வ;னிக் கோவண மன்றி
நயத்த குந்தன நல்லபட் டாடைகண் மணிக
ளுயர்ந்த கோடிகொண் டருளு"மென் றுடம்பினி லடங்காப்
பயத்தொ டுங்குலைந் தடிமிசைப் பலமுறை பணிந்தார். ௨௮

528. (இ - ள்) வெளிப்படை. மானை ஒளித்துத் (அதற்குப் பிரதியாகத்) தண்டினை யேந்திவந்த மறையவர் இவ்வாறு கோபிக்க, "உணர்வெல்லாம் பொறி கலங்கியவராகி முகம்வாடிச், "சிறியவனுகிய எனது இந்தப் பெரிய பிழையினைப் பொறுத்தருள் செய்வீராக; இஃது அடியேன் அறியும்படி வந்து நிகழ்ந்ததொரு பிழையன்று" என்று கூறி அவரது திருவடிகளில் நிலமிசை வீழ்ந்து அயர்வாராகி, ௨௭

529. (இ - ள்) வெளிப்படை. "செய்யத் தக்கதென்று தேவரீர் பணிக்கும் பணி எதுவோ அதனைச் செய்வேன்; இந்தக் கோவணமேயன்றி, விரும்பத்தக்கனவாயுள்ள நல்ல பட்டாடைகளும் மணிகளும் என்னும் இவற்றிலே உயர்ந்தனவாகிய கோடிகளைத் தேவரீர் ஏற்றுக்கொண்டருளுவீர்!" என்று சொல்லி உடம்பிலே அடங்கமுடியாது மீதூர்ந்த பயத்தினை உடையராகி மனங் குலைந்து, அவரது திருவடிமேல் பலமுறையும் பணிந்தனர். ௨௮

528. (வி - ரை) **மறிகரந்து தண்டு ஏந்திய மறையவர் - மறி** - மான். தாருக வனத்து இருடிகள் செய்த யாகத்தில் எழுந்து உலகை அழிக்க வந்தது; அதனை இறைவர் தமது இருவிரல் நுனிகளில் ஏந்தினுர் என்ற சரிதம் புராணங்களுட் காண்க. மான் காட்டி மான் பிடிப்பது என்பது ஒரு நெறி; தன் முன்னே தூங்குகின்ற மாணவகனை ஆசான் தண்டு கொண்டு எழுப்புவன் என்பது மற்றொரு நெறி; இங்கு மானைக் கரந்து பின்குறித்த நெறியினில் வருவார் போன்று வந்தனர் என்றதோர் உட்குறிப்பும் காண்க. "ஆசான் முன்னே துயின் மாணவகனைத், தேசாய தண்டாலே யெழுப்புஞ் செயல்போல்" என்பது திருமந்திரம். இறைவன் குருவாய் வந்து ஆட்கொள்ளும் முறையினையே மான்காட்டி மான் பிடிப்பதுபோல மானிடச் சட்டை சாத்தி வருவதாம் என்பது மரபு. மானை ஒளித்து அதன் தானத்தில் தண்டினை யேந்தினர். "புன்சடை கரந்ததோர் திருமுடிச்சிகை" (508), "கண்ணுதற் கரந்தோன்" (512), "கங்கை மடுத்ததும்பிய வளர்சடை மறைத்தவம் மறையோர்" (516) என்று முன்னர்ப் பலபடியும் இவ்வாறே குறித்தனவுங் காண்க. **மறையவர்** - கரந்தமையால் - மறைத்ததனுல் - மறையவர் என்றதும் குறிப்பு. (516.)

வெகுள - இவ்வெகுட்சியும் மறைவானதேயாம். இது திரோதானமாகிய ஆதி சத்தி சொரூபம். இது பின்னர் அருட்சத்தியாகியது. இது வெகுட்சிபோலக் காட்டியதேயன்றி உண்மையில் வெகுட்சியன்று. உண்மையின் வெகுட்சியாயின் உலக மழியும். மன்மதன் - பிரமன் - திரிபுராதிகள் முதலியோர் அழிந்த சரிதங்கள் காண்க.

பொறி கலங்கிய உணர்வு - பொறி - புலன்களை அறியும் கருவிகள். அவை கலங்கியபோது உணரும் இயல்பில்லையாம். இன்னது செய்வதென்று ஒன்றுந் தோன்றாத நிலைமை குறித்தது. "நினைவ தொன்றிலர்" (523) என்ற நிலையின் மேலும் அதற்குப் பரிகாரமாகத் தாம் வேண்டிய அதுவும் ஏற்கப்படாமல் இவ்வாறு மறுக்கப்பட்டபோது, பின்னும் உணர்வு கலங்கினார் என்க. தம் செயலற்ற நிலையை விளைத்தது. "நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னாதன், றன்செய லானேயென் றுந்தீபற" என்றபடி இதன்பின் இங்கும் நாயனார் செயல் என்பதொன்றின்றி எல்லாம் நாதன் செயலே யாவதுங் காண்க. "நான் கெட்டவா பாடி", "தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்" என்றற் றொடக்கத்த திருவாக்குக்களும் காண்க.

சிறிய என் பெரும்பிழை பொறுத்தருள் செய்வீர்-"சிறியோர் செய்த சிறு பிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே"; ஆனால் "சிறியோர் பெரும் பிழை செய்தனராயின் பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே" என்பன நீதி நூல் விதிகள். ஆயின் இங்குப் **பெரும்பிழை** என ஒப்புக் கொண்ட நாயனார் அதனைப் பொறுக்குமாறு அடிகளை வேண்டியது என்னை? எனின், அதன் காரணமறிவிப்பாராய் "அடியேன் அறிய வந்ததொன் றன்று" என உடன் கூறியவாறு காண்க. **அருள் செய்வீர்**-பிழை பொறுத்து மாற்றுக் கோவணமாக இதனைச் சாத்தி யருளுவீர்.

அடிபணிந்து அயர்வார் - முன்னர், நின்று வணங்கினார் (525). அது போதாத போது அடியில் வீழ்ந்து அயர்வார். அடி வீழ்தலுக்கு மேற்பட்ட பணிவும் தீர்வுமில்லை என்பர். **அயர்வார்** - அயர்வாராகி. முற்றெச்சம். அயர்வார் - வருந்துவாராகி - அடி மிசைப் பலமுறை பணிந்தார் என வரும்பாட்டுடன் முடிந்தது. 27

529. (வி - ரை) **செயத்தகும் பணி** - தருவதாய் நீர் பணிக்கும் பணி. முன் நான் செய்தவை செயத்தகாதன; கோவணம் போக்கியதொன்றும் அதற்குப் பிரதியாக இதனைத் தரலாம் என்று எனது தற்போதத்தாலே எண்ணியது மற்றொன்றுமாக இருவகையிலும் தவறு செய்தேன்; இனி நான் செய்வேன் என்பதின்றித் தேவரீர் **செய்தக்க** என்று பணிக்கும் பணிகள் எவையேயாயினும் அவற்றைச் செய்வேன் என்பதாம்.

நயத்தகுந்தன - நயக்கத்தகுந்தனவாகிய. **நயத்தல்** - விரும்புதல். **நயத்தகும்தனம்- தனம்** - ஆடைகள் ஒழிய மற்றை ஐசுவரியங்கள் என்று கொண்டுரைப்பாரு முண்டு.

பட்டாடைகள் - மணிகள் - இவ்விரண்டுமே இவர் வாணிபஞ் செய்த சரக்குகளாம், "பொன்னு முத்துநன் மணிகளும் பூந்துகில் முதலா" (503) காண்க. போயின கோவணத்தின் இனம்பற்றிப் பட்டாடைகளை முன்னர்க் கூறினார். **உயர்த்தகோடி - உயர்த்த** - உயர்ச்சியை யுடையனவாய். **உயர்ந்த** என்பது எதுகை நோக்கி **உயர்த்த** என வந்ததென்றலுமாம். **கோடி** - அனேகம் என்ற பொருளில் வந்தது. உயர்த்தப்பட்ட கோடி என்னும் தொகை என்பாருமுண்டு. குணத்தால் உயர்வும் எண்ணால் அளவின்மையும் கொண்ட. **கோடி** - புதுத்துணி - மணிகளின் எண்ணிக்கை என்றலுமாம்.

கொண்டு - போன கோவணத்திற்குப் பிரதியாக ஏற்றுக்கொண்டு.

உடம்பினில் அடங்காப் பயம் - தாம் அடக்கினும் அடங்காது வெளிப்படும் அடையாளங்களுடன் காட்டும் பயம். உடல் நடுக்கம் முதலியவை பயமிகுதியின் வெளித் தோற்றங்களாம். **குலைந்து** - மனமுடைந்து. நிலை குலைந்து.

அடிமிசைப் பலமுறை பணிந்தார் - முன் பாட்டில் **அடிபணிந்து** என்றது ஒரு நிலை; தன் செயலற்ற நிலை மேலும் முதிர்ந்த செயல் இங்குக் குறிக்கப்பட்டது. பிழை பொறுத்தருளும் என வேண்டிய நாயனார் அவ்வாறு பொறுத்தருள்வதில் மணிகள் பட்டாடைகள் கோடி கொண்டருளும் என அதன் மேலும் வேண்டிப் பல முறை பணிந்தனர் என்க. 28

530. பணியு மன்பரை நோக்கியப் பரம்பொரு ளானார்
தணியு முள்ளத்த ராயினார் போன்று,"நீர் தந்த
மணியும் பொன்னுநல் லாடையு மற்றுமென் செய்ய ?
வணியுங் கோவண நேர்தர வமையு "மென் றருள, உகூ

531. மலர்ந்த சிந்தைய ராகிய வணிகரே றனையா
"ரலர்ந்த வெண்ணிறக் கோவண மதற்குநே ராக
விலங்கு பூந்துகில் கொள்வதற் கிசைந்தருள் செய்யீர் ;
நலங்கொள் கோவணந் தரும்பரி சியா "தென நம்பர், ௩௦

532. "உடுத்த கோவண மொழியநா முங்கையிற் றரநீர்
கெடுத்த தாகமுன் சொல்லுமக் கிழித்தகோ வணநே
ரடுத்த கோவண மிது"வென்று, தண்டினி லவிழ்ரா
வெடுத்து, "மற்றித னெடையிடுங் கோவண" மென்றார். ௩௧

530. (இ - ள்) வெளிப்படை. அவ்வாறு பணியும் அன்பரைப் பார்த்து, அந்தப் பரம்பொருளாயினவர், கோபந் தணிந்த மனத்தையுடையார்போலக் காட்டி, "நீர் தந்த மணி பொன், ஆடைகளும் மற்றும் பிறவும் எனக்கு என்ன பயன்றரும் ? (அவற்றைக் கொண்டு நான் செய்வதென்னே ?) அணியுங் கோவணத்திற்கு நேராகிய கோவணத்தைத் தருதலே சாலும்" என்று அருளிச் செய்ய, உகூ

531. (இ - ள்) வெளிப்படை. (இது கேட்டு) மலர்ந்த சிந்தையினை யுடையாராகிய வணிகரில் ஏறுபோன்ற அந்த நாயனார், "வெண்மை நிறம் விரிந்த தேவரீரது கோவணத்திற்குப் பிரதியாக விளங்குகின்ற பூந்துகில் கொள்ளுவதற்கு இசைந்தருள் செய்திரல்லீர் ; ஆயின், நன்மை கொண்ட கோவணம் தருகின்ற வகை தான் யாது ?" என்று இறைஞ்ச, நம்பராகிய பிரமசாரியார், ௩௦

532. (இ - ள்) வெளிப்படை. "நாம் உடுத்தியிருக்கும் கோவணம் தவிர, உமது கையிலே நாம் தர நீர் போக்கியதாக முன்னே சொல்லிய அந்தக் கிழித்த கோவணத்திற்கு நேராகப் பொருந்திய கோவணம் இதுவாகும்" என்று சொல்லித், தண்டின் மேற் கட்டியிருந்ததனை அவிழ்த்து எடுத்து, "மற்ற இதற்குச் சமனாக எடையுள்ள கோவணம் இடுவீராக" என்றார். ௩௧

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

530. (வி - ரை) **பணியும் அன்பரை**-அன்பு மூலத்தினாலே பலமுறையும் பணிந்து நின்றவரை.

பணியும் - இறை இவ்வாறு இணங்கியமொழி சொல்லும்வரை பணிந்து கொண்டே யிருந்தனர் என்பார் **பணிந்த** என்னாது **பணியும்** என்றார்.

அப்பரம்பொருள் ஆனார் - அகரச்சுட்டுச் சிறப்புக் குறித்தது. **பரம்பொருள்** - எல்லாப் பொருள்கட்கும் மேலானவர் - எஞ்சி நிற்பவர்.

தணியும் உள்ளத்தர் ஆயினார் போன்று - உண்மையில் வெகுண்டவரல்லர். ஆதலின் தணிந்தார் **போன்று** காட்டினர் என்றார்.

தந்த - தருவதாகச் சொன்ன. கொண்டருளும் என்ற உடன்பாட்டு மொழியே தந்ததாயிற்று என்று கொண்டுரைத்தலுமாம்.

மணியும் பொன்னும் ஆடையும் மற்றும் - நாயனாரது வாணிபப் பொருள்கள் எல்லாவகையும் குறித்தது. 503 பார்க்க. **மற்றும்** - இவை போல்வனவாகிய, கோவணமல்லாத பிறவும்.

என் செய்ய - என்ன செய்தற்குப் பயன்படும்? இவை பிரமசரிய நிலையில் உள்ள எனக்கு எதற்காக உதவும்? எனக்கு உதவா. அதலின் அவை வேண்டுவதின்று என்றபடி. **என்செய்ய** - என்றதைக் கோவணத்துக்கு அடைமொழியாக்கிச் **செய்ய** - செம்மையே தருவதாய், நான் அணியும் கோவணம் என்றுரைப்பாரு முண்டு. இவ்வுரைக்கு வரும்பாட்டிலே **இசைந்து அருள் செய்தீர்** - என்று பாடங் கொண்டுரைப்பர்.

நேர்தர அமையும் - நேரானது - எடையிலே சமனானது - ஆகியதொரு கோவணம் தருதலே அமையும். நீர் எனக்குத் தருவதாகச் சொல்லும் மணி முதலியன எதற்காக வேண்டும்? நான் அணியும் கோவணத்திற்குச் சமனான எடையுள்ள கோவணம் தருதலே அமையும் என்றது கருத்து. 29

531. (வி - ரை) **மலர்ந்த சிந்தைய ராகிய** - பொறிகலங்கிய உணர்வினராய் முகம் புலர்ந்திருந்த நாயனார் அது மாறி இப்போது மலர்ந்த சிந்தையை யுடையாராயினார். சிந்தை மலரவே முன்னர்ப் புலர்ந்திருந்த முகமும் மலர்ந்தது என்க. தாம் தந்த கோவணமே வேண்டுமென்று கூறி வெகுண்ட அவர், அந்நிலையினை விடுத்து, அதற்கு நேராக மற்றொரு கோவணம் பெற்றுக் கொள்ள இசைந்தது பற்றிச் சிந்தை மலர்ந்தார். போயின கோவணத்திற்கு நேர் வேறொரு கோவணம் தந்து பிழைபோக்கி அவரது அருளைப் பெறலாம் என்று துணிவுண்டாயினது சிந்தை மலர்தற்குக் காரணம்.

வணிகர் ஏறு அனையார் - வணிகர் குலத்து வந்த ஆண்சிங்கம் போன்ற அவர். ஒரு கோவணம் போயினவகை தாம் அறியாது வந்ததொரு செய்கைக்கு உடம்பினி லடங்காப் பயத்தொடுங் குலைந்தவரை **ஏறு** என்றதென்னை? எனின், அடியார் பாற்பட்ட அபசாரத்திற்குப் பயந்தனரே யன்றி மற்றில்லை. இப்போது அது நீக்க வழிகண்ட மகிழ்ச்சி அவரைப் பின்னையும் **ஏறனையாராக** ஆக்கிற்று என்க. "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்"-குறள். ஆதலின் இவ்வச்சம் இழிவு பயவாது பெருமையே பயந்ததும், அஃது நீங்கியபோது தமதன்புநெறி நேரிதிற் செல்ல வழி கண்டு பெருமிதத்திற் கேதுவாயதும் காணப்படும் என்க.

அலர்ந்த வெண்ணிறம் - வெண்ணிறம் அலர்தலாவது மிகத் தூய்தாய் விளங்குதல். முன்னர்ப் "பொங்குவெண்" - 522 என்றது காண்க. **நேராக** - பிரதியாக.

பூந்துகில் இங்கு மணி முதலிய ஏனையவற்றையு முடன்கொண்டது. **கொள்வதற்கு** - ஒப்புக்கொள்வதற்கு. **இசைந்தருள் செய்யீர்** - அருள இசையாது நின்றீர்.

நலங்கொள் கோவணம் - நீர் ஒப்பும்படி உமது கோவணத்துக்கு நேராகும் நன்மை கொண்ட பிறிதொரு கோவணத்தை. **கோவணம்** - கோவணத்திற்கு நேராகியதொன்று என வருவிக்க.

செய்தீர் - என்று பாடங் கொண்டு, இசைந்தருளினீர்; ஆயின் அவ்வாறு நேர் காணுதற்குத் தட்டிலே யிட நீர் ஒரு கோவணம் தரும் வகை யாது? என்றுரைப்பாரும், கோவண நேராகத் துகில் முதலியன கொள்ள இசைந்தீர்; அவ்வாறு கோவண நேர் நான் தரும் வகை யாது? அதனை விவரித்தருளுக, என்றுரைப்பாருமுளர். அக்கோவணம் கெட்டுப் போயினமையின் அதற்கு நேர்தருதல் எவ்வாறமையும்? என்பதை உட்கொண்டு கேட்டனர் என்பர்.

நம்பர் - நம்பிக்கைக்குரியவர். தம்மாலியலுமாறு கோவண நேர்பெற இசைந்தனர் என்று நம்பி நாயனார் மேற் செல்கின்றமை குறிப்பாம். 30

532. (வி - ரை) **உடுத்த கோவணம் ஒழிய** - நாம் உடுத்தியிருக்கும் கோவணம் எமது இடையிலே நிற்க, முஞ்சி யரைஞாண் "சாத்திய வரையிற் றஞ்சமா மறைக் கோவண வாடையின் றசைவும்" (509) என்றபடி அக்கோவணம் திருவரையினையே தஞ்சமாகி நிற்பதனால் இங்கு அஃது நிறுத்தலளவைக் குதவாது; அங்கு உடையாகி நின்றொழிய.

நாம்...அவிழா எடுத்து - “ எம்மிடத்தில் நின்றது மூன்று கோவணங்கள். ஒன்று இடையில் நின்றது; அது அங்கு நிற்க, ஏனையிரண்டில் ஒன்று நாம் உம் கையிற்றர நீர் அதனைக் கெடுத்ததாக முன் சொல்லியதாம்; அதற்கு நேராக அடுத்த கோவணம் இது” என்று, தண்டின்மேல் உள்ளதனைக் காட்டி, அவிழ்த்து எடுத்தனர் என்க.

உம் கையிற்றர - “ அவர் கையிற் கொடுத்தார்” - 515.

நீர் கெடுத்ததாக முன் சொல்லும் - உண்மையில் நீர் கெடுக்கவில்லை. அதனை நானே போக்கினேன். ஆயின் அதனை நீர் ஏற்றுக்கொண்டு, “ அஃதொழிந்தவா றறியேன் ” (524) என்று முன்னே சொன்னீர் என்றபடி. **சொல்லும்** - சொன்ன அளவாலன்றி உண்மையன்று என்பது குறிக்கக் **கெடுத்த** என்னாது **கெடுத்ததாகச் சொல்லும்** என்றார். The alleged என்பர் நவீனர். **முன்** - முன்னர். என் முன்னே என்றலுமாம்.

அக் கிழித்த கோவணம் - **அ** - முன் சொல்லிய விவரணத்திற் கண்ட அந்த. முன் னிலையில் இல்லாத அந்த. **அ** - சேய்மைச்சுட்டு. அதற்கெதிர் **இது** என மற்றதனை அண்மைச் சுட்டிற் குறித்தது காண்க.

கிழித்த கோவணம் - “கிழிக்கோவணம்” (522) பார்க்க. நீர் உயர்வாய்ச் சொல்லி யதுபோல நெய்தமைத்ததன்று என்பது குறிப்பாம்.

நேர் அடுத்த கோவணம் - நேராக - சமனுகப் - பொருந்திய கோவணம். தனியாக நெய்தமைத்ததாயின் ஒன்றற்கொன்று ஏற்றத் தாழ்ச்சியிருத்தல்கூடும்; அவ்வாறன்றி ஒரு துணியிலே சமனுக இரண்டு கோவணம் கிழிக்கப்பட்டதாதலின் இஃது அதற்கு நேராகும். ஆதலின் இதற்கு நேர்தரவே அதற்கு நேர்தந்ததேயாகும் என்பது. ஒரு பொருளுக்குத் தனித்தனி சமனுகிய மற்றிரு பொருள்கள் தம்முளே சமமாவன என்பது நியாயம். Things which are equal to the same thing are equal to one another என்பர் நவீனர்.

தண்டினில் - தண்டினின்றும். **இல்** - ஐந்தனுருபு நீக்கப்பொருளில் வந்தது.

அவிழா எடுத்து - அவிழ்த்து எடுத்து. **அவிழா** - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

மற்றிதன் எடை இடும் கோவணம் - மற்ற இதற்கு நேராக எடையுள்ள கோவ ணம் இடும் என்க. தமது கோவணம் வேண்டும்; அஃதில்லையேல் அதற்கு நேர் எடையுள்ள கோவணமே தாம் விரும்பியதன்றி, வேறு துகில் மணி முதலியன அன்று என இங்கு வெளிப்படையாய்க் கூறியது காண்க. ஆயின், அவற்றைத் துலையி டைப் பின்னர் இசைந்து ஏற்றதென்னையோ? எனின், அவை யொன்றும் இதற்கு நேராகா என்று தமது **கோவணப் பெருமை காட்டவும்**, நாயனுர் அவற்றை விட்டுத் தம்மை யடையுமாறு **நீடருள் கொடுக்கவுமே** இசைந்தனர் என்பது. 507 பார்க்க.

இப்பாட்டினிற் பேச்சும் செயலுமாய் இயன்ற நாடகத் தமிழ்ச்சுவை காண்க. **இதன் எடையிடுங் கோவணம்** என்றதன் காரணம் அடுத்த கோவணமிது, (ஆதலின்) என முன்னர்க் கூறியபடியாம். 31

533. “நன்று சால!”வென் றன்பரு மொருதுலை நாட்டக்
குன்ற வில்லியார் கோவண மொருதட்டி லிட்டார்;
நின்ற வன்பருங் கையினி னெய்தகோ வணந்தட்
டொன்றி லேயிட நிறைநிலா தொழிந்தமை கண்டார். ௩௨

(இ - ள்) வெளிப்படை. “ மிகவும் நன்று !” என்று இசைந்து, அன்பரும் ஒரு துலையினை நாட்ட, மலையை வில்லாகவுடைய பெருமான் அத்துலையின் ஒரு தட்டிலே கோவணத்தை யிட்டார்; நின்ற அன்பரும் கையில் வைத்திருந்த நெய்ததாகிய கோவ

ணத்தைத் துலையின் மற்றைத் தட்டிலேயிட, அது அக்கோவணத்திற்கு நேரான எடையாக நில்லாதொழிந்ததைக் கண்டனர்.

(வி - ரை) சாலவும் நன்று என மாற்றுக. முற்றும்மை தொக்கது.

துலை - எடையிடும் என்று மறையவர் கேட்டாராதலின் எடையிட்டறிதற்கு வேண்டும் நிறுத்தற் கருவியாகிய துலையினை நாட்டினார் நாயனார். நாயனார் வணிகராத லின் துலையினிறுத்துச் சரக்குக் கொள்ளலும் கொடுத்தலும் அவர்க்குரிய தொழிலாம். "இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க், கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்" —(திருவாசகம்) என்றபடி யாவர் யாவர் எதிலெதிற் றப்புதற்குத் தந்திரம் பயின்றாலும், அவரவர்க்கும் அவ்வத் தந்திரங்களினுள்ளே புகுந்து அவரவாது சூழ்ச்சியையுங் கடந்து நின்றருளுவது இறைவனது இயல்பாம். இங்கு வணிகர்க்கு வாணிபத்தொழிலிற் புக்கு நின்றருளியது காண்க. இக் கருத்துப்பற்றியே, "கோடுப்பன் என்று சொல்லுவித் தது என் கோவணங் கோள்வது குறித்தோ?", "ஈங்குறு வாணிபம் அழகிது" (527) என முன்னர்க் கொள்ளல் கொடுத்தலாகிய வாணிபத்தைச் சுட்டிக் கூறியதுங் காண்க.

ஆயின் இங்கு அவர் நாட்டிய துலைதான், அவர் இதுவரைக் கொண்டதும் சேமித் ததுமாகிய பொருளேயன்றி அவர்தம்மையும் அவர் தாம் அறியாத நிலையில் நிறுத்த முறையாலே கொள்ளவும், நிறுத்துக் காட்டவும் வல்லதாயினமை திருவருட் செயலே யாம். இவ்வருட்டிறங் குறிக்கத் துன்று வில்லியார் என்றார். என்னை? ; வளையாது பிளந்திறுவதாகிய கல்லையே வில்லாக வளைத்ததான திருவருட்டிறத்தானே இதுவு மாயிற்று என்பது குறிப்பு.

கோவணம் - தண்டினில் அவிழ்த்து எடுத்த கோவணம்.

நின்ற அன்பர் - கோவண நேர்தருதலாற் பிழையை நேர்செய்ய நின்ற அன்பர்.

கையினில் - அவர்க்குத் தரக் கொண்டு வந்து தம் கையில் வைத்திருந்த.

நெய்த கோவணம் - துணியினின்றும் கிழித்தெடுக்கும் கிழிக்கோவண மல்லாமல் கோவணமாகவே நெய்தமைத்த கோவணம். 525 பார்க்க.

தட்டு ஒன்றிலே - ஒன்றாகிய மற்றைத் தட்டிலே. மற்ற என்பது தொக்கி நின்றது.

நிறை நிலாது ஒழிந்தது - **நிறை** - எடை. **நிலாதொழிந்தது** - சமனாக நில்லாது போயினதை.

நின்ற தொண்டரும்—என்பதும் பாடம். 32

534\. நாடு மன்பொடு நாயன்மார்க் களிக்கமுன் வைத்த
நீடு கோவண மடையநே ராகவொன் றொன்றாக்
கோடு தட்டின்மீ திடவிடக் கொண்டெழுந் ததுகண்
டாடு சேவடிக் கடியரு மற்புத மெய்தி, ௩௩

535\. "உலகி லில்லதோர் மாயை!;யிக் கோவண மொன்றாக்
கலகில் கோவண மொத்தில!" வென்றதி சயித்துப்
பலவும் வெண்டுகில் பட்டுட னிடவிட உயர
விலகு பூந்துகிற் பொதிகளை யெடுத்துமே லிட்டார். ௩௪

534\. (இ - ள்) வெளிப்படை. நாடும் அன்புடனே தாம் அடியார்களுக்கு அளிக் கும் பொருட்டு முன் வைத்திருந்த நீடிய கோவணங்களை, முழுவதும் நேராகுமென்று, ஒன்றொன்றாக எடுத்துக் கோடு தட்டின்மேல் இடஇட, அது அவற்றைக் கொண்டு மேல் எழுந்தே நின்றது கண்டாராய், அம்பலத்தாடும் இறைவரது திருவடிக்கு அடிமை செய்யும் நாயனாரும் அற்புதமடைந்து, ௩௩

535. (இ - ள்) வெளிப்படை. "இது உலகத்தில் இல்லாததோர் மாயையா யிருக்கின்றது; இந்தக் கோவணம் ஒன்றினுக்கு அளவில்லாத கோவணங்கள் ஒப் பில்லாவாயின" என்று அதிசயப்பட்டு, அதன் மேலும், மென் றுகில்கள், பட்டுக்கள் முதலிய பலவற்றையும் இடஇடவும் தட்டு உயர்ந்து நின்றதாகவே, பின்னும் விளங்கிய பூந்துகிற் பொதிகள் ஆகியவைகளை எடுத்து அவற்றின் மேலிட்டனர். ௫௩

534. (வி - ரை) **நாடும் அன்போடு** - அடியார்களுக்கு வேண்டுவதின்னதென்று அவர்கள் சொல்லாமலே தாமே நாடி யறிகின்ற அன்பினாலே. முன்னர் "கருத் தறிந்து" - 504, "நாடிய மனத்தினாலே" - 470 என்றதும் காண்க.

நாயன்மார் - தலைவர்கள். இவர் அடியார்களைத் தமது தலைவர்களாகக் கொண் டொழுகி வந்தவர் என்பது. அன்றியும் அடியார்களே யாவர்க்குந் தலைவராவர் என் றலுமாம். "அகில காரணர் தாள்பணி வார்கடாம், அகில லோகமு மாளற் குரியர்"-139 என்றது காண்க. **நாயனார்** என்ற இறைவனது பெயர் அவரை அடைந்து, பெற்று, அவரையே போன்ற அடியார்களுக் காகி வழங்குவதாம். "நாயன்மா ரணைந்த போது"- 470, முதலியன காண்க. முன் நாயன்மார்க்கு அளிக்க வைத்தவற்றை இங்கு நாய னார்க்கே யளித்தனர் என்றதும் குறிப்பு.

அளிக்க - அன்பினோடும் தர. **முன்வைத்த** - சேமித்து வைத்திருந்த.

நீடு - அளவாலும் குணத்தாலும் குறைவின்றி நீடிய. **அடைய** - கோவணங்கள் முழுவதையும்; **நேராக** - இக்கோவணம் நேர்பெறும் பொருட்டு.

ஒன்றொன்ற இடஇட - ஒன்றொன்றாக இட்டுக் காணவும். இது துலையில் நேர் காண்போர் இடும் முறை. ஒரே காலத்தில் அனைத்தையும் இடவிருப்பமில்லாமை யன்று. முன்னரே, "உயர்த்த கோடி கொண்டருளும்" - 509 என்று சொல்லி யதனையும், "நீர்தந்த" - 530 என்று மறையவர் ஏற்றதையும் காண்க. அவர் கோவண நேர் கேட்டனராதலின் நேர் காணவே இவ்வாறு ஒன்றொன்றாக இட்டுக் கண்டார் என்க.

கோடுதட்டு - பல கோவணமிடவும் நேர்நில்லாமல் ஒருபால் உயர்ந்து நின்ற தட்டு.

எழுந்தது - எழுந்தபடியே நின்றது.

ஆடு சேவடிக்கு அடியர் - இது இறைவரது அருள் விளையாட்டு என்றது குறிப்பு. "ஐயா! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டி, னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந் தொழிந்தோம்" என்ற திருவாசகமுங் காண்க. இங்கு அவ் வருள்விளையாட்டிலே இறைவர் நாயனாரை "இச்சழக்கினின் றேற்றி" - 542 - ஆட்கொள்ளத் தமது திரோ தான உருவமாகிய அருட்சத்தி பதிய நிற்கின்ற நிலையும், இதுவே விரைவில் அருட் சத்தியாக வெளிப்பட்டு நாயனாரைத் திருவடிக்கீழ் வைக்கும் நிலையும் ஆம். ஆதலின் ஆடுகின்ற அந்தத் திருவடியின் அருளினுக்குள் அடிப்பட்டு நின்றார் என்று குறிப் பிட்டவாறு. "பெருந் தொடக்கினி லகப்பட்டார்" 522.

அற்புதம் எய்தி - "அற்புத மறியேனே" என்பது திருவாசகம். இஃது இன்ன தென்று அறியலாகா நிலைமையில் நின்ற பெருமித உணர்ச்சியாதலின் **அற்புத** மென் றார். இவ் வுள்ளநிகழ்ச்சியினை வரும் பாட்டில் விரிக்கின்றது காண்க. 33

535. (வி - ரை) **உலகில் இல்லது ஓர் மாயை** - இது உலகிற் காணாததாகிய ஓர் மாயையாயிருக்கிறது. **மாயை** - மாயமுள்ளது. அறிய முடியாத தன்மை பெற் றது. ஒரு கோவணத்திற்கு அளவில்லாத கோவணமும் ஒப்பாகா நிலையினையே **மாயை** என்று நாயனார் கருதினார் எனப் பின்னர் விரித்தல் காண்க. **அலகில்** - அளவு இல் லாத. அடியார்களுக்களிக்க வைத்திருந்த எல்லாக் கோவணங்களையும் இட்டாராதலின் **அலகில்** என்றார்.

அதிசயித்து - முன் அற்புத வுணர்ச்சி யெய்தியவர், அவ்வுணர்ச்சியின் கார ணத்தை அறிய முயன்று அளவில்லாத கோவணமும் இவ்வொன்றுக்கு ஒவ்வாதது ஓர்

மாயை என்ற நிச்சயமே கண்டாராதலின் அதிசயித்து என்றார். அதிசயமாவது இது இன்னதென்று கண்டுணரும் பெருமித உணர்ச்சி என்பது முன்னர் உரைக்கப்பெற்றது. அதிசயம் கண்டாமே என்பது திருவாசகம்.

பலவும் மென்துகில் இடஇட - பிரமசாரியார் கோவணமே நேர்தர வேண்டினர் ; மணியும் பொன்னும் நல் ஆடையும் வேண்டிலார் ; ஆதலின் முதலிற் கோவணங்களையே யிட்டனர்; அவை யெல்லா மிட்டுத் தீர்ந்தும் கோவண நேர்பெறு தொழியவே, மேல் அதன் இனமாகிய துகில்களை யிட்டனர் என்க. **பலவும்** - துகில் வருக்கங்கள் பலவற்றையும். உம்மை முற்றும்மை. **மென் துகில்** - நிறை நேர்பெற முதலிற் கனத்தவற்றை இட்ட அவர் அவ்வருக்கத்தில் எஞ்சிய மென்துகில்களை இறுதியில் அவையும் ஒழியாமை யிட்டனர் என்பது குறிப்பு. **இட இட** - என்ற அடுக்குத் துகில்பலவும், அவ்வருக்கம் பலவும் ஒன்றொன்றாய் இட்டு நேர்காணும் இயல்பு குறித்தது. மேற்பாட்டிற் கூறியது காண்க. **உயர** - உயர்ந்தே நிற்க.

இலகு பூந்துகிற் பொதிகளை - ஒன்றொன்றாகத் துகில்கள் பலவுமிட்டும் அவை நேர் பெறுதொழியக் கண்டவர், மேலே பொதிகளாக இட்டு நேர்காண முயன்றனர். இது தற்போதத்தெழுந்த ஆன்ம முயற்சியின் இயல்பு குறித்தது. பூந்துகில் இலகுவான பொருள்களாயினமையின் ஒன்றொன்றாயிடாது பொதிகளாக இட்டனர் என்றுமாம். **மேல்** - மேன்மேலும். உம்மை தொக்கது. 34

536. முட்டி லன்பர்த மன்பிடுந் தட்டுக்கு முதல்வர்
மட்டு நின்றதட் டருளோடுந் தாழ்வுறும் வழக்கால்
பட்டொ டுந்துகி லநேககோ டிகளிடும் பத்தர்
தட்டு மேற்படத் தாழ்ந்தது கோவணத் தட்டு. ௩௫

(இ - ள்) முட்டுஇல்......தட்டுக்கு - முட்டு இல்லாத அன்பருடைய அன்பினை இடுகின்ற தட்டினை நோக்க ; முதல்வர் மட்டு நின்றதட்டு - முதல்வர் மட்டும் நின்ற தட்டானது ; **அருளோடு தாழ்வுறும் வழக்கால்** - அருளுடனே தாழும் என்றது வழக்காதலின் ; பட்டொடும்.........மேற்பட - பட்டுக்களுடனே துகில்களும் அனேக கோடிகளாக இடவும் நாயனாரது தட்டு மேற்பட்டே நிற்க ; தாழ்ந்தது கோவணத் தட்டு - மறையவரது கோவணம் மட்டும் இட்ட தட்டானது தாழ்ந்தே நின்றது.

(வி - ரை) இப்பாட்டில் முதலிரண்டடிகளில் ஒரு நியதி - நீதி - உண்மை - ஆகிய ஒருவழக்கினை நிறுவிப், பின்னிரண்டடிகளில் அவ்வுண்மை இந்நிகழ்ச்சியால் உதகரிக்கப் பெற்றது என்று எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். மாயை என்று நாயனாரால் காணப்பட்ட இவ்வரிய நிகழ்ச்சிக்குக் காரணங்கூறியதுமாம். இது ஆசிரியரின் மரபு. இவ்வாறு ஒரு நியதியாகிய வழக்கினைக் கூறிச் சரிதத்தை உதகரிக்கும் இவ்வாசிரியரது அரிய மரபினைக் கம்பரும்,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம்
மருண்ட சிந்தையை மாற்றுவ ரெனுமிது வழக்கே ;
யுருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
யிருண்ட கல்லையும் பொன்னிற மாக்கிய விரதம்"—**வரைக்காட்சிப் படலம்** - 8.

என்ற பாட்டிலே சொல் - பொருள்-யாப்பு எனும் பலவகையிலும் அடியொற்றிப் பின்பற்றி நின்றது காண்க.

இங்குக் குறித்த **வழக்காவது** - அன்பர் ஒரு தட்டும் முதல்வர் ஒரு தட்டுமாகக் கொண்டு ஒரு துலையில் நிறுக்கப்பெற்றபோது அன்பர் தட்டிலே அன்பு இடப்பெறும். அதனுக்கு இறைவரது அருள் இடும் தட்டுத் தாழ்ந்தே காட்டும். அன்பு அன்பரது உடைமை ; அருள் முதல்வரது உடைமை. **அன்பு** - **அருள்** - என்பன இங்கு அன்பு

கொண்டு செய்வனவும் அருளாற் செய்வனவுமாகிய செயல்களைக் குறித்தன. அன்புக்கு அருள் தாழ்தலாவது அன்புடையார்க்கு அருள் கொடுத்துத் தாங்கி நிற்கின்ற இறைவனது தன்மையாம்.

"தன்கடன் அடியேனையும் தாங்குதல் - என்கடன் பணிசெய்து கிடப்பதே." என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. தாங்கப்படும் பொருளுக்குத் தாங்கும் பொருள் தாழ்ந்து கீழே நிற்பது ஓரியல்பு. அன்புடையாரிடத்து அருளினாலே பணிந்து அருள் செய்வதும் இறைவனது இயல்பாம். விறகு சுமந்து 'பத்திரனடிமை'யென்றது; வந்தியம்மை பொருட்டும் திருவாதவூரடிகள் பொருட்டுமாக மண்சுமந்தது ; அப்பர்சுவாமிகளுக்குப் பொதி சோறு கொடுத்தது; சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சோறிரந் தளித்தது ; ஆளுடைய பிள்ளையார்க்குத் தாளம், சிவிகை, பந்தர் அளித்தது ; சாக்கியனார் இட்ட கல்லடி யேற்றது முதலிய எண்ணிறந்த அருட்டிருவிளையாடல்கள் **அன்புக்குத் தாழும்** முதல்வனது அருளினியல்பை விளக்குவன.

தாழ்ந்தது - தாங்கி நிற்பது - கீழ்நிற்பது - எனவும், கீழ்மைத் தன்மையிலே பட்டது எனவும் இருபொருளும்பட நயம்பெற உரைத்தது காண்க. அன்பிலே அருள் அழுந்தும் என்றும், அருள்காண அன்பு மேலிடும் என்றும் காண்பது மரபு. எவ்வாற்றானும் கோவண நேர்தந்து மறையவனு ரருள்பெற வேண்டுமென்ற அன்பு மேலிட்டுத் துகிலும் பட்டும் மேன்மே லிட்டார் ; ஆதலின் அன்பு மேலிட மேலிட அருள்பதியும் என்றதனாற் கோவணத் தட்டுப் பதிந்து தாழ்ந்தது என்க. கோவணம் இங்கு நாயனாரை ஆட்கொள்ளவந்த கருவி யாதலின் அருட் சொரூபமென்பது. பரிபாகம் மேற்படத் திருவருள் பதிந்ததெனவுங் கூறுப.

அருளோடும் தாழ்வுறும் வழக்கால்-"பரமசிவன் அடியவர்கட்கு எளியாராந்தன்மையுடையவ ரென்று வேத முதலியவைகளாற் சொல்லப்படுகிற முறைமையினால், ஈண்டுப் பரமசிவனது கோவணத்தட்டும் எளிய தன்மையுடையது போலத் தாழ்ந்ததென்று சொற் சாதுரியந் தோன்றக் கூறினார். "தன்னடியார்க் கென்றுமெளி வரும்பெருமையேழுலகு மெடுத்தேத்தும்" - (134) என்பதனானும், "அருளென்னு மன்பீன் குழவி" என்பதனானும் அறிக" என்பது வித்துவான் காஞ்சீபுரம் சபாபதி முதலியார் உரைக் குறிப்பு. **வழக்கால்** - இஃது வழக்கு - நியதி - உண்மை ; ஆதலால் அன்பர் அன்பிடும் தட்டுக்கு முதல்வர் தட்டு அருளொடு தாழ்வுறும் எனக் கூட்டி முடிக்க. மாயையன்று; வழக்கே; ஆதலின் பத்தர் தட்டு மேற்பட முதல்வர் தட்டுத் தாழ்ந்தது என்றபடி.

அன்பு இடும் என்றது இங்குப் பட்டொடுந்துகில் அனேக கோடிகளிடும் எனவும், **அருளோடும்** - என்றது இங்குக் கோவணத்தொடும் எனவும் பொருந்திக் கண்டுகொள்ள நின்றது. எடுத்துக் காட்டுவமை. முற்கூறிய இரண்டு தட்டினையும் தன்மையாகக் கொள்க என்பர் காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார்.

தாழ்தல் - விரும்புதல் என்றுகொண்டு அன்பினைத் தம்மிடத்து இட்டு இட்டு மேன்மேல் ஈட்டிவைக்கும் அன்பர் பாலே தாழ்வுடையவன் - விருப்பமுடையவன் - சிவன் என்றுரைத்தலுமாம். "தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் **தாழ்ந்தீரே** " - (காந்தாரம்) - என்ற ஆளுடைய பிள்ளையார் தேவார முதலிய ஆட்சிகள் காண்க.

முட்டில் அன்பர் - அன்பு முட்டிலர் எனமாற்றிக் கொள்க. அன்பினாற் புரியும் செயல் நேரிதிற் செல்லுகைக்கு எவ் விடையூறு வரினும், தம்பணிக்கு முட்டு வாராது எவ்வாற்றானும் செய்து கொள்ள வல்லராய் அன்பு செலுத்துபவர்.

"நட்டம் புரிவாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும் பரிசாயினுந் தேய்க்குங்கை **முட்டா** தென்று
வட்டந் திகழ்பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்"

—(மூர்த்தியார் புராணம் - 20.) என்றது காண்க. **அன்பர்** - இங்கு அன்பர்களின் பொதுமை குறித்தது.

முதல்வர் மட்டும் நின்ற தட்டு அருளோடும் தாழ்வுறும் என்றது ஒரு புறம் அன்பர் தட்டிலே அன்பரது அன்பு இடம்பெறும்; மற்றொருபுறம் முதல்வரது அருள் மட்டும் உளதாம். அன்பர்களாவார் தம் மெய்யன்புடைய உள்ளத்தில் அன்பு செய்யப் பட்ட இறைவனையுங் கொண்டு விளங்குவர். எனவே, அன்பர் என்றதனால் அன்பரும் இறைவரும் ஆக இருவராவர்.

"உள்ளத்திற் றெளிகின்ற வன்பின் மெய்ம்மை யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண் விமலரையு முடன்கண்ட விருப்பம்"
—திருஞான - புரா - 1084

"நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற் கதாமே" —திருமந்திரம்

முதலிய திருவாக்குக்கள் காண்க. அன்பு அருளை யீனும் தாய் என்பர் திருவள்ளுவர். ஆதலின் அன்பர் தட்டில் அன்பரும் முதல்வருமாக அன்பும் அருளும் என்ற இரண்டும் நிற்க, மற்றைத் தட்டிலோ, முதல்வரும் அவரது அருளும் மட்டில் நின்றன. எனவே இரண்டிற்கு ஒன்று தாழ்ந்தது என்பதும் ஒரு கருத்தாம். **முதல்வர் மட்டில் நின்ற** என்ற சொற்குறிப்பும் காண்க.

அன்பருக்குத் தாழும் தன்மை ஆண்டானாகிய பரமசிவத்தின் மட்டிலுண்டு என்பார் முதல்வர் மட்டினின்ற தட்டு என்றார் என்பது காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் குறிப்பு.

இப்பாட்டிலே வாணிபம் - நீதி - வழக்கு - இலக்கியம் - ஞானசாத்திரம் - முதலிய பல உண்மைகளையும் சுவைகளையும் காண இனிதின் அமைத்த ஆசிரியரது தெய்வப்புலமைத்திறங் கண்டு சிந்தித்துக் களிக்க.

அனேக கோடிகள் - கோடிகள் என்றதனை எண்ணுப் பெயராகவன்றிப், புதுத் துணிகளின் பெயராகக்கொண் டுரைப்பினும் பொருந்தும். 35

537. ஆன தன்மைகண் டடியவ ரஞ்சியந் தணர்முன்
"தூந றுந்துகில் வருக்கநூல் வருக்கமே முதலா
மான மில்லன குவிக்கவுந் தட்டின்மட் டிதுவால்;
ஏனை யென்றன மிடப்பெற வேண்டு"மென் றிறைஞ்ச, ௩௬

538. மங்கை பாகரா மறையவர் மற்றதற் கிசைந்தே
"இங்கு நாமினி வேறொன்று சொல்லுவ தென்கொல்!
அங்கு மற்றுங்க டனங்களி னாகிலு மிடுவீர்;
எங்கள் கோவண நேர்நிற்க வேண்டுவ" தென்றார். ௩௭

537. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு ஆயின தன்மையினைக்கண்டு, அடியாராகிய நாயனார், அந்த அந்தணர் முன்னே, "இத்தட்டிலே தூய நல்ல துகில் வருக்கங்களையும், அவற்றின் காரணமாகிய நூல் வருக்கங்களையும், இவை முதலாயின அளவில்லாதவற்றை மேன்மேற் குவித்திடவும் தட்டின் அளவு இதுவாய் நின்றது: இனி ஏனையவாகிய எனது தனங்களையும் அடியேன் இத்தட்டிலே நேர்பெற இடத் தேவரீர் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றுவணங்க, ௩௬

538. (இ - ள்) வெளிப்படை. மங்கையைப் பாகமாக உடையவராகிய மறையவர் அதற்கு இசைந்து, "இங்கு, நாம் இனி வேறொன்று சொல்ல என்ன இருக்கின்றது? அங்கு, மற்றுமுள்ள உங்கள் தனங்களில் உள்ளவற்றையாகிலும் இடுவீராக! எவ்வாற்றானும் எங்கள் கோவணம் நேர் நிற்க வேண்டுவ தொன்றுதான் நாம் வேண்டுவது" என்று சொன்னார். ௩௭

537. (வி - ரை) **ஆன தன்மை** - ஆன - ஆயின - இடஇட அத்தட்டு எழுந்தே நிற்பதாயின; **தன்மை** - கோவணத்தின் றன்மை. துகில் முதலியன இட்டு ஆயின - முடிந்த தன்மை - நிலை - என்றலுமாம்.

அஞ்சி - தாம் மறையவர்பாற் பட்ட பிழை மாற்றப்படாமலே நின்று விடுமோ என்று அஞ்சி. **அந்தணர்** - நாயனார்பால் வெளிப்படச் செந்தண்மை செய்யும் எல்லை அணுகியதாதலின் **அந்தணர்** என்றார்.

தூ நறும் துகில் - மென்றுகில்-பூந்துகில் - (535), என்றதற்கேற்ப இங்குத் **தூ-நறும்** என்று சிறப்பித்தார். **தூய்மை** - கலப்பில்லாமை; **நறுமை** - மெல்லிய பரிசமுடைமை. **துகில் வருக்கம்** - துகிலின் பல வகைகள். **நூல்வருக்கம்** - இவற்றால் துகில்கள் உண்டாகக் காரணமாகும் தொடர்புபற்றி இவற்றையும் இட்டார். நூல்களும் மென்மை நிறம் முதலிய பாகுபாடுகளாற் பலவகையாவன. ஆதலின் நூல் வருக்கம் என்றார். மென்றுகில் பட்டுடன் இடஇட உயரவே துகிற்பொதிகளை யிட்டார் என்றபின், "துகில் அனேக கோடிகளிடும்" என்றதனால் அந்த வருக்கமாக அங்குள்ளன யாவையும் இட்டாயினதைக் கூறிவிட்டார். ஆதலின் **குவிக்கவும் தட்டின் மட்டிதுவால்** - என முற்றும்மை தந்து முடித்துக் கூறியபடியாம்.

ஏனை என் தனம் - முன் இட்டனவும் தனமேயாம்; ஆயின் (அவை) தனத்தினைக் கொண்டு பெற்றனவும் பொன் முதலியவற்றின் பயனுமாம். இத்தனங்களோ எனின் இவை கோவணமாகா; துகில் முதலியனபோல அக்கோவணத்திற்கு இனமுமாகா; ஏனைப் போகங்களுக்கு ஒருவகையாற் காரணமாயிருத்தலன்றி வேறு பயன்பெறா. இவற்றை முன்னரே வேதியர் "மணியும் பொன்னும் என் செய்ய" (530) என்றொதுக்கினர்; ஆதலின் இவற்றை **ஏனை என் தனம்** என்ற இலேசினாற் கூறினார்.

இடப்பெற வேண்டும் - நேர்பெற இடுதற்கு இசையப் பெறுதல் வேண்டும்.

இறைஞ்ச - இதற்கிசைவது மறையோர் தம்பாற் செய்யுங் கருணையாமாதலின், அது பெறுதற்கு இறைஞ்சினார். 36

538. (வி - ரை) **மங்கைபாகராம் மறையவர்** - இதுவரை சடையையும் பிறையையும் மறைத்த பிரமசாரியாகிய மறையவர் என்று குறித்த ஆசிரியர் இங்கு **மங்கைபாகராம்** என்றார். பிரமசாரியாகியவர் தாம் மறைத்த மங்கை பாகத்தை இனி விரைவில் மேற் கொண்டு இல்வாழ்வாராகிய நிலையில் வெளிப்படுகின்றார் என்பதும், தனங்களை **இடப்பெற** இசைந்ததனால் இவர்பாற் கருணை வெளிப்படும் காலம் விரைவில் அணுகிய தென்பதும், மங்கைபாகமே அருட்சத்தி பதிந்தநிலை என்பதும் குறிப்பாம். **மற்றதற்கு** - **மற்று** - இனமல்லாத தனங்களை இடப்பெறுதற்கு என்ற பொருளில் வினைமாற்றுக் குறித்தது. **மற்ற அதற்கு** என்றது மற்றதற்கு என வந்தது. **அதற்கும்** என எச்சவும்மை தொக்கதெனக் கொண்டு முன் இசைந்த பலவற்றின் மேலும் என்றலுமாம்.

நாம் - **எங்கள்** - முன்னர் **நான்** (514 - 515 - 520 - 526) என்றவர் இப்போது அருட்சத்தியும் தாமுங் கூடிய நிலையின் அணிமை குறிக்கப் பன்மையாற் கூறியவாறு. இவ்வாறே **வந்தனம்** - 512, **நாம்** - 532 - என்பன திரோதான சத்தியும் தாமுமாகிய பன்மையில் வந்ததும் காண்க. இவ்வாறே **உங்கள்தனம்** என்ற பன்மை நாயனார் - மனைவியார் - புதல்வர் என இவர்கள் மூவரும் அணிமையில் அருள் பெறும் நிலையினைக் குறிப்பாலுணர்த்துவதும் காணப்பெறும். **எங்கள் கோவணம்** - **எங்கள்** என்றபன்மை என் போன்ற பிரமசாரிகளுக்குரியது என்றது வெளிப்பட்ட பொருளாம்.

சொல்லுவ தென்கொல் - "உமக்கு ஈங்கு நான் சொல்லவேண்டுவதில்லை"- 515 என்று முன்னமே கூறினேன்; இப்போது நான் சொல்லாமல் நீரே அறிந்து

கொண்டீர் - என்பது. இதுவரை இசைந்தது போல் இசைவதனைத் தவிர வேறு சொல்லுவதற்கு என்ன உள்ளது ? என்றலுமாம்.

அங்கு மற்று உங்கள் தனங்களின் ஆகிலும் - **அங்கு** - சேய்மைச் சுட்டு. துலை நாட்டி நிறுக்கின்ற இங்கில்லாமல் சேமங்களாகிய அங்கு என்க. எல்லாம் என்னுடைய பொருள்களேயாயினும் உங்களுடையன என்று எண்ணிக் கொண்டிருக்கும் அவ்விடத்தே உள்ள என்பது குறிப்பு. **இங்கு**-தம்முடையதான சிவச்சார்பு. **அங்கு**-அதற்கு வேறாகிய மாயா உலகம். **ஆகிலும்** - கோவணத்திற்கு எவ்வாற்றானும் தொடர்பு கொண்ட இனமல்லாவிடினும் அவற்றிலாகிலும். மேலே **ஏனைய** என்றதற் கேற்ப இவ்வாறு கூறினார். 37

539. நல்ல பொன்னொடும் வெள்ளியு நவமணித் திரளும்
பல்வ கைத்திறத் துலோகமும் புணர்ச்சிகள் பலவு
மெல்லை யில்பொருள் சுமந்தவ ரிடவிடக் கொண்டே
மல்கு தட்டுமீ தெழுந்தது ; வியந்தனர் மண்ணோர். ௩௮

(இ - ள்) வெளிப்படை. நல்ல பொன்னுடனே வெள்ளியும் நவமணித் தொகுதிகளும் மற்றும் பலவகையான் மேம்பட்ட தனி உலோகங்களும் இன்னும் பல உலோகங்களின் சேர்க்கையாலான பலவகைப் புணர்ச்சி உலோகங்களும் ஆக அளவற்ற பொருள்களை அவர் சுமந்துவந்து அந்தத் தட்டில் இடஇட அது அவற்றைத் தன்னுட் கொண்டே, நிறைவுடையதாயும், மேலெழுந்தபடியே நின்றது ; உலகத்தார் அதைக் கண்டு வியப்படைந்தார்கள்.

(வி - ரை) **நல்ல பொன்னொடு** - உலோகங்களில் உயர்ந்ததும், நற்பயன் தருவதும் ஆகிய பொன்னுடனே. பொன்னிலே நல்ல - உயர்ந்த - சாம்புநதம் முதலாக அதனுடனே என்பாருமுண்டு.

பொன்னொடு வெள்ளியும் - பொன்னிலும் வெள்ளி தாழ்ந்ததாயினும் அதனோடு ஒருபுடை ஒக்க வெண்பொன் என்று சொல்லப்பெற்று அதற்கடுத்தபடியில் வழங்க உள்ளது. பொன்னின் உயர்வு குறித்து ஒடு விகுதி தந்து பிரித்தோதியபடியாம். அதனோடு சேர்க்கத்தகாததாயினும் **தனம்** என்று இதனையும் வழங்குதலால் இதனையும் இட்டார் என்பார் **வெள்ளியும்** என இழிவு சிறப்பும்மை கொடுத்தோதினார். எண்ணும்மையுமாம்.

நவமணித் திரளும் - பொன்னினை அடுத்துவரும் தனங்களின் வகை மணிகளாம். "பொன்னு முத்துநன் மணிகளும்" (503), "பொன்னினு மணியினும்" (375) முதலியன காண்க. பொன்னினும் மணிகள் விலையுயர்ந்தவையாதலின் அவற்றை முன் வைக்காது பொன்னின் பின் வைத்ததென்னை ? யெனின், மணிகள் பொன்னி லழுத்தியோ அல்லது பொன்னாற் கட்டியோ பொன்னொடு புணர்ந்தாலன்றிப் பயன்படுமாறில்லை. இவற்றை மதிப்பதும் பொன்கொண்டேயாம். ஆதலின் பொன்னை முன்னர் வைத்ததுமன்றி **நல்ல** என்ற அடைமொழியும் கொடுத்தோதினார். பொன் அமையாதவிடத்து ஒரோவழி வெள்ளியும் அவ்வாறே மணிகளுக்கு உதவுதலால் வெள்ளியையும் அடைமொழியின்றி முன்வைத்தார். **நவமணி**களாவன - கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன.

பல்வகைத் திறத்து உலோகமும் புணர்ச்சிகள் பலவும் - முன் குறித்த பொன்னும் வெள்ளியுமேயன்றி இரும்பு - செம்பு முதலிய வேறு பலவும் கருதிப் **பல்வகைத் திறத்து** என்றார். இவை தனி உலோகங்கள். இரும்பைக் கரும்பொன் என்னும் வழக்கும் காண்க. இவை தாமே பெரும்பயன் தருவதனோடு பொன், மணி முதலியவற்றைத் தேடிக்கொள்ள உதவுவன ஆதலின் **திறத்து** என்றார். ஓடும் செம்பொனும்

ஒக்க நோக்கும் அடியார் திறத்து நின்றவராகிய நாயனார் கோவண நிறை காணும் இடத்து விலையும் மதிப்பும் குறிக்கொள்ளாது நிறை யளவொன்றனையே குறித்தார். ஆதலின் பொன் - வெள்ளி - மணி யிவைகளை முன்னர் இட்டார் என அவற்றைப் பிற உலோகங்களின் முன்னர்க் கூறியது காண்க. பிற உலோகங்களை முன்னர் இடுவாராயின் பொன் முதலியவற்றை விலைநோக்கித் தமக்கென எண்ணியவராகக் கொள்ளவரும் என்பது குறிப்பாம். பொன் வெள்ளி முதலியன அந்நாளிலும் நாணயங்களாகவும் விலைபெற்ற அணிகலன்களாகவும் வழங்கினர் என்றறிகின்றோம்.

புணர்ச்சிகள் பலவும் - பல தனி உலோகங்களின் சேர்க்கையால் உண்டாகும் வெண்கலம் முதலியன.

எல்லையில் பொருள் - "அந்நிலைக்கண் மிக்கவர்" - 503, என முன்னர்க் குறித்த படி வாணிபத் துறையிலே வேறு நாடுகளிலிருந்தும் வரும் பொன் - மணி - துகில் முதலிய விலைபெற்ற சரக்குக்களில் மிக்க வாணிபம் செய்தாராதலின் மிக்க பொருள் பெற்றனர். இவையே இந்நாளிலும் மிக்க பொருள் வரும் வாணிபமாதலும் காண்க. ஆதலின் **எல்லையில் பொருள்** என்றார். பின்னர் அவரே உலையில் **பல் தனம்** - (541) என்று தமது பொருள்களின் அளவற்ற பெருநிலையினைக் கூறுதலும் காண்க. **எல்லையில்** - வகையிலும் தொகையிலும் அளக்கலாகாத நிலை குறித்தது.

சுமந்து - இவற்றின் விலை குறியாது எடைமட்டிற் குறிக்கொண்டாராதலின் **சுமந்து** என்ற சொல்லாற் குறித்தார். இவை உருவிற் சிறியவாயினும் எடையில் மிகும். இவை பலவும் சேருங்கால் மிகுகனமாம் என்பதும் குறிப்பு. சுமந்து இட்டதேயன்றிப் பயனில்லை என்ற இலேசாற் கூறியதுமாம்.

இட இட - பல வகைகளையும், ஒவ்வோர் வகையினிலும் பலவற்றையும் குறித்த அடுக்கு. "துகில்பட்டுடன் இடஇட" 535. என்றதும் காண்க.

கோண்டே - கொண்டேயும். சிறப்பு உம்மை தொக்கது.

மல்கு - நிரம்பிய - நிறைவெய்திய. இனி இடப்பெறும் பொருளின்மையின் இவ்வாறு கூறிமுடித்தார். 541 பார்க்க. **மீதெழுந்தது** - மேல் எழுந்தபடியே நின்றது.

வியந்தனர் - காரணமறியாத பெருஞ் செயலைக் கண்டபோது உளதாம் உள்ள நிகழ்ச்சி **வியப்பு** எனப்படும். இதனையே பின்னர்த் திருவருளும் திருத்தொண்டின் பெருமையும் காரணமாகக் கண்டபோது துதிசெய்து அதிசயித்துத் தொழுதார் (546) என்பதும் காண்க. வியப்பின் மிகுதியும் விரைவும் கருதிப் பயனிலையை முன்னர் வைத்தார். அறிவின் வலிமை பெற்ற விண்ணோர் இதனை அருளென் றறிந்தாராதலின் அவர்களின் பாராட்டுதல் மட்டும் பின்னர் (546) ஒருசேரக் கூறினார்.

எல்லைதீர் தனம்—என்பதும் பாடம். 38

540\. தவநி றைந்தநான் மறைப்பொரு ளூல்களாற் சமைந்த
சிவன்வி ரும்பிய கோவண மிடுஞ்செழுந் தட்டுக்
கவனி மேலமர் நீதியார் தனமேலா மன்றிப்
புவனம் யாவையு நேர்நிலா வென்பது புகழோ? ௩௯

(இ - ள்) வெளிப்படை. தவத்தால் நிறைந்த நான்மறைப் பொருளாகும் நூல்களினால் அமைந்து சிவபெருமான் விரும்பியதாய்ச் செழுந் தட்டிலிட்ட கோவணத்துக்கு இந்த ஒரு பூமியில் அமர்நீதியாரது தனங்கள்மட்டுமேயன்றி எல்லாப் புவனங்களும் நேர் நிற்க மாட்டா என்று சொல்வதும் அதற்கு ஒரு புகழாகுமோ? (ஆகாது; அதன் புகழ் அதனினும் மேம்பட்டு நிற்கும்.)

(வி - ரை) இப்பாட்டு ஆசிரியர் கூற்று - கவிக்கூற்று என்பர்.

தவநிறைந்த நான்மறை - தவமானது நிறைவு பெற்ற. தவம் நிறைந்த வழியே மறைப்பொருள் பெறப்படுமென்க. மிக நிறைந்த என்றலுமாம். மறைகள் செய்த தவம் நிறைந்த வழியே கோவணமாக இறைவனைத் தமக்குட் பெற்றன என்ற குறிப்புமாம். திருமறைக்காட்டில் வேதங்கள் பூசித்த செய்தி முதலியன காண்க.

மறைப்பொருள் நூல்களாற் சமைந்த-சிவனது கோவணத்து நூலிழைகளானவை மறைப்பொரு ணூல்களேயாம். மறைப்பொருள்களும் அவற்றை உணர்த்தும் ஏனைக் கலைகளாகிய நூல்களும் என்ற இவற்றாற் சமைந்த என்றலுமாம்.

"மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாய்" என்பது திருவாசகம்.

நூல்களால் - மறைப்பொருள்களை விரிக்கும் நூல்களுக்கும் (சாத்திரங்கள்), கோவணமாக இழைக்க உதவிய நூலிழைகளுக்கும் சிலேடையாக வழங்கிய சுவை காண்க. "கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர், மனக்கோட்டந் தீர்க்கு நூன் மாண்பு" - நன்னூல் என்று கூறிய ஒற்றுமைகளையும் உன்னுக. **சமைந்த கோவணம்** எனக் கூட்டுக. பிறிதொருவருடைய செயற்கையா லமைக்கப்படாது இயற்கையானே நூல்களே கோவணமா யமைதலின் **சமைந்த** என்னாது **சமைந்த** என்றார். மறைப்பொருளே நூலாக அமைந்த கோவணம் என்பது கருத்து.

விரும்பிய - இவ்விருப்பத்தினைப்பற்றி முன்னர் உரைத்தவை காண்க.

அவனிமேல்-இந்தப் பூமியில். **அன்றி** - அன்றியும். எச்சவும்மை தொக்கது. தன மெலாம் நேர் நிலா; அதுவேயுமன்றிப் புவனம் யாவையும் நேர்நிலா என்க. **செழுந் தட்டு இடும் கோவணத்துக்கு** என உருபு பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்க.

அவனிமேல் அமர்நீதியார் தனமெலாம் - இந்தப் பூமியாகிய ஒரு சிறு அண்டத் திலே ஒரு மிகச் சிறிய அளவினதாகி அமர்நீதியார் தம்முடையன வென்று கருதி யிருந்த எல்லாத் தனமும். **நேர்நிலா** என்பதனை இங்கும் கூட்டுக.

புவனம் யாவையும் - இந்த ஒரு பிருதிவி அண்டம் மட்டுமோ? பிருதிவி யண் டங்களாகிய ஏனையவைகளும், ஏனைய நீர் - வாயு முதலியனவாக எண்ணப்பட்ட எண் ணில்லாத அண்டங்களின் புவனங்கள் எல்லாமும் ஒன்றுகூடினும். **புவனங்கள்** - பலதிறப்பட்ட எண்ணில்லாத ஆன்மாக்கள் எண்ணில்லாத போகங்களை அனுபவித்தற்கு இறைவனால் தரப்பட்ட எண்ணில்லாத இடங்கள். இவற்றை 224 என வகைப்படுத் திக் கூறுவது ஞானசாத்திரம். விரிவு ஆண்டுக் கண்டுகொள்க. பெருந்தேவர்களையும் அலைத்த சூரபன்மன் 1008 அண்டங்களை ஆண்டான் என்றும், அவன்மீது சிறிது அருள்நோக்கம் வைத்து "அளவில்லாத நம்பெரு வடிவங் கொள்வம் நன்று கண்டிடுதி" என்றருள்செய்து, முருகப்பெருமான் உலகெலாம் நிறைந்த தமது ஒரு பெருந் திரு வுருவத்தினைக் காட்டியபோது அவன் ஆண்ட 1008 பெரிய அண்டங்களும் அவ்வடி வத்தில் பாதத்தில் ஓர் உரோம நுனியில் தொங்கின என்றும், இவை முதலாகக் கந்த புராணங் கூறும் உண்மைகளை இங்கு வைத்துச் சிந்திப்பின் **அவனி மேலமர் நீதியார் தனமெலாம் அன்றிப் புவனம் யாவையும்** என்று கூறிய கருத்தின் உட் கோளும் உயர்வும் நன்கு புலனாகும். **புவனம் யாவையும் நேர்நிலா** என்றதன் உண்மை தத்துவ சோபான முறையில் கண்டுகொள்க. புவனங்கள் சுத்தம் - அசுத்தம் என்ற இருவகையாம். இவை மாயையின் காரணத்தாலாவன. **சிவன் விரும்பிய நான் மறைப் பொருள் கோவணமோ** எனின் நாததத்துவமாம். ஆதலின் இதற்கு அவை நேர்நிலா என்பதாம். செழுந்தட்டு இடும் கோவணத்துக்கு...நேர்நிலா என்று கூட்டி முடிக்க. பு - பகுதி. தோன்றுதற்கு இடமாதலின் **புவனம்** எனப்படும்.

என்பது புகழோ? - இது ஒரு புகழ்ச்சியின்பாற்படுமோ? படாது என்பது குறிப்பு. **புகழ்ச்சி** - ஒன்றற்குச் சிறப்பும் பெருமையும் தருவதோர் இயல்பு. இங்கு இது ஓர் புகழாகக் கூறுந் தகுதியான பொருளன்று. ஒரு பொன் அளவுகொண்டதொரு பொருள் ஆயிரம் பொன்னளவு கொண்டதற்கு நேராகாது என்றால் அது பின்ன

தற்கு ஒரு புகழ்ச்சியாகக் கொள்ளப்படாதது போல என்க. **மண்ணோர் வியந்தனர்** என மேற்பாட்டிற் குறித்த ஆசிரியர் இவ்வாறு வியக்கக் காரணமின்று; "விளைவை யல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே"—**திருக்கோவையார்**, என்றபடி இதன் உண்மையை அறியும் அருட்பதிவு பெறாத மண்ணோர்க்குமட்டும் இது வியப்பாயிற்று. அன்றி இஃது கோவணத்திற்குப் புகழாய் நில்லாது என்று இதன் தத்துவத்தை ஆசிரியர் விரித்துரைத்தபடியாம். 39

தவநிறைந்து நாற்பேர்நன்மறை—என்பதும் பாடம்.

541. நிலைமை மற்றது நோக்கிய நிகரிலார் நேர்நின்
"றுலைவில் பல்தன மொன்றொழி யாமையுய்த் தொழிந்தேன்;
றலைவ! யானுமென் மனைவியுஞ் சிறுவனுந் தகுமேற்
றுலையி லேறிடப் பெறுவதுன் னருள்"ளெனத் தொழுதார். ௪0

(இ - ள்) வெளிப்படை. மற்று அந்த நிலைமையை நோக்கிய நிகரில்லாதவராகிய நாயனார் மறையவர்முன் நேரே நின்று "கேடில்லாத பலவகையாகிய தனங்களை யெல்லாம் ஒன்றுகூட விடாமல் தட்டிலே இட்டு முடித்தேன். தலைவரே! யானும் எனது மனைவியும் சிறுவனும் தகுமேல் துலையிலே இட ஏறப்பெறுதற்கு உன் அருள் இருப்பதாக" என்று தொழுதனர்.

(வி - ரை) **மற்றது** - வேறாகிய அது. தனம் முதலிய பொருட் சார்புகளாற் கோவண நேர்பெறக்கூடும் என்ற எண்ணம் இதுவரை நின்றது. இங்கு அது கழிந்து ஒழிந்து வேறுநிலை வருகின்றது. ஆதலின் **மற்று** என்ற வினைமாற்றுச் சொல்லும் **அது** என்ற சேய்மைச் சுட்டும் தந்து ஓதினார்.

நோக்கிய - நோக்கம் - கூர்ந்த பார்வை. "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்" **குறள்**. "அண்ணலு நோக்கினான் அவளு நோக்கினாள்" - **கம்பராமாயணம்**. இந்நிலையினைக் கூர்ந்து அறிந்த நாயனார் பொருட்சார்புகள் யாவும் நேர்நிலா தொழிந்தமை யுணர்ந்தனர்; உணரவே அந்தப் போதத்தினை ஒழித்து எஞ்சிய உயிர்ச் சார்புகளை நேர்தர மனத்தில் எண்ணுகின்றார் எனும் மனநிலை குறித்தது.

நேர்நின்று - ஒரு பெருஞ்செயல் குறித்தோர் நேர்நிற்றல் முறையாம். "உடற் செவ்வே நிறுத்தி"—திருமந்திரம். "செந்நின்று"—திருஞான. புரா - 1053 காண்க. **நேர்** - நேரே - எதிரே - என்றது வெளிப்பொருள். **எதிர்நின்று** என்பது வரும் பாட்டு. நேர்பெற நின்று என்றலுமாம். **நேர்** - நேர்ச்சி - சமன் என்க. இங்குக் கூறிய செயலால் கோவண நேர்பெறப் போகின்றார் என்றது குறிப்பு.

உலைவு இல் - உலைதல் - கெடுதல். உலைவில்லாத தனம் என்றது இதுவரை அது எண்ணித் தீர்ந்தது என்று சொல்ல இயலாதபடி மிகுந்திருந்த தனம். இன்று தீர்ந்தது என்னும் சொற்பெறுதல் இங்கு உலைவு எனப்பட்டது. உண்மையில் அவை கெடுதலில்லாதனவே யாம். சிவனடியார் பெற்ற தனமாயிருந்தன; சிவன்பாற் கொடுக்கப் பெற்றன; கேடிலானுடைய வாயினமையின் இவையும் கேடிலாதனவாயின என்க.

ஒன்றும் - முற்றும்மை. **ஒன்றொழியாமை** - முழுமையும் - என்றதனை உறுதி பெற வழங்கும் அழகிய வழக்கு.

ஒழியாமை - ஒழியாமல். **உய்த்து** - தட்டிலே இட்டு.

ஒழிந்தேன் - இட்டு முடித்தேன். தீர்த்தேன். எனது - என் பொருள் என்ற மமகாரம் ஒழிந்தேன் என்பது குறிப்பு. ஒழியாமையிட்டொழிந்தேன் என்ற சொற்சுவையுங் காண்க. **ஒழிந்தேன்** - யான்மட்டும் எஞ்சினேன் என்ற குறிப்புமாம்.

தலைவ! - "யான் எனது என் றற்ற விடமே திருவடி" என்றபடி இங்கு எனது என்பது அற்று, யான் என்பது விட்டமையால் திருவடிதோன்றிற்று. அடியைத்

தலையின்மேற் கொள்ளப்படும்; திருவடி தோன்றவே தான் அடிமை என்பதும் தோன்றிற்று. ஆதலின் இங்குத் **தலைவ** என்றார்.

யானும் - "எனது" என்ற தொழிந்தேனாக, "யான்" என்றது எஞ்சியது; அதனையும் என்க. அவ்வாறு எஞ்சியதாகிய - எச்சமாகிய - என உம்மை எச்சவும்மை.

என்மனைவியும் - சிறுவனும் - மனைவி முன்னரும் அவர் மூலம் சிறுவனும் வருதலின் அம்முறை வைத்தார். மனைவி தமது உயிர்ச் சார்பாதலின் **என் மனைவி** என்று குறித்த ஆசிரியர் **சிறுவன்** - இருவர் சார்புமாதலின் வாளா கூறினார். சிறிய மகார்க்குத் தாயின் சார்பு மிகுதலின் முன்னர் வைக்காது மனைவியாரின் பின்னர் அவரைச் சாரவைத்தனர்.

தரும் மேல்-தருவதாயின் - தருமென்று நீர் எண்ணினால். கோவணத்திற்கு நேர் பெறத் தம்மைக் கொடுக்கத் தமக்குத் தகுதியில்லை என்று எண்ணிய நாயனார் மறையவர் தக்கதென்று இசைந்தால் ஏற நிற்பதாகக் குறிப்பிட்டார். கோவணத்தின் பெருமையும் தமது சிறுமையும் குறிக்கொண்டு சொன்னபடி. இதனானே முன்னர் **நோக்கிய** என்றார்.

தருமேற்றுலையில் - என்று கூட்டி யுரைத்தலுமாம். இதுவரை அத்தகுதி பெறாது இனி நேர் நிற்கும் தகுதி பெறுவதாகிய **மேற்றுலை** என்ற குறிப்பும் பெற இருபொருள் குறித்து வழங்கிய சொற்சுவை காண்க.

ஏறிடப்பெறுவது உன் அருள் - இட ஏறப்பெறுவது என மாற்றுக. **இட** - "இட்டார்" - 533, "இடஇட" - 534, "இடஇட" 535, "இடுந்தட்டு" - 536 "இடப்பெற" 537, "இடஇட" 538 என்றவை போலத் தங்களையும் கோவண நேர் பெறும் பொருட்டுத் தட்டிலே **இடும்** - பொருளாக வைக்கத் துணிந்தார். ஆதலின் **இட** - என்றார். இடும் பொருட்டு நாங்கள் ஏற நீர் கோவணநேராக எங்களை ஏற்றுப்பெற்றுக்கொள்வது என்பதாம். உமது அருள் இருப்பதாக! என்பது தொக்கி நின்றது.

சிறுவனும் - நாயனார்க்கு அக்காலத்து ஒரு சிறு மைந்தர் இருந்தனர். அவரும் துலைத்தட்டிலே இவருடன் ஒக்க ஏறி அழிவில் வான்பதம் பெற்றனர் (548), என்று ஆசிரியர் கூறியவாறும். சிறுத்தொண்ட நாயனார் சரிதமும் இங்கு நினைவுகூர்க. மைந்தர் இருந்தமை முதனூல் வகைநூல்களிற் பெறாதிருப்ப ஆசிரியர் கூறுவதென்னை? யெனின்,

"நாட்கொண்ட தாமரைப் பூந்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட கண்ணி மனைவி யொடங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றோ?இவ் வகலிடமே"

என்ற அப்பர் சுவாமிகள் திருவிருத்தத்தான் அறியக்கிடக்கின்றபடி இச்சரிதம் பண்டைக்காலம்தொட்டு வழங்கிய வழக்கினானும் திருவருளானும் கண்டுரைத்தனர் ஆசிரியர் என்க. 40

542. போச்ச மில்லடி மைத்திறம் புரிந்தவ ரெதிர்நின்
றச்ச முன்புற வுரைத்தலு, மங்கண ரருளா
னிச்ச யித்தவர் நிலையினைத் துலையெனுஞ் சலத்தா
லிச்ச ழக்கினின் றேற்றுவா ரேறுதற் கிசைந்தார். ௪௧

(இ - ள்) வெளிப்படை. குற்றமில்லாத அடிமைத் திறத்தினையே புரிந்த நாயனார் எதிரே நின்று தம்முன்பு அச்சம் உற இவ்வாறு சொல்லலும், அங்கணராகிய மறையவர் அருளினாலே அவரது நிலையினை நிச்சயித்து, துலை என்கின்ற முன்னிலையால் அவர்

களை இந்தச் சழக்கிலிருந்து ஏற்றுவாராய் அவரும் மனைவியாரும் மைந்தரும் துலையிலே ஏறுதற்கு இசைந்தனர்.

(வி - ரை) போச்சம் இல் - குற்றம் இல்லாத. **அடிமைத்திறம்** - அடிமைச் செயல்வகை. இத்திறத்தினை 504, 505-ம் பாட்டுக்களிற் காண்க. **புரிந்தவர்** - புரிதல் - செய்தல், இடைவிடாது நினைத்தல் என இரண்டுமாம்.

"புகழ் புரிந்தார்" - குறள் - "சிந்தை செய்வது சிவன் கழல்", "உதவி" (504) என இவ்விரண்டினையும் குறித்தது காண்க. மேலே **தலைவ** என்றதற்கேற்ப **அடிமைத்திறம்** என்றார். **முன்பு அச்சம் உற** என மாற்றுக. அவர் முன்னே இவரும், இவர் முன்னே இவரது அச்சமும் உற்றன என்பது. முகத்தும் அச்சமே முதன்மையாய் வெளிப்பட்டது என்பது கருத்து. "உடம்பினி லடங்காப் பயத்தொடும்" (529). "சிந்தனை முகத்திற் றேக்கி" என்பது கம்பராமாயணம்.

அங்கணர் நிச்சயித்து - முன்னர் வெகுண்டு காட்டியதுபோலன்றி இங்கு அழகிய அருட்பார்வை செய்தாராதலின் இவ்விடத்து **அங்கணர்** என்று குறித்தார். இது காறும் திரோதான சத்தியாக நின்ற செயல்கள் இங்கு அருட்செயலாக வெளிப்படுதல் குறித்தது. **நிச்சயித்து** - உறுதிப்படுத்தி. உறுதிப்பாடு பெற்ற உண்மையாய் மற்றெதனுனும் மாறுபடாத. "பகருஞானி பகலூண் பலத்துக்கு நிகரில்லை யென்பது நிச்சயம்" **திருமந்திரம்**. "மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே"—**நம்பிகள் தேவாரம்**. (**திருக்கானப்பேர்** - 11).

அவர் நிலையினை - நிலையினை நிச்சயித்துப் பின்னர் அவரை ஏற்றுவார் என்க. இங்கு நிச்சயித்தலாவது உலகறிய நிறுத்துக் காட்டுதல். "தொண்ட ரன்பெனுந் தூநெறி வெளிப்படுப் பாராய்" (510) என்றது காண்க.

துலைஎனும் கலத்தால் - **கலம்** - முகாந்தரம். **இச்சழக்கு** - இவ்வுலகில் என தல்லாததை **எனது** என்றும், யானல்லாததை **யான்** என்றும் கொண்ட அகங்கார மமகாரங்களாகிய தொடக்கு. இகரம் - அண்மைச்சுட்டு. யாவரும் அறிந்துநின்ற சிறப்புக் குறித்தது. உண்மையற்ற பொருளினுட்பட்டு நிற்குநிலை இங்குச் **சழக்கு** எனப்பட்டது. "சழக்கின்று நானியைந்தாற் றருமந்தான் சலியாதோ?" (120) காண்க.

ஏற்றுவார் - ஏறச் செய்வாராய். சேற்றினுட்பட்டு வெளியேற முடியாது நின்ற ஒருவனை மேலுள்ள ஒருவன் கைதந்து வெளியேற்றுவது போல். "கண்ணுதலான் பெருங் கருணை கைதந்தபடி" என்றது காண்க. "கொடுநர கக்குழிநின்று அருள்தரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே" என்ற திருவிருத்தத் திருவாக்குங் காண்க. ஏற்றுவார் - இசைந்தார் எனக் கூட்டி முடிக்க.

ஏறுதற்கு இசைந்தார் - ஏறிடப் பெறுவது உன் அருள் என அருளிப்பாட்டினை வேண்டிய தொண்டர்க்கு அங்ஙனமே ஏறுக எனத் தமது அருளினைத் தந்ததாம். துலையில் ஏறிய செய்தி அவருடையதாகக் காணப்படினும் அஃது இவர் ஏற்றியருளியதேயாம். செயல் இவர்பாலதன்றி அவருடையதன்று என்பது குறிப்பு. இவர் அருளினால் ஏற்றினாலன்றி உயிர்கள் ஏறமுடியாது என்பது சாத்திரம். என்னை ? அவர் துலையில் ஏறிய அச்செயலே தம் செயலாக அத்துலையினையே விமானமாகக் கொண்டு சிவபுரியிலே அவரை ஏற்றிக் கொண்டார் (549) ஆதலின் என்க.

துலையெனுங் கலத்தால் என்ற பாடம் சில ஆதீனப்பிரதிகளில் உள்ளதென்பது திரு. இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு. இப்பாடத்திற்குப் பிறவிச் சழக்கினின் றேற்றுதற்குத் துலையே கலமாயிற்று என்க. **கலம்** - மரக்கலம். 41

543. மனம கிழ்ந்தவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழன் மனைவியார் தம்மொடு புதல்வன்

றனையி டக்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவா
வினைய செய்கையி லேறுவார் கூறுவா ரெடுத்து, ௪௨

544. "இழைத்த வன்பினி லிறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனிற் பெருந்துலை நேர்நிற்க!" வென்று,
மழைத்த டம்பொழிற் றிருநல்லூ ரிறைவரை வணங்கித்
தழைத்த வஞ்செழுத் தோதினா ; ரேறினார் தட்டில். ௪௩

543. (இ - ள்) வெளிப்படை. மனமகிழ்ச்சி யடைந்து அவருடைய மலர்போன்ற பாதங்களைத் தலையினால் வணங்கிப், புனைந்த மலரணிந்த கூந்தலையுடைய மனைவியார் தம்முடனே புதல்வரையும் துலையில் இடுவதற்காக உடனே கொண்டு தகைமையினாலே இத்தன்மைத்தாகிய செயலிலே துணிந்து ஏறுவாராகிய நாயனார் எடுத்துக் கூறுவாராய், ௪௨

544. (இ - ள்) "புரிந்த அன்பினாலே இறைவரது திருநீற்றிலே கொண்டு செலுத்திய உண்மை யடிமைத் திறத்திலே இதுவரை நாங்கள் பிழைசெய்தோமில்லை என்பது உண்மையாயின் பெருந் துலையானது நேர் நிற்பதாக!" என்று சொல்லி, மழையால் நிரம்பிய தடாகங்களும் பொழில்களும் சூழ்ந்த திருநல்லூரில் விளக்கம் பெற எழுந்தருளிய இறைவரை வணங்கித், தழைத்த திருவைந்தெழுத்தினை விதிப்படி ஓதினாராகித் தட்டிலே ஏறினார். ௪௩

543. (வி - ரை) **மனமகிழ்ந்து** - மறையவர் இசைந்தது பற்றி மனமகிழ்ந்தார். இவ்வாறிசைந்ததனாற் றம்மைக் கொடுத்தாயினும் கோவண நேர்தந்து அடியவர்பாற் பிழையினின்றும் உய்திபெறலாமென்ற வழி கிடைத்ததுவே மகிழ்ச்சிக்குக் காரணம்.

முன்னர்த் திருவருள் பெறத் **தொழுதார்** (541) ; இப்போது அருள்பெற்றாராதலின் அதன் பொருட்டுக் கீழ் வீழ்ந்து அவரது திருவடிகளில் தமது முடிதோய வணங்கினார் என்று குறிக்க இங்குச் **சென்னியால் வணங்கி** என்றார்.

புனைமலர்க்குழல் - புனைகுழல் - மலர்க்குழல் என்று தனித்தனி கூட்டுக. **புனை குழல்** - ஐந்து வகையாகப் புனையும் தன்மையுடையதாகி, அவற்றில் ஒரு வகையிலே மங்கலமாகப் புனையப்பெற்ற என்க. ஒருவாற்றானும் புனையப்பெறாது அமங்கலக் குறி தோன்ற மயிர் விரித்துச் சரிப்பதோ ; அன்றி எவ்வாற்றானும் புனையலாகாவகையிலே துண்டித்து கிறுத்தலோ, **நீடிய** மங்கலமாகக் கொண்டொழுகும் இந்நாள் மக்களின் உள்ளக்கிடை இதன் மங்கலமாகிய உள்ளுறையை நன்குணராது என்க.

மலர்க்குழல் - மலரணிதலும் மங்கலத்தின் அடையாளமாம். அவை இந்நாட் காணும் கோரக்காட்சியாகிய காகிதம் துணி முதலிய பலவற்றானு மியன்ற போலிகளா யொழியாது உண்மையான இயற்கை மணந்தங்கிய பூக்களாம். இங்குப் புனைதலும் மலரணிந்தமையும் கூறியது இவ்வலங்காரக் கோலத்துடனே நித்திய மங்கலமாகிய வீட்டினை மனைவியார் தமது நாயகனாருடனே அடைய நின்றாராதலின் என்பதாம். மலர்புனை குழல் என மாற்றிவைத்து உரை கொள்வாருமுண்டு.

மனைவியார் தம்மொடு புதல்வன்றனை இடக்கொடு - இட - துலையில் இடுதற்கு. **ஏறிட** - 541 பார்க்க. மனைவியாருடன் புதல்வன்றனைக் கொண்டு. ஒடு என்னும் மூன்றனுருபு உடனிகழ்ச்சிப் பொருள் குறித்தது. புதல்வனுடன் மனைவியாரை என்னாது இவ்வாறு கூறியது, ஒரு புறம் நாயனாரையும் ஒரு புறம் புதல்வரையும் கூட்டி வைக்கும் தொடர்பு பற்றி மனைவியார் என்றதுடன் சேர்த்துக் கூறியதாம். தம்மால் மனைவியாரும் பின்னர் அவரால் புதல்வரும் பெற்றுள்ளபடியால் இம் முறை வைத்தோதினார். "இருவராகத்து ளோருயிர் கண்டனம்" - (திருக்கோவையார்) என்றபடி மனைவியாரும் தாமும் உருவிற் புன்மையாகக் காணப்படுவது

கருதிப் பன்மையிற் றம்மோடு என்றும், "பெறுமவற்றுள் யாமறிவதில்லை" (குறள்) என்றபடி பெறற்கரியதும் இடுதற் கரியதுமாகிய தம்பொருள் என்ற சிறப்புத்தோன்ற தனை என்றுங் கூறியபடி. சிறுவனும் என்றதனால் இளம் புதல்வர் மனைவியாருடன் இருந்தனர் (541) என்று குறிப்பார் **தம்மோடு** என்றார் எனக் கொள்வாருமுண்டு.

கோடு - உடன் அழைத்துக் கொண்டு. முன்னர்த் தனம் முதலிய பொருள்களை இட்டதுபோல இவர்களையும் ஒவ்வொருவராக இடாமல் இவ்விருவரையும் தம்முடனே கொண்டு துலையேறியதென்னையோ? எனின், சிறுவரை முன்னர் இடுவது என்னிலோ? அவர் தாய்தந்தையரை விட்டு நிற்க இயைபில்லை. அவரையும் மனைவியாரையும் ஒக்கவே முன்னர் இடுவதென்னிலோ; என்றும் பிரியேன் என்ற மணக்காலத்து உறுதிச் சொல் வழுவாமாதலின் அஃதும் இயைபில்லை. துலையில் முன்னர் தம்மையே இடுவதென்னிலோ? "உங்கள் தனங்களி னுகிலு மிடுவீர்" (538) என்று மறையோர் பணித்தலின், "தம்பொருள் என்ப தம் மக்கள்", "மங்கல மென்ப மனைமாட்சி" என்பவாதலின் மனைவி மக்களே தமது பொருளாகிய உயிர்ச் சார்புகளாதலின் அப்பொருள்களை இடாது ஒழியவும் நியாயமில்லை; தாம் மட்டில் முன்னர் ஏறத் துலை நேர் நிற்குமாயின் தாம் முதல்வரிடமும் இவர்கள் உலகினிடமுமாக நிற்கவந்து, தாம் ஆயுளளவும் பிரியேன் என்ற சொற்பிழைக்கும்; தாம் ஏறித்துலை நேர் நில்லாதாயின் தம்மை அவ்வாறு மறையவருக்கு நிறுத்துக் கொடுத்து அவருடைமையாயின பின்னர்த் துலைநேர் காண இவ்வுயிர்ப் பொருள்களை அவருக்குத் தாம் ஒப்புக் கொடுக்க உரிமையின்றாம்; இவை முதலிய நியாயங்கள் பற்றி **மனைவியாரோடு புதல்வன்** றனையும் தம்முடன் கொண்டு தட்டு ஏறினார் என்க. மேலும் தமது செயலில் பாதி உரிமையும் பொறுப்பும் மனைவியார்க்கு உண்டு என்பது நீதி நூல். இக்காரியத்தில் அதுபற்றி மனைவியார் "இடர் கூர்ந்தனர்" என 523-முன்னர்க் கூறியதுங்காண்க. அவர் பொருள் தந்தம் "வினையான் வரும்" என்றபடி புதல்வரும் தமது செயலினை நேர்காணும் பொறுப்புடையார் என்பனவாதி நியதிகளுங் காண்க.

தனித்துலை - அளக்கலாகாதன வாகிய இறைவன் கோவணத்தையும் அடிமைத் திறத்தையும் அளந்து காட்டும் கருவியாயினமையின் **தனி** - என்றார். **தகவால்** - தகவினாலே. **தகவு** - தகுதி. மேலே கூறிய நியாயவகை குறித்தது.

இனைய செய்கையில் - இத்தன்மைத் தாகிய செயல். **இனைய**-முன்னர் நிகழ்ந்த செய்தியாவும் குறித்தது. **இனைய தோன்று** - 523 பார்க்க. **செய்கை** - அந்த நிலையினை மாற்றுதற்கு இறுதியாகத் துணிந்த பரிகாரச் செயலாகிய இது. இதற்குமேல் வேறு செயல் இல்லையாதலின் இவ்வாறு முடித்துக் கூறினார். **ஏறுவார்** - வினையாலணையும் பெயர்; ஏறுவாராகிய நாயனார். **கூறுவார்** - முற்றெச்சம். கூறுவாராகி. வரும் பாட்டில் **என்று** எனும் வினையெச்சங் கொண்டது. **எடுத்துக் கூறுவார்** - என மாற்றுக. **எடுத்து** - முடிந்த பொருளாக எடுத்து. உரத்தசத்தத்திலெடுத்து என்பாருமுண்டு.

தனையுடன் கோடு—என்பதும் பாடம். 42

544. **(வி - ரை)** "**இழைத்த......நிற்க**" - இது துலையின் ஏறுதற்குமுன் நாயனார் கூறிய சூள். யாதொரு பெருங் காரியத்தைச் செய்வோர் முடிந்த பொருளாக இவ்வாறு தம் உண்மையினை எடுத்து உறுதிமொழி கூறிச் செய்வது மரபு.

> ஏய்ந்த வடிமை சிவனுக்கியா னென்னி, லின்றென் கண்பெற்று
> வேந்த னெதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்;
> ராய்ந்த பொருளுஞ் சிவபதமே யாவ" தென்றே, யஞ்செழுத்தை
> வாய்ந்த தொண்ட ரெடுத்தோதி, மணிநீர் வாவி மூழ்கினார்.—19.

என்ற தண்டியடிகணாயனார் புராணம் முதலியவை காண்க.

என்று - என்று சொல்லி. **இழைத்த அன்பினில்** - அன்பு இழைத்ததில் என்று கூட்டுக. அன்புகொண்டு இழைத்த திருத்தொண்டின் செய்கைகளிலே.

இறை திருநீற்று மெய்யடிமை - இறைவனது அருட்சத்தி புருவமாகிய திருநீற்றின்பாலே வைத்துச் செய்த உண்மையான அடிமைத் திறம். இதிற் பிழைத்திலாமை யாவது திருநீற்று நெறியிலே விதித்தவைகளினின்று ஒரு சிறிதேனும் மனம் வாக்குக் காயங்களில் அன்பினில் எவ்வாற்றானும் பிறழாது நிற்றல். "பொச்ச மில்லடிமைத் திறம் புரிந்தவர்" (542).

பிழைத்திலோம் எனில் பெருந்துலை நேர் நிற்க என்று நாயனார் கூறியது அவர் தமது உள்ளமும் உள்ளத்துள் நின்ற இறைவனும் அறிந்த உண்மை நிலையின் உறுதிப்பாட்டைத் தேற்றம்பெற உணர்த்தி நிற்பது காண்க. கோவணப் பொதிகளும், தனங்கள் யாவையும் நேர்நில்லா தொழிந்தமை கண்ட நாயனார், அக்கோவணத்தின் பெரிய நிலையினைக் கண்டும் இவ்வாறு தமது அடிமைத்திறத்தின் பிழையா நிலையை அதற்கு நேர்பெறக் கூறிய துணிபென்னையோ? எனின், அன்பு பிழையா நிலையாகிய உண்மையே சத்தியமாம். சத்தியம் இறைவன் உருவம்; சத்தின்முன் எதுவும் உயர்ந்து திறம்பி நிற்க இயலாது என்பது உண்மைநூல்களின் முடிபு என்னும் துணிபில் தாம் கண்டறிந்த உறுதிபற்றி என்க.

பிழைத்திலோம் எனின் - தவறியதில்லை என்பதுண்மையாயின் - இஃது உண்மையே என்றால்.

பெருந்துலை-இவர் ஏற நின்ற தட்டு முன்னர்த் தம் பொருள்கள் எல்லாவற்றையுங் கொள்ள இடந் தந்ததாற் பெரிதாயிற்று. மற்றைத் தட்டு இவ்வெல்லாவற்றினும் கனத்து நின்ற கோவணத்தைக் கொண்டதாற் பெரிதாயிற்று, இவ் விருபெருந் தட்டுக்களைக் கொண்டு நிலை காட்டும் துலையாதலின் **பெருந்துலை** என்றார். இதன் பெருமையினை நாம் தொடர்ந்து அனுபவிக்குமாறு சிறப்புக் குறிக்கும் **அகரச் சுட்டுக்** கொடுத்து **அத்துலை** என்று வரும் பாட்டிலும், பின்னரும் (548) ஆசிரியர் கூறியருளியதும், முன்னர்த் **தனித்துலை** என்றதும் காண்க. பின்னர் இவர்களைச் சிவபுரியினிற் சேர்க்கும் விமானமாக இதுவேயாயின பெருமையும் குறித்து **நற்பெருந்துலை** என்று சிறப்பித்தது முணர்க.

நிற்க - வியங்கோள் வினைமுற்று. 'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள், இயலு மிடம்பா லெங்கு மென்ப' என்பதிலக்கணம். இஃது எல்லா இடத்தும், எவ்வகைப் பாலுக்கும் ஒக்கும். **நிற்க** என்று ஆணையும், நிறுத்துக என்ற பொருளில் இறைவனை வேண்டிய விண்ணப்பமும் என இருவழியும் கொள்ள வைத்த அழகினை யுன்னுக. உண்மை அன்பின் திறம் எங்கும் இத்தன்மைத்தேயாம் என்ற உறுதியுமாம்.

மழைத் தடம் பொழில் - **மழைத்தடம்** - மழைநீரால் நிரம்பிய தடாகம். மழை பெய்யத் தடாகங்கள் நிறையும். மழையாற் காவிரியும், காவிரியாற் சோழநாட்டுத் தடங்களும் பெருகுமென்பது குறிப்பு. **பொழில்** - சோலைகள். தடமும் பொழிலும் சூழ்ந்த திருநல்லூர் என்க. உம்மைத்தொகை. "நாட்கொண்ட தாமரைப் பூந்தடம் சூழ்ந்த நல்லூர்" என்ற அப்பர் சுவாமிகள் திருவிருத்தமும் இங்கு நினைவு கூர்க. அணிமையில் இமையவர் பொழியவிருக்கும் புதிய பூமழையும் (546), இறைவரது அருண்மழையும் வரப்பெறும் நிலையினது முற்குறிப்பாக இங்கு **மழைத்தடம்** என்று குறித்தவாறு.

தழைத்த அஞ்செழுத்து - அன்பு தழைத்தற்குச் சாதனமும் பயனுமாகிய திருவைந்தெழுத்து. இதனை ஓதுதல் இதனை விதிப்படி எண்ணுதல். '**விதி எண்ணுமஞ் செழுத்தே**' என்ற சிவஞானபோதத்தினுட் காண்க. இதனை எண்ணியபோது "தண்ணிழலாம்பதி" என்றவாறு இது அருளிலே உயிரைத் தழைக்கச் செய்யும். உலகிலே

வளரும் உயிர்ப்பயிர் இறைவனதருளிலே கொண்டுவைக்கப்படும்போது அதனை அங்குத் தழைக்கச் செய்வது சிவநாமமாகிய இவ்வைந்தெழுத்தேயாம் என்பார் **தழைத்த** என்றார். **தழைப்பித்த** என்ற பிறவினைப் பொருளில் வந்தது. **ஓதினார்** - விதிப்படி எண்ணினார். **என்று** எனவே வாக்கின் றொழிலும், **வணங்கி** எனவே காயத்தின் றொழிலும், **ஓதினார்** எனவே மனத்தின் றொழிலும் குறித்தவாறு. 43

*545. மண்டு காதலின் மற்றவர் மகிழ்ந்துட னேற,
வண்டர் தம்பிரான் றிருவரைக் கோவண மதுவுங்
கொண்ட வன்பினிற் குறைபடா வடியவ ரடிமைத்
தொண்டு மொத்தலா லொத்துநேர் நின்றதத் துலைதான். ௪௪

(இ - ள்) வெளிப்படை. மிகுந்த காதலினாலே மற்று அவர்கள் மகிழ்ந்து உடனே தட்டிலே ஏறினார்களாக, எல்லா அண்டமுடையார்க்கும் பெருமானாகிய இறைவரது திருவரையிற் சாத்தும் கோவணமும், அவர்பாற் கொண்ட அன்பினிற் குறைபடாத அடியவர்களது தொண்டும் ஒப்புடையன ஆதலால் (மேலும் கீழுமாய் நிற்றலன்றி) ஒத்து அத்துலைதான் நேர் நின்றது.

(வி - ரை) மண்டுகாதலின்-மேன்மேல் மிகுகின்ற ஆசையால். கோவண நேர்நிற்கப் பெறுவோம் என்ற திண்மையான உறுதி பெற்றாராதலின் தமது பிழையினை மாற்றப் பெற்றோமென்ற உணர்ச்சிவர அதுவே **மண்டுகாதலை** விளைத்தது.

மற்றவர் மகிழ்ந்து உடன் ஏற - மகிழ்ச்சியோடு மற்ற அவர்கள் ஒன்று சேரத் தட்டிலே ஏறினார்களாக. காதல் மண்டியவழி மகிழ்ச்சி உண்டாகியது. காதல் உள்ளத்தும் மகிழ்ச்சி புறத்தும் நிகழ்வன. மகிழ்ச்சி - மெய்ப்பாடு. 543 உரை பார்க்க.

கோவணம் அதுவும் அடிமைத் தொண்டும் ஒத்தலால் - கோவணம் மறையாதவின் இறைவனை உள்ளே பொதிந்து வைத்துப் பற்றி நிற்பது. அடிமைத் தொண்டும் அவ்விறைவனையே உள்ளத்திற் பொதிந்து பற்றிக் கிடப்பது. ஆதலின் இரண்டும் ஒத்தன என்க. **அடிமைத் தொண்டு** - அடிமையாந் தன்மை பெற்றதனாற் செய்யும் தொண்டு. இது பற்றி முன்னர் உரைத்தவை இங்கு நினைவு கூர்க. (516 - 517)

அண்டர் தம்பிரான் - அண்டர்களுக்கு நாயகர்களாகிய வானவர்களுக்குத் தலைவர். "அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல்" என்பது முதலியவை காண்க.

கொண்ட அன்பினிற் குறைபடா அடிமைத் தொண்டு - இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய்யடிமை பிழைத்திலோம் என்ற நிலைமை. **கொண்ட** - உயிர்க்கீடாகக் கொண்ட - கடைப்பிடியாகிய. **அன்பினிற்குறைபடா** - எந்தவகை முட்டுப்பாடு நேரிடினுங் குறையாத. முட்டில் அன்பர் (536) என்றமையுங் காண்க.

அத்துலைதான் - நேர் நின்றது என மாற்றுக. இரண்டுதட்டுக்களிலும் இட்ட பொருள்கள் தம்முள் ஒத்தபோதே துலையும் நேர்நிற்கும். ஆதலின், கோவணமும் தொண்டும் ஒத்தலால் என்று காரணங்கூறியவாறு. இங்குத்தட்டில் நின்றது நாயனாரும் மனைவியாரும் புதல்வருமே யாயினும் அவர் தம்மையே அடியவர்க்கு (இறையவர்க்கு) ஒப்புக் கொடுத்த தொண்டின் செயலே இங்கு ஒப்புமை செய்தது என்பார் தொண்டரும் என்னாது **கோவணமும் தொண்டும் ஒத்தலால்** என்றார். மெய்யடிமை பிழைத்திலோம் எனில் என நாயனாரும் அடிமையையே குறித்ததும் காண்க.

அத்துலைதான் - துலைக்கோல் துலை எனப்பட்டது. **தான்** - அசையென்றுரைக்குவாரும் உண்டு. இறைவனது கோவணங் கொண்டதேயாயினும் என்க. "அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றே யனையாய் என்னை யாட் கொண்ட போதே கொண்டிலையோ? இன்றோ ரிடையூ றெனக்குண்டோ" என்ற மணிவாசகத்தின்படி உடல் பொருள் ஆவி என்ற மூன்றையும் அவன் வசமாக்கிய

வழியே இறைவன் அவர் இடரடையாது வெளிப்படத் தாங்கி நிற்பன். பணிசெய்து கிடப்பதே கடமையாகிப் பிறிதொன்றுமில்லாத பொழுதே இறைவன் றன் கடன் அடியேனையும் தாங்குதலாம் என்று அருளிய தேவாரமும் காண்க. பணிசெய்து கிடக்கும் நிலையினையே இங்கு **அன்பினிற் குறைபடா அடியவர் அடிமைத் தொண்டு** எனப்பட்டது. முன்னர் உடைமை மட்டும் நேர்தந்தார். உடலும் உயிரும் தம்ம தாக நிறுத்தினராதலின் தட்டு நேர்படாது நின்றது. இப்போது உடலையும் உயிரை யும் நேர்பெற ஒப்புவித்தனர். குறைநிரம்பிட இறைவனும் நேர் கொண்டனர் என்க. "**ஆட்கொண்ட** வார்த்தை" என்று இது பற்றிய அப்பர் சுவாமிகள் திருவிருத்தமும் சிந்திக்க. (பக்கம் 677).

பொட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
யொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
றட்டொக்க மாறினன் றன்னையு மென்னையும் ;
வட்டம தொத்தது ; வாணிபம் வாய்த்ததே.

ஏழாந்தந்திரம் - சம்பிரதாயம் - 78

என்ற திருமூலர் திருமந்திரம் இச்சரிதத்தினையும் அதன் தத்துவத்தினையும் நினை வூட்டிநிற்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. 44

546. மதிவி ளங்கிய தொண்டர்தம் பெருமையை மண்ணோர்
துதிசெய் தெங்கணு மதிசய முறவெதிர் தொழுதார் ;
கதிர்வி சும்பிடை கரந்திட நிரந்தகற் பகத்தின்
புதிய பூமழை யிமையவர் மகிழ்வுடன் பொழிந்தார். சஙு

(இ - ள்) வெளிப்படை. மதியினால் விளக்கம் பெற்ற தொண்டர் தமது பெருமையினை இவ்வுலகத்தவர்கள் யாவரும் துதித்து எங்கும் அதிசய உணர்ச்சிபெறத் தொழுதார்கள். விளக்கம்பெற்ற வானுலகத்தினின்றும் அவ்வெளி மறைவு பெறும் படி நிரைந்த புதிய இனிய கற்பக மலர்களை மழைபோல வானவர்கள் மகிழ்ச்சியுடன் பொழிந்தார்கள்.

(வி - ரை) இவ்வதிசயங் கண்ட மண்ணோரும், விண்ணோரும் செய்த செயல்களை இப்பாட்டாற் கூறினார்.

மதிவிளங்கிய—மதி - மெய்யறிவு - மெய்யுணர்ச்சி. **விளங்கிய** - அந்த மதியினால் விளக்கம்பெற்ற. முன்னர் "அறிவுறு" (521) இருந்த நாயனார் இங்கு இறைவர் காட்ட அறிவு பெற்றாராதலின் **மதி விளங்கிய தொண்டர்** என்றார். அத்தனை தனங்களும் இடஇடத் தட்டு மீதெழுந்து நின்றது கண்டு வியந்த மண்ணவர்கள் (539) நாயனார் ஏறியதும் நேர்நின்றமை கண்டு அவரது பெருமையை உணர்ந்தனராதலின் துதித்து அதிசயித்துத் தொழுதனர்.

அதிசயம் உற - கண்டு அனுபவிப்பது அதிசயம். "அத்தன் ஆண்டுதன் அடிய ரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" என்பது முதலிய திருவாசகங்களும் இதுபற்றி முன்னர்க் கூறியவையுங் காண்க.

எதிர் தொழுதார் - எதிரே - நேரே - தொழுதனர். **கதிர்விசும்பு** - ஒளியுடைய வான வுலகம். வான வுலகங்கள் ஒளியுடையன என்பதாம். கதிர்களாகிய ஞாயிறு முதலிய கோள்கள் திரியும் விசும்பு எனினுமமையும். **இடைகரந்திட** - இடைவெளி மறைய எங்கும் புதிய பூமழையேயாய்த் தோன்ற. **கதிர் விசும்பிடைக் கரந்திட** என்று பாடங்கொண்டு **கதிர்** - சூரியன் - விசும்பிடை மறைய என்று பொருள் கூறு வாருமுண்டு. **நிரந்த** - அணியணியாக. **இமையவர்** - இமையா நாட்டத்தவராதலின் இவ் வருள்வெளிப்பாட்டினை விரைவில் அங்கிருந்தபடியே அறிந்து பூமழை பொழிந்து

புனிதம் பெறவல்லாராயினர் என்பது குறிப்பார் இமையவர் என்ற பெயராற் சுட்டினார். "புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத பொன்னாடு" என்பர் தாயுமானார்.
நிறைந்த—நிரைந்த—என்பனவும் பாடங்கள். 45

547. அண்டர் பூமழை பொழியமற் றதனிடை யொளித்த
முண்ட வேதிய ரொருவழி யான்முத னல்லூர்ப்
பண்டு தாம்பயில் கோலமே விசும்பினிற் பாகங்
கொண்ட பேதையுந் தாமுமாய்க் காட்சிமுன் கொடுத்தார். ௪௬

(இ - ள்) வெளிப்படை. அண்டத் தலைவர்கள் கற்பகப்பூமழை விசும்பு மறையப் பொழிந்தனராக, மற்றதனிடையிலே ஒரு வழியால் ஒளித்தவராகிய திரிபுண்டரந் தரித்த வேதியர், முதன்மையாகிய திருநல்லூரிலே, ஒரு பாகத்தில் வைத்த உமையம்மையாருந் தாமுமாக அநாதியாய்த் தாம் பயின்றருள்புரியும் கோலத்தினையே மேற்கொண்டவராகி ஆகாயத்திலே முன்னர் நின்று காட்சி தந்தருளினார்.

(வி - ரை) மற்று அதனிடை ஒரு வழியான் ஒளித்த எனக் கூட்டுக. பூமழை ஒன்று. திருவருள் வெளிப்பாடு மற்றொன்று. ஆதலின் **மற்று** என்றார். **அதனிடை ஒளித்தலாவது** தாம் வெளிப்படத் தோற்றிய வேதிய உருவம் மறைந்து உமைபாகமாகிய பண்டைக் கோலங் கொள்வதற்கு இடைவெளிகாந்த பூமழை திரையிட்டு உபகரித்ததுபோல நின்றது என்றலங்கரித்து நாடகச்சுவை பெறக் கூறியவாறு.

முண்டவேதியர் - திருபுண்டரந் தரித்த மறையவர். "சைவ வெண்டிரு நீற்று முண் டத்தொளித் தழைப்பும்" (508) என முன்னர் இதைத் தேற்றம் பெறக் குறித்ததை நினைவு கூர்க. இத்திருநீறே நாயனாரை வசீகரித்ததாம் என்பது "இறை **திருநீற்று** மெய்யடிமை பிழைத்திலோ மெனின்" என முடிந்த பொருளாக அவர் கூறுரைத்தமையாற் றுணியப்படும். ஆதலின் இதனையே இங்கு முடித்துக் காட்டியபடி.

ஒருவழியால் ஒளித்த - அவர் ஒளித்தற்கு ஒரு வகையாற் பூமழை துணைசெய்தது போலும் என்க. **ஒரு வழியாற் பயில்** என்று கூட்டி யுரைப்பினுமாம். திருநல்லூரிலே இலிங்கத் திருமேனியாகவும் உமாசகாயத் திருமேனியாகவும் ஒரு வழியாற் றெரிசிக்க நின்று பண்டுதொட்டு நாயனார்க்கு அருள் தந்து பயின்ற - பழகிய - அத்திருக்கோலமே இப்பொழுது மற்றொரு வழியிலே பாகங் கொண்ட பேதையும் தாமுமாக முன் காட்சி கொடுத்த கோலமாம் என்க. பண்டு நல்லூரிற் பயில் கோலமேயாய் விசும்பினில் பேதையும் தாமுமாய் என்று கூட்டுக. **விசும்பினிற் காட்சி கொடுத்தார்** எனக் கூட்டியுரைத்து முடிக்க. 46

548. தொழுது போற்றியத் துலைமிசை நின்றுநேர் துதிக்கும்
வழுவி லன்பரு மைந்தரு மனைவியார் தாமு
முழுது மின்னருள் பெற்றுத்தம் முன்றொழு திருக்கு
மழிவில் வான்பதங் கொடுத்தெழுந் தருளினா ரையர். ௪௭

(இ - ள்) வெளிப்படை. தொழுது வாழ்த்திக்கொண்டு அத்துலையின்மேல் நின்று துதிக்கும் குற்றமற்ற அன்பரும், மைந்தனும், மனைவியார் தாமும் முற்றும் இனிய அருள்பெற்றுத் தம் முன்பு எக்காலமுந் தொழுதுகொண்டே இருக்கின்றதாகிய அழிவில்லாத பெரிய சிவபதங் கொடுத்து ஐயர் எழுந்தருளிப் போயினார்.

(வி - ரை) அத்துலைமிசை - அவ்வாறு நேர்நின்றதாகிய அந்தத் துலையின்மேல். 545 பார்க்க. அன்பரும், மைந்தரும், மனைவியாரும் தட்டில் ஏறினார் (544); துலை நேர் நின்றது (545); அவ்வாறு நேர்நின்ற துலையில் ஏறிய நாயனார் செய்கை யிதுவென்றும், அதற்கு எதிர்காட்சி தந்த இறையவர் செய்கை இதுவெனவும் இப்பாட்



அமர்நீதி நாயனார் திருமடம் திருநல்லூர்.

பாட்டு 505—பக்கம் ௬௩௭



பழையாறை வடதளியிலுள்ள அமர்நீதியார் - மனைவியார் -
மைந்தனார் - திருவுருவங்கள்

(இவர்கள் பக்கத்தில் காட்சி கொடுத்த இறைவன் திருவுருவம் உள்ளது.)
(மனைவியார் கையில் மகனை யேந்தியுள்ளார்.)

பாட்டு 548—பக்கம் ௬௮௪

டாற் கூறினர். நாயனார் துலையில் நின்றபடியே துலைநேர் நிற்றல் கண்டார். இறைவ ரும் பேதையும் தாமுமாகத் தந்த காட்சியுங் கண்டார். ஆதலின் தொழுதார்; போற்றினர்; நின்றபடியே துதித்தார். இறைவன் அவர்க்கும், மைந்தர்க்கும், மனைவி யார்க்கும் அழிவில் பதம் கொடுத்தார் எனக் கண்டுகொள்க.

அன்பரும் மைந்தரும் மனைவியார் தாமும் - இறுதியாக ஏறிய அன்பரை முன்ன ரும் அவர்க்குமுன் ஏறிய மைந்தரை அடுத்தும், இருவர்க்கும் முன்னர் ஏறிய மனைவி யாரை அதற்கடுத்தும் வைத்தார். முன் கூறியமுறை வேறு. இங்குக் குறித்தமுறை யின் காரணம் வேறு. இஃது ஏறிய காலம்பற்றி நிச்சயித்த சங்கார முறையாம். மைந்தரைக் கையிலேந்திய நாயனாரது பழய வுருவம் பழையாறையிலும் திருநல்லூரி லுங் காண்க.

வழுவில் - குற்றமில்லாத. இறைவர் தம் கோவணங் கொண்டார் என்று அன் பர்பாற் குற்றஞ் சுமத்தி வெகுண்டு இத்துணையுஞ் செய்தார். அவ்வாறு ஐயர் செய்தாரேனும் அவர் என்றும் வழுவற்றவரேயாம் என்பது குறிப்பு. கோவணக் கள் வர் (520), ஐயர் கைதவம் (521), என்ற இடத்தும் பிறண்டும் உரைத்தனவும் இங்கு நினைவு கூர்க. முட்டில் அன்பர் (536), பொச்சமில் வடிமைத்திறம் புரிந்தவர் (542), இழைத்த அன்பு (544), அன்பினிற் குறைபடா அடிமைத் தொண்டு (545), என்று பலவாறும் முன்னர்க் கூறியவற்றிற் கேற்ப இங்கு எவ்வகை வழுவுமில்லாத அன்பர் என்று கூறினர். வரும்பாட்டில் **கோதில் அன்பர்** - என முடித்துக் காட்டியதும் காண்க. **கிறிபட** என்ற அப்பர் சுவாமிகள் தேவாரத்திலும், **கைதவம்** ஐயர் மேலதே, அன்பரிடத்தன்று எனக் குறித்தபடியும் காண்க.

முழுதும் இன் அருள் - முன்பு " மன்னுமிருளை மதிதுரந்தவாறு " என்றபடி சிறிது சிறிதாக வெளிப்பட்டு நால்வகை நிலையின் வைத்து அருளியது. முன்னர் இதுவரை பெறக் கொடுத்ததும் இன்னருளேயாம். ஆயின் அவை திரோதான சத்தியின் உருவம் முழுதும் மாறுமல் நின்று வெகுட்சி முதலியனவாய் வெளிப்பட்டு, அச்சம் முதலியவற்றை விளைவு செய்தன. ஆயின் இங்குப் பெறக் கொடுத்தது அவ்வாறன்றி முழுதும் இன்னருளேயாய், அருட்சத்தி உருவமே யாய் நின்றது என்றபடி. கோதையுந் தாமுமாய் வெளிப்பட்டுக் காட்சிதந்த கோலத் திற் கேற்ப முழுதும் இன்னருளே பெறக் கொடுத்தனர் என்க. **முழுதும்** - காலத் தானும் இடத்தானுங் குறைபாடின்றி.

தம்முன் - தமது அருள் வியாபகத்திலே கலந்து தம் சந்நிதானத்திலே. **இருக்கும்** - எப்போதும் இடையறாது இருக்கின்ற. **அழிவில் வான் பதம்** - சிவபதம்.

எழுந்தருளினார் - வெளிப்பட்ட நிலையினின்றும் அருள்நிறைவுக்குள்ளே கலந் தருளினர். **ஐயர்** - பெருமையுடையவர். **ஐயர் கைதவம்** (521) என்ற இடத்துக் கூறியவையுங் காண்க. 47

549. நாதர் தந்திரு வருளினு னற்பெருந் துலையே
மீது கொண்டெழு விமானம தாகிமேற் செல்லக்
கோதி லன்பருங் குடும்பமுங் குறைவறக் கொடுத்த
வாதி மூர்த்தியா ருடன்சிவ புரியினை யணைந்தார். ௪௮

(இ - ள்) வெளிப்படை. நாதருடைய திருவருளினாலே நல்ல பெரிய அந்தத் துலையே அவர்களை மேலே கொண்டு எழுகின்ற விமானமாகி மேற்செல்லக், குற்ற மில்லாத அன்பராகிய நாயனாரும், அவரது மைந்தர் மனைவியாராகிய குடும்பத்தாரும் எஞ்ஞான்றும் குறைவுபடாத அழிவில் வான்பதங் கொடுத்த மூர்த்தியாருடனே சிவ புரியை அணைந்தனர்.

(வி - ரை) துலையே விமானமதாகி மேற்செல்ல - ஐயர் தம்முன் தொழுதிருக்கும் அழிவில்வான் பதம் கொடுத்தாராதலின், அப்பதத்திற் சேர்த்தற்குரியதாய் நாயனரும், மைந்தரும், மனைவியாரும் ஏறிய அந்தத் துலையே, விமானமாக ஆயிற்று. துலையே விமானமாகி என்றதனால் அதுவே விமான உருவம் பெற்று இவர்களை மேலெடுத்துச் சென்றது என்றதாம். திருவருளால் - தன முதலிய பல பொருள்களை ஒரு தட்டிலே கொண்டும் கோவணத் தட்டுக் கீழ் இறங்கியபடியே தாழ்ந்து நிற்கும் வலிமை பெற்றதும் திருவருட் செயலேயாம். பின்னர் இம்மூவரும் ஏறியவுடன் இருதட்டும் நேர் நின்றதும் திருவருளேயாம். இங்கு அத்துலையே விமானமாகி மேற்சென்றதும் திருவருளேயாம். ஆயின் முன்னர்த் திருவருள் வெளிப்பாடின்றி யிருந்து இங்கு அருட்சத்தியாகி நாயனரை அவர் குடும்பத்துடன் அழியா இன்பத்தில் வைத்தலின் திருவருளினல் என வெளிப்படக் கூறினர்.

குடும்பம் - மைந்தரும் மனைவியாரும். குறைவறக் கொடுத்த ஆதிமூர்த்தியார் - முழுதும் இன்னருள் தந்து முன் தொழுதிருக்கும் அழிவில் வான்பதம் கொடுத்த தனையே இங்குக் குறைவறக் கொடுத்த என்றார். குறைவறுதல் - எஞ்ஞான்றுங் கேடுறு திருத்தல். குறைவற - குறைவு - பிறவியாகிய குறை; அற - அறும்படியாக; கொடுத்த - அருள் கொடுத்த; என்றலுமாம் - அதாவது மல மற அருளிய என்பது. "இச்சழக்கினின் றேற்றுவார்" (542) என்றது காண்க.

ஆதிமூர்த்தியாருடன் சிவபுரியினை அணைந்தார் - பதங்கொடுத் தெழுந்தருளிய ஆதிமூர்த்தியினுடனே பதம் பெற்ற இவர்களும் சிவலோகமடைந்தனர்.

அழிவில் வான்பதம் - காலநீங்கிய நிலைமையாலே நித்தமாகிய சுத்தபுவனம். உடன் சிவபுரியினை யணைந்தார் என்றதனால் இறைவன் இவரை "வாராவுலக நெறியேற்றி" வைத்தார் என்பதாம். அந்தச் சுத்தமாகிய சிவபுரியே "நிலமிசை நீடு வாழ்வார்" என்ற வீட்டுலகமாம். 48

சுருக்கம்:—சோழநாட்டிலே பழையாறை என்பது சிறந்த பழம்பதி. அதில் வணிகர் குலத்தினில் வந்தவர் அமர்நீதியார் என்ற பெரியார். அவர் எந்நிலத்தினும் வருகின்ற பொன், மணி, துகில் முதலியவற்றிலே வாணிகம் செய்து அதனல் வளமிக்கு வாழ்ந்தனர். அவர் சிவன் கழலல்லாது வேறொன்றும் சிந்தை செய்யார்; சிவனடியார்களை அமுது செய்வித்து அவர்களுக்கு, அவரவர் கருத்தினைத் தாமே அறிந்து, வேண்டுமாறு கந்தை, கீள், உடை, கோவணம் என்பவற்றை உதவி வந்தனர். செல்வம் பெற்ற பயனை அடைவாராய்த் திருநல்லூருக்குச் சென்று அங்குத் திருவிழா அணி சேவித்தனர்; திருக்கூட்டமாகிய அன்பர்கள் அமுது செய்யும் திருமடஞ் சமைத்தனர். பழையாறையை விடுத்துத் திருநல்லூரிலே தாமும் சுற்றத்தாருமாகக் குடி புகுந்தனர். அங்குத் திருவிழாவைச் சேவித்துக் கொண்டும் அன்பர்களுக்கு இன்பமுடன் அமுதளித்தும் மகிழ்ந்துறைந்தனர்.

அந்நாட்களில் ஒரு நாள், தமது கோவணப் பெருமையைக் காட்டி இவர்க்கு நீடிய அருள் கொடுக்கும் பொருட்டுச் சிவபெருமான் மறையவர் குலத்து வந்த ஒரு பிரமசாரியின் வடிவந் தாங்கி வந்தனர். அவரது திருமுடியிலே பஞ்சசிகை இருந்தது. திருநெற்றியிலே திரிபுண்டரமாக அணிந்த சைவ வெண்டிருநீற்றின் ஒளி தழைத்தது. மெய்யிலே மான்றோலுடன் கூடிய பூணூலும், கையிற் பச்சைத் தருப்பையாலமைந்த பவித்திரமும் விளங்கின. இடையிலே சாத்திய முஞ்சிப் புல்லினற் றிரித்த அரைஞாணிலே தஞ்சமாகிய மறைக்கோவண ஆடை கட்டி யிருந்தது. இவ்வாறு கொண்ட கோலத்துடனே அடியவர்களுடைய நெஞ்சில் நீங்காத திருவடி மலர்கள் நிலந்தோயும்படி நடந்து வந்து தொண்டரது அன்பு நெறியை வெளிப்படுத்துவதற்காகத் தாம் ஏந்திய தண்டிலே இரண்டு கோவணங்களையும், திருநீற்றுப் பையினையும்,

தருப்பையையும் முடிந்து கொண்டு அமர்நீதியார் திருமடத்தைச் சேர்ந்தனர். அவர் முகமலர்ந்து "தேவரீர் இங்கு எழுந்தருள அடியேன் பெருந்தவஞ் செய்தனன்" என்று எதிர்கொள்ளப், பிரமசாரியார், "அடியார்களுக்கு நீர் மேன்மையாக உணவூட்டிக் கந்தையும், கீளும், உடைகளும், அழகிய வெண்கோவணங்களும் ஈகின்றது கேட்டு உம்மைக் காண வந்தனம்" என்றார். அமர்நீதியார் "இத்திருமடத்திலே மறைப் பெருந்தவர்கள் அமுது செய்ய அமைப்பதுமுண்டு. நீரும் இங்கு இன்று அமுது செய்தருள வேண்டும்" என்று பணிந்தனர். அவர் அதற்கிசைந்தவராகி, நான் காவிரி நீராடி வர, மழை வரினும் உதவும்பொருட்டு, இந்தக் காய்ந்த கோவணத்தை வாங்கி உம்மிடத்தில் வைத்திருந்து தருவீராக; ஓங்கு கோவணப் பெருமையை உள்ளபடி உமக்கு நான் சொல்ல வேண்டுவதில்லை" என்று சொல்லித் தமது கைத்தண்டின்மீதிருந்த கோவணங்கள் இரண்டினுள்ளொன்றை அவிழ்த்து அவர் கையிற்கொடுத்தார். அமர்நீதியார் அதை வாங்கிக்கொண்டு "விரைவிற்குளித்துத் தேவரீர் இங்கு எழுந்தருளுக" என்று வேண்ட, அவரும் காவிரி ஆடுதற் கென்று சென்றனர். அன்பரும் அவர் சொல்லியபடியே அக் கோவணத்தைத் தமது கோவணவகைகளிலன்றி வேறு தனியிடத்திற் றனிச் சேமத்தில் வைத்தனர்.

போயின வேதியர், விரைந்து அக்கோவணத்தை அவ்விடத்தினின்று போக்கிக், கங்கைநீர் தோய்வதோ? அன்றிக் காவிரிநீர் படிவதோ இவற்றுள் ஒன்றுசெய்தாரோ அறியோம்; மழைபொழிய நனைந்து வந்தணைந்தனர். அவர் வருமுன்னரே, அமுதாக்குவித்துக் காத்திருந்த நாயனார், அவரை எதிர் கொண்டிறைஞ்ச, அவர், "தண்டின் மேல் உள்ள கோவணம் ஈரமாயிற்று; ஆதலின் நான் தந்த கோவணத்தைக் கொண்டு வாரும்" என்றனர். ஐயர் செய்த மாறுபாட்டை அறியாத அன்பர் அதனைத் தாம் வைத்த இடத்தினிற்றேடிக்காணாது திகைத்தனர். தம் சரக்கில் எங்கும் நாடியும் கண்டிலர். மனைவியாரும் கிளைஞரும் தாமும் இடர்கூர்ந்தனர். வேறு ஒன்றும் நினைக்க மாட்டாதவராய், வேதியர்புனைவதற்கு வேறொரு கோவணங்கொண்டு அவர் முன் வந்து "அடிகளே! நீர்தந்த கோவணத்தை நான் வைத்த இடத்திற் கண்டிலேன். வேறிடத்தில் அதனை ஒளித்தார் பிறருமில்லை. அஃதொழிந்த படியை அறிந்திலேன். இது அதிசயம்! வேறு நல்ல கோவணங் கொண்டு வந்தேன். இது கிழித்த கோவணமன்று; நெய்தமைத்தது. ஈரத்தை மாற்ற இதனைச் சாத்தி எனது பிழை பொறுப்பீராக" என்று வணங்கினார். வேதியர், "அமர்நீதியாரே! நிலைமை மிக நன்று! நாள் இடையிற் கழிந்ததுமில்லை. இன்று நான் வைத்த கோவணத்தைக் கொண்டு, அதற்கெதிர் 'வேறொன்று கொள்க' என வுரைப்பதோ நீர்?. 'கோவணம் கொடுப்பன்' என்று நாளும் உலகில் நீர் சொல்லுவித்தது என் கோவணம் கொள்வது துணிந்தோ?" என்று மிகக் கடுங்கோபங் கொண்டார் போலக் கூறினார். அன்பர், முகம்புலர்ந்து "இஃது அடியேன் அறிய வந்ததன்று; சிறியேனது பெரும்பிழையினைப் பொறுத்தருளுக! இனித் தேவரீர் பணித்தபடி செய்வன்; நல்ல பட்டாடைகள் மணிகள் முதலியவற்றில் கோடி கொண்டருளுக" என்று மிகப் பயத்துடனே பலமுறை பணிந்தார். மறையவர் கோபந்தணிந்தார் போன்று காட்டி "எனக்கு உங்கள் மணியும் வேண்டுவதின்று; பொன்னும் வேண்டுவதின்று. எனது கோவணத்துக்கு நேர்பெறக் கோவணந் தருதலே அமையும்" என்றார். அன்பர் மகிழ்ந்து "அஃது தரும்பரிசுதான் யாது?" என்ன, மறையவர் "நாம் உடுத்தியிருக்கும் கோவணம் நிற்க, உம் கையில் நாம் தர நீர் கெடுத்ததாகச் சொல்லும் அந்தக் கோவணத்துக்கு நேர் இதுவாகும்" என்று சொல்லித் தண்டின் மேல் இருந்த அதனை அவிழ்த்து எடுத்து "இதற்குச் சமனாகிய எடை கோவணந் தாரும்" என்றனர். "மிக நன்று" என்று அன்பர் இசைந்து ஒரு துலை நாட்டினர். அதில் ஒரு தட்டில் மறையவர் தமது அந்த மற்றைக் கோவணத்தையிட்டனர். அன்பர் மற்றைத் தட்டில் தம் கையிலிருந்த கோவணத்தையிட்டனர். அது நேர்

நின்றிலது. அதுகண்டு அன்பர் அடியார்களுக்கு அளிக்கத் தாம் வைத்திருந்த கோவணங்களை எடுத்து ஒன்றொன்றாகப் பலவும் இடவும் தட்டு நேர்பெறாது நின்றது. அன்பர் அதிசயித்து அதன்மேலும் பல பட்டுக்களையும் பலவகைத் துகில்களையும் அநேக கோடிகள் இட்டனர். அப்போதும் மறையவர் தட்டுத் தாழ்ந்தே நின்றது.

நாயனாரது அன்பிடும் தட்டுக்கு முதல்வர் மட்டு நின்ற தட்டு அருளொடு தாழ்வது வழக்கே யன்றோ ?

பின்னர் அன்பர், மறையவரது இசைவுபெற்றுப் பொன் வெள்ளி மணிகள் முதலாகத் தமது தனங்கள் பலவும் இட்டனர். இடவும் அத்தட்டு மேலே நின்றொழிந்தது. இறைவனது நான்மறைப் பொருளாற் கோவணத்துக்கு இவ்வுலகில் அமர்நீதியார் தனமேயன்றிப் புவனம் யாவையும் நேர்பெறா என்பதும் அதற்கொரு புகழாமோ? இதுகண்ட அமர்நீதியார், தம்மதாக எண்ணியவற்றை எல்லாம் இட்டொழிந்தமையின், தாமும் தமது மனைவியாரும் மைந்தனும் துலையில் ஏறப்பெறவேண்டுமென்று மறையவரை இறைஞ்சினார். அவரும் இசைந்தனர். அவ்வாறே மூவரும் அத்தனித் துலையை வலங்கொண்டு நின்று "இறைவனது திருநீற்று மெய்யடிமைத் திறத்திலே நாங்கள் பிழைத்திலோம் என்பது உண்மையாயிருப்பின் இத்துலை நேர்நிற்க" என்று திருநல்லூரிறைவரை வணங்கித், திருவைந்தெழுத்தை ஓதித் தட்டின்மீதேறினார்கள். பிரானது கோவணமும் அன்பு குறைபடா அடிமைத் தொண்டும் ஒப்பாவன. **ஆதலின் அத்துலை நேர்நின்றது.** மண்ணவர் அதிசயித்துத் துதித்துத் தொழுதனர். விண்ணவர் கற்பகப் பூமழை பொழிந்தனர். மறையவராய் வந்த இறையவர் மறைந்து ஆகாயத்திலே தேவியாருந் தாருமாகக் காட்சி கொடுத்தனர். அது கண்டு துலைமேனின்ற அன்பரும் மைந்தரும் மனைவியாருந் துதித்தனர். அவர்கள் அருள் பெற்றுத் தம்மைத் தொழுதுகொண்டே யிருக்கும் அழிவில்லாத சிவபதம் கொடுத்து ஐயர் எழுந்தருளினார். நாயனாரும் மனைவியாரும் மைந்தரும் இறைவனது சிவபுரியினை அணைந்தனர்.

தலவிசேடம் :—(1) பழையாறை - இது இந்நாயனாரது அவதாரத் தலமாம். சந்திரன் பூசித்த தலம். இதில் வடக்கேயுள்ளது **பழையாறை வடதளி** என்ற தனித் தலம் ; மேற்கே உள்ளது **ஆறைமேற்றளி** என்ற தனித்தலம். வடதளியிலே சுவாமி சந்நிதியைச் சமணர் மறைத்தனர். அதனை அறிந்த அப்பர்சுவாமிகள் சுவாமியை நேரே வெளிப்படத் தரிசித்தாலன்றி அவ்விடம் விட்டுப்போவதில்லை என்று உண்ணாநோன்பு கிடந்தனர். இறைவர் ஆணையின்படி அரசன் அடையாளங் கண்டு சமணர் செய்திருந்த மறைப்புக்களை நீக்கிச் சுவாமியின் திருவுருவத்தை வெளிப்படுத்தி, அப்பர் சுவாமிகளைத் தரிசனம் செய்வித்துச், சமணர்குலந் தூரறுத்தான். இவ்வரலாறு அப்பர் சுவாமிகளது பழையாறை வடதளித்திருக்குறுந்தொகைப் பதிகத்திலும், அவர் புராணத்து 294 முதல் 300 வரையுள்ள திருப்பாட்டுக்களிலும் விரிவாய்க் காணப்படும். "அங்க மோதியோ **ராறை மேற்றளி** நின்றும் போந்துவந்து" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருப்புறம்பயத் தேவாரத்திலே மேற்றளித்தலத்தைப் பாடியிருத்தல் காண்க. வடதளியிற் காமதேனுவின் புத்திரி **விமலி** பூசித்தனராதலின் அம்மையார் **விமலநாயகி** எனப் பெயர் பெறுவர். மேற்றளியிற் காமதேனுவின் மற்றொரு புத்திரி **சபளி** பூசித்தனர். அங்கு அம்மையாரின் பெயர் **சபளநாயகி**. காமதேனுவின் இன்னொரு புத்திரி **நந்தினி** பூசித்த **முழையூர்** என்ற வைப்புத்தலமாகிய மாடக்கோயில் அடுத்துள்ளது.

தாரேச்சுரம் என்னும் தென்னிந்திய இருப்புப்பாதை நிலயத்தினின்று தென்மேற்கில் இரண்டு நாழியளவில் உள்ளது திருப்பட்டீச்சரம். அதனை யடைந்து கிழக்கே ஒரு நாழிகை சென்றால் **முழையூரை** அடையலாம். இதற்குக் கால்நாழிகை

யளவில் வடகுளியும், அதற்குத் தென்கிழக்கில் ஒரு நாழிகை யளவில் ஆற்றின்றென் கரையில் திருப்பழையாறையும் உள்ளன. ஆற்றுக்குப் பரிசு உண்டு.

(2) திருநல்லூர் - இங்குச் சிவலிங்கத் திருமேனி பொன்மேனியாய்ப் பஞ்ச வருணங்களோடு விளங்குகின்றது. பிருங்கி இருடி வண்டுருவமெடுத்துத் துளைத்துப் பூசித்த காரணத்தால் இவ்விலிங்கத் திருமேனியில் துளைகள் உள்ளன. அகத்தியருக் குக் காட்டிய திருக்கல்யாணக் கோலத் திருவுருவமும், அவர் பூசித்த அகத்தியலிங்கமும் கருப்பக்கிருகத்தில் உள்ளன. இக்காரணங்களால் சுவாமி பஞ்சவர்ணேசுவரர், கல்யாண சுந்தரேசுவரர் எனவும், அம்பிகை கல்யாண சுந்தரி எனவும் பெயர் பெறுவர். அப்பர் சுவாமிகள் இத்தலத் திருவிருத்தத்தில் "வடபாற் கயிலையுந் தென்பா னல்லூருந் தம் வாழ்பதியே", "தேற்றப் படத்திரு நல்லூ ரகத்தே சிவனிருந்தான்" எனப் பல வாறும் இத்தலச் சிறப்பைத் தேற்றம்பெற எடுத்துக்காட்டி யருளினர். இது அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் திருவடி தீட்சை செய்த தலம். விரிவு அவர் புராணம் 194 முதல் 198 வரையுள்ள திருப்பாட்டுக்களுள்ளும், அவரது இத்தலத் தேவாரங்களுள் ளும் காண்க. அமர்நீதி நாயனார் தமது தலமாகிய பழையாறையினின்றும் இங்குக் குடி புகுந்து திருமடஞ் சமைத்து அடியார்களுக்கு அமுதூட்டியும், திருவிழாச் சேவித்தும் வாழ்ந்தனர். அவரது திருமடம் கோவிலுக்கு வெளியே குளத்தின் தென்மேலைக்கரை யில் சிலமான நிலையில் இப்போதும் காணப்படுகின்றது. இதனைச் செப்பனிட்டுக் காத்துப் போற்றல் சைவர்களின் முக்கிய கடமையாம். இக்கோயில் மாடக்கோயில்களி லொன்று. இதற்குப் பதிகங்கள் ஐந்து.

தென்னிந்திய இருப்புப் பாதையிற் சுந்தரப்பெருமாள் கோயில் நிலயத்தினின் றும் தெற்கே மட்சாலையில் இரண்டு நாழிகையளவிலும், மழைக்காலமல்லாத காலங் களில் குறுக்கு வழியாய்ச் சென்றால் மூன்று ஆறுகளைக் கடந்து ஒரு நாழிகை யளவி லும் இதனை அடையலாம். கும்பகோணத்திலிருந்து மேற்குக் கற்சாலை வழியால் 6 நாழிகையளவிலும் அடையலாம். இவ்வழியில் மோட்டார் பஸ் வசதி உண்டு.

கற்பனை :—1. அடியார்க் கமுதளித்தலும், அவர் கருத்தறிந்து கந்தை, கீள், உடை, கோவணம் உதவுதலும் செல்வத்தால் வரும் பெரும் பயன்களாம்.

2. சிவபெருமானுடைய திருவிழா அணி சேவித்தலும், அடியார்க் கமுதளித்த லும் சிறந்த சிவபுண்ணியங்களாய்ப் பெரும்பயன் தருவன.

3. பொருளை நல்வழியில் ஈட்டும்வகை ஒன்று; அவ்வாறீட்டிய செல்வத்தின் பயனை அடையும்வகை மற்றொன்று. அமர்நீதியார், பழையாறையிலே சிவனடி மறவாத் தொண்டு செய்துகொண்டு நல்வழியிற் பெரும்பொருள் ஈட்டினார். பின்னர் அவ் வூரை விட்டுத் திருநல்லூரிற் குடிபுகுந்து திருவிழாச் சேவித்தும் அடியார்க்களித்தும் அப்பொருள் பெற்ற பயனையடைந்தனர். ஆனால் இந்நாள் இவ்வுலகத்து மக்கள் பெரும்பாலோரும் நல்வழி யிது - தீவழி யிது - என்னாது எவ்வாற்றானும் பொருளீட் டலே கருத்தாய்க் காலங்கழித்து இறந்தொழிகின்றனர். தாம் ஈட்டும் அச்செல்வப் பயனையடைய ஒரு சிறிதும் முயல்கின்றார்களில்லை. செல்வம் பெறுவார் அதன் உண்மைப் பயன்பெறாது கழிகின்றார்களே! இஃது என்ன அறியாமை! என்ன பாவம்!

4. இறைவனது திருவடிமலர்களைத் தம்முள் நீங்கா மனத்தினையுடைய அடியார் கள், வஞ்ச வல்வினைக் கறுப்பறுப்பார்.

5. கங்கையும் காவிரியும் ஆடுதலினும் அன்பர்களது அன்பென்னும் தூயநீரில் ஆடுதலில் மிக்க விருப்புடையவர் சிவபெருமான்.

6. அன்பர்தம் அன்புக்கு முதல்வர்தம் அருள் தாழ்வுறும்.

7. நான்மறைப் பொருணூற் கோவணத்திற்குப் புவனம் யாவையும் இடினும் நேர்நில்லா. ஆயின் அன்பிற் குறைபடா அடியவர் அடிமைத்தொண்டு ஒன்றுமே அதனுக்கு ஒப்பாகும்.

8. யாவர் யாவர் எவ்வெத் துறைகளினின்று இறைவனுக்குப் பொய்யிலா மெய்யடிமை செய்கின்றார்களோ அவ்வவர்க்கும் அவ்வத் துறைகளே இறைவனுலகம் புகுவிக்கும் வழிகளாக அமைவனவாம், இங்கு நாயனாரின் வாணிபத் தொழிற்கருவியாகிய துலையே அன்பினை அளந்து காட்டவும், இறுதியில் விமானமாகி அவரைச் சிவபுரியிற் செலுத்தவும் கருவியாயினமை காண்க.

9. தம்முடையனவென்று கொண்ட எல்லாப் பொருள்களையும் ஒப்புக் கொடுத்தும் தம்மை ஒப்புக் கொடாத அளவில் இறைவனருள் வெளிப்படாது. இங்கு நாயனார் தமது பொருட் சார்புகளை எல்லாம் தந்த பின்னும் நேர்நில்லாத துலைத்தட்டு, உயிர்ச் சார்பாகிய மனைவியாரையும் மகனாரையும் தம்மையும் இறைவன்பால் ஒப்புவித்த பின்னரே நேர்நின்று திருவருள் வெளிப்பட்டது காண்க.

10. இங்கு நாயனார் சரிதத்திற் கண்டபடியே இறைவன் எல்லா வுயிர்களையும் துலையில் நிறுத்துக் கண்டு, தட்டொக்கமாறி, அன்பு மேலீட்டால் அவை ஒத்த பின்னரே தன்னுலகடையச் செய்வன். இஃது அவன் செய்யும் வாணிபத்தின் உள்ளுறை.

11. புண்ணியச் சிவதலங்களிலே திருமடங் கட்டுவித்தலும், புண்ணிய காலங்களில் அன்போடும் அடியார்களுக்கு அமுது துணி முதலியன அளித்தலும் பெருஞ் சிவ புண்ணியங்களாம். இவை சிவபெருமானிடத்துப் பதிந்த அன்புடனே செய்யப் பெறுதல் வேண்டும். இவ்வாறு செய்யும் பேறும் சிவபெருமானருளினாலே வருவதாம். சிவனடியார்களிடத் தன்பில்லாதார் சிவனிடத் தன்புசெய்தல் பயனில்லாதது. இவ்வுண்மைகளைச் சிவாகமங்களும், சிவதருமோத்தரம், சிவபுண்ணியத் தெளிவு, வாயு சங்கிதை முதலிய சாத்திரங்களும் வலியுறுத்தும்.

12. தம்மிடம் ஒப்புவித்தது எந்தச் சிறு பொருளாயினும் அதனைப் பாதுகாத்துத், திரும்ப, ஒப்புவித்தவர்பால் ஒப்புவித்தல் யாவர்க்கும் ஒப்ப அமைந்த கடமையாம். ஒப்புவித்த பொருள் எதுவேயாயினும் அதனை அபகரித்தல் - கெடுத்தல் - போக்குதல் மிகவும் தகாத செயலும் பெரும்பிழையுமாம். அப்பிழை நேரின் எதனைக் கொடுத்தேனும் அப்பிழையினை ஈடுசெய்து போக்கிக் கொள்ளுதல் உயர்ந்தோர் செயல். இங்கு ஒரு கோவணத்திற்காக நாயனார் தமது அளவற்ற செல்வ முழுவதையுமே யன்றித் தம்மையும் ஒப்புக் கொடுத்தமை காண்க. ஒப்புவித்த பொருளை மாறுபடுத்தல், அபகரித்தல் முதலிய இந்நாட் தண்டச் சட்டத்தினும் பெருங்குற்றங்களாக விதிக்கப்படுவன.

அமர்நீதி நாயனார் புராணம் முற்றும்.

உ
சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

தொகை

ஆரூரா ஞரூரி லம்மானுக் காளே.—திருத்தொண்டத் தொகை.

வகை

தொழுதும் வணங்கியு மாலயன் றேடருஞ் சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணங் காட்டி "யெனக்குன்குடி
முழுது மடிமை; வந் தாட்செ!" யெனப்பெற் றவன்முரறே
ளுழுகு மலரினற் றாரெம் பிரானம்பி யாரூரனே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

விரி

550. மலர்மிசை யயனு மாலுங் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூ ராவணப் பழைமை காட்டி
யுலகுய்ய வாண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும். சுசுக

துதி - இனி, நிறுத்த முறையானே, "தில்லைவாழந்தணர்" என்று தொடங்கும் தொகைப் பாசுரத்தினுள், அமர்நீதியார் புராணத்துக் கடுத்து, "ஆரூரன் ஆரூரில் அம் மானுக்கு ஆளே" என்ற பகுதியிற் போந்த, ஆரூர்ப்பெருமானுக்கு நம்பிகள் ஆளா யின சரிதப்பகுதியினைக் கூறத் தொடங்கிய ஆசிரியர் அதனை நம்பிகளது துதியாக வைத்துக் கூறுகின்றார். மேலும் அவ்வச் சருக்க இறுதியில் துதிகளாக வருவனவும் இவ்வாறே கண்டுகொள்க. இதுவே திருத்தொண்டத்தொகைக்கு மகுடமென்ப.

தொகை:—திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் அம்மானுகிய இறைவனுக்குஆரூ ரன் அடிமையே. ஆரூர் இறைவனுக்கு ஆளாகிய ஆரூரன் என்கின்ற யான், தில்லைவா ழந்தணர் முதலியோராக முன் சொல்லப்பட்ட அடியார்களுக்குத் தனித்தனி அடியே னுவேன் என இப்பாட்டைத் தொடர்புபடுத்தி முடித்துக் கொள்க. தில்லைவாழந்த ணர்தம்மடியார்க்கும், இப்பாட்டிற் சொல்லிய ஏனையடியார்க்கும் அடியேனுகிய யான் ஆரூரில் அம்மானுக்குமாளே யாவன் என முடித்தலுமாம். இப்பொருட்கு எச்சவும்மை விரிக்க. எங்ஙனமாயினும் அடியார்களும் ஆண்டானும் ஒன்றுபோலவே என்னை அடிமை கொள்பவர்கள் என்பது பொருளாகக் கொள்க. இறைவனுக்காளாந் தன்மையுடை யார்க்கே அவனது அடியவர்க்கு ஆளாந்தன்மை ஆகும் என்பது சாத்திர முடிபு.

ஆரூரன் - நம்பிகளது பிள்ளைத்திருநாமம் (150). **ஆரூரில் அம்மான்** - திருவா ரூரில் எழுந்தருளிய எனது தலைவன். அவர்க்குத் தமக்குமுள்ள முன்னைத் தொடர் பும், இம்மைத் தொடர்பும், பிறவுங் குறிக்க **அம்மான்** என்றார். **ஆளே** - இறைவன் நம்பிகளை "இவன் எனக்கு **ஆள்**" என்று வழக்கிட்டு **ஆளாகக்** கொண்டான்; ஆத லின் அது குறிக்க **ஆளே** என்றார். **ஆள்**-ஏவலாள். "**ஆளா**யிருக்குமடியார்", "உனக்கு **ஆளாய்**", "எம்பெருமாற் **காளல்**லேனெனலாமே", "**ஆட்**செய வஞ்சுதுமே" (நம்பிகள் தேவாரம்), தடுத்து **ஆட்**கொண்ட புராணம் - முதலியவை காண்க. **ஆளே** - ஏகாரம் தேற்றம். இப்பொருள்களை வகைநூலும் விரிநூலும் விரித்தது காண்க.

வகை:—மேலே கண்ட தொகைக்கு வகை செய்தவாறு. **தொழுதும் வணங்கியும்** - தொழுதல் மனத்தாலும், வணங்குதல் காயத்தாலும் இயல்வன. இவை கூறவே இனம்பற்றி வாக்கின் தொழிலாகிய துதித்தலும் உடன் கொள்ளப்படும். **தேடரும் சோதி**-சோதி உருவினனாகிய இறைவன். "மாலயன்பா விருளா யிருக்கு மொளி" என்பது திருக்கோவை (எஅ). **தேடரும்**-தேடிக் காணற்கரிய. **சோதி சென்று**-இருவர் தேவர் தம்மைத் தேடற்கரியராயினும் இவரைத் தாம் தேடிச் சென்று. **ஆங்கு எழுதும் தமிழ்ப்பழ ஆவணம்** - அவ்விடத்தே அப்போதே எழுதியதே யாயினும் பழைமை பொருந்திய ஓலை.பழைமையாய்க் காட்டியது - பழஞ் செய்தியைக் குறித்தது என இரு வகையுங் குறித்தது. "என்றுயோ டென்னப்ப னேழேழ் பிறவியும், அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்" - **திருமந்திரம்**. இதனையே விரிநூலினுள், "ஆவணப் பழைமை காட்டி" என்றது காண்க. தமிழில் எழுதும் பழ ஆவணம் என்க. இவ்வெழுத்தின் விரிவு 205-ல் காண்க. உன் குடி முழுதும் எனக்கு அடிமை; ஆதலின் நீயும் வந்து ஆட்செய்க எனக் கூட்டுக. "மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும் வேதியர் குலம்" (149) "வழித்தொண்டு" (205) முதலியவை காண்க. **எனப்பெற்றவன்** - என்று சொல்லும் பேற்றினை முன்னர்த் தாம் வேண்டிப் பெற்றவன். **ஆளே** - என முதனூல் பேசிற்று. ஆளாயினவகை இது என வழிநூல் வகுத்தபடி. **முரல் தேன் ஒழுகும் மலர்** - முரலும் தேனாகிய வண்டுகள் மொய்க்கின்ற மலர். **முரல்** என்பது, உணவாந் தேன் என்ற பொருளை நீக்கி ஊதும் தேன் என்ற வண்டுகளைக் குறிப்பதனால் பிறிதினியைபு நீக்கிய விசேடணம். **மலரின் நற்றார்** - **மலர்** - சிறப்பு நோக்கித் தாமரை குறித்தது. தாமரை மாலை அந்தணர்க்குரிய வடையாள மாலை. **ஒழுகுதல்** ஈண்டு ஒழுங்குபட மொய்த்தல் என்ற பொருளில் வந்தது. **எம்பிரான் நம்பி** - நம்பியாண்டார் நம்பிகள் இங்கு நம்பி ஆரூரரை எம்பிரான் நம்பி என வழங்கும் உரிமைப்பாடு நோக்குக. **ஆரூரனே** - ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம். சோதி - சென்று - காட்டி, "அடிமை - ஆட்செய்" எனப் பெற்றவன் - ஆரூரனே என முடிக்க.

550. (இ - ள்) வெளிப்படை. தாமரையில் இருக்கும் பிரமதேவனும் விட்டுணு மூர்த்தியும் காண்பதற் கரியவராகும் வள்ளலாராகிய சிவபெருமான், பலரும் புகழும் திருவெண்ணெய் நல்லூரிலே ஓலையின் பழைமையைக் காட்டி உலகமுய்ய ஆண்டு கொள்ளப்பெற்றவராகிய நம்பியாரூரருடைய பாதங்களைத் தியானித்துத் தலையின் மேல் வைத்துக்கொண்டு அதன் கீழ் வாழ்கின்ற தலைமையே நமது தலைமையாவதாம்.

(வி - ரை) **காணுதற்கு அரிய வள்ளல்** - **காட்டி** - பிரம விட்டுணுக்கள் யாம் காண்போம் என்று காணலுற்றார்க்கு அரியவராகியும், தாமே கருணையினாலே வெளிப்பட எழுந்தருளி வந்து பலருமறியக் காட்டினார் என்ற நயங் காண்க. அவர் காட்டக் காண்பதேயன்றி உயிர்கள் காண வலியற்றன என்பது. "மாலுமிரு வர்க்குமரி யாரொருவர் வந்தார்" (174) என முன்னர்க் கூறியது காண்க. **வள்ளல்** - தாமே வலிய வந்து காட்டியதும், அவர் மறுப்பவும் விடாது பற்றி வழக்கிட்டு ஆட்கொண்டதும் வள்ளற்றன்மை குறித்தன. இதுபற்றித் தடுத்தாட்கொண்ட புராணத்தில் (174) முன்னர் உரைத்தவையும் காண்க. "பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர் தாம்பல ரேம்பலித் திருக்க, வென்னெடுங் கோயி னெஞ்சுவீற் றிருந்த வெளிமை" என்றது **கருவூர்த்தேவர்** (தஞ்சை இராசராசேச்சுரம் - 8) **திருவிசைப்பா**.

பலர் புகழ் வெண்ணெய் நல்லூர் - **பலர் புகழ்** - அறிவோர் பலரும். பலரும் - உம்மை தொக்கது. இதனை முதனிலைத் தீபமாக வைத்துப், பலர் புகழ் ஆவணம் என்றும், பலர் புகழ் பழைமை என்றும் கூட்டி யுரைத்தலுமாம். **ஆவணப் பழைமை காட்டி** - "அதன் தொன்மை நோக்கி" (204) என்றது காண்க.

உலகுய்ய ஆண்டுகொள்ளப் பெற்றவர் - உலகமுய்யும் பொருட்டு. "உலகுய்ய மறையளித்த" (345), "உலகேத்த" (348), "தேசமுய்ய" (சண்டேசர் புராணம்-60) முதலிய இடங்களிற் பெருமான் நம்பிகளை ஆட்கொண்டதனால் உலகமுய்ந்த வகை விரிக்கப்பட்டது. ஆட்செய் எனப் பெற்றவன் என்ற வகைநூல் இங்ஙனம் விரிந்தது. **ஆண்டுகொள்ள** - ஆண்டருள் செய் (38), அடிமை கொள்வான் (174) முதலியவை காண்க. **உன்னி-வைத்து** என்பன மனம் காயம் என்றவற்றால் வணக்கங்களாம்.

இப்பாட்டால் வாக்கின்றொழில் பெறப்படுதலின் அதனை வேறுகூறாராயினர். **தலைமிசை வைத்தல்** - தலைமேற் சூடுதல். தலைக்குமேல் உயர்ந்த அங்கம் இல்லை. பாதத்தை உயர்ந்ததனினும் உயர்ந்ததாக வைப்போம் என்றார். "தலைக்கணி யாக்குவாம்" என்றார் சிவப்பிரகாச சுவாமிகள். **வாழும்** - வாழ்வு பெறும். **தலைமை** - தலையின் றன்மை, முதன்மை என இரு பொருளும் பெறவைத்த அழகு காண்க. பாதந் தலையில் வைத்த அடிமையே எமக்கு முதன்மையாம். பிறர் எல்லாம் தாந்தாம் முதன்மை பெறுதலை வேண்டுவர். நாம் அங்ஙனமன்றிப் பாதந் தலைவைத்த வாழ்வினையே நாம் பெற்ற தலைமை யென்போம். "உன்பாதந் தலைவைத்த உத்தமர்கள்" - **திருவிருத்தம்**. கால்+தலை=காறலை, தாள்+தலை=தாடலை என்ற சொற்சந்திகளைத் திருவடி நிறைவிற்குள் உயிர் தன்போதஞ் சிவபோகமாக மாறிக் கலந்து நிற்றற்கு உவமித்துக் கூறும் ஞான சாத்திர மரபும் இங்கு வைத்துக் காண்க. நம்பிகள் **ஆளே** என்றும், **அடியேன்** என்றும் தமது அடிமைத் திறத்தினைத் தொகைநூலில் நாட்டினர்; நாம் அவரது அடியின் கீழ் முடி வைத்தலையே தலைமை என்போம்; அது அடிமையாகாது என்ற சுவையுங் காண்க. "தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே" என்பது பதினொராந் திருமுறை.

அம்மானுக்காளே என்ற தொகைநூற் பொருளை வகைநூல் வகுத்த அதனையே, மேலும் விரிநூலுள் விரித்துக் காட்டினார். இப்பொருளே திருமலைச் சருக்கத்தினும் இச்சருக்கத்தினும் பேசப்பட்ட பொருளின் சாரமாயினமையும், இதுவரையும் போந்த நம்பிகளது சரிதப்பகுதி யாயினமையும் காண்க. இவ்வாறே பின்னரும் நம்பிகளது துதிகளாக அவரது சரிதத்தின் அவ்வச் சருக்கத்திற் பெறக்கூடிய பொருள்களை வைத்து இம்மகுடப் பொருளை விரித்துக் காட்டிச் செல்கின்றமை அங்கங்கும் உய்த்துணர்ந்து கொள்க. ஆயின், **அம்மானுக்காளே** என்றதொரு சொற்றொடராகிய மகுடமே சரிதத்தின் பல பகுதிகளாக விரியுமாறெவ்வாறெனின், "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதி லாத்திருத் தொண்டத் தொகைதர" என்று குறித்தபடி, "ஆளா"யின, "அடியே"னாகிய, தன்மைகளினாலே உலகை உய்விக்கும் சரிதப் பகுதிகள் நிகழ்ந்தனவாம் என்க. இச்சரிதங்கள் ஆளாயின தன் மேல்விளைவுகளாதலின் **ஆளே**, "அடியேன்" என்ற முதனூலாட்சியின் விரிவுகளாயினமையும் கண்டுகொள்க.

தில்லைவாழந்தணர்சருக்கம் முற்றிற்று.

தில்லைவாழந்தணர் சருக்கம்

சரித ஆராய்ச்சியுரை

[இராவ்சாகிபு திரு. C. M. இராமச்சந்திர செட்டியார், B.A., B.L. உதவிய குறிப்புக்கள்]

1. தில்லைவாழந்தணர்

இவர்களைத் தில்லை **மூவாயிரவர்** என எண் கொடுத்து நூல்கள் பேசும். "தெய்வ வேதியர்களானார் **மும்மையாயிரவர்**" (357) என்பது புராணம். வைணவ சமயத்து ஆழ்வார்களில் ஒருவரான சேர மன்னர் குலசேகராழ்வாரும் இவர்களைத், "தில்லை நகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள், **அந்தணர்களொருமூவா யிரவ**ரேத்த" என்று எடுத்துப் பாடியிருக்கின்றார். "முட்டாத முச்சந்தி **மூவா யிரவர்க்கு மூர்த்தி**யென்னப் பட்டானை" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். எனவே, இவ்விருவர் காலத்துக்கு முன்னரே தில்லை மூவாயிரவர் என்ற எண்ணாற் குறித்த பெருமக்கள் வழிபாடு செய்துவந்தனர் என்றறிகின்றோம். "**மூவாயிரவரோடும்** அனையா விளையாடு மம்பலம்"—(**புருடோத்தமநம்பி**), "முத்தீயாளர் நான்மறையர் **மூவாயிரவர்**"—**கண்டராதித்தர்** முதலிய திருவிசைப்பாக்களுங் காண்க.

இதுபோலவே மூவாயிர அந்தணர்கள், "சேரர் மலைநாட் டோர்களின்முன் சிறந்த மூதூர்" என்று சேக்கிழார் அருளிய **திருச்செங்குன்றூரிலும்** இருந்தார்கள், "மனக்கொள்சீர் **மூவாயிரவர்** வண்சிவனு மயனுந் தானு மொப்பார்வாழ், கனக்கொள் சீர் மாடத் **திருச்செங்குன்றூரில்**" எனவும், "அமர்ந்த தண்பழனத் **திருச்செங்குன்றூரில்**, திருச்சிற்றாற்றங்கரையானை, அமர்ந்தசீர் **மூவாயிரவர் வேதியர்கள்** தம்பதி அவனி தேவர்வாழ்" எனவும் வரும் நம்மாழ்வார் பாசுரங்கள் காண்க. (மூவாயிரவர் என்ற எண் குறியாவிடினும்) இதனையே ஆசிரியர் சேக்கிழாரும் "மன்னுங் குலத்தின் **மாமறை நூல் மரபிற் பெரியோர்** வாழ்பதியாம்" என்று சிறப்பித்தனர். ஆயிரவர் என்ற தொகைக் குறிப்புக்கொண்ட வழக்கு நம்நாட்டில் முன்காலத்திலிருந்து நிகழ்ந்துவருவதாம். பிராமணர்களில் "எண்ணாயிரவர்" (அஷ்ட சகஸ்ரம்) என்றதொரு வகுப்பும், ஆயிர வைசியர், 12-ம் செட்டி, 500-ம் செட்டி என்ற வகுப்புக்களும், இவைபோல் பலவையும் இப்போதும் வழங்கி வருதல் காண்க.*

திருக்கழுக்குன்றத்துச் சாசனம் ஒன்றில் குலோத்துங்கச் சோழன் ஆட்சியில் இருபத்தைந்தாவது ஆண்டில் "**தில்லை மூவாயிரவர் நம்பி**" என்பானும்,

---

*இதுபோலவே திருவீழிமிழலையில் ஐந்நூற்றுவர் அந்தணர்கள் வழிவழியாக இருந்து வழிபாடியற்றினர் என்பர். "**ஐந்நூற் றந்தண**ரேத்து, மெண்ணில்பல் கோடி குணத்தரோர் வீழி யிவர்" என்பது சேந்தனார் திருவிசைப்பா. திருநின்றியூரில் முந்நூற்றுவர் அந்தணர் வழிபாடியற்றினர் என்பது "மொய்த்தசீர் முந்நூற் றறுபதுவேலி **மூன்றுநூறு வேதிய**ரொடு நுனக்கு, ஒத்த பொன்மணிக் கலசங்க ளேந்தி ஓங்குநின்றியூரென் றுனக்களிப்ப" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தா லறியலாம். "நற்குடி நாற்பத் தெண்ணாயிரத்து வந்த" என்று திருத்தொண்டர் புராண வரலாற்றில் உமாபதிசிவாசாரியர் குறித்ததும் காண்க. சூரபதுமனுக்கு மூவாயிரவர் என்ற தொகையாரான பிள்ளைகள் இருந்தார்கள் என்பது கந்தபுராண வரலாறு.

அவனது சகோதரன் இராமபட்டனும் அவ்வாலயத்திற்கு நூறு காசுக்கு வாங்கின நாலு பதக நிலத்தைத் தானஞ் செய்தார்கள் என்று கண்டிருக்கிறது. மேலும் மதுராந்தகத்துச் சாசனமொன்றில் சீராளன் கருணாகரன் என்ற **தில்லை மூவாயிரவ** மங்களோத்துமன் என்னும் ஒரு மத்தியஸ்தன் பெயரை இராஜராஜர் I காலத்திலேயே காண்கின்றோம். ஆதலின் இவ்வரசர்கள் காலத்திலே தில்லைமூவாயிரவர் எனும் பெயரை மக்கள் இட்டு வழங்கினர் என்று தெரிகிறது. வட ஆறுகாடு ஜில்லா செய்யாறு தாலூகா பிரமதேசத்துச் சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தில் மூன்று கல்வெட்டுக்களிற் பாண்டியன் தலைகொண்ட பார்த்தி வேந்திரவர்மன் என்ற அரசன் காலத்தில் திருவேகம்பபுரத்து ராஜமல்ல சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த திரை ராஜிய கடிகா மத்தியஸ்தன் **மூவாயிரவன்** என்ற ஒருவன் அவ்வாலயத்தில் அபிஷேகாதிகளைச் செய்யப் பொன்தானம் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. விருத்தாசலம் தாலூகா பெண்ணாகடத்தில் பிரளயகாலேஸ்வரர் ஆலயத்துச் சுவரில் "மூவாயிரவன்கோல்" என்றதொரு நீட்டலளவையைப்பற்றிக் கல்வெட்டில் பேசப்பட்டிருக்கின்றது. எனவே இப்பெயர் அளவைகளுக்கு வழங்கியதென்றும் அறிகின்றோம். அப்பூதி நாயனார் சரிதத்தில் அவர் தம் அளவைகள் நிறைகோல் முதலியவற்றிற்கும் தம்மால் பத்தி செய்யப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் பெயரை இட்டு வழங்கியதை இங்கு நினைவு கூர்க.

2. திருநீலகண்ட நாயனார்

இந்நாயனார் பெயரை மக்கள் இட்டு வழங்கினர். இவர் பெயரால் மடங்கள் அமைத்தனர். இவரது பெருமை தமிழ்நாடு முழுமையும் பழங்காலந்தொட்டுப் பரவி வந்தது. பழனியில் கிடைத்த ஒரு தாமிர சாசனத்தின்படி கலி - 4768 - சாலிவாகனசகம் 1438 - பிலவங்க ஆண்டில் பழனி நகரத்தில் **திருநீலகண்டர் மடம்** என்ற மடம் கட்டப்பெற்றதென்றும் அதனை நடத்தச் சில குறிப்பிட்ட தொகைகள் கொடுக்கப்பட்டன என்றும் தெரிகிறது. (இதிற் குறித்த ஆண்டு சரியாக இல்லை.) சேரமாதேவியில் அம்மநாத சுவாமி ஆலயத்தில் பரகேசரிவர்மன் ராஜேந்திர சோழ தேவனது ஆறுவது ஆண்டு வட்டெழுத்துச் சாசனப்படி ராஜராஜ மண்டலத்து முல்லை நாட்டுப் பிரமதேயமாகிய நிகரிலி சதுர்வேதிமங்கலத்துச் சபையார்கள், நகரம் ராஜேந்திர சோழபுரத்து மன்னீர்க்காடன் என்ற **திருநீலகண்ட செட்டி** என்ற வணிகனுக்குக் காராண்மைப் பட்டயம் கொடுத்ததாகவும் அவன் கயிலாயமுடையார் ஆலயத்துக்கு ஒரு வேலிக்கு உழவக் காசு ஆக இரண்டு காசுகள் கொடுக்க வேண்டுமென்றும் கண்டிருக்கிறது. இது மிகப் பழைய சாசனம்.

3. இயற்பகை நாயனார்

இப்பெயர் காரணப் பெயர் என்றும், இது இவரது இயற்பெயரன்று என்றும் தோன்றுகின்றது. எனினும், மற்றை நாயன்மார் பெயர்களை மக்கள் இட்டு வழங்கியது போலவே இப்பெயரையும் வழங்கினர். இந்நாயன்மார் சரிதங்களில் மக்கள் மிக ஈடுபட்டு வந்தனர் எனவும், அவை உலக வழக்கில் மிகப் பயின்று வந்தன எனவும் அறியலாம். தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலூகா திருப்புறம்பயத்தில் சாட்சீசுவரமுடையார் ஆலயத்தில் உள்ளதொரு கல்வெட்டில் அரிவாட்டாயன், திருத்தொண்டன், வன்றொண்டன், சண்டேசுவரன், **இயற்பகை**, கோட்புலியார், **விறன்மிண்டன்**, **அணுக்கநம்பி** முதலிய பேருடையார்கள் திருப்புறம்பய முடையாருக்கு ஐப்பசி, பங்குனித் திருவிழாக்களுக்கும், திருவேட்டை, தீர்த்தம் இந்நாட்களுக்கும் நைவேத்தியங்களுக்காகச் சில நிலங்களைத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது.

4. இளையான்குடி மாறநாயனார் * * * * * * * * *

5. மெய்ப்பொருணாயனார்

இந்நாயனார் முத்தநாதன் என்ற தமது பகைவனைத் தம் காவலாளன் தத்தன் வெட்ட வந்தபோது " **தத்தா ! நமர் !** எனத் தடுத்து வீழ்ந்தார் " என்று புராணத்துட் காண்கின்றோம். இம்மொழிகள் நாயனார் சரிதத்தோடு பரவி வழங்கி யிருத்தல் வேண்டும். தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜேந்திர சோழன் காலத்து மூன்றாவது ஆண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் இம்மொழிகளைக் காண்கின்றோம். "கோபரகேசரி வர்மனான இராஜேந்திர சோழ தேவருக்கு யாண்டு மூன்றாவது உடையார் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரம் உடையாருக்கு ஸ்ரீ காரியம் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்த சூரியனான தென்னவன்மூவேந்த வேளான் யாண்டு மூன்றாவதுவரை செய்வித்த செப்புப் பிரதிமங்கள்....................பாதாதி கேசாந்தம் இருப்பதிற்று விரல் உசரத்து இரண்டு கையுடையவரான கனமாகச் செய்த " **தத்தா நமரேகாண்** " என்ற மிலா டுடையார் ஒருவர்......" என்பது சாசனம். சரித்திர வழக்கிலும், அதை ஒட்டிச் சாசனப் பதிவிலும், அதை ஒட்டிப் புராணத்திலும் எத்துணைத் திருத்தமாக வாக்குக்களை எடுத்தாண்டனர் என்பது விளங்கும்.

தஞ்சைத் திருநாகேசுவரத்துக் கல்வெட்டு ஒன்றில் "மிலாடுடையார் பள்ளி " என்ற பெயரும், திருக்கோவலூருக்கடுத்த கீழூரில் " கயிரூர் பெருமானார் என்ற மிலாடுடையார் " என்ற பெயரும் காணப்படுகின்றன.

தஞ்சை திருப்பழனத்தில் பரகேசரிவர்மன் என்ற சோழனது 11-வது ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் " மலாடுடையார் சித்தவடத் தடிகள் " என்ற பெயர் வருகின்றது. நடுநாட்டில் திருமுனைப்பாடிநாடு, ராஜராஜ வளநாட்டுத் திருமுனைப்பாடிநாடு, மலை மண்டலத்து ஜனநாத வளநாடு என்ற மலைநாடு முதலிய நாட்டின் பெயர்கள் பலவும் கிடைக்கின்றன. முனையதரையன் திருவரங்கமுடையான் மலையராயன், முனைய தரையன் திருவரங்கமுடையான் ராஜாதிராஜ மலையராயன், முனையதரையன் மகன் திருவரங்கமுடையான் ராஜாதிராஜ மலையரையன் என்பனவாதி, இந்நாட்டு அரசர் பெயர் பலவும் அறிகின்றோம்.

6. விறன்மிண்டர்

இவர் அவதரித்த மலைநாட்டுச் செங்குன்றூரில் தில்லையிற்போலவே மூவாயிரம் என்ற எண்பெற்ற அந்தணர்கள் வசித்து வந்தனர் என்று முன்னரே குறிப்பிட்டோம். மேலே இயற்பகை நாயனார் பெயர் குறித்த திருப்புறம்பயக் கல்வெட்டில் இந்நாயனார் பெயரையும் மக்கள் இட்டு வழங்கிய செய்தி கண்டோம். இவர் பெயர் " அணுக்கநம்பி " என்றதனுடன் சேர்த்திருப்பதும் குறிக்க.

7. அமர்நீதி நாயனார்

திருவொற்றியூர்க் கோவிலில் விஜயகம்ப விக்கிரமவர்மன் என்ற கங்கபல்லவனுடைய 9-வது நூற்றாண்டுக் கல்வெட்டில் சோழநாட்டு இந்தளூர் நாட்டில் கஞ்சனூரில் இருந்த கஞ்சன் **அமர்நீதி** என்ற பல்லவதரையன் நந்தா விளக்கு வைக்கப் பொன் உதவினதாகக் கண்டிருக்கிறது. இது சோழர்கள் ஆதிக்கத்திற்கு முற்பட்டதான மிகப் பழங்காலச் சாசனம். இதனால் இந்நாயனார் பெயரை மிகப் பழங்காலத்திலிருந்தே மக்கள் இட்டு வழங்கினார்கள் என்று தெரிகிறது. அப்பர் சுவாமிகள் காலத்திற்கு முன்னரே இந்நாயனார் சரிதம் உலகப் பிரசித்தமாய் வழங்கி வந்ததென்று அவர் தேவாரத்திலிருந்து தெரிகின்றோம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பாட்டு முதற்குறிப்பு

பாட்டு	வரிசை எண்	பக்க எண்
அ		
அகலிடத்து	359	௪௪௩
அகிலகாரணர்	139	௧௭௧
அகில்விரை	162	௨௦௦
அக்குலப்பதி	405	௪௯௮
அங்கணரை	236	௨௭௨
அங்கணுளன்	39	௪௫
அங்கணேரொளி	26	௩௪
அங்கண்மாமறை	245	௨௮௫
அங்குமவன்	233	௨௬௮
அங்குமுன்னரே	33	௪௦
அங்குரைக்கென்	90	௧௦௭
அடிபணிந்த	133	௧௫௯
அடியவர்க்கடிய	336	௪௦௩
அடுத்துமேன்	312	௩௭௭
அண்டர்பூமழை	547	௬௮௪
அணிசிலம்படிக	284	௩௪௩
அண்ணலவன்	291	௩௫௫
அண்ணல்வீற்	12	௧௮
அதுகண்டு	231	௨௬௬
அத்தர்தந்த	25	௩௩
அத்தர்வேண்டி	140	௧௭௨
அத்தர்முன்பு	524	௬௫௮
அத்திருப்பதியி	42	௪௭
அத்திறமறி	484	௫௩௯
அந்தணனு	391	௪௭௭
அந்தணரவை	198	௨௨௮
அந்தணர்கூற	207	௨௩௬
அந்தணுளரு	40	௪௬
அந்தமில்சீ	34	௪௦
அந்தமெய்	49	௫௭
அந்தரத்தமரர்	330	௩௯௬
அந்திவான்மதி	27	௩௫
அந்நிலையவரை	399	௪௮௫
அந்நிலையாரூர	232	௨௬௭
அந்நிலையே	132	௧௫௭
அப்பொற்பதி	494	௬௧௮
அம்புனிற்று	108	௧௨௯
அம்பொனீடிய	440	௫௪௫
அயலறியாத	403	௪௯௧
அயலோர்தவ	223	௨௫௫
அரசியலாய	488	௬௦௩
அரசுகொள்	76	௯௦
அரசியனெறி	468	௫௭௬
அரந்தைசெய்	307	௩௭௧
அரந்தைதீர்க்கு	138	௧௬௮
அரம்பையர்	19	௨௫
அரிதருசெங்நெற்	73	௮௭
அருங்கடி	168	௨௦௩
அருந்தவத்தொ	395	௪௮௧
அருமறைநாவ	205	௨௩௪
அருமறைமுறை	192	௨௨௩
அருளினீர்மை	9	௧௩
அலறுபேராவை	110	௧௩௧
அவர்தங்கண்	363	௪௪௮
அவ்வண்ணந்	124	௧௪௭
அவ்வளவி	318	௩௮௨
அவ்வழியவர்க	485	௬௦௦
அவ்வாறு	297	௩௬௦
அவ்வுரைகேட்ட	117	௧௪௦
அவ்வுரையவை	201	௨௩௦
அவ்வுரையில்	125	௧௪௭
அளவிலாத	5	௧௦
அளவிலாமரபி	362	௪௪௮
அளவிறுரல்	104	௧௨௫
அழுந்திய	463	௫௭௦
அழைத்தபே	433	௫௩௪
அறம்பொருளி	102	௧௨௨
அனைத்துநூ	200	௨௨௯
அன்பனே	465	௫௭௧
அன்பனை	219	௨௪௭
அன்பின்	244	௨௮௩
அன்புபெருக	272	௩௨௩
அன்னதன்	23	௩௧
அன்னதொன்	98	௧௧௬
அன்னமாடு	69	௮௨
அன்னவன்	32	௩௯
ஆ		
ஆங்கதுகேட்ட	114	௧௩௬
ஆடுகின்றவர்	255	௩௦௩
ஆடுதோகை	247	௨௮௭
ஆட்சியிலா	202	௨௩௦
ஆண்டகை	172	௨௦௭
ஆதியாய்ந	350	௪௩௧
ஆதியார்நீலகண்	366	௪௫௪
ஆதிமாதவ	52	௬௪
ஆதிமூர்த்தி	37	௪௪
ஆயுநுண்பொரு	407	௫௦௦
ஆரங்கண்டிகை	144	௧௭௯
ஆரணங்களே	95	௧௧௨
ஆரநறுஞ்	319	௩௮௩
ஆரமென்பு	442	௫௪௮
ஆர்த்திகண்டு	311	௩௭௫
ஆலுமறைசூழ்	174	௨௦௯
ஆலைபாய்பவ	68	௮௧
ஆவணம்பறிக்க	190	௨௨௧
ஆவதிது	183	௨௧௫
ஆவதென்	385	௪௭௨
ஆளுநாயகர	444	௫௫௨
ஆறுசூடிய	406	௫௦௦
ஆனதங்கேள்வ	364	௪௫௦
ஆனதன்மைக	537	௬௭௧
இ		
இங்கிதனுமங்	10	௧௪
இசைவினு	199	௨௨௮
இடமருங்கு	241	௨௮௦
இதற்குமு	277	௩௩௨
இதுவெனக்கு	411	௫௦௭
இந்தமாதவர்	146	௧௮௨
இந்நெறியொழு	369	௪௫௭
இப்படியிழந்த	472	௫௮௪
இப்பரிசிவர்க்கு	466	௫௭௩
இயம்பலதுவைப்	166	௨௦௩
இயற்பகைமு	432	௫௩௨
இருக்கோல	260	௩௧௦
இருண்மறை	204	௨௩௩
இருவாலறிய	429	௩௨௯
இழையணி	382	௪௬௯
இழைத்தவன்பி	544	௬௭௯
இளமையின்	368	௪௫௬
இனையவகை	135	௧௬௨

பாட்டு	வரிசை எண்	பக்க எண்
இன்புறுதார	439	௫௪௦
இன்றிவர்	358	௪௪௨
இன்றுநீரெ	412	௫௦௮
இன்னதன்மைய	314	௩௭௮
இன்னவாறுவ	446	௫௫௪
இன்னவாறேத்	341	௪௦௪
இன்னவாறெரு	471	௫௮௩
இன்னுயிர்	490	௬௦௭
ஈ		
ஈரமேனியை	449	௫௫௮
உ		
உடுத்தகோவண	532	௬௬௪
உடையவரசு	229	௨௬௪
உம்பர்நாயகர	349	௪௨௨
உம்பர்நாயகர்தங்	299	௩௬௩
உலகமுய்யவும்	50	௫௮
உலகிலில்லதோ	535	௬௬௭
உலகெலாமுணர்	1	௧
உள்ளமன்பு	456	௫௫௯
உள்ளமாருரு	93	௧௧௦
உள்ளவண்ணம்	31	௩௮
உழுதசான்மிக	62	௭௪
ஊ		
ஊனடைந்த	2	௫
எ		
எடுக்குமாக்கதை	3	௭
எண்ணியவோ	215	௨௪௩
எண்ணில்பேருல	248	௨௮௯
எண்ணுமிவ்வுல	455	௫௫௯
எம்பிராட்டி	44	௫௧
எம்பிரான்கோயி	212	௨௪௧
எம்பிரான்யான்	374	௪௬௨
எய்துமென்பெ	304	௩௬௫
எனமொழிந்து	127	௧௪௮
என்மகன்செய்	122	௧௪௩
என்றரசனி	123	௧௪௬
என்றனுநின்ற	193	௨௨௪
என்றவாருளிச்	414	௫௧௪
என்றவர்விரைந்	380	௪௬௮
என்றவன்கூறக்	476	௫௮௯
என்றவுரைகேட்	318	௩௮௩
என்றுணிறை	184	௨௧௬
என்றினையபலவு	295	௩௫௭
என்றின்னன	324	௩௯௦
என்றுகூறவிறை	30	௩௮
என்றுகூறியவி	409	௫௦௬
என்றுசாலவு	301	௩௬௪
என்றுதம்பிரா	513	௬௪௬
என்றுபலமுறை	275	௨௨௯
என்றுமாமுனி	47	௫௫
என்றுரைசெய்	180	௨௧௪
என்றெழுமோ	214	௨௪௩
என்னவவ்வுரை	410	௫௦௭
என்னும்பெய	493	௬௧௪
ஏ		
ஏடநீயென்	421	௫௨௧
ஏரின்மல்கு	441	௫௪௭
ஐ		
ஐந்துபேரறிவுங்	252	௨௯௭
ஐயர்கைதவம்	521	௬௫௬
ஐயர்நீருளிச்	387	௪௭௪
ஒ		
ஒக்கவெடுநா	500	௬௨௯
ஒண்டுறைத்தலை	60	௭௨
ஒருமைந்தன்	129	௧௫௨
ஓ		
ஓங்குகோவணப்	515	௬௪௬
ஓலைகாட்டென்	189	௨௨௦
ஓவியநான்முக	287	௩௪௮
க		
கங்கைநதிகரந்த	388	௪௭௫
கங்கையும்மதி	147	௧௮௫
கடையுடைக்	475	௫௮௮
கணவனூர்தம்	462	௫௬௭
கண்கவெண்	171	௨௦௬
கண்கொள்ளாக்	289	௩௫௨
கண்டதோர்	188	௨௧௯
கண்டவர்க்கு	510	௬௩௯
கண்டனர்கை	400	௪௮௭
கண்டுசென்	477	௫௯௦
கண்ணிடை	175	௨௧௦
கண்ணுதற்	335	௪௦௩
கதிரிளம்பிறை	519	௬௫௩
கதிர்மணி	278	௩௩௩
கந்தங்கமழ்	321	௩௮௭
கயல்பாய்	66	௭௮
கரும்படு	77	௯௨
கரும்பல்ல	65	௭௭
கற்பகத்தின்	286	௩௪௬
கற்பனைகட	351	௪௩௪
கற்புறுமனைவி	367	௪௫௫
கனங்கொண்ட	315	௩௭௯
கா		
காடெல்லாங்	67	௭௯
காதிலணி	176	௨௧௧
காதில்வெண்	18	௨௪
காமத்துயரிற்	326	௩௯௦
காலிஞெற்	457	௫௬௪
காலைசெய்	160	௧௯௯
காவினிற்	70	௮௩
காவினோர்	302	௩௬௫
கீ		
கீழொடு	370	௪௫௮
கு		
குலமுதலறிவின்	154	௧௯௪
குழைமறை	194	௨௨௪
கே		
கேடிலாப்	384	௪௭௧
கேடுமாக்கமுங்	143	௧௭௭
கேட்கவிரும்பி	274	௩௨௭
கை		
கைகளஞ்சலி	38	௪௪
கைகள்கூப்பித்	28	௩௭
கைக்கடா	333	௪௦௦
கைத்தலத்	481	௫௯௪
கையினிற்	331	௩௯௬
கையின்மான்	22	௨௯
கொ		
கொடுத்தகோவ	516	௬௫௦
கொண்டுவந்து	443	௫௪௮
கொத்தார்மலர்	220	௨௪௮
கொற்றவாழி	100	௧௧௯
ச		
சடைமருங்கில்	131	௧௫௫
சம்புவின்	29	௩௭
சா		
சாலநாட்	378	௪௬௬
சாலிநீள்	71	௮௪
சாலியின்கற்றை	74	௮௮
சி		
சிந்தைசெய்வது	504	௬௩௬
சிவனுறையுஞ்	225	௨௫௮
சீ		
சீரிணீடியசெ	502	௬௩௪
சீறடிமே	316	௩௮௧
சூ		
சூதபாடலங்கள்	79	௯௪

பாட்டு	வரிசை எண்	பக்க எண்
செ		
செங்கண்மாதர்	92	௧௦௯
செங்குவளை	64	௭௬
செப்பலுற்ற	7	௧௧
செம்மாந்திங்	234	௨௬௯
செம்மையாற்	357	௪௪௧
செயத்தகும்பணி	529	௬௬௨
செய்யபுன்சடை	508	௬௩௯
செய்வதற்கரிய	431	௫௩௧
செல்லல்நீங்கப்	452	௫௫௮
செல்லுநான்	196	௨௨௬
செல்வமேவிய	445	௫௫௨
சென்றடிவ	487	௬௦௨
சென்றவர்தடுத்	424	௫௨௪
சென்றவர்முனி	434	௫௩௫
சென்னியால்	383	௪௭௧
சென்னிவெண்	404	௪௯௫
சே		
சேணார்மேரு	498	௬௨௪
சேதிநன்னா	467	௫௭௬
சை		
சையமால்வரை	53	௬௫
சொ		
சொரிந்தன	426	௫௨௬
சொல்லார்த	222	௨௫௪
சொல்லுவ	435	௫௩௫
சொன்னநாட்	86	௧௦௩
சோ		
சோதிமணி	267	௩௧௮
ஞா		
ஞாலமுய்யநடம்	338	௪௦௪
ஞாலமுய்யநாமு	499	௬௨௭
ஞானமேமுதலா	356	௪௪௦
த		
தடுத்துமுன்னா	254	௩௦௨
தண்டாள	288	௩௫௦
தண்டிருதலையும்	397	௪௮௩
தண்ணளிவெண்	130	௧௫௩.
தந்தகோவணம்	517	௬௫௧
தந்தமுன்	389	௪௭௫
தந்திருக்கண்	310	௩௭௪
தந்தையார்	153	௧௯௩
தம்பிரானருளி	150	௧௯௦
தம்பிரானருள்	265	௩௧௫
தம்பெருமான்	348	௪௧௮

பாங்டு	வரிசை எண்	பக்க எண்
தவநிறைந்த	540	௬௭௪
தவமுயன்றரிதி	103	௧௨௩
தவமுனிதன்னை	430	௫௩௦
தனிப்பெருந்	107	௧௨௮
தன்னுயிர்க்கன்	112	௧௩௩
தன்னையாளு	344	௪௧௩
தன்னையாளுடை	328	௩௯௫
தன்னையொப்ப	375	௪௬௨
தா		
தாழ்ந்தவேணியர்	96	௧௧௩
தி		
திங்கள்சூடிய	55	௬௭
திங்கள்வெண்கவி	105	௧௨௬
திரண்டமாமறை	208	௨௩௭
திருத்துறையூர்	227	௨௬௨
திருமகளென்ன	480	௫௯௩
திருமிகுமறை	210	௨௩௮
திருவளர்சிறப்பி	437	௫௩௫
திருவார்பெரு	497	௬௨௪
திருவுடைமனை	428	௫௨௮
திருவுடையந்த	394	௪௮௦
தூ		
தூநறும்பசுங்	163	௨௦௧
தூமலர்ப்பிணைய	164	௨௦௧
தூரத்தேதிருக்கூ	347	௪௧௮
தெ		
தெண்ணிலாமலர்	253	௩௦௧
தெரிவரும்பெரு	6	௧௦
தென்னாவலூர்	327	௩௯௩
தே		
தேசமெலாம்	46	௫௪
தேடியமாடு	470	௫௭௭
தேடியவயனு	217	௨௪௫
தேமலங்கலணி	238	௨௭௬
தேராருநெடுவீ	264	௩௧௪
தேருங்கொடியு	323	௩௮௯
தேனார்க்குமலர்	261	௩௧௦
தொ		
தொண்டரன்பெ	520	௬௫௩
தொண்டனார்க்கி	489	௬௦௬
தொல்லைமால்வ	345	௪௧௩
தொல்லைவேட்	376	௪௬௨
தொழுதுபோற்	548	௬௮௫
தோ		
தோற்றுமன்னு	308	௩௭௨

பாட்டு	வரிசை எண்	பக்க எண்
ந		
நக்கான்முகநோ	185	௨௧௭
நங்களைதனு	45	௫௩
நண்ணியதவச்சி	372	௪௬௧
நதியுமதியும்	495	௬௨௦
நமக்குமுன்பிங்	450	௫௫௮
நரசிங்கமுனைய	151	௧௯௦
நல்லகோவணம்	527	௬௫௯
நல்லபொன்னெ	539	௬௭௩
நல்லொழுக்கந்	390	௪௭௬
நறைகமழுஞ்	392	௪௭௮
நற்றமிழ்வரைப்பி	85	௧௦௦
நன்றுசாலவென்	533	௬௬௬
நா		
நாகசூதவகுளஞ்	239	௨௭௬
நாடுமன்பொடு	534	௬௬௭
நாடுமின்பொற்பு	281	௩௩௬
நாட்டுநல்லிசை	303	௩௬௫
நாதர்தந்திருவரு	549	௬௮௫
நாதனாருளிச்	343	௪௧௨
நாயகன்கழல்	17	௨௩
நாவலர்கோனூரு	224	௨௫௭
நாவலூர்வந்த	332	௪௦௦
நாளிகேரஞ்	78	௯௩
நான்மறைமுனி	209	௨௩௭
நி		
நிலமகட்கழகந்	97	௧௧௫
நிலவுமெண்ணில்	13	௧௯
நிலைமைமற்றிது	541	௬௭௯
நிறைகுடந்	170	௨௦௬
நின்றவேதியர்	526	௬௫௯
நின்றுகோபுரத்	256	௩௦௩
நீ		
நீடுதேவர்நிலை	16	௨௨
நீணிதியாமிது	393	௪௭௯
நீதிமாதவர்	339	௪௦௪
நெ		
நெடுஞ்சடைக	371	௪௫௮
நெருங்குதூரியங்	169	௨௦௫
நெற்றியிற்கண்ண	21	௨௮
நெற்றிவிழியான்	182	௨௧௫
நே		
நேர்ந்தவநெறி	423	௫௨௩

பாட்டு	வரிசை எண்	பக்க எண்
ப		
பஞ்சின்மெல்ல	305	௩௬௬
படர்ந்தபேரொ	91	௧௦௮
பணியுமன்பரை	530	௬௩௪
பண்டருவிபஞ்சி	82	௯௭
பண்டிசரி	177	௨௧௨
பத்தியின்பால	72	௮௫
பந்தம்வீடு	300	௩௬௩
பரசுவந்தியர்	106	௧௨௭
பரம்பொருளே	237	௨௭௪
பரவினர்காப்பு	279	௩௩௩
பரவையார்வலங்	296	௩௫௭
பல்லியங்கள்	88	௧௦௯
பழிப்பறைமுழக்	113	௧௩௪
பனிவிசும்பில்	15	௨௦
பா		
பாங்கியர்மருங்கு	283	௩௪௨
பாங்கோடிச்	292	௩௫௫
பாசமாம்வினைப்	298	௩௬௧
பாட்டியற்றமிழு	51	௬௨
பார்விளங்கவளர்	243	௨௮௩
பி		
பிஞ்ஞகனுமாவ	181	௨௧௪
பித்தனுமாகப்	187	௨௧௯
பிள்ளைமைப்பரு	282	௩௩௭
பிள்ளையார்திரு	258	௩௦௭
பிறந்தபெதங்கள்	313	௩௭௭
பிறைத்தளிர்ச்	507	௬௩௯
பிறைவளர்சடை	373	௪௬௨
பு		
புலரும்படியன்	322	௩௮௮
புலனொன்றும்	226	௨௬௧
புறந்தருவார்	257	௩௦௫
புற்றிடங்கொண்	271	௩௨௨
புற்றிடம்விரும்	285	௩௪௩
பூ		
பூதநாயகர்புற்றி	136	௧௬௬
பூதமைந்து	142	௧௭௫
பூதம்யாவையின்	43	௪௯
பூவார்திசைமுக	137	௧௬௭
பெ		
பெருகியநலத்	148	௧௮௬
பெருகுவானம்	454	௫௫௯
பெருமதில்சிற	250	௨௯௧
பெருமைசால்	152	௧௯௨
பெருமையாற்ற	342	௪௧௨
பெருவிறலாளி	420	௫௨௦
பே		
பேணுமன்பரை	512	௬௪௫
பேர்பரவை	294	௩௫௭
பேறெனக்கிதன்	479	௫௯௩
பொ		
பொங்கியதிருவி	353	௪௩௭
பொங்குமாமறை	101	௧௨௦
பொங்குவெண்	522	௬௫௭
பொய்கடிந்தற	361	௪௪௭
பொச்சமில்லடி	542	௬௭௭
பொருவருந்தவ	41	௪௬
பொருவரும்வழ	211	௨௩௯
பொலங்கலம்	334	௪௦௨
பொன்றயங்கு	134	௧௬௧
பொன்குழருவி	496	௬௨௨
பொன்றிரளு	235	௨௭௧
பொன்னின்வெ	11	௧௬
போ		
போகநீடுகிதி	246	௨௮௬
போற்றிசைத்து	126	௧௪௮
போற்றிநீடில்லே	352	௪௩௬
போனவேதியர்	518	௬௫௨
ம		
மகிழ்ச்சியான்	157	௧௯௬
மங்கலகீதநாத	167	௨௦௩
மங்கலகீதம்பாட	268	௩௧௭
மங்கலவினைக	80	௯௫
மங்கலம்பெருக	478	௫௯௦
மங்கலம்பொலிய	156	௧௮௫
மங்கையைப்	469	௫௭௭
மங்கைபாகரா	538	௬௭௧
மணவினை	158	௧௯௭
மண்டிய	259	௩௦௭
மண்டுகாதலின்	545	௬௮௨
மண்டுபுனல்	63	௭௫
மண்ணில்வாழ்த	99	௧௧௭
மதிவளர்சடைமு	4	௮
மதிவிளங்கிய	546	௬௮௩
மந்திரிகளது	119	௧௪௧
மருவுமன்பொடு	506	௬௩௯
மலரமளித்	320	௩௮௬
மலர்ந்தசிந்தை	531	௬௬௪
மலர்மிசை	560	௬௮௬
மலைவளர்சந்	228	௨௬௩
மறிகரந்துதண்	528	௬௬௨
மறுவிலாமரபின்	355	௪௩௯
மறுவில்சிந்தை	306	௩௭௧
மறைகளாயின	191	௨௨௨
மறைத்தவன்பு	482	௫௯௭
மறைமுனியஞ்	419	௫௨௦
மறையவஞ்ஞெி	381	௪௬௯
மற்றதுகண்டு	109	௧௩௦
மற்றமாற்ற	453	௫௫௮
மற்றவர்செயலி	447	௫௫௫
மற்றவர்சொன்	422	௫௨௨
மற்றவணிசைந்த	155	௧௯௫
மற்றவன்கொண்	486	௬௦௧
மற்றிதற்குப்	48	௫௬
மற்றுநீவன்மை	216	௨௪௪
மனமகிழ்ந்தவர்	543	௬௭௮
மனைவியார்கொ	461	௫௬௭
மனைவியார்சுற்	416	௫௧௬
மனைவியார்தம்	396	௪௮௧
மனைவியாரொடு	523	௬௫௮
மன்பெருந்திரு	337	௪௦௪
மன்றுளாடுமது	242	௨௮௧
மன்றுளேதிருக்	401	௪௮௮
மன்னவர்திரு	165	௨௦௨
மன்னவனத	115	௧௩௭
மன்னவன்மைந்	128	௧௫௧
மன்னியபோன்	259	௩௦௭
மன்னுசீர்வயலா	346	௪௧௭
மன்னுமப்பதிவ	503	௬௩௬
மன்னும்புகழ்	325	௩௯௦
மன்னுயிர்புரந்	118	௧௪௧
மா		
மாசிலாதமணி	141	௧௭௨
மாசிலாமரபில்	186	௨௧௭
மாடமாளிகை	89	௧௦௬
மாடலைகுருதி	427	௫௨௮
மாடுபோதகங்க	83	௯௮
மாதர்நாறு	61	௭௩
மாதவஞ்செய்த	35	௪௧
மாதவவேடங்	474	௫௮௭
மாதுகூறுவண்	451	௫௫௮
மாதுடன்கூட	329	௩௯௬
மாதுதன்னை	413	௫௧௩
மாதொருபாக	149	௧௮௮
மாநிலங்காவல	121	௧௪௩
மாமறைவிதி	159	௧௯௮
மாரிக்காலத்	448	௫௫௭
மாலயற்கரிய	464	௫௭௧
மாலயன்சத	249	௨௮௯
மாவினுந்திச்சுழி	54	௬௬
மாவிரைத்தெழு	59	௭௧

பாட்டு	வரிசை எண்	பக்க எண்
மாளிகைகண்	266	௩௧௬
மாணிளம்பிணை	280	௩௩௬
மி		
மின்ஞேர்செஞ்	263	௩௧௪
மு		
முக்கணக்கரா	505	௬௩௭
முஞ்சிநாணுற	509	௬௩௯
முட்டிலன்பத	536	௬௬௯
முறித்தவை	459	௫௬௯
முறையால்வரு	221	௨௪௮
முன்புநீமக்குத்	213	௨௪௨
முன்னமாங்க	36	௪௩
முன்னேவந்	290	௩௫௨
மூ		
மூண்டவப்புலவி	365	௪௫௩
மூண்டுமுன்பல	425	௫௨௫
மெ		
மெய்யெலாநீறு	473	௫௮௫
மே		
மேகமுங்களிறு	81	௯௬
மேயவிவ்வுரை	8	௧௨
மேன்மைநான்	14	௧௯
மை		
மைவளர்கண்டர்	276	௩௩௦
மொ		
மொய்த்துவளர்	178	௨௧௨
யா		
யாதவன்றுவ	24	௩௨
வ		
வடிவுகாண்டலு	511	௬௪௦
வணங்குமன்	514	௬௪௬
வண்ணநீள்வரை	56	௬௮
வந்தபின்மனைவி	458	௫௯௫
வந்தபின்றொண்	379	௪௯௭
வந்தவிப்பழியை	111	௧௩௨
வந்துதண்புகார்	408	௫௦௪
வந்துதிருமா	179	௨௧௩
வந்தெதிர்	269	௩௧௮
வம்புலாமல	262	௩௪௨
வம்புலாமலர்நீரா	57	௬௯
வரிவளர்பூஞ்	230	௨௬௬
வருமணக்கோல	173	௨௦௮
வருமுறையெரி	354	௪௩௮
வல்லையேற்காட்	203	௨௩௨
வளத்திஞன்மிக்	386	௪௭௩
வளவநின்புதல்வ	116	௧௩௮
வழக்கென்றுநீர்	120	௧௪௨
வழிவருமிளைப்பி	460	௫௯௭
வழிவிடுந்துணை	418	௫௧௮
வன்றொண்டர	293	௩௫௬
வன்னிகொன்	240	௨௭௯
வா		
வாசகங்கேட்ட	206	௨௩௫
வாசநீர்குடைமங்	58	௭௦
வாசநெய்யூட்டி	161	௧௯௯
வாரிசொரியுங்	492	௬௧௪
வாவிபுள்ளொலி	309	௩௭௩
வாவியின்மூழ்கி	398	௪௮௫
வாளொடுபலகை	415	௫ ௪
வாழியமாமறை	273	௩௨௪
வானவர்பூவின்	438	௫௩௯
வானுறநீடிருவா	270	௩௨௧
வி		
விண்ணிடைநின்	436	௫௩௫
விரைசெய்நறும்	491	௬௧௧
விளக்கமிக்ககல	94	௧௧௨
விறலுடைத்தொ	402	௪௯௦
வீ		
வீதிகள்விழவிஞ	84	௯௯
வே		
வேண்டுமொறுவி	145	௧௮௧
வேதநான்முக	20	௨௬
வேதபாரகரின்	197	௨௨௬
வேதவாரண	340	௪௦௪
வேதவோசையு	87	௧௦௫
வேதனையெய்தி	483	௫௯௮
வேதியர்தில்லை	360	௪௪௫
வேதியனதனைக்	195	௨௨௫
வேதியஞகியெ	218	௨௪௫
வேலொடுவில்லு	417	௫௩௬
வேறுநல்லதோர்	525	௬௫௯
வேறுபிரிதென்	501	௬௩௦
வை		
வைதெரிந்தக	75	௮௯
வைத்தபின்மறை	377	௪௬௬
வையகம்பொலி	251	௨௯௫

திருத்தங்கள்

குறிப்பு :— இத்திருத்தங்களை அன்பர்கள் நூலினுள் அங்கங்குக் குறித்துக்கொள்ளுதல் நலம்.

* * இக்குறியுடையன வெல்லாம் நீக்கத்தக்கன.

பக்கம்	பாட்டு	வரி		
க	1	18	யைத்தரித்த	நிறைந்த
,,	,,	21	அன்பர் உள்ளத்தே	எங்கும் நீக்கமின்றி
உ	,,	1	பொருள்களையும் காட்டி	பொருள்களையும்
,,	,,	16	உயர்ந்தோரைக்	உயிர்களைக்
,,	,,	16-17	"உலகெனப்....திலக்கணம் * *	[விருத்திக்கு
,,	,,	19-20	உட்காண...தொழிலுக்கு	பசுஞான பாசஞானங்களின்
,,	,,	25-26	இது...திருமேனி	இது ஞானிகள் வழிபடுவது.
,,	,,	30	அருவத்	அருவுருவத்
ங	,,	10	அருவுருவத்	அருவத்
,,	,,	15	இவற்றிற்கு அடுத்தபடியிலே* *	
,,	,,	15-16	என்று எடுத்துக் கூறினர்	என்றது உருவத் திருமேனி.
,,	,,	32	நின்று தன்மையிலே	நின்று
,,	,,	33	அறிவினல் முன்னிலையில்	அறிவினல்
,,	,,	36-40	வணங்குவாம்......காண்க * *	
ச	,,	,,	மலரைச்	மலரென்பதைச்
,,	,,	37-38	தகா...கூடிய * *	
,,	,,	43	உயர்ந்தார்க்கும் அரியவனுயினும்தாழ்ந் தார்க்கு	அரியவனுயினும்
ரு	,,	9	நான்காமடி	நான்கடியும்
.	2	31	சிருட்டிக்	புண்ணியக்
,,	,,	38	பிறவி	பிறவி. உயிரொன்பது வருவிக்க.
சா	,,	9	கழிநிறைத்	கழிநிரைத்
எ	3	6	மலமாகிய சேற்றிலிருந்து	பிறவிக் குழியிலிருந்து
,,	3	13-14	ஆன்மாக்களை...எடுத்து	எடுக்கும் என்ற குறிப்பினல் பிறவியாகிய குழியிலிருந்து எடுக்கும் என வருவிக்கப்பட்டது.
எ	3	15	எடுத்து" என்ற திருவாக்கும்	எடுத்து", "வினையின் குழிவாய் நின்றெனை யெடுத்தார்"—ஐயடிகள் - புரா - 9, "எடுத்து"—திருநா - புரா - 182, "எடுத்தருளி"—திருஞான - புரா - 731 "எடுப்ப" ஷை 657. முதலிய திருவாக்குக்களும்
,,	,,	27	இஃது	இது

பக்கம்	பாட்டு	வரி		
எ	3	31	இதுவே	இதுவும்
அ	4	28	துதிசெயும்	துதிசெயு
,,	,,	31	சடையை	சடைமுடியை
கூ	,,	17	மடிமை	மடிமையு
,,	,,	27-29	மலர்ப்பொதி....12 * *	
,,	,,	37	எச்சத்தாற்	வினைத்தொகையாற்
கக	7	34	இவ்வாறன்றிப்	இவ்வாறன்றித் "தம்பொரு ளென்ப தம் மக்கள்"—(குறள்) என்றதிற் போலப்
,,	,,	37	"தம்பொருள்......குறள் * *	
,,	,,	39	என்க	என்க. மெய்ப்பொருள் இறைவன் எனக் கொண்டு, அவனுக்குரியார் அவனது அடியார் என்றலுமாம்.
கச	10	19	ஆதிகாலந்	அநாதிகாலந்
,,	,,	19-20	இருட்கூட்டங்களிலே	இருளிலே
,,	,,	20	பௌதிகமாகிய வெளியிருட்டைப்	புறஇருளைப்
,,	,,	21	மனத்துள்ளே	உயிரினிடத்தே
,,	,,	26	உவமம்	கருத்து.
,,	,,	,,	பௌதிகமாகிய...மறைத்	பொருள்களைக் காணவொட்டாமற் புறவிருள் கண்ணை மறைத்
,,	,,	27-28	தன்னை...கொண்டிருக்கும்	பாரிசேட அளவையால் தன்னையறியும்படி காட்டி நிற்கும்.
,,	,,	30	உலகத்தை	உயிர் தன்னையும் இறைவனையும்
கரு	,,	5	"கருணை.......காண்க * *	
,,	,,	6	வலியில்லாமலும் செயலில்லாமலும்	உயிரறிவை மறைக்கமாட்டாமற்
,,	,,	9	நூன்மங்கலமுங் காப்புக்	காப்புக்
,,	,,	12	நூல்கேட்டாரும் அவைக்களமும்	அவைக்களமுங் காலமுங்
,,	,,	13	போக்குகின்றது	போக்குதல்.
கஅ	11	26-27	அடைமொழியும் வேறு	வேறு அடைமொழியும்
ககூ	12	6	தவத்தினுக்குரிய செயல்	தவத்தின் பயன்.
,,	,,	19	திருமலையாகும்	திருமலை.
உ0	14	9	மாயையிலிருந்து	மாயையின் பரம்பரையிற் றோன்றிய ஆகாயத்திலிருந்து
,,	,,	12	நாதப்பிரமத்	நாதத்
,,	,,	21	நாதம்	வேதம்
,,	,,	22	"மேன்மை நாதம்"	"மேன்மை நான்மறை"
,,	,,	23	மேன்மையுள்ள மறை என்றலுமாம் * *	
,,	,,	30-31	தானமாக்கள்...கொள்க * *	

பக்கம்	பாட்டு	வரி		
உ௨	16	30	சுற்றி இருந்து	சுற்றி
,,	,,	37	அளித்தலும் அழித்தலும்	அழித்தலும்
,,	,,	41	மிருதிப்பாட்டிலே	மிருதிப்பாட்டால்
உ௩	,,	10-12	சிவகணங்களின்...வாறுமாம்	* *
,,	17	30	வருந்துவான்	வருந்துவார்.
,,	,,	32	தலைவன்	தலைவன், இயக்குபவன்.
உ௪	18	37	நிற்பதான	நிற்கின்றதென
,,	,,	38	வெள்ளைப் பன்றி	பன்றி
உ௫	,,	18-19	வெள்ளைப்....எனப்படும் * *	
உ௭	20	12	என்பதல்ல	என்பதன்று.
,,	,,	42	சாரூபம்	சிவரூபம்.
,,	,,	43	இடபதேவராவார்	இடபதேவராவார்தருமதேவதை
,,	,,	44	மால்	மாலும்
,,	,,	,,	தாங்கினதேவர் இந்த	தாங்கினார்.
உ௮	,,	1-3	வேதத்துறை....வாறு * *	
,,	,,	4-5	நந்தி—...என்க	நந்தி - நந்தம் - நிறைதல் எல்லா ஞானத்தாலும்நிறைந்தவர்நந்தி.
உ௯	21	25	மலையொன்றே	மலை
,,	,,	28	கந்த புராணத்தினுட்	மாபுராணங்களுட்
,,	,,	38-39	தமக்குமேல்...புள்ளவர்	ஆன்மாக்களாயுள்ளதமக்குப் பிராணாயுள்ளவர்.
௩0	22	21-22	இவைகளை...இருந்தனர் * *	
,,	,,	22	இத்திருக்கோலமே	இவைகளைத் தாங்காத கோலமே
,,	,,	24	என்பது	புகலியும் திருவீழிமிழலையும் - 9.
,,	,,	27-28	உம்மைத்தொகை	உம்மை [என்பது
,,	,,	37	அன்பின்புகழ்	சத்துவத்தின் [காச ரூபம்
௩௧	,,	3	சத்தினுடைய ஒளி	சத்துவகுண விருத்தியாகிய பிர
,,	,,	6	அபாயமில்லாதவர்	அபாயமில்லாமற் செய்பவர்.அபயன் - பயமில்லாமற் செய்பவன்-"பயமைந்துந்தீர்த்துஅறங் காப்பான்" - 121.
௩௩	24	3	அவுன	ஆனு
,,	,,	13	தொடங்கிற்று, இங்கே முடிந்தது	தொடங்குகின்றது, இங்கே முடிகின்றது.
,,	,,	15	அடைந்தவர்	அடைந்தவர் - தொண்டினுக்கு ஆதி ; தலைவர்; அந்தம்(இறப்பு) இலாமை யடைந்தவர் எனப் பிரித்துரைத்தலுமாம்.
,,	25	24	தமது...லாகிய	அத்தர் அருளினாற் கொடுத்த
,,	,,	27	சுத்தசைதன்யத்தை அடைந்த	சுத்தாவத்தையிற் சிவத்தைச்சார்ந்த
,,	,,	38-40	தமது...உரைக்க * *	
௩௪	,,	3	யோகக்...வர்கள்	நின்றசிவயோகிகள்

பக்கம்	பாட்டு	வரி		
௫௪	25	10	இருவகையும்	இருவகையானும்
”	”	14	முத்தராய்	முத்தராகிய
”	26	27	சொல்லவும் ;	விளுவுதலும் ;
”	”	38	நூலில் விளக்கியுள்ளதனைக்	நூலிற்
௫௬	27	25	பதிந்ததனுல்	உபகாரத்தால்
௫௭	28	7-8	புளகம்...பெருக	வெள்ளம்பெருக.
”	”	14	முழுதும்புளகாங்கிதமும்	முழுதும்,
”	”	15	கண்ணீரும் கடல்போற்	கண்ணீர்
”	29	34	சுகரூப...செய்பவன்	சுகத்தை உண்டுபண்ணுபவன்.
௫௭	29	35	துக்க ரூபிகள்	துக்கமுற்றவர்
”	”	”	சுகத்தைச் செய்வதால்	சுகத்தை உண்டு பண்ணுவதால்
௫௮	”	1-2	தமக்குத்.... காண்க * *	
”	30	18	கேட்டதும் ;	கேட்டலும் ;
௫௯	31	5	பொருள	மெய்ப்பொருள
”	”	”	பொருள	மெய்ப்பொருள
”	”	”	பொருள்	மெய்ப்பொருள்
”	”	8	நீறுக்கும்	நீற்றுக்கும்
”	”	23	சாத்துவதற்காய்	சாத்துவதற்காக
”	”	24	படிக்குள்ள	படியுள்ள
௬௦	33	12	நாயகனது	நாயகனுக்கு
”	”	14	தன்மையுடைய	தன்மையுடைய. ஈறுகுறைந்த பெயரெச்சம்
”	”	21	பேரழகு. ஆதலின்	பேரழகாதலின் அது
௬௧	34	3	அருள்போல	அருள் என்னும்படி
”	35	29	அண்டங்	உலகங்
௬௨	”	20	அல்ல.	அன்று.
”	”	32	களிலேயும்	களிலும்
”	”	”	உரையிலேயும்	உரையிலும்
௬௫	”	6-7	அமைதல் ; படுதல்	கருத்து அமைதல்
”	”	12	ஒருவர்மேல்	ஒருவருக்கு
௬௬	37	7	கலந்து	நுகர்ந்து
”	”	17	இருந்தபடியே அறிந்தார்	அறிந்தார்
”	”	28	பெறும்போது உண்டாவது இன்பம்	பெற்று நுகரப்படுவது இன்பம். காதல் இங்குத் தலைவன் தலைவியர்க்குள் நிகழும் அன்பு குறித்தது
”	”	29-30	மனநிலை அதற்கு...என்க	மனநிலை
௬௫	38	5	வியாபகம்	(வியாபகம்)
”	”	14	சிறுமை என்பது	சிறுமை என்னும் பெயரெச்சம்
”	”	”	எழுவாய்ப்	வினைமுதற்
௬௯	40	15	மற்ற திசைகளைப் போலவே பாசவினைப்பட்ட	பாசப்பட்ட
”	”	16	எட்டுத் திசைகளிலும்	(எட்டுத் திசைகளிலும்)

2

பக்கம்	பாட்டு	வரி		
௪௬	40	27	என்பதல்ல.	என்பதன்று.
,,	,,	29	**பாற்படு......உரிய**	பாற்படுத்தல் -
,,	,,	32	சிருட்டியின் தத்துவமாம்	சிருட்டித்தல்.
௪௭	41	7	**(இ - ள்)**	41. **(இ-ள்)**
,,	,,	10	இருப்	வைப்பாகியஇருப்
,,	42	12	**(இ - ள்)**	42. **(இ-ள்)**
,,	41	16	**(வி - ரை)**	41. (வி - ரை)
,,	,,	20	குறளும்,	குறளில் அப்பற்றினைப் பற்றுக என்றது வீட்டுநெறி நூல்களில் ஓதிய உபாயமாதலின் இத்தலத்தைப் பற்றுதலும் ஓர் உபாயமாயிற்று.
,,	,,	21	"பற்றற்றார்சேர்பழம்பதியை"	"திருச்சிற்றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே"
,,	,,	41-42	எல்லாத்......பெருமை * *	
௪௮	,,	1	அதிதி	அநகுயை
,,	,,	17	முக்காலத்து	முக்காலத்தும்
,,	42	19	**(வி - ரை)**	42. (வி - ரை)
,,	,,	42	குறிப்புவினை	வினை
௪௯	,,	24	31	41
,,	43	27	கமலமாம்	கமலமா
,,	,,	31	பிரணவம்	இறைவன்
௫௦	,,	2	சொருபமாகிய	காரியமாகிய
,,	,,	3	துணைக்	முதற்
,,	,,	14-17	இந்தத்.....என்றார் * *	
௫௨	44	41	கொண்டதும் உயிர்கள்போக யோகம்	கொண்டது உயிர்கள் போகம்
௫௩	45	19-20	ஆதலின்...என்றார் * *	
,,	,,	27	ஹதர்	அதர்
௫௪	,,	3	என்ற விதிப்படி	என்றபடி
௫௬	47	8	(ஆசிரியர்)	ஆசிரியர்
,,	,,	20	குறித்ததல்ல.	குறித்ததன்று.
௫௭	48	2	திருத்தொண்டத்	திருத்தொண்டத்தொகைத்
,,	48	10	பிருதிவிதத்துவ நிலைய	பிருதிவித்தல
௫௮	49	4	என்பது தமிழில்	என்பது
,,	50	22	பிறவினைப்	செயப்பாட்டுவினைப்
,,	,,	36	நாடாய்	நாடாக
௬௧	சருக்கம்	39	காட்சியின் பொருட்டு	காட்சிகாரணமாக
௬௩	51	18	மேலும்	அப்பாலும்
௬௫	53	38	நீருடையது	நீர்மையுடையது
௬௬	,,	9	உயிர்	உயிர்தங்கும்
,,	54	38-39	திருமாலின்...சிறப்பினால் ;	மிகப் பெரிய நீர்ச்சுழியையும் மலர்களையும் **தன்னிடத்துத்**

பக்கம்	பாட்டு	வரி		
				தாங்கி வருகின்ற சிறப்பினால்; (மால் - பெரிய; **உந்திச்சுழி** - நீர்ச்சுழி)
௬௬	54	43	அருட்கோல	நற்கோல
௬௭	,,	32	அலைகள்...என்பது.	அலைகளினால் நீர் சுழித்தலுக்கு **உந்திச்சுழி** யென்று பெயர்
௬௮	55	4	வெண்டலைகளைப்	வெண்டலைகளிற்
,,	,,	6	யாகும்;	போலும்;
௬௯	56	4	ஒற்றுமை	ஒப்புமை
,,	57	36	அவர்களையும் கூடச்	அவர்களையும்
௭௧	58	2	என்க.	என்க
௭௨	61	22	உழத்தியராகிய பெண்கள் அழகிய	அழகிய உழத்தியராகிய பெண்கள்
௭௪	62	22	(உள்ளன)	உள்ளன.
,,	,,	30	(நிறைந்திருக்கும்)	நிறைந்திருக்கும்
௭௫	63	28	**முதலின்**	**முதலின் பதம்** என்பர்
,,	,,	29	கூறுவர். **பதம்** என்பர்	கூறுவர்.
௭௬	64	13	களைக்	களையும்
,,	,,	,,	அணிந்து கொள்வார்கள்;	அணிதலும் செய்வார்கள்;
௭௮	65	36	குறிப்பாம்.	குறிப்பாம். பகலெல்லாம் - நெல் என்ன - கரும்பு என்ன (என்னும்படி) - வயல் எல்லாம்-துகள் அல்ல (அல்லை யுடையன) - என்று முடிக்க.
௭௯	66	4	சிறுபானையாகவும்;	சிறுபானையாகக் கொண்டு
,,	,,	16	பொருள்களாய்க்	பொருள்களாக
,,	6	34	காடாகவுமுள்	காடாகவுள்
௮௧	68	31-34	உலகம்....உண்டாகும் * *	
௮௪	71	18	டைய நீர்மையுடைய மனம்	டைய
,,	,,	30-31	முற்றுவமையாக	உவமையும் சிலேடையுமாக
௮௫	,,	26	அசைதல்	விரிதல்
,,	,,	26-28	விதிர்ப்புறு......ஒன்று * *	
,,	,,	41	(வி-ரை)இப்பாட்டுவிரியுவமம்	(வி - ரை)
௮௬	72	11	மற்றும்...மேலும்.	அவ்வித்தகர் என்க.
௮௭	73	25	ஒருமுறை கதிர்களைக்	கதிர்களைக்
௮௯	74	3	தோற்றுவித்தல்	தோற்றுவித்தல். பிறவினைவிகுதி தொக்கது.
,,	,,	27-28	மேலே...காண்க. * *	
௯௦	75	12	என்க...மயக்கம்.	என்க.
,,	,,	12-13	ஒருமையுமாம்.	ஒருமை.
௯௧	76	3	மீந்த	எஞ்சிய
,,	,,	4	பரவுதற்கரிய	பரவுதற்குரிய அரிய
௯௨	,,	1	மீந்ததாகிய	எஞ்சிய

பக்கம்	பாட்டு	வரி		
கூஉ	76	5	மீதமே	மிகுதியே
கூரு	77	9	(ஈசுவரன்) மகாவாக்கியம்.	மகாவாக்கியம். ஆகுபெயராய் ஈசுவரனை உணர்த்திற்று.
,,	,,	10	சிறப்புப் பாயிரம்	சிறப்புப் பாயிரமும், "பெரும் பெயர் முருக"-என்ற திருமுருகாற்றுப்படையும் முதலியன
கூசு	81	19	ஆகிய	உளவாகிய
,,	,,	40	பெறுவது.	பெறுவது. அகப்பொருளின்பம்.
கூஎ	,,	2	இன்பம்...பெறுவன.	போகம் - இந்திரியங்களால் அநுபவிக்கப் பெறும் ஏனை யனுபவங்கள்.
கூஎ	81	9-10	சரியை...முதலியன.	மனம் புலன்வழி போகாதிருத்தற்பொருட்டு உண்டி சுருங்கல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமையுமாம். யோகமாவது கரணங்களை யடக்கி மனத்தை ஒரு குறியினிறுத்துதல்.
,,	,,	15-16	முனிதல் - வெறுத்தல் * *	
,,	,,	22-23	ஓதுவோரின்றியே..வேதமும்	வேதமும் அவற்றை ஓதுகின்ற
க0ச	86	34	தன்வினை - பிறவினைப்	செய்வினை-செயப்பாட்டுவினைப்-
க0ரு	87	10	இந்நகரிலே	அந்நகரிலே
,,	,,	16	அதுவே...குறிப்பு.	காண்க
க0எ	90	30	அனிந்திதை	சேடியாகிய, அனிந்திதை
,,	,,	31	ஒருவராகிய	ஒருவராகிய,
க0அ	,,	1	ச் செய்பவன்	உண்டுபண்ணுபவன்
,,	,,	2	சிவபெருமான்.	சிவபெருமான். "இன்பஞ் செய்தலிற் சங்கர ; னெம்பிரானின்ப மாக்கலிற் சம்பு ; விடும்பைநோ-யென்ப தோட்டுமியல்பி னுருத்திர னென்பரால்" - காஞ்சிப்புரா - பரசுராமீசப் - 44
,,	91	19	இறைவன் ;	இறைவர் ;
,,	,,	35	பார்	(பார்)
,,	,,	,,	விண்	(விண்)
,,	,,	37	அழல் தூணைய்	அழற்றூணைய்
,,	,,	39	இப்புரா	அப்புரா
க0கூ	,,	2	இதனை	இவ்வாறு வருதலை
,,	,,	27	நடந்தும் செல்வர்	திருவிழாக் கொள்வர்

பக்கம்	பாட்டு	வரி		
கoகூ	91	28	காண்க.	காண்க. **வீதிபார்** - என்பதும் பாடம்.
,,	92	38	உவமிப்பர்.	உவமிப்பர். செங்கண் செவ்வரி படர்ந்ததால் உளதாம்.
ககo	92	4-5	இதனை...தெரிகிறது * *	
ககரு	95	25	அமைப்பு.	அணிவகை.
ககச	96	13	வுடையவர்.	வுடையவர் அன்மொழித் தொகை. வடநூன் முடிபு.
,,	,,	13-14	தவம்........வந்தது * *	
,,	,,	15-16	**முனிவர்**...சிந்தை	**முனிவர்** - மனன சீலத்தையுடை
ககஎ	99	36	மண்ணில்மன்னி	மண்ணில் [யவர்.
,,	,,	37	உயிர்-என்று கூட்டிஉரைக்க.	நித்தமாகிய உயிர் என்று உரை
ககக	100	33	பெறும் - எனப் பிற	படும் எனச்செயப்பாட்டு [க்க.
,,	,,	38	திரை - திரையும்	திறை - திறையும்
கஉo	,,	35	நடைபெறு.	நடைபெறுது.
கஉக	101	12-17	இது...காண்க.	வேதம்பல சமயங்கட்கும் பொதுவாய் அவரவர்பொருளும் விரித்தற் கிடமாயிருத்தலிற் **போங்கும்** என்றார்.
,,	,,	22	—எல்லாம்	—(எல்லாம்)
கஉஉ	,,	21	நைமித்தியம்	நைமித்திகம்
,,	,,	24	நைமித்தியம்	நைமித்திகம் [தவறுமல்
,,	102	37	இவற்றால்...வழியிலே	இவற்றை அறநூலின் வழியிலே
கஉரு	,,	2	கூட்டப்பெற்றதாகிய தரும	கூறப் பெற்றதாகிய தருமநூல்
,,	,,	13	கூடியதே அறமாம் என்பார்	நூல் வகுத்தவாறே செய்ய வே
,,	103	39	தேர்ப்படைத்	தேர்படைத் [ண்டுமென்பார்
கஉச	,,	2	செய்த பாவங்களின்	செய்த வினைகளின்
,,	,,	19	செய்த பாவ	செய்த வினை
,,	,,	21	என்றபடி	என்றபடி. **பவம்** - பிறவி
கஉடு	104	19	நற்குணங்கள்	நற்குணங்களால்
கஉசு	105	23	அரச அங்கத்திற்குரிய	அரசர்க்குரிய
,,	,,	,,	தசாங்கம்	(தசாங்கம்)
,,	,,	26	அரசாங்...வழங்குவர்.	அரசர்க்குரிய சிறப்படையாளமாகவும் வழங்குவர்.
கஉஎ	106	21	தியர்கள்	தியர்கள் முன்னும்
,,	,,	,,	பக்கம்	பக்கமுமாக
,,	,,	41	கூறுவாறு	கூறுவாரு [கொள்ளப்
கஉஅ	107	21	தருமங்களாலேபிரதிபாதிக்கப்	தருமங்களின் அதிதெய்வமாகக்
கஉகூ	,,	,,	இரட்டித்தது	ஒற்று இரட்டித்தது.
கஉகூ	108	32	மாகச் செலுத்தப்பெற்று	மாக ஊரப்பட்டு
,,	,,	42-43	செலுத்தப்பெற்று	ஊரப்பட்டு
கருo	,,	5	பசுவாக - கன்றாக	பசுவாகி - கன்றாகி
,,	,,	6	வந்ததம்மானை	வந்தாரம்மானை

பக்கம்	பாட்டு	வரி		
௧௫௦	108	7	வந்ததாமாயின்	வந்தாராமாயின்
,,	,,	20	அலமறுதல் -	அலமருதல்
,,	109	40	வாக்கு	அதுவாக்கு
௧௫௧	,,	12	பாவமுயற்சி	வினைமுயற்சி
,,	,,	15	பாவத்தின்	வினையின்
,,	,,	31	போர்தான் (120) ஆகிய	போர்தானாகிய (120)
,,	110	42	வீழந்து	வீழ்ந்து
௧௫௨	,,	6	இறங்கி	இரங்கி
௧௫௫	113	23-24	செவியிலும்...பொறியிலும்	இங்குப் புலம் என்றது பொறியை உணர்த்திற்று. செவிக்குரியபுலனாகிய சத்தம் அதன் பொறியில்
,,	,,	24-25	செவியிற்...உழக்கிப்	செவிப்பொறியிற் புகுந்து-
௧௫௬	,,	5	நீங்கிய	நீங்கியது -
,,	114	35	அசேதனம்	அஃறிணை
,,	,,	41	தொங்கவைக்கப்.........	இப்பொருட்குத் தொங்க வைக்கப்பட்ட என்றது செயப்படுபொருளைச் செய்தது போலக் கூறப்பட்டது.
௧௫௭	,,	1	வரும்	
,,	,,	18	அசேதனமாகிய	மன உணர்வில்லாத
,,	,,	24	ஈடாகி	ஈடாக
,,	,,	26	அசேதனங்களும்	அஃறிணைகளும்
,,	,,	28	அசேதன	அஃறிணை
,,	,,	30	அசேதனமாய்	அஃறிணையாய்
,,	,,	,,	சிறந்த சேதன	சிறந்த
,,	115	40	அறிந்த அமைச்சன்	அறிந்தவனாகிய தொன்னெறி
௧௫௮	,,	20	பிரேரேபித்தல்	பிரேரித்தல்
,,	,,	34	**அமைச்சர் -**	**அமைச்சன் -**
,,	,,	37	- ஒழுக்கம்,	- வழியும் ஒழுக்கமுமாம்.
,,	116	40	வளவநின்	"வளவ ! நின்
,,	,,	43	தன்மை	தன்மை "
௧௫௯	,,	7	சோழன்.	சோழன். வளத்தை யுடைமையின் வளவன் எனப்பட்டான்.
௧௫௯	116	7	உடையவன்.	உடையவன் என்பாருமுண்டு.
,,	,,	8	தரும்.	தரும். இப்பொருளில் விளைவு **வளவு** என மருவிற்று.
,,	,,	18-22	இப்பகுதியில்.... - என்றார்.	* *
,,	,,	24	விளைவித்து	விளைத்து
௧௬௦	117	31	போல	போல்
௧௬௧	119	39	அறம் -	அறம் என்றார் -
௧௬௨	,,	24-26	நிறைமொழி...என்பதுமாம்	* *
௧௬௪	122	7	வாறு	வாரு
௧௬௭	124	9	சிவந்து	வாடி

பக்கம்	பாட்டு	வரி		
௧௪௭	124	25	முன்னமே	முன்னம்
,,	,,	26	தால்மேலும் சிவந்தது	தால்வாடிக்கறுகியது
,,	,,	27-28	முகமும்...இயல்பாகிய	முகம்கறுத்தல் அதனால் நிகழும்
௧௪௮	127	25	செயக்கடவ	செயக்கடவதாகிய
௧௫௦	126	6	**அவர்க்**	**அவற்**
,,	,,	24-25	வேண்டிக்கோடற்...காண்க * *	
,,	127	28-29	மனம்....வந்தது * *	
௧௫௧	,,	9	அனகன்...என்றலுமாம். * *	
,,	128	37	வைத்துகுற்ற	வைத்துக்குற்ற
௧௫௫	130	25	ருக்கு......யாகி	ராயும் உள்ள பெருமானே
௧௫௭	131	23	**வேந்தர்க்கு**	**வேந்தற்கு**
௧௬௦	133	27	மீந்து	மிகுந்து
௧௬௨	135	24	அந்தணர் -	அந்தணன்
,,	,,	29	எண்ணிறந்த...கூட்டி * *	
௧௬௩	,,	6-7	அகமலரே	அதன் உயிர் பொருட்டே அதன் போன்ற-
௧௬௬	136	19	நிலையில்	நிலையிலும்
,,	,,	20-21	ஞானம்.....சாதகமாகும் * *	
,,	,,	23	னாயகமே	னாயகமேபிறப்பட்டிங்கிருந்தேன்"
௧௬௭	,,	7-14	அந்தம்ஆதி......கூறுவர் * *	
,,	137	29	முதலானவர்	முதல் வானவர்
௧௭௦	137	10	வாழ்க	வாஅழ்க
௧௭௨	139	6	தொழில்களும்...வாகி	இடங்களும்
௧௭௩	140	28	பிறவினை	செயப்பாட்டுவினை
,,	,,	29	தேவாரம்.	தேவாரம். இவ்வாறன்றி "அத்தர் வேண்டிமுன்...ஆதலால் (174 பக்கத்தில் 32 முதல் 38 வரை வரிகளை இங்குக் கூட்டிவாசிக்க)
௧௭௪	140	35	பரவைத்	பரவை
௧௭௫	142	26	அன்பிலே...வழி	அன்பின் திண்மையினாலே அவ்
௧௭௬	142	12	உலகத்திலே ஆன்மாக்கள்	ஆன்மாக்கள் • [வழி
,,	,,	13-14	(மாயையினாற்...அப்பிராகிருதர்கள்	என்றும் -
,,	,,	15	இருவகை	மூவகை
,,	,,	15	வைநகிகர்கள் -	ஆற்றலு மறிவுங் காதலுமில்லாத வர்கள் பிராகிருதர்கள். வைநகி கர்கள் -
,,	,,	17	நிற்பவர். இவர்கள்	நிற்பவர். இவர்கள் முறைமையின் மந்ததர முதலிய சத்திநிபாத முடையவர்களாய் நூல் வழி யான் முத்தியடைய விரும்பு வோர். இவர்கள்

திருத்தங்கள்

பக்கம்	பாட்டு	வரி		
கஎஎ	,,	6-13	குணமெனுங்...மாயிற்று.	கோதிலாத குண மென்றது திருக்கூட்டத்தில் உள்ள அடியார்களுக்கு உரியனவாய் இப் பகுதியிலே ஆசிரியர் தாமே அருளிச் செய்தலில் இங்கு விரிக்கவில்லை. அக்குணங்களிற் சலியாமையும் நிலைபேறும் மிக்கது பற்றிப் பெருங் குன்று என்றார்.
,,	143	27	எண்ணுபவர்கள் ;	காண்பவர்கள் ;
கஎகூ	,,	1	கொண்டு முத்தராய்	கொண்டு
,,	144	17	அல்ல	அன்று
,,	,,	26	றில்லையாக"	றுகிடையாதாக "
கஅக	145	11	நிலையை	நிலைமையை
கஅரு	147	19	குளிர்ந்த	பெண்களின் குளிர்ந்த
,,	,,	20	பெண்களின் முகங்களிலே	முகங்களிலே
கஅஅ	148	6	மறைவர்களை	மறையவர்களை
ககூo	150	14	அணிந்துகொண்டும்	அணியப்பெற்றும்
,,	,,	14-15	அணிந்துகொண்டும்	அணியப்பெற்றும்
,,	151	20	போன்ற	போல
,,	150	28	வந்தது.	வந்தது. சாற்றி-சாத்தி - சாத்தி-செயப்பாட்டுவினை, செய்வினையாகக் கூறப்பட்டன.
ககூக	,,	16	மறைபுதல்வன்	மறைப்புதல்வன்
,,	151	40	அன்புக்குரிய	அன்புகாரணமாக
ககூரு	155	30	யாருரைப்	யாருராைப்
உoக	164	33	பிணையல்மாலை செறிவ	பிணையல் - மாலை. செறிவு
உoஉ	165	38	ஏனைவற்றினும்	ஏனையவற்றினும்
உoங	166	21	சிவிகைகளும்...வாகனங்கள்	குதிரை முதலிய வாகனங்களும் சிவிகைகளும்
உoரு	169	22	அன்று...ஆம் - அதனாலே	(அதனாலே) அன்று...ஆம் -
உஉo	189	22	(அல்ல)	(அன்று)
,,	,,	34	சத்தி,(திரைத்தன்மை வாய்ந்தது - திரோதானம்) அதாவது	சத்தி, அதாவது
உஉங	192	17	வானதெல்லாம்	வானவெல்லாம்
உஉகூ	199	19	முதுமொழி	முதுமொழி. "தசை யெலா மொடுங்க மூத்தாய்"-திருவிளை-புரா - விறகு - 16
உஙச	205	5	கணக்கன்.	கணக்கன். "இவர்கள் பணிக்க எழுதினேன் இவ்வூர்க் காணத் தான் சிவதாசன் ஆட்கொண்

பக்கம்	பாட்டு	வரி		
				டாளுன நூற்று நாற்பத்தெண் மனேன் ; S.I.I. VII no 44.
௨௩௯	210	4	முனிவரே!நீர்	முனிவ' நீ
"	"	6	உமக்கு	உனக்கு
"	"	7	காட்டுவீராக	காட்டுவாயாக
"	"	27	உமக்கு உமது	உனக்கு உனது
			உமது	உனது
			உமக்கு	உனக்கு
௨௪௩	213	1-4	"ஒருவராயிரு...உணர்த்திய தாம் * *	
௨௪௮	220	31	சூடி	சூட
"	"	39	சூடி	சூட
௨௪௯	221	42	தொல்லேயில்	துயரிடைப்
௨௫௫	229	1	கொண்டுடைய	கொள்ளப்பெற்ற பேறுடைய
௨௭௧	தேவாரம்	4	இதுவும்	என்ற இதுவும்
௨௭௭	238	4-5	அலேகளே...மீன்கள்	வாவியினின்றும் அலேகளிளுல் வெள்ளிய சங்குகளும்அசையும் மலங்கு மீன்களும்
"	"	27	சத்திக்க	சத்திக்கும்
"	"	30	இவை	இதில்
௨௭௮	"	26	சொல்லணியில்	சொல்லணியமைய
௨௮௧	241	2	எழுகின்ற சிலம்பின்	சிலம்பின் எழுகின்ற
"	"	4-5	எடுத்து....என்றலுமாம் * *	
"	"	9	நல்வீணே, ஒலி	நல்வீணே யொலி
"	"	11	திண்சிலம்பு"	திண்சிலம்பு சிலம்பொலிக்கே"
௨௮௫	245	2	செய்ய	திகழும் ;
௨௮௭	246	24	கூட்டி	கூடி
௨௮௮	247	7	தூக்கியன	தூக்கி
"	"	41	தீக்கடைக்கோல்	தீக்கடைகோல்
௨௯௯	252	40	யில்லாதவந்தஏமரா	யில்லாதஏமரா
௩00	"	24	யறிகிலேன்"	யறிகிலன்"
௩௧௧	260	8	பிறவிணேப்	விணேப்
௩௧௨	"	11	சீகாழிக்குத்	வைத்தீசுரன் கோயிலுக்குத்
௩௧௫	265	1	அழைத்தும்,	அழைத்ததும்,
௩௨௧	269	3	"ஏகமே நத்துவிதீயம்"	"ஏகமே வாத்துவிதீயம்"
௩௨௯	273	5	காரணமா யிருத்தல்	காரணமா யிருத்தலால்
௩௩௩	அடிக்குறி	42	மிகப் பழந்தமிழ்	மிக்க பழந்தமிழ்
௩௩௪	278	32	இவ்வாருகவே,	இவ்வாருகவும்,
௩௩௭	"	12	என இம்மூன்று பாட்டும்	எனத்
௩௪௧	282	42	மங்கை, மடந்தைப்	மங்கைப்
௩௪௨	"	29-90	முன்னே...பார்வதியார்க்கு	**உண்மையும் தோன்ற** என்ப[தற்கு
௩௪௪	284	18	பாட்டுடைத் தலேவியினது	தலேவியினது
"	285	41	ஆட்கொள்ளப் பெறும்	ஆட்கொள்ளப் பெற்ற

பக்கம்	பாட்டு	வரி		
௩௯௫	285	9	கடைக்கூட்ட	கடைகூட்டப்
,,	,,	,,	298	288
,,	,,	23	யாவர்களை	ஒருவரை
,,	,,	39	(143)	(288)
௩௯௬	286	11	தாமரையையும்	கோங்கையும்
,,	,,	9	தாமரையையும்	கோங்கையும்
௩௯௮	287	36-37	உள்ளத்திலே	உள்ளத்தால்
௩௯௨	289	30	முடியாத ;	முடியாத காதலால் ;
௩௬௨	298	25	நெறியை மீண்டும்	நெறியை
௩௬௩	299	23-24	வம்பென......காண்க * *	
,,	,,	28	திருக்கோவையார்	திருக்கோவையாரும், "வம்பென ஆண்டுகொண்டான் ஒருவனே தீர்ப்பான் வந்து" (ஏயர்கோன்-புரா - 392) முதலிய திருவாக்குக்களும்
,,	,,	30	பிறவினை	பிற
௩௬௫	302	24	இறைவன்	இறைவர்
௩௬௬	301	7	வரும்பாட்டில் உயிர்	உயிர்
௩௭௨	307	3	வன்மை	துன்பம்
௩௭௩	308	18	பகுதிகளையே	பகுதிகளே
௩௭௪	309	12	சிறப்பும்மை	உயர்வு சிறப்பும்மை
௩௭௬	311	3-4	ஆர்தலால்...ஆர்த்தியாம் * *	
௩௭௭	312	16	என்றபடி	என்றபடி. அலைத்து - வருத்தி
௩௮௦	315	12	பார்க்க.	பார்க்க. கனம் - பெருமையுமாம்.
,,	,,	16	காலமுன்	காலமுன்.
௩௮௬	319	10	நிகழ்ந்ததல்ல	நிகழ்ந்ததன்று
௩௮௭	321	29	தவிரீர்	தவிர்கின்றிலீர்
,,	,,	30	தவிரீர்	தவிர்கின்றிலீர்
,,	,,	36	எனை -	எனை - என்னை ?-
௩௮௮	322	32	மதன்	மதனுர்
௩௯௩	326	16	அல்ல.	அன்று.
௩௯௭	329	11	அனுபோகங்	அனுபவங்
௪௦௬	337	10	சுற்றிக்கிடப்ப	சுற்றியொலிப்ப
,,	,,	12-13	சூழ்ந்த...சேர்த்தல் * *	
,,	,,	37	கூறுவாறுமுண்டு.	கூறுவாறுமுண்டு. அவர்கள்
,,	,,	40	தலும் காண்க.	தலைக்கூறுவர்
,,	,,	42	துரைக்கின்றனர். முன்	துரைப்பர். இங்குக்
௪௦௭	,,	11	நன் -	நல் -
௪௦௮	338	8-10	இதன்மேல்...பெறுவன	மும்மலங்களின் வழி நின்று அவற்றின் தொழிலை நிகழ்த்துதல் மறைப்பு ; மலநீங்கிய உயிரைத் தன்னடி கூட்டுதல் அருள் என்ப.

பக்கம்	பாட்டு	வரி		
௪௦௮	338	30	கடந்து...உள்ள	கடந்தவனாய் இறை பணியில் [நின்ற
,,	,,	43	**பொலிவன -**	**பொலிந்தன -**
௪௧௦.	339	8	பக்குவத்தாலாம்	பக்குவக்குறைவாலாம்
௪௧௨	341	22	சைகிஷ்வ்ய	சைகிஷவ்ய
௪௧௩	345	6	நிருப்பாகன்	நிருப்பாகர்
,,	,,	9	“புகழாரை	புகழாரை
௪௧௪	342	10	“எம்மை	எம்மை
,,	,,	16	உடைமைப்	உரிமைப்
,,	,,	30	என்பன	என்பது
௪௧௫	345	41-42	“மூவனே...காண்க * *	
௪௧௯	346	12	நெஞ்சுவிடுதூது	திருக்களிற்றுப்படியார்
௪௩௫	351	12	விளைவு	வடிவு
,,	,,	25	ஞானாகாயம் என்னும்நாதப் பிரமம்.	ஞானாகாயம்.
௪௩௮	354	42	வேதம் ஓதல்	வேதப்பொருள் ஆராய்தல்
௪௪௧	356	9-10	சிவபூசை......என்க	உற்றநோய் நோன்றலும் உயிர்க் குறுகண் செய்யாமையுமாம்.
௪௪௫	359	5	ஆதலின்	அதனை விளக்குதற்கு
௪௪௮	362	14	ஞைகவாக்கின	ஞய்கின் ருக்குவ
,,	,,	32	பொய்மை	பொய்ம்மை
௪௫௦	364	37	**அங்கு -**	**ஆங்கு -**
௪௫௫	367	39	செய்து.	செய்ய.
௪௫௭	368	13	நிலைகளையும்	நிலைகளும்
௪௫௮	371	22	கொண்டு உயர்வுடையும்பொருட்டுப்	விளக்கமாகக் கொண்டு
௪௬௦	370	29	வேவ	மூழ்க
,,	,,	36	இடும்பலிப்	பலியிடும்
௪௬௩	373	19	நூல்கள் தொக்கி	நூல்கள் - தொக்கி
,,	,,	27	நின்று	ஆதலின் நின்று
௪௭௦	381	23	வந்தது ; ஆயினும்	வந்ததாயினும்
,,	,,	,,	நின்றது	நின்றதாதலின் மறைமிடறு எ
,,	,,	24	என்றாற்போலக் கொள்க.	என்றதும் காண்க. [ன்றார்.
௪௭௨	384	19	- இறைவன்	-முன்னர்ப்“பெரும!” என்றதை விரித்துக் கூறினர்.
,,	,,	23-24	முன்னர்ப்...பொருள் * *	
௪௭௯	392	21	தாக்கிச்	நின்று
,,	,,	,,	கரக்க நின்றது	கரந்தது
௪௮௫	399	17	339	399
,,	,,	19	இவ்வாறு	நாயனர் இவ்வாறு
௪௮௯	,,	34	நின்றிருந்த	நின்ற
,,	,,	42	என்றது நாயனர்	என்றது
௪௮௭	400	21	தொழுது கொண்டிருந்தது டன் துதித்துக் கொண்டும்	தொழுதும் உடன் துதித்தும்

பக்கம்	பாட்டு	வரி		
௪௯௧	402	6	இது......பதவி * *	
௪௯௩	வகை	23	தொகுத்துக்	வகுத்துக்
௪௯௭	404	35	மீந்த	மிகுந்த
௪௯௮	404	2	பிறப்பிடமாக உள்ளது என் பதுமாம்	மூலகாரணமாக உள்ளது சமுத் திரம். ஊழிக்காலத்தின் ஒன் ருகி நின்ற ஏழ்கடல் வெள்ளம் பிரமதீர்த்தமாய் அமைந்து நிற் றலின்
,,	,,	4	என்றதும்	என்று கூறியதும்
,,	405	44	முதல்வணிக	பெருங்குடிவணிக
௪௯௯	,,	33-34	இச்சரித ... ஆம் * *	
௫௦௦	,,	1	சிறப்பு ; விரும்பி	சிறப்பு ;
,,	,,	21	குறிப்பு	குறிப்பு. **இயற்பகை** என்ற முத னூல் **உலகியற்பகையார்** என விரிந்தது.
,,	,,	25	எல்லா	இனி, எல்லா
,,	,,	28	என்ருர்.	என்ற குறிப்பும் காண்க.
௫௦௧	406	6	படாததாய்	படாததாய
,,	,,	41	அது அருளாய்	அதன்கண் அருள்
,,	,,	42-43	"அருளென்னும்...என்ருர் * *	
௫௦௨	,,	25	**மனையறம்** -	**மனையறம்புரி** -
,,	,,	26	மகிழ்ச்சியின்வந்தபேறெலாம்-	மகிழ்ச்சியின் -
		35	பொருளன்று	பெருமையன்று
௫௦௩	407	10	ரணீயாம்"	ரணீயார்"
,,	,,	12	முடிபே"	முடிவே"
௫௦௪	,,	25	தாங்கிக்கொண்டு	தாங்கிக்கொண்டு அதனைக் காட் டுதலேயன்றி
௫௦௫	408	3	இறைவனுமாகிய	இறைவனுமாகியவாறு
,,	,,	9	என்று....கூட்டுக * *	
,,	,,	25	எந்தையாகிய...என்றலுமாம். * *	
,,	,,	36	**ஆதரவால்சிந்தையன்போடு**	**ஆதரவால் - அன்போடு**
,,	,,	43-44	எமது...என்றலுமாம். * *	
௫௦௬	,,	9	"அடிமைத் திறத்தை"யே	திருவேடத்தையே
,,	,,	28	அதற்கடையாயிற்று	அதற்கடையாயிற்று. தூர்த்த வேடமென்பது வருவிக்கப்பட் டது.
,,	409	29-30	சடையாரும்...காண்க * *	
,,	,,	36	விடினும்.	விடினும் குணமெனக்கொண்டு.
௫௦௯	410	3-5	எனது......காண்க * *	
௫௧௨	412	33-35	தமக்கும்......என்க * *	
௫௧௩	413	24	அத்தொழிலை யுணர்த்திற்று.	தொழிலெஞ்சி நின்றது.
௫௧௫	414	9	நேர்வாராய்	நேர்ந்தாராய்,
௫௧௬	415	17	நேர்வாராய்ப்	நேர்ந்தாராய்ப்

பக்கம்	பாட்டு	வரி		
ருகஎ	416	20	இழைகளாகிய...ஆகுபெயர்.	இழைக்கப்பட்டது. செயப்படு பொருள் விகுதி குன்றியது.
ருகக	418	13	அடுக்கு	ஒருபொருட் பன்மொழி.
ருஉ0	420	26	பொரி	பொறி
ருஉக	,,	23	பொரி	பொறி
ருஉஉ	421	12	நாடு உறுபழி......பழி * *	
,,	,,	14	புகழ்	பெருமை கூறுதல்.
,,	422	32	முற்றநும்	முற்றுநும்
ருஉரு	,,	13	ஆன்ம	மாயா
,,	,,	24-25	இங்குஇயமனுலகம்-வீரசுவர்க்கம் -	இங்கு வீரசுவர்க்கம் -
,,	,,	30	வேதியர் - நாயனர்.	வேதியரும் நாயனரும்.
,,	,,	34	அற்றன்று, உங்களே	உங்களை
ருஉச	423	21	எதிர்த்த பொழுதே.	எதிர்த்த அப்பொழுதே.
,,	,,	39	சீறி...பாய்ந்து	சீறுதல் பெருங் கோபத்தால் நிகழ்வது.
ருஉரு	424	8	ஒடி	ஓடி
ருஉசா	426	43	கண்டது	கண்டன
ருஉஅ	427	8	எல்லாரிலும்	எல்லாருள்ளும்
,,	,,	21	செயல்.	செயல். உறு - துணைவினை.
ருரு0	429	16	தமக்கென்று...மாட்டாதவர்	* *
,,	,,	17	முதலியவற்ருற்	அறிவு முதலியவற்ருற்
,,	,,	,,	யடியார்கள்	யடியாரவர்கள்
ருருக	430	1	அஞ்சலித்துக்	அஞ்சலி குவித்துக்
,,	,,	10	அஞ்சலி -	அஞ்சலி கூப்பி -
,,	431	40	மெய்யன்பு கொண்ட	மெய்ம்மையைத் தருகின்ற
ருருஉ	,,	4-9	வைனகிகர்...நிகழும்	இவர்களின் தன்மைகளைப் பற்றி முன் 142 பாட்டின்கீழ் உரைத்தவை காண்க.
,,	,,	9	இந்நாயனரும்	இந்நாயனர்
ருரு உ	431	18	மாறி	மாறிய
,,	,,	27	செயலேத்	தன்மையைத்
ருருரு	432	23	ஒப்புவித்த	ஒப்புவிக்கும்
,,	,,	36	கூட்டுக	உம்மை விரித்துரைக்க
ருரு.ச	,,	,,	என்னை அடைய	விரைய
,,	433	22-23	கொள்வாராய் மறைந்தனன்	கொள்வதற்கு மறைந்தனர்.
ருருரு	,,	14	காது.	காது என்றலுமாம்.
ருருசா	436	13	இறைவன்	இறைவர்
ருருஎ	434	12	"சேர்ந்தறியாக் கையான்" திருவாசகம். * *	
,,	435	45	வெள்ளத்தை அருள் செய்தலாவது * *	
ருருஅ	,,	1-3	படுகுழியில்...திருநா - புரா - 72. * *	

பக்கம்	பாட்டு	வரி		
௫௩௯	436	2	அதனே	அதனெ
,,	,,	6-7	இதனை...நன்னூல்	* *
,,	,,	25	அவ்வவர்பக்குவத்துக்குத் தக்கவாறு.	அவர் பக்குவத்துக்குத் தகுதியாகிய.
,,	,,	38	இந்த ஊனமற்ற	ஊனமற்ற
௫௪௨	சுருக்கம்	22	உயிர்க்குத்	உயிர்காக்கத்
௫௪௬	440	22	தம்பிரான் - ...பிரான்.	* *
௫௪௯	441	10	வேரவன்	பேரவன்
௫௫௦	,,	5	பெரும்பயன்	பெறும்பயன்
,,	442	30-31	அவன் சார்பினாலே தாமும்	தாமும்
௫௫௧	,,	14	விரைந்தறியும்ஆகலானென்க.	விரைந்தறியும்.
௫௫௯	449	13	திருமேனியை	திருமேனியின்
,,	453	33	நீர் சூழ்ந்த	சுற்றுநீருடைய
,,	455	39	அதனை	அதனை எண்ணுகின்ற
,,	,,	39-40	மனத்தால்...தோன்றவே,	துண்ணென நடுக்கமுறும் வகை தோன்ற,
௫௬௨	453	15	பெருமழை	பெருதுமழை
௫௬௩	455	9	தோன்றவே	தோன்ற
,,	,,	15	இருள்...செறிவு	இருள் செறிந்த மைக்குழம்பு
௫௬௫	458	26-27	இயல்பும் குணமுமாம்.	குணம்.
௫௬௭	460	26	னின்மிக்குச்	னுற்கிளர்ந்து
௫௬௮	,,	8	கவலைகொண்டு	கிளர்ச்சியுடன்
௫௭௧	464	18	நாதன்	நாதர்
௫௭௨	465	19-20	"அருளென்னும்...காண்க.	* *
௫௭௯	467	27	பாடி"முதலிய	பாடி", "தீர்ந்த வன்பாய வன்பர்க் கவரினு மன்ப போற்றி" முதலிய
௫௮௦	468	12	காண்க.	காண்க. "அறம்பொரு ளின்பமான வறநெறி வழாமற்புல்வி" 102, என முன்னர்க் கூறியதனையும் இங்குவைத்துக் காண்க.
௫௮௫	472	8	வெல்லவேண்டுமென்ற	வெல்வான்போல
,,	,,	18	படி பூமியை	படி - பூமியை அதாவதுபடியை.
,,	,,	19	பின்னர்ச்	இந்தப்பொருட்கு, பின்னர்ச்
,,	,,	38	முடிக்க.	ஆக - போல. "ஆள்வாரிலிமாடாவேனோ" - திருவாசகம்.
௫௯௦	476	3-4	கேட்டேயும்	கேட்டும்
,,	,,	9	கேட்டேயும்	கேட்டும்
௫௯௧	477	17	கதுமெனா - கதும்	கதுமெனா -
,,	,,	40	மனம்...உட்கரணங்கள்	உயிர் மனம் முதலிய உட்கரணங்களுடன்
,,	,,	41	நீங்கிய மனத்தால்	நீங்கி மனத்துடன்
,,	,,	42	புறக்கரணங்களின்	புறக்கரணங்களோடு

பக்கம்	பாட்டு	வரி		
௫௯௧	477	43	துயிலல்	துயிலல் ;
௫௯௫	481	18	பெற்றதாம்.	பெற்றன.
௬௦௧	486	38	மற்றும்	மற்று
,,	,,	44	மற்ற	மற்று
௬௦௨	,,	34	- பெயர்.	- இனி,
,,	,,	36	கொள்க.	கொள்ளலுமாம்.
௬௦௫	488	9	அதுவே...திருவடியாம். * *	
௬௦௬	489	31	"யாரேனுந்	"ஆரேனுந்
௬௪௩	491	3	**பேறுவளன் -**	**பேருவளன் -**
௬௧௪	492	21	ஊராகிய,	ஊராகித்
௬௧௯	494	13	(நாராயணபரோத்யாதா)	(நாராயண ஃ பரோத்யாதா - சுவேதாசுவதரம்)
,,	,,	14	(சிவனேகோத்யேய ஃ)	(சிவ ஏகோத்யேய ஃ—அதர்வசிகை)
௬௨௦	,,	5	என்றுரைப்பா	என்றுரைப்பர
௬௨௩	496	20	அண்டங்களும்	மண்டலங்களும்
,,	,,	22	சம்மார	சங்கார
௬௨௪	496	7	மூறிந்தவா	மூறிந்தவெதன்
௬௨௬	497	15	எண்ணும்மை	எச்சவும்மை
௬௩௦	501	32	கிமித்த	துணைக்
௬௩௨	தலவிசேடம்-1		இத்தலம் திருவாங்கூர்	திருவாங்கூர்.
௬௩௪	தொகை	24	நெஞ்சா யுருகாதால்"	நெஞ்சாய்"
௬௩௬	503	7	வருகின்ற வளங்கள்	வருகின்ற எல்லா வளங்களும்
,,	,,	19	493	492
௬௪௧	507	43	நல்லூருறை நம்பர்"	னல்லூருறை நம்பனை
௬௪௨	,,	18	குலங்களில்முதல் மூன்றிலும்	குலங்களிலும்
,,	,,	19	யிரண்டு	மூன்று
௬௪௩	509	23-24	ஆணவமலம்...அன்பர்கள்	நீக்கி இவ்விடத்தில் 33முதல் 36 வரை வரிகள்-**வஞ்சம்.....(159)** என்ற பகுதியைத் தந்து கொள்க.
,,	,,	37-38	**நேஞ்சில்......**பார்க்க. * *	
,,	,,	40	செயப்பாட்டு	பிற
௬௪௬	512	21	என்பதும் பாடம்.	**பேணிய அடியார்க்கு — என்** பனவும் பாடங்கள்.
௬௪௯	515	14-15	கொள்ளப்போகின்றீர்	கொள்ளுவீர்
,,	,,	25	கொள்ளப்போகின்றீர்	கொள்ளுவீர்
௬௫௪	519	9	இங்கும்,	இங்கும் அதனையே அனுபவித்துக்,
,,	,,	10	அதனையே அனுபவித்துக் * *	
,,	,,	40	"குடியொன்றி"	"குடிபொன்றி"
௬௫௬	521	37	செய்ததல்ல ; பிறர் செய்ததுமல்ல ;	செய்ததன்று ; பிறர் செய்ததுமன்று ;
௬௫௭	522	34	கூறினர்.	கூறினர். "வேதியாதவர் தம்மை வேதிப்பன" (339)

பக்கம்	பாட்டு	வரி		
௯௫௭	522	35	"வேதியாதவர்..." (339) * *	
௯௫௮	,,	2	காண்க.	காண்க. **பெருந்துவக்கினில்** - என்பதும் பாடம்.
௯௫௯	525	22	ச் சுத்தமாகக்	த் தன்னதாக்கிக்
,,	,,	30	தருகின்றேன்	தருவேன்
௯௬௧	526	3	குறிப்பு.	குறிப்பு ;
,,	,,	8	**சாலவும்...மொன்று** ———	இவ்வரியினை 11வது வரியின்கீழ் [வைக்க.
,,	,,	22	ஏகாரம் வினை.	ஏகாரவினை.
௯௬௨	527	5	சுவாமிகள்.	சுவாமிகள். **அழகிதீதுமக்கென்று** - என்பதும் பாடம்.
௯௬௫	530	2	அதலின்	ஆதலின்
,,	,,	39	மேற்செல்கின்றமை	மேலே தொடர்ந்து சொல்லுதல்
௯௬௭	533	25	மற்ற	மற்றை
௯௬௮	534	30-31	தமது...அருட்சத்தி	திரோதானமாய் நின்ற தமது சத்தி அருட்சத்தியாய்ப்
௯௭௧	536	14	மட்டில்	மட்டு
௯௭௨	538	32	**மற்ற**...வந்தது. * *	
௯௭௪	539	32	என்பதும் பாடம்.	- **எல்லையில் தனம்** - என்பனவும் பாடங்கள்.
௯௭௫	540	41	பு - பகுதி	பூ - பகுதி
௯௭௮	542	22	முகாந்தரம்.	முகாந்தரம், Guise or device என்பர் நவீனர்.
௯௮௦	543	36	**தனையுடன்கோடு** -	**தனையுடன்கோடு தலைத்துலை** -
,,	,,	38	யாதொரு	யாதாயினுமொரு
௯௮௨	545	26	அண்டர்களுக்கு	அண்டங்களுக்கு
௯௮௫	546	21	தொண்டர் தமது	தொண்டரது
௯௮௪	,,	3	நிரைந்ந -	நிரைந்த -

குறிப்பு :—முதற்சஞ்சிகை மிகு விரைவில் அச்சிட்டமையானும் அதன் பின்னரே பல பெரியார்களும் சரிபார்க்க நேர்ந்தமையானும் 200 பக்கங்கள்வரை திருத்தங்கள் மிகுதி காணப்பட்டன. இனி இவ்வாறு நேராதென நம்புகின்றேன்.

—பதிப்பாசிரியன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருஞ்சொற்றொடர் அகராதி

[இலக்கங்கள் பாட்டின் எண்களைக் குறிப்பன.]

அ

அகத்துமிக்கு 118
அகப்படாங் 522
அகமலர் 135
அகம்படித்தொண்டு 353
அகலிடம் 359
அகழ்ந்து 174
அகிலகாரணர் 139
அகிலலோகம் 139
அகில் 77, 228
அகிற்றூபம் 162
அக்காலம் 185
அங்கண் 219
அங்கண்வேதியர் 522
அச்சம் 542
அஞ்சலி 217
அஞ்சலிகூப்பி 269
அஞ்சலிகொண்டு 255
அஞ்சினான் போல் 419
அஞ்செழுத்து 138, 305
அடப்பையோர் 333
அடிசில் 450, 459
அடித்தவம் 352
அடிபணிந்து 528
அடிமிசை 529
அடிமைத்திறத்தின் மிக்கவர் 405
அடிமைத்திறம் 440
அடியவர்பாற் சார்வதனுக்கு 346
அடியவர்க்கடியனேன் 336
அடியவர் மனைகடோறும்சென்றனர் நிலைமை காட்டும் 401
அடியாருடன் நாமுளது 499
அடியார்திறம் 441
அடியனேனுய்ய 463
அடியார் பெருமை 499
அடியேனாகப் பண்ணுநாள் 335
அடியொதுங்கி 316
அடிவணங்கி 487
அடைக்கலப் பொருள் 385
அடைய (முழுதும்) 534
அடுக்கல் 73
அடுப்பின் மாட்டி 459
அட்டாங்கம் 272
அணங்கு 465
அணங்குநீர் 514
அணியன் 104
அணியது 325
அண்டமெலாம் 308
அண்டர்தம்பிரான் 545
அண்டர்நாயகர் 443
அண்டவானவர் 489
அண்டர்பிரான் 288
அண்ணலாராணை யுய்த்த 403
அண்ணல் 130, 263
அதற்குயானார் 344
அதனின் நல்ல பாத்திரம் 382
அதிக நன்மை 519
அதிசயங் கண்டார் 399
அதிசயமுற 545
அதிசயம் 524
அதிசயித்தார் 286
அதிசயித்து 535
அதனிடையொளித்தமுண்டவேதியர் 547
அத்தர் 140, 524
அத்தனை யல்லாலுரிமை வேறுளதோ 412
அத்திற மறிந்தார் 484
அநபாயன் 8, 22, 85, 98
அந்தக்கரணம் 251
அந்தணாளன் 190
அந்தரத்தமரர் 330
அந்தப்புரம் 480
அந்தமின்மனை 458
அந்திவண்ணர் 504
அந்நிலை 399
அபாயம் 108, 109
அமர்நீதியார் 503
அமர்மேற் கொண்டு 471
அமர் விளையாட்டு 424
அமுதமைத்து 461
அம்பர்மாகாளம் 262
அமைச்சர் 115
அம்பொனீடிய அம்பலம் 440
அம்பொன்வீதி 248
அம்மனை 281
அயரும்படியோ 323
அயர்வார் 528
அயர்வுற 452
அயர்ப்பிலாதான் 432
அயலறியா மனம் 288
அயலறியாமை 367
அயலார்காட்சி 202
அயல் நிற்ப 249
அரங்கு 89, 245
அரசன் மன்னுரிமைத் தனிக்கன்று 132
அரசாட்சி 129
அரசியலாயத்தார் 488
அரசியல் நெறியில் வந்த அறநெறி 468
அரசிளங் குமரன் 106, 151
அரசு 76
அரசுலாந்தெரு 116
அரணிதந்தசுடர் 247
அரண்டரு காப்பு 208
அரந்தை 138
அரம்பையர் 237
அரவிளாரம்புனைந்தார் 296
அரந்தை 307
அரவுலகு 284
அரி (உழவுச் சொல்) 73
அரிசனம் 161
அரிசி 459
அரியணை 114
அரியேறு 415
அருட்கழனீழல் 489
அருந்ததிக்கற்பு 363
அருமறைச்சிரம் 351
அரும்பெருமரபு 153
அருகு 454
அருங்கலிநீக்கி 355
அருச்சனை 443
அருட்சிவயோகி 369
அருமந்த 129
அரும்பர் 294
அரும்பெறல் 104
அரும்பொருள் 127
அருளிச்செய்யநின்றதுபிழை 414
அருளிருந்த பரிசு 265
அருளினார்ந்த 402
அருளின்னோக்கத்தின்வெள்ளம் 172

அருளும்வகை 324
அருளொடும்தாழ்வுறும்வழக்கு 536
அருள்செய்தது 412
அருள்செய்யும் 480
அருள்பெறும் 204
அருள்பெறப்பெற்றேன் 430
அருள்பேணி 506
அர்ச்சனை 216,271
அர்ச்சனைகள் 408
அலகில்சோதி 1
அலக்கு 458
அலங்கலந்தோளினன் 334
அலங்கல் 238
அலம்பு 238
அலைந்து 311
அலர்ந்தவெண்ணிறக்கோவணம் 531
அலறும் 108, 110
அல்குலார் 294
அல்குல் 284
அல்லதொன்றில்லார் 504
அல்லல்தீர்ந்துலகுய்ய 345
அல்லல்நல்குரவு 445
அவதரித்து 148
அவதரித்தாள் 277
அவதரித்தார் 494
அவநெறி 224
அவனி 540
அவிழாஎடுத்து 532
அவிழ்த்து 514
அவை 198
அளகபாரம் 474
அளக்கர் 94
அளகை 444
அளவிலா அளவு 350
அளவிலாமரபு 362
அளவிலார் 444
அளவிறந்தகாதல் 291
அளவின 339
அளறு 92
அள்ளுதற்கமைந்த 282
அழகியதுமக்கு 527
அழகுழுத்தவடிவேயோ 177
அழற்கதிர் 311
அழுங்கி 307
அழிதகன் 418
அழிய 284
அழியாவீரத்தார் 347
அழிவுறுங்காதலார் 488
அழிவுறும் 460
அழுந்தியஇடருள்நீங்கி 463
அறங்காப்பான் 121
அறத்தினீடு 118
அறத்தின்வாழ்வார் 361
அறநெறி 134
அறமேயாகில் 111
அறம் 119
அறம்பயந்தாள் 257
அறம்பொருளின்பமானஅறநெறி 102
அறலியற்கூந்தலார் 402
அறவனார் 135
அறியவந்ததொன்றன்று 528
அறியும்படியாய் 124
அறிந்தனபோல் 316
அறிந்திலையோ 233
அறிமின் 206
அறிவகையால் 403
அறிவிக்க 445
அறிவுறாது 521
அறுகு 170
அறுசுவைத்திருவமுது 519
அறுதொழிலாட்சி 355
அறுத்து 458
அறுவை 414
அறைகழலண்ணல் 419
அறைகுவாம் 314
அற்புதக்கோலம் 351
அற்புதம் 286, 534
அற்புதத்தனிக்கூத்து 259
அற்புறுபுணர்ச்சி 367
அற்றம் 472
அனகன் 127
அனங்கன் 282
அனேககோடிகள் 536
அனைத்துநூலுணர்ந்தீர் 200
அனைவர்க்குமனைவர் 425
அன்பருவிகண்பொழிதொண்டர் 245
அன்பர்சிந்தையலர்ந்தசெந்தாமரை 337
அன்பர்பூசை 465
அன்பர்வேடமே 468
அன்பிடுந்தட்டு 536
அன்பிலர்போல் 323
அன்பினுலின்பம் 342
அன்பினிற்பொலிந்து 462
அன்பின்மேன்மை 441
அன்பின்வழிவரும் 467
அன்புசாயார் 368
அன்புநீடும் 439
அன்பு பண்ணியபரிவு 436
அன்புபெருகஉருகி 272
அன்புருகப்பாடும் 281
அன்புறு மனத்தால் 438
அன்பெனுந்தூநெறி 510
அன்பெனுந்தூயநீராடுதல் 520
அன்றியோர்காப்பு 517
அன்றுதொட்டு 169
அன்னநடையார் 325
அன்னதெம்பிராணடியவருடைமை 410
அன்னமன்னவள் 314
அன்னம் 297, 447
அன்னவர் 471

ஆ

ஆ(காமதேனு) 84
ஆ(பசு) 112
ஆகமநூல் 478
ஆகமம் 100
ஆகுதி 247
ஆங்குவைத்து 515
ஆசனம் 161
ஆசிலந்தணர் 186
ஆசைமேலுமொராசை 298
ஆடரம்பையர் 245
ஆடவர் 156
ஆடவென்று 516
ஆடியசெய்யதாள் 217
ஆடியபெருமான் 470
ஆடுகின்றவர் 255
ஆடுசேவடி 534
ஆடுதோகை 247
ஆடுறுசெயல் 427
ஆடை 530
ஆட்சி 202
ஆணைபோற்றி 568
ஆண் 350
ஆண்டகை 172
ஆண்டகைவீரர் 425
ஆண்டவள்ளல் 219
ஆண்டுகள் 168
ஆண்டுகொள்ளப்பெற்றவர் 550
ஆதபமறைக்குடை 176
ஆதரவு 136
ஆதனம் 443
ஆதி 350
ஆதிசைவன் 200, 205
ஆதிதேவர் 136
ஆதிமுதல்வர் 277
ஆயுநுண்பொருள் 407
ஆய்ந்த 493
ஆய்ந்து 461
ஆரணம் 95
ஆரநறுஞ்சேறு 319
ஆரம் 144, 240, 442
ஆராதகாதல் 264
ஆருயிர்வரன் 307
ஆரூரமர்ந்தஅருமணி 274
ஆரூரையாண்டவர் 302
ஆரூர்மன்னவர் 346
ஆர் 317

ஆர்த்தி 311
ஆர்ப்ப 284
ஆர்ப்பரவம் 417
ஆர்ப்பு 113
ஆலமமுது செய்த பிரான் 499
ஆலியமுகில் 74
ஆலும் 174
ஆலை 77
ஆவணப்பழமைகாட்டி 550
ஆவணம் 190, 205
ஆவணவீதி 94
ஆவதிது 183
ஆவனஆகும் 470
ஆவிசூழ்ந்த தனிமை 309
ஆளாந்திரு 354
ஆளாய் அந்தணர்செய்தல் 191
ஆளுடையநம்பி 285
ஆளுடையார் 496
ஆளுநாயகர் 444
ஆளுறுக்கானம் 485
ஆளோலை 185
ஆழி (ஆணைச்சக்கரம்) 101
ஆழி 312
ஆறங்கம் 354
ஆறு சுவைத்திறத்தன 443
ஆறுசூடிய 405
ஆறை 501
ஆற்றலர் 301
ஆற்றாக்கையள் 320
ஆற்றாமை 320
ஆனதன்மை 537
ஆனந்தம் 252
ஆனந்தஅருவிநீர் 253
ஆனந்தவெளி 28
ஆனவெல்லாம் 367
ஆனாப் பேரன்பு 261
ஆன் கன்று 132

இ

இகலினால் 472
இகல் 490
இகழ்ந்து நோக்கி 115
இகழ்ந்துரைப்ப 123
இகற்றிறம் 471
இக்காரியத்தை 185
இங்குளோம் 193
இசைகோள் 221
இசைந்தன 340
இசைந்த வார்த்தை 155
இசைந்து 232
இசைபாடினான் 221
இசைப்பார் 345
இசையலா மெனினியம்பலாம் 409
இசைவில்லை 388
இசைவினாலெழுது மோலை 199
இசைவு 181
இசைவேயன்றோ வழக்கு 198
இச்சையின் அமுதுசெய்ய 443
இஞ்சி 241
இட 553
இடஇட 539
இடங்கொடுத்து 249
இடபவாகனன் 464
இடைப்படமுன் கூடி 415
இடப்பெற வேண்டும் 537
இடர் கூர்ந்து 523
இட விட 534
இடா 456
இடை (உள்ளிடம்) 139
இடைதெரிந்து 475
இடையறாமற் கும்பிடுங் கொள்கை 489
இடை யிடை மிடைந்து 324
இடையூறு 121
இணையிலாதவர் 462
இதுவேசெயல் 127
இத்தகைத்த 524
இத்திறமியம்புகின்றாய் 421
இந்தளம் 221
இந்திரத்திரு 330
இந்திரத் தெய்வதம் 62
இந்து வாழ் சடையான் 252
இமக் குலக் கொடிபாகர் 450
இமயப் பாவை துணைவனார் 489
இமையோர் 437
இம்பர் ஞாலம் விளக்கினார் 440
இயக்கன் 88
இயம்பலாமெல்லைத்து 358
இயல்பினின் அளித்து 404
இரங்கி நிற்கும் 110
இரந்து கூறி 365
இரவு 228
இரு கோவணம் 510
இருக்கு 82,260
இருண்டது 305
இருண்மறை மிடற்றோன் 204
இருதலை 397
இருநிதி 465
இரு நிலத்திருந்து 480
இருந்த வேறிடத்தில் 521
இருந் தொண்டர் 390
இருப்பு 193
இருமை 205
இருமையுங் கடந்து 342
இருவரால றிய வொண்ணாஒருவர் 429
இருவர்தேடொருவர் 317
இருளாரளகச் சுருளோதி 324
இருளின் கனம் 454
இருள் (சித்தையிருள்) 9
இருள் (புறவிருள்) 9
இருள் கால்சீக்கும் 164
இலவங்கம் 239
இலவவிதழ்ச் செந்துவர் வாய் 320
இல்லமடைந்த பின் 448
இல்லம் 448
இல்லை யென்றோதே 405
இளங்கன்று 118
இளங்குமரன் 103
இளங் கொடி 293
இளந்தனு 280
இளமென் சாயல் 365
இளமையின் மிக்குளார்கள் 368
இளமை மீதூர 362
இளம் பருவம் 280
இளம் பவள வல்லி 280
இளம் பிறை 131
இளவரசு 104
இழிந்து 477
இழியும் 262
இழுது செய் 62
இழைத்த அன்பு 544
இழைத்தவர் 433
இழையணிமுந்நூல் 382
இறு மருங்குலார் 306
இறைப் பொழுது 482
இறையும் 322
இறைவன தாணை 484
இறைவன் 191
இறைவன் 475
இற்புறம் பொழியார் 367
இனங்கொண்ட சேடியர் 315
இனவண்டு 284
இனிப்பெறும் பேறு 357
இனியவர் 450
இனைய செய்கையில் 543
இனைய தொன்று 416, 523
இன்ப ஆதரவு 408
இன்பத் துறை 362
இன்பமார்ந்திருப்பீர் 465
இன்பமோடமுதுசெய்திட 506
இன்பவெள்ளத் திடைமூழ்கி 272

இன்புறு தாரம் 438
இன்று 186, 526
இன்றொண்டை 293
இன்ன தன்மை யதாக 447
இன்ன தன்மை யது 375
இன்ன பண்பு 344
இன்னமுதூட்டு தற்கு 449
இன்னவாறு 344
இன்னன 324
இன்னிசை வண்டமிழ் மாலை 272
இன்னிசை 281
இன்னுயிர் 297
இன்னுயிர் செகுக்க 410

ஈ

ஈங்கு 515, 527
ஈசன் 298, 438
ஈண்ட அமுது செய்தருள்க 463
ஈண்டவமுது செய்விப் போம் 462
ஈதல் கேட்டு 512
ஈந்த 380
ஈர அன்பு 144
ஈரத்தை மாற்ற 520
ஈரம் புலர்த்தி 162
ஈர மென்மதுர ப்பதம் 442
ஈரமேனி 449
ஈன்ற ஆன் கனைப்பு 214

உ

உகிர்நுதி 162
உங்கள் தனங் களிலாகிலும் இடுவீர் 538
உங்கணாயகனார் 478
உச்சி குவித்த 270
உடம்பினில் அடங்காப்பயம் 529
உடற்றுணி 422
உடனிடஇட 535
உடனீங்க 318
உடனுறைவு 364
உடன் கூடி 328
உடன்கொண்டு 484
உடன் பெருகி 491
உடன் மூழ்க 388
உடன் மூழ்கீர் 397
உடன்று பொங்கி 423
உடுத்த கோவ ணம் 532
உடை 504
உடைய நம்பி 295
உடைய வரசு 229
உடையவர் 414, 475
உணங்கு கோவ ணம் 514
உணர்ந்து 254, 477
உணர்த்த 462
உணர்வினால் உணர வொண் ணாவொருவர் 462
உணர்வு 350
உணர்வு தந்து 218
உணர்வெலா மொழித்தது 38
உண்டி 443
உண்மகிழ்ந்து 295
உண்மைப் பான்மை 107
உதயம் 159
உத்தரத்திசை யின்வாயில் 243
உத்தரியத் துகில் தாங்கி 185
உத்தரியம் 176
உந்திச் சுழி 54
உமையாள் 131
உம்பரவை 294
உம்பர் 108, 212
உம்பர்களும் பணியும் செல் வம் 324
உம்பர் தரத் தார் 293
உம்பர் நாடுஇழி ந்ததென 265
உம்பர் நாயக ரடியார் 349
உம்பர் நாயகர் 298
உம்பர் நாயகி 407
உம்பர் பிரான்றா னருளுமுணர் வுபெற 348
உமைக் காண 512
உயர 235
உயர்த்த கோடி 529
உயர்வ போன்ற 282
உயிர்பதைத்துச் சோரும் 110
உயிர் துறப்ப 128
உயிரொன்றும் 318
உய்த்தொளித்த னர் 524
உய்த்தொழிந் தேன் 541
உய்ப்பார் 282
உய்யக்கொண்ட 218
உரவோன் 288
உரியதொண்டு 352
உரிமை செய் யும் 277
உருகுசிந்தை 506
உருச்செய்து வந்து 310
உருத்திரக்கணி கைமார் 278
உரைதிறம்பாத நீதி 468
உரைநல்கிட 341
உரைப்பதேநீர் 526
உரைப்பதொன் றின்றி 380
உரையியம்பாது 302
உலகிலில்லதோர் மாயை 535
உலகிலில்லா நெறி 192
உலகுய்ய 550
உலகுவிளங்க வரும்பேறு 501
உலகெலாம் 356, 454
உலகேறும்பெரு மை 493
உலகைவெல் வார் 342
உலைவில் 541
உலோகம் 539
உளநிறையருள் 406
உளமகிழ்சிறப்பு 362
உள்நிறையுங் குணநான்கு 291
உள்ளக்களிப்பி னாலே 275
உள்ளத்தே வேண்டி 411
உள்ளந்தழீயவன் 29
உள்ளம் 305
உள்ளம் அலைய 272
உள்ளமன்புகொ ண்டு 456
உள்ளவாறு 515
உள்ளனமாறி. 446
உள்ளும்புனிதர் 141
உள்ளெழுந்தரு ளும் 475
உறுதி 2
உறுதிகூற 476
உறைப்பு 142
உறையுள் 373
உழவாரம் 289
உழவின் அமை ந்தவளம் 493
உழூநர் 61
உழைநின்றார் 192
உழையார் 165
உன்னி 240
உன்னினார் 445

ஊ

ஊசல் 281
ஊடி 384
ஊட்டி 512
ஊன் 512
ஊதியம் 218
ஊரன் 498
ஊரெல்லைப் புறம் 258
ஊனமேல்ஒன்று மில்லார் 356
ஊனம் 342
ஊனுமுயிரும் உருக்குமன்பு 270

எ

எங்கள் செய்த வம் 379
எங்கு நாடியும் 522
எங்குளீர் 192
எங்கள்கோவ ணம் 538
எங்ஙனும் 469
எங்ஙனே 450
எடுத்தசேவடி 254
எடையிடும் 532
எட்டவல்லார் 190
எண்கொள்ளாக் காதல் 289
எண்டோளினார் 444
எண்டோள் 431
எண்ணமென் 190
எண்ணியஉலகு 436

எண்ணிலார்கள் 335
எண்ணில்பேரு
லகு 248
எதிரெழுந்து 519
எதிரேசொன்ன
போதிலும் 410
எதிர்காட்சி 258
எதிர்காணக்காட்
டும்படி 336
எதிர்கொண்
டார் 268, 269
எதிர்கொண்டு 442
எதிர்கொளீர் 264
எதிர்கொள்ள 265
எதிர்சென்றார் 242
எதிர்தொழுதார் 546
எதிர் தோன்றி 336
எதிர் தோன்று
முருகன் 289
எதிர் நின்றன 337
எதிர் நின்று 542
எதிர் நோக்கும் 289
எதிர் பாய்வன 238
எதிர்ப்பவர் 426
எதிர்முன் பரவு
மருள் 495
எதிர்வண
ங்கி 408, 511
எதிர்வழிபாடு 379
எதிர்வேறொ
ன்று 526
எந்தை 269
எந்தையார் 300
எந்நிலத்தினும் 503
எப்பற்றினையும்
அறவெறிவார் 494
எம்பிரான் 211, 265
எம்பிரான்றமர் 318
எம்மருங்கும் 184
எம்முன் பேற்ற
வேண்டும் 201
எம்மைப் பெற்
றார் 342
எம்மையும் ஆள்
வரோ 269
எயில் 136, 268
எரிசிதற நோ
க்கி 420
எரிசுடர்வாள் 420
எரி தளிர்த்தன்
ன 369
எரிதுள்ளினு
லென 527

எரிந்தன விழி
கள் 426
எரிமூன்றோம்பி 354
எரியினிடைத்
தோய்ந்த...கம
லம் 124
எல்லாம்தான் வை
த்து வாங்க வல்
லான் 379
எல்லை 238
எல்லை முடிவில்
லான் 182
எல்லைதீர்தனம் 539
எல்லையிலான் 390
எல்லையி லின்ப
வெள்ளம் 435
எல்லையில்தனிப்
பெருங்கூத்து 252
எல்லையில்லதோர்
செல்வம் 441
எல்லையில்லழகு 248
எல்லை யில்லாத்
திருநகர் 277
எல்லையில்லவன் 527
எல்லையில் வண்
புகழார் 345
எவர்க்கு மிக்
கான் 465
எளிதாம் வகை 223
எளியரானார் 362
எளிவரும் 134
எழுதவொண்ணா
மை யுள்ளத்
தால் 287
எழுத்தாமஞ்சு 84
எழுத்து 206
எழுத்துநீர் ஒப்பு
நோக்கி 207
எழுத்தொக்கும் 206
எழுந்தருள
(மறைய) 260
எழுந்தருளப்
பெற்றது என்
கொலோ 478
எழுப்பிட 477
எறியலுற்றான் 482
என்அளவிற்றே 501
என் உயிர்க்கொ
ரு நாதர் 412
என்செய்யஅணி
யுங்கோவணம் 530
என்செய்வார் 522
என்பார் 503

என்பா லெழுந்த
ருள் பெரியோ
ய் 463
என்பு 442
என்றாத்தும் 337
என்றுங்கேடிலா
தான் 274
என்று மிவ்விள
மை நீங்காது 401
என்னமுறை 191
என்னளவு 322
என்னினுமொழி
ந்தவா 383
என்னினைந் தா
ன்கொல் 184
என்னுயிர் 301
என்னுரைசெய்
தேன் 490

ஏ

ஏட 185, 421
ஏதமானவை தீர்
க்க 340
ஏதந்தீர்நெறி 343
ஏதிலார் 366, 451
ஏத்துகேன் 344
ஏரின்மல்குவ
ளம் 441
ஏலவார்குழ
லாள் 464
ஏவணச் சிலையி
னார் 190
ஏவல்செய்தல் 209
ஏவல்செய்வார் 467
ஏவின செய்யும்
பெருமை 406
ஏழிசைப்பாடல் 469
ஏழை (பெண்) 429
ஏழ்பரித்தேரோ
ன் 303
ஏழ்பெரும் புவ
னம் 241
ஏறநின்றே 475
ஏறுசேவகனார் 341
ஏற்றுவார் ஏறு
தற்கிசைந்தார் 542
ஏனை 537

ஐ

ஐ 294
ஐந்துறுப்பால்
வணங்கி 270
ஐந்துபேரறிவு 252
ஐம்படை 150

ஐயமில்லை 410
ஐயர் 251, 363,
387, 442, 521, 548
ஐயன் 640
ஐயனுக்கழகி
தாம் 331
ஐயன்செய்தது 487

ஒ

ஒக்கநெடுநாள் 500
ஒத்தலால் 545
ஒத்து 545
ஒப்புநோக்கி 208
ஒருகூறாய் 220
ஒருசேமம் 517
ஒருபுடை சாய்ந்
தன 291
ஒருப்பட்டனர் 453
ஒருபெருந்தொ
ண்டர் 381
ஒருமருங்கு 296
ஒருமை 342
ஒருவர் (இறை
வன்) 429
ஒருவழியால் 457
ஒருவா றொதுங்
கும் 497
ஒல்கி 299, 307
ஒல்லை (விரைவி
ல்) 457
ஒல்லை 527
ஒல்லை உளத்தி
னுங் களவிலா
மை 386
ஒழிந்தவர் ஒழிந்
தே மாண்டார் 427
ஒழிய 532
ஒழியாதுணர்
வழி 223
ஒழுகுநாள் 471
ஒளித்தவாறு 524
ஒளிர்முத்து 492
ஒன்றும்மறாது 409
ஒன்றுவேண்டி 409
ஒன்றொழி
யாமை 541
ஒன்றொன்று 534
ஒன்னார்நகை 421

ஓ

ஓங்குகோவணப்
பெருமை 515
ஓங்குநீர்மை 468
ஓசைஐந்து 215

ஓடிப்போய்ப்பி ழையும் 420
ஓடினாருள்ளார் உய்ந்தார் 427
ஓடு 143, 362
ஓடை 471
ஓதினார் 544
ஓமதூமம் 246
ஓர்தன்மை 442
ஓலமிடும் 260
ஓலம் 432
ஓலிட்டு 432
ஓலை 147
ஓவியம் 287
ஒளி (வரிசை) 266

க

கங்குல் 159, 454
கங்குல்கங்கை 306
கங்குற்கழிபோம் யாமம் 326
கங்கை 233
கங்கைநதிகரந்த சடைகரந்து 387
கங்கைமடுத்ததும் பிய 516
கங்கைமுழங்கும் 245
கச்சு 414
கடக்கத்துணை போதுக 413
கடக்களிறு 3
கடலைக்கடந்து 303
கடப்பாடு 140
கடல் 241
கடல்சூழ்புவி 496
கடல்புக 303
கடவுள் 76
கடற்படிமிகழ 405
கடன் 129
கடன்கள்தக்கன கொண்டு 446
கடி 168
கடிதணுகி 521
கடிது 190
கடிதுவந்து 511
கடிநகர்ப்புறம் 417
கடிமணம் 169
கடுக்கை 147
கடுத்தநஞ்சு 312
கடுப்பில் 516
கடை 113, 475
கடைகூட்ட 288
கடைபிறழும் 288
கட்டுவிட்டுருகு கின்றது 454
கணநாயகராகுந் தன்மை 500
கணவரும்மனை வியாரும் 398
கணவனார் 459, 462
கணவன் 315
கணிதநூற்புல வர் 160
கண் 274
கண்கொள்ளாக்க வின்பொழிந்த 289
கண்டம் 363
கண்டவர்க்கு 510
கண்டாரில்லை 399
கண்டிகை 144
கண்டிலர் 521,522
கண்டிலேன் 524
கண்ணி 164, 362
கண்ணீர்வார 112
கண்ணுதல் 291,335
கண்ணுதற்கரந் தோன் 512
கண்ணெரிதழல் 310
கண்மழை 130
கண்வியப்ப 288
கதறி 214
கதிரவன் 159
கதிரிளம்பிறைக் கண்ணியர் 519
கதிரோனெழு காலை 326
கதிர்சாய்வ தென 175
கதிர்த்தபூண் 277
கதிர்மணிபிறங் குதுஎன்ன 278
கதிர்முத்து 492
கதிர்விரிப்ப 289
கதுமென 411,477
கந்தம் 321
கந்தை 144
கமலம் 124
கமலப்போதிற் றிரு 364
கமலினி 277
கம்பலை 80
கயிரவம் 307
கயற்கண் 268
கயற்கண்ணினார் 156
கயிலை 174
கயிலையினின்வீற் றிருந்தபடி 259
கரசரணாதியங் கம் 214
கரணங்கள் நான்கு 252
கரணத்தான் 204
கரந்தது 393
கரந்தான் 233
கரவீரம் 240
கரு 71
கருங்குழலின் பாரம் 320
கருகும் 454
கருங்கூந்தல் 291
கருணைத்திறம் 134
கருணையுரு 351
கருத்தறிந்து 467
கருத்தறிந் துதவி 504
கருமம் 127
கரும்பாண்டில் 74
கரும்புபடுமுத்து 492
கரையில்லிருள் 326
கலங்கி 411
கலங்கியவுணர் வினராய் 528
கலந்தகாதலண் டர் 400
கலவமயில் 320
கலவை 163
கலவைச்சாந்தி னாறுபுனல் 170
கலன்கள் 94,164
கலைவாண்மதியும் கனல்வான் 321
கவல்வள் 326
கவளிகை 481
கவிகை 105
கவுதாரி 333
களமர் 77
களம் 386
களனில் 426
களியளி 502
களைந்து 525
கள்வர் 121
கழங்கு 281
கழல் 299
கழிபெருங்காதல் 418
கழுத்தணிமணி 113
கழுமலம் 257
கழுவி 461
கறிகள் 461
கறியமுது 461, 462
கறுத்தன 338
கறைக்களத்தி றை 507
கறைமருவுந்திரு மிடறு 392
கறைமறைமிடற் றினான் 381
கற்பகத்தின் பூங் கொம்போ 286
கற்பகம் 286, 546
கற்பகவாசமாலை 270
கற்பாடலம் 240
கற்பனை 350
கற்பனை கடந்த சோதி 350
கற்பின் மனைவா ழ்க்கை 149
கற்பின்மேம்படு காதலியார் 411
கற்புறு மனைவி யார் 367
கற்றை 74
கனங்கொண்ட 315
கன்னிகாரம் 240

கா

காஞ்சி 78, 284
காட்சி(துறை) 35
காட்சி 547
காட்சி தந்து 489
காணற்பாலை யோ 189
காணும்படியி லாத 511
காண்டகுவிசை 425
காண்டலும் 511
காதலுன் மகன் 386
காதல் 151, 510
காதற்பிள்ளை 151
காதன்மேவியசுற் றம் 413
காதில்கண்டிகை 175
காப்பு 279
காப்புறுமெல்லை 376
காமன் 286, 310
காமன்றன் பெரு வாழ்வு 286
காமத்துயர் 326
காமுறுமனத் தான் 159
காரணர் 501
காரிகை 418

காலநேர்படுதல் 249
காலனூர் 338
காலாள் 471
காவினூற்றடவிச் சென்று 457
காலைசெய்வினை 160
கால் (காற்று) 417
காவணம் 137, 190, 335
காவலன் 121
காவலாளர் 475
காவிநேர்வருங் கண்ணி 302
காவிரி 261
காளை 171
காஞூர்க்கும்மலர் 261

கி

கிடங்கு 241
கிடை 81
கிளர்கொணீறு 525
கிளை 76
கிளைஞர் 427, 523
கிள்ளை 93
கிழமை 221
கிழிக்கோவணம் 512
கிழித்த கோவணம் 532
கிழித்து 193

கீ

கீதம் 87
கீதவொலி 237
கீள் 504
கீறி 197
கீறியிட்டான் 191
கீறுகோவணம் 525

கு

குங்குமக்கலவை 330
குங்குமம் 167
குசை 177
குஞ்சி 162
குடும்பம் 549
குடை 169
குடைநிழல் 85
குணக்குன்று 142
குணங்கொள் கோவணம் 514
குணப்பெருங் கடல் 218
குணப்பெருங் குன்று 142
குணமொரு மூன்று 252
குண்டகழ் 242
கும்பிடல் 143
கும்பிடும் விருப்பு 329
கும்பிட்டுடனுறை பெருமை 438
கும்பிட்டுப்படருங் காதல்வழிச் செல்வார் 495
குயவனூர் 359
குரங்கு 333
குரவர் 76
குருளை 102
குலக்கொடி 418
குலத்தைவிளக்க 494
குலப்பதி 404
குலமகன் 128
குலமாதர் 307
குலமுதலறிவு 154
குலம் 129
குலாவுபாதம் விளக்கி 443
குலைந்து 529
குளத்தின்மூழ்கித்தருக 386, 394
குளிரிபடுத்து 319
குளிர்தாளம் 267
குளிர்முத்து 492
குவலயம் 101
குவிக்கவும் 537
குவித்தசெங்கை 249
குவித்தசெங்கை கொண்டெழுந்து 477
குழக்கன்று 120
குழல் 82,292
குழாங்கள் 167
குழிநிரம்பாத புன்செய்க் குறும்பயிர் 460
குழை 175
குழைக்கொடி 474
குழைத்தொடை 266
குழைப்பொலி காதினன் 433
குழைமகரம் 168
குறடு 235
குறட்சிறுபூதம் 16
குறித்துவேண்டினகுணமெனக்கொண்டு 409
குறிப்புத் தோன்ற 281
குறிப்பின்நின்றன் 486
குறியின்வழி 450
குறையாநிலை 221
குறையை நேர்ந்து 461
குறைவறக் கொடுத்தஆதி மூர்த்தியார் 549
குறைவறக் கொடுத்து 470
குற்றேவல் 414
குன்றவில்லி யார் 533

கூ

கூடவேமடிவது 421
கூடியமகிழ்ச்சி 470
கூவிளம் 240
கூறுய்த்துடிக் கின்றீர் 420

கெ

கெண்டைநெடுங் கண் 288
கெடிலம் 230,355
கெடுத்ததாக 532
கெடுத்தனேல் 391
கெடுத்தீர் 394

கே

கேடுமாக்கமுங் கெட்டதிரு 143
கேளீர் 269
கேள்வர் 364

கை

கைகளாரத் தொழுதனர் 400
கைக்கடா 333
கைக்கொண்டு 516
கைக்கொண்டு செலவுய்ப்ப 291
கைச்சாத்து 207
கைதவம் 521
கைநீண்ட 307
கைதை 79,242
கைதைதுன்று நீறு 242
கைத்தலம் 481
கைத்திருத் தொண்டு 140
கைத்தொண்டு 229
கைமா 234
கைமாவின்உரி யானை 234
கைமைவினை 461
கையினில்நெய்த கோவணம் 533
கைதவமறை யோர் 409
கைவலான் 162

கொ

கொடி 323
கொடியீர் 121
கொடுக்கயாமொட்டோம் 421
கொடுத்தகோவணம் 416
கொடுத்தமொழி 348
கொடுப்பார் 514
கொடுமையில் லான் 386
கொடுவந்தே னியம்ப 478
கொண்டருளும் 429
கொண்டவன்பினிற்குறைபடா அடியவரடிமைத் தொண்டு 545
கொண்டு 526
கொண்டே 539
கொண்டெழுந் தது 534
கொண்டுபோய் விடுக 483
கொண்டுபோவதாமொருவன் 416
கொண்டுவரும் 315
கொண்டுவாரும் 520
கொத்தார்மலர் 220
கொள்கென 526
கொள்கைத்து 167
கொள்கையின் வணங்கி 477
கொள்ளாமைக்கு 389
கொள்ளிடத் திருநதி 256
கொள்வது துணிந்தே 527
கொழுநர் 461

கொற்றவர்திரு 155
கொற்றவன் 486
கொற்றவாயில் 336
கொற்றவேனம் 447
கொன்றை 240
கொன்றையன் 270
கொன்றை வேய்ந்தார் 336

கோ

கோகிலம் 239
கோங்கரும்பை வீழ்ப்ப 282
கோங்கம் 78
கோடுதட்டின் மீது 534
கோணவருள் 498
கோதிலன்பர் 549
கோதிலாவமுது 218
கோதிலா அன்பர் 516
கோதிலா வாய்மை 343
கோதை 58,474
கோத்தமுதற் பொருள் 358
கோத்திரமுறை 154
கோபுரம் 89
கோமகன் 486
கோமான் 110, 467
கோயில் 469
கோயில் (அரண்மனை) 112,474
கோலம் தழைப்ப 331
கோலி 292
கோலிவாரி 457
கோவணக் கள்வர் 520
கோவணத்தட்டு 536
கோவணப்பெருமை 507
கோவணமொன்றுக்கு அளவில் கோவண மொத்தில 535
கோவணம் 177, 370, 504, 517
கோவதை 119
கோளிசாலம் 78
கோழி 333

ச

சங்கரன் 464
சங்கை 522
சடங்கு 81
சடைக்கங்கைநீர் 518
சடையோன் 226
சண்பகம் 79, 240
சதமகன் 249
சதுர்முகங்கள் 243
சந்தவிசை 269
சந்தனச்சேறு 163
சந்தனத்தளறு 330
சந்தின்றழல் 321
சந்து 78, 228
சபதம் 388
சபை 179
சமிதை 319
சம்பு 29, 90
சலத்தால் 542
சரக்கு 522
சரணாரவிந்த மலர் 328
சரளம் 79
சழக்கினின்று 542
சழக்கு 120
சழங்கலுடை 177

சா

சாதி 240
சாதிகள் 84
சாதித்தான் 200
சாதிப்பான் 195
சாதிமாலதி 79
சாதிவேதியர் 413
சாத்துவிதம் 252
சாந்தணிநீவி 267
சாந்தம் 276
சாந்து 267
சாமரைகள் ஓங்க 169
சாயல் 294
சாய்த்து 167
சாரச்சொன்னான் 197
சாரிகை மாரி வந்து 424
சார்பு 469
சார்வாக 327
சால 464
சாலநீடு செல்வது 384
சாலி 71, 74
சாலிவெண் முழை 457
சாலுமொழி 174
சால் 62, 533
சார்பின்மேன்மை 440
சாளரம் 89
சாற்றி (பலருக்கும் அறிவித்து) 265

சி

சிகழி 162
சித்தவடமடம் 229
சிந்திட 422
சிந்தை 252
சிந்தைசெய்தருளிற்று 379
சிந்தை செய்தான் 488
சிந்தை செய்து 517
சிந்தைசெய்வது 504
சிந்தைசெய்வர் 468
சிந்தை தளர்ந்தருளுவது 119
சிந்தை நெகிழ்ச்சி 187
சிந்தைமயக்கில 298
சிந்தையன்பு 408
சிந்தையார 300
சிந்தையில் விரும்பி 458
சிந்தை வலித்திருக்கின்றாய் 389
சிமையம் 74
(மறைச்) சிரத்தில் 250
சிரித்தார் 184
சிரிப்பு 87
சிலம்பு 284
சிலம்பொலி 241
சிவந்தன 338
சிவம் 103
சிவபுரி 549
சிவபெருமான் 227
சிவலோகம் 402
சிவல் 333
சிவவேதியர் மகள் 223
சிவனடியார் 497
சிவனருளால் 497
சிவனருள் 286
சிவனார் 494, 478
சிவன் 225, 363
சிவன்கழல் 504
சிவன்விரும்பிய 540
சிறந்தபுகழ் 257
சிறப்பின்மல்க 469
சிறப்பொடுபொலியும் 398
சிறிதளவேயொலிப்ப 316
சிறியவென் பெரும்பிழை பொறுத்து 528
சிறுமகளிர் 64
சிறைவண்டுகலந்தார்ப்ப 292
சிற்பரவியோமம் 351
சினவிடைப்பாகர் 396

சீ

சீதளத்தாளப் பந்தர் 329
சீரடியார் 341
சீரடியார்கள் 335
சீதமதி 147
சீரினீடிய 502
சீர் 294
சீர்வளர் 505
சீலமார் கொள்கை 378
சீலமார்பூசை 464
சீலம் 472
சீறடி 316

சு

சுட்டி 150
சுணங்கன் 6
சுண்ணம் 163, 170
சுமந்து 457, 539
சுரிகுழல் 284
சுரிகை 21, 417
சுரும்பு 158
சுற்றத்தார் 416
சுற்றம் 505
சுழியம் 330

சூ

சூடு (உழவு) 73
சூதம் 79, 239
சூதர் 106
சூது 60, 167
சூழிகை 89

செ

செக்கர் 405
செங்கணவன் 236
செங்கதிரோன் 98
செங்கயல் 147

செங்களம் (போர் முடிந்த களம்) 427
செங்கனிவாய் 293
செங்குருதி சோர 482
செங்குன்றூர் 492
செங்கோல் 112,118
செழுந்தட்டு 540
செந்தமிழ் மாலைகள் 260
செந்திரு 153
செந்நெல் 452
செப்பரு நிலைமை 472
செப்பற்கரிய பெருஞ்சீர்த்தி 494
செம்பியர் 97, 502
செம்பொருளால் 348
செம்பொன் மாளிகை 238
செம்மாந்து 234
செயத்தகும் பணி 529
செயற்கருஞ்செய்கை 432
செயற்கருஞ் செய்கைசெய்த தீரன் 432
செயிர்த்து 124,383
செயினர் 205
செய்கை 314
செய்குன்று 329
செய்தபேறு எனக்கு 411
செய்தவம் பெரியோன் 251
செய்தவ வேடங் கொண்டுவென்றவன் 487
செய்பணி 413
செய்யகழல் 494
செய்யபுன் சடை 508
செய்வதற்கரிய செய்கை 431
செல்லாநின்றார் 276
செல்லல் 452
செய்வதென் 449
செருந்தி 78, 240
செல்லப்பட்டு 108
செல்வத்து வளமை 405
செல்வ மேவிய நாள் 445
செவிலி 53
செவிப்புலம் 442
செவ்வாய்வெண் ணகைக்கொடி 297
செவ்விய உண் மைத் திறம் 125
செவ்வியநெறி 485
செழுந்தவிசு 329
செழுந்திரு மனை வியார் 463
செழு மறைகள் ஓலமிடவும் உணர்வரியார் 499
செறுத்து 428
செற்றம் 422
செற்றவர்தம்மை நீக்கி 486
செந்நெலன்ன மலை 247
சென்னி 232
சென்னி (சோழர்) 404
சென்னிமேற் கொண்டு 255
சென்னியால் வணங்கி 344, 382

சே

சேக்கை 304
சேடி 90
சேடியர் 277
சேடு 247
சேட்படு 256
சேட்செல 241
சேடர்த்துணை 326
சேய்த்தன்று 193
சேயிழை 434
சேரர்திருநாடு 492
சேர்த்தார் 158
சேர்வரியார் 293
சேணார்மேருச் சிலை 498
சேணிடையுந் தீங்கடையா 393

சை

சைவர் 96
சைவவிடங்கு 276
சைவமெய்த் திரு 331
சைவமுதல் 317
சைவஅந்தணர் 153
சைவநன்னெறி யின் சீலம் 499
சைவவெண்டிரு நீற்றுமுண்டம் 508
சைவப் பெருந் தன்மை 500
சைவமெய்த்திரு வின் சார்வே பொருள் 361

சொ

சொல்ல வேண் டுவதில்லை 515
சொல்லுவது 435
சொரிந்தன குடல்கள் 426
சொல்லுவித் தது 527
சொற்றமொழி 109
சொற்றமிழ் 216

சோ

சோதி 350
சோர்கின்றஆவி தாங்கும் 486
சோதியாய் எழுந்து 463
சோதி 339
சோதியுட் சோதிய 339

ஞா

ஞாலத்தோர் விரும்பிஉய்யு நெறி 369
ஞாலமுய்ய 499
ஞாலம் 338, 447
ஞாழல் 79, 239
ஞானமாமுனி வர் 438
ஞானமேமுதலா நான்கு 355

த

தகவால் 543
தகவுற 450
தகுநீர்மை 326
தகுதியின்பகுதி 356
தகும்பணி 353
தகைத்து 288
தகைந்து 363
தக்கவகையால் 500
தங்கணாயகர் 469
தசும்பு 266
தடம் (வாவி) 233
தடம்பணை 238
தடவிப்பறித்து 460
தடுத்தாண் டோம் 213
தடை (வாயில் கள்) 475
தடைசெய்ய 292
தட்டிவிட்டார் 533
தட்டின்மட்டு 537
தணிந்தசிந்தை 357
தணியுமுள்ளத்த ராயினர் போன்று 530
தண்டாளம் 288
தண்டு 195,510
தண்ணளி 130
தண்மதி 311
தத்தன் 475
"தத்தா நமர்" 482
தத்துவநெறி 354
தந்தகோவணம் 517,520,524
தந்ததுமுன் தாராதே 389
தந்தைதன் தந்தை 185
தபோதனர் 96,449
தப்பியது 522
தமாலம் 78
தமிழ்நாதன் 232
தமியோர் 304
தமியோர்பணிப் புற 304
தமிழ் (இனிமை) மாருதம் 313
தமிழ்மாலை 348
தமிழ்வரைப்பு 85
தம்பிரான் 262, 265, 513
தம்பிரான் றோழர் 275
தம்பிரான்றோழ ரவர் தாமொ ழிந்ததமிழ் 349
தம்பிரான்றோழ னார் 317
தம்பெருமான் 348
தம்மானை அறி யாதசாதியார் 234
தம்மையொப் பார் 342

தம்மையேதமக்கொப்பான நிலைமை 357
தயங்கப்போம் 314
தயா 107
தரங்கம் 168
தரங்கக்கரங்களால் 312
தரளம் 254
தரியா 322
தரு 99
தருதவவேடத்தான் 480
தருப்பை 510
தருமஞ்சலியாதோ 120
தருமம் 107
தருமமே பொருள் 354
தரும்பரிசு 531
தருவாரில்லை 451
தலைநின்றார் 493
தலைநின்றுய்த்து 353
தலைமேற்கொண்டு 466
தலையினால் வணங்கி 483
தலைவ! 541
தலைவன் 434
தவங்கள் (தீர்வுநெறி) 122
தவச்சிவயோகநாதர் 372
தவத்திற்புரிந்தநெறி 226
தவத்தினார் 440
தவநிறைந்தநான்மறைப்பொருள் நூல்களாற் சமைந்த 540
தவநின்றுதடுத்தது 363
தவநெறி 225
தவமுயல்வார் 223
தவமுனி 429
தவிசு 480
தவிர 479
தளர்நடைப்பருவம் 279
தளர்ந்தருள் செய்யேல் 419
தள்ளுநடை 177
தழைக்கமுகு 266
தழைத்தஅஞ்செழுத்து 544
தறைப்படுமளவில் 482
தறையிடைப் படுத்துகின்றேன் 419
தனம் 315,537
தனயர் 84
தனிக்கொடு போக 413
தனித்தடை 475
தனித்துச்சென்றமனம் 315
தனித்துலை 543
தனித் தொடாந்து 212
தனி நாயகி 241
தனிப் பெரும் 517
தனிப்பெரு தாண்டவம் 254
தனியாய் நின்றான் 198
தனி விழிக்குந் திரு நுதல் 130
தன்னுழைத் துன்னிய 375
தன்னைமாறி யிருக்க வுள்ளன 446
தன்னை யொப்பரியது 375

தா

தாணிழற் கீழ் 500
தாதன் 483
தாதிவர் பூந்தொடைமாலைத் தண் பந்தர் 267
தாமக் குழலாள் 326
தாமம் 158
தாமும் 523
தாம் (தாவும்) 238
தாரணி 220
தார மாதர் 449
தாரிப்பு 448
தாரும் 515
தார் 276
தார் மார்பு 290
தாவில் சீர் 262
தாள் 424
தாழ்ந்தது 536
தானை 105

தி

திகைத்தனர் 521
திகைத்து 211,463
திங்கட் கதிரிளங்கொழுந்து 280
திங்கள் 105
திங்கள் விரவிய பருவந் தோறும் விழாவணி 279
திசைகணான்கு 243
திசை முகன் 137
திசை யறியா வகை 232
திண்மையொழுக்க நடை 496
திரிமுகக் காந்தம் 196
திருக் களிற்றுப் படி 251
திருக் குலம் 404
திருக் கூட்டத்து நடு 349
திருக் கூட்டம் 498
திருக் கூத்து 227
திருக்கோலக்கா 260
திருச் சிற்றம்பலம் 250,351
திருத்தொண்டத் தொகைப் பதிகம் 347,358
திருத்தொண்டர் 265,317,464
திருத்தொண்டு 349
திருத் தோணிபுரத்தார் 259
திரு நடம் 253
திரு நல்லூர் 505
திரு நாவலூராளி 233
திருநீலகண்டம் 363
திரு நீற்றுமுண்ட வேதியர் 397
திரு நீற்றுமெய்யடிமை 544
திருந்த மன்னிய சிந்தை 441
திருந்தவை 390
திருந்து நிலனின் செழுவளன் 491
திருப்பதிகங்கள் 93
திருப்பதிகம் 220
திருப் பிரம்பினடி 249
திருப் புகலூர் 263
திருப்புலீச்சரம் 396
திருமகள் 480
திருமடம் 505,510
திருமணக் கோலம் 159
திருமடத்தே 513
திருமணப் பந்தர் 173
திருமணிவாயில் 474
திருமலி தோளினான் 429
திருமாணிகுழி 236
திருமாளிகை 275
திருமாளிகை வாயில் 270
திருமிகுமறையோர் 210
திருமுடிச்சிகை 508
திருமுண்ட நெற்றி 370
திருமுலைப் பாலமுது
திருமேனி 289
திருவணுக்கன் திருவாயில் 250
திருவம்பலம் 248
திருவரைக் கோவணம் 545
திருவருட்டுறை 217
திருவருள் மேற்கொள் பொழுது 346
திருவவதாரம் 149,258
திருவளரொளி 250
திருவளர் கோயில் (அரண்மனை) 105
திருவளர்சிறப்பு 437
திருவாயில் 136, 269,270
திருவாயில்கள் நான்கு 243
திருவாயிற் புறம் உற 268
திருவாரூர் 263,496
திருவாரூரார் 323
திருவாரூர்த் தோற்ற முடையுயிர் 126

திருவாரூர் வாழ் பெருமானடிகள் 324
திருவாரூர் வாழ்வார் (அடியார்கள்) 264
திருவிழா 505
திருவிழாவணி 506
திருவினும்உருவமிக்கார் 364
திருவினும்பெரியாள் 412
திருவின்மிக்கோர் 183
திருவீதி 244
திருவுடை மனைவியார் 428
திருவுடைஅந்தணாளர் 394
திருவுரு 294
திருவெல்லை 256
திரைசெய் கடலின் பெருவளன் 491
திரைசெய் நீர்ச்சடையான் 468
திலகம் 97
தில்லையம்பலம் 435
தில்லைவாழந்தணர் 352
திளைத்த 251
திளைத்தாடி 235
திளைத்து 276
திறலுடைச்செய்கை 402
திறை 101

தீ

தீங்குசெய்த 484
தீங்குறவொட்டோம் 203
தீண்டாமை செப்பமாட்டார் 395
தீண்டுவீராயின் 365
தீதிலாநெறியில் விட்டசொற்றிறம் 486
தீதுசெய்வினையேன் 451
தீபம் 170
தீரவேபசித்தார் 449
தீர்த்தம் 404
தீர்வு 119
தீவினை 224

து

துகள் அடங்க 267
துகில் 162
துடைப்புண்டது 122
துணரிணர் 164
துணித்துவீழ்த்தார் 425
துணித்து வீழ்த்து 424
துணிந்தனஉடல்கள் 426
துணிபொருள் 126
துணைவனார் 188
துண்ணெனும்படி 455
துயருழந்து 109
துயிலகற்றல் 462
துயிலமர்ந்தான் 232
துயில்கொளும் 475
துயில்கொள்ள 230
துலைநாட்ட 533
துலைமிசைநின்று 548
துலையிலேறிடப்பெறவதன்னருள் 541
துவளுநூல் 331
துவன்றி 159, 167
துளக்கியது 114
துறைபோனார் 390
துணைபெரும்பழியை மீட்பான் 416
துன்புறுது 438
துன்புறுவாழ்க்கை 213
துன்றினர் 424
துன்றுவேதியர் 513
துன்னினாரை 415

தூ

தூ 267, 270, 518
தூநறுந் துகில்வருக்கம் 537
தூபம் 170
தூமறை 216
தூயகுடிமை 493
தூயதொண்டனார் 410
தூயநீறு 242, 407
தூயார் 345
தூய்மை 308
தூய்மைசெய்வது 375
தூய்மையினமைப்பதுமுளது 513
தூரியங்களேங்க 169
தூரியம் 268
தூர்த்தவேடம் 407
தூர்ப்பதே 311
தூற்றி (உழவு) 75

தெ

தெண்ணிலா (தெள்+நிலா) 253
தெண்டிரை 259, 516
தெய்வக்கலை 103
தெய்வக் கற்பு 437
தெய்வநீர்நாடு 313
தெய்வப்பூ 398
தெய்வமணிப்புற்று 276
தெய்வ வளரிளமுகை 280
தெய்வவேதியர் 357
தெரியாதகொள்கையர் 447
தெரு 150
தெருமரும் 118
தெருள் 204
தெளியவொண்ணாது 200
தெற்றி 89, 268, 329
தென்றமிழ்ப்பயன் 358
தென்றிசையிற்கங்கை 235
தென்றிசை 35
தென்றிசைவாயில் 256
தென்னாவலூராளி 263

தே

தேங்கமழ்குழல் 283
தேங்கோதை 292
தேசு 141, 298
தேடியமாடு 470
தேடுவாரானார் 521
தேம் 238
தேராருநெடுவீதி 263
தேராழி 129
தேரின்மேவிய (வீதி) 502
தேருருட்டுநாள் 150
தேர் 323
தேர்க்கால் 108
தேர்த்தானை 116
தேர்நிறை 247
தேவதேவர் 245
தேவர்கடேவர் 401
தேவர்பிரான் 295
தேவாசிரியன் 270, 301,335,497
தேவி (மனைவி) 102
தேவியார் 480
தேற்றமருவிய 437
தேனார்க்குமலர்ச்சோலை 261
தேனிளம்பதம் 280

தை

தையல் 413

தொ

தொக்கநிலைமை 500
தொங்கல் 167,334
தொடக்குண்டு 295
தொடர்வதற்கு 416
தொடர்வறத்தொடர்ந்து 213
தொடைஇதழி 491
தொண்டர்கள் 242
தொண்டுகொண்டாண்டவர் 311
தொண்டுபெற்ற 500
தொல்கலைகள் 152
தொல்புகழ் 404
தொல்லை 345,375
தொழுதுவென்றார் 481
தொழுந்தொறும் 255
தொழுமன்பு 291
தொழும்பனார் 463
தொன்னெறி 115
தொன்மை 86
தொன்றுதொடுநெறி 123
தொன்னிலம் 123

தோ

தோடு 288
தோத்திரம் 87

தோய்ந்திடில் 455
தோய்ந்து 518
தோரணம் 95
தோளிணை துணை
யேயாக 415
தோள் 424
தோழமை 273
தோழனுர் 444
தோற்றம் 435
தோற்றீர் 209
தோன்றிய
பொருள் 350

ந

நகர்வாழ்வார் 268
நகைபொதிந்து 285
நங்கைபரவை
யார் 293
நஞ்சுண்ண 363
நண்ணல்
செய்யா 455
நடம் 338,351
நடு 350
நடுக்கு 299
நடுங்கிநுடங்கி 185
நடுநின்றூர் 287
நடுவிருள்யாமம் 455
நண்ணியமனைவி 436
நந்தனவனம் 240
நந்தி 240
நந்தலைமை 550
நம்பர் 261,531
நம்பி 179
நம்பிரானுர் 265
நம்புமாறறி
யேன் 299
நம்புவாய்மை 440
நம்மாரூரன்நாம
ழைக்கவாரா
நின்றான் 264
நம்மைத்தந்த
னம் 273
நயத்தகுந்தன 529
நரந்தம் 78,239
நரம்புடையயாழ் 237
நலங்கொள்
கோவணம் 531
நலஞ்சிறந்த 495
நலஞ்சிறந்தது 404
நலமிகுசிவ
லோகத்தில் 438
நலம் 265
நல்லகோவணங்
கொடுப்பன் 527
நல்லபொன் 539
நல்லிசை 303
நல்லொழுக்கம் 390
நல்வரவு 180
நவமணித்திரள் 539
நறும் 267,270,518
நறைகமழுஞ்
சடைமுடி 392
நற்றவக்களிறு 332
நற்றவத்தவர் 447
நற்றவர் 422
நன்புலனுகிய
ஐந்தும்ஒன்றி 272
நன்மணி 503
நன்னதி 404
நன்னெறி
காத்த 490
நன்னெறியினு
வாம் 369

நா

நாகம் 78,239
நாசிகள் 247
நாடியமனம் 470
நாடுமன்பு 534
நாடுறுபழி 421
நாட்கமலப்பதம் 274
நாணேன் 187
நாண்மடம்அச்
சம்பயிர்ப்பை
வலிந்தெழ 289
நான்மறைப் பெ
ருந்தவர் 513
நான்மறைமுனி
வர் 334
நாதம் 167
நாப்பண் 454
நாமஞ்சாற்றி 278
நாமம் (பெரு
மை) 164
நாயகன் 272
நாயன்மார் 470,534
நாயினேனை 274
நாலுவிதத்தில் 443
நல்லதோர்கோவ
ணம் 525
நாவலர்காவலர் 287
நாளிகேரம் 78,239
நாளிடை ஒரு
நாள் 506
நாளிடைகழிந்த
தும் 526
நாளுநாள் 281
நாளோலை 155
நாறுபூங்கோதை
மாது 479
நாற்றேருள் 392
நான்முகன் 287
நான்வருமளவும் 515

நி

நிகரிலார் 541
நிகரில்லான் 183
நிகரொன்றில்
லாதார் 496
நிகேதனம் 83
நிச்சயித்து 542
நிதிக்கிழவன் 465
நித்தமாகிய
பத்தி 442
நித்திலம் 301
நிபந்தம் 100
நிரந்த 138
நிரந்து 418
நிருத்தனுர் 227
நிருத்தன் 352
நிரைவெண்
டலை 323
நிலத்திடைவீழ்
த்த 415
நிலமகள் 97
நிலமுற 256
நிலவு 226, 321,322
நிலவுமிழுந்தழல் 320
நிலாமுன்றில் 316
நிலைஎழுகோபு
ரம் 255
நிலைமை 541
நிலைமைநன்று 526
நிலையினை 542
நிறை 322
நிறைகுடம் 170
நிறைசொன்
மாலை 343
நிறைத்தஅன்பு 507
நிறைநாண் முத
லாங்குணங்கள் 318
நிறைநிலாது 533
நிறைந்த நூன்
மார்பர் 519
நிறைபெருங்
கருணை 487
நிறையாற்றும்
பொறை 320
நிறையுடைய 392
நிற்கவுமாட்டார் 523
நின்றவேதியர் 528
நின்றிடு(விலகு) 476

நீ

நீக்கி 476
நீடருள் 507
நீடுசெல்வம் 470
நீடுபயன் 441
நீடும்பேறு 437
நீடியபேதை
யாள் 447
நீடுவாழ்க்கை 210
நீட்டும் 312
நீணிதி 393
நீணிலா 308
நீண்டகை 482
நீண்முடி 311
நீதி 101
நீதிமன்னவன்
புரங்கள் 246
நீதிமாதவர் 339
நீதியால் 343
நீர்முளை 452
நீராருஞ்சடை 264
நீர்மை 320
நீர்வழிச்சார்ந்
தனர் 457
நீலகண்டத்
தளவு 366
நீலத்துகள் 65
நீளிலையகதலி 266
நீளுமா நிதியின்
பரப்பு 444
நீள் 370
நீற்றினுல் நிறை
ந்த கோலம் 352
நீற்றின் உருவு
டையவர் 394
நீற்றின்செல்வம் 355
நீற்றுப்பை 510
நீற்றொளி 138, 370

நு

நுகர்ந்ததன்மையி
னன்மை 444
நுடங்குவன 246
நுணங்கிய
கேள்வி 160

நூ

நூபுரங்கள் 316
நூல்வருக்கம் 537

நெ

நெகிழ்ந்து 320
நெஞ்சினீங்கிடா அடிமலர் 509
நெடிதுயிர்த்து 110
நெடுஞ்சடை 371
நெய்தமைத்தது 525
நெருப்புயிர்த்து 112
நெறித்தபம்பை 371
நெற்றியீர் 525
நெற்றிவிழியான் 182

நே

நேடியும் 380
நேரடுத்தது 532
நேரவந்தவர் 442
நேராக 531,534
நேர்தரஅமையும் 530
நேர்துதிக்கும் 548
நேர்நிற்க 544
நேர்நிற்கவேண்டுவது 538
நேர்நின்று 541,545
நேர்ந்தது (நேர்ந்துஅதற்கறிகுறியாக எழுதிக்கொடுத்தது) 198
நேர்ந்தார் 420,434

நோ

நோய்மருந்து 120

ப

பகடு 74
பகல் 307,452
பகல்போக்கிய 304
பகைத்திறம் 121
பங்கயத்தாள் 271
பங்கயவதனிமார் 156
பங்கினாள் 277
பசலை 71
பசி 460
பசிதலைக்கொள்வது 448
பசுங்கர்ப்பூரம் 163
பசும்புரவிநெடுந்தேரிரவி 228
பஞ்சாங்கம் 272
பஞ்சின்மெல்லடி 305
பணிசெயற்பாலை 189
பணைத்து 167
பண்களினிறைந்தகீதம் 171
பண்டங்கள் 94
பண்டருமின்னிசைபயின்ற 259
பண்டி 177
பண்டுதஞ்செய்கை 397
பண்டுதாம்பயில்கோலமே 547
பண்டைநினைவு 461
பண்டைவிதி 288
பண்ணை 254
பண்பு 448
படர்பெருங்காதல் 309
படர்பெருஞ்சுற்றம் 420
படிந்து 518
படிமேல்வர 324
படியோலை 202
படைகரந்த 473
படைத்தொழில் 103
படைமதனார் 287
படைமன்மதனார் 322
படையனங்கன் 292
படையாளி 229
பட்டாடை 162
பட்டாடைகள் 529
பட்டு 535
பதம் (களை) 63
பதம் 459
பதாகை 246
பதி (ஊர்) 413
பதிகங்கள் 269
பதிகம் (புராண உறுப்பு) 48
பதியிலார் 90
பதியிலார்குலம் 278
பத்தர்தட்டு 536
பத்திரம்வாங்கி 481
பந்தம்வீடுதரும்பரமன் 300
பந்தர்கள் 247
பந்து 281
பயமைந்து 121
பயில்தீர்த்தம்படிந்தாடி 262
பயின்மொழிபயிற்ற 333
பரசு 491
பரசிராமன் 491
பரத்தை 364
பரமானந்தநன்மது 337
பரம்பரையில்விரும்பினார் 327
பரம்பொருள் 237, 530
பரவை 294
பரவை (கடல்) 294
பரவையார் 278
பரிசனங்கள் 285
பரிசனம் 121,230
பரிதி 104
பரிபவப்பட்டு 471
பரிபவம் 420
பரிவு 494
பரிவெய்த 442
பருவரல் 133
பல (பலா) 82
பலகை 415
பலர்புகழ் 550
பலிப்பாத்திரம் 371
பல்லாண்டு 165
பல்வகைத்திறத்து 539
பவநெறிக்குவிலக்கு 225
பவமுயன்றது 103
பவித்திரம் 163
பவித்திரம் மரகதக் கதிர் 508
பள்ளிக்கட்டில் 476
பள்ளியமர்ந்தருளினார் 230
பழனம் 80
பழி 110,111
பழிக்குநேரொன்றுநாணாய் 385
பழிதிலாதார் 397
பழிப்பறைமுழக்கு 113
பழிவிட 418
பழுதிலாதாய் 436
பழுதுரைத்தீர் 124
பனவற்கு 421
பனிநீர் 163
பனிநீர் நறுந்திவலை 319
பனிநீரளவித்தடவும் 321
பனிப்பு 107, 304
பனிவரை 51
பனிமலைவல்லி 281
பன்முறையிழந்து 471
பன்னுதமிழ்த்தொடைமாலை 327

பா

பாகங்கொண்டபேதை 547
பாங்கியர் 283
பாங்கோடி 292
பாசப்பழிமுதல் 460
பாசம் 298
பாசனம் 161
பாடலம் 79
பாடவம் 421
பாடியபொருள் 217
பாடும்பரிசு 344
பாணம் 292
பாணி 221
பாதகம் 122
பாதந்தலைமிசைவைத்து வாழும் தலைமை 550
பாதுகாத்துய்ப்பீர் 488
பாத்திரம் 390
பாரம் 144
பாரின்நீடியபெருமை 502
பாரின்மல்கவிரும்பி 441
பார் 243, 284
பார்க்கிலன் 431
பார்ப்பதிபாகன் 271
பாலிகைகள் 170
பாவகம் 385
பாவத்தினொலி 113
பாவை 309
பாவையர் 305
பானலந்துறைப்பொன்னிநீர் 518
பான்மைகூட்ட 285

பி

பிஞ்ஞகன் 181
பிணங்குகின்ற 192
பிணையல் 164
பித்தனென் 416
பித்தனே 187
பித்தவார்த்தை 188
பித்தா 220
பிரமசாரியின் வடிவு 507
பிரம்பு 21
பிரானுந் தன்மை 498
பிரான் 271, 479
பிரியா நங்கை 407
பிள்ளைமைப் பருவம் 282
பிள்ளையார் 258
பிழைத்தவர் 433
பிழைநெறி வழக்கு 194
பிழைபொறுத்து 340
பிழை பொறுப்பீர் 525
பிழைப்பார் 306
பிழையினைப் பொறுக்கவேண்டும் 382
பிறைசூடி 220, 498
பிறைத்தளிர்ச் சடை 507
பிறைவளர்சடை முடிப்பிரான் 372

பீ

பீலி 168, 228

பு

புகலலாந்தகைமையது 135
புகல்வகை 221
புகழோ 540
புகழ்பாடு 222
புகழ் பெருக்கிய சிறப்பு 404
புகார் நகரம் 404
புகுந்தது மொழியும் 392
புகுந்த பரிசு 393
புணரி 404
புணர்குவடு 327
புணர்ச்சிகள் 539
புண்டரீகப்பதம் 340
புண்ணியத் தொண்டர் 372
புண்ணியப் புனிதவன்பர்கள் 248
புண்ணியப் பொருள் 385
புண்ணியம் 286
புடை 230
புடை சூழ்ந்த 484
புடை சூழும் 241
புடைத்தது 112
புடை நின்று 322
புதல்வன் 116, 387, 543
புதிய பூமழை 546
புத்தகக் கவளி 473
புத்தகம் 481
புயல் சுமந்து விற் குவளை பவள மலர் மதி பூத்த விரைக்கொடி 286
புயல் வளர் மாடம் 403
புரமெய்தான் 222
புரவலனார் 296
புரவலன் 476, 488
புரவி 103
புரிந்து 481
புரிநூல் 508
புரிமுந்நூல் 257, 263
புரியும் 245
புரிவுடன் 480
புரிவுடைய மனம் 230
புலர 326
புலரும் படியன்றிரவு 322
புலவி 365
புலனென்றும் படி 226
புலி (கொடி) 51
புவன மூன்று 430
புவனம் 363
புவனம் யாவையும் நேர்நிலா 540
புளகம் 214
புள் 84, 238
புள்ளினம் 304
புள்ளுறங்கும் வயல் 456
புள்ளொலி 309
புறந்தருவார் 257
புறப்படல் 243
புறப்படார் 296
புறம்பணை 229
புறம்பணை 239
புறம்பணைத் தடம் 313
புறவம் 260
புறவிடைகொண்டு 255
புற்றிடங்கொண்ட புராதனர் 271
புற்றிடங்கொண்டார் 100
புற்றிடம்விரும்பினார் 285
புற்று 136
புனல் 461
புனிதநீறு 175
புனிதபாத்திரம் 461
புனிதமாக்குவது 404
புனிற்றிளங் கன்று 107
புனிற்று 108
புனைந்தார்க்கும் புறகு 498
புனையிழை 416
புனையுமுறை 135
புன்முறுவல் 306
புன்னகம் 79
புன்னை 240

பூ

பூகம் 79, 239
பூங்கழல் 283, 351
பூங்குழல் 277
பூங்கொம்பு 286
பூங்கோயில் 271, 292
பூங்கோயிலுள்ளார் 283
பூசைநீடி 469
பூணாரவம் 498
பூண்தயங்கு 365
பூதகணம் 131
பூதமைந்து 141
பூதநாத ! 340
பூதநாயகர் 136
பூந்துகள் 92
பூந்துகில் 503, 531
பூந்துகிற்பொதி 535
பூமாலைப்பந்தர் 157
பூம்பிடகை 333
பூம்புகார் 403
பூவணத்தவர் 190
பூவின் மங்கை 302
பூவை 93

பெ

பெடை 304
பெண் 350
பெண்ணையாறு 228
பெண்மை 294
பெரியகருணை 274
பெரியமயல் 315
பெயரின்விளங்கி 493
பெருகாநின்ற
பெரும்பேறு 497
பெருகிய அடியார்க்கு 512
பெருகொளி 290
பெருக்கோதம் 260
பெருங்காதல் 296, 315, 390
பெருங்காவல் 99
பெருஞ்சிலை 319
பெருநிதியம் 465
பெருந்தகை 181, 507
பெருந்துலை 544, 549
பெருந்தேவர் 249
பெருந்தொடக்கு 522
பெருந்தொண்டர் 495
பெருமைக் கெல்லை 352
பெருமைகூறும் அளவு 501
பெருமைகூறுவன் 498
பெரும்பதி 229
பெரும்புகலி 258
பெருமுலகம் 465
பெரும்பெயர் 77
பெரும்பேறு 257
பெருவலித்தடக்கைவாள் 433
பெருவழக்கு 181
பெருவாழ்வு 286, 322

பெருவிருப்
 பொடு 373
பெருவிறலாளி 420
பெற்றம் 109,125, 447
பெறலரு
 மிளமை 402
பெறுவதுசிவன்
 பாலன்பு 355
பெற்றித்தாம் 125
பெற்றமூர்ந்த
 வர் 423

பே

பேணலால் 342
பேணுதேகும் 498
பேணிநான்வைத்
 த விடம் 393
பேணிவாழுமாற்
 றினார் 352
பேணிவாழ்நாள் 406
பேணுமன்பர் 512
பேதியாஆணை 366
பேதியாஏகம் 350
பேதை 171
பேதைமைப்பரு
 வம் 282
பேதையேன் 340
பேயன் 187
பேரம்பலமேரு 250
பேருள் 326
பேரவை 197,389
பேரழலில்நெய்
 சொரிந்தால் 319
பேரனார் 206
பேரிடர் 127
பேரின்பம் 402
பேரின்பவெள்
 ளம் 252
பேருவகை 349
பேருவகையின்
 மலர்ந்தே 413
பேரொளி 26
பேரோசை 433

பை

பைம்பொன்
 வார்கரை 262
பையுள் 304

பொ

பொங்கழல்
 வீசிட 313
பொங்கியதிரு 353
பொங்குவெண்
 கிழிக் கோவ
 ணம் 521
பொச்சமில்லடி
 மைத்திறம் 542
பொதுக்கடிந்து
 85, 118, 277
பொதுநடம்350,359
பொதுமடம் 231
பொய்கடிந்து 361
பொய்கை 304
பொய்தருமுள்ள
 மில்லான் 431
பொய்தவவே
 டம் 473
பொய்தவன் 484
பொய்யில்சீர் 387
பொய்யில்செ
 யல் 403
பொரி 170, 267
பொருகரிவெண்
 கோடு 235
பொருதிறல்
 வீரர் 429
பொருத்தமா
 மிடம் 227
பொருந்துவ 367
பொருபரி 471
பொருப்பு 73
பொருமா கரி
 யின் உரிவை 325
பொரு வருங்
 கானம் 428
பொரு வரும்
 வழக்கு 211
பொரு விடைப்
 பாகர் 437
பொருவிறந்த 244
பொருளாக 274
பொலங் கலம்
 புரவி பண்ணி 334
பொலிந்த
 தென்ன 434
பொலிந்தன 339
பொழிந் திட
 நனைந்து 518
பொறிவாளரவு 323
பொறை 322
பொற்கால் 316
பொற்கொடி 365
பொற்கோயில் 292
பொற்கோல் 331
பொற்சுண்ணம் 267
பொற்பதி 494
பொற்பு 282
பொற்புடைய
 புண்ணியத்தின்
 புண்ணியம் 286
பொற்புவாய்ப்பு 281
பொற்பொது 437
பொன் 503, 530,
பொன்னி 262,404, 516,
பொன்னாண்காப்
 புச்சேர்த்து 158
பொன்வரை 255
பொன்றிரள் 235
பொன்றாழுருவி 496
பொன்றிக
 ழறுவை 414
பொன்றிகழ்
 குன்று 434
பொன்று வித்
 தல் 123
பொன்னணி
 ஓடை 471
பொன்னாருமுத்
 தரியம் 263
பொன்னிஆடி 514
பொன்னிநன்
 னாடு 502
பொன்னினால
 மைத்துத்தக்
 தாயாயினும் 383
பொன்னின்புரி 325

போ

போகேல் 418
போகபூமி 239
போகம் 246
போகப் பெற்
 றது 484
போக்கி 518
போதகம் 83
போதலர் வாவி 329
போதியாநிற்கும்350
போதுக 436
போதும் (வாரு
 ங்கள்) 211
போதும் போ
 தில் 284
போதும்
 வைகிற்று 451
போதுவார் 283
போந்தார் 283
போந்து 78
போர்வலித்
 தோள் 236
போயினை நெறி
 மேல் 522
போல் நடந்து 275
போவதுஞ்செய்
 யேன் 385
போற்பயின்றார் 232
போற்றவேண்டு
 வது 375
போற்றி 350, 351
போற்றுதல்
 புரிந்து 469
போனவேதியர் 518

ம

மகன்மை 151
மங்கலஅணி 278
மங்கலகீதம்165,268
மங்கலக்கலசம் 247
மங்கலஞ் செய்
 கோலம் 151
மங்கலத்
 தொழில் 353
மங்கலமடங்கல் 180
மங்கலம்பெருக 477
மங்கலம் பெரு
 வளத்தன 248
மங்கலவேள்வி 236
மங்குல் 320
மங்கை (உமா
 தேவி) 468
மங்கைபரவை 325
மங்கையிடங்
 கொள்ளும் 258
மஞ்சனசாலை 160
மஞ்சு 241, 284
மடக்கொடி 291
மடவரல் 292
மடவார் 319
மடிசுரந்து 133
மடிமேல் 481
மடை 229
மட்கலம் 362
மணக்கோலம் 173
மணத்திருநாள் 158
மணத்துறைக்
 கடன்கள் 159
மணத்தொழில் 179
மணம்புரிசெய
 லின்வாய்மை
 பல 154

மணப்பருவம் 152
மணவினை யோலை 156
மணி (ஆராய்ச்சி) 112
மணி 530
மணிகண்டர் 315, 505
மணிகள் 529
மணிநாவொலி 243
மணிப்புற்று 297
மணிமாளிகை 244
மணியெறிந்தது 125
மணிவிளக்கு 287
மணிவேதிகை 316
மண்கொள்ளா 289
மண்டபங்கள் 266
மண்டபம் 89
மண்டியபேரன்பு 259
மண்டுகாதலின் 545
மண்டுகாதல் 443
மண்டுதண்புனல் 520
மண்ணிரந்த 236
மண்ணிலேவந்த பிறவியே 253
மண்ணுற 270
மண்ணோர் 539,546
மண்மிசைவீழ்ந்து 271
மதகு 60
மதிக்கரங்கள் 307
மதிமுதிர்ந்து 175
மதியணி புனிதனன்னாள் (திருவாதிரை) 278
மதி விளங்கிய தொண்டர் 545
மதுரகம் 239
மந்தாரம் 240
மயக்கறுமறை 432
மரபுளோர் 205
மருதநீர்நாடு 404
மருதவைப்பு 75
மருமம் 127
மருவாநின்ற 497
மலங்க 238
மலங்குகள் 238
மலயம் 313
மலயானிலம் 321
மலரமளித் துயில் 320
மலர்ச்சேக்கை 316
மலர்தரு முகத்தன் 154
மலர்தலையுலகம் 110
மலர்ந்த சிந்தையர் 530
மலர்ந்தார் 252
மலர்ப்பலாசு 240
மலர்மகள் 97
மலர்மிசையயன் 550
மலர்வாளி 319
மலர்வித்து 328
மலாடர் 467
மலைமகள் கேள்வன் 381
மலைநாடு 491,496
மல்குதட்டு 539
மல்குநாடு 491
மல்லல் 445, 452
மல்லலம்பதி 238
மள்ளர் 60,75
மழலை 80
மழவிடை 130
மழை 268
மழைக்குலம் 173
மழைத் தடம் பொழில் 544
மழைவரினும் 514
மறம் 102
மறம்பயின்றது 313
மறலி 113
மறாதவண்ணம் 407
மறுக 333
மறிகரந்து தண்டேந்தியமறையவர்வெகுள 528
மறிதிரை 254
மறுகு 107,283,474
மறுவில்சிந்தை 305
மறுவில்மரபு 355
மறைஆயிரம் 179
மறைக்குலம் 507
மறைக்கோவண ஆடை 509
மறை சொன்ன நெறியின்வழி 493
மறைச்சிலம்பு 251, 405
மறைச் சிவயோகியார் 396
மறைச்சுரும்பு 242
மறைச்சைவர் 148
மறைத்தவன் 482
மறைநாதம் 243
மறைநான்கு 354
மறைநூல் 111
மறைநூன்மரபு 493
மறை முனி 419
மறை மொழிந்த அறம் புரிதல் 123
மறையவர் 514
மறையவன் (இறைவன்) 392
மறை யளித்த திருவாக்கு 345
மற்றல்லது ஒன்று 452
மற்று மோரிடம் 524
மற்றும் பெறநின்றார் 497
மனக்காதல் 318
மனங்கரைந்து 510
மனங்கொண்ட 293
மனங் கொண்டார் 227
மனஞ் சுருங்குதலின்றி 446
மனத்தினுணர் தற்கெட்டா மாயை 200
மனத்தினுட் கறுப்பு 473
மனத்தினுந் தீண்டேன் 366
மனத்தினு முக மிக மலர்ந்து 511
மனத்து நினைத்தயாவையும் 406
மனந்தெளிந்து 411
மனமங்கு வைத்த 482
மன மழியுஞ் செயல் 223
மன மழியுந் துயர் 127
மனம்திரித்த 290
மனித்தர் 107
மனு 98
மனு நூற்றுறை 122
மனைப்புகுந்து 443
மனையவள் 387
மனையறம் 356
மனைவியார் 363, 461,523,543, 548
மன் புகழ் 439
மன் பெருந்திருமாமறை 337
மன்றலங்குழல் 476
மன்றலார் செல்வம் 256
மன்றல் 301
மன்றுளாடினை 242, 338
மன்றுளாடும் பூங்கழல் 488
மன்றுளீர் 214
மன்றுளே திருக்கூத்தாடி 401
மன்றாடி 194
மன்னவனார் 273
மன்னிளங் குமரர் 105
மன்னினார் 445
மன்னுயிர் 354

மா

மா 84
மா (இலக்குமி) 137
மா (குதிரை) 172
மாகதர் 106
மாகமுன் பருகுகின்றனர் 246
மாசிலாமரபு 186
மாடலைகுருதி 427
மாடவீதி 106
மாடுபேரொளி 255
மாடே 238,476
மாட்சி 202
மாண 99
மாதரார் 366
மாதவ முனிவன் 491
மாதவர்கூட்டம் 146
மாதவவேடம் 474
மாதவி 79
மாதினைப் பயந்தார் 158
மாதுடன் 329
மாதைத்தீண்டிக் கொண்டு 397
மாதேவி 476
மாதொருபாகர் 467
மாமலையாள் செங்கை வருட 338
மாமறைப்புற்று 273
மாயை 380
மாயைவண்ணம் 407
மாயைவல்லான் 202

மாரன் 290,319
மாரிக் காலத்திரவு 448
மாலதி 240
மால் 550
மால்கடல் 417
மால்செய்து 300
மால்வரை 345
மால்விடையான் 258
மாவலி 236
மாளிகை 89
மாளிகைகள் 266
மாளிகைக்குலம் 246
மாறிலாகமம் 479
மாறிலா மகிழ்ச்சி 252
மாறிலாவொழுக்கம் 355
மாறிவந்து 445
மாறில் திருப்பணி 446
மாறுசாத்தி 525
மாற்றம் 422
மாற்றலர் முனைகள்மாற்றி 468
மாற்றான் 471
மாற்றமில்லன 537
மானமுன் பொருது வந்தவூடல் 364
மானிளம்பிணை 280
மாணார்க்குங் கரதலத்தார் 261
மானென விழித்து 300
மான் 275
மான்மதச்சாந்து 163
மான்றோல் 508

மி

மிக்கநீர் 404
மிக்கவர் 503
மிக்கசீரடியார் 405
மிடைகின்ற 230
மிடைந்தன கழுகு 426
மிதித்தனை 233
மிழற்ற 239
மின்றயங்கு 318
மின்ன 150
மின்னிடையார் 328
மின்னாருங்கொடி மருங்குல் 327
மின்னார் செஞ்சடை 263
மின்னேர் செஞ்சடை 290

மீ

மீண்டுபோந்தான் 485
மீண்டும் 233
மீதிடை 483
மீதுகொண்டெழு விமானம் 549
மீதெழுந்து 539

மு

முகம்புலர்ந்து 528
முகில் 162
முகிழ்த்தது 306
முகை 167
முக்கண் 392
முக்கண்நக்கர் 505
முஞ்சிநாண் 509
முடி 61
முடித்துக்கட்டி 473
முடிமேலடிவைத்தவன் 24
முடிவிலாதான் 191
முட்டிலன்பர் 536
முதல் 221
முதல்வர் மட்டுநின்றதட்டு 536
முதலின் சுருள் 63
முதல்வணிகர் 405
முதல் வனாரை இம்மையே பெற்றுவாழ்வார் 357
முதல்வனார் 505
முதற்பெருஞ்சயிலை 277
முதனல்லூர் 547
முதிரு மன்பு 495, 519
முதிர்ந்த கொள்கையர் 446
முதிர்ந்தகேள்வி 115
முதுவடிவு 231
முத்திநாதன் 473
முத்து 235, 503
முந்தை அந்தணர் மொழி 517
முந்தைநாள் 379
முந்தையெம்பெருந்தவம் 408
முப்புரஞ் செற்றார் 465
மும்மை 221
மும்மைமாமலங்கள் 238
மும்மை யாயிரவர் 357
முயறி 181
முரசு 158
முரல்கின்றன 242
முலையோங்கல் 327
முலை யோங்கற்புணர்குவடு 327
முறுவல் 492
முறுவல்வெண்ணிலவு 371
முறை 221
முறைகோக்கும் 492
முறைப்பாடு 197
முறையிட்டான் 191
முறைமையினால் 272
முறைமையின் 373, 519
முறைவழிநிறுத்தல் 119
முடிவிலாக் காதல் முதிர 272
முனைசாத்தினார் 157
முனைவித்து 459
முழவினாதவொலி 237
முழவு 87
முழுது மின்னருள் 548
முற்றிழையார் 268
முற்றுநும் முயிரை யெல்லாம் 422
முற்றுலகில் 257
முனி 434
முனிவா 432
முனைவர் 135
முன்கூர 442
முன்சென்று 462
முன்சொல்லும் 532
முன்பயில்தவம் 511
முன்பிறைஞ்சினர் யாவரென் றறியா முறைமை 244
முன்போக்கி 415
முன்பெய்தாததொரு வேட்கை 289
முன்வைத்த 534
முன்றம்மைக் கண்டவாறு 489
முன்றில் 136
முன்றொடர்ந்து வருங்காதல் முறைமை 295
முன்றொழுதிருக்கும் அழிவில் வான் பதம் 548
முன்னினைந்த வப்பரிசே 481
முன்னின்றது 287
முன்னின்றால் 132
முன்னை உண்மை 282
முன்னைநாள் 383

மூ

மூட்சி 202
மூதறிவீர் 197
மூதூர் 135, 492
மூப்பு 398
மூரல் 492
மூலட்டானம் 270
மூலவோலை 195,202
மூவுலகின்பயன் 287
மூழ்கிய ஈரம் 520

மெ

மெய்த்தவர் 411
மெய் யுறாமல் 367
மெய்வளர் கோலம் 276
மெய்த்தநெறி 178
மெய்தருசிந்தையார் 431
மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் 481
மெய்த்தன்மை 282
மெய்த்தாய் 220
மெய்நடுக்குற்று 108
மெய்ப் பத்தர்கள் 494
மெய்யடியார் 361
மெய்யுற வணைதல் 365

மெய்யெலாம் 473
மெய்வண்ணம் 124
மெல்லமறைந்து 445
மெல்லியல் 289
மெல்லணை 318
மெல்லியலார் 296, 327
மென்சாயல் 476
மென்றுகில் 535

மே

மேகசாலம் 239
மேகபந்திகள் 246
மேதினி 215
மேம்பட 371
மேம்படு 149
மேம்படுகற்பு 459
மேலிட்டாரர் 535
மேலெடுத்து 457
மேலெழுத்திட்டார் 206
மேலோர் 458
மேல் கடல் 228
மேவலர் புரங்கள் 332
மேற் கொண்டு 340
மேற்செல 304
மேற் செல்ல 549
மேற்பட 536
மேனிய 242
மேன்மை பூண்டு 467
மேன்மையோர் 209

மை

மை 454
மைக் கருங்கண்ணினார்கள் 333
மைக்குழம்பு 455
மைதிகழ் கண்டன் 431
மைந்தர் 548
மைபொதி விளக்கு 473
மையறு சிறப்பு 387
மையன்மானுடம் 38
மைவளர் கண்டர் 276
மைவாழுந் திருமிடற்று வானவன் 297
மைவிரவு கண்டர் 317

மொ

மொழிவழி யேவல் 465

மௌ

மௌவல் 240

யா

யாகம் 81
யாணர் 512
யாது நான்செய்கேன் 483
யாதுமொன்றும் 410
யாரெனினும் 405
யார்க்கும் பற்றிடமாய பரம்பொருள் 271
யார்க்கு முன்னவன் 132
யாராயினும் 442
யானங்கள் 165
யான் மூழ்கித் தருகின்றேன் 388

யூ

யூபவேள்வி 77

யோ

யோக சிந்தை 246
யோகம் 327

வ

வகை (நூல்) 49
வகுளம் 79,239
வஞ்சவல்வினைக் கறுப்பு 509
வஞ்ச மாக்கள் 305
வஞ்சனை வேடத்தான் 486
வஞ்சி 78,239,301
வடிவு 511
வடிவுஒருசோதியாக 464
வடிவுறு மூப்பு 368
வணிகரேறனையார் 531
வணிகர் 501
வணிகர்தங்குலம் 503
வணிகர்தமறுகு 408
வண்டமிழ் 237
வண்டமிழ்நாவலர் 276
வண்டலர் மாலையான் 477
வண்மை நீடிய 455
வந்த செல்வத்தின் வளத்தினுன் வரும்பயன் 504
வந்தாரோ 518
வந்திருந்தார் 226
வந்தியர் 106
வதுவை 183,326
வம்புமால் 299
வம்புலா மலரலைய 262
வம்புலா மலர் 374
வயல்வளந்தர 404
வயன் மாதர் 64
வரந் தருவான் 237
வரமலர் மங்கை 279
வரம்பு 63
வரி வளர் 230
வருக 254
வருத்த மிகு காதல் 227
வருத்தமுற விதித்த 287
வருவளம் 503
வரை நெடுந்தோள் 468
வரையின்வளன் 491
வரையுலகம் 75
வலங்கொண்டு 296, 543
வலங்கொள்வது போல் 241
வலமாக 258
வலயப் பொற்றோள் 324
வலிகாட்டி 319
வலிசெய்யாமல் 203
வலிதாக்கி 291
வலிப்பட்டு 120
[illegible] 207
[illegible] 193, 197
வலியவாட் கொண்டது 214
வல்லர் 445
வல்லவாறு 452
வல்லி 299
வல்லிருப்பு 196
வல்லை 435
வல்லையே 203
வல்வினை 305
வளஞ்சுருங்கவும் 446
வளத்தினுன் மிக்கவோடு 386
வளமலியிளமை 368
வளரிளந்திங்கள் 362
வளர்சடைமறைத்த அம்மறையோர் 516
வளவு 116
வளைத்துக்கொண்டேயன்றி 385
வழக்கின்மேலிட்டு 390
வழக்கு 120
வழக்கே 394
வழாமறப்புல்லி 468
வழிக்கொள்வான் 227
வழிச்செல்கை 129
வழிதடுத்து 174
வழித்திருமைந்தன் 113
வழித்துணை 418
வழித்தொண்டு 205, 341, 435,
வழிபட 373
வழிபடு நலம் 360
வழிவரு மிளைப்பு 460
வழிவழியடிமை 149
வழிவிடுந்துணை 418
வழுவிலன்பர் 548
வழை 79, 240,
வறிதே 320
வறுத்தபின் 459
வறுமைப்பதம் 445
வன்கணன் 474
வன்மைபேசி 216
வன்றிறல் செய்து 193
வன்றாள் 496
வன்றுணைவாளேயாக 424

வன்றொண்டன் 216
"வன்றொண்டன் புறகு" 497

வா

வாக்கிய[illegible]லை 459
வாக்கு (அசரீரி) 273
வாங்கு 375
வாசகம்
வாசித்து அருள் செய்ய 479
வாட்கயல் கொண்டகண் 274
வாணிகம் 527
வாமனன் 236
வாயிற் றூங்கிய மணி 114
வாய்தல் 458
வாய்மை 148
வாரணம் 95
வாரிசொரியும் 492
வாலிதாகிலைமை 378
வா[illegible]தாமின்பம் 253
வா[illegible] 309, 396,
வாவிப்புக்கு 387
வாளிதொடுப் பதே 310
வாளுந்தாமும் 427
வாள் 415
வாழி 273, 437,
வாழிய 273
வாழை 239
வாழ்வு வந்தணைந்தது 478
வானநீர்மழை 518
வானிடை யின்பம் 438
வானிழல் 9
வானின் மிசையைந்து 245
வான் 305
வான்பணிய 255
வான்பதம் 548

வி

விசும்பினாடு 399
விசும்பு 547
விசும் பேற்றிக் கொண்டு 422
விசை 197, 417,
விஞ்சையன் 290
விடம் தலைக் கொண்டாற்போல 118
விடைமேல் வருவார் 323
விடையமர் 332
விடையார் 229, 332
விட்டார் (மிகுதி பெறத் தெளித்தார்) 267
விட்டபின் 485
விண் கொள் ளாப் பேரொளி 289
விண்டரும் பொலிவு 400
விதானம் 147
விதித்த வாற்றால் 111
விதிமணக் குலமடந்தை 411
விதிமணக் கோலம் 160
விதி முறை 209
விதியினாலே 488
விதி யுளி 278
விதிர் விதிப்பு 140
வித்தகம் பேச வேண்டாம் 187
வித்தகர் 72
வித்திய 452
விபஞ்சி (பண்) 82
விம்மி 112
விரவியசெய்கை 488
விரவினர் 165
விரிந்தன தலைகள் 426
விருந்து 84
விருப்பின் னின்றார் 361
விருப்புறு மிளமை 398
விரை 167
விரைசெய் நறும்பூ 491
விரைய 480
விலக்கப்பட்ட 483
விலக்கா வண்ணம் 483
வில் 417
விளக்கங்காண 369
விளங்கிழை 285
விளையாடி 328
விளையாடுவாய் 273
விழுத்தவ வேந்தர் 276
விறல் 402
விறன்மிண்டர் 490
விற்புரைநுதல் 285
வினைப்பட 406
வினைப்பற்று 298

வீ

வீக்கி 414
வீடு 238
வீதி விடங்கப் பெருமான் 275
வீரட்டானம் 230
வீரம் 144
வீய 112

வெ

வெகுண்டார் 184
வெகுண்டான் 527
வெகுண்டு 526
வெங்கண்விடையார் 387
வெண்குடை 130, 404
வெண்கொடி 243, 474
வெண்சங்கம் 173
வெண்ணரை 175
வெண்டுகில் 177
வெண்ணகைச் செவ்வாய் மென்றோள் 402
வெண்ணிலா 306
வெண்ணீறுசாத்தும் அப்பெருவேடம் 472
வெண்ணீற்றின் பேரொளி 308
வெண்படாம் 175
வெண்மதி 311
வெண்முத்த நகையார் 492
வெம்பிடும் 108
வெருக்கோள் 260
வெல்ல மாட்டான் 472
வெல்லுமாறை 471
வெல் வினைக் கொடியோன் 485
வெவ்வுனை 201
வெவ்வுயிர்த்து 125, 318
வெளிப் படுப்பார் 510
வெளியே 310
வெளியே யாடுகின்றார் 251
வெள்வளை 168, 238
வெள்ளி 539
வெள்ளிப் பொருப்பு 434
வெள்ளைவிடையவர் 436
வெறுப்பில் 459
வெற்பு 73
வெற்றி 197
வென்றடிப்படுத்தனம் 284
வென்றடு புலியேறு 424
வென்றதுணிவு 284
வென்றவைம்புலனுன் மிக்கீர் 401
வென்றியடல் விடை 275

வே

வேடத்தர் 145
வேட்கை 213
வேட்கைதீர 273
வேட்கோவர் குலம் 359
வேணிகள் 4[illegible]3
வேணியர் 96
வேணியார் 491
வேணுத்தண்டின் இருதலை 396
வேணுத்தண்டு 177
வேண்டுமதனையே 341
வேண்டும்யாவையு 405
வேண்டியதிசை 425
வேண்டுமாறு 145
வேண்டுவ 365
வேதநன்னெறி 467
வேதபாரகர் 197
வேதமுதல்வர் 399
வேதவாரணம் 340
வேதனை 483
வேதிகை 247
வேதிகைகள் 267
வேதிப்பன 339

வேதியாதவர் 339
வேரல் 492
வேரி 73
வேரித்தாரான் 448
வேலை (முகூர்த்தம்) 160
வேலை 259
வேல் 417
வேளாண்குலம் 494
வேள்வி 99,273
வேள்வி (மணம்) 181
வேழமருப்பு 492
வேறடிமை 183, 200
வேறிடத்து 479,517
வேறுபிறிதென் 501
வேறுவைகி 367
வேறு வேறு 461
வேறு வேறு அமர் 425
வேறு வேறுயம் 332
வேறொருவருடன்பேசான் 316
வேறொன்று சொல்லவென் தென்கொல் 538
வேற் சண் 285

வை

வை 75
வையகம் 102,251
வைதிகத் தேர்கின்றூர் 496
வைதிகம் 178
வைத்த கோவணம் 518, 526
வைத்த கோவணமுன் செய்தவென் 521
வைத்திட்டு 524

வெள

வெளவி 385
வெளவினேனல்லேன் 386

அருஞ்சொற்றொடர் அகராதி முற்றும்.